Zw2,N06
N06.1-2
166677

Specimen Copy will be supplied on receipt of annas 7 in Postage Stamps.

The Honorable Justice Sir S. SUBRAMANYA IYER, B.L., K.C.I.E., Dewan Bahadur.

[illegible] S. [illegible], B.L., K.C.I.E.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யும் 1. சென்னப்பட்டணம் 1906ளு ஆகஸ்டுமீ 1. ட

அடக்கம்.

1. கனம் ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடை பொட்டகிராப் படம் ...
2. இந்திய சட்டகெஜெட்டின் கருத்துகள் ... ...
3. பத்திராதிபர் குறிப்புகள். ... ...
4. கனம் ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சரித்திரம். ... ...
5. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள். ... ...
6. முக்கியமான தீர்ப்புகள். ... ...
7. சட்ட சம்பந்தமான வேடிக்கை சமாசாரங்கள். ... ...
8. கோர்ட்டு சமாசாரங்கள். ... ...
9. கவர்ன்மெண்டு ஆர்டர்கள். ... ...
10. முனிசிபல் எலக்ஷன் விதி சீர்திருத்தம். ... ...
11. கவர்ன்மெண்டு விளம்பரம். ... ...
12. இந்தியன் லாரிப் போர்ட்டுகளில் சொல்லப்பட்டிருக்கும் கேசுகள். ... ...
13. சென்னை ஹைகோர்ட்டு மூன்றுவது செஷன்ஸ். ... ...
14. மோட்டார்வண்டி மசோதா. ... ...

166677
600 008
Z45 2,N06
N06.1-2

இந்திய சட்ட கெஜெட்.

1. "இந்திய சட்ட கேஜேட்டில்":—அடியில்கண்ட விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டுவரும்.

(a) கல்கத்தா ஹைகோர்ட்டார், பம்பாய் ஹைகோர்ட்டார், அலகபாத் சென்னை ஹைகோர்ட்டார் பிரதிமாதம் பிரசுரிக்கும் இந்தியன் லாரிபோர்ட் (Indian Law Reports) என்று ஆங்கிலத்தில் வழங்கிவருப் படியான இந்தியசட்ட ரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்டிருக்கும் ஒரிஜனல், அப்பீல், சிவில்கிரிமினல் வியாஜ்ஜியங்களின் விர்த்தாந்தங்களும் சட்டக் குறிப்புகளும் ஒன்றும்தவராமல் சங்கிரகமாக எழுதப்பட்டுவரும்.

(b) பிரிவிகௌன்சில் வியாச்சியங்களும், தீர்ப்புகளும், போடப்பட்டுவரும்.

(c) இங்கிலாண்டு. பிரான்சு, ஜெர்மெனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களின் கோர்ட்டுகளில் நடக்கும் ஆச்சரியக் கேசுகள்.

(d) இந்தியாவின் இதர மாகாணங்களில் நடக்கும் முக்கியமான கேசுகள் விசாரணை விபரத்துடன்,

(e) சென்னை ராஜதானியிலுள்ள ஹைக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டிலும் விசாரணை செய்யப்பட்டுவரும் முக்கியமான வியாச்சியங்கள் வாக்குமூலத்துடன், சென்னை செஷன் கோர்ட்டிலும் வெளி ஜில்லா செஷன் கோர்ட்டுகளிலும் நடக்கும் கேசுகள் சாக்ஷி வாக்குமூலத்துடன்.

(f) கோர்ட் தீர்ப்புகள் சட்டஒழுங்கைத் தவறியிருப்பதாகக் காணப்பட்டால் அதை எடுத்து விவகரித்துப்பேசுதல்.

(g) இன்னின்ன காரியங்களுக்கு இத்தனைரூபாய் ஸ்டாம்பில் பத்திரமெழுத வேண்டுமென்றும், அதற்கு எவ்வளவு ரிஜிஸ்டர் சார்ஜ் .

(h) வியாச்சியத் தொகைக்குள்ள ஸ்டாம்பு விபரம்.

(t) அதிகாரிகள் சட்ட வரம்பு கடந்து அமுல் நடத்தினால் அதைப்பற்றி கண்டித்துப் பேசி அரசாங்கத்தாரின் கவனத்தை இழுத்தல்.

(i) கவர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தும் கவர்ன்மெண்டு சர்க்கியுலர்களும் ரெவினியூ போர்ட் புரோசிடிங்ஸ்களும், போலீஸ் ஆர்டர்களும் போர்ட் செயின்ட் ஜியார்ஜ்கெஜட்டிலும் ஜில்லாகெஜட்டிலும்பிரசுரிக்கப்பட்டிருக்கும் சட்ட சம்பந்தமான பிரசுரங்கள்.

(k) இந்தியாவிலுள்ள நீதி இலாகா உத்தியோகஸ்தர்களின் மாறுதல்கள்.

(l) வைசிராய் சட்ட சபையிலும் லோகல் கவர்ன்மெண்டார் சட்டசபையிலும் பாசாகும் ஆக்ட்டுகளும், ஆலோசனைக்குவரும் மசோதாக்களும்.

(m) சட்ட சபைகளில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளும் அவைகளின் ஜவாப்புகளும்.

(n) சீர்மைப் பார்லிமெண்டில் இந்தியா சட்டங்களைப்பற்றி நடக்கும் பிரஸ்தாபங்களும் தீர்மானங்களும்.

(o) இந்துலா, முகமதியலா, இந்தியன் பீனல்கோட், கிரிமினல் புரோசிஜர் கோட், இந்திய சாக்ஷி சட்டம் 1867ம் ஞு-த்திய ரெண்ட்ரிக்கவரி ஆக்ட் முதலிய பல சட்டங்களைத் தழுவி இந்தியாவிலுள்ள கோர்ட்டார்கள் அப்போதைக்கப்போது சொல்லும் தீர்ப்புகள்.

(p) கோர்ட் விடுமுறை நாட்கள்.

(q) வியாச்சியமாடும் கக்ஷிகாரர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய சட்டமுறைகள்.

2. "இந்திய சட்ட கேஜேட்டில்" மேலேகூறப்பட்ட சமாசாரங்களெல்லாம் சம்பூரணமான சட்ட ஞானமும் நீடித்த அனுபோகமுமுடைய படிப்பாளிகளாலும் லாயர்களாலும் நிரூபநேயர்களாலும், நம் தேசத்துப் பெண்மணிகள்கூட இலகுவில் வாசிக்கும்படியான எளிய சிங்காரச்செந்தமிழ் நடையில் வாசிக்க வாசிக்க தெவட்டாத இன்பத்தையும் கொடுக்கும்படியாக எழுதிவரப்படும்.

3. "இந்திய சட்ட கேஜேட்டு" :—மாதாந்திர சஞ்சிகையானபடியால் ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரம் பிரசுரிக்கப்படும்.

4. "இந்திய சட்டகேஜேட்டின்" வருஷ சந்தா { உள்ளூராருக்கு 4-8-0
{ வெளி யூராருக்கு 4-14-0(தபாற்சார்ஜ் உள்பட)

ஒரு வருஷத்திற்கு மாதம் ஒரு சஞ்சிகையாக 12 சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

5. "இந்திய கேஜேட்டின்,,:—ஒவ்வொரு மாதாந்திர சஞ்சிகையிலும் ஒரு பொட்டகிராப்படம் பிரசுரிக்கப்படும்.

ஈ. ராதாகிருஷ்ண கம்பேனியார்,
மானேஜர்கள்,
இந்திய சட்டகெஜெட் ஆபிசு
37-நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி,
ஜியார்ஜ்டௌன், சென்னை.

உ

விஞ்ஞாபனம்.

பயிர்களுக்கு மழை ஆதாரம்; பக்ஷிகளுக்கு சிறகு ஆதாரம்; அதுபோல் பத்திரிகைகளுக்குச் சந்தாதாரர்கள் ஆதாரம். சந்தாதாரர்களின்றி பத்திரிகைகள் பொலிவு பெற்று விளங்கா. ஆதலால் நம்முடைய இந்திய சட்டகெஜெட்டை ஆதரிக்கும் கருத்துடன் அன்புகூர்ந்து கையொப்பநேயர்களாகச் சேர்ந்திருக்கும் கனதனவான்களுக்கு, நன்றி பாராட்டி பல கோடி வந்தனம் பன்முறை தந்தனம். நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டைப்போல சட்ட ஞானத்தைப் பரவச் செய்யக்கூடிய ஒரு பத்திரிகை சென்னை ராஜதானிக் கொன்றிருந்தால் மிகுந்த நன்மையைப் பயக்குமென்று அபிப்பிராயப்பட்டு இதை ஏற்படுத்த வெகு காலமாய் எண்ணிக்கொண்டு வந்தோம். சர்வேஸ்வரியின் சம்பூரணமான கடாக்ஷத்தால் வாய்த்த இச்சமயத்தைக் கைக்கொண்டு ஆரம்பித்தோம். ஆரம்பித்தபின் "நல்ல காரியத்திற்கு நாலாயிரம் விக்கினம்" என்பதுபோல, எதிர்பார்க்காத சில மனக்கவலைகள் குறுக்கிட்டன. ஆயினும் எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணோட்டமாயிருந்து, அக்கவலைகளுக்கிலக்காகாமல் இந்த இந்திய சட்ட கெஜெட்டை வெளிபடுத்திருக்கிறோம் இதில் ஜனங்கள், விவகாரங்களைக் குறித்து மிக முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டிய அனேக உபயோகமுள்ள தீர்ப்புகளை எடுத்து எழுதியிருக்கிறோம். நாம் இந்திய சட்ட கெஜெட்டிற்காக வெளிப்படுத்திய விளம்பரத்தில் போலிஸ் ஆர்டர்களும் ரெவினியூ போர்ட் புரொசிடிங்ஸ்களும் போடுவதாய்ச் சொல்லியிருந்தோம். இவைகளுக்காக போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபிஸ் மானேஜர் அவர்களைப்போய் நேரில் கண்டோம். அவர் இன்னும் ஒரு வாரத்தில் நம்முடைய கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக வாக்களித்திருக்கின்றனர். தமிழ் ஜில்லாக்களின் கலெக்டர்களுக்கு கடிதம் எழுதியிருந்தோம். சிலரிடமிருந்து இன்னும் ஜவாப்பு கிடைக்கவில்லை. ஆகையால் இந்த முதல் பிரிதியில் அவைகளைப் பிரசுரிக்க சாவகாசமில்லாமல் போய்விட்டதைப் பற்றி விசனிக்கிறோம் பம்பாய், கல்கத்தா இந்தியன் லாரிப்போர்ட்கள் இன்னும் நமக்கு வந்து சேராததால் சென்னபட்டணம், அலகபாத்இந்தியன் லாரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்டிருக்கும் கேசுகளை மட்டிலும் எழுதியிருக்கிறோம். இந்த முதல் சஞ்சிகையில் "இந்துலா" விருக்க வேண்டுமென்கிற கருத்துடன் "இந்துலாவின் ஆதாரங்கள்" என்கிற முதல் அத்தியாயம் எழுதினோம். ஆயினும் நிகழ் ஸ்ரீ நடந்தேறிய ஹைக்கோர்ட் செஷன்ஸ் கேசுகளை இப்பிரிதியில் வெளிப்படுத்தவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, அதை இதில் பிரசுரிக்க வடமில்லாமற் போய்விட்டது. ஆகவே அடுத்த சஞ்சிகை முதல் நாம் விளம்பரத்தில் கூறியிருந்த சகல விஷயங்களும் போடப்பட்டு வருமென் பதில் சந்தேகமில்லை. ஜனங்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள சட்ட சமாசாரங்களையும் கேசுகளையும் எடுத்து எழுதி உழைக்க எக்காலும் பின்வாங்கமாட்டோம். ஜனங்கள் எம்மாதிரியான விவகாரங்களைக் குறித்து தங்களுக்கிருக்கும் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள வேண்டுமானாலும் நம்முடைய இந்திய சட்டகெஜெட் சட்ட ஆதாரத்துடன் அச்சந்தேகத்தை தெளிய வைக்கக்கூடிய பெரிய உபகாரியாயிருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆகவே கனதனவான்கள் இந்த கெஜெட்டிற்கு கையொப்பக் காரர்களாகச் சேர்ந்து வேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

Abbreviations used in the Gazette.

இந்த கெஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta
All.	=	Allahabad
Bom.	=	Bombay
Mad.	=	Madras
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகபாத்
பம்.		பம்பாய்
மது சென்	}	சென்னப்பட்டணம்
சி. பு' கோ.		சிவில் புரொசிஜர்கோடு
கி. பு. கோ.		கிரிமினல் புரொசிஜர் கோடு.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதம் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

புத்தகம். 1. • சென்னை, 1906 ஹ ஆகஸ்ட் மீ நெ. 1.

உ

தேவிசகாயம்.

ஆரணம்புகழுங் காரணனிடத்தில்
என்றும் விளங்கி நின்ற பராபரை,
தன்னையன்றிப் பின்னையொன்றும்
இல்லை திறமென வொல்லையுணர்ந்து
போற்றுவேனுக் கேற்றவை யேற்றவை
தந்தருள்புரிந்த சுந்தரி யிந்நாள்
இந்துசட்டச் சுந்தரகெஜெட்டை
நடத்துவல்லவமுந் தடத்த மின்றருளி
ஆளுமாறவள் தாளிணை மலரை
உள்ளும் புறமுங் கொள்ளவணங்கித்
தாயே யருளெனச்சாற்றி
யுறுதலினன்மை பெறுமிச்சடங்கே.

THE AIMS OF THE INDIAN LAW GAZETTE.

இந்திய சட்ட கெஜெட்டின் கருத்துகள்

இது இந்திய சட்ட கெஜெட்டின் முதல் பிரிதியாணபடியால் இந்த கெஜெட் ஏற்பட்டதற்குள்ளகாரணங்களையும் அதன் கருத்துக்களையும் எடுத்துக்கூறுவது நம்முடைய கடமையாகவிருக்கிறது. இப்பூலோகத்தில் ஜனங்கள் எப்போது உற்பத்தியானார்களோ அப்போது முதல் சில ஏற்பாடுகளும் விதிகளும் அநுஷ்டானங்களு மிருந்துகொண்டு வருகின்றன. அப்போதிருந்த ஏற்பாடுகளும் விதிகளும் அனுஷ்டானங்களும் ஆகிய இவைகளில் பெரும்பால் நாகரீகமடைந்திருக்கும் இக்காலத்தார் புத்திக்குப் பொருந்தாதவையாயிருந்தபோதிலும் ஆதிகாலத்தில் ஜனசமுகத்திற்குறிய ஏற்பாடுகளும் விதிகளுமில்லை என்று எவரும் மறுக்கமுடியாது. அக்காலத்தில் இங்கிலாண்டிலும் சரி இந்தியாவிலும் சரி குடும்பத்தலைவனே அக்குடும்பத்திற்கு சர்வாதிகாரியாக விருந்தான். அவன் நினைத்தது சட்டமாகவிருந்தது. அக்குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அவனுடைய ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்து நடந்து வரவேண்டியதைத் தவிர்த்து வேறொன்றும் செய்ய இயல்பற்றவர்களாயிருந்தார்கள். ஒரு குடும்பத்திலுள்ளவன் மற்றொரு குடும்பத்திலுள்ளவனுக்கு தீங்கு செய்தால், தீங்கு செய்த குடும்பத்தின் தலைவன் அக்குற்றத்திற்காக இத்தனை ஆடுமாடுகள் தீங்குண்ட குடும்பத்தின் தலைவனுக்கு அபராதம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்படுவது வழக்கமாயிருந்தது. அப்படிப்பலவிதமான ஏற்பாடுகளும் அனுஷ்டானங்களும் உண்டாகி நாளடைவில் தேசமென்றும் அதற்குச் சொந்தக்காரர்களென்றும், அதற்கரச னென்றும், பிரஜைகளென்றும், அரசன் ஆக்கினை செய்ய வேண்டுமென்றும் பிரஜைகள் அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் இப்படியாக அனேக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டன. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் தொன்று தொட்டுவந்த அனுஷ்டானங்களே இப்போது சட்டங்களாக விளங்கி வருகின்றன. ஹிந்துக்கள் மதத்தில் விசேஷ பற்றுடையவர்களானபடியால் அவர்களுடைய தேசத்திற்குரிய சட்டங்கள் அவர்களுடைய மதாசாரங்களையும் கொள்கைகளையும் எடுத்துக்கூறும் சுருதிகளிலும், ஸ்மிரிதிகளிலும், உபநிடதங்களிலும், இதிகாசபுராணங்களிலும் மனுதர்மசாஸ்திரத்திலும் பிணைந்துகொண்டு இருக்கின்றன. இந்து அரசர்கள் ஆக்கினையிடுவதும்

பிரஜைகள் அதற்கு கீழ்ப்படிவதும் மேலே சொல்லப்பட்ட சட்டதிட்டங்களைத் தழுவியே செய்யப்பட்டுவந்தன. ஆனால் முகமதியர்கள் இந்தியாவைக்கைப்பற்றி ஆண்டுவந்தகாலத்தில் ஹிந்துக்களின் சட்டங்களை புறக்கணித்ததாக சரித்திரங்கள் கூறினபோதிலும், இப்பூலோகத்தின் மூன்றில் ஓர்பாகத்தைக் கட்டி பிரஜைகளுக்கு வேண்டிய சுதந்தரங்களை எல்லாம் கொடுத்து அரசாண்டுவரும் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ்அரசாங்கத்தார்இந்தியாவில்தொன்றுதொட்டு ஊர்ச்சிதத்திலிருந்து வந்த சட்டங்களில் எவை எவை தற்கால நாகரீகத்திற்குப் பொருந்தாமலிருக்கிறதோ அவைகளை புறக்கணித்து மற்றவைகளை நன்குமதித்து அவைகளைக்கொண்டு நம்மைப் பரிபாலித்து வருவதற்காக நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தியாவில் இச்சட்டங்களைத் தவிர, பிரஜைகள் க்ஷேமத்தை நாடி கீர்த்தி பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அனேகசட்டதிட்டங்களைச்செய்து அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இச்சட்டங்களை பெரும்பாலான பொது ஜனங்கள் படிப்பதுமில்லை அறிந்துகொள்ள விரும்புகிறதுமில்லை. தான் இன்னது செய்யலாம் இன்னது செய்யக்கூடாதென்றும், தனக்கு இதில் பாத்தியதையிருக்கிறது, இதில் பாத்தியதையில்லை என்றும் ஒரு மனிதன் அறிந்துகொள்ளாவிட்டால் அதைவிட அவனுடைய வாழ்க்கையில் வேறென்ன பெரிய குறைவிருக்கிறது? தேசத்தில் வழங்கிவரும் சட்ட திட்டங்களைஜனங்கள் அறிந்துகொள்ளாமலிருக்கும் இப்பெருங்குறைவால் விளையும் தீமைகளுக்கோ ஒரு எல்லையுமில்லை. அல்லும் பகலும் ஓடி ஓடி ஆயிரக்கணக்காய் சம்பாரிக்கும் பாரி வார்த்தகர்களுக்குக்கூட பாண்டிற்கும் பிராமிசரி நோட்டிற்கும் உண்டிக்குமிருக்கும் சட்டசம்பந்தமான வித்தியாசங்கள் தெரியாமல் சில சமயங்களில் நஷ்டமடைந்து வருகின்றார்கள். காலாவதிதோஷங்கள் தெரியாமல் கொடுத்தகடனை இழந்துவிடுகிறார்கள். பிதிரார்ஜ்ஜித சொத்தில் பிள்ளைகளுக்கிருக்கும் பாத்தியதையைத்தெரியாமல் தகப்பனார்கள் பராதீனஞ்செய்து விடுகிறார்கள். விதந்துகளும் பெண்களும் வார்சுக்கிரமப்படி அடைந்த சொத்துக்களில் தங்களுக்கிருக்கும்பாத்தியதை தெரியாமல் அச்சொத்துக்களை பராதீனங்கள்செய்து விடுகிறார்கள். அச்சொத்துக்களில் அவர்களுக்கிருக்கும் பாத்தியதையை அறியாமல் கடன் கொடுத்தும், கிரயத்திற்குப்பெற்றும் பெரும் நஷ்டமடைந்து வருகிறார்கள். அனந்தரவார்சு பாத்தியதைதெரியாமல் அனேகர் வார்சுக்கிரமப்படி கிடைக்கவேண்டிய சொத்துக்களை விட்டுவிட்டு கஷ்டகாலக்ஷேபம் செய்து வருகிறார்கள். இப்படி நாம் அனேக உதாரணங்களை எடுத்துக்கூறக்கூடும், ஜனங்கள் சாமானியசட்டங்களைக்கூட அறிந்துகொள்ளாமல்முனுசிப்கோர்ட்டுமுதல்பிரிவுகௌன்சில்வரையில் வியாஜ்ஜியமாடி கையிலிருக்கும் பொருளையெல்லாம் எள்ளும் தண்ணீரும் வைத்து தாரைவார்த்து வாழ்நாளை எல்லாம வீண்நாளாய்க் கழித்து அந்தியத்தில் அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள். நாளுக்குநாள் கோர்ட்டுகளில் வியாஜ்ஜியங்களும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. சில ஊர்களில் முனிசிப்தார்களுக்கும் சப் ஜட்ஜிகளுக்கும் அதிகவேலையிருக்கிறதென்று கவர்னமெண்டார் அபிப்பிராயப்பட்டு அந்த ஊர்களில் ஒரு கோர்ட்டிற்கு பதிலாக இரண்டுகோர்ட்டுகள் ஏற்படுத்த ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் வைசிராயாயிருந்து சென்றவருஷம் இங்கிலாண்டிற்குப் போன லார்ட்கர்ஸன் சென்னைக்கு வந்தபோது இந்துக்கள் வியாஜ்ஜியமாடி சொத்துக்களை இழந்து வருவது இந்தியாவின் வறுமை நிலைமைக்கு ஓர் காரணமென்று சென்னை மகாஜனசபையாருக்குச் சொன்னார். அதில் என்ன சந்தேகம்? வீம்பிற்கு வியாஜ்ஜியமாடி பொருளை எல்லாம் இழந்து கஞ்சிக்குக் காற்றாய்ப்பறக்கும் எத்தனையோ குடும்பங்களை நாம் கண்கூடாய்ப்பார்த்து வருகின்றோம். ஆதலால் பொதுஜனங்களுக்கு சட்டஞானமில்லாத குறையால் பெருந்தீமைகள் விளைகின்றன வென்றும் சட்டஞானம் ஜனங்களுக்கு இன்றியமையாதது என்றும் நாம் எடுத்துச் சொல்லவும்வேண்டுமோ? ஆகவே பொதுஜனங்களுக்குள் சட்ட ஞானத்தைப்பரவச்செய்ய வேண்டுமென்பதுதான் இந்தகெஜெட்டின் கருத்தாயிருக்கின்றது. சென்னை இராஜதானியில் அநேக தமிழ் பத்திரிகைகளிருந்தும் சட்ட ஞானத்தை பரவச்செய்யும் பத்திரிகையில்லாததால் அந்தக்காலி ஸ்தானத்தை நிரப்ப நாம் முன் வந்திருக்கின்றோம்.

லோகோபகாரத்தை முன்னிட்டு நாம் செய்துவருமிம்முயற்சியை நன்குமதித்து கனதனவான்கள் இந்தகெஜெட்டை அபிமானித்து ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்:— சுபம்! சுபம்!

—o—

ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்.

சென்னை ஐக்கோர்ட் ஜஸ்டிஸ்களில் ஒருவராயிருந்து சிறந்து விளங்கிய கனம் பொருந்திய ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ் அவர்கள் தமது உத்தியோகத்தை ராஜிநாமாக் கொடுத்து விட்டார். மிஸ்டர் டேவிஸ் வியாஜ்யஜிம்பெருத்த தஞ்சை ஜில்லாவில் வெகு காலம் ஜில்லா ஜட்ஜாகவிருந்து அநுபோகமடைந்தவர். வியாஜ்ஜியங்களின் உண்மைகளைக்கண்டுபிடிப்பதில் மிகவும் சாமர்த்தியமுடையவர். பாரபக்ஷமென்பது அவரிடம் காணப்படமாட்டாது. போலிசார் சிருஷ்டிசெய்த கேசுகளை இவருடைய விசாரணைக்குக் கொண்டுவர எப்போதும் அஞ்சுவார்கள்.

THE HONORABLE JUSTICE SIR S. SUBRAMANIA IYER, DEWAN BAHADUR, Kt., C.I.E.

ஹானரபிள் திவான்பகதூர் ஹைகோர்ட்டு ஜட்ஜி சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் Kt., C.I.E.

—o—

சென்னை ஹைக்கோர்ட்டிற்குத் திலகம் போல் விளங்காநின்ற ஜட்ஜி கனம்பொருந்திய சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் மதுரை ஜில்லாவில் 1842ம் ஆண்டு செல்வப் பெருக்குள்ள குடும்பத்தில் பிறந்தார். இவரது இளமைப் பருவத்திலே இவர் பிதா சூராவளி சுப்பையர் இறந்துபோனார்; இவருக்கு விசேஷ பூஸ்திதி உண்டு. பிதா இறந்தவுடன் இவர் மூத்தசகோதரர் இருவருடைய பராமரிப்பினால்நன்கு காக்கப்பட்டு கல்விபயின்று அதிகத்தேர்ச்சியடைந்து மதுரை ஜில்லா ரெவினியூ இலாக்காவில் உத்தியோக நியமனமாகி சீக்கிரம் தாசில்தார் உத்தியோகம் பெற்றார். இவர் சகோதரரில் மூத்தவர் கலெக்டர் ஆபீஸ் உசூர் சிரஸ்ததார் உத்தியோகம் பெற்று விளங்கினார். இரண்டாவது சகோதரர் சிவகங்கை ஜமீனில் மானேஜர் உத்தியோகம் வகித்து வந்தார். கனந்தங்கிய அய்யர் அவர்கள் தமக்குக் கிடைத்த தாசில்தார் உத்தியோகத்திலிருந்துகொண்டே பி. யல். சட்டப் பரிக்ஷைக்குப் படித்துத்தேறி 1869௵ நவம்பர்௴ 15உயில் ஹைக்கோர்ட்டு வக்கீலாக நியமனமானார். உடனே தாசில்தார் உத்தியோகத்தை இராஜிநாமா கொடுத்து வக்கீலாக இருந்து தனது பேரும் கீர்த்தியும் கதிர்விட்டெரிய வாழ்ந்து வந்தனர்.

எல்லா முக்கிய கக்ஷிகளிலும் இவர் ஒரு பக்கத்தில் இருந்து கட்சி பேசிக்கொண்டிருந்தார். திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் (Comptroller) முக்கிய கணக்கதிகாரி உத்தியோகம் பெற்ற ஒருவர் மேல் கிரிமினல் தரப்பில் சர்க்கார் சொத்தை அபகரித்தல் என்னும் குற்றத்திற்காக இதற்காகவே நியமிக்கப்பட்ட ஒரு கோர்ட்டில் நடந்த விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்டவருக்காக அய்யர் அவர்கள் ஆஜராகி அந்தக்கேசை வெகு திறமையோடும் புத்தி சாதுரியத்தோடும் நடத்தி தமது கட்சி ஜெயிக்கும்படியாகச் செய்ததினால் இவர் பிரதாபம் எங்கும் ஓங்கி வளர ஆரம்பித்தது.

இவ்வாறு சுமார் 15 வருடங்கள் வக்கீலாக இருந்து நிதி தேடி ஜட்ஜிகளும் மதிக்கும் படியாக நடந்து வந்தார். முக்கியமாக மதுரை ஜட்ஜிகளில் ஒருவராகிய (Sir Hutchin) ஹட்சின் துரையவர்களால் மிகக்கொண்டாடப்பட்டு ஷை துரை இவருடைய அதி ஆச்சரியமான சமர்த்தைப்பற்றி சென்னை கவர்மெண்டாருக்குத் தெரிவித்தார்.

இதனால் இவர் சட்ட சபையில் ஒரு மெம்பர் உத்தியோகம் பெற்று யாவரும் புகழ சமார்த்தியத்தோடு பேசி வந்ததால் கவர்மெண்டார் இவர் வேலைத்திறமைகளை நன்கு மதித்தார்கள்.

அய்யர் அவர்கள் பிறகு சென்னை ஹைகோர்ட்டிலேவைக்கீலாக இருக்கவேண்டுமென்று பிரியங்கொண்டு சென்னையில் வாசஞ்செய்துத் தாம்பிடிக்கிற கட்சிகள் வெற்றியடையும்படி பேசி தன் கீர்த்தியை நிலை நாட்டி வந்தார். இவர் ஹைக்கோர்ட்டு வக்கீலாக இருக்குங்காலத்தில் இவர் புத்திக்கோசரத்தை வியந்து இரண்டு மூன்று தடவை கவர்ண்மெண்டு பிளீடர் வேலையில் பதிலியாக நியமிக்கப்பட்டார். இவர் கீர்த்தி இளஞ்சூரியனைப் போல வர வர பிரகாசித்ததால் கவர்ண்மெண்டார் கவனிக்கும்படியாக நேரிட்டது. அக்காலை இந்து சுதேசிகளில் பிரபல புத்திசாலிக்கென்று அருமையாய்ச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி வேலையை நீண்ட காலமாகப் பார்த்து வந்த காலஞ்சென்ற கனம் சர். முத்துசாமி அய்யர் அவர்கள் ரஜா வாங்கிக்கொண்ட காலயி லெல்லாம் இவருக்கு அந்த உத்தியோகம் அளிக்கப்பட்டு வந்தது.

கனம் சர் முத்துசாமி அய்யர் அவர்கள் மரணத்தினால் அந்த வேலை காலியான போது பதிலாக இவர்கள் வேலை பார்த்து வந்த காலை இவரது திறமையையும் நடுவு நிலைமையையும் புத்தி நுட்பத்தையும் இவர் செய்த தீர்மானங்களில் காட்டினதால் அவ்வேலைக்குச் சிலாக்கிய யோக்கியதையுடைய வரென்று அந்த ஜட்ஜி உத்தியோகத்தை இவர்களுக்கு காயமாகக் கொடுத்தார்கள். இந்த உத்தியோகத்தில் 1895 ம் வேலையிலிருந்து நியாயத்தேருக்கு ஒரு அச்சாணியாகவிருந்து விளங்கி வருகிறார். இவரது இங்கிலீஷ் பாஷை பேசும் வன்மையும் வார்த்தை அலங்காரமும் இவர் செய்த தீர்மானத்தை வாசித்த ஒவ்வொருவரும் அறிந்திருப்பார்கள்.

இவர் தீர்மானங்கள் பாரபட்சமின்றியும் நியாவிளக்கமும் உடையதாகி ஆட்சேபனைக் கிடமின்றி தெளிவும் சிறப்பும் பொருந்திய பாஷையில் வரையப்பட்டு வந்ததால் பாஷைகற்றவர்களும் பிரியத்துடன் வாசிக்க எண்ணங்கொள்வார்கள். தம் நடுவு நிலைமையைக் காட்டினார் என்பது மற்ற ஜட்ஜிகள் செய்த தீர்மானம் தமது அபிப்பிராயத்துக்கு ஒத்திருக்காத பட்சத்தில் தாம் மாறான அபிப்பிராயத்தை அநேகசமையங்களில் தெரிவித்திருக்கிறதினாலறியலாம். இவர்வியாச்சியங்களை வெகுயூகமாக சொற்ப நேரத்துக்குள் நுணித்தறியுஞ் அபார சக்தியுடைய வராயிருந்தாலும் தாம் கொண்டகருத்துக்கு மாறாகவும் இணங்கவும் வக்கீல்கள் பேசுங்கட்சிகளை யெல்லாம் பொறுமை யோடு செவிகொடுத்துக்கேட்பார். வக்கீல்கள் சில சமயத்தில் ஊக்கத்துடன் மூர்க்கமாகவாதாடினாலும் அவர்களை நிலைகுலையச் செய்யாமல் அவர்களின் நியாயதர்க்கங்களை முற்றிலு மறிந்து கொண்டு அவர்கள் பிசகுகளை எடுத்துக்காட்டுவார். சில சமயங்களில் ஒற்றுமைக்காட்டக்கூடியகேசுகள் இந்தியாவில் நடந்திரா விட்டால் இதர கவர்ன்மெண்டிலும்

அமெரிக்காவைச்சேர்ந்த இராச்சியங்களிலும் விசாரிக்கப்பட்ட ஒற்றுமையான கேசுகளை எடுத்துத்தம் தீர்மானத்தில் எழுதி அதை உறுதிப்படுத்துவார்.

அவர் ஜட்ஜி உத்தியோகம்பெறுவதற்கு முன் நாஷனல் கான்கிரஸ் சபையாரால்கொடுக்கப்பட்ட பிரசிடெண்டு ஸ்தானத்தை ஒப்புக்கொண்டார் இதனால் அவர் ஜனங்களின் பொதுநன்மையையும் கஷ்டநிவர்த்தியையும் நாடினவரென்று நன்கு விளங்குகிறது.

இவர் ஜட்ஜி உத்தியோகம் பெறுவதற்கு முன் சட்டத்தேர்ச்சிக்காக 1891௵த்தில் திவான் பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டது. சட்ட நிருபண சபையில் இவர் செய்துவந்த வேலைத் திறமைகளுக்காக C. I. E. என்கிற கௌரவபட்டம் கவர்ண்மெண்டாரால் கொடுக்கப்பட்டது. ஜட்ஜியாக இருந்து செய்து வந்தவேலையின் ஊக்கத்துக்காக நைட்டுபட்டம் கொடுக்கப்பட்டது.

இதுவரையிலும் இம்மைக்குரிய விஷயங்களைக்கூறிவந்தோம் இனிமறுமைக்கான விஷயத்தில் இவர் எவ்வாறுநடக்கின்றனரென்று நாம் ஆராய்ச்சிசெய்யின் அந்தப்பாகமும் வியக்கத்தக்கதா கவேயிருக்கின்றது. இந்துக்களிற் சிலர் பெரிய உத்தியோகம்பெற்றபொழுதும் திரவியஸ்தர்களான பொழுதும் ஆங்கிலேய பாஷைகற்றபொழுதும் ஆத்மாவுக்கான பேறுகளில் முயலுகிறதில்லை இம்மூன்றும் இவரிடம் பொருந்தியிருந்தும் ஆன்மலாபதுக்கான வழிகளில் முயற்சியுடையவராய் மார்க்கததுக்குரிய நூல்களை ஆராய்ச்சி செய்து ஆன்றோர் கூறிய வழிகளில் பழக்கம்பண்ணிக்கொண்டு வருகிறதாக கேள்விப்பட்டு அதிக சந்தோஷமடையவேண்டியதாயிருக்கிறது.

அவரை எவ்வாறு உலகம்மதித்திருக்கிறதென்று நாம் யோசித்தால் இவரை முழு பெயரிட்டழைக்காமல் மணி அய்யர் என்னும் அரைப்பெயரிட்டழைக்கிறது.யாரை இவ்வாறுஅரைப்பெயர்யிட்டழைக்கிறது என்றால் அதிகபிரியத்துக்கும்அதிகபழக்கதுக்கும்பாத்திரமானவர்களை அழைப்போம். இப்பரதகண்டத்திற்குச் சக்கிரவர்த்தியாகவிருந்த ஸ்ரீராமபிரானை 'ராமா' வென்று அழைக்கிறோம். இப்பொழுது கனம் பொருந்திய அய்யர் அவர்களுக்கு இந்தவயதில் ஜட்ஜி வேலை பார்த்துவருவது அதிக கஷ்டம் என்று யாவருமறியக்கூடும். ஆயினும் இந்த வயதில் புத்தித்தெளிவோடு தளர்ச்சியும் களைப்புமின்றி இந்த வேலைப்பார்த்து வருகிறது யாவரும் வியக்கத்தக்கவிஷயம், இன்னும் நீண்டகாலத்துக்கு மேன்மையாகவும் கீர்த்திமேலும் மேலும் வளரும்படியாகவும் ஹைக்கோர்ட் ஜட்ஜியாக இருந்து தேகசௌக்கியத்துடனும் சகல சம்பத்துகளுடனும் வாழ்ந்து வர ஆசீர்வதிக்கும்படியாகவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இலிந்திய ஜட்ஜி

பப்ளிக் செர்விஸ் கமிஷன், சென்னை ஹைக்கோர்ட்டிற்கு இரண்டு இந்திய ஜட்ஜுகள் நியமிக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை அங்கிகரித்து, கனம் பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஒரு இந்திய ஜட்ஜியாக விருப்பதால், இன்னொரு இந்திய ஜட்ஜி நியமிக்கப்படுவதற்கு ஹைக்கோர்ட்டில் இரண்டு ஜட்ஜி ஸ்தானங்கள் காலியாயிருக்கும் இச்சமயம் தகுந்த சமயமென்றும், அதற்கு மிஸ்டர் சங்கரநாயகர் அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஹைக்கோர்ட்டிலிருக்கும் வக்கீல் சங்கத்தார் இந்தியா மந்திரிக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். இப்போது இரண்டு காலிஸ்தானங்களிருந்தும், அவற்றில் ஒன்றுக்கு ஒரு இந்திய ஜட்ஜி நியமிக்கப்படாமலிருப்பதற்கு மதிராஸ் மெயில் பத்திரிகை ஒரு காரணம் கூறுகின்றது.

அதென்னவென்றால், சமீபத்தில் கவர்மெண்டார் ஹைக்கோர்ட்டிற்கு ஒரு ஏழாவது ஜட்ஜி நியமிக்கப் போகிறபடியால் ஒருக்கால் அதை ஒரு சுதேசிக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் உத்தேசத்திலிருக்கலாமென்றும் கனம் பொருந்திய ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் பென்ஷன் பெற்றுக்கொள்ளும் காலம்சமீபித்துக் கொண்டு வருகிறபடியால் அவருக்கு பதிலாக ஒரு சுதேசியை நியமிக்கலாமென்றும் கவர்மென்மெண்டார் நினைத்து இப்போது காலியான ஸ்தானங்களை அங்கிலேயர்களுக்குக் கொடுத்து விட்டார் என்று எழுதியிருக்கிறது. மிஸ்டர் சங்கரநாயகருக்கு ஜட்ஜி உத்தியோகம் இந்த சமயம் கொடுக்காததைப்பற்றியும் மெயில் பத்திரிகை பட்டும் படாததுமாய் எழுதியிருக்கிறது. அஃதென்னவென்றால் மிஸ்டர் சங்கரநாயர் மூன்று முறைகளில் ஜட்ஜி உத்தியோகம் பதிலியாகப் பார்த்து தம்முடைய உரிமைகளை ஸ்தாபித்திருந்த போதிலும் அவர் இரண்டு மாதங்களுக்கு முந்தி "கன்டெம் போரரி ரிவியூ," என்னும் பத்திரிகையில் இத்தேசத்தில் குடியேயிருக்கும் ஆங்கிலோ இந்தியர்களைப் பற்றி குறைவாய் எழுதியது ஷை உரிமைகளை ஆதரிக்கவில்லை என்று எழுதியிருக்கிறது (அதாவது அவருக்கு அந்த காரணத்தை முன்னிட்டு தான் இப்போது ஜட்ஜி உத்தியோகம் கொடுக்கப்படவில்லை என்பது தார்ப்பரியம்)

மிஸ்டர் சி. சங்கர நாயர்.

சென்னை ஹைகோர்ட்டில் நியாயாதிபதிஸ்தானங்களுக்குள் இரண்டு காலியாகியும், மிஸ்ட்டர் சி. சங்கர நாயர் அவர்களை லோக்கல் கவர்ன்மெண்டார் ஒருஜட்ஜாக நியமிக்காமல் அவருடைய உரிமைகளைத் புறக்கணித்திருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. மிஸ்டர் நாயர் இதற்குமுன் பதில் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டு ஜட்ஜி உத்தியோகத்திற்கு தம் லாயக்கை ஸ்தாபித்திருக்கின்றார். மிகுந்த திறமையான ஜட்ஜி. சம்பூரணமான சட்ட ஞானமுடையவர், சிக்கலான வியாஜ்ஜியங்களை சீக்கிரத்தில் சிக்கறுக்க கூடிய புத்தி கூர்மை பொருந்தப்பெற்றவர். பொது ஜனங்களின் மதிப்பை பெற்றவர். இவ்வளவு யோக்கிதைகள் பொருந்தப்பெற்ற மிஸ்டர் நாயர் அவர்களின் உரிமையை லோக்கல் கவர்ன்மெண்டார் புறக்கணித்திருப்பது பொது ஜனங்களுக்குள் பெரும் மனப் பதைப்பை விளைவித்திருக்கிறது சென்னை மாகா ஜன சபையார் மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள் ஜட்ஜாக நியமிக்கப்பட வேண்டுமென்று இந்தியாமந்திரிக்குத்தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

MISCELLANEOUS SUITS.

சீவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்.

ஜட்ஜி :—சீப் ஜஸ்டிஸ்,

தாயாருக்கும் பெண்ணுக்கும் டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம்.

வாதி:—ரெங்கம்மாள்-மைனர் (கார்டியன் மந்திரம்-பார்த்தசாரதிசெட்டி)

பிரதிவாதி:—ஆதங்கி பெருந்தேவித்தாயாரம்மாள்.

கேசின் விபரம்:—வாதி, பிரதிவாதியின் சொந்த மைனர் குமாரத்தி. வாதியின் புருஷன் கார்டியனாகவும் அடுத்தசிநேகிதனாகவுமிருந்து இந்த வியாச்சியத்தைப் பிரதிவாதி பேரில் கொண்டு வந்திருக்கிறார். பிரதிவாதி, ஆதங்கி வரதப்பசெட்டியாரின் மனைவி. அவர் சென்ற ஆகஸ்ட்௴ இறந்து போய் விட்டார். அவர் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 வருமானம் வரக்கூடிய ரூ 1,30,000 ஸ்தாபர சங்கம சொத்துகள் வைத்துவிட்டுப்போனார்; அவருக்கு ஆண் சந்ததியில்லை. வாதிதான் ஒரே குமாரத்தி, அவர் இறந்துபோனவுடன் வாதிக்கு வார்சு செர்ட்டிபிக் கேட் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதியின் புருஷனாகிய மந்திரம் பாரத்தசாரதிசெட்டிஹைகோர்ட்டிற்குமனு செய்துகொண்டார். கோர்ட்டார் கொடுக்கவில்லை. அது முதல் தாவாச் சொத்துகள் பிரதிவாதியின் சுவாதீனத்திலும் அநுபவத்திலும் இருந்து வருகின்றன. ஆனால் பிரதிவாதி இது வரையில் வார்சு சர்ட்டிபிக்கேட்பெற்றுக்கொள்ள ஐக்கோர்ட்டாருக்கு மனு செயதுக்கொள்ளவில்லை.

பிரியாதின் சாராம்சம்:— பிரதிவாதிக் குப்பின் வார்சுக் கிரமப்படி தாவாச் சொத்துக்கள் வாதிக்குச் சேரவேண்டிய படியால் அந்தச்சொத்துக்களை வாதி அடையக் கூடாதென்கிற கெட்ட எண்ணத்துடன் பிரதிவாதி வரவேண்டிய பணங்களை எல்லாம் வசூல் செய்யாமலும், சில சொத்துக்களை ஈனக் கிரயத்திற்கு விற்று வருவதாலும், பிராமிசரி நோட்டுகளை காலாவதி தோஷத்திற் குள்ளாகும்படி செய்வதாலும், இன்னும் சொத்துக்களை பலவிதமாய்ப் பராதீனப்படுத்தி வருவதாலும், எஸ்டேட் நஷ்டமடைந்து வருகிறபடியால் இந்த எஸ்டேட்டிற்கு ஒரு ரிசீவர் ஏற்படுத்தி கணக்கெடுக்கும்படி செய்யவேண்டுமென்றும் பிரதிவாதி சொத்துக்களை விற்பனை முதலிய பராதீனங்கள் செய்யக் கூடாதென்றும் ஜீவதிசையிலிருக்கும் பரியந்தம் பிரதிவாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்பட்டு வரவேண்டுமென்றும் பிரியாதில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதிவாதி தம்முடைய அட்டர்ணிமிஸ்டர் அனசிங் காச்சாரியார் மூலமாய் தாக்கல் செய்த எழுத்து வாக்குமூலத்தின் சாராம்சம்:— "பிரதிவாதியின் புருஷன் ஜீவதிசையிலிருக்கும் போது ரொக்கப்பணம் கையிலில்லாமல் வீட்டுச் செலவுகளுக்குக் கடன் வாங்கிக்கொண்டு வந்தார். அவருக்கு ரொக்கப்பணம் கிடையாது. இருக்கிறதெல்லாம் ஸ்தாபரசங்கம சொத்துக்கள் தான். இந்த எஸ்டேட்டு, வாதியின் கார்டியனுடைய மானேஜ் மெண்டிலிருக்கும்போது அனேகமான அகிர்த்தியமான செய்கைகளால் எஸ்டேட்டை நஷ்டப்படும் படி செய்தார். ஷை கார்டியன்சிலருடன் சேர்ந்து கொண்டுபிரதிவாதியின்புருஷன்பிரக்ஞைபங்கமாயிருக்கும் போது ஒருஉயில்தயாரித்துஇந்தஎஸ்டேட்அவரைச்சேரவேண்டுமென்று ஹைகோர்ட்டில் வழக்காடினார். அந்தக்கேசை கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். இந்துக்களின் வழக்கத்திற்குவிரோதமாக வாதி புஷ்பிணியாவதற்கு முந்தி வாதி தம்முடையவீட்டிற்கு அனுப்பப்பட வேண்டுமென்றுபிரதிவாதியின் பேரில் ஹைகோர்ட்டில் வழக்குத்தொடுத்தார். அந்தக்கேசும் அவருக்குப் பிரதிகூலமாக முடிந்தது. அனேகரை ஏவிவிட்டு ஸ்மால்காஸ் கோர்ட்டில் பொய் பிரியாதுகள் பிரதிவாதியின் பேரில் கொண்டு வரும்படி செய்தார். அதனாலும் அனேக டிக்கிரிகள் ஏற்பட்டன. பிரதிவாதியின் பேரில் கார்டியன் இன்னும் சில கிரிமினல் கேசுகள் தொடுத்து அவைகளில் சிலவற்றில் அவரே தண்டனை அடைந்தார். ஆகவே இத்தியாதி காரணங்களால் அவரை முன்னிட்டே எஸ்டேட் கடனுக்குள்ளானது. இந்தச் செலவுகளுக்கு அப்போதைக்கப்போது பணம் பிரதிவாதியால் கடன் வாங்கப்பட்டது. அந்தக்கடன்களைத் தீர்க்கும் பொருட்டுச்சில வீடுகள் பிரதிவாதியால் விற்பனை செய்யப்பட்டன. இந்துலாப்பிரகாரம் ஒரு விதந்து, புருஷன்சொத்திற்கு வார்சு சர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ள கட்டுப்பட்டவளல்ல. வார்சு சர்ட்டிபிகேட் பெற்றுக் கொள்வதற்கு அதிகச் செலவு பிடிக்குமென்று நினைத்து பிரதிவாதி வார்சு செர்ட்டிபிக்கேட் பெற்றுக் கொள்ளமனுக் கொடுக்கவில்லை. அப்படியிருந்த போதிலும் எஸ்டேட்டிற்கு வரவேண்டிய பணங்கள் பிரதிவாதியால் விடாமல் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. இந்த எஸ்டேட்டு விஷயமாய் யாதொரு ஜவாப்பும் சொல்ல வாதிக்குப் பிரதிவாதி கட்டுப்பட்டவளல்ல. பிரதிவாதியின் புருஷன் இறந்து போகும் போது ஒரு ஸ்வீகார மெடுத்துக் கொள்ள பிரதிவாதிக்கு அதிகாரம் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள பிரதிவாதிக்கு உத்தேசமிருக்கிறது. வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வருவதற்கே நியாயமில்லை. பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கவேணுமென்கிற கெட்டெண்ணத்துடன் இந்த வியாஜ்ஜியம் வாதியால் கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருந்தது.

இந்த வியாஜ்ஜியம் 5 நாள் விசாரணை செய்யப்பட்டது.

தீர்ப்பு:—பிரதிவாதி சொத்துக்களைபராதீனஞ் செய்வதாக வாதி ருஜுப்படுத்தவில்லை. எஸ்டேட்டின் பேரில் ஏற்பட்டிருந்த டிக்கிரிக் கடன்களைத் தீர்ப்பதற்காகவும், கார்டியனால் கொண்டு வரப்பட்ட உயில் வியாஜ்ஜியச் செலவுகளுக்காகவும் சில ஸ்தாபர சொத்துக்கள் பிரதிவாதியால் விற்பனைசெய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கடன்களை எல்லாம் அடைப்பதற்கு எஸ்டேட்டில் ரொக்கம் கிடையாது. வரவேண்டிய பணத்தை வசூல் செய்யப்பிரதிவாதி அலக்ஷியஞ் செய்யவில்லை. ஒரு புத்திசாலித் தனமான ஸ்திரி எப்படி நடந்து கொண்டிருப்பாளோ அப்படியே பிரதிவாதியுஞ் செய்திருக்கிறார். ஆகையால் செலவுதொகையுடன் வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தச் செலவு தொகையை கார்டியன் கொடுக்க வேண்டும். அவரிடமிருந்து வசூல் செய்ய முடியாமற் போய் விட்டால் எஸ்டேட்டிலிருந்து செலுத்தப்படவேண்டும்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர்.

காணமற்போன பிராமிசரி நோட்டின்பேரில் தாவா.

கேசின்விபரம்:—திருநெல்வேலி ஜில்லாவில் லக்ஷ்மிநாராயண அய்யர் என்பவர் வாதிக்கு ரூபாய் 300க்கு பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்திருந்ததாகவும் பலமுறைகளில் பணம்கேட்டும் பிரதிவாதி கொடாமற்போனதால் திருநெல்வேலிசப்கோர்ட்டில் தாவாச்செய்ய வாதி பிராமிசரி நோட்

டை எடுத்துக்கொண்டு வந்ததாகவும் இடையில் வாதி தாம்பிரபரணிநதியில் ஸ்தானத்திற்குச் சென்றிருந்தபோது ஷை நோட்டுகாணாமற்போனதாகவும், ஜில்லாகெஜட்டில் பிரசுரித்து சப்கோர்ட்டில் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் தொடுத்தார்.

சப்கோர்ட்டார் ஜில்லா கெஜட்டு விளம்பரத்தையும், பிரதிவாதியின் சினேகிதன் ஒருவன் வாதிக்கு பிரஸ்தாப தாவாத்தொகையைக்குறித்து எழுதியகடிதத்தையும் போதுமான சாக்ஷியமாக வைத்துக்கொண்டு வாதிக்கு அனுகூலமாக தீர்ப்புகொடுத்தார்கள். பிரதிவாதி இந்தத்தீர்ப்புக்கு விரோதமாக ஹைகோர்ட்டில் சிவில்ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—இம்மாதிரிக் கேஸ்களில் பிராமிசரிநோட் காணாமற்போனதற்குப்பொருந்த சாக்ஷியங்களிருக்க வேண்டும். இந்தக்கேசில் பிராமிசரிநோட் காணாமற்போனதற்கு வாதியின் வாக்குமூலத்தைத்தவிர வேறுசாக்ஷியமில்லை. இந்த சாக்ஷியம் சட்டப்பிரகாரம் போதாது. ஆகையால் அசல்கோர்ட்டுத்தீர்ப்பு ரத்துசெய்யப்பட்டு பிரதிவாதிக்கு செலவுதொகையைச் செலுத்தும்படியாக தீர்ப்புச்சொல்லப்பட்டது.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

அப்பீல் கோர்ட்டார் அதிகாரம்.

கேசின் விபரம்:—கோயம்புத்தூரில் நாராயணசாமி நாயுடு என்பவன் வைப்பாட்டியாக வைத்திருந்தபெண் வேறொருவீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தாள். நாராயணசாமி நாயுடு அந்த வீட்டிற்குப்போய் கலகஞ்செய்தான். இதற்காக அவன் இ. பி. கோ 447, 352 பிரிவுகளின்படி குற்றஞ் சாட்டப்பட்டு சப்மேஜிஸ் டிரேட்டால் இரண்டு வாரங் கடுங்காவல் தண்டனைக் குட்படுத்தப்பட்டான். இந்தத்தீர்ப்பிற்கு விரோதமாக அவன் டிப்டிமாஜிஸ்டிரேட்டிற்கு அப்பீல் செய்துகொள்ளவே, அப்பீல் கோர்ட்டார் குற்றம் அற்பமாவிருக்கிறதென்றும் தண்டனை கடுமையாக விருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டுக் கீழ்க்கோர்ட்டுத் தண்டனையைமாற்றி கி. பு. கோ. 562வது பிரிவின்படி நல்நடத்தைக்காக ரூபாய் 50 ஜாமீன் கொடுக்கும்படியாக உத்திரவு செய்தார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட், உத்தியோக முறைப்படி தமக்குவந்த இக்கேசின் கட்டுகளைப் பார்வையிட்டதில் அப்பீல் கோர்ட்டாருக்கு கி. பு. கோ. 562வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அதிகாரமிலையாதென்று எண்ணி ஹைகோர்ட்டாருக்கு அறிவித்தார்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயம்:—இ. லா, ரி. 24 அல 306ல், கி. பு. கோ. 562வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அதிகாரம் அப்பீல் கோர்ட்டாருக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் நாங்களும் தீர்மானிக்கிறோம் என்று அபிப்பிராயங் கூறினார்கள்.

ஜட்ஜி:—சிப் ஜஸ்டிஸ்.

சாக்ஷிப் படியைப்பற்றிய தாவா.

கேசின் விபரம்:—கீழ்மதுரை சப்கோர்ட்டில் ஒரு நிறைவேற்று நடவடிக்கையில் சாக்ஷியம் கூறும்படியாக வாதி குண்ணகாடமட பண்டாரசந்நிதிக்கு சாக்ஷிசம்மன் அனுப்பினார். சம்மனுடன் அவருக்கு 25 ரூபாய் படிச்செலவும் அனுப்பினார். பண்டாரசந்நிதி சம்மனையும் ரூபாயையும் பெற்றுக்கொண்டார். ஆனால் சாக்ஷிசொல்ல கோர்ட்டிற்கு வரவில்லை. வாதி ஷை படிச் செலவுக்குக்கொடுத்த ரூபாய் 25ம் பண்டார சந்நிதியிடமிருந்து வரவேண்டுமென்று வியாஜ்ஜியஞ்செய்தார். சப்கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாக டிக்கிரி கொடுத்தார்கள். பண்டார சந்நிதி, ஹைகோர்ட்டில், இந்த டிக்கிரிக்கு விரோதமாக ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்; பிரதிவாதி தரப்பு வக்கீல், தம்முடைய கக்ஷிக்காரரை கோர்ட்டிற்கு வந்து சாக்ஷியம் சொல்ல வாரண்டு முதலிய முறைகளால் வாதி கட்டாயப்படுத்தலாமே தவிர, படிச்செலவை திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்பதற்கு வாதிக்கு யாதொரு சுதந்திரமும் இடையாதென்று வாதித்தார்.

தீர்ப்பு:— சாக்ஷிப்படி பெற்றுக்கொண்ட ஒருவர் சாக்ஷியம் கூற கோர்ட்டில் ஆஜராகாமற்போனால் அவரிடமிருந்து அப்படிச்செலவை வசூலிக்க, சாக்ஷிசம்மன் அனுப்பினவருக்கு சுதந்தரமிருக்கிறதென்று கோர்ட்டார் தீர்மானித்து மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம்,

திருவல்லிக்கேணி தேவஸ்தான தர்மகர்த்தா எலக்ஷன் தகரார்.

வாதிகள்:—கிருஷ்ணசாமி முதலியாரும் இன்னும் நான்கு பேர்களும்.

பிரதிவாதகள்:—தேவஸ்தான தர்மகர்த்தாக்கள்.

பிராதின் சாராம்சம்—வாதிகள் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி தேவாலயத்தின் ஆராதனைக்காரர்கள். அந்தக்கோவிலுக்கு 6 லக்ஷரூபாய் பொறுமான சொத்துக்களிருக்கின்றன. வருஷம் ஒன்றுக்கு ரூ 15, 000 வருமானம் வந்துகொண்டிருக்கிறது. 1891ம்ஹு ஹைகோர்ட்டார் ஒருடிக்கிரிபாஸ்செய்து அதில் தர்மகர்த்தாக்களை எலக்ஷன் செய்து கொள்வதற்கு சிலவிதிகள் ஏற்படுத்தி தர்மகர்த்தாக்களை எலக்ஷன் செய்ய வோட்டுக்கொடுப்பவர்கள் குறைந்தபக்ஷம் 6 மாதகாலமாகிலும் டிக்கிரியில் சொல்லபட்ட எல்லைக்குள் வாசஞ்செய்தவர் களாயிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 1904ம் ஹு பிப்ரவரிமீ தர்மக்கார்த்தாக்களில் ஒருவராகிய மிஸ்டர் வீரராகவாச்சாரியார் இறந்து போய்விட்டார். ஆகையால் ஒரு தர்மக்கர்த்தாஸ்தானம் காலியானது. அந்தஸ்தானத்தை நிறப்ப, மிஸ்டர் யம். ஒ. பாரதசாரதி அய்யங்கார், மிஸ்டர் யம். வீரராகவாச்சாரியார், காலஞ் சென்ற தர்மக்கர்த்தாவின் தமயனாரகிய மிஸ்டர். ராமானுஜாச்சாரியார் ஆகிய மூன்றுகாண்டிடேட்டுகள் முன்வந்தார்கள். சிலதினங்களுக்குப்பிறகு முதல் இரண்டுகாண்டிடேட்டுகளும் பின்வாங்கிக் கொண்டார்கள். ஆகவே எலக்ஷன் நடந்திருந்தால் மிஸ்டர். ராமானுஜாச்சாரியார் தர்மகர்த்தாவாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பார். ஆனால் பாக்கியிருந்த தர்மகர்த்தாக்களாகிய,, 1, 2, பிரதிவாதிகள் தங்களுக்கு வேண்டியவராயிருக்கிறவும் தேவாலயத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ15 சம்பளம் பெற்று அமீன்வேலை செய்து வந்த மிஸ்டர் M பார்த்தசாரதி அய்யங்காரை எலக்ஷன் செய்து கொண்டார்கள்:—இந்த எலக்ஷன், ஹைகோட்டார் கொடுத்திருக்கும் தீர்ப்புக்கு விரோதமாயிருப்பதாகவும், மோசடியாயும், அதிக்கிரமமானசெல்வாக்காலும், வஞ்சத்தாலும் செய்யப்பட்டிருக்கிறபடியால் அதை ரத்துச்செய்துவிடவேண்டுமென்றும் மூன்றுவதுபிரதிவாதி தேவாலய மானேஜ்மெண்டில் பிரவேசிக்ககூடாதென்று இன் ஜங்க்ஷன் ஆர்டர்பிறப்பிக்கும் படியாகவும் பிரியாதில் சொல்லப்பட்டிருக்கின்றது, பிரதிவாதிகள் சொல்லும் சுக்ஷி: வாதிகள் பிரியாதில் சொல்லியிருக்கும் சமாசாரங்களெல்லாம் பொய் என்றும் பிரியாதில்யாதொன்றும் விபரமாய்ச்சொல்லப்படாததால் தாங்கள் பதில்சொல்வதற்குக்கூடாமலிருக்கிறதென்றும் ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்தார்கள்.

இஷியூக்கள்:—30 இஷியூக்கள் ஏற்படுத்தப்பட்டன.

தீர்ப்பு:— பிராதில் அனேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை (1) எலக்ஷனில் சம்மந்தப்படக்கூடாத வர்களெல்லாம் கோவிலுக்குள் வந்து எலக்ஷனில் சம்மந்தப் பட்டார்கள். (2) வோட்டர்கள் ராமனுஜாச்சாரியாருக்கு வோட்டு கொடுப்பதை பிரதிவாதிகள் தடுத்தார்கள். (3) வோட்டர்க்ள் அடிக்கப்பட்டார்கள். தாறுமாறுமாய் நடத்தப்பட்டார்கள். (4) எழுதப்படிக்கத்தெரியாத வோட்டர்கள் கொடுத்த வோட்டுச் சீட்டில் பிரதிவாதிகள் மூன்றுவது பிரதிவாதியின் பெயரை எழுதினார்கள். (5) வோட்டர்கள், எலக்ஷன் காண்டிடேட்டுகளன்றி அனுமத்துப் பெயர்களை வோட்டுச் சீட்டில் எழுதும்படி தூண்டப்பட்டார்கள். (6) மைனர்கள் வோட்டு கொடுக்கும்படியாக விடப்பட்டார்கள்.

விசாரணையில் இவைகளில் ஒன்றுமினு ருஜுப்படவில்லை. வோட்டர் ஜாப்பிதா முன்னாடியே பகிரங்கமானவிடத்தில் போடப்படவில்லை என்று பிராதில் சொல்லப்பட்டது. ஆனால் எலெக்ஷன் நடந்த ஸ்தலத்தின் வாசற்படியில் அந்த ஜாப்பிதா போடப்பட்டிருந்ததாக ருஜுப்படுகிறது. பிரதிவாதிகள் கெட்ட எண்ணத்துடனும் மோசடியாயும் எலக்ஷன் நடத்தினார்கள் என்று பிராதில்சொல்லப்பட்டிருப்பதெல்லாம் ருஜுப்படவில்லை. ஆனால் அறியாத்தன்மையாலும் அஜாக்கிறதையாலும் எலக்ஷனை ஒழுங்கீனமாய் நடத்தியாருப்பதாகத் தெரிகிறது. எலக்ஷன்விஷயமாக ஹைகோர்ட்டார் முன் கொடுத்திருக்கிற டிக்கிரியின் பிரகாரம், எலக்ஷனிருந்தாலுஞ் சரி எலக்ஷனில்லாவிட்டாலுஞ் சரி ஒவ்வொரு வருஷமும் நவம்பர்மீ த்தில் எலக்ஷன் ஜாப்பித்தா புதிப்பிக்கப்பட வேண்டும். தர்மகர்த்தாஸ்தானம் 1904ம் ஹுத்தில் காலி செய்ப்யபட்டது. ஷை ஹைகோாட்டு டிக்கிரியின் படி உடனே எலக்ஷன் நடந்திருக்க வேண்டியது. அப்படி நடத்தப்படாமல் 1904ம் ஹு நவம்பர்மீ த்தி ல் வோட்டர் ஜாப்பிதாவைப் புதிப்பித்து 1905ம் ஹு ம் எலக்ஷன் நடத்தியிருக்கிறார்கள். இந்த ஒரு ஒழுங்கீனமான நடவடிக்கைக் குத்தான் பிரதிவாதிகள் உத்திரவாதிகள். ஆதலால் M. பார்த்தசாரதி அய்யங்கார தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டிருப்பது செல்லாது என்றும் மறுபடியும் எலக்ஷன் நடத்தப்பட வேண்டுமென்றும் உத்திரவு செய்யப்பட்டது. வாதிகள் பிரியாதில் அனாவசியமான சமாசாரங்களைச் சொல்லியிருந்தாலும் பிரதிவாதிகள் எலக்ஷன் நடத்தினதில் அஜாக்கிறதையாக விருந்ததாலும் அவரவர்கள் வியாஜ்ஜியச் செலவு அவரவர்களை பொறுத்துக்கொள்ளும் படி உத்திரவு செய்யப்பட்டது.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

அப்பிரக (Mica) வியாஜ்ஜியம்.

வாதி:— அங்கிலோ இந்தியன் டிரேடிங் கம்பெனி.
வாதிபிரதிவாதிகள்:— (1) அன்சூர் சுப்பா நாயுடு.
(2) கொண்டப்ப நாயுடு.

கேசின்விபரம்:—வாதிகள் சென்னையில் ஒரு வர்த்தகக் கம்பெனியார்: பிரதிவாதிகள் நெல்லூர் ஜில்லாவில் அப்பிரக வியாபாரிகள். வாதிகள் பிரதிவாதியிடமிருந்து அப்பிகாரம் வாங்கிவந்த வகையில் பிரதிவாதிகளுக்கு கொடுத்த அட்வான்சுகளால் ரூ 49,189-12-11ம் தாவா தேதிமுதல்100க்கு 9 வட்டியும் வாதிகளுக்குச் சேரவேண்டுமென்பது தாவா.

பிரதிவாதிகளின் எழுத்து வாக்குமூலம்:— தாவாத்தொகையைக்கொடுக்க சட்டுப்பட்டவர்களல்ல வென்றும், வாதிகளும் வாதிகளின் முதலாளிகளாகிய மெசர்ஸ் டியூரிங் அண்ட் பயிண்டலே கம்பெனியாரும் ஒப்பத்தந்தத்திற்கு விரோதமாக நடந்திருப்பதால் இப்போது அவர்கள் அட்வான்சுத்தொகையைக்கேட்க யாதொரு பாத்தியதையும் இடையாதென்றும் எழுத்து வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

அப்பிரக வியாபார ஒப்பந்தம்.

வாதி:— மெசர்ஸ்டியூரிங் ஆண்டு பயிண்டுலே கம்பெனியார்.

பிரதிவாதிகள்:— (1) அன்சூர் சுப்பாநாயுடு.
(2) ய. ப. கொண்டப்பநாயுடு.

கேசின் விபரம்:— வாதிகள் லண்டனில் ஒரு வர்த்தக கம்பெனியார். நெல்லூர் ஜில்லா கூடேர் தாலூக்கா தாலாபோடா அப்பிரக சுரங்கத்திற்குச்சொந்தக்காரர்கள். சிலவருஷங்களுக்குப்பிரதிவாதிகள் வாதிகளுக்கு அப்பிரகம் சப்ளை செய்வதாகவும் அப்படிச் செய்யத்தவறினால் பிரதிவாதிகள் வாதிகளுக்கு பத்துலக்ஷ ரூபாய் நஷ்டம் கொடுப்பதாகவும் இருவருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த ஒப்பந்தத்தை அனுசரித்து இப்போது பிரதிவாதிகள் அப்பிரகமாவது சப்ளை செய்யவேண்டும் அல்லது ஷைசொல்லப்பட்ட நஷ்டதொகையையாவது கொடுக்கவேண்டுமென்பது தாவா.

பிரதிவாதிகளின் எழுத்து வாக்குமூலம்:—ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் எந்த ஷரத்துக்கும் விரோதமாக பிரதிவாதிகள் நடக்கவில்லை என்றும், இந்த தாவாவைக்கொண்டு வருவதற்கு வாதிகளுக்கு யாதொரு காரணமும் இடையாதென்றும் யாதொரு நஷ்டத்தையும் கொடுக்கபிரதிவாதிகள் கட்டுப்பட்டவர்களல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஷியூக்கள்:— மூன்று இஷியூக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வியாஜ்ஜியம் விசாரனை செய்யப்பட்டு வருகின்றது.

ஜட்ஜி:—சிப் ஜஸ்டிஸ்.

லைசென்ஸ் வாங்காமல் குடிசை கட்டினகேஸ்.

மதுரையில் ராம நாதன் செட்டியார என்பவர் தமக்குப் சொந்தமான தோப்பில் முனிசிபாலிட்டியாரிடமிருந்து லைசென்ஸ் பெறாமல் சில குடிசைகள் கட்டினதாக ஜில்லா முனிசிபல் ஆகட் 180, 181, 101-3, 264 வது பிரிவுகளின் படி குற்றஞ் சாட்டப்பட்டு பென்சு மேஜஸ்டிராட்டாரால் விசாரணை செய்யப்பட்டார்.

டிபன்ஸ் தரப்பின் வாதம் என்ன வென்றல்:—180வது பிரிவு, குடிசைகள் கட்டுவதற்கு லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று கூறவில்லை என்றும் ஆதலால் ஷை குடிசைகள் கட்டுவதற்கு முனிசிபாலிட்டியாரிடமிருந்து லைசென்ஸ் வாங்க வேண்டியது ஆவசியமென்பதே.

பென்ச் மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் டிபன்சை ஏற்றுக் கொள்ளாமல் பிரதிவாதிக்கு ரூ 10 அபராதம் விதித்தார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாய் வாதி சப்டிவிஷனல் ஆபிசருக்கு அப்பீல் செய்தார். அப்பீல் கோர்ட்டார் முனிசி

பாலிட்டியாரிடமிருந்து லைசென்ஸ் வாங்காத அல்லது எழுத்து மூலியமாய் உத்திரவு பெருத குற்றத்தை கண்டிக்கும் பிரிவு 263 வதுபிரிவுஎன்று சொல்லி குற்ற ஸ்தாபனேயை 264 பிரிவி லிருந்து 263 வது பிரிவுக்குமாற்றி அசல்கோர்ட்டார் கொடுத்த அபராத தண்டனையை உறுதிசெய்தார்.

இந்த இரண்டு கோர்ட்டுகளின் தீர்ப்புக்கு விரோதமாய் பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார். பிரதிவாதி தரப்பில் வக்கீல் மிஸ்டர் M. சீனிவாச அய்யங்கார் ஆஜராஞர்.

தீர்ப்பு:— எந்தப் பிரிவின் பிரகாரம் குற்றஸ்தாபனே செய்து சிக்ஷை விதிக்கப்பட்டதோ அந்தப்பிரிவை அப்பில் கோர்ட்டார் மாற்றி அசல் கோர்ட்டு தண்டனையை உறுதிப்படுத்துவது சட்ட விரோதம். பிரதிவாதியை பிராசிக்யூட் செய்ய சேர்மேனுடைய உத்திரவையாவது அல்லது கௌன்சிலினுடைய உத்திரவையாவது பெற்றிருக்க வேண்டும். ஆதலால் கீழ் கோர்ட்டு தீர்மானங்கள் ரத்து செய்யப்பட்டன.

ஜட்ஜி.—ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம்.

ஜீவநாம்சதாவா.

வாதிகள்:— (1) ருக்மாபாய் அம்மாள்

(2) ஷை யாரின் குமாரத்தி.

பிரதிவாதி :—லாட் கிஷ்னதாஸ் பாலமுகந்தாஸ்

கேசின் விபரம்:— முதல்வாதி லாட் கிஷணதாஸின் விதந்து. இரண்டாவது வாதி மைனர். இரண்டு வாதிகளுக்கு ஜீவனும் சமும் முதல்வாதிக்குச் சொந்தமான நகைகளும் பிரதிவாதியிடமிருந்து வரவேண்டுமென்று தாவா.

பிரதிவாதியின் எழுத்து வாக்கு மூலம்:— முதல் வாதி தனக்குச் சொந்தமான நகையைப்பெற கொண்டுவந்திருக்கிற வியாஜ்ஜியத்தில் 2 வது வாதியைச்சேர்த்தது சட்டவிரோதம்

வாதிதரப்பில் ஆஜரான அட்வோகேட் ஜெனரல் பிரதிவாதியின் ஆக்ஷேபனையை ஒத்துக் கொண்டார். பிரியாதைதிருத்தி தாவா தாக்கல் செய்வதாகச்சொல்லி வாப்ஸ்பெற்றுக்கொண்டார்.

பிரதிவாதியின் செலவு தொகையைக் கட்டிக்கொடுக்கும்படி கோர்ட்டார் உத்திரவுசெய்தார்கள்.

தாய் குழந்தையை அனுதியாய்விட்டு விட்டகேஸ்.

தஞ்சாவூரில் 35 வயதுள்ள கமலம் என்னும் ஒரு ஸ்திரி தான் பெற்றசிசுவை கைசோர விட்டுவிடவேண்டு மென்று எண்ணி அதை ஒரு விடத்தில் போட்டு விட்டுப்போன குற்றத்திற்காக இ. பி கோ. 317-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்பட்டு தஞ்சாவூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணே செய்யப்பட்டு $2\frac{1}{2}$ வருஷம் கடினக்காவல் தண்டனே விதிக்கப்பட்டாள். இந்த கேசின் தஸ்தாவேஜிகளை அபிஷியல் துவாராக பரிசிலனே செய்த கிரௌன் பிராசிக்கி யூட்டர் தண்டனே கடிமையாயிருக்கிறதென்று ஐகோர்ட்டாருக்கு தெரிவித்துக்கொள்ள மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிசும் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரும் கூடின கோர்ட்டார் கீழ்க்கோர்ட் தஸ்தாவேஜிகளைப் பார்வையிட்டு $2\frac{1}{2}$ வருஷ கடினக்காவல் தண்டனேயை ஒரு வருஷ கடினக்காவல் தண்டனேயாக மாற்றியிருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ டேவிஸ்

மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

கி. பு. கோ 145 வது பிரிவின்படி கலெக்டர் செய்த உத்தரவை ரத்து செய்யும்படி

கிரிமினல்ரிவிஷன் மனு

மனுதார்:—கார்வெட்நகர் ராஜா.

எதிர்மனுதார். மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ்.

கேசின்விபரம்:—கோர்ட் ஆப்வார்ட்சார்மானேஜ்மெண்டிலிருந்த கார்வெட்நகர் ஜமீந்தாரி கவர்ன்மெண்டார் உத்திரவின்பேரில் கார்வெட் நகர ராஜாவினிடம் சென்றவரும் செப்டம்பர்மீ ஒப்பு விக்கப்பட்டது. அந்த ஜமீன்தாரியில் நாராயணவனம் என்கிற தாலூக்கா மிஸ்டர் லார்ட் ரோவிந்ததாஸ்னிடம் ஒத்தி பெந்தகம் வைக்கப்பட்டிருந்தபடியால் கோர்ட் ஆப்வார்ட் சார் உத்திரவின் பேரில் செப்டம்பர்மீ 27ம்டை ரெகுலேஷன் கலெக்டர் அந்ததாலூக்காவை ஒத்தி பெந்தகம் பெற்றவரிடம் ஒப்புவித்தாரென்றும் பெற்றுக்கொண்டவர் அதே தினம் ராஜா அந்தத்தாலூக்கா தமக்கு ஸ்வாதீனப்பட்டுப் போய்விட்டதென்றும், குடிகள் தம்மிடம் தீர்வை, கிஸ்தி, வரி முதலிய கட்டணங்களைச் செலுத்தவேண்டு மென்றும் உத்தியோகஸ்தர்கள் வசூல்தம்மிடம் செலுத்திக்கணக்கு கொடுக்க வேண்டுமென்றும்ஒத்தி பெந்தகக்காரரிடம் செலுத்தக்கூடாதென்றும் குடிகளுக்கு நோட்டீஸ் கொடுத்தார். இந்த சமாச்சாரத்தை ரெகுலேஷன் கலெக்ட்டர் கேள்விப்பட்டவுடன், பிரஸ்தாப தாலுக்கா ஒத்தி பெந்தக்காரர் வசம் ஒப்பிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவரிடமே குடிகள் தீர்வை வரி முதலியவைகளைச்செலுத்தவேண்டுமென்றும் கிராம உத்யோகஸ்தர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிஞர், அதற்குள்ளாக, குடிகள் தம்மிடமே வரிகளைச் செலுத்த வேண்டுமென்று அவர்களிடமிருந்து ராஜா முச்சிலிக்கை பெற்றுக்கொண்டது மன்றி தாலூக்கா! ஆபீசும் எற்படுத்திவிட்டார். ஒத்தி பெந்தகம் பெற்றவரும் அதே மாதிரி முச்சிலிக்கை பெற்றிருந்தும், குடிகள் இவரிடம் கட்டணங்களைச் செலுத்தமாட்டோ மென்று சொல்லிவிட்டார்கள். இதன் பேரில் பெந்தகம் பெற்றவர் கி. பு. கோ 145-வது பிரிவின்படி, இந்தத் தாலூக்கா தம்முடைய ஸ்வாதீனத்திலிருக்கிற தென்று கூறும்படியும் அந்த சுதந்தரத்திலிருந்து தாம் சட்ட முறைப்படி விலக்கப் படும் பரியந்தம் அதில் யாதொரு கலாபனேயும் நடக்கக் கூடாதென்று உத்திரவு பிறப்பிக்கவும் கலெக்ட்டருக்கு மனுச்செய்து கொண்டார், இந்த மனுவுடன் கூட ஒரு அபிடவிட்டும் தாக்கல் செய்யப்பட்டு பெந்தகம் பெற்றுக்கொண்டவரின் தாசில்தார் பிரஸ்தாபத்தாலூக்காவிலுள்ள கிராமங்களுக்கு தாம் பணம் வசூல் செய்யப் போயிருந்த போது குடிகள் பணம் வசூல் செய்யக்கூடாதென்று தம்மைத்தடுத்த தாகவும் பிரமாண வாக்கு மூலம் எழுதிவைத்தார். கலெக்ட்டர் இந்தத் தாலூக்காவில் கலாபனே நடக்கக்கூடியதாய்த் தானிருக்கிற தென்று திருப்திகரமாய் அறிந்துகொண்டு, பிரஸ்தாபத்தாலூக்காவில் ஒவ்வொரு கக்ஷிக்காரருக்கு மிருக்கும் பாத்தியதையைத் தெரியப்படுத்தும்படி இரு கக்ஷிக்காரர்களுக்கும் மார்ச்சுமீ 9ம் டை உத்திரவு அனுப்பிஞர். ராஜா, தமக்கு இந்தத் தாலூக்கா சுவாதீனப்பட்டிருக்கிற தென்றும், யாதொரு கலாபனேயும் நடக்க எதுவில்லை என்றும் சாக்ஷிகள் மூலியமாய் ருஜுப்படுத்துவதாகவும் சொன்ஞர். ராஜா கொடுத்திருக்கும் நோட்டீஸ் ராஜாவால் ரத்து செய்யப்படும். பரியந்தம் கலகம் நடக்கிறத

ற்கு போதுமான எதுக்களிருக்கிற தென்று அபிப்பிராயப்பட்டு, ராஜா விடுவதாய்ச் சொன்ன சாக்ஷிகளை விசாரணே செய்யவில்லை. ஆகவே, ஜில்லா மேஜிஸ்டிரேட் தாவத் தாலூக்கா பெந்தகம்பெற்றவர் ஸ்வாதீனத்திலிருக்கிறதென்று முடிவு செய்து கூறிஞர்.

இந்த உத்திரவுக்கு விரோதமாக, ராஜா ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனு கொடுத்தார்.

லாயர்கள்:—மனுதார் தரப்பிற்கு அட்வோக்கேட்ஜெனரல் ஆஜராஞர். எதிர் மனுதார் தரப்பில் வக்கீல் மிஸ்டர் பீ. ஆர். சுந்திரமய்யர்.

அட்வோகேட் ஜெனரல் கூறின வாதம்:—இம்மாதிரி உத்திரவைச் செய்ய ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரம் கிடையாது. கலாபனே நடப்பதற்கு எதுக்களிருந்ததாகத் தெரியவில்லை. கலாபனே நடக்கக்கூடிய தாயிருக்கிறதென்று போலீசார் புகார் செய்யவில்லை. இந்தத் தாலூக்காவில் 230 கிராமங்களிருக்கின்றன. அவைகளில் எந்தக் கிராமத்தில் கலாபனே உண்டாவதற்கு அறிகுறிகள் தோன்றின வென்பதற்கு சாக்ஷிய மில்லை. கி. பு. கோ. வில் சொல்லப்பட்டிருக்கும் “Subject Matter” என்கிற பதங்களை இ. லா. ரி. 3 கல். 68 பக்கப்படி, உள்ளடங்கியிருக்கும் எல்லா பாகத்தையும் (Component Parts) குறிக்கிறதென்றுஞ் சொன்ஞர்.

டேவிஸ், ஜ:—அப்படியாஞல் எந்தெந்த கிராமம் கல்லல்பட்டிருக்கிறதென்று ஒவ்வொரு கிராமமாய் கலெக்ட்டர் விசாரணே செய்து உத்திரவு செய்ய ஒருவருஷம் செல்லும். இந்தக்கேசில் மாஜிஸ்டிரெட் அப்பேற்கொத்த உத்திரவு செய்திருக்கக்கூடாது.

மிஸ்டர் பி. ஆர். சுந்திரமய்யர்:— இப்பேற்கொத்த உத்திரவு கலெக்ட்டர் பிறப்பிக்க, சில கிராமங்களில் கலகம் நடக்க எதுவிருக்கிறதென்று திருப்திகரமாய் அறிந்துகொண்டால் போதுமானது. கலகம்நடப்பதற்கு எதுவில்லை என்று ராஜா விடுவதாகச்சொன்ன சாக்ஷிகளை கலெக்ட்டர் விசாரணே செய்யாதது வாஸ்தவம்தான்.

டேவிஸ், ஜ:—இரு கக்ஷிக்காரர்களும் அந்தஸ்துடையவர்கள். ஜெயிலுக்குப்போக விரும்பமாட்டார்கள். ஆதலால் கலகம் நடப்பதற்கு எது விருந்திருக்கமாட்டாது.

அட்வோகேட் ஜெனரல்:— கோர்ட் ஆப்வார்ட்சார் பெந்தகம் பெற்றவர்களுக்கு இந்தத் தாலூக்காவிலிருக்கும் சுதந்தரத்தை ஒப்புக்கொண்டிருந்த போதிலும் எங்களை இந்தத்தாலூக்காவிலிருந்து விலக்க மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்தது நியாயமல்ல.

மிஸ்டர் பி. ஆர். சுந்திரமய்யர்— மாஜிஸ்டிரேட் அம்மாதிரியாக உத்திரவுசெய்தது நியாயந்தான். இ.லா.ரி. 16கல் 513ல் சொல்லப்பட்டிருக்கும் கேசில் சில கிராம விஷயமாக தகரார் எற்பட்டு கலகம் நடக்கும்போல் காணப்பட்டபோது கலெக்ட்டர் இம்மாதிரி உத்திரவு செய்திருக்கிருர்.

டேவிஸ், ஜ:—கல்கத்தாக் கேசுகளை எடுத்துப்பேசி நாம் சட்டம் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை. இந்த ஹைக்கோர்ட்டிலாவது பம்பாய் ஹைக்கோர்ட்டிலாவது இம்மாதிரி கேசுகள் நடந்திருக்கின்றனவா?

மிஸ்டர் பி. ஆர். சுந்திரமய்யர்:— பம்பாயில் இப்பேற்கொத்த எஸ்டேட்டுகளில்லை. சென்னேயிலும் இம்மாதிரி 230 கிராமங்களடங்கிய எஸ்டேட் விஷயமாய் இம்மாதிரியான கேஸ் நடந்ததில்லை.

டேவிஸ், ஜ:—ஒரே கேசில், 230 கிராமங்களில் நடந்த தகராரை விசாரணே செய்ய மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரம் கிடையாது.

மிஸ்டர் பீ. ஆர். சுந்திரமய்யர்;— கி. பு. கோ. 145 வது. பிரிவில் தகராருக்குட்பட்ட ஸ்தலத்தின் விஸ்தீரணம் இவ்வளவு தானிருக்கவேண்டு மென்று குறிப்பிடப்படவில்லை.

டேவிஸ், ஜ:— ஆஞல் மேஜிஸ்டிரேட்டின் அதிகாரத்திற்கு எல்லை எற்பட்டிருக்கிறது. இந்தக் கேசில் ஒவ்வொரு கிராமத்தையும் தனித்தனியே விசாரிக்கவேண்டும்.

தீர்ப்பு:— இந்தக் கேசை விசாரணே செய்துவிட்டு கோர்ட்டார் உடனே தீர்ப்பு சொல்லவில்லை. சென்ற ஜூலைமீ 30ம் டை தான் தீர்ப்புச் சொன்ஞர்கள். ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் தீர்ப்பின் சாராம்சம்:— கி. பு. கோ. 145-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்ய போலீசார் ரிப்போர்ட்டைக் கொண்டாவது கலகம் நடப்பதற்கு அறிகுறிகளிருக்கின்றன வென்று மாஜிஸ்டிரேட் தம்மை திருப்தி செய்து கொண்டிருக்க வேண்டும்; ஜில்லா மாஜிஸ்டிரேட் அப்படி போலீஸ் சூப்பிரண்டெண்டிற்கு எழுதிக் கலகம் நடப்பதற்கு எதுவிருக்கிறதா இல்லையா என்று விசாரிக்கவில்லை.

கலகம் நடப்பதற்கு எதுவிருக்கிறதென்று பிரமாணவாக்குமூலம் கொடுத்த தெல்லாம் கூடி ஒருவர். அதாவது சாவுக்கார் லாட் கோவிந்தாசின் டிப்டி தாசில்தார். அவர் மாஜிஸ்டிரேட் கி. பு. கோ. 145 பிரிவின்படி உத்திரவு செய்யவேண்டுமென்கிற விருப்பம்கொண்டவர். மாஜிஸ்டிரேட், கி. பு. கோ 145 பிரிவின்படி உத்திரவு பண்ணுவதற்குமுன் பிரஸ்தாபக்கேசில் பற்றற்ற சாக்ஷியத்தைப்பெற்றிருக்கவேண்டும். ராஜா விடுவதாகச்சொன்ன சாக்ஷிகளை விசாரித்திருக்கவேண்டும். ஆகவே இப்போது டிஸ்டிரிக்ட்மாஜிட்ஸ்ரேட்பிறப்பித்திருக்கும் ஆர்டர் அதிகாரவரம்பு கடந்தஆர்டராகவிருப்பதால் அதை ரத்து செய்கிரேம்.

ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிசின் தீர்ப்பு:—ஜில்லா மாஜிஸ்டிரேட், 230கிராமத்துக் கலாபனே விஷயங்களைதனித்தனியேவிசாரிக்காமல் ஒரேகேசில் விசாரித்ததில் சட்டத்திற்கு மாறுதலாக நடத்திருக்கிருர்.

டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஒவ்வொரு கிராமத்தையும் பிரத்தியேகமாக எடுத்துக் கொண்டு அது எந்தக்கக்ஷிக்காரருடைய சுவாதீனத்திலிருக்கிறதென்றும் அதில் கலகம் நடக்க எதுவிருக்கிறதா வென்றும் விசாரணே செய்து தீர்மானித்திருக்கவேண்டும். டிஸ்டிரிக் மாஜிஸ்டிரேட் கேசை அவசரத்தில் பைசல் செய்து விட்டார். ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் சொன்ன தீர்ப்பை ஒத்துக்கொள்ளுகிறேன்.

——o——

ஜட்ஜி:—சீப் ஜஸ்டிஸ்.

சிருஷ்டனே செய்யப்பட்ட தஸ்தாவேஜி கேஸ்.

வாதி:—செங்கோதக்கவுண்டன்.

பிரதிவாதிகள்:—கலியாணமுதலி முதலிய இன்னும் மூவர்களும்.

கேசின் விபரம்.

சேலம் ஜில்லாவில் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் பேருக்கு வாதி ரூ 500க்கு எழுதிகொடுத்ததுபோல் ஒரு கடன் பத்திரம் எழுதி 2வது பிரதிவாதி அதில் வாதி கையெழுத்து மாதிரி சிருஷ்டனே செய்து போட்டதாகவும், 1, 3, பிரதிவாதிகள் இந்தக் காரியத்தில் வாதிக்கு உடந்தையாகயிருந்து ஷை சிருஷ்டனே பத்திரத்தில் மேலொப்பம் போட்டதாகவும், நான்காவது பிரதிவாதி ஷை சிருஷ்டனேப் பத்திரத்தில் சாக்ஷி கையெழுத்து போட்டதாகவும், நாட்டுக்கோட்டைச் செட்டியார் 6 நாள் சென்று வாதியின்

யோக்கியதா பக்ஷங்களைப்பற்றி விசாரிக்கும்போது வாதிக்கு இது சமாசாரம் தெரிந்து இரண்டாவது பிரதிவாதியை போர்ஜரி என்கிற சிருஷ்டனை குற்றத்திற்கும் மற்ற பிரதிவாதிகளை உடைந்தைக் குற்றத்திற்கும் குற்றஞ் சாட்ட, இந்தக்கேஸ்சேலம் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு 2, 3, பிரதிவாதிகளுக்கு 4 வருஷக் கடினக் காவல் தண்டனையும், 4 வது பிரதிவாதிக்கு ஒரு வருஷக் கடினக் காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாய் பிரதிவாதிகள் ஹைக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். அப்பீலில் இவர்கள் தரப்பிற்கு ஆஜரான ஹைக்கோர்ட் வக்கீல் மிஸ்டர் சிவசாமி அய்யர் அவர்கள் தஸ்தாவேஜி சிருஷ்டனை செய்யப்பட்ட தென்பதை வாதி ருஜூப்படுத்தவில்லை என்றும் 1, 2, பிரதிவாதிகள் வாதிக்கு விரோதமாய் பிரதிவாதிக்கு உடைந்தையாக யிருக்க யாதொருகாரணத்தையும் காணுமென்றும், 4வது பிரதிவாதி, சாக்ஷிகையெழுத்து போட்டதினுல் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களும் அதைச் சேர்ந்த மற்ற சமாசாரங்களும் அவருக்குத் தெரிந்திருக்கு மென்றும் சட்டபடி நினைக்கக் கூடாதென்றும் வாதித்தார்.

தீர்ப்பு:—வாதி கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு பிறகு தான் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொல்லி பிரதிவாதிகளின் பேரில் குற்றஞ் சாட்ட யாதொரு காரணத்தையுங் காணும். ஆகையால் கீழ்க் கோர்ட்டு தீர்மானத்தில் பிரவேசிப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை. ஆனல் 1, 3, பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் 4 வருஷதண்டனை கடுமையான தாயிருக்கிறபடியால், 4 வருஷத்தை மூன்று வருஷ தண்டனையாக மாற்றப்பட்டது.

நான்காவது பிரதிவாதி சாக்ஷிக் கையெழுத்துமட்டிலும் போட்டதாக ருஜூப்படுகிறதே ஒழிய மற்றபடி இந்த நடவடிக்கைகளில் எதிலும் சம்பந்தப்பட்டதாக ருஜூவாகவில்லை. ஆகையால் 4 வது பிரதிவாதியை உடந்தைக்குற்றத்திற்கு உட்படுத்தக்கூடாமலிருக்கிறபடியால் விடுவிக்கும்படி உத்திரவு செய்யப்பட்டது.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்,
ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர்.

பொய் சாக்ஷியம் சிருஷ்டனை செய்ததாக கொண்டுவந்த கேஸ்.

அப்பீல் வாதிகள்:—நரசிம்ம பத்தாவும் இன்னும் நால்வர்களும்.

அப்பீல் பிரதிவாதி:—சுப்பராயசெட்டி

கேசின் விபரம்:— 1, 2, 3, 5, அப்பீல்வாதிகளுக்கும் அப்பீல் பிரதிவாதிக்கும் வெகு காலமாய் விரோதம். அப்பீல் பிரதிவாதியை துன்புறுத்த வேண்டுமென்கிற நோக்கத்துடன் மேற்சொல்லப்பட்ட 1, 2, 3, 5 அப்பீல் வாதிகள் தகரப்பெட்டி ஒன்று தயார் செய்து அதை நான்காவது அப்பீல் வாதியிடம் கொடுத்து அப்பீல் பிரதிவாதியிடம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அந்தப்பெட்டியின்மேல்அறையில் சில மருந்தும், கீழ் அறையில் கஞ்சாவும், சில பழைய தபாலாபீஸ் சீல்களும், ஒரு டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட் சீல்களும் வைக்கப்பட்டிருந்தன. அப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா சட்ட விரோதமான முறையால் செய்யப்பட்ட கஞ்சாவான படியால் ஆப்காரி இலாக்கா போலீசார் அப்பீல் பிரதிவாதியை அரஸ்டு செய்து பிராசிக்கியூட் செய்தார்கள். இந்தக்கேசை விசாரித்த மாஜிஸ்டிரேட் கேசைத்தள்ளி விட்டு, பொய்சாக்ஷி சிருஷ்டனை செய்த குற்றத்திற்காக அப்பீல் வாதிகளைப் பிராசிக்கியூட் செய்யும் படியாக உத்திரவு செய்தார்.

கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பு:— இந்த பொய்சாக்ஷி சிருஷ்டனைக் குற்றக்கேஸ் தென்கன்னடம் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு 1, 2, 3, 5 அப்பீல் வாதிகளுக்கு நான்கு வருஷ கடுங்காவல் தண்டனையும், 4-வது அப்பீல் வாதிக்கு 6 மாத கடுங்காவல் தண்டனையும், விதிக்கப்பட்டது.

அப்பீல் — தெண்டனை அடைந்தவர்கள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:— அப்பீல் வாதிகளின் கக்ஷிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் ஜான் ஆடம், கே. யன். அய்யா, மிஸ்டர் சிவராமகிருஷ்ண அய்யர் ஆகிய இந்த லாயர்கள் ஆஜரானுர்கள். அப்பீல் பிரதிவாதி தரப்பில் இக்கக் கேசிற்கு உள்ளபடி அப்பீல் பிரவாதி கவர்ன்மெண்டா ரானபடியால் பப்ளிக் பிராசிக்கியூட்டர் ஆஜராகவேண்டியது. ஆதலால் அவருக்குப்பதிலா[க] பாரிஸ்டர் மிஸ்டர் சி. யம். நேப்பியர் ஆஜரானுர்.

அப்பீல் வாதிகளின் லாயர்கள் கூறியவாதம்:—பிராசி[க்] யூஷன் தரப்பார் விட்ட சாக்ஷியமெல்லாம் பொய் சாக்ஷியமென்றும் அசல் பிரதிவாதியிடம் சட்ட விரோத முறையால் செய்யப்பட்ட கஞ்சா யிருந்ததாக கண்டு பிடிக்கப்பட்டபடியால், அவன் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், இப்படி தண்டனை அடைவதினின்று தன்னை தப்பிக்கொள்ளும் பொருட்டு போலீசாரையும் கிராமத்தலைமை அதிகாரியையும் கைக்குள் போட்டுக்கொண்டு அப்பீல் வாதிகளின் பேரில் பிரஸ்தாபக்கேஸ் சிருஷ்டித்துக் கொண்டு வரப்பட்டிருக்கிற தென்றும், 4-வது அப்பீல் வாதிக்கு விரோதமாகச் சொல்லப்பட்டிருக்கும் சாக்ஷியம் உபயோகமற்ற தென்றும் மற்ற அப்பீல் வாதிகள் பேரிலும் யாதொரு சாக்ஷியமும் இடையாதென்றும் வாதித்தார்கள்.

அப்பீல் கோர்ட்டார் தீர்மானம்:— அப்பீல் வாதிகளின் வக்கீல்கள் எடுத்து வாதித்ததை கோர்ட்டார் ஒப்புக்கொண்[டு] கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை மாற்றி அப்பீல் வாதிகளை உடனே விடுவிக்கும் படி தீர்ப்பு செய்தார்கள்.

—o—

ஜட்கஜிள்:—ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர்
ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சன்.

மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது.

கைதி:—பாசப்பா.

கேசின்விபரம்:—கைதி ஒரு வருஷகாலமாக ஒரு வை[ப்]பாட்டியை வைத்திருந்தான். சென்ற எப்பிரல்மீ 8[ம] இரவு அவள் வீட்டிலில்லை. தேடிக்கொண்டு போகும் போது அவளை ஒருகாலி வீட்டில் கண்டான். அப்போதுவே[று ஒ]ருவருடன் கூடியிருந்தாள். அவன் கைதியைக்கண்டவுட[ன்] ஓடிப்போய்விட்டான். சிலநேரஞ்சென்று அவளைக் கைதி[அழை]த்து வந்து திண்ணையில் உட்காரவைத்து பேசிக்கொண்டி[ரு]ந்தான். இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கையி[ல்] அவள் அயர்ந்து நித்திரைசெய்ய கைதி ஒரு கோடாரியை கொண்டு அடித்து அவள்தலையில் ஒரு பெரிய கல்லைத்[தூ]க்கிபோட்டுக் கொன்றுவிட்டான். அந்தக்கேஸ் பல்லா[ரி] செஷன் கோர்ட்டார் விசாரணைக்கு வந்து கைதி தூக்கு த[ண்ட]னை விதிக்கப்பட்டான். கோர்ட்டார் தீர்ப்பளிக்[கும்]

போது பின்வருமாறு சொன்னுர்கள்:—கைதி மூடத்தனமான ஆத்திரத்தால் தூண்டப்பட்டு இந்த கொலைபுரிந்திருக்கிருன். மிகவும் கொரேமான கொலை. கொலைக் குற்றத்தைத்தணிக்கக்கூடிய யாதொருவிஷயமும் இந்தக்கேசில் காணப்படவில்லை."

வாதிமரணதண்டனைவிதிக்கப்பட்டபடியால் அத்தண்டனையை உறுதி செய்யும் பொருட்டு கோர்டார் ஐக்கோர்ட்டாருக்கு இந்தக்கேசை அனுப்பினுர்கள்.

ஹைக்கோர்டார் தீர்ப்பு:—அசல் கோர்ட்டு தண்டனை உறுதி செய்யப்பட்டது.

—o—

கிரிமினல் ரிவிஷன் மனு
ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்,
ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர்.

"பப்ளிக் சேர்வேன்ட்" என்கிற கவர்ன்மேன்டு உத்தியோகஸ்தரின் உத்திரவை உல்லங்கனஞ் செய்த குற்றக்கேஸ்.

மனுதார்கள் (1) அங்கமுத்துப்பிள்ளை.
(2) பெரியசாமி பிள்ளை.

கேசின் விபரம்:— மனுதார்கள் இருவரும் நீலகிரி ஜில்லா கூனூரில் வசித்து வருகிருர்கள். அங்கமுத்துப்பிள்ளை 1905ம்ளூ அக்டோபர்மீ 11உ முதல் கூனூரில் ஒரு வீட்டில் வசித்து வருகிருர். அதேமீ 13ம்உ அந்த வீட்டிற்குச் சமீபத்தில் ஒருவருக்கு பிளேக் நோய் கண்டது. ஆகவே 15உ கூனூர் ஸ்பெஷல் மெடிக்கல் ஆபிசர், வீட்டைக் காலிசெய்யும்படியாக அங்கமுத்துப்பிள்ளைக்கு உத்திரவு செய்தார். அவர் அந்த உத்திரவின்படி வீட்டைக் காலி செய்யவில்லை. பெரியசாமி பிள்ளை மெடிக்கலாபிசர் உத்திரவின்படி வீட்டைச் காலிசெய்யவேண்டாமென்று அங்கமுத்துப்பிள்ளையைத் தூண்டிவிட்டார். ஆகவே அங்கமுத்துப்பிள்ளை இ. பி. கோ. 188 பிரிவின்படி குற்றஞ் செய்ததாகவும் பெரியசாமிபிள்ளை இ. பி. கோ. 189 வது பிரிவின்படி குற்றஞ் செய்ததாகவும் பிராசிக்யூட் செய்யப்பட்டார்கள். இந்தக் கேசை விசாரணை செய்த கூனூர் சப்மேஜிஸ்டிரேட் அங்கமுத்துப்பிள்ளைக்கு ஒரு மாத சாதாரண தண்டனையும், ரூ 25 அபராதமும் பெரியசாமிப்பிள்ளைக்கு ரூ 50 அபராதமும் விதித்தார். தண்டனை அடைந்தவர்கள் எட் அசிஸ்டன்ட் மேஜிஸ்டிரேட்டிற்கு அப்பீல் செய்துகொள்ளவே அவர் கீழ்கோர்ட்டு தீர்மானத்தை உறுதி செய்தார். ஆதலால் இவர்கள் இருவரும் தனித்தனியே ஹைக்கோர்ட்டிற்குரிவிஷன் மனுச்செய்துகொண்டார்கள்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு:—வீட்டைக்காலிசெய்ய உத்திரவு செய்வதற்கு மெடிகல் ஆபிசர், முதலில், கலெக்டருடைய அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும், அப்படிச் செய்யாததால், தண்டனையை ரத்து செய்து இருவரையும் விடுதலை செய்யும்படி தீர்மானஞ் செய்கிறேம் என்று தீர்ப்பு சொன்னுர்கள்.

—o—

எழும்பூர் போலிஸ் கோர்ட்.
பிரசிடேன்சி மாஜிஸ்டிரேட்,
"மிஸ்டர் பேர்ட்."

வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை.

வாதி:—மெசர்ஸ் சிம்சன் கம்பெனியார்.

எதிரி:—சொக்கலிக்க முதலி.

கேசின் விபரம்:— வாதிகள் சென்னையில் வண்டி செய்யும் கம்பெனியார். எதிரி அக்கம்பெனியின் குமஸ்தா. இவர்களுக்கு பிரதேசத்திலிருந்து சில வண்டி அச்சுகள் சீக்கஸ்டம் ஆபீசில் வந்திறங்கியிருந்தன. இவைகளை கட்டணம் செலுத்தி எடுத்து வரும்படியாக மூன்று தடவைகளில் கம்பெனியார் மூன்று செக்குகள் எதிரியினிடம் கொடுத்திருந்தார்கள். மூன்று செக்குகளின் மொத்த ரூபாய் 81-4-0 இந்தக் செக்குகளை எதிரி சார்ட்டர்ட் பாங்கியில் செலாமணி செய்து பணத்தை தன் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டான். வண்டி அச்சுகளை எடுத்துக் கொண்டுவரவில்லை. இந்தக் குற்றத்திற்காக கோர்ட்டார் அவனுக்கு நான்கு மாதக் கடினக்காவல் விதித்தார்கள். விதிக்கும் போது கோர்ட்டார் பின்வருமாறு சொன்னுர்கள்:—

குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்கிருன். வாதிகள் சென்ற வருஷம் நவம்பர்மீ 3ம்உ எந்த சாமான்களை எடுத்து வரும்படி குற்றவாளியிடம் பணம் கொடுத்தார்களோ அந்த சாமான்கள் இன்னும் சீக்கஸ்டம் ஆபீசிலிருக்கின்றன. இப்படி சாமான்கள் அவ்விடத்திலிருப்பது எதிரியே பிப்ரவரிமீ 16ம் உ எழுதி தெரிவிக்கும் பரியந்தம் வாதிகளுக்குத் தெரியாது. வாதிகள் கொஞ்சமேனும் ஜாக்கிரதையாக விருந்திருந்தால் முதல் தடவை கொடுத்த செக்கிற்கு சாமான் வராமல் போனதைக்கண்டு பிடித்திருப்பார்கள், எதிரி மறுபடி குற்றஞ்செய்ய இடமில்லாமிலிருந்திருக்கும். வாதிகளின் அஜாக்கிரதையே எதிரியை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது; வாதிகள் ஜாக்கிரதையாகயிருந்ததாகதெரியவந்திருந்தால் எதிரிக்கு இதை விட அதிகக் கடுமையான தண்டனை விதித்திருப்பேன்."

—o—

கோரேர் ரெயில்வே அபாயக்கேஸ்.

மதிராஸ் இருப்புப்பாதையில் கோடூர் உலவம்பாடு ஆகிய இந்த இருஸ்டேஷன்களுக்குமத்தியில் பம்பாய் மெயில் வண்டி சாமான்வண்டிபேரில் மோதியதால் ரூ50 ஆயிரம் பொறுமான முள்ள சாமான்கள் நஷ்டமாய்ப்போனதுமன்றி 5மனிதர்களும் உயிர் இழந்தார்கள். ஆதலால் கோடூர் ரெயில்வே ஸ்டேஷன் அசிஸ்டென்ட் ஸ்டேஷன் மாஸ்டர் மிஸ்டர் அச்சுத சேனே என்பவர் பேரிலும், சாமான்வண்டி சிப்கார்டுபேரிலும், ரெயில்வே சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யாமல் அலக்ஷியமாயிருந்தார்கள் என்கிற குற்றஞ் சாட்டப்பட்டு சுமார் இரண்டுமாதகாலமாய் ஜாயின்ட் மாஜிஸ்டிரெட் மிஸ்டர் கோல்ரிட்ஜ் அவர்களால் விசாரணை செய்யப்பட்டார்கள். கோர்ட்டார் ஜுலைமீ 30உ பின்வருமாறுதீர்ப்பு சொன்னுர்கள்:—

சீப் கார்ட்பிர்ன்டிஸி கேஸ்.

அபாயவிதிகளை அனுசரித்து இந்தக் குற்றவாளி வண்டியை முன்பக்கமாவது பின்பக்கமாவது காப்பாற்ற யாதொரு பிரயத்தனமுஞ் செய்யவில்லை. டிபன்ஸ் தரப்பு சாக்ஷிகள் குற்றவாளிக்கு வேண்டிய மனிதர்களானபடியால் அவர்களுடைய சாக்ஷியத்தை நம்பக்கூடியதாயில்லை. மெயில் டிரெயின் டிரைவருடைய அஜாக்கிரதையால் இந்த அபாயம் உண்டாகவில்லை. கோடூர் ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் "லயன் கிளியர்" டிக்கட்டு கொடுத்து விட்டார் என்பது குற்றவாளி செய்த குற்றத்தின் வலுவை சிறிதும் குறைக்கவில்லை. ஆதலால் குற்றவாளிக்கு மூன்றுமாதக்கடினக்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்டேஷன் மாஸ்டர் கேஸ்.

கோடூர் ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் அச்சுத சேனே வண்டி முழுமையும் பார்க்காமல் லயன் கிளியர் கொடுத்தது குற்றந்தான். மேலும் பாயின்ட்ஸ் சாவிகளை வைத்திருக்கும் விஷயத்திலும் அவர் கம்பேனி விதிகளுக்கு விரோதமாய் நடந்திருக்கிருர். ஆயினும் இது காலப்பரியந்த

முள்ள குற்றவாளியின் நன்னடக்கையை உத்தேசித்து இந்த குற்றவாளிக்கு 10 வாரங்கடுங்காவல் தண்டனைவிதிக்கப்பட்டது.

——o——

தகப்பன் புத்திரனைக் கொலை செய்த கேஸ்

கோயம்புத்தூரில் சென்ற செஷன்ஸ்கோர்ட்டில் ஒரு கொலைக் கேஸ் விசாரணை செய்யப்பட்டது. கேசின் சாராம்சம் என்னவென்றால் குடும்பச் சொத்து விஷயமாக தகப்பனுக்கும் 20 வயதுள்ள அவனுடைய குமாரனுக்கும் விவாதம் உண்டானது. இதனால் குமாரன் தந்தையை வீட்டிற்குள் வரக்கூடாதென்று தடுக்க, தந்தை உலக்கையால் குமாரனை ஓங்கி அடிக்க, அவன் உடனே இறந்து போய் விட்டான். செஷன்ஸ் கோர்ட்டார் குற்றவாளியை தூக்கிலிட்டு உயிருக்குயிர் வாங்கும் படியாக தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

——o——

அலகபாத் ஹைக்கோர்ட்.

(செஷன்ஸ் விசாரணை.)

விவாகத்திற்கு இடஞ்சலாயிருந்த ஒருஸ்திரியை கொலைசெய்த கேஸ்.

கைதிகள்: (1) ரூம் ஷாகே.
(2) ரூம் தியோ.
(3) ரூம் ஆத்தர்
(4) பல்பர்தர்
(5) ஜெகநாத்

கேசின்விப்ரம்:—வாதிகள் 5 பேர்களும் பிராமணர்கள். இவர்களில் ஒருவன் அலகபாத் சமீபத்திலுள்ள புரியாராம் என்னும் ஊரில் "முசாமத் பகவந்தியா" என்னும் ஒரு ஸ்திரியின் 10 வயதுள்ள ஒரு குமாரத்தியை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினான். ஆனால் ஷை கன்னிகையின் அத்தையாகிய "முசாம்பத்சிதாபாய்" என்பவள் ஷை கன்னிகையை ஷை கைதிக்கு விவாகஞ் செய்து கொடுக்கக்கூடாதென்று ஆக்ஷேபித்தாள். ஆகவே இவள் விவாகத்திற்கு இடஞ்சலாயிருக்கிறதாக கைதி எண்ணி இந்த இடஞ்சலை விலக்குவதற்காக, இன்னும் மற்ற நான்கு கைதிகளையுஞ் சேர்த்துக்கொண்டு சென்றமேமீ 15வ இரவு இவள் வீட்டிற்குள் சென்று இவள் கழுத்தை அறுத்து பிரேதமாகச் செய்து ஒரு பெட்டியில்வைத்து தூக்கிக்கொண்டுபோய்விட்டான்.

ஒருவாரம் வரையில் கொலை நடந்த சமாசாரமே எவருக்கும் தெரியவில்லை. மேமீ 22வ ஷை கன்னிகையின் தாயாராகிய முகமத்பகவந்தியா கொலையுண்டஸ்திரிகாணாமற்போய்விட்டாளென்று கிராம சாக்கிதாரிடம் ரிப்போர்ட் எழுதிவைத்தாள். இதன்பேரில் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் ரிப்போர்ட் கொடுத்தவளைப் பிடித்து நெருக்கினதில் விவாகவிர்த்தாந்தமும், பிரஸ்தாப ஐந்து கைதிகளும் சேர்ந்து கொலைசெய்ததும் வெளிவந்தது. இந்த ஸ்திரி செஷன் கோர்ட்டில் சாக்ஷியம் சொன்னதில் தானும், தன்னுடையகுமாரத்தியாகிய ஷை கன்னிகையும் இவள்வீட்டிற்குள் படுத்துக்கொண்டிருந்ததாகவும், கொலை செய்யப்பட்ட ஸ்திரி, வாசற்படியில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது பிரஸ்தாப கைதிகள் 5பேரும் சேர்ந்து கொலை செய்ததாகவும் தான் நேரே பார்த்ததாகவும் சொன்னாள். பிறகு, பிரேதம் அழுகிப்போய் ஒரு தடாகக்கரையில் கிடந்தது. அதை சரீரஅடையாளமும் கண்டு பிடிக்கக்கூடவில்லை; கெமிகல் எக்சாமினர் பரிசோதனைக்கும் அனுப்பவில்லை.

அப்படியிருந்த போதிலும் ஜூரிகள் சாக்ஷியத்தைசீர்தூக்கிப்பார்த்து 4, 1, 5 கைதிகள் நிரபராதிகளென்றும், 1, 2, 3 கைதிகள் குற்றவாளிகளென்றும் அபிப்பிராயங் கூறினார்கள்.

தீர்ப்பு:— கோர்ட்டார் ஜூரிகள் அபிப்பிராயத்தை அங்கீகரித்துக்கொண்டு 4, 1, 5 கைதிகளை விட்டு விடும்படி உத்திரவுசெய்து, 1, 2, 3 கைதிகளுக்கு தீபாந்திர தண்டனை விதித்திருக்கிறார்கள்.

——o——

பெண் கொலை

அலகபாத்திற்கு சமீபத்திலுள்ள பீராரி என்னும் கிராமத்தில் பிராமணர்கள் கூடி பத்து வயதுள்ள ஒரு பெண்ணைக் கொலை செய்து விட்டதாக அலகபாத் செஷன்ஸ் கோர்ட்டிற்கு கமிட்செய்யப்பட்டார்கள். கோர்ட்டார் இந்தக்கேசை விசாரணை செய்து இரண்டு குற்றவாளிகளை விடுவித்து விட்டு பாக்கியுள்ள மூன்று பேர்களுக்கு தீபாந்திர தண்டனை விதித்திருக்கிறார்கள்.

——o——

கல்கத்தா ஹைக்கோர்ட்.

நம்பிக்கை மோசக்கேஸ்

கல்கத்தா ஹைக்கோர்ட் மூன்றாவது செஷன்சில் ஒரு பெரிய நம்பிக்கை மோசக்கேஸ் விசாரணைக்கு வந்தது. இப்ராஹிம் இஸ்மெயில் டிம்மால், மூல்சி ஜீன்னுதாஸ் ஆகிய இருவர்கள் மெசர்ஸ் இப்ராஹிம் சூலிமான் என்கிற வர்த்தகக் கம்பெனியாரை ரூ 61 ஆயிரம் நம்பிக்கை மோசஞ் செய்து விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

பிராசிக்கூஷன் தரப்பிற்கு மிஸ்டர் ஏ. சௌத்திரி, மிஸ்டர் கே. யன். சௌத்திரி, மிஸ்டர். பி. சி. மிட்டர். எஸ். சி. ராய், மிஸ்டர் ஆர். யன். ராய், பாபு பூபேந்திர சிரிகோஷா, ஆகிய இந்த லாயர்கள் ஆஜரானார்கள்.

முதல் குற்றவாளி தரப்பிற்கு சென்னை பாரிஸ்டர் மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன், மிஸ்டர், பி. யல். ராய், மிஸ்டர் மேதா, மிஸ்டர் ஜே. யன். சட்டர்ஜி, மெசர்ஸ் மானுயல் அண்டு ஆகர்லாலா என்கிற சொலி சிட்டர்கள் இரண்டாவது குற்றவாளி தரப்பிற்கு மிஸ்டர் கிரகரி, மிஸ்டர் இவான்ஸ், மிஸ்டர் ஸ்டோக்ஸ், மெசர்ஸ் எஸ்லி அண்டுவிண்ட்ஸ் என்கிற சொலி சிட்டர் கம்பெனியார்கள்.

தீர்ப்பு:— முதல் குற்றவாளியாகிய இப்பரகிம் இஸ்மெயில் திம்மாலுக்கு நான்கு வருஷ கடினக்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

——o——

ஒரு பிளீடரின் பேரில் கேஸ்.

கல்கத்தா ஹைக்கோர்ட் செஷன்ஸ்கோர்ட்டாரால் தண்டனை அடைந்து ஜெயிலிலிருக்கும் "டெல்" என்பவன் ஒரு போலிஸ் கோர்ட் பிளீடரின் பேரில், பிரசிடென்சிமாஜிஸ்ரெட் முன்னிலையில் குற்றஞ்சாட்டியிருக்கிறான். அவனுக்காக செஷன்ஸ் கோர்ட்டில் ஆஜராக ஒரு லாயரை ஏற்பாடு செய்யும் படி சொல்லி தன்னுடைய பொன் கெடியாரத்தையும் பொன்மோதிரத்தையும் ஷை போலிஸ் கோர்ட் பிளீடரிடம் கொடுத்ததாகவும் அவர் யாதொரு ஏற்பாடும் செய்யவில்லை என்றும் அவன் தரப்பிற்கு செஷன்ஸ் கோர்ட்டில் யாதொரு லாயரும் ஆஜராகவில்லை என்றும் அவன் கொடுத்திருக்கும் பிராதிற்சொல்லப் பட்டிருக்கின்றது. கோர்ட்டார் இன்னும் யாதொரு உத்திரவும் பிறப்பிக்கவில்லை.

——o——

ராதா பஜார் கொலைக் கேஸ்

கல்கத்தாவில் ராதா பஜாரில் நடந்த கொலைக்குற்றக் கேஸ் விசாரணை செய்யப்பட்டு சென்ற ஜூலைமீ ம் 24 ம் வ முடிவடைந்தது. கொலை நடந்ததை பார்த்ததாக கீழ்க் கோர்ட்டில் சாக்ஷியம் சொன்ன ஸ்திரி தான் சொன்னதெல்லாம் பொய் யென்றும் போலீசார் அப்படிச் சொல்லிக் கொடுத்துச் சொல்லச் சொன்னார்களென்றும் செஷன்சில் சாக்ஷியம் கூறினாள். ஆகவே ஜூரர்கள் கைதி நிர்பராதி என்று அபிப்பிராயங் கூறினார்கள். கல்கத்தா போலீசார் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்காமல் அவர்களுக்கு பதிலாக நிர்பராதி களாயிருப்பவர்கள் பேரில் குற்றஞ் சுமத்தி செஷன் விசாரணைக்குக் கொண்டு வந்த கேசுகள் பிரஸ்தாப கேசுடன் நான் காகின்றன.

மானநஷ்டதாவா.

மிர்சாபூர் போலீஸ் ஸ்டேஷனில் பல்பதார் என்னும் பெயருடையவன் தன் மாற்றாந்தாய் மகன் (அதாவது சகோதரன்) பாஸ்தியோ என்பவன், தன்னைக் கொலை செய்ய எத்தனித்ததாக பிரியாது சொல்லிக்கொண்டான். அச்சமையம் அங்கிருந்த போலீஸ் இனிஸ்பெக்டர் பல்பதாரின் தேகத்தில் அநேக காய மிருக்கக் கண்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு விசாரணை செய்ய ஆரம்பித்து குற்றமிருக்கிறதாகக் கண்டு பாஸ்தியோவை அரெஸ்டு செய்தார். பிறகு சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் விசாரித்து அவனை கொலை செய்ய எத்தனித்தான் என்னுங் குற்றத்துக்காக செஷனுக்கு கமிட்டி செய்தார். செஷன் ஜட்ஜி விசாரித்து கைதியை விடுதலை செய்து விட்டார். அதன் பிறகு பாஸ்தியோ தன் சகோதரன் பொய்சாட்சி சொன்னதாக பிராசிக்கியூஷன் செய்ய கோர்ட்டாரை அனுமதி கேட்ட போது கோர்ட்டார் சாங்கிஷன் கொடாததால் சீவிலில் மானநஷ்டத்துக்குப் பிரியாது செய்தான். கீழ்க்கோர்ட்டாரும் அப்பீல் கோர்ட்டாரும் மானநஷ்டம் கொடுக்கும் படியாக உத்திரவு செய்தார்கள். இந்தக் கேசு கடைசியாக ஹைக்கோர்ட்டில் அப்பீலுக்கு வந்தது.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு:—பிரியாதுசெய்துக் கொண்டதற்கும் பேர் வழியை அரெஸ்டு செய்ததற்கும் மத்தியில் போலீஸ் விசாரணை நடந்து அந்த விசாரணையினால் அரெஸ்டு பண்ணப்பட்டிருப்பதினால் வாதி மான நஷ்டம் கொடுக்கும்படி தீர்மானஞ் செய்வது கூடாது.

ஜாமீன் தோகையைக்குறைக்கும்படி மனு.

பம்பாய் நகரில் (1) பி. யப். பெரிபரா (2) தேவிதாஸ் பித்தாபர், (3) ரூமதாஸ் பவானிதாஸ் ஆகிய மூவர்களும் ஒரு நிலவிற்பனை செய்த விஷயத்தில் லக்ஷ்மணதாஸ் நாகர்தாஸ் என்பவரை ஏமாற்றி (Cheating) விட்டதாக பிரசிடென்சி மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். கோர்ட்டாரால் பிரஸ்தாபக் குற்றவாளிகளைஜாமீன் பேரில் விட்டதில் மூன்றாவது குற்றவாளி பதினாயிரரூபாய்க்கு ஜாமீனும், வேறிருவர்கள் அவருக்கே பதினாயிரம்ரூபாய் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும், இந்த இருஜாமீனுக்கு ரொக்கமாவது அல்லது கவர்ன்மெண்ட் ப்ராமிசரி நோட்டாவது கொடுக்கவேண்டுமென்றும் உத்திரவுசெய்தார்கள்.

இந்த ஜாமீனைக் குறைக்கவேண்டுமென்று மூன்றாவது குற்றவாளி ஹைகோர்ட்டிற்கு மனுச்செய்து கொண்டார்.

3 வது குற்றவாளியின் வக்கீலாகிய மிஸ்டர் ஆர். டி. யன். வாடியா தம்முடைய கக்ஷிக்காரருக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஜாமீன் தொகை மிகவும் பெருந்தொகையாயிருக்கிற தென்றும், அந்தத் தொகையைக் குறைக்கும்படி பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட்டைக் கேட்டுக் கொண்டதற்கு அவர்தாம்ஒரு முறை செய்த உத்திரவை மாற்றுவதற்கு தமக்கு அதிகார மில்லை என்றும் ஹைக்கோர்ட்டாருக்கு மனு செய்துக் கொண்டால் குறைப்பார்களென்றும்சொன்னதாகச் சொன்னார்.

ஹைக்கோர்ட்டார் உத்திரவு:— வாதி தரப்பிற்கு ஆஜரான வக்கீல் வாதத்தை கோர்ட்டார் கேட்டபின்னர், மனுதார் சொந்த ரொக்க ஜாமீன் 5 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்றும், மற்ற இருவர்களும் ரொக்கஜாமீன் தலைக்கு ரூ 5 ஆயிரம் டிபாசிட் கட்டவேண்டுமென்றும் உத்ரவுசெய்தார்கள்.

பம்பாய் ஹைக்கோர்ட்

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆஸ்டன்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹீட்டன்.

கொள்ளிக்கட்டையால் சுட்டுக் கொலைசெய்த கேஸ்.

கேசின் விபரம்:— சூரத்து நகரத்திற்கு சமீபத்திலுள்ள தால்கினி என்னும் ஊரில் ஒரு ஸ்திரி தன் சக்களத்தியினுடைய 11 வயதுள்ள பெண், குடும்பத்திற்குச் சொந்தமான ஒரு ஆட்டை விட்டு விட்டதால் அந்த ஆடு கிணற்றில் விழுந்து இறந்து போய் விட்டதென்றும், மறுநாள் காலையில் அந்தப்பெண் தூங்கிஎழுந்திருந்து மாவரைக்கவரவில்லை என்றும் கோபம் கொண்டு எரிந்துக்கொண்டு அடுப்பிலிருந்த ஒரு கொள்ளிக் கட்டையை வாயினுள்ளும் செலுத்தினாள். பெண் வேதனை பொறுக்கால் இறந்து போய் விட்டாள்.

குற்றவாளி சூரத்து நகர் செஷன்ஸ் கோர்ட்டிற்கு கமிட்செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதில் ஜூரர்கள், குற்றவாளி 'நினையாமல் செய்த கொலை குற்றத்தைச் செய்திருக்கிறாள்" என்று அபிப்பிராயங் கூறி குற்றவாளி பெண்பாலானபடியால் கோர்ட்டார் தண்டனை சொல்லுவதில் இரக்கம்பாராட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாரகள்.

செஷன் ஜட்ஜாகிய மிஸ்டர் தட்டாராம் கிடுமால் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டுகைதிக்கு பத்து வருஷம் கடினக்காவல் தண்டனை விதித்தார்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக கைதி பம்பாய் ஹைக் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொண்டாள்.

அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு:— அசல் கோர்ட்டு தண்டனை உறுதி செய்யப்பட்டது.

அகோரமான கொலைக்கேஸ்

ரெங்கூனுக்கு சமீபத்திலுள்ள பாய்ப்பான் என்னும் ஊரில் ஒரு பர்மாதேசத்தான் கோழிச்சண்டைக்கு பந்தியம் கட்டவேண்டுமென்று சொல்லி ஒருவனிடமிருந்து ரூ 10 கடன்வாங்கினான். கோழிச்சண்டையும் நடக்கவில்லை. வாங்கின கடனும் கொடுக்கப்படவில்லை. ஆகவே கடன் கொடுத்தவன் பணத்தைக் கேட்டான். இருவருக்கும் பேச்சு வளர்ந்து சண்டை நடந்ததில் கடன் கொடுத்தவன் கடன் பட்டவனை அடித்தான். அடிபட்டவன் தன் மனதில் வஞ்சகம் வைத்திருந்து கடன்கொடுத்தவன் வீட்டிலில்லாதகாலத்தில் அவன் வீட்டிற்குள் புகுந்துகர்ப்பமாயிருந்த அவன் மனைவியை அடியோதண்டமாக அடித்து ஆறுமாத சிசுவை வெளிப்படுத்திவிட்டான். அடிபட்ட ஸ்திரீயை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோனார்கள். அவ்விடத்தில் இறந்துபோய்விட்டாள். இவன் இந்தக்கொலைக்குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டான். இவனுடைய கேஸ் விசாரணையாகும்போது இவன்ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தானல்லவா அப்போது ஜெயிலில் ஒரு கைதியை கொலை செய்துவிட்டான். இந்தக் கேஸ் விசாரணை செய்யப்பட்டு தீபாந்திர தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான்.

இந்த இரண்டு தண்டனைக்கு விரோதமாக அப்பில் செய்துகொண்டதில் அப்பீல் கோர்ட்டார் இரண்டாவது தண்டனை விஷயமாகச்செய்த அப்பீலை தள்ளிவிட்டார்கள். மற்றொரு அப்பீலின் முடிவு இன்னும் தெரியவில்லை.

பரோடா.

முதல் கிளாஸ் டிப்டி மாஜிஸ்டிரேட்

மிஸ்டர் மொர்லான்ஜி

பரோடா ராஜாவின் பந்துவின் குடும்பத்தில் நடந்திருக்கும் ஒரு கொலைக்கேஸ்.

வாதி:—சக்ரவர்த்தியார்.

எதிரிகள்:—(1) நர்பதாபே மேகய்க்வார்.
(2) சாபாரட்.
(3) அபாசாமேகப் மேகய்க்வார்.

கேசின் விபரம்.

முதல் எதிரி ஸ்திரி, 3-வது குற்றவாளி அவருடைய குமாரன், 2-வது எதிரி அவருடைய வேலைக்காரி. இவர்கள் மூவருஞ் சேர்ந்து மூன்றாவது எதிரியின் மனைவியாகிய ஒரு சிறுபெண்ணை துன்புறுத்தினதாகவும் அதனால் அந்தப்பெண் இறந்துபோகும்படி நேரிட்டதென்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள். 1, 3, எதிரிகள் பரோடா மகாராஜாவின் சமீப பந்துக்களானபடியால் இந்தக்கேசின் நடவடிக்கைகளை எல்லோரும் மிகவும் கவனித்து வருகிறார்கள். கேசின் விபரம் அடியில் சொல்லப்பட்டிருக்கும் சாக்ஷிகளின் வாக்குமூலத்தால் அறிந்துகொள்க.

மிஸ்டர் டாம் ஜிராவ்:—என் தொழில் வைத்தியம். மூன்றாவது எதிரியையும் இறந்துபோன மனைவியையும் எனக்குத் தெரியும். இறந்துபோன பெண் என் பெண்ஜாதியின் தங்கை புத்திரி, அந்தப் பெண்ணின் தகப்பனார் இறந்துபோனபின் நான் அவளை வளர்த்து வந்தேன். அந்தப்பெண்ணினுடைய இளம்பருவத்திலேயே தகப்பனார் இறந்துபோய்விட்டார். 17-வது வயதில் விவாகம் நடந்தது. விவாக நடந்த பிறகு புருஷனுடைய வீட்டில் வசித்துவந்தாள். முதல் எதிரி அதே வீட்டில்தான் வசித்துவருகிறார் புருஷனுடைய வீட்டிற்குப்போனபிறகு நான் ஒரே ஒரு முறை போய்ப் பார்த்தேன். 2-வது எதிரியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தன்னுடைய மாமியாராகிய முதலாவது எதிரியும் மூன்றாவது குற்றவாளியாகிய தன் புருஷனும் தன்னை கொடுமையாய் நடத்துவதாக அந்தப்பெண் எனக்குப் புகார் செய்தாள். "நீ உன் ஜீவதிசை முடியும் பரியந்தம் அவர்களுடனிருந்து காலம் கழிக்க வேண்டியதாயிருப்பதால் எப்படியாவது அவர்களுக்கு சந்தோஷமுண்டாகும்படி நடக்க பிரயாசைப்படுவென்று" புத்தி சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு அவள் இறந்துபோகும் தினம் வரையில் நான் பார்க்கவில்லை. அதன் பிறகு, இந்தப் பெண்ணை கொடூரமாய் நடத்திவருவதாய் நான் அடிக்கடி கேள்விப்பட்டேன். மிகுந்த அன்புடன் நடத்தும்படியாக 1, 3, எதிரிகளுக்குச் சமாசாரம் சொல்லி அனுப்பினேன். நான் சொல்லி அனுப்ப அனுப்ப அவர்கள் இன்னும் விசேஷ கொடுமையாய் நடத்தினார்கள். இந்தக் கொடுமையைப்பார்த்து வீட்டு வேலைக்காரர்கள் நடுங்குகிறார்கள். "அமந்தாரோ" என்கிற வேலைக்காரன், பெண்ணை ஒரு அறையில் தள்ளி பூட்டி வைத்திருப்பதாகச் சொன்னான். பிரதி தினமும் அடிக்கிற வழக்கமுண்டு என்றும் அவளுக்கு சாப்பாடு போடுகிறதில்லை என்றும் சொன்னான். நான் அந்தப் பெண்ணைப் பார்க்க பல தடவை போனேன். என்னை வீட்டிற்குள் விடவில்லை. நான் இதைக்குறித்து ஒரு சமயம் சாடர் கோர்ட் ஜட்ஜி மிஸ்டர் ரூப் சங்கரிடம் சொன்னேன். மனு அனுப்பும்படி சொன்னார். நான் மனு கொடுக்கலாமென்று நினைத்திருந்தேன். ஆனால் என் தமையனார் வேண்டாமென்று சொன்னார். அடிக்கடி அந்தப் பெண்ணை துன்பப்படுத்துகிறதைக் கேள்விப்பட்டு நான் என் குமாஸ்தாவை பார்த்து வரும்படி சொல்லி அனுப்பினேன்.

எதிரிகள் அவரை வீட்டிற்குள் விடமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ஜூன்மாதம் 30-ம்உ அந்தப்பெண் மரணப்படுக்கையில் யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே இந்தப் பெண்ணை எடுத்துக்கொண்டு வர வாரண்டு பெற்றுக்கொண்டு அந்த வீட்டிற்குப்போனேன். பிராணன் பிரியும் சமயமாயிருந்தது. கொஞ்சம் நேரஞ்சென்று அந்தப் பெண் என்னை அடையாளம் கண்டு பிடித்து "இனிமேல் என்னை மீட்க முடியாது. என் பிராணன் பிரியும்போது என்னை அழைத்துக்கொண்டு போகிறதில் என்ன பலன்" என்று சொன்னாள். ஒரு பல்லக்கில் வைத்து நான் கொண்டுவந்து விட்டேன். மிகவும் களைத்துப்போன நிலையிலிருந்தாள். மூக்கில் காயம் பட்டிருந்தது. தேக முழுது உதிரிக்கொண்டிருந்தது. இந்த ஸ்திதியில் அவளை கோர்ட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் காண்பித்து விட்டு நான் வீட்டிற்கு அழைத்துவந்தேன். வந்தவுடன் இரவு 7 மணிக்கு இறந்துபோய் விட்டாள்.

பிரேதத்தைக்குழுப்பாட்டின அநேகஸ்திரிகள் அடிவயற்றிலும், தொடையிலும், முதுகிலும், சூடு போடப்பட்டிருப்பதை எனக்குக்காண்பித்தார்கள். இடது புஜத்தில் சூடு போடப்பட்டிருந்தது. 2 வது புஜம் முறிக்கப்பட்டிருந்தது. காதுகள் கன்னத்தை விட்டு கிழிக்கப்பட்டிருந்தது. சவுக்கினால் அடித்த காயங்களிருந்தன. நான் பிரேதத்தைப் பரிசோதனை செய்யும்போது சில பெரிய மனுஷர்களிருந்தார்கள்.

அமார்த்தி ரோதாஜி:—நான் 1, 3, குற்றவாளிகள் வீட்டிலிருக்கும் வேலைக்காரன். ஸ்திரிகளிருக்கும் அந்தப் புறத்திற்கு நான் போகிறதுண்டு. அப்பெண்ணை இரண்டாவது மெத்தையில் ஒருஅறையில்போட்டு பூட்டிவைத்திருந்தார்கள். 12-மணிக்கு கதவைத்திறந்து கொஞ்சம் சாப்பாடு போட்டு மறுபடியும் அடைத்து வைப்பார்கள். முதல் எதிரி எவுதல் பேரில் மூன்றாவது குற்றவாளி அந்தப் பெண்ணை அடிக்கடி அடிக்கிற வழக்கமுண்டு. நான் கண்ணாலே பார்த்திருக்கிறேன்.

ஒரு தடவை முதல் எதிரி இந்தப் பெண்ணைப்பிடித்து மெத்தைப் படியில் தள்ளிவிட்டாள். இந்தக் கொடுமையை அந்தப்பெண் தன் சிறிய தகப்பனாரிடம் போய்ச் சொல்லும்படி எனக்குச் சொன்னாள். இது ஒன்றை வருஷத்திற்கு முந்தி ஒருதடவை அந்தப்பெண்ணை முழங்காலிட்டு இருக்கச் செய்து அவளுடைய கால்களுக்குள் ஒரு கொம்பை விட்டு கைகளை அந்தக் கொம்பில் கட்டினார்கள். அதே நிலையில் வெகு நாழி வரையில் வைத்திருந்தார்கள். நடு இரவு 12 மணிக்கு அவளை எழுப்பிவிட்டு மாவரைக்கச் சொல்லுகிற வழக்கம். அவளை வீடெல்லாம் கூட்டும்படி செய்வார்கள். கரி பிடித்த பாண்டங்களை சுத்திசெய்ய சொல்லுவார்கள். இப்படி கொடுமையாக நடத்துவதற்கு எனக்கு காரணம் தெரியாது. ஆனால் ஒரு தடவை முதல் எதிரியைக்கேட்டேன். இந்தப்பெண்ணின் சிறிய தகப்பனார் கொடுப்பதாக வாக்களித்த ஸ்திரிதனத்தை கொடுக்கவில்லை என்று சொன்னார்.

(கேசின் விசாரணை நடந்துகொண்டு வருகின்றது அடுத்த முறை எழுதுவோம்.)

நபர் சோரக் கேஸ்.

மிர்வார் ஜாதியைச்சேர்ந்த 10 வயதுடைய ஒரு சிறுவன் வெளியேயிருந்து வீட்டுக்குத்திரும்பிவரும்போது ஒருவன் அச்சிறுவனை தன்னுடன் வில்லஸ் என்னும் மகமதியன் அவுரா என்னுமிடத்துக்கு அழைத்துச்சென்று அவனிடமிருந்த ஆபரணங்களைப்பிடுங்கிக்கொண்டு ஏதோ சிலதொந்திரவுகளைச்செய்து தன்னுடன் பனாரிசுக்குவரும்படி வற்புறுத்தினான். உதவியற்ற அச்சிறுவனால் அவனை மீறிச்செல்ல முடியாதிருக்கிற அச்சமயத்தில் அங்கு ஓர் கான்ஸ்டேபிளைக் கண்டு அழுதான். உடனே கான்ஸ்டேபில் அங்கு வந்து கைதியைப் பிடித்துக்கொண்டு சோதிக்கச் சிறுவனுடைய ஆபரணங்கள் அவனிடமிருக்க கல்கத்தா போலீஸ் ஸ்டேஷனில் அடைத்தார்கள். சிறுவனையும் கைதியைப்பற்றி சாக்ஷி சொல்ல கல்கத்தாவுக்கு கூட்டிவந்து விசாரித்ததில் பிரசிடென்சி மேஜிஸ்டிரேட்டாரால் கைதி ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

கராச்சிக் கோர்ட்

வேலைக்காரனை அடித்துக் காயப்படுத்தினது.

சிந்து நகரில் பாகிடாகிஜ் ராம் என்கிற ஒரு வியாபாரி வீட்டில் களவு நடந்தது. வியாபாரி தம்முடைய வேலைக்காரன் பேரில் சந்தேகம்கொண்டு திருட்டை ஒப்புக்கொள்ளும்படி அவனை அடிக்கவே அதனால் அவனுக்கு தேகத்தில் காயமுண்டானது. இந்தக் குற்றத்திற்காக ஐதராபாத் செஷனஸ் கோர்ட்டார் வியாபாரிக்கு 6 மாத கடினக்காவல் தண்டனையும் ஆயிரரூபாய் அபராதமும் விதித்தார்கள்; கைதி கராச்சி ஜூடிஷனல் கமிஷனர் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளவே கோர்ட்டார் அப்பீலை விசாரணைசெய்து அசல் கோர்ட்டு தண்டனையை மாற்றி கைதியை விடுதலை செய்யும்படி தீர்ப்பு சொன்னார்கள்.

தற்கொலை.

ரெங்கூன் கவர்ண்மெண்டு அவுசிலிருக்கும் எட்சுவேர்ட்டாகிய 51 வயதுள்ள மிஸ்டர் தாமஸ் நாட்டன் என்பவர் ஜூலைமீ 29உ இரவு அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார். அவர் படுக்கையைப் பரிசோதித்ததில் ஒரு கடிதம் அகப்பட்டது. அதில் அவருக்கு தேகத்தில் தோன்றியிருக்கும் நோயின் வேதனை பொறுக்காமல் தற்கொலை செய்துகொண்டதாகவும், பெண்ஜாதி பிள்ளைகளை விட்டுப் பிரிந்து போவது அவருக்குப் பெரும் விசனகரமாயிருப்பதாகவும், அப்படியிருந்தும் நோயின் வேதனையைப் பொறுத்துக்கொண்டு உயிருடனிருக்க முடியவில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது.

கடனுக்கு பயந்து தற்கொலை செய்துகொண்டது.

ரெங்கூனில் ஒரு சுதேச ரத்தின வியாபார தாகன் இரண்டு ரத்தின வியாபாரிகளிடமிருந்து 1200 ரூபாய் பெருமான வயிரநகைகளை கிரயம் செய்து கொடுப்பதாக வாங்கியிருந்தான். இந்த நகைகளை கிரயம் செய்து சொந்த உபயோகப் படுத்திக்கொண்டதின்பேரில் ஷை வர்த்தகர்களுக்கு பணம் கொடுபடாததால், அவர்களில் ஒருவர் தாகனை சிவில் வாரண்டில் பிடித்து ஜெயிலுக்கு அனுப்புவதாய் பயமுறுத்தினதை முன்னிட்டு தாகனும் அவன் மனைவியும் சாராயத்தையும் அபினையும் கலந்து சாப்பிட்டு விட்டு இரண்டு பேரும் சொற்ப நேரத்திற்குள் இறந்துபோய் விட்டார்கள்.

மரண வாக்குமூலம்.

கள்ளிக்கோட்டையில் நாயர்வாசஸ்தலமாகிய சாளாபுரத்தில் மூன்று பேர்கள் சேர்ந்து மிஸ்டர் முத்தியால் கோவிந்தமேனன் B. A. B. L. என்கிற இளம்பிராயமுடைய ஒரு வக்கீலை அடியோதண்டமாக அடித்து காயப்படுத்திவிட்டார்கள். இந்தக் குற்றத்திற்காக அம்மூவர்களும் அரஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அடிபட்ட வக்கீல் இறந்துபோகிற ஸதிதியிலிருப்பதாகக் காணப்பட்ட படியால் மாஜிஸ்டிரேட் அவரிடம் சென்று மரண வாக்குமூலம் வாங்கினார். அதில் "பிரஸ்தாப வக்கீல் முதல் குற்றவாளியின் தங்கையுடன் நேசமாயிருந்ததாகவும், முதல் குற்றவாளி அவள் சமாசாரம் சொல்லி அனுப்பியதுபோல் இரண்டாவது குற்றவாளியிடம் வக்கீலுக்கு சமாசாரம் சொல்லி அனுப்ப, வக்கீல் அது உண்மையான சமாசாரம் என்று நினைத்து அவள் வீட்டிற்குப் போனபோது 1, 2, குற்றவாளிகள் வக்கீலை கத்தியால் தலையிலும் தேகத்திலும் வெட்டியும் குத்தியும் பலமாக காயப்படுத்திவிட்டார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அடியுண்ட வக்கீல் இறந்துபோகவில்லை. தினே தினே அவருடைய தேகம் சௌக்கியமடைந்துவருகின்றது. மூன்றாவது குற்றவாளி வக்கீலை அடிக்கவில்லை. ஆனால் 3, குற்றவாளி அடிக்கும்போது அருகில் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, குற்றம் நடந்து முடிந்தவுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு தானே சென்று சமாசாரங்களைத் தெரியப்படுத்தி தன்னை அப்புருவராக எடுத்துக்கொள்ளும்படி செய்துகொண்டான்.

மதராஸ ரயில்வேக் கம்பெனியார் பேரில் நஷ்ட வியாஜ்ஜியம்.

கேசின் விபரமாவது:— ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் அவர்கள் முன்னிலையில், கோக்கனடா சப்கோர்ட்டாருடைய டிக்கிரிக்கு விரோதமாக கோக்கனடாவில் வக்கீல்களாக விருக்கும் மிஸ்டர் சேஷகிரிராவ் முதலிய நால்வர்களும் செய்துகொண்ட மனுக்கள் வக்கீல் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்களால் எடுத்துப் பேசப்பட்டது.

ஷை கேசின் வாதிகளாகிய கோக்கனடா வக்கீல்கள் ஐவரும் சென்ற 1903 ளு டிசம்பர்மீ 25உ தங்களுக்கு மதராஸ் தியாசபிகல் கூட்டத்திற்குப் போவதற்காக ஒரு 2-வது வகுப்பு வண்டி ஒன்று பூராவும வேண்டுமென்றும் தாங்கள் சாமல் கோட் ஸ்டேஷனில் மாற்றப்படாமலே பிரயாணம் செய்து கொள்ளவேண்டுமென்றும் ஷை கோக்கனடா போர்ட் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டுக்கொண்டார்கள். ஷை ஸ்டேஷன் மாஸ்டரும் மேல் காட்டிய ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டு, 2-வது வகுப்புத் தனி வண்டி யொன்று தயாரித்துக் கொடுத்தார். வக்கீல்கள் ஐவரும் ஷை வண்டியில் பிரயாணமாய் அன்றிரவு சாமல்கோட் ஜங்ஷன் வந்து சேர்ந்தார்கள். ஆனால் வால்ட் டெயிரிலிருந்து வந்த மெயில் ட்ரெயினில் கூட்ட மதிகமாக விருந்த படியால் வக்கீல்கள் பிரயாணம் செய்து வந்த வண்டி இவர்கள் ஒப்பந்தப்படி இவர்கள் இறங்காமலே மெயில் வண்டித்துடரோடு சேர்க்கப்படாமல் போய் விட்டது. மெயிலும் புறப்பட்டு விட்டது. இது இப்படியாகவே வக்கீல்கள் நித்திரை கெட்டும் தேக அசௌக்கியமாயும் போனதுடன் தாங்கள் குறித்த காலத்தில் மதராசுக்குப் போக முடியாமல் போய் விட்டபடியால் அவர்கள் தங்கள் சார்ஜை வாபஸ் கொடுக்கும் படிக்கும், தாங்களடைந்த தொந்தரவுகளுக்காக ரூ. 200 நஷ்டத்திற்கும் மதிராஸ் ரெயில்வேக் கம்பெனியார் பேரில் கோக்கனடா சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்திருந்தார்கள்.

தீர்ப்பு:—பிரதிவாதியாகிய ரெயில்வேக் கம்பெனியார் தங்களுடைய ஒப்பந்தத்தை ஒத்துக் கொண்டபோதிலும் மெயில் ட்ரெயினில் கூட்ட மதிகமாகஇருந்தமையால் அப்படிச் செய்ய முடியாமல் போனது சமயத்தை யனுசரித்ததெ

ன்றும் அப்படிச் செயதபடியால் ஒப்பந்தம் அவர்களைக்கட்டுபடுத்த மாட்டா தென்றும்இவ்விஷயங்களெல்லாம் வாதிகளுக்கு முன்னமே சொல்லப்பட்டிருக்கிற தென்றுங் கூறினார்கள். என்றாலும் பிரதிவாதிகள் வாதிகளுடைய சார்ஜுகளைப் பூராவும் திருப்பிக்கொடுத்து விடுவதுடன் மறுபடி திரும்பக் கோக்கனுடா போகும் வரைக்குள்ள சார்ஜையும் கொடுத்துவிடுவதாகவும் சொன்னார்கள். ஆனல் வாதிகள் அதை மறுத்து விட்டார்கள். இதன் பேரில் கோர்ட்டாரால், ஷை ஒப்பந்தம் நடந்த துண்மையா அப்படியிருந்தால் அந்த ஒப்பந்தம் மெயில் ட்ரெயினின் நிலைமையின் சமயத்தைபொருத்த மட்டில் உண்மையா என்னும் இஷியூச்கள் ஏற்படுத்தப் பட்டன. அதின் பேரில்கோரட்டார இஷியூக்களின் விஷயங்களை அறிந்து வாதிகளுக்குப் பிரதிவாதிகள் அவர்கள் கொடுத்திருந்த சார்ஜுகளைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டு மென்றும், வேறு யாதொரு நஷ்டமும் வாதிகள் கேட்க இடமில்லை யென்றும், பிரதிவாதிகளிடமிருந்து யாதொரு செலவும் கிடைக்கப்பட மாட்டாதென்றும் தீர்ப்பு சொன்னார்கள். இது தான் கீழ்க்கோர்ட்டாருடைய தீர்ப்பு இதன் பேரில் வாதிகள் ஹைக்கோர்ட்டில் நஷ்டம் ரூ 200 ரயில்வே கம்பெனியாரிடமிருந்து கிடைக்கும்படி உத்திரவாகக் கொடுத்திருந்த மனு விசாரிக்கப் பட்டபொழுது, வாதிகள் வக்கீலாகிய வக்கீல் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், மெயில் டிரெயின் வால்டேர் ஸ்டேஷனுக்கு அன்று மாலை 7 மணிக்கு வந்த போது பிரதிவாதிகள் வேறு சில வண்டிகளைச் சேர்த்ததனல் தான் அவர்கள் நஷ்டத்திற்குள்ளாக வேண்டு மென்று வாதித்தார். பிரதிவாதிகளின் வக்கீலாகிய டி. சேஷகிரி அய்யர், ஒப்பந்தமானது மெயில்டிரெயினிலிருக்கும்கூட்டத்தின் நிலைமையை பொருந்திருக்கிறதென்றும், ரெயிலில் கூட்டமதிகமாக இருக்குமானல் அது கட்டுப் படுத்த மாட்டாதென்றும், ரெயில் சாமல் கோட் ஸ்டேஷன் வரும்போது பிரயாணிகளால் நிறைந்திருந்ததால் சட்டப்படி அதிக வண்டியைச் சேர்க்க முடியாதாகையால் ஒப்பந்தம் கட்டுப்படுத்த மாட்டாதென்றும் கூறினர்.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பு:—அதின் பேரில் கோர்ட்டார் பிரதிவாதிகளின் வக்கீல் சொல்லியதற்கு இணங்கி சாமல் கோட் ஸ்டேஷனில் கூட்ட மதிகமாக வண்டியிலிருந்ததால் ரெயில்வே உத்தியோகஸ்தர்கள் வண்டியை ஷை மெயில் தொடரோடு சேர்க்காமலிருந்தது நியமாயிருக்கிற தென்று சொல்லி மனுக்களைத் தள்ளிவிட்டார்கள்.

கல்கத்தா ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மித்தர், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹொம்வுட்.

கூலிஞ மேளக்காரப்பையன் கேஸ்.

போலீஸ் ஆக்ட்டு 32வது பிரிவின் குற்றத்திற்காக கூலிஞ டிப்டி மாஜிஸ்ரேட்டால் 5 ரூபாய் அபதாரம் விதிக்கப்பட்ட கேஸில் நொரேந்திரகுமார் கோஸ், குற்றவாளிக்காக ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுகொடுத்தார். இந்தகேஸானது செஷன் கோர்ட்டாரால் ஹைக்கோர்ட்டாருடைய பார்வைக்கு அனுப்பப்பட்டது. ஹைக்கோர்ட்டார் இவ்விதமான கேஸில் சட்ட சம்பந்தப்பட்டிருந்தால் மட்டும் அவைகளில் பிரவேசிக்கலாமே ஒழிய மற்ற விஷயங்களை பற்றி வரும் விவகாரங்களில் பிரவேசிக்கமுடியா தென்றும், அப்படி சட்ட சம்பந்தமிருந்தால் சொல்லலாமெனபின்வருமாறு கோர்ட்டாருக்கும் வக்கீலுக்கும் சம்பாஷணைநடந்தது?

"ஜட்ஜி மித்தர் வக்கீலைப்பார்த்து உம்முடைய சட்ட ஆதாரங்களென்ன"

வக்கீல்:—உண்மையில் எதிரி எந்தவிதமான குற்றத்தையும் செய்யவில்லை மனுதாரன் கிரமமானதும்சட்ட விரோதமில்லாதசெய்கையைச் செய்து கொண்டிருந்த போது போலீஸ் உடையில்லாமலிருந்த சப்இன்ஸ்பெக்ட்டர் அவன் செய்கையை எவ்விதத்தாலும் தடுக்க நியாமற்றவராய் இருந்தார்.

ஜட்ஜ் ஹொம்வுட்:— எட்கான்ஸ்டேபில் போலீஸ் உடுப்பு தரித்திருந்தார்"

வக்கீல்,—அப்படியாதொரு சாக்ஷியமுமில்லை.

ஜ. மித்தர்:—மனுதாரன் அவரை சப் இன்ஸ்பெக்டர் என்று அறியவில்லையா?

வக்கீல்:—அது எனக்கு நிச்சயமாய்த்தெரியாது; அல்லாமலும் அது விஷயத்திற்கு அவ்வளவு பாதகாமாயுள்ள தல்ல. மேலும் போலீஸ் அவனைத்தடுக்கிறதற்கு எவ்விதத்திலும் நியாய முடையவர்களல்ல. உண்மையில் நடந்த விஷயங்களை யோசிச்கும்போது போலீசார் அவனை நியாயமில்லாமல் தடுத்ததை அவன் மறுத்துவிட்ட துணிவுக்காக சப்இன்ஸ்பெக்டர் அவனை அரஸ்டு செய்யக்காரணமாயிற்றே யல்லாமல் வேறல்ல.

ஜ. மித்தர்:—ஆனல் அவன்பேரிலுள்ள குற்றங்களென்னவென்று பார்ப்போம்.

அப்போது உடனே வக்கில் கீழ்கோர்ட்டின் தீர்ப்பை வாசித்தார்.

ஜ. ஹோம்வுட்:—மனுதாரனே போலீஸ் தடுக்க அவனே காரணமாயிருந்திருக்கிறன்.

வக்கீல்:—கீழ்க்கோர்ட்டு தீர்ப்பு இப்படித் தடுப்பதற்கு சுதேசிய விஷயம் தான் உண்மையான காரணமாயிருக்கிறதென்று கூறுகிறது. இந்தவிதமான தடைகளால் சுதேசியத்தை அடக்கிவிட ஒருபோலீஸ் உத்தியோகஸ்தரால் முடியுமா? மனுதாரன் எந்த விததடைக்கும் காரணமாயில்லை வென்றும் போலீசார் அவனுக்கு விரோதமாக எந்தவாரண்டையும் வைத்திருக்க வில்லையென்றும் சப்இன்ஸ்பெக்டர் வேணுமென்றே இந்த குற்றத்தை ஏற்படுத்தி தப்பிதமாக அவனை அடைத்ததாகத் தெரிகிறது.

ஜ, மித்தர்:—இன்னும் அவனுக்கு விரோதமாக ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

வக்கீல்:—ஆம், டிப்டிமேஜிஸ்டிரேட்டே இதைத்தள்ளி இருக்கவேண்டும். இப்பொழுது நான் அதைச்சொல்ல அஞ்சுகிறேன் என்றாலும் இந்தவிஷயமானது மறுபடி உங்கள் முன்கொண்டுவரப்படவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஜ. ஹோம்வுட்:—லண்டனில் ஒருவனை போலீஸ் உத்தியோகஸ்தன் விலகு என்று சொல்லி அவன் அதை மறுப்பானல் உடனே அவனை அடைத்துவைத்து மறுநாள்காலை ஒருமாஜிஸ்ட்ரேட் முன் அனுப்பித்தண்டிக்கப்படுவான்.

வக்கீல்:—போலீசாருடைய அதிகாரம் பலவிதமிருக்கின்றன; போலீஸ்ஆக்ட் 34 வது பிரிவுப்படி உள்ளகுற்றங்களை மட்டும் வாரண்டு இல்லாமலேயே நிறைவேற்றலாமே ஒழிய. 32 வது பிரிவுப்படி உள்ளதை அப்படிச்செய்யமுடியாது.

ஜ. மித்தர்:—உம்முடைய நியாயமானது சட்ட சம்மந்தமாயிருக்கிறது.

வக்கீல்:—ஆனல் இந்த விஷயமானது ஒவ்வொரு நாளும் நடவடிக்கையிலிருக்கிறது.

ஜ. ஹோம்வுட்:—இத்தடைக்கு மனுதாரனே காரணமாயிருக்கிறனென்று காண்கிறது.

வக்கீல்:—ஓர் சர்க்கார் உத்தியோகஸ்தரான ஓர் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி என்று வைத்துக்கொள்வோம். அவர் ஒரு சிறு கிராமத்துக்குப்போக நேரிடுமானல் அங்கு அவரைப் பார்க்க அக்கிராமவாசிகள் கூட்டங் கூடுகிறார்கள் அப்போது அவ்வகைக் கூட்டம் ஏதாவது ஒரு விஷயத்திற்குத் தடையாகுமானல் அப்போதுஅந்த ஜட்ஜி தான் அக்குற்றத்திற்கு அருகராக வேண்டும்போலிருக்கிறது.!

ஜ. ஹோம்வுட்:—அப்படி நேரிடுமானல் ஜட்ஜே அக்கூட்டத்தைநீக்க போலீசாரிடம் கேட்க வேண்டும்.

வக்கீல்:—ஆனல் இதற்குக் காரணம் ஜட்ஜாகவிருக்கிறபடியால், போலீஸ் அவரை அரஸ்டு செய்து அடைத்து காபந்து செய்ய வேண்டியதுதானே? இந்தக்கேஸ் சட்டசம்மந்தப்பட்டதல்லவென்று கோர்ட்டார் நினைக்கிற தானலும், இதற்கு முன்னமேயே இந்த ரிக்கார்டுகளை கோர்ட்டார் பார்த்ததிலிருந்தே சாக்ஷியமுங்கூட போதுமானபடி இல்லாததால் இவனை தண்டித்திருக்கக்கூடாதென்று நினைத்திருக்கலாம். ஆகையால் இந்த கேஸை 430-வது பிரிவுக்கு மாற்றக்கேட்கிறேன்.

மித்தர்:—இத்தகைய விஷயங்களுக்கு மறுபடியும் இடங்கொடுக்கக்கூடாது. ஓர் வரம்பிருக்கவேண்டுமென்று பேசி முடித்துக் கடைசியில் மனுவைத் தள்ளிவிட்டார்.

——o——

ஜட்ஜி:— ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பரமணிய அய்யர்.

,, சர். ரால்ப் பென்சன்.

கோபத்தினல் கொலைக்குற்றத்திற் குள்ளான கேஸ்.

கேசின் விபரமாவது:—ஏப்ரல்மீ 5உ சின்னப்பன் என்ற ஒருவனை ஷை குற்றவாளியும் அவன் சகோதிரனும் மாமிசம் வெட்டும் கத்தியால் 50 காயங்களுக்கு அதிகமாக செய்த குற்றத்திற்காக தென் மலையாளம் செஷன் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியின் சகோதிரன் பேரில் குற்றம் ருசுவாகக்கூடிய யாதொரு சாக்ஷியமில்லாததால் அவனை விடுதலை செய்யப்பட்டது.

குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு அப்படிச் செய்வதற்கு காரணம் தனக்குக் கோபமூட்டிய செய்கையை அவன் செய்தபடியால் தான் அப்படிச் செய்ய நேரிட்டது என்று செஷன்ஸ் கோரட்டில் சொல்லியிருக்கிறன். அதாவது, 24 வயதுடைய வைதவ்ய மடைந்த தன் சகோதரியுடன் கொலையுண்டவன் அன்றிரவு இருந்ததை பார்த்ததினல் அவன் திருடனென்று கோபமடைந்து இப்படி செய்தேன் என்று சொல்லியிருக்கிறன். ஆனல் அதை செஷன்ஸ் கோர்ட்டார் நம்பவில்லை. என்றாலும் மற்ற சில விஷயங்களால் இவன் உண்மையில் கோபமூட்டபபட்டுச் செய்தானென்கிறதற்கு இடமிருக்கிறது. குற்றவாளி திருடனென்று தான் நினைத்து கோபத்துடன் இப்படிச் செய்ததாக குற்றத்தை ஒப்புக்கொள்வதை நம்புவதற்கிடமில்லாவிட்டாலும், அவனுடைய சகோதரியுடன் கூட விருந்ததே இதற்கு காரணமாகு மாகையால் அந்தக் கோபத்தினல் இக்குற்றத்தை செய்திருக்கலாமென்று ஹைக்கோரட்டார் மரணதண்டனையைமாற்றி தீவாந்திர தண்டனை விதித்தார்கள்.

——o——

தற்கொலை.

திருச்சினப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த குளித்தலையிலிருக்கும் உப்பள இலக்கா சப் இன்ஸ்பெக்டர் நிகழும் 16உ காவேரி நதியில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார். இவர் ஏதோ தமது டைரியில் தப்பான விஷயங்களை எழுதியிருந்ததை முன்னிட்டு மேலதிகாரிகள் அந்த டைரியை ஒரு அசிஸ்டண்ட் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி விசாரணை செய்யும்படியாக உத்திரவு செய்திருந்தார்கள். அசிஸ்டெண்ட்இன்ஸ்பெக்டர்குளித்தலைக்குவந்தபோதுசப் இன்ஸ்பெக்டர் ஊரிலில்லை. சர்க்கியுட்போயிருந்தாராம்; சப்இன்ஸ்பெக்டர் வீட்டில் ஒளிந்துகொண்டு சர்க்கியுட் போயிருப்பதாகச் சொல்லச் சொல்லுவதாக அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஒரே தினத்தில் காலையிலும், மத்தியானமும், நடுஇரவிலும் ஆக மூன்று முறை சப் இன்ஸ்பெக்டர் வீட்டில் சோதனை செய்தார். நடு இரவில் சோதனைபோடப் போன போது ஷை சப் இன்ஸ்பெக்டரின் 20 வயதுள்ள மனைவி கதவைத் திறக்கமாட்டேன் என்றும் தன் புருஷன் ஊரிலில்லை என்று சொல்லியும் அசிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர் கேட்கவில்லை. வெகு நாழிகை வரையில் ஆக்ஷேபனை நடந்தும், அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டருடைய பிடிவாதத்தால் ஏகாங்கியாயிருந்த அந்தப்பெண் நிசிராத்திரியில் கதவைத் திறக்கும்படியாக நேர்ந்தது. அசிஸ்டென்ட் இன்ஸ்பக்டர் உள்ளே சென்று தேடிப்பார்த்ததுமன்றி படுக்கை அறையிலுஞ் சென்று தேடிப்பார்த்துச் சப் இன்ஸ்பெக்டரைக் காணமல் திரும்பி வந்துவிட்டார் மறுநாள் காலையில் சர்க்கியுட்டிலிருந்து திரும்பிவந்த சப் இன்ஸ்பெக்டர் நடந்த விர்த்தாந்தங்களைக் கேள்விப்பட்டு விசனமடைந்து தம் மனைவியை சமுசயித்து அவளுடன் இரண்டு மூன்று தினம் வரையில் பேசாமலும் சாப்பிடாமலும் மன வருத்தமா யிருந்தார். பிறகு அவர் விசனத்தால் தூண்டப்பட்டு உயிரைமாய்த்துக் கொள்வதற்காக காவேரி நதியில் விழுந்து இறந்துபோய் விட்டார் என்றும் போலிசார் விசாரணை செய்து வருகிறார்களென்றும் குளித்தலையி லிருந்து ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

——o——

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

ஒரு பொட்டைநாய் பைசிக்கிலில் ஏறிப் போய்க்கொண்டிருந்த ஒருவரை தள்ளிவிட்டது அதனல் தேகத்தில் அவருக்குக் காயமுண்டானது. நாயின் சொந்தக்காரர் பேரில் நஷ்ட தாவா கொண்டுவந்தார். இந்தக்கேசை விசாரணை செய்த கௌன்டிகோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாய் தீர்ப்பு சொன்னார்கள். அப்பீலில், நாயின் சொந்தகாரர் அலக்ஷியமாகவாவது அஜாக்கிறதையாகவாவது யிருந்ததற்கு சாக்ஷிய மில்லை என்று சொல்லி அசல் கோர்ட்டு த்தீர்ப்பைரத்து செய்து விட்டார்கள் இங்கிலீஷ் தீர்ப்பு மில்லஸ் v காட்டு.

லாபமடையவேண்டு மென்கிற கருத்துடன் சிட்டுபோடும் ஒரு நிதி (Chit Fund) இந்தியன் கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். அப்படி ரிஜிஸ்டர் செய்யாவிட்டால் சிட்டுகட்டினவர்கள் ஷை நிதியிலிருந்து தங்களுக்குச்சிட்டு பணம் சேரவேண்டுமென்று தாவா கொண்டுவந்தால் அந்த தாவா செலாமணியாக மாட்டது. இ. லாரி. 19 மது, 31 இ. லாரி 20 மது, 68, மதிராஸ் 1905வது ஞபத்திய கிரிமினல் ரிவிஷன் மனு நம்பர் 91:

வாதியின் உத்திரவன்றி டெலிபோன் கம்பேனியார் அவர் நிலத்தின்பேரில் டெலிபோன் கம்பிபோட்டார்கள். வாதி கொண்டுவந்த தாவாவில், வாதி இஜக்ட்மென்டு(Ejectment)நடவடிக்கைகள் நடத்தி அக்கம்பியை எடுத்துப்போடகம்பெனியாரைக்கட்டாயப்படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

வாதி சரியானடிக்கட்டு வைத்துக் கொண்டு ரெயிலில் ஏறிப்போகவேணுமென்று எண்ணி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார். ஸ்டேஷன் கதவு மூடியிருந்தது. ரெயில்வே ஸ்டேஷனில் உத்தியோக மில்லாத ஒருவர் கதவைத்திறந்தார் வாதி பெண்பிள்ளையான படியால் ரெயில்வே ஸ்டெஷனில் பெண்கள் தங்கியிருப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் அறையில் போய் உட்கார்ந்திருந்தார். அப்படி உட்கார்ந்து கொண்டிருக்கையில், தரையில் ரெயில்வேகம்பெனியாரின் அஜாக்கிரதையால்செப்பனிடப்படா மலிருந்த ஒரு குழியில் விழுந்து வாதி காயம் பட்டார் வாதி ரெயில்வே கம்பேனியார் பேரில் நஷ்ட தாவா கொண்டு வந்தார். ரெயில்வே கம்பேனியார் வாதி ஸ்டேஷன் கதவு பூட்டியிருக்கும் போது வந்ததால் அத்துமீரிவந்திருக்கிறார் என்றும் அதனால் நஷ்டம் கொடுக்க கட்டுப் பட்டவர்களல்ல வென்று எதிர்வாதம் கூறினார்கள். கோர்ட்டார் அத்துமீறி வந்தவரல்ல வென்றும் பிரதிவாதிகளிடம் மிருந்து நஷ்டஈடு சேருவதற்கு வாதிக்கு சுதந்தரமிருக்கிற தென்றும் தீர்மானித்தார்கள். அமேரிக்காதேச தீர்ப்பு.

இன்சால்வன்சி மனுவின் பேரில் முனிசிப் கோர்ட்டார் செய்த உத்திரவிற்கு விரோதமாய் ஜில்லாக் கோர்ட்டிற்கு மட்டிலும் அப்பீல் செய்துகொள்ளலாம். ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்யக்கூடாது.

(மதிராஸ் A. A. A. O. 16 of 1906)

மரண தண்டனை அடைந்த கைதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள். அப்பீல் கோர்ட்டார் இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட ஒரு சர்ஜனுக்கு சாக்ஷி சம்மன் அனுப்பி அவருடைய சாக்ஷியத்தைக்கேட்க வேண்டு மென்று அபிப்பிராயப்பட்டார்கள். கைதிகள் வக்கில் வைத்திருந்தார்கள். கோர்ட்டார் சர்ஜன் சாக்ஷியாக விசாரணை செய்யும் போது கைதிகள் கோர்ட்டில் ஆஜராயிருக்க வேண்டுமா இல்லையா என்கிற ஒரு விவாதம் உண்டானது. கோர்ட்டாரே கோர்ட் சாக்ஷியாக ஒருவரைத் தருவித்து விசாரணை செய்யும் போது கி. பு. கோ. 375, 428 பிரிவுகளின் படி கைதிகளிருக்க வேண்டியது அவசிய மென்று தீர்மானிக்கப்பட்டது. அலகபாத் ஐக்கோர்ட் 1906ம் ஞு த்திய 52வது கிரிமினல் அப்பீல்.

அடியில் சொல்லப்பட்டிருக்கும் தகப்பன்பட்ட கடன்களுக்கு பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களல்ல:—

(1) கள், சாராயம், அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் வாங்கிச் சாப்பிடுவதினால் ஏற்படும் கடன்கள்.

(2) காம வெறியினாலாவது கோபத்தினாலாவது ஏற்படும் கடன்.

(3) பிரதிப் பிரயோஜன மன்னியி லேற்படும் கடன்.

(4) சூதாட்டத்திற்கு வாங்கும் கடன்.

(5) ஒருவனுக்கு ஜாமீன் கொடுப்பதால் உண்டாகும்கடன்

(6) அபராதம் அல்லது அநியாய வரி இவைகளின் பாக்கி.

(7) நல்ல நீதிக்கு விரோதமான செய்கைகளால் ஏற்படும் கடன்.

(8) கன்னிகைகளை விவாகத்திற்கு பணம்கொடுத்து வாங்குவதால் ஏற்படும் கடன்:

ஆனால்மேலே எட்டாவது அயிட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் விவாகப்பெண்களை பணம் கொடுத்து வாங்கும்அசுர விவாகவழக்கம் சென்னைராஜதானியில் பிராமணர்களுக்குள் நீண்டகாலமாய் அனுஷ்டானத்திலிருப்பதால் அதற்காக தகப்பன் வாங்கும் கடன்களுக்கு பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்று சென்னை ஹைகோர்ட்டார்மட்டிலும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இ-லா-ரி, 13 சென் 83 விஸ்வநாதன் v சாமி நாதன் I-L-R, 13 Mad. 83.

நான்காவது அயிட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஜாமீன் விஷயத்திலும் இப்போது ரூலிங்ஸ் மாறியிருக்கிறது. தகப்பன ஒருவனுக்கு ஜாமீன் கொடுத்து அதனால் ஏற்படும் கடன்களுக்கு பிள்ளைகள் வசத்திலுள்ள பூர்வீக சொத்துக்கள் கட்டுப்பட்டவைகளென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. இ-லா-ரி 11-சென் 313 சீத்தாராமய்யர் v- வெங்கட்டரமணா I-L-R 11 Mad.373.

தகப்பன் ஒரு கம்பேனியாரிடம் கண்டிராக்ட்டு செய்து தொழில் நடத்திஜீவனஞ்செய்து வருகிறான். அதனால் அவனுக்கு சில சொத்துக்கள் சேர்ந்தன. அந்தச்சொத்துக்களில் சிலவற்றை தன் பிள்ளைகளுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்தான். பிறகு அவனுக்கு ஷை கண்டிராக்டால் நஷ்டமுண்டாகி அவன்பேரில் டிக்கிரி ஏற்பட்டது. அந்த டிக்கிரிக்கு பிள்ளைகளின் வசத்திலிருக்கும் பாகப்பிரிவினையான சொத்துக்களும்கட்டுப்படக் கூடியவை. இ-லா-ரி 24 சென் 555ராமச்சந்திர படையாச்சி v கொண்டய்யா செட்டி I-L-R 24 Mad.555.

தகப்பன் எழுதிக்கொடுத்திருந்த வெண்ணலைக் கடன் பத்திரத்தின்பேரில் டிக்ரி ஏற்பட்டு அதற்காகக் குடும்பச்சொத்துக்கள் ஏலவிற்பனைக்கு கொண்டுவரப்பட்டால், அக்கடன் துன்மார்க்கக் கடன் என்பதாக பிள்ளைகள் ருஜூப்படுத்தி தங்கள் பாகத்தை விலக்கிக்கொள்ளலாம். அக்கடன் குடும்பக் கடனென்றாவது அல்லது பூர்வீகக்கடனென்றாவது ருஜூப்பட்டால் புத்திரர்கள் தங்கள் பாகத்தை விலக்கிக்கொள்ள சாத்தியப்படாது. இ-லா-ரி 12 சென் 311, ராமநாத v ராஜகோபால் I-L-R 12. Mad. 311

வயதில் முதிர்ந்தவன் தான் ஒரு அவிபக்தகுடும்பத்திற்கு தலைவனாக யிருக்கவேண்டு மென்ப தவசியமில்லை. குடும்பச் சொத்துக்களை பரிபாலிக்கக்கூடிய சாமர்த்திய முடையவர்கள் குடும்ப பாகஸ்தர்களில் இளவயதுடையவராக யிருந்தாலும் அவர்கள் குடும்பத் தலைவராகவிருந்து மானேஜ்மெண்டு செய்யலாம். வெங்கடகிருஷ்ண அய்யங்கார் v நாராயணா Norton 113, 114.

L என்பவனும் M என்பவனும் அவிபக்த சகோதரர்கள். L இறந்துவிடுகிறான், அவனுக்கு N என்கிற பெண்சாதியும் S என்கிற பெண்ணுமிருக்கிறார்கள். S கலியாணச் செலவுகளுக்காக M பணம் கொடுக்கவில்லை N அந்தச்செலவுகளைச் செய்து விவாகத்தை நடத்தி பிறகு M பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள். அச்செலவுகளை M இடமிருந்து வசூலிக்க N-க்குப் பாத்திய முண்டென்று தீர்மானிக்கப்பட்டது. இ-லா-ரி 26 சென் 497 வைகுண்டம் அய்யங்கார் v கல்விபுராம் அய்யங்கார் I-L-R 26 Mad.497.

ஒருவனுக்குக் குடும்பக் கடன்களும் பெண்சாதி ாகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஜீவனும்சக் களு மிருக்கின்றன. இவ்விரண்டு கடன்களில் பக்கடன் மேலானதேயன்றி ஜீவனும்சக்கடன் ானதல்ல. இ-லா ரி 2 சென் 126 நாச்சியார் ாள். v கோபாலகிருஷ்ணா I-L-R Mad. 126.

ஆண் வார்சு இல்லாமல் இறக்கும் ஒரு மனித ய சொத்துக்களை வார்சுக்கிரமப்படி அடையக் ப ஸ்திரீகள் மூன்று வகையார்களாகப் பிரிக்கப் ாம்.

அவையாவன:—

(1) இறந்தவனுடைய பெண்ஜாதி

(2) இறந்தவனுடைய தாயார்

(3) இறந்தவனுடைய பெண்கள்

மேற்கூறின தாய், விதந்து ஆகிய இருவர்களுக் வார்சுக்கிரமப்படி கிடைத்த சொத்துகளிலிருக் பாத்தியம் ஏறக்குறைய ஒரேமாதிரி யானது ர. ஆனால் பெண்கள் விஷயத்தில் மட்டிலுஞ் சில தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருவனுக்கு பெண்களிருந்தால் அவர்கள் எல்லோரும் தகப் சொத்தை சமமாகப்பங்கு பிரித்துக்கொண்டு பவித்துவர பாத்தியப்பட்டவர்கள் அப்பெண்க ஒருத்தி இறந்து போய்விட்டால் அப்பெண் பவித்துவந்த சொத்துக்கள் அவளுடைய பிள் ளுக்குக் கிடைக்கமாட்டாது. மற்றப் பெண்கள் சொத்தை பாகித்துக் கொள்ள பாத்தியமாயிருக் ர்கள் இப்படியாக அந்தச்சொத்து கடைசியில் ஒ பண்ணிடம் வந்து சேருகின்றது. இந்தப்பெண் ம் இறந்துபோய்விட்டால் அச்சொத்துக்கள் அவ டைய பிள்ளைகளுக்கு மட்டிலும் பாத்தியமில்லை. புருஷனுடைய பெண்களின் பிள்ளைகள் எத் ாபேர்களிருக்கிறார்களோ அவ்வளவுபேரும் சம க பாகம்பிரித்துக்கொள்ள பாத்தியமுடையவர்கள். ற்சொல்லப்பட்ட பெண்கள் அச்சொத்துக்களை கள் ஆயுள்பரியந்தம் அனுபவித்துவரலாமே தவிர பசியமானவும் நிர்ப்பந்தமான செலவுகளுக்கல்லா அச்சொத்துக்களை எவ்விதமான கடனுக்கும் படுத்தக்கூடாது. அச்சொத்துக்களை அனந்தர ர்சுகளிடத்தில் அவர்கள் ஒப்புவிக்கக் கடமைப்ப டிரஸ்டிதானத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். றல் அவர்கள் அனுபவிக்கும் சொத்தின் வரும் களை எந்தச்செலவும் செய்யலாம். அதைப்பற்றி க்ஷேபிக்க எவருக்கும் பாத்தியமில்லை. அவர்கள் புள்பரியந்தம் அனுபவிக்கும்படியான பாத்தியங்க அவர்கள் பராதீனங்கள் செய்யலாம். இ-லா-ரி- சென் 290 வெங்கடசுப்பய்யர் v. ஜோசி நரசிங்கப் I-L-R-Mad 290.

ஒரு விதந்துவின் மாமியார் கோவில்கட்டி சுவாமி ரதிஷ்டை செய்துவிட்டு இறந்துபோய்விடுகிறாள். நமகள் (விதந்து) பிறகு அந்தக்கோவிலுக்கு பூஜை நவேத்தியங்கள் நடத்த சில சொத்துக்கள் ஏற்ப ந்துகிறாள். அத்தருமம் அவளுடைய பரலோகசா னத்திற்கு ஏற்பட்டதேயன்றி அவளுடைய புருஷ டைய பரலோக சாதனத்துக்கு ஏற்பட்டதாக ட்டாது. ஆதலால் அப்பராதீனங்கள் செல்ல தக்கனவல்ல. இ-லா-ரி-22 கல் 506 ராணிக் ங்ஸ்சிங் v. ராணி இஸ்டோர்தாஸ் I-L-R 2- Cal. 506.

காடுந்துன்பம் உண்டாக்கியதாய் நடந்த விசாரணை ல் துன்பமடைந்தவன் சாக்ஷி சொன்னான். பின்பு இறந்து போய்விட்டான். அதற்கு பிறகு குற்றவாளிகள் பேரில் கொலை குற்றஞ்சாட்டி நடந்த விசாரணையில் இறந்தவன் முன் கொடுதத வாக்குமூலத்தை சாக்ஷியமாக எடுத்துக்கொள்ளலாமென தீர்மானிக்கப்பட்டது.

ஜாதகக் குறிப்புகள் இன்னாரால் எழுதப்பட்டதெனும் ருசுவில்லாமலும், அவைமேல் இன்னார் ஜாதகமென்று கண்டிருந்து இன்னான் கையெழுத்தென்றும் தெரியாமற் போனால் அது சாக்ஷியமாய் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இ.லா.ரி.9 கல் 613.

குற்றவாளியானவன் வயதுவராத தன் மகளை ஒரு கோவிலுக்கு பசவியாகத் தத்தஞ் செய்துவிட்டான். அப்படிப்பட்ட யாதொரு பசவியானவள் கிரமமான விவாகஞ் செய்துகொள்ளத் தகாதவளாய் நேர்ந்தபோது பொதுவாக யாரிடத்திலாவது தேகசம்மந்தம்செய்வது வழக்கமாகக் காணப்படுகிறதாகையால் தகப்பன்குற்றஞ்செய்தவனாகிறான் என்று தீர்மானித்திருக்கிறார்கள். I-L-R-Bom 737.

புணர்ச்சிக்கு இஷ்டமில்லாமல் தடங்கல் செய்துகொண்டிருந்தவள் தடங்கல் செய்து கொள்வதை நிறுத்திவிட்டால் சம்மந்தம் தொடுத்தவளாகமாட்டாள் I,-W-R-21.

விவாகமான புருஷன் தன்பெண்சாதியுடன் அக்கிரம புணர்ச்சிசெய்தால் குற்றவாளியாகமாட்டான். வேறொருவன் தன்பெண்சாதியைப் பலவந்தஞ்செய்து புணர்வதற்குக் சகாயஞ் செய்தால் உடந்தைக் குற்றத்திற்கு உள்ளாகுவான். இ.பி கோ. 114. பிரிவின்படி தானே அந்தக்குற்றஞ் செய்தவனாகவும் எண்ணப்படுவான்.

FUN UPON LAW.

சட்ட சம்மந்தமான வேடிக்கை.

மாஜிஸ்டிரேட்டும் கூச்சல்போட்டவனும்.

கோர்ட்டில் இரைஞ்சி பேசிக்கொண்டிருந்த ஒருவனைப்பார்த்து மேஜஸ்டிரேட் "நீர் என்வேலைக்கு ஓர் இடஞ்சல், தண்டிப்பேன்" என்றார்'

கூச்சலிட்டவன்: — இடஞ்சலைத்தண்டிக்க தங்களுக்கு அதிகாரம் கிடையாது.

ஆச்சரியமான வியாக்கியானம்.

பூமியும் ஆகாயமுமில்லாத ஊரிலே ஒரு தனவந்தன் இறந்துபோகும்போது தன்னுடைய மைனர் குமாரனையும் தன்சொத்துக்களையும் ஒருமடாதிபதியிடம் ஒப்புவித்து மைனருக்கு வயது வந்தவுடன் "மடாதிபதிக்கு எவ்வளவு இஷ்டமோ அவ்வளவு" அச்சொத்தில் அப்பையனுக்குக் கொடுக்கும்படியாக உயில் எழுதிவைத்துவிட்டு இறந்து போய்விட்டான். மைனர் மேஜரானான். மடாதிபதி அச்சொத்தில் முக்கால்பங்கு தமக்கு எடுத்துக்கொண்டு கால்பாகத்தை பையனுக்குக்கொடுத்தார். பையன் வழக்கிட்டான். அசல்கோர்ட்டும் அப்பில்கோர்ட்டும் மடாதிபதிசெய்தது சரிதான் என்று சொல்லி கேசைத் தள்ளிவிட்டார்கள். பையன் பிரிவிகௌன்சலில் அப்பீல்செய்தான். கீழ்க்கோர்ட்டுதீர்ப்புகள் மாறிப்போய்விட்டன. பையனுக்கு முக்கால் பாகம் கொடுத்துவிட்டு கால் பாகத்தை மடாதிபதி எடுத்துக் கொள்ளும் படியாக

தீர்ப்புகொடுக்கப்பட்டது. மடாதிபதி காரணம் கேட்டார்.

ஜட்ஜி.—பையன் தகப்பன் விவேகியா சித்தபேதப்பட்டவனா?

ம:—விவேகி

ஜ:—அப்படியானால் புத்திரனிருக்கையில் சொத்தின் பெரும்பாகத்தை நீர் எடுத்துக்கொள்ளும்படி சம்மதித்திருப்பானா?

ம:—சம்மதிக்கமாட்டான்தான். ஆனால் உயிலில் "உமக்கு எவ்வளவு இஷ்டமோ அவ்வளவு கொடுவென்று எழுதியிருக்கிறதே! எனக்கு கால்பங்கு கொடுக்கத்தான் இஷ்டம். அதற்கு என்ன ஆக்ஷேபமிருக்கிறது.

ஜ.—'உமக்கு எவ்வளவு இஷ்டமென்கிற வார்த்தைகளுக்கு நீர் சரியான தாற்பரியம் செய்துகொள்ளவில்லை.

ம:—சுத்த வெள்ளையாயிருக்கிறது.

ஜ:—இல்லை.

ம:—பின் எப்படி?

ஜ:—நீர் மைனராயிருந்து உம்முடைய தகப்பனார் ஒரு மடாதிபதியிடம் சொத்தை இப்படி உயில் எழுதி ஒப்பிவித்திருந்தால் நீர் அச்சொத்தில் எவ்வளவு இஷ்டப்படுவீர்?

ம:—பெரும்பாகம் தான்.

ஜ:— ஆகையால் நீர் எவ்வளவு இஷ்டபடுவீரோ அந்த பாகத்தைப் பையனுக்குக்கொடும்.

ம:—ஓகோ! அப்படியா அது!

வக்கீலும் கக்ஷிக்காரனும்

ஒரு தனாட்டிக கக்ஷிக்காரன் ஒரு லாயருக்கு வக்காலத்து கொடுக்கப்போனான். அவர் எதிர் தரப்பிற்கு வக்காலத்து பெற்றிருப்பதாய்ச் சொன்னார். அவருக்குத் தெரிந்தவேறெந்த லாயருக்காயினும் சிபார்சு கடிதம கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான். கொடுத்தார். கக்ஷிக்காரன் வேடிக்கையாய் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் "இதோ இரண்டு கொழுத்தகிடாக்கள்ஒன்றுடன்ஒன்று முட்டிக்கொண்டிருக்கின்றன. நீர்ஒன்றை உருஞ்சுப், நான் ஒன்றை உருஞ்சிவிடுகிறேன். பிறகு இரண்டும் ஒரு தாய்வயற்றில் பிறந்த சகோதரர்களைப்போல் ஒத்துப் போய்விடும்"என்று எழுதப்பட்டிருந்தது.

லாயர் சம்பார்த்தனை.

ஒரு லாயர் இறந்துபோகும் தருவாயில் தமக்கிருந்த ஏதேஷ்டமான சொத்துக்களுக்கு ஒரு உயில் எழுதிவைத்தார். அப்படி எழுதி வைத்ததில், வட்டுகாரர்களாகவும் பைத்தியங் கொண்டவர்களாகவுமிருப்பவர்களாகப் பார்த்து எழுதிவைத்தார். அவருடைய பந்து ஒருவர் "பாடுபட்டுத்தேடின சொத்தை ஏன் அப்படி எழுதி வைக்கிறீர்"என்று கேட்டதற்கு அப்பேர்க்கொத்தவர்களிடமிருந்துதான் அச்சொத்துக்களை சம்பாரித்தேன் என்று சொன்னார்.

சாக்ஷிவிசாரணை.

டிபன்ஸ்வக்கீல்:—குற்றவாளி எத்தனை கட்டு விரகு வெட்டினதாகச் சொல்லுகிறீர்?

பிராசிக்கியூஷன்தரப்பு சாக்ஷி:—சரியாகப் பத்து, எண்ணிப்பார்த்தேன்.

வக்கீல்:—அப்படி நினைத்துக் கொண்டிரோ?

சாட்சி;—ஆம்

வக்கீல்:—நீர் நினைத்ததை நாம் கேட்கவில்லை ஐயா! நீர் க-ண்-ணா-ல் பா-ர்-த்-த-தைச் சொல்லும்.

ஜட்ஜி:—நீர் பார்த்ததைச் சொல்லும்.

வக்கீல்:—நல்லதிருக்கட்டும், ஒன்பது கட்டுகளுக்கு மேலிருந்ததென்று நீர், பிரமாணம் செய்ய முடியுமா?

சா. :—செய்யமுடியும். சரியாக—

வக்கீல்:—நிறுத்தும், நிறுத்தும். கேட்டதிற்கு மட்டிலும் ஜவாப்பு சொல்லும், நல்லது பண்ணிரண்டு கட்டுகளுக்கு எத்தனை கட்டுகள் குறைவாயிருக்கின்றன.

சா. :—இரண்டு

வக்கீல்:—இரண்டு குறைந்திருந்தது என்று எப்படி ஐயா சொல்லுகிறீர்? எண்ணியா பார்த்தீர்?

சா. :—இல்லை, நான்---

வக்கீல்:—நிறுத்தும். அது போதும், சிறிது நிமிஷத்திற்கு முன் நீர் கட்டுகளை எண்ணிப் பார்த்ததாக பிரமாணத்தின் பேரில் சொல்லவில்லையா?

சா. :—சொன்னேன் ஆனால்—

வக்கீல்:—நிறுத்தம், ஜூரிகளே! இந்த சாக்ஷி முன்பின் விரோதமாய்ப் பேசுவதை கவனியுங்கள், நல்லது! நீர் பிரமாணமாய்ச் சொல்லும், பத்து கட்டும், ஒரு அரைக்கட்டுமில்லையா?

சா. :—ஆம். இருந்தது, (தாழ்ந்த தொனியில்)

வக்கீல்:—சரியான பதில் சொல்லும்-உண்-மை-யை-ப்பேசும்.

சா. :—பத்து-கட்டு (நிதானித்து)

வக்கீல்:—நீ பிரமாணம் செய்வீரா?

சா. :—செய்வேன்.

வக்கில்:—பொய் சாக்ஷியம் சொன்னால் என்ன தண்டனை என்பது உமக்குத் தெரியுமா?

சா. :—தெரியும்.

வக்கீல்:—ஆனால் 9 கட்டுகளுக்கு மேலிருந்ததாக பொய் பேசி பொய் சாக்ஷியப் சொன்ன குற்றத்திற்கு உள்ளாக உமக்கு சம்மதமா?

சா. :—ஆம்.

வக்கீல்:—என்ன! என்ன! பொய் சாக்ஷியஞ் சொல்ல விரும்புகிறீர். நான் அப்படித்தான் நினைத்தேன்.

வக்கில்:—நான் இந்த பொய் சாக்ஷியை இன்னுமொரு கேள்வி கேட்கிறேன். ஐயா! உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன். பொய் சொல்வது எவ்வளவு பெரிய கெட்ட காரியமென்பது உமக்குத் தெரியுமா?

சா. :—தெரியும் (நடுநடுங்கிக்கொண்டு)

வக்கில்:—அப்படித் தெரிந்திருந்தும் ஏறக்குறைய ஒன்பது கட்டுகளிருந்தன வென்று நீர் பிரமாணம் செய்கிறீர்.

சா :—நான் அப்படிச் செய்யவில்லையே.

வக்கில்:—நல்லதிருக்கட்டும். சரியா ஒன்பது கட்டுகள் என்று உமக்கு எப்படித் தெரியும்.

சா. :—எனக்கு ஒன்றுந் தெரியாது.

வக்கில்:—ஆனால் உமக்கு ஒன்றும் தெரியாதே? சரிதான் நான் அப்படித்தான் நினைத்தேன். அப்படியிருந்தும், நீர் பார்த்ததாகவும் எண்ணிப் பார்த்ததாகவும் சொன்னீர்.

சா. :—ஆனால் நான்--

வக்கில்:—டஷ்! இனி பேசாதியும் வாயை மூடும்

சா. அப்பாடா சனி விட்டதடா.

COURT NEWS.

கோர்ட்டு வர்த்தமானங்கள்

புதிய நியமனங்கள்.

சென்னை ஹைக்கோர்ட் நியாயாதிபதிகளில் ஒருவராகிய ஆனரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் அவர்கள் மைசூர் சமஸ்தான சீப் கோர்ட் ஜட்ஜாக நியமனம் பெற்றுப்புதிய உத்தியோகத்தை ஒப்புக்கொண்டுவிட்டார். மைசூர் சமஸ்தான ஜில்லாக் கோர்ட்டுகளை சீர்திருத்த வேண்டுமென்று மேற்படி சமஸ்தானத்தார் அபிப்பிராயம் கொண்டிருக்கிறபடியால் ஜில்லாக்கோர்ட்டு வேலையில் மிகுந்த அனுபோகமுடைய ஆனரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் அவர்களை தெரிந்தெடுத்து நியமித்திருக்கிறார்கள்.

* *

சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜி களாகவிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் மைசூர் சீப் ஜட்ஜியாக நியமனம் பெற்று மைசூருக்குப் போய் விட்டபடியாலும் ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ் தேக அசௌக்கியத்தினால் தம்முடைய உத்தி யோகத்தை ராஜிநாமாகொடுத்து விட்டு இங்கிலாண்டிற்குப் போய்விட்டபடியாலும், ஹைக்கோர்ட்டில் உண்டாயிருக்கும் காலிஸ்தானங்களுக்கு கோயம் புத்தூர் ஜில்லா ஜட்ஜாகவிருந்த மிஸ்டர் L. C. மில்லரும், அட்வோக்கேட் ஜனராலாகவிருந்த மிஸ்டர் ஜே. பி. வாலிசும், லோக்கல் கவர்ன் மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய நியமனம் மாக்ஷிமைதங்கிய மகா ராஜா அவர்களின் சம்மதத்தைப்பெற்று இந்தியாமந்திரி ஊர்ஜிதப் படுத்தும் பரியந்தம் பதில் (ஆக்டிங்) நியமனமாக எண்ணப்படவேண்டும்.

* *

சேலம் ஜில்லா ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் கோபாலாச்சாரியார் அவர்கள் திருவநந்த புரசமஸ்தான திவானாய் நியமனம் பெற்றபடியாலும், குன்ட்டூர் ஜில்லா ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் குப்புசாமி அய்யர் அவர்கள் இறந்துபோய் விட்ட படியாலும் ஜட்ஜி உத்தியோகங்களில் இரண்டு காலியாயின அவைகளுக்கு மிஸ்டர் ரெங்காச்சாரியார் அவர்கள் குன்ட்டூர் ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜியாகவும், சிட்டி சிவில் கோர்ட்டு ஜட்ஜி மிஸ்ட்டர் யம். ஒ. பாரத்தசாரதி அய்யங்கார் அவர்கள் கோதாவாரி ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜியாகவும் நியமனம் பெற்றிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டில் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் இரண்டாவது ஜட்ஜியாக விருத்த மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார் அவர்கள் சிட்டி சிவில் கோட் ஜட்ஜியாக நியமனம் பெற்றிருக்கிறார்:—

* *

அட்வோக்கேட் ஜெனரல்

மிஸ்டர் ஜெ. பி வாலிஸ் ஐக்கோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் லோக்கல் கவர்மெண்டார் அட்வோக்கேட் ஜெனரல் உத்தியோகத்தை தற்காலம் சர். வி. பாஷியம் அய்யங்கார் அவர்களுக்குக்கொடுத் திருக்கிறார்கள் இந்த உத்தியோகத்தைவகிக்க இப்போதிருக்கும் பாரிஸ்டர்களுக்குள் பாரிஸ்டர் நார்ட்டனையும் இன்னும் இரண்டொருவர்களையும் தவிர்த்து வேறே சீனியர் பாரிஸ்டரில்லாமலிருக்கிறபடியால் மேற்படி சொல்லப்பட்ட ஏற்பாடு செய்திருக்கிறதாகத்தெரிகிறது.

———o———

ஒரு மனு

சென்னை தங்கசாலை வீதியிலிருக்கும் வேதவிநாயகர் ஆலயத்தையும் ஸ்தலத்தையும், பச்சயப்பன் கலாசாலைக்கும் சைனாபஜார் ரோட்டிற்கும் வேறொரு புதியடிராம் பாதை போடுவதற்காக, Land Acquisition ஆக்ட்டின் படி கிரையத்திற்கு வாங்கும் படி கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். மேற்படி ஆலயத்திற்கு சுவாதீனக்காரர் மேற்படி ஆலயம் தம் சுவாதீனத்திலும் தம்முடைய முன்னோர் சுவாதீனத்திலும் பரம்பரை பரம்பரையாக விருந்து வருகின்றதென்றும் மேற்படி ஆலயத்திற்கு எதிரில் போதுமான காலி யிருப்பதால் அதில் டிராம்பாதையைப் போட்டுக்கொண்டு போகலாமென்றும், இந்துக்களின்மனம் நோகும் படியாக இத்தேவாலயத்தை இடிக்கக்கூடாதென்றும் லோக்கல் கவர்ன் மெண்டாருக்கு மனு செய்துகொண்டார். மனு தள்ளுபடி செய்யப்பட்டது இப்போது இந்தியா கவர்ன் மெண்டிற்கு மனுசெய்திருக்கிறார்.

லாட்டரி

சென்னையில் இரண்டுமாதங்களுக்கு முந்தி வில்சன்லாட்டரி கேஸ்நடந்து மிஸ்டர் வில்சன் சிக்ஷிக்கப்பட்டாரல்லவா? அதேமாதிரி கேஸ் ஒன்று கொழும்பில் நடக்கப்போகின்றது. கொழும்பு லாட்டரிக்காரர்களை போலிசார் பிராசிக் கியூட் செய்யவேண்டுமென்கிற கருத்துக்கொண்டு அவர்களுடைய டிக்கட்டு புஸ்தகங்கள் முதலிய தஸ்தாவேஜிகளை போலிசார் கைவசப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பிரஸ்தாபலாட்டரியில் இந்தியாவிலும் சில பேர்கள் சேர்ந்திருப்பதாகத்தெரிகின்றது. கவர்ன்மெண்டார்உத்திரவின்றிலாட்டரிபோடுதல் சட்ட விரோதயானசெய்கை யென்று இந்தியன் பீனல் கோடு கண்டிப்பாய்க் கண்டித்திருந்தும், இச்சட்ட விரோதமான செய்கையைச்செய்து ஏன் தண்டனைக்குள்ளாக வேண்டுமோ?

ஜஸ்டிஸ் சர் ஜேமஸ் டேவிஸ்ஸும் ஒரு ஜூனியர் வக்கீலும்.

மதிராஸ் ஐக்கோர்ட்டில் கடந்த ஜூலைமீ 25உ மிஸ்டர் ஜஸ்டிஸ் ஜேம்ஸ் டேவிசும், மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரும் கூடி விசாரணை செய்த டிவிஷன் பெஞ்சில் ஐக்கோர்ட் வக்கீலாக 6 மாதங்களுக்கு முந்தி தான் தாக்கல் செய்து கொண்டஜூனியர் வக்கீலாகிய மிஸ்டர் பட்டாபிராமய்யர் என்பவர் வேறொரு வக்கீலின் கோரிக்கைக் கிணங்கி ஒரு பிரமாணப்பத்திரிகையைப் பற்றிப் பேசுகையில் அவர் பேசினதற்கும் அபிட விட்டில் எழுதப்பட்டிருந்ததற்கும் வித்தியாசமிருந்ததை முன்னிட்டு மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிசுக்கு திடீரென்று கோபம் ஜெனித்து வக்கீலை நோக்கி அடிக்கடி "நீர் பொய்யர், பொய்யர் ரிக்கார்டுகளை மாற்றப்பார்க்கிறீர், உம்மால்வக்கீல் தொழிலுக்கே மானக்கேடாயிருக்கிறது" என்று சொன்னார். இப்படி ஒரு வக்கீலை ஒரு அற்பகாரணத்திற்காக ஜஸ்டிஸ் அவமதித்தது வக்கீல்களுக்குள் ஒரு பெருத்த மனப்பதைப்பை உற்பத்தி செய்திருக்கிறது, ஆயினும் கேசை ஒப்புக்கொண்ட வக்கீல் கேசுக்காக ஆஜராகாமல் அந்தக்கேசைப்படிக்காத வேறொரு வக்கீலை ஆஜர் செய்யும்படி செய்யும் துர்வழக்கத்தை இனி ஏறக்குறைய ஒழிக்கும்படியான காலம் வந்துவிட்டது. மிஸ்டர் டேவிஸ்சிக்கலான வியாஜ்ஜியங்களின் உண்மையைக் கூட கண்டுபிடிக்கக் கூடிய சாமர்த்தியமுடையவராகவிருந்த போதிலும் சற்றுப் படபடப்பான குணம் பொருந்தப் பெற்றவர் மேலும் அவர் மேற்சொன்ன சந்தர்ப்பத்திற்குப் பிறகு தம்முடைய தேக அசௌக்கியத்தை முன்னிட்டு ஜஸ்டிஸ் உத்தியோகத்தை ராஜிநாமாகொடுத்துவிட்டார்.

புதுக்கோட்டை – சீப் கோட்

புதுக்கோட்டை சமஸ்தானம் சீப் கோர்ட் (Chief Court) ரிஜிஸ்டிரார் இறந்து போய்விட்டார். இந்தஉத்தியோகத்திற்குக்காயமாக இன்னும் எவரும்

நியமிக்கப்படவில்லை. தற்காலம், சமஸ்தான மராமத்து இலாக்காவைச்சேர்ந்த மிஸ்டர் ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் ஆக்ட்டிங் ரிஜிஸ்டிரராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரே இதற்கு முன் இரண்டு மூன்று சமயங்களில் இந்த உத்தியோகத்தைப்பார்த்து வந்திருக்கிறார். இந்த உத்தியோகம் பி. யல். பாஸ் செய்தவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பது சமஸ்தானத்தின் சட்டமானபடியால் இவருக்கு காயமாகக்கொடுக்கப்படவில்லை. பி. யல். பாஸ் செய்த பன்னிரண்டு பேர்கள் இந்த உத்தியோகத்திற்கு மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். தேக சௌக்கியத்தை நாடி ஐரோப்பாவிற்குச் சமுத்திர யாத்திரை போயிருக்கும் சமஸ்தானாதிபதி வந்தவுடன் தான் இப்பன்னிருவரில் ஒருவர் அவ்வுத்தியோகத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்.

திருச்சினாப்பள்ளி ஜில்லாக் கலெக்ட்டர் உத்திரவின்பேரில்புதுக்கோட்டைச்சமஸ்தான சானிட்டெரி போர்டார் சமஸ்தானத்திலுள்ள கால் நடைகளையும் வண்டிகளையும் தனிக்கைசெய்து வருகின்றார்கள். காரணம்இன்னதென்று தெரியவில்லை வரி போடப் போகிறதாக ஜனங்கள் நினைத்து அஞ்சுகிறார்கள்.

மிஸ்டர் எமர்சன்

மிஸ்டர் பாபு சுரேந்திரநாத் பனர்ஜி கோர்ட்டை அவமதித்த கேசை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் தாம் இந்தக்கேசில் செய்த தீர்மானத்தை 1905ம்ஞு ஏப்பிரல்மீ 14ம்வ எழுதி தாக்கல் செய்தார் மூன்று நாட் சென்று அதாவது ஏப்பிரல் மீ 17ம் வ அத்தீர்ப்புக்கு ஒருவாக்கியம் சேர்த்தார். இதே மாதிரியான குற்றத்தைச் செய்ததற்காகக் கல்கத்தாப்போலீஸ் மாஜிஸ்டிரேட்டாக விருந்த பாபு கிசோரி சான்ட் மித்ரா அவர்களும், சிவில் ஜட்ஜாகவிருந்த காலஞ்சென்ற பாபு சிட்டால் சந்திரமுக்கர்ஜி அவர்களும் உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டார்களென்று இந்தியன் மிரர் பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

மிஸ்டர் எமர்சன் வியாஜ்ஜியம் நடத்தும் விதம்.

மிஸ்டர் எமர்சன் கீழ்பங்காளத்திலுள்ள பாரிசால் டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட் என்று எல்லோரும் அறிவார்கள். பாரிசாலில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு சுதேச பத்திரிகை ஆபிசுக்குள் பலாத்காரமாய்நுழைந்து பத்திரிகை ரிக்கார்டை எடுத்து வந்ததாக மிஸ்டர் எமர்சன் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டார். கோர்ட்டார், குற்றவாளியாகிய போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சம்மன் கூட அனுப்பாமலேயே விசாரணை செய்து கேசைத் தள்ளிவிட்டார்.

GOVERNMENT ORDERS·

கவர்ண்மெண்டு ஆர்டர்கள்.

திருச்சினாப்பள்ளி தாலூக்காவைச்சேர்ந்த பூவளூர் யூனியன் லாலுகுடியூனியனுக்குச் சமீபத்திலிருக்கிறபடியால் பூவளூர் யூனியன் சுகாதாரத்தை விர்த்தி செய்யவேண்டு மென்கிற நோக்கத்துடன் லோக்கல் கவரண்மெண்டார் பூவளூர் யூனியனை லாலுகுடி யூனியனுடன் 1906ஞும் அக்டோபர்மீ 1வ முதல் சேர்த்து விடும் படியாகவும், அன்றைய தினத்தில் பூவளூர் யூனியன் பஞ்சாயத்தின் அமைப்பு கலைந்து போகவேண்டு மென்றும், புதிதாய் சேர்க்கப்பட்ட லாலு குடியூனியன் பஞ்சாயத்தில் மொத்தம் 16 மெம்பர்களிருக்க வேண்டு மென்றும் விளம்பரம் பிரசுரித்திருக்கிறார்கள்.

1906 ஞு ஆகஸ்டுமீ 26வ 671. 1 நெ G. O.

திருச்சினாப்பள்ளிடிவிஷன் கொள்ளிடம் இடது கரையிலிருக்கிற தேலூர் ஓடையின் பேரில் ஓர் நீர்வடி கால் கட்ட ரூ 7,700 சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது

1906ம் ஞு ஜூன்மீ 6வ 616. 1 நெ G. O.

கர்னூல் ஜில்லா விலிருக்கும் குந்தலக்கம்மா என்னும் பழைய ஓடையைக் கட்டுகிறதற்காகவும், மர்க்காப்பூர் குளத்திற்கு நீர் பாயும் படியாக ஓர் புதிய வாய்க்கால்·வெட்டவும் ஆக இரண்டு வேலைகளின் சிலவுக்காக ரூ 1,15,600 சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ம்ஞு ஜூலைமீ 12வ பப்ளிக் 616 நெ G O.

கவர்ண்மெண்டுக்குச் சொந்தமாயிருக்கிறவும் 1903ம்ஞு டிசம்பர்மீ 23வ பப்ளிக் 1188 நெ G. O. ப்பிரகாரம் மராமத்து இலாக்கா வசம் பாதுகாக்கப் படுவதற்காக ஒப்புவிக்கப் பட்டிருக்கும் பூர்வ கால ஞாபகச் சின்னக் கட்டடங்களின் ஜாபிதாவிலடங்கியிருக்கும் ஒவ்வொரு பூர்வகால ஞாபகச்சின்னக் கட்டடமும் பப்ளிக் இலாகா ஆபீசரால் வருஷம் ஒரு முறையாவது பரிசோதனை செய்யப் படவேண்டு மென்று ஆர்க்கியலாஜிகல் சர்வே சூப்பிரிண்டெண்டெண்டு அறிவிக்கப்படுகிறார்.

சரித்திர சம்பந்தப்பட்டவாவது அல்லது விநோத வேலைப்பாடுள்ள கட்டடங்களின் விஷயமாகவாவது மராமத்து இலாக்கா ஆபீசர்கள் செய்ய வேண்டிய கடமைகள் மராமத்து இலாகா கோடு 318, 319, 1046-வது பாராக்களில் விஸ்தரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. கவர்ண்மெண்டாருக்குச் சொந்தமல்லாத பழைய கால ஞாபகச் சின்னக் கட்டடங்கள் அழிந்து போவதினின்றும் அழிக்கப் பட்டுப் போவதினின்றும் பாதுகார்க்கப் படவேண்டு மென்ற முக்கியக் கருத்துக் கொண்டு 1904ஞுத்திய 7 வது ஆக்டாகிய (The ancient monuments preservation) பழைய கால ஞாபகச்சின்னக் கட்டடங்களைப் பாதுகாக்கும் சட்டம் உண்டாக்கப்பட்டது.

மிஸ்டர் ரி (சூப்பிரிண்டெண்டெண்டு) க்கு கவர்ன்மென்டுக்குச் சொந்தமான எந்தெந்த பழைய காலக் கட்டடத்தில் ஜனங்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும் பொருட்டு விளம்பரப் பலகை போடவேண்டுமென்று நினைக்கிறாரோ அந்தந்த கட்டடத்திலிருந்து யாதொரு கல்லையும், வேலை செய்யப்பட்ட கல்லையும, சித்திரச் சிலைகளையும், ஒருவரும் எடுக்கக்கூடாதென்று போர்டு (விளம்பரப் பலகை)போடலாம். முக்கியமான கட்டட விஷயங்களில்டி ஆக்ட் 18 வது பிரிவுப்படி கவர்ண்மெண்டாரே விளம்பரம் பிரசுரிப்பார்கள். மற்றபடி சாதாரணக் கட்டட விஷயங்களில் மேற் சொன்னபடி செய்தாற் போதுமானது.

1906ஞு ஜூலைமீ 5வ 1199 M. G. O. அடியிற்கண்ட கவுன்சிலர்கள் நியமிக்கப்படும்படி தென்னார்க்காட் ஜில்லா கூடலூர் முனிசிப்பாலிட்டிக்கு உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. முதல்வார்டுக்கு 2, 2வது வார்டுக்கு 2, பண்டிப்பாளையம் வார்டுக்கு 1, திருப்பாப்புலியூர் இரண்டாவது வார்டுக்கு 2, புதுப்பாளையம் வார்டுக்கு 2,

இந்த ஏற்பாடு உடனே ஊர்ஜிதத்திற்கு வரவேண்டும்.

1906ஞு ஜூலைமீ 14வ 1264 M. நெ G. O. அசிஸ்டெண்டு சானிட்டரி இன்ஜினியர் மிஸ்டர் ஹாரம்ஸ்ஜி நௌரோஜி சென்னை வாட்டர் சப்ளை வேலைகளை விருத்திசெய்யும்பொருட்டு 22லக்ஷ ரூ மதிப்பிட்டனுப்பிய எஸ்டிமேட் பொதுவாய் அங்கீகரிக்கப்பட்டது. ஆதலால் பிளான்களும் எஸ்டிமேட்டுகளும், மராமத்து இலாகாவின் பரிசோதனையும் அனுமதியும் பெறுவதற்கு அனுப்பப்படும்· ஜல சப்ளையைச் சேர்ந்த தற்கால பாய்ச்சல் முறையை விருத்தி செய்வதற்கு ஓர் உபாயங் கண்டு பிடித்து எஸ்டிமேட் தயார் செய்வதற்கு மிஸ்டர் ஹாரம்ஸ்ஜி நௌரோஜியை 3மீ த்துக்கு பிரத்தியேகமாய் நியமிக்கக் கவர்ண்மெண்டார் தயாராயிருக்கிறார்கள்.

·1906ஞு ஜூலைமீ 10 வ 1-30 M நெ. G. O.

1902, 1903ஞு த்திய மதராஸ் முனிசிபாலிட்டி பரிபாலன ரிப்போர்ட்டைப் பார்வையிட்டவர்மி சானிட்டெரிகமிஷனர்கள் சென்னையிலிருக்கும் சுகாதாரமற்ற விடங்கள் வெகு சீக்கிரத்தில் சீர்திருத்தப்பட வேண்டுமென்று ரிப்போர்ட்டு செய்திருக்கிறபடியால் சென்னையில் குறுகலான தெருக்களையும் ஜன நெருக்கமுள்ள விடங்களையும் விஸ்தீரணப் படுத்துவதற்காகக் குடிசைகளைக் கிரயத்து வாங்கும் பொருட்டு சாங்கிஷன் செய்யப்பட்ட ரூ 10,000 6,500 ரூ ஒரு மாதிரி முனிசிபல் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு உபயோகித்துக் கொள்ளுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கார்ப்பொரேஷன் பிரரேபனை செய்திருப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை. சுகாதார விஷயம் மிகவும் அவசியம் அவசரம். மாதிரி முனிசபல் பள்ளிக்கூடம் கட்டுவதைப்பற்றி வித்யாவிலாகாத் தலைவரைக்கேட்டதற்கு அவர் வற்புறுத்தவில்லை.

2. 1906ஞு மேமீ 8 வ நெ 872னை G. O. 2 வது பாராவில் சொல்லப்பட்டிருக்கும் வேலைகளை நடத்துவதற்காக (பயிரங்கமான மார்கட்டில்) ஜனங்களிடமிருந்து லக்ஷ் ரூபாய் கடன் வாங்கவேண்டுமென்று பிரரேபித்திருக்கிறபடி அதற்கு அநுமதியைப் பெற விண்ணப்பம் அனுப்பும்படி கோரப்படுகிறார்.

3. அசிஸ்டண்டு ஹெல்த் ஆபீசர் உத்தியோகத்திற்கும் மானேஜர் உத்தியோகத்திற்கும் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று பிரசிடெண்ட் செய்திருக்கிற சிபார்சு கவனிக்கப்பட்டது. இந்தச் சம்பளங்களை உயர்த்துவதற்குப் போதுமான காரணங்களில்லை. ஆனால் தற்காலமிருக்கும் அசிஸ்டண்டு ஹெல்த் ஆபீசர் கார்போரேஷன் குறிப்பிடும் சில வருஷங்கள் வரையில் கார்பொரேஷனை விட்டுவிடுவதில்லையென்று தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள இஷ்டப்படுவாரானால் 1906ஞு ஏப்ரல்மீ 1வ முதல் ரூ 50 அலவுன்ஸ் சாங்கிஷன் செய்ய கவர்ண்மெண்டார் தயாராயிருக்கிறார்கள். மானேஜர் உத்தியோகத்திற்குச்சம்பளம் ரூ 80 விருந்தது படிப்படியாய் 200ரூ உயர்த்தப்பட்டிருக்கிறபடியால் தற்காலமிருக்கும் மானேஜரின் உரிமையை முன்னிட்டு இனிமேல் அவ்வுத்தியோகத்திற்கு சம்பளம் உயர்த்தப்படமாட்டாது.

4..

5..

6..

1906ஞு ஜூலைமீ 5வ G. O. நெ. 735 1.

பெல்லாரி	டிவிஷன்	—ரூ.	25000
கடப்பை		—ரூ.	90000
கர்நூல்		—ரூ.	5000
வட ஆர்காடு		—ரூ.	66000
சேலம்		—ரூ.	4000
திருச்சினாப்பள்ளி		—ரூ.	20000
மதுரை		—ரூ.	20000
திருநெல்வேலி		—ரூ.	21607
ஆகமொத்ததொகை		ரூ.	251607

இந்தத்தொகை தடாகம் புதுப்பிக்கும் ஏற்பாட்டிற்காக சாங்கிஷன் செய்யப்பட்டது. இந்ததொகையை முழுவதிலும் அபிஷியல் வருஷத்திற்குள் உபயோகித்துவிட கூடியவரையில் பிரையாசைப்படவேண்டுமென்று 3வது 4வது 6வது சர்க்கில் சூப்பிரிண்டெண்டிங் இன்ஜினீர்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1906ஞு ஜூலைமீ 17வ 330. நெ. G. O.

திருநல்வேலி ஜில்லா, ஸ்ரீவைகுண்டம் தாலூகா எரால் யூனியன் எல்லைக்குள் நடக்கக்கூடிய நியூசன்ஸ்கேசுகளை விசாரணைசெய்து சிக்ஷவிதிக்கும்படியாக பெருங்குளம் சப்ரிஜிஸ்டிராராகிய ம-ா-ா-ஸ்ரீ நரசய்ய சுப்பிராமய்யா அவர்கள் மூன்றாவதுகிளாஸ் ஸ்பெஷல் மேஜிஸ்டிராட்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1906ஞு ஜூலைமீ 17வ 337. நெ. G. O.

சேலம் ஜில்லா அம்மாப் பேட்டைகிராமத்திலுள்ள அங்காரப்புத்துரை என்று சொல்லும்படியான தடாகத்தின் கரையை ஜனங்கள் பொதுவான சுடுகாடாய்உபயோகப்படுத்திக்கொண்டுவருகிறபடியால்அப்படிஉபயோகப்படுத்திவருவதைமுன்னிட்டுஅந்தஅம்மாப்பேட்டைகிராமமுழுதிற்கும் ஜல சப்ளைசெய்துவரும் அக்கம் பக்கத்திலுள்ள கிணறுகளின்ஜலம் கெட்டுப்போய் ஜனசுகாதாரத்திற்கு ஆபத்துகளை விளைவிக்கக்கூடியதாகயிருப்பதால் அத்தடாகத்தின் கரையைஇனி சுடுகாடாய்உபயோகிக்ககூடாதென்று சேலம்டிவிஷனல் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் 1906ஞு ஜூன்மீ 24ம்வ செய்த உத்திரவு, மறு உத்திரவு பிறக்கும் பரியந்தம் ஊர்ச்சிதத்திலிருக்கும் மென்று உத்திரவு செய்திருக்கிறார்கள்.

AMENDMENT OF THE MUNICIPAL ELECTION RULES.

முனிசிபல் எலெக்ஷன் விதி சீர்திருத்தம்.

1897-ம்ஞுத்து 3-வது ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1848-ஞு த்து ஆக்டாகிய சென்னபட்டணம் டிஸட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் 250 வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (3) (i) அடையாளமிட்ட பகுதியின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-மியுனிஸிபல் கவின்ஸிலர்களை (அமாத்தியர்களை)த் தெரிந் தெடுப்பதென்னும் விஷயம் நடந்தேறுவதற்காக, 1904-மஞு மேமீ 17வ யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-A பாகம் 260 முதல் 294 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக் கப்பட்டிருக்கிற 618-ம் வ விளம்பரமூலமாய்வெளியிடப்பட்ட விதிகளிலே 27-வது விதியில் அடியிற்கண்ட மாறுதலைக் களிகூர்ந்து செய்கிறார்கள்:—

29-வது விதியில் 8-வது 9-வது வரிகளிலே "அபிப்பிராயச்சீட்டுப் பெட்டிக்குள் தாமே நேராக அந்தலகோடாவைப் போடவேண்டும்" என்பதற்குப் பதலியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்:—

" அபிப்பிராயச்சீட்டுப் பெட்டிக்குள் தாமே நேராக அந்த லகோடாவைப் போட வேண்டும்; ஷை பெட்டியானது அந்த உத்தியோகஸ்தர் கண்ணுக்குத் தெரியும்படியாக வைக்கப்பட்டிருக்கவேண்டும். அபிப்பிராயம் வாங்குகிற உத்தியோகஸ்தர் - அபிப்பிரா

யங்கொடுப்பதற்காகத் தாம் யாருக்கு லகோடா சவதரித்திருக்கிருரோ அப்படிப்பட்ட நபர் (அபிப்பிராயங்கொடுப்பவர்) ஒவ்வொருவரும் அந்த லகோடாவைத் தாமே அபிப்பிராயச் சீட்டுப் பெட்டிக்குள் போடும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்."

மேற்படி மாறுதலானது 1906-ம்ளு ஸெப்டெம்பர்மீ 1உயில் எல்லா மியுனிஸிபா லிடிகளிலும் அமுலுக்கு வரவேண்டும்.

GOVERNMENT NOTIFICATION.

கவர்ன்மெண்டு.

விளம்பரம்.

நெ. 136.—ஜனனமரணங்களை ரெஜிஸ்டட்ர்செய்வதைக்குறித்த சென்னபட்டணத்து (1899-ம்ளுத்து 3-வது) ஆக்ட்டின் 20 வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள சிரப்புற்ருங்கும கவர்னரவர்கள் - அடியிற்கண்ட விதிகளை முன்னதாகப் பிரசுரித்த பிறகு களிகூர்ந்து ஏற்படுத்துகிருர்கள்:—

இந்த ஆகட் பிரயோகமாகும் படி செய்யப்படுகிறஒவ்வொரு யூனியன் அல்லது வேறே விஸ்தீர்ணத்துக்கும் 5-வது பிரிவின்படி கலெக்ட்டரால் நியமிக்கப்படும் ரெஜிஸ்ட்ரார் அல்லது ரெஜிஸ்டரார்கள ஒவ்வொருவரும்-இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 1-ம் நமூனுப்படி ஜனனங்களைக் குறித்து ஒரு ரெஜிஸ்ட்டரையும், இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 2 ம் நம்பர் நமூனுப்படி மரணஙகளை க்குறித்து ஒரு ரெஜிஸ்ட்டரையும் வைத்துவர வேண்டும் இந்த இரண்டு ரெஜீஸ்ட் டர்களிலும் ஜனனமரணங்கள் சப்பவித்ததைக்குறித்து ஜனவரிமாதம் முதல்தேதியில் ஆரம்பித்துவரிசைக்கிரமமாக இலக்கமிட்டு டிஸெம்பர்மீ 31உவரையில் போட்டுக்கொண்டே போகவேண்டும் வரிசைக்கிரமமாயுள்ள இரண்டு இலக்கங்களுக்கும் மத்தியில் எந்தப்பதிவையும் நுழைக்கக்கூ டாது. குழந்தையின் தகப்பன் தன்னுடைய பெயருடனே தாயாருடைய பெயரையும் எழுதிவைக்க வேண்டுமென்று விருப்பிஞலன்றி மற்றப்படி 1-ம் நமபர் நமூனுவின் 5-வது கலத்தில் ஒன்றும் எழுதக்கூடாது. சட்டசம்மதமல்லாத குழந்தைகளின் விஷயத்திலே 8-வது பிரிவின் கடைசிபாகத்தில் சொல்லியிருக்கும் கற்பனைகளைரெஜிஸ்ட்ரார் கவனிக்கவேண்டும், ஜனனங்களைக்குறித்த ரெஜிஸ்ட்டரின் 7-வது கலத்திலும் மரணங்களைக்குறித்த ரெஜிட்டரின் 7-வது கலத்திலும் எழுதவேண்டிய "வகுப்பார்" யாரென்ருல்:—"ஐரோப்பியர்" "யூரேஷியர்," "சுதேசகிறிஸ்தவர்," "ஹிந்துக்கள்," "மஹம்மதியர்" "மற்றவகுப்பார்."ஜாதிகளையும் ஜாதிகளைச்சேர்ந்த உட்பிரிவுகளையும் குறிக்கக்கூடாது. வீட்டுபெயர் இல்லாதவர்கள் விஷயத்திலே, 2-ம் நம்பர் நமூனுவின் 3-வது கலத்தில் தகப்பனுடைய பெயரை எழுதவேண்டும். (இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற) வில்லேஜ் மான்யுயல் என்னும் கிராமச்சட்ட புஸ்தகத்தைச்சேர்ந்த 19-A. 19-B நமூனுக்களின்படி ஒவ்வொரு ரெஜிஸ்ட்ராரும் தம்முடைய ரெஜிட்டர்களிலிருந்து கோஷ்வாரா தயார்செய்து மாதந்தோறும் தாசில்தாரருக்கு அனுப்பவேண்டும்.

2. ஜனனங்களைக்குறித்தாவது மரணங்களைக்குறித்தாவது சங்கதி தெரிவிப்பதாஞல், அவசியமான சகல விவரங்களையுங்கண்டு ஒரு கடிதமூலமாகவாகிலும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 3-வது 4-வது நமூனுக்களின்படிக்காகிலும் எழுத்துமூலமாய் ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிவிக்கலாம். ரெஜ்ஸ்ட்ரார் எந்த விஸ்தீர்ணத்திற்காகத் தாம் நியமிக்கப் பட்டிருக்கிருரோ அதற்குள்ளிருக்கிற சகல குடிகளுக்கும் இந்த நமூனுக்களைக் கட்டணமில்லாமலே சவதரிக்கவெண்டும் ஜனனமரணங்களைக்குறித்து வாய்மொழியாகவும் சங்கதி தெரிவிக்கலாம். ஜனனம் ரெஜிஸ்ட்டர் செய்யப்படுகிற ஒவ்வொரு விஷயத்திலும், சங்கதி தெரிவித்தவன் கேட்டுக்கொள்வதன் மேல் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 5-ம் நம்பர் நமூனுப்படி அச்சங்கதியைக்குறித்து ஒரு யாதாஸ்தை எவ்வித கட்டணமும் வாங்காமலே அவனுக்கு ரெஜிஸ்ட்ரார் 14-வது பிரிவில் செய்யச்சொல்லியிருக்கிறபடி கொடுக்கவேண்டும். கடிதமூலமாகவாவது, 3-ம் நம்பர் நமூனுப்படிக்கும் 4-ம் நம்பர் நமூனுப்படிக்குமாவது ரெஜிட்டாருக்கு வரும் சகலசங்கதிகளையும் அவர் பைலில்சேர்த்து இரண்டுவருஷம்வரையில் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும்.

3. கடிதங்களையும நமூனுக்களையும் வைத்திருக்கிற பைல்களையும் அவைகளைக்குறித்த ரெஜிஸ்ட்டர்களையும், 17-வது பிரிவின்படி வசூல்செய்யப்படுகிற கட்டணங்களைக்குறித்த கணக்குகளையும், டிஸ்ட்ரிக்ட் கலெக்டருடைய உத்திரவுகளை அனுசரித்து ரெஜிஸ்ட்ரார் வைத்திருக்கவேண்டிய இதர தஸ்தவேஜுகளையும், ரெவினியு இன்ஸ் பெக்ட்டருடைய அந்தஸ்தையாவது அவருக்குமேற்பட்ட அந்தஸ்தையாவதுடைய யாதொரு ரெவினியு உத்தியோகஸ்தர் பார்வையிடும்படி வைத்திருக்கவேண்டும்; டிஸ்ட்ரிக்ட்கலெக்ட்ர் நிர்ணயிக்கிற மாதிரியாகவும் அந்தந்த காலங்களிலும் ஷை ரெஜிஸ்ட்டர்களையும் தஸ்தாவேஜுகளையும் பரிசோதித்துப் பார்ப்பது அந்த உத்தியோகஸ்தர்களுடைய கடமையாகும். ஆனுல், ஸப்ரெஜிஸ்ட்ரார் ஆவ் அஷ்யூரன்ஸ் என்னும் உத்தியோகஸ்தர் ரெஜிஸ்ட்ராராயிருக்கிற விஷயத்தில், பரிசோதனைசெய்கிற உத்தியோகஸ்தரானவர் - சுயேச்சையான விசாரணையுடைய தாசில்தார் அல்லது டெப்யுடி தாசில்தாரது அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ளவராயிருக்கவேண்டும்.

4. ஆக்டின் 6-வது 7-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி நடந்து கொள்வதோடுங் கூடி ரெஜிஸ்ட்ரரானவர்-ஜனன மரணங்களை இன்ன இன்ன மணிநேரங்களில் தாம் ரெஜிஸ்ட்டர் செய்வாரென்று தம்முடைய ஆபிஸிலாவது (அவருக்கு ஆபிஸிராவிட்டால் அவருடைய வீட்டிலாவதுவெளிக்கதவிலோ அல்லது அதற்குச் சமீபத்திலோ எல்லாருக்கும் தெரியும்படியான இடத்தில் எழுதிவைக்கவும் வேண்டும். (ஆதிவாரங்களும் அனுமதி கொடுக்கப்பெற்ற விடுமுறைநாள்களும் நீங்கலாக) நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்றுமணிநேரம அவர் வேலை செய்யவேண்டும்; ஒவ்வொரு ரெஜிஸ்ட்ராருக்காகவும் ஷை மணிநேரங்களை டிஸ்டிரிக்ட் கலெக்ட்டர் நிர்ணயிப்பார். இந்த மணிநேரங்களில்எந்தக் காரணத்திஞலாவது ரெஜிஸ்ட்ரார் ஹாஜராயிராவிட்டால், ரெஜிஸ்ட்ராராகத் தாம் செய்யவேண்டிய வேலையை இன்னகாலத்தில் செய்யக்கூடுமென்றும், தாம் ஹாஜராயிராதபோது 3-வது அல்லது 4-வது நம்பர் நமூனுப்படி கடிதங்களையாவது எழுதியிருக்கும் லிகிதங்களையாவது சங்கதி தெரிவிப்போர் இன்னுரிடத்தில் ஒப்பிக்கலாமென்றுங் கண்டு தம்முடைய ஆபிஸ் அல்லது வீட்டின் வெளிப்புறத்துக்கதவிலோ அல்லது அதற்குச் சமீபத்திலோ அவர் ஒரு நோட்டிஸ் ஒட்டிவைக்கவேண்டும்.

பின்வரும்.

CASES FROM INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டிலுள்ள கேசுகள்.

அலகபாத் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சிப்ஜஸ்டிஸ் சர். ஜான் ஸ்டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர். வில்லியம் பர்க்கிட்.

இந்துபுத்திரன் தகப்பன் கடனுக்குக் கட்டுப்பட்டவன்.

கணேசலால் ... வாதி (அப்பீல் பிரதிவாதி)
ஷியம்லால் ... பிரதிவாதி (அப்பீல் வாதி)

வியாஜ்ஜியசங்கிரகம்.

வாதியின் தகப்பனர், ஜெயந்திப்பிரசாத் என்பவருக்கு ரூபா 300-க்கு பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்து கடன்வாங்கியிருந்தார். இந்தக்கடன் செல்லாகவில்லை. ஆதலால் ஜெயந்திப்பிரசாத் ஷை பிராமிசரிநோட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதியின் தகப்பனர்பேரில் ஹாதரஸ் டி. மு. கோர்ட்டில் தாவா செய்தார். அப்படித் தாவா செய்ததில் கணேசலாலையும் பிரதிவாதியாகச் சேர்த்து தாவாசெய்தார். கணேசலால் தம்மை இந்த தாவாவில் பிரதிவாதியாகச் சேர்க்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்க டி. மு. கோர்ட்டார், பிரஸ்தாப பிராமிசரிநோட்டு கணேசலாலின் தகப்பனுரால்மட்டிலும் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், கணேசலாலை இந்த தாவாவில் பிரதிவாதியாகச் சேர்க்கக் கூடாதென்று சொல்லி, கணேசலாலை நீக்கி ஷையார் தகப்பனர்பேரில் மட்டிலும் டிக்கிரி கொடுத்தார்கள்.

ஜெயந்திப் பிரசாத் என்பவர் அந்த டிக்கிரியை ஷியம்லால் என்பவருக்கு மேடோவர் செய்துவிட்டார்.

ஷியம்லால் அந்த டிக்கிரியை நிறைவேற்றி கணேசலாலுக்கும் அவருடைய தகப்பனுருக்கும் சொந்தமான குடும்பச்சொத்தை ஜப்திசெய்து விற்பனைக்குக் கொண்டுவந்துவிட்டார்.

ஆதலால் கணேசலால், மேற் சொல்லப்பட்ட பிராமிசரிநோட் தாவாவில் தம்மைநீக்கி டிக்கிரிகொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அந்தடிக்கிரியைக்கொண்டு தமக்கு பாத்தியதையுள்ள சொத்துக்களை ஜப்திசெய்யக்கூடாதென்று காரணங்காட்டி அலிகாரா சப் கோர்ட்டில் ஷியம்லால்பேரில் வியாஜ்ஜியம் செய்தார்.

அசல் கோர்ட்டு தீர்ப்பு :—வாதி சொன்ன கக்ஷியை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளவில்லை. துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன் வாங்கப்பட்டாலொழிய ஹிந்து குடும்பப் புத்திரன் தகப்பன்பட்ட கடனுக்குக் கட்டுப்பட்டவன் என்றும் பிரஸ்தாபகேசில் வாதியின் தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன் வாங்கினதாக ஏற்படவில்லை என்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி அலிக்ரரா ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

முதல் அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு :—அசல் கோர்ட்டு தீர்மானத்தை உறுதிசெய்தார்கள். வாதி மறுபடியும் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல்செய்தார்.

இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு :—பிராமிசரிநோட் தாவாவில் கொடுக்கப்பட்ட டிக்கிரியில் வாதி விலக்கப்பட்டிருக்கிருர். வாதியும் வாதியினுடைய சொந்தசொத்துக்கள் மட்டிலும் விலக்கப்பட்டிருக்கிறது என்றும், அவருக்குக் குடும்பச்சொத்திலிருக்கும் பாத்தியதை விலக்கப்படவில்லை என்றும் அசல் கோர்ட்டார் குறிப்பிடவில்லை. எப்போது ஷை டிக்கிரியில் வாதி விலக்கப்பட்டிருக்கிருரோ அதஞல் அங்கு உண்டாயிருக்கும்பயன் என்னவென்ருல் அந்த டிக்கிரி அவரையும், அவருடைய சொந்த சொத்தையும், அவருக்குக் குடும்பச் சொத்திலிருக்கும் பாத்தியதையும் கட்டுப்படுத்த மாட்டாது. ஆதலால் இந்த டிக்கிரியைக்கொண்டு வாதிக்குக் குடும்பச்சொத்திலிருக்கும் பாகத்தை ஜப்திசெய்யக் கூடாதென்று சொல்லி கீழ்க்கோர்ட்டு தீர்மானங்களை ரத்துசெய்து பிரதிவாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு கொடுத்தார்கள்.

லெட்டர்ஸ் பேட்டண்ட் ஆக்ட் (Letters petent Act) 10-வது பிரிவின்படி பிரதிவாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஹைகோர்ட்டுதீர்ப்பு:—பிராமிசரிநோட் தாவாவில் வாதியைச் சேர்த்திருந்தால் எந்த நிலைமையிலிருப்பாரோ அதேநிலைமையில்தான் இப்போதுமிருக்கிருர். துன்மார்க்கச் செலவுகளுக்கு வாங்கின கடன்களைத் தவிர, ஹிந்து குடும்பபுத்திரன் தகப்பன்பட்ட கடனுக்குக் கட்டுப்பட்டவன் இந்த வியாஜ்ஜியத்தில் தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன்வாங்கினதாக பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஆகையால் இந்தக் கோர்ட் ஜட்ஜி கொடுத்த தீர்ப்பை ரத்துசெய்து அப்பீலை ஏற்றுக்கொள்ளுகிருேம்.

வாதி (அப்பீல் பிரதிவாதி) ஹைகோர்ட் அப்பீல் செலவையும், இந்த அப்பீல் செலவையும் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படியாக உத்திரவு செய்கிருேம் என்று தீர்ப்புசொல்லப்பட்டது.

ரூலிங்ஸ் :—பிதாவும் புத்திரனும் சேர்ந்த ஒரு ஹிந்து குடும்பத்தில் பிதாவால் மட்டிலும் எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டிற்காக பிதாவையும் புத்திரனையுஞ் சேர்த்துக்கொண்டு வரப்பட்ட ஒருவியாஜ்ஜியத்தில், அந்த பிராமிசரிநோட் புத்திரனல் எழுதிக்கொடுக்கப் படாததால் அவன் அந்தக் கடனுக்குக்கட்டுப்பட்டவனல்லவென்று விலக்கப்பட்டான். அதாவது புத்திரன் பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆயினும், தகப்பன்பேரில் டிக்கிரிகொடுக்கப்பட்டது.

அந்த டிக்கிரியை மேடோவர் பெற்றுக்கொண்டவர் டிக்கிரியை நிறைவேற்றி குடும்பச்சொத்துக்களை விற்பனை செய்யும்படி செய்தார். ஷை குடும்பச்சொத்தில் தனக்கிருக்கும் பாத்தியதையை விலக்கும்படி புத்திரன் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில், பிதாவால் எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரிநோட் தாவாவில் புத்திரன் விலக்கப்பட்டிருந்தபோதிலும், துன்மார்க்கச் செலவுகளுக்கு வாங்கப்பட்ட கடன்களைத்தவிர தகப்பன்பட்டகடனுக்கு அவிபக்த ஹிந்துகுடும்பபுத்திரன் கட்டுப்பட்டவன் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கேசில் கடன் துன்மார்க்கச் செலவுகளுக்காக வாங்கப்படவில்லை. Shiam Lal v. Gantshi Lal I. L. R. 28 All 238.

சீவில் ரிபரன்ஸ்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சார்ட்ஸ்.

வீதாசாரப்பணத்தைப் (Contribution money.) பற்றிய தாவா.

பேய்ரான் ... ... வாதி
ராம்பாரன் ... ... பிரதிவாதி.

வியாஜ்ஜியசங்கிரகம்.

முன் ஒரு வியாஜ்ஜியத்தில் செலவுதொகை கொடுக்கும்படியாக பிரஸ்தாப கேஸ் வாதி பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி கொடுக்கப்பட்டது. டிக்கிரி பெற்றவர் டிக்கிரியை நிறைவேற்றி பிரஸ்தாப கேஸ் வாதி ஒருவரிடத்திலிருந்து முழுத்தொகையும் வசூல் செய்துவிட்டார். ஆதலால் பிரதிவாதிகளிடமிருந்து வீதாசாரப்படி தொகை தமக்குச் சேரவேண்டுமென்று பிரதிவாதிகள்பேரில் ஸ்மால்காஸ் கோர்ட்டில் வாதி வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

ஸ்மால்காஸ் கோர்ட்டார் அபிப்பிராயம்:—இந்த வியாஜ்ஜியம் விசாரணைக்கு வந்தபோது, ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு இந்த மாதிரியான வியாஜ்ஜியத்தைப்பிடித்து விசாரிக்க அதிகாரம் கிடையாதென்று பிரதிவாதிகள் ககூதிசொன்னார்கள். கோர்ட்டார் அதை அங்கிகரித்துக்கொண்டு சரியான கோர்ட்டில் இந்த வியாஜ்ஜியத்தை தாக்கல் செய்யும்படியாக உத்திரவு செய்து இவ்வியாஜ்ஜியத்தின் பிராதை வாப்பீஸ் செய்துவிட்டார்கள்.

வாதி டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

டி. மு. கோர்ட்டார் அபிப்பிராயம் :—இந்தக் கோர்ட்டாருக்கும் இந்த வியாஜ்ஜியத்தைப் பிடித்து விசாரணைசெய்ய அதிகாரம் கிடையாதென்று பிரதிவாதிகள் ககூதி சொன்னார்கள். டி. மு. கோர்ட்டார் அதை ஏற்றுக்கொண்டு இந்த வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிக்கவேண்டியவியாஜ்ஜியங்களைச் சேர்ந்ததென்று சொல்லி பிராதை வாப்பீஸ் செய்துவிட்டார்கள்.

வாதி டி. மு. கோர்ட்டார் உத்திரவுக்கு விரோதமாக ஜில்லா கோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார்.

ஜில்லா கோர்ட்டார் சி. பு. கோட் 646 B பிரிவின்படி இந்தக்கேசை எந்தக் கோர்ட்டார் பிடித்து விசாரணைசெய்யவேண்டுமென்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்கள்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயம் :—புரோவின்ஷியல் ஸ்மால்காஸ்கோர்ட்டு ஆக்ட் 41-வதுபிரிவு 2-வது ஷெடியூல் பிரகாரம் இந்தக்கேசை விசாரிக்க தங்களுக்கு அதிகாரமில்லை என்று எண்ணி ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிராதை வாப்பீஸ் செய்திருக்கிறதாகத் தெரிகிறது. பிரஸ்தாப வியாஜ்ஜியம் இந்தப் பிரிவிலாவது அல்லது அந்த ஷெடியூலிலாவது சொல்லப்பட்ட வியாஜ்ஜிய வகைகளில் சேர்ந்ததல்ல. அந்த ஷெடியூல் வீதாசாரப் பணத்தைக்குறித்த எல்லா தாவாவையும் ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிக்கக்கூடாதென்று சொல்லவில்லை. இன்னின்ன விதமான வீதாசார வகைகளைப் பிடிக்கக்கூடாதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கும் வியாஜ்ஜியங்களில் பிரஸ்தாப வியாஜ்ஜியம் சேரவில்லை. ஆகையால் இந்தக் கேசை ஸ்மால்காஸ் கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்யலாம். இதே மாதிரியாக நாத்ஷா V நாபா குமார் சௌத்திரி (Nath Sah V Naba Kumar Cheudry*) கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸ்மால்காஸ் கோர்ட்டார் உத்திரவை ரத்துசெய்து அந்தக் கோர்ட்டாரே இந்தக் கேசை விசாரிக்கும்படியாக உத்திரவுசெய்திருக்கிறோம்" என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

ரூலிங்ஸ் :—ஒரு வியாஜ்ஜியத்தின் செலவுதொகையைக்கொடுக்க டிக்கிரியில் கட்டுப்படுத்தப்பட்ட பலர்களில் ஒருவன் ஷை தொகையை ஏகதேசமாய் செலுத்திவிட்டு மற்றவர்களிடமிருந்து வீதாசாரப் பணம் கிடைக்கவேண்டுமென்று அவர்கள்பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிக்கக்கூடாத வியாஜ்ஜியமல்ல. பகிரான் V. ராம்பாரன் இ. லா. ரி. 28 அல. 292. Bhairon v. Ram Bhron (I. L. R. 28 All. 292.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சர்ட்ஸ்.

பாகப் பிரிவினைப் பணத்தைப் பற்றிய தாவா.

சோட்டு ... ... வாதி (அப்பீல் வாதி)
ஜாவாகிர் ... ... பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)

வியாஜ்ஜியசங்கிரகம்.

வாதி பிரதிவாதிகளிருவரும் ஒரு வியாபாரத்தில் கூட்டாயிருந்தார்கள். பாகம் பிரித்து கணக்கு வழக்கு தீர்த்து வாதிக்கு ரூ 44-13-0 பிரதிவாதியால் சேரவேண்டுமென்று முடிவு செய்துகொண்டார்கள் வாதிக்கு ஷை தொகை செல்லாகாததால் பிரதிவாதியின்பேரில் டி. மு. கோர்ட்டில் தாவாசெய்தார். பிராதில் ஷை தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்குக் கிடைக்கவேண்டுமென்றும் கூட்டுவியாபாரம் முடிந்துபோய்விட்டதென்றும் தீர்ப்புகொடுக்கும்படியாகவும் வாதி கேட்டுக்கொண்டார்.

டி. மு. கோர்ட்டார் அபிப்பிராயம்:—பிரதிவாதியின் ஆக்ஷேபணையை ஏற்றுக்கொண்டு தாங்கள் இந்தக் கேசைப் பிடிக்கக்கூடாதென்றும் இந்தக் கேஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டார் பிடிக்கவேண்டியதென்றும் சொல்லி பிராதை வாப்பீஸ் செய்துவிட்டார்கள்.

வாதி இந்த பிராதை ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாக்கல் செய்தார்.

ஸ்மால்காஸ் கோர்ட்டார் அபிப்பிராயம் :—இந்தக் கேஸ் டி. மு. கோர்ட்டாரால் பிடிக்கப்படவேண்டிய கேசென்று சொல்லி பிராதை வாப்பீஸ் செய்துவிட்டார்கள்.

வாதி இதன்பேரில் ஜில்லாகோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டார்.

ஜில்லாகோர்ட்டார் ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்கள்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயம்:—பிராதில் கூட்டு வியாபாரம் முடிந்துபோய் கணக்குத் தீர்த்து வாதிக்குப் பிரதிவாதி ஷை தொகையைக் கொடுக்கவேண்டுமென்று முடிவான ஏற்பாடு செய்துகொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பிரஸ்தாப தாவாவின் முக்கிய கருத்து பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு ஷை பாகவிஷயத்தில் முடிவு செய்துகொண்ட

* (1888) I. L. R. Calc. 718.

தொகை வரவேண்டுமென்பதுதான். ஆதலால் கூட்டுப்பிரிந்துபோய்விட்டதென்று கோர்ட்டாரைத் தீர்ப்பு கொடுக்கும்படிபிராதில்கேட்டிருப்பது அனாவசியமாக எண்ணப்படவேண்டும். ஆதலால் கூட்டுப்பிரிந்துபோய்விட்டதென்றுதீர்ப்புக்கொடுக்கும்படி பிராதில் கேட்கப்பட்டிருக்கும் அனாவசியமான இந்தக்காரணத்தை முன்னிட்டு ஸ்மால்காஸ்கோர்ட்டார் இந்தக்கேசைப் பிடிக்கதங்களுக்கு அதிகாரமில்லை என்றுவிட்டுவிட்டது பிசகு. ஆதலால் ஸ்மால்காஸ் கோர்ட்டார் இந்தக்கேசைவிசாரணைசெய்யும்படியாக உத்திரவுசெய்யப்பட்டார்கள்.

ரூலிங்ஸ் :—கூட்டுவியாபார விஷயத்தில் பாகம் பிரித்துக் கணக்கு ஏற்பட்டு, வரவேண்டிய தொகைக்காக பாகஸ்தன்பேரில் தாவா செய்ததில் கூட்டுப் பிரிந்துபோய்விட்டதென்று தீர்ப்புகொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்ட நிமித்தம் இந்தக் கேசை ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிப்பதற்கு அதிகாரமில்லை என்று எண்ணக்கூடாது. சி. பு. கோட் 646 B பிரிவின்படி ஐக்கோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பும் ஜில்லாக் கோர்ட்டார் கீழ்கோர்ட் அபிப்பிராயத்தை பிசகென்று நினைப்பதற்கு காரணம் கூறி அனுப்பவேண்டும். இ. லா. ரி. 28 All அல. 293 (Chotu v. Jawahir, I. L. R. 28 All 293.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டீஸ் சர் ஜான் ஸ்டேன்லி
மிஸ்டர் ஜஸ்டீஸ் நாக்ஸ்.

அடமானமில்லாத சோத்து ஜப்தி.

ராம் பாரன்சிங்கு...வாதி (அப்பீல் வாதி)
கோவிந்து சிங்கு...பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)

வியாஜ்ஜியசங்கிரகம்

விபரம்:—கங்காபீஷன் தன்சொத்துக்களில் சிலவற்றை ஷியோராஜு என்பவரிடம் அடமானம்வைத்தார். ஷியோராஜு சப்கோர்ட்டில் தாவாசெய்து கங்காபீஷனுடைய எல்லாசொத்துக்களையுங் கட்டுப்படுத்தி டிக்கிரி வாங்கிக்கொண்டார் ; டிக்கிரியை நிறைவேற்றி அடமானபத்திரத்திற் கட்டுப்படாத இதரசொத்துக்களை 1891ஸ் செப்டம்பர்மீ 25உ ஜப்திபண்ணிவைத்தார். இவ்வாறு ஜப்திபண்ணின சொத்துக்களில் சிலபாகத்தை வாதிகள் அடமானம் வாங்கினார்கள். இதற்குப்பிறகு 1893ஸ் ஜனவரிமீ 21உ யில் ஜப்திபண்ணப்பட்ட சொத்து ஏலம் போடப்பட்டு பிரதிவாதி ஏலம் எடுத்துவிட்டார். ஏலவிற்பனையை ரத்துசெய்யவேணுமென்று வாதியின் தாவா.

சப்கோர்ட்டார் அபிப்பிராயம்—வாதிபக்கம் தீர்ப்புசெய்தார்கள்.

டிஸ்டிரிக்டு ஜட்ஜி அப்பீலை ஏற்றுக்கொண்டு விசாரணைசெய்து வியாச்சியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

ஹைகோர்ட்டார்அபிப்பிராயம்—டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்டு (Transfer of Property Act) பாஸ் ஆகிறதற்கு முன்னாலேயே இந்த டிக்கிரி கீழ்க்கோர்ட்டாரால் செய்யப்பட்டு அதன்மூலமாக ஜப்தி செய்யப்பட்டிருப்பதால் இந்த ஆக்ட்டு இந்தத் தீர்மானத்தையும் ஏலத்தையும் பாதிக்காது. டிக்கிரி எல்லாச் சொத்துக்களையும் கட்டுப்படுத்தியிருக்கிறது. அன்றியும் அடமானம் வைத்தவன்மேலேற்பட்ட ஒரு டிக்கிரி அவனையும் எல்லாச்சொத்தையுங் கட்டுப்படுத்தி ஏற்பட்டிருந்தால் டிக்கிரி பெற்றவன் அடமானச்சொத்தின்பேரிலாவது இதரச் சொத்தின்பேரிலாவது பேர்வழியின்மேலாவது நிறைவேற்றிக்கொள்ளலாம். ஆகையால் அப்பீல் வாதிகள் ஜப்தியான சொத்தை அடமானம்பிடித்ததினால் கிரமப்படி ஏற்பட்ட ஏலத்தை ரத்துசெய்துக்கொள்ள அவர்களுக்கு பாத்தியமில்லை.

ரூலிங்ஸ்—அடமானக் கடனை வசூல் செய்யக் கொண்டுவந்த வியாச்சியத்தில் அடமானம் வைத்தவனின் எல்லாச் சொத்தையுங் கட்டுப்படுத்தி ஏற்பட்ட ஒரு டிக்கிரியின்படி அடமானத்துக் குள்ளாகாத வேறுசிலசொத்துக்கள் ஜப்திசெய்யப்பட்டிருந்தது இவ்வாறு ஜப்திசெய்த சொத்தில் சிலவற்றை வாதி அடமானம் பிடித்து ஏலவிற்பனை ஆனபிறகு ஏலவிற்பனையை ரத்துசெய்யவேணுமென்று தாவாகொண்டுவந்ததற்கு டிக்கிரி ஷரத்துப்படி டிக்கிரிபெற்றவன் எந்தச் சொத்தின்பேரிலும் தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாமென்று தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 28 அல. 295. Ram Baran Singh. v. Gobind Singh, I. L. R. 28 All 295.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ் சர் ஜான் ஸ்டேன்லி,
மிஸ்டர் ஜஸ்டிஸ் நாக்ஸ்.

செல்லாப் பிராமிசரிநோட்டுத் தாவா.

பானர்ஜி பிரசாத்...வாதி (அப்பீல்வாதி)
பாசல் ஆமத் ...பிரதிவாதி (அப்பீல்பிரதிவாதி)

வியாச்சியசங்கிரகம்.

வாதிக்கு பிரதிவாதி கடன்வாங்கினதற்காக ஒரு பிராமிசரிநோட்டு 1900ஸ் ஆகஸ்டுமீ 12உ எழுதிக்கொடுத்தார். இது டி. மு. கோர்ட்டுக்கு வியாச்சியத்துக்கு வந்தபொழுது, பிரதிவாதி கடன்வாங்கினதில்லையென்றும் பிராமிசரிநோட்டு எழுதிக் கொடுக்கவில்லையென்றும் எதிர்வாதம்சொன்னார். ஆனால் பிராமிசரிநோட்டிலிருந்தஸ்டாம்பு,ஸ்டாம்புஆக்டு 12-வது பிரிவின்படி அழிக்கப்படாமலிருந்தது, மற்ற விஷயத்தில் பிராமிசரிநோட்டு சரிவர எழுதப்பட்டிருந்தது.

டி மு. கோர்ட்டார் தீர்மானம்—ஸ்டாம்பு ஒட்டப்படாத பிராமிசரிநோட்டாகப் பாவிக்கப்பட்டு பிரியாது தள்ளப்பட்டது.

சப்கோர்ட்டார் தீர்மானம்—அப்பீலில்,கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—இந்தப் பிராமிசரிநோட்டு வியாச்சியத்தில் பிரதிவாதி பணம் பெற்றுக்கொள்ளவில்லையென்றும்பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுக்கவில்லையென்றுஞ்சொன்னாலும், வாதியிடம் தான் லேவாதேவி செய்துவந்ததாகவும் கணக்குமூலியமாக இறங்கின பாக்கித்தொகையை தான் கொடுத்துவிட்டதாகவும் சொல்லுகிறார். ஸ்டாம்பு சரிவர ஒழுங்குப்படியில்லையென்று கீழ்க்கோர்ட்டார் கண்டாலும், பணம் வாதிக்கு பிரதிவாதியினால் செலுத்தப்படவேண்டியகடமை பிராமிசரி நோட்டு எழுதி வாங்குவதற்கு முந்தி ஏற்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. இந்தத் தொகை வாதிக்குச் சேரவேண்டுமென்று ருஜு கொடுக்க இடம் கொடாமற் கீழ்க்கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை தள்ளுபடிசெய்தது நியாயவிரோதமென்றும் சீவில்புரோசிஜர் 562 பிரிவுப்படி இந்தக்கேசை புனர்விசாரணைசெய்து முடிவுசெய்யும்

படியாக கீழ்க்கோர்ட்டாருக்கு உத்தரவுகொடுத்தார்கள். இ. லா. ரி. 7. கல் - 256 இல் சொல்லப்பட்டிருக்கும் ஷேக் ஆக்பர் v. ஷேக்கான் கேசிலும் இம்மாதிரி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ரூலிங்ஸ்—வாதிக்குச் சேரவேண்டிய தொகைக்காக வாங்கிய பிராமிசரி நோட்டின் வியாச்சியத்தில் பிராமிசரிநோட்டிலிருந்த ஸ்டாம்பு சரியாக அழிக்கப்படாமலிருந்த காரணத்துக்காக பிராமிசரிநோட்டை ஸ்டாம்பு ஒட்டாத பிராமிசரிநோட்டாகப் பாவித்து இதர சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். இதர சாட்சியங்களை கீழ்க்கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளவேண்டியது என்று தீர்மானித்தார்கள். அன்றியும் ஒருசொத்தை கிரயஞ்செய்தவழியிலாவது ஒரு கடன் கொடுத்த வழியிலாவது வேறு எந்த பாத்தியதை முன்னிட்டாவது ஒருவனுக்கு பணம் கொடுக்க வேறொருவன் கட்டுபட்டிருந்தால் பிறகு ஏற்பட்ட பிராமிசரி நோட்டு, பில் ஆகிய இவை கள்மூலியமல்லாமல் நேரே வியாச்சியம் கொண்டுவந்து கொடுக்கவேண்டியவன்பேரில் டிக்கிரி பெற்றுக்கொள்ளலாமென்றும் ஆனால் தன்னிடம் இருக்கும் பிராமிசரி நோட்டை மூன்றாவது பேர்வழி வசமாகும்படி விட்டு அதனால் பணம் கொடுக்கவேண்டியவனை நஷ்டத்துக்கு உள்ளாக்காமலிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 298. *Banarsi Prasad v Fazal Ahmad I. L. R. 28 All. 298.*

சீவில் அப்பீல்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி,

நிறைவேற்றுவதற்குச் செய்த மனு.

சுகதி ... ... வாதி (அப்பீல் பிரதிவாதி,
பகவன்தாஸ் ... பிரதிவாதி (அப்பீலவாதி)

வியாச்சிய சங்கிரகம்.

சுகதிபுருஷன் சியோடின் என்பவர் ஒரு வீட்டை சுவாதீனப்படுத்திக்கொள்ள டிக்கிரிவாங்கிக்கொண்டு பிரதிவாதி அதில் பிரவேசிக்கக்கூடாதென்று ஒரு இன்ஜங்கிஷனும் சப்கோர்ட்டில் பெற்றிருந்தார். சியோடின் இறந்துபோக பிரதிவாதி அந்த வீட்டைக் கைப்பற்றி அதில் குடி வைத்துவிட்டதாகச் சொல்லி சிவில் புரோசிஜர் 260-வது பிரிவுபிரகாரம் இன்ஜங்கிஷன் நிபந்தனையின்படி நடக்கும்படியாக பிரதிவாதியைக் கட்டாயப்படுத்த மனுசெய்துகொண்டாள்.

சப்கோர்ட்டாரும் ஜில்லாகோர்ட்டாரும் அப்படியேசெய்ய உத்தரவுசெய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—பிரதிவாதி சொன்ன ஆக்ஷேபனையாவது. (1) மனுவுக்கு காலாவதி தோஷம் உண்டு. (2) சியோடின் அந்தவீட்டின் ஒரு பாகத்தில் குடியிருக்க அனுமதிகொடுத்தார். இரண்டாவது ஆட்சேபனையை கீழ்க்கோர்ட்டில் ருஜுபடுத்தவில்லை முதலாவது ஆட்சேபனையிலும் பிரதிவாதிக்கு யாதொரு வலுவுமில்லை. பிரதிவாதி ஒரு காரியத்தைச்செய்யக்கூடாதென்று இன்ஜங்கிஷன் உத்தரவு பிறப்பித்தார்கள். பிரதிவாதி அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் வீட்டில் குடிவைத்தார். ஆகையால் கோர்ட்டை அவமதித்ததாக சீவில் புரோசிஜர் 260 பிரிவுபடி அவர்மேல் நடபடிக்கை நடத்தலாம். லிமிட்டேஷன் ஆக்டு 179 வது பிரிவு இரண்டாவது ஷிடியூல் பிரகாரம் இந்த மனுவுக்கு காலாவதிதோஷம் உண்டென்று சொல்வது பொருந்தாது.

இ. லா. ரி. 23 அல 465 இல் சொல்லப்பட்டிருக்கும் ராம்சாரன் v. க்ஷட்டார்சிங்கு கேசில் இம்மாதிரி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சீவில் புரோசிஜர் கோடு 260-வது பிரிவுப்படி இன்ஜங்கிஷன் உத்தரவுக்குக் கீழ்ப்படியும்படி பிரதிவாதியைக் கட்டாயப்படுத்த வாதிக்குப் பாத்தியமுண்டு. கோர்ட்டார் கவனிக்கவேண்டியதெல்லாங்கூடி பிரதிவாதி இன்ஜங்கிஷன் உத்தரவுக்குக் கீழ்ப்படிய போதுமான சாவகாசம் அவருக்கு கொடுக்கப்பட்டதா இல்லையா அல்லது பிரதிவாதி அவ்வுத்தரவை கெட்ட எண்ணத்துடன் உல்லங்கனம் செய்திருக்கிறாரவென்பதே.

இன்ஜங்கிஷன் 1899 ௵ல் பிறப்பிக்கப்பட்டது.

பிரஸ்தாப மனு 1904௵ ஜூலை௴ 26௳ கொடுக்கப்பட்டது. ஆகையால் இன்ஜங்கிஷன் உத்தரவுக்குக் கீழ்ப்படிய பிரதிவாதிக்குப் போதுமான சாவகாசமிருந்தது—ஆதலால் கீழ்க்கோர்ட்டார் இன்ஜங்கிஷன் ஆர்டருக்குக் கீழ்ப்படியும்படி பிரதிவாதியைக் கட்டாயப்படுத்த உத்தரவு பிறப்பித்தது நியாயந்தான் என்று பிரதிவாதிசெய்த அப்பீலை செலவுதொகையுடன் தள்ளிவிட்டார்கள்

ரூலிங்ஸ்:—ஒருவன் ஒரு குறிப்பிட்ட செய்கையை செய்யக்கூடாதென்று பிறப்பிக்கப்பட்ட இன்ஜங்கிஷன் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரச் செய்துகொண்ட மனு லிமிட்டேஷன் ஆக்டு 179 வது பிரிவு இரண்டாவது ஷிடியூலில் சொல்லப்பட்டிருக்கும் காலாவதிதோஷத்துக்கு உள்ளாகாது. இ. லா. ரி. 28. அல-300. (*Bhagwandas v. Sukhdei I. L. R: 28. All. 300.*)

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி.

லைசென்சில்லாமல் ஆயுதம்வைத்திருத்தல்.

சக்கிரவர்த்தி ... வாதி.
ராம் சரப் ... எதிரி.

வியாச்சிய சங்கிரகம்.

பாரலி ஜில்லாவில் பணங்கொடுக்கல் வாங்கல் பண்ணிவந்த செல்வவந்தர்களாகிய ஜமீன்தார் குடும்பத்தைச்சேர்ந்த ராம் சரப் என்பவர் இந்தியன் ஆர்ம்ஸ் ஆக்டின்படி பல குற்றத்துக்கு ஜில்லா செஷன் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு (1) ஆக்டுக்குவிரோதமாக ஆயுதமருந்துவைத்திருந்த குற்றத்திற்காகவும் (2) குவாலியர் சமஸ்தானத்திலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் ஆயுதம் கொண்டுவரச்செய்த குற்றத்திற்காகவும் (3) போலீஸார் சேர்ச்சு பண்ணிக்கொண்டுவரும்பொழுது ஆயுதங்களை ஒளித்து வைத்த குற்றத்திற்காகவும் தண்டனை விதிக்கப்பட்டார். முதலிரண்டுகுற்றத்திற்காக ஒவ்வொரு வருஷமும், மூன்றாவதுகுற்றத்திற்கு ஆறுமாதமும் கடுங்காவல்சிறை பண்ணப்பட்டார். முதல் இரண்டு தண்டனையையும் ஒன்றின்பின் ஒன்றாக அனுபவிக்கிறதென்றும் கடைசிதண்டனையை இவைகளோடுசேர அனுபவிக்கிறதென்றும் உத்தரவுசெய்தார்கள்.

இத்தீர்ப்பின்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து எதிர்வாதமாக (1) தான் வசிக்கும் இடம் பிரிவினையாகாத குடும்பத்திற்குச் சொந்தமானதால் அவ்விடத்திலிருந்து அகப்படும் ஆயுதம் அவர்வசமிருந்ததாக எண்ணப்படக் கூடாதென்றும், (2) ஆயுதம் கொண்டுவரச்செய்ததற்கு போதுமான ருஜுவாம்சம் இல்லையென்றும், (3) ஆயுதம் தன்னிட மில்லை என்பது, மறைக்க முயலுதல் என்னுங் குற்றமாகாதென்றும் சொன்னார்.

ஹைகோர்ட்டுத் தீர்ப்பு.—(1) கோபார்தன்தாஸ் என்னும் எதிரியின் சகோதரரின் சாட்சியினால் இவர்களிருவரும் அவிபக்த குடும்பஸ்தர்களென்று தெரிகிறது. ஆயினும் ஆயுதமிருந்த இடம் ஏகதேசமாக இவர்வசத்திலிருப்பதாகவும் இவர் ஆளுகைக்குள்ளிருப்பதாகவும் ருஜு ஏற்படுகிறதால் லைசென்சில்லாமல் ஆயுதம்வைத்திருந்த குற்றத்திற் கேற்பட்ட தண்டனைக் குள்ளானவர் எனக் கண்டார்கள்.

(2) குவாலியரில் சிராஞ்சிலால் என்பவரின்பிதா இறந்துபோனபோது எதிரி துக்கம் விசாரிக்கப்போனதாகவும் சிராஞ்சிலால் இவர்கேட்டுக்கொண்டதின்மேல் ஒரு பிஸ்தல் வாங்கினதாகவும் பிறகு வேறுசில ஆயுதங்களைவாங்கி பிஸ்தல் இருந்த பெட்டியில்வைத்து தேஜா, காளியன் ஆகிய இருவர்கள்வசம் அனுப்பினதாகவும் ருஜு ஏற்பட்டது. ஆனால் தேஜா, காளியன் என்பவர்கள் ராம்சரப்புக்கு எதிரியாகிய புரான் என்பவனைச் சேர்ந்தவர்களென்று எதிரியின் சகோதரர் சாட்சிசொல்லியிருக்கிறார். ஆகையால் ஆயுதத்தை இதர சமஸ்தானத்திலிருந்து கொண்டுவரச் செய்த குற்றத்திற்கேற்பட்ட தண்டனைக் குள்ளானவரென்றுங் கண்டார்கள்.

(3) "ஒளித்துவைத்தல்"என்பதற்குஅர்த்தம்வெளியாகிறதை தடுத்தல் என்று சட்டத்திற் சொல்லியிருப்பதால் ஆயுதம் உம்மிடம் இருக்கிறதா என்றுகேட்டபோது தன்னிடமில்லை யென்றது குற்றமென்று போலீசார் வாதஞ் சொன்னார்கள். ஒளித்தல் அல்லது ஒளிக்க முயலுதல் 25-வது பிரிவுப்படி போலீசார் "சேர்ச்சுபண்ணும்பொழுது" என்று அந்தப் பிரிவுடன் சேர்ந்து வாசிக்கவேண்டியதால் இவர் சேர்ச்சுபண்ணும்பொழுது ஆயுதத்தை ஒளிக்க யாதொரு செய்கையுஞ் செய்ததாக ருஜு ஏற்படாமலிருப்பதைக்கொண்டு இந்தக் குற்றத்திலிருந்து விலக்கிவிட்டார்கள். அன்றியும் இவர் வாலிபராகவும் கண்ணியமுள்ள குடும்பத்தைச் சேர்ந்திருப்பதாலும் ஒரு குற்றத்தைச்செய்ய ஆயுதம் கொண்டுவரச்செய்ததாகத் தோன்றாதாலும் இவருக்குவிதித்த தண்டனை கடுமையென்றுசொல்லி 19-வது பிரிவு சி. உட்பிரிவுப் படியும் 20-வது பிரிவை 19-வது பிரிவு எப் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்க அர்த்தமானபடியும் ஆறுமாசக் கடுங்காவலாக மாற்றி கீழ்க்கோர்ட்டார் விதித்திருந்த தனிக்காவலையும் நீக்கித் தீர்ப்புசெய்தார்கள்.

இ. லா. ரி. 15. அல. 129 இல் சொல்லியிருக்கும் சக்கிரவர்த்தினி. v. சங்கம் லால் கேஸ் இங்கு பொருந்ாதென்றார்கள்.

ரூலிங்ஸ்:—ஆயுத மிருக்கிறதா வென்று போலீசார் சோதனை போடும்பொழுது கேட்டால் வீட்டுக்குடையவன் தன்வசம் ஆயுதமில்லையென்றுசொல்வது ஆர்மஸ் ஆக்டு 20-வது பிரிவுப்படி ஒளிக்க முயலுதல் என்னுங் குற்றம் ஆகாதென்று தீர்மானஞ் செய்யப்பட்டது.

2. பிரிவினையாகாத குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டிலிருந்து ஒரு ஆயுதம் சோதனைபோட்டு எடுத்தால் அந்தவீடு அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுடைய ஏகதேச அனுபவத்திலிருக்கின் அவன் லைசென்சில்லாமல் ஆயுதம்வைத்திருந்த குற்றஞ்செய்தவனாவானென்றும தீர்மானஞ் செய்யப்பட்டது. இ. லா. ரி. 28. அல. 302. (Emperor v. Ram Sarup I. L. R. 28 All 302).

கிரிமினல் ரிவிஷன்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏயிக்மான்.

நன்னடத்தைக்கு ஜாமீன்.

சக்கிரவர்த்தி ... ... வாதி.
இரஞ்சிட் ... ... எதிரி.

வியாச்சிய சங்கிரகம்.

இரஞ்சிட் என்பவர் 1905௵ ஜூன்௴ 13௳ வரையிலும் 3 வருஷத்துக்கு நன்னடத்தைக்கு ஜாமீன் கொடுத்திருந்தார் அந்த வருஷம் ஜூன்௴ 20௳ கிரிமினல் புரோசிஜர்கோடு 110 - வது பிரிவுப்படி திரும்பவும் மூன்று வருஷத்துக்கு ஜாமீன் கொடுக்கும்படியாக அலிகார் செஷன் ஜட்ஜி உத்தரவுகொடுத்தார்கள். இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு எதிரி அப்பீல் மனுசெய்துக்கொண்டார்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயம்:—முந்திய ஜாமீன் கெடு முடிந்ததற்கும் திரும்ப ஜாமீன் கேட்கிறதற்கும் இடையில் சொற்பநாட்களிருப்பதாலும் ஜூன்௴ 13௳க்கு முந்திய சாட்சியங்கள் இந்தக் கேசுக்கு ஏற்றுக்கொள்ளப்படா தாகையாலும் இடையிட்ட நாட்களில் எதுவும் நடக்காததாலும் கீழ்க்கோர்ட்டார் உத்தரவை கிரிமினல் புரோசிஜர்கோடு 123-வது பிரிவு 3-வது உட்பிரிவுப்படி ரத்துசெய்து ஜாமீன் பத்திரம் பிறந்திருந்தால் தள்ளுபடி செய்யவும், ஜாமீன் வாங்கியிருந்தால் விலக்கிவிடவும், செஷன் ஜட்ஜி உத்தரவின்மேற் காவலிலிருந்தால் விடுதலை செய்யவும் உத்தரவு செய்தார்கள்.

1905௵ வாராந்தரக் குறிப்பு. சக்கிரவர்த்தி v. உசேன் அமத்கான் கேசில் இம்மாதிரி கூறியிருக்கிறது.

ரூலிங்ஸ்:—1905௵ ஜூன்௴ 13௳ வரையில் ஜாமீனின்பேரிலிருந்த ஒருவனை அந்த௴ 20௳ திரும்பவும் 3 வருஷத்துக்கு நன்னடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படியாக உத்தரவுசெய்ததில் இடையிட்ட காலம் அதிக சொற்பமாயிருப்பதால் நன்னடத்தையோடு நடந்துகொள்ள எண்ணங்கொண்டிருக்கிறாரா என்பதை யறிந்துகொள்ளப் போதுமான சாவகாசமில்லையென்றும்,

(2) 1905௵ ஜூன்௴ 13௳ க்கு முந்தி நடந்ததற்கான சாட்சியங்கள் பிந்தி ஜாமீன்கேட்பதற்கு தகுந்த காரணமாகாதென்றும் உத்தரவு செய்யப்பட்டது. இ. லா. ரி. 28. அல. 306. (Emperor. v. Ranjit. I. L. R. 28. All 306.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் —சீப் ஜஸ்டிஸ். சர். ஜான். ஸ்டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர். வில்லியம். பர்க்கிட்.

மகளின் மகள் வார்சுத்தன்மை.

க்ஷேம்பா ... வாதி. (அப்பீல் பிரதிவாதி)
கிஷன் தே ... பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)
ஜசனாத் ... பிரதிவாதி (அப்பீல் வாதி)

வியாச்சிய சங்கிரகம்.

இராம்ஜீமால் என்பவரின் மகளின் மகளாகிய வாதி இராம்பிமாலின் விதவை பார்வதி இறந்த 19௨2 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இராம்பிமாலினுடைய வீடு தனக்கும் கிஷன்தேயிக்கும் கிடைக்கவேண்டுமென்றும் ஆனல் அந்த வீட்டை ஜகனுத் சுவாதீனப்படுத்தி யிருக்கிறதாகவும் டி. மு. கோர்ட்டில் பிரியாதுசெய்தார். கிஷன்தேயி தன்னுடன் சேர்ந்து பிராதுசெய்ய உடன்படவேராததால் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது. முக்கிய பிரதிவாதியாகிய ஜகனுத் இந்து லாப்பிரகாரம் மகளின்மகள் வார்சாதக்கூடியவளல்லவென்று எதிர்வாதஞ்சொன்னர்.

டி. மு. கோர்ட்டார் தீர்மானம்:—இந்து லாப்பிரகாரம் மகளின் மகள் வார்சல்லவென்று தீர்ப்பு செய்தார்கள்.

சப்கோர்ட்டார் தீர்மானம்:—கிழ்க்கோர்ட்டாரின் தீர்பபைமாற்றி வாதிபட்சம் தீர்ப்புசெய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—ஜகனுத் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டார். ஜகனுத் மூலபுருஷனுக்கு தாய்மாமனின் மகன் கட்சிக்காரர்கள் மித்தாக்ஷாரா சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். சப்கோர்ட்டார் இ. லா. ரி. 22 அல. 338 இல் பரன்சிதார். ௨. கணேஷ் கேசில் சொல்லியிருக்கும் தீர்மானத்தை யனுசரித்து வாதிபட்சம் தீர்ப்பு செய்தார்கள். ஆயினும் கல்கத்தா ஹைகோர்ட்டு புல்பென்சு தீர்மானத்தில் (கூமத சந்தர்ராய் ௨. சீத்தாகந்துராய் கேசை 1863ஆு வாராந்தரக்குறிப்பில் எடுத்தெழுதியிருக்கிறபடி) மகளின் மகள் வார்சல்லவென்று தீர்மானித்திருக்கிருர்கள். இந்து லாவில் சொல்லப்பட்டவர்கள்தவிர மற்ற பெண்பிள்ளைகள் வார்சாக மாட்டார்களென்று இ. லா. ரி. 3. All. 45 ல் கௌரிராகை ௨. ரக்கோ கேசிலும் இ. லா. ரி. 5. அல. 311. ஜகத் நாராயன் V. ஷீயோதாஸ் கேசிலும் தீர்ப்புசெய்திருக்கிருர்கள். 1905ஆு வாராந்தரக் குறிப்பின் 249 ம் பக்கத்தில் நான் ஹி. ௨. கௌரிஷங்கர் கேசில் புல்பென்சார் தீர்ப்பை ஒப்புக்கொண்டு அவ்வாறே தீர்மானஞ்செயதிருக்கிருர்கள்.

ஆயினும் சென்னை ஹைகோர்ட்டாரால் மகன் மகளும், மகளின் மகளும் வேறே சபீப வார்சுக்கள் இல்லாவிட்டால் வார்சாகலாமென்று இ. லா. ரி. 14- மது - 149. நல்லண்ணு ௨ பொன்னவ்கேசும் 17 மது 82. இராமப்ப உடையான். ௨. ஆறுமுகத்துடையான் கேசும், சென்னை இராஜதானியில் தீர்ப்பாயிருக்கிறதாலும் அலகபாத்தைச்சேர்ந்த நாடுகளின் கேசு தீர்மானங்களுக்கு மாறு யிருக்கிறதால் இவைகளை அங்கீகரிக்காமல் தங்கள் ஹைகோர்ட்டில்செய்த பரன்சிதார் ௨. கணேஷ் கேசில் மேலே குறித்த கேசுகளை ஆராயோசித்து முடிவுபண்ணுமல அவைகளைப் பாராமல் செய்த தீர்மானமாகிய இந்தக்கேசின் தீர்மானத்தையும் அங்கீகரியாமல் மகளின் மகள் மித்தாக்ஷாரா லாப்படி வார்சல்லவென்று தீர்ப்புசெய்தார்கள்.

ரூலிங்ஸ்— மித்தாக்ஷாரா லாவுக்கு கட்டுப்பட்ட இந்து குடும்பங்களில் வார்சாக சொல்லப்பட்ட ஸ்திரீஜாதிதவிர இதரஸ்திரீகள் வார்சாக மாட்டார்களென்றும் ஆகையால் மகளின் மகள் வார்சாகமாட்டாளென்றும் தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 28. அல. 307. *Jagan Nath v. Chamba & Kishen Dei I. L. R. 28. All. 307.*

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். ஜான். ஸ்டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ். சர். வில்லியம் பர்க்கிட்.

ஸ்டாம்புக்குறைவு - காலாவதி.

தப்பிராய் ...வாதி. (அப்பீல் பிரதிவாதி)
ராம். தகல்சிங்கு ...பிரதிவாதி. (அப்பீல் வாதி.)

டி. மு. கோர்ட்டில் குறைந்த ஸ்டாம்பில் காலாவதியின் கடைசிநாளில் ஒரு பிராது கொடுக்கப்பட்டது. ஸ்டாம்புக் குறைவைக் கவனிக்காமல் வாதிபக்கம் தீர்ப்புகொடுத்துவிட்டார்கள்.

பிறகு அப்பீல்செய்தபொழுது ஸ்டாம்பு குறைவு என்கிற வாதம்பேசி ஸ்டாம்புக் குறைவுக்காக வேறு ஸ்டாம்பு ஒட்டப்பட்டு விசாரணைபண்ணி செல்லும்படியான பிராது கோர்ட்டு பயிலில் இல்லாததால் காலாவதியால் பாதிக்கப்படடுப் போய்விட்டதென்று கிழ்க்கோர்ட்டார் தீர்ப்பை ஜில்லாகோர்ட்டார் மாற்றிவிட்டார்கள். இரண்டாவது ஹைகோர்ட்டில் அப்பீலுக்கு வந்தபொழுது கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 28-வது பிரிவுப்படி ஜில்லா ஜட்ஜியினல் ஸ்டாம்புக்குறைவு ஒழுங்குபடுத்தப்பட்டதால் பிராது செல்லும்படியாகி காலாவதிதோஷத்தால் பாதிக்கப்படவில்லை யென்று ஜில்லாகோர்ட்டார் தீர்மானத்தைமாற்றி வாதிபட்சம் தீர்ப்புசெய்தார்கள்.

இதைத் திரும்ப ஹைக்கோர்ட்டார் அப்பீலில் ஏற்றுக்கொண்டு செய்த தீர்மானம்.—கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 28-வது பிரிவிற் கூறியிருக்கும் "தவறுதல் யோசனைக்குறைவு என்பது கோர்ட்டார் அல்லது கோர்ட்டு உத்தியோகஸ்தருடையதாகப் பாவிக்கவேண்டுமென்று இ லா. ரி. 12. அல 129. பஸ்க்காரான் ராய் ௨. கோவிந்துநாத் திவாரி - கேசில் சொல்லியிருக்கிறதால் மதராஸ் ஹைக்கோர்ட்டார்செய்த இ. லா. ரி. 24. மது. 331 வாலம்பாள் அம்மாள். ௨. வைத்திலிங்கமுதலியார் கேசின் தீர்மானத்தில் மேலேசொன்ன அர்த்தத்தை முன்னிட்டுத் தீர்மானம் செய்யாததினல் இந்தத் தீர்மானத்தை அண்டித்து தங்கள் கோர்ட்டு ஜட்ஜ்செய்தது தங்கள் கருத்துக்கு இசையவில்லையென்றும் ஹைகோர்ட்டு ஜட்ஜிசெய்த தீர்மானத்தைமாற்றி ஜில்லா கோர்ட்டார் செய்த தீர்ப்பை உறுதிசெய்து காலாவதிதோஷத்தினற் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்று தீர்மானஞ்செய்தார்கள். இதற்கனுகூலமான கேசுகளாவன. (இ. லா. ரி. 12. அல. 57 மன்ரே ௨. கான்பூர் முனிசிபல் போர்டு 23 அல. 423. மகமது ஆமத் ௨ மகமது சிராஜ் உத்தின்— (12. அல. 129. பல்காரன் ராய். ௨. கோவிந்து நாத்திவரி 1904ஆு வாராந்தரக் குறிப்பு. 133 பக்கம் ஜக்ராம் ௨. சுசத்தர்பால்.

ரூலிங்ஸ்.—கோர்ட்டார் அல்லது கோர்ட்டு உத்தியோகஸ்தர்கள் தவறுதலினலல்லாமல் வாதி தவறி ஸ்டாம்புகுறைவுள்ள பிராதுகொடுபட்டு இக்குறைவு காலாவதியானபிறகு கண்டு பிடிக்கப்பட்டால் இவ்வியாச்சியம் காலாவதிதோஷத்துக் குள்ளாகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 28. அல. 310. (Ram Sahal Singh. v. Duhri Rai I. L. R. 28. All 310)

கிரிமினல் ரிபரென்சு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜீ.

கெட்டுப்போன ஆகார விற்பனை.

சக்கிரவர்த்தி ... ...வாதி
சாலிக்ராம் ... ...எதிரி

வியாச்சிய சங்கிரகம்.

தானியவியாபாரி ராமிடட் என்பவரும் அவர் வேலைக்காரர் சாலிக்ராம் என்பவரும் ஒரு குழிக்குள் புதைத்துவைத்திருக்கும் தானியத்தை ஒரு மணங்கு 3 ரூபா விதம் என்ன ஸ்திதியி லிருந்தபோதிலும் வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்ட ஜன்னலால் என்பவரிடம் விலை பேசினர்கள். தானியத்தை திறந்து பார்த்தபொழுது அதில் அதிகபாகம் கெட்டுப்போ யிருக்கிறதாகக் கண்டு தானியவியாபாரியையும் அவர் வேலைக்காரரையும் இ. பி. கோ. 273 பிரிவுப்பிரகாரம் கெடுதியான ஆகாரத்தை விலைக்கு விற்றதாக குற்றஞ்சாட்டி விசாரணை பண்ணினதின்பேரில் டிப்டி மாஜிஸ்டிரேட்டார் வேலைக்காரனுக்கு 5ரூபா அபராதம் விதித்தார்கள்.

ஜில்லா கோர்ட்டார் ரிவிஷன் மனுவின்மேல் ஹைக்கோர்ட்டுக்கு. கி. பு. கோ-438 செக்ஷன்படி ரிபர்பண்ணி தண்டனை விதித்தது நியாய விரோதமென்று தம்மபிப்பிராயத்தையும் எழுதி தெரிவித்துக்கொண்டார்கள்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம்:—இ.பி.கோ. 273 பிரிவின் தாற்பரியத்தை தப்பாக அர்த்தம்பண்ணினர்களென்றும் ஆகாரம் பானம் பண்ணக்கூடிய பதார்த்தங்கள் கெட்டுப்போனது என்பது தாற்பரியமாக இருக்க, கெட்டுப்போன பதார்த்தங்களென்று அர்த்தம்பண்ணி, கெட்டுப்போன பதார்த்தங்கள் விற்றதற்காக அபராதம் விதித்தது கூடாதென்றும்கூறி இங்கு வியாபாரிக்கு 350மணங்குதானியம் விற்கப்பட்டது. அவைகளிலொருபாகம் மனிதர்கள் உபயோகப்படுத்த யோக்கியதை யில்லாமலிருந்தது இவ்விற்பனைவியாபாரத்தை முன்னிட்டேயல்லாமல் ஆகார உபயோகத்துக்கென்றல்ல ஆகையால் 273-வது பிரிவுப்படி யாதொருகுற்றமும் செய்யப்படவில்லை யென்று அபராததெண்டனையை மாற்றி பணம் கொடுபட்டிருந்தால் அதை வாபசு செய்யும்படியாக உத்தரவு செய்தார்கள்.

ரூலிங்ஸ்:— ஓர் குழியில் புதைக்கப்பட்டிருந்த தானியம் நல்லதா யிருந்தாலும் கெட்டுப்போ யிருந்தாலும் வாங்கிக்கொள்வதாக திறந்து பார்க்காமலே விலைதீர்த்துக்கொண்டு திறந்து பார்த்தபொழுது பெரும்பான்மையாகக்கெட்டுப்போய் உபயோகிக்கக்கூடாமலிருந்ததால் இக்காரணத்திற்காக கெட்டுப்போன ஆகாரம் பானம் விற்பனை செய்தால் உள்ளாகும் குற்றத்துக்கு விற்றவர் உள்ளாகமாட்டாரென்று தீர்மானஞ்செய்யப்பட்டது. இ. லா. ரி. 28. அல. 312. (Emperor v. Salig Ram I. L. R. 28 All 312).

கிரிமினல் ரிபரென்ஸ்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜீ.

ஏககாலத்தில் திருடின பலசோத்துக்கு பலதடவை விசாரிக்கலாமா.

சக்கிரவர்த்தி ... ...வாதி
மியான்ஜான் ... ...எதிரி

வியாச்சிய சங்கிரகம்.

ஒருவன் இ. பி. கோ. 411 பிரிவுப்படி திருட்டுச்சொத்தை தெரிந்து தன் வசம் வைத்திருந்த குற்றத்திற்காக செஷன் கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டபிறகு அதேகாலத்தில் திருடின வேறொரு வஸ்துவை மறைக்கவேண்டியதற்கு இன்யாத்திடங் கொடுத்த குற்றத்திற்காக செஷன்கோர்ட்டாரிடம் திரும்பவும் அவனையே கமிட்டு செய்தபொழுது இது நியாயவிரோதமென்று தமது அபிப்பிராயத்தோடு ஹைக்கோர்ட்டாருக்கு ரிபர்பண்ணி கமிட்டு செய்ததை ரத்து செய்யவேண்டு மென்று செஷன் கோர்ட்டார் கேட்டுக்கொண்டார்கள்.

திருட்டுச்சொத்தை மறைக்க உதவிசெய்வதும், திருட்டுச்சொத்தை வாங்குவதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுடையதாகத்தோன்றவில்லை என்றும் கூறியிருந்தார்.

ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயம்:—மியான் ஜான் என்பவர் ஏற்கனவே ஒரு திருட்டுச் சொத்தை அயோக்கிய எண்ணத்தோடு வாங்கின குற்றத்திற்காக சிட்சை விதிக்கப்பட்டார். அதேகாலத்தில், திருடின இன்னொரு சொத்து அவர் கைவசமிருந்ததாக வேறொரு குற்றம் சாட்டி திரும்பவும் அவரை சிட்சைக்குள்ளாக்குவது கூடாதென்று தீர்மானித்து கமிட்டு பண்ணினதை ரத்து செய்தார்கள்.

இ. லா. ரி. 15. அல. 317 இல் சொல்லியிருக்கும் சக்கிரவர்த்தினியார் ௨. மக்கான். கேசில் இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது.

ரூலிங்ஸ்:—இ.பி.கோ. 411-வது பிரிவுப்படி ஒருவனிடத்திலிருந்து திருடின சொத்து வைத்திருந்த குற்றத்திற்காக சிட்சிக்கபட்டபிறகு அதேபேரிடத்திலிருந்து அதே சமயத்தில் திருடின வேறொரு சொத்தைப் பற்றி இ. பி. கோ. 414-வது செக்ஷன்படி சிட்சிக்க விசாரணை செய்யக்கூடாது என்று தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 28. அல. 313.(Emperor v. Mian Jan I.L.R. 28. All. 313).

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். ஆர்னல்டு ஒயிட்டு.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்

டிக்களோட்டரி வியாச்சியம்.

கிருஷ்ணம் சூரியா வகையரா...வாதி (அப்பீல் வாதி.)
பத்மாபீவகையரா...பிரதிவாதிகள் 2, 1 (அப்பீல்பிரதிவாதி.)

இது வாதி அடமானம் பிடித்த பாத்தியதையை ஸ்தாபிக்கக் கொண்டுவந்த வியாச்சியம். இரண்டாவது பிரதிவாதி முதல்பிரதிவாதியின்மேல் ஏற்பட்ட டிக்கிரியை நிறைவேற்றி அடமானச்சொத்தை ஜப்தி செய்தார். அப்பொழுது வாதி பாத்திய மனுகொடுத்தார். கோர்ட்டார் தள்ளிப்போட்டார்கள் உடனே அடமானச் சொத்தின்மேல் தனக்குள்ள பாத்தியதையை ஸ்தாபிக்கவும் பாத்திய மனுவைத் தள்ளுபடி செய்த உத்தரவை ரத்துசெய்யவும் கோர்ட்டில் சி பு-கோ. 283-வது பிரிவுபடி வியாச்சியம் தொடுத்தார். இதில் கிழ்க்கோர்ட்டில் வாதிபக்கம் தீர்ப்புசெய்தார்கள்.

இரண்டாம் பிரதிவாதி ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஜில்லா கோர்ட்டார் செய்த தீர்ப்பு :—அடமானப் பத்திரத்தில் கேட்கும்போது பணங் கொடுத்துவிடவேண்டுமென்று கண்டிருக்கிறதாலும் இந்த வியாச்சியம் ஸ்பெசிபிக் ரிலீப் ஆக்ட்டு Specific Relief Act) 42-வது பிரிவுக்கு விரோதமா யிருக்கிறதாலும் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பை மாற்றிவிட்டார்கள். இவ்வாட்சேபனையைப்பற்றி பிரதிவாதி வாதஞ்சொல்லாததால் சிலவு தொகை கொடுக்கும்படியாகச் சொல்லவில்லை.

வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—இ. லா. ரி. 16, மது - 140. கண்ணியம்மா v. கன்னுண்ணி கேஸை ஆதாரமாகக்கொண்டு ஜில்லா ஜட்ஜி தீர்மானஞ்செய்திருக்கிறதாலும், இ. லா. ரி. 14-மது, 23 அன்பு. v. கெத்திலம்மா கேசில் கனம் முத்துசாமி ஐயர் அவர்கள் மாறாக அபிப்பிராயப்படுகிறதாலும் புல்பென்சு தீர்மானத்திற்கு அனுப்பினபோது அவர்கள் சி. பு. கோ. 280, 281, 282, பிரிவுபடி ஒரு உத்தரவு செய்யப்பட்டால் 283-வது பிரிவுப்படி பாத்தியதையை ஸ்தாபிக்க வியாச்சியம் கொண்டுவருவதை ஸ்பெசிபிக் ரிலீப் ஆக்ட்டு 42-வது பிரிவு பாதிக்காதென்று அபிப்பிராயங் கொடுத்ததை முன்னிட்டு ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் அவ்வாறே தீர்ப்பு செய்தார்கள்.

ரூலிங்ஸ் :—ஸ்பெசிபிக் ரிலீப் ஆக்ட்டு 42-வது பிரிவு சீவில் பிரோசீஜர் கோடு 283-வது பிரிவினுலுண்டாகும் ஒரு பாத்தியதையை பாதிக்காது என்று தீர்ப்புசெய்தார்கள். இ. லா. ரி. 29 மது 151. (Kristnain Scoraya v. Pathna Bee I. L R., 29 Mad. 151.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சிப் ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்.

ஸ்வீகாரத்தகப்பனிடம் ஜனகதகப்பன் டணம் வாங்கிக்கோள்ளுதல்.

நாகப்பசெட்டிவகையரா-வாதிகள் (அப்பீல்பிரதிவாதி)
முருகப்ப செட்டி ...பிரதிவாதி (அப்பீல் வாதி)

முதல் வாதி பிரதிவாதியின் சுவிகாரப்புத்திரன். வாதியின் மைனராயிருக்குங் குமாரனை தன்னுடன் வாதியாகச் சேர்த்து பிரதிவாதியின்மேல் குடும்பச்சொத்தைப் பாகம்பிரித்துக் கொடுக்கச்செய்ய வியாச்சியம கொண்டுவந்தார் பிரதிவாதி வாதம்:—முதல் வாதியின் தகப்பன் ரூபா 6150 வாங்கிக்கொண்டு பிள்ளையை மஞ்சணீர் புத்திரனைக் கொடுத்தார் ஆகையால் வாதி சுவிகாரப்புத்திரன் என்கிற நிலமையுடையவராகமாட்டாரென்றும் தன்வசமிருக்குஞ் சொத்து சுயார்ஜ்ஜிதமென்றுஞ் சொன்னார். ஆனால் சுவிகாரம் எடுத்ததற்கும் குடும்பச்செலவில் பிரதிவாதிக்குக் கல்பாணமா யிருக்கிறதற்கும் தகுந்த ருஜு ஏற்பட்டதால் சுயார்ஜ்ஜிதம் என்கிற பாபத்தை நீக்கி சப் கோர்ட்டார் வாதிபட்சம் தீர்ப்பு சொன்னார்கள்.

இத்தீர்ப்பின்மேல் ஹைகோர்ட்டுக்கு பிரதிவாதி அப்பீல் செய்துக்கொண்டார். அப்பீல் மெமோராண்டத்தில் ரூபா 6000 சொச்சம் ஜனகபிதா பணம் வாங்கிக்கொண்டு பிள்ளையை விற்றதாலும் வாங்கப்பட்ட பிள்ளையை குடும்பத்திற் சேர்த்துக்கொள்வது இந்து லாவாயிருந்தாலும் இப்பொழுது அப்படி வாங்குவதும் விற்பதும் சட்டவிரோதமா யிருப்பதாலும் அடபடி வாங்கும் பிள்ளையைக் குடும்பத்தில் சேர்க்கக்கூடாதாகையாலும் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பு நியாய விரோதமென்று சொல்லியிருந்தது இதற்கு ஆதாரமாக இ. லா. ரி 22. பம்.199. மாா பிளெஷ்வார் v. தர்காபாயி கேசை எடுத்து காண்பித்து வாதாடினார்கள்.

ஹைகோர்ட்டார்தீர்மானம்:—ஜனகபிதாவும்சுவிகாரப்பிதாவும் செய்துகொண்ட ஏற்பாடு வேறு, பிள்ளையை சுவிகாரம் எடுத்துக்கொண்ட சடங்கு வேறு. சுவிகார புத்திரனுக்குச் செய்துக்கொண்ட சடங்கு சட்ட ஒழுங்குக்குட்பட்டிருந்ததாலும் கொடுக்கவும் வாங்கவும் அதிகாரமுடையவர்கள் மனதாரக்கொடுத்திருக்கிறதாலும் மேலே எடுத்துக்காட்டிய கேசில் விதவை சமீபபந்துவின் சம்மதத்தின்மேல் நல்லஎண்ணத்துடன் எடுக்காத சுவிகாரமாகையாலும் இது பொருத்தமுள்ளதல்ல. இங்கு வாதி பிரதிவாதியாயிருக்கிறவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டி ஜாதியாகையால் ஒவ்வொரு ஆண் பிள்ளையும் பணஞ் சம்பாதிக்கக் கூடியவர்களாகையால் பிள்ளையை சுவிகாரம் செய்யும்பொழுது பணம் கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. அன்றியும் இ. லா ரி. 16 கல் 556. பாஸ்பா ராபிதாத் சிங்கு v. இந்தார் கன்வார் கேசில் ஜுடிஷியல் கமிட்டியார் செய்த தீர்ப்பில் என்ன ஒழுங்கீன நிலையில் சுவிகாரம் எடுத்தாலும் பணம் கொடுப்பதினல் சுவிகாரம் செல்லாமற் போகாது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களை முன்னிட்டு கீழ்க்கோர்ட்டார் செய்த தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

ரூலிங்ஸ் :—சுவிகாரம்கொடுக்க உரித்தான குமாரனை கொடுக்கவும் வாங்கவும் உரியவர்கள் கிரமப்படி சுவிகாரஞ்செய்தால் ஜனகபிதா பணம் வாங்கியிருந்தாலும் சுவிகாரபுத்திரனின் நிலமை பாதிக்கப்படாது. பணம் வாங்கிக்கொண்டு சுவிகாரம் கொடுத்தது ஒழுங்கீனமாயிருந்தாலும் இந்த உடன்படிக்கை வேறாகவும் சுவிகார உடன்படிக்கை வேறாகவும் பாவிக்கப்படும். ஒன்றை ஒன்று பாதிக்காதென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 29, மது-161. (Murugappa Chetty v. Nagappa Chetty I. L. R., 29 Madras 161)

சீவில் அப்பீல்.

ஜட்ஜுகள், சிப்ஜஸ்டிஸ் சர். எஸ் சுப்பிரமண்யஅய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

வோட்டர்களுக்குப் பணங்கோடுத்தல்

கிருஷ்ணசாமி அய்யங்கார் வாதி (அப்பீல்வாதி)
சிவசாமி உடையார் பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)

கும்பகோணம் தேவஸ்தானங் கமிட்டி மெம்பர் காலியானபோது கிருஷ்ணசாமி அய்யங்காருக்கும் வேறொருவருக்கும் கட்சி ஏற்பட்டதில் கிருஷ்ணசாமிஅய்யங்காருக்கு அதிகவோட்டுவிழுந்தது அதனால 1-முதல் 5-வரையிலுள்ள பிரதிவாதியாகிய மெம்பர்களுக்காகவும் தனக்காகவும், 6 - வது பிரதிவாதி கிருஷ்ணசாமி அய்பங்கார் மெம்பராக்கப்பட்டாரென்று உறுதிசொன்னார் மறுநாள் 1, 3, 5, 6 மெம்பர்கள் ஒருகூட்டங்கூடி வாதியின் எலக்ஷனை மாற்றிவிட்டார்கள். திரும்பவேறு எலக்ஷனுக்கு ஆரம்பித்து இதில் 7-வது பிரதிவாதியை மெம்பராகத் தெரிந்தெடுத்தார்கள். இதனுல் வாதிதான் ஒருமெம்பராக நியமிக்கப்பட்டுப்போனதாகவும் பிறகு வேறு மெம்பரை நியமித்தது சட்டவிரோதமென்றும்செல்லுபடியாகாதென்றும்வியாச்சியஞ்செய்தார். இவர்வோட்டுசம்பாதிப்பதிலும் எலெக்ஷனிலும் அநேக கெட்டபழக்கங்களை கையாடின குற்ற மிவரிட மிருப்பதால் அவரை எலெக்ட்டுபண்ணுவது செல்லத்தக்கதல்ல வென்றும் அதை மாற்ற தங்களுக்கு பாத்தியம் உண்டென்றும் எதிர்வாதஞ் சொன்னார்கள். வாதி வோட்டர்களின்பிரயாணச்செலவுக்கு ரூபா 2000-க்குமேல் செலவழித்ததாகச் சொல்லி அதற்கு கணக்குக் கொடுக்கவில்லை. ஆகையால் ஜில்லாகோர்ட்டார்வோட்டுகளைபணங்கொடுத்து வாங்கியிருப்பதாக சந்தேகிக்க இடமிருப்பதால் தேவஸ்தானம் கமிட்டிவிஷயமாக லோக்கல் கவர்ண்மெண்டார் செய்த 19-வது ரூலின்படி எலக்ஷன் செல்லாதென்று பிராதைத்தள்ளிதீர்ப்புசெய்தார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு வாதி அப்பீல் செய்தார்.

கமிட்டி மெம்பர்கள் செய்தது நியாயவிரோதமென்றும் நியமனமானதற்குஒத்து நடவடிக்கை நடத்தாமல் அதை மாற்றினதினுல் அவர்கள் தங்கள் அதிகார வரம்புக்கு மீறி நடந்தார்களென்றும் வாதி பக்கம் அநேகமாக வாதாடியும் அவைகளை கோர்ட்டார் அங்கீகரிக்கவில்லை.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—வாதியே ரூபாய் 2000 செலவழித்ததாகவும் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் சுற்றிவர ரூ 500-ம், வோட்டர்களின்பிரயாணச் செலவுக்கு ரூ. 1500-ம் செலவழித்ததாகவும் சொல்லுகிறார். மறறொரு சாட்சி வாதியின் ஏஜண்டு வண்டிச்சத்தமாத்திரம் கொடுத்தாரேயல்லாமல் வேறு கொஞ்சம் கொடுக்கவில்லையென்றும் சாட்சியம் சொன்னார். அதிக சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. அன்றியும் தன்மேல் சந்தேகம் உண்டாகாமலிருக்க தனக்கு ஆதாரமாக போதுமான ருஜுக்கள் விடவில்லை. தனக்கு வோட்டுகொடுக்கிறவர்களுக்கு இவர் வண்டிச்சத்தம் கொடுத்தது ஓர் ஒப்பந்தமாகிறது. இவர் பணங்கொடுக்கிறதென்றும்அவர்கள் பதிலுக்குவோட்டுகொடுக்கிறதென்றும் ஒப்பந்தம்பண்ணினதாகிறதால் அப்படிச்செய்வது மேலேகுறித்த 19-வது ரூலின்படி லாவுக்கு விரோதமானது. வண்டிச்சத்தம் தருகிறேன் என்று சொல்வதை ஏற்றுக்கொண்டோ கொள்ளாமலோ வோட்டர்கள்வந்து வோட்டுகொடுப்பது ஒப்பந்தமாகாது. ஆகையால் வாதியின்அப்பீலை செலவுடன் தள்ளித் தீர்ப்பு செய்தார்கள்.

ரூலிங்ஸ்:—1863-ம் ஹு 20-வது தேவஸ்தான ஆக்டு 7-வது பிரிவுப்படி சென்னை கவர்ண்மெண்டார் செய்த 19-வது ரூல்படி ஓர் ஒப்பந்தத்தின் முடிவான ஏதாகிலுமொரு ஈடுகொடுத்தால் அவ்வீடு வோட்டுக்குப்பதிலாகக் கொடுத்ததாக எண்ணப்படுமென்றும்.

(2) மெம்பராகப் பிரியமுள்ளவர் வோட்டர்களுக்குக்கொடுக்கும் வண்டிச்சத்தம் மேலே குறித்த ஈடு ஆகும் ஆகையால் அப்பேர்ப்பட்டவர் எலக்ஷனுக்கு யோக்கியதை யுள்ளவரல்லவென்றும்,

(3) ஒன்றைச் செய்வதாக வாக்குக் கொடுத்தல் வோட்டு போடுவதற்கு தகுந்த ஈடாகப்பாவிக்கப்படமாட்டாதென்றும்,

(4) அவ்வாறு பணம் கொடுக்கிறவர் வோட்டுக்காக பணம் கொடுபட இல்லையென்றால் தானே ருஜு கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்பு செய்தார்கள். இ. லா. ரி. 29. மது. 166. *Krishnaswami Aiyangar, v. Sivaswami Udayar I. L. R. Mad.* 29166.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்.

பத்திரத்து வட்டியே கேடுவுக்குப் பிந்தி கோர்ட்டார் தீர்மானஞ்செய்யவேண்டியதில்லை.

சுவாமிநாதசெட்டியார் வகையரா ... 1, 3, 4 வாதிகள் (அப்பீல் வாதிகள்)
சுவாமியப்பநாயக்கர் வகையரா ... 1, 4, 5 பிரதிவாதிகள் (அப்பீல்பிரதிவாதிகள்)

வியாஜ்ஜிய சங்கிரகம்.

இரண்டாவது பிரதிவாதியாகிய முதல் அடமானக்காரருக்கு ரூ 1,37,115 1897ஹு ஆகஸ்டுமீ 24உ முதல் மாதம் ஒன்றுக்கு 100-க்கு ஒன்று வீதம் வட்டிசேர்த்து முதல்பிரதிவாதி கொடுக்கவேண்டியிருந்தது. வாதியாகிய இரண்டாவது அடமானக்காரருக்கும் ரூ 20,452 1897ஹு பிப்ரவரிமீ 1உமுதல் மாதம் ஒன்றுக்கு 100-க்கு ஒன்று வீதம் வட்டி சேர்த்து முதல் பிரதிவாதி கொடுக்கவேண்டி யிருந்தது. இவ்வாறிருக்க 1906ஹு ஜுன்மீ 1உக்குள் பணம் மேலேசொன்ன வட்டிவீதத்துடன் முதல்பிரதிவாதி செலுத்தவேண்டுமென்றும் கெடுவு தவறிச் செலுத்தும்போது கெடுவுக்குப் பிந்தி மாதம் 1-க்கு 100-க்கு அரை வீதம் செலுத்தவேண்டுமென்றும் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பில் கெடுவுக்குப் பிந்தி பத்திரத்தில் கண்ட வட்டிவீதம் செலுத்த கோர்ட்டாரை கட்டாயப்படுத்தவேண்டியது அவசியமா என்பதைப்பற்றி விவாதம் ஏற்பட்டது. இ. லா. ரி. 26. கல். 39. ராமேஸ்வார் கோயர் v. மகம்மது மேதி உசேன் கான் இல் கூறியிருக்கும் பிரிவி கவுன்சில் தீர்மானமும், இ. லா. ரி. பர்த்பூர் மகாராஜா v. ராணிக்கன்னுதேவி கேசும், இவ்வாறு கட்டாயப்படுத்தவில்லை யென்றும், இ. லா. ரி. 23. மது. 637 இந்தியா கமெர்ஷியல்பாங்கு v. அதீந்திருளய்யா கேசு கட்டாயப்படுத்த வேண்டுமென்று சொல்லாததாலும் கிருஷ்ணசாமி அய்யங்கார் v. சீனிவாசய்யங்கார் கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் இருந்து தீர்மானம் பண்ணினவர் அப்போதைய தீர்மானத்துக்கு மாறாக இப்பொழுது அபிப்பிராயங்கொள்வதாலும் பத்திரத்துவட்டிவீதத்தைக் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை யென்று தீர்ப்புசெய்தார்கள்.

ரூலிங்ஸ்:—அடமானம் மீட்டுக்கொள்ளுகிறதற்காக ஏற்பட்ட கெடுவுக்குப் பிந்திய காலத்துக்கு பத்திரத்திலுள்ள முழுவட்டியையே கொடுக்கத் தீர்மானிக்கும்படி கோர்ட்டாரை கட்டாயப்படுத்தக்கூடாதென்று தீர்ப்புசெய்தார்கள். இ. லா. ரி. 29. மது 170. (*Saminatha Chettiar v. Swamiappa Naicker I. L. R.* 29 *Mad.* 170.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சிப் ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.

கோர்ட்டு பீஸ் ஸ்டாம்புத்தோகை.

ராஜலிங்கம்செட்டியார் ...வாதி (அப்பீல் பிரதிவாதி)
பாலசுந்தரம் முதலி ...பிரதிவாதி (அப்பீல் வாதி)

வியாச்சியசங்கிரகம்.

பிரதிவாதியின் தகப்பன்மேல் தாவா வீட்டை சுவாதீனப்படுத்திக்கொள்ள வாதி ஒரு டிக்கிரி பெற்ருர். அந்த டிக்கிரியை நிறைவேற்றும்பொழுது பிரதிவாதி பாத்தியமனு கொடுத்தார். சி. பு கோ. 330-வது பிரிவுப்படி ஒரு வியாச்சியமாக விசாரணை பண்ணி வாதிபக்கம் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள். பிரதிவாதி அப்பீல் செய்தபொழுது பொதுவாக அப்பீல் மெமோராண்டத்துக்குக் கட்டவேண்டிய ஸ்டாம்பு கட்டப்படவில்லையென்று எதிர்வாதம் உண்டானபோது, இத்தன்மையான கேசுகளுக்கு அப்பீலில் சரியான ஸ்டாம்பு கட்டவேண்டுமென்றும், ஆயினும் இதற்குக் கட்டியிருக்கும் ரூ. 10-ம் வீட்டுப் பொறுமானத்துக்கு போதுமானதாயிருக்கிறதால் அப்பீலை ஏற்றுக்கொண்டு தகப்பன் கடனுக்கு பிள்ளை கட்டுப்படவேண்டியதென்று பிள்ளையின்பாகமுள்பட வீட்டை வாதிவசமாக்கிக்கொள்ள தீர்ப்புசெய்தார்கள்.

ரூலிங்ஸ் :—சி. பு. கோ. 330-வது பிரிவுப்படி ஓர் பாத்தியமனு கொடுத்து விசாரணை நடந்தால் இதன்மேல் ஏற்படும் அப்பீலுக்கு சாதாரண வியாச்சியங்களுக்குக் கட்டும் தொகையுள்ள ஸ்டாம்பில் மெமோராண்டம் அப்பீல் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு செய்தார்கள். இ. லா. ரி. 8. கல். 720. மாஸ்பூபான் v. அம்ருவ் பீகம் கேசிலும், இ. லா. ரி. 10. பம். 238. நாராயன் ரகுநாத் v. பகவன்த் ஆனன்த் கேசிலும், இ. லா. ரி. 4. மது. 420 சீனிவாச அய்யங்கார் v. பெரியதம்பி நாயக்கர் கேசிலும் இம்மாதிரி அபிப்பிராயங்கொண்டிருக்கிருர்கள். இ. லா. ரி. 29. மது. 172. (*Balasundaram Mudaly v. Rajalingam Chettiar I. L. R. 29. Mad. 172.*)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ் சர். சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் போதாம்.

போதுப்பிரயோஜனத்துக்காக எடுத்துக்கொள்ளப்படும் நிலத்துக்காகக்கொடுக்கும் பொறுமானத்தொகை.

சௌக்காரன்மக்கி வகையரா - வாதிகள் (அப்பீல்வாதிகள்.)
வையாபிரத் கன்னிகட்டி ஆலி வகையரா...பிரதிவாதிகள் (அப்பீல் பிரதிவாதிகள்)

வியாஜ்ஜிய சங்கிரகம்.

பொதுப்பிரயோஜனத்துக்காக எடுத்துக்கொள்ளப்படும் நிலத்தின் பொறுமானத் தொகையை பாத்தியங் கொண்டாடும் இருவருடைய கட்சியையும் கலெக்டர், ஜில்லா கோர்ட்டுக்கு ரிபர் பண்ணி ஜில்லாக் கோர்ட்டார் செய்த தீர்மானத்துக்குக் கட்டுப்படாமல் மறுபடியும் சப் கோர்ட்டுக்கு வாதி புனர்வியாச்சியம் கொண்டுவந்தார்.

சப் கோர்ட்டுத் தீர்ப்பு :—இந்த வியாச்சியம் முந்திய சிவில் கோர்ட்டுத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டுப் போனதால் வியாச்சியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு :—லாண்டு அக்கியுசேஷன் ஆக்ட்டுபடி கலெக்டர் ரிபர் பண்ணி ஜில்லா கோர்ட்டார் செய்த தீர்ப்பு அதே கட்சிக்காரர் தங்களுக்குள் கொண்டுவரும் புனர்வியாச்சியத்தைக் கட்டுப்படுத்துமென்றும் லாண்டு அக்கியுசேஷன் ஆக்ட்டில் இந்த மாதிரியான வியாச்சியங் கொண்டுவர எந்தப் பிரிவும் இடங்கொடுக்கவில்லையென்றும் தீர்ப்புசொன்னார்கள்.

ரூலிங்ஸ் :—நிலம் விஷயமாக சர்க்காரால் கொடுக்கப்படும் பொறுமானத் தொகையைப்பற்றி பலர் பாத்தியங்கொண்டாடும்பக்ஷத்தில் இதுவிஷயமாக சிவில் கோர்ட்டார்செய்த தீர்ப்பு பிந்திய வியாச்சியங்களுக்கிடமில்லாமல் முடிவை ஏற்படுத்துகிறதென்று தீர்ப்பு செய்தார்கள். இ. லா. ரி. 29, மது 173 சௌக்காரன் மக்கி v. வையாபிரத கன்னிகட்டி ஆலி. (Chowakaran Makki v. Vayya prath Knnhi Kutti Ali I. L. R., 29 Mad. 173)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஷன்.

ஜப்தி பண்ணும்பொழுது டிக்கிரி இருக்கவேண்டும்.

செட்டியாட்டில் மகமது ... வாதி (அப்பீல் வாதி)
பன்னேலிமா தேவிபம்மா - வாதிகள் (அப்பீல் வாதி)
கன்னிகோருவகைரா-பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)
அம்பாலிகன்னிகோரு வகையரா-(அப்பீல் பிரதிவாதி)

வியாச்சிய சங்கிரகம்.

ஐந்தாவது பிரதிவாதி 1 முதல் 4 வரையிலுமுள்ள பிரதிவாதிகளின்மேல் அஞ்சிஹேமால் ஜில்லா கோர்ட்டில் எக்ஸ்பார்ட்டி டிக்கிரி பெற்ருர். அது கள்ளிக்கோட்டை சப் கோர்ட்டுக்கு நிறைவேற்றும்படி அனுப்பப்பட்டது 1900ஞ பிப்ரவரிமீ 19உ எக்ஸ்பார்ட்டி டிக்கிரி தள்ளுபடியானது சப் கோர்ட்டார் டிக்கிரி தள்ளுபடியான விஷயந் தெரியாமல் 1900ஞ மார்ச்சுமீ 10உ தாவா சொத்தைஜப்திசெய்தாகள். ஆனல் ஏப்பிரல் மேமாசங்களில் அந்த சொத்து பராதீனம் செய்யப்பட்டது. தள்ளுபடியான டிக்கிரி விஷயம் மறுபடியும் விசாரணையாகி ஐந்தாவது பிரதிவாதி பட்சம் தீர்ப்பு சொல்லப்பட்டது. இந்த டிக்கிரியைக்கொண்டு ஏற்கனவே ஜப்தியான சொத்தை ஏலத்துக்குக் கொண்டுவரப்போனர்.

அப்பொழுது வாதிகள் பாத்திய மனுகொடுத்தார்கள்.

பராதீனம் பண்ணப்பட்டபொழுது நிஜப்தியாகியிருந்தது என்பதாகப் பாத்திய மனுவைத்தள்ளிவிட்டார்கள்.

பிறகு வாதிகளுக்கு பராதீனம் பண்ணப்பட்டது செல்லுபடியானதென்று கோர்ட்டாரா டிக்கிளேர் பண்ண (அதாவது உறுதிகூற) வேண்டிக்கொண்டு புதுவியாச்சியஞ் செய்தாகள்:

இரண்டு கீழ்க்கோர்ட்டாரும் வாதிகளின் பிராதைத் தள்ளிப்போட்டார்கள்.

ஹைகோர்ட்டுக்கு அப்பீல் பண்ணினர்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு :—ஜப்தி பண்ணினபொழுது டிக்கிரிக்கு உயிரில்லாததால் அதன்மேல் நிறைவேற்றி ஜப்திசெய்தது செல்லுபடியானதல்ல. தள்ளப்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரிக்கு பிந்தி விசாரணை பண்ணி ஏற்பட்ட டிக்கிரியினல் உயிருண்டாகாது ஆகையால் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பை மாற்றி மறுபடியும் சில இஷியூக்களை விசாரிக்கும்படி உத்தரவுசெய்தார்கள்.

ரூலிங்ஸ் :—(1) டிக்கிரி தள்ளுபடியாயிருக்கும்பொழுது டிக்கிரிசெய்த கோர்ட்டாராலாவது டிக்கிரி டிரான்ஸ்பரர் செய்யப்பட்ட வேறு கோர்ட்டாராலாவது செய்த ஜப்தி செல்லாது என்றும், (2) பின்னல் அந்தவியாச்சியத்தில் அதேமாதிரி ஏற்படும் டிக்கிரியினல் அது செல்லுபடியான தாகாதென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 29 மது 175. (*Chettiattil Muhamed v. Kunhikoru I. L. R., 29 Mad. 175.*)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

முந்திய அடமானந் தெரிந்துகொள்ள இடம் இருக்கும் பட்சத்தில் அதனுல் பிந்திய அடமானம் கட்டுப்படுதல்.

காமேசுவரம்மாள் ... 2. பிரதிவாதி (அப்பீல் வாதி) $\frac{3058}{1903}$ நெ.

வாதி $\frac{3059}{1903}$ நெ.

சீந்தாராமானுஜாசார்லு வகையரா...வாதி(அப்பீல்பிரதிவாதி) $\frac{3098}{1903}$ நெ.

பிரதிவாதி $\frac{3059}{1903}$ நெ.

வியாஜ்ஜிய சங்கிரகம்.

ஒருவர் காமேசுவரம்மாளிடம் ரூ. 350-க்கு பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்து சில பத்திரங்களையுமீடுகொடுத்திருந்தார். அவரே, பின்பு சில சொத்துக்களை சீத்தாராமானுஜாசார்லுவிடம் அடமானம் வைத்து அடமானப்பத்திரத்தில் சொத்துக்களின் சாசனங்கள் சில கடனுக்கு ஈடாகக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கண்டெழுதி கடன் வாங்கினர். காமேசுவரம்மாளுக்கு முந்திய பாத்தியமுண்டா வென்பதைப் பற்றி டி. மு. கோர்ட்டில் தாவா நடந்தது.

டி. மு. கோர்ட்டார் தீர்மானம்:—காமேசுவரம்மாளுக்கு முந்திய பாத்தியம் உண்டென்று தீர்மானஞ் செய்தார்கள்.

ஜில்லா கோர்ட்டார் காமேசுவரம்மாளுக்கு முந்தியபாத்தியமில்லை என்று தீர்ப்பு சொன்னர்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—அடமானப்பத்திரத்தில் இந்தச் சொத்துக்களின் சாசனம் வேருெருவரிடம் ஈடாக இருக்கிறதென்று கண்டிருப்பதால் அடமானக்காரருக்கு இந்த சாசனங்க ளில்லாமலிருப்பதற்கு என்னகாரணம் என்று விசாரித்திருக்கலாம் அவ்வாறு விசாரித்தால் அதன் விபரம் இவருக்குத் தெரிந்திருக்கும். அப்பீல்வாதி தன்னிடம் அடமானம் வைக்கிறதாக உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிருர். இந்தக் காரணங்களை முன்னிட்டு ஜில்லா கோர்ட்டார் தீர்ப்பை ரத்துசெய்து காமேசுவரம்மாள்பட்சம் வழக்கத்திலுள்ள அடமான டிக்கிரி செய்து செலவு தொகையும் கொடுக்கும்படி தீர்ப்பு செய்தார்கள்.

ரூலிங்ஸ்:—ஒரு அடமானக்காரன் தான் பெந்த கம் வாங்குகிறபொழுது முன்னல் அதே சொத்தை வேருெருவருக்குபெந்தகம்வைக்கிறதென்று ஒரு உடன்படிக்கையிருக்கிறதாக தன் விசாரணையில் தெரியவ ரக்கூடியதாய் இருக்கும் பட்சத்தில் இவ்வடமானக் காரனின் பாத்தியதை முன்னெரு அடமானமிருந் தால் என்னபாத்தியதை யிருக்குமோ அந்த பாத்திய தைதானுண்டென்று டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 40-வது பிரிவையும், டிரஸ்டு ஆக்டு 91-வது பிரி வையும் அண்டித்து தீர்ப்புசொல்லப்பட்டது. இ. லா ரி 29. மது. 177. (*Kameswarammu v. Sitaramanuj Charlu, I. L. R. 2', Mad. 177.*)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

மோசமாகப் போய் சோல்லி ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்தல்.

வெங்கிட்டப்ப நாயக்கர் ... 10 வாதி (அப்பீல் வாதி
சுப்பா நாயக்கர் ... பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி

பிரதிவாதி பொய் சொல்லியும் சாட்சியங்களை மறைத்தும் வாதியின்மேல் தீர்ப்பு பெற்றதாகச் சொ ல்லி அத்தீர்ப்பை ரத்துசெய்யவேண்டுமென்று விய ச்சியங் கொண்டுவந்தார்.

இரண்டு கீழ்க்கோர்ட்டாரும் இந்த வியாச்சிய கொண்டுவரக்கூடிய அவ்வளவு மோசமிருக்கிறதாக தோன்றவில்லையென்று பிராதைத் தள்ளிவிட்டார்கள்

இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு வாதி அப்பீ செய்துகொண்டார்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—வாதி இந்த வியா சியங் கொண்டுவர வியாச்சியமூலம் இருக்கிறதா எ ன்பதைப்பற்றியும், வாதி ருஜுவிட சாவகாசம் கொ டுக்காமல் பிராதை ஏற்றுக்கொள்ளலாமா வென்பதை ப்பற்றியுமாகிய இந்த இரண்டு பிரதம இஷியூக்களை கொண்டு கேசை கீழ்க்கோர்ட்டில் முடிவு செய்திரு கிருர்கள்.

ஒருவன் மோசடியாக வேருெருவன்மேல் தீர்ப் பெற்ருல் அந்தத் தீர்ப்பை ரத்து செய்ய வேருெரு யாச்சியம் செய்யலாமா என்பதைப்பற்றி இங்கிலாந் லும் இந்தியாவிலும் ஒரேசட்டந்தானிருக்கிறது. ஆ னும் இங்கிலாந்தில் இந்த வியாச்சியங்கொண்டுவரல மென்று சில தீர்மானங்களால் உறுதிசெய்யப்பட்டி க்கின்றன. அத்தீர்மானங்களின்படி ஒருவன் மோச யாகத் தீர்ப்புபெற்றிருந்தால் அத்தீர்ப்பினல் பாதிக்க படுகிறவன் வேறு வியாச்சியஞ் செய்து அத்தீர்ப் இங்கிலீஷ்கோர்ட்டாரால் செய்த தீர்மானமாயிருந் லுஞ் சரி இதர கோர்ட்டுத் தீர்மானமா யிருந்தாலு சரி அதை ரத்துசெய்துகொள்ளலாம்.

மேலே குறித்த தீர்மானங்களில் ஒன்றில் ஒ ஜட்ஜி சொல்லுகிறதாவது: மோசடி யென்று பின் கொண்டுவரும் வியாச்சியத்தில் பிரதிவாதியா யிருக் றவன் தான் முன் வியாச்சியத்தில் சொன்னவைகளை யே சொல்லி இப்பொழுது கொண்டுவந்திருக்கு வியாச்சியம் மோசடியென்று ருஜுப்படுத்தி ஜெய டைந்தாலும் கோர்ட்டார் பின் வியாச்சியத்தை ஏ றுக்கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிருர்.

ஆகையால் வாதி கொண்டுவரும் வியாச்சியத்தை ஏற்றுக்கொள்ளாமலிருக்க மேலே கூறியவைகளில் ஆதாரமில்லை. முன் வியாச்சியத்தில் பொய்சாட்சி சொல்லியும் இன்னுமிதர சாட்சியங்களை மறைத்தும் மோசடியாகத் தீர்மானம் பெற்றுவிட்டானென்று கோர்ட்டாரைத் திருப்திபடுத்தும்படியாக வாதி தகுந்த ருஜு கொடுக்க சாவகாசம் இருக்கும்பொழுது அவ்வாறு கொடுத்து ஜெயமடையக் கூடியதாயிருந்தால் வாதி இவ்வியாச்சியத்தைக் கொண்டுவந்து ஜெயித்துக்கொள்ள பாத்தியப்பட்டவனே. ஆகையால் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பை மாற்றி இந்தப் பிராதை ஏற்றுக்கொண்டு சட்டப்படி விசாரணை செய்ய டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவு செய்தார்கள். செலவுதொகை டி. மு. கோர்ட்டார் தீர்ப்பைப் பொறுத்திருக்குமென்றார்கள்.

ரூலிங்ஸ்:—பெரும்பொய்சொல்லியும் சாட்சியங்களை மறைத்து மோசடியாகப்பெற்ற தீர்ப்பை ரத்துசெய்ய வேறு வியாச்சியங் கொண்டுவரலாமென்று தீர்ப்பு செய்யப்பட்டது. இ. லா. ரி. 29 மது. 179. *Venkatappa Naick v. Subba Naick I. L. R. 29. Mad. 179.*

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

உப்பள லைசென்சு கான்சலானவருக்கு காம்பென்சேஷனில்லை.

சுப்பராயமுதலியார்...வாதி. டிக்கிரி பெற்றவர் (அப்பீல் பிரதிவாதி)
இந்தியா சிக்கிரட்டெரிக்காக செங்கல்பட்டு கலெக்டர்... } பிரதிவாதி. டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவர் (அப்பீல் வாதி)

வியாச்சிய சங்கிரகம்.

சில உப்பளப் பாத்திகளை சர்க்கார் வசமாக்கிக் கொள்ளும்படியாக ஏற்பட்ட உத்தரவை ரத்துசெய்வதற்கும் அவைகளைத் தன்வசமாக்கிக் கொடுக்கும்படிக்கும் வாதி இந்தியா சிக்கிரட்டேரிபேரில் டி. மு. கோர்ட்டில் தாவா செய்தார்

டி. மு. கோர்ட்டார் தீர்மானம் :—மதுராஸ் சால்ட்டு ஆக்டு 16 (a) பிரிவுப்படி பிரதிவாதி தகுந்த பொறுமானத்தொகை கொடாதபட்சத்தில் வாதி உப்பளப்பாத்திகளை யடைகிறதென்று தீர்ப்பு செய்தார்கள். ஷை பிரிவுப்படி வாதிக்காக ரூபா 2 சர்க்காரில் கொடுத்தார்கள். வாதி பணத்தைப்பெற்றுக்கொள்ள சம்மதிக்காமல் தனக்கு நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்க டி. மு. கோர்ட்டில் மனுசெய்துகொண்டார். ஆனல் வேறு தனியான வியாச்சியங் கொண்டுவந்து கம்பென்சேஷன் தொகையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமென்று மனுவைத் தள்ளுபடி செய்தார்கள்.

இதன்மேல் வாதி ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டார்.

ஜில்லா கோர்ட்டார் தீர்மானம் :—மதுராஸ் சால்ட்டு ஆக்டின் 18-வது பிரிவின்படி வாதி கம்பென்சேஷன் பெற்றுக்கொள்ள உரித்தானவரென்று கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தை மாற்றி அத்தொகையை நிர்ணயிக்க முன்சிப்கோர்ட்டாருக்கு உத்தரவுசெய்தார்கள். பிரதிவாதி (சர்க்காரில்) ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—மதுராஸ் சால்ட்டு ஆக்டு 18-வது பிரிவுப்படி வாதி கம்பென்சேஷன் (பொறுமானத்தொகை) அடைய பாத்தியப்பட்டவராக ஜில்லா கோர்ட்டார் செய்த தீர்ப்பு பிசகென்றும் ஷை ஆக்ட்டின் 27-வது பிரிவின்படி லைசென்சு கான்சலானபொழுது அந்த ஆக்டின் 16 (a) பிரிவின்படி வாதிக்கு அந்த நிலத்திலுள்ள சுவாதீன பாத்தியதைக்கேற்படும் கிரயத்துக்குரியவரென்றும் அதுவுங்கூட உப்பு விளைவிக்க யோக்கியதை யுடைய அந்நிலத்தின் இருப்பை முன்னிட்டு கிரயம் நிதானிக்கக்கூடாதென்றும், இக்கிரயத்தொகையைத் தன் யுக்தம்போல கமிஷனர் நிர்ணயிக்கலாமென்றும், அவ்வாறு ஏற்படும் தொகையை வாதி ஒப்புக்கொள்ளாவிட்டால் கோர்ட்டுக்கு வரலாமென்றும் சொன்னார்கள். ஆயினும் இந்த வியாச்சியத்தில் கமிஷனர் ரூ. 2 அந்நிலத்தின் கிரயமாக மதித்தார். லைசென்சுதாராகிய வாதி இத்தொகையை ஒப்புக்கொள்ளவில்லை. டி. மு. கோர்ட்டார் இதை விசாரணைபண்ணி தொகையை நிர்ணயம் பண்ணத் தகுந்தவர்கள். இந்த வியாச்சிய டிக்கிரியை இக்கோர்ட்டார் நிறைவேற்றிக்கொண்டு வருவதால் இந்தச் சுவாதீன பாத்தியதைக்குரிய கிரயத்தைப்பற்றி இருபக்கக் கட்சிக்காரர்களின் ருஜுக்களையோசித்து நிர்ணயம்பண்ணி அத்தொகை கொடுபட டி. மு கோர்ட்டாரே உத்தரவுபண்ணும்படி தீர்ப்புசொன்னார்கள். இதன் செலவு தொகை டி. மு. கோர்ட்டாரே தீர்மானிக்கவேண்டியதென்றுஞ் சொன்னார்கள்.

ரூலிங்ஸ் :—(1) மதராஸ் சால்ட்டு ஆக்டின் 27-வது பிரிவின் பிரகாரம் ஒரு லைசென்சு கான்சல் பண்ணப்பட்டால் லைசென்சுதார் அந்த ஆக்ட்டின் 18-வது பிரிவின்படி கம்பென்சேஷன் பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவரல்லவென்றும் 16 (a) பிரிவுபடி அவருடைய சுவாதீன பாத்தியதைக்குரிய விலை மாத்திரம் அவருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் (2) அவ்வாறு விலை கொடுக்காதபட்சத்தில் நிலத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளுகிறதென்று வாதிக்கு தீர்ப்பு கிடைத்திருந்து அத்தீர்ப்பை நிறைவேற்றுங்காலத்தில் நிறைவேற்றுங் கோர்ட்டார் விலையின் தொகையை நிர்ணயிக்க அதிகாரமிருக்கிறதால் வேறு தனிவியாச்சியம் கொண்டுவர வேண்டியதில்லை யென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 29 மது 181. *The Collector of Chinglepet f r the Secretary of State for India v. Subraya Mudaliar I. L. R., 29 Madr 181.*

THIRD CRIMINAL SESSIONS OF THE MADRAS HIGH COURT.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

மூன்றாவது கிரிமினல் சேஷன்ஸ்.

ஜட்ஜி :—ஜஸ்டிஸ் சர் ரேல்ப் பென்ஸன்.

1906ஷூ ஆகஸ்டுமீ 13உ

சிருஷ்டனை கையெழுத்து செய்து ஏமாற்றின கேஸ்.

வாதி :—மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியார்.
குற்றவாளி :—ஆலிகர் என்கிற தனிகைமலை.

கேசின் விபரம் :—கடந்த ஜுலைமீ 8உ குற்றவாளி மீராராவுத்தர் தந்திகொடுத்ததுபோல் பர்மாவிலிருக்கும் ருக்மாதர் ராவுத்தருக்குத் தந்திகொடுத்து 50 ரூபா அனுப்பும்படி சொல்லியிருந்தான். மணியார்டர் மீராராவுத்தர் பேருக்கு திருவல்லிக்கெணித் தபால்ஆபீசுக்கு வந்தது. குற்றவாளி தபால்காரனிடம் தான் மீராராவுத்தர் என்று சொல்லிப் பணத்தைப் பெற்றுக்கொண்டான்.

கேசின் நடவடிக்கை :—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு :—மூன்றுவருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

II.

கைக்கெடியாரம் திருடின கேஸ்.

குற்றவாளி :—கோவிந்தன்.

கேசின் விபரம் :—மிஸ்டர் ஏ. டி. ஆம்பொரோசுக்குச் சொந்தமான ரூபா 2-15-0 மதிப்புள்ள கைக்கெடியாரத்தைத் திருடிவிட்டான்.

கேசின் நடவடிக்கை :—இதற்கு முன் எட்டுத்தடவை தண்டனைப்பட்டு ஜெயிலுக்குப்போய் வந்தவன். குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு :—ஏழு வருஷ தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டது.

III.

சோப்புத் திருடின கேஸ்.

குற்றவாளி :—முனிசாமி என்கிற சீனன்.

மைலாப்பூரில் ஒரு வீட்டிலிருந்து மொத்த மதிப்பு எட்டணவுள்ள ஒரு சோப்புக்கட்டி ஒரு அங்கவஸ்திரம், முகத்துக்குப் போடுகிறமாவு ஆகிய வஸ்துக்களைத் திருடிவிட்டான்.

கேசின்நடவடிக்கை :—இதற்குமுன் ஐந்துமுறை ஜெயிலுக்குப் போய்வந்தவன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு :—ஐந்துவருஷக் கடினக்காவல் தண்டனையும் அதில் மூன்றுமாதம் தனிக்காவலும் விதிக்கப்பட்டது.

IV.

பூட்டுத் திருடிய கேஸ்.

குற்றவாளி :—நாராயணசாமி யென்கிற வீராசாமி.

கேசின் விபரம் :—கடந்த ஏப்ரல்மீ 13உ மெஸ்ஸர்ஸ் என். வி. கன்னைய செட்டியார் கம்பெனியில் 10 அணு விலைமதிப்புள்ள ஒரு பூட்டைத்திருடினதாகக் குற்றஞ் சாற்றப்பட்டான்.

ஜூரர்கள்:—மெஸ்ஸர்ஸ் P. வெங்கிடாசல முதலியார் B. A. (*Foreman*) பி. பார்லெட், எஸ் பாபுராவ், W. பர்கால், G. M. ப்ரவுண், E. W. ஜேம்ஸ், P. செங்கல்வராய பத்தர், T. V. செல்லப்ப சாஸ்திரி, B. A. L. T; K. அச்சுதன்.

கேசின் நடவடிக்கைகள்:—பிராசிக்யூஷன் தரப்பில் சாக்ஷிகள் விசாரிக்கப் பட்டார்கள். குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. போலீசார் சிருஷ்டனைசெய்து இந்தக் கேசை தன்மேல் கொண்டுவந்திருப்பதாகச் சொன்னான்.

தீர்ப்பு :—ஏழுவருஷ தீவாந்திரதண்டனை விதிக்கப்பட்டது.

V.

துணிப்பை திருடிய கேஸ்.

குற்றவாளி :—நாராயணசாமி, மூனிசாமி என்கிற கிருஷ்ணசாமி.

கடந்த மேமீ 10உ டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டராகவிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கும் மிஸ்டர் சுப்பராம அய்யர் ஜார்ஜ் டவுன் செங்கான்கடைவழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது அவருடைய கோட்டையிலிருந்து 4 ரூபா 15 அணு 6 பை அடக்கமான ஓர் துணிப்பையைக் குற்றவாளி திருடிவிட்டான்.

கேசின் நடவடிக்கைகள் :—பிராசிக்யூஷன் தரப்பில் நான்கு சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டன. குற்றவாளி வக்கீல்வைக்காதபோதிலும் அவனே சாக்ஷிகளைக் கிராஸ்கேள்விகள் கேட்டான். போலீசார் தன்பேரில் இந்தக்கேசை சிருஷ்டனை செய்துகொண்டு வந்துவிட்டதாக டிபன்ஸ் சொன்னான்.

தீர்ப்பு :—குற்றவாளி இதற்குமுன் 14 வருஷம் ஜெயிலில் காலத்தைக் கழித்திருக்கிறபடியால் இனிமேலும் அவனைக் கடுங்காவல்தண்டனைக் குள்படுத்துவதில் பிரயோசனமில்லை யென்றுசொல்லி கோர்ட்டார் அவனுக்குத் தீவாந்திரதண்டனை விதித்தார்கள்.

VI.

கேரோசின் ஆயில் டப்பாத் திருடிய கேஸ்.

குற்றவாளி:—கோவிந்தன்.

கேசின் விவரம் :— ரெங்கநாத பிள்ளை என்பவர் கடந்த மேமீ 15உ ஒருவண்டியில் முன்புறத்திலொரு கெரோசின் ஆயில் டப்பாவும் பின்புறத்திலோர் டப்பாவும் கட்டிக்கொண்டு கொத்தவால் சாவடியிலிருந்து கோமளேஸ்வரன் கோவிலுக்குப் போகும்போது பின்புறத்திலிருந்த டப்பாவைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை :— குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. டப்பா ரோட்டில் கிடந்ததாகவும் பீட்டிலிருந்த போலீஸ் கான்ஸ்டேபிள் டப்பாவை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தால் கூலிகொடுப்பதாகச் சொன்னதாகவும் அப்படியே போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துக்கொண்டு போனபோது போலீசார் பிடித்துக்கொண்டதாகவும் டிபன்ஸ் சொன்னான்.

திர்ப்பு :— ஜூரிகள் குற்றவாளி அல்லவென்று அபிப்பிராயம் கூறினதைக் கோர்ட்டார் ஒப்புக்கொண்டு விடுதலைசெய்துவிட்டார்கள்.

VII

ரெயிலில் திருடிய கேஸ்.

குற்றவாளி:—ராமசாமி என்கிற ஆறுமுகம்.

கேசின்விபரம்:—குற்றவாளி எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு போர்ட்டர் கோட்டையிலிருந்து 5 ரூபா 6 அணு 6 பை அடக்கமான ஒரு கடுதாசிப் பொட்டணத்தைத் திருடிவிட்டான்.

தீர்ப்பு:—இந்தக் கைதி சவுக்கடிபட்டவன். கடுங்காவல் தண்டனை யடைந்தவன். தனிக்காவல் தண்டனை யடைந்தவன். இவ்வளவு தண்டனையடைந்தும் புத்திவராததால் இவனுக்கு மறுபடியும் காவல்தண்டனைவிதிப்பது பிரயோசனப்படமாட்டாதென்று சொல்லிக் கோர்ட்டார் 7 வருஷ தீவாந்திரதண்டனை விதித்தார்கள்.

VIII.

பதினைந்து ரூபாய் திருடின கேசு.

குற்றவாளி:—பாளையம் என்கிற கோவிந்தனென்கிற முனிசாமி.

கேசின் விபரம்:—மூலகொத்தளத்தில் இருந்த ஒரு படகுக்காரனிடமிருந்து குற்றவாளி ரூபாய் 14 திருடிவிட்டான்.

தீர்ப்பு:—3-வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அதில் 3-மாதம் தனிக்காவல்.

IX.

பெரம்பூர் கொலைக்கேஸ்.

குற்றவாளி:—பூச்சி என்கிற பெருமாள்.

கேசின் விபரம்:—குற்றவாளிபேரில் கொலைக்குற்றமாவது அல்லது நினையாமல் செய்த கொலைக்குற்றமாவது சாட்டப்பட்டது. கொலையுண்டவன் பெயர் மாணிக்க ஆசாரி. இவன் பெரம்பூர் ஒர்க்ஷாப்பில் வேலைசெய்கிறவன். இவனுக்கும் குற்றவாளிக்கும் நீடித்த விரோதமுண்டு. கடந்த பண்டிகையில் குற்றவாளி ஒரு புலிவேஷக்கக்ஷியிலும், கொலையுண்டவன் எதிர் புலிவேஷக்கக்ஷியிலும் சேர்ந்திருந்தான். அந்தசமயம் குற்றவாளிக்கும் கொலையுண்டவனுக்கும் சில சச்சரவுகள் நடந்தன. குற்றவாளி மனதில் வஞ்சகம் வைத்திருந்து கடந்த ஏப்பிரல்மாசம் 13உ இரவு ஏழரை மணிக்கு மாணிக்க ஆசாரி கொண்ணூர் ரோட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது குற்றவாளி அவன் மார்பில கத்தியால் குத்தவே அவன் கீழே மூர்ச்சையாய் விழுந்து இறந்துபோய்விட்டான் என்பது பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்லும் கக்ஷி,

ஜூரர்கள்:—மெசுர்ஸ்: J. M. பிரௌன், J. C. ஆர்ம்ஸ் டிராவ், டி-கோபால்ராவ், D. S. மாரிசன், D. கோபாலசாமி செட்டி, J. மிட்ச்சல், H. நாராயண ராவ், N. W. பேய்த், A. G. ஹாக்.

கேசின் நடவடிக்கை:— பிராசிக்யூஷன் தரப்பிற்கு 8 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். டிபன்ஸ்தரப்பு சாக்ஷிகள் குற்றவாளி மாணிக்கஆசாரியைக் குத்தவில்லை என்றும் குற்றவாளிக்கும் மாணிக்க ஆசாரி உள்பட இன்னும் மூவருக்கும் கைகலந்து சண்டைநடந்ததாகவும், அந்தச் சண்டையில் குற்றவாளி காயப்பட்டு மூர்ச்சையாய்க் கீழே விழுந்ததாகவும், மற்ற இருவரில் ஒருவர் கையில் வைத்திருந்த கத்தி மாணிக்க ஆசாரியின்பேரில் பட்டிருக்கவேண்டுமென்றும் ஆகவே மாணிக்க ஆசாரியைக் கொலைசெய்தவன் குற்றவாளியல்லவென்றும் சொன்னார்கள்.

ஜூரிகள் அபிப்பிராயம்:—6 ஜூரர்கள் குற்றவாளியென்றும், 3 ஜூரர்கள் குற்றவாளியல்லவென்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

கோர்ட்டார் பெரும்பான்மையான ஜூரர்கள் கூறின அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு ஜன்மாந்திர தீபாந்திரதண்டனைவிதித்தார்கள்.

X.

நம்பிக்கைமோசக்கேஸ்.

இராமகிருஷ்ணமுதலி என்பவர் முருகேசமுதலி என்பவரின் குமாஸ்தா. இவருக்கு வரவேண்டிய ரூபா 33 - 13 - 0 சொச்சத்தையும் ஷை குமாஸ்தா வசூல்செய்து கணக்கில் எழுதாமல் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டான். இந்தக் குற்றத்திற்காக மூன்று வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

XI.

5 அரை அடங்கின பணப்பை திருடியகேஸ்.

பார்க்குடௌன் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் அப்துல்ரகிமானுக்குச்சொந்தமான 5 அணு அடங்கிய பணம்வைத்துக்கொள்ளும் ஒரு பையைத் திருடினதாக குற்றஸ்தாபனை செய்யப்பட்டு 7 வருஷ தியாந்திரதண்டனை விதிக்கப்பட்டான்.

XII.

கட்டடத்தில் திருடின கேஸ்.

அப்துல் ரகிமான் ஒரு தையல்மெஷினைத்திருடிவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டான். ருஜுவாகவில்லை. விடுதலைசெய்யப்பட்டான்.

XIII.

குல்லா திருடின கேஸ்.

முருகேசன் என்பவன் மெஸர்ஸ் M. V. கன்னய்யசெட்டி கம்பெனியில் ஒரு குல்லா திருடினதாக குற்றஞ் சாட்டப்பட்டான். பழைய குற்றவாளி. மூன்றுவருஷ கடினகாவல் தண்டனையும், அதில் மூன்று மாதம் தனிக்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டான்.

MOTAR CAR BILL.

மோடார் வண்டியைப்பற்றிய மசோதா.

(ஒரு ஆக்ட் போடுவதற்குமுன் ஜனங்கள் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதற்காக அதனை கெஜட்டில் பிரசுரிக்கப்படும் பில்லுக்கு மசோதாவென்று பெயர்.

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் மோடார் வண்டிகளென்னும் தாமே இயங்கும் சக்தியமைந்த வண்டிகளை உபயோகிப்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயரும் வியாபிக்குமிடமும்.

1. (1) இந்த ஆக்டை, 190 -ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளாக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கிறது.

"மோடார்வண்டியென்னும் தானே இயங்கும் சக்தியமைந்த வண்டி" என்பதன் அர்த்தமும், "ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்" என்பதன் அர்த்தமும்.

2. (1) "மோடார்வண்டி என்னும் தானே இயங்கும் சக்தியமைந்த வண்டி" என்பதிலே, — பிரதேச கவர்ன்மெண்டார் போர்ட்ஸெய்ன்ட்ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யப்பட்ட விளம்பரமூலமாய் நிவாரணைசெய்யும் வண்டிகள் அல்லது இனத்தைச்சேர்ந்த வண்டிகள் நீங்கலாக, பாட்டையின்மேல் முழுவதுமோ அல்லது சிறிதுமட்டிலோ யந்திரவகையினால் தள்ளக்கூடிய விதமாய் அமைக்கப்பட்டுள்ள சகல வண்டிகளும் அடங்கும்.

(2) "ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர்" என்பது—பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்றாவது மோடார்வண்டிகளை ரெஜிஸ்டர் செய்வதற்காகப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் வேறே யாதொரு உத்தியோகஸ்தர்என்றாவது அர்த்தமாகும்.

ரெஜிஸடர் செய்வதற்கான அவசியம்.

3. (1) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதமான பிறகு, யாதொரு மோடார் வண்டியை ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர் ரெஜிஸ்டர் செய்திருந்தாலன்றி மற்றப்படி, அதை எவரும் பொதுஜனங்கள் நடமாடுகிற எந்த பாட்டையிலாகிலும் ராப்தாவான எந்த இடத்திலாகிலும் ஓட்டிக்கொண்டுபோகக்கூடாது:

விலக்கர்ணநிபந்தனை. ஆனால், யாதொரு நபர்—

(a) இந்த ஆக்டின்படிக்கல்லாமல் இந்தியாவின் எந்த பாகத்திலாவது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படி மோடார் வண்டியானது ரெஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கிற பட்சத்திலாகிலும்,

(b) இந்தப் பிரிவின்படி மோடார்வண்டியை ரெஜிஸ்டர் செய்வதற்காகத் தகுந்த சமயம் அவருக்கு வாய்த்திராத பட்சத்திலாகிலும்,

அவர் இந்தப் பிரிவின்படி நடப்பதற்கு உட்பட்டவராகமாட்டார்.

(2) ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தரானவர் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அல்லது இதுவிஷயமாய்ப் பிரதேசகவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் யாதொரு உத்தியோகஸ்தருடைய அதிகாரத்துக்குட்பட்டு, போதுமானதாகவும் சரியானபடியுமுள்ள நியாயத்தைக்கொண்டு எப்போதாகிலும் ரெஜிஸ்டர் செய்திருப்பதை ரத்துசெய்யும்படி கட்டளை யிடலாம்; ஷை நியாயத்தை எழுத்து மூலமாக எழுதிவைக்கவேண்டும்.

லைசென்ஸ கொடுப்பது.

4. (1) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட யாதொரு நபர் இரண்டு ரூபாய் கட்டணம் செலுத்தி மோடார்வண்டி ஓட்டுவதற்கான லைசென்ஸ் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டால், அவருக்கு சென்னைராஜதானிபட்டணத்திலே பொலீஸ் கம்மிஷனரும் இதர இடங்களிலே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும் லைசென்ஸ் கொடுக்கலாம்.

லைசென்ஸு எவ்வளவு காலத்துக்குச் செலாவணியாகுமென்பதும் அதை புதுப்பிப்பதும்

(2) ஒவ்வொரு லைசென்ஸும் - எந்தத்தேதியில் கொடுக்கப்பட்டதோ அந்தத்தேதியிலிருந்து பன்னிரண்டுமாத காலத்துக்குச் செலாவணியாய்க்கொண்டிருக்கவேண்டும்; ஆனால், அது-புதுப்பிக்கப்படத்தக்கதாகும்; மேலும், லைசென்சை(முதலில்) கொடுப்பதற்கு என்ன நிபந்தனைகள் பிரயோகப்படுமோ அதே நிபந்தனைகள் லைசென்சைப் புதுப்பிப்பதற்கும் பிரயோகப்படும்:

ஆனால், லைசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரானவர் - பிரதேச கவர்ன்மெண்டாருடைய அல்லது இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் யாதொரு உத்தியோகஸ்தருடைய அதிகாரத்துக்குட்பட்டு, போதுமானதாகவும் சரியானபடியுமுள்ள நியாயத்தைக்கொண்டு எப்போதாகிலும் யாதொரு லைசென்சை ரத்துசெய்யலாம்; ஷை நியாயத்தை எழுத்து மூலமாக எழுதிவைக்கவேண்டும்.

லைசென்ஸானது (ஒருவர் பேரிலிருந்து மற்றொருவர் பேருக்கு) ட்ரான்ஸ்பர் செய்யப்படத்தக்கதல்லவென்பது.

5. லைசென்ஸ் வைத்துக்கொண்டிருப்பவர் - அதை இன்னொரு நபருக்கு இரவல் கொடுக்கவுங் கூடாது, இன்னொரு நபர் அதை உபயோகப்படுத்த அனுமதிகொடுக்கவுங்கூடாது.

லைசென்ஸைக்காட்டுவது.

6. கான்ஸ்டபிளின் அந்தஸ்துக்கு மேற்பட்டவராய், உத்தியோக உடை தரித்துக்கொண்டிருக்கிற அல்லது தம்முடைய உத்தியோகத்துக்கேற்ற வேறே போதுமான அடையாளங்களாவது தம்மை இன்னாரென்று பிறர் அறிந்துகொள்வதற்கும் போதுமான வேறே சாதனங்களாவது அமையப்பெற்றிருக்கிற யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தர் லைசென்சைக் காட்டும்படி கேட்டால், மோடார்வண்டி ஓட்டுகிறவர் லைசென்சைக் காட்டவேண்டும்.

போக்கு வரவை ஒழுங்குபடுத்துவதற்காகவும் ஆபத்து நேரிடும்போதும் நிறுத்தவேண்டிய கடமை.

7. (a) உத்தியோக உடை தரித்துக்கொண்டிருக்கிற அல்லது உத்தியோகத்துக்கேற்ற வேறே போதுமான அடையாளங்களோ இன்னாரென்று பிறர் அறிந்துகொள்வதற்குப் போதுமான வேறே சாதனங்களோ அமையப்பெற்றிருக்கிற யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தர் - போக்குவரவை ஒழுங்குப்படுத்துவதற்காகவாவது மோடார்வண்டியார் வசத்திலிருக்கிறதோ அவருடைய பெயரையும் மேல்விலாசத்தையும் தெரிந்துகொள்வதற்காகவாவது நியாயமான வேறே யாதொரு காரியத்துக்காகவாவது வண்டியை நிறுத்தி ஒரே இடத்தில் வைத்திருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும்,

(b) (நடத்திக்கொண்டு போகப்படுகிற அல்லது வண்டியில் கட்டப்பட்டிருக்கிற அல்லது மேலேறி

சவாரி செய்யப்படுகிற) ஒரு குதிரை அல்லது வேறே பிராணியானது மோடார்வண்டியைக்கண்டு பயப்படுவதாகக் காணப்பட்டு, அந்தக்குதிரை அல்லது வேறே பிராணி யார்வசத்திலிருக்கிறதோ அவர் மேலேகண்டபிரகாரம் வண்டியை நிறுத்திவைத்திருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும்,

(c) ரஸ்தாவின்மேல் மோடார்வண்டி இருப்பது காரணமாக யாதொரு நபருக்காகிலும் யாதொரு நபர்வசமாயிருக்கிற யாதொரு பிராணி அல்லது வண்டிக்காகிலும் ஆபத்துநேரிட்டிருக்கிறதென்று மோடார் வண்டி யார்வசத்திலிருக்கிறதோ அவருக்குத் தெரிந்தாலும் அல்லது அவர் நம்புவதற்கு நியாயமிருந்தாலும்,

அவர் நியாயமாய் எவ்வளவு நேரத்துக்கு நிறுத்திவைக்கவேண்டியது அவசியமாயிருக்குமோ அவ்வளவு நேரத்துக்குத் தம்மால் கூடியமட்டில் மோடார் வண்டியை நிறுத்துவதோடுங்கூட ஒரே இடத்தில் வைத்திருக்கவும் வேண்டும்.

மோடார்வண்டிகளுக்கு விளக்குப்போடவேண்டுமென்பது.

8. யாதொரு மோடார்வண்டி யார்வசத்திலிருக்கிறதோ அவர் - சூரியாஸ்தமனமாய் அரைமணிநேரமானபிறகும் சூரியோதயத்துக்குஒரு மணிநேரத்துக்கு முன்னுமுள்ள காலத்திலே, பிரதேச கவர்ன்மெண்டார் 9-வது பிரிவின்படிக்கான விதியின்படி கட்டளையிடுகிற மாதிரியாயுள்ள விளக்குகளை அவர்கள் மோடார்வண்டியில் எந்த ஸ்தானத்தில் அமைக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார்களோ அந்த ஸ்தானத்திலமைத்துக்கொண்டுபோகவேண்டும்.

விதிகள்செய்யப் பிரதேசகவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

9. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதிலுமாவது அதன் யாதொரு பாகத்திலாவது மோடார் வண்டிகளை உபயோகிப்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காக அப்போதைக்கப்போது முன்னதாகப் பிரசுரஞ் செய்து விதிகள் ஏற்படுத்தலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்குப் பாதகமில்லாமலும், பிரதேச கவர்ன்மெண்டார் - அடியிற்கண்ட சகலவிஷயங்களைப் பற்றியுமாகிலும் அவைகளில் எதைப்பற்றி யாகிலும் இந்தப் பிரிவின்படி விதிகளேற்படுத்தி அவைகள்மூலமாய்க் கட்டளை பிறப்பிக்கலாம். அந்த விஷயங்கள் எவையென்றால் :—

(a) எந்த திட்டங்களின்படி மோடார்வண்டிகளை ரெஜிஸ்டர் செய்யலாமோ அந்த திட்டங்களும், ரெஜிஸ்டர் செய்வதற்காகச் செலுத்தத்தக்க கட்டணமும், (வண்டியின்) சொந்தக்காரர் மாறுகிற விஷயத்திலே அதைப் பற்றி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்குத் தெரிவிப்பதும் ;

(b) மோடார் வண்டிகளை ரெஜிஸ்டர் செய்வதன்மேல் அவைகளை வித்தியாசப்படுத்திக்காட்டுவதற்கு அனுகுணமாயுள்ள இலக்கமிட்டு அந்த இலக்கத்தை வண்டிகளில் நன்றாய்த் தெரியும்படியான இடத்திலே போட்டுவைப்பது ;

(c) மோடார் வண்டிகளில் தகுதியான ப்ரேக்குகளையாவது நிறுத்துவதற்கான வேறே சாதனங்களையாவது ஏற்படுத்துவதும் உபயோகிப்பதும், அவைகள் திடமுள்ளவைகளாயிருக்கின்றனவா என்று பரீட்சித்துப் பார்ப்பதும் ;

(d) மோடார் வண்டி சமீபத்திலிருக்கிறதென்பதைப்பற்றியாகிலும் அது இன்ன இடத்திலிருக்கிறதென்பதைப்பற்றியாகிலும் கேட்கும்படியாகவும் போதுமான அளவுக்கும் எச்சரிப்பு செய்வதற்காக அந்த வண்டிகளில் மணிகளையேனும் ஊதுகொம்புகளையேனும் வேறே கருவிகளையேனும் ஏற்படுத்துவதும் உபயோகிப்பதும் ;

(e) மோடார் வண்டிகளில் எந்தமாதிரியான விளக்குகள் போடவேண்டுமோ அதுவும், அவைகளை (வண்டியில்) எந்தஸ்தானத்தில் அமைக்கவேண்டுமோ அதுவும் ;

(f) மோடார் வண்டி ஓட்டுகிறவர்களுக்கு எந்த திட்டங்களின்படி லைஸென்ஸ் கொடுக்கலாமோ அந்த திட்டங்கள் ;

(g) மோடார் வண்டிகளை எவ்வளவு வேகமாக ஓட்டலாமோ அது ;

(h) மோடார் வண்டிகள் யாதொரு தெருவிலாவது பொதுவான இடத்திலாவது நின்றுகொண்டிருக்கும்போது அனுசரிக்கவேண்டிய முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் ;

(i) மோடார் வண்டிகளை எந்த இடத்தில் உபயோகிப்பதனால் பொதுஜனங்களுக்கு அபாயம் உண்டாகலாமோ அப்படிப்பட்ட யாதொரு இடத்திலே அவைகளை ஓட்டக்கூடாதென்று தடுப்பதற்காக ; அல்லது அப்படிப்பட்ட யாதொரு இடத்திலே இன்ன மணிநேரங்களுக்குள் மோடார்வண்டிகளை ஓட்டலாமென்பதைப்பற்றியாகிலும், மோடார் வண்டியல்லாத வேறே வண்டி எதையும் இன்ன மணிநேரங்களுக்குள் ஓட்டக்கூடாதென்பதைப்பற்றியாகிலும் ஒழுங்கேற்படுத்துவதற்காக ;

(j) பொதுவாய், ஜனங்களுக்கோ பிராணிகளுக்கோ வண்டிகளுக்கோ சாமான்களுக்கோ மோடார் வண்டிகளினால் அபாயமாவது துன்பமாவது நேரிடாதபடி தடுப்பதற்காகவும், அந்தவண்டிகளினால் போக்குவரவுக்கு இடைஞ்சலுண்டாகாதபடி தடுப்பதற்காகவும்.

லைஸென்ஸில்லாமல் ஓட்டுவது.

10. 4 - வது பிரிவின்படியாவது இந்த ஆக்டின்படிக்கல்லாமல் ப்ரிடிஷ் இந்தியாவின் யாதொரு பாகத்திலே அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்டிருக்கிற லைஸென்ஸில்லாமல் யாராகிலும் - அந்தப்படி லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரின் நேர் மேற்பார்வையின்கீழும் சரியான விசாரணையின்படிக்குமன்றி மற்றப்படி, பொதுஜனங்கள் நடமாடுகிற யாதொரு பாட்டையிலோ ராஸ்தாவான யாதொரு இடத்திலோ மோடார் வண்டியை ஓட்டினாலும், மேலே கண்டபடி லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத யாதொரு நபரை மோடார்வண்டி ஓட்டும்வேலையிலமர்த்திக்கொண்டாலும், அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஐம்பது ரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும், இரண்டாவது தடவை அல்லது அதற்குப் பிற்பாடு குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் நூறுரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும் அவருக்கு விதிக்கலாம்.

அஜாக்கிரதையாக ஓட்டுவது.

11. யாராகிலும் - பொதுஜனங்கள் நடமாடுகிற யாதொரு பாட்டையிலாவது ராஸ்தாவான யாதொரு இடத்திலாவது மோடார்வண்டியை அஜாக்கிரதையாகவாகிலும் அசட்டையாகவாகிலும் ஓட்டினாலும், பாட்டையின் தன்மை - நிலைமை - உபயோகம் ஆகிய இவைகள் உட்பட பிரஸ்தாப சந்தர்ப்பத்தின் சகல கூறாம்சங்களையும், பாட்டையின்மேல் அந்தக் காலத்தில் வாஸ்தவமாய்நடந்துகொண்டிருக்கிற போக்குவரவையும் அல்லது அந்தப் பாட்டையின்மேல் எவ்வளவு போக்குவரவு நடக்குமென்று நியாயமாய் எண்ணக்கூடுமோ அதையும் கவனித்துப் பார்க்கும்போது பொதுஜனங்களுக்கு அபாயமுண்டாகக்கூடிய விதமாகவோ அப்படி அபாயமுண்டாகக் கூடிய வேகத்துடனே மோடார் வண்டியை ஓட்டினாலும், அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் நூறுரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும், இரண்டாவது தடவை அல்லது பிற்பாடு குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் இருநூறுரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும் அவருக்கு விதிக்கலாம்.

பிரிவை அல்லது விதியை மீறி நடப்பது.

12. யாராகிலும் 3-வது, 5-வது, 6-வது, 7-வது, 8 - வது பிரிவுகளை மீறி நடந்தாலும் அல்லது 9-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியை மீறி நடந்தாலும், அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஐம்பதுரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும், இரண்டாவது தடவை அல்லது பிற்பாடு குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் நூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதமும் அவருக்கு விதிக்கலாம்.

வாரண்டில்லாமல் பிடிப்பது.

13. (1) 7-வது, 8-வது அல்லது 11-வது பிரிவையாவது வேறே யாதொரு பிரிவையாவது 9-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதியையாவது மீறி நடப்பதற்கு இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரமூலமாய்ப் பிரசித்தஞ்செய்திருந்து, ஷை பிரிவையாவது விதியையாவது யாதொரு நபர் யாதொரு பொலீஸ் ஆபிஸர் முன்னிலையில் மீறி நடந்துகொண்டிருக்கிற பட்சத்திலே, அவருடைய பெயரும் இருப்பிடமும் தெரியாமலும் அவைகளை அப்போது அந்த இடத்தில் ஷை பொலீஸ் ஆபிஸர் தெரிந்துகொள்ள முடியாமலுமிருந்தால், அவரை - மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்து உத்தரவு பெறாமலும் வாரண்டில்லாமலும் அந்தப் பொலீஸ் உத்தியோகஸ்தர் பிடிக்கலாம்.

(2) மேலே கண்டபடி யாராவது பிடிக்கப்பட்டிருந்தால், அதற்கு 1898-ம் ௵த்து கிரிமினல் ப்ரொஸீஜர்கோட் 5-வது பிரிவைச்சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளும் 60முதல் 63 வரையிலுள்ள பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளும் பிரயோகப்படும். (1898-ம்௵த்து 5-வது ஆக்ட்.)

குற்றங்கள் இன்னாரால் பரிசீலனை செய்யப்படத் தக்கவையென்பது.

14. இந்த ஆக்டின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்களானவை - ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகளாலாகிலும் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாலாகிலும் பரிசீலனை செய்யப்படத்தக்கவைகளாகும்.

உத்தரவாதத்தினின்றும் நிவாரணையாவது.

15. வேறே யாதொரு சட்டதிட்டப்படியாவது யாதொரு மோடார்வண்டி ஓட்டுகிறவருக்காகிலும் அதன் சொந்தக்காரருக்காகிலும் ஏற்படுகிற உத்தரவாதம் ஸிவில் சம்பந்தமானதாயிருந்தாலுஞ் சரி கிரிமினல் சம்பந்தமானதாயிருந்தாலுஞ் சரி அப்படிப்பட்ட எந்த உத்தரவாதத்துக்கும் இந்த ஆக்ட்டிலுள்ள தெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது ; ஆனால் ஒரே குற்றத்துக்காக யாதொரு நபர் இரண்டுதடவை தண்டிக்கப்படுவதற்குட்பட்டவராகமாட்டார்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

சென்னை ராஜதானிப் பட்டணத்தின் பாட்டைகளில் மோடார் வண்டிகளும் மோடார் பைஸிகில்களும் (த்விசக்கரவண்டிகளும்) வரவர அதிகமாய்ப் போக்குவரவு செய்துகொண்டு வருகின்றனவென்றும் அவைகளின் உபயோகத்தைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவாவது அவைகளின் விஷயத்தில் செய்யப்படும் அடாத காரியங்களையும் அவைகளை ஓட்டுகிறவர்கள் செய்யும் அடாத காரியங்களையும் அடக்குவதற்காகவாவது எவ்வித வகையுமில்லையென்றும் போலீஸ் கமிஷனர் கவர்ன்மெண்டாருக்கு அறிக்கை செய்துகொண்டிருக்கிறார். மோடார் வண்டிகளின் உபயோகத்தைப்பற்றி ஒழுங்கேற் படுத்துவதற்காக பங்காளத்திலும் பம்பாயிலும் சட்டமேற்படுத்தியிருக்கிறது. சென்னபட்டணம் பிரஸிடென்ஸியிலும் அவ்வித சட்டமேற்படுத்துவது உசிதமாகும்.

(1903-ம் ௵த்திய பங்காளத்து 3-வது ஆக்டாகிய) 1903-ம் ௵த்திய பங்காளத்து மோடார் வண்டி ஸைகில் ஆக்ட்டையும், (1904-ம் ௵த்து பம்பாய் 2-வது ஆக்டாகிய) 1904-ம் ௵த்து பம்பாய் மோடார் வண்டிகளாக்டையும் ஆதாரமாகக் கொண்டு இந்த மசோதா ஆக்ட் ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

பகுதி 2, உட்பகுதி (2)—பிரஸிடென்ஸி முழுவதுக்கும் ரெஜிஸ்டர் செய்வதற்காக ஒரே உத்தியோகஸ்தர் இருந்தால் போதுமானதென்று நம்பப்படுகிறது ; ஆனால் இன்னும் அதிகமாக உத்தியோகஸ்தர்களை நியமிக்க அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது.

பகுதிகள் 6, 7 (a).—இந்தப் பகுதிகளிற்கண்ட நிபந்தனைகளைத் துர் உபயோகப்படுத்தவொட்டாமல் தடுக்கும்பொருட்டு, "உத்தியோக உடை தரித்துக்கொண்டிருக்கிற அல்லது தம்முடைய உத்தியோகத்துக்கேற்ற போதுமான வேறே அடையாளங்களாவது தம்மை இன்னாரென்று தெரிந்துகொள்வதற்குப் போதுமான வேறே சாதனங்களாவது அமையப்பெற்றிருக்கிற" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்வது உசிதமென்று எண்ணப்படுகிறது.

பகுதி 10.—எவரும் லைஸென்ஸில்லாமல் மோடார் வண்டியை ஓட்டக்கூடாதென்று 1904-ம்வருஷத்து பம்பாய் 2-வது ஆக்ட் 4 (1)-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த நிபந்தனை, மெத்தவும் கடுமையானதாயிருக்கிறது. ஓட்டக் கற்றுக்கொள்ளும் நபர்களின்விஷயத்தைப்போன்ற விஷயங்களிலே அநுகூலம் செய்துகொடுக்கும்பொருட்டு, லைஸென்ஸ் பெற்ற யாதொரு நபர் தாமே எந்த வேளையிலாகிலும் வண்டியை ஓட்டிக்கொண்டு போகாத பட்சத்திலே, அப்படிப்பட்டவருடைய நேர்மேற்பார்வையின்கீழும் சரியான விசாரணையின்படிக்கும் வண்டியை ஓட்ட வேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்துவது போதுமானதாகுமெனத் தோற்றுகிறது.

The Indian Law Gazette,

A High Class Periodical Published in Tamil every last Week of the Month.

Deals solely in legal topics.

Furnishes complete report of the cases noted in the four series of the Indian Law Reports commencing from May 1906.

Gives complete report of the important cases, tried decided and undergoing trial in the Indian, English, and American Law Courts.

Contains Government Orders, Notifications, Revenue circulars, Proceedings of the Board of Revenue, Legislative Bills and Enactments and Police orders.

Explains Courtfees, Registration fees and Stamps.

Shows how to write Sale-deeds, Leases, Wills, Mortgage-deeds &c.,

Cites invariably decisions on the most important sections of the Indian Penal Code, the Criminal Procedure Code and the Rent Recovery Act.

Expounds the principles of Hindu Law; Mahomedan Law, Stamp Act, Registration Act and other important Acts.

Narrates the life of the distinguished Judges and the eminent Lawyers with their true portraits.

Tenders, further abundant Court News.

Possesses, indeed, the happy privilege of being really a serviceable journal to the Tamil knowing public.

Stands as the best medium for advertisers.

Annual Subscription.

	Rs.	A.	P.
Local	4	8	0
Mofussil	4	14	0

Advertisement Charges.

Rs. 10 per page per Month.

Proportionate charges for portions of a page. (Payable in advance.)

N. RATHA KRISHNA & CO.,

Managers.

THE INDIAN LAW GAZETTE OFFICE,

37, Nattupillyar Covil Street,

Georgetown, MADRAS.

பகுதி 9 (2) (i).—பொதுஜனங்கள் நடமாடுகிற யாதொரு பாட்டையிலாவது ராப்தாவான யாதொரு இடத்திலாவது நடக்கும் போக்குவரவைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகப் போலீஸாருக்குச் சாதாரணமாயுள்ள அதிகாரங்கள் போதுமானவையல்லவென்று எண்ணப்படுகிறபடியால், "மோடார் வண்டிப்பந்தயம்" போன்ற விசேஷ சந்தர்ப்பங்களுக்கு அனுகூலமாயிருக்கும்பொருட்டு, இதரபோக்குவரவுகளை நிறுத்துவதற்காக விதிகள் செய்ய இந்தப் பகுதியினால் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் ஏற்படுகிறது. இந்தப் பகுதியில் "எந்த இடத்தில் அந்த இடத்திலே" என்னும் வார்த்தைகள் 1904ம்வருஷத்து பம்பாய் 2-வது ஆக்ட் 10-வது பிரிவிற்கண்ட "காலடிப்பாதைகளிலாவது பாட்டைகளிலாவது தெருக்களிலாவது (Ghauts) கணவாய்களிலாவது குன்றுகளின்மேலுள்ள ஸ்தானங்கள் முதலிய இடங்களிலாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதமாய்த் திருத்தப்பட்டுள்ள பகுதியின் வியாபகம் முன்னிருந்ததைவிட அதிகமாகிறது; மேலும், பொதுஜனங்களுக்கு அபாயம் நேரிடுவதாயிருந்தால்தான் தடுப்பதற்கான அதிகாரத்தைச் செலுத்துவது நியாயமாகுமென்று மெத்தவும் ஸ்பஷ்டமாக இந்தப் பகுதியினால் ஏற்படுகிறது.

பகுதி 14.—1904ம்வருஷத்து பம்பாய் 2-வது ஆக்ட் 14-வது பிரிவில் "யாருடைய அதிகார வரம்புகுள்ளாக அப்படிப்பட்ட யாதொரு குற்றம் செய்யப்பட்டிருக்கலாமோ" என்னும் வார்த்தைகள் நீங்கலாக மிகுதியுள்ள பாகந்தான் (மசோதா ஆக்ட்) 14-வது பகுதியாகும்; கிரிமினல் பிரோஸீஜர் கோடில் நிபந்தனை கண்டிருக்கிற ஒரு விஷயத்துக்கு மேற்படி வார்த்தைகள் சம்பந்தப்படுகிறபடியால் அந்த வார்த்தைகள் விட்டுவிடப்பட்டிருக்கின்றன.

ஜி. ஸ்டோக்ஸ்.

ஹெச். டி. டெய்லர்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெகிரிடெரி.
சட்டநிரூபண இலாகா.

(A true translation.)
V. RAGHAVA CHARLU,
Tamil Translator to Government.

வட்டி ஜெந்திரி புஸ்தகம்.

வி. பி. போஸ்டேஜ் உள்பட விலை ரூ. 1—8—0 தான்.

இரண்டு லட்க்ஷம் ரூபாய் முதல், ஒரு பைஸாவரையிலுள்ள தொகைக்கு வட்டி மாத மொன்றுக்கு நூற்றுக்கு 3 அணா முதல் $3\frac{1}{4}$-$3\frac{1}{2}$-$3\frac{3}{4}$ இப்படி கால் காலணாவாக இரண்டு ரூபாய் வரையிலுள்ள எவ்விதமான வட்டியையும் சுலபத்தில் பார்த்து கொள்ள கூடியதாய், நாள், மாதம், வருஷம், இவைகளுக்கு கணக்கு பண்ணப்பட்டு, 8 பேஜ். 240-பக்கங்கள் உள்ளதாயும் காலிகோ பயிண்டு செய்ததாயுமிருக்கிறது.

இப்புஸ்தகத்திற்கு திவான்பகதூர் R. ஜெகனாதராவ் அவர்களும் சென்னை ரிவினியூ போர்டு ஸெக்ரிடெரி மகா-ள-ள-ஸ்ரீ வி. கெ. ராமானுஜாசாரியர் அவர்களும் புதுக்கோட்டை மகாராஜா காலேஜ பிரின்ஸ்பல். மகா-ள-ள-ஸ்ரீ. S. ருதாகிருஷணய்யர் அவர்களும் இப்படி விஷயமறிந்த தக்க கனவான்கள் இன்னு மனேகராலும் ஸர்ட்டிபிகேட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேண்டியவர்கள் அடியில் கையொப்ப மிட்டவரிடத்தில் பெற்றுகொள்ளலாம்.

T. M. பஞ்சாபகேசய்யர்.
30, உபதான தெரு.
கும்பகோணம்.

N. P. ராட்கின் அண்டுகோ.

கப்பல் ஏற்றுமதிக்காரர்கள்.

எங்கள் கம்பெனியில் இங்கிலாண்டு, பெல்ஜியம், ஜெர்மனி, ஹாம்பர்க், அமெரிக்கா முதலிய மேல் நாட்டுகளுக்கு பஞ்சு, நிலக்கடலை, முத்துக்கொட்டை, பூண்டு, மிளகாய், கடுக்காய், கோந்து, அரக்கு சனல் நார், எட்டிக்கொட்டை, புளி, காப்பிக்கொட்டை, ஏலக்காய், முதலிய இந்தியாவில் பயிராகும் சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றபடியால் மேற் கூறிய சரக்குகள் கையிருப்புள்ளவர்கள் எங்களுக்கு விலைவிபரங்களைத் தெரியப்படுத்தி எழுதினால் நாங்கள் வாங்கி அனுப்பத்தகுந்த ஏற்பாடு செய்வோம் வேண்டியவர்கள் பின்வரும் மேல் விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

N. P. ராட்கின் அண்டு கோ.

தந்தி மேல்விலாசம்
ராதாஸ் (Rados)
சென்னப்பட்டணம்.

ராதாஸ் அவுஸ்,
ஜியார்ஜ் டௌன்,
சென்னை

கர்ப்பசம்ரட்சணி.

இப்புத்தகம் முத்தமிழ் ரத்நாகரம் ஸ்ரீமத் ம. தி. பாநுகவி சுவாமிகளால் எழுதப்பட்டது. கர்போத்பத்தி - புத்திரசந்தான மடையுவிதம் - சாஸ்திரோக்தமான சம்போகவிதிகள் அங்க லக்ஷணத்தால் பெண்கள இன்ன குழந்தைகளைப் பெறுவார்களென்று அறிதல், ஆகிய இவைகளைப்பற்றியும் இவைகளைச் சார்ந்த இன்னும் அநேகமர்ம மான விஷயங்களைக் குறித்தும், அகஸ்தியமாமுனிவர், கோரக்கர் முதலிய சித்தாதிகள் செய்துள்ளவைத்திய நூல்களிலும், கர்ப்போப நிஷத்சாரீரம், கூர்ம புராணம் சிவதருமோத்தரம் முதலிய சாஸ்திரங்களிலும் சொல்லப் பட்டிருப்பன வற்றைச் சுருக்கிதிவ்யமான சந்திரிகையில் ஒரு அரச குமாரனும் அவன் காதலியும் ஏகாந்தமாய் அந்தப்புரத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்ததுபோல கதாரூபமாய்...எழுதப்பட்டிருக்கின்றது. மிகுந்த அருமையான புத்தகமான படியால் ஒவ்வொரு குடும்பத்திலு மிருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 10. தபால் சார்ஜ் அணா 1.

இங்ஙனம்,
யம். எ. லோகனாத செட்டியார்.
மானேஜர் ஜெனரல் ஏஜன்ஸி ஆபீஸ்.
100. வரதாமுத்தியப்பன் வீதி,
சென்னை.

The Madras Law Agency Office

Undertakes to conduct suits in the original side and the Appellate side of the High Court of Madras, file applications, petitions arrange and doall necessary affairs concerning the litigations, on behalf of clients in the mofusil.

Undertakes to procure the opinion of specified counsel or any other counse on the production of the documents concerned in the case.

Undertakes to arrange lawyers, Vakils, Barristers to conduct or defend civi and criminal suits

Undertakes to stand as permanent Law Agents for Native Chiefs, Zemindars Poligars and Mittadars.

Against a decent and moderate remuneration. Secrecy is strictly maintained. in the treatment of records and other affairs concerning the Litigation.

Apply for all particulars to
N. R. NAIDOO,
Law Agent.
THE MADRAS LAW AGENCY OFFICE, MADRAS

மதிராஸ் லா ஏஜன்சி ஆபீஸ்.

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரியப்படுத்துவதென்னவென்றால் அடியிற்கை யொப்பஞ் செய்திருக்கும் நாம் சென்னை ஹைகோர்ட்டிலும், ஸ்மால்காஸ் கோர்ட்டிலும், சிட்டி சிவில் கோர்ட்டிலும் பிரசிடெண்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும் கக்ஷிக்காரர்களின் ஏஜண்டாக விருந்து வியாஜ்ஜியங்களை நடத்தி வைப்போம். மனு முதலியவைகள் செய்யவேண்டியதாக யிருந்தாலும் செய்வோம். இன்னும் வியாஜ்ஜியத்தை நடத்தி வைக்கும் வகையில் என்னென்ன செய்யவேண்டியது அவசியமோ அவைகளை எல்லாம் சொந்தக்காரரிருந்தால் எப்படி கவலையுடனும் ஜாக்கிரதையுடனும் நடத்துவாரோ அதற்குமேல் பத்து மடங்கு அதிகமான கவலையுடன் பார்த்துவருவோம. கக்ஷிக்காரர்கள் தஸ்தாவேஜிகளை அனுப்பி ஒருகுறிப்பிட்ட பாரிஸ்டரிடமிருந்து அபிப்பிராயம் வாங்கி அனுப்பச்சொன்னாலும் அதன் பிரகாரம் வாங்கி அனுப்புவோம், அல்லது அபிப்பிராயம் வாங்கும் பொறுப்பை எம்மிடம் விட்டாலும் எங்களுக்கு இஷ்டப்பட்ட லாயரிடமிருந்து அபிப்பிராயம் வாங்கி அனுப்புவோம்.

கேசுகளை நடத்த தகுந்த லாயர்களை தெரிந்தெடுத்து ஏற்பாடு செய்வோம்.

சமஸ்தானாதிபதி, ஜமீன்தார், மிட்டாதார், ஜாகிர்தார் முதலியவர்களுக்கு சாஸ்வதமான ஏஜண்டாக நின்று (பிரதிநிதியாக யிருந்து) அவரவர்கள் வியாஜ்ஜியங்களை நடத்தி வைப்போம்.

வியாஜ்ஜியங்களிலிருக்கும் எங்கள் சிரமத்திற்குத் தகுந்தபடி கமிஷன் சார்ஜ் செய்வோம். விபரங்களுக்கு அடியிற்கண்ட மேல் விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

N. R. நாயுடு.
லா ஏஜண்டு,
லா ஏஜன்ஸி ஆபீஸ்,
சென்னப்பட்டணம்.

T. R. RAM & CO.,

Esplanade Row, Madras.

IMPORTERS OF

HIGH GRADE CYCLES

- - and - -

ACCESSORIES.

Terms—Moderate.

ILLUSTRATED CATALOGUE SUPPLIED FREE ON APPLICATION.

The Indian Law Gazette,

A High Class Periodical Publised in Tamil every last Week of the Month.

Deals solely in legal topics.

Furnishes complete report of the cases noted in the four series of the Indian Law Reports commencing from May 1906.

Gives complete report of the important cases, tried decided and undergoing trial in the Indian, English, and American Law Courts.

Contains Government Orders, Notifications, Revenue circulars, Proceedings of the Board of Revenue, Legislative Bills and Enactments and Police orders.

Explains Courtfees, Registration fees and Stamps.

Shows how to write Sale-deeds, Leases, Wills, Mortgage-deeds &c.,

Cites invariably decisions on the most important sections of the Indian Penal Code, the Criminal Procedure Code and the Rent Recovery Act.

Expounds the principles of Hindu Law, Mahomedan Law, Stamp Act, Registration Act and other important Acts.

Narrates the life of the distinguished Judges and the eminent Lawyers with their true portraits.

Tenders, further abundant Court News.

Possesses, indeed, the happy privilege of being really a serviceable journal to the Tamil knowing public.

Stands as the best medium for advertisers.

Annual Subscription.

	Rs.	A.	P.
Local	4	8	0
Mofussil	4	14	0

Advertisement Charges.

Rs. 10 per page per Month.

Proportionate charges for portions of a page. (Payable in advance.)

Specimen Copies will be supplied on payment of 7 As.

N. RATHA KRISHNA & CO.,

Managers.

THE INDIAN LAW GAZETTE OFFICE,

37, Nattupillyar Covil Street,

Georgetown, MADRAS.

வட்டி ஜெந்திரி புஸ்தகம்.

வி. பி. போஸ்டேஜ் உள்பட விலை ரூ. 1—8—0 தான்.

இரண்டு லட்சஷம் ரூபாய் முதல், ஒரு பைஸாவரையிலுள்ள தொகைக்கு வட்டி மாத மொன்று நூற்றுக்கு 3 அணு முதல் $3\frac{1}{4}$-$3\frac{1}{2}$-$3\frac{3}{4}$ இப்படி கால் காலணுவாக இரண்டு ரூபாய் வரையிலுள்ள பிதமான வட்டியையும் சுலபத்தில் பார்த்து கொள்ள கூடியதாய், நாள், மாதம், வருஷம், இவைகளுக்கு கணக்கு பண்ணப்பட்டு, 8 பேஜ். 240-பக்கங்கள் உள்ளதாயும் காலிகோ பயிண்டு செய்ததாயுமிருக்கிறது.

இப்புஸ்தகத்திற்கு திவான்பகதூர் R. ஜெகனதாருவ் அவர்களும் சென்னை ரிவினியூ போர்டு செக்ரிடேரி மகா-ா-ா-ஸ்ரீ வி. கெ. ராமானுஜாசாரியர் அவர்களும் புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் பிரின்ஸ்பல். மகா-ா-ா-ஸ்ரீ. S. ருதாகிருஷணய்யர் அவர்களும் இப்படி விஷயமறிந்த தக்க கனவான்கள் ஆனு மனேகராலும் ஸர்ட்டிபிகேட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேண்டியவர்கள் அடியில் கையொப்ப மிட்டவரிடத்தில் பெற்றுகொள்ளலாம்.

T. M. பஞ்சாபகேசய்யர்.
30, உபதான தெரு.
கும்பகோணம்.

N. P. ராட்கின் அண்டுகோ.

கப்பல் ஏற்றுமதிக்காரர்கள்.

எங்கள் கம்பெனியில் இங்கிலாண்டு, பெல்ஜியம், ஜெர்மனி, ஹாம்பர்க், அமெரிக்கா முதலிய நாட்டுகளுக்கு பஞ்சு, நிலக்கடலை, முத்துக்கொட்டை, பூண்டு, மிளகாய், கடுக்காய், கோந்து, அரக்கு, நல் நார், எட்டிக்கொட்டை, புளி, காப்பிக்கொட்டை, ஏலக்காய், முதலிய இந்தியாவில் பயிராகும் சாமான் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றபடியால் ஷை கூறிய சரக்குகள் கையிருப்புள்ளவர்கள் எங்களுக்கு விபரங்களைத் தெரியப்படுத்தி எழுதினல் நாங்கள் வாங்கி அனுப்பத்தகுந்த ஏற்பாடு செய்வோம் வேண்டியவர்கள் பின்வரும் மேல் விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

N. P. ராட்கின் அண்டு கோ.

தந்தி மேல்விலாசம்	ராதாஸ் அவுஸ்,
ராதாஸ் (Rados)	ஜியார்ஜ் டௌன்,
சென்னபட்டணம்.	சென்னை

கர்ப்பசம்ரட்சணி.

இப்புத்தகம் முத்தமிழ் ரத்நாகரம் ஸ்ரீமத் ம. தி. பாநுகவி சுவாமிகளால் எழுதப்பட்டது. கர்ப்பத்தி - புத்திரசந்தான மடையுவிதம் - சாஸ்திரோக்தமான சம்போகவிதிகள் அங்க லக்ஷணத்தால் பெண்கள் இன்ன குழந்தைகளைப் பெறுவார்களென்று அறிதல், ஆகிய இவைகளைப்பற்றியும் இவைகளைச் சேர்ந்த இன்னும் அநேகமர்ம மான விஷயங்களைக் குறித்தும், அகஸ்தியமாமுனிவர், கோரக்கர் முதலிய சித்தாதிகள் செய்துள்ளவைத்திய நூல்களிலும், கர்ப்போப நிஷத்சாரீரம், கூர்ம புராணம் சிவதருமோத்தரம் முதலிய சாஸ்திரங்களிலும் சொல்லப் பட்டிருப்பன வற்றைச் சுருக்கி திவ்யமான சந்திரிகையில் அரச குமாரனும் அவன் காதலியும் ஏகாந்தமாய் அந்தப்புரத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்ததுபோல ஸம்வாதரூபமாய்..எழுதப்பட்டிருக்கின்றது. மிகுந்த அருமையான புத்தகமான படியால் ஒவ்வொரு குடும்பத்திலு மிருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு 10. தபால் சார்ஜ் அணு 1.

இங்ஙனம்,
யம். எ. லோகனத செட்டியார்.
மானேஜர். ஜெனரல் ஏஜன்சி ஆபீஸ்.
100. வரதாமுத்தியப்பன் வீதி
சென்னை.

The Madras Law Agency Office

Undertakes to conduct suits in the original side and the Appellate side of the High Court of Madras, file applications, petitions arrang and doall nceesary affairs concerning the litigations, on behalf of clients in the mofusil.

Undertakes to procure the opinion of specified counsel or any other counsel, on the production of the documents concerned in the case.

Undertakes to arrange lawyers, Vakils, Barristers to conduct or defend civil and criminal suits

Undertakes to stand as permanent Law Agents for Native Chiefs, Zemindars, Poligars and Mittadars.

Against a decent and moderate remuneration. Secrecy is strictly maintained. in the treatment of records and other affairs concerning the Litigation.

Apply for all particulars to
N. R. NAIDOO,
Law Agent.
THE MADRAS LAW AGENCY OFFICE, MADRAS.

மதிராஸ் லா ஏஜன்சி ஆபீஸ்.

இதனுல் சகலமான ஜனங்களுக்கும் தெரியப்படுத்துவதென்னவென்றால் அடியிற் கையொப்பஞ் செய்திருக்கும் நாம் சென்னை ஹைக்கோர்ட்டிலும், ஸ்மால்காஸ் கோர்ட்டிலும், சிட்டி சிவில் கோர்ட்டிலும் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும் கக்ஷிக்காரர்களின் ஏஜண்டாக விருந்து வியாஜ்ஜியங்களை நடத்தி வைப்போம். மனு முதலியவைகள் செய்யவேண்டியதாக யிருந்தாலும் செய்வோம். இன்னும் வியாஜ்ஜியத்தை நடத்தி வைக்கும் வகையில் என்னென்ன செய்யவேண்டியது அவசியமோ அவைகளை எல்லாம் சொந்தக்காரரிருந்தால் எப்படி கவலையுடனும் ஜாக்கிரதையுடனும் நடத்துவாரோ அதற்குமேல் பத்து மடங்கு அதிகமான கவலையுடன் பார்த்துவருவோம். கக்ஷிக்காரர்கள் தஸ்தாவேஜிகளை அனுப்பி ஒருகுறிப்பிட்ட பாரிஸ்டரிடமிருந்து அபிப்பிராயம் வாங்கி அனுப்பச்சொன்னலும் அதன் பிரகாரம் வாங்கி அனுப்புவோம். அல்லது அபிப்பிராயம் வாங்கும் பொறுப்பை எம்மிடம் விட்டாலும் எங்களுக்கு இஷ்டப்பட்ட லாயரிடமிருந்து அபிப்பிராயம் வாங்கி அனுப்புவோம்.

கேசுகளை நடத்த தகுந்த லாயர்களை தெரிந்தெடுத்து ஏற்பாடு செய்வோம்.

சமஸ்தானதிபதி, ஜமீன்தார், மிட்டாதார், ஜாகிர்தார் முதலியவர்களுக்கு சாஸ்வதமான ஏஜண்டாக நின்று (பிரதிநிதியாக யிருந்து) அவரவர்கள் வியாஜ்ஜியங்களை நடத்தி வைப்போம்.

வியாஜ்ஜியங்களிலிருக்கும் எங்கள் சிரமத்திற்குத் தகுந்தபடி கமிஷன் சார்ஜ் செய்வோம். விபரங்களுக்கு அடியிற்கண்ட மேல் விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

N. R. நாயுடு.
லா ஏஜண்டு,
லா ஏஜன்ஸி ஆபீஸ்,
சென்னபட்டணம்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகனுதன்·

பிரசுரிக்கிறவர்கள் :—ந· ராதாகிருஷ்ணு அண்டு கோ.

வால்யும் 1. சென்னபட்டணம் 1906ளு செப்டம்பர்மீ 2. பாகம்.

அடக்கம்·

		பக்கம்.
1.	ஹானரபில் சர் சார்லஸ்ஆர்னுல்டு வொயிட் Kt. சீப் ஜஸ்டிஸ் பொட்டகிராப் படம் ...	,,
2.	சப்மாஜிஸ்டிரேட்டுகள்	43.
3.	பத்திராதிபார் குறிப்புகள்	44.
4.	ஹானரபில் ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்	45.
5.	ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்துருடின் தயாப்ஜி	46.
6.	வியாஜ்ஜியத்தொகையின் பேரில் கட்டவேண்டிய ஸ்டாம்பு ஜாப்பிதா ...	47.
7.	கவர்மெண்டு விளம்பரம்	49.
8.	ஹிந்துலாவின் உற்பத்திமூலஸ்தானங்கள்	51.
9.	அனுஷ்டானச்சட்டம்	53.
10.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	55.
11.	இந்தியன் லாரிப்போர்ட்டு கேசுகள்	63.
12.	திருச்சி கலேக்ட்டர் கொடுத்திருக்கும் செஸ் நோட்டிஸ்	75.
13.	போர்ட்ஸ் புரோசீடிங்ஸ்	76.
14.	கவர்ன் மெண்டு ஆர்டர்கள்	,,
15.	முக்கியமான தீர்ப்புகள்	78.
16.	அக்டோபர்மீ பஞ்சாங்கம்	,,

T. R. RAM & CO.,

Esplanade Row, Madras.

IMPORTERS OF

HIGH GRADE CYCLES

and

ACCESSORIES.

Terms—Moderate.

ILLUSTRATED CATALOGUE SUPPLIED FREE ON APPLICATION.

டி. ஆர். ராம் அண்டு கோ.

சைக்கில் வியாபாரிகள்.

எஸ்பிளனேட், சென்னப்பட்டணம்.

CYCLE.

The "Ariel" No. 2 Gents' Roadster.



This machine is the ideal of lightness and endurance, and will resist the greatest strain, unriualled to any of the charpest machines now obtainable in the Presidency. We have made it our duty to supply to the public a good machine at a reasonable rate, and we challenge its durability and neatness to any of the machines now sold in this Presidency for **Rs. 100.**

Price **Rs. 100-** Net Cash.

"ஏரியல்" ஜெண்ட்ஸ்ரோட் ஸடர் நெ. 2.

இந்த சைக்கில் மெஷீன் மிகவும் இலேசாகவும் மிகவும் உறுதியாகவுமிருக்கிறது. இந்த இராஜதானியில் இப்போது கிடைக்கக்கூடிய மிகவும் சரசமான சைக்கில்களைப் பார்க்கிலும் பளுவைத் தாங்கக்கூடிய ஆற்றுதிசயமுடையது. நல்ல மெஷீன்களை சாதாரண விலைக்கு விற்றுவருவதை எங்களுடைய கடமையாய்க் கருதி வருகின்றோம். இப்போது இந்த ராஜதானியில் விற்கப்படும் மெஷீன்களில், நம்முடைய "ஏரியல்" சைக்கிலில் காணப்படும் உறுதியையும், சுத்த வேலைப்பாட்டையும் காண்பிக்கிறவர்களுக்கு இனாம் கொடுக்க ரூபா 100-பந்தயம் கட்டத் தயாராயிருக்கிறோம்.

இந்தியா தேசசீதோஷ்ணங்களுக்குத் தக்கபடி இந்த சைக்கில் செய்யப்பட்டிருக்கிறது.

ரொக்க விலை. ரூபா-100.

PERAMBULATOR.

Best English Made.

This perambulator is strongly made of sound seasoned materials, mounted on strong iron springs and rubber-tyred wheels, well painted and varnished throughout in becoming colour, upholstered in Crockett's leather cloth, with Centre Board, Buckle straps, China or wood handle, and fitted with Brass-jointed Reversible Hood.

Price Rs. 31—8—0.

இங்கிலாண்டில் செய்யப்பட்ட பெராம்புலேட்டர்.

இந்த "பெராம்புலேட்டர்" என்கிற குழந்தை உல்லாசச்சவாரிவண்டி நல்ல உறுதியான சாமான்களைப்போட்டு செய்யப்பட்டிருக்கின்றது. பலமான இரும்பு வில்லுகள் பேரிலும், ரப்பர்போட்டு சுற்றப்பட்ட சக்கரங்கள் பேரிலும் வைக்கப்பட்டிருக்கின்றது. வண்டி முழுதிலும் நேர்த்தியான வர்ணமும் வார்னிஷும் பூசப்பட்டுப்பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கின்றது. விலை.—ரூ. 31—8.

THE RAMMOHIN FLUTE.



This instrument was specially built for us to meet the large orders we reeive for Carnatic as well as Hindustani Music. It has a mild, sweet and perfect tone resembling almost that of an organ. One would experience no difficulty in managing this instrument. It is so simple that even a child can handle it.

Price. Rs. 32, 45, 50,

ராம்மோகின் வாத்தியப் பெட்டி.

கர்நாடக சங்கீதமும், இந்துஸ்தானி சங்கீதமும் வாசிக்கும்படியான வாத்தியப் பெட்டிகளுக்கு நமக்கு அடிக்கடி ஆர்டர்கள் வருகிறபடியால், இவைகளுக்குத் தகுந்தபடி வாத்தியப் பெட்டிகள் தயாரித்து தருவித்திருக்கிறோம். இந்த வாத்தியப் பெட்டிக்கு மிகுந்த இன்பமான குளிர்ந்த சாரீரம் அமைத்திருக்கிறது. இதை கையாடுவதில் யாதொரு கஷ்டமுமில்லை. குழந்தைகள்கூட இப்பெட்டியைக் கையாடி வாசிக்கலாம்.

விலை.—ரூபா. 32, 45, 50.

விஞ்ஞாபனம்.

இந்திய சட்ட கெஜட்டை ஆதரிக்கவேண்டுமென்கிற கருத்துடன் இதற்கு ஏற்பட்டிருக்கும் சந்தாத்தொகையைச் செலுத்தியிருக்கும் கனவான்களுக்கும், வி. பி. பார்சலை ஒப்புக்கொண்டு பணம் செலுத்தியிருக்கும் கனவான்களுக்கும் பலகோடிவந்தனம் பண்முறை தந்தனம் ஏனையோர்களும் சீக்கிரத்தில் சந்தாத்தொகையைச் செலுத்தி இந்த கெஜெட்டை ஆதரிக்க கருணைபாராட்டவேண்டுமென்று மிக வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

2. நிகழ்மீ கெஜெட்டில் ஹிந்துலாவில் இரண்டு அத்தியாயங்கள் பிரசுரித்திருக்கின்றோம் இவ்விதமாக ஒவ்வொருமாத சஞ்சிகையில் ஏதேனும் ஒரு ஆகட் பிரசுரித்துக்கொண்டே வருவோம். சட்ட புத்தகங்கள் விலை உயர்ந்தனவென்று நாம் எடுத்துச்சொல்லவேண்டியது அனாவசியம். இந்த வருஷத்தில் ஹிந்துலா, முகமதியலா, ஸ்டாம்ப் ஆகட், ரிஜிஸ்டரேஷன் ஆகட் ஆகிய இந்த நான்கு ஆகட்டுகளையும் விபக்தமான வியாக்கியானத் துடனும் ஹைகோர்ட்டு ரூலிங்ஸ்களுடனும் பிரசுரித்து முடித்துவிடுவதாக தீர்மானித்திருக்கின்றோம். இக்கெஜட்டை ஆதரிக்கிறவர்களுக்கு விலை உயர்ந்த புஸ்தகங்களெல்லாம் இலகுவில் கிடைக்கிறபடியால் கனதனவான்கள் இந்த கெஜட்டின் அபிவிர்த்தியில் சற்று கவலையெடுத்துக்கொண்டு அவரவர்கள் ஊரில் இந்த கெஜெட் பரவிவரும்படியாக முயற்சி செய்ய தயவு புரியவேண்டுமென்று மிகவும் வணக்கமாய் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

பத்திராதிபர்.

NOTICE TO CORRESPONDENTS.

நிரூப நேயர்களுக்கு அறிவிப்பு.

கடிதக்காரர்கள் அபிப்பிராயத்திற்கு பத்திராதிபர் உத்திரவாதியல்ல.

ஈசூர் கிராம முன்சீப்:—கடிதம், கெஜெட் அச்சுவேலைகள் முடியும் தருவாயில் வந்தது. ஆகையால் பிரசுரிக்கவில்லை. அடுத்தவாரம் பிரசுரித்து கேள்விகளுக்கு ஜவாப்பும் எழுதுகிறோம்.

சோரணத்தம்மாள்:—இரண்டாவது அப்பீலில் சட்ட அம்சம் மட்டிலும் கவனிக்கப்படும். கீழ்க்கோர்ட்டு தீர்ப்பில் சட்ட வழுவைக்காணோம். இரண்டாவது அப்பீலுக்கு ஆதாரமில்லையென்பது நம்முடைய ஆபீஸ் லாயர் கமிட்டியின் அபிப்பிராயம்.

தாண்டவராய முதலியார்:—பேட்டன்ட் அண்டு டிசயின்ஸ் ஆக்ட் என்று ஒரு ஆக்ட்டிருக்கிறது. அந்த ஆக்டின் பிரகாரம் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ரூ 10-மணி ஆர்டர் செய்தால் விண்ணப்ப பாரம் அனுப்புவார்கள். அதில் எழுதி அனுப்பினால் உங்களுடைய சாமான் பேட்டன்ட் செய்யப்படும்.

ஆத்தூர் நாராணசாமி பிள்ளை:—ரெவினியூ போர்ட்டிற்கு அப்பீல்செய்து கொண்டால் தாசில்தார் உத்திரவு கட்டாயம் ரத்தாய்விடும்.

பத்திராதிபர்.

மானேஜர் விளம்பரம்.

அடுத்த மாதமுதல் ஒவ்வொருமாதமும் 25உ இந்திய சட்ட கெஜெட்டை தபாலில் அனுப்பும்படியாக அச்சாபீசில் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இம்மாத கெஜெட்டையும் சென்றமாத கெஜெட்டையும்தாமதமாய் பிரசுரித்ததை மன்னிக்கும்படி கொள்ளுகின்றோம். நிற்க, இச்சென்னையிலுள்ள சில ஐவேஜியற்ற கம்பெனியார் தேவையில்லாதவர்களுக்கும் ஆர்டர் கொடுக்காதவர்களுக்கும் சாமான்களை வி. பி. யில் அனுப்பி அவமானமடைவதுபோல் எங்களுடைய கம்பெனியில்செய்கிறதில்லை. ஆர்டர் அனுப்பினவர்களுக்குமட்டிலும் நம்முடைய கெஜெட்டை அனுப்பிவைக்கிறது வழக்கம். அங்கனமிருக்க ஆர்டர் அனுப்பியவர்கள் வி. பி. யை. திருப்பி அனுப்புவது யோக்கிதையான விஷயமல்ல. சென்றமீ ஆயிரம் வி. பி. பார்சல் அனுப்பியதில் 56 வி. பி. கள் திரும்பிவந்து விட்டன. இ. பி. கோ. பிரிவின்படியும் இந்தியன் போஸ்டல் ஆக்ட்டின் பிரகாரமும் இவர்களை பிராசிக்கியூட் செய்ய உத்தேசித்திருப்பதால், இவர்கள் எங்களுக்கு உண்டாக்கிருக்கும் நஷ்டத்தை ஈடுபடுத்தாவிடில் இந்த "மகா பெரிய கனவான்களின்"! பெயரை இந்த கெஜெட்டிலும் இந்நகர் பத்திரிகைகளிலும் பிரசுரிப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்.

மானேஜர்கள்.

போட்டகிராப்படம்.

ஹானரபில் ஜஸ்டிஸ் சர், S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் நீண்டகாலமாக சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜியாகவிருந்து கீர்த்திப்பிரகாசத்துடன் சிறந்து விளங்கி வருகின்றனர். இவர் பொது ஜனங்களாலும் நன்குமதிக்கப்பட்டவர். கவர்ன்மெண்டாராலும் நன்குமதிக்கப்பட்டவர். இப்பேர்கொற்ற அபாரகீர்த்தியும் பெருமையும் வாய்ந்த கனவானை எப்போதும் நம்முடைய ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கும்படியாகவும் பிரதி தினமும் அவரை நாம் பார்த்துக்கொண்டிருக்கும்படியாகவும் இவருடைய திருவுப்படத்தை ஒவ்வொருவரும் தத்தம்வீட்டில் வைத்திருக்கவேண்டியது அவசியம். இவருடைய திருவுப்படங்கள் நம்முடையகம்பெனியில் கிடைக்கும்; பூல்ஸ்காப் சயிசில், தும்ப மலர்போல்வெண்மையாயுள்ள உறுதியான கிளேஸ் கடுதாசில் இவருடைய பொட்டகிராப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. கண்ணாடி போட்டு சுவற்றில் மாற்றிக்கொள்ளலாம். ஹைகோர்ட் ஜட்ஜி உடுப்பு போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறசாயலாய் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

விலை 4 அணா தபால் சார்ஜ் அரை அணா

இந்திய சட்ட கெஜெட்

சந்தாதாரர்களுக்கு விலை அணா 3

(தபால் சார்ஜ் உள்பட)

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்.

மானேஜர்கள்.

இந்தியசட்டகெஜெட் ஆபீஸ்.

சவுகார்பேட் போஸ்ட்,

சென்னப்பட்டணம்.

Abbreviations used in the Gazette.

இந்த கெஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta
All.	=	Allahabad
Bom.	=	Bombay
Mad.	=	Madras
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
I. A.	=	Indian Appeals.
M. A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகபாத்
பம்.		பம்பாய்
மது சென்	}	சென்னப்பட்டணம்
ஸி. பு. கோ.		ஸிவில் புரொஸிஜர்கோடு
கி. பு. சோ.		கிரிமினல் புரொஸிஜர் கோடு.
இ. அ.		இந்தியன் அப்பீல்ஸ்.
மூ. இ. அ.		மூர் இந்தியன் அப்பீல்ஸ்.

The Hon. Sir CHARLES ARNOLD WHITE, *Kt.*,

Chief Justice of Madras.

ஆனரபில் ஸர் சார்லெஸ் ஆர்னல்ட் ஒயிட், Kt.

சென்னை ஹைகோர்ட் பிரதம நியாயாதிபதி.

MEN AND WOMEN OF INDIA.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதம் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யூம் 1. | சென்னப்பட்டணம் 1906ளு செப்டம்பர்மீ | 2. பாகம்.

SUB MAGISTRATES,

சப்மாஜிஸ்டிரேட்டுகள்.

போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டை அனுசரித்து இந்தியா கவர்ன்மெண்டார் போலீஸ் இலாக்காவைச் சீர்திருத்தஞ் செய்யும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். இந்த சீர்திருத்தத்தின்படி போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், ஸ்டேஷன் அவுஸ்ஆபீசர் முதலாயினோர்களின் சம்பளம் உயர்த்தப்படப்போகின்றதுமன்றி இப்போதிருப்பதைவிட மிகுந்த படிப்பாளிகளாகவும் சமர்த்தர்களாகவும் இன்னும் இம்மாதிரியோக்கிதைகள் பொருந்தினவர்களாகவும் அவ்வுத்தியோகங்களுக்கு பொறுக்கி எடுத்து நியமிக்கப்படுவார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சம்பளம் உயர்த்தப்பட்டு அவ்வுத்தியோகங்களுக்கு பொருக்கி எடுத்து நியமிக்கப்படுவார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சம்பளம் உயர்த்தப்பட்டு அவ்வுத்தியோகங்களுக்கு தகுந்த யோக்கிதைகள் பொருந்தினவர்கள் நியமிக்கப்படும்போது, இப்போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கண்டுபிடிக்கும் கேசுகளை விசாரணை செய்யும் சப்மேஜிஸ்டிரேட்டுகள் பெரும்பாலும் இப்போதிருப்பது போல சாமானிய அநுபோகமும் படிப்பு முடையவர்களாகயிருந்தால் கவர்ன்மெண்டார் போலீஸ் இலாக்காவைச் சீர்திருத்தினதால் விளையுமென்று எதிர்பார்க்கக்கூடிய அவ்வளவு பயன் உண்டாகமாட்டாது. சப்மாஜிஸ்டிரேட் உத்தியோகங்களுக்கு பெரும்பாலும் கவர்ன்மெண்டார் கலேக்ட்டர் ஆபீசில்குமாஸ்தா உத்தியோகம்பார்த்து வருபவர்களை நியமித்து வருகின்றார்கள். அவர்களிடம் கவர்ன்மெண்டார் ஒப்புவித்திருக்கும் அதிகாரமும் அமுலுமோ அபாரம். ஆனால் அவர்களுக்குக கொடுத்துவரும் சம்பளமோ சொற்பம் சொற்ப சம்பளம் வாங்குகிறவர்களிடம் பெரிய அதிகாரத்தை ஒப்புவித்தால் பாரபக்ஷமில்லாத நீதி பரிபாலிக்கப்படுமென்று எதிர்பார்ப்பது புத்திக்குப்பொருந்தாத காரியம், பி.எ.பி.ல். பாஸ்செய்து சிலகாலம் வக்கிலாயிருந்து வியாச்சிய விசாரணைகளில் அனுபோக படைந்தவர்கள் சப் மாஜிஸ்டிரேட்டுகளாக வர அபேக்ஷிக்கக்கூடும். ஆனால்சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் பெறவரவேண்டியவர்கள் ஒரு வருஷ மேனும் ரெவினியூ இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து அநுபோகமடைந்திருக்கவேண்டுமென்று ஒரு விதி இருப்பதாலும் சப் மேஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கு ஏற்பட்டிருக்கும் சம்பளம் கேவலமானதாயிருப்பதாலும் அவர்கள் இந்த உத்தியோகத்திற்கு அபேக்ஷிக்கிறதில்லை. கேசை விசாரிக்கும் நியாயாதிபதி சக்ஷிக்காரர்களின் யோக்கியதைக்கும் அந்தஸ்திற்கும் கூடியமட்டிலும் அதிகப்பட்டவராயிருந்தாலன்றோ கேசை விசாரணை செய்யும் நியாயாதிபதி தயவு தாக்ஷண்யத்தைச் சட்டை செய்யாமல் பாரபக்ஷமற்ற தீர்ப்பு சொல்ல மார்க்கமுண்டாகும். உயர்ந்த சம்பளமுடைய போலீஸ் இன்ஸ்பெக்டர் (புதிய ஏற்பாட்டின்படி) பிராசிக்கியூஷன் தரப்பாராயிருக்க அந்தக்கேசை நியாயாதிபதி ஸ்தானத்திலிருந்து விசாரணை செய்யும் சப் மாஜிஸ்டிரேட்டிற்கு சொற்ப சம்பளம் பெறுபவராயிருந்தால் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத்தான் சப் மேஜிஸ்டிரேட்டினிடம் என்ன மதிப்பிருக்கும், சப் மேஜிஸ்டிரேட்டிற்கு தான் இன்ஸ்பெக்டரிடம் தாக்ஷிணியத்திற்குக் கட்டுப்படாமலிருப்பது சாத்தியமாகுமா? போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சமர்த்தர்களாகவும் படிப்பாளிகளாகவும் நியமிக்கப்படும்போது சப்மாஜிஸ்டிரேட்டுகளும் அப்படியே மிகுந்த யோக்கியதைகள் பொருந்தினவர்களாக நியமிக்கப்படவேண்டும் இப்போதுபோலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கேசுகளைபிடிக்கும் திறமையுடையவர்களல்லவென்றும் விசாரணைக்குக் கொண்டுவரும்கேஸ்களெல்லாம் ஜோடிக்கப்பட்ட கேஸ்களென்றும்சொல்லி பெரும்பாலும் போலீசார்கொண்டுவரும் கேசுகளைத் தள்ளிவிடுகிறார்கள். இனிமேல், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் மிகுந்த படிப்புயோக்கியதையுடையவர்களாக பொறுக்கி எடுத்து நியமிக்கப்படப் போகிறபடியால், இவர்கள், சப் மாஜிஸ்டிரேட்டுகள்

விசாரணை செய்து கேசின் நுட்பத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய யோக்கியதை பொருந்தினவர்களாயில்லை என்று புகார்செய்யும்படியாகயிருக்கும்; சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கு சம்பளத்தை உயர்த்தினால் பி. எல். பாஸ் செய்து வக்கீலாயிருப்பவர்களும், முனிசிப் கோர்ட் ஜில்லாக்கோர்ட்டுகளில் வக்கீல் தொழில் நடத்தி அனுபோகமடைந்திருப்பவர்களும் இவ்வுத்தியோகத்தை விரும்பிவருவார்கள். இவர்களை சப்மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிப்பதும் மிகவும் உத்தமமான காரியமென்பதில் சந்தேகமில்லை. ஆயுள் காலமெல்லாம் கலெக்டர் கச்சேரியில் அற்ப சம்பளத்திற்கு அல்லல்பட்டுக்கொண்டிருந்தவர்கள் என்ன கிரிமினல் சட்டம் வாசித்திருப்பார்கள் என்ன விசாரணை அநுபோகம் அடைந்திருக்கப் போகிறார்கள்! ஆதலால் கவர்ன்மெண்டார் கலெக்டர் ஆபீஸ் குமஸ்தாக்களை உத்தரவாதம் பொருந்திய சப்மாஜிஸ்டிரேட் உத்தியோகங்களுக்கு நியமிக்கும் தற்கால வழக்கத்தை விரைவில் ஒழித்து கௌரவம் பொருந்திய அவ்வுத்தியோகத்திற்கு உயர்ந்த சம்பளம் ஏற்படுத்தி அதற்கு கிரிமினல் சட்டத்தில் சம்பூரணமான ஞானமுடையவும் வியாச்சிய விசாரணையில் அநுபோகமுடைய வக்கீல் பிளீடர் முதலியவர்களை தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஒரு திருத்தம்.

சென்ற மாத கெஜெட்டில் ஹானரபில் ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் ஆயுள் விர்த்தாந்த சரித்திரம் எழுதியிருந்தோமல்லவா அதில் "கனம் பொருந்திய அய்யர் அவர்கள் மதுரை முனிசிபாலிடிக்கி சில காலம் பிரசிடெண்டாகவிருந்து அப்போது ஜில்லா மாஜிஸ்டிரேட்டாகவிருந்த மிர். குரோல் துரை அவர்களின் உதவியைக்கொண்டும் மேல்பார்வையினும் நகருக்கு அனேக நன்மைகளைச்செய்துவந்ததை கவர்ன்மெண்டார் நன்கு மதித்து கனம் அய்யர் அவர்களை சட்டசபை அங்கத்தினராகத்தெரிந்தெடுத்தார்கள்" என்கிற முக்கியமான சமாசாரத்தை எடுத்துவரைய தவறிப்போனதைக்குறித்து மிகவும் விசனிக்கிறோம்.

பட்டபகலில் கொலை.

நிகழ்மீ 19உ சென்னைப்பீப்பில்ஸ்பார்க்கிலுள்ள விக்டோரியா மாளிகைக்கு எதிரில் 20-வயதுள்ள ஒரு மங்கை கத்தியால் குத்துப்பட்டு இறந்துகிடந்தனள் இப்பிரேதத்தை தோட்டக்காரன் பகல் 11-மணிக்கி பார்த்து சூப்பிரண்டினிடம் சொல்லவே சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. இறந்துபோன ஸ்திரி நல்ல அடுப்பத்தையும் உயர்ந்த குலத்தையும் சேர்ந்த ஸ்திரி என்று தெரிகின்றது. இப்பிரேதத்தைப் பார்க்கும்போது வெட்டுப்பட்ட அங்கத்திலிருந்து உதிரம் வந்து கொண்டிருந்தபடியால் ஒரு மணிநேரத்திற்கு முந்தி இவள் கொலைசெய்யப்பட்டிருக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கொலையாளி அகப்படவில்லை. G. டிவிஷன் போலிசார் கண்டு பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். கொலையாளிகளை கண்டுபிடிப்பவர்களுக்கு ரூ 100 இனாமளிக்கப்படுமென்று விளம்பரம் போடப்பட்டிருக்கிறது.

பாதிரியார் கேஸ்.

சான்டிப்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் இரண்டு கிறிஸ்தவப்பாதிரிகளை சில மாணாக்கர்கள் கூடி அடித்ததாக நடந்தக்கேசைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ரிப்போர்ட் தருவித்து பயிரங்கப்படுத்தியிருக்கிறார்கள். ஷை ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ஷை பாதிரியார்களுக்கு யாதொரு உதவியும் செய்யவில்லை என்று கவர்ன்மெண்டார் ரிமார்க்கு செய்து அவருடைய நடத்தையை கவனிக்கும்படியாக ரெயில்வே அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார்கள்.

சப்மேஜிஸ்டிரேட் ஆபிசில் திருட்டு.

நிகழ் செப்டம்பர்மீ 3உ வாக்கில் திருப்பதி சப் மாஜிஸ்டிரேட் பயிலிலிருந்த கேசுகளின் தஸ்தாவேஜிகளடங்கிய பெட்டியை யாரோ களவாடி தஸ்தாவேஜிகளை எடுத்துக்கொண்டு பெட்டியை ஆபிசுக்கு சமீபத்திலுள்ள கிணற்றில் போட்டுவிட்டுப்போய் விட்டார்கள். சப் மேஜிஸ்டிரேட் ஆபிசுக்குள் சப்ஜெயிலுமிருக்கின்றது. அதற்கு வார்டர்களும் போலிஸ் கான்ஸ்டேபில்களும் காவலிருக்கிறார்கள். அப்படியாயிருந்தும் பொட்டி களவாடப்பட்டிருப்பது ஆச்சரியமாயிருக்கின்றது!

சட்டசபை

சென்னை சட்ட நிரூபண சபையில் அங்கத்தினராயிருந்த டாக்டர்போர்ன் அந்தஸ்தானத்தை ராஜிநாமாகொடுத்துவிட்டபடியால் கவர்னர் அவர்கள் அந்தராஜிநாமாவை ஒப்புக்கொண்டு அவருக்குப் பதிலாக மிஸ்டர் T. T. லோகன் அவர்களை நியமித்திருக்கிறார்கள்

உத்தியோக நியமனம்

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜி யாகவிருந்த மிஸ்டர் குமாரசாமிசாஸ்திரியார் அவர்கள் சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டபடியால் இந்த மாறுதலில் உண்டான ஸ்மால்காஸ் கோர்ட் மூன்றாவது ஜட்ஜி காலிஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்ட மிஸ்டர் W. கோபாலாச்சாரியார் சார்ஜ் ஒப்புக்கொண்டு நிகழ்மீ 3உ திங்கட்கிழமை முதல் கோர்ட் நடத்திவருகின்றார்.

மான நஷ்டதாவா.

பெங்காளத்தில் குஷ்டியா என்னும் நகரில் சில பிளீடர்கள் சேர்ந்து ஒரு அரிசிக் கடை வைத்தார்கள். ஒரு பிளீடர் போய் அந்தக் கடையில் அரிசி வாங்கினார். பக்கத்திலுள்ள அரிசி வர்த்தகர்களில் இருவர்கள் இந்த பிளீடரை ஏளனம் செய்தார்கள். இதற்காக அந்த பிளீடர் இவர்கள் பேரில் மானநஷ்டதாவா செய்திருக்கிறார்.

ஒரு பார்சி ஜட்ஜி.

பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்ருடின் தயாப்ஜி அவர்கள் இறந்துபோய்விட்டாரல்லவா அவருக்குப் பதிலாக கவர்ன்மெண்டார் மிஸ்டர் ஸ்காட்டை நியமித்திருக்கிறார்கள். அவருக்கு இந்த உத்தியோகத்தில் காயமாயிருக்க இஷ்டமில்லாமலிருப்பதால் மிஸ்டர் தேவர் ஜட்ஜியாக நியமிக்கப்படுவார் என்று பம்பாய் கெஜெட் கூறுகின்றது. இது உண்மையானால் பார்சி ஜாதியாருக்கு ஜட்ஜி வேலை கொடுப்பது இதுதான் முதல் தடவை.

பலவந்தப் புணர்ச்சி.

மிட்னாப்பூரில் ஒரு சென்னப்பட்டணப் பெண்ணை பலவந்தப்படுத்தி அவளுடன் துராக்கிரதப் புணர்ச்சி செய்த வெள்ளைக்காரராகிய மிஸ்டர் வெட், மிட்னாப்பூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். குற்றவாளி தரப்பிற்கு அனேக பாரிஸ்டர்கள் ஆஜராகி பேசி வருகிறார்கள். இன்னும் கேஸ் முடியவில்லை.

THE HONBLE SIR CHARLES ARNOLD WHITE Kt.
CHIEFJUDGE OF THE HIGHCOURT MADRAS.

ஹானரபில் சர் சார்லஸ் ஆர்னால்ட் வொயிட் Kt.
(சென்னை ஹைகோர்ட் பிரதம ஜட்ஜி.)

சென்னை ராஜதானிக்கு வந்த கவர்னர்களுக்குள் இளம்பிராயத்தில்கவர்னராக வந்தவர்லார்ட் ஆம்த்தில் சென்னை ஹைக்கோர்ட்டிற்கு ஜட்ஜியாக வந்தவர்களுக்குள் இளம்பிராயத்தில் ஜட்ஜியாகவந்தவர் ஹானரபில் சர் சார்லஸ் ஆர்னால் வொயிட் அவர்கள்; இவர் 1885-வது ஹுத்தில் பிறந்தவர் நியூ ஆக்ஸ்போர்ட் கலாசாலையில் (New Oxford College)கல்விபயின்று பி.எ. பரிக்ஷையில் தேரி பட்டம்பெற்றவர். மேன்மைதங்கிய வைசிராகிய லார்ட்மின்டோவிற்கு முந்தி இந்தியாவிற்கு கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் கர்ஜனும் பம்பாய் ஹைகோர்ட் பிரதம ஜட்ஜியாகிய சர் லாரன்ஸ் ஜென்கின்சும் (Sir Lawrence Jenkins) நம்முடைய சர் சார்லஸ் ஆர்னால்ட் வொயிட்டும் ஒரே பள்ளிக்கூடத்தில் வாசித்தவர்கள். இன்னர் டெம்பில் (Inner Temple) என்கிற பாரிஸ்டர் கலா சாலையில் பயின்று பரிக்ஷையில் தேறிபட்டம் பெற்றவுடன் 1883-வது ஹு முதல் பாரிஸ்டர் தொழில் நடத்த ஆரம்பித்தனர். விசேஷமாய் இவர் லண்டன் கோர்ட்டுகளில்தொழில் நடத்திவந்தார். "ஜுடிக்கேச்சர் ஆகட்ஸ்" (Judicature Acts) ஈயர்ளி கவுண்டி கோர்ட்ஸ் பிராக்டிஸ் (Yearly County Courts Practice) என்கிற பத்திரிகைகளுக்கு சில காலம் பத்திராசியர்களுக்குள் ஒருவராயுமிருந்தார். சில காலம் பார்லிமெண்டு கௌன்சல் ஆபிசிலும் உத்தியோகமாயிருந்தார். லங்காஷயர், யார்க்ஷயர், செஸ்ஷயர் ஆகிய இந்த மூன்று இடங்களிலும் சில காலம் கௌன்டி கோர்ட் ஜட்ஜியாகவுமிருந்தார். 1898வது ஹும் சர் சார்லஸ் ஆர்னால் வொயிட் அவர்கள் சென்னை அட்வோகேட்ஜெனரலாக நியமனம் பெற்றனர். இந்தஉத்தியோகத்தில் அவர் 18-மாதம்வரையிலிருந்து அவ்வுத்தியோகத்திற்கு தகுந்தயோக்கியதைகள் பொருந்தினவரென்றுகீர்த்திப்பெயர் சம்பாரித்துக்கொண்டதுமன்றி அடிக்கடிஅனேகபெரிய வியாச்சியங்களும் இவரிடம் ஒப்புவிக்கப்பட்டு தகுந்தபடி தம்முடைய பாரிஸ்டர் தொழிலையும் நடத்திவந்தனர். இவர்சட்டஞானம் சம்பூரணமாயுடையவர். இவர் வியாஜ்ஜியத்தின்விஷயங்களை அடுக்கடுக்காய்ஒன்றின்பின் ஒன்றாய்க்கோர்வையாய் எடுத்துக்காண்பித்துகேசின் சாராம்சத்தை எடுத்துரைப்பதில் மிகுந்த சமர்த்தர். இந்த குணாதிசயம் இவரிடம் காணப்படுவதை ஜட்ஜிகளும், இவருடன் கூடவிருக்கும் லாயர்களும் ஆச்சரியப்பட்டு இவரைக்குறித்து புகழ்ந்து பேசுவார்கள். இவர் அட்வோகேட் ஜெனரலாகவிருந்து கொண்டு மேற்சொன்னபடி பெரும்புகழ் அடைந்து வருந்தருவாயில் அப்போதிருந்த சிப் ஜட்ஜி சர் ஆர்தர் காலின்ஸ்பென்ஷன் பெற்றுக்கொண்டு இங்கிலாண்டிற்கு போகும்படி நேரிட்டது. நம்முடைய சர்சார்லஸ் ஆர்னால்ட் வொயிட் அவர்களின் கீர்த்திப்பிரதாபத்தை கவனித்துவந்த லோக்கல் கவர்ன்மெண்டார் காலியான சிப் ஜட்ஜி உத்தியோகத்தை சர் சார்லஸ் ஆர்னால் வொயிட் அவர்களுக்குக் கொடுத்தார்கள். கவர்ன் மெண்டார் இவரை ஐக்கோர்ட் ஜட்ஜியாகத்தெரிந்தெடுத்து நியமித்தது பாரிஸ்டர்களுக்கும் வக்கீல்களுக்கும் ஆகவே எல்லா வகுப்பினருக்கும் சந்தோஷத்தைக்கொடுத்தது. அது முதல் அதாவது 1899-வருஷம் ஆகஸ்ட்மீ முதல் இவர் சென்னை ஹைகோர்ட்டிற்கு பிரதமஜட்ஜியாக விருந்து வருகின்றார் சாக்ஷிகளை விசாரணை செய்வதிலும், கேசின்உண்மைகளைக் கண்டு பிடிப்பதிலும் இவர் அபார சக்தியுடையவர். சில ஜட்ஜிகளைப்போல இவர்சாக்ஷிகளை மிரட்டி உருட்டி பயமுறுத்திக்கேட்கமாட்டார். மிகுந்த சாந்தமாகவே கேள்விகளை ஒன்றின்பின் ஒன்றாய்க்கேட்டு சாக்ஷியின் வாயிலிருந்து உண்மையான சமாசாரம் வரும்படி செய்து விடுவார். இயற்கையிலேயே இவர் சாந்த குணமுடையவர். இவருடைய கோர்ட்டில் ஆஜராகும் வக்கீல்களையும பாரிஸ்டர்களையும் மிகுந்த மரியாதையுடன் நடத்தி வருகிறார். வக்கீல்கள் வாதிப்பதில், இவருடைய புத்திக்குப் பொருந்தாததைச்சொன்னபோதிலும், இவர் பொறுமையாய் காது கொடுத்துக்கேட்டுக்கொள்ளுவார். சில ஆங்கிலோ இந்தியர்களைப்போல இவருக்கு சுதேசிகளிடத்தில் துவேஷம் என்பதே கிடையாது.

இன்னும் விபரித்துச் சொல்லப்போனால் இவர் சுதேசிகளிடத்தில் நேச பான்மையுடையவர், இவர் 1904வது ஹு சென்னை சர்வகலா சாலைக்கு வைஸ் சான்சலராக நியமன மடைந்தார்; ஆனால் ஒருவருஷத்திற்கு பிறகு இவர் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாண்டிற்குப்போக நேரிட்டமையால் அந்த கௌரவ உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டார்.

இவருடைய மனைவியாகிய லேடி வொயிட் துரைசானி ரூபர்ட் பேக்கர் என்னும் பாதிரியாரின் செல்வப்புதல்வி.

இவர் இன்னும் அநேக காலம் நம்முடைய சென்னப்பட்டண ஹைகோர்ட்டிற்கு பிரதம ஜட்ஜியாகவிருந்து நியாயம் பரிபாலிக்கும் படியானே தேக சௌக்கியத்தையும் பலத்தையும் இவருக்கு தந்தருளுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

THE LATE HONORABLE JUSTICE SIR JAMES DAVICE.

காலஞ்சென்ற ஹானரபில் ஜஸ்டிஸ் சர்ஜேம்ஸ் டேவிஸ்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராயிருந்து சிறந்து விளங்கிய ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ் நிகழ் செப்டம்பர்மீ 17உ திங்கட்கிழமை இங்கிலாண்டில் இறந்துபோய்விட்டார் என்று கேள்விப்பட்டு விசனிக்கிறோம். இவர் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு தம்முடைய ஜட்ஜி உத்தியோகத்தை ராஜிநாமாகொடுத்துவிட்டு இங்கிலாண்டிற்குப் போய்விட்டார் என்று சென்றமாத கெஜெட்டில் கூறியிருந்தோம். அவர் சென்ற மாதம் இங்கிலாண்டிற்குப்போகும் தருவாயில் தேக அசௌக்கியமுடையவராகயிருந்தபோதிலும் இவ்வளவு சமீபகாலத்தில் அவர் இறந்துபோவார் என்று ஒருவரும் நினைக்கவில்லை. அவரும் நினைக்கவில்லை. இந்நகரைவிட்டு இங்கிலாண்டிற்குப் புறப்படும் தினம் ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களைகண்டு "இங்கிலாண்டு போனவுடன் என்னுடைய தேகம் சௌக்கியமடையும் நான் இன்னும் வெகுகாலம் ஜீவதிசையிலிருப்பேன்" என்று சொன்னாராம். ஆனால் தெய்வத்தின் கருத்து வேறேவிதமாயிருந்தது. இவருடைய மரணத்தால் சென்னை ராஜதானி முழுதிலும் துக்க சாகரத்தில் ஆழ்ந்திருக்கிறதென்று நாம் சொல்லலாம். இச்சென்னை ராஜதானியில் இவர் 37 வருஷம் உத்தியோகஞ்செய்துவந்தார். சிலகாலம் ஜில்லா கலெக்டராயிருந்தார். சில காலம் ஹைகோர்ட் ஜட்ஜியாகவிருந்து பொலிவு பெற்று விளங்கிவந்தார். போக்கிரித்தனம், புனைசுருட்டு, மோசடி முதலியதுற்செய்கைகளுக்கு இவர் ஜென்ம விரோதி; அவைகளைக்கண்டால் இவருக்கு திடீரென்று கோபம் பிறந்துவிடும். அவைகளைக் கருவறுத்துவிட்டு மறுவேலை பார்ப்பார், இவருடைய கோர்ட்டு மிகவும் கம்பீரமாயிருக்கும்.

கேட்டகேள்விகளுக்குத் தக்கபடி நேருக்குநேர்பதில் வக்கீல்கள் சொல்லாவிடில் திடீரென்று சினங் கொள்ளுவார். கேசின் உண்மைகளைக்கண்டு பிடிப்பதில் சட்டநேர் நிர்வாகங்களை அவ்வளவாக கவனியாமல் உலக அநுபவங்களைக்கொண்டுகேசின்உண்மைகளைக்கண்டு பிடிப்பார். இவர் இத்தேச ஜனங்களுடன் கலந்துபழகாதவராயிருந்தபோதிலும் சில காலம் ஜில்லா ஜட்ஜியாகவுமிருந்தபடியால் இத்தேச ஜனங்களின் குணாதிசயங்களையும் பழக்க வழக்கங்களையும் நன்குணர்ந்தவர். போலீசார் இவருடைய கோர்ட்டிற்கு சிருஷ்டனை செய்த கேசுகளை கொண்டுவர அஞ்சுவார்கள். நியாயம் பரிபாலிப்பதில் எது தமக்கு யுக்தமென்று புத்திக்குப்படுகிறதோ அப்படிச்செய்வாரே யொழிய தயவு தாக்ஷணியத்திற்கு கட்டுப்பட்டு தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிவிடமாட்டார். பார்ப்பதற்கு சற்றுமுரட்டு குணமுடையவர்போல் காணப்பட்டபோதிலும், மிகுந்த அன்பும் தர்மகுணமும் நிரம்பின இருதய முடையவர்; அவர் இறந்துபோன துக்கத்தைக் கொண்டாடுவதற்காகவும் இவருக்கு மரியாதைக்காட்டும்பொருட்டும் நிகழ்செப்டம்பர்௴ 19௳ ஹைகோர்ட்டிலுள்ள எல்லா ஜட்ஜிகளும் பாரிஸ்டர்களும், வக்கீல்களும் ஒரே கோர்ட்டில் கூடி இவருடைய குணாதிசயங்களைப்பற்றி புகழ்ந்து பேசி துக்கித்து கோர்ட்டை மூடினார்கள்.

THE LATE HONORABLE Mr. JUSTICE BADRUDIN TYABJI.

காலஞ்சென்ற ஹானரேபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்ருடின் தயாப்ஜி.

பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராயிருந்து பொது ஜனங்களுடையவும கவர்ன் மெண்டாருடையவும் மதிப்பை ப்பெற்று கீர்த்திப்பிரகாசத்துடன் வாழ்ந்து வந்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்ருடின் தயாப்ஜி அவர்கள் சென்ற ஆகஸ்ட்௴ இறந்துபோய்விட்டதைக்குறித்து விசனிக்கிறோம். இவர் தனாடிகவர்த்தகராயிருந்த மிஸ்டர் தயாப்ஜிபாய் மீகான்சாய்ப்பு அவர்களின் செல்வப்புத்திரர். இவர்களுடையகுடும்பம் ஆதியில் காம்பே நகரிலிருந்தது. பிறகுபம்பாயில் குடியேறியிருக்கிறது. இவருடைய தகப்பனர் இங்கிலாண்டு, பிரான்சு, ஜெர்மனிதேசங்களோடு பெரியவியாபாரங்கள் செய்து வந்தனர். இதனுல் ஐரோப்பியருடைய நேசமும் வழக்கமும் இவருக்கு பெருகி இவருடைய புத்திரரை இங்கிலாண்டு தேசத்தில் படிக்கவைக்கவேண்டுமென்று அபேக்ஷித்தார் அப்படியே பிரஸ்தாப மிஸ்டர் ஜஸ்டிஸ் தயாப்ஜியை 16-வது வயதில் படிப்பதற்கு இங்கிலாண்டிற்கு அனுப்பிவிட்டார். இங்கிலாண்டில் பாரிஸ்டர்பரிக்ஷையில் தேறினவுடன் 1867-௵ பம்பாய் ஹைக்கோர்ட்டில் சேர்ந்து பாரிஸ்டர் தொழில் செய்து வந்தனர். அப்போது பம்பாயில் பிரபலமான பாரிஸ்டர்களிருந்தார்கள். மிஸ்டர் தயாப்ஜி அவர்களுக்கு கேசுகள் அகப்படுகிறதில்லை. இரண்டொருவருஷம் இவ்வாறிருந்தபின், சிக்கலான வியாச்சியங்களை சீக்கிரத்தில் சிக்கறுத்து வாதிக்கக்கூடிய இவருடைய புத்தி கூர்மையாலும் வாசாமகோசர பேச்சுவண்மையாலும் இவர் சிறந்த பாரிஸ்டராகமதிக்கப்பட்டு, பெரிய வியாஜ்ஜியங்கள் இவர் வசம் ஒப்புவிக்கப்பட்டு திரண்டபொருளைச் சம்பாரித்தனர். பாரிஸ்டர்களுக்குள்ளும் வக்கீல்களுக்குள்ளும் பிரதமமானவராயிருந்தனர். 1895-௵ கவர்ன்மெண்டார் இவருக்கு ஜட்ஜி உத்தியோகம் கொடுத்தார்கள். இந்தப் பதவியிலும் இவர் சிறந்துவிளங்கினர். இவர் ஒரிஜினல் சயிடிலேயே விசேஷமாய் ஜட்ஜியாக விருந்து விசாரணை செய்துவந்தபடியால் இந்தியன் லா ரிப்போர்ட்களில் இவருடைய தீர்ப்புகள் அதிகமாயில்லை. மகா புத்திமான். நியாயவாதி; உண்மையைக்கண்டு பிடிப்பதில் நிபுணர்; இவர் பாரிஸ்டராகவும் ஜட்ஜியாகவுமிருக்கும்போது இந்த உத்தியோகஸ்தர்களின் முறையில் அவருக்கு அதிகவேலையிருந்தபோதிலும் அவைகளையுஞ் செய்துகொண்டு தேச நன்மைக்காகவும் பாடுபட்டு வந்தார். இவர் வைதிக முகமதியர். ஒரு தினம் 5-முறை தொழுவார். அப்படியிருந்தும் இந்துக்களிடத்திலும் இதர மதஸ்தர்களிடத்திலும் மிகுந்த அன்புடையவர்! ஒரு மதஸ்தர் மற்றொரு மதஸ்தரை தூஷிக்கக்கூடாதென்பதும், கவர்ன்மெண்டாரிடமிருந்து நன்மைகளையும் சுதந்தரங்களையும் பெறுவதற்கு இந்துக்களும் முகமதியர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்பதும் இவருடைய உறுதியான கொள்கைகள். தம்முடைய மத ஆசாரங்களை சீர்திருத்தவும் முயன்றுவந்தார். முகமதிய ஸ்திரிகள் கோஷாவிலிருப்பதைக்கண்டித்துப்பேசி வந்தார். இவருடைய குடும்பத்தைச்சேர்ந்த ஸ்திரீகள் கோஷாவிலிருக்கிறதில்லை. எந்த மீட்டிங்கிற்கும் பயிரங்கமாய் வருவார்கள். இந்தியாவில் பெண்கல்வி பரவவேண்டுமென்று பெண் பாடசாலைகள் ஏற்படுத்தினர். பம்பாயில் அஞ்சுமன் இஸ்லாம் சாலை ஏற்படுத்தி அதற்கு பொருளுதவிசெய்து வெகுகாலம் அதற்கு காரியதரிசியாகவும் பிரசிடெண்டாகவு மிருந்தார். இவர் திடமான காங்கிரஸ் அபிமானி. சென்னையில் 1887-௵ கூடின மூன்றுவது காங்கிரசிற்கு சபாநாயகராயிருந்து இந்துக்களும் முகமதியர்களும் தேச விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டுவது அவசிய மென்பதை பயிரங்கமாய்க்காண்பிக்கும் பொருட்டே தாம் இந்த சபாநாயகர் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டேன் என்று சொன்னர். இவர் இறந்துபோனது காங்கிரசிற்கு ஈடுபடுத்தக்கூடா ஒருபெரும் நஷ்டமாயிருக்கிறது. இவர் 1844-௵ அக்டோபர்௴ 8௳ பிறந்தார். ஆகவே இறக்கும்போது இவருக்கு வயது-52; இவருடைய மரணத்தால் இவருடைய குடும்பத்திற்கு உண்டாயிருக்கும் துக்கத்தில் நாமும் கலந்து அநுதாபப்படுகின்றோம்.

(Extradition.) எக்ஸ்டிராடிஷன் ஆக்ட்.

சென்றவருஷத்தில் சென்னை ஹைக்கோர்ட்டு செஷன்ஸ்சில் பயிர்தொழில் செய்யும் ஒரு ஐரோப்பியர் கொலை குற்றஞ்செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை நடந்ததில் திருவாங்கூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் நயினன் பொய் சாக்ஷியஞ்சொன்னதாக அவரை பிராசிக்கியூட்செய்யும்படி பிரசிடென்சி மேஜிஸ்டிரேட் வாரண்டு பிறப்பித்தார். வாரண்டு பிறப்பதற்குள் அவர் திருவனந்தபுரத்திற்குப்போய் விட்டார். அவரைப்பிடித்து பிரிடிஷ் கவர்ன் மெண்டாரிடம் ஒப்புவிக்க சமஸ்தானச்சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சமஸ்தானத்தார் சொல்லிவிட்டார்கள். அதுமுதல் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கும் சமஸ்தானத்தாருக்கும் கடிதம்போக்கு வரத்து நடந்து சென்ற ஆகஸ்ட்௴ 22௳ சமஸ்தானகவர்ன்மெண்டார் ஒரு ரெகுலேஷன் பாஸ் செய்வித்து விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது என்னவென்றால் "திருவாங்கூர் சமஸ்தான சொந்தப்பிரஜைகளாவது அல்லது பிரிடிஷ் இந்தியாபிரஜைகளாவது பிரிடிஷ் இந்தியாவில் குற்றஞ்செய்ததாகவாவது அல்லது குற்றஞ்செய்ததாக சமுசயித்தாவது பிரிடிஷ் கவர்ன் மெண்டார் அந்த நபரின்பேரில் வாரண்டு பிறப்பித்தால் அந்த நபர்கள் திருவாங்கூர்கொச்சின்சமஸ்தான எல்லைக்குள்ளிருக்கும் விஷயத்தில் அவர்களைப்பிடித்துக் கொடுக்க ஒரு முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிற்கு திவான் உத்திரவு அனுப்பலாம்."

Table of Rates of *Ad Valorem* Fees leviable on the institution of suits.

வியாச்சியத்தொகையின்மேல் கட்டவேண்டிய கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு விபரஜாபிதா.

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.			வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.		
ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.	ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.
...	5	0	6	0	480	490	36	12	0
5	10	0	12	0	490	500	37	8	0
10	15	1	2	0	500	510	38	4	0
15	20	1	8	0	510	520	39	0	0
20	25	1	14	0	520	530	39	12	0
25	30	2	4	0	530	540	40	8	0
30	35	2	10	0	540	550	41	4	0
35	40	3	0	0	550	560	42	0	0
40	45	3	6	0	560	570	42	12	0
45	50	3	12	0	570	580	43	8	0
50	55	4	2	0	580	590	44	4	0
55	60	4	8	0	590	600	45	0	0
60	65	4	14	0	600	610	45	12	0
65	70	5	4	0	610	620	46	8	0
70	75	5	10	0	620	630	47	4	0
75	80	6	0	0	630	640	48	0	0
80	85	6	6	0	640	650	48	12	0
85	90	6	12	0	650	660	49	8	0
90	95	7	2	0	660	670	50	4	0
95	100	7	8	0	670	680	51	0	0
100	110	8	4	0	680	690	51	12	0
110	120	9	0	0	690	700	52	8	0
120	130	9	12	0	700	710	53	4	0
130	140	10	8	0	710	720	54	0	0
140	150	11	4	0	720	730	54	12	0
150	160	12	0	0	730	740	55	8	0
160	170	12	12	0	740	750	56	4	0
170	180	13	8	0	750	760	57	0	0
180	190	14	4	0	760	770	57	12	0
190	200	15	0	0	770	780	58	8	0
200	210	15	12	0	780	790	59	4	0
210	220	16	8	0	790	800	60	0	0
220	230	17	4	0	800	810	60	12	0
230	240	18	0	0	810	820	61	8	0
240	250	18	12	0	820	830	62	4	0
250	260	19	8	0	830	840	63	0	0
260	270	20	4	0	840	850	63	12	0
270	280	21	0	0	850	860	64	8	0
280	290	21	12	0	860	870	65	4	0
290	300	22	8	0	870	880	66	0	0
300	310	23	4	0	880	890	66	12	0
310	320	24	0	0	890	900	67	8	0
320	330	24	12	0	900	910	68	4	0
330	340	25	8	0	910	920	69	0	0
340	350	26	4	0	920	930	69	12	0
350	360	27	0	0	930	940	70	8	0
360	370	27	12	0	940	950	71	4	0
370	380	28	8	0	950	960	72	0	0
380	390	29	4	0	960	970	72	12	0
390	400	30	0	0	970	980	73	8	0
400	410	30	12	0	980	990	74	4	0
410	420	31	8	0	990	1,000	75	0	0
420	430	32	4	0	1,000	1,100	80	0	0
430	440	33	0	0	1,100	1,200	85	0	0
440	450	33	12	0	1,200	1,300	90	0	0
450	460	34	8	0	1,300	1,400	95	0	0
460	470	35	4	0	1,400	1,500	100	0	0
470	480	36	0	0	1,500	1,600	105	0	0

Table of Rates of *Ad Valorem* Fees leviable on the institution of suits.

வியாச்சியத்தோகையின்மேல் கட்டவேண்டிய கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு விபர ஜாபிதா.

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.			வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிறதொகைக்கு மேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.		
ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.	ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.
1,600	1,700	110	0	0	12,000	12,500	550	0	0
1,700	1,800	115	0	0	12,500	13,000	565	0	0
1,800	1,900	120	0	0	13,000	13,500	580	0	0
1,900	2,000	125	0	0	13,500	14,000	595	0	0
2,000	2,100	130	0	0	14,000	14,500	610	0	0
2,100	2,200	135	0	0	14,500	15,000	625	0	0
2,200	2,300	140	0	0	15,000	15,500	640	0	0
2,300	2,400	145	0	0	15,500	16,000	655	0	0
2,400	2,500	150	0	0	16,000	16,500	670	0	0
2,500	2,600	155	0	0	16,500	17,000	685	0	0
2,600	2,700	160	0	0	17,000	17,500	700	0	0
2,700	2,800	165	0	0	17,500	18,000	715	0	0
2,800	2,900	170	0	0	18,000	18,500	730	0	0
2,900	3,000	175	0	0	18,500	19,000	745	0	0
3,000	3,100	180	0	0	19,000	19,500	760	0	0
3,100	3,200	185	0	0	19,500	20,000	775	0	0
3,200	3,300	190	0	0	20,000	21,000	795	0	0
3,300	3,400	195	0	0	21,000	22,000	815	0	0
3,400	3,500	200	0	0	22,000	23,000	835	0	0
3,500	3,600	205	0	0	23,000	24,000	855	0	0
3,600	3,700	210	0	0	24,000	25,000	875	0	0
3,700	3,800	215	0	0	25,000	26,000	895	0	0
3,800	3,900	220	0	0	26,000	27,000	915	0	0
3,900	4,000	225	0	0	27,000	28,000	935	0	0
4,000	4,100	230	0	0	28,000	29,000	955	0	0
4,100	4,200	235	0	0	29,000	30,000	975	0	0
4,200	4,300	240	0	0	30,000	32,000	995	0	0
4,300	4,400	245	0	0	32,000	34,005	1,015	0	0
4,400	4,500	250	0	0	34,000	36,000	1,035	0	0
4,500	4,600	255	0	0	36,000	38,000	1,055	0	0
4,600	4,700	260	0	0	38,000	40,000	1,075	0	0
4,700	4,800	265	0	0	40,000	42,000	1,095	0	0
4,800	4,900	270	0	0	42,000	44,000	1,115	0	0
4,900	5,000	275	0	0	44,000	46,000	1,135	0	0
5,000	5,250	285	0	0	46,000	48,000	1,155	0	0
5,250	5,500	395	0	0	48,000	50,000	1,175	0	0
5,500	5,750	305	0	0	50,000	55,000	1,200	0	0
5,750	6,000	315	0	0	55,000	60,000	1,225	0	0
6,000	6,250	325	0	0	60,000	65,000	1,250	0	0
6,250	6,500	335	0	0	65,000	70,000	1,275	0	0
6,500	6,750	345	0	0	70,000	75,000	1,300	0	0
6,750	7,000	355	0	0	75,000	80,000	1,325	0	0
7,000	7,250	365	0	0	80,000	85,000	1,350	0	0
7,250	7,500	375	0	0	85,000	90,000	1,375	0	0
7,500	7,750	385	0	0	90,000	95,000	1,400	0	0
7,750	8,000	395	0	0	95,000	1,00,000	1,425	0	0
8,000	8,250	405	0	0	1,00,000	1,05,000	1.450	0	0
8 250	8,500	415	0	0	1,05,000	1,10,000	1,475	0	0
8,500	8,750	425	0	0	1,10,000	1,15,000	1,500	0	0
8,750	9,000	435	0	0	1,15,000	1,20,000	1,525	0	0
9,000	9,250	445	0	0	1,20,000	1,25,000	1,550	0	0
9,250	9,500	455	0	0	1,25,000	1,30,000	1,575	0	0
9,500	9,750	465	0	0	1,30,000	1,35,900	1,600	0	0
9,750	10,000	475	0	0	1,35,000	1,40,000	1,625	0	0
10,000	10,500	490	0	0	1,40,000	1,45,000	1,650	0	0
10,500	11,000	505	1	0	1,45,000	1,50,000	1,675	0	0
11,000	11,500	520	0	0	1,50,000	1,55.100	1,700	0	0
11,500	12,000	535	0	0	1,55000	1,60,000	1,725	0	0

Table of Rates of *Ad Valorem* Fees leviable on the institution of suits.

வியாச்சியத்தோகையின்மேல் கட்டவேண்டிய கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு விபர ஜாபிதா.

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியாண கட்டணம்.			வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிறதொகைக்குமேற்பட்டு,	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியாண கட்டணம்.		
ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.	ரூ.	ரூ.	ரூ.	அ.	ப.
1,60,000	1,65,000	1,750	0	0	2,90,000	2,95,000	2,400	0	0
1,65,000	1,70,000	1,775	0	0	2,95,000	3,00,000	2,425	0	0
1,70,000	1,75,000	1,800	0	0	3,00,000	3,05,000	2.450	0	0
1,75,000	1,80,000	1,825	0	0	3,05,000	3,10,000	2,475	0	0
1,80,000	1 85,000	1,850	0	0	3.10,000	3.15,000	2,500	0	0
1,85.000	1,90,000	1,875	0	0	3,15,000	3,20,000	2,525	0	0
1,90,000	1,95,000	1,900	0	0	3:20,000	3,25,000	2,550	0	0
1,95,000	2,00,000	1,925	0	0	3,25,000	3,30,000	2.575	0	0
2,00,000	2,05,000	1,950	0	0	3,30,000	3.35,000	2,600	0	0
2,05,000	2 10,000	1,975	0	0	3,35,000	3,40,000	2,625	0	0
2,10,000	2,15,000	2,000	0	0	3,40,000	3,45,000	2,650	0	0
2,15,000	2,20,000	2,025	0	0	3,45,000	3,50,000	2,675	0	0
2,20,000	2,25,000	2,050	0	0	3,50,000	3,55,000	2,700	0	0
2,25,000	2,30,000	2,075	0	0	3,55,000	3,60,000	2,725	0	0
2,30,000	2,35,000	1,100	0	0	3,60,000	3,65,000	1,750	0	0
2,35,000	2,40,000	2,125	0	0	3,65,000	370,000	2,775	0	0
2,40 000	2,45,000	2,150	0	0	3,70,030	3,75'000	2,800	0	0
2,45,000	2,50,000	2,175	0	0	3,75,000	3,80,000	2,825	0	0
2,50,000	2,55,008	3,200	0	0	6,80,000	3,85,000	2,850	0	0
2,55,000	2,60,000	2,225	0	0	6,85 000	3,90,000	2,875	0	0
2,60,000	2,65,000	2.250	0	0	3,90,000	3,95,000	2,900	0	0
2,65,000	2,70,000	2.275	0	0	3,95,000	4,00,000	2,925	0	0
2,70,000	2,75,000	2 300	0	0	4,00,000	4,05,000	2,950	0	0
2,75,000	2,80,000	2'325	0	0	4,05,000	4,10,000	2,975	0	0
2,80 000	2,85,000	2,350	0	0	4,10,000		3,000	0	0
2,85,000	2,90,000	2,375	0	0					

GOVERNMENT NOTIFICATION.

கவர்ன்மெண்டு.

விளம்பரம்.

(ஆகஸ்டுமீ 2தியே 24-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

5. வியாதியினாலோ வேறே அவசரமான கார ாத்தினாலோரெஜிஸ்ட்ரார் இரண்டுதினத்திற்கு மேற் டத் தம்முடைய வேலையைச் செய்யக்கூடாதவரா ருக்கிற விஷயத்திலே, டெப்டி தாசில்தாரு டய அந்தஸ்தையாவது அவரது அந்தஸ்துக்கு மற்பட்ட அந்தஸ்தையாவதுடைய அதிசமீபத்தி ள்ள ரெவினியு உத்தியோகஸ்தருக்கு அவர் அந் ச் சங்கதியைத் தெரிவிக்கவேண்டும். அந்த த்தியோகஸ்தர் ரெஜிஸ்ட்ராருடைய அலுவல்களைச் சய்யவேண்டும்; இந்தப்படி அங்காமியாக நியமிக் ப்படும் யாதொரு நபர் இந்த ஆக்ட்டின் காரியங் ளுக்காகவும் இந்த விதிகளின் காரியங்களுக்காகவும் ரஜிஸ்டராராயிருப்பவராக எண்ணப்படுவார்.

6. 1-வது 2-வது நமூனாக்களின்படி இருக்க வண்டிய ரெஜிஸ்ட்டர்களை, ஒவ்வொரு சவுரவரு ம் முடிந்தபிறகு பன்னிரண்டுமாதம் வரையில் ரஜிஸ்டரார் தம்வசத்தில் வைத்திருக்கவேண்டும்; அதன்பிறகு, பிரஸ்தாபகிராமம் எவ்விடத்திலிருக் கிறதோ அந்த டிவிஷனுக்காகவுள்ள ஸப் ரெஜிஸ்ட ரார் ஆவ் அஷ்யூரன்ஸ் என்னும் உத்தியோகஸ்தரி டத்தில் அவைகளை வைத்திருக்கவேண்டும்; அவர் அவைகளைத் தம்முடைய ஆபிஸில் பைசல்பண்ணி வைத்திருக்கவேண்டும். ஸப் ரெஜிஸ்டரார் ஆவ் அஷ்யூரன்ஸ் என்னும் உத்தியோகஸ்தர் தாமே ரெஜி ஸ்டராராயிருந்தால் அவர் தம்முடைய ஆபிஸிலேயே அந்த ரெஜிஸ்ட்டர்களை வைத்திருக்க வேண்டும்; 17-வது பிரிவின்படி அவைகளிலிருந்து எக்ஸ்டராக்ட் எடுத்துக்கொடுக்கவும் அது சரியென்று உறுதி மொழி கூறவும் வேண்டிய உத்தியோகஸ்தர் அவரே யாவார் கிராமப்பெரியதனக்காரராவது கர்ணமாக வாவதிருக்கிற ரெஜிஸ்டரார் வசத்தில் அந்த ரெஜிஸ் ட்டர்களிருக்கும்போது 17-வது பிரிவின்படி அவைக ளிலிருந்து எக்ஸ்டராக்ட் எடுத்துக்கொடுக்கவும் அது சரியென்று உறுதிமொழிகூறவும் வேண்டிய உத்தி யோகஸ்தர்-அந்த கிராமம் பெரியதனக்காரராவது கணிதராவது யாருக்குக் கீழ்ப்பட்டவரோ அந்த தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரராவார். ரெஜிஸ்ட்டர்களை ஸப் ரெஜிஸ்டரார் ஆவ் அஷ்யூர ஸ்ன் என்னும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பியபிறகு 17-வது பிரிவின்படி அவைகளிலிருந்து எக்ஸ்டரா க்ட் கொடுக்கவும் அது சரியென்று உறுதிமொழி கூறவும் வேண்டியவர் அந்த உத்தியோகஸ்தரேயா வார்.

7. ஜனனங்களைக் குறித்த ரெஜிஸ்ட்டர்களிலாவது மரணங்களைக்குறித்த ரெஜிஸ்ட்டர்களிலாவது காணப்படும் சகல எழுத்துப்பிழைகளையும் திருத்த வேண்டியது எப்படியென்றால்.—(பிரதமத்தில் செய்யப்பட்ட பதிவு விளங்கும்படி) அதன்மீது நெடுக ஒருவரியிழுத்து அதற்குமேல் நூதனமாய் எழுத வேண்டியதை எழுதவேண்டும்; ரெஜிஸ்ட்ரார் அந்தப் பிழையைக்கண்டுபிடித்தால் அவரே அதற்குத் தம்முடைய பெயர் முதற்குறிப்பெழுத்துக்களையும் தேதியையும் போடவேண்டும்; பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர் அப்பிழையைக் கண்டுபிடித்தால் அந்த உத்தியோகஸ்தரும் ரெஜிஸ்ட்ராரும் மேற்கண்டபடி செய்யவேண்டும். ஆனால், பிரதமபதிவுக்குப் பிறகு ஒருவருஷத்திற்கு மேற்பட்டு டிவிஷனல் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டாலன்றி மற்றப்படி, இந்த விதியின் பிரகாரம் எந்தப்பதிவையும் திருத்துவது கூடாது.

8. இறந்து பிறக்கிற குழந்தையின் விஷயத்திலும், தன் ஜனனம் ரெஜிஸ்டராவதற்கு முன் இறந்துபோகிற குழந்தையின் விஷயத்திலும், ஜனனத்தை ஜனனரெஜிஸ்ட்டரிலும் மரணத்தை மரணரெஜிஸ்ட்டரிலும் ரெஜிஸ்டரார் பதியவேண்டும்.

9. முன்னமே ரெஜிஸ்ட்டர் செய்யப்படாத சகல ஜனனமரணங்களையுங் குறித்து 15-வது பிரிவின்படி ரெஜிஸ்ட்டர் செய்வதற்காகச் சங்கதி தெரிந்துகொள்வதில் ரெஜிஸ்டராருக்கு உதவிபண்ணுவது ஆக்ட் எதற்கு வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு யூனியன் அல்லது வேறே விஸ்தீர்ணத்தில் வேலைசெய்கிற சகல கிராம உத்தியோகஸ்தர்கள், கிராம ஊழியக்காரர்கள், ஆகிய இவர்களுடைய கடமையாகும். அப்படிப்பட்ட மரணங்கள் அல்லது ஜனனங்களைக்குறித்துச் சங்கதி தெரிவிக்கக் கட்டுப்பட்டவர்கள் சரியானகாலத்தில் சங்கதி தெரிவிக்கத்தவறினால் ஆக்டின் 18-வது பிரிவின்படி தண்டனைக்குள்ளாவார்களென்று ஷை கிராம உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும்வேண்டும்.

10. ரெஜிஸ்டரார் ரெஜிஸ்ட்டர் செய்யவேண்டிய எவ்வித ஜனனம் அல்லது மரணங்களைக் குறித்தும் சரியானகாலத்தில் அவருக்குத்தெரிவிக்கப்படாமலிருந்து அவைகளைப்பற்றி அவர் சங்கதிதெரிந்துகொண்டால், அந்தந்த மாதம் 15-ம்தேதியிலும் கடைசிதேதியிலும் 6-ம் நம்பர் நமூனாப்பிரகாரம் அப்படிப்பட்ட விஷயங்களைக்குறித்து ஒரு ஜாபிதா தயார் செய்து, ஆக்ட்டில் செய்யச்சொல்லியிருக்கிறதுபோல் சங்கதி தெரிவிக்கத்தவறினவர்கள்மீது 18-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட பாகத்தின்படி பிராதுகொண்டுபோகவேண்டுமா என்பதைக்குறித்து உத்தரவு பெறும்பொருட்டு ஷை ஜாபிதாவைத் தாசில்தாரருக்கு (அல்லது டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டர் உத்தரவு செய்கிறபட்சத்தில் டிவிஷனல் ஆபிஸருக்கு) அனுப்பவேண்டும். சங்கதி தெரிவிக்கத்தவறினவரென்று தோற்றுகிற நபரிடத்திலிருந்து சங்கதி தெரிவிக்காமைக்குக் காரணத்தையும் கிராமப்பெரியதனக்காரர் கையெழுத்து சகிதமாகத் தெரிவிக்கவேண்டிய ஷராக்களையும், ரெஜிஸ்ட்ரார் கூடுமானால் கேட்டறிந்து ஷை ஜாபிதாவில் எழுதிக்கொண்டு, தம்முடைய சொந்த அபிப்பிராயங்களையும் உடன்சேர்த்து அந்த ஜாபிதாவில் கையெழுத்து செய்து தேதி போடவேண்டும். கிராமப்பெரியதனக்காரரே ரெஜிஸ்ட்ராராயிருந்தால், ரெஜிஸ்ட்ராருடைய ஷராக்களுக்கென்று விட்டிருக்கிற கலத்தில் மாத்திரம் தம்முடைய ஷராக்களை அவர் எழுதவேண்டும். 18-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) குறிப்பட்ட பாகங்களின்படி செய்யப்படும் எவ்வித குற்றங்களின் விவரங்களையும் ரெஜிஸ்ட்ரார் ஒரு ரிபோர்ட் ரூபமாகத் தாசில்தாரருக்கு அனுப்பவேண்டும்,

7-வது பிரிவின்படி எக்ஸ்ட்ராக்ட்வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களுக்காகச் செலுத்தவேண்டிய கட்டணங்களையும் தேடிப்பார்ப்பதற்காகச் செலுத்தவேண்டிய கட்டணங்களையும் கோர்ட்கட்டணமுத்திரை ஸ்டாம்ப் ரூபமாகச்செலுத்தவேண்டும்.

கிராம நமூனா நம்பர் 19-A, 19-B, நமூனா 12, 3, 4, 5, 6, பாரங்கள் தாசில்தாரால் சப்ளை செய்யப்படும்.

நம்பிக்கை மோசம்.

சென்னை ஜியார்ஜ் டௌனில் கம்பள வியாபாரஞ் செய்யும் பன்னிபியா என்பவர் லண்டினிலிருந்து வரவேண்டிய 58 கம்பள மூட்டைகளுக்கு கூடின கப்பல் சத்தம் ரூ 173 யை தம்முடைய குமஸ்தா முன்னுசாமி என்பவனிடம் கொடுத்து மெசர்ஸ் பின்னி அண்டு கம்பெனியில் செலுத்தச் சொன்னார். ஷை குமஸ்தா செலுத்தாமல் பணத்தை சொந்த உபயோகப்படுத்திக்கொண்டு வெளியூருக்கு ஓடிப்போய் விட்டான். நிகழ் மீ 5வ இவன் ரேணிகுண்டாவிற்கு சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் அரஸ்ட் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டான். ஜியார்ஜ் டௌன் பிரசிடென்சி மேஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரித்து இவனுக்கு 6 மாத கடினக்காவல் தண்டனை விதித்தார்.

காலஞ் சென்றார்.

ராமநாதபுரம் ஜெமீனுக்கு திவான் டிரஸ்ட்டியாகவிருந்த மிஸ்டர் வெங்கட்ட ரெங்கஅய்யர் நிகழ் செப்டம்பர் மீ 2வ மதுரையில் இறந்து போய் விட்டார்; இவர் நீதி இலாக்காவில் 30 வருஷம் உத்தியோகம் பார்த்து சப் ஜட்ஜியாக விருந்து 15 வருஷத்திற்கு முந்தி பென்ஷன் பெற்றுக்கொண்டார்.

ஒரு கட்டுப்பாடு.

முக்த்தியார் என்றால் பிரைவேட் பிளீடர் என்று தார்பரியம். பங்காளத்தில் கிருஷ்ணநகர் என்னும் நகரிலுள்ள முக்த்தியார்களெல்லாம் டிப்டி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ராமேசுவரின் கோர்ட்டிற்குப் போகிறதில்லை என்று கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஷை டிப்டி மாஜிஸ்டிரேட் ஒரு விர்த்தாபிய முகத்தியாரை பகிரங்கமான கோர்ட்டில் வாயில் வந்தபடி பேசி நிந்தித்தது இதற்குக் காரணமாம்.

ஒரு ஆபீசரின் குறை.

பர்மாவில் ஆப்காரி இலாக்கா, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பார்வையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அயன் போலீஸ் இலாக்காவிலுள்ள சூப்பிரண்டுகள் இன்ஸ்பெக்டர்கள் ஆப்காரி இலாக்காவிற்கு நியமிக்கப்படுகிறார்களாம். அப்போது அயன் போலீஸ் இலாக்காவிற்கு போதுமான ஆபிசர்கள் இல்லாமல் போலீஸ் வேலைகள் தாமதப்படுவதுமன்றி சரிவர நடக்கிறதில்லையாம், பிரிடிஷ் இந்தியாவிற்குள் பர்மாவில் மட்டும் ஆப்காரி இலாக்கா போலீஸ் டிபார்ட்டுமெண்டுனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறதாம். இரண்டையும் பிரிக்கும் பரியந்தம் போலீஸ் டிபார்ட்டுமெண்டு சரிவர நடைபெறாதென்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் சொல்லுகிறார்.

A SUMMARY OF HINDU LAW.

(All rights reserved.)

ஹிந்து லாச் சுருக்கம்.

CHAPTER I.

அத்தியாயம்—1.

ஹிந்துலாவின் உற்பத்தி ஸ்தானங்கள்.

1. இந்தியாவிலுள்ள ஆரியவம்சத்தாரின் சட்டம் ஹிந்துலா வென்பது. தற்கால அனுஷ்டானத்திலிருக்கும் ஹிந்து லாவிற்கு சுருதிகள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், வியாக்கியானங்கள், பண்டையகால அனுஷ்டானங்கள், ஹைகோர்ட்டுத் தீர்ப்புகள், கவர்ன்மெண்டு சட்டங்கள் மூல உற்பத்தி ஸ்தானங்கள்.

குறிப்பு.

ஹிந்துலாவை ஆங்கிலத்தில் எழுதியிருப்பவர்கள் ஹிந்துலாவானது யாருக்குப் பொருந்தினது அல்லது யாரைப்பரிபாலிக்கக் கூடியதென்கிற விஷயத்தைக் குறித்து பலவிதமான பேதப்பட்ட அபிப்பிராயங் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஹிந்துலா எழுதியிருக்கும் மிஸ்டர் மேயின் அவர்கள், பொதுவாய் இந்து மதம் என்று சொல்லப்படும் மதத்தை தழுவி வருகிறவர்களுக்குப், இந்து மதத்தை பகிரங்கமாய்ப் புறக்கணிக்காதவர்களின் வம்சத்தார்களுக்குப், இந்து மதத்தைத் தவிர வேறே மதத்தைத் தழுவாதவர்களுக்கும், இந்து ஜனசமுகத்திலிருந்து விலக்கப்படாதவர்களுக்கும் இந்துலா பொருந்துமென்று நிரணயத்திருக்கிறார்.

மதமும் சட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாமல் இரண்டும் புணைந்து கொண்டிருக்கும்படியான மதத்தில் ஒருவன் சேர்ந்தால் அவன் அந்த மதத்தால் ஆக்கியாப்பிக்கப் படும் சட்டத்திறகு கட்டுப்பட்டவனவன்; உதாரணமாக கிறிஸ்தவர்கள் தங்களுடைய மனைவி ஜீவதிசையிலிருக்கும் போது வேறொரு விவாகம் செய்யக்கூடாதென்பது கிறிஸ்தவமதக் கொள்கை அதாவது கிறிஸ்தவமதச் சட்டம். ஒரு இந்து அல்லது முகமதியன் தன்மதத்தை விட்டு கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தால் மேற்சொல்லப்பட்ட கிறிஸ்தவமதச் சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டும் (1). புதிதாய்ச் சேரும்மதம் அம்மாதிரியான நிபந்தனை ஒன்றும் விதிக்காவிடில் அம்மதத்தில் சேர்ந்தவன் இஷ்டமிருந்தால் முன் மதச்சட்டத்தையே தழுவிவரலாம். அல்லது அவனுக்கு இஷ்டமிருந்தால் புதிய மதச் சட்டத்தைத் தழுவி வரலாம். (2) வார்சு ஆகட் பாசாகி அமுலுக்கு வந்த பிறகு இந்து வார்சுச்சட்டத்தால் சுதேச கிறிஸ்தவர்கள் பரிபாலிக்கப் படுகிறதில்லை (3); ஆனால் வார்சு ஆகட் அமுலுக்கு வருவதற்கு முன் பிறந்த சுதேச கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இந்து லாப் பிரகாரம் கிடைக்கவேண்டிய பாத்தியதைகளை இழந்துவிடமாட்டார்கள். (4) ஐரோப்பியர்களும் இந்து ஸ்திரிகளும் கலந்ததால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் எப்போதும் இந்துக்களாகவே பாவிக்கப்பட்டு இந்துலாவால் பரிபாலிக்கப்பட்டு வருகிறார்கள். (5)

முகமதிய மதமும் முகமதியச் சட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாமல் இரண்டும் பின்னிக் கொண்டிருக்கிறபடியால் வேரு மதத்தை அனுஷ்டித்து வந்த ஒருவன் முகமதிய மதத்தைச் சேர்ந்தால் அவன் முகமதிய சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டும் (6) ஒரு இந்து வானவன் முகமதிய மதத்தைச் சேர்ந்தால் அவன் சேரும் பரியந்தம் அவனுக்குள்ள சொத்துக்கள் இந்து லாப் பிரகாரம் சேரவேண்டிய வார்சுகளுக்குச் சேரும். முகமதிய மதத்தில் சேர்ந்த பிறகு அவன் சம்பாரிக்கும் சொத்துக்கள் முகமதிய சட்டப்படி பரிபாலிக்கப்படும்.

வேரே பிரத்தியேகமான அனுஷ்டானம் அல்லது வழக்க மிருப்பதாக ருஜுப்பட்டாலொழிய ஜயினர்கள் இந்துலாவால் பரிபாலிக்கப் படுகிறார்கள். (7)

2. இந்தியாவில் பலர் ஸ்மிருதிகளுக்கு பலவிதமான தார்பரியம் கொடுத்து வியாக்கியானம் எழுதியிருக்கிறார்கள். ஆதலால் இப்போது இந்தியாவில் ஐந்து விதமான அனுஷ்டானங்கள் கொள்கைகள் ஊர்ச்சிதத்திலிருக்கின்றன. அவையாவன:—
(1) கௌரியா அல்லது பங்காளதேசக்கொள்கை,
(2) மிதிலைதேசக்கொள்கை, (3) காசிதேசக்கொள்கை,
(4) மகராஷ்டிரம் அல்லது பம்பாய் தேசக்கொள்கை,
(5) திராவிததேச அல்லது சென்னபட்டணக்கொள்கை. ஐந்தாவது கொள்கை யாகிய திராவித தேசக்கொள்கையை திராவித தேசக்கொள்கை என்றும், கர்நாடக தேசக்கொள்கை என்றும், ஆந்திர தேசக்கொள்கை என்றும் மூன்று உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வியாக்கியானம் பிரபலமான ஆதாரமாக எண்ணப்படுகின்றது.

3. பெங்காளதேசக்கொள்கைக்கு தாயபாகம் தாயகிரமசங்கிரகம, தாய தத்வம், மிதாக்ஷரம், விவாதர்னவசேது, விவாதபங்கர்னவா, தத்தசந்திரிகை ஆகிய இந்த வியாக்கியானங்கள் முக்கியமான ஆதாரங்கள்.

குறிப்பு.

தாயா கிரமசங்கிரஹம் என்பது ஸ்ரீகிருஷ்ணதார் கலங்காரா என்பவரால் செய்யப்பட்டது. அதை மிஸ்டர் P. வின்ச் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். ரெகுநந்தன என்பவரால் எழுதப்பட்ட தாயதத்துவம் கோபாலசந்திர சர்க்காரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது. விவாதர்னவ சேது என்பது இந்தியாவிற்கு முதல் கவர்னர் ஜனரலாக விருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் உத்திரவின்பேரில்தொடுக்கப்பட்டது. அதை மிஸ்டர் N. B. ஹால்எட் என்பவர் மொழி பெயர்த்திருக்கிறார். சர் வில்லியம் ஜோன்ஸ் வேண்டுகோளிற்கிணங்க ஜகந்நாத தார்க்க பஞ்சணன என்பவர் விவாதபான்கர்னவா என்பதைத் தொகுத்தார். இதை மிஸ்டர் H. T. கோல்புரூக் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியிருக்கின்றனர். கூவரா என்பவரால் செய்யப்பட்டதத்தசந்திரிகை ஸ்வீகார விஷயங்களைக்குறித்துப் பேசும் புத்தகம். இது மிஸ்டர் J. C. C. சதர்லாண்டு என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

---

(1) சிக்கின்னர் v ஓர்ட் 14 மு. இ. அ 309 & 324 (Skinner v Ode 14 M. I. A. 309, 324)

(2) அப்ரகாம் v அப்ரகாம் 9. மு. இ. அ. 242 (Abraham v Abraham M 9. M. I. A. 2 .

(3) பொன்னுசாமி v துரைசாமி இ லா. ரி. 2 சென் 209 Ponnusawmi v Dorasawmi I. L. R. 2 Mad 209.

(4) சர்க்கிஸ் v புரோ சொன்னமாயி இ. லா. ரி. 6 கல் 794 (Sarkies v Prossonomoyee I. L. R. 6 Cal 794)

(5) மயானபோயி v உத்தாராம் 8 மு. இ. அ. 400 (Mayana Boyee v Ootaram M. I. A.

(6) முகமது சிடிக் v ஹாஜி ஆமட் இ. லா. ரி 10. பம் 1. (Mahomed Sedick v Haji Ahmed I. L. R. 10 Bom 1.)

(7) சோட்டர்ய்லால் v சம்முலால் 6 இ. அ 15; (Chotoy Lal v Chumu Lal. 6 I. A. 15)

4. மிதிலைதேசக்கொள்கைக்கு, விவாதசிந்தாமணி, வியவகார சிந்தாமணி, சிந்தாமணி, ரத்னாகரம், விவாதசந்திரா, தத்தகமிமாம்சம் ஆகிய இவைகள் பிரபலமான ஆதாரங்கள்.

குறிப்பு.

விவாத சிந்தாமணியும், வியவகார சிந்தாமணியும் வச்சஸ்பதி மீஸ்ரா என்பவரால் எழுதப்பட்ட புத்தகங்கள். இவைகள் மிதிலையில் முக்கியமான பிரமாணங்களாக கருதப்பட்டு வருகின்றன. விவாத சிந்தாமணியை பிரசொன்குமார் தாகூர் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். விவாத சந்திரா என்பது லக்ஷமிதேவி என்னும் பண்டிதியால் எழுதப்பட்டது. தத்தகமிமாம்சம் என்பது நந்தபண்டிதரால் எழுதப்பட்டது; ஸ்வீகாரத்தைப்பற்றி பேசுகின்றது. இப்புத்தகம் மிஸ்டர் J. C. C. சதர்லாண்டு என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது.

5. காசிதேசக்கொள்கைக்கு மிதாக்ஷரா, நிரணயசிந்து, வீரமித்திரோதயம், விவாத தாண்டவம், தத்தகமிமாம்சம் ஆகிய இவைகள் முக்கியமான மேற்கொள்களாயிருக்கின்றன.

குறிப்பு.

கமலாகராவால் செய்யப்பட்ட நிரணயசிந்து காசிக்கொள்கைக்கு முக்கிய பிரமாணமாயிருப்பதுமன்றி மகராஷ்டிர கொள்கைக்கும் பிரமாணமாக கருதப்பட்டு வருகின்றது. ருமகிருஷ்ண பத்தா என்பவரின் புத்திரராகிய கமலாகரா என்பவரால் செய்யப்பட்ட விவாத தாண்டவம் என்பது பங்காளக் கொள்கையை ஆதரிக்கும் வியாக்கியான கர்த்தர்களுக்கு விரோதமாக எழுதிய விஜநேஸ்வரா என்பவரின் கோட்பாடுகளை ஆதரித்துப்பேசுகின்றது.

6. மகராஷ்டிர தேசக்கொள்கைக்கு, மிதக்ஷரா, வியவகார மாயூகா, வீரமித்திரோதயம், தத்தசந்திரிகை ஆகிய இவைகள் பிரமாணங்கள்.

குறிப்பு.

மிதக்ஷரா மகராஷ்டிர தேசத்திலும் வடகன்னடத்திலும் ரெத்தன கிரியிலும் பிரதமமான பிரமாணமாக கருதப்பட்டு வருகின்றது வியவகார மாயூகா என்பது மாயூகா என்கிற பொது நாமம் பூண்ட பன்னிரண்டு பிரபந்தங்களில் ஒன்று. இந்த மாயூகா பிரபந்தங்கள் பத்த நீலகண்டரால் செய்யப்பட்டன. இவர் மகராஷ்டிர வம்சத்தராய் காணப்பட்ட போதிலும் இவருடைய குடும்பம் காசி க்ஷேத்திரத்தில் குடியேறியிருந்தது.

7. திராவிடகொள்கைக்கு மிதாக்ஷரம், ஸ்மிருதிசந்திரிகை, தாயவிபாகம், சரஸ்வதி விலாசம், வியவகார நிரணயா, தத்தகசந்திரிகை ஆகிய இவைகள் பிரமாணங்கள்.

குறிப்பு.

ஸ்மிருதி சந்திரிகா என்பது தேவன்ன பட்டா என்பவரால் 1250வது ஹூல் செய்யப்பட்டது. திராவிடதேசத்தில் மிதாக்ஷராவிற்கு அடுத்தபடி இது மேற்கோளாகக்கொள்ளப்படுகின்றது. இதை 1567ம்ஹூ சென்னை மிஸ்டர் T. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்றனர்.

"தாயவிபாகம்" என்பது பதினான்காம் நூற்றுண்டின் பின் பாகத்தில் பராசரஸ்மிருதியின் பேரில் மாதவாச்சாரியாரால் எழுதப்பட்ட வியாக்கியானம். மாதவாச்சாரியார் என்பவர் விஜயநகர வம்ச அரசர்களில் பலருக்கு பிரதான மந்திரியாகயிருந்தவர். சரஸ்வதி விலாசம் என்பது பதினான்காம் நூற்றுண்டில் ஒரிசா தேசத்திற்கு அரசர்களாக யிருந்தவர்களுள் ஒருவராகிய பிரதாபருத்ரதேவே என்பவரால் செய்யப்பட்டது.

இதை பால்க்ஸ் பாதிரியார் 1881ம் ஹூம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். வியவகார நிரணயா என்பது பதினாறாம் நூற்றுண்டின் அந்தத்தில் வசித்து வந்த தமிழ் தேச சுதேசியாகிய வரத ராஜா என்பவரால் எழுதப்பட்டது.

8. தக்ஷண கலியாணபுர விஜநேஸ்வர யோகிஸ்வரரால் யஜனவால்க்கிய ஸ்மிருதியின் பேரில் எழுதப்பட்ட வியாக்கியானமாகிய மிதாக்ஷரம் பங்காளத்தைத் தவிர இந்தியா முழுதிலும் முக்கியமான பிரமாணமாக கருதப்பட்டு வருகின்றது.

9. ஜிமுதவாகனு என்பவரால் செய்யப்பட்ட தர்ம ரத்நாவில் தாயபாகா என்கிற ஒரு அத்தியாயமிருக்கிறது. இது உரிமை வழிகளையும் சுதந்தரங்களையும் பற்றிப்பேசுகின்றது. இந்த அத்தியாயத்தை பெங்காளத்தார் முக்கிய பிரமாணமாக கருதுகின்றார்கள்.

10. மிதாக்ஷரமும் தாயபாகாவும் பல முக்கியமான விஷயங்களில் பேதப்படுகின்றன.

முக்கியமான வித்தியாசங்களாவன.

தாய பாகப்பிரகாரம்

1. உத்தரகிரியையில் கொடுக்கப்பட்ட தானத்தின் எண்ணிக்கையும் விதமும்வார்சு பாத்தியதை ஸ்தாபிக்கின்றன.

2 புத்திரனுய் பிறந்த காரணத்தை முன்னிட்டு தகப்பன் சொத்தை அடைய பாத்தியதை உண்டாகமாட்டாது.

3. பிதிரார்ஜித சொத்திற்கு தகப்பனே சர்வ சுதந்தரதாரி

4. பிதிரார்ஜித சொத்துக்களைத் தகப்பன் தன் இஷ்டப்படி பராதீனம் செய்யலாம்.

5. தகப்பன் உயிருடனிருக்கும்போது, பாகம் பிரித்துக்கொடுக்க கட்டாயப்படுத்த புத்திரனுக்குச் சுதந்தரம் கிடையாது.

6. அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களும் மற்ற பங்காளிகளும் சமமான பாகமுடையவர்களாக கருதப்படுகிறார்கள்.

7. பாகஸ்தர்கள் (சகோதரர்கள்) சொத்தைப் பிரிவினை செய்து கொள்ளாமலிருக்கும் போதே தங்களுடைய பாகத்தைப் பராதீனம் செய்யலாம் உயில் எழுதிவைக்கலாம்.

8. அவிபக்த்த குடும்பத்தில் சந்ததி யில்லாத ஒரு விதந்து தன்னுடைய புருஷன் பாகத்தை அடைய சுதந்தரமுடையவள். அப்பாகத்தை பிரித்து அவளிடம் கொடுக்கும்படியாக கட்டாயப்படுத்த அவளுக்கு சுதந்தரமுண்டு.

மிதாக்ஷரப் பிரகாரம்.

(1) சமீபபந்துத்துவம் வார்சு பாத்திதையை ஸ்தாபிக்கிறது.

(2) புத்திரனுய் பிறந்த காரணத்தாலேயே தகப்பன் சொத்தை அடைய பாத்தியம் உண்டாகிறது.

(3) பிதிரார்ஜித சொத்துக்களில் தகப்பனும் புத்திரனும் சமபாத்தியதை உடையவர்கள்.

(4) பிதிரார்ஜித சொத்துக்களை தகப்பன் தன் இஷ்டப்படி பராதீனஞ் செய்யக்கூடாது.

(5) தகப்பன் ஜீவதிசையிலிருக்கும் போது பாகம் பிரித்துக் கொடுக்கக் கட்டாயப்படுத்த புத்திரனுக்கு சுதந்தரமிருக்கிறது.

(6) பாகப்பிரிவினையாகும் பரியந்தம ஒரு பாகஸ்தன் தனக்கு குடும்பச் சொத்தில் இவ்வளவுபாகந்தானிருக்கிறதென்று சொல்லமுடியாது. குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு சொத்திலும் பாகஸ்தனுக்கு பாகமிருக்கிறது. ஒரு பாகஸ்தன் இறந்து போனல் மற்ற பாகஸ்தர்களுக்கு அதிக பாகம் கிடைக்கும். ஒரு பாகஸ்தன் பிறந்தால் பிறகு குறைந்து போகும்.

(7) பாகப்பிரிவினை யாகாமலிருக்கும் போது பாகஸ்தர்கள் தங்கள் பாகத்தை பராதீனமுஞ் செய்யக்கூடாது உயிலும் எழுதிவைக்கக் கூடாது.

(8) அவிபக்த குடும்பததில் சந்ததி யற்ற ஒரு விதந்து புருஷன் பாகத்தை அடைய பாத்தியமுடையவளல்ல. அவளுடைய பாகம் இதற பாகஸ்தர்களைச் சேரும்:—

11. சன்மார்க்க சாஸ்திரங்களுக்குப் பொருந்தாத காரியங்கள் நடந்தேறி விட்டால், அவைகள் நடந்துபோனதை முன்னிட்டு ஒப்புக்கொள்ளப் படுகின்றன. ஆனல் அவைகள் சட்டத்திற்கு விரோதமாயிருந்தால் ஒப்புக்கொள்ளப்படமாட்டா.

குறிப்பு.

தென் இந்தியாவில் பிராமணர்களுள் சகோதரியின் புத்திரியையாவது குமாரத்தியின் புத்திரனையாவது ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் வழக்கம் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. வைத்தினுதா v அப்பூ இ. லா. ரி. 9 சென் 44. (I. L. R. 9. Mad 44.)

பம்பாயில் பிராமணர்களுக்குள் புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. பகீர்திபாய் v ருதாபாய் இ. லா. ரி. 3. பம் 298 (Bhagirthibai V Radhabai I. L. R. 3 Bom 298)

காசியில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சித்தாந்தத்தின் பிரகாரம ஒரு விதந்து தன்னுடைய புருஷனுடைய வியக்தமான சம்மதமின்றி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அப்படி எடுத்துக்கொள்வாளேயானல் அது சட்டவிரோதம், கோர்ட்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். துளசிராம் v பிகாரிலால். இ. லா. ரி. 12. அல. 329 (Tulasi Ram v Behari Lal I L. R. 12 All 329.)

காசியில் அனுஷடித்து வரும் இந்து லாப்பிரகாரம் ஏகபுத்திரனை ஸ்வீகாரம் கொடுப்பது இந்து லாவிற்கு விரோதம். இருந்தபோதிலும் அப்படி ஸ்வீகாரம் கொடுக்கப்பட்டால் அது செல்லுபடியுள்ளது. கோர்ட்டார் அங்கிகரித்துக் கொள்ளுகிறார்கள். புல்பென்ச்சு தீர்மானம். பெனிபிரசாத் v ஹார்டெபிபி இ. லா. ரி. 14 அல 67 (Beni Prasad v Harda Bibi I. L. R. 14 All 67.)

CHAPTER II

CUSTOMARY LAW.

அத்தியாயம் II

அனுஷ்டானச்சட்டம்.

12. இந்துலாவிற்கு வழக்கம் அல்லது அனுஷ்டானமே ஆதாரம். வழக்கம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு விரோதமாயிருந்தாலும் வழக்கமே ஊர்ச்சிதத்திலிருந்து வந்ததென்று ருஜுப்பட்டால் அதுவே கோர்ட்டாரால் ஒப்புக்கொள்ளப்படும்.

குறிப்பு.

வழக்கங்கள் அனுஷ்டானங்கள் வேதம் உற்பத்தியாவதற்கு முந்தியிருந்தனவென்றும்,

காலத்திற்குக்காலம் ஸ்மிருதிகளை எழுதிய பெரியோர்கள் அக்காலத்திலிருந்த அனுஷ்டானங்களையே சட்டமாக ஸ்மிருதிகளில் எழுதினதாகச் சொல்லப்படுகின்றது. அனுஷ்டானங்களில் நல்லவையுமிருக்கின்றன, கெட்டவையுமிருக்கின்றன. புராதீனமாயும், ஊர்ச்சிதமாயும் புத்திக்குப் பொருந்தினதாயுமுள்ள அனுஷ்டானங்கள் தான் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படும். புத்திக்குப் பொருந்தாத அனுஷ்டானங்கள் பண்டைய காலத்தனவாயிருந்தாலும் அவைகள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா.

14-மூ. இ. அ. 570-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் ருமலக்ஷமி V சிவாநந்தா கேசிலும் பண்டையகால அனுஷ்டானத்தையே பிரதானமாக பாவித்து தீர்ப்பு சொல்லவேண்டுமென்று பிரிவு கவுன்சில் ஜட்ஜிகள் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

இந்து லாப்பிரகாரம் தீர்ப்புக்கொடுக்க கடமைப்பட்டிருக்கும் நியாதிபதிகள் தகரார் பட்ட வழக்கம் அல்லது கோட்பாட்டைப்பற்றி இந்து சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன வென்பதை அவ்வளவா கவனிக்ககூடாது. அந்த வழக்கம் ஆதிகாலமுதல் அனுஷ்டானத்திலிருந்து வந்திருக்கிறதா என்று கவனித்து தீர்ப்பு சொல்லவேண்டும். ஏன் எனில் இந்து லாப்பிரகாரம் ஆதிகால வழக்கமே சாஸ்திரக் கட்டளையை விட மிக முக்கியமானதாக பாவிக்கப்படுகிறது (I)

13. நல்ல மனசாக்ஷிக்கும், நியாயத்திற்கும், தர்மத்திற்கும் பொருந்தி சட்டக் கட்டளையைப் போல் வேறான்றி ஆதிகாலமுதல் ஊர்ச்சிதத்திலிருந்து தொன்றுதொட்டு வியாபித்து வரும் அனுஷ்டானங்கள் கோர்ட்டாருடைய சம்மதத்தையும மதிப்பையும் பெருகின்றன. ஆனல் அவைகளில் எந்தெந்த அனுஷ்டானங்களை கவர்ன்மெண்டார் ஆக்ட்டுகள் மூலமாய் ரத்து செய்திருக்கிறார்களோ அவைகள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா.

14. இதனடியில் சொல்லப்பட்டிருக்கும் அனுஷ்டானங்கள் கவர்ன்மெண்டாரால் ஆகட்டுகள் மூலமாய் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.:—

1. உடன் கட்டை ஏறுதல் 1830-வது ஹூத்திய 1-வது ரெகுலேஷனல் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

2. அடிமை 1843ம் ஹூததிய 5-வது ஆக்ட்டால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

3. ஜாதியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் தாராளமாய் மதத்தைத் தழுவிவரலாமென்று 1850-வது ஹூத்திய 21-வது ஆகட் ஆக்கியாபிக்கிறது, அவர்களுக்கு வார்சு பாத்திதையுமுண்டு.

4. ஒரு ஹிந்து புருஷன் அல்லது ஒரு ஹிந்து மனைவி கிறிஸ்தவமதத்தில் சேர்ந்தால் அம்மதத்தி

---

1. மதுரை கலெக்ட்டர் v முத்து ருமலிங்கா 12 மூ இ. அ. 397.

Collector of Madura v Muthu Rumalinga 12. M. I. A. 397.

ற்கு தன்னுடன் கூடவர இஷ்டப்படாத முறையே மனைவியினின்றும் புருஷனினின்றும் விவாகத்தை பிரித்துக்கொள்ளலாமென்று 1866ம் ளுபத்திய 21-வது ஆகட் கூறுகிறன்து.

5. பிரிடிஷ் இந்தியாவிலும் அதற்குச் சொந்தமான சமஸ்தானங்களிலும் கோர்ட் ஆப்வார்ட் சார் பார்வையிலும் அல்லது கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கார்ட்டியன் பார்வையிலுமிருந்து வருகிற மைனர்கள் 21-வது வயது முடிந்தவுடன் மேஜராகிறார்களென்றும் மற்றபடி 18-வயது முடிந்தவுடன் மேஜர் ஆகிறார்களென்றும் 1875ம் ளுபத்திய 9-வது ஆகட் கூறுகின்றது.

6. ஹிந்து விதந்துகள் புனர் விவாகம் செய்துகொண்டால் செல்லத்தக்க தென்றும் அவ்விவாகத்தால் ஜெனிக்கும் குழந்தைகளுக்கு வார்சு பாத்தியமுண்டென்றும் 1856ம் ளுபத்திய 15-வது ஆக்ட் ஒப்புக்கொள்ளுகின்றது.

7. 12-வயதிற் குட்பட்ட ஒரு கன்னிகையுடன் ஒருவன் புணர்ந்தால் அவன் துராக்கிரத புணர்ச்சி யென்னும் குற்றத்திற்குள்ளாவான் என்று 1891ம் ளுபத்திய 9-வது ஆக்ட் எச்சரிக்கின்றது.

8. 1870ம் ளுபத்திய 21-வது ஆக்ட்டாகிய இந்து உயில் ஆகட் (Hindu Will's Act) கீழ்பங்காள மாகாணங்களிலும், பம்பாயிலும், சென்னபட்டணத்திலும் இந்துக்கள், ஜயினர்கள் சீக்கர்கள், பௌத்த மதஸ்தர்கள் ஆகிய இவர்கள் செய்யும் உயில்விஷயங்களை ஒழுங்கு படுத்தி பேசுகின்றது.

15. ஒரு ஜில்லாவில் வசித்து வரும் ஒரு ஹிந்து குடும்பம் அந்த ஜில்லாவில் ஊர்ச்சிதத்திலிருக்கும் அனுஷ்டானத்திற்கும் இந்து சட்டத்திற்கும் கட்டுப்பட்டதாகக் கருதப்படும்.

குறிப்பு.

ஒவ்வொரு ஹிந்துவும் அவன் வசித்து வரும் மாகாணத்தில் அனுஷ்டிக்கப் பட்டு வரும் இந்து சட்டத்திற்கும் கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டவனாக கருதப்படுகிறான். அது அவனுடைய சொந்தச் சட்டமாகிறது அவன் எங்கே சென்றாலும் அவன் சட்டமும் அவன் பின்னால் செல்லுகின்றது. இந்தியாவில் அவனவன் அனுஷ்டித்து வரும் இந்து சட்டத்தால் நியாயம் பகரப்படுகின்றது.

ஆனால் அவனுந்த குடியேறிய தேச சட்டத்தால் நியாயம் பரிபாலிக்கப்படவேண்டுமானால் அவன் குடியேறியதேசச் சட்டங்களையும் அனுஷ்டானங்களையும் தழுவி நடந்துவந்தான் என்று ருஜுப்படுத்த வேண்டும்.

எந்த விதமான இந்து லாவையும் எவ்விதமான அனுஷ்டானங்களையும் ஒரு ஹிந்துவானவன் அனுஷ்டித்து வந்தான் என்பதற்கு தகுந்த ருஜுவிருந்தாலொழிய அவன் வசிக்கு மாகாணத்தில் எவ்விதமான இந்துலா அனுஷ்டானத்திலிருக்கிறதோ அதற்குக் கட்டுப்பட்டவனாவன் (1.)

16. ஒரு ஹிந்து குடும்பம் ஒரு ஜில்லாவை விட்டு வேறொரு ஜில்லாவில் குடியேறினால் அதனுடைய சட்டத்தையும் அனுஷ்டானங்களையும் அதனுடன் கொண்டுபோகின்றது.

1 ராமதாஸ் சந்திரதேசியா இ. லா. ரி. 20. கல். 409. Ramadas v Chandra Dassia I. L. R. 20 Cal 409.

17. வேறு ஜில்லாவில் குடியேறும் ஒரு ஹிந்து குடும்பம் தங்களுடைய சுதேச அனுஷ்டானங்களையும் சட்டத்தையும் அனுஷ்டித்து வந்தாலும் வரலாம். இல்லேல் புதிதாய் குடியேறியதேச சட்டத்தையும் அனுஷ்டானங்களையும் தழுவி வந்தாலும் வரலாம். ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு குடியேறி வந்த ஒரு குடும்பம் தன்னுடைய சுதேசத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் மத சம்பந்தமான ஆசாரங்களையும் கிரியைகளையும் அனுஷ்டித்து வந்தால் சுதேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வார்சு சட்டத்தையே அனுஷ்டித்து வருகிறதென்று எண்ணப்படும். (2.)

18. ஹிந்துலாவிற்கு கட்டுப்பட்ட ஒருவன் தான் பிரத்தியேகமாக ஒரு வழக்கத்தை அனுஷ்டித்து வருவதாகவும் ஹிந்துலா தன்னைக்கட்டுப்படுத்தமாட்டாதென்று சொன்னால், அப்படி அவன் சட்டத்திற்கு மாறுதலாயுள்ள அனுஷ்டானத்தை அனுஷ்டித்து வருவதை ருஜுப்படுத்துவது அவனுடைய கடமையாயிருக்கிறது .(3)

19. விலக்கப்பட்டிருக்கிறவும், சன்மார்க்கத்திற்கு விரோதமாயுள்ளவும், ஜன சமூக ஏற்பாட்டிற்கு விரோதமாயுள்ளவும், இந்துலாவிற்கு விரோதமாயுமுள்ள அனுஷ்டானங்கள் கோர்ட்டாருடைய சம்மதத்தைப் பெறமாட்டா. (4)

வர்த்தமானக் குறிப்புகள்.

ஒரு ஜேயில் பரவை

ஜேப்ஸ் எட்வர்ட்டி ரேப்பர் என்னும் ஒருயுரேஷியன் தன்னுடைய தங்கையின் குழந்தை கையில் போட்டிருந்த பொன் காப்பை திருடினதற்காக ரெங்கூன் செஷன்ஸ் கோர்ட்டாரால் 10 வருஷ தீபாந்திர தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான். இவன் இதற்கு முன் நாலு முறை ஜெயிலுக்குப் போய் வந்தவன். கோர்ட்டார் இவனை இம்முறை தண்டிக்கும் போது "நான் போலீஸ் ஆபிசர் மாதிரி ஆள் மாராட்டம் செய்த குற்றத்திற்காக 5 வருஷ கடினக்காவல் தண்டனை அடைந்து ஜெயிலிலிருந்தப்போது தான் வெளியே வந்தேன் ஆதலால் என்மேல் இரக்கம் பாராட்ட வேண்டுமென்று" சொன்னான்.

நரசோர காபுரா

கல்கத்தாவில் சுக்குப்பொடிக்காரர்கள் குழந்தைகளுக்கு சுக்குப்பொடி போட்டு மடக்கி இழுத்துக்கொண்டு போய் விடுவதாக ஒரு பெரிய காபுரா உண்டாயிருக்கின்றது. இதனால் ரோட்டில் போகிற சாமானிய மனிதனைக்கூட சுக்குப் பொடிக்காரன் என்று கூவி ஜனங்கள் கும்பு கூடி அடித்து அமளி செய்து வருகிறார்கள். உள்ளபடி எந்தக் குழந்தையும் காணாமற்போனதைக் காணோம்.

கொலை செய்ய எத்தனித்தது

ரங்கூனிலிருக்கும் பெங்காள பாங்கியில் இதற்கு முன் உத்தியோகமாயிருந்த ஹார் கோவிந்து என்பவன் ஷை பாங்கி ஏஜண்டை கொலை செய்ய வேண்டுமென்கிற கருத்துடன் அவர் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டு காயப்படுத்தினான். இந்தக் கேஸ் விசாரணையிலிருக்கிறது.

2. ருச்சுப்பெட்டி v ருஜந்தர் 2 மூ. இ. அ. 132. Rutchepetty v Rajunder 2 M. I. A. 132.

(3) பனிந்திரா v ருஜேஸ்வரர், லா. ரி. 12. இ. அ. 72. Fanindra v Rajeswar 12. L. R. I. A. 72.

4. கணபதிபக்தா. v பாரதஸ்வாமி. இ. லா. ரி. 17. சென்னை. 222. (I. L. R. 17. Madras. 222.)

MISCELLANEOUS SUITS.

சீவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

பிராமிஸரி நோட் கேஸ்.

வாதி .—சுல்கச்சண்ட்டு.

பிரதிவாதி:— அட்மினிஸ்டேட்டர் ஜெனரல்.

கேசின் விபரம் :—கர்னாட்டிக் வம்ச கடைசி நவாப்பின் விதந்து காயரன் நிசாபீகம் சாகேப் என்பவர். இந்த அம்மாள் இறந்துபோன பிறகு இவருடைய எஸ்டேட் அட்மினிஸ்டேட்டர் ஜெனராலுடைய மானேஜ்மெண்டிலிருந்து வருகின்றது. இந்த அம்மாள் உயிருடனிருக்கும்போது 1902-ம் ளு செப்டம்பர்மீ 12உ வருஷத்திற்கு 100-க்கு 24 வட்டி மேனிக்கு ரூ 5,500-க்கு ஒரு பிராமிசரி நோட் வாதிக்கு எழுதிக்கொடுத்து கடன் வாங்கினதாகவும் அதற்காக முதலுக்கு ரூ 1400-ம் வட்டிக்கு ரூ 886-ம் அந்த அம்மாள் செலுத்தினதாகவும் ஆகவே இப்போது வட்டியும் முதலும் கூடின ரூ 6314 வாதிக்குச் சேரவேண்டுமென்று வாதி தாவா கொண்டுவந்திருக்கிறார். அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் தாக்கல் செய்திருக்கும் எழுத்து வாக்குமூலம்:—தாவாப் புரோநோட் காலஞ்சென்ற பீகம் சாகேப் எழுதிக்கொடுத்ததாக நான் கேள்விப்படவில்லை. அந்த அம்மாள் அதற்காக சொல்லி வைக்கவுமில்லை. அவர் கவர்ன்மெண்டாரிடமிருந்து வருஷத்திற்கு ரூ 7000-ம் உபகாரப்பணம் பெற்றுக்கொண்டு வந்தார். ஆதலால் அவருக்கு கடன் வாங்கவேண்டிய அவசியம் யாதொன்றுமில்லை. அவர் இறந்துபோகும்போது ரூ 37000 ரொக்கம் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். தாவாத் தொகையை அவர் கடன் வாங்கியதாக ருஜுப்படுத்தவேண்டிய கடமை வாதியைப் பொறுத்தது.

அடியிற்கண்ட இஷுக்கள் கோறப்பட்டன.

(1) இறந்துபோன பீகம் சாகேப்பால் தாவா பிராமிசரி நோட் எழுதிக் கொடுக்கப்பட்டதா? மேற்படி பிராமிசரி நோட்டிற்குச் செல்லாயிருப்பதாகச் சொல்லப்படும் தொகை அவரால் செலுத்தப்பட்டதா? வாதிக்கு ஏதேனும் தொகை சேரவேண்டியதாயிருந்தால் அது எவ்வளவு?

லாயர்கள் :—அட்வோகேட் மிஸ்டர் M. A. திருநாராயணச்சாரியாரும் மெஸர்ஸ் ஷார்ட் அண்டு பீயூஸ் என்கிற சொலிசிட்டர் கம்பெனியார்களும் வாதி தரப்பிற்கு ஆஜரானார்கள். பிரதிவாதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஷாமீயரும் அட்டர்னி மிஸ்டர் A. E. ரென்கான்ட்டரும்.

கேசின் விசாரணை :—வாதி தரப்பிற்கு 6 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். கோர்ட்டார் பிரதிவாதியை விசாரிக்கவேயில்லை. நாளது செப்டம்பர்மீ 14உ தீர்ப்பு சொல்லப்பட்டது.

தீர்ப்பு :—வாதி தம்முடைய கேசை ருஜுப்படுத்தவில்லை. வாதி தரப்பில் இரண்டு முகமதியர்கள் இறந்துபோன பீகம் பிராமிசரி நோட்டில் கையெழுத்து வைத்தபோது பார்த்ததாக சாக்ஷியம் சொல்லுகிறார்கள். அதை நம்பக்கூடியதாயில்லை. வாதியின் ஏஜண்டு பீகம் கையெழுத்து போட்டதை தாம் பார்க்கவில்லையென்று சொல்லுகிறார். இப்படி சாக்ஷியம் பேதப்படுகிறபடியால் முதல் இஷு வாதிக்கு விரோதமாயிருக்கிறது. ஆதலால் இந்தக் கேஸ் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

ஜட்ஜி:—சிப்ஜஸ்டிஸ் மிஸ்டர் ஆர்னால்ட் ஒயிட்

அட்மினிஸ் ட்ரேட்டர் ஜெனரலுடைய அதிகாரம்.

கேசின் விபரம்:—இந்தக்கேசில் வாதி கோபாலசெட்டி என்பவர். மூன்றுபேர்கள் பிரதிவாதிகள். P. V. இராஜமாணிக்க முதலியார் என்பவர் இறந்து போனபின்பு அவருடைய புத்திரராகிய இந்தவியாச்சியத்தின் முதல் பிரதிவாதி அச்சமயம் மைனராயிருந்தபடியால் 1899 வது ளும் அட்மினிஸ் டேட்டர் ஜெனரல் பரிபாலிக்கும் அதிகாரம் பெற்றுக்கொண்டு எஸ்டேட்டை மானேஜ்மெண்டுசெய்து வந்தார். மைனர் 1904 வது ளும் நவம்பர்மீ 19உ மெஜாரிட்டி அடைந்தார். அன்றையத்தினமே தம்முடையதகப்பனுடைய எஸ்டேட்டைச்சேர்ந்த இரண்டு வீடுகளை மூன்றாவது பிரதிவாதியினிடம் அடமானம்வைத்து ரூ 5000 வாங்கிவிட்டார். இப்படிதாம் அடமானம் வைத்திருப்பதை அட்மினிஸ்டேட்டர் ஜெனராலுக்கு நோட்டீஸ் மூலியமாய் தெறிவித்தார். 1905 வது ளும் எப்பிரல்மீ ம் 26உ கோபாலசெட்டிஎன்கிற இக்கேசின்வாதி ஷை அடமான வீடுகளில் ஒன்றை ரூ 2500க்கு முதல் பிரதிவாதியிடமிருந்து கிறையசாசனம் பெற்றுக்கொண்டார். ஷை வீட்டை அடமானம் வைத்துக்கொண்டவருக்கு ஷை கிறையத்தொகையிலிருந்து ரூ 2000ம் கொடுத்து விட்டார். இது இப்படியிருக்க அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் தாம் இதுகாலபரியந்தம் இந்த எஸ்டேட்டை மானேஜ்மெண்டு செய்து வந்த தற்காக தமக்கு சேரவேண்டிய கமிஷனை வசூலித்துக்கொள்ளும் பொருட்டு மேலே கிறையஞ்செய்ததாகச்சொல்லப்பட்ட வீட்டையே 1905வது ளு ஆகஸ்ட்மீ 2வது பிரதிவாதிக்கு கிறையஞ்செய்துவிட்டார். கிறையத்தொகையைப்பெற்று தம்முடைய கமிஷனை உளவடைத்துக்கொண்டார். மீதப்பட்டதொகையை முதல் பிரதிவாதியிடம் சேர்ப்பித்துவிட்டார். இதன் பிறகு வாதி தாம் அந்தவீட்டைவாங்கியிருப்பதாக அட்மினிஸ்டேட்டர் ஜெனராலுக்கு நோட்டீஸ் கொடுத்து வீட்டிற்குச்சொந்தக்காரரையும் வீட்டை அடமானம் வைத்துக்கொண்டவரையும், வீட்டை அட்மினிஸ்டேட்டர் ஜெனரலிடமிருந்து கிறையம் பெற்றவரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

இந்த வியாஜ்ஜியத்தில் கோர்ட்டாரால் ஆலோசனை செய்யப்பட்ட விஷயங்களாவன:—

(1) இந்த எஸ்டேட் அட்மினிஸ்டேட்டர் மானேஜ்மெண்டிலிருந்ததா?

(2) அப்படியிருந்திருந்தால் இந்த வீட்டை அவர் கிறையஞ்செய்ய கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டியது அவசியமா?

(3) 2 வது பிரதிவாதிக்கு அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் வீட்டைக்கிறையசாசனம் செய்யும்போது அந்த எஸ்டேட் அவருடைய மானேஜ்மெண்டிலிருந்ததா?

சாக்ஷி விசாரணையில் அந்த எஸ்டேட் அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் மானேஜ்மெண்டிலிருந்த தென்றும் அப்படியாயிருக்கும் காலத்தில் இந்தவீடு அட்மினிஸ்டேட்டர் ஜெனராலால் விற்பனைசெய்யப்பட்டதென்றும் தெறியவந்ததென்று கோர்ட்டாரால் முடிவு செய்யப்பட்டது.

வீட்டைவிற்பதற்கு அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டியது அனாவசியமென்றும் முடிவுசெய்யப்பட்டது. ஆதலால் அட்மினிஸ்டேட்டர்பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியம் தள்ளுபடிசெய்யப்பட்டது.

வாதி தம்முடைய பிரியாதில் தாம் கிரையம்பெற்றதை சரியான கிரையமென்று கூறவிடில் தம்முடைய கிரையத் தொகையை 1,3 பிரதிவாதிகள் கொடுக்கும்படி டிக்கிரிகொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்திருந்தார். இந்தக்கோறிக்கை விஷயமாக கோர்ட்டார் ஆலோசனை செய்ததில் வாதிக்கும் 3 வது பிரதி வாதிக்கும் யாதொரு ஒப்பந்தசம்பந்தமும் கிடையாதபடியால் முன்றுவது பிரதிவாதியை இந்த வியாஜ்ஜியத்திற்கு கட்டுப்படுத்தமுடியாதென்று 3 வது பிரதிவாதி மேல் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

தீர்ப்பு:--தாவா வீட்டின் கிரையமாகிய ரூ 2500ம் இந்த வியாஜ்ஜியத்தின் செலவையும் முதல் பிரதிவாதி வாதிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் இந்தவியாஜ்ஜியத்திற்கு முதல் பிரதிவாதியின் கோணலான நடவடிக்கை காரணமாயிருப்பதால் அவர் இதரபிரதிவாதிகளின் செலவையும் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

ஜட்ஜிகள்:—ஜட்டிஸ் சர்ரால்ப் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

ஜாமீன் பேரில் விட்டச்செய்து கோண்டமனு

கேசின் விபரம்:— இது தென்கன்னடத்தில் நடந்த கேஸ். தென்கன்னட ஜில்லாக்கோர்ட்டைச் சேர்ந்த அமீனு குட்டியார், அரசு என்பவரின் சொத்துக்களை ஜப்த்தி செய்ய அறிக்கை கொண்டு போனுர். அரசு, ஜப்த்தி செய்வதற்கு கோர்ட்டார் கொடுத்திருக்கும் அறிக்கையை காண்பிக்கும் படி கேட்டார். அதை காண்பிக்காமல், அமீனுடன் கூட வந்த 20 பேர்கள் அரசை நிந்தித்துப்பேசி அடித்து அவருடைய வீட்டிற்குள் புகுந்து ரூ 700 பொருமான சொத்துக்களை அள்ளிக்கொண்டு போய் விட்டார்கள். இந்தக் குற்றத்திற்சாக இந்த இருபது பேர்களும் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு பலவிதமாக தண்டிக்கப்பட்டார்கள்.

இப்படி தண்டனை அடைந்தவர்கள் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் மூலியமாய் ஹைகோர்ட்டில் கிரிமினல் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

செஷன்ஸ் ஜட்ஜி கேசின் சங்கிரகத்தை அசசர்களுக்கு எடுத்துக்கூறின போது கி. பு. கோ. 309-வது பிரிவின்படி ஜூரி மென்னுடைய கடமை இன்ன தென்றும் அசசர்களுடைய கடமை இன்ன தென்றும் எடுத்துச் சொல்ல வில்லை என்றும் அப்படிச் சொல்லாமலிருந்தது சட்ட விரோத மென்றும் மிஸ்டர் ஆடம் எடுத்துப்பேசினுர்.

கோர்ட்டார் அதை ஒத்துக்கொண்டு அப்பீலை அங்கீகரித்துக்கொண்டார்கள். தண்டனை அடைந்து ஜெயிலிலிருப்பவர்களை ஜாமீன்பேரில் விடவேண்டு மென்று மிஸ்டர் ஆடம் மனு செய்துக் கொண்டார்.

உத்திரவு:— ஒவ்வொருவரிடமிருந்து ரூ 500 ஜாமீனும், ரூ 250 க்கு வேறு இரண்டு ஜாமீன்களும் பெற்றுக்கொண்டு கைதிகளை விடலாமென்றும் உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்.—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

அமீனுவின் அதிகாரம்

கேசின் விபரம்:—மதுரை டி. மு. கோர்ட்டில் சுந்திரமய்யர் என்பவர் பேரில் ஒரு டிக்ரி எற்பட்டிருந்தது. அந்த டிக்ரி நிறை வேற்றப்பட்டு ஷை அய்யரைப்பிடிக்க ஒரு வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. அந்த வாரண்டை டி. மு. கோர்ட்டார் டி. சாமுவேல் பிள்ளை என்கிற அமீனுவிடம் ஒப்புவித்திருந்தார்கள். அவர், டிக்கிரி பெற்றவரின் சகோதரனுடனும், டிக்கிரி பெற்றவரின் குமாரனுடனும் சென்று ஷை அய்யரை அரஸ்ட் செய்யப் போனுர்கள். அய்யரை 1905-ம் ஸ்ரீ எப்பிரல் மீ 22வ பகல் 9-மணிக்கு ஒரு தெருவில் அரஸ்ட் செய்தார்கள். அரஸ்ட் செய்து அவருடைய மனுேபிஷடத்திற்கு விரோதமாக டிக்கிரி பெற்றவர் வீட்டிற்குக் கொண்டு போனுர்கள்.

அவ்விடத்தில் அய்யரை டிக்கிரி பெற்றவரின் சகோதரன் வாயில் வந்தபடி திட்டினுன். அந்த வீட்டுத் திண்ணையில் இரும்பு கம்பிகளால் ஒரு அறை தடுக்கப்பட்டிருந்தது. டிக்கிரி பெற்றவரின் சகோதரனுடைய தூண்டுதல் பேரில் அமீனு அய்யரை அந்த அறையில் தள்ளி அடைத்து கதவைப் பூட்டி சாவியை டிக்கிரி பெற்றவரின் குமாரன் கையில் கொடுத்தார். அமீனு இரவு $7\frac{1}{2}$-மணிக்கு வந்து கதவைத் திறந்து அய்யரை ஆற்றுக்கு அழைத்துக்கொண்டு போய் திரும்பியும் கொண்டு வந்து அறையில் அடைத்து கதவைப்பூட்டி விட்டார். மறுநாள் பகல் 2-மணிவரையில் அய்யர் அந்த அறையிலேயே அடைக்கப்பட்டிருந்தார். அதன் பிறகு அய்யரை அமீனு நாஜர் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனுர். அய்யர் தம்மை அக்கிரமமாய் அடைத்து வைத்திருந்ததை நாஜருக்கு புகார் செய்ய நாஜர் அமீனுவை மிகவும் கோபித்துக் கொண்டு அய்யரை ஒரு கோர்ட் சேவகன் வசம் ஒப்புவித்து அவருக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்யும்படி சொன்னுர். அய்யர் தம்மை அக்கிரமமாக அடைத்து வைத்திருந்த குற்றத்திற்காக அமீனுவின் பேரிலும் டிக்கிரி பெற்றவரின் சகோதரன் பேரிலும், புத்திரன் பேரிலும் மதுரை டௌன் இரண்டாவது கிளாஸ் மேஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றஞ் சாட்டினுர். அவர் இந்தக்கேசை விசாரணை செய்தார்.

அமீனு தரப்பிற்கு ஆஜரான வக்கீல், அமீனு அய்யரை அடைத்து வைத்திருந்தது நியாய விரோதமாக மாட்டாதென்றும் எப்பிரல் மீ 22 23, 24வ களில் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கோர்ட்டு மூடப்பட்டிருந்த படியால் அய்யர் ஓடிப்போகாமல் பந்தோபஸ்து செய்து வைக்கப்பட்டிருந்தாரென்றும், இந்தக் காரியத்தில் தக்க வசதிகளைச் செய்து கொடுக்க டிக்கிரி பெற்றவர் கவலையுள்ளவரான படியால் டிக்கிரி பெற்றவர் வீட்டில் அடைத்துவைக்கப்பட்டாரென்றும் அய்யர் ஓடிப்போய்விட்டால் அமீனு ஜவாப்தாரியென்றும் இதற்காக அவர் அடைத்துவைக்கப்பட்டிருந்தாரென்றும் வாதித்தார்.

அய்யருக்கு ஆஜரான வக்கீல், அமீனு நல்ல எண்ணத்துடன் அய்யரை அடைத்து வைத்ததை ருஜூப்படுத்துவது அவருடைய கடமை யென்றும் அதை அமீனு ருஜூப்படுத்தவில்லை என்றும் திடீரென்று ஒரு மனிதனை அடைத்து வைக்க டி. மு. விற்குக்கூட அதிகாரம் கிடையாதென்றும் அப்பேற் கொற்ற அதிகாரம் அமூலை அமீனு நடத்தினது சட்ட விரோதமென்று வாதித்தார்.

அமீனு அரஸ்ட் செய்து கோர்ட்டிற்குக் கைதியை அழைத்துக்கொண்டு போகலாமே தவிர அவனை அடைத்து வைக்க அமீனுவிற்கு அதிகாரம் கிடையாதென்று நியாயஞ் சொல்லி குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் கோர்ட்டார் ரூ 200 அபராதம் விதித்தார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிற்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

அவர் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்து விட்டார்.

அபிஷியல் முறையில் இந்தக்கேசின் கட்டுகளைப் பார்வையிட்ட பப்ளிக் பிராசிக்கியூட்டர் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கீழ்க்கோர்ட்டு தண்டனையை ரத்து செய்தது நியாயமல்லவென்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:— அமீனு தரப்பிற்கு ஹைக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் P. R. சுந்திரமய்யர் அவர்களும் மற்ற இருவர் தரப்பிற்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்களும் ஆஜரானுர்கள்.

தீர்ப்பு:— இன்னும் தீர்ப்பு சொல்லப்படவில்லை.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

ஜாமீன்பேரில் விடும்படி செய்துகோண்ட மனு.

கேசின் விபரம் :—திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டார் தூத்துக்குடி V. P. வர்த்தக கம்பெனியின் பாகஸ்தராகிய சிதம்பரம் பிள்ளையை (Forgery) சிருஷடனை கையெழுத்து செய்த குற்றத்திற்கு உட்படுத்தி அவருக்கு ஒரு வருஷ கடுங்காவல் விதித்தார். இந்த தண்டனைக்கு விரோதமாக ஜகோர்ட் வக்கீல் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர் மூலியமாய் ஹைகோர்ட்டில் கிரிமினல் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் செஷன்ஸ் ஜட்ஜி தீர்ப்பில் பிரஸ்தாப குற்றவாளிக்காக கணக்குப் புத்தகத்தில் அனேகம் பேர் சிருஷடனை கையெழுத்து செய்திருக்கிறுர்களென்று சொல்லியிருக்கிறுர் என்றும் அப்படி யிருந்தும் குற்றவாளியை போர்ஜரி குற்றத்திற்கு உட்படுத்தி தண்டித்திருக்கிறுரென்றும் எடுத்துக கூறினுர். கோர்ட்டார் அப்பீலை ஏற்றுக்கொண்டார்கள்.

இதன்பிறகு வாதியை ஜாமீன்பேரில் விடும்படி ஒரு மனு செய்துக்கொண்டார்.

உத்திரவு :—கைதியிடமிருந்து சொந்த ஜாமீன் ரூ 500ம் வேறு இருவர்களிடமிருந்து அதே தொகைக்கு ஜாமீனும், பெற்றுக்கொண்டு கைதியை விடலாமென்று உத்திரவு செய்திருக்கிறுர்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்,

ஸ்வீகார விவாதக்கேஸ்

வாதி:—சோமசுந்தரராவ்,
பிரதிவாதிகள்.—(1) ரெங்கநாயகி அம்மாள்,
(2) விஸ்வசுந்தரராவ்,

கேசின் விபரம்:—டோடம்பேட்டாறு ஜமீன் என்பது கோதாவரி ஜில்லாவிலிருக்கிறது. இது பாகிக்கப்படாத ஜமீன். இதனுடைய ஜெமீன்தார் 1865-ம்ஸ்ரீ இறந்துபோய் விட்டார். இந்த ஜெமீன்தாருக்கு ஆண்வாரிசில்லை. இரண்டு புத்திரிகளிருக்கிறுர்கள். இந்த இரு புத்திரிகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு புத்திரரிருக்கிறுர். வாதி முதல் புத்திரியின் புத்திரர். 2-வது பிரதிவாதி இரண்டாவது புத்திரியின் புத்திரர். ஜெமீன்தார் இறந்தகாலமுதல் ஜெமீன் அவருடைய விதந்து ரெங்கநாயகி அம்மாள் மானேஜ்மெண்டிலிருந்து வந்தது. 1900-ம் ஸ்ரீ மேற்படி விதந்து தம்முடைய இரண்டாவது புத்திரியின் புத்திரராகிய இந்தகேசின் 2-வது பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார்.

ஆகவே மேற்படி விதந்துவின் ஜேஷ்ட புத்திரியின் குமாரராகிய இந்தக் கேசின் வாதி மேற்படி விதந்து தம்முடைய இரண்டாவது புத்திரியின் புத்திரரை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள விதந்துவின் புருஷனுகிய ஜெமீன்தார் அனுமதி கொடுக்கவில்லை யென்றும் இந்து லாப்பிரகாரம் புத்திரியின் புத்திரனை ஸ்வீகரம் எடுப்பது செல்லமாட்டாதென்றும், தாம் ஜேஷ்ட குமாரத்தியின் புத்திரனுயிருப்பதால் தமக்கு அந்த ஜெமீன் கிடைக்கவேண்டுமென்றும் காக்கிநாடு சப் கோர்ட்டில் மேற்படி விதந்துவையும் ஸ்வீகாரப் புத்திரனையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து 1900-ஸ்ரீ டிசம்பர் மீ தாவா தாக்கல் செய்தார்.

இந்தக் கேசை காலஞ்சென்ற மிஸ்டர் C. G. குப்புசாமி அய்யர் அவர்கள் விசாரணை செய்தார்.

சப் கோர்ட்டு தீர்ப்பு:—புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது இந்து லாப்பிரகாரம் நல்லதல்ல. இந்த ராஜதானியின் வடஜில்லாக்களில் புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது அனுஷ்டானத்திலிருந்து வருகிறதென்பதற்கு ருஜூவில்லை. ஆதலால் ஸ்வீகாரம் செல்லமாட்டாது. இந்த ஜெமீன் வாதியைச் சேரவேண்டு மென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இந்த விசாரணையில் சப் ஜட்ஜி இரண்டாவது புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள காலஞ்சென்ற ஜெமீன்தார் அனுமதி கொடுத்தாரா என்பதைப்பற்றி சாக்ஷி விசாரணை செய்தார். ஆனுல் அதைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை தீர்ப்பில் சொல்லவில்லை.

இந்தத்தீர்ப்புக்கு விரோதமாக பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:—வாதியின் தரப்பிற்கு மிஸ்டர் P. R. சுந்திர அய்யரும், பிரதிவாதிகளின் தரப்பிற்கு மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானுர்கள்.

கேசின் நடவடிக்கை:— மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமென்று அனேக தீர்ப்புகளையும், சாஸ்திர ஆதாரங்களையும் எடுத்துக்காண்பித்தார். புத்திரியின் புத்திரனையும் தமக்கையின் புத்திரனையும் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் வழக்கம் இந்தியா முழுதிலும் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததென்பதற்கும் அனேக தீர்ப்புகளை எடுத்துக் காண்பித்தார்.

உத்திரவு:— [புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது செல்லத்தக்கதா அல்லது செல்லத்தக்கதல்லவா என்கிற அம்சத்தைக் குறித்து கோர்ட்டார் யாதொரு முடிவும் செய்யவில்லை.]

இரண்டாவது புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள ஜெமீன்தார் தம்முடைய மனைவிக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று வாதி சொல்லுகிறுரல்லவா அந்த பாகத்தை முதலில் விசாரணை செய்தால் நலமாயிருக்குமென்று நினைக்கின்றேம். வாதி இதை ருஜூப்படுத்தினுல் மற்ற விஷயங்களைப் பற்றி யோசனை செய்வது அனவசியமாகும். இல்லேல், புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் வழக்கம் வடஜில்லாக்களிலிருக்கிறதா என்று இன்னும் போதுமான அளவில் சாக்ஷியம் சேகரிக்க இந்தக் கேசை கீழ்க்கோர்ட்டிற்கு அனுப்ப வேண்டியதாயிருக்கும். இரண்டாவது புத்திரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள ஜெமீன்தார் தம்முடைய மனைவிக்கு அனுமதி கொடுத்த விஷயத்தைக் குறித்து கீழ்க்கோர்ட்டார் சாக்ஷி விசாரணை செய்திருக்கிறுர்களல்லவா அந்த தஸ்தாவேஜிகளை அச்சிட்ட பிறகு இந்தக் கேஸ் மறுபடியும் விசாரணைக்குக் கொண்டு வரப்படவேண்டு மென்று உத்திரவு செய்திருக்கிறுர்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

கிராமத்தில் கலகம் செய்த கேஸ்.

கேசின் விபரம்:—நடேச நாடானும் இன்னும் மூவர்களும்மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை கையில் வைத்துக்கொண்டு திருச்சினுப்பள்ளி ஜில்லா தாத்தனேடை கிராமத்தில் ஒரு தினம் கலகம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டார்கள். இந்தக் கேசை திருச்சினுப்பள்ளி அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்து 2, 3, 4, குற்றவாளிகளுக்கு தலைக்கு

ரூ 30 அபராதம் விதித்தார். அசிஸ்டெண்ட் மாஜிஸ்ட்டிரேட் 2, 3, 4, குற்றவாளிகளுக்கு ரூ 30 அபராதம் விதித்தபடியால் அவர்கள் அப்பீல் செய்துக்கொள்ள சட்டமிடம் கொடுக்கவில்லை. ஆதலால் முதலாவது குற்றவாளி திருச்சினாப்பள்ளிக்கு செஷன்ஸ்ஜட்ஜிக்கு அப்பீல்செய்துக்கொள்ள முதல் அப்பீல் கோர்ட்டார் அப்பீலை விசாரணை செய்து குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள். பாக்கியுள்ள குற்றவாளிகளையும் அபராதத்தினின்று விடுவிக்கும்படி செஷன்ஸ் கோர்ட்டார் ஹைகோர்ட்டிற்கு சிபார்சு செய்தார்கள்:

தீர்ப்பு:— செஷன்ஸ் கோர்ட்டாருடைய சிபார்சை ஏற்றுக்கொண்டு ஹைகோர்ட்டார் 2, 3, 4, குற்றவாளிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்ட அபராதத்தை வாப்பீஸ் செய்து விடும்படியாக உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

பயிர்களை சேதப்படுத்திய கேஸ்.

வாதி:— பச்சயப்பமுதலி

எதிரிகள்:— அப்பாசாமிமுதலியும்

இன்னும் இருவர்களும்

கேசின் விபரம்:—வாதியும் எதிரியும் தென் ஆர்க்காடு ஜில்லா புதுப்பாளையத்திலிருப்பவர்கள். எதிரிகள் வாதிக்குச் சொந்தமான நிலத்தில் பயிராகி நின்றுக்கொண்டிருந்த பயிர்களை நாசஞ் செய்ததாக இ. பி. கோ. 426-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற குற்றத்திற்கு வாதி எதிரிகள் பேரில் தென் ஆர்க்காடு ஜில்லா சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குற்றஞ் சாட்டினார். இந்தக்கேசை விசாரணை செய்வதற்கு 1906ம் ஞூம் மார்ச்சுமீ 3௳ குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றையத்தினம் வாதியும் ஆஜராகவில்லை. எதிரியும் ஆஜராகவில்லை. சப் மாஜிஸ்டிரேட் கி. பு. கோ. 247-வது பிரிவின்படி எதிரிகளுக்கு சம்மன் சார்வானதா இல்லையா என்பதைக் கூட விசாரிக்காமல் எதிரிகளை விடுதலை செய்து விட்டார். ஆனால் உள்ளபடி எதிரிகளுக்கு சம்மன் சார்வாகவில்லை. இந்தக்கேசின் கட்டுகளை உத்தியோக முறையில் பரிசீலனை செய்த பப்ளிக் பிராசிக்கியூட்டர் சம்மன் சார்வாகாமலிருக்கும் போது சப் மேஜிஸ்டிரேட் எதிரிகளை விடுதலை செய்தது சட்ட விரோதமென்று அபிப்பிராயப்பட்டு ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார். இந்த அப்பீல் நிகழ் செப்டம்பர்மீ 14ம் ௳ விசாரணை செய்யப்பட்டது.

அப்பீல் கோர்ட்டார் தீர்மானம்:—சம்மன் சார்வாகாமலிருக்கும் போது எதிரிகளை விடுவித்தது வீயர் ஸ்லா [Wier's Law of Offences] 2-வது பிரதி 2-வது வால்யூம் 307-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் 1892ம் ஞூத்திய 479-வது கிரிமினல் ரிவிஷன் கேசில் கோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானத்திற்கு விரோதமாயிருக்கிறது என்று பப்ளிக் பிராசிக்கியூட்டர் எடுத்துக் காண்பித்ததை கோர்ட்டார் ஒப்புக்கொண்டு எதிரிகளை விடுதலை செய்ததை ரத்து செய்து இந்தக் கேசை மறுபடியும் பயிலில் எடுத்துக்கொண்டு விசாரணை செய்து சட்டப்படி தீர்ப்பு செய்யும் படியாக ஷை சப் மாஜிஸ்டிரேட்டிற்கு உத்திரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் பென்சன்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

கோரமான இரட்டைக் கொலைக்கேஸ்.

கேசின் விபரம்:— அநந்தபூரில் கொல்லா கன்னபாதப்பா என்பவன் கங்கம்மா என்கிற தன் மனைவியையும், 8 நாள் வயதுள்ள தன்னுடைய ஆண் குழந்தையையும் கொலை செய்ததாகவும் ஒரு மருத்துவச்சியையும், தன் மைத்துனியையும் அடித்து காயப்படுத்தியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு செஷன்ஸ்கோர்ட்டாரால் மரண தண்டனை விதிக்கப்பட்டான். குற்றவாளியின் மனைவி ஒரு ஆண் குழந்தையை பிரசவித்திருந்தாள். பிரசவித்த அறையில் குற்றவாளியின் மைத்துனியும், ஒரு மருத்துவச்சியும் படுத்திருந்தார்கள். பிரசவமான 8-ம் நாள் காலையில் குற்றவாளி அந்த அறைக்குள் புகுந்து கையிலிருந்த ஒரு கோடரியால் தன் மைத்துனியை வெட்டினான். மருத்துவச்சி அவளுடைய சகாயத்திற்காகப் போக அவளையும் அடித்தான். இவர்கள் இருவரும் வெளியே ஓடிப்போய் சகாயத்திற்கு ஆட்களை அழைத்துக்கொண்டு திரும்பினார்கள். திரும்பி வந்து பார்த்த போது சிசு இறந்து கிடந்தது. கங்கம்மாள் கோடரியால் சின்ன பின்னமாய் வெட்டப்பட்டு உதிரத்தில் மெதந்து கொண்டிருந்தாள்.

குற்றவாளி டிபன்சில் தன் மனைவி வேறொருவனுடன் கூடியிருந்ததைப் பார்த்ததாகச் சொன்னான். செஷன்ஸ் ஜட்ஜி, அப்படி அவள் துரோகமாய் நடந்திருந்தாலும் இப்படி இரட்டைக் கொலை செய்வது மகா அக்கிரமமான விஷயமென்று கைதிக்கு மரண தண்டனை விதித்தார். கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான்.

தீர்ப்பு:— கீழ்க்கோர்ட்டு தண்டனை உறுதி செய்யப்பட்டது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

பெண்சாதியை கொலை செய்த கேஸ்.

கேசின் விபரம்:— கிருஷ்ணா ஜில்லாவைச்சேர்ந்த D. வெங்கட்நாராயுடு என்பவன் தன்னுடைய பெண்சாதியைக் கொலை செய்த குற்றத்திற்காகவும், தன்னுடைய மாமியாரைக் கொலை செய்த குற்றத்திற்காகவும் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டான். குற்றவாளியும் அவனுடைய மனைவியும் விவாகமான பிறகு இரண்டு மாதம் சேர்ந்து வசித்தார்கள். பிறகு மனைவியாகிய நரசிம்ம அம்மாள் தாய் வீட்டிற்குப் போய் விட்டாள். திரும்பி வரவில்லை. புருஷன் ஏன் அனுப்பவில்லை என்று அவளுடையபெற்றோரைக் கேட்டதற்கு, கொடுமையாய் நடத்துவதால் அவளை அனுப்பவில்லை என்று சொல்லி விட்டார்கள். சென்ற ஏப்பிரல்மீ 4௳ அந்தப் பெண் தன் தாயாருடன் தன் தாயார் வீட்டுவாசலில் உட்கார்ந்திருந்தபோது குற்றவாளி திடிரென்று போய் மாமியார் கூந்தலைப்பிடித்து இழுத்து கீழே தள்ளி ஒரு கத்தியால் குத்தினான். குற்றவாளியின் மனைவி இவர்களை விலக்க வந்த போது அவளையும் குத்தினான். கூச்சல் கேட்கவே அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் குற்றவாளியைப் பிடித்து போலீசில் ஒப்புவித்தார்கள் குத்துப்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டுபோகப்பட்டார்கள். ஆஸ்பத்திரியில் மனைவி இறந்து போய்விட்டாள் மாமியார் பிழைத்துக் கொண்டாள்.

மரண தண்டனை அடைந்த கைதி பாப்பர் ஹைக்கோர்ட்டில் அப்பீல்செய்து கொள்ள விருப்பமிருக்கிறதென்று சொல்ல கவர்ன்மெண்டார் ஹைக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் நடேசய்யரை குற்றவாளி பக்கம் அப்பீலில் வாதிக்கச் சொன்னார்கள்.

டிபன்சில் குற்றவாளி, தான் தன்னுடைய மனைவிக்கு நகை போட்டிருந்ததாகவும் அதை மாமியார் எடுத்து சொந்த உபயோகப்படுத்திக் கொண்டதாகவும் அந்த நகையைக் கேட்கும் பொருட்டு தன் மனைவி வீட்டிற்குப் போய் அவளை நகை கேட்டதாகவும், அவள் தன் தாயாரைக் கேட்டதாகவும் இருவருக்கும்சச்சரவு உண்டாகி ஒருவரை ஒருவர் கத்தியால் குத்தினதாகவும் தான் நிரபராதி என்றும் சொன்னான்.

தீர்ப்பு:— கீழ்க்கோர்ட்டு தண்டனையில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோமென்று சொல்லி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிஸ்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

வாதி:—மாக்ஷிமை தங்கிய ஏழாவது எட்வர்ட்

மகாராஜா அவர்கள்

எதிரிகள்:—(1)நரசிம்ம ராவ் (2) லக்ஷ்மண அய்யர்.

கேசின் விபரம்:—முதலாவது எதிரியாகிய நரசிம்மராவ் என்பவன் பணம்வாங்கும் பொருட்டு செங்கல்பட்டு கஜானாவிற்கு ஒரு லோக்கல் பண்டு செக்கு கொண்டுவந்தான். கஜானாவிலிருந்த உத்தியோகஸ்தர்கள் அந்த செக்கைச்சந்தேகித்து அவனை அரஸ்ட்செய்வித்தார்கள். சென்னையிலிருந்த அவன் வீடு பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது அவனுடைய சிநேகிதனாகிய லக்ஷ்மண அய்யர் என்பவன்வீட்டிலிருந்த செக்கு புஸ்தகத்தை கிணற்றில் தூக்கிப்போட்டான். போலிசார் அதை எடுத்து விட்டார்கள். அவனுடைய வீட்டை இன்னும் சோதனை செய்ததில் அவனுடைய பெட்டியிலிருந்து இன்னும் சில செக்கு புத்தகங்கள் அகப்பட்டன. பிரஸ்தாப நரசிம்மராவ் என்பவன் குண்டூர் லோக்கல்பண்டு இன்ஜினீர் ஆபிசில் லஸ்கர்வேலையிலிருந்தவன். அப்போது இந்தச்செக்கு புத்தகங்களைத்திருடியிருக்கிறான். ஆகவே நரசிம்மராவ் பேரில், லோக்கல் பண்டு இன்ஜினீர் ஆபிசிலிருந்து செக்கு புத்தகத்தைத்திருடினகுற்றத்திற்காகவும், அந்தச்செக்கை உண்மையான செக்குபோல உபயோகித்தகுற்றத்திற்காகவும் இ. பி. கோ 381, 467, 465, 471 பிரிவின் குற்றங்களுக்கும், லக்ஷ்மண அய்யர்திருட்டுச்சொத்தை மறைத்ததற்காக இ. பி. கோ 414 வது பிரிவில் சொல்லியிருக்கும் குற்றத்திற்காவும் ஆகவே இருவர்களும் செங்கற்பட்டு சப் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். சப் மாஜிஸ்டிரேட் இவர்கள் இருவரையும் விசாரணை செய்து குற்றம்ஸ்தாபித்து செஷன் விசாரணைக்குக் கமிட்செய்தார். செஷன் ஜட்ஜி கி. பு. கோ 239 வது பிரிவின்படி இவர்கள் இருவரையும் ஒரேசமயத்தில் சேர்த்து விசாரணைசெய்யக்கூடாதென்று நினைத்து முதலில் நரசிம்மராவ் கேசைவிசாரணைசெய்து திர்ப்பு சொல்லாமல் லக்ஷ்மணஅய்யர் கேசை விசாரணை செய்ய ஆரம்பித்தார். லக்ஷ்மண அய்யரின் வக்கீல் தம்முடைய கக்ஷிக்காரன் செய்ததாகசொல்லப்படும் குற்றம் சென்னப்பட்டணத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிற படியால் செங்கல்பட்டு சப் மாஜிஸ்டிரேட்டிற்கு இந்தக்கேசைப்பிடித்து விசாரணை செய்து கமிட் செய்யும் அதிகாரமில்லை என்றும் இந்த செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்யவும் அதிகாரமில்லை என்றும் ஆக்ஷேபித்தார். ஆகையால் செஷன்ஸ் ஜட்ஜி இதுவிஷயத்தைக்குறித்து ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்தைக் கேட்டார்

ஆக்டிங் பப்ளிக்பிரா சிக்கியூட்டராகிய மிஸ்டர் சி. சங்கரநாயர் அவர்கள் கவர்ன்மெண்டு தரப்பிற்கு ஆஜராகி சப் மாஜிஸ்டிரேட் தம்முடைய அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்குள் நடக்காத ஒருகேசை செஷன்ஸ்க்கு கமிட் செய்தால் நியாயம் கெட்டுப்போக மாட்டாதென்றும் இ. பி. கோ 531 வது பிரிவின்படி சப் மாஜிஸ்டிரேட் கமிட்செய்தது நியாயமாகுமென்றும் இருந்தபோதிலும் பிரஸ்தாபகேசை ஹைகோர்ட்டு செஷன்சுக்கு அனுப்பிவிடும் படி செங்கற்பட்டு செஷன்ஸ்கோர்ட்டாருக்கு உத்திரவு செய்யலாமென்றும் சொன்னார்.

உத்திரவு:—லக்ஷ்மண அய்யர் கேசை ஹைகோர்ட்டு செஷன்சுக்கு அனுப்பும்படி உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

ரிசீவர் நியமிப்பதற்காக செய்துகொண்ட மனு

வாதி:—சுதரிசனராஜு

பிரதிவாதிகள்:—(1) A. T. வின்

(2) P. எத்திராஜலு நாயுடு.

(3) T. ராஜகோபால நாயுடு.

மனுவின் விபரம்:—மதிராஸ் அய்ஸ்பாக்டரி என்கிற பனிக்கட்டி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் பிரதிவாதிகள் வாதியை கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டு வியாபாரம் நடத்திவந்தார்கள். வாதி கூட்டாளி ஸ்தானத்திலிருந்து கிரிஸ்டல் அய்ஸ் பாக்டரி என்னும் சாலையில் மானேஜ்மெண்டு செய்து வந்தார். இப்படிச் செய்துவருகையில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் சச்சரவு உண்டாக அச்சச்சரவுகள் முற்றி பிரதிவாதிகள் வாதியைத் தள்ளிவிட்டார்கள். வாதியை பிரதிவாதிகள் வர்த்தகத்தில் கூட்டாளியாக எடுத்துக்கொண்டதற்கு எகிரிமெண்டு உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் ஷை உடன்படிக்கை ஷரத்தின்படி நடக்கவேண்டுமென்றும் வாதியை வர்தககசாலையினின்று விலக்கிவிட்டதால் வாதிக்குண்டாயிருக்கும் நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்றும் வாதிவியாஜ்ஜியம் செய்திருக்கிறார். அந்த வியாஜ்ஜியம் பைசல் செய்யப்படும் பரியந்தம் பிரஸ்தாப கிரிஸ்டல் அய்ஸ் பாக்டரிக்கு கோர்ட்டார் ஒரு ரிசிவரை நியமிக்கவேண்டுமென்று வாதி இப்போது மனுசெய்துகொண்டார்.

லாயர்கள்:—1, 2, பிரதிவாதிகளுக்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் வி. மாசிலாமணிப்பிள்ளை 3-வது பிரதிவாதிக்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் K. K. சினிவாச அய்யங்கார் வாதி தரப்பிற்கு மெசர்ஸ் C. S. ராமசாமி அய்யர், ஆனரபில் L. A. கோவிந்தராகவ அய்யர், C. K. மகாதேவ அய்யர்.

கேசின் நடவடிக்கை:—வாதி பிரஸ்தாப வர்த்தகத்தில் கூட்டாளியாக எடுத்துக்கொள்ள பிரதிவாதிகள் சாதாரணமாய் பலவந்தப் படுத்தப்பட்டிருக்கிறபடியால், கூட்டுவியாபார உடன்படிக்கை செலாமணியாகமாட்டாது என்று மிஸ்டர், V. V. சினிவாச அய்யங்கார் அவர்கள் வாதித்தார்.

உத்திரவு:—பிரதிவாதிகள் டிபன்ஸ் கூறியிருப்பதைக்கொண்டே கிரிஸ்டல் அய்ஸ்பாக்டரிக்கு ஒரு

ரிசீவர் நியமிக்கவேண்டியது கோர்ட்டாருடைய கடமையாயிருக்கிறதென்று சொல்லி சென்னப்பட்டணம் முனிசிபாலிட்டி ரெவினியூ ஆபீசராகிய மிஸ்டர் முகமது சபேதார் உசேன் அவர்களை ரிசிவராக நியமித்திருக்கிறார்கள்,

---

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.
கிரிமினல் அப்பீல்

கேசின் விபரம்:—ராமசாமியும் இன்னும் நால்வர்களும, ஏதோ ஒரு நிலதகரார் விஷயமாய் சட்டவிரோதமான கூட்டம் கூடி கலகம் செய்ததாக மதுரை செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு ஒவ்வொருவரும் 9-மாத கடினக்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இந்த தண்டனைக்கு விரோதமாக ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் W. பார்ட்டனும் மிஸ்டர் மகாதேவ நாயரும் வாதிகளின் தரப்பிற்கு ஆஜராகி சட்டவிரோதமான கூட்டமென்றால் அதற்கு ஒரு பொதுவான கருத்திருக்கவேண்டும். அப்படி பொதுவான கருத்திருப்பதாக செஷன்ஸ் ஜட்ஜி தீர்ப்பில் சொல்லவில்லை என்று எடுத்துப் பேசினார்கள்.

தீர்ப்பு:—அப்பீலை தாக்கல்செய்யும்படி உத்திரவு செய்யப்பட்டது.

லாயர்கள் வாதிகளை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று மனுசெய்துகொள்ள, வாதிகள் ஒவ்வொருவரிடம் சொந்த ஜாமீன் ரூ. 1000-மும், ரூ. 500-க்கு வேறு இரண்டு ஜாமீன்களும் பெற்றுக்கொண்டு விடலாமென்று கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

ஜஸ்டிஸ்:—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் லாஷிஸ்
ஜீவனும்சதாவா.
வாதி:—சொந்த புத்திரனின் விதந்து.
பிரதிவாதி:—ஸ்வீகாரபுத்திரனின் விதந்து.

கேசின் விபரம்:—இந்த அப்பீல் கடப்பை ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறது. ராமபந்துலு என்பவருக்கு ஒரு புத்திரனிருந்தார். அவர் இறந்துபோய்விட்டார். இந்த புத்திரனின் விதந்துவினிடம் புருஷனுடைய சொத்துக்களும் ரூ. 300-ரொக்கமுமிருந்தது. இறந்துபோன புத்திரனுக்கு ரூ. 500-கடனுமிருந்தது. இந்த விதந்துவின் மாமனார் தன் புத்திரனின் சொத்துக்களையும் ரூ. 300-ரொக்கத்தையும் விதந்து கொடுத்துவிட்டால் தான் புத்திரனின் கடன்களைத் தீர்த்துவிடுவதாயும் விதந்துவிற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 50-ஜீவனும்சம் தருவதாயும் சொன்னார். விதந்து ஒப்புக்கொண்டு ஷை ரொக்கத்தையும் மற்றுமுள்ள சொத்துக்களையும் மாமனாரிடம் ஒப்புவித்தாள். இருவருக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையில் விதந்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 50-ஜீவனும்சம் பெற்றுக்கொள்ளுகிறதென்றும், மற்றப்படி மாமனாருக்கும் விதந்துவிற்கும் பந்துத்வமிருக்கிறதே தவிர மாமனார் சொத்தில் யாதொரு பாத்தியதையும் விதந்துவிற்குக் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. விதந்து ஷை உடன்படிக்கைப்படி ஜீவனும்சம் பெற்றுக்கொண்டு வந்தாள்; இப்படியிருக்க மாமனார் ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். இந்த ஸ்வீகாரப் புத்திரனுக்கு விவாகம் நடந்தது. பிறகு ஸ்வீகாரத் தகப்பன் இறந்துபோய்விட்டார். இறந்துபோகுப்போது சுயார்ஜ்ஜிதமான தம்முடைய சொத்துக்களுக்கு ஒரு உயில் எழுதி தம்முடைய ஸ்வீகாரப்புத்திரனுக்குக் கொடுத்துவிட்டு இறந்து போனார். ஸ்வீகாரப் புத்திரனும் பிறகு இறந்துபோனார். ஆகவே சொத்துகள் ஸ்வீகாரப் புத்திரனின் விதந்துவிற்கு வார்சு கிரமப்படி வந்து சேர்ந்தது. மேலே சொல்லப்பட்ட சொந்தப் புத்திரனின் விதந்துதான் (வாங்கிவரும்) ஜீவனும்சம் ரூ. 50 தனக்கு போதாதென்றும் ரூ. 80-கிடைக்கவேண்டுமென்றும் டி. மு. கோர்ட்டில் ஸ்வீகாரப் புத்திரனுடைய விதந்துவின் பேரில் வியாஜ்ஜியம் செய்தனள்.

டி. மு. கோர்ட்டார் வாதி தன மாமனாருக்கும் தனக்கும் சாதாரண உறவிருக்கிறதே தவிர மற்றப்படி அவருடைய சொத்தில் யாதொரு பாத்திதையும் கிடையாதென்று எழுதிக்கொடுத்து விட்டபடியால் இப்போது ஜீவனும் சத்துகையை உயர்த்தக் கேட்பது ஷை உடன் படிக்கைக்கு விரோதாமயிருக்கிறதென்று நியாயம் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளி விட்டார். வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டதில் ஜில்லாக்கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டு தீர்மானத்தை ரத்து செய்து வாதிக்கு ரூ 80 கொடுக்கும் படி டிக்கிரி கொடுத்தார்கள். இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல் செய்து கொண்டனள்.

பிரதிவாதிக்கி வக்கீல் மிஸ்டர் T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் ஆஜராகி வாதி பெற்று வரும் ஜீவனும்சத்தை உயர்த்தக் கூடாதென்று மூன்று ஆக்ஷேபங்கள் கூறினார்.

(1) மாமனாருக்கும் வாதி விதந்துவிற்கும் ஏற்பட்ட உடன்படிக்கையால் இனி இருவருக்கும் பந்துத்வமிருக்கிறதே ஒழிய விதந்துவிற்கும் மாமனார் சொத்தில் யாதொருபாத்தியமும் கிடையாதென்று வியக்த்தமாய் சொல்லப்பட்டிருக்கின்றது.

(2) மாமனாரின் சொத்து சுயார்ஜ்ஜிதசொத்து.

(3) இ. லா. ரி 20 அல. 267 ல் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு தகப்பன் தன்னுடைய சுயார்ஜ்ஜித சொத்துக்களை தன்புத்திரனுடைய க்ஷேமலாபத்தைக்கருதாமல் பரா தினம் செய்யலாமென்று இருக்கும்போது புத்திரனைப் பார்க்கிலும்கேவலமான பாத்திய முடைய புத்திரனின் விதந்து ஜீவனும்சம் கேட்பது அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றது.

தீர்ப்பு—மாமனார் சொத்துக்கள் பிதிரார்ஜ்ஜித சொத்துக்கள் என்று எண்ணி பிரியாது தயார் செய்யப்பட்டிருக்கிறது. அச்சொத்துகள் பிதிரார்ஜ்ஜிதசொத்துக்களா அல்லது சுயார்ஜிதமா என்று சாக்ஷி விசாரணை செய்ய இந்தக்கேசை கீழ் கோர்ட்டிற்கு அனுப்ப இந்தக்கேஸ் அப்பீலிலிருக்கும் இச்சமயத்தில் கூடாது மாமனாருக்கும் விதந்து விற்கும் நடந்த உடன்படிக்கையில் விதந்து இனி தனக்கு மாமனாருடைய சொத்தில் யாதொருபாத்தியமில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கிறாளே தவிர தனக்கு இனி ஜீவனும்சைபாத்தியம் கிடையாது என்று எழுதிக்கொடுக்கவில்லை ஆகையால் அவள் ஜீவனும்ச பாத்தியத்தை இழந்து விடவில்லை. பிரதிவாதி தகுந்த ஜீவேஜி உடையவள். வாதிகேட்கும் ரூ 80 சரியான துகை என்று சொல்லி அப்பீலைச் செலவு துகை உடன் தள்ளிவிட்டார்கள்.

(ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் மில்லர் முன்னிலையில்)
சிவில் அபீல் கேஸ்,
வாதி:—வள்ளியராஜா.
பிரதிவாதி:—மன்கோடாகோவிலக்கம்.

கேசின் விபரம்:—இந்த அப்பீல் மலையாலத்திலிருந்து வந்திருக்கிறது வள்ளியராஜா வாதியினிடமிருந்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் வருமானம் வரக்கூடிய பூஸ்திதியை பிரதிவாதி மோசடியாய்ப் பெற்றுவிட்டாரென்றும் அச்சொத்துக்கள் வாதியைச் சேரவேண்டுமென்றும் வாதி பாலக்காடு சப்கோர்ட்டில் தாவாசெய்தார்.

கீழ்க்கோர்ட்டார் தீர்மானம்:—தாவாசொத்தில் சில சொத்துக்கள் மட்டிலும் மோசமாய் பிரதிவாதி பெற்றிருப்பதாக கோர்ட்டார் முடிவு செய்து அச்சொத்துகளுக்கு மட்டிலும் வாதிபக்கம் டிக்ரீ கொடுத்தார்கள் அந்தத்தீர்ப்பிற்கு விரோதமாய் இருதரப்பாரும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

லாயர்கள்:—வாதி வலவநாட் வள்ளியராஜாவிற்காக மெசர்ஸ் J. L. ரொசொரியோ K. P. கோவிந்த மேனன், B. கோவிந்த நம்பியார் ஆகிய இருவர்களும் பிரதிவாதி தரப்பிற்கு மெசர்ஸ் வி. கிருஷ்ணசாமி அய்யர் P. R. சுந்திர அய்யர் C. V. அநந்த கிருஷ்ண அய்யர் ஆஜரானார்கள்.

கேசின் நடவடிக்கை:—கோர்ட்டார் இந்தக் கேசை ஒருவாரம் விசாரணை செய்தார்கள்.

தீர்ப்பு:—வாதிமோசடியைக் கொஞ்சமேனும் ருசுப்படுத்தவில்லை ஆகவே வியாஜ்ஜியம் செலவுதுகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இன்சால் வென்சி கோர்ட்டு
(மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்)
கங்கைகோண்டான் மண்டபதாவா.
வாதி:— P. M. அப்பாசாமிப்பிள்ளைவகையற
பிரதிவாதி:—ராமானுசாச்சாரி வகையரு.

கேசின் விபரம்:—திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி கோவிலுக்குச் சமீபத்திலுள்ள கங்கைகொண்டான் மண்டபமும் இன்னும் சில கட்டடங்களும் காலிநிலமும் ஷை தேவாலயத்திற்குச் சொந்தமானதென்றும் பிரதிவாதி வசத்திலிருக்கும் அவைகள் தேவாலயத்திற்குக் கிடைக்கவேண்டுமென்றும் ஷை ஆலயத்தின் தர்மகர்த்தாக்களாகிய வாதிகளின் தாவா,

தீர்ப்பு:—தாவாச்சொத்துக்கள் நெடுங்காலமாய் பிரதிவாதிகளின் அனுபவத்திலிருந்து வருகிறபடியாலும் தேவாலயத்திற்கு சொந்தமென்று ருசுபடாததாலும் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது. தாவா சொத்துக்கள் கோவிலுக்குச் சொந்தமா அல்லவா என்கிற சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு தர்மகர்த்தாக்கள் இவ்வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருப்பதாகச் தெறிகிறபடியால் இருகக்ஷியார்களின் செலவு தேவாலய எஸ்டேட்டிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.
வாரண்டில் பிடிக்காமல் காப்பாற்றும்படி செய்து கொண்டமனு.

கேசின் விபரம்:—வெங்கட கிருஷ்ணய்யர் என்பவருக்கு செங்கற்பட்டு ஜில்லாவில் ரூ 18 ஆயிரம் பொருமான சொத்துகளிருக்கின்றன. அதன் பேரில் 11 ஆயிர ரூபாய் கடனுமிருக்கிறது. இந்த ரூ 18 ஆயிரம் பொருமான சொத்துக்களுக்குள் ரூ 8000 பொருமான உப்பளப்பாத்திகள் சென்னை மிஸ்டர் G. நாராயணசாமி செட்டியாருக்கு ரூ 5 ஆயிரத்திற்கு அடமானமிருக்கின்றது. இதில் ரூ 3000-ம் செல்லாயிருக்கிறது. இது அன்றியில் ரூ 261-6-0 க்கு மிஸ்டர் நாராயணசாமி செட்டியார் ஷை வெங்கடகிருஷ்ணய்யர்பேரில் டிக்கிரி பெற்றிருந்தார் இந்த டிக்கிரியை நிறைவேற்றி மிஸ்டர் செட்டியார் ஷை வெங்கட்கிருஷ்ணய்யாவை அரஸ்ட்செய்து சென்னப்பட்டணம் கடன்காரன் ஜெயிலில் வைத்திருக்கிறார். வெங்கடகிருஷ்ணய்யாவின் குமாரர் சேஷய்யர் என்பவரும் தகப்பனாருக்கு சில பத்திரங்களில் மேலொப்பம் போட்டு அவர்பேரிலும் டிக்கிரிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இருவர்களும் இன்சால்வென்ட் மனு தாக்கல்செய்து தங்களை காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இன்சால்வெண்டிற்கு நன்ஜன்ட்கிராண்ட் பேசினார்.

இன்சால்வெண்டுகளின் சொத்துக்கள் நிகழ்ழ 18வ ஏலப்போடப்போகிறபடியால் அந்த சமயம் இன்சால்வெண்டுகளிருந்தால் ஏலதுகையை நடத்தி விடுவார்களென்றும், மிஸ்டர் நாராயணசாமி செட்டியார் அச்சொத்துக்களை ஈனக்கிறையத்திற்கு ஏலத்தில் எடுக்கவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்துடன் முதல் இன்சால் வெண்டை ஜெயிலில் பிடித்து வைத்திருக்கிறார் என்றும் இல்லாவிடில் 11-ஆயிரம் கடனிருந்தபோதிலும் 18-ஆயிரம் ரூ சொத்துக்களிருப்பதால் அதன்பேரில் பிரவேசித்திருக்கலாமென்றும் வாதித்தார் மிஸ்டர் நாயணசாமி செட்டியாருக்கு பாரிஸ்டர் மிஸ்டர் பெர்சி கிராண்ட் ஆஜராகி டிக்கிரிகளுக்கு விரோதமாக பணம் செலவு செய்துமுதல் இன்ஸால்வெண்டு அப்பீல் செய்கிறபடியால் அவரிடம் பணமிருக்கிறது கோர்ட்டார் அவரை பாதுகார்க்க உத்திரவுகொடுக்கக்கூடாதென்று வாதித்தார்.

தீர்ப்பு:—இரண்டு இன்சால் வெண்ட்டுகளையும் வாரண்டில் பிடிக்கக்கூடாதென்று உத்திரவு கொடுக்கப்பட்டது.

இரண்டு இன்சால்வெண்டு தாசிகள்.

எத்திராஜம்மாள் சேஷம்மாள் என்கிற இரண்டு தாசிகள் இன்சால்மெண்டு மனுதாக்கல் செய்திருக்கிறார்கள் இரண்டுபேரும் நோயாயிருந்ததை முன்னிட்டு தேகசௌக்கியப் படுத்திக்கொள்ளும் பொருட்டு வைத்தியச் செலவுகளுக்காக சவுகார்களிடம் கடன்வாங்கினார்கள் இவர்கள்ஸ்திரிகளான படியால் இவர்களை வாரண்டில் பிடிக்க முடியாது ஆகையால் இவர்கள் பாதுகாப்பு ஆர்டர் கேட்கவில்லை அபிஷியல் அசயினிடம் தங்களுக்கிருக்கும் சொத்துக்களை ஒப்புவிக்க கோர்ட்டாரை உத்திரவு கேட்டார்கள் இவர்களுக்காக ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஷரமியர் மனுதாரிகள் தாசிகளானபடியால் அவர்கள் கோர்ட்டிற்கு வருவார்களேயானால் கோர்ட்டில் விசேஷ கூட்டம் கூடுமென்று இப்போது கோர்ட்டிற்கு வரவில்லை என்றும் அப்படி நேரில் வரத்தான் வேண்டுமென்று கோர்ட்டார் விரும்பினால் அடுத்த விசாரணை தினம் வரத்தயாராயிருக்கிறார்களென்றும் இன்சால்வென்சிக்கோர்ட்டில் கக்ஷிக்காரர்கள் லாயர்வைத்திருக்கும் போது அவர்கள் நேரில் வரவேண்டியது அனுவசியமென்றும் சொன்னார்.

உத்திரவு:—அவர்களுக்கிருக்கும் சொத்துக்களை அபிஷியல் அசயினிடம் ஒப்புவிக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

இன்சால்வேன்சிமனு.

மதிராஸ் ரெயில்வேயைச் சேர்ந்த அசிஸ்டெண்டு ஸ்டேஷன் மாஸ்டராகிய மிக்கேல்ரெண்டான் தமக்கு ரூ, 738 கடனிருக்கிறதென்று சொல்லி கடந்த திங்கள்கிழமை இன்சால் வென்சிமனுதாக்கல் செய்தார் ஒரு விதந்துதான் கொஞ்சம்பணம் கடன்கொடுத்திருப்பதாயும் அப்பணம் தனக்கு வராவிடில் தான் கெட்டுப்போய் விடுவேனென்று சொல்லி கோர்ட்டார் பாதுகாப்பு ஆர்டர் கொடுக்க கூடாதென்று ஆக்ஷேபித்தனள்.

கோர்ட்டார் உத்திரவு:—இரண்டு வருஷத்திற்கு ஒருவரும் அவரை வாரண்டில் பிடிக்கக் கூடாதென்று உத்திரவு செய்யப்பட்டது மாதம் ஒன்றுக்கு ரூ. 10 அபிஷியல் அசயினியிடம் கட்டும்படியாகவும் உத்திரவு செய்தார்கள்.

இன்சால்வேன்சிமனு.

பட்டா முனுசாமி செட்டி என்பவர் இன்சால்வென்சி மனுதாக்கல் செய்திருக்கிறார் இவர் தட்டி செய்து விற்கிறவர் இவர் 1904 வருஷத்தில் தட்டி செய்வதற்காக மூங்கில் முதலியவைகள் வாங்கி தன்னுடைய வீட்டுவாசலில் போட்டிருந்தார் அவைகள் மழைபெய்து சேதப்பட்டுப்போய்விட்டன. மாதம் சிலாசிலாவாக கடனுக்குச்செல்லுவைப்பதாக கடன்காரர்களுக்குச்சொன்னார் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள் ஆனால் ஒருவர் மட்டிலும் இவர்பேரில் ஸ்மால்காஸ் கோர்ட்டில் பிராது செய்து டிக்ரிபெற்று விட்டார் ஆதலால் கோர்ட்டின் பாதுகாப்பிற்காக இவர் மனுசெய்து கொண்டிருக்கிறார்.

உத்திரவு:—அடுத்த விசாரணைத் தேதிவரையில் இவரை வாரண்டில் பிடிக்கக்கூடாது என்றுஉத்திரவு செய்யப்பட்டது,

பூரிகொலைக்கேஸ்.

பங்காளம் நாகப்பூர் இருப்புப் பாதையில் பயர்மென் (Fire man) உத்தியோகத்திலிருக்கும் ஜான் ஸ்மித் என்னும் வெள்ளைக்காரன் பூரிநகரில் சமயல் தொழில் செய்யும் ஒரு சென்னப்பட்டணத்தான் கழுத்தை அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு கத்தியால் அறுத்துவிடவே அவன் இறந்துபோய் விட்டான். இந்தக்கேஸ்கல்கத்தா ஹைக்கோர்ட்டு செஷன்ஸ் விசாரணைக்கு வந்தது. பிராசிக்யூஷன் தரப்பிறகு ஆஜரானகிரெளன் பிராசிக்யூட்டர் அட்டிரசுபேசுகையில் கொலைசெய்ததைக்கண்ணாரப்பார்த்த சாக்ஷிய மிருக்கிறதென்றும் அந்த சாக்ஷிபேஸ்வதும் சர் ஜன் சொல்வதும் ஒத்திருக்கிறதென்றும் சொன்னார். என்ன சொன்னால்தான் என்ன? கைதிவெள்ளைக்காரனல்லவா! 9 ஐரோப்பிய ஜுரார்கள் கைதி குற்றவாளியல்ல வென்று அபிப்பிராயங்கூறினார்கள். கோர்ட்டார்அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டுவாதியைவிடுதலைசெய்து விட்டார்கள்.

ஜியார்ஜடௌன் போலீஸ்கோர்ட்:

பிரசிடேன்சி மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் F. D. பேர்ட்

இம்சித்து லேஞ்சம்வாங்கிய கேஸ்.

வாதி:—குருவெங்கய்யா

எதிரிகள்:—(1) தங்கவேலு

(2) முத்துகிருஷ்ணசாமி.

கேசின் விபரம் :—வாதி, மூட்டைகள் கொண்டு போகிற கைவண்டிச் சொந்தக்காரன். 1, 2, எதிரிகள் சிட்டி போலீசைச்சேர்ந்த முக்கிய எட்கான்ஸ்டேபில் ஆக்டிங் எட்கான்ஸ்டேபில்கள் சென்ற ஆகஸ்டுமீ 7வ வாதி ஒரு கைவண்டியில் 10-மூட்டை அரிசி ஏற்றிக்கொண்டு டாங்ஷால் தெருவு மூன்றாவது சந்தில் போகும்போது வண்டியிலிருந்த கடைசி மூட்டை வழியில் போய்க்கொண்டிருந்த ஒரு மனிதன்பேரில் பட்டது. அம்மனிதன் கோபித்துக்கொண்டான். வாதி மன்னிக்கும்படிகேட்டுக்கொள்ள அம்மனிதன் போய்விட்டான், இந்த சம்பவம் நடந்த ஸ்தலத்திற்குச் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த முதலாவது எதிரி வண்டியிடம் வந்து மூட்டை அந்த மனிதனை இடித்ததால் போலீஸ்ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று சொன்னபோது வாதி வரமாட்டேன் என்று சொன்னான், இதன்பேரில் முதலாவது எதிரி வாதியையும் வண்டி இழுத்துக்கொண்டுவந்த கூலி ஆட்களையும் அடித்து போலீஸ்டேஷனுக்கு இழுக்க, வாதி வண்டியுடன் போலீஸ்டேஷனுக்குப் போகப் புறப்பட்டான், சிறிதுதூரம் போனவுடன் முதலாவது எதிரி ரூ 10-ம் கொடுத்தால் விட்டுவிடுவதாயும் இல்லேல் ஜெயிலில் அடைத்துவைப்பதாயும் மிரட்ட இருதரப்பாருக்கும் வெகுநாழிகைபரியந்தம் தகரார் நடந்து கட்சியாக வாதி இரண்டாவது எதிரியிடம் ரூ 2-14-கொடுக்க, அதை அவர் முதலாவது வாதியிடம் கொடுத்தார்.

லாயர்கள்:—வாதி தரப்பிறகு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் வெங்கட சுப்பய்யரும் எதிரிகள் தரப்பிறகு வக்கீல் மிஸ்டர் K. W. ஷாமராவும் பேசினார்கள் இன்னம் தீர்ப்பு சொல்லவில்லை.

மிஸ்டர்:—மீர் சுல்தான் மொஹிதீன்

சாயப்பு முன்னிலையில்

போலீஸ் உத்திரவை நிராகரித்த கேஸ்.

கேசின் விபரம்:—மைலாப்பூர் ஈவியட்ரோட்டில் வசித்துவரும் மிஸ் ஒபிரன் துரைசானியின் வண்டி பீச்சிலிருக்கும் அய்ஸ் அவுஸ் வழியாக மாலை 7-10 மணிக்கு லாந்தர் வெளிச்சமின்றி போனது. அந்த வழியாய் பந்தோபஸ்து கொடுத்துக் கொண்டிருந்த E. டிவிஷன் போலிசைச்சேர்ந்த எட் கான்ஸ்டேபில் பர்ச்சட் வண்டியை நிறுத்தி வெளிச்சம் போடும்படியாகச் சொல்ல, வண்டியினுள்ளிருந்த துரைசானிக்குக் கோபம் பிறந்து வண்டியை ஓட்டும்படி கோச்மானுக்கு உத்திரவு செய்தார். ஆகவே போலிசார் கோச்மேனையும் துரைசாணியையும் சேர்த்து சார்ஜ் செய்தார்கள்.

துரைசானிக்கு ரூ 5 அபராதமும் கோச்மானுக்கு அணா 8 ம் அபராதம் விதிக்கப்பட்டது.

போலீஸ் கேஸ்.

சென்னை சிட்டிப் போலிஸ் G, டிவிஷன் போலீஸ்டேஷனைச்சேர்ந்த 1371-ம் நெ. கான்ஸ்டெபில்தன்னுடைய வேலையிலிருக்கும்போது ஒரு பையன் திருடினதைப்பார்த்தான். அந்தத் திருட்டு சம்பந்தமாக புரசவாக்கம் ஸ்மித் பில்ட்மார்க்கட்டிற்கு சமீபத்திலிருந்த அவனுடைய வீட்டிற்கு போனபோது அவனுடைய தமயனாகிய சதாசிவ ஆசாரிக்குக் கோபம்பிறந்து ஷை கான்ஸ்டெபிலை கன்னத்திலும், கழுத்திலும் அடித்தான். இந்த குற்றத்திற்காக சதாசிவ ஆசாரி பிராசிக்யூட் செய்யப்பட்டதில் எழும்பூர் பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட் அவனுக்கு ரூ 20-அபராதம் விதித்தார்.

CASES FROM INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டிலுள்ள கேசுகள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.

டிக்கிரிபெற்ற இருவரில் முழுத்தொகையையும் வசூலித்துக்கொண்ட ஒருவன் மற்றொருவன் வீதத்துக்குக் கட்டுபடவேண்டும்.

சோமசுந்தரம்பிள்ளை—அப்பீல் வாதி (பிரதிவாதி)
கிருஷ்ணசாமிநாயுடு வ-ரு—அப்பீல்பிரதிவாதிகள்(வாதிகள்)

வியாச்சிய சங்கிரகம்.

அப்பீல் வாதி சோமசுந்தரம் பிள்ளையும் அப்பீல் பிரதிவாதிகள் கிருஷ்ணசாமிநாயுடு வ-ருவும் வேறொருவன்மேல்டிக்ரிபெற்றிருந்தார்கள். அந்த டிக்கிரியின்படி இவ்விரு கட்சிக்காரருக்கும் செலவு தொகை சேரவேண்டியிருந்தது. இதில் சோமசுந்தரம் பிள்ளை என்பவர் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவரிடமிருந்து முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டு கோர்ட்டுக்கு சர்டிபிகேட்டு கொடுத்துவிட்டார். பிறகு அப்பீல் பிரதிவாதிகள் கிருஷ்ணசாமி நாயுடு வ-ரு தஞ்சாவூர் சப் கோர்ட்டில் தங்கள்வீதம் கிடைக்கவேண்டுமென்று சோமசுந்தரம் பிள்ளையின்மேல் தாவா செய்தார்கள் ; இதில் ஏற்பட்ட சீவில் ரிவிஷன் மனுவில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் அப்பீல் பிரதிவாதிகள் பக்கம் தீர்ப்பு செய்தார்கள்.

இதன்மேல் லெட்டர்ஸ் பேட்டன்டு 15-வது பிரிவின்படி அப்பீல் செய்தார்கள்,

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—வாதிகள் சொல்வதிலிருந்து பிரதிவாதியின் மேல்வியாச்சியங் கொண்டுவர பாத்தியமுடையவர்களென்று ஹைகோர்ட்டு ஜட்ஜி கொண்ட அபிப்பிராயமே அப்பீல் கோர்ட்டு ஜட்ஜிகளும் கொண்டார்கள். டிக்கிரியினால் வாதி பிரதிவாதிகளாகிய இரு கட்சிக்காரர்களுக்கும் செலவுதொகை சேரவேண்டியிருக்கிறது. பிரதிவாதியாகிய சோமசுந்தரம் பிள்ளை டிக்கிரிக்குக் கட்டுபட்டவரிடமிருந்து முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டு கோர்ட்டுமூலமாக சர்ட்டிபிகேட்டு கொடுத்துவிட்டார். இந்த சர்ட்டிபிகேட்டு பிரதிவாதிகளாகிய கிருஷ்ணசாமி நாயுடு வ-ருவை கட்டுப்படுத்தாது; டிக்கிரிக்குக் கட்டுபட்டவரிடம் தொடராமல் வேண்டுமானால் முழுத்தொகையும் பெற்றுக் கொண்ட சோமசுந்தரம் பிள்ளையிடமிருந்து தங்கள் வீதத்தை யடைய வியாச்சியங் கொண்டுவரலாமென்று தீர்ப்பு செய்து அப்பீலை செலவுதொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

நூலிங்ஸ் :—டிக்கிரி பெற்றுக்கொண்ட இருவரில் ஒருவனிடம் முழுத்தொகையைஞ் செலுத்தி டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவன் சர்ட்டிபிகேட்டு வாங்கிவைத்திருந்தாலும் மற்றொரு டிக்கிரி பெற்றவனுக்குச் சேரவேண்டிய வீதத்தைச் செலுத்தவேண்டிய கடமையிலிருந்து நீங்கினவனல்லவென்றும் (2)டிக்கிரிபெற்றவன் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவன்மேல் நிறைவேற்றாமல் முழுத்தொகையும் பெற்றுக்கொண்ட டிக்கிரி பெற்றவன்மேல் வியாச்சியங் கொண்டுவரலாமென்றும் தீர்ப்புசொல்லப்பட்டது. இ. லா. ரி. 29. சென்னை, 183. (Somasundaram Pillay. V. Krishnasawmy Naidu I. L, R. 29. Madras. 183).

சீவில் அப்பீல்

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்

மேல்வாரம்.

சீனிவாச ராகவ அய்யங்கார்—அப்பீல் வாதி
(மனுதார்)

பிச்சைகாரன் வ-ரு—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாச்சிய சங்கிரகம்

முதல் பிரதிவாதி, இரண்டாம்பிரதிவாதிக்கும்வாதிகளுக்குஞ் சொந்தமான அவிபக்த சொத்தைப் பயிரிடுங் குடியானவன். பாகப்பிரிவினையில் வாதிகள் ஒரு பாகச்சொத்தை தங்கள் வீதத்துக்காக அடைகிறதென்று ரிஜிஸ்டரான பாகபத்திரம் வாதிகளும் இரண்டாவது பிரதிவாதியும் செய்துக் கொண்டார்கள். அப்பாகப் பத்திரப்படி தங்களுக்குச் சேரவேண்டிய மேல்வாரத்துக்காக முதல் பிரதிவாதியின் மேலும் இரண்டாம் பிரதிவாதியின் மேலும் வியாச்சியங் கொண்டு வந்தார்கள். இரண்டாம் பிரதிவாதி பேருக்கு வாரப்பத்திரம் எழுதப்பட்டிருக்கிறதால் முதல் பிரதிவாதி கொடுக்காத பட்சத்தில் இரண்டாம் பிரதிவாதி கொடுக்ககட்டுபட்டவரென்று இரண்டாம் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது.

இந்தப் பிராது கும்பகோணம் சப்கோர்ட்டில் 1903ஞு 1979 ஸ்மால் நெ ஆக கொடுக்கப்பட்டது. அந்தக் கோர்ட்டு அதிகாரத்துக்குட் பட்டதல்ல வென்றும் தகுந்த கோர்ட்டில் கொடுக்கும் படியாகவும் வேறு காரணம் சொல்லாமல் வாப்ஸ் செய்து விட்டார்கள். பிறகு கும்பகோணம் முன்சீப்கோர்ட்டில் கொடுக்கப்பட்டது. முன்சீப் கோர்ட்டார் ஸ்மால் காஸ் வியாச்சியமாக இருப்பதால் தகுந்த கோர்ட்டில் கொடுக்கபட வேண்டு மென்று வாப்ஸ் செய்து விட்டார்கள். இந்த உத்திரவுக்கும் 1904ஞு 1131நெ அசல்மனுவுக்கும் விரோதமாக 1904ஞு 47 நெ அப்பீல் மனுதார் கொடுத்தார். டிஸ்டிரிக் முன்சீப்கோர்ட்டார் உத்தரவை மாற்றும் பட்சத்தில் சப் கோர்ட்டார் செய்த உத்தரவு சரியா வென்பதைப்பற்றி சீவில் புரோசிஜர் கோடு 646 பிரிவுப்படி ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்யும்படியாக மனுவில் கண்டிருந்தது. அதே பிரகாரம் ஹைகோர்ட்டிற்கு ரிபர் செய்யப்பட்டது.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் அபிப்பிராயம் முதல் பிரதிவாதி விஷயமாக யோசிக்கும் பட்சத்தில் இப் பிராது மேல்வாரத்தைப் பற்றியதாயிருப்பதால் ஸ்மால் காஸ் கோர்ட்டார் பிடிக்க வேண்டிய வியாச்சியமே. இரண்டாம் பிரதிவாதி விஷயமாகப் பார்க்கும்போது "வாதிக்குச் சொந்தமாகிய ஸ்தாபர சொத்தாயிருந்து அதன் வரும்படி பிரதிவாதியால் பிசகி வாங்கப் பட்டிருக்கிறதா" வென்பதை ஸ்மால் காஸ் கோர்ட்டு ஆக்டு 2-வது ஷெடியூல் 31-வது பிரிவுப்படி கவனிக்கவேண்டியது இவ்வபிப்பிராயத்தோடு ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டு ஹைகோர்ட்டாரின் தீர்மானத்துக்கு ரிபர் பண்ணியிருக்கிற காரணத்துக்காக தங்களிடம் வந்த அப்பீலைத் தள்ளிவிட்டார்கள். செலவைப்பற்றி யாதொரு உத்திரவும் செய்ய வில்லை.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:— இந்தப் பிராது மேல்வாரத்துக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறதால் ஸ்மால் காஸ்கோர்ட்டு ஆக்டு இரண்டாவது ஷெடியூல் 31-வது பிரிவுக்குட் பட்டதல்லவென்றும் ஸ்மால்காஸ் கோர்ட்டார் அதிகாரத்துக் குள்பட்ட தென்றும் ஆகையால் இந்தப்பிராதை கும்பகோணம் சப் கோர்ட்டார்பயிலில் வைத்து சட்ட

ப்படி முடிவு செய்ய வேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

நலிங்ஸ்:—விபக்த்த குடும்பத்தின் ஒரு பாகஸ்தன் தனக்குரிய மேல் வார வீதத்துக்காக குடியானவன் கொடுக்கக் கடமைப்படாத பட்சத்தில் மேல் வாரம் பத்திரம் வேறொரு பாகஸ்தன் பேரால் மாத்திரம் பிறந்திருந்தால் இவ்விருவர் மேலுங் கொண்டு வரும் பிராது மேல் வாரத் தொகைக்காக ஏற்றப்பட்ட பிராதாக பாவிக்கப்படுமே யல்லாமல் ஸ்தாவர சொத்தின் வரும்படியை பிசகாக வாங்கிக் கொண்ட ஒரு பாகஸ்தன் மேல் அவ்வரும்படியை யடைய தொடரும் ஸ்மால் காஸ் ஆக்டு 2-வது ஷெடியூல் 31-வது பிரிவில் சொல்லிய வியாச்சிய மாகா தென்றுந் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29. சென் 184. (Srinevasa Ragava Ayyangar. V. Pichaikaran I. L. R. 29 Madras, 184.)

கிரிமினல் அப்பீல்

ஜட்ஜி:—சிப்ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

அபுப்பக்கர்:—மனுதார் (எதிரி)

நாகப்பட்டணம் முனிசிபாலிட்டி :—அப்பில் பிரதிவாதி.

வியாச்சிய சங்கிரகம்.

நாகப்பட்டணம் பென்சி மேஜிஸ்டிரேட்டார் முன்னிலையில் மனுதார் லைசென்சு பெறாமல் ஆட்டிறைச்சி விற்றதாகக்குற்றஞ் சாட்டப்பட்டார். எதிரிகறி விற்பனை செய்த விடம் முதலில் மார்கட்டாயிருந்து பிறகு 1888ஞு மூடிவிடும்படி உத்தரவு செய்யப்பட்டது. சென்னை டிஸ்டிரிக்டு முனிசிபாலிடி ஆக்டு 191, 197. 264. பிரிவுப்படி சிட்சிக்கப்பட்டு அப்பீலில் நாகப்பட்டணம் சப் டிவிஷனல் மேஜிஸ்டிராட்டாரால் உறுதி செய்யப்பட்டது. எதிரி ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுகொடுத்தார். ஹைகோர்ட்டார் உத்தரவு. இந்தக்கேஸில் ஏற்பட்ட சிட்சை அங்கீகரிக்கத்தக்கதே ஆட்டிறைச்சி மீன் விற்ற இடம் பிரதமத்தில் பகிரங்கமான மார்க்கட்டாயிருந்தது-1888 ஞு உத்திரவின்மேல் மூடிவிட்டார்கள். அது முதற்கொண்டு அந்த இடத்தை மார்க்கட்டாக உபயோகிக்க லைசென்சு கொடுக்கவில்லை. எதிரி உபயோகித்து வந்தஇடம் ஒருவர் சுவாதீனத்துக்குள்ளாயிருந்தாலும் முன் ஒருக்கால்பகிரங்கமார்க்கட்டாயிருந்தது அதாவது விற்கவும் வாங்கவுங் கூடிய பகிரங்கமான இடம். இதுவேமார்க்கட்டுக்குச் சட்டப்படி அர்த்தம். இவ்விடத்தில் லைசென்சில்லாமல்விற்றது டிஸ்டிரிக்டு முனிசிபாலிட்டி ஆக்டின் 197 வது பிரிவுப்படி குற்றமே அதுவேறெந்த இடமாயிருந்தாலும் உணவாகக் கூடிய இறைச்சி மீன் இவைகளை லைசென்சு இல்லாமல் விற்றால் அந்த ஆக்டின் 191 வது பிரிவு 2 வது உட்பிரிவுப்படி, எதிரி குற்றஞ் செய்தவராகிறார். மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

நலிங்ஸ்:—ஒருவருடைய சொந்த இடம்வாங்கவும்விற்கவும் பகிரங்கமாக உபயோகிக்கப்பட்டால் அதுவே மார்க்கட்டு.

2. ஒருவருக்கு சொந்தமாயிருந்த மார்க்கட்டு மூடிவிடும்படியாக உத்தரவு செய்யப்பட்டால் லைசென்சு கேட்டு கொடுக்கப்படாதிருக்கும் பொழுது அந்த இடத்தில் மீனும் இறைச்சியும் ஒருவன் விற்றால் சென்னைடிஸ்டிரிக்டு முனிசிபாலிட்டி ஆக்டு 197 வது பிரிவுப்படி குற்றம் செய்தவனாவானென்றும் இல்லாவிட்டாலும் 191 வது பிரிவுப்படி குற்றத்துக்குள்ளாவானென்றுந் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி, 29. சென்னை 185. (Abu Baker v The municipality of Negapatam I. L. R. 29. Mad 185)

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜி.—சிப் ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

எதிரிக்கு அனுகூலமான உத்தரவை மாற்றும் பொழுது எதிரிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

சக்கிரவர்த்தி :—வாதி

பழனியப்ப வேளான் வ-ரு :—எதிரிகள்.

வியாச்சியசங்கிரகம்.

எதிரிகளுக்கும் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்கும் நோட்டீஸ் கொடுக்காமலே வாதி செய்த அப்பீலில் எதிரிகளுக்கு கம்பென்சேஷன் கொடுக்கும்படியாகச் செய்த உத்தரவு மாற்றப்பட்டது. ஹைகோர்ட்டார் தீர்மானம். இவ்விதமான கேசுகளில் எதிரிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. நியாயத்துக்கு தங்களுக்கனுகூலமான உத்திரவை அனுசரித்து நியாயஞ் சொல்வதற்கு தகுந்த சாவகாசம் கொடுக்க எதிரிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

எதிரிகளை மாத்திரம் பாதிக்கிறதாயிருந்தாலும் சங்கிரகமாக அப்பீலைத் தள்ளுகிற கேஸிலுங்கூட கவர்ண்மெண்டாரால் கி. பு. கோ 422-வது பிரிவுபடி நேமிக்கப்படும் உத்தியோகஸ்தருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியமே இந்த விஷயம் சந்தேகமாயிருந்தாலும் சங்கிரகமாக அப்பீலைத் தள்ளும் கேஸிலும் எதிரிகளுக்கும் கவர்ண்மெண்டாரால் நேமிக்கப்படும் உத்தியோகஸ்தருக்கும் நோட்டீஸ் கொடுப்பது மிகக் காபந்தான நடவடிக்கை யென்று அபிப்பிராயப்பட்டு அப்பீல் கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்து 1905ஞு 75 நீ கிரிமினல் அப்பீலாக திண்டுக்கல் சப் டிவினல் மேஜிஸ்டிரேட்டார் ஏற்றுக்கொண்டு எதிரிகளுக்கும் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்கும் நோட்டீஸ் கொடுத்து சட்டப்படி முடிவு செய்யும்படியாக தீர்ப்பு சொன்னார்கள்.

நலிங்ஸ்:—எதிரிக்குக் கம்பென்சேஷன் கொடுக்கும்படியாகச் ஒரு மேஜிஸ்டிரேட்டார் செய்த உத்திரவை எதிரிக்கு நோட்டீஸ் கொடுக்காமல் மாற்றக்கூடாதென்றும் கி. பு. கோ 422 வது பிரிவுப்படி கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கு நோட்டீஸ் கொடுப்பது அதிக காபந்தான நடவடிக்கை யென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது இ. லா. ரி 29. சென். 187. (Emperor. v Paliniappavelan I. L. R. 29 Mad. 187.)

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

செலவு தொகை கொடுக்கத் தீர்மானித்தல் தண்டனையை அதிகப்படுத்தினதல்ல.

சக்கிரவர்த்தி :—வாதி

கருப்பண்ணபிள்ளை வ-ரு :—எதிரி

வியாச்சிய சங்கிரகம்.

பாம்பன் சப் மேஜிஸ்டிரேட்டு இ. பி. கோ. 352 வது பிரிவுப்படி முதல் எதிரி ரூ 5 அபராதம் கொடுக்கும்படியாகவும் தவறினால் ஒருவாரக் காவலுக்குள்ளாகிறதென்றும் இரண்டாவதுஎதிரி ரூ 2 கொடுக்கும்படியாகவும் தவறினால் மூன்றுநாட்காவலுக்குள்ளாகிற தென்றும் சிட்சை விதித்தார்.

எதிரிகள் இராமநாதபுரம் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் அப்பீல் பண்ணிக்கொண்டார்கள். சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் கீழ்க்கோர்ட்டார் தண்டனையை

உறுதிப்படுத்தினது மல்லாமல் கோர்ட்டு பீஸ் ஆக்ட் 31 வது பிரிவுப்படி எதிரி, வாதிக்கு ரூ 1—8—0 கொடுக்கும்படியாகவும் தீர்மானித்தார்கள். மதுரை செஷன் ஜட்ஜி டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் ரிக்கார்டுகளை அஜிமாஷ் செய்தபொழுது எதிரிகளைரூ 1—8—0 கொடுக்கும்படியாக தீர்மானஞ் செய்தது தண்டனையை ஜாஸ்தி பண்ணினதற்குச் சமான மென்றும் சப் மேஜிஸ்டிரேட்டார் வாதிக்கு கம்பென் சேஷன் கொடுக்கவேண்டியதில்லையென்று கண்டிருக்கிறதாகவும் சப் டிவிஷனல் மேஜிஸ்டிரேட்டார் அப்படிச் செய்தது சட்ட விரோதமென்றும் அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டுக்கு கி. பு. கோ. 438 வது பிரிவுப்படி தெரிவித்து அப்பீல் கோர்ட்டார் உத்தரவை மாற்றும்படிக் கேட்டுக்கொண்டார்கள். பப்ளிக் பிராசிக்கியூட்டர் அவ்வாறே அபிப்பிராயப்பட்டார்.

ஹைகோர்ட்டார் உத்தரவு வாதியின் செலவு தொகை கொடுக்கும்படியாக சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் செய்த தீர்மானம் தண்டனையை ஜாஸ்தி பண்ணின தாகாது. இந்த உத்தரவு கோர்ட்டு பீஸ் ஆக்டு 31 வது பிரிவுப்படி செய்யப்பட்டது. இ. பி. கோ. கி. பு. கோ. வில் சொல்லியிருக்கும் தண்டனைக்கு முற்றிலும் சம்பந்தமில்லாததால் தண்டனையை ஜாஸ்தி பண்ணினதல்ல. மாடான் மன்றல். v. ஹாரான் கோஸ் கேஸில் இம்மாதிரி தீர்மானிக்கப்பட்டது. (இ. லா. ரி. 20. கல். 687) தண்டனையயல்லாமல் கோர்ட்டார் கம்பென் சேஷன் கொடுக்கும்படியாகத் தீர்மானிக்கலாமென்று கோர்ட்டு பீஸ் ஆக்டில் சொல்லியிருக்கிறது. ஆகையால் இது தண்டனையின் ஒரு பாகமாகாது. கீழ்க்கோர்ட்டார் செய்த தீர்மானத்தைத் திருத்தி கம்பென் சேஷன் கொடுக்கச்சொன்னது தண்டனையை ஜாஸ்தியாக்கினதாகாதென்றும் தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 22. சென. 153. சக்கிரவர்த்தினி. v. தங்கவேலுசெட்டி கேஸில் இதற்கு மாறாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தால் அதனை ஹைகோர்ட்டார் அங்கீகரிக்கவில்லை.

நலிங்ஸ்:—அப்பீலில், கோர்ட்டு பீஸ் ஆக்டு 31 வது பிரிவுப்படி வாதிக்கு செலவு தொகை கொடுக்கும்படியாக அப்பீல் கோர்ட்டார் உத்தரவு செய்வது தண்டனையை ஜாஸ்தி பண்ணினதாகாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29 சென்னை 188. (Emperor. v. Karuppana Pillai I. L. R. 29. Madras. 188.)

கிரிமினல் அப்பீல்

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

கலகம்பண்ணுதிருக்க அப்பீல் கோர்ட்டார் ஜாமீன் வாங்குதல்.

முத்தியசெட்டி—அப்பீல் வாதி(எதிரிகள்-மனுதாரர்கள்)
சக்கிரவர்த்தி—அப்பீல் பிரதிவாதி.

வியாச்சிய சங்கிரகம்.

P. W. 13-க்குச் சொந்தமான கொட்டகையின்மேல் கூறையை பிரித்து அழித்ததற்காக மனுதார்களும் இன்னம் சிலரும் சேர்ந்து சுமார் 100-பேர்கள் திருப்பத்தூர் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் முன்பாக குற்றஞ் சாட்டப்பட்டார்கள். விசாரணையில் அந்த நிலம் முதல் எதிரிக்குச் சொந்தமென்றும் அதனால் அக்கொட்டகையை அழிக்க தங்களுக்கு பாத்தியமுண்டென்றும் டிபன்சு சொன்னார்கள். இ. பி. கோ. 146, 425, பிரிவுப்படி எதிரிகளுக்கு சப்மாஜிஸ்டிரேட்டார் தண்டனை விதித்தார் எவருக்காவது தீங்கு செய்ததாகவும் எவரையாவது தாக்கினதாகவும்காணப்படவில்லை.

இதன்மேல் எதிரிகள் அப்பீல் செய்துக்கொண்டார்கள் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுத் தீர்மானம் :—இராமநாதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் 426-வது பிரிவுப்படி விதித்த தண்டனையை ரத்துசெய்து 147-வதுபிரிவுப்படி ஏற்பட்ட தண்டனையை 143-வது பிரிவுக்கு மாற்றி தண்டனையை உறுதிப்படுத்தி கி. பு. கோ. 106-வதுபிரிவுப்படிஎதிரிகளிடம் கலகம் பண்ணுதிருக்க இருவர் ரூபா 500-க்கும் வேறிருவர் ரூபா 50-க்கும் எதிரிகளுக்காக ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்தார் இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு எதிரிகள் ரிவிஷன் மனுகொடுத்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—சட்டவிரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக ருஜுவாகி இ. பி கோ. 143-வது பிரிவுப்படி அபராதம் விதிக்கப்பட்டார்கள். கி. பு. கோ. 106-வது பிரிவுப்படி கலகம்பண்ணுதிருக்க ஜாமின் கொடுக்கும்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

பிராசிக்கியூட்டர் தனக்குச் சொந்தமென்று பாத்தியங் கொண்டாடின நிலத்தண்டை அப்பீல் வாதிகளும் இன்னம் சிலரும் சேர்ந்து 100-பேர்வழிகள் அரிவாள் கழி முதலிய ஆயுதங்களோடு அவ்விடத்தைக் கைப்பற்றி அதன்மேலிருக்குங் கட்டடத்தையும் அழிக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் போனதற்காக சிட்சை விதிக்கப்பட்டது. நியாயம்எதிர்கட்சிக்காரர்கள் பயமுறுத்தப்பட்டு எதிர்த்து வராததால் எதிரிகள் யாதொரு தீங்கும் செய்ததில்லை. ஆயினும் (1) ஒரு 2—வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டினால் சிட்சை விதிக்கப்பட்டிருக்கிறதாலும் (2) அமைதியை கெடுத்து கலகம் பண்ணுவதற்கான குற்றம் செய்ததாக சிட்சிக்கப்படாததாலும் கி. பு. கோ. 106-வது பிரிவுப்படி ஜாமீன் வாங்கினது நியாயவிரோதமென்று எதிரிகளின் வக்கீல் ஆட்சேபிக்கிறதுபோல இந்தப்பிரிவுப்படி அப்பீல் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் அளவுகடந்ததல்ல. கீழ்க்கோர்ட்டாருக்கு எவ்வளவு அதிகாரமிருக்குமோ அவ்வளவு அதிகாரந்தான் அப்பீல்கோர்ட்டார் செலுத்தலாம். மேலே கூறிய பிரிவுப்படி அவ்வதிகாரம் செலுத்தக்கூடிய கோர்ட்டாக கீழ்க்கோர்ட்டு இருக்கும்பட்சத்தில் அதன் அப்பீல் கோர்ட்டார் இவ்வதிகாரத்தைச் செலுத்தலாம்.

அன்றியும். "அமைதியைக் குலைக்கும் செய்கை உடைய" என்று அப்பிரிவில் எழுதப்பட்டிருப்பதால் ருஜுவாகியிருக்கும் குற்றத்தில் அமைதியைக் குலைக்குஞ்செய்கை ஓர் பகுதியாகயிருப்பதோடுகூட அவ்வமைதியைக் குலைத்து கலகம்பண்ணினதாக கோர்ட்டார் கண்டிருக்கவேண்டும். இ. லா. ரி. 30-கல். 93-இல் சொல்லியிருக்கும் பாயித்யாநாத் மாஜண்டார்-v. ரிப்ரான் கூண்டர் கோப் கேசும் இ. லா. ரி 26. சென். 469-இல் சொல்லியிருக்கும் கன்னுகாரன் கூனமாட் v. சக்கிரவர்த்தி கேசும் இதற்கு அனுசரணையானது.

இந்தக்கேஸில் அமைதியைக் குலைக்குஞ் செய்கை செய்ததாக கீழ்க்கோர்ட்டார் கண்டு எழுதாததாலும் எதிரிக்குத் தண்டனை விதிக்க காரணமாயிருந்த குற்றத்தில் அமைதியைக்குலைத்தது பகுதி ஆகாததாலும் அமைதியை குலைத்து ஒரு கலகமும் எதிரிகளால் செய்யப்படாததாலும் இதற்காக ஜாமீன் வாங்கவேண்டுமென்று அப்பீல்கோர்ட்டார் செய்த தீர்ப்பை ரத்துசெய்து ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் அதைக்கான்சல்பண்ணி மற்றதண்டனையை உறுதிப்படுத்தினார்கள்.

நலிங்ஸ் :—சிட்சை விதிக்கப்பட்ட எதிரிசெய்த குற்றத்தில் அமைதியைக் குலைக்கும் செய்கை ஓர் பகுதியாயிருந்து அவ்வமைதியைக் குலைக்கும் செய்கை செய்ததாக கீழ்க்கோர்ட்டார் கண்டிருந்தால் ஒழிய இதற்கு கி. பு. கோ. 106-வது பிரிவுப்படி ஜாமீன் கொடுக்கும்படி கட்டுப்படுத்தக் கூடாதென்றும்.

(2) இந்தப்பிரிவின்படி அதிகாரங்கொடுக்கப்பட்ட ஒரு கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு சிட்சிக்கப்பட்டாலொழிய அப்பீல் கோர்ட்டார் கலகம் செய்யாதிருக்க ஜாமீன் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 29. சென்னை. 190. Muthiah Chetti v. Emperor. I. L. R. 29 Madras. 190.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

போலீஸ் கான்ஸ்டேபிள் லீவுக்குப்பின் வேலைக்கு வராதது குற்றமாகும்.

சக்கிரவர்த்தி:—வாதி (அப்பீல் வாதி)
ராமசாமி ராஜு எதிரி (அப்பீல்பிரதிவாதி)

வியாச்சிய சங்க்ரகம்.

எதிரி ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள். இவர் லீவ்கேட்டபோது லீவ் கொடுபட வில்லை. பிறகு மூன்று நாள் காஷுவல் லீவ் கேட்டு வாங்கிக்கொண்டுபோய் நீண்டகாலத்துக்கு லீவ் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். லீவ்கொடுக்கப்படவில்லை. காஷுவல் லீவ் கழித்தபிர்கு வேலைக்கு வாராமல் ஒரு மாதம் லீவ் இல்லாமல் இருந்துவிட்டார். சென்னை டிஸ்டிரிக்டு போலீஸ் ஆக்டு 44 வது பிரிவுப்படி இவரை பிராஜிக்கியூட்பண்ண சாங்கிஷன் கொடுக்கப்பட்டது. மதுரை ஸ்டேஷனரி சப்மாஜிஸ்டிரேட்டு முன்பாக விசாரணை நடந்தது.

ஸ்டேஷனரி சப்மாஜிஸ்டிரேட்டு தீர்ப்பு. இவருக்கு 12 ரூ அபராதம் போட்டு தவறினால் ஒருவாரம் காவலுக்குள்ளாகிறதென்று தண்டனை விதிக்கப்பட்டது.

இதன்மேல் எதிரி மேலூர் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் அப்பில் செய்தார். சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு தீர்ப்பு:—கான்ஸ்டேபில் காஷுவல் லீவிலிருந்து லீவ்கழித்து அதிகநாள் வராமலிருந்தாரேயல்லாமல் லீவ் இல்லாமல் வேலைக்குரியகடமைசெய்யாத குற்றம் ஆகாதென்று அபிப்பிராயப்பட்டு கீழ்க்கோர்ட்டார் தண்டனையை மாற்றி விடுதலை செய்தார்.

இதன் மேல் கவர்ன் மெண்டில் கி. பு. கோ 414 வது பிரிவுப்படி. அப்பில் செய்தார்கள்.

ஹைகோர்ட்டு தீர்மானம்:—அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு பிசகு ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் லீவ் கொடுக்கப்பட்டு அந்த லீவுக்குப்பிறகு வேலைக்கு வராமற்போனால், தான் செய்யவேண்டிய கடமையிலிருந்து விலகி "லீவ் இல்லாமல் வேலை செய்யவேண்டிய கடமையைச் செய்யாமலிருந்த குற்றத்துக்கு" உள்ளாவாரென்றும் போலீஸ் ஆக்டின் 10 வது பிரிவுப்படி விட்டு ஓடிப்போனவர்கள் தவிர மற்றவர் தங்கள் வேலை பார்க்காமல் அசட்டையாயும் வேலை பார்க்காமலுமிருந்தால் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்குவதே இந்தப்பிரிவின் கருத்தென்றும் லீவ் இல்லாமல் வேலைக்கு வராமலிருந்து விடுகிற ஒரு கான்ஸ்டேபில் இந்தக்குற்றத்துக்குரிய தண்டனைக்குள்ளாவாரென்றும் லீவ் இல்லாமல் வேலைக்கு வராத நாள்களுக்கு முன் சில நாளைக்கு லீவ் கொடுக்கப்பட்டதென்று சொல்வது குற்றத்தை எவ்விதத்திலும் வித்தியாசப்படுத்தாதென்றும் லீவ் முடிந்தவுடன் வேலைக்கு ஆஜராகியிருக்கவேண்டியதென்றும் தவறின்தான் வேலைக்குவந்து ஆஜராகி பிறகு லீவ் இல்லாமல் தங்கிவிட்டால் ஏற்படும் குற்றத்துக்கு ஒப்பாக பாவிக்கப்படுமேயல்லாமல் அவன் கடத்தை அக்குற்றத்தைச் சார்நிப்படுத்தினதாகாதென்றும் அபிப்பிராயப்பட்டு சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் செய்த விடுதலையைமாற்றி சப் மாஜிஸ்டிரேட்டார் செய்த தண்டனையை உறுதிப்படுத்தினார்கள்.

நூலிங்ஸ்:—ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் காஷுவல் லீவ் வாங்கிக்கொண்டு லீவ் கழித்தபிறகு லீவ் இல்லாமல் வேலைக்கு வாராமல் தங்கிவிட்டால் சென்னை டிஸ்டிரிக்டு போலீஸ் ஆக்டு 44 வது பிரிவுப்படி "லீவ் இல்லாமல் வேலைக்கு வராத குற்றத்துக்குள்ளாவானென்று தீர்மானிக்கபபட்டது. இ. லா. ரி. 29. சென். 192. (Emperor, v. Ramasawmy Raju 29 Madras. 192)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். ஜான். ஸடேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர். வில்லியம் பார்க்கிட்

முன்கடனில்லாமலிருக்கும் பொழுது தகப்பன் அவிபக்த குடும்பச்சொத்தை விற்பனைசெய்தல்.

ராம் டாயல்-பிரதிவாதி (அப்பீல்வாதி)
அஜூடியா பிரசாத்-வாதி (அப்பீல் பிரதிவாதி)

வியாச்சிய சங்கிரகம்,

ஷீயோ நாருயனும் அஜூடியாவும் சுக்லாலின் குமாரர்கள். இவர்கள்.தகப்பன் மேலும் தகப்பனிடம் கிரயம் வாங்கின ராம் டாயல் மேலும் முன்சிப் கோர்ட்டில் தாவாசெய்தார்கள். முன்சிப் கோர்ட்டுத்தீர்மானம்:—வாதிக்கனுகூலமாக வாதிபட்சம் தீர்ப்பு செய்தார்கள்-பிரதிவாதி அப்பீல் செய்தார்

சப்கோர்ட்டார் தீர்மானம்:—சொத்தின் சுபாவகிலமை அறியாது கிரயத்தை ஸ்தாபித்தார்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டார்கள். ஹைகோர்ட்டு ஜட்ஜிவாதி பக்கம் தீர்ப்பு செய்தார் லெட்டர்ஸ்பேட்டெண்டுப்படி திரும்ப ஹைகோர்ட்டுக்கு அப்பீல் பண்ணப்பட்டது. ஹைகோர்ட்டுத் தீர்ப்பு:—1. ஷீ பியாநாருயன் 2. அஜூடியில் ஆகிய இவர்கள், தங்கள் தகப்பன் பிதிரார்ஜித சொத்தை கிரயம் பண்ணிவிட்டதில் தங்களுக்கு 3. இல் இரண்டு பாகம் சேரவேண்டுமென்று தாவாசெய்தார்கள். இந்த வியாச்சியத்தில் இவர்களுடைய தகப்பன் சுக்லாலும் கிரயம் வாங்கினவராகிய-ராம்டாயலும் பிரதிவாதிகள். வாராந்திரக் குறப்பு (1901) 57 இல் கூறியிருக்கும் மான்பாஹால் ராய். V. கோபால் மிஸ்ரா கேசை அனுசரித்து வாதிபக்கம் முன்சிப் கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள். சுக்லாலின் தகப்பன் - பூரான் என்பவரால வாங்கப்பட்ட சொத்தாகையால் பிதிரார்ஜித சொத்தாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்று முன்சிப் கோர்ட்டுத் தீர்ப்பால் தெரிகிறது. இத்தீர்மானத்துக்கு விரோதமாக அப்பீல் பண்ணினபொழுது, பிரதிவாதியாகிய அப்பீல்வாதி, 1, 2 வாதிகளிருக்கிறதை பிரதிவாதி தெரிந்துகொண்டிருக்கிறதாக ருஜூப்பிக்கவில்லையென்றும், சுக்லாலுக்கு முன் கடனிருந்து கிரய ரொம்படியினால் தீர்க்கப்பட்டிருக்கிறதாக ரிக்கார்டுகளால் ருஜூவாகிறதென்றும்முன்கடனிருந்ததால் பிரதிவாதி கொடுத்த கிரயத்தையும் அச்சொத்துக்காக அவர் செலவு செய்திருக்கிற தொகையையும் வாப்ஸ் பண்ணுமல் வாதிகள் வார்சாக சொத்தடையக் கூடாதென்றும் வாதஞ்சொன்னார்கள். இவ்வாதத்தில் முன்சிப் கோர்ட்டு தீர்ப்பில், சொத்து பிதிரார்ஜிதமென்று கண்டிருப்பதை மறுத்து ஒரு ஆட்சேபணையும் சொல்லவில்லை. இவ்வாறிருந்தும் முற்றிலும் விளங்காமலிராததாயும் அஜாக்கிரதையாயும் தயார் செய்யப்பட்ட சப் ஜட்ஜி தீர்ப்பில் இ.லா.ரி. 24. அல. 479 இல் கூறியிருக்கும் டேபி பிரசாத் V. ஜை காரன்சிங்கு கேசில் சொல்லியிருக்கும் அம்சங்கள் இவ்வியாச்சியத்துக்கு பொருத்தமென்று சொல்லியிருக்கிறார். இந்தக்கேசு இவ்வியாச்சியத்துக்கு எவ்வம்சத்திலும் பொருத்தமுள்ளதல்ல. இ. லா. ரி 35 அல 214 இல் கூறியிருக்கும், டேபிசிங்கு. V. ஜைராம் கேசை சப் ஜட்ஜி குறிப்பிடுகிறாரென்று கட்சிக்காரர்கள் வாதம் சொன்னார்கள். இந்தக் கேசை சப் ஜட்ஜி குறிப்பிட்டிருப்பாரானால், இதுவுங்கூட ஒரு அவிபக்த குடும்பத்துக்குச் சொந்தமான ஒரு சொத்தை பெந்தகக் கடனுக்கு ஏலம் போட்டதாக இருக்கிறதால் இவ்வியாச்சியத்துக்குப் பொருத்த முள்ளதல்ல. அந்தக்கேசில் தகப்பன்கடனை பிள்ளைகள் தீர்க்கவேண்டிய கடமையைப்பற்றி யோசித்து துன்மார்க்கச்செலவுக்கு வாங்கப்பட்டதாக ருஜூவாகாத வரையில் தகப்பன் பெந்தகக் கடனுக்காக ஏல விற்பனையான சொத்து பிள்ளைகளுக்கு பாத்தியப்படாதென்று தீர்மானித்திருக்கிறது. இச்சப் ஜட்ஜி பின்வறுமாரு தன் தீர்ப்பில் எழுதியிருக்கிறார் "தாவா வீடு கிரயஞ்செய்தவரால் வாங்கப்பட்டிருக்கின்றது. கிரயசாசனம் அவர் பேருக்கு இருக்கிறது. ஆகையால் கிரயம் வாங்கினவர் இந்த சொத்தை அவரிடமிருந்து வாங்கினதில் எவ்வித தவறுதலும் செய்யவில்லை." இவ்வாக்கியங்களின், கருத்து முற்றிலும் தவறு. கீழ்க் கோர்ட்டில் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறதற்கு விரோதமாயிருக்கிறது. கிரயப்பத்திரத்தில் இச்சொத்து சுக்லாலின் தகப்பன் பூரான் என்பவரால் வாங்கப்பட்டதாகக் கண்டிருக்கிறது. பிறகு சப் ஜட்ஜி பின்வருமாறு இவ்விவாதத்தை முடிக்கிறார். "மேலே எடுத்துக்கூறிய கேஸின் சட்ட நிர்ணயத்தை ஒத்து இக்கிரயத்தை நான் ஸ்தாபிக்கவேண்டும் இக்காரணங்களை முன்னிட்டு முதல் இஷியூவை பிரதிவாதி பக்கம் தீர்மானித்தேன் முன் கூறியதுபோல சப் ஜட்ஜி குறிப்பிட்ட கேசு இவ்வியாச்சியத்துக்கு பொருத்தமில்லாததாலும் தாவா வீடு கிரயம் பண்ணினவரால் வாங்கப்பட்டதென்பது முன்சிப் கோர்ட்டார் தீர்ப்பின்படி ஒப்புக்கொண்டதற்கும், கிரய சாசனத்துக்கும் விரோதமாயிருப்பதாலும் அத்தீர்ப்புக் கீழ்க் கோர்ட்டார் தீர்ப்பை மாற்றுவதாயிருக்கும பொழுது சப் ஜட்ஜி தம் தீர்ப்பை அஜாக்கிரதையோடு தயார் செய்திருப்பது அதிக ஆச்சரியமாக இருக்கிறது. சந்தேகத்துக் கிடமில்லாமல் ஸ்தாபிக்கப்பட்ட சங்கதிகளால் இவ்வியாச்சியத்துக்கு வன்பாஹால் V. கோபால் மிஸ்ரா கேசு பொருத்தமுள்ளது. இவ்விரண்டு கேசிலும் வித்தியாசமிருக்கிறதாகத்தெரியவில்லை. ஆகையால் இக்கோர்ட்டின் ஜட்ஜி செய்த தீர்மானம் முற்றிலும் சரி. கீழே கூறப்படும் ஒரு பாகந்தவிர மற்ற விஷயத்தில் இவ்வப்பீலைத் தள்ளிவிடவேண்டும். இந்தக் கோர்ட்டு ஜட்ஜி முன் இவ்வியாச்சியம் அப்பீல் விசாரணையாகும்பொழுது வாதிகளில் ஒரு மைனரும் இரண்டு மைனர் வாதிகளின் கார்டியனும் இறந்துபோனதால் மீதியாக இருக்கும் மைனருக்கு கார்டியன் டிக்கிரிசெய்தபொழுது கோர்ட்டில் கட்சியை நடத்த ஒருவரும் ஏற்படவில்லையென்றும் வாதம் சொன்னார்கள். இது ஒரு ஒழுங்கீனந்தான் ஆயினும் அப்பீல் வாதிகளுக்கு ஒரு பந்தகமும் இதனால் உண்டாகவில்லை ஒரு கார்டியன் பின்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். ஷீயோ நாருயன் இறந்துபோனதால் இந்தக்கோர்ட்டு ஜட்ஜிசெய்த தீர்ப்பை மாற்றவேண்டும். இவன் இறந்ததால் இவன் பாகம் இவனுடைய சகோதரனுக்கும் தகப்பனுக்கும் பாத்தியமாயிற்று. ஆகையால் அஜூடியசவுக்கு $\frac{1}{2}$ பாகம் கிடைக்கவேண்டும். அவ்விதமாக ஹைகோர்ட்டு ஜட்ஜி செய்த தீர்மானத்தை மாற்றி அஜூடியாவுக்கு தாவாசொத்தில் $\frac{1}{2}$ பாகம் கொடுக்கும்படிக்கும் இதர விஷயத்தில் அத்தீர்ப்பு உறுதிசெய்யப்பட்டு, அப்பீல்வாதி இவ்வப்பீல் செலவுகொடுக்கும்படி தீர்ப்புசொல்லப்பட்டது.

நூலிங்ஸ்:—தகப்பனுக்குக் கடனில்லாமலிருக்கும் பொழுது அவன் பிதிரார்ஜித சொத்தை கிரயம்பண்ணினால் துன்மார்க்கச் செலவு செய்யாமற் போனாலும் அவிபக்த குடும்ப புத்திரன் கிரயத்தைரத்து பண்ணுவதற்கு வியாச்சியங்கொண்டு வரலாமென்றும். 2. இரண்டு மைனர் குமாரர்களுக்காக ஹைகோர்ட்டில் வியாச்சியம் நடந்துகொண்டிருக்கும்பொழுது அவர்களுடைய கார்டியனும் அவர்களில் ஒரு மைனரும் இறந்து இச்சமாசாரம் தெரியாமல் தீர்ப்பு செய்யப்பட்டால், இது ஒரு ஒழுங்கீனமாகும் இத்தீர்ப்பின்மேல் அப்பீல் பண்ணப்பட்டபொழுது பின்பு ஏற்படுத்தப்பட்ட ஒரு கார்டியனால் செம்மையாகப்படும் என்று தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 28 அல-328. Ram Dayal v. Ajudhia Prasad I. L. R. 23. All. 328.

அலகபாத் ஹைகோர்ட்டு.

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர் ஜான்ஸ் டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர்வில்லியம் பார்க்கிட்

வேறொருவருக்கு செய்திருக்கும் உடன் படிக்கை தெரிந்து வாங்கின கிரையம் செல்லாது.

அன்னுமால் வ-ரா—பிரதிவாதிகள்(அப்பீல்வாதி)
பேரலி கலெக்டர்—வாதி (அப்பீல் பிரதிவாதி)

வியாச்சியசங்கிரகம்.

1867ஹு க்ஷாதிரி நாபாத்ராம் மகேஸ்புரம் கிராமத்தையும் வேறு சில சொத்தையும் வைத்துவிட்டு இறந்துபோனார். இவர் விதவை அந்தச்சொத்தை அனுபவித்து 1878ஹு இறந்துபோனார். பிறகு நாபாத் ராமின் சுவிகாரப்புத்திரனின் மனைவியென்று சொல்லி இச்சொத்துக்களை ராணி நாருயன் குன்வார் அபகரித்துக்கொண்டார்.

1. ஷிப்லால் 2. பியாரிலால் ஆகிய ஒரேதரத்திலுள்ள இரண்டு அனர்தரவார்சுக்கள் 1881ஹு ஜுன்மீ 20வ பேரலி டிஸ்டிரிக்டு ஜட்ஜியினிடம் இச்சொத்துக்களை வசப்படுத்திக்கொள்ள டிக்கிரி பெற்றார்கள். இவ்வியாச்சியத்துக்கு பணம் உதவி செய்த லால்ஜி மால் என்பவருக்கும் இச்சொத்தில் ஒரு பாகங்கொடுத்தார்கள். பியாரிலால் இறந்துபோக இவருக்கு வார்சாக பெயிரோ பிரசாத் இச்சொத்தின் சிறிது பாகத்தை யடைந்தார்.

இவ்வாறிருக்கும்பொழுது ஷிப்லாலும் பெயிரவ பிரசாத்தும் தங்களுடைய வியாச்சியத்தில் தங்களுக்கு நர்பட பிரசாத் செய்த உதவிக்காக 1 ரூ. வரும்படியில் 2 அணு 8 பைசா வரும்படி பாகத்தை நர்படா பிரசாத்துக்குக் கொடுத்துவிடுகிற தெனறும் அவர் பெயரை தங்கள் பெயரோடு கேவாத்துகளில் பதிந்து விடுகிறதென்றும் ஒரு உடன்படிக்கை 5 ரூ ஸ்டாம்பு கடுதாசியில் எழுதி ரிஜிஸ்டர் செய்யாமல் இருந்துவிட்டார்கள். இவ்வுடன்படிக்கையில் லாஜி மால் சாட்சி போட்டிருக்கிறார். ராணி நாராயனி குண்வார் அப்பீல் செய்தபொழுது ஒரு ராஜிநாமா செய்துக்கொண்டு வேறு சொத்துக்களை கொடுத்துவிட்டும் கேஸ்புரம் கிராமத்தை தங்களுக்குள் வைத்துக்கொண்டார்கள். இந்த ராஜி நாமாவை ஒட்டி ஹைகோர்ட்டு டிக்கிரி 1885ஹு ஜூலைமீ 8வ ஏற்பட்டது. இத்தறுவாயில் ராணி நாராயனி குன்வார் மகேஸ்புரம் கிராமத்தை ராம் சரப் என்பவருக்கு தனக்கு பாத்தியதை யுள்ளதாக 1885ஹு செப்டம்பர்மீ 24வ ஹைகோர்ட்டு டிக்கிரிக்குப் பிறகு கிரயஞ்செய்து விட்டார். இக்கிரயத்தை ஆதாரமாகக் கொண்டு ராம் சரப்பின் மேல் டிக்கிரி பெற்ற ஒருவர் இக்கிராமத்தை ஏலம் போடஓர் க்ஷாரன் மிசர் என்பவர் ஏல மெடுத்துவிட்டு இறந்துபோனார். இவர் குமாரர்கள் மைனராயிருந்ததால் கோர்ட்டு ஆப் வார்டுஸ் இல் இவர் சொத்துக்களை பரிபாலனம் பண்ணினார்கள்.

ஷிப்லாலின் சகோதரன் மகன் லக்ஷிமி நாருயணனுக்கும் ஷிப்லாலுக்கும் விவாதம் வந்த பொழுது ஓர் மத்தியஸ்

தரிடம் மகேஸ்புரம் கிராமத்துக்கு பாத்தியதையுள்ளவர்களின்றென்றும் இவ்வளவு பாத்தியமுள்ளதென்றும் பின்வருமாறு தெரிவித்துக்கொண்டார்கள்.

ஷிப்லாலுக்கு 4 அணா 6 பைசா வரும்படி பாகமும் பெயிரோ பிரசாத்துக்கு 3 அணா 6 பைசா வரும்படி பாகமும் லால்ஜிமாலுக்கு 5-அணா 4-பைசா வரும்படி பாகமும் நர்படா பிரசாத்துக்கு 2 அணா 8 பைசா வரும்படி பாகமும் உள்ளதென்றும் இதில் யாதொரு விவாதமும் இல்லையென்றும் எழுதிக்கொடுத்தார்கள்.

ஷிப்லாலுக்கும் லக்ஷ்மி நாராயணனுக்கும் நடந்த வியாச்சியத்தில் நர்படா பிரசாத்துக்கு 2 அணா 8 பைசா வரும்படி பாகம் சொந்தமென்று ஷிப்லால் ஒப்புக்கொண்டிருந்தும் லால்ஜிமால் முன் உடன்படிக்கையில் சாட்சி போட்டிருந்தும் ஷிப்லாலுக்கு 7 அணா 2 பைசா வரும்படி பாகம் பாத்தியமிருப்பதுபோல அவரிடமிருந்து லால்ஜிமால் ஒரு கிரயம் வாங்கிக்கொண்டார். லால்ஜிமால் இறந்துபோக இவர் விதவை அன்னாமாலுக்கு லால்ஜிமாலின் பாத்தியதையை கிரயஞ் செய்தார்.

1896௵ அக்டோபர்௴ 10௳ ஹர் ஷாரன் மிசர் என்பவருக்கு நர்படா பிரசாத்தின் பாகம் 2 அணா 8 பைசா வரும்படிக்காக ஒரு விடுதலைப் பத்திரம் கொடுத்துவிட்டார்.

1901௵ அலகபாத் பேங்கார் (Allahabad Bank) லால்ஜிமாலைக் கட்டுப்படுத்தி ஒரு டிக்கிரி பெற்றிருந்ததால் மகேஸ்புரம் கிராமத்தில் லால்ஜிமாலுக்கு 13 அணா 4½ பைசா வரும்படி பாகம் பாத்தியமிருக்கிறதாகச் சொல்லி ஏலத்துக்குக்கொண்டு வந்தார்கள். அவ்வளவு லால்ஜிமாலுக்குச் சொந்தமில்லையென்று ஹர் ஷாரன் மிசர் மைனர் குமாரர்களுக்காக கோர்ட்டு ஆப்வார்ட்ஸார் ஆக்ஷேபணை மனு கொடுத்தார்கள். இவ்வாட்சேபணை மனுவை சப் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளாததால் சி. பு. கோ. 283 வது பிரிவுப்படி புது வியாச்சியம் கொண்டுவந்தார்கள். மகேஸ்புரம் கிராமத்தில் தங்களுக்கு 8 அணா வரும்படி பாகம் தங்களுக்கிருக்கிறதாக டிக்கிளேயர் பண்ணும்படிக்கும் அப்பாகத்தின் மேல் அலகபாத்து பேங்கார் (Bank) தொடரக் கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள்.

இவர்களுக்குப் பிரதிவாதிகளாக இருந்தவர்கள் 1. அலகபாத்து பேங்கு (2) லால்ஜிமாலின் விதவையும் குமாரர்களும் (3) அன்னாமால், சந்தர் ஷை அலகபாத்து பேங்குக்கு பணம் செல்லாகிவிட்டதால் இவர்கள் கட்சியாடவில்லை. லால்ஜிமாலின் விதவையும் குமாரர்களும் தங்கள் பாத்தியதையைக் கிரயஞ் செய்துவிட்டதால் இவர்களும் கட்சியாடவில்லை.

அன்னாமால் வ-ரா மாத்திரம் எதிர் கட்சியாடினார்கள்.

சப் கோர்ட்டார் தீர்மானம்:—நர்படா பிரசாத்தின் பாகமாகிய 2 அணா 8 பைசா வரும்படி உள்பட 5 அணா 3⅓ பைசா வரும்படி பாகத்துக்கு வாதி பக்கம் தீர்ப்பு செய்தார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அன்னாமால் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—ராணி நாராயணி குன்வாரின் ராஜிநாமா தீர்ப்பு ஹைகோர்ட்டார் செய்ததற்கு ஒரு வருஷத்துக்குமுன் 1884௵ செப்டம்பர்௴ 15௳ ஷிப்லாலும் பெயிரோ பிரசாத்தும் இந்த வியாச்சியத்தில் முக்கிய தஸ்தாவேஜாயிருக்கும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ராணி நாராயணி குன்வாரோடு செய்த வியாச்சியத்தில் தாங்கள் ஜெயமடைந்ததையும் நர்படா பிரசாத் தங்களுடைய கட்சியிலிருந்து நடத்தினதையும் தங்கள் பாத்தியதை ஸ்தாபிக்க தஸ்தாவேஜி சாட்சியங்கள் தயார் பண்ணினதையும் தாங்களும் நர்படா பிரசாத்தும் ஒரே மூல புருஷனின் சந்ததியாயிருப்பதையும் கண்டெழுதி (மேலே கூறிய உதவிக்காக) தீர்மானத்தினாலாவது ராஜிநாமாவினாலாவது தங்களுக்குக் கிடைத்து தங்கள் சுவாதீனமாகும் எல்லா சொத்துக்களிலும் 2 அணா 8 பைசா வரும்படி பாகத்தை நர்படா பிரசாத்துக்குக் கொடுக்கிறதென்று உடன்படிக்கையில் எழுதியிருந்தார்கள். அன்றியும் அவர் பெயரை கேவாத்தில் தங்கள் பெயரோடு ஜமீன்தாரென்றும் சொத்துக்குச் சொந்தக்காரரென்றும் பதிந்துவிடுகிறதென்று அவ்வுடன்படிக்கையில் வரையப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் லால்ஜிமால், சாட்சி கையெழுத்துப்போட்டிருந்தார். இதில் லால்ஜிமால் வாங்கியிருந்த சில சொத்துக்களும் மதசம்பந்தமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த சில சொத்துக்களும் விலக்கியிருந்தன லால்ஜிமால் நேரில் அந்த பத்திரத்தில் சம்பந்தப்படாமலிருந்தாலும் அவ்வுடன்படிக்கையில் எழுதியிருக்குஞ் சங்கதிகளை யறிந்தவராக விருக்கிறார். பேரலி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தீர்ப்பினால் நாபாத்ராமின் குடும்ப சந்ததி ஜாபிதாவை நர்படாபிரசாத் சேகரம் பண்ணிகொடுத்து கட்சி செயிக்கும்படிச் செய்ததாக தெரியவருகிறது. இவ்வுடன்படிக்கை ஐந்து ரூபாய் ஸ்டாம்புக்கடிதத்தில் எழுதி ரிஜிஸ்டர் பண்ணப்படாமலிருந்தது; 2 அணா 8 பைசா வரும்படி பாகத்தை கிரயஞ் செய்ததாக யாதொரு பத்திரமும் காண்பிக்கப்படவில்லை. இவ்விரண்டுங் குறைவாயிருக்கிறதென்று டிபன்சு சொன்னார்கள். 2 அணா 8 பைசா வரும்படி பாகத்துக்குச் சொந்தக்காரராக நர்படா பிரசாத்தின் பெயரை கேவாத்தில் எழுதி உடன்படிக்கை ஷரத்து பூர்த்தி பண்ணியிருக்கிறதாக 1902௵ ஹைகோர்ட்டார் செய்த அப்பீல் தீர்மானத்தால் தெரிகிறது. இந்த வியாச்சியம் ஷிப்லால் ஒரு பக்கத்திலும் நர்படா பிரசாத் மற்றொரு பக்கத்திலுமிருந்து கட்சியாடினதால் ஏற்பட்ட தீர்ப்பு. அப்பீல் வாதிகளாகவும் கீழ்க்கோர்ட்டு பிரதிவாதிகளாகவுமிருக்கிறவர்கள் ஷிப்லால் லால்ஜிமாலுக்கு மகேஸ்புரம் கிராமத்தில் 7 அணா 2 பைசா வரும்படி பாகத்தை விற்றதினால் (இதில் 2 அணா 8 பைசா வரும்படி பாகமும் சேர்ந்திருக்கிறதென்று) அது தங்களுக்குகிடைக்கவேண்டுமென்று பாத்தியங் கொண்டாடுகிறார்கள். ஹர் ஷாரன் மிசருக்கு நர்படா பிரசாத்து 2 அணா 8 பைசா வரும்படி பாகத்தை விடுதலை பத்திரத்தின் மூலமாக கையளித்துவிட்டதால் கீழ்க்கோர்ட்டு வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகையால் இவ்வியாச்சியத்தின் இரு கட்சிக்காரர்களும் அவ்வியாச்சியத்தின் இருகட்சிகாரர்களிடமிருந்து தங்களுக்கு பாத்தியமுண்டானதாகச் சொல்லுகிறார்கள். முந்தின வியாச்சியத்தில் நர்படா பிரசாத்துக்கு யாதொரு பாகமும் கொடுக்கப்படவேண்டியதில்லையென்றும் கொடுக்க உடன் படவில்லையென்றும் இவர் பெயரை வாதி பதிந்தது புகலான காரியமென்றும் கட்டுப்பாடான காரியமென்றும் டிக்கிளேயர் பண்ணும்படி கோர்ட்டாரை ஷிப்லால் கேட்டுக்கொண்டார். ஷிப்லாலின் மேல் தாவா செய்ய உத்தேசித்திருந்த லக்ஷ்மி நாராயணனை இந்தச் சொத்து நர்படா பிரசாத்துக்குச் சொந்தமென்று காண்பித்து ஏமாற்றுவதற்காக இக்காரியஞ் செய்ததாக ஷிப்லால் காரணஞ் சொன்னார். இந்த வியாச்சியம் கீழ்க்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வியாச்சியம் அப்பீலில் ஹைகோர்ட்டு விசாரணைக்கு வந்தபோது ஷிப்லாலின் பிராது பொய்யென்றும், லக்ஷ்மி நாராயணனை ஏமாற்றுவதற்கு நர்படா பிரசாத்தின் பெயர் பதியப்படவில்லையென்றும் முன்னேற்பட்ட உடன்படிக்கையை முன்னிட்டு அவர் பெயர் பதியப்பட்டதென்றும் 1887௵ மார்ச்சு௴ 9௳ நடந்த வேறொரு உடன் படிக்கையில் இது உறுதி செய்யப் பட்டிருக்கிறதென்றும். நர்படா பிரசாத்

இச் சொத்துக்கு ஈடாக தான் உதவி செய்திருப்பதாலும் அவ்வீடு போதுமானதாயிருப்பதாலும் அவ்வுடன்படிக்கை இருவரையுங் கட்டுப்படுத்து மென்றும் உடன்படிக்கைபடி நர்படா பிரசாத்துக்கு கிரய சாசனம் செய்துகொடுக்கவேண்டு மென்றும், அக்கடமையில் ஷிப்லால் தவறிவிட்ட காரணத்துக்காக நியாயப்படி அவருக்குச் சேரக்கூடாத ஒரு சொத்தை சுவாதீனப் படுத்திக்கொள்ள டிக்கிரி கொடுக்கக் கூடாதென்றும் அத்தீர்ப்பில் எழுதியிருக்கிறார்கள். அத்தீர்ப்பில் கொண்ட கருத்தை மாற்றி வேறு தீர்ப்பு செய்ய இப்பொழுது யாதொரு காரணமும் இல்லை. இத்தீர்ப்பினால் இவ்வியாச்சியத்தில் எதிர் கட்சிக்காரர் சொல்வது போலன்றி நர்படா பிரசாத்தின் பெயரை சேவாத்தில் பதிந்தது உடன்படிக்கையில் ஏற்பட்ட வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்கென்று தெரிகிறது. வேறொரு தஸ்தாவேஜி 1887௵ மார்ச்சு௴ 9௳ எழுதப்பட்டது 1 பெயிரோ பிரசாத் 2. ஷிப்லால் 3. நர்படா பிரசாத்-4. லக்ஷ்மி நாராயணன்-5. லால்ஜிமால் ஆகிய இவ்வைந்து பேரும் கூடி அத்தஸ்தாவேஜியை எழுதியிருக்கிறார்கள் அதில் நர்பாத் ராமின் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்வதற்காக-நர்படா பிரசாத்தின் பெயரை சில நடவடிக்கைநடத்துவதற்காக நீக்கிவிடவேண்டு மென்றும் கீழே குறித்த பிரகாரம் இவர்கள் பங்கு ஸ்தாபிக்கப்பட்டுப் போய் எல்லாருடைய சம்மதத்தின் மேல் அப்பங்கு வீதம் அன்றைய வரைக்கும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகிறதென்றும் இப்பங்கு வீதம் - ஷிப்லால் - 4½ அணா - பெயிரோ பிரசாத் 3 அணா 4 பைசா நர்படா பிரசாத் 2 அணா 8 பைசா லால்ஜிமால் 5 அணா 4 பைசா என்றும் கண்டிருந்தது - இப்பங்கு வீதத்தில் ஷிப்லாலுக்கும் லக்ஷ்மி நாராயணனுக்கும் விவாத மிருக்கிற தென்றும் மற்றவர்கள் பங்கு வீதத்தில் ஒரு விவாதமும் இல்லை யென்றும் எழுதப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் - ஷிப்லாலினுடைய பாகத்தில் - லக்ஷ்மி நாராயணனுக்கு இவ்வளவு பாகமென்றும் வக்கீல் மிஸ்டர் காஸ்பருடைய மத்தியஸ்தம் முதலியவைகளும் எழுதப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மேலே குறித்த ஜட்ஜிமெண்டில் இப்பத்திரத்தைப் பற்றி ஹைகோர்ட்டார் பூராய் யோசித்து முன்னுடன்படிக்கையை அனுசரித்து. எழுதியிருந்தார்கள் இதில் 1. கட்சிக்காரர்களின் பாகத்தில் விவாத மிருக்கிறதாகவாவது அவைகளைத் தீர்க்க மத்தியஸ்தரைக் கேட்டுக்கொள்ளவாவது இல்லை 2. நர்படா பிரசாத் அந்த மத்தியஸ்த வியாச்சியத்தில் ஒரு கட்சிக்காரராக இருந்தார் 3. கிராமக்-கேவாத்தில் நர்படா பிரசாத்தின் -பெயர் எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வுடன்படிக்கை ஷரத்துப்படி காரியங்கள் நிறைவேற்றப்பட்டதென்று தெரிகிறது. லக்ஷ்மி நாராயணன்செய்த வியாச்சியத்தில் மத்தியஸ்தரால் 2 அணா 8 பைசாவரும்படி பாகம் நர்படா பிரசாத்துக்கு தீர்ப்பு செய்திருக்கிறதாக - ஷிப்லால் சொல்லியிருக்கிறாரென்றும் முன் ஜட்ஜ்மெண்டில் கண்டிருக்கிறது. இதனால் நர்படா பிரசாத்துக்கு 2 அணா 8 பைசா வரும்படி பாகம் சொந்த மென்று ஷிப்லால் ஒப்புக்கொண்டு கிராமத்தின் - கேவாத்தில் இவர் பெயரையும் பதிந்திருக்கிறார் என்று தெரிகிறது 7000 ரூபாய் கிரயம் பேசி (2 அணா 8 பைசா பாகம் உள்பட) 7 அணா 2 பைசா வரும்படி பாகம் தனக்கிருக்கிறதாகக் கண்டு - லால்ஜிமாலுக்கு ஷிப்லால் கிரயஞ் செய்திருக்கிற கிரய சாசனம் 1896௵ மே௴ 8௳ பிறந்திருக்கிறது இதில் நர்படா பிரசாத்தின் யாவரும் ஒப்புக்கொண்ட பாத்தியதையை அறியாதிருக்கிறது போல் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கிரயஞ் செய்தவரும் பெற்றுக்கொண்டவரும் நர்படா பிரசாத்துக் குரிய பாத்தியதையை நன்றாய் அறிந்திருக்கிற வர்களென்று சொல்லாமலே விளங்குகின்றது. 1887௵ உடன் படிக்கையில் லால்ஜிமாலும். ஷிப்லாலும் நேரிற் சம்பந்தப்பட்டவர்கள். 1884௵ உடன் படிக்கையில் - ஷிப்லால் நேரிற் சம்பந்தப்பட்டும் லாலஜிமால் சாக்ஷியாகவுமிருக்கிறார். இவ்விரண்டாவது பத்திரத்தில் லால்ஜிமாலின் சொந்த சொத்துக்கள் நன்றாய்க் காபந்து பண்ணப்பட்டு எழுதியிருக்கிறது. இதனால் 2 அணா 8 பைசா வரும்படி பாகம் விற்ற ஷிப்லால் தனக்குச் சொந்தமல்ல வென்று தெரிந்தவராக இருக்கிறார் இப்பாகத்தை வாங்கின லால்ஜிமாலும் விற்றவருக்குச் சொந்தமல்லாத பாகத்தை வாங்குகிறோமென்றும் தெரிந்தவராக இருக்கிறார். இவர்களிருவரும் அச்சொத்து நர்படா பிரசாத்துக்குச் சொந்த மென்று தெரிந்திருக்கிறார்கள். 1895௵ டிசம்பர்௴ 16௳ ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தின்படி தனக்குப் பாத்திய முண்டென்று விற்றதை கவனிக்கவேண்டியதில்லை. இத்தீர்ப்போ, ஷிப்லால் பெயிரோ பிரசாத் - லால்ஜிமால் ஆகிய மூவர்களும் ஹர்ஷாரன்லால் இடமிருந்து மகேஷ்புரம் கிராமத்தை சுவாதீனப் படுத்திக்கொள்ள கொண்டுவந்த வியாச்சியம் இதில் நர்படா பிரசாத்தை சேர்த்துக்கொண்டு கக்ஷியாடவில்லை ஆகையால் இத்தீர்மானம் நர்படாபிரசாத்தை பாதிக்காது. ஆகையால் 2 அணா 8 பைசா வரும்படி பாகத்துக்கு நர்படா பிரசாத் சொந்தக்காரர்.

1896௵ அக்டோபர்௴ 10௳ நர்படாபிரசாத் எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரத்தில் தனக்கு நாபாத்ராமின் முழுச்சொத்தில் 2 அணா 8 பைசா பாகம் தனக்குச் சொந்த மென்றும் மத்தியஸ்தர் தீர்ப்பினாலும் கிராம ரிக்கார்டுகளில் தன் பெயர் பதியப்பட்டிருக்கிறதினாலும் மகேஷ்புரம் கிராமம் உள்பட தான் குறித்திருக்கும் பாகம் அவ்வளவுக்கு சுவாதீன அனுபவம் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு நேரிட்ட வியாச்சியச் செலவினால் ஏற்பட்ட கடனையும் தன் முன்னோர் பட்ட கடனையும் தீர்க்கவேண்டி மகேஷபுரம் கிராமத்தில் தனக்குரிய 2 அணா 8 பைசா பாகத்தை தான் விட்டதாகவும் இனி தனக்கு யாதொரு சம்பந்த மில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது. ஹர்ஷாரன்லால் மிசருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. இப்பத்திரத்தின் மூலமாக வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் தங்கள் பாத்தியதை ஸ்தாபிக்க முயன்றார்கள்.

நர்படா பிரசாத்து விஷயமாகச் செய்த உடன் படிக்கை ரிஜிஸ்டர் ஆகாமலிருக்கிறதால் முடிவு பெறாத வாக்குத்தத்தம் என்று அப்பீல் வாதிகள் வாதஞ் சொன்னார்கள். 2 அணா 8 பைசா பாகம் நர்படா பிரசாத்துக்குச் சொந்த மென்று கேவாத்தில் இவர் பெயர் எழுதப்பட்டிருப்பதாலும் மத்தியஸ்தர் விசாரணைக்காக செய்துக் கொண்ட உடன் படிக்கையில் நான்கு பாகஸ்தர்களுடைய பாகமும் எல்லாருடைய ஒற்றுமையினாலும் சம்மதத்தினாலும் அப்பொழுது வரைக்கும் ஒழுங்காயனுபவித்து வருவதாகக் கண்டிருப்பதாலும், 9 வருஷத்துக்குப்பின் ஷிப்லால் தான் ஒப்புக்கொண்டதற்கு மாறாக மற்றொருவர் பாகத்தைச் சேர்த்து கிரயஞ் செய்திருப்பதாலும் மேலே கூறிய வாதம் நிற்கத்தகுந்ததல்ல. அன்றியும் ரிஜிஸ்டர் ஆகாத ஒரு பத்திரத்தை நர்படா பிரசாத்தின் பாத்தியத்துக்கு ஆதாரமாகக் காண்பிப்பது செல்லத்தகுந்ததல்ல வென்றும் ஷிப்லால் தங்களுக்கு முந்தி 1896௵ மே௴ கிரயஞ் செய்து விட்டதாகவும் அதற்குப் பிறகு 1896௵ அக்டோபர்௴ 10௳ அப்பீல் பிரதிவாதிகளுக்கு நர்படாபிரசாத் கிரயம் பண்ணியிருப்பதாகவும் அதனால் அப்பீல் பிரதிவாதியின் கட்சி பலமில்லையென்றும் அப்பீல்வாதிகள் வாதஞ்சொன்னார்கள்.

அநியாயத்தை உண்டுபண்ணி ரிஜிஸ்டரேஷன் ஆக்டை ஒரு யந்திரமாக்கக்கூடாதென்று அடிக்கடி ஹைகோர்ட்டில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ரிஜிஸ்டர் பண்ணப்பட்ட கிரயசாசனத்தையுடைய ஒருவன் தனக்கு முன் கிரயம் வாங்கின் வேறொருவன் ரிஜிஸ்டராகாத ஒரு கிரயசாசனம் பெற்றிருப்பது தெரிந்து வாங்குவானேயானால் ரிஜிஸ்டர் பண்ணினபத்திரத்தையுடையவனுக்கு ரிஜிஸ்டரேஷன் ஆக்டில் சொல்லியிருந்தாலும் முந்திபாத்தியம் கிடைக்காது. இவ்விதி இந்த இலாக்காவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகிறது. இதேப்பிரகாரம் இங்கிலாந்திலும் ரிஜிஸ்டரேஷனுள்ள கௌன்ட்டிகளிலும அனுஷ்டித்துவரப்படுகின்றது 1861௵ 1 ஜான்சன் 685 இல் சொல்லியிருக்கும் பென்ஹாம் V. கீள் கேசில் சொல்லியிருக்கிறசாவது. "ஒருவன் தன்முன்னடத்தையால் கிரயம்பண்ண யோக்கியதையில்லாத பட்சத்தில் அவனிடமிருந்து வேறொருவன் அது தெரிந்து வாங்குவானேயானால் விற்கிறவனின் மனச்சாட்சியினால் வாங்குகிறவனின் மனச்சாட்சி பாதிக்கப்படும் ஆகையால் விற்கிறவன் விர்பதிலிருந்து விலக்கப்பட்டவனென்றுதெரிந்து வாங்குகிறவன் விற்பவனைப்போலேதானும் வாங்குவதிலிருந்து விலக்கப்படுவான்" ஆகையால் ஷிப்லால் நர்படாபிரசாத்துக்கு கொடுத்துவிட்ட அதேசொத்தை விர்பதிலிருந்து தடுக்கப்படுவதுபோல் இது தெரிந்து வாங்கின-லால்ஜிமாலும் தடுக்கப்படுவோர்.

சில கேசுகளில் இது விஷயமாகச்சொல்லப்பட்டவைகளாவன:—

முன்னால் இரகசியமாகவும் மோசடியாகவும் செய்துக்கொண்ட சொத்துக்களின்மேலுள்ள பாத்தியதையினால் பின் அச்சொத்து வாங்குகிறவர்களை பாதிக்காமலிருப்பதற்கு ரிஜிஸ்டரேஷன் ஆக்டு ஒரு காபந்தாக ஏர்படுத்தப்பட்டதேயன்றி ஏற்கனவே கைமாறிப்போன சொத்தை இது விஷயந்தெரிந்து வாங்குகிறவர்களை காபந்துபண்ண ஏர்பட்டதல்ல. அது சட்டத்தின் நோக்கமன்று என்று ஜேம்ஸ் என்னும் ஜஸ்டிஸ் சொல்லுகிறார்.

இரகசியமாக கிரயம் முதலிய பராதீனம் செய்யப்பட்டிருந்து பின் வேறொருவன் அதனையறியாது பணம்கொடுத்துவாங்கி ரிஜிஷ்டர் பண்ணி கிரயசாசனம் வைத்திருந்தால் அவனைக்காபந்து பண்ணுவதே ரிஜிஷ்டரேஷன் ஆக்டின் வித்தாகும் என்றும் முன்னடந்த கிரயமுதலியவை தெரிந்து வாங்கும் ஒருவனுக்கு அது காபந்து ஆகாதென்றும் பேகாலே என்னும் ஜஸ்டிஸ் சொல்லியிருக்கிறார்.

ஒருவன் தன்னுடைய சொத்தை வேறொருவனுக்குக் கிரயம் பண்ணுவதாக உடன்பட்டிருக்கும்பொழுது இதனை லக்ஷியஞ்செய்யாது மூன்றாவது பேர்வழிக்கு கிரயம் பண்ணி இதுவிஷயம் வாங்குகிறவன் அறிந்திருக்கின் பின் வாங்கினவனுடைய மன்ச்சாட்சி பங்கமாயிருக்கிறதால் முன்வாங்கிக்கொள்ள ஒப்பந்தம் பண்ணினவனுடைய பாத்தியதைக்குள் பட்டே இவனுக்குச்செல்லுமேயன்றி இவன் கிரயம் நிற்கத் தகுந்ததல்லவென்றும் பிரேம்வெல் என்னும் ஜஸ்டிஸ் கூறியிருக்கிறார்.

மனச்சாட்சி பாதிக்கப்படாமலிருக்கும் பேர்களுக்கு இந்த ஆக்டு காபந்தாகுமேயல்லாமல் ஒரு உடன்படிக்கை விரோதமாக ஒரு தப்பிதத்தை செய்பவனோடு கூடிக்கொண்டு அப்பிசகுக்கு உடந்தையாயிருக்கும் வேறொருவனைக் காபந்துபண்ணுவது இவ் ஆக்டின் கருத்தல்ல வென்று இந்த ஜஸ்டிஸ் திரும்பவும் சொல்லியிருக்கிறார்.

மேலே கூறியவைகளை இவ்வப்பீல் சம்பந்தமாக யோசிக்கும்பொழுது. ஷிப்லாலுக்கும் நர்படாபிரசாத்துக்கும் நடந்த நடவடிக்கைகளை-லால்ஜிமால் பூராய் அறிந்தவராய் இருக்கிறார். இந்நடவடிக்கையினால் 2 அணா 8 பைசா பாகத்துக்கு சொந்தக்காரராக இவர் பெயர் பதிவாயிருக்கிறது. அப்பீல் வாதிகள் லால்ஜிமாலின் பாத்தியதையடைந்தவர்களாயிருக்கிறதால்-நர்படாபிரசாத்துக்கு 2 அணா 8 பைசா பாகத்துக்கு சொந்தக்காரராகையாலும் அந்தப்பாத்தியத்தை அப்பீல் பிரதிவாதிக்கு வந்துவிட்டபடியாலும் அப்பீல் வாதிகள் இவருக்குப்பாத்தியமில்லையென்று சொல்லக்கூடியவர்களல்ல வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் வசம் 2 அணா 8 பைசா பாகமிருக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நர்படாபிரசாத்தைத் தவிர வேறொருவருக்கு ஷிப்லால் பராதீனம் பண்ண யோக்கியதையுடையவரல்ல. ஷிப்லால் அப்பாகத்தை பராதீனம் பண்ணக்கூடிய பாத்தியதையை இழந்தவராயிருக்கிறதினால் யோக்கியதையோடு 1896௵ மார்ச்சு௴ 10௳ அதை கிரயஞ்செய்யக்கூடியவரல்லவென்பதை - லால்ஜிமால் அறிந்தவராயிருக்கிறார்.

லால் ஜிமால் அக்கிரயத்தை ஒப்புக்கொண்டபொழுது நல்ல எண்ணத்துடன்வாங்கினவராக மாட்டார். இவரும் இதைகிரயஞ்செய்தவரும் அயோக்கியதையாய் நடந்துக்கொண்டார்கள். நர்படாபிரசாத்தை சொத்தின்பாத்தியத்திலிருந்து விலக்கவும் 1887௵ மார்ச்சு௴ 1884௵ செப்டம்பர்௴ களில் பிறந்த உடன்படிக்கைகளினால் ஏற்பட்ட நர்படாபிரசாத்தின் நலத்தைக்கெடுக்கவும் ஷப்லாலின் கருத்தாயிருக்கிறதென்று ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது. மேலே சொன்ன காரணங்களால் சப் கோர்ட்டார் தீர்ப்பு நியாயமென்று அதைவுறுதிப்படுத்தி அப்பீலை செலவு தொகை யுடன் தள்ளி விட்டார்கள்.

நூலிங்ஸ்:—ஒருகேசில் ஜெயமடைந்த சிலவாதிகள் ஒரு பெரிய சொத்தையடைந்தார்கள் தங்கள் வியாச்சியத்தில் உதவிபுரிந்த ஓர் சொந்தக்காரனுக்கு அந்தச்சொத்தில் ஒரு பாகம் கொடுக்கிறதென்று உடன்பாடு செய்துக்கொண்டு அவ்வுடன் பாட்டின்படிமற்ற உடன்பங்காளிகளின் சம்மதத்தோடு இவர் பெயரை கிராமரிக்கார்டுகளின் பதிவு செய்து இவர் வசத்திலும் அப்பாக அனுபவத்தையும் விட்டுவிட்டார்கள் ஆனால் கிரயசாசனம்எழுதி ரிஜிஸ்டர் பண்ணவில்லை பின்பு இவ்வாறு அனுபவிப்பதையும் காரணத்தையுமறிந்தவேறொருவருக்கு மூலபங்காளிகளில் ஒருவர் விட்ட இப்பாகத்தை கிரயம்பண்ணினார்.

விற்றவர், விற்கதனக்குப்பாத்தியமில்லையென்று தெரிந்துவிற்றதாலும், முன் வாங்கின வரை மோசஞ் செய்யாமல் விற்கமுடியாதென்கிறதை பின்பு வாங்கினவர் அறிந்திருப்பதாலும் முன்வாங்கினவரின் பாத்தியத்துக்கு விரோதமாக இவ்விற்பனை பயன்படாதென்று தீர்மானிக்கப்பட்டது இ. லா. ரி. 28. அல. 315.

(Annu Mal. v. The collector of Bareilly I.L.R. 28 All 315.)

விடுமுறை நாட்கள்.

சென்னை ராஜதானியில் மே௴ம் ஜூன்௴மும் கோர்ட்டுகள் மூடப்படுவதுபோல பங்காளத்தில் செப்டம்பர்௴மும் அக்டோபர்௴மும் மூடப்படுகிற வழக்கம். அது போல் நிகழ் செப்டம்பர்௴ம் முதல் கல்கத்தா ஹைகோர்ட்டு மூடப்பட்டிருக்கிறது. சிப் ஜட்ஜியும் இன்னும் சில ஜட்ஜிகளும் இங்கிலாண்டிற்குப் போயிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் மிட்டரும், ஜஸ்டிஸ் ஹொம்வுட்டும் ரஜாகால ஜட்ஜிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அவசரமான வேலைகளை மட்டிலும் பைசல் செய்து வருவார்கள்.

கல்க்ட்டா ஹைகோர்ட்டு.

சீவில் அப்பில்

ஜட்ஜிகள்:— சிப்ஜஸ்டிஸ்சர்.பிரான்வலிஸ்,W.மாக்லீன்.

மெசர்ஸ் ஜஸ்டிஸ் சேல், ஜஸ்டிஸ் ஹாரிங்டன்.

காப்பிரயிட். ஜஸ்டிஸ் ஹைகோர்ட்டு அதிகாரம்.

அப்டுலா பே. சாரபாலி—(அப்பீல் வாதி)

இஸ்மேயல் பின் ஷேக்பாடால்—மனுதார் (அப்பீல் பிரதிவாதி)

வியாச்சியசங்கிரகம்.

மகமது சேலேபின் அஜி ஓமர், ஜாவாவில் வாசம் செய்பவர் "மஜ்மால் ஆல் சேரா" "முன்ல்யாட" என்னும் இரண்டுபுத்தகங்களை எழுதி1893-சிங்கப்பூரில் அச்சடித்தாரென்றும், 1901௵த்தில் காப்பிரயிட்டை 1847௵ காப்பிரயிட் ஆக்டுப்படி அங்குள்ள கலோனியல் சிக்கிரெட்டரி ஆபிசில் ரிஜிஸ்டர் பண்ணினார் என்றும், 1903௵ ஜனவரி௴ 26௳ பிறந்த பத்திரத்தினால் அந்தக்காப்பிரயிட் பாத்தியத்தை, இஸ்மேயல் பின் ஷேக்பாடாலுக்கு கையளித்து விட்டாரென்றும், பம்பாயிலுள்ள அப்டுலாபேசாரபாலி கம்பெனியார் இதற்கு முன் சில காலமாக இப்புத்தகங்களை அச்சிற்பதிப்பித்து சிங்கப்பூர் ஜாவாமுதலிய இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பிவந்தாரென்றும் இவ்வாறுசெய்யக்கூடாதென்று அந்தக்கம்பெனியாருக்கு இஸ்மேயில் பின் ஷேக்பாடால் நோட்டிஸ் கொடுத்தும் கேட்டுக்கொண்டபடி அவர்கள் செய்யவில்லை யென்றும் மேலே சொன்ன இரண்டு புத்தகங்களுக்கும் காப்பிரயிட்டு தங்களுக்குச்சொந்தமென்று 1867௵ 25வது ஆக்டுப்படி பம்பாயில் புஸ்தககாட்டலாக்கில் ரிஜிஸ்டர்பண்ணியிருக்கிறார்களென்றும் இப்பதிப்பிலிருந்து இவர்கள் பெயரை நீக்கவேண்டுமென்று கல்கட்டாஹைகோர்ட்டுக்கு இஸ்மேயல்பின் ஷேக்பாடால் மனு செய்துக்கொண்டார்

இவர் ஹைகோர்ட்டுக்கு 1904௵ ஆகஸ்டு௴ 29௳ மனு செய்துக்கொண்டார். பிறகு டிசம்பர்௴ 6௳ இந்தியா கவர்ன்மெண்டுஹோம் சிக்கிரட்டேரி ஆபிசில் ரிஜிஸ்டரி புஸ்தகத்தில் இப்புத்தகங்களின் காப்பிரயிட்டை ரிஜிஸ்டர் பண்ணினார் ஹைகோர்ட்டில் அசல்பக்கத்தில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடில்லி என்பவர் விசாரணை பண்ணினார்.

ஹைகோர்ட்டு அசல்பக்கத்தில் தீர்மானம்.—இந்தஹைகோர்ட்டுக்கு இக்கேசைப்பிடித்து விசாரணை பண்ண அதிகாரமில்லையென்றும் 1847௵ காப்பிரயிட் ஆக்டின் 6-வது. பிரிவுப்படிமனுதார் இடையூறுஅடைந்ததாக ரூபிக்கவேண்டியகடமை மனுதாருடைய பொறுப்பென்றும்வாதித்தார்கள். அன்றியும் மனுதார் சொல்வதுபோல ஓமர் அப்புத்தகங்களை எழுதவில்லை. பசலென்னும் ஒருடச்சுக்குடியானவன் எழுதி தனக்குக்காப்பிரயிட்டைக் கொடுத்ததாக எதிர் மனுதார் கட்சிசொன்னார்,

1847௵ காப்பிரயிட் ஆக்ட்டுப்படி சுப்பிரீம் கோர்ட்டாருக்கு இருந்த அதிகாரம் அந்தக்கோர்ட்டை மூடி அந்தஸ்தானத்தில் ஹைகோர்ட்டை நியமிக்கும் பொழுது சுப்பிரீம் கோர்ட்டார் செய்த அதிகாரத்தை ஹைகோர்ட்டார் செய்கிறதென்றுசார்ட்டர்24-25விக்டோரியா 104 அதிகாரம் 1வது பிரிவில்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்ஹைகோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறது 1864௵ காப்பிரயிட்ஆக்டினால் ஒவ்வொரு இராஜதானியிலும் ஒருகாப்பிரயிட் ரிஜிஸ்டர்வைக்க அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால் அவ்வாக்குப்படிபம்பாயிலிருக்கும் காப்பிரயிட்ரிஜிஸ்டரில் இருக்கும்பதிவு விஷயமாக பம்பாய் ஹைகோர்ட்டார் விசாரணை பண்ண வேண்டுமென்று எதிர்வாதம் சொன்னார் பம்பாய் கோர்ட்டுக்கு இதை விசாரணை பண்ண அதிகாரமிருக்கிறதாவென்பதைப்பற்றி யோசிக்கவேண்டியதில்லை யென்றும் சுப்பிரீம் கோர்ட்டாருக்கிருந்த சகல அதிகாரமும் ஹைகோர்ட்டுக்கு அளிக்கப்பட்டதால் இவ்ஹைகோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறதென்று இந்த ஜட்ஜி அபிப்பிராயப்பட்டார் புஸ்தகங்களின் முதல் பக்கத்தைப்பார்க்கும் பொழுது ஓமரென்பவரால் எழுதப்பட்டிருக்கிறதாகத்தெரிகிறது, பசல் என்பவர் எழுதினதாகத்தெரியவராததாலும் இச்சங்கதி தெளிவாக இருக்கிறதால் இதைப்பற்றி விசாரிக்கவேண்டியதில்லை கோர்ட்டில் காண்பிக்கப்பட்ட புஸ்தகங்கள் 1893௵ ஓமரென்பவர் நேரில் பதிப்பித்த புஸ்தகங்களாக இருந்தன; எதிர்மனுதார் தன்பெயருக்கு காப்பிரயிட்டை பதிவு செய்துக்கொண்டதால் மனுதார் இடையூறு அடைந்தவராக இருக்கிறார் ஆகையால் மனுதார் நிவர்த்தி தேடிக்கொள்ள வேண்டியவராயிருப்பதால் எதிர்மனுதார் பெயரைபம்பாய் ரிஜீஸ்டிரிலிருந்து எடுத்து விடவேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

இத்தீர்ப்பின் மேல் எதிர்மனுதார் ஹைகோர்ட்டுக்கு அப்பில்செய்தார்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு:—அப்பில்வாதியின் வாதம்" இந்தக்கேசை விசாரிக்க கல்கட்டா ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. 1847௵ காப்பிரயிட் ஆக்டுப்படி கல்கட்டா சுப்பிரீம் கோர்ட்டாருக்கு கல்கட்டா ஹோம்சிக்கிரட்டேரி ஆபிசில் ஒரேகாப்பிரயிட் ரிஜிஸ்டர் வைத்திருந்தபொழுது இக்கேசுகளை விசாரிக்க அதிகாரமிருந்தது. அவ்ரிஜிஸ்டர்கள் பல பிராவின்ஸுகளில் வைக்கும்படி 1867௵ காப்பிரயிட்டுஆக்டில் விதி ஏற்படுத்தின பொழுது அவ்வவ்விலாக்கா ஹைகோர்ட்டுக்கு இவ்வதிகாரம் கொடுக்கப்பட்டதே யொழிய கல்கட்டா ஹைகோர்ட்டுக்கு இவ்வதிகாரமிருக்கிறதாகத்தெரியவில்லை. பம்பாய் ஹைகோர்ட்டுக்கு இவ்வதிகார மிருக்கிறது. அன்றியும் அசல் பக்கத்திலிருந்து ஹைகோர்ட்டில் விசாரணை பண்ணும் ஜட்ஜிக்கு இவ்வதிகாரமேயில்லை. 1847௵ ஆக்டின் 6வது பிரிவுப்படி மனுதார் இடையூறு அடைந்தவரல்ல. பிரமாணவாக்கு மூல சாட்சியத்தின் மேல் இக்கேசைமுடிவு பண்ணக்கூடாது இதைநிர்ணயிக்க ஒரு இஷியூ ஏற்படுத்தி விசாரிக்கவேண்டும்.

1847௵ ஆக்டின் 14வது பிரிவுப்படி இந்தியாகவர்ன்மெண்டு ஹோம் சிக்கிரிட்டேரி ஆபீசில் ரிஜிஸ்டரி புஸ்தகத்தில் பதிவு செய்த பிறகு இவ்வியாச்சியங் கொண்டு வரவேண்டியதாகையால் அவ்விதம்செய்யாமல் இவ்வியாச்சியஞ் செய்தது நிற்கத் தகுந்ததல்ல."

மனுதாராகிய அப்பீல் பிரதிவாதி மேலேகூறியவைகள் ஒவ்வொன்றையும் மறுத்துக்கூறி 1847௵ ஆக்டின் 14வது பிரிவு அதே ஆக்டின் 6வது பிரிவின் நடவடிக்கைகளைக்குறிக்காதென்றும் 6வது பிரிவுப்படி செய்யும் நடவடிக்கைகள் 14 வது பிரிவிற் சொல்லிய சங்கிரக நடவடிக்கையல்ல வென்றும் எதிர் வாதம் சொன்னார்.

ரிஜிஸ்டரி புஸ்தகத்தில் 1847 ௵ ஆக்டைபோலிகாபந்தாக வைத்து செய்திருக்குமெப்பதிவினாலாகிலும் எவனாவது இடையூறுபட்டால் அப்பதிவு அழிக்கப்பட சுப்பிரீம் கோர்ட்டாருக்கு மனுசெய்து அப்பதிவை அழித்து விடும்படி உத்திரவு பிறப்பிக்கக்கேட்டுக்கொள்ளலாமென்று அவ்வாக்டின் 6வது பிரிவுகூறுகிறது.

ஒவ்வொரு இராஜதானி தலைநகரங்களில் ஒருபுஸ்தக கேட்டலாக் வைக்கவேண்டியதென்றும் இந்தியாவில் அச்சடிக்கப்படும் புஸ்தகங்களை அதில் பதிவு செய்ய வேண்டுமென்றும் 1847௵ ஆக்டில் இது சம்பந்தமாகச்சொல்லியிருக்

கும் அம்சங்கள் அவசியமான மாறுதலோடு இங்கு இசைவித்துக்கொள்ள வேண்டுமென்றும் 1867௵ ஆக்டு 18வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

கல்கட்டா சுப்பிரீம் கோர்ட்டுக்குள்ள அதிகாரம் இதனால் இதவிஷயத்தில் நீக்கி விட்டது என்று சொன்னார்களே யன்றி சுப்பிரீம் கோர்ட்டுக்குள்ள எல்லா அதிகாரமும் ஹைகோர்ட்டுக்கு வந்ததைப்பற்றி ஓர் விவாதமும் இல்லை. அபீல்வாதி சொல்லுகிற இந்தவாதம் சம்மத முள்ளதல்ல. 1867 ௵ ஆக்டு 18வது பிரிவு இவ்வதிகாரத்தை சுப்பிரீம் கோர்ட்டிலிருந்து நீக்கி பம்பாய் ஹைகோர்ட்டுக்கு ஏற்படுத்தினது என்று வாதித்தார்கள். இவ்விவாதத்துக்கு ஆக்டின் பாஷை நடையில் ஆதாரமில்லை மூந்தின ஆக்டில்" ரிஜிஸ்டரி புஸ்தகம் என்பதற்கு" புஸ்தககேட்டலாக்,, என்று தார்ப்பரியப்படச்சொன்னதேயன்றி இக்கோர்ட்டின் அதிகாரம் இந்தப்பிரிவினால் நீங்கிவிட்டதென்றுஅர்த்தம் பண்ணுவது அதிக்கிரமப்போக்காகும்.

இக்கோர்ட்டுக்கு இவ்வதிகாரமிருக்கிறதாக ஸ்தாபித்தபிறகு அசல்பக்கத்து ஜட்ஜிக்கு அதிகாரமில்லையென்று வாதிப்பது அதி ஆச்சரியகரமானது.

இவ்வாதம் முதல் கோர்ட்டில் ஏற்படவில்லை சார்ட்டர் ஆக்டு (24, 25 விக்டோரியா) 14 வது பிரிவுப்படி சீப் ஜஸ்டிஸால் நியமிககப்படும் அசல்பக்கத்து ஜட்ஜிக்கு இதை விசாரிக்க அதிகாரமிருக்கிறது லெட்டர் பேட்டென்ட் 19, 13, 14, 36 வது பிரிவுகளின் படி இதற்குச்சந்தேகமேயில்லை ஆகையால் இவ்வாதம் நிற்கத்தகுந்த தல்ல 6வது பிரிவுப்படி இடையூறு அடைந்த மனிதன் இவ்வப்பீல் பிரதிவாதி, இவருக்குச்சொந்தமாகிய காப்பிரயிட்டை தனக்குரியதாக அப்பீல் வாதி மோசடியாக தன் பெயரை பம்பாய் புஸ்தக கேட்டலாக்கில் பதிவித்திருக்கிறது அப்பீல் பிரதி வாதிக்கு நஷ்டத்தை உண்டுபண்ணக்கூடியது. பிரமாண வாக்கு மூல சாட்சியத்தை மாத்திரங்கொண்டு தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது காப்பிரயிட்டுக்குச் சொந்தக்காரர் இன்னவரென்றுநன்றாய்க்கோர்ட்டுக்குத் தெரியும் பொழுதும் அப்பீல்வாதி அப்பீல் பிரதிவாதியை ஏமாற்றுகிறதற்காக பம்பாயில் தன் பெயரை பதித்திருப்பது கோர்ட்டுக்குத்தெரியும் பொழுதும் கோர்ட்டார் இது விஷயமாக நடத்தினது நியாயமே.

அப்பீல் வாதி கூறிய வாதங்களில் மிகவும் முக்கியமானதும் இக்கேசை அதிகமாய் பாதகப்படுத்தக்கூடியது மான ஆக்ஷேபனை ஹோம் சிக்கிரெட்டேரி ஆபீசில் ரிஜிஸ்டர் பண்ணாமல் மனுதார் மனுகொடுத்தது இவ்வாட்க்ஷேபனை முதல் கோர்ட்டில் கூறப்படவில்லை அப்பீல் கோர்ட்டிலும் பிரதமத்தில் சொல்லப்படாமல் விவாதம் முடிவானவுடனே எடுத்துரைக்கப்பட்டது.

1847௵ ஆக்டுப்படி ரிஜிஸ்டரி புஸ்தகத்தில்(3, 4, வில்லியம் அதி 85) பார்லிமெண்டு ஆக்டுக்குப்பிறகு பிரசுரமாகும் புஸ்தகங்களை ரிஜிஸ்ட்ர் செய்யாதபட்சத்தில் அந்த ஆக்டின் 14வது பிரிவுப்படி ஒருவியாச்சியமும் கொண்டுவரக்கூடாது. ஆயினும்புஸ்தகக்காப்பிரயிட்இதரவியாச்சியங்கள் இதனால் பாதிக்கப்படாது இந்த ஆக்டுப்படி மாத்திரம் வியாச்சியஞ் செய்யக்கூடாது என்று கூறுகிறது மனுதார் செய்துக்கொண்டபொழுது ஹோம் சிக்கிரெடெரி ஆபிசில் ரிஜிஸ்டர் செய்யவில்லைஇது ஓர்ஆட்சேபனையாகஅப்பீல் வாதி சொன்னார்,6வதுபிரிவுப்படி செய்யும்சங்கிரக நடவடிக்கைகளுக்கு 14 வதுபிரிவுபொருத்தமுள்ள தல்ல வென்று மனுதார் எதிர்வாதம்சொன்னார் ஆனால் ஆக்டில் 6வது பிரிவில் சொல்லியிருக்கும்சங்கிரக நடவடிக்கையையன்றிவேறுசங்கிரகநடவடிக்கைசொல்லப்படாத தால் இதைத்தான் 14வது பிரிவு குறிப்பிடுகிறது.

இது சட்டமீறின நடவடிக்கை யாகாதென்று மனுதாரரால் ஆக்ஷேபிக்கப்பட்டது, புஸ்தங்களை ஹோம்சிக்கிரட்டேரிஆபிசில் ரிஜிஸ்டர்பண்ணாதது சட்டமீறின நடவடிக்கையேயென்று அபிப்பிராயப்பட்டு அப்பீலை யேற்றுக்கொண்டு மனுதார் மனுசெய்துக்கொள்ள சட்டமீறின நடவடிக்கையினால் தடுக்கப்பட்டிருக்கிறாரென்று அப்பீல் வாதிபக்கம் தீர்ப்பு சொல்லி இவ்வாட்சேபனை முதல் கோர்ட்டில் சொல்லாததால் செலவு தொகைக்குத் தீர்ப்புசொல்லவில்லை ரூலிங்ஸ் 1867௵ 25 ஆக்டுப்படி பம்பாயில் புத்தககேட்டலாக்கில் ரிஜிஸ்டர் பண்ணின பதிவை அழிக்கவேண்டு மென்று புத்தகங்களின் காப்பிரயிட்டை விலைக்கு வாங்கினவேறொருவர் கல்கட்டா ஹைகோர்ட்டுக்கு மனுசெய்துக்கொண்டதில்.

1-1867௵ 25 வது ஆக்டின் 18 வது பிரிவு 1847௵ காப்பிரயிட் ஆக்டின் 6 வது பிரிவுப்படி சுப்பிரீம் கோர்ட்டுக்குக்கொடுத்திருந்த அதிகாரத்தை மாற்றினதில்லை அதன் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட ஹைகோர்ட்டுக்கு சுப்பிரீம் கோர்ட்டுக்குள்ள சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால் ஹைகோர்ட்டு 14 வது பிரிவுப்படிவிசாரணை செய்யும் ஜட்ஜி பம்பாயில் ரிஜிஸ்டர் செய்திருக்கும் பதிவை அழிக்க 1847௵ ஆக்டுபடி உத்திரவு பிறப்பிக்க லாமென்றும். 2. புஸ்தகங்களின் காப்பிரயிட்டுச் சொந்தமானவர் வேறொருவரால் அவைகளை தனக்குச்சொந்தமாக புஸ்தககேட்டலாக்கில் பதிவு செய்தால், இடையூறு அடைந்தவராவாரென்றும் 3 இப்பேர்க்கொத்த கேசுஸ்பஷ்டமாக இன்னதென்று நிதானிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் பிரமாண வாக்கு மூல சாக்ஷியத்தைக்கொண்டே முடிவு செய்துவிடலாமென்றும் 4. 1847 ௵ ஆக்டின் 6 வது பிரிவுப்படி விசாரணையாகும் நடவடிக்கை 14வது பிரிவுப்படிசங்கிரகநடவடிக்கையாகும். ஹோம் சிக்கிரட்டெரி ஆபிசில் ரிஜிஸ்டர் பண்ணாமல்மனு செய்வதற்குத்தடையாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லாரி 33 கல். 571.

(Abdoolla Bhay Sarafalli v. Ismail Bin Shaikh Badal I. L. R. 33 cal 571)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:--மிஸ்டர் ஜஸ்டிஸ் மித்ரா

மிஸ்டர் ஜஸ்டிஸ் கெயிட்

ஏகதேசத்திலும் பொதுவிலும் கட்டுப்பட்டிருக்கும் பிரதிவாதிகள்.

ஜெய கோவிந்லாகா—வாதி

(இவ்வார்சுகள் அப்பீல் வாதிகள்)

மொன்மொதா நாத் பெனார்ஜி—பிரதிவாதி

(அப்பீல் பிரதிவாதி)

வியாச்சிய சங்கிரகம்.

1306-ம் வருஷம் முதல் 1309-ம் வருஷம் வரைக்கும் சாகுபடி செய்ததற்குக் கிடைக்கவேண்டிய மேல் வாரத்துக்காக குடியானவர்களாகிய பிரதிவாதிகள்மேல்வாதிஜெசோர் அடிஷனல் முன்சீப்கோர்ட்டில் தாவா செய்தார். இதற்குப் பிரதிவாதிகள் 1308-ம் ௵த்தில் தங்கள் உழவுடைப் பாத்தியதையயை குமிடினிதாஸ்யிடம்விற்றுவிட்டபடியால்அதற்குப் பின் தாங்கள் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களல்ல வென்றும் அதுவரையில் தாங்கள் கொடுக்கவேண்டியதை செலுத்திவிட்டதாகவும் டிபன்சு சொன்னார்கள்.

முன்சீப்கோர்ட்டார் தீர்மானம்:—குமிடினிதாஸ் என்பவருக்கு கிரயம்பண்ணிவிட்டதாக ஒரு ரிஜிஸ்டர் பத்திரம் பிறந்திருந்தபோதிலும் உண்மையில் அச்சொத்துக்களின் உழவுடையபாத்தியம் அனுபோகத்தில் விடப்படவில்லை என்று தெரிந்துகொண்டு வாதிபக்கம் தீர்ப்பு சொன்னார். இதன் மேல் அப்பீல் செய்தபொழுது அடிஷனல் ஜட்ஜி;

செய்த தீர்யானம்:—இப்பாத்தியம் கிரயம் பண்ணக்கூடியதாகையாலும் ஒரு கிரயப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதாலும் கிரயமான காலத்துக்கு பின் ஏற்படும் மேல் வாரத்துக்கு பிரதிவாதிகள் கட்டுப்பட்டவர்களல்லவென்று கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றி பிரதிவாதிகள் பக்கம் தீர்ப்பு செய்தார்கள்.

இதன்மேல் வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார் ஹைகோர்ட்டுத்தீர்ப்பு பிரதிவாதிகளில் ஒருவர் இறந்துபோயிருக்க அவர் வார்சை சி. பு. கோ. 368-வது பிரிவுப்படிகட்சியிற் சேர்க்காததால் இவ்வப்பீல் நிலைக்கத்தகுந்தல்லஎன்று அப்பீல் பிரதிவாதிவாதஞ்சொல்லி இ. லா. ரி. 22. அல. 430 இல் சொல்லியிருக்கிற ஹெம்கூன்வார் V. அம்பா பிரசாத் கேசை இதற்கு ஆதாரமாகக் காட்டினார்கள்.

இதற்கு எதிர் வாதமாக, பிரதிவாதிகள் பொதுவாயும் ஒவ்வொருவரும் ஏக தேசத்திலும் இப்பகுதி கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாகையால் இவ்வப்பீலுக்குக் கெடுதியில்லையென்றும் இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் ஒரு வேளை இவ்வப்பீலில்பாதிக்கப்படலாம்; சி. பு. கோ 368-வது பிரிவின் தாற்பரியம் இதுவேயென்றும்; ஒரு கிரயம் ஏற்பட்டால் அக்கிரயம் செல்லும்படி யுள்ளதாக இருக்கவேண்டும் ஒருவருக்குப்பேரிரவலாகவும் கட்டுப்பாடாகவு மிருக்கிற கிரயத்தை அடிஷனல் ஜட்ஜி எடுத்துக்கூறிய கேசுகள் குறிக்கவில்லையென்றும் அப்பீல் வாதிசொன்னார்.

இதற்கு மாறாக, முதல் அப்பீல் கோர்ட்டார் எடுத்துக் காட்டிய இ. லா. ரி. 16 கல் 642 இல் கூறியிருக்கும் கிரிஷ்டோ, புல்லவ கோஸ் V. கிரிஷ்டோ லால் சிங்கு கேசும் இ. லா, ரி. 19 கல் 17 இல் சொல்லியிருக்கும் சிந்தாமணி டட் V. ராசுபெஹாரி மொண்டல் கேசும் அக்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துகிறதென்றும் உழவுடைப்பாத்தியம் கிரயம் பண்ணக்கூடியதென்றும் அவ்வாறு கிரயம் பண்ணினதாக ஒரு ரிஜிஸ்டர் பத்திரம் செய்யப்பட்டிருப்பதால் அக்கிரயம் செல்லும்படியானதென்றும் ஆகையால் கிரயம்பண்ணிவர்களின் கடமை கிரயமான தேதியோடுநின்று விட்டதென்றும் பிரதிவாதி ஆக்ஷேபித்தார். இவ்வப்பீல் நடக்கும்பொழுது ஒரு பிரதிவாதி இறந்தார் அவர் வார்சை வாதிகள் கட்சியில் சேர்க்கவில்லை பிரதிவாதிகள் சேர்ந்தும் தனித்தும் பகுதித்தொகை கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாதலால் இறந்துபோன பிரதிவாதிக்காக அவருடைய வார்சை நியமிக்காமற்போனது இதர பிரதிவாதிகளைதங்கள் கடமையிலிருந்து விலக்காது அப்பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் இவ்வப்பீல்பாதிக்கப்படும் இதரபிரதிவாதிகள்மேல் அப்பீல் நடவடக்கை நடத்தக் கூடாதென்பதற்கு யாதொரு காரணமும் இல்லை. சி. பு. கோ 308 வது பிரிவுடன் "இறந்துபோன பிரதிவாதிசம்பந்தப்பட்ட அளவுக்கு என்று சேர்த்துவாசித்துக்கொள்ளவேண்டும். ஆனால் ஹெம்கூன்வார் V. அம்பா பிரசாத் கேசில் ஒரு பிரதிவாதி இறந்து அவருக்கு வார்சு நியமித்து கட்சியில் சேர்க்காவிட்டால் அப்பீல் காலியாய் விடும் என்றுதீர்மானிக்கப்பட்டிருக்கிறது இவ்வியாச்சியம் நிலத்தை சுவாதீனப்படுத்தக் கொண்டுவரப்பட்டது. பிரதிவாதிகளுக்குதனித்த பாத்திய மிருந்ததாகத் தெரியவில்லை இதைப்போல்தனித்தும் சேர்ந்தும் கட்டுப்பட்டவர்களல்ல ஆகையால் இதைப்பற்றி பிரதிவாதி சொன்ன ஆட்சேபனை நிற்கத்தகுந்ததல்ல, இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில்அப்பீல் நிற்காது, இரண்டாவது,

ரிஜிஸ்டர் பத்திரம் பிறந்திருப்பதால் கிரயம் பூர்த்தி ஆகிவிட்டது. ஆகையால் பின் பகுதிக்குப்பிரதிவாதிகள்கட்டுப் படக்கூடியவர்களல்லவென்று அடிஷனல் ஜட்ஜி சொல்லுகிறார். குமிடினி என்பவருக்கு கிரயம் பண்ணினபடி அந்நிலத்தை அவர் அனுபோகத்துக்கு விடவில்லை இதற்கு ஈடும் கொடுக்கப்படவில்லை யென்று ருஜுவாகிறதால் கிரயம்-மாறாட்டமானதென்று முன்சீப்கோர்ட்டார் சொல்லுகிறார். முன்சீப்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயமே சரி, அடிஷனல் ஜட்ஜி குறிப்பிடுகிற இரண்டு கேசுகளும் இக்கேசுக்கு வித்தியாசமானது இக்கேசுகளில் பொய்யாகவும் மாறாட்டமாகவும் செய்யுங் கிரயங்களைப்பற்றிப்பேசவில்லை, உண்மையான கிரயங்களைப்பற்றிக்குறிப்பிடுகிறது கிரயம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் கிரயஞ்செய்தவர்கள் பின் பகுதிக்குக் கட்டுப்பட்டவர்களல்ல ஆகையால் இக்கேசை திரும்ப கீழ்க்கோர்ட்டுக்கு அனுப்பி குமிடினிக்குச்செய்தக்கிரயம் உண்மையா மாறாட்டமுள்ளதா வென்பதை முடிவுசெய்யவேண்டுமென்றும் இம்முடிவின்பேரில் செலவு தொகை ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்ப்புசொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்:—ஒரு வியாச்சியத்தில் பிரதிவாதிகள் தனித்தும் சேர்ந்தும் ஒரு தொகைக்குக் கட்டுப்பட்டிருந்தால் இவர்களில் ஒருவர் இறந்து போக அவருக்குப்பதில் வேறொருவரை நியமிக்காவிட்டால் இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் மாத்திரம் அப்பீல் பாதிக்கப்படும் என்றும் உழவுடைப்பாத்தியம் கிரயம் பண்ணக்கூடியதாயிருந்து அக்கிரயம் உண்மையில் செய்யப்படாமல் பேரிரவலாகவும் மாறாட்டமாகவும் நடந்திருந்தால் கிரயப்பத்திரம் ரிஜிஸ்டராயிருந்தபோதிலும் கிரயஞ் செய்தவர் பகுதி செலுத்த வேண்டிய கடமையிலிருந்து விலக்கப்படாரென்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 33 கல் 580.

(Jay Gobind Laha v. Monmothanath Banerj I L. R. 33Cal. 580)

சென்னை ஹைகோர்ட்.

இன்சால் வென்சி கோர்ட்

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ்போடாம்.

இன்சால் வென்சி கோர்ட்டின் அதிகாரம்.

கேசின்விவரம்:—T. குமாரவடிவேலு முதலியார் என்பவர் தாக்கல் செய்த இன்சால் வென்சிமனு நிகழ் செப்டம்பர௴ 8௳ விசாரணைக்கு வந்தது அவர்தம்முடைய கடன்களை எல்லாம் பைசல் செய்துவிட்டதாகச் சொல்லி மனுவை வாப்பீஸ்யெல்லாம் பெற்றுக்கொள்வதற்கு உத்திரவு கேட்டார்.

உத்திரவு:—ஒருமனிதன் இன்சால் வென்சி தாக்கல் செய்தால் அதை கோர்ட்டார் விசாரித்து பைசல் செய்ய வேண்டுமே தவிர அந்த மனிதன் அதை வாப்பீஸ்கேட்டால் வாப்பீஸகொடுக்க கோர்டாருக்கு அதிகாரங்கிடையாது, அந்தமனிதன் வாப்பீஸ் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று விரும்பினால் ஷெடியூலில் காணப்பட்டகடன் கொடுத்தவர்கள்எல்லோரும் சேர்ந்து கோர்ட்டார் மனுவை வாப்பீஸ் செய்துவிடலாமென்று மனுசெய்து கொள்ளவேண்டும். ஆகையால் வாப்பீஸ் கொடுக்கபடமாட்டாது விசாரணை ஒருமாதம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது அதற்குள் தகுந்த ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

ஏமாற்றி நகையை வாங்கின கேஸ்.

சென்னப்பட்டணம் ஜியார்ஜ்டௌன் அண்ணுப் பிள்ளை தெருவில் அய்யாவய்யர் என்கிறவர் வீட்டில் ராஜம்மாள் என்பவள்வேலை செய்துகொண்டிருந்தாள் எஜமான் வீட்டிலில்லாதகாலத்தில் இவள் அவருடைய வீட்டிற்குச் சென்று அவ்வீட்டிலிருந்த 10 வயதுடைய ருக்குமணி என்னும் பெண்ணிடம் அப்பெண்ணின் தாயார் பெட்டியில் வைத்திருக்கிற நகையை அப்படியே வாங்கி வரச்சொன்னதாகத் தெரிவிக்க அந்தப்பெண் அவ்வார்த்தைகளை நம்பி அந் நகைப் பெட்டியைக் கொடுக்க வேலைக்காரி அதை தன் வீட்டில் கொண்டுபோய் வைத்துக்கொண்டாள். இச்சமாச்சாரம் வெளிப்படபோலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் அண்ணுமலைப்பிள்ளை அவளை அரஸ்ட்செய்து நகையைப்பெற்றுக்கொண்டார். இந்தக் குற்றத்திற்காக இவள் ஜியார்ஜ்டௌன் போலீஸ் கோர்ட் பிரசிடென்சி மேஜிஸ்டிரேட் மிஸ்டர் F. D. பேர்ட் அவர்களால் விசாரணை செய்யப்பட்டு மூன்றுமாத கடுங்காவல் தண்டனை அடைந்திருக்கிறுள்.

பிளேக் பிராசிக்கியூஷன்.

தஞ்சாவூர் ஜில்லா செருவமணி கிராமத்தைச் சேர்ந்த மிஸ்டர் V. S. நாராயண அய்யர் பிளேக் விதிகளுக்கு விரோதமாய் நடந்ததற்காக இரண்டாவது சர்க்கில் பிளேக் இன்ஸ்பக்டரால் பிராசிக்கியூட் செய்யப்பட ஜியார்ஜ்டௌன் இண்டாவது பிரசிடென்சி மேஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் P. ராஜரெத்தின முதலியார் அவர்களால் நிகழ் செப்டம்பர்௴ 14௳ ரூ 7 அபராதம் விதிக்கப்பட்டார்.

செய்யவேண்டிய் கடமையை செய்யாதிருந்த குற்றக்கேஸ்,

பர்மா ஹான்த்தவாடி டிவிஷனைச்சேர்ந்த கின்ஜி என்னும் கிராமத்தில் சென்ற ஏப்பிரல்௴ த்தில் சில தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் ஒரு கிராம வாசியின் வீட்டில் கொள்ளை அடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வீட்டில் மூன்று மிலிட்டரி போலீஸ்க்காரர்கள் குதிரைமே லேறிக்கொண்டு பந்தோபஸ்திலிருந்தார்கள். தீவட்டி கொள்ளைக்காரர்கள் கொள்ளை அடிப்பது இவர்களுக்குத் தெரிந்திருந்தும் இவர்கள் அவர்களைப் பின்பற்றிச்சென்று பிடிக்க முயலவில்லை. இந்தக் குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட் முதல் குற்றவாளியை மூன்று மாத கடுங்காவல் தண்டனைக்கும் மற்ற இருவர்களை இரண்டு மாத கடுங்காவல் தண்டனைக்கும் உட்படுத்தினர். இவர்கள் அப்பீல் செய்திருக்கிறார்கள். குதிரைகள் முரண்டிக்கொண்டிருந்ததாகவும் அவைகளைப் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் டிபன்ஸ் கூறியிருக்கிறார்கள்.

தபால் சேவகன் செய்த மோசம்,

ஒரு கிரிமினல் குற்ற சம்பந்தமாக போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆபிசைச்சேர்ந்த தபால் சேவகனுகிய மிஸ்டர் அப்தல் ராஜக் என்பவனுடைய வீடு சோதனை செய்யப்பட்டது. சுமார் 500 தபால்கடிதங்கள் அவனுடைய வீட்டில் அகப்பட்டன. ஹைகோர்ட்டிற்கு எதிரிலுள்ள தபால்பெட்டியில் விழும்கடிதங்களைஎடுத்து போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆபிசில் ஒப்புவிப்பது அவனுடைய கடமை. தபால் கடிதங்களில் ஒட்டப்பட்டிருக்கும் ஸ்டாம்புகளுக்கு ஆசைப்பட்டு அந்த ஸ்டாம்புகளை எடுத்துக்கொண்டு கடிதங்களை வீட்டில் போட்டிருந்தான் என்று தெரியவந்தது. இவன் இந்தியன் போஸ்டாபீஸ் ஆகட் 52-வது பிரிவின்படி பிரசிடென்சி மேஜிஸ்டிரேட் மிஸ்டர் பேர்ட் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டான். இவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தன்னை பிரசிடென்சி மேஜிஸ்டிரேட்டே விசாரணைசெய்து தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். இந்தக் கேஸ் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்படவேண்டிய கேசானபடியால் மாஜிஸ்டிரேட் சாக்ஷி விசாரணை செய்துக்கொண்டுவருகிறுர்.

சென்னை ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்:— ஜஸ்டிஸ் சர்ரால்ப் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

நல்ல நடைத்தைக்கு ஜாமீன் வாங்குவதைப்பற்றிய விவாதம்.

கேசின் விபரம்:—துரைசாமியும் இன்னும் பன்னிரண்டு பேர்களும் சட்ட விரோதமான கூட்டம் கூடி கலகஞ் செய்ததாக குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு அரந்தாங்கி இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரட்டால் தமக்கு ரூ 30 அபராதமும் அப்படி அபராதம் கட்டாவிடில் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்த தண்டனைக்கு விரோதமாக அவர்கள் பட்டுக்கோட்டை முதல் கிளாஸ் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்து கொண்டாகள். இவர் அப்பீலை விசாரித்து கீழ்க்கோர்ட்டு தண்டனையை உறுதி செய்தது மன்றி அப்பீல் தாரர்களிட மிருந்து நல்ல நடைத்தைக்குச் ஜாமீன் வாங்கும் படியும் தீர்ப்பு சொன்னர். இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக அப்பீல்தாரர்கள் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

தீர்ப்பு:— இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டு தண்டனை அடைந்தவர்கள் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்து கொண்டால், கி. பு. கோ. 163-வது பிரிவின்படி அவர்களிடமிருந்து நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்க உத்திரவு செய்ய அவருக்கு அதிகாரம் கிடையாது.

நாகதாளி (சப்பாத்திக்கள்ளி) மாடுகளுக்கு ஆகாரம்.

1. கருப்புகாலத்தில் நாகதாளியை மாடுகளுக்கு அதிக வலிவுகொடுக்கிற தீனியாகச்செய்து உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதினுல் பெரிய கருப்புகாலத்தில் அனேகமாடு சாகாமல் பிழைத்தது. இப்பொழுதுகூட பல்லாரியில் அதை அதிகமாய் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறுர்கள்.

2. மேலே கண்டிருக்கிறபடத்தில் நாகதாளியை மாடுகளின் தீனிக்கி தயார்செய்யும் விதத்தை காட்டியிருக்கிறது. இதற்கு முக்கியமாய் வேண்டிய கருவிகளாவன:—

(1) இரும்பு கொறடு ஒன்று. இது முள்ளைப் பிடுங்குகிறதற்கு உபயோகம்.

(2) சின்ன கவைக்கோல் அல்லது நுணியில் பிளந்த மூங்கில் ஒன்று. இது நாகதாளி பில்லையால் குத்தி எடுக்கிறதற்கும் முள்ளை பிடுங்கும்போது அதை அழுத்தி பிடித்துக்கொள்ளுகிறதற்கும் உபயோகம்.

(3) சாதாரண கத்தி ஒன்று. இது நாகதாளி பில்லையை துண்டிக்கிறதற்கு உபயோகம்.

3. நாகதாளி பில்லையை தரையின்பேரிலாவது பலகையின்பேரிலாவது வைத்து மேலே சொன்ன கவைக்கோலினுலாவது மூங்கிலினுலாவது அமித்தி இருப்புக்கொறட்டினுல் முள்ளை கொத்துக்கொத்தாய் பிடுங்கிவிடவேண்டியது. கொறட்டின் ஒரு நுணியை முள்ளின் அடியில் அழுத்தி - மற்றொரு நுணியையுச்சேர்த்து கொறட்டை அமிக்கி இழுத்தால் முள்ளுகள் அதிகசுலபமாக கொத்துக்கொத்தாய் வந்துவிடும். இந்த பிரகாரம் கொரட்டினுல் நாகதாளி பில்லையின் இரண்டுபக்கத்திலுமிருக்கிற முள்ளுகளையெல்லாம் எடுத்துவிட்டு அதின் ஓரத்திலிருக்கிற முள்ளுகளை கத்தியினுல் கழித்துவிடவேண்டியது.

4. மேற்படத்தில் இடது பக்கத்திலிருக்கிற ஸ்திரி நாகதாளிபில்லையின் மேலிருக்கிற முள்ளை பிடுங்குகிறவள் போலவும் வலது பக்கத்திலிருக்கிறவள் பில்லையின் ஓரத்திலிருக்கிற முள்ளை கத்தியால் கழிக்கிறவள்போலவும் காட்டப்பட்டிருக்கிறது. 4 - வது நம்பர்போட்டது முள்ளெடுத்துவிட்டபிறகு பில்லையிருப்பதை காட்டுகிறது. மேற்சொன்னபிரகாரம் முள்ளெடுத்துவிட்டபிறகு பில்லைகளை ஜலத்தில் கழுவினுல் அங்கங்கே ஒட்டிக்கொண்டிருக்கிற முள்ளுகளும் அழுக்குகளும் போய்விடும். பின்பு பில்லைகளை ஒன்று ஒன்றரை அங்குலம் (இரண்டு மூன்று விரல்) அளவு அகலத்தில் துண்டுதுண்டாய் நறுக்கி மாடுகளுக்கு கொடுக்கவேண்டியது. - வழக்கப்படுகிற வரையில் அவைகளுக்கு ருசியுண்டாகும்பொருட்டு கொஞ்சம் உப்பும் தவுடு அல்லது மாவாவது நாகதாளி துண்டுகளின்பேரில் தெளித்து மாடுகளின் வாயில் வைத்து தின்னும்படி செய்யவேண்டியது - இந்த பிரகாரம் தப்பாமல் ரெண்டொருநாள் கைதீனிவைத்தால் அப்புரம் அவைகளே ஸ்வயமாகவே தின்னும்,— கொஞ்சம் உப்பாவது தவுடாவது கலக்கிரதினுல் எப்பொழுதும் ஆகாரத்தின் குணம் அதிகப்படும்.

5. சாதாரண மாடுகளுக்கு 10 அல்லது 15 பவுன் அதாவது மூணுவீசைமுதல் அஞ்சு வீசை நாகதாளி துணுக்கைகளுடன் 5 அல்லது 6 பவுன் அதாவது ஒண்ணரை அல்லது இரண்டுவீசை வைக்கல் அல்லது புல்லை சேர்த்து கொடுத்தால் இரண்டு வேளைக்கு போதுமானது. பல்லாரியில் ரெண்டு அணு கூலி கொடுத்தால் 125 பவுன் அதாவது அஞ்சு மணங்கு நாகதாளி துணுக்கைகள் தயார் செய்து கொடுக்கிறுர்கள். இந்த அஞ்சுமணங்கும் அஞ்சு மாடுகளுக்கு ஒரு தினத்திற்கு போதுமான ஆகாரம். ஆரம்பத்திலேயே ஒரு கூலியாள் இத்தனை மணங்கு தயார்செய்யாமற்போனுலும் கொஞ்சம் வழக்கமானவுடன் அவ்வளவு தயார்செய்வது கஷ்டமாயிருக்காது ஒன்றரை அணு கொடுத்தால் எந்த கருமானுவது ரேக்கு தகட்டில் ஒரு கொறடு செய்துகொடுப்பான். கவைக்கோல் அல்லது மூங்கில் எங்கும் கிடைக்கும் கத்தி கூலிக்காரர்களிடத்தில் சாதாரணமாயிருக்கும். இந்த மூன்று சாமான்களெல்லாம் இருப்புரேக்கு தகட்டில் செய்து ஜதை ஒன்றுக்கு 2½ அணு விகிதம் விலைக்கு பெல்லாரியில் ம-ா-ா-ஸ்ரீ சபாபதிமுதலியார் அவர்கள் கம்பனியில் விற்கப்படுகிறது.——ஜில்லா கெஜெட்.

திருச்சிணுப்பள்ளி ஜில்லா கலெக்ட்டர் கொடுத்திருக்கும் செஸ் நோட்டீசு.

எல்லா மிட்டாதார்களும், பாளைக்காரர்களும், ஜாகீர்தார்களும், சுரோதரியம் தார்களும், இனும்தார்களும், ரயத்வாரி திட்டத்தின் படிக்கல்லாமல் வேறே விதப்படி நிலம் வைத்திருப்பவர்களும் தங்கள் தங்கள் கைப்பற்றிலிருக்கிற நிலத்தைப்பற்றி 'அந்த நிலங்கள் தங்களுடைய வசத்திலிருந்தாலும் சரி அல்லது குடிகளின் வசத்திலிருந்தாலும் சரி) ஒரு சரியான ஜாப்தாவை அந்தந்த தாலூகா தாசில்தார்களின் துவாரா அனுப்பவேண்டியதென்று 1884-௵ த்திய மதிராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட் 1865-௵ த்திய மதிராஸ் ரெவடரிக்கவரி ஆக்ட் இவைகளைத் திருத்துப்பாடு செய்யும் ஆக்ட்டாகிய 1890-௵ த்திய 3-வ

து ஆக்ட்டின் 2-வது பிரிவினுல் மாறுதல் செய்யப்பட்டிருக்கிற மதிராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டாகிய 1884ளு த்திய 5-வது ஆக்ட் 65-வது பிரிவின்படி கலெக்ட்டர் கேட்கிறுர், ஜாப்தாவில்கண்ட ஒவ்வொரு கேசிலும் அப்படி கைப்பற்றிலிருக்கிற நிலங்களுக்காக சர்க்காருக்கு தங்களுடைய குடிகளால் நேரில் செலுத்தத்தகுந்த நீர்க்கூலி நீங்கலாக ஷை நிலங்களின் வருஷாந்திர குத்தகை பேரீஜ் இவ்வளவென்பதைக் காணவேண்டியது. இந்த ஜாப்தாவானது 1316-ம் பசலி லாண்ட் செஸ்ஸை நிஷ்கரிஷை செய்யத் தேவையாயிருக்கிறது.

2. இந்த நோட்டீசின் தேதி முதல் ஆறு மாசத்திற்குள்ளாக அப்படிப்பட்ட ஜாப்தாவை கொடாதவர்கள் அந்த ஜாப்தாசொடுக்கும் தேதிவரையிலாவது அல்லது அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர்களுடைய நிலங்கள் வருஷாந்திர குத்தகை மொத்தமானது கலெக்ட்டரால் நிச்சயிக்கப்படும் வரையிலாவது நேரிடும் ஒவ்வொரு தினத்தின் சாவகாசத்திற்கு ஷை ஆக்ட்டின் 67-வது பிரிவின்படி தினம் ஒன்றுக்கு 50- ரூ.க்கு மேற்படாத அபாராதத்திற்குள்ளாவார்கள்.

3. அவ்வித ஜாப்தாக்களில் ஸ்தலவார் விவரங்கள் பிரதிகேசிலும் அவைகளுடைய வருஷாந்தர குத்தகை மதிப்பு சகிதம் காட்டப்படவேண்டியது. கோரியபடி ஜாப்தாக்களைக் கொடுக்க அசட்டை செய்யும் நிலக்காரர்கள் சட்டத்தில் ஏற்படுத்தி யிருக்கிறபடி நடத்தப்படுவார்கள்.

1906ம்ளு ஜூன்மீ ம் 16ம் உ ஜூ. ந 1026 G.O.

கிராமத்தலைவர் அல்லது கிராம காவல்காரர் உள்பட யாதாமொரு பிரைவேட் மனுஷனுல் போலீஸ் அல்லது கிரிமினல் அரசாட்சிக்கு தங்களால் விசேஷ உதவி செய்யப்பட்டிருந்தால் அதன் பொருட்டு பிரதேச கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாரின் முந்தின சாங்கிஷன் அன்னியிலே அம்மனிதனுக்கு அல்லது அவனுடைய வார்சுக்கு அல்லது அவன் விதவைக்கு 500- ரூ. மதிப்புக்கு மேற்படாத சர்க்கார் நிலத்தை வெகுமானமாய் அளிக்கலாம் அல்லது அவனுக்காவது அவன் வார்சுக்காவது அல்லது அவன் விதைவைக்காவது ஒரு ஆயுசுபரியந்தம் அல்லது இருபத்தைந்து வருஷ காலத்திற்காவது (எது நீடித்திருக்குமோ அந்த காலத்திற்கு) ஒரு வருஷத்திற்கு 15-ரூ.க்கு மேற்படாத நிலத்தீர்வையை அவனுக்கு இனுமாக அடமானம் செய்யலாம். இந்த நன்கொடையானது ஒரு பாகம் நிலமாயும் மற்றொரு பாகம் அந்நிலத்தின் அல்லது மற்றொரு நிலத்தின் தீர்வை அடமானமாயுமிருக்கலாம். ஆனுல் அதன் மொத்தக் கிரயம் 500- ரூ. மதிப்புக்கு மேல்பட்டிருக்கப்படாது. இந்த நன்கொடையை கொடுக்கும்போது அதை கலெக்ட்டர் சாங்க்ஷன் அல்லாமல் பிறருக்கு வினியோகம் செய்யப்படாது என்னும் ஷரத்துட் பட்டிருக்கவேண்டும். அது நிலத்திர்வை அடமானமாயிருக்கும்போது சர்க்காருக்கு கீழ்படிந்திருந்தாலும் நல்ல நடத்தையாயிருந்தாலும் என்னும் ஷரத்திற்குட்பட்டு இருக்கவேண்டும்.

இந்தியா கவர்ன்மேண்டு விளம்பரம்.

1889-ளு பிப்ரவரிமீ 17௳ யுள்ள 785-R-நெ.

இந்தியா கவர்ன்மெண்டாருடைய பைனுன்ஸ் அண்டு காமார்ஸ் டிபார்ட்மெண்ட் விளம்பரத்தில் 57-நெ. விதிக்குப்பதிலாக அடியில்வருவதை அமைத்துக்கொள்ளும்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் 1899-ளு-த்திய இந்தியன் ஸ்டாம்பு ஆக்டாகிய II-வது சட்டத்தின் 9-வது செக்ஷன் (a) உட்பிரிவு பிரகாரம் தமக்கு வகித்துள்ள அதிகாரங்களை முன்னிட்டு உத்திரவு செய்யலானுர்கள்.

தேயிலை, காப்பிக்கொட்டை, ரப்பர், மிளகு, ஏலக்காய், சிங்கோனு இவைகளை உற்பத்தி செய்வதற்காக தயார் செய்யப்படும் அல்லது உற்பத்தியாகும் பிரிட்டிஷ் இந்தியாவில் அல்லது மைசூரிலிருக்கும் விஸ்தீரணத்தில் 10-ஏகருக்கு குறைவுபடாத ஏதாவது ஒரு பண்ணையில் (அந்தப்பண்ணையின் சொந்தக்காரன் ஒருவன் இருந்தாலும் சரி அல்லது பலபேர் கூட்டாயிருந்தாலும் சரி ஒரு தாக்காயிருந்தாலும் அல்லது பலதாக்காயிருந்தாலும் சரி வேலை செய்வதற்காக எழுதிக்கொடுக்கலான அக்கிரிமண்டு அதாவது கருர் நாமாவுக்கு ஏற்படுத்தப்பட்ட கட்டணம் அந்த கருர் நாமாவில்கண்ட அட்வான்சு தொகை 50-ரூபாயிக்கு மேற்படாமலிருந்தால் ஒரு அணுவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது.

போர்ட்ஸ் புரோசீடிங்ஸ்.

1906ம் ளு அக்டோபர்மீ 1௳ முதல்கொண்டு இந்த ராஜதானி முழுமைக்கும் ஒரு கள்ளுகடைக்காரனிடமிருந்து வேறொரு கள்ளுகடைக்காரன் அடியிற்கண்ட பாபத்துகள் தவிர இதரகேசுகளில் கள்ளு வாங்குவது கூடாதென்று 1906-ம் ளு ஜூலைமீ 21௳ போர்ட்ப்ரெசீடிங்ஸ் நெ. 150/1110 R. அப்காரி (செ. ரிவினியூ) உள்ள உத்தரவில் ஆக்கியாபித்திருக்கிறுர்கள்:—

(1) ஒரு திருவிழா அல்லது உற்சவ நிமித்தமாக கள்ளுக்கு ஏராளமாய் தேவையாயிருக்கும் போதும்.

(2) ஒரு குத்தகை முடிவாகும் கடைசிநாட்களில் மரங்களில் கள்ளு அகப்படாமல் போகும் காலத்திலும்.

(3) ஒரு குத்தகையின் கடைசி காலத்தில் ஒரு கள்ளுகடைக்காரன் இறக்கும் கள்ளு புது முதல் குத்தகையின் முதல்தேதியில் கடைக்கு கொண்டுவரமுடியாமல் போகும்விஷயத்திலும்.

மேற்கண்டபாபத்தில் கள்ளு வாங்க இஷ்டமுள்ள கடைக்காரர்கள் சம்பந்தப்பட்ட சர்க்கிள் இன்ஸ்பெக்ட்டரை கேட்டுக்கொள்ளவேண்டும். அவர் ஸ்தல சம்பந்தமான நிலைமைகளுக்குத் தக்கபடிக்கு யோசித்து அநுமதிகொடுப்பார்.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மேண்டு ஆர்டர்கள்.

1906ளு ஆகஸ்ட்மீ 1 G. O. நெ. 1605 W.

தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் டிப்டி கலெக்ட்டர் ஆபிசில் பழைய தஸ்தாவேஜிகள் வைக்கப்படும் பொருட்டு இரும்புஅலுமாரிகள் தயாரிக்க ஏற்கனவே கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்த ரூ. 25,230-மேல் இப்போது ரூ. 1860 சாங்கிஷன் செய்திருக்கிறுர்கள்.

1906ளு ஜூலைமீ 23௳ G. O. நெ. 1560 W.

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவலிப்புத்தூர் ஆலயத்தின் கோபுரம் புராதீனக் கைத்தொழில் வேலைப்பாடு அமையப்பெற்றது. இந்தக்கோபுரத்தை பழுதுபார்த்து சீர்திருத்த தேவஸ்தானத்தார் கையில் போதுமான பொருள் இல்லாததால் அதைப்பழுதுபார்க்க கவர்ன்மெண்டார் ரூ. 9600 சாங்கிஷன்செய்திருக்கிறுர்கள்; கோவில் அதிகாரிகள் மராமத்து இலாக்காவிதிகளுக்குக்கட்டுப்படுவதாய் ஒப்புக்கொண்டிருப்பதுமன்றி ஷை தொகையை ரூ. 5000 ஒரு தவணையிலும் ரூ 4600 ஒரு தவணையிலும் ஆக இரண்டு தவணைகளில் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள்.

1906ளு ஆகஸ்ட்மீ 1௳ G. O. நெ. 1601 W.

கோதாவரி ஜில்லா ருமச்சந்திரபுரத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு ரூ. 14460 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஜூலைமீ 25௳ G. O. நெ. 1568 W.

மலபார் ஜில்லா ஆலத்தூரில் டிப்டி தாசில்தார் ஆபிஸ் கட்ட ரூ 15140 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. பணம் வசதிப்படும்போது இந்த வேலை ஆரம்பிக்கப்படும்.

1906ளு ஆகஸ்ட்மீ 11௳ G. O. நெ. 1449 W.

காஞ்சிபுரம் ஹாட்சன் பேட்டையில் ஒரு மார்க்கட் (Market) கட்டுவதற்காக ரூ. 7000 பொது ஜனங்களிடமிருந்து கடன் வாங்கிகொள்ள ஷை முனுசிபாலிட்டிக்கு அநுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

1906ளு ஜூலைமீ 25௳ G. O. நெ. 1566 W.

கர்நூல் ஜில்லா மலையாள ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கொடூர் வரையில் இருப்புப்பாதைபோட ரூ. 51563 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஜூலைமீ 31௳ G. O. நெ. 8301

சாந்தனூர்பாய்ச்சல் வாய்க்காலுக்கு ஒரு தலைப்பு வாய்க்கால் வெட்டும்பொருட்டு ரூ. 2399 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஆகஸ்ட்மீ 7௳ G. O. நெ. 1648 W.

சேலம் சென்ட்டிரல் ஜேயிலில் இருப்புக்கொட்டகையைவிஸ்தரிக்க ரூ, 7000 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஆகஸ்ட்மீ 1௳ G. O. நெ. 1604 W.

குன்ட்டூர்ஜில்லா "ஆதங்கி"யில் ஒரு ரெண்டாந்தர போலிஸ் ஸ்டேஷன் கட்டுவதற்கு ரூ 3230, சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஆகஸ்ட்மீ 1௳ G. O. நெ. 1603 W.

செங்கற்பட்டு (Reformatory School) என்கிற இளஞ்சரைச்சீர்திருத்தும் ஜெயில் காம்பௌண்டில் (Compound) சாக்கடைகட்டும்பொருட்டு ரூ. 3950 சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு ஆகஸ்ட்மீ 13௳ G. O. நெ. 1368 W.

மலபார் ஜில்லா பெரம்பரா, தானேரி, வில்லியாப்பள்ளி ஆகிய இந்த மூன்று ஊர்களிலும் சப் ரிஜிஸ்டிரார் ஆபிசுகள் ஏற்பட வேண்டு மென்று ரிஜிஸ்டிரேஷன் இலாக்கா இன்ஸ்பக்டர் ஜெனரல் பிரரேபித்ததை கவர்ன்மெண்டார் அங்கீகரித்துக்கொண்டு அப்படியே ஏற்படுத்தும்படி உத்திரவு செய்திருக்கிறுர்கள்.

1906ளு ஆகஸ்ட்மீ 3௳ 291 நெ. தீர்மானம் 1.

தஞ்சாவூர் கைத்தொழில் விவசாய சங்கத்தின் ஆதரிப்பில் 1906ளு மார்ச்சுமீ தஞ்சாவூரில் நடந்தேறிய விவசாய பொருட்காக்ஷியையும் கால்நடை பொருட்காக்ஷியையும்பற்றி தஞ்சாவூர் கலெக்ட்டரும் விவசாய இலாக்கா டிப்டி டைரக்ட்டரும் அனுப்பிய ரிப்போர்ட்டுகள் வாசிக்கப்பட்டன.

2. விவசாயக்காக்ஷிமார்ச்சுமீ 6௳ ஹானரபில் மிஸ்டர். C. J. வீர், (Weir) அவர்களால் திறக்கப்பட்டு இரண்டுநாள் நடத்தப்பட்டது. விவசாய இலாக்காவில் இதற்குமுன் டிப்டி டைரக்ட்டராயிருந்த மிஸ்டர் பென்சனும், கோர்ட் ஆப் வார்ட்சிற்கு விவசாய சமர்த்தரான (Expert) மிஸ்டர் சாம்சனும் விஜயஞ்செய்திருந்தார்கள். விவசாயக்காக்ஷியையும் கால்நடை காக்ஷியையும் நடத்த தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பார்க்கவந்த ஜனங்களின் எண்ணிக்கையும் திருப்த்திகரமாயிருந்தது. ஆனுல் இந்த காக்ஷிக்கு விசேஷ சாமான்கள் வரவில்லை என்றும் அவ்வளவா போட்டி உணர்ச்சியுமில்லை என்று ரெவினியூ போர்ட்டார் விசனப்படுகிறுர்கள். 1 தங்கப்பதக்கமும் (Medal) 52 வெள்ளிபதக்கங்களும் இனுமளிக்கப்பட்டன. சாமான்கள் கொண்டுவந்தவர்களுக்கு இந்த விலையுயர்ந்த இனும்கள் கொடுக்கப்பட்டது அவர்கள் கொண்டுவந்த சாமான்களின் மதிப்பை உத்தேசிக்கும்போது அதிகமானதென்று கலெக்ட்டரே அபிப்பிராயப்படுகின்றுர். கால்நடைக்காக்ஷி சிறிதுகூட பிரயோஜனப்படவில்லை. அதிக மாடுகள் வரவில்லை கும்பகோணத்தில் மக உர்ச்சவமும், ஒங்கோலில் நால்நடைகாக்ஷியும் அந்த சமயம் சம்பவித்தபடியால் பிரஸ்தாபகாக்ஷிக்கி கால்நடைகள் வரவில்லை என்று காரணம் சொல்லப்படுகின்றது. உயர்ந்த காளைமாடும் உயர்ந்த பசுவும் கொண்டு வருகிறவர்களுக்கு இனும் கொடுப்பதற்காக இரண்டு மெடல்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தகுந்த காளைமாடு வாராததால் அந்த மெடல் கொடுக்கப்படாமல் போய்விட்டது.

3. இந்தக்காக்ஷியில் ஒரு திர்ப்த்திகரமான விசேஷம் என்னவென்றுல் விவசாய விஷயங்களைக்குறித்து காக்ஷிதினங்களில் மத்தியான காலங்களில் உபன்னியாசங்கள் செய்யப்பட்டன. அனேக உபயோகமுள்ள விஷயங்கள் இதனுல் வெளிப்பட்டன.

4. காக்ஷி நடத்தச்சேர்ந்த தொகை ரூ. 2926, இதில் ரூ- 975 கவர்ன்மெண்டாராலும் லோக்கல் போர்ட்டாராலும் கொடுக்கப்பட்டது. செலவு ரூ 2317 போக பாக்கி ரூ. 789.

5. மேற்கண்ட இரண்டாவது பாராவில் சொல்லப்பட்ட கனவான்களும், மிஸ்டர் லயனுல்டேவிட்சன் I. C. S. மிஸ்டர் சீனிவாசபிள்ளை அவர்கள் ஆகிய இந்த கனவான்களின் உதவியில்லாவிடில் இந்தக்காக்ஷி நடைபெற்றிருக்கமாட்டாது.

1906ளு ஆகஸ்ட்மீ 17௳ G. O. நெம்பர் 518. கோதாவரி ஜில்லா ருஜமகேந்திரத்தில் ரிசர்வ்போலிஸ் இன்ஸ்பெக்ட்டர் பங்களாவிற்கு ஒருவாசல் கட்ட ரூ. 460 ம் அனந்தபூர் ஜில்லா தாட்பத்திரியில் இரண்டாவது வகுப்பு போலிஸ் ஸ்டேஷன் கட்ட ரூ. 2720 ம், சேலத்தில் பழைய டி. மு. கோர்ட் கட்டடத்தை இடித்து போலிஸ் இன்ஸ்பக்டருக்கு வீடுகட்டிக்கொடுக்க ரூ. 600 ம், கோயம்புத்தூர் ஜில்லா ருமபுரத்தில் ஒரு இரண்டாவது கிளாஸ் போலீஸ் ஸ்டேஷன்கட்ட ரூ. 3450, ம்ஷை ஜில்லாகோபிச் செட்டிபாளையத்தில் முதல் கிளாஸ் போலீஸ் ஸ்டேஷன்கட்ட ரூ. 3400 ம் ஆக ரூ. 10630 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1906ளு பிப்ரவரிமீ 19௳ G. O. நெ. 150 Rev

ருய்பகதூர் C. ஜம்புலிங்கமுதலியார் C. I. E. இறந்துபோய்விட்டபடியால் கோர்ட் ஆப்வார்ட்ஸ் நியூங்டன் விசிட்டர் கமிட்டியில் அவருக்குப்பதிலாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ம-ா-ா-ஸ்ரீ, V. ருமபத்ரநாயுடுகாரை கனிகூர்ந்து நியமித்திருக்கிறுர்கள். ஆகவே இப்போது ஷை கமிட்டியில் அடியிற்கண்ட கனவான்கள் அங்கத்தினர்களாயிருக்கிறுர்கள்.

(1) சாகேப் முஸ்பிக் மெர்பான் காரம்பார்மே டோஸ்டன் ருஜா சுகாத்தூர் இம்மிட வீரபேச வசிக்கா ருயல்ய சோவந்தபாதூர்-புங்கனூர் ஜெமிந்தார்.

(2) ஜெகவீரரும் வெங்கடேஸ்வர இட்டப்ப நாயக்கர் எட்டியாபுரம் ஜெமீந்தார்.—

(3) ஹானரபில் சர். E. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் K. C. I. E. திவான்பகதூர்.

(4) ம-ா-ா-ஸ்ரீ, திவான்பகதூர C. ருமச்சந்திரராவ் சாகேப் அவர்கள்.

(5) மிஸ்டர் H. K. பிச்சாம் C. I. E.

(6) ம-ா-ா-ஸ்ரீ, திவான் பகதூர் P. ருஜூரெத்தின முதலியார் அவர்கள் C. I. E.

(7) ம-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீ கொச்சகர்லக் கோட்டா ருமச்சந்திரவெங்கடகிருஷ்ணராவ்காரு-போலாவரம் ஜெமீந்தார்.

(8) ரெவரெண்டு G. H. ஸ்மித் M. A.

(9) ம-ா-ா-ஸ்ரீ, V. ருமபத்திரநாயுடுகாரு.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

ஒரு போலீசு கான்ஸ்டேபிளுக்குக் கடன்கொடுத்திருந்தவர்கள், தங்களுக்கு அவனால் சேரவேண்டிய பாக்கி ரூபா இரண்டும் தீருகிறவரையில் அவன் சம்பளத்தில் மாதாமாதம் பிடித்துக்கொண்டு வரவேணுமென்று போலீசு டிஸ்டிரிக்ட் சூபிரண்டெண்டண்டைக் கேட்டுக்கொண்டார்கள். அவ்விதமாய் அவன் சம்பளத்தில் பிடித்து வரும்படியாக உத்திரவானதின் பேரில் கடனாளி, தான் கொடுக்கவேண்டியிருந்த முழு தொகையாகிய 18-ரூபாயுஞ் சேர்ந்துவிட்டதாக ஒரு ரசிது ஆஜர்படுத்தினான். அந்தரசிது 8-ரூபாய்க்குகொடுக்கப்பட்டிருந்ததில் 8-க்குமுன் "1" என்கிற எண்ணைச்சேர்த்தது 18-ரூபாய்க்கு ரசீதென்று காணும்படியாகச் செய்தானென்று பின்னிட்டு தென்பட்டது. இவ்விஷயத்தில் இந்த குற்றவாளியின் மனதிலிருந்த உண்மையான எண்ணம், தன் சம்பளத்திலிருந்து தன்மேலான உத்தியோகஸ்தரை அக்கிரமமாய் பிடித்தம் பிடிக்கவொட்டாமல் தடுக்க வேணுமென்பதாயிருந்தமையால், கிரிமினல் கேசில், கோர்ட்டார், அவனுக்குப் புத்தியில்பட்டிருந்த இந்த எண்ணத்துக்கு மேலும், அல்லது மாருகவும் அவன் எண்ணக்கொண்டிருந்ததாக யூகிக்கப்படாது என்றும்; அப்படி அவன் செய்துவிட்டதினால் கடனை மோசஞ்செய்யவேணுமென்று ரசிதை திருத்தும்படி யோசித்ததாக அர்த்தமாகவில்லையென்றும்; அவன்பேரில் பினல்கோடு 471-வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்திருக்க கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சுது. I. L R. 7. All. 403.

ஒருவன் ஒரு பகிரங்கமான பாட்டைக்கு எட்டு கஜ தூரத்துக்குட்பட்ட தன் சொந்த நிலத்தில் திறந்தபடியாயிருக்கும் ஒரு கிணற்றைச்சுற்றி வேலிபோடாமல் விட்டிருந்தால் அவன் தன்னிலத்திலிருக்கும் கிணற்றிற்கு சுவர்போடாமல் வைப்பதினால் சகல ஜனங்களுக்கும் இடையூருன காரியம் ஒன்றை செய்வதால் ஏற்படக்கூடிய குற்றத்தைச் செய்ததாகச் சொல்லக்கூடாது என்று தீர்மானித்தார்கள். என் எனில் சொந்த நிலத்திலிருக்கும் கிணற்றிற்குச் சுற்றிலும் சுவர்போடாமல் விடுவது குற்றமாகுமென்று எந்தசட்டத்திலும் சொல்லப்படவில்லை. அதுவுமல்லாமல் அப்படிச் சுவர்போடாமல் விட்டதிற்காக சிவில் வியாச்சியம் தொடருவதற்கும் யாருக்கும் பாத்தியம் கிடையாது. ஆகையால் அவன் சுவர்போடாமல் விட்டது அக்கிரமமான காரியமாகமாட்டாது. I. L. R. 6. Mad. 280. டிப்டி தாசில்தாராயிருந்த ஒருவர் தன்னுடைய அனுபவத்திலிருந்த நிலங்களைப் பற்றி, தனக்குமேலான அதிகாரிக்கு அனுப்பவேண்டிய கணக்கில் தனக்கு யாதொரு நிலமுமில்லை யென்பதாய் ஒரு பொய்யான "வெறும்" கணக்கனுப்பினர். அதுவிஷயமாய் மேற்குறித்த காரணங்களாலேயே அவர் செய்த காரியமும் அக்கிரமமானதென்று சொல்லக்கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சுது. I. L. R. 14. Mad. 484.

தகுந்த ஜாக்கிரதை, கவனம், நல்ல எண்ணம் முதலிய மனதருமங்கள் அவரவர்கள் படிப்பு அந்தஸ்து, முதலியவற்றைப்பற்றி வரம்புடையவனென்றீ எண்ணவேணும், அதிகபடிப்பில்லாத ஒரு கான்ஸ்டேபில் தான் காவல் செய்யும் மார்கெட் இடத்தில் மற்றொருவன் மூன்று பீஸ்துணிகளை அக்குளில் வைத்துக்கொண்டு வந்ததைப்பார்த்தான் அந்தத்துணிகள் களவு சொத்தாயிருக்குமென்று சந்தேகித்து அவனிடத்திற்குப் போய் அவனைக்கேள்வி கேட்டான். இவன் கேட்ட கேள்விகளில் ஒன்றிற்கு பதிலாக அந்தத் துணிகள் இங்கிலாந்தில் செய்யப்பட்டதென்று அவன்சொன்னான். ஒவ்வொரு பீசிலும் குஜராத்தியடையாளங்களிருக்கண்டு, இப்படிப்பட்ட அடையாளங்கள் இங்கிலீஷ்காரரால் செய்யப்படும் துணிகளுக்கும் போடுவதுண்டென்னும் சங்கதி தெரியாதவனாகையால், அவன் சொன்ன சங்கதி பொய்யென்று எண்ணி, அந்தத்துணிகள் களவு சொத்தென்று தீர்மானித்துக்கொண்டு, அதைப்பின்னும் செவ்வையாய் பரிசோதிக்கும் பொருட்டு அதில் ஒரு பீசைப்பிடுங்கினான். இதற்கு அவன் ஆட்சேபித்ததினால் அந்தத் துணியைப்பற்றி இருவருக்கும் சச்சரவு நேரிட்டு துணிக்காரனை கான்ஸ்டேபில் தன் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனான். கான்ஸ்டேபிலின் நடவடிக்கை தகுந்த ஜாக்கிரதையுடனும், நல்ல எண்ணத்துடனும், தகுந்த கவனத்துடனும் நடத்தப்பட்டதா என்னும் அம்சத்தைப்பற்றி யோசிப்பதிய் இந்த விஷயங்கள் ஒவ்வொருவனுடைய படிப்பையும் அந்தஸ்தையும் பொருந்தியவைகளென்றும் தன் புத்திக் கெட்டிய வரையில் கான்ஸ்டேபில் வாஸ்தவமாகவே திருட்டு சொத்தென்று எண்ணி பரிசோதனை செய்ததனிந்தவன் என்றும், இந்த சமயங்களில் கான்ஸ்டேபில் அல்லாமல் பெரிய உத்தியோக இன்ஸ்பெக்டர்களாயிருந்தால் அவர்கள் துணிக்காரன் சொன்ன வார்த்தையை நம்பியிருப்பார்களோயானாலும், தெரியாத கான்ஸ்டேபில் சந்தேகப்பட்டது நல்ல எண்ணத்தினாலல்ல வென்று சொல்லக்கூடாதென்றும் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். I. L. R. 12 Bom 377.

(1) ஒரு கடனாளியைப் பிடிப்பதற்காகப் பிறந்த ஒரு வாரண்டில் முன்சேரிம் என்கிற கோர்ட்டு உத்தியோகஸ்தனுடைய பேரின் முதற்குறிப்பும் (இனிஷியல்) கோர்ட்டு முத்திரையும் போடப்பட்டு அதை நிறைவேற்றும்பொருட்டு தகுந்த உத்தியோகஸ்தனிடம் ஒப்புவிக்கப்பட்டது. அந்த கடனாளி அந்த வுத்தியோகஸ்தனை பலவந்தமாய் தடுத்து அதினால் பினல்கோடு 353-வது பிரிவின்படி பரிசிலனை செய்யப்பட்டு, சர்க்கார் உத்தியோகஸ்தனை அவன் வேலையை நடத்தவொட்டாமல் அவனை தாக்கினதாக அவன்மேல் குற்றஸ்தாபனை செய்யலாமா என்னும் விசாரணையில் சிவில் புரோசிஜர் கோடு 251-வது பிரிவின் நிபந்தனைகளை யனுசரித்து அந்த பிடிவாரண்டில் இனிஷியல் மட்டும் போடப்பட்டிருந்தமையால் அது சரியானதல்லவென்றும் அதைஅவ்வுத்தியோகஸ்தன் நிறைவேற்றக்கூடாதென்றும் ஆகையால் பினல்கோடு 353-வது பிரிவின்படி யாதொரு குற்றமும் நடத்தப்படவில்லையென்றும் வாதிக்கப்பட்டது. இந்த வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. யாதொரு வாரன்டில் கையெழுத்திடுகிறவன், தன்பெயரை பூர்த்தியாய்எழுதவேண்டியது கிரமமாயிருந்தபோதிலும், பூர்த்தியான கையெழுத்துக்குப்பதிலாகஇனிஷியல் போடப்பட்ட மாத்திரத்தினாலேயே அந்த வாரண்டை நிறைவேற்றுவது அவ்வுத்தியோகஸ்தனுடைய கடமை யல்லவெ

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகனுதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ணு அண்டு கோ.

ால்யும் 1. சென்னப்பட்டணம், 1906ளு அக்டோபர்மீ 3. பாக

அடக்கம்.

		பக்கம்.
1.	ஹைகோர்ட் ஜட்ஜி சர் ரால் பென்சன் படம்	
2.	வெளி ஜில்லாக்களில் ஜூரி ஏற்பாடு	79
3.	பத்திராதிபார் குறிப்புகள்	80
4.	முக்கியமான தீர்ப்புகள்	83
5.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	87
6.	இந்தியன் லாரிப்போர்ட்டு கேசுகள்	97
7.	கர்ணன்கள் புது பீல்ட்டுமொப்பு தயாரிக்கும்போது கவனிக்கவேண்டிய விஷங்கள் ...	I14
8.	போர்ட்ஸ் புரோசீடிங்ஸ்	116
9.	1906-வது ஒுத்திய 8-வது ஆகட்	I17
10.	மெசர்ஸ் அர்பத்நட் கம்பேனியாரின் இன்சால்வென்சிமனு	119

இந்திய சட்ட கெஜெட்.

1. "இந்திய சட்ட கெஜெட்டில்":—அடியில்கண்ட விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டுவரும்.

(*a*) கல்கத்தா ஹைகோர்ட்டார், பம்பாய் ஹைகோர்ட்டார், அலகபாத் சென்னை ஹைகோர்ட்டார் பிரதிமாதம் பிரசுரிக்கும் இந்தியன் லாரிபோர்ட் (Indian Law Reports) என்று ஆங்கிலத்தில் வழங்கிவரும்படியான இந்தியசட்ட ரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்டிருக்கும் ஒரிஜனல், அப்பீல், சிவில்கிரிமினல் வியாஜ்ஜியங்களின் விர்த்தாந்தங்களும் சட்டக் குறிப்புகளும் ஒன்றும்தவராமல் சங்கிரகமாக எழுதப்பட்டுவரும்.

(*b*) பிரிவிகௌன்சில் வியாச்சியங்களும், தீர்ப்புகளும், போடப்பட்டுவரும்.

(*c*) இங்கிலாண்டு, பிரான்சு, ஜெர்மெனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களின் கோர்ட்டுகளில் நடக்கும் ஆச்சரியக் கேசுகள்.

(*d*) இந்தியாவின் இதர மாகாணங்களில் நடக்கும் முக்கியமான கேசுகள் விசாரணை விபரத்துடன்,

(*e*) சென்னை ராஜதானியிலுள்ள ஹைக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டிலும் விசாரணை செய்யப்பட்டுவரும் முக்கியமான வியாச்சியங்கள் வாக்குமூலத்துடன், சென்னை செஷன் கோர்ட்டிலும் வெளி ஜில்லா செஷன் கோர்ட்டுகளிலும் நடக்கும் கேசுகள் சாக்ஷி வாக்குமூலத்துடன்.

(*f*) கோர்ட் தீர்ப்புகள் சட்டஒழுங்கைத் தவறியிருப்பதாகக் காணப்பட்டால் அதை எடுத்து விவகரித்துப்பேசுதல்.

(*g*) இன்னின்ன காரியங்களுக்கு இத்தனைரூபாய் ஸ்டாம்பில் பத்திரமெழுத வேண்டுமென்றும், அதற்கு எவ்வளவு ரிஜிஸ்டர் சார்ஜ்.

(*h*) வியாச்சியத் தொகைக்குள்ள ஸ்டாம்பு விபரம்.

(*i*) அதிகாரிகள் சட்ட வரம்பு கடந்து அமுல் நடத்தினால் அதைப்பற்றி கண்டித்துப் பேசி அரசாங்கத்தாரின் கவனத்தை இழுத்தல்.

(*j*) கவர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தும் கவர்ன்மெண்டு சர்க்கியுலர்களும் ரெவினியூ போர்ட் புரோசிடிங்ஸ்களும், போலீஸ் ஆர்டர்களும் போர்ட் செயின்ட் ஜியார்ஜ்கெஜட்டிலும் ஜில்லாகெஜட்டிலும்பிரசுரிக்கப்பட்டிருக்கும் சட்ட சம்பந்தமான பிரசுரங்கள்.

(*k*) இந்தியாவிலுள்ள நீதி இலாகா உத்தியோகஸ்தர்களின் மாறுதல்கள்.

(*l*) வைசிராய் சட்ட சபையிலும் லோகல் கவர்ன்மெண்டார் சட்டசபையிலும் பாசாகும் ஆக்ட்டுகளும், ஆலோசனைக்குவரும் மசோதாக்களும்.

(*m*) சட்ட சபைகளில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளும் அவைகளின் ஜவாப்புகளும்.

(*n*) சீர்மைப் பார்லிமெண்டில் இந்தியா சட்டங்களைப்பற்றி நடக்கும் பிரஸ்தாபங்களும் தீர்மானங்களும்.

(*o*) இந்துலா, முகமதியலா, இந்தியன் பீனல்கோட், கிரிமினல் புரோசிஜர் கோட், இந்திய சாக்ஷி சட்டம் 1867ம் வருஷத்திய ரெண்ட்ரிக்கவரி ஆக்ட் முதலிய பல சட்டங்களைத் தழுவி இந்தியாவிலுள்ள கோர்ட்டார்கள் அப்போதைக்கப்போது சொல்லும் தீர்ப்புகள்,

(*p*) கோர்ட் விடுமுறை நாட்கள்.

(*q*) வியாச்சியமாடும் கக்ஷிகாரர்கள் தரிந்துகொள்ளவேண்டிய சட்டமுறைகள்.

2. "இந்திய சட்ட கெஜெட்டில்" மேலேகூறப்பட்ட சமாசாரங்களெல்லாம் சம்பூரணமான சட்ட ஞானமும் நீடித்த அனுபோகமுமுடைய படிப்பாளிகளாலும் லாயர்களாலும் நிருபநேயர்களாலும், நம் தேசத்துப் பெண்மணிகள்கூட இலகுவில் வாசிக்கும்படியான எளிய சிங்காரச்செந்தமிழ் நடையில் வாசிக்க வாசிக்க தெவட்டாத இன்பத்தையும் கொடுக்கும்படியாக எழுதிவரப்படும்.

3. "இந்திய சட்ட கெஜெட்டு" :—மாதாந்திர சஞ்சிகையானபடியால் ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரம் பிரசுரிக்கப்படும்.

4. "இந்திய சட்டகெஜெட்டின்"வருஷ சந்தா { உள்ளூராருக்கு 4-8-0
வெளி யூராருக்கு 4-14-0(தபாற்சார்ஜ் உள்பட

ஒரு வருஷத்திற்கு மாதம் ஒரு சஞ்சிகையாக 12 சஞ்சிகைகள் அனுப்பப்படும்

5. "இந்திய கெஜெட்டின்":—ஒவ்வொரு மாதாந்திர சஞ்சிகையிலும் ஒரு பொட்டகிராப்படம் பிரசுரிக்கப்படும், இந்தப்படம் ஒன்றே ஒரு ரூபாய் விலை மதிப்புள்ளது.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,
மானேஜர்கள்,
இந்திய சட்டகெஜட் ஆபிசு,
37-நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி,
ஜியார்ஜ்டௌன், சென்னை.

விஞ்ஞாபனம்.

நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை அன்புடன் ஆதரித்து வரும் மேன்மை தங்கிய கனதனவான்கள் பிரதிமாத கெஜெட்டைப் பெற்று வாசிக்க ஆரம்பிக்கும் போது இந்த விஞ்ஞாபன பக்கத்தை முதலில் தவறாமல் வாசித்துவிட்டு மற்ற பக்கங்களை வாசிக்கும் படியாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஏனெனில் கெஜெட்டின் அச்சடிக்கும் வேலைகள் முடிந்தவுடன் இந்த விஞ்ஞாபன பக்கம் அச்சிடப்படுகின்றபடியால் கெஜெட்டில் எழுதத்தவறிப்போன சமாசாரங்கள் இதில் குறிப்பிடப்படும். பிரஸ்தாப கெஜெட்டில் "சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்" என்கிற அத்தியாத்தில் பாப்பாநாடு ஜெமின்தார் கேசின் விசாரணை மட்டிலும் போடப்பட்டிருக்கிறது. ஷை கேசில் செஷன்ஸ் ஜட்சி இரண்டு நாள் தாமதித்து தீர்ப்பு சொன்னமையால் அந்தத் தீர்ப்பை கெஜெட்டின் ஆரம்பப்பக்கங்களில் எழுதியிருக்கிறோம். அதே மாதிரியாக மிஸ்டர் யம். யல். ஆர். யம். ராமநாதன் செட்டியார் கேசின் முடிவும் சொல்லப்பட்டிருக்கிறது.

திருத்தம்.

செப்டம்பர்மீ கெஜெட்டில் 45-வது பக்கம் 6-வது வரியில் 1885 என்றிருப்பதை 1858 என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

அக்டோபர்மீ கெஜெட்டில் 96-வது பக்கம் 40-வரியில் '21 செக்ஷனில்" என்றிருப்பதை "21 சென்" என்று திருத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு அறிவிப்பு.

சென்ற செப்படம்பர்மீ கெஜெட்டில் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை வாசித்த கனவான்களில் பலர் ஒரு ஆக்ட்டை முழுதிலும் பிரசுரித்து விட்டு மறு ஆகட் ஆரம்பித்தால் நலமென்று எழுதியிருப்பதால் நாம் ஏற்கெனவே செப்டம்பர்மீ கெஜெட்டில் துவக்கியிருக்கும் இந்து லாவை முழுதிலும் பிரசுரித்துவிட்டு ஸ்டாம்பு ஆக்ட் துவக்க வேண்டு மென்று தீர்மானித்திருக்கிறோம். ஆகையால் அடுத்த கெஜெட்டில் ஹிந்து லாச் சுருக்கத்தின் தொடர்ச்சி பிரசுரிக்கப்படும்.

NOTICE TO OUR CORRESPONDENTS.

நிருப நேயர்களுக்கு அறிவிப்பு.

புதூர்வட்டம் கி. மு :—தங்களுடைய கடிதம் இந்த கெஜெட்டில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. ஜவாப்பு அடுத்த கெஜெட்டில் வரும்.

மிஸ்டர். டி. ஜெகந்நாதம் நாயுடு:—தங்களுடைய பிரரேபணைக்கு வந்தனம். எல்லாக் கேஸ்களுக்கும் நம்பர் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. கூடிய வரையில் பிரையாசைப் பட்டுப் பார்க்கிறோம்.

புதுச்சேரி அ. பே. ச. :—விளம்பரம் அனுப்பி அதற்குள்ள சார்ஜையும் அனுப்பினால் பிரசுரிக்கிறோம்.

சீரங்கபுரம் நா. அ. பே. :—தாங்கள் எழுதியிருப்பது வாஸ்தவமான கேசா? அப்படியிருந்தால் தஸ்தா வேஜிக்கட்டுகளை அனுப்பி சார்ஜும் கட்டினால் எங்களுடைய லாயர் கமிட்டியின் அபிப்பிராயத்தை வாங்கி அனுப்புகிறோம்,

கண்டதுவிண்டோன். :—கேஸ் விசாரணையிலிருக்கும் போது பத்திரிகையில் ஒருவரும் அபிப்பிராயம் கூறக்கூடாது.

நொந்துபோன ஆண்டி :—மூன்று மாதத்திற்குள் ரெவினியூ போர்டிற்கு அப்பீல் செய்து கொள்ளவேண்டும்.

சிங்கக்குட்டி :—சட்டகுறைகள், கோர்ட் நடவடிக்கைகள் தெரியாவிட்டால் அவைகளுக்கு யோசனைகளும் சட்ட முறைகளையும் எடுத்து சொல்லக்கூடுமே தவிர, தஸ்தாவேஜிக்கட்டுகளைப்பார்த்து அபிப்பிராயம் சொல்வதென்றால் அதற்கு ஏற்பட்டிருக்கும் சார்ஜை கட்டவேண்டும். இந்திய சட்ட கெஜெட்டின் லாயர் கமிட்டியார் சரியான அபிப்பிராயம் கூறுவார்கள்.

எடிட்டர்.

மானேஜர் விளம்பரம்.

1. சென்ற செப்டம்பர்மீ கெஜெட்டை தாமதமாய் வெளிப்படுத்தியத்தைக் குறித்து சில சந்தாதார்கள் எழுதியிருந்த புகார் கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவைகளில் சிலவற்றிற்கு பதில் எழுதினோம், சிலவற்றிற்கு பதில் எழுதவில்லை. இந்திய சட்ட கெஜெட் விஷயத்தில் சந்தாதாரர்களை சந்தோஷிப்பதைத் தவிர எங்களுக்கு வேறே பெரிய கடமை எதுவுமில்லை. பிரஸ்தாப கெஜெட்டின் அச்சு வேலைகளெல்லாம் கால கிரமத்தில் முடிந்துபோய்விட்டன. அதில் ஹைகோர்ட்டு பிரதம ஜட்ஜியின் ஆயுள் விர்த்தாந்த சரித்திரமும் எழுதி அச்சிட்டு விட்டோம். அவருடைய உருவப்படம் போடாமல் கெஜெட்டை அனுப்பினால் எந்த சந்தாதாரர்கள் தாமதத்திற்காக இப்போது புகார் செய்தார்களோ அவர்களே உருவப் படம் போடாமல் அனுப்பினதைக் குறித்து புகார் செய்து நமக்கு எழுதுவார்கள். பிரதம ஜட்ஜி கனம் பொருந்திய ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட் அவர்களை ஜட்ஜி உடுப்புடன் பிடித்த பொட்டகிராப்படம் இலகுவில் அகப்படுவதாயில்லை. அவருடை பேட்டி பெற்று பொட்டகிராப் பிடித்து தயாரிக்கவும் சாவகாசம் ஏற்படவில்லை. அதன் பேரில் பம்பாயிலிருப்பதாகக் கேள்விப்பட்டு தந்தி கொடுத்து தருவித்து அந்தப்படத்தை பொட்டகிராப் பிடித்து அதினின்று உறுவம் தயாரித்து அச்சிடவேண்டியதாய் நேரிட்டுவிட்டது. இதனால் தாமதமே தவிர மற்றப்படி வேறு காரணமில்லை. இனி இம்மாதிரி தாமதம் நேரிடமாட்டாதென்று நம்புகின்றோம். சிறிது தாமதமானாலும் ஒவ்வொரு மாத கெஜெட்டும் தவறாமல் பிரசுரிக்கப்படுமென்பதை மேன்மை தங்கிய சந்தாதாரர்கள் அறியவேண்டும்.

2. நம்முடைய ஆபிசுக்குக் கடிதம் எழுதும் சந்தாதாரர்கள் எழுதும்போதெல்லாம் கடிதத்தில் தங்கள் ரிஜிஸ்டர் நெம்பரையும் முழு மேல் விலாசத்தையும் கொடுத்து எழுதவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். எழுதுவது விபரமாயும் சுத்தமாயும் எழுதவேண்டும்.

3. மேல்விலாசம் மாற்ற வேண்டுமென்றும் இன்னும் ஏதேனும் தகவல் விசாரிக்கக் கடிதம் எழுதும் சந்தாதாரர்களும் ஏனையோர்களும் நம்மிடமிருந்து பதில் விரும்பினால் ரிப்பிளை கார்ட்டிலாவது எழுதவேண்டும். இல்லேல் அரை அணா ஸ்டாம்பு அடக்கஞ்செய்து அனுப்பவேண்டும்.

Abbreviations used in the Gazette.

இந்த கேஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta
All.	=	Allahabad
Bom.	=	Bombay
Mad.	=	Madras
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
I. A.	=	Indian Appeals.
M. A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகபாத்
பம்.		பம்பாய்
மது / சென்		சென்னப்பட்டணம்
சி. பு. கோ.		சிவில் புரொசிஜர்கோடு
கி. பு. கோ.		கிரிமினல் புரொசிஜர் கோடு.
இ. அ.		இந்தியன் அப்பீல்ஸ்.
மூ. இ. அ.		மூர் இந்தியன் அப்பீல்ஸ்.

The Hon. Sir Justice R. S. BENSON, *Kt.*, M.A., LL.B., I.C.S., *(Bar.-at-Law.)*

ஆனரபில் ஸர். ஆர். யஸ். பென்ஸன், *Kt.*, M.A., LL.B., I.C.S., (*Bar.-at-Law.*)
ஐகோர்ட் நியாயாதிபதி.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதம் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்

வால்யூம் 1. சென்னப்பட்டணம், 1906௵ அக்டோபர்மீ பாகம். 3.

THE JURY SYSTEM IN THE MOFUSSIL.
வெளி ஜில்லாக்களில் ஜூரி ஏற்பாடு.

குற்றவாளிகளை அவனுடைய சொந்த தேசமனிதர்கள் முன்னிலையில் விசாரணைசெய்து அவர்களுடைய அபிப்பிராயத்தை அங்கீகரித்துக்கொண்டு அவர்களை (குற்றவாளிகளை) விடுவிப்பதும் தண்டிப்பதும் நீதிவரம்பு தவறாத கவர்ன்மெண்டாரின் மேன்மையான குணாதிசயம். குற்றவாளிகளை ஜூரிகள் முன்னிலையில் விசாரணை செய்யும் வழக்கம் இவ்வுலகத்திலுள்ள எல்லா அரசாங்கங்களிலுமில்லை. பிரன்ச் அரசாங்கத்திலும், பிரிட்டிஷ் அரசாங்கத்திலும், அமெரிக்கா யுனைட்டெட் ஸ்டேட் குடி அரசிலும் இந்த-வழக்கமிருந்துகொண்டு வருகின்றது. குற்றவாளிகளை ஒரே நியாயாதிபதி விசாரித்து தீர்மானம் சொல்லுவதைப்பார்க்கிலும் ஜூரர்கள் முன்னிலையில் விசாரித்து அவர்கள் கூறும் அபிப் பிராயப்படி தீர்மானம் சொல்வது குற்றவாளிக்கு சரியான நியாயத்தைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்த ஏற்பாடு எந்தெந்த தேசங்களிலிருக்கின்றதோ அங்கங்கே இது மிகுந்த நன்மையைப்பயக்கி வருகின்றது. குற்றவாளிகளை அக்கிரமமாய் தண்டிக்கக்கூடாதென்றும் அவர்களுக்கு சரியான நியாயம் பகரப்படவேண்டுமென்றும் காருண்யம் பொருந்தி பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்த ஜூரி ஏற்பாட்டை இந்தியாவில் உண்டாக்கினார்கள். ஆனால் இதனால் தேசத்திற்கு எவ்வளவு நன்மை உண்டாகுமென்று எதிர்பார்த்தார்களோ அவ்வளவு நன்மையும் இன்னும் சித்திக்கவில்லை. பிரதான நகர்களில் அதாவது கல்கத்தா பம்பாய், அலகபாத், சென்னை முதலிய நகர்களில் ஜூரி ஏற்பாடு சரிவர நடந்து குற்றவாளிக்கு சரியான நியாயம் பகரப்படுகிறதென்று சொல்லலாம். ஆனால் நம்முடைய சென்னை ராஜதானியின் ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டுகளில் இந்த ஜூரி ஏற்பாட்டிற்கு கவர்ன்மெண்டார் செய்திருக்கும் விதிகளில் யாதொரு பிசகுமில்லை. அந்த விதிகளை அமுலுக்குக்கொண்டு வந்து நடவடிக்கை நடத்தும் வகையில் சில பிசகுகளிருக்கின்றன. ஜில்லா செஷன்ஸ்கோர்ட்டுகளுக்கு தெரிந்தெடுக்கப்படும் ஜூரிகள் அனேகமாய் கேசின் நேர் நிர்வாகங்களையும், சாக்ஷிகளின் தாரதம்மியத்தையும், குற்றங்களின் சுபாவத்தையும் பரிசீலனை செய்து கண்டுபிடித்து விசாரணை செய்யப்பட்ட குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறானா அல்லது நிரபராதியா என்று அப்பிப்பிராயம் கொடுக்கும்படியான போதுமான அறிவும், படிப்பும், ஞானமும் பொருந்தினவர்களாயில்லை என்று எடுத்தெழுத விசனிக்கிறோம். இப்போது வெளி ஜில்லாக்களில் தெரிந்தெடுக்கப்படும் ஜூரர்கள் எல்லோரும் இத்தன்மை உடையவர்கள் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் 100-க்கு 50 ஜூரர்கள் போதுமான திறமையற்றவர்களென்றே சொல்லலாம். ஜூரி ஏற்பாடு நம்முடைய ராஜதானியிலுண்டாகி அனேக வருஷ காலமாகியும் இன்னும் வெளி ஜில்லா ஜூரர்கள் தங்களுடைய கடமையையும் பொறுப்பையும் உணரவில்லை. அவர்கள் ஜூரிகளாய்த் தெரிந்தெடுக்கப்படுவதே அவர்களுக்கு இஷ்டப்படாத ஒரு பலவந்தமான காரியமாயிருக்கிறது. சாத்தியப்பட்டால் ஜூரர்களாய் நியமிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் வழி தேடு

கிறார்கள். ஒருக்கால் தப்பித்துக்கொள்ள சாத்தியப்படாவிட்டால் நான்கு பேர்கள் என்ன அபிப்பிராயங் கூறுகிறார்களோ அதே அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டுவருவோம் என்று எண்ணிப்போகின்றார்கள். ஜூரர்கள் விசாரணை சமயத்தில் தூங்கி விழுவதையும் நாம் பார்த்தும் வருகின்றோம். கேட்டுமிருக்கின்றோம். சில ஜூரர்களை கேசின் வரலாற்றைக் கேட்டால் சொல்லவும் தெரியாது. இப்பேர்க்கொத்த ஜாரர்களை வைத்துக்கொண்டு கோர்ட்டார் எவ்விதமாக சரியான நியாயம் குற்றவாளிகளுக்குக் கொடுக்கக்கூடும்? சில மாதங்களுக்கு முந்தி தஞ்சாவூர் செஷன்ஸ் ஜட்ஜி கேசின் சாரம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொல்லி குற்றவாளிகள் தீவட்டிக்கொள்ளை குற்றம் செய்திருக்கிறார்களா அல்லது திருட்டு சொத்தை வாங்கின குற்றம் செய்திருக்கிறார்களா என்று கேட்டதற்கு ஜூரர்கள் இரண்டு குற்றங்களையும் செய்திருக்கிறார்களென்று அபிப்பிராயங் கூறினார்கள்! இன்னொரு கேசில் ஜட்ஜி கேசின் சாராம்சத்தை எடுத்துக் கூறிக்கொண்டுவரும்போது குற்றவாளிகளை விடுவிக்கும்படியாக அபிப்பிராயங் கூறும்படியாகச் சொல்ல ஜூரர்கள் குற்றவாளிகளை குற்றவாளிகளென்று அபிப்பிராயங் கூறினார்கள்! இதனால் நாம் என்ன நினைக்கவேண்டியதென்றால் ஜட்ஜி கேசின் சாரம்சத்தை எடுத்துச் சொன்னதை ஜூரர்கள் கவனிக்கவில்லை என்றாவது அல்லது ஜட்ஜி தாம் சொன்னதை ஜூரர்கள் அறிந்து கொண்டார்களா இல்லையா என்று கவனிக்கவில்லை என்றாவது நினைக்கவேண்டியதாயிருக்கிறது. ஜூரர்கள் கேசின்விசாரணையைக்கவனித்துவருகிறார்களா வென்றும்தாம் கேசின் சாராம்சத்தை எடுத்துச் சொல்லுவதையும் சட்டத்தை விளக்கிக்காட்டுவதையும் ஜூரர்கள் அறிந்துகொள்ளுகிறார்களா வென்று கவனிக்கவேண்டியது ஜட்ஜியின்கடமை. காலஞ்சென்ற ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ் செஷன் ஜட்ஜியாயிருக்கும்போது ஜூரர்கள் கேசின் விசாரணையை மிகுந்தகவலையுடன் கவனித்து வருவார்கள். பராமுகமாயிருக்க அஞ்சுவார்கள். ஆனால் எல்லாசெஷன்ஸ் ஜட்ஜிகளும் இப்படிச்செய்கிறதில்லை. ஜூரர்கள் தெரிந்துகொள்ளக்கூடாதவர்களாயிருப்பதைப்பார்க்கும் சில செஷன்ஸ் ஜட்ஜிகள் கேசின் சாராம்சத்தை எடுத்துச்சொல்லுவதை ஒரு மாமூலான வழக்கமென நினைத்து ஒப்புக்கு கேசின் சாராம்சத்தை எடுத்துச் சொல்லுகிறார்களே தவிர தாங்கள் சொன்னதை ஜூரர்கள் அறிந்து கொண்டார்களா இல்லையா என்று கவனிக்கிறதில்லை. ஜூரர்கள் சரியான அபிப்பிராயத்தைக்கூறும்படி உதவி செய்ய வேண்டியது செஷன்ஸ் ஜட்ஜிகளின் கடமை. இந்தக்கடமையை உணராத ஜட்ஜிகளுமிருக்கிறார்கள். அவர்கள் கேசின்சாராம்சத்தை எடுத்துச்சொல்வதை சாமானிய காரியமாக நினைத்து விடுகிறார்கள்.

ஆனால் இதே காரியத்தை நீதி இலாக்காவில் மிகுந்த அனுபோகமுடைய மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷெப்பர்ட்மிகுந்த உத்திரவாதமுள்ளதும்அருமையானதும் கஷ்டமுள்ளதுமான காரியமென்று சொல்லியிருக்கிறார். கேசின்சாராம்சத்தை ஜூரர்களுக்கெடுத்துச்சொல்லும் சாமர்த்தியம் செஷன்ஸ் ஜட்ஜிகளுக்கு மிகுந்த அனுபோகத்தாலன்றி உண்டாக மாட்டாது என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே ஜூரி ஏற்பாடு நன்மைபயக்கவேண்டு மானால் மூன்று முக்கிய அம்சங்கள் தேவை.' அவையாவன (1) தகுந்த ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும் (2) செஷன்ஸ் ஜட்ஜிகள் தாங்கள் சொல்வதை ஜூரர்கள் அறிந்து கொள்ளுகிறார்களா என்று கவனித்து அவர்கள் சரியான அபிப்பிராயம் கூறும்படி உதவி செய்ய மனமுடையவர்களா யிருக்கவேண்டும் (3) தர்ஜமா (Translators) செய்பவர்கள் செஷன்ஜட்ஜி ஆங்கிலத்தில் சொன்னதை மட்டிலும் தர்ஜமா செய்வது கூடாது. அவருடைய எண்ணங்கள் விளங்கும் படியாக தர்ஜமா செய்யவேண்டும். ஜூரிக்கமிஷன் சொல்லியிருப்பதுபோல் ஜூரி நியமனத்தை கௌரவமாக நினைக்கும்படியாகவும் அந்தப் பதவியை ஒரு பெரும் பதவியாக நினைத்து தகுந்த அந்தஸ்துடைய மனிதர் விரும்பும்படியாகச் செய்துவிடவேண்டும். இப்போதிருக்கிறபடி, வெளிஜில்லா ஜூரர்களுக்கு யாதொரு கௌரவமும் கிடையாது. கோர்ட்டில் அவர்கள் கால்நடைகள் போல் நடத்தப்படுகிறார்கள்! கோர்ட்டுகளில் அவர்களுடைய சௌகரியத்திற்குத் தகுந்தபடியும் அவர்களைப்பார்த்தவர்கள் கௌரவப்படுத்தி மதிக்கும்படியும் அவர்களுக்கு பிரத்தியேகமான "ஜூரிரூம்" என்று ஒருவிடமிருக்கவேண்டும். அவர்கள் ஒரு கேசிற்கு ஜூரியாய் வரும்பொருட்டு சம்மன்கள் அவர்களுக்கு போலிசார் கொண்டுபோய் சேர்வ்செய்கிறார்கள். இந்த வழக்கம் கூடாது. அவர்களுக்கு சம்மன் ஜில்லாக் கோர்ட்டு மூலமாய்ப்போக வேண்டும். ஜூரி ஜாப்திதாவை ஜில்லா மேஜிஸ்டிரேட் நேரில் பார்த்து புதிப்பிக்கவேண்டும். பண அந்தஸ்தையே பெரும் உரிமையாக நினைத்து ஜூரிகளாக நியமிக்கக் கூடாது. செல்வமும் கல்வியும் பொருந்திய அந்தஸ்துடையவர்களைப் பொறுக்கி எடுத்து ஜூரர்களாக நியமிக்கவேண்டும். குற்றம் எந்தத் தாலுக்காவில் நடந்ததோ அந்த தாலுக்காவிலிருப்பவர்கள் அந்தக்கேசிற்கு ஜூரர்களாய் வரக்கூடாது. ஆகவே ஹைக்கோர்ட்டாரும் கவர்ன்மெண்டாரும் சேர்ந்து ஆலோசனைசெய்து வெளிஜில்லா ஜூரி ஏற்பாட்டை சீர்திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தது.

நிகழ் ௴ 21௳ ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஒரு பாலியமான ஹிந்து ஸ்திரி மைலாப்பூர் சென்தோமிற்கு எதிரிலுள்ள கடல் கரையோரத்தில் பிராணன் போகும் நிலையில் அலங்கோலமாய் பூமியில் கிடந்ததைப் போலிசார் பார்த்து அவளை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த பின் சிறிது நாழிகையானவுடன் அவளுக்கு பிரக்ஞை உண்டானது. அவளும் அவளுடைய புருஷனும் அநேக வருஷகாலமாய் மிகுந்த நேசத்துடன் வாழ்ந்து வந்ததாகவும், இப்போது புருஷன் வேறொருவளை நேசித்து வருவது தனக்கு சகிக்க முடியாமல் தான் பிராணனை விட்டுவிட சமுத்திரத்தில் விழுந்ததாகவும் சொன்னாள். சமுத்திரத்தில் விழுந்தவளை அலை கரையில் கொண்டு சேர்த்துவிட்டதாகத் தெரிகிறது.

கவர்ன்மெண்டு விளம்பரம்.

சென்னை சட்டநிரூபண சபையில் அடிஷனல் அங்கத்தினராகவிருக்கும் திவான்பகதூர் கனம்பொருந்திய L. A. கோவிந்தராகவ அய்யர் அவர்கள் ஷை சபையில் அங்கத்தினராயிருக்கவேண்டியகாலம் 1861.வரு ஞுத்திய இந்தியன் கவுன்சில்ஸ் ஆகட்டின் பிரகாரம் 1907ஞும் ஜெனவரி௴ 15௳ யுடன் முடிவாகிறபடியால், இவ்விராஜதானியின் வடபாக ஜில்லா போர்டுகள் இந்த காலிஸ்தானத்திற்கு ஒருவரைத்தெரிந்தெடுத்து அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன. காண்டிடேட்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டவுடன் பிரதிநிதிகள் கூடவேண்டிய தேதி குறிப்பிடப்படும்.

கோயம்புத்தூர்.

இவ்வூரில் சிறிதுகாலமாக அடிக்கடி அநேக கொலை, களவு முதலிய குற்றங்கள் நடந்து வருகின்றன. ஆகவே செஷன்ஸ் ஜட்ஜிக்கு வேலை அதிகமாயிருக்கின்றது. போலிசார் மிகவும் அஜாக்கிரதையாக இருக்கிறதாகத் தெரியவருகின்றது. இவ்வூருக்கு சமீபத்தில் சில தினங்களுக்கு முந்தி சில திருடர்கள் மாறுவேஷம் பூண்டுகொண்டும், தேக முழுதிலும் சிலர் கரிபூசிக்கொண்டும் இரவில் ஒரு சுதேச கிறிஸ்தவர் வீட்டில் புகுந்து புருஷர்களையும் ஸ்திரிகளையும் அலங்கோலப்படுத்திதீவட்டிக்கொள்ளையாடி கையிலகப்பட்ட பணத்தையும் நகைகளையும் வாரிக்கொண்டு போய்விட்டார்கள். வீட்டிற் குடையவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டுபோகப்பட்டு அவ்விடத்திலேயே இறந்துபோய்விட்டார். இந்தசம்பவம் நடந்தேறி சில தினங்களாகியும்போலிசார் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை. போலிசார் இந்த குற்றவாளிகளை இன்னும் கண்டுபிடிக்காததே இப்போது இவ்வூரில் நடந்துவரும் அதிகமான குற்றங்களுக்குக் காரணமாயிருக்கின்றது. மேலதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

புகார்.

கடந்த தீபாவளிபண்டிகை தினம் சென்னை எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்ட மெயில் ரேயில் வண்டியில் டிக்கட்டு வாங்கின 300-பிரையாணிகளுக்கு இடம் அகப்படாமல் தங்கிவிட்டார்களென்று ஒரு நிரூபர் மதிராஸ் மெயில் பத்திரிகையில் எழுதியிருந்தார். இதைப்பார்த்த ரெயில்வே அதிகாரிகள் இதைக்குறித்து விசாரணை செய்ததில் 50 பேர்களுக்கு மட்டிலும் இட மகப்படாமல் ரெயில்வே ஸ்டேஷனிலேயே தங்கிவிட்டார்களென்றும் மதிரஸ் மெயில் பத்திரிகையில் புகார் செய்தவர்கள் ருஜுப்படுத்த முன் வருவார்களாகில் இதுவிஷயத்தைக் குறித்து இன்னும் விசாரணை செய்ய டிராபிக்மானேஜர் தயாராயிருப்பதாகவும் பதில் எழுதியிருக்கின்றனர்.

கவர்னர்.

மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆதலாலி அவர்கள் சுற்றுப் பிரமாணத்தில் காஞ்சிவரம் போயிருந்தவிடத்தில் நிகழ் அக்டோபர்௴ம் 26௳ அவருக்கு ஜுரம் கண்டதின் நிமித்தம் காஞ்சிவரத்தில் செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் நிறுத்திவிட்டு சென்னைக்கு வந்து விட்டனர்.

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்துக்கு அனுப்பட்ட கேஸ்.

(23—9—06)

கேசின் விபரம்:—மதுரை ஜில்லா உத்தமபாளையம் சப் மாஜிஸ்டிரேட்டு முன்னிலையில் 11-பேர்கள் இ. பி. கோ. 197, 325-வது பிரிவுகளின் பிரகாரம் கலகஞ்செய்து கடுங்காயம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்கள், சப் மேஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணைசெய்து குற்றவாளிகளை பலவிதமாக தண்டித்தார்.

தண்டனை அடைந்த குற்றவாளிகள் திண்டுக்கல் ஜாயிண்ட் மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

அப்பீல் கோர்ட்டார் கீழ்கோர்ட்டு தண்டனையை உறுதிசெய்ததுமன்றி ஒவ்வொரு குற்றவாளியும் நல்ல நடத்தைக்காக 6-மாதத்திற்கு சொந்த ஜாமீன் ரூ. 50-ம், வேறொரு ஜாமீன் ரூ. 100-ம் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு செய்தார்.

அப்பீல் கோர்ட்டார் இந்த மாதிரியான கேசில் நல்ல நடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படி உத்திரவு செய்தது சட்டவிரோதமென்று ஜில்லா மேஜிஸ்டிரேட் அபிப்பிராயப்பட்டு இந்தக்கேசை ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பினர்.

தீர்ப்பு:—நல்ல நடத்தைக்கு ஜாமீன்வாங்கும்படி உத்திரவுசெய்யவேண்டுமானால் குற்றவாளிகள் ஊரின் அமெரிக்கையைக்கெடுத்த (Breach of Peace) குற்றத்திற்கும் அவசியமாய் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கவேண்டுமென்றும், அப்படி ஊரின் அமெரிக்கை, அவர்களால் கெடுக்கப்பட்டதென்று ருசுப்பட்டிருக்க வேண்டுமென்றும் இ. லா. ரி. 29-கல் 190-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஜாயின்ட்மேஜிஸ்டிரேட் செய்த தீர்ப்பு மேற்சொல்லப்பட்ட கல்கத்தா தீர்ப்பிற்கு விரோதமானதா யிருப்பதால் ஷை ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கும்படி செய்த உத்திரவு ஹைக்கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டது.

கவர்ன்மெண்டு ஆர்டர்.

சென்னை முனிசிபாலிட்டியார் இனிமேல் பொது ஜனங்களிடமிருந்து வாங்கும் கடன்களுக்கு எழுதிக்கொடுப்பதற்கு ஒரு விதமான டிபன்ச்சர்பாண்டு தயாரித்து அதை கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்திற்கு அனுப்பினார்கள். லோக்கல் கவர்ன்மெண்டார் இதை இந்தியா கவர்ன்மெண்டார் அங்கீகாரத்திற்கு அனுப்பினார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் அந்த டிபன்ச் சர்பாண்டை (Debenture bond)

அங்கீகரித்துக் கொண்டார்கள் என்று லோக்கல் கவர்ன்மெண்டார் முனிசிபாலிட்டியாருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இளைஞர் சீர்திருத்த சாலை.

செங்கற்பட்டு "Reformatory School" என்று சொல்லும்படியான இளைஞர் சீர்திருத்த சாலையின் விசிட்டர் (Visitor) கமிட்டியின் அங்கத்தினராக மகா-ள-ள-ஸ்ரீ G. நாராயணசாமி செட்டியார் அவர்கள் மறுபடியும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஷை சீர்திருத்த சாலையில் வைத்திருக்கும் கவலையும் அன்பும், இவர் வருஷா வருஷம் மிகுந்த நல்ல நடக்கை உடைய பையனுக்குக் கொடுத்துவரும் வெள்ளிப் பதக்கமும். இவர் அடிக்கடி அச்சாலையைப் போய்பார்வையிட்டு வருவதும் ஆகிய. இந்தசெய்கைகள் வித்வ இலாகாத் தலைவர், கவர்ன்மெண்டார் ஆகிய இவர்களுடைய நன்குமதிப்பைபெற்றிருக்கின்றன.

சமஸ்தானாதிபதி.

திருவாங்கூர்சமஸ்தானாதிபதி மகாராஜா அவர்கள் கவர்னர் பேட்டிபெறும் பொருட்டு அடுத்த டிசம்பர்மீ ஆரம்பத்தில் சென்னைக்கு வருகிறார். மகாராஜா அவர்களை மைசூருக்கு வந்துபோகும்படியாக மைசூர்மகாராஜா அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறபடியால் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் மைசூருக்கும் போவார்கள் என்று நினைக்கின்றோம்.

அர்பத் நட் பாங்கி முழுகிப்போனது.

இதைக்குறித்துசவிஸ்தாரமாய் இந்த கெஜெட்டின் கடைசி அத்தியாயத்தில் எழுதியிருக்கிறோம், அர்பத்நட்பாங்கிக்கி இவ்வுலகத்திலிருக்கும் சொத்துகளை எல்லாம் ஒன்று தப்பாமல் வசப்படுத்தி கோர்ட்டுச்செலவிலும் அபிசூஷியல் அசயினி கமிஷனிலும் அதிகப் பணம் போகாமல் பாதுகார்த்து பங்கிட்டால், இந்த பாங்கியில் பணம் கட்டி நஷ்டமடைந்திருக்கும் ஜனங்களுக்கு கொஞ்சத்திற்கு கொஞ்சமாயினும் நஷ்ட மீடேபடுமென்று நம்புகிறோம். இருந்தபோதிலும் நஷ்டப்பட்டவர்கள் இன்னும் மூன்று வருஷம் பொறுமையாய் காத்துக்கொண்டிருக்கும்படியாக நேரிடும்.

சென்னை கார்ப்போரேஷன்.

சென்னை நகர் முனிசிபல் பிரசிடெண்டாகிய மிஸ்டர் S. D. பியர்ஸ் அவர்கள் 6-மாத ரஜாவின் பேரில் சீமைக்குப்போயிருந்தவர் திரும்பிவந்துவிட்டார். ஆனால் அவருக்கு இப்போது பிரசிடெண்டு உத்தியோகம் கொடுக்கப்படாதென்றும் அவர் ஏற்கனவே இருந்த சூப்பிரண்டு இன்ஜினீர் உத்தியோகத்தில் போய்ச்சேரவேண்டுமென்றும் இப்போதிருக்கும் பிரசிடெண்டாகிய மிஸ்டர் லிலாய்ட் I. C. S. அவர்களே இனி மேலும் பிரசிடெண்டாயிருப்பாரென்றும் ஒரு பிரஸ்தாபம் உண்டாயிருக்கிறது. மி-ர் பியர்ஸ் சென்னைக்குவந்து 5-தினங்களாகியும் இன்னும் பிரசிடெண்டு உத்தியோகத்தை சார்ஜ் ஒப்புக்கொள்ளாமலிருக்கிறபடியால் ஷை பிரஸ்தாபம் உண்மையென்று எண்ணவேண்டியதாயிருக்கின்றது.

ஓட்டேரி கொலைக் கேஸ்.

நிகழ் அக்டோபர்மீ ஆரம்பத்தில் சென்னை ஓட்டேரியில்மாவலிங்க நாடானைக்கொலைசெய்ததாக குறஞ்சாட்டப்பட்ட துரைசாமியும் முனுசாமியும் போலீஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு குற்றஸ்தாபனை செய்யப்பட்டு ஹைகோர்ட்டு செஷன்ஸ் விசாரணைக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பாப்பநாட்டு ஜெமீன்தாரை வழிமறித்து அடித்த கேஸ்.

இந்தக்கேசின் விசாரணையையும், வாதிபிரதிவாதி வக்கீல்கள் பேசின அட்டிரசையும் இந்த கெஜெட்டின் "சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் என்று தலைப்பெயரிட்ட அத்தியாத்தில்பிரசுரித்திருக்கிறோம். கேஸ்விசாரணை முடிவானவுடன் ஜட்ஜி தீர்மானம் சொல்லாமல் இரண்டு தினம் தாமதித்துச்சொன்னதால் தீர்ப்பு அதில் எழுதப்படவில்லை. செஷன்ஸ் கோர்ட்டார் ஜமீன்தார் கொண்டுவந்த கேசை தள்ளி எல்லா குற்றவாளிகளையும் விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

ஒரு அறிவிப்பு.

இந்த கெஜெட்டில் சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் என்கிற அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிற மிஸ்டர் M. L. R. M. ராமநாதன் செட்டியார் வகைறாக்கேசில் இரு கக்ஷிக்காரர்களும் சமாதானமாய்ப்போய்விட்டார்கள்.

ஹைகோர்ட்டு சிட்டிங் ஜாபிதா.

1906ஹ நவம்பர்மீ 2வ-யுடன் முடியும் வாரத்திற்கு ஹைகோர்ட்டு சிட்டிங்டி ஜாபிதா :—

திங்கட்கிழமை, சீப் ஜஸ்டிஸ், சர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் ஆகிய மூன்று ஜட்ஜிகளும் புல்பெஞ்சு கேசுகளை விசாரணைசெய்வார்கள். புல்பெஞ்சுகேசுகளின் விசாரணை முடிந்தவுடன் சீப் ஜஸ்டிசும், சர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களும் முதல் அப்பீல் கோர்ட்டில் வீற்றிருந்து ஹைகோர்ட்டு ஒரிஜினல் சயிட்டிலிருந்தும் சிட்டி சிவில் கோர்ட்டிலிருந்தும் வரும் அப்பீல்களை விசாரிப்பார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சனும் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிசும் இரண்டாவது அப்பீல் கோர்ட்டில் வீற்றிருந்து இரண்டாவது அப்பீல் கேசுகளை விசாரணை செய்வார்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அட்மிஷன் கோர்ட்டில் வீற்றிருப்பார். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் ஒரிஜினல் சைட்டில் வீற்றிருந்து செவ்வாய்க்கிழமை தினம் இஷ்யூகோர்ட்டு நடத்துவார் இதரதினங்களில் பைனல் டிஸ்போஸல் கோர்ட் நடத்துவார்.

மைலாப்பூர் பண்டு.

சென்னை மைலாப்பூர் பண்டைச்சேர்ந்த பணத்தை மெசர்ஸ் அர்பத் நட்பாங்கியில் போட்டுக்கொண்டுவந்தார்கள். ஆர்பத் நட்பாங்கி முழுகிப்போய்விட்டபடியால் மைலாப்பூர் பண்டு நஷ்டமடைந்திருக்குமென்று எண்ணமுண்டாகுமானபடியால், ஷை பண்டு அதிகாரிகள் அர்பத்நட்பாங்கியில் போடப்பட்டிருந்த பண முழுமையும் சென்ற ஜூலைமீ வாங்கிவிட்டதாக அறிவிக்கிறார்கள்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

ஹிந்துலா:—ஹிந்து குடும்பத்தில் புத்திரன் மைனராயிருக்கும்போது தகப்பன் ஒரு சொத்தை அடமானம் வைத்து, அதன்மேல் பிறகு ஒரு வியாஜ்ஜியம் ஏற்பட்டால், அந்த அடமானம், அச்சொத்தில் புத்திரனுக்கிருக்கும் பாகத்தைக்கட்டுப்படுத்த மாட்டாது. தகப்பன் கடன்வாங்குவது துன்மார்க்கச் செலவுகளுக்கல்லவென்று கடன்காரர்கள் அச்சமயத்தில் விசாரணைசெய்து திருப்த்தி செய்துகொண்ட விஷயத்தை ருஜுப்படுத்துவது வாதியைப் பொருத்ததல்ல. ஒரு தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன் வாங்கியிருந்து அந்தக்கடனைத் தீர்ப்பதற்காக வேறொருவனிடம் கடன்வாங்கி இந்த இரண்டாவது கடன் கொடுத்தவன் ஷை தொகையை அவன் புத்திரனிடமிருந்து வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தால், தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன்வாங்கினான் என்று புத்திரன் டிபன்ஸ் சொல்வது நல்ல டிபன்சாகும். சரவணத்தேவன் v. முத்தாயி அம்மாள் 6 சென். ஹை. ரி. 371. பக்கம் 383. (6 Mad H. C. Rcp. 371 at. P. 383.)

இந்தியன் சாக்ஷி சட்டம்—ஒரு தஸ்தாவேஜியில் சுத்தமாகவும் சந்தேகப்படக்கூடாதபடியும் எழுதப்பட்டிருக்கும் பதத்திற்கு கக்ஷிகாரர்கள் நினைத்துக் கொண்ட தார்பரியத்தைக் குறித்த சாதாரண வாக்குமூல சாக்ஷியம் (Oral Evidance) ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. கேஷவரால் v. ரூயா 8 பம். லா. ரி. 287 (8. Bom L. R. 287.)

தீர்ப்புக்கு முந்தின ஜப்த்தி:—தீர்ப்பு பெறுவதற்குமுந்தி ஜப்த்தி செய்வதின் கருத்து என்னவென்றால் வாதிக்கு டிக்கிரி கிடைத்தால் அந்த டிக்கிரியின் தொகையை வசூல்செய்து கொள்ளுவதற்கு ஒருபந்தோபஸ்தே தவிர, மற்றப்படி ஜப்த்திசெய்த கடன்காரனுக்கு மற்றகடன்காரர்களைவிட (கடன்கொடுத்தவர்கள்) அச்சொத்தில் முந்திய பாத்தியதையிருக்கிறதென்று தார்பரியப்படுத்திக் கொள்ளக்கூடாது. 10. சல். வி. நோ. 634 (10 Cal. W. N.)

சாக்ஷி கையெழுத்து:—ஒருபத்திரத்தில் சாக்ஷி கையெழுத்து போட்டதினால் அப்பத்திரத்தில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு சம்மதம் கொடுத்தவனாகமாட்டான். 10. கல். வி. நோ. (551 (10. Cal. W. N. 551)

வைப்பாட்டி:—ஒருவன் ஒருவளை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்திருந்து பின்பு விட்டுவிடுகிறான். அவள் அப்புருஷன்பேரில் வழக்கிட நியாயமில்லை. ராமாரசு v. புச்சம்மா இ. லா. ரி. 23 சென் 282 (I. L. R. 23 Mad. 282.)

————————:—ஒருவன் ஒரு வைப்பாட்டியையை வைத்திருந்து இறந்து விடுகிறான். அவள்பிற புருஷமுகம் பார்க்காமலிருப்பவளாயிருக்கும் பக்ஷத்தில் அவளுடைய வைப்புப் புருஷனுடைய சகோதரர்கள் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்க கடமைப்பட்டவர்கள். யஷலுண்டிராவ் v. காசூபேய் இ. லா. ரி. 12 Bom 26. (I. L. R. 12 Bom 26.)

குஷ்டரோகி புத்திரன்:—குடும்பச்சொத்து பாகப்பிரிவினை செய்யப்படுவதற்கு முந்தி ஒரு பாகஸ்தனுக்கு கொடிதாகிய அல்லது ரணமுள்ள குஷ்டரோக முண்டாகிவிட்டால் அவனுக்குக் குடும்பச்சொத்தில் ஜீவனும்சம் கிடைக்ககூடியதேயன்றி குடும்ப சொத்தில் பாகம் கிடைக்கமாட்டாது. அனந்தா v. ரூபபாய் இ. லா. ரி. 1 பம் 554. (I. L. R. 1 Bom 554.)

ஹிந்துலா:—ஸ்வீகாரப் பெற்றோர்கள் சொந்தப் பெற்றோர்களுக்கு எழுதிக்கொடுத்த எகிரிமெண்டு தஸ்தாவேஜி சாதாரண புத்திக்குப் பொருந்தாத விஷயம் ஏதாவதிருந்தால் அது ஸ்வீகாரம் பெற்றோர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது. வெங்கய்யா v. மோசிர் தொண்டா 8 பம். லா ரி. 346. (8 Bom L. R. 346.)

செய்யவேண்டிய வேலை:—ஒரு வேலையை அல்லது ஒரு காரியத்தை கோர்ட்டார் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது தேதிக்குள் செய்துமுடிக்க வேண்டுமென்று உத்திரவு செய்திருந்தால் அப்படி அன்றையத்தினம் செய்துமுடிக்கப்படாதது உத்திரவு செய்யப்பட்டவனின் குற்றமாயில்லாவிடில் அடுத்த சாத்தியப்பட்டதினம் செய்தால் கோர்ட்டார் குறிப்பிட்ட தினத்திலேயே செய்ததாக எண்ணப்படும். டோபி v. ஹிர்மேய்ன் 8. வீ. ரீ. 223 (8. W. R 223.)

ஹிந்து விதந்து:—விதந்துவாகப்போன பெண்ணை சம்ரெட்சிக்க அவளுடைய தகப்பனும் தமயனும் சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்லவானாலும் நெருங்கின பாத்தியத்தை முன்னிட்டு அந்தப்பெண்ணை சம்ரெட்சிக்க கடமைப்பட்டவர்கள். பாய்மங்கல் v. பாய்கிமீம் இ. லா. ரி. 23 பம் 291. (I. L. R. Bom. 291.)

சக்களத்தி தாயார்:—பிதிரார்ச்சிதசொத்துக்களை அடையாத சக்களத்தி பிள்ளைகள் தங்களுடையசக்களத்தாயாருக்கு ஜீவனும்சம் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல. பாய் தாயா v. நதகோவிந்தலால் இ. லா. ரி. 9 பம் 279. (I. L. R. 9. Bom 279.)

புருஷனும் பெண்சாதியும்:—ஒருவன் பெண்ஜாதி தன்னுடைய புருஷனுடன் கூடவிருந்து வசிக்காமல் தனியேவசிக்க ஜீவனும்சம் வேண்டுமென்று புருஷன் பேரில் வியாஜ்ஜியஞ் செய்ய பாத்தியமில்லை. புருஷன் தன்னை சரிவர சம்ரெட்சிக்கவில்லைஎன்றும், புருஷன் விபசாரஞ் செய்கிறவன் என்றும், புருஷனுடன்கூடி வாழ புருஷன் தடை செய்தானென்றும் ருசுப்படுத்தினால் ஜீவனும்சம் கிடைக்கும். சிட்லிங்கம்பா v. சிதேவா இ. லா. ரி. 2 பம் 624 (I. L. R. Bom 624.)

மகமடன் லா (முகமதியச் சட்டம்):—மகமடன் லாப்பிரகாரம் ஒரு தாயார் தன்னுடைய மைனர் புத்திரனின் சொத்துக்களை பராதீன முதலியவைகள் செய்ய யாதொரு சுதந்தரமும் கிடையாது. அவ

ளால் எழுதிக்கொடுக்கப்பட்ட விக்கிரய சாசனம் செலாமணி யாகமாட்டாது. சிதாராம் இ. லா. ரி. 8. அல. (324. I. L. R. All 324.)

வட்டி:—சுவாதீன அடமானம் வைத்துக்கொண்ட ஒருவன் அடமானம் பெற்றுக்கொண்ட சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டு அடைந்து வரவேண்டிய லாபத்தை (வட்டியை) அடையாமல் போய் பிறகு அந்த லாபத்திற்கு பதில் வட்டி தேவை என்று வியாஜ்ஜியம்கொண்டு வருவதுசெல்லுபடியுள்ளதல்ல மகதாஜி v. ஜோதி. இ. லா. ரி. 17. பம். 425. (I. L. R. Bom. 425.)

நிலவிர்த்தி:—நிலம் விர்த்தி செய்யப்பட்டபோது நான் மைனராயிருந்தேன் என்று டிபன்ஸ் கூறுவது அப்படி நிலம் விர்த் திசெய்யப்பட்டதற்குப் பிடித்த செலவைக் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதினின்று விடுவிக்கமாட்டாது. 10 வீ. நோ. (10. W N.)

இந்தியன் பினல் கோட்:—ஒரு குற்றவாளி பிடிப்பட்ட பிறகு வண்டியில் ஒரு சினேகிதனுடன் கொண்டுபோகப்பட்டான். வண்டியின் முன் பந்தோபஸ்தாக ஒரு போலீஸ்காரன் குதிரையின்பேரில் போய்க்கொண்டிருந்தான். சில தூரம் சென்ற பிறகு நடுவழியில் அவ்வண்டிக்கு மாடுகள் மாற்றவேண்டியதாயிருந்தது. போலீஸ்காரன் மாடுகளைக் கொண்டுவர கிருமத்திற்குள் போய் விட்டான். அச்சமயம் குற்றவாளி தான் செய்த குற்றத்தை சினேகிதனிடம் ஒப்புக்கொண்டான். விசாரணை காலத்தில் சினேகிதனிடத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை சாக்ஷியமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லை. போலீசார் காவலிலிருப்பவன் அப்படி காவலிலிருக்கும்போது மாஜிஸ்டிரேட் முன்னிலையிலல்லாமல் வேறு யாரிடத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அது சாக்ஷியமாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 20 பம் 165 (I. L. R. 20 Bom. 165.)

இந்தியன் பினல்கோட்:—விவாகமான ஸ்திரியுடன் விபசாரஞ் செய்ததாகவும் துர்ச் செய்கைக்காக அவளை மயக்கி அழைத்துக்கொண்டு போனதாகவும் வந்த கேசில் விசாரணை காலத்தில் பிரியாது கொடுத்தவன் தனக்கு விவாகமான விஷயத்தைக் குறித்து தன் பெண்சாதியை சாக்ஷியாக விசாரிக்க ஒப்புக்கொள்ளவில்லை. கேசை விசாரணை செய்த டிப்டி மேஜிஸ்டிரேட் கேசைத் தள்ளி குற்றவாளியை விட்டுவிட்டார். செஷன்ஸ் ஜட்ஜி இந்தக்கேசை வேறொரு டிப்டி மாஜிஸ்டிரேட்டினிடம் அனுப்பி பெண்சாதியை சாக்ஷியாக விசாரணை செய்யும்படி உத்திரவு செய்தார். இந்தக்கேஸ் அப்பீலுக்கு வந்தபோது, செஷன்ஸ் ஜட்ஜி உத்திரவில் பிராசிக்கியூஷன் தரப்பில் கேசை ருஜுப்படுத்தவில்லை என்றும் பிராசிக்கியூஷன் தரப்பார் யாதொரு சாக்ஷியமும் கொண்டுவந்து அதை டிப்டி மாஜிஸ்டிரேட் ஒப்புக்கொள்ளாமலிருக்கவில்லை என்று சொல்லியிருப்பதால் அப்படிச் சொல்லியிருந்தும் அவர் இந்தக்கேசைபுனர் விசாரணைக்கு அனுப்பியதில் அவர் செம்மையாய்யோசிக்கவில்லை என்று தீர்ப்புசொல்லப்பட்டது. இ. லா. ரி. 11 கல். 81 (I. L. R. 11 Cal. 81.)

————————:—பத்து வயதுக்குட்பட்ட குழந்தையானது உண்மையில் ஒருவர் விசாரணைக்கும் மேற்பார்வையிலு மிருக்கிறது. அப்படிப்பட்ட குழந்தையை கிரமமாய் உத்திரவு பெற்றுக்கொள்ளாமல் அப்புறப்படுத்துகிறவன் அதினால் வரும் நஷ்டத்தை யனுபவிக்க வேண்டியவனாயிருக்கிறான். குழந்தைக்கு விசாரணை கர்த்தன் உண்டா இல்லையா என்று விசாரிக்க வில்லை என்கிற விஷயமே பிரிவின்படி வயதுக்குட்பட்ட ஒருவனை நியாயமான விசாரணை கர்த்தன் வசத்திலிருந்து திருட்டுத்தனமாய் அழைத்துப் போனதென்றும் குற்றத்திற்குச் சமாதானமாக மாட்டாது. இ. லா. ரி. 3. பம் 178 (I. L. R. 3. Boml. 178.)

————————:—கொண்டுபோனாலும் ஆசைகாட்டி வசியப்படுத்தினாலும் குற்றமாகும். வீட்டில் ஹிம்சை பொருக்காமல் தானாகவே ஓடிவந்து ஒருவனிடம் வந்து சேர்ந்தால் அவன் குற்றஞ் செய்தவனாக மாட்டான். 4. வீ. ரி. 6 (4. W. R. 6.)

————————:—பதினைந்து வயதுள்ள ஒரு ஹிந்து பெண்பிள்ளைக்கு அவளுடைய புருஷனே கார்டியனாவன். அவன் சம்மதமில்லாமல் அவனிடமிருந்து அவளுடைய பிதாவே அழைத்துக்கொண்டுபோனாலும் அவன் குற்றஞ்செய்தவனாவான் இ. லா. ரி. 17 கல் 298 (I. L R. 17. Cal 298)

————————:—மைனர் குழந்தை சம்மதம் கொடுத்ததென்பது நல்ல டிபன்சல்ல. 10 வி. ரி. 42 (10 W. R. 42)

————————:—கார்டியன் சம்மதி கொடுத்தான் என்று நல்ல எண்ணத்துடன் பிசகாய் நம்பினதாய் ருசுப்படுத்தினால் குற்றத்தின் தன்மை நீங்கிவிடும், இ. லா. ரி. 2 அல. 154. (I. L. R. 2All 154)

————————:—ஒரு போலிஸ் ஆபிசர் யாதாமொருவனை யாவது தகுந்த காரணமில்லாமல் ஒரு மணிநேரங்கூட அடைத்து வைக்க அதிகாரமற்றவனாவான். இ. லா. ரி. 12 பம் 377 (I. L. R. 12 Bomb. 377).

————————:—ஒரு அற்ப சண்டையில் குற்றவாளியானவன், இறந்துபோனவனை பலமாய் மல்லாக்கத்தள்ளினான். அதினால் அவன் இரண்டரை முழதூரத்தில் கீழே பாட்டையில் விழும்படி நேரிட்டது. அப்படி விழுந்ததில் இறந்து போனவனுக்கு துன்பம் நேரிட்டு அதின் பேரில் வலிகண்டு ஐந்து நாள் பொறுத்து அவன் சாரும்படி நேரிட்டது. இந்த சங்கதிகளினாலே பீனல் கோட் 304 A பிரிவிற் கண்ட குற்றத்தைச்செய்தவனாகவில்லை; கொலையாகத்துர்மரணமூண்டுபண்ணியதாகவுமில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட சம்பவம் நேரிடு மென்கிற பிரமேயமிருந்திருக்கவில்லை. இ. லா. ரி. 16 சென். 224 (I. L. R. 16 Mad 224)

————————:—ஒருவன் எல்லோரும் வருகிற பாட்டையில் பள்ளம் வெட்டுவானானால் சகலருக்கும் இடஞ்சல் செய்ததற்காக குற்றஸ்தாபனை செய்யக்கூடும். ஒருவன் அப்பள்ளத்தில் விழுந்து காலை ஒடித்துக்கொண்டால் பள்ளம் வெட்டினவன் பேரில் நஷ்டத்ராவாசெய்ய நியாயமேற்படும். இ.லா.ரி. 10 அல 498 (I. L. R. 10 All 498)

————————:—திருடனை திருடும்பொழுதே சர்க்கார் உத்தியோகஸ்தனல்லாத வேறெந்த மனிதன் பிடித்தாலுங் கூட பிடிக்கலாம். ஆகையால் அப்படிப்பிடிபட்டவனை மீட்பது குற்றமாகும். இ. லா. ரி. I1 சென் 441 (I. L. R. 11 Mad. 441.)

————————:—வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கைதியை போலிஸ் ஸ்டேஷனுக்கு தன்னுடைய வேலைக்காரனுடைய பாராவில் அனுப்பினால் அந்த வேலைக்காரனிடமிருந்து தப்பித்து ஓடுவது குற்றமாகும். இ. லா. ரி. சென| 480. (I. L. R. Mad. 480)

மாதாந்திர வேலைக்காரன்:—ஒரு மாதாந்தர சம்பளக்காரன் யாதொரு தகுந்த காரணமின்றி அம்மாதத்தில் வேலையை விட்டுப்போய் விட்டால், அவன் வேலை செய்த நாட்களுக்கு சம்பளம் கேட்க பாத்திதை கிடையாது. ரூஜாகெஷம்பெட் v. பெருமாள், 12 பர். லா. ரி. 77 (12 Burm L. R. 77)

ஸ்திரி தனம்:—தாயாருடைய ஸ்திரிதன ஸ்தாபரசொத்துக்களை வார்சுக்கிரமத்தில் அடையும் விவாகமானபுத்திரி அச்சொத்துக்களை தன் உயிருள்ளவரையில் அனுபவிக்கலாமே தவிர அவைகளைப்பராதீனங்கள் செய்யக்கூடாது. அவள் இறந்து போனவுடன் அச்சொத்துக்கள் தாயாருடைய வார்சுகளுக்கு கிடைக்கின்றன. வெங்கட்டராம கிருஷ்ணராவ் v. புஜங்கராவ் இ. லா. ரி. 19. சென் 107 (I. L. R. 19. Mad. 107)

ஸ்திரி தனசோத்தின் உயில்:—புருஷனும்பெண்சாதியும கூடிவாழுங்காலத்தில் புருஷன் பெண்சாதிக்கு அடிக்கடி சொந்த செலவிற்காக கொஞ்சம் பணம் கொடுத்துவந்தான். இந்தப்பணத்தை அவள் சேர்த்துக்கொண்டு வருகிறாள். இதையன்றி அவளுக்கு ஸ்திரிதனமூலியமாய் கொஞ்சப்பணமும்கிடைத்தது. இந்த இரண்டு ஐவேஜிகளைக்கொண்டு அவள் சில ஸ்தாபரசொத்துக்கள் வாங்குகிறாள். இந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரிதன சொத்துக்களாக எண்ணப்படவேண்டும். அவள் அச்சொத்துக்களை தன் இஷ்டப்படி பராதீனம் செய்யலாம். உயில் எழுதிவைக்கலாம். வெங்கட்டருமராவ் v. வெங்கட்டசூரியராவ், இ. லா. ரி. 1 சென் 281. (I. L. R. 1. Mad. 281)

ஸ்திரிதன பாத்தியம்:—புருஷனுடைய பணத்தைக்கொண்டும் பெண்சாதிக்கு ஸ்திரிதனமூலியமாய்க் கிடைத்தபணத்தைக்கொண்டும் இருவரும் சேர்ந்து தங்கள் பெயரால் ஒரு நிலம்வாங்கியிருந்தால், புருஷனிறந்தவுடன் பெண்சாதி தன்னுடைய பாகத்தை பிரித்துகொள்ள பாத்தியமுடையவள். மாதவராபா v. தீர்த்தசாமி. இ. லா. ரி. 1 சென் 307. (I. L. R. 1. Mad. 307.)

தாசியின் விபசார வருமானம்.—ஒருதாசி ஆடுவதற்கும் பாடுவதற்கும் குடும்பச்செலவில் கற்றுக்கொண்டபோதிலும் அவளுடைய விபசாரவருமானத்தால் அவள் சம்பாதித்த சொத்துக்கள் பாகிக்கப்படமாட்டா. பூலகம் v. சுவரணம் இ. லா. ரி. 4. சென் 330. (I. L. R. 4. Mad. 330)

பிதிரார்ஜித சோத்துக்கள் தகப்பனுடைய பராதீனங்கள்:—பிதிரார்ஜித சொத்துக்களில் சில வற்றை தகப்பன் தன்புத்திரன் குழந்தையாயிருக்கும்போது தன் பெண்சாதிக்கும், சிலவற்றை தன்னுடைய பெண்களுக்கும் ஸ்திரீதனமாகவும் கொடுத்துவிட்டான். புத்திரன் மைனராயிருக்கும்போதே அடுத்த சினேகிதன் (Next Freind) மூலியமாய், ஷை பரா தீனங்களை ரத்துசெய்யவும் சொத்துக்களைத்திரும்பி அடையும்பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். தகப்பன் செய்தபராதீனங்கள் கொஞ்சம்கூட செல்லமாட்டாதென்று சொல்லி கோர்ட்டார் அவைகளைரத்து செய்துவிட்டார்கள். ரூயக்கான் v. சுப்பண்ணா இ. லா. ரி. 16. சென் 84. (I. L. R. 16 Mad. 84) .

வைப்பாட்டி புத்திரன்:—ஒரு சூத்திரனுடைய வைப்பாட்டி அவனைச்சேரும்போதும் விவாகமான ஸ்திரியாகவிருந்தால், வைப்பு புருஷனுக்குப்பிறந்த புத்திரனுக்கு தகப்பனின் சொத்துக்களிலிருந்து ஜீவனாம்சம் கேட்க பாத்தியமுண்டு. விராரமுத்தி உடையான் v. சிங்காரவேலு இ. லா. ரி. 1 சென் 306. (I. L. R. 1 Mad 306)

விதந்துவின் துற்விபசாரம்:—ஜீவனாம்சம் பெற்று வரும் விதந்து விபசாரஞ் செய்தால் அல்லது பதிவிரதாதன்மையை கெடுத்துக்கொண்டால் ஜீவனாம்சத்திற்கு அவளுக்குள்ள பாத்தியம் விலகிப்போகும் ஜீவனாம்சம் கொடுப்பதாக ஒரு எகிரிமெண்டு உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறதென்று அவள் டிபன்ஸ் சொல்லுவது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. நாகம்மா v. வீரபத்திரா இ. லா. ரி. 17. சென் 392. (I. L R. 17 Mad 392)

புத்திரனின் விதந்துவின் ஜீவனாம்சம்:—பிதிரார்ஜித சொத்துக்களில்லாத ஒரு ஹிந்து தகப்பன், வயது வந்த தன புத்திரனையாவது அல்லது புத்திரனின் விதந்துவையாவது சம்ரெட்சிக்க கடமைப்பட்டவனல்ல. ஆதலால் மாமனார் உயில்மூலியமாய் தன்னுடைய பேரப்பிள்ளைக்கு எழுதிவைத்த சுயார்ஜ்ஜித சொத்துக்களிலிருந்து மருமகள் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கு செய்யக்கூடாது. மாமனார் தன்னுடையசொத்துக்களை தன்பேரப்பிள்ளைக்கு எழுதிவைத்த உயிலில் மருமகளுக்கு ஜீவனாம்சம் கொடுத்து வரும்படி எழுதியிருந்தால், ஜீவனாம்சம் கிடைக்கும். அம்மாக்கண்ணு v. அப்பு இ. லா. ரி. I1 சென் 191 (I. L. R. 11 Mad. 9I)

குடும்பகடனும் ஜீவனாம்சமும்:—பெண்சாதிபிள்ளைகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டிய கடனைக்காட்டிலும் குடும்பக்கடனே முக்கியமான கடன். ருமாபாய் v. திரும்பககனேஷ் ஷெ இ. லா. ரி. 9பம் ஹ. ரி. 283. (9 Bom H. C. 283.

தாயாரை சம்ரேட்ச்சிக்கவேண்டும்.—ஹிந்துலாப் பிரகாரம் ஒருபுத்திரன் தன்னுடைய தகப்பனிடமிருந்துசொத்துக்கள் அடைந்தாலும்சரி அடையாவிட்டாலும் சரிதன்னுடைய தாயாரை சம்ரெட்சிக்ககடமைப்பட்டவன். சுப்பிராயண்ணா v. சுப்பக்கா இ. லா. ரி 8 சென் 236 (I. L. R. 8 Mad 236.)

ஸ்வீகார உடன்படிக்கை:—ஒரு தகப்பன் தன்னுடைய புத்திரனை ஸ்வீகாரம் கொடுக்கும்போது ஸ்வீகாரத்தாயாரிடமிருந்து, ஸ்வீகாரபுத்திரன் ஸ்வீகாரத்தகப்பனுடைய சொத்துக்களில் மூன்றில் ஒரு பாகத்தை அடையவேண்டுமென்று உடன்படிக்கை எழுதிவாங்கிக்கொண்டு புத்திரனை ஸ்வீகாரம் கொடுத்தான். இந்த உடன்படிக்கை செலாமணியாகாதல்ல வென்றும் புத்திரனுக்கு வயது வந்தபோது மாறுதலடையக் கூடியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ருமசாமி அய்யன் v. வெங்கட்டருமய்யன், இ. லா. ரி. 2 சென் 91. (I. L. R. 2 Mad 91.)

தாயாரின் சகோதரியின் புத்திரன்:—சூத்திரர்கள் தாயாரின் சகோதரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதுசரியானஸ்வீகாரம், இ. லா. ரி. 1சென் 62 (I. L. R 1 Mad 62.)

சொந்தபுத்திரனை இழந்த விதந்து ஸ்வீகாரம் ஏடுத்துக்கொள்ளலாம்:—ஹிந்துலாப்பிரகாரம், சொந்தபுத்திரன் பாலியத்தில் இறந்துபோனாலும் சரி, அல்லது விவாகமாகாமலிறந்து போனாலும் சரி ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று புருஷனுடைய உத்திரவைப்பெற்ற ஒரு விதந்து ஷை சொன்ன அசந்தர்ப்பங்கள் நடந்தேறினால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். ராஜாவெளன்க்கி வெங்கட்டகிருஷ்ணராவ் v. ருமலக்ஷுமி இ. லா. ரி. 1 சென் 174. (I. L. R. 1 Mad 174.)

மைனர் விதந்து:—ஒரு விதந்து மைனராயிருந்த போதிலும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளத்தகுந்தவள் மொதாகினிதேசி v. ஆதிநாத்தேவ் இ. லா. ரி. 18 கல். 69. (I. L. R. 18. கல். 69.)

விதந்துவும் ஸ்வீகாரமும்:—ஒரு விதந்து தன்னுடைய புருஷனுடைய உத்திரவின்றியாவது அல்லது அவனுடைய நெருங்கின பந்துக்களின் உத்திரவின்றியாவது ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அதிகாரமற்றவள். அருந்ததி அம்மாள். v. குப்பம்மாள் 3 சென் ஹை கோ. ரி. 283 (3 M. 1 H C. R. 283)

ஸ்வீகாரச் சடங்கு:—சூத்திரர்கள் ஸ்வீகாரம் எடுக்கும்போது மதச்சம்பந்தமான சடங்குகள் நடத்த வேண்டுமென்பதை அவசியமென்று நினைக்கிறதில்லை. ஆகையால் சூதகத்திலிருந்த ஒரு சூத்திர விதந்து ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது செல்லுபடியற்றதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. தங்கத்தானை v. ருமு. இ. லா. ரி. 5 சென் 358. (I. L. R. Mad 358.)

வக்கீலின் சொத்துக்கள்:—குடும்பச்செலவிலிருந்துபடிப்படைந்து பாஸ் செய்து வக்கீல்தொழில் நடத்திசம்பாதித்தசொத்துக்கள் குடும்பப்பொதுச்சொத்துக்களாகவே பாவிக்கப்பட்டு பாகப்பிரிவினைக்குள்ளாகும். கங்காதரடு v. நரசம்மா 7. சென் ஹை. கோ ரி. 47 (7 Mad H. C. R. 47)

காலாவதியாய்ப்போன கடன்.—காலாவதிதோஷத்திற்குள்ளான கடனுக்குபதிலாக ஒரு ஹிந்துஅபிவிபக்தகுடும்ப மானேஜிங் மெம்பர் புதுப்பத்திரம் எழுதிக்கொடுக்க அதிகாரம்கிடையாது. இஷ்டமிருந்தால் தான் மட்டிலும் கட்டுப்பட்டு எழுதிக்கொடுக்கலாம். டினக்கார் v. அப்பூஜி. இ லா. ரி. 20 பம் 155 (I. L. R. 20 Bcmb 155)

ஸ்வீகாரத்தாயாருக்கும் சொந்தத் தகப்பனுருக்கும் எகிரிமெண்டு.—புருஷனுடைய உத்திரவின் பேரில் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட ஒரு விதந்து ஸ்வீகாரமெடுத்த சமயத்தில் சொந்த தகப்பனுக்கு எழுதிக்கொடுத்திருந்த ஒரு எகிரிமெண்டிற்கு ஸ்வீகாரப்புத்திரன் கட்டுப்பட்டவனல்ல. ஜெகநாதா v. பாப்பம்மா இ. லா. ரி. 16. சென் 400 (I. L. R. 16 Mad 400)

ஸ்விகாரத்திற்குமைனர் அதிகாரம்:—கோர்ட் ஆப் வார்ட்சார் பார்வையில் இல்லாதவும், ஹிந்துலாப்பிரகாரம் பகுத்தறிவு அடையும் படியான வயதை அடைந்த ஹிந்துமைனர்கள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கலாம். அந்த அதிகாரம் செல்லுபடி உள்ளது. ஜமுனா தேசயா சவ்ராணி v. பாமசுந்தரி தேசாயே சவ்ராணி 3 இ. அ. 72. (3 I A. 72.)

பெண்சாதியை இழந்தவன்:—பெண்சாதியை இழந்தவன் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லும்படியுள்ளது. விவாகமாகாதவன் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் அதுவும் செல்லுபடியுள்ளது. n. சந்திரசேகரடு v. n. பிரம்மண்ணு 4 சென். ஹை. ரி. 270 (4 Mad H. C. R. 270.)

இரண்டாவது ஸ்வீகாரம்:—முதல் ஸ்வீகாரபுத்திரன் உயிருடனிருக்கும்போது இரண்டாவது ஸ்வீகாரம் எடுப்பது சட்டவிரோதமான செய்கை. ரெங்கம்மாள் v. அச்சம்மா பிரிவு கவுன்சில் தீர்ப்பு (4 M 1 A 1)

பெண்சாதி கர்ப்பமும் ஸ்வீகாரமும்:—பெண்சாதி கர்ப்பவதியாயிருப்பது தெரிந்திருந்தும் புருஷன் எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரம் செல்லும்படியற்றதல்ல. நாராயணரெட்டி v. வரதாச்சலரெட்டி. இ. லா. ரி. 3 சென் 180. (I. L. R. 3 Mad 180)

விதவா விவாகம்:—மரவர் ஜாதியில் ஒரு விதந்து புனர் விவாகம் செய்துகொண்டால், அவள் முதல் புருஷனுடைய சொத்தை அடைய பாத்திதை இழந்தவளாகிறுள். முருகாயி v. வீரமாகாளி. இ. லா. ரி. 1 சென் 226 (I. L. R. 1 Mad 226.

ஸ்திரி கார்டியன்:—ஒரு மைனரின் பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் அந்த மைனருக்கு ஒரு விவாகமான ஸ்திரியை கார்டியனாக நியமிப்பது ஒழுங்கீனமான நடவடிக்கையா இருந்தபோதிலும் தகுந்த போதனையின் பேரிலும் கோர்ட்டாருடைய அனுமதியின்பேரிலும் அந்த கார்ட்டியன் செய்துகொண்ட சமாதானத்தை ரத்துசெய்ய முடியாது இ. லா. ரி. 29. சென் 58 (I. L. R. 29 Mad. 58.)

ஏஜண்டை பிரதிவாதியாய்ச் சேர்க்கவேண்டும்:—ஏஜண்டினிடம் கடன்வாங்கினவர்கள் செலுத்தவேண்டிய தொகையை வசூலிக்க சொந்தக்காரன் வியாஜ்ஜியம் கொண்டுவந்து ஷை கடனாளிகள் ஏஜண்டினிடமிருந்து கடன் வாங்கவில்லையென்று சொன்னால் வாதி ஷை ஏஜண்டையும் பிரதிவாதியாகச் சேர்த்து வியாஜ்ஜியஞ் செய்யலாம், இதரபிரதி வாதிகள் பேரில் டிக்கிரி கொடுக்கப்படாமல்போனால் ஏஜண்டுபேரிலாவது டிக்கிரிகொடுக்கவேண்டுமென்று வாதி கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாம். மெய்யப்ப செட்டி v. பெரியண்ண செட்டி. இ லா. ரி. 29. சென். 50. (I. L. R. 29 Mad 50.)

தேவஸ்தான வியாஜ்ஜியம்:—ஒரு தேவாலய தர்மகர்த்தா ஷை தர்மகர்த்தா ஸ்தானத்தில் ஒருவர்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் அந்த தேவாலயத்தில் ஆராத்திப்பவர்களில் சிலரை கக்ஷிக்காரர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம், அப்படிச் சேர்ப்பது ஷை தேவஸ்தானத்தின் நன்மையை உத்தேசித்து சேர்க்கப்பட்டிருக்கிறதென்று கோர்ட்டார் நினைக்கும்படியாகயிருக்கவேண்டும். சிதம்பரம் செட்டியார் v. ஸ்ரீ ரெங்காச்சாரியார் இ. லா. ரி. 29. சென் 106. (I. L. R. 29 Mad 106.)

தர்மச்சொத்துக்கள்:—தர்மச்சொத்துக்களை யாதொரு விதமான பராதீனமும் செய்யக்கூடாது. ஆனால் பொது நன்மைக்காக Land Acquisition. ஆக்ட்டின் பிரகாரம் அச்சொத்துக்கள் வாங்கப்பட்டால் அவைகளின் கிரயத்தை கெவர்ன்மெண்டாரிடம் வட்டிக்குப்போடும்படி உத்திரவுசெய்யலாம். ஷியால் v. நகாப்பா. இ. லா. ரி. 29 சென் 117 (I. L. R. 29. Mad. 117.)

கிரிமினல் புரோசீஜர் கோட்:—ஒரு பிளீடரால் கையெழுத்து செய்யப்பட்ட ஒரு அப்பீல் மனுவை கக்ஷிக்காரன் மேஜிஸ்டிரேட்டினிடம் கொடுத்தால், அந்த பிளீடர் ஆஜராகும்படி சாவுகாசம் கொடுக்காமல் மாஜிஸ்டிரேட் அப்பீலைத் தள்ளிவிடக்கூடாது. தண்டனை அடைந்த ஒருவன் தனக்கு விரோதமாக கீழ்க்கோர்ட்டில் சொன்ன சாக்ஷிகளை நம்பக்கூடாதென்று தகுந்த காரணம்காட்டி அப்பீல் மனுதாக்கல் செய்தால் அப்பீல் கோர்ட்டார் அந்தக்கேசின் ரிக்கார்டுகளை தருவித்துப்பார்க்காமல் கி. பு. கோ. 421-வது பிரிவின்படி அப்பீலைத் தள்ளிவிடக்கூடாது. இ. லா. ரி. 19. சென் 236. (I. L. R. 29 Mad 236.)

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

விவாகப்பிரிவினை கேஸ்.

கேசின் விபரம்:—மனுதாரி தன் புருஷனுக்கும் தனக்கும் விவாகமானதை ரத்துசெய்யும்படியாக புருஷனாகிய மிஸ்டர் A. மானுயலையும் மிஸ்ட்ரஸ் லாரொஜொரியோ என்கிற துரைசானியையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து ஹைகோர்ட் ஒரிஜனல் சயிடில் மனு தாக்கல் செய்தார்.

கேசின் நடவடிக்கை:—இந்த மனு விசாரணை செய்யப்பட்டபோது பிரதிவாதிகள் ஆஜராகவில்லை. மனுதாரி தனக்கு 1895-வது ளும் விவாகமானதாகவும் அதுமுதல் புருஷன் தன்னை கொடுமையாகவும் தாறுமாறாகவும் நடத்திவருவதாகவும் சண்டைபோட்டுக்கொண்டு அடிக்கடி பிரிந்திருந்ததாகவும், பிறகு சமாதானமாய் கூடி வாழ்ந்ததாகவும் 1898-வது ளுமுதல் புருஷன் தன்னை முழுதிலும் விட்டுவிட்டதாகவும் அந்தக்காலத்திலிருந்து புருஷன் இரண்டாவது பிரதிவாதியுடன் கூடி வாழ்ந்துவருவதாகவும் சொன்னார்.

உத்திரவு:—விவாகத்தை ரத்துசெய்து பிரதிவாதிகள் மனுதாரிக்குச் செலவு தொகை செலுத்தும்படியாக உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் ஆர்னால்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்.
மிஸ்டர். ஜஸ்டிஸ் மில்லர்.

லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல்.

வாதி:—ஒரு கிராம கர்ணன்.

(3—10—06,)

கேசின் விபரம்:—ஒரு கிராமக் கர்ணனுக்கு கடன் கொடுத்தவர் ஷை கடனை ஷை கர்ணனிடம் வசூல் செய்யும்பொருட்டு சிக்காக்கோல் டி. மு. கோர்ட்டில் ஷை கர்ணன்பேரில் வியாச்சியஞ் செய்தார். டி. மு. கோர்ட்டார் கர்ணன்பேரில் டிக்கிரி கொடுத்தார்கள். டிக்கிரி பெற்றவர் டிக்கிரியை நிறைவேற்றி கர்ணனுக்குச் சொந்தமான நிலத்தை ஜப்திசெய்தார். ஷை நிலம் கர்ணன் உத்தியோகத்திற்கு கவர்ன்மென்டாரால்கொடுக்கப்பட்ட இனாம் நிலம் என்றும் அதை கடனுக்காக ஜப்திசெய்யக்கூடாதென்றும் ஷை கர்ணன் ஆக்ஷேபித்தார். டி. மு. கோர்ட்டார் இந்த ஆக்ஷேபனையை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே ஜப்திசெய்யப்பட்ட நிலம் ஏலம் போடப்பட்டு அந்த ஏலத்தில் டிக்கிரி பெற்றவரே அந்த நிலத்தை வாங்கிக்கொண்டார். கர்ணன் நிலத்தைத் திரும்பி அடையும்பொருட்டு 1895-வது ளுத்திய சென்னப்பட்டணம் 3-வது ஆக்டின் பிரகாரம் ரெவினியூ கோர்ட்டில் அதாவது அசிஸ்டன்ட் கலேக்டரிடம் வியாஜ்ஜியஞ்செய்தார். அசிஸ்டன்ட் கலேக்டர் கேசைத் தள்ளிவிட்டார். கர்ணன் ஜில்லாக் கலேக்டரிடம் அப்பீல் தாக்கல் செய்தார். இவர் அசிஸ்டன்ட் கலேக்ட்டர் தீர்மானத்தை உறுதிசெய்து அப்பீலைத் தள்ளிவிட்டார். கர்ணன் ரெவினியூ போர்ட்டிற்கு அப்பீல் செய்தார்.

ரெவினியூ போர்டார் தாவா நிலம் சர்விஸ் இனாம் நிலமென்றும் அதில் வரும் வருமானம் கர்ணன் அடையவேண்டுமென்றும் தீர்மானஞ் செய்தார்கள். ஆனால் அந்த நிலத்தை திரும்பி கர்ணன் வசம் ஒப்பிவிக்க தங்களால் சாத்தியப்படாதென்றும், சிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யும்படியும் ரெவினியூ போர்ட்டார் கர்ணனுக்கு அறிவித்தார்கள்.

கர்ணன் இந்த நிலத்தை திரும்பிப் பெறும்பொருட்டு டி. மு. கோர்ட்டில் வியாச்சியஞ் செய்தார். டி. மு. கோர்ட்டார் இந்தக் கேசைப்பிடித்து விசாரிக்க தங்களுக்கு அதிகாரமில்லை என்று சொல்லி கேசைத் தள்ளிவிட்டார்கள். இந்த உத்திரவிற்கு விரோதமாக கர்ணன் ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். ஜில்லாக்கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து இந்தக்கேசை விசாரிக்கும்படியாக உத்திரவு செய்தார்கள், கர்ணன் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ய, இந்தக்கேஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களும், மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரும் கூடின கோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது. இருவரும் அபிப்பிராயத்தில் பேதப்பட்டார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இந்தக் கேசை விசாரிக்க முனிசிப் கோர்ட்டிற்கு அதிகாரமிருக்கிறதென்றும், ஜில்லாஜட்ஜிசெய்த உத்திரவு சரிதான் என்றும் அபிப்பிராயப்பட்டார். மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் சிவில் கோர்ட்டிற்கு அதிகாரமில்லை என்று அபிப்பிராயப்பட்டார். மிஸ்டர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சினியர் ஜட்ஜியானபடியால் அவருடைய அபிப்பிராயமே தீர்ப்பாக முடிவுசொல்லப்பட்டது.

ஆகவேகர்ணன் லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் வி. ருமேசன் வாதிக்காகவும், மிஸ்டர் எத்திராஜமுதலியார் பிரதிவாதிக்காகவும் பேசினார்கள்.

கேசின் முடிவு:—கோர்ட்டார் இருகக்ஷி வக்கீல்களும் பேசினதைக்கேட்டுக்கொண்டார்கள். சிவில் கோர்ட்டாருக்கு இந்த வியாஜ்ஜியத்தைப் பிடித்து விசாரிக்க அதிகாரமில்லை என்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

இன்சால்வேன்ட் கோர்ட்.

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

இன்சால்வேன்சிமனு.

சோம்பேரிப்புத்திரன்.

மனுவின் விபரம்:—கில்பர்ட் மோர்வுஸ் என்பவரும் அவருடைய புத்திரன் அந்தோனி கில்பெர்ட் என்பவரும் இன்சால் வென்சிமனு தாக்கல் செய்தார்கள். இரண்டாவது மனுதார் அதாவது புத்திரன் ரெயில்வே கார்ட் உத்தியோகத்திலிருந்து அதை ராஜிநாமா கொடுத்துவிட்டு தகப்பனருடைய சம்ரெட்சணையிலிருந்து வருகின்றார்.

உத்திரவு:—இந்த மனுவின் விசாரணை 6-மாத காலம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. அதுவரையில் முதல் மனுதாரை ஒருவரும் வாரண்டில் பிடிக்கக்கூடாது. இரண்டாவது மனுதார் செய்துவந்த உத்தியோகத்தையும் விட்டுவிட்டு காலக்ஷேபத்திற்கு சோம்பேரித்தனத்தால் தகப்பனரிடம் தொங்கிக்கொண்டிருப்பதால் கோர்ட்டார் பாதுகாப்பு கொடுக்க மாட்டார்கள் என்று முடிவு சொல்லப்பட்டது.

ஜட்ஜிகள் :—ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய [அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கிரிமினல் கேஸ்.

கைதி :—வன்கமல்லாரெத்தனம்.

(23—9—06)

கேசின் விவரம் :—கைதியும் இன்னும் நாலவரும் சேர்ந்து அப்பண்ணா என்பவனை அடிக்கப்போனார்கள். அப்பண்ணா இவர்களைக் கண்டவுடன் வீட்டிற்குள் ஓடிப்போய்விட்டான். இந்த வீட்டிற்குச் சொந்தக்காரனாகிய வடலமன்னு வெங்கண்ணா என்பவன் வெளியேவந்து கைதி வகையறாவைத் திட்டினான். அதின்பேரில் கைதி தன் கையிலிருந்த உலக்கையால் ஒரு அடி பலமாய் அடிக்கவே வெங்கண்ணா உடனே கீழ்விழுந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு அவ்விடத்தில் இறந்துபோனான்.

இந்தக்கேஸ் குண்ட்டூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு கைதிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

கேசின்நடவடிக்கை:—மரண தண்டனை ஹைகோர்ட்டாரால் உறுதி செய்யப்படவேண்டியதால், செஷன்ஸ் கோர்ட்டார் இந்தக்கேசை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்கள்.

தீர்ப்பு:—வெங்கண்ணாவைக்கொலைசெய்ய வேண்டுமென்கிறஎண்ணம் கைதிக்கு முந்திகிடையாது; ஆத்திரத்தின்பேரில் திடீரென்று செய்தகொலை ; ஆகையால் மரணதண்டனை தீபாந்திர தண்டனையாக மாற்றப்பட்டது.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணியஅய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் அப்பீல்.

தற்காப்பு சுதந்தரம்.

கைதி:— அங்கமுத்துப்பிள்ளை.

(25—9—06.)

கேசின் விபரம்:—திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் அங்கமுத்துப்பிள்ளை என்பவர் கட்டளை என்னும் கிருமத்தில் கூடின பெங்கால் சந்தைக்குப்போய் திரும்பிவரும்போது வழியில் இருவர்கள் அவரை எதிர்த்துச் சண்டை செய்தார்கள். காரணம் என்னவென்றால் இவ்விருவர்களில் ஒருவனின் பெண்சாதியுடன் கைதி ரகசியமாய் சாவகாசம் செய்துவந்தான். நிற்க, மேற்படி சண்டையில் கைதி இருவர்களையும் கொன்றுவிட்டான்.

இந்தக் கேசை திருச்சி செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்தபோது, கைதி தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு அவர்களைக் கொன்றதாக டிபன்ஸ் கூறினான்.

செஷன்ஸ் கோர்ட்டார் தற்காப்பு சுதந்தரத்தின் எல்லையைக்கடந்து கைதி கொலை செய்திருக்கிறான் என்று அபிப்பிராயப்பட்டு கைதிக்கு 7-வருஷ தீபாந்திர தண்டனை விதித்தார்கள். கைதி ஹைகோர்ட்டில் அப்பில் செய்துகொண்டான்.

தீர்ப்பு :—"தற்காப்பு சுதந்தரம் (Right of Private Defence) என்பதற்கு செஷன்ஸ் ஜட்ஜீ குருகின தார்பரியம் கொடுத்துவிட்டார். கடுங்காயம் உண்டாகுமென்று எதிர்பார்த்தபோதும் உயிர்கஷ்டமுண்டாகுமென்று எதிர்பார்த்தபோதும் தற்காப்பு சுதந்தரத்தைப் பிரயோகப்படுத்தி எதிரிக்கு மரணமுமுண்டாக்கலாம் என்று நியாயஞ்சொல்லி கைதியைவிடுவிக்கும்படி தீர்ப்பளித்தார்கள்.

கிரிமினல் அப்பீல்.

பில்லிசூனியக்காரனைக் கொலைசெய்த கேஸ்.

கைதிகள்:—லக்ஷிகாடும் இன்னும் மூவர்களும்.

(23—9—06.)

கேசின் விபரம்:—இந்தக்கேஸ் கெஞ்சம் ஜில்லாவில் நடந்தது. "போனேபோலபாளி" என்னும் கிருமத்தில் பாண்டியா என்னும் பெயருடைய ஒரு பில்லி சூனியக்காரன் இருந்தான். அக்கிருமத்தில் இவனைக் கண்டால் எல்லோரும் பயப்படுவார்கள். இவனுக்கு ஏறக்குறைய எல்லோரும் விரோதம். சென்ற மேமீத்தில் அக்கிருமத்தில் வாந்திபேதி பரவியது. ஆதலால் இந்த பில்லி சூனியக்காரன் மயான தேவதையை ஏவிவிட்டுவிட்டான் என்று கிருமத்தார்கள் எண்ணிவிட்டார்கள். சென்ற மேமீல் ஒரு கோமுட்டிஜாதி ஸ்திரி வாந்திபேதிகண்டு இறந்துபோனாள். அவளுக்கு ஒரே குமாரன்; இந்த குமாரனைத் தவிர அந்தக்கிருமத்தில் கோமுட்டி ஜாதியில் வேறொருவரும் கிடையாது. ஆகையால் ஷை கோமுட்டி குமாரன்பேரில் இரக்கம்பாராட்டி கைதிவகையறாக்களும் இன்னும் சிலரும் பிரஸ்தாப பில்லி சூனியக்காரனும் பிரேதத்தை தகனஞ்செய்ய மயானத்திற்குச் சென்றார்கள். பிரேதத்தை தகனம் செய்தபிறகு தகனமேடையைச் சுற்றிலும் இவர்கள் உட்கார்ந்துகொண்டு அந்த கிருமவழக்கம்போல் சாராயம் குடித்தார்கள். சிலர்கொஞ்சம் குடித்தார்கள். சிலர் அதிகமாக்க் குடித்தார்கள். பில்லி சூனியக்காரன் தலைகால் தெரியாமல் குடித்திருந்தான். இப்படி குடித்துக்கொண்டிருக்கையில் பலவிஷயங்களைப்பற்றி பேசினார்கள். அப்படிப்பேசுகையில் வாந்திபேதி பேச்சுவந்தது. அதற்குக்காரணம் இந்த பில்லி சூனியக்காரன் என்று ஒருவன் சொன்னான். அதிலிருந்து பேச்சுவளர்ந்து கைதி வகையறா பில்லி சூனியக்காரனை அடித்து கொலைசெய்து அவன் பிரேதத்தையும் அம்மயானத்திலேயேவைத்து தகனம் செய்துவிட்டு அவரவர்கள் வீட்டிற்குப்போய் விட்டார்கள். இந்த சமாசாரம் போலிசாருக்குத்தெரியாது. கொலைசெய்த கைதிகள் மிஸ்டர் ஜெகநாதபந்துலு என்னும் ஒரு பாரிஸ்டர் சுதந்தரதாரிடம் சாகுபடி செய்கிறவர்கள். சமாசாரம் அவர் காதிற்கு எட்டினது. அவர் உடனே போலிசாருக்கு அறிவிக்க, இவர்கள் அந்தக்கேசை கண்டுபிடித்து கைதிவகையறாவையும் இன்னும் சிலரையும்சேர்த்து கொலைக்குற்றஞ் சாட்டினார்கள். கெஞ்சம் செஷன்ஸ் கோர்ட்டார் இவர்களை விசாரித்து சிலரைவிட்டுவிட்டு மேலே சொல்லப்பட்டிருக்கும் கைதிவகையறாக்களில் இரண்டு பேர்களுக்கு ஜன்ம தீபாந்திர தண்டனையும், ஒருவனுக்கு 6-மாத கடுங்காவல் தண்டனையும், இன்னொருவனுக்கு ஒருவருஷ கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

சேஷன்ஸ் ஜட்ஜீ தீர்ப்பில்பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—கிருமத்தார்களை விரோதம்செய்துக்கொண்டிருந்தபில்லி சூனியக்காரனைக் குற்றவாளிகள் கொன்றதால்கிருமத்தார் எல்லோரும் குற்றவாளிகளிடம் அநுதாபம்காட்டினார்கள். ஆகையால் இந்தக்கேசைக் கண்டுபிடித்தது கன கஷ்டத்தைக் கொடுத்திருக்கும். போலிசார் இந்தக் கேசில் நல்ல வேலை செய்து கீர்த்தி சம்பாதித்துக்கொண்டார்கள். ஆனால் மிஸ்டர் ஜெகநாத பந்துலு இந்தக்கேசில் உதவி செய்யாவிடில் போலிசார் இந்தக்கேசை கண்டுபிடித்திருப்பது சந்தேகம். அவருடைய பொதுநலஊக்கம் புகழத்தகுந்தது. இந்தகுணம் எல்லாரிடத்திலும காணப்படமாட்டாது." கைதிகள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

தீர்ப்பு :—மூன்றாவது குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவு செய்யப்பட்டது. மற்ற கைதிகளின் அப்பீல்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் சர் ரரல்ப் பென்சன்

ஜமீன்பேரில் விடச்செய்துகோண்ட மனு.

மனுதார் :—சேஷய்க் இஸ்மால் ராவுத்தர்

(24-9-06.)

மனுவின் விபரம்:—மனுதாருக்கு சேலம் ஜில்லாவில் காப்பி எஸ்டேட்டுகளிருக்கின்றன. இந்த எஸ்டேட்டில் மூன்று கூலிக்காரர்கள் வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்து ஒப்பந்தத்திற்கு விரோதமாக வேலை செய்யாமல் ஓடிப்போய்விட்டதாக யெர்காடு சப் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் அவர்கள் பேரில் குற்றஞ் சாட்டினார். மனுதார், பிரமாண வாக்குமூலத்தில் இந்த மூன்று கூலிக்காரர்களும் ஓடிப்போய்விட்டதாகவும், ஒரு வருஷமாய் அவர்களுடைய இருப்பிடமும் மேல்விலாசமும் தெரியவில்லை என்றும், இவர்களில் தீர்த்தகிரி என்பவன் மூன்று மாதம் வேலை செய்ததாகவும் பிறகு கோயில் விழுந்துவிட்டதாகவும், இந்த பிரியாது தாக்கலாவதற்கு முன்15-நாள் வேலை செய்ததாகவும் பிறகு ஓடிப்போய் விட்டான் என்றும் சொல்லியிருந்தார்.

ஆனால் சப் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் மனுதார் சாக்ஷியாக விசாரணை செய்யப்பட்டபோது, தீர்த்தகிரி அட்வான்சு வாங்கினபிறகு கோயில் விழுந்துவிட்டான் என்றும் பிறகு, 4,5, மாதகாலம் வேலை செய்து வந்தான் என்றும் எந்தக் கூலிக்காரனும் ஊரைவிட்டு ஓடிப்போகவில்லை என்றும் எல்லோரும் கிருமத்திலேயே இருக்கிறார்களென்றும் சொன்னார். பிரமாண வாக்குமூலத்தில் சொன்னதிற்கும் சாக்ஷி வாக்குமூலத்தில் சொன்னதிற்கும் வித்தியாசமிருப்பதால் மாஜிஸ்டிரேட் மனுதார் பொய் சாக்ஷியம் சொன்ன குற்றத்திற்காக விசாரணை செய்யப்படும்பொருட்டு சேலம் முதல் கிளாஸ் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ரவிவர்மா அவர்களிடம் அனுப்பினார்.

இவர் மனுதாரை விசாரணை செய்து மனுதாருக்கு மூன்று மாத கடினக்காவல் தண்டனை விதித்தார்.

இந்த தண்டனைக்கு விரோதமாக மனுதார் சேலம் செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்து தன்னை ஜாமீன் பேரில் விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கோர்ட்டார அப்பீலை தாக்கல் செய்துகொண்டார்கள். ஆனால் ஜாமீன்பேரில் விடவில்லை.

ஆகையால் மனுதார் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் மூலியமாய் ஹைகோர்ட்டில்மனு செய்துகொண்டார்.

பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம், தண்டனை சட்டவழுவுடையதாயிருக்கிறதென்றும், விசாரணை ஒழுங்காக நடத்தப்படவில்லை என்றும் ஆகையால் தம்முடைய கக்ஷிக்காரனை ஒரு மணி நேரம் கூட ஜெயிலில் வைக்கக்கூடாதென்றும் எடுத்துப்பேசினார்.

உத்திரவு:—மனுதார் சொந்த ஜாமீன் ரூ 500க்கும் ரூ 250க்கு வேறே இரண்டு ஜாமீன்களும் சேலம் ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜியின் திருப்திகரத்திற்கு தகுந்தபடி கொடுத்தால் ஜாமீன் பேரில் விடப்படலாமென்று உத்திரவு செய்தார்கள்.

கோரேர் ரெயில்வே அபாய அப்பில் கேஸ்.

அசிஸ்டன்ட் மாஜிஸ்டிரேட்டால் சிக்ஷை விதிக்கப்பட்ட கார்ட்பிரிண்டிலியும் அசிஸ்டென்ட் ஸ்டேஷன் மாஸ்டர் மிஸ்டர் அச்சுதசேனையும் கடப்பை செஷன்ஸ் கோர்ட்டில் அப்பில் செய்திருப்பதாகவும் அவர்கள் ஜாமீன்பேரில் விடப்பட்டிருப்பதாகவும் சென்ற ஆகஸ்ட்மீ கெஜெட்டில் சொல்லியிருந்தோம்; இந்த அப்பில் கேசுகள் விசாரணை செய்யப்பட்டு கீழ்க்கோர்ட்டு தண்டனையை கோர்ட்டார் மாற்றி ஜிப்த்கார்டிற்கு ரூ 100-அபராதமும் அசிஸ்டன்ட்ஸ் டேஷன் மாஸ்டருக்கு ரூ 50-ம் அபராதம் விதித்திருக்கிறார்கள். செஷன்ஸ் ஜட்ஜி ஒரு பெரிய தீர்ப்பு எழுதி வாசித்தார். அதில் மதிராஸ் ரேயில்வேபரிபாலனம் மிகவும் ஊழலாயிருக்கிறதென்று ரிமார்க் செய்திருக்கிறார்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய [அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

(26—9—06.)

கேசின் விபரம்:—கால் நடையை சட்டவிரோதமாகப்பிடித்து அடைத்ததற்காக சப் மாஜிஸ்டிரேட் கால்நடைச்சொந்தாரனுக்குப் பரிகாரப்பணம் கொடுக்கும்படியாக உத்திரவுசெய்தார். இந்த உத்திரவிற்கு விரோதமாக ஜில்லா மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பில் தாக்கல் செய்யப்பட்டது. ஜில்லா மேஜிஸ்டிரேட் கால் நடையை சட்டவிரோதமா அடைத்துவைத்ததற்குப் பரிகாரப்பணம்கொடுக்கும்படி உத்திரவு செய்தால் அந்த வுத்திரவிற்கு அப்பில் கிடையாது என்று அபிப்பிராயப்பட்டு அப்பிலைத் தள்ளிவிட்டார். தென் ஆர்க்காடு ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜி இந்தக்கேசை ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்.

உத்திரவு:—அப்பீல் உண்டு என்று சொல்லி இந்த அப்பீலை விசாரணைசெய்து சட்டப்படி பைசல் செய்யும்படி தென் ஆர்க்காடு ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு உத்திரவு அனுப்பியிருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல் முனிசிபல் பிராசிக்கியூஷன்.

(27—9—06.)

கேசின் விபரம்:—கரூரில் நாகண்ண செட்டியார் என்பவர் தம்முடைய வீட்டு சாக்கடை தண்ணீரை பக்கத்திலிருந்த சந்தில் விட்டதாக "நீயூசென்ஸ்" குற்றத்திற்கு பென்ச் மேஜிஸ்டிரேட் முன்னிலையில் முனிசிபாலிட்டியாரால்குற்றஞ்சாட்டப்பட்டார். பென்சு மேஜிஸ்டிரேட்டார் இந்தக்கேசை விசாரணைசெய்து முனிசிபாலிட்டியார் சாக்கடைத் தண்ணீர்போகும்படியாக கால்வாய்களாயினும்தொட்டிகளாயினும் கட்டாதபடியாலும் சாக்கடைத்தண்ணீர்போவதற்கு வேறே மார்க்கமில்லாதபடியாலும் பிரதிவாதி தம்முடைய வீட்டு சாக்கடைத்தண்ணீரை தெருவில் விடு

வது அவசியமாயிருந்ததென்று சொல்லி பிரதிவாதியை விட்டுவிட்டார்கள்.

முனிசிப்பாலிட்டியார் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

இவர்கள் தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினர்:

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டாருடைய தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது. இ. லா. ரி. 5 சென் 91 (I. L. R. Mad 91) ல் ஜட்ஜிகள் கொடுத்திருக்கும் அபிப்பிராயத்தை அனுசரித்து இந்த கேசை பைசல் செய்யும்படி பென்ச்சு மாஜிஸ்டிரேட்டார் உத்திரவு செய்யப்பட்டிகிறார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென் சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்

முனிசிபல் பிராசிக்கியூஷன்.

கேசின்விபரம்:—கரூரில் ராமசாமி செட்டி என்பவரும் இன்னொருவரும் தங்களுடைய வீட்டுக் கொல்லையில் துர் நாற்றம் வீசும்படியான நாலு பார வண்டி சாணங்களைச் சேர்த்து வைத்திருந்ததற்காக முனிசிபாலிடியார் 1884 - வது ஞூத்திய நான்காவது ஆக்ட் 221-வது பிரிவின்படி அவர்கள் பேரில் குற்றஞ் சாட்டினார்கள். இந்தக் கேசை விசாரணை செய்த பென்ச் மாஜிஸ்டிரேட்டார் எருவு சேர்த்து வைப்பது 221-வது பிரிவின்படி குற்றமாகாதென்றும் 186-வது பிரிவின்படி முனிசிபாலிட்டியார் இவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை என்றும் சொல்லி பிரதிவாதிகளை விட்டு விட்டார்கள்.

பென்ச் மாஜிஸ்டிரேட்டார் பிரிவைத் தப்பர்த்தம் செய்துவிட்டதாக ஜில்லா மேஜிஸ்டிரேட் அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்யும்படியாக பப்ளிக் பிராசிக்கியூட்டருக்கு எழுதினார். அப்படியே பப்ளிக் பிராசிக்கியூட்டரும் அபிப்பிராயப்பட்டு ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பு:—பென்ச் மாஜிஸ்டிரேட்டார் 186-வது பிரிவை இந்தக் கேசிற்கு ஆதாரமாய்க் கூறினது தவறுதல். இந்தக் கேசை 221-வது பிரிவின்படி தீர்மானித்திருக்கவேண்டும். அந்தப் பிரிவில் சொல்லப்பட்டவைகளுக்குள் "எரு" என்பது அடங்கவில்லையென்று பென்ச் மேஜிஸ்டிராட்டார் அபிப்பிராயப்பட்டது. தவறுதல்; அது துர்வாசனையுடையதாயிருந்தால் 'அந்தப் பிரிவின் கீழ் வரமாட்டாது. இந்த விஷயம் கீழ்க்கோர்ட்டாரால் கவனிக்கப்படவில்லை. ஆகையால் கீழ்க்கோர்ட்டார் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது. பென்ச் மாஜிஸ்டிரேட்டார் இந்தக் கேசை புனர் விசாரணை செய்து பைசல் செய்யவேண்டும். சேர்த்து வைக்கப்பட்ட எரு துர்வாசனை யுடையதா அல்லவா என்கிற விஷயத்தை இப்போது பென்ச் மேஜிஸ்டிரேட்டார் ஆலோசனை செய்யவேண்டும்.

பிரசிடேன்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு.

மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர் W. E. கிலார்க்.

பித்தளைக்கொலுசை பொன் கொலுசு என்று ஏமாற்ற எத்தனித்தகேஸ்.

கேசின் விமரம்:—சைதாப்பேட்டை அப்பாசாமி செட்டி என்பவர் சென்றசெப்டெம்பர்மீ 16உ பாப்பான்சாவடி ரோட்டின்வழியாய் போய் கொண்டிருக்கும் போது குப்புசாமி முன்னுசாமிஎன்கிற இருவர்கள் ஒரு பித்தளை கொலுசை பொன் கொலுசு என்று சொல்லியும், ரூ 60-விலை என்றும் ஆனால் ரூ 30-க்குத்தந்து விடுவதாயுஞ்சொன்னார்கள். அப்பொது தம்முடைய கையில் பண மில்லை என்று மைலாப்பூருக்கு வந்தால் பணம் தருவதாயும் அப்பாசாமி செட்டியார் சொன்னார். எல்லோரும் மைலாப்பூருக்குச்சென்றார்கள். அப்பாசாமி செட்டியார் ரூபாய் கொடுப்பதற்கு முந்தி ஒரு தட்டானிடம் கொலுசைக்கொடுத்து பரிக்ஷித்ததில் அது பித்தளைக் கொலு சென்றும் பொன்கிலிட்கொடுத்திருக்கிறதென்றும் தெரிய வந்தது. போலிசார் அறிவிக்கப்பட்டு E. டிவிஷன் சப் இன்ஸ்பக்டர் மிஸ்டர் கூக் இவர்களை பிராசிக்கியூட்செய்ய இரு குற்றவாளிகளுக்கும் நான்குமாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஓட்டரி கொலைக்கேஸ்

சென்னை ஓட்டரி குப்பைடெப்போவிற்கு சமீபத்தில் அனேக காக்கைகள் கூட்டமாய் கூடியிருந்தன. அது அதிசய மாயிருந்ததால் டெப்போவில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். பார்க்கவே ஒரு பிரேதத்தைகக்கண்டார்கள். உடனே போலிசார் அறிவிக்கபட்டு சூப்பிரண்டு மிஸ்டர் J. C. ஈட்டன், இன்ஸ்பக்ட்டர் R. C. மேசன் முதலியவர்கள் வந்தார்கள். டாக்டர் G. L. பிலிப்ஸ் பிரேத பரிசோதனை செய்தார் பிரேதம் உப்பிப்போயிருந்தது. தலைதுண்டிக்கப்பட்டிருந்தது. வலதுகையைக் காணோம். வலதுகையில் முழங்கையிலிருந்து புஜம் முழுதிலும் சதையைக்காணோம். பிரேதத்தின் பக்ருக்கள் இடதுகையில் பச்சை குத்தியிருந்ததையும், இடுப்பில் கட்டியிருந்த வஸ்திரத்தையும் பார்த்து அடையாளம் கண்டு பிடித்தார்கள் பிரேதபரி சோதனை செய்தமேஜர் ராபர்ட்சன் தலை ஒரு வளைவான கத்தியால் துண்டிக்கப்பட் டிருக்கவேண்டுமென்று அபிப்பிராயங் கூறினார்.

அன்றையத்தினமே ஒருபிரேதபரிசோதனைவிசாரணை நடத்தப்பட்டது. இந்த பிரேதம் புரசபாக்கம் மாவலிங்கநாடானுடைய தென்றும் இவனும் துரைசாமி என்கிற சாணானும் வெள்ளிக்கிழமை இரவு 7, 8, மணிக்கு பெரம்பூர் பாரக்ஸ்ரோட்வழியாகப் போய்க்கொண்டிருந்தார்களென்றும்வெளிப்பட்டது. போலிசார் ஷை துரைசாமியைஅரஸ்ட்செய்திருக்கிறார்கள். அவன் இந்தக்குற்றத்தில் இன்னும் சிலரைச்சேர்த்திருக்கிறான் இறந்துபோனவன்போட்டிருந்த பொன் காப்பை அபகரித்துக் கொள்வதற்காக இந்தக்கொலை நடந்திருக்கிறதாகத் தெரியவருகின்றது.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

சீவில் அசல் வியாச்சியம்.

மேசர்ஸ் மோசஸ் கம்பேனி வியாச்சியம்.

வாதி:—C. கிருஷ்ணசாமி செட்டி

பிரதிவாதிகள்:—T. சித்தாரம செட்டி

T. கூரத்தாள்வார் செட்டி,

கேசின்விபரம்:—வாதியின் தகப்பனாராகிய காலஞ்சென்ற மிஸ்டர் எத்திராஜலு செட்டி மெசர்ஸ் மோசஸ் கம்பெனியின் பாகஸ்தர். பிரதிவாதிகள் ஷை கம்பெனியின் சுதந்தரதாரிகள். வாதியின் தகப்பனார் இறந்து போனவுடன் வாதி ஷை கம்பெனியின் சுதந்தாரிகளிடம் ரூ 40 ஆயிரம் பெற்றுக்கொண்டு தம்முடைய தகப்பனாருடைய சுதந்தரத்தை சர்வ வில்லங்க சுத்தியாய் விலக்கிக்கொள்ளுகிறதென்று ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். இப்போது இந்த உடன்படிக்கையை ரத்துசெய்து கொள்ளவேண்டுமென்று பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

பிரதிவாதிகள் அனேக உண்மையான விஷயங்களை மோசடியாய் மறைத்துச் சொன்னதால் மேலே சொன்ன மாதிரியான உடன்படிக்கை செய்து கொள்ளும்படியாக் நேரிட்டதென்று வாதி பிரியாதில் காரணம் சொல்லியிருக்கிறார்.

பிரதிவாதிகள் வாதி சொல்லியிருப்பதை மறுதளித்திருக்கிறார்கள்.

பிரதிவாதிகள் தரப்பிற்கு ஆஜரான வக்கீல் மிஸ்டர் பி. ஆர். சுந்திரஅய்யர் வாதிக்கு ரூ. 40 ஆயிரம் கொடுக்கும்படி தீர்மானித்தது சட்டப்படி நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார்கள் என்றும் பஞ்சாயத்தின் தீர்மானத்தை ரத்து செய்யும்படியும் வாதி பிரியாதில் கேட்டிருக்கவேண்டுமென்றும் சொன்னார்.

வாதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் E. நார்ட்டன், பாரிஸ்டர் மிஸ்டர். C. F. நேப்பியர், சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன் ஆஜரானார்கள்.

இஷ்யூ :—பஞ்சாயத்தார் தீர்மானம் செய்தார்களா இல்லையா என்கிற ஒரு இஷ்யூ கோர்ட்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இஷ்யூ விசாரணையில் பஞ்சாயத்தார் தீர்மானம் செய்தார்கள என்று ஏற்பட்டால் வாதி பிரியாதை திருத்தும்படியாக அனுமதி கொடுக்கப்படும். கேசின் விசாரணை நடந்து வருகின்றது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆர்னல்ட் வொயிட், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சீவில் அப்பீல்

உயில் கேஸ்.

கேசின் விபரம்:—காலஞ் சென்ற மிஸ்டர் திருமலாச்சாரியார் மதிராஸ் பாங்கியில் டிப்டி காக்ஷியராக விருந்தார். இவருக்கு ஒரு பெரிய எஸ்டேட்டிருக்கிறது. இறந்துபோகும்போது ஒரு உயில் எழுதி வைத்தார். அந்த உயிலில் தமக்கு ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி தம்முடைய மனைவிக்கு அதிகாரம் கொடுத்திருந்தார். விதந்து ஷை உயிலின் ஆதாரத்தின் பேரில் கோர்ட்டில் லெட்டர்ஸ் ஆப் அட்டமினிஸ்டிரேஷன் (Letters of Administration) என்கிற வார்சு செர்ட்டிபிக்கெட் பெறும்போது, ஷை விதந்துவிற்குப்பின் அந்த எஸ்டேட்டிற்கு பாத்திய முடையவர்களாகிய ஆழ்வார் திருமலை அய்யங்காரும் V. G. நரசிம்மாச்சாரியும் அந்த உயில் சிருஷ்டனை செய்யப்பட்ட உயிலென்றும் உயில் செய்யுங்காலத்தில் வாதியின் புருஷனுக்குச் சரியான மனநிலையில்லை என்றும் சொல்லி ஆக்ஷேபித்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் இந்த உயில் வியாஜ்ஜியத்தை விசாரித்து உயில் உண்மையான தென்று தீர்மானித்து ஆக்ஷேபித்தார்கள் விதந்துவின் கோர்ட்டுச் செலவுகளைக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு செய்தார். இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக ஆழ்வார் திருமலை அய்யங்கார் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—சர். வி. பாஷ்யமய்யங்கார், வி. கிருஷ்ணசாமி அய்யர் முதலியோர்கள் அப்பீல்தார் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

பாரிஸ்டர் மிஸ்டர் நார்ட்டன், மிஸ்டர் டி. கூநாமியர், முதலாயினர் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கு ஆஜரானார்கள்.

இந்த அபீல் விசாரணையில் இன்னும் தங்கள் தரப்பிற்கு சில சாக்ஷிகள் விடும்படியாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று ஆபில்தார் கேட்டுக்கொண்டார். இந்த வியாச்சியத்தைக்குறித்து சர். வி. பாஷ்யமய்யங்கார் மூன்று நாள் தொடர்ந்தேர்த்தியாகப் பேசினார்.

தீர்ப்பு:—காலஞ்சென்ற மிஸ்டர் திருமலாச்சாரியார் எழுதிவைத்த உயில் உண்மையான உயிலென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல், செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. சாக்ஷிகள் விடுவதற்கு கோர்ட்டார் அனுமதி கொடுக்கவில்லை.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

1906-வது ஞூத்திய 336ம் நே. கிரிமினல் ரிவிஷன் மனு.

(10—10—1906)

கேசின் விபரம்:—சேலம் ஜில்லா ஊத்தன்கரைத் தாலூக்காவைச்சேர்ந்த பேருக்கருப்பன் என்கிற கூலியும் இன்னும் இருவருஞ் சேர்ந்து வாதியின் நிலத்தில் வேலை செய்வதாகச் சொல்லி ஒப்பந்தஞ்செய்துகொண்டு வாதியின் தகப்பனிடம் ரூ 54 அட்வான்ஸ் வாங்கிக்கொண்டார்கள். எகிரிமெண்டு உடன்படிக்கையில் இந்த ரூ 54-க்கும் பேருக்கருப்பன் ஒருவன் மட்டிலும் 20 வருஷத்திற்கு வேலை செய்து கொண்டு வரவேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்த பத்திரத்தில் மூன்று பேர்களும் கட்டுபட்டு எழுதிக்கொடுத்து கையெழுத்து செய்திருந்தார்கள். அட்வான்ஸ் தொகை ரூ 54-ம் மூன்று பேர்களும் சேர்ந்து பெற்றுக்கொண்டார்கள். பத்திரக்ஷரத்தின்படியே பேருக்கருப்பன் ஒருவன் மட்டிலும் வாதியின் நிலத்தில் 11 வருஷம் வேலை செய்துவந்தான்; 12 வது வருஷத்தில் ஓடிப்போய்விட்டான். வாதி 1859-வது ஞூத்திய 2-வது ஆக்ட்டின்படி ஷை கூலிக்காரன் பேரில் ஹாரூர் சப் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் பி. அப்பாசாமி அய்யர் முன்னிலையில் குற்றஞ் சாட்டினார். சப் மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணை செய்து தண்டித்து பாக்கி வருஷங்களுக்கு வாதியின் நிலத்தில் வேலை செய்யும்படி உத்தரவு செய்தார். இந்தக் கேசை உத்தியோகமுறையில் பார்வையிட்ட ஜில்லா மேஜிஸ்டிரேட், இம்மாதிரி உடன்படிக்கை அடிமை உடன்படிக்கைபோல் காணப்படுகிறதென்று அபிப்பிராயப்பட்டு இந்தக் கேசை கி. பு. கோ 438-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்.

தீர்ப்பு :—1859-வதுஞூத்திய 2-வது ஆக்ட்டின்படி குற்றஞ் சாட்டப்படவேண்டுமானால் அட்வான்சு பெற்றுக்கொள்ளும்போது பத்திரம் எழுதிக்கொடுத்தவனும் பணம் பெற்றுக்கொண்டவனும் ஆகிய இருவர்களும் அந்நிலத்தில் வேலை செய்பவர்களாக யிருக்கவேண்டும். ஆகையால் இந்தக்கேஸ் ஷை ஆக்ட்டின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட கேசாகமாட்டாது. என்று சொல்லி குற்றஸ்தாபனையை நீக்கி குற்றவாளியை விடுவிக்கும்படி தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

1906-வது ஆம் வருஷத்திய கிரிமினல் ரிவிஷன் மனு ந. 337.

கேசின்விபரம்:—காட்டு இலாக்கா ரேன்ஜராகிய மிஸ்டர் V. சுப்பிரமணிய அய்யர் என்பவரால் இரண்டு காட்டிலாக்கா காவல்காரர்கள் (ஷேக்அலாயடின் (2) பாபாஜி) உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள்.

ரேன்ஞ்ஜர் ஒரு மாலையில் வெளியேபோயிருந்து திரும்பிவரும்போது ஷை சொல்லப்பட்ட காவற்காரர்கள் ரேன்ஞ்ஜரை சந்தித்தார்கள். பாபாஜி. அலாயடின் காதில் ஏதோரகசியமாய்ச்சொன்னான், அதன்பேரில் அலாயடின் ஆபிசரைப்பார்த்து "நீ என்னுடையசம்பளத்தைக்கொடுக்காவிடில் என்கால்ஜோட்டால் உன்னை 50 அடி அடிப்பேன்" என்று சொன்னான்பாபாஜி ஆபிசரைப்பார்த்து "நீர் என்னுடைய ஜீவனத்தைதப்பிடுங்கி விட்டீர். அதற்காக கடவுள் உம்மைத்தண்டிப்பார்" என்று சொன்னான். இதற்காக ஷை ரென்ஞ்ஜர் இவர்கள் பேரில் குற்றஞ்சாட்டினார்; சேலம் ஜில்லா ஹொசூர் ஜாயின்ட்மேஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணை செய்து இ. பி. கோ 506, 114 பிரிவுகள்படி குற்றஸ்தாபனைசெய்து அலாயடீனுக்கு 18-மாதகடுங்காவல் தண்டனையும் பாபாஜிக்கு 4-மாதகடுங்காவல் தண்டனையும் விதித்தனர்.

இருவரும் செஷன்ஸ் கோர்ட்டில் அப்பில் செய்து கொண்டார்கள்.

செஷன்ஸ் ஜட்ஜி மிஸ்டர் கோபாலாச்சாரியார் முதல் குற்றவாளி விஷயத்தில் குற்றஸ்தாபனையை இ. பி. கோ 506-வது பிரிவிற்கு மட்டிலும் மாற்றி இரண்டாவது குற்றவாளி சொன்ன வார்த்தைகள் தெய்வகோபம் ஆபிசர் தலையில் வந்துவிடியும், என்று தார்பரியப்படுகிறபடியால் அவன் குற்றத்தை இ. பி. கோ 508-வது பிரிவிற்கு மாற்றி முதல் குற்றவாளிக்கு ஒரு வருஷதண்டனையும், இரண்டாவது குற்றவாளிக்குமூன்றுமாததண்டனையுமாக மாற்றி தீர்ப்பு சொன்னார்.

கைதிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்கள்.

தீர்ப்பு:—இ. பி. கோ 508-வது பிரிவின்படி இரண்டாவது குற்றவாளி சொன்னவார்த்தைகள் குற்றமாகமாட்டாது. கடவுள் ஆபிசரைதண்டிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டானே ஒழிய அவன் அவனுடையசெய்கையால் கடவுள் அந்த ஆபிசரைத்தண்டிக்கும் படிச்செய்வதாய்ச்சொல்லி பயமுறுத்தவில்லை. ஆகையால் இரண்டாவது குற்றவாளியைகுற்றஸ்தாபனையிலிருந்து விலக்கி விடுவிக்கும்படி தீர்ப்பு சொன்னார்கள்.

தஞ்சாவூர் சேஷன்ஸ் கோர்ட்

ஜட்ஜி:—மிஸ்டர் F. D. P. ஒல்ட பீல்ட் I.C.S

பாப்பாநாடு ஜமீன்தாரை வழிமறித்து அடித்தகேஸ்

(9—10—06)

கேசின் விபரம்:—கடந்த ஆகஸ்ட்மீ 9உ பாப்பாநாடு ஜெமீன்தாரையும் அவருடைய வேலைக்காரர்களையும் பாப்பாநாடு ரோடில் வழிமறித்து அடித்ததாக தீவட்டிக்கொள்ளை குற்றத்திற்கு 8-பேர்கள் செஷன்ஸ் விசாரணைக்கு கமிட் செய்யப்பட்டார்கள்.

செஷன்ஸ் ஜட்ஜி ஒரு வாரமாய் இந்தக்கேசை விசாரணை செய்துவந்தார்.

கேசின் விபரம்:—இருதரப்பிலும் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். 1, 2, 3, 4- குற்றவாளிக்கு ஆஜரான வக்கீல் அட்டிரஸ் பேசுகையில், தம்முடைய கக்ஷிகாரர்களின் பெயர்களை பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளில் ஒருவன் ஸ்டேஷன் அவுஸ் ஆபிசரிடம் எழுதிவைத்திருக்கிறான் என்றும் அவனுக்கு நேரேதம்முடைய கக்ஷிகாரர்களைத்தெரியாதென்றும், போலிஸ்ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் கிராமத்திற்குச் சென்று தம்முடையகக்ஷிகாரர்களை அரஸ்ட்செய்யும்போது இவர்கள் பெயரைச் சொன்னவனை கூட அழைத்துக்கொண்டுவரவில்லை என்றும் அவன் எழுதிவைத்த ஆசாமிகள் தான் அரஸ்ட் செய்யப்பட்டார்களென்று ஸ்டேஷன் அவுஸ் ஆபிசர் தம்மைதிர்ப்த்தி செய்துகொள்ள வில்லையென்றும் தம்முடைய கக்ஷிக்காரர்களுக்கு விரோதமான கிராமகக்ஷியில் சேர்ந்த சிலர் தீவட்டிக்கொள்ளை அடித்தாக புதுகோட்டை போலிசார் அரசஸ்ட் செயய வந்தபோது தம்முடைய கக்ஷிகாரர்கள் எதிர் கக்ஷிக்காரர்களை பிடித்துக் கொடுத்து புதுக்கோட்டைபோலிசாருக்கு உதவி செய்தார்களென்றும் அதனால் தம்முடைய கக்ஷிக்காரர்களுக்கு விரோதமான கக்ஷியைச் சேர்ந்த கிராமத்தார்கள் தம்முடைய கக்ஷிக்காரர்கள் பெயரைவேணுமென்று பிரஸ்தாபகுற்றத்தில் சம்பந்தப்படுத்தியிருக்கலாமென்றும், தம்முடையகக்ஷிகாரர்கள் குற்றம் நடந்தாகச்சொல்லப்படும் தினம் புதுக்கோட்டையிலிருந்ததாக ஒருகௌரவம் பொருந்திய தகுந்த மனிதர் சாக்ஷியஞ் சொல்லியிருக்கிறார் என்றும் புதுக்கோட்டை போலீஸ்இன்ஸ்பெக்ட்டர் இந்த நான்கு குற்றவாளிகளும் குற்றம் நடந்த தினத்திற்கு முந்தின தினம் புதுக்கோட்டையில் அவருக்கு உதவிசெய்து கொண்டிருந்ததாகச் சொல்லியிருப்பது தஞ்சாவூர் போலீசார்பேரில் அநுதாபம் காட்டி சொல்லி யிருக்கக்கூடுமென்றும் ஆகையால் தம்முடைய கக்ஷிகாரர்கள் இந்தகுற்றத்தில் சம்பந்தப்படவில்லை என்றும் சொல்லிமுடித்தார்.

5-வது, 6-வது குற்றவாளிகளின் வக்கீல் பேசியது. 5-வது குற்றவாளி தஞ்சாவூரிலிருக்கும் ஜெமீன்தார் பங்களாவில் அடைக்கப்பட்டு இந்தக்கேசில் சில குறிப்பிட்டபேர்வழிகள் சம்பந்தப்பட்டதாகச் சொல்லும்படி தூண்டப்பட்டான். குற்றவாளி அதற்கு சம்மதிக்கவில்லை. 6-வது குற்றவாளி சத்தியமங்கலத்திலிருப்பவன். சத்தியமங்கலம் பூண்டிவாண்டையாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறது. பூண்டிவாண்டையார் பாப்பாநாடு ஜெமீன்தாரின் உறவினர். பிராசிக்கியூஷன் தரப்பார் வெற்றிபெற வேண்டுமென்று கவலை கொண்டவர். 7-வது, 8-வது குற்றவாளிகளின் வக்கீல்பேசினது. என்னுடைய கக்ஷிக்காரர்கள்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் கேஸ் முழுதிலும் கட்டுப்பாடான கேஸ். பூண்டிவாண்டையார் இந்த ஜில்லாவில் செல்வாக்குள்ளஐஸ்வரியவந்தர். பாப்பாநாடு ஜெமீன்தரால் பிராசிக்கியூட் செய்யப்பட்ட பேர்வழிகள் தண்டனை அடையவேண்டுமென்று கவலை கொண்டவர். பாப்பநாடு ஜெமீந்தாருக்கு உறவினர். இந்தக்கேசின் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளெல்லாம் கள்ளர்கள். அதாவது ஜெமீன்தாருடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள். குற்றம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு பிறகு 10-நாள் வரையில் சிங்கம்பட்டி ஜமீன்தாரும் மதுக்கூர் ஜெமீன்தாரும் பாப்பாநாட்டிலிருந்ததாக ஸ்டேஷன் அவுஸ் ஆபிசர் சொல்லியிருக்கிறார். ஆகையால் பாப்பாநாட்டுஜமீன்தார்வஞ்சகத்தின்பேரில் உற்பத்திசெய்தகேஸ் எப்படி கண்டுபிடிக்கப்படுகிறதென்று ஷை கூறிய ஜெமீன்தார்கள் பார்க்க வந்திருந்ததாக ஏற்படுகிறது. குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும்போது சந்திரிகை மங்கலாயிருந்தபடியாலும் சந்திரவெளிச்சத்தைச் சாலையிலிருந்த மரங்கள் மறைத்துக்கொண்டிருப்பதாலும் குற்றவாளிகளை நன்றாய்ப் பார்த்திருக்கமுடியாது. சப் மாஜிஸ்டிரேட் ஆபீசில் அனேகமனிதர்களை குப்புசேரச்செய்து அதிலிருந்து அடையாளம் கண்டுபிடித்து குற்றவாளிகளை காண்பிக்க சொன்னதால் அப்படி காண்பிக்கப் பட்டவர்கள்தான் சரியான குற்றவாளி என்று நினைக்கக்கூடாது. சப் மாஜிஸ்டிரேட் சுத்தமான மனதுடன் சாக்ஷியம் சொன்னதாக நினைக்கக்கூடாது. ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் பிராசிக்கியூஷன் தரப்பாரை படுதாவின் பின்புறமாயிருந்து கொண்டு ஆட்டி வைக்கிறவர்.

இந்தக்கேசின் முக்கிய பாகங்களாகிய அரஸ்ட், அடையாளம், சோதனை ஆகிய இந்த மூன்று அம்சத்தைக் குறித்தும் சாக்ஷி சொன்னவர்களின் சாக்ஷியம் பொய் சாக்ஷியம். அதைத் தள்ளிவிடவேண்டும்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்,

மிஸ்டர் வாலிஸ் ஜஸ்டிஸ்.

முக்கோலைக் கேஸ்.

கைதி:—சங்காலிங்க ரெட்டி.

கேசின் விபரம்:—கைதி கடந்த சூன்மீ 9உக்கு 6-மாதங்கள் முன்னதாக ஒரு விவாகமான ஸ்திரீயை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்து வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருந்தான். இது குடும்பத்தாருக்குப்பிடிக்கவில்லை. குடும்பத்தார் அந்த வீட்டில் இவர்களை வசிக்கும்படியாக ஒரு பிரத்தியேகமான விடம் ஒதுக்கிவிட்டார்கள். இப்படி வசித்துக்கொண்டு வருகையில் வீட்டில் சில்லரை சாமான் திருட்டுப்போய்க்கொண்டிருந்தன. குடும்பத்தார் சங்கரலிங்கத்தையும் அவன் வைப்பாட்டியையும் சமுசயித்தார்கள். அடிக்கடி சச்சரவு நடக்கிறதுண்டு. பிறகு சமாதானமாய்ப் போய்விடுவார்கள். கடந்த சூன்மீ 9உ வீட்டில் ஒரு சாமான் காணமற்போனது. இதற்காக குடும்பத்தார் தம்பதிகளைத்திட்டினார்கள். தாயார் அதிகமாய்த்திட்டினாள். சங்கரலிங்கம் அன்று நடு இரவில் அரையைவிட்டு வந்து முதலில் தாயாரை வெட்டினான். பிறகு தகப்பனாரையும், பிறகு சிற்றப்பனையும் வெட்டினான். பிறகு தமையனை வெட்டினான். பிடிக்கவந்தவர்களை எல்லாம் எதிர்த்தான். தானே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தன்னை ஒப்புக்கொடுத்தான்; தாயார் தவிர மற்ற மூவர்களும் இறந்துபோய்விட்டார்கள்.

இந்தக்கேஸ் மதுரை செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டது.

தான் வைப்பாட்டிக்குப் போட்டிருந்த நகைகளை குடும்பத்தார் அபகரித்துக்கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் குடும்பத்தாரும் இன்னும் சிலரும் சேர்ந்து தன்னையும தன் வைப்பாட்டியையும் அடிக்கவந்தார்களென்றும் தன்னை காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அவர்களைக்கொன்றதாகவும் கைதி டிபன்ஸ் கூறினான்.

செஷன்ஸ் கொர்ட்டார் கைதிக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

மரணதண்டனை ஹைகோர்ட்டாரால்உறுதிசெய்யப்படவேண்டியதாகையால் இந்தக்கேஸ் ஹைகோர்ட்டார் பார்வைக்கு அனுப்பப்பட்டது.

தீர்ப்பு:—மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜஸ்டிஸ் சுப்பிரமணியஅய்யர்

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சீவில் அப்பீல்.

மகடோல் எஸ்டேட் வியாஜ்ஜியம்.

கேசின் வீபரம்:—மகடோல் எஸ்டேட் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிலிருந்தது. இந்த எஸ்டேட்டின் ஜமீன்தாரின் விதந்து இறந்துபோனால், இந்த எஸ்டேட்டை வார்சுக் கிரமத்தில் அடைவதற்கு, முகுந்ததேவி - ருஜேந்திர தேவி என்கிற இரண்டு பேர்களும் தத்தமக்குக் கிடைக்கவேண்டுமென்று போட்டிபோட்டு வழக்காடினார்கள். பிறகு இருவரும் சமாதானமாய்ப்போய் ஷை விதந்து இறந்துபோன பின்பு ஷை எஸ்டேட்டை சமபாகமாக பாகித்துக் கொள்ளுகிறதென்று ஒப்புக்கொண்டு ஒரு (எகிரிமெண்டு)உடன்படிக்கைசெய்துகொண்டார்கள். ஷை விதந்து 1901-ஆம் ஏப்ரல்மீ இறந்துபோனதும் முகுந்த தேவியும் ருஜேந்திர தேவியும் சேர்ந்து ஷை எஸ்டேட்டை கோர்ட் ஆப்வார்ட் சாரிடமிருந்து| பெற்றுக்கொண்டு தங்களுடைய பெயர்களில் 1902-வது ஆம் ரிஜிஸ்டர் செய்துகொண்டு எஸ்டேட்டை மானேஜ்மெண்டுசெய்து லாபங்களை அநுபவித்து வந்தார்கள். இப்படி யிருக்கும்போது 1902-ம் ஆம் மத்தியில் பாகிக்கக்கூடாத எஸ்டேட் ஆக்ட் (Impartiable Estates' Act) பாசாகி அமுலுக்கு வந்தது. இதன் பிறகு இருவரும் 1901-வது ஆம்த்தில் செய்துகொண்ட உடன்படிக்கையை அனுசரித்து எஸ்டேட்டை பாகித்துக்கொண்டார்கள். இந்த எஸ்டேட்டின் ஒரு பாகம் ஜெய்ப்பூர் மகாராஜாவினிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. இந்த அடமானத்திலிருந்து எஸ்டேட்டை மீட்பதற்காக முகுந்த தேவியும் ருஜேந்திர தேவியும் வியாஜ்ஜியம் செய்தார்கள். வியாச்சியம் விசாரணையிலிருக்கும்போது முகுந்த தேவி என்பவர் இறந்துபோய் விட்டார். இவருடைய விதந்து தம்மை தம்முடைய புருஷனுக்குப் பிரதிநிதியாக வியாச்சியத்தில் கக்ஷிகாரர்களில் ஒருவராகச் சேர்க்கவேண்டுமென்று விசாகப்பட்டணம் ஏஜண்டாகிய கலெக்ட்டருக்கு மனுசெய்துகொண்டார். கலெக்ட்டர், சேர்ந்து கொள்ளும்படி உத்திரவுசெய்தார்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக ஜெய்ப்பூர் மகாராஜா அப்பீல் செய்தார்.

ஜெயப்பூர் ராஜாவிற்கு ஆஜரான வக்கீல் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமிஅய்யர் இந்தஜமீன்தாரி எஸ்டேட் பாகிக்கக்கூடாத எஸ்டேட்டுகளைச் சேர்ந்ததானபடியால், இது ஒருவருடைய சுவாதீனத்திலிருக்கிறதென்று எண்ணப்படவேண்டும். இந்த வியாச்சியத்தின் வாதியாக இரண்டாவது வாதியிருக்கிறார். ஆகையால் முகுந்த தேவியின் விதந்துவையை கக்ஷிகாரராகச் சேர்க்கக்கூடாதென்று சொன்னார். 1902-வது ஆம் இந்த எஸ்டேட்டை பாகித்துக்கொண்டது செல்லுபடி யுள்ளதல்ல வென்றும் சொன்னார்.

அப்பீல் பிரதிவாதிகளுக்கு ஆஜரான வக்கீல், அப்பீல் பிரதிவாதிகள் பாகிக்கக்கூடாத எஸ்டேட் ஆக்ட் பாசாவதற்கு முந்தி அந்த எஸ்டேட்டிற்கு கிரமமான பாத்தியதையை சம்பாரித்துக்கொண்டிருக்கிறார்கள்; எகிரிமெண்டுசெலாமணியாகததாய்ப்போன்போதிலும் அதனுடைய க்ஷரத்துகளின்படிக்கு சம்மதப்பட்டு, விதந்து இறந்துபோனவுடன் எஸ்டேட்டை, சேர்ந்து ஒப்புக்கொண்டார்கள். ஆகையால் "பாகிக்கக்கூடாத எஸ்டேட் ஆக்ட்" அது பிறப்பதற்கு முந்தின சம்பவங்களைக் கட்டுப்படுத்த மாட்டாதென்று சொன்னார்.

தீர்ப்பு:—அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் சொன்னதை ஒத்துக்கொண்டு கோர்ட்டார் அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர்—ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சீவில் அப்பீல்.

அப்புறப்படுத்துவதற்கு வியாஜ்ஜியம்.

வாதி:—அருணாசலஞ்செட்டி.

பிரதிவாதிகள்: இராமய்யநாயுடு முதலியவர்கள்.

கேசின் விபரம்:—திருவாரூரில் வாதிக்குச்சொந்தமான வீடு ஒன்றிருக்கிறது. இதில் 1889-வரு௵ 13உ பிரதிவாதிகளைக் குடிவைத்தார். மாதம் ஒன்றுக்கு வாடகை 11-அணா வென்றும் இந்த வாடகையை ஒவ்வொரு மாதம் 30உ செலுத்தவேண்டுமென்றும் எகிரிமெண்டு செய்துகொண்டார்கள். பிரதிவாதிகளை ஷை வீட்டிலிருந்து அப்புறப்படுத்த 1901௵ ஆகஸ்ட்௴ 30உ யுடன் முடியும்படியான 15-நாள் னோட்டீஸ் வாதி பிரதிவாதிகளுக்குக் கொடுத்தார். பிரதிவாதிகள் வீட்டை காலி செய்யவில்லை. வாதி தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியஞ் செய்தார்.

டி. மு. கோர்ட்டார், பிரதிவாதிகள் வீட்டை வாடகைக்கு ஒப்புக்கொண்டது ஒருமாத 13உ முதல் மறுமாதம் 13உ வரையில் ஒரு மாதமாகிறதென்றும், வாதி 30உ யுடன் முடியும்படியான 15-நாள் னோட்டீஸ் கொடுத்தது சரியான னோட்டீஸ் அல்லவென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தை தள்ளிவிட்டார்கள். வாதி ஜில்லாக்கோர்ட்டில அப்பீல் தாக்கல் செய்தார்.

அப்பீல் கோர்ட்டாரும் அசல் கோர்ட்டு தீர்ப்பை உறுதிசெய்து விட்டார்கள். வாதி இரண்டாவது அப்பீல் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—குடக்கூலி ஒவ்வொரு மாதமும் 30உ கொடுக்கப்படவேண்டு மென்று கக்ஷிக்காரர்கள் ஏற்பாடுசெய்து ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் ஒருமாத 30உ முதல் மறுமாதம் 30உ வரையில் ஒருமாதமாக கணக்கு செய்து வந்திருப்பார்களே ஒழிய வீட்டை ஒப்புக்கொண்ட 13உ முதல் மறுமாதம் 13உ வரையில் ஒருமாதமாக கணக்கு செய்திருக்கமாட்டார்கள். ஆகையால் வாதி கொடுத்த னோட்டீஸ் சரியான னோட்டீஸ் என்று சொல்லி கீழ் இரண்டு கோர்ட்டு தீர்ப்புகளையும் ரத்து செய்து இந்த கேசை மறுபடியும் விசாரித்து சட்டபடி பைசல் செய்யும்படி உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

குழந்தைக் கொலைக்கேஸ்.

கேசின் விபரம்:—சின்னத்தாயி என்பவளுக்கு விவாகமாகி 7, 8, வருஷகாலமாகிறது. விவாகமானகாலமுதல் அவளுடைய புருஷன் அவளை சரிவர சம்ரெட்சிக்காமல் நினைத்தபோதெல்லாம் தொந்திரவு செய்துவந்தான். இந்தத் தொந்திரவுகளைப் சகிக்கமுடியாமல் கடந்த மே௴ 27உ வீட்டை விட்டு தன்னுடைய 10-மாத குழந்தையுடன் புறப்பட்டு விட்டாள். இவள் குழந்தையை ஒரு கிணற்றில் எறிந்து விட்டாள். குழந்தை இறந்துபோய்விட்டது. இது கிராமத்தில் நடந்த கேசானபடியால் கிராம முனிசீப்பு இவளைக்கேட்டதற்கு, இவள் குழந்தையை கிணற்றில் விட்டெறிந்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொள்ள கிணற்றில் விழுந்ததாகவும் ஆனால் தனக்கு நீந்தத் தெரிந்தபடியால் தான் தப்பித்துக்கொண்டதாகவும் குழந்தை மட்டிலும் இறந்துபோனதாகவும் சொன்னாள். போலீஸ் காவலிலிருக்கும்போது இவள் இம்மாதிரியாக குற்றத்தை ஒப்புக்கொண்டு சொன்னதைத் தவிர இவள் செய்த குற்றத்திற்கு சாக்ஷியமில்லை. ஆனால் வட ஆர்காடு ஜில்லா செஷன்ஸ்கோர்ட்டார் இவளை விசாரணை செய்தபோது தான் கீழ்க்கோர்ட்டில் சொல்லிய வாக்குமூலத்தைமாற்றி தான் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தபோது குழந்தைதற்செயலாய் கிணற்றில் விழுந்துவிட்டதென்று சொன்னாள்.

செஷன்ஸ் கோர்ட்டார் தற்கொலைசெய்துகொள்ள எத்தனித்த குற்றத்திற்காகவும் குழந்தையைக் கொலைசெய்த குற்றத்திற்காகவும் இவள் பேரில் குற்றஸ்தாபனைசெய்து இந்தக் குற்றங்களுக்கு மரணதண்டனைதான் கோர்ட்டார் கொடுக்கக்கூடுமென்றும், ஆனால் இந்தக்கேசின் விஷயங்களை கவனித்துப்பார்த்தால், தீபாந்திர தண்டனைகூட அவள் செய்த குற்றத்திற்கு அதிகமான தண்டனை என்றும், ஆகையால் கவர்ன்மெண்டார் இரக்கம் பாராட்ட அனுப்பிக்கப்டுவதற்கு இது தகுந்த கேசென்றும் சொல்லி கேசை ஹைகோர்ட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். ஹைகோர்ட்டாரும் இந்தக் கேசை கவர்ன்மெண்டாருடைய பார்வைக்கும் உத்திரவிற்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்

கலகஞ்செய்த கேஸ்.

கேசின் விபரம்:—நாராயணக் கவுண்டனும் இன்னும் 7-பேர்களும் சட்ட விரோதமான கூட்டம் கூடி கோயம்புத்தூர் ஜில்லா இரங்க சமுத்திர கிராமத்தில் கலகஞ் செய்ததாகவும் T. ரெங்கய்ய கவுண்டனை கொலை செயதுவிட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை அடைந்திருக்கிறார்கள். இரங்க சமுத்திர கிராமத்தின் தென்பாகச் சூரியம்பிள்ளையும் அவரின் குமாரர்களுடைய அனுபோகத்திலிருந்தது. 1904-வரு௵ம் டிசம்பர் ௴-த்தில் அவர்கள் இந்த தென்பாகத்தை குட்டிக்கவுண்டனுக்குக் விற்றுவிட்டார்கள். குட்டிக்கவுண்டனின் குடியானவனாகிய குப்பு போயன் என்பவன் அந்த நிலத்தைச் சாகுபடி செய்துவந்தான். 1905-வரு௵ செப்டம்பர் ௴ 16உ குப்பு போயனும் 20 கூலிக்காரர்களும் சேர்ந்து மாகூலை அறுக்கப்போகும்போது நாராயணக்கவுண்டனும் அவனைச் சேர்ந்தவகையருக்களும் கொம்பு, கத்தி, துப்பாக்கி சகிதமாய் வந்தார்கள். வரவே, பெண்பிள்ளைக் கூலிக்காரர்கள் ஓடிப்போய் விட்டார்கள். அடுத்த ரோடில் கப்பிக்கல்லை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்த இராமபோயன் வந்தவுடன் 6-வது குற்றவாளி அவனை துப்பாக்கியில் சுட்டான். இதிலிருந்து கலகம் ஆரம்பமாகி இரு கக்ஷிகளுக்கும் பலமான சண்டை நடந்தது. முதல் குற்றவாளி துப்பாக்கி வைத்துக்கொண்டு எதிரிகளை சுட்டுக்கொண்டிருந்தான். இரண்டாவது குற்றவாளியும் 6-வது குற்றவாளியும் குப்பு போயனை உதைத்து அவனை காவு கொடுக்கப்போவதாய் தங்கள் வீட்டைச் சுற்றிலும் பூமியில் இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

தீர்ப்பு:—இந்தக்கேஸ்செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டபோது நாராயணக்கவுண்டன் வகையறா முதலிய குற்றவாளிகள், அந்த நிலம் சூரியம்பிள்ளைக்காவது குட்டிக் கவுண்டனுக்காவது சொந்தமல்லவென்றும், நாராயணக்கவுண்டனுக்குச் சொந்தமென்றும், குப்புபோயன் மாகூலை அறுவடை செய்ய உத்தேசித்திருப்பதை அறிந்து தாங்கள் போனதாகவும், சொத்தைக் காப்பாற்றுவதற்கு எதிரிகளுக்கு எவ்வளவு தேகத்தில் தீங்கு விளைவிக்கவேண்டுமோ அவ்வளவு விளைவித்த தாகவும் கலகம் பெருத்து தங்களுடைய உயிருக்கு நஷ்டம் வருமென்று எதிர்பார்த்தபோது எதிரிகளுக்கு மரணம் விளைவிக்கும்படியாக நேரிட்டதென்றும் சட்டப்பிரகாரம் தற்காப்பு சுதந்தரத்தை எவ்வளவு பிரயோகிக்கவேண்டுமோ அவ்வளவு பிரயோகித்ததாகவும் டிபன்ஸ் கூறினார்கள்.

சேஷன்ஸ்கோர்ட்டார் தீர்ப்பு:—கலகம் நடந்த வயல்கள் முதல் குற்றவாளி நாராயணக்கவுண்டனுடையதென்று தீர்மானிக்கப்பட்டது. எதிரிகள் மாகூலை அள்ளிக்கொண்டு போய் விடுவார்களென்றும் அதைத்தடுக்கவேண்டுமென்கிற கருத்துடனும் குற்றவாளிகள் ஆயுதங்களுடன் வயல்களுக்குப் போயிருக்கக்கூடும். ஆனால் அப்படி அவர்கள் தீங்கு விளைவித்தது சட்டப்படி அவர்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டேதவிர மற்றபடி சட்டவிரோதமான செய்கையல்ல. எதிரிகள் தீங்கு விளைவிக்க எதிர்த்து சண்டை போட்டபோது குற்றவாளிகள் தங்களுடைய உயிருக்கு நஷ்டம் வந்து விடுமென்று எதிர் பார்த்து தற்காப்பு சுதந்தரத்தை பிரயோகித்து எதிரிகளுக்கு மரணம் உண்டுபண்ணும்படியாய் நேரிட்டது. ஆகையால் குற்றவாளிகளின் செய்கைகள் சட்டப்படி குற்றமாகமாட்டாதென்று கோர்ட்டாரும் அசசர்களும் அபிப்பிராயப்பட்டதால் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

உத்தியோக முறையில் இந்தக்கேசைப் பரிசீலனை செய்த பப்ளிக் பிராசிக்கியூட்டர் குற்றவாளிகளை செஷன்ஸ் கோர்ட்டார் தண்டிக்காமல் விட்டது நியாய விரோதமென்று அபிப்பிராயப்பட்டு ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அப்பீல் கிரௌண்கேள்:—கேசின் நேர் நிர்வாகங்களை சீர்தூக்கிப்பார்க்கும்போதும், சாக்ஷியத்தைக் கவனிக்கும்போதும் குற்றவாளிகளை விடுவித்தது சட்ட விரோதம்; குற்றவாளிகள் தற்காப்பு சுதந்தரத்தை பிரயோகப்படுத்தியது சொத்தைக் காப்பாற்றிக்கொள்ளவா அல்லது தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ளவா வென்று செஷன்ஸ் ஜட்ஜி தீர்மானிக்கவில்லை. 1, 2, குற்றவாளிகளின் சுவாதீனத்திலும் அநுபோகத்திலும் தாவா நிலமிருந்த தென்று தீர்மானித்தது சரியான தீர்மானமல்ல. குற்றவாளிகள் சர்க்கார் அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கு போதுமான சாவகாச மிருந்தபடியால் குற்றவாளிகள் தற்காப்பு சுதந்தரத்தை பிரயோகித்திருக்கக்கூடாது. விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளின் தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் L. C. கோவிந்தராகவ அய்யர் ஆஜரானார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் இருதரப்பு லாயர்களின் வாதத்தைக் கேட்டுக்கொண்டார்கள். இன்னும் தீர்ப்பு சொல்லவில்லை.

மதுரை ஜில்லா கோர்ட்.

ஜட்ஜி:—A. F. பின்னி I. C. S. கிரிமினல் கேஸ்.

பிரியாதி:—நயுவின்

எதிரிகள்:—(1) M. L. R. M. ராமனாதன்செட்டி.
(2) அங்கமுத்தன்

கேசின் விபரம்:—நயுவின் என்பவன் ஒரு தனவந்தரான நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் மேஸ்திரி. M. L. R. M. ராமநாதன் செட்டியார் தேவக்கோட்டையில் ஒரு பெரிய ஜெமீன்தார். 2-வது எதிரி முதல் எதிரியின் சம்மயல்காரன். பிரியாதி எதிரிகள் பேரில் ஒரு கிரிமினல் கேஸ் தாக்கல் செய்தான். இந்தக்கேஸ் ராமநாதபுரம் இரண்டாவது கிளாஸ் சப் டிவிஷனல் மேஜிஸ்டிரேட் மிஸ்டர் J. S. ஸ்டோடார்ட் I. C. S. அவர்களால் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் விடுவிக்கப்பட்டார்கள். பிரியாதி மதுரை ஜில்லாக் கோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தான்.

உத்திரவு:—ஜில்லாக் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு தீர்ப்பை பரிசிலனை செய்து ஒவ்வொரு வாக்கியத்திலும் குற்றங்கண்டுபிடித்து கண்டித்து, குற்றவாளிகளை சப் டிவிஷனல் மேஜிஸ்டிரேட் விடுவித்துவிட்டது மிகுந்த அக்கிரமமென்றும், கேசை நடத்தினதில் சட்ட ஒழுங்குகளையே மாஜிஸ்டிரேட் தழுவி நடக்கவில்லை என்றும் சொல்லி இந்தக் கேசை புணர்விசாரணை செய்யும்படி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பி யிருக்கிறார். சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ஸ்டோடார்ட்டை பார்க்கிலும் மிகுந்த அனுபோகமுடையவர்கள் இந்தக்கேசை விசாரணை செய்யவேண்டுமென்று ரிமார்க்கு செய்திருக்கிறார்.

ஜில்லாக் கோர்ட்டில் பிரியாதிக்கு வக்கீல் மிஸ்டர் சி. சங்கர நாயரும் பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மண்டும், எதிரிகளுக்கு பாரிஸ்டர் மிஸ்டர் எர்ட்லி நார்ட்டனும் ஆஜராகிப் பேசினார்கள்.

(தேவக்கோட்டை மிஸ்டர் M. L. R. M. ராமனாதன் செட்டியாருக்கும் இன்னொரு நாட்டுக செட்டியாருக்கும் உள்ள விரோதத்தால் இந்தக்கேஸ் உற்பத்தியாயிருக்கிறதென்பது சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் அபிப்பிராயம்.)

ஜட்ஜி.—ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

விவாகம் 6-மாத தண்டனையில் முடிந்தது.

கேசின் விபரம்:—பெல்லாரி ஜில்லா கந்தபுரி போலீஸ் ஸ்டேஷனில் காசிம் சாயப்பு என்பவன் 1905-ம் வரு௵ போலீஸ் கான்ஸ்டெபிலா யிருந்தான் இவனுக்கு வயது 24-ஆதலால் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று ஆபேக்ஷித்தான். கையில் பணமில்லை. அதே ஸ்டேஷனிலுள்ள நாகப்பன் என்கிற போலீஸ் கான்ஸ்டேபிலினிடம் கடன்வாங்கினான். விவாகம் முடிந்தது. கடன் கொடுத்தவன் கடனைக்கேட்க ஆரம்பித்தான். காசிம் சால்ஜாப்புசொல்லிக்கொண்டு வந்தான். இப்படியிருக்கும் தருவாயில் அந்த போலீஸ் ஸ்டேஷன் அதிகார எல்லைக்குள் ஒரு கொலைக்கேஸ் நடந்தது. அதில் சிதம்பரய்யா என்பவனை போலிசார் சமுசயித்து போலீசார் அரஸ்ட் செய்தார்கள். இந்த சிதம்பர அய்யாவின் குமாரன் ராமப்பா என்பவனுக்கும் காசிமுக்கும் சினேகம். ஆகையால் காசிம் இந்தக்கேசில் நாகப்பன் கடனைத்தீர்த்து விடலாமென்று எண்ணிவிட்டான். இந்தக்கேஸ் தன்னுடைய சார்ஜ்ஜிற்கு வரப்போகிறதாயும், தான் அதில்

அனுகூலம்செய்வதாயும் தனக்கு ரூபா 10-கொடுக்க வேண்டுமென்றும் காசிம் ருமப்பனுக்குச் சொல்லியிருந்தான்.

ருமப்பன் பேசினபடிபணம்கொடுக்கவில்லை.நாகப்பனை காசிமைப் பணத்திற்குதொந்திரவுசெய்தான் ஆகவே கடன்பாதைசகிக்க முடியாமல் காசிம் ருமப்பனுக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினான்:—நாகப்பன் தன் கடனைத்தீர்க்கும் படி என்னை மிகவும் தொந்திரவு செய்கிறான். அவனும் எனக்குச்சரிசமானமான கான்ஸ்டேபில். அவன் என்னை பணத்திற்குத்தொந்திரவு செய்வது எனக்கு மிகவும் மானசங்கடமாயிருக்கின்றது. நீ பேசுகிறபடி நடக்கிற மனிதனல்ல; உடனே எனக்கு நூ 10ம் ரூ 2 பொருமான அரிசியும் அனுப்பவேண்டும். இல்லேல் இந்தக்கேசில் உனக்கு யாதொரு உதவியும் செய்யமாட்டேன். எதிர்கக்ஷியில் சேர்ந்துகொண்டு எனக்குத்தேவையானதை வாங்கிகொள்ளுவேன். எதிர்கக்ஷிக்காரர்ளாகிய முத்லேவண்டிவகையறு எனக்குக்கொடுக்க தயாராயிருப்பதாய்ச் சொல்லுகிறார்கள்."

இந்தக்கடிதத்தைஆதாரமய்வைத்துக்கொண்டு ருமப்பன் குத்தி டிப்டி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ருமசாமி அய்யர் முன்னிலையில் இ. பி. கோ 161 வது பிரிவின்படி கான்ஸ்டேபில் காசிம் பேரில் குற்றஞ்சாட்டினான்.

டிப்டி மேஜிஸ்டிரேட் காசிமை போக்கிரி என்று நினைப்பதைப்பார்க்கிலும் மூடன் என்று நினைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு அவனுக்கு 10 நாள் சாதாரண காவல் தண்டனையும் ரூ 5 அபராதமும் விதித்தார்.

உத்தியோகமுறையில் இந்தகேசின் ரிக்கார்டுகளை பரிசீலனை செய்த ஜில்லா மேஜிஸ்டிரேட் தண்டனை மிகுந்த சொற்பமாயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு இந்த கேசை ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினர்.

தீர்ப்பு :—கைதிக்கு தண்டனையை இன்னும் 6-மாதத்திற்கு உயர்த்தும்படி உத்திரவு செய்தார்கள்.

———

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட் எழும்பூர்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் W. E. கிளார்க்

சென்னை கார்போரேஷன் டிரைவரை அடித்தகேஸ்

(28—9—06)

கேசின் விபரம்.—மெசர்ஸ் மாசி கம்பெனியாரின் இன்ஜின் முனிசிபாலிட்டியைச்சேர்ந்த மைலாப்பூர் பம்பு ஒர்க்ஷாப்பிலிருக்கிறது. மிஸ்டர் ஸ்டாபோர்ட் என்பவர்மேற்படி கம்பெனியின் இன்ஜினியர். இவர் கார்போரேஷனைச்சேர்ந்த டிரைவரை இன்ஜினிலிருக்கும் ஏதோ பிசகை ரிப்பேர் செய்யும்படி சொன்னர் அப்படிச்செய்துகொண்டிருக்கும் போது டிரைவர் ருமலிங்கத்தை காலினல் உதைத்துத் தள்ளினர். இதற்காக ருமலிங்கம் ஷை இன்ஜினீரின்பேரில் குற்றஞ்சாட்ட, கோர்ட்டார் கேசை விசாரணை செய்து இன்ஜனீருக்கு ரூ 35 அபராதம் விதித்தார்கள். மாஜிஸ்டிரேட் இன்ஜினீராகிய வெள்ளைக்காரரை தண்டிக்கும்போது, இத்தேசத்தில்சில வெள்ளைக்காரர்கள் கோபம் வந்தபோது கீழ் உத்தியோகஸ்தர்களை அடிப்பதும் உதைப்பதும் துர்வழக்கமென்றும் தகாத காரியமென்றும் ரிமார்க் செய்தார்.

———

ஜட்ஜிகள்:— பிரதமஜட்ஜி

மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்,

லேட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல்.

பேரிரவல் பிராமிசரி நோட்கேஸ்

கேசின் விபரம் :—சேலம் ஜில்லாக் கோர்ட்டில் பிரதிவாதி ருமசாமி அய்யர் ஒரு பிராமிசரி நோட்டின் பேரில் ரூ 229—1—3. கொடுக்கவேண்டுமென்று வாதி வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்.

வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்படும்போது பிரதிவாதி ஷை பிராமிசரி நோட்டின் பணத்திற்குடையவர் வாதியல்லவென்றும், பேரிரவலாக அவர் பேருக்குப் பிறந்ததென்றும பணத்திற்குடையவரிடம் ஷை பிராமிசரி நோட்டின் தொகையைச் செலுத்தி விட்டதாகவும் பிரதிவாதி சொன்னதற்குசாக்ஷிவிசாரணைசெய்து பிரதிவாதியின் டிபன்ஸ் உத்தமமென்று தீர்மானித்துக் கேசைத் தள்ளிவிட்டார்.

வாதி இந்தத்தீர்மானத்தை ரத்து செய்யும் படியாக ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனு மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ் கூடிய கோர்ட்டின் விசாரணைக்கு வந்தது. மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜில்லாக் கோர்ட்டார் சொன்ன தீர்ப்பு சரிதான் என்று தீர்ப்பு சொன்னர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ் பிரதிவாதி இம்மாதிரியான டிப்பன்ஸ் சொல்லுவதற்கே முடியாது என்று சொல்லி வாதிக்குச் செலவு தொகையுடன் டிக்கிரி கொடுத்தார். முடிவில் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆகவே வாதி லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் தாக்கல்செய்தார்.

தீர்ப்பு ஒரு நெகோஷியபில் இன்ஸ்டுரூமெண்டுக்குக் (Negotiable instrument))பிராமிசரி நோட்டைப்போல் பத்திரம்) கட்டுப்பட்ட பிரதிவாதி பத்திரம் எவன்பேராலிருக்கிறதோ அவன் சொந்தக்காரனல்லவென்று நமோதிற்கு அவன்பேரில் எழுதப்பட்டதென்றும், அவன்வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமில்லை என்றும் டிபன்ஸ் சொல்லலாமாவென்கிற விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசனை செய்தார்கள். இதுவிஷயமாக இத்தேச தீர்ப்புகளையும் பார்த்தார்கள். இங்கிலாண்டு அமெரிக்காக தேச தீர்ப்புகளையும் சோதனைசெய்து பார்த்தார்கள் முடிவில் இ.லா.ரி. 21-செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கும் இக்கோர்ட்டு தீர்ப்பையும். 7-மதிராஸ் லாஜெர்னலில் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பையும் அனுசரித்து பிரதிவாதிக்கு அம்மாதிரியான டிபன்ஸ்சொல்ல யாதொரு பாத்தியம் கிடையாதென்று சொல்லி வாதிக்குச் செலவுதொகையுடன் டிக்கிரி கொடுத்தார்கள்.

———

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

கிரிமினல் அப்பீல்.

கலகம் செய்து கோடூந்துன்பம் உண்டாக்கினகேஸ்.

கேசின்விபரம்:—கஞ்சம் ஜில்லாவில் ஒரு நிலத்தை வாதி தன்னுடையதென்றான். பிரதிவாதிகள் தங்களுடையதென்றார்கள். இதிலிருக்கும் விஷயத்தில் பிரதிவாதிகள் தேசநாயுடு அபாயகரமான ஆயுதம் வைத்துக்கொண்டு சண்டைசெய்து வாதிகளுக்குக் கடுங்காயம் விளைவித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டார்கள். கஞ்சம் சப் மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரணை செய்து, விசாரணை ஆரம்பத்திலே குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் 5 பேர்வழிகள் பேரில் யாதொரு கேசும் கிடையாதென்று அபிப்பிராயப்பட்டு விட்டுவிட்டார். பாக்கியுள்ளவர்களை விசாரணை செய்து டிபன்ஸ் விசாரணையும் செய்து கலகஸ்தலம் வாதிகளுக்குச் சொந்தமென்றும், வாதிகள் அதிலிருந்த ஆலையைக்கொண்டுபோக எத்தனித்து கலகஞ்செய்தபடியால் பிரதிவாதிகள் தங்களையும் தங்கள் சொத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு தற்காப்பு சுதந்தரத்தை பிரயோகித்து வாதிகளுக்கு கடுங்காயம் விளைவித்தார்களென்றும் இ. பி. கோ. 161-வது பிரிவின்படி அவர்கள் செய்தது குற்றமாகமாட்டாதென்றும் அபிப்பிராயப்பட்டு பிரதிவாதிகளை விட்டுவிட்டார். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக பப்ளிக் பிராசிக்கியூட்டர் அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—இ. பி. கோ. 326-வது பிரிவில் சொல்லியிருக்கும் குற்றத்தை சப் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்வதற்கு அதிகாரம் கிடையாது என்று சொல்லி இந்தக்கேசை ஜில்லா மாஜிஸ்டிரேட்டாவது அல்லது ஒரு முதல்கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாவது விசாரணை செய்யவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

———

CASES FROM INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

———

பம்பாய் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுஷண்டவர்க்கர்.

ரிசீவரின் நடவடிக்கைகள் எப்பொழுதும் செல்லுபடியுள்ளது.

மேக்லியாட் வித்தால் ஷை வாதிகள் (அப்பீல் வாதிகள்)

கிசான் வித்தால் சிங்கு ஷை (அப்பீல் பிரதிவாதிகள்)

வியாச்சிய சங்கிரகம்.

ஒரு கோஜா வியாபாரியாகிய "சோம்ஜி பார்ப்பியா" என்பவர் 1885ஞு இறந்தார். அவருக்கு முதல் மனைவியால் 4 பிள்ளைகளும் இரண்டாவது மனைவியால் 4 பிள்ளைகளும் இருந்தார்கள். முதல் மனைவியின் 4 குமாரர்களும் தன்னுடைய எல்லா ஸ்தாவர சங்கம சொத்துக்களையும் அடைகிறதென்றும் மற்ற பிள்ளைகளுக்கும் 30,000 ரூ ஆறு வருஷத்துக்குள் இவர்கள் கொடுத்து விடவேண்டுமென்றும் உயில் எழுதிவைத்தார். ஆகையால் சொத்து முதல் மனைவியின் புத்திரர்கள் வசத்திலிருந்தது.

1899ஞு ஜனவரிமீ 12உ முதல் மனைவியின் புத்திரர்கள் பம்பாய் பாங்கிக்காரரிடம் பெந்தகம் வைத்தார்கள்.

1903ஞு செப்டெம்பர்மீ 1உ பெந்தகப் பத்திரத்தின் ஷரத்துப்படி பெந்தகச் சொத்தை விற்கப்போகிறதாக விளம்பரஞ் செய்தார்கள்.

இது தெரிந்து இரண்டாவது மனைவியின் புத்ரர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய 30,000 ரூ கட்டுப்படுத்தித்தான் விலை பேசவேண்டுமென்று பாங்கிக்காரருக்கு நோட்டீஸ் கொடுத்தார்கள். பாங்கிக்காரர் அதற்கு ஒத்துக்கொள்ளாததால் முதல் மனைவியின் புத்திரர்களையும் பாங்கிக்காரரையும் பிரதிவாதிகளாக்கி 1903 வருஷத்திய 554 நெ. வியாச்சியங் கொண்டுவந்தார்கள். அவ்வியாச்சியம் பம்பாய் ஹைகோர்ட்டாரால் பாங்கிக்காரர் பட்சம் தீர்ப்பு சொல்லப்பட்டது. வியாச்சியம் நடவடிக்கையிலிருக்கும் மத்தியில் 1904ஞு ஜனவரிமீ 14உ பாங்கிக்காரர் "டுவார்க்கதாஸ் தாரம்சே" என்பவருக்கு பெந்தகச்சொத்தை விற்றுவிட்டார்கள். இதற்கு முன் 1903ஞு டிசம்பர்மீ 2உ முதல் மனைவியின் புத்திரரில் ஒருவராகிய "கூலாம் ஹூசேன்" என்பவர் "கிசான் வித்தால் சிங்கு"க்கு பெந்தகச் சொத்தில் ஒரு பாகமாகிய "எல்பிஸ்டோன்" நாடகக் கொட்டகையை குத்தகைக்கு விட்டார்.

1904ஞு ஜனவரிமீ 26உ மிஸ்டர் மேக்லியாட்டை "ரிசீவராக" கோர்ட்டார் நியமித்து தாவா சொத்தை பரிபாலிக்க உத்தரவு செய்தார்கள். அடுத்தமீ 24உ தாவா சொத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களை அதிலிருந்து விலக்கும்படியாக வியாஜியஞ் செய்துக்கொள்ள ரிசீவருக்கு கோர்ட்டாரால் அனுமதி கொடுக்கப்பட்டது. மேலே கூறிய 554 நெ. வியாஜ்ஜியம் விசாரணையாகிக் கொண்டுவரும் பொழுது கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிசீவராகிய "மேக்லியாட்" என்பவர் "டுவார்க்க தாஸ்தாரம்சே" என்பவரையும் தன்னுடன் வாதியாகச் சேர்த்துக்கொண்டு "கிசான் வித்தால் சிங்கு" வையும் குத்தகைக்கு விட்ட "கூலாம் ஹூசேனு" வையும் பிரதிவாதிகளாக இவர்களை நாடகக் கொட்டகையினனுபவத்திலிருந்து விலக்கிவிட தாவா செய்தார். இக்கேஸ் ஹைகோர்ட்டில் நடந்தது. 554 நெ. வியாச்சியம் முடிவுக்கு வந்து ஹைகோர்ட்டு ஜட்ஜியால் பாங்கிக்காரருக்கு அனுகூலமாகி விட்டதால் ரிசீவரை நீக்கிவிட்டார்கள். ரிசீவரால் கொண்டுவரப்பட்ட வியாச்சியம் ஆரம்ப ஸ்திதியிலிருந்ததாலும் அவர் நீக்கப்பட்டுப்போனதாலும் பின் வரும் இஷியூக்கள் ஏற்பட்டன.

(1) 554நெ. வியாச்சியம் முடிவுக்கு வந்து இவ்வியாச்சிய மத்தியில் நியமிக்கப்பட்ட ரிசீவர் தன் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுப்போனதால் இவ்வியாச்சியம் நடவடிக்கையிலிருக்கலாமா ?

(2) வேற்றுமையான வாதிகளின் சேர்க்கையினல் இவ்வியாச்சியம் கெடுதலையாக வில்லையா. ?

(3) 1899ஞு ஜனவரிமீ 12உ ஏற்பட்ட பெந்தகத்தில் நாடகக் கொட்டகை சேர்ந்திருக்கிறதா ?

(4) பெந்தகம் 2-வது வாதிக்கு கிரயஞ் செய்யப்பட்டதா ?

(4a) 2-வது பிரதிவாதி "ஆமட்பாயி"க்கு பதிலியா ?

(4b) அப்படியானல் "ஆமட்பாயி" ஒரு கட்சிக்காரராகச் சேர்க்கப்படவேண்டிய தவசியமா ?

(5) பெந்தகச் சொத்து 2-வது பிரதிவாதிக்குக் கிரயமாயிருந்தால் நாடகக் கொட்டகையில் பாத்திய முண்டா ?

(6) நாடகக் கொட்டகையை தன் வசமாக்கிக் கொள்ள முதல் பிரதிவாதிக்கு பாத்தியமுண்டா ?

(7) 1903ஞு டிசம்பர்மீ 2உ நடந்த குத்தகைப்பத்திரம் செல்லுபடியானதாய் வாதிகளை கட்டுப்படுத்தாதா?

(8) குத்தகை மோசடியுள்ளதா குறைந்த தொகைக்கு ஏற்பட்டதா ?

வாதிகளின் வாதம்:—2-வது பிரதிவாதியாகிய "டுவர்க்கதாஸ் தாரம்சே" ரிசீவரின் ஸ்தானத்திலிருந்து கட்சியை நடத்த கூடியவரா யில்லாவிட்டால் ரிசீவரை விலக்க இடங்கொடுத்திருக்க மாட்டோமென்றும் இருவாதிகளையுஞ் சேர்த்து ஒரே வியாச்சியமாகக் கொடுவந்தது வியாச்சியங்களின் மிகுதியை குறைக்க வென்றும் வக்கீல்கள் சொன்னார்கள்.

பிரதிவாதிகளின் வாதம்:—இவ்வியாச்சியங் கொண்டுவர ரிசீவருக்குத் தான் பாத்தியமுண்டு. ரிசீவரை அவ்வேலையிலிருந்து நீக்கப்பட்ட பொழுதே அவர் செய்த வியாச்சியம் முடிவுக்கு வந்து விட்டது. டுவார்க்கதாஸை ரிசீவருடன் வாதியாகச் சேர்த்தது வேற்றுமை வாதிச்சேர்க்கையாகும். எல்பிண்ன்டோன் நாடகக் கொட்டகை பெந்தகத்துக்குப் பிறகு தான் கட்டப்பட்டது. "கட்டடம் உறுதியாக அமைக்கப்பட்டவைகள்" என்னும் வார்த்தைகள் பெந்தகப்பத்திரத்தில் இல்லாததால் இந்நாடகக் கொட்டகை பெந்தகத்துக் குள்ளானதல்ல.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—இவ்வியாச்சியம் 554 நெ. வியாச்சியத்தின் கிளை வியாச்சியம் 554 நெ. வியாச்சியமும் இப்பொழுது விசாரிக்கும் ஜட்ஜியினாலேயே விசாரிக்கப்பட்டு முடிவு சொல்லப்பட்டது. (தீர்மானிக்கப்பட்டது) 554 நெ. வியாச்சியத்தில் ரிசீவராக நியமிக்கப்பட்ட "மேக்லியாட்" என்பவரும் கிரயம் வாங்கின டுவார்க்க தாஸ்தாரம்சே என்பவரும் சேர்ந்து 1904ஞு மார்ச்சுமீ 18உ இந்த வியாச்சியஞ் கொண்டுவந்தார்கள். தாவா சொத்தை அனுபவிப்பதிலிருந்து கிசான் வித்தால் சிங்குவை நீக்க அவர் மேலும் அவருக்குக்குத்தகை கொடுத்த "கூலாம் ஹூசேன்" மேலும் தாவா செய்யப்பட்டது.

பம்பாய் பாங்கிக்கு அனுகூலமாக 554 நெ. வியாச்சியம் தீர்மானிக்கப்பட்டது. இச்சொத்துக்கள் இரண்டாவது மனைவியின் புத்திரர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகைக்குக் கட்டுப்பட்டிருந்தாலும் நல்ல எண்ணத்துடன் பாங்கிக்காரர் பணம் கொடுத்து பெந்தகம் வாங்கியிருக்கிறதால் இவர்களுக்கு முந்திய பாத்தியமிருக்கிறதென்று சொல்லி பெந்தகச் சொத்தைக் கட்டுப்படுத்தி ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

இத்தறுவாயில் இவ்வியாச்சியம் விசாரணையாகி வந்தது. 554 நெ. வியாச்சியத்தின்முடிவின்மேல் முதல்வாதியாகிய ரிசீவர் நீக்கப்பட்டபொழுது அவரால் கொண்டுவரப்பட்ட வியாச்சியம் நீடிக்கக்கூடியதா என்பது முதல் பிரதிவாதியின் ஆக்ஷேபணையாயிருந்தது.

இவ்வாட்சேபணையை தெளிவாக பின்வருமாறு விரிக்கலாம்:—முதல் வாதி கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிசீவராகையால் கோர்ட்டு உத்தியோகஸ்தராவார். அவசியமானால் யாரையும் பெந்தகச்சொத்தை அனுபவிப்பதிலிருந்து விலக்க தாவா செய்யும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதனாற்றான் இவ்வியாச்சியஞ் செய்ய இவருக்குப் பாத்தியமில்லை. பிராது செய்த தேதியில் முதல் வாதிக்கு மாத்திரந்தான் பிராது செய்யக்கூடிய பாத்தியமிருந்தது. இப்பிராது அவருடையது. கோர்ட்டாரால் ரிசீவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டபொழுது வியாச்சியஞ் செய்யக்கூடிய அவர் அதிகாரமும் அவர் செய்த வியாச்சியமும் முடிவுக்கு வந்துவிட்டது. இது தான் பிரதிவாதி வக்கீல் கூறிய ஆட்சேபணையின் தாற்பரியம்.

இரு பக்கத்து வக்கீல்களின் பிரயாசையும் இதற்கு ஒற்றுமையான தீர்மானங்களை எடுத்துக்காட்ட முடியாமற் போயிற்று. ஆகையால் மூல விதிகளைக் கொண்டு தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

கோர்ட்டார் ஒரு ரிசீவரை நியமித்து அனுபவித்திலிருந்து கட்சிக்காரரல்லாத ஒருவன் விலக்க வியாச்சியஞ்செய்ய அதிகாரம் கொடுத்தால் அச்சொத்துக்கு சுவானுளியாக ஏற்படும் ஒருவரின் நன்மைக்காக அவருடைய பதிலி அல்லது டிரஸ்டியாக இந்த ரிசீவர் இவ்வியாச்சியஞ் செய்யவேண்டுமென்பது சட்டத்தின் கருத்தாகும். சொத்துக்கு பாத்தியமுடையவர் இன்னாரென்று நிர்ணயிக்கப்பட்டபொழுது இந்த ரிசீவர் அவருடைய ரிசீவராக பாவிக்கப்படுவார்.

554 நெ. வியாச்சிய முடிவாவதற்கு முன் இவ்வியாச்சியத்துக்கு ஒரு தீர்ப்பு ஏற்பட்டால் நிர்ணயிக்கப்படுகிற சுவானுளிக்கும் இதன் பிரதிவாதிகளுக்கு முண்டாகும் இவ்விவாதத்தைப்பற்றிய எவ்வித வியாச்சியமும் கொண்டுவரக்கூடாதபடி ஓர் தடையாகும். இதற்கு வால்தலையாக ஒரு தீர்மானம் பின்வருமாறு செய்யப்பட்டிருக்கிறது. அது என்னவெனின் 1827ஞு பம்பாய் ரெகுலேஷன் ஆக்டுப்படி தெரியக்கூடிய வார்சில்லாமலும் உயில் எழுதி வைக்காமலும் ஒருவன் இறந்துபோனால் அவ்விடத்துக்கு அதிகாரமுடைய ஜட்ஜி அவன் சொத்தைப் பரிபாலிக்க ஒரு "அட்மினிஸ் டிரேட்டரை" நியமிக்க வேண்டுமென்று 1827ஞு பம்பாய் 8-வது ரெகுலேஷனில் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 'ஏ' என்பவன் தெரியக்கூடிய வார்சில்லாமலும் உயில் எழுதிவைக்காமலும் இறந்துபோனான். கோர்ட்டார் அவன் சொத்தை பரிபாலிக்க கோர்ட்டு நாதரை அட்மினிஸ் டிரேட்டராக நியமித்தார்கள். நாதர் வசத்திலிருக்கும்பொழுது 'பி' என்பவன் தான் வார்சென்று சொத்து தன் வசமாக நாதர் மேல் வியாச்சியஞ்செய்தான். இறந்துபோனவனுக்கு 'பி' என்பவன் வார்சல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு 'சி' என்பவன் வார்சென்று கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள். இதில் 'பி' என்பவன் கட்சிக்காரனல்ல. 'பி' என்பவன் திரும்ப 'சி' என்பவன் மேல் தனக்குச் சொத்து கிடைக்கவேண்டுமென்று தாவா செய்தான். முன்நாதருக்கும் 'பி' என்பவருக்கும் நடந்தவியாச்சியத்தின் தீர்மானம் அதேபாத்தியதை மேல்கொண்டுவந்த இவ்வியாச்சியத்துக்குத்தடையாயிருக்குமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது இத்தீர்ப்பில் "வெஸ்ட்" என்னும் ஜட்ஜி சொல்லுகிறதாவது:—"ஒரு சொத்தைபரிபாலிக்க சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர்மேல் அச்சொத்துக்கு வார்சென்று வியாச்சியஞ்செய்து அபஜெய மடைந்தவர்கள் பிறகு நிர்ணயிக்கப்பட்ட சொந்தக்காரர் மேல் அதேகாரணத்துக்குவியாச்சியம் தொடுப்பதுகூடாது சொந்தக்காரரின் பாத்தியம் முன்வியாச்சியத்தில் நிர்ணயிக்கப்படாமலிருந்தாலும் இவருக்குச் சேரவேண்டிய சொத்திலிருந்து அந்தவியாச்சித்தில் செலவுசெய்து கட்சியாடப்பட்டிருப்பதால் சொந்தக்காரரின் பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டதாகும்."

இக்கருத்தைத்திருப்பி வால்தலையாகப்பார்த்தாலும் அதுவும் சட்டசம்மதமானதே. எவ்வாறெனின் ஒரு சொத்தின் விஷயமாக சர்க்காரால் நியமிக்கப்பட்டவர் நியாய வாயிலாக ஒரு கோர்ட்டில் சிலசொத்தைக் கைவசப்படுத்தச்செய்த வியாச்சியத்தில் ஜயமடைந்ததால் பின் நிர்ணயிக்கப்படும் சொந்தக்காரர் இதில் கட்சிக்காரராக விராமற்போனாலும் இவர்கள் ஜயமடைந்ததாக பாவிக்கப்பட்டு எதிர்கட்சிக்காரர்களை அத்தீர்மானம் கட்டுப்படுத்தும்.

ரிசீவராகிய மேக்லியாடு 554 நெ. வியாச்சியம் முடிவாதற்கு முன் அவ்வுத்தியோகத்திலிருந்து நீக்கப்படாமல் இவ்வியாச்சியத்தில் ஜயமடைந்தால் 554 நெ. வியாச்சியத்தினால் அடமான பாத்தியமுடையவர்களாக தீர்மானிக்கப்பட்ட பம்பாய் பாங்கிக்கும் அதனிடமிருந்து கிரயமேவாங்கினவருக்கும் அத்தீர்ப்பு நலத்தைக்கொடுக்கும். அவ்வாறு பெற்றத்தீர்ப்பு இப்பிரதிவாதிகளை இப்பொழுது நடக்கும் வியாச்சியத்தில் கட்டுப்படுத்தாதென்று சொல்லமுடியாது. பம்பாய் பாங்கியின் பாத்தியம் அப்பொழுது நிர்ணயிக்கப்படாவிட்டாலும் பின் அப்பாத்தியம் ஏற்கனவேயிருந்து வருவதாக தீர்மானிக்கப்படுகிறது. அப்பாங்கியின் நலத்துக்காகவே ரிசீவர் வியாச்சியஞ்செய்து தீர்ப்பு பெற்றார். ரிசீவர் உத்தியோகம் வியாச்சியமத்தியில் நீங்கிவிட்டதாலும் இந்நியாயம் பொருந்தும் நிர்ணயமாகாத சொத்துக்காரரின் ஸ்தானத்தில் கோர்ட்டார் ஒரு ரிசீவர் நியமித்து தாவா செய்ய அதிகாரத்தின்படி ரிசீவர் தாவா செய்தால் அத்தாவா எவ்வியாச்சியத்தில் ரிசீவர் நியமிக்கப்பட்டாரோ அது முடிவாகிறதற்குள் இத்தாவாவும் முடிவாகுமென்பது தெரிந்தே கோர்ட்டார் ரிசீவரை நியமிக்கிறார்கள். அன்றியும் ரிசீவர் உத்தியோக முடிவு பெற்றாலும் அவர்நடத்திய தாவா தீர்ப்பாகிற வரையில் விசாரணையாகிவரவேண்டுமென்பதே ரிசீவரை நியமித்த கோர்ட்டாரின் நோக்கமாயிருக்கிறது. ஆகையால் 554 நெ. வியாச்சியம் தீர்ப்பாகி ரிசீவர் நீக்கப்பட்டபொழுது டிக்கிரிபெற்றவர் அவர் ஸ்தானத்திலிருந்து கட்சியாகும் பாத்தியம் அடைகிறார் (ரிசீவர் ஜயமடைந்தவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டிருப்பதால்) ரிசீவரின் வேலை முடிவுக்குவந்தால் இவரால் நடத்தப்பட்ட சகலநடவடிக்கைகளும் இவர் உத்தியோகத்தோடு முடிவடையாமல் யாருக்காக ரிசீவர் நடத்தினாரோ அவர் டிக்கிரியினால் நிர்ணயிக்கப்பட்டதால் அவ்வாறு டிக்கிரி பெற்றவர் தொடர்ச்சியாக கட்சியாடவேண்டியது (இனி ரிசீவர் உத்தியோகம் அனாவசியமாகையால்).

ரிசீவரின் ஸ்தானத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்சிக்காரரிருந்து நடத்த எந்த சட்டம் இடம் கொடுக்கிறதென்று முதல் பிரதிவாதியின் வக்கீல் கேட்டார். சி. பு. கோ. 372-வது பிரிவுப்படி இவ்வாறு செய்யலாமென்று மறுமொழி கூறலாம். 372-வது பிரிவில் சொல்லியிருக்கிறதாவது "கோர்ட்டு நடவடிக்கையிலிருக்கும் ஒரு வியாச்சியத்திலுள்ள பாத்தியம் விற்கப்பட்டாவது, நூதனமாய் ஏற்பட்டாவது, மாறியாவது போகும் கேசுகளில், கட்சிக்காரரின் சம்மதத்தின் மேலாவது அவர்களுக்கு எழுத்து மூலமாக நோட்டீஸ் கொடுத்தாவது ஏதாவதிருந்தால் அவர்களின் ஆட்சேபணை ஏதாவதிருந்தால் அதை கேட்டு கோர்ட்டார் கொடுக்கும் அனுமதியின் மேல் யாரிடமிருந்து அப்பாத்தியம் வந்ததோ அவரோடு கூட அல்லது அவருக்குப்பதிலாக கேஸின் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பாத்தியம் வரப்பெற்றவர் மேல் அல்லது அவரால் வியாச்சியம் நடத்தப்படலாம்," "பாத்தியம் மாறுதல்" என்னும் மொழிகள் ஒருவர் மரணத்தினால் மாறினது மாத்திரமல்ல "கோர்ட்டாகப் போர்" என்பவரின் கடன் முழுகின சொத்தினுடைய மானேஜர் நடத்தின வியாச்சியம், விசாரணையிலிருக்கும் பொழுது அம்மானேஜ்மெண்டு நீங்கி சொந்தக்காரர் வசமான பொழுது உண்டான பாத்தியமாறுதலுக்கும் பொருத்தமுள்ளதென்று இ. லா. ரி. 28. கல். 171 இல் கூறியிருக்கும் சுரேந்திரமோகன் டாகோர் v. சிரோமோனி டேபி கேசில் கல்கத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள், அக்கோர்ட்டார் "வரப்பெற்ற" என்னும் வார்த்தை இப்பிரிவில் உபயோகிக்கப்பட்டிருப்பதைப்பற்றி ஊன்றுதலாய்க் குறிப்பிட்டெழுதி யிருக்கிறார்கள். யுக்தி அமைந்த அத்தாற்பரியம் இவ்விடம் பொருத்தமுள்ளது. இந்தக் கோர்டில் இவ்வாறு அர்த்தங்கொள்ளக்கூடிய வார்த்தைகளடங்கிய பிரிவுகளிருந்து அவைகளைப் பொருத்த முடையதாக்க இடமிருக்கும் பொழுது இம்மாதிரியான கேசுகளுக்கு சட்ட நிரூபண சபையார் விதி ஏற்படுத்தாமல் விட்டு விட்டதாக துணிவு கொள்ளக்கூடாது. ஒருவருக்கு ஒரு சொத்து பாத்தியம் இருக்கிறதாக தீர்மானம் ஏற்பட்டால் அவருக்கு அப்பாத்தியம் ஏற்கனவே யுள்ளதாக கூறுகிறதேயல்லாமல் நூதனமாக அதில் பாத்தியம் இத்தீர்மானம் உற்பத்தி பண்ணுகிறதில்லை. ஒரு கட்சிக்காரருக்கு பாத்திய மிருக்கிறதாக ஒரு டிக்கிரி கூறினால் அப்பாத்தியம் அவ்டிக்கிரியினால் கட்சிக்காரருக்கு "வந்ததாக" எண்ணுவது நீதி முறைமையில் வழக்கம். "வந்ததாக" என்னும் சகசவார்த்தை 372வது பிரிவில் உபயோகித்திருப்பது, கிரயம் கலியாணம், மரணம் முதலியவைகளால் மாறும் பாத்தியத்தைப்பற்றி விதி ஏற்படுத்தினதாகும். இப்பொழுது டிக்கிரி ஏற்படுகிறவரையிலும் அப்பாத்தியம் ரிசீவரிடமிருந்தது. டிக்கிரிக்கும் ரிசீவரை நீக்கினதற்கும் பிறகு டிக்கிரியினால் நிர்ணயிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு "வந்தது" 554 நெ. வியாச்சியத்தில் ரிசீவருக்குள்ள பாத்தியம் டிக்கிரியின் முடிவினால் அவ்வழக்கின் 5-வது பிரதிவாதியாகிய பம்பாய் பாங்கிக்கு மாறிற்று. பாங்கிக்காரர் அல்லது அவர்களிடம் கிரயம் வாங்கின இரண்டாவது பிரதிவாதியாகிய "டுவார்க்கதாஸ்" கட்சியை நடத்திக்கொண்டு வந்தால் இம்மாதிரியான மனு செய்யவில்லை. பிராது செய்தபோது இருவருஞ்சேர்ந்து செய்தது நியாயமாகாமலிருந்தாலும் அதுவேற்றுமைவாதிகளின்சேர்க்கையாகாது. உயில்செய்துவிட்டு இறந்துபோன ஒருவர்சொத்து, கடனால் முழுகிப்போனதாக அவருடைய கடன்காரர்கள் அவர் சொத்தைப் பரிபாலித்து கடனைத்தீர்க்கவேண்டியதற்கு ஒரு ரிசீவரை நியமிக்க வியாச்சியஞ் செய்தார்கள். அதில் ஏற்பட்ட ஒரு டிக்கிரியினால் ஒரு ரிசீவர் நியமிக்கப்பட்டார். இந்த ரிசீவரும் உயிலில்கண்ட காரியக்காரியாகிய ஒரு பெண்பிள்ளையும் இறந்துபோனவரின் சொத்து விஷயமாக ஒரு வியாச்சியஞ் செய்தார்கள். ரிசீவர் இறந்துபோனவருக்கு மரணத்துக்குமுன் வரவேண்டியதை மாத்திரம் வசூலிக்க வியாச்சியஞ் செய்யலாமென்றும் உயிலின் காரியக்காரி இறந்துபோனவருக்கு இறந்த பிறகு வரவேண்டியதை வசூலிக்கப் பிராது செய்யலாமென்றும் இருவரும் வாதிகளாக ஒரு வியாச்சியம் கொண்டுவரக்கூடாதென்றும் பிரதிவாதி எதிர்வாதஞ் சொன்னார். அந்தக்கேசுக்கு முடிவு சொன்ன ஜட்ஜிகள் தீர்மானித்ததாவது:—"இரண்டு தனிவியாச்சியங்கள் அனாவசியம். இதில் வரவேண்டியதை வசூலிக்க ரிசீவர் மாத்திரம் தனியாகத்தாவா செய்திருக்கலாம். காபந்துக்காக காரியக்காரியாகிய "பாக்ஷூபாயை" கூடச்சேர்த்துக் கொண்டார். இப்படி சேர்ந்து செய்வது வேற்றுமை வாதிகளின் சேர்க்கையாக எண்ணக்கூடாது என்று தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இவ்வாறிருக்க 372-வது பிரிவுப்படி தன்னுடையான ரிசீவருக்குப் பதிலாகத் தன்னை வைத்துக்கொண்டு கேசை நடத்த மனுசெய்யவேண்டிய "டுவார்க்கதாஸ்" ஏற்கனவே வாதியாக இருக்கிறார்;

"டுவார்க்கதாஸ்" வாதியாகச் சேர்க்கப்பட்டது சரியா வென்பதைப்பற்றி பிரதிவாதிகளின் வாதம் கவனிக்கப்பட்டது. இவ்விதச் சேர்க்கை வேற்றுமைச் சேர்க்கையல்ல. வியாச்சியத்தை நடத்த டுவார்க்கதாஸ் வாதியாகச் சேர்க்கப்பட்டது நியாய விரோதமல்ல. ரிசீவரின் பெயர் முதலாம் வாதியாக ரிக்கார்டில் இருப்பது பிரதிவாதிகளை எவ்விதத்திலும் பாதிக்காது. 554 நெ. வியாச்சியத்தின் டிக்கிரியினால் ரிசீவர் நீக்கப்பட்டபோதிலும் வியாச்சியம் முதலில் செய்தவராகையால் அவர் பெயர் அதிக காபந்துக்காக ரிக்கார்டில் இருந்து வந்திருக்கிறது.

ஆகையால் வியாச்சியம் ரிசீவர் வேலை நீங்கின பிறகும் நடத்த படலாம் என்பதினால் முதல் இஷ்யூ வாதிபக்கம் முடிவு சொல்லப்பட்டது.

இரண்டாவது இஷ்யூ கேள்விப்படி வேற்றுமை வாதிச்சேர்க்கையில்லை.

எல்பின்ஸ்டோன் நாடகக்கொட்டகை பம்பாய் பாங்கியின் பெந்தகத்துக்குள் பட்டதா?

554 நெ. வியாச்சியத்திலும் இது ஒரு இஷ்யூவாகக்குறிக்கப்பட்டிருந்தது. இந்நம்பரில் பாங்கியும் கிரயம் வாங்கின தற்கால வாதியாகிய "டுவார்க்கதாஸும்" தற்கால 2-வது பிரதிவாதியாகிய கூலாம் ஹூசேனும் பிரதி வாதிகளாயிருந்தார்கள், அவ்வியாச்சியத்தில் பெந்தகத்துக்குள்ளானதென்றே தீர்ப்பு செய்யப்பட்டது. பாங்கி, டுவார்க்கதாஸ் கூலாம் ஹூசேன் அந்நம்பரில் பிரதி வாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தாலும், 554 நெ. வாதிகளும் தற்கால 2-வது பிரதிவாதி "கூலாம் ஹூசேனும்" சேர்ந்து ஒரு பக்கத்திலும் பம்பாய் பாங்கி ஒரு பக்கத்திலும் ஆகிய இருதரத்தாரின் மாறான விவாதத்திலுண்டான ஷை நம்பரின் இதே இஷ்யூவை விசாரித்துத் தீர்ப்பது அங்குள்ள பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்டாற்போல அந்நம்பரின் வாதிகளுக்கு நேரிட்டதாகச் சொல்லும் குறையைத் தீர்ப்பதற்கு அதிக அவசியமாயிருந்தது. அத்தீர்ப்பு அவ்வியாச்சியத்தின் பிரதிவாதிகளுக்குள் வேறு வியாச்சியங்கொண்டு வராதபடி தடை தீர்ப்பாகும். இ. வ. ரி. 11-பம். 116-இல் சொல்லியிருக்கும் ராம் சந்திர நாராயன் v. நாராயன் மகா தேவ் கேஸ் இதற்குப் பொருத்தமுள்ளது. தற்கால 2-வது பிரதிவாதியாகிய "கூலாம் ஹூசேன் முந்தின கேஸின் இவ்விஷ்யூவின் முடிவுக்குக் கட்டுப்பட்டவராவார். இப்போது முதல் பிரதிவாதியாகவிருக்கும் கிசான்சிந்தாஸ் சிங்கு அந்நம்பர் பிராதுக்குப்பின் இவரிடமிருந்து பாத்தியம்பெற்றவராகையால் அங்கு கட்சிக்காரராக விராமற்போனாலும் அவரும் கட்டுப்பட்டவராகிறார். அப்பிராது 1903௵ செப்டம்பர்௴ 3௳ கொடுக்கப்பட்டது. குத்தகைப் பத்திரம் 1903௵ டிசம்பர்௴ 2௳ பிறந்திருக்கிறது. டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 52-வது பிரிவுப்படி வியாச்சியகாலத்தில் ஏற்பட்ட குத்தகைப்பத்திரம் செல்லுபடியுள்ளதல்ல. இந்த இஷ்யூவைப்பற்றித் திரும்பவும் ஆலோசிக்கப்படும், முன் ஏற்பட்ட முடிவுக்கு மாறுக்கொள்ள யாதொருகாரணமும் தோன்றவில்லை. பெந்தகம்வைத்த சொத்தின் விவரத்தில் இந்நாடகக் கொட்டகைக் காணப்படாமலிருப்பதே பிரதிவாதிகளின் வாதத்துக்கு அனுகூலமாயிருக்கிறதென்று தர்க்கித்தார்கள் பெந்தகபத்திரம் இரண்டு சொத்துக்களைக்குறிக்கிறது.—

(1) பாஜிபாலா தெருவிலுள்ள வீடு (2) நானா சொத்தாகிய பால்க்லாண்டு தெருவிலுள்ள பகுதிக்கு வாங்கின சொத்து.

முந்தினசொத்தைப்பற்றி பின்வருமாறு பெந்தகப் பத்திரத்தில் கண்டிருக்கிறது. கீழ்குறித்த முதல் ஷெடியூலில் முதலின் விவரித்திருக்கிற எல்லாப் பலவித ஸ்தாவர சொத்துக்களும் அந்நிலத்தைச்சேர்ந்த எல்லாக் கட்டடங்களும் நிறுத்தப்பட்டவைகளும் மரங்களும் பாத்தியங்களும் சௌகரியங்களும் இவைகளோடு சேர்ந்தவைகளும் அனுபவத்திலுள்ளது அல்லது கொண்டாடப்பட்டதும் அடமானம்வைக்கிறவர்களுக்கு இவைகளிலுள்ள எல்லா நிலைமையும் உரிமையும் வரவேண்டியவைகளும்." முதல் ஷெடியூலில் இந்த சொத்து "குடியிருக்குந் தோட்டமும் வீடும் அசையாப்பொருள் அல்லது அங்குள்ள வர்சஸ்தலம் உள்பட பாசாண்டாரி நிலத்திலுள்ள துண்டுநிலமெல்லாம்" என்று கண்டிருக்கிறது. மேலே சொன்ன விஷயமாக நிலத்தின் மேலே நிற்கும் கட்டடங்களைப்பற்றி பெந்தகப்பத்திரத்தில் கூறியிருக்கிறது. பால்க்லாண்டு தெருவிலுள்ள மற்றொரு நிலத்தில் விஷயமாக கட்டடம் முதலானவை எழுதப்படவில்லை. அதைப்பற்றி பின்வருமாறு கண்டிருக்கிறது:—

"முதல் ஷெடியூலில் இரண்டாவது விவரிக்கப்பட்டிருக்கும் அசையாப்பொருளும் மேலே குறித்த பகுதிப்பத்திரத்தின் மூலமாகக் கிடைத்ததோட்டத்துக்குள்ளடங்கியவைகளும் பெந்தகக்காரர்களுக்குச் சொந்தமாகிய எல்லா நிலைமைகளும் (அதாவது ஸ்திதிகளும்) ஷெடியூலில் இதைப்பற்றி "புது விக்டோரியா நாடகக்கொட்டகை நிற்கும் நிலமெல்லாம்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

கட்டடம் நிறுத்தப்பட்டவைகளென்று இதில் காணப்படாமலும் முன்னிலத்தில் அவ்விவரம் காணப்பட்டதாலும் பிரதிவாதியின் ஆக்ஷேபணைகளுக்கு ஒரு ஆதாரமிருப்பினும் இவைகளை மற்றவைகளோடு சேர்த்து யோசிக்கவேண்டும் "மாறான கருத்து வெளியிடுத்தப்பட்டு அல்லது அவசியமானமாறான தாற்பரியம் கொள்ளக்கூடியதாயிருந்தாலொழிய ஒரு சொத்தை ஒருவருக்குக் கையடித்தால் கொடுத்தவருக்கிருக்கும் அச்சொத்தோடு செல்லக்கூடிய எல்லாபாத்தியங்களும் வாங்கினவரிடம் போய்ச்சேருகிறது. "அச்சொத்து நிலமாயிருந்தால் அதைச்சேர்ந்த சகலசௌகரியங்களும், நிலப்பகுதிகளும் கொடுபட்ட பிறகு ஏற்படும் லாபமும் நிலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் எல்லா வஸ்துக்களும் அவ்வுபகாரியங்களுக்குள்ளடங்கும்" என்று டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டின் 8-வதுபிரிவில் கூறியிருக்கிறது. இதில் 2-வது பாராப்படி பெந்தகம் வைக்கும்பொழுது நின்ற நாடகக்கொட்டகை "புது விக்டோரியா நாடகக்கொட்டகை" என்னும் பெயருடைய தாய்பூமியோடு இணைக்கப்பட்டிருந்ததால் மாறான தாற்பரியத்துக்கு வெளிப்படையாகவாகிலும் இடமில்லாதிருக்கின் பெந்தகம் வாங்கினவருக்கு கொட்டகையின் மேல்பாத்தியமுண்டாகிறது பெந்தகம் வைத்தபிறகு பெந்தகம் வைத்தவர்கள் இக்கொட்டகையை அழித்துவிட்டு எல்பின்ஸ்டோன் நாடகக்கொட்டகையென்னும்வேறுபுதியகட்டடம்கட்டினார்கள். டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்டு 70-வது பிரிவில் "பெந்தகம் வைத்த சொத்தில் ஏதாவது சேர்க்கப்பட்டால் மாறான உடன்படிக்கையில்லாத பக்ஷத்தில் அவ்வாறுசேர்க்கப்பட்டது பெந்தக ஈட்டுக்காக பெந்தகம் வாங்கினவருக்கு பாத்தியமாகிறது" என்று கூறப்பட்டிருக்கிறது. இதனைப்பற்றிய 2-வது திருஷ்டாந்தத்தில் 'ஏ' என்பவன் 'பி' என்பவனுக்கு ஒரு கட்டடம் கட்டக்கூடிய நிலத்தை பெந்தகம் வைத்துப் பிறகு ஒரு கட்டடம் கட்டுகிறான். பெந்தக ஈட்டின் பலத்துக்காக அந்நிலத்திலும் கட்டடத்திலும் 'பி' என்பவனுக்கு பாத்தியமுண்டு.' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

166627

ஆகையால் நிலத்தின்மேல் நிற்கும் நாடகக்கொட்டகை பெந்தகத்துக்குப் பிறகு கட்டப்பட்டிருந்தும் வேறுவிதமான உடன்படிக்கையில்லாவிட்டால் பெந்தகச்சொத்துக்குள் ளடங்கும். மேலே கூறியபிரிவுக்குள்ளடங்கிய சட்டவிதிகளின் கருத்துவிஷயமாக டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு சுவாதீன நிலத்துக்கும் பகுதிக்குவாங்கின நிலத்துக்கும் ஒரு வித்தியாசமும் ஏற்படுத்தாமலிருப்பதால் பெந்தகச்சொத்து பகுதிக்குவாங்கின நிலமாயிருப்பதை முன்னிட்டு அவ்விதிகளுக்குக்கட்டுப்படாமலிருப்பதில்லை. வித்தியாசமான கருத்து பெந்தகப் பத்திரத்தினால் ஏற்பட்டாலொழிய சொத்துடன்சேர்ந்திருக்கிற எல்லாக்கட்டடங்களும் பெந்தகச்சொத்துக்குள்ளடங்குகிறதினால் பத்திரத்தில் இந்த விவரம் காணவேண்டியதில்லை. இந்தச்சட்டம் இங்கிலீஷ் சட்டத்தைக் இந்தியாவில் விதியாக்குகிறது. பத்திரத்திலிருந்து இதற்கு மாறான கருத்து கொள்ளலாமாவென்பதைப்பற்றி கவனிக்கவேண்டும். முதலிற்சொல்லிய சொத்தில்கட்டடத்தை சேர்த்து சொல்லியும் இத்தாவரசொத்து விஷயசொத்தில அதைக்குறித்துச்சொல்லாமலிருப்பதே நாடகக்கொட்டகை பெந்தகத்தில்சேரவில்லையென்று பிரதிவாதிகள் வாதித்தார்கள். இது விஷயமாக யோசிக்கும்பொழுது "பாஜிபாலாத்தெருவில்" உள்ள கட்டடமும் நிலமும் பெந்தகம் வைத்தவர்களுக்கு சொந்தமானது. தாவா சொத்தைச் சில வருஷங்களுக்கு பகுதிக்குவாங்கி அதில் நாடகக்கொட்டகை கட்டியிருக்கிறார்கள். இதற்காகவே அந்நிலம் பகுதிக்கு வாங்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அப்படியே அது முதற்கொண்டு உபயோகிக்கப்பட்டு வருகிறது. அந்நிலத்தில் "பழைய விக்டோரியா நாடகக்கொட்டகை" என்று பெயருடைய ஒரு கொட்டகை நாடகத்துக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது என்று 2-வது பிரதிவாதி தன் வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். பிறகு "புது விக்டோரியா நாடகக்கொட்டகை" என்று பெயருள்ள கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அது முதற்கொண்டு அக்கட்டடம் விரிவாகக்கட்டப்பட்டு "எல்பின்ஸ்டோன் நாடகக்கொட்டகை என்னும் பெயரிட்டிருக்கிறது. பெந்தகம்வைத்தவர்கள் அந்நிலத்தில் நாடகத்துக்காக உபயோகப்படும்படியாய் கட்டடம் கட்டிக்கொள்ளும் பாத்தியமுடையவர்களேயல்லாமல் வேறு பாத்தியமில்லை. சாஸ்வதமல்லாத அப்போதைக்கப்போது பகுதிக்கு வாங்கினவர்களின் சௌகரியத்துக்குத்தக்கபடி கட்டடம் கட்டிக்கொள்வதே அவர்கள் பாத்தியமென்று அந்நிலத்தை தொடர்ச்சியாக உபயோகப்படுத்தினதிலிருந்து தெரியவருகிறது. ஆகையால் பெந்தகப்பத்திரத்தில் கட்டடத்தைக் குறிப்பிடவேண்டியதில்லை. பெந்தகம்வைத்தவர்களின் பாத்தியத்தைக்காண்பிக்க அக்கட்டடம் பெந்தகம் வைத்த நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அந்நிலத்தில் கட்டடம் கட்டிக்கொள்வதே அப்பாத்தியமாகவிருக்கின்றது. அன்றியும், இச்சொத்து விஷயமாக பெந்தகப்பத்திரத்தில் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள் "ஷெடியூலில் சொல்லியிருக்கும் அசையாப்பொருளும் நிலமும் அதைச் சேர்ந்ததும் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள எல்லாஸ்திதியும்" என்பனவைகளே. "சேர்ந்தது" என்பதற்கு அர்த்தம். "அதை வியாபித்திருக்கும்" என்று பல தீர்மானங்களிற் சொல்லியிருக்கிறது. அதனால் அதிலுள்ள கட்டடத்தையுங்குறிக்கும். அந்நிலத்தில் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள எல்லாஸ்திதியும் (நிலைமையும்) என்றால் அக்கட்டடமும் அந்த ஸ்திதிக்குடங்கும் கட்டடம் முதலிய வார்த்தைகள் இப்பத்திரத்தில் எழுதப்படாமலிருப்பதற்குக் காரணம் நன்றாய் விளங்குகிறது. சொத்தோ பகுதிக்கு வாங்கினது நிலம். அதை ஒரு விதமாய் அனுபவிக்கவேண்டியது. அதிலிருக்கும் கட்டடம் அனுபவிக்கும் விதத்தைக் காட்டுகிறது. இவ்வளவுதான் பெந்தகம் வைத்தவர்களுக்கு அங்குள்ள ஸ்திதி. ஒருக்கால் ஒரு நிலத்து[illegible] சொந்தக்காரர் அந்நிலத்தை வேறொருவனுக்கு [illegible] ஏற்றுமதிக்கு உபயோகித்துக்கொள்ள அ[illegible]கொடுத்து திரும்ப மீட்டுக்கொள்ளும் விதமாக பகுதிக்கு விட்டார். அதில் அனுமதி பெற்றவர் ஒரு சார்பு கட்ட சொந்தக்காரர் இடங் கொடுத்தார். அவ்வாறு இடங்கொடுத்தது அனுமதியை மீட்குந் தன்மையுடையதல்ல. அனுமதி பெற்றவருக்கு அந்நிலத்தில் ஒரு ஸ்திதி அல்லது பாத்தியம் ஏற்பட்டது. மேலே கூறியது ஒரு தீர்ப்பில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பாத்தியத்தை ஒரு ஸ்திதி என்றால் பகுதிக்கு வாங்கினவர் அந்நிலத்தில் ஒரு குறித்த காலத்துக்கு ஒரு கட்டடம் கட்டி அனுபவித்து வருகிறதையும் அதைப்போல் ஒரு ஸ்திதி என்று சொல்லலாம் அவ்விதம் கட்டடம் கட்டும் பாத்தியமே பகுதிக்கு வாங்கினவனுக்கிருக்கும் ஸ்திதி. ஆகையால் "கட்டடம்" என்று பெந்தகப் பத்திரத்தில் காணப்படவில்லையென்ற வாதத்துக்கு இங்கு சொல்லியவைகள் போதுமான சமாதானமாயிருக்கிறது. 554 நெ. இன் தீர்ப்பில் சொன்னதைப்பார்க்கிலும் இங்கு விரிவாகப் பேசப்பட்டதேனெனில் அந்த நம்பரில் சில முக்கியமான விஷயம் கோர்ட்டாருக்குத் தெரிவிக்கப்படாமலிருந்ததாக எதிர் கட்சி இப்பொழுது சொன்னார்கள். ஆகையால் இதனைப்பற்றி விரிவாகச்சொல்ல நேரிட்டது. பெந்தகப் பத்திரம் பிறப்பதற்கு முன்பு "புது விக்டோரியா நாடகக் கொட்டகை"யின் பிளானை பாங்கியார் வாப்சு செய்துவிட்டு மற்ற தஸ்தாவேஜிகளைத் தங்களிடம் வைத்துக்கொண்டார்கள். என்று சாட்சி விடப்பட்டது: இதனால் பெந்தகத்தில் சேர்ந்ததல்லவென்று கட்சி சொன்னார்கள். பிளானைத்திரும்பக்கொடுத்து விட்டதினால் இக்கட்சிக்கு பலமில்லை. பெந்தகபத்திரத்தில் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள ஸ்திதி என்று கண்டிருப்பது போதுமானது. அடிக்கடி புதிது புதிதாகக் கட்டடம் கட்டும் பாத்தியமிருக்கும்பொழுது அழிக்கக்கூடிய கட்டடத்தின் பிளானை வைத்திருப்பதில் ஒரு பலனுமில்லை. மூன்றாவது இஷ்யூவும் வாதிகள் பக்கம் அனுகூலமாகத் தீர்மானிக்கப்பட்டது.

2-வது பிரதிவாதியாகிய "டுவார்க்கதாஸ் தாரம்சே"க்கு பாங்கிக்காரர் பராதீனம் பண்ணினார்களா? இந்த டுவார்க்கதாஸ் உண்மையாகக் கிரயம் வாங்கினவரா அல்ல பாங்கியில் டைரக்டராகிய "ஆமத்பாய் ஹாபிபாயி"க்குப் பதிலாக இவர் பேரால் பெயர்வலாக வாங்கப்பட்டதா? குடி ஆமத்பாய் கட்சிக்காரராக வரவேண்டியதில்லையா என்கின்ற நான்காவது இஷ்யூவைப்பற்றி யோசிக்கவேண்டும். 1906௵ ஜனவரி௴ 14௳ பிறந்த பத்திரத்தினால் "டுவார்க்கதாஸ் தாரம்சே"க்கு பெந்தகம் கிரயமாகி யிருக்கிறது. நாஷனல் பாங்கியிலிருந்து தனக்கு வரவேண்டியதாயிருந்த தொகைக்கு செக்குக் கொடுத்து பம்பாய் பாங்கிக்கு பணம் செலுத்தினதாக ருஜுபண்ணினார். அவரிடமிருந்த பாஸ் புக்கோடு இந்த ருஜு ஒத்திருக்கிறது. அவருடைய சொந்த பணத்திலிருந்து பம்பாய் பாங்கிக்குச் செலுத்தியிருக்கிறதாகத் தெரிகிறது. ஆமத் பாயிக்காக "டுவார்க்கதாஸ்" பேருக்குபராதீனம் பண்ணியிருக்கிறதாக சொல்லுகிறதற்குண்டான காரணம் என்னவென்றால் "ஆமத்பாயி" பம்பாய் பாங்கியின் டைரக்டர் பெந்தகத்தைக் கிரயம் பண்ணி விடப்போகிற சமாச்சாரம் தெரிந்தவர். 2-வது பிரதிவாதி, தான் வாங்கிக்கொள்ளுகிறதாக பாங்கிக்காரரைக் கேட்டார். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. "ரெடி மணி" என்னும் வேறொருவரும் அவ்வாறு கேட்டும் அதற்கும் பாங்கிக்காரர் ஒப்புக்கொள்

ளவில்லை. "டுவார்க்க தாஸ்தாரம்சே" பாங்கிக்கு 42000 ரூ க்கு வாங்கிக்கொள்ளுகிறதாக 1903௵ நவம்பர்௴ 24௳ ஒரு லெட்டர் எழுதிக்கேட்டார். இத்தொகை மற்ற இருவர் கேட்ட தொகைக்கும் குறைந்திருந்தது. ஷை மாசம் 27௳ டுவார்க்கதாஸ் எழுதின தொகைக்கு பெந்தகத்தை விட்டு விடுகிறதாக் பாங்கிக்காரர் ஒப்புக்கொண்டார்கள்.

அதிகமாகக் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்ட இருவருக்கும் கொடுக்காமல் 52000 பெந்தகத்தை ரூ 42000-க்கு 2-வது வாதியாகிய "டுவாக்கதாஸுக்கு" எழுதிக்கொடுத்து விட்டார்கள். 'ரெடி மணி" கேட்ட உடனே 2-வது வாதி கேட்டிருக்கிறார். வழக்கமாக வேலையின் மேல் போகிறதுபோல ஒரு நாள் பாங்கிக்குப் போனபொழுது பாங்கிக்காரர் பெந்தகத்தை விற்கிற விஷயத்தைக் கேள்விப்பட்டதாக டுவார்க்கதாஸ் ஒப்புக்கொள்ளுகிறார். பாங்கியில் தனக்குச் சமாச்சாரம் சொன்னவரைச் சொல்லக்கூடியவராக வில்லை. பிறகு ஆமத்பாயியின் மருமகனாகிய அப்துல்லா ஹுஸேன் என்பவரை இவர் கேட்டபோது 42000-ரூ க்கு விட்டுவிடுவார்களென்பதாகவும் "ரெடி மணி" என்பவரும் வாங்கிக்கொள்ளுகிறதாக பாங்கிக்காரரைக் கேட்டிருக்கிறதாகவும் சொன்னாரென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். 2-வது வாதி இவைகளையெல்லாம் அப்துல்லா என்பவரிடம் கேட்டுத் தெளிந்து கொண்டிருக்கிறார். 2-வது வாதி பெந்தகச்சொத்து விஷயமாக ஏற்பட்ட தஸ்தாவேஜிகளை வாங்குவதற்குமுன் பார்வையிட வில்லை. பம்பாய் பாங்கியின் வேலைத்திறமையில் நம்பிக்கை வைத்து கண் மூடித்தனமாய் வாங்கினேனென்று அவர் சொன்னார். வாங்கின பிறகு கூடி பெந்தகப் பத்திரத்தை யாவது அதோடு கூட இருக்கும் பிளான்களையாவது பார்த்ததுமில்லை. வாங்குவதற்குமுன் 25000 ரூ க்கு ஆமத்பாயியோடு "உண்டி" -லேவாதேவிபண்ணியிருந்ததுண்டு. 2-வது வாதியினால் எண்டார்சு பண்ணப்பட்ட சில உண்டிகளை ஆமத்பாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார். வாங்கினபிறகும் ஆமத்பாயியோடு அநேக லேவதேவி செய்து உண்டிகளை ஆமத்பாயி எண்டார்சு பண்ணியிருக்கிறார். பெந்தகம் வாங்கின சமையத்தில் ரூ 55000 ஆமத்பாயிக்கு 2-வது வாதி கடன் கொடுக்கவேண்டியதிருந்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

2-வது வாதியின் வாக்குமூலத்தைக் கொண்டு மேலே கூறிய சமாசாரங்கள் பொறுக்கிச் சேர்க்கப்பட்டது. இதனால் 2-வது வாதிக்குக் கடன் கொடுத்தவராகிய ஆமத்பாய் சொன்னபடி 2-வது வாதி நடத்தியிருக்கிறாரென்றும் ஆமத்பாயி பாங்கியின் டைரக்டராயிருப்பதை முன்னிட்டு பெந்தகத்தை வாங்கக்கூடாதவராயிருப்பதால் 2-வது வாதியைக் காட்டி அவருக்கு ஆகவேண்டிய சங்கதிகளைச் சொல்லிக்கொடுத்து தனக்காக அவர் பெயரால் வாங்கியிருக்கிறாரென்றும் கோர்ட்டார் அறிந்துகொள்ளலாமென்றும் பிரதிவாதிகள் வாதித்தார்கள்.

சந்தேகிக்க இடமிருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டியது: 2-வது பிரதிவாயும் ரெடிமணியுங் கேட்டபோது பாங்கிக்காரர் ஒப்புக்கொள்ளாததற்குக் காரணந் தெரியவில்லை. ஆமத்பாயிடம் இது விஷயமாக யாதொரு சம்பாஷணையுஞ் செய்ததில்லையென்பது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் அவருடைய மருமகனிடமிருந்து சங்கதி யறிந்திருக்கிற விஷயம் ஒன்றிருக்கிறது. அவர் மருமகன் யாரிடமிருந்து இவ்விவரம் தெரிந்திருப்பார் என்னும் சங்கை யொன்றிருக்கிறது. பெந்தகம் வாங்கின சமையத்தில் ஆமத்பாயிக்கு கடன் கொடுக்கவேண்டியதாயிருந்த விஷயம் ஒன்றிருக்கிறது. இவைகள் எவ்வளவு சந்தேகத்துக்கிடமாயிருந்தாலும் பாங்கிக்காரர் 2-வது பிரதிவாதிகள் நேரில் பிராதினை செய்திருக்கிறதாலும் நேஷனல் பாங்கியில் தனக்குச் சொந்தமாய்ப் போட்டிருந்த தொகையைக் கொண்டு தான் வாங்கினதற்கு ரூடு செய்திருப்பதாலும் சந்தேகத்தைக்கொண்டு ஆமத்பாயிக்கு பதிலாக பேரிரவலாகத் தன் பேரால் வாங்கியிருக்கிறாரென்று எண்ணக்கூடாது. ஆமத்பாயியால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் பாங்கிக்கு 42000 அல்லது 40000 ரூ கொடுக்க தான் காஷ்புக்கில் தொகை யில்லையென்றும் எதிரிகளின் வக்கீல் ஆக்ஷேபித்தார். ஆனால் 2-வது வாதி அச்சமையத்தில் நாஷனல் பாங்கிக்கு பெருந் தொகைகளை அனுப்பி தன் பெயருக்கு கணக்கெழுதப்பட்டிருக்கிறதாக ருஜுப்படுத்தினார். பாங்கிக்கு அனுப்பப்பட்டதால் இத்தொகையை, தன் தினசரி வரவு செலவு கணக்கில் கொண்டு வரவில்லையென்று சமாதானங் கூறினார். "இம்மாதிரியான சந்தர்பத்தில், கோர்ட்டார் செய்யுந் தீர்மானம், சந்தேகத்தைக் காரணமாக வைத்து ஏற்படக்கூடாது. ஆனால் சட்டத்துக்குரிய சாட்சியங்களால் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட ஆதாரமான காரணங்களை முன்னிட்டு தீர்மானஞ்செய்யவேண்டுமென்று 11-மூர் இந்தியன் அப்பீல் 28-(44-வது பக்கத்தில்), பிரிவி கௌன்சிலால் கூறப்பட்டிருக்கிறது. மேலே எடுத்துக்காட்டிய கேசில் பேரிரவலாக் வாங்கப்பட்டிருக்கிறதென்று எதிர் கட்சியால் வாதிக்கப்படுகிறதை ஏவ்வாறு வாங்கப்பட்டதென்பதற்சத்தகுந்தகாரணங்கூறக் கூடாமையினால் அல்லது சில பாகத்தில் பொய்யானகணக்கு கொடுத்திருக்கிறதினால் பேரிரவலாகத் தான் வாங்கப்பட்டிருக்கிறதென்று செய்த தீர்மானத்தின்மேல்பிரிவி கௌன்சிலார் சொல்லுகிறதாவது: "அப்பீல் வாதிக்கு பணங்கிடைத்த வழிக்கு திருப்திகரமில்லாதகணக்கு சொல்லியது அதிக ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் சொத்தை வாங்கினவர் எவ்வாறு வாங்கினாரென்று கணக்குக்கொடுக்க பிரியப்பட்டிருக்கவாட்டார் என்று விசாரணை நடத்திய விதத்தினால் தெரிகிறது. இச்சந்தர்ப்பம் ஒரு சந்தேகத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருந்தாலும் அப்பீல் வாதி வாங்கின சொத்து வேறொருவருக்கு டிரஸ்டியாக இருந்து வாங்கினதாக எண்ணங்கொள்ளக்கூடியதான அப்போக்கொத்த சங்கதியல்ல" என்று கூறிப்பிறகு, "இச்சந்தர்ப்பங்களைக்கொண்டு யூகிக்கும் சூசனையினால் சொத்துக்களை உடையவர்களிட மிருந்து பிரித்துவிடுவோமானால், எந்தச்சொத்தும் காப்பந்தாயிருக்குமென்பது அசாத்தியம்" என்று பிரிவிகௌன்சிலில் கூறியிருக்கிறார்கள். ஆகையால் 4-(a), 4-(b) இஷ்யூக்கள் விஷயமாக, 2-வது வாதியாகிய டுவார்க்தாஸ் தாரப்" எல்பின்ஸ்டோன் நாடகக் கொட்டகையுள்படதாவா சொத்தில் ஒரு பாத்தியதையடைந்து உண்மையாகவே வாங்கினவரென்று வாதி பக்கம் முடிவு பண்ணப்பட்டது.

வாதி அச்சொத்தை ஒப்படைத்தபோதும் வியாச்சியங்கொண்டு வந்தபோதும் பகுதி முடிவுபெற்று புதுபகுதி பத்திரம் ஏற்படாமலிருந்தால் 12-பிரதிவாதிகளை பகுதிச்சொத்திலிருந்து அப்புறப்படுத்தலாமாவென்பதைப்பற்றி யோசிக்கவேண்டியது. 2-வது பிரதிவாதியால் 1888-௵ ஜூலை௴ 15௳யி லிருந்து 15-வருஷத்துக்கு பகுதிக்கு 1892௵ அக்டோபர்௴ 14௳யில் வாங்கப்பட்டது. ஆகையால் 1903௵ ஜூலை௴ 15௳ முடிவுபெற்றது. இன்னம் 10-வருஷத்திற்கு திரும்ப புதுப்பித்துக்கொள்ளுகிறதென்று அப்பத்திரத்தில் உடன்படிக்கை கண்டிருக்கிறது. அவ்வுடன்படிக்கை நிலத்தோடு செல்லக்கூடியது.

(அதாவது நிலம் யார் வசமாகிறதோ அவர் வசம் போகிறது) என்று தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அன்றியும் பெந்தகப்பத்திரத்தில் பெந்தகம் வைத்தவர்கள் பகுதிப்பத்திரத்தை புதுப்பித்துக்கொடுக்காவிட்டால், பெந்தகம் வாங்கினவர்கள் புதுப்பித்துக்கொள்ளுகிறதென்று கண்டெழுதி யிருக்கிறது. இன்னமும் பெந்தகம்வைத்தவர்கள் கெடுவுக்குள் கேட்கப் பணங்கொடுக்காத பட்சத்தில் சொத்தை பெந்தகம் வைத்தவர்கள் சுவாதீனப்படுத்திக் கொள்ளுகிறதென்றும் பெந்தகப்பத்திரத்தில் கண்டிருக்கிறது. அவ்வாறே பாங்கிக்காரர் பணத்தை 1906-௵ செப்டெம்பர்௴ 3௳ கேட்டனுப்பி யிருக்கிறார்கள். பெந்தகம் வைத்தவர்களும் அவர்கள் மூலமாக பாத்தியங் கொண்டாடுகிறவர்களும நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து பகுதிப் பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ளாததால் தாங்களே அந்நிலத்தை வைத்துக் கொள்ளவேண்டுமென்று பெந்தகம் வைத்தவர்கள் சொல்லக்கூடாது. இவ்வாட்சேபனையை நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் சொல்லலாம். பெந்தகம் வைத்தவர்களுக்கும் வாங்கினவருக்கும் பெந்தகப் பத்திரத்தின் ஷரத்து கட்டுப்படுத்தும். பழைய பகுதிக் கெடுவு முடிந்தாலும் பெந்தகம் வைத்தவர்கள் அந்நிலத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள பாத்தியமுடையவர்கள் அப்படி வைத்துக்கொள்வது அயோக்கியதையால் கைவசப்படுத்தின தாகாது. பெந்தகம் வைத்தவர்கள் அப்பகுதியை புதுப்பித்துக்கொண்டால் அதுவும் பெந்தகம் வாங்கினவர்கள் நலத்துக்காகும். ஆகையால் பெந்தகம் வாங்கினவர்கள் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்வது புதுப்பிக்காவிட்டாலும், புதுப்பித்துக்கொடுக்க அடைந்ததாக பாவிக்கப்படவேண்டும்.

2-வது பிரதி வாதி யிடமிருந்து 1903-௵ டிசம்பர்௴ 2௳ முதல் பிரதி வாதி கீழ்க்குத்தகை வாங்கியிருக்கிறதாகச்சொல்லுகிறார். வியாச்சியம் நடவடிக்கையிலிருக்கும் பொழுது குத்தகைக்கு வாங்கினது செல்லாது. இக்குத்தகைகூட மோசடியானது. பெந்தகம் வாங்கினவர்களின் பாத்தியத்தை கெடுக்கிறதற்காகச்செய்யப்பட்டதென்று வாதிகள் பக்கத்தில் கட்சி சொன்னார்கள். இக்குத்தகை 3-வருஷக்கெடுவுக்கு ஏற்பட்டது. ஆனால் முந்தின குத்தகைகள் குறைந்த கெடுவுக்கு ஏற்பட்டிருந்தது. இக்குத்தகைக்குப்பிறகு முதல் பிரதிவாதி 2-வது பிரதி வாதிக்கு ஒரு அதிகாரப்பத்திரங்கொடுக்க குத்தகைகொடுத்தவராகிய 2-வது பிரதி வாதி வாடகையை வசூல் பண்ணி வரிசெலுத்திக்கொண்டு வந்திருக்கிறார். பெந்தகத்தை வாங்கிக்கொள்ளுகிறதாக 2-வது பிரதி வாதி பாங்கிக்காரரைகேட்டு அவர்கள் மறுத்த பிறகு கீழ்குத்தகை கொடுத்ததையோசிக்கும் பட்சத்தில் சந்தேகத்திற்கு ஆஸ்பதமாயிருக்கிறது. இக்கீழ்க்குத்தகை புரட்டானதல்லவென்று 2-வது பிரதி வாதி சாட்சியாக வந்து கூறுமலிருந்தாலும், இது மோசம்-புரட்டென்று சாட்சியம் உறுதியாயுந்தெளிவாகவும் ஏற்படவில்லை. இதைப்பற்றி விரிவாகயோசிக்கவேண்டிய தில்லை. இக்கீழ்க் குத்தகை நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென்று நினைத்தாலும், பெந்தகம் வைத்தவனும் அவன் மூலியமாக பாத்தியம் கொண்டாடுகிறவனும் பெந்தகம் வாங்கினவன் அச்சொத்திற் பிரவேசிக்கிறவரையில் அவர்கள் பாத்தியம் நிச்சய மில்லாமல் பெந்தகம் வாங்கினவனின் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது. பெந்தகம் வைத்தவன் பெந்தகம் வாங்கின வனுடைய அனுமதியில்லாமல் குத்தகைக்கு விட்டால் (அக்குத்தகை நியாயமான உடன்படிக்கையினால் சுவாதீனப் படுத்தி யிருந்தாலும் அல்லது மரணசாதனத்தினால் கிடைக்கப்பெற்றாலும் குத்தகைகொடுத்தவனையும் குத்தகை எடுத்தவனையும் கட்டுப்படுத்தினாலும்) மேம்பட்ட பாத்தியமுடைய பெந்தகம் வாங்கினவனின் பாத்தியத்துக்கு கீழாகவே கொள்ளப்படும். இவ்வபிப்பிராயம் சில தீர்மானங்களில் சொல்லப்பட்டிருப்பதால், முதல் பிரதிவாதியின் கீழ்க்குத்தகை வாதியைக்கட்டுப்படுத்தாது. ஆனால் இவ்வாறு கீழ்க்குத்தகை கொடுக்க பாங்கிக்காரர் இடங்கொடுத்து அச்சொத்தை அவர்கள் உபயோகித்து வரும் வழக்கமான பாத்தியத்தைக்காண்பிக்கிறதென்றும் ஆகையால் 2-வது பிரதிவாதி பாங்கியின் ஏஜெண்டாக நடத்தினதாகுமென்றும் அல்லது அப்பாங்கியின்சம்மதத்தின் மேல்நடத்தினதாகுமென்றும் இதனால் நல்லஎண்ணத்துடன் நடத்தின கீழ்க்குத்தகையாகும் என்று கட்சி சொன்னார்கள். பெந்தகப்பத்திரத்தின் ஷரத்துக்குள்ள தங்கள் பாத்தியத்தை யிழந்துவிடும் படியாக கீழ்க்குத்தகை விட 2-வது பிரதி வாதியை ஏஜண்டாக நடத்தவாவது பாங்கிக்காரர் அனுமதி பெற்று நடத்தினதாகவாவது ஒரு சாக்ஷியமும் தோன்றவில்லை. 2-வது பிரதிவாதி வசத்தில் நிலத்தை அனுபவிக்க விட்டதால் இம்மாதிரி துணிவு கொள்ளக்கூடாது. பெந்தகப் பத்திரத்து ஷரத்துப்படி விட்டிருந்ததாகும். பணங் கேட்டு,கொடுக்கத்தவறினால் பாங்கிக்காரர் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளலாமென்பதை பெந்தகப் பத்திரம் ரிஜிஸ்டராகியிருப்பதால் முதல் பிரதி வாதி அறிந்திருக்கிறார். இ. லா. ரி. 26 சென். 792 இல் "ரெயில்ஹட்ஸ் ஆஷபி அண்டு சன் லிமிட்டெட்"கேசில்பெந்தகம் வாங்கினவர் பெந்தகம் கொடுத்தவரை அனுபவிக்க இடங் கொடுத்திருந்தால் எதுவுஞ் செய்து சொத்தை பாகிக்க பொது அதிகாரம் கொடுத்ததாக அர்த்தம்பண்ணுவது அதிக அபாயகரமானது. மற்ற இஷ்யூக்களும் இவ்வாறு தீர்ப்புசொல்லப்பட்டது.

ரூஸிங்ஸ் சோர்ஜி என்பவர் தன் சொத்தை 4-பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுத்து. இவர்கள் மற்ற நாலுபிள்ளைகளுக்கு 6-வருஷக்கெடுவில் 30000ரூபா கொடுக்கும் படியாய் உயில் எழுதிவைத்தார். முந்திய நாலுபிள்ளைகளும் பம்பாய் பாங்கிக்காரரிடம் பந்தகம் வைத்தார்கள் அவர்கள் பெந்தகப்பத்திர ஷரத்துப்படி பணங்கேட்டுக்கொடுக்காததால் அச்சொத்தைக் கிரயம்பண்ண ஆரம்பித்தார்கள். மற்ற நாலுகுமாரர்களும் தங்களுக்கு பணங்கொடுக்கவேண்டியிருக்கிறதைத் தெரிவித்து அத்தொகைக்குக் கட்டுப்படுத்த கிரயம் பண்ணும்படி நோட்டீஸ் கொடுத்தற்கு பாங்கிக்காரர் ஒப்புக்கொள்ளாததால் பிராதுபண்ணின பொழுது கோர்ட்டார் ரிசீவரை நியமித்து எவர்களையுஞ் அச்சொத்தை அனுபவிக்கிறதிலிருந்து நீக்க வியாச்சியஞ் செய்ய அதிகாரமும் கொடுத்தார்கள். ரிசீவர் பாங்கிக்காரரிடம் சொத்தை விலைக்கு வாங்கின "டுவார்காதாஸ் தாரம் சே" என்பவரைச் சேர்த்துக் கொண்டு சொத்தின் ஒருபாகத்தில் கட்டியிருந்த நாடகக் கொட்டகையை கீழ்க்குத்தகைக்கு வாங்கின ஒருவரை அனுபவத்திலிருந்து விலக்க அவருக்குக் குத்தகைகொடுத்த பெந்தகம் வைத்தவர்களில் ஒருவரைகூடச் சேர்த்து பிராது செய்தார். பிறகு ரிசீவரை நியமித்த வியாச்சியம் முடிவானதால் ரிசீவர் வேலை முடிவுக்கு வந்து விட்டது.

I. பாங்கி அல்லது அதனால் ஒப்படைக்கப்பட்ட டுவார்க்கதாஸ் சி. பு. கோ. 372-வது பிரிவுப்படி வியாச்சியத்தை நடத்த பாத்தியமுடையவர். இவர்களில் ஒருவரால் வியாச்சியத்தை நடத்திக்கொண்டு போக மனுசெய்துக் கொள்ளலாம்; டுவார்க்கதாஸ் ஏற்கனவே வாதியா யிருப்பதால் அம்மனு செய்ய வேண்டியதில்லை, டுவார்க்கதாஸை ரிசீவரோடு வாதியாகச் சேர்த்தது நியாய மாகாவிட்டாலும் அது வேற்றுமை வாதிச் சேர்க்கை யாகாது என்றும்,

II. பெந்தகப்பத்திரம் எழுதிக்கொடுத்தபிறகு பெந்தக நிலத்தில் கட்டப்பட்ட நாடகக் கொட்டகை மாறுன உடன்படிக்கை யில்லாத பொழுது பெந்தகத்துக் குள்ளாகுமென்றும்.

(டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டின் ஆக்டின் 8-வது 70-வது பிரிவில் சொல்லியிருக்கும் விதிகள் சொந்த நிலத்துக்கும் பகுதி நிலத்துக்கும் வேறுபாடில்லாமல் பொருத்தமுள்ளது. இந்தவிஷயத்தில் இங்கிலீஷ் சட்டத்தையே இந்தியாவிலும் ஏற்படுத்துகிறது. அதாவது பெந்தகம் வைத்த சொத்துக்கு சேர்ந்திருக்கிறவைகளெல்லாம் பெந்தகத்துக்குள் ளாகுமென்பதே ஆகையால் பத்திரத்தில் கட்டடங்கள் முதலானவைகளைக் காணவேண்டியதில்லை. மாறுக எண்ண இடமில்லாதபட்சத்தில)

III. பெந்தகம் வைத்தவன்வசம் சொத்திருக்கும் பொழுது பெந்தகம் பெற்றவன் அனுமதியில்லாமல் ஒருவர் குத்தகைவாங்கினல் நிச்சயமில்லாத பாத்தியமுடைய வராவார். குத்தகைகொடுத்தவரும் எடுத்தவரும் கட்டுப்பட்டவர்களானுலும் மேலான பாத்தியமுடையராவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 30. பம். 250.

N. C. Macleod v. Kissan, I. L. R. 30. Bomp 250.

பிரிவி கௌன்சில் அப்பீல்,

பம்பாய் ஹைகோர்ட்டுத் தீர்ப்பின் மேலான அப்பீல்,

ஏடென் பட்டணத்தில் பொலிட்டிகல் ரெசிடெண்டு கோர்ட்டிலுள்ள வியாச்சியத்தை மாற்ற பம்பாய் ஹைகோர்ட்டுக்குள்ள அதிகாரம்.

இஸ்மேபல்ஹாஜி ஆ.வாதிகள் (அப்பீல் பிரதிவாதிகள்) ஏடென் முனிசிபல் ஆபீசர் பிரதிவாதி (அப்பீல் வாதி)

வியாச்சிய சங்கிரகம்.

ஏடென்பட்டணத்திலுள்ள பொலிட்டிக்கல் ரெசிடெண்டு கோர்ட்டில் வாதிகள் பிரதிவாதியின்மேல் ஒரு தாவாசெய்து பிறகு அக்கேசை பம்பாய் கோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ள பம்பாய் ஹைகோர்ட்டுக்கு மனுசெய்துக்கொண்டார்கள். அம்மனுவை ஹைகோர்ட்டார் ஏற்றுக்கொண்டு 1865-ௗ டிசம்பர்ீ 28ௗ பிறந்த லெட்டர்ஸ் பேட்டெண்டு 13-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் அவ்வியாச்சியத்தை தங்கள் கோர்ட்டுக்கு வரவழைத்து விசாரணை பண்ணி முடிவு செய்தார்கள்.

இவ்வாறு தங்கள் கோர்ட்டுக்கு அக்கேசை வரவழைத்துக்கொள்வதற்கு ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை யென்று, பிரிவிகௌன்சிலுக்கு வாதி அப்பீல் பண்ணினர்.

அப்பீல் வாதியின் வாதம்.—1865-ௗ லெட்டர்ஸ் பேட்டெண்டு 16-வது பிரிவுப்படியாவது 24, 25-விக்டோரியா 104-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் சூர்ட்டர் ஆக்டு 15-வது பிரிவுப்படியாவது தங்கள் மேல் விசாரணைக்குள்ளாகாத ஏடென் ரெசிடெண்டு கோர்ட்டிலுள்ள கேசை தங்கள் கோர்ட்டுக்கு மாற்றிகொள்ள பம்பாய் ஹைகோர்ட்டாருக்கதிகாரமில்லை. 1864-ௗ ஏடென் கோர்ட்டு ஆக்டுப்படி ஹைகோர்ட்டாருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மேல் விசாரணை அதிகாரம் மேல் கூறிய பிரிவுகளால் குறைக்கப்பட்டு ஓர் வரையறை ஏற்படுத்தப் பட்டிருப்பதால் அம் மேல்விசாரணை யதிகாரம் ஹைகோர்ட்டாருக்கில்லை. சூர்ட்டர் ஆக்டு 15-வது பிரிவுப்படி அப்பீல் அதிகாரம் ஒரு கோர்ட்டின்மேல் ஹைகோர்ட்டிற் கிருந்தால்தான், மேல் விசாரணையதிகாரம் உள்ளதாக எண்ணப்படும். அம்மேல் விசாரணை யதிகாரத்துக்குள்பட்ட கோர்ட்டுகளில் விசாரணையாகும் கேசுகளை தங்கள் கோர்ட்டுக்கு வரவழைத்துக்கொள்ளும் அதிகாரத்தைக்கொடுக்கும்லெட்டர்ஸ்பேட்டெண்டு 13-வது பிரிவுடன் மேற்கூறிய பிரிவைச் சேர்த்து வாசிக்கவேண்டும். ஆனல் 1864-ௗ ஆக்டு 8-வது பிரிவுப்படி ஏடென் ரெசிடெண்டு கோர்ட்டின் மேல் கோர்ட்டுக்கு ஆப்பீல் அதிகாரமில்லை. ஏடன் கோர்ட்டிலுள்ள இக்கேசை தங்கள் கோர்ட்டுக் மாற்றிக் கொள்ளும் லெட்டர்ஸ் பேட்டெண்டு13-வது பிரிவில் "அப்பீல் அதிகாரம்" என்ற நிபந்தனை அடங்கியிருக்கிறதாக தாற்பரியங்கொண்டு இவ்வப்பீல் அதிகாரமிருந்தால் இவ்வாறு செய்யலாம். சூர்ட்டர் ஆக்டின் 15-வது பிரிவின் மற்ற விஷயங்கள் 1865-ௗ ஆக்டினல் ஹைகோர்ட்டுக்கு அமைக்கப்பட்டிருந்தாலும், கேசை மாற்றிக்கொள்ளும்படியான அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இவ்வதிகாரம்வேண்டுமென்றே நீக்கப்பட்டிருக்கிறதாகத் அணிவுகொள்ளவேண்டும். ஏடென் கோர்ட்டின் மேல், ஹைகோர்ட்டுக்குள்ள மேல்விசாரணை யதிகாரம் அக்கோர்ட்டின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்குரியதே யல்லாமல் நியாய முறைமைக்குரியதல்ல. மோல்மியான் (மோர்மான்) கோர்ட்டின்மேல் கல்கத்தா ஹைகோர்ட்டுக்கும் இவ்வதிகாரம் உண்டு. ஆகையால் பம்பாய் ஹைகோர்ட்டார் செய்த வுத்தரவை ரத்துசெய்யவேண்டுமென்று அப்பீல் வாதி கேட்டுக்கொண்டார்.

பிரிவிக் கௌன்சில் தீர்மானம்:—ஏடெனிலுள்ள சில நிலத்தைப்பற்றிய வியாச்சியத்தின்மேல் இந்த அப்பீல் கொடுக்கப்பட்டது. அங்குள்ள ரெசிடெண்டு கோர்ட்டில் இந்தத்தாவா நியாயமாகக்கொண்டு வரப்பட்டது. பம்பாய் ஹைகோர்ட்டார் இந்தக் கேசை முடிவுசெய்ய தங்கள் கோர்ட்டுக்கு வரவழைக்கும்படியாக உத்திரவுசெய்தார்கள்.

1865-ௗ லெட்டர்ஸ் பேட்டெண்டு 13-வது பிரிவுப்படி அதிகார மிருக்கிறதாக ஹைகோர்ட்டார் இவ்வுத்தரவு செய்தார்கள். பம்பாய் ஹைகோர்ட்டாருக்கு யுத்தமாகத் தோன்றும் பட்சத்தில் கட்சிக்கள் ஒத்துக்கொண்டார்கள். நியாயத்தை முன்னிட்டாவது தங்கள் நடவடிக்கைக்கு காரணங் கண்டெழுதி பம்பாய் இராஜதானியிலாவது வெளியிலாவது தங்கள் மேல் விசாரணைக்குள் பட்டிருக்கும் எந்தக்கோர்ட்டிலாவது விசாரணையாகும் எந்தக்கேசையும் அசல்பக்கத்தில் தங்களுக்குரிய அசாதாரண அதிகாரத்தைக்கொண்டு தங்கள் கோர்ட்டுக்கு வரவழைத்துக்கொண்டு தீர்மானிகக அதிகார முண்டென்று இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிறது.

இக்கேசைத் தங்கள் கோர்ட்டுக்கு வரவழைத்துக்கொண்டதற்கு ஹைகோர்ட்டார் காரணங் கண்டெழுதி யிருக்கிருர்கள். இவர்களுக்கிருக்கும் அதிகாரத்துக்கு விவாதம் ஏற்பட்டதே யல்லாமல் இவர்கள் மாற்றினதற்கு போதுமான காரணமிருக்கிறதா என்பதற்கு யாதொருஆட்சேபனையும் ஏற்படவில்லை. ஏடெனிலுள்ள ரெசிடெண்டு கோர்ட்டு, பம்பாய் ஹைகோர்ட்டார் மேல்விசாரணைக்குள்பட்டதா வென்பதைப் பற்றி விவாதமுண்டாயிருப்பதால் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களால் செய்யப்பட்ட 1864-ௗ 2-வது ஆக்டைக்கவனித்தால் இதற்கு முடிவுசொல்லக்கூடும். 1887-ௗ 9-வது ஆக்டினல் திருத்தியபடி மேலே குறித்த சட்டத்தினல் ஏடெனிலுள்ள சிவில் நியாயங்கள் இப்பொழுது ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆக்டின் நோக்கத்தைச் சொல்லும் பிரதமப் பிரிவில் பின்வருமாறு

கூறப்பட்டிருக்கிறது:—பிரிவிகௌன்சிலுக்கு அப்பீலில் வரும் கேசுகளைத்தவிர ஏடென்கோர்ட்டு சில தீர்ப்புகளும் நடவடிக்கைகளும் எந்தக்கோர்ட்டின் மேல்விசாரணைக்கும் அஜிமாஷுக்கும் உள்பட்டிராததால் பம்பாய் ஹைகோர்ட்டார் மேல்விசாரணைக்கும் அஜிமாஷுக்கும் இக்கோர்ட்டின் தீர்மானங்களும் நடவடிக்கைகளுமுள்ளாக்க வேண்டியதற்கு விதிகள் ஏற்படுததுவது யுக்தமென்று சொல்லியிருக்கிறது. ரெசிடெண்டு தீர்மானத்தின் மேலாவது உத்திரவின் மேலாவது இவ் வைகோர்ட்டுக்கு அப்பீல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆயினும் அநேக கேசுகள் விஷயமாக ஹைகோர்ட்டுக்கு "ரிபர்"பண்ணிக்கொள்ளவும்; இவ் வைகோர்ட்டார் செய்யும் தீர்ப்புக்கு ஒத்து தம்முன் விசாரணையாகும் ஒவ்வொரு கேசையும் முடிவுசெய்யக் கட்டுப்பட்டவரென்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டன. அன்றியும் ரெசிடெண்டு கோர்ட்டில் அப்பியாசமுறைமையைப் பற்றியும் நடவடிக்கை விஷயமாகவும் விதிகள் செய்யவும் ஹைகோர்ட்டாருக்கு அவசியமாகத் தோன்றும் பட்சத்தில் ரெசிடெண்டுகோர்ட்டின் நடவடிக்கையைப்பற்றியும், புஸ்தகங்கள் வைத்திருப்பதைபற்றியும் உத்தியோகஸ்தர்கள் வைத்திருக்கவேண்டிய கணக்குகள் விஷயத்தைப் பற்றியும் அக்கோர்ட்டால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படவேண்டிய ஸ்டேட்டுமெண்டுகளைப் பற்றியும் பாரங்கள் ஏற்படுத்தவும் இவ்விதிகளையும் பாரங்களையும் மாறுதல் செய்யவும் இவைகள் சட்டவிரோதமாகாமலிருக்கும் பட்சத்தில் ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமிருப்பதாக 31-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

ரெசிடெண்டு கோர்ட்டின்மேல் பம்பாய் ஹைகோர்ட்டு ஞாபகத்தில் மேல் விசாரணையிருக்கிறதாக அப்பீல் வாதியின் வைக்கீல் ஒப்புக்கொண்டு 1865-ௗ லெட்டர்ஸ் பேட்டெண்டு 13-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சங்கதிகளுக்குப்போதுமான அவ்வளவு அதிகாரமில்லையென்று வாதித்தார். இதற்கு ஆதாரமாக இப்பதிவில் பாஷைப்போங்கையும் சூர்ட்டர் ஆக்டின் 15-வது பாஷைப்போங்கையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படியாகவும், இந்த 15-வது பிரிவில் அப்பீல் அதிகாரத்தைப்பற்றி விசேஷமாகக் கூறுகிறதால் லெட்டர்ஸ் பேட்டெண்டு 13-வது பிரிவில் இக்கருத்து அடங்கியிருக்கிறதாக தாற்பரியம் கொள்ளவேண்டியதைக் கவனிக்கும் படியாகவும் சூர்ட்டர் ஆக்டின் 15-வது பிரிவில் "டிரான்ஸ்பர் பண்ணும் அதாவது மாற்றும் அதிகாரம்" சொல்லாமலிருப்பதை கவனிக்கும்படியாகவும் எடுத்துச் சொன்னர். இப்புத்தி சாதுரியமானதும் ஒன்றுக்கொன்று மாறுகவுமுள்ள இவ்விவாதத்துக்கு சமாதானம் சுலபமாய்ச் சொல்லிவிடலாம். சூர்ட்டர் ஆக்டில் சொல்லியிருக்கும் "ஒருகோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக் மாற்றும் அதிகாரம்" லெட்டர்ஸ் பேட்டெண்டால் கொடுக்கப்பட்ட "கேசின் விசாரணையை நிறுத்தி தங்கள்கோர்ட்டுக்குவரவழைக்கும்அதிகாரத்துக்கு" கொஞ்சமாகிலும் சம்பந்தமுள்ளதல்ல, இப்பொழுது ஹைகோர்ட்டார் கையாடின மேல்விசாரணை யதிகாரத்துக்கு "அப்பீல் அதிகாரமுடைமை" ஹைகோர்ட்டுக்கு இருந்தால் தான் அவ்வாறு மேல் விசாரணை செய்யலாமென்று லெட்டெர்ஸ் பேட்டண்டில் சொல்லப்படவில்லை. ஆகையால் அப்பீலைத் தள்ளி விட்டார்கள்.

ரூலிங்ஸ்:—1864-ௗ 2-வது ஏடென் கோர்ட்டு ஆக்டுப்படி ஏற்படுத்தப்பட்ட ரெசிடெண்டு கோர்ட்டு 1865 ௗ லெட்டர்ஸ் பேட்டெண்டு 13-வது பிரிவுப்படி பம்பாய் ஹைகோர்ட்டு மேல் விசாரணைக்குட்பட்ட தென்றும் அக்கோர்ட்டில் விசாரணையாகும் ஒரு கேசை ஹைக்கோர்ட்டார் தங்களிடம் வரவழைத்துக்கொண்டு விசாரணை பண்ணி முடிவு செய்யலாமென்றும் தீர்மானம சொல்லப்பட்டது. இ. லா. ரி. 30. பம். 246,

(Municipal officer, Aden v. Ismail Hajee I. L. R. 30. Bom. 246)

அலஹாபாத் ஹைகோர்டு

கிரிமினல் ரிவிஷன்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சார்ட்ஸ்

எதிரி எழுதிவைத்த பொய்ப் பிரமாண வாக்குமூலம் தண்டனைக்குள்ளாக்காது.

சக்கிரவர்த்தி—வாதி.

பிண்டேஷ்ரி சிங்கு—எதிரி.

வியாச்சிய சங்கிரகம்,

பிண்டேஷ்ரி சிங்கு இ. பி. கோ. 379,323-வது பிரிவுகளின்படி குற்றஞ் செய்ததாக தாசில்தார் கோர்ட்டில் "ஜெய்சிங்கு" பிராது பண்ணினர். சில தினங்களுக்குப் பின்பு டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டு கோர்ட்டுக்கு கேசை மாற்றிக்கொள்ள அவரிட மனு செய்துக்கொண்டார். தாசில்தாருக்கு விரோதமாக கெடுதியான சங்கதிகளடங்கிய ஒரு பிரமாண வாக்குமூலம் மனுவுக்கு ஆதாரமாகக் கொடுத்தார். இதன் மேல் ஜெய்சிங்கு பிராதை வாப்ஸ் வாங்கிக்கொண்டார். டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டு பிண்டேஷ்ரிசிங்குவை விசாரித்துக்கொண்டு தாசில்தாரை ரிப்போர்ட்டு பண்ணும்படியாக உத்தரவு அனுப்பி கடைசியாக இ. பி. கோ. 193-வது பிரிவுப்படி "பிண்டேர்சிங்கு"வை பிராசிக்கியூஷன் பண்ணும்படி உத்தரவு செய்தார். இதன்மேல் பிண்டேஷ்ரி சிங்கு செஷன்ஸ் ஜட்ஜிக்கு ரிவிஷன்மனு பண்ணினர். அங்கு அனுகூலமாகாததால் ஹைகோர்ட்டாருக்கு மனு செய்துக்கொண்டார்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம்:—இ. பி. கோ. 193-வது பிரிவுப்படி மனுதாரைப் பிராசிக்கியூஷன் பண்ணும்படி சாங்கிஷன் கொடுத்த டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்டிரேட்டின் உத்தரவைத் திருத்தி மாற்றும்படியாக இம்மனு ஏற்பட்டது. நடந்த சமாச்சாரங்கள் விநோதமாயிருக்கிறது. இ. பி. கோ. 379-வது பிரிவுப்படி "பிண்டேஷ் ரிசிங்கு"வை பிராசிக்கியூஷன் பண்ண ஆரம்பித்தார்கள். டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டு கோர்ட்டுக்காகிலும் வேறு கோர்ட்டுக்காகிலும் கேசை தாசில்தார் கோர்ட்டிலிருந்து மாற்றும்படியாக மனு கெய்துக்கொண்டார். தாசில்தாருக்கு விரோதமாக சில கெடுதியான சங்கதிகளை பிரமாணத்தின் மேற் சொல்லி மனுவுக்காதாரமாக்கினர். தன் கேசு தாசில்தார் விசாரித்தால் நியாயம் கிடைக்கக்கூடாத விதமான நடவடிக்கை தனக்கும் தாசில்தாருக்கும் இருக்கிறதாகச் சொல்லி மாற்றிக்கொள்வதற்காகவே இப்பிரமாண வாக்குமூலம் எழுதி யனுப்பினர். டிரான்ஸ்பருக்கு மனு பண்ணிக் கொள்ளும்பொழுது எதிரியிட மிருந்து பிரமாணத்தின் மேல் வாக்குமூலம் வாங்குவது கோர்ட்டாருக்கு வழக்கமாயிருக்கிறது. இவ்வழக்கம் நியாயமாயிருந்தாலும் அவ்வளவு சௌகரிய முள்ளதல்லவென்று இக்கேசின் விருத்தாந்தத்தினல் தெரிய வருகிறது. டிரான்ஸ்பருக்குள்ள ஆதாரம் அடங்கிய பிரமாண வாக்குமூலம். எதிரியல்லாத வேறொருவரால் கொடுக்கப்படுவது சிலாக்கியமாயிருக்குமென்று தோன்றுகிறது. பிரமாணத்தின் மேல் எழுதிவைத்த ஸ்டேட்மெண்டை மேஜிஸ்டிரேட்டு தாசில்தாரை ரிப்போர்ட்டு பண்ணும்படி அனுப்பிவைத்தார். 1905 ௗ ஆகஸ்டுீ 22ௗ எதிரி மனு செய்துக்கொண்டார்,

செப்டெம்பர்ஸ்ரீ 23உ "பிண்டேசரி" மேல் பிராது செய்த "ஜெய்சிங்கு" குற்றம் ஸ்தாபிக்க சாட்சிகளை ஆஜரப்படுத்த முடியாதென்று சொல்லி வேறு காரணம் சொல்லாமல் பிராதை வாப்ஸ் வாங்கிக் கொண்டார். டிரான்ஸ்பருக்காக மனு கொடுத்த சமையத்தில் எழுதிவைதத ஸ்டேட்டுமெண்டு விஷயமாக ஏன் பிராசிக்கியூஷன் பண்ணக்கூடாதென்பதற்கு காரணஞ் சொல்ல "பிண்டேஷரி"க்கு மேஜிஸ்டிரேட்டு உத்தரவு கொடுத்தார். டிரான்ஸ்பருக்கு மனு கொடுத்தவுடன் பிராதை வாப்ஸ் வாங்கினது சற்று விசேஷமாகத் தோன்றுகிறது. தான் கொடுத்த பிரமாண வாக்குமூலத்துக்கு அனுசரணையாக சாட்சிகள் விடுகிறேனென்று சொன்னபொழுது மேஜிஸ்டிரேட்டு, அவர்களேயும்விசாரிக்க வில்லை; தாசில்தாரையும் விசாரிக்கவில்லை. டிரான்ஸ்பருக்கு மனு கொடுத்த சமையத்தில் பிரமாணத்தின் மேல் எழுதிவைத்த ஒருவராலும் மறுக்கப்படாத ஸ்டேட்மெண்டைத் தவிர வேறொன்றுங் கோர்ட்டில் இல்லை. இவ்வாறான சங்கதிகளில் முதல் பிராசிக்கியூஷன் இவ்வளவு சங்கிரகமாக முடிவுக்கு வந்ததால் பிராசிக்கியூஷனுக்கு சாங்கிஷன் கொடுக்காமலிருந்தால் சிலாக்கியமாயிருக்குமென்று யுக்தமாகத் தோன்றுகிறது.

கேசை மாற்றிக்கொள்ளதற்கே மனுதார் ஸ்டேட்டுமெண்டு எழுதிவைத்தார்.

யுக்தத்தைப்பற்றி இங்கு வாதிப்பாரில்லை:—குற்றஞ்சாட்டப்பட்டு எதிரியாயிருந்தவன்எழுதிவைத்த ஸ்டேட்டுமெண்டு 193-வது பிரிவுப்படி அவனை பிராசிக்கியூஷன் செய்ய ஆதாரமாகுமா என்பதே இங்கு வாதம். இ. லா. ரி. 19. அல. 200 இல் கூறியிருக்கும் பார்க்காட் மனுவின் விஷயத்தில் முன்னால் இதே விஷயத்லதப்பற்றி தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் தண்டனையை ரத்துசெய்யக்கொடுத்த ரிவிஷன் மனுவுக்காதாரமாக மனுதார் பிரமாண வாக்குமூலம் எழுதிவைத்தார். வாக்கு மூலத்திலுள்ள பொய் ஸ்டேட்டுமெண்டுக்காக குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதால் பிராசிக்கியூட் செய்யக்கூடாதென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் பிளெயிர் தீர்ப்பு செய்திருக்கிறார். இந்தக்கேசுக்கும் இப்போது வந்திருக்கும் கேசுக்குமுள்ள வித்தியாசம் மேலே குறித்த வழக்கந்தான்.

இத்தீர்ப்பு நியாய முறைக்கு வித்தியாசமாயிருப்பதாகத் தோன்றவில்லை. செஷன்ஸ் ஜட்ஜி உத்தரவையும் பிராசிக்கியூஷன் செய்யச்சொன்ன டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டு உத்தரவையும் பிந்திய நடவடிக்கைகளேயும் ரத்து செய்தார்கள்.

ரூலிங்ஸ்:—பிரமாண வாக்குமூல ஆதாரத்துடன் தன் மேல் நடக்கும் கேசை வேறு கோர்ட்டுக்கு மாற்றும்படி மனு கொடுத்தால் அம்மனுதாரன் செய்த ஸ்டேட்டுமெண்டு விஷயமாக இ. பி. கோ. 193-வது பிரிவுப்படி பிராசிக்கியூட் பண்ணக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 28. அல. 331. (Emperor V. Bindeshri Singh. I. L. R. All. 331.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். ஜான் ஸ்டேன்லி,
மிஸ்டர் ஜஸ்டிஸ் வில்லியம் பர்க்கிட்

அனுபோக ஒத்தி பெந்தகம் மிட்டல் காலாவதி.

மகமது ஆக்பர் ஹூசேன்கான் வாதி (அப்பீல்வாதி)

இசாட் உன் நிசாஹூ பிராதிவாதிகள் (அப்பீல் பிரதிவாதிகள்)

வியாச்சிய சங்கிரகம்.

1781-ஞு ஆகஸ்டுஸ்ரீ 14உ பிஷாரட் காஞ்சிகச்சானு, நவாடியா, நகாரியா, என்னும் 4-கிராமங்களை ஜலால்கான் முதலியவர்களிடம் மகமது பிஷாரட்கான் என்பவர் அனுபோக பெந்தகம் வைத்து 1500ரூ வாங்கினரென்றும் இப்பெந்தகச்சொத்தை 70-வருஷம் கெடுவுக்குப் பிறகு முதல் கொடுக்காமல் மீட்டுக்கொள்ளுகிற தென்றும் அதுவரைக்கும் வுள்ள வரும்படிக்குக் கணக்குக் கொடுக்கிறதென்றும், வாதியின் தாவா. வாதி பெந்தகம் வைத்தவரின் வார்சென்றும் பெந்தகச்சொத்தும், வரும்படிக்காக ரூ 7000-ம் கிடைக்கவேண்டு மென்றும் பிராதில் சொல்லியிருந்தது. பிரதிவாதிகள் அதிகமாயிருந்தார்கள். பத்து இஷியூக்கள் "பேரிலி" சப்கோர்ட்டில் ஏற்பட்டன. இவைகளில் 2-வது இஷியூ முக்கியமானது. வாதியின் பாத்தியம் காலாவதியால் பாதிக்கப்பட்டுப் போயிற்ரு? என்டதே இரண்டாவது இஷியூ.

சப்கோர்ட்டார் தீர்மானம்:—1859ஞு லிமிட்டேஷன் ஆக்டு குறித்தகாலாவதிக்குப் பிறகு பாத்தியம் விட்டுப்போனதாகவிதிக்காமலிருக்கிறதை முன்னிட்டு 1871ஞு வரையில் பெந்தகம் வைத்தவர்களுக்கு பாத்தியமிருந்தாலும், 1874ஞு ஏப்பிரல்ஸ்ரீ 1உயோடு வாதியின் பாத்தியம் முடிவாகிறதாக 1871ஞு 9-க்கு ஆக்டில் விதியேற்பட்டிருக்கிறது இக்காரணங்களில் இக்கோர்ட்டார் வாதியின் பிராதைத்தள்ளி விட்டார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டாருக்கு வாதி அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார்தீர்மானம்:—காலாவதி தோஷத்தால் இத்தீர்ப்பு கீழ்கோர்ட்டார் சொன்னதுபோல் பாதிக்கப்பட்டது. சரியானல் இவ்வபீலும் நிற்கத்தகுந்ததல்ல. 125 வருஷத்திற்குமுன் 70-வருஷ கெடுவில் 1500-பெந்தகவைத்து அதை மீட்கக்கொண்டுவந்த வியாச்சியம் இது பெந்தகத்தையாவது அதன் ஷரத்தையாவது பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. பெந்தகமாயிருந்தாலும் பெந்தகச் சொத்து பிரதி வாதிகள் வசத்திலிருப்பதால் இப்பிராது காலாவதி ஆகிவிட்டதென்றுஞ் சொல்லுகிறார்கள்.

இக்கேசுக்குப் பொருத்தமாக 1781ஞுதில் மொகலேயர் அரசாட்சியில் என்ன விதியிருந்ததென்று தெரியவில்லை. 1859ஞு XIV-வது ஆக்டு 1-வது பிரிவு 15-வது கிளாசில் பெந்தகத்தேதியிலிருந்து 60-வருஷம் காலாவதி ஏற்பட்டிருக்கிறது. அன்றியும் 18-வது பிரிவுப்படி (2) வருஷத்துக்கு அந்த ஆக்டு அமூலுக்கு வராமல் நிறுத்திவைக்கப்பட்டது. அது பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது. "இப்போது கோர்ட்டில் நடவடிக்கையிலிருக்கிறதும் 2-வருஷத்துக்கு பிராது செய்யப்படுவது மாகிய வியாச்சியங்களை இவ்வாக்டு பாஸ் பண்ணப்படவில்லை யென்று கோர்ட்டார் வைத்துக்கொண்டு விசாரணை பண்ணவேண்டுமென்றும். இரண்டு வருஷத்துக்குப் பிந்தி வரும் வியாச்சியங்களை இதர சட்டங்கள் அனுகூலமாயிருக்கினும் இந்த ஆக்டு பொருந்த முள்ள அளவுக்கு இதன் விதிகளை ஒட்டியே விசாரிக்கவேண்டும்". 70-வருஷக் கெடு 1851-வது வருஷத்தோடு முடிவர்கிவிட்டது. அந்த கெடுவுக்குள் மீட்காவிட்டால் மேலேசொல்லிய ஆக்டு பாஸான இரண்டு வருஷங்களுக்குள் மீட்டுக்கொண்டிருக்கலாம் சில கேசு தீர்மானங்களில் அனுபோக ஒத்திக்கும் இந்நிபந்தனைப் பொருத்தமுள்ள தென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசுகளின் பெந்தகப்பத்திரங்களில் கெடுவு குறிக்காம லிருக்கிற தென்றும் 1859ஞு 14-வது ஆக்டுபாஸானபொழுது 60 வருஷத்துக்குமேற்பட்ட கெடுவுள்ள பெந்தகப்பத்திரங்கள் இருக்குமென்று சட்ட நிரூபண சபையார் யோசித்திருக்கமாட்டார்

களென்றும் தர்ம நியாயமாக இந்த ஆக்டின் பிரிவுகளை அர்த்தம் பண்ண வேண்டு மென்றும் இந்த ஆக்டுக்கு அப்பாற்பட்ட தென்றும் செல்லிக் வாதி கேட்டுக்கொண்டார்.

ஒரு தீர்மானத்தில் பிரிவிகௌன்சிலில் பின் வருமாறு தீர்ப்பு செய்திருக்கிறார்கள். "இந்தக்கேசை தர்ம நியாயமாக விசாரிக்க வேண்டுமே யல்லாமல் சட்டத்தில் சொல்லியபடி விசாரிக்கக்கூடாதென்று கட்சிக்காரர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். மற்ற ஆக்டுகளேப்போலவே இந்த லிமிட்டேஷன் ஆக்டின் வார்த்தைகளுக்குச் சரியான அர்த்தம் பண்ணவேண்டுமென்று ஜட்ஜிகள் நினைக்கிறார்கள். லிமிட்டேஷன் ஆக்ட்டை மாற்றக் கூடாதது அனுபோகத்தை ஸ்தாபிக்கவும் பழைய பழுதான பாத்தியங்களை தொலைப்பதற்கும் லிமிட்டேஷன் ஆக்டு ஏற்பட்டது இவ்வாக்கு இந்தியாவிலும் இங்கிலாந்திலுள்ளது போல யுக்தமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது இதனை அர்த்தம் பண்ணுவதற்கு பழக்கத்தை அனுசரிக்கத்தான் வேண்டும்." இத்தீர்ப்புப்படி பெந்தகச் சொத்துக்குள்ள பாத்தியத்தை பெந்தகத் தேதியிலிருந்து 60 வருஷத்துக்குள் ஸ்தாபிக்கவேண்டும் என்று இந்த ஆக்டில் சொல்லியிருக்கிறது. இதில் வேறர்த்தம் கொள்ள இடமில்லை. அன்றியும் அந்த ஆக்டினல் பாதிக்கப்படாதபடி பெந்தக விஷயமாக 2 வருஷத்துக்குள் பிராது பண்ணி பாத்தியத்தை ஸ்தாபித்திருக்கலாம். இவ்வுரிமையை அப்பீல் வாதியும் முன்னோர்களும் இரண்டு வருஷத்துக்குள் ஸ்தாபிக்கத் தவறிப்போனார்கள். 1899ஞு ஜூன்ஸ்ரீ 7உ வரையிலும் (அதாவது ஒரு நூற்றுண்டுவரையிலும்) யாதொரு பிரயத்தனமுஞ் செய்யவில்லை. பின்னல் பாரான லிமிட்டேஷன் ஆக்டினலும் வாதிக்கு அனுகூலமில்லை. 1871ஞு 9-வது ஆக்டு 148-வது ஆக்ட்டுகளிலும் 60-வருஷம் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் நிலத்தை சுவாதீனப்படுத்தவியாச்சியங்கொண்டுவரவேண்டிய காலம் நிர்ணயிக்கப் பட்டபொழுது அந்நிலத்துக்குள்ள பாத்தியம் நீங்கிவிடுகிறதென்று அதின் 28-வது பிரிவுவிதிக்கிறது. நிர்ணயிக்கப்படுவதன் முன் வியாச்சியம் பண்ணவேண்டிய பாத்தியம் காலாவதியாகின்றது; ஆனல் நிலத்தின்மேலுள்ள பாத்தியம் நீங்கிவிடுகிறதில்லை. இந்த ஆக்டினல் அடையக்கூடிய வழியும் பாத்தியமும் காலாவதியால் பாதிக்கப்பட்டுப் போயிற்று. மறுபடியும் 1877-ஞு 15-வது ஆக்டு வதியில் ஒரு பெருத்த மாறுதலே ஏற்படுத்தினது. இதன்படி வியாச்சியமூலம் உண்டான தியதியிலிருந்து காலாவதி ஆரம்பிக்கின்றது. அவ்வாறிருந்தும் முந்தின ஆக்டினல் காலாவதியால் பாதிக்கப்பட்டாவது ஒரு பாத்தியமுண்டாகியாலது பிருந்தால் அதனை புது ஆக்டு பாதிக்காதென்று கண்டிருப்பதால் இவ்வப்பீல் வாதியின் பாத்தியம் நீங்கிப்போனது. ஆகையால் சப் ஜட்ஜி காலாவதியால் பாதிக்கப்பட்டுப்போயிற்று என்ற தீர்மானம் சரியானதாகத் தோன்கிறதாலும் கோர்ட்டில் வேறு வாதமில்லாததாலும் செலவுடன் அப்பீல் தள்ளப்பட்டது.

ரூலிங்ஸ்:—70 - வருஷக்கெடுவுக்கு 1781 - ஞு ஆகஸ்டுஸ்ரீ 14உ அனுபோக பெந்தகம் வைத்தசொத்தை மீட்க 1899-ஞு ஜூன்ஸ்ரீ 7உ வாதி பிராதுசெய்தார். 1899-ஞு 14-வது 18-வது பிரிவுப்படியும் 1-வது 15-வது உட்பிரிவுப்படியும் காலாவாதியால் பாதிக்கப்பட்டதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 28- அல. 333.

(Muhammad Akbar Husain Khan v. Izzat un nissa I. L. R. 28. All. 333.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சார்ட்ஸ்

பிரிவி கௌன்சிலில் அப்பீலிலிருக்கும்பொழுது சொத்து பராதீனம் செல்லாது.

காருர்துஜ் பிரசாத்சிங்கு டிக்கிரி பெற்றவர் (அப்பீல் வாதி)

பெயுஜுமால் ஜூ டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவர்கள் (அப்பீல் பிரதிவாதிகள்)

வியாச்சிய சங்கிரகம்.

காருர்துஜ் பிரசாத் சிங்கு என்பவர் மேல் அவர் சகோதரர் தனக்கு பாகங் கிடைக்கவேண்டுமென்று அலிகார் சப் கோர்ட்டில் தாவா செய்தார். சப் கோர்ட்டார் அது பிரிக்கப்படாத சொத்தென்றும் மூத்தவர் அனுபவிக்க வேண்டியதென்றும் பிராதைத் தள்ளிவிட்டார்கள். இதன் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டார் கீழ்கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றி இவர் சகோதரர் பாகங் கொடுக்கும்படித் தீர்மானஞ் செய்தார்கள். இதன்மேல் பிரிவி கௌன்சிலுக்கு "காருர்துஜ் பிரசாத் சிங்கு" அப்பீல் பண்ணினர். அப்பீல் முடிவாகிறதற்குள் ஹைகோர்ட்டார் தீர்ப்பால் காருர் பிரசாத் சிங்குவின் சகோதரருக்கு கிடைத்த பாகத்தில் ஒரு மாலிக்கானு வரும்படியை இவருடைய கடன்காரர் நிறைவேற்றி ஏலம் போட அப்பீல் பிரதிவாதிகளால் ஏலம் எடுக்கப்பட்டது. பிரிவி கௌன்சிலில் ஹைகோர்ட்டார் தீர்ப்பை மாற்றி பிரிக்கப்படாத சொத்தென்று தீர்ப்பு சொன்னார்கள். இத்தீர்ப்புக்குப் பிறகு காருர்துஜ் பிரசாத் சிங்கு தன்வசமிருந்து நீக்கப்பட்ட சொத்துக்களை திரும்ப அடையும்படி மனு செய்துக்கொண்டார். மாலிக்கானு வரும்படி தவிர மற்ற சொத்துக்கள் வசப்படுத்திக் கொடுக்கப்பட்டன. மாலிக்கானு வரும்படியை வாங்கினவர்கள் கட்சிக்காரர்களா யில்லாததால் அதைத் திரும்பிக்கொடுக்க மாட்டோமென்று கீழ்க்கோர்ட்டார் அதற்கான மனுவைத் தள்ளிவிட்டார்கள். அதன் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—கீழ்க்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயந் தப்பு. ஹைகோர்ட்டாரால்

தவறுதலாகச் செய்யப்பட்டு அதன்மேல் வேறொருவருக்குச் சுவாதீனமாக்கப்பட்ட சொத்தை திரும்ப முன்னிருந்தவரிடம் வசமாக்குவதற்கே தீர்ப்பு பிரவிகௌன்சிலால் ஏற்பட்டது. ஆகையால் சி. பு. கோ. 610-வது பிரிவுப்படி நிறைவேற்றப்படக்கூடிய ஒரு உத்திரவு. மனுசெய்துகொண்டால் அவ்வாறே நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். கிழ்கோர்ட்டாருக்கு பிரிவு கௌன்சில் உத்தரவு தெரிவிக்கப்பட்டிருக்கிறதால் 244-பிரிவுப்படி நிறைவேற்றியிருக்கவேண்டும். அப்பிரிவுப்படி அப்பீல் பிரதிவாதிகள் டிக்கிரிக்குக்கட்டுப்பட்டவர்களின் பதிலியாயிருக்கிறார்கள். இ. லா. ரி. 26. அல. 447 இல் சொல்லியிருக்கும் "குல்சாரிலால்" v. "மாதோராம்" கேசில் நிறைவேற்றும் பொழுது ஏலமெடுத்தவர்கள் டிக்கிரிக்கு பெற்றவரின் பதிலி யென்று தீர்மானித் திருக்கிறார்கள் கிழ்க்கோர்ட்டார் ஆதாரமாகக் கொண்ட இ. லா. ரி. 19. அல. 136, இ. லா. ரி. 20. அல. 139. இல் முறையே சொல்லியிருக்கும் பகவதிபிரசாத். v. ஜம்னு பிரசாப் கேசும், சாலிக்ஹுசேன் v. லால்டா பிரசாத் கேசும், இதற்கு வித்தியாசமுள்ளது. இந்தக் கேசுகளில் பிரிவு கௌன்சில் அப்பீலில் வியாச்சியம் தொடுப்பதற்கு முந்தி ஏலமெடுத்தவர்களுக்கு டிக்கிரியில் ஒரு பாத்தியம் ஸ்தாபகமாகி யிருந்தது. அப்பேர்ப்பட்டவர்களை அப்பீலில் கட்சிக்காரர்களாகச் சேர்க்காமற்போனது பிசகு. இங்கு அப்படியல்ல; அப்பீலில் கொடுத்தபிறகு ஏலமெடுத்தவர்களுக்கு ஒரு பாத்தியம் உண்டானது ஆகையால் பிரிவி கௌன்சில் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவர்கள். 244-வது பிரிவுப்படி பதிலியாகப் பாவிக்கப்படுவார்கள். ஆகையால் அப்பீலை ஏற்றுக்கொண்டு, கீழ்க்கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்து இதரபாகங்களை விசாரிப்பதற்கு கீழ்க்கோர்ட்டுக்கு ரிமாண்டு பண்ணப்பட்டிருக்கிறது (அதாவது அனுப்பப்பட்டிருக்கிறது) அப்பீல் வாதிகள் இந்த அப்பீல் செலவை யடையும்படியாகவும் இதர செலவுகள் மற்றபாகம் முடிவின்மேல் ஏற்படுத்தும்படியாகத் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்:—பிரிவு கௌன்சிலில் அப்பீல் நடக்கும்பொழுது ஹைகோர்ட்டு டிக்கிரி பெற்ற வாதியைக் கட்டுப்படுத்தி பெற்ற தீர்ப்பை நிறைவேற்றி வியாச்சியத்திலிருக்கும் சிறிதுபாகம் ஏலம் எடுக்கப்பட்டது. பிரிவி கௌன்சிலில் பிரதிவாதி டிக்கிரி பெற்றார். ஜெயமடைந்த அப்பீல் வாதி சி. பு. கோ. 244-வது பிரிவும் 610-வது பிரிவும் கூறுகிறபடி மனு செய்து சொத்தைத் தன் வசப்படுத்த பாத்தியமுடையவராவார். ஏலமெடுத்தவர்களை கட்சிக்காரர்களாகச் சேர்க்காமற்போனது அப்பாத்தியத்தை பாதிக்காது. இ. லா. ரி. 28. அல. 337.

(Garurdhuy Prasad Singh v. Baigu Mal I. L. R. 28. All. 337.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சர்ட்ஸ்

ஸ்தாவரசொத்தைப்பிரித்து ஒருவன் பாகத்தை சுவாதீனப்படுத்தக் கொடுத்த பிராதுக்கு கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு

தூர்க்காபிரசாத்வாதி (அப்பீல் பிரதிவாதி)

வாலி உல்லாஹு பிரதிவாதிகள் (அப்பீல் வாதிகள்)

செயிடான். பிரதி வாதிகள் (அப்பீல் பிரதிவாதி).

வியாச்சிய சங்கிரகம்.

வாதியாகிய தூர்க்காபிரசாத் என்பவர், "ஜுவர்லா பெர்ஷாட்" டுக்குச் சொந்தமா யிருந்த சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தை சொந்த பாத்தியத்தாலும், வாங்கின பாத்தியத்தாலும், வாதியின் சுவாதீனத்துக்கு விட்டுவிட்ட பாத்தியத்தாலும் கிடைத்திருப்பதால் பிரிவினைசெய்து வாதியின் சுவாதீனப்படுத்திக்கொடுக்க ஆக்ரா சப் கோர்ட்டில் பிராது செய்தார். 1870ளு கோர்ட்டு பீஸ் ஆக்டு 2-வது ஷெடியூல் 17-வது ஆக்ட்டின் 6-வது உட்பிரிவின்படி பிராது 10ரூ ஸ்டாம்பு பேப்பரில் கொடுக்கப்பட்டது. வீடு பூல் வாதியின் சுவாதீனத்தி லில்லாததாக ருஜுஏற்படுகிறதால் மதிப்பின் பேரில் ஸ்டாம்புத் தொகை கட்டியிருக்கவேண்டும். ஆகையால் பாக்கித்தொகையை ஒரு கெடுவுக்குள் கட்டவேண்டு மென்று சப் கோர்ட்டார் உத்தரவு பண்ணியும் கெடுவுக்குள் கட்டாததால் பிராதைத் தள்ளி விட்டார்கள். இதன் மேல் ஆக்ரா டிஸ்டிரிக்டு கோர்ட்டுக்கு வாதி அப்பீல் பண்ணினார். கீழ்க்கோர்ட்டார் உத்தரவை மாற்றி பிராதில் சொல்லியிருக்கும் அம்சத்தையும் அவர் வேண்டுகோளையுங்கவனிக்கவேண்டுமே யொழியருஜுவாம்சத்தைக் கவனிக்கக்கூடாதென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு பிராதில் கேட்கும் அம்சத்துக்குப் பாத்தியமிருக்கிறதா (பிராது செய்தக்குதியிருக்கிறதா) வென்பதை விசாரித்தும் முடிவு செய்யும்படியாகக் கீழ்க்கோர்ட்டுக்கு ரிமாண்டு பண்ணினார். இதன் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—இவ்வியாச்சியம் பாகப்பிரிவினைக்கு மாத்திரம் கொண்டுவரப்பட்டதே யொழிய மற்றொன்றுக்கு மல்ல என்பது கீழ் அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயம். அப்படியானால் 10 ரூபாய் ஸ்டாம்பு போதுமானது. கோர்ட்டு பீஸ் தொகையை நிர்ணயம் பண்ணுவதற்கு ருஜுவாம்சத்தைக் கவனியாமல் பிராதி கேட்கும் அம்சங்களை மாத்திரம் கவனிக்கவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டதும் சரியே. அவ்வாறு பிராதைக்கவனிக்கும்பொழுது, ஒரு சொத்தில் மூன்றில் ஒருபாகத்துக்கு பாத்தியதை ஸ்தாபிக்கவும் அதைச்சுவாதீனப்படுத்தவும் இவைகளோடு கேட்டுக்கொண்ட குறைய்யைத் தீர்த்து காரியப்படுத்த பிரித்துக்கொடுக்கும் படியாதவும் கேட்டிருக்கிறது. இதற்குச்...

வேண்டிய ஸ்டாப்பு ரூ. 10 அல்ல. கேட்கும் பாகத்துக்குள்ள மதிப்பின்மேல் ஏற்படவேண்டும். இ. லா. ரி. 8. கல. 757-இல் சொல்லியிருக்கும் "கொர்ட்டிகூர்ன் மிட்டர்." v. "ஆனந்நாத்தேப்" கேசில் சீப் ஜஸ்டிஸ் "சர். ரிச்சர்குகார்த்" சொல்லுகிறதாவது "சொத்தின் ஒருபாகத்துக்கு பாத்தியத்தை ஸ்தாபிக்கவாவது சுவாதீனப்படுத்தவாவது பிராது செய்தால் மதிப்பின் மேல் ஸ்டாம்பு கட்டவேண்டுமென்றும் ஆனால் அந்தக் கேசில் பாகப்பிரிவினைக்கு மாத்திரம் பிராது செய்திருப்பதால் (அதாவது அனுபவ ரீதியை மாற்றுவதற்காக பிராது செய்திருப்பதால்) 10-ரூ. ஸ்டாம்பு போதுமானது" இதே மாதிரி இ. லா. ரி. 18. பம். 209-இல் 'பால் வான்ட்கணேஷ்' v 'நாறுகூதின்தமோன்' கேசிலும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். சப் கோர்ட்டார் உத்தரவை உறுதிப்படுத்தி கீழ் அப்பீல் கோர்ட்டார் உத்தரவை மாற்றித் தீர்ப்புச் சொன்னார்கள்.

ரூலிங்ஸ்:—ஒரு சொத்தின் மூன்றில் ஒரு பாகத்திலுள்ள பாத்தியத்தை ஸ்தாபிக்கவும் அதை சுவாதீனப்படுத்தவும் இவைகளோடு கேட்டுக்கொண்ட குறையைத்தீர்த்துக்காரியப்படுத்த பிரித்துக்கொடுக்கும் படியாகவும் கேட்டிருக்கிறதாக பிராதினால் தெரியவந்தால் அதற்கு மதிப்பின் மேல் ஸ்டாம்புகட்டவேண்டுமேயல்லாமல் கோர்ட்டு பீஸ் ஆக்டு 2-வது ஷெடியூல் 17-வது ஆக்ட்டின் 5-வது கிளாஸில் சொல்லியிருக்கிறபடி 10-ரூ ஸ்டாம்பில் பிராது கொடுக்கக் கூடாது. இ. லா. ரி.28. அல. 340.

Wali-ullah v. Durga Prasad and saidan I. L. R. 28. All. 340)

கல்கத்தா ஹைகோர்டு

சீவில் அப்பீல்.

ஜட்ஜி.—சீப் ஜஸ்டிஸ். சர். பிரான்சிஸ்
W. மாக்லீன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் கெயிட்.

முதல் பெந்தகம் வாங்கினவன் ஏல விற்பனை சய்த சொத்தை இரண்டாவது பெந்தகம் வாங்கினவன் மீட்பதற்குக் கொடுக்க வேண்டிய தொகை.

கிரிஷ்சூண்டர் நண்டி-வாதி (அப்பீல் வாதி)

கேடர்நாத் குண்டு. 1-பிரதிவாதி, (அப்பீல் பிரதிவாதி)

வியாச்சிய சங்கிரகம்.

ஸ்ரீநாத் நண்டிக்கும், பெனேஸ்வார் நண்டிக்கும் சொந்தமாகிய சொத்தில் ஸ்ரீநாத் நண்டிக்குச்சொந்தமாகிய பாகத்தை "உமெஷ்சூண்டரா" வுக்கு1889ளு ஆகஸ்டுமீ 25௳ "ஸ்ரீநாத் நண்டி," "பெனேஸ்வார் நண்டி". ஆகிய இருவரும் சேர்ந்து "கேடர்நாத் குண்டு"விடம் முழுச்சொத்தையும் பெந்தகம் வைத்தார்கள். ஒரு பாகத்தை முதல் பெந்தகம் வாங்கின "உமேஷ்சூண்டரா" அப்பெந்தகச் சொத்தின் மேல் நிறைவேற்றி பெந்தகப்பாகமாகிய பாதி சொத்தை ஏலமெடுத்து அப்பாகத்தை 99-ரூபாய்க்கு "கிரிஷ்சூண்டர் நண்டி" "மாக்கன் லால்தாஸ்" ஆகிய இருவருக்கும் 1901-ளு ஆகஸ்டுமீ 11௳ கிரயஞ் செய்துவிட்டார். இவர்களிருவரும் மற்றொரு பாகஸ்தனோடு பிரிவினை செய்துக்கொண்டு அனுபவித்துவந்தார்கள். பிறகு முழுச்சொத்தின்மேல் பெந்தகம் வாங்கின "கேடர்நாத்குண்டு" என்பவர் அச்சொத்தின்மேல் நிறைவேற்றி 1901-ளு ஏலமெடுத்தார். இவர் முதல் பெந்தகம் வாங்கின "உமேஷ் சூண்டராவை" பிரதிவாதியாகச் சேர்க்கவில்லை. "உமேஷ் சூண்டரா"வும் இவ்விரண்டாவது பெந்தகம் வாங்கினவரை பிரதிவாதியாகச் சேர்த்ததுமில்லை. முழுச்சொத்தையும் ஏலமெடுத்த "கேடர்நாத்குண்டு" சொத்தை வசப்படுத்தப்போனபொழுது பாதிபாகத்தை உமேஷ் என்பவரிடமிருந்து வாங்கின இருவரும் ஆக்ஷேபித்ததின் மேல் சி. பு. கோ. 335-வது பிரிவுப்படி அவர்கள் ஆக்ஷேபனை மனுவை கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு விசாரணைபண்ணி ஆக்ஷேபனையை நீக்கி வசப்படுத்தும்படி உத்தரவு செய்தார்கள்.

இதன்மேல் வாதிகள் ("கிரிஷ் சூண்டர் நண்டி" "மாக்கான் லால் தாஸ்") முன்சிப் கோர்ட்டில் கிரமவியாச்சியஞ்செய்தார்கள். 1-"கேடர்நாத்" 2. "ஸ்ரீநாத்நண்டி" 3. "பெனேஸ்வார்நண்டி" ஆகிய மூவரும் இந்நம்பரில் பிரதிவாதிகள். முதல் பிரதிவாதி (கேடர்நாத்) பின்பு ஏலமெடுத்தாலும், 2-வது பிரதிவாதிக்கு (ஸ்ரீநாத்நண்டி) அச்சொத்தில் அச்சமயம் யாதொரு பாத்தியமு மில்லாததாலும், முதல் பிரதிவாதி ஏலமெடுத்ததைக்கொண்டு சொத்தை வசப்படுத்த உரியவரல்லவென்றும் தாவா சொத்து "டிக்கிளேயர் பண்ண" (கூற) வேண்டுமென்றும் அச்சொத்தை தங்கள் வசமிருக்கும்படி உறுதிப்படுத்த வேண்டுமென்றும் ஒருவேளை பிரதிவாதி வசமானால் தங்கள் வசப்படுத்த டிக்கிரி செய்யவேண்டுமென்றும் வாதிகளின் தாவா.

முதல் பிரதிவாதி கேடர்நாத் மாத்திரம் இவ்வியாச்சியத்தில் எதிர்கட்சி யாடினார். முதல் பெந்தகம் அதன் மேலான டிக்கிரி. அதனை நிறைவேற்றுதல் ஆகிய எல்லாம் மோசடியினால் ஏற்பட்டதென்றும் ஏல விற்பனையினால் இதைக்கொண்டு பாத்தியமுண்டாகவில்லை யென்றும், தான் முன் தீர்மானத்தில் கட்சிக்காரராயில்லாததால் முன் டிக்கிரி முதலிய தன்னை கட்டுப்படுத்தி தன் பாத்தியத்தைக் கெடுக்காதென்றும், 2-வது பிரதிவாதியும் அவருடைய பங்காளியும் ஒன்று சேர்ந்து தனக்கு பெந்தகம் எழுதிக்கொடுத்து முழுச்சொத்தின் மேல் நிறைவேற்றி ஏல மெடுத்து கோர்ட்டு மூலமாக வசப்படுத்தியிருக்கிறதாகவும், "உமேஷ்" என்பவர் வாதிகள் பாத்தியங்கொண்டாடுகிற சொத்தை வசப்படுத்தினதில்லை யென்றும், வசப்படுத்தினதாகப் பிராதிற் சொல்லப் பட்டிருப்பது பொய்யென்றும் பிரதிவாதி ஸ்டேட்டுமெண்டு கொடுத்தார்.

முன்சீப்கோர்ட்டார் தீர்மானம்:—“உமேஷசூஷண்டரா”விடம் பெந்தகம் வைத்ததும் அதன் மேலான தீர்ப்பு. ஏல விற்பனை மோசடியல்லவென்றும் முதல் பிரதிவாதி பெந்தகம் வாங்கினது உமேஷுக்குத்தெரியாதென்றும், முதல் பிரதிவாதி முதல்பெந்தகத்தின் வியாச்சியத்தில் கட்சிக்காரராயில்லாததால் வாதிகளிடமிருந்து முதல் பெந்தகத்துக்காக 6-மாசத்துக்குள் தொகைகொடுத்துவிட்டு அச்சொத்தை மீட்டுக்கொள்ளுகிறதென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

இதன் மேல் முதல் பிரதிவாதி, உமேஷின் பெந்தகமும் தீர்மானமும் மோசடியென்றும் பெந்தகத் தொகை அவ்வளவும் கொடுக்கும்படி தீர்மானித்தது நியாய விரோதமென்றும் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டாரிடம் அப்பீல் செய்தார்.

டிஸ்டிரிக்டு கோர்ட்டார் தீர்மானம்:—(1) பெந்தகம் மோசடியல்லவென்று டிஸ்டிரிக்டு முன்சிப் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை உறுதிப்படுத்தி, (2) உமேஷ் என்பவர் இதில் கட்சிக்காரராயில்லாததால் வாதிகள் கிரயத்துக்குக் கொடுத்த ரூ. 99-மாத்திரம் முதல் பிரதிவாதி கொடுக்கவேண்டுமென்று முன்சிப் கோர்ட்டார் தீர்மானத்தை அது விஷயத்தில் மாற்றித் தீர்ப்புசெய்தார்கள். இதன்மேல் வாதிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜி முன்னிலையில் விசாரணையானது. மிஸ்டர் ஜஸ்டிஸ் மித்ரா என்பவர் விசாரணை பண்ணினார். இவர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தை உறுதி செய்தார். இதன்மேல் வாதிகள் லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது பிரிவுப்படி ஹைகோர்ட்டிலேயே அப்பீல் செய்தார்கள்.

வாதியின் வக்கீல் கூறிய வாதம் :—முதல் பிரதிவாதி உமேஷுக்குத் கிடைக்க வேண்டிய பெந்தகத் தொகையைக் கொடுத்து மீட்டுக்கொள்ளவேண்டும். இதற்கு ஆதாரமாக (1) இ. லா. ரி. 21. சென். 64 சிவாதீ உடையான் v. ருமசுப்பய்யர் (2) வது இ. லா. ரி. 19. அல. 527 டிப் நாருயன் சிங்கு. v. ஹீருசிங்கு (3) இ. லா. ரி. 16. பம். 486. டா டோபா ஆர் ஜன்ஜி v. டா மோடார் ரகுநாத் (5) டிரான்ஸ்பர் ஆப்பிராப்பர்ட்டி ஆக்டு 60-வது பிரிவு. (6) கோஸ்மார்ட் கேஜ் (3-வது பதிப்பு) பக்கம் 740 741 ஆகிய இவைகளை குறிப் பிட்டார்கள்.

பிரதிவாதியின் வைக்கீல் சொன்ன வாதம்:— இ. லா. ரி. 8. கல். 79. காசு முனிசா. v. நீல்வன் தாபி கேசை ஆதாரமாகக் கொண்டு வாதிகள் தங்கள் கூறுகிறது பேல அவர்கள் வசத்தில் இருப்பதால் அந்தக் காலத்துக்கு வட்டி கொடுக்கக்கூடாது. இ. லா. ரி. 19 அல் 527 டிய் நாருயன் சிங்கு v. ஹீருசிங்கு.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் :—சொத்துக்காக வாதிகள் கொடுத்த ரூ 99-ம் அதன் வட்டியும் கொடுத்து மீட்க தனக்கு பாத்தியமுண்டென்று முதல் பிரதிவாதி வக்கில் கட்சி சொல்லுகிறார். பெந்தகத்தின்படி கிடைக்கவேண்டிய முதலும் வட்டியும் கோர்ட்டுச் செலவும் ஆகியவைகளுக்குக் கணக்கெடுக்கச் சொல்லி அவைகளாற் கூடுதலாகுந் தொகையை முதல் பிரதிவாதி செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ள வேண்டுமென்று வாதிகள் வக்கில்சொன்னார். வாதிபிரதிவாதிகளுக்கு இதுதான் கட்சி. இவர்களில் யாராவது சொத்தை யனுபவித்தார்களா வென்பதைப்பற்றி கோர்ட்டார் கண்டு பிடிக்கவில்லை. பெந்தகக் கடன் சுமார் 350 ரூ ஆகிறது. பெந்தகக் கடனில் எந்தப் பாகமாவது செலுத்தப்பட்டிருக்கிறதா வென்பதைக்காட்ட ஒரு ஆதாரமுமில்லை. முதல் பிரதிவாதி இதைப்பற்றிச் சொல்ல வந்தால் அவரே ரூபிக்க வேண்டும். ஒரு கணக்கு எடுக்கும்படிச் சொன்னால் இது அவருக்கு நல்ல சமையமாகும். இப்பொழுது வாதிகளுக்கும் விற்றவருக்கும் ஒரு விவாதமும் ஏற்படவில்லை.

டிஸ்டிரிக்டு ஜட்ஜியும் அப்பீலில் ஹைகோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் மித்ராவும் வாங்கின விலை ரூ 99-ம் அதன் வட்டியும் கொடுத்து முதல் பிரதிவாதி மீட்டுக்கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இவ்வபிப்பிராயம் சரியல்ல. முன்பெந்தகம் இருக்கிறதை யாதாரமாகக்கொண்டு அதைத்தான் மீட்கவேண்டும், மீட்கவேண்டிய ஒரே பாத்தியந்தானிருக்கிறது. “யூனைட்டட் ஸ்டேட்ஸ்” சுப்பிரீம் கோர்ட்டு மிஸ்டர் ஜஸ்டிஸ் “பிரேட்லி” என்பவர் பின்வருமாறு கூறினதாக “கோஸ்” மார்ட்கேஜ் என்னும் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். பெந்தகச் சொத்தை பெந்தகத் தொகைக்குக் குறைந்த தொகைக்கு ஏலத்தில் வாங்கியிருந்தால் அதை மீட்பதற்கு அத்தொகையைக் கொடுக்க உத்தேசிப்பது போதுமானதல்ல. முழு பெந்தக்கடனையும் கொடுக்கவேண்டும். பெந்தகம் முடிவு பெறுமல் இன்னம் நீடித்திருக்கிறது என்கிறதை யாதாரமாகக் கொண்டு அச்சொத்தை ஒருவன் மீட்க ஆரம்பிக்கிறான். ஆகையால் பெந்தகத்து தொகையைக் கொடுத்தான் பெந்தகத்தை நீக்கவேண்டும். அவ்வாறு வாங்கப்பட்ட தொகையில் ஏலமெடுத்தவனுக்கு அவன் செலவழித்த தொகையையும், பெந்தகக் கடன் கொடுத்தவனுக்கு பாக்கித் தொகையையும் கொடுக்கவேண்டும். இ. லா. ரி. 21. சென். 64 “நீலகண்ட பெனார்ஜி” v. “சுரேஷ் சூஷண்டரா முல்லிக்” கேசில் பிரிவி கௌன்சிலார் இம்மாதிரி அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். இ. லா. ரி. 12. கல். 414 இல் “சிவதே உடையான்” v. “ராமசுப்பையர்” கேசிலும் இவ்வபிப்பிராயத்திற்கு ஆதாரமிருக்கின்றது. வாதிகளுக்கு பெந்தகம் வாங்கினவரால் கிரயஞ் செய்யப்படாமலிருப்பதாக வைத்துக்கொண்டால் ஏலமெடுத்தத் தொகை 25 ரூபாயையும் அதன் வட்டியையுங் கொடுத்து மீட்டுக்கொள்வதாக முதல் பிரதிவாதி வாதங் கூறி ஜெயிக்க முடியாது. இப்படியானல் வாதிகளுக்கும் முதல் பிரதிவாதிக்கும் மேலே காட்டிய பாத்தியா பாத்தியம் தவிர வேறு சம்பந்தமுண்டாகுமா ? வாதிகள் பெந்தகம் வைத்தவர்களிடத்தில் வாங்கினவர்களாகவும் அவர் ஸ்தானத்திலிருக்கிறவர்களாகவுமிருக்கிறார்கள். வாதிகளுக்கும் உமேஷுக்குமுள்ள

பாத்தியா பாத்தியங்களைப்பற்றி தீர்மானிக்கப்போகிறதில்லை. ஆனல் வாதிகளுக்கும் முதல் பிரதிவாதிக்குமுள்ள சம்பந்தத்தைபற்றித் தீர்மானிக்கவேண்டியதாயிருக்கிறது. வாதிகள் பெந்தகம் வாங்கின வரின் ஸ்தானத்திலிருக்கிற படியால் முதல் பிரதிவாதி பெந்தகக்கடனைக் கொடுத்து மீட்கவேண்டியது. ஆகையால் முதல், வட்டி, செலவு முதலியவைகளைப்பற்றி ஒரு கணக்கு எடுக்கும்படிக்கும் அக் கணக்கால் எற்படும் தொகையை முதல் பிரதிவாதி கொடுத்து மீட்கும்படிக்கும் டிக்கிரிசெய்ய வேண்டும்.

“உமேஷ்” என்பவரை இவ்வியாச்சியத்தில் ஒருகட்சிக்காராக ஏற்படுத்தவேண்டும். பெந்தகம் வாங்கினவராகிய உமேஷ் என்பவரை கட்சிக்காரராக ஏற்படுத்த வேண்டுமென்று இப்பொழுது ஆட்சேபிக்கிறார். பிரதமத்தில் இவ்வாட்சேபணையை சொல்லாததால் இக்கடைசி காலத்தில் அவரைக்கட்சிக்காராகச்சேர்த்துக்கொள்வது சங்கடமாகத் தோன்றுகிறது. வட்டியைப்பற்றி விவரஞ் சொல்லவில்லை ஆகையால் பெந்தகப் பத்திரத்திலுள்ள வட்டியே போடவேண்டும். வாதிகள் வசம் சொத்து அனுபவத்திலிருந்தால் அவர்களடைந்த லாபத்தை வட்டியிலிருந்துகழித்து விடவேண்டும் அல்லது அக்காலத்துக்கு வட்டியை நீக்கி விடவேண்டும். முதல்பிரதிவாதி இன்று முதல் 6-மாசத்துக்குள் இச்சொத்தை மீட்டுக் கொள்ளாவிட்டால் வாதிகள் அச்சொதததை அனுபவத்திக் கொள்ளுகிறதென்றும் வாதிகள் இவ்வியாச்சியங்களின் செலவு தொகையை அடைகிறதென்றும் இத்தொகைக்கும் அச்சொத்து ஈடாகுமென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்:—முதல் பெந்தகம் வாங்கினவர் இரண்டாவது பெந்தகம் வாங்கினவரைக் கட்சிக்காரராகச் சேர்க்காமல் பெந்தகச்சொத்தின் மேல் நிறைவேற்றி ஏலமெடுத்து “ஏ” என்பவருக்குக்கிரயஞ்செய்துவிட்டார். பிறகு இரண்டாவது பெந்தகம் வைத்தவர் அச்சொத்தை நிறைவேற்றி தானே ஏலமெடுத்து வசப்படுத்தப்போகும் பொழுது “ஏ” என்பவர் ஆட்சேபித்ததற்கு கோர்ட்டார் இடங்கொடுக்காததால் கிரமவியாச்சியஞ்செய்தார். இதில் முதலாவது பெந்தகம் இருக்கிற தென்கிற ஆதாரத்தின்மேல்தான், இரண்டாவது பெந்தகம் வாங்கினவர் அச்சொத்தை மீட்கவேண்டியதாயிருக்கிற தென்றும், “ஏ” என்பவருக்கும் இரண்டாவது பெந்தகம் வாங்கினவருக்குமுள்ள சம்பந்தத்தை யோசிக்கில் முதல் பெந்தகம் வாங்கினவர் ஸ்தானத்தில் வாதிகளிருக்கிறார்களென்றும் “ஏ” என்பவருக்கும் முன் பாத்தியக்காரருக்குமுள்ள பாத்தியாபாத்தியதை தீர்மானிக்கவேண்டிய தில்லையென்றும், இரண்டாவது பெந்தகக்காரர் அச்சொத்தை மீட்டுக் கொள்ள “ஏ” என்பவர் கிரயம் பெறக்கொடுத்தத் தொகையை கொடுப்பது போதாது; ஆனல் முதல் பெந்தகத் தொகையைக் கொடுக்கவேண்டு மென்றும்.

2. “ஏ” என்பவர் வசத்தில் அச்சொத்திருந்தால், இருந்தகாலத்தில் வந்தலாபத்தை வட்டியிலிருந்து கழித்துக்கொள்ளவேண்டும்; அல்லது அக்காலத்து வட்டி கொடுக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 33. கல். 590.

(Girish Chunder Nandi v. Kedan natte Kundru I. L. R. 33. Cal. 590.)

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் சர். பி. W. மேக்லீன் ? மிஸ்டர் ஜஸ்டிஸ் கேட்.

தானசாதனம் செய்தவர் இறந்த பிறகு
ரிஜிஸ்டர் பண்ணல்.

பாபட்டாஸ் பெனர்ஜி v. சோல்மான்.

வியாச்சிய சங்கிரகம்.

தாவாசொத்து காளிப்பிரசன்னுவுக்குச் சொந்தமானது. இவர் 1301ஞு சிரவன் 8உ இறந்தார். இறந்துபோன தியதிக்கு முன்தியதியில் “காளிப்பிரசன்ன பெனர்ஜி ஒரு தான சாசனத்தினல் பெண்ஜாதி ஜகத்மோகினிக்கு தன் சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டார். இவள் அதை யனுபவித்துக்கொண்டிருந்தாள். பிறகு ஜகத்மோகினி இதை பிரதிவாதியாகிய “சோல்கான்” என்பவருக்குக் கிரயஞ் செய்தாள். சொத்து சோல்மான் என்பவர் வசமிருந்தது.

ஜகத்மோகினி இறந்தவுடன் பாபட்டாஸ் பெனர்ஜி, தானும் “பிரசிட்டோஷ் என்பவரும் சொத்துக்கு அனந்தவர வார்சுக்களென்றும் “பிரசுட்டோஷ்” என்பவரின் பாகத்தை தான்வாங்கி விட்டதாகவும், ஜகத்மோகினிக்கு ஜீவியகால முள்ளளவும் அனுபவ பாத்தியமாத்திரந்தா னுள்ளவளென்றும் அவளுக்குப் பிறகுத் தனக்குக்கிடைக்க வேண்டுமென்றும், இறந்த தியதிக்கு முன்தியதில் ஒரு தானசானம் பெண்சாதி பேருக்கு மூலபுருஷனல் பிறந்ததுபோல பொய்கையெழுத்துப்போட்டு எழுதிசிலபாதங்களுக்குப் பிறகு பெண்சாதியினல் சட்டவிரோதமாக ரிஜிஸ்டர் பண்ணப்பட்டிருக்கிற தென்று யாதொரு பாத்தியமு மில்லாத பிரதிவாதி வசமிருக்கும் சொத்து தனக்குப் பாத்தியமுள்ளதென்று டிக்ளேயர் பண்ணும்படி (ஸ்தாபிக்கும்படி)க்கும், சுவாதீனப்படுத்திக் கொடுக்கும்படிக்கும். மத்திய வரும்படி கிடைக்கும்படிக்கும் தீர்ப்புசெய்ய வேண்டுமென்று “பர்ட்வான்” டிஸ்டிரிக்டு கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தீர்மானம்:—ஜகத் மோகினி பெயரால் எழுதப்பட்ட தானசாதனம் உண்மையானதென்றும் அது 7உ பிறந்திருக்கிறதென்றும் அவர் இறந்த 8உக்குப் பிறகு அவர் விதவை சட்டப்படிக்கான பதிலியாக அப்பத்திரத்தை ரிஜிஸ்டர் பண்ணியிருக்கிறாளென்றும் ஆகையால் ரிஜிஸ்டரேஷன் செல்லத்தக்கதென்றும் இத்தானசாதனத்தால் அச்சொத்தின் சகலபாத்தியமும் காலிப்பிர

சன்னுவின் மனைவிக்கு வந்துவிட்டதென்றும் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பை உறுதிப்படுத்தி அப்பீலைத்தள்ளி விட்டார்கள். இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் பண்ணினுர்.

வாதி பக்கத்து வக்கீலின் வாதம்:—தான சாதனத்தின்படி பாத்தியங் கொண்டாடுகிறவளும் ரிஜிஸ்டர் செய்தவளும் ஒரே பேர் டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டின் 123-வது பிரிவுப்படி அசையாப்பொருளைப்பற்றிய தானம் ரிஜிஸ்டரான பத்திரத்தினுல் நிறைவேறவேண்டியது. ரிஜிஸ்டர் பத்திரத்தினுல்தான் தானம் பூரணமாகும். ரிஜிஸ்டர் ஆகிறவரையிலும் சொத்து கைமாருது. தானசாசனம் ரிஜிஸ்டர் பண்ணினுல் மாத்திரம் பலனளிக்கிறதென்று 123-வது பிரிவை அர்த்தம் பண்ணவேண்டும். எல்லா தான சாசனங்களும் ரிஜிஸ்டர் பண்ணப்படவேண்டுமென்பது மாத்திரம் 123-வது பிரிவை எழுதின சட்ட நிருபண சபையாரின் நோக்கமாயிருந்தால் அதற்கு தான சாதனம் எழுத்து மூலமான பத்திரத்தியிருக்கவேண்டுமென் றிருந்தாற்போதும்; ஏனெனில் ரிஜிஸ்டரேஷன் ஆக்டு 17-வது பிரிவில் எல்லாப்பத்திரங்களும் ரிஜிஸ்டர்பண்ணப்படவேண்டுமென்றிருக்கிறது. டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு நடக்குங் காரியத்தைப் பற்றி சொல்லுகிறது. ரிஜிஸ்டரேஷன் ஆக்டு பத்திரங்களைப்பற்றி கூறுகிறது. (இ. லா. ரி. 12 சென். 433 இல் ராமசாமி அய்யன் v. கோபால அய்யன்.) ஒரு தானம் செல்லும்படியாகவும் பிரயோசனப்படவும். சொத்தை வாங்குகிரவர் வசஞ்சேர்க்கவும் அவருக்கு பாத்தியத்தை பூரணமாகவும் வேண்டிய ஒவ்வொரு காரியமுஞ் செய்யவேண்டுமென்பது சட்டம். கொடுத்தவர் உயிரோடிருந்தால் ரிஜிஸ்டர் பண்ணச்சொல்ல கட்டாயம் பண்ணமுடியாது. பூரணமாகாத தானத்துக்கு ஒரு கோர்ட்டார் சகாயஞ்செய்து பெற்றுக்கொள்ளுகிற வருக்கு ஒருபாத்தியத்தை உண்டுபண்ணமுடியாது இ. லா ரி. 20 அல 392 இல் "நன்ட்கிஷோர்லால்" v "சூராஜ பிரசாத்." கேசில் வித்தியாசமாக அபிப்பிராயப்பட்டிருக்குர்கள். இ. லா. ரி. 23 சென். 580 இல். பக்ரான் v குன்ஹோமட்" கேசிலும் 25 சென் 67 இல் மெய்யாலு நாடான் v "அஞ்சலை" கேசிலும் தானப்பண்ணுகிறவன் இறந்துபோனுல் அவருடைய ஸ்தானத்திலுள்ளவர்கள சட்டப்படி அவர் நடத்த வேண்டியவைகளை நடத்தத் தகுதியுள்ளவர்; இவர் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினுல் அதைத் தடுக்கக்கூடியவர் ஒருவருமில்லையென்று கண்டிருக்கிறது; ஆனுல் இந்தக்கேசில் விதவை சொத்துக்கு முழு பாத்திய முள்ளவளல்ல. அரைகுறையான தானத்தைப்பூர்த்திபண்ண தன்புருஷன் ஸ்தானத்தில் வரக்கூடியவளல்ல. முழுசொத்தையும் பராதீனம் செய்யக்கூடியவர் யாரோ அவர்தான் அப்படிச்செய்யக்கூடும். தனக்கு ஒரு பாத்தியத்தை ஸ்தாபிக்கிற பத்திரத்தை, அது செய்யப்பட்டதாக தான் ஒப்புக்கொள்ளுதல் பூர்த்தியானதாகாது. இவ்விஷயத்தில் செய்த ரிஜிஸ்டரேஷன் செல்லத்தக்கதல்ல. இங்கு ரிஜிஸ்ரேஷன் ஆபிசில் சரியான பெயரால் தாக்கல் செய்யப்பட்டது ரிஜிஸ்டராகிறதற்கு பத்திரம் முடிவுபெற்றதாக ஒப்புக்கொண்ட பெயர் சரியானபெயரல்ல. ரிஜிஸ்டரேஷன் செர்ட்பிகேட்டு அக்குறைவை நிவர்த்திக்காது.

பிரதிவாதியின் வக்கீல் கூறிய வாதம்:—இந்து லாப்படி விதவை சொத்தின் முழுப்பாத்தியத்துக்கும் நடவடிக்கை நடத்தத் தக்கவள். வியாச்சிய விஷயத்திலும் முழுபாத்தியத்துக்கும் நடவடிக்கை நடத்தக்கூடும். தான் தானம் பெற்றவள் என்கிற செய்தி இத்தகுதியை குறைவுபடுத்தாது (மீயாலுநாடான் v. அஞ்சலை; பக்ரான். v. குன்ஹமட்) இந்தக் கேசுகளில் ஒன்றில் தானம் பண்ணினவர் இறந்தவுடன் அவருடைய புத்திரன் மூவரில் ஒருவருக்குச் செய்த தானத்துக்காக அவரே ஒப்புக் கொண்டதன்மேல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—காளிப் பிரசன்ன பெனர்ஜி தன் மனைவி ஜகத்மோகினிக்கு தானசாசனம் செய்தார். மறுநாள் இறந்துபோனுர். அதை ஜகத்மோகினி ஒப்புக்கொண்டு ரிஜிஸ்டர் பண்ணினுள். கீழ்க்கோர்ட்டார் அப்பத்திரம் பிறந்தது உண்மையென்று கண்டார்கள். இச்சொத்தை ஜகத் மோகினி பிரதிவாதிக்குக் கிரயஞ்செய்துவிட்டாள். காளிப் பிரசன்னுவுக்கு அனந்தர வார்சென்றும் சொத்து தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும் வாதி பிராது செய்திருக்கிருர்.

டிரான்ஸ்பர் ஆப்பிராப்பர்ட்டி ஆக்டின் 123-வது பிரிவுப்படி ரிஜிஸ்டரான தஸ்தாவேஜியாகாதென்றும் 123-வது பிரிவில் அசையாப்பொருளை தானஞ்செய்வதற்கு தானஞ் செய்பவராவாகிலும் அவருக்காகவாகிலும் கையெழுத்து போடப்பட்டு குறைந்த பட்சம் இரண்டு பெயரால் சாட்சி போடப்பட்ட ரிஜிஸ்டர் செய்த தஸ்தாவேஜியால் காரியப்படுத்தவேண்டும் (அதாவது நிறைவேற்றவேண்டும்) என்று எழுதப்பட்டிருக்கிறதென்றும் பத்திரம் ரிஜிஸ்டர் பண்ணுவதற்கு ஏற்பட்டு அமுலிலிருக்கிற சட்டத்துக்கிணங்க ரிஜிஸ்டர் செய்யப்படவேணுமென்கிறதாக 3-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், 4-வது பிரிவைக் கவனிக்கும்பொழுது ரிஜிஸ்டரேஷன் ஆக்டுக்கு 123-வது பிரிவு சேர்க்கப்படவேண்டுமென்றும், ரிஜிஸ்டர் பண்ணினதென்றல் தானஞ்செய்கிறவரால் ரிஜிஸ்டர் பண்ணப்படவேண்டுமென்றும் அவ்வாறு ரிஜிஸ்டர்பண்ணப்படாவிட்டால்தான சாசனம் பூர்த்தியாக வில்லையென்றும் தானஞ்செய்ததேயொழிய சட்டப்படி முடிவு பெற வில்லையென்றும் வாதிவக்கில் கட்சி சொன்னுர்.

இவ்வபிப்பிராயம் நியாயமல்ல இ.லா.ரி. 20. அல 392 நன்ட்கிஷோர் லால், v சுராஜ் பிரசாத், கேஸ் இதற்கு ஆதாரமுள்ளது. தான சாசனம் ரிஜிஸ்டரானபத்திரமா அல்லவாவென்பதைப்பற்றிநிர்ணயிக்க ரிஜிஸ்டரேஷன் ஆக்டு 35-வது பிரிவைக்கவனிக்க வேண்டும். பத்திரம் நடந்ததை ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் அந்தப்பிரிவிற்கண்டிருக்கிறதாவது "பத்

ரஞ்சொய்தவர் இறந்து போனுல் அவர்காரியக்காரன் அல்லது சொத்து ஒப்படைக்கப்பட்டவன் ரிஜிஸ்டர் பண்ணும் உத்தியோகஸ்தர் முன்பு ஆஜராகிபத்திரஞ் செய்ததை ஒப்புக்கொண்டால்அவர் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியது." இப்பொழுது விதவையை ஒரு காரியக்காரியாக அல்லது பதிலியாகப்பாவிப்போமானுல் ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் முன் ஆஜராகி பத்திரம் பிறந்ததாகச்சொல்லி ஒப்புக் கொண்டால் அப்பத்திரம் ரிஜிஸ்டரானதாக எண்ணப்படும். ரிஜிஸ்டரான பத்திரமென்றல் எழுதிக்கொடுத்தவராற்ருன் ரிஜிஸ்டர் பண்ணப்படவேண்டுமென்று 123-வது பிரிவுப்படி அர்த்தமாகுமென்று அப்பீல் வாதி சொல்லுகிற கட்சிக்கு ஆதாரம் அந்தப்பிரிவில் ஒன்றுங் காணப்படவில்லை. அங்கு இருக்கும் வார்த்தைகளால் வேண்டுமென்றே மேலேகுறித்த அம்சத்தை விட்டிருக்கிறதாகத் தெரிகிறது. தானஞ்செய்கிறவரால் அல்லது அவருக்காக வேறெருவரால் கையெழுத்து செய்யப்படவேண்டுமென்று அப்பிரிவில் கண்டிருக்கிறதேயல்லாமல் தானஞ்செய்தவராலேயே ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்கிற அவசியத்தைப்பற்றி யொன்றுஞ்சொல்லப்படவில்லை. பத்திரம் எழுதின தியதிக்கும் ரிஜிடர் பண்ணுகிற தியதிக்கும் இடையில் எழுதிக்கொடுத்தவர் இறந்துபோகக்கூடும் என்று சட்டநிருபணசபையார் உத்தேசித்திருக்கிருர்கள். இப்பிரிவை ரிஜிஸ்டரேஷன் ஆக்டு 4-வது பிரிவுடனும் வாசிக்கும்பொழுது ரிஜிஸ்டர் செய்யப்பட்டது என்றல் இந்தியன் ரிஜிஸ்டரேஷன் ஆக்டுப்படி ரிஜிஸ்டரானதென்று அர்த்தப்படும். இங்கே ரிஜிஸ்டர் பண்ணுகிரதற்கு முன் இறந்துபோன பெயரைப்பற்றியும் குறிப்பிடுகிறது. 35-வது பிரிவின் தாற்பரியத்தின்படி தானசாசனம் செய்தவருக்கு பதிலியாக விதவையாவாளாவென்று சங்கை நேரிடுகிறது. அவள் பதிலியென்பதற்கு ஒரு ஆட்சேபனையுமில்லை. வேண்டியதானுல் அந்தக்சொத்தைபரிபாலிக்க சர்க்காரால் அதிகாரம்பெற யோக்கியதை யுடையவள் உள்ளபடி அவள் பதிலிதான். அவள் தானத்தைப்பெறுகிறவளாதலால் அவள் தன் புருஷனுக்கு பதிலியாகமாட்டாளென்று அப்பீல் வாதி ஆட்சேபிக்கிருர். சட்டநிருபணசபையாருக்கு இது தோன்றியே யிருக்கும். அதற்காக அங்கே யாதொரு வேற்றுமையு மேற்படுத்தவில்லை. காரியக்காரர் (அதாவது பதிலி) என்று மாத்திரம் குறிப்பிடுகிறது. விதவையோ அப்பேர்ப்பட்ட பதிலி என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் ரிஜிஸ்டரேஷனைச் செல்லுபடியாக்க பத்திரம் நடந்ததை ஒப்புக்கொள்ள யோக்கியதையுடையவள்.பாக்ரன். v குன்ஹோமெட்இவ்வபிப்பிராயத்துக்கு ஆதாரமுடையது. மேலே சொல்லிய காரணங்களினுல் அப்பீல் செலவு தொகையுடன் தள்ளப்பட்டது.

ரூலிங்ஸ்:—தானசாசனஞ் செய்தவர் இறந்து போனுல் அவர் விதவை காரியக்காரியாயிருக்கும் பொழுது தான சாசனத்தின்படி தானம் பெருகிறவளாயிருந்தாலும் ரிஜிஸ்டரேஷன் ஆக்டு 35-வது பிரிவுப்படி அவள் காரியக்காரியாகப் பாவிக்கப்படுவாளென்றும் பத்திரத்தின் ரிஜிஸ்டரேஷன் செல்லுபடியாக பத்திரம் நடந்ததை ஒப்புக்கொண்டு ரிஜிஸ்டர் பண்ண யோக்கியதையுடையவள் என்றும் டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 123-பிரிவு 4-வது செக்ஷ்டியூள்படி இந்தியன் ரிஜிஸ்டரேஷன் ஆக்டுடன் சேர்க்க வேண்டியது என்றும், "ரிஜிஸ்டரான பத்திரயா" என்னும் வார்த்தைகள் இந்தியன் ரிஜிஸ்டரேஷன் ஆக்டின் விதிகளின்படி ரிஜிஸ்டரான பத்திரமென்றர்த்தமென்றும், தானஞ் செய்கிறவனுலேயே ரிஜிஸ்டர் பண்ணப்படவேண்டியதில்லையென்றும்.

3. மனைவிபேருக்கு ஒரு தானசாசனஞ் செய்தவன் இறந்துபோனுல் பிறகு அவன் பதிலியாக பத்திரம் நடந்ததாக ஒப்புக்கொண்டதினுல் ரிஜிஸ்டர் பண்ணப்படுமானுல் அப்படி ரிஜிஸ்டரானது டிரான்ஸ்பர் ஆக்டு 113-வது பிரிவுப்படி ரிஜிஸ்டரான தென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 33. கல். 584.

(Bhabatosh Banerjee v. Soleman I. L. R. 33. Cal. 584.)

வருமானவரி பிராசிக்கியூஷன்.

(21—10—06.)

கேசின் விபரம்:—பழனியப்பதேவர் என்பவர் சய்கானுக்குப் போய் சம்பாரித்து ரூ 27500 கொண்டுவந்து ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரிடம் வட்டிக்குப் போட்டு பட்டுக்கோர்ட்டையில் வசித்துக் கொண்டுவந்தார். வருமானவரி ஜாப்பிதாவில் சர்க்காருக்குஅனுப்பவேண்டிய இவர்டை நாட்டுக்கோட்டை செட்டியாரிடம் போட்டிருந்த பணத்தை எழுதவில்லை. ஆகையால் இவர்பேரில் இ. பி. கோ. 182-வது பிரிவின்படி பப்ளிக் செர்வென்டிற்கு அதாவது சர்க்கார் உத்தியோகஸ்த்தரிடம் பொய்யான சமாசாரம் சொன்னதற்காக குற்றஞ் சாட்டப்பட்டார்.

லாயர்கள்:—பப்ளிக் பிராசிக்கியூட்டர் கவர்ன்மெண்டு தரப்பிற்கும் பாரிஸ்டர் மிஸ்டர் E. நார்ட்டன் குற்றவாளி தரப்பிற்கும் ஆஜரானுர்கள்.

குற்றவாளியின் டிபன்ஸ்:—இன்கம்டாக்ஸ் ஜாப்பிதாவில் உறுதி மொழிக்கு (Solemn Declaration) முன்னுல் கையெழுத்து செய்திருக்கிறனே தவிர அதன் கீழ் கையெழுத்து செய்யவில்லை. எனக்கு வாசிக்கத் தெரியாது. என் குமஸ்தா எழுதினுன். நான் கையெழுத்து போட்டேன். என் குமஸ்தா எனக்கு வாசித்துக் காண்பித்ததற்கு சாக்ஷியமில்லை.

தீர்ப்பு:—குற்றவாளி சர்க்கார் உத்தியோகஸ்தருக்குபொய்யான சமாசாரத்தைச்சொன்னகுற்றத்தைச் செய்திருக்கிருன். தண்டனை சொல்லும் விஷயத்தில், எனக்கு எவ்வளவு அபராதம் போடுவதற்கு அதிகார மிருக்கிறதோ அவ்வளவும்போடவேண்டும்; குற்றவாளி பணக்காரன். வருமானவரிசெலுத்து வது அவனுக்கு ஒரு பெரியகாரியமல்ல. இந்த அயோக்கியத்தனமும் அற்பத்தனமுமான நடவடிக்கை மிகக் கடுமையாய் சிக்ஷிக்கப்படவேண்டும். ஆகையால் அபராதத்துடன் சொற்ப ஜெயில் தண்டனையும் விதிக்க வேண்டும் இப்படிச்செய்தாலொழிய சர்க்காருக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை கட்டு வதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஜனங்கள் முயன்று வருவார்கள். ஆகையால் குற்றவாளிக்கு மூன்று நாள் கடுங்காவல் தண்டனையும், ரூ 1000 அபராதமும், அபராதம் கட்டத்தவறினுல் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன்.

இந்தத்தீர்ப்பிற்கு விரோதமாய் குற்றவாளி ஜில் லாக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்திருக் கிறார். அப்பீல்தாக்கலாகும் போது, பிளீடர் மிஸ்டர் கே. சீனிவாசபிள்ளை ஆஜராகி குற்றவாளியை ஜாமீன் பேரில் விடுவிக்கும்படி மனுசெய்து கொண்டார் குற் றவாளியை ஜாமீன்பேரில் விடும் படி உத்திரவு செய் யப்பட்டது. அப்பீல் விசாரணைக்கு அடுத்தமீ 2உ குறிப்பிடப்பட்டிருக்கிறது.

GOVERNMENT ACTS, ORDERS, NOTIFICATIONS AND BOARD'S PROCEEDINGS.

ஆக்டுகள், ஆர்டர்கள், விளம்பரங்கள் போர்ட்ஸ் புரோசிடீங்ஸ்கள்.

கர்ணன்கள் புது பீல்டு மாப்புகள் தயார்செய்வதில் கவனிக்க வேண்டியவைகள்.

1. கிருமத்திய முதல் சர்வே நம்பரிலிருந்து வரிசை கிரமமாய் பீல்டு மாப்புகள் தயாரிக்கவேண்டும். ஒரு சர்வே நம்பரின் மொத்த விஸ்தீரணத்தை அதற்கு சம்பந்தப்பட்ட பீல்டு மாப்பின் உச்சியில் வலதுபுரம் மூலையில் தவருமல் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

2. டிரை ஜங்கிஷன் லயன்கள் $\frac{1}{3}$-இஞ்சு நீளத்திற்கு குறையாமல் இழுக்கவேண்டியது. பீல்டு மாப்பில் ராயசம் எழுதாமல் தாக்கல் செய்கிற பிரதி எழுத்தும் பிகரும் தெளிவாகவும் ஜாக்கிரதையோடும் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

3. ஒரு புலத்திற்கு சயிட் (பக்கம்) வேறு கிராமமாக ஏற்பட்டால் அந்த கிராம நம்பரையும் பெயரையும் மட்டும் ஷை பீல்டு மாப்பில் அதற்கு எல்லையாய் ஏற்படும் பக்கத்தில் தாக்கல் செய்யவேண்டியது. (இன்ன கிராமத்திய எல்லையென்று எழுதவேண்டியதில்லை.

4. தாக்கல் செய்யும் இலக்கங்கள் ஒன்ருேடொன்று சேராமலும் தனிதனியாகவும் இருக்கவேண்டியது. 1 & 7, 7 & 9, 6 & 9, 3 & 5, 3 & 8, 0 & 6, இதுகள் நன்ருய் வித்தியாசம் தெரியும்படியாய் தாக்கல் செய்யவேண்டியது.

5. லயன்கள் ஒரு மூலைக்கு ஒரு மூலை ஒழுங்காய் நேர் கோடாக ஜாக்கிரதையுடன் தட்டை (ப்ளாட்) ரூலரினால் இழுக்கவேண்டும்.

6. வெவ்வேறு விதமான டிமார்க்கேஷன் கற்களை தெரிந்து கொள்ளும்படி பீல்டு மாப்பில் அடியில் காண்பித்திருக்கும் அடையாளங்களை காண்பிக்கவேண்டும்.

அல்லது  கிராம டிரை ஜங்கிஷன் அல்லது எல்லை முக்கிட்டுத்தியாட்லைட் கற்கள்.

மற்ற எல்லைத்தியாட் லைட் ஸ்டேஷன்கள்.

ப்ளாக்கு ஸ்டேஷன்கள்.

செக்கு ஸ்டேஷன்கள்.

பவுண்டேரி ஆப் செட்டு, பிளாக்கு ஆப்செட்டு கற்கள். இவைகளுக்கு யாதொரு விதமான அடயாளமும் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை.

7. ஒரு சர்வே புலத்தின் எல்லையானது இரண்டு பிளாக்குகளின் எல்லையாக யேற்பட்டால் பீல்டு மாப்பில் பக்கத்திய பிளாக்கு நம்பரை தாக்கல் செய்யாமல் பக்கத்திய புலத்தின் நம்பரைத்தான் தாக்கல் செய்யவேண்டியது.

8. பீல்டு மாப்புகளின் சயிட்டு நம்பர்கள் (பக்க நம்பர்கள்) தாக்கல் செய்வதில் ஷை சயிட்டு நம்பர்களைச் சுற்றிச் சக்கரம் வரையாமல் ஷை பக்க நம்பரின் கீழ் ஒருகோடுமட்டும் வரையவேண்டியது.

(உதாரணம் 46, 19, & 6,& 6.)

9. பீல்டு மாப்புகளில் தாக்கல் செய்யும் அளவுகளெல்லாம் வடக்கிலும், மேற்கிலும். பார்த்திருக்கவேண்டும்.

10. ஒரு பீல்டை ரீ பிளாட்டு செய்யவேண்டியதற்காக ஏற்பட்டால் ஒடைகள், ரோட்டு (கரைபாதை) முதலிய நீண்ட குறுகலான சர்வே நம்பர்களைத்தவிர பாக்கி நம்பர்களை விஸ்தீரணத்துக்குத்தக்கபடி ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் ஸ்கேலால் பிளாட்டு செய்யவேண்டியது. (அதாவது) 5-எக்கர் வரை, 1-அங்குலம் 1-சங்கிலி, 5-எக்கராவுக்கு மேற்பட்டு 20-எக்கர் வரை 1-அங்குலத்திற்கு 2-சங்கிலி. 20-எக்கராவுக்கு மேற்பட்டது 1-அங்குலத்திற்கு 5-சங்கிலி ஸ்கேலால் பிளாட்டுசெய்யவேண்டியது. பீல்டு புக்கிலேயே எல்லாம் சரியாயிருந்து வேறே பிரித்து எடுக்கவேண்டிய அவசியமில்லாத 5 எக்கருக்கு உள்பட்ட நெம்பர்கள் ஏற்கனவே 40-இஞ்சுஸ் கேலிலேயே பிளாட்டாகியிருந்தால் அவைகளை என்லார்ஜ் செய்யவேண்டியதில்லை. ஆனல் வேறு பிரித்து எடுக்கும்போதெல்லாம் 80-இஞ்சு ஸ்கேலுக்கே என்லார்ஜ்செய்யவேணும். பாரஸ்ட்டு முதலிய 400, 500-எக்கருள்ள மிக்கபெரிய நெம்பர்களை 1-அங்குலம் 10-சங்கிலி ஸ்கேலாலும் பிளாட்டு செய்யலாம்.

11. கர்ணன்கள் அல்லது இன்ஸ்பெக்ட்டர்கள் பிளாக்குமாப்போடு பீல்டு புஸ்தகத்தைக் கம்பேர்செய்யும்போது அளவுக்கு மேலே பென்சலினல் டிக்குமார்க்குசெய்து பீல்டு மாப்பைக்கெடுக்கக்கூடாது. டிக்குமார்க்கு செய்யவேண்டியது அவசியமாயிருந்தால் கருப்பு பென்சலினல் மெல்லியதாக டிக்குமார்க்கு செய்யவேண்டும்.

12. திருத்தப்பாடுகள் பூராவும் சிவப்பு மசியினல்தான் செய்யவேண்டும். அளவுகளை ஒன்றின்மேலொன்று விளம்புதல், கத்தி அல்லது ரப்பரினல் சுரண்டுதல் இவைகள் கூடாது. அப்படிச்செய்வது சந்தேகத்துக்கு இடம். மேலும் அப்படி சுரண்டும் பாகங்களில் மசிப்பட்டால் அது எங்கும் பரவிவிடும்.

13. கம்பாசை அஜாக்கிரதையாய் உபயோகிப்பதினல் சிறிய துவாரங்களில் விழுந்திருந்தால் ஷை துவாரங்களில் இங்கிபடாமல் ஜாக்கிரதையாய் இங்கி செய்யவேண்டியது. அந்த துவாரங்களில் மசிபடும் பட்சத்தில் அந்த நெம்பரின் பின் பக்கத்தில் மசி ஊரி அந்த நெம்பரை கெடுப்பதும் தவிர அதற்கு அடுத்த கீழ் நெம்பரையும் கெடுத்துவிடும். மசி ஊரிக் கடுதாசியை கெடுக்காமலிருக்கிறதற்காக அடியில் ஒரு பெரிய பிளாட்டிங்கு பேபரைக்கொடுத்து அதின்மேல் பீல்டு மாப்பைவைத்து இங்கி செய்யவேண்டியது.

14. தாலூகாவிலிருந்து கர்ணன்களுக்கு சப்ளை செய்திருக்கும் இங்கிப்பவுடரை கர்ணன்கள் கெஜட்டில் கொடுத்திருக்கும் இன்ஸ்டிரக்ஷன்படி மசி காய்ச்சிவைத்துக் கொண்டு ஷை மசியால்த்தான் பீல்டு மாப்புகளை இங்கி செய்யவேண்டியது. இங்கி செய்தபிறகு மசிக்கூடுகளை ஜாக்கிரதையாய் மூடிவைக்கவேண்டியது. இங்கி பவுடர் இதுவரை சப்ளையாகாவிட்டால் தாலூகாவுக்கு ரிப்போர்ட்டுசெய்து உடனே பெற்றுக்கொள்ளவேண்டியது.

15. கர்ணன்கள் சில சமயங்களில் மிருதுவில்லாமல் கெட்டியாயிருக்கிற அல்லது ஏற்கனவே ஊரிப்போன பிளாட்டிங்கு பேபர்களை உபயோகிப்பதினல் லயனுக்கப்பாலும் கடுதாசியில் இங்கி பரவிப்போகிறது. மேலும் பிளாட்டிங்கு பேபரினல் ஒத்துவதினல் இங்கியின் கருப்புநிறமும் கொஞ்சம் மங்கிபோய்விடுமாகையால் கூடியமட்டில் பிளாட்டிங்கு பேபரை உபயோகப்படுத்தாமல் காயவிட்டுவிடுவதே நலம்.

16. பீல்டு மாப்பை டெஸ்டுசெய்யும் சர்ணனும் செக்குசெய்யும் இன்ஸ்பெக்ட்டரும் ஷை மாப்பின் வலது புறத்தில் சீழேயிருந்து சற்றேரக்குறைய ஒரு அங்குலத்துக்கு மேற்படாமல் அடியில் கர்ணன் முடிவுதேதியுடனும் இன்ஸ்பெக்ட்டர் தணிக்கைதேதியுடனும் கையெழுத்து செய்யவேண்டியது.

17. எல்லா கர்ணன்களும் பிரதிதினமும் அவர்கள் கம்பேர் அல்லது தயார்செய்யும் பிரதி பீல்டு மாப்புகளிலும் உள்ள குறைவுகள் வித்தியாசங்களை பூமியில் பார்த்து கரெக்ஷன் செய்யும்பொருட்டு ஏற்கனவே கொடுத்திருக்கும் அச்சுப்பாரப்படி ஒரு நோட்டு புஸ்தகத்தில் தாக்கல்செய்துவைத்துக்கொள்ள வேண்டியது. இன்ஸ்பெக்ஷன் காலத்தில் ஷை நோட்டுப்புஸ்தகத்தை தயாருய் காண்பிக்கவேண்டியது

18 உறுதியுள்ள நல்ல பென் ஒல்டர்களையும் புதிதான ஸ்டீல் நிப்புகளையும் இங்கு செய்வதற்காக உபயோகிக்கவேண்டியது. அவைகளை வேறுவிதமான எழுத்துவேலைகளுக்கு உபயோகப்படுத்தலாகாது, கனமான லயன்கள் வரையதற்கு ஒருவித ஸ்டீல் நிப்பும் மெல்லிய லயன்களை இங்கு செய்வதற்காக ஒருவித ஸ்டீல் நிப்பும் ஆக இரண்டுவித நிப்புகள்

பிரத்தியேகமாய் உபயோகப்படுத்தவேண்டியது. ஷை ஸ்டீல் நிப்புகளை வேலை முடிந்தவுடன் நன்ருய்க்கழுவிசுத்திசெய்து விட்டால் வெகு நாளைக்கு நிற்கும்.

19. புதிதாய் தயார்செய்யும் பீல்டு மாப்புகளிலும் அல்லது பீல்டு புக்கிலேயே சரியாயிருக்கிற நெம்பர்களிலும் டிரை ஜங்கிஷன்கள், சயிட் நெம்பர்கள் இவைகளை சி.—மாப்பைபார்த்து தான் தாக்கல் செய்யவேண்டும். பிளாக்கு மாப்பைப்பார்த்து சயிட் நெம்பர்கள் ஜங்கிஷன்கள் தாக்கல் செய்யக்கூடாது. ஒரே பிபிண்டில் மூன்று நெம்பருக்கு மேற்பட்டு 4-5-நெம்பர்கள் ஜங்கிஷனக யேற்படுவதில் எவ்வளவு ஜங்கிஷன்கள் ஏற்படுகிறதோ அவ்வளவையும் ஜாக்கிரதையாய் பார்த்து இழுக்கவேண்டும். இதில் தவரிப்போகிறது வழக்கம். அப்படி தவறக்கூடாது.

20. ஒரு பீல்டுக்குள் முழுவதும் வேருெரு பீல்டு இருந்தால் பின்சொல்லிய சிறிய பீல்டை தனியாக வேறே ஷீட்டில் பிரிக்கோ பிளாட்டிங்கோ செய்வதும் தவிர ஷை பெரிய பீல்டுக்குள்ளும் சரியான இடத்தில் இதைக்காட்டவேண்டும். ஆனல் ஷை பீல்டின் அளவுகளை தாக்கல் செய்யவேண்டியதில்லை.

21. தயாரிக்கும் பீல்டு மாப்பில் சர்வே சப்-டிவிஷன் களைத்தவிர பாக்கி பிளாட்டு செய்யும் செட்டில்மெண்டு ரிவினியூ சப்-டிவிஷன்களில் லயன்கள், அளவுகள் முதலியவைகளை கூடுமானல் சிவப்பு மசியால் தாக்கல் செய்யவேண்டும் இத்தனையாவது நம்பர் என்பதை பீல்டு மாப்பின் தலைப்பு ஹெட்டிங்கில் எழுதினல் போதுமானது. பீல்டு மத்தியில் எழுதவேண்டியதில்லை. சப்-டிவிஷன் நம்பர்கள் லெட்டர்கள் இன்னின்னது இன்னதென்று பரிஷ்காரமாய் தெரியும்படி சர்வே சப்டிவிஷன்களை கருப்புஇங்கிலும் செடில்மெண்டு ரிவினியூ சப்டிவிஷன்கலில் பென்ஸலினலும் தாக்கல் செய்யவேணும். பீல்டு நம்பரை சப்-டிவிஷன் நம்பர்லெட்டரோடு சேர்த்துப்போடக்கூடாது. அதாவது 21-ம் நம்பரில் 2-சி என்று ஒரு சப்-டிவிஷன் இருந்தால் 2-சி என்று மட்டும் அந்த சப்-நம்பருக்குப் போடவேணுமே யொழிய 21 2-சி என்று போடக்கூடாது.

22. பீல்டுறப்புஸ்கெச்சு சரியாயில்லாமல் புதிதாய் தயாரிக்கும் பீல்டு மாப்புகளுக்கு முதலில் பிளாக்குமாப்பில் அளவு பிரகாரம் பிளாட்டிங்கு டெஸ்டு செய்து பென்சல் பாயிண்டுபோட்டுக்கொண்டு பிறகு பிரிக் எடுக்கவேண்டும். அப்படி பிளாட்டிங்கு வித்தியாசமாயிருந்தால் அந்த வித்தியாசம் பக்கத்திய லயன்களில் இருக்கிறதாவென்று பார்த்தும் அதிலும் இல்லாவிட்டால் அந்த லயனுக்குச்சம்பந்தப்பட்ட ஜி-லயன் ஆப்செட்டுகளைக்கொண்டு பிளாக்கு மாப்பில் பிளாட்டுசெய்து பார்த்து கரெக்ஷன் செய்துக்கொள்ளவேண்டியது. அப்படியும் கரெக்ஷனகாவிட்டால ஷை வித்தியாசம் சங்கிலி ஒன்றுக்கு 5-லிங்சுக்கு மேற்படாமலிருக்கிறதாவென்று பார்க்கவேண்டியது. மேற்படாமலிருந்தால் அப்படியே பிரிக் யெடுத்துவிடலாம். மேற்பட்டால் பூமியில் சோதிக்கவேண்டிய அம்சத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டியது பிளாக்கு மாப்பில்லாத பிளாட்டிங்கு பிசகு பீல்டு மாப்பில் ஏற்படக்கூடாது, பிளாக்கு மாப்பில் சங்கிலி 1-க்கு 5-லிங்சுங்குள்பட்ட பிசகாயிருந்தால் அதைத்திருத்திப்போடக்கூடிய கேசுகளில் திருத்திப்போட்டு கொள்ளவேண்டியது. பிசகுகளை நன்ருய் கவனித்துப்பாராமல் கண்ணை மூடிக்கொண்டு பிரிக்யெடுத்து விட்டால் அவைகளை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இரட்டிப்பு வேலையாகும். பிளாக்கு மாப்பில் சரியாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்த லயனிலும் பீல்டு புஸ்தகத்தில் சங்கிலி 1-க்கு 5 லிங்சு வரை வித்தியாசமிருக்கலாமென்று நினைப்பது பிசகு.

23. பிளாக்கு மாப்பில் ஒரு லயனின் அளவு 2-3-பாகங்களாய் பிரித்துக்கொடுக்கபட்டிருந்தால் அந்த கேசுகளில் ஷை லயனில் யேதாவது பெண்டிங்கு இருக்கிறதென்ருவது இல்லையென்ருவது நிச்சயம் சொல்லமுடியாது. ஆகையால் அப்பேர்பட்ட கேசுகளில் பிளாக்கு மாப்பிலிருக்கிறபடியே பீல்டு மாப்பிலும் அளவுகளை பிரித்தே தாக்கல் செய்யவேணுமே யொழிய மொத்தத்தைமட்டும் போட்டுவிடக்கூடாது.

24. பீல்டு மாப்பில் கிருமப்பெயர் நெம்பர் ஜில்லா தாலூகா வகையரு ஹெட்டிங்குகளை கூட்டெழுத்தில் ராயசமாய் எழுதாமல் அச்செழுத்துப்போல எழுதவேணும் ஒவ்வொரு மாப்பையும் சுத்தமாகப் பளீரென்று யிருக்கும்படியாய் ரப்பரால் இங்கு நன்ருய் காய்ந்தபிறகு துடைக்கவேண்டும்.

25. பிளாக்கு மாப்பில்லாமல் பூமியில் இப்பால் கர்ணன்கள் அளந்திருக்கும் லயன்களை லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் தனிக்கை செய்கிறவரை இங்கி செய்யாமல் பென்சலினலேயே தாக்கல்செய்து வைத்திருக்கவேண்டியது.

26. கடுதாசியின் உச்சிதான் வடக்கு எப்பொழுதும் பீல்டின் வடக்கு உச்சிப்புறமாக இப்போது பீல்டு புக்குகளில் இருப்பதுபோலவே தான் வரையவேணும். கடுதாசியின் அகலம்பாட்டின பீல்டு அடங் காத கேசுகளில் மாத்திரந்தான் அதாவது பீல்டின் கீழ்மேல் நீளம் கடுதாசியின் அகலத்தை விட ஜாஸ்தியாய் இருக்கும் கேசுகளில் மட்டுந்தான் பீல்டை திசை திரும்ப பிளாட்டு செய்யவேணும். அப்பேர்பட்ட கேசுகளில் நார்த்து பாயிண்டும் வரையவேணும். சாதாரணமாய் பிளாட்டு செய்யக்கூடிய பீல்டுகளை அனுவசியமாய் திசை திருப்பி பிளாட்டு செய்யவும் கூடாது. திசைதிருப்பி பிளாட்டுசெய்யாத கேசுகளில் நார்த்து பாயிண்டு வரையவும் கூடாது.

27. பீல்டு கூடியமட்டில் பேபரின் மத்தியிலேயே இருக்கும்படி பிளாட்டு செய்யவேணும். கூடுமானல் ஒவ்வொரு ஓரத்திலும் ஒரு அங்குலத்துக்குக்குறையாமல் காலி இடம் விட்டுவிடவேணும், தையல் வரும் ஓரத்தில் கட்டாயம் ஒரு அங்குலத்துக்கு குறையாமல் இடம் விடவேண்டியது.

28. ஒரு நம்பரில் ஏதாவது சிறிய வாய்க்கால் முதலிய சப்-டிவிஷன் நன்ருய் தெரியக்கூடாமல் சொற்ப அகலமுள்ளதாயிருந்தாலும் அல்லது அரை அங்குல சதுரத்திற்குக்குறைவாயிருக்கிற சப்-டிவிஷன்களையும் பெரிய ஸ்கேலில் நன்ருயத்தெரியும்படி பீல்டு மாப்பின் பக்கத்தில் தனியாய் வரையவேண்டும்.

29. ஒரு பீல்டு அநேகம் பக்கங்களோடு கோணலான ஷேப்பு உள்ள காரணத்தினலாவது அல்லது அதிக அளவுகள் உள்ள காரணத்தினலாவது எல்லா அளவுகளையும் தெளிவாய் அந்தந்த இடத்திலேயே தாக்கல் செய்ய முடியாவிட்டால் லெட்டர்கள் கொடுத்து பக்கத்தில் தாக்கல் செய்யலாம். ஜி-ஆப்செட்டு அளவுகளுக்கும் அப்படியே தெளிவாயில்லாமல் நெருக்கமாய் போய்விடுமானல் ஷை பீல்டு பிளாட்டு செய்திருக்கும் ஷீட்டின் பக்கத்திலோ அல்லது அங்கும் இடமில்லாவிட்டால் பின்புறத்திலோ லெட்டர்கள் கொடுத்து அளவுகளை காட்டலாம்.

30. ஒரு பீல்டுக்குள்ளேயே முடியும் ஜி-ஆப்செட்டு லயன்கள் அளவுகளை பிளாக்கு மாப்பிலிருந்து பீல்டு புக்கிலும் அந்தந்த பீல்டில் தாக்கல் செய்துகொள்ளவேண்டியது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பீல்டுகளுக்கு பொதுவான ஜி-லயன்களையும் அளவுகளையும் காட்டவேண்டியதில்லை.

தஞ்சாவூர்
ஜில்லா கலெக்ட்டர் நோட்டீஸ்.

1884௵த்திய 5-வது (மதிராஸ் லோகல் போர்டு) ஆக்ட்டு 65-வது பிரிவின்படி தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லா ஜமீன் தார்களையும் பூரா இனும் கிராம சொந்தக்காரர்கள் புகல் இனும் சொந்தக்காரர்கள் இவர்கள் நீங்கலாக ரயத்துவாரல்லாத மற்ற எல்லாவித நில சொந்தக்காரர்களையும் இதனால் கேட்டுக்கொள்ளுகிற தென்னவென்ல்றால்:—தங்களுடைய நிலங்களுக்கெல்லாம் (தங்களுடைய குடிகளின் கைப்பற்றிலிருந்தாலும் சரி தங்களுடைய அனுபோகத்திலிருந்தாலும் சரி) தங்களுடைய அல்லது தங்களிடம் அதிகாரம்பெற்ற ஏஜண்டுகளுடைய கையொப்பமுள்ள சரியான ஜாப்தா ஒன்று தயார்செய்து 1907௵ மார்ச்சு௴ 31௳க்குள்ளாக அடியிற் கையொப்பமிட்டவர்களுக்கு அனுப்பவேண்டும். ஷை ஜாப்தாவில் ஒவ்வொரு கேசிலும் நில விபரம், விஸ்தீர்ணம், 1316 பசலியில் அவைகளினுடைய வருஷாந்திர குத்தகை பெறுமானம், பலனை தரக்கூடிய மரங்களின் குத்தகை பெறுமானம் இவைகளை குறிக்கவேண்டும். இந்த ஜாப்தா தயார்செய்வேண்டிய விதம் 1903௵ நவம்பர்௴ 14௳யுள்ள இந்த ஆபீஸ் சர்க்கியூலர் R. Dis. 1,140-ரீ. நம்பரில் கண்டிருக்கிறது. அதின் நகல் ஒன்று அவர்களுக்கு அனுப்பப்படும்.

2. மேற்சொல்லிய கணக்குகளை கொடுக்கத்தவறினால் அல்லது ஷை ஆக்ட் 68-வது பிரிவின்படி கலெக்ட்டரவர்களாலேயே அந்நிலங்களின் வருஷாந்திர வரும்படி இன்னதென்பதாய் நிர்ணயிக்கப்படும் வரையில் உண்டாகும் தாமதத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூபா. 50 பரியந்தம் அபராதம் விதிக்கப்படுமென்பதை எல்லா ஜமீன்தார்களும் புரொப்ரைட்டர்களும் தெளிவாய் அறியவேண்டியது. அந்த செக்ஷன் நிபந்தனைகள் கருராய் அனுஷ்டிக்கப்படுமென்பதாய் அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். ஏதாவது விசேஷ முகாந்தரங்களினிமித்தம் கணக்குகள் தயார் செய்துகொடுக்க ஜாஸ்தி சாவகாசம் வேண்டியிருந்தால் அது விஷயமாய் கலெக்ட்டரவர்களிடமிருந்து எழுத்து மூலமாய் உத்திரவு பெற்றுக் கொள்ளவேண்டும் அவசியமென்பதாய் தோன்றினால் மட்டும்தான், அப்படிக்கு அனுமதி கொடுக்கப்படும். கணக்குகளை இந்த ஆபீசுக்கு நேராக அனுப்பவேண்டியது.

3. 1316 பசலிக்காக செஸ் ஏற்படுமட்டும் 1315 பசலிக்காக ஏற்படுத்தப்படுகிற செஸ்ஸே தற்கால டிமாண்டாக பாவிக்கப்பட்டு பேஷ்குஷுடனே சரி கட்டின தவணைகளில் வசூலிக்கப்படும்.

1906௵ ஆகஸ்ட்௴ 2-தேதியுள்ள நெ. 2745, மிஸ். டோர்ட்ஸ் ப்ரோசீடிங்ஸ்.

சவுக்கு, முந்திரி மரங்களை நடப்பட்டிருக்கும் ஆக்ஷேபகரமில்லாத பொரம்போக்குகளையும், கரம்பு நிலத்தையும், மரக்கிரயம் அன்னியில் பட்டா பெறுவதற்கு தயாவிஷயமான உத்திரவுகள் 1904-ம் ௵ எப்ரல்௴ 11௳யில் 150-ம் நெம்பரிலும், 1904-ம் ௵ ஆகஸ்ட்௴ 17௳யில் 1337/வெர் நெம்பரிலும் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், 1315-ம் பசலி சிதம்பரம், கூடலூர், தாலூகாக்களில் ஜமாபந்தி நடந்துவருகையில், ஷை உத்திரவுகளை அநேகம் கேசுகளில் அனுஷ்டிக்கவில்லை யென்றும், முக்கியமாய் சிதம்பரம் தாலூகாவில் சில கேசுகளில் தர்க்காஸ்து தாரர்களுக்கு, பொது நன்மையை முன்னிட்டோ அல்லது தர்க்காஸ்துதாரர்கள் நிலத்தில் உள்ள இதரமரங்களின் அதாவது பனைமரங்களின் கிரயத்தைக்கட்ட சக்தி இல்லாததை முன்னிட்டோ சில தர்க்காஸ்துகள் ஏற்கனவேதள்ளப்பட்டிருப்பதாகவும், சிலது தள்ளுண்டுபோக சித்தமாக இருப்பதாகவும் கலெக்டர் அவர்களுடைய நோட்டீசுக்கு வந்திருக்கிறது. 1904-ம்௵ ஜூலை மாதத்துக்கு முந்தி சவுக்குமரங்களாவது முந்திரி மரங்களாவது வைத்து விருத்தி செய்திருக்கும் கேசுகளிலே மரங்களை வைத்து விர்த்தி செய்தவர்கள் சிவாஜமையில் தீர்வை செலுத்திவந்து அந்த நிலம் அடமானம் செய்யப்படாமலும் அல்லது அடமானத்துக்கு லாயக்கில்லாமலும் இருக்கிற கேசுகளிலே, இந்த 1316-ம் பசலி ஆகையருக்குள் தங்களால் வைத்து விர்த்திசெய்யப்பட்டிருக்கும் மரங்களை தாங்களே வெட்டிக்கொள்ளலாம் என்று இதனால் உத்திரவு செய்யப்படுகிறது. அந்தப்படிக்கு மரத்தை உற்பத்தி செய்தவர்கள் மரங்கள் வெட்டிக்கொள்ளாமற்போனால் ஷை மரங்களுக்கு உரிமை பாத்தியம் கவர்ன்மெண்டாருக்கு சேர்ந்துவிடும் என்று இதனால் எச்சரிக்கப்படுகிறது. 1904-ம் ௵ ஜூலை௴ 1௳க்கு இப்பால் மரங்களை வைத்து விர்த்தி செய்தவர்களையும் இனிமேலும் மரங்களை வைத்து விர்த்திசெய்பவர்களையும் இன்னம் ஒரு தபா எச்சரிப்பது யென்னவென்றால் ஷை நிலங்களுக்கு தர்க்காஸ்து கொடுத்துக்கொண்டு மரக்கிரயம் செலுத்தி பட்டா பெற்றுக்கொண்டாலொழிய மரங்களை வெட்டிக்கொள்ள அவர்களுக்கு உத்திரவு கொடுக்கப்படமாட்டாதென்றும் ஷை நிலத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் பயான் செய்யப்படுகிறது.

1906-ம் ௵ ஆகஸ்ட்௴ 27௳யுள்ள 238 நெ. லாண்ட் ரிவினியூ போர்ட்ஸ் ப்ரோசீடிங்ஸ்.

இதற்கு முன்னாலே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் எல்லாவற்றையும் ரத்துசெய்து இப்போது உத்தரவுசெய்கிறதாவது (கொல்லன், தச்சமானியம்) ஊழிய இனமுக்குள்ள ஜோடி எந்த கேசில் செட்டில்மெண்டு தீர்வையை விட ஜாஸ்தியாக விருக்கிறதோ அவ்வகை பாபத்தில் நடந்துவரும் செட்டில்மெண்டு ஆகிர வரையில் செட்டில்மெண்டு தீர்வையையே வசூல் செய்யவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் பின்னால்வரும் மறுசெட்டில் மெண்டில்அவ்வகை பேரீஜைசீர்திருத்த பாத்தியதையைவகித்து அவ்வித பேரீஜ இப்போதிருக்கும் ஜோடியைவிட அதிகப்படாதென்றும் உத்தரவுசெய்கிறார்கள்.

2. இனும் ஷாத்தின்பேரில் அனுபவிக்கப்பட்ட நிலங்களின் சர்க்கார் பேரிஜாக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஜோடியை கிராம இனும் ரிஜிஸ்தர்களில் தாக்கல் செய்துக்கொண்டு வரவேண்டியது. அதற்கும் பூரா தீர்வைக்கும் உள்ள வித்தியாச ஜாஸதி தகையை காயம்வஜாவாக பாவிக்கவேண்டியது.

மன்மதகாந்தன் கதை:—இஃது பல நீதிகளையும் தன்னில் அடங்கப்பெற்று கதா ரூபமாய் வெளிவந்திருக்கும் ஓர் சிறந்த தமிழ் நூல். இஃது சுமார் 110 - பக்கங்க ளுடையதாய் உயர்ந்த கடிதத்தில் மெஸ்ஸர்ஸ் தாம்ஸன் கம்பெனியாரால் அச்சிடப்பட்டது. விலை அணு 8; தபாற் கூலி வேறு. வேண்டுவோர் ஷை கதா ஆசரியர் ம-ள-ள-ஸ்ரீ ஆ—வி—சியாலம்பிள்ளை அவர்களுக்கு (கெ-16. வீரப்பிள்ளைத் தெரு, மண்ணடி) எழுதிக்கொள்ளவும்.

ACT No. VIII OF 1906.

1906-ம்௵த்து 8-வது ஆக்ட்.

AN ACT AMEND THE LAND IMPROVEMENT LOANS ACT, 1883, AND THE AGRICULTURISTS' LOANS ACT, 1884.

1883-ம்௵த்து நிலவிருத்திசம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டையும், விவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்பதைப்பற்றிய 1884-ம்௵த்து ஆக்டையும் திருத்துவதற்கான ஆக்ட்.

1883-ம்௵த்து நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டையும், விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிய 1884-ம்௵த்து ஆக்டையும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விளகப்படுகிறதென்னவென்றால்:—

1. இந்த ஆக்டை, நிலவிருத்தி சம்பந்தமாகவும் விவசாயக்காரர்களுக்கும் கொடுக்கப்படும் கடன்களைப்பற்றிய

சுருக்கமானபெயர். (ஆக்ட்டுகளைத் திருத்துவதற்கான) 1906-ம்௵த்து ஆக்டென்று சொல்லலாம்.

2. 1883-ம்௵த்து நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்ட் 1-வது பிரிவைச்சேர்ந்த (2) அடையாளமிட்ட உட்பிரிவிலும், 4-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (f) அடையாள மிட்டபகுதியிலும். "ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1883-ம்௵த்து 1-வது ஆக்ட் 1-வது, 4-வது பிரிவிகளின் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 6-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட அப்பிரிவிலே, "விதிகள் செய்து அங்கீகரிக்கும்போது, பிரதேச கவர்ன்மெண்டாரும் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களும்," என்பதற்குப்பர்த்தியாக, "விதிகள் செய்யும்போது, பிரதேச கவர்ன்மெண்டார்." என்பதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஷை ஆக்ட் 6-வது பிரிவின் திருத்தம்

4. ஷை ஆக்ட் 10-வது பிரிவிலே, "முன்னதாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதி பெற்றுக்கொண்டு" என்பதற்குப் பர்த்தியாக, "ஆலோசனை சபையிள்ள கவர்னர்ஜெனரலவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டு", எனபதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஷை ஆக்ட் 10-வது பிரிவின் திருத்தம்,

5. ஷை ஆக்ட் 11-வது பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கான நிபந்தனையிலே, "ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அங்கீகாரத்தின் பேரில்" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

ஷை ஆக்ட் 11-வது பிரிவின் திருத்தம்.

6. விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைபற்றிய 1884-ம்௵த்து ஆக்ட் 188ம்௵4-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே, "அனுத்து 12-வது மதியை முன்னதாய்ப்பெற்றுக்கொண்டு" என்பதற்குப் பர்த்தி ஆக்ட் டாக, "அதிகாரத்துக்குட்பட்டு" என்பதை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1884-ம்௵த்து12-வது ஆக்ட் 4-வது பிரிவின் திருத்தம்.

விளம்பரம்.

திருச்சினாபள்ளி ஜில்லா ஜட்ஜ் அவர்களால் 1890-௵ VIII-வது ஆகட்டு பிரகாரம் ஸ்ரீரங்கத்திலிரந்துபோன சீதாவுடைய சஞ்சீவி குப்பு என்னும் இரண்டு மைனர் ஆண்குழந்தைகளுக்கு அவர்களுடைய சொத்துக்கும் கார்டியனாக கலெக்ட்டரவர்களை நியமனம் செய்திருப்பதால் இறந்துபோன சீதாவால் விடப்பட்ட ஜங்கமசொத்துக்களைபகிரங்கமாய் ஏலத்தில்போட்டு விற்பனைசெய்து அதிலுண்டான தொகையில் மேல்சொன்ன சஞ்சீவிக்கு சேரவேண்டிய பாதி தொகை அதாவது 110ரூ திருச்சினாபள்ளி ஜில்லா கஜானாவில் டிப்பாசிட்டில் வைத்திருப்பதாலும் மேல்சொன்ன சஞ்சீவி என்பவன் இப்போது மேஜராயிருப்பானென்று நம்பப்படுவதாலும் ஆனால் அவனுடைய இருப்பிடம் முதலானது தெரியாததாலும் தெரியக்கூடாமலிருப்பதாலும் கலெக்ட்டரும் கார்டியனுமானவருக்கு ஷை தொகையை அவனுக்கு செலுத்திவிட கூடாமலிருப்பதாலும் இதனால் சகலருக்கும் தெரியப்படுத்துவது யாதனில் மேலேசொன்ன சஞ்சீவி என்பவன் தான் நேரிலாவது அல்லது அதிகாரம்பெற்ற பேஜண்டு மூலமாயாவது கலெக்டரும் கார்டியன்மானவருக்கு முன் ஆஜராகி திருச்சினாப்பள்ளி ஜில்லா கெஜட்டில் இந்த நோட்டீசு பிரசுரமான 6-மாசத்திற்குள் ஷை தொகையை பெற்றுக்கொள்ளத்தவறினால் அவன் இந்த தொகைக்குள்ள தமது எல்லா பாத்தியத்தை இழந்துபோவது மன்றி கலெக்ட்டரும் கார்டியனுமானவர் தமக்கு உசிதமாய் தோன்றும் பிரகாரம் அந்த தொகையை சிலவுசெய்து விடுவார்.

வர்த்தகன் :—இப்பெயர் வாய்ந்த தமிழ் பத்திரிகையொன்று தேச செல்வநல்வளங்களுக்குவேண்டிய கைத்தொழல் வர்த்தகம் இவைகளின் அபிவிர்த்தியை முன்னிட்டு மாதம் இரு முறையாக சென்னைப்பட்டண (143-கோவிந்தப்பநாய்க்கன் தெரு-ஜார்ஜ்டவுன்) த்திலிருந்து வெளிவருகிறது. நமது தாய் பாஷையில் ஷை நோக்கங்களுடன் வெளிவரும் பத்திரிகை இஃது ஒன்றே. இப்பொழுது நம்பார்வைக்கு எட்டியிருக்கும் 4-வது இலக்கப் பத்திரிகையில் (1) "சுதேசியம் என்றால் என்ன" (2) "நமது அச்சாபீசார்க்கு ஒருபிரேரேபணை" (3) "நெசவுத்தொழல் அபிவிர்த்தி" (4) வளையல் செய்யும் தொழில் (5) இங்கிலீஷ் வியாபாரிகளின் மோசம், முதலிய விஷயங்களும் ஒரு அழகிய பசு சித்திரமும், காலஞ்சென்ற இராஜா ரவிவர்மா அவர்களின் மீது இனியப்பாடலும் மற்றும் வர்த்தக சமாசாரங்களும் குறிப்புகளும் அடங்கியிருக்கின்றன. இவைகள் யாவும் எளிய தமிழ் நடையில் இனிமையாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் வருஷசந்தா தபாற்கூலி உள்பட அணா எட்டு (0—8—0) ஆனதால் இது பொதுஜன நன்மையை நாடியது என்பது தெளிவாய் விளங்குகின்றது.

நிருபங்கள்.

குறிப்பு:—நிருப நேயர்களின் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் எவ்விதத்திலும் உத்திரவாதியல்ல

ப-ர்.

நான் மதுராந்தகம் தாலூக்கா 78-நெ பூதூர் வட்டம் கிறாம முன்சீப்பு. ஷை வட்டத்திற்கு 2 தலைகாரிகளும் 3 வெட்டியான்களுமிருக்கிறார்கள். ஷை யார்களில் சிலர் மதிராஸ் 1816ளுத்திய 11-வது ரிகுலேஷன் 10.வது பிரிவு படிக்கும் 1816ளுத்திய 4-வது ரிகுலேஷன் 6-வது பிரிவு படிக்கும் குற்றம் செயததாக என்னிடம் பிரியாது வந்தது ஷை கேசுகளுக்கு கிரமப்பட்டி சம்மன் அனுப்பி விசாரணை ஆரம்பித்தேன் ஷை வெட்டிதலைகாரிகள் கிறாம நவுகர்களானதால் அவர்கள் பேரில் வரும் கேசுகளை கிறாம முன்சீப்பு பிடிக்கக்கூடாதென்று 1816ளுத்திய 11-வது ரிகுலேஷன் படி குற்றம் செய்த வெட்டியான் ம-ா-ா-ஸ்ரீ ஜாயண்டு மேஜிஸ்டிரேட்டு கோர்ட்டார் அவர்களிடத்திலும் 1821ளுத்திய 4வது ரிகுலேஷன் படி குற்றம் செய்த நகர்கள் ம-ா-ா-ஸ்ரீ தாசில்தார் அவர்களிடத்திலும் மனுகொடுத்து இரண்டுமனுக்களையும் தாசில்தார் அவர்களே விசாரணை செய்து சுமார் 8-மாதம் காலஹரணம் செய்து கடைசியாய் கிறாம ஊழியக்காரர்கள் பேரில் வரும் எவ்வித சுவல்படீகசுகத்தையும் கிறாம முன்சீப்பு விசாரிக்கக்கூடாதென்று" எனக்கு உத்திரவு அனுப்பினார்கள். சர்க்காரில் எங்களுக்கு சப்ளை செய்திருக்கும் சட்டபுஸ்தகத்தில் முதலில் கிறாம ஊழியக்காரர்கள் 6 வகைகளாகபிரிக்கபட்டிருக்கிறார்களென்று கண்டிருக்கிறது. அதாவது முன்சீப்பு மணியம் கர்ணம் தலைகாரி வெட்டி நீர்கட்டி ஷை சட்டபுஸ்தகத்தில் 1821ளுத்திய 4 ரிகுலேஷனில் கீழ் ஊழியக்காரன் செய்த களவை கிறாம முன்சீப்புபிடிக்கக்கூடாதென்றும் கண்டிருக்கிறது. முதல் கேசில் கிறாம ஊழியக்காரர்கள் 6 வகை என்று கண்டிருப்பதாலும் 1821ளுத்திய 4வது ரிகுலேஷனுக்கு கீழ் ஊழியக்காரன் செய்த களவை கிறாமமுனுசிப்பு பிடிக்கக்கூடாதென்றும் கண்டிருக்கிறதை ஆதாரமாகக்கொண்டு தாசி[ல்]தார் அவர்கள் ஷை உத்திரவு செய்திருக்கிறதாக தெரியவ[ரு]கிறது: பிறகு ஊழியக்காரன் செய்தகளவை கிராமமுனிசீப்[பு] பிடிக்கக் கூடாதென்று கண்டிருக்கிறது. பிறகு சொல்[லிய]யதில் சர்க்கார் ஊழியக்காரர்களென்று அர்த்தமாகவில்லை.

ஹைகோர்ட்டார் அவர்களிட 1864ளு ஆகஸ்ட்மீ 17உ யுள்ள புரோசிடிங்சை அனுசரித்து ம-ா-ா-ஸ்ரீ 'ஹை[கோர்ட்டு] கோர்ட்டு வக்கீல் ஆர். வெங்கிட சுப்பயராவு அவர்களால் இயற்றப்பட்டசட்டயுஸ்தகங்களில் 1821ளுத்திய 4வது ரிகுலேஷன்கீழ் "வேலைக்காரனாவது குமஸ்தாவாவது எஜமான் சொத்தை திருடினால்" கிறாமமுன்சிப்புபிடிக்கக்கூடாதென்[று] வியக்தமாய் கண்டிருக்கிறது. ஷை ஹைகோர்டு புரோசிடி[ங்கி]ஞல் எந்தவேலைக்காரன் அவர்கள் எஜமான் சொத்தை தி[ரு]டினாலும் கிறாம முன்சிப்பு பிடிக்கக்கூடா தென்று ஏற்படு[த்தியி]றதேதவிர கிறாமசர்க்கார் ஊழியக்காரர் என்று ஏற்பட[வி]ல்லை. இந்த கேசில் ஷை வெட்டிதலையாரிகள் சர்க்கார் ச[ம்ப]ந்தமான சொத்தையாவது அவனுக்கு எஜமானர்களின் வகைளுக்கச் சொத்துக்களையாவது திருடவில்லை. அ[ப்ப]ண்டு கேசாகிய 1816ளுத்திய 11வது ரிகுலேஷன் படி கு[ற்ற]ம் செய்தால் கிறமமுன்சிப்பு பிடிக்கக்கூடாதென்று எந்[த] சட்டபுஸ்த்தகத்திலும் சொல்லப்படவில்லை. இது விவர[ங்]களை எல்லாம் என்னிடஸ்ட்டேட்மெண்டில் சொல்லியிரு[ந்]தும் தாசில் அவர்கள் ஹைகோட்டார் அவர்களிடபுரோசிடி[ங்]க்கு நேர் விரோதமான உத்திரவு செய்திருக்கிறார்கள். 1816ளுத்திய 11வது ரிகுலேஷன் படி வரும் கேசுகளை ஒருகிற[ா]மமுன்சிப்பு கோர்ட்டிலிருந்து வேறொருகோர்ட்டாருக்[கு] மாத்த ஜாயண்டு மேஜிஸ்ட்டிரேட்கோர்ட்டார் அவர்களுக்[கு]க்கூட அதிகாரமில்லை என்று 1803ளு மேமீத்திய 26-[ம்] வரைக்கும் இந்தியன் லா ரிபோர்ட்டில் கண்டிருக்கிறது. மேல்சொன்னகேசுகள் என்னிடரிஜிஸ்டரில் தாக்கலாயிரு[க்]கிறதை எப்படி ரிஜிஸ்டரிலிருந்து நீக்குகிறதோ? அதைதெரி[வி]க்கும்படி தாசில்தார் அவர்களுக்கு 4-ரிபோர்ட்டுகள் செய்[து]க்கொண்டும் யாதொரு உத்திரவு வரவில்லை. இதுவிஷயங்களைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ ஜாயண்டுமேஜஸ்ட்டிரேட்டார் அவர்களுக்கும் ரிபோர்ட்டு செய்துக்கொண்டிருக்கிறேன்.

1. தாசில்தார் இம்மாதிரி ஆகையால் அவர் கிரிமினல் கேசுகளைப்பற்றி தாமேமனு பிடித்து விசாரித்து தீர்ப்புசொல்ல அதிகரமிருக்கிறதா?

2. இந்தகேசில் அவர் செய்ததீர்மானம் சரியா?

3. ஹைகோர்ட்டார் அவர்களிட 1864ளு ஆகஸ்ட்டுமீ 17உயுள்ள புரோசிடிங்சால் சர்க்கார் ஊழியக்காரன் செய்த களவை கிறாம முன்சிப்புபிடிக்கக்கூடாதா? அல்லது எந்த ஊழியக்காரன் செய்தகளவையும் பிடிக்கக்கூடாதென்று அர்த்தமாகிறதா?

4. எந்தசட்டபுஸ்தகத்திலும் சொல்லப்படாத 1816ளுத்திய 21-வது ரிகுலேஷன் அசால்டு) படி வந்த கேசைப்பற்றியும் பிடிக்கக்கூடாதென்று தாசில்தார் அவர்கள் சொல்லியிருக்கிறது சரிதானா ?

5. என்னிடரிஜிஸ்டரிலிருந்து ஷை கேசுகளை எடுத்துவிடும்படிக்காவது அல்லது வேரு உத்திரவு செய்யவாவது தாசில்தார் அவர்களுக்கு அதிகாரமிருக்கிறதா?

இதுகளின் எல்லா விபரத்தையும் ஆதாரங்களுடனும் தங்களிட அடுத்தமீத்திய இந்திய சட்டகெஜெட்டில் பி[ர]சுரம்செய்து என்னிட சந்தேகங்களை நீக்கும்பொருட்டு மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். மதுராந்தக[ம்]

அர்பத்நட் பாங்கியார் இன்சால்வென்சி மனு தாக்கல் செய்துவிட்டார்கள்.

பாங்கியை மூடிவிட்டார்கள்.

சீமையிலிருந்த பாகஸ்தர் தற்கொலை செய்துகொண்டார்.
இந்தியர் பணம் தோராயமாய் 21-கோடி நஷ்டம்.
அனேக குடும்பங்கள் நொடித்துப்போய்விட்டன.
பணம்கட்டி இழந்துபோய் பிழைப்பதற்கு வழியற்ற ஏழைகள் பிராணனைவிட்டு வருகிறார்கள்.
பட்டணமுழுதிலும் "கோல்" என்றிருக்கிறது.

கடந்த 106 வருஷங்களாய் இச்சென்னை மாநகரில் மிகுந்த பிரசித்தியுடன் பாங்கித்தொழிலும் சீமை வர்த்தகமும் செய்துவந்த மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் சிகழ்மீ 22உ திங்கள்கிழமை கதவை மூடிவிட்டார்கள். சென்னையில் இன்னும் சில பாங்கிகளிருந்தபோதிலும் இந்த ராஜதானியிலுள்ள ஜனங்களுக்கு மெசர்ஸ் அர்பத்நட் பாங்கிலேயே பெரும் நம்பிக்கை. பைசா பைசாவாக சிறுகச்சிறுக 100ரூ சிறுவாடு சேர்த்து வந்த ஆப்பக்காரி அப்பணத்தை அர்பத்நட் பாங்கியில் போட்டால்தான் பத்திரமாயிருக்குமென்று நினைத்து அந்த பணத்தை அர்பத்நட் பாங்கியில் போடுவாள். லக்ஷக்கணக்காய் வருமானமுடைய நம்தேச சிற்றரசர்களும் ஜெமின்தார்களும் தங்கள் பணத்தை அர்பத்நட் பாங்கியில் கட்டினால்தான் அழிவில்லாமலிருக்குமென்று நம்பிப் பணம் போடுவார்கள். கையிலிருக்கும் பணத்தை அர்பத்நட் பாங்கியில் கட்டிவிட்டால் மனதிற்கு பெரிய சந்தோஷமாகவும் ஆதரவாகவு மிருந்தது. இந்த பாங்கியின் பாகஸ்தர்களும் கோடிக்கணக்காய்ச் சொத்துடையவர்கள். ஹிந்துக்களில் சகல வகுப்பாருடைய முழு நம்பிக்கைக்கும் ஆங்கிலேயர் வகுப்பார்களின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமாகும்படியே இவர்கள் தொழிலும் நடத்திவந்தார்கள். ஆகவே இதில் சமஸ்தானாதிபதிகள் ஜெமின்தார்கள், மிட்டாதார்கள், வர்த்தகர்கள், தொழிலாளிகள், தேவஸ்தான கமிட்டியார்கள், சங்கத்தார்கள், பாதிரிகள், மைனர்கள் விதந்துகள் இப்படி பல வகையார்கள் இதில் பணம் கட்டி வட்டி பெற்றுக்கொண்டு வந்தார்கள். இவ்வளவு ஜனங்களின் நம்பிக்கையை அனுபவித்து மகா பிரசித்தத்துடன் தொழில் நடத்தி வந்த கம்பெனியார் திடிரென்று தொழிலை நிறுத்தி கதவை மூடினது மிகவும் பிரமிக்கக்கூடியதா யிருப்பதுமன்றி விசனிக்கக்கூடியதாயு மிருக்கின்றது.

ஜனங்களின் துன்பம்.

மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியர் சிகழ் செப்டம்பர்மீ 22உ திங்கள்கிழமை காலையில் கதவைமூடிவிட்டு " Messrs Arbuthnot & Co. regret to state that they have suspended payment " அதாவது மெசர்ஸ் அர்பத்நட்கம்பேனியார் பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டதைப்பற்றி விசனிக்கிறார்கள் என்று ஆங்கிலத்தில் பெரிய கருப்பெழுத்தால் ஒரு காயிதத்தில் எழுதி அதை ஒரு போர்ட் பலகையில் மாட்டிதங்கள் கட்டடத்தின் தெருவாசற்படியிலருக்கும் இரும்புக்கிராதியில் தொங்கவிட்டு விட்டார்கள். இந்தசமாசாரம் சென்னை முழுவதிலும் மின்சாரம்போல் பரவி சிறிது நாழிகைக்கெல்லாம் வெகு ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஓடிவந்தார்கள். இந்த சமாசாரத்தை கேட்ட எவரும் முதலில்நம்பவில்லை. மெசர்ஸ் அர்பத்நட்பாங்கியார் இத்தேச சகல வகுப்பினருடைய முழு நம்பிக்கையையும் அநுபவித்து வந்தபடியால் அந்த பாங்கி முழுகிப்போய் விட்டதென்கிற பிரஸ்தாபத்தை முதலில் எவரும்நம்பவில்லை. ஆதலால் இதை நேரேபார்த்து திர்ப்திசெய்துகொள்ள வேண்டுமென்று விரும்பிகேள்விப்பட்ட ஒவ்வொருவரும்வந்து சேர்ந்தார்கள். பெரிய ஐரோப்பிய ஆபீசர்கள் வண்டியை விரட்டிக்கொண்டு ஓடிவந்துபார்த்தார்கள். சாதாரண உத்தியோகஸ்தர்கள் ஓட்டமாய் ஓடிவந்தார்கள். பணம்போட்டிருந்த கொமுட்டிகள் ஐயோ ! எமிசேசேதி" என்றுசொல்லி மனங்கலங்கி ஓடிவந்தார்கள். கிடங்குத்தெருவின் பீஸ்குடஸ் வர்த்தகர்கள் ஐயோ சரக்குகளெல்லாம் மாட்டிக்கொண்டதே, கடன்காரர்கள் பிடித்துக்கொள்வார்களே என்ன செய்வோம் என்று கனவேகமாய் ஓடிவந்தார்கள். கிருஷ்ணாங்குள அக்கிரகார பிராமண ஸ்திரீகள் போட்டபணம் போய்விட்டதே என்று கதறிக்கொண்டு ஓடிவந்தார்கள். நாட்டுக்கொட்டைச் செட்டிமார் வாயுவேகமனோவேகமாக ஓடிவந்தார்கள். கிறிஸ்தவப் பாதிரிகள் ஓடிவந்தார்கள். திருவல்லிக்கேணி பிராமணவிதவைகளெல்லாம் நெற்றிவியர்வை நிலத்தில் விழும்படியாய் ஓடிவந்தார்கள். மைனர் குழந்தைகளை வளர்த்துவரும் தாய்மார்களும் கார்டியன்களும் தலையில் அடித்துக்கொண்டுவந்தார்கள். ஐயோ ! இந்த பரிதாபகாக்ஷியை நாம் என்னவென்று எடுத்துரைப்போம்! கைநடுங்கிறதே! வயற் எறிகிறதே! இந்தக்கோலத்தைக்கண்ணால்பார்க்க முடியவில்லையே ! பூகம்பம் சம்பவித்து உயிர்ச்சேத முண்டானாலும் துக்கமில்லை. அர்பத்நட் கம்பெனிக்கு எதிரிலிருக்கும் சமுத்திரம் பொங்கி தேசத்தையே நாசமாக்கினாலும் பாதகமில்லை. எல்லோருக்கும் ஒரே துக்கம். பிராணனுக்கு ஆதாரமானபொருள் போய்விடுமானால் பணமில்லாதவன் பிணம், அருள் இல்லார்க்கு அவ்வுலகில் பொருளில்லார்க்கு இவ்வுலகில் என்பதுபோல் பின் இவ்வுலகவாழ்க்கையில் என்ன சந்தோஷமிருக்கின்றது நிற்க. இத்தனை ஜனங்களும் வந்து கூடினார்கள். ஒரு சுதேச பாங்கி இப்படி மூடப்படுமானால் கவர்ன்மெண்டாரே அதன் அதிகாரிகளை தாறுமாறுமாய் நடத்தி வாரண்டு அரஸ்டு முதலிய நடவடிக்கைகளைசெய்து இல்லாத அமுல்களெல்லாம் செய்துவிடுவார்கள். முழுகிப்போன பாங்கி வெள்ளைக்காரருடைய பாங்கியானபடியால் வெள்ளைக்கார் போலீஸ் சூப்பிரண்டு, வெள்ளைக்காரபோலீஸ் இன்ஸ்பக்ட்டர்ள் வெள்ளைக்கார சார்ஜென்ட்டுகள் வெள்ளைக்கார எட்கான்ஸ்டேபில்கள் எல்லோரும் பாங்கியின் கட்டடவாசற்படியில் ஒரு சுண்ணம்பு அடித்த குட்டிச்சுவர்போல் வெள்ளை உடுப்புப்போட்டுக்கொண்டு வரிசையாய் நின்றுவிட்டார்கள். ஆகையால் காக்கையும் குருவியும் கூடகம்பெனியின் கட்டடத்தினிடம் அணுகக்கூடாமலிருந்தது. பணம்போட்டவர்களுக்கு சமயோஜிதமான தைரியமான பேச்சு சொல்வதற்காவது கம்பேனிக்காரர்கள் இசைந்தவர்களா அதுவுமில்லை. போன ஜனங்கள் பெருமூச்சவிட்டு ஐயோ ! ராமா என்று சொல்லி தலையில் கையைவைத்துக்கொண்டு திரும்பிவந்தார்கள். இந்த பாங்கி முழுகினதால் இந்த ராஜதானியில் அனேக பெரிய குடும்பங்கள் ஏழையாய்ப்போய்விட்டன. அனேகநடுநிலைமையுள்ள குடும்பங்கள் பாப்பர் குடும்பங்களாய்விட்டன. அனேக ஏழைக்குடும்பங்கள் பிச்சை எடுத்து ஜீவிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டன; என்ன பரிதாபம்! இந்தியமக்களை

னும் வேறே சொத்துக்களிருக்கின்றனவா என்று விசாரிக்க வேண்டும். விசாரணையில் இன்னும் சொத்துக்களிருக்கின்றனவென்றுகேள்விப்பட்டால் அவைகளையும் அபிஷியல் அசைனிபிடம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அபிஷியல் அசைனியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் எஸ்டேட்டானபடியால் அபிஷியல் அசைனியிக்கு உதவிசெய்ய சில கமிஷனர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த பாங்கியில் நஷ்டமடைந்திருப்பவர்கள் பெரும்பாலும் இந்துகுடும்பங்களாக இருப்பதால் கமிஷனர்களாய் நியமிக்கப்படுபவர்கள் இந்துக்களாயிருக்க வேண்டும். பாங்கியில் பணம்போட்ட டிபாசிட்டர்கள் சீக்கிரத்தில் மீடிங்கூடி இம்மாதிரியான ஏற்பாடுகளைச்செய்தால் டிபாசிட்டர்களுக்கு ஏதேனும் கொஞ்சத்திற்கு கொஞ்சமாயினும் தேறுமென்று நம்புகிறோம்.

மிஸ்டர் P. மாக்பேடயனின் தற்கொலை.

சென்னையிலுள்ள மெசர்ஸ் அர்பத்நட் பாங்கிக்கு தலைமை பாங்கியாய் லண்டனிலிருந்த மெசர்ஸ் P. மாக்பேடயன் பாங்கியின் பிரதான பாகஸ்தராகிய மிஸ்டர் P. மாக்பேடயன் சென்ற சனிக்கிழமை யிரவு தற்கொலை செய்துகொண்டு இறந்துபோய்விட்டார். மெசர்ஸ் அர்பத்னட் கம்பெனியார்கள் சனிக்கிழமை தினம் "அனுப்ப முடியவில்லை பணம் அகப்படவில்லை. பாங்கியை திங்கட்கிழமை மூடிவிட வேண்டும்" என்கிற சமாசாரம் அடங்கிய ஒரு தந்தி அடித்தார்கள். இந்த தந்தியைப் பார்த்தவுடன் அவருடைய மனம் கலங்கிப்போய்விட்டது. இந்த தந்தியை ஒரு லகோடாவில் போட்டு அதன் பேரில் "இந்த தந்தி என் முதுகை ஒடித்த கடைசி தந்தி; அர்பத்நட் பாங்கியை நடை பெறும்படி என்னால் செய்ய இயலவில்லை" என்று எழுதி மேஜையின் பேரில் வைத்துவிட்டு சனிக்கிழமை மாலையில் லண்டனில் கவுத்கேட் என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று இருப்புப்பாதையின் குறுக்கில் படுத்துக்கொண்டார். ரயில் வண்டியேறி தேகம் நானாவிதமாய் துண்டிக்கப்பட்டு இறந்துபோய் விட்டார். அன்று இரவு முழுதிலும் சமாசாரம் தெரியாது. காலையில் துண்டிக்கப்பட்டபிரேதம் மிஸ்டர் P. மாக்பெடேயினுடைய தென்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையிலும்இவர் சனிக் கிழமையில் சரியான மனநிலையிலில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. பாங்கியில் பணம்போட்டவர்கள் இவ்விடத்தில் பரிதபித்தது போல் மறுநாள் அந்த நகரிலும் மாக்பேடயன் கம்பெனிக்கும் போய் ஒப்பாரி வைத்தழுதார்கள். அக்கம்பெனியைச் சேர்ந்த பாகஸ்தர்களில் மிஸ்டர் மக்பேடயன் ஒருவர் தான் அவ்விடம் இருந்தார். மற்ற பாகஸ்தர்களெல்லாம் வெளிதேசத்திலிருக்கிறார்கள். ஆகையால் அந்த பாங்கியின் தகவலை சொல்லக்கூடியவர்கள் எவருமில்லை. அந்த பாங்கியில் பணம் போட்டவர்கள் மிகுந்த பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். மிஸ்டர் P. மாக்பேடயன் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனது நமக்கு கொஞ்சங்கூட விசனத்தை உண்டு பண்ணவில்லை. கோடான கோடி பணத்தை பொது ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு பலவருஷகாலம் பாங்கித் தொழில் நடத்திவந்த பாரி வர்த்தகர் நஷ்டம் நேரிட்டாலும் அந்த நஷ்டம் இன்னவிதமாய் உண்டாய்விட்டதென்று எடுத்துக்கூறி தக்க வுதவிகளைப்பெற்று தொழிலை சரிவர நடத்தி நஷ்டத்தை ஈடுபடுத்தி, பணத்தை போட்டவர்களும் காபந்தாய் திருப்பிக்கொடுக்க வேண்டிய கடமையிருக்க, நஷ்டம் உண்டானதற்கு காரணம் சொல்லாமலும் இருக்கும் சொத்துக்களை ஒப்பிக்காமலும் யாதொரு தகவலும் சொல்லாமலும், பணம்போட்டவர்களுக்கு கொஞ்ச நஞ்சமாவது சேர்ப்பதற்குப் பிரயாசைப்படாமலும் உயிரை விடுவது மனுஷத்தனமல்லவென்றும், கலப்பற்ற அயோக்கியத்தனம் என்றும் நாம் அஞ்சாமல் சொல்லலாம். இவர் உயிருடனிருந்தாலும் கொஞ்சத்தொகையாகிலும் பணம் கட்டினவர்களுக்குச் கிடைத்திருக்கும். அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோய் விட்டதால் அதற்குக்கூட இடமில்லாமல் போய்விட்டது.

ஹைகோர்ட்டு இன்சால்வென்சி கோர்ட்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

இன்சால்வென்சி மனு.

மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் சென்னையில் பாங்கி வர்த்தகர்கள். இவர்களுடைய லண்டன் பாங்கியாகிய மெசர்ஸ் மாக்படேயன் கம்பெனியார் சனிக்கிழமைதினம் பட்வாடாவை நிறுத்தி விட்டார்கள். சமீபகாலத்தில் பணம்போட்டிருந்த டிபாசிடர்கள் சிலர் திடீரென்று பணத்தைக்கேட்டுவாங்கிக்கொண்டார்கள். கம்பெனியைச் சேர்ந்த காபி எஸ்டேட்டுகளில் அதிக அட்வான்சுத்தொகை கொடுக்கப்பட்டுப் போய்விட்டது ஆகையால் இப்போது கம்பெனியாரிடம் பாங்கியை நடத்தபோதுமான ஐவேஜியில்லை. அபிஷியல் அசைனிபிடம் அர்பத்நட்கம்பெனியின் எஸ்டேட்டை ஒப்புவித்து கொடுக்கல் வாங்கலையும் ஒப்புவிக்க கம்பெனியார் தயாராயிருக்கிறார்கள்.

இந்தகம்பெனியைச்சேர்ந்த கணக்குகளையும் தயாரித்து இன்னும் ஆறுவாரத்திற்குள் ஷெடியூல் தாக்கல் செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டார் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது மனுவின் சாராம்சம். சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய ஆர் அண்டு டேவிட்டும் பாரிஸ்டர் F. H. நேபியரும் மனுதார்களின் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

உத்திரவு :—6 வாரம் வரையில் பாதுகாப்பு ஆர்டர் கொடுக்கப்பட்டது. அபிஷியல் அசைனி சொத்துக்களை ஒப்புக்கொள்ளும்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

அபிஷியல் அசைனி நடவடிக்கை.

அபிஷியல் அசைனியாகிய மிஸ்டர் ஆர்ச்சிபால்ட் ரீட் தம்முடைய பரிவாரங்களுடன் சொத்துக்களைப் போய் திங்கட்கிழமை தினமே ஒப்புக்கொண்டார். ரூ. 34000 ரொக்கம் அகப்பட்டது. அதை மதிராஸ் பாங்கியில் வட்டிக்குப் போட்டுவிட்டார். ரூபாய் 50-லக்ஷத்திற்கு கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளிருந்தன. சர் ஜியார்ஜ் அர்பத்னட்டிற்கு "அர்பத்னட் இண்டஸ்டிரியல்ஸ் லிமிட்டட்" என்கிற கம்பெனியில் ரூபாய் 25-லக்ஷம் பொருமான பங்குகளிருக்கின்றனவாம். இந்த பங்கும் அபிஷியல் அசைனியிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இந்த பங்குகளின் மதிப்பு 25-லக்ஷ ரூபாயாய் இருந்தபோதிலும் இவைகளைக் கிரயஞ் செய்தால் அவ்வளவு தொகை வரமாட்டாது.

புதுக்கோட்டை.

தேக சௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாண்டிற்குப் போயிருந்த புதுக்கோட்டை ராஜா அவர்கள் திரும்பி சென்னைக்கு வந்து புதுக்கோட்டைக்குப் போய்விட்டார்.

மழை.

கடந்த ஒருவாரமாக மதுரையில் கனத்தமழை இன்னும் மப்புமந்தாரமாயிருக்கின்றது. வைகயில் பிரவாகம்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்தசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—த. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 1. சென்னபட்டணம், 1906ளு நவம்பர்மீ 4. பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படங்கள்.	
	(a) காலஞ்சென்ற ஹானரபில் ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்	
	(b) ,, ஹானரபில் ஜஸ்டிஸ் பத்ருடீன் தியாப்ஜி	
2.	கவர்ன்மெண்டு ஆர்டரும் பயித்தியகாரர்களும்	123
3.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	127
4.	மலைப்பிரதேச மினிசிபாலிட்டிகளின் மசோதா ஆக்ட்	139
5.	ரெவினியூ போர்ட் புரோசீடிங்ஸ்	153
6.	சென்னை சட்ட நிரூபண சபை	155
7.	இந்தியன் லாரிப்போர்ட்டு கேசுகள்	159
8.	அர்பத்நட் கம்பெனியின் இன்சால்வென்சி:—	167
	(a) நிவாரண நிதிக்கூட்டம்	167
	(b) நிவாரண நிதி கமிட்டி மீட்டிங்கு	169
	(c) சர் ஜார்ஜ் அர்பத்னட் சொல்லும் இரண்டு ஏற்பாடுகள்	119
	(d) டிபாசிட்டர்கள் மீட்டிங்கு	170
	(e) அபிஷியல் அசயினி கூறின சரித்திரம்	173
9.	சென்னபட்டண ஹைகோர்ட்டு நான்காவது கிரிமினல் செஷன்ஸ்	175

லும் வேறே சொத்துக்களிருக்கின்றனவா என்று விசாரிக்க வேண்டும். விசாரணையில் இன்னும் சொத்துக்களிருக்கின்றனவென்றுகேள்விப்பட்டால் அவைகளையும் அபிஷியல் அசைனியிடம் ஒப்புவிக்க எற்பாடு செய்யவேண்டும். அபிஷியல் அசைனியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் எஸ்டேட்டானபடியால் அபிஷியல் அசைனியிக்கு உதவிசெய்ய சில கமிஷனர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த பாங்கியில் நஷ்டமடைந்திருப்பவர்கள் பெரும்பாலும் இந்துகுடும்பங்களாக இருப்பதால் கமிஷனர்களாய் நியமிக்கப்படுபவர்கள் இந்துக்களாயிருக்க வேண்டும். பாங்கியில் பணம்போட்ட டிபாசிட்டர்கள் சீக்கிரத்தில் மீடிங்கூடி இம்மாதிரியான எற்பாடுகளைச்செய்தால் டிபாசிட்டர்களுக்கு ஏதேனும் கொஞ்சத்திற்கு கொஞ்சமாயினும் தேறுமென்று நம்புகிறோம்.

மிஸ்டர் P. மாக்பேடயனின் தற்கொலை.

சென்னையிலுள்ள மெசர்ஸ் அர்பத்நட் பாங்கிக்கு தலைமை பாங்கியாய் லண்டனிலிருந்த மெசர்ஸ் P. மாக்பேடயன் பாங்கியின் பிரதான பாகஸ்தராகிய மிஸ்டர் P. மாக்பேடயன் சென்ற சனிக்கிழமை யிரவு தற்கொலை செய்துகொண்டு இறந்துபோய்விட்டார். மெசர்ஸ் அர்பத்னட் கம்பெனியார்கள் சனிக்கிழமை தினம் “ அனுப்ப முடியவில்லை பணம் அகப்படவில்லை. பாங்கியை திங்கட்கிழமை மூடிவிட வேண்டும்” என்கிற சமாசாரம் அடங்கிய ஒரு தந்தி அடித்தார்கள். இந்த தந்தியைப் பார்த்தவுடன் அவருடைய மனம் கலங்கிப்போய்விட்டது. இந்த தந்தியை ஒரு லகோடாவில் போட்டு அதன் பேரில் “இந்த தந்தி என் முதுகை ஒடித்த கடைசி தந்தி; அர்பத்நட் பாங்கியை நடை பெறும்படி என்னால் செய்ய இயலவில்லை” என்று எழுதி மேஜையின் பேரில் வைத்துவிட்டு சனிக்கிழமை மாலையில் லண்டனில் கவுத்கேட் என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று இருப்புப்பாதையின் குறுக்கில் படுத்துக்கொண்டார். ரயில் வண்டியேறி தேகம் நானுவிதமாய் துண்டிக்கப்பட்டு இறந்துபோய் விட்டார். அன்று இரவு முழுதிலும் சமாசாரம் தெரியாது. காலையில் துண்டிக்கப்பட்டபிரேதம் மிஸ்டர் P. மாக்பெடேயினுடைய தென்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையிலும்இவர் சனிக் கிழமையில் சரியான மனநிலையிலில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. பாங்கியில் பணம்போட்டவர்கள் இவ்விடத்தில் பரிதபித்தது போல் மறுநாள் அந்த நகரிலும் மாக்பேடயன் கம்பெனிக்கும் போய் ஒப்பாரி வைத்தழுதார்கள். அக்கம்பெனியைச் சேர்ந்த பாகஸ்தர்களில் மிஸ்டர் மக்பேடயன் ஒருவர் தான் அவ்விடம் இருந்தார். மற்ற பாகஸ்தர்களெல்லாம் வெளிதேசத்திலிருக்கிறார்கள். ஆகையால் அந்த பாங்கியின் நிலவரசு சொல்லக்கூடியவர்கள் எவருமில்லை. அந்த பாங்கியில் பணம் போட்டவர்கள் மிகுந்த பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். மிஸ்டர் P. மாக்பேடயன் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனது நமக்கு கொஞ்சங்கூட விசனத்தை உண்டு பண்ணவில்லை. கோடான கோடி பணத்தை பொது ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு பலவருஷகாலம் பாங்கித்தொழில் நடத்திவந்த பாரி வர்த்தகர் நஷ்டம் நேரிட்டாலும் அந்த நஷ்டம் இன்னவிதமாய் உண்டாய்விட்டதென்று எடுத்துக்கூறி தக்க வுதவிகளைப்பெற்று தொழிலை சரிவர நடத்தி நஷ்டத்தை ஈடுபடுத்தி, பணத்தை போட்டவர்களும் காபந்தாய் திருப்பிக்கொடுக்க வேண்டிய கடமையிருக்க, நஷ்டம் உண்டானதற்கு காரணம் சொல்லாமலும் இருக்கும் சொத்துக்களை ஒப்பிக்காமலும் யாதொரு தகவலும் சொல்லாமலும், பணம்போட்டவர்களுக்கு கொஞ்ச நஞ்சமாவது சேர்ப்பதற்குப் பிரயாசைப்படாமலும் உயிரை விடுவது மனுஷத்தன்மல்லவென்றும் கலப்பற்ற அயோக்கியத்தனம் என்றும் நாம் அஞ்சாமல் சொல்லலாம். இவர் உயிருடனிருந்தாலும் கொஞ்சத்தொகையாகிலும் பணம் கட்டினவர்களுக்குக் கிடைத்திருக்கும். அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோய் விட்டதால் அதற்குக்கூட இடமில்லாமல் போய்விட்டது.

ஹைகோர்ட்டு இன்சால்வென்சி கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

இன்சால்வென்சி மனு.

மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் சென்னையில் பாங்கி வர்த்தகர்கள். இவர்களுடைய லண்டன் பாங்கியாகிய மெசர்ஸ் மாக்படேயன் கம்பெனியார் சனிக்கிழமைதினம் பட்வாடாவை நிறுத்திவிட்டார்கள். சமீபகாலத்தில் பணம்போட்டிருந்த டிபாசிடர்கள் சிலர் திடீரென்று பணத்தைக்கேட்டுவாங்கிக்கொண்டார்கள். கம்பெனியைச் சேர்ந்த காபி எஸ்டேட்டுகளில் அதிக அட்வான்சுத்தொகை கொடுக்கப்பட்டுப் போய்விட்டது ஆகையால் இப்போது கம்பெனியாரிடம் பாங்கியை நடத்தபோதுமான ஐவேஜியில்லை. அபிஷியல் அசைனியிடம் அர்பத்நட்கம்பெனியின் எஸ்டேட்டை ஒப்புவித்து கொடுக்கல் வாங்கலையும் ஒப்புவிக்க கம்பெனியார் தயாராயிருக்கிறார்கள்.

இந்தகம்பெனியைச்சேர்ந்த கணக்குகளையும் தயாரித்து இன்னும் ஆறுவாரத்திற்குள் ஷெடியூல் தாக்கல் செய்யத்தயாராயிருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டார் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது மனுவின் சாராம்சம். சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய ஆர் அண்டு டேவிட்டும் பாரிஸ்டர் F. H. நேபியரும் மனுதார்களின் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

உத்திரவு:—6 வாரம் வரையில் பாதுகாப்பு ஆர்டர் கொடுக்கப்பட்டது. அபிஷியியல் அசைனி சொத்துக்களை ஒப்புக்கொள்ளும்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

அபிஷியல் அசைனி நடவடிக்கை.

அபிஷியல் அசைனியாகிய மிஸ்டர் ஆர்ச்சிபால்ட் நீட் தம்முடைய பரிவாரங்களுடன் சொத்துக்களைப் போய் திங்கட்கிழமை தினமே ஒப்புக்கொண்டார். ரூ. 34000 ரொக்கம் அகப்பட்டது. அதை மதிராஸ் பாங்கியில் வட்டிக்குப் போட்டுவிட்டார். ரூபாய் 50-லக்ஷத்திற்கு கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளிருந்தன. சர் ஜியார்ஜ் அர்பத்னட்டிற்கு “அர்பத்னட் இண்டஸ்டிரியல்ஸ் லிமிட்டட்” என்கிற கம்பெனியில் ரூபாய் 25-லக்ஷம் பொருமான பங்குகளிருக்கின்றனவாம். இந்த பங்கும் அபிஷியல் அசைனியிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பங்குகளின் மதிப்பு 25-லக்ஷ ரூபாயாய் இருந்தபோதிலும் இவைகளைக் கிரயஞ் செய்தால் அவ்வளவு தொகை வரமாட்டாது.

புதுக்கோட்டை.

தேக சௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாண்டிற்குப் போயிருந்த புதுக்கோட்டை ராஜா அவர்கள் திரும்பி சென்னைக்கு வந்து புதுக்கோட்டைக்குப் போய்விட்டார்.

மழை.

கடந்த ஒருவாரமாக மதுரையில் கனத்தமழை இன்னும் மப்புமந்தாரமாயிருக்கின்றது. வைகயில் பிரவாகம்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்தசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள்:—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 1. சென்னபட்டணம், 1906ஞு நவம்பர்மீ 4. பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படங்கள்.	
	(a) காலஞ்சென்ற ஹானரபில் ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ்	
	(b) ,, ஹானரபில் ஜஸ்டிஸ் பத்ருடீன் தியாப்ஜி	
2.	கவர்ன்மெண்டு ஆர்டரும் பயித்தியகாரர்களும்	123
3.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	127
4.	மலைப்பிரதேச மினியூசிபாலிட்டிகளின் மசோதா ஆக்ட்	139
5.	ரெவினியூ போர்ட் புரோசீடிங்ஸ்	153
6.	சென்னை சட்ட நிரூபண சபை	155
7.	இந்தியன் லாரிப்போர்ட்டு கேசுகள்	159
8.	அர்பத்நட் கம்பெனியின் இன்சால்வென்சி:—	167
	(a) நிவாரண நிதிக்கூட்டம்	167
	(b) நிவாரண நிதி கமிட்டி மீட்டிங்கு	169
	(c) சர் ஜார்ஜ் அர்பத்னட் சொல்லும் இரண்டு எற்பாடுகள்	119
	(d) டிபாசிட்டர்கள் மீட்டிங்கு	170
	(e) அபிஷியல் அசயினி கூறின சரித்திரம்	173
9.	சென்னபட்டண ஹைகோர்ட்டு நான்காவது கிரிமினல் செஷன்ஸ்	175

Opinions of the Press on the "Indian Law Gazette".

The "Madras Mail," dated 10th September 1906:—"*The Indian Law Gazette.*"—We have received the first number of a new Tamil monthly, entitled the *Indian Law Gazette*, edited by Mr. M. A. Loganathan, and published by Messrs. N. Ratha Krishna & Co. The new venture is intended to spread amongst the people of South India a knowledge of the laws which are applicable to the protection of their person and property. The Editor deplores that, through ignorance of law, Hindus waste their money in carrying on litigation to the ruin of their family, and that to avert such disastrous consequences, a knowledge of the general laws of the land are essential to them. The first number appropriately opens with an illustrated life sketch of the Hon'ble Sir S. Subramania Iyer, *Kt.*, C.I.E., "one of the foremost Indian Lawyers, and an eminent Indian Judge, who is held in the highest esteem by his countrymen.', There are, besides, reports of miscellaneous law cases, important rulings, Government Orders, etc., and a translation of the Motor Car Bill. The *Indian Law Gazette* will do a great service to the rural population if it will systematically translate and publish from time to time Government Orders, Proceedings of the Board of Revenue and other departments relating to Agriculcural and Revenue matters generally. Through ignorance of these very necessary matters, the ryot population are often swindled by unsrcupulous Village Officials and lower subordinate Revenue employees.

The "Hindu" dated 11th September 1906:—The "*Indian Law Gazette*," is the title of a new legal journal in Tamil, the first part of which we have just received. We believe this is the first time that a legal journal is published in any of our Vernacular languages: this, the Editor says, is intended to educate in law the ignorant man in the streets who blunders often not knowing what the law of the land is. We trust that this new enterprise in legal journalism will supply a real want, and we wish the journal every success Editor: Mr. M. A. Loganathan: Publishers, N. Ratha Krishna & Co., Madras.

The "Madras Times," dated 11th September 1906:—We have received the first number of a new Tamil monthly, called the "*Indian Law Gazette.*" Mr. M. A. Loganathan is its Editor, the publishers being Messrs. N. Rathakrishna & Co. The Magazine deals solely in legal topics and is intended to spread amongst the people of South India a knowledge of the law applicable to the protection of their person and property. The first number appropriately opens with an illustrated sketch of the life of the Hon'ble Sir S. Subramaniya Iyer, *Kt.*, C.I.E., who is most deservedly held in high esteem by his countrymen. Reports of Miscellaneous, Law Cases, Government Orders, etc., and a translation of the Motor Car Bill form the other reading matter in the magazine. We have no doubt that the "*Indian Law Gazette*" will be of great service to the rural population of this presidency, and we wish every succes to the new venture.

The "Swadesa Mithran," dated 13th September 1906, says:—A new monthly Tamil Magazine under the name of "*The Indian Law Gazette*" has been started in Madras. It has come out with the laudable object of spreading all matters relating to Law among Tamil masses who are unacquainted with English. Besides reporting the cases that are tried by the Courts of the Madras Presidency, reports of cases that are tried by Courts in other parts of India, will be published by this Law Journal. This will prove very useful to all persons who have something to do with Law. In the first Journal that has been sent us is placed a handsome protrait of Justice Sir S. Subramania Aiyar. Kt. C.I.E. We heartily wish success to this undertaking.

இந்திய சட்ட கெஜெட்.

மானேஜர் விளம்பரம்.

ரூ 10 ரொக்கம் கொடுக்கப்படும்

எல்லோரும் தயவுசெய்து இதை வாசிக்கவேண்டும்.

உலகத்தில் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் சட்ட ஞானத்தை அவசியம் பெற்றிருக்க வேண்டும். அதிலும் பொழுது விடிந்தால் அந்திபட்டால் ஜன க்ஷேமத்தை நாடி சட்டங்களைப் பிறப்பிக்கும் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரஜைகள் சட்ட ஞானமுடைத்தாயிருக்கவேண்டுவது அவசியத்திலும் அவசியமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சட்ட ஞானமும் விவகார ஞானமுமில்லாக் குறையால் நம்தேசஜனங்கள் படும் கஷ்டத்தையும் அவஸ்தையையும் கையிலிருந்த பொருள்களைக் கோர்ட்டுச் செலவு செய்து காலக்ஷேபத்திற்குக்கூட வழியின்றிக் கஷ்டப்பட்டு வருவதையும் நாம் கண் கூடாய்ப்பார்த்துவருகின்றோம். நம் தேச ஜனங்களுக்குச் சட்ட ஞானத்தைப்போதித்து விவகார ஞானத்தை உண்டுபண்ணி சட்ட ஞானக்குறைவால் இப்போது விளைந்துவரும் தீமைகளையெல்லாம் அகற்றி தேசத்திற்கு அத்தியாவசியகமான நன்மையைப் பயக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கும் இந்த இந்திய சட்ட கெஜெட்டை மதிராஸ் மெயில், டைம்ஸ், ஸ்டாண்டர்ட், சுதேசமித்திரன் முதலிய முக்கியமான பத்திரிகைகள் இது தேசத்திற்கு முக்கியமானதென்றும், மிகுந்த நன்மையைப் பயக்கக் கூடியதென்றும் புகழ்ந்து பேசி இது நீடூழிகாலம் நிலைபெற்று நடைபெறவேண்டுமென்று ஆசீர்வதித்திருப்பதுமன்றி, நாம் மரியாதை காட்டும்பொருட்டு இவ்விந்திய சட்ட கெஜெட்டின் பிரதிகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுக்கும், வக்கீல்களுக்கும் ஏனைய கன தனவான்களுக்கும் அனுப்பினோம். அவர்கள் அதைமுற்றும் வாசித்துச் சந்தோஷித்தவர்களாய் அதன் அருமைக்கேற்றபடி தகுந்த நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி இந்திய சட்ட கெஜெட்டை ஆசீர்வதித்து நம்மையும் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். அன்றி, பெருமை தங்கிய நமது கவர்ன்மெண்டாரும் இவ்விந்திய சட்ட கெஜட்டின் விஷயப் பொலிவைக்கண்டு, இங்கிலீஷ் பயிற்சியில்லாத பிரஜைகளுக்கு மிகப் பிரயோஜனகரமான ஜர்னலென்றும், இதனை மும்மரமாய் நடத்தும்படியும் கூறி, நமக்கு மிக்க ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் விளைவித்தார்கள். ஆகவே இந்த இந்திய சட்ட கெஜெட் தேசத்திற்கு மிக அவசியமான நன்மையைப் பயக்கக் கூடியதாயிருப்பதால் இதன் அபிவிர்த்தியில் கண்ணோட்டமாயிருந்து ஒவ்வொருவரும் பரோபகார சிந்தையுடன் இதை விர்த்தி செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டியதைத் தங்களுடைய கடமையாக நினைக்கவேண்டும். சட்ட ஞானக்குறைவால் உண்டாகிவரும் தீமைகளை அகற்றிலோகோபகாரத்தைச் செய்துவரும் இந்த இந்திய சட்ட கெஜெட் நாமுள்ள காலத்திலும் நமக்குப் பிற்காலத்திலும் தடையின்றி நடந்துவரும்படியாக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்திருப்பதுமன்றி நம்முடைய தேச சிற்றரசர்கள் ஜெமீந்தார்கள் முதலிய தனாட்டிகர்களின் பேருதவியையும் உதாரத்துவத்தையும் பெற்று இதற்கு ஒரு சாஸ்வதமான நிதியும் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இது நிற்க, இந்த கெஜெட் ஜனங்களுக்கு இன்னும் மிக உபயோகமாயிருக்கும்பொருட்டு இதில் விசேஷமான சமாசாரங்களையும் கேசுகளையும் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது. அப்படிச் சேர்ப்பதென்றால் அதிகச் செலவு பிடிக்கும். கெஜெட்டின் சந்தாவை இன்னும் உயர்த்துதல் சாத்தியமாயில்லை. ஆகையால் இன்னும் சில சந்தாதாரர்களைச் சேர்த்துவிடவேண்டுமென்று இப்போது பிரயத்தனஞ் செய்துகொண்டு வருகின்றோம். இந்த இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்து வரும் கனவான்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் நமக்கு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றோம். இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடும் செய்திருக்கிறோம். அதாவது, **25** கையொப்பங்கள் சேர்த்து அனுப்புகிறவருக்கு ரூ. **10** ரொக்கம் அனுப்பத்தயாராயிருக்கிறோம். 25 கையொப்பக் காரர்களும் பணம் செலுத்தினவுடன் ரூ. 10 மணி ஆர்டர் செய்து அனுப்பப்படும். மேற்சொன்னவாறு கையொப்பங்கள் சேகரித்துக்கொடுக்க முன் வரும் கன தனவான்கள் நமக்கு எழுதிக்கொண்டால், நாம் அச்சிட்டுள்ள விளம்பரங்களும் விண்ணப்பக் கார்டுகளும் அனுப்புகிறோம். விண்ணப்பக் கார்டுகளில் கையொப்பம் வாங்கி தபால் ஸ்டாம்பு ஒட்டாமல் தபாலில் போட்டுவிடலாம். ஆகவே நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்துவரும் கனவான்களும், ஏனையோரும் இது விஷயத்தில் தங்களால் இயன்றளவு உதவி புரியவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,

மானேஜர்கள்,

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,

சென்னை, சாவுகார்பேட் போஸ்ட்.

ABBREVATIONS USED IN THE GAZETTE.

இந்த கெஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta.
All.	=	Allahabad.
Bom.	=	Bombay.
Mad.	=	Madras.
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
I. A.	=	Indian Appeals.
M. A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகாபாத்
பம்.		பம்பாய்
மது சென்	}	சென்னப்பட்டணம்
சி. பு. கோ.		சிவில் புரொசிஜர்கோடு
கி. பு. கோ.		கிரிமினல் புரொசிஜர் கோடு.
இ. அ.		இந்தியன் அப்பீல்ஸ்.
மூ. இ. அ.		மூர் இந்தியன் அப்பீல்ஸ்.

விஞ்ஞாபனம்.

இம்முறை நமது சந்தாதாரர்கட்கு அறிவிக்கவேண்டிய ஒரு சந்தோஷகரமான சமாசாரமொன்றுளது. அஃதி யாதெனின், மேன்மை பொருந்தியகவர்ன்மெண்டார், நமது சட்ட கெஜெட்டை நன்கு மதித்துக் கௌரவப்படுத்தி தாங்கள் அப்போதைக்கப்போது செய்துவரும் ஆர்டர்களை யும் ப்ரொசீடிங்சுகளையும் நமக்கு அனுப்பிவரும்படி கவ ன்மெண்டு அச்சாபீஸ் சூப்பிரண்டெண்டுக்கு உத்தரவு செய் திருப்பதாய் நிகழும் நவம்பர்மீ 5௳ R. 633-நெம்பருடைய கடிதத்தில் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக மேன்மைதங்கிய கவர்ன்மெண்டாரவர்கட்கு அநேக் கோடி வந்தன மளிக்கின்றோம்.

பத்திரப் பதி விலாகா இன்ஸ்பெக்ட்டர் ஜனரலவர்கள் டை இலாகாவில் செய்யப்படும் ப்ரொசீடிங்சுகளையும், நம க்கு அனுப்பிவருவதாக நிகழும் நவம்பர்மீ 1௳ G. 10, 48 நெ. கடித மூலமாக அறிவித்திருப்பதற்காகவும் அன்பார்ந் வந்தனஞ் செலுத்துகின்றோம்.

புதுக்கோட்டை சமஸ்தானம் கனம்பொருந்திய திவா னவர்கள், நமக்கனுப்பியிருக்கும் நிகழ்மீ 19௳ யுள்ள $\frac{2270}{C}$ நெம்பர் கடிதத்தில் நம்முடைய இந்திய சட்ட கெஜட்டை அங்கீகரித்து, டை சமஸ்தான சீப் கோர்ட் தமிழ் வக்கீல்கள் வாங்கி வாசிக்கும்படி சிபாரிசு செய்திருப்பதால் நாம் அத காக வந்தனமளித்து அவர்பால் நன்றிபாராட்ட என்று கடமைப்பட்டிருக்கிறோம்.

நிகழும் நவம்பர்மீ 13௳ முதல் நடந்துவரும் சென்ன ட்டணம் ஹைகோர்ட் நான்காவது கிரிமினல் செஷன்ஸி 25௳ வரையில் விசாரணை செய்து முடிவாயிருக்கும் கேசுகளை மாத்திரம் இந்த கெஜெட்டில் பிரசுரம் செய்திருக்கின்றோம் விசாரணைசெய்யப்படவேண்டிய கேசுகள் இன்னும் அநேக மிருப்பதால், அவைகளை அடுத்தமாத கெஜட்டில் முறையே பிரசுரிப்போமாக. [எடிட்டர்]

நிருபநேயர்கட் கறிக்கை.

T. காசிம் சாயப்பு:—தாங்கள் இன்னாரென்று தெரிய வில்லை. ஆகையால் தங்களுடைய கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.

S. சுப்பராய ஐயர்:—அனேக வந்தனம். கவனிக்கப் படும்.

ஞா. ஞான நாடார்:—இந்திய சட்டம் கொளும்புக்கு பொருந்தாது. ஆகையால் அவ் டத்தியலாயரிடம் யோசிக்கவும்

சு-ரவ-சாமிநாத முதலியார்:—வீரமுத்து உடையான் V. சிங்காரவேலு-இந் கேஸ் செ. இ. லா. ரி 1 - வாலியம் 306-வது பக்கத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இந் புஸ்தகம் தேவையானா ல் கவர்ன்மெண்ட் அ சாபீசு சூப்பிரண்டெ ண்டுக் கெழுதித் தருவி த்துக் கொள்ளவும்.

M. அண்ணாவி செட்டியார்:—அடுத்த முறை தெரிவிக்க லாகும்.

அ. நா. முத்துதட்டியாபிள்ளை:—சிலோனில் ஊர்ஜி மாயிருக்கும் சட்ட தை அனுசரித்து கா கள் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

காவேரியாப்பிள்ளை:—அடுத்த முறை.

The Late Hon. Justice
Sir James Davies, Kt.,
BAR-AT-LAW.
கனம் ஜஸ்டிஸ் சர் ஜேம்ஸ் டேவிஸ் Kt.

The Late Hon. Justice
Mr. Budruddin Tyabjee.
கனம் ஜஸ்டிஸ் மிஸ்டர் பத்ருதீன் தியாப்ஜீ.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதம் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யூம் 1.] சென்னப்பட்டணம், 1906௵ நவம்பர்௴ [பாகம். 4.

RED TAPE AND THE LUNATICS,
கவர்ன்மெண்டு உத்திரவும் பயித்தியக்காரர்களும்.

சட்டங்களையும் உத்திரவுகளையும் கவர்ன்மெண்டார் பிறப்பிப்பதற்கு முந்தி அவைகளை நெடுங்காலம் ஆலோசனையில் வைத்திருந்து அவைகளால் உண்டாகக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் பரிசீலனை செய்து, அவைகளை கவர்ன்மெண்டு கெஜெட்டுகளில் மூன்று மாதம் நான்குமாதகாலவரையில் பிரசுரஞ்செய்து, இவைகளை வாசித்துப்பார்த்தவர்கள் சொல்லும் ஆக்ஷேபனைகளைப் பற்றி சிந்தனைசெய்துப், கடைசியாக அவைகளைச் சீர்திருத்தி இவ்விதமாக நீடித்த காலம் யோஜனைசெய்து பிறகு அவைகளைப் பிறப்பித்து அமுலுக்குக் கொண்டுவருகிறார்கள். இப்படி தீர்க்கமாக ஆலோசனை செய்து பிறப்பிக்கப்பட்ட சில சட்டங்களும் உத்திரவுகளும் அமுலுக்கு வந்தபின் அவைகள் ஜனங்களுக்குப் பொருந்தாதனவாக யிருக்கின்றனவென்றும் இடஞ்சலையும் தீமையையும் விளைவிக்கக்கூடியனவா யிருக்கின்றன வென்றும் அநுபவத்திற்கு ஒத்துவரவில்லை என்றும் அநுபவத்தால் ஜனங்களும் கவர்ன்மெண்டார்களும் கண்டறிகிறார்கள். அரசாங்கத்தாரும் பிரஜைகளும் ஒரு இனத்தாராயிருக்கும் கிரேட்பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, அமரிக்கா யுனைட்டட்ஸ்டேட்ஸ் முதலிய தேசங்களில் அரசாங்கத்தார்கள் ஆழ்ந்து யோசனை செய்து பிறப்பிக்கும் சட்டங்கள் ஜனநோக்கத்திற்கு பொருந்தாமல் இடஞ்சலை விளைவிக்கும்போது ஜாதி, மதம், ஆசாரம், நடை, உடை, பாவனை முதலியவைகளில் அகண்ட வித்தியாசங்களையும் பேதா பேதங்களையுமுடைய அரசாங்கத்தார்களையும் பிரஜைகளையுமுடைய இந்தியாவில் அரசாங்கத்தார்கள் தகுந்தபடி யோசனை செய்து பிறப்பிக்கும் சட்டங்களும் விதிகளும் சில சமயங்களில் அநுபவத்திற்குப் பொருந்தாமல் இடஞ்சலையும் தீமையையும் விளைவிப்பது ஆச்சரியமல்ல; கவர்ன்மெண்டார் பிறப்பிக்கும் சட்டங்கள், விதிகள், உத்திரவுகள் அநுபவத்திற்குப் பொருந்தாமலிருந்தால் அவைகளை விலக்கும்படியாவது சீர்திருத்தும்படியாவது கேட்டுக்கொள்வது பெரும்பாலும் அச்சட்டங்களாலும் விதிகளாலும் துன்பப்பட்டுவரும் ஜனங்களின் கடமையாகும். இங்கிலாண்டு தேசத்தில் அரசாங்கத்தார்கள் பிறப்பித்த சட்டம் ஜனங்களுக்குத் தீமைசெய்யக் கூடியதாயிருந்தால் அதை நீக்கிவிட்டு மறுவேலை பார்க்கும்படி பொதுஜனங்கள் பிரயத்தனப்படுவார்கள். அரசாங்கத்தார் அந்த சட்டத்தைச் சீர்திருத்தும் வரையிலாவது அல்லது ரத்துசெய்யும் வரையிலாவது ஓயாமல் அந்த சட்டத்தைப்பற்றி ஆக்ஷேபனை மகஜர்கள் அனுப்பிக கொண்டிருப்பார்கள்; மூலைக்கு மூலை கூட்டம் கூடிப் பேசி அச்சட்டத்தைப் பற்றி கண்டனஞ் செய்து அரசாங்கத்தாரின் கவனத்தை இழுப்பார்கள். இவ்விதமாக வருஷம் பத்தானாலும் தளர்ச்சி அடையாமலும் ஓயாமலும் முயற்சிசெய்து வருவார்கள். அரசாங்கத்தார் பிறப்பித்த சட்டம் தீமையைச்செய்யக்கூடியதாயிருந்தாலும் நன்மையைப்பயக்கக்கூடியதாயிருந்தாலும் அதில் ஜனங்களுக்கு யாதொரு சம்பந்தமில்லை என்று அச்சட்டத்தால் உண்டாகக்கூடிய தீமைகளை எல்லாம் பொறுமையாக சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அரசாங்கத்தார் ஜனங்களின் பிரதிநிதிகளென்றும் அவர்கள் ஜனசம்மதப்படி ராஜ்ஜியபாரஞ் செலுத்தக்கடமைப்பட்டவர்களென்றும் கருதிவாதாடுவார்கள். பொது ஜனங்கள் ஏகோபித்து சொன்னபடி அரசாங்கத்தார் அரசு முறை செலுத்தாவிடில் அவ்வரசாங்கத்தாரை நீக்கிவேறே அரசாங்கம் ஸ்தாபிக்கவும் பிரயத்தனப்படுவார்கள். ஜனசம்மதப்படி ராஜ்ஜியபாரஞ் செலுத்தவில்லை யென்றல்லவோ பிரிடிஷ் பொது ஜனங்கள் கூடி சார்லஸ் அரசனின் சிரத்தைகொய்தது! பிரான்ஸ் தேசத்தார் குடி-அரசை-ஸ்தாபிக்கும் பொருட்டு எத்தனை அரசர்களின் தலையை வெட்டியிருக்கிறார்கள்! எத்தனை ஜனத்தலைவர்கள் ஜனக்ஷேமத்தை நாடி அரசாங்கத்தார் தேசத்தைப்பரிபாலன

ஞ்செய்து வரவேண்டுமென்று செய்துவந்தபிரயத்தனங்களில் தங்களுடைய இரத்தத்தைச் சிந்தி உயிரைத் திரணமாக எண்ணி கொடிய அரசர்களின் வாளுக்கு ஆகாரமாய்க் கொடுத்திருக்கிறார்கள்! பல்லாண்டுகளுக்குமுன் இவ்வுலகினில் இதர தேசங்களைவிட பிரசித்தியுடன் பிரகாசித்துவந்த கிரீஸ் தேசச் சரித்திரத்தையும் ரோம் தேசச் சரித்திரத்தையும் வாசித்தால் அந்தக் காலத்தில் இத்தேச அரசாங்கத்தார்களுக்கும் ஜனங்களுக்கும் பெருஞ் சண்டைகள்கூட நடந்து வந்தனவென்று நன்குவிளங்கும். தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவது அரசாங்கத்தார்களைச் சேர்ந்த கடமைமட்டு மல்ல, பெரும்பாலும் ஜனங்களைப் பொறுத்ததாயுமிருக்கிறதென்று அநுபவம் அறிவிக்கின்றது. அரசாங்கத்தார் செலுத்தும் அரசு முறையை ஜனங்கள் மிகுந்த கவலையுடன் கவனித்து வரவேண்டும்; நம்தேச ஜனங்கள் பரம்பரை பரம்பரையாக சுதேச அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தவர்களானபடியாலும், பெரும்பாலும் முற்காலத்தில் ஆண்ட அரசர்களெல்லோரும் மனுநீதி தவறாமல் ராஜ்ஜியபாரஞ் செலுத்திவந்த மன்னர்களானபடியாலும் அவர்கள் தேசவிஷயமாய்ச் செய்துவந்த சட்ட திட்டங்களெல்லாம் ஜன க்ஷேமத்திற்கும் ஜன நோக்கத்திற்கும் பொருந்தினவாயிருந்தபடியாலும் அரசன் திருவாய்மலர்ந்தருளியது வேதவாக்கியமென்றும் அரசன் செய்த சட்டம் வேதமென்று நினைக்கப்பட்டு வந்தபடியால் நம்முடைய ஜனங்களுக்கு அரசாங்க விஷயங்களை கவனிக்கும் இயல்பே ஆதி முதல் கிடையாதென்று சொல்லவேண்டும். ஆனால் இந்தக்காலம் பூர்வீக ஹிந்து ராஜாக்களுடைய காலமல்ல; சிலப்பதிகாரம் கூறுவதுபோல மும்மாரி பெய்து நாடு செழித்து பொன் நாணயங்கள் வழங்கி ஒரு துண்டு பொன்னுக்கு கலக்கணக்காய் நெல்லகப்பட்டுக்கொண்டு வந்த காலம் பறந்துபோய் விட்டது. அன்னிய அரசாங்கத்தாரால் ஆண்டுவரப்படுகிறோம். அன்னிய தேசத்தார்கள் பலர் நம்முடைய நாட்டில் குடியேறி ஜீவனஞ்செய்து வருகிறார்கள். பெரும் மூலதனம்வைத்து பெரியவியாபாரஞ்செய்து நம் தேசத்தில் கோடிக் கணக்காய் சம்பாரித்து பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு சுதேசங்களுக்குப் போய் விடுகின்றார்கள். இத்தேசக்கைத்தொழில்களெல்லாம் ஆதரிப்பாரின்றி ஒவ்வொன்றாய் நசித்துப் போய்விட்டன. கிருஷித்தொழில் லாபகரமானதாயில்லை. பிளேக் ஒருபக்கம், பஞ்சம் ஒரு பக்கம் ஜனங்களை பிரேதத்தைக் கழுகுகள் பிடுங்கித் தின்பதுபோல உயிருடன் பிடுங்கித்தின்கின்றன. செல்வமும் செழிப்பும் சாஸ்வதமாய் குடியிருந்த இத்தேசத்தில் பல்லாண்டுகளாக தரித்திரமே குடி கொண்டிருக்கிறது. ஏழை ஜனங்கள் வயிரார உண்டு களித்த காலம்போய் சாப்பிடுவதற்கு ஆகாரமின்றி பட்டினியால் ஆயிரக்கணக்காய் இறந்து வருகிறார்கள். ஏராளமான நெல் முதலிய தானியாதிகளை ஈன்றுவந்த வயல்களும் கழனிகளும் பூமிகளும் போதுமான தானியங்களைக்கொடுக்கும் வளப்பத்தை இழந்து போய்விட்டன. பஞ்சகாலத்தில் எந்த இலையை எந்தக் கொடியை அல்லது எந்தக் காயை ஆகாரமாய் உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்று புதிதாய்க் கண்டுபிடிக்க முயன்று வருகின்றோம். ஆகவே இப்போதிருக்கும் காலம் நம் தேசத்திற்குக் கொடுமையான காலம்! ஆகையால் நம்முடைய தேச ஜனங்கள் அரசாங்க விஷயங்களில் கவனம் செலுத்தாமல் பூர்வீக சுபாபத்தையே உடைத்தாயிருப்பது இன்னும்நம்தேசத்தைப் பெருந்துன்பத்தில் ஆழ்த்திவிடும். ஜனங்கள் அரசாங்கவிஷயங்களை கவனித்துவரவேண்டும் தேசத்தை முன்னுக்குக்கொண்டு வரப் பிரயத்தனப்பட்டு வரவேண்டும். எல்லோரும் க்ஷேமத்துடனும் வாழ்ந்து வரும்படியாக. பரோபகாரச்சிந்தையுடன் பாடுபடவேண்டும். நாம் நம்முடைய பூர்வீக அரசாங்கத்தை இழந்து விட்டபோதிலும் நாம் முன் ஜென்மத்தில் செய்த தபோபலத்தால், கொடிய ருஷியர்கள் நமக்கு அரசாங்கத்தார்களாக ஏற்படாமல், பிரஜைகளுக்குச்சரியான நியாயத்தையும் சுதந்தரங்களையுங்கொடுத்து அரசு முறைசெலுத்துவதையே மேன்மையான குணநிசயமாயுடைய பிரிடிஷார் நமக்கு அரசாங்கத்தார்களாய் ஏற்பட்டிருக்கிறார்கள். நாம் கஷ்டப்படுவதை அவர்கள் உள்ளபடி அறிந்து கொண்டால் காருண்யம் பொருந்திய அரசாங்கத்தார் அக்கஷ்டத்தின் காரணத்தைக்கண்டுபிடித்து அதை விலக்காமலிருக்கமாட்டார்கள். ஆகையால் நாம்கஷ்டப்படுகிறோமென்றும், நாம் துன்பப்படுகிறோமென்றும், இன்ன இடஞ்சல்களால் நாம் துன்பப்படுகிறோமென்றும் கவர்மெண்டாருக்கு எடுத்துச்சொல்வது பிரஜைகளின் கடமை. இந்த கடமையையும் இந்தப் பொறுப்பையும் இந்த உத்திரவாதத்தையும் பிரஜைகள் எப்போது உணர்ந்து ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அப்போது தான் நம் தேசத்தைப் பிடித்திருக்கும் கஷ்டங்களும் துன்பங்களும் விலகுமென்று ஐயமின்றி எழுதுவோம். அனேக வருஷங்களுக்கு முந்தி ரோம்தேசத்தை ஆண்டு வந்த ஒரு அரசன் சில சட்ட திட்டங்களைச்செய்து பிரஜைகளறிந்து கொள்ளும்படியாக பயிரங்கபடுத்தாமல் ஒரு 60-அடிக்கப்பத்தின் சிகரத்தில் கட்டிவிட்டு அச்சட்டத்திற்கு பிரஜைகள் கீழ்ப்படியவில்லை என்று தண்டித்தான். அவ்வரசன் போலல்லாமல் நம்முடைய கவர்ன்மெண்டார், செய்யும்சட்டதிட்டங்களை எல்லாம் கெஜெட்டுகளில் பிரசுரஞ்செய்கிறார்கள். அவைகளை அறிந்து கொள்ளவேண்டியது பிரஜைகளின் கடமை; சட்டங்களை கெஜெட்டில் பிரசுரித்துவிட்டவுடன் ஜனங்கள் அவைகளை அறிந்துகொண்டிருக்கிறார்களென்று கவான்மெண்டார் தார்பரியஞ்செய்து கொள்ளுகிறார்கள். ஆகையால் சட்டவிரோதமான காரியத்தைச்செய்து குற்றஞ்சாட்டப்பட்டவன் தனக்குச்சட்டந்தெரியாதென்று டிபன்ஸ்சொன்னால் இ.பி.கோ-வின்படி குற்றத்தினின்று விலக்கப்பட்டு விடுவிக்கப்படமாட்டான். இ. பி. கோ-வின்படி கவர்ன்மெண்டார் செய்யும் சட்ட திட்டங்களை பிரஜைகள் தெரிந்து கொண்டிருக்கக் கட்டுப்பட்டவர்களாயிருந்தும் நம் தேச ஜனங்கள் அவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கனவிலும் நினைக்காமலிருப்பது இத்தேசத்திற்கு ஒரு பெரும் குறையாயிருந்துகொண்டிருக்கிறது. ஜனங்கள் சட்ட திட்டங்களைத் தெரிந்தவர்களாயிருந்தால் இப்போது நடப்பதுபோல் எண்ணிக்கையில்லாத அக்கிரம வியாஜ்ஜியங்கள் நடக்க ஏது விருக்கமாட்டாது. வியாஜ்ஜியமாடி உள்ள பொருளையும் இழப்பதற்கிட மிருக்க மாட்டாது. இத்தனை கோர்ட்டுகள் ஏற்படுவதற்குமிட மிருக்கமாட்டாது. இன்னும் இந்த விஷயத்தைக் குறித்து சமயம் நேரிட்டபோதெல்லாம் எடுத்து எழுத நாம் உத்தேசித்திருப்பதால் இம்மட்டோடு நிறுத்தி பயித்தியக்காரர்களுக்கு இடஞ்சலாயிருக்கும் கவர்ன்மெண்டு உத்திரவைபற்றிச் சற்று கவனிப்போம்.

நிற்க, பைத்தியக்காரர்கள் விஷயமாய் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஒரு ஏற்பாடு கால் பயித்தியக்காரனை முழுப் பயித்தியக்காரனாய்ச் செய்துவிடக்கூடியதாயிருக்கிறது. சென்னையிலுஞ் சரியே வெளியூரிலுஞ் சரியே இவர்கள் விஷயமாய் ஊர்ச்சிதத்திலிருக்கும் ஏற்பாடு மிகவும் கொடுமையானதாயிருக்கிறதென்று சொல்லவேண்டும். வெளியூர்களில் பயித்தியக்காரர்களுக்கு ஆஸ்பத்திரி கிடையாது. சென்னையில் மட்டிலும் Lunatic Asylum என்று பயித்தியக்காரர்களுக்கு மட்டிலும் ஒரு ஆஸ்

பத்திரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வெளியூர் பயித்தியக்காரர்களை அவர்கள் பந்துக்கள் அழைத்துக் கொண்டுவந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனால் ஜெனரல் ஆஸ்பத்திரி அதிகாரிகள் அந்த பயித்தியக்காரனை சேர்த்துச்கொள்ளமாட்டோமென்கிறார்கள். பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகும்படியாகச் சொல்லுகிறார்கள். பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போனால் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் உத்திரவின்றி சேர்க்கமாட்டோமென்று பயித்தியக்காரர் ஆஸ்பத்திரியின் தலைமை அதிகாரி சொல்லிப்போடுகிறார். ஆகவே பயித்தியக்காரனை அழைத்துக்கொண்டு வந்தவர்களுக்கு இன்னவிதமாய் பயித்தியக்காரனை மேஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் ஆஜர்படுத்துகிறதென்பது தெரியாது. தெரிந்தவர்களாயிருந்தால் வக்கீலிடம்சென்று வக்கீல்பீஸ் செலுத்தி ஒரு மனு தயாரித்து பயித்தியக்காரனை வக்கீலைக்கொண்டு மாஜிஸ்டிரேட்டினிடம் ஆஜர் படுத்துகிறார்கள். இந்த கிரமமான வழி தெரியாதவர்கள் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு ரூபாய் 10-அல்லது ரூபாய் 5-கொடுத்து பயித்தியக்காரன் ரோட்டில் போக்குவரத்து செய்யும் ஜனங்களுக்கு இடஞ்சலான செய்கையை செய்துகொண்டிருந்தான் என்று வேணுமென்று அரஸ்ட் செய்யச் சொல்லி போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கச்செய்து மறுநாள் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் போலீசாரைக்கொண்டு குற்றஞ் சாட்டி ஆஜர் செய்யும்படி செய்விக்கிறார்கள். மாஜிஸ்டிரேட்டாவது இவனை உடனே பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுகிறாரா அதுவுமில்லை. இப்படி ஆஜர் படுத்தப்படும் பயித்தியக்காரன் தன்னுடைய பயித்தியத்தன்மையை முன்னிட்டு மாஜிஸ்டிரேட் முன்பே காரிஉமிழ்ந்தாலும் சரி, அல்லதுகுத்தவந்தாலும் சரி உதைக்கவந்தாலும் சரி அல்லதுபயித்தியக்கார சொரணிகள் எவ்வளவு செய்தபோதிலும் அவனை மாஜிஸ்டிரேட் பயித்தியக்காரன் என்று சொல்லி உடனே பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுகிறதில்லை. பின் என்ன செய்கிறார்? டாக்டர் பரிசோதனை செய்யும்படியாக கிரிமினல் குற்றங்களைச் செய்து தண்டனை அடைந்துவரும் கைதிகளடைப்பட்டிருக்கும் பெனிடன்ஷெரி என்கிற ஜெயிலில் அடைத்துவைக்கும்படி உத்திரவு செய்கிறார். இவ்விடத்தில் ஒரு வாரம் வரையில் டாக்டர் இந்த பயித்தியக்காரனை பரிசோதனை செய்து சர்டிபிகேட் கொடுத்தால் பிறகு அவனை போலீசார் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்படுத்துகிறார்கள். பிறகு மாஜிஸ்டிரேட் அவனை பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப உத்திரவு செய்கிறார். போலீசார் அவனை பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒப்புவிக்கிறார்கள். சென்னைக்கு வந்தால் இப்படி துன்பப்படவேண்டியதிருக்கிறதே, வெளியூரிலேயே ஜில்லா மாஜிஸ்டிரேட் ஆர்டர் வாங்கிக்கொண்டு வந்துவிடக்கூடாதாவென்று சிலர் கேட்கக்கூடும். சென்னையில் படுகிறபாடுதான் அங்கும் படவேண்டியதாயிருக்கிறது. அவ்விடத்திலும் மாஜிஸ்டிரேட்டினிடம் ஆஜர்படுத்த வேண்டியதிருக்கிறது. அவர் ஜெயிலில் அடைத்து வைக்கும்படி உத்திரவு செய்கிறார். போதாக் குறைக்கு அந்த பயித்தியக்காரனை போலீஸ் பந்தோபஸ்துடன் அனுப்புகிறார்கள். பைத்தியக்காரனை ஜெயிலில் அடைத்து வைக்கும்படியும் போலீஸ் பந்தோபஸ்துடன் அனுப்பவேண்டுமென்று உத்திரவு செய்திருப்பதில் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு கெட்டெண்ணமும் கிடையாது. பயித்தியங்கொண்டவனானபடியால் அவனால் சமீபத்திலுள்ளவர்களுக்கு யாதேனும் தீங்கு நடக்கவொட்டாவண்ணம் இப்படி பந்தோபஸ்துடன்வைக்கும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஏற்பாட்டில் அவனுக்கும் ஒரு குறையிருக்கிறது. அவனைச்சேர்ந்த பந்துக்களுக்கும் ஒரு குறைவு மிருக்கின்றது. போலீஸ்காரரின் கடமை இன்னதென்பதை இத்தேசத்தார் இன்னும் அறிந்துகொள்ளவில்லை குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அரஸ்ட் செய்வதற்கு போலீஸ்காரர்கள் உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். ஆகையால் போலீஸ் கான்ஸ்டேபிலுடன் சாதாரணமாய்ச் சேர்ந்துகொண்டு போவதை அகௌரவமாக நினைக்கிறார்கள். ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் ஒரு வீட்டுத்திண்ணையில் சாதாரணமாய் உட்கார்ந்துக்கொண்டிருந்தால் அந்த வீட்டுக்காரன் ஏதோ கிரிமினல் குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று சமுசயிக்கும் இயல்பையுடைய ஜனங்கள் நம்தேச ஜனங்கள். பயித்தியம் என்கிற நோய்க்கு ஏழை என்றும் பணக்காரனென்றும்பேதமில்லை. தோட்டியும்சரி, தொண்டாவனுஞ்சரி எளியவனும்சரி, மானிகளும் சரி, மானங்கெட்டவர்களும்சரி, பயித்தியக்காரர்கள் விஷயமாய் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் விதி மேற் கூறிய எல்லோருக்கும் பொதுவான விதி; ஆதலால் மானிகளுக்கும் பணக்காரர்களுக்கும் பயித்தியம் பிடிக்கும் போது அவர்களை இம்மாதிரியாக ஜெயிலில் அடைத்துவைப்பதும்போலீஸ் பந்தோபஸ்துடன்கொண்டு போவதும், மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் ஆஜர் படுத்தும்படி செய்வதும் அவர்களுடைய பந்துக்களுக்கு மிகுந்த மானசங்கடமாயிருக்கின்றது. கிரிமினல் குற்றஞ்செய்த கைதியைக் கொண்டு போகும் போலீஸ் கான்ஸ்டேபில்கள் தன்னைக் கொண்டுபோகிறான் என்றும் தன்னை கிரிமினல் கைதிகளிருக்கும் ஜெயிலில் அடைத்துவைத்திருக்கிறார்களென்று பயித்தியக்காரன் அறிந்துக்கொண்டால் அது அவனுடைய பயித்தியத்தை முதிரச்செய்யக்கூடியதாயிருக்கிறது. ஆகவே கவர்ன்மெண்டார் பயித்தியக்காரர்களை வெளியூர்களில் ஜில்லா சர்ஜனும், சென்னையில் சர்ஜன் ஜெனரலும் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படியாக உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சூனாம்பேட்டை ஜெமீன்தாரின் மரணம்.

செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூக்காவைச் சேர்ந்த சூனாம்பேட்டையின் ஜமீன்தாராகிய கனம் பொருந்திய மிஸ்டர் C. முத்துக்குமாரசாமி முதலியார் B. A. அவர்கள் சென்ற அக்டோபர்மீ 31வ புதன்கிழமை காலை 3-மணிக்கு இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகினதைக் கேள்விப்பட்டு மிகுந்த விசனமடைகின்றோம். இவர் தமிழ்ப்பாஷையின் அபிமானி; இவரே அப்பாஷையில் பாண்டித்யம் பொருந்தியவர்; இவருடைய கிரகத்தில் எப்போதும் தமிழ்ப்பண்டிதர்களே கூடியிருப்பார்கள். இவர்களுக்கு அவருடைய பொக்கிஷம் எப்போதும் திறக்கப்பட்டிருக்கும். இவருக்கு செங்கற்பட்டு ஜில்லாவில் ஏராளமான பூஸ்திதிகளிருக்கின்றன. இவர், சென்னை (Land Holder's Association) என்கிற நிலசுவான்தார்களின் சங்கத்தின் பிரதிநிதியாக சென்னை சட்ட நிருபண சபையில் அங்கத்தினராக விருந்தார். காங்கிரஸ் அபிமானி; கிரமமான வழிகளில் தகுந்த தர்மங்களுஞ்செய்து வந்தனர். பாகிக்கக்கூடாத எஸ்டேட்டு ஆக்ட் மசோதா ஆக்ட்டாயிருக்கும்போது அதைப் பரிசிலனை செய்ய கவர்ன்மெண்டார் Select Committee நியமித்தபோது நம் முதலியார் அவர்களும் அதில் ஒரு அங்கத்தினராக கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டார். இறந்து போகும்போது வயது-49. கனம்பொருந்திய ஜெமீன்தார் அவர்கள் நம்முடைய கெஜெட்டின் போஷர்களில் ஒருவர். இம்மரணத்தால் இவருடைய குடும்பத்தாருக்கு உண்டாயிருக்கும் தீராத்துயரத் துயரத்தில் நாமும் கலந்து அநுதாபப்படுகின்றோம்.

கல்கத்தா பிராவிடன்ட் பண்டு.

கல்கத்தாவில் நான்கு வருஷத்திற்கு முந்தி ஏற்பட்ட இந்த (Provident Fund) பிராவிடன்ட்பண்டு என்கிற நிதியில் சென்னை ராஜதானியில் வெகு ஜனங்கள் பணம் போட்டிருக்கிறார்கள். இந்த நிதிக்காரர்கள். இந்தநிதியில்சேர்ந்த ஒவ்வொருவரிடமிருந்து மாதம் ஒரு ரூபாய் பெற்றுக்கொள்ளுகிறதென்றும், இந்த சந்தாப்பணம் யார் பேரால் கட்டப்பட்டிருக்கிறதோ அவர் இறந்துபோய்விட்டால் அவருடைய மரணகிரியைகளுக்கு உதவும்படி ரூபா. 50-உடனே அனுப்புகிறதென்றும் வருஷக்கடைசியில் இறந்துபோனவரின் பாகத்திற்கு என்ன லாபம் கிடைக்கிறதோ அது அனுப்பிவிடப்படுமென்றும் விளம்பரங்கள் பிரசுரித்து ஏஜண்டுகள் நியமித்து மத்தியமாகாணத்திலும் சென்னை ராஜதானியிலும் ஆயிரக்கணக்கான சந்தாதாரர்களை (Subscribers)ச்சேர்த்துவிட்டார்கள். தீபத்தின் பிரகாசத்தைக் கண்டுகளித்து அதன்பேரில் விழுந்து மாண்டுபோகும் பூச்சுகளைப்போல நிதியின் யோக்கிதா பக்ஷங்களையும் நிலைமையையும் பரிசீலனை செய்யாமல் அனேக ஜனங்கள் பணம் செலுத்தி இப்போது நஷ்டமடைந்திருக்கிறார்கள். இந்த நிதியார் ஆரம்பகாலத்தில் மட்டிலும் ஜனங்களுக்குள் நம்பிக்கை உண்டாகும் பொருட்டு அவர்கள் வாக்குக் கொடுத்தபடி சிலருக்குப்பணம் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. பிறகு பணம் கொடுப்பதை நிறுத்தி சந்தாரர்களுக்குச் சாக்குபோக்குச் சொல்லி ஏமாற்ற ஆரம்பித்துவிட்டார்கள். அனேகருக்குப்பணம் கொடுக்காமல்போகவே சென்னை ராஜதானியிலுள்ளவர்கள் போலிஸ் கமிஷனருக்கு புகார் செய்தார்கள். இவர்களுக்கும் கல்கத்தா போலிசாருக்கும் இது விஷயத்தைக்குறித்து கடிதம்போக்குவரத்துகள் நடந்து கொண்டுவந்தன. இதன் மத்தியில் ராஜமகேந்திரபுரத்தில், இந்தநிதிக்குப்பணம் செலுத்திக்கொண்டுவந்த ஒருவர் பிரஸ்தாபநிதியின் தலைவராகவும் சொந்தக்காரராகவுமிருக்கும் காளேஸ்கிரிஸ்டன் போஸ் என்பவர்பேரில் நம்பிக்கைமோசக்குற்றத்திற்காகவும் ஏமாற்றினகுற்றத்திற்காகவும் குற்றஞ்சாட்டி, வாரண்டுபிறப்பிவிக்கும்படி செய்ய கல்கத்தா போலிசார் ஷை நிதியின் கணக்குகளை பரிசோதனை செய்து இரண்டு லக்ஷரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கிறதென்று அறிந்து ஷை போசை அரஸ்ட்செய்து சென்னைப்போலிசாரிடம் ஒப்புவித்து ராஜமகேந்திர புரத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். பங்காளப் லப்ட்டினன்ட் கவர்னரும் கேசை பிராசிக்கியூட் பண்ணும்படியாக அனுமதிகொடுத்திருக்கிறார்.

துணிகரமான திருட்டு.

சென்ற அக்டோபர்மீ 22உ திங்கள் கிழமை மாலையில் கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டையிலிருந்து பொள்ளாச்சி ரோடின் வழியாக தபால் பைகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்த தபால் ரன்னரை 6-திருடர்கள் வழி மறித்து அடித்துப்பைகளை பிடுங்கிக்கொண்டு ஓடிப்போய் அவைகளைச் சோதனை செய்து அகப்பட்டதை எடுத்துக்கொண்டு பைகளை பக்கத்திலிருந்த வயல்களில் போட்டுவிட்டு ஓடி விட்டார்கள். மாலை 6-மணிக்கு பயிரங்கமான ரோடில் இம்மாதிரியான திருட்டுகள் நடப்பது கோயம்புத்தூர் ஜில்லாத் திருடர்கள் கோயம்புத்தூர் போலிசார் பேரில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களென்பதை உலகத்தாருக்கு எடுத்துக் காண்பிக்கின்றது.

உதைபட்டு இறந்தனள்.

நிகழும் அக்டோபர்மீ 25உ சென்னை சூளை சக்கிலிய பாளையத்தில் வசிக்கும் வெங்கய்யா என்பவன் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தான். அவனுடைய மனைவி அவன் குடித்ததற்காக கோபித்துக்கொள்ள இருவருக்கும் பேச்சு வளர்ந்து புருஷன் பெண்ஜாதி வயிற்றில் உதைக்க அவள் கீழே விழுந்து இறந்து போய்விட்டாள். பந்துக்கள் பிரேதத்தை எடுத்துக்கொண்டு மயானத்திற்குப் போகும் தருவாயில் போலிசார் வந்து தடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக கொண்டுபோய்விட்டார்கள்.

டௌன் மாஜிஸ்டிரேட்.

புதுக்கோட்டை டௌன் மாஜிஸ்டிரேட்டின் பேரில் கொண்டுவரப்பட்ட கிரிமினல் கேசின் விசாரணை இன்னும் முடிவாகவில்லை. மாஜிஸ்டிரேட்டை எந்தத் தாலூக்காவிற்காவது மாற்றி விடவேண்டுமென்று பிரியாதி கேட்டுக்கொண்டதை சீப்கோர்ட்டார் அங்கீகரிக்கவில்லை. பிரியாதிக்கும் மாஜிஸ்டிரேட்டிற்குமுள்ள சிவில் வியாச்சியம் தீரும்பரியந்தம் கிரிமினல் கேசை விசாரணைசெய்யக்கூடாதென்று மாஜிஸ்டிரேட் மனு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

தற்கொலை.

சென்னப்பட்டணம் ஜியார்ஜ்டௌன் தியாகராய முதலி தெருவில் நிகழ் நவம்பர்மீ 1உ தாயாரம்மாள் என்னும் பெயருடைய ஒரு ஹிந்து ஸ்திரீ தன்னுடைய வீட்டின் கூரையில் ஒரு கயிற்றைக் கட்டி தன் கழுத்தில் சுருக்குப்போட்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். போலிசார் அக்கம் பக்கத்திலுள்ளவர்களை விசாரணை செய்ததில் இந்த ஸ்திரீயின் புருஷன் இறந்துபோய் ஒரு மாதமாகிறதென்றும் அது முதல் தானும் இறந்து போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாளென்றும் தெரிய வந்தது.

அர்பத்நாட் பாங்கி.

போனது போக அர்பத்நாட் பாங்கிக்கு இருக்கும் வியாபாரத் தொழிலைக் கொண்டு டிபான்சிட்டர்கள் அதிக நஷ்டமடையாமல் பாதுகாக்க சர் ஜியார்ஜ் அர்பத்நட் முயன்று வருவதாக நாகப்பட்டணம் ம-ள-ள-ஸ்ரீ, ரெத்தினசபாபதி பிள்ளை அவர்களுக்கு எழுதியிருப்பது மன்றி இந்நகர் பத்திரிகைகளிலும் பயிரங்கப்படுத்தியிருக்கிறார். திருவாங்கூர் மகாராஜா அவர்களும் ஏதோ இந்த பாங்கிக்கு உதவி செய்யப்போகிறதாகவும் திருவாங்கூரிலிருந்து ஒரு நிரூபர் மதிராஸ் மெயில் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

ஜல விபத்து.

அமிர்த அம்மாள் என்னும் ஒரு மங்கை வெளியூரிலிருக்கும் தன் மாமியார் வீட்டிலிருந்து தீபாவளிக்காக சென்னை தேனாம்பேட்டையிலிருக்கும் தன் தாயார் வீட்டிற்கு வந்தனள். சென்ற அக்டோபர்மீ 31உ புதன்கிழமை தன்னுடைய சேலைகளை துவைத்துக்கொண்டுவர சமீபத்திலிருந்த ஒரு கிணற்றிற்குப் போன இந்நங்கை வெகு நாழிகைப்பரியந்தம் வரவில்லை. பெண்ணைக் காணாத பெற்றோர் பயந்து பலவிடங்களில் தேடி காணாமல் கடைசியாக கிணற்றைப் பார்த்தும் காணவில்லை. இருந்தபோதிலும் சமுசயித்து கிணற்று ஜலத்தை இழுக்க பிரேத மகப்பட்டது. போலிசார் பிரேத பரிசோதனை செய்து சட்டபடி பிரேதத்தைப் பைசல் செய்தார்கள்.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

மனுதார்:—காதர் பாக்ஷா சாயப்பு

எதிர் மனுதார்:—கவர்ன்மெண்டார்.

(2—11—06)

மனுவின் விபரம்:—நீலகிரி ஜில்லா கூடலூர் தாலூக்காவிலிருக்கும் எல்லமலை காபி எஸ்டேட்டுகளில் மனுதார் காபிக்கொட்டைத் திருடினதாக ஷை. காபி எஸ்டேட்டுகளின் மானேஜராகிய மிஸ்டர் W. H. சர்ச் என்பவரால் கூடலூர் தாலூக்கா மாஜிஸ்டிரேட்டு முன்னிலையில் சென்ற பிப்ரவரிமீ 17உ குற்றஞ் சாட்டப்பட்டான். கூடலூர் தாலூக்காமாஜிஸ்டிரேட் விசாரணை செய்கையில் மனுதார் ஷை காபிக்கொட்டைகளை ஷை காபி எஸ்டேட்டுகளுக்கு சமீபத்திலுள்ள உம்பிளிமலை காபி எஸ்டேட்டில் பொருக்கினதாகவும், அப்படிப் பொருக்குவதற்கு ஷை எஸ்டேட்டின் மானேஜருடைய காரியஸ்தனிடமிருந்து பாஸ் (Pass) வாங்கிக்கொண்டதாகவும் டிபன்ஸ் சொன்னான்.

இவன் சொன்ன டிபன்சை மாஜிஸ்டிரேட் நம்பவில்லை. எல்லைமலை எஸ்டேட்டில் இவன் காபிக்கொட்டை திருடவேண்டுமென்று எண்ணி, அப்படி அந்தத்திருட்டு வெளிப்பட்டால் உம்பிளிமலை எஸ்டேட்டில் ஷை காபிக்கொட்டைகளைப் பொருக்கினதாக டிபன்ஸ் கூறலாமென்று முன் யோஜனை செய்து பாஸ் வாங்கிருக்கிறான் என்று மாஜிஸ்டிரேட் அபிப்பிராயப்பட்டு திருடின குற்றத்திற்காக அவன் மேல் குற்ற ஸ்தாபனை செய்து அவனுக்கு ரூ 200-அபராதம் விதித்தார்.

மனுதார் இந்த தண்டனைக்கு விரோதமாக சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிற்கு அப்பீல் செய்துகொண்டான்.

அப்பீல் கோர்ட்டுத் தீர்மானம்:—கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டுத் தண்டனையை உறுதிப்படுத்தி காபி திருடினது ஒரு முக்கியமான குற்றம் மென்றும் இந்த குற்றத்திற்கு கீழ்க்கோர்ட்டார் தண்டனை சொன்னபோது அபராதத்துடன் ஜெயில் தண்டனையும் சேர்த்துச் சொல்லியிருக்கவேண்டுமென்று ரிமார்க் செய்தார்கள்.

மனுதார் மறுபடியும் ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தான். சர்க்கார் தரப்பு வக்கீலாகிய கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டரும் தண்டனையை உயர்த்தும்படியாக ஹைகோர்ட்டில் அப்பீல் மனு தாக்கல் செய்தார்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு:—மனுதாருக்கு ரூ 100 அபராதமும் இரண்டு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

குற்றவாளி: பில்லை சேஷா.

(3—10—06)

கேசின் விபரம்:—தென்கன்னடத்திலிருக்கும் குற்றவாளிக்கு ஒரு 8-வயதுள்ள புத்திரனிருந்தான்; இந்தப்புத்திரன் ஷை குற்றவாளியின் பெண்சாதியின் முதல் புருஷனுக்குப் பிறந்தவன், குற்றவாளிக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் மிகுந்த மனஸ்தாபமுண்டு, குற்றவாளியின் வீட்டில் கடந்த ஜூலைமீ 1உ ஷை புத்திரனுடைய பிரேதம் தொங்கிக்கொண்டிருந்தது. குற்றவாளி தன்னுடையபுத்திரனை யாரோ கொலைசெய்து விட்டு அவன்கையில் போட்டிருந்த நகைகளைத்திருடிக்கொண்டுபோய் விட்டார்களென்று கிராமமேஜிஸ்டிரேட்டினிடம் ரிப்போர்ட் எழுதிவைத்தான்.

போலிசார் விசாரணைசெய்ததில் குற்றவாளிக்கும் அவனுடைய சகோதரர்களுக்கு மிருக்கும் மனஸ்தாபத்தால் அச்சகோதரர்களை வில்லங்கத்தி லிழுத்து வைக்கவேண்டு மென்னும் கருத்துக்கொண்டு இந்தக்கொலைப்பழியை அவர்கள்பேரில் சுமத்தி அவர்களை மரணதண்டனைக்குக்குள்ளாக வேண்டுமென்கிறகருத்துடன் குற்றவாளியே தன்னுடைய புத்திரனைக்கொலைசெய்து உத்திரத்தில் தொங்கவிட்டான் என்று புலப்பட்டது. ஆகையால் குற்றவாளி இ. பி. கோ 302-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கொலைக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டு தென்கன்னடம் செஷன்ஸ் கோர்ட்டாரால்விசாரணை செய்யப்பட்டான்.

கேசின் விசாரணையைக்கவனித்து வந்த அசசர்கள் குற்றவாளி கொலைக்குற்றஞ்செய்ததும் செய்யாததும் சந்தேகமாயிருக்கிறதென்று அபிப்பிராயம் கூறினார்கள்-

செஷனஸ் ஜட்ஜி அசசர்களின் அபிப்பிராயத்தை அங்கீகரித்துக்கொள்ளாமல் குற்றவாளி அவனுடைய சகோதரர்களை மரணதண்டனைக்குள்ளாக்க வேண்டுமென்கிற கருத்துடன் யாதொரு விதமான கோபமும் மூட்டப்படாமலிருக்கும்போது இந்தக் கொலைக்குற்றத்தைமிகுந்த துணிகரமாய்ச் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம்கூறி குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்தார்; மரணதண்டனை ஹைகோர்ட்டாரால்உறுதி செய்யப்படவேண்டியதால் இந்தகேஸ் ஹைகோர்ட்டாருக்கு அனுப்பப்பட்டது.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் K. P. கோவிந்தமீனன் குற்றவாளி தரப்பிற்கும் கவர்ன்மெண்டு தரப்பிற்குப்பப்ளிக்பிராசிக்கியூட்டரும் பேசினார்கள்.

ஹைகோர்ட்டு தீர்மானம்:—குற்றவாளி குற்றஞ் செய்தது சந்தேகமாயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

புல்பென்ச் :—சிப்ஜெஸ்டிஸ்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்
லெடர்ஸ் பேட்டன்ட் அப்பீல்.

வாதி:—ரூப்லால் வகையரு (அப்பீல் பிரதிவாதி)
பிரதி வாதி:—T. லக்ஷிமிதாஸ் (அப்பில் வாதி)
(30—10—1906)

கேசின்விபரம்.—பிரதிவாதி காலஞ்சென்ற தனவந்தராகிய சென்னபட்டணம் ஈஸ்வரதாசின் ஸ்வீகாரப்புத்திரர்; ஈஸ்வரதாஸ் ஜீவதிசையிலிருக்கும்போது 1887-வதுஞூம் ஒரு டிரஸ்ட்சாசனம்(Trust deed) செயததாகவும் அதன் பிரகாரம் வாதிகளுக்கு மாதாமாதம் காலக்ஷேபத்திற்காக பணம் கொடுத்து வருவதாயும் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அந்தப்படி அனேக வருஷகாலம் கொடுத்து வந்ததாயும் அவர் இறந்துபோன பிறகு அப்பணம் அவருடைய ஸ்வீகார புத்திரராகிய பிரதிவாதியால் கொடுக்கப்படவில்லை என்றும், பிரதிவாதியும் ஷை டிரஸ்ட் சாசனத்தில் கை யெழுத்து செய்திருப்பதால் பிரதிவாதி கொடுக்கக்கடமைப்பட்டவரென்றும் ஷை டிரஸ்ட் சாசனத்தின்படி கிடைக்கவேண்டிய பணமெல்லாம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி வகையரு ஐக்கோர்ட் ஒரிஜினல் சயிடில் வியாஜ்ஜியஞ் செய்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் இந்த வியாச்சியத்தை விசாரணை செய்து ஷை டிரஸ்ட் சாசனத்தில் கையெழுத்து செய்தால் அதனால் என்ன நேரிடுமென்பதை அறியாமல் அதில் பிரதிவாதி கையெழுத்து செய்திருப்பதால் அந்த டிரஸ்ட் சாசனத்திற்கு வலுவில்லையென்று சொல்லி வாதிகள் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்.

வாதிகள் அப்பீல்செய்தார்கள். இந்த அப்பீலை மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரும் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயரும் விசாரணை செய்து பேதப்பட்ட அபிப்பிராயம் கூறினார்கள்.

ஈஸ்வரதாஸ் ஜீவதிசையிலிருக்கும்போது, வாதியாகிய புத்திரர் அவருடைய பேச்சைக் கேட்கக் கடமைபட்டவராயிருந்தபோதிலும், இந்த டிரஸ்ட் சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற அனேக காரியங்கள் நடை பெருமற் போன போதிலும் டிரஸ்ட் சாசனம் செலாமணியாகக் கூடியதுதான் என்று மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் சொல்லி வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு சொன்னார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர், தீர்ப்பு.-ஈஸ்வரதாஸ் தாமுள்ளகாலத்தில் தம்மைக் கட்டுப்படுத்தும்படியான யாதொரு டிரஸ்ட் சாசனத்தையும் செய்ய உத்தேசித்ததில்லை. ஆகையால் அந்த சாசனம் அவருடைய புத்திரரையும் கட்டுப் படுத்தமாட்டாதென்று பிரதிவாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு சொன்னார்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சீனியர் ஜட்ஜியானபடியால் அவருடைய அபிப்பிராயமே. இந்த வியாஜ்ஜியத்திற்குத் தீர்மானமாய்ச் சொல்லப்பட்டது.

ஆகையால் பிரதிவாதி லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் தாக்கல் செய்தார்.

புல்பேன்ச்சுதீர்ப்பு:—இந்த டிரஸ்ட்சாசனம்பிரதிவாதியைக்கட்டுப்படுத்தாது. ஏனென்றால், பிரதிவாதி டிரஸ்ட் சாசனம் செய்யப்படும்போது தகப்பனருடைய அதிகாரத்திற்கு உட்பட்டவராயிருந்தார். மேலும் பிரதிவாதியிடமிருந்து அந்த சாசனத்தில் கையெழுத்து வாங்கும்போது அவர் காசிக்ஷேத்திரத்திற்குப் போகும்பொருட்டு சாமான் முதலியவைகள் வாங்கிக்கொண்டு பிரயாணம் தயார்செய்வதில் கவனத்தைச் செலுத்தியிருந்தார். கியூஜெனின் V. பேஸ்லி (Kughenin V. Basely) என்கிற கேசில் சொல்லப்பட்டிருப்பதுபோல தானசாசனம் எழுதி வாங்குகிறவர்கள் யாதொரு விதமான பலவந்தத்தையும் தகாத செல்வாக்கையும் பிரயோகப்படுத்தி வாங்கக்கூடாது. ஆகையால் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயரின் அபிப்பிராயத்தை அங்கீகரித்துக் கொள்ளுகிறோமென்று சொல்லி வாதிகள் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். அவரவர்கள் செலவு தொகையை அவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்டது.

N. B. இந்தக்கேஸ் அடுத்தமாத கெஜெட்டில் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்கேஸ்களில்வருமாகையால் இவ்விடத்தில் விபரமாய் எழுதவில்லை. Ed.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.
கிரிமினல் ரிவிஷன்மனு.
குற்றவாளிகள்:—(1) கோவிந்தராவ்
(2) கோவிந்தசாமி நாயுடு.

கேசின்விபரம்:—குற்றவாளிகள் நாகப்பட்டணத்தில் போலிஸ் கான்ஸ்டேபில்களாயிருந்தவர்கள். சென்ற ஆகஸ்ட்மீ 4உ இந்த இரண்டு குற்றவாளிகளும், சுப்பிரமணிய அய்யன் என்னும் ஒருவன் திருட்டுச் சொத்துக்களை வாங்கிக்கொண்டு கமலம் என்னும் ஒரு ஸ்திரி வீட்டில் மறைந்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு ஷை வீட்டிற்குப்போய் ஷையானை அரஸ்ட் செய்தார்கள். அடுத்ததினம் மாலை 4-மணிக்கு ஷை கமலம் இறந்துபோய் விட்டாள். அவளுடைய மருமகள், முந்தினதினம் பிரஸ்தாப இரண்டுகான்ஸ்டேபில்களும் அடித்த அடியாலும் அடித்தபின் கொடுத்த மருந்தாலும் கமலம் இறந்துபோய் விட்டாள் என்று கிராம முனிசிப்பினிடம் சென்று ரிப்போர்ட் செய்தனள். ஷை கமலத்தினுடைய பிரேதத்தின்பேரில் போலீஸ் விசாரணை நடந்தபோது மருமகள் தன்னுடைய மாமியார் சாதாரணமாய் இறந்துபோனாள். என்று வாக்குமூலம் எழுதிவைத்தனள். இருந்தபோதிலும் இ. பி. கோ. 323-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் (காயம்) விளைவித்த குற்றத்திற்காக ஷை இரண்டு கான்ஸ்டேபில்களும் குற்றஞ் சாட்டப்பட்டு நாகப்பட்டணம் சப் டிவிஷனல் மேஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டார்கள்.

பிரேதத்தை டாக்ட்டர் பரிசோதனைக்கு அனுப்பினதிலும், பிரேத விசாரணை நடத்தினதிலும் அதிக தாமதம் ஏற்பட்டபடியால் திருப்திகரமான டாக்ட்டர் சாக்ஷியம் இந்த கேசிற்குக் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், குற்றவாளிகள், ஷை திருடனை காண்பிக்கும்படி ஷை கமலத்தை அடித்ததும், இவர்கள் அடித்ததால் உண்டான காயத்தை ஆற்றிக்கொள்ளும்படி இவர்கள் அவளுக்கு மருந்து கொடுத்ததும் ஆகிய இந்த விஷயங்கள் ருஜுப்படுகின்றனவென்று சொல்லி காயம் விளைவித்ததாக குற்ற ஸ்தாபனை செய்து ஒவ்வொருவருக்கும் ஒரு மாத கடுங்காவல் தண்டனை விதித்தார். குற்றவாளிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்கள்.

லாயர்கள் :—பாரிஸ்டர் நன்ஜன்ட் கிரான்ட் மனுதார்களுக்காகப் பேசினார்.

உத்திரவு :—கோர்ட்டார் மனுவை ஏற்றுக்கொண்டு இவரிடமிருந்து தனித்தனியே ரூ 500-க்கு ஜாமினும் ரூ 250-க்கு வேறே இரண்டு ஜாமீன்களும் பெற்றுக்கொண்டு விடும்படியாக உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
கிரிமினல் அப்பீல்.
(18—10—6.)

கேசின் விபரம்:—திருநல்வேலி ஜில்லாவில் பலவேசத்தம்மாள் என்கிற ஒரு மரவஜாதி விதந்து தன்னுடைய ஜீவனும்சத்திற்குப் பதிலாக ஷை மைத்துனன் பெயராலிருந்த சில நிலத்தை 1903ஞும் தானசாசனம் எழுதி வாங்கிக்கொண்டார். 1905-வதுஞும் ஷை விதந்து நிலத்தை விற்றுவிட்டு தாய் வீட்டிற்குப் போக வேண்டுமென்று பிரயத்தனஞ் செய்தாள். விதந்துவின் சகோதரன் ஷை விதந்துவின் மைத்துனர் திரும்பி அந்த நிலத்தை வாங்குவதாகச் சொல்லுகிறார் என்று சொல்லி அந்நிலத்தைச்சேர்ந்த தஸ்தாவேஜிகளை எல்லாம் விதந்துவனிடமிருந்து பெற்று விதந்துவின் மைத்துனரிடம் கொண்டுபோய்க்கொடுத்தார். மைத்துனர் அந்த தஸ்தாவேஜிகளை செல்லமய்யர் என்கிற கிருஷ்ணய்யரிடம் கொடுத்து இந்த நிலத்தை மறுபடியும் கிரய சாசனம் செய்து வாங்கிக்கொள்ளலாமா என்று கேட்டார். அவர் தஸ்தாவேஜிகளைப்பார்த்துச் சொல்லவேண்டும் என்று சொல்லி அவைகளைப் பெற்றுக்கொண்டார். திரும்பிக் கொடுக்கவில்லை. பல முறை கேட்டதற்கு வக்கீலடமிருக்கென்றும் போய் வாங்கி வர சாவகாசப்படவில்லை என்றும் இப்படி பல விதமாக ஜால்ஜாப்பு சொல்லிவந்தார்.

இப்படியிருக்க 1905ஞும் ஆகஸ்ட்மீ 10உ செல்லமய்யர் தனக்கு பலவேசத்தம் மாள் ஷை நிலத்தை கிரையசாசனம்செய்ததுபோல சிருஷ்டனைப் பத்திரம்செய்து திருநல்வேலி சப் ரிஜிஸ்டிரார் ஆபீசில்ரிஜிஸ்டர் செய்யும்படியாக ஷை கிரையசாசனப் பத்திரத்தை படுத்தினார். அதே தினம் பலவேசத்தம்மாள் ஆஜர் தன்னுடைய நிலத்தை வேறொருவருக்குக் கிரய சாசனம் செய்து அக்கிரய சாசனத்தை ரிஜிஸ்டர் செய்யும்பொருட்டு அதே ரிஜிஸ்டர் ஆபீசில் ஆஜர்படுத்தி தானும் ஆஜராயிருந்தார். ஆகவே சப் ரிஜிஸ்டிரார் செல்லமய்யர் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்யமாட்டோமென்று சொல்லி போலீசாருக்கு ரிப்போர்ட் செய்தார். ஆகவே சிருஷ்டனை செய்த தஸ்தாவேஜியை சிருஷ்டனைசெய்த தஸ்தாவேஜி என்றுதெரிந்திருந்தும் உண்மையான தஸ்தாவேஜிபோல உபயோகித்த குற்றத்திற்காக செல்லமய்யரும் இன்னும் 5-பேர்களும் (பத்திரம் எழுதினவன் சாக்ஷி கையெழுத்து செய்தவர்கள்) குற்றஞ்சாட்டப்பட்டு திருநல்வேலிசெஷன்ன்ஸ்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டார்கள். கோர்ட்டார் மற்றவர்களை விடுதலைசெய்துவிட்டு செல்லமய்யருக்குமட்டிலும்ஒருவருஷ கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். குற்றவாளி ஹைகோர்ட்டில் அப்பீல்தாக்கல்செய்ய அவருடைய தரப்பிற்கு பாரிஸ்டர் ரிச்மெண்டு பேசினார்.

தீர்ப்பு :—இந்தக் கேசில் பிராசிக்கியூஷன் தரப்பில் சொல்லப்பட்ட சாக்ஷியமெல்லாம் பெரும்பாலும் பொய்சாக்ஷியம். நம்பக்கூடிய சாக்ஷியமெல்லாம் மிகுந்த சொற்பமாயிருக்கிறது. ஆதலால் இந்த சொற்ப சாக்ஷியத்தைக்கொண்டு குற்றவாளியை தண்டித்திருக்கக்கூடாது. ஆகையால் குற்றவாளியை விடுவிக்கும்படி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.
கிரிமினல் அப்பீல்,
குற்றவாளி .—ருமநாயக்.

கேசின்விபரம் :—ருமநாயக் என்பவன் பழைய குற்றவாளி. பலமுறை ஜெயிலுக்கும் போய் வந்தவன். இவன் அளகிரி நாயக்கன் என்பவனிடமிருந்த சாவிச்சங்கிலியைத் திருடினதாக பழைய குற்றவாளி திருடின குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டு திருநல்வேலி செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு 10-வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் கோர்ட்டார் 10-வருஷ தண்டனையை 7-வருஷ தண்டனையாக மாற்றியிருக்கிறார்கள்.

பிரசிடென்சி மாஜிஸ்ரேட் கோர்ட்.
(மிஸ்டர் P. ராஜரெத்தின முதலியார் அவர்கள் முன்னிலையில்).
பிரியாதி :—நா. அப்புசுந்திரம் பிள்ளை.
எதிரி :—V. முருகப்ப ஆசாரி.

பிரியாதின் சாராம்சம் :—பிரியாதி சென்னை முனிசிபல் கமிடிஷனர்களுக்குள் ஒருவர். எதிரி தம்புச்செட்டித் தெருவில் 228-நெ. வீட்டில் இருப்புப்பெட்டிகள் தயார்செய்து வியாபாரஞ் செய்து வருகிறார். இந்த இருப்புப்பெட்டிகளைத் தயாரிப்பதில் பகல் முழுதிலும், சிலசமயம் இராக்காலத்திலும் இருப்புத்தகடுகளை சம்மட்டிகொண்டு அடிப்பதிலும் இன்னும் அதைச்சேர்ந்த வேலைகளைச் செய்வதிலும் அதிர்ச்சியான பெரும் இரைச்சல் உண்டாகின்றது. இதனால் அந்த வீட்டிற்கு சமீபத்தில் வசிப்பவர்களுக்கும், தம்புச்செட்டித் தெருவில் அந்த எல்லையில் போகிறவர்களுக்கும் பெரும்மிடைஞ்சலும் அபாயமும் உண்டாக்கக்கூடியதா யிருக்கிறது: பிரியாதியும் இன்னும் அத்தெருவிலுள்ளவர்களும், இந்த இரைச்சலை நிறுத்தும்படியாக பலமுறை எதிரிக்குச் சொல்லியும் கேட்கவில்லை. ஆதலால் போலீசாருக்குரிபோர்ட் செய்தார்; போலிசார்மாஜிஸ்டிரேட்டினிடம்பிரியாது கொடுக்கச்சொன்னார்கள். கோர்டார் எதிரிக்கிசம்மன் அனுப்பும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் ரால்ப்பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
கிரிமினல் அப்பில்
குற்றவாளி:—கேய்தநாவிதன்.

கேசின் விபரம் :—கோயம்புத்தூர் ஜில்லாவில் பொன்னய்யகவுண்டருக்கும் அவருடைய சிறிய தகப்பனருக்கும் மிகுந்த விரோதம் இதனால் சிறிய தகப்பனர் ஷை பொன்னய்யக்கவுண்டரையும்அவருடைய மைத்துனரையும் வில்லங்கத்திலிழுத்துவைக்கவேண்டுமென்று கருத்துக்கொண்டு கேய்த் நாவிதனைக்கொ

ண்டு கொண்டப்பக்கவுண்டன் என்பவனைக் கொலை செய்யும்படி செய்து அந்தக்கொலைக்குற்றத்தை ஷை பொன்னய்யககவுண்டன்பேரில் சுமத்தும்படி ஏற்பாடுசெய்தான். கடந்த ரூன்மீ 30உ கொண்டப்பக்கவுண்டன் செருகளங்கி கிராமத்திலிருந்து ஆளப்பாளையம் கிராமத்திற்கு வந்துகொண்டிருக்கும் போது கேய்தநாவிதன் பின் தொடர்ந்துகொண்டப்பக்கவுண்டனை கொலை செய்துவிட்டு செருகளங்கி கிராமமுனிசிப்பினிடம் சென்று தன்னுடன் வந்து கொண்டிருந்த கொண்டப்பக்கவுண்டன் என்பவனைபொன்னையக்கவுண்டரும் அவருடைய மைத்துனராகிய முத்துசாமிக்கவுண்டரும் சேர்ந்து கொலை செய்துவிட்டுஓடிவிட்டார்களென்று ரிப்போர்ட் எழுதி வைத்தான். கிரும முனிசிப் சிலமனிதர்களை துணைகூட்டிக்கொண்டுவந்து குற்றம் நடந்தஸ்தலத்தைப்பார்வையிட்டார் பிரேதம் கிடந்தது. பிறகு விசாரிக்க தலைப்பட்டார். இந்தக்கொலையை கேய்தநாவிதனே நடத்திவிட்டு பழியை பொன்னய்யக்கவுண்டன் வகையறுபேரில் போடுவதாக தெரியவந்தது, ஆகவே கேய்தநாவிதனும் இன்னும் மூவர்களும் கொலைக்குற்றஞ்சாட்டப்பட்டு கோயம்புத்தூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டதில் கோர்ட்டார் மற்ற மூவர்களை விடுவித்து விட்டு கெய்தநாவிதனுக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டான்.

தீர்ப்பு—இந்தக்கேசில் பிராசிக்யூஷன் தரப்பில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியமெல்லாம் அனுமான சாக்ஷியம் (Cirumstantial) கைதி மற்றவர்கள் கையில் ஆயுதமாயிருந்தான் என்று சொல்லி குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்தி மரணதண்டனையை ஜென்மதீபாந்திரதண்டனையாக மாற்றினார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

சீவில் வியாஜ்ஜியம்

வாதி:—தென்கலை தர்மகர்த்தா.

பிரதி வாதிகள்.—வடகலைதர்மகர்த்தாக்கள்.

(20—10—06)

கேசின் விபரம்—வாதி பிரதிவாதிகள் காஞ்சிவரம் விஜயராகவசுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்கள். வாதி தென்கலை வகுப்பாரைச்சேர்ந்தவர்; பிரதிவாதிகள் மூன்று பேரும் வடகலை வகுப்பாரைச் சேர்ந்தவர்கள். பிரதிவாதிகள் ஷை தேவாலயத்தில் புதிதாய் வடகலை நாமம்போட்ட ஒரு செப்புவேதாந்த தேசிகர் விக்கிரமும், வடகலை நாமம் போட்ட இரண்டு கோப்பைகளும் புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள் ; இதுவழக்கத்திற்கு விரோதமென்றும், இவைகளை ஷை தேவாலயத்திலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று வாதி, பிரவாதிகள் பேரில் காஞ்சிவரம் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியங்கொண்டு வந்ததுமன்றி வியாஜ்ஜியம் தாக்கலான தேதிமுதல் ஷை வடகலை விக்கிரகத்தையும் வடகலைப்பாத்திரங்களையும ஷை தேவாலயத்தில் பிரதிவாதிகள் உபயோகப்படுத்தாமலிருக்கும்படி இன்ஜங்ஷன் (Injunction) உத்திரவு கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதிவாதிகளின் டிபன்ஸ் :—இந்த தேவஸ்தானத்தின் மூலவர் வடகலைப் பெருமாளானபடியால் உற்சாவதிகாரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளும்பொருட்டு தாவாவில் கண்ட வடகலை வேதாந்த தேசிகர் விக்கிரகம் ஏற்படுத்தப்பட்டது என்று பிரதிவாதிகள் டிபன்ஸ் கூறினார்கள்.

டி. மு. கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதிகள் செங்கற்பட்டு ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல்தாக்கல் செய்தார்கள் ஜில்லாக் கோர்ட்டாரும் அசல்கோர்ட்டு தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் .—பிரதிவாதிகளின் டிபன்சை ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரதிவாதிகள் பிரஸ்தாப தேவஸ்தானத்தில் ஷை விக்கிரகத்தையும் பாத்திரங்களையும் உபயோகித்து வருவது சிவில்கோர்ட்டார் பிரவேசித்து தீர்மானிக்கும்படியான பிரமாதமான மாறுதலல்ல. ஆகையால் இரண்டாவது அப்பீலை ஏற்றுக்கொள்ளுகிறோமென்று கோர்ட்டார் தீர்மானித்து வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தை செலவு துகையுடன் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சீவில் ரிவிஷன் மனு

கேசின் விபரம் :—வாதி திருச்சினாப்பள்ளி டி. மு. கோர்ட்டில் ஒரு பிராமிசரி நோட்டின்பேரில் வியாஜ்ஜியஞ் செய்திருந்தார். இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்யும்பொருட்டு ஒரு தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. விசாரணை தினம், வாதி தம்பேரில் டி. மு. விற்கு கெட்ட அபிப்பிராய மிருப்பவதாகவும், அவரால் இந்த வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டால் தமக்கு சரியான நியாயம் கிடைக்கமாட்டாதென்றும் ஆதலால் இந்த வியாஜ்ஜியத்தை வேறொரு டி. மு. கோர்ட்டிற்கு மாற்றும்படி மனு செய்துகொள்ளப் போவதாயும் அதற்காக இந்த வியாஜ்ஜியத்தை அன்றையத்தினம் விசாரிக்காமல் விசாரணையை ஒத்தி வைக்கவேண்டுமென்று டி. மு. வைக்கேட்டுக்கொண்டார்.

டி. மு. கோர்ட்டார் அன்றையத் தினத்தில் பிரதிவாதியினுடைய கோர்ட்டுச் செலவுகளை வாதி உடனேகட்டும் பக்ஷத்தில் வியாஜ்ஜிய ஒத்திப் போடுவதாய்ச்சொன்னார். பிறகு ஒரு மணிநேரம் சென்றபின் டி. மு. வியாஜ்ஜியத்தை விசாரணை செய்ய கக்ஷிக்காரர்களை கூப்பிட உத்திரவு செய்ய வாதி ஆஜராகவில்லை. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை உடனே தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்து அபிடவிட்டும் (பிரமாணப்பத்திரமும்) ஆஜர்படுத்தினர். வக்கீல் விஸ்வநாத சாஸ்திரியார் வாதி தரப்பிற்குப் பேசினர். பிரதிவாதிக்கு நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டு அவரும் வக்கீல் வைத்திருந்தார்.

அபிடவிட்டின் சாராம்சம் :—எதிரியின் கோர்ட்டுச் செலவுகளை கோர்ட்டில் கட்டும்பொருட்டு பணம் கொண்டுவர வீட்டிற்குச் சென்றதாகவும் திரும்பி வருவதற்குள்ளாக கோர்ட்டார் கேசைக் கூப்பிட்டுத் தள்ளிவிட்டர்கள் என்பது வாதியின் பிரமாண வாக்குமூலம்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் .—டி. மு. வியாஜ்ஜியத்தை பைசல் செய்த விதம் திருப்திகரமாயில்லை. வாதி சிலவு துகையை உடனே கோர்ட்டிலிருந்தபடி கட்ட முடியுமாவென்று டி. மு. கேட்டிருக்கவேண்டும். வாதி முடியாதென்று சொன்னால்,

வியாச்சியத்தை ஒத்திப்போட மாட்டோம் என்று சொல்லிவிடலாம். அப்படிக்கில்லாமல் வாதிகோர்ட்டைவிட்டு வெளியேபோய் பணம்கொண்டுவந்துகட்ட டி. மு. சம்மதித்தால், போதுமான சாவகாசம் கொடுக்கவேண்டும். வாதி கோர்ட்டுச் செலவுகளைக் கட்டுவதற்கு டி. மு. மிகுந்த சொற்ப சாவகாசம் தான் கொடுத்திருக்கிறதாகத் தெரிகிறது. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தை ஸ்ரீரங்கம் டி. மு. கோர்ட்டார் விசாரணை செய்யும்படி உத்திரவு செய்கிறோம் என்று தீர்மானம் சொல்லப்பட்டது.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சீவில் ரிவிஷன் மனு

(26—10—06)

கேசின் விபரம் .—பிரதி வாதிகள் 1903ஆு அக்டோபர்மீ 20உ வாதியாகிய ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து ரூ 200 கடன் வாங்கினார்கள். வாதி ரூ 30 வட்டிக்கா முன்னடி பிடித்துக் கொள்ளுகிறதென்றும், பிரதிவாதிகள் 20 மாதங்களுக்குள் மாதம் ஒன்றுக்கு ரூ 10 - மேனிக்கி கடனைச் செலுத்திருக்கிறதென்றும், பிரதிவாதிகள் ஒரு தவணை செலுத்தத் தவறுவார்களேயாகில் முழுத் துகையையும் மாதம் ஒன்றுக்கு 100-க்கு மூன்று ரூபாய் வட்டி மேனிக்கி சேர்த்து வாதி வசூலித்துக் கொள்ளலாமென்று வாதி பிரதிவாதிகள் ஏற்பாடு செய்து பத்திரம் எழுதிக் கொண்டார்கள். பிரதிவாதிகள் சில மாதங்கள்வரையில் தவணைகளை செலுத்திவந்தார்கள். பத்திரத்தின் படி தவணை செலுத்தவேவண்டிய காலம் ஒவ்வொரு மாதமும் 23உ யாயிருந்தபோதிலும், பிரதிவாதிகள் அந்தத் தேதியில் செலுத்தாமல் அதற்குப் பிந்திய தேதிகளில் செலுத்தினபோதிலும் யாதொரு வட்டியும் கேட்காமலும் ஆக்ஷேபிக்காமலும் வாதி தவணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டுவந்தார். பிரதிவாதிகள் 1904ஆு ஜனவரிமீ வரையில் தவணைகள் செலுத்தி வந்தார்கள். அதற்குப்பிறகு செலுத்தவில்லை. ஆகையால் வாதி தமக்கு தவணை தவறிய காலமுதல் நாளது வரையில் செல்லான துகைபோக பாக்கித்துகையும் அதற்கு மாதம் ஒன்றுக்கு 100-க்கு ரூ 3 வட்டி மேனிக்கு கூடின வட்டியும் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று திருச்சினாப்பள்ளி டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தார்.

டி. மு. கோர்ட்டாரின் தீர்மானம் :—வாதி 20 மாதங்களுக்கு முன்வட்டிப் பிடித்துக்கொண்டமையால், 21-வது மாதத்திலிருந்து வியாஜ்ஜியத்தியத் தேதி வரையில் மாதம ஒன்றுக்கு, செல்லான துகை போக பாக்கியுள்ள துகையின்பேரில் மூன்று வட்டி போட்டு கூடினதுகைக்கும் அசல்பாக்கித்துகைக்கும் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார். வாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யர் வாதி பக்கமும் வக்கீல் மிஸ்டர் K. S. கோபால ரெத்தினமய்யர் பிரதிவாதி பக்கமும் பேசினார்கள்.

வாதி வக்கீல் பேசினது :—தவணை தவறினால் உயர்ந்த வட்டி கேட்பது சட்ட விரோதமல்ல வென்றும், 20-மாதங்களுக்கு ஷை துகைக்கு வட்டி ரூ 30-மாத்திரமல்ல வென்றும் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் க்ஷரத்திற்கு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாமலிருக்கிறதற்கு யாதொருகாரணத்தையும் காணோமென்றும் சொன்னார்.

பிரதிவாதி வக்கீல் பேசினது :—பத்திரத்தில் குறிப்பிட்ட தவணைத் தேதிக்குப் பிந்தி பிரதிவாதிகள் பல தவணைகளில் பணம் செலுத்தியபோது வாதி யாதொரு ஆக்ஷேபனையும் செய்யாமல் பெற்றுக்கொண்டிருக்கிறபடியால் பின்னால் அதிக வட்டி கேட்கும் பாத்தியதையை இழந்து போய்விட்டார். மேலும் ஒரு இரண்டாவது அப்பீல் வியாஜ்ஜியத்தில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ் தவணை தவறிப்போனதற்காக வருஷத்திற்கு 100-க்கு 36-வட்டி கேட்பது சட்ட விரோதமான வட்டி என்று தீர்மானித்து அதற்கு பதிலாக வருஷத்திற்கு 12-வட்டி மேனிக்குப் போட்டு டிக்கிரி கொடுத்திருக்கிறார் என்று சொன்னார்.

தீர்ப்பு :—வாதி, பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் தவணைத் தேதிக்குப் பிந்தி பிரதிவாதிகளிடம் தவணைகளைப் பெற்றிருப்பதால் பின்னால் அதிக வட்டி கேட்க்கும் பாத்தியதையை இழந்து விட்டார் என்கிற விஷயம் கீழ் கோர்ட்டில் பிரதிவாதியால் பிரரேபிக்கப்படாத படியால் இந்தக் கோர்ட்டில் அந்த விஷயம் கவனிக்கப்படமாட்டாது. பாக்கித் துகையின் பேரில் 100-க்கு வருஷத்திற்கு 12-வட்டி மேனிக்கு போடுவதே கிரமமான வட்டி என்று சொல்லி அதன்பிரகாரம் கூடின துகைக்கு டிக்கிரி கொடுந்தார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

கிரிமினல் அப்பீல்.

குற்றவாளி :—கொல்ல நாகாடு.

கேசின் விபரம்:—கடப்பை ஜில்லாவில் ஒபளக்காள் என்பவளை 5,6, வருஷங்களாக ஒருவன் வைப்பாட்டியாக வைத்திருந்தான். இந்தக் காரணத்திற்காக இவனுடைய சொந்த மனைவி இவனுடன் சேர்ந்து வசிக்க சம்மதமில்லாமல் தாய் வீட்டிலிருந்து கொண்டுவந்தாள். புருஷன் வைப்பாட்டியை விட்டு விலகினாலொழிய அவனுடன் கூடி வாழமாட்டேன் என்று பெண்சாதி சொல்லிவந்தாள் ; புருஷன் வைப்பாட்டியை விட்டு விடுவதாய்க் காணோம். ஆகவே புருஷனின் தகப்பனாகிய கொல்லநாகாடு என்பவன் சென்ற ரூன்மீ 25உ இரவு ஒப்பளக்காளை அடியோதண்டமாக அடித்து உயிரைப் போக்கி பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போய் கிராமத்திற்கு வெளிப்புரத்திலுள்ள ஒரு கிணற்றில் போட்டுவிட்டான் இதற்காக இவன்பேரில் கொலைக் குற்றம் ஏற்பட்டு, கடப்பை செஷன்ஸ் கோர்ட்டார் இவனுக்கு மரண தண்டனை விதித்தீர்கள்.

கைதி அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு :—கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோமென்று அப்பீலைத் தள்ளி மரண தண்டனையை உறுதிப் படுத்தினார்கள்.

புல்பென்ச் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சீப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

(30—10—06)

கேசின் விபரம் :—பக்தவஸ்சல நாயுடும் இன்னும் ஐவர்களும் இ. பி. கோ. 147-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்தைச் செய்ததாக குற்

றஞ் சாட்டப்பட்டு தரங்கம் பாடி ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப் பட்டார்கள். 1,2, குற்றவாளிகளுக்கு ரூ 30-அபராதம், கட்டத்தவறினால் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதித்தார். 5,6,9, குற்றவாளிகளுக்கு ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தண்டனை அடைந்த குற்றவாளிகள் மாயவரம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பில்செய்து கொண்டார்கள் இந்த அப்பில் கோர்ட்டார் அப்பீலை விசாரணை செய்து இரண்டாவது குற்றவாளியை விடுவித்து மற்றக் குற்றவாளிகள் ஷவியத்தில் குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்தி முதல் குற்றவாளி பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் 20-வயதுடைய சிறுவனாகயிருந்தபடியால் ரூ 15-அபராதம், அபராதம் கட்டத்தவறினால் இரண்டு வாரக்கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். 6, 9, குற்றவாளிகளுக்கு 5-தின கடுங்காவல் தண்டனையும் ரூ 20-அபராதமும் 5-வது குற்றவாளிக்கு 5-தின கடுங்காவல் தண்டனையும் ரூ 40-அபராதமும் ஆகவே அவர்கள் ஏறகனவே அடைந்திருந்த தண்டனையை மாற்றி விதித்தார்கள். இரண்டாவது குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார்.

5, 6, 9, குற்றவாளிகளின் தண்டனையை அப்பில் கோர்ட்டார் மாற்றினதில் புதிதாய் அபராததண்டனையும் விதித்தபடியால், இப்படி புதிதாய் அபராத தண்டனைவிதித்தது ஏற்கனவே கீழ்கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட தண்டனையை உயர்த்தினதாரயிருக்கிறதென்றும் அப்பீலை விசாரணை செய்யும் மாஜிஸ்டிரேட்டிற்கு தண்டனையை உயர்த்த அதிகாரம் கிடையாதென்றும் எண்ணி 5, 6, 9, குற்றவாளிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்கள். இந்த மனுவை மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சனும் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிசும் விசாரணை செய்து அடியிற்கண்படி சொல்லி புல்பெஞ்சின் ஆலோசனைக்கு அனுப்பினார்கள்:—" அப்பில் கோர்ட்டார் ஜெயில் தண்டனையைக் குறைத்து அபராதம் விதித்திருக்கிறார்கள். அப்பில்கோர்ட்டார் இம்மாதிரியான உத்திரவுசெய்திருக்கக்கூடாதென்றும் அந்த உத்திரவு சட்டவிரோதமான உத்திரவென்றும் குற்றவாளிகளின் வக்கீல்கள் சொல்லுகிறார்கள், ஆனால் இம்மாதிரியாக உத்திரவு செய்யலாமென்பதற்கு அனேக பிரமாணங்களி (Authority) ருக்கிறதாகத் தெரிகிறது. ஒரு கிரிமினல்ரிவிஷன்கேசில், அப்பீலை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் ஜெயில்தண்டனையைக்குறைத்து அபராதம்விதித்தது தண்டனையை உயர்த்தினதாக நினைக்ககூடாது மாற்றினதாக நினைக்கவேண்டுமென்று மிஸ்டர் ஜஸ்டிஸ்கெஷபர்ட் தீர்மானித்திருக்கிறார். இ. லா. ரி 17-அலகபாத்தில்அப்பீல் கோர்ட்டார் விதித்த ஜெயில்தண்டனையும் அபராதம் கட்டத்தவறினால் அதற்காக விதிக்கப்பட்டதண்டனையும் சேர்ந்து அசல்கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு அதிகமாயிருந்தால் அது தண்டனையை உயர்த்தினதற்குச் சாமனமென்றும் அதைச் சட்டவிரோதமான உத்திரவாக நினைக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி. 23-பம். 439-ல் சொல்லப்பட்டிருக்கும்கேசில் ஷை சொல்லப்பட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் கெஷப்பர்டின் தீர்மானத்தை அனுசரித்து தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கின்றது, இ. லா. ரி. 27-கல் 175-ல் சொல்லப்பட்டிருக்கும் கேசில், அபராதம் கட்டத்தவறினால் ஏற்படும் தண்டனையை கணக்கு செய்யக்கூடாதபடியால் அப்பீல் கோர்ட்டார் ஜெயில் தண்டனையைக்குறைத்து அதற்குப்பதிலாக அபராத தண்டனை விதிப்பது தண்டனையை உயர்த்தினதா அல்லவா என்கிற விஷயம் சட்டசம்பந்தமான கேள்வியல்ல Facts (சமாசார) சம்பந்தமான கேள்வி என்று முடிவுசெய்திருக்கிறார்கள். இந்த ஹைகோர்ட்டில் 1901-ம்ஹுத்திய 50-வது ரிவிஷன் கேசில் அப்பில் கோர்ட்டார் ஜெயில் தண்டனையைக் குறைத்து அதற்குப்பதிலாக அபராத தண்டனைவிதிப்பது சட்டவிரோதமான உத்திரவு என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, அப்பீல் கோர்ட்டார் ஜெயில் தண்டனையைக்குறைத்து அபராதம் விதிப்பதைக்குறித்து சட்டம் நிச்சயமாய் ஒன்றும் கூறவில்லை. ஆனால் இந்த விஷயத்தைக்குறித்து ஏற்பட்டிருக்கும் ஜாரியான தீர்ப்புகளெல்லாம் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால், இந்தக்கேசில் அப்பீல் கோர்ட்டார் செய்த உத்திரவு சட்டசம்மதமான உத்திரவா அல்லவாஎன்கிற பிரஸ்னையைபுல்பென்ச்சார் ஆலோசனை செய்து தீர்மானிக்கும்படி இந்தக்கேசை அனுப்புகிறோம்."

லாயர்கள்:—புல் பென்ச் முன்னிலையில் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் குற்றவாளிகள் தரப்பிலும், கவர்ன்மெண்டுதரப்பில் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக வக்கீல் மிஸ்டர் J. L. ரோஜாரி யோவும் பேசினார்கள்,

புல்பென்ச் தீர்மானம்:—அப்பில் கோர்ட்டார் மாற்றின ஜெயில் தண்டனையும் அபராதம் கட்டத்தவறினால் அதற்காக ஏற்பட்ட தண்டனையும் ஆக இரண்டும் சேர்ந்து அசல் கோர்ட்டார் விதித்த தண்டனைக்கு குறைவாயிருந்தால் அது சட்டப்பிரகாரம் தண்டனையை உயர்த்தினதாக மாட்டாது. எந்தக் கேசுகளில் மாற்றப்பட்ட தண்டனை அசல் கோர்ட்டு தண்டனையை விட அதிகமாயிருக்கிறதோ அம்மாதிரியான கேசுகளில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்வதற்கு தகுந்த காரணமிருக்கிறது. பிரஸ்தாபகேசில் அப்பீல்கோர்ட்டார் விதித்த தண்டனை அசல்கோர்ட்டு தண்டனையைவிட அதிகமாயில்லைஎன்று சொல்லி ரிவிஷன் மனுவைத்தள்ளி விட்டார்கள்.

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமில் ரிவிஷன்மனு

(1—11—06)

கேசின் விபரம்:—மிஸ்டர் செல்டானு என்பவர் மங்களூரில் ஒரு வர்த்தகர் இவர் மைசூருக்குப்போயிருந்துதிரும்பிவரும் போது பிளேக்நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் பெட்டகண்டி என்னும் ஊரின் வழியாக வரும்படி நேரிட்டது; பிளேக்நோய் பறவியிருக்கு மிடததிலிருந்து வருபவர்கள் பிளேக்சட்டத்தின் 2-வது பிரிவின்படி பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வரவேண்டியதானபடியால் இவர் பாஸ் போர்ட்டுபெறும் பொருட்டு தம்முடைய வேலைக்காரனுடன் ஆஸ்ப்பிட்டல அசிஸ்சடனிடம் போனார், ஆஸ்ப்பிட்டல் அசிஸ்டன்ட் அப்போது பிளேக் ஸ்டேஷனிலில்லை, பாஸ்போர்ட்டை தம்முடைய வேலைக்காரனிடம் அனுப்புப்படி ஷை ஆஸ்பிட்டல் அசிஸ்ட்டன்டின் ரயிட்டரிடம் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு தம்முடைய வேலைக்காரனையும் அவ்விடத்தில் விட்டு விட்டு தாம் புறப்பட்டுவந்து விட்டார். ஆஸ்ப்பிட்டல் அசிஸ்டென்ட்டு பிளேக்ஸ்டேஷனுக்கு வந்தார் பேர்வழியைப்பார்த்தாலொழிய பாஸ்போர்ட் கொடுக்கமுடியாதென்று சொல்லி விட்டார், இதற்குள்ளாக மிஸ்டர் செல்டானு பிட்டகண்டியைவிட்டு 8-மயில் தூரம் நடந்து வந்து விட்டார்; இருந்தபோதிலும் வேலைக்காரன் வேகமாய் ஓடிப்போய் ஆஸ்பிட்டல் அசிஸ்டன்ட்சொன்னதைச்சொன்னான்; இவருக்குத்திரும்பிப்போக சௌகரியப்படவில்லை மங்களூருக்குவந்து சேர்ந்துவிட்டார்; வந்தவுடன் பிட்டகண்டியில் பாஸ்போர்ட் வாங்காமல் வந்ததற்குநேரி

ட்டகாரணங்களைச்சொல்லி ஒரு புதியபாஸ்போர்ட் தமக்கு கொடுக்கும் படியாக மங்களூர் கஜானு டிப்டிக்லேக்ட்டருக்கு மனு செய்து கொண்டார்; இவர் பாஸ்போர்ட் கொடுக்கும்படியாக உத்திரவு செய்யவில்லை இருந்தபோதிலும் மிஸ்டர் செல்டானு 10-தினம் வரையில் பிரதிதினமும் மங்களூர் டௌன் ஆஸ்பத்திரிக்குப் போய் ஆஸ்ப்பிட்டல் அசிஸ்டன்ட் தம்மைப் பரிசோதனைசெய்யும்படியாகச் செய்துகொண்டார். பிட்டகண்டி பிளேக்அதிகாரிகள் மங்களூர் அதிகாரிகளுக்கு அறிவிக்க, பிளேக்சட்டத்திற்கு விரோதமாய் நடந்ததாக மிஸ்டர் சல்டானு பிராசிக்யூட் செய்யப்பட்டு மங்களூர் டௌன் இரண்டாவதுகிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் ரூ 25-அபராதம் விதிக்கப்பட்டார்.

குற்றவாளி பாஸ்போர்ட் வாங்கிவரும்படிதம்முடையவேலைக்காரனை பிட்டிகண்டியில் விட்டதும், மங்களூர் கஜானு டிப்ட்டிகலெக்ட்டருக்கு மனு செய்து கொண்டதும் மங்களூர் ஆஸ்பிட்டல் அசிஸ்டென்டு தம்மை பரிசோதனை செய்யும்படியாக செய்துகொண்டதும் ஆகிய இந்தநடவடிக்கைகள் குற்றத்தின் வலுமைக்குறைக்ககூடியதாயிருந்தாலும் குற்றவாளியை குற்றத்தினின்று அடியோடு விலக்கமாட்டாதென்று மாஜிஸ்டிரேட் தீர்ப்பில் சொன்னார்,

இந்த தண்டனைக்கு விரோதமாக மிஸ்டர் செல்டானு ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்.

மனுதாருக்காக பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் மனுவைதாக்கல் செய்தார்.

மிஸ்டர் ஆடம்பேசியது:—மனுதார்ஏதேனும் குற்றஞ்செய்திருந்ததாக எண்ணப்பட்டால் அது மிகுந்த அற்பக்குற்றமும் அதுவும் பாஸ்போர்ட் வாங்கி வரவில்லை என்கிற சட்டசம்பந்தமான குற்றம் சொற்ப அபராதம் விதித்தால் போதுமானது. பிளேக்சட்ட விதிகள் கிரமமாய்பிரயோகிக்கப்படவேண்டும். பிளேக் அதிகாரிகள் தாஙகள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய முடியவில்லை என்பதை முன்னிட்டு ஜனங்களை அன்னியஊர்களில் அதிககாலம் பாஸ்போர்ட்டிற்காக தங்கும்ப செய்வது சுந்தப்பிசகான காரியம். மனுதார் பாஸ்போர்ட்டு வாங்கப்போனபோது ஆஸ்பிட்ட்ல் அசிஸ்டென்ட் படுத்துதூங்கிக்கொண்டிருந்தார். பாஸ்போர்ட்டிற்கா ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார் என்று அவரை எழுப்பியும் தம்மை ஒருவரும் துயிலினின்று எழுப்பக்கூடாதென்று ஆஸ்பிட்டல் அசிஸ்ட்டன்ட்சொல்லியிருக்கிறார். என்று மிஸ்டர் ஆடம் எடுத்துபேசினார்.

உத்திரவு,—கோர்ட்டார்மனுவை ஏற்றுக்கொண்டார்கள்; எதிரிக்கு நோட்டிஸ் அனுப்பும் படியாக உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்

கிரிமினல் அப்பீல்.

கேசின் விபரம்:—சுப்பண்ணக் கவுண்டனும் இன்னும் 6-பேர்களும் சேர்ந்து கையில் துப்பாக்கி கொம்பு முதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு கோயம்புத்தூர் ஜில்லாவில் கலகம் செய்து எதிரிகளை அடித்ததாக கோயம்புத்தூர் டிப்ட்டி மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். கோயம்புத்தூரில் ஒரு நிலத்தின் சுவாதீனம் தகராரிலிருந்தது. பொன்னயக் கவுண்டர் தன்னுடைய தென்றூர். அவருடைய எதிரி தன்னுடைய தென்றூர். அடிபட்டவர்கள் ஷை பொன்னய்யக் கவுண்டரிடமிருந்து ஷை நிலத்தைக் குத்தகை பெற்றுக்கொண்டவர்கள். அடித்தவர்கள் பொன்னையக் கவுண்டனின் எதிரிகளுக்குச் சினேகிதர்கள். இவர்கள் பொன்னயக் கவுண்டரின் குத்தகைக் காரர்களை குத்தகை நெல்லை பொன்னயக் கவுண்டரின் எதிரியினிடம் கொடுக்கும்படியாக சொல்லி வந்தார்கள். குத்தகை பெற்றுக்கொண்டவர்கள் அப்படி கொடுக்கவில்லை ஆகவே சுப்பண்ணக் கவுண்டன் வகையறா கலகம் செய்து பொன்னயக் கவுண்டரின் குத்தகைக்காரர்களை அடித்து விட்டார்கள்.

சுப்பண்ணன் கவுண்டன் வகையறா, பொன்னய்யக்கவுண்டரின் குத்தகைக் காரர்கள் தங்களுடைய நிலத்திற்கு வந்து மாகூலை அள்ளப் பிரயத்தனம் செய்ததாகவும் அதனால் அவர்களை அடித்து ஓடும்படி செய்தோமென்றும் டிபன்ஸ் சொன்னார்கள். கேசை விசாரணை செய்த டிப்ட்டி மேஜிஸ்டிரேட் சுப்பண்ணக் கவுண்டர் வகையறா பேரில் கலகம் செய்த குற்றம், கடுங்காயம்விளைவித்த குற்றம், அநியாயமாய் பயமுறுத்தின குற்றம் ஆகிய இந்த குற்ற ஸ்தாபனைகளை ஏற்படுத்தி 9-மாத முதல் ஒரு வருஷம் வரையில் பலவிதமாக எல்லோருக்கும் தண்டனை விதித்தார்.

கைதிகள் செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

செஷன்ஸ் கோர்ட்டார் பயமுறுத்தின குற்றத்தை விலக்கி மற்ற குற்றங்களையும் தண்டனைகளையும் உறுதிப் படுத்தினார்கள்.

கைதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

கேசை விசாரணை செய்த ஜட்ஜிகள் பேதப்பட்ட அபிப்பிராயம் கூறினார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன், செஷன்ஸ் கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் செஷன்ஸ் ஜட்ஜி எப்போது இ. பி. கோ. 506-வது பிரிவில் சொல்லப்படும் குற்றமாகிய அநியாயமாய் பயமுறுத்தின குற்றத்தினின்று குற்றவாளிகளை விடுவித்து விட்டாரோ அப்போது அவர்களுடைய தண்டனையிலும் அதற்குத் தகுந்தபடி குறைத்திருக்கவேண்டுமென்று சொல்லி குற்றவாளிகள் அடைந்திருந்த தண்டனையில் ஒருவாரம் குறைத்து தீர்ப்பு சொன்னார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ், கலகஞ் செய்த குற்றத்திற்காக தண்டிக்க வேண்டுமானால், கலகஞ் செய்தவர்கள் சட்ட விரோதமான கூட்டம் கூடினார்களென்றும், இ. பி. கோ. 141-வது பிரிவில் சொல்லியிருக்கும் பொதுவான கருத்தையும் (Common object) கலகக்காரர்கள் உடைத்தாயிருந்தார்களென்று ருஜுப்படவேண்டும். அந்தப் பொதுவான கருத்து இன்னதென்றும் குற்றப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கவேண்டும். பிரஸ்தாபக் கேசில் குற்றவாளிகள் எதிரிகளை வஞ்சகத்தின்பேரில் அடித்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் மாஜிஸ்டிரேட் "அடிப்பது தான்" கலகக்காரர்களின் பொதுவான கருத்து என்று அபிப்பிராயப்பட்டார். செஷன்ஸ் ஜட்ஜி ஒருதகராருக்குட்பட்டநிலத்தைபெறும்பொருட்டு சட்ட விரோதமான பலாத்காரத்தைபிரயோகித்ததுதான் பொதுக்கருத்து என்று அபிப்பிராயப்பட்டார். ஆகையால் கைதிகள் எல்லோரும் ஒரே பொதுவான கருத்தை உடைத்தாயிருந்ததாக ருஜுப்படவில்லை. ஆதால் கைதிகளை விடுதலை செய்து விடவேண்டும் என்று தீர்ப்பு சொன்னார். இந்தக்கேஸ் வேறொரு ஜட்ஜியின் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

தஞ்சை சேஷன்ஸ் கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஒல்ட்பீல்ட்

கேசின் விபரம்:—பழைய குற்றவாளியாகிய கந்தசாமி நாடான் என்பவன் கும்பகோணம் நாராயணம் பெருமாள் கோவில் மடப்பளியிலிருந்து இரண்டு பித்தளைப்பாத்திரங்களைத் திருடிவிட்டான். இவன் அந்த மடப்பளியிலிருந்த பரிசாரகனுகிய ருகவ அய்யங்காரிடம் ஒரு அணு கொடுத்து பட்டை சாதம் கேட்டான். அய்யங்கார் சாதம் கொண்டு வருவதற்கு உள்ளே நுழைந்த சமயத்தில் பித்தளைப் பாத்திரங்களை யாரோ கையாடுகிற சப்தம் கேட்டது. ஓடிவந்து பார்த்தபோது பித்தளைப் பாத்திரங்களைக் காணும். கந்தசாமி நாடானை போலிசார் அரஸ்ட் செய்தபோது இந்தப்பத்திரங்கள் அவனிடமிருந்தன. இந்தக்கேசை விசாரித்த ஜூரர்கள் கைதி குற்றவாளியல்ல வென்று அபிப்பிராயம் கூறினுர்கள். செஷன்ஸ் ஜட்ஜி குற்றவாளி என்று அபிப்பிராயப்பட்டு இந்தக்கேசை ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினுர். ஹைகோர்ட்டார் செஷன்ஸ் ஜட்ஜியின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு ஒரு வருஷ கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறுர்கள்.

புல்பென்ச்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
சீப்ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

கேசின் விபரம்:—ரெவினியூ போர்டாரின் நடவடிக்கையில் 1848-ளுத்தில் செய்யப்பட்ட ஒரு கிரயசானம் வந்தது. அந்த கிரயசாசனம் சென்னப்பட்டணத்திலுள்ள ஒரு நிலத்தை ரூபா. 105-க்கு கிரயஞ் செய்ததைப்பற்றியது. சென்னப்பட்டணம் கஸ்பாவில் செய்யப்பட்டது. ஆனுல் இந்தசாசனத்திற்கு ஸ்டாம்பு போடவில்லை. அப்போது 1816-ளுத்திய 13-வது ஸ்டாம்பு ரெகுலேஷன் அமுலிலிருந்தபடியால் அந்த சட்டத்தின்படி சென்னப்பட்டணம் கஸ்பாவில் செய்யப்படும் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு போடவேண்டியதில்லை. 1860-வது ளுத்திய 36-வது ஆகட் அதாவது ஸ்டாம்பு ஆகட் அமுலுக்கு வந்தபிறகு தான் சென்னப்பட்டணம் கஸ்பாவில் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு போடப்பட்டு வந்தன. இருந்தபோதிலும் இது விஷயத்தைக்குறித்து ரெவினியூ போர்ட்டாருக்கு சந்தேகமாயிருந்தபடியாலும் அவர்கள் இந்தக்கேசை ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினுர்கள்.

தீர்ப்பு:—இந்த கிரய சாசனம் பிறந்த காலத்தில் 1816-ளுத்திய 13-வது ஸ்டாம்பு ரெகுலேஷன் ஊர்ச்சிதத்திலிருந்தது. இந்த ரெகுலேஷன்படி சென்னபட்டணம் கஸ்பாவில் செய்யப்படும் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு போடவேண்டியதில்லை. ஆகையால் பிரஸ்தாப கிரயசாசனப்பத்திரம் ஸ்டாம்பு தீர்வைக்குக் குள்ளாகமாட்டாது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

வாதி:—குப்புசாமி.
பிரதிவாதி:—பண்டார சந்நதி.

கேசின் விபரம்:—மதுரை ஜில்லா கண்ணகுடி மடத்தின் காலஞ்சென்ற பண்டார சந்நதி வாதிக்கு 1901-ளுகுலைமீ ஒரு பிராமிசரிநோட் எழுதிக்கொடுத்து ரூ. 1500-வாங்கியிருந்தார். அவர் இறந்துபோகவே, வாதி இப்போதிருக்கும் பண்டார சந்நதியாகிய தேவசிகாமணி பண்டார சந்நதியின்பேரில் ஷை துகை கிடைக்கவேண்டுமென்று மதுரை டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தார். பண்டார சந்நதி ஷை துகையை மடத்துச்செலவுகளுக்காக கடன்வாங்கிக் கொண்டதாக வாதி கக்ஷி சொன்னுர்.

மடச்செலவுகளுக்காக வாங்கப்படவில்லை என்பது பிரதிவாதியின் டிபன்ஸ்.

டி. மு கோர்ட்டாரின் தீர்மானம்:—பிரதிவாதி இந்தக்கடனுக்குக் கட்டுப்பட்டவரல்ல. காலஞ்சென்ற பண்டார சந்நதியின் சொத்துக்கள் பிரதிவாதி வசமிருந்தால் அவைகளை இந்த கடனுக்குக் கட்டுப்படுத்தலாமென்று வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். வாதி ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அப்பீல் கோர்ட்டார் இந்தக்கடன் மடத்துச்செலவுகளுக்காக வாங்கப்பட்டிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு மடச்சொத்துகளின் பேரில் பிரவேசிக்கும்படியாக வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் P. R. சுந்திரமய்யர் பிரதிவாதி தரப்பிற்கும் K. N. அய்யா வாதி தரப்பிற்கும் பேசினுர்கள்.

தீர்ப்பு:—இந்த மடத்திற்கு வருஷமொன்றுக்கு ரூபா. 20000-வருமானம் வருகிறது. வருஷச் செலவு ரூ. 10000 ஆதலால் ரூபா. 10000-மீதப்படுகின்றது. ஆகலால் பண்டார சந்நதி இந்த கடனை வாங்கியிருந்தால் அவருடைய சொந்த டம்பச்செலவுகளுக்காக வாங்கி யிருக்கவேண்டும். என்று சொல்லி ஜில்லாக் கோர்ட்டு தீர்ப்பை ரத்துசெய்து டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிசெய்தார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சீவில் மனு.

மனுவின் விபரம்:—ரெங்கநாயகி அம்மாள் என்கிற விதந்து தம்முடைய சொத்துகளின் பெரும்பாகத்தை பச்சயப்பமுதலியார் எஸ்டேட்டின் டிரஸ்ட்டிகளிடம் ஒப்புவித்து அவைகளின் வருமானத்தை இன்ன விஷயத்தில் விநியோகப்படுத்தவேண்டுமென்பதற்கு ஒரு உயிலும் எழுதி வைத்துவிட்டு இறந்து போய்விட்டார் பிரஸ்தாப சொத்துகள் ஷை டிரஸ்ட்டிகள்வசமிருக்கும்போது ஷை விதந்து இப்படி டிரஸ்ட்டிகளிடம் சொத்துக்களை ஒப்புவிக்க பாத்திதையற்றவரென்றும் அவருடைய ஜீவதிசை முழுதிலும் அச்சொத்தை அனுபவிக்கலமே தவிர அதை பராதீனம் செய்ய சுதந்தர மற்றவரென்றும் ஷை விதந்துவிற்குப் பிறகு அச்சொத்துகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று புல்லயசெட்டியாரும் அளகிசெட்டியாரும ஒவ்வொருவரும் தனித்தனியே ஹைகோர்ட்டில் பச்சயப்பா டிரஸ்ட்டிகளின்பேரில் அசல வியாஜ்ஜியங்கள் கொண்டுவந்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் தனித்தனியே விசாரணைசெய்து வியாஜ்ஜியங்களைத்தள்ளி விட்டார்.

இருவரும் அப்பீல் செய்திருக்கிறுர்கள். டிரஸ்ட்டிகள் அசல் வியாஜ்ஜியச் செலவுகளுக்கும் அப்பீல் செலவுகளுக்குமாகச்சேர்ந்து ரூ. 1300 க்கு அளகிச்செட்டியாரிடமிருந்து ஜாமீன் வாங்கும்படியாக மனுசெய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—வக்கீல் ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அளகிச்செட்டிக்காகவும் பாரிஸ்டர் மிஸ்டர் D. சுவாமியர் மனுதார் தரப்பிற்கும் பேசினுர்கள்.

மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் பேசினது:—என்னுடைய கக்ஷிகாரன் ஏழை அவனுக்கு ஜாமீன் கொடுக்க சக்தியில்லை. இருந்தபோதிலும் இந்த அப்பீலில் சட்ட சம்பந்தமாக யோஜனை செய்யப்படவேண்டிய சில விஷயக்களிருக்கின்றன.

மிஸ்டர் D. சுவாமியர் பேசினது:—இந்த வியாஜ்ஜியத்திற்கு அளகிச் செட்டிக்கி சிலர் பொருளுதவி செய்கிறதாகத் தெரிகிறது அப்படியிருக்கும்போது ஏன் ஜாமீன் கொடுக்கக்கூடாது?

உத்திரவு:—அப்பீல்தார அளகிசெட்டி, ஜாமீன் கொடுக்க சக்தியில்லை என்று சொல்லுகிறபடியால் அவர் தாக்கல் செய்திருக்கும அப்பீலைத்தள்ளி விடுகிறோம் என்று சொன்னுர்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

கைதி:—ஆவடியாபிள்ளை.

தாயும் மகளும் கொலைசெய்யப்பட்டார்கள்.

கேசின் விபரம்:—மாயி என்னும் ஒரு மிராட்டிய ஜாதி ஸ்திரி தன்னுடைய மூன்று பெண்ணுகளுடன் மதுரையில் வசித்துக்கொண்டு வந்தனள், இரண்டு பெண்கள் புத்தி அறியாத பெண்கள். ஒரு பெண் புஷ்பவதியாகி 10-ளுங்களுக்கு முன் தாய் மாமன் ருமச்சந்திரனுக்கு விவாகம்செய்து கொடுக்கப்பட்டனள். இந்தப் பெண்ணின்பெயர் அம்மணி; அம்மணியும் ருமச்சந்திரனும் விவாகமாயி இரண்டுமூன்றுவருஷம் கூடிவாழ்ந்து வந்தார்கள். இப்படியிருக்கும்போது இந்த அம்மணிக்கும் ஆவடியாபிள்ளை என்பவனுக்கும் நேசமுண்டானது. இதை அறிந்தருமச்சந்திரன் பலமுறை தன்னுடைய மனைவிக்குப் புத்தி சொல்லியும் கேட்காமல்போக, அவன் இவளை அடியோடு விட்டுவிட, அம்மணி கடந்த 7, 8-வருஷகாலமாக ஆவடியா பிள்ளையின் வைப்பாட்டியாக யிருந்து வந்தனள். சென்ற மேமீ இருவருக்கும் மனஸ்தாபமுண்டானது, ஆதலால் இனி தன் வீட்டிற்கு வரக்கூடாதென்று கண்டிப்பாய் ஆவடியா பிள்ளைக்குச் சொல்லி விட்டாள். ஆகவே பிள்ளைக்குக் கோபம் பிறந்து தாயும் பெண்ணையும் குத்தி அவர்களுடைய உயிரை வாங்கி விடுவதாகச் சொல்லிக்கொண் டிருந்தான். கடந்த ஜூன்மீ 16உ அதிகாலையில் மாயி வகையரு வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்தபோது ஆவடியா பிள்ளை வீட்டிற்குள் நுழைந்து முதலில் அம்மணியை அரிவாளால் வெட்டி பிறகு மாயியை வெட்டிவிட்டு வெளியே வந்துவிட்டான். இவர்கள் ஆப்பம் சுட்டு விற்கிறவர்களானபடியால் புஷ்பவதியாகாத பெண்களில் ஒரு பெண் காலையில் எழுந்திருந்து ஆப்பம் சுடும் விடத்தை தயார் செய்துக்கொண்டிருந்தனள். மாயியின்கழுத்து அறுக்கப்படும்போது கூச்சல்போட்டதைக் கேட்டு மற்றொரு பெண்ணும் விழித்துக்கொண்டாள். இந்தக்கேசில் இந்த இரண்டு பெண்கள்தான் முக்கியமான சாக்ஷிகள். இந்தக்கேசை மதுரை செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்தார்கள்.

ஒரு அசசர் மட்டிலும் கைதி குற்றவாளியல்லவென்று அபிப்பிராயம் கூறினுர்கள், மற்றவர்கள் குற்றவாளி என்று அபிப்பிராயம் கூறினுர்கள்.

கோர்ட்டார் பெரும்பான்மையான ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கைதிக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு தண்டனையை உறுதிப்படுத்தி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

இன்சால்வென்ட் கோர்ட்.

கமிஷனர்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்
மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியின் இன்சால்வென்சி.

மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியில் பணம் போட்டிருந்தவர்களில் சிலர் சேர்ந்து, இப்போதிருக்கும் அபிகூஷியல் அசயினிககு உதவிசெய்யும் பொருட்டு இரண்டொரு அபிகூஷியல் அசயினிகளை நியமிக்க டிபாசிட்டர்கள் மீட்டிங் கூடி எல்கஷன் நடத்தும் படியாக கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்று இன்சால்வென்சி ஆக்ட் 17-வது பிரிவின்படி மனு செய்துகொண்டார்கள். இதனுடன் ஒரு பிரமாணப்பத்திரமும் (அபிடவிட்டும்) ஆஜர் படுத்தினுர்கள்.

லாயர்கள்:—அட்வோகேட் மிஸ்டர் A. திருநாராயுணச்சாரியார் மனுதார்கள் தரப்பிற்குப் பேசினுர். அபிகூஷியல் அசயினி தரப்பிற்கு அவரே பேசினுர்.

அபிடவீட்டின் சாராம்சம்:—மேலே சொல்லப்பட்ட இன்சால்வெண்டு கம்பெனியில் பணம் போட்டவர்களில் 20-பேர்கள் நிகழ்மீ 1உ வெள்ளிக்கிழமை சென்னை காஸ்மாபோலிட்டன் கிளப்பில் கூடினுர்கள்.

2. ஷை சொல்லப்பட்ட இன்சால்வெண்டுகள் அகண்ட வியாபாரம் செய்து வந்தபடியால் அவர்களுடைய எஸ்டேட்டையும் அது சம்பந்தமான விஷயங்களையும் ஒரு அபிகூஷியல் அசயினி திருப்திகரமாய் மானேஜ்மெண்டு செய்ய முடியாதென்று எல்லா டிபாசிட்டர்களும் அபிப்பிராயப்பட்டு, இப்போதிருக்கும் அபிகூஷியல் அசயினிக்கு உதவி செய்யும்படியாகவும் அவருடன் கூடவிருந்து மானேஜ்மெண்டு செய்யும்படியாகவும் வேறே இரண்டொருவர்களை அசயினிகளாக நியமிக்க வேண்டுமென்று ஏகோபித்து அபிப்பிராயப்படுகிறுர்கள்.

3. டிபாசிட்டர்கள் எல்லோரும் ஒரு மீட்டிங் கூடி எலக்ஷன் நடத்துவதற்கு கோர்ட்டார் அனுமதியைப் பெற மனு செய்துகொள்ளவேண்டுமென்று காஸ்மா போலிட்டன் கிளப்பில் கூடிய டிபாசிட்டர்கள் மீட்டிங்கில் ஒரு ஏகோபித்த தீர்மானம் செய்யப்பட்டது. (வெளியூரிலிருக்கும் டிபாசிட்டர்களும் இதே விதமாக அபிப்பிராயப்படுகிறுர்கள்.)

மனுதார் தரப்பு லாயர் பேசினது:—இந்த மனுவை ஆஜர் படுத்துகிறவர்கள் மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியில் பணம் போட்டிருப்பவர்கள். இன்சால்வென்சி ஆக்ட் 17-வது பிரிவின்படி இந்த மனு செய்து கொள்ளப்படுகின்றது. பணம் போட்டவர்கள் கூடி எலக்ஷன் நடத்தி இரண்டொரு அசயினிகளைத் தெரிந்தெடுத்து நியமிப்பதற்கு இது தகுந்த கேஸ். பணம் போட்டவர்களுக்கு இந்த விஷயத்திலிருக்கும் பொறுப்பையும் உள்ளூரிலும் வெளியூரிலுமிருக்கும் டிபாசிட்டர்களின் எண்ணிக்கையும் யோஜிக்கும் விஷயத்தில் இந்த மனுவை கோர்ட்டார் அங்கீகரித்துக் கொண்டு உத்திரவு கொடுப்பது விரும்பத் தகுந்த காரியமா யிருக்கிறது. எந்த டிபாசிட்டர்களுக்காக இந்த மனுவை ஆஜர் படுத்துகிறேனே அவர்கள்

தகுந்த பிரபுக்கள் அந்தஸ்துடையவர்கள் எல்லோருக்கும் தெரிந்தவர்கள்; திவான் பகதூர் R. கிருஷ்ணசாமிராவ் C. I. E. மிஸ்டர் C. R. திருவேங்கடாச்சாரியார், மைசூர் திவான் மிஸ்டர் V. P. மாதவராவ் C. I. E. வெங்கடகிரி ராஜா ஆகிய இந்த கனவான்கள் ஸ்பெஷல் அசயினிகளை நியமிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

மி-ர் போடாம், ஜ:—இந்த மனு சரியானகாலத்தில் செய்யப்பட்டிருக்கிறதென்று நான் நிச்சயமாய் நினைக்க முடியவில்லை. அர்பத்நட்டார் ஷெடியூல் தாக்கல் செய்வதற்கு முன் கடன் கொடுத்தவர்களை எப்படி நமக்குத் தெரியும். ?

அட்வோகேட்:—கடன் கொடுத்தவர்கள் தாங்கள் கடன் கொடுத்திருப்பதை அபிஷியில் அசயினிடம் அபிட விட்டதாக்கல் செய்து ருஜூப்படுத்துவார்கள்.

ஜ:—ஷெடியூல் தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தி இந்த மனுவிற்கு யாதொரு உத்திரவும் சொல்லக்கூடாது.

அ:—(இன்சால்வென்சி ஆக்ட் 17-வது பிரிவை வாசிக்கிறார்) இந்தப் பிரிவின்படி கோர்ட்டார் இன்சால்வெண்டு சொத்துக்களை அபிஷியல் அசயினியிடம் ஒப்புவிக்கும்படி உத்திரவு செய்தவுடன், கடன் கொடுத்தவர்கள் ஸ்பெஷல் அசயினிகளை எலக்ஷன் செய்து நியமிக்க சுதந்தரமுடையவர்களாயிருக்கிறார்கள். ஆதால் டிபாசிட்டர்கள் கூடி எலக்ஷன் நடத்தும்படியாக கோர்ட்டார் ஒரு தேதி குறிப்பிடவேண்டும். ஷெட்யூல் அடுத்த டிசம்பர்மீ 3உ தாக்கல் செய்யப்பட போகிறபடியால் 3உக்குப் பிந்தி ஒரு தேதி குறிப்பிடவேண்டும்.

ஜ:—டிபாசிட்டர்கள் மீட்டிங் கூடும்படியாக டிசம்பர்மீ 5உ குறிப்பிடுகிறேன் என்று நினைத்துக் கொள்ளுவோம் அதற்குள் ஷெட்யூல் தாக்கலாகாமல் போனாலோ ?

அ:—அப்போது மீட்டிங் தேதியையும் கோர்டார் தள்ளி வைத்துக்கொள்ளும்படியாக உத்திரவு செய்யலாம். அனேகமாய் ஷெட்யூல் கோர்ட்டார் கொடுத்திருக்கும் வாயுதாக்குள் தாக்கலாய் விடும் போலிருக்கிறது.

ஜ:—எல்லாம் ஒழுங்காய் நடந்தால் சரிதான், ஆனால் நான் அந்தத் தேதியில் தாக்கலாகுமென்று எதிர்பார்க்கக்கூடாது.

அ:—ஆனால் வேறே எந்தத் தேதியையயாகிலும் கோர்ட்டார் குறிப்பிடலாம். சீக்கிரம் ஷெடியூல் பயிலாகவேண்டு மென்றும் சீக்கிரம் டிபாசிட்டர்கள் மீட்டிங் கூடவேண்டுமென்றும் விரும்புகிறோம். டிபாசிட்டர்களுக்கு மீட்டிங் தேதியைக்குறித்து நோட்டீஸ் அனுப்ப அதிகநாள் பிடிக்கும் இப்போதே ஆரம்பித்தால் நலமாயிருக்கும்.

ஜ:—எந்த தினமாயிருந்தாலும் பாதகமில்லையா அல்லது சௌகரியமான தினமாய் குறிப்பிடவேண்டுமா?

அ:—சனிக்கிழமையா யிருந்தால் உத்தமமாகயிருக்கும். எல்லா டிபாசிட்டர்களும் மீட்டிங்கிற்கு வருவார்கள்.

ஜ:—எப்படியிருந்தாலும் ஷெடியூல் டிசம்பர்மீ 3உக்குள் தாக்கல் செய்யப்படமாட்டாது. மூன்றும் தேதிக்குப் பிறகு ஒருவாரம் 10உ ஆகிறது அந்த வாரத்தில் ஏதேனும் ஒரு நாளைக் குறிப்பிடுவதில் ஏதேனும் அனுகூலமிருக்கிறதா ?

அ:—ஆம். அனேகம்பேர் வருவதற்குத்தயார் செய்வார்கள் அல்லது அபிப்பிராயம் எழுதி அனுப்புவார்கள்!

ஜ:—அபிப்பிராயம் எழுதி அனுப்பக்கூடாது.

அ:—அப்படி அனுப்புவதற்கு சட்டம் விடம் கொடுக்கிறது.

ஜ:—இல்லவே இல்லை.

அ:—அது, சமபத்திற்கு தக்கபடி தீர்மானிக்கவேண்டிய விஷயம். அதை அபிஷியல் அசயினியின் இஷ்டத்திற்கு விட்டுவிடலாம்.

ஜ:—எங்கே மீட்டிங் கூடப்போகுறீர்கள் ?

அ:—மெசர்ஸ் அர்பத்நட்கம்பேனியில். அதுதான் சௌகரியமான விடமாயிருக்கும் அல்லது அபிஷியல் அசயினி ஆபிசிலும்கூடலாம். இந்த இரண்டுவிடங்களில் எதாயிருந்தாலும் எங்களுக்கு இஷ்டந்தான்.

அபிஷியல் அசயினி மிஸ்டர் ஆர்ச்சி பால்ட்ரீட் பேசினது.—இந்த மனுவைப்பற்றி ஆக்ஷேபிப்பது என்னுடைய கடமையல்ல. டிபாசிட்டர்களுக்கு இஷ்டமிருந்தால் இரண்டொருவர்களை உதவி அசயினிகளாகத் தெரிந்தெடுத்து நியமிக்கலாம், அது எனக்கு சம்மதம்தான். ஆனால் இந்த சமயம் கோர்ட்டார் இந்த மனுவின் கோரிக்கையை நிறைவேற்றிவைத்தால் அனேக கஷ்டங்களிருக்கின்றன என்பதை கோர்ட்டாருக்கு எடுத்துக்காண்பிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஏறக்குறைய 8000-டிபாசிட்டர்களிருக்கிறார்கள். இவர்களும் நோட்டீஸ் அனுப்பி அவர்களுடைய கையெழுத்தைப் பெறுவது ஒவாரம் பத்துநாளைக்குள் முடியும் காரியமல்ல, ஷெடியூல்தாக்கலான பிறகு இந்தக்கேசின் சுபாவம் தெரியும்; இப்போது எல்லோரும் இருளிலிருக்கிறோம். இவ்வளவு அவசரமாய் இந்தமனு செய்யப்படுவதற்கு யாதொருகாணத்தையும் காணோம் டிப்பாசிட்டர்கள் நிகம்பர்மீ 17உ மீட்டிங்கூடி எனக்கு உதவிபுரியும்படியாக ஒரு கமிட்டியாரை நியமிக்கும்படியாக ஏற்பாடுசெய்திருக்கிறேன்.

அ:—கோர்ட்டார் குறிப்பிடும் எலக்ஷன் தேதிக்குள் ஷேடியூல் தாக்கலாகா விட்டால்தேதியைத்தள்ளிவைத்துக்கொள்ளலாம். அப்படித் தள்ளி வைத்திருப்பதை பத்திரிகைகள் மூலமாயும் கெஜெட்டு மூலமாயும் பயிரங்கப்படுத்திவிடலாம்.

ஜ:—கூடாது. எல்லா டிபாசிட்டர்களுக்கும், நோட்டீஸ் அனுப்ப வேண்டும்.

உத்திரவு:—இந்த மனு, செய்யப்படவேண்டிய காலத்திற்கு முந்தி செய்யப்பட்டிருக்கிறது. ஷெட்யூல் தாக்கலாவதற்கு முந்தி டிபாசிட்டர்களின் மீட்டிங்கிற்குத்தேதிகுறிப்பிடப்படமாட்டாது. ஷெட்யூல் தாக்கல் செய்யப்படவேண்டிய தேதியாகிய டிசம்பர் 3உக்கு இந்த மனுவின் விசாரணையும் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

அலிப்பூர் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—குமார் கிரிந்திரோ நாராயன் கிடப்பத்தார்.

கோர்ட்டாருக்கும் வக்கீலுக்கும் கடுமையான வாக்குவாதம்.

(31—10—06)

கேசின் விவரம்:—அலிப்பூர் ஜாயின்ட்மேஜிஸ்டிரேட் கோர்ட்டார், ஒரு புருஷன் தன் மனைவிக்கு என்

ஜீவனாம்சம் கொடுத்துவரக்கூடாதென்பதற்குக் காரணம் காண்பிக்கும்படியாக அவருக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். நோட்டீஸ் விசாரணை தினம் புருஷன் தன் தரப்பிற்கு ஒரு வக்கீல் வைத்துப்பேச ஏற்பாடு செய்திருந்தார். மனைவி விபசாரம் செய்து வருகிறாள் என்று ருஜூப்படுத்தினர். சாக்ஷி விசாரணை முடிந்தவுடன் புருஷனின் வக்கீல் அட்டிரஸ் பேச ஆரம்பித்தார். அப்போது அவர் பேசிய பேச்சு மாஜிஸ்டிரேட்டிற்கு விளங்கவில்லை போலிருக்கிறது. அதன் நிமித்தம் இருவருக்கும் அடியிற்கண்டபடி பேச்சு நடந்தது.

மாஜிஸ்டிரேட்:—நீர் இங்கிலீஷ் தப்பிதமாய் பேசுகிறீர்.

வக்கீல்.—கேசின் சமாசாரங்களில் கவனம் செலுத்துவதைப்பார்க்கிலும் கோர்ட்டார் இங்கிலீஷ் பாஷையில் அதிக கவனம் செலுத்துவதாய்த்தெரிகின்றது !

மா:—உமக்கு இங்கிலீஷ் பேசத்தெரியாது பெங்காலிபாஷை பேசும்.

வ:—நான் இந்தக்கோர்ட்டு மாஜிஸ்டிரேட்டுகள், ஜட்ஜிகள் முன்னில் வெகு காலமாய்ப் பேசிவருகிறேன், அவர்கள் எந்தக்காலத்திலும் நான் பேசும் இங்கிலிஷில் தப்பிதம் கண்டுபிடித்ததில்லை.

மா:—(ஒரு வாக்கியத்தைச்சொல்லி) அது சரியான இங்கிலிஷா ?

வ:—நான் பி. யல். பரிக்ஷையில் தேறி சர்ட்டிபிக்கேட் பெற்ற பிறகு இவ்விடத்தில் வேறே இங்கிலிஷில் பரிக்ஷிக்கப்படவரவில்லை. ஆனால் ஒன்று சொல்வேன் அது என்ன வென்றால் இந்தக் கோர்ட்டில் அனேக மாஜிஸ்டிரேட்டுகள் பேசும் இங்கிலீஷைவிட நான் பேசும் இங்கிலீஷ் கெட்ட இங்கிலீஷல்ல. நான் என்னுடையகேசைப் பற்றி வாதிக்க இவ்விடம் வந்திருக்கிறேன். கேட்டவர்கள் தெரிந்துகொள்ளும்படியான அவ்வளவு சுத்தமான இங்கிலீஷ் நான் பேசுகிறேன் என்று நினைக்கிறேன்.

மா:—நீர் பெங்காலியில் பேசினாலொழிய நீர் பேசுவதை நான் கேட்கமாட்டேன்.

வ:—என்னை அவமானம் படுத்தவேண்டு மென்பதும் கேசைப்பற்றி கவனிப்பதில்லை என்பதும் கோர்ட்டாருடைய கருத்தாயிருந்தால் நான் கோர்ட்டை விட்டுப்போய் விடுவதே நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

மா:—உமக்கு இஷ்டமிருந்தால் அப்படியே செய்யும். வக்கீல் உடனே கோர்ட்டை விட்டுப்போய்விட்டார்.

அசிஸ்டண்ட் சர்ஜனாகவிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கும் டாக்ட்டர் வில்க்கின்ஸ் சென்னை வேப்பரி நாவல் ஹாஸ்பிட்டல் ரோட்டில் வசிக்கிறார். இவர் அர்பத்நட் பாங்கியில் போடவேண்டுமென்று ரூபா. 4,0000 கையில் வைத்திருந்தார். அந்த பாங்கி மூழுகிப்போகவே அதற்கு கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் வாங்கி அவைகளையும் ஒரு ஆயிர ரூபாய்க்கு சவரன்களும் வாங்கி பொட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு நிகம்பர்மீ 6உ செவ்வாய்க்கிழமைதினம் மாலையில் தம்முடையசிநேகிதர்களைப்போய்ப்பார்த்து விட்டு இரவு 11-மணிக்கு திரும்பிவந்து பொட்டியைப்பார்க்கையில் நோட்டுகளையும் காணோம் சவரன்களையும் காணோம். போலிசாருக்கு அறிவிக்க போலிஸ் சூப்பிரண்டு ஈட்டனும் இன்ஸ்பக்டர் மேசனும் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1906-வதுஷுத்திய 370, 375 நே. கிரிமினல் ரிவிஷன் கேசுகள்.

கேசின் விபரம்:—நெல்லூர் ஜில்லா ஆத்மக்கூரில் ஒரு ஸ்திரி ஒரு பள்ளிக்கூடத்துப்பையன் கையிலிருந்த பொன்காப்பை எடுத்து தன்னுடைய புத்திரனுக்குப்போட்டுப்பார்த்து விட்டு மறுபடியும் அதைச்சொந்தக்காரர்களிடம் கொண்டுபோய்கொடுத்து விட்டாள். இந்த சமாசாரத்தை அந்த ஊரில் கிணற்றில் ஜலம் எடுத்துக்கொண்டிருந்த பெண்டுகள் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை அந்த ஊர் எட்கான்ஸ்டேபில் V. T. சாம்பசிவ முதலியார் கேள்விப்பட்டு அந்தஸ்திரியை 30—10—05ல் அரஸ்ட்செய்து ஸ்டேஷன் அவுஸ் ஆபீசராகிய T. ரெங்கசாமி நாயுடு வின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார், இருவர்களும் சேர்ந்து அந்த ஸ்திரியை அக்கிரமமாய் ஜெயிலில் அடைத்துவைத்து இம்சித்து ரூ 40 வாங்கிச்கொண்டு விட்டு விட்டார்கள் இதன் மேல் அந்த ஸ்திரி 11—12—05ல் ஆத்மக்கூர் டிப்ட்டி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஷை எட்கான்ஸ்டேபிலையும் ஸ்டேஷன் அவுஸ் ஆபிசரையும் குற்றஞ்சாட்ட, மாஜிஸ்டிரேட் விசாரணை செய்து இ. பி. கோ 342, 384-வது பிரிவுகளின் படி குற்றஸ்தாபனசெய்து தலைக்கு ரூ 100 அபராதம் விதித்தார்.

இரு குற்றவாளிகளும் நெல்லூர் செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட்டு தீர்மானத்தை உறுதி செய்தார்கள். குற்றவாளிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்கள்.

டிபன்ஸ்:—ஆத்மாத் கூரிலிருக்கும் கோமுட்டிகளை அடிக்கடி எட் கான்ஸ்டேபில் நியூசன்ஸ் கேசில் சார்ஜ் செய்துவந்தபடியால் கோமுட்டிகளெல்லோரும் சேர்ந்து வேணுமென்று இந்தக் கேசை சிருஷ்டனை செய்துகொண்டு வந்திருப்பதாக குற்றவாளிகள் டிபன்ஸ் சொன்னார்கள்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் P. R. சுந்திர அய்யரும், வக்கீல் மிஸ்டர் K. S. ராமசாமி சாஸ்திரியாரும் எட் கான்ஸ்டேபில் பக்கத்தில் பேசினார்கள்; வக்கீல் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர் ஸ்டேஷன் அவுஸ் ஆபிசருக்காகப் பேசினர்.

கோர்ட்டார் கேள்வி:—ஸ்திரியை 1905ஹு அக்டோபர்மீ 30உ அரஸ்ட் செய்திருக்க குற்றவாளிகள் பேரில் அந்த ஸ்திரி வெகு நாட்கள் சென்று 1905ஹு டிசம்பர்மீ 11உ ஏன் குற்றஞ் சாட்டவேண்டும் ?

ஜவாப்பு:—லோக்கல் சப் மாஜிஸ்டிரேட், குற்றவாளி ஸ்டேஷன் அவுஸ் ஆபிசருக்கு நெருங்கினபந்து, அவரிடம் பிரியாது கொடுத்தால் சரியான நியாயம் கிடைக்கமாட்டாதென்று சர்க்கியூட் போன டிப்ட்டி மேஜிஸ்டிரேட் வரும் பரியந்தம் காத்திருந்து இவரிடம் பிரியாது செய்து கொள்ளப்பட்டதென்று பப்ளிக் பிராசிக்கியூட்டர் பதில் சொன்னர்.

தீர்ப்பு:—அசல் கோர்ட்டு தீர்மானத்தில் பிரவேசிக்க யாதொரு காரணத்தையும் காணோமென்று சொல்லி அப்பீல்களைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

வாதி:—மிஸ்டர் P. R. வெங்கடேசலுநாயுடு.

பிரதிவாதிகள் :—(1) இந்தியா காரியதரிசி.

(2) மி-ர் கருப்பண்ண பிள்ளை.

கேசின் விபரம் :—மதுரையில் 1901ஆ மேமீ 20உ நடந்த ஒரு முனிசிபல் எலக்ஷனில் வாதியும் இரண்டாவது பிரதிவாதியும் போட்டி போட்டுக்கொண்டு காண்டிடேட்டுகளாய் நின்றார்கள். வாதிக்கு அதிக வோட்டுகள்கிடைத்தன. ஆகவேசேர்மன்வாதி முனிசிபல் கவுன்சிலராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கூறிவிட்டார். இப்படியிருக்க இரண்டாவது பிரதிவாதி எலக்ஷனை ஆக்ஷேபித்து ஜில்லா கலெக்டருக்கு மனு செய்து கொண்டார். அந்த மனுவில் தாம் ஆக்ஷேபித்ததற்கு மூன்று காரணங்கள் சொன்னார். அவையாவன :—(1) வாதி முனிசிபல் ஸ்தானத்தை வகிக்க யோக்கிதையற்றவர் (2) வோட்டர் ஜாப்தா ஒழுங்கீனமாய்த் தயாரிக்கப்பட்டது (3) வாதியை கவுன்சிலராக நியமிப்பது முனிசிபல் பரிபாலனத்திற்கே பெருத்த அகௌரவத்தை விளைவிக்கும்.

இந்த மனுவை கலெக்டர் சப் டிவிஷனல் ஆபிசருக்கு அனுப்பி விசாரிக்கும்படி சொன்னார். இவர் ஷை சொல்லப்பட்ட இரண்டாவது அயிட்டத்தில் கண்ட காரணத்தைப்பற்றி மட்டிலும் விசாரணை செய்து கலெக்டருக்கு ரிப்போர்ட் செய்தார். கலெக்டர் கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட் செய்தார். வாதி ஆக்டிங் சேர்மேனாக யிருந்த காலத்தில் ஒரு எலக்ஷன் சமயத்தில் ஒரு காண்டிடேட்டை தூஷித்து அடித்ததற்காக இ. பி. கோ. 504, 352-வது பிரிவுகளின்படி குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை அடைந்திருக்கிறபடியால் அவர் கவுன்சிலராய் நியமிக்கப்படுவதற்கு அருகரல்ல வென்று கவர்ன்மெண்டார் அவருடைய நியமனத்தை ரத்து செய்து புதிய எலக்ஷன் நடத்தும்படி உத்திரவு செய்தார்கள்.

இதற்குள்ளாக வாதி அப்பீல் செய்ததில் அவர் இ. பி. கோ. 352-வது பிரிவின் குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டார். கவர்ன்மெண்டாரும் அறிவிக்கப்பட்டார்கள். இருந்தபோதிலும் கவர்ன்மெண்டார் முன் கொடுத்த உத்திரவையே மறுபடியும் பிறப்பித்தார்கள். ஆனால் அதில் 504, 352-பிரிவுகளுக்கு பதிலாக பிரிவு 504-மட்டிலும் காட்டியிருந்தார்கள். ஆகவே இப்போது வாதி மதுரை டி. மு. கோர்ட்டில் கவர்ன்மெண்டு உத்திரவை ரத்து செய்து தம்முடைய நியமனத்தை ஊர்ச்சிதப்படுத்தும்படி இந்தியா காரியதரிசியையும் கருப்பணப்பிள்ளை பேரிலும் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். டி. மு. கோர்ட்டார் கேசைத் தள்ளிவிட்டார்கள். வாதி ஜில்லா ஜட்ஜியிடம் அப்பீல் செய்து கொண்டார். ஜில்லாக்கோர்ட்டார் வாதி எலக்ஷனில் வெற்றி அடைந்தவுடன் கவுன்சிலராக நியமிக்கப்பட்டார். என்றும் அவரை அந்த நியமனத்திலிருந்து நீக்கவேண்டுமானால் பயிரங்கமான விளம்பரம் போட்டு நீக்கி யிருக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் சட்டத்தை அநுசரித்து உத்திரவைப் பிறப்பிக்கவில்லைஎன்றும் ஆகையால் எலக்ஷனில் வெற்றி அடைந்த வாதியின் நியமனமே சரியான நியமனம் என்றும், இரண்டாவது பிரதிவாதியை கவுன்சிலராக நியமித்தது சரியல்லவென்றும் சொல்லி கீழ்க்கோர்ட்டு தீர்மானத்தை ரத்து செய்துவிட்டார்.

கவர்ன்மெண்ட் ஹைகோர்ட்டில் மனு செய்து கொண்டார்கள்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் L. ரெங்காச் சாரியார் வாதிக்கும், பாரிஸ்டர் C. F. நேப்பியரும் கவர்ன்மெண்டு பிளீடரும் கவர்ன்மெண்டு தரப்பிற்கும் பேசினார்கள்.

தீர்ப்பு :—(இன்னும் சொல்லவில்லை)

ஜட்ஜிகள்:—ஜெஸ்டிஸ் சர் ஆர்னல்வொயிட்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

மனுதார் :—மனு வைத்தண்டர் ரெங்கப்பா.

(2—16—06.)

கேசின் விபரம் :—மனுதார் ஒரு கிரிமினல் கேசில் போய் சாக்ஷி சொன்னதாக அவரை பிராசிக்கியூட் செய்யும் படி பெல்லாரி ஜில்லா அதோனி டிவிஷன் டிப்டிமாஜிஸ்டிரேட் உத்திரவு செய்தார். இந்த உத்திரவிற்கு விரோதமாக மனுதார் பல்லாரி செஷன்ஸ்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

செஷன்ஸ்கோர்ட்டார் இந்த மனுவை விசாரிக்கும் போது 1905-ம்ஆ த்தில் மனுதார் ஒரு கிரிமினல் கேசில் செஷன்ஸ்கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்ட விஷயங்களை எடுத்துச்சொல்லியும், மனுதாருக்கு, இந்த பொய்சாக்ஷி சொன்ன கேசில் அனுகூலமாகச்சொல்லக்கூடிய ஒரு சாக்ஷியைப்பற்றி கேட்ட அபிப்பிராயம் சொல்லியும் ஊரில் ஏற்பட்டிருக்கும் இருகக்ஷிகளில் ஒரு கக்ஷிக்கு மனுதாரன் தலைவன் என்று கேட்ட அபிப்பிராயங்கூறியும் மனுவைத் தள்ளிவிட்டார்.

ஆகவே மனுதார் பொய் சாக்ஷியம் சொன்ன குற்றத்திற்காக பிராசிக்கியூட் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டான். இந்த தண்டனைக்கு விரோதமாக மனுதார் பெல்லாரி செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்திருக்கிறான்.

பெல்லாரி செஷன்ஸ் ஜட்ஜி ஏற்கனவே மனுதார் பேரில் கெட்ட அபிப்பிராயம் கூறியிருப்பதால் இந்த அப்பில்கேசை அந்தசெஷன்ஸ் ஜட்ஜியே விசாரணைசெய்தால் சரியான நியாயம் கிடைக்கமாட்டாதென்று இத்தக்கேசை வேறெந்த செஷன்ஸ் கோர்ட்டிற்காயினும் மாற்றிவிட வேண்டுமென்று மனுதார் ஹைகோர்ட்டாருக்கு மனுசெய்து கொண்டான்.

லாயர்கள்:—மனுதார் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஆடமும், கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும் பேசினார்கள்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு:—இந்தக் கேசை கடப்பை செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்யும்படி. உத்திரவு செய்திருக்கிறார்கள்.

தீ விபத்து.

சென்னையில் சென்ற அக்டோபர்மீ 22உ அங்கம்மாள் என்கிற 9-வயதுடைய ஒரு பெண் அடுப்பருகில் உட்கார்ந்திருக்கும்போது தீ அப்பெண்ணின் பாவாடையில் தாவி வலதுகால் முழுதிலும் வெந்துபோய்விட்டது. தாயார் ஓடிவந்து உடனே தீயை அவித்து மருந்துகள் போட்டு சிகிச்சை செய்தும் சௌக்கியப்படாமல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயினள். அவ்விடத்தில் சௌக்கியப்படாமல் அப்பெண்ணை தாயார் வீட்டிற்குக் கொண்டுவந்தனள். இரண்டுதினம் சென்று அக்டோபர்மீ 30உ வீட்டில் இறந்துபோயினள். நகர் போலீஸ் படையைச்சேர்ந்த போலீஸ் சூப்பிரண்டு மிஸ்டர். ஈட்டன் பிரேத விசாரணை நடத்தி பிரேதத்தைச் சட்டப்படி பைசல் செய்தார்.

Bill to be introduced into the Council of the Governor of Fort St. George for making Laws and Regulations.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னப்பட்டணம் கவர்னரவர்களுக்கு ஆலோசனை சபையின் கூட்டங்களில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச்சேர்ந்த 33-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதனுடன் சேர்ந்திருக்கிற அதன் ஹேதுக்களும் நோக்கங்களுமடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன :—

No. 2 of 1906.

1906-ம்ஆ த்து 2 - நம்பர்.

A BILL TO PROVIDE FOR THE LEVY OF ENHANCED TAXATION IN HILL MUNICIPALITIES AND FOR THE BETTER CONTROL OF BUILDINGS THEREIN AND FOR CERTAIN OTHER PURPOSES.

மலைப்பிரதேசங்களிலிருக்கும் மியுனிஸிபாலிடிகளின் விதிக்கப்பட்டுள்ள வரியை அதிகப்படுத்துவதற்காகவும் அங்கேயிருக்கும் கட்டிடங்களைப்பற்றி இன்னும் நன்றாய் விசாரணை ஏற்படுத்துவதற்காகவும் வேறே சில காரியங்களுக்காகவும் நிபந்தனை யேற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட்.

பீடிகை. மலைப்பிரதேசங்களிலிருக்கும் மியுனிஸிபாலிடிகளில் விதிக்கப்பட்டுள்ள வரியை அதிகப்படுத்துவதற்காகவும் அங்கேயிருக்கும் கட்டிடங்களைப்பற்றி இன்னும் நன்றாய் விசாரணை ஏற்படுத்துவதற்காகவும் வேறே சில காரியங்களுக்காகவும் நிபந்தனை யேற்படுத்துவது அவசியமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

பெயர். 1. இந்த ஆக்டை, மலைப்பிரதேச மியுனிஸிபாலிடிகளைப்பற்றிய சென்னப்பட்டணம் 1906-ம்ஆ த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம். 2. இது - உதகமண்டலம், கூனூர், கொடைக்கானல் ஆகிய இந்த மியுனிஸிபாலிடிகளுக்கும், இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கிய பிறகு வேறே யாதொரு "மலைப்பிரதேச" மியுனிஸிபாலிடி ஏற்படுத்தப்பட்டு அதற்குப் பிரதேச கவர்ன்மெண்டார் இந்த ஆக்டை வியாபிக்கச்செய்கிற பட்சத்திலே அப்படிப்பட்ட யாதொரு மலைப்பிரதேச மியுனிஸிபாலிடிக்கும் வியாபிக்கிறது.

அர்த்தம். 3. (1) "புதுப்பித்தல்" என்னும் வார்த்தையை ஒரு கட்டிடத்தின் சம்பந்தமாக உபயோகிக்கும்போது, அதிலே—

(a) ஒரு கட்டிடத்தின் கன அடி விஸ்தீர்ணத்திலே அரைப்பங்குக்கதிகமாக அழித்துவிடப்பட்டபிறகாவது கொளுத்திவிடப்பட்டப்பிறகாவது விழுந்துவிட்டபிறகாவது அதைப் புதுப்பிப்பதும்,

(b) ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட குடிசைகளையாகிலும் சிறிதுகாலத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் கட்டுக்கோப்புகளையாகிலும் கல் கட்டிடமாக மாத்துவதும்,

(c) மனிதர்கள் வாசஞ்செய்வதற்காக முன்னமே கட்டியிராத யாதொரு கட்டிடத்தை மனிதர்கள் வாசஞ்செய்வதற்கேற்ற இடமாக மாற்றுவதும், அடங்கும்.

விவரணம்.—ஏககாலத்தில் முழுவதுமாவது பற்பலகாலங்களில் சிறிது சிறிதாகவாவது புதிப்பிக்கப்பட்டாலும், ஏககாலத்திலாகிலும், பற்பலகாலங்களிலாகிலும் கன அடி விஸ்தீர்ணத்தில் அரைப்பங்குக்கதிகமாக அழித்து விடப்பட்டாலும், கொளுத்திவிடப்பட்டாலும் விழுந்துவிட்டாலும் (a) குறிப்பிட்ட பகுதியானது பிரயோகப்படுகிறது.

(2) இந்த ஆக்டில் உபயோகிக்கப்படும் இதர சொற்களும் சொற்றொடர்களும் - இதில் பின்னால் பிரதான ஆக்ட் என்று சொல்லப்படும் 1884-ம்ஆ த்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டிலே அவைகளுக்கு என்ன அர்த்தம் கூறியிருக்கிறதோ அதே அர்த்தம் உடையவைகளாகும்.

1884-ம்ஆ த்து 4-வது ஆக்ட் 9-வது பிரிவின் திருத்தம். 4. பிரதான ஆக்ட் 9-வது பிரிவுடன் அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவையாவன :—

"அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் இராதபட்சத்திலே, அந்த டிஸ்ட்ரிக்டின் கலெக்டராவது அவரால் இதுவிஷயத்தில் நியமிக்கப்படும் அஸிஸ்டன்ட் கலெக்டராவது டெப்புடி கலெக்டராவது ஷை டிவிஷனைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற ரெவினியு உத்தியோகஸ்தராக எண்ணப்படுவார்."

1884-ம்ஆ த்து 4-வது ஆக்ட் 47-வது பிரிவின் திருத்தம். 5. பிரதான ஆக்ட் 47 - வது பிரிவிலே,—

(1) இங்க்லிஷ் பிரதியில் செய்துள்ள திருத்தத்துக்குத் தமிழ் மொழிபெயர்ப்பில் இடமில்லை ;

(2) (vii) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடுத்தாற்போல் அடியிற்கண்ட நூதன பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது :—

"மேலும், (viii) கட்டிடங்களுக்காவது நிலங்களுக்காவது இவ்விரண்டுக்குமாவது இதில்பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி கணக்கிடப்பட்ட வருஷாந்தர விளக்குவரி."

(3) ஷை பிரிவின் கடைசியில் அடியிற்கண்ட மூன்றாவது விலக்கான நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது :—

"மேலும், காஸ் அல்லது மின்சாரத்தைக்கொண்டு மியுனிஸிபாலிடிக்கு விளக்கு போடுவது சம்பந்தமாய்ப் பிடிக்கும் செலவுகளுக்காக மியுனிஸிபால் சங்கத்தார் ஏற்பாடுசெய்யக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டு மாத்திரம் விளக்குவரி விதிக்கவேண்டும்; அன்றியும், மேற்படி வரியினால் வசூலாகும் பணத்தை மேற்படி செலவைச்செய்யும்பொருட்டே உபயோகிக்கவேண்டும்."

1884-ம்ஆுத்து 4-வது ஆக்ட் 63-வது பிரிவின் திருத்தம்.

6. பிரதான ஆக்ட் 63-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலே, "நூற்றுக்கு எட்டரைக்கு" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "நூற்றுக்குப் பத்துக்கு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1884-ம்ஆுத்து 4-வது ஆக்ட் 75-வது பிரிவின் திருத்தம்.

7. பிரதான ஆக்ட் 75-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே, "நூற்றுக்கு எட்டுக்கு" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "நூற்றுக்குப் பத்துக்கு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

96-A, 96-D பிரிவுகளின் திருத்தம்.

8. (1) பிரதான ஆக்ட் 96-A பிரிவிலே, "அப்போது நடந்துகொண்டிருக்கிற" என்பதுமுதல் "செலுத்துவதற்குள்ளாகாதவர்களுமான" என்பது வரையிலுள்ள வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "அப்போது நடந்துகொண்டிருக்கிற ஸர்க்கார் கணக்கு வருஷத்தில் 47-வது பிரிவைச்சேர்ந்த (i) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியைச் செலுத்துவதற்குள்ளாகாதவர்களான அல்லது சொந்தக்காரர்களாயிருப்பதனால் ஷை பிரிவைச்சேர்ந்த (ii), (iii) குறிப்பிட்ட பகுதிகளிற் கண்ட வரிகளில் எதையாவது செலுத்துவதற்குள்ளாகாதவர்களான" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

2. பிரதான ஆக்ட் 96-D பிரிவிலே, "47-வது பிரிவு (i), (ii), (iii) குறிப்பிட்ட பகுதிகளிற்கண்ட வரிகளிலெதையாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, "47-வது பிரிவைச்சேர்ந்த (i) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியையாவது, ஷை பிரிவைச்சேர்ந்த (ii), (iii) குறிப்பிட்ட பகுதிகளிற் கண்டபடி சொந்தக்காரராயிருப்பதனால் தாம் செலுத்துவதற்குள்ளாயிருக்கிற வரிகளிலெதையாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

விளக்குவரி விதிக்க அதிகாரம் கொடுப்பது.

9. பிரதான ஆக்ட் 96-E பிரிவுக்குப் பிறகு அடுத்தாற்போல் அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது:—

"96-F. (1) கட்டிடங்களின் மேலாவது நிலங்களின் மேலாவது இவ்விரண்டின் மேலுமாவது அவைகளின் வருஷாந்தர மதிப்பிலே நூற்றுக்கு இவ்வளவு விளக்குவரி விதிக்கப்படுமென்று 50-வது பிரிவின்படி மியுனிஸிபல் சங்கத்தார் விளம்பரம் பிரசித்தஞ் செய்தால், அந்த வரியானது-அந்தப்பிரகாரம் விளம்பரம் பிரசுரஞ்செய்யப்பட்ட வீதம் அல்லது வீதங்களின்படி விதிக்கப்படுமேயல்லாமல், எவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக்கட்டிடங்கள் அல்லது நிலங்கள் அல்லது அவ்விரண்டின் வருஷாந்தர மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்றுக்கு மேற்பட்டு எந்த விஷயத்திலும் விதிக்கப்படுவது கூடாது. 63, 63-A, 64, 65, 66, 68, 69-A, 69-B, 69-C, 69-D, 72, 73-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளெல்லாம் விளக்குவரிக்கு அவசியமான மாறுதலுடன் பிரயோகப்படும்; ஆனால், விவசாயக் காரியங்களுக்காக மாத்திரம் உபயோகிக்கப்படும் எந்த நிலத்துக்காகிலும் அப்படிப்பட்ட யாதொரு வரியையும் விதிக்கக்கூடாது.

(2) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யாதொரு மியுனிஸிபாலிடியின் எந்த பாகத்தையாவது விளக்கு வரி செலுத்தவேண்டியதில்லையென்று விளம்பரமூலமாய் நிவாரணை செய்யலாம்."

1884-ம்ஆுத்து 4-வது ஆக்ட் 178-வது பிரிவின் திருத்தம்.

10. பிரதான ஆக்ட் 178-வது பிரிவிலே, "டெலிபோன் கம்பிகளையாகிலும்" விளக்குகளையாகிலும் என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "டெலிபோன் கம்பிகளையாகிலும் மின்சாரத்தைக்கொண்டுபோவதற்கான கம்பிகளையாகிலும் விளக்குகளையாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1884-ம்ஆுத்து 4-வது ஆக்ட் 180-முதல 181-B-வரையிலுள்ள பிரிவுகளை ரத்துசெய்வது.

11. பிரதான ஆக்ட் 180, 181, 181-A, 181-B பிரிவுகள் இதனால் ரத்துசெய்யப்படுகின்றன.

கட்டிட நிவேசனங்களும், கட்டிடங்களைக் கட்டுவதும் புதுப்பிப்பதும்.

12. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கியபிறகு, இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படிக்கும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி 1-வது அல்லது 2-வது ஷெட்யூலிற்கண்ட நிபந்தனைகளின்படிக்கும், கட்டிட நிவேசனங்களை உபயோகிப்பதைக்குறித்தாவது கட்டிடங்கள் கட்டுவதைக்குறித்தாவது புதுப்பிப்பதைக்குறித்தாவது இந்த ஆக்டின்படியாகிலும் பிரதான ஆக்டின்படியாகிலும் செய்யப்படும் எவ்வித விதிகள் அல்லது சகாயச்சட்டங்களிற்கண்ட நிபந்தனைகளின்படிக்குமன்றி மற்றப்படி, எந்தத்துண்டு நிலத்தையும் கட்டிடம் கட்டுவதற்காக வேண்டிய நிவேசனமாய் உபயோகிக்கவுங்கூடாது, யாதொரு கட்டிடத்தைக் கட்டவுங்கூடாது, புதுப்பிக்கவுங்கூடாது.

இன்னவையென்று குறிக்கப்படும் தெருக்களிலாவது இடங்களிலாவது சில வகையானகட்டிடங்களை இனிமேல் கட்டுவதைக்குறித்து ஒழுங்கேற்படுத்த மியுனிஸிபல் சங்கத்தாருக்குள்ள அதிகாரம்.

13 (1) மியுனிஸிபல் சங்கத்தார் பகிரங்கமாய் நோடிஸ் பிறப்பித்து:—

(a) அந்த நோடிஸிற்கண்ட எந்த தெருக்களிலாவது அவைகளைச்சேர்ந்த பாகங்களிலாவது,—

(i) தொடர்ச்சியாகக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படுமென்றாகிலும்,

(ii) அதன்பிறகு கட்டப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் சகல கல்கட்டிடங்களின் மட்டமும் முற்பிறத்து அமைப்பும்-கட்டுவேலையின் இலட்சணங்களைக்குறித்து அவ்வவ்விடத்திற்கேற்றபடி இருப்பதாக மியுனிஸிபல் சங்கத்தாருக்குத் தோற்றுகிறமாதிரியாயிருக்கவேண்டுமென்றாகிலும்,

(b) நோடிஸில்கண்ட எந்த இடங்களிலாவது, (தொடர்ச்சியாகவல்லாமல்) பிரத்தியேகமான கட்டிடங்களை மட்டும் கட்டுவதற்கு அனுமதிகொடுக்கப்படுமென்றாகிலும்,

(c) நோடிஸில்கண்ட எந்தத்தெருக்களிலாவது அவைகளைச் சேர்ந்த பாகங்களிலாவது இடங்களிலாவது, மியுனிஸிபல் சங்கத்தாருடைய பிரத்தியேகமான உத்தரவில்லாமல் கடைகளோ சாமான்கிடங்குகளோ குடிசைகளோ கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்றாகிலும்,

பிரசித்தப்படுத்தத் தாங்கள் விருப்பங்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கலாம்.

(2) அந்தப்படி பிரசித்தஞ்செய்த யாதொரு விஷயத்தைப்பற்றி எவ்வித ஆட்சேபனைகளையும் மேற்படி நோடிஸ் பிரசுரித்ததுமுதல் மூன்றுமாதமானபிறகு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(3) ஷை காலத்துக்குள் பெற்றுக்கொள்ளப்படும் சகல ஆட்சேபனைகளையும் மியுனிஸிபல் சங்கத்தார் ஆலோசிக்கவேண்டும்; பிறகு அவர்கள் நோடிஸில்கண்ட தெருக்களைப்பற்றியாவது இடங்களைப்பற்றியாவது ஒரு பிரசித்தப்பத்திரிகை தயார்செய்து, அதையும் ஷை ஆட்சேபனைகள் எவையேனும் இருந்தால் அவைகளையும் அவைகளைப்பற்றித் தங்களுடைய ரிபோர்ட்டையும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பலாம்.

(4) ஷை ஆட்சேபனைகள் எவையேனுமிருந்தால் அவைகளைப்பற்றி யோசித்தபிறகு பிரதேச கவர்ன்மெண்டார் அந்தப் பிரசித்தப்பத்திரிகையை ஊர்ஜிதஞ்செய்வதற்குமுன்னே, அந்தப் பிரசித்தப்பத்திரிகையின் அம்சங்களை அபிவிருத்திசெய்யாதபடி அதை மாற்றலாம்.

(5) அப்படிப்பட்ட யாதொரு பிரசித்தப்பத்திரிகை மேலேகண்டபடி ஊர்ஜிதஞ் செய்யப்படுமாகில் அதைப் பிரசுரிக்கவேண்டும்; அப்படி பிரசுரித்த தேதிமுதல் அது செலாமணியாகும்.

(6) அப்படிப்பட்ட யாதொரு பிரசித்தப்பத்திரிகைக்கு விரோதமாக யாதொரு கட்டிடத்தை எவரும் கட்டவுங்கூடாது, புதுப்பிக்கவுங் கூடாது.

கல்கட்டிடம் கட்டவோ அல்லது புதுப்பிக்கவோ விண்ணப்பம்.

14. (1) யாதொரு நபர் ஒரு கல்கட்டிடத்தைக் கட்டவாவது புதுப்பிக்கவாவது உத்தேசித்தால், அவர்—

(a) நிவேசனத்தை அங்கீகரிப்பதற்காக எழுத்துமூலமான ஒரு விண்ணப்பத்தையும், நிலத்தின் நிவேசன நக்ஷாவையும்,

(b) வேலையைச் செய்துமுடிக்க அனுமதிவேண்டுமென்று எழுத்துமூலமான ஒரு விண்ணப்பத்தையும், கட்டிடத்திற்கும் பூர்த்தியான மட்டம் ஸெக்ஷன் முதலிய வேலையின் விவரங்களுக்கும் ஒரு நக்ஷாவையும், அக்கிராசனாதிபதிக்கு அனுப்பவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு தஸ்தவேஜிலும் 2-வது ஷெட்யூலிற்கண்ட விவரங்களடங்கியிருக்கவேண்டியதுங்கூட ஷை ஷெட்யூலில் இது விஷயமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாய் அவைகளைச் சித்தஞ்செய்யவும் வேண்டும்.

நிவேசனத்தை முன்னதாக அங்கீகரிப்பது அவசியம்.

15. அடுத்த முந்திய பிரிவின்படி விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேல் அக்கிராசனாதிபதி தாம் நிவேசனத்தை அங்கீகரித்தாலன்றி மற்றபடிக்கும் அங்கீகரிக்கிறவரையிலும் கல் கட்டிடம் கட்டவோ அல்லது புதுப்பிக்கவோ அனுமதிகொடுக்கக்கூடாது.

அனுமதியில்லாமல் வேலை ஆரம்பிக்கக்கூடாதென்று தடுப்பது.

16. 14-வது பிரிவின்படி அக்கிராசனாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல் வேலையைச் செய்து முடிப்பதற்காக அவர் எழுத்து மூலமான அனுமதி கொடுத்தாலன்றி மற்றப்படிக்கும் கொடுக்கிறவரையிலும் கல் கட்டிடம் கட்டத்தொடங்கவுங்கூடாது அதைப்புதுப்பிக்கத் தொடங்கவுங்கூடாது.

நிவேசனத்தை அக்கிராசனாதிபதி எவ்வளவு காலத்துக்குள் அங்கீகரிக்கவாவது அங்கீகரிக்காமல் நிராகரிக்கவாவது வேண்டுமென்பது.

17. நிவேசனத்தை அங்கீகரிப்பதற்காக 14-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் யாதொரு விண்ணப்பத்தையாவது, 2-வது ஷெட்யூலின்படி வேண்டியிருக்கும் யாதொரு சங்கதி அல்லது விசேஷசங்கதியையாவது வரப்பெற்றுக்கொண்டபிறகு முப்பது தினத்திற்குள்ளாகவாகிலும் நிவேசனத்தை அங்கீகரிப்பதைக்குறித்த சட்டப்படி எவ்வித ஆட்சேபனையும் இராதென்பது அக்கிராசனாதிபதிக்குத் திருப்தியானபிறகு முப்பது தினத்திற்குள்ளாகவாகிலும் அக்கிராசனாதிபதியானவர் எழுத்துமூலமான உத்தரவுவாயிலாக நிவேசனத்தை அங்கீகரிக்கவாவது வேண்டும், 21-வது பிரிவிற்கண்ட ஆதாரங்களில் ஏதேனும் ஒன்று அல்லது பலவற்றைக்கொண்டு நிவேசனத்தை அங்கீகரிக்காமல் நிராகரிக்கவாவதுவேண்டும்:

ஆனால், ஷை விண்ணப்பத்தைக்குறித்து அக்கிராசனாதிபதியானவர் கடைசியாய் முடிவுசெய்யக்கூடியவராக இருப்பதற்குத் தமக்கு அவசியமாகத்தோற்றும் சகல சங்கதிகளையும் பெற்றுக்கொண்டபிறகு முப்பது தினத்துக்குமேல் ஷை உத்தரவு பிறப்பிப்பதினால் எந்தவிஷயத்திலும் ஆலசியம்செய்வது கூடாது.

வேலையைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய அனுமதியை எவ்வளவுகாலத்துக்குள் அக்கிராசனாதிபதி கொடுக்கவேண்டும் அல்லது கொடுக்காமல் நிராகரிக்கவேண்டுமென்பது.

18. யாதொரு வேலையைச் செய்துமுடிப்பதற்காக அனுமதி வேண்டுமென்று 14-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் யாதொரு விண்ணப்பத்தையாவது, 2-வது ஷெட்யூலின்படி வேண்டியிருக்கிற யாதொரு சங்கதி அல்லது தஸ்தவேஜுகள் அல்லது விசேஷசங்கதி அல்லது தஸ்தவேஜுகளையாவது வரப்பெற்றுக்கொண்டபிறகு முப்பது தினத்திக்குள்ளாகவாகிலும், வேலையைச் செய்துமுடிக்க அனுமதி கொடுப்பதற்குச் சட்டப்படி யாதொரு ஆட்சேபனையும் இல்லையென்று அக்கிராசனாதிபதிக்குத் திருப்தியானபிறகு முப்பது தினத்திற்குள்ளாகவாகிலும், அக்கிராசனாதிபதியானவர் எழுத்துமூலமான உத்தரவுவாயிலாக வேலையைச்செய்துமுடிக்க அனுமதியைக் கொடுக்கவாவது வேண்டும், 21 அல்லது 22-வது பிரிவிற்கண்ட ஆதாரங்களில் ஏதேனும் ஒன்று அல்லது பலவற்றைக்கொண்டு அந்த அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கவாவதுவேண்டும்:

ஆனால், இந்தப் பிரிவிற்கண்ட விஷயங்களெதினும், 17-வது பிரிவின்படி நிவேசனம் அங்கீகரிக்கப்படுகிறவரையிலே ஷை முப்பதுதினவாயிதாவைக் கணக்கிடத் தொடங்கலாகாது.

மேலும், ஷை விண்ணப்பத்தைக்குறித்து அக்கிராசனாதிபதி கடைசியாக முடிவு செய்யக்கூடியவராயிருக்க அவசியமென்று தோற்றுகிற சகல சங்கதிகளையும் அவர் பெற்றுக்கொண்ட பிறகு ஷை உத்தரவைப் பிறப்பிப்பதைக்குறித்து முப்பதுதினத்திற்கு மேற்பட எந்த விஷயத்திலும் ஆலசியம் செய்வதுகூடாது.

அங்கீகாரம் அல்லது அனுமதி நிராகரிக்கப்படுமானால் அதற்குள்ளநியாயங்களை எழுதிவைப்பதும் அப்பீலும்.

19. (1) கல் கட்டிடத்திற்காக வேண்டியிருக்கும் ஒரு கட்டிட நிவேசனத்தை அங்கீகரிக்கவோ, கல்கட்டிடத்தைக்கட்டவாவது புதுப்பிக்கவாவது அனுமதிகொடுக்கவோ அக்கிராசனாதிபதி நிராகரிக்கும்போதெல்லாம், அப்படி நிராகரிப்பதற்குள்ள காரணங்களை அவர் விவரமாய்க் காணவேண்டும்; அப்படி நிராகரித்ததின்மேல் விண்ணப்பதாரர் மியுனிஸிபல் சங்கத்தாருக்கு அறுபதுதினத்துக்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) மியுனிஸிபல் சங்கத்தாருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(3) மியுனிஸிபல் சங்கத்தார் அப்படிப்பட்ட யாதொரு அப்பீலைத் தள்ளிவிடுவார்களாகில், அப்படி தள்ளிவிடுவதற்குள்ள காரணங்களை அவர்கள் எழுத்துமூலமான உத்தரவிலே விவரமாய்க் காணவேண்டும்.

அங்கீகாரம் அல்லது அனுமதியைக் கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ அக்கிராசனாதிபதி ஆலசியம் செய்வாராகில் மியுனிஸிபல் சங்கத்தாருக்குத் தெரிவிப்பது.

20. (1) சந்தர்ப்பத்துக்கேற்றபடி, 17-வது அல்லது 18-வது பிரிவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலவரைக்குள், சங்கதிக்குத்தக்கபடி அக்கிராசனாதிபதி கட்டிடத்திற்கான நிவேசனத்தை அங்கீகரிக்காமல் அல்லது அங்கீகரிப்பதில்லையென்று நிராகரிக்காமலிருந்தாலும் யாதொரு வேலையைச் செய்துமுடிக்க அனுமதிகொடாமல் அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்காமலிருந்தாலும், விண்ணப்பதாரர் எழுதிக்கேட்டுக்கொள்வதன்மேல் மியுனிஸிபல் சங்கத்தார் - அப்படிப்பட்ட அங்கீகாரம் அல்லது அனுமதியைக் கொடுக்கவேண்டுமோ கொடுக்கக்கூடாதாவென்பதை ஷை காலவரையறை கழிந்தவுடனே எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு தீர்மானிக்கக் கடமைப்பட்டவராவார்கள்.

(2) மேற்கண்ட எழுத்துமூலமான வேண்டுகோள் வந்து சேர்ந்ததுமுதல் முப்பது தினத்திற்குள்ளாக மியுனிஸிபல் சங்கத்தார் ஷை அங்கீகாரம் அல்லது அனுமதியைக் கொடுக்கவேண்டுமென்றாவது கொடுக்கக்கூடாதென்றாவது தீர்மானிக்காவிட்டால் அப்படிப்பட்டஅங்கீகாரம் அல்லது அனுமதி கொடுக்கப்பட்டதாக எண்ணப்படும்; விண்ணப்பதாரர் வேலையைச் செய்துமுடிக்கத் தொடங்கலாம், ஆனால், இந்தஆக்டின் நிபந்தனைகளில் எதையாவது, பிரதான ஆக்டின்படி செய்யப்படும் எவ்வித விதிகள் அல்லது சகாயச்சட்டங்களையாவது அவர் மீறி வேலைசெய்து முடிக்கத் தொடங்கக்கூடாது.

கல் கட்டிடம் கட்டுவதற்காக நிவேசனத்தை அங்கீகரிப்பதில்லை யென்றாவது அக்கட்டிடத்தைக் கட்டுவதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கோ அனுமதி கொடுப்பதில்லை யென்றாவது நிராகரிப்பதற்குள்ள காரணங்கள்.

21. கல்கட்டிடத்தைக் கட்டுவதற்காவது புதுப்பிப்பதற்காவது நிவேசனத்தை அங்கீகரிப்பதில்லையென்றாகிலும்: கல் கட்டிடத்தைக் கட்டுவதற்காவது புதுப்பிப்பதற்காவது அனுமதி கொடுப்பதில்லையென்றாகிலும் நிராகரிப்பதற்குள்ள காரணங்களெல்லாம் அடியிற்கண்டவைகளேயாகும். அவை யென்னவென்றால்:—

(1) கட்டுவேலையாவது, நிவேசன நக்ஷா-கட்டிட நக்ஷா-மட்டம்-ஸெக்ஷன் அல்லது விவரக் குறிப்புகளிலடங்கிய அம்சங்களில் எதுவாவது இந்த ஆக்டிலுள்ள குறிப்பான யாதொரு நிபந்தனைக்காகிலும் இந்த ஆக்டின்படியோ பிரதான ஆக்டின்படியோ செய்யப்பட்ட ஏதோ ஒரு குறிப்பான விதி அல்லது சகாய்ச் சட்டத்துக்காகிலும் விரோதமாக இருக்குமென்பது;

(2) அப்படிப்பட்ட அனுமதிக்காகச் செய்துக்கொள்ளப்படும் விண்ணப்பத்திலே 2-வது ஷெட்யூலிற்கண்ட விவரங்கள் கண்டிருக்கவில்லையென்பது, அல்லது அது அந்த ஷெட்யூலிற்கண்டவிதமாகச் சித்தஞ்செய்யப்படவில்லையென்பது;

(3) 14-வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட தஸ்தவேஜுகளில் எதிலாவது ஷை ஷெட்யூலிற்கண்டபடி கையெழுத்துசெய்யப்படவில்லையென்பது;

(4) மேற்படி ஷெட்யூலின் பிரகாரம் அக்கிராசனாதிபதி கேட்கும் எந்த சங்கதியாவது தஸ்தவேஜுகளாய் கிரமமாய்ச் சவதரிக்கப்படவில்லையென்பது; அல்லது,

(5) மேற்கண்டபடி அங்கீகரிப்பதற்காவது அனுமதிகொடுப்பதற்காவது அந்தப்பிரிவில் இதற்குமுன்னே கண்டிருக்கும் ஹேதுக்களில் எதை அனுசரித்தாகிலும் சட்டப்படி செய்யக்கூடிய ஆட்சேபனை இல்லையென்று விண்ணப்பதாரர் அக்கிராசனாதிபதிக்குத் திருப்திசெய்யவில்லையென்பது,

கல் கட்டிடம் கட்டுவதற்கு வேண்டியிருக்கும் அனுமதியை நிறுத்தி வைக்கவோ அல்லது கொடுக்கவோ விசேஷ அதிகாரம்.

22. 21-வது பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே,—

(a) நிவேசன நக்ஷாவிற்கண்ட யாதொரு தெரு சொந்ததெருவாய் உத்தேசிக்கப்பட்டிருக்குமானால், அந்தத்தெருவை அமைக்க ஆரம்பிக்கிறவரையிலாவது அதை அமைத்துப் பூர்த்திசெய்கிறவரையிலாவது கல் கட்டிடம் கட்டவாகிலும் ஒன்று அல்லது பல குடிசைகளையோ அல்லது சிறிதுகாலத்துக்கு அமைக்கப்பட்ட கட்டுவேலைகளையோ கல் கட்டிடங்களாக மாற்றவாகிலும் அனுமதி கொடுப்பதில்லையென்று அக்கிராசனாதிபதி தமக்கு யுக்தமாகத்தோற்றினால் நிராகரிக்கலாம்; மேலும்,

(b) யாதொரு நிவேசனம் யாதொரு தெருவின் சம்பந்தமாக எப்படி அமைந்திருந்தபோதிலும் பாதகமில்லாமலே அந்த நிவேசனத்தில் கல் கட்டிடம் கட்டவாகிலும் ஒன்று அல்லது பல குடிசைகளாவது சிறிது காலத்துக்கு அமைக்கப்பட்ட கட்டுவேலைகளையாவது கல் கட்டிடமாக மாற்றவாகிலும்விசேஷ காரணங்களினால் அக்கிராசனாதிபதி அனுமதிகொடுக்கலாம்.

அனுமதியின்பிரகாரம் ஒருவருஷத்துக்குள் நடந்து கொள்ளாவிட்டால் அது ரத்தாவது.

23. யாதொரு கல் கட்டிட வேலையைச்செய்துமுடிக்க அனுமதி கொடுக்கப்பட்ட தேதிக்குப் பிறகு ஒரு வருஷத்துக்குள் அதைக் கட்டத்தொடங்காவிட்டாலும் புதுப்பிக்கத்தொடங்காவிட்டாலும் இந்த ஆக்டின்படி மறுபடியும் விண்ணப்பம் செய்துகொண்டு மறுபடியும் அனுமதி பெறுகிறவரையில் பிரஸ்தாபவேலையை ஆரம்பிக்கக்கூடாது.

அக்கிராசனாதிபதி பார்வையிடுவது.

24. யாதொரு கட்டிடத்தைக் கட்டிக்கொண்டிருக்கும்போதாவது புதுப்பித்துக்கொண்டிருக்கும்போதாவது, பிரதான ஆக்ட் 73-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோடிஸ் வந்துசேர்ந்ததேதிமுதல் ஒரு மாதத்திற்குள்ளாவது அக்கிராசனாதிபதி அந்தக் கட்டிடத்தைப் பார்வையிடலாம்.

கட்டுவேலையில் திருத்தஞ்செய்யவேண்டுமென்று கட்டளையிட அக்கிராசனாதிபதிக்கு அதிகாரம்.

25. (1) அக்கிராசனாதிபதி பார்வையிடுவதன்மேல்—

(a) அங்கீகரிக்கப்பட்ட நக்ஷாக்களின்படிக்கன்றி வேறே விதமாகக் கட்டுவேலை இருக்கிறதென்றாகிலும்,

(b) இந்த ஆக்டின் நிபந்தனைகளிலெதற்காவது, பிரதான ஆக்டை யனுசரித்துச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின் நிபந்தனைகளிலெதற்காவது மாறாக ஷை வேலை இருக்கிறதென்றாகிலும்,

அக்கிராசனாதிபதிக்குத் தோற்றினால் அவர் அக்கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு நோடிஸ்கொடுத்துக் குறிக்கும் ஒரு காலத்துக்குள்ளே—

(i) மேற்படி நக்ஷாக்கள் அல்லது நிபந்தனைகளின்படி பிரஸ்தாப கட்டுவேலையை அமைக்கும்பொருட்டு மேற்படி நோடிஸிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டுமென்றாவது,

(ii) அப்படிப்பட்ட திருத்தங்களை ஏன் செய்யக்கூடாதோ அதற்குக் காரணம் தெரிவிக்கவேண்டுமென்றாவது,

உத்தரவு செய்யலாம்.

(2) மேற்கண்டபடி சொந்தக்காரர் காரணம் தெரிவிக்காவிட்டால், அந்த நோடிஸிற்கண்ட திருத்தங்களை அவர் செய்யக் கடமைப்பட்டவராவார்.

(3) மேற்கண்டபடி சொந்தக்காரர் காரணம் தெரிவித்தால், அக்கிராசனாதிபதியானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பித்த நோடிஸை உத்தரவு மூலமாய்த்து செய்யவாவது வேண்டும், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கண்டு ஊர்ஜிதஞ் செய்யவாவது வேண்டும்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் யாதொரு கட்டளையின்மேலாவது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் யாதொரு கட்டளையின்மேலாவது மியுனிஸிபல் சங்கத்தாருக்கு அப்பீல்செய்துகொள்ளலாம்.

(5) மியுனிஸிபல் சங்கத்தார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

மனிதர் பிராணனுக்கு அபாயமுண்டாகத்தக்க கட்டுவேலையை நிறுத்துவது.

26. இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கும்போதாவது புதுப்பிக்கப்படும்போதாவது அது மனிதர் பிராணனுக்கு அபாயத்தை உண்டாக்கத்தக்கதென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுவாராகில் அவர் அதை எப்போதாகிலும் நிறுத்தலாம்.

சில பிரிவுகளைக் கிணறுகள் விஷயத்தில் பிரயோகிப்பது.

27. 14, 15, 16, 23, 24, 25-வது பிரிவுகளின் நிபந்தனைகளும் அடுத்த முந்திய பிரிவின் நிபந்தனைகளும் கிணற்றுக்குப் பிரயோகப்படுவதாக எண்ணப்படும்:

ஆனால், கிணற்றின் விஷயத்திலே 14-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (a) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட விவரங்களில் எவைகளை விட்டுவிடுவது அக்கிராசனாதிபதிக்கு யுக்தமாகத் தோற்றுமோ அவைகளை அவர் தமக்கிஷ்டமானால் விட்டுவிடலாம்.

குடிசை ஏற்படுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ விண்ணப்பம்.

28. (1) குடிசை ஏற்படுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ உத்தேசிக்கிற ஒவ்வொருவரும்—

(a) வேலைசெய்து முடிக்க அனுமதி வேண்டுமென்று ஒரு விண்ணப்பத்தையும்,

(b) நிலத்தின் நிவேசன நக்ஷாவையும்,

அக்கிராசனாதிபதிக்கு அனுப்பவேண்டும்.

(2) 2-வது ஷெட்யூலில் இது விஷயமாகக்கண்ட விவரங்கள் அப்படிப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்திலும் நக்ஷாவிலும் அடங்கியிருக்கவேண்டியதுங்கூட ஷை ஷெட்யூலிற்கண்ட விதமாக அந்த விண்ணப்பத்தையும் நக்ஷாவையும் சித்தஞ்செய்யவும் வேண்டும்.

அனுமதியில்லாமல் வேலை செய்யத் தொடங்கலாகாதென்று தடுப்பது.

29. 28-வது பிரிவின்படி அக்கிராசனாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல் வேலையைச்செய்து முடிப்பதற்காக அவர் எழுத்து மூலமாய் அனுமதி கொடுத்தாலன்றி மற்றப்படிக்கும் கொடுக்கிறவரையிலும் குடிசையை ஏற்படுத்தவாவது புதுப்பிக்கவாவது தொடங்கலாகாது.

வேலை செய்து முடிப்பதற்கு வேண்டிய அனுமதியை அக்கிராசனாதிபதி எவ்வளவு காலத்துக்குள் கொடுக்கவேண்டும் அல்லது கொடாமல் நிராகரிக்கவேண்டுமென்பது.

30. குடிசையை ஏற்படுத்துவதற்கோ புதுப்பிப்பதற்கோ அனுமதிவேண்டுமென்று 28-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் யாதொரு விண்ணப்பத்தையாவது, 2-வது ஷெட்யூலின்படி வேண்டியிருக்கிற யாதொரு சங்கதி-நக்ஷா-விசேஷ சங்கதி அல்லது நூதன நக்ஷா இவைகளையாவது வரப்பெற்றுக்கொண்ட பிறகு முப்பது தினத்திற்குள்ளாகவாகிலும், வேலையைச் செய்து முடிப்பதற்குச் சட்டப்படி யாதொரு ஆட்சேபமும் இல்லையென்று அக்கிராசனாதிபதிக்குத் திருப்தியான பிறகு முப்பது தினத்திற்குள்ளாகவாகிலும் அக்கிராசனாதிபதியானவர்-எழுத்து மூலமான உத்தரவு வாயிலாக ஷை அனுமதியைக் கொடுக்கலாம், அல்லது 33-வது பிரிவிற்கண்ட காரணங்களில் ஏதேனும் ஒன்று அல்லது பலவற்றை அனுசரித்து அனுமதி கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம்:

ஆனால், ஷை விண்ணப்பத்தைக்குறித்து அக்கிராசனாதிபதி கடைசியாக முடிவு செய்யக் கூடியவராவதற்கு அவருக்கு அவசியமென்று தோற்றுகிற சகல சங்கதிகளையும் அவர் பெற்றுக்கொண்டபிறகு உத்தரவு பிறப்பிப்பதை முப்பது தினத்திற்கு மேற்பட எந்த விஷயத்திலும் ஆலசியம் செய்வது கூடாது.

அனுமதி கொடுப்பதில்லையென்று நிராகரிக்கும்போது நியாயங்களை எழுதிவைப்பதும் அப்பீலும்.

31. (1) மேற்கண்டபடி அனுமதி கொடுப்பதில்லையென்று அக்கிராசனாதிபதி நிராகரிக்கும்போதெல்லாம் அவர் அப்படி நிராகரிப்பதற்குள்ள காரணங்களை விவரமாய்க் காணவேண்டும்; அப்படி நிராகரிப்பதன்மேல் விண்ணப்பதாரர் மியுனிஸிபல் சங்கத்தாருக்கு அறுபதுதினத்திற்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) மியுனிஸிபல் சங்கத்தாருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு அப்பீலை மியுனிஸிபல் சங்கத்தார் தள்ளிவிடும்பட்சத்தில், அதற்குள்ள காரணங்களை அவர்கள் எழுத்து மூலமான உத்தரவிலே விவரமாய்க் காணவேண்டும்.

அனுமதி கொடுப்பதிலாவது அனுமதி கொடுப்பதில்லையென்று நிராகரிப்பதிலாவது அக்கிராசனாதிபதி ஆலசியம் செய்தால் மியுனிஸிபல் சங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்வது.

32. (1) 30-வது பிரிவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலவரையருக்குள்ளே, குடிசையை ஏற்படுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ அக்கிராசனாதிபதி அனுமதி கொடாவிட்டால் அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்காவிட்டால், விண்ணப்பதாரர் எழுதிக்கேட்டுக்கொள்வதன்மேல் மியுனிஸிபல் சங்கத்தார் மேற்படி அனுமதி கொடுக்கவேண்டுமோ கொடுக்கக்கூடாதோ என்பதைப்பற்றி மேற்படி கால வரையறை கழிந்தவுடனே எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு தீர்மானிக்கக் கடமைபட்டவராவார்கள்.

(2) மேற்கண்டபடி எழுதிக் கேட்டுக்கொண்டது வந்துசேர்ந்ததுமுதல் முப்பது தினத்திற்குள்ளாக மியுனிஸிபல் சங்கத்தார் மேற்படி அனுமதியைக் கொடுக்கவேண்டுமோ அல்லது கொடுக்கக்கூடாதோ என்பதைப்பற்றி தீர்மானிக்காவிட்டால், மேற்படி அனுமதி கொடுக்கப்பட்டதாக எண்ணப்படும்; விண்ணப்பதாரர் மேற்படி வேலையைச் செய்துமுடிக்கத் தொடங்கலாம்; ஆனால், இந்த ஆக்டின் நிபந்தனைகளில் எதற்காவது இந்த ஆக்டின்படி யாகிலும்பிரதான

ஆக்டின்படியாகிலும் செய்யப்பட்ட எந்த விதிகளுக்காவது சகாயச் சட்டங்களுக்காவது விரோதமாக ஷை வேலையைச் செய்துமுடிக்கத் தொடங்கலாகாது.

குடிசையை ஏற்படுத்தவோ புதுப்பிக்கவோ வேண்டிய அனுமதியைக்கொடுப்பதில்லையென்று நிராகரிப்பதற்குள்ள காரணங்கள்.

33. குடிசையை ஏற்படுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ வேண்டிய அனுமதியை அடியிற்கண்ட காரணங்களினால்மாத்திரம் கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம். அந்தக் காரணங்களாவன:—

(1) இந்த ஆக்டிலுள்ள குறிப்பான யாதொரு நிபந்தனைக்காவது, இந்த ஆக்டின்படியாகிலும் பிரதான ஆக்டின்படியாகிலும் செய்யப்பட்ட ஏதோ ஒருகுறிப்பான விதிக்காவது சகாயச்சட்டத்துக்காவது பிரஸ்தாப வேலை விரோதமாயிருக்குமென்பது;

(2) அப்படிப்பட்ட அனுமதிக்காகச் செய்துகொள்ளவேண்டியிருக்கிற விண்ணப்பத்திலே 2-வது ஷெட்யூலிற் கண்ட விவரங்கள் கண்டிருக்கவில்லை, அல்லது அவ்விண்ணப்பம் ஷை ஷெட்யூலிற்கண்ட விதமாகச் சித்தஞ்செய்யப்படவில்லையென்பது;

(3) ஷை ஷெட்யூலின் பிரகாரம் அக்கிராசனாதிபதி கேட்கும் யாதொரு சங்கதியாவது நக்ஷாவாவது கிரமமாய்ச் சவதரிக்கப்படவில்லையென்பது; அல்லது,

(4) ஷை அனுமதி கொடுப்பதற்கு இந்தப் பிரிவில் இதற்குமுன்னே கண்டிருக்கும் காரணங்களில் எதன்படியாகிலும் சட்டப்பிரகாரம் ஆட்சேபனை கிடையாதென்று விண்ணப்பதார் அக்கிராசனாதிபதிக்குத் திருப்தி செய்யவில்லையென்பது.

அனுமதியின்படி ஆறுமாதத்திற்குள் வேலைசெய்யாவிட்டால் அது ரத்தாவது.

34. வேலைசெய்து முடிக்க அனுமதிகொடுக்கப்பட்ட தேதிக்குப்பிறகு ஆறுமாதத்திற்குள்ளாக யாதொரு குடிசையை ஏற்படுத்த அல்லது புதுப்பிக்கத்தொடங்காவிட்டால், இந்த ஆக்டின்படி மறு விண்ணப்பம் செய்துகொண்டு மறு அனுமதி கொடுக்கப்படுகிறவரையில் பிரஸ்தாப வேலையைச் செய்யத் தொடங்கக்கூடாது.

திருத்தங்களுக்கும் சேர்க்கும் பாகங்களுக்கும் நிபந்தனைகளைப்பிரயோகிப்பது.

35. (1) கட்டிடங்களைக் கட்டுவதைக்குறித்தும் புதுப்பிப்பதைக்குறித்தும் இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளும் இந்த ஆக்டின்படியாவது பிரதான ஆக்டின்படியாவது செய்யப்பட்ட எந்த விதிகள் அல்லது சகாயச்சட்டங்களிலுள்ள நிபந்தனைகளும்-அந்தக் கட்டிடங்களை மாற்றும் விஷயத்துக்குமாவது அவைகளை விஸ்தாரப்படுத்துவதற்குமாவது பிரயோகப்படத்தக்கவைகளாகும்.

ஆனால், யாதொரு கட்டிடத்தின் நிலைமைக்காவது அளவுக்காவது பாதகமுண்டாக்காதபடி செய்யும் அவசியமானமராமத்து வேலைகள்-இந்தப்பிரிவின் காரியங்களுக்காக மாறுதலாகவாவது சேர்க்கும் பாகமாகவாவது எண்ணப்படமாட்டா.

(2) சேர்ந்த யாதொரு பாகமாவது யாதொரு திருத்தமாவது கட்டிடத்தின் நிலைமையயாகிலும் அளவையாகிலும் பாதிக்காத அவசியமான மராமத்தா அல்லவா என்பதைக்குறித்து யாதொரு கேள்வி பிறக்குமானால், அது மியுனிஸிபல் சங்கத்தாருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

சட்டத்துக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்ட அல்லது நடத்திவரப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட கட்டிடவேலையை இடிப்பது அல்லது மாற்றுவது.

36. (1) (i) (a) அக்கிராசனாதிபதியினுடைய அனுமதியைப் பெறாமல், அல்லது (மியுனிசிபல் சங்கத்தாருக்கு அப்பீல் செய்திருக்கும் பட்சத்திலாவது யாதொரு சங்கதியை அவர்களுக்குத் தெரிவித்திருக்கும்பட்சத்திலாவது) மியுனிசிபல் சங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை மீறி, யாதொரு கட்டிடத்தைக் கட்ட அல்லது புதுப்பிக்க ஆரம்பித்திருப்பதாகவாகிலும்,

(b) எந்த ஆதாரத்தின்மேல் அப்படிப்பட்ட அனுமதி அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அந்த ஆதாரத்தின் விவரங்களின்படியல்லாமல் வேறுவிதமாய் மேற்படி வேலை நடந்துகொண்டிருக்கிறதென்றாவது முடிக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும்,

(c) இந்த ஆக்டின் நிபந்தனைகளிலெதற்காவது, இந்த ஆக்டின்படியோ அல்லது பிரதான ஆக்டின்படியோ செய்யப்பட்ட யாதொரு விதிக்காவது சகாயச்சட்டத்துக்காவது, இந்த ஆக்டின்படியோ அல்லது மேற்படி விதிகளின்படியோ சகாயச்சட்டங்களின்படியோ சட்டப்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவுக்காவது கட்டளைக்காவது விரோதமாய் மேற்படி வேலை நடந்து வருகிறதென்றாகிலும் முடிக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும்,

(ii) 25-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடிசிற்கண்ட எவ்வித மாறுதல்களாயினும் கிரமமாய்ச் செய்யப்படவில்லையென்றாகிலும்,

(iii) யாதொரு கட்டிடத்தை எவ்விதமாகவாவது மாற்றுவதாயினும் அதை விஸ்தாரப்படுத்துவதாயினும் யாதொரு கட்டிடத்திலாவது அதனுடனாவது அதன் மேலாவது எந்தக்காரியத்துக்காகவாகிலும் செய்யப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட வேறே யாதொரு கட்டுவேலையாயினும், 35-வது பிரிவுக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்டது, அல்லது நடந்துவருகிறது, அல்லது முடிக்கப்பட்டிருக்கிறது என்றாகிலும்,

அக்கிராசனாதிபதிக்குத் திருப்தியானால், அவர் - செய்து முடிக்கப்பட்ட கட்டுவேலையை, அல்லது அதில் எவ்வளவு பாகம் சட்டத்துக்கு விரோதமாய்ச் செய்து முடிக்கப்பட்டதென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுகிறாரோ அவ்வளவு பாகத்தை இடித்துவிடும்படியோ, மேற்படி வேலை மேற்கண்டபடி ஆக்ட், சகாயச்சட்டம், விதி, உத்தரவு, அல்லது கட்டளையை அனுசரித்திருப்பதற்காவது, எந்த நக்ஷா அல்லது விவரங்களின் ஆதாரத்தின்மேல் மேற்படி அனுமதி அல்லது உத்தரவு கொடுக்கப்பட்டதோ அந்த நக்ஷா அல்லது விவரங்களை யனுசரித்திருப்பதற்காவது அவசியமென்று அக்கிராசனாதிபதிக்குத் தோற்றுகிற மாறுதல்களைச் செய்யும்படியோ, கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு அங்காமியான உத்தரவு கொடுக்கலாம்.

(2) அக்கிராசனாதிபதியானவர் - கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அங்காமியான உத்தரவைச் சேர்ப்பித்து, அவருக்கு ஒரு நோடிஸ்கொடுத்து அதில் கண்ட நியாயமான ஒரு காலவரையறைக்குள், மேற்படி உத்தரவை ஏன் ஸார்ஜ்ஜிதப்படுத்தக்கூடாது என்பதற்குள்ள காரணத்தைக் காட்ட வேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்.

(3) அக்கிராசனாதிபதிக்குத் திருப்திகரமாய்ச் சொந்தக்காரர் காரணம் காட்டத்தவறினால், அக்கிராசனாதிபதியானவர் மேற்படி உத்தரவை ஸார்ஜ்ஜிதப்படுத்தலாம்; பிறகு அப்படிப்பட்ட உத்தரவு சொந்தக்காரரைப் பிணைப்படுத்தக்கூடியதாகும்; ஆனால், இந்த உட்பிரிவின்படி ஸார்ஜ்ஜிதப்படுத்தப்பட்ட யாதொரு உத்தரவின்மேல் மியுனிஸிபல் சங்கத்தாருக்கு முப்பது தினத்துக்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளலாம்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

நிவாரணை.

37. அடியிற்கண்ட கட்டிடங்கள் இந்த ஆக்டின் 12-முதல் 25-உட்பட 25-வரையிலுள்ள பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளினின்றும், 28-முதல் 36-உட்பட 36-வரையிலுள்ள பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளினின்றும் நிவாரணையாகும்:—

(a) செடி முதலியவைகளைப் பயிர்செய்வதற்கான வீடாவது, (குடியிருப்பு வீடல்லாமல்) வேனில்வீடாவது, கோழி பாத்து முதலியவைகள் விட்டிருக்கும் வீடாவது, பட்சிகள் விட்டிருக்கும் வீடாவது-அதிசமீபத்திலுள்ள அடுத்த கட்டிடத்திலிருந்து முழுமையும் பிரிந்து அதமம் பத்தடி தூரத்திலிருந்து, மேற்படி காரியத்திற்காகவே கட்டி உபயோகிக்கப்பட்டாவது கட்டி உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டாவதிருக்குமானால் அப்படிப்பட்ட யாதொரு கட்டிடமும்;

(b) அபாயகரமான யாதொரு வியாதி கண்டிருப்பவர்களை வரப்பெற்றுக்கொண்டு அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காகச் சிறிது காலத்துக்கு அமைக்கப்பட்ட ஆஸ்பத்திரியாகவே உபயோகமாகும்படி மியுனிஸிபல் சங்கத்தாராலாவது அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டாவது கட்டப்பட்டாகிலும் கட்டுவதாக உத்தேசிக்கப்பட்டாகிலுமிருக்கிறது யாதொரு கட்டிடமும்.

ஆனால், இந்தப் பிரிவைச்சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட யாதொரு கட்டிடமானது கட்டப்பட்ட பிறகு அந்தப் பகுதியில் குறிக்கப்பட்டிராத எந்தக் காரியத்துக்காகவாகிலும் உபயோகிக்கப்பட்டால், 35-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் அதற்குப் பிரயோகப்படும்.

கட்டிடத்தைப்பற்றிய விதிகளைக் கண்டிப்பாய் அனுசரிக்காதபடி செய்வதற்குப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

38. பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு மியுனிஸிபாலிடியின் விஷயத்திலாவது யாதொரு மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த எந்த பாகத்தின் விஷயத்திலாவது இந்த ஆக்டிற்கண்ட 12, 13, 14, 15, 16, 22, 27, 28, 29-வது பிரிவுகளிலாகிலும் இந்த ஆக்டுடன் சேர்க்கப்பட்டுள்ள ஷெட்யூல்களிலாகிலும் ஏற்படுத்தியிருக்கிற விதிகள் அல்லது திட்டங்களில்யாதொரு விதிஅல்லது திட்டத்தின் பிரயோகத்தினின்றும் பொதுவாய்க் கட்டிடங்களையோ அல்லது யாதொரு வகுப்பைச்சேர்ந்த கட்டிடங்களையோ நிவாரணை செய்யலாம்.

1884-ம்ஹூத்து 4-வது ஆக்ட் 204-வது பிரிவின் திருத்தம்.

39. (1) பிரதான ஆக்ட் 204-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலே, "தகுந்ததல்லவென்று" என்பதற்குப் பர்த்தியாக, "தகுந்ததல்லவென்றோ, கலப்பிடமாயிருக்கிறதென்றோ, அது எதுவென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துவல்லவென்றோ" என்பதை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(2) மேற்படி பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவிலே, "தகுந்ததல்லவென்று" என்பதற்குப் பர்த்தியாக, "தகுந்தவையல்லவென்றோ, கலப்பிடமாயிருக்கின்றனவென்றோ அவை எவையென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துக்கள் அல்லவென்றோ" என்பதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(3) மேற்படி பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பரிவிலே "தகுந்ததுதானென்று" என்பதற்குப் பர்த்தியாக "தகுந்தவைதானென்றோ கலப்பிடமல்லவென்றோ அவை எவையென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துக்கள்தானென்றோ" என்பதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

கேட்கப்படும் மாதிரியானவையல்லாத ஆகாரவஸ்துக்களையாவது மருந்து சரக்குகளையாவது விற்கக்கூடாதென்று தப்பது.

40. கிரயத்திற்கு வாங்குபவர் கேட்கும் வஸ்துவின் மாதிரி, தன்மை அல்லது லக்ஷணம் பெற்றிராத யாதொரு ஆகாரவஸ்துவையாவது பானத்தையாவது மருந்து சரக்கையாவது வாங்குபவருக்குக் கெடுதிநேரிடும்படி எவரும் யாதொரு மியுனிஸிபாலிடிக்குள் விற்பனை செய்யக்கூடாது.

ஆனால், அடியிற்கண்ட விஷயங்களில் இந்தப்பிரிவின்படி குற்றஞ்செய்ததாக எண்ணப்படமாட்டாது. அவையாவன:—

(a) மேற்படி ஆகாரவஸ்து அல்லது பானம் அல்லது மருந்துசரக்கைக் கொண்டுபோவதற்காகிலும் உட்கொள்ளுவதற்காகிலும் தகுதியாயிருக்கும்படி செய்யும்பொருட்டு தேகாரோக்கியத்தைக் கொடுக்கத்தக்கதல்லாத யாதொரு பண்டம் அல்லது சம்பாரம் அதனுடன் சேர்க்கப்பட்டதேயல்லாமல் அதன் காத்திரம், எடை அல்லது அளவை மோசடியாக அதிகப்படுத்தவோ அல்லது அதன் குறைந்த லக்ஷணத்தை மறைக்கவோ அப்படிப்படி சேர்க்கப்படவில்லையென்கிற விஷயமும்;

(b) அப்படிப்பட்ட ஆகாரவஸ்து அல்லது மருந்துசரக்கின் பாத்தியதை ஒருவருக்கே உரியதாயிருந்தாலும், வழங்கிவரும் அதிகார உரிமைப்பத்திரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாயிருந்து அதன் விவரச்சூசிகையில் சொல்லியிருக்கிற லக்ஷணப்படி சவதரிக்கப்பட்டாலும் அப்படிப்பட்ட விஷயமும்;

(c) அப்படிப்பட்ட ஆகாரவஸ்து அல்லது பானம் கூட்டுவஸ்துவாயிருக்கிற விஷயமும், அல்லது அப்படிப்பட்ட மருந்துசரக்கு சேர்த்துக் கூட்டப்பட்டிருக்கிற விஷயமும்;

(d) அப்படிப்பட்ட ஆகாரவஸ்து பானம் அல்லது மருந்துசரக்கைச் சேகரிக்கையிலாவது சித்தஞ்செய்கையிலாவது தடுக்கமுடியாதவகைக்கு சில அன்னிய பொருள்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அந்த விஷயமும்.

அக்கிரமமாய்ச் சேர்த்துக்கூட்டப்பட்ட ஆகாரவஸ்துக்களையாவது மருந்து சரக்குகளையாவது விற்பனைசெய்யக்கூடாதென்று தடுப்பது.

41. கிரயத்திற்கு வாங்குபவர் கேட்கிறமாதிரியான சம்பாரங்களைச் சேர்த்துக் கலக்கப்படாத யாதொரு கலப்பு ஆகாரவஸ்துவையாவது பானத்தையாவது கலப்பு மருந்து சரக்கையாவது எவரும் விற்கக்கூடாது:

ஆனால், யாதொரு ஆகாரவஸ்து பானம் அல்லது மருந்து சரக்கை ஒப்பிக்கும்போது வாங்குபவருக்கு மேற்படி பொருள் கலப்பிடமானதென்று ஒருவர் தெரிவித்திருந்தால், அப்படிப்பட்ட ஆகாரவஸ்து பானம் அல்லது மருந்து சரக்குடன் தீங்கல்லாத யாதொரு பண்டம் அல்லது சம்பாரம் சேர்க்கப்பட்டிருப்பது காரணமாக மேற்படி நபர் இந்தப்பிரிவின்படி குற்றஞ்செய்ததாக எண்ணப்படமாட்டார்.

ஆகாரவஸ்துக்களிலிருந்து யாதொரு பாகத்தை மோசடியாய் எடுப்பது கூடாதென்பது.

42. எவரும்—

(a) யாதொரு ஆகாரவஸ்து மாற்றப்பட்ட ஸ்திதியில் பிறருக்குத் தெரிவிக்கப்படாமலே அது விற்பனையாக வேண்டுமென்னும் எண்ணத்துடன் அதனுடைய மாதிரி, தன்மை அல்லது லக்ஷணத்தைத் தீங்குண்டாக்கும்படி கொடுக்கும்விதமாக அந்த வஸ்துவிலிருந்து அதன் யாதொரு பாகத்தை எடுக்கவுங்கூடாது;

(b) அப்படி மாற்றப்பட்ட யாதொருவஸ்துவை மாற்றின விஷயத்தைத் தெரிவிக்காமலே விற்பனை செய்யவுங் கூடாது.

பாகுபாடுசெய்து பார்ப்பதற்காக ஆகாரவஸ்துக்களையாவது மருந்து சரக்குகளையாவது கிரயத்துக்கு வாங்குவது.

43. அக்கிராசனாதிபதியானவர்-யாதொரு ஆகாரவஸ்துவையோ அல்லது மருந்து சரக்கையோ பாகுபாடுசெய்து பார்க்கவேண்டுமென்றும் எண்ணத்தோடு அதையேனும் அதில் எவ்வளவையேனும் தமக்கு விற்பனை செய்யவேண்டுமென்று அதன் விற்பனைக்காரரைக் கேட்கலாம்: மேலும், அதை கிரயத்திற்கு வாங்கியபிறகு—

(a) அந்த எண்ணத்தைக்குறித்து விற்பனைக்காரருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்;

(b) அந்தப்பொருளை மூன்று பாகங்களாகப் பிரித்து, அதில் ஒவ்வொன்றையும் அவ்விடத்திலேயே அப்போதே பிரத்தியேசப்படுத்தி அடையாளமிட்டு முத்திரைபோட்டாவது கட்டியாவது வைக்கவேண்டும்;

(c) மேற்படி பாகங்களில் ஒருபாகத்தை விற்றவரிடத்தில் கொடுக்கவேண்டும்.

(d) இனிமேல் ஒத்திட்டுப் பார்ப்பதற்காக ஒரு பாகத்தை வைத்திருக்கவேண்டும்.

(e) தமக்கு யுக்தமாகத்தோற்றினால் மூன்றாவது பாகத்தைக் கவர்ன்மெண்டு கமிகல் எக்ஸாமினர் என்றும்ரசாயனபரிசோதகரிடத்திலாவது இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் நியமிக்கும்பரிசோதகரிடத்திலாவது அனுப்பவேண்டும்

பாகுபாடுசெய்து பார்த்தபிறகு இன்னது செய்வது,

14. பாகுபாடுசெய்து பார்க்கையில் அல்லது பரிசோதித்துப் பார்க்கையில் இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்கு விரோதமாய் யாதொரு குற்றம் செய்ததாகத் தோற்றும்பட்சத்திலே, எதற்காக மாதிரி எடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த வஸ்துவை அக்கிராசனாதிபதியானவர் மாஜிஸ்டிரேக்குமுன் கொண்டுபோகலாம்; அதை இன்னது செய்யவேண்டுமென்பதைக் குறித்து மாஜிஸ்டிரேட் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறதை உத்தரவு செய்யவேண்டும்.

பால் விற்கிறவர்களுக்கு லைசென்ஸ்கொடுப்பது.

45. (1) எவராகிலும்-யாதொரு மியுனிஸிபாலிடிக்குள் பாலையாவது பாலினின்றும் எடுக்கப்படும் வெண்ணெய் முதலிய வஸ்துக்களையாவது விற்பதற்கோ அல்லது விற்பனைக்குவைத்திருப்பதற்கோ அக்கிராசனாதிபதியிடம் வந்து லைசென்ஸ் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, அவர் அந்தப்படி விற்கவுங்கூடாது, விற்பனைக்காக வைத்திருக்கவுங்கூடாது.

(2) அப்படிப்பட்ட லைசென்ஸைக் கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம்: அல்லது, யாதொரு ஷரத்துகளில் (வளவுகள் மியுனிஸிபல் சரஹத்துக்குள் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அந்த) வளவுகளின் அமைப்பைக்குறித்தும் காற்று வருவாயைக்குறித்தும் பாதுகாப்பைக்குறித்தும் மேல்விசாரணையைக்குறித்தும் பரிசோதனையைக்குறித்தும் அக்கிராசனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் திட்டங்களுக்குட்படுத்தியாவது மேற்படி லைசென்ஸைக்கொடுக்கலாம். லாமலேயாவது, பாலசர்ப்பராவானது எந்தப்பசுக்களிடமிருந்து கிடைக்கிறதோ அந்தப் பசுக்களை வைத்திருக்கும்

(3) அப்படிப்பட்ட ஒவ்வொரு லைசென்ஸும் எந்த ஸர்க்கார் கணக்கு வருஷத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த வருஷத்தின் கடைசியில் காலங்கடந்ததாகும்; எந்த ஷரத்துகளின்படி மேற்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டதோ அந்த ஷரத்துகளை எவ்விதமாயாகிலும் மீறிநடந்ததின் காரணமாகவாவது மியுனிஸிபாலிடிக்குள்ளே லைசென்ஸ்தாரர் விற்பனைசெய்த அல்லது விற்பனைக்காக வைத்திருந்த பாலின் விஷயமாகவோ பாலினின்றும் எடுக்கப்பட்ட வெண்ணெய் முதலிய வஸ்துக்களின் விஷயமாகவோ 40-வது அல்லது 42-வது பிரிவின்படிக்கான குற்றஞ்செய்தாரென்று தீர்மானிக்கப்பட்டிருப்பது காரணமாகவாவது அக்கிராசனாதிபதியானவர் - மேற்படி லைசென்ஸை எப்போதேனும் திருத்தலாம், ரத்துசெய்யலாம் அல்லது நிறுத்திவைக்கலாம்.

(4) இந்தப்பிரிவின்படி லைசென்ஸ்வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தின்மேல் உத்தரவு பிறப்பிக்கவும், விண்ணப்பம் வரப்பெற்றுக்கொண்ட பிறகு முப்பது தினத்துக்குள்ளாக அதை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கவும் அக்கிராசனாதிபதி அசட்டைபண்ணினால், விண்ணப்பதாரர்-எந்த ஸர்க்கார் கணக்கு வருஷகாலத்திற்காக லைசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த காலத்திற்கு யாதொரு ஷரத்துமில்லாமலே லைசென்ஸ் பெற்றிருப்பதாக எண்ணப்படுவார்.

(5) லைசென்ஸ் கொடுப்பதைக்குறித்துத் திட்டங்களேற்படுத்தியோ லைசென்ஸைக்கொடுப்பதில்லையென்றோ திருத்தியோ ரத்துபண்ணியோ நிறுத்திவைத்தோ இந்தப்பிரிவின்படி அக்கிராசனாதிபதியானவர் ஜாரிசெய்யும் ஒவ்வொரு உத்தரவும் எழுத்துமூலமாக இருக்கவேண்டியதோடுகூட அதற்குண்டான ஹேதுக்களை அதிற்கண்டெழுதவும் வேண்டும்; மேலும், அந்த உத்தரவினால் துன்பமடைந்தவரெவராவது அந்த உத்தரவைப் பெற்றுக்கொண்டபிறகு ஒருமாதத்திற்குள் மியுனிஸிபல் சங்கத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அதன்மேல் அவர்கள் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

1884-ம்ஹுத்து 4-வது ஆக்ட் 255-வது பிரிவின் திருத்தம்.

46. பிரதான ஆக்ட் 255-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் (iv) அடையாளமிட்ட பகுதிக்கும் இடையிலேயே அடியிற்கண்ட பகுதிகளை அமைத்துக்கொள்ளவேண்டும். அவையாவன:—

"(iv-a) கட்டிட நிவேசனங்களின் உபயோகசம்பந்தமாகவும் கட்டிடங்களைக் கட்டுவது புதுப்பிப்பது ஆகிய இவைகள் சம்பந்தமாகவும் தெருக்களை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும்.

"(iv-b) கறவைக் கால்நடைகளைப் பார்வையிடுவதைக் குறித்தும் மியுனிஸிபாலிடிக்குள்ளே பால்விற்கும் வியாபாரத்தையாவது பாலினின்றும் எடுக்கப்படும் வெண்ணெய் முதலிய வஸ்துக்களை விற்கும் வியாபாரத்தையாவது செய்துவரும் நபர்களின் அனுபோகத்திலுள்ள கால்நடைக் கொட்டில்களாகிலும் பாலினின்றும் வெண்ணெய் முதலியவை எடுக்கும் சாலைகளாகிலும் (மியுனிஸிபல் சரஹத்துக்குள் இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி) அவைகளைப் பார்வையிடுவதைக்குறித்தும், அவைகளின் அமைப்பைக் குறித்தும், காற்றுவருவாயைக்குறித்தும், அவைகளுக்கு விளக்குப்போடுவதைக் குறித்தும், அவைகளில் தண்ணீர் வடிவதற்காகவுள்ள ஏற்பாட்டைக் குறித்தும், ஜல சர்ப்பராவைக்குறித்தும்;

"(iv-c) பால் அல்லது பாலினின்றும் எடுக்கப்படும் வெண்ணெய் முதலிய வஸ்துக்களுக்காகவுள்ள கிடங்குகளையும் கடைகளையும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தியும் விற்பனைக்காக உத்தேசிக்கப்பட்ட பால் அல்லது அதினின்றும் எடுக்கப்படும் வஸ்துக்களை வைத்திருப்பதாக உபயோகிக்கப்படுகிற அல்லது மேலே சொன்ன நபர்களால் உபயோகிக்கப்படுகிற ஏனங்களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தியும்."

1884-ம்ஹுத்து 4-வது ஆக்ட் B-ஷெட்யூலின் திருத்தம்.

47. (1) B ஷெட்யூலைச்சேர்ந்த முதல் இரண்டு அம்சங்களுக்குப் பர்த்தியாக, அடியிற்கண்ட அம்சங்களை அமைத்துக்கொள்ளவேண்டும். அவையாவன:—

அரை வருஷத்திற்கு.

ரூ. அ. பை.

"இரண்டு அல்லது மேற்பட்ட குதிரைகளினால் இழுக்கும்படி அமைக்கப்பட்ட நாலு சக்கர வில்வண்டி ஒவ்வொன்றுக்கும், மோடார் பைஸிகில் (தானே இயங்கும் சக்தியமைந்த த்விசக்கரவண்டி) அல்லாத வேறே மோடார்வண்டி ஒவ்வொன்றுக்கும் 10 0 0

ரூ. அ. பை.

"ஒரு குதிரையினாலாவது இருஷபத்தினாலாவது எருதினாலாவது நாலடி நாலங்குல உயரத்திற்குட்பட்ட இரண்டு அல்லது மேற்பட்ட குதிரைகளினாலாவது இரண்டு அல்லது மேற்பட்ட இருஷபங்கள் அல்லது எருதுகளினாலாவது இழுக்கும்படி அமைக்கப்பட்ட நாலு சக்ர வில்வண்டி ஒவ்வொன்றுக்கும், மோடார் பைஸிகில் ஒவ்வொன்றுக்கும் 5 0 0

1884-ம்ஹுத்து 4-வதுஆக்ட் C ஷெட்யூலின் திருத்தம்.

(2) C ஷெட்யூலைச்சேர்ந்த முதல் இரண்டு அம்சங்களுக்குப் பர்த்தியாக அடியிற்கண்டஅம்சங்களை அமைத்துக்கொள்ள வேண்டும், அவையாவன:

ஷை அரை வருஷத்துக்கு வரி.

ரூ. அ. பை.

"இரண்டு அல்லது மேற்பட்ட குதிரைகளினால் இழுக்கும்படி அமைக்கப்பட்ட நாலுசக்ர வில்வண்டி 10 0 0

மோடார் பைஸிகிலல்லாத வேறே மோடார்வண்டி 10 0 0

ஒரு குதிரையினாலாவது இருஷபம் அல்லது எருதினாலாவது நாலடி நாலங்குல உயரத்திற்குட்பட்ட இரண்டு அல்லது மேற்பட்ட குதிரைகளினாலாவது இரண்டு அல்லது மேற்பட்ட இருஷபங்கள் அல்லது எருதுகளினாலாவது இழுக்கும்படி அமைக்கப்பட்ட நாலு சக்கர வில்வண்டி 5 0 0

மோடார் பைஸிகல் ... ... 5 0 0"

1884-ம்ஹுத்து 4-வதுஆக்ட் D-ஷெட்யூலின் திருத்தம்.

(3) D ஷெட்யூலைச்சேர்ந்த முதல் இரண்டு அம்சங்களுக்குப் பர்த்தியாக, அடியிற்கண்ட அம்சங்களை அமைத்துக்கொள்ளவேண்டும். அவையாவன:—

ரூ. அ. பை.

"நாலுசக்கர வில்வண்டி ஒவ்வொன்றுக்கும் மோட்டார் பைஸிகிலல்லாத வேறே மோடார்வண்டி ஒவ்வொன்றுக்கும் 0 8 0

"சுமை ஏற்றிக்கொண்டிருக்கிற சுமைவண்டி குலால்வண்டி, ஜட்கா ஒவ்வொன்றுக்கும், மோடார் பைஸிகில் ஒவ்வொன்றுக்கும் 0 4 0

1884-ம்ஹுத்து 4-வதுஆக்ட் 5-ம் அத்தியாயம் இந்த ஆக்டுக்குப் பிரயோகப்படுவது.

48. பிரதான ஆக்டைச் சேர்ந்த 5-ம் அத்தியாயத்தின் காரியங்களுக்காக, 12 முதல் 38 வரையில் (அவை இரண்டும் உட்பட) உள்ளபிரிவுகளும், 40 முதல் 45 வரையில் (அவை இரண்டும் உட்பட) உள்ளபிரிவுகளும் இந்த ஆக்டிற்கண்ட ஷெட்யூல்களும் பிரதான ஆக்டின் பாகமாக எண்ணப்படும்.

1-வது ஷெடியூல்

கட்டிட நிவேசனங்களைப்பற்றிய விதிகள்.

(12-வது பிரிவைப்பாக்க)

கட்டிட நிவேசனங்களை உபயோகிப்பதைக்குறித்துத் திட்டங்கள்.

(1) கட்டிடம் வீதியில் பிதக்கமாக வருவதாயிருக்குமானால், கட்டிடத்தின் முகப்பானது தெருவின் எல்லை ரேகைக்குச் சமமாய் நெடுகவாவது, மியுனிஸிபல் சங்கத்தார் உத்தரவு செய்கிறபடி ஷை எல்லை ரேகைக்குச் சற்றேறக்குறைய சமமாய் நெடுகவாவது இருக்கும்படிச் செய்வதற்கான ரூபமாகக் கட்டிட நிவேசனமிருந்தாலன்றி மற்றபடிக்கும்,

(2) ஷை நிவேசனமானது குளத்திற்கு முப்பது அடி தூரத்திற்குள்ளிருக்குமானால், வீட்டுக் கட்டிடத்திலிருந்து வருகிற சாக்கடைத் தண்ணீரானது குளத்தில்போய் விழாதபடித் தடுப்பதற்கான ஏற்பாடுகளைத்தாம் செய்வதாக அதன் சொந்தக்காரர் அக்கிராசனாதிபதிக்குத் திருப்தி செய்தாலன்றி மற்றப்படிக்கும்;

(3) கட்டப்போகிற கட்டிடமானது பொதுவான கட்டிடமாகவாகிலும் குடியிருப்பு வீடாகவாகிலும் குடிசையாகவாகிலுமிருக்குமானால்—

(a) நிவேசனமானது உலர்ந்திருக்கிறதென்றும் நன்றாய் நீர்வடியச் செய்யப்பட்டிருக்கிறதென்று அல்லது அப்படி நீர்வடியச்செய்யப்படுவதற்குத் தகுந்ததாயிருக்கிறதென்றும் பிரதேச கவர்ன்மெண்டார் இதற்காக நியமிக்கிற உத்தியோகஸ்தர் ஸெர்டிபை செய்திருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(b) நிவேசனமானது குளம் தூர்த்த இடமாயிருக்கும்பட்சத்தில் அல்லது குப்பை கூல முதலியவற்றாலாவது சாக்கடைச்சேறு முதலிய கசுமாலங்களாலாவது நிரப்பப்பட்டாகிலும் அவைகளைச் சேர்த்துவைப்பதற்காக உபயோகிக்கப்பட்டாகிலுமிருக்கும்பட்சத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் இதற்காக நியமிக்கிற உத்தியோகஸ்தர் ஷை நிவேசனத்தைப் பரிசோதித்து, சுகாதாரவிஷயமாய்ப் பார்க்கும்போது அது கட்டிடங் கட்டுவதற்குத் தகுதியாயிருக்கிறதென்று ஸெர்டிபிகேட் கொடுத்திருந்தாலன்றி மற்றப் படிக்கும்.

(c) நிவேசனத்தின்மேல் எவ்வித கட்டிடம் கட்டுவதாய் உத்தேசிக்கப்படுகிறதோ அவ்விதக் கட்டிடத்திற்குத் தகுதியானவையென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுகிற சுகாதார விஷயமான ஏற்பாடுகள் அமைக்கப்படுவதற்கு இடங்கொடுக்க ஷை நிவேசனமானது போதுமானதாயிருந்தாலன்றி மற்றப் படிக்கும்,

(4) முழுவதுமாவது சிறிதுமட்டிலுமாவது மலைச்சாரலில் தோண்டப்பட்டிருக்கிற நிவேசனத்தில் கட்டிடம் கட்டுவதாயிருக்குமானால், பூமி சாயும்போது மனிதர்களுக்காவது சொத்துக்காவது அபாயம் நேரிடாமல் தடுப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளை ஷை நிவேசனத்திலும் கட்டிடத்திலும் செய்ய அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர் உத்தேசித்திருப்பதாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் இதற்காக நியமிக்கிற உத்தியோகஸ்தர் ஸெர்டிபை செய்திருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

எந்தத்துண்டு நிலத்தையும் கட்டிடம் கட்டுவதற்காகவேண்டிய நிவேசனமாய் உபயோகிக்கக்கூடாது.

2-வது ஷெடியூல்.

கட்டிட விதிகள்.

(12, 14-வது பிரிவுகளைப்பார்க்க.)

1-ம் பாகம்.—பொதுவாய்க் கட்டிடங்களைக்குறித்து.

தரைமட்டம்.

1. பூமிமட்டத்திலிருந்து கட்டப்பட்டாவது புதுப்பிக்கப்பட்டாவதிருக்கிற பிரதி கட்டிடத்தின் தரை அல்லது அடித்தரையைக்கட்டிடத்திலிருந்து வரும் சாக்கடைத்தண்ணீர் அந்தந்த காலத்திலிருக்கிற அல்லது கட்டுவதற்கு ஏற்பாடாயிருக்கிற யாதொரு பொதுவான சாக்கடைக்காலிற்கொண்டுபோய் விடுவதற்கு அனுகூலமாயிருக்கும்படியான மட்டத்திலே ஷை சாக்கடைத்தண்ணீரை நன்றாய் வடியச்செய்வதற்குப் போதுமான ஒரு சாக்கடைக்காலைக் கட்டுவதற்கு அனுகூலமாயுள்ள மட்டத்தில் கட்டவேண்டும்.

கட்டிட வரிசைக்கும் தெருவின் எல்லைரேகைக்குமுள்ள தூரம்

2. இந்த ஆக்ட் வழங்கியதற்குப் பிற்பாடு நிருமிக்கப்பட்ட யாதொரு தெருவிலே கட்டிட வரிசைக்கும் தெருவின் எல்லை ரேகைக்குமுள்ள தூரமாவது நாலடிக்குக் குறையாமலிருக்கவேண்டும்.

2-ம் பாகம்.—பொதுவாய்க் கல்கட்டிடங்களைக்குறித்து.

அஸ்திவாரம்.

3. (1) அக்கிராசனாதிபதியினுடைய அனுமதியுடனன்றி மற்றப்படி:—

(a) ஒரு கல்கட்டிடத்தின் அஸ்திவாரமானது இயற்கை பூமியின்மேல் போட்டிருக்கவேண்டும்.

(b) 9. 11-வது விதிகளில் உதகரிக்கப்படும் தரை-தாரிசு (ஏதாவதிருந்தால்) அது ஆகிய இவைகளின்மேலிருக்கும் பாரத்தை கணக்கில் சேர்த்துகொண்டபிறகு சதுர அடி ஒன்றுக்கு ஒரு டன்னுக்கு மேற்பட பூமியின்மேல் அழுத்தாமலிருக்கும் வகைக்கு அஸ்திவாரம் பரப்பியிருக்கவேண்டும்.

(2) அஸ்திவாரத்தின் மட்டமானது - அக்கிராசனாதிபதிக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிறபடி இருக்கவேண்டும்.

அடி அஸ்திவாரம்.

4. கல் கட்டிடத்தின் அடி அஸ்திவாரமானது அதிசமீபத்திலுள்ள தெருமத்தியின் மட்டத்துக்குமேல் அதமம் பதினெட்டங்குலம் இருக்கவேண்டும்.

சுவர்களுக்கு ஆதாரங்கள்.

5. கல் கட்டிடத்திலுள்ள பிரதி சுவரையும் தகுதியான ஆதாரங்கள் மேல் நிற்கும்படியாய்க் கட்டவேண்டும்.

வெளிச்சுவர்கள்.

6. கல் கட்டிடத்தின் வெளிச்சுவர்களை செங்கல்லாலாவது வேறே அழுத்தமானதும் தீப்பற்றும் தன்மையில்லாததுமான சாமானாலாவது கட்டவேண்டும்.

சுவர்களைப் பலமாய்க்கட்டுவது.

7. கல் கட்டிடத்தின் சகல சுவர்களையும் தகுந்தபடி பலமாய்க் கட்டவேண்டும்.

ஒரு அடுக்குக்குமேலிருக்கும் கட்டிடத்தின் சுவர்கள் விஷயத்திலே விசேஷநிபந்தனைகள்.

8. கல் கட்டிடமானது உயரத்தில் ஒரு அடுக்குக்கு மேற்பட்டிருந்தால் பிரதிசுவரும்-அபாயம் நேரிடாமலிருக்குமென்று நிச்சயங்கொள்வதற்கு எவ்வளவு கனமாயிருப்பது அவசியமென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுகிறாரோ அவ்வளவு கனமாயிருக்கவேண்டும்.

தரை.

9. பிரதி கல் கட்டிடத்தின் தரைகளையும் பிராணிகளின் பாரத்துக்காகச் சதுர அடி ஒன்றுக்கு ஐம்பத்தாறு பவுண்டுக்குக்குறையாமலிருக்கும்படி விட்டு, அவைகளுக்கு மேல் பாரம் எவ்வளவு அதிகமாய்க்கொண்டுபோகப்படுமோ அவ்வளவையும் அபாயமில்லாமல் தாங்கும்படியாய்க் கட்டவேண்டும்.

தூலங்களும் கர்டர்களும்.

10. (1) கல் கட்டிடத்திலுள்ள சகல தூலங்களும் கர்டர்களும் உறுதியாயிருப்பதற்குபோதுமான அளவுக்கு அகலமுள்ள செங்கற்கட்டுவேலையினலாவது கல் அல்லது வேறே அழுத்தமான சாமானைக்கொண்டாவது ஷை தூலங்களையும் கர்டர்களையும் பலப்படுத்தவேண்டும்.

(2) ஒரு சுவரின்மேல் தூலத்தையாவது கர்டரையாவது சுமத்தும்போது அக்கிராசனாதிபதியினுடைய அனுமதியில்லாமல் அதை அந்த சுவரின் கனத்தில் முக்காலளவுக்கு குறைந்த அளவாகப் பொருந்தும்படி வைக்கக்கூடாது.

தாரிசு.

11. தாரிசின் பாரத்தோடுகூட சதுர அடி ஒன்றுக்கு நாற்பது பவிண்டுக்கு குறையாமல் அக்கிராசனாதிபதியினுடைய உத்தரவிற் கண்டிருக்கிற பாரத்தைத் தாங்கும்படியாகத் தாரிசு போடவேண்டும்.

3-ம்பாகம்.—குடியிருப்பு வீடுமுதலிய வீட்டுக்கட்டிடங்களைக் குறித்து.

கட்டிடத்தின் உயரம்.

12. ஐம்பது அடிக்குக்குறைவான அகலமுள்ள ஒரு தெருவைச் சார்ந்திருக்கிற யாதொரு கல் கட்டிடத்தின் உயரமானது ஷை தெருவிலும் அகலத்திற்கு ஒன்றரைமடங்கைவிட எந்த விஷயத்திலும் அதிகரிக்கக்கூடாது.

குடியிருப்பு அறைகளின் அளவும் அவைகளுக்குக் காற்று வருவாய்களும்.

13. வீட்டுக்கட்டிடத்தில் மானிடவாசத்திற்காக உத்தேசிக்கப்படுகிறபிரதி அறையும்.

(a) ஒவ்வொரு பாகத்திலும் தரைமுதல் கூரையைத் தாங்குகிற தூலத்தின் அடிப்பக்கம் வரையில் அளந்தால் உயரத்திலே ஒன்பது அடிக்குக் குறையாமலிருக்கவேண்டும் ;

(b) பரிஷ்காரமாய் எண்பது சதுர அடிக்குக்குறையாத விஸ்தீரணத்தையுடையதாயிருக்கவேண்டும்.

(c) காற்றுபோவதற்காக நேராய் வெளிப்புறத்திலாவது தாழ்வாரத்திலாவது திறக்கும்படியாகக் கதவுகளாகிலும் ஜன்னல்களாகிலும் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

கட்டிடத்தின் பின்புறத்தில் வெளியான இடம்.

14. (1) பிரதி வீட்டுக்கட்டிடத்தின் பின்புறமானது-இருபது அடி அகலத்துக்குக் குறையாமல் பொதுஜன உபயோகத்திற்கென்று பிரத்தியேகமாய் விட்டுவைத்திருப்பதனால் வெருசாய்க் கட்டப்படாமலிருப்பதுபோலுள்ள யாதொரு வெளியான சதுக்கத்தையாவது அதுபோன்ற வேறே இடத்தையாவது சார்ந்திருந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட பிரதி கட்டிடத்தின் பின்புறத்திலும் கட்டிடத்தின் முழு அகலத்துக்கு வியாபித்து அந்தக் கட்டிடத்திற்கே உரியதாயுள்ள வெளியான இடமிருக்கவேண்டும்.

(2) மேலேகண்ட வெளியான இடத்தின் குறுக்காய் ஷை கட்டிடத்தின் பிரதி பாகத்துக்கும் அந்தப்பாகத்துக்கு நேரெதிரிலிருக்கும் கட்டிடம் அல்லது நிலத்தின் எல்லை ரேகைக்குமாவது (சுவர் எல்லையாயிருக்கும்பட்சத்தில்) எல்லைச்சுவரின் உள்ளோரத்திற்குமாவது அதமம் பத்து அடி தூரம் இருக்கவேண்டும்.

ஒழுங்கற்ற நிவேசனத்தின்விஷயத்தில் 14-வது விதியைக் கட்டாயப்படுத்தாமல்விடுவது.

15. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குமுன்னே நிருமிக்கப்பட்ட யாதொரு தெருவிலே, இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குமுன் வீட்டுக்கட்டிடம் கட்டியிருந்த ஒரு நிவேசனத்தின்மேல் யாதொரு நபர் வீட்டுக்கட்டிடம் கட்ட இஷ்டப்பட்டால், 14-வதுவிதியிற்கண்ட அளவின் பிரகாரம் கட்டிடத்தின் பின்புறத்திலே வெளியான இடம் ஏற்படுத்துவது சாத்தியமாயிராதபடி மேற்கண்ட நிவேசனம் அமைந்திருக்கும்பட்சத்தில் அக்கிராசனாதிபதி ஷை விதியிலுள்ள நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்தாமல் விடலாம் :

ஆனல்—

(a) பிரஸ்தாப விஷயத்தின் கூலாம்சங்களையெல்லாம் அனுசரித்தபிறகு வெளியான இடம் எவ்வளவு விடுவது சாத்தியமென்று மியுனிஸிபல் சங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்களோ அவ்வளவு வெளியான இடம் விட்டுவைக்கவேண்டும் ; மேலும்,

(b) கல் சட்டிடங்களையாவது தாழ்வாரங்களையாவது நிவேசனத்தின் மொத்த விஸ்தீரணத்திலே மூன்றில் இரண்டுபங்குக்கு மேற்பட்ட பாகத்தில் கட்டக்கூடாது.

உட்புறத்திலுள்ள முற்றங்கள்-வெளிப்புறத்திலுள்ள வெளியான இடங்கள் இவைகளின் மட்டத்தை உயர்த்துவதும் அவைகளைத்திறந்து வைப்பதும்.

16. (1) சாக்கடைத்தண்ணீர் சுலபமாய்த் தெருவில் போய்க் கலப்பதற்கு அனுகூலமாயிருக்கும்படி, உட்புறத்திலுள்ள பிரதி முற்றத்தையும் அதி சமீபத்திலுள்ள தெருமத்தியின் மட்டத்துக்குமேல் அதமம் ஒரு அடி உயர்த்தவேண்டும்.

(2) உட்புறத்திலுள்ள பிரதி முற்றத்தையும் அப்படிப்பட்ட பிரதி வெளியான இடத்தையும் மேலே மூடாமல் முழுதும் திறந்துவைக்கவேண்டும் ; அன்றியும், அதற்குள்ளேயாகிலும் மேலேயாகிலும் அதன்மேல் பிதுங்கிவரும்படியாயும் எந்தக் கட்டுக்கோப்புரம் ஏற்படுத்தக்கூடாது.

4-ம் பாகம்.—கல் கட்டிடங்களுக்காகவேண்டிய நிவேசனங்களை அங்கீகரிப்பதற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களைக்குறித்தும் அவைகளைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதி வேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்களைக்குறித்தும்.

நிவேசனத்தை அங்கீகரிப்பதற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்ப நமூனா.

17. (1) கல் கட்டிடத்திற்காக வேண்டிய யாதொரு நிவேசனத்தை அங்கீகரிப்பதற்காகச் செய்துகொள்ளும் பிரதி விண்ணப்பத்தையும் (கட்டணமில்லாமல் அக்கிராசனாதிபதி சவதரிக்கவேண்டிய) அச்சிட்ட நமூனாவில் எழுதவேண்டும்; மேலும், நிவேசனம் எந்த இடத்திலிருக்கிறதோ அதையும் - வரிப்புஸ்தகத்தில் அதற்குக் கொடுத்திருக்கும் நம்பரையும்-அதன் அகல நீள அளவையும்-மியுனிஸிபல் சங்கத்தார் நிர்ணயிக்கிற வேறே விவரங்களையும் ஷை விண்ணப்பத்தில் கண்டெழுதவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் நிவேசன நக்ஷாவை, அடியொன்றுக்கு அங்குலத்தில் ஐம்பதில் ஒரு பங்குக்குக்குறையாத ஒரு பரிமாண வீதப்படி யெழுதி, அதை இரட்டைப்பிரதியாக அனுப்பவேண்டும் ; மேலும், அதில்—

(a) பிரஸ்தாப நிவேசனத்தின் எல்லைகளையும்,

(b) சமீபத்திலிருக்கிற தெருக்களைநோக்க பிரஸ்தாப நிவேசனமிருக்குமிடத்தையும்,

(c) எந்தத்தெருவில் கட்டிடம் கட்ட உத்தேசித்திருக்கிறதோ அந்தத் தெருவின் பெயரையும்.

(d) உத்தேசித்திருக்கிற ஜலபாதை மறைவிடங்கள் - சாக்கடைக்கால்கள் - சாக்கடைக்குழிகள் - லாயங்கள் - கால்நடைக் கொட்டில்கள் - பசுமாட்டுத்தொழுவங்கள் - கிணறுகள் - கட்டிடத்தைச்சேர்ந்த இதர அனுபந்தங்கள் ஆகிய இவைகளிருக்கும் இடத்தையும் இவைகளின் அகல நீள அளவையும்,

(e) மியுனிஸிபல் சங்கத்தார் நிர்ணயிக்கிற வேறே விவரங்களையும், கண்டெழுதவேண்டும்.

கட்டிடம் கட்டுவதற்காக அனுமதி வேண்டுமென்று செய்துகொள்ளும் நமூனா.

18. (1) யாதொரு கல் கட்டிடத்தைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதி வேண்டுமென்று செய்துகொள்ளும் பிரதி விண்ணப்பத்தையும் (கட்டணமில்லாமல் அக்கிராசனாதிபதி சவதரிக்கவேண்டிய) அச்சிட்ட நமூனாவில் எழுதவேண்டும்; மேலும், கட்டிடத்தின் விவரத்தையும், அதன் அகல நீள அளவையும்-மியினிஸிபல் சங்கத்தார் நிர்ணயிக்கிற வேறே விவரங்களையும் ஷை விண்ணப்பத்தில் கண்டெழுதவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் கட்டிட நக்ஷாவையும் எலிவேஷன்களையும் ஸெக்ஷன்களையும், அடியொன்றுக்கு அங்குலத்தில் எட்டில் ஒருபங்குக்குக் குறையாத ஒரு பரிமாண வீதப்படி சுத்தமாகவும் சரியாகவும் எழுதி, அதை இரட்டைப் பிரதியாக அனுப்பவேண்டும் ; மேலும் அந்த நக்ஷாவிலே—

(a) கட்டிடத்தின் அஸ்திவாரத்தின் மட்டங்களையும் அகலத்தையும்,

(b) கட்டிடத்திலுள்ள அடித்தரையின் மட்டத்தையும்,

(c) கட்டிடம் அல்லது வளவிலுள்ள சகல முற்றங்கள் - வெளியான இடங்கள் ஆகிய இவைகளின் மட்டத்தையும், அதிசமீபத்திலுள்ள தெரு மத்தியின் மட்டத்தை அனுசரித்துக் கட்டிடங்களின் அடி அஸ்திவார மட்டத்தையும், கண்டெழுதவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் விவரத்தில் அடியிற்கண்ட அம்சங்களைக் குறித்துப் பூர்த்தியாய் எழுதியிருக்கவேண்டும். அந்த அம்சங்களென்னவென்றால்:—

(i) கட்டும்விதமும் அவைகளுக்காக உபயோகப்படுத்தப்போகிற சாமான்களும்,

(ii) நிலத்தின் மேற்புறத்தில் சேருகிற தண்ணீரைக் கொண்டுபோகும்விதமும்,

(iii) கக்கூஸ்களுக்குப்போகத் தோட்டிகளுக்குக் கிடைக்கும் வழியும்.

(iv) எந்தக் காரியத்திற்காகக் கட்டிடத்தை உபயோகிக்க உத்தேசிக்கப்படுகிறதோ அந்தக்காரியமும்,

(v) அந்தக் கட்டிடத்தை, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்குக் குடியிருப்புவீடாகவாவது, இருபதுபேருக்கதிகமாய் வேலையில் அமர்ந்திருக்கும் யாதொரு வர்த்தகம் அல்லது தொழிலை நடத்துவதற்கான இடமாகவாவது பொது ஜனங்கள் நடமாடுகிற இடமாகவாவது உபயோகிக்க உத்தேசித்தால், அந்தக் கட்டிடத்தின் உள்ளேபோவதற்கும் அதிலே வெளியேவருவதற்கும் இருக்கிறவழியும்.

விவரணம்:—அந்தக்கட்டிடத்தையாவது அதன் பாகத்தையாவது, பிரதான ஆக்ட் 188-வது பிரிவிற் கண்டிருக்கிற காரியங்களுள் எதற்காகவாகிலும், லாயம்-கால்நடைக் கொட்டில் அல்லது பசுமாட்டுத்தொழுவமாகவாகிலும் உபயோகப்படுத்த உத்தேசித்திருந்தால், அப்புடி உத்தேசித்திருப்பதை வெளிப்படையாய் எழுதவேண்டும்.

நக்ஷாக்களில் கையெழுத்து போடுவது.

19. விண்ணப்பதாரர் நக்ஷாக்களில் கையெழுத்துபோடவேண்டும்.

அவாயமாய் வேண்டியவைகளையும் ஆட்சேபனைகளையும் விவரித்துச் சொல்வது.

20. (1) யாதொரு நிவேசனத்தைக் கல்கட்டிடம் கட்டுவதற்காக அங்கீகரிக்கலாமாவென்பதையாகிலும் கல்கட்டிடம் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதிகொடுக்கலாமாவென்பதையாகிலும், தீர்மானிப்பதற்குமுன்னே, என்ன சங்கதிகளும் தஸ்தவேஜுகளும் அவசியம் வேண்டியதென்று காணப்படுகிறதோ அந்த சங்கதிகளையும் தஸ்தவேஜுகளையும், என்ன ஆட்சேபனைகள் செய்வது அவசியமென்று காணப்படுகிறதோ அந்த ஆட்சேபனைகளையும் ஒரே கட்டளை மூலமாய்க் கேட்கவேண்டும்; அதைக்குறித்து விண்ணப்பதாரருக்கு எவ்வளவு சீக்கிரத்தில் சங்கதி தெரிவிக்கக்கூடுமோ எவ்வளவு சீக்கிரத்தில் தெரிவிக்கவேண்டும்.

(4) 14-வது பிரிவின்படி நிவேசனத்தை அங்கீகரிப்பதற்காகச் செய்துக்கொண்ட விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட தேதிமுதல் 30 தினத்திற்குள்ளாக, அக்கிராசனாதிபதியானவர்:—

(a) இந்த ஷெட்யூலிற்சொல்லியிருக்கிற விஷயங்களைக்குறித்து அதன்படி வரப்பெற்றுக்கொண்ட தஸ்தவேஜுகளில் முன்னதாய்த் தெரிவிக்கப்பட்டிராத யாதொரு சங்கதியைத் தமக்குச் சவதரிக்க வேண்டுமென்றாவது,

(b) நிவேசனத்தை அங்கீகரிப்பதன் விஷயமாகச் சட்டப்படி செய்யத்தக்க ஆட்சேபனைகள் ஒன்றுமில்லையென்று தமக்குத் திருப்தியுண்டாக்கவேண்டுமென்றாவது,

விண்ணப்பதாரைக் கேட்கலாம்.

(3) 14-வது பிரிவின்படி வேலையைச் செய்துமுடிக்க அனுமதிவேண்டுமென்று செய்துகொண்ட விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட தேதிமுதல் 30 தினத்திற்குள்ளாக அக்கிராசனாதிபதியானவர்:—

(i) இந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற விஷயங்களைக்குறித்து, அதன்படி வரப்பெற்றுக்கொண்ட தஸ்தவேஜுகளில் முன்னதாய்த் தெரிவிக்கப்பட்டிராத யாதொரு சங்கதியையாவது, அந்தப்பிரிவில் நிர்ணயித்திருந்தும் அனுப்பப்பட்டிராத யாதொரு தஸ்தவேஜையாவது தமக்குச் சவதரிக்கவேண்டுமென்றாகிலும்,

(ii) வேலையைச்செய்து முடிப்பதற்கு அனுமதி கொடுப்பதன் விஷயமாகச் சட்டப்படி செய்யத்தக்க ஆட்சேபனைகள் ஒன்றுமில்லையென்று தமக்குத்திருப்தி யுண்டாக்கவேண்டுமென்றாகிலும்,

விண்ணப்பதாரரைக் கேட்கலாம்.

(4) (2) அல்லது (3) குறிப்பிட்ட உபவிதியின்படி சவதரிக்கவேண்டிய யாதொரு சங்கதியாவது தஸ்தவேஜாவது அபூர்ணமாயிருக்கிறதென்றாகிலும் குறைவானதாயிருக்கிறதென்றாகிலும் அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுவாராகில் அவர்-அதை வரப்பெற்றுக்கொண்ட தேதிமுதல் 30 தினத்திற்குள்ளாக, இன்னும் சங்கதியையோ தஸ்தவேஜுகளையோ சவதரித்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்கலாம்.

(5) (2), (3) அல்லது (4) குறிப்பிட்ட உபவிதியின் பிரகாரம் செய்த யாதொரு உத்தரவின்படி நான்குமாத காலத்திற்குள் நடவாவிட்டால், 14-வது பிரிவின்படி வரப்பெற்றுக்கொண்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்படாதது போல எண்ணப்படும்.

அங்கீகரித்த நக்ஷாக்களில் கையெழுத்து போடுவது.

21. அக்கிராசனாதிபதியானவர் யாதொரு நிவேசன நக்ஷாவை அங்கீகரித்தாலும், யாதொரு வேலையைச் செய்துமுடிக்க அனுமதிகொடுத்தாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த நிவேசன நக்ஷாவிலாவது மேற்படி வேலையின் அங்கீகாரமான நக்ஷாக்களிலாவது கையெழுத்து செய்யவேண்டும்.

5-ம் பாகம்.—பொதுவாய்க் குடிசைகளைக்குறித்து.

குடிசைக்கும் கல் கட்டிடத்துக்குமுள்ள தூரம்.

22. அக்கிராசனாதிபதியினுடைய அனுமதியுடனன்றி மற்றபடி குடிசையின் எந்தப் பாகத்தையும கட்டிடத்திலிருந்து ஆறு அடி தூரத்திற்குள்ளாகப் போட்டுக் கொள்ளக்கூடாது.

ஆனால், யாதொரு விஷயத்திலே கல்லால் வெளிக்கட்டிடங்கள் கட்டிக்கொள்ள அனுமதி கொடுக்கத்தக்கவைகளுக்குள் குடிசைகள் போட்டுக்கொள்வதற்கு இந்த விதியினால் தடையுண்டாகமாட்டாது.

உயரம்.

23. எந்தக் குடிசையும் ஒரு அடுக்குக்கு மேலிருக்கவுங்கூடாது, அடி அஸ்திவாரத்தின் மேல்மட்டத்திலிருந்து இறவாணமும் சுவரும் சேருகிற இடம்வரையில் அளந்தால் பன்னிரண்டு அடி உயரத்திற்கு மேற்பட்டிருக்கவுங்கூடாது.

அடி அஸ்திவாரம்.

24. குடிசையின் அடி அஸ்திவாரத்தை, அதி சமீபத்திலுள்ள தெரு அல்லது பாதை மத்தியின் மட்டத்துக்குமேல் அதமம் ஒரு அடி உயர்த்தவேண்டும்.

6-ம் பாகம்.—குடிசைகள் போட்டாகிலும் குடிசைகள் போட்டுக்கொள்வதற்காகப் பிரத்தியேகமாய் வைக்கப்பட்டாகிலுமிருக்கிற நிலத்தின்மேலுள்ள குடிசைகளைக்குறித்து.

தொடர்ச்சியாயுள்ள ரேகைகள்.

45. அக்கிராசனாதிபதி நிர்ணயித்தும் பூமியின்மேல் எல்லைக் குறிப்போட்டும் எல்லை ரேகையின்படி, குடிசைகளைத் தொடர்ச்சியாகவும் வரிசையாகவும் அமைக்கவேண்டும்.

பாதைகள்.

26. 25-வது பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்ட எல்லை ரேகையானது தெருவின் எல்லை ரேகையோடு ஒத்திராவிட்டால், மேலேசொன்னபடி நிர்ணயிக்கப்பட்ட எல்லை ரேகையைச் சார்ந்திருக்கும் குடிசை வரிசைகளுக்கு மத்தியில் ஒரு இறவாணத்திலிருந்து மற்றொரு இறவாணத்திற்கு அளந்து பார்த்தால் அதமம் பன்னிரண்டு அடியுள்ள ஒரு பாதை விட்டுவைக்கவேண்டும்.

பாதைகளின் உபயோகம்.

27. 26-வது பிரிவிற்கண்ட சகல பாதைகளும் ஒருவருக்கேயுரிய சொத்தாயிருக்கும்; அவைகள் வழியாய்க் கட்டை வண்டிகள் அனுப்புவதற்கோ, இந்த ஆக்டிலுள்ள காரியங்களில்எதற்காகவாவது அவைகளை உபயோகிப்பதற்கோ மியுனிஸிபல் அதிகாரிகளுக்கு அவைகள் விஷயமாகப் பாத்தியதையுண்டு.

முற்றம்.

28. 25-வது விதியில் என்ன சொல்லியிருந்தபோதினும் பாதகமில்லாமலே, அக்கிராசனாதிபதியினுடைய அனுமதியைப் பிரத்தியேகமாகப் பெற்றுக்கொண்டு, குடிசைகள்-முற்றம் ஆகிய இவைகளின் மொத்த விஸ்தீர்ணத்தில் அதமம் கால்பங்கு அளவுள்ள ஒரு வெளியான முற்றம் ஏற்படும்படி குடிசைகள் போடலாம்.

இடம்.

29. 28-வது விதியிற் சொல்லியிருக்கும் குடிசைகள் விஷயம் தவிர மற்ற விஷயங்களிலே, சகல குடிசைகளுக்கும் மத்தியில் ஒரு இறவாணத்திலிருந்து மற்றொரு இறவாணத்துக்கு அளந்துபார்த்தால் அதமம் மூன்றடி அளவுள்ள இடம் விட்டுவைக்கவேண்டும்.

7-ம் பாகம்.—குடிசைகளைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதிவேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்களைக்குறித்து.

குடிசையைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதி வேண்டுமென்றுசெய்துகொள்ளும்விண்ணப்பம்.

30. (1) குடிசையைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதிவேண்டுமென்று செய்துகொள்ளும் பிரதி விண்ணப்பத்தையும், கட்டணமில்லாமல் அக்கிராசனாதிபதி சவதரிக்கவேண்டிய அச்சிட்ட நமூனாவில் எழுதவேண்டும்.

(2) அந்தக் குடிசையையாவது அதன் பாகத்தையாவது பிரதான ஆக்ட் 188-வது பிரிவிற்கண்டிருக்கிற காரியங்களுள் எதற்காகவாகிலும், லாயம்-கால்நடைக் கொட்டில்-அல்லது பசுமாட்டுத் தொழுவமாகவாகிலும் உபயோகப்படுத்த உத்தேசித்திருந்தால், அப்படி உத்தேசித்திருப்பதை மேற்படி விண்ணப்பத்தில் வெளிப்படையாய்க் காணவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் நிவேசன நக்ஷாவில், அந்த குடிசையையும், தெருவிலிருந்து அதற்குப்போகும் வழியையும், மியுனிஸிபல் சங்கத்தார் நிர்ணயிக்கிற வேறே விவரங்களையும் கண்டெழுதவேண்டும்.

நூதனமாய்ச் சங்கதி தெரிவிக்க வேண்டுமென்றாவது நிவேசன நக்ஷா அனுப்பவேண்டுமென்றாவது கேட்க அக்கிராசனாதிபதிக்குள்ள அதிகாரம்.

31. (1) அக்கிராசனாதிபதியானவர்—

(a) முன்னதாய்த் தெரிவிக்கப்பட்டிராத வேறே நூதன சங்கதியைத் தமக்குத் தெரிவிக்கவேண்டுமென்றாகிலும், சரியான நிவேசன நக்ஷாவை யனுப்பவேண்டுமென்றாகிலும்,

(b) வேலையைச் செய்து முடிப்பதற்கு அனுமதி கொடுப்பதன் விஷயமாகச் சட்டப்படி செய்யத்தக்க ஆட்சேபம் ஒன்றுமில்லையென்று தமக்குத் திருப்தியுண்டாக்கவேண்டுமென்றாகிலும்,

விண்ணப்பதாருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சவதரிக்கவேண்டிய யாதொரு சங்கதியாவது நக்ஷாவாவது அபூர்ணமாயிருக்கிறதென்றாகிலும் குறைவானதாயிருக்கிறதென்றாகிலும் அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுவாராகில், அவர் இன்னும் சங்கதியையோ நூதனமாய் நக்ஷாவையோ சவதரித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்கலாம்.

(3) (1) அல்லது (2) குறிப்பிட்ட உபவிதியின் பிரகாரம் செய்த யாதொரு உத்தரவின்படி இரண்டுமாத காலத்திற்குள்ளாக நடவாவிட்டால், 28-வது பிரிவின்படி வரப்பெற்றுக்கொண்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்படாததுபோல் எண்ணப்படும்.

8-ம் பாகம்.—கட்டிடங்களை மாற்றிக்கட்டுவதற்கும் அவைகளை விஸ்தாரப்படுத்துவதற்கும் பிரயோகப்படுவதைக்குறித்து.

17 முதல் 21 வரையிலுள்ள விதிகளையாவது 30, 31-வது விதிகளையாவது பிரயோகிக்கும் விஷயத்தைக்குறித்து வரையறை.

32. சந்தர்ப்பத்துக்கேற்றபடி 17 முதல் 21 வரையிலுள்ள விதிகள் அல்லது 30, 31-வது விதிகள்-அடியிற்கண்ட வேலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகள் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, கட்டிடத்தை எவ்விதமாய் மாற்றிக் கட்டுவதற்காகிலும் அதை விஸ்தாரப்படுத்துவதற்காகிலும் பிரயோகப்படமாட்டா. மேற்படி வேலைகளென்னவென்றால் :—

(a) கூரை அல்லது வெளிப்புறத்துச் சுவர் அல்லது குறுக்குச்சுவர் கட்டுவது.

(b) கட்டிடத்திலே, கூரைமேலிருக்கும் புகைக்கூடு அல்லது சிம்னியை முழுமையுமாவது பெரும்பாலுமாவது இடித்துவிட்டபிறகு மீண்டும் கட்டுவதாகிய வேலை அடங்கிய எவ்வித மராமத்துகளும்;

(c) கட்டிடத்திலிருந்து சாக்கடைத்தண்ணீர் வடிவதற்கான சாதகத்துக்காகிலும் அதன் பந்தோபஸ்துக்காகிலும் பாதகம் உண்டாக்கத்தக்க விதமாய் அந்தக் கட்டிடத்தின் உட்புறத்து ஏற்பாடுகளிலே செய்யும் வேறே யாதொரு மாறுதல்;

(d) யாதொரு கட்டிடம், அறை, வெளிக்கட்டிடம், அல்லது வேறே கட்டுக்கோப்பைச் சேர்ப்பது.

அவசரமான விஷயங்களில் வேலைசெய்ய ஆரம்பிக்க அங்காமியாய் அனுமதி கொடுப்பது.

33. (1) யாதொரு நபர் தம்மால் தவிர்க்கமுடியாத காரணங்களால் நேரிடுகிற யாதொரு அவசரமான விஷயத்திலே 32-வது விதியில் உதகரிக்கப்பட்டிருக்கிற வேலைகளில் எதையாவது ஆலசியம் பண்ணாமல் செய்ய விரும்புவாராகில், அந்த வேலை செய்யஆரம்பிக்க அங்காமியாய் அனுமதி கொடுக்கவேண்டுமென்று அக்கிராசனாதிபதிக்கு விண்ணப்பம் அனுப்பலாம்.

(2) அந்த விண்ணப்பத்திலே, அவசரத்தின் காரணத்தையும், செய்ய உத்தேசித்திருக்கிற வேலையின் பொதுவான விவரத்தையும் கண்டெழுதவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட தேதிமுதல் பத்து தினத்திற்குள்ளாக, அக்கிராசனாதிபதியானவர் - எழுத்து மூலமான உத்தரவினால் அந்த வேலை செய்ய ஆரம்பிக்க அங்காமியாய் அனுமதி கொடுக்கவேண்டும், அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்கவேண்டும்.

(4) ஷை காலவரையறைக்குள்ளே அக்கிராசனாதிபதியானவர் அப்படிப்பட்ட அங்காமியான அனுமதி கொடுக்காமல் அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்காமலிருந்தால், அந்த அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

(5) அப்படிப்பட்ட அங்காமியான அனுமதி கொடுக்கப்படுகிற பிரதிவிஷயத்திலும், (4) குறிப்பிட்ட உபவிதியில் நிபந்தனை கண்டிருக்கிற யாதொரு விஷயத்திலும், விண்ணப்பதாரர் - அந்த வேலையைச் செய்துமுடிக்க அனுமதி வேண்டுமென்று முப்பது தினத்திற்குள்ளாக அக்கிராசனாதிபதிக்குக் கிரமமாய் விண்ணப்பம் அனுப்பவேண்டும்; அப்படி அவர் அனுப்பத்தவறுவாராகில், அங்காமியாய்க் கொடுக்கப்பட்ட அனுமதியானது ரத்தாயிருப்பதாக எண்ணப்படும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

மலைப்பிரதேசங்களிலுள்ள மியுனிஸிபாலிடிகளுக்கு மாத்திரம், எனவே—தற்காலத்தில் உதகமண்டலம் - கூனூர் - கொடைக்கானல் ஆகிய இவ்விடங்களுக்கு மாத்திரம் பிரயோகப்படுகிற இந்த சட்டதிட்டத்திற்கண்ட முக்கியமான நிபந்தனைகள் விசேஷமாக மூன்று விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருக்கின்றன. அந்த விஷயங்கள் எவையென்றால்:—

(1) வரியை அதிகமாக்குவது ;

(2) கட்டிடங் கட்டுவதைப்பற்றி இன்னும் நல்ல ஒழுங்கேற்படுத்து ;

(3) போஜன பதார்த்தங்களின் விஷயத்திலும் பானவஸ்துக்களின் விஷயத்திலும் மேல் விசாரணை பண்ணுவதன் சம்பந்தமாகச் சீர்திருத்தஞ் செய்வது.

2. மியுனிஸிபல் பரிபாலனத்துக்குப் பிடிக்கும் செலவுகளுக்காக இப்போதிருக்கிற வருவாய் மூகாந்தரங்களைப்பார்க்கிலும் அதிகமான வருவாய் மூகாந்தரங்களை மலைப்பிரதேசங்களிலுள்ள மியுனிஸிபாலிடிகளுக்கு ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமென்று வெகுகாலமாய்த் தெளிவாகத் தெரிந்திருக்கிறது: உதகமண்டலத்து மியுனிஸிபாலிடியின் விஷயத்திலும் கூனூர் மியுனிஸிபாலிடியின் விஷயத்திலும் ஷை அவசியம் விசேஷமாயிருக்கிறது; பல தடவைகளில் கவர்ன்மென்டார் பொது வருமானங்களிலிருந்து (மேலேகண்ட மியுனிஸிபாலிடிகளைச்சேர்ந்த) சங்கத்தார்களுக்கு விசேஷ பணம் கொடுத்துச் சகாயம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். சகல வரிகளையும் எவ்வளவு அதிகமாக விதிக்கலாமோ அவ்வளவு அதிகமாக இப்போது அவைகள் விதிக்கப்பட்டுவருகின்றன; ஆகையால், ஷை சங்கத்தார்களின் வருமானத்தை வேண்டியபோது அதிகமாக்குவதற்காக அதிகாரம் ஏற்படுத்தும்பொருட்டுச் சட்டதிட்டம் செய்வது அவசியமாயிருக்கிறது. பிரேரேபிக்கப்படுகிற (இந்த) சட்டதிட்டத்தினால் ஷை மியுனிஸிபல் சங்கத்தார்கள் கட்டிடங்களுக்கும் நிலங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள உச்ச வரிவீதமானது (அவைகளின்) வருஷவாரி மதிப்பின் மேல் நூற்றுக்கு $8\frac{1}{2}$ யாயிருக்க, அந்த உச்சவீதத்தை நூற்றுக்கு 10 ஆக உயர்த்தவும், தண்ணீர் ஜலத்தாரை வரிவிஷயத்திலே இப்போதுள்ள உச்சவரிவீதத்தை நூற்றுக்கு எட்டிலிருந்து நூற்றுக்கு 10-ஆக உயர்த்தவும் கூடியவர்களாவார்கள்.

2. மேலும், விளக்குப்போடும் காரியங்களுக்காகப் பிரத்தியேகமாய் ஒரு வரிவிதித்து வாங்க அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும் பிரேரேபணை செய்திருக்கிறது. காஸ் அல்லது மின்சாரத்தைக்கொண்டு தெருக்களுக்கு விளக்குப்போடுவது தவிர வேறே எந்தக் காரியத்துக்காகவும் இந்த வரியை வசூல் செய்யக்கூடாது; மேலும், (இந்த வரியின்) உச்சவீதமானது, கட்டிடங்கள் நிலங்கள் ஆகிய இவைகளில் வருஷவாரி மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்றாகவே ஏற்படுத்தியிருக்கிறது: விவசாயக் காரியங்களுக்காக மாத்திரம் உபயோகிக்கப்படுகிற நிலம் பூர்த்தியாய் நிவாரணை செய்திருக்கிறது. இப்போது சென்னை இராஜதானிப் பட்டணத்திலே விளக்குவரி விதித்து வாங்கத்தக்கதாயிருக்கிறது.

4. கட்டிடங்கட்டுவதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதன் விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட்மியுனிஸிபாலிடிகளாக்டிலுள்ள நிபந்தனைகள் இப்போதிருக்கிறபடி அவைகள்-வெகு நெருக்கமாயும் தேகாரோக்கியத்துக்குப் பிரதிகூலமாயும் கட்டிடங்கள் கட்டுவதைத் தடுப்பதற்குப் போதாதவைகளாகக் காணப்படுகின்றன; ஆகவே, சட்ட நிபந்தனைகள் இப்போது எவ்வளவு கண்டிப்பாயிருக்கின்றனவோ அதைவிட அவைகளை அதிக கண்டிப்பாக்குவது யுக்தமாயிருக்கிறது. இந்தக் காரணத்தினால், டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டிலே இப்போது போதாதவைகளாயிருக்கிற நிபந்தனைகளுக்குப் பதிலாக, அவைகளைக்காட்டிலும் தீர்க்கயோசனையுடன் இராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டில் செய்யப்பட்டிருக்கிற நிபந்தனைகளை அமைக்கவேண்டும்; ஆனால், இந்த நிபந்தனைகளிலே எவையேனும் அனுபோகத்தில் தகுதியற்றவைகளாகவோ அனவசியமாகவோ காணப்படுகிறபட்சத்தில் அவைகளின் பிரயோகத்தைச் சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைக்கவும் ஒவ்வொருபட்டணத்தின் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடியும் அவைகளை மாற்றிக்கொள்ளவும் கவர்ன்மெண்டார் தாங்களே அதிகாரம் வைத்துக்கொண்டிருப்பார்கள்.

5. போஜன பதார்த்தங்களோடும் பான வஸ்துக்களோடும் தகாத பொருள்களைக் கலப்பதைத் தடுப்பதற்காகவும் மலைப்பிரதேசங்களிலே பால் விற்பதைப்பற்றி இன்னும் அதிகமான மேல்விசாரணை ஏற்படுத்துவதற்காகவும் உத்தேசித்து (இராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டிலுள்ள நிபந்தனைகளோடு அனேகமாய் ஒத்திருக்கிற) பிரிவுகளைத்தான் முக்கியமாய் (இந்த) மசோதா ஆக்டின் கடைசிபாகத்தில் அமைக்கலாயிற்று. ஷை விஷயத்தைக்குறித்துச் சட்டதிட்டம் ஏற்படுத்துவது யுக்தமானதென்பது போதுமானமட்டில் தெளிவாகப்புலப்படும்.

சர்வ கற்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டிருக்கிற விதிகளின் தாத்பரியங்களையும் காரணங்களையும் குடிகளுக்கும் கிராம நவுக்கர்களுக்கும் தெரியும்படி கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.—

ரிபரென்ஸ் :—போர்டு புரொஸீடிங்குகள் 1906-ஆம் ஏப்பிரல்மீ 5உ-யுள்ள 113-ந. செட்டில்மெண்டு.

2. 1897-ஆம் 4-வது ஆக்ட்டாகிய சென்னபட்டணம் சர்வேயும் எல்லைமார்க்கு ஆக்டின் நிபந்தனைப்படி சர்வே கற்களைப் பாதுகாப்பதும் புதுப்பிப்பதும் ரிப்பேர் செய்வதும் குடிகளுடைய கடமை. ஷை கற்களுக்குக் கெடுதி நேரிட்டாலாவது அல்லது கற்கள் மாற்றப்பட்டாலாவது அவைகளைத் தடுப்பதும் அந்த சங்கதியை மேலான அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியதும் கிராம அதிகாரிகளுடைய (அதாவது கர்ணன், கிராமமுன்சீப் இவர்களுடைய) வேலை. குடித்தனக்காரர் இது விஷயத்தில் சட்டப்படி தனக்கேற்பட்டிருக்கும் வேலையைச் செய்யாவிட்டால் சர்க்கார் செலவில் அந்த வேலையைச் செய்து அதற்கு நேரிட்ட செலவை அந்த குடித்தனக்காரனிடமிருந்து வசூல் செய்யவேண்டிதாயிருக்கும்.

3. ஆகையால் சர்வே கற்களைச் சரிவர கர்ணன் சோதனை செய்யவேண்டியதென்று விதிகள் ஏற்பட்டிருக்கிறது. அப்படிச்செய்வதற்காக ஒருபடத்தில் ஒவ்வொரு சர்வேகல்லும் எண்ணப்பட்டிருக்கிறது. அந்தக் கற்களின் நம்பர்களை வரிசையாக மூன்றுவகை ரிஜிஸ்டர்களில் பதியப்பட்டிருக்கிறது. (தியாட்லைட், கேது, சப்டிவிஷன் என்று மூன்றுவகை கற்கள்) கர்ணன் ஷை படத்தையும் கல் ரிஜிஸ்டர்களையும் பூமிக்கு எடுத்துக்கொண்டுபோய்ப் படத்தைக்கொண்டு ஒவ்வொரு கல்லும் இந்தக்கல்லுதான் என்று கண்டு தெரிந்துகொண்டு அதன் ஸ்திதியைச் சம்பந்தப்பட்ட கல் ரிஜிஸ்டரில் எழுதவேண்டியது. கர்ணன் அதைப்பரிசோதனை செய்கிறானாவென்றும் சரியானபடி ரிபோர்ட்டுசெய்கிறானாவென்றும் நிச்சயிப்பதற்காகப்பிர்க்கா ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர், தாலூகா தாசில்தார், லாண்டுரிக்கார்டு தாசில்தார் இவர்கள் பூமியில் மேல்தணிக்கைசெய்து கற்களின் ஸ்திதியைக் கல் ரிஜிஸ்டரில் எழுதவேண்டியது. இரண்டு மாதத்துக்கு ஒரு தபா கர்ணன் தன்னால் முந்தினமாதத்தில் காணாமல்போனதாகவும் ரிபேராகவேண்டிதாகவும் கண்டுபிடிக்கப்பட்ட கற்களுக்குத் தன்னுடைய கல் ரிஜிஸ்டர்களிலிருந்து எக்ஸ்டிராக்டுகள் எடுத்து விளம்பரசகிதம் மாதாந்தர சாகுபடி கணக்குடன் பிர்க்கா ரிவினியூ இன்ஸ்பெக்ட்டருக்கு டேப்ளிக்கேட்டுகளில் அனுப்பவேண்டியது. கிராமத்திலிருக்கும் குடிகளுக்கு நோட்டிசாக இருக்கும்படிப் பிரசுரம்செய்ய அந்த எக்ஸ்டிராக்டுகளையும் விளம்பரங்களையும் தாமதமன்னியில் பிர்கா ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர் தபால் மூலமாய் நேராகவாவது அல்லது தாலூகா ஆபீஸ்துவாராவாகவாவது லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டருக்கு அனுப்பவேண்டியது. லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் அவைகளைக் கையெழுத்துசெய்து சம்மதப்பட்ட குடிகளுக்கு நோட்டீசாகப் பிரசுரமாகும் கிராமத்துக்கு வாபஸ் செய்யவேண்டியது. லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கிராமத்துக்குப் போகும்போது தான்போகிற தேதிக்கு 15-நாளைக்கு முந்தி பிரசுரம்செய்யப்பட்டும் குடிகளால் ரிப்பேர்செய்யாமல் பாக்கியில் வைக்கப்பட்டுமிருக்கும் கற்களுக்கு ரிபேர் செய்யவேண்டியது அல்லது அவைகளைப் புதுபிக்கவேண்டியது. இப்படி ரிப்பேர் செய்யவேண்டியதற்கும் புதிப்பிப்பதற்கும் ஒருகல் ஒன்றுக்கு 4-அணா சார்ஜ் ஏற்படுத்தியும் (கல்லாவது அதிருக்குமிடமாவது நெருக்கமான சப்பாத்தி வளையறுவால் மூடப்பட்டிருந்தால் 12-அணா) ஸ்பெஷல் கூலிசெலவு ஆகியிருந்தால் அதை ஏற்படுத்தியும் குடித்தனக்காரனிடமிருந்து வசூல் செய்யப்படும். புதுக்கல் நடப்பட்டால் அதன் கிரயமும் வசூல் செய்யப்படும். கிராம குடிகள் கற்களை ரிபேர்செய்திருந்தாலாவது அல்லது புதுப்பித்திருந்தாலாவது அது சரியாயிருக்கிறதாவென்று பார்த்து லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் ஒப்பம் கொடுக்கவேண்டியது. இந்த விதிகளின் உத்தேசம் என்னவென்றால், சர்வே கற்களைப் புதிப்பித்தோ ரிப்பேர் செய்தோ சரியாய் பாதுகாக்கவேண்டிய தான வேலையைக்குடிகள் சரியாய்ச் செய்கிறார்களாவென்று பார்க்கிறதற்கே அதாவது லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கிராமத்துக்குவந்து வேலைசெய்தால் அதனால் தங்களுக்கு ஏற்படும் செலவு இவ்வளவென்பதை அவர்கள் தெரிந்துகொள்ளத்தான். ஆகையால் விதிகளின்படி கற்களை ரிப்பேர்செய்வதிலும் புதுப்பிப்பதிலும் என்ன செலவாகிறதோ அதை முழுதும்குடிகளிடமிருந்து வசூல்செய்செய்வதில் யாதொரு தாட்சணியமும் இருக்கக்கூடாது. குடிகள் இந்த எச்சரிப்பதைச் சீக்கிரம் தெரிந்துகொள்ளவேண்டியதற்காக லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் எவ்வளவு ஜாஸ்தி கிராமங்களில் வேலைசெய்யக்கூடுமோ அவ்வளவு கிராமங்களிலும் வேலை செய்யவேண்டும். ஆனால் அப்படி அவரால் போகப்பட்ட கிராமத்தில் அவருக்குச் செய்யக்கூடிய வேலை எவ்வளவு தயாராக இருக்கிறதோ அதைப் பாக்கியன்னியில் முடித்துவிடவேண்டியது. பாக்கி வைக்கக்கூடாது. மேலேகண்ட இரண்டு உத்தேசங்களும் கூடியமட்டில் நிறைவேறவேண்டியதின்பொருட்டு கர்ணன் எல்லா கற்களையும் ஒரே தடவையாகச் சோதனைசெய்யாமல் மாதமாதம் கொஞ்சங் கொஞ்சமாக வருஷமுழுவதும் நிரவிச் செய்யவேண்டியது. அதாவது ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கும் கர்ணன் கொடுக்கவேண்டிய லிஸ்டில் கிராம மொத்தக் கற்களில் சொல்ப பாகம்தான் தாக்கல்செய்திருக்கவேண்டியது. அப்படிச் செய்தால்லாண்டுரிக்கார்டு இன்ஸ்பெக்டர் போகும் கிராமத்தில் பாக்கியன்னியில் அவருடைய வேலையைச் சீக்கிரத்தில் செய்யமுடியும். அடுத்த கிராமங்களுக்கும் அவர் சீக்கிரம் போகலாம். எல்லாகற்களையும் ஒரேயடியாய்ச் சோதனைசெய்து கர்ணன் கணக்கு கொடுத்தால் இம்மாதிரி லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் செய்யமுடியாது. மேலும் கிராமத்தில் செல்வாக்குள்ள குடிகளுடைய கற்களைக் கர்ணன் முதலில் சோதனைசெய்யவேண்டியது. ஏனென்றால், அவர்கள் கல்விஷயமாய் அஜாக்கிரதையாயிருக்கக்கூடாதென்று சீக்கிரம் தெரிந்துகொண்டு அவைகளைச் சரியான ஸ்திதியில் வைத்திருப்பார்கள். சில்லறை குடிகளும் அவர்களைப்பார்த்து ஜாக்கிரதையாவார்கள்.

4. கர்ணன் கல் ரிஜிஸ்டர்களில் எழுதிய ரிமார்க்குகள் சரியாயிருக்கிறதாவென்று பார்ப்பதற்காகப் பிர்கா ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர், தாலூகா தாசில்தார், லாண்டு ரிக்கார்டு தாசில்தார் இவர்களை ஜவாப்தாரியாக்கியிருக்கிறது. கல் சோதனைசெய்து அதன் விபரத்தைக் கர்ணனுடைய கல் ரிஜிஸ்ட்டரில் எழுதியிருக்கிறார்கள் என்பதற்கு ருஜுவாக அந்தப்படி தங்களுடைய டைரிகளில் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர்கள் அத்தாட்சி எழுதவேண்டியது. லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கற்களைச் சோதனை செய்யவேண்டியதில்லை. அந்தக் கேசுகளில் மாத்திரம் சரியாயிருக்கிறதாவென்று பார்த்துத் திருத்தம்செய்ய அவர் சோதனை செய்யலாம். அடுத்த பாராவில் சொல்லியபடி காணாமற்போன கற்களைப் புதுப்பிப்பதும் ரிப்பேராகவேண்டிய கற்களை ரிப்பேர்செய்வதும்தான் அவருடையவேலை.

5. கற்களைப் புதுப்பிப்பதிலும் ரிப்பேர்செய்வதிலும் ஏற்படும் செலவுகளைச் சரியானபடி கணக்குகொண்டுவர ஒரு பெருத்த உத்தியோகஸ்தர் வேண்டியிருப்பதாலும் குடிகளுக்கு கஷ்டம் ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர்இருண்டு ாகல்லாடர் கிராமத்துக்கு வருவதற்குமுன் கர்ணன்களுடைய உதவியைக்கொண்டு கற்களைப்புதுப்பித்துக்கொள்ளலாம். ரிப்பேரும் செய்துகொள்ளலாம் என்றகருத்தையிட்டுத்தான் கற்களை புதுப்பிக்கிறவேலையையும் ரிப்பேர் செய்யவேண்டியவேலையும் கிராமமுனிசீப்பு அல்லது கர்ணனுக்குகொடுக்காமல் லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்ணனுடைய உதவியில்லாமல் கற்களைச் சரியான இடத்திலிருக்கும்படி புதைக்கவும், ரிப்பேர் செய்யவும் போதுமான சர்வேஞானம் குடிகளுக்கு இருக்குமென்று நம்புவதற்கில்லை. அவ்விதமான ஒத்தாசை கொடுக்கவேண்டியது எப்போது சட்டப்படி கர்ணன்களுடைய கடமையில்லையோ அந்த ஒத்தாசை செய்வதற்காக கர்ணன்கள் குடிகளிடமிருந்து பணப்பிரயோசனம் அடைவது தகாததன்று. கர்ணன் அப்படிப் பிரயோசனம் பெற்றுக்கொண்டு உதவி செய்வதால இரண்டுவிதலாபமிருக்கிறது. அதாவது லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கிராமத்துக்கு வருவதற்கு முன் கல் ரிப்பேர் வகையறா வேலையைச் செய்வதனால் அவர் வந்தால் எவ்வளவு செலவாகுமோ அதைக்காட்டிலும் குறைவான தொகைக்கே குடிகளுடைய வேலை முடிந்துவிடுகிறது. இது குடிகளுக்கு அனுகூலம். லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கிராமத்துக்கு வருவதற்குள் கூடியமட்டில் எல்லா காணாத கற்களையும் ரிபோராகவேண்டிய கற்களையும் கணக்குக்குக் கொண்டுவந்து புதுப்பிக்கிறவேலையையும் ரிப்பேர்செய்கிறவேலையையும் பிரயோசனத்தை உத்தேசித்துக் கர்ணன் சீக்கிரம் முடிப்பதினால் லாண்டு ரிக்கார்டு இன்ஸ்பெக்ட்டர் கிராமத்துக்கு வரும்போது அவர் செய்ய வேண்டியவேலை சுலபமாயிருக்கும். இது சர்க்காருக்கு அனுகூலம்.

ஒரு சிறுகதை.

"ஜாதியந்த புத்தி - குலமந்த ஆசாரமு" என்கிற பழமொழிக்கு விரோதமாகத் தாழ்ந்த குடிப்பிறப்பினர்களாகிய சிலர் உயர்ந்த யோக்கியதைகள் பொருந்தினவர்களாகவும் உயர்ந்த குடிப்பிறப்பினர்கள் தாழ்ந்த யோக்கியதைகள் பொருந்தியிருப்பதாக நாம் அனுபவத்தில் கண்டபோதிலும், பெரும்பாலும் ஆன்றோர் நீண்ட கால அனுபவத்தால் அறிந்து வெளிப்படுத்திய மொழிகள் ஒரு நாளும் பழுதாகமாட்டா. இதற்கு ஒரு சிறுகதை சொல்லுகின்றோம். ஒரு ஊரிலே ஒரு குயவன் அவ்வூர் அரசன் அரண்மனைக்குச் சட்டிப்பானைகள் சப்பளைசெய்துகொண்டு வந்தான். இவனுக்கு அரண்மனைக்குயவன் என்று பெயர். இவன் குமாரனுக்கு விவாகம் நேரிட்டது. மகாராஜாவிற்கு வண்ணான் நேரில் தாம்பூலம் கொண்டுபோய் வைத்து வணங்கி அரசனை விவாக தினம் தன்னுடைய கிரகத்திற்கு விஜயம் செய்யும்படி வருந்தி அழைத்தான். மகா ராஜா அவனுடைய கோரிக்கைக் கிணங்கி வருவதாகவும் வாக்களித்தார். விவாக தினம் வந்தது. அரசன் குயவன் விவாகத்திற்குப்போகவேண்டும்மென்று ஆனை அம்பாரி. தாருப்புக்கள் விருதுகள் வாத்தியங்கள் முதலியவைகள் தயாரிக்கும்படியாக உத்திரவளித்து விட்டு கூட அழைத்துக்கொண்டு போக பிரதானியைக் கூப்பிட்டார். மந்திரி வருவதற்கு ஆக்ஷேபித்தார். அரசன் போவதையும் தடுத்தார். அரசன் காரணம் கேட்க மந்திரி கீழ் மக்கள் தலைவாசல் மிதித்தால் மானபங்க முண்டாகுமென்றுபுத்திமதிசொன்னார். அரசன் அதற்கு "பாதகமில்லை, நம்முடைய அரண்மனையில் ஊழியஞ் செய்யும் குயவன் நம்மை என்ன அவமானம் செய்யப்போகிறான்" என்று சொல்லி மந்திரியை கட்டாயப் படுத்தி அழைத்துக்கொண்டு விருதுகளும், தாருப்புகளும் முன்பின் ஓட வாத்தியங்கள் முழங்க, நடுவில் மகாராஜாவும், மந்திரியும் யானை அம்பாரியில் வீற்றிருந்து மிகுந்த சம்பிரமமாய் குயவன் வீட்டிற்குப் புறப்பட்டார், மகாராஜா வருவதைக் கண்ணால் பார்த்தான், சந்தோஷமடைந்தான் குதூகுலம் கொண்டான். ஆரவாரித்தான். ஆனந்தபரவச மடைந்தான். எதிர்கொண்டழைக்க ஓடினான். அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டான். இருகரம் கூப்பிக்கும்பிட்டான். பூமியில்விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தான். எழுந்தான் ராஜாதிராஜனே ராஜ பூபதியே, இந்த அகிலகோடி பிரபஞ்சத்தை ஆண்டுவரும் கனந்தங்கிய தாங்கள் சேல்லம் தங்கள் அரண்மனையில் கூலிவேலை செய்யும் யெல்லா வீட்டிற்கு வந்ததால் அடியேனுக்கு உண்டாயிருக்கும் சந்தோஷத்தை நான் என்னவென்று சொல்லுவேன்.! மகாராஜாவே! தாங்கள் கிருபை செய்து அடியேன் வீட்டிற்கு வந்தது. ஆயிரம் குயப்பல்கள் வந்ததற்குச் சமானம் என்று சொன்னார்கள். இந்த வார்த்தைகளை கேட்டவுடன் மகாராஜா மந்திரி சொன்னதைக் கேளாமல் வந்தோமே என்று நினைத்து மானசங் கடமடைந்து திருப்பிப்போனார். ஆகவே ஒருவனுடைய பேச்சும் நடவடிக்கையும் அவனுடைய குடிப்பிறப்பையும், சாவகாசத்தையும் பொருத்ததாயிருக்கின்றன.

காமத்திற்குக் கண்ணில்லை.

பெல்லாரி ஜில்லா ஹிந்துப்பூர் தாலூக்காவில் போலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் வீடும், தாலூக்கா குமஸ்தா அண்ணாஜிராயர் வீடும் ஒன்றுக்கொன்று சமீபத்திலிருக்கின்றது. போலீஸ் இன்ஸ்பெக்டர் பெண்சாதிக்குத் தானே சடை போட்டுக்கொள்ளத் தெரியாது. ஆகையால் அண்ணாஜிராயர் பெண்சாதியிடம்போய் கூந்தலைபின்னிக் கொண்டுவருகிற வழக்கம். அண்ணாஜிராயருக்கும் ஒரு பாலியமான பெண்ணுமிருக்கிறது. அண்ணாஜிராயர் வீட்டுப்பெண்பிள்ளைகள் சுப்பிரமணிஅய்யர் வீட்டிற்கும் போகிறதுண்டு. இப்படியாக இரு குடும்பத்தாரும் நேசமாயிருந்தார்கள், போலிஸ் இன்ஸ்பெக்டர் அண்ணாஜிராயர் மகள்பேரில் மோகம்கொண்டு குறிப்புவைத்திருந்ததாகத் தெரிகிறது.

1905-ஆ செப்டம்பர்மீ 16வ பகலில் இன்ஸ்பெக்டர் அண்ணாஜி ராயர் வீட்டிலில்லாத காலத்தில் தெருவழியாகப் போவதுபோலவும் தாகமெடுத்தது போலவும் பாவனைசெய்து அண்ணாஜிராயர் வீட்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்து அண்ணாஜி ராயரின் மனைவியைத் தீர்த்தம் கேட்டார். அந்த அம்மாள் ஒரு பஞ்சபாத்திரத்தில் ஜலம் கொண்டுவந்து கொடுக்கும்போது அந்த அம்மாளுடைய கையைப் பிடித்து அதில் ரூபாய்களைப்போட்டு "உன்னுடைய பெண்ணை என்னிடம் அனுப்பு" என்று மெள்ளச் சொன்னார். இந்த சப்தத்தைக் கேட்ட பதிவ்ரதையாகிய அம்மாளுக்கு காதில் நாராசம் காய்ச்சி ஊற்றினதுபோலிருந்து மதிமயங்கி மயிர்க் கூச்சலிட்டு அந்த அம்மாள் அடேபாவி! சண்டாளா! உனக்குத் தாயில்லையா! தங்கையில்லையா! புத்திரியில்லையா, என்று கூச்சலிட இன்ஸ்பெக்டர் கூட்டம் கூடுவதற்கு முந்தி சமீபத்திலிருந்த தன்னுடைய வீட்டிற்கு ஓடிப்போய்விட்டார். அண்ணாஜிராயர் தாலூக்கா கச்சேரியிலிருந்து அன்று சாயங்காலம் வந்துசேர்ந்தார். மனைவி அழுதகண்ணும் சிந்தின மூக்குமா யிருப்பதைப் பார்த்து காரணம் கேட்க நடந்த விர்த்தாந்தங்களைத் தெரிந்துகொண்டார். மனம் நொந்தார். பெருமூச்சுவிட்டு விசனித்துசிநேகிதர்களிடம்ஓடினார். என்ன செய்வதென்று கேட்டார். தன்மானமும் தன் குடும்பமானமும் போகிறதே என்று சும்மாவிருந்தார். 5-தினங்கள் சென்ற பிறகு புனராலோசனையின் பேரில் அண்ணாஜிராயர் மதககாரா சிரஸ்தார் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் போலிஸ் இன்ஸ்பெக்டரின் பேரில் இ. பி. கோ 45, 448, 497, 506, பிரிவுகளின் குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டினார். அதேதினம் அந்த பிரியாதை ரிஸ்டர் செய்து போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அனுப்பினார். இந்த சமாச்சாரம் தெரிந்த இன்ஸ்பெக்டர் இந்தக்கேசை சமாதானஞ் செய்யும் பொருட்டு அவருடைய கான்ஸ்டேபிலேயும் ரயிட்டரையும் அண்ணாஜிராயரிடம் அனுப்பினார். அந்த ஊர் ஹாஸ்பிட்டல் அசிஸ்டென்டு தாசில்தாரும் இன்ஸ்பெக்டருக்காக அண்ணாஜிராவை சமாதானமாக்ப் போகும்படியாகவும் கேட்டுக்கொண்டாகள், அண்ணாஜிராயர் ஒருவர், பேச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்தக்கேஸ் விசாரிக்கப்படும் பொருட்டு மதர்கரசி தாலூக்கா மேஜிஸ்ட்டிரேட்டிற்கு அனுப்பப்பட்டது. இது முதல்கிளாஸ் குற்றமாயிருப்பதால் அவர் இந்தக்கேசை விசாரணை செய்யக்கூடாதென்று பெனுகொண்டா எட் அசிஸ்டெண்டு மாஜிஸ்டிரேட் மிஸ்டர் வால்ஷினிடம் அனுப்பினார்.

THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னை சட்ட நிரூபணசபை.

நிகழ் நவம்பர்மீ 13வ செவ்வாய்க்கிழமை பகல் 12-மணிக்கு சென்ஜியார்ஜ் கோட்டைக்குள்ளிருக்கும் கவுன்சில் சேம்பரில் சென்னை சட்ட நிரூபண சபை சங்கத்தினர்கள் ஒரு மீட்டிங் கூடினார்கள். ஹானரபில் மெசர்ஸ் G. ஸ்டோக்ஸ், G.S. போப்ஸ், Mr ஹாமிக், J. டெவிச், C. J. விர், A. G. கார்டியூ, J. N. அட்கின்சன், திவான் பகதூர், L. A. கோவிந்தராகவ அய்யர், B. N. சர்மா, முகமது ரஜாக்கான் சாயப்பு பகதூர், A. E. காசில் ஸ்டுவர்ட். P. S. சிவசாமி அய்யர், ராஜா வாசுதேவராஜா, V. G. லின், சர் வி. சி. தேசிகாசாரியார், T. T. லோகன், F. J. வில்சன், K. R. குருசாமி அய்யர், சர். வி. பாஷியமய்யங்கார், M. கிருஷ்ண நாயர்—ஆகிய அங்கத்தினர்களாகவிருக்கும் இந்த கனவான்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். மேன்மைதங்கிய கவர்னர் சர். ஆர்தர் லாலி அவர்கள் வழக்கம்போல் இச்சபைக்கு பிரசிடெண்டாக விருந்தனர்.

(நம்முடைய கெஜட்டு சட்ட கெஜெட்டானபடியாலும், சட்டநிரூபணசபை சென்னை மாகாணத்திற்குரிய சட்டதிட்டங்களைச் செய்யும் சபையானபடியாலும், அந்தச் சபையார் கூட்டம்கூடி நடத்தும் நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய கெஜெட்டிலிருக்க வேண்டிய தவசியமானபடியாலும் அவர்கள் மீட்டிங் குகூடுந்தோறும் இதேமாதிரியாக எழுதிவருவதைக் கடமையாக நினைப்போம்—Ed.).

மேன்மைதங்கிய கவர்னர் சர். ஆர்தர் லாலி அவர்கள் சபா நாயகர் ஸ்தானத்தில் வீற்றிருந்து மறுபடியும் எழுந்து நின்று, இதற்குமுன் சட்டசபையார் கூடிய காலத்திற்கும் இப்போது கூடியிருக்கும் காலத்திற்கும் இடையில் இச்சபையில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களாயிருந்து இறந்துபோன மிஸ்டர் வாசுதேவ அய்யங்கார், மிஸ்டர். C. முத்துக்குமாரசாமி முதலியார். ஆகிய இருவர்களைப்பற்றி நினைத்து, அவர்களிருவரும் இத்தேசத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த கௌரவம் பொருந்திய குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்றும், எல்லோராலும் மதிக்கப்பட்டவர்களென்றும், இந்தச் சபையில் அவர்கள் இருவரும் சென்னை ராஜதானியின் நிலை சுதந்தரக்காரர்களுக்குப் பிரதிநிதிகளாயிருந்து அந்த வகையில் இச்சபையாருக்கு வெகு ஆலோசனைகள் சொல்லி வந்தார்களென்றும், இருவர்களும் தங்களுடைய தேசஜனங்களின் க்ஷேமத்தை நாடி உழைத்து வந்தார்களென்றும், இவர்களுடைய மரணத்தால் இச்சபை மிகுந்த நஷ்டம் அடைந்திருக்கிறதென்றும், இவர்களுடைய குடும்பத்தார்களுக்கு எக்காலத்திலும் இந்தச் சபையார் பரிசுத்தமான அநுதாபம் காட்டத் தயாராயிருக்கிறார்களென்றும் சொன்னார்.

இதன்பிறகு ஹானரபில் மிஸ்டர். ஸ்டோக்ஸ் மேற்கூறப்பட்ட இரண்டு கனவான்களின் குணாதிசயங்களைச் சிலாகித்து துக்கம்பாராட்டிப் பேசினார்.

அதன்பிறகு சபையிலிருந்த எல்லா கனவான்களும் எழுந்து நின்றுகொண்டு அடியிற்கண்டதீர்மானத்தை ஏகோபித்து பாஸ் செய்தார்கள். "ஹானரபில் மிஸ்டர் வாசுதேவ ஐயங்கார், ஹானரபில் மிஸ்டர். P. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் ஆகிய இந்த இரண்டு கனவான்களும் இறந்துபோனதால் இந்த சபையாருக்கு உண்டாயிருக்கும் பெரிய விசனத்தை வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்புகிறார்கள்.—இறந்துபோன இந்த இரண்டு சங்கத்தினர்களும் இந்த கௌன்சிலில் செய்துவந்த வேலைகளை இச்சபையார் சிலாகித்து எப்போதும் ஞாபகமிருக்கும்படியாகப் பதிவுசெய்து கொள்ளுவதுடன், இந்த இரண்டு கனவான்களுடைய மரணத்தால் இவர்களுடைய குடும்பத்தார்கள் அடைந்திருக்கும் விசனத்தில்இச்சபையாரும் கலந்து அனுதாபப்படுவதை அக்குடும்பத்தார்களுக்கு அறிவிக்க விரும்புகிறார்கள்.

இதன் பிறகு ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் அபிஷியல் அங்கத்தினர்களைக் கேள்விகள் கேட்க அவைகளுக்கு அவர்கள் பதில் கூறினார்கள். இந்தக் கேள்வி ஜவாப்புகளை எல்லாம் இவ்விடத்தில் எடுத்து எழுதுவதாயிருந்தால் ஓரேமாத கெஜெட்டில் முடியமாட்டாது. ஆகையால் நம்முடைய சந்தாதாரர்கள் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப்பற்றியகேள்வி ஜவாப்புகளை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து எழுதுகின்றோம். நம்முடைய சந்தாதாரர்களின் இஷ்டத்திற்குத்தகுந்தபடி நாம் நடந்துகொள்வதைத்தவிர, இந்த சட்ட கெஜெட் நடத்தும் விஷயத்தில் வேறே முக்கியமான காரியம்ஒன்றுமில்லை. ஆகையால் சட்டசபையில் கேட்கப்படும் கேள்விகளும், ஜவாப்புகளும் ஒன்று தவறாமல் நம்முடைய கெஜெட்டில் பிரசுரிக்கப்படவேண்டுமென்று நம்முடைய மேன்மைதங்கிய சந்தாதாரர்கள் அபிப்பிராயப்படும் விஷயத்தில் அப்படியே செய்யத் தயாராயிருக்கிறோம் என்பதை இந்த சமயத்தில் தெரியப்படுத்திக்கொண்டோம்.—Ed).

ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர் கேட்ட கேள்விகளும் அவைகளுக்கு கவர்ன்மெண்டு அங்கத்தினர்கள் சொன்ன ஜவாப்புகளும்.

கே:—1902ஆம் செப்டம்பர்மீ 26வ கவர்ன்மெண்டார் பிறப்பித்த உத்தரவின்பிரகாரம் தள்ளிவைக்கப்பட்ட திருநெல்வேலி ஜில்லா கிரியாறு ஆராய்ச்சியை மறுபடியும் ஆரம்பித்து மானாமதுரை தாலூக்காவின் புஞ்சைச் சாகுபடியை விஸ்தரித்து உபகரிக்க கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமிருக்குமா?

ஹானரபில் மிஸ்டர் வில்சன்:—இந்த ஆராய்ச்சி வேலைகளில் அமர்ந்திருந்த சூப்பிரண்டெண்டிங் இன்ஜினீயர் சென்றசெப்டம்பர்மீ 30வ அந்த உத்தியோகத்தை விட்டு நீங்கிவிட்டார். அவர் நீங்குவதற்குள் அந்த ஆராய்ச்சி வேலைகளை முடிவுசெய்ய முடியாமற்போய்விட்டது. இருந்தபோதிலும் பாம்பியாறு பெரியாறு பிரயத்தன ஏற்பாட்டு வேலைகளில் அமர்ந்திருக்கும் ஸ்பெஷல் ஆபிசர்களை இந்த கிரியாறுவேலை

யில் அமரச்செய்து இந்த ஆராய்ச்சிவேலைகளைச் சீக்கிரம் முடிக்கும்படி தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

கே :—கடந்த 5-வருஷகாலமாக கொஞ்சம்கூட மழை பெய்யவில்லைஎன்றும் ஆதலால் கிஸ்திபாக்கிகளை கவர்ன்மெண்டார் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்றும் பெல்லாரி ஜில்லா, குலூர் தாலூக்கா மொளகவல்லி கிராம ரயத்துக்கள் மகஜர் அனுப்பியிருக்கிறார்களா?

(b) அந்த மகஜரில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் உண்மைதானா? அப்படி உண்மையாயிருந்தால் கவர்ன்மெண்டார் என்ன உத்தரவு செய்திருக்கிறார்கள். இன்னும் செய்யாமலிருந்தால் மகஜர்காரர்களின் கஷ்டநிவிர்த்திக்காக என்ன ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள்.

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ:—மகஜர்வந்து சேர்ந்து ரெவினியூ போர்டாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. போர்டார் இன்னும் அதைக்குறித்து ரிப்போர்ட் அனுப்பவில்லை.

கே :—வருமான வரிவிதிக்கப்படவேண்டிய தொகைக்குக் குறைவான வருமானத்தை யுடைய திருநெல்வேலி சீட்டுக் கம்பெனிகளுக்கு கவர்ன்மெண்டார் வருமானவரி விதித்துவசூலித்திருப்பது வாஸ்தவந்தானா? இந்த வழக்கம் வேறே எங்கேயாவது யிருக்கிறதா? அப்படி யிருந்தால் எவ்வளவுகாலமா யிருந்துவருகின்றது?

(b) இப்படி வரிபோட்டு வருவதற்கு சட்ட ஆதாரமிருக்கிறதா? அப்படி சட்டத்திற்கு விரோதமாயிருந்தால் இதுவரையில் வரி கட்டிவந்தவர்களுக்கு கவர்ன்மெண்டார் என்னபரிகாரம்செய்யப்போகிறார்கள்? இனிமேல் என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ:—இந்தச்சீட்டுக் கம்பெனிகள் 1886-ம்௵த்திய 2-வது ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் இரண்டாவது பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும் கம்பெனிகளைச் சேர்ந்தன. இந்த கம்பெனிகளுக்கு வருமான வரி விதிக்க யாதொரு வருமானத் தொகையும் குறிப்பிடவில்லை. இந்த ஆக்ட் அமுலுக்கு வந்தகாலமுதல் சீட்டு கம்பெனிகளுக்கு வருமான வரி விதிக்கப்பட்டு வருகின்றது. அதை சட்டவிரோதமென்று நினைப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோம்.

கே :—போலீஸ் படையில் விசேஷமாக இந்தியர்களை அதிலும் முக்கியமாய் முகமதியர்களை நியமித்து அவர்களுக்கும் ஐரோப்பியஉத்தியோகஸ்தர்களைப்போல உத்தியோகங்களை உயர்த்திக்கொண்டுபோக கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

(b) ஐரோப்பிய சப் இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகைக்காக அலவன்ஸ் கொடுத்து வரும்போது அதேமாதிரியாக இந்திய சப் இன்ஸ்பெக்டர்களுக்கு அலவன்ஸ் ஏன் கொடுத்துவரக்கூடாது? இனிமேலாவது கொடுத்துவரும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்வார்களா?

ஹானரபில் மிஸ்டர் ஹாமிக்:—சென்னைநகர் ஒரு மாதிரியான ஊராயிருக்கிறது. ஆதலால் போலீஸ் படையில் அதிக ஐரோப்பியர்களையும், யுரேஷியர்களையும் நியமிக்கவேண்டியதா யிருக்கிறது. இருந்தபோதிலும் சென்னை நகர் போலீஸ் படையை அடியோடு சீர்திருத்தும் ஏற்பாடு இப்போது கவர்ன்மெண்டார் ஆலோசனையி லிருந்துகொண் டிருக்கிறது. இந்த ஏற்பாடு நடவடிக்கைக்கு வரும்போது ஹானரபில் மெம்பர் சொல்லும் விஷயம் கவனிக்கப்படும்.

(b) இருவருக்கும் குடும்ப வாழ்க்கையிலிருக்கும் வித்தியாசத்தால் அந்த பேதம் உண்டானது. இருந்தபோதிலும் மேலே கூறப்பட்ட சீர்திருத்த ஏற்பாடு நடவடிக்கைக்கு வந்தவுடன் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இப்போது கொடுத்துவரும் வீட்டு அலவன்ஸ் அடியோடு ரத்துசெய்யப்படும். எல்லா சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் யாதொரு வாடகையின்றி ஜாகைவிடப்படும்.

கே :—சமீபகாலத்தில் நெட்டாலிலிருந்து 650-கூலிக்காரர்களை ஏற்றிக்கொண்டு சென்னைக்குவந்த "உம்புலி" என்னும் ஸ்டீமரில் பிரயாணஞ்செய்துவந்த மிஸ்டர் மைலோமாக்மகோன் என்பவர் நேட்டால் பயிர் தோட்டக்காரர்கள் இந்தியக்கூலிக்காரர்களைக் கொடுமையாக நடத்துவதைக் குறித்தும் இந்தப்பிரயாணத்தில் கூலிக்காரர்கள் அடைந்த கஷ்டத்தைக்குறித்தும் மிகுந்த பரிதாபகரமாய் பத்திரிகைகளில் எழுதியிருந்ததையும் அதே ஸ்டீமரில் பிரயாணஞ்செய்துவந்த மெசர்ஸ். பிளேமியர் அண்டு B. ஒட்லாக் என்பவர்கள் மேலே சொல்லப்பட்டவர் எழுதியிருந்ததை ஆதரித்து எழுதியிருந்ததையும்கவர்ன்மெண்டார்வாசித்துப்பார்த்தார்களா?

(b) அந்த ஸ்டீமர் சென்னைத் துறைமுகத்திற்கு வரும்போது கவர்ன்மெண்டார் தங்களுடைய உத்தியோகஸ்தர்களில் யாரையேனும் அனுப்பி விசாரிக்கும்படி உத்தரவு செய்தார்களா? அப்படி உத்தரவு செய்திருந்தால் அந்த ஆபீசர் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட்டைப் பயிரங்கப்படுத்த முடியுமா?

(c) இப்படி ஸ்டீமரில் ஜனங்களை ஆடுமாடுகள் போலும், ஆண் என்றும் பெண் என்றும் பேதமில்லாமல் போட்டு அடைத்து அனுப்பினதைக் குறித்து கவர்ன்மெண்டார் நெட்டால் கவர்ன்மெண்டாருக்காகிலும் அல்லது அதைச்சேர்ந்த எந்த கவர்ன்மெண்டாருக்காகிலும் எழுதிக்கேட்டார்களா? அப்படி இதுகாலபரியந்தம் எழுதிக்கேட்காவிட்டால் இனிமேலாகிலும் எழுதிக்கேட்டு அவர்கள் சொல்லும் பதிலைப் பயிரங்கப்படுத்தமுடியுமா?

(d) நேட்டாலில் இந்தியக் கூலிக்காரர்கள் கொடுமையாக நடத்தப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதை முன்னிட்டு கவர்ன்மெண்டார் ஒரு கமிஷன் ஏற்படுத்தி விசாரணைசெய்யும்படியாக ஏற்பாடு செய்ய இஷ்டப்படுவார்களா?

(e) இல்லையேல் குடியேற்ற நாடுகளில் வசித்துவரும் தங்களுடைய பிரஜைகளைப் பாதுகாக்கும்படியாக கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறார்கள்?

ஹானரபில் மிஸ்டர் ஹாமிக்:—கவர்ன்மெண்டார் வாசித்துப்பார்த்தார்கள். நேட்டாலில் இந்தியக்கூலிக்காரர்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஆபீசர் இதுவிஷயமாய் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட் பயிரங்கம் செய்யப்படும். அந்த ஆபீசர் இன்னும் சில ரிப்போர்ட் அனுப்புவதாக வாக்களித்திருப்பதால் அந்த ரிப்போர்ட் வரும் பரியந்தம் இதுவிஷயத்தைக் குறித்து கவர்ன்மெண்டார் யாதொரு ஏற்பாட்டையும் செய்ய சாத்தியப்படவில்லை.

கே :—அக்டோபர்௴ 8௳ ஹிந்து பத்திரிகையில் மலபார் நிருபர் "ஒரு விசனகரமான சம்பவம்" என்று தலைப்பெயரிட்டு எழுதியிருந்தாரே அதைப்பற்றி கவர்ன்மெண்டார் விசாரணை செய்தார்களா?

ஹானரபில் மிஸ்டர் ஹாமிக்:—விசாரித்தார்கள்; அது தப்பான சமாசாரம்; உண்மையான சமாசாரம் என்னவென்றால், வெள்ளி, வெலுக்கன் என்கிற இரண்டு பண்ணைய ஜாதியார்கள் ஒரேதினத்தில் வைநாடு சிரஸ்தார் மேஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்டார்கள். வெள்ளி என்பவனுக்கு 15-நாள் கடுங்காவல் தண்டனையும், வெலுக்கன் என்பவனுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும்விதிக்கப்பட்டது. இருவரும் மே௴ 20௳ கண்ணனூர்சென்டிரல் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்கள். அவ்விடத்தில் 15-நாள் தண்டனை அடைந்த வெள்ளி என்பவன் தன்பெயரை வெலுக்கன் என்று பதிவுசெய்து வைத்தான். மூன்றுமாத தண்டனை அடைந்த வெலுக்கன் என்பவன் தன் பெயர் வெள்ளி என்று பதிவுசெய்து வைத்தான். ஆகவே வெலுக்கன் 16-ம் நாள் ஜெயிலைவிட்டு விடுதலை செய்யப்பட்டான். வெள்ளி என்பவன் மூன்று மாதம் சென்று அனுப்பப்பட்டான். இந்த சமாசாரம் வெளிப்பட்டவுடன் ஜில்லா மேஜிஸ்டிரேட்டின் உத்திரவின் பேரில் அரஸ்ட் செய்யப்பட்டார்கள். போலீஸ் காவலிலிருக்கும்போது வெலுக்கன் ஓடிப்போய்விட்டான். அவனுடைய இருப்பிடம் இன்னும் தெரியவில்லை. ஆகையால் இந்த இரண்டு கைதிகளும் வேணுமென்று ஆள்மாருட்டம் செய்தார்களேயொழிய ஜெயில் அதிகாரிகள் தப்பிதமாய் விட்டுவிடவில்லை.

கே. (a) மிஸ்டர் சி. சங்கரநாயர் அவர்கள் மூன்று முறைகளில் ஜட்ஜி உத்தியோகத்தைப் பதிலாகப் பார்த்திருந்தும் ஜட்ஜி ஸ்தானங்கள் ஹைகோர்ட்டில் காலியானபோது கவர்ன்மெண்டார் அவரை நியமிக்காமற் போனதில் பொது ஜனங்கள் மிகுந்த அதிருப்தி அடைந்திருப்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா?

(b) மிஸ்டர் சங்கரநாயரின் உரிமைகளைப் புறக்கணித்ததற்குக் காரணம் என்ன?

ஹானரபில் மிஸ்டர் ஹாமிக்:—இந்தக் கேள்விக்கு ஜவாப்பு சொல்வது அனுவசியமென்று கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள்.

கே. (a) சால்ட், ஆப்காரி, கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டில் 103-கெஜெட்டெட் ஆபீசர்களில் 29-பேர்கள்தானா இந்தியர்கள்?

(b) ரூபா 500-சம்பளமும் அதற்கு மேற்பட்ட சம்பளமும் வாங்கிவருகிற இருபத்திரண்டு ஆபீசர்களுக்குள் ஒருவர்தானா இந்தியர்?

(c) ரூ. 1000-சம்பளமும் அதற்கு மேற்பட்ட சம்பளமும் வாங்குகிறவர்களுக்குள் ஒருவர் கூட இந்தியரில்லையா?

(d) இந்த இலாகாவில் ஐரோப்பியர்களையும் யுரேஷியர்களையுமே நியமிக்கவேண்டுமென்றுகவர்ன்மெண்டார் ஏதேனும் விதி ஏற்படுத்தி யிருக்கிறார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ :—ஸ்டாட்சு 33,34, விக்டோரியா, அத்தியாயம் 3-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி இந்தியர் என்கிற பதத்திற்கு சுதேசி என்று தாத்பரியம் செய்துகொண்டால் ஹானரபில் மெம்பர் எடுத்துக்காண்பித்தவிஷயமெல்லாம் பிசகு. கவர்ன்மெண்டு உத்தியோகங்களைக் கொடுக்கும் விஷயத்தில் உரிமையுடையவர்களைப்பார்த்துக் கொடுக்கப்படுகிறதேயொழிய ஜாதிவித்தியாசம் பாராட்டுகிறதில்லை. உரிமை யுடையவர்களாயிருந்தால் கமிஷன் உத்தியோகங்கூட கொடுக்கப்படும்.

திருச்சினாப்பள்ளியில் சப் மேஜிஸ்டிரேட்டாகவிருந்த மிஸ்டர் விஜயேந்திரராவ் போலிஸ் சூப்பிரண்டை 1904௵ அவமதித்ததற்காகப் போலிசாரிடமிருந்து மன்னிப்புப் பெறும்படியாக நேரிட்டது. இந்தக் காரணத்திற்காக ௸ விஜயேந்திரராவை கவர்ன்மெண்டார் சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திலிருந்து நீக்கி அதற்குத் தாழ்ந்த உத்தியோகமாகிய 70-ரூ சம்பளத்தில் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஒரு ரெவினியூ சப் டிவிஷனல் ஆபீஸ் எட் கிளர்க்காக நியமித்து விட்டார்கள். அது முதல் அவர் அதே உத்தியோகத்திலிருந்து வருகிறார். அவருக்கு மறுபடியும் சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகமாவது அல்லது அவருக்கு ஏற்கனவே ரெவினியூ ஆபீசிலிருந்த 125-ரூ சம்பள உத்தியோகத்தையாவது கொடுக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படமாட்டார்களாவென்று மிஸ்டர் K. R. குருசாமி அய்யர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார். இந்தக் கேள்விக்கு ஹானரபில் மிஸ்டர் ஹாமிக் கவர்ன்மெண்டார் இது விஷயத்தைக்குறித்து யாதொன்றும் பதில் சொல்லமாட்டார்களென்று சொல்லிவிட்டார். அக்டோபர்௴ 1௳ "முஸ்லிம் பேட்ரியாட்" என்னும் பத்திரிகையில் கவர்ன்மெண்டு பெரிய உத்தியோகங்கள் காலியாகும்போது கவர்ன்மெண்டார் ஏற்கனவே உத்தியோகத்தி

லிருக்கும் முகமதியர்களின் உரிமைகளைப் புறக்கணிக்கிறார்களென்றும், முகமதியர்களுக்கு உத்தியோகங் கொடுக்கிறதில்லை என்றும் புகார் செய்திருக்கிறதே அதைக் கவர்ன்மெண்டார் பார்த்தார்களா வென்று கேட்டார். இந்தக் கேள்விக்கும் ஹானரபில் மிஸ்டர் ஹாமிக்கே பதில் சொன்னார். கவர்ன்மெண்டார் உத்தியோகங்களைக் கொடுத்து வருவதில் உத்தியோகங்களுக்கு உரிமை யுடையவர்களே பார்த்துக் கொடுக்கிறார்களென்றும் அவர்கள் ஒருவரைப் பார்க்கிலும் மற்றொருவர் உரிமை யுடைவர் என்று நினைப்பதற்கு உள்ள காரணங்களைப் பயிரங்கமாய்ச் சொல்ல இஷ்டப்படமாட்டார்களென்று சொன்னார்.

சென்ற ஆகஸ்டு மீ திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் குளித்தலையிலிருக்கும் உப்பள சப் இன்ஸ்பெக்டர் ஏதோ பிசகு செய்ததாக விசாரணை செய்யவந்த அசிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர் நடு இரவில் சப் இன்ஸ்பெக்டர் வீட்டிலில்லாத காலத்தில் வீட்டின் கதவைத்தட்டி அவருடையபாலிய மனைவியைக் கதவைத் திறக்கும்படி கட்டாயப்படுத்தினதாகவும் அந்நங்கை கதவைத்திறந்ததாகவும் மறுநாள் காலையில் வீட்டிற்கு வந்த சப் இன்ஸ்பெக்டர் தன்னுடைய மனைவியின் பதிவிரதாதன்மையை சமுசயித்து இரண்டுமூன்றுதினம் ஏக்கங்கொண்டிருந்ததாகவும் மறுநாள் காவேரி நதியில் விழுந்து தற்கொலை செய்துகொண்டதாகவும் ஒருவர் ஹிந்து பத்திரிகையில் எழுதியிருந்தார். ஹானரபில் மிஸ்டர் K.R. குருசாமி அய்யர்அவர்கள் இதைக் கவர்ன்மெண்டார் பார்த்தார்களாவென்றும், அப்படிப்பார்த்திருந்தால் அசிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர் என்ன செய்தார்களென்றும் ஒரு கேள்வி கேட்டார். இந்தக் கேள்விக்கு ஜவாப்பு சொன்ன ஹானரபில் மிஸ்டர் கார்டியூ சப் இன்ஸ்பெக்டர்-தற்கொலை செய்துகொண்டதற்கு அசிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர் கதவைத்தட்டினது காரணமல்லவென்று சொல்லிவிட்டார்.

ஹானரபில் மிஸ்டர் கிருஷ்ணநாயர் கேட்ட கேள்விகளும் ஜவாப்புகளும்.

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் ஜாயிண்ட் ஸ்டாக்கம்பேனிகளையும் ஐரோப்பியரால் நடத்தப்படும் பாங்கியைத்தவிர சுதேச பாங்கிகளில் பணம் போட்டுவரக்கூடாதென்றும் யாதொரு பத்து வரவும் செய்யக்கூடாதென்றும் ஒரு கவர்ன்மெண்டு உத்திரவிருப்பதால் சுதேச உத்தியோகஸ்தர்கள் ஐரோப்பிய பாங்கிகளில் பணம்போட்டு நஷ்டமடைய வேண்டியதாயிருக்கிறது. கவர்ன்மெண்டார் இந்த விதியை ரத்துசெய்து கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சுதேச வர்த்தகர்களிடமும், சுதேச பாங்கியிலும் பணம்போட்டு வரலாமென்று உத்திரவு பிறப்பிக்க இஷ்டப்படுவார்களாவென்று மிஸ்டர் கிருஷ்ணநாயர் அவர்கள் கேட்டதற்கு, ஹானரபில் மிஸ்டர் ஹாமிக், கவர்ன்மெண்டார் அம்மாதிரி விதியை ஏற்படுத்தினதில் கவர்ன்மெண்டு சுதேச உத்தியோகஸ்தர்களை சுதேசிகளிடம் பணம் போட்டு வரும்படிவிட்டால் உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய அதிகாரமுறையில் அவர்களுக்கு தாக்ஷிண்யம் காட்டும்படியாக விருக்குமென்று அபிப்பிராயப்பட்டு அப்படி விதி ஏற்படுத்தினார்கள். ஆயினும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சுதேசபாங்கிகளில் பணம்கேட்டு வரும்படியான விதி ஒன்றுபிறப்பிக்க கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். டாக்டர் போப் தமிழ் அகராதியை இங்கிலாண்டில் அச்சிடும்படி கவர்ன்மெண்டார் ரூ 30-ஆயிரம் உபகாரப்பணம்கொடுக்க வர்க்களித்திருப்பது வாஸ்தவம்தானாவென்றும், அப்படிப்பணம் கொடுக்கும் விஷயத்தில், அந்தபுஸ்தகத்தை இந்தியாவில் சாதாரண விலைக்கு விற்று வரவேண்டுமென்றும் ஏன் ஒருநிபந்தனை கேட்கக்கூடாதென்றும் ஒரு கேள்வி கேட்டார். இதற்கு, இன்னும் அதைப்பற்றிய பேச்சு முடிவாகவில்லை யென்று சொன்னார்.

ஜட்ஜிகள் .—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

கேசின் விபரம்.—கோச்சின் சப்கோர்ட்டார் சினிவாசசெட்டி என்பவரை அரஸ்ட் செய்யும்படி ஒரு சிவில் வாரண்டு பிறப்பித்திருந்தார்கள். சினிவாசசெட்டியார் கடந்த எப்ரல் மீ 5உ அரஸ்ட் செய்யப்பட்டார். அரஸ்ட்செய்யப்பட்டவுடன் கோர்ட்டு சேவகனிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார். சேவகன் சப்ஜட்ஜியினிடம் ரிப்போர்ட் செய்தான். அவர் மாஜிஸ்டிரேட்டினிடம் செட்டியாரை பிராசிக்கியூட் செய்யும் படியாக உத்திரவு செய்தார். மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரித்து 26-அல 27ல் சொல்லப்பட்டிருக்கும் கேசை பிரமாணமாகவைத்துக்கொண்டு கொச்சின் சப்கோர்ட்டார் சி.பு.கோ 389-பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் போஷக பணத்தை (Sudsistance allowance) டிக்கிரிபெற்றவரிடமிருந்து வசூல் செய்யாமல் இந்த வாரண்டைப் பிறப்பித்திருக்கிறபடியால் இது சட்டவிரோதமான வாரண்டு என்று சொல்லிகேசைத் தள்ளிகுற்றவாளியை விடுவித்துவிட்டார்.

உத்தியோக முறையில் இந்தக்கேசின் தஸ்தாவேஜிகளைப் பார்வையிட்ட மலபார் ஜில்லா மாஜிஸ்டிரேட் சி. பு. கோ. 339-பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் போஷகபணம் நபரை அரஸ்ட் செய்தது முதல் அவனை கோர்ட்டில் ஆஜர்படுத்தும் பரியந்தம் அவனுக்காக செலவு செய்யவேண்டிய பணமென்றும், பிரஸ்தாப செட்டியார் கோர்ட்டிற்குச் சமீபத்தில் அரஸ்ட் செய்யப்பட்டிருக்கிறபடியால் அவரைக் கோர்ட்டில் கொண்டுவருவதற்குள் செய்யவேண்டிய செலவு யாதொன்று மில்லை என்றும், இந்தக் கேசை இப்படியே விட்டுவிட்டால் சிவில் கோர்ட்டார் வாரண்டு பிறப்பிக்கும்போதெல்லாம் டிக்கிரி பெற்றவர்களிடமிருந்து கொடுமையாகப் பணத்தை வசூல் செய்து பிறகு வாப்பீஸ் செய்யும்படி நேரிடுமென்றும் ஆகையால் இந்தக்கேசை புனர் விசாரணை செய்யும்படி உத்தரவு செய்தால் நலமாயிருக்குமென்றும் அபிப்பிராயங் கூறி இந்தக் கேசை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்.

தீர்ப்பு:—இந்தக்கேசை புனர் விசாரணை செய்யும்படி ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்கள்.

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

பிரிவி கௌன்சில் அப்பீல்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு தீர்ப்பின் மேலான அப்பீல்.

பிரிவி கௌன்சிலில் அப்பீல் செய்ய மனு கொடுத்தல்.

வெங்கநாத் சுவசுருபதில்வாலியா நம்புதிரி அவர்கள். } மனுதார்.

1. கேடரகுன்னுத் நம்பியாத்தான் நம்புதிரிஸ்.
2. கிருஷ்ணன் நம்புதிரிபாத முதல் } எதிர் மனுதார்கள்.

வியாச்சிய சங்கிரகம்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் செய்த இரண்டு தீர்மானத்தின் மேலும் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்ய அனுமதி கொடுக்கவேண்டுமென்று ஹைகோர்ட்டுக்கு மனு செய்துகொள்ளப்பட்டது.

எதிர் மனுதார் மானேஜ்மெண்டு அல்லது டிரஸ்டுக்குட்பட்ட பாலக்காட்டுக் கோவிலில் "மேல்கோமா" என்னும் பாத்தியம் தனக்கிருக்கிறதாக மனுதார் சொல்லிக்கொண்டார். இம் "மேல்கோமா" பாத்தியமிருக்கிறதாக 1845-1874 வருஷங்களில் மனுதார்களுக்குள் நடந்த ராஜியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மறுபடியுங் கட்சி ஏற்பட்டு 1887ளு எதிர் மனுதார்களால் கோவிலில் முழு சுவாதீனம் தங்களுக்கிருக்கிறதாக மனுதார் மேல் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. இவ்வியாச்சியத்தில் கடைசியாகப் பிரிவி கௌன்சிலர் இரு கட்சிக்காரர்களுக்கும் பொதுவாக மானேஜ்மெண்டு உண்டென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பையே உறுதிப்படுத்தினார்கள். 1899ளு எதிர் மனுதார்கள் தங்களுக்குப் பாத்திய சுவாதீனமுள்ளதென்று டிக்கிளேயர் பண்ணும்படி தாவா செய்தார்கள். மனுதாரும் தனக்கு மேல்கோமா பாத்தியம் இருக்கிறதென்றும் அதன் எல்லை இவ்வளவென்று டிக்கிளேயர் பண்ண (கூற) வேண்டுமென்று வேறொரு தாவா செய்தார்கள். இந்த இரண்டு வியாச்சியங்களையும் ஹைகோர்ட்டார் அப்பீலுக்கு வந்தபொழுது தீர்ப்பு செய்ததாவது:—

ரூபாய் பதினாயிரத்திற்கு மேல்கொண்ட தொகைக்குக் கீழ்க்கோர்ட்டிலும் அப்பீல்கோர்ட்டிலும் தாவா செய்யப்பட்டதென்றும், மனுதார் "மேல் கோமா" பாத்தியத்தைக் கொண்டாட 1845, 1874ளு களில் செய்த ராஜியினால் தடைப்பட்டிருக்கிறாரா என்பதும், மேல்கோமா பாத்தியம், உரலாபாத்தியம் ஆகிய இவை மேல்விசாரணை, மானேஜ்மெண்டின் சுபாவத்தையும் எல்லையையும் முன் வியாஜ்ஜியத்தின் பிரிவி கௌன்சில் தீர்மானம் முடிவுசெய்து விட்டதா என்பதுமாகிய சட்டத்துக்குரிய சங்கைகள் இவ்வப்பீலில் ஏற்படுகிறதென்றும் 1905ளு பிப்ரவரி மீ 15உ சென்னை ஹைகோர்ட்டார் செய்த இரண்டு தீர்ப்புகளின்மேல் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்ய இரண்டு மனுசெய்ததைக் காரணஞ்சொல்லாமல் தள்ளிவிட்டார்களென்றும் மனுவில் எழுதப்பட்டிருந்தது.

பிரிவி கௌன்சில் தீர்மானம்:—அப்பீல் பண்ணிக்கொள்ள அனுமதி கொடுக்கும்படி சக்கரவர்த்தியவர்களிடம் ஆலோசனை சொல்லக்கூடிய அப்பேர்ப்பட்ட கேசு இது அல்லவென்று அபிப்பிராயப்பட்டு இனி ஹைகோர்ட்டார் இம்மாதிரியான மனுக்களைத் தள்ளும்பொழுது மனுவைத் தள்ளும்படி செய்ததற்குக்காரணம் சொல்வது உசிதமாயிருக்குமென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்:—பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கும்படியாக ஹைகோர்ட்டுக்கு மனு செய்துகொள்ளும் பொழுது அம்மனுவைத் தள்ளும்படி செய்தால் அதற்குக் காரணம் ஹைகோர்ட்டார் சொல்வது உசிதமாகப் பாவிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 194 Venganat Swarupathil Valia Nambidi Avergal Cdarakunnath Nambiyathan Nambudris &c. I. L. R. 29. Mad. 194.

சீவில் அப்பீல் - புல்பெஞ்சு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்டு ஒயிட்டு.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்.

தீர்ப்புத்தடை—தகுந்த நியாயாதிக்கம்.

அவனாசி கவுண்டன் முதல் 1,2,4 பிரதிவாதிகள்
(அப்பீல் வாதிகள்.)

ராச்சம்மாள்—அப்பீல் பிரதிவாதி.

நிலமும் அதன் வரும்படியும் கிடைக்கவேண்டுமென்று வாதி கொண்டுவந்த தாவாவில் பிரதிவாதிகள் தங்களுக்கு நிலம் சொந்தமென்று வாதித்தார்கள். தாவா சொத்தில் பயிரிட்டிருக்கும்சோளப்பயிருக்குத் தண்ணீர் பாய விடாமல் தடைசெய்ததற்காக ரூபாய் 240 நஷ்டங் கொடுக்கவேண்டுமென்று வாதி பிரதிவாதியின்மேல் இதற்குமுன் ஒரு வியாச்சியஞ் செய்தார். அப்பொழுது பிரதிவாதிகள் வாதிக்கு நிலஞ் சொந்தமில்லையென்று மறுத்தார்கள். வாதிக்கு நிலத்தில் பாத்தியமுண்டா என்பதற்கு ஒரு இஷியூ ஏற்பட்டு ரூ 140-க்கு வாதி பட்சம் டிக்கிரி செய்யப்பட்டது.

இதன்மேல் பிரதிவாதிகள் டிஸ்டிரிக்டு கோர்ட்டில் செய்த அப்பிலுந் தள்ளப்பட்டது. முன் வியாச்சியத்தின் முடிவு இவ்வாறிருப்பதால் முன் வியாச்சியத்தின் இஷியூத்தீர்மானம் இவ்வியாச்சியத்துக்குத் தடையாகுமா என்பது முதல் இஷியூ. முன்சிப் கோர்ட்டார் இவ்வியாச்சியத்துக்குத் தடையாகுமென்று கூறி வாதி பட்சம் தீர்ப்புசெய்தார்கள். அப்பீலிலும் இது உறுதி செய்யப்பட்டது. இதன்மேல் 1, 2, 4 பிரதிவாதிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். ஜட்ஜிகள் டேவிஸாப், பென்சனும் பின்வருமாறு அபிப்பிராயமெழுதி புல்பெஞ்சின் அபிப்பிராயத்துக்கு ரிபர் பண்ணினார்கள்.

"இதே கட்சிக்காரர்களுக்குள் உண்டான முன் வியாச்சியத்தில் ஏற்பட்ட ஒரு இஷியூ இந்த வியாச்சியத்திலும் ஏற்படுகிறது."

முன் வியாச்சியத்தின் தொகை ரூ 500-க்குட்பட்டிருப்பதால் முன்சிப் கோர்ட்டாரின் ஸ்மால்காஸ் அதிகார வரம்புக்கு மேற்பட்டுப் போனதுபற்றி முன்சிப் கோர்ட்டாரால் அசல் வியாச்சியமாக விசாரிக்கப்பட்டாலும் அது ஸ்மால்காஸ் வியாச்சியமா

கும். அவ்வாறு ஸ்மால்காஸ் வியாச்சியமாக இராவிட்டால் அதனுடைய தீர்ப்பு பின் வியாச்சியமாகிய இதற்கு ஒரு தடையாகும்.

ஸ்மால்காஸ் வியாச்சியமாகவிருக்கிறதை முன்னிட்டு அதன் தீர்மானம் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் வியாச்சியத்திற்குத் தடையாகாமற்போகும்.

இந்தவிஷயத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று மாருகிற ரூலிங்ஸுகள் ஏற்பட்டிருக்கின்றன.

(1) இ. லா. ரி. 15 சென். 118. வயித்திலிங்க முதலியார் v வைத்திலிங்க முதலி 21 இ லா. ரி. 18 சென். 189-ஸ்ரீ ரெங்காசாரியார் v. இராமசாமி அய்யங்கார். ஆகிய இந்தக்கேசுகளில் பின் வரும் அசல் வியாச்சியங்களுக்குத் தடையாகாதென்று கூறப்பட்டிருக்கிறது.

(1) இ. லா. ரி. 17. சென். 273. சுப்பம்மாள் v. ஹட்டல்ஸ்டன், (2) இ. லா. ரி. 34. சென் 444 ஆமட் v. மொதின் ஆகிய இந்தக்கேசுகளில் தடையாகுமென்று கூறப்பட்டிருக்கிறது.

இக்காரணங்களைக்கூறி புல் பெஞ்சுக்கு ரிபர் பண்ணினார்கள்.

புல் பென்சு கோர்ட்டார் அபிப்பிராயம்:—ஒரு வியாச்சியத்தில் இரு கட்சிக்காரர்களுக்குள் ஏற்பட்ட ஒரு இஷியூவுக் குண்டான முடிவு ஸ்மால்காஸ் வியாச்சியமாயிருந்து அசல் பக்கத்தில் விசாரிக்கப்பட்டாலும் இரண்டாவது அப்பீல் இல்லாததால் பின்னொரு வியாச்சியம் அதே இஷியூவைப்பற்றி அதே கட்சிக் காரர்களுக்குள் ஏற்பட்டால் இதற்குத்தடையாகுமா என்பதைப்பற்றிக் கேள்வி உண்டாயிருக்கிறது.

இ. லா. ரி. 9. பம். 75-போலபாயி v. அடெசாங்கு கேசில், முதலில் இச்சங்கை உண்டாயிற்று. அதில் முதல் வியாச்சியத்தின் தீர்ப்பு பின் வரும் வியாச்சியத்திற்குத்தடையாகாதென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 15. பம். 104. கேசில் முன் தீர்ப்பை அனுசரித்து ரூலிங்ஸ் ஏற்பட்டது. இதன்மத்தியில் சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் முன் தீர்ப்புத் தடையாகுமென்று சொல்லப்பட்டது. இ. லா. ரி. 15. சென் 111-கேசில் சட்ட சம்பந்தமான சங்கை யிருந்தால் மாத்திரம் அப்பீல் எற்றுக்கொள்ளப்படும். ரூ 5000-க்குக்குறைந்த தொகைக்கு சப்ஜட்ஜியினுல் செய்த தீர்மானம் 5000-க்குமேற்பட்ட தொகையாயிருக்கும் வியாஜ்ஜியத்திற்குச் சங்கதி விஷயத்திலும் சட்டவிஷயத்திலும் அப்பீலிருக்கிறதால் இம்மாதிரி கேசுக்குத்தடையாகாதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்ப்பைஒத்து ஒரு ஜட்ஜியினுல் சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது. இ. லா. ரி. 17. சென். 168 கேசில் ஜட்ஜிகள் டேவிஸும், முத்துசாமி அய்யரும் முன் வியாஜ்ஜியம் தடையாகுமென்றும் வாதத்தை நீக்கித் தீர்ப்பு செய்தார்கள். இத்தீர்ப்பை அனுசரித்து இ. லா. ரி. 18 சென். 189 கேசிலும் முடிவு செய்தார்கள். பிறகு இ. லா. ரி. 15. சென் 111. கேசில் இதற்கு மாருக அபிப்பிராயங் கொண்டார்கள். கல்கட்டா ஹைகோர்ட்டில் முதலாவது அப்பீல் இரண்டாவது அப்பீல் இந்தக் கேசுக்கிருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டியதில்லை. முன் வியாச்சியத்தை விசாரித்த கோர்ட்டார் பின் வியாச்சியத்தை விசாரிக்க அதிகாரமுடையவர்களாயிருந்தால் அந்தக் கோர்ட்டு சி. பு. கோ. 31-வது பிரிவுப்படி தகுந்த நியாயாதிக்க முடைய கோர்ட்டாகும். அதன் தீர்ப்பு பின்வரும் வியாச்சியத்திற்குத் தடையாகுமென்று கூறியிருக்கிறார்கள். இ. லா. ரி. 24 சென். 444 கேசில் சென்னை ஹைகோர்ட்டார் இதை ஆதாரமாக வைத்து ஒரு தீர்ப்பு செய்திருக்கிறார்கள். அத்தீர்ப்பில் இ. லா. ரி. 17. சென். 273 கேசை எடுத்துக்கூறவில்லை யென்றும் இ. லா. ரி. 18. சென் 189. கேசில் கவனியாது போய்விட்டார்களென்றும் சொல்லியிருக்கிறது.

இப்பொழுது கூறிய இரண்டு கேசுகளில் பின்னால்சொன்னகேசு மற்றொரு கேசுக்குச் சில நாட்களுக்கு முன்னுல் தீர்மானமாயும் அது அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப்பட காலதாமதமாகி யிருக்குமாகையால் அந்தக்கேசில் இதை கவனித்திருக்க இடமிருந்திருக்காது.

இந்தச் சிறிய சங்கையைப்பற்றிப்பேசும் இவ்வளவு ஏராளமான ஆதாரங்களிருக்கும்பொழுது இதைத்தவிர வேறு நூதன தர்க்கம் பேசக்கூடியதாகவுமில்லை. இவ்விரண்டு மாருன அபிப்பிராயங்களிலொன்றை அனுசரிக்க வேண்டியிருக்கிறது. 13-வது பிரிவின் தாத்பரியத்தை நிதானிப்பது பிரயாசையென்று ஒப்புக்கொள்ளப் படுகிறது முன் வியாச்சியத்தைத் தீர்மானஞ் செய்த கோர்ட்டார் பின்வரும் வியாச்சியத்தை விசாரிக்க அதிகாரமுள்ளவராயிருந்தால் முன் வியாச்சியத்திற்குரிய அப்பீல் பின்வரும் வியாச்சியத்திற்குரிய அப்பீலை யொத்திருக்கிறதைக் கவனியாமலே முன் தீர்ப்பு பின்வரும் வியாச்சியத்திற்குத் தடையாகுமென்றும் வேறு விதமாக அர்த்தப்படுத்துவது சட்ட நிரூபண சபையாரின் வார்த்தைகளை நெருக்கிப்பிழிந்து அர்த்தங்கொள்வதையொக்குமென்றும், தடையாகும் என்று கூறுஞ் ஜட்ஜிகள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் இப்பிரிவுகூறும் தடையை உபயோகிக்க அப்பீல் விஷயத்திற்குரிய சட்டவிதிகளைத் "தகுந்தநியாயாதிக்கமுடைய" என்னும் வார்த்தைகளின் தாத்பரியமென்றும், இத்தேசத்தில் நியாயபரிபாலனஞ் செய்யுங் கோர்ட்டுகள் பலபடித்தாமுடையவைகளாயிருக்கிறதைக் கவனிக்கும்பொழுது கூடியவரையில் கீழ்க்கோர்ட்டார் தீர்ப்புகளினுல் மேல் கோர்ட்டுகளைக் கட்டுப்படுத்தாமலிருப்பது உசிதமா யிருக்குமென்று மற்ற தரத்து ஜட்ஜிகள் நினைக்கிறார்கள். ஜூடிஷியல் கமிட்டி குறிக்கப்பட்ட 8-வாராந்தக்குறிப்பு 175-முசமட் எடன் v முசபட் மேச்சன் கேசில் "சர் பார்னஸ் பீக்காக்" என்பவரும், ஜூடிஷியல் கமிட்டியாரும் * கோர்ட்டாரின் படித்தரங்களைப்பற்றி விசேஷித்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கேசிலேயே கமிட்டியார், வியாச்சிய விரிவை நிறுத்த வேண்டியது உசிதமாயிருந்தாலும் பல இந்தியக் கோர்ட்டுகளின் திறமைக்குறைவைக்கொண்டு ஒரு கட்சிக்காரன் கேசின் உண்மையை ரூபிப்பதைத் தடுக்கும்படி அவ்வளவு கடுமை செய்யாமலிருப்பது நலமென்று கூறியிருக்கிறார்கள்.

ஆகையால் மாருன தீர்மானங்களை எற்றுக்கொள்ளாமல் இ. லா. ரி. 17. சென். 273-ன் கேசுக்குச்சம்பந்தப்பட்டிருப்பதால் முன் வியாச்சியத்தின் தீர்ப்பு இதற்குத்தடையாகாதென்றும் முன் வியாச்சியம் ஸ்மால்காசாயிருப்பதால் அத்தீர்ப்பின் வியாச்சியத்திற்குத்தடையாவதை நீக்குகிறதென்று அபிப்பிராயப்பட்டு கட்டுகளை டிவிஷன் பென்சுக்கு அனுப்பினார்கள்.

டிவிஷன் பென்சார் தீர்ப்பு:—புல்பென்சார் அபிப்பிராயம் இந்தக்கேசுக்கு முன் தீர்மானம் தடையாகாதென்பது. கீழ்க்கோர்ட்டார் தீர்ப்புகளை மாற்றி இந்த வியாச்சியத்தை முன்சிப்கோர்ட்டுக்கு ரிமாண்டு பண்ணி விசாரிக்கும்படி உத்தரவு செய்து செலவுதொகை வியாச்சியத்தின் முடிவைப் பொறுத்திருக்குமென்று தீர்ப்புசெய்தார்கள்.

* மிசிர் ராகோபார்டியால் v ஷியோபாகூா சிங்கு இலா 9 கல் 430.

ரூலிங்ஸ்:—சி. பு. கோ. 13-வது பிரிவிலுள்ள "தகுந்த நியாயாதிக்கமுடைய" என்னும் வார்த்தைகள், கீழ்க்கோர்ட்டுகளின் தீர்ப்பு மேல்கோர்ட்டுகளைக் கட்டுப்படுத்தாதபடி பொருந்த அர்த்தம் பண்ணி முன்வியாச்சியத்தீர்ப்புகள்பின்வரும் தீர்ப்புகளுக்குத் தடையாவதற்கு அப்பீல் உரிமையைக் காரணமாக எற்றுக்கொள்ளுமென்றும் விதிகளை இரண்டாவது அப்பீல் செய்யக்கூடாத ஸ்மால்காஸ் வியாச்சியத்தின் தீர்ப்பு இரண்டாவது அப்பீல் செய்யக்கூடிய பின்வரும் வியாச்சியங்களுக்கு அதே கோர்ட்டில் தடையாகாதென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 195.

(Avanasi Gounden v. Nachammal. I. L. R, 29. Madras 195.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சர் ஆர்னுல்டு ஒயிட்டு சிப்ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்.

தகப்பன் கிரயம் அல்லது பெந்தகம் வைத்தால் முன் கடனிருந்தாலொழிய பிள்ளைகளின் பாகத்தைக் கட்டுப்படுத்தாது.

வெங்கிட்ட ரமணய்ய பந்துலு வ-ரு வாதிகள் (அப்பீல்வாதிகள்.)

வெங்கிட்ட ரமணதாஸ் பந்துலு வ-ரு பிரதிவாதிகள் (அப்பீல் பிரதிவாதிகள்.)

வியாச்சிய சங்கிரகம்.

1, 2, 3 பிரதிவாதிகளின் இறந்துபோன தகப்பனும், 4, 5 பிரதிவாதிகளும், 6, 7 பிரதிவாதிகளின் தகப்பனும் சேர்ந்து எழுதிக்கொடுத்த ரிஜிஸ்டரான பெந்தக பத்திரத்தின் மூலமாகக்கிடைக்கவேண்டிய ரூ 166-6-6-க்கு வாதிகள் பிராது செய்தார்கள். இப்பத்திரம் முந்தின கடனைத் தீர்க்கவேண்டியதற்குப் பிறந்ததா: வில்லை. முன்சிப்கோர்ட்டார் தீர்மானம்:—

பெந்தகத்திற்குத் தகுந்தாடு ஏற்படவில்லை யென்று பிராதைத் தள்ளிவிட்டார்கள்.

இதன்மேல் டிஸ்டிரிக்டு கோர்ட்டாருக்கு அப்பீல் செய்தபொழுது டிஸ்டிரிக்டு கோர்ட்டார் வாதி பட்சம் தீர்ப்புசொல்லி, 1, 2, 3, 6, 7 பிரதிவாதிகளையும் அவர்கள் பாகத்தையுங் கடனுக்குக் கட்டுப்படாதபடி விலக்கிவிட்டார்கள். இதன்மேல் வாதிகள் இந்த இரண்டாவது அப்பீல் செய்தார்கள்.

டிஸ்டிரிக்டு கோர்ட்டாரால் விலக்கி விடப்பட்ட பாகங்கள் பெந்தகக் கடனுக்குக் கட்டுப்படுமா என்னும் ஒரே கட்சி ஏற்பட்டது. ஜட்ஜிகள் கனார் டேவிஸும் பென்சனும் விசாரிக்க ஆரம்பித்துப் பின் வருமாறு அபிப்பிராயப்பட்டு புல்பெஞ்சுக்கு அனுப்பும்படி உத்தரவு செய்தார்கள். டிஸ்டிரிக்டு கோர்ட்டார் ஆதாரமாகக்கொண்ட இ. லா. ரி. 21 சென். 28 ன் சாமி அய்யங்கார் v. பொன்னம்மாள்கேசுக்கு மாருக டிவிஷன் பெஞ்சில் வேறொரு கேசாகிய இ. லா. ரி. 27. சென். 326 சிதம்பர முதலியார் v. கூத்தப்பெருமாள் கேசில் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். இப்படி யிருப்பதால் புல்பெஞ்சிக்கு ரிபர்பண்ணி நன்ருய் முடிவு செய்யவேண்டுமென்று நினைக்கிறோம்.

ஆகையால் பிள்ளையின் பாகத்தைக் கட்டுப்படுத்த தகப்பனுல் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரயம் அல்லது பெந்தகத்துக்கு முன் ஒரு கடனிருக்க வேண்டியதவசியமாஎன்பதைப்பற்றித் தீர்மானிக்க புல்பென்சி கோர்ட்டாருக்கு ரிபர் பண்ணப்போகிறோம்.

புல்பேஞ்சார் அபிப்பிராயம்:—முன் ஒரு கடன் இல்லாமற்போனுல் அவிபக்த குடும்பத் தகப்பன் எழுதிக்கொடுத்த கிரயம் அல்லது பெந்தகம், பிள்ளையின் பாகத்தைக் கட்டுப்படுத்துமா என்பதைப்பற்றித் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

சாமி அய்யங்கார் v. பொன்னம்மாள் கேசில் பிள்ளையின் பாகத்தைக் கட்டுப்படுத்த அவிபக்த குடும்பத் தகப்பன் எழுதிக்கொடுத்த கிரயம் அல்லது பெந்தகத்துக்கு முன் ஒரு கடன் இருந்திருக்க வேண்டுமென்றும் பணப்பாத்தியமாக தகப்பனுடைய கடனுக்காகப் பிள்ளையின் பாத்தியத்தைக் கட்டுப்படுத்த பெந்தகம் முன் கடனுக்காகச் செய்யப்பட்டு சட்ட விரோதம் அல்லது துன்மார்க்கச் செலவுக்கு வாங்கப்படாமலிருக்கும் கேசில் ஒரு சங்கையுமில்லையென்றும் தீர்ப்பில் கண்டிருக்கிறது. பிறகு இதையனுசரித்து முன் கடனில்லாமற்போனுல் தகப்பனுடைய கிரயம் அல்லது பெந்தகம் பிள்ளையின் பாகத்தைக் கட்டுப்படுத்தாது என்று இந்தக் கோர்ட்டாரால் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

சிதம்பர முதலியார். v. கூத்தப்பெருமாள் கேசில் முந்தின கடனுக்காக ஏற்பட்ட பெந்தகத்துக்கும் இப்போது கடன் வாங்கின பெந்தகத்துக்கும் நியாயமாகவே வித்தியாசமில்லாததால் பிள்ளையினுடைய பாகம் தகப்பனுடைய கடனுக்கு எவ்விதத்திலும் கட்டுப்பட வேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ் பெந்தகம் சம்பந்தமானதேயல்லாமல் கிரயத்தைப்பற்றியது அல்ல. ஆனுல் அதிலுள்ள வார்த்தைகள் கிரயத்துக்கும் பெந்தகத்துக்கும் ஒத்தே இவ்விதி பொருத்தமாகுமென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டதாக விளங்குகிறது. சாமி ஐயங்கார் v. பொன்னம்மாள் கேசு சரியானபடி தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா என்னும் ஒரே கேள்விதானிருக்கிறது. அது சரியென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம். இந்தக் கோர்ட்டைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்புகளால் இச்சங்கை ஆளப்பட்டிருக்கிறதென்று நமக்குத் தெரிகிறது. இ.லா ரி. 5. கல். 148. சூராஜ் பன்ஷி. கோ. v. ஷியோ. பர்ஸாத் ஸிங்கு வகையரு கேசில் முன்னுலிருக்கும் ஒரு கடனை நிவர்த்திப்பதற்கு அல்லது தகப்பனுடைய கடனுக்காக வேற்பட்ட தீர்ப்பை நிறைவேற்றும்போது இதைத் தீர்ப்பதற்கு ஏற்பட்ட கிரயம் தகப்பனுடைய கடனைப் பிள்ளைகள் தீர்க்க வேண்டிய கடமையிருக்கும் காரணத்தை முன்னிட்டு ஒருதகப்பன் எழுதிக்கொடுத்த பத்திரத்தினுல் பிதுரார்ஜிதசொத்து அவிபக்த குடும்பத்தைவிட்டு மாறும் பொழுது அது துன்மார்க்கச்செலவுக்காக கடன் வாங்கப்பட்டதென்று ரூபித்து சொத்தைக்கிரயம் வாங்கினவர்களுக்கு அவ்வாறு நோட்டீசு கொடுக்கப்பட்டிருந்தாலொழிய பிள்ளையின் சொத்து தகப்பனுடைய கடனுக்குக் கட்டுப்படுமென்று பிரிவிகவுன்சிலார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். மறுபடியும் இ.லா.ரி. 13. கல். 21. நாஜேமி பாசின் v. மோடன் மோகன் கேசில் பிள்ளைகளின் குடும்பப் பொதுச்சொத்திலிருக்கும் பாத்தியத்துக்கு ஒரு அழிவுவந்தாலும் முந்தின கடனுக்காக தகப்பன் பராதீனம் செய்யும் சொத்துக்களில் துன்மார்க்கச்செலவுக்காக அந்தக் கடனில்லாதபக்ஷத்தில் பிள்ளைகள் தங்கள் பாத்தியதையைக்கொண்டாடமுடியாதென்றும் சிலகாலங்களாக விதி ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகப் பிரிவிகவுன்ஸிலார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

இ. லா. ரி. 15 கல் 717. பாக்பத்பெர்ஷாத்ஸிங்கு v. கர்ஜா கோர்வகையரு கேசில் கிரயத்துக்கு முந்திகடன் இருந்ததுஎன்றபோது மேலேசொல்லிய தீர்மானத்தை எடுத்தெழுதி. அதனை அனுசரித்துப் பிரிவி கௌன்ஸிலார் தீர்மானம் செய்தார்கள்.

இ. லா. ரி. 17-கல் 584:—மஹாபீர் பெர்ஷாத். v. மோஹெஸ்வார்நாத்ஸாஹே கேசில் கடன் கிரயத்துக்கு முந்தினதா யிருந்தபோது அவ்வாறு கட்டுப்படுமென்று ஷை. பிரிவி கவுன்சிலார் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

சிதம்பர முதலியார் v. கூத்தப்பெருமாள் கேசில் இக்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயத்தை ஒத்துக்கொள்ளுவது கூடாதென்று நமக்குத் தோற்றுகிறது. அவ்வாறு செய்வதற்கு நமக்கு ஆதாரமுமில்லை என்று நினைக்கிறோம். இதர ஹைகோர்ட்டுகளின் தீர்மானங்களைக்கவனிக்கும்பொழுது கடனானது பெந்தகத்தினாலேயே ஏற்பட்டிருந்தபோதிலும், அப்பெந்தகம் பிள்ளையின் பாகத்தையும் கட்டுப்படுத்துமென்று தீர்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்கடனும் முந்தினகடன் என்பதாகப்பாவித்து அர்த்தம்பண்ணி பிரிவிகவுன்ஸிலார் ரூலிங்ஸ்களுக்கு இணங்க அவ்வாதாரத்தின்மேல் செய்யப்பட்ட தீர்மானங்களாகவிருக்கின்றன. இப்படி தீர்மானிக்கப்பட்ட கேசுகள்: இ. லா. ரி. 20-கல் 328. இ. லா. ரி. 5-கல் 855. இ. லா. ரி. 14-பம் 320.

இ. லா. ரி. 24-அல. 459. டெபிடாத் v. ஜாடுராய் கேசில் பிரிவிகவுன்ஸிலாருடைய ரூலிங்ஸ்களை எடுத்துக்காட்டாமல் ஒருதகப்பன் எழுதிக்கொடுத்த பெந்தகப் பத்திரத்திற்கு அந்தக்கடன் உள்ளபடியே வாங்கப்படாமல் அல்லது துன்மார்க்கச்செலவுக்காக ஏற்படாமல் இருந்தால் பிள்ளைகள் அது விஷயமாய் எந்தக்கக்ஷியும் சொல்லாமல் கட்டுப்படவேண்டுமென்று அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இ. லா. ரி. 5-கல். 148-இன் கேசில் பிரிவுகவுன்ஸிலார் செய்த தீர்மானத்திலுள்ள வார்த்தைகளின் கருத்துப்படி இ. லா. ரி. 13-சென். 51.

இ. லா. ரி. 21-சென். 28-யிலுள்ள கேசுகளின் கடன்கள் கிரயம் அல்லது பெந்தகத்துக்கு முந்திய கடன் ஆகாது என்று இக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் நமக்கு ரிபர் செய்யப்பட்ட இச்சங்கைக்கு மறுமொழி தகப்பனால் செய்யப்பட்ட கிரயம் அல்லது பெந்தகத்திற்குப் பிள்ளையின் பாகம் கட்டுப்பட அவைகளுக்கு முன் ஒரு கடனிருக்கவேண்டுமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இவ்வபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு டிவிஷன் பெஞ்சார் செய்த,

தீர்மானம்:—1,2, 3 பிரதிவாதிகளின் தங்கையின் விவாகச் செலவுக்காக இக்கடன் வாங்கப்பட்டதென்று டிஸ்டிரிக்டு கோர்ட்டார் அபிப்பிராயப்படவில்லை என்று கக்ஷி சொன்னார்கள். ஷை கோர்ட்டாருடைய தீர்மானம் இவ்வாறு அர்த்தப்படுவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அக்கடன் விவாகச் செலவுக்காக வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டதென்றும் ஆனால் அது அந்த விவாகத்துக்காகவே செலவழிக்கப்பட்டதா அல்லது அந்த விவாகம் எப்பொழுது நடந்தது என்பதைப்பற்றிய சாக்ஷியங்களில்லை என்றும் அத்தீர்ப்பில் எழுதியிருக்கிறார்கள். விவாகமே நடந்ததற்கு ஒரு சாக்ஷியமுமில்லை என்றும் இன்னும் அதிகமாயும் ஷை டிஸ்டிரிக்டு ஜட்ஜி எழுதியிருக்கலாம். இந்தக்கேசை புல்பெஞ்சாருக்கு ரிபர் செய்தபோது தகப்பனால் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரயம் அல்லது பந்தகமானது அவிபக்த குடும்பத்தின் அவனுடைய பிள்ளையின் பாகத்தைக் கட்டுப்படுத்த முந்தின கடனென்று இதற்கு முன்னிருந்து அதைத் தீர்ப்பதற்காக இது ஏற்படவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டு எல்லா சந்தேகங்களையும் நிவர்த்திசெய்துவிட்டார்கள். இந்த விஷயம் வாதிகளுக்கு அபஜெயமானதால் அவர்களின் வைக்கீல் நூதனக்கேள்விகளைக்கேட்க ஆரம்பித்தார். டிஸ்டிரிக்டு கோர்ட்டில் இவ்வாட்சேபங்களை அவர்களெடுத்துப் பேசாததனால் இவ்விரண்டவது அப்பீலில் இக்கேள்விகளுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாதென்று அபிப்பிராயப் படுகிறோம் என்றும் ஆகையால் இவ்வப்பீலைத்தள்ளுபடி செய்து வாதிகளின் செலவுகளை அவர்களேபொறுத்துக்கொண்டு 10-வது பிரதிவாதிக்கு வாதிகள் செலவுதொகைகொடுக்கும்படியும் மற்றக் கக்ஷிக்காரர்களுக்குச் செலவுதொகை ஏற்படுத்தாமலும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்:—முன்னொரு கடன் ஏற்பட்டிருக்கும் பொழுது அவிபக்த குடும்பத்தின் சொத்தைக் கட்டுப்படுத்தின கிரயமாவது பெந்தகமாவது ஒரு தகப்பனால் எழுதிக்கொடுக்கப்பட்டால் அது பிள்ளையின் பாகத்தையும் கட்டுப்படுத்தும் என்றும், அந்தக் கடனும் கிரயமும் பெந்தகம் செய்து கொடுக்கும் போது ஏற்பட்ட கடனாயிருக்குமானால் அது பிரிவி கவுன்சிலர் தீர்மானத்தின்படி முந்தின கடனாகாதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இ. லா. ரி. 29. சென். 200. Venkata Ramanayya Pantulu v. Venkata Ramana Doss Pantulu, I. L. R. 29 Mad. 200.

கல்கத்தா ஹைகோர்டு.

சிவில் அப்பீல்.*

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிஸ். சர். பிரான்சிஸ் W. மாக்லியான்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மூக்கர்ஜி.

கடனை ஒப்புக்கொள்ளுதல் காலாவதி தோஷத்தை நிவர்த்திக்க எவ்வாறு இருக்கவேண்டும்.

பீபீ பெயிஜ் நாத்ராம் சாஹு—வாதி (அப்பீல் பிரதிவாதி).

இமாம் ஆலி—பிரதிவாதி (அபீல் வாதி).

வியாச்சிய சங்கிரகம்.

சில பிரதிவாதிகளும் அவர்களின் தகப்பனும் கூடி வாதிக்கும் வாதியின் தகப்பனுக்கு கணக்கு தீர்ந்த வகையிலும் ரொக்கம் பெற்றுக்கொண்டவகையிலும் ரூ. 500-க்கு ஒரு பெந்தகப்பத்திரம் 1882௵ செப்டம்பர்௴ 5உ எழுதிக்கொடுத்தார்கள். பலதடவைகளில் இந்தப்பத்திரத்தில் வரவுவைக்கப்பட்டிருந்தது. 1891௵ ஜனவரி௴ 16உ கடைசி வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் மேல் 1902௵ டிசம்பர்௴ 17உ இவ்வியாச்சியம் கோர்ட்டில் கொண்டுவரப்பட்டது. இவ்வியாச்சியத்தில் பெந்தகப்பத்திரம் எழுதினவர்களோடு பத்திரம் பிறந்தபிறகு சொத்துக்களிற் பலவற்றில் பாத்தியமடைந்தவர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டது. அவைகளில் ஒரு சொத்து "இமாம் ஆலி" க்குக்கிடைத்தது. வேறுசில "திலுக்தாரி லாலுக்கு" க்கிடைத்தன. இன்னஞ்சில "அப்துல் ராஹிமுக்குக்" கிடைத்தன. இமாம்ஆலிமுதலில் பிரதிவாதியாகச் சேர்க்கப்படவில்லை. பிறகு பிரதிவாதிகளிலொருவன் ஆக்ஷேபிக்க டிரான்ஸ்பர்

ஆப் பிராபர்ட்டி ஆக்டு 85-வது பிரிவுப்படி வாதி மனுவின்மேல் 1903௵ மே௴ 8உ பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டான்.

(1.) நூதனமாகப் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்ட "இராம் ஆலி" அனுபவிக்கும் சொத்து விஷயமாகக் காலாவதி யாகிவிட்டதென்றும், (2.) மேலே கூறியது நியாயமாகும் பட்சத்தில் பெந்தகக்கடன் பிரிக்கப்படாதபடி ஒரே மொத்தமா யிருப்பதால் முழுமைக்கும் காலாவதியாகிவிட்ட தென்றும், (3) பெந்தகத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு வாதியின் சம்மதத்தின்மேல் வாங்கப்பட்டிருப்பதால் டிலாக்தாரி கைவசமிருக்குஞ் சொத்தில் பிரவேசிக்க நியாயமில்லை என்றும் பிரதிவாதிகளின் கட்சி.

சப் கோர்ட்டார் தீர்மானம்:—இந்த வியாச்சியத்தில் சப் கோர்ட்டார் மேலே கூறிய கட்சிகளை ஒப்புக்கொள்ளாமல் வாதிபட்சம் தீர்ப்புசெய்தார்கள்.

இதன் மேல் "பாகல்பூர்" டிஸ்டிரிக்டு ஜட்ஜியினிடம் அப்பீல் செய்யப்பட்டது.

டிஸ்டிரிக்டு கோர்ட்டார் தீர்மானம்:—டிலாக்தாரி வசமிருக்குஞ் சொத்து பெந்தகம் வாங்கினவர்கள் விடுதலை செய்ததின்மேல் வாங்கப்பட்டதாக அபிப்பிராயப்பட்டு அதுவிஷயத்தில் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை மாற்றி மற்ற விஷயத்தில் உறுதிப்படுத்தினார்கள். இதன்மேல் பிரதிவாதிகள் தனித்தனியே அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—1. இமாம் ஆலி அனுபவிக்குஞ்சொத்து விஷயமாக காலாவதி ஆகிவிட்டதென்றும், 2. இமாம் ஆலி விஷயத்தில் காலாவதியானதென்று வியாச்சியம் தள்ளப்பட்டால் மற்ற பிரதிவாதிகள் விஷயத்திலும் வியாச்சியம் நிற்கத்தகுந்ததல்லவென்றும், 3. டிலாக்தாரி வசமிருக்கும் சொத்தும் இதர சொத்துக்களைப்போல பெந்தகக் கடனுக்குக் கட்டுப்படவேண்டுமென்றும் டிஸ்டிரிக்டு கோர்ட்டார் தீர்ப்புக்கு விரோதமாக கட்சி சொன்னார்கள்.

லிமிட்டேஷன் ஆக்டு 22-வது பிரிவுப்படி 1903௵ மே௴ 8உ இமாம் ஆலியின்மேல் வியாச்சியஞ் செய்ததாகத் தாற்பரியப்படவேண்டியதென்றும் பத்திரத்தில் வரவுவைத்த தேதிக்குப்பிறகு இந்தத் தேதி பன்னிரண்டு வருஷத்திற்கு மேற்பட்டுப்போனதால் (லிமிட்டேஷன் ஆக்டு 20-வது பிரிவு, 132-வது ஆர்ட்டிகள்படி) காலாவதியால் பாதிக்கப்பட்டுப்போனதென்றும் முதலாவது கட்சி விஷயமாக பிரதிவாதிகள் வாதித்தார்கள். இவ்வாதத்துக்கு மாறாக 1891௵ அக்டோபர்௴ 21உ பெந்தகம் வைத்தவர்கள் "டிலாக்தாரிக்கு" எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தில்கடனைக்கண்டுஎழுதியிருக்கிறதால்அதுகடனை ஒப்புக்கொண்டதற்குச் சமானமாகுமென்றும் அதனால்காலாவதியால் பாதிக்கப்படவில்லையென்றும் அன்றியும் கோர்ட்டாரால் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருப்பதால் காலாவதி ஏற்படாதென்றும் வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் சொன்னார்கள். இவ்வாதத்தின் பிரதயபாக விஷயமாக, 1891௵ அக்டோபர்௴ 21உ பெந்தகம் வைத்தவர் பெந்தகச் சொத்தில் ஒரு பாகத்தை விற்றபோது டிலாக்தாரிக்கு எழுதிக்கொடுத்திருக்கிற கிரயசாசனத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"1882௵ செப்டெம்பர்௴ 5உ பெயிஜ்நாத்ராமுக்கும் ஜகனாத்ராமுக்கும் எழுதிக்கொடுத்திருக்கும் பத்திரத்தின்படி அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் நான் கொடுக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. சொத்தைக் கிரயஞ் செய்யாமல் அத்தொகையைச் செலுத்த எனக்கு வேறாதாரமில்லாததால் "டிலாக்தாரிலால்" என்பவரிடம் நான் ரூ. 1400 பெற்றுக்கொண்டு அத்தொகையைக்கொடுத்து கிரயம் பண்ணுகிற சொத்தை * பெந்தகத்திலிருந்து பெந்தகம் வாங்கினவரால் விடுதலையாக்கி, பெற்றுக்கொண்ட தொகைக்காக சொத்தைக் கிரயஞ்செய்து கொடுத்தேன்," லிமிட்டேஷன் ஆக்டு 19-வது பிரிவுப்படி மேலே எழுதிய வாசகத்தினால் இப்பத்திரத்தேதியிலிருந்து காலாவதி கணக்கிடக்கூடியதாகக் கடனை ஒப்புக்கொண்டதற்குச் சமானமாகுமா என்னும் சங்கை உண்டாகிறது. கடனுக்குக் கட்டுப்பட்டிருக்கிறதாக ஒப்புக்கொள்ளாததாலும், பெந்தகம் வாங்கினவர்களுக்கு நேரிலாகிலும் அல்லது அவர்களுக்குத் தெரியப்படுத்தியாகிலு மில்லாததாலும் செல்லுபடியான ஒப்புக்கொள்ளுதலாகாதென்று அப்பீல் வாதிகள் கட்சிசொன்னார்கள். இந்தக் கட்சி ஸ்திரமுள்ளதாகவும் "மீலாப்பூர் v ஈயோகே" கேசில் ஜுடிஷியல் கமிட்டி தீர்மானத்தினால் ஆதரிக்கப்பட்டிருக்கிறதாகவுந் தெரிகிறது. லிமிட் டேஷன் ஆக்டு 19-வது பிரிவுப்படி கடனை ஒப்புக்கொள்ளுதல் என்கிற அர்த்தப்படும்படி கிரயசாசனத்தில் வாசகமிருக்கிறதாகக் கட்சி ஏற்பட்டபொழுது பின் வருமாறு சர் பார்னஸ் பீகாக் Sir Barnas Peacock என்பவர் தீர்ப்பில் எழுதியிருக்கிறார்.

"கிரயபத்திரத்தில் சொத்தின் விஷயமாக கட்டுப்பட்டதாக எழுதியிருக்கிறதென்று வாதிக்கப்பட்டது. சொத்தைக்கிரயம்பண்ணுவதில் எக்ஸிகியூட்டருக்கு ஏஜெண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார். கிரயத்தொகையிலிருந்து கடனை ஈடுபண்ணக் கிரயஞ்செய்தார்.. வாதியினிடமாகிலும் வாதியின் மூலமாக பாத்தியங்கொண்டாடுகிற வேறொருவரிடமாகிலும் ஒப்புக்கொள்ளவில்லை. மேலே கூறிய சங்கதிகளால் இது பொருத்தமுள்ளதல்ல."

வாதி யிடமாகிலும் அவர் மூலமாக பாத்தியங்கொண்டாடுகிற வேறொருவரிடமாகிலும் ஒப்புக்கொண்டால் தான் 19-வது பிரிவுப்படி ஒப்புக்கொண்டதாகுமென்று இதனால் தெளிவாகிறது. பாத்தியமுள்ளவர்களுக்கல்லாமல் மற்றொருவர் பேருக்கனுப்பிய கடிதத்தில் ஒப்புக்கொண்டாகிலும் போதுமென்று அந்தப்பிரிவுக்குக் கீழிருக்கும் விவரிப்பில் கூறியிருக்கிறதைக் கவனியாமல் ஜுடிஷியல் கமிட்டியார் தீர்ப்பு செய்திருக்கிறார்களென்று பிரதிவாதிகளின் வைக்கில் கட்சி சொன்னார். இந்தியாக் கோர்ட்டுகளில் அதிக அனுபோகமும், இந்தியாச் சட்டங்களில் அதிக பழக்கமுமுள்ள மூன்று ஜட்ஜிகள் ஜுடிஷியல் கமிட்டிக்குளிருந்ததால் இப்படிச் சொல்வதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. வக்கீல் தனக்கு ஆதாரமாகச்சொன்ன விவரிப்பினாலும் அவருக்கு ஒரு உதவியுமில்லை. அப்பாத்தியத்திற்குரிய மனிதனல்லாத வேறொருவருக்குத் தெரிவித்தால் போதுமானதாயிருக்கலாமென்றிருக்கிறதேயொழிய போதுமானதாயிருக்கிறதென்று சொல்லப்படவில்லை. அன்றியும் அந்தவிதம் கடனை ஒப்புக்கொள்ளுதல் செல்லுபடியாக ஒருவர்பேருக்கு எழுதியிருக்கவேண்டும்.

19-வது பிரிவின் முதலாவது விவரத்தின்படி ஒப்புக்கொண்ட அம்சம் கடன்காரனுக்காகிலும் அவனுக்காக வேறொருவனுக்காகிலும் தெரிவிக்கவேண்டுமென்று அர்த்தமாகுமென்று ஒரு தீர்மானத்தில் "சர் சார்லஸ் சார்ஜண்டு" எழுதியிருக்கிறார்.

பிரிவி கௌன்சிலில் நடந்த இ. லா. ரி. 25-கல். 844-சுக்காமோனி v இஷான் ஷண்டர் கேசிலும்

* இங்கு சொத்தின் விவரங் கண்டிருந்தது.

கல்கத்தா ஹைகோர்ட்டில் நடந்த வேறொரு கேசிலும் செய்த தீர்மானங்கள் மேலே சொல்லிய அபிப்பிராயத்திற்கு விரோதமாயில்லை. முன் கேசில் கடன்காரனும் கடன்பட்டவனும் சேர்ந்து கோர்ட்டாருக்கு எழுதிக்கொடுத்த மனுவில் கடனை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது கேசில் கடன்காரனும் கடன்பட்டவனும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தில் கடன் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு கேசிலும் கடன்காரன் பேருக்கு எழுதாவிட்டாலும் அவனுக்குத் தெரிவிக்கக்கூடிய விதமாக எழுதப்பட்டிருக்கிறது. (அதாவது அதைக் கடன்காரன் அறியாமலிருக்க வேண்டுமென்கிற எண்ணமிருக்கக்கூடிய விதம் இல்லை).

19-வது பிரிவிற்குக்கீழ் இவ்விவரிப்பு 1871௵ ஆக்டில் முதலிற்சேர்க்கப்பட்டது. இதற்கு முன்னுள்ள 1859௵ ஆக்டில் இவ்விவரிப்பு இல்லாமலிருந்தபொழுது 3. வாராந்தரக்குறிப்பு 3, "தற்காப்பால்" v. காஷிராம் கேசிலும் 4-சென்னை ஹைகோர்ட்டு 385, நிஜாமுத்தீன் v. மகமத் ஆலி கேசிலும், கடன்காரன் பேருக்கு எழுதாவிட்டாலும் கடனை ஒப்புக்கொண்டதே போதுமானதென்று தீர்மானிக்கப்பட்டது. ஜுடிஷியல் கமிட்டியார் 19-வது பிரிவின்கீழிருக்கும் விவரிப்பை ஒருகேசில் தாற்பரியப்பட்டபடி நாமும் இப்பொழுது அபிப்பிராயப்படுகிறோம். இங்கிலீஷ் சட்டத்திலும் கடன்காரனல்லாத ஒரு அன்னியனிடம் ஒருகடனை ஒப்புக்கொள்ளுதல் உபயோகப்படாதென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஒருவர் பேருக்கெழுதப்படாமலும் கடன்காரனுக்காகவாகிலும் அல்லது அவனுக்காக வேறொருவருக்காகிலும் தெரிவிக்கப்படாமலும், கீழ்க்கோர்ட்டில் இதை யொரு ஆதாரமாகக் கொள்ளாமலும் ஒரு கிரயப்பத்திரத்தில் கடனிருப்பதாக எழுதியிருப்பதைக்கொண்டு 19-வது பிரிவுப்படி கடனை ஒப்புக்கொண்டதாக அர்த்தம் பண்ணக்கூடாது.

ஒருவரைப் பிரதிவாதி யாக்கவேண்டுமென்று கோர்ட்டாருக்குத் தெரிவித்துக் கொண்டபொழுது வியாச்சியத்தை முடிவுபண்ண அவரைப் பிரதிவாதியாகக் கோர்ட்டாரே சேர்த்துக்கொண்டதால் காலாவதி தோஷம் அவர் விஷயமாக ஏற்படாதென்று பிரதிவாதிகள் வாதித்தார்கள்.

இதற்காதாரமாக இ. லா. ரி. 24 கல் 640, கிரிஷ் கடண்டர் v. துவார்க்கநாத் கேசும். 27. கல் 540 பேக்கரா பாஸ்பான் v. பீபி அசிமுனிசா கேசும் எடுத்துக்காட்டினார்கள். இந்தக்கேசுகள் இங்குள்ளதற்கு வித்தியாசமானது. இங்கே கட்சியில் பிரதிவாதியாக கோர்ட்டார் தானே சேர்க்கவில்லை. வாதி செய்துகொண்ட மனுவின்மேல் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அன்றியும் மேலே குறித்த கேசுகளில் எழுதிய தீர்மானத்திற்கு ஒத்துக்கொள்ள எங்களுக்கு விருப்பமில்லை இ. லா. ரி. 12. கல் 642 ஓரியண்டல் பாங்கி v. சுசாரியோல் கேசைச் சரியாக அர்த்தங் கண்டுபிடிக்காமல் மேலே குறித்த கேசுகளைத் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். அவசியமானால் புல்பெஞ்சார் அபிப்பிராயத்திற்கு இந்தக் கேசை ரிபர் பண்ணுவோம். இ. லா. ரி. 28-பம். 11,20 குருவாயா v தாத்தராயது கேசில் இத்தீர்ப்பைப்பற்றி தாற்பரியங்கொண்டது எங்களுக்குச் சம்மதமாயிருப்பதால் புல்பெஞ்சார் அபிப்பிராயத்திற் கனுப்பவேண்டியதில்லை. பம்பாய் ஹைகோர்ட்டார் அதன் தாற்பரியத்தைச் சொல்லுகிறதாவது :—சி. பு. கோ. 32-வது பிரிவுப்படி ஒருவரைக் கட்சிக்காரராகச் சேர்த்துக்கொள்ள வேண்டிக்கொள்ளும் விஷயத்தில் கோர்ட்டார் அவரைக் கட்சிக்காரராகச் சேர்த்துக்கொள்ளும்பொழுது காலாவதியினால் பாதிக்கப்பட்டுப் போனதென்பது கோர்ட்டாரைக் கட்டுப்படுத்தாது. ஆனால் அவ்வாறு சேர்ப்பதனால் பாதிக்கப்படுகிற எந்தக் காலாவதியையும் அலட்சியஞ்செய்து கட்சிக்காரராகச் சேர்க்கக்கூடாது. சி. பு. கோ. 32-வது பிரிவின் பின்பாகத்தினால் காக்கப்பட்டிருக்கும்பொழுது லிமிட்டேஷன் ஆக்டினால் காலாவதியாகி சௌகரியமடையக்கூடிய ஒருவனைக்கோர்ட்டார் கட்சிக்காரராகச் சேர்த்து அவனுடைய நலத்தைக் கெடுக்கக்கூடுமானால் அது ஒரு நிலையுண்டுபண்ணும். ஆகையால் நூதனமாகச் சேர்க்கப்பட்ட இமாம் ஆலி சம்பந்தப்பட்டவரையில் காலாவதியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இமாம் ஆலி விஷயமாகப் பாதிக்கப்பட்டுப்போனால் பெந்தகக்கடன் பிரிக்கக்கூடாததாகையால் முழுக்கடனும் பாதிக்கப்பட்டுப்போகுமென்று அப்பீல் வாதிகள் சொன்னார்கள். இது ஆதாரப்படுத்தக்கூடிய வாதமல்ல. இ. லா. ரி. 6 கல்-815 ராம்சேபக் v ராம் லால் கேசும் இ. லா. ரி. 14-கல். 791 ராம்தாயல் v ஐன்மென்ஜாய்கேசும் இதிலிருந்து வித்தியாசமானவை. இவைகளில் நூதனமாகச் சேர்க்கப்பட்ட கட்சிக்காரனில்லாவிட்டால் வாதிக்கு ஒன்றுங் கிடைக்க ஹேதுவில்லாமலிருந்தபொழுது பின்னால் சேர்க்கப்பட்டவன் காலாவதிக்குப் பிறகு சேர்க்கப்பட்ட காரணத்தினால் முழு வியாச்சியமும் காலாவதியால் பாதிக்கப்பட்டுப் போயிற்றென்று கோர்ட்டார் தீர்மானம் பண்ணும்படியாக நேரிட்டது. ஆனால் நமக்கு முன்னிருக்கும் இந்தக்கேசில் பெந்தகத்திலிருக்கும் எல்லாச் சொத்தும் கட்டுப்பட்டிருக்கிறது. பலபேர் இவைகளை மீட்டுக்கொள்ளப் பலவித பாத்தியத்தை யடைந்திருக்கும் அச்சொத்துக்கள் கட்டுப்பட்டேயிருக்கின்றன. இந்தச் சொத்தில் ஒரு பாகத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியமுடைய யாரும் தங்கள் பாகவீதத்திற்குரிய கடனுக்குத்தான் கட்டுப்பட்டவர்கள். அதற்குமேல் அதிக கடனை அவருடைய பாகத்திலிருந்து வசூல் செய்யக் கூடாதென்று கேட்டுக்கொள்ள பாத்தியமுடையவர்கள். இது நியாயமாகும் பெந்தகம் வாங்கினவர் ஒரே பாகத்திலிருந்துமுழுக்கடனையும் வசூலிக்கக்கூடாது. ஒரு பாகத்தின்மேல் தனக்குள்ள பாத்தியத்தைத் தன் தவறுதலினாலிழந்துவிட்டு இதர பாகத்தின் மேல்முழுக்கடனையும் வசூலிக்கப்போகுதல் கூடாது. இ. லா. ரி. 30 கல். 755 ஹரிசென் v. லியாட் ஹொசேன் கேசில் இப்படியே தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இனி போக இதர சொத்தின்மேல் அந்த வீதத்துக்குள்ள கடனுக்கு வாதிகள் தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டியதென்று அபிப்பிராயப்படுகிறோம்.

மூன்றாவது, டிலாக்தாரியின் சொத்தைக் கடனுக்குக் கட்டுப்படுவதிலிருந்து விலக்கினதை அப்பீல் வாதிகள் ஆட்சேபித்தார்கள். 1891௵ ஜனவரி௴ 16௳ பெந்தகம் வைத்தவர் 1400 ரூபாய் கடன் வாங்கி பெந்தகம் வாங்கினவர்களுக்குக் கொடுத்திருக்கிறதாக ருஜுவாகியிருக்கிறது. 1890௵ ஜூன்௴ 11௳ பெந்தகம் வாங்கினவர்கள், டிலாக்தாரி வாங்கின பாகத்தைப் பெந்தகத்திலிருந்து விடுதலைசெய்துவிடுகிறதாக ஒப்புக்கொண்டு டிலாக்தாரிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். 1891௵ அக்டோபர்௴ 21௳ பெந்தகம் வைத்தவர் டிலாக்தாரிக்கு அப்பாகத்தைக் கிரயஞ்செய்து கொடுத்தார்கள். அக்கிரயப்பத்திரத்தில் அப்பாகம் பெந்தகத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறதாகக் கண்டிருக்கிறது. பெந்தகம் வாங்கினவர்களில் ஒருவர் சாட்சியும் போட்டிருக்கிறார். எழுத்து மூலமாக விடுதலை செய்வதாக உறுதி

யாகக் கூறுவதனால் ஒரு சொத்து விடுதலையாக்கப்படக்கூடியதானாலும் ரிஜிஸ்டரேஷன் ஆக்டு 17-வது பிரிவுப்படி ஸ்தாவரமாயிருந்து 100-அல்லது 100 ரூபாய்க்குமேல் அச்சொத்து பொறுமேயானால் அவ்வுறுதிச் சீட்டு ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதாகையால் இவ்விடுதலை லாப்படி செல்லத்தக்கதல்ல. இ. லா. ரி. 2 அல.554 சபதர் ஆலிகான் v. லட்சுமன்தாஸ் கேசும் 2. பம். 489, பாசாவா v. கல்கபா கேசும். 16. வாராந்தரக்குறிப்பு 56, பீரப் v. காலிகஷண்டர் கேசும் இதற்குப் பொருத்தமுள்ளது. பெந்தகம் வாங்கினவரில் ஒருவர் கிரயபத்திரத்தில் சாட்சி போட்டிருப்பதால் அவர் அச்சொத்தின்மேல் போகபாத்தியமில்லையென்று பிரதிவாதிகளின் வக்கீல்சொன்னார். சாட்சிக்கையெழுத்துப் போடுவதனால் அப்பத்திரத்திலுள்ள எல்லா அம்சங்களுக்கும் சம்மதித்து சாட்சிபோட்டதாக அர்த்தமாகாதென்று ஒரு தீர்மானத்தில் தீர்மானமாக முடிவு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு அச்சொத்தை விலக்குவதற்குக் கீழ்க்கோர்ட்டார் ஒரு ஆதாரமுங் காட்டவில்லை. ஆயினும் பெந்தகம் வாங்கினவர்கள் நிலம் விடுதலையானதைப்பற்றி ஆக்ஷேபிக்கக்கூடாவிட்டாலும் சொத்தை மீட்க பாத்தியமுள்ளவர்களுக்கு விடுதலையானதைப்பற்றி வாதிக்கும் பாத்தியம் நீங்கமாட்டாது. பெந்தகம் வாங்கினவன் தனக்குக் கட்டுபட்ட சொத்துக்களிற் சில பாகத்தை விடுதலைசெய்து மற்றப்பாகத்தில் ஓர் பாத்தியமடைந்தவர்களைப் பாதிக்கக்கூடாது. பெந்தகச் சொத்தில் ஒரு பாகத்திலிருந்து தன் கடனைத் தீர்த்துக்கொண்டு மற்றப்பாகத்தை விடுதலை செய்யக் கூடாது.

இ. லா. ரி. 25-அல. 79 ஷியோபிரசாத் v பேகாரிலால் கேசின் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள நமக்குப் பிரியமில்லை. இது துன்பத்திற்கும் அநியாயத்திற்குமிடமாகும். பெந்தகம் வாங்கினவன், தன் கடனுக்குக் கட்டுப்பட்ட சொத்துக்கள் இருவருக்குச் சொந்தமானால் ஒருவனுடைய சொத்தை மற்றொருவனுடைய சம்மதமன்றி விடுதலைசெய்துவிட்டு, இவனுடைய சொத்தை முழுக்கடனுக்கும் கட்டுப்படுத்தக்கூடாது. விடுதலையாகாத சொத்தை வாங்கினவர்கள் தங்கள் வசத்திலிருக்குஞ் சொத்திற்குள்ள வீதக்கடனுக்கு மேற்கொண்டு வாங்கக்கூடாதென்று கட்டாயப்படுத்த பாத்தியமுள்ளவர்கள் ஆகையால் டிலாக்தாரி வசத்திலிருக்குஞ் சொத்து சட்டப்படி விடுதலையாகாததால் இவ்வியாச்சியத்தின் தீர்ப்பின் மேல் நிறைவேற்றப்படக்கூடியது, ஆனால் இதன் கிரயத்தொகை கடனுக்குச் செல்லுவைக்கப்பட்டிருப்பதால் "இமாம் ஆலி"யின் வசமிருக்குஞ் சொத்து நீங்கலாக இதர சொத்துக்களின்மேல் முதலில் நிறைவேற்றி ஏல விற்பனைசெய்து பிறகு இச்சொத்தின் மேல் தொடரவேண்டுமென்று நாம் உத்தரவு செய்கிறோம்.

பத்திரத்தினால் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகையில் சிறு பாகம் கேட்கிறதால் வீதமாகப் பிரிக்கவேண்டிய அவசியமில்லை என்று பிரதிவாதிகளின் வக்கில் சொன்னார். இது நியாயமென்று நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. வாதிகள் பெருந்தொகைக்குப்பிராதுபண்ணியிருந்தால் வேறுவிதமாக டிபன்சு ஏற்படலாம். உதாரணமாக வட்டி கேட்கக்கூடிய பாத்தியத்திற்கு ஒரு கட்சி ஏற்படக்கூடும். சப்ஜட்ஜியின் தீர்மானத்தின்மேல் இந்த ஹைகோர்ட்டுக்கு அப்பீல் வருமே யல்லாமல் டிஸ்டிரிக்டு கோர்ட்டுக்கு அப்பீல் போகாது. ஆகையால் இத்தாவா தொகை பிராது சமையத்தில் பெந்தகத்தினால் வரவேண்டிய தொகையாகப் பாவிக்கப்படும்.

ஆகையால் இந்த அப்பீல் ஏற்றுக்கொள்ளப்பட்டு கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பு மாற்றப்பட்டது. நூதனமாகச் சேர்க்கப்பட பிரதிவாதியாகிய "இமாம் ஆலி" விஷயமாக பிராது தள்ளப்படும். மற்ற பிரதிவாதிகள் விஷயமாக இந்தக்கேசு டிஸ்டிரிக்டு கோர்ட்டாருக்கு அனுப்பப்படும். பிராதிற் கேட்ட தொகை பிராது காலத்தில் பத்திரத்திற்குச் சேரவேண்டிய தொகையென்று பாவித்துக்கொண்டு வரவேண்டிய தொகைக்கு கணக்கு எடுக்கவேண்டும். "இமாம் ஆலி" வசமிருக்குஞ் சொத்து நீங்கலாக இதர சொத்திலிருந்து வரவேண்டிய வீதத்தை நிர்ணயிக்கவேண்டும். பெந்தகம் ஏற்பட்டபோது "இமாம் ஆலி"யின் சொத்து எவ்வளவு தொகை விலையோ அந்த விலை முழுச்சொத்தின் விலைக்கெவ்வளவு பாகமோ அவ்வளவு பாகம் தீர்ப்பின் தொகையிலிருந்து கழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு குறைக்கப்பட்ட தொகைக்கு டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 88-வது பிரிவுப்படி வாதிகளுக்குத் தீர்ப்பு சொல்லப்படும். அத்தீர்ப்பில் டிலாக்தாரி சொத்தை நீக்கி மற்றவர்கள் சொத்தின் மேல் நிறைவேற்றிக்கொண்டு தொகை ஈடாகாத பட்சத்தில் டிலாக்தாரி சொத்தின்மேல் தொடரவேண்டுமென்று தீர்ப்பில் கண்டெழுதப்படும்.

இமாம் ஆலி விஷயம் நீங்கலாக மற்ற விஷயத்தில் வாதிகளுக்கு இவ்வப்பீலினுட்பட செலவு தொகையடையும்படி தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ் :—(1) லிமிட்டேஷன் ஆக்டு 19-வது பிரிவுப்படி கடனை ஒப்புக்கொள்ளுதல் கடன் காரனுக்காகிலும் அல்லது அவனுக்காக வேறொருவருக்காகிலும் எழுதப்படவேண்டும். அல்லது தெரிவிக்கவேண்டும்.

(2) தம் சுயேச்சையாயல்லாமல் வாதி மனுவின்மேல் ஒருவரைப் பிரதிவாதியாகக் கோர்ட்டார் சேர்ந்தால் லிமிட்டேஷன் ஆக்டு 22-வது பிரிவுப்படி நூதனமாகச் சேர்க்கப்பட்ட தினமுதற்கொண்டு அவர்மேல் வியாச்சியம் செய்ததாக எண்ணவேண்டுமென்றும்.

(3) பெந்தகம் வைத்தபிறகு மீட்கவேண்டிய சொத்தில் பலருக்கு பாத்தியமுண்டானால் எந்தப் பாகத்திற்காகிலும் சொந்தக்காரன் தன்பாக வீதத்திற்கேற்படும் கடனுக்குமேல் தன் சொத்திலிருந்து ஈடு செய்துகொள்ளக் கூடாதென்று கேட்க பாத்தியமுடையவரென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய் ஹைகோர்ட்டு.

அசல் சீவில்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் தியாப்ஜி.

இறந்துபோன தகப்பன் சொத்தைப் பிள்ளைகள் பரிபாலனம் பண்ணுதல்.

ஹஜிசாபு சிடிக் (வாதி)

ஆலி மகமத் ஜான்மகமது (பிரதி வாதிகள்).

வியாச்சிய சங்கிரகம்.

"ஜான் மகமத் ஹஜி ஆமட்" என்பவர் இரண்டு பிள்ளைகளையும் ஒரு விதவையையும் விட்டுவிட்டு இறந்துபோனார். இவருடைய பிள்ளைகளும் இரண்டு கடன்காரர்களும் ஒரு தரகரும் ஒரு வியாபாரியும் ஆகிய அறுவர் கூடி இறந்துபோனவருடைய சொத்தைப் பங்கு போட்டுக்கொண்டார்கள்.

இ. லா. ரி. 33-கல். 613. Imam Ali v Baig Nath Ram Sahu,

ஹஜிசாமிசிடிக் என்று மிறந்துபோனவரின் வேறொரு கடன்காரன் இவ்வறுவரோடு விதவையையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து ஹைகோர்ட்டில் பிராது செய்தார்.

இறந்துபோனவரின் இரண்டு குமாரர்களும் 1. 2. பிரதிவாதிகளாகவும் விதவையை 3-ம் பிரதிவாதியாகவும் தரகரை 4-ம் பிரதிவாதியாகவும் இரண்டு கடன்காரரையும் 6, 7, பிரதிவாதிகளாகவும் பிராதில் கண்டிருந்தது.

வாதியின் தாவா :—"ஜான் மகமத் ஹஜி ஆமத்" என்பவரின் சொத்து கோர்ட்டாரால் பரிபாலிக்கப் படவேண்டுமென்றும் பிரதி வாதிகள் அடைந்த சொத்தை இன்னதென்று விவரமாகத் தெரிவித்துக் கணக்கு கொடுக்கவேண்டுமென்றும், அபகரிக்கப் பட்ட சொத்துக்களையும் வர வேண்டியவைகளையும் திரும்ப வாங்குவதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்ட "ரிசிவரை" நியமிக்கவேண்டுமென்றும், இவ்வாறு சேகரிக்கப்பட்டவைகளைக் கொண்டு வாதிக்கும் இதரகடன்காரர்களுக்கும் கோர்ட்டுச் செலவுக்கும் ஈடு செய்யவேண்டுமென்றும் பிராது.

"ஹஜிஜான் மகமத்" இறந்தவுடனே அவருடைய சொத்துக்களைப் பிரதிவாதிகள் கைப்பற்றிக் கொண்டு நியாய விரோதமாய் பங்கு வீதமாக கடன்காரர்களுக்கு ஈடு செய்யாமல் தங்கள் இஷ்டப்படி பிரித்துக்கொண்டார்களென்றும் அதனால் தனக்கு நஷ்டம் கொடுக்கப் பாத்தியமுள்ளவர்களென்றும் அச்சொத்துக்களைக் கொண்டு எல்லாக் கடன்காரர்களுக்கும் பங்கு வீதமாய்ச் செலுத்தவேண்டுமென்றும் வாதி கோர்ட்டில் தெரிவித்துக்கொண்டார். 6, 7. பிரதி வாதிகள், தங்களுக்குச் சேரவேண்டிய கடனுக்காக நியாயமாகக் கிடைத்த சொத்து தங்களுக்கே பாத்தியமுள்ளதென்று கட்சிசொன்னார்கள்.

1, 2, பிரதி வாதிகள் "குட்சிமெமான்" (Kutchi memon) வகுப்பைச் சேர்ந்தவர்களாகையால் இந்து லாப்படி வார்சுக்கிரமப்படித்தும் வழக்கத்தினால் இறந்து போனவரின் சொத்துக்கு வார்சுகளாகிக் கடனுக்குக் கட்டுப்பட்டுசொத்தை யடைந்தார்கள்.

6-ம் பிரதி வாதிக்கு இறந்துபோனவர் ஒவ்வொன்று இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு எழுதிக் கொடுத்த இரண்டு பிராமிசரி நோட்டின் மூலமாக ரூ. 5000-வரவேண்டியதற்கு ஈடாக சில சொத்துக்களைத் தான் பெற்றுக்கொண்டிருக்கிறதாகச் சொன்னார். 7-ம் பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டிய 2500-ரூபாய்க்கு ஈடாக அவர் சிலசொத்துஅடைந்திருக்கிறதாகச் சொன்னார்.

இந்தக்கோர்ட்டாரின் உத்தரவினால் 4, 5, பிரதிவாதிகள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

இப்பொழுது கவனிக்கவேண்டியது ஒரே விஷயந்தான். 6, 7, பிரதிவாதிகள் அடைந்திருக்குஞ் சொத்துக்களை ஒன்றாகச்சேர்த்து மற்றக் கடன்காரர்களுக்கும் பாகித்துகொடுக்கவேண்டியதா அல்லது அவர்களே வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அட்மினிஸ்ட்ரேஷன் ஆக்டுக்குச்சம்பந்தப்பட்டவரையி லல்லாமல் மேற்கொண்டு கூறும் இந்தியன் செக்ஷன் ஆக்டு இவ்வியாச்சியத்தில் பொருத்தமுள்ளதல்ல. இந்துக்களும் மகம்தியர்களும் இறந்துபோனவரின் உயிலுக்காக "புரோபேட்" (Brobate) என்னும் அதிகாரப்பத்திரம் பெறவேண்டிய அவசியமில்லை. 1, 2, பிரதி வாதிகள் வார்சுப்பாத்தியத்தினால் இறந்துபோனவரின் சொத்தைக்கைப்பற்றவும், பரிபாலிக்கவும் கோர்ட்டுக்குக்கணக்குக்கொடுக்கக் கட்டுப்படாமல் கடன்களைத்தீர்க்கப் பாத்தியமுள்ளவர்கள். வார்சு என்கிற ஒரு விஷயத்தில் மாத்திரம் கோர்ட்டாருக்குக் கட்டுப்பட்டவர்கள். இதற்காதாரமாக இ. லா. ரி, 26. சென். 792-ம் பக்கத்தில் கூறியிருக்கும் கனம் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் பின்வரும் நிர்மானத்தைக் கோர்ட்டில் வாசித்தார்கள். அது வருமாறு:—

"ஈட்டின்மேல் கொடாத இறந்துபோனவரின் கடன்காரர்கள் அவருடைய வார்சுக்களுடையும் சொத்தை ஈடாக நிறுத்திவைக்க முடியாது. விதாசாரப்படி கடன்காரருக்கு வார்சுக்கள் கடன் கொடுக்காவிட்டால் அவ்வாறு கடன் கொடுத்தவறினதாக ஏற்படாது. எந்தக்கடனுக்குத்தொகை கொடுத்தாலும் அவ்வாறு கடன் கொடுப்பது இதர கடன்காரர்களைப் பாதிக்கினும் நியாயமே. இறந்துபோனவரின் சொத்தை இப்படி செலவழிப்பது சி. பு கோ. 252-வது பிரிவுப்படி செய்ததாகும்" இத்தீர்ப்பில் சொன்ன பிரகாரம், இறந்துபோன ஜான் மகமதுவின் குமாரர்களாகவும் தாங்கள் செய்ததுபோல கடன்காரர்களுக்குத் தொகை கொடுக்கப் பாத்தியமுடையவர்கள். இவர்கள் செய்கை மோசடியானதா என்பதைக் கவனிக்கில் இது விஷயத்தைப்பற்றி வாதிவைக்கீல் சொல்வதையன்றி யாதொரு சாட்சியமுமில்லை. வாதியை வக்கீல் சொல்வதற்கும் ஆதாரமில்லை. ஆகையால் 1, 2, பிரதிவாதிகள் வார்சுக்களாயிருந்து வேலை நடத்தி வந்திருக்கிறதால் அவர்கள் நடவடிக்கை நியாயமே. ஆயினும் முதல் பிரதிவாதி தகப்பனை விட்டுப்பிரிந்து ஷாப்பிற்குச் சில சமையங்களில் வருத்துப்போக்கா யிருந்தாரே யல்லாமல் யாதொரு நடவடிக்கையிலும் பிரவேசித்ததில்லை. ஆகையால் அவர்மேல் பிராதிற்சொல்லிய அம்சங்களுக்கு யாதொரு ஆதாரமுமில்லை.

6, 7, பிரதிவாதிகள் தாங்கள் அடைந்த சொத்துக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவர்களல்ல. அவர்களுக்கு வரவேண்டிய கடனை முற்றிலுமோ சிறு பாகமோ தீர்க்கவேண்டியதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. வாதி இவர்களின் செலவு கொடுக்கவேண்டியது.

முதல்பிரதிவாதி இதில் பிரவேசிக்காததால் இவருடைய செலவுதொகையுங் கொடுக்கவேண்டியது.

2-வது பிரதிவாதி இந்நடவடிக்கைகளில் பிரவேசித்திருக்கிறார். ஆயினும் அவர் செய்கை நியாயமுள்ளதாகையால் அவர் ரூபிக்கும்படி ஏற்பட்ட இஷியூக்களினால் நேரிட்ட செலவு தொகையையும் வாதி கொடுக்கவேண்டியது.

மற்றப் பிரதிவாதிகள் கோர்ட்டில் இவ்விஷியூ விஷயமாக ஆஜராகவேண்டியதில்லை யென்று முன்னமே நீக்கிவிடப்பட்டார்கள்.

6, 7, பிரதிவாதிகளைப்பற்றிய பிராது தள்ளப் படவேண்டும். ஆனால் 1. 2. பிரதி வாதிகள், தங்களுடைய வசம் வரும் இறந்து போனவரின் சொத்துக்களுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். ஆகையால் இவர்கள் கணக்குக் கொடுக்கவேண்டிய விஷயத்திற்குக் கட்டுப்படுத்தித் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரூலிங்ஸ்.—இந்து லாப்படி கட்டுப்பட்டிருக்கும் "குட்சி மெமான்" வகுப்பைச்சேர்ந்த குடும்பத்தில் இறந்து போனவரின் குமாரர்கள் அவருடைய கடனைத்தீர்ப்பதற்குக் கடமைப்பட்டு சொத்தை யடையபாத்தியமுடையவர்களென்றும் ஆகையால் அச்சொத்தைத் தங்கள் வசமாக்கிப் பரிபாலித்து வார்சுகள் என்கிற விஷயங்களுக்கு உத்தரவாதிகளாகாமல் கடனைக்கொடுக்க பாத்தியமுள்ளவர்களென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 30. பம். 270. (Haji Saboo v. Ally mahomed I. L. R. 30. Bom. 270).

மெஸர்ஸ் அர்பத்னட் கம்பெனியின் சமாசாரங்கள்.

நிவாரண நிதிக்கூட்டம்.

அர்பத்நட் பாங்கி முழுகிப்போனதால் கஷ்டப்படும் ஏழை ஜனங்களுக்கு உதவி செய்யும்பொருட்டு ஒரு நிதி ஏற்பாடுசெய்வதைக்குறித்து யோசனைசெய்ய மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆர்தர் லாலி அவர்களின் பிரேரேபனையின்பேரில் நிகழும்மீ 6வ செவ்வாய்க்கிழமை மாலையில் இந்நகர்ப்பிரபுக்கள் மௌன்ட்ரோடிலிருக்கும்கவர்ன்மெண்டு அவுசிலுள்ளபாங்கொட்டிங் ஹாலில் ஒரு கூட்டம் கூடினார்கள். அடியில் குறிப்பிடப்பட்டிருக்கும் கனவான்கள் அம்மீட்டிங்கிற்கு விஜயஞ் செய்திருந்தார்கள் :—மேன்மை தங்கிய கவர்னர், கனம் பொருந்திய சர். S. சுப்பிரமணிய அய்யர், கனம் பொருந்திய மிஸ்டர் ஸ்டோக்ஸ், ஹானரபில் மிஸ்டர் G. S. போர்ப்ஸ், ஹானரபில் மிஸ்டர் M. ஹாமிக், ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன், ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம், ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ், மி-ர். C. சங்கரநாயர், C. I. E. ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர், ஹானரபில் மிஸ்டர் V. C. தேசிகாசாரியார், ஹானரபில் மி-ர். V. G. லின், ஆர்ச்சி பிஷப் கால்கன், மிஸ்டர் C. F. நேப்பியர், மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார், மிஸ்டர் E. M. மாக்பேயில், மிஸ்டர் C. சௌடன், மிஸ்டர் S. கஸ்தூரிரங்கய்யங்கார், மிஸ்டர் N. அப்புசுந்தரம்பிள்ளை, மிஸ்டர் C. திருமலய்யநாயுடு, ஹானரபில் முகதீன்சாயப்பு பகதூர், மிஸ்டர் M. R. சுல்தான் முகதீன் சாயப்பு, மிஸ்டர் A. சாட்டர்ட்டன், மிஸ்டர் G. நாராயணசாமி செட்டியார், ஹானரபில் மிஸ்டர் J. N. அட்கின்சன், ஹானரபில் மிஸ்டர் J. டுவிக், டாக்டர் மில்லர், மிஸ்டர் J. P. டேவிசன், மிஸ்டர் W. R. மிஸ்டர் A. E. ரென்கான்ட்டர், மிஸ்டர் G. ரோமலி, மிஸ்டர் சதர்ன்லான்ட் ஆர், மிஸ்டர் ராஸ்ஜான்சன், மிஸ்டர் A. D. ஜாக்சன், மிஸ் M. A. திருநாராயணாசாரியார், மேஜர் கிளின், மிஸ்டர் A. Y. G. காம்பல், மிஸ்டர் E. S. லாய்ட், மிஸ்டர் S. ரங்கய்யசெட்டி, மைலாப்பூர் பிஷப், மிஸ்டர் P. தியாகராய செட்டி, மிஸ்டர் B. சிட்டிபாபு நாயுடு.

கவர்னர் பேசினது.

கனவான்களே! இந்த மீட்டிங்குகூட நேர்ந்ததற்குள்ள காரணங்களை சங்கிரகமாய் இந்த சமயம் நான் எடுத்துக்கூறினால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். மெசர்ஸ் அர்பத்நட்கம்பெனி முழுகிப்போனதைவாசித்து பிரமித்தது இரண்டு வாரங்களுக்கு முந்திதான் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டியது அனாவசியம். இந்த கம்பெனி முழுகிப்போனதால் எத்தனை ஜனங்கள் நஷ்டமடைந்திருக்கிறார்களென்றும் எவ்வளவுதொகை நஷ்டமடைந்திருக்கிறார்களென்றும் இன்னும் இம்மாதிரியான சமாசாரங்களைக் குறித்து நிச்சயமாய் தற்சமயம் ஏதையும் சொல்வதற்கு சாத்தியப்படவில்லை. ஆனால் நிச்சயமாய்ச் சொல்லக்கூடிய சமாசாரங்கள் இரண்டிருக்கின்றன. ஒன்று என்னவென்றால், இப்போது சம்பவித்திருக்கும் இந்ததுர்பாக்கியம் ஒரு ஜாதியாருக்குமட்டிலுமல்ல! ஒரு வகுப்பாருக்குமட்டிலுமல்ல! எல்லா வகுப்பாருக்கும். ஐரோப்பியர், யுரேஷியர், சுதேசிகள் ஆகியஎல்லோருக்கும் இந்தத்துன்பம்நேரிட்டிருக்கிறது. இரண்டாவது என்னவென்றால், இந்தத்துன்பம் ஒரு ஊரிலிருக்கும் ஜனங்களுக்குமட்டிலும் நேரிடவில்லை; ஒரு ஜில்லாவிலிருக்கும் ஜனங்களுக்குமட்டிலும் நேரிடவில்லை; இந்தராஜதானி முழுதிலும் இந்தத்துன்பம் பரவியிருக்கிறது. நீடித்த காலமாக இந்த ராஜதானியிலுள்ள சகல ஜனங்களின் முழு நம்பிக்கையும் அனுபவித்து லாவாதேவி செய்துவந்த இந்தப்பெரியபாங்கி முழுகிப்போய்விட்டது இந்த ராஜதானியில் ஒரு பெரிய அச்சத்தையும் திகிலையும் விளைவித்திருப்பது ஒரு ஆச்சரியமல்ல! இந்த சமயம் கவர்ன்மெண்டார் என்ன செய்யப்போகிறார்கள்? பொதுஜனங்கள் என்ன ஏற்பாடுகள் செய்யப்போகிறார்கள் என்று பலர் பலவிதமாக நினைத்து பிரேரேபனைகள் செய்வதும் ஒரு ஆச்சரியமான காரியமல்ல! இப்படிப்பட்ட ஒரு சம்பவம் பொதுஜனங்களின் நம்பிக்கையைக் கலைக்காமலிருக்கமாட்டாதென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இருந்தபோதிலும் இம்மாதிரியான அசந்தர்ப்பங்கள் இனிநடக்குமென்று நினைப்பதற்குக் காரணமில்லை என்று நிச்சயமாய் நம்புகிறேன். கனவான்களே! இந்த சமயம் எனக்குச் செய்யப்பட்டிருக்கும் பிரேரேபனைகளைப் பற்றிச் சிறிது சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். பத்திரிகைகள் எனக்கு ஒருபிரேரேபனை செய்திருக்கின்றன. அதே விஷயத்தைக் குறித்து சிலர் எனக்கு நேரில் கடிதமும் எழுதியிருக்கிறார்கள். அதாவது என்னவென்றால், மெஸர்ஸ் அர்பத்நட் கம்பெனியாரின் சமாசாரங்களைப்பற்றியும் அந்தக் கம்பெனி முழுகிப்போனதற்கு நேர்ந்த காரணங்களைப்பற்றியும் விசாரணைசெய்ய கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்றும் அந்த கமிட்டியாருக்கு சாக்ஷிகளுக்கு சம்மன் அனுப்பி அவர்களிடமிருந்து பிரமாணவாக்குமூலம் பெறும்படியான அதிகாரமும் கொடுக்கவேண்டுமென்றும் பிரேரேபனை செய்திருக்கிறார்கள். இந்தப் பிரேரேபனையை அங்கீகரித்து அதை நிறைவேற்றிவைப்பதாயிருந்தால் ஹைகோர்ட்டாரின் அதிகார விஸ்தீரணத்தைச் சற்றுக் குறைக்கும்படியாக நேரிடுகின்றது. இப்படிச் செய்வதாயிருந்தாலும் அதற்குச் சீமைப் பார்லிமெண்டார் ஒரு ஆக்ட் பிறப்பிக்கவேண்டும். இப்போது ஹைகோர்ட்டார் செலுத்திவரும் அதிகாரத்தைச் செலுத்தும்படியான ஒரு பிரத்தியேக கமிட்டி நியமிப்பதாயிருந்தால் லோக்கல் சட்ட சபையின் ஸ்பெஷல் மீட்டிங் ஒன்று நடக்கும்படியாக நான் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிருக்கின்றது. கனவான்களே! இப்போது இம்மாதிரியான ஏற்பாட்டைச் செய்வது கவர்ன்மெண்டாருக்கு நியாயமாயிருக்குமென்று தோற்றவில்லை. மெசர்ஸ் அர்பத்

நட் கம்பெனியின் விஷயங்கள் சட்டப்பிரகாரம் இத்தேசத்தில் மகா உயர்ந்தவும் மிக வல்லமை பொருந்தியவுமான நியாயஸ்தலத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த கம்பெனி முழுகிப்போனதற்கு நேரிட்டிருக்கும் காரணங்கள் ஐகோர்ட்டாருக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைக்குறித்து விசாரணைசெய்ய சாக்ஷிகளுக்கு சம்மன் அனுப்பவும் பிரமாண வாக்குமூலம் பெறவும் ஐகோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கின்றது. ஆதலால் இதர இன்சால்வென்சி கேஸ்களை விசாரிப்பதுபோல இந்த இன்சால் வென்சிக் கேசை விசாரிக்கப்போதுமான பத்திரங்க ளிருக்கின்றன. ஆகையால் இப்போது செய்யப்பட்டிருக்கும் பிரேரேபணையை ஏற்றுக்கொண்டு அதன்படி ஒரு கமிட்டி ஏற்பாடு செய்வதைக்குறித்து கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்ய உடன்படமாட்டார்களென்று நினைக்கிறேன். டிபாசிட்டர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும்படியான இரண்டொரு பிரதிநிதிகள் அபிஷியல் அசயினிக்கு உதவி புரியும்படியாக நியமிக்கப்படவேண்டுமென்று டிபாசிட்டர்கள் கேட்டுக்கொள்ளலாம். இப்பேர்க்கொத்த பிரேரேபணை யிருந்த உத்தமமான பிரேரேபணை என்றும் நியாயமானதென்றும் நாம்நினைக்கிறோம். இந்தப் பிரேரேபணையை ஹைகோர்ட்டார் தள்ளிவிடமாட்டார்களென்று நினைப்பதற்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. கனவான்களே! இப்போது நான் பேசி வருவதெல்லாம் இன்றையத்தினம் எந்தக்காரியத்தைக்குறித்து மீட்டிங் கூட்டப்பட்டதோ அதைச் சேர்ந்ததல்லவென்று எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் இன்னும் எனக்குச் செய்யப்பட்டிருக்கும் ஒரு பிரேரேபணையைக் குறித்து சங்கிரகமாய்ச் சொல்லி முடிக்கிறேன். அதென்னவென்றால், அர்பத்நட் பாங்கிமுழுகிப்போனதால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு கவர்ன்மெண்டார் பொருளுதவிசெய்யவேண்டி சிலர் பிரேரேபணை செய்திருக்கிறார்கள். பொது ஜனங்களிடமிருந்து வரிகள் மூலியமாய் வசூலித்த பணத்திற்கு டிரஸ்ட்டி ஸ்தானத்திலிருக்கும் எந்த கவர்ன்மெண்டாரும் வியாபார முயற்சியில் நஷ்டமடைந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு அப்பணத்திலிருந்து எடுத்து உதவிசெய்வது நியாயமல்லவென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். நான் இப்படி முன்னுடியே சொல்லிவிட்டது மிகவும் நல்லது. ஏனென்றால், கஷ்ட நிவாரணைக்காக இப்போது நிதி சேர்க்கச்செய்து வரும் பிரயத்தனத்தில் அந்நிதி சேர்வது நம்மவர்களின் ஒவ்வொருவருடைய தர்மத்தை மட்டிலும் பொறுத்ததாயிருக்கிறதென்று நாம் எல்லோரும் உணரும்படியாக விருக்கும். இவ்வளவு வெளிப்படையாய் எடுத்துச்சொன்னபிறகு இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதென்னவென்றால், கஷ்ட நிவாரணத்திற்கு ஒரு நிதி சேர்க்கவேண்டுமென்கிற விஷயத்தில் கவலையுடைய பிரபுக்கள் ஒரு மீட்டிங் கூடி ஆலோசனை செய்தார்கள்; அந்த மீட்டிங்கின் பயன்தான் இந்தமீட்டிங்கு. இதற்காகத்தான் நீங்கள் எல்லோரும் இந்த மீட்டிங்கிற்கு வரவேண்டுமென்று வேண்டிக் கேட்டேன். என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி நீங்கள் இவ்விடம் வந்ததற்காக நான் வந்தனம் செய்கிறேன். முன் கூடிய மீட்டிங்கில் நான்கு விஷயங்கள் ஏகோபித்துத்தீர்மானிக்கப்பட்டன முதலாவது, இந்தத் துன்பம் எங்கு பார்த்தாலும் பரவியிருப்பதால் பொது ஜனங்களுடைய உதவியைப்பெற்று ஒரு நிதி சேர்க்கவேண்டியது நியாயந்தான் என்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவது, அப்படி அந்த நிதி ஏற்பட்டால் ஜாதி வித்தியாசமும் பேதாபேதமும்பாராட்டாமல் ஐரோப்பியர் யுரேஷியர் சுதேசிகள் எல்லோருக்கும் பொதுவானதா யிருக்கவேண்டும். மூன்றாவது என்ன வென்றால், அந்நிதி சென்னை ராஜதானி முழுமைக்கும் பொது நிதியாக இருக்கவேண்டுமேதவிர ஒரு பாகத்தை மட்டிலும் சேர்ந்ததாக இருக்கக்கூடாது. நான்காவது என்னவென்றால், அர்பத்நட் பாங்கி முழுகிப் போனதால் ஏழையாய்ப்போன ஜனங்களுக் குதவிசெய்யமட்டிலும் இந்நிதி விநியோகப்படுத்தப்பட வேண்டுமேதவிர மற்றப்படி டிபாசிட்டர்கள். முழுகிப்போன பாங்கியில் கட்டியிருக்கும் பணத்தை ஈடுவைத்துக்கொண்டு கடனைப் பணம் கொடுக்க இந்நிதியை உபயோகப்படுத்தக்கூடாது. இந்தத்தீர்மானங்களெல்லாம் உங்களுடைய சம்மதத்தைப் பெறக்கூடியவையாயிருந்தால் இந்நிதியை ஏற்பாடுசெய்ய ஒரு பலமான கமிட்டி ஒன்று நீங்கள் ஏற்படுத்த வேண்டும். அதில் எல்லா வகுப்பினரும் அங்கத்தினர்களா யிருக்கவேண்டும். வெளியூர்களிலும் சப்கமிட்டிகள் ஏற்பாடு செய்ய நேரிடுமென்று நினைக்கிறேன். ஆகவே இப்போது இந்நிதியின் கருத்துகள் இன்னவென்றும், இந்நிதி எந்த விஷயத்தில் உபயோகிக்கப்படவேண்டுமென்றும், கமிட்டியார் செய்யவேண்டியது இன்னதென்றும், உங்களுக்கு விவரமாய் எடுத்துச் சொல்ல முயற்சி செய்தேன். இந்த விஷயங்களை எல்லாம் எடுத்துச் சொன்ன பிறகு உங்களுக்குச் செய்துகொள்ளவேண்டிய மனு ஒன்றுளது. அது என்னவென்றால், இந்த விபத்து எல்லா வகுப்பாருக்கும், ஐரோப்பியர், யுரேஷியர், சுதேசிகள் ஆகிய எல்லோருக்கும் பொதுவாய் நேர்ந்திருக்கிறது. இது நாம் எல்லோரும் பேதப்படும்படியான சமயமல்ல. இன்னும் சொல்லப்போனால் நம் எல்லோருக்கும் ஒற்றுமை யுண்டாகும்படியான சமயம். ஒருவருக்கொருவர் உதவிசெய்யும்படியாக நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தைரியத்துடன் நேரிட்டிருக்கும் துன்பத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெறவேண்டும். அப்படிச் செய்யும் முயற்சியில் நம்முடைய ஒற்றுமை பிளவுபடக்கூடாது. ஜனங்களுக்கு மறுபடியும் நம்பிக்கை உண்டாகும்படியாகப் பாடுபடவேண்டும்.

கனவான்களே! இந்தத் துன்பத்தால் கஷ்டப்படும் மனிதர்களும் ஸ்திரீகளும் நம்முடைய உதவியை எதிர்பார்ப்பது வீண்போகமாட்டாதென்று நினைக்கிறேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களை ஆதரிக்க முன்வருவீர்களென்று நான் உறுதியாய் நம்புகின்றேன். உங்களுடைய உதவியன்றி இந்நிதிசேர்க்கும் முயற்சி வெற்றி அடையமாட்டாது என்று சொல்லி முடித்தார். இதன் பிறகு ஹானரபில் ஜஸ்

டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்களும், ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சனும் பேசினார்கள். இந்தராஜதானியில் இப்போது உண்டாயிருக்கும் பண விபத்தால் மிகுந்த கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவிபுரியும்படியாக ஒரு நிதி ஏற்படுத்த 300-அங்கத்தினர்களடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

அர்பத்நட் நிவாரண நிதிகமிட்டி மீட்டிங்.

திரும்பவும் சென்ற திங்கட்கிழமை சாயந்திரம் கவர்னரின் அக்கிராசனத்தின்கீழ் ஓர்சபைகூடி ஆனரபில் சர் வி-சி. தேசிகாசாரியார், மி-ர் E. S. இல்லியாட், மிஸ்டர். மஹமத் சப்தர் உசேன் சாகிப் ஆகிய இவர்கள் மூவரும் செக்ரிடரிகளாகவும், மிஸ்டர் W. R. கருதர்ஸ் பொக்கிஷதாரராகவும், ஆனரபில் மிஸ்டர் அட்கின்சன், ஆனரபில் திவான் பகதூர் L. கோவிந்தராகவய்யர், மதராஸ் பிஷப், மி-ர் E. தர்ஸ்டன் W. ஆர், மிஸ்டர். E. W. ஆர். மி-ர். E. R. ஆஸ்பர்ன், மிஸ்டர் P. தியாகராயசெட்டியார், டாக்டர் டி. எம். நாயர், ஹாஜி மஹமத், ஹாஜி அப்துல் பாட்சா சாகிப் முதலானவர்கள் எக்சிகூடிவ் கமிட்டி மெம்பர்களாவும் நியமிக்கப்பட்டார்கள்.

இந்நிதிக்குக் கையொப்பஞ் செய்திருப்பவர்கள்.

சென்னை கவர்னர்	ரூபா	1000
சர். S, சுப்பிரமணிய அய்யர்	,,	1000
மெசர்ஸ் பெஸ்டு அண்டு கம்பெனி	,,	5000
ஆனரபில் மிஸ்டர் ஹாமிக்	,,	500
ஆனரபில் மிஸ்டர் ஸ்டோக்ஸ்	,,	500
சர் ரால்ப் பென்ஸன்	,,	500
மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்	,,	500
ஆர்காட் அரசர்	,,	500
மெசர்ஸ் டெய்லர் அண்டு கம்பெனி	,,	5000
மி-ர். C. V. குமாரசாமி சாஸ்திரியார்	,,	100
மெசர்ஸ் பாரி அண்டு கம்பெனி	,,	5000
,, வில்சன் கம்பெனி	,,	2500
,, W. A. பியர்ட்செல் அண்டு கம்பெனி	,,	2500
கார்டன் உட்ராப் அண்டு கம்பெனி	,,	5000
வாக்கர் அண்டு கம்பெனி	,,	2500
ஆனரபில் மிஸ்டர் J. டுவிக்	,,	500
,, ,, C. J. வேர்	,,	500
,, ,, J. N. அட்கின்சன்	,,	1000
மெசர்ஸ் பி. ஆர். அண்டு சன்ஸ்	,,	500
,, ஸ்பென்சர் கம்பெனி	,,	1000
,, ஹிக்கின் போதாம் கம்பெனி	,,	300
மிஸ்டர். A. W. ராஸ்லிங்கு	,,	1000
மிஸ்டர். W. E. ஹண்டர்	,,	1000
மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன்	,,	500
மிஸ்டர். H. ஸ்சாட்டு	,,	250
மிஸ்டரஸ் பிராண்டர்	,,	50
மிஸ்டர் சதாசிவராவ்	,,	100
,, G. D. ராபர்ட்சன்	,,	50
,, F. M. ராபின்சன்	,,	100
மெசர்ஸ் இங்கி அண்டுகோ	,,	100
ஆனரபில் மிஸ்டர் J. P. டேவிட்சன்	,,	500
மிஸ்டர் காடர்டன்	,,	400
கல்கத்தா "எம்பயர்"பேபரின் பத்திராதிபர்		250
மிஸ்டர். F. J. வில்சன்	,,	250
,, G. E. பெரெசயர்	,,	200
,, பி. ஆர் சுந்தர அய்யர்	,,	200
,, C. F. நேபியர்	,,	250
,, ஜஸ்டிஸ் வடலிஸ்	,,	500
மெசர்ஸ் வொயிட்டவே லெயிட்லா அண்டு கோ	,,	500
ஆர்சிபிஷப் கோல்கன்	,,	100
டாக்டர் மில்லர்	,,	250
மெசர்ஸ் ஆர், டேவிட், பிரைட்வெல்	,,	1500
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்	,,	500
ஆனரபில் P. S. சிவசாமி அய்யர்	,,	500
சர். சார்லஸ் ஆர்னுல்டு ஒயிட்டு	,,	750
மிஸ்டர். ரி. A. Y. G. காம்பல்	,,	250

மொத்தம். ரூ, 45,150.

சர் ஜியார்ஜ் அர்பத்னட் சோல்லும் இரண்டு ஏற்பாடுகள்.

மெசர்ஸ் அர்பத்னட் பாங்கி முழுகிப்போய்விட்டதற்கு கம்பெனியார் யாதொரு காரணமும் "சொல்லவில்லை" "சொல்லவில்லை" என்று பத்திரிகைகளும் பொது ஜனங்களும் பலநாள் கதறிக் கூக்குரல் போட்ட பிறகு சர் ஜியார்ஜ் அர்பத்நட் வெளிகிளம்பியிருக்கிறார். கிளம்பி என்ன சொல்லுகிறார்? பாங்கி முழுகிப்போனதற்குள்ள காரணங்களையும் இப்போது பாங்கிக்குள்ளசொத்துக்களைப் பற்றியும் கடன்களைப் பற்றியும் யாதொன்றும் சொல்லாமல் டிபாசிட்டர்களின் நஷ்டத்தை ஈடுபடுத்துமென்றும் அவர் நினைக்கும் இரண்டு உபாயங்களைப்பற்றி இந்நகர்ப் பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார். மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் தங்களுடைய கம்பெனியைத் திடீரென்று மூடினதற்கு இன்சால்மெண்டுகோர்ட்டில் இரண்டு முக்கிய காரணங்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று என்ன வென்றால், காபி எஸ்டேட்டுகளில் அதிகப்பணம் முடக்கப்பட்டுப் போய்விட்டதென்பது, இரண்டாவது என்னவென்றால், லண்டன் மெசர்ஸ் மாக்படேயின் கம்பெனி முழுகிப்போய்விட்டபடியால் தங்களுடைய கம்பெனியும் முழுகிவிட்டதென்பது. இந்தக்காரணங்களைப்பற்றி யோசிக்குமளவில் இந்த இரண்டும் நம்பக்கூடியதாயில்லை. காபி எஸ்டேட்டுகளில் நாளடைவில் பணத்தை முடக்கிக்கொண்டுவந்தது, பாங்கி திடீரென்று மூடினதற்குக் காரணமாகமாட்டாது. மிஸ்டர் மாக்படேயினே அர்பத்நட் கம்பெனி முழுகிப்போய்விட்டதால்தான் தற்கொலை செய்துகொண்டேன் என்று மரணவாக்கு மூலம் எழுதிவைத்துவிட்டு இறந்து போயிருக்கிறார். இக்கக் காரணங்களைக் கொண்டு மெசர்ஸ அர்பத்நட் கம்பெனியாரின் நடவடிக்கைகளை சமுசயிக்கவேண்டியதாயிருக்கிறது. சர் ஜியார்ஜ் அர்பத்நட் இவைகளுக்கெல்லாம் யாதொரு சமாதானமும் சொல்லாமல் உபாயத்தைப்பற்றி மட்டி

னும் எழுதியிருப்பது ஏற்கனவே நமக்குள்ள சமுசயத்தை இன்னும் பலப்படுத்தியிருக்கின்றது. இன்னொரு சமாசாரத்தைக் கேளுங்கள்! பாங்கித்தலைமையா யிருப்பவருக்கு அதற்கு இவ்வளவு சொத்து இவ்வளவு கடனிருக்கிறதென்று தெரிந்திருக்கமாட்டாதா? இன்னும் இந்தத் தகவலைப்பற்றி அவருக்கு ஒரு வார்த்தை சொல்லவில்லை. அபிஷியல் அசயினியும் ஒரு வார்த்தை சொல்லவில்லை. நிற்க. சர் ஜியார்ஜ் அர்பத்நட் சொல்லியிருக்கும் உபாயங்களைச் சற்று பரிசீலனை செய்வோம். முதலாவது உபாயமென்னவென்றால், முழுகிப்போன பாங்கியை இங்கிலாண்டில் ஒரு பாரி வர்த்தகக் கம்பெனியார் ஒப்புக்கொண்டு மானேஜ்மெண்டு செய்வதாகச் சொல்லுகிறார்களாம். ஆனால் அவர் தங்களுடைய சிரமத்திற்குத் தகுந்த பிரகாரம் பணமும், எக்காலத்திலும் தங்களுடைய மானேஜ்மெண்டில் கம்பெனியை விட்டுவிடவேண்டு மென்கிற உறுதிமொழியும் தங்கள் இஷ்டப்படி வியாபாரத்தையும் அது சம்பந்தமான விஷயங்களையும் நடத்திக்கொள்ளும்படியான அனுமதியும் கேட்கிறார்களாம். சர் ஜியார்ஜ் சொல்லியிருக்கும் இந்த ஏற்பாட்டைக் குறித்து யோசிக்கின், டிபாசிட்டர்களுக்கு அபிஷியல் அசயினியிடமிருந்து கிடைக்கக்கூடிய கொஞ்ச நஞ்சம் பணம் கூட அப்போது கிடைப்பதற்கு ஏதுவில்லை. அர்பத்னட் கம்பெனியை மானேஜ்மெண்டு செய்ய வருகிற சீமைக் கம்பெனியாரின் பரிகாரப் பணத்திற்கே லாபத்தை எல்லாம் உளவடைந்துக் கொள்ளுவார்கள். ஏறக்குறைய டிபாசிட்டர்களுக்கு ஒன்றும் கிடைக்கமாட்டாது. இரண்டாவது உபாயம் என்ன வென்றால், அபிஷியல் அசயினியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியின் சொத்துக்களை வாங்கி இப்போதிருக்கும் டிபாசிட்டர்களை எல்லாம் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டும் பழையபடி வியாபாரம் நடத்திவந்தால் பங்குதாரிகளுக்கு வருஷத்திற்கு 100-க்கு $2\frac{1}{2}$-வட்டி தேறும் என்று சொல்லுகிறார் அப்படிச் சொல்லுவதில், டிபாசிட்டர்கள் தாங்கள் கட்டியிருக்கும் டிபாசிட்டுத் தொகையில் பாதியை தள்ளிக்கொடுக்க வேண்டுமென்றும் பாதித்தொகைக்குத்தான் பங்குகள் கொடுக்கப்படுமென்றும் சொல்லுகிறார்.

அர்பத்நட் பாங்கியில் பணம் கட்டியிருந்தவர்களின் மீட்டிங்கு.

அர்பத்நட் பாங்கியில் பணம் கட்டியிருந்த டிபாசிட்டர்கள் திருவல்லிக்கேணி ஹைஸ்கூலில் கடந்த நவம்பர்மீ 10வ சனிக்கிழமை ஒரு கூட்டம் கூடினுர்கள். அனேக ஜனங்கள் வந்திருந்தார்கள். வந்தவர்களுக்குள் முக்கியமானவர்கள்—திவான் பகதூர் ராஜரத்தின முதலியார் அவர்கள், மிஸ்டர் ஜான் ஆடம், ரெவரெண்டு ஜேம்ஸ் கூலிங், ரெவரெண்டு லீத், டாக்டர் பி. பழினியான்டி, பண்டிட் டி. கோபாலாசார்லு, மிஸ்டர். K. S. ராமசாமி சாஸ்திரி, மிஸ்டர் C. W. மிடில்மாஸ்ட், மிஸ்டர் K. ராமானுஜாசாரியார், மிஸ்டர் தேவராஜபந்துலு, ஹானரபில் கொலின்கோட்ராஜா. மிஸ்டர் டி. ராம கிருஷ்ணபிள்ளை, ராவ் பகதூர் M. ஆதிநாராயண அய்யர், P. மிஸ்டர் ராஜகோபாலாசாரியார், மிஸ்டர் S. கஸ்தூரிரங்க அய்யங்கார், மிஸ்டர் M. புனிதவேலு முதலியார், மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், மிஸ்டர் S. கோபாலசாமி அய்யங்கார், திவான் பகதூர், K. கிருஷ்ணசாமிராவ், C. I. E. மிஸ்டர் W. கோபாலாசார்லு, புரொப்சர் S. ரங்கய்ய செட்டி, மிஸ்டர் C. R. திருவேங்கடாசாரியார், மிஸ்டர். K. R. நாராயணராவ், மிஸ்டர் B. ஹனுமந்தராவ், ராவ்பகதூர் P. அனந்தாசார்லு. மிஸ்டர். P. கோபாலாசார்லு, ஹானரபில் மிஸ்டர் B. N. சர்மா, ஹானரபில் மிஸ்டர். L. A. கோவிந்தராகவ அய்யர், மிஸ்டர் W. மார்க்கர், மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர், மிஸ்டர் P. C. அனந்தாசார்லு.

சர் ஜியார்ஜ். அர்பத்னட் இந்த மீட்டிங்கிற்கு வருவாரென்று எல்லோரும் வெகு நாழிகை பரியந்தம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவருக்கு வர பயித்தியமா! வரவில்லை. மீட்டிங்கிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முந்தியே ஜனங்கள் ஸ்கூல் நிரம்பக் கூடிவிட்டார்கள். மிஸ்டர் P. சங்கரராவின் பிரரேபணையின்பேரில் திவான்பகதூர் கிருஷ்ணசாமிராவ் அவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தார்.

சபாநாயகர் பேசியது.

கனவான்களே! இந்த மீட்டிங்கிற்கு நீங்கள் என்னைச் சபாநாயகனாக நியமித்தது எனக்கு மிகவும் விசனமாயிருக்கின்றது. அர்பத்நட் பாங்கி முழுகிப்போனதால் நமக்கு உண்டாயிருக்கும் துன்பங்களை எடுத்துக்கூறும் சக்தியுடைய மேதாவிகளாகிய கல்விமான்களாலும் முடியாதென்றால், கேவலம் நான் என்னமாய் எடுத்துச் சொல்லப்போகிறேன். ஆனால் அர்பத்னட் பாங்கி முழுகிப்போனதால் உண்டாயிருக்கும் துன்பம் எவ்வளவு பெரிது என்று நிச்சயிக்க ஒரு காரியமிருக்கிறது. இந்த பாங்கி முழுகிப்போனதால் கஷ்டமடைந்துவரும் ஏழை ஜனங்களுக்கு உதவிபுரிய மேன்மைதங்கிய கவர்னர் அவர்களே கருணைபுரிந்து ஒரு நிதி ஏற்பாடுசெய்ய ஆரம்பிக்கிறதென்றால், டிை பாங்கி முழுகிப்போய்விட்டதால் உண்டாயிருக்கும் துன்பம் எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டுமென்று நீங்களே அறிந்துகொள்ளலாம் சர் ஜியார்ஜ். அர்பத்னட் டிபாசிட்டர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்கிற கருத்துடன் இரண்டு ஏற்பாடுகள் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டு ஏற்பாடுகளால் சமீபத்திலாகிலும் அல்லது சிறிது காலம் சென்றாகிலும் டிபாசிட்டர்களுக்கு முழுத் தொகையாகிலும், அல்லது ஒரு பாகமாகிலும் கிடைக்குமென்று நம்பக்கூடவில்லை. டிபாசிட்டர்கள் கட்டியிருக்கும் பணத்தை வேறொரு கம்பெனிக்கு மூலதனப் பங்குகளாக மாற்றிக்கொள்ளுகிறோமென்று சொல்லுகிறார். வியாபார விஷயத்தில் அனுபோகமுடைய மேதாவிகளுடன் ஆலோசனை செய்யாமல் ஏகதேசத்தில் இந்த ஏற்பாடுகளைப்பற்றி நாம் ஒரு அபிப்பிராயமும் சொல்லமுடியாது. சர் ஜியார்ஜ் அர்பத்நட் இந்த ஏற்பாடுகளை வெளிப்படுத்தி சிறிதுதினங்கள்தானுயிற்று ஆனபடியால், அதற்குள் இவைகளைக்குறித்து வியாபார அனுபோகமுடையவர்களுடன் கலந்துபேசி அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிய அவகாசமில்லை. [வியாபார. விஷயத்தில் மிகுந்த அனுபோகமுடைய மிஸ்டர் ஆர்மராட், இந்த ஏற்பாடுகளால் டிபாசிட்டர்களுக்கு பணம் கிடைக்கமாட்டாதென்று பெங்களூர் "டெய்லிபோஸ்ட்" என்னும் பத்திரிகையில் எழுதிவிட்டார்.] சர் ஜியார்ஜ் அர்பத்நட் இந்த மீட்டிங்கிற்கு வருவதாயும், இந்த யேற்பாடுகளைக்குறித்து விபரமாய்ச்சொல்வதாயும், டிபாசிட்டர்கள் இந்த ஏற்பாடுகளைக்குறித்து கேட்கும் கேள்விகளுக்குப் பதில்சொல்வதாயும் நமக்கு எழுதித் தெரிவித்திருந்தார். வியாபார அநுபவமுடையவர்களைக் கலக்காமல் நாம் அவரை என்ன கேள்வி கேட்கக்கூடும்? ஆதலால் இந்த சபையாரால் நியமிக்கப்படும் கமிட்டியார் இனிமேல் அந்த ஏற்பாடுகளைக்குறித்து யோசனைசெய்து சர் ஜியார்ஜ் அர்பத்நட்டைக்கண்டு பேசுவார்கள் என்று அவருக்குப் பதில் எழுதிவிட்டோம். எந்த டிபாசிட்டரும் முழுகிப்போன பாங்கியின்பேரில் விரோதம் பாராட்டவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்தபாங்கியை இனிமேலும் நடைபெறச்செய்யும்படியாக சிலடிபாசிட்டர்கள் உபாயஞ் சொல்லி இருக்கிறார்கள். சிலர் தாங்கள் பிரரேபிக்கிறபடி செய்தால் பாங்கியாருடைய கடன் சல்லிசாய் தீர்ந்துபோகுமென்று சொல்லுகிறார்கள். சிலர் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டைக்கேட்கும்படியாகச்சில கேள்விகள் அனுப்பியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் இந்த சபையாரால் நியமிக்கப்படும் கமிட்டியாரிடம் கொடுக்கப்படும். அவர்கள் தகுந்தபடி யோசனை செய்து சமயோசிதமாய் நடவடிக்கை நடத்திவருவார்கள். எந்த டிபாசிட்டர் வேண்டுமானாலும் தனக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டிய விஷயத்தை இந்த கமிட்டியாரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். டிபாசிட்டர்களும் பாங்கியாரும் ஒன்றுசேர்ந்து இன்சால்வெண்டு கோர்ட்டார் ஏராளமான தொகையைச் செலவுசெய்ய விடாமல் தங்களுடைய தகராரைத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாயிருந்தால் அது மிகுந்த உத்தமமான காரியம்தான் என்று சொல்லி முடித்தார். அதன்பிறகு,

ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர். V. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் அடியில் வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசினுர்.

தீர்மானம்:—"மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியில் பணம் போட்டிருந்தவர்கள் சேர்ந்து நடத்தும் இக்கூட்டம் மேற்படி கம்பெனியின் சொத்துக்கும் மேற்படி கம்பெனியின் பாகஸ்தர்களின் சொத்துகளுக்கும், தங்களுக்குப் பிரதிநிதிகளாக இரண்டு ஸ்பெஷல் அசயினிகள் நியமிக்கப்பட வேண்டுமென்று ஏகோபித்து அபிப்பிராயப்படுகிறது. கூடிய சீக்கிரம் டிபாசிட்டர்கள் எலக்ஷன் நடத்தி இரண்டு ஸ்பெஷல் அசயினிகளைத் தெரிந்தெடுத்து நியமிக்கும் பொருட்டு ஒரு மீட்டிங்கூட அனுமதி பெறுவதற்காக இன்சால்வெண்டு கோர்ட்டு கமிஷனருக்கு மனுசெய்துகொள்ளவேண்டும். இதுவுமன்றி இந்த ஸ்பெஷல் அசயினிகள் நியமிக்கப்படும் பரியந்தம் அபிஷியல் அசயினி மேற்படி பாங்கி சொத்துக்களிலிருந்து அவசியமாக இருந்தாலொழிய யாதொரு செலவும் செய்யக்கூடாதென்றும், கோர்ட்டாருடைய அனுமதியின்றியாதொரு சொத்தையும் விற்பனைசெய்யக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்க மனுசெய்துகொள்ள வேண்டும்."

என்னும் தீர்மானத்தை பிரேரேபித்தும் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் அடியில் வருமாறு பேசினுர்.—கனவான்களே! இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிப்பதற்கு முந்தி நான் இந்த இன்சால்வெண்டு கம்பெனியின் அபார கடன்களைப்பற்றியும் சிதறுண்டு கிடக்கும் அவர்களுடைய சொத்துக்களைப்பற்றியும் நான் சில வார்த்தைகள் சொல்ல விருப்புகின்றேன். இந்த கம்பெனியின் சரித்திரத்தை நான் எடுத்துச்சொல்ல வேண்டியது அவசியமில்லை. இந்த கம்பெனி 100-வருஷங்களுக்குமேல் அதிகமாக இருந்துகொண்டு வந்திருக்கிறது. ஆனால் இவர்கள் இவ்வளவு விஸ்தாரமாக நானுவிதமான வியாபாரங்கள் செய்துவந்தது நமக்குத் தெரியாது. இது பங்குகள் சேர்த்து நடத்தும் லிமிடெட் கம்பெனியல்லவாகையால் இவர்கள் பிரதிவருஷ முடிவில் லாப நஷ்டஜாப்தா தயாரித்துக்காட்ட சட்டப்படி கடமைப்பட்டவர்களல்ல. இப்படியிருக்க, பாங்கியின் பணநிலைமையும், டிபாசிட்டர்களின் பணத்தைக்கொண்டு பாங்கியார் என்ன செய்கிறார்களென்பதுமாகிய விவரங்களை எல்லாம் அறிந்து கொள்ளாமல் இவ்வளவு ஜனங்கள் இந்த பாங்கியில் பணம் போட்டுவந்தது மிகவும் ஆச்சரியப்படக் கூடியதாயிருக்கிறது. நம்முடைய ஆச்சரிய மெப்படியிருந்த போதிலும், நாம் இதுகால பரியந்தம் இந்த பாங்கியாரிடம் வைத்துவந்த நம்பிக்கைக்கு அவர்கள் பாத்திரமானவர்களல்லவென்று இப்போது உணர்ந்து கொண்டோம், இச்சென்னையில் உயர்ந்த அந்தஸ்தை வகித்துவந்த இந்த பாங்கிக்காரர்களை தூஷிக்கவேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல. ஆனால் உங்களுக்கு ஒரு சமாசாரம் சொல்லவிரும்புகிறேன். அதாவது நேற்றைய மதிராஸ் மெயில் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிற தந்தி சமாசாரத்தைப் பாருங்கள். அர்பத்நட் கம்பெனியாருடைய கூட்டாளிகளாகிய மெசர்ஸ் மக்பேடேயின் கம்பெனியார் அனேகவருஷ காலமாக இன்சால்வெண்டு நிலைமையிலிருந்தார்கள் என்று தந்தி சமாசாரம் வந்திருக்கிறது. அப்படி யிருந்தும் இந்த கம்பெனியார் தங்களுக்கு நேரிடப்போகிற விபத்தை உணராமல், பலவியாபாரங்கள் நடத்திவந்திருக்கிறார்கள். இந்த சமாசாரம் முன்னமேயே தெரிந்திருந்தால் இப்போது துன்ப சமுத்திரத்தில் முழுகிப்போயிருக்கும் அனேகர்கள் தப்பித்துக்கொண்டிருப்பார்கள். இப்போது நாம் என்னசெய்யவேண்டியதென்று யோசிக்கும்படியான

காலம் வந்து விட்டது. அபிஷியல் அசயினியுடன் சேர்ந்து வேலை பார்க்கும்படியாக இரண்டு ஸ்பெஷல் அசயினிகள் நியமிக்கப்படவேண்டியது அவசியம். நான் லாயரானபடியால் இன்சால்வெண்டு கோர்ட்டைக்குறித்து சில சமாசாரம்சொல்ல விரும்புகின்றேன். இங்கிலாண்டில் அபிஷியல் அசயினி என்கிற ரிசீவருக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. முதலில் இன்சால்வெண்டு சொத்துக்கள் ரிசீவரிடம் ஒப்புவிக்கப்பட்டபோதிலும் பிறகு கடன் கொடுத்தவர்கள் கூடி ஒரு டிரஸ்டியை நியமித்து விடுகிறார்கள். அந்த டிரஸ்டியே சகல விவகாரங்களையும் நடத்துகிறார். அவருக்குப் பிறகு யாதொரு அதிகாரமுமில்லை. இந்தியாவிலோ அப்படியல்ல, கடன் கொடுத்தவர்களில் பெரும்பான்மையோர்கூடி ஸ்பெஷல் அசயினிகளை நியமித்தபோதிலும் அவர்கள் அபிஷியல் அசயினியுடன் சேர்ந்து வேலைபார்க்கவேண்டியவர்களே தவிர, அபிஷியல் அசயினியை நிராகரித்து யாதொன்றும் செய்ய அதிகாரமற்றவர்கள். அபிஷியல் அசயினிகளுக்கிருக்கும் அதிகாரம் ஸ்பெஷல் அசயினிகளுக்குமிருக்கும்படியாக கோர்ட்டாருக்கு மனுசெய்து அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். ஸ்பெஷல் அசயினிகளை நியமிக்கவேண்டுமென்பது; அபிஷியல் அசயினியை நம்பாமலல்ல. அபிஷியல் அசயினி இளவயதுடைய பாரிஸ்டர் அவருக்குப் பல வேலைகளிருக்கின்றன. அர்பத்நட் கம்பெனி பெரிய கம்பெனி, ஆகையால் இந்தவேலை ஒரு அபிஷியல் அசயினியால் திருப்திகரமாய்ப் பார்க்கமுடியாது.

இதன்பிறகு மிஸ்டர். வி. கி. ஐயர் அவர்கள் ஸ்பெஷல் அசயினிகள் நியமிக்கப்படும் பரியந்தம் அபிஷியல் அசயினி யாதொன்றும் செலவு செய்யக்கூடாதென்பதற்குப் பல காரணங்கள் எடுத்துக் காண்பித்தார். ஆகவே மேலேசொன்ன தீர்மானம் ஏகோபித்து பாஸ் செய்யப்பட்டது.

இதன்பிறகு தகுந்த கனவான்கள் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

அர்பத்நட் சொத்துக்கள் பல விடங்களிலிருப்பதாலும் இன்னும் இதைச்சேர்ந்த அநேக விஷயங்கள் நடைபெற வேண்டியதா யிருப்பதாலும் அதற்குப் பணம் தேவை என்று கருதி டிபாசிட்டர்கள் தாங்கள் கட்டியிருக்கும் டிபாசிட்டிற்கு 100-க்கு கால் ரூபாய் மேனிக்கு கொடுக்கவேண்டுமென்றும் அதிலும் ஆயிரரூபாய்க்குக் குறைவாய்க்கட்டிருந்தவர்கள் இம்மாதிரி கொடுக்கவேண்டியதில்லை என்றும், இப்படி வசூலான பணத்தை மதிராஸ் பாங்கியில் போட்டுவைத்து செலவுநேரிடும்போது செலவுசெய்யவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் செய்யப்பட்டது.

அர்பத்னட் கம்பெனியின் சமாசாரம் வெட்ட வெளியாயிற்று.

நவம்பர்௴ 17௳ சனிக்கிழமை மாலை விக்டோரியா நகர மண்டபத்தில் முழுகிப்போன அர்பத்னட்கம்பெனியின் கடன்காரர்களைத் தருவித்து அபிஷல் அசைனி மிஸ்டர் ஆர்ச்சிபால்ட்ரீட், இந்த அதிசயக்கம்பெனியின் முழுக்குக் காரணங்களையும் முழுகிப்போன சமயத்தில் அதன் நிலைமையையும் இப்போது கடன்காரர்களது நஷ்டங்களையும் பற்றி விஸ்தாரமாகப் பேசினார். அவர் பேசினதைக் கேட்டுக்கொண்டிருந்த கடன்காரர்களின் வயிற்றெரிச்சலையும் துக்கத்தையும் பற்றி நாம் என்ன சொல்லுவோம்! இருக்கிற பணத்தையெல்லாம் வட்டிக் காசைப்பட்டுக் கடன் கொடுத்து முழுகிப்போய் சாப்பாட்டுக்கின்றித் திண்டாடவேண்டி வந்தவர்களின் வயிற்றெரிச்சலையும் துக்கத்தையும் நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். அப்படித் திண்டாடவேண்டி நேரிட்டுள்ளார் எங்கேயோசிலர் இருப்பார்கள். கடன் வாங்கி மோசம் செய்கிறவர்களை மகாபாதகராக இந்தியராகிய நாம் நினைத்து நிந்திக்கிறதுவழக்கம். வாங்கின கடனைக் கொடுக்காதது பஞ்சமா பாதகங்களில் ஒன்று. இந்த அர்பத்னட் கம்பெனிக்குக் கடன்கொடுத்து முழுகிப்போனவர்கள் ஒருவர் இருவரல்ல; பத்தாயிரக் கணக்காய் முழுகிப்போனார்கள். நஷ்டங்களும் நூறு ஆயிரமல்ல; பத்தாயிரக்கணக்காகவும் லட்சக் கணக்காகவும் உள்ளன. அபிஷியல் அசைனியானவர் இந்த ஆங்கிலேயக் கம்பெனியின் மோசங்களை ஒவ்வொன்றாயெடுத்துச் சொல்லி, அதன் கடன் இவ்வளவு, மிகுதிசொத்திவ்வளவு என்று வெளியிட்டபோது, இப்படி மோசம் போனவர்கள் மனது எப்படிப்பதைத்ததோ மனதால் நினைத்தல் சாத்தியமேயொழிய கையினால் எழுதல் சாத்திய மல்ல. சென்னை அர்பத்நட் கம்பெனியையும் அதற்கு லண்டனிலாயிருந்த மாக்படெயின் கம்பெனியையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கணக்குகள் பார்த்ததில், மொத்தம் கடன் 2,68,66,524, அதாவது ஏறக்குறைய 3-கோடி ரூபாய். இதற்கு சொத்துகள் என்ன இருக்கின்றன வென்றால் சுமார் 40½ லட்சம் ரூபாய்க்குமேலில்லை. இந்த 40½ லட்சம் ரூபாயும், அர்பத்னட் கம்பெனியார்காப்பித்தோட்டங்களுக்குக் கடனாகக் கொடுத்த தொகைகள், "இண்டஸ்ட்ரியல்ஸ்" என்கிற அலுவல்களில் போட்டிருக்கிற பணம், மற்ற அலுவல்களில் அடங்கியிருக்கும் பங்குகள்—இவைகளெல்லாம் அபிஷல் அசைனிபோட்டிருக்கும் மதிப்புப்படி கிடைத்தால் உண்டு. காப்பித் தோட்டங்களுக்கு 15-லட்சம் ரூபாய்க்குமேல் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது; 'இண்டஸ்ட்ரியல்ஸ்' என்கிற தொழில்களில் போட்டிருக்கும் முதலானது 25-லட்சம் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு இனங்களுந்தான் பெரிய இனங்கள். இவைகளில் காப்பித் தோட்டங்களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் கடனில் எவ்வளவு அந்தத் தோட்டங்களை விற்பதாலும் வேறு வழியாலும் திரும்பிக் கிடைக்குமோ நிச்சயமில்லை. அப்படியே "இண்டஸ்ட்ரியல்ஸ்" என்கிற பல தொழில்களில் ஒன்றேனும் நல்ல நிலைமையிலில்லை யென்று நம்பப்படுகின்றது. வேறு சில்லறை வகைகளில் கம்பெனிக்கு வரவேண்டிய பணங்களிருப்பதாகக் கணக்குப் போடப்பட் டிருக்கின்றது. இவைகளையும் சேர்த்துக்கடன்காரர்களுக்குக் கிடைக்கக்கூடியதைப் பார்த்தால், ரூபாய்க்கு இரண்டணா தேருவதே வருத்த மென்று தோன்றுகிறது. இந்தக்கம்பெனியின் சரித்திரத்தை அபிஷல் அசைனிசொன்னார். என்ன விந்தையான சரித்திரம்! கோடிக்கணக்காக வியாபாரம் செய்த இந்தக் கம்பெனியில் பார்ட்னர்கள் அல்லது முதலாளிகளென்று சொல்லப்பட்டவர்கள் ஒரு ரூபாயேனும் முதல் கொண்டு வந்தவர்களல்லர். முதலாளிகள் நால்வர் ஐவர் இருந்தபோதிலும், இவர்களுக்குள் இன்னாருக்கு இன்னவிகிதம் இலாபமென்றாவது, இன்னார் எப்படி உத்தரவாதமென்றாவது, வேறு எந்த விதமான சம்பந்தத்தைக் குறித்தாவது, எழுத்து மூலமான ஏற்பாடேயில்லை! வெகுவருஷங்களாக, வரவு செலவு நிலுவைக் கணக்குகளைக் காட்டும்படியான பாலன்சுஷீட்டுத் தயார் செய்ததே யில்லை! முதலாளிகள் ஏராளமான தொகை கண்டபடி செலவு செய்து ராஜாக்கள்போல ஜீவனம் செய்ததுமல்லாமல், 9-லட்சம் ரூபாய் வரையில் கம்பெனி பணத்தில் கடன் வாங்கிக் கணக்கெழுதியிருப்பதாகத் தெரிகிறது. கடைசியில் கம்பெனி நின்றுபோனபோது, முதலாளிகளாக இருந்த மூவருக்குள் எவருக்கும் சொந்த சொத்துக்களில்லையாம். ஒத்தை ரூபாய் முதல் வைக்காமலும், முதலாளிகளுக்குள் ஒருவித எழுத்து மூலமான ஏற்பாடில்லாமலும், கம்பெனியின் நிலைமையைக் காட்டும்படியாக ஒருவிதமான கணக்கில்லாமலும், அப்போதப்போது கம்பெனியை நடத்தின பார்ட்னர் தமக்குத் தோன்றினபடி கம்பெனிப் பணத்தைச் செலவு செய்தும், அன்னியர்பணத்தைக் கண்ணை மூடிக்கொண்டு பற்பல தொழில்களில், லட்சக்கணக்காகப் போட்டு நஷ்டப்பட்டும்—இப்படியும் ஒரு கம்பெனி நடந்திருக்க, அதை நம்பி நம்மவர்கள் கோடிக்கணக்காகப் பணத்தைப்போட்டு இழந்தார்களே!—இந்தப் பிரிட்டிஷ் கம்பெனியின் மோசக்கருத்தும் தைரியமும் ஆச்சரியமா? அதை யாதொரு உள்வயணமும் அறியாமலே வெங்கடகிரி ராஜாபோன்ற பணக்காரர்கள் லட்சம் லட்சமாகப் போட்டு இழந்தார்களே! அவர்களது மடமை ஆச்சரியமா? இன்னொன்றுகவனிக்கத்தக்கது. இந்தக்கம்பெனியில் பணம் போட்டிருந்தவர்கள் பெரும்பாலும் இந்தியரே யன்றி ஆங்கிலேயர் சொற்பப் பெயரே. ஆங்கிலேயருக்கு உண்மை தெரிந்துதான் ஜாக்கிரதையா யிருந்தார்களோ? அப்படியானால் இப்படித் தெரிந்திருந்த ஆங்கிலேயர் இந்தியருக்கு ரகசியத்தை வெளியிடாமல் தங்கள் ஜாதியாரான கம்பெனிக்காரர்களைத் தாங்கள் அகப்பட்டுக்கொள்ளாமலே நமது பணத்தைக் கொண்டு மீட்கப் பார்த்தது என்ன அதிசயமான ஜாதி யபிமானம்! ஆங்கிலேயரது சத்தியத்துக்கும் தரும சிந்தைக்கும் அர்பத்நட் கம்பெனியாரின் சரித்திரம் பெரும் உறுதியாகக் கொள்ளப்படு மல்லவா!!

அபிஷியல் அசைனி சொன்ன சரித்திரம்.

சனிக்கிழமையன்று அபிஷியல் அசைனி அர்பத்னட் கம்பெனியின் சரித்திரத்தை ஆதியோடு அந்தமாகச்சொன்னார். சொன்னதில் அதன் பெரும் ஊழல்களும், மோசங்களும் வெளிப்பட்டன. அர்பத்னட் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு 100-வருஷத்துக்கு மேலாகின்றதென்பது பொதுவாகத் தெரிந்தவிஷயம். அக்காலம் தொட்டு அதனுடைய சரித்திரத்தைச் சொல்லுதல் அனாவசியமென்று 1860-ம் வருஷம் முதல்சொன்னார். அந்த வருஷம்முதல் 1872-ம் வருஷம் வரையில் கம்பெனி செழிப்பான நிலைமையிலேயே இருந்தது. பின்சொல்லிய வருஷத்தில் ஸர் ஜார்ஜ் அர்பத்னட் ஒரு பார்ட்னராக வந்தார். அவர் தகப்பனாரும் பார்ட்னராக இருந்து விலகினவர். தகப்பனுக்குப் பிறகு பார்ட்னராக வந்த ஸர். ஜார்ஜ் ஒரு ரூபாயேனும் முதல் கொண்டு வந்தவரல்ல. மிஸ்டர் A. மக்கென்ஸி யென்பவரும் அப்போது சிலகாலம் பார்ட்னராயிருந்து 1887-ம் வருஷ ஆரம்பத்தில் விலகினார். மக்கென்ஸிக்குப் பதிலாக மிஸ்டர் R. J. H. அர்பத்னட்டென்று ஒருவரும்; மிஸ்டர் வான்ஸ் ஆக்னியு என்கிற ஒருவரும் பார்ட்னர் ஆனார்கள். மிஸ்டர் மக்பாட்யனும் அக்காலத்தில் ஒரு பார்ட்னராகத்தா னிருந்தார். இந்த நால்வரும் 1887-ம் வருஷத்தில் பார்ட்னர்கள். இவர்களில் ஒருவராவது எவ்வளவு முதலையும் போட்டவர்களல்ல. பிற்காலத்தில் மிஸ்டர் யங் என்று ஒருவர் சொற்ப சம்பளத்தின் பேரில் பார்ட்னரானார். இப்போது இவரும் சர் ஜார்ஜ் அர்பத்னட்டுமே இருக்கிறார்கள். 1887-ம் வருஷத்தில் நமது துக்கங்களுக் கெல்லாம் முக்கிய காரணஸ்தரான மிஸ்டர் மக்பாட்யன் லண்டனுக்குப் போய், அங்கே அர்பத்னட்டாருக்கு ஒரு பிராஞ்சு ஸ்தாபித்தார். ஸ்தாபித்தபோது, லண்டன் பிராஞ்சானது சென்னைக் கம்பெனிக்கு இங்கிலாண்டில் இறக்குமதி யேற்றுமதி வியாபாரத்தை நடத்துவதாகவும் பொதுவாய்ச் சென்னைக்கம்பெனிக்கு உதவியாயிருப்பதாகவும் பேச்சு. ஆனால் லண்டன் பிராஞ்சுக்கும் சென்னைக் கம்பெனிக்கும் எவ்விதமான சம்பந்தமென்று எழுத்து மூலமாக எதுவும் ஏற்படவில்லை. மிஸ்டர் மக்பாட்யனுக்கு ஒற்றைரூபாய்கூட சொந்த முதலில்லை. அவருக்குவேண்டிய பணமெல்லாம் சென்னையிலிருந்து அனுப்பப்பட்டு வந்தது. வந்தாலும் ஒருவிதக் கணக்குவழக்குகளும் எழுத்தில் எழுதப்பட்டு வந்ததில்லை. மக்பாட்யனுக்குத் தோன்றினபடி மக்பாட்யன் செய்கிறது; அர்பத்னட்டுக்குத் தோன்றினபடி அர்பத்னட் செய்கிறது. இருவருக்கும் வேண்டிய பணம் சென்னைக் கம்பெனியில் டிபாஸிட்டாகும் தொகைகளே. இவ்வாறு நடந்து வந்ததில், மக்பாட்யன் பேராசை பிடித்தவனாகி, கண்டபடி பணத்தைப்போட்டுத் தூரதேசங்களில் பெரும் சம்பாத்தியம் சம்பாதிக்க முயன்றான். மேற்கு இந்தியத் தீவுகளில், அதாவது மோரிஸ், ஜமேக்கா ஆகிய தீபாந்தரங்களில் சர்க்கரை செய்வதற்காகப் பணம் அட்வான்ஸ் செய்தான். ஜாவாத் தீவில்

இம்மாதிரியே செய்தான். ஜாவாத் தீவென்பது கீழ் சமுத்திரத்தில் இருக்கிறது. லண்டனிலிருந்தமக்பாட்டியன், சென்னைப் பணத்தைக்கொண்டு, மேல் சமுத்திரத்திலும் கீழ் சமுத்திரத்திலுமுள்ள தோட்டப்பயிர்க்காரர்களுக்குப் பணம் ஏராளமாக அட்வான்ஸ் செய்து பெரும் லாபம் பெறலாமென்று முயன்றான். இவைகள் போதாதென்று அமெரிக்காவில் ரயில் தண்டவாளங்களில் வியாபாரம் செய்தானும், இவைகளிலெல்லாம் ஒன்று தவறாமல் பெரும் நஷ்டமே நேரிட்டது. 1887-ம் வருஷம்முதல் 1893-ம் வருஷத்துக்குள்ளாக, அதாவது ஆறு வருஷத்துக்குள்ளாக 60-லட்சம் ரூபாய் நஷ்டம் வந்துவிட்டது. இவ்வளவு நஷ்டம் வருஷத்துக்கு வருஷம் நேரிட்டு வந்தது சென்னையிலிருந்த ஸர் ஜார்ஜ் அர்பத்னட்டுக்குத் தெரியாதிருக்கவில்லை. நேரிட்ட கஷ்டங்களையெல்லா மறிந்தும், சென்னையிலிருந்து மக்பாட்யனுக்கு வேண்டுமென்ற பணம் போய்க்கொண்டே யிருந்தது. இருந்தும் ஒரு வருஷமாவது இந்த இரண்டு கம்பெனிகளுக்கும் சேர்த்து என்ன வரவு, என்ன, செலவு, லாபநஷ்டங்களென்ன என்பதாக பாலன்ஸ் ஷீட்டும் போட்டதே யில்லையாம்! இந்த இருவரும் அந்தரங்கமாயாவது வாய்ப்பேச்சாலாவது ஏதேதும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கக் கூடும்; கம்பெனிப் புஸ்தகங்களில் எதுவும் பதியப்பட்டிருக்க வில்லை.

லண்டனில் இப்படியிருக்க, சென்னையிலாவது லாபம் வந்துகொண்டிருந்ததா? அதுவுமில்லை. 1893-ம் வருஷம் முதல் 1900-ம் வருஷம் வரையில் சென்னையிலும் நஷ்டமே வந்துகொண்டிருந்தது. காப்பித் தோட்டங்களிலும் அவுரியிலும் ஏராளமானபணத்தைப்போட்டு நஷ்டம் வந்தது. உப்புக்கண்டிராக்ட்கள் எடுத்து அவைகளிலும் நஷ்டம் வந்தது; சில வருஷங்களுக்கு முன்னால் இறக்குமதி வியாபாரத்தில் பல லட்சம் ரூபாய் காணாமற்போய்விட்டது. தென்னாபிரிகாவில் போவர் யுத்தத்தின்போது கவர்ன்மெண்ட் பத்திரங்கள் வாங்கி விற்றதில் 3 லட்சம் ரூபாய் நஷ்டம் வந்தது. தவிர, மி-ர். மாக்பாட்யனும் ஸர் ஜார்ஜ் அர்பத்னட்டும் சொந்தத்தில் ஏதோ வியாபாரம் செய்து பேருக்கு 1½ லட்சம் நஷ்டம் வந்தது. இந்த 1½ லட்சத்தை ஸர் ஜார்ஜ் அர்பத்னட் சென்னைக் கம்பெனிப்பணத்தைக் கொண்டு ஈடுசெய்துகொண்டார்! லாபம் வந்திருந்தால் அது இவரது சொந்தமாகும்! நஷ்டம் வந்தபடியால் கம்பெனிப் பணத்தைக் கொண்டு ஈடுசெய்து கொள்ளப்பட்டது. மிஸ்டர் மக்பாட்யனும் சொத்தில்லாதவரானதால், அவர் பங்குக்குக்கு வந்த நஷ்டமாகிய 1½-லட்சமும் சென்னைக் கம்பெனியின் பணத்திலிருந்துதான் ஈடு செய்து கொள்ளப்பட்டிருக்கவேண்டும். கடைசிக்காலத்தில் கம்பெனியின் அலுவல்களெல்லாம் சுருங்கிக் கொண்டே வந்தன. 1897-ம் வருஷம் முதல் ஒரு வகையிலும் லாபமே யில்லையாம்! சிறிது லாபம் கிடைத்தாலும், நேரிட்ட பெரும் நஷ்டங்களுக்கு ஈடாக வைத்துக்கொள்ளப்பட்டது. இவைகளெல்லாம் திருப்தி யடையாமல், இந்தப் பார்ட்னர்கள் கம்பெனிப் பணத்திலிருந்து அதாவது தென்னிந்தியா ஜனங்கள் அவர்களை நம்பிப்போட்டிருந்த பணத்திலிருந்து, 9½-லட்சம் ரூபாய் அதிகப்பற்றுகக்கணக்கெழுதி வாங்கி யிருக்கிறார்கள். கடனாக வேறு 2½-லட்சம் வாங்கியிருக்கிறார்கள். இவைகளைத் தவிர கரண்ட்கணக்கில் கடன் கொடுத்த தொகைகள் திரும்பிக் கிடைக்காதவை 5,68,852 ரூபாய்; நானாவிதமான கடன்கள் திரும்பிவரக் கூடாதவை 9,42,834-ரூபாய். என்ன தாராளம்! என்ன பெருந்தன்மை! இப்படி ஒட்டாஞ்சில்லாகப் பணத்தைப் பத்து லட்சக் கணக்காக வாரியிறைத்த கம்பெனி முழுகிப்போனது அதிசயமல்ல; இவ்வளவு காலம் தள்ளிக்கொண்டு வந்ததே யதிசயம். லண்டனில் மக்பாடியன் சங்கதி இந்தியர்க்குளதுவுந் தெரியாது. சென்னையிலிருந்த ஸர். ஜார்ஜ் அர்பத்னட் தாம் உத்தரவாத மேற்று நடத்திவந்த கம்பெனி வெகுகாலமாக நஷ்டப்பட்டுவந்ததை யறிந்தும் பணம் போட்டவர்களுக்குத் திருப்பிக்கொடுக்க வழியேயில்லையென்று தெரிந்தும் நம்மவர்களிடம் லட்சக்கணக்காகவும் பத்தாயிரக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும், மகா ஏழைகளிடமிருந்து நூற்றுக் கணக்காகவும், பணத்தை டிபாஸிட் வாங்கி வாயில் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார். இப்படியல்லவோ வியாபாரம் செய்யவேண்டும்! இந்தியரைக் காப்பதற்காக அல்லவோ ஆங்கிலேயர் இந்தியாவில் பாங்கிகள் ஸ்தாபிக்கிறார்கள் என்று பயோனியர் பத்திரிகை சொல்லவில்லையா?

இந்திய பாங்கி.

கீழ் கையொப்பமிட்டிருக்கும்கனவான்கள் சென்னையில் ஓர் இந்திய பாங்கி ஏற்படுத்துவதைப்பற்றி ஓர் சர்க்கியுலர் அடித்திருக்கிறார்கள். அதாவது:—சென்னையில் ஓர் சுதேசிய பாங்கி இல்லாதிருப்பது ஓர் பெருங்குறையென்றும், அம்மாதிரியாக ஓர் பாங்கி ஏற்படுத்துவதற்கு இது தக்க சமயமென்றும் பணம் கொடுக்கல் வாங்கல் முதலான லாவாதேவி விஷயங்களில் மிகவும் தேர்ச்சியடைந்த நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் உதவியால் மேற்படி பாங்கியை வெகு சுலபமாய் நடத்திக்கொண்டு வரலாமென்றும், சென்னையிலுள்ள சில பொறுப்பான ஜனத்தலைவர்கள் இதைப்பற்றி சிரத்தையெடுத்துக்கொண்டால் ஜனங்கள் அதற்காக மிகவும் நன்றி பாராட்டினவர்களாயிருப்பார்களென்றும், பங்கு ஒன்றுக்கு 50-ரூபாய் விகிதம், 100000-பங்குகளாக ஏற்பாடுசெய்து 50-லக்ஷ ரூபாய் முதலுடன் பாங்கி ஏற்படுத்தப்படும் என்றும், சில நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் லக்ஷக்கணக்காய் பங்குகள் எடுத்துக்கொள்வதாய் எதிர்பார்ப்பதாகவும், இன்னும் பல சுதேச வர்த்தகர்களும் இதில் சேருவார்களெனவும் இதைப்பற்றி அவரவர்கள் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தவேண்டுமாகில், ஐகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யருக்கெழுதி தெரிவித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். சர்க்கியுலரில் கைச்சாத்திட்டிருப்பவர்கள்:—கான்பகதூர் எ. மகமத்து அப்துல் அசீஸ்பாட்சாசாகிப், முரலிதாஸ், T. சீதாராம்செட்டி, M. A. கத்துஸ் பாட்சா சாகிப், M. ஜம்மல் மொகதீன் அண்டுகோ, புதுச்சேரி கலவை கிருஷ்ணசாமிசெட்டியார், சர்-வி-பாஷியமய்யங்கார், P. R. சுந்தரமய்யர், V. கிருஷ்ணசாமி அய்யர்.

ஹைகோர்ட்டு.

நான்காவது கிரிமினல் செஷன்ஸ்

ஜட்ஜி:—ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

முதல் தினம்:—1906௵ நவம்பர்௴ 12௳ திங்கட்கிழமை.

I.

குற்றவாளி.—B. S. லக்ஷ்மண அய்யர்.

குற்றம்:—திருட்டுச் சொத்தை ஒளித்துவைப்பதில் உதவிசெய்த குற்றம்.

ஜூரர்கள்:—மிஸ்டர் J. G. பாஸ்கட், (போர்மன்) மிஸ்டர் W. H. பேர்ட், மிஸ்டர் J. சாட்விக், மிஸ்டர் A. குரூப், மிஸ்டர் W. K. புல்மோர், மிஸ்டர் C. சீனிவாசாசாரி, மிஸ்டர் T. அண்ணாசாமிராவ், மிஸ்டர் K. பாலகிருஷ்ண பிள்ளை, மிஸ்டர் A. பட்லர்;

லாயர்கள்:—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும், குற்றவாளி தரப்பிற்கு அவர் வக்கீல் மிஸ்டர் T. வெங்கட்ட சுப்பய்யர் அவர்களும் ஆஜரானார்கள்.

கேசின் விபரம்:—பப்ளிக் பிராசிக்கியூட்டர் கேசின் வரலாற்றை அடியிற்கண்டபடி ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னார்:—குற்றவாளி திருட்டுச்சொத்தென்று தெரிந்து அதை ஒளித்து வைத்த குற்றத்திற்காவது அல்லது அதை ஒளித்துவைத்ததில் உதவிசெய்த குற்றத்திற்காவது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறான். திருட்டு வேறே யூரில் நடந்திருந்தபோதிலும் அச்சொத்தை ஒளித்து வைத்தது இந்த ஊரில் நடந்திருக்கிறபடியால் குற்றவாளி இந்த ஹைகோர்ட்டின் விசாரணைக்கு ஆஜர் படுத்தப்பட்டான். குண்ட்டூர் லோக்கல் பண்டு இன்ஜினீராகிய மிஸ்டர் ரெட்மெண்டினிடம் நரசிம்மராவ் என்பவன் லஸ்கர் வேலை செய்துகொண்டு வந்தான். இவன் சென்ற ஏப்பிரல்௴ 13௳ உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டான். அதேசமயத்தில் இஞ்சினீருடைய செக்கு புஸ்தகமும் காணாமற்போய்விட்டது. செக்கு புஸ்தகம் காணாமற்போனதைக் குறித்து இஞ்சினீர் விளம்பரமும் போட்டிருந்தார். ஷை லஸ்கர் நரசிம்மராவ் என்பவன் அந்த செக்கு புஸ்தகத்தைத் திருடி அதில் ஒரு செக்கில் இஞ்சினீர் மிஸ்டர் ரெட்மெண்டு கையெழுத்து செய்ததுபோல் சிருஷ்டிக் கையெழுத்து செய்து பணம் பெறுவதற்காக சைதாப்பேட்டைகஜானா ஆபீசில் அந்த செக்கை ஆஜர்படுத்தினான். கஜானா அதிகாரிகள் அந்தச் செக்கை சமுசயித்துப் போலிசாருக்கு ரிப்போர்ட்செய்ய அவர்கள் நரசிம்மராவை அரஸ்ட்செய்து, சென்னை ஜியார்ஜ் டௌனிலிருந்த இவனுடைய வீட்டைசோதனைசெய்துகொண்டிருந்தார்கள். அப்படி இவர்கள் சோதனைசெய்துகொண்டிருக்கையில், இந்தக் கேசின் குற்றவாளியாகிய லக்ஷ்மண அய்யன் அந்த வீட்டிலிருந்த செக்கு புஸ்தகத்தை எடுத்து போலிசார் சோதனையில் சிக்காமலிருக்கும் வண்ணம் கிணற்றுக்குள் போட்டுவிட்டான். போலீசார் அந்த செக்குபுஸ்தகத்தைக் கிணற்றிலிருந்து எடுத்து, நரசிம்மராவ், லக்ஷ்மண அய்யர் ஆகிய இரண்டு பேர்கள் பேரிலும் குற்றஞ்சாட்ட, இவர்கள் செங்கற்பட்டு செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணைக்கு அனுப்பப்பட்டார்கள். செஷன்ஸ் கோர்ட்டார் இக்குற்றவாளிகளையும் சேர்த்து விசாரிக்கும்போது லக்ஷ்மண அய்யன் வக்கீல் தம்முடைய குற்றவாளி செக்கு புஸ்தகத்தைக் கிணற்றில் எடுத்துப்போட்டதாகச் சொல்லப்படுவது சென்னபட்டணத்திலானபடியால் தம்முடைய கக்ஷிக்காரனை விசாரிக்க செங்கற்பட்டு செஷன்ஸ் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று சொல்லி ஆக்ஷேபித்தபடியால் செஷன்ஸ்கோர்ட்டார். ஷை. ஆக்ஷேபனையை ஒப்புக்கொண்டு இந்த செஷன்ஸ் கோர்ட்டிற்குக் குற்றவாளியை அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னார்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பில் வீட்டைச்சோதனை போட்ட கான்ஸ்டேபில் உள்பட அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். பிராசிக்கியூஷன் தரப்பு விசாரணை முடிந்தவுடன், குற்றவாளி கமிட்டிங் மாஜிஸ்டிரேட்டினிடம் எழுதிவைத்த வாக்குமூலம் வாசித்துக்காண்பிக்கப்பட்டது.

குற்றவாளியின் வக்கீல் பேசினது:—என்னுடைய கக்ஷிக்காரன்மேல் சாட்டப்பட்ட குற்றம் ருஜுப்படவில்லை. அப்படி ஏதேனும் அந்தக் குற்றத்தைச்செய்திருந்தால் பிராசிக்யூஷன் தரப்பு சாக்ஷியாகிய பூரணசந்திர அம்மாள் என்பவளின் கூட்டுறவின்பேரில் செய்திருக்கவேண்டும். அப்படிச்செய்திருந்தால் அவள் இந்தக்குற்றத்தில் கூட்டாளியாகிறாள். ஒரு குற்றத்தில் கூட்டாளியாகவிருப்பவரின் சாக்ஷியத்தைச்சட்டப்படி நம்பக்கூடாது. ஆகையால் என்னுடைய கக்ஷிக்காரனுக்கு ஜூரர்களுக்குச் சந்தேக நன்மையையாவது கொடுக்கவேண்டும்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னதின் பேரில், ஜூரர்கள் சிறிது நாழிகை ஆலோசனை செய்து குற்றவாளி குற்றஞ் செய்யவில்லை என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினதுமன்றி பூரணசந்திரம்மாள் குற்றஞ்சாட்டப்பட்டிருக்க வேண்டுமென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளியை விடுதலை செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

II.

இரண்டாம் நாள்.

ஜியார்ஜ் டௌன் கொலைக்கேஸ்.

குற்றவாளி:—தங்கவேலு ஆசாரி.

குற்றம்:—நினைத்துச்செய்த கொலைக்குற்றம் அல்லது வேணுமென்று கடுங்காவல் விளைவித்த குற்றம்.

ஜூரர்கள்:—மெசர்ஸ், W. R. கருத்தர்ஸ், (போர்மன்) S. லோன், W. H. ஒக்ஸ், W. B. பிம்

பிளட், C. கருணாகரன்மேனன், முகம்மது அன்வாருடின் சாய்பு, R. S. மென்சிஸ் G. S. அப்பாசாமிஅய்யர், மாக்ஸ்மீர்ச்.

லாயர்கள் :—குற்றவாளி தரப்பிற்கு மிஸ்டர் M. A. திருநாராயணாசாரியார் ஆஜரானார்.

கேசின் விபரம்:—தங்கவேலு ஆசாரி என்பவனும், ஆண்டியப்ப ஆசாரி என்பவனும் ஒருவருக்கொருவர் பந்துக்கள். இவர்கள் ஒரேவீட்டில் வசித்து வந்தார்கள். இச்சம்பவத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு தாங்கள் வசிக்கும் வீட்டின் பிரிவினையைப் பற்றி இருவருக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. சென்ற ஆகஸ்டுமாதம் 15-ந்தேதி தன் வீட்டுத்தெருநடையில் கதவைச் சற்று சாத்திவிட்டு ஆண்டியப்ப ஆசாரிக்குத் தன்னுடைய பெண்ஜாதி எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது, தங்கவேலு ஆசாரியென்பவன் கதவை பலாத்காரமாய்த் திறந்துகொண்டு வாய்க்குவந்தவாறு ஆண்டியப்ப ஆசாரியைத் திட்டிக்கொண்டு உள்ளேபோனான். அதன்பேரில் இருவருக்கும் சச்சரவு வுண்டாகி ஒருவரையொருவர் திட்டிக்கொண்டார்கள். தங்கவேலாசாரி சரேலென்று ஒரு கத்தியை எடுத்துக்கொண்டுவந்து ஆண்டியப்ப ஆசாரியைக் கழுத்தின்பேரில் ஒரு குத்தும் தோளின்பேரில் ஒரு குத்தும் குத்தினான். இதற்குக் காயமுண்டவன் பெண்சாதியும் பிள்ளையும் பிரத்தியக்ஷ சாட்சிகள். பிறகு காயமுண்டவன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்ட 10-ம் நாள் உயிர்துறந்தான். இக்கேசில் குற்றவாளியாகிய தங்கவேலு ஆசாரி தரப்பில் ஐகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் M. A. திருநாராயணாசாரியார் வாதித்தார்.

பிராசிக்கியூஷன் தரப்பு முதல் சாக்ஷி:—குற்றம் நடந்த ஸ்தலத்தின் பிளானைத் தயாரித்த டிராப்ட்ஸ்மென் சாக்ஷியம் சொன்னார்.

இரண்டாவது சாக்ஷி :—கொலையுண்டவனின் பெண்சாதி தன் புருஷன் கொலைசெய்யப்பட்டதைத் தான் கண்ணால் பார்த்ததாகச் சாக்ஷி சொன்னாள்.

மூன்றாவது சாக்ஷி :—பிரேத பரிசோதனை செய்த அசிஸ்டன்ட் சர்ஜன் மிஸ்டர் சுப்பிரமணியபத்தர் பிரேதத்தின் பேரில் கண்ட காயங்களைப்பற்றிப் பேசினார்.

பிராசிக்கியூஷன் சாக்ஷி விசாரணை முடிந்த பின்னர் குற்றவாளி கீழ்கோர்ட்டில் எழுதிவைத்த வாக்குமூலம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. குற்றவாளி ஏதேனும் கோர்ட்டாருக்குச் சொல்லிக் கொள்ளவேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாமென்று சொன்னார்கள். அதற்கு இறந்துபோனவன் தன்னை அடிக்கடி நிந்தித்துக் கோபம் மூட்டினதாகவும் அந்தக்கோபம் பொறுக்க முடியாமல் அவனைக் கத்தியால் தான் குத்தப்போனதாகவும், அவன் தன்னை எதிர்த்தபோது கத்தி அகஸ்மாத்தாய் அவன் தோளில் விழுந்து காயப்படுத்திப் பூமியில் விழுந்து விட்டதாகவும் அதன்பேரில் அவன் விழும்படியாக நேரிட்டதென்றும் சொன்னான்.

ஜூரிகளின் அபிப்பிராயம் :—குற்றவாளி நினையாத கொலைக்குற்றத்தைச் செய்திருப்பதாக ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—7-வருஷம் கடினகாவல் தண்டனைவிதிக்கப்பட்டது.

III.

மூன்றாம் நாள் :— 14வ புதன்கிழமை

நம்பிக்கை மோசக் கேஸ்.

கேசின் விபரம் :—சென்ற ஆகஸ்டுமாதம் 6-தேதி அப்துல்ராசக் என்பவன் தபால் பெட்டியிலிருந்து கடிதங்கள் எடுத்துக்கொண்டுபோய் போஸ்டாபீசில் போடும் பியூன், மி-ர் சுப்பராவ் என்பவர் எழுதிய 2-கார்டுகளிலிருந்த ஸ்டாம்பையும், மி-ர் M. V. கன்னைய்ய செட்டியார் என்பவர் எழுதின கவரிலிருந்த ஒரு ½ அணா ஸ்டாம்பையும் பேர்த்து எடுத்துக்கொண்டதற்காக சார்ஜ் செய்யப்பட்டு, அவன் வீட்டிற்குப்போய் பரிசோதனை செய்ததில் பிம்மாதிரியாகச் சேர்த்துவைத்த சுமார் 488-ஸ்டாம்புகள் எடுக்கப்பட்டன. குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

ஜூரர்கள் :—கைதி குற்றவாளி யல்லவென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கைதியை விடுதலை செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

IV.

ரேவுதுறைக் கொலைக்கேஸ்.

குற்றவாளிகள்;—(1) சின்னசாந்தேவு.

(2) ரத்னம்.

குற்றம்:—நினையாமல் செய்த கொலைக்குற்றம்.

ஜூரர்கள்:—மெசர்ஸ் சி. டௌடன், W. B. பிம்பலட், G. S. அப்பாசாமி அய்யர், R. T. மென்சிஸ், மாக்மெர்ச், W. D. சிமித், வி. தேசிகாசாரி, T. கூரத்தாள்வார் செட்டி, H. M. ஜம்சன்.

கேசின் விபரம்:—இரு குற்றவாளிகளும் சென்னைத்துறைமுகத்தில் படகு ஓட்டுகிறவர்கள். கொலையுண்டவனாகிய வேலுசெட்டியும் படகு ஓட்டுகிறவன். ரெங்கூனிலிருந்து ஒரு ஸ்டீமர்வர, அதன் பிரயாணிகளை ஏற்றிப் பணம் சம்பாதிக்கும்பொருட்டு இரண்டு படகுக்காரர்களும் வேகமாய் ஸ்டீமரிடம் போனார்கள். வேலு செட்டியின் படகு முன்னால்போனது. குற்றவாளிகளின் படகு பிந்திபோனது. குற்றவாளிகள் தங்களுடைய படகை ஒதுக்கி முந்திவிட ஆரம்பித்தார்கள். அப்படிச்செய்யும்போது இருபடகுக்காரர்களுக்கும் சண்டை நடந்து, குற்றவாளிகள் வேலுசெட்டியை, தங்கள் கையிலிருந்த துடுப்புக்கோலால் ஓங்கி அடிக்கவே அவன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்து விட்டான். விழுந்து விடவே அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டுபோனார்கள். அவ்விடத்தில் இறந்துபோய் விட்டான்.

கேசின் நடவடிக்கை :—பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டவுடன், குற்றவாளிகள், தாங்கள் இந்தக்குற்றத்தைச் செய்யவில்லை என்று இரண்டு சாக்ஷிகளை விட்டார்கள்.

கோர்ட்டார் இந்த சாக்ஷிகள் சொன்னதை நம்பவில்லை.

ஜூரர்களின் அபிப்பிராயம் :—குற்றவாளிகள் கடுங்காயம் விளைவித்த குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—குற்றவாளிகளுக்கு 9-மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

V.

பேரம்பூர் கொலைக்கேஸ்.

குற்றவாளி :—ஜெகநாதன்.

குற்றம் :—நினையாமல் செய்த கொலைக்குற்றம்; அல்லது கடுங்காயம் விளைவித்த குற்றம்.

ஜூரர்கள் :—முன் கேசிலிருந்த ஜூரர்கள்.

கேசின் விபரம் :—அக்டோபர்மீ 16வ குற்றவாளியும், கொலையுண்டவனும், இன்னும் இருவர்களும், ஆக எல்லோரும் சேர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருக்கையில் குற்றவாளி சின்னப்ப நாயக்கனை சோடாவாட்டர் புட்டிகளால் அடிக்க, அந்த அடி அவனுடைய கபாலத்தில் பட்டு இறந்துபோய் விட்டான்.

சாக்ஷி விசாரணை :—பிரேத பரிசோதனை செய்த டாக்டர்கள் சோடாவாட்டர் புட்டியால் ஒருவனை கபாலத்தில் அடித்தால். மரணத்தை விளைவிக்குமென்று சாக்ஷியஞ் சொன்னார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம் :—குற்றவாளி நினையாமல் செய்த கொலைக்குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கைதிக்கு 7-வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

VI.

திருட்டுக் கேஸ்.

குற்றவாளி:—(1) முன்னுசாமி.

(2) மாணிக்கம்.

குற்றம்:—திருடின குற்றம்.

கேசின் விபரம்:—ஜியார்ஜ் டௌன் அண்ணாப்பிள்ளைத்தெருவில் பாஷியம்நாயுடு என்பவருக்குச் சொந்தமான ஒரு கிடங்கில் இருந்த மிளகாய் மூட்டைகளைக் கடந்த அக்டோபர்மீ 12வ இரவு திருடின போது, அந்த கிடங்கின் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தவர்கள் சப்தம் கேட்டு, விழித்துக்கொண்டு கள்ளர்களைக் கையும் களவுமாகப்பிடித்து போலீசாரிடம் ஒப்புவித்து விட்டார்கள்.

குற்றவாளிகள் வாக்கு மூலம்:—கீழ்க்கோர்ட்டில் இரு குற்றவாளிகளும் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். செஷன் கோர்ட்டில் முதல் குற்றவாளி தான் குற்றஞ்செய்யவில்லை என்றும், போலிசார் நிர்ப்பந்தப்படுத்தினதால் தான் கீழ் கோர்ட்டில் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படியாக நேரிட்டதென்றும், தான் நிரபராதி என்றும் சொன்னான். இரண்டாவதுகுற்றவாளி கீழ்கோர்ட்டில்சொன்னது போலவே செஷன்ஸ் கோர்ட்டிலும் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

கேசின் நடவடிக்கை :—செஷன்ஸ் கோர்ட்டில் முதல் குற்ற வாளியை மட்டிலும் விசாரணை செய்தார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—குற்றவாளி திருடியிருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—முதல் குற்றவாளிக்கு 5-வருஷ கடினகாவல் தண்டனைவிதித்தது மன்றி அவன் ஜெயிலைவிட்டு வந்த பிறகு ஒருவருஷம் வரையில் அவனுடைய போக்கு வரத்துகளைப் போலிசாருக்கு அறிவித்துக்கொண் டிருக்கவேண்டு மென்று உத்தரவு செய்தார்கள். இரண்டாவது குற்றவாளி கோர்ட்டாருக்கு சிரமம் கொடுக்காமல் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டபடியால் அவனுக்கு இரண்டு வருஷகாலம் தண்டனை விதிக்கப்பட்டது.

VII.

ஓட்டேரிக் கொலைக்கேஸ்.

ஜூரர்கள்:—மெசர்ஸ்:—F. E. ஹூபர் (போர்மன்) H. நெல்சன்; மஹமத் ஷெரிப்கான் பகதூர்; கன்ஷம்சிங்; W. J. எகார்டி; B. B. சாண்டிக்; J. J. எவரெட் T. அங்காய்; W. F. மிஸ்குவித்.

கேசின் விபரம்:—சென்ற செப்டம்பர்மீ 28வ மஹாலிங்கநாடான் என்பவன் தன்வீட்டில் காணப்படாமையால், வீட்டிலுள்ளார் தேடவாரம்பித்தும் அகப்படவில்லை. மூன்றாம்நாளாகிய 30-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஓட்டேரி முனிசிபல் குப்பை டிபோவில் காவலிருக்கும் குப்பைக்காரன்குப்பையினாலும் மலத்தினாலும் மூடப்பட்டிருந்த பிரேதத்தைப்பார்த்து, போலீசாருக்கறிவிக்க, அவர்கள் வந்து அதைத்தோண்டி எடுத்து நன்றாய்க்கழுவிப்பார்த்தும் பிரேதம் கண்டதுண்டமாக விருந்தமையால் இன்னாரெனக் கண்டுபிடிக்க முடியாமலிருக்க, இச்சேதியைக் கேட்டு வந்த இறந்தவனின் தகப்பனும், தங்கை: சினேகிதர் முதலியோரும் உடம்பிலிருந்த சிலகுறிப்புக்களைக்கண்டு துணியிலிருந்த வண்ணான் குறியைக்கண்டும் மஹாலிங்க நாடான் பிரேதம் எனக் கண்டு பிடித்தார்கள். டாக்டர் பிரேதபரிசோதனையில் அவன் தலை நசுக்கப்பட்டு, துண்டாகவெட்டப்பட்ட நிலைமையிலிருந்த தென்றும், அவன் அணிந்திருந்த 75-ரூபாய் பொறுமான காப்பை எடுத்துவிடப்பட்டிருந்ததுமன்றி, ஒரு கையை வெட்டப்பட்டும், மற்றொரு கையின் நான்கு விரல்களும் வெட்டப்பட்டிருந்த

தென்றும் கூறினர். கொலையுண்டவன் பந்துக்கள் கடைசியாக அவர் காணாமற்போன இராத்திரி தன் சிநேகிதனாகிய துரைசாமி கிராமணியோடு தான் போனான் எனக்கூற அதின் பேரில் போலீசார் துரைசாமி கிராமணியைப் பிடித்து விசாரித்ததின்பேரில் தன் குற்றத்தையும் ஒத்துக்கொண்டு இக்கொலையில் முனுசாமி செட்டி என்பவனும் கலந்திருந்ததாகக் கூற ஓர் வாரத்திற்குள் அவனும் பிடிக்கப்பட்டான். காப்பின் பொன் தகடு முதலானவைகளும் அகப்பட்டது. இந்தக் கேசின் குற்றவாளிகளாகிய துரைசாமி கிராமணியும், முனிசாமி செட்டியும், போலீஸ் கோர்ட்டில் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டார்களெனினும் செஷனில் தாங்கள் குற்றவாளிகள் அல்லவென பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பாரன் மூல்யமாய் வாதித்தார்கள்.

இக்கேசில் சம்பந்தப்பட்ட சில சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள். அன்று பொழுதாய் விட்டபடியால் இக்கேஸ் மறுநாளாகிய நான்காநாள் வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டு மற்ற சாக்ஷிகளும் விசாரிக்கப்பட்டார்கள்.

தீர்ப்பு:—குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

VIII.

கேடியாரம் திருடின கேஸ்.

குற்றவாளி :—முன்னுசாமி என்கிற ராமசாமி.

குற்றம் :—திருட்டுக் குற்றம்.

கேசின் விபரம் :—சென்ற செப்டம்பர்மீ 27வ குற்றவாளி சென்னபட்டணம் மூர் மார்க்கட்டில் லக்ஷ்மிபதி நாயுடு என்பவர் தம்முடைய கோட் சட்டையில் போட்டுக்கொண்டிருந்த கைகெடியாரத்தைத் திருடிக்கொண்டு ஓட்டம்பிடித்தான். இவர் உடனே போலிசாருக்கு அறிவிக்க போலிசார் குற்றவாளியை அரெஸ்ட் செய்தார்கள். இந்தக் கேசை முன் கேஸிலிருந்த ஜூரர்களே விசாரணை செய்து குற்றவாளி குற்றஞ் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—குற்றவாளி இதற்கு முன் தண்டனை அடைந்த பழைய குற்றவாளி யானபடியால் கோர்ட்டார் இவனுக்கு இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனை விதித்து ஜெயிலை விட்டுவந்த பிறகும் இவன் இரண்டு வருஷம் வரையில் தன்னுடைய போக்குவரத்துகளை போலிசாருக்கு எச்சரித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

IX.

பணப்பை திருடின கேஸ்.

குற்றவாளி:—ஜிலுப்பாக்கார முன்னுசாமி.

குற்றம்:—திருடின குற்றம்.

ஜூரர்கள்:—முன் கேஸிலிருந்த ஜூரர்கள்.

கேசின் விபரம்:—குற்றவாளி பலமுறை ஜெயிலுக்குப்போய் வந்தவன். கடந்த செப்டம்பர்மீ 5வ மாலையில் சாலே முகம்மது சயத் என்பவர் தம்முடைய சட்டை ஜேபியில் ஐந்து ரூபாய் கரன்சி நோட்டுகள் இரண்டும், ரொக்கம் ரூ. 2-ம் அடங்கிய (Money Purse) என்று சொல்லும்படியான பணப்பை வைத்துக்கொண்டு சென்னபட்டணம் மூர் மார்கட்டில் போய்க்கொண்டிருக்கும்போது குற்றவாளி இந்தப் பையைத் திருடிக்கொண்டு ஓட்டம் பிடிக்கையில் போலிசாரால் அரஸ்ட் செய்யப்பட்டான்.

ஜூரர்கள் :—குற்றவாளி குற்றம் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதுமன்றி ஜெயிலைவிட்டுவந்த பிறகு இரண்டு வருஷம் வரையில் அவனுடைய இருப்பிடங்களைத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது.

X.

பெட்டி திருடின கேஸ்.

குற்றவாளி:—காஜர் உசேன்.

குற்றம்.—திருடின குற்றம்.

கேசின் விபரம்:—குற்றவாளி பலமுறை ஜெயிலுக்குப்போய் வந்தவன். சென்ற ஆகஸ்ட்மீ 11வ முருகனுக்குச்சொந்தமான ரூ. 30-விலையுள்ள ஒரு பெட்டியைக் குதிரை லாயத்திலிருந்து திருடிவிட்டான்.

ஜூரர்கள்:—குற்றவாளி குற்றம் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு —இவனுக்கு நான்குவருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதுமன்றி ஜெயிலை விட்டு வந்த பிறகு இரண்டு வருஷம் வரையில் இவனுடைய இருப்பிடங்களைப்போலிசாருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

N. B. இந்தக்கேஸ் முடிந்தவுடன் தப்பான சமாசாரம் சொல்லி எமாற்றின குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்ட பலவேசம் பிள்ளையும், சார்லஸ் லால்லசும் விசாரணைக்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். இந்தக்கேசிற்கு "லேடிஸ் இன்டீரியல்ஸ்" என்று பெயர். இது இரண்டு தினங்களாய் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. விசாரணை முடிவடைய இன்னும் சில தினங்கள் செல்லும். இந்த கேசும் இதற்குப் பின் நடக்கும் கேசுகளும் அடுத்த மாத கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்படும்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்தசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 1. சென்னபட்டணம், 1906ஸு டிசம்பர்மீ 5. பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம் :—மிஸ்டர் எர்ட்லி நார்டன், (பாரிஸ்டர்)	...
2.	இந்தியா தேச நீதிபரிபாலனம்.	179
3.	தேசவர்த்தமானம்.	180
4.	இந்தியன் லாரிப்போர்ட் கேசுகள்	183
5.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	191
6.	சிவில் ப்ரோஸீஜர் மசோதா ஆக்ட்டின் கண்டனம்.	203
7.	சென்னபட்டண ஹைகோர்ட் 4-வது கிரிமினல் செஷன்ஸின் தொடர்ச்சி	206
8.	இந்துலா:—விவாகம்.	208
9.	கவர்ன்மெண்ட் ஆர்டர்கள்.	209

Opinions of the Press on the Indian Law Gazette

The "Madras Mail," dated 10th September 1906:—"*The Indian Law Gazette*."—We have received the first number of a new Tamil monthly, entitled the *Indian Law Gazette*, edited by Mr. M. A. Loganathan, and published by Messrs. N. Ratha Krishna & Co. The new venture is intended to spread amongst the people of South India a knowledge of the laws which are applicable to the protection of their person and property. The Editor deplores that, through ignorance of law, Hindus waste their money in carrying on litigation to the ruin of their family, and that to avert such disastrous consequences, a knowledge of the general laws of the land are essential to them. The first number appropriately opens with an illustrated life sketch of the Hon'ble Sir S. Subramania Iyer, *Kt.*, C.I.E., "one of the foremost Indian Lawyers, and an eminent Indian Judge, who is held in the highest esteem by his countrymen.', There are, besides, reports of miscellaneous law cases, important rulings, Government Orders, etc., and a translation of the Motor Car Bill. The *Indian Law Gazette* will do a great service to the rural population if it will systematically translate and publish from time to time Government Orders, Proceedings of the Board of Revenue and other departments relating to Agriculcural and Revenue matters generally. Through ignorance of these very necessary matters, the ryot population are often swindled by unsrcupulous Village Officials and lower subordinate Revenue employees.

The "Hindu" dated 11th September 1906:—The "*Indian Law Gazette*," is the title of a new legal journal in Tamil, the first part of which we have just received. We believe this is the first time that a legal journal is published in any of our Vernacular languages: this, the Editor says, is intended to educate in law the ignorant man in the streets who blunders often not knowing what the law of the land is. We trust that this new enterprise in legal journalism will supply a real want, and we wish the journal every success Editor: Mr. M. A. Loganathan: Publishers, N. Ratha Krishna & Co., Madras.

The "Madras Times," dated 11th September 1906:—We have received the first number of a new Tamil monthly, called the "*Indian Law Gazette*." Mr. M. A. Loganathan is its Editor, the publishers being Messrs. N. Rathakrishna & Co. The Magazine deals solely in legal topics and is intended to spread amongst the people of South India a knowledge of the law applicable to the protection of their person and property. The first number appropriately opens with an illustrated sketch of the life of the Hon'ble Sir S. Subramaniya Iyer, *Kt.*, C.I.E., who is most deservedly held in high esteem by his countrymen. Reports of Miscellaneous, Law Cases, Government Orders, etc., and a translation of the Motor Car Bill form the other reading matter in the magazine. We have no doubt that the "*Indian Law Gazette*" will be of great service to the rural population of this presidency, and we wish every succes to the new venture.

The "Swadesa Mithran," dated 13th September 1906, says:—A new monthly Tamil Magazine under the name of "*The Indian Law Gazette*" has been started in Madras. It has come out with the laudable object of spreading all matters relating to Law among Tamil masses who are unacquainted with English. Besides reporting the cases that are tried by the Courts of the Madras Presidency, reports of cases that are tried by Courts in other parts of India, will be published by this Law Journal This will prove very useful to all persons who have something to do with Law. In the first Journal that has been sent us is placed a handsome protrait of Justice Sir S. Subramania Aiyar. Kt. C.I.E. We heartily wish success to this undertaking.

இந்திய சட்ட கெஜெட்.

மானேஜர் விளம்பரம்.

ரூ 10 ரொக்கம் கொடுக்கப்படும்.

எல்லோரும் தயவுசெய்து இதை வாசிக்கவேண்டும்.

உலகத்தில் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் சட்ட ஞானத்தை அவசியம் பெற்றிருக்க வேண்டும். அதிலும் பொழுது விடிந்தால் அந்திபட்டால் ஜன க்ஷேமத்தை நாடி சட்டங்களைப் பிறப்பிக்கும் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரஜைகள் சட்ட ஞானமுடைத்தாயிருக்கவேண்டுவது அவசியத்திலும் அவசியமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சட்ட ஞானமும் விவகார ஞானமுமில்லாக் குறையால் நம் தேசஜனங்கள் படும் கஷ்டத்தையும் அவஸ்தையையும் கையிலிருந்த பொருள்களைக் கோர்ட்டுச் செலவு செய்து காலக்ஷேபத்திற்குக்கூட வழியின்றிக் கஷ்டப்பட்டு வருவதையும் நாம் கண்கூடாய்ப் பார்த்துவருகின்றோம். நம் தேச ஜனங்களுக்குச் சட்ட ஞானத்தைப்போதித்து விவகார ஞானத்தை உண்டுபண்ணி சட்ட ஞானக்குறைவால் இப்போது விளைந்துவரும் தீமைகளையெல்லாம் அகற்றி தேசத்திற்கு அத்தியாவசியகமான நன்மையைப் பயக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கும் இந்த இந்திய சட்ட கெஜெட்டை மதிராஸ் மெயில், டைம்ஸ், ஸ்டாண்டர்ட், சுதேசமித்திரன் முதலிய முக்கியமான பத்திரிகைகள் இது தேசத்திற்கு முக்கியமானதென்றும், மிகுந்த நன்மையைப் பயக்கக் கூடியதென்றும் புகழ்ந்து பேசி இது நீடூழிகாலம் நிலைபெற்று நடைபெறவேண்டுமென்று ஆசீர்வதித்திருப்பதுமன்றி, நாம் மரியாதை காட்டும்பொருட்டு இவ்விந்திய சட்ட கெஜெட்டின் பிரதிகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுக்கும், வக்கீல்களுக்கும் ஏனைய கன தனவான்களுக்கும் அனுப்பினோம். அவர்கள் அதைமுற்றும் வாசித்துச் சந்தோஷித்தவர்களாய் அதன் அருமைக்கேற்றபடி தகுந்த நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி இந்திய சட்ட கெஜெட்டை ஆசீர்வதித்து நம்மையும் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். அன்றி, பெருமை தங்கிய நமது கவர்ன்மெண்டாரும் இவ்விந்திய சட்டகெஜட்டின் விஷயப் பொலிவைக்கண்டு, இங்கிலீஷ் பயிற்சியில்லாத பிரஜைகளுக்கு மிகப் பிரயோஜனகரமான ஜர்னலென்றும், இதனை மும்மரமாய் நடத்தும்படியும் கூறி, நமக்கு மிக்க ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும்விளைவித்தார்கள். ஆகவே இந்த இந்திய சட்ட கெஜெட்டு தேசத்திற்கு மிக அவசியமான நன்மையைப் பயக்கக் கூடியதாயிருப்பதால் இதன் அபிவிர்த்தியில் கண்ணோட்டமாயிருந்து ஒவ்வொருவரும் பரோபகார சிந்தையுடன் இதை விர்த்தி செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டியதைத் தங்களுடைய கடமையாக நினைக்கவேண்டும். சட்ட ஞானக் குறைவால் உண்டாகிவரும் தீமைகளை அகற்றி லோகோபகாரத்தைச் செய்துவரும் இந்த இந்திய சட்ட கெஜெட் நாமுள்ள காலத்திலும் நமக்குப் பிற்காலத்திலும் தடையின்றி நடந்துவரும்படியாக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்திருப்பதுமன்றி நம்முடைய தேச சிற்றரசர்கள் ஜமீந்தார்கள் முதலிய தனாட்டிகர்களின் பேருதவியையும் உதாரத்துவத்தையும் பெற்று இதற்கு ஒரு சாஸ்வதமான நிதியும் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இது நிற்க, இந்த கெஜெட்டு ஜனங்களுக்கு இன்னும் மிக உபயோகமாயிருக்கும்பொருட்டு இதில் விசேஷமான சமாசாரங்களையும் கேசுகளையும் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது. அப்படிச் சேர்ப்பதென்றால் அதிகச் செலவு பிடிக்கும். கெஜெட்டின் சந்தாவை இன்னும் உயர்த்துதல் சாத்தியமாயில்லை. ஆகையால் இன்னும் சில சந்தாதாரர்களைச் சேர்த்துவிடவேண்டுமென்று இப்போது பிரயத்தனஞ் செய்துகொண்டு வருகின்றோம். இந்த இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்து வரும் கனவான்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் நமக்கு உதவிசெய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றோம். இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடும் செய்திருக்கிறோம். அதாவது, **25** கையொப்பங்கள் சேர்த்து அனுப்புகிறவருக்கு ரூ. **10** ரொக்கம் அனுப்பத்தயாராயிருக்கிறோம். 25 கையொப்பக்காரர்களும் பணம் செலுத்தினவுடன் ரூ. 10 மணி ஆர்டர் செய்து அனுப்பப்படும். மேற்சொன்னவாறு கையொப்பங்கள் சேகரித்துக்கொடுக்க முன் வரும் கன தனவான்கள் நமக்கு எழுதிக்கொண்டால், நாம் அச்சிட்டுள்ள விளம்பரங்களும் விண்ணப்பக் கார்டுகளும் அனுப்புகிறோம். விண்ணப்பக் கார்டுகளில் கையொப்பம் வாங்கி தபால் ஸ்டாம்பு ஒட்டாமல் தபாலில் போட்டுவிடலாம். ஆகவே நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்துவரும் கனவான்களும், ஏனையோரும் இது விஷயத்தில் தங்களால் இயன்றளவு உதவி புரியவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,

மானேஜர்கள்,

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,

சென்னை, சாவுகார்பேட் போஸ்ட்.

ABBREVIATIONS USED IN THE GAZETTE.

இந்த கெஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta.
All.	=	Allahabad.
Bom.	=	Bombay.
Mad.	=	Madras.
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
I. A.	=	Indian Appeals.
M. A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகபாத்
பம்.		பம்பாய்
மத / சென்	}	சென்னப்பட்டணம்
சி. பு. கோ.		சிவில் புரொசீஜர்கோடு
கி. பு. கோ.		கிரிமினல் புரொசீஜர் கோடு.
இ. அ.		இந்தியன் அப்பீல்ஸ்.
மு. இ. அ.		மூர் இந்தியன் அப்பீல்ஸ்.

விஞ்ஞாபனம்.

சந்தாதாரர்கள் மிக முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

இந்திய சட்ட கெஜெட் 1906௵ மத்தியில் ஆகஸ்டு௴த்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறபடியால், அது முதல் டிசம்பர்௴ கெஜெட்டுடன் இந்திய சட்ட கெஜெட்டை முதல்வால்யமாகச் செய்திருக்கிறோம். ஏனெனில், கவர்ன்மெண்டாரால் பிரசுரஞ் செய்யப்படும், இந்தியன்லா ரிப்போர்ட்ஸ்கள் ஜனவரி முதல் மறு ஜனவரி வரையில் பிரசுரமான ரிப்போர்ட்ஸ்கள் ஒரு வால்யமாகக் கணக்கு செய்யப்பட்டுவருகிறது. அதுபோல் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டும் வருஷத்திற்கு ஒரு வால்யமா யிருக்க வேண்டுமென்கிற கருத்துடன் ஆகஸ்ட் முதல் இது வரையில் பிரசுரமான கெஜெட்டை முதல் வால்யமாகச் செய்திருக்கிறோம்.

1. சென்ற மாத கெஜெட்டில் மலேப்பிராந்திய முனிசிபாலிட்டி மசோதா ஆக்ட்டுகளைப் பிரசுரிக்கும் பொருட்டு 20-பக்கங்கள் அதிகமாய்ச சேர்த்திருந்தமையால், இம்மாத கெஜெட்டை 32 பக்கங்களுடன் பிரசுரித்திருக்கின்றோம்.

2. அடுத்த கெஜெட்டு முதல் இப்போது பிரசுரஞ் செய்யப்பட்டுவரும் சமாசாரங்களுடன் இன்னும் சில விசேஷ சட்ட சமாசாரங்கள் பிரசுரித்து வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மிஸ்டர் எர்ட்லி நார்டன்.

இம்மாத கெஜெட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உருவம், மிஸ்டர் எர்ட்லி நார்டன் துரையவர்களுடைய படமாகும். இவர் அநேக வருஷகாலம் சென்னபட்டணம் ஹைகோர்டில் பாரிஸ்டராயிருந்து வருகின்றார். இவர் வாக் சாதுர்யமுடையவரென்றும், சாக்ஷிகளைக் குறுத்துக் கேள்விகள்கேட்டு உண்மையை வெளிப்படுத்துவதில் அபார சக்தியுடையரென்றும் எங்கும் புகழ்பெற்றிருப்பதால், "நார்டன்" என்கிற சொல்லுக்கே, நம் நாட்டினர், வாசாமகோசரமாய்ப் பேசுகிறவரென்று பொருள்கொள்கின்றனர். இவர் அங்கிலேயரேயாயினும், இந்துக்கள்மீது மிக்க அன்புடையவர். இவர்தம்மை நேரிற் காணாதர்கள் அநேகரிருக்கக்கூடுமேனும், இவருடையகியாதியைப்பற்றிக் கேளாதவர் ஒருவருமிரார். பாரிஸ்டர் துரையவர்கள் மிக்க சம்பாத்தியமுடையவர். சென்னை ராஜதானியில் தொழில் நடத்துவதைப்பார்க்கிலும், கல்கத்தாவில் நடத்துவது லாபகரமாயிருக்கிறதென்றும், அதிக சிரமமில்லாதிருக்கிறதென்றும் எண்ணி, கடந்த இரண்டு மாதகாலமாகக் கல்கத்தா நகரி லமர்ந்து தொழில் நடாத்தி வருகின்றார்.

EARDLEY NORTON, Esq., BAR.-AT-LAW.
மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன், பாரிஸ்டர்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 1.] சென்னபட்டணம், 1906௵ டிசம்பர்௴ [பாகம். 5.

ADMINISTRATION OF CIVIL JUSTICE IN INDIA.

இந்தியா தேசத்து நீதி பரிபாலனம்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவில் நீதி பரிபாலனத்தின்பொருட்டு நல்ல சட்டங்களை ஏற்படுத்தியும், நீதிஸ்தலங்களாகிய பற்பல கோர்ட்டுகளை நிர்மாணம் செய்தும், தக்க படிப்பாளிகளை ஜட்ஜிகளாக நியமித்தும், ஜனங்களுடைய பொருள் ஸ்வாதந்தரங்களையும் உரிமைகளையும் காத்து ஜனசமூக க்ஷேமத்தை நாடிவருகிறார்கள். இப்படிச்செய்துவந்தபடியாற்றான் இராஜாங்கத்தாருக்கு இந்த விஷயத்தில் மகத்தான கீர்த்திகிடைத்திருக்கிறது. ஆனால் இப்பொழுது சில வருஷ காலங்களாக அரசாங்கத்தை வகித்து அமுல் நடத்தும் பெரியோர்கள் செய்யும் சில நிர்ப்பந்தங்களால், நமதுநாட்டில் முனிசீபுகள் தக்கபடி விவகாரங்களை விசாரித்து நீதியான தீர்மானங்களைச் செய்ய தகுந்த அவகாசமில்லாமல் கடபுடலாய் விசாரித்துக்கேசுகளைச் சீக்கிரம் முடிக்கவேணுமென்னும் கேவலக்கியானத்துடனே இருக்கிறார்களேயல்லாது, கக்ஷிக்காரர்களுக்கு நியாயம் கிடைக்கவேணுமென்னும் எண்ணம் அவர்கட்கு லவலேசமும் கிடையாது. ஆகையாற்றான் இப்பொழுது கொஞ்சகாலங்களாக நீதிபரிபாலனத்தில் ஜனங்களுக்கிருந்த நம்பிக்கை நீங்கி அவநம்பிக்கை மேலிட்டு வந்து கொண்டிருக்கின்றது. இது இப்படியிருக்க, இக்குறையைநீக்கி ஜனங்களின் க்ஷேமத்தை நாடாமல் இனியும் அதிக அதிருப்தி விளைவிக்கக்கூடிய சட்டங்களைச் சில விஷயங்களில் பிரேரேபிக்கத் துணிந்திருப்பது நமது துற்பாக்கியமே. இங்கே சொல்லும் விஷயம், இப்பொழுது மசோதாவாய்ப் பிரசுரம் செய்திருக்கும் 'சிவில் ப்ரோஸீஜர்பில்'லைப் பார்த்தால் நாம் [illegible] சங்கதி நன்கு விளங்கும். விவகாரங்களை அதிசீக்கிரத்தில் முடிக்கும் எண்ணத்துடனேயே சம்மன் பிறப்பித்து கட்சிக்காரர்களுக்குச் சேர்ப்பிக்கும் விஷயத்திலும், கட்சிக்காரர்கள் கோர்ட்டில் ஆஜராகப் பிரேரேபித்திருக்கும் நூதன நிர்ப்பந்தங்களாலும், கோர்ட்டார் சாட்சிகளின் வாக்குமூலத்தை சவிஸ்தாரமாய் ரிகார்டுசெய்து கொள்வதற்குப் பதிலாக சாராம்சத்தை மாத்திரம் எழுதிக்கொண்டால் போதுமெனக் கொண்டிருக்கும் கொள்கைகளாலும், கடன்காரர்களை அடியோடு நசிப்பிக்கத்தக்க மற்ற ஏற்பாடுகளினாலும், இன்னும் சில சட்ட நிபந்தனைகளாலும், மசோதா மிகப்பெரியதா யிருப்பதாலும், அதில் கண்டிருக்கும் விஷயங்கள் பலவகையாயிருப்பதாலும் சட்டந்தெரிந்த வக்கீல்களில் அனேகர் இன்னும் படிக்காதிருப்பதாலும் உண்டாகும் கெடுதியைக்குறித்துப் பத்திரிகைகள் வெளிப்படையா யெடுத்துக் கூற அஞ்சுகின்றனவெனக் காண்கிறது.

சென்னை மாகாணத்தை மட்டும் பார்க்குமளவில் சென்ற முப்பது வருஷங்களுக்குள் நீதி பரிபாலனத்தில் உண்டாயிருக்கும் பேதத்தினால் ஜனங்களுடைய கஷ்டமும் அதிருப்தியும் எவ்வளவென்றறியலாம். 1880-ம் வருஷம் முதல் நாளதுவரை வருஷா வருஷம் கவர்ன்மெண்டார் பிரசுரிக்கும் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்டிலிருந்து நாம் சில சங்கதிகளைப் பார்ப்போம். 1880-வது ௵ ரிபோர்ட்டில், அதற்கு முந்திய பத்து வருஷ வியாச்சிய தாமாஷா, வருஷம் ஒன்றுக்கு சுமார் 66,561-அசல் வியாச்சியங்கள் என்றும், 78762-சிறு வழக்குகளென்றும் ஆகமொத்தம் 1,45,323-வழக்குகள் கோர்ட்டுகளில் தாக்கலாய் வந்ததென்றும் கோர்ட்டொன்றுக்குசுமார் 600-அசல் 700-சிறுவழக்குகள் வருட தாக்கலென்றும் தெரியவருகிறது. நாளுக்கு நாள்வழக்குகள் அதிகரிக்க, அதற்குத்தக்கபடி

உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், பிரஸ்தாபக் கொலை நடந்திருக்கமாட்டாது. அடிக்கடி இந்நகரில் இப்படிக் கொலைகள் நடப்பதால் கொலையாளிகள் நகர் போலீசாரின் திறமையைப்பற்றி நகைத்துப் பரிசாசம் செய்து தங்கள் திறமையைக் காட்டிவருகின்றார்கள்போலும்!

கொலைக்கேஸ்.

'இராவணன் அழிந்ததும் பெண்ணாலே. துரியோதனன் படைமாண்டதும் பெண்ணாலே' அன்றோ? அழிவுக்கு அஸ்திவாரம்பெண்களே என்பது நிச்சயம். ஒருபிச்சைக்கார பைராகியின் குடும்பத்துக்கு அவனுடைய மனைவியால் அழிவுண்டாயிருக்கிறது. தம்பதி சமேதரான இரு பைராகி பிச்சைக்காரர்கள் வடதேசத்திற்குப் போகும்வழியில்கடந்த இரண்டுமாதகாலமாய் சென்னை சாவுகார்பேட்டை மடத்தில் வசித்துக்கொண்டு வந்தார்கள். பைராகியின் மனைவிக்கு 20-வயதிருக்கும். இவள் கடந்த சில தினங்களாகப் பிச்சையெடுக்கப் போனவள் இரவில் நாழிசென்று வரத்தலைப்பட்டாள். புருஷ பைராகி தன் மனைவியைக் கண்டித்துக்கொண்டுவந்தான். அப்படியிருந்தும் இரவில் அகாலத்திலேயே வந்துகொண்டிருந்தாள். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அவள் இரவில் நாழிசென்று வந்தபோது கணவன் அவளுடன் வம்புவளர்த்தி அவளைக் கல்லால் அடித்து உயிர்மாய்த்துவிட்டான். சூப்பிரண்டு மிஸ்டர் இச்சார்ச்சு சட்டப்படி பிரேதபரிசோதனை செய்து பிரேதத்தைப் பைசல் செய்தார். புருஷன் அரஸ்ட் செய்யப்பட்டு டாணாவில் வைக்கப்பட்டிருக்கிறான்.

விபத்து.

கொளம்பில் ஓர் கட்டடவேலையில் இரும்பு வாரவட்டைகள் தூக்கும்போது 9-கூலிகள் தப்பிக்கீழே விழுந்து அதிகாயமடைந்தார்கள். அதில் மூன்று பேர் மிகவும் அபாயகரமான ஸ்திதியிலிருந்துகொண்டிருக்கிறார்கள். எல்லோரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு சிகிச்சையிலிருந்துவருகிறார்கள்.

மழைத்துளியோடு சிறிய மீன்களும் விழுந்தனவாம்.

சென்ற சனிக்கிழமைக்கு முன் சனிக்கிழமை மாத்தளை யென்னும் பதியில் மழை உரத்துப்பெய்தபோது ஒருவீட்டுக் கம்பவுண்டுக்குள் மழைத்துளியோடு சிறிய மீன்களும் விழுந்ததாக ஒருவர் சென்ற 14-தேதி வெளிப்பட்ட சிலோன் டைம்ஸ் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

ஓர் விசேஷ அகராதி.

பாரிஸ் நகரத்துச் சாஸ்திரக் கல்லூரியில் அனேக வித்தியாபாரகர்கள் ஒரு புதிய அகராதிப்புத்தகம் கோர்வை செய்கிறார்கள். அப்புத்தகத்தின் சி. என்ற ஒரு பாகம் 1877-ம்ஹு துவக்கப்பட்டு இந்த மாதந்தான் முடிவாகி யிருக்கின்றதாம். அவ்வகராதியின் முழுப்பாகமும் முடிவாகிறதற்கு 250-வருஷம் பிடிக்குமாம்.

கிணறு தோண்டும் ஏற்பாடு.

செங்கற்பட்டு ஜில்லாவில் மாதிரிக் கிணறுகள் தோண்டிக் காண்பிக்கும்படியாக கவர்ன்மெண்டார் ஒரு ஏற்பாடு செய்து இந்தக் கிணறு வேலைகளை நடத்தும்படி ஒரு டிப்டி கலெக்டரை நியமித்தார்கள். அவர் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கும் ரிபோர்ட்டில் இந்தவேலைகள் விர்த்தி அடைந்து வருகிறதென்றும் இந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டு கிருஷிகள் தங்களுடைய நிலங்களில் கிணறுகள் தோண்டிவருகிறார்களென்றும் ஏற்கனவே யிருக்கும் கிணறுகளைப் புதுப்பித்து வருகிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

யுத்தக்கப்பலில் செலவாகும் சுத்தஜலம்

பாரிய யுத்தக் கப்பல்களில் நாளொன்றுக்குச் சராசரி 8000-ம் பலம் சுத்தஜலம் செலவாகின்றனவாம். ஏதாவது ஒரு விபத்தினால் சுத்த ஜலம் தட்டிப்போகிறதாயிருந்தால் கடல் நீரைச் சுத்தஜலமாக்கும் பொருட்டு, கடல் நீரை ஆவியாகப் பரிணமிக்கச்செய்து சுத்தஜலமாக்கும் இயந்திரம் ஒவ்வொரு கப்பலிலும் வைக்கப்பட்டிருக்கின்றதாம்.

பிளேக் நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை.

இம்மாதம் 1-தேதிமுதல் 8-தேதிவரையில் 7765-பேருக்கிவ்வியாதி கண்டு அதில் 6098-பேருக்கு மரணம் நேர்ந்தது. அதன் விவரம் பம்பாய் மாகாணத்தில் 1716, சென்னை மாகாணத்தில் 7, பங்காள மாகாணத்தில் 349, ஐக்கியமாகாணத்தில் 1466, பஞ்சாப் 1697, பர்மாவில் 126, மைசூரில் 116, மத்திய இந்தியாவில் 288, ராஜ புதனத்தில் 2, காஷ்மீரத்தில் 23, வடமேற்கு மாகாணத்தில் 1.

கலிகால அரக்கர்கள்.

இம்மாதம் 5உ பெஷாவாருக் கருகிலுள்ள பதாபர் என்னும் ஊரில் சிலகொள்ளைக்காரர்கள் ஒரு பெருங் கூட்டமாய் வந்து பட்டாளத்தாரை எதிர்த்து 7-ஆட்களையும் சில சிப்பாய்களையும் சில ஒட்டகங்களையும் குதிரைகளையும் ஆடுமாடுகளையும் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். திரும்பவும் அதேமாதிரி இம்மாதம் 15உ வந்து பாபிபோசாரை எதிர்த்து அங்கிருந்த 5 துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்களாம்.

பினங்கில் பழக்கப்படாத ஓர் யானையால் நேர்ந்த கஷ்டம்.

சென்ற மாதக்கடைசியில் பினங்கு துறைமுகத்தில் கப்பலேற்றிக்கொண்டுவந்த நன்றாய்ப் பழக்கப்படாத ஓர் யானை சங்கிலியையறுத்துக்கொண்டு பட்டணத்துக்குள் நுழைந்து எதிர்ப்பட்ட மிருகங்களையும் மனிதரையும் கொன்றும் மிதித்துந் துன்பப்படுத்தியும் மெஸ் காமேதோர் என்பவருடையவீட்டுக்குள் புகுந்தும் அங் குமாட்டியிருந்த பெரிய நிலைக்கண்ணாடியையும் மேசைநாற்காலி தட்டு முட்டுச் சாமான்களையும் உடைத்துச் சின்னாபின்னப் படுத்திவிட்டதாம்.

CASES FROM THE INDIAN LAW REPORTS

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

முன் கடன் பத்திரத்தின் பாக்கித் தொகையைக் கொடுப்பதாகப் பின்னால் பிறந்த பத்திரத்தில் வாக்குத்தத்தஞ் செய்வது, முன் கடன் பத்திரம் ரத்து செய்யப்படாம லிருக்கும்பொழுது நூதன பாத்தியம் உண்டுபண்ணாது.

வெங்கடராமய்யபந்துலு—வாதி (அப்பீல்வாதி).

ராமகிருஷ்ண பந்துலு—பிரதிவாதி (அப்பீல்பிரதிவாதி).

வியாச்சிய சங்கிரகம்.

1895ஹு நவம்பர்மீ 28உ பிரதிவாதி, வாதியிடம் 12500-ரூ. கடன்வாங்கி 100-க்கு மீ ஒன்றுக்கு ஒரு வட்டி கொடுப்பதென்று வாதிக்கு ஒரு அண்டிமாண்டு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார். 1898ஹு ஜூலைமீ 2உ பிரதிவாதி கணக்குத்தீர்த்து ரூ. 16465-12-0-க்கு ஒரு ரிஜிஸ்டர் செய்த பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்தார்.

அப்பத்திரத்தின் முக்கியபாகம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"ஷை டிக்கிரியை உமக்கு இதன் மூலமாக மேடோர் செய்தேன். இந்த டிக்கிரிக்குக் கட்டுப்பட்ட பிரதிவாதிகளின்மேலும் கட்டுப்பட்ட சொத்தின்மேலும் எனக்கு டிக்கிரியினால் உண்டாகிய சகல பாத்தியத்தையும் உமக்குக் கையளித்துவிட்டேன். அந்த டிக்கிரியை நிறைவேற்றுவதி லெனக்குண்டாகிய சகல அதிகாரத்தையும் நீரே கையாடி, வரவேண்டிய தொகையை வசூல்பண்ணி செலவுபோக பாக்கியை என்னால் 1895ஹு நவம்பர்மீ 28உ எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டினால் மாசம் ஒன்றுக்கு 100-க்கு ஒன்று வீதம் கூடிய வட்டியும் முதலும் ரூ. 16465-12-0. கொடுக்கவேண்டி யிருப்பதற்குச் செல்லுவைத்துக்கொள்ளுகிறது. இந்த டிக்கிரியினால் வசூலாகுந் தொகைபோகப் பாக்கித் தொகையை நான் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்."

1898ஹு ஜூலைமீ 2உ பிறந்த பத்திரத்தின்படி பாக்கித் தொகைக்காகப் பிரதிவாதி உடன்படிக்கை செய்துகொடுத்திருக்கிறதாக 1904ஹு ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜியிடம் வாதி தாவா செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—தாவா பிராமிசரி நோட்டு பின்னால் பிறந்த பத்திரத்தினால் ரத்து ஆகிவிட்டதா என்னுங் கேள்வியை யோசிக்கவேண்டும். பின் பத்திரத்தினால் பிராமிசரி நோட்டு தீர்ந்துபோகவில்லை யென்பது என்னுடைய அபிப்பிராயம்.

பின் பத்திரத்தில் சொல்லியிருக்கும் பிராமிசரி நோட்டு தீரவில்லை; ஆனால் அப்பத்திரத்தில் செலுத்திவிடுகிறேன் என்று சொல்லியிருக்கும் வசரத்தினால் பிராமிசரி நோட்டு ரத்தாகி நூதன உடன்படிக்கை ஏற்பட்டுப்போனதென்று கட்சி சொன்னார். இப்பத்திரத்தினால் உடன்படிக்கை யுண்டாகவில்லையென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். பிராமிசரி நோட்டின்படி செலுத்தவேண்டிய கடமையை ஒப்புக்கொண்டு டிக்கிரியினால் செல்லான தொகைபோக பாக்கித் தொகையைச் செலுத்திவிடுகிறதாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. செலுத்துகிறதாக விருக்கும் வாக்குத்தத்தத்தை யோசிக்கும்பொழுது இது மாத்திரம் ஒரு உடன்படிக்கை யாகிவிடாது. இதனால் வியாச்சியமூலமுண்டாகாது. ஒரு வாக்குத்தத்தத்தைத்தவிர வேறொன்றுமல்ல. காலாவதிக்குள்ளிருக்கும்பொழுது ஒரு கடனிருக்கிறதாக ஒப்புக்கொண்டதாகும். பிராமிசரி நோட்டைத் தீர்க்காமலும் நோட்டுப்படி உண்டாகிய பாத்தியத்தை வாதியை விட்டுவிடும்படியாகவுங் கேட்டுக்கொள்ளப்படாமலும் இருப்பதால் செலுத்திவிடுகிறதாக வாக்குத்தத்தஞ் செய்ததாகும். இது லிமிடேஷன் ஆக்டு 19-வது பிரிவினாலுண்டாகும் பலத்தை ஏற்படுத்துகிறது. (அதிலிருந்து மூன்று வருஷங்காலாவதி உண்டுபண்ணும்) இவ்வாக்குத்தத்தம் பிராமிசரி நோட்டை ரத்துசெய்து நூதன உடன்படிக்கை ஏற்படுத்தாது என்று கூறி வாதி பிராதைத் தள்ளிவிட்டார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டிலேயே அப்பீல்செய்தார்கள்.

அப்பீல்கோர்ட்டார் தீர்மானம்:—இந்த அப்பீலில் வாதியின் தாவா நிலைநிற்கக்கூடியதாவென்று கவனிக்கவேண்டும். 1895ஹு நவம்பர்மீ 28உ பிரதிவாதி, வாதிக்கு ஒரு பிராமிசரி நோட்டெழுதிக்கொடுத்தார். 1898ஹு ஜூலைமீ 2உ ஒரு மேடோர் பத்திரமும் எழுதிக்கொடுத்தார். பிராமிசரி நோட்டின்படி கொடுக்கவேண்டிய கடனைத் தீர்த்து வேறு நூதன உடன்படிக்கை இப்பத்திரத்தினாலுண்டானதாக இத்தாவா ஏற்பட்டது. பிராதில் இந்தப் பிராமிசரி நோட்டு ரத்து செய்யப் பட்டாவது பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டாவதிருப்பதாகச் சொல்லவில்லை. அந்தப் பிராமிசரி நோட்டு ரத்து செய்யப்படாமல் வாதியிடமிருப்பதாகப் பகிரங்கமாகச்சொல்லப்பட்டபொழுது இதற்கு எதிர் வாத மொருவருஞ் சொல்லவில்லை. அப்பீல் கிரௌண்டிலும் இதனைப்பற்றிக் குறிப்பிடவுமில்லை. கட்சி பேசும்பொழுது பிராமிசரி நோட்டைப் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டதாக வாதி சொன்னதாய் வாதி வைக்கீல் சொன்னார். பிராமிசரி நோட்டைக் கொடுக்கவில்லை யென்றே நாம் நடத்தவேண்டியது. பிராமிசரி நோட்டின்படி கட்டுப்பட்ட கடமை நீங்கி நூதன உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறதா என்கிற சங்கையைப்பற்றி யோசிக்கவேண்டும்.

இதற்கொற்றுமையான வேறொரு கேசில் நடந்த தீர்மானம் இதற்கு ஆதாரமாகிறது. ஆனால் அந்தக் கேசில் அதன் வாதி ஆதாரமாகக் கொண்ட தஸ்தாவேஜி பணம் செலுத்தின அன்றையத்தினமே எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கேசில் சில வருஷங்களுக்குப்பிறகு எழுதிக்கொடுக்கப்பட்டது. இவ்விரண்டு கேசுகளிலும் இந்த ஒரே வித்தியாசந்தான். இவ்வித்தியாசம் இந்தக் கேசிலுண்டான சங்கையைப் பாதிக்காது. இப்பொழுது இதற்கு மேற்கோளாக எடுத்துக்கொண்ட கேசை அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பை மாற்றித் தீர்ப்பு சொல்லும்பொழுது பின்வருமாறு அபிப்பிராயப்பட்டார்கள் :—செக்கியூரிட்டியை விற்று வசூலான தொகையை ஈடு செய்துகொண்ட பிறகு பாக்கியாகுந் தொகையைக் கேசின் பிரதிவாதி செலுத்தி விடுவதாக எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜிலுள்ள நிபந்தனை, வாதி தொகைக்காகப் பிராது செய்கிறதில்லையென்று ஒப்புக்கொண்டதாக அர்த்தமாகாது. ஆகையால் வாதிக்குத் தனிப் பாத்தியத்தை யுண்டாக்காது. பணஞ் செலுத்தின தேதியிலிருந்து (அதாவது சொல்லிவந்த தஸ்தாவேஜி பிறந்ததேதியிலிருந்து) காலாவதி கெடுவுக்குள் வியாச்சியஞ் செய்யாததால் வாதிக்குப் பாத்தியம் தடைபட்டதென்று தீர்ப்பு செய்தார்கள்.

இப்பொழுது விசாரணையாகு மிந்தக் கேசிலும் பிராது செய்ய பிராமிசரி நோட்டினுலுண்டான ஒரே பாத்தியந்தானிருக்கிறது. மேடோர் பத்திரத்திலெழுதியிருக்கும் டிக்கிரிக் கடனைக் கொடுப்பதாக அதில் சொல்லியிருப்பது பிராமிசரி நோட்டினுலுண்டான பாத்தியத்தைப் பாதித்து நூதன பாத்தியத்தையுண்டு பண்ணுது. நோட்டின்படி ஏற்பட்டிருக்குங் காலாவதிக்குப் பிறகு தாவா செய்திருப்பதாலும் லிமிட்டேஷன் ஆக்டு 19-வது பிரிவின் நிலத்தை மேடோர் பத்திரத்தின் ஷரத்து கொடுப்பதாலும் வியாச்சியத்தைத் தள்ளின ஜட்ஜியின் தீர்ப்பு நியாயமென்று நாங்கள் தீர்மானிக்கிறோம். இவ்வபிப்பிராயத்தினுல் பிரதிவாதி கேட்டுக்கொண்ட கிராஸ் பாத்தியத்தை விசாரிக்கவேண்டியதில்லை. செலவு தொகையுடன் அப்பீலைத் தள்ளிவிட்டோமென்று தீர்மானஞ் சொன்னுர்கள்.

ரூலிங்ஸ் .—பிரதிவாதி ஒரு பிராமிசரி நோட்டெழுதிக்கொடுத்து கொஞ்சகாலத்திற்குப் பிறகு ஒரு டிக்கிரியை மேடோர் பண்ணி அதனுல் வசூலாகுந் தொகையைப் பிராமிசரி நோட்டின் கடனுக்கு ஈடு பண்ணி பாக்கியிருக்குந் தொகையைச் செலுத்திவிடுகிறேனென்று அந்த மேடோர் பத்திரத்தில் கண்டிருந்தது. ஆனால் அசல் பிராமிசரி நோட்டு பிரதிவாதியிடம் கொடுக்கப்படாமலும் ரத்துசெய்யப் படாமலுமிருந்தது. பிராமிசரி நோட்டின் மூலமாகக் கிடைத்த ஒரே பாத்தியந்தான் வாதிக்கிருக்கிறதென்றும் பின்னுல் பிறந்த மேடோர் பத்திரம் வேறு பாத்தியத்தை யுண்டுபண்ணவில்லை யென்றும் பிராமிசரி நோட்டுக் குண்டாகிய காலாவதிக்குப் பிறகு வியாச்சியங் தொண்டுவந்திருப்பதால் அப்பிராது காலாவதியால் பாதிக்கப்பட்டதென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 205.

(Venkataramiah Pantulu v. Ramakrishna Puntulu I. L. R. 29. Madras. 205.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னுல்டு ஒயிட்டு
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

விரோதத்தின்மேல் அரெஸ்டு செய்ததற்கு மான நஷ்டம் எப்பொழுது தீர்ப்பு செய்யலாம்.

பத்ருடீன் சரயபு—வாதி (அப்பீல் பிரதிவாதி).

தாக்டி ஹஜி—பிரதிவாதி (அப்பீல் வாதி).

வியாச்சிய சங்கிரகம்.

1904ளு ஜனவரிமீ 6வ 40000-ரூபாய் முதலும் இதன் வட்டியும் செலவு தொகையையும் பிரதிவாதிக்கு வாதிகொடுக்கும்படியாக ஒரு டிக்கிரி ஏற்பட்டிருந்தது. ஜனவரிமீ 25வ வாதி அப்பீல் செய்யப்போகிறதாகவும் அதுவரையிலும் நிறைவேருமலிருக்கும்படியும் வாதிமனுசெய்துகொண்டார். அவ்வாறு ஏன் செய்யக்கூடாதென்றுகாரணஞ்சொல்லப் பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கும்படிக்கும் மூன்றுநாள் கெடுவில் டிக்கிரித் தொகையைக் கோர்ட்டில் செலுத்திவிடவேண்டுமென்றும் கோர்ட்டாரால் உத்தரவுசெய்யப்பட்டது. டிக்கிரித்தொகையும் வட்டியும் செலவும் வாதியால் கோர்ட்டில் செலுத்தப்பட்டது.

பிப்ரவரிமீ 11வ நிறைவேற்ருமல் நிறுத்திவைக்கும்படிச்செய்த உத்தரவை ரத்து செய்யவில்லை.

கோர்ட்டிலிருக்கும் தொகையைத் தன்னிடங் கொடுக்கும்படிப் பிரதிவாதி மனுசெய்தார். அத்தொகைக்கு ஜாமீன் கொடுக்கும் பட்சத்தில் பணத்தைப் பிரதிவாதியிடம் கொடுத்துவிடும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

மார்ச்சுமீ 5வ பிரதிவாதியின் சொலிசிடர்கள் வாதி வைக்கிலுக்குப் பின்வருமாறு நோட்டீஸ் கொடுத்தார்கள்.

" டிக்கிரியினுல் கிடைக்கவேண்டிய தொகையைக்கேட்டதற்கு உம்முடைய கட்சிக்காரர் தொகை கொடுக்காமலிருக்கும்படியாக வீண் ஆட்சேபனைசெய்து எங்களுடைய கட்சிக்காரர் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று கேட்டார். எங்களுடைய கட்சிக்காரர் ஜாமீன் கொடுத்துத் தொகையைப் பெற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லை. இப்பணத்தைப் பெற்றுக்கொள்ள உம்முடைய கட்சிக்காரருக்குப்போதுமான சாவகாசங் கொடுக்கிறோம். பிறகு டிக்கிரியை நிறைவேற்றுவோம்."

மார்ச்சுமீ 14வ நிறைவேற்று மனுவில் வாதியை வாரண்டில் அரெஸ்டுசெய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மார்ச்சுமீ 15வ வாரண்டு பிறந்து வாதி பிடிக்கப்பட்டார்.

இதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் விரோதத்தினுல் வாரண்டில் பிடித்ததாக ஒருஜட்ஜி முன்னிலையில் மான நஷ்டம் கிடைக்கவேண்டுமென்று பிராது செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்.—ரூபா. 1000-வாதிக்கு மானநஷ்டம் கொடுக்கும்படி தீர்ப்பு செய்தார்கள்.

இதன் மேல் ஹைகோர்ட்டிலேயே பிரதிவாதி அப்பீல் செய்தார்.

அப்பீல் கோர்ட்டார் தீர்மானம்:—டிக்கிரியைத் தீர்ப்பதற்கே பணம் கோர்ட்டில் கட்டப்பட்டிருக்கிறதென்றும், நீதி முறையிலும் நடவடிக்கையிலும் டிக்கிரி தீர்ந்துபோய் விட்டதென்றும், வாரண்டுக்கு உத்தரவு செய்தது சட்டவிரோதமென்றும் வாதி கட்சி சொன்னுர்.

டிக்கிரியைத் தீர்ப்பதற்குக் கோர்ட்டில் பணஞ் செலுத்தப்படவில்லை யென்றும் நிறைவேற்ருமல் நிறுத்திவைக்த உத்தரவு பெறுவதற்கு நிபந்தனையாகப்பணத்தை வாதி செலுத்தினுரென்றும், ஜாமீன்கொடுக்காமல் பணத்தை வாங்கக்கூடாதென்று கோர்ட்டார் செய்த உத்தரவினுல் பணத்தைப் பெற்றுக்கொள்ள வாதிக்குத் தடையுண்டானதென்றும், ஆகையால் சட்டத்தின்படி நிறைவேற்றிக்கொள்ளும் எந்தப்பரிகாரமுஞ் செய்துகொள்ள பிரதிவாதிக்கிடமிருக்கிறதென்றும் பிரதிவாதி கட்சி சொன்னுர்.—

பிரதிவாதிக்குக் கிடைக்கவேண்டிய டிக்கிரித் தொகையை வட்டி செலவு உள்பட வாதி கோர்ட்டில் செலுத்தினது டிக்கிரியைத் தீர்ப்பதற்கா வென்பதைப்பற்றி நாம் தீர்மானிப்பது அனுவசியம். கோர்ட்டில் பணத்தைச்செலுத்தினது டிக்கிரியைத்தீர்ப்பதற்கென்றும் அப்படியானுல் அரெஸ்டு பண்ணும்படி கோர்ட்டில் வாரண்டு பிறப்பிக்க உத்தரவு செய்தது கூடாதென்றும் வைத்துக்கொள்வோம். இவ்வாறு வைத்துக்கொண்டு பிரதிவாதி வாரண்டுக்கு உத்தரவு கேட்டபொழுது உண்மையும் நியாயமுமான காரணமில்லையா வென்று யோசிப்போம்.

வாதி பக்கத்தில் சொலிசிட்டர்களிலொருவராகிய மிஸ்டர் " பிரான்சன் " என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். வாரண்டு பிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்ட மனுவிஷயமாக அவர் எழுதிவைத்த வாக்குமூலமாவது, டிப்டி ரிஜிஸ்டிரார் மிஸ்டர் " பெக்வெல் " என்பவரை நான் பார்த்தேன். அவர் நேரிட்டு அது விஷயமாக உத்தரவு செய்யவேண்டியவர். சட்டவிதிப்படி வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. நடந்த விஷயத்தைத் தவருமற் சொன்னேன். நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கப்பட்டிருந்ததா வென்பதைப் பற்றி நாங்கள் பேசினேம். வாரண்டு பிறப்பிக்கும்படி உத்தரவுசெய்தார்" டிப்டி ரிஜிஸ்டிரார் மிஸ்டர் "பேக்வெல் " சாட்சியாக விசாரிக்கப்பட்டு எழுதிவைத்த வாக்குமூலமாவது, " 1904ளு மார்ச்சுமீ 14வ நிறைவேற்ற மனுதாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அதன்மேல் என்னுடைய எண்டார்சமெண் டிருக்கிறது. இந்த மனு என் ஞாபகத்திலிருக்கிறதாக நான் சொல்லக்கூடியதா யில்லை. இது விஷயமாக ஒரு மனு வந்ததாக ஞாபகமிருக்கிறது. மிஸ்டர். பிரான்சனிடம் நான் சந்தித்துப் பேசின ஞாபகமிருக்கிறது. மனு கொடுத்ததைத் தவிர நாங்கள் சில பேசிக்கொண்டிருந்ததாக ஞாபகமிருக்கிறது. நான் வாரண்டுக்கு உத்தரவு செய்தேன்.

டிக்கிரியை நிறைவேற்றும்பொழுது அரெஸ்டு செய்ய உத்தரவுசெய்வது கோர்ட்டாரின் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது. அசல் சயிட் விதிகளில் 542-வது விதியில் வாரண்டுக்கு உத்தரவு செய்வது ரிஜிஸ்டிரார் இஷ்டமென்றும், அல்லது தனக்குத் தகுதியாய்த் தோன்றும் பட்சத்தில் ஒரு ஜட்ஜியிடம் தெரிவித்துக்கொள்ளலாமென்றும் அவர் யுக்தமாகத் தோன்றுகிறபடி செய்யலாம் என்றும் கண்டிருக்கிறது. மிஸ்டர் பிரான்சன் டிப்டி ரிஜிஸ்டிராரிடம் இந்தக் கேசில் நடந்ததை முழுவதும் தெரிவித்துக்கொண்டிருக்கிறுர். டிப்டி ரிஜிஸ்டிரார் வேறு யோசனையுஞ் சொன்னதில்லை. ஆகையால் தனக்கு முன் சொல்லப்பட்ட கேசிலிருந்து இதில் வாரண்டு பிறப்பிக்கவேண்டுமென்று டிப்டி ரிஜிஸ்டிரார் அபிப்பிராயப்பட்டாரென்றும் அவ்வாறே வாரண்டு பிறப்பித்தாரென்றும் நினைக்கவேண்டும்.

மோசடியினுல் அல்லது காரியத்தை வெளிப்படுத்தாமல் இவ்வாறு செய்யப்பட்டதென்று ஏற்படாத பட்சத்தில் தகுந்த காரணமும் உண்மையுமின்றி வாரண்டு கோர்ட்டாரைக் கேட்டதாகச் சொல்லக்கூடாது. அப்படி உத்தரவு செய்வது தம் இஷ்டத்துக்குச் சரியென்று கோர்ட்டார் நினைத்து உத்தரவுஞ் செய்தார்கள். ஒரு கேசில் தகுந்த காரணமின்றி கொடுக்கப்பட்டதும் முடிவாக்கக் கூடியதுமாகிய மனு கோர்ட்டில் கொடுக்கப்பட்டு உத்தரவு போடுவதற்குமுன் வாப்ஸ் வாங்கப்பட்டு கடைசியாகத் தள்ளப்பட்டது. இந்தக் கேசை ஆதாரமாக அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் எடுத்துச் சொன்னுர்.

ஒரு மனிதனை அவமானஞ் செய்ய அல்லது ஒரு கம்பெனியை முடிவுபண்ணிவிட விரோதத்தின் மேல் கோர்ட்டில் நடவடிக்கை செய்தால் அம்மனு தள்ளப்பட்டு அல்லது அதன் மேலான உத்தரவு ரத்துசெய்யப் படும்பொழுது விரோதத்தின்மேல் செய்ததாகப் பிராசிக்யூட் பண்ணலாமென்று சில கேசுகளில் தீர்மானமாகி யிருக்கிறது.

தன்னிஷ்டத்திற்கு வாரண்டு பிறப்பிக்கக்கூடிய ஒரு உத்தியோகஸ்தரால் காரிய முழுதுந் தெரிந்துகொண்டு உத்தரவு செய்யப்பட்டதென்று பிரதிவாதி கட்சி சொன்னுர். இங்கு சொன்னவைகளைப் பிரதி

வாதி ருஜூப்படுத்தினர். இது சரியான டிபன்ஸ்; விரோதத்தின்மேல் பிராசிக்யூட் பண்ணினதற்கு மான நஷ்டங் கேட்பதற்கும், விரோதத்தின்மேல் அரெஸ்டு செய்ததற்கு மான நஷ்டங் கேட்பதற்கும் மேலே சொன்ன டிபன்சு நியாயமாகும். பொய் சொல்லி காவல்படுத்தினதற்காகக் கொண்டுவரும் வியாச்சியத்தில் பிரதிவாதி தகுந்த காரணமிருந்ததென்று ருஜூப்படுத்தவேண்டும். விரோதத்தினல் பிராசிக்யூட் பண்ணினதற்குக் கொண்டுவரும் வியாச்சியத்தில் வாதி தகுந்த காரணமின்றித் தன் மேல் நடவடிக்கை நடத்தினதாக ருஜூப்படுத்தவேண்டும்.

இந்த வியாச்சியத்தில் ருஜூப்படுத்தவேண்டிய கடமை பிரதிவாதியினுடையதாயிருந்தபோதிலும் அக் கடமைப்படி ருஜூப்படுத்தித் தீர்த்துவிட்டாரென்று நாமபிப்பிராயப்படுகிறோம்.

மேலே சொன்ன இச்சிறு காரணத்தினல் நாம் அப்பீலை யேற்றுக்கொண்டு டிக்கிரியை ரத்து செய்கிறோம். அவரவர் செலவை அவரவர் பொறுத்துக் கொள்ள வேண்டியது. ஆட்சேபனை மெமோராண்டமும் தள்ளுபடி செய்யப்பட்டது.

ரூலிங்ஸ்:—(1) அரெஸ்டு செய்யவேண்டிய உத்தரவு பிறப்பிப்பது உத்தியோகஸ்தரின் இஷ்டத்தைப்பொறுத்திருக்கும்பொழுது பிரதிவாதி நடந்த விஷயங்களைப் பூராவும் தெரிவித்திருந்து சங்கதி முழுதும் தெரிந்துகொண்டு தம்மிஷ்டத்தின்படி அரெஸ்டு பண்ணும்படி உத்தரவு செய்தால் விரோதத்தினல் அரஸ்டு பண்ணப்பட்டதென்று மானநஷ்ட வியாச்சியங்கொண்டுவரக்கூடாதென்றும்.

(2) பொய் சொல்லிக் காவல் படுத்தினதற்காகக் கொண்டுவரும் வியாச்சியத்தில் பிரதிவாதி தகுந்த காரணமிருந்ததென்று ருஜூப்படுத்தக் கடமைப்பட்டவரென்றும் விரோதத்தினல் பிராசிக்யூட் பண்ணினதற்குக் கொண்டுவரும் வியாச்சியத்தில் தகுந்த காரணமின்றி நடவடிக்கை நடத்தப்பட்டதென்று வாதி ருஜூப்படுத்தக் கடமைப்பட்டவரென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 208.

Thakdi Hajji v. Budrudin Saib. I. L. R. 29. Madras. 208.

ஜட்ஜிகள்:—சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

சுப்பிராயப்பிரபூ—(வாதி) அப்பீல்வாதி.

மஞ்சுநாத் பக்த்தா—(பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

V.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி பிரதிவாதிகள் தங்களுக்குள்ள ஒரு விவகாரத்தைத் தீர்க்கும்பொருட்டு ஒரு பஞ்சாயத்து நியமித்து அவர்களுடைய தீர்மானத்திற்குக் கட்டுப்படுவதாய் முச்சலிக்கை எழுதிக் கொடுத்தார்கள். பஞ்சாயத்தார்கள் அந்த விவகாரத்தைப்பற்றி விசாரணைசெய்து தீர்ப்பு சொன்னர்கள். இந்த பஞ்சாயத்து தீர்மானத்தைக் கோர்ட்டில் தாக்கல்செய்துகொள்ளும்படி வாதி சி. பு. கோ. 525 பிரிவின்படி ஜில்லாகோர்ட்டில் மனுசெய்துகொண்டார். பிரதிவாதி ஷை பஞ்சாயத்தார் கொடுத்த தீர்ப்பை கோர்ட்டார் தாக்கல் செய்துகொள்ளக்கூடாதென்று ஆக்ஷேபித்தார். பிரதிவாதி ஆக்ஷேபித்ததற்கு இரண்டு காரணங்களும் சொன்னர். ஒன்று என்னவென்றால், பஞ்சாயத்தார்கள் இந்த விவகாரத்தைப் பஞ்சாயத்து செய்ததற்காகக் கக்ஷிக்காரர்களிடமிருந்து பரிகாரப்பணம் பெற்றுக்கொண்டார்கள். அப்படி அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கக்கூடாது என்று சொன்னர். இன்னொருகாரணம் என்னவென்றால், பஞ்சாயத்தார்கள் விசாரணை செய்வதற்காக மீட்டிங்கு கூடுவதற்குக் குறிப்பிட்ட தேதிகளில் சிலவற்றைத் தமக்கு நோட்டீஸ் மூலியமாய் அறிவிக்கவில்லை என்று பிரதிவாதி சொன்னர்.

ஜில்லாக்கோர்ட்டு தீர்மானம்:—பஞ்சாயத்தார் தீர்மானத்தைக் கோர்ட்டில் தாக்கல் செய்யமாட்டோமென்று ஜில்லாக்கோர்ட்டார் சொல்லிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் C. ராமசந்திர ராவ் சாயப்பும், மிஸ்டர் K. P. மாதவராவும் வாதி தரப்பிற்கு. மிஸ்டர் P. R. சுந்தர அய்யருக்குப் பதிலாக C. V. அனந்தகிருஷ்ண அய்யர் பிரதிவாதி தரப்பிற்கு.

தீர்ப்பு சங்கிரகம்:—பஞ்சாயத்தார்கள் தீர்த்த வியாஜ்ஜியமதிப்பு ரூபா. 2500-க்கு மேற்பட்டதானபடியால் வாதி ஷை தீர்மானத்தை ஜில்லாக்கோர்ட்டில் தாக்கல்செய்ய மனுசெய்துகொண்டது நரசிங்கதாஸ் அஜோத்தியபிரசாத்சாகுல் (1) கேஸ் பிரகாரம் சரியான கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறர் என்று அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால், நாம் அடுத்தபடி தீர்மானிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால், பஞ்சாத்தார்கள் ஜூலைமீ 21வ, 23வ மீட்டிங் கூடி விசாரணை செய்யப்போகிறதைப் பிரதிவாதிக்குத்தெரிவிக்கவில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு பஞ்சாயத்து தீர்ப்பு செலாமணியாகாது என்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியான அபிப்பிராயமா அல்லவா? இதைப்பற்றிய சமாசாரங்கள் என்னவென்றால், 15வ ஒரு மீட்டிங்கு நடந்தது. அப்போது இருகட்சிக்காரர்களும் ஆஜராயிருந்தார்கள். பாக்கி விசாரணை 20வ தள்ளிவைக்கப்பட்டது. 16வ பிரதிவாதி, தான் பஞ்சாயத்தார்கட்கு எழுதிக்கொடுத்த முச்சிலிக்கையை ரத்துசெய்து ஒரு நோட்டீஸ் அனுப்பினர். அந்த முச்சிலிக்கையின் கடைசிபாராவில் அடியிற் கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது:—

"நான் இந்த விஷயத்தில் முச்சிலிக்கையை ரத்து செய்துவிட்டேன். பஞ்சாயத்தார் விசாரணையிலிருந்து விலக்கிக்கொண்டேன். இனிமேல் நீங்கள் விசா-

(1) இ. லா. ரி. 31. கல். 203.

ரணை செய்யவேண்டியதில்லை. இந்த விவகாரத்தைக் குறித்து நான் வியாஜ்ஜியம் தாக்கல்செய்யப்போகிறேன். இதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்."

இந்த நோட்டீசு பஞ்சாயத்தார் கைக்கு 19வ வந்து சேர்ந்து 20வ மீட்டிங்கில் பஞ்சாயத்தார்களுக்குள் ஒருவர் வராமற்போனமையால் மீட்டிங்கு நடக்கவில்லை. 21, 23-தேதிகளில் பஞ்சாயத்தார்கள் மீட்டிங்கு கூடி விசாரணை செய்து, தீர்ப்பு சொன்னர்கள். இவ்விரண்டு தேதியில் நடந்த விசாரணைக்கும் பிரதிவாதி ஆஜராகவில்லை. ஆர் கோர்ட் v. ராம்ஸ்போடன் (1) ஸ்காட் v. வங்சந்தம் (2) ஆகிய இந்த கேசுகளில் சொல்லியிருக்கும் தீர்ப்பின்படி பஞ்சாயத்தார் பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கத் தவறிப்போனது அவர்களுடைய தீர்மானத்தை ஒருக்காலும் பலஹீனப்படுத்தமாட்டாது.

ஆகவே, நாம் தீர்மானிக்கவேண்டிய பாக்கி அம்சம் என்னவென்றால், பஞ்சாயத்தார்கள் பரிகாரப் பணம் வாங்கிக்கொண்டது நியாயமா? நியாயமல்லவா? இதைப்பற்றி ஏற்பட்டிருக்கும் சாக்ஷியம் என்னவென்றால், இரு கக்ஷிக்காரர்களும் சேர்ந்து பஞ்சாயத்தார்களுக்கு அவர்களுடைய சிரமத்துக்காகப் பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறர்கள். அப்படி சொல்லப்பட்டது ஷை பஞ்சாயத்தார்கள் கூடிய மீட்டிங்கில் ஒன்றில் நடந்தேறியது. அப்போது இரு கக்ஷிக்காரர்களும் வந்திருந்தார்கள். இந்த சமாசாரமும், மீட்டிங்கின் மற்றப் ப்ரொசீடிங்சுகளுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், ஜில்லாகோர்ட்டார் தீர்மானத்தைமாற்றிப் பஞ்சாயத்தார் தீர்மானத்தைத் தாக்கல் செய்யும்படி நாம் உத்தரவு செய்கிறோம். பிரதிவாதி அப்பீல் கோர்ட்டுச் செலவுகளை வாதிக்குக் கொடுக்கவேண்டும்.

ரூலிங்ஸ்:—ஒரு கக்ஷிக்காரன் பஞ்சாயத்தார்கள் மீடிங்கு கூடுவதற்குமுன் தன்னுடைய முச்சிலிக்கையை ரத்துசெய்து அவர்களுக்கு நோடீசு கொடுத்திருந்தும் அவர்கள் தாங்கள் மீட்டிங்கு கூடப்போனதை அவனுக்கு நோடீஸ் மூலமாய் அறிவிக்கத் தவறிப்போனது, அவர்கள் கொடுத்த தீர்மானத்தைப் பலஹீனப் படுத்தமாட்டாது. கக்ஷிக்காரர்களுடைய பிரேரேபணையின் பேரிலும், சம்மதத்தின் பேரிலும் பஞ்சாயத்தார்கள் பரிகாரப் பணம் வாங்கிக்கொண்டது அவர்களுடைய தீர்மானத்தைச் சட்டவிரோதமான தீர்மான மாக்கமாட்டாது.

பஞ்சாயத்தார் தீர்மானத்தை எந்தக் கோர்ட்டில் தாக்கல்செய்வதென்று நிர்ணயிக்கவேண்டியது, பஞ்சாயத்தார் கொடுத்த தீர்மானத் தொகையைப் பொறுத்ததல்ல. பஞ்சாயத்தார் தீர்க்கப் புகுந்த வியாச்சியத் தொகையைப் பொறுத்தது.

(1) I. J. & W. 507 at p. p. 511.512.

(2) 6. Q. B. 237 at p. p. 247, 248.

ஜட்ஜிகள்:—சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.
மிஸ்டர். ஜஸ்டிஸ் போடாம்.

மெய்யப்ப செட்டி வகையரு—(வாதி) அப்பீல் வாதி.

பெரியண்ண செட்டி வகையரு—(பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

வியாஜ்ஜிய சங்கிரகம்.

நான்காவது பிரதிவாதி, வாதி வகையருவின் ஏஜெண்டாக சிங்கப்பூரில் லேவாதேவி செய்துவந்தார். அப்போது, முதலாவது பிரதிவாதிக்குக் கொஞ்சம் பணம் கடன் கொடுத்திருந்தார். வாதி வகையரு முதற் பிரதிவாதி கொடுக்கவேண்டிய கடன்தொகையைக் கேட்டார்கள். முதற் பிரதிவாதி தான் கடன் வாங்கவில்லை யென்று சொன்னர். முதற் பிரதிவாதிக்குப் பாகம் பிரியாத இரண்டு புத்திரர்கள். ஆகவே, வாதி வகையரு, முதற் பிரதிவாதியையும், ஷை இரண்டு புத்திரர்களையும் 2, 3-பிரதிவாதிகளாகவும், கடன்கொடுத்த ஏஜெண்டை 4-வது பிரதிவாதியாகவும் சேர்த்து சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். பிராதில் சிவில் புரோசிஜர் கோடு 28-வது பிரிவின்படி 1, 3-பிரதிவாதிகள் பேரிலாவது, அல்லது நான்காவது பிரதிவாதியின் பேரிலாவது டிக்ரி கொடுக்கும்படி வாதிகள் வேண்டிக்கொண்டார்கள். சப் கோர்ட்டார் 1, 3-பிரதிவாதிகளை யாவது அல்லது நான்காவது பிரதிவாதியையாவது இந்த வியாஜ்ஜியத்திலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று சொல்லி அந்தப்பிரகாரம் பிராதைச் சீர்திருத்தி ஆஜர் செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

இந்த உத்தரவுக்கு விரோதமாக வாதிவகையரு ஐகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயர். வாதி தரப்பிற்கு, மெஸர்ஸ். G. கிருஷ்ணசாமி ஐயர். V. ஜெகந்நாதையர் பிரதிவாதிகள் தரப்பிற்கு.

ஹைகோர்ட்டுத் தீர்ப்பு சங்கிரகம்:—

வாதியின் ஏஜெண்டாகிய நான்காவதுபிரதிவாதியால், 2, 3-பிரதிவாதிகளின் தகப்பனாகிய முதற் பிரதிவாதிக்குக்கொடுக்கப்பட்ட கடனை வசூல்செய்வதற்கு, வாதி வகையரு இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டுவந்திருக்கிறர்கள். வாதி கடனைக் கேட்டபோதெல்லாம், முதற் பிரதிவாதி கடன் வாங்கவில்லையென்று சொன்னபடியாலும், நான்காவது பிரதிவாதி கடன் கொடுத்தது வாஸ்தவமென்று சொன்னபடியாலும், வாதி வகையரு நான்காவது பிரதிவாதியையும் இந்த வியாஜ்ஜியத்தில் சேர்த்து, அவர் பேரிலாவது டிக்ரி கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறர்கள். இப்படி நான்காவது பிரதிவாதியைச் சேர்ப்பதற்கு வாதி வகையரு சி. பு. கோ. 28-வது பிரிவை ஆதாரமாகக் கூறுகிறர்கள்.

முத்தப்ப செட்டி. V. முத்துப்பழனி செட்டி (1) கேசில் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பு இந்தக் கேசுக்குப் பொருந்தாது. ஆகையால் சப் கோர்ட் உத்தரவையும், அந்த உத்தரவை யனுசரித்து இதுவரையில் நடந்திருக்கும் நடவடிக்கையையும் ரத்துசெய்து, வாதிகள் ஆதியில் கொடுத்த பிராதின்படியே இந்த வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்து சட்டப்படி பைசல் செய்யும்படி உத்தரவு செய்கிறோம்.

ரூலிங்ஸ் :—வாதி தம்முடைய ஏஜெண்டு கொடுத்த கடனை வசூல் செய்யும்பொருட்டு கடன் பெற்றுக்கொண்டவர்களின்மேல் வியாஜ்ஜியம் கொண்டுவரும்பொழுது, இவர்கள் கடன் வாங்கவில்லையென்று சொன்னால், ஏஜெண்டையும் இந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியாகச் சேர்த்து அவர்பேரிலாவது டிக்ரி கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளலாம். அப்படிக் கேட்டுக்கொள்வதற்கு சி. பு. கோ. 28-வது பிரிவு இடம் கொடுக்கிறது.

Mayappa Chetty. V. Pereyanna Chetty. I. L. R. 29. Madras. 50.

அலகபாத் ஹைகோர்ட்டு.

சீவில் ரிபரன்ஸ்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சார்ட்ஸ்.

மகம்மதிய சட்டம் - உயில்.

அப்துல் கரீம்கான்—வாதி (அப்பீல் வாதி).

அப்துல் குயேயம்கான்—பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)

வியாச்சிய சங்கிரகம்.

மகமது அசிம் என்பவர் 1878௵ மார்ச்சுமீ 4௳ ஒரு உயில் செய்தார். அதில் தன் மனைவிக்கும், பெண்களுக்கும் ஒரு ஜீவேஜி ஏற்படுத்திவிட்டுத் தன் சொத்துக்களைத் தன் மூன்று குமாரர்களுக்கும் பிரிவினை செய்து ஒவ்வொருவருக்கும் சில கிராமங்களைக் கொடுத்தார். ஒவ்வொரு பிள்ளைக்குங் கொடுத்தது பூரணதானமாயிருந்தது. ஆயினும் தனக்குக் கிடைத்த சொத்தை எந்தப் பிள்ளையும் பராதீனம் செய்யக்கூடாதென்றும் எவராகிலும் சந்ததியின்றி இறந்துபோனால் அவருடைய விதவைக்கு அச்சொத்தில் யாதொரு பாத்தியமுமில்லை யென்றும் அவருடைய சகோதரர்கள் அல்லது அவர்களின்வார்சுக்கள் அடைகிறதென்றும் அந்த உயிலில் எழுதப்பட்டிருந்தது. உயில் செய்தவரின் ஒரு மனைவிக்கு அப்துல்கரீம் என்னும் ஒரு குமாரனும், மற்றொரு மனைவிக்கு "அப்துல்குயேயம்" "அப்துல்காதர்" என்கிற இரண்டு குமாரரு மிருந்தார்கள். வார்சுக்களாகிய மூன்று குமாரர்களும் உயிலை ஒப்புக்கொண்டு சொத்தை உயிலின்படி கட்டிக்கொண்டார்கள். இது உண்மையென்று அசிஸ்டெண்டு கமிஷனர் டிப்டி கமிஷனர் ஆகிய இரு கோர்ட்டார்களும் ருஜுவானதாகக் கண்டார்கள்.

அப்துல்காதர் சந்ததியின்றி இறந்துபோனதால் அவருடைய சொந்த சகோதரர் "அப்துல்குயேயம்" என்பவர் அவருடைய சொத்தைத் தன் வசமாக்கிக் கொண்டார். அப்துல்கரீம் என்னும் மாற்றாந்தாயின் குமாரராகிய சகோதரர், இறந்துபோனவரின் சொத்தில் தனக்குப் பாதி கிடைக்கவேண்டுமென்று அஸிஸ்டாண்டு கமிஷனர் கோர்ட்டில் தாவாசெய்தபொழுது வாதிபக்கம் தீர்ப்பு செய்தார்கள். இதன்மேல் டிப்டி கமிஷனர் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போனபொழுது அங்கும் வாதிபட்சம் தீர்ப்பு சொன்னார். "குயேயம்" இன் "கமிஷனர் கோர்ட்டு"க்கு அப்பீல் செய்தபொழுது இவ்விரண்டு தீர்ப்பையும் மாற்றிப் பிரதிவாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள். இதன்மேல் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதி பெற்றுக்கொண்டு "குமாவூன்" விதிகளின் 17-வது பிரிவுப்படி இவ்வியாச்சியத்தை ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—மகமதிய லாப்பிரகாரம் அச்சொத்து அப்துல்காதருடையதா யிருந்தால் இச்சொத்துக்குப் பிரதிவாதியாகிய "அப்துல் குயேயம்" வார்சாவாரென்பதை வாதி ஒப்புக்கொள்ளுகிறார். உயிலின் ஷரத்துக்குக் கட்டுப்படவேண்டுமென்றும் அந்த ஷரத்துப்படி தனக்குப் பாதி கிடைக்கவேண்டுமென்றும் வாதி கட்சி சொன்னார். மகமதிய லாப்படி வார்சுக்களுக்குச் சொத்தைக் கொடுப்பதாக உயில் செய்வது செல்லத்தகுந்ததல்ல. வார்சுக்கள் அதை ஒப்புக்கொண்டதால் அந்த உயில் செல்லுபடியானது. இது மகமதிய லாப்பிரகாரம் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொண்டபடி சரியானது. ஆனால் உயிலை ஒப்புக்கொண்டது உயிலிற் சொல்லிய ஒவ்வொரு ஷரத்துக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது என்று தாற்பரியங் கொள்ளவேண்டும். அது மகமதிய லாவுக்கு எவ்வளவு விரோதமா யிருந்தாலும் நிமித்தமில்லை என்று வாதி வக்கீல் சொன்னார். வார்சுக்கள் ஒப்புக்கொண்ட உயிலை மகமதிய லாப்படிச் செல்லுபடி யாக்கினாலும் மகமதியலாவுக்கு ஒத்த இதர பத்திரங்களை அர்த்தம் பண்ணுவதுபோல இவ்வுயிலையும் அர்த்தம் பண்ணவேண்டும் என்று எதிர் வாதஞ் சொன்னார்கள். பிரதிவாதி சொல்லுங் கட்சியே அங்கீகரிக்கத் தகுந்தது. விவாதம் பேசும்பொழுது வாதி வக்கீலை "ஒரு மகமதியன் மூன்றில் ஒரு பாகச் சொத்தை மகமதிய லாப்படி ஓர் அன்னியனுக்கு உயிலெழுதிக் கொடுத்துவிட்டுச் சொத்தை யடைகிற அன்னியன் பராதீனம் செய்யக்கூடாதென்றும், சந்ததியின்றி இறந்தால் மகமதிய லாப்படி சொத்து வார்சுக்களிடம் போகக்கூடாதென்றும் அவ்வுயிலிற் கண்டிருந்தால் அந்நிபந்தனை செல்லுபடி யாகுமாவென்று கேட்டபோது, அத்தானம் செல்லுபடியானாலும், இந்நிபந்தனை செல்லுபடியாகாதென்று வாதி வக்கீல் மறுமொழி கூறினார். இந்த மறுமொழிதான் சொல்லக்கூடும். இவ்விதியே இந்தக்கேசிலும்பொருத்தமுள்ளது. உயில் வார்சுக்களின் சம்மதத்தின்மேல் செல்லுபடியானது. செல்லுபடியான உயில்கள் அன்னியர்கள் விஷயமாகச்செய்யும் பட்சத்தில் அர்த்தம் பண்ணுவது போலவே இங்கும் அர்த்தம்பண்ணவேண்டும். ஜீவியகாலம்வரையில் அனுபவிக்கும் பாத்தியமும் நிச்சயமில்லாத பாத்தியமும்மகமதியலா ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இங்கிலீஷ் உயிலுக்குக் கட்டுப்படுத்துவது போல மகமதிய உயிலுக்குக் கட்டுப்படுத்துவது கூடாது. உயில் மூலமாக அப்துல் காதருக்குக் கொடுக்கப்பட்ட சொத்து முழு சுவாதீனத்துக் குரியதாகையால் பராதீனஞ் செய்யக்கூடாதென்றும் இன்னவாறு சொத்துக்கள் வார்சுததன்மை பெறவேண்டுமென்றும் நிபந்தனையுண்டுபண்ணுவது செல்லாது. ஆகையால் வாதியின் பாத்தியம் நிலை நிறுத்தக் கூடியதல்ல. ஆகையால் கமிஷனர் செய்த தீர்மானஞ் சரியென்று அபிப்பிராயப்பட்டு அவரவர்கள் செலவை அவரவர்களே பொறுத்துக்கொள்ளுகிறதென்று தீர்ப்பு செய்தார்கள்.

(1) இ. லா. ரி. 27. சென்னை. 80.

ரூலிங்ஸ் :—மகமது அசிம் ஒரு உயில் செய்து அதனால் மனைவிக்கும் பெண்களுக்கும் ஒரு ஜீவேஜி ஏற்படுத்திவிட்டுத் தன் சொத்துக்களை மூன்று குமாரர்களுக்கும் பிரிவினை செய்து ஒவ்வொருவருக்கும் சில கிராமங்களைக் கொடுத்தார். அக்கொடை பூரணதானமாயிருந்தது. கிடைத்த சொத்தை எந்தப் பிள்ளையும் பராதீனஞ் செய்யக்கூடாதென்றும் எவராகிலுஞ் சந்ததியின்றி இறந்துபோனால் அவருடைய சொத்தை அவருடைய சகோதரர்கள் அல்லது அவர்களின் வார்சுக்கள் அடைகிறதென்றும் அந்த உயிலில் எழுதப்பட்டிருந்தது. உயில் செய்தவருக்கு ஒரு மனைவியால் அப்துல்கரீம் என்னும் ஒரு குமாரனும், மற்றொரு மனைவியால் "அப்துல் குயேயம்" "அப்துல் காதர்" என்கிற இரண்டு குமாரருமிருந்தார்கள். வார்சுக்களாகிய மூன்று குமாரர்களும் உயிலை ஒப்புக்கொண்டு சொத்தை உயில்படி அடைந்தார்கள்.

அப்துல் காதர் சந்ததியின்றி இறந்துபோனதால் அவனுடைய சொந்த சகோதரர் "அப்துல் குயேயம்" என்பவர் அவருடைய சொத்தைத் தன் வசமாக்கிக் கொண்டார். அப்துல் கரீம் என்னும் மாற்றாந்தாயின் குமாரராகிய மற்றொரு சகோதரர் இறந்துபோனவரின் சொத்தில் தனக்குப் பாதி கிடைக்கவேண்டுமென்று பிராது செய்தபொழுது மகமதிய லாப்பிரகாரம் சொத்தை முழு சுவாதீனத்துடன் மூன்று குமாரர்களும் அடைந்திருக்கிறார்களென்றும் வாதிக்குத் தாவா சொத்தில் பாத்தியமில்லையென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 28. அல. 342.

(Abdul Karim Kham. v. Abdul Qayum Kham. I. L. R. 28. Aall. 642.)

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெனர்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சார்ட்ஸ்.

ஸ்திரீ தனம் - வார்சுக்கிரமம்.

அஜுடியா பிரசாத் ஆ மனுதார்கள்—(அப்பீல் பிரதி வாதிகள்).

கனைஷிலால் ஆ எதிர் மனுதார்கள்—(அப்பீல் வாதிகள்).

வியாச்சிய சங்கிரகம்.

முசுமாத் மதுராதேவி தன் ஸ்திரீதனத்தைவைத்துவிட்டு இறந்துபோனாள். இவள் புருஷனுடைய சகோதரியின் புத்திரர்கள் கடனை வசூலிக்க வார்சு செர்ட்டிபிகேட்டு பெற மொரடபாத் டிஸ்டிரிக்டு ஜட்ஜியிடம் மனுசெய்து கொண்டார்கள். இவர்களுக்கு வார்சு செர்டிபிகேட்டு கொடுக்கக்கூடாதென்று இறந்துபோனவளுக்குச் சகோதரியின் புத்திரர்கள் ஆக்ஷேபித்தார்கள். இவ்விரு கட்சிக்காரருக்குள் யாருக்குப் பாத்தியமென்று டிஸ்டிரிக்டு கோர்ட்டார் விசாரித்து வாதிபக்கம் தீர்ப்பு செய்தார்கள். இதன்மேல் ஹைகோர்ட்டுக்குப் பிரதிவாதிகள் அப்பீல்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—கீழ்க் கோர்ட்டார் செய்த தீர்ப்பு சரியானது. சாஸ்திர யுக்தமாகக் கலியாணமாகியிருக்கும் ஒரு பெண்பிள்ளையின் ஸ்திரீதனம் சந்ததியின்றி அவள் இறக்கும் பட்சத்தில் முதலில் புருஷனைச் சேருமென்றும், புருஷனில்லாவிடின் அவன், சமீப சொந்தக்காரரை (சபிண்டாக்களை)ச் சேருமென்றும் மித்தாக்ஷாரா, 2-ம் அதிகாரம், 11-வது பிரிவு 11-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. புருஷனுடைய சகோதரியின் புத்திரர்கள் வேறு கோத்திரமாயிருந்தாலும் அவர்கள் புருஷனுக்குச் சொந்தக்காரர்கள். புருஷனுக்கு வேறு சமீப சொந்தக்காரர்கள் இல்லை. ஆகையால் பெனாரிவில் மித்தாக்ஷாரா அனுஷ்டிக்கப்படுவதால் இந்தக் கேசுக்கும் இவ்வியாக்கியானமே பொருத்தமுள்ளது. அப்பீல் பிரதிவாதிகளாகிய மனுதார்கள் (புருஷனுடைய சகோதரியின் புத்திரர்கள்) ஸ்திரீ தனத்துக்குப் பாத்தியமுள்ளவர்கள். கீழ்க்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டதுபோல வார்சு செர்ட்டிபிகேட்டுபெற உரித்தானவர்கள். இந்த அப்பீல் தள்ளப்பட்டது.

எவ்வுத்தரவின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்பட்டதோ அவ்வுத்தரவு பிறந்த தேதிக்கு மறுதேதியில் மனுதார்களாகிய அப்பீல் பிரதிவாதிகளை ஜாமீன் கொடுக்கும்படிக் கீழ்க்கோர்ட்டார் வேறொரு உத்தரவுசெய்தது நியாயமாவென்பதைப்பற்றி சி. பு. கோ. 561-வது பிரிவுப்படி பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தார்கள். இவ்வாட்சேபனையை இங்கு விசாரிப்பது கூடாது (ஏனெனில், அப்பீலுக்குவந்த உத்தரவுக்குச் சம்பந்தமில்லை. 1905௵ பிபர்வரிமீ 15௳ பிறந்த டிஸ்டிரிக்டு ஜட்ஜியின் உத்தரவில் அப்பீல் பிரதி

வாதிகள் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்றுசொல்லியதைமுன்னாள் வார்சுசெர்ட்டிபிகேட்டு கொடுக்கும்படியாகச்செய்த உத்தரவிற் சேர்த்தெழுதவேண்டியது. இதுபிரதிவாதிகளின் ஆட்சேபனைக்குச் சமாதானமாகும். கீழ்க்கோர்ட்டார் உத்தரவை அவ்வாறு மாற்றி அப்பீல் பிரதிவாதிகள் மூன்று மாசத்துக்குள் ஜட்ஜினிடம் வசூலிக்க வேண்டிய கடன் தொகை அவ்வளவுக்கு ஒரு நபர் ஜாமீனுடன் ஜாமீன் பத்திரம் சொத்துக்குரியவாகளுக்குக் கணக்குக் கொடுப்பதற்கு எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும் அப்பீல் தள்ளப்பட்டதால் அப்பீல் பிரதிவாதிகளுக்குச்செலவு தொகை கொடுக்கும்படிக்கும் தீர்ப்பு சொல்லப்பட்டது. 561-வது பிரிவுப்படி செய்த ஆட்சேபனையுஞ் செலவு தொகையுடன் தள்ளப்பட்டது.

ரூலிங்ஸ்:—மித்தாக்ஷரா சட்டத்தை அனுஷ்டித்து வரும் குடும்பத்திலுள்ள ஒரு பெண்பிள்ளையின் ஸ்திரீதனம் அவள் சந்ததியின்றி இறந்தால் அவளுடைய சொந்த சகோதரியின் குமாரர்களைப் பார்க்கிலும் புருஷனுடைய சகோதரியின் புத்திரனைச் சேருமென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 28. அல. 345.

(Ganechi Lal. v. Agudhia Prasad. I. L. R 28 All 345.)

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சர் S. சுப்பிரமணிய ஐயர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்:

சிவில் அப்பீல்.

ரத்தினஜலமையர் மனுதார். (அப்பீல்தார்)

வெங்கடராமையர் வகையரு:—எதிரிகள்.

கேசின் விபரம்:—மனுதாரின் தகப்பனர் எதிரிகள் பேரில் வியாச்சியம் கொண்டுவந்து 1894ளு 13வ ஒரு டிக்கிரி பெற்றார். ஆனால் அந்த டிக்கிரியில் எதிரிகள் இன்னின்ன வீதசாரப்படி பணம் கொடுக்கவேண்டுமென்று ஏற்படவில்லை. 1895ளு ஜூலைமீ 13வ மனுதாரின் தகப்பனர் டிக்கிரியை நிறைவேற்றும்போது, டிக்கிரியில் இன்னவீதசாரமென்று சொல்லப்படாமலிருப்பதைக் காரணமாகக்காட்டி நிறைவேற்றுதலை ஆக்ஷேபித்தார்கள். கோர்ட்டார் ஒருகமிஷனரை நியமித்து ஷை டிக்கிரிகளுக் கட்டுப்பட்ட அடமான நிலங்களைப்போய் பார்வையிட்டு வீதசார மேற்படுத்தும்படி உத்திரவு செய்தார்கள். அவர் அப்படியே போய்ப்பார்வையிட்டு வீதாசாரமேற்படுத்தியதை கோர்ட்டார் 1896ளு பிப்ரவரிமீ 25வ தாக்கல் செய்துகொண்டார்கள். 1896ளு ஏப்ரல்மீ 30வ மனுதாரின் தகப்பனர் டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு மனுசெய்துகொண்டார். அவர்மேல் நடவடிக்கை நடத்தாததால் மனுதள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு மனுதாரின் தகப்பன் இறந்துபோனார். இறந்துபோனபின் 1899ளு பிப்ரவரிமீ 24வ மனுதார் கார்டியன் மூலமாக டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு மனுகொடுத்தார். மனுவில்யாதோ பிழையிருந்ததால், அதைத்திருத்தி ஆஜர்ப்படுத்தும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள். அதோடு அம்மனுமேல் நடவடிக்கை யாதென்றும் செய்யப்படாமல் நின்றுபோய் விட்டது. மனுதார் மறுபடியும் 1903ளுசெப்டம்பர்மீ 15வடிக்கிரியை நிறைவேற்ற மனு கொடுத்தார்.

இந்த விவகாரத்தில் முக்கியமான லாபாயின்ட் என்னவென்றால், 1899ளு பிப்ரவரிமீ 24வ மனுதார் டிக்கிரியை நிறைவேற்றினபோது, டிக்ரி காலாவதியாயிற்றா இல்லையா?

ஜில்லா கோர்டார் டிக்கிரி காலாவதியாயிற்றென்று மனுவைத் தள்ளிவிட்டார்கள். மனுதார் ஹைகோர்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—மெஸர்ஸ் V. கிருஷ்ணசாமி ஐயர், T. நடேச ஐயர் இவ்விருவரும் மனுதார் தரப்பிற்கு மெஸர்ஸ் T. V சேஷகிரி ஐயர், K. S. கோபாலரத்ந ஐயர் எதிரிகள் தரப்பிற்கு ஆஜராய் பேசினார்கள்.

தீர்ப்பு:—அடமான நிலங்களை மதிப்பிட்டு வீதாசார மேற்படுத்திய கமிஷனர் இன்னின்ன எதிரிகள் இன்னின்ன வீதாசாரப்படி டிக்ரி கடனைக் கொடுக்க வேண்டுமென்று 1896ளு பிப்ரவரிமீ 25வ கோர்டில் ரிபோர்ட் தாக்கல் செய்தார். அன்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கமிஷனர் ரிபோர்டின்படியே எதிரிகள் டிக்ரி கடனைக்கொடுக்கும்படி உத்தரவு செய்தார் அன்று முதல் தான் டிக்ரி பூர்ணமாண டிக்ரியாயிற்று. ஆதலால் டிக்ரி நிறைவேற்று காலம் 1896ளு பிப்ரவரிமீ 25வ முதல் கணக்கு செய்துகொள்ளவேண்டும். அப்படிக் கணக்கிட்டுப்பார்த்தால் 1899ளு பிப்ரவரிமீ 24வ மனுதார் டிக்டியைக் நிறைவேற்றுவதற்குக் கொடுத்த மனு மூன்று வருஷத்திற் குட்பட்டிருக்கிறது. ஆகையால் டிக்ரி காலாவதியாகவில்லை.

கீழ்க்கோர்ட் உத்தரவை ரத்து செய்துவிட்டோம். எதிரிகள் மனுதாரிகள் செலவைக் கட்டிக் கொடுக்கவேண்டும்.

ரூலிங்ஸ்:—ஒரு டிக்கிரியில், பின்பு தீர்மானிக்கிறபடி வசூல் செய்துகொள்வது என்று எழுதி டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தால் அந்த விஷயம் தீர்மானிக்கப்பட்டபிறகுதான் டிக்ரி நிறைவேற்றுவதற்கு யோக்யதையுடையதாகிறது. அந்த விஷயம் தீர்மானிக்கப்பட்ட தேதி முதல் மூன்று வருஷத்திற்குள்ளாக அந்த டிக்ரியை நிறைவேற்றினல் அது காலாவதி தோஷத்திற்கு உட்பட்டதாகமாட்டாது.

இ. லா. ரி. 29. சென். 46.

MISCELLANEOUS SUITS.

சீவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆர்னல் வொயிட்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1906ம்ளுத்திய இரண்டாவது சீவில் அப்பீல் நெ. 313.

கேசின் விபரம்:—இந்தக்கேஸ் தென் கன்னடம் ஜில்லாவில் நடந்தது. "குன்னுலி பியாரி" என்பவர் தமக்கு மான்டு பரன்டா என்பவர் கொடுக்கவேண்டிய கடனிற்காக ஒரு டிக்ரி பெற்றார். அவர் இந்த டிக்கிரியை நிறைவேற்றி கடனாளி சொத்துக்களை ஜப்தி செய்து ஏலத்திற்குக் கொண்டுவந்து கோர்ட்டு ஏலத்தில் தாமே வாங்கிக்கொண்டார். சி. பு. கோ. 310 A. பிரிவின்படி கோர்ட் ஏலத்தேதி முதல் 30 நாளைக்குள்ளாக கடனாளி ஏலத்தொகையை ஏலத்தில் எடுத்தவருக்காயினும் டிக்ரி பெற்றவருக்காயினும் செலுத்திவிட்டு ஏலவிற்பனையை ரத்துசெய்யக் கோர்ட்டில் மனு செய்து கொள்ளலாம். அப்படிச் செய்துகொண்டால் கோர்ட்டார் ஏல விற்பனையை ரத்து செய்யலாம். ஆதலால் ஏல விற்பனை தேதி முதல் 30-நாளைக்குள்ளாக கடன் பட்டவர் (Judgment debter) ஷை ஏல சொத்துக்களையும் இன்னும் தனக்குள்ள சில சொத்துக்களையும் ஒருவரிடம் அடமானம் வைத்து ஏலத்தொகை போக பாக்கியுள்ள பணத்தை பெற்றுக்கொண்டார். அடமானம் பெற்றுக்கொண்டவர் ஏல விற்பனை தேதிமுதல் 30-நாளைக்குள்ளாக ஷை ஏல விற்பனையை ரத்து செய்யும்படி சி. பு. கோ. 310-வது பிரிவின்படி பணத்தைக்கட்டி டி. மு. கோர்ட்டில் மனு செய்துகொண்டார். டி. மு. கோர்ட்டார் ஏல விற்பனைக்குப் பிறகு கடன்பட்டவர் ஏலம் போட்ட சொத்தை அடமானம் வைத்திருப்பது செல்லாது என்று சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள். ஜில்லாக் கோர்ட்டார் டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை உறுதி செய்தார்கள். ஆகவே அடமானம் பெற்றவர் ஹைக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் K. நாராயணராவ் அடமானம் பெற்றவருக்கும், மிஸ்டர் C. மாதவராயரும், M. பாபுராவும், ஏலத்தில் வாங்கினவருக்கும் ஆஜரானார்கள்.

இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு:—ஏலம் போடப்பட்ட சொத்தில் கடன்பட்டவருக்கிருக்கும் பாத்தியதையைக் காப்பாற்றும் பொருட்டு சி. பு. கோ. 310-வது பிரிவு உண்டாக்கப்பட்டிருக்கிறதே யொழிய ஏலச் சொத்தை வாங்கினவரின் பாத்தியதையைக் காப்பாற்றும்பொருட்டல்ல; ஆகையால் கடன்பட்டவன் தன்பேரில் ஏற்பட்டிருக்கும் டிக்கிரி கடனைத் தீர்க்கும்பொருட்டு ஷை ஏல சொத்துக்களை ஷை பிரிவில் சொல்லப்பட்ட வாய்தாவுக்குள் விற்க சுதந்தரமுடையவனாகிறான். மேலும் சி. பு. கோ. 316-வது பிரிவின்படி ஏல விற்பனை உறுதிப்படுத்தப்பட்டு ஏலத்தில் வாங்கினவனுக்குக் கோர்ட்டாரால் சர்ட்டிபிகேட் பிறப்பிக்கப்படும் பரியந்தம், கடன்பட்டவனுக்கு ஷை ஏல சொத்தில் பாத்தியமிருக்கின்றது. ஆதலால் இந்தக் கேசில் கடன்பட்டவரிடமிருந்து அடமானம் பெற்றுக்கொண்டவருக்கு சி. பு. கோ. 310-A பிரிவின்படி ஏல விற்பனையை ரத்து செய்யும்படி மனு செய்துகொள்ள சுதந்தரமிருக்கின்றது என்று சொல்லி கீழ்க்கோர்ட்டுத் தீர்மானங்களை ரத்து செய்து ஏல விற்பனையையும் ரத்து செய்துவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:— ஷை

இரண்டாவது சீவில் அப்பீல்.

கேசின் விபரம்;—வாதி தென்னாற்காடு ஜில்லா திருக்கோவிலூர் டி. மு. கோர்ட்டில் தமக்கு ஸ்ரோத்திரிய பாத்தியமுடைய நிலத்தில் பிரதிவாதி அக்கிரமமாய்ப் பிரவேசித்துக் கைப்பற்றியிருக்கிறார் என்றும், ஷை நிலம் தமக்குக் கிடைக்கவேண்டுமென்றும் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்கையில், இந்த வியாஜ்ஜியத்திற்குச் சில காலத்திற்கு முந்தி வாதி இதே நிலத்தைக்குறித்தும் ஷை நிலத்தில் பிரதிவாதிகுடிவார பாத்தியதையுடன் அனுபவித்துவந்த வகையில் தமக்கு மூன்று வருஷத்திற்குள்ள கிஸ்தி சேரவில்லையென்றும் ஆகவே மேற்படி தொகை பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும் பிரதிவாதியின்பேரில் தாவாசெய்திருந்ததாகவும் அந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதி, வாதிக்கு இந்த நிலத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும், டிபன்ஸ் கூறினதாகவும், வாதிக்கு இந்த நிலம் சொந்தமா அல்லவா என்கிற பிரஸ்னை அப்போது கோர்ட்டாரால் ஆலோசனை செய்யப்பட்டு அந்த வியாஜ்ஜியம் பைசல் செய்யப்பட்டதென்றும் தெரியவந்தது. ஆதலால் சி. பு. கோ. 13, 43-வது பிரிவுகளின்படி முந்தின வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்தை நடத்துவதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சொல்லி இந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் அசல்கோர்ட்டு தீர்மானமே உறுதி செய்யப்பட்டது.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—வாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் நாராயணராவ் பேசினார்.

வாதி வக்கீல் பேசினது:—முன் வியாஜ்ஜியத்தில், தாவா நிலம் வாதிக்குச் சொந்தமா அல்லவா என்கிற சங்கை நேரான தனி இஷுவாக ஏற்படுத்தப்பட்டு விசாரணை செய்யப்படவில்லை. இ. லா. ரி. 26 கல் 428-ல் சொல்லப்பட்டிருக்கும் கேசில் ஒரு நிலத்தின் வரியை வசூல்செய்யும்படி வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம், பிறகு வாதி தனக்கு அந்நிலத்திலிருக்கும் பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு அதே பிரதி வாதியின்பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்திற்குத் தடையாகாதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் முந்தின வியாஜ்ஜியத்தின் காரணமும், இந்த வியாஜ்ஜியத்தின் காரணமும் ஒன்றல்ல; முந்தினவியாஜ்ஜியம் நிலுவை வரி கிடைக்கவேண்டுமென்று செய்யப்பட்டது. இந்த வியாஜ்ஜியம் பாத்தியதையை ஸ்தாபிக்கக்கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவைகளுமன்றி, முந்தின வியாஜ்ஜியம் ரூபா 500-ருக்குக் குறைந்த தொகைக்குச் செய்யப்பட்டிருக்கிறபடியால் அது ஸ்மால்காஸ்வியாஜ்ஜியம்; ஸ்மால்காஸ் வியாஜ்ஜியத்திற்குச் சட்டப்படி இரண்டாவது அப்பீல் கிடையாது. இ. லா. ரி. 29 சென் 195-ல் ஒரு ஸ்மால்காஸ் வியாஜ்ஜியத்தில் சொல்லப்படும் தீர்ப்பு பின்பு அதே விஷயத்தைக் குறித்துச் செய்யப்படும் ஸ்மால்காஸ் சுபாவமல்லாதவும் சட்டப்படி இரண்டாவது அப்பீல் செய்வதற்கு உரிமையை உடையவுமான ஒரு வியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ் வியாஜ்ஜியமல்ல. ஆகையால் முந்தின வியாஜ்ஜியம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்தமாட்டாது.

இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் தீர்மானம்:—இரண்டு வியாஜ்ஜியங்களுக்கும் பிரத்தியேக வியாஜ்ஜிய மூலம்

இருக்கின்றன. ஆகையால் சி. பு. கோ. 43-வது பிரிவின்படி முந்தின வியாஜ்ஜியம் பிந்திய வியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கமாட்டாது. இ. லா. ரி. 29. சென் 195-ல் ஒரு ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் பிந்தி அதே விஷயத்தைக் குறித்துச் செய்யப்படும் ஸ்மால்காஸ் அல்லாத வியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும்போது கீழ்க்கோர்ட்டுத் தீர்மானங்களை உறுதிப்படுத்த நமக்குச் சாத்தியப்படவில்லை. ஆதலால் முந்தின வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்திற்குத் தடையாயில்லை என்று சொல்லி இந்த வியாஜ்ஜியத்தைக் கீழ்க்கோர்ட்டார் விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யவேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

நகைகளுக்கு ஆசைப்பட்டுக் கொலைசெய்த கேஸ்.

(26—11—06).

கேசின் விவரம்:—கோயமுத்தூர் ஜில்லாவில் நாச்சிக்கவுண்டன் என்பவன் கடந்த செப்டம்பர்மீ நாச்சியாயி என்னும் ஒரு ஸ்திரீயிடம் தன்னுடைய கிராமத்தில் பஞ்சு அகப்படுமென்று சொல்லவே, அவள் தன்னுடைய ஆபரணங்களை அணிந்துகொண்டும் கையில் மூன்று ரூபாய் எடுத்துக்கொண்டும் தன்னுடைய வீட்டாரிடம் சனிக்கிழமை திரும்பிவருவதாய்ச் சொல்லிவிட்டு ஷை நாச்சிக்கவுண்டனுடன் கிராமத்திற்குச் சென்றாள். சென்றவள் ஞாயிற்றுக்கிழமை வரையில் திரும்பிவரவில்லை. அவளுடைய பந்துவாகிய கருப்பண்ணன் என்பவன் அவளைத் தேடிக்கொண்டு ஓடிவந்தபோது கிராமத்திற்கு வரும் வழியில் மூன்றுமனிதர்களைச் சந்திக்க, அவர்கள் ஒரு பெண் பிரேதம் வழியில் கிடப்பதாகச் சொன்னார்கள். கருப்பண்ணன் அவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து அப்பிரேதத்தைப் பார்த்து நாச்சியாயினுடைய பிரேதமென்று திருப்தியடைந்து, நாச்சியாயியை கிராமத்திற்கு அழைத்துக்கொண்டுவந்த நாச்சி முத்துக்கவுண்டனை அவனுடைய தோட்டத்தில்கண்டு அவனுடன் வாதாட, கடைசியில் அவன் நாச்சியாயிபோட்டிருந்த நகைகளைக்கொடுத்தான். ஆகவே நாச்சிமுத்துக் கவுண்டன்தான் இந்தக் கொலையைச் செய்திருக்கவேண்டுமென்று போலிசார் அவனை அரஸ்ட் செய்தார்கள். இந்தக்கேஸ் கோயமுத்தூர் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைசெய்யப்பட்டபோது, கிராமத்தார்கள் மேலே சொல்லப்பட்டபடி பேதப்படாமல் சாக்ஷியம் சொன்னார்கள். ஜூரர்கள் நாச்சிமுத்துக்கவுண்டன் கொலைக்குற்றம் செய்யவில்லை என்று அபிப்பிராயம் கூறினார்கள். செஷன்ஸ் ஜட்ஜி குற்றவாளி நகையைக் கொள்ளையடிக்கவேண்டுமென்ற கருத்துடன் கொலைசெய்திருக்கிறானென்று அபிப்பிராயப்பட்டு, ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தான்.

தீர்ப்பு:—குற்றவாளி கொலை செய்திருக்கிறானென்று சொல்வதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவன் செய்திருக்கும் குற்றத்தின் வலுவை தணிக்கக்கூடிய யாதொரு சமாசாரத்தையும் இந்தக்கேசில் காணோம். ஆகையால் கீழ்க்கோர்ட்டு தீர்மானத்தை உறுதிப்படுத்துகிறோம் என்று கூறி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

லா பாயின்ட்:—ஜாதி வழக்கப்படி மகிமைப் பணம் கேட்டு வாங்குவது மிரட்டி வாங்கின குற்றமாகமாட்டாது.

(21—11—06).

கேசின் விவரம்:—மதுரையில் ஒரு முகமதியர் தம்முடைய சகோதரருக்குச் சுன்னத்துச் சடங்கு செய்தார். அனேக பந்துமித்திரர்கள் வந்திருந்தார்கள். முகமதிய மதாசாரியர்களும், பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களும் வழக்கப்படி வந்தார்கள். சடங்கு ஆரம்பமாகுமுன், பள்ளிவாசல் தர்மகர்த்தா தம்முடைய மனிதனைவிட்டுத் தங்கள் ஜாதி வழக்கப்படிப் பள்ளிவாசலுக்குச் செலுத்தவேண்டிய மகிமைப்பணம் மூன்று ரூபாயைக் கேட்கும்படி சொன்னார். சடங்குக்குடையவர் அப்படிக்கொடுப்பது வழக்கமில்லை என்று சொன்னார். இவருடைய சிறிய தகப்பனார், மகிமைப்பணம் கொடுக்கிறது வழக்கமென்றும், தாமும் அப்படியே ஒரு காலத்தில் கொடுத்திருப்பதாகச் சொல்லவே, சடங்குக்குடையவர் ஒரு ரூபாய் கொடுக்கவந்தார். பள்ளிவாசல் தர்மகர்த்தா அதை வாங்கமாட்டேனென்று சொல்லி "எப்படி இந்த மனுஷன் சடங்கை நடத்திவிடுவான் பார்க்கிறேன்" என்று கோபமாய்ச் சொன்னார். சடங்குக்குடையவர், ஒருக்கால் பள்ளிவாசல் தர்மகர்த்தா தம்முடைய செல்வாக்கைப் பிரயோகப்படுத்திச் சடங்கு நடந்தேறாமல் விக்கினஞ்செய்யக் கூடுமென்று பயந்து மகிமைப்பணத்திற்காக இரண்டு ரூபாய் கொடுத்தார். பள்ளிவாசல் தர்மகர்த்தா அதைப் பெற்றுக்கொண்டார். பிறகு சடங்குகள் நடந்தேறின. சடங்குக்குடையவர், பள்ளிவாசல் தர்மகர்த்தாவும் அவருடைய வேலைக்காரனும் தம்மை மிரட்டிப் பணம் வாங்கினதாக இ. பி. கோ. 383-வது பிரிவின்படி அவர்கள் இருவர்பேரிலும் மதுரை சப் மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் குற்றஞ்சாட்டினார்.

சப் மாஜிஸ்டிரேட் கேசை விசாரணைசெய்து இ. பி. கோ 383-வது பிரிவு குற்றத்தை ஸ்தாபித்து முதல் குற்றவாளி அதாவது தர்மகர்த்தாவிற்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும் ரூபா 50-அபராதமும், இரண்டாவது குற்றவாளிக்கு மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். கைதிகள், மதுரை சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஸப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்தி மூன்றுமாத தண்டனையை மூன்றுவார தண்டனையாக மாற்றினார்.

கைதிகள் இந்த உத்தரவிற்கு விரோதமாக ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—கைதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் W. பார்ட்டன் பேசினார்.

மிஸ்டர் பார்ட்டன் பேசினது:—இ. பி. கோ. 383-வது பிரிவின்படி ஒருவனை தண்டிக்க வேண்டுமானால், அவன் அயோக்கியமான கருத்துடன் மிரட்டியிருக்கிறான் என்று ருஜுப்படவேண்டும். அதாவது, மிரட்டின குற்றத்துடன் அயோக்கியமும் கலந்திருக்க வேண்டும்; இந்தக்கேசில் குற்றவாளிகள் ஜாதி வழக்கப்படி சடங்கு சமயங்களில் கிடைக்கவேண்டிய மகிமைப்பணத்தைக் கேட்டு வாங்கினார்கள். இப்படி கேட்டு வாங்கினதில் அயோக்கியத்தனம் யாதொன்றுமில்லை. இ. பி. கோ. 383-வது பிரிவின்படி ஒருவனை தண்டிக்க, மிரட்டுவதுடன் அயோக்கியத் தன்மையும் அவசியமாய் கலந்திருக்கவேண்டுமென்கிற அம்சத்தைக் கீழ் இரண்டு கோர்ட்டார்களும் கவனிக்கவில்லை என்று சொன்னார்.

தீர்ப்பு—குற்றவாளியின் பாரிஸ்டர் எடுத்துச்சொன்ன அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளுகிறோம். இதுவுமன்றி, சடங்கு சமயங்களில் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் மகிமைப்பணம் வாங்கிவருவது மாமூலானவழக்கமென்று ருஜுவாயிருக்கிறது; ஆகையால் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து இருகுற்றவாளிகளையும் விடுவிக்கும்படி உத்தரவு செய்கிறோம் என்று சொன்னார்கள்.

ரேங்கூன் சீப் கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கி.

லா பாயின்ட்:—சாக்ஷி சாக்ஷியம் சொல்லும்போது அவதூறான வார்த்தைகளைச் சொன்னால், அதற்காக இந்த சாக்ஷியைப் பிராசிக்கியூட் செய்யலாமா?

கேசின் விபரம்:—ஒரு ஐசுவரியவந்தனான பர்மாகாரனை பெக்கு ஜில்லா சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் பிராசிக்கியூட் செய்யும்படி உத்தரவுசெய்தார். இந்தக்கேஸ் ரெங்கூன் சீப்கோர்ட்டார் விசாரணைக்கு வந்தது. பர்மாகாரன் ஒரு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்தார். அதில் ஷை மாஜிஸ்டிரேட்டைக் குறித்து அவதூறான வார்த்தைகளிருந்தன. இம்மாதிரி, கக்ஷிக்காரர்கள் பிரமாணப் பத்திரத்திலாவது அல்லது தாங்கள் சொல்லும் சாக்ஷியத்திலாவது அவதூறான வார்த்தைகளைச் சொன்னால் அவர்களைப் பிராசிக்கியூட் செய்யலாமாவென்று, இந்தக் கேசின் பிராசிக்கியூஷன் தரப்பு பாரிஸ்டராகிய மிஸ்டர் பென்னல், கோர்ட்டாரைக் கேட்டார். இந்தக் கேள்வியைக் குறித்து தர்க்கம் நடந்தபோது, மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கி அடியில் கண்டுள்ளபடித் தீர்மானம் சொன்னார்:—கக்ஷிக்காரர்கள், தங்களுடைய வாக்கு மூலத்திலும், பிரமாணப் பத்திரத்திலும், தங்களுடைய கக்ஷியைப்பற்றி வாதிப்பதிலும், கேசுக்குச் சம்பந்தமில்லாத அவதூறான வார்த்தைகளையும் நிந்தனையான வார்த்தைகளையும் சொல்லி, சாக்ஷியம்சொல்வதுபோல் சொல்லித் தங்களுக்கு இஷ்டமானபடி எதிரியை நிந்தித்து விட்டோம் என்று சந்தோஷப்படுவது பொது நன்மைக்கு அடுத்த விஷயமல்ல. சாக்ஷிகள் இஷ்டப்பட்டபடி நிந்திக்குமாறு விடுவோமாகில், கோர்ட் என்கிற நியாயஸ்தலம் அவதூறானவும், நிந்தனையானவுமான வார்த்தைகளைச் சொல்வதற்குச் சுதந்தரம் கொடுக்கும் ஸ்தலமாய்விடும். ஆகையால் கக்ஷிக்காரர்கள் தங்களுடைய வாக்குமூலத்திலாவது அல்லது பிரமாணப்பத்திரத்திலாவது நிந்தனையான வார்த்தைகளைச் சொன்னால் மானநஷ்டதாவாவிற்கு உள்ளாவார்களென்று அறிந்திருக்கவேண்டும்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

கிரிமினல் அப்பீல்.

ஹைகோர்ட்டு வக்கீலை அடித்த கேஸ்.

(3—12—06).

கேசின் விபரம்:—சென்ற வருஷம் டிசம்பர்மீ த்தில் ஈரோட்டில் டிஸ்டிரிக்ட் முனிசிபாயிருந்த மிஸ்டர் T. B. வாசுதேவ சாஸ்திரியாருக்கும், அந்தக்கோர்ட்டில் வக்கீலாயிருந்துவரும் ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் S. வெங்கடரமண அய்யருக்கும் மிகுந்த விரோதம். இதனால் ஷை டி. மு. வின் வேலைக்காரர்களும், ஷை டி. மு. குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரரும் சேர்ந்து ஷை வக்கீலைக் கடந்த டிசம்பர்மீ 26வ டி. மு. கோர்ட்டிற்குச் சமீபத்தில் வழிமறித்து அடித்தார்கள். இந்தக் குற்றத்திற்காக மூவர்கள் பேரில் ஷை வக்கீல் ஈரோடு சப் மாஜிஸ்டிரேட்முன்னிலையில்குற்றஞ்சாட்ட, மூன்று குற்றவாளிகளுக்கும் இரண்டுவாரக் கடுங்காவல் தண்டனையும் ரூபா. 25-அபராதமும் விதிக்கப்பட்டது. தண்டனை அடைந்த குற்றவாளிகள் ஈரோடு டிப்டி மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்துகொண்டார்கள். ஈரோடு டிப்டி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் சிங்காரவேலுபிள்ளைக்கும், ஷை ஈரோடு டி. மு. விற்கும் சிநேகமென்றும், அவர் அப்பீலை விசாரணை செய்தால் தமக்குச் சரியான நியாயம் கிடைக்கமாட்டாதென்றும், இந்த அப்பீலை வேறே எந்தக்கோர்ட்டிற்காயினும் மாற்றிவிடவேண்டுமென்றும் ஷை வக்கீல் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு மனுசெய்து கொண்டார். ஜில்லா மாஜிஸ்டிரேட் அப்பீலை கோயமுத்தூர் கஜானா டிப்டி மாஜிஸ்டிரேட்டின் பயிலுக்கு அனுப்பிவிடும்படி உத்தரவு செய்தார்.

இந்த உத்தரவிற்கு விரோதமாக குற்றவாளிகள் ஹைகோர்ட்டில் அப்பீல்மனு செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—வக்கீல் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் பார்ட்டனும், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தரப்பிற்கு கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டரும் ஆக இருலாயர்களும் சேர்ந்து அப்பீல் மனுவை எதிர்த்தார்கள்.

உத்தரவு:—ஜில்லா மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோமென்று சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

புல் பெஞ்ச்:—சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல்.

(3—12—06).

லா பயின்ட்:—ஒரு ஹிந்து தகப்பன் தன்னுடைய சுயார்ஜ்ஜிதத்தை உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோனபின்பு அவனுக்குப்பிறந்த குமாரன் அந்த உயிலை ரத்துசெய்ய முடியுமா?

கேசின் விபரம்:—செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூரிலுள்ள செங்கா ரெட்டி என்பவருக்கு இரண்டு பெண்சாதிகளும் தங்கைகளுமிருக்கிறார்கள். இவருடைய மூத்த பாரியாளுக்கு இரண்டு பெண்களிருக்கிறார்கள். செங்காரெட்டிக்குள்ள சொத்துக்களெல்லாம் அவருடைய சுயார்ஜ்ஜித சொத்துக்கள்; அவருடைய இரண்டாவது மனைவி கர்ப்பமாயிருக்கும்போது 1900-ஞு மேமீ இவர் தன்னுடைய இரண்டு மனைவிகளுக்கும், இரண்டு புத்திரிகளுக்கும், தங்கைகளுக்கும் இன்னும் சிலருக்கும் அச்சொத்துசேரும்படி உயில் எழுதிவைத்து இறந்துபோனார். கர்ப்பமாயிருந்த அவருடைய இரண்டாவது மனைவி அதேவருஷம் அவர் இறந்துபோனபின்பு நவம்பர்மீ ஒரு புத்திரனை ஈன்றாள். இந்தப்புத்திரனாகிய சுப்பாரெட்டி தான்பிறந்ததனாலேயேதன் தகப்பன்செய்துள்ள உயில்ரத்தாய்விட்டதென்று சொல்லி, ஷை உயிலினால் நன்மை அடைந்திருப்பவர்களையெல்லாம்பிரதிவாதிகளாகச்சேர்த்துத் திருவள்ளூர்டி.மு.கோர்ட்டில்தன்னுடையகார்டியன்மூலமாகவியாஜ்ஜியம் செய்தார். டி. மு. கோர்ட்டார், குமாரன் பிறந்ததால் உயில் ரத்தாய்விட்டதென்று தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதிகள் ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஜில்லாக்கோர்ட்டார், குமாரன் பிறந்ததால் உயில் ரத்தாகமாட்டாதென்று தீர்ப்பு சொன்னார்கள். வாதியாகிய மைனர் புத்திரன் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். இந்த அப்பீல் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் ஆகிய இருவர்களுடைய விசாரணைக்கு வந்ததில், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், குமாரன் பிறந்துவிட்டதால், தகப்பன் செய்த உயில் ரத்தாய்விட்டதென்று தீர்ப்பு சொன்னார். மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் உயில் ரத்தாகமா

ட்டாதென்று தீர்ப்பு சொன்னார். இருவரும் அப்படி பேதப்பட்ட அபிப்பிராயங்கள் கூறினபோதிலும், மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் சீனியர் ஜட்ஜியானபடியால் அவருடைய அபிப்பிராயமே இந்தக் கேசிற்குத் தீர்மானஞ்சொல்லப்பட்டது.

ஆகவே, மைனர் புத்திரன் ஹைகோர்ட்டில் லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—வாதியாகிய மைனர் புத்திரனுக்கு மிஸ்டர் P. R. சுந்தரமய்யர் பேசினார். பிரதிவாதிகள் தரப்பிற்கு மிஸ்டர் ஜோசப் சத்திய நாடார்.

தீர்ப்பு:—இன்னும் தீர்ப்பு சொல்லப்படவில்லை.

தஞ்சாவூர் சப் கோர்ட்.

ஜட்ஜி.—சப் ஜட்ஜி.

சீவில் அப்பீல்.

மிராசு கிராமங்களில் மிராசுதாரர்களுக்குப் புறம்போக்கு நிலத்திலிருக்கும் பாத்தியதையைப்பற்றிய கேஸ்.

(26—11—05).

கேசின் விபரம்:—வாதிகள் தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூக்காவிலுள்ள ஒரு கிராமத்திற்கு ஏகபோக மிராசுதாரர்கள். அக் கிராமத்தில் ஒரு தடாகமும், அதன படுகையில் தாழைமரங்களு மிருக்கின்றன. பைமாஷ் ரிஜிஸ்டரில் இந்தத்தடாகமும் அதன் படுகையும், புறம்போக்கு நிலமென்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தடாகத்தின் கரையிலுள்ள தாழைமரங்களை கவர்ன்மெண்டார் ஒருவருக்குக் குத்தகை கொடுத்தார்கள். ஆகவே அந்த கிராமத்தின் ஏகபோக மிராசுதாரர்களாகிய வாதிகள், கவர்ன்மெண்டார் தரப்பில் இந்தியா காரியதரிசியை முதல் பிரதிவாதியாகவும், குத்தகை எடுத்தவரை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்துத் திருவாலூர் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியமாடினார்கள்.

வாதிகளின் கக்ஷிவாதம்:—தடாகம் வாதிகளுக்குச் சொந்தமென்றும், பைமாஷ் ரிஜிஸ்டரில் ஷை தடாகம் புறம்போக்கு என்று தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும், மிராசு கிராமங்களிலிருக்கும் புறம்போக்குகளும், தார்சு நிலங்களும் தஞ்சாவூர் ஜில்லாவில் மிராசுதாரர்களுக்குச் சொந்தமாயிருந்து வருவது நீடித்தகால வழக்கமாயிருக்கிறதென்றும், ஷை தடாகம் கவர்மெண்டாருக்குச் சொந்தமாயிருந்த போதிலும், தங்களுடைய அனுபோகத்தில் நீடித்த காலம் இருந்து வருகிறபடியால் அத்தடாகம் தங்களுக்கே சொந்தமென்றும் சொல்லி பிரதிவாதிகள் தாழை மரத்தில் பிரவேசிக்காமலிருக்கும்படி இஞ்சங்ஷன் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

டி. மு. கோர்ட்டார் பிரதிவாதிகளுக் கனுகூலமாகத் தீர்ப்பு சொன்னார்கள்.

வாதிகள் தஞ்சாவூர் ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜியாகிய மிஸ்டர் F. D. P. ஓல்ட் பீல்ட் I. C. S. தஞ்சாவூர் ஆக்டிங் கலெக்ட்டரா யிருந்தபோது ரெவினியூ இலாகா தரப்பில் இந்தக் கேசை விசாரணை செய்து பைசல் செய்திருக்கிறபடியால் இந்தக்கேசை விசாரணை செய்யும்படி சப் ஜட்ஜியிலுக்கு அனுப்பினார்.

லாயர்கள்:—ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும், தஞ்சாவூர் பிளீடராகிய மிஸ்டர் P. V ரெங்கநாத சாஸ்திரியாரும் வாதிகள் தரப்பிற்கு ஆஜரானார்கள். பிரதி வாதிகள் தரப்பிற்குத் தஞ்சாவூர் பப்ளிக் பிராசிக்கியூட்டர் ஆஜரானார்.

தீர்ப்பு:—வாதிகள், ஷை தடாகம் தங்களுடைய அனுபோகத்திலிருக்கிறதென்றும், மிராசு கிராமத்திலிருக்கும் புறம்போக்கு மிராசுதாரர்களுக்குச் சொந்தமாயிருந்துவருவது வழக்கமென்றும் ருஜுப்படுத்தவில்லை என்று அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்.—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்,

மிஸ்டர் ஜஸ்டிஸ் மென்சன்.

லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல்.

லா பாயின்ட்:—சாக்ஷியம் சொல்ல வராத ஒரு சாக்ஷிக்காரன் பெற்றுக்கொண்ட படிச்செலவை வசூல் செய்ய தாவா செய்யலாமா?

வாதி:—நீலகிரி வீரபத்திர செட்டி.

பிரதிவாதி:—நடராஜதேசிகர்.

கேசின் விபரம்:—சிவகங்கை ஜமீனைச்சேர்ந்த குன்றக்குடி மடாதிபதியாகிய நடராஜதேசிகர்பேரில் வாதி ஒரு டிக்கிரி பெற்றார். வாதி ஷை டிக்கிரியை நிறைவேற்றுகையில், மடத்துச் சொத்துக்களை ஜப்திசெய்யக் கூடாதென்று பிரதிவாதி ஆக்ஷேபித்தார். வாதி ஷை நிறைவேற்றிய நடவடிக்கையில் தன் தரப்பில் சாக்ஷியம் சொல்லும்படி பிரதிவாதிக்குச் சம்மன் அனுப்பிப் படிச்செலவு ரூ 57-12-ம் சேர்த்து அனுப்பினார். பிரதிவாதி படிச்செலவையும் சம்மனையும் பெற்றுக்கொண்டு சாக்ஷியம் சொல்லக் கோர்ட்டிற்கு வரவில்லை.

ஆதலால் வாதி மதுரை சப் கோர்ட்டில் ஷை தொகை ரூ. 57-12-ம் பெறும் பொருட்டுப் பிரதிவாதியின்பேரில் பிரியாது செய்தார்.

சப் ஜட்ஜி மிஸ்டர் W. கோபாலாசாரியார் வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்.

பிரதிவாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்ய, இந்த மனு சீப் ஜஸ்டிஸ் அவர்களால் விசாரணை செய்யப்பட்டு அசல் கோர்ட்டு தீர்மானமே உறுதிசெய்யப்பட்டது. பிரதிவாதி ஹைகோர்ட்டில் லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் K. சீனிவாச அய்யங்கார் பிரதிவாதி தரப்பிற்கும், மிஸ்டர் K. N. அய்யாவையர் வாதிதரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் சீப் ஜட்ஜியின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு சப் கோர்ட்டு தீர்ப்பை உறுதிசெய்தார்கள்.

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

காளாஸ்திரி எஸ்டேட் அசல் வியாஜ்ஜியம்.

வாதி:—K. A. சீனிவாசராவ்.

பிரதிவாதிகள்:—(1) ராஜா தாமரதிம்ம நாயக பகதூர்.

(2) காலஞ்சென்ற ஜெமீந்தாரின் மைனர் விதந்து.

கேசின் விவரம்:—காளாஸ்திரி எஸ்டேட்டிற்கு இப்போதிருக்கும் ஜெமீந்தாருக்கு முன்னிருந்த ஜெமீந்தார் வாதியின் தகப்பனாரிடமிருந்து ரூபா, 8000-கடன் வாங்கி இந்தத்தொகையின் வருஷாந்த வட்டியை ஒவ்வொருவருஷமும் ஷை காலஞ்சென்ற ஜெமீந்தார், வாதியின் தகப்பனாருக்குச் சென்னபட்டணத்தில் மேமீ 31உக்குள் செலுத்திக்

கொண்டு வருகிறதென்றும், வாதியின் தகப்பனார் பணம் தேவையாயிருக்கிறதென்று பத்துமாத நோட்டீஸ் கொடுத்தால் ஷை கெடுவுக்குள் முழுத்தொகையையும் கூடுதலான வட்டியையும் ஷை ஜமீன்தார் செலுத்திவிடவேண்டுமென்றும், ஷை ஜமீன்தார் வாதியின் தகப்பனாருக்கு 1884-ம்ஆ ஜூலைமீ 20உ ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தார். கடன் பத்திரத்தின்படி அசலும் வட்டியும் கூடின ரூபா 30711-10-5. இப்போதிருக்கும் காளாஸ்திரிராஜாவாகிய-ராஜா தாமரதிம்ம நாயக பகதூரிடமிருந்தும் ஷை காலஞ்சென்ற ஜமீன்தாரின் மைனர் விதந்துவினிடமிருந்தும் கிடைக்கவேண்டுமென்று இருவரையும் கக்ஷிக்காரராகச்சேர்த்து வாதி ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

முதல் பிரதிவாதி அடியில் கண்டபடி எழுத்து-வாக்கு மூலம் தாக்கல் செய்திருக்கிறார்:—வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்கு உள்ளாயிருக்கிறது. காளாஸ்திரி ஜெமீன் பாகிக்கப்படாத எஸ்டேட், பிரதிவாதி வார்சுக் கிரமப்படி அந்த எஸ்டேட்டை அடைந்திருக்கிறார். இந்தக்கடன் வாங்கப்பட்டிருந்தால் ஜெமீன்தாரின் சொந்தக்கடனா யிருக்கும். அதற்கு எஸ்டேட்டு கட்டுப்படமாட்டாது.

லாயர்கள்:—மிஸ்டர் ராமசந்திரராவ்சாயப் வாதிக்கும், மிஸ்டர் C. P. ராமசாமி அய்யர் முதல் பிரதிவாதிக்கும் ஆஜரானார்கள். இரண்டாவது பிரதிவாதி வக்கீலும் வைக்கவில்லை. நேரிலும் ஆஜராகவில்லை.

அடியிற்கண்ட இஷியூக்கள் ஏற்படுத்தப்பட்டன. காளாஸ்திரி எஸ்டேட்டை முதல் பிரதிவாதியின் சொந்த சொத்தாக இந்தக் கடனுக்குக் கட்டுப்படுத்தலாமா? தாவா கடன், எஸ்டேட்டைக் கட்டுப்படுத்தும்படியான சொந்தக் கடனா? குடும்பத்தைக் கட்டுப்படுத்தாத செலவுகளுக்கு இந்தக் கடன் வாங்கப்பட்டதா? தகப்பனாரால் வாங்கப்பட்ட தாவா கடனுக்கு முதல் பிரதிவாதி புத்திர ஸ்தானத்தில் கட்டுப்பட்டவரா? அப்படி கட்டுப்பட்டவரானால் எவ்வளவு கடனுக்கு?

இந்த வியாஜ்ஜியம் முதல் பிரதிவாதியின் பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமல்லவென்றும், காளாஸ்திரி எஸ்டேட்டின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் வாதி ஒப்புக்கொண்டார்.

கோர்ட்டார், இருதரப்பாரும் தஸ்தாவேஜிகளை தாக்கல் செய்யும்பொருட்டு இரண்டுவார கெடுவு கொடுத்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் ரிவிஷன்மனு.

வாதி:—அலுவூர் கிராமமுனிசிப்.

பிரதிவாதி:—வைத்தி வகையறா.

கேசின் விவரம்:—அலுவூர் என்கிற கிராமம் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கிறது. இந்தக் கிராமத்தில் ஷை வாதிகளாகிய வைத்தி வகையறா திருடியதாகக் கி. மு. குற்றஞ் சாட்டி இவர்களுக்கு விலங்கிட்டு மூன்று மணி நேரம் பாராவில் அடைக்கும்படியாக உத்தரவு செய்தார். கிராம முனிசிப்பின் சேவகர்கள் இவர்களுக்கு விலங்கு போட அழைத்துக்கொண்டு போகும்போது இவர்கள் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். ஆதலால் கி. மு., இ. பி. கோ. 224-வது பிரிவின்படி குற்றவாளிகள்பேரில் தஞ்சாவூர் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றஞ் சாட்டினார். இவர் கேசை விசாரணை செய்து 1905ஆ மேமீ 27உ குற்றவாளிகளை விடுதலை செய்தார். அதன்பேரில் கி மு. ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்து உத்தரவு பெற்று மறுபடியும் குற்றவாளிகளை இ. பி. கோ. 224-வது பிரிவின் குற்றத்திற்கே, வல்லம்-இரண்டாவதுகிளாஸ்மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றஞ் சாட்டினார். இவரும் கேசை விசாரணை செய்து அக்டோபர்மீ 30உ குற்றவாளிகளை விடுதலை செய்தார். இதன் பிறகு கி. மு. தாம் குற்றவாளிக்குக் கொடுத்த விலங்கு தண்டனையை நிறைவேற்றி வைக்கும்படியாக தஞ்சாவூர் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிற்கு மனுசெய்துகொண்டார். மாஜிஸ்டிரேட் மனுவை அங்கீகரித்துக்கொண்டு எதிரிகளுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். இந்த மாஜிஸ்டிரேட், கி. மு. வின் மனுவின்பேரில் குற்றவாளிகளுக்குக் கொடுத்திருக்கும் நோட்டீசை ரத்து செய்யும்படி, குற்றவாளிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். இதுவுமன்றி, கி. மு. குற்றவாளிகளுக்கு விலங்கு தண்டனை விதித்ததை ரத்துசெய்யும்படியும் 15-வது சார்ட்டர் ஆக்ட்டின்படி வேண்டிக்கொண்டார்கள். இதற்கு அடியில் கண்ட காரணங்கள் கூறினார்கள்:—(1) கி. மு. வால் குற்றவாளிகள் சட்ட ஒழுங்குப்படி கி. மு. வால் விசாரணை செய்யப்பட்டு அவர்கள் முன்னிலையில் தண்டனை சொல்லப்படவில்லை. (2) குற்றவாளிகளின் அந்தஸ்தையும் வாழ்க்கை நிலைமையையும் சீர் தூக்கிப்பார்க்கின், அவர்களுக்கு மிகுந்த கேவலமான விலங்கு தண்டனை விதித்தது சட்டவிரோதம். (3) எந்தப் பொருள் திருடப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அப்பொருள் ஒரு ரூபாய்கிரயத்திற்கு மேற்பட்டதாகையால் இந்தக் கேசைப்பிடித்து விசாரணைசெய்ய கி. மு. விற்கு அதிகாரம் கிடையாது. (4) காவலிலிருந்தபோது ஓடிப்போய்விட்டதாகக் கேஸ் கொண்டுவந்தது குற்றவாளிகளுக்கு விரோதமான கள்ளர்களும், கி.மு. வும் சேர்ந்து கட்டுப்பாடு செய்து கொண்டுவந்த கேசே ஒழிய உண்மையான கேசல்ல. இந்தக் கேசை இரண்டு முறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் விசாரணைசெய்து தள்ளிவிட்டார்கள். (5) கி. மு. குற்றவாளிகளுக்கு விலங்கு போடாமல் விடுகிறதில்லை என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

கோர்ட் நடவடிக்கை:—குற்றவாளிகள் தரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர். ரிச்மண்டு பேசி மனுவை ஆஜர்படுத்தினார். கோர்ட்டார் மனுவை தாக்கல்செய்துகொண்டார்கள்.

கும்பகோணம் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் A. G. பனர்ஜி I. C. S.

கேசின் விவரம்:—தருமபுரமடம் பண்டார சந்நிதியாகிய சிவஞான சம்பந்தர், நவம்பர்மீ 1உ திருப்பனந்தாளில் இறந்தார். இவர் ஜீவதசையிலிருக்கையிலேயே தமக்குப்பின் தமது மடத்துக்கு மாணிக்கவாசக தேசிகரென்பவரை மடாதிபதியாக நியமித்திருந்தார்கள். ஆனால் தருமபுர மடம் வேறொரு பண்டாரசந்நிதியின் வசமாயிருந்தது. சிவஞான சம்பந்தர் கால வியோகமானபடியால், அச்சமயம் தருமபுரமடம் யார் வசத்திருந்ததோ அவர், இறந்துபோனமடாதிபதியாகிய சிவஞானசம்பந்தருக்கு ஈமக்கடன் முதலியனசெய்யவேண்டுவது தம்மைப்பொறுத்தகடனென்றும், ஆதீனசொத்துக்களுக்கும் தாமே உரியரென்றும், ஆகவே இக்காரியங்களுக்கு விவ்லங்கம் நேராதிருக்கும்படித் தமக்குப் பாதுகாப்பாகப் போலீஸ்பந்தோபஸ்து செய்து கொடுக்கவேண்டுமென்றும் கும்பகோண மாஜிஸ்டிரேட்டுக்குத் தந்திகொடுத்தார். சிவஞான சம்பந்தர் நியமித்த வார்சு திருப்பனந்தாள் மடாதிபதிக்கு மிகவும்வேண்டியவர். திருப்பனந்தாள் மடாதிபதி தருமபுர மடத்தில் இப்போதிருக்கும் பண்டார சந்நிதிக்கு ஜன்மவிரோதி. ஆகையால், ஈமக்கடனாகிய மரணக் கிரியைகளை நடத்துவ

தில் இரு கக்ஷிக்காரர்களுக்கும் கலகமுண்டாகி பொது அமரிக்கை கெட்டுப்போகுமென்று மாஜிஸ்டிரேட்டு அபிப்பிராயப்பட்டு, கி. பு. கோ. 144-வது பிரிவின்படி இரு கக்ஷிக்காரர்களுக்கும் நோடீஸ் அனுப்பி விசாரணை செய்தார்.

மாணிக்கவாசக தேசிகர் சொன்ன கக்ஷி:—சிவஞான சம்பந்தர் திருப்பனந்தாளில் இறந்துபோனார். அவரை திருப்பனந்தாள்மடத்துத் தம்பிரானுடைய தோட்டத்தில் சமாதி செய்யப்பட்டது மரணக்கிரியைகள் முதலியவற்றை நானே நடத்தினேன். இப்போது மூன்றுநாள் கிரியையைச் செய்ய ஆரம்பித்துவிட்டேன். திருப்பனந்தாள் தம்பிரான் தமக்கு இஷ்டப்படாதவர்களைத் தோட்டத்துக்குள் விடமாட்டார். அவரைக் கட்டுப்படுத்துவதற்கு யாதொரு நியாயமுமில்லை.

எதிரிசொன்ன கக்ஷி:—வார்சுக் கிரமப்படி எனக்குத்தான் காலஞ்சென்ற சுவாமிகளின் மரணக்கிரியையைச் செய்யும் சுதந்தரமிருக்கிறது. நான் தருமபுர மடத்தில் ஷை கிரியைகளைச் செய்துகொள்கின்றேன். திருப்பனந்தாள் சமாதியில் இப்போது செய்யவேண்டுமென்பது அவசியமல்ல.

கோர்ட்டார் உத்தரவு:—மாணிக்கவாசக தேசிகர் கருமக் கிரியைகளைத் திருப்பனந்தாளில் செய்துகொள்ளலாம். தருமபுரமடத்தார் தருமபுரத்தில் செய்துகொள்ளலாம். ஆனால் திருப்பனந்தாளில் நடத்தப்படும் கிரியைகளுக்கு, தருமபுரகக்ஷியைச் சேர்ந்தவர்கள் யாரேனும் வந்தால் அவர்களை ஆக்ஷேபியாமலும், தொந்தரை செய்யாமலும், தீங்கு புரியாமலும் கிரியை நடக்குமிடத்தில் விடவேண்டும். ஆனால் தருமபுர பண்டார சந்நிதி அந்த ஸ்தலத்திற்கு வரவேண்டுமானால், போலீசாருக்கும், மாஜிஸ்டிரேட்டுக்கும் மூன்று நாள் முந்தி நோடீஸ் கொடுத்து வரவேண்டும். அப்படி வந்தபோதிலும் சமாதி அருகிற் சென்று யாதொரு கிரியையும் செய்யலாகாது.

சிவ சமுத்திரம் பாஷாணக் கொலைக்கேஸ்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணியஐயர்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

கேசின் விவரம்:—சிவ சமுத்திரம் மின்சார வேலைப் பட்டரையில் மெஸர்ஸ் C. வார்டன், W. மெல்லோர் என்கிற இரண்டு ஐரோப்பியர்கள் உத்தியோகமாயிருந்தார்கள். இவர்கள் உத்தியோகத்திலிருக்கையில் இருவரும் ஒரே பங்களாவில் வசித்திருந்தனர். இருவரும் கடந்த செப்டம்பர்மீ 3௳ இரவு ஒரு பெண்பிள்ளையை யழைத்து வரும்படியாகத் தங்களுடைய பட்ளருக்குச் சொன்னார்கள். பட்ளர் போகமாட்டேனென்றுசொல்ல, அவனை ஐரோப்பியர்கள் அடித்தார்கள், அவன் ஒளிந்துகொண்டான். பிறகு தமது பங்களாவுக்குச் சமீபத்தில் வசித்திருந்த நாராயணி என்பவனை அழைத்துவரும்படி தமது வேலைக்காரனாகிய பாஸ்டியனை அனுப்பினார்கள். நாராயணி வந்து சேர்ந்தான். அவனிடம் ஒரு பெண்பிள்ளையை யழைத்து வரும்படிச் சொன்னார்கள். அவனும் போக மாட்டேனென்று சொல்ல, அவனுக்குச் சாராயத்தைக் கொடுத்து அவனோடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்பு, வெங்கடா என்பவனை அழைத்துவரும்படி தங்கள் வேலைக்காரனாகிய பாஸ்டியனை அனுப்பிவிட்டு நாராயணியை யடித்துக் கார்பாலிக் ஆஸிட் என்னும் பாஷாணத்தை அவன் வாயில் ஊற்றினார்கள். அதனால் அவன் தொண்டை வெந்துபோய்விட்டது. நாராயணி கூக்குரலிட்டழ, அவனை அவ்வைரோப்பியர்கள் வீட்டைவிட்டுத் துரத்தினார்கள். அவன் தங்கை அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட, அங்கே அவன் இறந்து போனான்.

அவன் இறக்குமுன் எழுதிவைத்த வாக்குமூலமாவது:—"ஐரோப்பியரிருவரும் கர்பாலிக் ஆஸிட் என்னும் பாஷாணத்தைத் தன் வாயில் ஊற்றினார்கள் என்று எழுதிவைத்தான்." பிரேதபரிசோதனை செய்து வயிற்றுப்பையை கெமிகல் எக்ஸாமினருக்கு அனுப்பினார்கள். அவர் அதனைப் பரிசோதித்து அதில் பாஷாணமிருப்பதாக ஸர்டிபிகேட்கொடுத்தார். ஷை இருவர்மீதும் குற்றம்சாட்டப்பட்டு பெங்களூர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்ததில், குற்றவாளிகளிருவரும் விடுதலை யடைந்தார்கள். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தம்முடைய தீர்ப்பில்,"இந்தக்கேசில்பிராசிகூஷன் தரப்பில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியமெல்லாம் அநுமான சாக்ஷியமென்றும், மரண வாக்குமூலம் எழுதிவைப்பவர்கள் இறக்கும்போது பொய் சொல்லிக்கொண்டிறக்கமாட்டார்கள் என்கிற கருத்துடன் அந்த வாக்குமூலத்தை நம்புவது வழக்கமென்றும், ஆனால் அப்படி மரண வாக்குமூலம் எழுதிவைப்பவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால்மட்டும் நம்பலாமே தவிர, இந்தக் கேசில் மரணவாக்குமூலம் கொடுத்து இறந்துபோனவன் கேவலமான இந்து ஜாதியைச் சேர்ந்தவனென்றும், அவன் ஆயுள் நாள்வரை, பொய்சொல்லிக்கொண்டிருந்தவனென்றும் ஆதலால், அவன் வாக்குமூலத்தை நம்பலாகாதென்றும், ப்ராஸிகூஷன் தரப்பார் இரு குற்றவாளிகளும் கொலைசெய்ததற்குக் காரணம் ருசுப்படுத்தவில்லையென்றும்" தமது தீர்ப்பில்சொல்லியிருக்கிறார்.

மைசூர் கவர்ன்மெண்டார் குற்றவாளிகளை விட்டுவிட்டது நியாயவிரோதமென்று அபிப்பிராயப்பட்டு, சென்னை ஐகோர்ட் பப்ளிக்ப்ராஸிகூட்டருக் கறிவிக்க, மி-ர். C. சங்கர நாயரவர்கள் கிரிமினல் ரிவிஷன் மனு தாக்கல் செய்யும்போது, அடியிற்கண்ட அபீல் கிரௌண்டுகளை எடுத்துக்கூறினார்.

1. கி. பு. கோ. 153-வது பிரிவின்படி குற்றவாளிகளை விட்டுவிட்டது நியாய விரோதம்.

2. மாஜிஸ்டிரேட் மரண வாக்குமூல சாக்ஷியத்தைத் தள்ளிவிட்டது நியாய விரோதம்.

3. மாஜிஸ்டிரேட் அனுமான சாக்ஷியங்களை அடியோடு தள்ளிவிட்டது நியாய விரோதம்.

4. குற்றவாளிகள் குற்றத்தை ஒரு சமயம் ஒப்புக்கொண்ட அம்சத்தையும் மாஜிஸ்டிரேட் அலக்ஷியமாக விட்டுவிட்டது நியாய விரோதம்.

உத்தரவு:—கோர்ட்டார் மநுவை ஏற்றுக்கொண்டு எதிரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல்.

வாதி:—சுப்பிரமணிய ஆசாரி.

பிரதிவாதி:—இந்தியா செக்ரிடரி.
(கவர்ன்மெண்டார்.)

லா பாயின்ட்:—விதிக்கக்கூடாத தீர்வையை கவர்ன்மெண்டார் விதித்து வசூலித்தால், அந்தத் தீர்வைத் தொகையைத் திரும்பிப் பெறுவதற்காக கவர்ன்மெண்டார் பேரில் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தை ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிப்பதற்கு அதிகாரமிருக்கிறதா?

கேசின் விவரம்:—தூத்துக்குடியில் வாதிக்குச் சொந்தமான தீர்வைக்குட்படாத ஒரு நிலத்திற்குப் பிரதிவாதிகள் வாதியிடமிருந்து தீர்வையை வசூலித்து விட்டார்கள், இந்தத் தீர்வைத் தொகை, பிரதிவாதி யிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி தூத்துக்குடி சப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். (1904-வது வருஷத்திய ஸ்மால் காஸ் 744-நெ.) சப் கோர்ட்டார், பிரதிவாதிகளாகிய கவர்ன்மெண்டார்பேரில் டிக்ரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி தரப்பில் பப்ளிக் பிராசிக்கியூட்டர், ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார். (1905-வதுஹுத்திய சிவில் ரிவிஷன்மனு 301) மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் இந்த மனுவை விசாரணை செய்து புரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட்டு இரண்டாவது ஷெட்யூல் 9-வது ஆர்ட்டிகலின் பிரகாரம் இப்படிப்பட்ட கேசை ஸ்மால் காஸ் கோர்ட்டார் பிடிக்க அதிகாரமில்லை என்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—கனம் பொருந்திய மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அவர்கள் அப்பீல்தார் தரப்பிற்குப் பேசினார்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தை ஸ்மால்காஸ் கோர்ட்டார் பிடித்து விசாரிப்பதற்கு அதிகாரமற்றவர்கள். பிரதிவாதியின் செலவை வாதி கொடுக்கவேண்டும். சரியான கோர்ட்டில் தாக்கல் செய்யும்படி உத்தரவு செய்து பிராதை வாப்பீஸ் செய்கிறோம்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸடிஸ் மில்லர்.

கிரிமினல் அப்பீல்.

பிரியாதி:—ராஜ அச்சம்மாள்.

எதிரி:—சாவுகார் ஜமெட்டூர் பால ஒபியா.

கேசின் விவரம்:—இந்தக் கேஸ் கடப்பை ஜில்லாவில் நடந்தது. பிரியாதி ராஜ அச்சம்மாள் பல்லாரியிலுள்ள ஒரு பாரி வர்த்தகரின் மனைவி. புருஷன் இரண்டாவது விவாகம் செய்துகொண்டதில் முதல் மனைவியாகிய ராஜ அச்சம்மாளுக்குச் சிறிது மனஸ்தாபமுண்டாகிப் போலாவரத்தில் தம்முடைய தாயார் கிரகத்தில் வசித்துக்கொண்டுவரும்போது, இந்த ஸ்திரீயின் தாய் மாமனாகிய பெத்த ஒபியா என்பவர் இந்த ஸ்திரீக்கும் அவருடைய புருஷனுக்கு முள்ள மனஸ்தாபத்தைத் தீர்த்து ஷை ஸ்திரீயைப் பல்லாரிக்கு அனுப்பும்போது நகைகளை இப்போது போட்டுக்கொண்டு புருஷன் வீட்டிற்குப் போவது அவ்வளவு உசிதமான காரியமல்ல வென்று சொன்னார். சொல்லவே, ஷை ஸ்திரீ தம்முடைய நகைகளை எல்லாம் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்பொருட்டு பெத்த ஒபியாவிடம் கொடுக்க, அவர் தன்னுடைய குமாரனாகிய பால ஒபியாவினிடம்கொடுத்து இரும்புப்பெட்டியில் பத்திரமாய் வைக்கும்படி சொன்னார். பெத்த ஒபியாவும் பால ஒபியாவும் ஆகிய இருவர்களும், ஐசுவரியவர்த்தகர்களான சாவுகார்கள். ஷை ஸ்திரீ பெல்லாரியில் புருஷனுடைய கிரகத்திலிருக்கும்போது, இந்த இரண்டு ஒபியாக்களும்சேர்ந்து ஷை நகைகளை யாங்கட்டையா என்பரிடம் அடமானம்வைத்து 1905ஹு ஜனவரிமீ 12௳-யும், மார்ச்சுமீ 12௳-யுமாக மொத்த ரூபா 4400-பெற்றுக்கொண்டதாகவும், இந்த இரண்டு ஒபியாக்களும் ஓடிப்போய் விட்டார்களென்றும், பிரியாதி, இரு ஒபியாக்கள்பேரிலும் நம்பிக்கைமோசக்குற்றஞ்சாட்டினார். பால ஒபியாமட்டிலும் ஜூன்மீ வாண்டிமிட்டா என்னு மிடத்தில் அரஸ்ட் செய்யப்பட்டார். அவரை ஜம்மலமடுகு ஸப்டிவிஷன் மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்து ஒருவருஷக் கடுங்காவல் தண்டனையும் 500—ரூபா அபராதமும், அபராதங்கட்டத்தவறினால் 6-மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். குற்றவாளி கடப்பை செஷன்ஸ் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள, அசல்கோர்ட்டுத் தீர்மானமே உறுதிசெய்யப்பட்டது. குற்றவாளி மறுபடியும் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மநு தாக்கல்செய்து கொண்டு தன்னை ஜாமீன் பேரில் விடும்படியாக வேண்டிக்கொண்டார்.

உத்தரவு:—மநுவை தாக்கல் செய்யும்படி உத்தரவு செய்து ஜாமீன் பேரில் விடமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர்.

சர்ரால்ப் பென்சன்.

சீவில் அப்பீல்.

வாதி:—G. ராமசாமி.

பிரதிவாதி:—கவர்ன்மெண்டார்.

கேசின் விவரம்:—கிருஷ்ணா ஜில்லா தென்னைலத் தாலூக்காவில் கவர்ன்மெண்டார் வாதிக்குச் சொந்தமான 19-எக்கர் நிலத்தை ஜம்பெளிரோடைச் சீர்த்திருத்துவதற்காக வாங்கிக்கொண்டார்கள். இந்த நிலத்திற்குக் ஒரு எக்கர் ஒன்றுக்கு ரூ. 400-விகிதம் கொடுக்கும்படி பிரேகாம்பன்சேஷ ரேபித்து தாசில்தார், எழுதினார். கலெக்டர் அதே பிரகாரம் வாதிக்குத் தொகைகொடுக்கும்படி உத்தரவு செய்ததுமன்றி, 100-க்கு 15-மேனிக்கு அலவுன்ஸ் பணமும் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். வாதி ஒரு சதுர கெஜம் ஒன்றுக்கு ரூ. 2-மேனிக்குக் கூடுதலான பணம்வேண்டுமென்று கேட்டார். இந்தக் கேசை கலெக்டர் ஜில்லா ஜட்ஜிக்கு அனுப்பினார். அவர் இந்தக் கேசை விசாரணை செய்து கட்டடம் கட்டுவதற்கு இந்த நிலத்தை வாங்கிக் கொள்ளுபவர்கள் அதிக தொகை கொடுப்பார்கள் என்று வாதி சொல்லுவதை முன்னிட்டு வாதிக்கு அதிக காம்பன்ஸேஷன் பணம் கொடுக்கக்கூடாதென்று சொல்லி கலெக்டர் தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு:—இந்தக் கேசில் வாதிக்குச் சொந்தமான நிலத்தின் கிரயம் பொதுவாய் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. அப்படி நிர்ணயித்து இந்தக் கேசை சட்டப்படி பைசல் செய்யும்படி ஜில்லாக் கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்து தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

வாதி:—மெசர்ஸ் காக்ஸ் அண்டுகோ.

பிரதிவாதி:—கமர்ஷியல் அண்டு லாண்டுமார்ட்கேஜ் பாங்கி லிமிடெட்.

கேசின் விவரம்:—சென்னையிலிருக்கும் பிரதிவாதி பாங்கிக்கு, பெங்களூரில் ஒரு பிராஞ்சு பாங்கி யிருக்கின்றது. இந்த பாங்கியில் பெங்களூரிலிருக்கும் மேஜர் ஹாரிசன் பணம் போட்டு வாங்கிக்கொண்டுவந்தார்.

சென்ற வருஷம் (1905) டிசம்பர்மீ 15௳ மேஜர் ஹாரிசனுக்குச் சொந்தமான தொகை ரூபா 3347-ம் சில்லறையும் பிரதிவாதி பாங்கியிலிருந்தது. இந்தத் தொகையிலிருந்து மேஜர் ஹாரிசன் சென்ற மார்ச்சுமீ 14௳ ஒரு செக்கனுப்பி ரூபா 347 - 14 - 2, வாங்கிக்கொண்ட பிறகு ஜூன்மீ 6௳ பிரதிவாதி பாங்கியில் பணம் வாங்கிக்கொள்ளும்படியாக மெசர்ஸ் காக்ஸ் கம்பேனியாருக்கு ரூ 3000-

க்கு ஒரு செக்கு கொடுத்தார் இந்தச் செக்கை ஷை கம்பெனியார் சென்னையில் பிரதிவாதி பாங்கியில் ஜூலைமீ 8உ ஆஜர்படுத்திப் பணம் கேட்டார்கள். பிரதிவாதிபாங்கியார்செக்கை அவமதித்தார்கள். (அதாவது பணம் கொடுக்கவில்லை). ஆகையால் இந்த காக்ஸ் கம்பெனியார், பிரதிவாதிகள் செக்கை அநியாயமாய் அவமதித்ததற்காக ரூபா. 5500-க்கு நஷ்டம் கொடுக்கவேண்டுமென்று ஹைகோர்ட் ஒரிஜினல் சயிடில் பிரதிவாதி பாங்கியின்பேரில் வியாஜ்ஜியம்கொண்டுவந்தார். சிப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட் அவர்கள் இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்தார்.

பிரதிவாதி பாங்கியார் சொன்ன கக்ஷி:—மேஜர் ஹாரிசன், பாங்கியிலுள்ள தம்முடைய பணத்தைக்கொண்டு தமது கடன்காரர்கள் கணக்கைத் தீர்த்துவிடும்படியாகப் பிரதிவாதி பாங்கியின் பெங்களூர் பிராஞ்சி பாங்கியின் ஏஜண்டாகிய மிஸ்டர் ஹாகின்சுக்கு உத்தரவு செய்திருந்தார் என்றும், அதன் பிரகாரம் ஷை கடன்காரர்களுக்குப் பாங்கி வசமிருந்த பணம் கொடுக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், வாதி கம்பெனியார் ஆஜர்படுத்தின செக்கிற்குப் பணம் கொடுக்க, பாங்கியார் வசம் மேஜர் ஹாரிசனுக்குச் சொந்தமான பணமில்லை என்றும் டிபன்ஸ் சொன்னார்கள்.

மேஜர் ஹாரிசன் தம்முடைய கடன்காரர்களுக்குப் பாங்கியிலிருந்த தம்முடைய பணத்தைக் கொடுத்துவிடும்படி பெங்களூர் பிராஞ்சு பாங்கியின் ஏஜண்டாகிய மிஸ்டர். ஹாக்கின்சுக்கு அதிகாரம் கொடுத்தது ருஜுப்படவில்லை என்று சொல்லி கோர்ட்டார், பிரதிவாதிகள் வாதிக்கு ரூ. 1500-நஷ்டம் கொடுக்கும்படித் தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதி பாங்கியார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் A. சீட் வாதிக்கும், பாரிஸ்டர் மிஸ்டர் ஷாமியர் பிரதிவாதிக்கும் பேசினார்கள்.

தீர்ப்பு:—இதற்கு முன் மேஜர் ஹாரிசன் பாங்கியிலிருந்து வாங்கின பணமெல்லாம் செக்குகள் அனுப்பி வாங்கியிருக்கிறார். மேஜர் ஹாரிசன் தம்முடைய கடன்காரர்களுக்குப் பாங்கியிலிருந்த தம்முடைய பணத்தைக்கொடுத்துவிடும்படி பாங்கி ஏஜண்டிற்கு அதிகாரம் கொடுத்ததாகச் சொல்லுவது ருஜுப்படவில்லை. ஆகையால் அசல்கோர்ட்டு தீர்மானத்தை உறுதிசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சீவில் அப்பீல்.

லா பாயின்ட்:—ஒரு ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் தன்னுடைய சொத்துக்களைத்தனக்கு இஷ்டப்பட்ட ஒருவருக்குக் கொடுத்து விடலாமா?

வாதி:—மைனர் புத்திரன் (கார்டியன் அருணாசலம்பிள்ளை.)

பிரதிவாதி:—நரம்புநாத பிள்ளை.

கேசின் விவரம்:—திருநெல்வேலியில் நரம்புநாதபிள்ளை என்பவர் 1891ம்ஹு மார்ச்சுமீ 17உ டீட் ஆப் செட்டில்மெண்டு பத்திரம் (Deed of Settlement) எழுதி தம்முடைய சகல சொத்துக்களையும் மைனர் புத்திரனுக்குக் கொடுத்துவிட்டார். தம் பேராலிருந்த பட்டாக்களையும் புத்திரன் பேரில் மாற்றும்படியும் உத்தரவு செய்துவிட்டார். மாத மாதம் தம்முடைய செலவுகளுக்குக் கொஞ்சு அளவின் பணம் புத்திரனிடமிருந்து ஒப்புக்கொள்வதாயும், புத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட சொத்தின்பேரில் தாம் கடன் வாங்குகிறதில்லை என்றும் ஷை பத்திரம் எழுதி ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பிறகு ஷை நரம்புநாத பிள்ளை ஷை டீட் ஆப் செட்டில்மெண்டு பத்திரத்தை ரத்து செய்தார். மைனர் புத்திரன் தன்னுடைய சிறிய தகப்பனார் அருணாசலம் பிள்ளை மூலியமாக, தகப்பன் ஷை பத்திரத்தை ரத்துசெய்ய அதிகாரமற்றவர் என்று திருநெல்வேலி சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

பிரதிவாதி சொன்ன டிபன்ஸ்—1881ம்ஹுத்தில் புத்திரனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் அதிகாரப்பத்திரமே தவிர டீட் ஆப் செட்டில்மெண்டு பத்திரமல்லவென்றும், புத்திரனும் இன்னும் சிலரும் சேர்ந்து மோசடியாய் எழுதி வாங்கிவிட்டார்கள் என்றும் தகப்பனாகிய பிரதிவாதி கக்ஷி சொன்னார்.

சப் கோர்ட்டார் தாவாப்பத்திரம் அதிகாரப்பத்திரம் என்று முடிவு செய்து வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் மனு செய்துகொண்டார்.

லாயர்கள்:—மிஸ்டர் K. S. ராமசாமி சாஸ்திரியார் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் திருநாராயணாசாரியார் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

வாதி தரப்பு வக்கீல் பேசினது:—இந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் தன்னுடைய சொத்துக்களிலிருக்கும் பாத்தியதையை வேறொருவருக்குக் கொடுத்துவிடுவதற்கு ஆதாரங்களிருக்கின்றன வென்றும், அப்படி கொடுத்துவிட்டால் பிறகு அதை ரத்து செய்ய சாத்தியப்படாதென்றும், மோசடியாய் வாங்கப்பட்டிருந்தால்மட்டும் அந்தப் பத்திரத்தைப் பிறகு ரத்து செய்யலாமென்றும், இந்தக் கேசில் யாதொரு மோசடியும் ருஜுப்படுத்தப்படவில்லை என்றும், இந்தக் கேசில் தீர்மானிக்கப்படவேண்டியது, தாவாப்பத்திரமா அதிகாரப்பத்திரமா அல்லது டீட் ஆப் செட்டில்மெண்டு பத்திரமா என்று தீர்மானிக்கப்படவேண்டுமென்றும், இந்தப் பத்திரத்தில் டீட் ஆப் செட்டில்மெண்டு பத்திரத்தில் சொல்லப்படவேண்டிய நிபந்தனைகளும் ஷரத்துக்களும் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இந்தப்பத்திரம் செட்டில்மெண்டு பத்திரமென்றே தீர்மானிக்கவேண்டுமென்றும் சொன்னார்.

11. இந்தியன் அப்பீல் 164, 5 இந்தியன் அப்பீல் 61, 11-சென் 416, 14-மூர் இந்தியன் அப்பீல் 27-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்புகளின் பிரகாரம் ஒருசேர்ந்த ஹிந்து குடும்ப மெம்பர் தன்னுடைய பாகத்தை இஷ்டமிருந்தால் வேறொருவருக்குக் கொடுத்துவிடலாமென்று சொன்னார்.

தீர்ப்பு:—பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப்பத்திரத்தில் வாதி பாத்தியதை உரிமை முதலியவைகளை சர்வ வில்லங்கசுத்தியாய் புத்திரனுக்குக் கொடுத்துவிட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. ஒருவன் தனக்குள்ள பாத்தியதையை வேறொருவனுக்குக்கொடுப்பது செல்லாது என்று சொல்வதற்கு சாதாரணமாகவே யாதொரு காரணத்தையும் காணோம். அப்படி ஒருக்கால் இதற்குச் சட்ட ஆதாரம் வேண்டுமானாலும் வாதி வக்கீல் எடுத்துக்கூறிய கேசின் தீர்ப்புகள் இந்தக் கேசிற்குச் சரியான தீர்ப்புகள். ஆகையால் அப்பீலை ஏற்றுக்கொண்டு இந்த வியாஜ்ஜியத்தைக் கீழ்க்கோர்ட்டார் விசாரித்து சட்டப்படிப் பைசல் செய்யுமாறு உத்தரவு செய்கிறோம்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

மனு.

மனுவின் விவரம்:—1906ஹு ஜூலைமீ கோயம்புத்தூர் செட்டி பாளையத்தில் சோளப்பயிர் சொந்தத்தைக்குறித்து செட்டிமார்களுக்கும் வேளாளர்களுக்கும் விவாதமுண்டாகி இரு கக்ஷிகாரர்களும் கலகம் செய்ததில் இரு கக்ஷியிலும் சிலர் காயமடைந்தனர். ஆகவே, செட்டிமார்கள் வெளாளர் பேரிலும், வேளாளர் செட்டிகள் பேரிலும் ஆக இருகக்ஷிகாரர்களும் கோயமுத்தூர் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் மார்கடியிடம் பிரியாது செய்துகொண்டார்கள். மாஜிஸ்டிரேட் செட்டிமார் கொடுத்த பிரியாதை முதலில் எடுத்துப் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளை எல்லாம் விசாரணைசெய்துவிட்டுப் பின்பு வேளாளர்கள் கொடுத்த பிரியாதையெடுத்து பிராசிக்கியூஷன் தரப்புகளை யெல்லாம் விசாரணைசெய்து, செட்டிமார்கள்மீது யாதொரு குற்றஸ்தாபனையும் செய்யாமல் அவர்களை விடுதலைசெய்துவிட்டார். சில நாட்கள் சென்றபின், வேளாளர் பேரில்வந்த பிரியாதை மறுபடியும் எடுத்து விசாரணை செய்ய ஆரம்பித்தார். வேளாளர்கள் இந்தக்கேசை இதே மாஜிஸ்டிரேட் விசாரணை செய்யக்கூடாதென்றும், வேறொருமாஜிஸ்டிரேட் பயிலுக்கு மாற்றிவிடும்படியும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு மனுசெய்துகொண்டார்கள். ஷை முதற் கிளாஸ் மாஜிஸ்டிரேட் செட்டிமார்களை விடுதலை செய்யும்படி சொன்ன தீர்ப்பில், இக்கலகத்தில் செட்டிமார்கள் நிரபராதிகளென்றும், வேளாளர்கள்தான் குற்றவாளிகளென்றும் சொல்லிவிட்டதைக் காரணமாகச்சொன்னார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட் கேசை மாற்றிவிடும்படி உத்தரவு செய்யவில்லை. மநுவைத்தள்ளிவிட்டார். இந்த உத்தரவுக்கு விரோதமாக வேளாளர்கள் ஹைகோர்ட்டில் மனுசெய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயர் மநுதார்கள் தரப்பிற்கும், மிஸ்டர் பவல் ஜில்லா மாஜிஸ்டிரேட் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயர் பேசியது:—முதற்கிளாஸ் மாஜிஸ்டிரேட் செட்டிமார்களை விடுவித்து சொன்னதீர்ப்பில், வேளாளர்களைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கூறியிருக்கவேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்தும் ஜில்லா மாஜிஸ்டிரேட் வேளாளர்கள்தான் குற்றவாளிகளென்று சொல்லிவிட்டபடியால், அவரே இந்தக் கேசை விசாரித்தால் வேளாளர்களுக்கு நியாயம் கிடைக்கமாட்டாது. ஆகையால், கேசை மாற்றிவிடவேண்டும்.

மிஸ்டர் பவல் பேசியது:—இரண்டு கக்ஷிக்காரர்களுடைய கேசைச்சேர்த்து விசாரிக்கிறபோது, ஒரு கக்ஷிக்காரர்களைப்பற்றிக் கெட்ட அபிப்பிராயம் கூறாமல், மற்றொரு கக்ஷிக்காரர்களை விடுவிக்கமுடியாது. மாஜிஸ்டிரேட் அந்தக் கெட்ட அபிப்பிராயத்தை மனத்தில் வைத்துக்கொள்ளாமல் தீர்ப்பில் கூறியதை முன்னிட்டு இந்தக் கேசை அவர் பயிலிலிருந்துமாற்றுவது நியாய விரோதமென்று சொன்னார்.

உத்தரவு:—13-கல்கத்தா லாரிபோர்ட் 275-வது பக்கத்தில் சொல்லியிருக்கும் தீர்ப்பில், ஒரு மாஜிஸ்டிரேட் ஒரு கக்ஷிக்காரர்கள்பேரில் கெட்ட அபிப்பிராயம் பகிரங்கமாகக் கூறிவிட்டால், அவர்களுக்கு அம்மாஜிஸ்டிரேட் விசாரணையால் நியாயம் கிடைக்கமாட்டாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்தக் கேசை வேறொரு மாஜிஸ்டிரேட்டின் பயிலுக்கு மாற்றிவிடும்படி உத்தரவு செய்கிறோம்.

அலஹபாத் முதல் மாஜிஸ்டிரேட் கோர்ட்.

பிரயாதி:—கவர்ன்மெண்டார்.

எதிரி:—ஸையத் மஹமத் என்கிற ஸையத் அஹமத்

குற்றம்:—ஏமாற்றின குற்றம்.

(11—11—06.)

கேசின் விவரம்:—ஸையத் மஹமத் அல்லது ஸையத் அஹமத் என்னும் ஒரு முகமதியன் அலஹபாத்துக்குச் சமீபத்திலுள்ள கலாலி போலிஸ்டேஷன் அதிகார எல்லைக்குள்ளிருக்கும் கிராமங்களுக்கு வந்து, தான் துருக்கி சுல்தானுடைய ஏஜெண்டென்றும், அவரும், பம்பாயிலிருக்கும் அவருடைய தூதரும் தன்னை இந்தக் கிராமங்களுக்கனுப்பி, ஒவ்வொரு ஜமீந்தார்களிடமிருந்தும் ஒரு ரூபாயும் பத்தணா வாங்கிக்கொள்ளும்படியும், இப்பணத்தை ஷை ஜமீந்தார்கள் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியிலிருந்து கழித்துக்கொள்வதாயும், தனக்கு உத்தரவு செய்திருக்கிறார்களென்றும் சொன்னான். இவ்வாறு கூறி இரண்டு ஜமீந்தாரர்களிடம் பணத்தை வசூல் செய்தான். இந்த சமாசாரம் போலீசாருக்குத் தெரிந்து அவனை அரஸ்ட் செய்து, முதற்கிளாஸ் மாஜிஸ்திரேட்டின் முன்னிலையில் அவன் மீது ஏமாற்றின குற்றம் சாட்டினார்கள். முதல் நாள் விசாரணையில் குற்றவாளி தனக்குப் பணம் தேவையாயிருந்ததென்றும், அதனால் ஜமீந்தார்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் யாதொரு பொய்யும் சொல்லி வாங்கவில்லையென்றும் சொன்னான். இரண்டாநாள் விசாரணையில், தனக்கு அறபிப் பாஷையைத்தவிர வேறொரு பாஷையும் தெரியாதென்றும், ஷை ஜமீந்தார்கள் கேட்ட கேள்வியைத் தான் அறிந்து கொள்ளவில்லையென்றும் சொல்லி, துருக்கி சுல்தான், துருக்கி மந்திரி, பம்பாய் கவர்னர், இளவரசர் ஆகிய இவர்களை சாக்ஷியாய்க் கூறி, இவர்களுக்குச் சாக்ஷி சம்மன் அனுப்பித் தருவித்துக் கேட்டால், தான் துருக்கி மனிதனென்றும், தான் யாதொரு குற்றமும் சொல்லவில்லையென்றும் சொல்வார்கள் என்றான்.

கோர்டார் இவன் கேசின் விசாரணையைத் தாமதப்படுத்தவேண்டுமென்னும் கருத்துடன் இவ்வாறு சாக்ஷி கோருகிறானென்று அபிப்பிராயப்பட்டும், இவன் முன்னொரு கேசில் தண்டனை யடைந்திருக்கிறானென்றறிந்தும் இவனுக்கு இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

(9—9—06).

கேசின் விவரம்:—திருநெல்வேலி ஜில்லா சாத்தூரில் ஒரு பெருமாள்கோயிலிருக்கிறது, ஷை தேவஸ்தானத்தின் கமிட்டியார், ஷை ஆலயத்தை மானேஜ்மென்ட் செய்வதற்கு 1899ஹு வெங்கு ஐயரென்பவரை சூப்பிரெண்டெண்டாக நியமித்தார்கள், அய்யர் மானேஜ்மென்ட் செய்து வருகையில், 1906ஹு பிப்ரவரிமீ ஷை தேவஸ்தான கமிட்டியார் ஷை வெங்கு ஐயருடன் சேர்ந்து பெருமாள் கோயிலை மானேஜ்மென்ட்செய்துவரும்படி இன்னுமிரண்டுசூபரெண்டெண்டுகளை நியமித்தார்கள். வெங்குஐயர் ஷை இருவர்களுடனிருந்து வேலைபார்க்கமாட்டோமென்று கூறினார். மேமீ 9உ தேவஸ்தான கமிட்டியார் மீட்டிங்கு கூடி ஷை வெங்கு ஐயரை உத்தியோகத்தினின்றும் விலக்கி அவருக்கு உத்தரவு அனுப்பினார்கள்; வெங்கு ஐயர் தேவஸ்தானத்தில் கலகம் நடக்கப்போவதாகவும், தன்னுடைய உரிமையைக்காப்பாற்ற வேண்டுமென்றும் எட் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு மநு வனுப்பினார். தேவஸ்தான கமிட்டியாரும் தங்க

ளுடைய பாத்தியதையைக் காப்பாற்றிக்கொடுக்கவேண்டுமென்று எட் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு மனுசெய்துகொண்டார்கள். இந்த மனுக்கள் விசாரணையிலிருக்கும்போது, மேமீ 27உ வெங்குஐயர் ஷை கோயிலிலில்லாதிருக்கும் சமயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட சூபரெண்டெண்டுகளில் ஒருவர் தேவஸ்தான இன்ஸ்பெக்டர் சகிதமாக ஷை கோயிலுக்குட் சென்று பலாத்காரமாய் தேவஸ்தான சொத்துக்களைக் கைவசப்படுத்திக்கொண்டார். மேமீ 29உ எட் அசிஸ்டண்ட் மாஜிஸ்டிரேட் ஷை மனுக்களைப்பற்றி ஆரம்ப விசாரணை நடத்தி இருகக்ஷிக்காரர்களையும் சமாதானப் படுத்திவைக்க முயன்றார். அது சாத்தியப்படவில்லை. ஆகவே, ஜூன்மீ 6உ இரு கக்ஷிக்காரர்களும் தங்களுடைய பாத்தியதைகளை ஆஜராகித் தெரிவிக்கவேண்டுமென்று எட் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் நோட்டீஸ் கொடுத்தார். விசாரணை நடந்ததில், தேவஸ்தான கமிட்டியார் வெங்கு ஐயரை உத்தியோகத்தினின்று நீக்குவதற்குயாதொரு நியாயத்தையும் காணோமென்று ஷை கமிட்டியார் கொடுத்திருந்த மனுவைத் தள்ளிவிட்டார். தேவஸ்தான கமிட்டியார் ஐகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்கள்.

தீர்ப்பு :—தேவஸ்தான கமிட்டியார் புதிதாய் நியமித்த சூப்பரெண்டெண்டுகளுடன், வெங்கு ஐயர் வேலைபார்க்கமாட்டேனென்று சொன்னதே ஷை கமிட்டியார் அய்யரை உத்தியோகத்தினின்றும் நீக்குவதற்குப் போதுமான காரணமாயிருக்கிறது. ஆகையால் எட் அஸிஸ்டெண்டு மாஜிஸ்டிரேட் உத்தரவை ரத்து செய்கிறோம்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

மிஸ்டர். ஜஸ்டிஸ் வாலிஸ்.

குடிவார பாத்தியதை.

வாதி :—விஜயநகர மகாராஜா.

பிரதிவாதி:—போடா-காடப்பா வகையரு.

லா பாயின்ட் :—குடிவார பாத்தியமுடையவர்கள், பலன்தரும் மரங்களாயிருந்தாலும் சரி, தராத மரங்களாயிருந்தாலும் சரி, நில சுவான்தாரர்களுடைய அனுமதி யின்றி வெட்டலாமா ?

கேசின் விவரம் :—வாதியின் நிலத்தில், பிரதிவாதிகள் சாஸ்வதமான குடிவாரபாத்தியமுடையவர்கள், பிரதிவாதிகளுக்கு வாதி பட்டா கொடுக்கும்போது அந்தப் பட்டாவில் "பிரதிவாதிகள் பட்டா நிலத்திலிருக்கும் மரங்களை வாதியின் அனுமதியின்றி வெட்டக்கூடாதென்கிற" ஷரது குறிக்கப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் பட்டாவைப் பெற்றுக்கொள்ளமாட்டோமென்றார்கள். 1865ஆம் 8-வது ஆக்ட்டு 10-வது பிரிவின் பிரகாரம் வாதி, எட் அஸிஸ்டெண்ட் கலெக்டரிடம் பிரதிவாதி பேரில் வியாஜ்ஜியம் செய்தார்.

பிரதிவாதிகளின் சாக்ஷி:—தாங்கள் சாஸ்வதமான குடிவார பாத்திய முடையவர்களென்றும், பணக்கிஸ்தி செலுத்திவருகிறவர்களென்றும், தாங்களே மரங்களை நட்டு வளர்க்கிறவர்களென்றும் ஷை கண்டஷரத்து ஒவ்வொரு பட்டாவிலுமிருந்தபோதிலும் அதை அனுசரித்து நடப்பதில்லையென்றும், மரங்களை வெட்டி உபயோகப்படுத்திக்கொள்ளும் வழக்கமுண்டென்றும் பிரதிவாதிகள் சாக்ஷி சொன்னார்கள்.

வாதியின் சாக்ஷி:—பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கும் ஷரது ஒவ்வொரு பட்டாவிலும் 11-வருஷத்திற்கு அதிகமாகவேயிருந்துகொண்டு வருகிறது.

எட் அஸிஸ்டெண்ட் கலெக்டர் உத்தரவு:—பிரதிவாதிகள் பலன்தரு மரங்களை வெட்டவேண்டுமானால் நிலசுவான்தாருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பட்டாவைச் சீர்திருத்திப் பட்டாவை ஒப்புக்கொள்ளும்படி பிரதிவாதிகளுக்கு உத்தரவு செய்தார். பிரதிவாதிகள் கெஞ்சம் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். அசல் கோர்ட்டுத் தீர்மானமே உறுதி செய்யப்பட்டது. பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்துகொண்டார்கள்.

தீர்ப்பு:—இ. லா. ரி. 13-சென். 249-ல் சொல்லப்பட்டிருக்கும்கேசில், குடிவார பாத்தியமுடையவர்கள் 10-வருஷமாக நிலசுவான்தார்களுடைய உத்தரவின் பேரில் மரங்களை வெட்டிவந்திருந்தால், மரங்களைக் குடிவார பாத்தியமுடையவர்கள் ஜமீந்தாருடைய அனுமதியின் பேரில் வெட்டுவது வழக்கமென்று தீர்மானிக்கவேண்டுமென்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இதற்குப்பிறகு வந்த இ. லா. ரி. 15-சென். 17, 17-சென். 54-கேசுகளிலும் இந்த ஐகோர்ட்டார் முன் கேசின்படியே தீர்மானம்செய்திருக்கிறார்கள். இந்தக்கேசில் பிரதிவாதிகள் மரங்களை வெட்டும்போது வாதியிடமிருந்து கடந்த பத்துவருஷகாலமாக அனுமதிபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், இந்த அப்பீலைத்தள்ளிவிடுகிறோமென்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சுரப்பு நீர்ப் பாய்ச்சல் தாவா.

(22—11—06).

வாதி :—அநுமந்தராவ்.

பிரதிவாதி :—பாக்ஷா மியான் சாயப்.

கேசின் விவரம் :—வாதி சேலம் ஜில்லாவில் ஒரு மிட்டாதார். இவருக்குச் சொந்தமான வாய்க்காலொன்றிருக்கிறது. அந்த வாய்க்காலின் கரைக்குப் பக்கத்திலிருக்கும் நிலம் பிரதிவாதிக்குச் சொந்தமானது. பிரதிவாதி தன்னுடைய நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்பொருட்டுத்தமக்குச்சொந்தமான நிலத்தில் ஒரு கிணறு தோண்டினார். பிரதிவாதி ஷை நிலத்தில் கிணறு தோண்டக்கூடாதென்றும், வாய்க்காலுக்கும் கிணறு தோண்டப்படும் இடத்திற்கும் எட்டு அல்லது ஒன்பதடிதான் இருப்பதால், வாய்க்கால் ஜலம் அதில் சுவறிப்போய் அதனால் வாய்க்கால் ஜலம் குறைந்து போகுமென்றும், வெய்யிற்காலங்களில் இன்னும்அதிகமாய்க் குறைந்துபோகுமென்றும், ஆதலால், பிரதிவாதி ஷை இடத்தில் கிணறு தோண்டக்கூடாதென்றும், வாதி திருப்பத்தூர் டி. மு. கோர்ட்டில் பிரதிவாதியின் மேல் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு :—கிணறு தோண்டப்படும் இடம் பிரதிவாதிக்குச் சொந்தமான நிலமென்று சொல்லி வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். வாதி ஜில்லா கோர்டில் முதல் அப்பீல் செய்தார்.

ஜில்லா கோர்ட் தீர்ப்பு :—முன்சீப் கோர்டார் தீர்ப்பை ரத்து செய்து, பிரதிவாதி ஷை இடத்தில் கிணறு தோண்டக்கூடாதென்று சொல்லி வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள். பிரதிவாதி ஐகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்.

லாயர்கள் :—மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயருக்குப் பதிலாக, மிஸ்டர் K. ஸ்ரீநிவாச ஐயங்காரும், மிஸ்டர் N. ராஜகோபாலாசாரியாரும் பிரதிவாதி தரப்பிற்கு ஆஜரானார்கள். மிஸ்டர் K. நாராயணராவ் வாதி தரப்பிற்கு ஆஜரானார்.

தீர்ப்பு :—இருதரத்து லாயர்களும் பேசின கக்ஷிகளைக் கேட்டுக்கொண்டார்கள். இன்னும்தீர்ப்பு சொல்லவில்லை.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் சர்ரால்ப் பென்சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

கேசின் விவரம் :—தூத்துக்குடியில் வி. பி. வர்த்தக கம்பெனி என்றும், எ. எஸ். கே. வர்த்தக கம்பெனி என்றும் இரண்டு வர்த்தக கம்பெனிகளிருக்கின்றன. இந்தக்கேசின் பிரியாதியாகிய கிருஷ்ணபிள்ளை என்பவர் மேலே சொல்லப்பட்ட எ. எஸ். கே. கம்பெனியின் பார்ட்னர். இந்தக் கேசின் குற்றவாளியாகிய சிதம்பரம்பிள்ளை மேலே சொல்லப்பட்ட வி. பி. கம்பெனியின் பாகஸ்தர். இந்த இரண்டு வர்த்தக கம்பெனிகள் ஒன்றுடன் ஒன்று பத்து வரவு செய்து வந்தன. அப்படி பத்து வரவு செய்து வரும்போது எ. எஸ். கே. கம்பெனி 1903-ம்ஆம் முழுகிப்போய்விட்டது. இந்த இரண்டு கம்பெனிகளும் கணக்குத் தீர்த்துக்கொண்டபோது எ. எஸ். கே. கம்பெனியார், வி. பி. கம்பெனியாருக்கு ரூபா ஆயிரம் கொடுக்கவேண்டியதா யிருந்தது. குற்றவாளி தன்னுடைய வி. பி. கம்பெனிக்கு வரவேண்டிய தொகையை எ. எஸ். கே. கம்பெனியாரைக் கேட்டார். குற்றவாளி எ. எஸ், கே. கம்பெனியாருக்கு ஒரு வீட்டு விவகாரத்தில் ரூ 500-பிரத்தியேகமாகக் கொடுக்கவேண்டியதாயிருந்தது இந்தத்தொகையை வி. பி. கம்பெனியின் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும்படியாகக் குற்றவாளிக்கு எ. எஸ். கே. கம்பெனியின் பாகஸ்தராகிய கிருஷ்ணபிள்ளை சொன்னாராம். அதனால் குற்றவாளி தன்னுடைய கம்பெனி கணக்கு புஸ்தகத்தில் வரவு வைத்துக்கொண்டார். கிருஷ்ணபிள்ளை, அப்படி வரவு வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கவில்லை என்றும், குற்றவாளி கணக்குப் புத்தகத்தில் போர்ஜரி செய்திருக்கிறார் என்றும் குற்றவாளி பேரில் கிரிமினல் குற்றஞ் சாட்டினார்.

இந்தக் கேசை திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்து குற்றவாளிக்கு ஒரு வருஷக் கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

குற்றவாளி ஹைகோர்டில் அபீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—மிஸ்டர் T. V. முத்துகிருஷ்ணஐயர் குற்றவாளி தரப்பிற்கு ஆஜரானார்.

தீர்ப்பு :—இந்தக் கேசின் பிரயாதியாகிய கிருஷ்ணபிள்ளை தாக்கல் செய்திருக்கும் இன்ஸால்வென்ஸி ஷெட்யூலில் குற்றவாளியிடமிருந்து ரூ. 500-வரவேண்டுமென்று காண்பிக்கவில்லை. இந்த ரூபா 500-யும் V. P. கம்பெனியின் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும்படி பிரயாதி உத்தரவு செய்திராவிட்டால், இன்ஸால்வென்ஸி மனுவில் குற்றவாளியிடமிருந்து தமக்கு 500-ரூபா வரவேண்டுமென்று கட்டாயம் காண்பித்திருப்பார். ஆகையால் பிரயாதி தம்முடைய கம்பெனிக்குச் சேரவேண்டிய ரூபா ஐநூறை V. P. கம்பெனியின் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும்படி குற்றவாளிக்கு உத்தரவு கொடுத்திருப்பது வாஸ்தவமென்றேற்படுகிறது. இந்தக்கேசில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியங்களும் மேற்சொன்ன அபிப்பிராயத்தைப் பலப்படுத்துகின்றது. குற்றவாளி பிரியாதியிடமிருந்து அனுமதி பெறுவதற்கு முந்திய தேதியில் V. P. கம்பெனியின் கணக்கில் வரவு வைத்திருந்தபோதிலும் அவருக்கு யாதொரு மோசக் கருத்தான எண்ணமிருந்ததில்லை யென்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. ஆகையால் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து, குற்றவாளியை விடுவிக்கும்படி உத்தரவு செய்கிறோமென்று தீர்ப்பு செய்தார்கள்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

வாதி :—பாலிரெட்டி புஷ்பானம் (மைனர்—கார்டியன் மூலியமாய்)

பிரதிவாதிகள்:—(1) வெங்கடரத்தினமும்,
(2) ஷை யார் மைத்துனரும்.

இரண்டாவது சிவில் அப்பீல்.

(6—11—06).

கேசின் விவரம் :—வாதியின் புருஷன் முதற் பிரதிவாதியின் புத்திரர். வாதியின் புருஷனும், 1, 2-பிரதிவாதிகளும் ஒரு பாகபத்திர மேற்படுத்திக்கொண்டு ஏக குடும்பமாய் வசித்துவந்தார்கள். ஷை பத்திரத்தில் குடும்பச் சொத்து மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு மூவருக்கும் சமபாகமாக ஏற்படுத்தப் பட்டிருந்தது ஷை பத்திரத்தில்:—

"நம்மூவரில் யாரேனும் ஒருவர் ஒரு பானையில் சமைத்துப் புசிப்பதற்கு இஷ்டமில்லாமல் பாகம் பிரித்துக்கொண்டு பிரியவேண்டுமென்னும் விருப்ப மிருந்தால், இப்பத்திரத்தில் சொல்லியிருக்கும் பங்குப் பிரகாரம் பாகத்தைப் பிரித்துக் கொண்டு போய்விடலாம் என்று" எழுதப்பட்டிருந்தது.

முதலாவது பிரதிவாதியின் புத்திரன். அதாவது வாதியின் புருஷன் இறந்துபோனார். வாதி, தனது புருஷனுடைய பாகம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று 1, 2-பிரதிவாதிகள் பேரில் குடிவாடா டி. மு. கோர்ட்டில் வியாஜ்யம் கொண்டுவந்தார்.

முதற் பிரதிவாதியின் சாக்ஷி :—தகப்பன் உயிருடனிருக்கும்போது புத்திரன் இறந்துபோனால் புத்திரனுடைய பாகம் தகப்பனுக்குக் கிடைக்கவேண்டும் என்று சாக்ஷி சொன்னார்.

டி. மு. கோர்டார் தீர்மானம் :—குடும்பச் சொத்தை பாகித்துக்கொள்ள வாதியின் புருஷனுக்கும் 1—2, பிரதிவாதிகளுக்கும் பத்திரமேற்பட்டிருந்தபோதிலும், வாதியின் புருஷன் இறந்துபோனகாலத்தில் முதற் பிரதிவாதி ஜீவதசையில் இருப்பதால், குடும்பச் சொத்தில் வாதியின் புருஷனுக்கிருக்கும் பாத்தியதை முதற் பிரதிவாதியைச் சேரவேண்டுமென்று தீர்ப்பு சொல்லி, வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி, கிருஷ்ணா ஜில்லா சப் கோர்டில் அப்பீல் செய்தார். அப்பீல் கோர்ட்டார், அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதி செய்தார்கள். வாதி இரண்டாவது அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் T. R வெங்கடராமசாஸ்திரியார் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் V. சுப்பிரமணிய சாஸ்திரியார் பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—குடும்பச் சொத்தைப் பாகித்துக்கொள்வதற்காக ஏற்பட்ட பத்திரத்தில், தகப்பனும் பிள்ளையும் பாகத்தைப் பிரித்துக்கொள்வதற்கு என்ன வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதோ அதே வார்த்தைகள்தான் மூன்றாவது மனுஷனாகிய இரண்டாவது பிரதிவாதியின் விஷயத்திலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், ஷை பாக பத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பாகம் ஏற்பட்டுவிட்டது. வாதி புருஷனுடைய பாகம் வாதிக்குச்சேரவேண்டும் என்று சொல்லி கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளை ரத்துசெய்துவிட்டார்கள். வாதியின் செலவு தொகையைப் பிரதிவாதிகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

(11—12—06).

கேசின் விவரம் :—வட ஆர்க்காடு ஜில்லா, சித்தூரில் இந்தக்கேசின் குற்றவாளியாகிய வெங்கடப்பா வீட்டில் திருட்டுச்சொத்துக்க ளிருப்பதாகக் கேள்விப்பட்டு அவருடைய வீட்டை சோதனை செய்யும்பொருட்டு கடந்த ஞூன்மீ 9வ ஒரு போலீஸ் இன்ஸ்பெக்ட்டரும் ஒரு கான்ஸ்டேபிளும் போனார்கள். போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் வீட்டின் முன் வாசலில் ஒரு கட்டிலில் வீற்றுக்கொண்டார். கான்ஸ்டேபில் உள்ளே நுழைந்தான். ஷை குற்றவாளியும் இன்னும் 6-பேரும் சேர்ந்து வீட்டினுள் நுழைந்த கான்ஸ்டேபிலைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். ஆதலால் போலீஸ் கான்ஸ்டேபில் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் உத்தியோக முறையில் தன்னுடைய கடமையைச் செய்து வந்ததைத் தடுத்து பலாத்காரம் உபயோகப்படுத்திய குற்றத்திற்காக ஷை குற்றவாளி வகையரு எழு பேர்கள் பேரிலும் சித்தூர் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றம் சாட்டினான். இவர் ஷை குற்றவாளி வகையருக்களில் மூன்று பேர்களை விடுதலைசெய்துவிட்டு பாக்கி நான்கு பேர்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு மாதக் கடினகாவலும், ரூபா 50-அபராதமும் விதித்தார்.

கைதிகள் வட ஆர்க்காடு ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். செஷன்ஸ் கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்தி நான்குமாத தண்டனையை மூன்று மாத தண்டனையாகக் குறைத்து விதித்தார்கள்.

கைதிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் G. S. ராமசந்திர அய்யரும் குற்றவாளிகள் மனுவை தாக்கல் செய்ய ஆஜரானார்கள்.

மனுதாரர்களின் வக்கீல் பேசினது:—போலீஸ் காரர்கள் எந்த வீட்டைச் சோதனை செய்யப்போகிறார்களோ அந்த வீட்டிற்கு அக்கம்பக்கத்திலுள்ள அந்தஸ்துடைய சில மனிதர்களைக் கூட அழைத்துக்கொண்டுபோய் சோதனையை நடத்தவேண்டும். இந்தக்கேசில் கான்ஸ்டேபில் சோதனைபோட ஏகாங்கியாய்ப் போயிருக்கிறான். ஆகையால் அவன் போட்ட சோதனை சட்டவிரோதமான சோதனையாக விருக்கின்றது.

உத்தரவு:—கோர்ட்டார் மனுவை ஏற்றுக்கொண்டு, இந்த மனு பைசல் செய்யப்படும் பரியந்தம் கைதிகளை ஜாமீன் பேரில் விட்டுவைக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

கூட்டு வியாபாரத்தின் பாக வியாஜ்ஜியம்.

வாதி C. கிருஷ்ணசாமி செட்டி.

பிரதி வாதிகள் : (1) T. சீதாராம்செட்டி.
(2) கூரத்தாள்வார்செட்டி.

கேசின் விவரம்:—வாதி, சென்னபட்டணத்தில் மௌண்டுரோட்டில் "மெசர்ஸ் மோசஸ் அண்டுகோ" என்கிற மேல்விலாசம் பூண்டு வியாபாரஞ் செய்துவரும் கம்பெனியின் பார்ட்னர்களுக்குள் இறந்துபோன பார்ட்னரின் புத்திரர். பிரதிவாதிகள் இருவரும் ஷை கம்பெனியின் ஜீவதசையிலிருக்கும் பார்ட்னர்கள். வாதி தம்முடைய தகப்பனார் இறந்துபோன பின்பு, ஷை கம்பெனியில் அவருக்கிருக்கும் பாகத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பினார். இருகக்ஷிக்காரர்களும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி அவர்களுடைய தீர்மானப்படி தீர்த்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டார்கள். பிரதிவாதிகளிடமிருந்து வாதி நாற்பதாயிர ரூபாய் பெற்றுக்கொண்டு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிடவேண்டுமென்று பஞ்சாயத்தார் தீர்மானித்தார்கள். பஞ்சாயத்தார் கொடுத்த தீர்மானம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டபின், பிரதிவாதிகள் வாதியை மோசம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் மோசஸ் கம்பெனியின் சொத்துக்களில் சிலவற்றை மறைத்திருக்கிறார்கள் என்று வாதி கேள்விப்பட்டு ஷை பஞ்சாயத்தார் கொடுத்த தீர்மானத்தை ரத்து செய்யும்பொருட்டும், தமக்குப் பாகம் கிடைக்கவேண்டுமென்றும் வாதி, பிரதிவாதிகள்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியத்தில் இரு கக்ஷியாரும் கோர்ட்டாரும் சேர்ந்து சில இஷியூக்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். இந்த இஷியூக்களின் விசாரணை ஆரம்பமாகுமுன் பஞ்சாயத்தார்களின் தீர்மானம் சட்ட ஒழுங்குடையதா அல்லது சட்ட விரோதமான தீர்மானமா என்று தீர்மானிக்கப்படுவதற்குப் பிரதிவாதிகள் ஒரு இஷியூ கோரிக்கொண்டார்கள். கோர்ட்டார் இந்த இஷியூவைப்பற்றிமட்டிலும் விசாரணை நடத்தினார்கள்.

லாயர்கள் :—மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன் என்கிற சொலி சிட்டர் கம்பெனியார்களின் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியர் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் P. R. சுந்தர அய்யர் பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—பஞ்சாயத்தார்களின் தீர்மானம் ஆர்பிட்டிரேஷன் ஆக்ட்டின் (Arbitration Act) நிபந்தனைகளை நிராகரித்திருப்பதால் அது சட்ட விரோதமான தீர்மானம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல்.

கேசின் விவரம்:—இரண்டுபேர்களின்மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டது. இருவருஞ்சேர்ந்து ஒரு வக்கீல் வைத்தார்கள். அந்த வக்கீலின் பீசை ஷை குற்றவாளிகளில் ஒருவர்மட்டும் தவணை தவணையாக வக்கீலுக்குச் செலுத்திவிட்டு, கடைசித்தவணை முடிந்தவுடன், ஷை வக்கீலுக்குக் கொடுத்த பீஸ் தொகையில் பாதி மற்றொருவரிடமிருந்து தனக்குக் கிடைக்கவேண்டுமென்று விசாகபட்டணம் டி. மு. கோர்ட்டில்வியாஜ்ஜியம் கொண்டுவந்தார் டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிற்றென்று வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி விசாகபட்டணம் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள அசல் கோர்ட்டுத்தீர்மானமே உறுதி செய்யப்பட்டது.

அதன் பிறகு, வாதி சிவில் ரிவிஷன் மனு தாக்கல்செய்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் விசாரணைசெய்து கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தில் " பிரவேசிப்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை." என்று சொல்லி ரிவிஷன் மனுவைத் தள்ளிவிட்டார்.

வாதி ஹைகோர்ட்டில் லெட்டர்ஸ்பேட்டண்ட் அப்பீல் செய்தார்.

லாயர்கள் பேசினது:—பிரதிவாதி தரப்பிற்கு ஆஜரான மிஸ்டர் V. ராமேசம், மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் சொன்ன " பிரவேசிப்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை" என்ற வார்த்தைகள் தீர்ப்பாகமாட்டாது. ஆகையால். வாதி லெட்டர்ஸ் பேட்டின்ட் அப்பீல் தாக்கல் செய்தது சட்டவிரோதமென்று சொன்னார். வாதி கட்சிக்கு ஆஜரான மிஸ்டர் E. வெங்கடராம சர்மா, இத்தகைய வார்த்தைகளை ஜட்ஜிமார்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொண்டு, இதற்கு முன் தீர்ப்பளித்திருக்கும் சில கேசுகளை மேற்கோள்களாக எடுத்துக்காட்டினார்.

தீர்ப்பு :—பிரதிவாதி வக்கீலின் ஆக்ஷேபனையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. வாதி பிளீடருக்குப் பீசு செலுத்திய தவணைகளில் எந்தத் தவணைகள் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறது—எந்தத் தவணைகள் காலாவதி தோஷத்திற்குள்ளாகவில்லை என்பதை டி. மு. கோர்ட்டார் நிர்ணயித்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாததால், இந்த வியாஜ்ஜியத்தை மறுபடியும் விசாரித்து சட்டப்படி பைசல் செய்யும்படி உத்தரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

ஜீவனும்ஸ தாவா.

வாதி :—ருக்மணிபாய்.

பிரதிவாதி :—லாட் - கோவிந்ததாஸ்.

கேசின் விவரம் :—வாதி சென்னையில் தனவந்தராகிய காலஞ்சென்ற திவான் பஹதூர் கிருஷ்ணதாஸ் பால முகுந்ததாவின் மனைவி, பிரதிவாதி ஷை பால முகுந்ததாவின் மற்றொரு மனைவிக்குப் பிறந்த புத்திரர். ஷை பால முகுந்ததாவின் சொத்துக்களெல்லாம் பிரதிவாதியிட மிருக்கிறது. வாதி தமக்கு ஜீவனும்ஸம் கிடைக்கவேண்டுமென்று பிரதிவாதியின் மீது இதற்கு முன் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியம் தீரும் பரியந்தம் பிரதிவாதி ஜீவனும்ஸம் கொடுத்துவரவேண்டுமென்று ஒரு மனு தாக்கல் செய்துகொண்டார். கோர்ட்டார் அப்போது வியாஜ்ஜியம் தீரும் வரையில் மாதமொன்றுக்கு ரூபா 200-கொடுத்து வரும்படி உத்தரவு செய்தார்கள். ஷை வியாஜ்ஜியம் விசாரணைக்கு வந்தபோது வாதி கொடுத்த பிராதை சீர்திருத்திக்கொடுக்கும்படி கோர்டார் உத்தரவு செய்யவே, வாதி பிறகு வியாஜ்ஜியம் கொண்டுவருவதாகச் சொல்லிப் பிராதை வாப்சு வாங்கிக்கொண்டார். இவ்வாறு வாப்சு வாங்கிக்கொண்டபின், பிரதிவாதி, வாதிக்குக் கொடுத்துவந்த ஜீவனும்சத்தை நிறுத்திவிட்டார்.

இப்போது, வாதி தாம் இன்னும் சில காலைக்குள் வியாஜ்ஜியம் கொண்டுவரப்போவதாகவும், இதற்குமுன் தனக்குப் பிரதி வாதியைக் கொடுக்கும்படி உத்தரவு செய்ததைவிட இப்போது அதிகதொகைகொடுத்துவரும்படி உத்தரவு செய்யவேண்டுமென்றும் வாதி ஒரு மனு தாக்கல் செய்தார்.

பிரதிவாதி வாதிக்கு ஜீவனும்சத்துக்கு மாதம் 100-ரூபாய்கொடுத்துவந்தால் போதுமென்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—ஸொலிஸிடர் கம்பெனியார்களாகிய மெஸர்ஸ் ஷார்ட் அண்டு பியூஸ் என்பவர்களின் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் A. ரீட், வாதி தரப்பிற்கும், ஸொலிஸிடர் கம்பெனியார்களாகிய மெஸர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன் என்பவர்கள் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் D. ஷாமியர் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—பிரதிவாதி, வாதிக்கு மாதமொன்றுக்கு ரூபா. 300-கொடுத்து வரும்படி உத்தரவு செய்தார்கள்.

---

* சிவில் ப்ரோஸீஜர் பில்.

ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் S.S. வேங்கட்ரமண ஐயரால் எழுதப்பட்டது.

இந்தியா கவர்ன்மெண்டு சட்ட நிருபண சபையாரிட "செலக்ட்கமிட்டியார்" ஜனங்களுடைய ஆலோசனை உத்தேசமாய் இப்பொழுது பிரசுரம் செய்திருக்கும் சிவில் ப்ரொஸீஜர் பில் என்னும் மசோதா உண்மையாகவே பிரம்மாண்டமான விஷயம் எனலாம். சர்க்கார் கெஜெட்டுகளில் பிரசுரமாயிருக்கும் இந்த மசோதாவின் பக்கங்களைப்பார்த்தாலே அவற்றுளடங்கியிருக்கும் திருத்தங்கள் பெரிய அச்சுக்களில் பதிப்பித்திருப்பவை அநந்தம் எனக்காண்கின்றன. அவற்றை ஒருவாறு மேற்போக்காய்ப் படித்துப் பார்ப்பதாலேயே அவற்றைப், பிரேரேபனை செய்வதற்காக மிக்க பிரயாசமும் ஆலோசனையும் கொண்டிருக்கவேணுமென்பது வெளியாகும். இப்பிரேரேபனைகள் ஒரு வியாச்சிய ஆரம்பம் முதல் அவசானம்வரை நடத்துவதற்குள்ள சாஸ்திரார்த்த சூத்திரங்கள் யாவும் பொருந்த நிற்கின்றன. அவைகளை கோடு முழுமையையும் பூராவாய்ப் படிக்கும் சிரமத்தை மேற்கொண்டு படித்து லா ஞானமும் சற்று உடையவனாயிருக்கும் ஒருவன்தான், குற்றங்காட்டி குணப்படுத்தக்கூடிய விஷயங்களாம். ஆகையினாலேதான் விஷயத்தைக் குறித்து நாட்டிலுள்ள பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அவற்றைப்பற்றித் தமது சிந்தனைகள் இன்னவையென்று எடுத்துரைக்கவில்லையெனக் காண்கின்றது. தவிர இந்தியாவில்லா விஷயங்களைப்பற்றியே பிரசுரமாய் வரும் சஞ்சிகைகள் கூட விஷயத்துக்குத்தக்க விசாரம் செய்திருப்பதாகக் காணவில்லை.

பிரஸ்தாப மசோதாவைப் பக்குவம் செய்து வெளிக்கிட்ட ஆனரபில் மிஸ்டர் ராலி மசோதாவில் பிரேரேபித்திருக்கும் திருத்தங்களின் சுபாவங்களைப் பற்றி அதற்கு அநுபந்தமாய்ப் பிரசுரித்திருக்கும் காரண காரியங்களுள் பின் வருமாறு சொல்லியிருக்கின்றனர்.

"பிராரம்பத்தில் மசோதாவை வரைந்திருக்கும் உத்தேசமென்னவெனில், பற்பல ஹைகோர்ட்டுகளால் அப்போதைக்கப்போது எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் அனேக சமுசயங்களையும், ஒன்றுடனொன்றொவ்வாத தீர்ப்பின் அம்சங்களையும் நீக்குவதும், சட்டநிருபண சபையார்களுக்குச் சரி என்றும், சட்டத்துக்குள் சேர்க்கவேண்டியவை யென்றும் காணப்பட்டிருக்கும் தீர்ப்பு அம்சங்களைச் சட்டத்துள் சேர்ப்பதுமேயாம். தவிர இரண்டாவதாகச் சொரிசுகளாய் வந்திருக்கும் வேறு விஷயங்களுள், பிரிட்டிஷ் இந்தியாவின் துணைச்சட்டத்தின் முக்கியபாகமாகிய சிவில் ப்ரொஸீஜர் விஷயத்தைச் சரிப்படுத்தக்கூடியதாயுள்ளவற்றைப் பயன்படுத்தும்படிக்குள்ள பிரயத்தினமும் செய்யப்பட்டிருக்கின்றது" ஆதி மசோதாவில் பிரேரேபித்திருந்த திருத்தங்களைச் சில மாறுபாடுகளுடன் சட்ட நிருபணசபையார் அங்கீகரிப்பார்களேயானால், அது இப்பொழுது ஜாரியிலிருக்கும் சிவில் ப்ரொஸீஜரைவிட அதிக அபிவிருத்தியுள்ளதாய் ஆகும். ஆனால் அதைச் சீர்திருத்த நியமிக்கப்பட்ட "செலக்ட் கமிட்டியார்" சில மிக்க நலமாய சீர்பாடுகளாகும் திருத்தங்கள் என்ன, சேர்க்கைகள் என்ன, இன்னும் இவைகளுடன் சில மாறுதல்களைச் செய்யப் பிரேரேபித்திருக்கிறார்கள். இவைகளை ஆட்சேபிக்கத் தக்கவைகளென்றும், இவைகளைச்

* இதற்குமுன் ஒரு சமயம் நான் இதைப்பற்றி பத்திரிகைகளுக்கு எழுதியிருந்தபோதிலும் புனராலோசனையின் பேரில் சீர்திருத்தி பிரசுரக்கிறேன். S.S. வெங்கட்ரமணன்.

சட்டமாக வாக்குவதன்முன் புனராலோசனை செய்யத் தக்கவைகள் என்றும் எமக்குத் தோற்றுகின்றன.

இவ்விதம் புனர் ஆலோசனைக் குரியவைகளுள் முக்கியமானவை (1) சம்மன் பிறப்பிப்பதையும் சேர்ப்பிப்பதையும், (2) சாட்சி விமரிசையையும், (3) டிக்கிரிகளை நிறைவேற்றுவதையும் குறித்தவைகளாம்.

இவ்விஷயங்களுள் முதலாயிருக்கும் விஷயம் அதாவது சம்மன் பிறப்பிப்பதையும் சேர்ப்பிப்பதையும் பற்றி "ஆனரபில் மிஸ்டர் ராலி" சொல்லியிருக்கிறதாவது:—

ஆஜராவதைக்குறித்துள்ள நடவடிக்கையை ஒரேதடவையில் சுலபமாக்கவும் பலப்படுத்தவும் அதேசமயத்தில் சம்மன் மனு அனுவசியமாயும் அலக்கழிக்கும் பொருட்டும் செய்துகொள்ளப்பட்டால் அவ்வித மனுக்களை நிராகரிப்பதற்கு வேண்டிய யுக்தாயுக்த அதிகாரத்தைக் கொடுக்கவும் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றது. ரிஜிஸ்டர் தபால் மூலமாய் சம்மன் சேர்ப்பிக்கும் நடவடிக்கையும் தக்க தேர்ச்சியடைந்த பிரதேசங்களில் இங்கிலிஷ் நடவடிக்கையாகிய கட்சிக்காரர்கள் அல்லது அவர்களிட வக்கீல்களால் சம்மன் சேர்ப்பிப்பது என்றுள்ள நடவடிக்கையையும் ஒத்துக்கொள்ளலாமென்றும் எண்ணப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது இந்த விஷயங்களை "ஆனரபில் மிஸ்டர் ராலி" இக்கு சற்று முன் பின்னாய்ச் சொல்லியிருந்தபோதிலும் மசோதாவில் எந்த ரீதியில் காணப்பட்டிருக்கிறதோ அந்தப்படி அவற்றை ஒன்றின்பின் ஒன்றாய் எடுத்துப் பரிசோதிப்போம்.

வெகு காலமாய் சம்மன் சேர்ப்பிக்கும் விஷயம் அதிக கவலைகொண்ட ஆலோசனைக்குரிய விஷயமாக இருந்து வருகின்றது. பிரதிவாதியின்பேரில் சம்மன் சரியாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜு ஆகும் பக்ஷத்தில் அவன் ஆஜராகாமற்போனால் அவனுக்கு நேரிடுகிற கடுந்துன்பமும், அது காரணத்தாலேயே சாத்தியமானவரையில் பிரதிவாதிக்கு அவன் மேல் தொடரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியத்தைப்பற்றி அவன் தகுந்த காலத்திலேயே வாஸ்தவமாய் நோட்டீஸ் பெற்றுக் கொண்டிருக்கிறான் என்பதைப் பற்றிய துணிவு உண்டாக வேண்டு மென்னும் அவசியத்தையும் பார்த்தே கட்டளை ஜாரி செய்பவன் தன்னிஷ்டப்படி பிரதிவாதிவீட்டு வெளிக் கதவில் சம்மனை ஒட்டி ஜாரி செய்வதைச் சரியாய் சம்மன் சேர்ப்பிக்கப் பட்டதென்று எண்ணக்கூடாதென்றும், சம்மன் கிட்டாமலிருக்கும்பொருட்டு பிரதிவாதி அகப்படாமல் தப்பித்துக்கொண்டிருக்கிறானென்று நம்புவதற்குத் தகுந்த முகாந்தரமிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தோற்றினால் அதன்மேல்தான் கோர்ட்டார் வெளிக்கதவில் ஒட்டி ஜாரி செய்ய உத்தரவு கொடுக்கலாமென்றும் இதுவரை எண்ணப்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. முன் காலத்தில் மதிராஸில் ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் நெல்ஸன் என்பவர் 1859-ம் வருஷத்திய சிவில் ப்ரொஸீஜர் கோடில் இருந்த இவ் விஷயத்தைப்பற்றிப் பின் வருமாறு கூறினர். "கோர்ட்டிலுள்ள எல்லாக்கோட்பாடுகளுள்ளும் இப்பிரிவின் (அதாவது 1859-ஆம் வருஷத்திய 8-வது ஆக்ட் 55-வது பிரிவின் முதற்பாகந்தான் அனேகமாய் அடிக்கடி பழிக்கப்பட்டு வருவதாயிருக்கின்றது. ஒரு மனிதன் சற்று தன் வீட்டில் இல்லாத காலம் பார்த்து அவன் வீட்டு வெளிக்கதவில் சம்மன் நகலை ஒட்டுவதைவிட உலகத்தில் சுலபமான காரியம் வேறுகிடையாது. தவிர, கட்டளை ஜாரி செய்பவர்கள் தாங்கள் போய்ப் பார்க்கும்பொழுது அவர்கள் வீட்டு வாசலில் ஆஜரில்லாதவர்களைக்கண்டுபிடிக்க முயலும் விஷயத்தில் சுறு சுறுப்பு கொஞ்சமேனும் இல்லாதவர்களா யிருக்கிறார்கள். மேலும் லஞ்சம் வாங்கியிருக்கும் கட்டளை ஜாரி செய்வோன் தான் ஒரு சம்மன் நகலைவெளிக்கதவில் ஒட்டியதாகச் சத்தியம் செய்து சொல்லும்பொழுது சாதாரண சுதேசி ஒருவனுக்கு அந்தக் குறிப்பிட்ட தினத்தில் பிரிவிற் சொல்லுகிற பிரகாரம் நகல் ஒன்று ஒட்டப்படவில்லையென்று ருசுசெய்வதைவிட அதிக கடினமான காரியம் யாதொன்றுமில்லை. ஆகையால் அயோக்கியப் பிராதுக்காரர்கள் தங்களுடைய மோசம் வெளியாதல் அசாத்தியமாயாவது அல்லது வெகு கஷ்டமாயாவது இருந்தால் கிடைக்கும் சமயங்களை யெல்லாம் அனுகூலப்படுத்திக்கொள்ளுகிறார்கள். இன்னும் இதே விஷயத்தைக் குறித்து பம்பாய் சஞ்சிகையொன்று கூடப் பின்வருமாறு கூறியிருக்கின்றது. நாம் மன்றாடுவதெல்லாம் கோர்ட்டாருடைய விசேஷ உத்தரவில்லாமல் நேரில் சம்மன் சேர்ப்பிக்கும் ஏற்பாட்டைத் தள்ளிவிடக்கூடாதென்பது; "செலக்ட்கமிட்டி" கோடின் மற்ற நிபந்தனைகளுக்கு 'ஒவ்வாமலும் பிரதிவாதிகளின் அக்கரைகளைச் சேதப்படுத்தியும் கட்டளை ஜாரிசெய்வோர்பால் அஜாக்கிரதையை விருத்திப்படுத்தியும்மோசடிக்கு விரிந்தவழியைத்திறந்து கொடுக்கவுங்கூடியதான அவ்வித நடவடிக்கைக்கு சட்டத்தின் வலுவைத்தருவதற்குமுன் சற்று யோசிப்பார்கள் என நம்புகிறோம்.

இவைகளும் இவைபோன்ற மற்ற தர்க்கங்களும் இன்றைக்கும் பலனற்றுப் போகவில்லை இவை தபாற்காரன் வக்கீலுடை ஆள், அல்லது கட்சிக்காரன் இத்தகையாரிடரிடர்களைப்பற்றி இரட்டிப்புப் பலன் பூண்டவையாகும். அயோக்கியப் பிராதுக்காரன் ஒருவன் அவன் சுற்றத்தான், சிநேகிதன், அல்லது ஆள் இவர்களுக்குச் சம்மன் சரியாய்ச சேர்ப்பிக்கப்பட்டதென்று ஒரு பிரமாணப் பத்திரிகைக்குப் பொய்யாகச் சத்தியம் செய்வது சுலுவான காரியமாகிவிடும். ராஜதானிப் பட்டணங்களில் அனேக இன்சால்வெண்டுக் கேசுகளில் கடன்காரர்களுக்கு மனுவின் நோட்டீஸ் போய்ச் சேராமலே சேர்ந்ததான ரிடர்ன்கள் செய்யப்படுகிறதென்பது சகஜமாய்த் தெரிந்த விஷயமாயிருக்கின்றது.. ஆனால் விஷய விசேஷம்பற்றி இன்சால்வெண்டுப் பேர்வழிகளுடன் வியாச்சியம் செய்யக் கடன்காரர்கள் இஷ்டமில்லாதவர்களாய்ப் புகார்செய்யாதிருக்கிறார்கள் என்பது நன்றாய்த் தெரிகின்றது. வாதிக்காவது, வாதி மனுஷனுக்காவது தபாலாபீசுக்குப் போய்ப் பிரதிவாதிக்கனுப்பியிருக்கும் ரிஜிஸ்டர் காகிதத்தை ஆள் மாறாட்டமாய் வாங்கிக்கொள்வதும் அல்லது போஸ்டுமோனிடம்போய் அப்படிப் பெற்றுக்கொள்வதும் மிகச்சுலபமான காரியமாகும். சேர்ப்பிக்க வேண்டியவன் சற்று ஆஜரா யிருக்கவில்லையென்ற காரணத்தாலேயே கதவில் கட்டளையை ஒட்ட சேர்ப்பிப்போனுக்கு அதிகாரம் கிடைக்கமாட்டாதென்று ஹைகோர்ட்டுத் தீர்மானங்களிருக்கின்றன. சம்மன் சேர்ப்பிப்போன் கூடுமானால்நேரில் சம்மனைச் சேர்ப்பிக்கும்பொருட்டுச் சேர்ப்பிக்கவேண்டியவரைக் கண்டுபிடிக்கப் பிரயத்தினம் செய்யவேணும். (21 Mad 419; 21 Bom, 223; 19 Cal 2 1). அதற்காகவே ஏற்படுத்தி யிருக்கும் கோர்ட்டு உத்தியோகஸ்தன் விஷயத்தில் எதிர்பார்க்கக்கூடியவாறு கோர்ட்டு அலுவல்களுக்குத் தக்கபிரகாரம் பிரதிவாதியைக் கண்டுபிடித்து நேரில்சம்மனைச் சேர்ப்பிக்கப் பல அலுவல்களுடைய "போஸ்ட்மான்" பிரயத்தனம் செய்வானென்று எதிர்பார்ப்பது தகாத விஷயமே. தவிர, கோர்ட்டு வழக்குகளுக்கு வரும் கக்ஷிக்காரர்களில் பெரும்பான்மையர் எழுதப் படிக்கத்தெரியாத மூடஜனங்களாயாவது அல்லது அரைகுறையாய்க் கற்றவர்களாயாவது இருப்பதினாலே வாஸ்தவமான பிரதிவாதிகளின்கையெழுத்தெனப் பொய்க் கையெழுத்துகளைக்கோர்ட்டாரை மோசம்பண்ணக் கொண்டுவருவது சுலுவாயிருக்கிறது. ஆனரெபில் மிஸ்டர் ராலி பிரயோகித்த தர்க்கம் அதாவது பிரஸ்தாப பிரேரேபணையில் தபாற்காரனுக்குச் சாதாரணமாய்க் கடிதம் இன்னதென்றுதெரியாதானையாலும், தபால் லகோடாவுள் இன்னது இருக்கின்றதென

ளிக்குக் காட்ட அதன்மேற்புறத்தில் யாதொரு குழ்ச்சியும்
ருக்காதாகையாலும் லஞ்சம் வாங்கிக் கட்டளை சேர்ப்பிக்
ம் உத்தியோகஸ்தன் என்ன, அயோக்கியமான அல்லது
டைஞ்சல் செய்யும் பிரதிவாதிகள் என்ன இவ்விருதிறத்தா
க்கும் மோசம்செய்ய வழியற்றிருக்கக்கூடியதென்றும் அனு
.லாம்சம் பெற்றிருக்கின்றது என்று சொல்லும் தர்க்கம்பிர
தாப நடவடிக்கையை ஜாரிக்குக் கொண்டுவந்தவுடனே
சிலேகனக் காணும் என்று துணிந்து சொல்லலாம். ஒரு கிரா
ந்தனுக்கு தினசரி கடிதம் வருகிறதில்லை. ரிஜிஸ்டர் கடித
ா மிக்க அரிதாம். ஆகையால் அதி சீக்கிரத்தில் கிராமஸ்த
ளும் தபாற்காரர்களும் ரிஜிஸ்டர் கடிதத்தின் அர்த்தம்
ன்னதென்று அறிந்து கொள்ளுவார்கள். "ஆனரபில் மிஸ்
ராலி" வாதிகள் செய்யக்கூடிய மோசம் மனத்துட்படா
பிரதிவாதிகள் தந்திரங்களால் சம்மன் ஜாரியாகாமல்
ஸ்விசாரணை தாமதப்படுகிறதென்பது மாத்திரம் முன்னி
றது நமது துர்ப்பாக்கியமே. சாதாரணமாய் சேர்ப்பிப்போ
விட தபாற்காரன் அதிக அந்தஸ்த்துள்ளவனல்ல. எற்கன
ரிஜிஸ்டர் கடிதங்களை மேல்விலாசக்காரன் வாங்கிக்கொ
மறுத்துவிட்டான் என்றாவது அல்லது விலாசக்காரன்
வில்லை என்றாவது ரிடர்ன் செய்வது சகஜமாயிருக்கிறது.
கையால் சம்மன் சேர்ப்பிப்பதை வேணுமென்று பின்வாங்
செய்யப்படவில்லை என்றும், சேர்ப்பிக்காமற் போயிற்றென
ு பொய் ரிடர்ன் ஆகவில்லைஎன்றும், காட்டத்தக்க சாட்
ம் அவசியமென்பது வெளியாகின்றது.

தற்கால நடவடிக்கைப்படி ஒட்டிச் சேர்ப்பிக்கப்பட்ட
ன்று ரிபோர்ட்வந்ததன்மேல் புதிய சம்மன் இன்னொன்று
ப்பிக்க அதிகாரம்ஜட்ஜியின்யுக்தத்திலிருக்கின்றது. கோர்
.ார்சாதாரணமாய் சம்மன் சேர்ப்பிக்கவேறுவகைநடவடிக்
கை இரண்டொருதரம் நேரில் ஜாரிசெய்யத் தவறிப்போ
லொழிய உத்திரவு செய்கிறதில்லை. இவ்வகைக் காரணங்க
காக மசோதாவின் பிரிவுகள் 92-A. 92-B. இவைகளை நீக்
டவேண்டியது அவசியம். தவிர, நீதி பரிபாலனத்துக்குதவ
ரும் வழி வேறு ஒன்றிருக்கின்றது. அது என்னவெனில்,
மன் சேர்ப்பிப்போனுக்கு வாதியாவது கிராமாதிகாரிகளா
பிரதிவாதியை அடையாளங் காட்டவேணுமென்றும் சம்
சேர்ப்பிப்போன் தனது ரிடர்ன் சரியானதென்று கா
அக்கம் பக்கத்துக்குடிகளின் அத்தாட்சியும் வாங்கவே
மென்றும் சட்டம் ஏற்படுத்துவது உசிதமான காரிய
ா எமக்குத் தோற்றுகின்றது.

அடுத்த பிரேரேபணையைப் பார்க்குங்கால் அதாவது(1)
கிகளை ஆஜராக நிர்ப்பந்திக்கும் விஷயத்திலும் 2 அனுவ
ானதும் அலக்கழிக்கும் உத்தேசமுள்ளதுமான சம்மன்
க்களை நிராகரிக்கும் விஷயத்திலும் பிரேரேபித்திருக்கும்
தனைகள் திருத்திப்போட்டிருக்கும் மசோதாவில் 168
ல் 175 வரைப்பிரிவுகளும் 159-வது பிரிவுமாக முறையே
ப்பதைப் பார்க்கலாம்.

தற்காலத்தில் சாட்சிகளுக்காக சம்மன் மனுக்களை இப்
ழுது இருக்கும்கோடின் 109-வது பிரிவின்படி உத்திரவு
துவருகிறார்கள். அந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறதென்
வன்றால், பிரதிவாதிக்குப் பிறப்பிக்கப்பட்ட சம்மனுது
த அம்சங்களைமாத்திரம் நிச்சயிப்பதற்காக இருந்தபோ
ம் வியாச்சியத்தை முடிவாய்த்தீர்மானிப்பதற்காகஇருந்த
திலும் அந்த சம்மனைப்பிரதிவாதிக்குச் சேர்ப்பிக்கும்படி
த்த அல்லது அனுப்புவித்தபின்பு கட்சிக்காரன் கோர்ட்
க்காவது இதுவிஷமாய்க்கோர்ட்டார் நியமிக்கிற உத்தி
கஸ்தருக்காவது மனுசெய்துகொண்டு சாட்சி சொல்லு
காவது தஸ்தாவேசுகளைக் கொண்டுவந்து காட்டுவதற்
து ஆஜராகவேண்டிய நபர்களுக்கு விவாத அம்சங்களை
பிப்பதற்கோ அல்லது வியாஜ்ஜியத்தைமுடிவாய்த் தீர்மா
பதற்கோ நியமிக்கப்பட்ட தினத்திற்கு முன்னமே சம்மன் பிறப்பித்துக்கொள்ளலாம்" என்று இருக்கிறது. இது விவாத விஷயங்களைக் கட்சிக்காரர்கள் கொடுக்கும் சாக்ஷியங்கொண்டு தீர்க்கவேணும் என்னும் கொள்கையுடைய நீதி சாஸ்திரத்தினின்று ஏற்படும் நிபந்தனையாம். மிக்க உன்னதபதவி பெற்றிருந்த "ஸர் பார்னிஸ் பீகாக், ஜேம்ஸ் கால்வில், ஸர் ஹென்றி ஹாரிங்டன்" முதலினோர், இங்கிலண்டு தேசத்து ராயல் கமிஷனர்கள், செய்த ரிபோர்ட்டின்மேல் சித்தாந்தம் செய்த 1859-ம் வருஷத்திய கோடில் இருகட்சியையும் கேட்டுத் தீர்க்கவேணுமென்றும், இந்த தத்துவத்தைப் பூரணமாய் ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்பது எல்லோரும் அறியக்கூடிய விஷயமாகும். அந்தக்கோடினுடைய 149-வது பிரிவில் சம்மன் மனுவில் எவ்வளவு நபர்களின் பெயர்களை யானாலும் சேர்த்து எழுதி அவர்களாஜராகச் சம்மன் பெறலாம் என்று கண்டிருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் பிரிவுக்குப் பின்வருமாறு சேர்க்கப் பிரேரேபனை செய்திருக்கிறார்கள்.

"ஆனால், முதலாவதுகோர்ட்டார் ரிகார்டுசெய்யும் ஹேதுக்களுக்காக அலக்கழிக்கும் பொருட்டாவது ஆலசியம் பண்ணும்பொருட்டாவது நீதிதவறிப்போகும் பொருட்டாவது அந்த மனு செய்துகொள்ளபட்டதென்று தோன்றினால் அந்த சம்மன் மனுவை நிராகரிக்கலாம் என்பதே".

"ஆனரபில் மிஸ்டர் ராலி" பிரேரேபித்திருக்கும் இந்த நிபந்தனையைப் பின்வருமாறு தாங்கப் பிரயத்தனம் செய்திருக்கிறார். "இப்பொழுதிருக்கும் பிரிவினுடைய தளர்ந்த வாசகமானது வியவஹாரங்களின் தாமதத்திற்கும் அதனால் விளையும் அதிகச் செலவுகளுக்கும் அதிகமாய் பாத்தியப்பட்டிருக்கின்றது. ஆகையால் அதைப் பலப்படுத்தப் பிரேரேபிக்கப்படுகிறது. முதலில் கோர்ட்டாருக்கு அலக்கழிக்கும் பொருட்டாவது ஆலசியம் பண்ணும் பொருட்டாவது நீதி தவறிப்போகும் பொருட்டாவது செய்துகொள்ளப்படும் மனுக்களை நிராகரிப்பதில் 1898-ம் வருஷத்திய "கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்" 257 (1) வது பிரிவின்படி கொடுத்திருக்குமளவு நிர்ப்பந்த அதிகாரமாவது வகித்திருக்கவேண்டும்" என்பதுதான்.

மற்ற ஆட்சேபனைகள் நிற்க, கிரிமினல் கேஸ் விசாரணைக்காக கோர்ட்டாருக்கு யாதாமொரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதினாலேயே, ஜனங்களின் சுவதந்தர உரிமைகளைப் பற்றி விமரிசை செய்யும் சிவில் கோர்ட்டுகளுக்கும் அவ்வித அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்பது நியாயமாகுமா?

மற்றக் காரணங்கள்பற்றியும் அது ஒவ்வாததாகும். கிரிமினல் ப்ரொஸீஜரில் மேற்சொன்ன பிரிவின் வாசகம் பின்வருமாறு காண்கிறது.

257 (1) "யாதொரு சாட்சியை விமரிசை செய்யும்பொருட்டாவது ரத்துசவால் செய்யும்பொருட்டாவது ஆஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும் யாதொரு தஸ்தாவேஜு முதலிய பொருளைக்கொண்டுவந்து காட்டும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும் யாதொரு கட்டளை பிறப்பிக்கும்படி குற்றஞ் சாட்டப்பட்டவன் தன் பட்சத்தில் வாதிக்க ஆரம்பித்த பிறகு மாஜிஸ்டிரேட்டுக்கு மனு செய்துகொண்டால் மாஜிஸ்டிரேட்டானவர் அலக்கழிக்கும் பொருட்டாவது ஆலசியம் பண்ணும்பொருட்டாவது நீதி தவறிப்போகும் பொருட்டாவது அந்தமனு செய்துகொள்ளப்பட்டதென்கிற ஹேதுவின் மேல் அதை நிராகரிக்கவேண்டுமென்று தமக்குத் தோற்றினாலொழிய அப்படிப்பட்ட கட்டளையைப் பிறப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஹேதுவை அவர் எழுதி ரிகார்டுபண்ணவேண்டும்.

ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றப்பத்திரிகை ஏற்படுத்தப்பட்ட பிறகு யாதொரு சாக்ஷியை ரத்துசவால்

செய்தாலும், அல்லது ரத்து சவால் செய்ய அவனுக்கு அனுகூலம் வாய்த்திருந்தாலும் மாஜிஸ்ட்ரேட்டானவர் நியாய விஷயங்களுக்காக அவசியமென்று தாம் திருப்தி அடைந்தாலன்றி மற்றப்படி அந்த சாட்சியை ஹாஜராயிருக்கும்படி இந்தப்பிரிவின் பிரகாரம் கட்டாயப்படுத்தக்கூடாது.'

கட்டளைகளை நிராகரிக்கக் கொடுத்திருக்கும் அதிகாரம் அந்தப் பிரிவில் ஒரே ஒரு விஷயத்திற்குள் மாஜிஸ்ட்ரேட்டு அடைந்திருக்கிறார். அதாவது குற்றஞ் சாட்டப்பட்டவன் ஒரு வாரண்டுக் கேசில் குற்றஞ்சாட்டப்பட்ட பிறகு அவன் தன் பட்சத்தில் வாதிக்க ஆரம்பித்தபிறகு யாதொரு கட்டளை பிறப்பிக்கும்படி கேட்கும் பக்ஷத்தில் மாத்திரம் பிரஸ்தாப அதிகாரம் கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கோட் 254-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட் குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றத்தைச் செய்திருக்கிறானென்று நிச்சயமாய் கொள்வதற்கு முகாந்தரமிருப்பதாக அபிப்பிராயப்பட்டால், அவர் அவன்மேல் குற்றப்பத்திரிகை எழுதலாம். ஆகவே, சில கேசுகளில் (அவ்விதக்கேசுகளும் வெகு அருமை.) குற்றஞ் சாட்டப்பட்டவன் தன்பேரில் குற்றப்பத்திரிகை எழுதப்பட்டதென்று கண்டு கோர்ட்டார் தான் குற்றவாளியென்று எதிர்கட்சி சாட்சியத்தால் ஒருவாறு தீர்மானத்துக்கு வந்தாய்விட்டதே என்று பயந்து தனக்கு சிட்சை விதிக்கும் காலமாகிய ஜட்ஜிமெண்டு கொடுக்கும் தினத்தைத்தள்ளிப் போகச் செய்யவேணுமெனும் எண்ணத்துடன் அனேகம் நபர்களைத் தன் சாட்சியாக விசாரிக்கவேணுமென்று கேட்டுக்கொள்ளக்கூடுவதா யிருப்பதுபற்றி பிரஸ்தாப அதிகாரம் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருகிறது கிரிமினல் ஜெயிலுக்குப்போகவேண்டுமே எனும் ஏக்கங்கொண்டு அவ்வித கஷ்டத்தை எப்படியாவது கூடினகாலம் தள்ளிப்போகச் செய்யவேணுமென்று ஒரு குற்றவாளி செய்யக்கூடியதந்திரங்களைத் தடுப்பதற்காகக் கொடுத்திருக்கும் அதிகாரம் சிவில்கேஸ் விமரிசைகளுக்குச் சற்றும் ஒவ்வாததாகும். (இன்னும் வரும்)

THE FOURTH CRIMINAL SESSIONS OF THE HIGH COURT OF MADRAS. (*CONTD.*)

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

நான்காவது கிரிமினல் சேஷன்ஸ்.

(தொடர்ச்சி.)

சேஷன்ஸ் ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கேஸ் நெ. XI.

குற்றவாளிகள் :—(1) S. பலவேசம்பிள்ளை
(2) சார்லஸ் வாலேஸ்

குற்றம் :—புரட்டுசொல்லி ஏமாற்றின குற்றம்

லாயர்கள் :—பாரிஸ்டர் மிஸ்டர் A. S. கவுடல் முதல் குற்றவாளி தரப்பிற்கும், மிஸ்டர் E. R. ஆஸ்பர்ன் இரண்டாவது குற்றவாளிக்கும் ஆஜரானார்கள்.

ஜூரர்கள் :—மிஸ்டர் C. சவுடன் (போர்மன்) மிஸ்டர் F. E. கூப்பர், மிஸ்டர் S. லோன், மிஸ்டர் W. R. கருத்தர்ஸ், மிஸ்டர் டி. ஆங்கஸ், மிஸ்டர் எச். எ. நெல்சன், மிஸ்டர் முகமது அன்வாருடின் சாகிப், மிஸ்டர் H. M. ஜிப்சன் மிஸ்டர் J. K. இதார்ட்டி.

கேசின் விவரம்:—இரண்டு குற்றவாளிகளும் சேர்ந்து "லேடிஸ் இன்டஸ்டிரியல்" என்கிற விலாசத்துடன் ஒரு பண்டாபீசு ஏற்படுத்தி இதில் எந்த ஸ்திரியாகிலும் தினம் ஒன்றுக்கு நான்கணா மேனிக்கு 100-தினங்களுக்கு ஆக ரூ. 25 செலுத்துகிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு வருஷத்திற்கு 100 - க்கு மூன்று வட்டி மேனிக்குத் தேவையானபோது பணம் கடன் கொடுக்கப்படுமென்று விளம்பரம் பிரசுரித்தார்கள்; வெளியூர்களுக்கும் தங்களுடைய ஏஜண்டுகளை அனுப்பி விளம்பரப்படுத்தி சந்தாதாரர்கள் சேர்க்கும்படி அனுப்பினார்கள். உள்ளூரிலும் வெளியூரிலும் அநேக ஸ்திரீகள் இதில் சேர்ந்து பணம் செலுத்தி வந்தார்கள். சேர்ந்தவர்கள் பணம் செலுத்தி விட்டு கடன் கேட்டபோது இந்தக் குற்றவாளிகள் கடன் கொடுக்காமல் பல சாக்குப்போக்குகள் சொல்லிவந்தார்கள். இந்த சமாசாரம் சென்னை போலீஸ் கமிஷனருக்கு அறிவிக்கப்பட்டு அவர் அக்கவுண்டன் ஜெனராலுக்கு எழுதி ஒரு அக்கவுண்டாண்டை விட்டு கணக்குகளைப் பரிசோதனைசெய்யும்படி செய்தார். அவர் பரிசோதித்ததில் கணக்குகள் தப்பாயிருந்ததாகவும், சந்தாதாரர்களிடமிருந்து வசூலித்த ரூ. 3000-ம் என்றும், இந்தத்தொகையைக் குற்றவாளிகள் என்னசெய்தார்களென்று தெரியவில்லை என்றும் சிட்டாக்கணக்கில் காணப்பட்ட ரூபா. 1000-குற்றவாளிகள் தங்களுடைய சொந்தச் செலவுகளுக்கு உபயோகித்துக் கொண்டார்களென்றும் ஷை பண்டு கடன்கொடுக்கக்கூடிய நிலைமையிலில்லை என்று குற்றவாளிகளுக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் பண்டில் கடன் கொடுப்பதற்காக ரூ. 5000-ம் தயாராயிருக்கிறதென்றும் பண்டன் ஐவேஜி நிலைமையைப்பற்றி சிலாகித்து எழுதி விளம்பரங்கள் பிரசுரித்திருக்கிறார்களென்றும், ஆகவே, ஏழை ஜனங்களை ஏமாற்றவேண்டுமென்கிற கருத்துடன் இந்தப்பண்டை இந்த இரு குற்றவாளிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும் ரிப்போர்ட் எழுதினார். இந்த ரிப்போர்ட்டைப் பார்த்த போலிசார் இரு குற்றவாளிகளையும் அரஸ்ட் செய்து விசாரணைக்குக் கொண்டுவர இவர்கள் செஷன்ஸ் விசாரணைக்குக் கமிட்டிசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

கேசின் நடவடிக்கை :—இந்தக் கேசின் விசாரணை ஏறக்குறைய ஒரு வாரம் நடந்தது. இருதரப்பிலும் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

டிபன்ஸ் :—முதல் குற்றவாளி, இந்த பண்டு இரண்டாவது குற்றவாளி உற்பத்தி செய்தது என்று சொன்னான். இரண்டாவது குற்றவாளி தனக்குத் தமிழ் தெரியாதென்றும் சகலத்திற்கும் முதல் குற்றவாளியே உத்தரவாதி என்றும் சொன்னான்.

தீர்ப்பு :—முதல் குற்றவாளிக்கு 18-மாதக் கடுங்காவல் தண்டனையும், இரண்டாவது குற்றவாளிக்கு 6-மாதக்கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

கேஸ் நெ. XII.

கன்னக்கோல் திருட்டுக்கேஸ்.

குற்றவாளிகள் :—(1) சொக்கலிங்கம்.
(2) எதிராஜலு.
(3) சோட்டாசிங்.
(4) திருவேங்கடம்.

கேசின் விவரம் :—இந்த நான்கு குற்றவாளிகளும் கடந்த செப்டம்பர்மீ 6வ இரவு சென்னை ஜியார்ஜ்டவுன் பெருமாள் தோட்ட வீதியில் வெங்கடாசலமுதலியார் வீட்டில் கன்னம் வைத்துப் புகுந்து ரூ. 2500 - பெறுமான சாமான்களைத் திருடிக் கொண்டு போய்விட்டதாகக் குற்றஞ் சாட்டினார்.

ஜூரிகள் :—மிஸ்டர் W. H. போர்ட் (போர்மன்), மெசர்ஸ் W. H. புல்மோர், A. டோருன், H. பாலகிருஷ்ணபிள்ளை F. A. டிக்ரூஸ், J. H. பார்க்கர், J. பாஸ்சட், A. W. பால், J. சாட்விக்.

தீர்ப்பு :—1, 2, குற்றவாளிகளுக்கு இரண்டு வருஷக்கடுங்காவல் தண்டனையும், 3-வது குற்றவாளிக்கு 5-வருஷக் கடுங்காவல் தண்டனையும், நான்காவது குற்றவாளிக்கு மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. 3, 4, குற்றவாளிகள் ஜெயிலிலிருந்து வந்ததுமுதல் மூன்று வருஷத்திற்குப் போக்குவரவுகளைப் போலிசாருக்கு அறிவித்துக் கொண்டிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

கேஸ் நெ. XIII.

நகை திருடின கேஸ்.

குற்றவாளி :—அப்துல்லா என்கிற காசிம்பெக் என்கிற காசிம்கான் என்கிற பாபு.

கேசின் விவரம் :—சென்ற அக்டோபர்மீ 22வ குற்றவாளி ஜியார்ஜ்டவுனில் லக்ஷ்மணபிள்ளை என்பவர் வீட்டில் ஒரு குழந்தை அணிந்துகொண்டிருந்த வெள்ளி நகையைத் திருடிவிட்டான்.

தீர்ப்பு :—இவன் பழைய குற்றவாளியானபடியால் கோர்ட்டார் இவனுக்கு நான்குவருஷக் கடினகாவல் தண்டனை விதித்து ஜெயிலிலிருந்து வந்தபின் மூன்றுவருஷம் வரையில் இவனுடைய போக்குவரவுகளைப் போலிசாருக்கு அறிவிக்கவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

கேஸ் நெ. XIV.

நம்பிக்கை மோசக் கேஸ்.

குற்றவாளி :—துரைசாமி என்கிற எதிராஜலு என்கிற ஏகாம்பரம்.

கேசின் விவரம் :—குற்றவாளி ஜாதியில் கம்மாளன். மாணிக்க ஆசாரி என்கிற இவன் எஜமான் இவனிடத்தில் இரண்டு விராகனெடை பொன் கட்டியைக்கொடுத்துக் கம்பி நீட்டும்படி சொல்ல, இவன் அதைவிற்றுச் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டு ஒரே அடியாய் கம்பி நீட்டிவிட்டான்.

கேசின் நடவடிக்கை:—இவன் பலதடவை ஜெயிலுக்குப் போய்வந்தவன்.

தீர்ப்பு:—4-வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது மன்றி, தண்டனை முடிந்து வெளிவந்தவுடன் மூன்று வருஷம் வரையில் போலிசாருக்குப் போக்குவரவுகளை அறிவித்துக்கொண்டிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

கேஸ் நெ. XV.

போர்ஜரி கேஸ்.

குற்றவாளி.—சங்கரலிங்கம் பிள்ளை.

கேசின் விவரம்.—குற்றவாளி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ரெயில்வே அதிகாரிகள் சாமான் பெற்றுக்கொண்டதற்குக் கொடுக்கும் ரசீது கடிதாசி ஒன்றைத் திருடி, அதில் சையத்ராவுத்தர் என்பவருக்கு 100-பீப்பாய் தேங்காயெண்ணெய் வந்திருப்பதுபோல எழுதி ஸ்டேஷன் அதிகாரிகள் கையெழுத்தையும் போட்டு ஜியார்ஜ்டவுனில் வர்த்தகம் செய்யும் P. R. Y. கம்பெனியாரிடம் காண்பித்து ஷை பீப்பாய்களை ரூ. 2000-க்கு விற்று ஷை தொகையை சையத்ராவுத்தருக்குக் கொடுத்துவிட்டு, தனக்குச் சேரவேண்டிய தரகு ரூபா 20-ம் பெற்றுக்கொண்டான். கம்பெனியார் ரெயில்வே ரசீதைக் காண்பித்து ரெயில்வேஸ்டேஷனில் சரக் கெடுக்கப்போனபோது மோசம் வெளிப்பட்டது. சையத் ராவுத்தர் ஓடிப்போய்விட்டார்; இன்னும் அகப்படவில்லை.

ஜூரர்கள்:—மிஸ்டர் W. H. போர்ட், மிஸ்டர் T. அண்ணாசாமிராவ், மிஸ்டர் A. டோருன், மிஸ்டர் K. பாலகிருஷ்ண பிள்ளை, மிஸ்டர் F. S. டிக்ரூஸ், மிஸ்டர் Y. H. பார்க்கர், மிஸ்டர் I. C. பாஸ்கட், மிஸ்டர் A. W. பால், மிஸ்டர் Y. சாட்விக்.

தீர்ப்பு:—நான்கு வருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கேஸ் நெ. XIVI.

பிராமிசரி நோட்டு போர்ஜரி கேஸ்.

பெருமாள் நாயுடு என்பவன் ஒரு பிராமிசரி நோட்டின் பின்பக்கத்தில் போர்ஜரி எண்டார்ஸ்மெண்டு செய்து ஏமாற்றினதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதில் ஏமாற்றின குற்றமட்டிலும் ருஜூப்பட்டு அவனுக்கு மூன்றுவருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கேஸ் நெ. XVII.

முனிசிபாலிட்டி மோசக்கேஸ்.

குற்றவாளி:—நாராயணராவ் நாயுடு.

கேசின் விவரம்:—குற்றவாளி முனிசிபாலிட்டி உத்தியோகஸ்தன். சாக்கடை வேலைகளுக்காகச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் வால்ஸ் தோட்டத்தில் ஸ்டோர் கீப்பருக்கு உதவிசெய்துவந்தான். இந்த உத்தியோகமுறையில் கணக்கு வழக்குகளைப் புரட்டி எழுதி மோசம் செய்துவந்தது மன்றி, 144-ரூபா பெறுமான சிமின்ட் பீப்பாய்களை விற்றுப் பண

த்தைத்தன் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டதாக இ. பி. கோ. 477, A-பிரிவின்படி குற்றஞ் சாட்டப்பட்டான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் W. H. புல்மோர் (போர்மன்). H. ஹாட்சன் மிஸ்டர் A. J. நிக்கல்ஸ், மிஸ்டர் C. N. வம்பு, மிஸ்டர் R. வெங்கட்ராவ், மிஸ்டர் H. W. நேய்லர், மிஸ்டர் P. தீனதயாளுமுதலியார், மிஸ்டர் B. T. மாரிஸ்.

தீர்ப்பு:—நாராயணராவ் நாயுடு! நீ கணக்குகளைப் புரட்டி எழுதியிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய். அந்தக் குற்றம் ருஜுவாய்விட்டதென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. நீ ஒருதடவை மட்டிலும் கணக்குகளைப் புரட்டி எழுதியிருப்பதாக ருஜுப்பட்டிருக்கிறது. ஆனால் நீயும் பைப்லேயரும் சேர்ந்து முனிசிபாலிட்டியையும் வரிகொடுப்பவர்களையும் மோசஞ் செய்யவேண்டுமென்று வெகு காலமாய்ப் புரட்டுக்கணக்குகள் எழுதி வருகிறீர்கள் என்று நினைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் உனக்கு மூன்று வருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கிறோம் என்று சொன்னார்.

இத்துடன் சென்னபட்டணம் ஹைகோர்ட்டு நான்காவது செஷன்ஸ் விசாரணை முற்றிற்று.

இந்துலா.

அத்தியாயம்-3.

விவாகம்.

விவாகம் முக்கியம்:—

1. விவாகமென்பது இந்துக்களால் பல்லாண்டு பல்லாண்டாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சட்டப்பிரகாரமுள்ள உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் அதுவே மூலாதாரமாக விருக்கிறது. விவாகத்தால் ஸ்திரீ ஜாதிகள் அடிமைத்தன்மையிலிருந்து உயர்ந்த அந்தஸ்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்களென்றும் சொல்லலாம். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய துவிஜாதிகளில் பிறந்த ஆண்களுக்குப்புனர்ஜனன பரிசுத்த விசேஷத்திற்காக நடத்தப்படவேண்டிய பத்து சமஸ்காரங்களுக்குள் விவாகம் ஒன்றாயிருப்பதாலும், பொதுவாய்,சூத்திரர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் விவாகமென்கிற சமஸ்காரத்தைத் தவிர வேறே சமஸ்காரமில்லாததாலும் இந்துக்களுக்கு விவாகமென்பது மிக முக்கியமென் றேற்படுகிறது.

2. பத்து சமஸ்காரங்கள்:—முந்திய பாராவில் சொல்லப்பட்டிருக்கும் பத்து சமஸ்காரங்கள் அல்லது சடங்குடன் துவிஜாதி புருஷர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்படாவிடில் அவர்கள் காயத்திரி மந்திரத்தினின்று நீங்கினவர்களாயும், விராத்தியானென்னும் பெயருள்ளவர்களாயும், பெரியோர்களாலே வைதிக காரியத்தினின்று நீக்கப்பட்ட அபரிசுத்தராளாகி விடுகிறார்களென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றபடியால் அவற்றை எல்லோரும் தெரிந்துகொண்டிருப்பது நலம். (1) சிசு கர்ப்பத்திலிருக்கும்போது நடத்தப்படும் சடங்கிற்குக் கர்ப்பாதானமென்றுபெயர். (2) பிறந்த சிசு ஆணாயிருந்தால் அதன் தொப்புள் கொடியறுப்பதற்குமுன் நெய்-தேன்-இவற்றில் சுவர்ணத்தை மந்திரத்தோடிழைத்து அதன் நாவிற்றடவவேண்டியது; அல்லது பரிசுத்தஞ் செய்யப்பட்ட நவனீதத்தைத் தங்கக்கரண்டியால் அதற்கு ஊட்டவேண்டியது. இந்த சமஸ்காரத்திற்கு ஜட்கர்ம மென்று பெயர். (3) குழந்தை பிறந்த பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவது அல்லது நூற்றி ஒராவது தினத்தில் புண்ணிய திதியில் நல்ல முகூர்த்தத்தில் சுப நட்சத்திரத்தில் அதற்கு நாமகரணஞ் செய்யவேண்டியது. (4) குழந்தை பிறந்த நாற்பத்திரண்டாம் தினத்திலாகிலும் அல்லது மூன்றாவது நான்காவது மாசத்திலாகிலும் அந்த சிசுவைப் பிறந்த வீட்டினின்று வெளியில் கொண்டுவந்து முறையே மூன்றாம்பிறைச் சந்திரனுக்காகிலும் சூரியனுக்காகிலும் காட்டவேண்டிய சமஸ்காரத்திற்குப் பெயர் நிஷ்கிரமணம். (5) குழந்தை பிறந்த 6-வது அல்லது 8-வது மாதத்தில் அல்லது அதற்குத் தந்த உற்பத்தியானவுடனாவது அக்குழந்தைக்குச் சாதம் ஊட்டல் வேண்டும். இதற்கு அன்னப்பிராசனம் என்று சொல்லப்படும். இச்சடங்கு முதல் அக்குழந்தை குடும்பத்தில் ஒரு அங்கத்தினனாகப் பாவிக்கப்படுகிறபடியால் அனேக விடங்களில் இச்சடங்கு மிகச் சம்பிரமமாய் நடத்தப்பட்டுவருகின்றது. (6) குழந்தை பிறந்த வருஷத்திலாவது அல்லது மூன்றாவது வருஷத்திலாவது வேதத்திற் சொன்னபடி தர்மமாக சௌளகர்மஞ் செய்யவேண்டியது (சௌளம்-சிரமுண்டிதம்; க்ஷவரம்.)

7. பிரமதேஜசை விரும்புகிற பிராமணனுக்கு ஐந்தாவது வயதிலும், பலத்தை விரும்புகிற க்ஷத்திரியனுக்கு ஆறாவது வயதிலும், பொருளை விரும்புகிற வைசியனுக்கு எட்டாவது வயதிலும் உபநயனஞ்செய்யவேண்டும். துவிஜாதி புருஷன் இந்த சமஸ்காரஞ் செய்யப்படாதவனானால் அவன் ஜாதிப் பிரஷ்டனாக எண்ணப்படுகிறான். (8) காயத்திரியால் பரிசுத்தஞ் செய்யப்படும் சமஸ்காரத்திற்குச் சாவித்திரி என்று பெயர். (9) குருவின் கிரகத்திலிருந்து சிஷியன் வந்தவுடன்நடத்தப்படும் சடங்கிற்குச் சாமவர்த்தனமென்று சொல்லப்படும். (10) விவாகம்:—இதுதான் துவிஜாதிகளின் புனர் ஜனனத்தைப் பூர்த்திசெய்கிற கட்சி சமஸ்காரம். ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் விவாகத்தைத் தவிர அன்னப்பிராசன சமஸ்காரத்தையுஞ் செய்யலாமென்று சில ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ஆகவே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு வருணத்தாருக்கும் முடிவாகப் புனர்ஜனனத்தைக் கொடுக்கிற சமஸ்காரம் விவாகமாயிருக்கிறது. இந்தச் சடங்கு முதல் புருஷன் எந்தக் குடும்பத்திற் பிறந்தானோ அந்தக்குடும்பத்தில்சேர்க்கப்பட்டவனாகிறான். பெண்ணை பாணிக்கிரகணஞ்செய்துகொள்ளுதல் கடைசி சமஸ்காரமாயிருக்கிறபடியால் அது ரத்துசெய்யப்படக்கூடாத ஓர் உடன்படிக்கையாயிருக்கிறது. இந்தசம்பவமுதல் பையன்பாலனத்திலிருந்தும், தகப்பனின் பராமரிப்பிலிருந்தும் நீங்கி

தானே தன் காரியாதிகளை நடத்திக்கொள்ள விவேகமுள்ள பக்குவியாகிறானென்று எண்ணப்படுகிறது. பையனுக்கு 16-வயது முடிந்தவுடன் சுயேச்சை அடைகிறானென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் வங்காளத்தில் மட்டிலும் 15-வது வயது முடிந்து 16-ம்வயது ஆரம்பத்தில் மைனர்பந்தம் நீங்குகிறதாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருந்தபோதிலும் 1875-ம் வருஷத்திய 9-வது ஆக்ட் அமுலுக்கு வந்த பிறகு மேற் சொல்லப்பட்ட விதிகள் மாறிப் போய்விட்டால், பிரஸ்தாப ஆக்ட்டின் பிரகாரம் ஏறக்குறைய எல்லோருக்கும் பதினெட்டாவது வயது சம்பூர்ணமானவுடன் மைனர் பந்தம் நீங்குகின்றது. அந்த ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டொரு வகையாருக்குமட்டிலும் மைனர் கால வரையரை இருபத்தொரு வயதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஆக்ட், விவாகம்-பரிதனம், சம்பந்தத்தை ரத்துசெய்தல் - ஸ்வீகாரத்தின் காலத்தைப் பாதிக்கமாட்டாது.

(3) இந்துக்களுக்கு விவாகம் அவசியம்:—புத்திரனில்லாதவர்களுக்குச் சுவர்க்காதி புண்ணியலோகமில்லை யென்றும், புத்திரனிருந்தால் பிதுர்க்களை நரகத்தினின்றும் தப்புவிக்கிறானென்றும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் புத்திரனைப் பெறுவதற்காகவே விவாகம் செய்துகொள்ள வேண்டியது இந்துக்களுக் கவசியமா யிருக்கிறது. இந்தியாவில் அப்போதைக் கப்போதிருந்த ஜனாசாரத்திற்குத்தக்கபடி அனேகவிதமான விவாகங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. அவைகள் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாச முள்ளவைகளாகவு மிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் எட்டு விதமான விவாகங்கள்தான் இந்துலாவில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒன்று அல்லது பல எத்தனைவித விவாகங்க ளிருந்த போதிலும் ஒரு புருஷன், ஒரு ஸ்திரீயுடனாகிலும் பல ஸ்திரீகளுடனாகிலும் சேர்ந்து கொள்வதுதான் சாமானிய விதமான விவாகம். புருஷன் இறந்தபிறகு பெண்சாதி ஜீவித்திருப்பாளேயாகில் அவள் உயிருள்ள பரியந்தம் வைதவ்வியத்திலிருக்கவேண்டும். இந்துக்களுடைய விவாகம், ஐரோப்பியர்களுடைய விவாகத்தைப்போல் கூட்டுறவையும் சிநேக சந்தோஷத்தையுமே உத்தேசித்துத் துரையும் துரைசானியும் மனமொத்துச்செய்துகொள்ளும் உடன்படிக்கையைப்போலல்லாமல் மத சம்பந்தமான ஓர் அவசியகர்மமாக விருப்பதால் இன்னார்தான் விவாகஞ் செய்து கொள்ளலாம் இன்னார் விவாகஞ்செய்து கொள்ளக்கூடாதென்று நாகரீகம் அடைந்திருக்கும் தேசங்களின் சட்டங்களில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனை நம்முடைய இந்துலாவில் கிடையாது. பெண்ணைப்பெற்ற தகப்பன் அல்லது கார்டியன் கன்னிகைக்குத் தகுந்தவனைத்தேடி விவாகஞ்செய்துகொடுக்காவிடில் அவளே தனக்கு வரனைத்தேடிக்கொண்டு விவாகஞ்செய்து கொள்ளலாம். இந்த விவாகத்திற்குச் சுயம்வர விவாகமென்று பெயர்.

பெண்ணைப் பெற்ற தகப்பனாயினும் அல்லது கார்டியனாயினும் அவளுக்கு ஒருவரனைத்தேடி விவாகஞ் செய்துகொடுப்பது விவாகமாகப் பாவிக்கப்படுகிறது. ஆகையால் அந்த சங்கதியில் ஒருகன்னிகையானவள் ஒருவரால் மற்றொருவருக்குக் கொடுக்கும் பொருளாயிருக்கிறாளே ஒழிய அதில் அவள் நேரான ஓர் கட்சிக்காரியல்ல.

ஜாதியைவிட்டு வேறேஜாதியில் விவாகம்செய்து கொள்ளுதல், ஒரே கோத்திரத்தில் விவாகம் செய்தல், விவாகஞ்செய்து கொள்ளக்கூடாத பந்துக்களை விவாகஞ்செய்துகொள்ளுதல் ஆகிய இந்த அசந்தற்ப விவாகங்கள் மட்டிலும் பொதுவாய் இப்போது கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டு வருகின்றனவேயொழிய, மற்றப்படி வேறு காரணங்களைக்கொண்டு இதர அம்சத்தில் திருப்திகரமாய் முடிந்துபோன விவாகத்தைப் பெரும்பாலும் ரத்து செய்யமாட்டார்கள். அப்படி ஏதேனும் மேற்சொல்லப்பட்ட நான்கு காரணங்களைத் தவிர்த்து தக்க காரணமிருந்து தாவா நேரிடுமானால் விவாகத்தில் நஷ்டமடைந்தவர்களுக்கு எதிர்கக்ஷியார் நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி உத்தரவாகுமே தவிர விவாகம் ரத்து செய்யப்படமாட்டாது.

ஆகவே, விவாகத்தில் கொடுக்கப்படும் கன்னிகையினுடைய சம்மதம் விவாகத்திற்கு அனாவசியம். ஒரு புருஷன் எத்தனை பெண்களை வேண்டுமென்றாலும் தன் இஷ்டப்படி விவாகம் செய்துகொள்ளலாம். முந்திய தாரத்தினுடைய சம்மதம் வேண்டுமென்பதவசியமில்லை. அவனுக்கு யாதொரு காரணமுஞ்சொல்லாமலே விவாகஞ் செய்துகொள்ளலாம். ஆனால் புனர்விவாகஞ் செய்துகொண்ட நிமித்தம் முந்திய தாரத்தை விலக்க முடியாது.

இந்தியா கவர்ன்மேண்டு விளம்பரம்.

இந்தியாதேசத்திலிருந்து கன்னட நாட்டிற்குப் பிழைப்பை நாடி வருகிறவர்களுக்கு அந்நாட்டில் பிழைப்பு அகப்படமாட்டாதென்றும், அப்படி இவ்விடம்வந்து பிழைப்பு அகப்படாமல் அலைந்து திரிகிறவர்களைக் கன்னட நாட்டுச்சட்டத்தின்படி நாட்டைவிட்டு அப்புறப்படுத்தும்படி நேரிடுமென்றும் அதனால் இந்தியக்கூலிகளுக்கு இந்த சமாசாரத்தைத் தெரிவித்து எச்சரிக்கவேண்டுமென்றும் கன்னட நாட்டு கவர்னர் ஜெனரல் மாக்ஷிமை தங்கிய மகாராஜாவின் இந்தியாதேசமந்திரி எழுதியிருப்பதால், இந்தியா மந்திரியாகிய இந்தியாகாரியதரிசி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அறிவித்திருக்கிறார்கள். மேலே சொல்லப்பட்ட எச்சரிக்கையைக் கன்னட நாட்டிற்குப்போகிறவர்கள் அறிந்துகொள்ளும்படியாக எச்சரிக்கை செய்யவேண்டுமென்று லோக்கல் கவர்ன்மெண்டாருக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

சென்னை கவர்ன்மேண்டு ஆர்டர்கள்.

1906ம்ஸ்ரீத்திய டிசம்பர்மீ 3உ G. O. நெ. 198. L.

சென்னை சானிட்டரி கமிஷனர், அனுப்பியிருக்கும் சென்னை ராஜதானியின் 1096ஸ்ரீ ஆகஸ்ட்மீ அடியிற்கண்

ட ஜனனமரண ரிப்போர்ட்டைப்போர்ட் சென்ட் ஜியார் கெஜெட்டில் பிரசுரம் செய்யும்படியாகக் கவர்ன்மெண்டா உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜில்லாக்களின் ஜனன மரணம்.

ஜனனம்:—110123; மரணம் 126397.

ஜனன விபரம்:—ஆண் 56410, பெண் 53713;

மரண விபரம்:—ஆண் 64218, பெண் 62149.

நோயின் விபரம்—கால்ராவா லிறந்தவர்கள் 36480; நீலகிரி ஜில்லாவைத் தவிர மற்ற ஜில்லாக்களில் இந்த மாதம் வாந்திபேதி பரவிவந்தது. கோதாவரி, கிருஷ்ணா, கர்நூல், கடப்பை, தென் ஆற்காடு, அனந்தபூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, விசாகபட்டணம், நெல்லூர், திருச்சி ஆகிய இந்த ஜில்லாக்களில் வாந்திபேதி மும்மரமாய்ப் பரவி வந்தது. வைசூரியாலிறந்தவர்கள் 2110, எல்லா ஜில்லாக்களிலும் வைசூரிகண்டது. ஆனால் நீலகிரி, பெல்லாரி, வட ஆற்காடு ஜில்லா ஆகிய இந்த மூன்றுஜில்லாக்களில் வைசூரியால் அதிக மரண முண்டானது. பிளேக்கினால் மரணம் 36, ஐந்து ஜில்லாக்களில் பரவியிருந்தது. சுரத்தால் மரணம் 3349. விசாகபட்டணம், கஞ்சம், குண்டூர், கிருஷ்ணா, கர்நூல், கோதாவரி, நீலகிரி ஆகிய இந்த ஜில்லாக்களில் சுரத்தால் அதிகப்படி மரணம். வயிற்றுளைவு, வயிற்றுப் போக்கு முதலிய நோய்களால் 8283. சென்னை, நீலகிரி, மலையாளம், கோதாவரி பெல்லாரி ஆகிய இந்த ஜில்லாக்களில் வயிற்றுளைவால் அதிக மரணம். சுவாச சம்பந்தமான வியாதிகளால் 2418. நீலகிரி, சென்னை, கிருஷ்ணா ஜில்லாக்களில் அதிக மரணம்.

முனிசிபல் நகரங்களின் ஜனன மரண ஜாப்தா.

ஜனனம்:—8234. மரணம் - 10529.

ஜனன விவரம்:—ஆண் 4215. பெண் 4019. மரண விவரம் ஆண் 5339. பெண் 5190.

நோயின் விவரம்:—12-முனிசிபாலிடிகள் தவிர, மற்ற முனிசிபாலிடிகளில் கால்ரா பரவி 1843-பேர்கள் இறந்தார்கள். பாளயங்கோட்டை, அனந்தபூர், குடியேத்தம், ராஜமஹேந்திரி, எல்லூர் ஆகிய இந்த நகரங்களில் அதிகப்படி கால்ரா மரணம். 21-முனிசிபாலிடிகளில் வைசூரி கண்டு 125-மரண முண்டானது. வெல்லூர், கூனூர், திருவண்ணாமலை ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் அதிகப்படி மரணம். பிளேக்நோயால் 24-பேர்மரணம். மங்களூரில் 5. தலைச்சேரியில் 15. சுரத்தால் மரணம். 1489 குண்டூர், திருப்பதி, அனகபள்ளி, ராஜமகேந்திரி, நந்தியால், கடப்பை ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் அதிகப்படி மரணம். வயிற்றுளைவு, வயிற்றுப் போக்கால் மரணம் - 1726. ராஜமகேந்திரி, ஆதோனி, குண்டூர், ஈரோடு, அனகபல்லி, காகிநாடு, திருப்பதி ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் அதிகப்படி மரணம். ஸ்வாஸ நோய்களால் மரணம் 425. கூனூர், உதகமண்டலம், தலைச்சேரி ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் அதிகப்படி மரணம்.

1906ஹு அக்டோபர்மீ 2உ G. O. நெ. 979. கவர்ன்மெண்டார் உத்திரவின்பேரில் கோதாவரி ஜில்லாவில் பனைமரங்களைப் பீடிக்கும் நோய்களைப் பரிசோதனை செய்த டாக்டர் E. J. பட்லர் M. B. F. L. S. அவர்கள் அந்த நோய்க்குரிய காரணங்களைக்கண்டுபிடித்து அவைகளைப் போக்கும்பொருட்டுச் சில பிரேரேபனைகள் செய்தார். இந்தப்பிரேரேபனைகளை ரெவினியூ போர்டார் கவர்ன்மென்டாருக்கு அறிவித்தார்கள்,

உத்தரவு;—(1) ரிபோர்ட்டு தாக்கல்செய்துகொள்ளப்பட்டது. கோதாவரிஜில்லாவில், காகிநாடுதாலூகாவின் பிர்க்காவாகிய கொரிங்கியாவிலும், ராமசந்திரபுரம் தாலூகாவின் பிர்க்காவாகிய வெங்கடாய பாளயத்திலும், அமலாபுரம் தாலூகாவின் பிர்க்காவாகிய அமலாபுரத்திலும் பனைமர நோய்கள் பரவியிருக்கின்றன.

(2) ரிவினியூ போர்டார் செய்திருக்கும் பிரேரேபனைகளைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்துக்கொள்கிறார்கள்.

(3) நோயை விலக்கும்பொருட்டு அந்த நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் நான்கு மாத காலத்திற்கு மீ 1-க்கு 40-ரூபாயில் ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டரும், தினம் நாலணா சம்பளத்தில் 24-பாளை தட்டிகளையும் நியமிக்கவேண்டுமென்று ரிவினியூ போர்டார் பிரேரேபித்திருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

1906ஹு நவம்பர்மீ 30உ 98-ம் நெ. (லெஜிஸ் லேடிவ்) வடஜில்லாக்களின் ஜில்லாபோர்டுகளுக்குப் பிரதிநிதியாக, சென்னை சட்டநிரூபண சபையில் அடிஷனல் மெம்பராயிருக்கும் ஆனரபில் L. A. கோவிந்தராமையர், திவான் பஹதூர் மெம்பராயிருக்கவேண்டிய காலம் அடுத்த ஜனவரிமீ 15உ யோடு முடிவாய்விடப்போகிறபடியால், அடியிற்கண்ட ஜாப்தாவில் காணப்பட்டிருக்கும் காண்டிடேட்டுகளுக்குள் ஒருவரைத் தெரிந்தெடுக்கும்படியாக வட ஜில்லா போர்டார்கள் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். ஓட்டுகொடுக்கும் பிரதிநிதிகள் 1907ஹு ஜனவரிமீ 19உ சனிவாரம் மீட்டிங்கு கூடவேண்டும்.

அநந்தபூர் ஜில்லா போர்டார் ம-ா-ா-ஸ்ரீ, A. ஸ்ரீநிவாஸ ராவ்காரு அவர்களைச்சட்டசபைக் காண்டிடேட்டாக நியமித்திருக்கிறார்கள். முகமது பாஸுல்லாசாயப் பகதூர் அவர்கள் ஓட்ஸ் டெலிகேட்டாக நியமித்திருக்கிறார்கள்.

வட ஆர்க்காடு ஆனரபில் L. A. கோவிந்தராகவ ஐயர் ம-ா-ா-ஸ்ரீ, D. வாசுதேவராவ்காரு.

கைத்தொழில் அபிவிருத்தி.

ஐதராபாத் நிஜாம்இந்தியாதேசக் கைத்தொழில்களை விர்த்தி செய்வதில் கவலைகொண்டவராயிருக்கிறார். இந்திய கவர்ன்மெண்டாரைப்போலத் தம்முடைய ராஜ்ஜியத்திலிருந்து அந்நிய தேசங்களுக்குப்போய் கைத்தொழில் கற்றுவர விரும்புகிறவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்திருக்கின்றனர். இங்கிலாண்டிற்கும் அமெரிக்காவிற்கும் போகும் இரண்டு மாணக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 250-ம், ஜப்பானுக்குப்போகும் 6-மாணக்கர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ 100-ம் இதை அந்நியில் போகவும் வரவும் ஸ்டீமர் செலவுகளும் ஆக எட்டு மாணக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் தம்முடைய சமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

நெருப்புக்குச்சி சாலை.

ஜப்பான்தேசஞ்சென்று நெருப்புக்குச்சிவேலையில் நன்றாய்த் தேர்ந்து வந்த மிஸ்டர் A. P. கோஸ் மிஸ்டர் P. C. ராய் அவர்களின் மானேஜ்மெண்டின் கீழ் இன்னொரு நெருப்புக்குச்சி சாலை ஸ்தாபிக்கப் போகிறார்கள்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்தசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள்:—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 2. சென்னபட்டணம், 1907ஹு ஜனவரிமீ 1. பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம்:—ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் H. T. போடாம் (பாரிஸ்டர்)	...
2.	இந்தியாவில் தண்டனை அடைந்தவர்களின் சீர்திருத்தம்.	1
3.	இந்தியாவில் கூட்டுவியாபாரத்தை ரிஜிஸ்டர் செய்தல்	2
4.	மானிட இரத்தத்தை அடையாளம் கண்டு பிடித்துச் சொல்லலாம்.	3
5.	ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் H. T. போடாமின் ஆயுள் சரித்திரம்.	,,
6.	இந்தியன் லாரிப்போர்ட்ஸ்களில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேசுகள்.	6
7.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	14
8.	கல்கத்தா ஹைகோர்ட்டு ஐந்தாவது கிரிமினல் செஷன்ஸ்.	22
9.	கவர்ன்மெண்ட் ஆர்டர்கள். போர்ட்ஸ் புரொசீடிங்சுகள், ஜில்லா சர்க்கியுலர்கள்.	28
10.	போலிஸ்ஷீட்.	32
11.	சென்னபட்டணம் சட்ட நிரூபணசபை மீட்டிங்கின் புரொசீடிங்சுகள்.	33
12.	கோர்ட்டு வர்த்தமானங்களும், பலதேச வர்த்தமானங்களும்	37 39
13.	சுதாரதனுவளி.	42
14.	முக்கியமான தீர்ப்புகள்.	43
15.	இந்து தேசத்து முத்திரைக்கடிதாசியைக்குறித்த சட்டம் ஆதாரவுகளுக்கு முத்திரைத்தீர்வை.	44,45
16.	ஹிந்துலா—விவாகம் (தொடர்ச்சி)	47

Opinions of the Press on the "Indian Law Gazette".

The "Madras Mail," dated 10th September 1906:— "*The Indian Law Gazette.*"—We have received the first number of a new Tamil monthly, entitled the *Indian Law Gazette*, edited by Mr. M. A. Loganathan, and published by Messrs. N. Ratha Krishna & Co. The new venture is intended to spread amongst the people of South India a knowledge of the laws which are applicable to the protection of their person and property. The Editor deplores that, through ignorance of law, Hindus waste their money in carrying on litigation to the ruin of their family, and that to avert such disastrous consequences, a knowledge of the general laws of the land are essential to them. The first number appropriately opens with an illustrated life sketch of the Hon'ble Sir S. Subramania Iyer, *Kt.*, C.I.E., "one of the foremost Indian Lawyers, and an eminent Indian Judge, who is held in the highest esteem by his countrymen.', There are, besides, reports of miscellaneous law cases, important rulings, Government Orders, etc., and a translation of the Motor Car Bill. The *Indian Law Gazette* will do a great service to the rural population if it will systematically translate and publish from time to time Government Orders, Proceedings of the Board of Revenue and other departments relating to Agriculcural and Revenue matters generally. Through ignorance of these very necessary matters, the ryot population are often swindled by unsrcupulous Village Officials and lower subordinate Revenue employees.

The "Hindu" dated 11th September 1906:—The "*Indian Law Gazette*," is the title of a new legal journal in Tamil, the first part of which we have just received. We believe this is the first time that a legal journal is published in any of our Vernacular languages: this, the Editor says, is intended to educate in law the ignorant man in the streets who blunders often not knowing what the law of the land is. We trust that this new enterprise in legal journalism will supply a real want, and we wish the journal every success Editor: Mr. M. A. Loganathan: Publishers, N. Ratha Krishna & Co., Madras.

The "Madras Times," dated 11th September 1906:—We have received the first number of a new Tamil monthly, called the "*Indian Law Gazette.*" Mr. M. A. Loganathan is its Editor, the publishers being Messrs. N. Rathakrishna & Co. The Magazine deals solely in legal topics and is intended to spread amongst the people of South India a knowledge of the law applicable to the protection of their person and property. The first number appropriately opens with an illustrated sketch of the life of the Hon'ble Sir S. Subramaniya Iyer, *Kt.*, C.I.E., who is most deservedly held in high esteem by his countrymen. Reports of Miscellaneous, Law Cases, Government Orders, etc., and a translation of the Motor Car Bill form the other reading matter in the magazine. We have no doubt that the "*Indian Law Gazette*" will be of great service to the rural population of this presidency, and we wish every succes to the new venture.

The "Swadesa Mithran," dated 13th September 1906, says:—A new monthly Tamil Magazine under the name of "*The Indian Law Gazette*" has been started in Madras. It has come out with the laudable object of spreading all matters relating to Law among Tamil masses who are unacquainted with English. Besides reporting the cases that are tried by the Courts of the Madras Presidency, reports of cases that are tried by Courts in other parts of India, will be published by this Law Journal. This will prove very useful to all persons who have something to do with Law. In the first Journal that has been sent us is placed a handsome protrait of Justice Sir S. Subramania Aiyar Kt. C.I.E. We heartily wish success to this undertaking.

1907ஆ ஜனவரி

இந்திய சட்ட கெஜெட்.

மானேஜர் விளம்பரம்.

ரூ 10 ரொக்கம் கொடுக்கப்படும்.

எல்லோரும் தயவுசெய்து இதை வாசிக்கவேண்டும்.

உலகத்தில் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் சட்ட ஞானத்தை அவசியம் பெற்றிருக்க வேண்டும். அதிலும் பொழுது விடிந்தால் அந்திபட்டால் ஜன க்ஷேமத்தை நாடி சட்டங்களைப் பிறப்பிக்கும் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரஜைகள் சட்ட ஞானமுடைத்தாயிருக்கவேண்டுவது அவசியத்திலும் அவசியமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சட்ட ஞானமும் விவகார ஞானமுமில்லாக் குறையால் நம்தேசஜனங்கள் படும் கஷ்டத்தையும் அவஸ்தையையும் கையிலிருந்த பொருள்களைக் கோர்ட்டுச் செலவு செய்து காலக்ஷேபத்திற்குக்கூட வழியின்றிக் கஷ்டப்பட்டு வருவதையும் நாம் கண்கூடாய்ப் பார்த்துவருகின்றோம். நம் தேச ஜனங்களுக்குச் சட்ட ஞானத்தைப்போதித்து விவகார ஞானத்தை உண்டுபண்ணி சட்ட ஞானக்குறைவால் இப்போது விளைந்துவரும் தீமைகளையெல்லாம் அகற்றி தேசத்திற்கு அத்தியாவசியகமான நன்மையைப் பயக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கும் இந்த இந்திய சட்ட கெஜெட்டை மதிராஸ் மெயில், டைம்ஸ், ஸ்டாண்டர்ட், சுதேசமித்திரன் முதலிய முக்கியமான பத்திரிகைகள் இது தேசத்திற்கு முக்கியமானதென்றும், மிகுந்த நன்மையைப் பயக்கக் கூடியதென்றும் புகழ்ந்து பேசி இது நீடூழிகாலம் நிலைபெற்று நடைபெறவேண்டுமென்று ஆசீர்வதித்திருப்பதுமன்றி, நாம் மரியாதை காட்டும்பொருட்டு இவ்விந்திய சட்ட கெஜெட்டின் பிரதிகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுக்கும், வக்கீல்களுக்கும் ஏனைய கன தனவான்களுக்கும் அனுப்பினோம். அவர்கள் அதைமுற்றும் வாசித்துச் சந்தோஷித்தவர்களாய் அதன் அருமைக்கேற்றபடி தகுந்த நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி இந்திய சட்ட கெஜெட்டை ஆசீர்வதித்து நம்மையும் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். அன்றி, பெருமை தங்கிய நமது கவர்ன்மெண்டாரும் இவ்விந்திய சட்டகெஜெட்டின் விஷயப் பொலிவைக்கண்டு, இங்கிலீஷ் பயிற்சியில்லாத பிரஜைகளுக்கு மிகப் பிரயோஜனகரமான ஜர்னலென்றும், இதனை மும்மரமாய் நடத்தும்படியும் கூறி, நமக்கு மிக்க ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும்விளைவித்தார்கள். ஆகவே இந்த இந்திய சட்ட கெஜெட்டு தேசத்திற்கு மிக அவசியமான நன்மையைப் பயக்கக் கூடியதாயிருப்பதால் இதன் அபிவிர்த்தியில் கண்ணோட்டமாயிருந்து ஒவ்வொருவரும் பரோபகார சிந்தையுடன் இதை விர்த்தி செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டியதைத் தங்களுடைய கடமையாக நினைக்கவேண்டும். சட்ட ஞானக்குறைவால் உண்டாகிவரும் தீமைகளை அகற்றி லோகோபகாரத்தைச் செய்துவரும் இந்த இந்திய சட்ட கெஜெட் நாமுள்ள காலத்திலும் நமக்குப் பிற்காலத்திலும் தடையின்றி நடந்துவரும்படியாக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்திருப்பதுமன்றி நம்முடைய தேச சிற்றரசர்கள் ஜமீந்தார்கள் முதலிய தனாட்டிகர்களின் பேருதவியையும் உதாரத்துவத்தையும் பெற்று இதற்கு ஒரு சாஸ்வதமான நிதியும் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இது நிற்க, இந்த கெஜெட்டு ஜனங்களுக்கு இன்னும் மிக உபயோகமாயிருக்கும்பொருட்டு இதில் விசேஷமான சமாசாரங்களையும் கேசுகளையும் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது. அப்படிச் சேர்ப்பதென்றால் அதிகச் செலவு பிடிக்கும். கெஜெட்டின் சந்தாவை இன்னும் உயர்த்துதல் சாத்தியமாயில்லை. ஆகையால் இன்னும் சில சந்தாதாரர்களைச் சேர்த்துவிடவேண்டுமென்று இப்போது பிரயத்தனஞ் செய்துகொண்டு வருகின்றோம். இந்த இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்து வரும் கனவான்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் நமக்கு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றோம். இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடும் செய்திருக்கிறோம். அதாவது, **25** கையொப்பங்கள் சேர்த்து அனுப்புகிறவருக்கு ரூ. **10** ரொக்கம் அனுப்பத்தயாராயிருக்கிறோம். 25 கையொப்பக்காரர்களும் பணம் செலுத்தினவுடன் ரூ. 10 மணி ஆர்டர் செய்து அனுப்பப்படும். மேற்சொன்னவாறு கையொப்பங்கள் சேகரித்துக்கொடுக்க முன் வரும் கன தனவான்கள் நமக்கு எழுதிக்கொண்டால், நாம் அச்சிட்டுள்ள விளம்பரங்களும் விண்ணப்பக் கார்டுகளும் அனுப்புகிறோம். விண்ணப்பக் கார்டுகளில் கையொப்பம் வாங்கி தபால் ஸ்டாம்பு ஒட்டாமல் தபாலில் போட்டுவிடலாம். ஆகவே நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்துவரும் கனவான்களும், ஏனையோரும் இது விஷயத்தில் தங்களால் இயன்றளவு உதவி புரியவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,

மானேஜர்கள்,

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,

சென்னை, சாவுகார்பேட் போஸ்ட்.

ABBREVIATIONS USED IN THE GAZETTE.

இந்த கெஜெட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I. L. R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta.
All.	=	Allahabad.
Bom.	=	Bombay.
Mad.	=	Madras.
W. R.	=	Weekly Reporter.
G. O.	=	Government Order.
I. A.	=	Indian Appeals.
M. A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டு [கள்.
கல்.		கல்கத்தா
அல.		அலகபாத்
பம்.		பம்பாய்
மது } சென் }		சென்னப்பட்டணம்
சி. பு. கோ.		சிவில் புரொசிஜர்கோடு
கி. பு. கோ.		கிரிமினல் புரொசிஜர் கோடு.
இ. அ.		இந்தியன் அப்பில்ஸ்.
மூ. இ. அ.		மூர் இந்தியன் அப்பில்ஸ்.

விஞ்ஞாபனம்.

(1) தஞ்சாவூர் ஜில்லாவில் பிராக்டிஸ் செய்துவரும் ஹைகோர்ட்டு வகீல் மிஸ்டர் R. S. சோமசுந்தரம்பிள்ளை B. A. B. L. அவர்கள், நமது இந்தியசட்ட கெஜட்டின் ஆலோசனை கமிட்டியில் ஒரு அங்கத்தினராகச்சேர்ந்திருப்பதற்காக அவர்பால் மிக்க நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

(2) இந்தியசட்ட கெஜட்டின் முதல் வால்யம் அட்டவணை இன்னும் அச்சடித்து முடியவில்லை. அடுத்தமாதச் சஞ்சிகையில் சேர்த்தனுப்புகின்றோம்.

(8) கவர்னர் ஜனரல் சட்ட நிரூபண சபையின் நடவடிக்கைகளை இந்திய கவர்ண்மெண்டார் நமக்குத் தயைகூர்ந்து அனுப்பிவருவதைக்குறித்து அவர்க்கு வந்தனமளிக்கின்றோம்.

(3) இந்தியசட்டகெஜட்டில் இன்னும் சேர்க்கப்படவேண்டிய விஷயங்களைக் குறித்து நமது சந்தாதாரர்கள் நம்பால் தயைசெய்து சொல்லக்கூடிய ஆலோசனைகள் நம்முடைய சம்பூர்ண கவனத்தை வந்தனத்துடன் பெறும்.

Notice to Correspondence.

நிரூபநேயர்கட் கறிக்கை.

ஓர் சந்தேகி:—1982ளு 6-வது ஆக்ட் இந்தியன் கம்பனீஸ் ஆக்ட்டைப்பார்த்தால் தம்முடைய சந்தேகம் விலகிவிடும். அந்த ஆக்டை அனுப்பும்படி உத்தரவு செய்தால் நாங்கள் அதனை வி. பி. யில் அனுப்புகின்றோம்.

ம-א-ா-ஸ்ரீ, சி. த. இராமாநுஜ செட்டியார்:—முக்கியமான கேசுகளின் தீர்ப்பை வாங்கியனுப்பினால் வந்தனத்துடன் பிரசுரம்செய்கிறோம். தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பிரயாசைக்காகவந்தனம். தேவகோட்டை ம-ா-ா-ஸ்ரீ, A. L. S. R. க்கும், இராமநாதபுரம். ம-ா-ா-ஸ்ரீ, M. R. M. A. S. க்கும்நடந்த கேஸ் முடிவடைந்து விட்டது. இருவரும் சமாதானஞ்செய்துகொண்டார்கள்.

ம-ா-ா-ஸ்ரீ, சுப்பய்யர்:—நடேச நாடானுடையகேஸ் ஹைகோர்ட்டுக்கு வரவில்லை. 2, 3, 4, குற்றவாளிகளைப்பற்றிய கேஸ்தான் ஹைகோர்டுக்கு வந்தது. நடேச நாடான் செஷன்ஸ் கோர்ட்டில் அபீல் செய்துகொண்டபடியால், ஒன்று ஐம்பது ரூபாய்க்குமேற்பட்ட அபராததண்டனையாவது ஒன்று ஜெயில் தண்டனையாவதுபெற்றிருக்கவேண்டும்.

ம-ா-ா-ஸ்ரீ. T. R. சேதுராமராவ:—பூல்ஸ்கேப்ஸைஸிலுள்ள கடிதாசியில் ஒருபுறத்தில் மாத்திரம் தம்முடைய சமாசாரங்களையெல்லாம் செவ்வனே எழுதியனுப்பினால் எம்முடைய ஆலோசனை கமிட்டியாருக்கு அனுப்புகின்றோம்.

ம-ா-ா-ஸ்ரீ. C K. ஸ்ரீனிவாசைய்யர்.—தாங்கள் எழுதியிருக்கும் சமாசாரங்கள் ஹைகோர்ட்டிலும், கவர்னர் செக்ரிடெரி ஆபீஸிலும் விசாரணை செய்து தெரிவிக்கவேண்டும். சற்றுத்தாமதமாகும். மகமதியனுக்குப் பிள்ளைகளிருக்கிறதா? அவனுக்கு எத்தனை மனைவிகள்? எந்தெந்தத்தாரத்திற்குப்பிள்ளைகளிருக்கின்றன? எந்தெந்தத்தாரத்திற்கு இல்லை?

ம-ா-ா-ஸ்ரீ, L. பங்காருசாமி நாயுடு:—அடுத்தமாதக் கஜட்டில் கட்டாயம் அறிவிக்கின்றோம்

இனிசந்தேக விசாரணைசெய்யும் கனவான்கள் மேற்குறித்த ம-ா-ா-ஸ்ரீ, L. R. சேதுராமராய் அவர்கட்கு எழுதியிருப்பதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

[எடிடர்].

விளம்பரம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச்சார்ந்த திருக்கோகர்ணத்திலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, B. தேவராஜா அவர்களை, புதுக்கோட்டை, திருச்சிஜில்லா, தஞ்சாவூர், மதுரை ஆகிய இந்தஜில்லாக்களில், நம்முடைய இந்தியசட்டகெஜட்டுக்கு நம்முடைய சொந்த ஏஜெண்டாக நியமித்திருக்கின்றோம். இவர் சுற்றுப்பிரயாணம் வரும்போது இவருக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

என். ராதாகிருஷ்ண கம்பெனியார்.

The Honorable Justice H. T. BODDAM, *(Bar.-at-Law),*
High Court, Madras.

ஆனரபில் ஜஸ்டிஸ் யச். டி. போடாம் துரையவர்கள்,
சென்னை ஐகோர்ட் ஜட்ஜி.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ளு ஜனவரிமீ [பாகம். 1.

THE REFORM OF THE CRIMINAL CLASSES IN INDIA.

இந்தியாவில் தண்டனை அடைந்தவர்களின் சீர்திருத்தம்.

சென்னப்பட்டணம் செஷன்ஸ் கோர்ட்டிலும் இதர மாகாணங்களின் பிரதான நகர்களிலுள்ள செஷன்ஸ் கோர்ட்டுகளிலும் அடிக்கடி அநேக பழைய குற்றவாளிகளே மறுபடியும் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை யடைந்து வருகின்றார்கள். இதன் காரணத்தை உற்று நோக்குங்கால் ஜனசமூக ஏற்பாட்டில் ஒரு குறை யிருப்பதாகத் தெரிகின்றது. அரசாங்கவிஷயங்களைக் கவனித்து சீர்திருத்த காங்கிரஸ் மகா சபை, மாகாண சபைகள் இவைகளைப் போல இன்னும் அநேக சபைகளும் ஏற்பட்டிருக்கின்றன. தேச ஆசாரங்களைச் சீர்திருத்த நாடெங்கும் ஆசாரசபைகள் ஏற்பட்டிருக்கின்றன. பெண் கல்வியை விருத்திசெய்ய அநேக சபைகள் தோன்றியிருக்கின்றன. தேசப்பயிற்சியை விர்த்தி செய்ய அநேக சங்கங்களும், கிளப்புகளும் தோன்றியிருக்கின்றன. பஞ்சத்தில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிபுரிய அநேக சகாய நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்ய அநேக அன்னதான சமாஜங்களும், சத்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் இவைகளைப்போல அநேக சீர்திருத்தங்கள் செய்ய அந்தந்த சீர்திருத்தத்திற்குத் தகுந்தபடி சபைகளும், சங்கங்களும் நம் நாட்டில் உற்பத்தியாயிருக்கின்றன. நம்தேசத்தில் இவ்வளவு சபைகளிருந்தும் தண்டனை அடைந்து ஜெயிலுக்குப் போய்வந்தவர்களைச் சீர்திருத்த இங்கிலாண்டிலும் அமெரிக்காவிலும் Prisoner's Aid Societies என்கிற கைதி சகாய சங்கங்களிருப்பதுபோல் நம் தேசத்திலுமில்லாம லிருப்பது ஒரு பெருங் குறையா யிருக்கிறதென்று எண்ணுகின்றோம். இங்கிலாண்டிலும் அமெரிக்காவிலும் கைதி சகாயசங்கங்கள் உற்பத்தியாகி ஜெயிலிலிருந்து வந்தவர்களை ஆதரித்து அவர்களை யோக்கியதையுடைய மனிதர்களாகச்செய்துவருகின்றன. தண்டனை அடைந்தவர்களைச் சீர்திருத்தும் சாலையாகிய ஜெயிலுக்குப்போய் வந்தவுடன் சீர்திருத்தமடைந்து யோக்கியனாய்விட்டான் என்று எண்ணப்படுவதற்குப் பதிலாக அவன் ஜெயிலிலிருந்து வந்தபிறகும் நம் நாட்டில் அயோக்கியனாகவே பாவிக்கப்படுகிறான். அவன் தண்டனையடைந்த நிமித்தம் அவனுடன் ஒருவரும் சேருகிறதில்லை. ஜனசமூகத்தில் அவனைச் சேர்த்துக்கொள்ளுகிறதுமில்லை. அவனுக்கு ஏதேனும் தொழில் தெரிந்திருந்தபோதிலும் அவனுக்கு வேலை அகப்படுகிறதில்லை. ஆகவே அவன் ஜனசமூகத்திலிருந்து விலக்கப்பட்டவனாகி கலந்து பழகுவதற்கு வேறொரு வகையின்றி பழையபடி அவனுடைய பழைய அயோக்கிய சிநேகிதர்களுடன் சேர்ந்து சட்ட விரோதமான செய்கைகளைச் செய்து மறுபடியும் தண்டனை அடைந்து ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறான். இப்படி ஆயுள்காலமெல்லாம் தண்ட

னையடைந்து ஜெயிலுக்குப்போய் வந்துகொண்டிருக்கும் நபர்கள் அனேகரிருக்கிறார்கள். ஜெயிலில் தற்காலம் அமுலிலிருக்கும் ஏற்பாடுகளும் ஒரு குற்றவாளியைச் சீர்திருத்தக்கூடியனவாயில்லை. தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டு அண்டமான் தீவுக்கு அனுப்பப்படும் கைதிகள் சீக்கிரத்தில் யோக்கியர்களாய் மாறுவதற்கு அவ்விடத்தில் அனேக ஏதுக்களிருக்கின்றன. இங்கிலாண்டில் ஆதிகாலத்தில் கைதிகளைத் தீவாந்திரத்திற்கு அனுப்பும் வழக்க மிருந்துகொண்டிருந்தது. இப்போதிருக்கும் ஆஸ்திரேலியா கண்டத்தினரின் முன்னோர்கள் இங்கிலாண்டில் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். இப்படி தண்டனை அடைந்து வந்தவர்கள் ஆஸ்டிரேலியாவிலேயே தங்கி தொழில்களைச்செய்து ஜீவித்து நிலமுதலியவைகளை வாங்கிக்கொண்டு ஆஸ்திரேலியா கண்டத்தையே சுதேசமாகச் செய்துகொண்டார்கள். ஆதியில் கைதிகளாகவிருந்தவர்கள் மாறி நல்லயோக்கிதை யுடையவர்களாகவே, இப்போதிருக்கும் அவர்களுடைய பரம்பரையார்கள் சுதேச பரிபாலனம் செய்துகொள்ளும் யோக்கியதையுடையவர்களாகி விட்டார்கள். அதுபோல் குற்றவாளிகளைச் சீர்திருத்திக்கொண்டுவர சாத்தியப்படாதென்று நாம் நினைக்கக்கூடாது. இங்கிலாண்டில் தீவாந்திர தண்டனை ஏற்பாட்டை நிறுத்தினநாளாய் தண்டனை அடைந்து ஜெயிலுக்குப்போய் வந்தவர்கள் பெரும்பாலும் யோக்கியர்களாய் மாறுவதைக்காணோம். அடிக்கடி மறுபடியும் குற்றம் செய்து தண்டனை அடைந்து ஜெயிலுக்குப்போய் வந்துகொண் டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை இங்கிலாண்டிலேயே சீர்திருத்துவதென்றால் சாத்தியமாயில்லை என்று அபிப்பிராயப்பட்டு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மறுபடியும் தீவாந்திர தண்டனை ஏற்பாட்டை ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஷை கைதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பினால் அவர்கள் சுமார் இரண்டு மூன்று வருஷகாலத்திற்குள் யோக்கியர்களாய் மாறி யோக்கியதையாய்ப் பிழைப்பு தேடிக்கொண்டு வசிக்கத்தலைப்பட்டு விடுகிறார்கள் என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் அனுபோகத்தால் கண்டறிந்திருக்கிறார்கள். நம்முடைய இந்தியாவில் குற்றம் செய்து தண்டனை அடைகிறவர்களை அந்தமான் தீவிற்கு அனுப்ப இந்தியன்பினல்கோடு இடங்கொடுத்திருந்தபோதிலும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் நியாயாதிபதிகள் கொலைக் குற்றத்தைத்தவிர வேறு குற்றம் செய்கிறவர்களுக்குத் தீவாந்திரதண்டனை விதிப்பதில்லை. அநேகவருஷகாலமாய் இந்தியாவிலேயே அடிக்கடி ஜெயிலுக்குப்போய் வந்துகொண்டிருக்கும் ஒருவன் தீவாந்திரதண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் தீவிற்கு அனுப்பப்படுவானேயானால் சுமார் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் அவன் யோக்கியனாய் மாற அவ்விடத்தில் வசதிகளிருக்கின்றன. ஆகையால் மூன்று வருஷங்களுக்குமேல் தண்டனை அடையும் பழைய குற்றவாளிகளுக்கு நியாயாதிபதிகள் தீவாந்திர தண்டனை விதித்தால் நலமாயிருக்குமென்று எண்ணுகின்றோம்.

நிற்க, ஜெயிலில் கைதிகளுக்குத் தொழில் கற்பித்துக் கொடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் ஜெயிலிலிருந்து வந்தவுடன் அவர்கள் பழையபடி அவர்களுடைய பழைய சினேகிதர்களுடன் சேர்ந்து குற்றமான செய்கைகளைச் செய்யாமலிருக்கும்படியும் அவர்களிடம் அனுதாபங்காட்டி அவர்களை ஜனசமுகத்தில் சேர்த்துக்கொள்ளவும், அவர்களுக்கு உத்தியோக முதலிய வேலைகள் சம்பாரித்துக்கொடுத்து அவர்களுடைய நிலைமையை உயர்த்தவும் இத்தேசத்தில் கைதி சகாய சங்கங்கள் ஏற்படுத்தவேண்டியதும் அவசியமென்று நினைக்கிறோம்.

THE REGISTRATION OF PARTNERSHIP IN INDIA.

இந்தியாவில் கூட்டு வியாபாரத்தை ரிஜிஸ்டர் செய்தல்.

பலபேர் ஒன்று சேர்ந்து யாதேனும் ஒரு கூட்டு வியாபாரம் செய்தால் இன்னின்னார் கூட்டாளி என்றும் இன்ன வியாபாரம் செய்வதற்காகக் கூட்டு சேர்ந்திருக்கிறார்கள் என்றும் பத்திரப்பதிவு ஆபீசில் ரிஜிஸ்டர் செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்குத் தற்காலம் இந்தியாவில் யாதொரு சட்டமும் கிடையாது. இந்தியா கவர்ன்மெண்டார்கள், கூட்டாளிகள் கூட்டுச்சேர்ந்து வியாபாரம் நடத்துவதற்கு முந்தி அவர்கள் பெயர்களையும் வியாபாரத்தையும் ரிஜிஸ்டர் செய்துவைக்கும்பொருட்டு ஒரு சட்டம் பிறப்பித்தால் மிகுந்த நலமாயிருக்குமென்று எண்ணுகின்றோம். இப்படி ஒரு சட்டம் பிறந்தால் இத்தேசத்தின் வியாபாரத்தை உள்ளபடி விர்த்தி செய்யுமென்பதில் சந்தேகமில்லை. கூட்டு வியாபாரத்தை ரிஜிஸ்டர் செய்யக் கட்டாயப்படுத்தக்கூடிய சட்டமில்லாமலிருப்பதால் தகுந்த ஐவேஜியுள்ளவர்கள் கூட்டுச் சேர்ந்து வியாபாரம் நடத்தப் பின் வாங்குகிறார்கள். இந்தச் சட்டம்பிறந்தால் அனேக ஜனங்களுக்கு வர்த்தகத்தில் பெரும்நம்பிக்கை உண்டாகும். யாதொரு மோசக்கருத்தின்றி யோக்கியத்துடன் வியாபாரம் நடத்த இஷ்டப்படும் வர்த்தக கம்பெனியார்கள் இம்மாதிரி சட்டத்திற்குப் பயப்படவே மாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த கம்பெனிகளின் கூட்டாளிகள் ஒருவர்மேல் ஒருவர் பெரும் நம்பிக்கைவைத்து வியாபாரத்தை விர்த்திசெய்து வருவார்கள். இந்தசட்டம் பிறந்தால் மோச வர்த்தகக்கம்பெனியார்கள் எளிதில் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். போகப்போக இத்தேசத்தில் மோசக் கம்பெனிகள் உண்டாவதற்கே ஏதுவிருக்க மாட்டாது. ஏகாங்கியாய்வியாபாரம்செய்கிறவர்கள்கூட "அண்டுகோ"என்று மேல்விலாசம் பூண்டுகொள்வதால் இதைப் பார்ப்பவர்கள் இது கூட்டுக்கம்பெனி என்று நினைத்து அதன்பேரில் எவ்வளவு மதிப்புவைக்கவேண்டுமோ அதைவிட அதிகமாக மதிப்புவைப்பதற்கு ஏதுவாயிருக்கின்றது. "அண்டுகோ" என்று மேல்விலாசம் பூண்டு வியாபாரம் நடத்துவதில் மோசடியின்றி வியாபாரம் நடத்துகிறவர்களுமிருக்கிறார்கள்.

பார்வைக்குப் பெரிய கம்பெனிபோல் பாவனைசெய்து மோசஞ்செய்ய வேண்டுமென்கிற கருத்துடன் "அண்டுகோ" என்று மேல்விலாசம் பூண்டு கொள்ளுகிறவர்களு மிருக்கிறார்கள். நல்ல எண்ணத்துடன் "அண்டுகோ" என்று மேல்விலாசம் பூண்டு யோக்கியத்துடன் வியாபாரம் நடத்தினால் இதனால் யாதொரு தீங்கும் நேரிடாதென்று கவர்ன்மெண்டார் ஏகாங்கியாய் வியாபாரம் செய்யும் ஒருவன் "அண்டுகோ" என்று மேல்விலாசம் வைத்துக்கொள்வதைக் கண்டிக்காமல் விட்டிருக்கின்றார்கள். இருந்தபோதிலும், ஏகாங்கியாய் வியாபாரம் செய்யும் ஒருவன் பலபேர் கூட்டாளிகளாய்ச்சேர்ந்து நடத்தும் கம்பெனிபோல் பார்வைக்குப் படட்டுமென்று நினைத்து "அண்டுகோ" என்று வைத்துக்கொள்வது பிரதமத்திலேயே புரட்டாயிருப்பதுமன்றி, மனச்சாக்ஷிக்குப் பொருந்தாததாயு மிருக்கின்றது. இந்த துர்வழக்கத்தைக் கவர்ன்மெண்டார் கண்டிக்கவேண்டுமென்று மிக வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். நிற்க, மேலே நாம் கூறின சட்டம் பிறப்பிக்கப்பட்டால் "அண்டு கோ" என்று மேல்விலாசம் பூண்டு வியாபாரம் செய்கிற கம்பெனிகளின் சுதந்தரஸ்தர் ஏகாங்கியா அல்லது பலபேர்களா வென்றும் கண்டுபிடிக்கமுடியும். ஏனெனில், உள்ளபடி பலபேர் கூட்டுச்சேர்ந்து நடத்தும் வியாபாரமா யிருந்தால் இச்சட்டத்தின்படி கூட்டாளிகள் தங்கள்பெயரை ரிஜஸ்டர்செய்து வைத்திருப்பார்கள். ஆகவே மேலே நாம் கூறினசட்டம் பிறப்பிக்கப்பட்டால் பெரும்பாலும் மோசக் கம்பெனிகளின் கொட்டம் அடங்கிப் போகும். மேலும் இப்போது வரவர வியாபாரத்தில் ஒரு மாறுதல் உண்டாகிவருகின்றது. அதென்னவென்றால், கூட்டுக் கம்பெனிக்காரர்கள் சிலகாலம் கூட்டு வியாபாரஞ்செய்து திரண்ட பொருள் சம்பாதித்துப், பிறகு தங்களுடைய பாகங்களை ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளாக மாற்றி இந்தியன் கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜஸ்டர் செய்து ஒருபங்கு ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என்று நிர்ணயித்துப் பொதுஜனங்களைப்பங்குதாரிகளாகச்சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இப்படி ஒவ்வொரு கூட்டுக்கம்பெனியாரும் ஜாயின்ட் ஸ்டாக்கம்பெனியாராக மாறி பொது ஜனங்களைப்பங்குக்காரர்களாகச்சேரும்படித் தூண்டி போட்டிபோடுதலால் பங்கு மலிந்துபோய் ஏழைஜனங்களும் வியாபார முயற்சியில் சேர்ந்து லாபமடைவதற்கு ஏதுவாயிருக்கின்றது. இது நல்லகாரியமென்றும் வியாபாரத்தை விர்த்திசெய்யு மென்றும், பொது ஜனங்கள் சேர்ந்து லாபமடையக் கூடியதாயிருக்கிற தென்றும் ஐயமின்றிச் சொல்லலாம். ஆனால் இப்படிச்செய்வதற்குமுந்தி ஷை கூட்டுவர்த்தகக் கம்பெனிக்காரர்கள் தங்கள் கம்பெனியில் பார்ட்னர்களா யிருப்பவர்கள் பெயரை ரிஜஸ்டர்செய்து வைக்கும்படி கட்டாயப்படுத்த சட்டம்பிறந்தால் பொது ஜனங்களுக்கு அந்த கம்பெனியில் என்றும் விசேஷ நம்பிக்கை யுண்டாகி வியாபாரம்விர்த்தியடையுமென்று எண்ணுகின்றோம்.

HUMAN BLOOD CAN BE DISTINGUISHED FROM OTHER MAMMILIAN BLOOD.

மானிட இரத்தத்தை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லலாம்.

கிரிமினல் கேஸ் விசாரணையில் இரத்தத்தை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்வது பிராசிக்கியூஷன் தரப்பிற்கும், டிபன்ஸ் தரப்பிற்கும் முக்கியமான சாக்ஷியமாயிருந்து வருகின்றது. இதைப் பற்றி நாளதுவரையில் கெமிகல் எக்ஸாமினர் அனுப்பும் ரிபோர்ட்டு, இரத்தம், "குட்டிகளுக்குப் பால்கொடுக்குந்தன்மையுள்ள பிராணியினுடையது" அல்லது வேறே பிராணியினுடையதென்று சொல்லுகின்றதே தவிர, மற்றப்படி பால்கொடுக்கும் தன்மையையுடைய வகுப்புப் பிராணிகளுக்குள் எந்தப் பிராணியின் இரத்தம் என்று சொல்லமுடியாது. பால்கொடுக்கும் வகுப்புப் பிராணிகளுக்குள் ஏறக்குறைய பத்து வகுப்புகளிருக்கின்றன; குதிரை, நாய் பூனை முதலியவைகளும் அந்த வகுப்பைச் சேர்ந்த பிராணிகள்தான். மனிதன், குரங்குகள் வாலில்லாக் குரங்குகள் முதலியவைகளும் பால்கொடுக்கும் வகுப்புப் பிராணிகள்தான். ஒருவன் ஒரு பூனையைக் கொன்று அதன் இரத்தத்தை அவனுடைய விரோதியின் வேஷ்டியில் தெளித்து, அவன் ஒருவனைக் கொலை செய்ததாக அவன்பேரில் கேஸ் கற்பனை செய்துகொண்டுவந்தால், இந்தக்கேஸ் விசாரணையில் இரத்தம் மனிதனுடைய தல்லவென்றும், பூனை இரத்தம் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில், ரசாயன சாஸ்திரப்படி இரத்தத்தை இன்னபிராணியின் இரத்தம் என்று தெரிந்துகொள்ளும் முறை கண்டு பிடிக்கப்படாம லிருந்தது. சிலகாலத்திற்கு முந்தி ஜெர்மனியில் ரிஸ்லால்ட் என்னும் நகரிலிருக்கும் டாக்டர் யுலன்கத் என்பவர் மனித இரத்தத்திற்கும், குதிரை பூனை, நாய் இரத்தத்திற்கு முள்ள பேதத்தைக் கண்டுபிடித்தார். மனிதன், குரங்குகள் வாலில்லாக்குரங்குகள் ஆகிய இவைகள் ஒரேவகுப்பு ஜந்துக்களானபடியால் அவைகளுடைய இரத்தத்திலிருக்கும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியாம லிருந்தது. சிலகாலம் சென்று மனிதனுடைய இரத்தத்திற்கும் குரங்கின் இரத்தத்திற்கு முள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடித்தார். அப்போது மனிதனுடைய இரத்தத்திற்கும் வாலில்லாக் குரங்கினுடைய இரத்தத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கக் கூடாமலிருந்தது. இப்போது அந்த வித்தியாசத்தையும் கண்டுபிடித்து விட்டார். ஆகவே இனிமேல்வரும் கெமிகல் எக்ஸாமினர் ரிப்போர்ட் ஒரு குறிப்பிட்ட இரத்தம் மனிதனுடையதா அல்லவா என்று வியக்தமாய்க் கூறும்.

THE HONORABLE MR. JUSTICE BODDOM.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் H. T. போடாம்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுள் ஒருவராயிருந்து சிறப்புறப் பிரகாசித்துவரும் மிஸ்டர் ஜஸ்டிஸ் H. T. போடாம் துரை அவர்கள், பங்காள

த்திலிருந்து துண்டிக்கப்பட்டுப் புதிதாய் உண்டாக்கப்பட்ட மாகாணமாகிய கீழ் பெங்காள மாகாணத்தின் பிரதான நகராகிய டேக்காவில் 1850௵ ஜூன்ஸ்ரீ 27உ பிறந்தவர். இவர், பெங்காளத்தில் வைக்கப்பட்டிருந்த "பெங்கால் ஸ்டாப் கார்ப்ஸ்" (Bengal staff corps) என்கிற சைனியத்தின் ஜெனரல் H. M. போடாம் அவர்களின் இரண்டாவது புத்திரர். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம், சுமார் 200-வருஷங்களுக்குமுன் இந்தியாவில் குடியேறி அதுமுதல் இந்தியாவிலேயே வசித்துக்கொண்டுவரும் கௌரவமும் அந்தஸ்தும் பொருந்திய ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர். ஸ்காட்லாண்டு தேசத்திலுள்ள "அபர்டீன் க்ஷயர்" என்று சொல்லப்பட்ட ஜில்லாவில், போடாம் என்று பெயர் கொண்ட ஒரு சிறுபட்டணமிருக்கின்றது. இப்பட்டணத்திலிருந்து "சார்லஸ் போடாம்" என்பவர் ஒரு வர்த்தகக் கப்பலின் காப்டினுக 1712௵ சென்னபட்டணத்திற்கு வந்து சேர்ந்தார். இவர், போர்ட் சென் ஜியார்ஜ் கோட்டைக்குள் வசித்து வந்த "மேரிஹெறரால்ட்" (Mary Harald) என்கிற ஒரு கன்னிகையை 1716-ல் விவாகம் செய்துகொண்டு சென்னையிலேயே அமர்ந்து வர்த்தகம் செய்துவந்தார். தம்பதிகள் 1718-ல் சார்லஸ் என்கிற புத்திரனை ஈன்றூர்கள். இந்த "சார்லஸ்" என்பவர் அப்போதிருந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் ரயிட்டர் உத்தியோகத்தில் அமர்ந்து படிப்படியாய் உத்தியோக உயர்வடைந்து போர்ட் சென்ட் ஜியார்ஜ் கவர்னர் நிர்வாக சபையில் மெம்பராகி கவர்னர் "பார்ஸ்" துரையின் செல்வப் புதல்வியாகிய "பிரான்சிஸ்மார்சை" விவாகம் செய்துகொண்டு, "சென் ஹார்ட் போடாம்" என்பவருக்குப் பிதாவாயினர்.

"சென்ஹார்ட்போடாம்" என்பவர் "ஈலியா டேர்" என்னும் கன்னிகையை விவாகம் செய்துகொண்டு பம்பாய் ராஜதானிக்குக் கவர்னுயிருந்தனர். இவருடைய புத்திரராகிய "சென் ஹார்ட் போடாம்" என்பவர் இந்திய சைனியத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து "எல்லன்கிஷியா ஹன்கர் ரூபார்ட்" என்கிற துரைசானியை விவாகம் செய்துகொண்டார். இவர்களுடைய புத்திரராகிய H. M. போடாம்தான் நம்முடைய ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் துரையின் தகப்பனுர். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் இந்தியாவில் பிறந்தவராயிருந்தபோதிலும், இவருடைய பெற்றோர்கள் இவரை இந்தியாவிலேயே படிக்க வைக்காமல், இவர் இந்தியாவில் கலெக்ட்டர் உத்தியோகம் பார்க்கும்படியாகத் தயாரித்துவிடவேண்டு மென்கிற கருத்துடன் இங்கிலாண்டிற்கு அனுப்பி லண்டனிலிருக்கும் "கிங்கஸ் காலேஜ் இஸ்கூல்" என்று வழங்கிவரும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வியில் பயிலும்படியாகச் செய்தார்கள். இவரை இந்தியக் கலெக்ட்டர் உத்தியோகத்திற்குத் தயார்செய்து வைக்கவேண்டுமென்று முதலில் கருத்துக்கொண்ட இவருடைய தகப்பனுர் பிறகு தம்முடைய கருத்தை மாற்றி இவரை பாரிஸ்டர் உத்தியோகத்திற்குத் தயார் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு இவரை 18-வது வயதில் அதாவது 1886-௵த்தில் "இன்னர் டெம்பில்" (Inner Temple) என்று சொல்லுப்படியான சட்ட கலாசாலையில் சேர்த்துவைத்தனர். இவர் அதில் பயின்று 1872-வது௵ பாரிஸ்டர் தொழில் நடத்த ஆரம்பித்தனர். மேலே கூறப்பட்ட சட்ட கலாசாலையில் இவர் மாணுக்கராயிருந்து வந்தபோதும் இவர் பாரிஸ்டர் தொழில் ஆரம்பிப்பதற்கு முந்தியும் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆர்ச்சிபால்ட், லார்ட் ஹெர்ஷெல், மிஸ்டர் ஜஸ்டிஸ் கெக்லிஸ் முதலிய சிறந்த பாரிஸ்டர்களிடம் அமர்ந்து தொழில் கற்றுக்கொண்டனர். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் 1874 - வது௵த்தில் ஆக்ஸ் போர்ட் சர்க்கியூட்டில் (Oxford circuit) சேர்ந்து, 1896-வது௵ சென்னபட்டணத்திற்கு வரும் பரியந்தம் பாரிஸ்டராக விருந்து அனேக வியாஜ்ஜியங்களில் வெற்றி அடைந்து மிகுந்த கீர்த்தியையும் செல்வத்தையும் சம்பாரித்தனர். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் இவ்வாறு கீர்த்திப் பிரதாபத்துடன் இங்கிலாண்டில் விளங்கிவருங்கால், இந்தியா காரியதரிசி சென்னபட்டணம் ஹைகோர்ட்டிற்கு ஆருவது ஜட்ஜி ஸ்தானம் சாங்கிஷன் செய்து அந்த உத்தியோத்தை நம்முடைய மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் துரைக்குக் கொடுத்தனர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ்போடாம் 1896-வது௵ ஜூலைஸ்ரீ 6உ சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்தை ஒப்புக்கொண்டார். ஒப்புக்கொண்ட சிறிது தினங்களுக்கெல்லாம் இவர் ஒரிஜினல் சயிடில் வீற்றிருந்து அசல் வியாஜ்ஜியங்களை விசாரிக்கும்படி நேர்ந்து அதுமுதல் இதுகாலபரியந்தம் இவர் சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் ஒரிஜினல் வியாஜ்ஜியங்களை விசாரிக்கும் ஜட்ஜியாகவேயிருந்து வருகின்றனர். ஆனுல் இடையில் 1903-முதல் 1905-வரையில் மட்டும் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் அசல் வியாஜ்ஜியங்களை விசாரித்து வந்தனர். ஒரிஜினல் சயிட், அப்பீல் கோர்ட்டுகளுக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டாயிருந்தபோதிலும் அதில்வீற்றிருந்து விசாரணை புரிந்து நல்லபெயர் சம்பாதிப்பது இலகுவானகாரியமென்று எண்ணக்கூடாது. இந்தக்கோர்ட்டில் ஜட்ஜிக்கு மிகுந்தகடுமையான வேலையிருக்கின்றது. மிகுந்த உழைப்புடனும், பொறுமையுடனும், தன்னடக்கத்துடனும், நிதானத்துடனு மிருந்து கேஸ்களைவிசாரிக்கவேண்டும். கக்ஷிக்காரர்களுடனும், சாக்ஷிகளுடனும், லாயர்களுடனும் போராடவேண்டும் சதாகாலமும் வாக்குமூலங்களைத் தாக்கல் செய்துகொண்டிருக்கவேண்டும்.

அநேகசட்ட சம்பந்தமான சங்கைகளையும் விஷய சம்பந்தமான சங்கைகளையும் வேறொரு ஜட்ஜியின் உதவியின்றி ஏகாங்கியாய்த் தீர்மானிக்கவேண்டும். இந்த வேலைகளை எல்லாம் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் சிறந்தபடியும் ஒழுங்காயும் நியாய வரம்பு கடவாமலும் நடத்தித் தம்முடைய சகோதரர் ஜட்ஜிகளினுடையவும் பொது ஜனங்களினுடைய சந்தோஷத்திற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமா யிருக்கின்றனர்.

இவர் ஜட்ஜி உத்தியோகத்தை வகித்துப் பார்ப்பதில் இவரிடம் சிறந்து விளங்கும் ஒருமேன்மையான குணுதிசயம் என்னவென்றுல், இவர் முன்னிலையில் ஒருவன் பொய்சாக்ஷியம் சொல்லவந்தால் அவனை ஓயாமல் பல குறுக்குக்கேள்விகள் கேட்டு அவன் வாயிலிருந்து உண்மையான சமாசாரங்களைப்பிடுங்கிவிடுவார். ஆகவே பொய்சாக்ஷியம் சொல்ல விரும்புகிறவர்கள் இவரைக்கண்டால் நடுங்குவார்கள்; இவருடையகோர்ட்டிற்கும் பெரும்பாலும்போகாட்டார்கள்.

நியாயம் பகரும் விஷயத்தில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் பாரபக்ஷமில்லாதவர். இவர் தம்முன் ஆஜராகும் வக்கீல்களையும் பாரிஸ்டர்களையும் மிகுந்த மரியாதையாய் நடத்திவருகிறது வழக்கம். மிகுந்த சாந்தகுண முடையவர். வக்கீல்களும் கக்ஷிக்காரர்களும் தெரிவித்துக்கொள்ளுவதை மிகுந்த பொறுமையுடன் கேட்பார். சிக்கலான வியாஜ்ஜியங்களை வெகு சீக்கிரம் சிக்கறுத்து அவைகளுக்குள் பிரவேசித்து உண்மையைக் கண்டுபிடித்து நியாயம் பகருவதில் மிகுந்த சாமர்த்தியமுடையவர்; ஒரு வக்கீல் ஒரு சாக்ஷியை விசாரணை செய்யும்போது அவன் உண்மையை மறைத்துச்சொல்லுகிருன் என்று மிஸ்டர். ஜஸ்டிஸ் போடாமிற்குத் தோன்றினுல், அவர் வக்கிலை வீற்றிருக்கும்படிச் சொல்லிவிட்டு அவரே அந்த சாக்ஷிக்குப் பலவித கேள்விகள் போட்டு உண்மையான சமாசாரத்தை வெளிப்படுத்தி விடுவார். எப்போதும், திங்குண்டவரிடத்திலும் எளியோரிடத்திலும் மிகுந்த இரக்கமும் அநுதாபமும் காட்டும் குணமுடையவர். கொடுமை என்பதற்கே இவர் ஜென்ம விரோதி. கொடுமையான நடவடிக்கைகளைக் கண்டித்துக் கொடுமை செய்கிறவர்களைக் கடுமையாய்த் தண்டிப்பார். ஒரு வக்கீல் தம்முடைய கக்ஷிக்குவேண்டிய கேள்விகளை சாக்ஷியைக் கேட்கத் தவறிப்போய்விட்டால் இவரே அக்கேள்விகளை எல்லாம் கேட்பார். கேசுகளில் புலப்படும் சமாசாரங்களை ஒன்று தவருமல் கவனிப்பதிலும், அவைகளைப்பிறகு ஒன்று தவருமல் சொல்லுவதிலும் அபாரசக்தி யுடையவர். இவர் கேசுகளின் விசாரணையை முடிவு செய்துவிட்டுப் பிறகு தீர்ப்பு சொல்வதாகப் பெரும்பாலும் சொல்லுகிறதில்லை. விசாரணை முடிவானவுடனே வாயினலேயே தீர்ப்புச்சொல்லிவிடுவார். அப்படித் தீர்ப்புச் சொல்லும்போது தஸ்தாவேஜிகளைப் பாராமல் சகல சமாசாரங்களையும் ஞாபகத்தில் வைத்திருந்து ஒன்றின்பின் ஒன்றுய்ச் சொல்லித் தீர்ப்புச் சொல்லுவார். சில பெரிய வியாஜ்ஜியங்களுக்குத் தீர்ப்புச் சொல்லும்போது அந்த வியாஜ்ஜியத்தில் புலப்பட்ட சமாசாரங்களை யெல்லாம் இரண்டு மூன்று மணி நேரம் வரையில் எடுத்துக்கூறி தீர்ப்பளித்திருப்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறும்.

குற்றம் ருஜுப்பட்டால் சட்ட சம்பந்தமான சீர்களை இவர் பெரும்பாலும் கவனிக்கிறதில்லை என்று நாம் சொல்லலாம். ஒரு முறை இவர்முன் ஒரு வக்கீல் ஒரு கைதிக்காக ஆஜரானுர். அந்தக் கைதி ஒரு நாள் ஒரு இரவில் வீட்டிற்குட் புகுந்து திருடுவதற்கு எத்தனிக்கையில் பிடிபட்டுப் போய்விட்டான். இவன் திருடவேண்டுமென்கிற எண்ணத்துடன் இரவில் வீட்டிற்குள் நுழைந்த குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான். இவனுக்கு ஆஜரான வக்கீல் இவன் அந்த வீட்டிற்குள் அகப்பட்டதால் திருடவேண்டுமென்கிற நோக்கத்துடன் அதற்குள் நுழைந்திருக்கவேண்டுமென்று சாதாரணமாய் அனுமானிக்க வேண்டியதாயிருக்கிறதே தவிர மற்றப்படி இவன் திருட வேண்டுமென்கிற எண்ணத்துடன் தான் அந்த வீட்டிற்குள் புகுந்தான் என்பதற்குச் சட்டப்பிரகாரம் சாக்ஷியமில்லை என்று வாதித்து அக்கைதியை விடுவிக்கும்படியாக வேண்டிக்கொண்டார். இதற்கு மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம், சட்டமென்பது சாதாரண அறிவின் சாராம்சத்தைத் தவிர வேறென்ன? என்று சொன்னுர். இவர் கணக்கு விஷயங்களிலும் நிபுணர்; பெரிய வர்த்தகக் கம்பெனியின் வியாஜ்ஜியங்கள் இவருடைய விசாரணைக்குவரும்போது இவர் யாதொரு கஷ்டமின்றி அந்தக்கணக்குகளை யெல்லாம் பரிசோதனை செய்து கணக்குகள் புரியாமல் மயங்கும் வக்கீல்களுக்குக்கூட எடுத்துச் சொல்லி உதவி செய்வார்; வைத்திய விஷயத்திலும் இன்ஜினீரிங் விஷயத்திலும் ஞானமுடையவர். இவைகள் சம்பந்தமான கேஸ்கள் இவருடைய விசாரணைக்கு வந்தால் இந்தவிஷயங்களை யறியா ஜட்ஜிமார்கள் சில சமயம் கஷ்டப் படுவதுபோல இவர் கஷ்டப்படாமல் இலகுவில் விசாரணை நடத்தி பைசல் செய்வார். இவர் ஜட்ஜியாகவிருந்து வரும் 10-வருஷ காலத்தில் எந்த வக்கிலையாகிலும் மனம் நோகும்படி பேசினுர் என்பதை நாம் கேள்விப்பட்டதில்லை. சொல்லப்போனுல் நாளுக்குநாள் லாயர்களிடம் விசேஷ நேசபான்மை பாராட்டி வருகின்றுர். இவர்மேல் கெட்ட அபிப்பிராயம் கூறும் லாயர்களுமில்லை. மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாமிடத்தில் கக்ஷிக்காரர்கள் வக்கீல்கள் முதலிய எல்லோரும் பிரியம் பாராட்டி வருகின்றுர்கள். ஒருசமயம் ஒருவக்கீலுக்கு ஒவ்வொரு கோர்ட்டிலும் ஒவ்வொரு கேஸ் மேனிக்கு மூன்று கோர்ட்டிலும் மூன்று கேஸ்க ளிருந்தன. இந்த மூன்று கேஸ்களும் மூன்று கோர்ட்டிலும் ஒரே நாளில் ஒரே சமயத்தில் விசாரணை செய்யப்படக் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த வக்கீல் இந்தக் காரணத்தைக் கூறி மிஸ்டர் போடாம் கோர்ட்டிலிருந்த கேசை தள்ளி வைக்கும்படி வேண்டிக்கொள்ள, மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் அப்படியே அந்தக் கேசின் விசாரணையைத் தள்ளிவைத்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாமின் மேன்மையான குணுதிசயங்களைப்பற்றி இன்னும் எத்தனை உதாரணங்கள் வேண்டுமானுலும் எடுத்துக்கூறலாம். இவர் சில நியாயாதி பதிகளைப் போல ஜனசமூகத்துடன் கலந்து பழகாமலிருக்கிறதில்லை. சென்னையின் நன்மைக்காகவும் பொதுஜன

க்ஷேமத்திற்காகவும் உழைத்து வருகின்றார். இவர் இந்நகரிலுள்ள அநேகசபைகளுக்கும்சங்கங்களுக்கும் பிரசிடெண்டாகவிருந்து வருகின்றனர். இவர் S. P. C. A. என்று சொல்லும்படியான மிருகவதை நிவாரண சங்கத்தின் பிரசிடென்டு ஸ்தானத்தை வகித்து மிகுந்த கேவல நிலைமையிலிருந்த அந்த சங்கத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறதுமன்றி அவருடைய முயற்சியால் அந்த சங்கத்திற்கு ஒரு கட்டடமும் மிருகங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரியும் நாய்களுக்கு ஒரு கிரகமும் கட்டியிருக்கிறார். தென் இந்தியா அதலட்டிக் சங்கத்திற்கும் இவர் பிரசிடெண்டாகவிருந்துவருகின்றார். இப்படி ஏறக்குறைய ஒரு இருபது சங்கங்களுக்குப் பிரசிடெண்டாயிருந்து வருகின்றனர். இவர் இவைகளில் நமோதாவிற்குப் பிரசிடென்டாயிருக்கிறதில்லை. ஒவ்வொன்றிலும் தம்முடைய செல்வாக்குகளையும் புத்திமதிகளையும் பிரயோகப்படுத்தி உள்ளபடி அவைகளுக்குப் பல நன்மைகளைத் தேடிவைத்திருக்கின்றனர்.

இவர் சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும்போது ஒரிஜினல் சயிடில் விசாரணை செய்யாத விஷயங்கள் அநேகமிருந்தன. திலுவைவியாஜ்ஜியங்கள் சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் இப்போது அதிகமாகக் கிடையா. இவர் சரியானகாலத்தில் கோர்ட்டிற்கு வரும் நடவடிக்கையுடையவர். 11-மணிக்குச்சரியாய் கோர்ட்டிற்குவந்துவிடுவார். மிகுந்த தர்மகுணமுடையவர். சென்னபட்டணம் ஹைகோர்ட்டிலிருக்கும் ஆங்கிலேயஜட்ஜிகளுக்குள் இவர்தான்மிகுந்த சுந்தரவடிவமுடையவர். இவருடைய தரைசானி அம்மாள் இங்கிலாண்டில் உயர்ந்த உத்தியோகமுடைய மி-ர் J. O கிரிமத்என்பவருடையசெல்வப்புத்திரி. இவருடைய ஒரே புத்திரி ஹாரனரபில் காப்டின் மில்ஸ் என்பவரை விவாகம்செய்துகொண்டிருக்கின்றனர். இவர் இன்னும் அநேககாலம் ஜட்ஜியாகவிருந்து சென்னைக்கு அநேக நன்மைகள் செய்துவருமாறு இவருக்குத் தீர்க்காயுளையும், தேகாரோக்கியத்தையும் செல்வத்தையும் புத்திரமித்திர சம்பத்தையும் தந்தருளுமாறு நாம் திருவருளைச் சிந்திப்பது பொது ஜனப் பிரார்த்தனையை எடுத்துக் கூறுகிறோமே தவிர மற்றப்படிவேறொன்று மில்லை.

[இவருடைய ஆயுள் சரித்திரத்தை எடுத்துக் கூறியிருப்பதில் சில விஷயங்கள் இந்நகரில் ஆங்கில பாஷையில் பிரசுரமாகும் "லா டைம்ஸ்" என்கிற சட்ட சஞ்சிகையிலிருந்து எடுத்து எழுதியிருக்கின்றோம். Ed.]

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ். சர். ஆர்னல் ஒயிட்டு.
மி-ர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சீவில் அப்பீல்.

கடனை பெந்தகச்சொத்தின்மேல் வீதிக்கும்படி பெந்தகம் வாங்கினவனைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

கிருஷ்ண அய்யர் வ-ரா. 2-முதல் 5 பிரதிவாதிகள் (அப்பீல் வாதிகள்).

முத்துக் குமாரசுவாமிபிள்ளை வ-ரா. வாதிகளும், 1, 6, 7, 8, 9. பிரதிவாதிகள்—(அப்பீல்பிரதிவாதிகள்).

வியாச்சிய சங்கிரகம்.

வாதியின் தகப்பனாகிய இறந்துபோன ராமலிங்கப் பிள்ளைக்கு ரூ. 5000-க்கு 1896௵ ஜூன்௴ 21௳ ஒரு ரிஜிஸ்டர் செய்த பெந்தகப்பத்திரம் முதல் பிரதிவாதி எழுதிக்கொடுத்திருந்தார். இதன் வட்டியும் முதலுங்கூடிய ரூ. 9000-க்கு வாதி திருநெல்வேலி சப் கோர்ட்டில் பிராது செய்தார். பெந்தகப்பத்திரத்தில் 4 வகையாகிய சொத்து பெந்தகம் வைக்கப்பட்டிருந்தது. C. அடையாளமிட்ட சொத்தையும், பாக்கிச்சொத்துக்களில் மூன்றில் ஒருபாகத்தையும் விலக்கி வியாச்சியஞ்செய்தார். வாதியின் தகப்பனார் விடுதலைப்பத்திரம் கொடுத்துவிட்டதால் C அடையாளமிட்ட சொத்தை விலக்கினார். முதல் பிரதிவாதியின் இதர பெந்தகக்காரர்கள் கொண்டுவந்த வியாச்சியத்தில் அவருடைய சகோதரரின் குமாரர்களுக்குச் சேரவேண்டிய மூன்றில் ஒரு பாகம் விலக்கப்பட்டிருப்பதாலும், முதல் பிரதிவாதியும் அவருடைய சகோதரன் குமாரர்களும் செய்துகொண்ட ராஜிநாமாவில் முதல் பிரதிவாதி வாங்கின கடன்களைத் தானே கொடுத்துவிடுகிறதென்றும் கண்டிருப்பதாலும் அவர்களுடைய பாகத்திற்காக மூன்றிலொரு பாகத்தை விலக்கினார். பெந்தகம் வைத்த சொத்தில் சில பாகத்தை 2-முதல் 7-வரையிலுள்ள பிரதிவாதிகள் வாங்கியிருப்பதால் அவர்களும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள். சில பாகத்தை முன் பெந்தகம் வாங்கின 8, 9-பிரதிவாதிகளும் பிராதிற் சேர்க்கப்பட்டார்.

1, 6, பிரதிவாதிகள் எதிர் கட்சியாடவில்லை. 7-வது பிரதிவாதி 4-வது ஷெடியூலிலுள்ள B அடையாளமிட்ட சொத்தில் எந்த பாத்தியமும் கொண்டாடவில்லை. 8, 9 பிரதிவாதிகள் முந்தின பாத்தியம் தங்களுக்குண்டென்று சொன்னார். அதை வாதி மறுக்கவில்லை. 2-முதல் 5-வரையிலுமுள்ள பிரதிவாதிகள் எதிர் கட்சி யாடினார்கள். முதல் பிரதிவாதியின் சகோதரரின் புத்திரர்கள் பாகமாகிய மூன்றிலொரு பாகத்தையும் C அடையாளமிட்ட சொத்தையும் மோசடியாகச் சேர்க்காமல் விட்டாரென்றும், அவர்களைக் கட்சிக்காரராகச் சேர்க்காததால் வியாச்சியங் கெட்டுப்போனதென்றும் பிராதில் கொண்டுவராத சொத்திற்குள்ள வீதத் தொகையைப் பிராதுத் தொகையிற் குறைத்துவிடவேண்டுமென்றும் பெறுமானத் தொகை கொடுக்காமல் எழுதி

வாங்கினதென்றும் மோசடியான பெந்தகப்பத்திரமென்றும் எதிர் கட்சி சொன்னார்கள். இரண்டு இஷியூக்கள் ஏற்பட்டன.

(a) முதல் பிரதிவாதியின் சகோதரரின் குமாரர்களை மோசடியாக வாதி பிராதில் சேர்க்கவில்லையா ?

(b) இவர்களைச் சேர்க்காததால் வியாச்சியங் கெட்டுப்போகிறதா ?

சப் கோர்ட்டார் தீர்மானம் :—வாதிபக்கம் இந்த இஷியூக்களைத் தீர்மானம் பண்ணி பெந்தகச் சொத்தின்மேல் டிக்கிரி செய்தார்கள்.

இதன்மேல் 2, 3, 4, 5 பிரதிவாதிகள் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—முதல் பிரதிவாதிக்கும் இறந்துபோன சகோதரரின் இரண்டு குமாரர்களுக்குமுள்ள பொதுச்சொத்தை முதல் பிரதிவாதி அடமானம் வைத்து வாதி மைனராயிருக்கும்பொழுது வாதியின் தகப்பனாகிய இறந்துபோன ராமலிங்கம் பிள்ளையிடம் ரூ. 5000-வாங்கியிருந்தார். இக்கடன் குடும்பத்திலுள்ள யாவரையும் கட்டுப்படுத்துவதாக எழுதப்பட்டிருந்தது. பெந்தகத்திற்குப் பிறகு முதல் பிரதிவாதிக்குச் சொந்தமாயிருந்த $\frac{1}{2}$-பாகத்துடன் அவருடைய சகோதரரின் குமாரர் ஒருவரிடம் $\frac{1}{6}$-பாகம் வாங்கி மொத்தம் மூன்றிலிரண்டு பாகச்சொத்து இருவருக்கேற்பட்டிருந்தது. முதல் பிரதிவாதி கொடுக்கவேண்டிய கடனுக்காகக் கோர்ட்டு மூலியமாகப் பெந்தகச்சொத்தில் சிலவற்றை ஏலத்திலெடுத்தவர்களை 2-முதல் 7-வரையிலுள்ள பிரதிவாதிகளாக்கினார். (இப்பெந்தகத்தை மீட்டுக்கொள்ள பாத்தியமுள்ளவர்களாகையால்) முதல் பெந்தகம் வாங்கினவர்கள் 8, 9, பிரதிவாதிகளாக்கப்பட்டார்கள். இந்த வியாச்சியத்தில் வாதியின்மேல் மூன்றில் இரண்டு பாகத்திற்கு மாத்திரம் தாவா செய்யப்பட்டிருந்தது. சகோதரனின் குமாரர் பாகமாகிய $\frac{1}{3}$-பாகத்திற்குள்ள பாத்தியத்தை விடாமல் இக்கடன் இந்தப்பாகத்தையும் கட்டுப்படுத்துவதாக ஸ்தாபிப்பது கஷ்டமாயிருக்கிறதால் இப்பாகம் விலக்கப்பட்டதென்று பிராதிற் சொல்லியிருந்தது. விலக்கின சொத்து விஷயமாகப் பிரதிவாதிகள் சொன்ன கட்சியைப் பாராது வாதி கேட்டுக்கொண்டபடி தீர்ப்பு செய்தார்கள்.

இராமலிங்கம் பிள்ளை விலக்கப்பட்ட சொந்தக்குடையவருக்குத் தாய் மாமனாகையால் அச்சொத்தைக் காபந்து செய்யவேண்டுமென்று பாக்கிச் சொத்தின்மேல் தொடர உத்தேசஞ்செய்து இம்மாதிரி பிராது செய்திருக்கிறாரென்று அப்பீல் வாதிகள் கட்சி சொன்னார்கள். இக்கட்சிக்குமாறாக சகோதரனின் மகன் சொல்லக்கூடிய சாட்சியங்கள் இவ்வியாச்சியத்தில் எடுத்து எழுதப்படாமலிருப்பதால் இதைப்பற்றி முடிவுசெய்யக் கூடியதாகவில்லை அப்பீல் வாதிகள் ஆதாரமாகக்கொண்ட சாட்சியங்கள் அவர்கள் கட்சியை ஆதரித்தபோதிலும் சந்தேகத்திற் கிடமில்லாமலிருக்கவில்லை. ஆகையால் வாதியின் அடுத்த சினேகிதன் அவருடைய பங்காளியின் சொத்தை விலக்கி அவரைப் பிரதிவாதியாக்காமலிருந்தது வாதியின் நலத்திற் கல்லவென்று நினைக்கக்கூடாது.

இப்பொழுதிருக்கும் நிலைமையில்பங்காளியின்பாகத்தை விலக்கி 2-முதல் 7-வரையிலுமுள்ள பிரதிவாதிகளடைந்திருக்கும் மூன்றில் இரண்டுபாகச் சொத்தின்மேல் தொடர்ந்து கடனை வசூலிக்கலாமா வென்பதைப்பற்றி கவனிக்கவேண்டும்.

அப்படிச்செய்யலாமென்பது நம்முடைய அபிப்பிராயம் பயம்சர்ஷி ஐயங்கார் எடுத்துக்காட்டியதுபோல டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டி'ல் 4-வது அல்லது 5-வது செக்ஷன்கள்தான் இதற்குச் சம்பந்தப்பட்டதாக விருக்கிறது.

56-வது பிரிவில் அதிற் சொல்லியிருக்கும் வியாபாரத்திற்கு வாங்குகிறவர்களுக்கும் விற்கிறவர்களுக்குமுள்ள பாத்தியத்தையும் கடமையையும்பற்றி விதி ஏற்பட்டிருக்கிறது. 81-வது பிரிவில் இரண்டு சொத்திற்குச் சொந்தக்காரன் இரண்டையும் முதலில் ஒருவரிடத்திலும் பிறகு ஒரு சொத்தைமாத்திரம் வேறொருவரிடத்திலும் முந்தின பெந்தகத்தை அறியவிடமில்லாமலிருக்கும்பொழுது அடமானம் வைத்தால் அதற்கு ஒழுங்கு ஏற்படுத்துகிறது. 82 வது பிரிவில் ஒருவன் அல்லது பல பெயருக்குச் சொந்தமான பல சொத்தை ஒரே கடனுக்குப் பெந்தகம் வைத்தால் அந்தச் சொத்தின் அப்போதுள்ள பெறுமானப்படி வீதத்தொகைக்குக் கட்டுப்படுமென்று சொல்லியிருக்கிறது. இது 81-வது பிரிவைப் பாதிக்காது. 95-வது பிரிவில், பல பெந்தகக் கடன்காரர்களிலொருவர் பெந்தகச் சொத்தை மீட்டால் இவருக்கு நேரிட்ட செலவுக்கு மற்றப்பெந்தகக் கடன்காரர்களும் வீதப்படி கட்டுப்படவேண்டுமென்று கூறியிருக்கிறது. பெந்தகச் சொத்தில் ஒரு பாகத்தில்மாத்திரம் பாத்தியமுடைய ஒருவர் முழுச் சொத்தை அல்லது இப்பாகத்தையடையும் பெந்தகம் வாங்கினவரிடமிருந்து இதனை மீட்டுக்கொள்ள பாத்தியமுண்டென்று 60-வது பிரிவு விதிக்கிறது. பங்காளியின் வீதமாகிய மூன்றிலொரு சொத்தின்மேல் தொடர்ந்தபிறகு இதர சொத்துக்களின்மேல் வீதத்தொகைக்குத் தொடரும்படி கட்டாயப்படுத்த இவ்வியாச்சியத்தின் வாதியைப்போலொத்த பெந்தகக் கடன்காரர்களுக்கும் பிரதிவாதிகளைப்போலொத்த மீட்கும் பாத்தியமுடையவர்களுக்கும் மேலே கூறிய செக்ஷன்கள் பொருத்தமுள்ளவைகளல்லவென்று சொல்லவேண்டிய தனாவசியம்.

சர். பாஷியம் அய்யங்கார் எடுத்துச்சொன்ன தீர்ப்புகள் வாதிக்கனுகூலமாக விருக்கிறது. இ. லா. ரி. 5-சென். 385. திம்மப்பா. v. லக்ஷ்மம்மா. கேசில் பெந்தகக் கடனுக்காகச் சொத்தை விற்பனைக்குக் கொண்டுவர கடன்காரர் டிக்கிரி பெற்றார். பிறகு பெந்தகம் வைத்தவன்மேல்வெண்ணிலைக் கடனுக்காக டிக்கிரிபெற்றஒருவர் பெந்தகச்சொத்தில் ஒன்றை விற்பனைக்குக் கொண்டுவர மீட்டும் பாத்தியத்தை வேறொருவர் வாங்கினார். இந்த ஏல விற்பனைக்குப் பிறகு அந்தசொத்து மறுபடியும் பெந்தகக் கடன் டிக்கிரிக்காக ஏலத்திற்குவந்து பெந்தகம் வாங்கினவர் (பெந்தகக் கடன்காரர்) ஏலமெடுத்துவிட்டார். வெண்ணிலைக் கடன் டிக்கிரியினா லேலமெடுத்தவர் இதர சொத்துக்களிற் பிரவேசித்துப் பெந்தகக்கடனை வசூல்பண்ணிக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. இஷ்டமிருந்தால் முழுப்பெந்தகக் கடனையுங்கொடுத்து மீட்டுக்கொள்ளக்கட்டுப்பட்டவர். வேறொரு கேசில் பெந்தகத்திற்குப் பிறகு பெந்தகச்சொத்தில் ஒரு பாகத்தைப்பெந்தகம்வைத்தவர் விற்றபோது பெந்தகக் கடன்காரரை மற்றப்பாகத்தில் தொடர்ந்து பெற்றுக்கொள்ள அவர் பாத்தியத்தைக் குறைந்துவிட முடியாதென்று தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இ. லா. ரி. 11. கல். 258 லாலாடிலா வார்சா ஹே v. திவான்போல கிராம் கேசில் இம்மாதிரி தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஒரு சொத்து ஏ, என்பவனுக்குப் பெந்தகம் வைக்கப்பட்டது. பிறகு, பி, என்பவனுக்கு ஒரு பாகம் விற்கப்பட்டது. ஏ என்பவன் பிராதுக்குப் போகும்பொழுது பாக்கியிருக்கிற சொத்தின்மேல் மாத்திரம் தொடரக்கட்டுப்பட்டவனல்ல வென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி. 18. கல். 320-ரோகுநாத் பெர்ஷாட் v. ஹார்லால் சாது கேசில் அவ்விதியை யொட்டித் தீர்மானிக்கப்பட்டது. பெந்தகம் வைத்தவனிடமிருந்து மீட்டும் பாத்தியத்தை வாங்கினவர்கள் கடனை அவரவர்கள்

வீதத்திற்குள்ளதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று வாதித்தபோது முழுக்கடனையும் முழுச்சொத்தின் மேலும் தொடரப்பாத்தியமிருப்பதாலும் பிரதிவாதிகள் தங்களுக்குள் அவ்வாறு செய்துகொள்ள வேண்டியதாதலாலும் அதற்கு கோர்ட்டார் இடங்கொடுக்கவில்லை. ஆயினும் "டாக்டர் கோஸ்" லாலாடில் வார்சாஹே v. திவான் போலகிராம்கேசிலும், ராமாராஜு v. சுப்பராயடு கேசிலும் அதை அனுசரித்த இதர கேசுகளிலும் அதிகக்கிரமமாகப் போயிருக்கிறார்களென்று சொல்லியிருக்கிறார். பெந்தகம் வாங்கினவர் பெந்தகம் வைத்தவரிடம் இருக்கிற சொத்தை விட்டுவிட்டு அவரால் விற்கப்பட்டு மற்றவர்களிடமிருக்கிற சொத்தின்மேல் மாத்திரம் தொடர்ந்தால் மேலே கூறிய தீர்ப்புகளை ஒத்துத் தீர்ப்புசெய்ய இஷ்டப்படமாட்டோம் (பெந்தகம் வைத்தவருக்கும் வாங்கினவருக்கும் கடனை வீதப்படி தீர்க்கவேண்டுமென்று ஓர்வித உடன்படிக்கையும் இல்லாத பட்சத்தில்) அப்பேர்ப்பட்ட விஷயத்தில் பெந்தகம் வைத்தவர் வசத்திலிருக்கும் பெந்தகச் சொத்தின்மேல் முதலில் தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தலாம். இது நியாய முறைமைக்கும் தீர்ப்புகளின் சாரத்திற்கும் ஒற்றுமையாயிருக்கும். இந்தக் கேசோ முற்றிலும் விசாலமானது. பெந்தகச்சொத்தை வாங்கினவர்கள் பெந்தகக்கடனிலிருந்து விலக்கி வாங்கினவர்களல்ல. பிராதில் விலக்கின்சொத்து பெந்தகம் வைத்தவரின் கைவசத்திலுமில்லை. மூன்றுவது பேர்வழிக்குச் சொந்தம். முன் சொத்தின் ஒரு பாகத்தின்மேல் தொடர்ந்து பின் வேறொரு சொத்தின்மேல் தொடரச்செய்யக்கூடிய அப்பேர்ப்பட்ட கேசுமல்ல. இப்படிச்செய்யக்கூடிய கேசிலும், இரண்டாவது கடன்காரனுக்குப் பாத்தியமில்லாத ஒரு ஐவேஜி போதுமானதா வென்பதைப்பற்றி ஒரு சந்தேகமிருக்கும் பொழுதும் முன் கடன்காரன் ஈடு பண்ணிக்கொள்வதாலுண்டாகும் அபாயத்திற்குட்பட இஷ்டமில்லாதிருக்கும் பொழுதும் ஒரு வியாச்சியஞ் செய்தாலல்லாமல் ஈடு பண்ணிக்கொள்ள ஏதுவில்லாத ஐவேஜியிருக்கும்பொழுது அப்பேர்ப்பட்ட ஐவேஜியிலிருந்து தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாது.

பங்காளியின் பாகமாகிய மூன்றி லொன்றிமேல்தொடரும்பட்சத்தில் ஒரு தனி வியாச்சியத்திற் கிடங்கொடுக்குமாகையால் இதன்மேல் தொடரும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. இ. லா. ரி. 9 கல். 406-ராம்துன்தர் v. மோஹெஷ்கடிண்டர் க்ஷத்திரி கேசில் பெந்தகம் வைத்தவர் வசத்திலிருந்த சொத்தின்மேல் முதலில் தொடர்ந்து பெற்றுக்கொள்ள உத்தரவு செய்யப்பட்டது. இங்கே டிக்கிரியை நிறைவேற்றும்பொழுது வாதமேற்பட்டது. பெந்தகச் சொத்தில் பலவிதமாகப் பாத்தியப்பட்டவர்கள் கட்சிக்காரர்களாயிருந்தால் அவர்களுடைய பல வகையான மீட்கும் பாத்தியத்தை ஓர் வகையாகக் கிரமப்படுத்த ஒரு வரிசையாக இன்னின்ன சொத்தின்மேல் முதலில் தொடர்ந்து பெற்றுக்கொள்ளுகிறதென்று உத்தரவு செய்ய அக்கோர்ட்டாருக் கதிகாரமுண்டு. "டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 85-வது பிரிவுக்கு மாறாக இந்த வியாச்சியத்தில் பிராது பெந்தகச்சொத்தில் பாத்தியமுள்ளவர்களையெல்லாஞ் சேர்த்துக் கொடுக்கவில்லையென்றும், மூன்றிலொரு பாகத்திற்குப் பாத்தியமுள்ள பங்காளியைக் கட்சியில் சேர்க்கும்படி சப் ஜட்ஜி உத்தரவு செய்திருக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்திருந்தால் அப்பீல் பிரதிவாதிகளின் ஆக்ஷேபனையின்மேல் இப்பாகம் பெந்தகக் கடனுக்குக் கட்டுப்படுமாவென்று ஒரு இஷியூ ஏற்படுமென்றும், அவ்விஷியூ அப்பீல் வாதிகளின் பக்கம் அனுகூலமானால் பெந்தகக் கடனை வீதப்படி செலுத்த அக்கோர்ட்டார் உத்தரவு பண்ணும்படி நேரிடுமென்றும், அப்பீல் வாதிகளின் வைக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் கட்சி பேசினர். 85-வது பிரிவை இவர் சொல்லுகிறதுபோல வெளி அர்த்தம் பண்ணினுல் அபாயமான முடிவுக்குள்ளாக்கும். உதாரணமாக பெந்தகம் வைத்தவர் பெந்தகம் வாங்கினவர் ஒரு கட்சியிலும், மூன்றுவது பேர் ஒரு கட்சியிலுமாகயிருந்து பெந்தகச்சொத்தி லொருபாகம் பெந்தகம் வைத்தவருக்குப் பாத்தியமில்லை யென்று ஒரு வியாச்சிய மேற்பட்டு அவ்வியாச்சியத்தினுல் அவ்வாறே அப்பாகம் பெந்தகம் வைத்தவருக்குச் சொந்தமல்லவென்று ருஜுவாகித் தீர்மானஞ் செய்திருக்கிறதாக வைத்துக்கொள்வோம். இப்பொழுது 85-வது பிரிவினுல் இவருடைய அர்த்தப்படி பெந்தகம் வாங்கினவர் இவரை மறுபடியுங் கட்சிக்காரராகச் சேர்க்கவேண்டும். முன் தீர்மானம் இப்பாகத்தைப் பெந்தகக்கடனிலிருந்து விலக்காதென்று தாற்பரியங் கொள்ளவேண்டும். டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு பாஸ் ஆவதற்கு முன்னமே ஒரு சொத்தைப்பற்றி வியாச்சியமுண்டானுல் அதற்குச் சம்பந்தமுள்ள யாவரையுங் கட்சிக்காரராகச் சேர்க்கவேண்டியதென்று பொது விதியிலிருந்து வந்தது. அதையே இந்த ஆக்டில் திரும்ப வெடுத்து எழுதப்பட்டது. இதனுல் நூதன விவாதத்தை உண்டுபண்ணும்படியாகப்பெந்தகம் வாங்கினவன் வேண்டுமென்றே பிராதில் விலக்கியவர்களைக் கட்சிக்காரர்களாகச் சேர்க்கும்படி கோர்ட்டார் கட்டாயப்படுத்துவது கூடாது. வக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் சொல்லதுபோல இடங்கொடுக்கும் பட்சத்தில் மூன்றிலொருபாகத்தை யடைந்திருக்கும் பங்காளியின் பாத்தியம் பலதரத்திலும் எவ்வாறு முடிவாகிறதென்று தெரிந்துகொண்டுதான் உடனே பிரவேசிக்கவேண்டிய சொத்தின்மேல் பிரவேசிக்காமல் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கும். அப்பீல் வாதிகளுக்கும் சகோதரரின் மகனுக்கும் நேரிடும் வியாச்சியத்தின் முடிவு தெரிவதன்மேல் வாதியின் கடன் தொகையை வாங்க வெத்தளிப்பது வித்தியாசமான ஏற்பாட்டுக்குக் கொண்டுபோகலாம். அதற்கு வாதி இடங்கொடுக்காமல் தடுக்க பாத்தியமுடையவர்.

பெந்தகச் சொத்தின் எந்தப் பாகத்தையாவது கடனுக்குக் கட்டுப்படாமல் பெந்தகம் வாங்கினவர் தன் செய்கையால் விலக்கினுல் இதர பாகங்களிலிருந்து வீதத்தொகையை அடையக் கட்டுப்பட்டவராவார். அப்படிப்பட்ட கேசல்ல இது. பங்காளியின் பாகத்தை விலக்கினது கடனில் அதற்குள்ள பாகத்தைக் கொடுப்பதிலிருந்து விலக்கினதாகாது. அப்பீல் வாதிகள் முழுக்கடனையுந் தாங்கள் கொடுத்துவிட்டு பங்காளியின் பாகமும் இக்கடனுக்குக் கட்டுப்படாதென்று காண்பிக்கும்பட்சத்தில் இந்த வியாச்சியத்தில் அவரைக் கட்சிக்காரராகச் சேர்க்காவிட்டாலும் வீதக்கடனைக் கொடுப்பதிலிருந்து நீங்கமாட்டார். இ. லா. ரி. 20. பம். 615. ஹுாகந்தாஸ். v. கான்சிங்கு. கேசும் இ. லா. ரி. 2. அல. 807. ஜகத் நாராயண். v. கூத்துபஹுசேன் கேசும் இதற்குப் பொருத்தமுள்ளது. வாதியின் செய்கையால் பிரதிவாதிகளுக்கும் பங்காளிக்குமுள்ள பரஸ்பரகடமை நீங்காமலிருப்பதால் எந்தப் பாகத்திலிருந்தாவது தன் முழுக்கடனை வசூலிப்பதை ஒருவரும் தடுக்கமுடியாது.

ஆகையால் சப் கோர்ட்டார் தீர்ப்பு நியாயமானது அப்பீல் செலவுடன் தள்ளப்பட்டது.

(1) நலிங்ஸ் :—பெந்தகம் வாங்கினவர் பெந்தகச் சொத்தை மீட்கும் பாத்தியமுடையவராகிய இவர்களுக்குள் பெந்தகச் சொத்துக்களிலிருந்து வீதப்படி கடனை வசூலிக்கச் செய்ய பெந்தகம் வாங்கினவரைக் கட்டாயப்படுத்த டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டில் ஆதாரமில்லை யென்றும்,

(2) கடனை மீட்கும் பாத்தியமுள்ளவர்கள் பிறரிடத்திலிருந்து வீதமடையும் பாத்தியத்தைப் பெந்தகம் வாங்கினவன் தன் செய்கையால் கொடுத்தால் அவர்களிடமிருந்து வீதத்தொகையை மாத்திரம் பெற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தலாமென்றும், மீட்கும் பாத்தியமுடையவர்களிற் சிலரிடமிருந்து மாத்திரம் முழுக்கடனை வசூலித்தால் மற்றவரின் பாகம் வியாச்சியத்தில் சேர்க்கப்படாவிட்டாலும் அவர்களிடமிருந்து வீதத்தொகையைப் பெற்றுக்கொள்ள இவர்கள் பாத்தியமுள்ளவர்களென்றும்,

• (3) பெந்தகம் வைத்தவன் பெந்தகச் சொத்தி லொரு பாகத்தின் மீட்கும் பாத்தியத்தை விற்காமல் பெந்தகக் கடனுக்குக் கட்டுப்படவேண்டியதில்லை யென்று அதை வேறொருவருக்கு விற்றுவிட்டால், பெந்தகம் வாங்கினவன் முதவில் பாக்கிச் சொத்தின்மேல் தொடரும்படியாகக் கட்டாயப்படுத்தலாம். ஆனுல் பாக்கிச் சொத்து கடனுக்குப் போதாமலிருக்கும்பொழுதாவது அதிக வியாச்சியத்திற்கிடமிருக்கும்பொழுதாவது அப்படிக் கட்டாயப்படுத்தக் கூடாதென்றும்.

(4) பலவிதமாகிய சொத்துக்கள் ஒரு பெந்தக டிக்கிரிக்குக் கட்டுப்பட்டிருக்கும்பொழுது டிக்கிரியை நிறைவேற்றுங் கோர்ட்டார் அச்சொத்துக்களுக்குப் பாத்தியங்கொண்டாடுகிறவர்களின் உரிமையை ஒழுங்குப்படுத்த இன்னின்ன விதமாக ஏல விற்பனைக்குக் கொண்டுவர வேண்டுமென்று விதி ஏற்படுத்தலாமென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 219.

Krishna Ayyar. v. Muthukumara Swamiya Pillay. I. L. R. 29, Mad. 219.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர். ஆர்னுல்டுஒயிட்டு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

உத்தரவு பிறந்த ஒரு வருஷத்துக்கு மேற்பட்டு டிக்கிரித்தொகையைச் செலுத்துவதனுல் உண்டான பிரயோஜனம்.

கோரசித்தம்மா வ-ரா. 2, 3 பிரதிவாதிகள் (அப்பீல் வாதிகள்).

பூாசி கவரம்மா வ-ரா. 1, 2, வாதிகள், 4-வது பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதிகள்).

வியாச்சிய சங்கிரகம்.

1890௵ ஜுலைமீ௳த்தில் சிலபேர்வழிகளுக்குச்சிலநிலங்களை வாதிகளின் தகப்பன் பெந்தகம் வைத்தார். பெந்தகம் வாங்கினவர்களுடைய பாத்தியம் இப்பொழுது பிரதிவாதிகளிடம் வந்திருக்கிறது. மேலே கூறிய பெந்தகத்தினுல் பிரதிவாதிகளின் வசத்தில் நிலங்கள் இருக்கும்பொழுது வாதிகளுக்கு அவைகளை விற்றுவிட்டதாக ரிஜிஸ்டரான ஒரு கிரயப்பத்திரம் 95௵ ஜுலைமீ௳த்தில் தகப்பன் எழுதிக்கொடுத்தார். தகப்பன்மேல் தொடர்ந்த 1895௵த்து ஒரு வியாச்சியத்தில் அந்நிலங்கள் ஜப்தி செய்யப்பட்டன. ஜப்தி பண்ணப்பட்ட சொத்து வாதிகளுக்குப் பாத்தியமிருக்கிறதாகப் பாத்தியமனு கொடுத்தார்கள். சி.பு. கோ. 283-வது பிரிவுப்படி 1896௵ பிப்ரவரிமீ௳ 22௳ பிறந்த உத்தரவால் இந்த பாத்தியம் தள்ளுபடிசெய்யப்பட்டது. 1898௵ ஜுலைமீ௳த்தில் பிரதிவாதிகளுக்கு அந்நிலங்களை விற்க தகப்பனுர் உத்தேசித்தார் 95௵த்து முன் வியாச்சியத்தின் டிக்கிரியை நிறைவேற்றிச் சொத்தை ஏலத்துக்குக் கொண்டுவந்தார்கள். இறந்துபோன முதல் பிரதிவாதி டிக்கிரித்தொகையைச் செலுத்தினதனுல் ஜப்தி விடுதலை செய்யப்பட்டது. இப்பொழுது வந்திருக்கும் வியாச்சியம் தாவா நிலங்களை மீட்க வாதிகளால் சிக்காகோ முன்ஸிப் கோர்ட்டில் கொண்டுவரப்பட்ட வியாச்சியமாயிருக்கிறது.

முனிஸிப் கோர்ட்டார் தீர்மானம்:—சி. பு. கோ. 283-வது பிரிவுப்படி செய்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள் தாவாசொத்தில் வாதிகளுக்குள்ள பாத்தியத்தை ஸ்தாபிக்க வியாச்சியங் கொண்டுவராததனுல் லிமிடேஷன் ஆக்ட் 2-வது ஷெடியூல் 11-ம் ஆர்டிகிலால் வாதிகளின் பாத்தியம் காலாவதியாகி விட்டதென்று தீர்மானித்தார்கள். இதன்மேல் ஈஞ்சம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடம் அப்பீல் செய்யப்பட்டது.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தீர்மானம்:—சி. பு. கோ. வில் உபயோகித்திருக்கும் விசாரணை பண்ணுதல் என்னும் வார்த்தையின் தாத்பரியப்படி விசாரணை நடக்காததனுல் காலாவதியாகவில்லை யென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—வாதியின் பாத்தியம் விசாரிக்கப்படவில்லை யென்கிற காரணத்தினுல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தீர்மானம் ஆதரிக்கப்படுமென்று நாம் நினைக்கவில்லை. அதன்மேல் ஏற்பட்ட உத்தரவானது "கிரயம் மோசடியாகத்தோன்றுகிறது. பாத்தியம் தள்ளப்படாது" என்று எழுதப்பட்டிருக்கிறது. தாவா கிரயம் பெண்களுக்குத் தகப்பனுல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தக்கிரயசாசனம் உண்மையாகவே மோசடியாயிருக்குமென்று எடுத்தவுடனே முனிஸிப்கோர்ட்டார் நினைத்திருக்கலாமென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லுகிறார்.

இவர் சொல்வதை நாம் ஒப்புக்கொண்டபோதிலும் அப்பிரிவில் சொல்லியிருக்கும் விசாரணைபண்ணல் என்னும் வார்த்தையின் தாத்பரியப்படி விசாரணை பண்ணினதாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். விசாரணை பண்ணல் என்பதற்கு இவ்வளவு அளவுக்கு விசாரணை பண்ணவேண்டுமென்று சொல்ல முடியாது. பாத்தியத்தின் சுபாவத்தைப்பற்றிச் செய்ததாகச் சொல்லுகிற உத்தரவை விசாரணை பண்ணித்தான் முடிவுசெய்திருக்கவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இ. லா. ரி. 15-கல். 521 சார்தாரிலால் v. அம்பிக்காபிரஸாத் கேசில் பிரிவிகவுன்சிலார் சொல்லுகிறதாவது "இவ்வளவு அளவுக்குத்தான் விசாரணை பண்ணவேண்டுமென்று சட்ட புஸ்தகத்தில் சொல்லவில்லை. கட்சியை விசாரணை பண்ணுவதற்காக ஒரு வியாச்சியமே செய்ததுபோல அவ்வளவு அளவுக்கு விசாரணை பண்ணவேண்டியது சில கேசுகளில் அவசியமாயிருந்தபோதிலும் மற்றக் கேசுகளில் சப் ஜட்ஜியின் முன்னுலிருக்கும் சங்கதிகளைப் பற்றி அபிப்பிராயங்கொடுத்து அபஜயமடைகிற கட்சிக்காரர்கள் புனர்வியாச்சியம் சட்டப்படி செய்துகொள்ள இடம் கொடுப்பது மிகவும் யுக்தியாகவும் நியாயமாகவுமிருக்கின்றது. இ. லா. ரி. 18. சென்னை. 265-முனிசாமிரெட்டி v. அருணுசலரெட்டி கேசில் விசாரணையில்லையென்று அபிப்பிராயப்பட்டு அந்தப் பிரிவுப்படி உத்தரவு செய்யப்படவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 18. சென். 316 புல்லம்மாள் v. பிரதோஷம் கேசில் மனுதாரினுடைய நிலம் ஜப்தியானதைக் காண்பிக்க ஆதாரமில்லை யென்றும் உத்தரவு பிறந்தது. இவ்வுத்தரவு பிரிவுப்படி ஆகவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. நிலம் ஜப்தியாகாததனுல் விசாரணை பண்ண இடமில்லை. கேசின் சுபாவத்தைப்பற்றித் தீர்மானிக்கப்பட்ட ஒரு உத்தரவைச்சரியாகவிசாரணை ஆகாமல் ஏற்பட்ட உத்தரவென்று தள்ளிவிட்டதாக ஒரு தீர்மானமும் காணும். ஆயினும் டிக்கிரியை நிறைவேற்றிச் சொத்து விற்பனையாகாமல் டிக்கிரித் தொகைச் செலுத்தப்பட்டகார

ணத்தைமுன்னிட்டு வாதிபிரதிவாதிக்குள்முடிவானஉத்தரவு ஏற்படவில்லையென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளலாமென்று அப்பீல் பிரதிவாதிகள் பட்சம் கட்சிசொன்னார்கள். இதன் தாத்பரியமாவது டிக்கிரித்தொகை கடைசியாகச் செலுத்தப்பட்டுப்போனதால் வாதிகள் வியாச்சியங்கொண்டுவரக் காரணமிருந்ததில்லை யென்பதே. ஒருவருஷம் முடிவானபிறகு டிக்கிரித்தொகை செலுத்தப்பட்டிருக்கும் சங்கதியைக் கவனிக்கவேண்டியதில்லை யென்றும், நிலத்தை ஏலவிற்பனைக்குக் கொண்டுவரக்கூடிய பாத்தியத்தையும் வாங்குகிறவனுடைய பாத்தியத்தையும் மறுக்கத் தடையாகாதபடி வியாச்சியங் கொண்டுவரத்தவறினால் வாதிகள் விஷயத்தில் மாத்திரம் இது ஒரு முடிவைத்தருமென்றுஞ் சொன்னார்கள். பிரதிவாதிகள் இதற்கு எதிர்கட்சியாக இ. லா. ரி. 8 கல் 279 உமேஸ்சண்டர்ராய் v. ராஜ் புல்லுப் கேசில் கோர்ட்டாருடைய பின்வரும் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டினார்கள்.

நிறைவேற்றும்பொழுது விற்பனை செல்லாதென்று கோர்ட்டார் சொல்லுவது, டிக்கிரி பெற்றவனுக்கும் அவன் ஜப்தி செய்திருக்கிற சொத்தை வாங்குகிறவனுக்கும் விற்பனை செல்லாதென்பது தாத்பரியம். டிக்கிரி பெற்றவனுக்குத் தொகை கொடுத்துவிட்டால் அவனுக்கு வேறு விதமான பாத்தியமில்லை.”

இதனைத் தீர்மானம் செய்த ஜட்ஜிகள் அந்தக் கேசின் சங்கதிகளைப் பொறுத்து செய்திருப்பதால் அவைகளுடன் சேர்த்து வாசிக்கவேண்டும். அந்தக்கேசினுடைய சங்கதி இந்தக்கேசுக்கு வித்தியாசமானது. அந்தக்கேசின் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவன் தொகையைச் செலுத்தினான். இந்தக்கேசில் யாருக்குப் பின்னால் நிலம் விற்கப்பட்டதோ அந்த மூன்றாவது பேர்வழியால் தொகை கொடுக்கப்பட்டது. அன்றியும், முந்தின கேசில் ஒரு வருஷத்துக்குள் பணம் செலுத்தப்படவில்லை யென்று சொல்ல ஆதாரத்தைக் காணோம். இன்னம் இது சம்பந்தமான வேறு கேசுகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. அவைகளெல்லாம் இந்தக்கேசுக்கு வித்தியாசமானதென்று நமக்குத்தோன்றுகிறது. இ. லா. ரி 31. கல். 228 கிருஷ்ண பிரசாதுராய். v. பிப்பின் பேகாரிராய் கேசில் வாதி வசத்திலிருந்து சில நிலங்கள் ஒரு டிக்கிரியினால் ஜப்தி செய்யப்பட்டன. 278-வது பிரிவுப்படி இவர் ஒரு பாத்திய மனு கொடுத்தார். சி. பு. கோ. 283-வது பிரிவுப்படி செய்த ஒரு உத்தரவால் மனு தள்ளப்பட்டது. அவர் உடனே டிக்கிரித் தொகையைச் செலுத்தினதனால் ஜப்தி விடுதலையானது. டிக்கிரித் தொகை செலுத்தினபோது ஜப்தி விடுதலையானதைக்கொண்டு அவ்வாதியை வாதிக்கக்கூடிய ஒரு உத்தரவும் உள்ள ஜப்தியானது இல்லையென்றும், அவ்வுத்தரவை மாற்ற ஒரு வியாச்சியங் கொண்டுவரத்தேவையில்லை யென்றும்தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கேசில் வாதி சுயமாகவே உத்தரவு பிறந்த ஒருவருஷத்துக்குள் ஜப்தியை விடுதலை செய்துகொண்டார். டிக்கிரித் தொகையைச் செலுத்திப் பாதுகாத்துக்கொண்ட ஒரு சொத்தைத் திரும்பவும் பாதுகாக்க ஒரு வியாச்சியங்கொண்டுவரவேண்டிய கடமை யிருக்கிறதாகத்தீர்மானிக்கக்கூடாது. அத்தீர்மானத்தின் கருத்து இந்தக் கேசுக்குப்பொருத்தமுள்ளதல்ல. இ. லா. ரி. 13-பம்மாய் 72-இபுராகிம்பாய் v. குபுலாபாய் கேசில் டிக்கிரிக்குக் கட்டுபட்டவனால் டிக்கிரித் தொகை செலுத்தப்பட்டது. இ. லா. ரி. 18-பம். 241 கோபால் புருஷோத்தமன் v. பாய்நீவாதி கேசில் அவ்வியாச்சியத்தில் வாதியான டிக்கிரி பெற்றவன் செய்கையினாலே ஜப்தி விடுதலை செய்யப்பட்டது. தன்னுடைய செய்கையினாலேயே ஜப்தியை விடுதலை பண்ணி அந்தக் கேசில் பிரதிவாதியாகிய பாத்தியங் கொண்டாடுகிறவனை அவனுடைய பாத்தியத்தை ஸ்தாபிக்க வியாச்சியங் கொண்டுவராததால் வாதிக்கு விரோதமாக ஒரு பாத்தியத்தை ஏற்படுத்தக்கூடாதென்று சொல்ல வாதிக்கு இடமில்லை. சி. பு. கோ. 283-வது பிரிவுப்படி உத்தரவு பிறந்த தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள்ளாக டிக்கிரித்தொகை மேலே சொல்லிவந்த மூன்று கேசுகளிலும் செலுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இ. லா. ரி. 8 கல். 279 இதிலுள்ள முதல் கேசில் ஒரு வருஷத்துக்குமேல் தொகையைச் செலுத்தினதாக ஆதாரமில்லாமலிருந்தாலும் இப்பொழுதுதான் தொகையைச் செலுத்தினதென்று சொல்லப்படவில்லை. நிறைவேற்றுகிற கேசின் கட்சிக்காரர் எல்லாக்கேசுகளிலும் தொகையைச்செலுத்தியிருக்கிறார்கள். இந்தக் கேசைப்போல மூன்றாவது பேர்வழியால் செலுத்தப்படவில்லை. இந்தக் கேசிலிருந்து மற்றக் கேசுகளை வித்தியாசப்படுத்த மூன்றாவது பேர்வழி தொகையைச்செலுத்தினதே தகுந்த ஆதாரம் என்று நாம் தீர்மானிக்கவேண்டியதில்லை. ஒரு வருஷத்துக்குள் தொகையைச் செலுத்தாததனாலே கட்சிக்காரர்களுக்குக் கோர்ட்டார் உத்தரவு ஓர் முடிவை ஏற்படுத்துகிறதென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இதற்கு மாறாக அபிப்பிராயப்படுவது பாத்தியத்தை உறுதிப்படுத்தாமலும் பாத்திய மனு நடவடிக்கையில் யாருக்கு விரோதமாக உத்தரவு பிறக்கிறதோ அவர்கள் ஒரு வருஷத்துக்குள் வியாச்சியம் செய்யவேண்டுமென்றும் காலாவதி ஏற்படுத்திய சட்ட நிரூபண சபையாரின் ஒழுங்குக்கு விரோதமாகும். அபஜயமடைந்த பாத்தியக்காரன் எந்தக் காலத்திலும் தன் பாத்தியத்தை ஸ்தாபிக்க வியாச்சியங் கொண்டுவரலாமென்று நாம் தீர்மானிப்பது ஒரு வருஷத்துக்குப் பிறகு வேண்டியபோது மீட்டுக்கொண்டு பணத்தைச் செலுத்தப் பாத்தியமிருப்பதால் அவ்வாறு செலுத்திச் சொத்தை மீட்டுக்கொள்ள முயல்வது அதிக சங்கடத்தை யுண்டுபண்ணும். 283-வது பிரிவுப்படி பிறந்த உத்தரவு வாதி பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தினதென்றும் கீழ் அப்பீல்கோர்ட்டாரின் உத்தரவு அங்கீகரிக்கத் தக்கதல்லவென்றும் நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

தடைத் தீர்மானத்தைப்பற்றி விசாரிக்கவேண்டியது பாக்கியிருக்கிறது, இந்த வியாச்சியத்தில் வாதியின் பாத்தியம் பின் வியாச்சியங்களுக்குத் தடைத் தீர்மானமாயிருக்கும்பட்சத்தில் நாம் மேலே கூறிய அபிப்பிராயத்துக்கு இடங்கொடாது அப்பீலைத் தள்ளவேண்டியதாயிருக்கும். வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் 1899௵ 30-வது நம்பரின் அசல்வியாச்சியத்தின் தீர்மானத்தால் இந்த வியாச்சியத்திலுள்ள அவர்களுடைய பாத்தியம் தடைத்தீர்மானம் ஆகிறதென்று சொல்லுகிறார்கள். டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரும் வாதிகள் சொல்லுகிறதுபோல அபிப்பிராயப்பட்டும் அனுவசியமென்று இதைப்பற்றி ஆலோசனை செய்யாமல் வேறு காரணங்களைக்கொண்டு அப்பீலுக்கு இடங்கொடுத்தார். 33-ம் நம்பர் வியாச்சியத்தின் கட்சிக்காரர்கள் இந்தக்கேசின் பிரதிவாதிகளும் முதலாவது இரண்டாவது பிரதிவாதிகளுமாயிருக்கிறார்கள். முதல் பிரதிவாதி இறந்துபோனார். மூன்றாவது பிரதிவாதி அவருடைய சுவிகாரப் புத்திரன்; நாலாவது பிரதிவாதி மூன்றாவது பிரதிவாதியினிடமிருந்து தனக்குச் சொத்து கிடைத்ததென்று பாத்தியங் கொண்டாடுகிறவராயிருக்கிறார். தடைத் தீர்மானவிஷயமாக யோசிக்கும் பட்சத்தில் கட்சிக்காரர்கள் இரண்டு கேசுகளிலும் அவர்களாகவே யிருக்கிறார்கள். 39-ம் நம்பர் கேசின் தாவா 1-2. சொத்துக்களை மீட்டுக்கொள்ளத் தீர்மானம்பெற்றிருக்கிறார்கள். 3, 4, 5, சொத்துக்களை வாதிகள் 1900௵ ஜூலை௴ 18௳க்கு முன்னால் மீட்டுக்கொள்ள வாதிகளுக்குப் பாத்தியமில்லையென்று அந்த விஷயத்தைப்பற்றிய வரையிலும் வியாச்சியத்தைத்தள்ளியிருக்கிறார்கள் அவ்வியாச்சியத்தின் 3, 4, 5 சொத்துகள் இவ்வியாச்சியத்தில் தாவாவுக்கு வந்தது. 39-ம் நம்பர் கேஸ் தீர்மானம், வியாச்சியத்திற்குத் தடைத்தீர்மான

மாகாது.) சட்டத்துக்கு விரோதமாகத் தவறித் தீர்மானமாயிருக்கிறபடியால்) என்று அப்பீல் வாதிகள் கட்சி சொல்லுகிறார்கள். இ. லா. ரி. 5. சென். 304. பார்த்தசாரதிv. சின்னக்கிருஷ்ண கேசின் தீர்மானத்தை அதற்குப் பொருத்தமாக எடுத்துக் காட்டினார்கள். அந்தக்கேசில் சொல்லியிருக்கும் கட்சிக்காரர்கள் வித்தியாசமாயிருப்பதால், இந்தக்கேசுக்கும் அது வித்தியாசமாயிக்கிறதென்று நமக்குத் தோற்றுகிறது. என்றாலும், பொதுச்சட்ட முறைமைக்கு மாறாக முன் தீர்மானம் ஏற்பட்டிருப்பது பின் வியாச்சியத்திற்குத் தடையாகாதென்று அதில் நியாயம் பேசியிருக்கிறார்கள். 39-ம் நம்பர் வியாச்சியத்தில் 1-2-சொத்துக்களை வாதிபட்சம் அனுகூலமாக முன்சீப் கோர்ட்டார் தீர்மானம் செய்தது சட்டமுறைமைக்குமாறாக எண்ணங்கொண்டு அல்ல. சட்ட முறைமையையும் நடந்த சம்பவங்களையும் கலந்து யோசிக்க வேண்டியதாயிருந்தது. சி. பு. கோ. 283-வது பிரிவுப்படி விசாரணை சரியாகப் பண்ணப்பட்டதா என்பது சட்டத்தைப் பொறுத்ததல்ல; நடந்த சங்கதியைப் பொறுத்தது. சரியாக விசாரிக்கப்படவில்லை யென்று முனிஸீப் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார். இந்த அபிப்பிராயத்தைக்கொண்டு வாதி பக்கந் தீர்மானஞ் செய்தார். இந்த வியாச்சியத்தில் தாவாவுக்குவந்த சொத்துக்களைப்பற்றியும் இதர சொத்துக்களைப்பற்றியும் விசாரணை நடத்தியிருக்கிறார். முன் தீர்மானத்தினால் சொத்தை மீட்கக்கொண்டுவந்த இவ்வியாச்சியம் தடையானதென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

ரூ. 187-15-7-பெந்தகத்தொகைக்கு மேற்பட்டு அப்பீல் பிரதிவாதி கொடுத்து மீட்கவேண்டு மென்று அப்பீல் வாதிகள் கட்சி சொன்னார்கள். இத்தொகை 1895௵ 407-ம் நம்பர் அசல் வியாச்சியத்தில் ஜப்தியை விலக்க அப்பீல் வாதியாகிய பிரதிவாதிகள் செலுத்தின தொகை. பிரதிவாதிகளுக்குக் கிரயம் பண்ணினபிறகு இத்தொகை அவர்களால் செலுத்தப்பட்டது. கிரயசாசனத்தினால் தங்களுக்கு ஏற்பட்ட பாத்தியத்தை உறுதிப்படுத்த அவ்வாறு செய்யப்பட்டது. அது சுய இச்சையாய்ச் செலுத்தினார்கள். வாதிகளின் அனுகூலத்துக்காக உண்டானதல்ல. மீட்கக் கொண்டுவந்த இவ்வியாச்சியத்தில் பிரதிவாதிகளை இத்தொகையைக் கொடுக்கும்படியாகச் சொல்லக்கூடாதென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். செலவை நீக்கி அப்பீலைத் தள்ளிவிட்டோம்.

நவீன்ஸ்:—கிரயம் மோசடி யென்றும் பாத்தியமனு தள்ளப்பட்டதென்றும் சொல்லி ஜப்தி பண்ணப்பட்ட சொத்தில் A என்னும் ஒருவர் கொண்டாடின பாத்தியத்தைத் தள்ளிவிட்டார்கள். கிரயசாசனத்தை மாத்திரம் கவனித்து இவ்வுத்தரவு பிறந்திருக்கிறதாகத்தெரிகிறது. சாட்சியங்களைக்கொண்டு முடிவுசெய்ததாக யாதொரு ஆதாரமுமில்லை. உத்தரவு பிறந்த ஒருவருஷத்திற்குப் பிறகு இவரிடமிருந்து இன்னும் வேறொருவர் டிக்கிரித் தொகையைச் செலுத்தி ஜப்தியை விலக்கிக்கொண்டார். A கொண்டுவந்த வியாச்சியத்தில் :—

(1) A கொடுத்த பாத்தியமனுவின்மேல் பிறந்த உத்தரவு அதன்தன்மையை அறிந்துசெய்த உத்தரவாகத் தோன்றுவதால் சி. பு. கோ. 283-வது பிரிவுப்படி விசாரணை பண்ணி முடிவு செய்யப்பட்டதாக ஸ்தாபிக்கப்பட்டு அவ்வுத்தரவு செல்லுபடியுள்ளதென்றும்.

(2) A-யையும், பிரதிவாதிகளையும் அவ்வுத்தரவு கட்டுப்படுத்துமென்றும். உத்தரவு பிறந்த ஒரு வருஷத்துக்குப் பிறகு B செலுத்தின தொகை, பிறந்த உத்தரவை மாற்ற ஒரு வருஷத்துக்குள் வியாச்சியங் கொண்டுவர A கடமைப்பட்டிருப்பதை விலக்காதென்றும்.

(3) சட்டத்துக்கு மாறாக எண்ணங்கொண்டு செய்த தீர்மானத்தையன்றி, சட்டத்தையும் நடந்த சங்கதிகளையும் கலந்து யோசித்துச் செய்த தீர்மானம் அதே கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட அதே விஷயத்தைப்பற்றிய பின்வரும் வியாச்சியங்களுக்குத் தடையாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 225.

Koyyana Chittemma v. Doosy Gavaramma. I. L. R. 29. Mad. 225.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

பெந்தகக் கடனுக்காக கோர்ட்டில் கட்டின தொகை யாருடையது ?

மோத்தியார் மீராதாரகன் வாதி (அப்பீல் வாதி).
ஆமதி ஆமெட்பிள்ளை பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி).

வியாச்சியசங்கிரகம்.

ஜட்ஜி மி-ர் சங்கரநாயர்தீர்மானம்:—இந்தக்கேசில் டிரான்ஸ்பர் ஆப்பிராபர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவுப்படி பாக்கியிருக்கும் பெந்தகக்கடனை பெந்தகக்கடனாளி கோர்ட்டில் செலுத்தினார். அந்தப் பிரிவுப்படி அத்தொகை பெந்தகம் வாங்கினவனுக்குச் செலுத்தப்படவேண்டியது. 84-வது பிரிவுப்படி பெந்தகம் வைத்தவன் செலுத்தின தேதியிலிருந்து வட்டி கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. கோர்ட்டிலுள்ள தொகை பெந்தகம் வாங்கினவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையாக யிருக்கிறது. பிரதிவாதி பெந்தகம் வாங்கினவன் கொடுக்கவேண்டிய கடனுக்காகத் தீர்ப்பு பெற்றிருப்பதால் இத்தொகையிலிருந்து அக்கடன் கொடுக்கப்படவேண்டியதே. கோர்ட்டில் செலுத்தப்பட்ட தொகைக்காகத் தகுந்த மனு கொடுக்கப்பட்டு பணம் வாங்கப்படாததால் அது பெந்தகம் வாங்கினவனுக்குச் சொந்தமல்லவென்று வாதிக்கப்பட்டது. பணஞ் செலுத்தின தேதிக்குப் பிறகு மனு செய்துகொண்டு பணத்தை வாங்கிக்கொள்வதற்குப் பெந்தகம் வாங்கினவனுக்குத் தடையில்லாததால் இதில் யாதொரு வித்தியாசமுமில்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். 84-வது பிரிவுப்படி வட்டி நின்றுபோய்விட்டது என்பது பெந்தகம் வைத்தவன் விஷயத்தைப்பற்றின வரையிலும் பணம் செலுத்திவிட்டதற்குச் சமமாகிவிட்டது. பெந்தகம் வைத்தவனுடைய மனுவானது 1903௵ ஜூலை௴ 28௳ செய்த உத்தரவால்தள்ளப்பட்டதென்றுவற்புறுத்திச் சொன்னார்கள். பெந்தகம் வைத்தவனால் மனு கொடுத்ததாக வைத்துக்கொண்டபோதிலும், கோர்ட்டிலுள்ள தொகை பெந்தகம் வாங்கினவனுடைய கணக்கிலிருக்கிறவரையில் அவருடைய தொகையாகவே யிருக்கிறது. கீழ்க்கோர்ட்டாருடைய டிக்கிரி சரியென்று மனுவைச் செலவு தொகையுடன்தள்ளி ஹைகோர்ட்டில் ஜட்ஜி சங்கரனயர் தனியாகத் தீர்மானஞ் செய்தார். லெட்டர்ஸ் பேட்டென்டின்படி ஹைகோர்ட்டிலேயே வாதி அப்பீல் செய்தார்.

அப்பீல் கோர்ட்டார்தீர்மானம்:—83-வது பிரிவுப்படி பெந்தகம் வாங்கினவனுக்குக்கொடுக்கும்படியாகப்பெந்தகம் வைத்தவன் கோர்ட்டில் செலுத்தினதொகை அப்பிரிவில் சொன்னபடி கோர்ட்டிலிருந்து பணம் வாங்குவதற்குமுன்னால் செய்யவேண்டிய கடமைகளைப் பெந்தகம் வாங்கினவர் செய்யாமலிருக்கும்பொழுதே பெந்தகம் வாங்கினவருடைய சொத்தென்றும் அவருடைய கடன்காரரால் அத்தொகை ஜப்தி செய்யப்படலாமென்றும் ஹைகோர்ட்டு ஜட்ஜி அபிப்பிராயங்கொண்டது தவறென்று நாங்கள் நினைக்கிறோம்.

பெந்தகம் வாங்கினவன் செய்யவேண்டிய கடமைகளாவது :—

பணத்தை ஒப்புக்கொள்ளுகிறேனென்று தன் விருப்பத்தைச் சொல்லி பெந்தகத் தொகை அதனுல் பூராவும் தீர்ந்துவிட்டதாகக் கண்டெழுதி ஒரு மனு கொடுக்கவேண்டும். கோர்ட்டில் பெந்தகப் பத்திரத்தையும் தாக்கல் செய்யவேண்டும். இ. லா. ரி. 25. அல, 179 டால்லிங் v. பித்தாம்லிங் கேசில் சொல்லியிருக்கும் தீர்மானம் இதற்குப் பொருத்தமுள்ளது. அங்கே ஜட்ஜிகள் சொல்லும் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். அதற்கு மாருக அபிப்பிராயப்படுவது இந்தக் கேசில் நடந்த அநியாயத்தைப்போல அதிக அநியாயத்துக்கு இடம் கொடுக்கும் இந்தக்கோர்ட்டு ஜட்ஜிசெய்த உத்தரவைச்செலவுடன் ரத்துசெய்து சப் ஜட்ஜியினுடைய டிக்கிரியையும் மாற்றிப் பிராதில் கண்ட தொகைக்குச் செலவு தொகையுடன் வாதிக்குத் தீர்ப்பு கொடுக்கிறோம்.

நலிங்ஸ்:—டிராஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவுப்படி பெந்தகம்வாங்கினவனுக்குச் செலுத்தும்படியாகப்பெந்தகம் வைத்தவன் கோர்ட்டில் செலுத்தினதொகை அப்பிரிவின்படி நடக்கவேண்டிய நிபந்தனைகளைப் பெந்தகம் வாங்கினவன் செய்கிறவரைக்கும் அவனுடைய சொத்து ஆகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 232.

Mothiyar Mira Taragan, v. Ahmatti Ahmed Pillay I. L. R. 29. Madras. 232.

———

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

வட்டி எவ்வாறு செலுத்தவேண்டும்?

மீலான்-வாதி (அப்பீல் வாதி).

அண்ணுவிமாதன் மனுதாரர்கள் (அப்பீல் பிரதிவாதிகள்.)

வியாச்சிய சங்கிரகம்.

1897ஆு ஜூலைமீ 8உ வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டினுல் சேரவேண்டிய தொகைக்கு 1903ஆு இவ்வியாச்சியம் செய்யப்பட்டது. வாதி பிரதிவாதியினிடம் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி வட்டிக்காக சில நிலங்களின் வரும்படியை அனுபவித்துக்கொண்டு வருகிற படியால் வியாச்சியங் காலாவதியாகவில்லையென்று சப் ஜட்ஜி தீர்மானஞ்செய்தார். ஹைகோர்ட்டுக்கு இதைப்பற்றி ரிவிஷன்மனு கொடுத்தபொழுது ஜட்ஜி டேவிஸ் பின்வரும் உத்தரவைச் செய்தார். "இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட பிராமிஸரி நோட்டு வட்டிக்காக பணங்கொடுக்கும்படிச் சொல்லுகிறது. லிமிட்டேஷன் ஆக்டின் 20-வது பிரிவுப்படி காலாவதியை நீக்க சொத்தை யனுபவிப்பது பிராமிஸரி நோட்டின் வட்டியைச் செலுத்தினதற்குச் சமமாக அர்த்தம் பண்ணக்கூடாது. அப்படிச் செய்கிறதாகச் சொல்ல சப் ஜட்ஜி எத்தனிக்கவில்லை. பிராமிஸரி நோட்டினுல் வந்த இந்த வியாச்சியங் காலாவதியினுல் பாதிக்கப்பட்டுப்போனது (ஏனெனில், வாதிக்குப் புதுகாலவரையரை ஏற்படுத்தஎழுதப்பட்டகாலத்திலிருந்து வட்டி செலுத்தப்படவில்லை) மனுவை ஏற்றுக்கொண்டு வாதியின் வியாச்சியத்தைச் செலவுதொகையுடன் தள்ளித் தீர்ப்பு செய்தார்.

லெட்டர்ஸ் பேட்டெண்டின் 15-வது பிரிவுப்படி ஹைகோர்ட்டில் வாதி அப்பீல் செய்தார்.

அப்பீல் கோர்ட்டார் தீர்மானம்:—ஹைகோர்ட்டு ஜட்ஜியினுடைய தீர்மானத்தை உறுதிசெய்ய நாம் அபிப்பிராயப்படவில்லை. வாதி வசத்தில் ஒரு நிலத்தை பிராமிஸரி நோட்டு பிறந்த ஒரு மாசத்திற்குப் பிறகு ஒப்புக்கொடுத்து வட்டிக்காக வாதி அந்நிலத்தின் வரும்படியை அனுபவித்துக்கொள்ளுகிறதென்று உடன்படிக்கை செய்துகொண்டதாக சப் ஜட்ஜி கண்டுபிடித்தார். அவ்வுடன்படிக்கையின்படி வாதி அந்நிலத்தைத் தன் வசத்தில் வைத்து 1902ஆு ஆகஸ்டுமீ வரையில் வட்டிக்காக வரும்படியை அனுபவித்து வந்தார். லிமிட்டேஷன் ஆக்ட் 20-வது பிரிவுப்படி வட்டி செலுத்தப்பட்டுவருவதாக நாம் அபிப்பிராயப்படுகிறோம். அப்படிச் செலுத்துவது பணமாயிருக்கவேண்டியதில்லை. இ லா. ரி. 19 சென்னை. 340 கொல்லிபாரா புல்லம்மா v. மத்துலாதத்லையா கேசில் இந்த கோர்ட்டார் செய்த தீர்மானத்திலுள்ள அபிப்பிராயத்தையே நாம் அனுசரிக்கிறோம். பணஞ் செலுத்துவது ரொக்கமாயிருக்கவேண்டியதில்லை. சாமானுயிருக்கலாம்; கணக்கு மூலியமாய் தீர்த்துக்கொள்ளலாம். தொகையை வாங்குவதற்குப் பிரதிவாதியினுல் கொண்டுவரப்படும் வியாசியத்தில் யீடு சொல்லக்கூடிய தொகையாக யிருக்கவேண்டும். இ. லா. ரி. 24 பம். 493. காரியப்பா v. ராசப்பா கேசில் இதே மாதிரி அபிப்பிராயங்கொள்ளப்பட்டது. ஆகையால் இந்தியன் லிமிட்டேஷன் ஆக்ட் 2..-வது பிரிவுப்படி என்()னன்ன தேவையோ அவ்வளவும் நடந்திருக்கிறதாக இந்தக் கேசிலும் அபிப்பிராயப்படவேண்டும். வாதி பிராமிஸரி நோட்டினுல் கிடைக்கவேண்டிய வட்டிக்காக நிலத்தை யனுபவித்துக் கொள்ளுகிறதென்று வாதியும் பிரதிவாதியும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதால் பிரதிவாதிகளிடமிருந்து வட்டி கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்தால் அவர்ஜெயமடையமாட்டார். இதைக்கொண்டு தான்இக்கேசில் நிதானிக்கவேண்டும். இ. லா. ரி. 24-பம்; 619, ராகோ சித்தாராம் v. ஹரிகேசம் இதற்குப் பொருத்தமானது. ஆகையால் அப்பீலை ஏற்றுக்கொண்டு ஹைகோர்ட்டு ஜட்ஜியினுடைய தீர்மானத்தைமாற்றி சப் ஜட்ஜியினுடைய தீர்மானத்தை யுறுதிப்படுத்தி இந்தக்கோர்ட்டிலும் இதற்கு முன் ஹைகோர்ட்டு ஜட்ஜி முன்னிலையிலும் நடந்த வியாச்சிய செலவை வாதியடைகிறதென்று தீர்மானஞ்செய்கிறோம்.

நலிங்ஸ்:—பிராமிஸரி நோட்டின்படி கடன் கொடுத்தவர் கிடைக்க வேண்டிய வட்டிக்காக நிலத்தை யனுபவிக்கிறதென்று எழுதிக்கொடுத்தவரும் அவருமாக உடன்படிக்கைசெய்துகொண்டபொழுது, அப்படி அநுபவிப்பது வட்டிக்காக அவர் கொண்டுவரும் வியாச்சியத்திற்குத் தகுந்த டிபன்சாயிருப்பதால் லிமிட்டேஷன் ஆக்ட் 20-வது பிரிவுப்படி வட்டி செலுத்தினதாகும் என்றும், 20-வது (2) பிரிவுப்படி செலுத்துவது ரொக்கத்தில் செலுத்தவேண்டியதில்லை. செலுத்தவேண்டிய தொகைக்காக வியாச்சியங்கொண்டுவரும் பொழுது தகுந்த டிபன்ஸ் சொல்லும்படியாக செலுத்தினுல் போதுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 29. சென். 234.

Mylay. Annavi Madan. I. L. R. 29. Mad. 234.

———

கல்கத்தா ஹைகோர்ட்டு.

கிரிமினல் ரிவிஷன்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பிரட்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டிபன்.

லெஞ்சம் கொடுக்கக் கட்டாயப்படுத்தல்.

தியோநந்தன் பெர்ஸாத் அப்பீல்வாதி (எதிரி)

சக்கிரவர்த்தி அப்பீல் பிரதிவாதி (வாதி)

"தியோநந்தன் பெர்ஸாத்" செல்லி தாணுவிலுள்ள "லோகர் டாகா" ஜில்லாபோலீஸின் ஹெட்கான்ஸ்டேபில்

இ. பி கோ. 161, 165-வது பிரிவுகளின்படி மூன்று குற்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு "ரஞ்சி"யிலுள்ள ஜாயிண்டு மேஜிஸ்டிரேட்டாரால் சிட்சிக்கப்பட்டார். மூன்று குற்றங்களும் ஒரு செய்கையின் பாகமாக விருந்தது. ஒவ்வொரு குற்றத்துக்கும் ஒவ்வொரு வருஷ தெண்டனை விதித்தபோதிலும், இத்தெண்டனைகளை ஏககாலத்தில் நிறைவேற்றும்படியாக (அதாவது ஒன்றின்பின் ஒன்ருக அல்ல என்ற) மேஜிஸ்டிரேட்டார் தீர்மானித்தார்கள். அன்றியும், 43-ரூபாய் அபராதமும் தவறினுல் ஒரு மாதக்கடுங்காவல் தண்டனையும் விதித்தார். "ஷோட்டா நாகப்பூரி"லுள்ள ஜுடிஷியல் கமிஷினரிடம் அப்பீல் செய்தபோது கீழ்க்கோர்ட்டார் தண்டனையை உறுதிப்படுத்தினுர்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டாருக்கு மனு செய்து ஒரு உத்தரவுவாங்கிக்கொண்டார். உடன் குற்றவாளிகளின் சாட்சியத்தைக் கொண்டும் முக்கியமான அம்சங்களில் ஒவ்வாத இதர சாட்சியங்களைக்கொண்டும் தண்டிக்கப்பட்டிருப்பதாக ஆதாரங் காண்பித்துப் பின்வரும் ஹைகோர்ட்டாருடைய உத்தரவைப் பெற்ருர்.

"தண்டனையானது உடன் குற்றவாளியின் சாட்சியத்தையும் முக்கியமான அம்சங்களில் பொருந்தாத இதர சாட்சியங்களையும் ஆதாரமாகக் கொண்டு தண்டனை ஏற்பட்டிருப்பதால் ஏன் அத்தண்டனையை மாற்றக்கூடாதென்பதற்குக் காரணம் தெரிவிக்கவேண்டும்".

எவர்கள் உடன் குற்றவாளிகளாவார்களென்றும், உடன் குற்றவாளியின் சாட்சியத்திற்கு ஒற்றுமையாயிருக்கவேண்டிய சாட்சியத்தின் தன்மையையும் லெஞ்சங்கொடுத்த மனுஷன் லெஞ்சம் வாங்கின மனுஷனுக்கு உடன் குற்றவாளியல்ல என்பதையும் கீழ்க்கோர்ட்டார் சரியானபடி அர்த்தம்பண்ணவில்லையென்று எதிரியின் வைக்கீல் எடுத்துச்சொன்னுர். பிராசிக்கியூஷனில் பின் வருமாறு சொல்லப்பட்டிருந்தது:—

"வாதி ஒரு கார்ட்ட அரக்கு விளைவிக்கப் பகுதிக்கு வாங்கியிருந்தான். 1905ஆு ஏப்பிரல்மீ 21, 22உ களில் ராத்தா என்பவன் 200-ரூபாய் பெறுமான லாக்கையை வெட்டித் தூக்கிக் கொண்டுபோய்விட்டான். ஏப்பிரல்மீ 23உ செல்லிதாணுவில் பகுதிக்கு வாங்கினவன் முறையிட்டுக்கொண்டபொழுது 24உ வரும்படியாக தெரிவிக்கப்பட்டான். மறுநாள் போனபொழுது எதிரியாகிய ஹெட்கான்ஸ்டபின் இந்தக்கேசை விசாரித்து மேலே விஜாரணைக்கு அனுப்ப 50-ரூபாய் லெஞ்சம் கேட்டார். வாதி சற்று ஆக்ஷேபித்து கடைசியாக 50-ரூபாய் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்டார். ஏப்பிரல்மீ 27உ 20-ரூபாய் எதிரிக்குக்கொடுக்கப்பட்டது. 28உ ஒரு 20-ரூபாயையும் 30உ 3-ரூ. விலையுள்ள ஒரு வெள்ளாடும் கொடுக்கப்பட்டது. வாதியும் அவருடைய தாயாரும் சைனுத், ஷெணக்கிதாரும் எதிரிலெஞ்சக்கேட்டதாக சாட்சிசொன்னுர்கள். பந்து என்பவரும் குர்தியால் என்பவரும் ஜாமீனுயிருந்து 20-ரூ. பணம் ஷர்மன் என்பவரிடத்தில் கடன் வாங்கிக்கொடுத்ததாக ருஜுசொன்னுர்கள். முதலில் 20-ரூபா கொடுத்தபொழுது வாதியோடும் குர்தியாலோடும் "பூதான் சௌக்கிதார்" கூடவிருந்ததாகச் சொல்லியிருக்கிருர். மூன்று காளைமாட்டை யீடாகவைத்துக்கொண்டு வாதிக்குக் கடன்கொடுத்த ராதனுத் என்பவரும் "குர்தியால்" "பூதான்" என்பவர்களும் இரண்டாவது தொகை 20-ரூபாய் கொடுத்ததற்கு சாட்சிசொல்லியிருக்கிருர்கள். மூன்று ரூபாய்க்கு ஆட்டைவிற்க "ஜுமாக் அகிர்" என்பவரும் இன்னம் நால்வரும் ஆடு கொடுத்ததற்குச்சாட்சி சொல்லியிருக்கிருர்கள்.

செஷன்ஸ்கோர்ட்டார், இந்த மூன்று குற்றத்தையும் சாட்சிகள் ருஜுப்படுத்தினதாக ஒப்புக்கொண்டார்கள்.

இ. லா. ரி, 27-கல்கத்தா 925-கேசின் தீர்மானத்தை ஆதாரமாகக்கொண்டு கட்டாயத்தினுல் வாதி லஞ்சங் கொடுத்திருப்பதனுல் அவர் உடன் குற்றவாளி ஆகமாட்டாரென்றும் இரண்டு தொகைகளையும் ஆட்டையும் கொடுத்தபோது கூடவிருந்த சாட்சிகளும் உடன் குற்றவாளிகளாகமாட்டார்களென்றும் செஷன் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள் மேலே சொன்ன கேசின் தீர்மானத்தில் பணங்கொடுத்தவன் காவலிலிருந்து தான் விடுதலை யடைய பணங்கொடுத்திருப்பதாலும் ஆனுல் இந்தக் கேசில் சொத்தைத் திரும்ப அடைவதற்கும் கோர்ட்டில் கேசு நடத்தினுல் உண்டாகுஞ் செலவை நீக்கிக்கொள்வதற்கும் வாதி பணம் கொடுத்திருப்பதாலும் இந்தக் கேசுக்கு அந்தக்கேசு ஆதாரமாகாது என்றும், செஷன் ஜட்ஜியினுடைய அபிப்பிராயம் தவறு என்றும் எதிரியின் வைக்கீல் சொன்னுர். அன்றியும் வாதியும் அவருடைய தாயாரும் உடன் குற்றவாளியாவார்களென்றும் வாதித்தார். இ. லா. ரி. 14. பம். 115. சக்கிரவர்த்தினி v. மோகன்லால்கேசில் ஒருவனைக்குற்றப்படுத்தாமலிருக்க இன்னின்னது அவசியமாயிருக்கவேண்டுமென்று இ. பி. கோ. 94-வது பிரிவில் சொல்லப்படடிருக்கிறதென்று தீர்மானஞ் செய்திருப்பதை ஆதாரமாக எடுத்துக்காட்டினுர். "பூதான் குர்தியா" என்பவரும் "சைனுத்" என்பவரும் "பந்து" என்பவரும் குற்றஞ் செய்ததை யறிந்து அதைத் தடுக்கவாவது வெளிப்படுத்தவாவது பிரயத்தனஞ் செய்யாததால் உடன் குற்றவாளிக்கு மேற்பட்டவர்களாக மாட்டார்களென்றும், ஆட்டைக்கொடுத்தபொழுது இருந்த சாட்சிகள் அவ்வாறே பாவிக்கப்படுவார்களென்றும் எதிரியின் வைக்கீல் கட்சி சொன்னுர்,

பின்னும் என்ன காரணத்திற்காகப் பணம் கடன் வாங்கப்பட்டதென்று தெரியாதிருப்பதால் "பிரதனுத்" என்பவரின் சாட்சியும் மற்றவர்களுடைய சாட்சியத்திற்கு ஒத்திருப்பதாக ஒப்புக்கொள்ளக் கூடாததால் உடன் குற்றவாளிகளின் சாட்சியத்திற்கு முக்கியமான அம்சங்களில் ஒற்றுமையாய் இல்லையென்றும் எதிரி வைக்கீல் வாதித்தார். ஆகையால் தெண்டனை ஆதாரமுள்ளதல்ல என்று சொன்னுர்.

இவர் சொன்ன கட்சிகளை யெல்லாம் கூட்டிப்பார்க்கும் பட்சத்தில் லெஞ்சங்கொடுக்கிறவனும் லெஞ்சங்கொடுக்கும்பொழுது கூடவிருக்கிறவர்களும் உடனே குற்றவாளிகளாக மதிக்கப்பட்டு கூடயிராமலும் இன்ன காரணத்துக்காகப் பணம் கடன் வாங்கப்பட்டது என்று சொல்ல முடியாத மற்றவர்களுடைய சாட்சியமும் ஒன்றுமை யில்லாததனுல் பிரயோஜனமில்லையென்று எண்ணப்படும்பொழுது இ. பி. கோ. 166-வது பிரிவுப்படி லெஞ்சம் வாங்கின கேசகளுக்குத் தண்டனையே ஏற்படாது. இவ்வபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறோம்.

இ. பி. கோ. 166-வது பிரிவுப்படி லெஞ்சங் கொடுக்கிறவன் உடந்தை குற்றவாளியாகிருன் என்கிற கட்சி நியாயந்தான். ஆகையால் அவனை உடன் குற்றவாளியாகப் பாவிக்கவேண்டும். எதிரி குற்றம் செய்ததாக முக்கியமான அமிசங்களில் பொருந்தும்படி ஒத்திருந்தாலொழிய உடன் குற்றவாளியின் சாட்சியத்தைக்கொண்டு தண்டிப்பது ஆதாரமுள்ளதல்லவென்று சொல்வதும் நியாயந்தான். ஆயினும் இவ்விதியை எல்லாக் கேசுகளிலும் பொருந்த உபயோகிக்காமல் அந்தந்தக் கேசுக்குத் தக்கபடி யூகித்தறியவேண்டுமென்றும், குற்றவாளிகளை யெல்லாம் ஒரே தரத்தில் பாவிக்கக்கூடாதென்றும் இது விஷயத்தைப்பற்றிப் பொது விதி ஏற்படுத்தக்கூடாதென்றும், இ. லா. ரி. 26. பம். 193 சக்கிரவர்த்தி v. மால்ஹோர், மார்த்தாந்து, குல்கரணி கேசின் தீர்மானத்திலுள்ள அபிப்பிராயத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்.

செஷன் கோர்ட்டார் எடுத்துக்காட்டிய கேசின் தீர்மானத்திலுள்ளதோடு இந்தக் கேசு எல்லா அம்சங்களிலும் பொருத்தமில்லாமற்போனாலும் வாதி சுயேச்சையாய் லஞ்சங் கொடுக்கவில்லையென்பதையும் லஞ்சங் கேட்டது எதிரியென்பதையும் தன்னுடைய அதிகாரத்தை முன்னிட்டு இப்படி கட்டாயப்படுத்தினார் என்பதையும் நாங்கள் அறியாமற்போக ஏதுவில்லை. குற்றஞ்செய்தவனை தண்டிப்பதைவிட திருட்டுப்போன சொத்தை மீட்டுக்கொடுப்பதற்கு எதிரி பிரயாசைப்பட்டாரென்பது ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ளதல்ல. லஞ்சங்கொடுக்கிறவரையிலும் யாதொரு நடவடிக்கையும் நடத்தமாட்டேனென்றும் மறுத்துவிட்டார். லஞ்சங் கொடுப்பதாக வாதி கடைசியாக ஒப்புக்கொண்டாலும அவர் சுயேச்சையாய் செய்ததல்ல. அவசியத்தை முன்னிட்டுச் செய்தார். உடன் குற்றவாளிகள் தங்கள் குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேறொரு குற்றவாளியின்மேல் குற்றத்தைச் சுமத்தாமல் தங்கள் குற்றத்தையே வெளிப்படுத்துவதாகிய சாட்சியத்தினால் எதிரியின் குற்றத்தை ருஜுப்படுத்துவதினால் உடந்தைக் குற்றவாளிகளின் ஒற்றுமையில்லாத சாட்சியத்தைக்கொண்டு விதிக்கும் தண்டனையை நியாயமாக்குகிற கேசில் ஒன்றுயிருக்கிறது. அவருடைய சாட்சியத்தை நம்ப சொற்ப ஒற்றுமையிருந்தால் போதும். இதனால் வாதியும் அவருடைய தாயாரும் சொன்ன ஸ்டேட்டுமெண்டுகளிலுள்ள ஒற்றுமையே போதுமானது. வாதிக்குக் கடன் கொடுத்தவர்களும் லஞ்சங்கொடுத்தபோது கூடவிருந்தவர்களும் எங்களுடைய அபிப்பிராயத்தில் உடன் குற்றவாளிகளாக மாட்டார்கள். லஞ்சங்கொடுத்தபோது கூடவிருந்த சாட்சிகள் தாங்கள் கூடவிருந்துநடத்தினாலொழிய அல்லது அப்படிக் கொடுப்பதில் தூண்டுதலாகவிருந்தாலொழிய உடன் குற்றவாளிகளாக மாட்டார்களென்று அபிப்பிராயத்தையுண்டாக்கிய இ. லா. ரி 27. கல். 144 ராஜத்தி v. தியோதோர்லிங் கேசுக்கு இந்தக் கேசும் ஒத்திருக்கிறது. பணங்கொடுத்தவரின் சாட்சியம் இப்பேர்ப்பட்ட கேசுகளில் வாதியின் வாக்குமூலத்துக்கு ஒத்திருக்கிறதாக ஒப்புக்கொள்ளலாம். ஆட்டைக்கொடுத்த விஷயத்தில் ஏற்பட்ட சாட்சியமும் ஆக்ஷேபனைக்கு இடமுள்ளதல்ல.

இரண்டு கீழ்க்கோர்ட்டாரும் சாட்சிகளின் சாட்சியத்தை நன்றாய்ப் பரிசோதித்து நம்பத்தக்கது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணத்தைக்கொண்டு வாதியின் சாட்சியத்துக்குப் போதுமான ஒற்றுமையிருக்கிற காரணத்தை யோசித்துத் தண்டனை விதித்ததில் நாம் தலையிடாமல் ஏற்படுத்தின விதியை ரத்துசெய்துவிட்டோம்.

ரூலிங்ஸ்.—வாதி சுயேச்சையாய் லஞ்சங்கொடுக்க எத்தனிக்காமலிருக்கும்பொழுது ஒருபோலீஸ் உத்தியோகஸ்தனாகிய எதிரி வாதி சொன்ன சார்ஜை எழுதிக்கொள்வதற்கு முன் லஞ்சங்கேட்டு தன்னுடைய அதிகார தத்துவத்தினால் கட்டாயப்படுத்தினால் உடன் குற்றவாளிகள் சுயேச்சையான நடத்தையைக்கொண்டு உடன் குற்றவாளியாவதினால் ஏற்படுகிற கேசைப்போலல்லாமல் இந்தக்கேசில் அவர்களுடைய சாட்சியத்திலுள்ள அற்பஒற்றுமையைக்கொண்டு தண்டிப்பது நியாயமாகுமென்றும்.

(2) வாதிக்குக் கடன்கொடுத்தவர்களும் பணஞ்செலுத்தினபோது கூடவிருந்தவர்களும் அந்நடவடிக்கைகளைத் தாங்கள் நடத்தியாவது அல்லது அவைகளுக்குத் தூண்டுதலாகவாவது யிருந்தாலொழிய உடன் குற்றவாளிகளாகமாட்டார்களென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 33. கல். 649.

Deo Nandan Pershad v. Emperor. I. L. R. 33. Cal. 649.

அலகபாத் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிஸ் சர் ஜான்ஸ்டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர் வில்லியம் பர்க்கிட்.

குடும்பச் சோத்திலிருந்து செலவு பண்ணி வியாச்சியம் நடத்தி அனந்தரவார்சு பாத்தியத்தினால் கிடைத்த சோத்து குடும்பச்சோத்துடன் சேராது.

பாச்சோ குன்வார் வாதி (அப்பீல் வாதி).

தாரம்தாஸ் பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி.)

ரூலிங்ஸ்:—அவிபக்த குடும்பத்தலைவன் ஏராளமான குடும்பச்சொத்தைப் பராமரித்துக்கொண்டு வரும்பொழுது ஒரு அனந்தரவார்சு பாத்தியத்திற்கு வியாச்சியஞ் செய்து அதில் ஏற்பட்ட ராஜிநாமாப்படி சில ஸ்தாவர ஜங்கமசொத்துக்கள் அவருக்கு ஏகதேசத்தில் கிடைத்தன. இவ்வியாச்சியம் குடும்பஜவேஜியிலிருந்து நடத்தப்பட்டது. அக்குடும்பத்திற்குண்டான தொழிலினால் மிகுதியாகியபணம் கையிலிருந்து கொண்டுவந்ததென்று தெரியவருகிறதாலும், வியாச்சியத்திற்குச் செலவழித்த தொகையைத் திரும்பச் செலுத்திக் குடும்பக்கணக்கில் வரவு வைத்து விட்டதாலும் அத்தொகையைக்கடன்வாங்கினதாக எண்ணவேண்டுமென்றும் குடும்பச் சொத்து அதனால் பாதிக்கப்படவில்லையென்றும் ஆகையால் அச்சொத்தை சுயார்ஜிதமாகப் பாவிக்கவேண்டுமென்றும் பிதிரார்ஜித சொத்தோடு சேராதென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 28 அல. 347.

Bachcho Kunwar v. Dharm Das, I. L. R. 28. All 347.

MISCELLANEOUS SUITS.

சீவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

இரட்டைக் கொலைக்கேஸ்.

(10—1—07).

கேசின் விவரம்:—தென் மலையாளத்தில் காளியப்பன் என்பவனும் அவனுடைய பெண்சாதியும், குழந்தையும், மாமியாரும் சென்ற அக்டோபர்௴ 19௳ அவனுடைய வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். காலையில் காளியப்பன் எழுந்திருந்து தன்னுடைய பெண்சாதியை வேலைக்குப்போகும்படி ஏவினான். அவள் போக மறுக்க, அவளையும் அவளுடைய குழந்தையையும் கொன்றுவிட்டான். மாமியாரையும் கத்தியால் குத்திக்காயப்படுத்திவிட்டு ஓடிவிட்டான். மறுநாள் அவனேபோலீஸ் ஸ்டேஷனிற்போய் ஆஜராக, போலீசார் அவனை அரஸ்ட் செய்தார்கள். நிற்க. காளியப்பனுடைய கழுத்திலும் தொண்டையிலும் சில வெட்டுக்காயங்கள் பட்டிருந்தன. போலீசார் அவைகளைப்பற்றிக் காளியப்பனைக் கேட்டபோது, தான் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தபோது உண்டான காயங்கள் என்று சொன்னான். போலீசார் இவன்பேரில் கொலைக்குற்றம் சாட்டித் தென்

மலையாளம் செஷன்ஸ்கோர்ட்டார் விசாரணைக்குக் கொண்டுவந்தபோது, இவன் கொலைசெய்ததை இவனுடைய மாமியார் நேரேபார்த்ததாகச் சாக்ஷியம் சொன்னாள். கைதி தன்னுடைய பெண்ஜாதியையும் குழந்தையையும் கொலைசெய்ததை ஒப்புக்கொண்டு தனக்குப் பிசாசுபிடித்திருந்ததாகவும் தான் கொலை செய்யும்போது சித்த சுவாதீனமற்றிருந்ததாகவும் வாக்குமூலம் எழுதிவைத்தான், இருந்தபோதிலும் இந்தக்கேசை விசாரணைசெய்த அசசர்கள் கைதி குற்றம் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம்கூறக் கோர்ட்டார் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டுகைதிக்கு மரணதண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான்.

உத்தரவு:—டாக்டர் பரிசோதனை செய்து ரிப்போர்ட் செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டது. பரிசோதனை செய்த டாக்டர் கோர்ட்டில் கைதியின் வக்கீலின் முன்னிலையில் விசாரணை செய்யப்படவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

கிரம சிவில் வியாஜ்ஜியம்.

வாதிகள்; மெசர்ஸ் வால்காட் பிரதர்ஸ்.

பிரதிவாதிகள்: மெசர்ஸ் வில்சன் கம்பெனியார்.

கேசின் விவரம்:—பரமசிவம்பிள்ளை என்பவர் சென்னை ரேவுதுறையைவிட்டுப் புறப்பட்டுக் கொளும்பிற்குப் பிரயாணமான "செக்ன்டிரா" என்னும் ஸ்டீமரில் கொளும்பிற்குச் சில சரக்குகள் ஏற்றி ஒருக்கால் ஸ்டீமருக்கு அபாயமுண்டாகி சரக்குகள் நஷ்டப்பட்டால் அவைகளின் கிரயத்தைப்பெறும்படி மரேயின் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனியில் 1904-ம்௵ டிசம்பர்௴ 3௳ இன்சூரன்ஸ் செய்து இன்சூரன்ஸ் சர்ட்டிபிக்கேட் பெற்றுக் கொண்டார். செக்கன்டிரா ஸ்டீமர் புறப்பட்டுப்போகும்போது வழியில் டிசம்பர்௴ 9௳ சமுத்திரத்தில் முழுதிலும் முழுகிப்போய் விட்டது. இப்படி முழுகிப்போய் விட்ட விபரம் சென்னபட்டணம் பத்திரிகைகளில் டிசம்பர்௴ 10௳ பிரசுரஞ் செய்யப்பட்டது டிசம்பர்௴ 12௳ டை பரமசிவம்பிள்ளை சென்னையிலுள்ள வர்த்தக கம்பெனியார்களாகிய வாதிகளிடம் வந்து டை இன்சூரன்ஸ் சர்ட்டிபிக்கேட்டைக் காண்பித்து, இந்த இன்சூரன்சு சர்ட்டிபிக்கேட்டிற்கு மரேயின் இன்சூரன்ஸ் கம்பெனியார்கள் பணம் கொடுக்கச் சில காலமாகும் என்றும், வாதிகள் இப்போது இந்த சர்ட்டிபிக்கேட்டின் பேரில் பணம் கொடுத்தால் அதற்குக் கமிஷன் கொடுப்பதாகவும் சொல்லி சர்ட்டிபிக்கேட்டைக் காண்பித்துப் பணம் கேட்டார். மரேயின் இன்சூரன்ஸ் சர்ட்டிபிக்கேட் பேரிலும் பாலிசி பேரிலும் பணம் கொடுப்பது வர்த்தகர்களுக்குள் வழக்கமானபடியால் வாதிகள் பணம் கொடுக்க இசைந்து இந்த இன்சூரன்ஸ் சொர்ட்டிபிக்கேட் சரியான சர்ட்டிபிக்கேட்டா என்று விசாரிக்கத் தலைப்பட்டுத் தங்களுடைய கம்பெனியின் உத்தியோகஸ்தர் ஒருவரை டை மரேயின் இன்சூரன்ஸ் கம்பெனியின் சென்னபட்டண ஏஜண்டுகளாகிய மெசர்ஸ் வில்சன் கம்பெனிக்கு அனுப்பி விசாரித்து வரும்படிச் சொன்னார்கள். மெசர்ஸ் வில்சன் கம்பெனியார் இந்த இன்சூரன்ஸ் சர்ட்டிபிக்கேட் சரியான சர்ட்டிபிக்கேட் என்று சொன்னார்கள். அதன் பிறகு வாதிகள் டை இன்சூரன்ஸ் சர்ட்டிபிக்கேட்டை மேடோவர் வாங்கிக்கொண்டு 100-க்கு 5-வீழுக்காடு கமிஷன்பிடித்துக்கொண்டு பரமசிவம்பிள்ளைக்கு இன்சூரன்ஸ் தொகையைக் கொடுத்துவிட்டார்கள். சில மாதங்கள் சென்று வாதிகள் மெசர்ஸ் வில்சன் கம்பெனியாரை டை இன்சூரன்ஸ் தொகையைக் கொடுக்கும்படி கேட்டார்கள். பிரதிவாதிகளாகிய மெசர்ஸ் வில்சன் கம்பெனியார் ஆக்ஷேபிக்க, வாதிகள் பிரதிவாதிகளின் பேரில் ரூ 7150-க்கு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

லாயர்கள்:—சொலிசிட்டர் கம்பெனியாராகிய மெசர்ஸ் கிங் அண்டு ஜாகிலயின் உதவியுடன் பாரிஸ்டர்கள் மெசர்ஸ் ஆர்ச்சிபால்ட் ரீடும், E. R. ஆஸ்பர்னும் வாதிகளின் தரப்பிற்கும், சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய மெசர்ஸ் ஆர், டேவிட், அண்டு பிரயட் வெல் உதவியுடன் பாரிஸ்டர்கள் மெசர்ஸ் டி. கூஷாமியரும், நன்ஜன்ட் கிராண்டும் பிரதிவாதிகளின் தரப்பிற்கும், ஆஜரானார்கள்.

பிரதிவாதிகள் அடியில் கண்டபடி ஆக்ஷேபனை எழுத்து வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறார்கள்:—(1) பரமசிவம்பிள்ளை உண்மையான சமாசாரங்களை மறைத்துச் சொல்லி மோசடியாய் பிரதிவாதிகளிடமிருந்து இன்சூரன்ஸ் பாலிசி வாங்கிவிட்டார். (2) செக்ன்டிரா ஸ்டீமர் முழுகிப்போன பிறகு டிசம்பர்௴ 10௳ பரமசிவம்பிள்ளை இன்சூரன்ஸ் பாலிசி பெற்றுக்கொண்டிருக்கிறார். (3) இன்சூரன்ஸ் பாலிசியில் சொல்லியிருக்கும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி பரமசிவம்பிள்ளை நடந்துகொள்ளவில்லை. ஆகையால் இந்த இன்சூரன்ஸ் செலாமணியாகமாட்டாது. வியாச்சிய விசாரணை நடந்துகொண்டு வருகின்றது.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் மி-ர் ஆர்னல் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

ஒரு மனு.

(11—12—06).

மனுவின் விவரம்:—மிஸ்டர் S. T. சாமண்ணாவும் N. T. சாமாண்ணாவும் அசல் கோர்ட்டிலும் அப்பீல் கோர்ட்டிலும் வியாஜ்ஜிய மாடினார்கள். மிஸ்டர் S. சாமண்ணா தமக்கு இந்த இரண்டு கோர்ட்டுகளிலும் நியாயம் கிடைக்கவில்லை என்று பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அபிப்பிராயப்பட்டார். பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டுமானால் அப்பீலின் முக்கிய காரணங்களைச் சொல்லி ஹைகோர்ட்டாருக்கு மனுசெய்து அவர்களுடைய உத்தரவைப் பெறவேண்டும். ஆதலால்

மிஸ்டர் சாமண்ணு வக்கீல் மிஸ்டர் T. ராமானுஜாசாரியார் மூலமாக மனு செய்துகொண்டார்.

மிஸ்டர் ராமானுஜாசாரியார் பேசினது:—பிரிவு கௌன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிறதால் லக்ஷரூபாய்க்குமேல் மதிப்புடைய வியாஜ்ஜியங்கள்தான் அப்பீல்செய்துகொள்ளப்படவேண்டுமென்றும், தம்முடைய கக்ஷிக்காரரின் வியாச்சியத்தொகை மதிப்பு லக்ஷரூபாய்க்கு மேலாகிறபடியாலும் அதில் பிரிவுகௌன்சிலில் கவனிக்கப்படவேண்டிய சட்ட சம்பந்தமான அநேகசங்கைகளிருக்கிற படியாலும் தம்முடைய கக்ஷிக்காரர் பிரிவு கௌன்சிலில் அப்பில் செய்து கொள்ளும்படி அனுமதி கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

அப்பீல் பிரதிவாதியாகிய N. T. சாமண்ணுவிற்காக ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஸூமியர், இந்த வியாஜ்ஜியத்தில் சமாசார சம்பந்தமானவிஷயங்களில் அசல் கோர்ட்டாரும் அப்பீல் கோர்ட்டாரும் ஒரேவிதமான அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள் என்றும் இதில் சட்ட சம்பந்தமான சங்கையாதொன்றுமில்லை என்றும் சொல்லி மனுவை ஆக்ஷேபித்துப்பேசினர்.

உத்தரவு:—பிரிவு கௌன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ளும்படியாகச் சர்ட்டிபிக்கேட்கொடுக்கப்பட்டது.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

கைதி:—புளிக்கொட்டில் மாது.

கேசின் விவரம்:—கைதி சென்ற ஆகஸ்டுமீ 23உ தன்னுடைய தமையனை கத்தியால் குத்திக் கொன்றுவிட்டதாக இ. பி கொ. 302-வது பிரிவின்படி கொலைக்குற்றம் சாட்டப்பட்டான். தமையன் தன்னுடைய பெண்சாதியை வைத்திருக்கிறான் என்று கைதி எண்ணங் கொண்டு தமையனுடன் விரோதம் பாராட்டி அடிக்கடி அவனுடன் சண்டைபோட்டு வந்தான். இப்படிவிரோதமாயிருந்தபோது சென்ற ஆகஸ்டுமீ 23உ இரவு கைதி அவனுடைய தமையனை மூன்று பேர் முன்னிலையில் கத்தியால் குத்திவிட்டான். இந்தக்கேஸ் தென்மலையாளம் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டபோது இந்த மூன்று பேர்களும் கைதி கொலைசெய்ததைக் கண்ணால்பார்த்ததாச்சொன்னார்கள். பிரேதபரிசோதனை செய்த டாக்டர் பிரேதத்தின் தலையிலும் கழுத்திலும் தேகத்திலும் 26-கத்தி வெட்டுக் காயங்களிருந்தனவென்றும், இந்தக் காயங்கள் கத்தியால் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் சாக்ஷியம் சொன்னார். கைதி எந்தக் கத்தியைக்கொண்டு குத்தினானோ அந்தக் கத்தியை அவனிடமிருந்து பெற்று கோர்ட்டில் காண்பித்தார்கள். கைதி கீழ்க்கோர்ட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் செஷன்ஸ்கோர்ட்டில் ஒப்புக்கொள்ளாமல் தானும் தன் தமையனும் அன்று இரவு சாப்பிட்டுவிட்டு ஒரு அறையில் படுத்து உறங்கினதாகவும் காலையில் எழுந்து பார்க்கும்போது தமையன் குத்துண்ட பிரேதமாகக்கிடந்ததாகவும், தமையனை யாரோ கொலைசெய்து விட்டதாக நினைத்துத் தன்னுடைய சிறிய தகப்பனிடம் போய்ச்சொன்னதாகவும் தான் இந்தக் கொலைக்குற்றத்தைச் செய்யவில்லை என்றும் தான் நிரபராதி என்றும் சொன்னான்.

அசசர்களின் அபிப்பிராயம்:—கைதி குற்றவாளியல்லவென்று அபிப்பிராயம் கூறினார்கள்.

சேஷன்ஸ்கோர்ட்டார் தீர்மானம்:—கோர்ட்டார் அசசர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் கைதிக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—ஹைகோர்ட்டார், செஷன்ஸ் கோர்ட்டார் செய்த குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் தூக்குத் தண்டனையை மரண தண்டனையாக மாற்றி தண்டனை விதித்தார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

செலவுதொகைக்கு ஜாமீன்வாங்கும்படியாகச் செய்துகொண்ட மனு.

(3—1—07).

வாதிகள்:—(1) M. A. ஆழ்வார் திருமலை அய்யங்கார்.
(2) M. A. அப்பளாச்சாரி.

பிரதிவாதிகள்:—(1) M. C. சிங்கப்பெருமாள் அய்யங்கார்.
(2) M. C. திருமலாசாரியார்.
(3) M. C. சிங்கராசாரியார்.

மனுவின் விவரம்:—மணி திருமலாசாரி என்பவர் ஒரு உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோய்விட்டார். இவருடைய விதவை தம்முடைய புருஷன் சொத்திற்குப் புரோபேட் (வார்சு சர்ட்டிபிகேட்) பெறுவதற்கு ஹைகோர்ட்டில் மனுசெய்துகொண்டபோது வாதிகள் ஆக்ஷேபித்தார்கள். இந்த மனுவை விசாரணைசெய்த மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் [illegible]க்கொண்டு ஷை விதவை வேதம்மாளுக்கு புரோபேட்டு கொடுக்கும்படியாக உத்தரவு செய்தார். வாதிகள் ஆக்ஷேபித்தபடியால் அவர்கள் வேதம்மாளுக்குக் கோர்ட்டுச் செலவுகளைக் கொடுக்கும்படியாகவும் உத்தரவு செய்தார். வாதிகள் இந்தச்செலவுகளை இன்னும் செலுத்தவில்லை. பிறகு வாதிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரின் தீர்மானத்திற்கு விரோதமாக அப்பீல் செய்துகொண்டதில் அசல்கோர்ட்டுத் தீர்மானமே உறுதி செய்யப்பட்டு வாதிகள் செலவு தொகை கொடுக்கும்படியாக உத்தரவு செய்யப்பட்டார்கள். வாதிகள் இந்தச் செலவு தொகையையும் இன்னும் செலுத்தவில்லை. இப்படியிருக்கையில் வேதம்மாள் ஒரு

உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோக, அந்த உயிலின்படி டிரஸ்டிகளாகிய M. C. சிங்கப்பெருமாள் அய்யங்கார், M. G. திருமலாசாரியார், M. C. சிங்கராசாரியார் ஆகிய மூவரும் வார்சு செர்ட்டிபிக்கேட்பெற மனுசெய்துகொண்டபோது அப்போதும் வாதிகள் ஆக்ஷேபித்தார்கள். இந்த மனுவை விசாரணைசெய்த மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் வாதிகளின் ஆக்ஷேபனை மனுவைத்தள்ளி மேலே சொல்லப்பட்ட மூவர்களுக்குப் புரபேட் கொடுக்கும்படி உத்தரவுசெய்து வாதிகளை மேற்சொல்லப்பட்ட மூவர்களுக்கும் செலவு தொகை கொடுக்கும்படியாக உத்தரவுசெய்தார். இந்தச் செலவு தொகையையும் இன்னும் வாதிகள் செலுத்தவில்லை. இப்போது வாதிகள், ஷை வேதம்மாள் எடுத்துக்கொண்டிருக்கும் ஸ்வீகாரம் செல்லாது என்று வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள். வாதிகள் இருவருக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில் யாதொரு சொத்து மில்லாததால் இவர்களிடமிருந்து பிரஸ்தாப ஸ்வீகார வியாச்சியத்தின் செலவு தொகைக்கு ஜாமீன் வாங்கும்படியாக பிரதிவாதிகள் மனுசெய்துகொண்டார்கள்.

இரண்டாவது வாதி தம்முடைய இருப்பிடம் மைசூர் என்று ஒப்புக்கொண்டார். முதல் வாதி இந்த வியாஜ்ஜியங்களை நடத்தும்பொருட்டுக் கடந்த மூன்றுவருஷமாகச் சென்னையிலிருந்தபோதிலும் அவரும் மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவரென்றும் அவர் தற்காலம் வியாஜ்ஜியத்தை நடத்தும்பொருட்டுச் சென்னையில் வசித்துவந்தபோதிலும் சாஸ்வதமாய் சென்னையில்வசிப்பவர் என்று எண்ணக்கூடாதென்பதற்குப்பிரதிவாதிகளின் பாரிஸ்டராகிய மி-ர். நேப்பியர் சில சட்ட ஆதாரங்கள் கூறினர்.

உத்தரவு:—வாதிகள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியே வசிப்பவர்களானபடியால் நான்குவார கெடுவுக்குள் இந்த வியாஜ்ஜியத்தின் செலவு தொகைக்காக ஆயிரரூபாய் ஜாமீன் கொடுக்கவேண்டும். அதுவரையில் வியாஜ்ஜிய நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

ஜட்ஜிகள் மிஸ்டர்:—ஜட்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ரேவினியூ அப்பீல்.

கேசின் விவரம்:—உதக மண்டலத்தில் சேரிங்கிராஸ் என்கிற விடத்திலும் மெசர்ஸ் மியான்ஜி சேட்டிற்குச் சொந்தமான நிலத்தை உதகமண்டலம் ரயில் வேய்க்காக கவர்ன்மெண்டார் வாங்கிக்கொண்டார்கள். நீலகிரி எட் அசிஸ்டன்ட் கலெக்டர் ரூ. 3053—4—0 ஷை நிலத்தின் சொந்தக்காரர்களுக்குகாம்பன்சேஷன் பணம் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். மியான்ஜி சேயிட்கம்பெனியார் ஷை தொகை ஷை நிலத்திற்கு மிகுந்த கேவலமானதொகை என்று ஆக்ஷேபனை சொல்லி அந்தத்தொகையைப் பெற்றுக்கொண்டு இந்தக்கேசை ஜில்லா ஜட்ஜியிடம் அனுப்புப்படி எட் அசிஸ்டன்ட் கலெக்டரைக்கேட்டுக்கொண்டார்கள். அப்படியே இந்தக்கேஸ் கோயமுத்தூர்ஜில்லா ஜட்ஜினிடம் அனுப்பப்பட்டது. ஜில்லா ஜட்ஜி இந்த நிலம் ஷாப்பு வைப்பதற்குக் கட்டிடம் கட்டுவதற்குத் தகுந்தவிட மென்றும், மெசர்ஸ் மியான்ஜி செயிட் 1899-ம்ளு நிலத்தை வாங்கின விலைகூட எட் அசிஸ்டன்ட்கலெக்டர் கொடுக்கவில்லை என்றும், இதன்பிறகு மெசர்ஸ் மியான்ஜி சேயிட் கம்பெனியார் விசேஷ பணம் செலவு செய்து அந்த நிலத்தைச் சீர்திருத்தியிருக்கிறார்கள் என்றும், எட் அசிஸ்டன்ட் கலெக்ட்டர் மிகுந்த கேவலக்கிரயம் கொடுத்திருக்கிறார் என்றும் தீர்ப்பில் சொல்லி நில சொந்தக்காரர்களுக்கு ரூ. 9732—3—9 காம்பன்சேஷன்பணம் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—அப்பீல் தாருக்காக கவர்ன்மெண்டு பிளீடர் ஆஜரானர்.

பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியர் நிலச் சொந்தக்காரர்களுக்காக ஆஜரானர்.

தீர்ப்பு:—ஜில்லா ஜட்ஜியின் தீர்மானத்தை உறுதிப்படுத்தி, அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

(7—1—07).

கேசின் விவரம்:—கோயமுத்தூர் ஜில்லாவில் சென்ற அக்டோபர்மீத்தில் சின்ன அம்மாசி என்பவனுடைய தாயார் இறந்துபோய்விட்டாள். பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோகும்போது பிரேதத்தின் பந்துக்கள் கொமர நாவிதன் என்கிற அம்பட்டனை அழைத்துக்கொண்டு போனார்கள். மயானகிருத்தியங்கள் முடிந்தவுடன் எல்லோரும் சின்ன அம்மாசியை வழக்கம்போல் வீட்டிற்குக் கொண்டுவந்துவிட்டுத் திரும்பி அவரவர்கள் வீட்டிற்குப் போக ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் வீட்டின் வாசற்படியில் நின்றுகொண்டிருந்த கொமரநாவிதன் ஒரு உலக்கையைக் கையில் எடுத்துக் குட்டிக்கவுண்டன் தலையில் அடித்து வீழ்த்த அவன் இறந்துபோய்விட்டான். இதன்பிறகு வழியில் போக்குவரத்து செய்துகொண்டிருந்தவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினான். அதன்பிறகு அவனைப்பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவித்துவிட்டார்கள். கொமரநாவிதன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு கோயமுத்தூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டபோது இதற்குமுன் ஒருசமயம் இந்தக்கைதிக்குப்பயித்தம் பிடித்திருந்தது என்று வெளியாயிற்று.

கோர்ட்டார் கைதியை விசாரித்தபோது, தான் கொலை செய்தபோது சித்த சுவாதீன மில்லாதிருந்ததாக முதலிற் சொன்னான். பின்பு கேட்டதில் குட்

டிக் கவுண்டன் தன்னை அடித்ததாகவும் அதற்குப் பதிலாகத் தான் கொலைசெய்ததாகவும் சொன்னான். கைதி யாதொரு கோபமும் மூட்டப்படாமலும், யாதொரு விரோதமின்றியும், யாதொரு கலகமின்றியும் கொலை செய்திருப்பது அவன் பயித்தியகாரன் என்று நினைப்பதற்கு ஏதுவாயிருக்கிறதென்று செஷன்ஸ் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபோதிலும் அவனைப் பைத்தியகாரகைதி என்று நினைக்க இஷ்டப்படாமல் அவனுக்கு மரண தண்டனை விதித்தார்கள் கைதி ஹைகோர்ட்டில் மனு செய்துகொண்டான்.

தீர்ப்பு :—கைதி கோயமுத்தூர் மெடிக்கல் ஆபீசர் பார்வையில் ஒருமாதம் வைக்கப்பட்டுப் பரிசோதனை செய்யும்படியாக உத்தரவு செய்திருக்கிறார்கள். மெடிகல் ஆபிசர் ரிப்போர்ட்டையும், கைதி தான் கொலைசெய்யும் சமயத்தில் சித்த சுவாதீனமிழந்திருந்ததற்கு யாரையேனும் சாக்ஷி கூறினால் அந்த சாக்ஷியத்தையும் வாங்கி ஹைகோர்ட்டிற்கு அனுப்பும்படியாக உத்தரவு செய்யப்பட்டது.

ஆள் மாருட்டம் செய்து ஏமாற்றின கேஸ்.

கிரிமினல் அப்பீல்.

(7—1—07).

கேசின் விவரம் :—ஆறுமுகம் பிள்ளை என்பவன் வேணுகோபாலபிள்ளை என்று பெயர் வைத்துக்கொண்டு தான் மெட்றிக்குலேஷன் பாஸ் செய்திருப்பதாகவும் தனக்கு உத்தியோகம் தேவை என்றும் மதுரை ஜில்லா ரிஜிஸ்டிராருக்கு மனு அனுப்பினான். வேணுகோபால பிள்ளை பேருக்குக் கொடுக்கப்பட்டிருந்த மெட்ரிக்குலேஷன் சர்ட்டிபிக்கேட்டை ரிஜிஸ்டிரார் பார்த்து திர்ப்தி அடைந்து அவனுக்கு அறுப்புக்கோட்டை சப் ரிஜிஸ்டிரார் ஆபிசில் கும்ஸ்தா உத்தியோகம் கொடுத்தார். அவன் அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு வேணுகோபால்பிள்ளையென்றே எல்லோராலும் கூப்பிடப்பட்டு வந்தான். சில காலம் சென்றபின் இவன் ரஜா எடுத்துக்கொண்டு போயிருந்தபோது ஒரு கிரிமினல் கேசில் சிக்கி அரஸ்ட் செய்யப்பட்டு இவன் பேரின் கேஸ் நடந்ததில் இவன் பேர் ஆறுமுகம்பிள்ளை என்றும், இவன் வேணுகோபாலபிள்ளை என்னும் பெயர் வைத்துக்கொண்டு சால்ட்சப் இன்ஸ்பெக்ட்டரிடம் பியூனாகவிருந்தான் என்றும் இவன் காண்பித்த மெட்ரிக்குலேஷன் சர்ட்டிபிக்கேட் ஷை வேணுகோபால பிள்ளையிடமிருந்து திருடப்பட்ட சர்ட்டிபிக்கேட் என்றும் புலப்பட்டது.

ஆகவே, இவன்பேரில் ஆள்மாருட்டக் குற்றம், போர்ஜரிக்குற்றம் ஆகிய இருகுற்றமும் சாட்டப்பட்டு மதுரை செஷன்ஸ் கோர்ட்டாரால் 5-வருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்திக் கைதி பெருங் குற்றம் செய்திருப்பதால் அவனைக் கடுமையாய்த் தண்டிப்பது அவசியமாயிருந்தாலும் செஷன்ஸ் கோர்ட்டார் மிகுந்த கடுமையாகத் தண்டித்துவிட்டார்கள் என்று ரிமார்க்செய்து 5-வருஷ கடினகாவல் தண்டனையை மூன்று வருஷகடினகாவல் தண்டனையாக மாற்றிவிட்டார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர். ஜஸ்டிஸ் பென்சன், மிஸ்டர். ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

அப்பீல்தார் : மிஸ்டர் செல்டானு.

பிளேக் சட்டங்களை மீறின கேஸ்.

கேசின் விவரம்.—மங்களூரிலிருக்கும் செல்டானு என்பவர் மைசூருக்குப்போய் திருப்பிவரும்போது பிளேக்நோய் அதிகாரிகளிடமிருந்து பாஸ் போர்ட்டு வாங்கிக்கொள்ளாமல் வந்த குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டு ரூபாய் 25-அபராதம் விதிக்கப்பட்டாரென்றும், அந்த தண்டனைக்கு விரோதமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார் என்றும் ஹைகோர்ட்டார் அப்பீலை தாக்கல் செய்துகொண்டு எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள் என்றும் நம்முடைய இந்திய சட்ட கெஜெட் முதல் வால்யம் 132-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் கேசில் சொல்லியிருந்தோம். இந்தக்கேஸ் இப்போது ஹைகோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு மிஸ்டர் செல்டானுவுக்கு விதிக்கப்பட்ட ரூ. 25 அபராத தண்டனையை மாற்றி 5-ரூ. அபராத தண்டனை விதித்திருக்கிறார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன். மிஸ்டர் ஜஸ்டிஸ் வால்ஸ்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

கேசின் விவரம்.—நாகபட்டணத்தில் ஒரு வண்டிக்காரன் தன்னுடைய வண்டியையும் மாட்டையும் அஜாக்கிரதையாய் ஓட்டினதால் அவைகள் ஐந்துமாத வயதுள்ள ஒரு பஞ்சமஜாதிப் பெண்குழந்தைமேல் ஏறவே அக்குழந்தை இறந்துபோய்விட்டது. வண்டிக்காரன் இ. பி. கோ. 304-வது பிரிவில் சொல்லப்பட்ட குற்றத்தைச்செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டான். இந்தக்கேசை விசாரணைசெய்த நாகபட்டணம் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் குற்றவாளிக்கு ரூ. 20 அபராதம் விதித்து இந்த அபராதம் வசூல் செய்யப்பட்டால் குழந்தையை இழந்த தகப்பனுக்கு ஷை அபராத ரூபாய் இருபதையும் பரிகாரப்பணமாய் கொடுத்துவிடும்படி கி. பு. கோ. 545 (C.) பிரிவின்படி உத்தரவு செய்தார். இந்த மேஜிஸ்டிரேட் தம்முடைய தீர்ப்பில் "அந்தப் பெண் குழந்தை உயிருடனிருந்தால் சம்பாதித்துக்கொடுக்கக் கூடிய சம்பாதனையைத் தகப்பன் இழந்துபோனவனாயிருப்பதால் அவனுக்குப் பரிகாரப்பணமாக இந்த அபராதத்தைக் கொடுக்கும்படியாக உத்தரவு செய்திருக்கிறேன்" என்று எழுதியிருந்தார். இந்தக்கேஸ் செஷன்ஸ் கோர்ட்டார் பார்வைக்கு வந்தபோது, இறந்து

போன குழந்தை 5-மாத வயதுடையதாயிருப்பதாலும், பெண்குழந்தையாயிருப்பதாலும், அது கொலையுண்ட சமயத்தில் சம்பாதிக்கும் வயதுடையதாயிருந்தபோதிலுங்கூட சிவில் கோர்ட்டில் நஷ்டஈடு கொடுக்கும்படியாக உத்தரவு செய்யமாட்டார்கள் என்று அபிப்பிராயப்பட்டு ஷை. குழந்தையின் தகப்பனுக்கு அபராதப் பணத்தைப் பரிகாரமாகக் கொடுக்கும்படி மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்து செய்யும்படி சிபார்சு செய்து இந்தக் கேசை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு :—குழந்தையின் தகப்பனுக்குப் பரிகாரப் பணம் கொடுக்கும்படி மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

ஜட்ஜி : மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

அர்பத்நட்பாங்கியின் இன்சால்வேன்சியைப்பற்றியமனு.

மனுதார் : இராஜா சர் சவலை இராமசாமிமுதலியார்.

மனுவின் விவரம்:—மனுதார் அர்ப்தநட் கம்பெனியில் துபாஷ் உத்தியோகம் செய்து வந்ததற்கு ஷை கம்பெனியாரிடம் ரூபா. 30100-பெறுமான கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் டிபாசிட்டு கட்டியிருந்தாராம். இந்தக் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளை மனுதாருக்குத் திருப்பிக்கொடுத்துவிடும்படி கோர்ட்டார் அபிஷியல் அசயினுக்கு உத்தரவு செய்யவேண்டுமென்று மனுதார் பாரிஸ்டர் மிஸ்டர் டி. சுஷாமியர் மூலியமாய் மனு செய்துகொண்டார்.

அபிஷியல் அசயினியாகிய மி-ர் ஆர்ச்சிபால்ட் ரீட் நேரில் ஆஜராகி இந்த மனுவை ஆக்ஷேபித்தார்.

உத்தரவு :—துபாஷ் உத்தியோகத்திற்காக டிபாசிட்டு கட்டப்பட்டது, அந்த உத்தியோக முறையில் துபாஷ், கம்பேனிக்குப்பணம் கொடுக்கும்படியிருக்கும், கம்பேனியார் துபாஷுக்குப் பணம் கொடுக்கும்படியாகவிருக்கும். ஆகையால் இருதரத்தாருக்கும் கணக்குவழக்குத் தீரவேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்கள் மனுவில் தீர்மானிக்கமுடியாது. ஷை. கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் பத்திரமாகப் பாதுகாக்கப்படும்பொருட்டு கம்பேனியாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தால் இந்த மனு விசாரணையில் அவைகளை மனுதாருக்குக் கொடுத்துவிடும்படி உத்தரவு செய்யலாம். ஆகையால் மனுதார் தாம் ஜாமீனுக்காகக் கட்டியிருப்பதாகச் சொல்லும் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வியாஜ்ஜியம் செய்வதே சிலாக்கியமானவழியென்று உத்தரவு செய்தார்கள்.

அர்பத்நட் பாங்கியார் செய்துகொண்ட மனு.

அர்பத்நட் பாங்கியார் மெசர்ஸ் ஆர். டேவிட் பிரயிட்வேல் என்கிற சொலிசிட்டர் கம்பேனியார்கள் மூலியமாய் ஒருமனு செய்துகொண்டார்கள். ஷை சொலிசிட்டர் கம்பேனியார்களுக்காக ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் நேப்பியர் அடியிற்கண்ட பிரகாரம் மனுசெய்துகொண்டார்:- அர்பத்நட்பாங்கியார் ஜனவரிமீ 5ஹ ஷெட்யூல் தாக்கல் செய்துவிட்டார்கள். ஆகையால் இப்போது கடன் கொடுத்தவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டியதிருக்கிறது. கடன் கொடுத்தவர்களின் எண்ணிக்கை 6855-இவ்வளவு பேர்களுக்கும் கோர்ட்டு மூலியமாய் சட்டப்பிரகாரம் நோட்டீஸ் சார்வ் செய்கிறதாயிருந்தால் ரூபா. 5143 செலவாகும். இது பெருந்தொகையாகவிருக்கின்றது. போஸ்ட்கார்ட் மூலியமாய் நோட்டீஸ் அனுப்பலாமென்றாலோ அவைகள்போய் சேர்ந்ததும் சேராததும் தெரியமாட்டா. ஆகையால் நோட்டீசைப் பத்திரிகைகள் பகிரங்கப் படுத்தும்படி அனுமதி கொடுக்கவேண்டும்.

உத்தரவு:—ஒவ்வொருவருக்கும் நோட்டீஸ் ரிப்ளைகார்ட் மூலமாய் அனுப்பவேண்டும். திரும்பி வரும் பதில் கடிதங்களைச் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டும். இதுவுமல்லாமல் மதிராஸ் மெயில், மதிராஸ் டைம்ஸ், ஹிந்து, சுதேசமித்திரன், ஆந்திரப் பிரகாசிகா, கேரளாபத்திரிகை, ஸ்டேட்ஸ்மென், பயோனிர், பம்பாய்கெஜெட் ஆகிய இந்தப்பத்திரிகைகளில் நோட்டீசைப்பகிரங்கப்படுத்தவேண்டும். பிப்ரவரிமீ டிபாசிட்டர்கள் 18ஹ திங்கள்கிழமை மீட்டிங்கு கூடவேண்டும். அர்பத்நட்பாங்கியின் இன்சால்வென்சி மனு விசாரணை செய்யப்படும். பத்திரிகையில் நோட்டீசைப் பகிரங்கப்படுத்தப் பிடிக்கும் செலவை அபிஷியல் அசயினி கொடுக்கவேண்டும்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன். மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

தீர்ப்புக்கு முந்தின ஜப்தி.

கேசின் விவரம் :—தென் கன்னடம் ஜில்லா மங்களூரில் வாதி உசேன் சாயப்பு என்பவர் பிரதிவாதியின் கிடங்கில் 162 மூங்கில் பாய்களை வைத்திருந்தார். வாதி இந்த மூங்கில் பாய்களைக் கேட்டவுடன் பிரதிவாதி கொடுத்து விடவேண்டுமென்பது இருவரும் செய்துகொண்ட ஏற்பாடு. சில காலம் சென்று வாதி ஷை. பாய்களைக் கொடுக்கும்படி பிரதிவாதியைக் கேட்க, இவர் கொடுப்பதற்கு ஆக்ஷேபனை சொன்னார். ஆதலால் வாதி மங்களூர் டி. மு. கோர்ட்டில் பிரதிவாதியின் பேரில் ஷை பாய்களின் விலையாகிய ரூ 507-க்கு வியாஜ்ஜியம் கொண்டுவந்து தீர்ப்பு பெறுவதற்கு முந்தி ஷை மூங்கில் பாய்களை ஜப்தி செய்தார். டி. மு. கோர்ட்டில் இந்த வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டபோது பிரதிவாதி ஷை பாய்களை ஈடாக வைத்துக்கொண்டு வாதிக்கு ரூ. 250 அட்வான்சு கொடுத்ததாக டிபன்ஸ் கூறினார். டி. மு. கோர்ட்டார் ரூ. 507-க்குப் பிரதிவாதியின் பேரில் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். பாய்களைக் கோர்ட்டில் ஏலம் போடப்பட்டதில் ரூ. 114-க்கு கிரயம் செய்யப்பட்டது. பிரதிவாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்தார். சப்ஜட்ஜி இந்த அப்பீலை விசாரணை செய்து வாதி தீர்ப்பு பெறுவதற்கு முந்திப் பாய்களை ஜப்தி செய்திருக்கிறபடியால் பாய்கள் அவர் வசமாய் விட்டன வென்றும், ஏலத்தொகைதான் அப்பாய்

களின் விலை என்றும் டி. மு. கோர்ட்டார் ரூ 507-க்கு டிக்கிரி கொடுத்தது பிசகென்றும் தீர்ப்பு சொன்னார். வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு:—வாதி தம்முடைய பாய்களைத் திருப்பிக்கொடுக்கும்படி கேட்டபோது பிரதிவாதி கொடுக்காததால் வாதி பாய்களை ஜப்தி செய்து கோர்ட்டு ஏலத்தில் விற்பனைசெய்து நஷ்டமடையும்படியாக நேரிட்டது. ஆகையால் டி. மு. கோர்ட்டார், வாதிக்கு ரூ. 507-க்கு டிக்ரிகொடுத்ததே சரியான டிக்கிரி என்று சொல்லி சப் கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தை ரத்து செய்து டி. மு. கோர்ட்டாரின் தீர்மானத்தை உறுதிப்படுத்திவாதிக்குப்பிரதிவாதி செலவு தொகையும் கட்டிக்கொடுக்கும்படி தீர்ப்பு சொன்னார்கள்.

லா பாயின்ட் :—டிக்கிரியை மேடோவர் பெற்றுக்கொண்டவர், மேடோவரைக் கோர்ட்டார் அங்கீகரிப்பதற்கு முந்தி, நிறைவேற்றுமனு செய்துகொள்ளலாம்.

கேசின் விவரம் :—திருச்சினாப்பள்ளியில் கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் 1895௵ம் ஒரு டிக்கிரி பெற்றுக்கொண்டார். இந்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு 1898௵ மனு செய்துகொண்டார். ஆனால் நிறைவேற்று நடவடிக்கைகளை நடத்தவில்லை. இப்படியிருக்கும்போது ஷை கிருஷ்ணசாமி அய்யர் இந்த டிக்கிரியை சுப்பய்யா சாஸ்திரி என்பவருக்கு 1900௵ மேடோவர் செய்தார். சாஸ்திரியார் 1900 1901, 1903 ஆகிய இந்த மூன்று வருஷங்களிலும் நிறைவேற்றுவதற்கு மனுகொடுத்தார். ஆனால் நிறைவேற்று நடவடிக்கைகளை நடத்தவில்லை. சாஸ்திரியார் மறுபடியும் 1904ம்௵ டிக்கிரியை நிறைவேற்ற மனு கொடுத்தார். திருச்சினாப்பள்ளி டி. மு. கோர்ட்டார், மேடோவர் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படாமலிருப்பதால் சாஸ்திரியார் மூன்றுவருஷம் செய்துகொண்ட நிறைவேற்று மனு செல்லுபடியுள்ளதல்லவென்றும், இந்த டிக்கிரியை மேடோவர் செய்த கிருஷ்ணசாமி அய்யர் 1898-ம்௵ செய்துகொண்ட நிறைவேற்று மனுதான் செல்லுபடியுள்ளதென்றும், அது முதல் 1904-ம்௵ சாஸ்திரியார் செய்துகொண்டிருக்கும் நிறைவேற்று மனுவுக்கும் காலம் கணக்கிட்டால் மூன்று வருஷத்திற்கு மேலாகிறபடியால் லிமிட்டேஷன் ஆக்ட் 179-வது ஆர்ட்டிக்கில் 4-வது கிளாஸ்படி டிக்கிரி காலாவதியாகிப் போய்விட்டதென்றும் ஆகையால் இப்போது சாஸ்திரியார் செய்திருக்கும் நிறைவேற்றுமனுவும் செல்லுபடியுள்ளதல்லவென்றும் சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

ஹைகோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரும் டி. மு. கோர்ட்டுத் தீர்மானத்தையே உறுதிசெய்தார்.

சாஸ்திரியார் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீல்வாதியின் வக்கீல் பேசினது :—சி. பு. கோ. 2-வது பிரிவின்படி டிக்கிரியை மேடோவர் வாங்கிக்கொண்டவர் டிக்கிரி பெற்றவரென்றே எண்ணப்படவேண்டும். இந்தப்பிரிவில் மேடோவர் பெற்றுக்கொண்டவர் தாம் பெற்றுக்கொண்டிருக்கும் மேடோவரைக் கோர்ட்டார் அங்கீகரிக்கும்படிச் செய்யவேண்டியது அவசியமென்று சொல்லப்படவில்லை. சி. பு. கோ. 232-வது பிரிவு (a) கிளாசில் மேடோவர் பெற்றுக்கொண்டவருக்கும் டிக்கிரி கடனாளிக்கும் கிரமமான நோட்டீஸ்கொடுக்காமலும் அவர்களை விசாரணை செய்யாமல் நிறைவேற்று மனுவைக் கோர்ட்டார் விசாரணைசெய்யக்கூடாதென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் மேடோவர், பெற்றுக்கொண்டவர் நிறைவேற்று மனு செய்துகொள்ளலாமென்று அதே பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. மதிராஸ் லாஜெர்னல் 393-வது பக்கத்தில் மேடோவர் பெற்றுக்கொண்டவர் டிக்கிரியை உடனே நிறைவேற்றலாமென்றும், மேடோவர்பெற்றுக்கொண்டவர் செய்துகொள்ளக்கூடிய ஒரே மனுவு நிறைவேற்று மனுதான்என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் என்னுடைய கக்ஷிக்காரர் 1904ம் ௵த்திற்குமுந்தி செய்த மூன்று நிறைவேற்று மனுக்களும் செல்லுபடியுள்ள மனுக்கள்தான் என்று பேசினார்

தீர்ப்பு:—சி. பு. கோ. 2-வது பிரிவின்படி மேடோவர் பெற்றுக்கொண்டவர் டிக்கிரி பெற்றவர் என்று எண்ணப்படவேண்டும். அப்பீல்தார் செய்துகொண்டிருக்கும் நிறைவேற்று மனுக்கள் சி. பு. கோ. 232-வது பிரிவை அனுசரித்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் 1904-௵ம் அப்பீல்தார் செய்திருக்கும் மனு செல்லுபடியுள்ளதுதான் என்று சொல்லி இந்த நிறைவேற்று மனுவை விசாரித்து சட்டப்படி பைசல் செய்யுமாறு டி. மு. கோர்ட்டாருக்கு அனுப்பும்படி உத்தரவு செய்தார்கள்.

பாட்னா சேஷன்ஸ் கோர்ட்.

ஜட்ஜி :—மிஸ்டர் பார்னிவயில் I. C. S.

நரசோரக் கேஸ்.

குற்றவாளிகள்:—அப்துல்பாசட் சௌத்திரியும் இன்னும் இருவர்களும்.

கேசின் விவரம்:—முதல் குற்றவாளி பெங்காளத்திலுள்ள பாட்னா ஜில்லாவில் ஒரு தனாட்டிக நவாப் குடும்பத்தைச்சேர்ந்தவர். பாட்னா என்னும் ஊரில் வசித்துவந்த சுமார் 10, அல்லது 11-வயதுடைய காண்டோஎன்கிற முகமதியப்பெண்ணும், சுமார் 15-அல்லது 16-வயதுடைய பான்ஞ்சி என்கிற முகமதியப்பெண்ணும் ஆகிய இரு பெண்களும் சென்றமாதம் காணாமற்போனார்கள். இவர்களுடைய இருபுருஷர்களும் எங்கும் தேடிப்பார்த்துக் காணாமல் முதல் குற்றவாளியையும் மற்றக் குற்றவாளிகள் பேரிலும் சந்தேகப்பட்டு இவர்கள்பேரில் போலிஸ் ஸ்டேஷனில் பிராது எழுதிவைத்தார்கள். போலிசார் இவர்களை அரஸ்ட் செய்தார்கள் ஆனால் பெண்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படியிருக்கும்போது இருபுருஷர்களும், தாங்கள் குற்றவாளிகள்பேரில் சந்தேகப்பட்டது சரியல்லவென்றும், அவர்களை விடுவிக்கவேண்டுமென்றும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு மனு செய்து கொண்டார்கள்.

இந்தமனு கொடுக்கப்பட்டபின் இரண்டுபெண்களும் வீடுவந்து சேர்ந்தார்கள். போலிசார் இந்தப் பெண்களை விசாரணை செய்ததில் ஷை குற்றவாளிகள் தங்களைத்தூக்கிக்கொண்டு போய்விட்டதாகவும், முதல்குற்றவாளியின் ஆள்கள் தங்களைப் பல விடங்களில் மறைத்துவைத் திருந்தார்கள் என்றும் தங்களில் ஒருத்திக்குக் குற்றவாளிகள் சாராயம் குடிக்கக்கொடுத்து ஒரே நாளில் அவளுடன் பலபேர் புணர்ந்தார்களென்றும் சொன்னார்கள். குற்றவாளிகள், தங்கள் பேரில் சமுசயமில்லை என்று பெண்களின் புருஷர்கள் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்துகொண்டால், பெண்களை வெளிப்படுத்துவதாகச் சொன்னபடியால் தாங்கள் நமோதாவுக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு மனுசெய்துகொண்டதாகப் புருஷர்கள் சொன்னார்கள். ஆகவே குற்றவாளிகள் இ. பி. கோ. 363,368-ம் பிரிவுகளில் சொல்லப்பட்ட குற்றங்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு செஷன்சுக்குக் கமிட்டி செய்யப்பட்டார்கள்.

லாயர்கள்:—கல்கத்தா பாரிஸ்டராகிய மிஸ்டர் காஸ்டர்சும் இன்னம் அனேக வக்கீல்களும் குற்றவாளிகள் தரப்பிற்கு ஆஜராயிருக்கிறார்கள். பிராசிக்கியூஷன் தரப்பிற்குக் கவர்ன்மெண்டு பிளீடர் பேசிவருகிறார். விசாரணை நடந்துவருகின்றது. (இந்தக் கேசில் ஒரு பணக்கார நவாப்பு சேர்ந்திருக்கிறபடியால் பொது ஜனங்கள் இந்தக்கேசை ஆவலாய் கவனித்துக்கொண்டு வருகின்றார்கள்.)

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

வாதி:—கூரியபத்தர்.
பிரதிவாதிகள்:—(1) ரெங்கய்யன்.
(2) ராமசந்திரன்.

லாபாயின்ட் :—ஒரு விஷயத்தை ருஜுப்படுத்த வாதி பிரதிவாதி ஆகிய இரு தரப்பாருக்கும் போதுமான சாக்ஷியமில்லாவிடில் பிரமாணமே தகுந்த உபாயம்.

(4—1—07).

கேசின் விவரம்:—பிரதிவாதிகள் ரூ. 215க்குவாதிக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்து கடன் வாங்கியிருந்தார்கள். பிரதிவாதிகள் கடனைக் தீர்க்காததால் வாதி உடுப்பி டி. மு. கோர்ட்டில் அசலும் வட்டியும் கூடின தொகைக்குப் பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதிகள் வட்டி பாபத்திற்காக ரூ. 47 செலுத்தியிருப்பதாச் சொன்னார்கள். வாதி ஷை ரூபாய் 47-ரூயும் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார். ஷை ரூபாய் நாற்பத்தேழையும் வட்டி பாபத்திற்காக வாதி பெற்றுக்கொள்ளவில்லை என்று கோர்ட்டில் பிரமாணம் செய்யும் விஷயத்தில் பிரதிவாதிகள் ஷை ரூ. 47யும் மறுபடியும் கொடுப்பதாகச் சொன்னார்கள். வாதி பிரமாணம் செய்யச் சம்மதிக்கவில்லை.

டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பு:—கோர்ட்டார் வாதி பிரமாணம் செய்ய உடன்படாததை கவனிக்காமல் வாதிக்குப் பிராதின் முழுத்தொகைக்கும் பிரதிவாதிகள்பேரில் டிக்கிரி கொடுத்துத் தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதிகள் தென் கன்னடம் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

ஜில்லாக் கோர்டாரின் தீர்ப்பு :—பிரதிவாதிகள் வாதியைப் பிரமாணம் செய்யும்படி கேட்டபோது வாதி மறுதளித்திருக்கிறபடியால் வட்டி பாபத்திற்காக வாதி ரூ. 47 பெற்றுக்கொண்டிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை ரத்து செய்து ரூ. 47 போக பாக்கித்தொகைக்கு வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

இந்த அப்பீலை மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் விசாரணை செய்து ஜில்லாக் கோர்ட்டார் தீர்ப்பு பிசகான தீர்ப்பு என்று அபிப்பிராயப்பட்டு அதை ரத்து செய்து, டி. மு. கோர்ட்டார் தீர்ப்பை உறுதிப்படுத்தினார். பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு :—இந்த வியாஜ்ஜியத்தில் வாதி ரூ 47 பெறவில்லை என்றுசொல்லுவதற்கும், பிரதிவாதிகள் ஷை தொகையைச் செலுத்திவிட்டதாகச் சொல்வதற்கும் ஆகிய இந்த இரண்டு அம்சங்களுக்கும் போதுமான சாக்ஷியமில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ரூ. 47 வாதி பெற்றுக்கொண்டதையும் கொள்ளாததையும் ருஜுப்படுத்தக்கூடிய உபாயம்பிரமாணத்தைத்தவிர வேறொன்றுமில்லை. ஆகையால் பிரதிவாதிகள் பிரமாணம் செய்யும்படி கேட்டும் வாதி பிரமாணம் செய்ய உடன்படாமற் போனதை உத்தேசித்து ஜில்லாக்கோர்ட்டார் ரூபா 47-தள்ளி டிக்கிரி கொடுத்தது சரியான டிக்கிரி என்று சொல்லி மிஸ்டர் ஜஸ்டிஸ் மூரின் தீர்ப்பை ரத்துசெய்து ஜில்லாக்கோர்ட்டாருடைய தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள். இந்தக் கோர்ட்டின் செலவு தொகையை வாதி, பிரதிவாதிகளுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று உத்தரவுசெய்தார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ராம்பினி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் குப்த்தா.

லா பாயின்ட்:—புஷ்வதியாவதற்கு முந்தி விவாகமான மைனர் பெண்ணுக்கு ஜீவனாம்சம் கொர்டுக்கக்கடமைப்பட்டவன் தகப்பனா அல்லது புருஷனா ?

கேசின் விவரம் :—பங்காளத்தில் ராம்பூர்கட் என்னும் ஒரு ஊரில் ஒரு ஸ்திரீ பஜனலால் பானியா என்பவனுக்கு வைப்பாட்டியாயிருந்தனள். சில காலம் சென்று இருவருக்கும் மனஸ்தாபமுண்டாகிப் பிரிந்து போய்விட்டார்கள். இந்த ஸ்திரீக்கு இரண்டு பெண்குழந்தைகள் பிறந்திருந்தன. மூத்த குழந்தை

க்கு சுமார் 7-அல்லது 8-வயதாகிறது. இந்தஸ்திரீ தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று ராய்பூர் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தன்னுடைய வைப்பு புருஷன் பேரில் பிரியாது கொடுத்தனள். கோர்ட்டார் இந்தக்கேசை விசாரணை செய்தபோது, வைப்பு புருஷன் இளையகுழந்தை தனக்குப்பிறந்ததல்லவென்றும் மூத்த பெண் குழந்தையை விவாகம் செய்து கொடுத்துவிட்டபடியால் அதற்குத் தான் சீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவனல்லவென்றும் கக்ஷிசொன்னான்.

சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பு:—வைப்பு புருஷன் தனக்குப் பிறக்காத இளைய குழந்தைக்குச் சீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவனல்லவென்று தீர்மானித்தார். மூத்த பெண்குழந்தை விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் இன்னும் புஷ்பவதியாகாமல் தாய் வீட்டிலேயே யிருக்கவேண்டியதாயிருப்பதால் அந்தப் பெண்ணிற்குத் தகப்பன் ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவனென்று அபிப்பிராயம் கூறி மூத்தபெண்குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் மூன்று மேனிக்கு நான்கு வருஷம் ஜீவனாம்சம் கொடுத்துவரவேண்டுமென்று கி. பு. கோ. 433-வது பிரிவின்படி உத்தரவு செய்தார்.

இந்த உத்தரவிற்கு விரோதமாக வைப்பு புருஷன் ஹைகோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன்மனு தாக்கல் செய்தான்.

மனுதாருக்கு ஆஜரான வக்கீல் மூத்த பெண்ணுக்கு விவாகமாய் விட்டபடியால் அந்தப் பெண் தாய் வீட்டிலிருந்தபோதிலும் அப்பெண்ணிற்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவன் புருஷனேயொழிய தகப்பனல்லவென்று வாதித்தார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் விவாகமான பெண் புஷ்பவதியாகமல் தாய் வீட்டிலிருக்கும்போதும் புருஷனே அப்பெண்ணிற்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஐந்தாவது கிரிமினல் சேஷன்.

சேஷன் ஜட்ஜி:—ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்டிபின்.

பாரிஸ்டர் போர்ஜரி கேஸ்.

குற்றவாளி:—மி-ர் சபத்ஜாகிருடின் ஆதித்சாயப்பு. குற்றம்:—சிருஷ்டனை செய்யப்பட்ட ஒரு தஸ்தாவேஜியை சிருஷ்டனை செய்யப்பட்ட தஸ்தாவேஜி என்று தெரிந்திருந்தும் உண்மையான தஸ்தாவேஜி போல அயோக்கியத்தனமாகவும் மோசடியாகவும் ஏமாற்றி ஒரு சொத்தைக் கொடுக்கும்படியாகத் தூண்டின குற்றம்.

ஜூரிரர்கள்:—மிஸ்டர் L. C. பாட்டன் (போர்மன்) மெசர்ஸ் J. N. ஸ்காட், H. ராபின்சன், A. ரோடோகொனச்சி, C. G. H. டிக்ஷிமிட், பாபூஸ் முராளிதார். சென்பிகாரிலால் ஆடி, ராஜாகஷ சந்திரதத், சாரட் சந்திரமித்தர்.

லாயர்கள்:—பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் சின்னாவும், மிஸ்டர் ஷெல்விபெனர்ஜியும் பிராசிக்கியூஷன் தரப்பிற்கு ஆஜரானார்கள். பாரிஸ்டர் மிஸ்டர் எர்ட்லிநார்ட்டனும், மிஸ்டர் E. P. கோஷும் குற்றவாளி தரப்பிற்கு ஆஜரானார்கள்.

பப்ளிக் பிராசிக்கியூட்டராகிய மிஸ்டர் சின்னா ஜூரிரர்களுக்கு எடுத்துக்கூறிய கேசின் சங்கிரகம்:—குற்றவாளி கல்கத்தா ஹைகோர்ட்டில் பாரிஸ்டராகவும் அட்வோக்கேட்டாகவுமிருந்து வருகின்றார். இவர் இந்த போர்ஜரி குற்றம் நடத்தினதாச் சொல்லப்படும் 1906-ம்௵ ஜூன்௴ 11௳ இவர் ஈலியட் ரோட்டில் 83-1-நெ. வீட்டில் வசித்துக்கொண்டுவந்தார். “மகபூப் உசேன்” என்னும் பெயருடைய ஒரு வேலைக்காரன் இவரிடம் வேலை செய்துவந்தான். அவனுக்கு இங்கிலிஷ் பாஷை படிக்கவும் தெரியாது. எழுதவும் தெரியாது. K. N. சென்குப்த்தா என்பவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் தொழில் நடத்திவரும் பாரிஸ்டர். இவர் எழுதியதாகத் தாற்பரியப்படும்படியான ஒரு கடிதத்தை மாபூப்உசேன் ஜூன்௴ 11௳ பங்காளபாங்கிக்குக்கொண்டுபோனான். இந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்ததென்றால் “இக்கடிதம் கொண்டுவருபவனிடம் ஒரு செக்கு புஸ்தகம் கொடுத்து அனுப்பவேண்டுமென்றும், தமக்குச் சேரவேண்டியபணம் பாங்கியில் எவ்வள விருக்கிறதென்று தெரியப்படுத்தும்படியும்” பாங்கி அதிகாரிகளுக்கு K. N. சென்குப்த்தா எழுதியதுபோல எழுதப்பட்டிருந்தது. பாங்கிக்காரர்கள் இந்த லெட்டரைப்படித்துப் பார்த்தவுடன் லெட்டர் கொண்டுவந்த மாபூப் உசேனிடம் ஒரு செக்கு புஸ்தகம் கொடுத்து அனுப்பினார்கள். அன்றையத்தினமே பாங்கிக்காரர்கள் K. N. சென்குப்த்தாவின் கணக்குப் புத்தகத்தைப் பார்வையிட்டு அவருக்குச்சேரவேண்டிய பணம் இவ்வளவு என்று குறித்து கே. யன். சென்குப்த்தாவிற்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அவருக்குப் பாங்கிக்காரர்கள் ஒரு செக்கு புத்தகம் அனுப்பியிருப்பதாகவும் அந்தக்கடிதத்தில் எழுதியிருந்தார்கள். பாங்கிக்காரர்களால் எழுதப்பட்ட இந்தக்கடிதம் ஜூன்௴ 13௳ மிஸ்டர் கே. என். சென்குப்தாவுக்குச் சேர்ந்தது. இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் தாம்பாங்கிக்குச் செக்குப் புத்தகம்வேண்டுமென்று எழுதவில்லையே என்றும் யாரோ மோசடி நடத்தியிருக்கிறார்கள் என்றும் எண்ணி கே. யென். சென்குப்த்தா தாம் அப்படியாதொரு கடிதமும் எழுதவில்லை என்றும் தாம் செக்குப்புஸ்தகம்கேட்கவில்லை என்றும், தம்முடைய பணம் எவ்வளவு பாங்கியிலிருக்கிற தென்று தாம் கேட்கவில்லை என்றும் யாராவது தம்முடைய கையெழுத்தைப் போர்ஜரிசெய்து மோசடி நடத்தியிருக்கவேண்டுமென்றும் தாம் எழுதியதுபோல எழுதப்பட்டிருக்கும் கடிதத்தைத் தாம் பார்க்கும்பொருட்டு அனுப்புவிக்க வேண்டுமென்றும் பாங்கிக்கு ஒருகடிதம் எழுதினார். பாங்கிக்காரர்கள், சிருஷ்டனைக் கடிதத்தைச் சென்குப்த்தாவிற்கு அனுப்பினார்கள். அவர் அது தம்முடைய கடிதமல்லவென்று சொல்லிவிட்டார். அதன்பிறகு பாங்கியார் போலிசாரிடம் ரிப்போர்ட் செய்தார்கள். இவர்கள் ஜூன்௴ 2௳ மாபூப் உசேனை அரஸ்ட்செய்து 23௳ மாஜிஸ்டிரேட்டு முன்னால் ஆஜர்படுத்தினார்கள். மாபூப் உசேன் தன்னிடம் தன் எஜமான் (குற்றவாளி) பாங்கிக்கு ஒரு கடிதம் கொடுத்ததாகவும், தான் அதைக்கொண்டுபோய் பாங்கியாரிடம் கொடுத்ததாகவும், பாங்கியார் ஒரு செக்கு புத்தகம் கொடுத்ததாகவும் அதைத்தன்னுடைய எஜமானிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டதாகவும் சொன்னான். கோர்ட்டார் இவனை விட்டுவிட்டு பாரிஸ்டர் பேரில் ஒருவாரண்டுபிறப்பித்தார்கள். பாரிஸ்டர் அச்சமயம் தம்முடையசொந்த ஊராகிய பானிக்பூருக்குப் போயிருந்தனர். அந்த ஊருக்குப் போலிசார் வாரண்டுடன் போய் பாரிஸ்டரை அரஸ்ட் செய்து கல்கத்தாவிற்குக் கொண்டுவந்தார்கள். போலிசார் பாரிஸ்டரை அரஸ்ட் செய்தவுடன் அவர் தம்மிடமிருந்த சர்விகளைப் போலிசாரிடம் ஒப்புவித்துவிட்டார். பாரிஸ்டர் கல்கத்தாவிற்குக் கொண்டு வரப்பட்டவுடன் அவருடைய வீடு போலிசாரால் சோதனை போடப்பட்டது. சோதனையில் இரண்டு லகோடா போட்ட கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு கடிதத்தில் 1906ம்௵ எப்பிரல்௴ 21௳ என்று தேதி போட்டிருந்தது. இந்த லெட்டரில், மிஸ்டர் குப்த்தா 25-செக்குகள் அடங்கிய ஒரு செக்கு புத்தகம் அனுப்பும்படி பாங்கியாருக்கு எழுதியிருந்ததுபோல எழுதப்பட்டிருந்தது. இது பாரிஸ்டரின் மேசையின் பேரிலிருந்த புஸ்தகங்களுக்கு அடியிலிருந்து எடுக்கப்பட்டது. இன்னொரு லெட்டர் பாரிஸ்டர் ஆபீஸ் மேஜையில் பூட்டப்பட்டிருந்த ஒரு அறையிலிருந்து எடுக்கப்பட்டது.

இந்த அறைக்குச் சாவி அகப்படாததால் போலிசார் பூட்டை யுடைத்து சோதனை செய்தார்கள். இதில் மற்றொரு லெட்டர் அகப்பட்டது. இந்த லெட்டரிலும் மிஸ்டர் கே. யன். சென்குப்த்தா எழுதியதுபோலவேபாங்கிக்காரர்களைச் செக்குப்புஸ்தகம் அனுப்பும்படி வேண்டி எழுதப்பட்டிருந்தது. இந்த இரண்டு கடிதங்களைத் தவிர மேஜையின்பேரிலும் உள்ளும், வெளியிலும் வீடுகளில் பல விடங்களிலும் சென்குப்த்தா யெழுத்து மாதிரி போட பழகிக்கொண்ட சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த சமாசாரமும், மாபூப் உசேன் தன் எஜமான்தான் பாங்கிக்கு லெட்டர் கொடுத்தார் என்று சொல்லியிருப்பதும் ஆகிய இந்த இரண்டு சமாசாரங்களும் குற்றவாளியை எம்மட்டில் சம்பந்தப்படுத்துகிறதென்று யூகிக்கவேண்டியது ஜூரியின் கடமை; நிற்க, சென்குப்த்தா என்பவர் Indexe Cod of Criminal Procedure Code என்று ஒரு புத்தகம் ஜூன்௴ 11௳ வாக்கில் அச்சிட்டு வெளிப்படுத்தி அதில் சில புத்தகங்கள் தம்முடைய சிநேகிதர்களுக்கு இனாமாகக் கொடுத்துவந்தார். பிரஸ்தாப குற்றவாளி பாரிஸ்டர் தமக்கு ஒரு இனாம் புத்தகம் ஷை புத்தகத்தின் முந்திய பக்கத்தில் “இந்தப் புத்தகம் கிரந்த கர்த்தாவின் வந்தனத்துடன் மிஸ்டர் ஜாகிருடின் அகமத் அவர்களுக்கு இனாம் அளிக்கப்பட்டதென்று” எழுதி கெ. யன். சென் குபத்தா என்று கையெழுத்துப்போட்டு கொடுக்கும்படியாய் மிஸ்டர் சென் குப்தாவைக் கேட்டுக்கொண்டார். மிஸ்டர் சென்குப்தா புஸ்தகம் இனாமாகக் கொடுக்க முணுமுணுத்தார். இருந்தபோதிலும் பிரஸ்தாப குற்றவாளி பாரிஸ்டருக்கு ஒரு புஸ்தகம் இனாம் கொடுத்தார். இந்தப் புஸ்தகத்தில் மிஸ்டர் சென்குப்த்தா தம்முடைய கையெழுத்து செய்திருந்தார். குற்றவாளி பாரிஸ்டர் இந்தக் கையெழுத்தைக் பார்த்துக்கொண்டு சிருஷ்டனை கையெழுத்து செய்யப் பழக்கிக்கொள்ள ஏது விருந்தது. நிற்க, இன்னொரு முக்கியமான சமாசார மிருக்கின்றது. பிரஸ்தாப குற்றவாளி பாரிஸ்டர் பாங்கியில் கொஞ்சம் பணம் போட்டிருந்தார், கடந்த ஜூன்௴ ஆரம்பத்தில் இவர் பாங்கிக்குச் சென்று ஒரு பாங்கி ரயிட்டரைக் கண்டு தம்முடைய பணம் எவ்வள விருக்கிறதென்றும் தம்முடைய பேருக்கு பானிக் பூரிலிருந்து ஒரு உண்டி வந்ததாவென்றும் விசாரித்ததுமன்றி கெ. யன். சென் குப்த்தாவின் பணம் பாங்கியில் எவ்வளவிருக்கிறதென்று விசாரித்தார். பாங்கியின் கணக்கப்பிள்ளை முன் இரண்டு கேள்விகளுக்கு மட்டிலும் பதில் சொல்லிவிட்டு கெ. யன். சென் குப்த்தாவைப்பற்றி யாதொன்றும் சொல்லமுடியாதென்று சொல்லிவிட்டார். இந்தக் கணக்கப்பிள்ளையும், பாரிஸ்டர் இவருடன் பேசிக்கொண்டிருந்தபோது ஷை கணக்கப்பிள்ளைக்குப் பக்கத்தில் வீற்றிருந்த மற்றொரு கணக்கப்பிள்ளையும் இதைப்பற்றி சாக்ஷியம் சொல்லி ருஜுப்படுத்துவார்கள். பாங்கிக் கணக்கர்கள் கூறும் இந்த சமாசாரமும் மேலே கூறிய சமாசாரங்களும் சேர்ந்து பாரிஸ்டர் குற்றஞ் செய்திருக்கிறார் என்று வெளிப்படுத்துகின்றது. பிரஸ்தாப பாரிஸ்டர் குற்றவாளிக்குப் பணமுடையாயிருந்ததென்று ருஜுப்படுத்த சாக்ஷியமில்லை. சாதாரணமாய் குற்றவாளியைப்போல பாரிஸ்டர் அந்தஸ்தையுடைய ஒருவர் இம்மாதிரி போர்ஜரி குற்றம் செய்வார் என்று எவரும் நினைக்கமாட்டார்கள்” என்று சொல்லி முடித்தார்.

பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷி விசாரணை.

மாபூப் உசேனை பப்ளிக் பிராசிக்கியூட்டராகிய சின்னா சாக்ஷி விசாரணை செய்தபின் குற்றவாளிக்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் நார்ட்டன் கிராஸ் செய்தார். அப்போது மாபூப் உசேன் சொன்ன சாக்ஷி வாக்குமூலம்:—நான் சில சமயம் துருக்கி குல்லா போட்டுக்கொள்ளுகிறதுண்டு. எனக்கு மா

தம் ஒன்றுக்கு ரூ 5 சம்பளம். பாரிஸ்டர் மிஸ்டர் அகமதிடம் வேலை செய்தபோது அவருக்கு ரயிட்டர் கிடையாது. நான் பாபு என்பவரைப் பார்த்ததில்லை. ஆனால் என்னுடைய எஜமான் ஒரு பெங்காளிபாபுவை ரயிட்டராகத் தம்மிடம் வைத்துக்கொண்டிருந்தாரென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். நான் குற்றவாளி பாரிஸ்டரிடம் வேலை செய்யவந்தது முதல் அவருடன் நான் ஹைகோர்ட்டிற்குப் போகிறதுண்டு.

நார்ட்டன் : உன்னுடைய எஜமான் குமஸ்தா வைத்துக்கொண்டிருக்கிறார் இல்லை என்பதை நீ விசாரித்து அறிந்து கொள்ளவில்லையா ?

மாபூப் உசேன் : நான் விசாரிக்கவில்லை. எனக்குச் சென்குப்த்தாவைத் தெரியாது. நான் இந்த பேரைக் கேள்விப்பட்டதில்லை. என்னைப்போலிசார் அரஸ்ட்செய்தபோது நான் சென்குப்த்தாவின்பேரைக் கேள்விப்பட்டேன். சென்குப்த்தாவின் குமாஸ்தாவும் என் எஜமான் குமஸ்தாவும் ஒன்றாய் வசித்துக்கொண்டிருப்பது எனக்குத் தெரியாது

நா : உன்னுடைய எஜமான் உன்னிடம் ஒரு கடிதம் கொடுத்து செக்கு புஸ்தகம் வாங்கிவரும்படிச் சொன்னதாக நேற்று விசாரணையில் சொன்னாயல்லவா ?

மா : ஆம், சொன்னேன். என்னை விசாரணை பண்ணின போதெல்லாம் அப்படியே சொன்னேன்.

நா : நீ சாக்ஷிக் கூண்டுக்குள் போவதற்கு முந்தி மாஜிஸ்டிரேட் ஹியூமினிடம் ஏதேனும் சொன்னதுண்டா ?

மா : சொன்னதுண்டு. ஒரு பாபு முன்னிலையில் மி-ர். ஹியூமினிடம் சொன்னேன். அவர் நான் சொன்னதைத்தாக்கல் செய்துகொண்டதும் கொள்ளாததும் எனக்கு ஞாபகமில்லை.

நா : "போய் செக்கு புஸ்தகம் வாங்கிக்கொண்டுவா" என்று மட்டிலும் உன் எஜமான் சொன்னாரா அல்லது இன்னும் ஏதேனும் சொன்னாரா ?

மா : ஆம் செக்கு புஸ்தகத்தை வீட்டிற்குக் கொண்டுவா என்று சொன்னார். பாங்கியில் கிரோட் சந்திரபோஸ் என்பவர் என்னை ஒரு பாங்கி அதிகாரியிடம் அழைத்துக்கொண்டுபோய் செக்கு புஸ்தகம் வாங்கிக் கொடுத்தார்.

நா : நீ இதை பப்ளிக் பிராசிக்கியூட்டராகிய சின்னாவுக்குச் சொல்லவில்லையா ?

மா: அவர் என்னைக் கேட்கவில்லை.

நா: இதை நீ போலிஸ் கோர்ட்டிலும் சொல்லவில்லையே ?

மா: இந்தக்கேள்வி அவ்விடத்தில் என்னைக் கேட்கவில்லை.

நா: இச் சமாசாரத்தைப் போலிஸ் கமிஷனருக்குச் சொன்னாயா ?

மா: எனக்கு ஞாபகமில்லை.

நா: மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ஹியூமுக்கு இதைச் சொன்னாயா ?

மா. ஞாபகமில்லை.

நா: பாங்கியில் யாருக்காவது சொன்னாயா ?

மா: ஞாபகமில்லை. பாங்கி பெரிய அதிகாரி "இப்போது நீ போகலாம். மறுநாள் உன் எஜமானுக்கு ஜவாப்புக் கடிதம் அனுப்புகிறேன்" என்று சொன்னார்.

நா: இந்த சமாசாரத்தைப் போலிஸ் கமிஷனருக்குச் சொன்னாயா ?

மா: எனக்கு ஞாபகமில்லை.

நா: மிஸ்டர் ஹியூமினிடம் சொன்னாயா ?

மா: ஞாபகமில்லை.

நா: போலிஸ் கோர்ட்டில் பாபுடாரக்நாத் சாது உன்னை சாக்ஷி விசாரணை செய்தாரே அப்போது இந்த சமாசாரத்தை அவருக்குச் சொன்னாயா?

மா: ஞாபகமில்லை.

நா: நேற்று ஏன் இந்த சமாசாரத்தைச் சொல்லவில்லை ?

மா: என்னைக் கேட்கவில்லை. என் எஜமானிடம் நான் செக்குப் புஸ்தகத்தைக் கொடுத்தபோது அவர் என்னை ஒரு கேள்வியும் கேட்கவில்லை. நானும் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு மணிநேரம் சென்று நான் என் எஜமானுக்கு வேலைசெய்துகொண்டிருந்தபோது இந்தக் கடிதத்தைக் குறித்து எங்களிருவருக்கும் சம்பாஷணை நடந்தது. அப்போது என் எஜமான் தாம்பூலம் தரித்துக்கொண்டு படுத்துக் கொண்டிருந்தார். சம்பாஷணையை நான் ஆரம்பித்தேனா அல்லது அவர்ஆரம்பித்தாரோ என்பது எனக்கு ஞாபகமில்லை.

நா: என்ன சம்பாஷணை நடந்ததென்று சரியாய்ச் சொல் பார்ப்போம்.

மா. என் எஜமான் "நீ பாங்கிக்குப்போனாயே, பாங்கி அதிகாரி உன்னிடம் பதில் கடிதம் கொடுத்தாரா" என்று கேட்டார். நான் கொடுக்கவில்லை "உன் எஜமானுக்கு மறுநாள் ஜவாப்பு அனுப்புகிறேன்" என்று பாங்கி ஆபிசர் சொன்னதாகச் சொன்னேன்.

நா: ஹைகோர்ட்டிலிருக்கும் பார்லைபிரெரிக்கு (Bar Library) பாங்கி அதிகாரி கடிதம் அனுப்புவதாக உன்னிடம் சொன்னாரா?

மா: சொல்லவில்லை.

நா: பாங்கி அதிகாரி சொன்னதை நீ உன் எஜமானுக்குச் சொன்னபோது அவர் ஏதேனும் கவலைப்பட்டதாக உனக்குத் தோற்றினதா?

மா: இல்லை.

நா: தாம்பூலம் போட்டுக்கொண்டு சாதாரணமாய்ப் படுத்துக்கொண்டிருந்தாரா?

மா: ஆம். எனக்கு ஞாபகமில்லை. அவ்வளவு பேச்சுதான் நடந்தது.

நா: நீ உடனே பாங்கிக்குப் போய் இந்த ஜவாப்பு கடிதத்தை வாங்கிக்கொண்டு உடனே வந்துவிடு என்று உன் எஜமான் உனக்குச் சொன்னதுண்டா?

மா: சொன்னதில்லை.

நா: மறுநாள் காலையிலாவது நீ பாங்கிக்குப் போய் அந்த ஜவாப்பு கடிதத்தை வாங்கிக் கொண்டு வரும்படியாக உன் எஜமான் உனக்குச் சொன்னதுண்டோ?

மா: சொல்ல வில்லை.

நா: மறுநாள் அந்தக்கடிதத்தைக் குறித்து ஏதேனும் உன் எஜமான் உன்னிடம் பேசினதுண்டா ?

மா: இல்லை.

நா: இம்மாதிரியாகச் சொல்லும்படி நேற்றிரவு உனக்குப் போதனைசெய்ததைமுன்னிட்டு இப்போது நீ இப்படிச் சொல்லுகிறாயல்லவா?

மா: எனக்கு ஒருவரும் போதனை செய்யவில்லை.

நா: உன் எஜமானுக்கும் உனக்கும் நடந்ததாக நீ சொல்லும் இந்தச் சம்பாஷணை அதுமுதல் உன் ஞாபகத்திலிருந்துகொண்டிருக்கிறதா?

மா: ஆம். நான் 11ஆ பாங்கிக்குப்போனபோது என்னை எந்தப்புத்தகத்திலும் கையெழுத்துப் போடும்படி என்னைப் பாங்கி அதிகாரிகள் சொல்லவில்லை. என் பெயரைக்கேட்டார்கள். சரியான பெயரைச் சொன்னேன். எனக்குப் பார்சி பாஷை தெரியும். நான் அப்பாஷையில் கையெழுத்துச்செய்யக்கூடும். என் எஜமான்குழந்தை பாட்னாவில் நோயாயிருந்து அபாயஸ்திதியிலிருக்கிறதென்று அவருக்குத் தந்திவந்து, அவர் பாட்னாவிற்குப் புறப்பட்டுப் போகும்வரையில் அவரிடம் சேவகம் செய்து வந்தேன். முனிசிபாலிட்டி பணத்தைமோசம் பண்ணினதாக என் தகப்பனார் என்னை வீட்டைவிட்டுத் துரத்தவில்லை. என்னுடைய விவாக விஷயத்தில் எனக்கும் என் தகப்பனாருக்கும் மனஸ்தாபமுண்டாகி நாங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசுகிறதில்லை. என்னுடைய தகப்பனார் யோக்கியர்.

நா : நீ திருடினதற்காக உன் தகப்பனார் உன்னை வீட்டைவிட்டுத் துரத்தினதாக சாக்ஷியம் சொன்னால் அது உண்மையாயிருக்குமா பொய்யாயிருக்குமா ?

மா : நான் சொல்லமுடியாது. என்னுடைய எஜமான் பாட்டினாவிலிருக்கும்போது எனக்குரொம்பவும் கஷ்டமாயிருக்கிறதென்று நான் அவருக்குக் கடிதம் எழுதினதாக எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய சம்பளத்தை உயர்த்தினாலொழிய நான் வேலையைவிட்டுப் போய்விடுவேன் என்று அவருக்கு ஜுன்மீ 19ஆ அல்லது 18ஆ யில் ஒருகடிதம் எழுதினதுண்டு. வீடு சோதனை போடப்பட்ட மறுதினம் என்னுடைய பெண் சாதிக்கு ஜெர்மன் வெள்ளிநகைகளும் வஸ்திரங்களும் பார்சல் செய்து அனுப்பினேன். ஒரு சிநேகிதனுக்கு மூன்று ரூபாய் மணி ஆடர் செய்து அனுப்பினேன். என்னிடம் கொஞ்சம் பணமிருந்தது. கொஞ்சம்பணம் ஒரு சிநேகிதனிடமிருந்து கடன் வாங்கினேன். அந்த சிநேகிதன் யார் என்று இப்போது ஞாபகமில்லை. நான் அந்தக்கடனைக் கொடுத்து விட்டேன். எப்போது கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. வீட்டைச் சோதனைபோடும்போது பாரிஸ்டர் மிஸ்டர் அப்தர்ரகிமை அந்தவீட்டில் கண்டேன். இன்னும் எங்கே சோதனை போடவேண்டுமென்று இன்ஸ்பெக்டர் ஹாமில்ட்டன் பாரிஸ்டர் மிஸ்டர் அப்தர் ரகிமைவிட்டு என்னைக்கேட்கச்சொல்லவில்லை. என்னை போலிசார் அரஸ்ட் செய்தபோது என்னை பாங்கிக்குயார் அனுப்பினாரோ அவர் பெயரைச்சொன்னால் என்னை விட்டுவிடுவதாகப் போலிசார் என்னிடம் சொல்லவில்லை. என்னைப் பாங்கிக்கு அனுப்பினவர் பேரைச்சொல்லாமல் என் எஜமான் பேரைச் சொன்னேன் என்பது நிஜமல்ல.

கோர்ட்டார் : பாங்கிக்கு நீ கடிதம் கொண்டுபோனது உன்னுடைய எஜமானுடைய தஸ்தாவேஜி கட்டுகள் முதலியவைகளைப்பார்க்க உன் எஜமானுக்கு வேறே சேவகன் கிடையாதா ?

மா : கிடையாது என்னுடைய எஜமானிடத்தில் நான் வேலைசெய்து கொண்டிருந்தபோது அவருக்கு என்னைத்தவிர வேறே சேவகன் இல்லை. தஸ்தாவேஜிகளை எல்லாம் அவர் பையில் வைத்துக்கொண்டு அவரே கோர்ட்டிலிருந்து வீட்டிற்குக் கொண்டுவந்துவிடுவார்.

இரண்டாவது சாக்ஷி வாக்கு மூலம்:—(பப்ளிக் பிராசிக்கியூட்டர் கேள்விகளுக்கு) என்பெயர் கிரோட்சந்திரபோஸ். நான் பங்காளாபாங்கியில் ரயிட்டர். நான் ஜுன்மீ 11ஆ செக்கு புஸ்தகம் கொடுக்கும் வேலையிலிருந்தேன்; மாபூப் உசேன் கொண்டுவந்த கடிதத்தை நான் பெற்றுக்கொண்டேன். அது திறந்திருந்தது. நான் அதைத் திறக்கவில்லை. அந்த லெட்டரை முதலில் நான் பார்க்கவில்லை. மாபூப் உசேன் கடிதம் கொண்டுவந்தபோது என் மேலதிகாரியிடம் கொண்டுபோய் கையெழுத்து வாங்கிவரும்படி சொன்னேன். அப்படியே வாங்கிக்கொண்டுவந்தான். நான் 25 செக்குகள் அடங்கிய ஒரு செக்கு புஸ்தகம் அவனிடம் கொடுத்தேன். மாபூப் உசேன் பாங்கியைவிட்டுப் போனதை நான் பார்க்கவில்லை. மாபூப் உசேனைப் போலிசார் அரஸ்ட் செய்ததில் நான் அவர்களுக்கு அடையாளம் கண்டுபிடித்துச் சொன்னேன். (மிஸ்டர் நார்ட்டனுடைய கிராஸ் கேள்விகளுக்கு) எனக்கு இங்கிலீஷ் தெரியும், பாங்கிக்கடிதம் எல்லாம் இங்கிலீஷில்தான் எழுதுகிறேன். இங்கிலீஷில் பேசுவேன். ஆனால் பங்காளி பாஷையில் சாக்ஷி சொல்ல விரும்புகிறேன்.

நா: உன் பாங்கியில் உம்முடைய வேலைப் எல்லாம் இங்கிலீஷில் பார்க்கிறீர்?

சாக்ஷி: தங்களுடைய இங்கிலீஷிற்கும் பாங்கி இங்கிலீஷிற்கும் வித்தியாசமிருக்கிறது.

நா: ப்ராங்கி இங்கிலீஷ் ஸ்காட்ச் இங்கிலீஷா? (சிரிப்பு)

சா: நான் போலீஸ் கோர்ட்டில் பங்காளிபாஷையில் தான் சாக்ஷியம் சொன்னேன்.

நா: உம்மிடமிருந்து வரும் கடிதங்களைப் பரிசோதனை செய்வது உம்முடைய கடமையல்லவா ?

சாக்ஷி: ஆம்.

நா: இந்தக்கடித விஷயத்தில் உம்முடைய கடமையை அன்றையத்தினம் செய்தீரா?

சாக்ஷி: இல்லை. அச்சமயம் பாங்கி செக்ரட்டரியின் கையெழுத்தைப் பரிசோதனை செய்வது என்னுடைய கடமையல்ல.

நா, பாங்கியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் யாரேனும் அந்தக்கடிதத்தில் கையெழுத்துச் செய்திருக்கிறார்களா?

சாக்ஷி: நான் பார்க்கவில்லை.

நா: ஆனால் உத்தியோகமுறையில் உம்மிடம் வரும் கடிதத்தைப் பார்க்கவேண்டியது உம்முடைய கடமையல்லவா?

சாக்ஷி; ஆம். என்னுடைய கடமைதான், அதில் பாங்கி ஆபிசர் கையெழுத்தில்லாததை நான்பார்த்தேன். யார் அந்தக் கடிதத்தை முதலில் மாபூப் உசேனிடமிருந்து பெற்றது என்று எனக்குத்தெரியாது. யாராவது முதலில் அதைப்பெற்று உடைத்துப் பார்த்திருக்கவேண்டும்.

நா: அது எப்படி உமக்குத் தெரியும்?

சா: ஏன்? என்னிடம் அந்த லெட்டர் வந்தபோது திறந்திருந்தது.

நா: அந்த லெட்டர் கொண்டுவந்தவன் சென்குப்தாவின் சேகவன் என்று நீர் எண்ணியதுண்டா?

சாக்ஷி: நான் என்ன நினைத்தேன் என்று என்னால் சொல்லமுடியாது.

நா: லெட்டர் கொண்டுவந்தவன் சென்குப்தாவின் மனிதன் என்று நீர் நினைக்காமற் போனால் நீர் அவனிடம் செக்குப்புஸ்தகம் கொடுப்பீரா?

சாக்ஷி: கொடுக்கமாட்டேன்.

நா: அப்போது அவனைச் சென்குப்தாவின் மனிதன் என்று நினைத்தீரல்லவா?

சாக்ஷி: ஆம். ஆனால் அவன் சென்குப்தாவின் சேவகனா அல்லவா என்று நான் அவனைக் கேட்கவில்லை.

நா: நீர் மிஸ்டர் ஸ்காட் துரையிடம் போகுமுன் அவனிடம் செக்கு புத்தகத்தைக் கொடுத்து விட்டீரல்லவா ?

சாக்ஷி: ஆம்.

நா: நீர் செக்கு புத்தகம் கொடுக்கும்போது அவன் எங்கேயிருந்தான்?

சாக்ஷி: என் எதிரிலிருந்தான்.

நா: ஊமைபோல் நின்றுகொண்டிருந்தானு?

சாக்ஷி: ஆம். பெயர் எழுதத் தெரியுமா என்று கேட்டேன். தெரியாதென்றான். தன்பெயர் மகபூப் உசேன் என்று சொன்னான், நான் எழுதிக்கொண்டேன்.

நா: நீர் ஏதேனும் பிசகாய் எழுதிக்கொண்டீர் என்று நினைக்கக் காரணமிருக்கின்றதா?

சாக்ஷி: இல்லை.

நா: புஸ்தகத்தில் பாபூப் உசேன் என்று எழுதியிருக்கிறதே அவர் பெயர் மகபூப் உசேன் அல்லவா?

சாக்ஷி: என் காதில் பட்டபடி நான் எழுதினேன். போர்ஜரி நடந்திருக்கிற தென்று பாங்கியில் 15ல பிரஸ்தாப முண்டாயிருந்த போதிலும், நான் கேள்விப்படவில்லை. இன்ஸ்பெக்டர் ஹாமில்ட்டன் பாங்கிக்குவந்தபோதுதான் போர்ஜரி நடந்திருப்பது எனக்குத்தெரியும்.

நா: மாபூப் உசேன் செக்கு புஸ்தகத்தைக்கொண்டு போகும்போது நீர் கண்ணால் பார்த்ததாகப் போலிஸ் கோர்ட்டில் சொன்னீரா ?

சாக்ஷி : ஞாபகமில்லை.

நா: நீர் சொல்லியிருக்கிறீர். அது உண்மையா பொய்யா ?

சாக்ஷி: சொல்லமுடியாது.

நா: அதுஉண்மையா அல்லது பொய்யா என்று நீர் சொல்ல வேண்டும்.

சாக்ஷி: எனக்கு ஞாபகமிருக்கிறவரையில், அவன் செக்குபுஸ்தகம் கொண்டு போனதை நான் பார்க்கவில்லை.

ஜூரி: பெங்கால் பாங்கியில் பணம் போட்டிருக்கும் ஒருவருக்குச் செக்குப்புஸ்தகம் அனுப்புவதாயிருந்தால் அதைப்பற்றி அவருக்கு அறிவிப்பது யாருடையகடமை ?

சாக்ஷி: எல்லோருக்கும் நோட்டீஸ் அனுப்புகிறதில்லை. செக்குபுஸ்தகம் அனுப்பினால் யாருக்கு அனுப்புகிறோமோ அவருடைய பாங்கி பாஸ் புத்தகத்தில் செக்கு அனுப்பி யிருப்பதாய் தாக்கல் செய்துகொள்ளுகிறது வழக்கம்.

மூன்றாவது சாக்ஷி: என்பெயர் W. A. கிப்ஸ். எனக்குப் பெங்காள பாங்கியில் காஷ்கிப்பர் உத்தியோகம். ஜூன்மீ 11ல 12லசிப்அக்கவுண்டன்ட் வரவில்லை. ஆகையால் நான் கடிதத்தை உடைத்துப்பார்த்து தேதிபோட்டு கொண்டு வந்தவனிடம் எடுத்துக்கொண்டுபோ என்று சொல்லிக் கொடுத்துவிட்டேன்) (மிஸ்டர் நார்ட்டன் கிராஸிற்கு) மிஸ்டர் ஸ்காட்டினிடம் இந்தக்கடிதத்தைக்கொடுக்கும்படி நினைத்து அவனிடம் கொடுத்தேன்.

நா: பாங்கியில் உத்தியோகமில்லாத ஒரு சேவகனுக்கு அந்த லெட்டரை மிஸ்டர் ஸ்காட்டினிடம் கொண்டுபோய் கொடுக்கவேண்டுமென்று எப்படித் தெரியும் ?

சாக்ஷி : ஏன் தெரியாது? பாங்கிச் சேவகர்களைக் கேட்டால் சொல்லுகிறார்கள்.

நான்காவது சாக்ஷி:—என் பெயர் ஸ்காட். நான் பாங்கியில் அஸிஸ்டன்ட் ஆபிசராகவிருக்கிறேன். செக்கு புத்தகம் தேவை என்று ஜூன்மீ 11ல ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தின் கையெழுத்து சரியாயிருந்தது. சந்தேகப்படக் கூடியதாயில்லை. ஆகையால் செக்கு புஸ்தகம் கொடுக்கும்படி உத்தரவு செய்தேன் (மிஸ்டர் நார்ட்டன் கிராசிற்கு) மிஸ்டர் சென்குப்தா ஜூன்மீ 13ல பாங்கிக்குக்கடிதம்எழுதினார். அதனால் போர்ஜரி செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவந்தது. அதன்மேல்ஒரு விசாரணை நடந்தது. அந்த விசாரணையில் நான் சம்பந்தப்படவில்லை.

ஐந்தாவது சாக்ஷி :—என் பெயர் C. M. பாஸ்டன். நான் பங்காள பாங்கிக்கு டிப்டி செக்ரட்டரியாக விருக்கிறேன். (இவர் மாபூப் உசேனிடம் செக்கு புஸ்தகம் கொடுக்கும்படி பாங்கியார் உத்தரவு செய்ததைக் குறித்துப்பேசினார்).

ஆறாவது சாக்ஷி :—என் பெயர் ஹரிதாஸ் சந்தர். நான் பங்காளபாங்கியில் லெட்ஜர் கீப்பராயிருக்கிறேன். நான் முப்பது வருஷமாக அந்த உத்தியோகத்திலிருக்கிறேன். எனக்குக் குற்றவாளி பாரிஸ்டரைத் தெரியும். அவர் இந்த பாங்கியில் லேவாதேவி செய்துவருகின்றார். இவர் கடந்த ஜூன்மீ 4லக்குப் பிறகு பாங்கிக்கு வந்தார். அவருடைய கணக்கில் பணம் எவ்வளவு யிருக்கிறதென்று கேட்டார். சொன்னேன். பானிக்பூரிலிருந்து தம்முடைய பெயருக்கு உண்டி வந்ததா என்று கேட்டார். வந்து அவருடைய கணக்கில் வரவுவைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது என்று சொன்னேன், மிஸ்டர் சென்குப்தா கணக்கில் பணம் எவ்வளவு யிருக்கிறது என்று கேட்டார். சொல்லமுடியாது என்று சொன்னேன். அவர் போய்விட்டார். (கிராஸ் கேள்விகளுக்கு)

கே : 1902-ம் ஜூன்மீ 1ல குற்றவாளி பாரிஸ்டருக்கு ஒரு செக்கு புத்தகம் அனுப்பினதுண்டா?

ஜ : சொல்லமுடியாது.

கே : இதைக்குறித்து உம்முடைய லெட்ஜர் புத்தகத்தில் ஏதேனும் குறிப்பு செய்து கொண்டிருக்கிறீரா ?

ஜ: ஆம். ஆனால் எவ்விடத்திற்கு அனுப்பினேன் என்று சொல்ல முடியாது.

கே: ஜூன்மீ 11ல மிஸ்டர் சென் குப்தாவின் பணம் எவ்வளவு என்று விசாரணை செய்தது உமக்கு ஞாபகமிருக்கிறதா ?

ஜ: ஆம். நான் அவருடைய கணக்கை ஒரு துண்டு கடிதத்தில் எழுதி கெரோடின் என்பவரிடம்கொடுத்தேன்.

கே: அன்றையத்தினம் மிஸ்டர் சென்குப்தாவிற்கு, மிஸ்டர் சென்குப்தா கணக்கில் பணமில்லையே ? அவர் பாங்கியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறாரல்லவா ?

ஜ: ஆமாம். அவர் பாங்கிக்கு ரூ 5000-ம் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

கே: சென்குப்தா பாங்கிக்குப் பணம் கொடுக்கவேண்டியதிருக்க, தமக்குச் சேரவேண்டிய பணம் பாங்கியில் எவ்வளவிருக்கிற தென்று அவர் கடிதம் எழுதிக் கேட்டது உமக்கு ஆச்சரியமாகத் தோற்றவில்லையா ?

ஜ: இல்லை.

ஜூரிகே: குற்றவாளி பாரிஸ்டர் கணக்குப், சென்குப்தா கணக்கும் ஒரே கணக்குப் புத்தகத்திலாயிருக்கின்றது. ?

ஜ: ஆம்.

கே : நீரா அந்தக் கணக்குப்புத்தகம் வைத்து வருகிறீர் ?

ஜ : ஆம்.

கே: இன்னும்வேறேலெட்ஜர்கீப்பர்களிருக்கிறார்களா?

ஜ: இருக்கிறார்கள்.

கே: சென்குப்தா கணக்கை உம்மைக்கேட்டால் சொல்லுவீர் என்று குற்றவாளிக்கு எப்படித் தெரியும் ?

ஜ: எப்படி என்றால், "S" என்கிற எழுத்துடன் ஆரம்பிக்கும் பெயர்களுடைய கணக்குப் புத்தகத்தை நான் எழுதுகிறேன் என்று அவருக்குத் தெரியும். (குற்றவாளி பெயர் Syed Ahmad S-ல் ஆரம்பிக்கிறது. சென்குப்தா Sen Gupta) பேரும் S-ல் ஆரம்பிக்கிறது.

ஏழாவது சாக்ஷி: என் பெயர் ராமநாத சட்டர்ஜி. நான் பங்காள பாங்கியில் லெட்ஜர் கீப்பர் உத்தியோகத்திலிருக்கிறேன். குற்றவாளி பாங்கிக்கு வந்து முந்தின சாக்ஷியைச் சென் குப்தாவுக்குப் பாங்கியில் எவ்வளவு பணமிருக்கிறதென்று கேட்டதைக் குறித்து முன் சாக்ஷி, சாக்ஷியம் சொன்னது போலவே சொன்னார்.

எட்டாவது சாக்ஷி :—என் பெயர் K. N. சென்குப்தா. நான் Index Code of Criminal Procedure என்று ஒரு புஸ்தகம் அச்சிட்டேன். குற்றவாளிக்கு ஒரு புஸ்தகம் இனாம் கொடுத்தேன். அதில் என் கையெழுத்து போட்டிருந்தேன். நான் ஜூன்மீ 11லபாங்கிக்குயாதொருகடிதமும் எழுதவில்லை. என்னுடைய குமஸ்தா பேர் ரட்டிகான்டோ மிட்டர், நான் எப்போது ஹைகோர்ட்டில் தாக்கலானேனோ அது முதல் அந்த குமஸ்தாவும் என்னுடனிருக்கிறான். செப்டம்பர் மீ முதல் என்னிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு ரஜாவின்பேரி லிருக்கிறார். இந்தக் கடிதங்கள் பேரிலும் பிளாட்டிங்பாடின் பேரிலும் போடப்பட்டிருக்கும், கையெழுத்து என்னுடைய

கையெழுத்தல்ல. (மிஸ்டர் நார்ட்டன் கிராஸ் கேள்விகளுக்கு) இந்தக்கேசில் எனக்கு யாதொரு பாரபக்ஷமில்லை. நான் நான்கு வருஷம் இங்கிலாண்டிலிருந்தேன். பாட்னவிலிருக்கும் குற்றவாளியின் பந்துக்களை எனக்குத் தெரியும். குற்றவாளியின் தகப்பனர் பெரிய பணக்காரர். அந்தஸ்துடையவர். குற்றவாளியின் சிறிய தகப்பன்மார்களும் ஐவேஜியுடையவர்கள். குற்றவாளியின் பாட்ன வேலைக்காரர்களுக்கு என்னுடைய யோக்கியதா பக்ஷங்களும் தெரியும். மாபூப் உசேனுக்கும் என் யோக்கியதாபக்ஷம் தெரியும். குற்றவாளி கௌரவமும் அந்தஸ்து முடையவரென்று எனக்கு நன்ருய்த் தெரியும். இதற்கு முன் அவருடைய யோக்கிதாபக்ஷங்களைக்குறித்துக் கெடுதலாய் யாதொன்றும் கேள்விப்பட்டதில்லை. குற்றவாளிக்கு ரூ. 1500 தேவையாயிருந்து என்னைக் கடன்கேட்டிருந்தால் நான் சந்தோஷத்துடன் கொடுத்திருப்பேன். சிலசமயம் என்னுடைய செக்குப்புத்தகம் வீட்டிலிருக்கும். சிலசமயம் கோர்ட்டு லைபிரரிரூமிலிருக்கும், கோர்ட்டு லைபிரரிரூமிலிருக்கும் மேஜைகள் பூட்டப்படுகிறதில்லை: யார்வேண்டுமானலும் போகலாம். என்னுடைய கையெழுத்து என் தஸ்தாவேஜுகளில் எல்லாமிருக்கும். என்கையெழுத்தைப் பார்க்க வேண்டு மென்று யார் விரும்பினலும் பார்க்கலாம்.

கோர்ட்டுகே: குற்றவாளிக்கு நீர் பாங்கியில் பத்துவரவு செய்து வருகிறது தெரியுமா?

ஜ: தெரியும்.

கே: எப்படி?

ஜ: கோர்ட்டிலிருந்தபடி என்னுடைய சேவகன் வசம் பாங்கிக்குச் செக்கு அனுப்புகிறதுண்டு ?

9-வது சாக்ஷி: என்பெயர் ஹாமிஸ்டன், நான்போலிஸ் இன்ஸ்பெக்டர். (பாங்கியார் போர்ஜரி கடிதத்தைப் போலிசாருக்கு அனுப்பியதுமுதல் குற்றவாளியை அரஸ்ட் செய்து வீடுசோதனை போட்டது வரையில் நடந்த விர்த்தாந்தங்களைச் சொன்னர்).

9-வது சாக்ஷி: மிஸ்டர் ஆர்ட்லஸ் என்பவர் கடிதத்திலும் பிளாட்டிங் பாடிலும் இருக்கும் கையெழுத்துக்கள் குற்றவாளியால்தான் போர்ஜரி செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று கையெழுத்து அடையாளம் கண்டு பிடித்துச் சொன்னர். (இவருடைய சாக்ஷியம் மிஸ்டர்நார்ட்டன் கிராஸில் உடைந்துபோய்விட்டது.)

இதன் பிறகு ஜூரர்கள் மாபூப் உசேனை மறுபடியும் சாக்ஷி கூண்டிற்குள் போட்டு இன்னும் உன் எஜமான் வீட்டில் வேறே வேலைக்காரர்களிருக்கிருர்களா ? அவர்களுக்கு இங்கிலீஷ் தெரியுமா என்று கேட்டார்கள். வேறே வேலைக்காரர்களிருக்கிருர்கள்: ஆனல் அவர்களுக்கு இங்கிலீஷ் பாஷை தெரியா தென்று சொன்னன்.

இதன்பிறகு பப்ளிக்பிராசிக்கியூட்டரும் மிஸ்டர் நார்ட்டனும் அட்டிரஸ்பேசி முடித்த பின்பு ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துரைத்தனர்.

ஜூரர் அபிப்பிராயம்: ஜூரர்கள் மாலை 5-30 மணிக்கு ஆலோசனை அறைக்குள் சென்று 25 நிமிஷம் சென்றபின் திரும்பிவந்து குற்றவாளி குற்றஞ் செய்யவில்லை என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினர்கள்.

தீர்ப்பு—குற்றவாளியை விடுவிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

(இந்தக்கேசில் குற்றவாளிக்கு விரோதமான சாக்ஷியம் பாங்கி குமஸ்தாக்கள் சொல்லியிருக்கும் சாக்ஷியம்தான். அதாவது, குற்றவாளி நேரே பாங்கிக்கு வந்து சென்குப்த்தாவிற்குப் பாங்கியில் எவ்வளவு பணமிருக்கிறதென்று கேட்ட சமாசாரம், குற்றவாளி தகுந்த பணக்காரரானபடியாலும் அந்தஸ்துடையவரானபடியாலும் அவர் போர்ஜரி செய்யக்கூடியவரல்லவென்று இந்தக்கேசின் வாதியே சாக்ஷியம் சொன்னபடியால் பாங்கி குமாஸ்தாக்களின் சாக்ஷியத்தை ஜூரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் ஜூரர்கள் குற்றவாளி குற்றம் செய்யவில்லை என்று அபிப்பிராயம் கூறினர்கள்.)

GOVERNMENT ORDERS, BOARD'S PROCEEDINGS, AND DISTRICT CIRCULARS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள், போர்ட் புரோசீடிங்ஸ், ஜில்லா சர்க்கியுலர்கள்.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1906-ம்ளு டிசம்பர் மீ 24உ G. O. நெ. 1637 L. சானிட்டரி கமிஷனர் அனுப்பியிருக்கும் சென்னை ராஜதானியின் 1906ம்ளு செப்டம்பர்மீ ஜனனமரண விபர ஜாபிதா தாக்கல்செய்துகொள்ளப்பட்டது.

1906-ம்ளு செப்டம்பர்மீ த்தில் ஜனனம் 109,892, மரணம் 108623. ஜனனவிபரம்:—55822 ஆண், 5470 பெண்; மரணவிபரம் 54961 ஆண், 53662 பெண். ரோகவிபரம்: காலரா 20463, வைசூரி 1996, பிளேக் 77, சுரம் 32766. வயிற்றுளைவு 7506, மாபுர்ரோய் 2404, காயம் 956, இதரகாரணங்கள் 42455 ஆக மொத்த மரணம் 108623.

—நவம்பர் மீ 6உ G. O. நெ. 712. கல்வி இலாகா தலைவர் டாக்டர் போர்ன், சைதாப்பேட்டை விவசாய கலாசாலையின் 1905-1906-வது ளுத்திய பரிபாலன ரிப்போர்ட்டு தாக்கல் செய்துகொள்ளப்பட்டது.

முக்கியமான ரிமார்க்கு :—இப்போது பெரிது ஜனங்கள் விவசாயத்தில் தனம் செலுத்திவருவது இந்தக் கலாசாலை தோன்றிய காலமுதல் செய்து வந்திருக்கும் வேலைகளின் பயன் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம்.

டிசம்பர் மீ 3உ G. O. நெ. 2131 தூத்துக்குடியில் குழை ஜல ஏற்பாடு.

தூத்துக்குடி டௌனுக்கு ஜலம் குழைகள் மூலியமாய்க் கொண்டு வருவதற்காக கோரம்பாளம் தடாகத்தில் ஒரு ப்ரத்தியேகமான தடாகம் கட்டி, அதிலிருந்து டௌன் எல்லைவரையில் ஜலம் வரும்படியான ஏற்பாடு செய்துவிட்டார்கள். இந்த ஜலத்தைக் குழைகள் மூலியமாக டௌனுக்குள் பட்வாடா செய்ய குழை வேலைகள் முதலியவை நடத்த வேண்டியதாயிருக்கின்றது. இதற்கு சானிட்டரி இன்ஜினீர் ரூ 188180. செலவு பிடிக்குமென்று ரிப்போர்ட் செய்திருக்கிருர். ஏற்கனவே கொமரபாளம் தடாகத்தில் ப்ரத்தியேக ரிசர்வ் தடாகம் ஒன்று தயாரிக்க கவர்ன்மெண்டார் பணம் கொடுத்த வகையில் ரூ 14 ஆயிரம் மீதப்பட்டுப் போய்விட்டபடியால் இப்போது தூத்துக்குடி டௌனுக்குள் குழை போடுவதற்கு ரூ. 174090 தேவையாயிருக்கிறது. இதில் பாதித்தொகையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று முனிசிபாலிட்டியார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் ரூ 75-ஆயிரம் இனமாய்க் கொடுப்பதாகவும், 99-ஆயிரம் ரூபாய் வருஷத்திற்கு 100-க்கு வட்டி மேனிக்கு 25-வருஷத்திற்குள் பெற்றுக்கொள்வதாய் ஏற்பாடு செய்துகொண்டு கடன் கொடுப்பதாயும் சொல்லுகிறார்கள். இதுவரையில் தூத்துக்குடியில் தண்ணீர் வரியும் சாக்கடை வரியும் போடாமலிருப்பதால் இனிமேல் இந்த வரிகளை வீட்டுக் குடிக்கூலி வருமானத்தில் 100-க்கு 6-மேனிக்கு தண்ணீர் சாக்கடை வரி போட்டு கவர்ன்மெண்டாருக்கு வருஷத்திற்கு ரூ 19160 மேனிக்கு கடனைச்செலுத்திவிடலாம் என்று கவர்மெண்டார் யோசனை சொல்லியிருப்பது மன்றி, இந்த ஏற்பாட்டின்படி முனிசிபாலிட்டியார் கவர்ன்மெண்டாரிடமிருந்து ரூ. 99 ஆயிரம் கடன் வாங்கிக்கொள்ள இஷ்டப்படுகிருர்களா, இல்லையா என்று தெரியப்படுத்தும் பொருட்டு முனிசிபாலிட்டியாரைக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

டிசம்பர் மீ 3உ G. O. நெ. 2124 M. திருநெல்வேலி முனிசிபாலிட்டி.

(1) சானிட்டரி கமிஷனர் பிரேரேபணையின்படி ஜலசப்ளை வேலைகளும் சாக்கடைவேலைகளும் ஒரேசமயத்தில் ஆரம்பித்து நடத்தினால் முனிசிபாலிட்டியாரிடம் போதுமான பணமில்லை. ஜலசப்ளை செய்வது மிகமுக்கியமானதானபடியால் இந்த வேலைகள் முதலில் நடக்கவேண்டும்.

(2)..................

(3)..................

(4)..................

(5)..................

(6)..................

மேமீ 9உ G. O. நெ. 785 ஜுடிஷியல். கிராமக்கோர்ட்டுகள்.

கிராமமுனிசிப் கோர்ட்டுகளின் நிலைமையை விர்த்தி செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் அனேக வருஷமாகக் கவலைகொண்டிருக்கிருர்கள். 1889-முதல் 1899ம் வரையில் ஒவ்வொரு வருஷம் ஒன்றுக்கு கிராமமுனிசிப் கோர்ட்டுகளில் சராசரி 53733 கேசுகள் தாக்கல் செய்யப்பட்டு வந்தன. 1899-ல் 102704 கேஸ்கள் தாக்கல் செய்யப்பட்டன. பிந்திய வருஷங்களில் மேற் கூறின எண்ணிக்கை குறைந்துபோய்விட்டது எனெனில், 1903-ம்ளுத்தில் ...967 கேஸ்கள்தான் தாக்கல் செய்யப்பட்டன. 1904ல் அதிகக் கேஸ்கள் அதாவது 82478 கேஸ்கள் தாக்கல் செய்யப்பட்டு வந்தபோதிலும் பெரும்பாலும் வருஷாவருஷம் கி. மு. கோர்ட்டுகளில் தாக்கலாகும் கேசுகள் குறைந்து கொண்டுவருவது கவர்ன்மெண்டாருக்குப் பெருங் கவலையை விளைவித்திருக்கின்றது. இத்தேச பரிபாலனத்தில் பற்றுடையவர் எவரும் கிராமத்தார்கள் தங்கள் கிராமக்கோர்ட்டுகளிலேயே தங்களுடைய தகரார்களைத் தீர்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்வதில் அலக்ஷியமாக விருக்கமாட்டார்கள். ஆகையால் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் கிராமக் கோர்ட்டுகளை விர்த்தி செய்துகொண்டு வருவதற்கு என்ன உபாயங்களை அனுஷ்டித்து வரலாமென்று யோஜனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

கிராம முனிசிப் உத்தியோகத்திற்குத் தகுந்தவர்களை நியமிக்க வேண்டுமென்றும் கிராமங்களில் பென்சுக்கோர்ட்டுகள் ஏற்படுத்தினல் கிராமக் கோர்ட்டுகள் விர்த்தியடையுமென்றும் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிருர்கள். கவர்ன்மெண்டார் எவ்வளவு எச்சரிக்கைசெய்தபோதிலும் கலெக்டர்கள் கிராமக்கோர்ட்டுகளைப்பற்றி கவனிக்காமலிருப்பதைக்குறித்து மிகவும் விசனப்படுகிருர்கள். கலெக்டர்கள் தங்களுக்கும் கிராமக்கோர்ட்டுகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று நினைப்பது பிசகான எண்ணம் என்றும், இனி கலெக்டர்கள் கிராமங்களுக்கு ஜமாபந்தி செய்யப்போகுங்காலத்திலும் மற்றப்படி சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்திலும் கிராமக் கோர்ட்டுகளுக்குச் சென்று ரிஜிஸ்டர்களைப் பார்வையிடவேண்டுமென்றும் ஒவ்வொரு வருஷம் ஜமாபந்தியில் இனி கலெக்டர்கள் கிராமக் கோர்ட்டுகளைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பவேண்டுமென்றும் கிராமத்தார்கள் தங்களுடைய கேசுகளைத் தங்களுடைய கிராமக்கோர்ட்டுகளிலேயே தீர்த்துக்கொள்ளும்படி கலெக்டர்கள் தூண்டி முயற்சி செய்யவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவும் ரிமார்க்கும் செய்திருக்கிருர்கள்.

டிசம்பர் மீ 20உ G. O. நெ. 1247.

செங்கற்பட்டு ஜில்லா கின்ச்சேரியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விவசாய பாங்கிக்கு கவர்ன்மெண்டார் ரூ 50) கடன் கொடுக்க தயவுபுரிந்திருக்கிருர்கள். நான்கு வருஷம் வரையில் இந்தத்தொகைக்கு பாங்கி வட்டி கொடுக்கவேண்டியதில்லை. நான்காவது வருஷத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு ரூ 50 மேனிக்கு 100-க்கு வருஷத்திற்கு இரண்டு வட்டி சேர்த்து 10-வருஷத்திற்குள் பாங்கி கவர்ன்மெண்டிற்குக் கடனைச் செலுத்திவிடவேண்டும்.

செங்கற்பட்டுஜில்லா உத்தரமேரூரில் ஏற்படப் போகிற கடன் கொடுத்து உதவும் கூட்டுபொங்கி அனுசரிக்க வேண்டிய விதிகள் கவர்ன்மென்டாரால் அப்புருவ் செய்யப்பட்டன.

சென்னபட்டணம் கவர்ன்மெண்டார் கலெக்டர்களுக்கு அனுப்பியிருக்கும் 1903ளுத்திய நவம்பர் மீ 9உ ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 1395. L.

1894-ளுத்திய 1-வது லாண்டு அக்விசிஷன் சட்டத்தைப்பிரயோகிக்க உத்தேசித்திருக்கும் நிலத்தில் சட்டப்படி சர்க்காரார் அதை வாங்கிக்கொள்வதற்கு முன்னமே சொந்தக்காரனுடைய அனுமதி எழுத்து மூலமாய்ப் பெற்றிருந்தபோதிலும் கலெக்டர்கள் பிரவேசிப்பது உசிதமென்று தோற்றவில்லை.

அனுமதி கொடுத்தவன் உண்மையாகவே சொந்தக்காரனாயிருக்கமாட்டான். அதனால் தொந்தரவுக் கிடமுண்டாகும். சர்க்காருக்கு வேண்டிய நிலம் தரிசாய் அல்லது சாகுபடிக்கு லாயக்கானதாயிருந்தால் அவசரமான சமயத்தில் லாண்டு அக்விசிஷன் சட்டத்தின் 17-வது செக்ஷனைப் பிரயோகிக்க உத்தரவு கேட்க கலெக்ட்டர்களுக்கு எப்போதும் அதிகாரமிருக்கிறது.

DISTRICT CIRCULARS.

ஜில்லா சர்க்கியுலர்கள்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்ட்டர் மிஸ்டர் பட்டர் ஓர்த் I. C. S. அவர்கள் அனுப்பியிருக்கும் சர்க்கியுலர்களும் பிரசுரஞ் செய்திருக்கும் விளம்பரங்களும்.

சர்க்கியுலர்.

வில்லேஜ் ஸெஸ்ஸைப்பற்றின அடியில் கண்ட விளம்பரம் எல்லோருக்கும் தெரியும்பொருட்டு பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

1893-ஆம் மதராசு வில்லேஜ்ஸெஸ் ஆக்டுப்பிரகாரம் விதிக்கப்பட்டு எந்த ரயத்துவார் வில்லேஜ்ஸெஸ் 1906 ஆம் ஏப்ரல்மீ 1உ முதல் தள்ளுபடப்பட்டதென்றும் அந்தத் தேதியிலும் அதற்குப்பிந்தியும் அந்த ஸெஸ் வசூல் செய்யப்படமாட்டாதென்றும் இதனால் தெரிவிக்கப்படுகிறது.

ஆன்திராக்ஸ் (Anthrax) என்னும் நோயினால் செத்தப் பிராணிகளின் பிரேதங்களைத் தொடுவதனால் வரும் அப்பாயத்தைக் குறித்து —

ஆன்திராக்ஸ் (Anthrax) நோயினால் செத்தப்பிராணிகளின் பிரேதங்களை வெட்டி அறுத்த மனுஷர்களில் அநேகருக்கு அபாயமான தொத்துவியாதியும் சிலருக்குப் பிராணஆபத்தும் ஸம்பவித்திருப்பதனால் மனுஷஉயிருக்கு இதனால் ஏற்படும் அபாயத்தைக்குறித்து எல்லோரும் எச்சரிக்கை செய்யவேண்டியது அத்தியாவசியம். கைகளில் அல்லது புஜங்களில் எவ்வளவு சிறிதானபோதிலும் எங்கேயாவது காயங்களிருந்தால் அப்பேர்ப்பட்டவர்கள் இந்த வியாதியினால் செத்த அல்லது அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்போது அறுக்கப்பட்ட பிராணிகளின் பிரேதங்களின் எந்த பாகத்தையும் தொடாமலிருக்கும்படி தங்களை விலகிக்கொள்ளவேண்டும். ஆந்திராக்ஸ் வியாதியால் செத்தப்பிராணிகளின் பிரேதங்களைச் சுண்ணாம்பினால் நன்றாய் மூடி தோல் உரியாமலும் அவைகளை வெட்டாமலும் முழுசாக ஆறு அடிக்குக் குறையாமல் பூமியின் கீழ் புதைத்துவிடவேண்டும்.

இந்த போதனைகளுக்கு விரோதமாய் நடந்துகொள்ளும் ஒவ்வொருவரும் இந்தியன் பீனல்கோட்டு 269-வது செக்ஷன்படியுள்ள குற்றத்தின் கீழ் தண்டனைக்குள்ளாவார்கள். மேலே விவரித்த போதனைகள் ரின்டர் பெஸ்டுக்கும் (Render pest) அதுபோன்ற மற்ற வியாதிகளுக்கும் பொருந்தும்.

1890-ஆம் நோம்- 14உ யுள்ள 137-நெ. செட்டில்மெண்டு ரிவினியு போர்டு உத்தரவில் வாசித்துள்ள 1890-ஆம் த்திய C. R. C. 27-நெ. கேசில் இ. பி. கோ. 438-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டார் செய்த உத்தரவு.

"தண்டனையானது சரியாக விதிக்கப்பட்டதென்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. குற்றவாளியின் செயலினால் பிராணத்திற்கு அபாயமுள்ள வியாதியால் ஏதுவாயிருந்ததென்று இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு கண்டிருக்கிறார். அந்த அபிப்பிராயத்தின்பேரில் தண்டனைக்குள்ளாக்குகிறது சரிதான். தண்டனை மிகவும் குறைவாக விதிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. குற்றம் ஒருவேளை எங்கும் பரவினால் இதைவிட பெருத்த தண்டனை அதற்காக விதிக்கப்படவேண்டும்."

மனுதார்கள் தாசில்தார்களால் தாலூக்கா கச்சேரிக்கு ரிவினியூ விசாரணை விஷயமாய் வரும்படி சம்மன் செய்யப்பட்டு அவர்கள் குமாஸ்தாக்களால் விசாரிக்கப்பட்டதாக மனுக்களில் கண்டிருப்பதை அநேகந் தடவையில் கலெக்ட்டரவர்கள் பார்க்க நேரிட்டது. சில தாசில்தார்கள் இம்மாதிரியான ஒழுங்கீனத்திற்கு இடம் கொடுப்பதாகத் தெளிவாகத்தோற்றுகின்றது. இந்த வழக்கம் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது. ரிவினியு விசாரணைக்காக சம்மன் செய்யப்பட்ட எல்லாரையும் தாசில்தார் அல்லது அவர் இல்லாதபோது ஸ்டேஷனரி டிப்டி தாசில்தார் விசாரிக்கவேண்டும்.

1903-வருஷத்திய 13-20 நெ. திருத்தற்பாடு சீட்டுகளால் திருத்தப்பட்ட 13-நெ-ருள்ள போர்ட்டார் உத்தரவின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள தீர்வை வஜா விதிகளில் பாரா ஒன்றை அனுசரித்து எல்லாருக்கும் தெரியும்படியாய் இதனால் விளம்பரம் செய்வது யாதெனில், தரிசு அல்லது சாயி அல்லது கண்டுமுதல் குறைவு அல்லது ஜலத்தட்டால் அல்லது வெள்ளத்தால் புஞ்சைதானியங்கள் நஞ்சையில் பயிரிடுதல் முதலான காரணங்களைக்கொண்டு நஞ்சை நிலங்களின் பேரில் விதித்துள்ள தீர்வையை வஜா செய்யவேண்டுமென்று செய்துகொள்ளும் மனுக்கள் அடியில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் அல்லது அதற்கு முன்னமேயாவது அனுப்பப்படவேண்டும்.

எல்லா இடத்திலும் (1) முதல் போகத்திலும் அடியில் குறிக்கப்பட்ட (2) (3) பாராவில் கண்ட இடங்களைத்தவிர மற்ற இடங்களில் தாளடிக்கு—ஜனவரிமீ 31உ.

(2) முசிரி குளித்தலை தாலூக்காக்களிலுள்ள நீராரம்ப பிரதேசங்களில் தாளடிக்கு—மார்ச்சுமீ 31உ.

(3) பெரம்பலூர் தாலூக்காவில் தாளடிக்கு பிப்ரவரிமீ கடைசிதேதி.

ஜமீன்தாரிகளில் மரவரியின்பேரில் ஏற்படும் லாண்டுசெஸ்.

ஜமீன்தாரிகளில் மரவரியின்பேரில் 1884-ஆம்-த்திய V-வது மதராஸ் சட்டத்தின் கீழ் லாண்டு செஸ் விதிப்பதில் அடியிற்கண்ட விதிகளை அனுசரித்துச்செய்யப்படவேண்டும்.

(1) மரங்களும் அவைகள் நிற்கும் பூமியும் ஒரே குடியின் அனுபோகத்திலிருந்து அவன் அந்த நிலத்திற்காக ஏற்பட்ட தீர்வையும் மரங்களின் தீர்வையும் தனித்தனியாகச்செலுத்திவந்தால் சாதாரணமாய் அவனால் செலுத்தப்பட்ட மொத்தத்தீர்வையை செஸ் கணக்குக்காக ஏற்பட்ட குத்தகையாகப்பாவிக்கவேண்டும். ஆனால் ஒரே மனுஷன் தனித்தனி நடவடிக்கைகளால் முதலில் குத்தகைதாரனாகவும் அதற்குப் பின்னிட்டு நிலத்தின் மரங்களின் குத்தகைதாரனாகவுமிருந்தால் பின்னிட்டு சொல்லப்பட்ட நடவடிக்கையால் ஏற்படுகிற குத்தகையின் பேரில் மட்டும் செஸ் கணக்கிடவேண்டும்.

(2) மரங்களும் நிலமும் வெவ்வேறு மனுஷர்களின் அனுபோகத்திலிருந்தால் மரங்களின் குத்தகைதாரனால் செலுத்தப்படும் குத்தகையின் பேரில் செஸ் விதிக்கப்படாது.

(3) மரங்கள் தரிசு நிலத்திலிருந்து அம்மரங்களின் அனுபோகத்துக்கு அந்த நிலத்தில் பாத்தியமில்லாமலிருந்தால் அவனால் செலுத்தப்படும் குத்தகையின் பேரில் செஸ் விதிக்கப்படாது. 2. மீன் குத்தகையின்பேரில் செஸ் விதிக்கப்படாது.

தென் ஆற்காடு ஜில்லா கலெக்ட்டர் விடுத்திருக்கும் சர்க்கியுலர்கள்.

ரெவினியூசர்க்யுலர்.

தென்னாற்காடு ஜில்லா பயிரிடும்குடிகள் வரன்முறையில்லாமல் டி. பி. டபிள்யூ டிபார்ட்மெண்டாருக்கும் ரிவினியூ டிபார்ட்மெண்டாருக்கும் விண்ணப்பங்களனுப்புகிறார்கள். அதனால் இரண்டு டிபார்ட்மெண்டாருக்கும் எழுத்து வேலைகள் ஜாஸ்திப்படுகின்றன. அதற்காக இனி நடந்துகொள்ளவேண்டியதற்குப் பின்வருமாறு உத்தரவுகள் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கின்றன.

2. இந்த ஜில்லாவில் பாய்ச்சலாதாரவேலைகள் மேஜர் என்றும் மைனர் என்றும் அதில் மேஜர் டி. பி. டபிள்யூ இலாகாதாரர்களைச் சேர்ந்ததென்றும் மைனர் ரிவினியூ இலாகாதாரர்களைச் சேர்ந்ததென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேஜர் வேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட மராமத்து சீர்திருத்தம் முதலானவைகளுக்கு எக்ஸிகூடிவ் எஞ்சினீர் அல்லது சம்பந்தப்பட்ட சப் டிவிஷன் ஆபீசர்களுக்கும் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டியது. பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி, வீராணம் இவைகள் தவிர மற்ற எல்லா ஏரிகளின் தண்ணீர்மடை ரிவினியூ டிபார்ட்மெண்டாரைச் சேர்ந்தபடியால் அது விஷயமான குறைகளைப்பற்றி ரிவினியூ டிபார்ட்மெண்டாரிடம் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

3. லோயர் கொள்ளிடம், பிளாந்துறை, மேமாத்தூர், விருத்தாசலம், சேத்தியாதோப்பு இந்த அணைகளின் பாய்ச்சல் முறை முன் ஏற்பட்டிருக்கிற மாதிரிதான். அந்த முறையின் ஜாபிதா சீக்கிரத்தில் பிரசுரஞ் செய்யப்படும். ஷை அணைகளின் பாய்ச்சலாதாரமானமுறைகள் விஷயத்தைப்பற்றி டி. பி. டபிள்யூ இலாகாதாரர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

4. இதர அணைகளின் தண்ணீர் முறை முதலான ஏற்பாடுகள் ரிவினியூ டிபார்ட்மெண்டாருடைய அதிகாரத்தின் கீழ் குடிகளுடைய கையிலிருப்பதால் ஷை பாய்ச்சல் விஷயங்களுக்கு ரிவினியூ டிபார்ட்மெண்டாரிடம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

5. மைனர் ஏரிகளுடைய மராமத்து சீர்திருத்தம் தண்ணீர் முறை முதலான யாவத்தும் ரிவினியூ டிபார்ட்மெண்டாருடைய அதிகாரத்திற் குட்பட்டிருக்கின்றன.

1890-ம் ஆம் மேமீ 14உ யுள்ள 137-ம் நெ. (ரிவினியூ செட்டில்மெண்டு லாண்டு ரிகார்டு அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டு) ரிவினியூ போர்டார் அவர்களுடைய புரோசீடிங்கின்பேரில் அனுபந்தம்.

(மண்ணீரல் ஜன்னி அல்லது) மண்ணீரலடைப்பான் கண்டு இறந்த பிராணிகளின் உடலைத் தொடுவது முதலியவைகளாலுண்டாகும் அப்பாயத்தைக்குறித்தது.

மண்ணீரலடைப்பான் கண்டு இறந்துபோன பிராணிகளின் உடலைச் சேதிக்கும் தொழிலாளிகளுக்கு அநேக சமயங்களில் பலமான தொத்துநோய் நேரிட்டிருக்கிறது. சிலசமயங்களில் அந்தத் தொத்தினாலே மரணமுண்டாயிருக்கிறது. இப்படி இந்த நோயினாலே மனிதருக்கு மரணமுண்டாகிறதென்கிற சங்கதி ஜனங்களுக்குத்தெரியப்படுத்துவது முக்கியமானதாயிருக்கிறது. மண்ணீரலடைப்பான் நோயில் பிராணியின் இரத்தமும் இரத்தம் பரவியிருக்கிற உடலின் சகல பாகங்களும் வெகு எளிதில் நோயைத் தொத்துவிக்கிறதென்பது பிரசித்தமான விஷயமே. யாருக்காவது கைமுழுவதிலு மெங்கேயாகிலும் தோளில் உயர்ந்த காயம் சொற்பமாயிருந்தபோதிலும் அப்படிப்பட்டவர்கள் இந்த நோயினால் இறந்துபோயாவது இந்த நோய்கண்டிருக்கையில் கொல்லப்படாமலிருக்கிற பிராணியின் உடலை எவ்வளவேனும் தொடக்கூடாது. நோய்கண்ட பிராணிகளின் இரத்தமானது புல், வைக்கோல் முதலிய தீனியிலாகிலும், படுக்கை செத்தைகளிலாகிலும், சாணமுதலிய வஸ்துக்களிலாகிலும் பட்டிருந்தால் அப்படிப்பட்டவைகளையும் தொடக்கூடாது. மண்ணீரலடைப்பான்கண்டு இறந்த பிராணிகளின் உடலைத் தோலுரிக்காமலும், சேதிக்காமலும் முழுசாய் பள்ளத்தில்போட்டு அதன்பேரில் சுண்ணாம்பு நீறு செவ்வையாய்ப் பரப்பி ஆறடி ஆழத்திற்குக் குறையாமல் மண்மூடிப் புதைக்கவேண்டியது.

தஞ்சாவூர் கலெக்ட்டர் மிஸ்டர் J. B. பெப்போர்ட் அனுப்பியிருக்கும் சர்க்கியுலர்கள்.

சென்ற வருஷத்தில் 2000 இந்தியன் எமிகிரண்டுகள் வாஸ்தவமில்லாத சமாசாரத்தை நம்பி வாங்கோவருக்கு வந்திருப்பதாகவும் அவர்களுக்கு அந்த ஊர் ஒத்துக்கொள்ளாததாலும் அவர்களுக்குக் கொடுக்கும்படியாக அவ்விடத்தில் வேண்டிய அளவு வேலையில்லாததாலும் அவர்கள் சர்க்காருக்குப் பாரமாயிருக்கும்படியான நிர்ப்பந்தத்திலும், கனடா ராஜாங்கத்து சட்டப்படி அப்புறப்பட வேண்டியவர்களாயுமிருக்கிறார்களென்று கனடா தேசத்து கவர்னர் ஜனரல் அவர்களிடமிருந்து சமாசாரம் வந்திருக்கிறது. எல்லா டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுகளும் சென்னபட்டணம் போலீஸ் கமிஷனரும் தங்கள் ஜூரிஸ்டிக்ஷனிலிருந்து வாங்கோவருக்கு எமிகிரண்டுகள் போயிருந்தாலும் அல்லது போய்க்கொண்டிருந்தாலும் அவ்விதம் போவதாய் உத்தேசித்திருக்கும் எமிகிரண்டுகளுக்கு நேரக்கூடிய ஆபத்தைப்பற்றி எச்சரித்து ஜில்லா கெஜெட்டு பிரசுரிப்பதாலாவது அல்லது எவ்விதமாயாவது செம்மையாய்ப் பிரசித்தப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வியாதிகண்ட மிருகங்களின் பிரேதங்கள் முதலியவைகளை இன்னது செய்யவேணுமென்பதைப்பற்றி கலெக்டர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி அடைப்பானினால் இறந்த ஒரு எருமையைப் புதைப்பதற்குப் பதிலாய் அதன்தோலை உரித்து மாமிசத்தைச் சாப்பிட்டதாக இந்தியன் பீனல்கோட் 269-வது பிரிவின்படி ஒருவன்பேரில் மாயவரந் தாலூகா 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முன்பாகக் குற்றஞ் சாற்றப்பட்டது. மாஜிஸ்ட்ரேட்டானவர் ரிகார்டு செய்யப்பட்ட சாக்ஷியத்தின் பேரிலும் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய ஒப்புக்கொள்ளுதலின் பேரிலும் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய செய்கை பிராணனுக்கு அபாயகரமான ஒரு வியாதியின் தொத்துதலைப் பரவச்செய்ய ஏதுவுள்ளதாகவுமிருந்ததென்று தீர்மானித்து அவனை மேற்கண்ட பிரிவின்படி குற்றவாளியாக்கினார்.

கிரிமினல் புரோசீஜர் கோட் 438-வது பிரிவின்படி தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாரால் செய்யப்பட்ட ரிபரென்சின்பேரில் ஹைகோர்ட்டாரவர்கள் 1890-ம் ஆம்த்து 27-ம் நம்பர் கிரிமினல் ரிவிஷன்பேரில் அடியிலுள்ள உத்தரவைச் செய்திருக்கிறார்கள்.

"குற்றத்தை ஸ்தாபித்தது சரியென்பதைப்பற்றி எங்களுக்குச் சந்தேகமில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய செய்கையானது வாஸ்தவமாகவே பிராணனுக்கு அபாயகரமான ஒரு வியாதியைப் பரவச்செய்யத்தக்கதாகவிருந்ததென்று 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு தீர்மானித்தார். அந்தத் தீர்மானத்தின்பேரில் குற்றவாளியாக்கினது சரியாயிருக்

கின்றது. தெண்டனை ரொம்ப இலேசானதாகக் காணப்படுகிறது. இக்குற்றம் சாதாரணமானதாக ஆகும் பக்ஷத்தில் இதைவிட பளுவான தெண்டனை விதிக்கப்படவேண்டும்."

மன்னார்குடி தாலூகா பூவனூர் கிராமத்தில் திருவாசல் நந்தவனத்தின் உபயோகத்துக்காக விடப்பட்டு இனும் கந்தாயினால் டைடில்டீட் 698-நம்பரில் உறுதி செய்யப்பட்ட 4 அணா தீர்வையுள்ள 13 செண்டு புஞ்சை நிலத்தை டிரஸ்டிகள் திருவாசலை கவனிக்காததாலும் நோட்டீஸ் கொடுத்தும் அதைச் சரிவர பாதுகாக்காததாலும் 1906ஞு நவம்பர்மீ 2உயுள்ள G. O. 1,240 மிஸ். நெ. படி கவர்ன்மெண்டார் உத்தரவுப்பிரகாரம் ரிஸ்யூம் செய்யப்பட்டது.

2. 693 நெ. டைடில்டீட் ரத்து செய்யப்பட்டது.

கஸ்பா மன்னார்குடி ருக்மணி பாளையத்தெருவிலிருக்கும் கோவிந்தப்ப நாயிடு மகன் வீராசாமி நாயிடு என்பவன் இந்தக் கோர்ட்டார் அவர்களால் சிவில் புரொஸீஜர் கோடு 351-வது பிரிவுப்படி 1906ஞு நவம்பர்மீ 29உ வியாழக்கிழமை தினம் இன்ஸால்வெண்டு என்று டிக்ளேர் செய்யப்பட்டிருக்கிறான்.

கஸ்பா மன்னார்குடி மூர்க்க விநாயகர் பிள்ளையார்கோவில் தெருவிலிருக்கும் ஆனை கொத்தன் மகன் பொன்னுசாமி கொத்தன் என்பவன் இந்தக்கோர்ட்டாரவர்களால் சிவில் புரொஸீஜர் கோடு 351-பிரிவுப்படி 1906ஞு நவம்பர்மீ 28உ புதன்கிழமை தினம் இன்சால்வெண்டு என்று டிக்ளேர் செய்யப்பட்டிருக்கிறான்.

POLICE SHEET.

போலிஸ் ஷீட்.

தஞ்சாவூர்ஜில்லாவில் B iii டிவிஷன் 254-ம் நெ. 3 கிரேட் எட். கான்ஸ்டேபில், சீனிவாச நாயுடு 5 குறவர்களைப்பிடித்து அவர்களிடம் நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கும்படி செய்ததற்காக, Ji-1115-1-கி. ஏ. கா. ரெங்கசாமிநாயுடு 792-2-கி. ஏ. கா. சுந்தரம் பிள்ளை கந்திரி உற்சவத்தில் ஒரு கொடிய கேடியைப்பிடித்து அவனிடம் நன்னடத்தை ஜாமீன் வாங்கினதற்காக, F-596 கான்ஸ்டபிள் நாகலிங்கம் ஒரு கொடிய துஷ்டன் பேரிலிருந்த வாரண்டை நிறைவேற்றினதற்காக, Ci-406 ஷை துரைசாமி ஒரு திருடனைத் திருட்டு சொத்துடன் பிடித்ததற்காக, 625 ஷை சுப்பராயலு நாயுடு திருட்டு கேஸில் மதுரை கள்ளனைப் பிடித்ததற்காக, 626 ஷை கதிரேசன் திருட்டு கேஸில் நல்ல வேலை செய்ததற்காக, K-423 ஷை கோவிந்தசாமி 932-1-கி. ஏ கா. கிருஷ்ணசாமி பிள்ளை சூதாட்டக்கேஸில் 5 பேர்வழிகளைப் பிடித்து அவர்களைத் தண்டனைக்கு கொண்டுவந்த நல்ல வேலைக்காக, Eii-609-3-கி. ஏ. கா. ரெங்கசாமி அய்யர் கி. பி. கோ. 110-வது பிரிவுப்படி வாரண்டிறந்து தலைமறைவாயிருந்த ஒருவனைப்பிடித்ததற்காக, Bi-977-கான்ஸ்டபில் சாமிநாத ராவ் உஷாராயிருந்து தஞ்சாவூர் டவுன் 1906ஞுத்திய 83-நெ. கேஸில் திருடனைப்பிடித்ததற்காக, H-511-3-கி. ஏ. கா. சுப்பிரமணிய அய்யர் 5 ஜாதிப்பிள்ளைகளைக் கன்னக்களவு ஆயுதங்களுடன் பிடித்து அவர்களிடம் நன்னடத்தை ஜாமீன் வாங்கினதற்காக, Ji-138 கான்ஸ்டபிள் கிருஷ்ணசாமி நாயுடு திருட்டு சொத்துடனே ஒரு திருடனைப்பிடித்ததற்காக, ஆகிய இவர்களுக்கு நல்ல ரிமார்க்கு கொடுக்கப்பட்டு ரிஜஸ்டரில் தாக்கல்செய்து கொள்ளப்பட்டது.

போலீஸ் இனாம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் Cii டிவிஷன் கா. நெ. 337 பக்கிரிசாமியும் கா. நெ. 360 கோபால் ராவும் மாடு திருட்டுக் கேஸைக் கண்டுபிடித்ததற்காக ஒவ்வொருவருக்கு ரூபா 3-ம், கா. நெ. 337 பக்கிரிசாமி கா. நெ. 50. வீராசாமி ஆகிய இருவரும் நாச்சார்குடி டிவிஷன் மாடு திருடினகேஸைக் கண்டுபிடித்ததற்காகவும் தலைக்கு ரூபா 2-ம், தென்ரேன்ஜ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவின் பேரில் இனாமளிக்கப்பட்டிருக்கின்றது.

மாயவரம் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்களால் 1905-ம்ஞு அக்டோபர்மீ 18உயில் Mis. கேஸ் 1905-ம்ஞுத்திய 38-ம் நெம்பரில் கி. பு கோ. 109, 110 வது செ. படி ஒரு வருஷம் கடினகாவல் தண்டனையடைந்த வாணிய நாராயண செட்டி என்பவன்; ஜாதி பூசும் தொழில், இருப்பிடம் தென்னார்க்காடு ஜில்லா கூடலூர், வயது 20, உயரம் 5-அடி, 3-அங்குலம்; நெத்தியில் மேற்புறமாக மத்தியில் சிரங்குத்தழும்பு; 1906-ம்ஞு செப்டெம்பர்மீ 23உயில் விடுதலையானது முதல் பராரியாயிருக்கிறான்.

விளம்பரம்.

போலீசிலிருந்து ராஜினாமாவை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னமே போய்விட்ட டிஸர்டரின் அங்க அடையாளங்கள்.

பெயர் காதர்கான், 317-ம் நெ. ரிஜர்வ் போலீஸ் கான்ஸ்டேபில் (சென்னபட்டணம், காலாள் 20-வது ரிஜிமெண்டு 2666-ம் நெ. டிஸ்சார்ஜ் பிரைவேட்) வயது 24; உயரம் 5 அடி $7\frac{1}{2}$ அங்குலம்; மோவாய்க் கட்டையின் வலதுபக்கத்தில் 2 மச்சங்கள், வலது தோள்பட்டை எலும்பின் கீழ் 1 மச்சம்; வலது புஜத்தில் ஒரு மச்சம்; தமிழும் இந்துஸ்தானியும்வாசிப்பான்; சொந்த ஊர் திருவண்ணாமலை தாலூகா செம்மேடு கிராமம்; 1906-ம்ஞு எப்ரல்மீ 6உயில் போலீசில் தாக்கல்; கூடலூரிலிருந்து 1906-ம்ஞு அக்டோபர்மீ 14உயில் டிஸர்ட்டாகிவிட்டான்.

தென் ஆர்காடு ஜில்லா F. டிவிஷன் கான்ஸ்டேபில் நெ. 742 குட்டியாபிள்ளை. கேடிகளாகிய சின்னப்பய்யன் ராமன் என்பவர்களைக் கண்டு பிடித்ததற்காகவும், B. டிவிஷன் கா. நெ. 85 கூப்பர்பு, கூடலூர் ஓல்ட் டௌனில் ஒரு சூதாட்டக் கேஸைக் கண்டுபிடிக்க புலன்கள் தெரியப்படுத்தினதற்காகவும், J. டிவிஷன் கா. நெ. 650 அய்ட் அமீன் திருவெண்ணெய் நல்லூர் ஸ்டேஷன் 1906-வதுஞுத்திய 63 நெ. குற்றத்தில் சம்பந்தப்பட்ட ரெங்கசாமியை அரஸ்ட் செய்ததற்காகவும், B. டிவிஷன் கா. நெ. 27 ராமச்சந்திரன், ஓல்ட்டௌன் போலீஸ் ஸ்டேஷன் 172 நெ. கேஸைக்கண்டு பிடித்ததற்காகவும், B. டிவிஷன் கா. நெ. 534 தஸ்தகிரி ஓல்ட்டௌன் ஸ்டேஷன் 158-வது நெ. கேஸை சாமர்த்தியமாய்க் கண்டுபிடித்துக் குற்றவாளியைத் திருட்டுச் சொத்துடன் அரஸ்ட் செய்ததற்காகவும், ஆகிய இவர்களுக்கு நல்ல ரிமார்க்குகள் கொடுக்கப்பட்டு இந்த ரிமார்க்குகளை ரிஜிஸ்டரில் தாக்கல்செய்து கொள்ளப்பட்டிருக்கின்றன.

போலீஸ் இனாம்.

தென் ஆற்காடு ஜில்லாவில் வானூர் டிவிஷன் கா. நெ 89 ஆயப்கான், கோட்டக்குப்பம் ஸ்டேஷன் 16-வது நெ. கேஸில் சம்பந்தப்பட்ட அரவாசாயப்பை அரஸ்ட் செய்ததற்காக ரூ 3-ம், கட்டரிப்பேட்டு ஸ்டேஷன் 77-வது நெ. குற்றத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கண்டுபிடித்து திண்டிவனம் ஸ்டேஷனைச்சேர்ந்த ஏட்கா. நெ. 570 கிருஷ்ணசாமி, கா. நெ 688 மான்ஜினி ஆகிய இருவர்களுக்கும் முறையே ரூ 3, 2-ம் ஜின்ஜி டிவிஷன் கா. நெ. 826 பெருமாள் சாமி, ராமன், லக்ஷ்மணன், ரெங்கன் கன்னிஎன்கிற சந்தேகப்பட்ட ஆசாமிகளைத் தொடர்ந்துபோய்க் கண்டுபிடித்ததற்காக ரூ. 5-ம், சென்ட்ரல் ரேன்ஜ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்திரவின் பேரில் இனாமளிக்கப்பட்டிருக்கின்றது.

PROCEEDINGS OF THE MEETING OF THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னபட்டணம் சட்ட நிருபண சபையார் கூட்டம் கூடி நடத்தின நடவடிக்கைகள்.

கேள்விகளும் ஜவாப்புகளும்.

சென்னை சட்ட நிருபணசபை அங்கத்தினர் நிகழ் ஜனவரிமாதம் 2௨ செவ்வாய்க்கிழமை வழக்கம்போல் கோட்டைக்குள்ளிருக்கும் கௌன்சில் சேம்பரில் ஒரு கூட்டம் கூடி நடவடிக்கைகள் நடத்தினார்கள். ஆனரபில் மிஸ்டர் G. S. போர்ப்ஸ், ஆனரபில் மிஸ்டர் M. ஹாமிக், ஆனரபில் மிஸ்டர் H. பிராட்லி, ஆனரபில் மிஸ்டர் F. H. வில்சன், ஆனரபில் J. டுவிக், ஆனரபில் மிஸ்டர் J. N. அட்க்கின்சன், ஆனரபில் மிஸ்டர் T. T. லோகன், ஆனரபில் மிஸ்டர் V. G. வின், ஆனரபில் மிஸ்டர் C. J. வீர், ஆனரபில் திவான் பகதூர் R. V. சீனிவாச அய்யர் ஆனரபில் மிஸ்டர் A. E. காசில்ஸ்டுவார்ட், ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியூ, ஆகிய கவர்ன்மெண்டு பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள்; சென்னை ராஜதானியின் நிலசுவான்தார் தரப்பிற்கு புதிதாய் நியமிக்க பட்ட அங்கத்தினராகிய குருப்பம் ராஜா அவர்களும் வந்திருந்தார்; இவர்களன்றி ஆனரபில் மிஸ்டர K. குருசாமி அய்யர், ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர், ஆனரபில் மிஸ்டர் B. N. சர்மா ஆனரபில் M. கிருஷ்ணநாயர், ஆனரபில் கொலிங்கொடு ராஜா ஆகிய ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களும் வந்திருந்தார்கள் ஆனரபில் சர் V. பாஷியம் அய்யங்கார் அவர்களும் வந்திருந்தார் சென்னை முனிசிபாலிட்டியின் பிரதிநிதியாகிய சர் V. C. தேசிகாச்சாரியும் லோகல் கவர்ன்மெண்டு காரியதரிசியாகிய மிஸ்டர் H. D. டேய்லரும் வந்திருந்தார்கள்; மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆர்தர் லாலியும் வந்திருந்தார்; இந்த சட்டநிருபணசபைக்கு எப்போதும் கவர்னரே சபாநாயகராயிருப்பது வழக்கம். அதுபோல் இந்தக்கூட்டத்திற்கும் கவர்னர் சபாநாயகராயிருந்து நடவடிக்கைகளை நடத்திவைத்தனர்; மேன்மை தங்கிய கவர்னர் சபாநாயகர் ஸ்தானத்தில் வீற்றுக் கொண்டவுடன் ஜனப்பிரதி அங்கத்தினர்கள் இந்த ராஜதானியின் அரசாங்கவிஷயங்களைக்குறித்து கேள்விகள் கேட்டார்கள்; இம்முறை கூட்டத்தில் ஜனப்பிரதி அங்கத்தினர்கள் அதிகக் கேள்விகள் கேட்கவில்லை எல்லா மெம்பர்களும் சேர்ந்து 38 கேள்விதான் கேட்டார்கள்; ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் 2 கேள்விகளும் ஆனரபில் கொலிங்கோடுராஜா 4-ம் ஆனரபில்மிஸ்டர் B. N. சர்மா 16-ம், ஆனரபில் மிஸ்டர் M. கிருஷ்ணநாயர் 11ம், ஆனரபில் மிஸ்டர் K. R. குருசாமி ஐயர் 5-ம் ஆக எல்லோரும் சேர்ந்து 38 கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்.

ஆனரபில் மிஸ்டர் P. சிவசாமி அய்யர்.

கேள்வி I (a) மதுரை ஜில்லாவில் கடந்த ஒரு நூற்றாண்டாக வைகைநதி பழைய பேரணைக்குச் சமீபத்தில் வடகரை வாய்க்காலில் பாய்ந்து, சோளவந்தான், சோளக்குருச்சி, பேட்டை, எருப்பாளி, காருப்பேட்டை, விளாப்பட்டி முதலிய கிராமங்களிலுள்ள நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது வாஸ்தவந்தானா ?

(b) மேற்கண்ட கிராமங்களில் வடகரை வாய்க்கால் நேரே இரண்டாயிரம் ஏக்ராவிற்கும், வடகரை தடாகத்தில் தேக்கப்பட்ட தண்ணீரால் 2600-ஏக்ராக்களும், வடகரை வாய்க்கால் பாயும் கலிங்கில் வாய்க்காலால் 4000-ஏக்ராக்களும் சாகுபடி செய்யப்பட்டுவந்தது வாஸ்தவமா ?

(c) பெரியார் தலைப்பு வாய்க்கால் வெட்டியபின் மேற் சொன்ன வழக்கம் நிறுத்தப்பட்டு வடகரை வாய்க்காலுக்குப் பெரியார் தலைப்பு வாய்க்காலிலிருந்து பிரிந்த ஒரு கிளைவாய்க்கால் பாய்ந்து வருவதும், இதனால் வைகையில் வரும் மழைஜலமும் சரப்பு நீரையும் வடகரை வாய்க்கால் பெற்றுவந்த நன்மையை இழந்திருப்பது வாஸ்தவமா ?

(d) கோடை காலத்தில் பெரியார் தலைப்பு வாய்க்காலில் ஜலம் தாமதமாய் வருவதாலும், வைகையில் வரும் மழை ஜலத்தையும் சரப்பு ஜலத்தையும் வடகரைவாய்க்கால் பெறக்கூடிய நன்மையை இழந்திருப்பதாலும் கோடைச்சாகுபடி தாமதப்பட்டு சிலசமயங்களில் சேதமடைந்து வருவது வாஸ்தவமா ?

(e) இந்தக் குறையைக்குறித்து குடிகள் 1900-வருஷம் எக்சிக்கியூட்டிவ் இன்ஜினீருக்கும் கலெக்டருக்கும் மனுசெய்து கொண்டார்களா ?

(f) குடிகளின் நன்மையை உத்தேசித்துக் கோடைகாலத்தில் வைகையில் வரும் மழை ஜலமும் ஊற்று ஜலமும் நேரே வடகரை வாய்க்காலில் பாய்ந்துவரும்படியாக வடகரை வாய்க்காலை வைகையுடன் சேர்ப்பதற்கு வேண்டிய வேலைகளை நடத்துவதற்காக எஸ்டிமேட் தயார் செய்ய உத்தரவு செய்யும்படி கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

(g) கடந்த ஒரு நூற்றாண்டாக வடகரை வாய்க்கால் வைகையிலிருந்து நேரே ஜலம் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறபடியால் குடிகளுக்குள்ள இந்தக் குறையை அகற்ற கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஆனரபில் மிஸ்டர் வில்சன்.

ஜவாபு:—(a, b & d) கேள்விகளில் சொல்லப்பட்டிருக்கும் சமாசாரங்கள் வாஸ்தவமானவை என்று நிச்சயமாய்ச் சொல்ல கவர்ன்மெண்டார் தயாராயில்லை.

(c) பெரியார் தலைப்பு வாய்க்காலிலிருந்து பிரியும் ஒரு கிளைவாய்க்கால் வடகரை வாய்க்காலில் பாய்ந்து வருகின்றது. இந்த வாய்க்கால் பாய்ந்து சாகு

படி செய்யப்பட்டு வரும் நிலங்கள் நல்ல ஸ்திதியிலிருக்கின்றன.

(e) ஆம்.

(f & g) வடகரை வாய்க்காலை வைகையுடன் சேர்ப்பது சாத்தியப்படாத காரியம். இருந்தபோதிலும், கோடைகாலத்தில் பெரியார் தலைப்பு வாய்க்கால் அடைக்கப்பட்ட பின்பு, வைகையில் வரும் மழை ஜலமும் ஊற்று ஜலமும் வடகரை வாய்க்காலில் பாயும்படி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஹானரபில் ராஜா v. வீரபத்திர ராஜு பகதூர்.

கே. II (a, b, c, d) வால்டேர் குழை ஜல வேலையைக் குறித்த கேள்வி.

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. II. (a, b, c, d) ... ...

ஹானரபில் ராஜா v. வீரபத்திர ராஜு பகதூர்.

கே. III (a) கோர்ட் ஆப்வார்ட் சார் மானேஜ்மெண்டிலிருக்கும் மைனர்களை வருஷத்திற்கு ஒருமுறை உதக மண்டலத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் தற்கால வழக்கத்தை நிறுத்திவிட கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

(b) ரஜாகாலத்தில் மைனர்கள் சென்னையை விட்டு வேறே எந்த ஊரிலாகிலும் வசித்து வந்தால் நலமாயிருக்குமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால், மைனர்கள் விவசாய ஆராய்ச்சி சாலையையும், சோதனைப் பண்ணைகளையும் பார்த்துப் பயனடைந்து வரும்பொருட்டுக் கோயமுத்தூருக்கு அனுப்ப இஷ்டப்படுவார்களா?

(c) இதர பள்ளிக்கூடங்களைப்போல மைனர்கள் வாசிக்கும்படியான நியூங்டன் பள்ளிக்கூடத்தையும் மதராஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர் பார்வையிட்டு ரிப்போர்ட் செய்யும்படி வித்தை இலாகா தலைவருடன் ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ.

ஜ. III (a & b) ரஜாகாலத்தில் இன்ன விடத்திற்குத்தான் மைனர்கள் போகவேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமில்லை. இருந்தபோதிலும் கோயமுத்தூரில் விவசாய ஆராய்ச்சி சாலை கட்டிமுடிந்தபின் மைனர்கள் அவர்களுடைய ரஜாகாலத்தின் ஒரு பாகத்தையாவது கோயமுத்தூரில் கழித்துவர ஏற்பாடு செய்யப்படும்.

(c) நியூங்டன் பள்ளிக்கூட விசிட்டர் கமிட்டியில் வித்தை இலாகா தலைவரை அங்கத்தினராகச் சேர்க்கும் விஷயம் கவர்ன்மெண்டாரால் ஆலோசனை செய்யப்படும்.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர்.

கே. IV. (a & b) கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களிலுள்ள காண்ட்ஸ், சாவர்ஸ் என்கிற மலைநாட்டார்கள் அவர்களுடைய சாமான்களை விற்றுக்கொள்ளும் பொருட்டு சந்தைகள் ஏற்படுத்தவேண்டு மென்பதைப்பற்றிய கேள்வி.

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. IV. (a & b) ஏற்கனவே சந்தைகளிருக்கின்றன என்று பதில் சொல்லப்பட்டது.

கோலிங்கோடு ஹானரபில் ராஜா வாசுதேவ ராஜா வள்ளிய நம்பிதி:—

கே V. (a) இந்த ராஜதானியில் ரூ 500-ம் அதற்குக்குறைவாகவும் சம்பளம் வாங்கிவரும் டிப்டிகலெக்டர்கள் பிரயாண அலவன்ஸ் பெறும் விஷயத்தில் இரண்டாவது வகுப்பு ஆபீசர்களாக எண்ணப்பட்டு வருவதை கவர்ன்மெண்டார் கவனித்திருக்கிறார்களா?

(b) இதர இலாகாக்களில் 500 ரூபா சம்பளத்திற்கு அதிகப்படாமல் சம்பளம் வாங்கிவரும், போலீஸ் சூப்பிரண்டுகள் தந்தி சூப்பிரண்டுகள் தபாலாபீஸ் சூப்பிரண்டுகள் முதல் கிளாஸ் ஆபீசராகப் பாவிக்கப்பட்டுவருவது வாஸ்தவந்தானா?

(c) ... ...

(d) சப்டிவிஷன் சார்ஜிலிருக்கும் டிப்டிகலெக்டர் முதலியவர்களும் பிரயாண செலவு பெறும் விஷயத்தில் முதல்கிளாஸ் ஆபீசர்களாக எண்ணிநடத்தப்படும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதி அனுமதி பெறுவதற்குக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ.

ஜ V. (a, b & c) சிவில் செர்விஸ் ரெகுலேஷன் ஆர்டிக்கில் நெ. 1002-யும் 18 நெ. அப்பண்டிக்சையும் ஹானரபில் மெம்பர் பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(d) இதைக்குறித்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுத கவர்ன்மெண்டார் தயாராயில்லை.

V. ஹானரபில் கோலிங்கோடுராஜா.

கே VI. தாலூக்கா சப்டிவிஷன் சார்ஜிலிருக்கும் டிப்டி தாசில்தார்கள் ஒவ்வொரு மாதமும் பத்து நாள் தங்களுடைய சப் டிவிஷனில் சுற்றுப் பிரயாணம் போகவேண்டுமென்றும் அப்படிப் போனால் அவர்கள் டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதில்லை என்பதும் வாஸ்தவம்தானா?

(f) தாசில்தார்களுக்கு இப்போது நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் டிராவலிங் அலவன்ஸ் கொடுத்து வருவதுபோல டிப்டி தாசில்தார்களுக்கும் கொடுத்துவர ஷை கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ.

ஜ VI. a 1905ஆ மார்ச்சு௴ 21௳ சட்டசபை மீட்டிங்கில் ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ணநாயர்கேட்ட 21-ம் நெ. கேள்விக்குச்சொல்லப்பட்டிருக்கும் ஜவாப்பைப்பார்க்கும்படி ஹானரபில் மெம்பர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

கே VII. (c) ஜமீன்தார்களுக்குப் பணம் கொடுத்து உதவும்படியான ஒரு நில பாங்கி (Land Bank) ஏற்படுத்த பிரேரேபணை செய்து 1906-ம் ஆ டிசம்பர்௴ 17௳ ஹிந்துப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த ஒரு முக்கியமான வியாசத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனித்தார்களா?

(b) இந்த பாங்கியை ஏற்படுத்துவதைக் குறித்து விசாரணைசெய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ.

ஜ VII. (a & b) கவர்ன்மெண்டார் இப்போது அந்த வியாசத்தைப்பார்த்தார்கள். அதைக்குறித்து இப்போது யாதொரு விசாரணையும் நடத்த கவர்ன்மெண்டார் தயாராயில்லை

(கே. VIII & IX மலபாரைக் குறித்த கேள்வி.)

கே. X (a) பிரைவேட் மானேஜ்மெண்டிலிருக்கும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு ஒரு பிராவிடண்ட் பண்டு ஏற்படுத்தவேண்டுமென்று சென்ற வருஷம் கல்வி இலாகா சங்கத்தார் ஒரு தீர்மானம் செய்தார்களே அதை கவர்ன்மெண்டார் கவனித்தார்களா?

(b) அந்தப் பிரேரேபணையை கவர்ன்மெண்டார் அனுகூலமாய் நிறைவேற்றி வைக்க இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. X (a) கவர்ன்மெண்டார் இப்போது தான் அந்தத் தீர்மானத்தைப் பார்த்தார்கள்.

(b) இதைக் குறித்து இன்னும் யாதொரு மனுவும் வரவில்லை.

(கே. XI மலபாரைப் பற்றியது.)

ஹானரபில் மிஸ்டர் B. N. சர்மா.

கே. XIII விசாகபட்டணத்தைக் குறித்த கேள்வி.

கே. XIV (a) இந்த ராஜதானியில் தொழிற்படிப்பை விர்த்தி செய்யும்பொருட்டு பிரேரேபணைகள் செய்து கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கும் கடிதங்களைக் கவர்ன்மெண்டார் பகிரங்கப்படுத்த முடியுமா?

(b) தொழிற்படிப்பு கற்றுக்கொடுக்கும் பொருட்டு இன்னும் ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களா?

(c) தொழிற்கலா சாலை ஏற்படுத்த கவர்ன்மெண்டார் ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. XIV. (a) பகிரங்கப்படுத்தப்படமாட்டாது.

(b) தொழிலையும் தொழிற்படிப்பையும் கவனித்து விர்த்தி செய்ய கவர்ன்மெண்டார் பிரத்தியேக ஒரு டைரக்டரை நியமித்திருக்கிறார்கள்.

(c) இந்த ராஜதானிக்குத் தொழிற்கலா சாலை இப்போது அனுவசியமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

கே. XXXV. (a) சென்னையில் மாக்காஸ்கன் தெருவு, அப்பய்யாமுத்து தெருவு, செம்படப்பிள்ளையார் கோயில் தெவுரு, மெமோரியல் ஹாலிலிருந்து தங்கசாலைத்தெருவு பிரவேசம், வால்டாக்ஸ்ரோட்டிலிருந்து பார்க்போஸ்டாபீஸ்வரையில், ஜான் பெரியரா ரோட் ஆகிய இந்த தெருக்களில் வசிப்பவர்கள் கவர்ன்மெண்டார் ஷை. தெருக்களிலிருக்கும் 3000 ஜனங்களையும் போகச்சொல்லி விட்டும் ஷை. தெருக்களிலிருக்கும் 200 வீடுகளையும் இடித்து விட்டும் மதராஸ் ரயில்வேகம்பெனியார் ஆபீஸ்கட்டடங்கள் கட்டிக் கொள்ளும் படி ஷை தெருக்கள்கூடிய நிலத்தை வாங்கப்போகிறதை ஆக்ஷேபித்து யாதேனும் கவர்ன்மெண்டாருக்கு மகசர் அனுப்பியிருக்கிறார்களா?

(b) மகசர் அனுப்பியிருப்பவர்களின் வீடுகளை கவர்ன்மெண்டார் வாங்கிக் கொண்டால் அவர்களுடைய ஜீவனமே போய்விடுமென்பது வாஸ்தவம் தானா?

(c) அப்படியானால் மகசர் காரர்களின் கோரிக்கையை கவர்ன்மெண்டார் நிறைவேற்றிவைக்க முடியுமா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. XXXV (a) மகசர் வந்திருக்கிறது.

(b & c) ஏற்கனவே அனுப்பப்பட்ட மகசரையும் கவர்ன்மெண்டார் பெற்று ஆலோசனை செய்து ஷை வீடுகளை வாங்கத் தீர்மானித்தார்கள். இப்போது அனுப்பியிருக்கும் மகசரில் புதிய சமாசாரம் ஒன்றுமில்லை. மகசர்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க முடியாமலிருப்பதைப் பற்றி கவர்ன்மெண்டார் விசனிக்கிறார்கள்.

கே. XXXVI (a) சென்னை ராஜதானியில் மாஜிஸ்டிரேட்டுகளால் விதிக்கப்பட்டு வரும் அபராதங்களை இதர மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சென்னை ராஜதானியின் ஜனத்தொகைக்கும் விஸ்தீரணத்திற்கும் தகுந்தபடியிராமல் அதிகமாயிருப்பதை கவர்ன்மெண்டார் கவனித்தார்களா?

1905-1906-ம் ஆத்தின் அபராத எஸ்டிமேட்டுகள்.

	ரூபாய்.
சென்னை	5,99000
பங்காளம்	5,60'00
ஆக்ராவும், அயோத்தியும்	2,65000
பஞ்சாப்	20,7000
பம்பாய்	2,66500
மத்தியமாகாணம்	8,3500

(b) அதிகப்படியான அபராதங்களை ஜனங்களுக்கு விதித்துக் கஷ்டப்படுத்தாமல் சட்டத்தைப் பிரயோகப்படுத்தும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்ய இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

XXXV. இந்த இராஜதானியில் அபராதங்கள் தகாதபடி போடப்பட்டு வருகிறதென்று கவர்ன்மெண்டார் நினைப்பதற்கு யாதொரு காரணத்தையும்

காணேம். அப்படி மாஜிஸ்டிரேட்டுகள் தகாதபடி அபராதம் விதித்துவந்தால் அவர்களைக் கண்டிக்க அப்பீல் கோர்ட்டுகளிருக்கின்றன.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர்.

XVIII (a) தூத்துக்குடி சப் மாஜிஸ்டிரேட் முருகய்யன் என்பவனுக்கு டிபன்ஸ் கூறக்கூட சாவகாசம் கொடுக்காமல் தண்டித்ததாக 1906-ம்ஹு டிசம்பர்மீ 14வ ஹிந்து பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டிருப்பதை கவர்ன்மெண்டார் கவனித்தார்களா?

(b) அது உண்மையான சமாசாரமா?

(c) இனிமேல் இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறாமலிருக்கும்படி ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ XVIII கவர்ன்மெண்டார் இப்போது அந்த வியாசத்தைப் பார்த்தார்கள். அதைக்குறித்து ரிப்போர்ட் அனுப்பும்படி கேட்கத் தகுந்த காரணமில்லை என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள். குற்றவாளிக்கு யாதேனும் குறையிருந்தால் அவனுக்கு அப்பீல் கோர்ட்டுகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

கே XXI (a) 1906ம்ஹு டிசம்பர்மீ 15வ இந்தியன் பேட்ரியட் பத்திரிகையில், "ஆபீசில் உத்தியோகம் பார்க்கும் காலம்" என்று ஒரு வியாசம் எழுதப்பட்டிருக்கிறதே அதை கவர்ன்மெண்டார் பார்த்தார்களா?

(b) சென்னையிலும் வெளியூர்களிலும் கவர்ன்மெண்டு ஆபீஸ்களில் கிளார்க்குகள் தினம் ஒன்றுக்கு 8-அல்லது 9-மணி நேரம் உத்தியோகம் செய்து வருவது வாஸ்தவமா?

(c) கவர்ன்மெண்டார் இன்னும் அதிகப்படி கிளார்க்குகளை நியமிக்கவாவது அல்லது இன்னும் ஏதேனும் தகுந்த ஏற்பாட்டைச் செய்யவாவது இஷ்டப்படுவார்களா?

ஜ XXI. கவர்ன்மெண்டார் அந்த வியாசத்தை இப்போது பார்த்தார்கள். கவர்ன்மெண்டு ஆபீசுகளில் கிளார்க்குகள் ஏற்பட்ட மணிநேரத்திற்கு அதிகமாக சில அவசரசமயங்களில் வேலைபார்க்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு ஆபீசில் போதுமானபடி கிளார்க்குகள் நியமிக்கப்படாமலிருக்கிறதென்று தெரியவந்தால் அந்த டிபார்ட்மெண்டிற்குப் பணவேவஜியிருக்கும் விஷயத்தில் தகுந்தபடி கிளார்க்குகள் நியமிக்க கவர்ன்மெண்டார் எப்போதும் தயாராயிருக்கிறார்கள்.

ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர்.

கே XXXI. (a) திருநெல்வேலியிலிருக்கும் அடிஷனல் டிஸ்டிரிக்ட்முனிசிப் கோர்ட்டை நாங்குநேரியில் வைக்கும்படியாக திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரிதாலுக்கா ஜனங்கள் கவர்ன்மெண்டாருக்கு மகசர் அனுப்பியிருக்கிறார்களா?

(b) திருநெல்வேலியிலிருக்கும் இரண்டு டிஸ்டிரிக்ட் முனிசிப்கோர்ட்டுகளுக்கும் கவர்ன்மெண்டார் கோர்ட்டுகட்டடங்கள் கட்டுவதைக்குறித்து தீர்மானிப்பதற்கு முந்தி பிரஸ்தாப மகசர் காரர்களின் கோரிக்கையை கவர்ன்மெண்டார் நிறைவேற்றி வைக்க இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ XXXI. நிகழ்மீ 17வ ஒருமகசர் வந்தது-அதே மாதிரி மகசர் ஒன்று ஹைகோர்ட்டிற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஹைகோர்டார் அதைப் பற்றி கவனித்துப் பைசல் செய்வார்கள்.

கே XXXII (a) குளித்தலை தாலூக்காவில் காட்டிலாக்கா ஆபீசர்களின் உத்தரவின் பேரிலும் மராமத்திலாகா ஆபீசர்களின் உத்தரவின் பேரிலும் கால்நடைகள் அடிக்கடி பவுண்டுகளில் அடைக்கப்பட்டு அவைகளின் சொந்தக்காரர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதும், சொந்தக்காரர்கள் அடிக்கடி பிராசிக்கியூட் செய்யப்படுவதும் வாஸ்தவந்தானா?

(b) இதைக்குறித்து ஷை ஜில்லா ரெவினியூ இலாக்காகாரர்கள் ஒரு ரிப்போர்ட் அனுப்பும்படி உத்தரவு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ.

கே XXXII. இதைக்குறித்து கவர்ன்மெண்டாருக்கு யாதொரு புகாரும் எட்டவில்லை. ஆகையால் இப்போது இதைக்குறித்து ரிப்போர்ட் ஷை ஜில்லாவிலிருந்து தருவிக்க கவர்ன்மெண்டார் தயாராயில்லை.

ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் கேள்வி கேட்டு முடிந்தபின் செக்ரட்டரி, 1905ம்ஹுத்திய நிலசொத்து மசோதா ஆக்டைக்குறித்து அடியில் குறித்த மகசர்களும் மனுக்களும் வந்திருப்பதாய்ச்சொன்னார்.

(1) செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூக்காவின் ஜெமீன் ஸ்ரோத்திரிய கிராமங்களின் பட்டாதார்களும் மிராசுதார்களும் அனுப்பியிருக்கும் 12-11-1906 தேதியுள்ள மகசர்,

(2) திருநெல்வேலி ஜில்லா மிட்டாதார்களும் ஜமீன்தார்களும் அனுப்பியிருக்கும் 1906-ம்ஹுத்திய அக்டோபர்மீ 1வயுள்ள மகசர்.

(3) தென் கன்னடம் பாய்ந்தூர் வெங்கட்ராவ் முதலியவர்கள் அனுப்பியிருக்கும் தேதி போடாத மகசர்,

(4) விஜாகபட்டணம் ஜில்லா ஜேய்ப்பூர் மகாராஜா விக்கிரமதியோ அனுப்பியிருக்கும் 1906-ம்ஹு டிசம்பர்மீ 28வ யுள்ள கடிதம்.

இதன் பிறகு தானாய் இயங்கும் மோட்டார் வண்டியின் 1906-ம்ஹுத்திய மசோதா ஆகட்டின் பேரில் செலக்ட் கமிட்டியார் செய்திருக்கும் ரிப்போர்ட்டை ஹானரபில் மிஸ்டர் ஹாமிக் அவர்கள் ஆஜர்படுத்தினார். இந்த மசோதா ஆக்ட் தர்க்கிக்கப்படுகையில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் சில பிரேரேபனைகள் செய்ய, இந்த பிரேரேபனைகளில் சில ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த மீட்டிங்கில் செய்த சீர்திருத்தத்துடன் பிரஸ்தாபமோட்டார்வண்டி மசோதா ஆகட் கவர்னர் சம்மதத்தை ஏற்றுச் சட்டமாகப் பாஸ் செய்விக்கப்பட்டதென்று கூறப்பட்டது இத்துடன் சபை கலைந்தது.

—o—

COURT NEWS.

கோர்ட்டு வர்த்தமானங்கள்

தென்னாற்காடு செஷன்ஸ் கோர்ட்.

சிறிது நாட்களுக்கு முந்தி நடந்த தென் ஆற்காடு செஷன்ஸ் விசாரணைக்கு ஒரு போலீஸ் இம்சைக் கேஸ் வந்தது. ஏற்கனவே இந்த ஜில்லாவில் மோசபாங்கி ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்ட ரெங்கசாமிபிள்ளை, குப்புசாமிபிள்ளை, ரெங்காசாரி ஆகியமூவருள் ரெங்கசாமிபிள்ளை என்பவன் தன்னை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லும்படி அழைத்துக்கொண்டு போன கஞ்சமாபட்டி முதலிய விடங்களில் போலீசார் தன்னை இம்சித்ததாகக் குற்றஞ்சாட்டினான். இந்தக் கேஸ் செஷன்ஸ் விசாரணைக்கு வந்தபோது பிராசிக்கியூஷன் தரப்பார் குற்றத்தை ருஜுப்படுத்த பல சாக்ஷிகளை விட்டார்கள். சாக்ஷியம் பேதப்பட்டிருந்தபடியால் அசசர்களும் கோர்ட்டார்களும் நம்பவில்லை. ஆகவே குற்றம் சாட்டப்பட்ட போலீசார்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

வக்கீல்.

சென்னை ஹைகோர்ட்டில் சீப் ஜஸ்டிஸும் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனும் கூடியிருந்த கோர்ட்டில் சென்ற டிசம்பர்மீ 12வ வக்கீல் மிஸ்டர் K. நாராயணராவ் தம்மிடம் அப்பரிண்டிசாகவிருந்து தொழில் கற்றுவந்த மிஸ்டர் சோமாஜி அய்யரை வக்கீலாகத் தாக்கல் செய்துகொள்ளும்படி மனு செய்துகொள்ள, அப்படியே தாக்கல் செய்துகொள்ளும்படி உத்தரவு செய்யப்பட்டது. பாரிஸ்டர் டாக்டர் சாமிநாதன் மனுவின்பேரில் அவரிடம் அப்பரிண்டிசாக விருந்துவந்த மிஸ்டர் M. D. சுப்பராய அய்யரும் வக்கீலாக தாக்கல் செய்துகொள்ளும்படி உத்தரவு செய்தார்கள்.

மிஸ்டர் C. சங்கரநாயர்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் பப்ளிக் பிராசிக்கியூட்டராகவிருக்கும் மிஸ்டர் C. சங்கரநாயர் அவர்கள் ராஜமகேந்திர புரத்தில் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ராபர்ட் 1 C. S. கோர்ட்டில் ஆஜராகி கல்கத்தா பிராவிடன்ட் பண்டு சொந்தக்காரனுகிய போசை பிராசிக்கியூட் செய்யும்பொருட்டு கவர்ன்மெண்டாரால் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறார்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளின் சம்பளம்.

பிரதம ஜட்ஜியாகிய ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வயிட் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5000-சம்பளம். மற்ற ஐந்து ஜட்ஜிகள் ஒவ்வொரு வருக்கும் ரூ. 4000-ம் சம்பளம்.

நான்கு நிமிஷ சுகத்திற்கு நான்குமாத ஜெயில்.

கல்கத்தா கிரான்ட் தெரு 5-ம் நெ. வீட்டில் கல்கத்தா போலீஸ் படையில் இதற்கு முன் உத்தியோகமாயிருந்த உல்லியம் அலக்சாண்டரும், ரயிலில் உத்தியோகஸ்தராயிருக்கும் மிஸ்டர் மெக்கன்சியும் வசித்து வந்தார்கள். மிஸ்டர் மெக்கன்சியின் துரைசானி ஒரு அழகான நங்கைபோல் தோற்றுகின்றது. வில்லியம் அலக்சாண்டர் இந்த துரைசானியுடன் கூடிச்சுகிக்கவேண்டுமென்று வெகுநாளாய் காமப்பேயால் பிடிக்கப்பட்டு வாட்டப்பட்டு வந்தான். சமயம் நேரிடவில்லை. சென்ற இரண்டு வாரங்களுக்கு முந்தி ஷை துரைசானியின் புருஷன் வெளியூருக்குப் போயிருந்த சமயம் பார்த்து ஒரு நாள் இரவு இரண்டுமணிக்கு அந்த அம்மாள் படுத்து உறங்கிக்கொண்டிருக்கும்போது அறைக்குள் சென்று துரைசானியின் பக்கத்தில் படுத்துக்கொண்டான். துரைசானி விழித்துப் பார்த்து திகிலடைந்தார். இருந்தபோதிலும் "ஏன் இங்குவந்தாய்" என்று கோபத்துடன் கேட்க, அவன் சரச ஜாடைகள் செய்யத் தலைப்பட்டான். அந்த துரைசானி கூச்சல் போட ஆரம்பிக்க, உடனே ஓடிவிட்டான். மறுநாள் காலையில் கார்ட்டர் என்கிற ஒரு துரை வீட்டிற்கு வந்தபோது, அவரிடம் துரைசானி சென்ற இரவு நடந்தவிர்த்தாந்தங்களை யெல்லாம் சொல்லினர். இத்துரை போனவுடன் வில்லியம் அலக்சாண்டருக்குக் கோபம் பிறந்து அந்த துரைசானியைக் கத்தியால் குத்திவிட்டான். அவன் கடுங்காயம் விளைவித்த குற்றத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டு கல்கத்தா ஓப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டதில் கோர்ட்டார் இவனுக்கு நான்குமாத கடினகாவல் தண்டனையும் ரூ. 150 அபராதமும் விதித்திருக்கிறார்கள். ஜெயிலிலிருந்து வந்தவுடன் நல்ல நடத்தைக்காக 6-மாதத்திற்கு ரூ. 200 ஜாமீன் கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

போலிசார் ஆடு திருடப்போனதாகச் சொல்லப்படும் கேஸ்.

திருநெல்வேலி ஜில்லாவில் குலசேகர பட்டணத்தைச் சேர்ந்த வடகூரில் கிறிஸ்தவ பஞ்சமர்கள் கடந்த டிசம்பர்மீ 30வ கிறிஸ்தவப் பண்டிகையைக் கொண்டாடிக்கொண்டிருக்கும்போது மூன்று கான்ஸ்டேபில்கள் அவர்களுக்குச் சொந்தமான இரண்டு ஆடுகளைப் பிடித்துக்கொண்டு போக எத்தனித்தார்கள். பஞ்சமர்கள் ஆடுகளை விடமாட்டோமென்று சொல்ல, போலிஸ் கான்ஸ்டேபில்களுக்குக் கோபம் பிறந்து தங்கள் கையிலிருந்த துப்பாக்கியைப் பிரயோகப்படுத்தி ஒரு பஞ்சம ஜாதியானின் காலில் சுட்டு அவன் கீழே விழும்படி செய்துவிட்டார்கள். இதைப்பார்த்துக்கொண்டிருந்த இதர பஞ்சமர்களுக்குக் கோபம் பிறந்து அந்த போலிஸ் கான்ஸ்டேபில்களையும் அவர்களுக்கு உதவி செய்யும்படி வந்த இன்னும் சில கான்ஸ்டேபில்களையும் பிடித்துக் கயிற்றால் கட்டி விட்டார்கள். இவர்களிடமிருந்த இரண்டு துப்பாக்கிகளையும் சப் மாஜிஸ்டிரேட்டிற்குக் காண்பிக்கும் பொ

ருட்டு பிடுங்கிக்கொண்டார்கள். சில நாழிகை சென்று பஞ்சமர்கள் கான்ஸ்டேபில்களை விட்டுவிட்டார்கள். மறு நாள் காலையில் குலசேகரபட்டணம் சப் மாஜிஸ்டிரேட்டும் போலிஸ் இன்ஸ்பெக்டரும் 20 கான்ஸ்டேபில்கள் சகிதமாய் வடகூருக்கு வந்து துப்பாக்கிகளைக் கேட்க, பஞ்சமர்கள் கொடுத்துவிட்டார்கள். குலசேகரபட்டணத்திலுள்ள மறவர்களும் வேளாளர்களும் வடகூர் பஞ்சமர்களுக்கு எப்போதும் பகையாளிகள். இவர்களும் சப் மாஜிஸ்டிரேட்டினுடன் வடகூருக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களும் கான்ஸ்டேபில்களும் சப் மாஜிஸ்டிரேட் போலிஸ் இன்ஸ்பெக்டர்களின் தூண்டுதல்பேரில் வடகூரையே கொள்ளை யடித்து ஸ்திரீகளை மானபங்கம் செய்து, 8-வீடுகளையும் ஒரு பள்ளிக்கூடத்தையும் அக்கினி பகவானுக்கு ஆகாரமாக அளித்துச் சூறையாடினார்கள் என்றும் பஞ்சமர்கள் மேற்படி அதிகாரிகள் பேரில் பிராது கொடுத்திருக்கிறார்கள் என்றும் 30 பஞ்சமர்களைப் போலிசார் அரஸ்ட் செய்து அவர்களில் 17-பேர்களை விடுவித்து விட்டு பாக்கிப்பேர்வழிகளை இன்னும் ஜெயிலில் வைத்திருக்கிறார்கள் என்றும் மதிராஸ் மெயில் பத்திரிகைக்கு தூத்துக்குடியிலிருந்து ஒரு நிருபர் கடிதம் எழுதியிருக்கின்றார்.

திருடன் அகப்பட்டான்.

பாரிஸ்டர் மிஸ்டர் கவுடல் சென்ற ஜூலை௴ 26௳ மதராஸ் ரெயில்வேயில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது யாரோ ஒருவன் அவருடைய வண்டியிலேறி அவருடைய பெட்டியைத்திறந்து சில சாமான்களைத் திருடிக்கொண்டுபோய்விட்டான். சொத்து திருட்டுப்போனதைத் திருப்பத்தூர் ரெயில்வேஸ்டேஷனில் போலிசாருக்கு அறிவித்தார். இந்த சொத்துக்களைத்திருடினவனைப் போலிசார் வெகுநாளாய்த்தேடிக்கொண்டிருந்தார்கள். அகப்படவில்லை. இப்போது அப்தல்லாகான் என்பவன் அரஸ்ட் செய்யப்பட்டு அவனிடமிருந்து சில சாமான்கள் அகப்பட்டன. போலீஸ் கோர்ட்டார் இவனுக்கு எட்டுவார கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறார்கள்.

பெரியமேட் ரயில் அபாயக்கேஸ்.

சென்ற ஆகஸ்ட்௴ 18௳ பெரிய மெட்டிலிருக்கும் இருப்புப்பாதையில் தென்இந்தியாரெயில்வே கம்பெனியைச்சேர்ந்த டிரைவர் காதர்பெக் என்பவர் கம்பெனியின் விதிகளுக்கு விரோதமாக ரயில் வண்டியை விட்டுக்கொண்டு போனதால் மூன்று கூலிக்காரர்கள் ரயிலில் அகப்பட்டு காயம் அடைந்து இறந்து விட்டார்கள். அதற்காக இப்போது ஷை டிரைவர் குற்றஞ் சாட்டப்பட்டு போலீஸ்கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். இன்னும் விசாரணை முடியவில்லை.

பிளேக்சட்டத்தை நிராகரித்தது.

பிளேக்பரவியிருக்கும் ரெங்கூனிலிருந்து பாஸ்போர்டு பெற்றுக்கொண்டு ரெத்தினம் என்பவர் சென்னைக்குவந்தார். பிளேக்சட்டப்படி சோதனை ஆபீசுக்கு ஜூன்௴ 27, 28, 29, 30௳ களில் ஆஜராகவில்லை. ஆகலால் பிளேக் அதிகாரிகள் இவரை பிராசிக்கியூட் செய்தார்கள். 5 மாதம் வரையில் சம்மனுக்கு அகப்படவில்லை. அதன்மேல் வாரண்டு பிறந்து தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகா தீத்தனூரில் கண்டு பிடிக்கப்பட்டு அரஸ்ட் செய்து கொண்டுவரப்பட்டான். இந்தக் கேசை விசாரணை செய்த பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் மிஸ்டஸ் P. ராஜரத்தின முதலியார் அவர்கள் குற்றவாளிக்கு 10 நாள் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கின்றனர். இருந்தபோதிலும் பிளேக்சட்டத்தை நிராகரித்த ஒரு கிராமத்தானுக்கு 10 நாள் கடுங்காவல்தண்டனை விதிப்பது கடுமையான தண்டனை யென்றே எண்ணுகின்றோம்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ரிஜிஸ்டிரார் சம்பளம்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ரிஜிஸ்டிராருக்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம். ரூபா. 1800; ஒரிஜனல் சயிட் டிப்ட்டி ரிஜிஸ்டராருக்கு ரூ. 1000; அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்டிராருக்கு 500; சீப் இன்டிராப்பிரட்டருக்கு ரூ. 400; குஜராத்தி இன்டிராப்பிரட்டருக்கு (தர்ஜுமாக்காரர்) ரூ. 200; பெர்ஷியா பாஷை இன்டிராப்பிரட்டருக்கு ரூ. 200; அப்பீல் கோர்ட்டு டிப்ட்டி ரிஜிஸ்டிராருக்கு ரூ. 1000-ம்; அட்வோக்கேட் ஜெனரலுக்கு சம்பளம் ரூ. 1800; கிரௌன்பிராசிக்கியூட்டருக்கு ரூ. 500; அட்மினஸ்டேட்டர் ஜெனரலுக்கு ரூ. 300; கவர்ன்மெண்டு பிளீடருக்கு ரூ. 350; ஷெரிப்புக்கு ரூ. 500.

1907ம்௵த்தில் கோர்டு ரஜாநாட்கள்.

1907-ம்௵த்தில் அடியிற் கண்டதினங்களில் சென்னை ராஜதானியிலுள்ள கோர்ட்டுகள் மூடப்பட்டிருக்கும் :—

பிப்ரவரி௴	11௳	மகாசிவராத்திரி.
மார்ச்சு௴	15௳	தெலுங்கு வருஷப்பிறப்பு.
மார்ச்சு௴	30௳	ஈஸ்டர் பண்டிகை.
ஏப்ரல்௴	12௳	
ஏப்பிரல்௴	13௳	தமிழ்வருஷப்பிறப்பு.
ஜூன்௴	26௳	மகாராஜாபிறந்தநாள்.
ஆகஸ்ட்௴	23௳	ஆவணியாவட்டம்.
ஷை	31௳	ஸ்ரீஜயந்தி.
செப்டம்பர்௴	11௳	விநாயக சதுர்த்தி.
அக்டோபர்௴	7௳	மாளய அமாவாசை.
ஷை	15௳	ஆயுதபூஜை.
நவம்பர்௴	5௳	தீபாவளி.
ஷை	7௳	ரம்ஜான் பண்டிகை.
டிசம்பர்௴	27, 28, 30, 31௳	கிரிஸ்ட்மஸ்பண்டிகை.

கல்கத்தா பிராவிடன்ட் பண்டு.

இதன் சொந்தக்காரனாகிய போஸ் என்பவன் ஏமாற்றின குற்றத்திற்கும் நம்பிக்கை மோசக்குற்றத்திற்கும் குற்றஞ்சாட்டப்பட்டு ராஜமகேந்திரபுரம் எட் அசிஸ்டன்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் ரூபர்ட்ஸ் I. C. S. அவர்களில் விசாரணை செய்யப்பட்டு

வருகின்றான். ஜனங்களிடமிருந்து வசூல் செய்த ரூ. 3-லக்ஷத்திற்கு யாதொரு விபரக்கணக்கும் இவன் கொடுக்க முடியவில்லையாம் பெருத்த மோசம் நடந்திருக்கிறதாகவே புலப்படுகின்றது. இன்னும் விசாரணை முடியவில்லை.

GENERAL NEWS.

பொது வர்த்தமானங்கள்.

அர்பத்நட் பாங்கியின் கடன்.

அர்பத்நட்பாங்கியார் கடன் ஜாபிதாவைக் கோர்ட்டில் தாக்கல் செய்துவிட்டார்கள். மொத்தக்கடன் ரூ. 3,1066288-4-11 என்று தெரியவருகிறது.

மரணம்.

சென்னபட்டணம் ரிஜிஸ்டிரார் ஆபீசில் ரிஜிஸ்டராராகவிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டு சிந்தாதிரிப்பேட்டையில் சுகவாசம் செய்துவந்த மிஸ்டர் A. பெரியசாமிமுதலியார் B. A. அவர்கள் நிகழ் ஜனவரி௴ 5௳ சனிக்கிழமை ஷை சிந்தாதிரிப்பேட்டையில் தம்முடைய கிரகத்தில் இறந்துபோனதைக் கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். இவர் பத்திரப்பதிவு இலாகாவில் 30-வருஷகாலம் உத்தியோகம் பார்த்து கவர்ன்மெண்டாருடைய நன்கு மதிப்பைப் பெற்றவர். தஞ்சாவூர், செங்கற்பட்டு, தென் ஆற்காடு, முதலிய ஜில்லாக்களில் டிஸ்டிரிக் ரிஜிஸ்டராராகவிருந்து சிறப்படைந்தவர். இவர் பண்டைக்கால பி. எ. க்களைச் சேர்ந்தவர் இவருக்கு ஆங்கிலத்திலிருக்கும் வித்வத்வம் நன்குமதிக்கப்பட்டு இவர் இருமுறை சென்னைச்சர்வ கலாசாலைச் சகாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். மிகுந்த செல்வாக்கு முதலிய யோக்கியதாம்சங்களும் பொருந்தப் பெற்றவர்.

அர்பத்நட் துன்ப நிவாரண நிதி.

முழுகிப்போன அர்பத்நட் பாங்கியில் பணம் போட்டு நஷ்டமடைந்து நிராதரவாகவிருக்கும் ஜனங்களுக்கு உதவி புரிய மேன்மை தங்கிய கவர்னர் சர். ஆர்தர்லாலி அவர்களால் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்த நிதியில் நாளது வரையில் ரூ. 133155-10-6 சேர்ந்திருக்கிறது.

அநியாய மரணம்.

பங்காளத்தில் சிறந்து விளங்கி வந்த பங்கபாஸிப்பத்திரிகையின் பத்திராசிரியரின் குமாரராகிய பாபு சச்சந்திர போஸ் என்பவர் கல்கத்தாவுக்கும் பூரிக்கும் போகும் இருப்புப்பாதையில் கடந்த 6௳ ரயிலேறி துண்டிக்கப்பட்ட பிரேதமாய்க்கிடந்தனர். இந்த அநியாய மரணத்திற்கு இன்னும் காரணம் தெரியவில்லை.

தூரதிருஷ்டிக் கண்ணாடி.

இப்போது இங்கிலாண்டில் நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் மேல் உலகத்தை உபாயமாகப் பார்க்கக் கூடியதாயிருக்கின்றதாம். அவ்விடமிருக்கும் மனிதர்களும், நதிகளும், வாய்க்கால்களும் கண்ணுக்குப் புலப்படுகின்றனவாம். அங்குள்ள மனிதர்களுக்கு இரு கைகளிலும் இறக்கைகளிருப்பதாகவும் சீமையிலிருந்து வந்திருக்கும் ஓர் பத்திரிகை கூறுகின்றது.

காங்கிரஸ் சபா நாயகர்.

சென்ற டிசம்பர்௴ கல்கத்தாவில் கூடிய காங்கிரசிற்குச் சபாநாயகராகவிருக்கும்பொருட்டு இங்கிலாண்டிலிருந்து புறப்பட்டு வந்த திடம்பொருந்திய தேசாபிமானியாகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி அவர்கள் கடந்த 19௳ கலிடோனியா ஸ்டீமரில் ஏறி மறுபடியும் இங்கிலாண்டிற்குப் போய்விட்டார்.

காலரா.

கங்கா தீர்த்தத்தில் கடந்த சூரிய கிரகணதினம் ஸ்நாநம் செய்யும்பொருட்டு பிரதேசமிருந்து வந்த மூவாயிரம் பிரயாணிகள் தங்கியிருந்த காளிகாட் என்னுமிடத்தில் காலரா சம்பவித்துச் சிலர் இறந்து போய்விட்டனர்களாம்.

கவர்னர் சுற்றுப்பிரயாணம்.

கவர்னர் சர் ஆர்தர்லாலி அவர்கள் தம்முடைய துரைசானியுடனும், சகோதரர் லார்ட் வென்லாக் துடனும் இம்மாதம் செய்த சுற்றுப்பிரயாணத்தில் கொச்சி சமஸ்தானத்தையும் போய்ப் பார்வையிட்டனர். மேன்மை பொருந்திய விருந்தாளிகளின் வரவைக் கொச்சிராஜா மிகுந்த சம்பிரமமாய்க்கொண்டாடினர். இவர்கள் கொச்சியில் ஒரு நாள் தங்கியிருந்த பங்களாவைச் சீர்திருத்தி அலங்கரிப்பதற்கு மட்டிலும் ரூபாய் ஐயாயிரம் செலவு செய்தனர்.

விருந்து.

இம்மாதம் கவர்னர் செய்த சுற்றுப்பிரயாணத்தில் கவர்னர் உலவக்கோடு ரெயில்வே ஸ்டேஷனில் களிங்கோடு ராஜாவின் விருந்தினராயிருந்தனர்.

தீவிபத்து.

நிகழ் ஜனவரி௴ 18௳ சுக்கிரவாரம் சென்னை கோட்டைக்குள்ளிருக்கும் ரெவினியூ செக்ரட்டரி ஆபீசிலுள்ள பிராமண ரிஜஸ்டிரார் சிற்றுண்டி சாப்பிடுவதற்காகக் காபி காச்சும் யந்திரமாகிய ஸ்டோவில் காபிகாய வைத்துக்கொண்டிருக்கும்போது அந்த யந்திரம் வெடித்து ஆபீஸ் முழுதிலும் ஒரே புகைமயமாய்ப் போய்விட்டது. தீ பிடிப்பதற்குள் கோட்டையிலுள்ள அபாய எச்சரிக்கை மணிகள் அடிக்கப்பட்டு உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் கூடி தீயைப் பிரதமத்திலேயே அணைத்துவிட்டார்கள். இனி இந்த ஆபீசுகளில் "ஸ்டோவ்" யந்திரத்தை உபயோகப்படுத்தக்கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சென்னைத் தபால் இலாகா.

இப்போது சென்னையிலுள்ள தபாலாபீசுகளில் சில கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும் வேலையும் பட்பாடா செய்யும் வேலையும் ஆகிய இரண்டு வேலைகளை

யும் செய்து வரும் ஆபீசுகளிருக்கின்றன. சில கடித முதலியவைகளைமட்டும் பெற்றுக்கொண்டு பட்வாடா செய்யும் வேலையின்றியு மிருக்கின்றன. இப்படிக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டும் பட்வாடா செய்து கொண்டும் ஆகிய இரண்டு வேலைகளைச் செய்யும் ஆபீசுகள் இந்நகரில் 26 இருக்கின்றன. இந்த இருபத்தாறு தபாலாபீஸ்களுக்கும் ரெயில்வே மெயில் ஆபீசில் கடிதங்களைப் பொறுக்கி அனுப்புவது கால தாமத மாகிறதாம். ஆகையால் இந்த 26 ஆபீசுகளுக்குள் 12 ஆபீசுகளுக்கு பட்வாடா செய்யும் வேலையை எடுத்துவிட தபால் இலாகா அதிகாரிகள் உத்தேசித்திருக்கிறார்கள். லெட்டர்களை வெகு சிக்கிரத்தில் பட்வாடா செய்யும்பொருட்டும் ரிஜிஸ்டர் லெட்டர் முதலிய கையெழுத்துப் பெறவேண்டிய கடிதங்களைப் பட்வாடா செய்வதற்கும் பிரத்தியேகமாய் தபால் பியூன்களை நியமிக்கப் போகிறார்களாம்.

லார்ட் வென்லாக்.

நிகழ்மீ 24உ வியாழக்கிழமை ராய்பகதூர் அனந்தாசார்லு அவர்கள் லார்ட் வென்லாக் அவர்களுக்குத் தோட்டக்கச்சேரி விருந்து முதலியவைகள் தம்முடைய "லேக்சயிட்" என்கிற கிரகத்தில் நடத்திவைத்தனர். மேன்மை தங்கிய சர் ஆர்தர் லாலி தம்முடைய மனைவியாகிய லேடிலாலியுடன் தோட்டக்கச்சேரிக்குவந்திருந்தார்.

போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

சென்னை ராஜதானி போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் W. O. ஹார்ன் I. C. S. அவர்களுக்கு மார்ச்சுமீ 29உ முதல் 8-மாதம் 15-நாட்களுக்கு ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் S. W. G. கல்லி I. C. S. அவர்கள் அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இரக்கம்.

இந்த உலகத்தில் பிழைப்பதற்கு வகையின்றி கஷ்டம் பொறுக்காமல் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய மனிதர்களுக்கு அனுதாபத்துடன் புத்திமதி கூற இரக்ஷணிய சேனையைச்சேர்ந்த ஜெனரல் பூத் ஒரு "தற்கொலை விரோத ஆபீஸ்" ஏற்படுத்தி அதில் சில ஆபீசர்களையும் வைத்திருக்கின்றனராம்.

ஒரு தகுந்த நன்கொடை.

பம்பாயில் சர் கலாஜி ஜிகாங்கியர் என்பவர் பம்பாய் சர்வகலாசாலைக்கு ஒரு உன்னதமான மாளிகை கட்டும் பொருட்டு இரண்டுலக்ஷத்து இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றனர்.

இருப்புப் பாதை.

தஞ்சாவூர் ஜில்லாவில் திருத்துறைப் பூண்டிக்கும் வேதாரண்ணியத்திற்கும் இருப்புப்பாதை போடவேண்டுமென்று தஞ்சாவூர் ஜில்லா போர்டார் செய்த பிரேரேபனையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளாமல் முதலில் நீடாமங்கலம்,- மன்னார்குடி,- திருத்துறைப்பூண்டிக்கு ரயில்போடவேண்டுமென்கிற உத்தேசத்துடன் இந்தப்பாதையை சர்வே செய்யும்படியாக உத்தரவு செய்திருக்கிறார்கள்.

சென்னை கசாப்புக்காரர்கள்.

கடந்த மூன்றுவாரங்களாக சென்னை நகர் கசாப்புக்காரர்கள் கட்டுப்பாடு செய்துகொண்டு கடைகள் வைக்காமல் பிடிவாதமாயிருக்கிறார்கள். முனிசிபாலிட்டியார் ஆட்டின்பேரில் கசாப்புக்காரர்கள் கொடுக்கவேண்டிய ஒரு அணா வரியை இரண்டணாவாகச் செய்துவிட்டார்கள் என்பது கசாப்புக்காரர்களின் குறை. நகரில் மாமிசம் புசிப்பவர்களும், கிறிஸ்தவர்களும், ஐரோப்பியர்களும் ஆட்டுமாமிசம் அகப்படாமல் கஷ்டப்பட்டு வருகின்றார்கள். இவ்வகை ஜனங்கள் ஒன்று கூடி இதைக்குறித்து கவர்னருக்கு ஒரு மகசர் அனுப்பியிருக்கிறார்கள்.

உத்தியோக மாறுதல்.

தஞ்சாவூர் சப் ஜட்ஜியாக விருக்கும் மிஸ்டர் S. சுப்பிரமணிய பந்துலு அவர்கள் காக்கிநாடு சப் ஜட்ஜியாக மாற்றப்பட்டிருக்கின்றனர். சேலம் சப் ஜட்ஜியாக விருக்கும் மிஸ்டர் துரைசாமி அய்யர் தஞ்சாவூர் சப் ஜட்ஜியாக மாற்றப்பட்டிருக்கிறார். தஞ்சாவூர் ஜில்லாவில் கலெக்டருக்கு பெர்சனல் அசிஸ்டன்டாக விருந்த திவான் பகதூர் சாமிநாத அய்யர் சென்னை ரெவினியூ போர்ட்டில் ரெவினியூ இலாகா உதவி காரிய தரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்குப் பதிலாக டிப்டிகலெக்டர் ராவ்சாகிப் மிஸ்டர் ராகவய்யா B. A. அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேவஸ்தான வயிர ரவை.

பர்மாதேசத்திலுள்ள ஒரு கோவிலின் கோபுர உச்சியில் ஒரு விலை உயர்ந்த 28-காரட்டுள்ள வயிரவை பதிக்கப்பட்டிருந்ததாம். சந்திரிகையில்லாத காலத்தில் இந்த ரவை சந்திரிகைபோல் பிரகாசிக்குமாம். இரண்டு மூன்று மாதகாலமாக இந்த ரவையை கோபுர உச்சியில் காணோம். தேவஸ்தானத்தார் பூகம்ப அதிர்ச்சியில் இந்த ரவை கீழேவிழுந்து காணாமற் போயிருக்கவேண்டுமென்று எண்ணி சும்மா விருந்து விட்டார்கள். இப்போது அந்த ரவை பம்பாயில் கண்டு பிடிக்கப்பட்டு அதை விற்பனை செய்த ஆசாமிகளைத் தொடர்ந்ததில் ஆதியில் கோபுரத்தில் ஏறித் திருடினவன் அகப்பட்டு, அவனும் திருட்டுச் சொத்து வாங்கினவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பஞ்சம்.

சீனதேசத்தில் பஞ்சமுண்டாகி கோடிக்கணக்கான ஜனங்கள் போதுமான ஆகாரமின்றிக் கஷ்டப்பட்டு வருகின்றார்கள்.

பூகம்பம்.

சென்ற சூரியகிரகணதினத்தில் ஜமேய்க்காவிலுள்ள "கிங்கள் டௌன்" நகரில் பூகம்பம் உண்டாகி

மூன்று கோடி ரூபவுக் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாய்ப் போய்விட்டது மன்றி 400 ஜனங்கள் இறந்துபோய்விட்டார்கள். ஆயிரம்பேர் காயம் அடைந்திருக்கிறார்கள். பெரும்பாலான ஜனங்கள் அருகிலிருந்த காடுகளுக்குப் போய்விட்டார்கள். பூகம்ப அதிர்ச்சியுடன் அக்கினிபகவானும் பிரவேசமாக நகர் நாசமடைந்து விட்டது. மாக்ஷிமைதங்கிய ஏழாவது எட்வர்ட் மகாராஜா அவர்களும் மகாராணி அவர்களும் அனுதாபத்தந்தி அடித்திருக்கிறார்கள். பம்பாய் கவர்னராயிருந்த சர் ஜேம்ஸ் பர்கூசனும் இந்த பூகம்பத்தில் இறந்துபோய்விட்டார்.

ஆப்கன் தேச ஆமீர்.

அப்கானிஸ்தான் தேச அரசர் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கும்பொருட்டு வந்திருக்கிறார். இத்தேசத்தில் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் தங்களுடைய சைனியங்களை எம்மாதிரியாக வைத்திருக்கிறார் என்பதாகப் பார்த்துத் தம்முடைய தேச சைனியங்களைச் சீர்திருத்திக்கொள்ளவேண்டுமென்கிற நோக்கத்துடன் வந்திருக்கிறார். ஆப்கன் தேச அமீர் இந்தியாவின் மீது ருஷியர்கள்போலுள்ள வேற்றரசாங்கத்தார்கள் படையெடுத்து வராமல் பாதுகாத்து வருவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 16 லக்ஷ ரூபாய் கப்பம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அமீர் வரவை இந்தியா கவர்ன்மெண்டார் கொண்டாடி வருகின்றார்கள். கடந்த இரண்டு வாரங்களாக ஆக்ரா நகரில் அபரிமிதமான ராணுவக் கொண்டாட்டங்கள் நடந்து வருகின்றன. கவர்னர் ஜனரல் லார்ட் மின்டோவும், சேனாதிபதி லார்ட் கிச்சனரும் ஆக்ராவிற்கு வந்திருந்து அமீரைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு பல்விதமான கொண்டாட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இந்தியாகவர்ன்மெண்டார் அமீருக்கு ஒரு பெரிய விருந்து நடத்தி அதற்கு நம் தேசத்திலுள்ள சில சிற்றரசர்களையும் தருவித்திருந்தார்கள்.

அமீரின் தர்ம குணம்.

ஒரு நாள் ஆக்ராவிலுள்ள தாஜ்மகால் அரண்மனையில் அமீர் நடந்துகொண்டிருக்கும்போது ஒரு பட்டாள ஐரோப்பிய உத்தியோகஸ்தரின் கைக்குழந்தையை யாரோ தூக்கிவைத்துக்கொண்டிருந்தார்களாம். அக்குழந்தையைப்பார்த்த அமீர் உடனே அந்தக் குழந்தையைக் கொண்டுவரும்படிச் செய்து அதன் கழுத்தில் வைரரவைச்சரம் ஒன்றைத் தம்முடைய கரத்தால் அணிந்தனராம்.

அமீரின் குணாதிசயம்.

முகம்மதியர்கள் கொண்டாடிவரும் பக்ரீத்பண்டிகை சமயத்தில் அமீர் டில்லி நகருக்கு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கொண்டாட்டத்தை இந்த வருஷம் டில்லி முகம்மதியர்கள் 100 பசுக்கள் அடித்து விசேஷமாய்க் கொண்டாட உத்தேசித்து இந்தக் கொண்டாட்டத்தில் அமீரும் சேரும்படியாக வேண்டிக்கொண்டார்கள். பசுக்களைக் கொன்றால் இந்துக்களுடைய மனம் நோகுமென்றும், பசுக்களுக்குப் பதிலாக ஆடுகளைக் கொல்வதாக விருந்தால் தாம் இந்தக் கொண்டாட்டத்தில் சேர்வதாகவும் அமீர் பதில் கூறிவிட்டனர்.

யானையின் அறிவு.

பாங்காளத்தில் சான்த்தல் பார்க்கனாஸ் என்னும் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு காட்டிற்கு அருகில் சில யானைகள் கூடி வயலிலிருந்த பயிர்களை அழித்துக்கொண்டிருந்தனவாம். வயலுக்குடையவன் துப்பாக்கியால் ஒரு யானையைச் சுட்டுவிட்டான். மற்ற யானைகள் எல்லாம் அவனைத் துரத்திக்கொண்டு வரவே அவன் ஒரு குடிசைக்குள் மறைந்துகொண்டான். யானைகள் குடிசையைச் சின்னாபின்னம் செய்து கீழே தள்ள, இவன் நடுநடுங்கி அருகிலிருந்த ஒரு பெரிய மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். யானைகள் கோபம் கொண்டு சப்தித்து அந்த மரத்தைத் தும்பிக்கையாலும் கால்கைகளாலும் முறையே அடித்துதைத்துப் பார்த்தும் மரத்தைக் கீழே சாய்க்க முடியாமல் ஒரு பெருஞ் சப்தமிட்டன. அங்கே இன்னும் சில யானைகள் வந்து சேர்ந்தன. அவைகளும் கூடச்சேர்ந்து அந்த மரத்தை அசைத்துப்பார்த்தன. சாத்தியப்படவில்லை. மரத்தின் அடியில் ஜலம் ஊற்றினால், மரம் அடிவாரத்தில் சதுப்புண்டாகி மரம் அசையுமென்று இந்த யானைகள் நினைத்து, அவைகளில் சில அருகிலிருந்த ஊரணிக்குச் சென்று தங்களுடைய தும்பிக்கையில் ஜலம் ஏந்திக்கொண்டு வந்து மரத்தடியில் வார்த்து எல்லா யானைகளும் சேர்ந்து அசைக்க மரம் கீழே சாய்ந்தது. உடனே இந்த யானைகள் அந்த மனிதனைப் பிடித்துக்கொன்று பழிக்குப் பழி வாங்கிவிட்டன என்று நிகழ்மீ 10உ மதிராஸ் மெயில் பத்திரிகை கூறுகின்றது.

கர்னல் ஆல்காட்.

இந்தியா முழுதிலும் தியாசபிக்கல் சங்கங்கள் ஸ்தாபித்திருக்கும் கர்னல் ஆல்காட் அவர்களுக்கு அடையாற்றில் மிகுந்த தேக அசௌக்கியமாயிருக்கிறதென்றும் மிஸ்டர் அனிபீசன்ட் அம்மாளுக்குத் தந்திகொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கேள்விப்பட்டு விசனிக்கின்றோம்.

கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

"நீதிபாலன்."

இத் தலைப்பெயர்பூண்ட சிறந்த கதைப்புத்தகம் ஒன்று பழையகாலத்துக் கிழக்கதை போல்வதன்றி, இங்கிலீஷ் நாவல்களைப்போல், ஆண் பெண் இருபாலாருக்கும் இலேசாக விளங்கும்படி எளிய செந்தமிழ் வசனநடையில் படிக்குந்தோறும் உற்சாகத்தை யுண்டாக்கி, ஆச்சரியத்தையும், ஆநந்தத்தையும் தந்து அறிவை விசாலப்படுத்துமாறு, எழுதப்பட்டிருக்கின்றது. சுகந்தமலரில் வண்டுகள் மொய்ப்பது போல, புத்திமான்கள் இக்கதை வாசிப்பதில் தங்கள் புத்தியைச் செலுத்துவார்கள். சுவல்ப காப்பிகளே அச்சிட்டிருப்பதனால் உடனே அடியிற் கண்டிருப்பவர்க்கு எழுதிக்கொள்ளவும். இதன்விலை அணா 12. வி. பி. யுள்பட 0-14-0.

ஒரே தடவையில் ஐந்து காப்பி வாங்குவோர்க்கு 1-காப்பி இனம் தருவதுடன் தபால்சார்ஜ் இல்லாமலும் அனுப்பப்படும்.

☞ சே. கோ. மாசிலாமணி முதலியார் அண்டு கோ.
புக்செல்லர், ஜெனரல் மெர்ச்செண்டு, அண்டு கமிஷன் ஏஜெண்டு, செளகார்பேட்டை, மதராஸ்.

சத்கதா ரத்னவளி

"திருமாலுக் கடிமைசெய்" என்பது நமது மூதாட்டியாகிய ஔவையார் திருவாய்மலர்ந்ததிருமொழி. திருமாலானவர் காக்குந் தொழிலுடையவராதலால் அவரை நாம் உய்யும்பொருட்டு நாடோறும் பணிதல் அவஸ்யத்தினும் அவஸ்யமாகும். லக்ஷ்மீகாந்தனாகிய புண்டரீகாக்ஷப் பெருந்தகையாம் கேசவப்பெருமானை மனமொழி மெய்களால் வணங்கி அவனுடைய திவ்ய திருநாமங்களை வாயால் உச்சரித்து வழிப்படாது செருக்குற்றுத்திரியும் மாந்தர்கள் அதோகதியில் ஆழ்ந்தமிழ்வார்கள் என்பதனை அடியில் நிரூபிக்கின்றோம்.

தீயவரின் செருக்கடக்கி, குணத்தூய்மையுடைய சற்சனரை உலகத்தில் நிலைநிறுத்துமாறு ஸ்ரீமன் நாராயணனே கிருஷ்ணபரமாத்மாவாக உலகிற் றோன்றினரென்பது நூற்றுணிபாகும். ஒருநாள் துவாரகையில் கிருஷ்ணமூர்த்தியானவர் தமதன்பரோடு சேர்ந்து வீதிவழியே கோவிந்த நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு உத்ஸாகத்தோடு சென்றுகொண்டிருந்தார்.

"கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே" என்றபடி, அவ்வீதிவழியேயுள்ளதோர் வீட்டின் ஒரு முகப்பில் நின்றிருந்த இடைப்பெண்ணொருத்தி, தேவநாம சங்கீர்த்தனம் செய்து தம்மடியவரோடு செல்லும் புண்டரீகாக்ஷனாகிய கண்ணனை விளித்து "அடே கண்ணா! மணிவண்ணா!! ஏது மெல்ல மெல்ல இவ்வீதி வழியாகவும் வர ஆரம்பித்துக்கொண்டாய்? சங்கதி தெரியாமற் சங்கீதம் பாடுகின்றனையோ? ஜாக்கிரதை! உன்னுடைய மாயவித்தை என்னிடம் செல்லாது. துவாரகையிலுள்ள பெண்கள் அத்தனைபேருடைய கற்பையும் நீ கெடுத்தாயென்பதை நான் நன்குணர்வேன். அதுபோல் என் அருமருந்தன்ன ஒரே மகனுக்கு வாய்த்துள்ள பெண்ணின் கற்பைக் கெடுக்க முயல்வையேல் உன்னை மரத்திற் பிணித்து, மத்தாற் புடைத்து மானபங்கஞ் செய்வேன். மற்றவர்களை மயக்கியதுபோல் என்னை உன் மாய்கையிற் சிக்கவைக்க முடியாது. என் றின்னணம் அவ்விடைப்பெண் கிருஷ்ணமூர்த்தியை வலிந்தழைத்துச் சண்டையிட்டாள்.

உலகுண்ட திருவாயான், உள்ளே சீற்றங்கொண்டு, வெளியே இன்முகங் காட்டி, "காளீ! வலிந்தழைக்கின்றனையோ! வழியே சென்றுகொண்டிருக்கும் என்னை வலிந்தழைத்து அயோக்யதையாய்ப் பேசுவது உனக்கழகாமோ? என்பால் உனக்கிவ்வளவு சீற்றமுண்டாதற்கு நான் உன்மாட்டுச்செய்த கொடுமை யென்னையென்றார்.

காளி:—நீ ஜகஜாலத்தில் வல்லவனென்பதும், பெண்களின் கற்பைக்கெடுப்பதே உன் ஜன்ம சுபாவமென்பதும் எனக்கு நெடுநாட்களாகத் தெரியும். இவ்வீதி வழியே வாராத நீ இன்று உல்லாஸ நடையோடு பாடிக்கொண்டு செல்வதை யோசித்தால் யாதோ தீங்கியற்ற எண்ணிவந்துள்ளாயென் றெனக்குத் தோற்றிற்று. ஆகவே உன்னை முன்னதாக எச்சரிக்கலானேன். ஜாக்கிரதை! கிருஷ்ணா! "மீன் குட்டிக்கு நீச்சற் கற்பிப்பாருமுண்டோ" என்று கைகொட்டி நகைத்தாள்.

கிருஷ்ணமூர்த்தி, காளீ! நீ கூறியவாறு எனக்குத் துர்க்குணம் சுபாவமா யமைந்துள்ளதெனின், அது நீங்குவது கூடுமோ? கூடாதாதலால், நீ இருக்கவேண்டிய ஜாக்கிரதையிலிரு வென்று கூறி, தம்மடியவரோடு சேர்ந்து சென்றார்.

ஒருநாள் காலை ஒன்பதரைமணி யிருக்கலாம். காளியின்வீடு கபாடபந்தனஞ் செய்யப்பட்டிருந்தது. அடியின் பட்டுஞ்ச அங்கவஸ்திரம் உடுத்து, மேலே சரிகைவேஷ்டி போர்த்திருந்தவொருவன், மூடப்பட்டிருந்த அக்கதவைப்பலமாகத் தட்டினான். உள்ளிருந்து "யார் அது? நாராயணனா?" என்ற சத்தம் உண்டாயிற்று. "ஆம் அம்மா; கதவைத்திற" என்றான் வெளியே யிருந்த நாராயணன். கதவைத்திறந்து வெளியே வந்த காளியம்மாள் நாராயணன் உடம்பு நடுக்குறுவதைக்கண்டஞ்சி "என்னடா மகனே! காலையில் நன்றாய்ச் சென்ற உனக்கு இப்போ திவ்வாறுண்டாவானேன்? என்ன சங்கதி? எங்குப்போனாய்? என்ன தின்றாய்? என் உன் தேகம் இவ்வாறு நடுக்குறுகின்றது? மகனே! உள்ளே வா, மஞ்சத்திற் சயனித்துக்கொள்" என்று ஆற்றாமையோடும், மனோசஞ்சலத்தோடும் அவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் மஞ்சத்திற்கிடத்தி, தானும் தன் மருமகளும் இருபுறமிருந்து அவன் கால்களைப்பிடித்தார்கள். நாராயணன தேகமுழுதும் முத்துமுத்தாய் வியர்வையெழுந் தொழுகியது. சுரம் அதிகரித்தது. நாவுலர்ந்து மஞ்சத்திற் புரளலானான். ஜன்னி கண்டவர்போல் அலறி யெழுந்துட்காருவான். சமீபத்துள்ள காளியின் கன்னத்தில் ஓங்கியறைந்து அவள் கூந்தலைப்பிடித்திழுத்துக் கீழே வீழ்த்துவான். எழுந்துநின்று அவள் கையைப்பிடித்திழுத்துச் சுவற்றில் மோதுவான். இச்செய்கைகளால் அவளுக்குப் பொறுக்கமுடியாத உபத்திரவம் நேர்ந்தபோதிலும், தன் மகன்மேலுள்ள பிரீதியால் மனம்பொறுத்திருக்கலானாள். உண்மையறியாத நாராயணன் மனைவியும் புருஷனுடைய விபரீத குணங்களைக்கண்டு, அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய்க் கிடந்தாள். காளியம்மாள் நோயாளியைக் கட்டித்தழுவி மகனே! நீ என்னை ஏசினும் இகழினும், குத்தினும், கொலைசெய்யினும் எனக்கிஷ்டமே. என் கண்மணியாகிய உனக்குத் திடீரென்று இத்தகைய குணமாறுபாடு நேர்வானேன்? என் செல்வமே! உன்னைப் பெற்றதாயாகிய என்னிடம் உண்மை கூறலாகாதா? என்று வேண்டியழுதாள். தேவர்களும் தீண்டரிய திருத்தாளால் நாராயணன் அவளை எட்டி யுதைக்கலானான். உதையுண்ட காளி கீழே வீழ்ந்து சின்னேரம் மூர்ச்சித்திருந்தாள். பின்னர் அவள் திடுக்கிட் டெழுந்து நாராயணனை நெருங்கி, மகனே! மகனே!! நீ இவ்வாறு நோயால் துன்புறவும், பாவி நான் கண்டு உயிர்பெற் றிருக்கவும் ஆயிற்றே என்று கதறினாள். இஃதிங்ஙனநிற்க,

"ஐயன் திருக்கூத்தை யாரறிவார்-பேருலகீர்!" என்று பெரியோர் கூறுகின்றார்கள். தெய்வத்தினிடத்தில் நமக்கென்ன சேஷ்டை-யென்று அக்காளி யென்பவ ளிருக்கலாகாதா? கிரகசாரம் யாரைவிட்டது?

"வாய்க்கொழுப்பு சீலையில் வடிக்குது" போலாயிற்று காளியின் கதி. என்ன செய்வாள் பாவம்! "அரசன் அன்று கொல்லும். தெய்வம் நின்றுகொல்லும்" என்னும் பழமொழியின் சாரத்தை அவளறியாள். நாம் இயற்றியுள்ள பழமொழிக் கதையைப்படித்தால் இப்படிப்பட்ட வாக்கியங்களின் ரகஸ்யார்த்தங்களெல்லாம் விளங்கும். "கொட்டிக்கிழங்கு விண்டுகிறவளுக்குக் - கோயிலில் வந்து ஆடத் தெரியுமா" என்பதுபோல, காளியம்மாள் படிப்பு வாசனையே கிடையாதவளாதலால், அவள் பழமொழிக் கதையை யெவ்வாறு படிக்கப்போகின்றாள்? துன்பம், துன்மார்க்கத்தனம், வரம்புமீறிய செய்கை, தீக்குணம், பிறர் நகைக்கத்தக்க ஒழுக்க முதலியவெல்லாம், சிறிது நன்றாய் வாசித்த பெண்களிடத்தில் காண்பது அரிதாயிருக்கின்றது. நல்ல தாயைப் பெறுவதும் பூர்வ புண்ணிய விசேடமேயாதலால், தவக்குறைவுடைய நாராயணனுக்கு இக்காளியம்மாள் தாயாய் வாய்த்தது அவனுடைய பூர்வசன்மமேயாகும்.

பகல் பன்னிரண்டுமணி யிருக்கலாம். காளியம்மாள் வீட்டுத் தெருக்கதவை யாரோ பலமாய்த் தட்டும் சத்தம் கேட்டது. அவள் தேககுண மில்லாத அந்த நாராயணனை விட்டு நீங்கி தெருக்கதவருகில்வந்து "யாரது?" என, "நான்தானம்மா நாராயணன்; கதவைத்திற" என்னும் சத்தம் கேட்கவே, காளியம்மாள் கதவைத்திறந்தபோது மற்றொரு நாராயணன் உள்ளேநுழைந்தான். காளி வாய் பேசா மௌனத்தில் சின்னேர மிருந்து, உட்சென்று மஞ்சத்திலிருக்கும் நாராயணனிடம் சென்று அவனை உற்று நோக்கினாள். இருவரும் ஒரே ரூப முடையவர்களா யிருக்கக் கண்டாள். உடனே சில தினங்களுக்குமுன் வீதிவழியே சென்றுகொண்டிருந்த கிருஷ்ணனைத் தான் வலிய அழைத்து வைத நினைவு அவளுக்கு உண்டாயிற்று. அதனால் தேக நலிவோடு மஞ்சத்திற் கிடப்பவனே தன்மகனென்றும், இப்போது அவனைப்போல் உள்நுழைந்தவன் மாயகிருஷ்ணனென்றும் தீர்மானித்தாள்.

காளி, இவ்விஷயத்தைத் தன் மருமகளிடம் தெரிவித்தாள். இருவரும் சேர்ந்து அப்போது வந்த உண்மை நாராயணனைப் பிடித்துத் தூணிற்கட்டி, 'அடே மாயகிருஷ்ணா! என் மகன் நலிவுற்றிருக்கையில், இதுதான் சமயமென்று உன் மாயவித்தையைக் காட்டவந்தவிட்டையோ? உன்னுடைய வல்லமை என்னிடம் செல்லாதென்று முன்னமே உனக்குத் தெரிவித்தேனே கேட்டையாவென்று கூறி, கட்டையாலும் கம்பாலும் மொத்து மொத்தென்று மொத்தினார்கள். உண்மை நாராயணனுக்கு ஒன்றுந் தோன்றாமல் கண்ணீர்விட்டுக் கலங்கலானான். மேலுமேலும் பலத்த அடி விழவே, நாராயணன் மூர்ச்சித்தான். அவன் முடி சாய்ந்தது. இவ்விஷயத்தை நந்தகோபனிடம் தெரிவிக்க இருவரும் உட்சென்றனர். அப்போது கிருஷ்ணபரமாத்மா பாற்கடலில் யோக நித்திரை செய்பவர்போல் கண்மூடியிருந்தார். அவர்தம் திருக்கரத்தில் சங்கு சக்கரம் பிரகாசித்தன. எம்பெருமான் திருவுருவைக்கண்டவுடனே காளிக்கு நல்லறிவு ஜனித்தது. கோபிகாரத்னத்தைக் காளிதேவி அலம் வந்து பணிந்து நமஸ்கரித்துக் கைகட்டி வாய்பொத்தித் தன் குற்றத்தை க்ஷமித்து ஆட்கொள்ளும்படி வேண்டி நின்றாள். அவளுடைய மருமகளும் அங்ஙனமே பணிந்து நின்றாள். கண்ணன் புன்னகைபுரிந்து, அவ்விடம்விட் டெழுந்தருளி, கட்டுண்டு முடிசாய்ந்து கிடக்கும் நாராயணனிடம் வந்து கட்டை யவிழ்த்து அவன் தேகத்தைப் பரிசித்தலும், அவனுடைய உபாதைகளெல்லாம்தீர்ந்து எழில் பெற்று விளங்கினான்.

பின்னர் ஸ்ரீ கண்ணபிரான் காளியம்மாளுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி, நாராயணனையும் அவன் மனைவியையும் ஆசீர்வதித்து, நல்வரமீந்து அந்தர்த்தான மாயினர்.

"தெய்வமிகழேல்" என்று நமது மூதாட்டியாகிய ஔவை நமக்குக் கற்பித்ததற்காக நாம் அவள் வாய்க்குக் கற்கண்டிடுவதற்கில்லையே யென்று வருந்துகின்றோம். இச்சிறுகதையால் தெய்வத்தை இகழலாகாது என்று விளங்குவதால் அறிவுடைய மற்றை மனிதர்களை இகழலாமென்று நினைக்கலாகாது. காளி, கிருஷ்ண பரமாத்மாவை நேரே இகழ்ந்ததனால், அவளுக்கு நல்லறிவுண்டாகும்படி ஒரு சிறிய திருவிளையாடல் இயற்றிப் பின்னர் அவர்களை ரக்ஷிக்கலானார். அவனுடைய அடியவரை அவள் நிந்தித்திருப்பாளேயானால், அப்போதேஅவளை அதோகதியாக்கியிருப்பார் என்று இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்

அவிபக்த ஹிந்து குடும்பம்:—அவிபக்த ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த ஒரு மெம்பர் கடனாளியாகப் போய்விட்டான். கடன் கொடுத்தவர்கள் இவன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற, குடும்பத்தில் இவனுக்கிருக்கும் பாகம் கோர்ட்டாரால் ஏலம் போடப்பட்டது. கோர்ட் ஏலத்தில் ஒருவன் இந்த பாகத்தை வாங்கிக்கொண்டான். இப்படி பாகத்தைவாங்கிக்கொண்டவன், தன் பாகத்தைப் பிரித்துக்கொடுக்கும்படியாக ஷை குடும்பத்தின் இதர மெம்பர்களைக் கட்டாயப்படுத்த சி. பு. கோ. 318-வது பிரிவின்படி கோர்ட்டில் மனுசெய்து கொண்டான். சி. பு. கோ. 318-வது பிரிவின்படி அம்மாதிரி உத்தரவு கோர்ட்டார் செய்யமுடியாது என்று சொல்லி மனுவைத்தள்ளிவிட்டார்கள். இப்படி கோர்ட்டார் மனுவைத்தள்ளியது, பாகத்தை வாங்கியவன், பிந்தி தான் வாங்கின பாகத்தைப் பெறுவதற்குக் கொண்டு வரவேண்டிய பாக வியாஜ்ஜியத்திற்குத் தடையா யிருக்கமாட்டாது.—ஏழுமலைசெட்டி v. சீனிவாசசெட்டி இ. லா. ரி. 29 சென் 294.

டிக்கிரியை நிறைவேற்றல்:—டிக்கிரிபெற்றவனும் டிக்கிரி கடனாளியும் கோர்ட்டுத் தகவலன்றி டிக்கிரிக் கடனைத்தீர்த்து ஒழுங்குபடுத்திப் பைசல் செய்துகொண்டால் டிக்கிரி பெற்றவன் அப்படி டிக்கிரியைப் பைசல் செய்துகொண்டதாகக்கோர்ட்டில் சர்ட்டிபிக்கேட் தாக்கல் செய்யவேண்டுமென்று சி. பு. கோ. 258-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி கோர்ட்டுத் தகவலன்றி டிக்கிரிக் கடனை பைசல் செய்துகொண்டதைப்பற்றி கோர்ட்டில் சர்ட்டிபிக்கேட் தாக்கல் செய்யாமல் போனது டிக்கிரியை நிறைவேற்றுவதற்குத்தடையாயிருக்குமென்று கக்ஷி சொல்லக்கூடாது.—கணபதி அய்யர் v. செங்காரெட்டி இ. லா. ரி. 29. சென். 312.

மைனர், கார்டியன், சர்ட்டிபிக்கேட்:—ஒரு மைனர் தரப்பில் கார்டியனாகவாவது அல்லது அடுத்த சிநேகிதனாகவாவ திருந்து வியாஜ்ஜியம் கொண்டுவந்தவன் சமாதானம் செய்துகொள்ள விரும்பினால் கோர்ட்டாருடைய அனுமதியைப் பெறவேண்டுமென்று சி. பு. கோ. 462-வதுபிரிவுகூறுகின்றது. மைனர்தரப்பில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற்ற ஒரு கார்டியன் சி. பு. கோ. 462-வது பிரிவின்படி சமாதானமாகப்போகக் கோர்ட்டார் அனுமதி பெறாமல் சமாதானம் செய்துகொண்டால் இந்த சமாதானத்தை சி. பு. கோ. 258-வது பிரிவின்படி கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு சர்ட்டிபிக்கேட் செய்யமாட்டார்கள். அருணாசலம்செட்டி v. ராமனாதன் செட்டி இ. லா. ரி. 29. சென். 309.

பஞ்சாயத்தார் தீர்மானம்:—பஞ்சாயத்தார் தீர்மானத்தைக்கோர்ட்டில் தாக்கல்செய்யும்படி சி. பு. கோ. 525-வது பிரிவின்படி கோர்ட்டாருக்குச் செய்துகொண்ட ஒரு மனுவின்பேரில் கோர்ட்டார் செய்யும்

உத்தரவு டிக்கிரியாக எண்ணப்படவேண்டும். இந்த உத்தரவிற்கு விரோதமாக அப்பீலும் செய்து கொள்ளலாம். எந்த விவகாரத்தைத் தீர்க்கும் பொருட்டு பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்பட்டார்களோ, அந்த விவகாரத்திற்கு மட்டிலும் அவர்கள் தீர்ப்பு சொல்லவேண்டும். அதில் வேறே விவகாரங்களைக்குறித்து அவர்கள் தீர்ப்பு சொல்லியிருந்தால் அப்படிப்பட்ட தீர்ப்பு கோர்ட்டாரால் தாக்கல் செய்துகொள்ளப்படமாட்டாது.—திருவேங்கடத்தய்யங்கார் V. வைத்தியநாத அய்யர். இ. லா. ரி. 29 சென். 303.

தானபத்திரம்—ஒரு விதவைக்கு செய்து கொடுக்கப்பட்ட தானப்பத்திரத்தில் இவளுக்கு ஒரே குமாரத்தியிருக்கிறாள் என்றும், தானம் செய்யப்படும் நிலம் விதவை இறந்துபோனவுடன் குமாரத்தியைச்சேரவேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தால் தானம் விதவைக்கும் அவளுடையகுமாரத்திக்கும் சேர்ந்துசெய்யப்பட்டதாக எண்ணக்கூடாது. தானம் விதவைக்கு மட்டிலும் செய்து கொடுக்கப்பட்டதென்றும் தானம் செய்துகொடுக்கப்பட்ட நிலத்தை அனுபவிக்கவேண்டிய பாத்தியதை விதவைக்கு மட்டிலும்தானிருக்கிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.—ரெங்கசாமி நாயக்கன் V. ஞானம்மாள் இ. லா. ரி. 29 சென். 300.

பயித்தியம் பிடித்தவனுக்கு கார்ட்டியன் நியமிப்பது:—பயித்தியம் பிடித்த ஒருவனுக்கு சொத்திருக்கிறதென்றும் அவனுடைய சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்யவும் அவனுக்கு கார்டியனாகவும் கோர்ட்டார் ஒருவரை நியமிக்கவேண்டுமென்று 1858-வது ஞூ்த்திய 35-வது பிரிவின்படி ஒரு மனுச்செய்துகொள்ளப்பட்டது, பிரஸ்தாப பைத்தியகாரனுக்கு யாதொரு சொத்துமில்லை என்று எதிர் மனு ஒன்று செய்துகொள்ளப்பட்டது. பயித்தியகாரனுக்குச் சொத்தில்லை என்று எதிர் மனு வந்ததை முன்னிட்டு, கார்டியன் நியமிக்கும்படி செய்துகொள்ளப்பட்ட மனுவை கோர்ட்டார் தள்ளிவிடக்கூடாது. பிரஸ்தாப பயித்தியகாரனுக்கு சொத்திருக்கிறதா இல்லையா என்று விசாரணை நடத்தியே மனுவை பைசல் செய்யவேண்டும். லக்ஷிமி அம்மாள் V. ரெங்கத்தம்மாள் இ. லா. ரி. 29 சென். 310.

பேந்தகம்:—மூன்று சகோதரர்கள் சேர்ந்து தங்களுடைய நிலத்தை ஒருவனுக்குக் கிரயம் செய்து கிரயசாசனமும் எழுதிக்கொடுத்திருந்தார்கள். கிரயசாசனமும் கிரமமாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுமிருந்தது. விக்கிரயம் செய்துகொடுத்த இரண்டு மாதங்களுக்குப்பின்பு கிரயம் பெற்றுக்கொண்டவன் ஷை சகோதரர்களுள் ஒருவருக்கு அடியிற் கண்டபிரகாரம் ஒரு எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்தான்:—"நீர், பிரத்தியாரிடம் கடன் வாங்காமல் சுயமாய்ச் சம்பாதித்து 1901-ஞு ஜனவரிமீ 29உ ரூபா. 350 எனக்குக் கொடுத்தால் இந்த நிலத்தை உமக்கு நான் திரும்பி விற்கிரயம்செய்து கொடுத்துவிடுகிறேன். அப்படி நீர் மேலே சொன்ன தேதியில் பணம் கொடுக்காவிட்டால் உமக்கு நான் விற்கிரயம்செய்து கொடுக்கமாட்டேன்" என்று அந்த எக்ரிமெண்டில் எழுதப்பட்டிருந்தது. இந்த எக்ரிமெண்டால் கிடைத்திருக்கும் சுதந்தரத்தை எக்ரிமெண்டு எழுதி வாங்கினவன் வேறொருவனுக்கு, ஆசயின் செய்துவிட்டான். இவன் அந்த எகிரிமெண்டு பிரகாரம் பணத்தைச் செலுத்தி ஷை நிலத்தைக் கிரயம் செய்து கொடுக்கும்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். ஜில்லாக்கோர்ட்டார், கிரயசாசனத்தையும் எகிரிமெண்டையும் சேர்த்து யோசிக்கின் நிலம் பெந்தகம் வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறபடியால் நிலத்தைத் திரும்பி கிரயசாசனம் செய்து கொடுத்துவிடும்படி வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு சொன்னார்கள். அப்பீலில் நிலத்தை வாங்கிக்கொண்டவனுக்கு மூன்று சகோதரர்களும் சேர்ந்து கிரய சாசனம் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். எகிரிமெண்டு என்கிற எதிரிடை ஒரு சகோதரன் பேரால்மட்டும் வாங்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இரண்டும் தனித்தனி விவகாரங்களாக விருக்கின்றனவே யொழிய ஒன்றல்ல. ஆகையால் இந்த விவகாரத்தைப் பந்தக விவகாரமாக நினைக்கமுடியாது. மேலும் எகிரி மெண்டால் கிடைத்திருக்கும் சுதந்தரத்தை எக்கிரி மெண்டு எழுதிவாங்கிக்கொண்டவன் தான்மட்டிலும் அனுபவிக்கலாமே தவிர அந்த சுதந்தரத்தை அசயின் செய்வதற்கு அவனுக்கு யாதொரு சுதந்தரமுமில்லை என்று தீர்மானித்தார்கள். உத்தண்ட முதலி V. ராகவாசாரி. இ. லா. ரி. 29 சென். 317.

THE INDIAN STAMP LAW.

இந்துதேச முத்திரைக்கடிதாசியைக் குறித்த சட்டம்.

முத்திரைக் கடிதாசியைக்குறித்த சட்டத்தின் வரலாறு.

முத்திரைத்தீர்வை ஏற்பாடு முதல் முதல் டச்சுக்காரர்களால் 1624-ஞூ்த்தில் உண்டாக்கப்பட்டது. இதைப்பார்த்துக்கொண்டு இங்கிலாண்டு தேச அரசாங்கத்தார்கள் பிரன்சிக்காரர்களுடன் சண்டை போடுவதற்குப் பணம் சேர்க்கும்பொருட்டு தங்கள் தேசத்தில் 1694-ஞூ்ம் முத்திரைத் தீர்வை ஏற்பாட்டை உண்டாக்கினார்கள். அதன் பிறகு இங்கிலாண்டு தேசத்தை மகாராணி ஆண்டுவந்த காலத்தில் 1702-ம் வருஷம் ஒரு முத்திரைத்தீர்வைச் சட்டம் பாஸ் செய்விக்கப்பட்டது. அதன் பிறகு இங்கிலாண்டில் 1815, 1850, 1870, 1891-ஆகிய இந்த வருஷங்களில் முத்திரைத் தீர்வைச்சட்டம் சீர்திருத்தி பாஸ் செய்விக்கப்பட்டன.

இந்தியாவில் முதலில் பங்காள மாகாணத்தில் 1791-ஞூ்த்தில் பாஸ் செய்விக்கப்பட்ட 6-வது ரெகுலேஷனால் முத்திரைத் தீர்வைகள் போடப்பட்டு வந்தன என்று தெரியவருகின்றது. சென்னை மாகாணத்தில் 1801-ஞூ முதல் அமுலுக்கு வந்த 8-வது ரெகுலேஷன் பிரகாரம் விதிக்கப்பட்டு வருகின்றன. பம்பாய் மாகாணத்தில் 1815-ஞூ முதல் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் மேற் கூறப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் 1860-ஞூ்ம் வரையில் முத்திரைத்தீர்வைகளைக் குறித்துப் பல ரெகுலேஷன்கள் பிறப்பிக்கப்பட்டுவந்த கவர்னர் ஜெனரல் ஆலோசனை சபையாரால் அமுலுக்கு வந்தது.

1860-ஞூ்த்தில் ஆலோசனை சபையிலிருக்கும் கவர்னர் ஜெனரலால் பாஸ் செய்விக்கப்பட்ட 36-வது முத்திரைத்தீர்வை சட்டம் மேற்சொல்லப்பட்ட மூன்று மாகாணங்களில் அமுலிலிருந்த ரெகுலேஷன்களை எல்லாம் ரத்துசெய்து பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் ஒரே சட்டமாக அமுலுக்கு வந்தது. ஆகவே இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் விதிக்கப்பட்டு வரும் முத்திரைத் தீர்வைகள் பெரும்பாலும் மேற்சொன்ன ரெகுலேஷன்களையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்களால் பாஸ் செய்விக்கப்பட்ட 1860-வது ஞூ்த்திய 36-வது ஆக்ட், 1862-வது ஞூ்த்திய 10-வது ஆக்ட், 1869-வது ஞூ்த்திய 18-வது ஆக்ட், 1879-வது ஞூ்த்திய 1-வது ஆக்ட், தற்காலத்தில் ஜாரிதத்திலிருக்கும் 1879-வது ஞூ்த்திய 1-வது ஆக்ட் ஆகிய இந்த ஆக்ட்டுகளைப் பொருத்ததாயிருக்கின்றன. இங்கிலாண்டு தேச முத்திரைத் தீர்வைச் சட்டத்தைப் பெரும்பாலும் தழுவிய இந்தியா தேச முத்திரைத்தீர்வை சட்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் முக்கிய கருத்து என்னவென்றால், கவர்ன்மெண்டார் தங்களுக்கு ஒரு வருமானம் உண்டுபண்ணிக் கொள்ளும் பொருட்டு இததேசத்தில் முத்திரைத் தீர்வைகள் போட்டு வருகிறார்கள். சட்டப் பிரகாரம் கவர்ன்மெண்டார் பிறப்பிக்கும் முத்திரைக் கடிதங்கள் ஜனங்கள் பணம் கொடுத்து வாங்கவேண்டுமென்று முத்திரைத் தீர்வைச் சட்டம் ஆக்கியாபிக்கின்றது. கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முத்திரைத் தீர்வை விதிகளை நிராகரித்தவர்களுக்கு அபராதம் விதிக்கவும் பொதுவாக முத்திரைத் தீர்வையால் கவர்ன்மெண்டாருக்கு வரக்கூடிய வருமானத்தைப் பாதுகாக்கவும் முத்திரைத் தீர்வைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. பழையகால ஆதரவுகள் போர்ஜரி செய்யப்பட்டிருந்தால் அதைக்கண்டுபிடிக்கவும் முத்திரைத் தீர்வை சட்டம் உதவிசெய்யும். முத்திரைக் கடிதங்களில் அப்போதைக் கப்போது ஒரு அடையாளம் போடப்படுகிறபடியால் இந்த அடையாளத்தைக்கொண்டு, அந்த ஆதரவு போர்ஜரி செய்யப்பட்டிருந்தால் கண்டு பிடித்துவிடலாம். உதாரணமாக ஒருவன் ஒரு வியாஜ்ஜியத்தில் 1855ம் வருஷத்தில் தனக்கு செய்துகொடுக்கப்பட்டதாக தாத்பரியப்படும் ஒரு கிரயசாசன ஆதரவை ஆஜர்படுத்தினான். கோர்ட்டார் இந்த முத்திரைக் கடிதத்தைப் பரிசோதனை செய்ததில் அதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடையாளமும் ஒரு கிரீடமும் V. R. என்கிற எழுத்துக்களும் போடப்பட்டிருந்தன. ஆனால் இவ்விதமான அடையாளம் போட்ட முத்திரைக் கடிதம் 1859-ஞு வரையில் செய்யப்படவில்லை. மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி இந்தியா தேசத்தை நேரே ஆளப்புகுந்த 1859-ஞு்த்திற்குப் பிறகுதான்மேற்சொல்லப்பட்ட அடையாளங்கள் போட்ட முத்திரைக் கடிதங்கள் கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்டன. மேற்சொன்ன கிரய சாசன ஆதரவு பிறந்ததாக சொல்லப்படும் 1855ம் வருஷத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் பிறப்பிக்கப்பட்ட முத்திரைக் கடிதத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட முத்திரைக் கடிதம் என்று காண்பிக்கும்பொருட்டு E. I. C. என்ற எழுத்துக்கள் அடையாளமாகப் போடப்பட்டிருந்தன. ஆகையால் பிரஸ்தாப கிரயசாசன ஆதரவு போர்ஜரி செய்யப்பட்ட ஆதரவு என்று தீர்மானிக்கப்பட்டது.

THE INDIAN STAMP ACT.

ACT II OF 1899.

இந்து தேச முத்திரைத் தீர்வையைக் குறித்த 1899-வது ஞூ்த்திய இரண்டாவது ஆக்ட்.

ஷெட்யூல் நெ. 1.

ஆதரவுகளுக்கு முத்திரைத் தீர்வை.

1. கடனை ஒப்புக்கொள்வது:—தொகையிலாவது விலையிலாவது இருபது ரூபாய்க்கு மேற்பட்ட கடனைக்குறித்துச் சாட்சியமாக ருஜு கொடுக்கும்பொருட்டு (யாதொரு சவுகாருடைய பாஸ் புஸ்தகம் தவிர வேறே) யாதொரு புஸ்தகத்திலாவது தனித்துண்டு கடிதாசியிலாவது கடன் வாங்கிக்கொண்டவனாலாகிலும் அவன் பட்சத்திலாகிலும் எழுதப்பட்டாவது கையெழுத்து செய்யப்பட்டாவது, அந்தப் புஸ்தகம் அல்லது கடிதாசி கடன் கொடுத்தவனுடைய ஸ்வாதீனத்தில் வைக்கப்பட்டிருந்தால், ஆனால், அவ்வாறு ஒப்புக்கொள்வதிலே, கடனைக் கொடுத்துவிடும்படியாக யாதொரு வாக்குத்தத்தமாவது வட்டி கொடுப்பதாக அல்லது யாதொரு சரக்கு அல்லது சொத்தை ஒப்பிப்பதாக யாதொரு நிபந்தனையாவது இருக்கக்கூடாது. இந்த ஆதரவிற்குச் சரியான முத்திரைத் தீர்வை ஒரு அணா.

குறிப்பு.

ஒரு ஆதரவு, இந்த ஆர்ட்டிக்கிளின் பிரகாரம் கடனை ஒப்புக்கொள்ளும் ஆதரவாக எண்ணப்படவேண்டுமானால் அதில் மூன்று முக்கிய அம்சங்கள் பொருந்தியிருக்கவேண்டும் முதலாவது அந்தஆதரவு கடனைப் பெற்றுக்கொண்டவனாலாவது அல்லது அவன் தரப்பில் இன்னும் வேறே யாராலாவது எழுதப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டிருக்கவேண்டும். அப்படி கடனைப் பெற்றுக்கொண்டவனுடைய கையாலாவது அல்லது அவனுடைய தரப்பு மனிதனுடைய கையாலாவது இந்த ஆதரவு எழுதப்படாமல் போனபோதிலும் அவனால் கையெழுத்து செய்யப்பட்டிருக்கவேண்டும். இரண்டாவது கடனைப் பெற்றுக்கொண்டவனால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதரவு கடன் கொடுத்தவன் வசமிருக்கவேண்டும் மூன்றாவது இந்த ஆதரவில் கடனைத் திருப்பிக்கொ

டுக்கிறதைக் குறித்தாவது அல்லது வட்டி விஷயத்தைக் குறித்தாவது அல்லது பெற்றுக்கொண்ட கடனுக்காக சாமான் அல்லது சொத்து முதலியவைகள் கொடுப்பதாக செய்யப்படக்கூடிய வாக்கு தத்தத்தைப்பற்றியாவது யாதொரு ஷரத்தும் எழுதக்கூடாது.

கடன் கொடுத்தவன் தன்னுடைய ஞாபகத்திற்காகக் குறித்துவைத்துக்கொள்ளும் கடன் பெற்றவனின் கையெழுத்தில்லாத ஒரு தஸ்தாவேஜிக்கு முத்திரைத்தீர்வை கிடையாதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் குப்பர்ஷாட் v. பகவான் கேசில் தீர்மானித்திருக்கிறார்கள்.

கையெழுத்து செய்யத்தெரியாதவன் ஒரு தஸ்தாவேஜியில் யெழுத்திற்குப்பதிலாகச் செய்யும் கீரல் அவனுடைய கையெழுத்தாக எண்ணப்படவேண்டுமென்று ஜெனரல் கிளாசஸ் ஆக்ட் (General classes Act.) 3-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

கடனை ஒப்புக்கொள்ளும் ஆதரவு கடன் பெற்றுக்கொண்டவன் கடன் பெற்றுக்கொண்டிருப்பதை ஒப்புக்கொண்டதற்காகத் தான் கையெழுத்து செய்திருக்கிறான் என்று ருஜுப்படுத்தும் படியானதாயிருக்கவேண்டும். அதாவது கடனை ஒப்புக்கொண்டதற்காக அவன் கையெழுத்துச்செய்திருக்கிறான் என்கிற கருத்து அந்த ஆதரவில் பரிஷ்காரமாய் விளங்கவேண்டுமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். முல்ஜிலாலா v. லிங்குமக்காஜி இ. லா. ரி. 21 பம். 201.

ஒரு வர்த்தகன் அல்லது லாவாதேவி செய்யும் ஒருவன் பேரேட்டு கணக்கு புத்தகத்தில் "பத்து," "வரவு" என்று இரண்டு அயிட்டங்களிருக்கின்றன. இந்த வர்த்தகன் தன்னிடம் பத்து வரவு செய்யும் ஒருவனுக்குப் பணம் கொடுக்கும்போதெல்லாம் அந்தத்தொகையை "பத்து" என்கிற அயிட்டதில் எழுதி அவனுடைய கையெழுத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான். அவனிடமிருந்து ஏதேனும் வரவு வந்தால் அந்த வரவு என்கிற அயிட்டத்தில் வரவுவைத்துக்கொள்ளுகிறான். இப்படி வர்த்தகன் பணம் கொடுக்கும்போதெல்லாம் பத்து வரவு காரணமிருந்து வாங்கிவரும் கையெழுத்து கடனை ஒப்புக்கொண்டதற்காக செய்யப்பட்டதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஏனெனில், அப்படி பணம் வாங்கும்போதெல்லாம் செய்யப்படும் கையெழுத்து பணம் பெற்றுக்கொண்டிருப்பதை மட்டிலும் ருஜுப்படுத்தும்படி வாங்கப்படுகிறதே ஒழிய மற்றப்படி பத்து வரவு காரன் வர்த்தகனுக்குப்பாக்கி கொடுக்க வேண்டியதும் இல்லாததும் "வரவு" அயிட்டத்தைப் பொறுத்திருக்கின்றது. புரோஜந்தர் குமார் v. புரோமாயி சௌத்திரானி இ. லா. ரி. 4. கல். 885.

கடன் கொடுத்தவன் புத்தகத்தில், கடன் பெற்றுக்கொண்டவன் செய்திருக்கும் கையெழுத்து கடனை ஒப்புக்கொண்டதா அல்லவா என்று தீர்மானிப்பது இருதரத்தாருடைய எண்ணத்தையும் சந்தர்ப்பத்தையும் பொருத்ததாயிருக்கின்றது. கடன் பெற்றுக்கொண்டவன் கடன் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொள்ளுவதற்காகக் கையெழுத்துசெய்திருந்தால் அதற்கு ஸ்டாம்புதீர்வையுண்டு. இ.லா. ரி. 8-கல்-282

வர்த்தகத்தில் பங்குதாரியாகவிருக்கும் ஒருகுமஸ்தா தான் ஷை வர்த்தகத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் பணத்திற்கு ஒரு பாக்கி ஜாப்தா (Balan Sheet) தயாரித்து அதில் கையெழுத்து செய்திருந்தால் அந்தக் கையெழுத்து கடனை ஒப்புக்கொண்டதற்காகச்செய்தகையெழுத்தாகமாட்டாது. ஆகையால் அதற்கு ஸ்டாம்பு தீர்வை கிடையாது. நந்தகுமார் ஷாகா. v. ஷர்ரோபாயி இ. லா. ரி. 15. கல். 162.

வாதி பிரதிவாதி இருவரும் ஒரு கூட்டு வர்த்தகம் செய்து வந்தார்கள். வாதி தனக்குக் கிடைக்க வேண்டிய தொகைக்காக பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். மத்தியில் இருவரும் சமாதானமாகப் போவதாகப் பேச்சு நடந்தது. இன்னின்ன பிரகாரம் சமாதானமாகப் போகிறதென்றும் அந்த வர்த்தகத்தில் வாதிக்குக் கிடைக்கவேண்டிய தொகைதோராயமாய் இவ்வளவுஎன்றும்குறிப்பிட்டுப் பிரதிவாதியால் எழுதப்பட்ட ஒரு கடிதம் பிரதிவாதி கடனை ஒப்புக்கொண்டதற்கு சாக்ஷியமாகக் கொள்ளப்படமாட்டாது. ஆகையால் அதற்கு ஸ்டாம்புத் தீர்வை கிடையாது. லக்ஷிமி நாராயண v. ராமஜோகி காரு, மதிராஸ் லா ஜெனரல் 18-வதுவல்யம் 66-வது பக்கம்.

ஒரு கடனாளி தன்னுடைய கடன்காரனின் பேரேட்டுக் கணக்கில் கணக்குத் தீர்த்துக்கட்டி பாக்கி இறக்கி அந்த பாக்கியை ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்து அந்தக் கணக்கில் "இந்தக் கடனுக்காக பிரத்தியேகமாய் ஒரு ஸ்டாம்பு கடுதாசியில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று ஒரு ஷராவும் எழுதுகிறான். இப்படி அந்தக் கடனுக்சாக வேறே பிரத்தியேகமாக ஸ்டாம்பு போட்ட தஸ்தாவேஜி பிறந்திருந்த போதிலும், பிரஸ்தாப கணக்குப் புத்தகத்திலும் ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து வாங்க வேண்டும்.—

மத்திய மாகாணத்திய 1887-ம் ளுத்திய அக்டோபர் ஸ்ரீ 6ே யுள்ள 10-வது நெ. சர்க்கியுலர். கணக்குப் பார்த்து பாக்கி கட்டின கணக்கில், பாக்கிகொடுக்க வேண்டியவனும் அவனுக்காகமேலொப்பம்போடுகிறவனும் ஆகிய இருவரும் கடனை ஒப்புக்கொண்டதற்காகக் கையெழுத்து செய்திருந்தாலும் அதற்கும் ஒரு அணா பசை முத்திரை ஒட்டினால் போதுமானது என்று பம்பாய் ஹைகோர்ட்டார் பாபாஜிபர்துஷெட் v. மகாது என்கிற கேசில் தீர்மானித்திருக்கிறார்கள்.

கடனை ஒப்புக்கொள்ளுவதற்காக எழுதிக்கொடுக்கும் ஒரு ஆதரவில் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாக ஒரு வாக்குதத்தம் செய்யப்பட்டிருந்தால் அது கடனை ஒப்புக்கொள்ளும் ஆதாரவாக எண்ணப்படாமல் பிராமிசரி நோட்டாக எண்ணப்படும் என்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. 8. பம். 1941.

கடனை ஒப்புக்கொள்ளும் ஆதரவில் சாக்ஷி கையெழுத்து வாங்கலாம். அப்படி சாக்ஷி கையெழுத்து வாங்கியிருப்பதால் அது பத்திரமாக (Bond) எண்ணப்படமாட்டாது. இ. லா. ரி. 22-கல். 757. அந்த ஆதரவில் கடனை திருப்பிக்கொடுப்பதாக ஒரு வாக்குதத்தம் செய்திருந்து, அதில் சாக்ஷி கையெழுத்தும் வாங்கப்பட்டிருந்தால் அந்த ஆதரவு கடனை ஒப்புக்கொள்ளும் ஆதரவாக எண்ணப்படாமல் பத்திரமாக எண்ணப்பட்டு நடத்தப்படும்:—1886-ம் ளுத்திய ஜனவரி ஸ்ரீ 16ே சென்னபட்டணம் போர்ட்டு ப்ராசீடிங்ஸ்.

ஒரு கடன் காலாவதி யாவதற்கு முந்தி கடன்பட்டவன் கடன் கொடுத்தவனுக்கு எழுதிய கடிதத்தில் பிரஸ்தாப கடனை ஒப்புக்கொண்டும் இன்னும் பல சமாசாரங்களும் எழுதியிருந்தான். இந்த கடனுக்காகப் பிறந்திருந்த பிராமிசரி நோட்டு காலாவதியாய்விட்டது. வாதி காலாவதியான பிராமிசரி நோட்டை தாக்கல்செய்து பிரதிவாதி எழுதியிருந்த கடிதத்தை சாக்ஷியமாக தாக்கல்செய்தான். இந்தக் கடிதத்தில் கடன் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது கடனை ருஜுப்படுத்தக்கூடியபிராமிசரிநோட்டு உயிருடனிருந்தபோது எழுதப்பட்டபடியால், இந்தக் கடிததிற்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது அனாவசியமென்று அலகபாத்ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு தஸ்தாவேஜியில் அடியிற் கண்டபிரகாரம் எழுதி மேற்படி கையெழுத்துசெய்து ஒரு அணா பசை முத்திரை ஒட்டப்பட்டிருந்தது:—"ஆக்ரா, 14-11-1878-ம் ளு ஜனவரி ஸ்ரீ A. என்பவனுக்கு திருப்பிக் கொடுக்கவேண்டிய ரூ. 200"

இந்த தஸ்தாவேஜு பிராமிசரி நோட்டாகமாட்டாதென்று கடனை ஒப்புக்கொள்ளும் ஆதரவென்று அலகபாத் ஹைகோர்ட்டு புல்பெஞ்சார் தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. 3. அல 581.

2 அட்மினிஸ்ட்ரேஷன் பாண்ட்.-1865-ம் ளுத்திய இந்து தேசத்துத் தாயபாக ஆக்ட் 256-வது பிரிவின்படிக்காவது 1873-ம் ளுத்துக் கவர்ன்மெண்ட் ஸேவிங்ஸ்பாங்க் ஆக்ட் 6-வது பிரிவின்படிக்காவது, 1881-ம் ளுத்து ப்ரொபேட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையுங் குறித்த ஆக்ட் 78-வது பிரிவின்படிக்காவது, 1889-ம் ளுத்து செக்ஷன் ஸெர்டிபிகேட் ஆக்ட் 9-அல்லது 10-வது பிரிவின்படிக்காவது கொடுக்கப்பட்ட பத்திரமுட்பட—தொகை ரூ. 10-க்கு மேற்படாத விஷயத்தில் இரண்டணா முத்திரைத் தீர்வை. 10-க்கு மேற்பட்டு ரூ. 50-வரையில் நான்கணா.

50-க்கு மேற்பட்டு		100-வரையில்		8-அணா
100	,,	200	,,	1-ரூபா
200	,,	300	,,	1-8
300	,,	400	,,	2
400-க்கு மேற்பட்டு		500-வரையில்		2-8
500	,,	600	,,	3
600	,,	700	,,	3-8
700	,,	800	,,	4
800	,,	900	,,	4-8
900	,,	1000	,,	5

(6) இதரமான யாதொரு விஷயத்தில் ரூ 5.

3. ஸ்வீகாரபத்திரம், அதாவது யாதொரு ஸ்வீகாரத்தை ரெக்கார்ட் செய்கிற அல்லது ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரங் கொடுக்கிற அல்லதுகொடுப்பதாகப் பொருள்படுகிற (உயிலல்லாத) வேறே யாதொரு ஆதரவு முத்திரைத் தீர்வை ரூ. 10.

(வரும்.)

—o—

HINDU LAW.

இந்துலா.

அத்தியாயம்-3.

விவாகம்.

கன்னிகையை விவாகம்செய்து கொடுக்கக் கடமைப்பட்ட கார்டியன்கள் விவாகம்செய்து கொடுக்காமல் அலக்ஷியமாயிருந்தால் கன்னிகையே ஒருவரனைத்தேடி விவாகம்செய்து கொள்ளலாம். இந்த விவாகம் சுயம்வரம் என்று சொல்லப்படும். ஜாதியைவிட்டு ஜாதியில் விவாகம் செய்துகொள்ளுதல், விவாகம் செய்துகொள்ளக்கூடாத பந்துக்களை விவாகம் செய்துகொள்ளுதல் ஒரே கோத்திரத்தில் விவாகம் செய்துகொள்ளுதல் ஆகிய இந்த மூன்று காரணங்களும் மற்ற பொருத்தங்கள் சரிவரப் பொருந்தப் பெற்று செல்லுபடியுள்ளதுமான ஒரு முடிந்துபோன விவாகத்தைப் ஊனப்படுத்தப் போதுமான காரணங்களாகக்கோர்ட்டாரால் சொல்லப்பட்டு வருகின்றன. இந்த மூன்று காரணங்களைத்தவிர இன்னும் சில காரணங்களிருக்கின்றன. ஆனால் அவைகள் முடிந்துபோனவிவாகத்தை ஊனப்படுத்துவதற்கும்பாதுமான காரணங்களாகக்கோர்ட்டாரால் எண்ணப்படுகிறதில்லை. ஆனால் விவாக ஒப்பந்தத்தில் உண்டாயிருக்கும் நஷ்டத்தைப் பெறுவதற்கும், காம்பன்சேஷன் பெறுவதற்கும் அல்லது விவாக ஒப்பந்தப் பிரகாரம் நடக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும் கொண்டு வரப்படும் வியாஜ்ஜியங்களில் இந்தக்காரணங்களையும்பற்றி யோசனை செய்து தீர்மானிக்கிறார்கள் விவாகத்தை ஊனப்படுத்தக்கூடிய ஏதுக்களை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம்.

1. விவாகத்திற்கு அருகரல்லாதவர் யார்:—(a) தகுந்த வயதடையாதது, இதர சில விவகாரங்களுக்குத்தடையாயிருந்தபோதிலும் ஹிந்துலாப்பிரகாரம்விவாகத்திற்குத் தடையாயில்லை இத்தனை வயதானவுடன்தான் ஒருவன் விவாகம் செய்துகொள்ளலாமென்று ஹிந்துலாவில் யாதொரு விதியும் ஏற்படுத்தப்படவில்லை.

(b) சித்தபேதப்பட்டவன், பயித்தியகாரன் முதலினோர்கள் விவாகத்திற்கு அருகரல்லரென்று ஹிந்துலாவில் சொல்லப்படவில்லை.

(c) செவிடன், ஊமை, அசிங்கப்படும்படியான தீராவியாதி யுடையவன் ஆகிய இவர்கள் விவாகத்திற்கு அருகரல்லாதவர்கள் என்று ஹிந்துலா வினைக்கிறதில்லை. ஆனால் இவர்கள் விவாகம்செய்து கொண்டபோதிலும் தங்களுடைய பெண்ஜாதியைத் தங்களுடன்கூடி அனுபவிக்கும்படி கட்டாயப்படுத்த சுதந்தரமற்றவர்கள்.

(d) விவாகத்திற்குக் கொஞ்சம்கூட யோக்கியதையற்ற நபும்சகன் விவாகத்திற்குக் அருகனல்லவென்று ஹிந்துலா கூறவில்லை.

(e) பெண்ஜாதி ஜீவதசையிலிருக்கும்போது வேறொருதரம் விவாகம் செய்யக்கூடாதென்று கிறிஸ்தவசட்டம் கூறுகின்றது. ஆனால் ஹிந்துலா அப்படிச் சொல்லவில்லை. ஒருவன் தனக்கு இஷ்டமிருந்தால் எத்தனைதாரம் வேண்டுமானாலும் விவாகம் செய்துகொள்ளலாம்.

(a) ஸ்திரீகளுக்கு விவாகத்தைத் தவிர வேறே சமஸ்காரம் கிடையாது. ஆகவே புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு விவாகம் மிக அவசியமானதாயிருக்கின்றது. ஆகையால் விவாகத்திற்கு எந்தக்கன்னிகையும் யோக்கியதையற்றவளாக எண்ணப்படுகிறதில்லை. கன்னிகை பாலிகையாயிருக்கும்போது அவளை விவாகம்செய்துகொடுத்துவிடவேண்டுமென்று ஹிந்து சாஸ்திரங்கள்தானே கூறுகின்றபடியால் விவாககன்னிகைவிவாகத்திற்கு ஒரு கக்ஷிக்காரியாயிருக்கமுடியவில்லை தகுந்த வரனைத்தேடி அவளை விவாகம்செய்து கொடுத்துவிடவேண்டிய பொறுப்பு அவளுடைய கார்டியன்களைச் சேர்ந்ததாகவிருக்கின்றது. மைனர் கன்னிகைகள்தான் விவாகத்திற்குத் தகுந்தவர்கள். கன்னிகை ரஜஸ்சுவலையாவதற்கு முந்தி விவாகம் செய்துகொடுக்கப்படவேண்டும். ரஜஸ்வலையான பிறகு விவாகம் செய்துகொடுத்தால் அந்த விவாகம் முழுதிலும் செல்லாது என்று சொல்ல முடியாது. மூன்று துவிஜாதி வகுப்பினர்களைத் தவிர இதர ஜாதிகளில் கன்னிகைகள் ரஜஸ்வலையானவுடன் விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமிருந்துகொண்டிருக்கிறது.

(b) ஒருவனுக்கு நிச்சயதார்த்தம் செய்துகொடுக்கப்பட்ட ஒரு கன்னிகையை வேறொருவனுக்கு விவாகம் செய்து கொடுத்தால் அந்த விவாகத்திற்கு ஒருவிதமான தோஷம் சொல்லப்பட்ட போதிலும் அந்த விவாகம் ஹிந்துலாப் பிரகாரம் செல்லுபடியுள்ள விவாகமாகும். நிச்சயதார்த்த ஒப்பந்தப்படி அந்தக் கன்னிகை எந்த வரனுக்கு விவாகம் செய்து கொடுப்பதாக நிச்சயம் செய்து கொள்ளப்பட்டதோ அதே வரனுக்குதான் விவாகம் செய்து கொடுக்கவேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டு வந்து கட்டாயப்படுத்த முடியாது.

(c) புருஷன் ஜீவ தசையிலிருக்கும்போது மனைவி வேறொரு புருஷனை விவாகம் செய்து கொள்ளக்கூடாது. அப்படி அவள் விவாகம் செய்து கொண்டாளேயானால் இ. பி. கோ. 494-வது பிரிவின்படி தண்டனைக் குள்ளாவாள்.

(d) பராசரரும் நாரதரும் விதவா விவாகத்தை ஒப்புக்கொண்ட போதிலும் இந்த வழக்கம் ஹிந்துக்களுக்கு அனுஷ்டானத்திலில்லை. விதவா விவாகம் ஹிந்துலாவிற்கு விரோதமென்றே எண்ணப்படுகின்றது. இருந்தபோதிலும் 1856-ம் வருஷத்திய 15-வது ஆக்டின்படி விதவைகளை இப்போது விவாகஞ்செய்து கொள்ளலாம்.

(e) மூத்த பெண்ணிற்கு விவாகமாகாமலிருக்கும்போது இளைய பெண்ணை விவாகம்செய்து கொடுக்கக்கூடாது. அப்படி செய்து கொடுத்தால் அந்த விவாகம் செல்லுமோ செல்லாதோ சந்தேகமாயிருக்கின்றது. இப்பேர்க்கொத்த விவாகம் அனேகமாய் சம்பவிக்கிறதில்லை.

(f) துவிஜாதி வகுப்பார்கள் கன்னிகையின் கோத்திரத்தையுடைய வரனுக்குக் கன்னிகையை விவாகம்செய்து கொடுக்கக்கூடாது. அந்தவிதி சூத்திரர்களுக்குக் கிடையாது.

(g) கன்னிகை விவாகம் செய்து கொள்ளக்கூடாத பந்தத்துவமுடைய ஒரு புருஷனுக்கு அவளை விவாகம் செய்துகொடுக்கக்கூடாது. (வரும்.)



The Hon'ble Sir VEMBAKKAM BHASHYAM IYENGAR, B.A., B.L., *Kt.*, C.I.E., *Dewan Bahadu*
Officiating Advocate-General.

ஹொனரபில் சர். வெம்பாக்கம் - பாஷியம் அய்யங்கார், Kt. C. I. E.
அபிஷியேட்டிங் அட்வோகேட் ஜெனரல்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—த. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யும் 2.] சென்னைப்பட்டணம், 1907ஆ பிப்ரவரிமீ [2 பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம் :—கனம் சர். V. பாஷியமய்யங்கார் Kt. C. I. E. Dewan Bahadur, ...	
2.	அடையாளம் தெரியாமல் கைதி செய்தல்.	49
3.	வரதக்ஷிணை.	51
4.	சப் மாஜிஸ்டிரேட்களும், சாக்ஷிவாக்குமூலக் குறிப்புகளும்.	52
5.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.	53
6.	கவர்ன்மெண்டு ஆர்டர்கள், போர்ட்ஸ் புரோசிடிங்கள், ஜில்லா சர்க்கியுலர்கள், போலீஸ்கஜிட்.	69
7.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலிருக்கும் கேஸ்கள்.	72
8.	பொது வர்த்தமானங்கள்.	81
9.	சத்கதா ரத்னவளி	83

Opinions of the Press on the "Indian Law Gazette."

The "**Madras Mail,**" **dated 10th Spetember 1906**:—"*The Indian Law Gazette.*"—We have received the first number of a new Tamil monthly, entitled the *Indian Law Gazette*, edited by Mr. M. A. Loganathan, and published by Messrs. N. Ratha Krishna & Co. The new venture is intended to spread amongst the people of South India a knowledge of the laws which are applicable to the protection of their person and property. The Editor deplores that, through ignorance of law, Hindus waste their money in carrying on litigation to the ruin of their family, and that to avert such disastrous consequences, a knowledge of the general laws of the land are essential to them. The first number appropriately opens with an illustrated life sketch of the Hon'ble Sir S. Subramania Iyer, *Kt.*, C.I.E., "one of the foremost Indian Lawyers, and an eminent Indian Judge, who is held in the highest esteem by his countrymen." There are, besides, reports of miscellaneous law cases, important rulings, Government Orders, etc., and a translation of the Motor Car Bill. The *Indian Law Gazette* will do a great service to the rural population if it will systematically translate and publish from time to time Government Orders, Proceedings of the Board of Revenue and other departments relating to Agricultural and Revenue matters generally. Through ignorance of these very necessary matters, the ryot population are often swindled by unscrupulous Village Officials and lower subordinate Revenue employees.

The "**Hindu,**" **dated 11th September 1906**:—The "*Indian Law Gazette,*" is the title of a new legal journal in Tamil, the first part of which we have just received. We believe this is the first time that a legal journal is published in any of our Vernacular languages: this, the Editor says, is intended to educate in law the ignorant man in the streets who blunders often not knowing what the law of the land is. We trust that this new enterprise in legal journalism will supply a real want, and we wish the journal every success.—Editor—Mr. M.A. Loganathan: Publishers, N. Ratha Krishna & Co., Madras.

The "Madras Times," dated 11th September 1906:—We have received the first number of a new Tamil monthly, called the "*Indian Law Gazette.*" Mr. M. A. Loganathan is its Editor, the publishers being Messrs. N. Rathakrishna & Co. The Magazine deals solely in legal topics and is intended to spread amongst the people of South India a knowledge of the law applicable to the protection of their person and property. The first number appropriately opens with an illustrated sketch of the life of the Hon'ble Sir S. Subramaniya Iyer, *Kt.*, C.I.E., who is most deservedly held in high esteem by his countrymen. Reports of Miscellaneous, Law Cases, Government Order, etc., and a translation of the Motor Car Bill form the other reading matter in the magazine. We have no doubt that the "*Indian Law Gazette*" will be of great service to the rural population of this Presidency, and we wish every success to the new venture.

The "Swadesa Mithran," dated 13th September 1906, says:—A new monthly Tamil Magazine under the name of "*The Indian Law Gazette*" has been started in Madras. It has come out with the laudable object of spreading all matters relating to Law among Tamil masses who are unacquainted with English. Besides reporting the cases that are tried by the Courts of the Madras Presidency, reports of cases that are tried by Courts in other parts of India, will be published by this Law Journal. This will prove very useful to all persons who have something to do with Law. In the first Journal that has been sent us is placed a handsome protrait of Justice Sir S. Subramania Aiyar, *Kt.* C.I.E. We heartily wish success to this undertaking.

1907௵ பிப்ரவரி௴

இந்திய சட்ட கெஜெட்.

மானேஜர் விளம்பரம்.

ரூ 10 ரொக்கம் கொடுக்கப்படும்.

எல்லோரும் தயவுசெய்து இதை வாசிக்கவேண்டும்.

உலகத்தில் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் சட்ட ஞானத்தை அவசியம் பெற்றிருக்கவேண்டும். அதிலும் பொழுது விடிந்தால் அந்திபட்டால் ஜன க்ஷேமத்தை நாடி சட்டங்களைப் பிறப்பிக்கும் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரஜைகள் சட்ட ஞானமுடைத்தாயிருக்கவேண்டுவது அவசியத்திலும் அவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. சட்ட ஞானமும் விவகார ஞானமுமில்லாக் குறையால் நம் தேசஜனங்கள் படும் கஷ்டத்தையும் அவஸ்தையையும் கையிலிருந்த பொருள்களைக் கோர்ட்டுச் செலவு செய்து காலக்ஷேபத்திற்குக்கூட வழியின்றிக் கஷ்டப்பட்டு வருவதையும் நாம் கண்கூடாய்ப் பார்த்துவருகின்றோம். நம் தேச ஜனங்களுக்குச் சட்டஞானத்தைப்போதித்து விவகார ஞானத்தை உண்டுபண்ணி சட்ட ஞானக்குறைவால் இப்போது விளைந்துவரும் தீமைகளையெல்லாம் அகற்றி தேசத்திற்கு அத்தியாவசியகமான நன்மையைப் பயக்கவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கும் இந்த இந்திய சட்ட கெஜெட்டை மதிராஸ் மெயில், டைம்ஸ், ஸ்டாண்டர்ட், சுதேசமித்திரன் முதலிய முக்கியமான பத்திரிகைகள் இது தேசத்திற்கு முக்கியமானதென்றும், மிகுந்த நன்மையைப் பயக்கக் கூடியதென்றும் புகழ்ந்து பேசி இது நீடுழிகாலம் நிலைபெற்று நடைபெறவேண்டுமென்று ஆசீர்வதித்திருப்பதுமன்றி, நாம் மரியாதை காட்டும்பொருட்டு இவ்விந்திய சட்ட கெஜெட்டின் பிரதிகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுக்கும். வக்கீல்களுக்கும் ஏனைய கனதனவான்களுக்கும் அனுப்பினோம். அவர்கள் அதை முற்றும் வாசித்துச் சந்தோஷித்தவர்களாய் அதன் அருமைக்கேற்றபடி தகுந்த நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி இந்திய சட்ட கெஜெட்டை ஆசீர்வதித்து நம்மையும் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். அன்றி, பெருமை தங்கிய நமது கவர்ன்மெண்டாரும் இவ்விந்திய சட்டகெஜெட்டின் விஷயப் பொலிவைக்கண்டு, இங்லீஷ் பயிற்சி இல்லாத பிரஜைகளுக்கு மிகப் பிரயோஜனகரமான ஜர்னலென்றும், இதனை மும்மரமாய் நடத்தும்படியும் கூறி, நமக்கு மிக்க ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும்விளைவித்தார்கள். ஆகவே இந்த இந்திய சட்ட கெஜெட்டு தேசத்திற்கு மிக அவசியமான நன்மையைப் பயக்கக் கூடியதாயிருப்பதால் இதன் அபிவிர்த்தியில் கண்ணோட்டமாயிருந்து ஒவ்வொருவரும் பரோபகார சிந்தையுடன் இதை விர்த்தி செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டியதைத் தங்களுடைய கடமையாக நினைக்கவேண்டும். சட்ட ஞானக் குறைவால் உண்டாகிவரும் தீமைகளை அகற்றி லோகோபகாரத்தைச் செய்துவரும் இந்த இந்திய சடட கெஜெட் நாமுள்ள காலத்திலும் நமக்குப் பிற்காலத்திலும் தடையின்றி நடந்துவரும்படியாக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்திருப்பதுமன்றி நம்முடைய தேச சிற்றரசர்கள் ஜமீந்தார்கள் முதலிய தனாட்டியர்களின் பேருதவியையும் உதாரத்துவத்தையும் பெற்று இதற்கு ஒரு சாஸ்வதமான நிதியும் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இது நிற்க, இந்த கெஜெட்டு ஜனங்களுக்கு இன்னும் மிக உபயோகமாயிருக்கும்பொருட்டு இதில் விசேஷமான சமாசாரங்களையும் கேசுகளையும் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது. அப்படிச் சேர்ப்பதென்றால் அதிகச் செலவு பிடிக்கும். கெஜெட்டின் சந்தாவை இன்னும் உயர்த்துதல் சாத்தியமாயில்லை. ஆகையால் இன்னும் சில சந்தாதாரர்களைச் சேர்த்துவிடவேண்டுமென்று இப்போது பிரயத்தனஞ் செய்துகொண்டு வருகின்றோம். இந்த இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்துவரும் கனவான்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் நமக்கு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றோம். இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடும் செய்திருக்கிறோம். அதாவது, 25 கையொப்பங்கள் சேர்த்து அனுப்புகிறவருக்கு ரூ. 10 ரொக்கம் அனுப்பத்தயாராயிருக்கிறோம். 25 கையொப்பக்காரர்களும் பணம் செலுத்தினவுடன் ரூ. 10 மணி ஆர்டர் செய்து அனுப்பப்படும். மேற்சொன்னவாறு கையொப்பங்கள் சேகரித்துக்கொடுக்க முன் வரும் கன தனவான்கள் நமக்கு எழுதிக்கொண்டால், நாம் அச்சிட்டுள்ள விளம்பரங்களும் விண்ணப்பக் கார்டுகளும் அனுப்புகிறோம். விண்ணப்பக் கார்டுகளில் கையொப்பம் வாங்கி தபால் ஸ்டாம்பு ஒட்டாமல் தபாலில் போட்டுவிடலாம். ஆகவே நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை ஆதரித்துவரும் கனவான்களும், ஏனையோரும் இது விஷயத்தில் தங்களால் இயன்றளவு உதவி புரியவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

ந. ராதாகிருஷ்ணா கம்பெனியார்,

மானேஜர்கள்,

இந்திய சட்ட கேஜெட் ஆபீஸ்.

சென்னை, சாவுகார்பேட் போஸ்ட்.

டுமென்று நினைத்து அவர் பேரில் குற்றம் சாட்ட இஷ்டப்படாமல் அவரை விட்டுவிடுகிறார்கள்; சிவில்விவகாரங்களில்தங்களுக்கு பணம்கிடைக்கக்கூடியதாயிருந்தாலும் ஸ்திரீகள் கோர்ட்டில் ஆஜராவதற்கு லஜ்ஜைப்பட்டுக்கொண்டு தங்களுக்கு வரக்கூடிய பணத்தையும் இழந்துவிடுகிறார்கள். மேலும் போலிஸ் கோர்ட்டு என்றால் சொல்லவே வேண்டியதில்லை! நடுநிலைமையுள்ள மனிதர்கள்கூட சாதாரணமாய்வேடிக்கைபார்க்கப்போவதற்கும் சங்கைப்படுவார்கள். போலிஸ்கான்ஸ்டேபில் ஒருவனுடைய வீட்டில் சாதாரணமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாலும் அந்த வீட்டுக்காரன் ஏதோ குற்றம் செய்திருக்கிறான் என நினைத்து அவனுடன் சகவாசம் செய்யவும் பேசவும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் இஷ்டப்படமாட்டார்கள். இம்மாதிரியான ஜனங்கள்நிறைந்ததேசம் இவ்விந்தியாதேசம்! இத்தேசத்தில் நிரபராதியாகவிருக்கும் ஒருவனைப்போலிசார் அரஸ்ட்செய்து அல்லது அவனுக்குச் சம்மன்சார்வு செய்து அவனைப்போலிஸ்கோர்ட்டில் ஆஜராகும்படிச் செய்வதென்றால் அவனுக்கு மானஹானியை விளைவிக்க வேறே என்ன சம்பவம் வேண்டும்! விசாரணை நடந்த பின்பு அவன் கௌரவமாய்விடுவிக்கப்படுகிறான் என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதிலும் அவனை முதலில் போலிசார் அரஸ்ட் செய்தபோது அவனைப்பற்றி ஜனங்கள் என்னநினைப்பார்கள்! அவன் எவ்வளவு மானபங்கப் படவேண்டும்! அவனுடைய பந்து மித்திரர்கள் எல்லாம் எவ்வளவு விசனப்படுவார்கள்! அதிலும் ஒரு சிறிய நகரில் ஒருவனை அரஸ்ட் செய்தால் அந்த நகர் முழுதும் கொல்லென்றாய்விடும்! அப்போது யாதொரு குற்றமும் செய்யாமல் அர்ஸ்ட் செய்யப்பட்டிருப்பவனின் மனம் என்னபாடுபடும்! இவ்வளவு துன்பமடைந்திருக்கும் அவனுக்குக் கோர்ட்டார் ஏதேனும் காம்பன்சேஷன் பணம் கொடுக்க சட்டம் இடம் கொடுக்காமலிருப்பது ஒருபெருங்குறையென்றே நாம் அபிப்பிராயப்படுகின்றோம். கோர்ட்டார் காம்பன்சேஷன் பணம் கொடுத்தால் மட்டும் போன மானம் அவனுக்கு வந்துவிடுமோ என்று சிலர் கேட்கக்கூடும். அவன் மானி என்றும், மானத்தை இழந்துவிட்டவன் என்றும் நினைக்கப்படுவது ஜனங்களின் சுபாவத்தையும் நாகரீகத்தையும் பொறுத்ததா யிருக்கின்றது. விவகார ஞானமுடையவர்கள் அவனை மானமிழந்தவன் என்று நினைக்கமாட்டார்கள். விவகார ஞானசூனியர்கள் அவன் போலிசாரால் அரஸ்ட் செய்யப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தாலேயே அவன் மானத்தை இழந்தவனாகிறான் என்று நினைப்பார்கள். இது ஒருபுறமிருக்க, போலிசாரால் அரஸ்ட் செய்யப்பட்டு கோர்ட்டின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுகிறவனுக்குச் செலவுகிடையாது என்று சொல்லமுடியாது. அரஸ்ட் செய்யப்பட்டவன் சிறிது ஐவேஜியுள்ளவனாகவிருந்தபோதிலும் தனது தரப்பில் பேசுவதற்கு வக்கீல் வைக்கத் தவறிப்போகமாட்டான். வக்கீல் வைப்பதென்றால் சொற்பச்செலவா? இதன்றி வெளியில் சொல்லக்கூடாத அந்தரங்கச்செலவுகள் வேறேயிருக்கின்றன! யாதொரு குற்றத்தையும் செய்யாமல் தெய்வமேயென்றிருந்த ஒரு நிரபராதி தன்மேல் அநியாயமாய் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்திலிருந்து தன்னை விலகிக்கொள்ளும்படி செய்த செலவு தொகையாயினும் ஈடுபடுத்தும்படி கோர்ட்டார் காம்பன்சேஷன் பணம் கொடுக்காமலிருப்பது சரியான நியாயம் என்று சொல்ல நம் மனம் உடன்படவில்லை. இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நேரிடமாட்டா என்பதாக கவர்ன்மெண்டார் எண்ணி அதற்குப்பொருந்த சட்டம் ஏற்படுத்தாமலிருந்திருக்கக்கூடும். இருந்தபோதிலும் இதே பிப்ரவரிமீ" த்தில் இம்மாதிரி கேஸ்கள் சென்னை மாகாணத்தில் ஒன்றும், பங்காள மாகாணத்தில் ஒன்றும் நடந்தேறியிருக்கின்றன. சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் டிக்கட்டு ஆபீசில் ஒருவர் போய் தனக்கு டிக்கட்டு கொடுக்கும்படி கேட்டதாகவும், அவர் காலதாமதமாய் வந்தபடியால் டிக்கட்டு கொடுக்க முடியாது என்று புக்கிங்கிளர்க் சொல்ல, அதில் அவருக்குக் கோபம்பிறந்து புக்கிங்கிளர்க்கை அடிக்க எத்தனித்தார். புக்கிங்கிளர்க்கு அவரைப்பிடித்துப்போலிசாரிடம்ஒப்புவித்தார். ரயில்வே போலிசார் அவரைப் போலிஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவருடைய பெயரைக் கேட்க, தன் பெயர் T. துரைசாமி முதலியார் என்றும் தான் தரங்கம்பாடியில் உப்பள சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்துவருவதாயும் தாக்கல்செய்துவைத்தார். போலிசார் இவரிடம் சொந்த ஜாமீன் பெற்றுக்கொண்டு விட்டுவிட்டார்கள். மறுதினம் போலிசார் இவர்பேரில் பிரசிடெண்டு மாஜிஸ்டிரேட் மிஸ்டர் W. E. T. கிளார்க்கு முன்னிலையில் குற்றம் சாட்டி சம்மன் பிறப்பித்தார்கள். சம்மன் கூடலூர் சப்டிவிஷன் உப்பள இலாகா அசிஸ்டண்ட் கமிஷனர் மூலியமாகத் தரங்கம்பாடி சப் இன்ஸ்பெக்டர் T. துரைசாமி முதலியார் என்பவருக்குச் சம்மன் அனுப்பப்பட்டது. இப்பெயர் கொண்டவர் சிலகாலத்திற்கு முந்தி உத்தியோகத்திலிருந்து ராஜிநாமா கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என்கிற எண்டார்ஸ்மெண்டுடன் சம்மன் திரும்பிவந்தது. இப்படியிருக்கும்போது தஞ்சாவூர் முகாசா (அரண்மனைக்கச்சேரி) ஆபீசில் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் T. துரைசாமி முதலியார் என்னும் பெயருடையவரிருக்கிறார். என்று தெரியவந்தது; போலிசார் மறுபடியும் சம்மன் பிறப்பித்து இவருக்குச் சார்வு செய்தார்கள் இவர் தஞ்சாவூரிலிருந்து சென்னபட்டணத்திற்கு வந்து விசாரணை தினம் கோர்ட் முன்னிலையில் ஆஜரானார். இவர் தரப்பில் ஆஜரான வக்கீல், போலிசார், குற்றவாளியின் சரியான அடையாளம் தெரியாமல் தம்முடைய கக்ஷிக்காரர்களுக்குச் சம்மன் சர்வ் செய்துவிட்டார்கள் என்றும், பிரஸ்தாபக்குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் சமயத்தில் தம்முடைய கக்ஷிக்காரர் முகாசா ஆபீசை (அரன்மனை எஸ்டேட் ஆபீஸ்) சேர்ந்த கிராமங்களிலிருந்தாரென்றும் (Defence of alibi) இதை ருஜுப்படுத்தத் தம்முடைய கக்ஷிக்காரர் தயாராயிருப்பதாகவும் சொன்னார். இதைக்குறித்துப் போலீசார் ஆலோசனை செய்யும்பொருட்டுக் கோர்ட்டார் விசாரணைத் தேதியைத்தள்ளியும் வைத்தார்கள். விசாரணைத்தேதியில் ரெயில்வே போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆஜராகிப் பிரஸ்தாப T. துரைசாமி முதலியார் குற்றவாளியல்லவென்றும் போலீசார் சரியான அடையாளம் தெரியாமல் இவர் பேரில் சம்மன் பிறப்பித்துவிட்டார்களென்றும் சொல்லி

இவர்பேரில் கொண்டுவரப்பட்ட கேஸை வாபீஸ் பெற்றுக்கொண்டார்கள். கோர்ட்டார் T. துரைசாமி முதலியாரை விடுவிக்கும்போது இவருக்குக் காம்பன்சேஷன் கொடுக்கும்படி உத்தரவுசெய்யச் சட்டமிடங் கொடுக்காமலிருப்பதைப்பற்றி விசனப்பட்டார்கள். இதேமாதிரியாகக் கல்கத்தா போலிசார் மகோதியா என்பவன் பேரில் வாரண்டு பிறப்பித்து இப்பெயருடைய வேறொருவனை அரஸ்ட் செய்து கல்கத்தா பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிங்ஸ் போர்ட்டு முன்னிலையில் ஆஜர் படுத்தினார்கள். மாஜிஸ்டிரேட் நடத்தின விசாரணை :—

மாஜிஸ்டிரேட் :—(பிரியாதியைப்பார்த்து) இந்த மனிதன் உம்முடைய எதிரி?

பிரியாதி :—இல்லை, அய்யா! அரஸ்ட் செய்யும்படி வாரண்டு பிறப்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்ட மனிதன் இவனல்ல!

மகோதியா :—அடையாளம் தெரியாமல் என்னை அரஸ்ட் செய்து இவ்விடம் கொண்டு வந்துவிட்டார்கள்.

மாஜிஸ்டிரேட் :—(இன்ஸ்பெக்டரைப் பார்த்து) உண்மையான குற்றவாளியின் தகப்பன் பேர் ஏன் வாரண்டில் தாக்கல் செய்யப்படவில்லை?

இன் :—பிரியாதி சொல்லவில்லை.

மா :—நீர் கேட்டிருக்கவேண்டும். உம்முடைய அஜாக்கிரதையை முன்னிட்டு யாதொரு குற்றத்தையும் செய்யாத மனிதன் அரஸ்ட் செய்து கொண்டுவரப்பட்டிருக்கிறான் பார்த்தீரா? உம்முடைய அஜாக்கிரதையை முன்னிட்டு இந்த மனிதன் மிகுந்த தொந்தரவுடனும் மனக்கவலையுடனும் ஆறு நாள்வரையில் போலிசார் பாராவில் வைக்கப்பட்டிருந்தான்!

மாஜி :—(மகோதியாவைப்பார்த்து) நீ அனுவசியமாகப் போலிசாரால் அரஸ்ட் செய்யப்பட்டு 6 தினங்கள்வரையில் பாராவிலிருந்ததைக் குறித்து நான் சம்பூரணமாய் அனுதாபப்படுகின்றேன்

என்று சொல்லி தர்மப்பெட்டியிலிருக்கும் ஐவேஜிலிருந்து ரூபா. 25 அவனுக்கு இனாம் கொடுக்கும்படி உத்தரவு செய்து அவனை விட்டுவிடும்படி ஆக்ஞாபித்தார். ஆகையால் இம்மாதிரியான கேசுகளில் சிக்கிக்கொள்ளுகிறவர்களுக்குக் கோர்ட்டார் காம்பன்சேஷன் பணம் கொடுக்கும்படியாக கிரிமினல் புரொசீஜர் கோடை கவர்ன்மென்டார் சீர்திருத்தவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

PRICE OF THE BRIDEGROOM.

வரதக்ஷிணை.

கன்னிகையை விவாகம் செய்துகொடுக்கும் பெற்றோர்கள் வரதக்ஷிணை அதாவது, வரனுக்கு தக்ஷிணை கொடுத்துவரும் வழக்கம் பிராமணஜாதியில் நீடித்த காலமா யிருந்துவருகின்றது. இந்த வழக்கம் துர்வழக்கமென்று பிரதமத்திலேயே சொல்லலாம். கன்னிகை வீட்டாரின் விவாகச் செலவுகளுக்குள் வரதக்ஷிணை செலவுதான் பெரிய செலவா யிருந்துவருகின்றது. சில வரன்களுடைய பெற்றோர்கள் கன்னிகையின் பெற்றோரிடமிருந்து திரண்ட பணம் பெற்றுக்கொள்ளாமல் கன்னிகையைத் தங்களுடைய புத்திரனுக்கு விவாகம் செய்துகொள்ளுகிறதில்லை. கன்னிகைகளின் பெற்றோர்கள் மிகுந்த ஏழைகளாக விருந்தபோதிலும் வரனுக்குத் தக்ஷிணை சமர்ப்பிக்காமல் தங்களுடைய கன்னிகையை விவாகம் செய்துகொடுக்கச் சம்மதப்படமாட்டார்கள். அப்படி வரதக்ஷிணை கொடுக்காமற்போனால் அவர்களுடைய குடும்பத்திற்கே மானக்கேடு உண்டாய்விடுமென்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் பெற்றோர்களிட மிருப்பதால் வரனுடைய பெற்றோர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் வரதக்ஷிணைக்காக மிகுந்த பெரிய தொகை கேட்கிறார்கள். அந்தத் தொகையைக் கொடுக்காவிட்டால் கன்னிகையைத் தங்களுடைய புத்திரனுக்கு விவாகம் செய்துகொள்ளமாட்டோம் என்று சொல்லிவிடுகிறார்கள். இதனால் கன்னிகையின் பெற்றோர்கள் வரன் வீட்டார் கேட்கும் தொகை தங்களுடைய கையிலில்லாமற் போனபோதிலும் அக்கம்பக்கத்திலாவது கடன் வாங்கி வரன் வீட்டார் கேட்ட பணத்தைக்கொடுக்கிறார்கள். இல்லையேல் வீடுவாசல் நிலங்களை அடமானம் வைத்துக் கடன் வாங்கி வரதக்ஷிணையைச் செலுத்துகிறார்கள். கடன் வாங்குவதற்கு இயல்பில்லாதவர்கள் தங்களுடைய சொத்துக்களைக் கிரயம்செய்து, வரதக்ஷிணையைச் செலுத்துகிறார்கள். மிகுந்த ஏழைகள் யாசகம் செய்தாவது பணம் சேகரித்து வரனுக்குத் தக்ஷிணை செலுத்திவருகின்றார்கள். இப்படி கன்னிகையை விவாகம் செய்துகொடுப்பதற்கு அவர்களுடைய பெற்றோர்கள் வரதக்ஷிணை செலுத்திவருவதால் அவர்களுடையகுடும்பமே வறுமைச் சமுத்திரத்தில் அமிழ்ந்து போகின்றது. அதிலும் ஒருவனுக்கு 4, 5-கன்னிகைகளிருந்தால் அவன் படக்கூடிய துன்பத்தை நாம் எடுத்துச் சொல்லவேண்டியதேயில்லை. அவனை வறுமைச் சமுத்திரத்தில் ஆழ்த்த வேறு காரணங்கள் வேண்டியதில்லை. வரதக்ஷிணை கொடுத்து நசித்துப்போன பிராமணகுடும்பங்கள் அனேகமிருக்கின்றன. வரனுடைய பெற்றோர்கள் பணக்காரர்களாக விருந்த போதிலும் வரதக்ஷிணை பெற்றுக்கொள்ளாமல் வரனை விவாகம் செய்துகொடுக்கிறதில்லை. ஏனெனில், இவர்களுடைய கன்னிகைகளை விவாகம் செய்துகொடுக்கும்போது இவர்கள் வரன் வீட்டார்களுக்கு வரதக்ஷிணை கொடுக்க வேண்டியதாயிருப்பதால் இவர்களும் தங்களுடைய புத்திரர்களுக்கு விவாகம் செய்யும்போது வரதக்ஷிணை கேட்டு வாங்கிவருகின்றார்கள். மொத்தத்தில் இந்த வழக்கம் துர்வழக்கமென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறதென்பதில் சந்தேகமில்லை. இந்த வரதக்ஷிணை வழக்கம் துர்வழக்கமென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும் இந்த வழக்கத்தை ஒழிக்க இதுகாலபரியந்தம் நம் தேசப் பிரமுகர்கள் யாதொரு ஏற்பாடும் செய்யாமலிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கின்றது. இப்போது சிலகாலமாக இவ்வழக்கத்தை ஒழிக்க கவரன்மெண்டார் ஒரு சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று சிலர் சொல்லிவருகிறார்கள். கவர்ன்மெண்டார் இதைக்குறித்து கவனிக்கச்சம்மதிக்கமாட்டார்கள் என்று எண்ணு

இன்றோம். ஏனெனில், இந்த வழக்கம் சூத்திரஜாதிகளிலில்லை. துவிஜாதி வகுப்பினர்களுக்குள் பிராமண வகுப்பாரிடமட்டிலும் இந்தவழக்கம் காணப்படுகிறதேயொழிய மற்ற இரண்டு ஜாதியார்களிடம் காணப்படவில்லை; மேலும் பிராமணர்களுக்குள் ஏழைக்குடும்பங்கள்மட்டிலுந்தான் வரதக்ஷிணை கொடுப்பதால் கஷ்டப்பட்டுப் போகின்றன. ஆகையால், கவர்ன்மெண்டார் இவர்களுக்காகப் பிரத்தியேகமான ஒரு சட்டம் பிறப்பிக்க மனமிசைவார்களென்று நாம் நினைக்கக்கூடவில்லை. இருந்தபோதிலும் வரதக்ஷிணை வழக்கத்தை ஒழிக்க கவர்ன்மெண்டாரைச் சட்டம் பிறபிக்கும்படி கேட்பது உத்தமமான காரியமென்று நமக்குத் தோற்றவில்லை. இப்படி நம்தேச ஜனங்களிடம் காணப்படும் துர்வழக்கங்களை ஒழிக்க கவர்ன்மெண்டாரே பிரவேசிக்க வேண்டுமானால் இப்போதிருக்கும் ஒரு கவர்ன்மெண்டு போதாது. இன்னும் இரண்டு கவர்ன்மெண்டுகள் வேண்டும். லோகல் கவர்ன்மெண்டார் இத்தேசத்தில் பால்யவிவாகத்தை ஒழிக்கவே இன்னும் சட்டம் பிறப்பிக்கவில்லை. பயித்தியகாரன், தீராவியாதி யுடையவன், நபும்சகன் ஆகிய இவர்கள் விவாகத்திற்கு யோக்கியதையற்றவர்களென்று கன்னிகை வீட்டாருக்குத் தெரிந்திருந்தபோதிலும் இவர்களிடம் தனமிருக்கும் விஷயத்தில் கன்னிகையை விவாகம் செய்து கொடுத்துவிடுகிறார்கள்! இத்தகைய அனேக துர்வழக்கங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் கவர்ன்மெண்டார் பிரவேசித்துத் தனித்தனி சட்டம்பிறப்பிப்பதென்றால் சாத்தியப்பட்ட காரியமல்ல. இந்த துர்வழக்கங்களும் எளிதில் நம்மைவிட்டு ஒழியப்போகிறதில்லை. நம்மிடம் காணப்படும் ஒவ்வொரு துர்வழக்கத்திற்கும் கவர்ன்மெண்டாரைச் சட்டம் பிறப்பிக்க வருந்தி அழைப்பது முடிவில் அவர்கள் நம்முடைய மதாசாரங்களில் பிரவேசிப்பதற்கு இடமுண்டாகிவிடும். கவர்ன்மெண்டார் நம்முடைய மத அனுஷ்டானங்களில் பிரவேசிக்காமலிருப்பதற்குக் காரணம் 1858ளு காலஞ்சென்ற விக்டோரியா மகாசக்ரவர்த்தினி அவர்கள் டில்லிமா நகரில் நமக்குத் தந்தருளிய வாக்குதானப் பட்டயமே; Magnacharta of India இந்தப்பட்டயம் நமக்குப் பெரிய ஆதாரவாயிருக்கின்றது. கவர்ன்மெண்டாரும் இந்த ஆதாரவை மீறி நடக்கமுடியவில்லை. எப்போது இந்த ஆதரவிற்கு ஊனம் நேரிடுமென்று காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஆங்கிலேயர்களு மிருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப்பட்டயத்தை லார்ட் கர்ஜன் புறக்கணிக்க எத்தனித்தார். அப்பட்டயத்தில் சொல்லப்பட்டுள்ள பல ஷரத்துக்களில் ஒரு ஷரத்திற்கு எல்லோராலும் ஒப்புக்கொண்ட தாத்பரியத்திற்கு நேர்விரோதமான தாத்பரியம் கொள்ள எத்தனித்தார். ஆகையால் நம்முடைய ஆசாரங்களையும் வழக்கங்களையும் சீர் திருத்திக்கொள்ள கவர்ன்மெண்டாரைக் கூப்பிடுவது, கடைசியில் காலஞ்சென்ற மகாராணி அவர்கள் கருணைகூர்ந்து தந்தருளிய சுதந்தரங்களுக்கே மோசக்கேடாய் முடியுமாதலால் நாம் மிகுந்த ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். வரதக்ஷிணை வழக்கம் இத்தேசத்திலுள்ள ஒரு ஜாதியாரிடத்தில் மட்டிலும் இருந்து வருகின்றது. இந்த துர்வழக்கத்தை ஒழித்துக் கொள்ளவேண்டியதாயிருந்தால் அந்த ஜாதியிலிருக்கும் சாஸ்திரியார்கள் கூடி ஆலோசனை செய்து வரதக்ஷிணை கேட்கவும் கூடாது; கொடுக்கவும் கூடாதென்றும், அப்படி வாங்குகிறவர்கள் ஜாதியைவிட்டு விலக்கப்படுவார்கள் என்றும் ஒரு தீர்மானம் செய்து கட்டுப்பாடு செய்யலாம். வரதக்ஷிணை கொடுத்துவருவது மதசம்பந்தமான ஆசாரமல்ல. ~~சிலர் அதை மதசம்பந்தமான~~ ஆசாரமென்று நினைப்பது பிசகான எண்ணம். ஆகையால் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள்போலொத்த நம்தேசத்தில் இக்காலத்திலிருக்கும் மதாசாரியர்கள் வரதக்ஷிணை வாங்கிவரக்கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கலாம். இவ்விதமாக நம் தேசத்தில் காணப்படும் கெட்ட வழக்கங்களை யொழிக்க கவர்ன்மெண்டாரைக் கூப்பிடாமல் கூடியமட்டின் நாமே சீர்திருத்தங்களைத் தேடிக் கொள்ளவேண்டும்.

SUB-MAGISTRATES AND MEMORANDA.

சப் மாஜிஸ்டிரேட்டுகளும், சாக்ஷிவாக்கு மூலக் குறிப்புக்களும்.

இரண்டாவது மூன்றாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் சில கேஸ்களில் சாக்ஷி வாக்கு மூலத்தை முழுதிலும் தாக்கல் செய்துகொள்ளாமல் முக்கியமான குறிப்புக்கள் மட்டிலும் செய்துவரும் ஏற்பாடு சில சமயங்களில் கக்ஷிக்காரர்களுக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியதாயிருக்கின்றது. இரண்டாவது கிளாஸ் மூன்றாவது கிளாஸ் சப்மாஜிஸ்டிரேட்டுகள் செய்யும் தீர்ப்புகளுக்கு விரோதமாக முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்து கொள்ளலாம். அப்படி அப்பீல் செய்து கொண்டால் அப்பீல் கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டு ரிகார்டுகளைப் பரிசீலனை செய்து தீர்ப்பு சொல்லுகின்றார்கள். ஆகையால் கீழ்க்கோட்டாரால் ஒரு சாக்ஷி வாக்குமூலத்தின் முக்கியமான பாகத்தை முக்கியமல்லவென்று அபிப்பிராயப்பட்டு குறித்துக்கொள்ளாமல் விட்டுவிட்டால் அப்பீல் கோர்ட்டிலும் கக்ஷிக்காரர்களுக்குச் சரியான நியாயம் கிடைக்கமாட்டாது. வக்கீல்கள் ஒரு வாக்குமூலத்தை முக்கிய மென்று குறித்துக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டபோதிலும் சில மாஜிஸ்ரேட்டுகள், வக்கீல் சொல்லுவதை நாம் கேட்டகவாவது என்றெண்ணி குறித்துக்கொள்ளுகிறதில்லை. நம்தேச முனிசிப் கோர்ட்டுகளுக்கு பி. எ. பி. எல். பரீக்ஷையில் தேறியவர்களை டி. மூ. க்களாக நியமித்திருப்பது போல், சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கும் பி. எ. பி. எல் களையாவது அல்லது பிளீடர் பரீக்ஷையில் தேறியவர்களையாவது நியமிக்கும் பரியந்தம் பெரும்பாலும் இப்போதுள்ள சப் மாஜிஸ்டிரேட்டுகள் நடத்தும் நடவடிக்கைகளில் குறைகள் இருந்துகொண்டுதானிருக்கும். இந்த சப் மாஜிஸ்டிரேட்டுகள் அனாவசியமென்று அபிப்பிராயப்பட்டு தாக்கல் செய்யாமல் விடும் சாக்ஷியத்தைச் சில சமயம் அப்பீல் கோர்ட்டார்கள் மிக முக்கியமான சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்களும் தாங்கள் குறித்துக்கொண்ட வாக்குமூலத்தைக் கோர்ட்டில் வாசிக்கிறதில்லை. கக்ஷிக்காரன் ஒருமாதம் சென்று நகல் வாங்கிப்பார்த்தால் அதில் அவன் தரப்பில் சாக்ஷிகள்சொன்ன வாக்குமூலங்கள் ஒன்று மிருக்கிறதில்லை! இப்படியாக கக்ஷிக்காரர்கள் இந்த ஏற்பாட்டால் தீங்குற்று வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் இந்தக் குறையைக் கவனித்து விலக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னைபட்டணம் ஹைகோர்ட்டு.

• இரம வியாஜ்ஜியங்கள்.

ஜட்ஜி :—சீப் ஜஸ்டிஸ்.

அபிரக ஒப்பந்தக்கேஸ்.

வாதிகள் :—(1) ஆங்கிலோ இந்தியன் டிரேடிங் கம்பெனி.
(2) மெசர்ஸ் டியூரிங் அண்டு பின்லே.

பிரதிவாதிகள் :—(1) மிஸ்டர் அன்சூர் சுப்பாநாயுடு.
(2) மிஸ்டர் கொண்டப்பநாயுடு.

கேசின் விவரம் :—வாதிகள் தனித்தனியே பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியங்கள் செய்திருந்தார்கள் என்றும், இந்த வியாஜ்ஜியத்தின் காரணத்தையும் நம்முடைய இந்திய சட்ட கெஜெட் முதல் வால்யம் முதல் பிரதியில் சொல்லியிருந்தோம். இந்த வியாஜ்ஜியங்கள் ௴ பிப்ரவரிமீ நான்குநாள்பரியந்தம் விசாரணை செய்யப்பட்டன. இந்த வியாஜ்ஜியங்கள் தாக்கலானவுடன் இரு தரப்பாருக்கும் சமாதானப்பேச்சுகள் நடந்துவந்தன. பிரதிவாதிகள் விசாரணை தினத்தில் வாதிகளுடன் சமாதானம் செய்துகொண்டதாகச் சொன்னார்கள். வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் கோர்ட்டார் "இருதரப்பாரையும் கட்டுப்படுத்தும்படியான சட்டசம்மதமான சமாதானம் செய்துகொள்ளப்பட்டதா"? என்று ஒரு இஷ்யூ ஏற்படுத்தி விசாரணைசெய்தார்கள்.

லாயர்கள் :—மெசர்ஸ் ஷார்ட் ஆண்டு பியூஸ் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் டி. ஸ்வாமியர் வாதிகள் தரப்பிற்கும், மெசர்ஸ் பிரான்சன், பிரான்சன் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ரீட் பிரதிவாதிகள் தரப்பிற்கும் பேசினார்கள்.

கேசின் நடவடிக்கை :—முதல் வாதி தரப்பில் மிஸ்டர் மாக்கொலினும், இரண்டாவது வாதி தரப்பில் மிஸ்டர் டியூரிங்கும் சாக்ஷிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள். பிரதிவாதிகள் தரப்பில் இரண்டு பிரதிவாதிகளும் விசாரணை செய்யப்பட்டார்கள்.

இன்னும் சில சாக்ஷிகளும் விசாரணை செய்யப்பட்டார்கள்.

மேலே கூறப்பட்ட இஷ்யூவைப்பற்றிக் கோர்ட்டார் தீர்ப்பு சொல்லுவதற்கு முந்தி வாதி பிரதிவாதிகள் சமாதானம் செய்துகொள்ள இருதரப்பாருக்கும் பேச்சு நடந்துவருகின்றதென்று கோர்ட்டார் அறிவிக்கப்பட, விசாரணைத்தேதியைக் கோர்ட்டார் தள்ளிவைத்திருக்கிறார்கள்.

சாவுகார் டிஸ்கவுண்ட் கேஸ்.

ஜட்ஜி :—சர். S. சுப்பிரமணிய அய்யர்.

வாதி :—புருஷோத்தம பேட்டல்.

பிரதிவாதிகள் :—(1) G. விராசாமி.
(2) ஷையார் குமஸ்தா.

கேசின் விவரம் :—வாதி சென்னையில் லாவாதேவி செய்யும் சாவுகார். முதல் பிரதிவாதி சென்னை வாலாஜா ரோட்டில் குதிரை ஜீனி முதலிய சாமான்கள் செய்து விற்பவர். இவருடைய விலாசம் G. விராசாமி அண்டு சன்ஸ். இரண்டாவது பிரதிவாதி ஒரு சிறு பையன்; கடையிலேயே குமாஸ்தாவேலை பார்த்து வருகின்றான். முதல் பிரதிவாதியின் பௌத்திரன். பிரதிவாதிகளிருவரும் சேர்ந்து வாதிக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து ரூ. 7000-ப் கடன் வாங்கியதாகவும் இந்தத் தொகை தமக்குக் கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

பிரதிவாதிகளின் கக்ஷி :—முதல் பிரதிவாதி தாம் தாவா பிராமிசரி நோட்டில் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னார். இரண்டாவது பிரதிவாதி தான் கையெழுத்து செய்ததாகவும், தன் கையெழுத்திற்குமேல் முதல் பிரதிவாதியின் அனுமதியும் சம்மதமும் பெறாமல் முதல் பிரதிவாதியின் வர்த்தகவிலாசம் (G. Veerasawmy & Sons) கையெழுத்தைப் போட்டதாகவும் ஷை பிராமிசரி நோட்டு ரூ. 7000-க்கு எழுதப்பட்டிருந்தபோதிலும் ரூ. 817 தான் சாவுகார் கொடுத்ததாகவும் கக்ஷி சொன்னார்.

கேசின் நடவடிக்கை:—முதல் பிரதிவாதி பிரஸ்தாப பிராமிசரி நோட்டு கடனில் சம்பந்தப்படவில்லை என்று ரூஜூப்பட்டது.

தீர்ப்பு :—இரண்டாவது பிரதிவாதி அனுபோகமில்லாத சிறுபிள்ளை. இப்போதுதான் தொழில் செய்ய ஆரம்பித்திருக்கிறார். தன்னுடைய நிலைமை இன்னதென்று அறியாமல் கடன்வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். பிராமிசரி நோட்டின் முழுத்தொகையையும் இரண்டாவது பிரதிவாதிக்குக் கொடுத்ததை ரூஜூப்படுத்தவேண்டியது வாதியின் கடமையாயிருக்கின்றது. வாதி முழுத்தொகையையும் பிரதிவாதிக்குக் கொடுத்திருப்பாரா இல்லையா என்று யோசிக்கின் பிரதிவாதியிடமிருந்து ஏதேனும் அடமான ஈடு முதலியவைகள் பெற்றுக்கொள்ளாமல் கேவலம் பிரதிவாதியின் கையெழுத்தை நம்பி ஒரு சாவுகார் இவ்வளவு பெருந்தொகை கொடுத்ததாகச் சொல்வது ஆச்சரியமாக விருக்கிறது. இரண்டாவது பிரதிவாதி, வாதியை ஷாப்பிற்கு அழைத்துக்கொண்டுவந்து காண்பித்து இந்த ஷாப்பு மிகுந்த கௌரவமுடைய ஷாப்பென்று சொன்னதாகவாதிசொல்லுகினார். இரண்டாவது பிரதிவாதி அப்படிச் சொல்லியிருக்கக்கூடும். இருந்தபோதிலும் அவர் சொன்னதை நம்பி வாதி இவ்வளவு பெருந்தொகை கடன் கொடுத்ததாகச் சொல்வது நம்மக்கூடியதாயில்லை. ஆகையால் இரண்டாவது பிரதிவாதிமட்டிலும் வாதிக்கு ரூ. 897-ம் பிராமிசரி நோட்டு பிறந்ததுமுதல் 100-க்கு வருஷத்திற்கு 18-வட்டி மேனிக்குக் கூடின தொகையையும் டிக்கிரிதேதி முதல் பணம் செலுத்தப்படும்பரியந்தம் 100-க்கு வருஷத்திற்கு 6-வட்டியும் ஆகக்கூடின தொகையை வாதிக்குக் கொடுக்கும்படியாக வாதிக்கு டிக்கிரி கொடுக்கிறோம். முதல் பிரதிவாதியின் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிற வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்து இந்த வியாஜ்ஜியத்தில் அவருக்கு நேரிட்டிருக்கும் கோர்ட்டுச் செலவை வாதி கட்டிக்கொடுக்கும்படியும் உத்தரவுசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜி :—ஹானரபில் சீப் ஜஸ்டிஸ்.
வாதி :—மாணிக்க ஆசாரி வகையரு.
பிரதிவாதி :—இந்தியா செக்கிரட்டரி.

(16—1—07).

கேசின் விவரம் :—பிரதிவாதிக்குச் சொந்தமான எழும்பூர் சர்க்கிலைச்சேர்ந்த உப்பள பாக்டரியில் (Salt Factory) சில வாய்க்கால்களிருக்கின்றன. இந்த வாய்க்கால்களிலிருக்கும் சேற்றை வெளியில் எடுத்துப் போடுவதற்குப் பிரதிவாதியின் ஏஜண்டாராகிய உப்பள இலாகா டிப்டி கமிஷனர் வாதிகளுக்குக் கண்டிராக்டு கொடுத்திருந்தார். வாதிகள் அப்படியே சேற்றை எடுத்துக் கரையில் குவித்தார்களாம். ஒப்பந்தப்படி வாதிகளுக்குச் சேரவேண்டிய தொகையைப் பிரதிவாதிகள் கொடுக்கவில்லையாம்.

ஆகையால் ஒப்பந்தப்படி பிரதிவாதிகளிடமிருந்து ரூ. 3,797 கிடைக்கவேண்டுமென்று வாதிகள் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

வாதியின் வாக்குமூலம் :—ஒப்பந்த ஷரத்துக்களின்படி நாங்கள் வேலையைச் செய்தோம். ஆக்டிங் இன்ஸ்பெக்டர் R. S. ஷேப்பர்ட் நாங்கள் போர்போட்டிருந்த சேற்றை அளந்து பார்த்தார். அப்படி அளந்ததில் போரின் உச்சியிலிருந்து பாதி உயரத்தை அளந்தார். பாக்கிப் பாதியை அளந்துபார்க்கவில்லை. டிப்டி கமிஷனர் அளந்து பார்த்தபோது இன்ஸ்பக்டர் அளந்தது தப்பிதம் என்று கண்டு பிடிக்கப்பட்டது. இன்னும் சில வாய்க்கால்களிலிருந்து எடுத்த சேற்றைப் பிரதிவாதி ஏஜண்டுகள் அளக்கவில்லை. இதற்குக்காரணம் கேட்டோம். போர்போடவில்லை என்று சொன்னார்கள். வாய்க்கால்களுக்குப் போதுமான கரையில்லாததால் நாங்கள் போர்போடவில்லை. போர்போடாத சேற்றைப் பிரதிவாதியின் ஏஜண்டுகள் தோராயமாய் அளவிடுகிறது வழக்கம். நாங்கள் உள்ளபடி ரூ. 3978-7-3 செலவு செய்திருக்கிறோம். எங்களுக்குப் பிரதிவாதியிட மிருந்து ரூ. 1014-6-2 தான் கிடைத்திருக்கின்றது.

பிரதிவாதியின் எழுத்து வாக்குமூலம் :—ஒப்பந்த ஷரத்துக்களை அனுசரித்து வாதிகள் சில வாய்க்கால்களில் மட்டிலும்தான் சேறெடுத்தார்கள். பாக்கி வாய்க்கால்களில் சேறெடுக்கவில்லை. வாதிகள் போட்டிருந்த சேற்றுப்போர்களை எல்லாம் பிரதிவாதியின் ஏஜண்டுகள் அளந்தார்கள். பழையசேற்றுப் போரின்பேரில் வாதிகள் புதிதாய் எடுத்த சேற்றை அக்கிரமமாய்ப் போட்டிருந்தார்கள். பழைய சேற்றுப்போர்களை பிரதிவாதியின் ஏஜண்டு அளக்கவில்லை. வாதிகள் செய்த வேலைக்கு வாதிகளுக்கு ஒப்பந்தப்படி கிடைக்கவேண்டிய பணத்தைப் பிரதிவாதிகளின் ஏஜண்டுகள் செலுத்திவிட்டார்கள்.

தீர்ப்பு :—வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம் ருஜுப்படவில்லை. தள்ளும்படி செய்யப்பட்டது.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.
வாதி :—மெசர்ஸ் ஹாஜி முகமது பாக்ஷாசாயப்பு கம்பெனியார்.
பிரதிவாதி :—மிஸ்டர் A. P. பச்சைப் பெருமாள் செட்டியார்.

கேசின் விவரம் :—வாதி பிரதிவாதிகள் சென்னையில் வியாபாரம் செய்துவரும் வர்த்தகர்கள். வாதிகள் சீமையிலிருக்கும் நெஸ்ல் அண்டு ஆங்கிலோ சுவிஸ் கண்டன்ஸ்ட்மில்க்கம்பெனியாரின் (Nestle and Anglo-Swiss Condensed Milk Co.) சென்னை ஏஜண்டுகளாகவிருந்து ௸ கம்பெனியாரால் அனுப்பப்படும் பால் பெட்டிகளை விற்பனைசெய்துவருகிறார்கள். 789 - பால் பெட்டிகளுக்கு விலைநிர்த்துப் பிரதிவாதிகளிடமிருந்து வாங்கிக்கொள்வதாக வாதி ஒப்பந்தம்செய்து கூடுதலான கிரயத்தொகைக்கு 8 பிராமிசரி நோட்டுகள் எழுதிக்கொடுத்து ஒவ்வொரு பிராமிசரி நோட்டிற்கும் இன்னமாதம் இன்னதேதியில் பணம் செலுத்தி இத்தனை பெட்டிகள் எடுத்துக்கொள்ளுவதென்றும் ஏற்பாடு செய்துகொண்டாராம். ஒப்பந்தப்படி பிரதிவாதி இரண்டு பிராமிசரி நோட்டுகளுக்காக ரூ. 2500-செலுத்தி400-பெட்டிகள் எடுத்துக்கொண்டாராம். மற்றப் பிராமிசரி நோட்டுகளுக்கு ஒப்பந்தப்படி பணமும் செலுத்தவில்லையாம். பெட்டிகளையும் எடுத்துக்கொள்ளவில்லையாம். ஆகையால் பாக்கியுள்ள பிராமிசரிநோட்டுகளுக்காகப்பிரதிவாதியிடமிருந்து ரூ. 6511-கிடைக்கவேண்டுமென்று வாதி கம்பெனியார் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

பிரதிவாதியின் எழுத்து வாக்குமூலம் :—வாதிகள் செய்த விற்பனை பூர்த்தியான விற்பனையல்ல. வாதிகள் சப்ளைசெய்த ரகம் ஒப்பந்தப்படியில்லை. வாதிகள் சீமை கம்பெனியாருக்கு எழுதி சென்னைராஜதானியில் வேறொருவர் இந்த நெஸ்ல் பால்பெட்டிகளை விற்பனை செய்யவிடாமல் பிரதிவாதி ஒருவரே விற்பனை செய்துவரும்படியான சுதந்தரத்தை, பிரதிவாதிக்கு வாங்கிக்கொடுப்பதாகச் செய்துள்ள வாக்குத்தத்தத்தை வாதிகள் நிறைவேற்றவில்லை. தாவாத் தொகைக்கு யாதொரு டிக்கிரியும்வாதிகளுக்குக்கொடுக்கக்கூடாது. பிரதிவாதி அடைந்திருக்கும்நஷ்டத்திற்காகவாதிகளிடமிருந்து ரூ. 6500 பிரதிவாதிக்குச் சேரவேண்டும்.

லாயர்கள் :—அட்டர்னி மிஸ்டர் M. K. ராமசாமி அய்யர் உதவியுடன் அட்வோக்கேட் மிஸ்டர் M. A. திருநாராயணாசாரியார் வாதி கம்பெனியார் தரப்பிற்கு ஆஜரானார். பிரதிவாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் K. நாராயணராவும், மிஸ்டர் குன்ஜுணி நாயரும் ஆஜரானார்கள்.

அடியிற்கண்ட இஷ்யூக்கள் கோரிக்கொள்ளப்பட்டன.

(1) சப்ளை செய்யப்பட்ட பெட்டிகளின் ரகம் ஒப்பந்த ஷரத்தின்படி யிருந்ததா ?

(2) சென்னை ராஜதானி முழுதுக்கும் பிரதிவாதிக்கு சுதந்தர வர்த்தகம் கொடுப்பதாய் வாதிகள் பரிஷ்காரமாய் ஒப்பந்தம் செய்துகொண் டிருக்கிறார்களா ?

(3) பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு ஏதேனும் கிடைக்க வேண்டியதாயிருந்தால் அது எவ்வளவு ?

கேசின் நடவடிக்கை :—விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

சிவில் அப்பீல்கள்.

ஜட்ஜிகள் :—(1) ஜஸ்டிஸ் சர். S சுப்பிரமணிய அய்யர்.
(2) ஜஸ்டிஸ் சர். ரால்ப் பென்சன்.
(3) ஆனரபில் மிஸ்டர் வாலிஸ்.

சேர்விஸ் இனும் நிலத்தைக்குறித்த இரண்டாவது அப்பீல்.

லாபாயின்ட் :—ஒரு விதவைபேரிலிருக்கும் சர்விஸ் இனும் நிலத்தை அவள் இறந்து போனபின்பு அதைத் தன் இஷ்டப்பட்டவர்கள் அனுபவிக்கும்படியாகப் பராதீனம் செய்து உயில் எழுதிவைக்கலாமா ?

வாதி:—செல்லமய்யர்.

பிரதிவாதி:—விதவையின் தங்கை புத்திரன்.

கேசின் விவரம் :—கோதாவரி ஜில்லாவில் அச்சண்ணா என்பவர் கர்ணம் வேலையிலிருந்தார். இதற்காக கவர்ன்மெண்டார் அவருக்கு இனும் நிலம் கொடுத்திருந்தார்கள். சிறிதுகாலம் சென்றபின் அவர் இறந்து போய்விட்டார். இறந்துபோகவே, அவருடைய விதவை தாயாராகியசுப்பம்மாள் அனேகவருஷகாலம் ௸ இனும் நிலத்தை அனுபவித்து வந்தார். ௸ இனும் நிலம் இந்த அம்மாளுடைய அனுபவத்திலிருந்து வந்தபோது இனும் கமிஷனர் ௸ இனும் நிலத்தை ௸ சுப்பம்மாள் பேரிலும் ௸ அச்சண்ணா சிறிய தகப்பனார் புத்திரனாகிய செல்லமய்யர் பேரிலும் ரிஜிஸ்டர் செய்துகொண்டு இந்த இரண்டுபெயர்கள் பேரிலும் ௸ இனும் நிலத்திற்குப் பட்டாகொடுத்தனர். ௸ இனும் நிலம் இரண்டு பெயர்கள் பேரிலிருந்த போதிலும் ௸ நிலம் ௸ சுப்பம்மாள் இறந்துபோகும் பரியந்தம் அவருடைய ஏகபோக அனுபவத்திலேயேயிருந்துவந்தது. சுப்பம்மாள் இறந்து போகும்போது ௸ நிலத்தைத் தன்னுடைய தங்கை புத்திரனாகிய இந்த வியாஜ்ஜியத்தின் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்துவிட்டுப் பிறகு இறந்துபோய்விட்டார். ஆகவே வாதி செல்லமய்யர், தான் ௸ விதவைக்கு வார்சு என்றும் தனக்கு ௸ இனும் நிலம் கிடைக்க வேண்டு மென்றும் டி. மு. கோர்ட்டில் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் செய்தார்.

வாதியின் கக்ஷி :—பிரஸ்தாப இனும் நிலம் கர்ணம் உத்தியோகத்திற்காக கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டது. (2) கர்ணம் உத்தியோகம் குடும்பத்தில் பரம்பரை உத்தியோகம். (3) இந்த நிலத்தை அநுபவிக்கப் பாத்தியமுடையவர்கள் கர்ணனுடைய குடும்பத்தார்கள். (4) விதவை அந்நிலத்தைத் தன்னுடைய ஆயுள்பரியந்தம் அநுபவிக்கச் சுதந்தர மிருக்கின்றதேயொழிய அதைத் தன் இஷ்டப்படிப் பராதீனம் செய்யச்சுதந்தரமில்லை.

டி. மு. கோர்ட்டாரின் தீர்மானம்:— இ. லா. ரி. 21. சென். 47-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பை அநுசரித்து இனும் நிலம் விதவையின் சொந்த சொத்தென்றும் அவள் இஷ்டப்படிப் பராதீனம் செய்யப்படும்படியான சொத்தென்றும் தீர்மானித்து வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். வாதி காக்கிநாடு சப் கோர்ட்டில் முதல் அப்பீல் செய்து கொண்டார்.

முதல் அப்பீல் கோர்ட்டின் தீர்மானம் :—இ. லா. ரி. 26. சென். 339-ல் சர். V. பாஷ்யமய்யங்கார் அவர்கள் சொல்லியிருக்கும் தீர்ப்பை அனுசரித்து கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட இனும் நிலபாத்தியதையை ஹிந்துலாப் பிரகாரம் ஒரு விதவை தன்னுடைய ஜீவதசை முடியும் பரியந்தம் அனுபவிக்கப்பாத்தியமுடையவளேதவிர அதைப்பராதீனம் செய்யப் பாத்தியமற்றவள் என்று தீர்மானித்து வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொண்டார்.

இந்த அப்பீல் சீப்ஜஸ்டிஸ்,மிஸ்டர்ஜஸ்டிஸ் வாலிஸ் ஆகிய இந்த இரண்டு ஜட்ஜிமார்களாலும் விசாரணை செய்யப்பட்டு இவர்களால் முடிவு செய்யக்கூடாமல் புல்பென்சிற்கு ரிபர் செய்தார்கள்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் T. V. முத்துகிருஷ்ண அய்யர் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் K. குப்பு சாமி அய்யர் பிரதிவாதி தரப்பிற்கும் பேசினார்கள்.

புல்பென்ச் தீர்ப்பு :—இ. லா. ரி. 8. சென். 241-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானம் பிரதிவாதிக்குப் பலமாயிருந்தாலும், இ. லா. ரி. 26. சென். மிர். சர். வி. பாஷியமய்யங்கார் அவர்கள் சொல்லியிருக்கும் தீர்ப்பே சரியான தீர்ப்பு என்று அபிப்பிராயப் படுகின்றோம். ஆகையால் இ. லா. ரி. 15,21,23 சென். வால்யங்களில் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்புகளை ரத்துசெய்து ஒரு விதவைக்கு கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட இனும் நில பாத்தியதையை அவள் ஜீவதசை முடியும் பரியந்தம் அனுபவித்து வரலாமேயன்றி அவள் இறந்து போனபின்பு தன் இஷ்டப்பட்டவர்கள் அனுபவித்து வரும்படியாகப் பராதீனம்செய்து உயில் எழுதிவைக்க அவளுக்குப்பாத்தியம் இல்லையென்று தீர்ப்பு சொன்னார்கள்.

புல்பென்ச் :—(1) மிஸ்டர் ஜட்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர்.
(2) மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலில்.
(3) மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

இரண்டாவது அப்பீல்.

(31—1—07.)

லாபாயிண்ட் :—பல பிரதிவாதிகள் உள்ள ஒரு வியாஜ்ஜியத்தில் கீழ்க்கோர்ட்டார் எல்லாப் பிரதிவாதிகளுக்கும் பொதுவாயுள்ள ஒரு காரணத்தை முன்னிட்டு எல்லாப் பிரதிவாதிகள்பேரிலும் டிக்கிரி கொடுத்தபோது அவர்களில் ஒரு பிரதிவாதிமட்டிலும் முழு டிக்கிரிக்கும் விரோதமாக அப்பீல் செய்துகொண்டால், இதர பிரதிவாதிகள் பேரில் ஏற்பட்டிருக்கும் டிக்கிரியை ரத்துசெய்யவாவது அல்லது மாற்றவாவது அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதா ?

கேசின் விவரம் :—வட ஆற்காடு ஜில்லாவில் புருஷோத்தமம் என்பவருக்குச் சொந்தமான சில நிலங்களிருக்கின்றன. அவர் இறந்துபோன பின்பு ஷெ நிலங்களை அவருடைய விதவை அனுபவித்து வந்தனள். அவள் ஜீவதசையிலிருக்கும்போது ஷெ நில சொத்துக்களில் சிலவற்றைச் சிலருக்குப் பராதீனம் செய்தாள். அவள் இறந்துபோன பின்பு அவளுடைய நெருங்கிய பந்து ஒருவன் மூலபுருஷனுகிய புருஷோத்தமனுக்குத் தான்தான் வார்சென்றும், விதவையால் பராதீனம்செய்யப்பட்ட சொத்துக்கள் வார்சுக் கிரமத்தில் தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும் ஷெ விதவையிடம் சொத்துக்களை வாங்கியவர்கள் எல்லோரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து அவர்கள் பேரில் சித்தூர் டி.மு. கோர்ட்டில் வியாஜ்ஜியங்கொண்டுவந்தான்.

கோர்ட்டார்கள்தீர்மானம் :—வாதி ஷெ மூலபுருஷனுக்கு வார்சு என்றும், விதவைசெய்த பராதீனங்கள் வாதியைக்கட்டுப்படுத்த மாட்டாதென்றும் தீர்மானித்துப்பிரதிவாதிகள்பேரில் டிக்கிரி கொடுத்து வாதிபக்கம் தீர்ப்பு சொன்னர்கள். இந்தப் பிரதிவாதிகளில் ஒருவன் முழு டிக்கிரிக்கு விரோதமாக ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான்.

ஜில்லா கோர்ட்டாரின் தீர்மானம் :—தாவா நிலத்தின் சொந்தக்காரனுகிய மூலபுருஷனுக்கு வாதி வார்சாக மாட்டான் என்று தீர்மானித்துக் கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தை ரத்துசெய்து வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்,

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டான்.

அப்பீல் கிரவுண்கேள் :—டி. மு. கோர்ட்டார் எல்லாப் பிரதிவாதிகள் பேரிலும் டிக்கிரி கொடுத்தார்கள். ஒரு பிரதிவாதிமட்டிலும் அந்த டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்துகொண்டான். இதர பிரதிவாதிகள் அப்பீல் செய்துகொள்ளாமலிருக்கும்போது அவர்கள் பேரில் ஏற்பட்டிருந்த டிக்கிரியையும் ரத்துசெய்ய அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை.

இந்த அப்பீல் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் ஆகிய இந்த இரண்டு ஜட்ஜிமார்களால் விசாரணை செய்யப்பட்டது.

முழு டிக்கிரியையும் ரத்துசெய்ய அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்றும்; சில தீர்ப்புகள் அதிகாரமில்லை என்றும் இப்படித் தீர்ப்புகள் பலவிதமாயிருக்கிறபடியால், கோர்ட்டார் இந்தக் கேசை புல்பென்சுக்கு ரிபர்செய்தார்கள்.

புல்பென்ச் தீர்ப்பு:—இவ் விஷயத்தில் அப்பீல் கோர்ட்டாருக்கிருக்கும் அதிகாரத்தை வரைபடுத்துவதற்குச் சி.பு.கோ. 544-வது பிரிவில் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆகையால் ஒரு பிரதிவாதி முழு டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்துகொண்டபோதிலும் இதர பிரதிவாதிகள் பேரில் ஏற்பட்டிருக்கும் டிக்கிரியை ரத்துசெய்யவும் அல்லது மாற்றவும் அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கின்றதென்று தீர்ப்பு சொன்னர்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

மதிராஸ் ரெயில்வேகம்பெனியின் நஷ்ட வியாஜ்ஜியம்.

வாதிகள் .—காக்கிநாட்டில் 5 பேர்கள்.

பிரதிவாதிகள் :—மதிராஸ் ரெயில்வே கம்பெனியார்.

கேசின் விவரம் :—காக்கிநாட்டிலிருக்கும் வாதிகள் 1903-ம்௵ டிசம்பர்௴ 25௳ சென்னையில் நடந்த தியாசபிகல் பிரசங்கங்களைக் கேட்க ஆவல்கொண்டு சென்னபட்டணம் வர மதிராஸ் ரயில்வேகம்பெனியாருடன் ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். அந்த ஒப்பந்தம் என்னவென்றல், வாதிகள் ஐவருக்கும் காக்கினுடு போர்ட் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு பிரத்தியேக இரண்டாவது வகுப்பு வண்டி ரெயில் தொடரில் சேர்க்க வேண்டுமென்றும், சாமல்கோட் ஜங்ஷனில் இந்த வண்டியைவிட்டு வேறேவண்டியில் போய் ஏறும் சிரமத்தைக் கம்பெனியார் வாதிகளுக்குக் கொடுக்காமல் காக்கிநாடு போர்ட்ஸ்டேஷனிலிருந்து வாதிகள் ஏறிப்போன இரண்டாவது வகுப்பு வண்டியைத் தனிப்படுத்தி சாமல் கோட்டில் சென்னைக்குப் போகும் மெயில் ரயில்வண்டித் தொடரில் சேர்த்து வாதிகளைச் சென்னைக்குக் கொண்டுபோக வேண்டுமென்றும் வாதிகள் பிரதிவாதிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்படி ஒப்பந்தம் செய்து கொண்டு வாதிகள் 1903௵ டிசம்பர்௴ 23௳ காக்கிநாடு போர்ட்ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டார்கள். ஒப்பந்தப்படி பிரதிவாதிகளும் வாதிகளுக்கு ரயில் தொடரில் பிரத்தியேகமாய் ஒரு இரண்டாவது வகுப்பு வண்டி சேர்த்திருந்தார்கள். ரயில் சாமல் கோட் ஜங்ஷனுக்கு வந்தது. அவ்விடத்தில் சென்னைக்குப் போகும் மெயில்வண்டியும் வந்தது. பிரதிவாதி கம்பெனியார் வாதிகள்ஏறியிருந்த இரண்டாவது வகுப்பு வண்டியைத் தனிப்படுத்திச் சென்னைக்குப் போகும் மெயில் வண்டியில் சேர்க்காமல் போனதுமன்றி, வாதிகளுக்கு மெயில் வண்டியில் ஏறிப்போகப் பிரத்தியேக இடமும் தயார்செய்து கொடுக்கவில்லை. ஆகையால் வாதிகள் ஏறிப்போன வண்டியிலேயே இரவெல்லாம் கண்விழித்துக்கொண்டும் மிகுந்த அசௌகரியங்களுக்குட்பட்டுக் கொண்டும் நடு இரவில் காக்கிநாட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். இதனல் வாதிகள் தங்களுக்கு நேரிட்டிருக்கும் டிக்கட்டு நஷ்டத்தையும், தங்களுக்குண்டான அசௌகரியங்களுக்காகவும் ரூ. 200 நஷ்டம் கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதிகள் பேரில் காக்கிநாடு சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தார்கள்.

பிரதிவாதிகளின் கக்ஷி :—வாதிகளுடன் ஒப்பந்தம் செய்தது உண்மைதான். ஆனல் அந்த ஒப்பந்தம் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பந்தம். அதாவது சாமல்கோட் ஜங்ஷனிலிருந்து சென்னைக்குப்போகும் மெயில் வண்டியில் வாதிகள் ஏறிப்போன இரண்டாவது வகுப்பு வண்டியைச் சேர்க்க வசதியிருந்தால் சேர்க்கப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு வாதிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. சாமல்கோட்டிற்கு வந்த மெயில் வண்டி முழு பாரத்துடன் வந்தது. ஆதலால் வாதிகளின் வண்டியை அதில்கொண்டுபோய் சேர்க்கமுடியவில்லை. இந்த மெயில்வண்டியில் பிரயாணிகள் பூராவாய் நிறைந்திருந்தபடியால் வாதிகளுக்குப் பிரத்தியேகமான இடம் சம்பாதித்துக்கொடுக்கச் சாத்தியப்படாமலிருந்தது. இந்த விபரம் வாதிகளுக்கு சாமல்கோடிலேயே தெரிவிக்கப்பட்டது. பிரதிவாதிகளின் வேலைக்காரர்கள் அலக்ஷியமாயிருக்கவில்லை. வாதிகளுக்கு யாதொரு நஷ்டமும் நேரிடவில்லை.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—வாதிகள் ஏறிப்போன வண்டியை சாமல்கோட் ஸ்டேஷனில் மெயில்வண்டியில் பிரதிவாதிகள் சேர்ப்பது ரெயில்வேகம்பெனி விதிகளை அனுசரித்து சாமல்கோடிற்கு வரும் மெயில்வண்டியிலுள்ள பளுவைப் பொறுத்ததாயிருக்கின்றது. ஆகையால் வாதி பிரதிவாதிகள் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தம் மேற்சொன்ன நிபந்தனைக்கு உட்பட்ட ஒப்பந்தமாயிருக்கிறது. அன்றைய இரவு சாமல் கோடிற்குவந்த மெயில்வண்டி முழுபாரத்துடன் வந்ததென்று ருஜுவாயிருக்கிறது. ஆகையால் வாதிகளின் வண்டியை மெயில்வண்டியில் பிரதிவாதிகள் சேர்க்காமற்போனது சரியான செய்கைதான். வாதிகள் சென்னைக்கு வந்து தியாசபிக்கல் பிரசங்கங்களைக் கேட்கத் தவறிப்போனதால் அவர்களுக்கு யாதொரு நஷ்டமும் நேரிடவில்லை. இரவு முழுதிலும் கண்விழித்துக்கொண்டு திரும்பி காக்கினுட்டிற்கு வந்ததனல் அவர்களுக்கு யாதொரு நஷ்டமும் நேரிட்டிருப்பதாகச் சொல்லமுடியாது என்று நியாயம்சொல்லி வாதிகள் வாங்கின டிக்கட்டுகளின் கிரயத்திற்கு மட்டிலும் பிரதிவாதிகள்பேரில் டிக்கிரி கொடுத்தார்கள்.

வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

இந்த அப்பீலை விசாரணைசெய்த மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் அசல்கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிசெய்தார்.

வாதிகள் லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் V. சேஷகிரி அய்யர் வாதிகள் தரப்பிற்கும், பாரிஸ்டர் மிஸ்டர் ஷாமியர் பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானர்கள்.

தீர்ப்பு :—இந்தியன் ரயில்வே ஆக்ட் 67-வது பிரிவின்படி ரயிலில் இடமிருந்தால் ஏறிக்கொள்ளலாமென்கிற நிபந்தனையுடன் டிக்கட்டுகள் கொடுக்கப்படுகின்றன. வாதிகள் ஒரு பிரத்தியேக கம்பார்ட்மெண்டு எடுத்துக்கொண்டதை முன்னிட்டு ஷெ பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனையிலிருந்து விலக்கப்பட்டவர்களாகமாட்டார்கள். அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடிசெது கீழ்க்கோர்ட்டு தீர்மானங்களை உறுதிசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னர்கள்.

கிரிமினல் அப்பீல்.

குட்டியார் தீவட்டிக்கொள்ளைக் கேஸ்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கேசின் விவரம் :—தென்கன்னடத்தில் ஒரு மனிதன் அசரு என்கிற உத்தியோகத்திலிருந்தார். இந்த உத்தியோகத்திலிருந்து அவரை நீக்கும்பொருட்டு அவருடைய தமையன் மகன் அவர்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு வந்தபோது பிரதிவாதி தம்முடைய சொத்துக்களைத் தம்முடைய பெண்சாதிக்குப் பராதீனம் செய்வதாக வாதி பிரமாணப்பத்திரம் தாக்கல்செய்து தீர்ப்புக்கு முந்தி பிரதிவாதியின் சொத்துக்களை ஜப்திசெய்யும்படி வேண்டிக்கொண்டனர். அப்படியே ஜப்தி செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டது. அம்ஜப்தி செய்வதற்காக பிரதிவாதியின் வீட்டிற்குப் போகும்போது ஒரு கோர்ட்டு சேவகனையும், ஒரு போலிஸ் கான்ஸ்டேபிலையும் 5-பஞ்சாயத்தார்களையும் சாக்ஷிகளாகவிருக்கும்பொருட்டு அழைத்துக்கொண்டுபோனர்.

இவர்கள் பின்னல் 200-அல்லது 300-ஜனங்கள் வந்து பிரதிவாதியை அவமானப்படுத்தவேண்டுமென்கிற கருத்துடனும் தீவட்டிக்கொள்ளை அடிக்கவேண்டுமென்கிற கருத்துடனும் பிரதிவாதியின் வீட்டிற்குள் புகுந்து தீவட்டிக்கொள்ளை அடித்ததாக 18 - பேர்கள் பேரில் பிரதிவாதி குற்றம் சாட்டினர்.

இந்தக் கேசை தென்கன்னடம் செஷன் கோர்ட்டார் விசாரணைசெய்து எல்லாக் குற்றவாளிகளையும் தீவட்டிக்கொள்ளை குற்றத்திலிருந்தும், தீவட்டிக்கொள்ளை அடிக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் அக்கிரமமாய்ப் பிரவேசிக்கிறது என்கிற குற்றத்திலிருந்தும் விடுவித்து, எல்லோர் பேரிலும் "அக்கிரமமாய்ப்பிரவேசித்தல்" என்கிற குற்றஸ்தாபனைசெய்து 1-முதல் 4-குற்றவாளிகளுக்கும் 8-வது குற்றவாளிக்கும் ஒவ்வொருவருக்கும் 6-மாத கடுங்காவல் தண்டனையும், 1-வது குற்றவாளிக்கு ஜெயில் தண்டனையுடன் ரூ. 500 அபராதமும், 2, 3, 4, 8-குற்றவாளிகளுக்கு ஜெயில் தண்டனையுடன் தலைக்கு ரூ. 250 அபராத தண்டனையும், 18-வதுகுற்றவாளி (அமீனு)வுக்கு ஒருமாதக் கடுங்காவல் தண்டனையும் பாக்கியுள்ள குற்றவாளிகளுக்கு மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

ஆகவே 18-கைதிகளும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

1, 2, 3, 4, 8-குற்றவாளிகளுக்கு ஆஜரான வக்கில் மிஸ்டர் R. நாராயணராவ், ஜப்தி சட்டமுறைகளைத் தழுவி செய்யப்பட்டதென்றும், கூட்டத்திலிருந்த மனிதர்கள் இந்தக் கேசின் பிரியாதியின் (அசரு : சிவில்கேசின் பிரதிவாதி) சொந்தக் குடியானவர்கள் என்று ருஜுவாயிருக்கிறதென்றும், பிரியாதியை அவமானப்படுத்தவாவது அல்லது அவருக்கு இடஞ்சல் செய்யவாவது யாதொரு பிரயத்தனம் செய்யப்பட்டதாக ருசுப்படவில்லை என்றும் ஆகையால் தம்முடைய கக்ஷிக்காரர்களைக் கோர்ட்டார் விடுதலை செய்யும்படி உத்தரவுசெய்யவேண்டுமென்றும் சொன்னர்.

பாரிஸ்டர் மிஸ்டர் ஜான் ஆடம் பாக்கி 11-கைதிகளுக்கும், வக்கீல் மிஸ்டர் R. S. ராமசாமி சாஸ்திரியாரும், வக்கீல் மிஸ்டர் G. அண்ணஜிராவும் 18-வது குற்றவாளிக்கு ஆஜரானர்கள்.

தீர்ப்பு :—1, 2, 3, 4, 5, 6, 7, 8, 11, 13, 16, 17, 20 ஆகிய இந்தக் குற்றவாளிகளின்பேரில் ஸ்தாபிக்கப்

பட்ட குற்றஸ்தாபனையைக் கோர்ட்டார் உறுதிப்படுத்தினார்கள். ஆனால் முதல் குற்றவாளிக்கும் 8-வது குற்றவாளிக்கும் விதிக்கப்பட்டிருந்த 6 மாதக் கடுங்காவல் தண்டனையைமுறையே 4, 3 மாத தண்டனையாகக் குறைத்து விதித்தார்கள். 9, 10, 12, 18, குற்றவாளிகள் ஜப்தி செய்வதற்குக் கோர்ட்டார் கொடுத்த உத்தரவை நிறைவேற்றப் பிரியாதியின் வீட்டிற்குப் போனார்களே ஒழிய யாதொரு குற்றத்தையும் செய்வதற்குப் போகவில்லை என்று காரணம் சொல்லி அவர்களை விடுவிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

அம்மயநாயக்கனூர் ஜமீன் கேஸ்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலில்.

கேசின் விவரம் :—அம்மயநாயக்கனூர் ஜமீனுக்கு இப்போதிருக்கும் ஜமீன்தாருக்கு முன்னிருந்த ஜமீன்தாரும், இந்த ஜமீனுக்குப் பட்டத்திற்கு வர பாத்தியதையுடைய ஜமீன் குடும்ப ஜூனியர் மெம்பர்களும் ஷை பாத்தியதையை ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரிடம் அடமானம் வைத்துப் பணம்வாங்கிக் கொண்டார்கள். ஜமீன்தார் வகையறு கடனைத்தீர்க்கவில்லை. நாட்டுக்கோட்டை செட்டியார் வியாஜ்ஜியம் செய்தார். வியாஜ்ஜியம் சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. அதாவது, அம்மயநாயக்கனூர் ஜமீன் பட்டத்திற்கு வரும் ஒவ்வொருவரும் ஜமீன் எஸ்டேட்டிலிருந்து நாட்டுக்கோட்டை செட்டியாரின் கடனைக் கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு வியாஜ்ஜியத்தைச் சமாதானம் செய்துகொண்டார்கள். அப்படியே கோர்ட்டாரும் சமாதான டிக்கிரி நாட்டுக்கோட்டை செட்டியாருக்குக் கொடுத்திருந்தார்கள். இப்போது ஷை ஜமீன் பட்டத்திற்கு வந்திருக்கும் ஜமீன்தார், செட்டியாரின் கடனைக்கொடுக்க ஆக்ஷேபித்தார். நாட்டுக்கோட்டை செட்டியார் தாம் பெற்றிருந்த சமாதான டிக்கிரியை நிறைவேற்றி ஜமீனை ஜப்தி செய்தார்; ஜப்தி செய்யப்பட்ட எஸ்டேட்டை விற்பனைசெய்ய வேண்டுமென்றும் விற்பனை செய்யப்படும் பரியந்தம் அந்த எஸ்டேட்டை மானேஜ்மெண்டு செய்யக் கோர்ட்டார் ஒரு ரிஸீவரை நியமிக்கவேண்டுமென்றும் செட்டியார் மதுரை சப் கோர்ட்டில் மனுசெய்து கொண்டார்.

ஜமீன்தார் தரப்பிற்கு ஆஜரான வக்கீல் மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் இந்த ஜமீனுக்கு இனிமேல் பட்டதாரியாய் வரக்கூடிய பாத்தியதையுடையவர்கள் அந்த பாத்தியதையை அடமானம் வைப்பதற்கு முந்தி தங்களுடைய பாத்தியதையை அடமானம் வைத்திருக்கிறபடியால் அந்த அடமானம் செலாமணியாக மாட்டாதென்றும் அந்த பாத்தியதையையும் கி. பு. கோடின் பிரகாரம் ஏலம்போட முடியாதென்றும் வாதித்தார்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—இந்த பெந்தகத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும்ஜமீன்குடும்ப ஜூனியர்மெம்பர்களுக்கு ஜமீனில் சுவாதீனமான பாத்தியதையிருக்கின்றது. ஆகையால் அவர்கள் பாத்தியதைபெந்தகமும் வைக்கப்படலாம். விற்பனையும் செய்யப்படலாம் என்று சொல்லி ஷை ஜப்தி செய்யப்பட்ட எஸ்டேட்டிற்கு ரிசீவர் நியமிக்கும்படி உத்தரவு செய்தார்கள். ஜமீன்தார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு.—டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி (Transfer of Property Act) 6-வது பிரிவின்படியும் சி. பு. கோ. 266—வது பிரிவின்படியும் வார்சுக்கிரமத்தில் பிந்தி எஸ்டேட்டிற்குப் பட்டத்திற்கு வரக்கூடியவர்களின் பாத்தியதை விற்பனை செய்யப்படவும் அடமானம்வைக்கப்படவும் கூடாது என்று சொன்னார்கள். இருந்தபோதிலும் நாட்டுக்கோட்டை செட்டியார் டிக்கிரியை பணடிக்கிரியாகப் பாவிக்கப்படும்பொருட்டு முதலில் செய்துகொண்டநிறைவேற்று மனுவை சீர்திருத்திக்கொள்ளும்படி உத்தரவு செய்தார்கள். ரிசிவர்நியமிக்கும்படியாக சப் கோர்ட்டார் செய்த உத்தரவும் அமுலிலிருக்கும்படியும் உத்தரவுசெய்தார்கள்.

வருமானவரியைப்பற்றிய கேஸ்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கேசின் விவரம் :—சென்னை டிப்டி கலெக்டர் ஆபீசில் கர்ணன் உத்யோகம் பார்த்துவந்த பார்த்தசாரதி அய்யங்கார் என்பவர் வருமானவரி வசூலித்துவந்த வகையில் கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமான ரூ. 87-14-0 கையாடி நம்பிக்கை மோசம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு மூன்றாவது பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் மூன்றுமாதக்கடுங்காவல் தண்டனையும், ரூ. 250 அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டார். இந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளி ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்து, தன்னை ஜாமீன்பேரில் விடும்படி பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மண்டு மூலியமாக மனுவும் செய்து கொண்டார்.

உத்தரவு :—அப்பீலை தாக்கல் செய்யும்படியும், குற்றவாளியிடமிருந்து ரூ. 500-க்கு ஜாமீன் வாங்கிக்கொண்டும், ரூ. 250-க்கு வேறே இரண்டு ஜாமீன்களும் வாங்கிக்கொண்டும் அவரை ஜெயிலிலிருந்து விடுவிக்கும்படியும் கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

சர்வகலாசாலை மோசக்கேஸ்.

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கேசின் விவரம்.—கோபால கிருஷ்ணய்யா, லக்ஷ்மி அய்யா ஆகிய இருமாணவர்கள் சர்வகலாசாலை பரீக்ஷை கேள்விக்கடிதங்களை S.P.C.K. அச்சாபீசிலிருந்து தங்களுக்கு எடுத்துக்கொடுக்கும்படியாக ஷை அச்சாபீஸ் மானேஜருக்கு ரூ. 900 லஞ்சம்கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சென்னை சீப் பிரசிடென்ஸிமாஜிஸ்டிரேட் மிஸ்டர் W. E. கிளார்க் அவர்களால் விசாரணை செய்யப்பட்டார்கள். கோர்ட்டார் குற்றவாளிகளின் பேரில் குற்றத்தை ஸ்தாபித்து குற்றவாளிகளிடமிருந்து நல்லநடத்தைக்கு ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டுவிட்டார்கள். குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தும், சர்வ கலாசாலை ரிஜிஸ்டிரார் குற்றவாளிகள் லஞ்சம் கொடுத்ததைத் தாம் கண்ணாரப்

பார்த்ததாகச் சாக்ஷியம் சொல்லியிருந்தும் கோர்ட்டார் குற்றவாளிகளை அற்பதண்டனையுடன் விடுவித்துவிட்டது நியாயமல்ல வென்றும் கிளௌரன் பிராசிக்கியூட்டர் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் தண்டனையை உயர்த்தும்படி ஹைகோர்ட்டில் கிரிமினல்ரிவிஷன்மனுதாக்கல்செய்யக் கோர்ட்டார் எதிரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவு செய்தார்கள். இதன்பேரில் எதிரிகள் தாங்கள் செய்ததாகச் சொல்லப்படும் செய்கை சட்டப்படி குற்றமாக மாட்டாதென்றும் தங்களுக்குப் போலீஸ் கோர்ட்டார் விதித்திருக்கும் தண்டனையை ரத்துசெய்ய வேண்டுமென்றும் பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன் மூலியமாகக் கிரிமினல் அப்பீல் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

புளியம்பழம் திருடின கேஸ்.

கேசின் விவரம்:—சேலம் ஜில்லா தருமபுரியில் கிருஷ்ணய்யர் என்பவர், வெங்கடநரசிம்மய்யர் என்பவருக்குச் சொந்தமான நிலத்திலிருந்த புளியமரத்தில் ஏறி புளியம்பழம் திருடினதாகக் குற்றம் சாட்டப்பட்டார். குற்றவாளி புளியமரம் நிற்கும் நிலமும் மரமும் தன்னுடையதென்று டிபன்ஸ் கூறினார். இந்தக்கேஸை விசாரணைசெய்த இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் குற்றவாளி பிரஸ்தாப நிலம் தனக்குச்சொந்தமென்று நினைக்க யாதொரு காரணமுமில்லையென்றும், பழைய சர்வேயிலாவது அல்லது புதுசர்வேயிலாவது ஷை மரம் நிற்கும் நிலம் குற்றவாளியின் நிலத்தைச் சேர்ந்ததாகத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொல்லி குற்றஸ்தாபனை செய்து குற்றவாளிக்கு ரூ. 20 அபராத தண்டனையும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குற்றவாளி அப்பீல் செய்துகொண்டதில் டிப்டி மாஜிஸ்டிரேட் கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதி செய்தார்கள். குற்றவாளி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுசெய்துகொண்டார்.

லாயர்கள் :—அப்பீல்தார் தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் சேஷாசார்லு பேசினார். பிராஸிக்கியூஷன் தரப்பிற்கு பப்ளிக் பிராஸிக்கியூடர் பேசினார்.

தீர்ப்பு :—கீழ்க் கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் குற்றத்தை ஸ்தாபித்ததற்குக் காரணங்கள் சொல்லவில்லை. இந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்தின முதல் அப்பீல் கோர்ட்டார் குற்றவாளி ஒரு தந்திரமான பிராமணன் என்று மட்டிலும் காரணம் காட்டி யிருக்கிறார்கள். குற்றவாளி புளியமரம் நிற்கும் நிலம் தன்னுடையதென்று டிபன்ஸ்கூறி யிருக்கிறார். ஆகையால் இது சிவில் கோர்ட்டார் பிடிக்கவேண்டியகேஸ். குற்றஸ்தாபனையை சட்டம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. ஆகையால் தண்டனையை ரத்து செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

மனுக்கள்.

ஜட்ஜி :—ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

வியாஜ்ஜியம் செய்வதற்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று செய்துகொண்ட மனு.

மனுதார் :—சென்னை சார்ட்டர்ட் பாங்கியார்.

மனுவின் விவரம் :—பங்களூரில் வசித்துவரும் மிஸ் டாசன் என்கிற துரைசானி சென்னபட்டணத்தில் வர்த்தகம் செய்துவரும் மெசர்ஸ் வெஸ்ட் கம்பெனியாருக்கு ரூ. 5000-க்குப் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார். மெஸர்ஸ் வெஸ்ட் கம்பெனியார் ஷை நோட்டை மனுதாருக்கு மேடோவர்செய்து ரூ. 5000-பெற்றுக்கொண்டார்கள். மனுதார் பெங்களூருக்குச் சென்று டாசன் துரைசானியின்பேரில் வியாஜ்ஜியம் செய்வதென்றால் அதிகச் செலவுபிடிக்கும். டாசன் துரைசானியை முதல் பிரதிவாதியாகவும் மெசர்ஸ் வெஸ்ட் கம்பெனியாரை இரண்டாவது பிரதிவாதியாகவும் சேர்த்து ஹைகோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் செய்யும்படி அனுமதி கொடுக்கும்படி மனுதார் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றார். இரண்டு பிரதிவாதிகளுக்கும் நோட்டீஸ்கள் சார்வ் செய்யப்பட்டிருக்கின்றன.

மனுவின் விசாரணை :—மனுதார் பாங்கியாரின் அக்கௌண்டண்ட் என்கிற - உத்தியோகஸ்தர். ஷை மனுவுடன் ஒரு பிரமாணபத்திரம் தாக்கல்செய்து பிரமாண வாக்குமூலம் எழுதிவைத்தனர்.

உத்தரவு :—சென்னை ஹைகோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் செய்துகொள்ளலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்டது.

ஜட்ஜி :—ஜஸ்டிஸ் ஸர். S. சுப்பிரமணிய அய்யர்.

சிவில் ரிவிஷன் மனு.

மனுதார் :—மிஸ் சங்கவுடாயின்.

கேசின் விவரம் :—P. A. வெங்கடேச முதலியார் என்பவர், மிஸ்டர் கவுடாயினையும் அவருடைய பெண்சாதியையும் பிரதிவாதிகளாகச்சேர்த்து சென்னபட்டணம் ஸ்மால்காஸ் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து ரூ. 882-க்கு எக்ஸ்பார்ட்டி டிக்கிரி பெற்றுக்கொண்டார். இந்த டிக்கிரித் தொகையில் பெண்சாதி எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அவ்வளவிற்கு மட்டிலும் பெண்சாதிக்குள்ள சொத்தின்மேல் பிரவேசிக்கலாமென்று டிக்கிரியில் சொல்லப்பட்டிருந்தது. பெண்சாதிக்கு அபிஷியல் டிரஸ்டியிடம் ஒப்புவிக்கப்பட்ட சில பணச்சொத்திருந்தது. இதற்கு வட்டிபணம் சேர்ந்திருந்தது. டிக்ரி பெற்றவர் டிக்கிரியை நிறைவேற்றி ஷை டிரஸ்ட் சொத்தின் வட்டிப் பணத்தை ஜப்திசெய்தார். அபிஷியல் டிரஸ்டி வட்டி பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டார். ஆகவே பெண்சாதி டிரஸ்ட் ஆதரவின் ஷரத்துப்படி ஷை டிரஸ்ட் பணத்தைத் தான் பெற்றுக்கொள்ளுவதற்கு அதிகாரமில்லை என்றும் ஆகையால் டிரஸ்ட் சொத்தின் வருமான டிக்கிரிகடனுக்குக் கட்டுப்படமாட்டாதென்றும் ககூஷிசொல்லி ஜப்தியை ஆக்ஷேபித்து மனு

செய்ய, இந்த மனுவை விசாரித்த ஸ்மால்காஸ் கோர்ட் ரிஜிஸ்டிரார் டிரஸ்ட் சொத்தின் வருமானத்தை ஜப்தி செய்யக்கூடாதென்று ஷை டிரஸ்ட் வருமானத்தை ஜப்தியிலிருந்து விடுவிக்கும்படி உத்தரவு செய்தார். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக டிக்கிரிபெற்றவர் ஸ்மால்காஸ் கோர்ட்டு புல் பென்சிற்கு அபீல் செய்துகொண்டார். ஒரு விவாகமான ஸ்திரீக்குச் சேரவேண்டிய டிரஸ்ட் வருமானம் அந்த ஸ்திரீயின்பேரில் ஏற்பட்ட ஒரு டிக்கிரிக்குக் கட்டுப்படுமா கட்டுப்படாதா என்கிற சங்கை புல்பென்ச்சாரால் யோசனை செய்யப்பட்டது. டிக்கிரி கடனாளிக்குச் சொந்தமான எல்லாப் பணங்களையுமாவது அல்லது அவர் தம்முடைய இஷ்டப்படி செய்யக்கூடிய ஷை பணங்களின் லாபத்தையாவது அல்லது வருமானத்தையாவது டிக்கிரி பெற்றவன் ஜப்திசெய்யலாமென்று சிவில் ரூல்ஸ்ஆப் பிராக்டிஸ் (Civil Rules of Practice) 220-வது ரூல் கூறுகின்றபடியால் பிரஸ்தாபக்கேஸில் டிக்கிரி பெற்றவர், பெண்சாதியின் டிரஸ்ட் சொத்தின் வருமானத்தை ஜப்திசெய்தது நியாயந்தான் என்று சொல்லி ரிஜிஸ்டிராரின் உத்தரவை ரத்துசெய்தார்கள்.

இந்த உத்தரவிற்கு விரோதமாகப்பெண்சாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்ய இந்த மனு ஜஸ்டிஸ் ஸர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய விசாரணைக்கு வந்தது.

உத்தரவு:—இந்தக்கேஸில் முக்கியமான சட்ட சங்கை தீர்மானிக்கப்படவேண்டியதா யிருப்பதால் இரண்டு ஜட்ஜிகள் கூடி விசாரணை செய்யும் கோர்ட்டிற்கு மனுவை அனுப்பும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

கேசை வேறொரு கோர்ட்டிற்கு மாற்றும்படி மனு.

மனுதார்கள் :—ராமலிங்கம் வகையரா.

மனுவின் விவரம்:—மனுதார்கள் திருநெல்வேலி ஜில்லா ராதாபுரம் சப்மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கொள்ளை யடித்த குற்றத்திற்காகவும் கடுங்காயம் விளைவித்த குற்றத்திற்காகவும் குற்றம் சாட்டப்பட்டார்கள். சப்மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்து குற்றவாளிகள் பேரில் யாதொரு குற்றமும் ருஜுப்படவில்லை யென்று சொல்லி விடுவித்து கேசைத் தள்ளிவிட்டார்.

பிரியாதி செஷன் கோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல்செய்தார். செஷன் கோர்ட்டார் கேசின் கட்டுகளைப் பார்வையிட்டு இந்தக் கேசைத் தங்களுடைய விசாரணைக்கு அனுப்பும்படியாக சப் மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவு செய்தார்கள். அந்த உத்தரவுப்பிரகாரமே சப்மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளை செஷன் விசாரணைக்குக் கமிட்செய்தார்.

இந்தக் கேஸ் சென்ற டிசம்பர்மீ 5உ செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது; குற்றவாளிகளின் வக்கீல் இந்தக் கேசின் கட்டுகளை செஷன் கோர்ட்டார் ஏற்கனவே பார்வையிட்டு ஒருவித மான அபிப்பிராயம் கொண்டிருப்பதால் அவர்களே இந்தக் கேசை விசாரிக்கக்கூடாதென்றும் ஆக்ஷேபித்து இந்தக் கேசை வேறே எந்தக் கோர்ட்டிற்காகிலும் மாற்றிவிடும்படியாக, ஒன்று செஷன் கோர்ட்டாரே ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்யவேண்டுமென்றும், அல்லது குற்றவாளிகளாவது ஹைகோர்ட்டில் மனு செய்துகொள்ளும்படியாக இந்த விசாரணையைத் தள்ளி வைக்க வேண்டுமென்றும் வாதித்தார். கோர்ட்டார் விசாரணைத்தேதியைத் தள்ளிவைத்தார்கள். குற்றவாளிகள் தங்கள்பேரில் திருநெல்வேலி செஷன் கோர்ட்டிற்கு வந்திருக்கும் கேசை வேறே கோர்ட்டிற்கு மாற்றிவிடும்படி ஹைக்கோர்ட்டில் மனுசெய்துகொண்டார்கள்.

மனுதார்களுக்காக ஆஜரான வக்கீல் மிஸ்டர் ஜோசப் சத்தியநாடார், இந்தக் கேசின் கீழ்க்கோர்ட்டு ரிகார்டுகளை செஷன்கோர்ட்டார் பார்வையிட்டுமனுதார்கள் குற்றம் செய்திருப்பதாக அபிப்பிராயப்பட்டு அவர்களை செஷன் கோர்ட்டிற்குக்கமிட்செய்யும்படி சப்மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவு செய்திருப்பதால் அந்தக் கோர்ட்டாரே இந்தக் கேசை விசாரணைசெய்தால் மனுதார்களுக்குச் சரியான நியாயம் கிடைக்கமாட்டாதென்றும் வேறே கோர்ட்டிற்கு மாற்றப்படுவதற்கு இது தகுந்த கேஸ் என்றும் வாதித்தார்.

உத்தரவு :—"ஹைகோர்ட்டிற்கு மிகுந்த தாமதமாய் மனு செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தபோதிலும் இந்தக் கேசை வேறே கோர்ட்டிற்கு மாற்றத்தகுந்த காரணத்தைக்காணோம்" ஆகையால் இந்தக் கேசை வேறு கோர்ட்டிற்கு மாற்றும்படி உத்தரவு செய்யமாட்டோம் என்று சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

செஷன் கோர்ட்.

சேலம் செஷன் கோர்ட்.

செஷன் ஜட்ஜி :—மிஸ்டர் A. C. தத்.

கொலைக்கேஸ்.

(2-2-07.)

கேசின் விவரம் :—சேலத்தில் பிளீடர் மிஸ்டர் திருமல்ராயரின் புத்திரன் காணாமற்போனான். இதைக் குறித்துப் பெற்றோர்கள் தேடிப்பார்த்தார்கள். அகப்படவில்லை. சேலத்தில் இதைக்குறித்துப் பறையறைவிக்கும்படியாகவும் செய்தார்கள். புத்திரன் போனவிடம் தெரியவில்லை. அடுத்ததினம் புத்திரன் சேலம் ஒதுப்புறத்திலுள்ள ஒரு கிணற்றில் பிரேதமாகக் கிடந்தான். பிரேதத்தின் தேகத்தில் கொலைசெய்யப்பட்ட சின்னங்களுமிருந்தன. போலீசார் இந்தக்கேசைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். இறந்துபோன புத்திரனின் பெற்றோர்கள் மிகுந்த நல்லகுணமுடையவர்களான்படியால் அவர்களுக்கு யாதொரு விரோதியுமில்லையாம். புத்திரன் கையில் சொற்ப விலையுள்ள பொன் காப்பு போடப்பட்டிருந்தது. வெகுநாள்வரையில் போலீசார் இந்தக் கேசைக் கண்டுபிடிக்கவில்லை. பிறகு பிளீடர் வீட்டில் கூட்டுகிறவனை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருந்தவனை போலீசார் அரஸ்ட்செய்து அவன்பேரில் கொலைக்குற்றம் சாட்டினார்கள்.

அந்தக் குற்றவாளி, இரண்டொரு சமயங்களில் பிளீடர் வீட்டில் அற்ப சாமான்களைத் திருடினதற்காகப்பிளீடர் அவனைத்திட்டி தன்னுடைய வீட்டுவாசற்படி ஏறவேண்டாம் என்று கண்டித்திருக்கிறார். இதனால் அவனுக்குக் கோப மூண்டு இந்தக் கொலையைச் செய்திருக்கக்கூடுமென்று போலீஸார் நினைத்து அவன் பேரில் குற்றம் சாட்டினார்கள். இந்தக்கேஸ் ஸெஷன்ஸ் விசாரணைக்கு வந்தபோது சிலசாக்ஷிகள் இறந்துபோன பையனும் பிரஸ்தாப குற்றவாளியும், பிரேதம் கண்டெடுக்கப்பட்ட தினத்திற்கு முந்தியதினம் ஒன்றுசேர்ந்து ஒருவழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள் என்றும் சாக்ஷியம் சொன்னார்கள். இந்த சாக்ஷியமெல்லாம் முன்னுக்குப் பின் முரணாயிருந்தபடியால் கோர்ட்டார் நம்பவில்லை.

தீர்ப்பு :—போலீஸார் இந்தக்கேசை ஜோடித்துக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றுசொல்லி கைதியை விடுவிக்கும்படி உத்தரவு செய்து தீர்ப்புசொன்னார்கள்.

ஸ்மால்காஸ் கோர்ட்.

ஜட்ஜி :—மிஸ்டர் J. G. ஸ்மித்.

வாதி :—ஈஸ்ட் இந்தியா டிபாசிட் அண்டுலோன் சொஸைட்டி.

பிரதிவாதி :—மிஸ்டர் C. N. H. கார்டினர்.

கேசின் விவரம் :—பிரதிவாதி, வாதி நிதியில் இதற்குமுன் செக்ரடெரியாகவும் கஜானஜியாகவுமிருந்தார். பிரதிவாதி வாதிக்கு சில பிராமிசரிநோட்டுகள் எழுதிக் கொடுத்து கடன்வாங்கினவகையில் ரூ. 1300 பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

லாயர்கள் :—பிரதிவாதிக்கு ஆஜரான மெஸர்ஸ் கிராண்ட் அண்டு கிரீட்டரிக்ஸ் தங்களுடைய கக்ஷிக்காரருக்கு மன நிலைமை சரியாயில்லை என்றும் சித்தம் பேதப்பட்டிருக்கிறதென்றும் டாக்டர் ஸர்டிபிகேட்தாக்கல்செய்து விசாரணையைத் தள்ளிவைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். வாதிக்கு ஆஜரான அட்டர்ணி மிஸ்டர் A. E. ரென்கான்டர் விசாரணையைத்தள்ளிவைக்கக் கூடாதென்றும், பிரதிவாதி வியாஜ்ஜியமுடிவைக் காலதாமதம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் விசாரணையைத் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார் என்றும் சொன்னார்.

உத்தரவு :—மார்ச்சுமீ 12உ இந்தக்கேஸ் விசாரணை செய்யப்படும். பிரதிவாதி அந்த சமயம் வந்து தமக்குள்ள எதிர்வாதத்தைச் சொல்லிக்கொள்ளாவிடில் பிரதிவாதி உள்ளபடி சித்த பேதப்பட்டிருந்தால் பயித்தியம் கொண்டவர்களின் சட்டத்தை அனுசரித்து பிரதிவாதியையும் அவருடைய சொத்துக்களையும் பாதுகாக்கும்பொருட்டுக் கோர்ட்டாரால் ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என்று சொன்னார்.

ஒரு உபாத்தியாயரின் சம்பளக்கேஸ்.

புல்பெஞ்ச்.—மிஸ்டர் J. G. ஸ்மித்.
மிஸ்டர் C. கிருஷ்ணன்.
மிஸ்டர் கோபாலாசாரியார்.

வாதி.—மிஸ்டர் ரெங்காச்சார்லு.

பிரதிவாதி.—மிஸ்டர் P. தியாகராயசெட்டியார்.

கேசின் விவரம்.—சென்னை வண்ணாரப்பேட்டையிலிருக்கும் " North Madras High School " என்கிற பள்ளிக்கூடத்தில் வாதி உபாத்தியாயராயிருந்தார். பிரதிவாதி மேற்படி பள்ளிக்கூடத்தின் மானேஜர். சம்பளபாபத்தில் ஒருமாதம் மூன்றுநாட்களுக்குக் கூடுதலான சம்பளம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

பிரதிவாதியின் கக்ஷி.— வாதியின் உத்தியோகம் 1905-ஆம் மேமீ 31உ முதல் வேண்டியதில்லையென்று அவருக்கு மேமீ 15உ பிரதிவாதியால் நோட்டிஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வாதியின் கக்ஷி.—பிரதிவாதி கொடுத்த நோட்டீஸ் போதுமான நோட்டீசல்ல.

இந்தக் கேஸ் ஸ்மால்காஸ்கோர்ட் ஜட்ஜி மிஸ்டர் சி. கிருஷ்ணனால் விசாரணை செய்யப்பட்டது.

தீர்ப்பு.—பிரதிவாதி கொடுத்த நோட்டீஸ் போதுமான நோட்டீஸ் என்று சொல்லி வாதிகொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஸ்மால்காஸ் கோர்ட்டு புல்பென்சிக்கு அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்—வாதி தரப்பிற்கு மிஸ்டர். V. N. சீனிவாச அய்யங்கார்.

தீர்ப்பு:—பிரதிவாதி, தமக்கு வாதியின் உத்தியோகம் வேண்டியதில்லை என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டபடியால் நோட்டீசில் குறிப்பிட்ட தேதிமுதல் பிரதிவாதிக்கும் வாதிக்கும் இருந்துவந்த எஜமான் வேலைக்காரன்என்கிற பந்தத்துவம் முடிந்துபோய்விட்டது. அப்படி முடிந்து போனது அநியாயமென்று வாதிக்குத்தோற்றினால் தமக்கு நேரிட்டிருக்கும் நஷ்டத்திற்காக பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் செய்யலாமே தவிரசம்பளம் கேட்கக்கூடாது. ஆகையால் அப்பீல்தள்ளுபடிசெய்யப்பட்டது என்று திர்ப்பு சொன்னார்கள்.

பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

எழும்பூர் போலீஸ் கோர்ட்.

பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர். மீர் சுல்தான் மொகிதீன் சாயப் பகதூர்.

அடையாளம் தெரியாமல் அரஸ்ட் செய்த கேஸ்.

(31—1—07.)

கேஸின் விவரம் :—1906 ம்-ஆம் அக்டோபர்மீ 12உ ஒருவன் எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டு ஆபீசில்வந்து டிக்கட்டு கேட்டான். டிக்கட்டு

கொடுக்கும் உத்தியோகஸ்தராகிய புக்கிங்கிளர்க்கு கிருஷ்ணசாமி நாயுடு டிக்கட்டு கொடுக்கவேண்டிய காலம் தவறிவந்ததால் டிக்கட்டு கொடுக்கப்படமாட்டாதென்று அவனுக்குப்பதில்கூற உடனே அவனுக்குக்கோபம் மூண்டு ஷை கிருஷ்ணசாமி நாயுடுவைத்திட்டி அடிக்க அவர் போலிஸாரிடம் ரிப்போர்ட் செய்தார். ரெயில்வே போலிஸார் அவனைப்பிடித்து சமீபத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் குற்றப் பதிவு ரிஜிஸ்டரில் அவன் பெயரைத் தாக்கல்செய்து கொள்ளும்பொருட்டு அவனுடைய பெயர் என்னவென்று கேட்டார்கள். அவன் தன்னுடைய பெயர் T. துரைசாமி முதலியாரென்றும், தான் தரங்கம்பாடியில் உப்பள இலாகாவில் சப் இன்ஸ்பெக்டராக (Salt Sub-Inspector) இருப்பதாகவும் சொன்னான். போலீஸார் அவனிடம் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவனை விட்டுவிட்டார்கள். போலீஸார் அவன்பேரில் போலீஸ் கோர்டில் குற்றம் சாட்ட அவனுக்கு ஸம்மன் பிறப்பிக்கப்பட்டது. சம்மன் கூடலூர் சப் டிவிஷன் உப்பள அஸிஸ்டெண்ட் கமிஷனர் மூலமாகத்தரங்கம்பாடிக்கு அனுப்பப்பட்டது. அவர், துரைசாமி முதலியென்று பெயர்கொண்ட ஒருவன் இதற்குமுன் உப்பள இலாகாவில் உத்தியோகத்திலிருந்ததாகவும் அவன் சிலமாதங்களுக்குமுந்தி உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டதாகவும் சொல்லி ஸம்மனைத்திருப்பி அனுப்பிவிட்டார். தஞ்சாவூரில் அரண்மனை எஸ்டேட்டின் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் T. S. துரைசாமி முதலியார் என்னும் பெயருடைய ஒருவர் இருக்கிறார். ரெயில்வே போலீஸார் இவருடைய பெயருக்கு ஸம்மன் பிறப்பிக்கும்படி செய்து அவருக்கு சார்வ் செய்தார்கள்.

லாயர்கள் :—தஞ்சாவூர் அரண்மனை எஸ்டேட் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் T. S. துரைசாமி முதலியாருக்காக வக்கீல் மிஸ்டர் V. சங்கர நாராயண சாஸ்திரியார் ஆஜரானார்.

கேசின் நடவடிக்கை :—புக்கிங் கிளர்க் கிருஷ்ணசாமிநாயுடு தன்னை அடித்தது கோர்ட்டின்முன் நிற்கும் குற்றவாளியாகிய T. S. துரைசாமி முதலியார்தான் என்று பிரமாண வாக்குமூலம் எழுதிவைத்தார். குற்றவாளியின் லாயர் பிரஸ்தாபகுற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் தினத்தில் தம்முடைய கக்ஷிக்காரன் தஞ்சாவூர் அரண்மனையைச்சேர்ந்த கிராமாந்திரங்களிலிருந்ததாக ருஜுப்படுத்தத் தயாராயிருக்கின்றார் என்றும் ஆகையால் பிரஸ்தாப குற்றத்தைச்செய்தவனின் சரியான அடையாளம் தெரியாமல் தன்னுடைய கக்ஷிக்காரனுக்குப் போலீஸார் ஸம்மன் சார்வ்செய்து தருவித்திருக்கிறார்களென்றும் சொன்னார். கோர்ட்டார் அந்தக்கேஸைப்பற்றிப் போலீஸார் தகுந்தபடி யோசனைசெய்யும்பொருட்டு விசாரணையை வேறொருதினத்திற்குத்தள்ளிவைத்தார்கள். விசாரணை தினத்தில் ரெயில்வே போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் ஆஜராகி இந்தக் கேஸைப்பற்றித் தாம் மறுபடியும் விசாரணை செய்ததில் பிரஸ்தாபக்குற்றத்தைச்செய்தவன் தஞ்சாவூர் அரண்மனை ஸப் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் அல்லவென்று தெரியவருகிறபடியால் அவர்பேரில் கொடுக்கப்பட்ட பிரியாதை வாப்பீஸ் கொடுத்துவிடும்படியாகக் கோர்ட்டாரை வேண்டிக்கொண்டனர். கோர்ட்டார் பிரியாதை வாப்பீஸ் கொடுக்க இஷ்டப்படாமல் கேஸை விசாரணை செய்தார்கள்.

தீர்ப்பு :—பிரஸ்தாப குற்றத்தைச்செய்தவன் தஞ்சாவூர் அரண்மனை இன்ஸ்பெக்டர் T.S. துரைசாமிமுதலியார் அல்ல வாகையால் அவருடைய கௌரவம் சிறிதும் பங்கப்படாமல் அவரை விடுதலை செய்கின்றோம். இவருக்குக் காம்பன்சேஷன் கொடுப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காமலிருப்பது விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. இருந்தபோதிலும் புக்கிங்கிளர்க் கிருஷ்ணசாமிநாயுடு பொய்சாக்ஷியம் சொன்னதற்காக அவரை பிராஸிக்கியூட் செய்யும்படி முதலியார் சாங்ஷன் கொடுக்கும்படி கோர்ட்டாருக்கு மனு செய்துகொண்டால் கோர்ட்டார் சாங்கிஷன் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள் என்று தீர்ப்புசொன்னார்கள்.

மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர் மீர்சுல்தான் மொய்தீன் சாயபு பகதூர்.

பிரியாதி :—வேலாயுதம் பிள்ளை.

எதிரி :—ஆனரெபில் மிஸ்டர் பிராட்லி.

கேசின் விவரம் :—பிரியாதி வேலாயுதம் பிள்ளை என்பவர் சென்னை சர்வகலாசாலை ரிஜிஸ்டிரார் ஆபீசில் மானேஜராகவிருந்தவர். எதிரி சென்னை கவர்ன்மெண்டின் பிரதமகாரியதரிசி. பிரியாதி அடியிற்கண்டபிரகாரம் பிரமாணவாக்குமூலம் எழுதிவைத்து எதிரியின் பேரில் சம்மன் பிறப்பிக்கும்படி கோர்ட்டாரை வேண்டிக்கொண்டார் :—என்னை உத்தியோகத்திலிருந்து அநியாயமாய்த் தள்ளிவிட்டார்கள் என்று நான் சென்ற நவம்பர்மீ 12உ மாக்ஷிமைதங்கிய கவர்னருக்கு ஒரு மனு அனுப்பினேன். என்னுடைய மனுவந்து சேர்ந்ததென்றும், இனி அவ்விஷயத்தைக் குறித்து செய்துகொள்ளப்படும் மனுக்கள் முதலியவை கவர்ன்மெண்டு சீப் செக்ரட்டரிக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் எனக்கு கவர்னரின் பிரைவேட் செக்ரட்டரி ஒரு கடிதம் எழுதியிருந்தார். நான் கவர்னருக்குச்செய்துகொண்டமனுவில் அடக்கம்செய்து அனுப்பியிருந்த தஸ்தாவேஜிகளை யெல்லாம் சீப்செக்ரட்டரி எனக்கு டிசம்பர்மீ 11உ அனுப்பினார். ஆனால் அவைகளுடன் எனக்கு யாதொரு உத்தரவும் அனுப்பப்படவில்லை. என் மனுவிற்கு யாதொரு உத்தரவும் வாராததற்குக் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு நான் சீப் செக்ரட்டரிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்திற்கு யாதொரு பதிலும் வரவில்லை. ஆதலால் டிசம்பர்மீ 17உ, முன் அனுப்பிய மனுவிற்கு இன்னும் உத்தரவு வரவில்லை யென்று சொல்லி ஒரு மனுவனுப்பினேன். அந்த மனு வந்து சேர்ந்ததென்றும் இனிமேல் இதைக்குறித்த மனு முதலியவைகள் சீப் செக்ரெட்டரிக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் கவர்னர் பிரைவேட் செக்ரட்டரி எனக்கு பதில் எழுதியிருந்தார். சீப் செக்ரட்டரியிடமிருந்து பதில் வாராதபடியால் அவரை நேரில் பார்த்தால் நலமாயிருக்குமென்றெண்ணி நான் டிசம்பர்மீ 27உ சீப் செக்ரட்டரி வீட்டிற்குப் போனேன். போய் என்னுடைய விஸிட்டிங்கார்ட்டை (Visiting Card) பொட்லரிடம் கொடுத்து அனுப்பினேன். சீப் செக்ரட்டரியாகிய மிஸ்டர் பிராட்லி வந்தார். நான் அவரிடம் மிகவும் மரியாதையாகச் சென்றேன். மிஸ்டர் பிராட்லி "நீ உத்தியோகத்திலிருந்து தள்ளப்பட்ட மனிதன்; என்னிடம் வர உனக்கு யாதொரு வேலையுமில்லை; என் முன்னில்லாதே; போய்விடு; உடனே போய்விடு" என்று சொன்னதுமன்றி, இன்னும் சில நிந்தனையான வார்த்தைகளைச் சொல்லி என்னை அடிக்க என்பின்னால் ஓடிவந்தார். நான் உடனே ஓடிவந்து விட்டேன். என்னைப் பின்பற்றிப் பிடித்துவரும்படி மிஸ்டர் பிராட்லி அவருடைய பொட்ளரையும் பியூனையும் அனுப்பினார். பியூன் என்னைப்பிடித்து இழுத்துக்கொண்டு மிஸ்டர் பிராட்லியிடம் கொண்டுபோய்விட்டான். அவர் என்னை நிந்தித்தார். பல சாக்ஷிகளிருக்கிறார்கள்.

கேசின் நடவடிக்கை :—பிரியாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் P. சுப்பிரமணியம் ஆஜரானார். மிஸ்டர் பிராட்லி தரப்பிற்கு சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய மிஸ்டர் ஷார்ட் ஆண்டு பியூஸ் ஆஜராகிக் கோர்ட்டார் சம்மன் பிறப்பிக்கக்கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். பிரியாதி மிஸ்டர் பிராட்லியைப்போய்ப்பார்த்தபோது மிஸ்டர் பிராட்லி "நீர் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டவர் போய்விடும்" என்று சொன்னது வாஸ்தவந்தான் என்றும், ஆனால் பிரியாதி "தங்களுடைய பொறுமைக்கு வந்தனம்" என்று சொன்னது மிஸ்டர் பிராட்லிக்குக் கோபம் மூட்டிவிட்டதென்றும் ஆகையால் முதலில் நிந்தித்தது பிரியாதி என்றும் டிபன்ஸ் தரப்பு லாயர்கள் கக்ஷிசொன்னார்கள்.

தீர்ப்பு :—பிரியாதி சொன்ன சமாசாரங்கள் ருஜுப்படவில்லை. ஆகையால் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது.

மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர் W. E. கிளார்க்கு.

ஏழுவயதிற்குட்பட்ட பிள்ளை திருடினகேஸ்.

கேஸின் விவரம் :—குள்ளன் என்கிற ஒரு வாலிபன் மைலாப்பூரிலுள்ள ஒரு கடையிலிருந்து ரூ. 1-8-0 ரொக்கம் திருடினதாகப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் மாக்மோகன் குற்றம் சாட்டினார்.

கேஸின் நடவடிக்கை :—குற்றவாளி திருடினது சாக்ஷி விசாரணையில் ருஜுப்பட்டது. குற்றவாளி ஏழுவயதிற்குட்பட்டவன் என்று டாக்டர் சர்டிபிகேட் தாக்கல் செய்யப்பட்டது.

தீர்ப்பு :—ஏழுவயதிற்குட்பட்ட பிள்ளைகள் செய்யும் செய்கைகளுக்கு அவர்கள் ஜவாப்புதாரியல்லவென்று சட்டம் கூறுகிறபடியால் குற்றவாளிக்குத் தண்டனை விதிக்காமல் எச்சரித்து விடுவிக்கும்படி உத்தரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர் மீர் சுல்தான் மொகிதீன் சாயப்பு பகதூர்.

ஜீவனாம்ஸ தாவா.

பிரியாதி :—"டவுலத்பீ" என்கிற விவாகமாகாத முகம்மதிய ஸ்திரீ.

பிரியாதி :—(1) சென்னபட்டணம் முனிசிபாலிட்டி எல்த் ஆபீசராகிய காப்டன் தாமஸ் ஸ்பைக்ஸ் ரூஸ் I. M. S. L. R. C. P. L. C.S. (Ed.) என்பவர் மூன்று வருஷத்திற்கு முந்தி, என்தாயாரிடம் தாம் முகமதிய மதத்திற்கு வந்துவிடுவதாகச் சொல்லி, என்னுடன் சகவாசம் செய்து வரும்படி என் தாயாரைக் கேட்டுக்கொள்ள அவள் அப்படியே சம்மதிக்க, அவர் என்னுடன் நேசம்செய்து என்னை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டார்.

2. இப்படி அவர் என்னை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டு வரும்போது 6 மாதத்திற்கு முந்தி அவருக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அக்குழந்தைக்கு "காசிம்பீ" என்று பெயர் வைத்தேன். எனக்கும் என் குழந்தைக்கும் காலக்ஷேபத்திற்காக மாதம் ரூ 30 கொடுத்துக்கொண்டுவந்தார்.

3. 1906ஆம் பிப்ரவரிமீ கடைசியாக என் தாயாரிடம் ரூ 100 கொடுத்தார். அவருடைய குழந்தையின் ஜீவனம்சத்திற்காக யாதொன்றும் கொடுக்கவில்லை.

4. நான் குழந்தைக்கு ஜீவனம்சம் கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். தம்முடைய வக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமி நாயுடுவிடம் போய்க் கேட்டுக்கொள்ளும்படி சொன்னார். அப்படியே கேட்டுக்கொண்டேன். அவர் மாதம் ஒன்றுக்குக் குழந்தையின் ஜீவனம்சத்திற்காக ரூ 10 கொடுக்கும்படி சிபார்சு செய்தார். குழந்தையின் தகப்பனுடைய அந்தஸ்திற்குத் தகுந்தபடி அதை சௌக்கியத்துடன் வளர்த்துவர ரூ 10 கொஞ்சங்கூடப்போதாது.

5. எதிரிக்குப் பிறந்த வைப்பாட்டி பிள்ளைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 ஜீவனம்சம்கொடுக்க எதிரிக்குப் போதுமான ஐவேஜியிருக்கின்றது. பிள்ளையைவளர்த்துவர என்னிடம் யாதொரு ஐவேஜியுமில்லை.

6. தனக்குப்பிறந்த பிள்ளைக்கு ஜீவனம்சம்கொடுக்க அலக்ஷியத்துடன் மறுதளித்த குற்றத்தை எதிரி செய்திருப்பதாய் நான் குற்றம் சாட்டுகின்றேன். ஆகையால் எதிரிக்கு சம்மன் அனுப்பும்படியும் மாதம் ஒன்றுக்கு எதிரியின் குழந்தைக்கு ரூ 30 கொடுத்து வரும்படியாக எதிரிக்கு கனம் பொருந்திய கோர்ட்டார் உத்தரவு செய்யவேண்டுமென்றும் மிக வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

லாயர் :—ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் P. சுப்பிரமணியம்.

உத்தரவு :—பிரியாதி கேட்டுக் கொள்ளுகிறபடி ஜீவனம்சம் கொடுக்க, கோர்ட்டார் ஏன் எதிரிக்கு உத்தரவு செய்யக்கூடாதென்று காரணம் காட்டும்படியாக எதிரிக்குச் சம்மன் அனுப்பும்படி கோர்ட்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

இன்சால்வெண்டு கோர்ட்.

சமிஷனர் :—ஜஸ்டிஸ் சர். S. சுப்பிரமணிய அய்யர்.

அர்பத்நட் இன்சால்வென்சியைப்பற்றியது.

மனுவின் விவரம் :—இன்சால் வெண்டு கோர்ட்டார் அர்பத்நட் பாங்கிக்குக் கடன் கொடுத்தவர்கள். அடுத்த மார்ச்சு௴ 9௳ சனிக்கிழமை மீட்டிங்கு கூடி ஸ்பெஷல் அசயினிகளை நியமிக்கவேண்டுமென்று சென்ற டிசம்பர்௴ 4௳ உத்தரவு செய்திருந்தார்கள். ஷை பாங்கிக்குக் கடன் கொடுத்தவர்கள் சிலர் இங்கிலாண்டிலுமிருப்பதால் அவர்களுக்கு நோட்டீஸ் போய்ச்சேர சற்றுக் காலதாமதமாகும் என்றும் ஆகையால் ஷை மீட்டிங்கின் தேதியை மார்ச்சு௴ 9௳யிலிருந்து 16௳ சனிக்கிழமைக்கு மாற்றிவிடவேண்டுமென்றும் அபிஷியல் அசயினி மிஸ்டர் ரீட் மனு செய்துகொண்டார்.

உத்தரவு :—மார்ச்சு௴ 23௳ மீட்டிங்கு கூடும்படி உத்தரவு செய்தார்கள்.

சமிஷனர் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் S. சுப்பிரமணிய அய்யர்.

1906-ம் ௵த்திய 181-ம் நெ. மனு.

(15—2—07.)

மனுதார் :—மிஸ்டர் C. V. சாமிநாத அய்யர்.

இன்சால்வெண்டுகேள் :—மெஸர்ஸ் அர்பத்நட் கம்பெனியின் பார்ட்னர்களாகிய பாட்ரிக் மாக்பேடயன், சர் ஜியார்ஜ் கௌத் அர்பத்நட், ஜான்மான்ட் கோமரி.

மனுவின் விவரம் :—இன்சால்வெண்டுகள் தாக்கல் செய்திருக்கும் ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை விவரமாகவும் பூராவாகவும் விசாரணை செய்து உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மனுதார் தமக்காகவும் இன்ஸால்வெண்டுகளுக்குக் கடன்கொடுத்த மற்றவர்களுக்காகவும் மனுதாக்கல்செய்து அடியிற்கண்ட பிரமாண பத்திரம் ஆஜர்படுத்தினர்:—

சென்னை திருவல்லிக்கேணி சையாஜி சந்து 2-வது நெ. வீட்டில் வசித்துவரும் கருங்குடி வெங்கட்ராமய்யருடைய குமாரராகிய 41 வயதுடைய சாமிநாத அய்யராகிய நான் பிரமாணத்தின் பேரில் உறுதியாகச் சொல்லுவது என்னவென்றால் :—

1. அர்பத்நட் கம்பெனிக்குக் கடன் கொடுத்தவர்களுக்குள் நான் ஒருவன். நான் பிக்சட் டிபாசிட்டிலும் நடைமுதல் கணக்கிலும் போட்டுவந்த பணவகையில் எனக்கு ஷை கம்பெனியார் ௹ 18,529-11-6 கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

2. இன்சால்வென்சி விதிகளின் 40-வது விதியை அனுசரித்து நான் ஷை கம்பெனிக்கு ஒரு கடன்காரன் என்று 1906௵ நவம்பர்௴ 13௳ அபிஷியல் அசயினியிடம் ஒரு பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன்.

3. மேற்கூறிய கடனாளிகள், 1848-ம்௵ பாஸ் செய்விக்கப்பட்ட இன்சால்வென்ட் ஆக்ட்டின் நன்மைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்தக் கோர்ட்டில் மனு செய்து கொண்டதாகவும், அதேதினம் கோர்ட்டார் அவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவு கொடுத்ததாகவும் அவர்கள் கொடுத்த மனு பிப்ரவரி௴ 25௳ விசாரணை செய்யப்படுமென்றும் எனக்கு வந்திருக்கும் ஒரு அச்சிட்ட போஸ்ட் கார்டால் நான் அறிகிறேன்.

4. கடன்காரர்கள் 1907-ம் வருஷம் பிப்ரவரி௴ 18௳ முதற் கூட்டம் கூடுவார்கள் என்றும், நான் ஷை கடனாளிகள் செய்துகொண்டிருக்கும் இன்சால்வெண்டு மனுவை ஆக்ஷேபிக்க வேண்டுமானால் என்னுடைய ஆக்ஷேபனைகளைச் செப்பி கோர்ட்டில் 1907-ம் ௵-ம் பிப்ரவரி௴ 21௳க்குள் ஒரு மனு தாக்கல் செய்யவேண்டுமென்றும் அதற்கு நகல் ஒன்று தயாரித்துக் கடனாளிகளுக்கு சர்வ்செய்யவேண்டுமென்றும் அதே அச்சிட்ட கார்டால் எனக்குத் தெரியவருகின்றது.

5. கடனாளிகள் கடன் தீர்க்கச் சக்தியற்ற நிலைமையில் வெகுகாலமாயிருந்துவந்தார்கள் என்றும், இப்படியிருந்துவந்ததை மறைத்துத் தாங்கள் தகுந்த ஐவேஜியுள்ள நிலைமையிலிருப்பதுபோல் பாவனைசெய்து வந்தார்கள் என்றும், இப்படி இவர்கள் தகுந்த ஐவேஜியுடையவர்கள்போல் பாவனை செய்தது அநேகர் இவர்களுடைய பாவனையை நம்பி பணம் போடுவதற்கு ஏதுவாயிருந்ததென்றும் நான் கேள்விப்படுகிறபடி நம்புகிறேன்.

6. கடனாளியின் பாங்கியில் பிக்சட் டிபாசிட்டில் ரூ. 12,243 போட்டிருந்தேன். இந்தத் தொகையில் என்புத்திரன் பேராலும் புத்திரி பேராலும் சில தொகைகள் போட்டிருந்தேன். கடனாளிகள் இன்சால்வெண்டு நிலைமையிலிருக்கிறார்கள் என்கிற பிரஸ்தாபம் வெகுநாளாயிருந்துவருகிறதாக இப்போது நான் கேள்விப்பட்டபோதிலும் நான் 1906-ம் ௵ பிப்ரவரி௴ தான் நான் கேள்விப்பட்டேன். அதேமாதத்தில் கடனாளிகள், நான் பிக்சட் டிபாசிட்டில் போட்டிருந்த தொகையில் சில தொகைகள் எனக்கு 7௳யும் 22௳யும் கொடுக்க வேண்டியதாகவிருந்தது. இந்தத் தொகைகளை இவர்களுடைய பாங்கியில் மறுபடியும் போடலாமா வேண்டாமா என்பதை சந்தேகித்து இவர்கள்பேரில் உண்டாகியிருக்கும் மேற்கண்ட பிரஸ்தாபம் உண்மையா அல்லது வதந்தியா என்று இவர்களுக்கு எழுதிக்கேட்டேன். இரண்டு மூன்றுவாரம் சென்று சென்னை பீச்சு ரோடிலிருக்கும் இவர்களுடைய ஆபீசுக்கு நானே நேரிற்சென்று இங்கிலீஷ் அஸிஸ்டெண்டைக்கண்டு இதைப்பற்றி விசாரித்தேன். அவர் இந்த பிரஸ்தாபங்களெல்லாம் பொய் என்றும் பாங்கி தகுந்த நிலைமையிலிருக்கிறதென்றும் சொன்னார். இவர் இப்படிச்சொன்னது, என் பாலிய புத்திரன் பெயராலும் என் பாலிய புத்திரிபெயராலும் போட்டிருந்த பணத்தை வாங்கிக்கொள்ள உத்தேசித்திருந்த நான் 1906-ம் ௵ மார்ச்சு௴ 3௳யும் இன்னும் அதற்கு அடுத்த தேதிகளிலும் அப் பணத்தை மறுபடியும் இந்த பாங்கியில் போடும்படி என்னைத் தூண்டிவிட்டது.

7. நான் மறுபடியும் பணம் போட்ட காலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும் ஷை கடனாளிகள் இன்சால்வெண்டு நிலைமையிலிருந்தும், அப்படி அவர்கள் யிருக்கும் நிலைமையை அவர்களுடைய சிப்பந்திகளும், வெளியாரும் அறிந்துகொள்ளாமலிருக்கும்படி சரியான கணக்கு வழக்குகளை வைக்காமல் பாங்கியின் உண்மையான நிலைமையை மறைத்துவந்தார்கள் என்று நான் கேள்விப்படுகிறபடி நம்புகிறேன்.

8. கடனாளிகள் கடனிலிருந்து தாங்கள் மீளக்கூடாத நிலைமையிலிருப்பதைத் தெரிந்திருந்தும் அந்த நிலைமையை வெளியார் அறிந்துகொள்ளாதபடி மறைத்துவைத்ததுமன்றி, தங்களுடைய இன்சால்வெண்டு நிலைமையை அறிந்த தங்களுடைய உத்தியோகஸ்தர்கள் தகாதபடி அதிகப்பணம் வாங்கிக்கொள்ளும்படி விட்டதுமன்றி தாங்களும் கணக்கு வழக்கின்றி அதிகப்படி பணம் பாங்கியிலிருந்து எடுத்துக்கொண்டு கடன்காரர்கள் அரும்பாடுபட்டு சம்பாதித்தபணத்தை மோசப்படுத்திப் பாங்கியை சீர்கேடாக மானேஜ்மெண்டுசெய்து பார்வைக்குமட்டிலும் ஐவேஜியுள்ள பாங்கென்று தோன்றும்படியாகச் செய்து வந்தார்களென்று நான் கேள்விப்படுகிறபடி நம்புகின்றேன்.

9. கடனைக் கொஞ்சமேனும் உளவடைக்கக்கூட சொந்த சொத்துக்களற்றவும், பாங்கியில் கொஞ்சமேனும் மூலதனம் வைக்காதவும், தங்களுடைய சக்திக்கு மேற்கொண்டு பாங்கியிலிருந்து அதிகப் பணம் கடன்வாங்கிக்கொண்டிருக்கும் பாங்கியின் பாகஸ்தர்களாகிய கடனாளிகள் எப்போது பாங்கி இன்சால்வெண்டு நிலைமைக்கு வந்துவிட்டதென்று தெரிய வந்ததோ அப்போதே பாங்கிக்குக்கடன் கொடுத்திருப்பவர்களுக்குத்தெரியப்படுத்திவிட வேண்டியது அவர்களுடைய முக்கியமான கடமை.

10. மனசாக்ஷிக்கு விரோதமில்லாமலும், தர்மமாகவும், நியாயமாகவும் வியாபாரம் நடத்தும் முறையில் மேற்கூறியவாறு செய்ய ஷை கடனாளிகள் கடமைப்பட்டிருந்தும், கடன்காரர்களின் பணத்தைத் தகாதபடி வாரி இறைத்துச் செலவுசெய்துவிட்டார்கள்.

11. ஷை கடனாளிகள் தாக்கல் செய்திருக்கும் ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் உபயோகமற்ற விஷயங்கள் என்றும், ஷை கடனாளிகளுக்குச் சொந்தமான சொத்துக்களையும் வரவேண்டிய பணங்களையும் பேரிரவலாகவும் காரணார்த்தமாகவும் எழுதிவைத்து அநேக சொத்துக்களை மறைத்துவிட்டார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

12. ஷை கடனாளிகள்பேரில் ஜனங்கள் வைத்திருந்த நம்பிக்கையை அவர்கள் துர்விநியோகப்படுத்தி பாங்கிமுழுகிப்போனால், அதனால் நஷ்டமடையக்கூடிய கடன்காரர்களுடன் கிஞ்சித்தேனும் ஆலோசனை செய்யாமல் தங்களுக்குத் தோன்றியவாறு கடன்காரர்களுடைய பணத்தைத் தாறுமாறாகச் செலவு செய்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறபடி நம்புகின்றேன்.

13. ஷை கடனாளிகள் கிஞ்சித்தேனும் யோக்கியத்திற்கும், உண்மைக்கும் மனசாக்ஷிக்கும் அஞ்சாமல் கடன்காரர்களுடைய பணத்தைத் தகாதபடி வாரி இறைத்துச் செலவு செய்திருக்கிறார்கள் என்று அவர்கள் தாக்கல் செய்திருக்கும் ஷெட்யூலை மேற்பார்வையாகப் பார்த்தாலும் தெரிந்துகொள்ளலாம்.

14. பாங்கி இன்சால்வெண்டு நிலைமையிலிருந்துவருவதைத் தெரிந்திருந்தும் ஷை கடனாளிகள் 1906ம் ௵த்தில் ௹ 18,90,472ம் சொச்சமும் அதிகமாய்ப் பத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனுடன் மிஸ்டர் யங் என்கிற பார்ட்னருக்குக் கொடுத்திருக்கும் கடனைச் சேர்த்தால் பார்ட்னர்களின் அதிகப்பத்தே 1906ம் ௵த்தில் ரூ. 84,57,550 ஆகிறது.

15. ஷை கடனாளிகள் தாக்கல் செய்திருக்கும் ஷெட்யூலில் 3 முதல் 5 அயிட்டத்தில் பாங்கிக்கு வரவேண்டியதாகச் சொல்லும் நிலுவை ரூ 128,68,030. இதில் பார்ட்னர்கள் பாங்கிக்குக் கொடுக்கவேண்டிய கடன் ரூ. 84,57,550 இவ்வளவு தொகையையும், ஷை கடனாளிகள் பாங்கி இன்சால்வெண்டு நிலைமையிலிருக்கிறதென்று தெரிந்தும் பத்திக்கொண்டிருக்கிறார்கள்.

16. பாங்கியின் பார்ட்னர்கள் 1906ம் ௵த்தில் 9 மாதம் மூன்று வாரத்திற்குள் ரூ. 9,89,562—15—5 அதிகப்பத்தாய் பத்திக்கொண்டிருக்கிறார்கள். இதுவுமன்றி சில பார்ட்னர்கள் ஏதோ காபி எஸ்டேட்டுகளை மானேஜ்மெண்டு செய்யவேண்டுமென்று சொல்லி $10\frac{1}{2}$ லட்சம் ரூபா அட்வான்சாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்தால் பார்ட்னர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்னும் கருத்துடன் கைகொண்டமட்டும் தங்கள் இஷ்டப்படி பணத்தை எடுத்துக்கொண்டதாகத் தெரியவருகிறதே யொழிய, இப்படி எடுத்துக் கொள்ளுவதால் கடன்காரர்கள் கெட்டுப்போய் விடுவார்களே என்று பார்ட்னர்கள் சிறிதும் எண்ணினதாகத் தெரியவில்லை.

17. ஷை கடனாளிகள் பாங்கிக்கு வரவேண்டியதாகச் சொல்லும் கடன்களில் பெரும்பாலும் கிடைக்கக்கூடிய கடன்களாயில்லை. இறந்து போனவர்களுக்குக் கொடுத்த கடனையும் காலாவதியான கடன்களையும் இன்னும் இம்மாதிரியான கடன்களையும் பார்த்தவர்கள் மலைக்கும்படி ஜாபிதாவில் காண்பித்திருக்கிறார்கள்.

18. ஷை கடனாளிகள் தங்களுடைய இன்சால்வெண்டு நிலைமையை முன்னதாக அறிந்து தங்களுடைய சொத்துக்களைப் பராதீனமும் செய்திருக்கிறார்கள். தாங்களே அச்சொத்துக்களின் வருமானத்தை அனுபவித்துக்கொண்டுவரும்போது அவைகளைப் பேரிரவலாக எழுதிவைத்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுவதுபோல நம்புகின்றேன்.

19. அர்பத்நெட் இன்டஸ்டிரியல் லிமிடெட் கம்பெனியும் மைசூர் சர்க்கரைக் கம்பெனியும் மேற்கூறப்பட்ட மாதிரியானவிவகாரங்கள். இதில் ஷை கடனாளிகளுக்கிருந்த பங்குகளைப் பேரிரவலாக மாற்றிவைத்திருக்கிறார்கள்.

20. ஷை கடனாளிகளின் பாங்கி வெகு காலமாயிருந்த பாங்கியானபடியாலும் அவர்கள் அகண்ட வியாபாரங்கள் செய்துவந்தபடியாலும் அவர்கள் இன்சால்வெண்டு நிலைமைக்கு வந்த பிறகு செய்திருக்கக்கூடிய

எல்லா ஒழுங்கீனங்களையும் புரட்டுக்களையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

21. மேலே கூறப்பட்டுள்ள சமாசாரங்கள்தான் எனக்கு இப்போது எட்டியிருக்கும் சமாசாரங்கள். இவைகளை கவனித்தால் ஷை கடனாளிகள் மிகுந்த அலக்ஷியத்துடன் சீர்கேடாய் மானேஜ்மெண்டு செய்து வந்திருக்கிறார்கள் என்று தெரியவருகின்றது.

22. ஷை கடனாளிகள் இன்சால்வெண்டு நிலைமையிலிருந்ததை வேணுமென்று மறைத்துவைத்திருந்தார்கள். ஆகையால் அவர்களுக்கு இன்சால்வெண்டு ஆக்ட்டின் நன்மையைக்கொடுக்கக்கூடாது. இவர்கள் இன்சால்வெண்ட் ஆக்ட்டின் நன்மையைப் பெறவேண்டுமானால் பாங்கிக்கு நஷ்டம் தெய்வாதீனமாகவும் எதிர்பார்க்காதபடியும் உண்டானதென்றும் ருஜுப்படுத்தவேண்டும். அப்படியிருந்தபோதிலும், அந்த நஷ்டம் பாங்கியைப் பாதிக்காமலிருக்கும்படி தங்களால் கூடியமட்டில் பிரயாசப்பட்டு சாத்தியப்படாமற் போய்விட்டதென்று ருஜுப்படுத்தவேண்டும்.

23. ஷை கடனாளிகள் செய்திருக்கும் நடவடிக்கைகளும் சீர்கேடான மானேஜ்மெண்டுகளும், பாங்கியை திடீரென்று மூடினதும் ஆகிய இந்த விஷயங்கள் ஷை கடனாளிகளின் மோசக்கருத்தை வெளிப்படுத்துகின்றன. ஆகையால், யோக்கியமான வர்த்தர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய இன்சால் வெண்டு ஆக்ட்டின் நன்மையை இவர்களுக்குக் கனம்பொருந்திய கோர்ட்டார் கொடுக்கக்கூடாது என்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

24. மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு ஷை கடனாளிகளுக்கு இன்சால்வென்ட் ஆக்ட்டின் நன்மையைக் கோர்ட்டார் கொடுப்பதை நான் ஆக்ஷேபிக்க உத்தேசித்திருக்கிறேன்.

25. ஷை கடனாளிகளின் பாங்கியின் கணக்குப்புத்தகங்களைப் பரிசோதிக்க நியமிக்கப்பட்ட சார்ட்டர்ட் அக்கவுண்டண்டுகள் அடுத்த திங்கட் கிழமைக்குச் சென்னையை விட்டுப் போகப்போகிறதாகக் கேள்விப்படுகிறேன். அவர்கள் போய்விட்டால் பாங்கியின்கணக்கு வழக்குகள் விபரமாய் தெரியமாட்டாது என்று நான் கேள்விப்படுகிறபடி நம்புகிறேன்.

26. ஆகையால் இந்த பாங்கியின் கணக்கு விஷயங்களைப்பற்றி சார்ட்டர்ட் அக்கவுண்டண்டுகளைப் பூராய் விசாரித்துக்கொள்ளும்படி கோர்ட்டார் அபிஷியல் அசயினிக்கு உத்தரவு செய்யவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உத்தரவு:—இன்சால்வெண்டுகளின் மனுவிசாரணை செய்யப்படும்போது, பிரஸ்தாப மனுதாரைப்போலுள்ள கடன்காரர்கள் பிரஸ்தாப பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களைக் குறித்து இன்சால்வெண்டுகளை விசாரணைசெய்யப் போதுமான அவகாசமிருக்கிறது. ஆகையால் இப்போது இந்த மனுதாக்கல்செய்யப்படவேண்டியது அனுவசியம் என்று மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ராம்பினி
மிஸ்டர் ஜஸ்டிஸ் குப்தா.

கேசை வேறு கோர்ட்டிற்கு மாற்றும்படிச் செய்துகொண்ட மனு.

மனுதார்:—ராஷபிகாரி லால்மாண்டல்.

(5-2-07.)

மனுவின் விவரம்:—பாகல்பூர் ஜில்லாவில் மதனப்பூரில் 20 அல்லது 25 பெயர்கள் சட்டவிரோதமான கூட்டம்கூடி கலகம் செய்து ஒரு வீட்டிற்குட் புகுந்து கொள்ளையடித்து ஷை வீட்டிலிருந்த ஸ்திரீகளை மானபங்கம் செய்ததாகவும், அந்தக் கூட்டத்தில் மனுதார் சேர்ந்திருந்ததாகவும் மனுதார்பேரில் பாகல்பூர்ஜில்லா மாஜிஸ்டிரேட்மிஸ்டர் வியால் முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. மனுதாரை ஜாமீன்பேரில் விடும்படி கேட்டுக்கொண்டபோது ஜாமீன்பேரில் விடக்கூடாதென்று பாகல்பூர் ஜில்லாமாஜிஸ்டிரேட் சப்டிவிஷனல் ஆபீஸருக்கு எழுத, அவர் மனுதாரைப்போலீஸ்ஸ்டேஷனில் அடைத்துவைத்திருந்தார். அதன்பேரில் மனுதார் ஐகோர்ட்டுக்கு மனுசெய்து தம்மிடம் ரூபா 5000 ஜாமீன் பெற்றுக்கொண்டு தம்மை ஜாமீன் பேரில் விடும்படியான உத்தரவைப் பெற்றார். மனுதார் ஜாமீன்பேரில் விடப்படுவதற்கு ஹைகோர்ட்டிற்கு மனுசெய்துகொண்டபோது ஷை மனுவை எதிர்க்கும்படி பாகல்பூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்கு எழுதினார். ஜில்லா மாஜிஸ்டிரேட்டாரும், போலீசாரும் பிராசிக்கியூஷன் தரப்பாரையும் சாக்ஷிகளையும் மிகவும் ஜாக்கிரதையாக வைத்து வருவதுமன்றி, பிராசிக்கியூஷன் தரப்பில் மிகுந்த பற்றுடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் பாகல்பூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் மனுதார்பேரில் வந்திருக்கும் கேசை விசாரணைசெய்தால் மனுதாருக்கு நியாயங்கிடைக்கமாட்டாது. ஆகையால் இந்தக்கேசை வேறொரு கோர்ட்டிற்கு மாற்றிவிடும்படி மனுதார் பிரார்த்தனை செய்துகொள்ளுகின்றார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் ஹாரிபுஷன் முக்கர்ஜி, வக்கீல் மிஸ்டர் ஹெரோபிரசாத் சட்டர்ஜி ஆகிய இவர்கள் உதவியின்பேரில் பாரிஸ்டர் மிஸ்டர் S. P. சின்ஹ மனுதாருக்கு ஆஜரானார்.

உத்தரவு:—இந்தக்கேசை வேறொரு கோர்ட்டிற்கு மாற்றக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி பிராசிக்கியூஷன் தரப்பிற்கு நோட்டிஸ் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

பம்பாய் ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் தேவர்.

அக்கிரமவட்டி வியாஜ்ஜியம்.

வாதி:—மோமதொங்காரா வகையறா.

பிரதிவாதி:—வில்லியம் ஜில்லஸ்ப்பி.

கேசின் விவரம்:—வாதி பம்பாயில் லாவாதேவி செய்யும் மார்வாடி ஜாதியார். பிரதிவாதி பம்பாய் ஜெனரல் போஸ்டாபீஸில் மணியார்டர் டிபார்ட்மெண்டிற்கு மானேஜர். பிரதிவாதி, வாதிக்கு 1904 ம் ஹ ஜூலைமீ 19உ மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணா மேனிக்கு வட்டி, அதாவது வருஷத்திற்கு 100 - க்கு 75-வட்டிமேனிக்குச் சேர்த்துக்கொடுப்பதாய் ஒரு பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்து ரூ. 500 கடன் வாங்கிக்கொண்டதாகவும் 1905-ம் ஹ ஜனவரிமீ 20உ மாதம் ஒன்றுக்கு 100-க்கு 5 வட்டி மேனிக்கு அதாவது 100-க்கு வருஷத்திற்கு 60 வட்டி வீதம் சேர்த்துக் கொடுப்பதாய் ஒரு பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்து ரூ. 500 பெற்றுக்கொண்டதாகவும், இந்த இரண்டு பிராமிசரி நோட்டுகளுக்காகப்பிரதிவாதி பலதடவைகளில் ரூ. 300 செலுத்தியிருக்கிறார் என்றும் ஆகையால் முதலுக்காக ரூ. 680-ம், வட்டி பாபத்திற்காக ரூ. 1,008-ம் ஆக ரூ. 1,688-ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும் வாதிவகையறா வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

கேசின் நடவடிக்கை:—இந்த வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்படுவதற்காகக் குறிப்பிட்டிருந்த தினத்தில் பிரதிவாதி கோர்ட்டிற்கு வந்து தாம் பணம் தயார் செய்து கொடுத்து விடுவதாகச் சொல்லி விசாரணையைத் தள்ளி வைத்துக்கொள்ளும்படியாக வாதிகளை வேண்டிக்கொண்டார். வாதிகள் சம்மதிக்கவில்லை. அப்படி தள்ளிவைக்காவிட்டால் பிரதிவாதி இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ளத்தயாராயிருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். போனவர் திரும்பிவரவில்லை. கோர்ட்டார் இந்தக்கேசை பிரதிவாதி யில்லாமலே விசாரணை செய்தார்கள். வாதிகளில் ஒருவரைக் கோர்ட்டார் சாக்ஷியாக விசாரணை செய்தபோது, பிரதிவாதி இன்னும் சில சாவுகார்களிடத்தில் கடன்வாங்கி கடன் சமுத்திரத்தில் முழுகியிருக்கிறார் என்று ருஜுப்பட்டது. நிற்க, வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தை ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாக்கல் செய்தால் பிரதிவாதி டிக்கிரித் தொகையைத் தவணை தவணையாகச் செலுத்துவதாய்ச் சொன்னால் கோர்ட்டார் சம்மதித்து அப்படியே செலுத்தும்படி உத்தரவு செய்வார்கள் என்றும், ஹைகோர்ட்டில் (short cause) தாக்கல் செய்தால் டிக்கிரித்தொகையைத் தவணை தவணையாகச் செலுத்த உத்தரவு செய்யமாட்டார்கள் என்று வாதிகள் எண்ணியும் இந்த வியாஜ்ஜியத்தை ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாக்கல் செய்யாமல் வாதிகளின் கோர்ட்டுச் செலவுகள் ஹைகோர்ட்டில் கிடைக்காமற் போனாலும்போகட்டும்; முழுத்தொகைக்கும் டிக்கிரி கிடைத்தால் போதுமென்று எண்ணியும் இந்த வியாஜ்ஜியத்தை வாதிகள் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்ததாகவும் வாதி சாக்ஷியம் சொல்லிவரும்போது சொன்னார்.

தீர்ப்பு:—வாதிகள் அகாத வட்டி போட்டு பிராமிசரி நோட்டுகளை எழுதிவாங்கியிருக்கிறார்கள். வாதிகள் கேட்டுக்கொள்ளுகிறபடி டிக்கிரி கொடுக்க நமக்கு மனம் வரவில்லை. இதைக்குறித்துச் சிலநாள் வரையில் தீர்க்கமாக யோசனை செய்தோம். பிரதிவாதியோ இந்த விசாரணைக்கு ஆஜராகிக் கோர்ட்டார் நியாயமான தீர்மானம் செய்வதற்கு உதவிசெய்யவில்லை. இத்தாவாவில் சம்பந்தப்பட்ட முதல் பிராமிசரி நோட்டைப் பிரதிவாதி எழுதிக் கொடுத்தபோது பிரதிவாதிக்கு வேறே அபாரக்கடன்களுமிருந்ததென்று வாதியே ஒப்புக்கொள்ளுகிறார். ஆகையால் பிரதிவாதி தாவா பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன்வாங்கும்போது மிகுந்த பணமுடையால் தொந்தரவு அடைந்து வந்தார் என்று ருஜுப்படுகின்றது. இப்படி பிரதிவாதி அசாத்தியப் பணமுடையால் தொந்தரவு அடைந்து வருகிறார்—இச்சமயம் அவரை எந்தவட்டி கேட்டாலும் அதற்குச் சம்மதித்துப் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துவிடுவார் என்று வாதிகள் எண்ணி மிகுந்த அநியாய வட்டிகேட்டு அதற்கு அவரைச் சம்மதிக்கும்படியாக தங்களுடைய செல்வாக்கை அக்கிரமமாகப் பிரயோகப்படுத்தி அவரைச் சம்மதிக்கும்படி செய்து தாவாப் பிராமிசரி நோட்டுகளை எழுதி வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் வாதிகள் பிரதிவாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் அநியாய ஒப்பந்தமாயிருக்கிறது. இந்த பிராமிசரி நோட்டுகள் தாவாவிற்கு வந்தவுடன் பிரதிவாதிக்கு ஏதேனும் கோர்ட்டார் இதுவிஷயத்தில் அனுகூலம் செய்யக்கூடியதாயிருந்தால் செய்யவேண்டுமென்று எண்ணினோம். ஆனால் வாதி பிரதிவாதிகள் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் கோர்ட்டார் பிரவேசிக்கலாமா பிரவேசிக்கக்கூடாதா என்கிற சந்தேகமுண்டாயிற்று. இதைக்குறித்து சட்ட ஆதாரங்களைத் தேடிப்பார்த்தோம். காண்டிராக்ட் ஆக்ட் (Contract Act VI. of 1899) 16-வது பிரிவு மூன்றாவது கிளாசில் ஒரு ஒப்பந்தம் அநியாயமான ஒப்பந்தம் என்று கோர்ட்டாருக்குத் தெரியவந்தால், அந்த ஒப்பந்தத்தைத் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தி செய்துகொள்ளவில்லை என்று ருஜுப்படுத்த வேண்டியது, தான் சொல்வதைக் கேட்கும்படி கட்டாயப்படுத்தக்கூடிய நிலைமையிலிருந்தவனின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடன் கொடுக்கிறவர்கள் கடன் வாங்குகிறவர்களுடன் செய்துகொள்ளும் கொடுமையான ஒப்பந்தங்களைக் கோர்ட்டார் அங்கீகரித்துக்கொள்ளாமல் ரத்துசெய்வதற்காகக் கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கும்பொருட்டே காண்டிராக்ட் ஆக்ட் 19 - வது A. பிரிவும், அதன் B. உதாரணமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வருஷம் ஒன்றுக்கு 100 - க்கு 75 - வட்டிமேனிக்கும் 60-வட்டிமேனிக்கும் பிரதிவாதி தாவா பிராமிசரி நோட்டுகளைஎழுதிக்கொடுக்கும் காலத்தில் வாதிகள் தங்களுடையபேச்சைப் பிரதிவாதி கேட்கும்படியாகச்செய்யக்கூடிய நிலைமையிலிருந்தார்கள் என்பதற்குச்சந்தேகமில்லை. இப்படி நினைப்பதற்குத் தாவாப்பிராமிசரி நோட்டுகளைப் பார்த்தாலே போதுமானது. இதுவுமன்றி, சாக்ஷி விசாரணையில் ருஜுவும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இப்போது வாதிகளுக்குப் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டியது என்னவென்றால்,

பிரதிவாதியால் இன்னும் வாதிகளுக்குச் செலுத்தப்படாத முதல் தொகையும் பிராமிசரிநோட்டுகள் பிறந்த தேதி முதல் நியாயமான வட்டி மேனிக்குக் கூடுதலான தொகையுமே.

இந்த பிராமிசரி நோட்டுகளுக்கு என்னவட்டி போட்டால் நியாயமாயிருக்குமென்று யோசிக்கின், பங்காளத்தில் சகஜமாய் வருஷத்திற்கு 6 வட்டிமுதல் 12 வட்டிவரையில்போடப்பட்டுவருகின்றது. வடமேற்கு மாகாணத்தில் (North-West Provinces) சகஜமாய் 20-வட்டிக்குக்கூட கடன் கொடுத்துவருகிறார்கள். பம்பாயில் பணமுடையவர்கள் 24-வட்டிகூடக் கொடுத்துக்கடன் வாங்குகிறார்கள். இப்படி உயர்ந்த வட்டிமேனிக்குக் கடன் கொடுப்பதற்கு மார்வாடிகள் ஒரு காரணமும் சொல்லுகிறார்கள். அது என்னவென்றால், பெரும்பாலும் மார்வாடிகள் யாதொரு சொத்து ஜாமீன் பெற்றுக்கொள்ளாமல் கடன்பெற்றுக்கொள்ளுகிறவனை மட்டிலும் நம்பி கடன்கொடுத்து வருகிறார்களென்றும் பணம் அவர்களிடமிருந்து வருவது பெரும்பாலும் சந்தேகமாயிருக்கிறதென்றும் அநேகர் கடனைச் செலுத்தமுடியாமல் இன்சால்வெண்டும் பெற்றுக்கொள்ளுகிறார்கள் என்றும்மார்வாடிகள் சொல்லுகிறார்கள், இந்தக் காரணத்தை நாம் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

ஒருவனுக்குக் கடன் கொடுத்தால் அவன் திரும்பிக் கடனைச் செலுத்துவது சந்தேகம் என்று நினைக்கப்பட்டபேர்களுக்கும் கடனைத் திரும்பிக்கொடுக்கப் போதுமான ஐவேஜி யற்றவர்களுக்கும் மார்வாடிகள் கடன் கொடுக்கக் கடமைப்பட்டவர்களல்ல, தங்களிடம் கடன் வாங்கி வருபவர்களில் இரண்டொருவர்கள் கடனைச்செலுத்தாமல் இன்சால்வெண்டு பெற்றுக் கொள்ளுகிறார்கள் என்கிற காரணத்தை முன்னிட்டு அவர்கள் இன்சால்வெண்டு வாங்கிக்கொண்டதால் இழந்துபோன பணத்தை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் மார்வாடிகள் தங்களிடமிருந்து கடன்வாங்குகிறவர்களிடத்தே கொடுமையான வட்டி வாங்கி வருவது நியாயமான காரியமல்ல! ஆகையால் தாவாப் பிராமிசரி நோட்டுகள் பிறந்த தேதிமுதல் 100-க்கு வருஷத்திற்கு 24 - வட்டி மேனிக்குக் கூடுதலான தொகைக்கு நாம் பிரதிவாதிபேரில் டிக்கிரி கொடுக்கிறோம். நிற்க, ஸ்மால் காஸ் கோர்ட்டில் தாவாசெய்தால் டிக்கிரிப் பணத்தைத் தவணையாகச் செலுத்தும்படி உத்தரவு செய்துவிடுகிறார்கள் என்றும், ஹைகோர்ட்டில் ஷார்ட்காஸ் நம்பராக்த் தாக்கல் செய்துவிட்டால் தவணை டிக்கிரி கொடுக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்றும் எண்ணி தாவாசெய்கிறவர்கள் ஸ்மால்காஸ் வியாஜ்ஜியங்களை ஹைகோர்ட்டில் தாக்கல்செய்கிறார்கள். இது தப்பான எண்ணம். தவணை டிக்கிரி கொடுக்க ஹைகோர்ட்டாருக்கும் அதிகாரமிருக்கின்றது. "சி. பு. கோ. 210-வது பிரிவின்படி பிரதிவாதி டிக்கிரித் தொகையை முழுதும் உடனே செலுத்த சக்தியற்றவன் என்று ஹைகோர்ட்டாருக்குத் தெரியவந்தால், வாதியின் சம்மதமின்றியே டிக்கிரித் தொகையைப் பிரதிவாதி தவணை தவணையாகச் செலுத்தும்படி உத்தரவு செய்யலாம்." என்று தீர்ப்பு சொன்னார்கள்.

சென்னபட்டணம்
ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் S. சுப்பிரமணிய அய்யர்.

மைனர் எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டுக் கேஸ்.

(15—2—07.)

கேசின் விவரம்:—திருநெல்வேலி ஜில்லாவில் ஒருவர் தாம் மைனராகவிருந்தபோது பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துப் பணம்வாங்கிக்கொண்டார். நோட்டின் கடன் தீரவில்லை. ஆகவே பிராமிசரிநோட் எழுதி வாங்கினவர் மைனர்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதி மைனரானபடியால் கோர்ட்டார் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். மைனர் மெஜார்டி அடைந்தவுடன் வாதி அந்த பிராமிசரி நோட்டின் தொகைக்கு வேறொரு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக்கொண்டார். சிலகாலம் சென்று இந்த புதிப்பிக்கப்பட்ட பிராமிசரி நோட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி திருநெல்வேலி ஸப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். விசாரணையில் இந்த பிராமிசரிநோட்டு மைனராகவிருக்கும் போது எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டிற்குப் பதிலாக எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரிநோட்டென்று ருஜுப்பட்டது.

சப் கோர்ட்டுத்தீர்ப்பு:—மைனராகவிருக்கும்போது எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டின் பேரில் எழுதிக்கொடுத்தவர் மைனராக விருக்கும்போதே, வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. மைனர் மெஜாரிட்டி அடைந்தவுடன் தான் மைனராகவிருந்தபோது எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டிற்குப்பதிலாகப் புதிதாய் பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்தது கடன்கொடுத்தவனுக்குப் புதியவியாஜ்ஜியமூலத்தை உண்டுபண்ணமாட்டாதென்று சொல்லி வாதிகொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஜில்லாக்கோர்ட்டில் முதல் அப்பீலும் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீலும் செய்துகொண்டதில் இரு அப்பீல் கோர்ட்டார்களும் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தையே உறுதிப்படுத்தினார்கள். மறுபடியும் வாதி ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

லாயர்:—வாதி தரப்பிற்கு மிஸ்டர் P. R. சுந்தரமய்யர் அவர்கள் ஆஜரானார்.

தீர்ப்பு:—ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோமென்று தீர்ப்பு சொல்லி, ரிவிஷன் மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

GOVERNMENT ORDERS, BOARD'S PROCEEDINGS, AND DISTRICT CIRCULARS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள், போர்ட் ப்ரோசீடிங்ஸ் ஜில்லா சர்க்கியுலர்கள்.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1907-மீஸ் ஜனவரிமீ 22உ **G. O.** நெ. 166. இப்போது சென்னை ராஜதானியில் ரிஜிஸ்டிரேஷன் இலாகாவில் முதல் கிரேடில் 11-ம், இரண்டாவது கிரேடில் 28, மூன்றுவதில் 42, நான்காவதில் 93, ஐந்தாவதில் 79, ஆறுவதில் 67, ஏழாவதில் 54, எட்டாவதில் 50 சப் ரிஜிஸ்டிரார்களிருக்கிறார்கள். 1907-மீஸ் ஏப்பிரல்மீ முதல் முதல் கிரேடில் 20, இரண்டாவது கிரேடில் 30, மூன்றுவதில் 100, நான்காவதில் 60, ஐந்தாவதில் 60, ஆறுவதில் 60, ஏழாவதில் 50, எட்டாவதில் 50 சப் ரிஜிஸ்டிரார்களிருக்கும்படியாக பிரஸ்தாப வருஷத்திற்கு ரூ. 15-ஆயிரம் சாங்கிஷன்செய்து கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

—28உ **G. O.** நெ. 112.

சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்களின் 1906ஸ் அக்டோபர்மீ த்திய ஜனனமரண ஜாபிதா.

ஜனனம்:—109,593, மரணம் 94,851. ஜனனவிவரம்:—55625 ஆண், 53914 பெண்; மரணவிவரம்:—48268 ஆண், 46583 பெண்; நோயின் விவரம்:—கால்ராவால் இறந்தவர்கள் 12954, வைசூரி-1703, பிளேக்-64, சுரம் 30203, வயிற்றுளைவு வயிற்றுப்போக்கு-5955, மார்புநோய்-2152, காயம் 1032, இதரகாரணங்கள் 40788 ஆக மொத்தம் 94851.

கிருஷ்ணா ஜில்லாவைத்தவிர இதர ஜில்லாக்களில் இந்த மாதம் வாந்திபேதி பரவிவந்திருக்கிறது. வாந்திபேதியால் கோயமுத்தூர், திருநெல்வேலி, மதுரை, அனந்தபூர், கடப்பை ஆகிய இந்த ஜில்லாக்களில் அதிக மரணம் உண்டாயிற்று; வட ஆற்காட்டில் வைசூரியால் அதிகப்படி மரணம். 5 ஜில்லாக்களில் மட்டிலும் பிளேக் நோயால் மரணமுண்டானது. விசாகபட்டணம், கஞ்சம், கோதாவிரி, குண்டூர், கடப்பை, கர்னூல் ஆகிய இந்த ஜில்லாக்களில் சுரத்தால் அதிகப்படி மரணம். சென்னை, நீலகிரி, கோயமுத்தூர் ஆகிய இந்த ஜில்லாக்களில் வயிற்றுளைவால் அதிகப்படி மரணம்.

சென்னை ராஜதானியிலுள்ள ஜனன மரண விவர ஜாபிதா.

ஜனனம்:—8209; 4190 ஆண், 4019 பெண். மரணம்:-8257, 4175 ஆண்; 4082 பெண். நோயின் விவரம்:—கால்ராவால் இறந்துபோனவர்கள் 805, வைசூரி 62, பிளேக் 27, சுரம் 1437, வயிற்றுளைவு 1237, மார்புநோய் 402, காயம் 84. இதர காரணங்கள் 4153 ஆக மொத்தம் 8257.

31-முனிசிபாலிட்டிகளில் கால்ராயில்லை. பாக்கி 31 முனிசிபாலிட்டிகளிலும் கால்ராவால் மரணம் உண்டாயிற்று. அதிலும் பெரியகுளம், பழனி, வாணியம்பாடி, திருநெல்வேலி ஈரோடு, பாளையங்கோட்டை ஆகிய இந்த முனிசிபாலிட்டிகளில் அதிகப்படி கால்ராவால் மரணம். கொடைக்கானல், வேலூர் ஆகிய இந்த இரண்டு முனிசிபாலிட்டிகளிலும் வைசூரியால் அதிகப்படி மரணம். கூனூர், மங்களூர், தலைச்சேரி ஆகிய இந்த மூன்று முனிசிபாலிட்டிகளிலும் அதிகப்படி பிளேக் மரணம். கடப்பை, ரெட்டகுளம், நந்தியால், ராஜமகேந்திரபுரம், நெல்லூர், தூத்துக்குடி ஆகிய இந்த முனிசிபாலிட்டிகளிலும் சுரத்தால் அதிகப்படி மரணம். பெரியகுளம், திருப்பதி, ஈரோடு, திருவண்ணாமலை, கரூர் ஆகிய இந்த முனிசிபாலிட்டிகளில் வயிற்றுளைவால் அதிகப்படி மரணம். தலைச்சேரி, பெரியகுளம், கூனூர், பாரலக்கிமிதி, வாணியம்பாடி ஆகிய முனிசிபாலிட்டிகளில் மார்புநோவால் அதிகப்படி மரணம்.

—28உ **G. O.** நெ. 157. M.

மதுரையில் ஒரு ஜெனரல் மார்க்கட்டு கட்டுவதற்காக ரூ.40-ஆயிரம் மதுரை முனிசிபாலிட்டிக்குக் கடன் கொடுக்கும்படியாக சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்பணத்தை கூடிய சீக்கிரம் முனிசிபல் கவுன்சில் பெற்றுக்கொண்டு, பெற்றுக்கொண்ட விவரத்தை கவர்ன்மெண்டாருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—10உ **G. O.** நெ. 15.

சர்வகலாசாலை கமிஷன் சிபார்சுசெய்ததை அனுசரித்து சென்னை சர்வகலாசாலையார் செய்திருக்கும் விதிகள் இத்தேச பாஷைகளைத் தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும் என்று மதுரைத் தமிழ்ச்சங்க பிரசிடெண்டு அனுப்பிய தந்தியும் அதற்குப்பிறகு அனுப்பிய மகசரும் தாக்கல் செய்துகொள்ளப்பட்டது. இது விஷயங்களைக்குறித்து மகஜர்காரர் நேரே சர்வகலாசாலையாருக்கு அறிவிக்கவேண்டும்.

—பிப்ரவரிமீ 1உ **G. O.** நெ. 204. M.

சென்னை ராஜதானியிலுள்ள முனிசிபாலிட்டிகள் 1905-1906-மீஸத்திற்கு அக்கவுண்டென்டென்ட் ஜெனரலுக்கு அனுப்பிய கணக்குகள் ஷை ஆபீசரால் பரிசோதிக்கப்பட்டு அதன்பேரில் அவர் செய்திருக்கும் மொத்த ரிப்போர்ட் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. இந்த மொத்த ரிப்போர்ட்டின் காப்பியை ஒவ்வொரு முனிசிபாலிட்டிகளுக்கும் கவர்ன்மெண்டார் அனுப்புவதில் அடியிற்கண்ட எண்டார்ஸ்மெண்டுடன் அனுப்பியிருக்கிறார்கள்.

கர்னூல், தூத்துக்குடி, கூடலூர், அனந்தபூர், கொச்சின், பெல்லாரி, ஸ்ரீவில்லிபுத்தூர், பீமிலிபட்டணம் ஆகிய இந்த முனிசிபாலிட்டிகள் அனுப்பிய கணக்குகளை அக்கவுண்டெண்ட் ஜெனரல் பரிசோதனைசெய்து சில கேள்விகள் கேட்டிருந்தார். இந்தக் கேள்விகளுக்கு மேற்படி முனிசிபாலிட்டிகள் மிகுந்த தாமதமாய் பதில் அனுப்பியது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. இனிமேல் கேள்விகளைப்பெற்ற 6-வாரங்களுக்குள் ஜவாப்புகளை அனுப்பிவிடவேண்டுமென்று முனிசிபல் சேர்மென்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பல்லாரி, காஞ்சிவரம், திருவண்ணாமலை, வாலாஜாபாட், கும்பகோணம், கோயமுத்தூர், கூடலூர், பெரம்பூர், ஓங்கோல் ஆகிய இந்த முனிசிபாலிட்டிகளின் கணக்குகள் திருப்திகரமாயில்லை. அதிலும் பல்லாரி, கும்பகோணம் முனிசிபாலிட்டிகளில் கணக்குகள் மிகவும் ஊழலா யிருக்கின்றன. இந்த ஊழல்களைச்சீர் திருத்த என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்று தெரியப்படுத்தும்படியாக இந்த முனிசிபாலிட்டிகளின் சேர்மென்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

—ஜனவரிமீ 28உ **G. O.** நெ. 186.

1904-மீஸ் 10-வது இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்டாகிய கோவாப்பரேட்டிக்கிரடிட் சொசைட்டி ஆக்டின்படி மதுரை ஜில்லா பரமக்குடியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சகாய சொசைட்டியின் (Urban Bank) மானேஜ்மெண்டிற்காக அந்த சொசைட்டியார் செய்துகொண்டிருக்கும் உபவிதிகள் கவர்ன்மெண்டாருடைய சம்மதத்தைப்பெற்றிருக்கின்றன.

—ஜனவரிமீ 25உ **G. O.** நெ. 175.

கோர்ட் ஆப் வார்ட்சார் பார்வையிலிருந்து வரும் மைனர்கள் வாசிக்கும் நியூயிங்டன் பள்ளிக்கூடத்தின் விசிட்டர் (Vtsitor) கமிட்டியில் அங்கத்தினராயிருந்த மிஸ்டர் H. K. பீச்சாம் C. I. E. ராஜினாமா கொடுத்து விட்டபடியால் ஆலோசனை சபையிலிருக்கும் கவர்னர், காலியாயிருக்கும் ஸ்தானத்திற்கு சர் H. C. கிங் Kt. அவர்களை நியமித்திருக்கிறார்கள்.

—ஜனவரிமீ 28உ **G. O.** நெ. 181.

ஆனமலை (Anamalai Planten's Association.) பயிர் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி புதிதாய் குத்தகை பெற்றுக்

கொண்டு ரப்பர் சர்குபடி செய்யும் நிலங்களுக்கு, சாகுபடிசெய்ய ஆரம்பித்த காலமுதல் தொடர் சேர்த்தியாக மூன்று வருஷங்களுக்கு, சாதாரணமாகக் குத்தகை எகிரிமெண்டின்படி கவர்ன்மெண்டார் வசூல் செய்யவேண்டிய தீர்வையை வஜா செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

—ஜனவரி௴ 19௳ G. O. நெ. 54.

பெல்லாரி ஜில்லா வெங்கடபுரம் கிராமம் மலையவந்தா மலையின்பேரிலிருக்கும் ரகுநாத சுவாமி திருக்கோயிலை ஷை ஆலயத்திற்குச் சொந்தக்காரராகிய பைராகியுடன் சில நிபந்தனைகள் அடங்கிய எகிரிமெண்டு கவர்ன்மெண்டார் செய்துகொண்டு திருப்பணிவேலைகள் நடத்தப் போகிறபடியால் அப்படி நடத்துவதற்கு முந்தி AncientMonuments'Preservation Act என்று சொல்லும்படியான பூர்வகால ஞாபகக்கட்டடங்களைப் பாதுகாப்பதற்காக 1904-ம் ௵ பிறப்பிக்கப்பட்ட ஆக்ட்டின் இரண்டாவது பிரிவின்படி பிரஸ்தாப திருக்கோயிலும் பாதுகாக்கப்பட்ட கட்டடம் என்று கவர்ன்மெண்டார் பயிரங்ப்படுத்தியிருக்கிறார்கள்.

—ஜனவரி௴ 20௳ G. O. நெ. 182.

திருச்சினாப்பள்ளியிலிருந்து 98-மயில் தூரத்திலிருக்கும் திருக்கோயிலூருக்கு இருப்புப்பாதைபோட உத்தேசித்து ஷை மார்க்கத்தை சர்வே செய்யும்படி ரெயில்வே போர்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள். சர்வே வேலைகள் சென்னை கவர்ன்மெண்டாருடைய மேற்பார்வையின்பேரில் தென் இந்தியா ரயில் கம்பெனியாரால் நடத்தப்படும்.

இந்தியா கவர்ன்மெண்டு ஆர்டர்.

"நியூ கலிடோனியா" (New Cale-donia) என்கிற குடியேற்ற நாட்டிற்கு வரக்கூடிய இந்தியக் கூலிக்காரர்களுக்கு ஷை நாட்டில் வேலை அகப்படுவதற்கு எதுவில்லாமலிருப்பதாலும் அப்படி வந்தவர்கள் வேலை அகப்படாமல் கஷ்டப்பட்டால் அவர்களுக்கு யாதொரு சகாயமும் செய்ய ஷை நாட்டின் கவர்ன்மெண்டாருக்கு சாத்தியப்படாமலிருக்கிறதென்றும் இந்தியா மந்திரி தெரிவிக்கிறபடியாலும் இந்தியாவிலுள்ள லோகல் கவர்ன்மெண்டார்கள் இந்த சமாசாரத்தை இந்தியக் கூலிகள் நியூ கலிடோனியாவிற்குக் கப்பலேறக்கூடிய ரேவு துறைகளில் விளம்பரப்படுத்தி அவர்களை ஷை நாட்டிற்குப் பிரயாணமாகாமல் எச்சரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1907ம் ௵ ஜனவரி௴ 29௳ G. O. நெ. 83.

I. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள அடியிற்கண்ட பழையகால கட்டடங்கள், 'பழையகால கட்டட பாதுகாப்பு ஆக்ட்டின்படி' பாதுகாக்கப்படவேண்டிய கட்டடங்கள் என்று கூறும்படியாக ஷை ஜில்லா கலெக்ட்டர் தெரியப்படுத்துகிறார்.

(1) தென்னேரியிலிருக்கும் பெரிய சிவாலயம்.

(2) ஷை சிறிய சிவன் கோவில்.

(3) மணிமங்கலத்திலிருக்கும் விரிவான கோபுரமுடைய பழைய கோவில்.

(4) சைதாப்பேட்டை சின்ன மவுண்ட்டிலிருக்கும் மாதாகோவிலுக்குக் கீழிலிருக்கும் மலைக்குகை.

(5) சென்தாமஸ் மௌண்ட் குன்றின்பேரிலிருக்கும் மாதாகோவிலின் சிலுவை.

II. மேலே கூறப்பட்ட மூன்று ஹிந்து தேவஸ்தானங்களையும் பாதுகாக்கப்படவேண்டிய பூர்வீகக் கட்டடங்களில் கவர்ன்மெண்டார் சேர்த்துக்கொள்ளுவதற்கு ஷை தேவஸ்தானங்களின் சொந்தக்காரர்களுக்கு ஏதேனும் ஆக்ஷேபம் யிருக்குமாவென்றும், அப்படியில்லாவிட்டால் ஷை சொந்தக்காரர்கள் கவர்ன்மெண்டாருடன் எக்ரிமெண்டு செய்துகொள்ளத் தயாரா யிருக்கிறார்களாவென்றும் கலெக்ட்டர் விசாரித்து ரிப்போர்ட் செய்யவேண்டும்.

1907ம் ௵ ஜனவரி௴ 19௳ G. O. நெ. 138.

ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட ஆபீசுகளைப் பரிசோதனை செய்வதற்கு ஸ்டீமரில் பிரயாணம் செய்யவேண்டியதாயிருந்தால் அவர்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தபடி பிரத்தியேகமான ஒரு காபின் என்கிற கம்பார்ட்மெண்டு அவர்களுக்கு விடவேண்டும். அவர்கள் ஆபீசுகளைப் பார்வையிடும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ. 15-படிச்செலவு பெற்றுக்கொள்ளலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவி செய்திருக்கிறார்கள்.

—ஜனவரி௴ 30௳ G. O. நெ. 215.

கிரிமினல் புரோசீஜர் கோட் 92-வது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் வாரண்டுகளைக் கொண்டுபோய் சாக்ஷிகளை அரஸ்ட் செய்துகொண்டுவரும் போலிஸ்காரர்களுக்கு பிரயாணச் செலவும் படிச்செலவும் ஷை வாரண்டுகளைப் பிறப்பிக்கும் கிரிமினல் கோர்ட்டார் கொடுக்கவேண்டும்.

—பிப்ரவரி௴ 22௳ G. O. நெ. 253.

ஜமீன் நுங்கம்பாக்கம் கிராமம் கோவாப்பரேட்டிவ் கிரிடிட் சொசயிட்டிக்கு, சர். டி. ஹாமில்ட்டன் கொடுத்த ஐவேஜியிலிருந்து ரூ. 200-கடன் கொடுக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள்.

போர்ட் ப்ரோசீடிங்ஸ் அண்டு டிஸ்டிரிக்ட் ஜில்லா சர்க்கியுலர்கள்.

தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டார் அவர்களால் அனுப்பப்பட்டிருக்கும் சர்க்கியுலர்கள்.

மாஜிஸ்டிரேட் சர்க்கியுலர்கள்.

ஒருவன் தன் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தைத் தான் செய்ததாகத் தன் பேரில் சந்தேக முண்டாகாமலிருக்கும்படியாவது அல்லது அந்தக்குற்றத்திலிருந்து தன்னை மறைத்துக்கொள்ளும் பொருட்டாவதுபொய்சாக்ஷியம் சொன்னான் அல்லது பொய் சாக்ஷியம் தயாரித்தான் என்று குற்றஞ்சாட்டப்படக்கூடாது. இ. லா. ரி. 28 அல. 705.

காட்டில் டிரஸ்பாஸ்ஆக்ட் 22-வது பிரிவின்படிசெய்யப்படும் உத்தரவிற்கு விரோதமாக இ. பி. கொ. 407-வது பிரிவின்படி அப்பீல் செய்துகொள்ளலாம். இ. லா. ரி. 29 சென். 517.

நல்ல நடத்தைக்காக ஜாமீன் கொடுத்த ஒருவன் தன்னுடைய ஜாமீனை இழக்கும்படி நேரிட்டால் எவ்வளவு தொகைக்கு ஜாமீன் கொடுத்தானோ அதைக்கோர்ட்டார் அவனிடமிருந்து வசூலித்துவிடலாம். ஆனால் எவ்வளவுகால ஜெயில் தண்டனைக்குப் பதிலாக அவனிடம் நல்ல நடத்தை ஜாமீன் வாங்கப்பட்டதோ அந்தக்காலத்தை மறுபடியும் ஜெயிலில் கழித்து வரும்படி அவனை தண்டித்து ஜெயிலுக்கு அனுப்பக்கூடாது இ. லா. ரி. 28. அல. 629.

ஒரு கேசில் சிலசாக்ஷிகள் குற்றவாளி இறந்துபோனவனை அடித்ததைத் தாங்கள் கண்ணாரப்பார்த்ததாக சாக்ஷியும் சொன்னார்கள். அந்தக்கேஸ் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டபோது அதேசாக்ஷிகள் குற்றவாளி இறந்துபோனவன் அடிக்கவில்லை என்று சாக்ஷியும் சொன்னார்கள் செஷன் கோர்ட்டார் தங்கள் முன்னிலையில் இந்த சாக்ஷிகள் சொல்லும் சாக்ஷியும் பொய் என்று அபிப்பிராயப்பட்டு கீழ்க்கோர்ட்டில் இந்த சாக்ஷிகள் கொடுத்த சாக்ஷியத்தை செஷன் கோர்ட்டார் இ. பு. கோ. 288-வது பிரிவின்படி ஏற்றுக்கொண்டார்கள். அது நியாயமான காரியமென்று தீர்மானிக்கப்பட்டது இ. லா. ரி. 28. அல. 683.

ஒரு திருட்டில் களவாடப்பட்ட பல பொருள்களை வைத்துக்கொண்டிருக்கும் பலபேர்வழிகளை ஒன்றாகச் சேர்த்து குற்றம்சாட்டி விசாரணை செய்யக்கூடாது. ஏனென்றால், அவர்கள் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை அவர்கள் ஒரேகாலத்தில் செய்ததாகச் சொல்ல முடியாது. இ.லா.ரி. 33. கல். 1256.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் அவர்களால் அனுப்பப்பட்டிருக்கும் சர்க்கியுலர்கள்.

இதனால் விளம்பரம் செய்வது யாதெனில், ஒருபோக சாகுபடி அறுவடையான்வுடன் காலத்தில் சர்க்கார் ஜலத்தைக் கொண்டு எருவுக்காக அல்லது ஆடு மாடுகள் மேய்ப்பதற்காகப் பயிரிடப்படும் பயிர்களின்மீது நீர்க்கூலியானது அந்தப்பயிர்கள் முதிருவதற்கு முன்பாகவே உழுது நிலத்திலேயே மடக்கிவிட்டால் அல்லது அறுத்துவிட்டால் அல்லது ஆடுமாடுமேயவிட்டுவிட்டால் விதிக்கப்படாது. இதனால் உண்டாகிய அனுகூலம் அமுலில் இருபோக தீர்வைக்கு நஷ்டமுண்டாகும்படி கையாடப்படுமானால் காலநிர்ணயமன்னியில் ரத்துசெய்யப்படும்.

சர்க்கியுலர்.

நாளது 1316-ம் பசலி முதல் இந்த ஜில்லாவிலுள்ள ரிகிளாசிவையாகாத கிராமங்களிலுள்ள ரயத்வாரி உழைப்பேரி நஞ்சை நிலங்களின் பேரிலுள்ள தீர்வையைச் சாதாரண நஞ்சைத் தீர்வை ரேட்டுக்கு ரிவினியூ போர்டார் உத்தரவை யனுசரித்துக் குறைத்திருப்பதாக இதனால் எல்லாருக்கும் தெரியப்படுத்தப்படுகிறது. இவ்விதமாய் குறைத்தால் ஷை நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ள ஏற்பட்டுள்ள சுதந்தரமும் அல்லது இருபோக நஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்ட காம்பௌண்டு செய்யும் ரேட்டுகளும் எவ்விதத்திலும் மாறுபடவில்லை.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் அவர்களால் அனுப்பப்பட்டிருக்கும் ஜில்லா சர்க்கிலர்கள்.

சில ஏரிகளில் குடிகள் கரடுமொரடான பெரிய கற்களைப் போட்டு ஏரிகலுங்கல்களின் உச்சிமட்டத்தைத் தூக்கிவிடுவதும் (கலுங்கல் குத்துக்கால்) மத்தியில் இருக்கப்பட்ட சந்துகளைக் களிமண்ணைக்கொண்டு அடைப்பதும் அவர்களுக்கு வழக்கமாய் இருப்பதாகவும், ஒரு ஏரியில் சொற்பகாலத்துக்கு முந்தி வெள்ளம்வந்தபோது ஷை கற்கள் தாய்ச்சுவர் பேரில் விழுவதனால் ஏரி ஏப்ரன் கட்டடத்தில் சந்து பிசியப்பட்டிருக்கிற சுண்ணாம்பு வேலைக்குக்கெடுதியை உண்டு பண்ணியிருப்பதாயும் அதை மராமத்து செய்வதற்காக சர்க்கார் செலவில் நடவடிக்கை நடத்தப்பட்ட தென்றும் தென்னாற்காடு சப் டிவிஷன் எக்சிகியூடிவ் இஞ்சினீர் அவர்கள் கலெக்டர் அவர்களுடைய நோட்டீசுக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். கிராமக்குடிகள் உத்தரவில்லாமல் மேற்கண்ட விதமாய் ஏரி வகைரா பாச்சலாதாரங்களிலுள்ள கட்டடங்களில் இனிபிரவேசித்தால் அவர்களை கிரிமினல் தரப்பில் பிராசிகூஷன் செய்யப்படும் என்றும் அவர்களுடைய நடவடிக்கையால் நேர்ந்த நஷ்டத்தை சம்பந்தப்பட்ட நபர்களிடத்திலிருந்து வசூல் செய்யப்படும் என்கிற விவரத்தையும் எல்லா கிராம நவுக்கர்களும் தங்கள் கிராமத்தில் தண்டோராமூலமாய் இதைப் பிரசித்தம் செய்துவிடவேண்டியது.

மாதாந்தர ஜனனமரண கணக்கும், கால்நடை மரண கணக்கும், கிராமங்களிலிருந்து தாலுகா கச்சேரிக்குச் சரியான காலத்தில் அனுப்பாததை முன்னிட்டு, இந்த ஜில்லா பூராவுக்கும் கலெக்டர் ஆபீசிலிருந்து சென்னபட்டணத்துக்குப்போக வேண்டிய மொத்த ஸ்டேட்மெண்டு சில சமயங்களில் காலந்தப்பியும், விசேஷமாய் அறைகுறையாகவும் அனுப்பவேண்டியதாய் நேரிடுகிறது. ஆதலால் கிராமஉத்தியோகஸ்தர்கள் தாங்களனுப்பவேண்டிய அந்தந்த மாசத்திய ஸ்டேட்மெண்டுகளை அதனடுத்த மாதம் 1௳ தவறாமல் தாலூகா கச்சேரிக்கு அனுப்பவேண்டியது. இந்த உத்தரவுபிரகாரம் தங்கள் ஸ்டேட்மெண்டுகளைக் கிரமப்படி அனுப்பாமல் அடிக்கடி தவறிப்போகிறவர்களை வேலையினின்று சஸ்பெண்டுசெய்யப்படும். ஜனன மரணம், கால்நடை மரணம் இவைகளில்லாத மாசத்தில்; பூச்சிய கணக்கு அனுப்பவேண்டியது.

சொந்தக்காரர்கள் தங்களுடைய முழு மூர்க்கத்தனமானவும் பாதி மூர்க்கத்தனமாயுமுள்ள ஆடு மாடுகளைப்பயமன்றி வெளியில் மேயவிடுவதால் கால்மியர் முனை (கோடியக்காடு) ரிசர்வ்பாரஸ்டுக்கு அதிக கெடுதி உண்டாகியதென்றும் அவைகள் வாராமலிருக்கும்படிச்செய்ய சாதாரண ஏற்பாடு போதுமானதா யில்லையென்று தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு பாரஸ்டு ஆபீஸர் நோட்டீசுக்குக் கொண்டுவருகிறார். ஷை ஆடு மாடுகளுக்குச் சொந்தக்காரர்கள் இந்த நோட்டீசு பிரசுரமான ஒரு வாரத்துக்குள் திருப்பிப்பிடித்துக் கொண்டுபோக வேண்டியதென்று எச்சரிக்கப்படுகிறார்கள். தவறினால் அநியாயமாய் மேய்த்த குற்றத்திற்காக குற்றவாளி அடையும் தண்டனை தவிர மாடுகள் சர்க்காருக்குச் சொந்தமாய்ப்போய்விடும்.

2. தண்டிக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் முன் அநியாய மேய்ச்சல் குற்றத்துக்காக கொண்டுவரும் கேசுகள் தண்டனையாகும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஆடு மாடுகளை சர்க்காரில் எடுத்துக்கொள்ளும்படி இதனால் உத்தரவு செய்யப்படுகிறார்கள்.

POLICE SHEET.

போலிஸ் ஷீட்.

தஞ்சாவூர் ஜில்லா Cii டிவிஷன் திருவிடமருதூர் ஸ்டேஷன் கிரைம் ந. 178/1906-ல் இ. பி. கோ. 380, 75-செக்ஷன்படி நடந்த கேசில் சுறுசுறுப்பாய் வேலைசெய்து தடயத்துடன் குற்றவாளியைப் பிடித்ததற்காக, சேதுபதானபுரமென்கிற கோவிந்தபுரம் கிராமத்தின் தலையாரி சாமிநாத படையாச்சிஎன்பவனுக்கு தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்டிரேட்டு துரையவர்களால் ரூபா 2 இனாம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலிலிருந்து விடுதலையாகி தன் சொந்த ஊருக்குத் திரும்பிவராமலிருக்கிறவர்களின் அங்க அடையாள ஜாப்தா அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு துரையவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கோரப்படுகிறது.

(1) பெயர் —மொஹிதீன் பிச்சை; ஜாதி—மகம்மதியன், ராவுத்தன்; வியாபாரம்; இருப்பிடம்—மதுரை ஜில்லா ராமநாதபுரம் நெம்புதலை கிராமம்; வயது—18; 5 அடி $4\frac{3}{4}$ அங்குல உயரம்; இடது புஜத்தில் மச்சம்; இடது புஜத்தில் பின்புறத்தில் நீண்ட தழும்பு. இவன் தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கி சப்மேஜிஸ்டிரேட்டாரால் கியாலண்டர் கேஸ் 171/13-7-1906-ல் இ. பி. கோ. 379 செக்ஷன்படி 3௴ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு 12-10-1906-ல் விடுதலை செய்யப்பட்டான்.

(2) பெயர்—மொய்தீன், ராவுத்தன்; ஜாதி—மகம்மதியன் ராவுத்தன்; தொழில்—பிச்சை; தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா சோழபுரம்—இருப்பிடம்; வயது—35; 5 அடி $4\frac{1}{4}$ அங்குல உயரம்; வலது கழுத்து எலும்புக்கு கீழாக மச்சம். இவன் கும்பகோணம் ஸ்டேஷனரி 2-வது கிளாஸ் மே. யவர்களால் கியாலண்டர் கேஸ் 172/19-7-1906-ல் இ. பி. கோ. 457 & 380 செக்ஷன்படி 3௴ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு 22-9-1906-ல் விடுதலைசெய்யப்பட்டான்.

மதராஸ் பெனிடென்ஷியரி ஜெயிலிலிருந்து 1906௵ நவம்பர் மாதத்தில் விடுதலையாகித்தன் சொந்த ஊருக்குத்திரும்பிவராமலிருக்கிறவனுடைய அங்க அடையாளம் அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்

லா போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு துரையவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

பெயர்—மொய்தீன் சாயப்; ஜாதி—மகம்மதியன்; தொழில்—வியாபாரம்; இருப்பிடம்—தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் தாலூகா கீரனூர் கிராமம்; வயது—23; 5 அடி 2 அங்குல உயரம்; நெத்தியில் மச்சம், இடது காலில் தழும்பு, முதுகில் மச்சம். இவன் நயகான் 2-வது கினாஸ் மேஜிஸ்டிரேட்டவர்களால் 25-5-1906-ல் கியாலண்டர் கேஸ் 84/1906-ல் இ. பி. கோ. 407 செக்ஷன்படி 6மீ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு 24-11-1906 விடுதலையானவன்.

தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலிலிருந்து விடுதலையாகித் தன் சொந்த ஊருக்குத் திரும்பிவராமலிருக்கிற, கலியபெருமாள் படையாச்சி என்பவனுடைய அங்க அடையாள ஜாப்தா அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவன் கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு துரையவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

ஜாதி—படையாச்சி; பயிர்த்தொழில்; இருப்பிடம்—தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம்; வயது—30; உயரம் 5 அடி $4\frac{3}{4}$ அங்குலம்; வலது கழுத்தெலும்புக்குக் கீழாக மச்சம். இவன் கியாலண்டர் கேஸ் 420/1906-ல் 6-10-1906-ல் கும்பகோணம் பிர்க்கா மேஜிஸ்டிரேட்டாரால் இ.பி.கோ. 457, 380 செக்ஷன்படி 2மீ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு 5-12-1906-ல் விடுதலைசெய்யப்பட்டான்.

தஞ்சாவூர் ஜில்லாவில் H. டிவிஷன் 316-ம் நெ. 4-வது கிரேட் எட்கான்ஸ்டபிள் அண்ணுசாமிராவ், 568-ம் நெ. கான்ஸ்டபிள் ஆராவமுது கொரடாச்சேரி ஸ்டேஷன் கிரைம் நெ. 53 & 54/1906-ல் சந்தேகத்தின் பேரில் குற்றவாளியைத் தடயத்துடன் பிடித்ததற்காக, A-881 கான்ஸ்டேபிள் ராமசாமி, டவுன் பீட் ட்யூட்டியில் சுறுசுறுப்பாய் இருந்து ஒரு பழையகுற்றவாளியால் செய்யப்பட்ட திருட்டைக் கண்டுபிடித்ததற்காக, Bi-183 நெ. கான்ஸ்டபிள் பொன்னுசாமி 260 கான்ஸ்டபிள் சின்னசாமி கன்னக்களவு செய்கிற சில குறவர்களை ராத்திரிவேளையில் தைரியமாகப்பிடித்ததற்காக, Gii-629 கான்ஸ்டபிள் கோபாலசாமி ஒரு திருட்டுக்கேசில் சுறுசுறுப்பாய் வேலை செய்ததற்காக, குட்சொவிஸ் என்மரி பெற்றிருக்கிறார்கள்.

தென் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் துரையவர்களால் அடியில் கண்ட இனுங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன:—Ji டிவிஷன் 1115 நெ. 1-கிரேட். எட். கான்ஸ்டபிள் ரெங்கசாமி நாயுடு ரூபா. 5 ஒரு கால்நடை திருட்டில் நல்லவேலை செய்ததற்காக, Ei-606 கான்ஸ்டபிள் ஆரோக்கியசாமி ரூபா 5, நீடாமங்கலம் ஸ்டேஸன் கிரைம் ந. 61 & 62/1906-ல் நல்ல வேலைசெய்ததற்காக, Ci-1186 கான்ஸ்டபிள் சிவராயபிள்ளை ரூபா 5 இ. பி. கோ. 393 செக்ஷன்படி நடந்த கேசில் நல்லவேலை செய்ததற்காக.

போலீஸ் அக்கிரமம்.

பூனு போலீஸார் ஒரு தீவட்டிக்கொள்ளைக்கேசை கண்டுபிடிக்கப் பிரயத்தனம் செய்துவந்த வகையில் தீவட்டிக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட பேர்களைத் தெரிவிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தி ஒருவனை அடித்ததில் அவன் இறந்துபோக, பூனு போலீஸ் இன்ஸ்பெக்டர் ராவ்பகதூர் ராவ்ஜிபந்தாரும் ஒரு கான்ஸ்டேபிளும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைசெய்யப்பட்டு வருகிறார்கள்.

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்:—(1) மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
(2) மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

1903-ம் ஷுத்திய சிவில் அப்பீல் நெ. 22.

(*a*) ராஜாகாவலி அருணாசலராவ் பகதூர்:—
அப்பீல் வாதி (வாதி).

(*b*) ராஜா ரெங்கய்யா அப்பாராவ் பகதூர் வகையரு
அப்பீல் பிரதிவாதிகள் (பிரதிவாதிகள்).

1903-ம் ஷுத்திய சிவில் அப்பீல் நெ. 23.

(*c*) கோபிசெட்டி நாராயணசாமிநாயுடுகாரு.
(*b* யைச்சேர்ந்த எஸ்டேட்டின் ரிசீவர்)
அப்பீல் வாதி (பிரதிவாதி).

(*d*) ராஜாகாவலி அருணாசல ராவ்பகதூர்.
(அப்பீல் பிரதிவாதி) வாதி.

கேசின் விவரம்:—ராஜாகாவலி அருணாசல ராவ் பகதூரும் அவருடைய காலஞ்சென்ற சகோதரரும், தங்களுக்குச் சொந்தமான ரெட்டிருடம் ஜமீன்தாரியின் ஓர் பாகமாகிய ரெப்புடி என்னும் கிராமத்தை நிடுவோல் எஸ்டேட்டின் ஜமீன்தாரிணியாகிய காலஞ்சென்ற பாப்பம்மராவ் அவர்களுக்கு விற்றுவிட்டார்கள். விற்றவர்கள் கிரயசாசனமும் எழுதி கிரமப்படி ரிஜிஸ்டர் செய்துகொடுத்து ஷை கிராமத்தையும் நிடுவோல் ஜமீன்தாரிணி வசம் ஒப்புவித்துவிட்டார்கள். கிரயசாசனத்தில் எழுதப்பட்டிருந்த முக்கிய ஷரத்துக்கள் (1) கிரயசாசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் ராஜாவின் கடன்களை ஜமீன்தாரின் கிரயத்தொகையிலிருந்து கொடுத்துவிட்டு மீதப்பட்டதொகையை ராஜாவிற்குக் கொடுக்கவேண்டும். (2) இந்த கிராமத்தை அயன் ஜமீன்தாரியிலிருந்து பிரிக்கும்படி ஏற்படும் பேஸ்குஷ் (கிஸ்தியை) ஜமீன்தாரிணி கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்துவரவேண்டுமே யொழிய கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தி முதலியவைகளுக்கு ராஜா எந்த விதத்திலும் பாத்தியப்பட்டவரல்ல. (3) இந்த கிராமத்தை அயன் ஜமீன்தாரியாயிருந்து பிரிக்கும் விஷயத்திலும், ஜமீன்தாரிணிபேரில் ரிஜிஸ்டர் செய்து வைக்கும் விஷயத்திலும், இந்த கிராமத்திற்குப் பிரத்தியேகமாகத் தீர்வை விதிக்கும்படி செய்யும் விஷயத்திலும் என்ன என்ன காரியங்கள் அவசியமாகச்செய்யப்படவேண்டுமென்று ஜமீன்தாரிணி கேட்டுக்கொள்ளுகிறாரோ அவைகளை ராஜா செய்யவேண்டும். இவ்விதமாக எழுதப்பட்டிருந்தது. ஆகையால் ஜமீன்தாரிணி கிரயத்தொகையை ராஜாவிற்குக் கொடுக்காமல் தாமே வைத்துக்கொண்டார். இதன்பிறகு ராஜாவும் ஜமீன்

தாரிணியும் சேர்ந்து ஷை ரெப்புடி என்னும் கிராமத்தை அயன் ஜமீனிலிருந்து பிரித்து இதை ஜெமீன்தாரிணியின்பேரில் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்றும் அதற்கு பிரத்தியேகமாகத் தீர்வை விதிக்கவேண்டுமென்றும் அந்தத் தீர்வை இன்னது என்று தெரியப்படுத்தவேண்டுமென்றும் கலெக்டருக்கு மனு செய்துகொண்டார்கள்.

இப்படி ராஜாவும் ஜெமின்தாரிணியும் சேர்ந்து கலெக்டருக்கு எழுதிக்கொண்ட மனுவிற்கு ஷை கிராமம் ராஜாவின்பேரிலும் ராஜாவின் இறந்துபோன சகோதரன் பேரிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதுமன்றி சந்திரமௌலிராவ் என்பவர் பேரிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஆகையால் நிடுவோல் ஜமீன்தாரிணியின்பேரில் ரிஜிஸ்டர் செய்யப்படமாட்டாதென்றும் அப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமானால், ஷை சந்திரமௌலி ராவின் சொத்தை விற்பதற்கு ராஜாவிற்கும் அவருடைய சகோதரருக்கும் அதிகாரமிருக்கிறதென்று காண்பிக்கக்கூடிய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவு ஏதேனுமிருந்து அதைத் தமக்கு அனுப்பினால் தாம் இந்த கிராமத்தை நிடுவோல் ஜமீன்தாரிணியின்பேரில் ரிஜிஸ்டர்செய்யமுடியுமென்று கலெக்டர் நிடுவோல் ஜெமீன்தாரிணிக்கு 1893ஆு ஏப்ரல்மீ 20உ பதில் எழுதினார்.

இப்படி கலெக்டரிடமிருந்து வந்திருக்கும் பதில் ராஜா வகையறுவுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இதன்பிறகு பிரஸ்தாப கிராமத்தை அயன் ஜமீனிலிருந்து பிரிக்கும் விஷயத்தைக்குறித்து விற்றவர்களுக்கும் வாங்கினவருக்கும் பேச்சு நடந்துவந்தது. இப்படி நடந்துவரும் தறுவாயில் விற்றவர்களும் வாங்கினவர்களும் தத்தம் தரப்பிற்குத் தங்கள் மனுஷாளை நியமித்து ஷை கிரயத்தொகையைப்பற்றி 1898-ம்ஆு ஜூன்மீ 1உ கணக்குவழக்குத் தீர்த்துக்கொண்டார்கள்.

பிரஸ்தாப ரெப்புடி கிராமம் அயன் ஜமீனிலிருந்து பிரிக்கப்படாமலிருந்தபடியால் நிடுவோல் ஜமீன்தாரிணி தாம் ஜீவதசையிலுள்ள பரியந்தமும், காலஞ்சென்றபின் வார்சுகளும் ஷை கிராமத்திற்குரிய பேஸ்குஷை (கிஸ்தியை) கவர்ன்மெண்டிற்குச் செலுத்தவில்லை. ஷை கிராமத்தை விற்ற ராஜா செலுத்திவந்தார். ஆகையால் ராஜா, கிரயத்தொகையில் ரூ. 4037-ம் கிரயத் தேதிமுதல் அதாவது 1302-ம் பசலிமுதல் கவர்ன்மெண்டாருக்கு ஷை கிராமத்திற்காகச் செலுத்திவந்த பேஸ்குஷ் தொகைக்கும் அதன் வட்டிக்கும் ரூ. 2962-ம் தமக்குக்கிடைக்கவேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

தீர்ப்பு:—கிரயத்தொகைக்கும் 1302-ம் பசலிக்கும் ரூ. 1007-ம் அதன் வட்டியும், பேஸ்குஷ் பாபத்தில் 1305-ம் பசலிமுதல் கூடுதலான தொகைக்கும் பிரதிவாதியின்பேரில் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். 103, 104-ம் பசலிகளுக்கு பேஸ்குஷ் செலுத்தப்பட்ட தேதிமுதல் பிரஸ்தாப வியாஜ்ஜியத் தேதிவரையில் கணக்கு செய்தால் 6-வருஷங்களுக்கு மேலாகிறபடியால் காலாவதி தோஷமுண்டாய் விட்டதென்று சொல்லி அவைகளுக்கு டிக்கிரி கொடுக்கவில்லை.

ஆகவே, வாதி, ஜில்லாக் கோர்ட்டார் காலாவதி தோஷமுண்டாய் விட்டதென்று விட்டுவிட்ட பேஸ்குஷ் தொகைகள் கிடைக்கவேண்டுமென்று ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

பிரதிவாதி, கீழ்க்கோர்ட்டார் 1305-ம் பசலிமுதல் கூடுதலான பேஸ்குஷிற்கு கொடுத்த டிக்கிரிக்கு விரோதமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஹைகோர்ட்டார் இந்த இரண்டு அப்பீல்களையும் சேர்த்து விசாரணை செய்தார்கள்.

வாதியின் கக்ஷி:—வாதி பிரதிவாதிகள் 1898ஆு ஜூன்மீ கணக்கு வழக்குகள் தீர்த்து வாதிக்குப் பிரதிவாதியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையைப் பாக்கிகட்டி ஒரு ஆதரவு (எக்சிபிட் B) ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையில் 1303, 1304-ம் பசலிகளுக்கு வாதி கொடுத்த பேஸ்குஷ் தொகையும் சேர்ந்திருக்கின்றது. ஆதலால் அந்த ஆதரவு பிறந்த காலமுதல் வியாஜ்ஜியத்தேதிவரையும் கணக்கிட்டால் ஷை 1303, 1304-ம் பசலிக்குக்கொடுத்த தொகை காலாவதி தோஷத்திற்குள்ளாகவில்லை என்றும் ஆகையால் ஷை பசலிகளுக்குச்செலுத்தப்பட்ட தொகையும் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றும் கக்ஷி சொன்னார்.

பிரதிவாதியின் கக்ஷி:—கிரயசாசனப்படி கிராமம் அயன் ஜமீனிலிருந்து பிரிக்கப்பட்டபின் பிரதிவாதி பேஸ்குஷ் கட்டிவரக் கடமைப்பட்டவரே தவிர அதற்கு முந்தியல்ல; கிராமம் இன்னும் பிரிக்கப்படவில்லை. ஆகையால் வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவர வியாஜ்ஜிய மூலம் கிடையாது. வியாஜ்ஜியமூலம் உண்டாவதற்கு முந்தி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

லாயர்கள்:—வாதிக்கு மெஸர்ஸ் V. கிருஷ்ணசாமி அய்யரும், K. சுப்பிரமணியசாஸ்திரியாரும்; பிரதிவாதிக்கு மெஸர்ஸ். P. R. சுந்தர அய்யரும், P. நாகபூஷணமும்.

தீர்ப்பு:—இந்த இரண்டு அபீல்களிலும் ஆலோசனை செய்யப்படவேண்டிய விஷயங்கள் இரண்டு; ஒன்று என்னவென்றால், இந்த வியாஜ்ஜியம் வியாஜ்ஜிய மூலம் உண்டாவதற்கு முந்தி கொண்டுவரப் பட்டிருக்கிறதா? இரண்டாவது என்னவென்றால், 1303, 1304-ம் பசலிகளுக்கு வாதி கொடுத்திருக்கும் பேஸ்குஷ் தொகையைப் பெறுவதற்காகக்கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறதா அல்லவா? முதல் சங்கையை அதாவது இந்த வியாஜ்ஜியம் காலத்திற்கு முந்தி கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதைக்குறித்து யோசித்துப்பார்ப்போம்.

பிரதி வாதியின் வக்கீலாகிய மிஸ்டர் P. R. சுந்தர அய்யர், ரெப்புடி கிராமத்திற்குப் பிரத்தியேகமான தீர்வை இவ்வளவு என்று ரெவினியூ அதிகாரிகள் விதிக்கும்பரியந்தம் வாதி தாம் பேஸ்குஷிற்காகச் செலுத்திவந்த தொகையைப் பிரதிவாதியிடமிருந்து கேட்கக் கிரயசாசனப்படி வாதிக்குப் பாத்தியம் கிடையாது என்றுவாதிக்கிறார். ஆனால் நாம் இதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஒரு சொத்தை விற்றவனும் வாங்கினவனும் வேறே ஏதேனும் ஏற்பாடு செய்துகொண்டாலொழிய சாதாரணமாய் டிரான்ஸ் ஆப் பிராப்பர்ட்டி ஆகட் 55-வது பிரிவு (5) (a) கிளாசின் (Transfer of Property Act Sec. 55 (5) (a) படிஷை சொத்தின்பேரில்விதிக்கப்பட்டிருக்கும் கவர்ண்மெண்டு தீர்வைகளைச் செலுத்தவேண்டியபொறுப்பு ஷை சொத்தை வாங்கிக்கொண்டவனுடைய பொறுப்பாயிருக்கின்றது. 1302-ம் பசலிக்குச் செலுத்தவேண்டிய பேஸ்குஷிற்கு மட்டிலும் வாதி பிரதிவாதிகள் பிரத்தியேகமான ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அதாவது என்னவென்றால், ஷை கிராமத்திலிருந்து ஷை பசலிக்குக் கிடைக்கும் வருமானத்திலிருந்து வாதி பேஸ்குஷ் செலுத்திவிட்டு பாக்கிக்குப் பிரதிவாதிக்குக் கணக்குக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்; இதர பசலிகளுக்கும் செலுத்தவேண்டிய பேஸ்குஷ்களைப்பற்றி வாதி பிரதிவாதிகள் யாதேனும் பிரத்தியேகமான ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகக் கிரயசாசனத்தில் தெரியவில்லை; கிரயசாசனத்தில், "அயன்ஜமீனிலிருந்துகிராமத்தைப் பிரித்தபடி ஏற்படும் பேஸ்குஷைப் பிரதிவாதி கவர்ன்மெண்டாருக்குச் செலுத்திவரவேண்டுமென்றும் வாதி செலுத்தக்கடமைப்பட்டவரல்லவென்றும்" கிரயசாசனத்தில் ஒரு தடவைக்குமேல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இதன் சரியான தாத்பரியம் என்னவென்றால், சகஜமாய் கிரயசாசனத்தில் சொல்லப்படுவதுபோல் ஷை கிராமத்தை வாங்கினவர் (பிரதிவாதி) 1303-ம் பசலி முதல் கவர்ன்மெண்டு பேஸ்குஷைச் செலுத்தி வரவேண்டுமென்பதே. கிராமத்தையும் கிராமத்தில் வரும் வருமானங்களையும் பிரதிவாதி அனுபவித்து வரும்போது அவர் கவர்ன்மெண்டுக்குப் பேஸ்குஷ் செலுத்தவேண்டிய பொறுப்பை நிபந்தனைக்குட்பட்ட பொறுப்பாய்ச்செய்வதற்குப்போதுமான காரணமில்லை; அப்படி ஒருக்கால் கவர்ன்மெண்டிற்குப் பேஸ்குஷ் செலுத்தும் விஷயத்தைக் குறித்து வேறே ஏதேனும் வாதி பிரதிவாதிகள் ஏற்பாடு செய்துகொள்ளுவதாக எண்ணம் கொண்டிருந்தால் அது கிரயசாசனத்தில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கும். ஆகையால் டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட்டின் பிரகாரம் சொத்தை வாங்கிக்கொண்டவன் சர்க்கார் தீர்வையைச் செலுத்தவேண்டுமென்று கூறுவதைத்தான் இந்தக் கிரயசாசனத்தில் வாதி பிரதிவாதிகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்; கிரயம் செய்யப்பட்ட சொத்து வாங்கினவனிடம் போகும்போதே சர்க்கார் தீர்வையைச் செலுத்தும் பொறுப்பும் அச்சொத்துடன் விற்றவனிடமிருந்து வாங்கினவனிடம் போய்விடுகிறது. டின்ஹாம் V. பிராட்போர்ட் (Dinham V. Bradford L R. Cal App 519)ல், வாதிபிரதி வாதிகள்செய்துகொண்டிருக்கிறஒப்பந்தத்தின்முக்கியபாகமாயிராத ஒருஷரத்தை அவர்களே தாங்கள் நினைத்தவாறு ஒழுங்குபடுத்திக்கொள்ளக்கூடாமற் போய்விட்டால் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க எது நியாயமாயும் தகுந்தபடியும் செய்யப்படவேண்டுமோ அதைக்கோர்ட்டார் செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள்; அதுபோல இந்தக்கேசிலும் ரெப்புடி கிராமத்திற்காகச் செலுத்தவேண்டிய பேஸ்குஷ் இவ்வளவு என்பதைக்குறித்து கக்ஷிக்காரர்கள் தாங்களே ஒத்து முடிவு செய்துகொள்ளாவிட்டால் ரெவினியூ அதிகாரிகள் ரெப்புடி கிராமத்திற்குத்தீர்வை இவ்வளவு என்று நிர்ணயிப்பதை அனுசரித்து கோர்ட்டாரே இவ்விஷயத்தில் வாதி பிரதிவாதிகளுக்குள்ள தகராறைத் தீர்த்து தீர்வை நிர்ணயித்துவிடலாம்; ஆனால் ரெவினியூ அதிகாரிகளால் தீர்வை நிர்ணயிக்கப்பட்டபின்புதான் வாதி தாம் கொடுத்து வந்த பேஸ்குஷ் கேட்கப் பாத்தியதையுடையவர் என்று வாதி பிரதிவாதிகள் யாதொரு ஏற்பாடும் செய்துகொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில், 1898-ம் வருஷத்தில் வாதிபிரதிவாதிகள் கணக்கு வழக்கு தீர்த்துக்கொண்டு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆதரவில் வாதி அதுவரையில் ரெப்புடி கிராமத்திற்காகக் கொடுத்துவந்த பேஸ்குஷ் தொகையையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ரெப்புடிகிராமத்தை அயன் ஜமீனிலிருந்து ரெவினியூ அதிகாரிகள் பிரிக்கும்படியாகச் செய்வதும் அதற்கு அவர்கள் பிரத்தியேகமான தீர்வை விதிக்கும்படிச் செய்வதும் ஆகிய இந்தக் கடமைகள் யாருடையது என்கிற கேள்வி இந்தக் கேசைத் தீர்மானிப்பதில் ஆலோசனை செய்யப்படவேண்டியது அனாவசியமென்று அபிப்பிராயப்படுகிறோம். அப்படியே அந்தக்கடமைகள் வாதியுடையதாயிருந்தாலும், வாதி அந்தக் கடமைகளைச் செய்யத்தவறிப் போனதற்காகப் பிரதிவாதி செய்யக்கூடியதெல்லாம் என்னவென்றால், அவர்பேரில் நஷ்டதாவா கொண்டுவரலாம். அப்படி இந்த வியாஜ்ஜியத்தில் வாதி நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பிரதிவாதி கேட்கவில்லை. ஆகையால் அதைக்குறித்து இவ்விடத்தில் ஆலோசனைசெய்வது அனாவசியம். இந்த வியாஜ்ஜியம் காலத்திற்கு முந்தி கொண்டுவரப்படவில்லை. ஆகையால் வாதி செய்துகொண்ட வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூலம் உண்டாய்விட்டது. 23-ம் ந. அப்பீலை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

இதன்பிறகு, 1303, 1304-ம் பசலிகளுக்கு வாதி செலுத்திய பேஸ்குஷ் தொகையைப் பெறும்பொருட்டு கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறதா என்று யோசிப்போம். "ஷை தொகைகள் செலுத்தப்பட்ட ஆறுவருஷ காலங்களுக்குப்பிறகு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் லிமிட்டேஷன் ஆக்ட்டின் பிரகாரம் இந்த வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறதென்று சொல்லவேண்டும். இருந்தபோதிலும் வாதி பிரதிவாதிகள் 1898-ம் வருஷம் கணக்கு வழக்கு தீர்த்துக்கொண்டு, செய்துகொண்ட ஆதரவில் (எக்சிபிட் B.) வாதி செலுத்திவந்த பேஸ்குஷ் தொகைகளைப்பிரதிவாதிகள் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இந்த ஆதரவு, கடனை ஒப்புக்கொண்ட ஆதரவாயிருந்தால், இப்போது வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாகமாட்டாது. ஆனால் இந்த ஆதரவில்" காவலியார் (விற்றவர்கள்) ரெப்புடி கிராமத்தை அயன் ஜமீனிலிருந்து பிரித்து சர்க்கார் கணக்குகளில்ஜமீன்தார் (வாங்கினவர்) பெயர் ரிஜிஸ்டர் செய்யப்படும்படியாகச் செய்யவேண்டும். வேளாங்கிவாருவின் பந்தகப்பத்திரத்தைக்கொண்டுவந்து கொடுக்கவேண்டும். இந்த இரண்டு ஷரத்துக்களையும் காவலியார் நிறைவேற்றிவைத்துவிட்டால் இப்போது கணக்கு வழக்கு பார்த்து தீர்த்துக் கொண்டபடி சம்மதிக்கிறோம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆதரவில் சொல்லப்பட்டிருக்கிறபடி வாதி ரெப்புடி கிராமத்தை கவர்ன்மெண்டார் பிரிக்கும்படி செய்யவில்லை. ஆகையால் இந்த ஆதரவைப் பிரதிவாதிகள், கடனை ஒப்புக்கொண்ட ஆதரவாக நினைப்பதற்கு வாதிக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. மனிராம் V. செத்ருப்சண்ட் (Maniram V. Sethrupchand I. L. R. 33 Cal. 1047) ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி இந்த ஆதரவு, கடனை ஒப்புக்கொண்ட ஆதரவாக எண்ணப்படமாட்டாது. ஆகையால் வாதி 1303, 1304-பசலிகளுக்கு வாதி செலுத்திய பேஸ்குஷ் தொகையைப் பெறுவதற்குக் கொண்டுவந்த வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறது. ஆகையால் 22-ம் ந. அப்பீலையும் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.—இ. லா. ரி. 29 சென். 519. (I. L. R. 29. Mad. 519).

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

மாணிக்கவாசகதேசிகர் என்கிற ஞானசம்பந்த பண்டாரசந்நிதி—இரண்டாவது பிரதிவாதி —(அப்பீல் வாதி).

பாலகோபாலகிருஷ்ணசெட்டி அப்பீல் பிரதிவாதி —(வாதி).

கேசின் விவரம் :—வாதி, தர்மபுர ஆதீனத்திற்குச் சில சாமான்களை சப்பளை செய்ததாகவும், அவைகளின் கிரயத்திற்காக ஷை ஆதீனத்தின் பண்டாரசந்நிதி வாதிக்கு ஒரு பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்ததாகவும், ஷை பண்டாரசந்நிதி ஷை பிராமிசரிநோட்டின் தொகையைச் செலுத்தாததால் பண்டாரசந்நிதியின்பேரில் கும்பகோணம் சப் கோர்ட்டில் தாவாசெய்து ஷை "ஆதீன மட ஐவேஜியிலிருந்து பண்டாரசந்நிதி தமக்கு ஷை பிராமிசரிநோட்டின் பணத்தைச் செலுத்தும்படியாக" கோர்ட்டார் டிக்கிரி கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். இந்த வியாஜ்ஜியம் விசாரணையிலிருக்கிறபோது வாதி பிரதிவாதிகள் சமாதானம் செய்துகொண்டார்கள். சமாதானம் செய்துகொண்டபடி கோர்ட்டாரும் சமாதான டிக்கிரி கொடுத்தார்கள். இந்த சமாதான டிக்கிரியில் மடச்சொத்துக்களின்பேரில் வாதி டிக்கிரியை நிறைவேற்றிக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருந்தது. சிலகாலம் சென்று, பிரதிவாதி தம்முடைய மடாதிபதிஸ்தானத்தை மாணிக்கவாசகதேசிகர் என்கிற ஞானசம்பந்ததேசிகர் என்பவருக்குக் கொடுத்துவிட்டுத்தாம் ஷை ஸ்தானத்திலிருந்து விலகிக்கொண்டார். வாதி, இந்த மாணிக்கவாசகதேசிகரை இரண்டாவது பிரதிவாதியாகச்சேர்த்து மடத்துச் சொத்துக்களை ஜப்திசெய்து ஏலத்திற்குக் கொண்டுவரும்படி பாக டிக்கிரியை நிறைவேற்ற மனுகொடுத்தார்.

இரண்டாவது பிரதிவாதி, மடச் சொத்துக்களின் பேரில் டிக்கிரி நிறைவேற்றப்படக் கூடாதென்று ஆக்ஷேப மனு தாக்கல்செய்தார்.

சப்கோர்ட்டார் தீர்ப்பு:—V. வித்தியபூர்ன தீர்த்தசாமி V. வித்தியநிதி தீர்த்தசாமி (I. L. R. 27. Mad. 935) என்கிற கேசில் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பை அனுசரித்து, வாதியை மடச் சொத்தின்பேரில் பிரவேசிக்கவிடக்கூடாதென்கிற கருத்துடன் முதல் பிரதிவாதி தம்முடைய மடாதிபதிஸ்தானத்தை இரண்டாவது பிரதிவாதிக்குச் செய்துவைத்திருப்பது நியாயமல்லவென்று சொல்லி மடச் சொத்தின்பேரில் டிக்கிரியை நிறைவேற்றும்படி உத்தரவு செய்தார்கள். இரண்டாவது பிரதிவாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—இ. லா. ரி. 9 சென். 80. (I. L. R. 9 Mad. 80) சொல்லப்பட்டிருக்கும் கேசில் ஒரு மடத்திற்கு டிரஸ்டிஸ்தானத்திலிருப்பவர்பேரில் ஒரு டிக்கிரி ஏற்பட்டிருந்தால், அந்த டிரஸ்டிஸ்தானத்திற்குப்பின்பு வரக்கூடியவர்களையும் அந்த டிக்கிரி கட்டுப்படுத்துமென்றும், அப்படிப் பின்பு வந்த டிரஸ்டி ஏற்கனவே யிருந்த டிரஸ்டியின்பேரில் ஏற்பட்டிருந்த டிக்கிரியை ரத்துசெய்யவேண்டுமானால், தகுந்த காரணங்கள் சொல்லிப் புதிதாய் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் இரண்டாவது பிரதிவாதி நிறைவேற்று நடவடிக்கையை ஆக்ஷேபிக்கக்கூடாது என்றும், டிக்கிரியை ரத்து செய்யத்தகுந்த காரணங்களிருக்குமாகில் புதிதாய் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்றும் தீர்ப்புச் சொன்னார்கள்.

இரண்டாவது பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

இரண்டாவது பிரதிவாதியின் கக்ஷி :—(1) பண்டாரசந்நிதி (முதல் பிரதிவாதி) மட்டிலும் பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்திருக்கிறபடியால், அந்த பிராமிசரிநோட்டின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் பண்டாரசந்நிதி மடத்திற்குப் பிரதிநிதியாகமாட்டார். ஆகையால் டிக்கிரி செலாமணியாகமாட்டாது.

(2) மேலும்பண்டாரசந்நிதி தம்மிஷ்டப்படி ராஜிநாமா செய்துகொண்டிருக்கிறார்.

(3) மடத்துச்சொத்துக்களை டிக்கிரிக்குக்கட்டுப்படும்படியாகச் செய்யவேண்டுமானால் சிஷியர்களையும் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்திருக்கவேண்டும்.

தீர்ப்பு :—ஒரு மடாதிபதியின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியம் அவர் எழுதிக்கொடுத்தவும் அவரைமட்டிலும் கட்டுப்படுத்தக்கூடிய பிராமிசரி நோட்டின்பேரில் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும் அப்போதும் அவர் மடத்திற்குப் பிரதிநிதிஸ்தானத்திலிருக்கிறார். மடத்தின் நன்மையை நாடி வியாஜ்ஜியத்தைச் சமாதானம் செய்துகொண்டால் நலமாயிருக்குமென்றெண்ணி பண்டாரசந்நிதி வியாஜ்ஜியத்தைச் சமாதானம் செய்துகொண்டது நியாயமான காரியம். இந்த வியாஜ்ஜிய

த்தில் மடத்திலிருக்கும் சிஷ்யர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கும்படியான அவ்வளவு பாத்தியதை சிஷ்யர்களுக்கு மடத்தில் கிடையாது. ஆகையால் அப்பீல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இ. லா. ரி. 29-சென். 553 I. L. R. 29-Mad. 553.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்,
மிஸ்டர் ஜட்டிஸ் மூர்.

அருணசலம்செட்டியார்—வாதி (அப்பீல் வாதி).
காதர்ராவுத்தன்—பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி).

வியாஜ்ஜிய சங்கிரகம் :—வாதி நில சுவான்தார், பிரதிவாதி, வாதியின் குடி. பிரதிவாதி, வாதிக்கு 1310 ம் பசலி அதாவது 1901-ம்ஆு 30உ ஜூன்மீ த்துடன் முடியும் வருஷத்திற்குக் கொடுக்கவேண்டிய மேல்வார மாசூலுக்காக ரூ. 25-8-8-க்கு வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு :—1901-ம் ஆு பிப்ரவரிமீ மாசூல் அறுவடையானது; பட்டா 1901-ம் ஆு ஜூன்மீ 28உ கொடுக்கப்பட்டது. வியாஜ்ஜியம் 1904-ம் ஆு ஏப்பிரல்மீ 8உ தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் மாசூல் அறுவடையானவுடன் நில சுவான்தாரின் பங்காகிய மேல்வாரத்தை அப்போதே கணக்குப்பார்த்துக் கொடுக்கிற வழக்கம் என்று ருஜுப்படுகிறது. ஆகையால் மேல்வாரம் இந்தக்கேசில் 1901-ம் ஆு பிப்ரவரிமீ முதல் மேல்வாரம் பாக்கிப்பட்டிருக்கின்றது. பாக்கியில் நிற்கும் மேல்வாரத்தை வசூல்செய்ய லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் 110-வது ஆர்ட்டிகிலின் பிரகாரம் பாக்கிப்பட்ட காலமுதல் மூன்று வருஷத்திற்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டுவரப்படவேண்டும். இந்த வியாஜ்ஜியத்திற்கு அப்படி காலம் கணக்கிட்டால் வியாஜ்ஜியம் மூன்றுவருஷம் சென்றபின்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் வியாஜ்ஜியம் காலாவதிதோஷத்திற்குள்ளாயிருக்கிறதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவுதொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

வாதி 1887-ம்ஆுத்திய 9-வது ஆக்ட் 25-வது பிரிவின்படி ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

வாதியின் கக்ஷி :—(1) மேல்வாரம் பெறுவதற்காக நில சுவான்தார் வியாஜ்ஜியம் கொண்டுவரும்பரியந்தம் மேல்வாரம் பாக்கியிலிருப்பதாக எண்ணப்படக்கூடாது. 1865-ம்ஆுத்திய 8-வது ஆக்ட்டாகிய ரெட்ன்ரிக்கவரி ஆக்ட் 7-வது பிரிவில் நில சுவான்தார் குடிகளுக்குப்பட்டா கொடுக்கும்பரியந்தம் மேல்வாரத்தை நில சுவான்தார் வசூல் செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வாதியின் கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி. 27 சென். 143-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானம் கூறப்பட்டது.

தீர்ப்பு :—இ. லா. ரி. 27 சென். (ரங்கய்ய அப்பாராவ், V. போபாஸ்ரீராமலு)—இந்தக் கேசில் நில சுவான்தாருக்குக் கிடைக்கவேண்டிய மேல்வாரம் இவ்வளவு என்று தெரியாமலிருந்தது. இந்த வியாஜ்ஜியத்திலோ அப்படியல்ல. நில சுவான்தாருக்குக் கிடைக்கவேண்டிய மேல்வாரம் இவ்வளவு என்று மாசூல் அறுவடையானவுடனே தெரிந்துபோய்விட்டது. ஆகையால் மேலே சொல்லப்பட்ட கேசின் தீர்மானம் இந்த வியாஜ்ஜியத்திற்குப் பொருந்தாது. பட்டாக் கொடுப்பதற்கு முந்தி மேல்வாரம் வசூலிக்கக்கூடாதென்பது உண்மைதான். ஆனால் பட்டா கொடுபட்ட தேதிமுதல் மேல்வாரம் பாக்கிப்பட்டிருப்பதாகக் கணக்கு செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணுவதற்கு ரென்ட்ரிக்கவரி ஆக்ட்டிலாகிலும், லிமிட்டேஷன் ஆக்ட்டிலாகிலும், அல்லது மேற்கூறப்பட்ட பிரிவுகவுன்சில் தீர்ப்பிலாகிலும் யாதொரு ஆதாரத்தையும் காணோம். ஆகையால் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிசெய்து ரிவிஷன் மனுவைச்செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்கின்றோம் என்றுதீர்ப்பு சொன்னார்கள். I.L.R. 29 Mad. 533.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஸ்கள்:—சர் ஆர்னல் ஒயிட். சீப் ஜஸ்டிஸ்; மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

தாமஸ்:—(அப்பீல்தார்)—எதிரி.

சக்ரவர்த்தி :—பிரியாதி.

கேசின் விவரம் :—கைதி, ரெங்கைய கவுண்டன் கம்பெனியில் காஷியராகவிருந்தான். இவன் ஒரு 14-ரூ செக்கையும், ஒரு 54-ரூ. செக்கையும் பலபாபத்துகள் சேர்ந்த தொகையாகிய ரூ. 611-11-யும் ஆகிய மூன்று இனங்களையும் நம்பிக்கை மோசம் செய்ததாக இ. பி. கோ. 408-வது பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டான். விசாரணை சமயத்தில் கோர்ட்டார் ரூ. 611-11 அயிட்டத்தை மூன்று இனங்கள் சேர்ந்த 60 ரூபாயை நம்பிக்கை மோசம் செய்திருப்பதாகப் பிரியாதையைச் சீர்திருத்திக்கொண்டு ஆகவே (1) 18 ரூ. செக், (2) 54 ரூ. செக் (3) மூன்று இனங்கள் சேர்ந்த ரூ. 60 ஆகிய இந்த பணங்களை நம்பிக்கை மோசம் செய்ததாகக் குற்றம் சாட்டி விசாரணை செய்து, 60 ரூ. பாபத்தில் குற்றம் ருஜுப்படாததால் பாக்கி இரண்டு குற்றத்திற்கும் குற்ற ஸ்தாபனை செய்து தண்டித்தார்கள்.

எதிரி அப்பீல் செய்து கொண்டான். வாதியின் கக்ஷி:—கி. பு. கோட் 234-வது பிரிவில் ஒரு குற்றவாளியின் பேரில் ஒரே சமயத்தில் 3 குற்றங்களுக்குமேல் குற்றம் சாட்டி விசாரணை செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ரூ. 60-ல் மூன்று இனங்கள் சேர்ந்திருப்பதாலும் இந்த மூன்றினங்கள்சம்பந்தமான குற்றங்களைக் கோர்ட்டார்தனித்தனி விசாரணை செய்து அவைகளுக்காகத் தனித்தனி சாக்ஷி வாக்குமூலங்கள்பெற்றிருக்கிறபடியால் இந்த மூன்று குற்றங்களும் செக்கு சம்பந்தமான இரண்டு குற்றங்களும் ஆகஐந்து குற்றங்களும் கைதிமேல் சாட்டப்பட்டு இந்த 5 குற்றங்களையும் கோர்ட்டார் ஒரே விசாரணையில் விசாரணை செய்து கேசை பைசல் செய்தது கி. பு. கோ. 234-வது பிரிவிற்கும், இ. லா. ரி. 25. சென். 46-ல் சொல்லப்பட்டிருக்கும் பிரிவு கவுன்சில் தீர்ப்பிற்கும் விரோதமாயிருக்கிறபடியாலும் கைதியைச் சட்ட விரோதமான விசாரணை செய்திருப்பதாலும் கைதியை விடுவித்துவிடவேண்டுமென்று எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது.

தீர்ப்பு :—எதிரி தரப்பு வக்கீல் எடுத்துக் கூறிய பிரிவு கவுன்சில் தீர்ப்பு நம்பிக்கை மோசக்குற்றத்தைப் பற்றிப் பேசவில்லை. ஆகையால் அந்தத் தீர்ப்பு இந்தக் கேசிற்குப் பொருந்தாது. மேலும் ஒரே வருஷத்திற்குள் ஒரே பாபத்தில் நம்பிக்கை மோசம் செய்யப்பட்ட பல இனங்களை ஒரு மொத்தத் தொகையாகச்சேர்த்துக் குறிப்பிட்டுக்கொண்டு விசாரிக்கலாமென்று கி. பு. கோ. 222-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் கீழ்க்கோர்ட்டார் ரூ. 611 குற்றபாபத்தில் 15அல்லது 20 இனங்கள் சேர்ந்திருக்கிறதென்று எண்ணி அதை மூன்று இனங்கள் கூடிய 60 ரூ. குற்றமாகச் செய்ததே அனாவசியம் ரூ. 611-ல் எத்தனை அயிட்டங்கள் சேர்ந்திருந்தாலும் அதை ஒரு குற்றமாகப் பாவித்து விசாரணை செய்யலாம் ஆதலால் ரூ. 60-ல் மூன்று அயிட்டங்கள் அடங்கியிருந்த போதிலும் அது நம்பிக்கை மோச சம்பந்தமான குற்றமானபடியால் அது ஒரு குற்றமாகவே பாவிக்கப்படும். மேலும் இந்த ரூ. 60-ல் சேர்ந்திருக்கும் மூன்று குற்றங்களும் 12 மாதங்களுக்குள் நடந்திருக்கின்றன ஆகையால் கீழ்க்கோர்ட்டார் கி. பு. கோ. 234-வது பிரிவின்படி மூன்று குற்றங்களுக்கு மேல்படாமல் செக்கு சம்பந்தமாக இரண்டு குற்றங்களும், ரூ. 60 சம்பந்தமாக ஒரு குற்றமும் ஆக மூன்று குற்றங்களுக்கு மேற்படாமல் குற்றம் சாட்டி விசாரணை செய்ததது சரியான நியாயமென்று சொல்லி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.—I. L.R. 29 Mad., 558.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் S. சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

மஹோபாத்தியாய ரெங்காசாரியார்—வாதி.
(அப்பீல் வாதி).

கும்பகோணம் முனிசிபாலிடி—பிரதிவாதி
(அப்பீல் பிரதிவாதி)

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதிக்குக் கும்பகோணத்தில் ஒரு தோட்டமிருக்கிறது. அதன் ஒரு புறத்தின் எல்லை பிரதிவாதிக்குச் சொந்தமான ரோட். தோட்டம் கீழேயும் ரோடுமேலுமாக அமைந்திருக்கிறது. ரோடில் விழும் ஜலம் தோட்டத்திற்குள்வந்து தோட்டத்தைத் தடாகமாக்கிவிடுகின்றது. ஆதலால் வாதி தம்முடைய தோட்டத்திற்கு ரோட்டிலிருந்து வரும் ஜலத்தைத் தடுக்கும்பொருட்டு தம்முடைய நிலத்திலே ஒரு அணைபோட்டுக்கொண்டார். பிரதிவாதியின் உத்தரவின்பேரில் பிரதிவாதியின் வேலைக்காரர்கள் அந்தஅணையை இடித்துவிட்டார்கள். ஆதலால் பிரதிவாதிகள் 10 ரூ. நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் இனிமேல் எப்போதும் பிரதிவாதி இம்மாதிரி இடிக்காமலிருக்கும்பொருட்டு அவருக்கு சாஸ்வத உத்தரவுகொடுக்கவேண்டுமென்றும் வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

எதிர்வாதம்:—வாதி இன்ஜங்ஷன் (Injunction) உத்தரவு பெறவேண்டுமானால் ஜில்லா முனிசிபாலிடி ஆக்ட் 261 - வது பிரிவின்படி பிரதிவாதிக்கு நோட்டிஸ் கொடுத்திருக்கவேண்டும். அப்படி யாதொரு நோட்டிஸும் கொடுக்கவில்லை. ஆகையால் இன்ஜங்ஷன் உத்தரவு பெறுவதற்காகக் கொண்டுவந்த வியாஜ்ஜியம் செல்லாது; வாதியின் நிலத்தில் ரோடின் ஜலத்தை விடுவதற்குத் தொன்றுதொட்டு வந்த வழக்கத்தால் பிரதிவாதிக்குச் சுதந்தரம் உண்டாயிருக்கிறது.

டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பு:—வாதி, பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அனாவசியம் என்று தீர்மானித்தார்கள். பிரதிவாதி தொன்றுதொட்டுவந்த வழக்கத்தால் தமக்குச் சுதந்தரம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னதை ருஜுப்படுத்தவில்லை. ஆகையால் வாதி பக்கம் செலவு தொகையுடன் தீர்ப்பு சொல்லப்பட்டது என்று சொன்னார்கள்

ஜில்லா கோர்ட்டாரின் தீர்ப்பு :—வாதி, பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியமென்றும்; பிரதிவாதியின் நிலம் வாதியின் நிலத்திற்கு மேலேயிருக்கிறபடியால் ஈஸிமென்ட் ஆக்ட் (Easement Act) 7-வது பிரிவு (i) உதாரணத்தின்படி மேல் நிலத்தில் இயல்பாக உண்டாகும் ஜலத்தைக் கீழ் நிலத்தில் விடுவதற்குப் பிரதிவாதிக்குச் சுதந்தரமிருக்கிறதென்று சொல்லி வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத்தள்ளிவிட்டார்கள்.

வாதி இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அப்பீல்தாருக்கும், P. R. சுந்தரமய்யர் அப்பீல் பிரதிவாதிக்கும் பேசினார்கள்.

வாதி 1903ஆு ஜூலைமீ 27உ அப்பீல் தாக்கல்செய்தார். அப்பீல் விசாரணைக்கு முந்தி, 1905ஆு ஆகஸ்ட்மீ 29உயில், ஜில்லா முனிசிபல் ஆக்ட் 4-B(i)(j) பிரிவின்படி கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்துக் கும்பகோணம் முனிசிபாலிடியை 1906ஆு மார்ச்சுமீ 31உயுடன் முடிவாகும் ஏழு மாதங்கள் வரையில் விலக்கிவைத்துவிட்டார்கள். 7 மாதம் சென்றபிறகு முனிசிபல் கவுன்சில் மறுபடியும் அமைக்கப்பட்டது.

ஆகையால் பிரதிவாதியின் வக்கீல்கள் இந்த அப்பீல் பழைய முனிசிபாலிடிபேரில் கொண்டுவரப்பட்டபடியால் அதை இந்த முனிசிபல் கவுன்சிலின்பேரில் விசாரணை செய்யக்கூடாதென்று சொல்லி ஆக்ஷேபித்தார்கள்.

தீர்ப்பு :—இந்த அப்பீலில் ஆலோசனை செய்யப்படவேண்டியவிஷயங்கள் மூன்று; அவைகளாவன:—

(1) வாதி கொண்டுவந்திருக்கும் அப்பீலுக்கு இப்போது புதிப்பிக்கப்பட்டிருக்கும் முனிஸிபாலிடியைப் பிரதிவாதியாக வைத்துக்கொண்டு அப்பீலை விசாரணை செய்யலாமா ?

(2) வாதி, பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியமா ?

(3) வாதி, பிரதிவாதியின்ரோட்டிற்கு அடுத்தாப்போல் தம்முடைய நிலத்திலேயே ஒரு அணைகட்டிக் கொள்ள பாத்தியமில்லையா ?

முதல் அயிட்டத்தைக்குறித்து யோசிக்கின், லோகல் கவர்ன்மெண்டார் முனிசிபாலிடியை ஏழுமாத காலத்திற்குத் தள்ளிவைத்தார்களே தவிர முனிசிபாலிடியை அடியோடு எடுத்துப்போடவில்லை. முனிசிபல் கவு

ன்சிலர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்த காலத்தில் முனிசிபாலிடி வேறு கவுன்சிலரிடம் ஒப்புவிக்கப்படும் பரியந்தம் லோக்கல் கவர்ன்மெண்டார் வசமிருந்தது. வேறு கவுன்சிலர்கள் நியமிக்கப்பட்டபின் அவர்களிடம் கவர்ன்மெண்டார் முனிசிபாலிடியை ஒப்புவித்துவிட்டார்கள். ஆகையால் கவர்ன்மெண்டாருடைய விளம்பரத்தால் விலக்கப்பட்டு வைத்தவர்கள் முனிசிபல் கவுன்சிலர்களே யொழிய முனிசிபாலிடியல்ல. முனிசிபாலிடி யிருந்துகொண்டேயிருந்தது. ஆகையால் புதிய கவுன்சிலராக நியமனமடைந்திருப்பவர்களை கக்ஷிக்காரர் களாகச் சேர்த்துக்கொண்டு இந்த அப்பீலை விசாரணை செய்யலாம்.—I. L. R. 29 Mad. 539.

இரண்டாவது வாதி பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியமானன்றுயோசிப்போம். ஜில்லா முனிசிபல் ஆக்ட் 261-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நோட்டீஸ் நடந்துபோன காரியங்களுக்கும் நடந்ததாக எண்ணப்படும் காரியங்களுக்கும் பொருந்துமேயொழிய இனிமேல் நடக்கப்போகிற காரியங்களுக்கல்ல. வாதி இனிமேல் பிரதிவாதி அணையை இடிக்கக்கூடாதென்று சாஸ்வத உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறுர். ஆகையால் அதற்கு வாதி நோட்டீஸ் கொடுப்பது அனுவசியம். மூன்றுவது, வாதி தம்முடைய தோட்டத்தில் அணைபோட்டுக்கொள்ள சுதந்தரமிருக்கிறதா இல்லையா என்று யோசிப்போம். ஈஸ்மெண்டு ஆக்ட் 7-வதுபிரிவு (i) உதாரணத்தில் மேல் நிலக்காரன் தன்னுடைய நிலத்தில் உற்பத்தியாகும் ஜலத்தைக் கீழ் நிலத்தில் விடலாமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் கீழ் நிலக்காரன் ஜலம் வந்து தன்னுடைய நிலத்தில் விழுவதால் உண்டாகும் கெடுதலிலிருந்து தன்னுடைய நிலத்தைக்காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு தன்னுடைய சொந்த நிலத்திலேயே தகுந்தபடி சீர்திருத்தம் செய்துகொண்டால் அதை ஆக்ஷேபிக்கமுடியாது. ஆகையால் வாதி தம்முடைய நிலத்தில் தமக்குள்ள கிரமமான பாத்தியதையைப் பிரயோகப்படுத்திக் கட்டிக்கொண்ட அணையை முனிசிபல் கவுன்ஸிலர்கள் வாதியின் நிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசித்து இடித்திருக்கிறுர்கள். இனிமேல் அப்படிச் செய்யக்கூடாதென்று பிரதிவாதிகளுக்கு உத்தரவுசெய்கிறேம். ரூ. 10 நஷ்டத்தையும், வாதியின் கோர்ட்டுச்செலவுகளையும் பிரதிவாதி கொடுக்கும்படியாக உத்தரவு செய்கிறேம்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் S சுப்பிரமணிய அய்யர் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கணபதி அய்யர் வகையரு (18, 5, 4, பிரதிவாதிகள்)
அப்பீல் வாதிகள்.

ஸ்ரீ வேதவியாஸ துளசிங்கபட்டர் வகையரு (1 முதல் 4 பிரதிவாதிகள், 7 to 10, 11 to 13 பிரதிவாதிகள்)
அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—மேலே கூறப்பட்டுள்ளவாதிகளும் 8 முதல் 16 பிரதிவாதிகளும் ஸ்ரீரங்கம் திருக்கோவிலின் பரம்பரை ஸ்தானிகர்கள். அதாவது ஷை கோவிலின் ஸ்தானிகஸ்தானத்தை அவர்களுடைய குடும்பத்தார்களே தலைமுறை தலைமுறையாகவகித்துக்கொண்டுவருகின்றுர்கள். 3 முதல் 7 பிரதிவாதிகள் திருச்சினுப்பள்ளி தாலூக்கா தேவஸ்தான கமிட்டியார். 1, 2, பிரதிவாதிகள் பிரஸ்தாப திருக்கோயிலுக்கு ஏற்கனவேயிருக்கும் டிரஸ்டிகளுடன் கூடவிருந்து மானேஜ்மெண்டு செய்யும்படியாகப் புதிதாய் நியமிக்கப்பட்ட டிரஸ்டிகள். 1817 ம் ஞு சென்னபட்டணம் 7-வது ரெகுலேஷனுல் ரெவினியூ போர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி ரெவினியூ போர்ட்டார் ஸ்ரீரங்கம் கோவிலை மானேஜ்மெண்டு செய்வதற்கு 1842 ம் ஞும் ஒரு ஏற்பாடு செய்தார்கள். அந்த ஏற்பாடு என்னவென்றுல், அந்தக்கோயிலுக்குப்பரம்பரை ஸ்தானிகபாத்தியதையுடை நான்கு குடும்பங்களுக்குள் வருஷம்ஒன்றுக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒரு டிரஸ்ட்டியா யிருக்கவேண்டுமென்றும், இவர் நான்கு ஸ்தானிக குடும்பங்களுக்குப் பிரதிநிதியாயிருந்து மானேஜ்மெண்டுசெய்துவரவேண்டுமென்றும் ஒருவருஷம், சென்றவுடன் மற்ற மூன்று குடும்பங்களில் ஒருவர் ஸ்தானிக பிரதிநிதி டிரஸ்டி ஸ்தானத்தைப் பெறவேண்டுமென்றும் இப்படி வருஷத்திற்கு வருஷம் ஸ்தானிக குடும்பத்திலிருந்து ஒரு டிரஸ்டியும், ஸ்தானிக குடும்பங்களைச் சேராத வேறு இரண்டு டிரஸ்ட்டிகளும் ஆக மூன்று டிரஸ்ட்டிகளும் சேர்ந்து ஷை கோவிலை மானேஜ்மெண்டுசெய்துவரவேண்டுமென்றும் ரெவினியூ போர்ட்டார் ஏற்பாடு செய்தார்கள். ஏற்பாடு செய்தகாலமுதல் ஸ்தானிக குடும்பங்களின் பிரதிநிதி டிரஸ்டி ஒருவரும் வேறே இரண்டு டிரஸ்டிகளும் ஆக மூன்றுபேருமாகச்சேர்ந்து 1899ஞும் வரையில் மானேஜ்மெண்டு செய்துவந்தார்கள்.

இந்தப்பிரகாரம் கோவிலை மானேஜ்மெண்டு செய்துவரும்போது 1899ஞும் டிசம்பர்மீ த்தில் 3 முதல் 7 பிரதிவாதிகளாகிய திருச்சினுப்பள்ளி தாலூக்கா தேவஸ்தான கமிட்டியார் (ஸ்ரீரங்கம் கோவிலும் திருச்சினுப்பள்ளி தேவஸ்தான கமிட்டி அதிகாரத்திற்குட்பட்டது) ஏற்கனவே ஸ்ரீரங்கம் கோவிலுக்கிருக்கும் மூன்று டிரஸ்ட்டிகளுடன் கூடவிருந்து சொற்பகாலத்திற்கு மானேஜ்மெண்டு செய்துவரும்படியாக 1. 2, பிரதிவாதிகளை அடிஷனல் டிரஸ்ட்டிகளாக நியமித்தார்கள். இப்படி இந்த இரண்டு டிரஸ்ட்டிகள் நியமிக்கப்பட்டது சட்ட விரோதமென்றும் கோவிலுக்குப் பாதகரமான காரியமென்றும் தங்களுடைய பாத்தியதைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொல்லி ஷை நியமனங்களை ரத்துசெய்யும்படி ஸ்ரீரங்கம் டி. மு. கோர்ட்டில் வாதிகள் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்கள்.

டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைச்செலவுதொகையுடன் தள்ளிவிட்டார்கள். ஜில்லாக் கோர்ட்டார் அசல்கோர்ட்டுத் தீர்மானத்தை ரத்துசெய்து வாதிபக்கம் தீர்ப்புசொல்லி செலவு தொகைக்கும் டிக்கிரி கொடுத்தார்கள். ஆகவே 4, 5, 18, பிரதிவாதிகளாகிய தேவஸ்தான கமிட்டி வகையரு ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள் :—அப்பீல் தாரர்களுக்காக மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் P. R. சுந்தரமய்யரும் N. ராஜகோபாலாசாரியாரும் ஆஜராளுர்கள்.

அப்பீல்வாதிகளின் கக்ஷி :—(1) டிரஸ்ட்டிஸ்தானத் த ஸ்தானிக குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பாரம் ரியமாக வகித்துக்கொண்டு வரும்படியாக ஏற்பாடு செ வதற்கு ரெவனியூ போர்டாருக்கு அதிகாரமில்லை.) 1817ம் ஞு சென்னபட்டணம் 7-வது ரெகுலே ன் 2-வது பிரிவின்படி தேவஸ்தானங்களை விசாரணை சய்யும் பொறுப்பு ரெவினியூ போர்டாரிடம் ஒப்பு க்கப்பட்டிருக்கிறது. ரெவினியூ போர்டார் தாங்கள் சய்யவேண்டிய கடமைகளின் ஒரு பாகத்தைப் பரம் ரை டிரஸ்டிகள் ஏற்படுத்தி இவர்களிடம் ஒப்புவித்தி ப்பது ஷை ரெகுலேஷன் இரண்டாவது பிரிவிற்கு ரோதமான செய்கை (3) எப்போது ரெவினியூ போ ாருக்கு தேவஸ்தான மானேஜ்மெண்டு விஷயமாக ரு ஏற்பாடு செய்ய அதிகாரமிருக்கிறதோ அந்த ஏற் ாட்டை ரத்து செய்யவும் அதிகாரமிருக்கின்றது. 363ம் ஞுத்து 20-வது ஆக்டின்படி தேவஸ்தான ானேஜ்மெண்டின் விஷயமாக ரெவினியூ போர்டாருக் ள்ள அதிகாரம் தேவஸ்தான கமிட்டியாருக்குச் சென் விட்டது. ஆதலால் தேவஸ்தான கமிட்டியார் தேவஸ் ானங்களின் மானேஜ்மெண்டு விஷயமாக அனுஷ்டா த்திலிருந்துவரும் ஏற்பாடுகளைத் தங்கள் இஷ்டப்படி ாற்றிக்கொள்ளலாம். ஆகையால் அவர்கள் ஸ்ரீரங்கம் காவிலுக்கு அடிஷனல் டிரஸ்ட்டிகள் நியமித்திருப் தை ஆக்ஷேபிக்கக்கூடாது.

தீர்ப்பு:—1817ம் ஞுத்திய சென்னபட்டணம் -வது ரெகுலேஷன் பிரகாரம் தேவஸ்தானங்களை மா னஜ்மெண்டு செய்துவரும் விஷயத்திலாவது அல்லது மற்பார்வை செய்துவரும் விஷயத்திலாவது எந்தக் ாரியம் சரியான தென்றும் நியாயமான தென்றும் ரெ னியூ போர்டாருக்குத்தோற்றுகின்றதோ அதைச்செ யலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தானிகா ல்லாத தேவஸ்தானங்களைமட்டிலும் ரெவினியூபோர் ார் விசாரணைசெய்துவரவேண்டுமென்றுவது, அல்லது தானிகாள் உடைய கோவிலையும் விசாரணை செய்து ரலாமென்றுவது ரெவினியூ போர்டாரின் அதிகாரத் ற்கு ஒரு வரம்பு கட்டி ஷை ரெகுலேஷனில் கூறப்பட ல்லை. ஆகையால் ஸ்தானிகாள் உள்ள தேவஸ்தானங் ளையும் இல்லாத தேவஸ்தானங்களையும் விசாரணைசெ துவருதற்கு ரெவினியூ போர்டாருக்கு அதிகாரமிருக் ன்றது. ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் அத் தேவ தானத்திற்கு அவர்களுக்கு நியாயமென்றும் சரியா தென்றும் தோற்றினகாரியங்களைச் செய்வதற்கு ஷை ரகுலேஷன் 13-வது பிரிவில் அவர்களுக்கு அதிகாரம் காடுக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீரங்கம் தேவஸ்தானத் த மானேஜ்மெண்டு செய்து வருவதில் ஷை தேவஸ் ான ஸ்தானிக குடும்பத்தாரும் பாரம்பரியமாக டிரஸ் களாயிருந்து வரவேண்டியது அவசியமென்றும் ரெ னியூ போர்டார் அபிப்பிராயப்பட்டுச் செய்தால் அவர் ள் அப்படிச் செய்யக்கூடா தென்று ஆக்ஷேபிக்கமுடி ாது. ஆராதனை அர்ச்சனை முதலிய விஷயங்களை மா னஜ்மெண்டு செய்வதற்காக ஸ்தானிகாள் டிரஸ்ட்டிக ாயிருந்தால் நலமாயிருக்குமென்று ரெவினியூ போர் ார் அபிப்பிராயப்பட்டு செய்திருக்கலாம். ஸ்தானிக டும்பங்களில் ஒரு பரம்பரை டிரஸ்ட்டி ஏற்படுத்தி வர் மற்ற இதர இரண்டு டிரஸ்ட்டிகளுடன் கலந்து மானேஜ்மெண்டு செய்துவரும்படியாக ரெவினியூ போர்டார் செய்திருக்கும் ஏற்பாடும் கோவிலின் நன்மையை நாடிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் பரம்பரை டிரஸ்ட்டி நியமித்த விஷயத்தில் ரெவினியூ போர்டார் தங்களுடைய அதிகாரத்தை மீறிநடக்கவில்லை என்பது வெங்கடேச நாயுடு V. ஷிரிவன் சடகோபாஸ்ரீ சடகோபசாமி (7 M. H. C. R, 77). கேசில் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானத்தால் நன்கு விளங்குகின்றது. டிரஸ்டிகளில் ஒருவரைப் பரம்பரை டிரஸ்ட்டியாகச் செய்துவிட்டமையால், சட்டப்பிரகாரம் ரெவினியூ போர்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை ரெவினியூ போர்டார் பரம்பரை டிரஸ்டிக்கு விட்டுவிட்டார்கள் என்று அப்பீல் வாதிகள் சொல்லும் கக்ஷியும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல; ரெவினியூ போர்டார் செய்த ஏற்பாடு ஒழுங்காய் நடைபெற்று வரும்போது அதை மாற்றுவதும் கூடாத காரியம். அவர்கள் செய்த ஏற்பாடு யாதொரு புகாருக்கும் உட்படாமல் நடைபெற்று வரும்போது அதை மாற்றவும் கூடாது. ஷேக்தாவத் சாகிப்பா V. உசேன் சாகிப்பா (I. L. R. 17. சென். 21) கேசில் பரம்பரை டிரஸ்டிகளிருக்கும்போது அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு காரணத்தைக் கொண்டே தேவஸ்தானக் கமிட்டியார் அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கக்கூடாதென்று சொல்லிவிடலாம். இந்தக்காரணமின்றியும் அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கப்படக்கூடாதென்றும் சொல்லலாம். டிரஸ்டிகள் அலக்ஷியத்துடன் சீர்கேடாக மானேஜ்மெண்டு செய்துவந்தால் அப்படிப்பட்ட டிரஸ்டிகளை விலக்கிவிட்டுப் புதிய டிரஸ்ட்டிகள் நியமிக்கவேண்டுமேயொழிய அடிஷனல் டிரஸ்டிகளை நியமிக்கக்கூடாது. மேலும் தேவஸ்தான கமிட்டியார் செய்திருக்கும் நியமனங்களுக்கு ஒரு முக்கியமான ஆக்ஷேபம் என்னவென்றுல், நியமிக்கப்பட்டிருக்கும் அடிஷனல் டிரஸ்டிகள் சொற்பகாலத்திற்கு டிரஸ்டிகளாயிருப்பவர்கள். சேஷாத்ரி அய்யங்கார் V. நடராஜ அய்யர் (இ. லா. ரி. வு. சென். 179) ல் ஜட்ஜி மிஸ்டர். ஷெப்பர்ட் (Sheppherd,J.) தேவஸ்தான கமிட்டியாரைச் சொற்பகாலத்திற்கு டிரஸ்ட்டிகளை நியமிக்கும்படி விடுவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை துர்விநியோகப்படுத்தும்படி செய்யும் என்று சொல்லியிருக்கிறுர். 1863ஞு 20-வது ஆக்டில் தேவஸ்தானத்தின் நேரான பரிபாலனம் தர்மகர்த்தா டிரஸ்டிகள் கையிலிருக்கவேண்டு மென்றும் தேவஸ்தான கமிட்டியார் மேற்பார்வை பார்த்து வரவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. சொற்பகாலத்திற்கு நியமிக்கப்படும் தர்மகர்த்தா டிரஸ்டிகள் எப்போதும் தேவஸ்தான கமிட்டியாரின் தயவையும் தாக்ஷணியத்தையும் அபேக்ஷித்தவர்களாயிருப்பார்கள். தேவஸ்தானக் கமிட்டியார், தங்களை தர்மகர்த்தா ஸ்தானத்திலிருந்து விலக்கிவிடுவார்களோ என்று அஞ்சி அவர்கள் இஷ்டப்படி நடக்க விருப்பமுடையவர்களாயிருப்பார்கள். அப்போது தேவஸ்தான மானேஜ்மெண்டும் கமிட்டியாருடைய அதிகாரத்திற் குட்பட்டு சீர்குலைந்து போகக்கூடியதா யிருக்கும்; ஆகையால்சொற்பகாலத்திற்கு தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்படகூடாது.

ஆகவே, ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.—இ. லா. ரி. 29. சென். 534.

ஜட்ஜிகள் :—ஸர். ஆர்னால்ட் ஒயிட், சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்.

கோல வெங்கடநாராயண வாதி (அப்பீல் வாதி).
உப்பள ரத்தினம் பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி).

சிவில் அப்பீல்.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—பிரதிவாதியின் காலஞ்சென்ற தகப்பன், வாதியின் காலஞ்சென்ற தகப்பனுக்கு 1877ம்௵ ஒரு ஆதரவு எழுதிக்கொடுத்திருந்தார். அந்த ஆதரவின் முக்கியமான பாகம் பின்வருமாறு "1877ம்௵ ஜூலைமீ 17௳க்குச்சரியான ஈஸ்வர வருஷம் ஆஷாடசுத்தமீ 7௳ உப்பள ஜகனுதத்திற்கு கொல்லதொரய்யா எழுதிக்கொடுத்த நிபந்தனைக்குட்பட்ட கிரய சாசனம் என்னவென்றால் என்னுடைய அவசரநிமித்தம் தங்களிடமிருந்து கடன் வாங்கிக்கொண்டிருக்கும் தொகையாவது :—1873 ம்௵ ஆகஸ்டுமீ 20௳யுள்ள ஸ்டாம்பு போடப்பட்ட ஆதரவில் காணப்பட்டிருக்கும் முதல் ரூபா 150 ; 11 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1-8-0 மேனிக்குக் கூடுதலான வட்டி ரூ. 24-12, என்னுடைய புத்திரன் விவாகச் செலவிற்காக நான் இன்றையதினம் கடனாக வாங்கிக்கொண்டிருக்கும் ரூ. 225-4-ஆக கூடின இந்த ரூபாய் நானூற்றையும் மாதம் 100-க்கு ரூ. 1-8-0 மேனிக்கு வட்டி சேர்த்து கூடின வட்டியும் முதலையும் 1879-ம்௵ ஜூன்மீ 26௳க்குச் சரியான பிரமாதி௵ ஆஷாடசுத்தமீ 7௳ தங்களுக்குச் செலுத்தி இந்த பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றேன். அப்படி ஷை கண்ட தேதியில் கொடுக்கத்தவறிப்போனால் ஜியோரத்தி கருவுப்பட்டாவில் காணப்பட்டிருக்கும் என்னுடைய புஞ்சை நிலத்தைத்தங்களுக்குக் கொடுத்துவிட்டுத் தங்களிடமிருந்து கடனாகவாங்கிக்கொண்டிருக்கும் தொகையை ஷை நிலத்தின் கிரயத்தொகையாக பாவித்துக்கொள்ளுகின்றேன் ஷை கண்ட கெடுவிற்குள் நான் தங்களுக்குப்பணம் செலுத்திவிடுவேனேயாகில் இந்தப் பத்திரத்தில் செல்லுவைத்துத் தங்களிடமிருந்து பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுவேனேதவிர வேறே எந்த விதமாகவாகிலும் பணத்தைத் தங்களிடம் செலுத்திவிட்டதாகக் கக்ஷி சொல்லமாட்டேன்."

இப்படி ஆதரவு எழுதிக்கொண்ட கக்ஷிக்காரர்கள் இறந்துபோய்விட்டார்கள். கெடுவின் பிரகாரம் பணமும் செலுத்தப்படவில்லை.

பிரஸ்தாப ஆதரவு பெந்தகப்பத்திரம் என்று சொல்லி வாதி தம்முடைய நிலத்தைப் பெந்தகத்திலிருந்து விடுவிக்க டி. மு. கோர்ட்டில் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பு :—வாதியின் தகப்பன் பிரதிவாதியின் தகப்பனுக்கு எழுதிக்கொடுத்த ஆதரவு கிரயசாசனம் என்றும் பந்தகமல்லவென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

ஜில்லாக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டு தீர்மானம் உறுதி செய்யப்பட்டது. வாதி ஹைக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர் வாதி தரப்பிற்கும், ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர், மிஸ்டர் C. வெங்கடசுப்பராமய்யாவும் பிரதிவாதிகள் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 58-வது பிரிவில் கிரய நிபந்தனைக்குட்பட்ட மூன்று விதமான அடமானங்கள் (Mortgage by conditional sale) சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள் அடமானம் வைக்கிறவன் தான் கடன் வாங்கிக்கொண்ட பணத்தைக் கொடுக்கவேண்டிய காலத்தில் கொடுக்கத் தவறிப்போனால், அடமானம் வைக்கப்பட்ட சொத்தை அடமானம் பெற்றுக்கொண்டவன் கிரயம் பெற்ற சொத்தாக எண்ணிக்கொள்ளவேண்டு மென்பது ஒன்று.

ஆகையால் இந்த தாவா ஆதரவுமேற் கூறப்பட்ட பெந்தகத்தைச் சேர்ந்தது. மேலும் தாவா ஆதரவில் "(இன்னார் இன்னாருக்கு எழுதிக்கொடுத்த மொதட்டேக்கிரயம்" என்னவென்றால்), வாதி பிரதிவாதிகள் இந்த ஆதரவை மொதட்டுக்கிரயம் என்று சொல்லியிருக்கிறார்கள். **மொதட்டேக்கிரயம் என்கிற** வார்த்தைக்கு "அடமானம் வைத்துக் கடன்வாங்கியவன் கடனை ஒரு குறிப்பிட்ட தேதியில் கொடுக்கத் தவறிப்போனால் ஷை சொத்தை அடமானம் பெற்றுக்கொண்டவன் கிரயம் பெற்ற பொருளாகவைத்துக் கொள்ளலாமென்று சொல்லி அடமானம் வைப்பது" என்று தாத்பரியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மொதட்டுக் கிரயம் என்கிற வார்த்தையாலேயே இந்த தாவா ஆதரவைப் பெந்தக ஆதரவாக முழுதிலும் நினைக்கக்கூடாது. ஆயினும் தாவா ஆதரவில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களையும் மொதட்டுக்கிரயம் என்று சொல்லப்பட்டிருப்பதையும் கலந்து யோசனைசெய்தால் இந்த ஆதரவு பெந்தக ஆதரவே யொழிய கிரய சாசனமல்லவென்று தோற்றுகின்றது. ஆகையால் தாவா ஆதரவு பந்தகப்பத்திரம் என்று அபிப்பிராயப்படுகிறோம். ரூ. 544 வாதி செலுத்தி இந்தபெந்தகச் சொத்தை நான்குமாத காலத்திற்குள் மீட்டுக்கொள்ளும்படி டிக்கிரி கொடுக்கிறோம். வாதியின் அசல் அப்பீல் கோர்ட்டாரின் செலவுகளைப் பிரதிவாதி கட்டிக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புசொன்னார்கள்.
—I. L. R. 29 Mad. 531.

ஓடிப்போன கைதி அகப்பட்டுக்கொண்டான்.

ஐந்துவருஷ தண்டனை அடைந்து சென்னையிலுள்ள மகாராஜா ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போன இரண்டு கைதிகளில் ஒருவனாகிய சின்னமலைக்கவுண்டன் மதுரைஜில்லாவில் சதுரபதிக்குச் சமீபத்திலுள்ள ஒருமலையில் மதுரை ரிஸர்வ் போலீசாரால் அரஸ்ட் செய்யப்பட்டு சென்னைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறான்.

NEWS AND NOTES.

பொது வர்த்தமானங்கள்.

அமீர்:—இவர் டிசம்பர் 26௳ செவ்வாய்க்கிழமை யன்று கராச்சிக்குப்போய் அவ்விடமிருந்து புதன் கிழமையன்று லாகூருக்குப் புறப்பட்டார்.

***

காஞட்டுக் கோமகர்:— காஞட்டுக்கோமனும் கோமகளும் இம்மாதம் 7 தேதி கல்கத்தா நகரம் வந்து சேருகிறார்கள்.

***

லார்டு கிச்சனர்:—இந்தியா சேனாதிபதி லார்டு கிச்சனர் வேட்டையாடும்பொருட்டு ஹைதராபாக்கம் செல்கிறார்.

***

பிள்ளை வளர்ப்பு நிதி:—லேடிமிண்டோவால் ஆரம்பஞ் செய்யப்பட்டு, பணஞ் சேகரித்துவரும் இந்த நிதிக்கு நாளது வரையில் 1, 70, 000 ரூபாய் வரையில் வசூலாயிருக்கிறதென வறிகிறோம்.

***

புல்லர் பெருமான் ஞாபகச்சின்னம் இதற்கிதுவரையில் ரூபாய் 5000, வரையில் சேர்ந்திருக்கிறது.

***

பிரஞ்சு கவர்னர்:—மார்கழிமீ 1௳ காலை தமது பரிவார சகிதம் இங்கு வந்திறங்கி இண்டியிலிருந்து வருகிறார்.

***

மிஸ்டர் S.M. பிரேசர்:—மைசூர்ரெசிடெண்ட் ஆனரபில் மிஸ்டர் S. M. பிரேசர் இம்மாதம் 14-தேதி மைசூரைவிட்டுப் புறப்பட்டு தமது ஜென்மதேசம் போகிறார்.

***

தீவிபத்து:—ஹௌராவில் டிசம்பர் 29௳ புதன்கிழமை தினம் ஒரு சணல் கிடங்கில் அக்கினிபகவான் நுழைந்து சுமார் ஒன்றரை லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள சணல்களைத் தனக்கிரையாக்கிக் கொண்டார்.

***

கல்கத்தா பொருட்காட்சியானது இன்றுடன் முடிவு பெறுகிறது. இந்தப்பொருட்காட்சியில்பரிசுகள் அடையவேண்டியவர்களுக்கு தர்பாங்காமகாராஜாவால் பரிசுகளளிக்கப்படும்.

***

அதிசயிக்கத்தக்க ஓர் தென்னை மரம்:—திருவாங்கூர் இராச்சியம் டயிலோனைச்சேர்ந்த நல்லெட்டா கிராமத்தில் பத்து தனிக்கிளைகளடங்கிய ஓர்தென்னைமரமிருக்கின்றதாம். அனேக ஜனங்கள் தினமும் அதைப் போய்ப் பார்த்து வருகிறார்களெனத் தெரியவருகிறது.

***

புலியைக்கொன்றது:—வங்காளத்தைச் சேர்ந்த போக்ராவில், ரங்க்பூர் வாசியாகிய மஹாராஜகுமாரர் கோபால்லால்ராய் என்பவர் எழு அடி எழரை அடி நீளங்களுள்ள இரண்டு புலிகளைச் சுட்டாராம். இதனால் அவ்வூர் ஜனங்களது பீதி தீர்ந்ததெனக் கேட்டு சந்தோஷிக்கிறோம்.

***

பரோடா மகாராஜா:—யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவரும், பிரஜைகளின் கஷ்டத்தைத் தமதெனப் பாவிப்பவருமாகிய மகாராஜ சிங்கபரோடாமகாராஜாவிற்கு வெள்ளிஜூபிலி நடந்தேறப்போகிறது. அதாவது அவர் அரசிற்குவந்து 25 வருடமானது என்பதின் ஞாபகார்த்தமாக "சில்வர் ஜூபிளி" என நடத்தும் ஓர் சுபகாரியம். ஜூபிளியன்று பரோடாவில் அநேக கூட்டங்கள் கூடும். அன்று பலவித அலங்காரங்களால் நகரமெங்கும் அலங்கரித்து மகாராஜாவிற்கு ஆசிகூற ஏற்பாடு செய்து வருகிறார்கள். அவரைப்போன்ற ஓர் பதுமை செய்து (Statue) பரோடாவில் வைக்கவும் ஓர் பிரயத்தினம் நடந்து வருகிறது.

ஒரு பிணம்:—பர்மாவில் ஓர் ஆற்றில் 14 வயதுள்ள ஒரு பர்மன் கன்னிகையின் பிணம் கண்டெடுக்கப்பட்டது. இதே மாதிரியாக 15 நாளைக்குள் இரண்டு பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டனவாம். இதனுடைய விவரம் தெரிந்துகொள்ளக் கூடாத சந்தேகத்தை மிகுதியும் கொடுத்து வருகிறது.

***

பயித்தியம் பிடித்த நரியின் மரணகடி:—ஒரு மாதத்திற்கு முன், ஸாகுபீபி என்னும் ஓர் மகம்மதிய ஸ்திரீ ஹௌராவிற்கு சமீபித்த கரிசாலை யோரமாக போய்க்கொண்டிருக்கும்போது ஒரு பயித்தியம்பிடித்த நரியால் கடிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு முன்னர் சுரம்கண்டு மரணக்குறிகளெல்லாம் படிப்படியாகக் காணப்பட்டு அதே வியாதியினால் இறந்தாளெனத் தெரியவருகிறது.

***

சுரங்கவிபத்து:—பஞ்சாபைச் சேர்ந்த ஜோக்டா என்னும் நகரில் இந்தமாதம் 16௳ சாயந்திரம் 4-மணிக்கு ஜெரியாவில் உள்ள ஜோக்டா சுரங்கத்தில் சுமார் 1000 சதுர அடியுள்ள மேற்கூரை ஓர் பெருத்த இரைச்சலுடன் இடிந்து விழவும் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த அனேக ஆட்கள் இறந்தார்களாம். சுரங்கத்தினுள் வேலை செய்திருந்தவர்களெல்லாம் உயிருடன் சமாதியானார்களென்பதைக் கேட்க மிக விசனமாயிருக்கிறது.

***

ஓர் மனைவி தற்கொலை யுண்டாள்:—பங்காளத்தில் பாபராம் கோஸ்வீதி 50-வது நெம்பர் வீட்டிலிருக்கும் கவர்ன்மெண்ட் பென்ஷனர் பாது பொனுமலிதார் என்பவரின் மனைவியார் முனிதாசி என்பவளுக்கு 60 வயதெனவும் 47 வருஷ காலமாகத்தன்னை வாட்டிவந்த ஓர் கடூரவியாதியினால் பாதைப்பட்டுக்கொண் டிருந்தாளெனவும் தெரிகிறது. ஓர் நாள் புருஷன் வீட்டு வெளிப்புறத்துச் சங்கிலியைத் தாளிட்டுப்போய் திரும்பிவந்து பார்க்க ஓர் துணியை மேற்கூரையிற் கட்டித் தொங்கவிட்டுத் தன்கழுத்தில் மாட்டிக்கொண்டு தற்கொலை புரிந்திறந்ததாகக் காணப்படவே போலீசார் பிணத்தைச்சோதிப்பதற்காகக் கொண்டுபோய் விட்டார்களாம். அந்த வியாதி நேம்போதெல்லாம் மணி கணக்காய் பிரக்ஞை யற்றுக்கிடக்கும் வழக்கமாம்.

***

ஓர் திருட்டு.—அலிபூரிலுள்ள ஓர் இந்து கோவிலில் தரிசனஞ் செய்து கொண்டிருந்த ஓர் மார்வாடி ஸ்திரீயின் நகைகள் திருடன் எனப் பேர்பெற்ற மோடிலால் காஹர் என்பவன் களவாடின குற்றத்திற்காக மேற்படி டௌன் போலீஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்கள்முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். சென்ற சிவராத்திரி விரதத்தினத்தன்று தரிசனார்த்தம் கோவிலுக்குப்போயிருந்த அந்த பெண்பிள்ளை கழுத்தில் அணிந்திருந்த வைரங்கள் பதித்த மாலையை மேற்படி திருடன் பலாத்காரமாக இழுத்து அறுத்துக்கொண்டு ஓடத்தலைப் படக்கண்ட அந்தப் பெண்பிள்ளை கூச்சலிட்டாள். அண்டையிலிருந்தார் ஓடி திருடனைப்பிடித்துக்கொண்டார்கள். விசாரணை காலத்தில் பழைய கைதியென்பது தெரிந்த நியாயாதிபதி இரண்டு வருஷக்கடுங்காவலில் இருக்கும்படித் தீர்மானித்தார்.

***

இரண்டு மாதரின் கற்பையழிக்கமுயன்ற பாதகர்களுக்குத் தண்டனை உயர்த்தப்பட்டது.—பஞ்சாப் மாகாணத்தில் காஸ்கஞ்ச சரசன் மேலா ஸ்பெஷல் ரயில்வண்டி காஸ கஞ்ச ஸ்டேஷனை விட்டுப்புறப்படுஞ்சமயத்தில் அந்த ஸ்டேஷனின் வண்டி எக்ஸாமினர் ரைன் என்பவனும் டிக்கட் கலெக்டர் கோமஸ் என்பவனும் தங்கள் திரண்டசினேகிதர்களுடன் சரேலென்று ஸ்திரீகளின் பிரத்தியேக கம்பார்டு மெண்டிற்கு வந்து அதிலிருந்த ஸ்திரீகளையும் மனிதர்களையும் வெளியே வரும்படிக் கூறிவிட்டு அதில் சுந்தரி, நாராயணி என்னு மிரண்டு மாதர்களை மட்டிலு மிருக்கும்படி உத்தரவிட்டு அக்கம்பார்ட்மெண்டிற்குப் பக்கத்திலுள்ள இரண்டாவது [illegible]

வண்டியிலேறிக்கொண்டார்கள். வண்டி புறப்பட ஆரம்பித்தவுடன் நால்வரும் அந்த இரண்டாவதுகிளாஸ் வண்டியினின்றும் வெளிவந்து அதிலொருவன் அந்த இரண்டு மாதர்கள் உட்கார்ந்திருந்த வண்டியிலேறி, எரிந்து கொண்டிருந்த விளக்கை அவித்துவிட்டான். உடனே பைரன் என்பவன் அந்த கம்பார்ட்மெண்டின் கதவைத்திறந்து உள் நுழைந்து அம்மாதின்கற்பை அழிப்பதற்காகப்பிரயத்தனப்படுகையில் அம்மாதர்களிருவரும் கூச்சலிடவே, இவ்வயோக்கிய சிகாமணிகளின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த அவ்வண்டியின் கார்டு உடனே வண்டியை நிறுத்தி, இவ்வயோக்கியர்களைப் பிடித்துக்கொண்டு வண்டி மறுஸ்டேஷன் வந்து சேர்ந்தது, போலீசாரிடம் ஒப்புவித்தார். இதன்பேரில் இந்நால்வரும் சார்ஜ் செய்யப்பட்டு அலகபாத் போலீஸ் கோர்ட்டில் முதல் குற்றவாளியாகிய பைரனுக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மற்ற மூன்றுபேரும் விடுதலை செய்யப்பட்டார்கள் இப்பாதகர்களுக்கு இந்த தண்டனை குறைந்தது என வினைத்து ஹைகோர்ட்டார் அக்கேஸைப் புனர் ஆலோசனை செய்து கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

***

ஓரியண்டல் ஸோப் :—பங்காளத்தில் பெரிய ஜமீன்தாராயும், தனவானுயுமுள்ள ராஜா B. N. ராம் சௌத்ரி, நமது சென்னை ஜமீன்தார்களைப்போல அடைப்பான் தாங்கிகளது சகவாசத்தில் மோகித்துத் தூங்காமல், தேசாபிமானத்தால் தூண்டப்பட்டுப் பெரும்முதல் வைத்து வேலைசெய்யும் இயந்திரசாலை ஸ்தாபித்திருக்கிறார். இது முற்றிலும் சுதேசிய முயற்சியென்று நாம் சொல்லவேண்டியதில்லை. ஜப்பானிலிருந்து கைதேர்ந்த ஒரு ஜப்பானியரைச் சம்பளத்துக்கு வரவழைத்து அந்தச்சாலையை நடத்திவருகிறார். இதில் செய்யப்படும் ஸோப்களின் மாதிரிகள் நமக்கு அனுப்பப்பட்டு நாம் அவைகளைச் சோதனை செய்ததில், அவைகள் சுதேசி ஸோப்களைவிட இளப்பமென்று சொல்லுதற்கில்லை சுதேசி ஸோப்களைவிட இரண்டொருவிதமான ஸோப்கள் உயர்த்தியென்றே சொல்லலாம். பலடாக்டர்கள் அவைகளைப் பரிசோதித்து அவைகளில் தேகத்துக்கு விரோதம் செய்யக்கூடிய கலப்பு எதுவுமில்லையென்று அபிப்பிராயங் கொடுத்திருப்பதோடு, கல்கட்டா ஆங்கிலேய பத்திரிகைகள் தெரிவித்த அபிப்பிராயங்களில், இந்த ஓரியண்டல் ஸோப்கள் ஒருக்கால் சுதேசி ஸோப்புகளே மாறுபாடாகக் கொண்டுவரப்பட்டனவோ வென்று சந்தேகிக்கும்படியாக அவ்வளவு நேர்த்தியாயிருக்கின்றன வென்று சொல்லுகின்றன. இந்த ஸோப்புகளுக்குச் சென்னையில் தம்புசெட்டி வீதியிலுள்ள மெஸர்ஸ் கணேச அண்டு கம்பெனி ஏகதேச ஏஜெண்டுகள் பெங்காளத்தார் ஸோப் செய்யும் வித்தையை நன்றாய்க்கற்றுக்கொண்டு விட்டார்கள். அங்கே பலகம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டு இந்த சாமான் விசேஷமாய்ச் செய்யப்பட்டு வருகின்றது. பம்பாயில் இன்னும் இது விசேஷமாகச் செய்யப்பட ஆரம்பமாகவில்லை. சமீபத்தில் அங்கு ஆரம்பம் செய்யப்பட்டு இந்தியர் எல்லோரும் சுதேசி ஸோப்பையே உபயோகிக்கும் காலம் சீக்கிரம் வந்துவிடுமென்று நம்ப ஏது உண்டாயிருக்கிறது.

***

“ விஹாரி ” பத்திரிகை கேஸ் :—கவர்ன்மெண்டார் பத்திராதிபர்களைப் பிடித்தடைப்பதும் குற்றஞ் சாட்டுவதும் சிறைச்சாலையில் வைப்பதும் இப்பொழுது ஏகதேசமாயிருந்தாலும் இனி இந்தியர்களுக்கு ஸ்வாதந்திர வுணர்ச்சியும் ஸ்வாதீனப்பிரியமும் வளர வளர மாதந்தோறுமோ, அல்லது தினந்தோறுமோ, அல்லது நாழிகைதோறுமோ பத்திராதிபர்கள் தண்டிக்கப்படவும் சிறைச்சாலையி லடைக்கப்படவும் வேண்டிய சமயங்களும் காரணங்களும் ஒரு காலத்தில் நிச்சயமாய் வருமென்று சென்ற சென்னை ‘பஞ்சாபி’ க்கூட்டத்தில் மிஸ்டர் வி. சக்கரச்செட்டியார் மிகுதியும் பொருள்படக் கூறினர். அதுபோலவே இப்பொழுது பத்திராதிபர்கள்மீது கவர்ன்மெண்டார் கண்வைக்கத் தொடங்கிவிட்டார்கள். இது யாருடைய நன்மைக்கு அல்லது யாருடைய தீமைக்கு என்பதை அறிஞர்களே யூகித்தறியக்கடவர். அங்ஙனமே “பஞ்சாப்பிகேஸ் முடிந்தும் முடியாது மிருக்கும் இச்சமயத்தில் பம்பாயில் “ விஹாரி” கேஸ் தொடங்கி விடப்பட்டது. இப்பத்திரிகை பிரிட்டிஷ் ராஜ்யத்தைப் பரங்கிகள் ராஜ்யமெனவும், பரங்கிகள்ராஜ்யமேயூலோகநாகமெனவும் அஞ்சாதெழுதியிருந்ததாய் முன்னொரு முறை கூறியிருக்கிறோம். இப்போழுது அவ்வாறு எழுதிய விஷயம் இந்தியன் பினல்கோட் 124. ஏ பிரிவின்படி இராஜ நிந்தனையென்னும் குற்றமென்றும், அதற்காக விஹாரி பத்திராதிபர் 1000 ரூபாய் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றதாம். பிந்திய விவரங்கள் தெரியவில்லை.

(சு - மி.)

***

ஓர் குறவன் ஆகருஷண வித்தையாற்செய்த திருட்டு:— மதுரையில் சென்ற ஞாயிற்றுகிழமை யன்று ஓர் குறவனும் அவன் மனைவியும் அன்னக்குளி மண்டபச் சந்தில் இடைக்குலம் கோமாளிப் பெரியசாமி என்பவனைக்கண்டு அவன் பெண்ஜாதியின் தலையில் குறத்தி என் கண்ணே உன்னைக்கண்டு நெடுநாளாயிற்றே யென்று தன் இருகைகளையும் அவள் தலையில் தடவி நிற்க, குறவன் கோமாளிப் பெரியசாமியைப் பார்த்து ஐயா நான் உம்மைப்பார்த்து நெடுநாளாயிற்றே யென்று இருகைகளாலும் அவன் கன்னத்தைத் தடவி நிற்க, இரண்டொரு நிமிஷத்தில் இடையனும் அவன் மனைவியும் மதிமயக்க முற்றிற்கும் வேளையில் குறத்தி என் மகனுக்கு இரண்டொரு தினத்தில் கலியாணம் நடக்கிறபடியால் உங்கள் கழுத்துநகை காதுநகைகளைத் தந்துவிடவேண்டுமென்று கேட்க உடனே இடைச்சி மறுபேச்சின்றி திருமங்கலியம் ஒன்று நீங்கலாகசுமார் 120- ரூ. பெறுமான மற்றெல்லா ஆபரணங்களையும் கொடுக்கக் குறவன் துணிமணியில்லையென்று சொன்னதனால் கோமாளி அவர்களைக் கணக்கிட்டுக் கொண்டுபோய் 27 ரூபாய்க்கு ஆடைகள் வாங்கித்தர,மீண்டுங் குறத்தி செலவுக்குப்பணமில்லையென்று சொன்னமையால் இடைச்சி முந்தானையில், முடிந்திருந்த 9 ரூபாயை அவிழ்த்துக்கொடுக்க,மாயக்குறவனும்குறத்தியும் கம்பிகாட்டிவிட்டார்களாம். இதென்ன மாயவித்தை?இச்செய்தி உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் ஐரோப்பியா அமெரிக்கா சாஸ்திரப்பண்டி தோத்தமர் கண்டுபிடித்துச் செய்கிற “மெஸமெரிசம்” என்னும் ஆகருஷண வித்தை (ஒருவருடைய அறிவைத் தன்வயப்படுத்துவது) இந்தக்குறவருடைய மாயவித்தைக்கு முன்னில்லாது என்பதிற் றடையென்ன ?

***

வைத்தியர்கள்:—சிலவருடங்களுக்கு முன்பு ஜப்பான் அரசரின் மாமியார் வியாதியாயிருந்தகாலத்து சுமார் 423 வைத்யதிர்கள் கூப்பிடப்பட்டார்களாம்.

***

தஞ்சாஊர் ஜில்லா கான்பரன்ஸ்:—மார்ச்சுமீ க்கடைசியில் தஞ்சாஊர் ஜில்லாக் கான்பரன்ஸ் தஞ்சாஊரில் கூடுகிறது. இதற்கு ஆனரபில் P. சிவசாமி அய்யர் பிரசிடெண்டாக விருப்பார்.

***

கொச்சி திவான்:—திவான் மிஸ்டர் பட்டாபிராமராவ் 3 மாத ரஜா எடுத்துக்கொள்ளப்போகிற தாகவும், அவருக்குப் பதில் சீப்ஜட்ஜ் மிஸ்டர் லாக்க யென்பவர் திவானாக ஆக்ட் செய்வாரெனவும் ஓர் வதந்தி உலாவுகிறது.

***

அபாயமான ரயில் விபத்து:—இரண்டு டிரைவர்களும் ஒரு கார்டும் கொல்லப்பட்டார்கள். ஒரு பிரயாணி கடுங்காயமடைந்தான். சென்ற திங்கட் கிழமை பஞ்சாப் மெயிலுடன் ஷண்டிங் இஞ்சின் தாக்கியதால் மேற்படி ஆபத்து நேர்ந்ததில் இரண்டு இஞ்சின் டிரைவர்களும் மரணமடைந்ததோடு கார்டும் அதேகதியாக மெயில், பிரயாணிக்கும் கடுங்காயம் நேர்ந்ததென பூனாவிலிருந்து சமாசாரம் வந்ததா யறிகிறோம். வியசனிக்கத்தக்கது.

தற்கொலையோ, கொலையோ:—சிலநாளைக்குமுன் பஞ்சாபைச்சேர்ந்த அம்பாலாவில் ஒரு நடைக்குப் பின் புறத்திலுள்ள கால்வாயில் ஒரு ஐரோப்பியனுடைய பிணம் கண்டெடுக்கப்பட்டதாம். பரிசோதித்ததில் செத்துக்கிடந்தவன் தேக முழுமையும் வலுத்த காயங்கள் காணப்பட்டதாம். E. J. ரெயில்வேகார்ட் Mr. டன்ஸ் டோன் என்னும் பெயரினன் அவனிடம் பகைமை பாராட்டிவந்த ஒரு சோல்ஜர்தான் இதற்குக் காரணமெனத் தெரியவந்து போலீஸார் அவனைப்பிடித்திருக்கிறார்களாம். விசாரணை இனிமேல்தான் நடக்கும்.

***

ஒரு ஸ்திரீயின் சண்டை:—பம்பாயில் கிராண்ட் சாலையில் மூர்ச்சையாய் விழுந்துகிடக்கக் கண்டெடுக்கப்பட்ட ஹீராபாய் என்னும் ஒரு இந்துப்பெண்ணை உடனே சர்ஜேம் ஸெட் ஜிஜிபாய் ஆஸ்பத்திரிக்கு பம்பாய் போலீசார் கொண்டு போனார்கள். வியாழக்கிழமை இரவு நாலாவது ஆக்டிங் பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் அவர்கள் அவளுடைய வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டார்கள். அதாவது தன்னோடு வசித்திருந்த ஒரு தீவாளி பெண்பிள்ளைதான் தன்னைக் காயப்படுத்தினாளென்றும் அவளுக்கொத்தாசையாக இனி தான் அத்தீவாளிபெண்பிள்ளையோடிருக்க உடன்படேனென்பதைக் காரணமாகக் கொண்டு லால் ஜிவல்ஜீல் என்பவனும் வந்ததாகக் கூறினாள்.

***

கலகம்:—கல்கத்தாவிற்கு சமீபமான ஓர் ஊரில் பக்ரீத் பண்டிகையன்று சில மகம்மதியர்கள் பசுக்களைக்கொன்றார்கள். அந்தோ ! அமீர் அரசர் கூறின புத்திமதி இந்தமடையர்கள் காதிலேறவில்லைபோலும்.மகம்மதியர்கள் புரிந்தகொடுந்தொழிலால் இந்துக்கள் மனம் புண்புட்டவர்களாய் பண்டிகைநடந்த சிலநாட்களுக்குப்பின் மகமதியர்களின் பசுக்கள் இந்துக்களின் நிலங்களில் வந்துமேய இந்துக்கள் அவைகளைப்பிடித்துக் கட்டிக்கொண்டு அவர்கள் வந்துகேட்டும் விடமாட்டேன் என வைத்துக்கொண்டார்கள். இதனால் மகமதியர்களுக்குக் கோபம் பிறந்து கூட்டமாய் ஆயுதங்களுடன் வந்து கலகஞ் செய்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஓர் இந்து கொல்லப்பட்டான் என ஓர் சப்தம் கிளம்ப இதைக்கேட்ட மகம்மதியர்கள் தங்கள் வீட்டில் ஒன்றிற்கு தீமூட்டிவிட்டு இந்துக்கள் தங்கள் வீட்டைக் கொளுத்திவிட்டார்கள் எனக்கூறுகிறார்களாம். போலீசார் இதைப்பற்றி விசாரித்து இரண்டு பக்கங்களிலுமிருந்து 16 பேர்களைப் பிடித்துவைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி சப்டிவிஷன் கோர்ட்டில் கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. நமது தேசாபிமானிகள் இந்துக்களும் மகமதியர்களும் எப்பொழுதும் அமைதியாய் ஒத்துழைத்து வரவேண்டுமென்று மூலைக்கு மூலை உபந்நியாசங்கள் செய்துகொண்டிருக்க இம்மாதிரியான சம்பவம் நடந்ததைப்பற்றி வியசனிக்கிறோம்.

நாறேறு நினைக்கத் தெய்வ மொன்று செய்தது.

உடுப்பியிலிருந்து இரண்டு பிராமணர்கள் யாசகஞ்செய்துகொண்டே தேசயாத்திரை போயினர். அவர்களில் ஒருவர் பெயர் விஷ்ணுசர்மா, மற்றொருவர் பெயர் கிருஷ்ணசர்மா. இவ்விருவரும் ஆங்காங்கே சேகரித்தபணத்தை இரண்டு மூட்டையாகக் கட்டிக்கொண்டு ஹொஸ்துர்க்கத்தருகே வருகையில் அஸ்தமானமாயிற்று. இரவை அங்குக்கழித்து விடிந்தபின்பிரயாணம் போகலாமென்றெண்ணி கண்ணன் நாயர் என்பவன் வீட்டில் தங்கியிருந்தார்கள். கஷ்கத்தில் மூட்டை வைத்துக்கொண்டிருந்ததை யறிந்து எவ்விதத்திலும் பணத்தை அபகரிக்க வேண்டுமென்றெண்ணி இரண்டு சாணார்களை அழைத்து இரவில் பிராமணர்களிடமுள்ள மூட்டைகளைப்பிடுங்கி அவர்களையும் வெட்டிப்புதைக்கும்படி கூறினர். கொடும்பாவிகள் அவன் வார்த்தைப்படி செய்வதாய்ப்புகன்று உண்டவுடன் கத்திகள் சஹிதமாய் கண்ணன்நாயரின் வீட்டுக்குள் ஒளித்துக்கொண்டனர். பிராமணரிருவரும் கண்ணன்நாயர் வீட்டுத் திண்ணையில் மூட்டையைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு தூங்கினார்கள். அர்த்தராத்திரியில் இரண்டு சாணார்களும் வெளியே வந்து மெள்ள மூட்டைகளைப்பிடுங்கிக்கொண்டு போயினர், இருவரும் அரவம் செய்தால் உயிருக்கே ஹானியுண்டாகுமென்று அப்பால் போய் வேறிடத்தில் ஒளித்துக்கொண்டனர். இங்ஙனமாக கண்ணன்நாயரின் மருமகனும் ஒரு சேவகனும் நாடகம் பார்க்கச்சென்று திரும்பிவந்தனர். அவர்கள் வீட்டின் கதவு மூடியிருப்பதைக்கண்டு திண்ணையில் விரித்திருந்த பாயில்படுத்து உறங்கினார்கள். மூட்டைகளைப்பத்திரப்படுத்தினபிறகு இரண்டு சாணார்களும் வெளியேவந்து நள்ளிருளாயிருப்பதையறிந்து படுத்துறங்கிய வீட்டுக்காரனுடைய மருமகனையும் சேவகனையும் கத்தியாற் கழுத்தை யறுத்துத் துண்டங்களையெடுத்துக்கொண்டு வீட்டின் புறக்கடையி லிருக்கும் குப்பைத் தொட்டியிற்போட்டு சாம்பலை மேலே கொட்டி மூடிவிட்டனர். பொழுது புலர்ந்தது. விஷ்ணுசர்மனும், கிருஷ்ணசர்மனும் ஹொஸ்துர்க்கம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சகல சங்கதிகளையும் அறிவித்தனர். அவர்கள் தக்ஷணமே கண்ணன்நாயரின் வீட்டுக்குள்வந்து சோதனைசெய்துபண மூட்டைகளையும் பிணத்துண்டங்களையும் எடுத்துக்கொண்டு நாயரை விலங்கிட்டு டாலூவுக்குக் கொண்டுபோயினர். ஐயோ பணத்தாசையால் இரண்டு விப்ரர்களை வதைசெய்ய முயன்ற கண்ணன்நாயர் தன் மருமகனுடைய துண்டங்களைக்கண்டு மனம்கொதித்துப் பூமியில் மூர்ச்சையாய் விழுந்தானும். அக்கிரமம் செய்ய எத்தனிப்பவர்க்கு இவ்வித ஆபத்துக்களை யுண்டாக்கிய பகவானுடையபெருமை வியக்கத்தக்கதன்றே ?

சத்கதா ரத்னுவளி.

பேராசை பெருந்துக்கம்.

‘ ஆசைக்கொ ரளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு
அலைந்திடுவர் * * * ’

என்று நந் தாயுமானர் திருவாய்மலர்ந்தபடி மனிதர்க்குள்ள ஆசை ஓரளவில் நிற்பதன்றென்பதனைப்பற்றிச் சமீபகாலத்தில் நடந்ததோர் சம்பவத்தை அடியிற் கூறுகின்றோம்.

(Calcutta Derby Sweep Lottery) கல்கத்தாவில் “ டெர்பீ ஸ்வீப் லாட்ரீ ” என்று ஒரு அதிர்ஷ்டச்சீட் டேற்படுத்திப் பல பிரதேசங்களுக்கு அச்சியற்றியபில் புத்தகங்கள் அனுப்பப்பட்டது. அதில், லாட்டரி ஒவ்வொன்றிற்கு ஒரு ரூபாயாகக் கட்டணம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. முதற் பிரைஸ்,—எண்பதினுயிரத்தொருநூறு ரூபாயும் எட்டணுவென்றும், இரண்டாவது பிரைஸ் நாற்பதினுயிரத்துச் சில்லறை யென்றும், இவ்வாறே மூன்ருவது நாலாவதற் குரிய தொகை இம்வள விவ்வள வென்றும் அப் புத்தகத்தில் விவரமாகக் காட்டப்பட்டிருந்தது. இதுநிற்க.

மதுரைமாநகரில் அநந்தராமைய னென்னும் ஒரு பிராமணனிருந்தான். அவன் பரம ஏழை ; ஏழைப் பிராமணனென்றால் நெடுநாளைய ஏழையல்ல. முன்னே தாசில்தாரனுயிருந்து யாதோ குற்றஞ் செய்ததனல் நீதிதுரைத்தனத்தாரால் அவனைஉத்தியோகத்தினின்றும் நீ

க்கப்பட்டு ஏழெட்டு வருஷங்களாயின. அதுமுதலாகக் கைப்பொருள் செலவழிந்து ஏழையாகிக் கஷ்டப்படலானான். இங்ஙன மிருக்குநாளி லொருநாள் மேற்படி லாட்ரிபுத்தகத்தைக் கண்ட அநந்தராமன் அதிற் றொன்றெடுத்துக்கொள்ளவேண்டுமென் றெண்ணின னெனினும், கையிற் காசின்மையால் தன் மனைவியிடம் யோசிக்கலாமென்று வீடுசென்றான்.

அநந்தராமன் பேராசையும் பிடிவாதமுமுடையவன். மூர்க்கன். பொய்சொல்லுதலிற் பிரீதியும் வஞ்சநெஞ்சும் பிறர்வாழ்க்கையிற் பொறாமையுங்கொள்பவன். இடம்பன். மற்றெல்லாத் துர்க்குணங்களும் முதன் முதலில் இவனிடத்திற் பிறந்துதான் பின்னர் ஊர் முழுவதும் பரவிற் றென்னலாம்.

வீடு சென்ற அநந்தராமன் ' அடி ருக்கணீ! ஒரு வார்த்தை : கேட்டுட்டுப்போகோணும்' என்றான். அவள் சமையலறையைவிட்டு பரபரப்பாய் வெளியேவந்தாள். அநந்தராமன் ஒரு நாற்காலியி லுட்கார்ந்து 'பெண்ணே! எனக்கு உத்தியோகம் ஒழிந்தநாள் முதலாக இது பரியந்தம் எந்த சங்கதியிலும் நான் ஆசைவைக்கிறதில்லை. முந்தாநாளைக்கு முன்னாள் காலம்பர பல்தேய்த்துக்கொண்டே நம்ம வேப்பத்துரா ணுத்துக்குப்போயிருந்தேன். அப்போ பிரம்பையரோடே ஒத்தன் உட்காந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தான். நானவனை யாரென்று விசாரித்தேன். அவங்காத்து சுப்பு இருக்காளோன்னோ: அவள்தாண்டீ பனமரத்தான் மகள். ஏன் நோக்கு கூடத்தெரியுமோன்னோ ? அவள் என்னைக் கண்காட்டி- உள்ளே யழைத்து 'எங்காம்படையாளண்டை வார்த்தை பேசிக்கொண்டிருப்பவர் யார் தெரியுமோ ஒமக்கு?' என்றாள். நான் தெரியாதென்றேன். அடடா ஜோஸ்யத்தில் வெகு சமர்த்தரோன்னோ அவர் ? இராமபாணமாட்டமா சொன்னால் சொன்னதுபோல்பலிக்கும். ஊரெங்கும் பிரசித்தி பெற்றவராச்சே. நம்ம மணியையனுக்குக்கூட இவர்தானே ஜாதகம் கணித்தார். ஒண்ணு கூட பிசகில்லை. நீர் வேண்டுமானால் ஒமக்குக் கேளுமே' என்றாள். ஜோஸ்யன் வார்த்தையாடி முடிந்த பிறகு என்னுடைய லக்னத்தைச்சொல்லிப்பலன் கேட்டேன். அவர் எனக்கு இந்தக் கார்த்திகை மாதம் பதினைந்தாந் தேதி ஒன்பதாமிடத்தில் குரு வருவதாகவும், திரண்ட செல்வ முண்டாகுமென்றும், என் ஜாதகம் த்ருடமானதென்றும் சொன்னார். சரியென்று இதையாருடனும் நான் சொல்லவில்லை. என்னமோ நல்ல அதிர்ஷ்டசாலிதான் நீ என்று மனைவியிடம் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று நடைக்கதவு திறந்த சத்தங்கேட்டது. அநந்தராமன் விரைந்தெழுந்து விட்டினுட்போய்ப் பதுங்கினான். வாணிபனொருவன் வாசலில் வந்து நின்று அங்கு உட்கார்ந்திருந்த பிராமணமாதை நோக்கி ' ஐயரெங்கே அம்மா : இன்னுங்கொடுக்க மனசில்லையா உங்களுக்கு ? நடந்துநடந்து என் காலுந் தேய்ந்ததே ' என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பிராமணமாது ' பொறு பொறு செட்டியாரே ! சும்மா கூவவேண்டாம். உம்ம சொத்துக்கு நாங்க பொறக்கில்லை. என்னமோ காலவித்தியாசம்; எல்லாருக்கும் உண்டு. ஐயரெங்கோ போயிருக்கார். சுவாமி தயவால் நல்லகாலம் வந்துட்டுது. ஐயருக்கு உத்தியோக மிருக்கச்சே ஒத்தருக்கு ஒரு பைசா கடனுண்டா? ஹூம் : என்னமோ சொல்லுகிறீர்! சீக்கிரம் கொடுத்துட்ச்சொல்றேன் போம்" என்று மூச்சுவிடாமற் பேசினாள். வாணிபன் தலையையசைத்து இல்லை இல்லை. சம்மன் செய்தால்தான் கொடுப்பீங்கபோலிருக்குது. 'கொட்டினால் தேள் : கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி' தானே என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

உள்ளேயிருந்த ஐயர் மெதுவாக எட்டிப்பார்த்து 'சேஷீ போய்விட்டானோ?' என, 'அவன்தொலைந்தான்; நீர் வாரும்' என்றாள். அநந்தராமன் வெளியே வந்து நடைக்கதவை யிழுத்துத் தாளிட்டுக்கொண்டு பழயபடி நாற்காலியி லுட்கார்ந்து 'ருக்மணீ! நல்ல காலத்தில் எல்லாம் நல்லபடியேதான் நடக்கும். ஜோஸ்யன் சொன்னதற்கிணங்க இப்போதுதான் எனக்குக் கொஞ்சம் தைரியமுமுண்டாகிறது. நேற்று வலது தோள் துடித்தது. இவையெல்லாம் நற்குறிகள்தான். அதுகிடக்கட்டும். இப்போது உன்னிடத்தில் ஒரு சங்கதி சொல்ல வந்தேன். முதன்முதலில் அவலக்ஷணமாக ஒன்றும் சொல்லாமல் கேட்பாயானால், இதுமூலமாக நாம் செல்வத்தைப்பெற்று சௌக்கியப்படலாம். அதாவது,—கல்கத்தாவிலிருந்து அதிர்ஷ்டச் சீட்டொன்று வந்திருக்கிறது. அதற்குக் கட்டணம் ஒருரூபாயாகின்றது. அதனைக் கட்டிவிட்டு * ரங்கம்பாடுவோரால் நம்ம சுவாமியைப் பிரார்த்தித்து வரவழைத்து நமக்கு முதற்பிரைஸ் எடுத்துக்கொடுக்கும்படி வேண்டிக்கொண்டால் அப்படியே கிடைத்துடும். எனக்கும் நல்லகாலம் பிறந்துவிட்டது. நீ யாதொரு தடையும் செய்யாமல் எங்கேனும் ஒருரூபாய் சமாளித்துக்கொடு. ஒரு ரூபாய்க்கு எண்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும். நம்முடைய தரித்திரம் ஹதமாகிவிடும். நமக்குத் தெய்வபல மிருக்கச்சே நாம் பயப்படுவானேன் ? சுவாமிக்கு எதேஷ்டமாய்ப் பூசை போடுகிறோமென்று பிரார்த்தித்துக்கொண்டால் நம்மிஷ்டப்படி அநுக்கிரகஞ் செய்துடுவர். இந்த ரகஸ்யத்தைமட்டும் யாரிடத்திலும் சொல்லாதே. சொல்லிவிட்டையோ அவர்களும் நம்மைப்போல் செய்ய ஆரம்பித்துடுவார்கள். அப்புறம் நம்ம காரியம் கெட்டுப்போய்விடும் என்றான்.

ருக்மணி, அப்படிதான் செய்யுமே. எதிர்வீட்டு எல்லம்மை தன் ஆம்படையானுக்கு தெரியாமல் என்னிடம் ஒருரூபாய் கொடுத்துவைத்திருக்கிறாள். அதையெடுத்துத்தருகிறேன். சுகமாகக் கொண்டுபோய்க் கட்டும் என்று அந்தணனிடத்தில் ரூபாயைக் கொடுத்தாள். அதை அநந்தராமன் பற்றிக்கொண்டுபோய் லாட்ரி புத்தகத்தில் 1390-வது டிக்கட் நம்பரில் தன் பெயரையும் விலாசத்தையும் எழுதிக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டான்.

அந்தணன் மறுநாளே ரங்கம்பாடுவோரை வருவித்துப் பூசைமுகத்தில் கல்கத்தா லாட்ரியில் எண்பதினாயிரம் ரூபாய் வரக்கூடிய முதற்பிரைஸை தன்பெயருக்கு எடுத்துக்கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ரங்கம் பாடுவோன்மேல் ஆவேஸம் வந்து அப்படியே எடுத்துக்கொடுப்பதாய் வாக்களித்தான். சுவாமி நல்லவாக்களித்ததற்காக அநந்தராமன் ஆநந்தங்கொண்டு ஓ ரறையுட் புகுந்து மறைவாக நின்று குதித்துக் குதித்துக் கூத்தாடினான். இப்போதவன் அளவுகடந்த சந்தோஷத்தில் மூழ்கிப்போனாதலால் அவன் முகத்தில் புதிய அழகொன்றுதோன்றிப் பிரகாசித்தது.

---

* ரங்கம்பாடுவோர் ஓர்வகைச் சாதியார். இவர்கள் மிருதங்கம் போன்ற ஒருவகைக் கருவியைக்கொண்டு முழக்கித் தம் தேவதையை வருவித்து, ஆவேசங்கொண்டு குறி சொல்லுவர். இவர்கள் பூர்வ ஜனனத்தைப் பற்றியும், இனி நடக்கும் விஷயத்தையும் தெரிந்து கூறுவார்களாம். இன்னோரால் சொல்லப்படும் குறி மிக உண்மையானதென்று ஜனங்கள் நம்புகின்றார்கள்.

The Hon'ble Justice Sir T. MUTHUSAWMY IYER, B.L., C.I.E.

ஹானரபில் ஜஸ்டிஸ் சர். T. முத்துசாமி அய்யர், B.L., C.I.E.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ணு அண்டு கோ.

வால்யம் 2.] சென்னப்பட்டணம், 1907 ஹ மார்ச்சு ௴ [3 பாசம்.

அடக்கம்.

பக்கம்.

1. உருவப்படம் :—காலஞ்சென்ற ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் முத்துசாமி ஐயர், B. L. C. I. E. ...
2. "பஞ்சாபி" கேஸ் 85
3. கோர்ட்டில் தீர்ப்பை வாசித்தல் 88-b
4. முக்கியமான தீர்ப்புகள் 88-c
5. சென்னபட்டணம் ஹைகோர்ட்டு, 1907-ம் வருஷத்திய முதல் கிரிமினல் செஷன் விசாரணை. 89
6. போர்ட் புரொசீடிங்ஸ், ஜில்லா சர்க்கியுலர், பொலீஸ் ஷீட் 92
7. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் 95
8. திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் தேவஸ்தான அப்பீலின் பிரிவி கவுன்சில் தீர்ப்பு... 107
9. வார்சுக்கிரமத்தில் புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களில் ஹிந்துவிதவைகளுக்கிருக்கும் பாத்தியதைகள். 109
10. பொது வர்த்தமானங்கள் 112
11. சத்கதா ரத்னவெளி 114
12. காலஞ்சென்ற ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் முத்துசாமி அய்யர் அவர்களின் ஆயுள் சரித்திரம் 117
13. இந்தியன் லாரிப்போர்ட்டுகளிலுள்ள கேசுகள் 123

Opinions of the Press on the "

The "Madras Mail," dated 10th Spetember 1906 :—"*The Indian Law Gazette.*"—We have received the first number of a new Tamil monthly, entitled the *Indian Law Gazette*, edited by Mr. M. A. Loganathan, and published by Messrs. N. Ratha Krishna & Co. The new venture is intended to spread amongst the people of South India a knowledge of the laws which are applicable to the protection of their person and property. The Editor deplores that, through ignorance of law, Hindus waste their money in carrying on litigation to the ruin of their family, and that to avert such disastrous consequences, a knowledge of the general laws of the land are essential to them. The first number appropriately opens with an illustrated life sketch of the Hon'ble Sir S. Subramania Iyer, *Kt.*, C.I.E., "one of the foremost Indian Lawyers, and an eminent Indian Judge, who is held in the highest esteem by his countrymen." There are, besides, reports of miscellaneous law cases, important rulings, Government Orders, etc., and a translation of the Motor Car Bill. The *Indian Law Gazette* will do a great service to the rural population if it will systematically translate and publish from time to time Government Orders, Proceedings of the Board of Revenue and other departments relating to Agricultural and Revenue matters generally. Through ignorance of these very necessary matters, the ryot population are often swindled by unscrupulous Village Officials and lower subordinate Revenue employees.

The "Hindu," dated 11th September 1906 :—The "*Indian Law Gazette*," is the title of a new legal journal in Tamil, the first part of which we have just received. We believe this is the first time that a legal journal is published in any of our Vernacular languages: this, the Editor says, is intended to educate in law the ignorant man in the streets who blunders often not knowing what the law of the land is. We trust that this new enterprise in legal journalism will supply a real want, and we wish the journal every success.—Editor—Mr. M.A. Loganathan : Publishers, N. Ratha Krishna & Co., Madras.

The "Madras Times," dated 11th September 1906 :—We have received the first number of a new Tamil monthly, called the "*Indian Law Gazette.*" Mr. M. A. Loganathan is its Editor, the publishers being Messrs. N. Rathakrishna & Co. The Magazine deals solely in legal topics and is intended to spread amongst the people of South India a knowledge of the law applicable to the protection of their person and property. The first number appropriately opens with an illustrated sketch of the life of the Hon'ble Sir S. Subramaniya Iyer, *Kt.*, C.I.E., who is most deservedly held in high esteem by his countrymen. Reports of Miscellaneous, Law Cases, Government Order, etc., and a translation of the Motor Car Bill form the other reading matter in the magazine. We have no doubt that the "*Indian Law Gazette*" will be of great service to the rural population of this Presidency, and we wish every success to the new venture.

The "Swadesa Mithran," dated 13th September 1906, says :—A new monthly Tamil Magazine under the name of "*The Indian Law Gazette*" has been started in Madras. It has come out with the laudable object of spreading all matters relating to Law among Tamil masses who are unacquainted with English. Besides reporting the cases that are tried by the Courts of the Madras Presidency, reports of cases that are tried by Courts in other parts of India, will be published by this Law Journal. This will prove very useful to all persons who have something to do with Law. In the first Journal that has been sent us is placed a handsome protrait of Justice Sir S. Subramania Aiyar, *Kt.* C.I.E. We heartily wish success to this undertaking.

இந்திய சட்ட கெஜெட்

விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 25 கையொப்பங்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கும் சனதனவான்களுக்கும் ரூ. 10 - மணியார்டர்செய்து அனுப்பத்தயாராயிருக்கிறோம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் கையொப் போஸ்ட்கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கி தபால் ஸ்டாம்பு ஒட்டாமல் நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,
மானேஜர்கள்,
இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,
37, நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, ஜியார்ஜ்டௌன்,
சென்னை.

ABBREVIATIONS USED IN THE GAZETTE.

இந்த கெஜட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

I.L.R.	=	Indian Law Reports.
Cal.	=	Calcutta.
All.	=	Allahabad.
Bom.	=	Bombay.
Mad.	=	Madras.
W.R.	=	Weekly Reporter.
G.O.	=	Government Order.
I.A.	=	Indian Appeals.
M.A.	=	Moor's Indian Appeals.
இ. லா. ரி	=	இந்தியன் - லா - ரிப்போர்ட்டுகள்.
கல்.	=	கல்கத்தா.
அல.	=	அலகாபாத்.
பம்.	=	பம்பாய்.
மது / சென்	=	சென்னப்பட்டணம்.
சி. பு. கோ.	=	சீவில் புரொசீஜர்கோடு.
கி. பு. கோ.	=	கிரிமினல் புரொசீஜர் கோடு.
இ. அ.	=	இந்தியன் அப்பீல்ஸ்.
மூ. இ. அ.	=	மூர் இந்தியன் அப்பீல்ஸ்.

விஞ்ஞாபனம்.

(1) மெஸர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ளக் கொடுத்திருக்கும் மனு ௸ 25௳ முதல் கனம் ஜஸ்டிஸ் சர் சு. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. இக்கம்பெனியாரின் கணக்குகளைப் பரிசோதனை செய்து ரிப்போர்ட் செய்திருக்கும் சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் சாக்ஷியாக விசாரணைசெய்யப்பட்டார். இதன் பிறகு சர் ஜியார்ஜ் அர்பத்நட்டை இரண்டு தினங்களாக விசாரணைசெய்து வருகின்றார்கள். இவருக்கு இன்சால்வெண்ட் ஆக்ட்டின் நன்மையைக் கொடுக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்கும் கடன் காரர்களின் பாரிஸ்டர் "கம்பெனி நஷ்டம் அடைந்து வருகிறதென்று வெகு காலத்திற்கு முந்தியே தெரிந்திருந்தும் அப்போதே வியாபாரத்தை நிறுத்தாமல் இதுபரியந்தம் செய்துவந்ததற்குக் காரணம் என்னவென்று" சர் ஜியார்ஜ் அர்பத்நட்டை ஒரு கேள்வி கேட்டார். இதற்கு அவர், தம்முடைய கம்பெனியார் செய்துவந்த வியாபாரங்களில் பல லாபகரமுடையனவென்றும், அவைகளிலிருந்து வருவாய் எதிர்பார்த்துச் சமாளித்துக்கொள்ளலாமென்றும் அபிப்பிராயப்பட்டதாகவும் பதில் கூறினர்.

இந்த விசாரணையைக்குறித்த முழு ரிப்போர்ட்டும் ஏப்ரல்மாத சஞ்சிகையில் வெளிப்படுத்தப்படும்.

(2) கனம் ஜஸ்டிஸ் மிஸ்டர் பாஷ்ய மய்யங்கார் அவர்களின் ஆயுள் சரித்திரம் இன்னும் பூர்த்தியாக அகப்படவில்லை. அதுவும் அடுத்த மாத சஞ்சிகையில் வரும்.

(3) கோடைகால ரஜாவிற்காக சென்னபட்டணம் ஹைகோர்ட்டு அடுத்த ஏப்பிரல்௴ 29௳ முதல் மூடப்போகிறபடியால், அது முதல் ஒரு மாதத்திற்கு நம்முடைய இந்திய சட்டகெஜெட்டு பத்திராசிரியர் டிபார்ட்டுமெண்டுக்கும் ஒரு மாதம் ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மே௴ சட்டகெஜெட் அம்மாத முதல்தேதியில் அனுப்பப்படும். ஏப்பரல்௴ கெஜெட் ஏப்பரல் 15 முதல் 20௳ க்குள் வெளிப்படுத்தப்படும்.

நிருப நேயர்கட்கறிக்கை.

சிவசுப்பிரமணிய பிள்ளை:—சென்ற இரண்டு மாத காலமாக அபிப்பிராயம் கூறிவரும் வழக்கத்தை நிறுத்திவிட்டோம். ஏனெனில், அபிப்பிராயம் கேட்கும் கடிதங்கள்மட்டும் மாதம் ஒன்றுக்குச்சுமார் 100-க்குக் குறையாமல் வந்துகொண்டிருந்தன. கெஜெட் சம்பந்தமான வேலைகளே லாயர் கமிட்டியாருக்கு அதிகமாயிருப்பதால் அவைகளுடன் இந்த லெட்டர்களுக்கு அபிப்பிராயம் கூறுவதாயிருந்தால் மிகுந்த சிரமமாயிருக்கின்றது. ஆகையால் 5-ரூபா மணியார்டருடன் அனுப்பப்படும் கடிதங்களை மட்டிலும் லாயர் கமிட்டியார் கவனி அபிப்பிராயம் கூறி பைசல் செய்யும்படியாக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆறுமுகக்கோன்:—தாங்கள் கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கும் மகஜரையும், பலவந்தப்புணர்ச்சிக் கேசின் ரிப்போர்ட்டையும் இந்த மாதத்திய கெஜெட்டில் வெளிப்படுத்துவதாக நினைத்து அச்சிட்டுவிட்டோம். புனராலோசனையின் பேரில் அடுத்தமாத கெஜெட்டில் வெளிப்படுத்துவதாக உத்தேசித்து நிறுத்திவைத்திருக்கிறோம்.

எடிட்டர்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907௵ மார்ச்சு௴ [பாகம் 3.

THE "PUNJABEE" CASE.

பஞ்சாபி கேஸ்.

"பஞ்சாபி" என்பது ஒரு பத்திரிகையின் பெயர். இப்பெயர்கொண்ட பத்திரிகை பஞ்சாப் மாகாணத்தின் பிரதான நகராகிய லாகூரில் வாரம் இருமுறை ஆங்கில பாஷையில் பிரசுரம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் பத்திராதிபர் பெயர் மிஸ்டர் லாலா ஜெஸ்வன்ட்ராய்; இதன் பத்திராசிரியர் பெயர் மிஸ்டர் ஆதவேல். இவர்கள் இருவரும் சேர்ந்து 1906-ம் ௵ ஏப்பரல்௴ 11௳ பிரசுரமான பஞ்சாபி பத்திரிகையில், இ. பி. கோ. 153-வது A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்குள்ளாகும்படியான விஷயங்களை எழுதினதாகப் பஞ்சாப் கவர்ன்மெண்டாரே குற்றம் சாட்ட, இந்தக்கேசை ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் R. A. மான்ட் விசாரணை செய்து பத்திராதிபருக்கு 2 வருஷக்கடுங்காவல் தண்டனையும், ரூ. 1000 அபராதமும், பத்திராதிபருக்கு 6 மாதக்கடுங்காவல் தண்டனையும் ரூபாய் இருநூறு அபராதமும் விதித்தார். பத்திராதிபரும் பத்திராசிரியரும் அப்பீல் செய்துகொண்டதில், பத்திராசிரியருக்குக் கீழ்க்கோர்ட்டார் விதித்த தண்டனை உறுதிசெய்யப்பட்டதென்றும், பத்திராதிபருக்கு விதிக்கப்பட்ட இரண்டுவருஷக் கடுங்காவல் தண்டனையை 6-மாதமாக மாற்றி விதிக்கப்பட்டதென்றும் லாகூரிலிருந்து வந்திருக்கும் தந்திகள் தெரிவிக்கின்றன. இப்படி பஞ்சாபி பத்திராதிபர்கள் இ.பி.கோ. 153-வது A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டிருப்பது நியாய விரோதமென்றும், அவர்கள் செய்த பிரசுரங்கள் 153-வது A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கு இலக்காகாதென்றும் எண்ணப்பட்டு இத்தேச ஜனங்களின் மனப்பதைப்பைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

ஆகையால் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில், (1) பஞ்சாபி பத்திராதிபர்கள் என்ன எழுதினார்கள் என்றும், (2) 153 A பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றும் (3) பஞ்சாபிப் பத்திராதிபர்கள் எழுதிய விஷயங்கள் ஷை பிரிவின் குற்றத்திற்குள்ளாகுமாவென்றும் (4) கவர்ன்மெண்டாரே நேரில் பிராசிக்கியூட் செய்தது நியாயமாவென்றும், (5) இவர்களுக்கு விதித்திருக்கும் தண்டனை நியாயமான தண்டனையாவென்றும் ஆகிய இந்தஅம்சங்களைக்குறித்து இவ்விடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

மேலேகூறியிருக்கும் அயிட்டங்களுக்குள் முதலில், முதலாவது அயிட்டத்தை அதாவது பஞ்சாபி பத்திராதிபர்கள் என்ன எழுதினார்கள் என்பதைக் குறித்து யோசிப்போம்.

சிற்சில சமயங்களில் காட்டில் வேட்டையாடப் போகும் சோல்ஜர்கள் கிராமத்தார்களை அடிப்பதும் உதைப்பதும் சிலசமயத்தில் சுடுவதும் ஆகிய இந்த சம்பவங்கள் நடந்தேறிவருகின்றனவென்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். சிற்சில சமயங்களில் முன்கோபமுடைய ஐரோப்பியர்கள் தண்ணிக்காரியையும் பங்கா இழுக்கும் சுதேசக் கூலிகளையும் அடிப்பதாலும் உதைப்பதாலும் அவர்கள் இறந்துபோவதையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இம்மாதிரி சம்பவங்கள் 1906-ம்௵ ஏப்பிரல் மாதச் சமீபத்தில் ஏதோ நடந்தேறியிருக்கின்றனபோல் காணப்படுகின்றன.

இந்தச் சம்பவங்களைக் குறித்து "டெல்லகிராப்" என்னும் ஒரு பத்திரிகை எடுத்துப்பேசி, விசாரணை செய்யும்படியாக வைசிராய் உத்தரவு செய்யவேண்டு மென்று பிரார்த்தித்துக் கூறியது. இந்த டெல்லகிராப் பத்திரிகையில் எழுதியிருந்ததைப் பார்த்த பஞ்சாபி பத்திராதிபர்கள் தங்களுடைய பஞ்சாபிப் பத்திரிகையில் "எப்படி மனஸ்தாபம் நேரிடுகிறது?" "How misunderstandings occur" என்று தலைப்பெயரிட்டுக்கொண்டு ஷை சம்பவங்களைக் குறித்து எழுதிவிட்டு அடியிற்கண்ட பிரகாரம் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்கள். "Has the *Telegraph* then such a great confidence in the panacea of enquiry? And are instances of man-slaughter yea! even of deliberate murder of Indians at the hands of European Officers so rare in India that our contemporary should be ready to pin his trust to the impartiality of an enquiry? How many poor Indians have been mercilessly launched into eternity in the past, for being mistaken for bears and monkeys or for having so-called enlarged spleens?

அதாவது, "டெல்லகிராப் பத்திரிகை இச் சம்பவங்களைக் குறித்து விசாரணைசெய்யும்படியாகவைசிராயை வேண்டிக்கொள்ளுகின்றதே, ஆனால் விசாரணையில் டெல்லகிராப் பத்திரிகைக்கு அவ்வளவு நம்பிக்கையிருக்கிறதா! விசாரணைகள் பாரபக்ஷமின்றி நடத்தப்படுகின்றனவென்று நம்முடைய சகோதரப் பத்திரிகை நினைத்து இந்தவிசாரணைகள்மீது நம்பிக்கைவைக்க, ஐரோப்பிய ஆபீசர்கள் நினையாமல், ஏன் நினைத்துக்கூட செய்யும் கொலைசம்பவங்கள் இந்தியாவில் அவ்வளவு அபூர்வமா"? எத்தனை ஏழை இந்தியர்கள், கரடிகளாகவும், குரங்குகளாகவும் தவறுதலாக நினைக்கப்பட்டு மரணம் என்கிற தெப்பத்தில் மிதந்துகொண்டிருக்கும்படியாக இரக்கமின்றிச்செய்யப்பட்டிருக்கின்றார்கள். (அதாவது கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்).

பஞ்சாபிபத்திராதிபர்கள் இப்படிஎழுதிவிட்டு அதன்பிறகு A deliberate murder அதாவது "நினைத்துச் செய்தகொலை" என்று தலைப்பெயர்போட்டுக்கொண்டு அடியிற்கண்ட வாக்கியங்களை எழுதியிருந்தார்கள் :—

"As to deliberate murders unpremeditated, of course, of Indians by irate, irascible officers, instances though rare are not wanting. Only the other day, two European officers, of a district not very far from Lahore, went out shooting on horse back, with a mounted orderly. Amongst other denizens of the forest which fell to their joint shots was a boar, a full-grown fat porker, which the pair of worthies laid much store by to furnish them with the *piece de resistance* of two or three "heavenly" feasts. As soon as the animal was despatched they asked their mounted orderly to carry the carcase secured to his saddle. The man, who was a follower of the Prophet, however, instead of complying with the orders of the Huzoors, refused point bank to do their bidding, or even to touch the unclean animal. For a second they stood aghast petrified at his temerity but for a second only. The next moment the Sahib recovered his wits, and saw that it was insubordination or even worse, downright mutiny and what is the reward of mutiny? Why a short shrift and a swing into eternity. No sooner thought of than this brilliant idea of the imperial hunter was put into practice. He aimed at the poor Indian (who cared more for the faith that was in him, his *deen* than even the favour of his official chief) and shot him dead without compunction or remorse. If anybody was ever guilty of murder that identical Sahib surely was. The British Indian Penal Code might perhaps, call it culpable homicide not amounting to murder. But it was nothing but murder in cold blood. That murderer is at large to-day enjoying the privileges of the dominant race, and the sweets of life like any innocent man. And yet we have reason to believe that the matter had soon reached the years of the higher authorities. The only thing done in the case however, was to get the *gentleman* transferred from the district and a new man put in his place with strict injunctions not to allow the skeleton in the official cupboard to see the light of day. And up to this time it has not seen the light of day."

அதாவது திடீரென்று கோபமுளக்கூடிய ஆபீசர்கள் இந்தியர்களைப் பயிரங்கமாய் (ஆனால் முன்யோசனையின்றி) கொலை செய்யும் சம்பவங்கள் அபூர்வமா யிருந்தபோதிலும் சம்பவங்கள் இல்லாமலில்லை. இப்போதுதான் சிலதினங்களுக்குமுந்தி லாகூரிலிருந்து வெகுதூரமில்லாத ஒரு ஜில்லாவைச்சேர்ந்த இரண்டு ஐரோப்பிய ஆபீசர்கள் குதிரைமேலேறிக்கொண்டு வேட்டையாடப் போனார்கள். போகும்போது குதிரைமேல்வீற்றிருக்கும்படியான (Mounted orderly) ஒரு ஆர்டர்லியையும் அழைத்துக்கொண்டு போனார்கள். இரண்டு ஆபீசர்களும் சேர்ந்து காட்டில் வேட்டையாடினார்கள். வேட்டையாடி சுடப்பட்டவைகளுக்குள் ஒரு காட்டுப் பன்றியுமிருந்தது. அந்தப்பன்றியை இந்த இரண்டு ஆபீசர்களும் தங்களுடைய விருந்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் தங்களுடன் கொண்டுபோக உத்தேசித்து அந்தக் காட்டுப்பன்றியை எடுத்துக் குதிரைஜீனியில் கட்டிவைத்துக்கொண்டு வரும்படியாகத் தங்களுடன்கூட அழைத்துக்கொண்டு போன ஆர்டர்லிக்கு உத்தரவுசெய்தார்கள். ஆர்டர்லி முகம்மதியனானபடியால் அந்தமிருகத்தைத் தொடக்கூட மாட்டேன் என்று சொல்லிவிட்டான். ஒருவினாடிப்பொழுது செல்லும்பரியந்தம் அவனுடைய துணிச்சலைப் பார்த்துக் கல்போல் நின்றார்கள். ஆபீசருக்குக் கோபம் பிறந்து இவனைத்தம்முடைய கையிலிருந்த துப்பாக்கியால் கொஞ்சம்கூட அனுதாபமும் பச்சத்தாபமுமின்றி சுட்டுக்கொன்றுவிட்டார். யாரேனும் எப்போதும் கொலைக் குற்றத்திற்கு உள்ளாகவேண்டியதாயிருந்தால் அவர் இந்த ஆபீசர்தான். பிரிடிஷ் இந்தியன் பினல்கோட் ஒருக்கால் இக்குற்றத்தைக் கொலையாகாத அநியாயமரணம் உண்டு பண்ணியது என்று கூப்பிடும். ஆனால் அது கோபம் மூட்டப்படாமலிருக்கும்போது செய்த கொலையே தவிர வேறல்ல. அந்தக் கொலையாளி இன்று அரசாங்க வம்சத்தாருடைய சுதந்தரங்களையும் குற்றம் செய்யாத இருதயத்தையுடைய மனிதன் அனுபவிக்க வேண்டிய ஆயுள் வாழ்க்கை இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு பகிரங்கமாய் உலாவுகின்றான். இந்தச் சமாசாரங்கள் மேலதிகாரிகள் காதிற்கு எட்டியிருப்பதாக நாம் நினைக்கவும் காரண மிருக்கின்றது. இந்தக்கேசில் மேலதிகாரிகள் செய்ததெல்லாம்கூடி அந்த ஆபீசரை அந்த ஜில்லாவைவிட்டு மாற்றி, இந்த சமாசாரத்தை வெளியிடக்கூடா தென்று கண்டிப்பாய்தாக்கீது செய்து வேறொரு ஆபீசரை நியமித்திருக்கிறார்கள். இச்சமாசாரமும் வெளிச்சத்தைப்பார்க்கவில்லை."

மேற்கூறப்பட்டுள்ள வாக்கியங்கள்தான் பஞ்சாபிப் பத்திராதிபர்கள் எழுதியவை. இந்த வாக்கியங்களுக்குள் கவர்ன்மெண்டார் இ. பி. கோ. 153 A. பிரிவுக்குள்ளாகுமென்று எண்ணும் வாக்கியங்கள் எவை என்றால், இரண்டு ஐரோப்பிய ஆபீசர்கள் வேட்டையாடச் சென்று ஒரு ஆர்ட்டர்லியைச்சுட்டுக்கொன்றதாகப் பொருள்படும்படி எழுதியிருக்கும் வாக்கியங்களே. இந்த வாக்கியங்களில் எந்த ஆபீசர்கள் வேட்டை யாடப்போன தென்றும் அவர்கள் இன்ன உத்தியோகமுடையவர்கள் என்றும் இன்ன ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. இருந்த போதிலும் லாகூருக்குச் சமீபத்திலுள்ள குஜர்வாலா என்னும் ஜில்லாவில் 1899-ம்௵ போலீஸ் சூப்பிரண்டெண்டாயிருந்தமிஸ்டர். R.D.ஸ்பென்சர் என்பவர்மற்றொருஐரோப்பிய ஆபீசருடன் வேட்டையாடக் காட்டிற்குச்சென்றதாகவும், இருவர்களும் வேட்டையாடி ஒரு காட்டுப்பன்றியைச்சுட்டுக்கொன்றதாகவும், இவர்களுள் போலீஸ் சூப்பிரண்டெண்டு அந்தப்பன்றியை எடுத்துக்கொண்டு வரும்படி தம்முடன் கூட அழைத்துக்கொண்டு போயிருந்த ராபட் ஆர்டர்லிக்கு உத்தரவுசெய்ய, அவன் முகம்மதியனானபடியால் அந்த மிருகத்தைத் தொடமாட்டேனென்று சொன்னதாகவும், இதில்போலீஸ் சூப்பிரண்டெடிற்குக் கோபம்பிறந்து ராபட் ஆர்டர்லியைத் தம்முடைய கையிலிருந்த துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும், 1899-ம் ௵த்தில் பஞ்சாப் மாகாணத்தில் ஒரு பெரிய பிரஸ்தாபம் உலாவிவந்ததென்றும், இதைத்தான் இப்போது பஞ்சாபி பத்திரிகையில் குறிப்பிட்டுப் பேசினதாகவும் பத்திராதிபர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

பஞ்சாபிப் பத்திரிகையில் எழுதப்பட்ட இந்த சமாசாரம், ஐரோப்பியர்கள்மீது சுதேசிகளுக்கு விரோதமான எண்ணத்தை மூட்டக்கூடிய பிரசுரமென்பதும், இ. பி. கோ. 153 A பிரிவின் குற்றத்திற்கும் உள்ளாகுமென்பதும் பஞ்சாப் கவர்ன்மெண்டாரின் கக்ஷி. இ. பி. கோ. 153-வது பிரிவு அடியிற்கண்ட பிரகாரம் கூறுகின்றது:—

யாரேனும் எழுத்துமூலமா யாகிலும், பேச்சு மூலமாயாகிலும் அல்லது குறிப்பான அடையாளங்கள் மூலமாயாகிலும் அல்லது பார்க்கக்கூடிய உருவங்கள்மூலமாயாகிலும் மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களின் பிரஜைகளாகிய நானாவித வகுப்பினர்களுக்குள் ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார்மீது வெறுப்பு அல்லது விரோதமான எண்ணம் உண்டாகும்படித் தூண்டிவிட்டாலும், அல்லது தூண்டப்பிரயத்தனம் செய்தாலும் அவனுக்கு இரண்டு வருஷம்வரையில் ஜெயில் தண்டனையாவது அல்லது அபராத தண்டனையாவது அல்லது இரண்டுதண்டனையுமாவது விதிக்கப்படும்.

வியாக்கியானம் :—மாக்ஷிமை தங்கிய மகாராஜாவின் பிரஜைகளாகிய பலவகுப்பினர்களுக்குள், ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார் மீது வெறுப்பு அல்லது விரோதமான எண்ணத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிற அல்லது உண்டாக்கக்கூடிய சுபாவமுடைய விஷயங்களை விலக்கவேண்டுமென்கிற யோக்கியமான எண்ணத்துடன் யாதொருகெட்ட எண்ணமுமின்றி எடுத்துக்காண்பிப்பதுஇந்தப் பிரிவின் பிரகாரம்குற்றமாகமாட்டாது.

இப்போது பஞ்சாபிப்பத்திராதிபர்கள் தங்களுடைய பஞ்சாபி பத்திரிகையில் எழுதிய சமாசாரங்கள் மேற்கூறிய பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் சுதேசிகளுக்கு ஐரோப்பியர்மீது வெறுப்பான அல்லது விரோதமான எண்ணத்தை உண்டுபண்ணக்கூடியதா என்று யோசிப்போம். இத்தேசத்தில் சமயாசமயங்களில் சில கோபகுணமுடைய ஐரோப்பிய ஆபீசர்களும் சோல்ஜர்களும் திடீரென்று கோபம் கொண்டு தண்ணிக்காரியையும் சுதேச பங்காக் கூலிகளையும் அடித்தும் கால் பூட்சால் உதைத்து மிருக்கிறார்கள். உதைபட்டவர்கள் இறந்துபோயு மிருக்கிறார்கள். இப்படி துஷ்டகுணமுடைய ஐரோப்பியர்கள் செய்வது நல்ல சுபாவகுணமுடைய அவர்களுடைய இனத்தாருக்கே பிடிக்காதவிஷயம். கவர்ன்மெண்டார் லார்ட்கர்ஜன் காலத்தில் சிலகோபம் கொண்ட ஐரோப்பியர்களிடம் காணப்படும் இந்த துஷ்டத்தன்மையை அடக்க முயன்று வந்ததும், சில மாதங்களுக்குமுந்தி சீமை பார்லிமென்டில் ஒரு அங்கத்தினர் இந்தத் துஷ்டத்தனத்தை அடக்கி வரும்படி. இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்துவரக்கூடாதா வென்று இந்தியா காரியதரிசியைக் கேள்வி கேட்டதும் இத்தேசித்திலுள்ள ஜனங்களுக்கும் அதிலும் ஆங்கிலம் படிக்கத்தெரிந்த சகலஜனங்களுக்கும் தெரிந்தவிஷயம். ஆகையால் ஆங்கில பாஷை தெரிந்த சுதேச வகுப்பினர்களுக்குச்சிலதுஷ்டத்தன்மையையுடையஐரோப்பிய ஆபீசர்கள் சமயா சமையங்களில் சுதேசிகளை இம்சித்து வருகிறார்களென்றும் இதற்கு அவர்களுடைய இனத்தாராகிய மற்ற ஐரோப்பியர்களும் கவர்ன்மெண்டாரும் உடந்தையாயிராமல் இந்தச்செய்கையைக் கண்டித்து வருகிறார்கள் என்றும் நன்றாய்த்தெரியும். பஞ்சாபி பத்திரிகையும் ஆங்கிலபாஷையில்தான் பிரசுரஞ் செய்யப்படுகின்றது. ஆகையால் "பஞ்சாபி" பத்திரிகையை இத்தேசத்தில் வாங்கி வாசிக்கக்கூடியவர்கள், சில ஐரோப்பியருடைய துஷ்டத்தனத்தை மற்ற ஐரோப்பியர்களும் கவர்ன்மெண்டாரும் கண்டித்து வருகிறார்கள் என்று

தெரிந்துகொண் டிருப்பவர்களாகிய ஆங்கிலம் கற்ற சுதேசிகள்தான்.

இப்படிப்பட்ட சுதேசிகள் பஞ்சாபி பத்திரிகையில் எழுதிய வாக்கியங்களை வாசித்ததனல் அவர்களுடைய மனத்தில் யார் மீதேனும் வெறுப்பானவும் விரோதமானவுமான எண்ணம் கிளம்பக்கூடியதாயிருந்தால் அவர் இந்த ராபட் ஆர்டர்லியைக்கொன்ற ஐரோப்பிய ஆபீசரேயொழிய, ஐரோப்பிய ஜாதியார்கள்எல்லோர் பேரிலும் விரோதமான எண்ணம் உண்டாகமாட்டாது. மேலும் போலீஸ் சூப்பரன்டெண்டு ராபட் ஆர்டர்லியைச் சுட்டுக்கொன்றதாகச் சொல்லப்படும் சம்பவம் 6 வருஷங்களுக்குமுன் நடந்தது. அப்போது ராபட் ஆர்டர்லியைப்போலீஸ் சூப்பிரன்டெண்டு சுட்டுக்கொன்றுவிட்டதாகப் பெரும்பிரஸ்தாபமிருந்ததென்று பிரஸ்தாப போலீஸ் சூப்பிரன்டெண்டு மிஸ்டர் ஸ்பென்ஸரே இந்தப் பஞ்சாபி கேசில் வாக்குமூலம் கொடுத்திருக்கின்ருர். ஆகையால் பஞ்சாபிப்பத்திராதிபர்கள் தாங்கள் கேள்விப்பட்டதை நம்பி தங்களுடைய பத்திரிகையில் எழுதி கவர்ன்மெண்டாருடைய கவனத்தை இழுத்தால் இம்மாதிரி சம்பவங்கள் இனிநடந்தேரு வண்ணம் கவர்ன்மெண்டார் கண்டித்து ஏற்பாடு செய்வார்கள் என்கிற நல்ல எண்ணத்துடன் எழுதியிருக்கிருர்கள். மேலும் பிரஸ்தாப போலீஸ் சூப்பிரன்டெண்டைப் பஞ்சாபிப் பத்திராதிபர்களுக்கு நேரில் தெரியமாட்டாது. சூப்பிரன்டெண்டிற்கும் இவர்களுக்கும் யாதொரு விரோதமும் கிடையாது என்று இந்தக்கேசின் விசாரணையில் ருஜூப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்தக்கேசை கவர்ன்மெண்டார் விசாரித்து இம்மாதிரி சம்பவங்கள் இனி நடந்தேரு வண்ணம் நல்லெண்ணத்துடன் பத்திரிகையில் எழுதியிருப்பதாக வியக்கத்தமாய் விளங்குகின்றது. ஆகையால் பஞ்சாபிப் பத்திராதிபர்கள் எழுதிய வாக்கியங்களில், ஐரோப்பியர்கள் மீது முகமதியர்கள் மனதில் யாதொரு வெறுப்பான அல்லது விரோதமான எண்ணத்தின் சாயல்கூட உண்டாகக்கூடியதாகப் பொருள் படத்தக்கது யாதொன்றையும் சிறிதும் காணேம். ஆகையால் அவர்கள் எழுதிய விஷயங்கள் இ. பி. கோ. 153 A பிரிவின் குற்றத்திற்கிலக்காக மாட்டாவென்று சந்தேக மின்றிச் சொல்லலாமென நாம் அபிப்பிராயப்படுகின்றேம். நல்ல திருக்கட்டும் : பஞ்சாபி பத்திராதிபர்கள் எழுதிய சமாசாரங்கள், சுதேசிகள் மனதில் ஐரோப்பியர்மீது விரோதமான எண்ணத்தைக்கிளப்பிவிடக்கூடிய சுபாவ முடையவையென்றே எண்ணிக்கொள்வோம். ஏன் அவர்கள் 153 A பிரிவின் வியாக்கியானத்தில் சொல்லப்பட்டபடி ஐரோப்பியர்களுக்கும்சுதேசிகளுக்கும் விரோதம்விளைவிக்கக்கூடிய சுபாவமுடையவிஷயங்களை விலக்கிவைக்கவேண்டுமென்கிற நல்லெண்ணத்துடன் தங்களுடைய பத்திரிகையில் எடுத்துக்காண்பித்திருப்பதாக எண்ணக்கூடாது ? பஞ்சாபி பத்திராதிபர்கள் ஐரோப்பியர்களுக்கும் சுதேசிகளுக்கும் விரோத மூட்டவேண்டு மென்கிற கருத்துடன்தான் எழுதியிருக்கிருர்கள் என்று தீர்மானிக்க அவர்கள் எழுதிய வாக்கியங்களில் யாதொரு ஆதாரத்தையும் காணேம்! ஆகையால் அவர்கள் எழுதிய வாக்கியங்கள் இ. பி. கோ. 153 A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற் கிலக்காக மாட்டாதென்று முடிவுசெய்கின்ரேம்.

இதன் பிறகு நான்காவது அயிட்டம், அதாவது, கவர்ன்மெண்டாரே பத்திராதிபர்களை நேரில் பிராசிக்கியூட் செய்தது நியாயமா என்பதைக்குறித்து ஆலோசனை செய்து பார்ப்போம். பஞ்சாபி பத்திராதிபர்கள் எழுதியவாக்கியங்களில் கவர்ன்மெண்டார் மீதும் புகார்செய்திருக்கிருர்கள் என்பது வியக்தமாய் விளங்குகின்றது. அதாவது, ஐரோப்பியர்கள் சுதேசிகளை இம்சிக்கும் சம்பவங்களைக்குறித்துப்பாரபக்ஷமின்றிகவர்ன்மெண்டார் விசாரணை செய்கிறதில்லையென்றும் பிரஸ்தாப போலிஸ் சூப்ரின்டெண்ட் ராபட்டார்டர்லியைக் கொன்ற சமாசாரம் கவர்ன்மெண்டார் காதிற்கு எட்டியும் அவர்கள் அதைப்பற்றிகவனியாமல் பிரஸ்தாபபோலீஸ்சூப்பிரன்டெண்டை வேறொரு ஜில்லாவிற்குமாற்றி இந்தராபட்டார்டர்லி சூப்பிரண்டால் சுட்டுக்கொலைசெய்யப்பட்டசமாசாரத்தை வெளிக்குவராமல் செய்யும்படி தாக்கீதுசெய்து வேறொரு சூப்பிரன்டெண்டை இந்த ஜில்லாவிற்கு அனுப்பினர்கள் என்று எழுதியிருக்கிருர்கள். இந்த சமாசாரங்கள் கவர்ன்மெண்டாரின் பேரில் செய்யப்பட்ட புகார் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் பஞ்சாப்கவர்ன்மெண்டார் இந்த வாக்கியங்களைத்தங்கள் பேரில் (கவர்ன்மெண்டார்பேரில்) பிரஜைகளுக்கு வெறுப்புண்டாக்கக்கூடிய சுபாவமுடையவையாக நினைக்கவில்லை. ஏனெனில், அப்படி நினைத்திருப்பார்களேயாகில் பத்திராதிபர்கள்பேரில் இ.பி.கோ. 124 A-பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ராஜதுரோகக்குற்றம் சாட்டியிருப்பார்கள். அப்படிச்சாட்டியிருந்தால் கவர்ன்மெண்டாரே பத்திராதிபர்களை நேரில் பிராசிக்கியூட் செய்யவேண்டியது அவசியந்தான். ஆனல் பஞ்சாப் கவர்ன்மெண்டார் தங்கள் பேரில் பஞ்சாபி பத்திராதிபர்கள் கூறியிருந்த புகாரை நல்லெண்ணத்துடன் கூறியிருப்பதாகவோ அல்லது அதைப்பற்றி கவனியாமலோ அந்தப் புகாரைக் குற்றமாகக்கொள்ளாமல் பஞ்சாபிப்பத்திராதிபர்கள், ஐரோப்பிய ஆபீஸர் ராபட் ஆர்டர்லியைச்சுட்டுக்கொன்றதாக எழுதியிருந்த ஒரு சமாசாரத்தைபட்டிலும் ஐரோப்பியர்களுக்கும் சுதேசிகளுக்கும் விரோதமுண்டாக்கக்கூடிய சுபாவமுடைய பிரசுரமாக நினைத்து இ. பி. கோ. 153 A-பிரிவின் குற்றம் சாட்டியிருக்கிருர்கள். அங்ஙனமிருக்க, பத்திராதிபர்கள் எழுதியது பொய் என்றும் அவர்கள் அப்படி எழுதியதால் தம்முடைய மானம் ஊனப்பட்டிருக்கிறதென்றும், பத்திராதிபர்கள் தம்மேல்கூறியிருக்கும்பழியினின்று தம்மைவிலக்கி உலகத்தாருக்குத் தாம் மாசற்ற மனிதன் என்று காண்பிக்கும்பொருட்டுப்பத்திராதிபர்களை பிராசிக்கியூட் செய்வது தம்முடைய கடமை என்றும் நினைக்கவேண்டியது, எந்த ஐரோப்பிய ஆபீஸர் கொலைக்குற்றம் செய்ததாகப் பத்திராதிபர்களால் கூறப்பட்டிருக்கிருரோ அவருடைய கடமையாகும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் சரியான வழியில் பிரயோகப்படுத்தி வருகிருர்களா என்று இத்தேச நன்மையை நாடி கவனிக்கக் கடமைப்பட்ட கவர்ன்மெண்டார் பஞ்சாபிப் பத்திராதிபர்கள் எழுதிய வாக்கியங்களைப் பார்த்தவுடன் அவர்களைப் பிராசிக்கியூட் செய்யப்போ

லீஸ் சூப்பரன்டெண்டிற்கு உத்தரவுகொடுத்து, மாசற்ற மனதுடன் நடுநிலைமையிலிருந்து பஞ்சாபி பத்திராதிபர்கள் எழுதியது உண்மையா அல்லது பொய்யா என்று தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கப் பத்திராதிபர்கள் ஐரோப்பிய ஆபீசர் பேரில் செய்த புகாரைத் தங்கள் பேரில் இழுத்துப்போட்டுக்கொண்டு பத்திராதிபர்களைப் பிராசிக்கியூட் செய்ய முன்வந்தது சிறிதேனும் நியாயமான காரியமாக எண்ணப்படக் கூடியதாயில்லை. இப்படிப்பட்ட கேசுகளில் கவர்ன்மெண்டாரே பிராசிக்கியூட் செய்ய முன்வருவது எதற்குச் சமானமாயிருக்கிறதென்ருல், ஓ ! மஹாஜனங்களே ! நீங்கள் எங்களுடைய உத்தியோகஸ்தர்கள் மீது ஏதேனும் புகார் செய்தால் நாங்களே உங்களைப்பிராசிக்கியூட் செய்வோம். ஆகையால் எங்களுடைய உத்தியோகஸ்தர்கள் என்ன அக்கிரமங்கள் செய்த போதிலும் அவைகளைப்பற்றி நீங்கள் புகார் செய்யக்கூடாது என்று இந்தியாமுழுதிலும் ஒரு கிராமங்கூடத் தப்பாமல் கவர்ன்மெண்டார் தண்டோராபோட்டதற்குச் சமானமாகவிருக்கிறது.

இப்படிகவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பேரில் புகார் வரும்போது கவர்ன்மெண்டார் இந்தப்புகார் உண்மையா பொய்யா என்று அறிந்துகொள்ளப்பிரயாசப்படாமல் புகார் செய்தவர்கள்பேரில் 153 A என்கிற கூர்மையான அம்பை எய்வது, இத்தேசத்தில் சர்க்கார் அதிகாரிகள் பெருத்த அக்கிரமங்களைச் செய்யத் தூண்டிவிட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மேன்மையும் பிரக்கியாதியும் ஊனப்படுவதற்கு ஏதுவாயிருக்கும். கவர்ன்மெண்டார் பத்திராதிபர்கள் எழுதியது உண்மையா பொய்யா என்று அறிந்துகொள்ளும் பொட்டு சூப்பிரண்டெண்டைவிட்டு பத்திராதிபர்களைப் பிராசிக்கியூட் செய்வதற்கு இந்தக்கேசில் தகுந்த காரணங்களிருக்கின்றன. ஏனெனில், பத்திராதிபர்கள் எழுதியது முழுதிலும் பொய் என்று நினைப்பதற்கு கிஞ்சித்தாயினும் காரணமில்லை. போலீஸ் சூப்பரென்டெண்டு மற்றொரு ஐரோப்பிய ஆபீசருடன் வேட்டைக்குப்போனதும் வாஸ்தவம்! போலீஸ் சூப்பிரென்டெண்டுதம்முடன் ஆர்டர்லிராபட் ஆலியை அழைத்துக்கொண்டு போனதும் வாஸ்தவம்! ராபட் ஆலி முகமதியன் என்பதும் வாஸ்தவம்! பஞ்சாபி பத்திராதிபர்கள் எழுதிய வாக்கியங்களிலிருக்கிற சந்தேகமெல்லாம்கூடி போலிஸ் சூப்ரென்டெண்டு ராபட் ஆலியைச் சுட்டுக்கொன்றது வாஸ்தவமா என்கிற ஒருபிரஸ்னை மட்டிலும் சந்தேகமாயிருக்கின்றது. வேட்டையாடிவிட்டுப் போலிஸ் சூப்ரென்டெண்டு திரும்பிவரும்போது அவர் தம்முடன் அழைத்துக் கொண்டு போன ராபட் ஆலியைக்காணேம் ! அப்போதே போலிஸ் சூப்ரென்டெண்டு ராபட் ஆலியைக் கொன்று விட்டார் என்று ஒரு பெரிய பிரஸ்தாபம் ஜனங்களுக்குள் பரவி வந்தது. இந்த சந்தர்ப்பத்தில் போலிஸ் சூப்ரென்டெண்டின் பேரில் வந்திருக்கும் பழியை அவர் விலக்கிக்கொண்டு உலகத்தாருக்கு அவர் சுத்தமான மனிதர் என்று காட்டும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருந்தால் பிரஜைகளுக்கு எவ்வளவு மன ஆறுதல் உண்டாயிருக்கும்? கவர்ன்மெண்டாரே அந்தக்கேசில் பிராசிக்கியூஷன் தரப்பாராய்ப் போய்விட்டபடியால் போலிஸ் சூப்ரென்டெண்டு ராபட் ஆலியைக் கொன்றதும் கொல்லாததும் நிச்சயமாய்த் தெரியவில்லை. கவர்ன்மெண்டாரே பிராசிக்கியூஷன் தரப்பாராகவிருக்க, அவர்களுக்கு விரோதமாக சாக்ஷியம் சொல்ல யார் அஞ்சாமல் முன்னுக்குவரமுடியும்? இந்தக்கேசில், போலிஸ் சூப்ரென்டெண்டே பிராசிக்கியூட்டராக விருந்தால் ராபட் ஆலி மரணமடைந்த விதம் நிச்சயமாய்த் தெரிந்துபோகும். ஆதலால் பஞ்சாப் கவர்ன்மெண்டார் தாங்களே இந்தக்கேசைப் பிராசிக்கியூட் செய்ய முன்வந்தது உத்தமமான காரியமாக நினைக்கக்கூடியதாயில்லை என்று முடிவு செய்கின்ரேம்.

இதன்பிறகு இந்தக்கேசை விசாரணை செய்த ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் மான்ட் பத்திராதிபர்களுக்கு விதித்திருக்கும் தண்டனை நியாயமான தண்டனையா என்று யோசித்துப் பார்ப்போம். பத்திராதிபராகிய மிஸ்டர் லாலா ஜெஸ்வன்ட்ராய்க்கு 153-வது A. பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் முழு ஜெயில் தண்டனையையும் மாஜிஸ்டிரேட் விதித்திருக்கிருர். இந்தக்கேசை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் இப்படி கடுமையான தண்டனை விதித்ததற்குத் தம்முடைய தீர்ப்பில் ஒரு காரணமும் கூறியிருக்கின்ருர். அதாவது என்ன வென்ருல், பஞ்சாபி பத்திராதிபர்கள் எழுதிய வாக்கியங்களை ஒரு முகமதிய ஜாதி வாலிபன் பார்த்தபோதிலும் அவனுடைய இரத்தம் பொங்கி ஐரோப்பியர்கள் பேரில் விரோத மூட்டக்கூடிய சுபாவமாயிருக்கின்றன வென்று சொல்லியிருக்கின்ருர். இப்படி இவர் அபிப்பிராயப்பட்டபடியால் இவர் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற இரண்டு வருஷ தண்டனையும் விதித்துவிட்டார், இவருடைய செய்கையை நாம் இவ்விடத்தில் கண்டனம் செய்யவேண்டியது அனுவசியம். ஏனெனில், பிரஸ்தாப மாஜிஸ்டிரேட் பத்திராதிபருக்கு விதித்த தண்டனை நியாயமல்ல வென்று அபிப்பிராயப்பட்டு அப்பீல் கோர்ட்டார் அத்தண்டனையை 6-மாத தண்டனையாகக் குறைத்து விதித்திருக்கின்ருர்கள். இந்த 6-மாத தண்டனைகூட பத்திராதிபர்கள் செய்ததாகச் சொல்லும் குற்றத்திற்கு அதிகமான தண்டனை யென்றே அபிப்பிராயப்படுகின்ரேம்.

இம்மாதிரி கேஸ்களில் கோர்ட்டார் தண்டனை விதிக்கும்போது குற்றவாளி செய்த குற்றத்தால் விளைந்திருக்கும் அல்லது விளையக்கூடிய தீமையைச் சீர்தூக்கிப்பார்த்து தண்டனை விதிக்கவேண்டும் நாலைந்து வருஷங்களுக்கு முன் திருநெல்வேலியில் சில கிறிஸ்தவப் பாதிரிமார் கோகுலஜாதியைச்சேர்ந்த ஒரு மைனர் பெண்ணை கிறிஸ்தவமார்க்கத்தில்சேர்த்துத் தங்களுடையமடத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள். அப்பெண்ணின் பந்துக்களுக்கு இந்த சமாசாரம் எட்டி அப்பெண்ணை மீட்க எத்தனித்ததில் பாதிரிமார்களுக்கும் அப்பெண்ணின் பந்துக்களுக்கும் கலகம் நேர்ந்து அப்பெண்ணின் இனத்தார்கள் பாதிரிமார்களால் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை யடைந்தார்கள். அடையவே, இவர்கள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள, இந்தக்கேஸ் கனம் பொருந்திய ஜஸ்டிஸ் சர் சுப்பிரமணிய அய்யர், கனம்பொருந்தியசர் ஜஸ்டிஸ் பாஷியமய்யங்கார் அவர்கள் ஆகிய இரு ஜட்ஜிகளும் கூடியிருந்த கோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது. இவர்கள், இந்தக்கேசில் பாதிரிமார்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டிருக்கும் இடைப்

பெண் மைனரானபடியால் அவளை அவளுடைய இனத்தார்கள் மீட்க்க முயன்றது நியாயந்தான் என்று சொல்லி தண்டனை அடைந்தவர்களை விடுவித்துவிட்டார்கள். இப்படி ஹைகோர்ட்டார் பெண்ணின் இனத்தாரைவிட்டுவிட்டதில் ஒரு பாதிரியாருக்குக் கோபம் பிறந்து மைசூரில் பிரசுரமாகும் ஒரு கிறிஸ்தவ சஞ்சிகையில் ஹைகோர்ட்டின் நியாயமும் பிரக்கியாதியும் ஊனப்படும்படியாக எழுதியிருந்தார். இதைப்பார்த்த ஹைகோர்ட் வக்கீல் சங்கத்தார் பாரிஸ்டர் மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன் தலைமை கொண்டு ஷை பாதிரியாரை பிராசிக்கியூட் செய்யும்படியாகவாவது அல்லது அவர்பேரில் மான நஷ்டம் தொடுக்கும்படியாகவாவது உத்தரவு கொடுக்க வேண்டுமென்று மனு செய்துகொண்டார்கள். ஹைகோர்ட்டார் அந்த மனுவை விசாரித்து ஷை கிறிஸ்தவப் பாதிரியார் ஹைகோர்ட்டார் மீது குறை கூறி எழுதியிருக்கும் சஞ்சிகை அத்தேசத்தில் அதிகமாய்ப்பரவவில்லை யென்றும் சொற்பகாப்பிகள் அதாவது 200-அல்லது 300-சஞ்சிகைகள்தான் அச்சிடப்படுகின்றன வென்றும் இவர் எழுதியதைப் பார்க்கக்கூடிய 200 அல்லது 300 பேர்கள் ஹைகோர்ட்டைப்பற்றித்தாழ்வாய் நினைத்தால் ஹைகோர்ட்டின் பிரக்கியாதியான மதிப்பு ஊனமடையாதென்று சொல்லி ஷை பாதிரியார்பேரில் மான நஷ்டதாவா தாக்கல் செய்ய உத்தரவு கொடுக்காமல் மனுவைத் தள்ளிவிட்டார்கள். அதுபோல் பஞ்சாபி பத்திராதிபர்கள்பேரில் வந்திருக்குங்கேசைப்போலுள்ள கேசுகளை விசாரணைசெய்து தீர்ப்புச் சொல்லும் மாஜிஸ்டிரேட்டுகள் குற்றவாளிகள் செய்த பிரசுரங்களால் என்ன தீமை விளைந்திருக்கிறது அல்லது என்ன தீமை விளையக்கூடுமென்று சீர்தூக்கிப்பார்த்து தண்டனை சொல்லவேண்டும். பிரஸ்தாப பஞ்சாபி கேசை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் பஞ்சாபி பத்திரிகை எவ்வளவு தூரம்பரவுகிறதென்றும் எத்தனை பத்திரிகைகள் அச்சடிக்கப்படுகின்றனவென்றும் அதை எத்தனை ஜனங்கள் வாங்கி வாசிக்கிறார்கள் என்றும், அதைவாசித்த 1906ம் ஹூ பிப்ரவரிமீ 11வ முதல் நாளது வரையில் இந்தப் பிரசுரம் என்ன தீமையை விளைவித்திருக்கிறதென்றும், அல்லது இனிமேலாகிலும் என்ன தீமைவிளைவிக்கக்கூடுமென்றும் சீர்தூக்கி ஆராய்ந்துபார்த்து தண்டனைவிதித்தால், மாஜிஸ்டிரேட், பத்திராதிபருக்கு இரண்டுவருஷக் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கமாட்டார். மேலும் பத்திராதிபர்கள் ஸ்தானப்பொறுப்பை ஏற்றுப் பத்திரிகை நடத்திவருகிறவர்கள் கூடிய மட்டிலும் யோக்கிதையும் அந்தஸ்தும் பொருந்தினவர்களாயிருப்பார்கள். இவர்கள் சமயாசமயத்தில் சட்டவிரோதமான காரியத்தைச்செய்ததாக எண்ணப்பட்டாலும் இவர்களுக்கு நமோதாவில் சொற்ப தண்டனை வித்தால் அதுவே இவர்களுக்குச் சரியான புத்தியைப் புகட்டும்.

ஆகவே, பஞ்சாபி பத்திராதிபர்களை நேரில் பிராசிக்கியூட் செய்தது நியாயவிரோதமான காரியமென்றும், பத்திராதிபர்கள் எழுதிய வாக்கியங்கள் இ. பி. கோ. 153 A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கிலக்காக மாட்டாவென்றும் முடிவு செய்கின்றோம்.

பத்திராதிபர்கள் ஹைகோர்ட்டில் கிரிமினல் அப்பீல்தாக்கல் செய்திருக்கின்றார்கள். முடிவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

DELIVERING JUDGMENT IN COURT.

கோர்ட்டில் தீர்ப்பை வாசித்தல்.

கேசை விசாரணை செய்யும் கோர்ட்டார் தாங்கள் விசாரணை செய்த கேசிற்குத் தாங்கள் எழுதும் தீர்ப்பை வாதி பிரதிவாதிகளையாவது அல்லது அவர்களுடைய லாயர்களையாவது கோர்ட்டில் வைத்துக்கொண்டு பகிரங்கமாய்த் தீர்ப்பை வாசித்துக் கையெழுத்து செய்ய வேண்டுமென்று சிவில் புரொசீஜர் கோட் 320-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஹைகோர்ட்டாரும் சென்னையிலுள்ள இதர சிவில் கோர்ட்டார்களும் இந்தப் பிரிவைச் சிறிதும் புறக்கணியாமல் தீர்ப்புகளை வாசித்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வெளியூர்களிலிருக்கும் சில முனிசீப்தார்கள் அவகாசமில்லாததாலோ அல்லது அனுவசியமென் றெண்ணியோ தீர்ப்புகளை எழுதியிருந்தாலும் அவைகளை வாசிக்காமல் பிரதிவாதிபேரில் டிக்கிரி கொடுத்தோம்; வாதி பேரில் டிக்கிரி கொடுத்தோம் என்று தீர்ப்பின் முடிவைச் சொல்லிவிடுகிறார்கள் என்று வியாஜ்ஜியமாடும் கக்ஷிக்காரர்கள் குறை கூறுகின்றார்கள்.

இப்படி தீர்ப்புகள் கோர்ட்டில் வாசிக்கப்படாததால் கக்ஷிக்காரர்களுக்கு அனேக தீங்குகள் நேரிடுகின்றன. அபஜயப்பட்ட கக்ஷிக்காரன் கோர்ட்டாருக்கு மனு செய்து தீர்ப்பின் நகலைப் பெறும்பரியந்தம் அப்பீலுக்கு கிரௌண்டுக ளிருக்கிறதா இல்லையாவென்று அறிந்துகொள்ளமுடியவில்லை. ஆகையால் அவன் அப்பீலுக்குச் செய்யவேண்டிய பிரயத்தனங்கள் எல்லாம் தாமதப்படுகின்றன. கோர்ட்டார் எந்தெந்த சாக்ஷியின் சாக்ஷியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், எந்தெந்த சாக்ஷிகளின் வாக்குமூலத்தை நம்பாமல் எச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பிறர்க்குத் தெரிய மார்க்கமில்லாமலிருக்கின்றது. தீர்ப்பைக் கோர்ட்டில் வாசித்துவிடுவதில் வாதி பிரதிவாதிகளிருவருக்கும் நன்மை யிருக்கின்றது. தீர்ப்பைக் கோர்ட்டில் வாசித்தபின் கோர்ட்டார் அதில் ஏதேனும் சீர்திருத்தம் செய்தால் குற்றமாகும். இப்படி தீர்ப்புக் கோர்ட்டில் வாசிக்கப் படாமலிருப்பதில் கோர்ட்டார் புனராலோசனையின்பேரில் ஏதேனும் சீர்திருத்தம் செய்தபோதிலும் அதைக்கண்டு பிடிக்க சாத்தியப்படாது. தீர்ப்பு சொன்னதற்குப் பிந்தி ஒரு கோர்ட்டார் தீர்ப்பில் சீர்திருத்தம் செய்ததாகச் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் நோட்டிசிற்குக் கொண்டுவரப்பட்டு இவர்கள் அந்தக்கேசைப் புனர் விசாரணை செய்யும்படி அனுப்பியிருக்கிறார்கள். ஆகையால் தீர்ப்பைக் கோர்ட்டில் வாசிக்காமல் வாய்ச்சொல்லால் சுருக்கமாய்த் தீர்ப்புச் சொல்லும் வழக்கம் சென்னபட்டணம் ஹைகோர்ட்டாரால் முன் ஒரு சமயம் கண்டிக்கப்பட்டிருக்கின்றது. இப்போதும் பம்பாய் ஹைகோர்ட்டார் இந்த துர்வழக்கத்தைக் கண்டித்துத் தீர்ப்பு சொல்லும் ஒவ்வொருவரும் சி. பு. கோ. 320 பிரிவை அனுசரித்துத் தீர்ப்புகளைக் கோர்ட்டில் வாசிக்கவேண்டியது மிக அவசியமென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

பிரிவிகவுன்சில்.

ஹிந்துக்கள் கக்ஷிக்காரர்களாக விருக்கும் ஒரு பெந்தகப் பத்திரத்தில் பெந்தகம் வைத்துக் கடன்வாங்கியவர்கள் 100-க்கு இரண்டு ரூபாய் மேனிக்கு வட்டி சேர்த்துக் கூடின வட்டியும் முதலும் சேர்த்துச் செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்வதாக எழுதப்பட்டிருந்தால் “100-க்கு இரண்டு வட்டி” என்பதற்கு 100-க்கு மாதத்திற்கு இரண்டு ரூபாய் வட்டி என்று கக்ஷிக்காரர்கள் எண்ணி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. லெக்காசிங் V. சாம்பட்சிங் இ. லா. ரி. 28. அல. 724.

அலகபாத் ஹைகோர்ட்டு.

ஒரு பக்காக் கூரைக்கட்டடம் சமயா சமயங்களில் பிரித்துப்புதுப்பிக்கப்படக் கூடியதாயிருந்த போதிலும் இந்தியன் ஈஸ்மெண்ட்டு ஆகட் 606-ம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்வத தன்மையையுடையதாக எண்ணப்படவேண்டும். நாஜர் அல்ஜமான்கான் A அஜாம் அல்லா. இ. லா. ரி. 28. அல. 741.

புல்பெஞ்ச்.

ஒரு வக்கீலுக்கு ஒருவன் தன்னுடைய கேசைக் கொடுத்து வக்கிலாக நியமிப்பதாகவும் சட்டப்பிரகாரம் அந்தக்கேசிற்கு என்ன பீஸ் சேரவேண்டுமோ அதையும் தருவதாக வாக்குத்தத்தம் செய்தான். ஆனால் நிறைவேற்றவில்லை. வக்கீல் இவன் பேரில், ஒப்பந்தம் மீறிநடந்ததற்காக நஷ்டதாவா கொண்டுவந்தார். ஒப்பந்தம் எழுத்து மூலமாயில்லாமலிருப்பதால் Legal Practitioners ஆகட் (லாயர் ஆக்ட்) 28-வது பிரிவின்படி வியாஜ்ஜியம் செல்லாது என்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 28 அல. 794.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஒரு பிரியாதை ஒரு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கி. பு. கோ. 203-வது பிரிவின்படி தள்ளும்படி செய்துவிட்டால் அதை மறுபடியும் விசாரிக்கும்படி உத்தரவு செய்ய கி. பு. கோ. 437, 439-வது பிரிவுகளின்படி ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. அப்படி ஹைகோர்ட்டார் உத்தரவு செய்யவேண்டுமானல் சாட்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி உத்தரவு செய்யலாம். இ. லா. ரி. 33 கல். 1282.

ஒரு ஹிந்து தான் ஜீவதசையி லிருக்கும்போதே A என்பவனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டான். அவன் இறந்துபோகும்போது, ஸ்வீகார புத்திரன் இறந்துபோனல் வேறொரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படியாகவும், அவனும் இறந்துபோனல் இன்னும் இரண்டு முறை ஒன்றின்பின் ஒன்றாய் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாகவும் தன்னுடைய பெண்சாதியாகிய M க்கு அதிகாரம் கொடுத்துவிட்டு இறந்துபோனன். A என்கிற ஸ்வீகாரப்புத்திரன் சில வருஷகாலத்திற்குப் பின் இறந்துபோனன். இந்த A இறந்துபோனபின்பு அந்த ஹிந்துவின் சொத்து வார்சுக்கிரமத்தில் A என்பவனுடைய விதவைக்கு வந்து சேர்ந்தது. இந்த விதவையும் இறந்துபோக அச்சொத்து M க்கு வந்து சேர்ந்தது. M. ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள்.

ஹிந்து லாப்பிரகாரம் விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதற்கு ஒருவரைபரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எப்போது சொத்து A. என்கிற ஸ்வீகாரப் புத்திரனின் விதைவைக்கு வந்து சேர்ந்ததோ அப்போதே மூலபுருஷன், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படி M. க்குக் கொடுத்த அதிகாரமும் முடிவடைந்துவிட்டது. ஆகையால் M. எடுத்துக்கொண்ட ஸ்வீகாரம் செல்லாது. மாணிக்கமால் போஸ் V. நந்தகுமார் போஸ். இ. லா. ரி. 33-கல். 1306.

லிமிடேஷன் ஆக்ட்டின்படி அப்பீல் தாக்கல்செய்யவேண்டிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் சிறிது தினங்கள் சென்று அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. அப்பீல்தார்கள் அப்படி தாக்கல் செய்ததற்குச் சில காரணங்களும் காண்பித்தது அப்பீல் தாக்கல்செய்யவேண்டிய காலத்தைச் சிறிது அதிகப்படுத்தும்படியாகவும் வேண்டிக்கொண்டார்கள். கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லை. அப்பீல்தார்கள் இந்த உத்தரவிற்கு விரோதமாக அப்பீல் செய்து கொண்டார்கள். இந்த உத்தரவு லெட்டர் ஸ்பேட்டன்ட் ஆக்ட் 15 - வது பிரிவின்படி தீர்ப்பாகமாட்டாது. ஆகையால் அந்த உத்தரவிற்கு அப்பீல் கிடையது என்று தீர்மானிக்கப்பட்டது. கோவிந்தலால் தாஸ் V. ஷிப்பா தாஸ் சட்டர்ஜி இ. லா. ரி. 33-கல். 1323.

ஒரு வியாஜ்ஜியத்தில் வாதி கொடுத்த பிரியாதுடன் 1836 பார்சி பாஷையில் எழுதிக்கொடுக்கப்பட்ட தீர்ப்பையும் தாக்கல் செய்திருந்தார். வாதி தரப்பு விசாரணை முடிந்தவுடனும் பிரதிவாதி தரப்பு விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முந்தியும் வாதி இந்தத் தீர்ப்பை தர்ஜிமா செய்து தஸ்தாவேஜி சாக்ஷியாக தாக்கல் செய்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டார். முனிசீப் கோர்ட்டாரும் ஜில்லாக் கோர்ட்டாரும், வாதி தரப்பு சாக்ஷி விசாரணை முடிந்துபோன பின்பு வாதி சொன்னபடியால் அந்தத் தீர்ப்பை சாக்ஷியமாக தாக்கல் செய்து கொள்ளமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். இந்த தஸ்தாவேஜியை சாக்ஷியமாக தாக்கல் செய்வது கோர்ட்டாருடைய இஷ்டத்தைப் பொறுத்திருந்த போதிலும் கீழ்க்கோர்ட்டார் இந்த இஷ்டத்தைச் சரியாய்ப் பிரயோகப் படுத்தவில்லை என்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 33-கல். 1345.

1301, 1302, 1303-ம் பசலிகளுக்கு, தங்களுக்குச் சேரவேண்டிய லாபத்தைப் பெறும்பொருட்டு வாதிகள், மூன்றுபேர்களின்பேரில் இதற்கு முன் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். ஆனால் ஒரு பிரதிவாதி பேரில் சம்மன் சார்வ் செய்யமுடியவில்லை. ஆகையால் முழு வியாஜ்ஜியமும் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு வாதிகள் அதே பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்வள். இதில் ஒரு பிரதிவாதி, முந்தின வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறபடியால், அதே விஷயத்தைக்குறித்து மறுபடியும் வியாஜ்ஜியம் கொண்டுவர வாதிகளுக்குப் பாத்தியமில்லை என்று கக்ஷிசொன்னர்.

லிமிட்டேஷன் ஆக்ட்டின்படி மறுபடியும் வியாஜ்ஜியம் கொண்டுவர வேண்டிய காலத்திற்குள் வியாஜ்ஜியம் கொண்டுவந்து விட்டால் அந்த வியாஜ்ஜியம் சி. பு, கோ. 99 A பிரிவின்படி செல்லுபடியுள்ளதென்று அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். சிதாராம்சிங் V லோக்பால்சிங் இ. லா. ரி. 28. அல. 749.

வாதியின் எஸ்டேட்டிற்கு கவர்ன்மெண்டார் சாஸ்வத தீர்வை விதித்திருக்கிறார்கள். இந்த எஸ்டேட்டின் வழியாக ஒரு நதிபாய்கின்றது. வெகு காலத்திற்குப் பிறகு வாதிகள் இந்த நதியில் மீன் பிடித்துக்கொள்ள பாத்தியதையில்லை என்று தாவா கொண்டுவரப்பட்டது இந்த தாவாவில், வாதி இந்த நதியில் மீன் பிடித்துக் கொள்ளலாமென்பதற்கு யாதொரு ருஜுவுமில்லாமற்

போனபோதிலும், வாதியின் எஸ்டேட்டிற்கு கவர்ன்மெண்டார் சாஸ்வத தீர்வை விதித்தபோது வாதிக்கு மீன் பிடித்துக்கொள்ளும் பாத்தியதையும் கொடுத்தே சாஸ்வத தீர்வை விதித்திருப்பார்கள் என்று யூகிக்கலாம். ஏனெனில், வாதி வெகு காலமாயும் தொடர் நேர்த்தியாயும் மீன் பிடித்துக்கொண்டுவருகின்றார். இ. லா. ரி. 33. கல். 1349.

குற்றம் சாட்டப்பட்ட பலபேர்களுள் ஒருவனை தகுந்த சாக்ஷியாக (Competent witness) விசாரணை செய்யப்படும் பொருட்டு அவனுக்கு நிபந்தனைக்குட்பட்ட மன்னிப்பு (Pardon) கொடுக்க இந்தியாவில் லோக்கல் கவர்ன்மெண்டார்க்கு அதிகாரமில்லை.

ஒரு உடன் குற்றவாளியைத் தகுந்த சாக்ஷியாக நினைத்து விசாரணை செய்யப்பட வேண்டுமானால் அவன் எந்தக்கேசிற்காக சாக்ஷியாக விசாரணை செய்யப்படுகின்றானோ அந்தக்கேசில் அவன் குற்றம் சாட்டப்பட்டிருக்கக்கூடாது. அப்படி சாட்டப்பட்டிருந்தால் அவன் பேரில் வந்திருக்கும் கேசை வாப்பிஸ் கொடுத்துவிட்டு அவனை டிச்சார்ஜ்செய்து போலீஸ் பந்தோபஸ்திலிருந்துவிடும்படி உத்தரவு செய்து பிறகு அவனை சாக்ஷியாக விசாரணை செய்யவேண்டும்.

கோர்ட்டார் ஒரு அப்ரூவர் சாக்ஷியத்தை ஏற்றுக்கொள்வதில் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அவன் சொல்லும் சாக்ஷியம் இதர சாக்ஷியத்திற்கு ஒத்திருக்கிறதா என்று கவனித்து வருவது மல்லாமல் அவன், நிர்ப்பந்தத்தை முன்னிட்டாகிலும் அல்லது தூண்டுதலை முன்னிட்டாகிலும் சாக்ஷியம் சொல்லுகிறானா அல்லது இயல்பாகவே சொல்லுகிறானா என்று கவனிக்க வேண்டும் இ. லா. ரி. 33 கல். 1353.

---

(1) ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர். }

சிவில் அப்பீல்.

டோஸ் திம்மன்ன பத்தா—(வாதி) அப்பீல் வாதி.

கிருஷ்ண தான்ட்ரி—(வாதி) அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—ஒரு ஸ்தாவர சொத்தின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந் திருக்கும்போது அச்சொத்தை அடமானம் பெற்றுக் கொண்டவனுக்கு முந்திய பாத்தியதையா? பிந்திய பாத்தியதையா?

தீர்ப்பு:—ஒரு விதவை ஜீவனாம்சதாவா தாக்கல் செய்து ஒரு குறிப்பிட்ட ஸ்தாவர சொத்தின் பேரில் டிக்ரி கொடுக்கும்படி வேண்டிக்கொண்டனள். வியாஜ்ஜியம் ஆரம்பித்தபிறகும் முடிவாவதற்கு முந்தியும் பிரதிவாதி ஷை சொத்தை ஒருவனிடம் அடமானம்வைத்துக் கடன்வாங்கி ஜீவனாம்ச கடனுக்கு முந்திய கடனல்லாத வேறொரு கடனைத் தீர்த்தான். அச்சொத்தில் விதவைக்கு முன்பாத்தியதை என்றும், அடமானம்பெற்றுக்கொண்டவனுக்குப் பின்பாத்தியதை என்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29 சென். 508.

---

(2) ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர். }

சிவில் அப்பீல்.

ரெத்தினவேலு முதலியார் வகையிரா—(பிரதிவாதி) அப்பீல்வாதி.

குழந்தைவேலு பிள்ளை—(வாதி) அப்பீல்வாதி.

லா பாயின்ட்:—வேறொருவன் நிலத்தில் சாய்ந்து தொங்கிக்கொண்டிருக்கும்படியாக ஒருவன் வீடு கட்டிக்கொள்ளலாமா?

தீர்ப்பு:—அயல் நிலத்தில் சாய்ந்து தொங்கிக்கொண்டிருக்கும்படியாக ஒரு வீடு கட்டினால் அவன் அயலான் நிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசித்தவனாகிறான். அதற்காக அவன் பேரில் தாவா செய்யலாம். அப்படி தாவா செய்யாமல், 12 வருஷத்திற்கு அதிகமாக சும்மா விருந்துவிட்டுப் பிறகு வியாஜ்ஜியம் கொண்டுவந்து எடுத்துவிட முடியாதென்று தீர்மானித்திருக்கிறார்கள்—இ. லா. ரி. 29. சென். 511.

1, 2, இவ்விரண்டு கேசுகளும் 128-வது பக்கத்தின்தொடர்பு.

சதாவதானம்.

சென்ற மார்ச்சுமீ 10வ ஆதிவாரம் சென்னை விக்டோரியா டவுன்ஹாலில், மகாவித்வான்-தேவாமிர்தப்பிரசங்கக் களஞ்சியம்-கோட்டாற-நா-ப. செய்குதம்பிப் பாவலரவர்கள் சதாவதானஞ் செய்தார்கள். மிஸ்டர் கண்ணபிரான் முதலியாரவர்கள் சபா நாயகராகத் தெரிந்தெடுக்கப் பட்டனர். பாவலரவர்களைப் பரீட்சை செய்வதற்குப் பலவித்வான்கள் வந்திருந்தனர். நாவில் தம்மிஷ்ட தேவநாம உச்சரிப்புடனும், கரத்தில் இலாடசங்கிலியைக் கழற்றும் செய்கையுடனும் அவதானியார் அவதானத்தை யாரம்பித்தனர். கல்லெறியுணர்தல், நெல்லெறியுணர்தல், பாத்திர சப்தபேதந்தெரிதல், மணியோசையெண்ணல், நீர்ப்பேதங்கண்டுபிடித்தல், சீட்டு விளையாடல் பதினாறு வீட்டி லிலக்க மடைத்தல், ஓர் தொகை சொன்னவுடன் மொத்தத்தை முன்னே சொல்லல், ஏற்படுத்திக்கொண்ட ஓர் தொகையில் அடித்த தொகை யின்னதெனச் சொல்லல், பத்திற் கதிகப்படாத தொகைகளைக் கூட்டுவதில் நூறு சொல்லுதல் முதலிய கணித அவதானங்கள் செவ்வனே நடைபெற்றன. ஒருவர் பிறந்த மாதத்தைச் சொல்லுதல், தேதிசொல்லுதல், வயது சொல்லுதல், வருஷஞ் சொல்லுதல், வருட, மாதம், தேதியுசாவி அதற்குக் கிழமை சொல்லுதல் ஆகிய சோதிட அவதானங்கள் மண்டபத்தில் இருந்தவர்களெல்லாம் ஆச்சரியப்படும்படி அதிவிரைவாயும் திருத்தமாகவும் முற்றுப்பெற்றன. இருபதெழுத்துக்குட்பட்ட கண்ட பத்திரிகை சொல்லல், இலக்கிய பாடம் திருவிளையாடல் மாமனாக வந்து வழக்குரைத்த படலம் பிரசங்கித்தல், வெண்பாவை யிருமுறை சொன்னவுடன் பாடஞ் சொல்லுதல், வெண்பாவுங் கலித்துறையும் பாடுதல் ஆகிய செந்தமிழ் அவதானங்கள் கற்றோரு மற்றோரும் வியந்துவியந்து புகழும்படி யோரெழுத்தும் பிழைபடாமல் நிறைவேறின. வெண்பாவுங் கலித்துறையும் பாடல் என்னும் கடைசியாய்க் குறிப்பிட்ட அவதானத்தில் "விராடனையே பெண்ணெனலாமே" எனவும், "மாமனுக்குக் கந்தன் மகன்" எனவும், "கண்கெட்ட பின்னென்றுங் காணாத காக்ஷியைக் கண்டனரே" எனவுமீற்றடிகள் பரீக்ஷகர்களாற் கொடுக்கப்பட்டன. அவதானியார் அதற்கேற்பப் பின்வருஞ் செய்யுட்களைப் பாடி முடித்தனர்.

"உண்ணும் பொழுது முறங்கும் பொழுதுமொன்றை
யெண்ணும் பொழுது மெரிமுன்னாப்—மண்ணில்
வராடவனை யேதெய்வ மன்னனெனுஞ் சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே."

"அண்டர் மூறையா லலைகடலிற் பள்ளிகொண்ட, கொண்டல்வண்ண மேனிக் குரிசிலாம்—விண்டுபெற்ற, காமனுக்கு முற்றுங் கருதும் படியமைந்த, மாமனுக்குக் கந்தன் மகன்."

"விண்பட் டவையுந் தருமலி கானின் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்விழி
புண்பட்ட தென்றுதங் கண்ணைப் பெயர்த்துப் பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காக்ஷியைக்கண்டனரே."

மற்ற அவதானங்களிலெல்லாம் அவதானியார் விடையளிக்குந்தோறும் மண்டபமுழுதும் குதூகலமும், கரகோஷமும் நிலவியிருந்தன. எவ்வித அவதானமும் தவறாமல் நிறைவேறியதைப்பற்றி அனைவர்க்கும் உண்டான அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் அளவிடற் கரிதாகவிருந்தது. சதாவதானம் சுப்பிரமணிய அய்யரவர்கள் "இவ்வவதானியார் மகமதியருள் மகா மதியர்" எனக் கூறிவியந்தனர். சபையிலிருந்த வித்வான்களும் பிரபுக்களும் கோரிக்கொண்டபடி அவதானியார்க்கு "மகா மதி" "சதாவதானி" யென்ற இருபட்டங்களும் சபாநாயகரால் அளிக்கப்பட்டன. அப்பால் ஸ்ரீமான், இட்டா. பார்த்தசாரதி நாயுடு அவர்களால் அவதானியாரவர்களுக்கு இருகரங்கட்குந் தங்கத்தோடாக்கள் போடப்பட்டன. மற்றக் கனவான்களால் சரிகை துப்பட்டாக்களும், காசித் துப்பட்டாக்களும் நன்கொடையா யளிக்கப்பட்டன. சுபம்.

THE FIRST CRIMINAL SESSIONS OF THE HIGH COURT OF MADRAS.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

1907-ம் ஆண்டிய முதலாவது கிரிமினல் செஷன் விசாரணை.

ஜட்ஜி:—கனம் பொருந்திய ஜஸ்டிஸ் மில்லர்.

முடிச்சவிழ்த்த கேஸ்.

(14-2-07.)

I.

குற்றவாளி:—மதுரை என்கிற முருகன் என்கிற டில்லி என்கிற கள்ளன் என்கிற குப்புசாமி.

ஜூரர்கள்:—மெஸர்ஸ் A. பிளேரீ, (போர்மன்) F. L. கிளோஸ், C. சாம்தென், J. கிங் போர்ன், S. ஞானமுத்துப்பிள்ளை, T. R. கிருஷ்ணசாமி பிள்ளை, M. வைவோடக், D. கிளார்க், R. V. முத்தய்யா பிள்ளை.

கேசின் விபரம்:—கிரௌன் பிராசிக்கியூட்டர், 1906-ம் ஆண்டு ஜூன்மீ 6வ குற்றவாளி சென்னபட்டணம் வால்டாக்ஸ் ரோட்டில் இலான் ஜலையின் பிரான்ட்ஸ் என்கிற ஒரு துரைசானி போய்க்கொண்டிருக்கும்போது அந்த அம்மாள் ஒருவன் தன் கவுன் சட்டையில் கையையிட்டு இரண்டணா ஒன்பது தம்படியைத் திருடிக்கொண்டு ஓட்டம் பிடித்தான் என்று துரைசானி கூச்சல் போட்டவுடன் அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஒருவர் குற்றவாளியைப்பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவித்தாரென்று ஜூரர்களுக்கு எடுத்துக்கூறினர்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணைசெய்யப்பட்டார்கள். கீழ்க்கோர்ட்டில் குற்றவாளி எழுதிவைத்த வாக்குமூலம் ஜூரர்களுக்கு வாசித்துக்காண்பிக்கப்பட்டது. குற்றவாளி தான் நிரபராதி என்றும், தான் பழைய குற்றவாளியாக விருப்பதால் போலிசார் இந்தக்கேசைத் தன் பேரில் ஜோடித்துக் கொண்டுவந்திருப்பதாகவும் சொன்னான்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—செஷன் ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு இரண்டுவருஷங் கடின்காவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டுவந்தவுடன் தன்னுடைய போக்கு வரத்துக்களை மூன்று வருஷம் வரையில் போலிசாருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதித்தார்கள்.

II.

அங்கவஸ்திரம் திருடின கேஸ்.

கைதி:—மாணிக்கம்.

குற்றம்:—திருட்டு.

கேசின் விபரம்:—சென்ற டிசம்பர்மீ 31வ குற்றவாளி, நம்மணி அம்மாள் என்னும் கிழவி வீட்டிலிருந்து ஒரு மேல் திருடியதாகக் குற்றம்சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—முன் கேசின் ஜூரர்களே இந்தக்கேசையும் விசாரணை செய்தார்கள். கைதி குற்றத்தை ஒப்புக்கொண்டான். மேலும் பலதடவை தண்டனை யடைந்து ஜெயிலுக்குப்போய் வந்திருப்பதையும் ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளிக்கு 18 - மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். கைதி ஜெயிலை விட்டு வந்தவுடன் மூன்றுவருஷம் வரையில் போலீசாருக்குத்தன்னுடைய போக்குவரத்துக்களை அறிவித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

III.

சரிகைவேஷ்டிகள் திருடினகேஸ்.

குற்றவாளி:—அனந்தன்.

குற்றம்:—திருடின குற்றம்.

கேசின் விபரம்:—சென்ற டிசம்பர்மீ 24வ குற்றவாளி சென்னபட்டணம் ஜியார்ஜ்டௌன் பசுபதிநாயக்கர் கடையில் புகுந்து, அவர் வேலைத்தொந்தரவிலிருந்தபோது கடையிலிருந்த அலுமாரியிலிருந்து ரூபா 501 பெறுமான சரிகை வஸ்திரங்களைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—முன் கேசின் ஜூரர்களே இந்தக்கேசையும் விசாரணை செய்தார்கள்.

தீர்ப்பு:—ஜூரர்கள் கைதி குற்றவாளி என்று ஏகோபித்துக் கூறிய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கோர்ட்டார் கைதிக்கு நான்குவருஷம் கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

IV.

குழந்தை நகையைத் திருடினகேஸ்.

குற்றவாளி:—கந்தசாமி என்கிற கொட்டாப்புளி என்கிற முனிசாமி.

குற்றம்:—திருட்டு.

கேசின் விபரம்:—ஒங்கோல் நகரிலிருந்து சென்னைக்கு வந்த மிஸ்டர் நரஸிம்மராவ் என்கிற பிளீடர் தம்முடைய குழந்தையுடன் விக்டோரியா டவுன்ஹாலிற்குப் போயிருந்தார். ஷை குற்றவாளி குழந்தை கையில் போட்டப்பட்டிருந்த பொன்காப்பைத் திருடிக்கொண்டு ஓடினான். குழந்தை அழ, பிளீடர் குழந்தையைப் பார்த்தவுடன் திருடன் ஓட்டம் பிடிப்பதைக் கண்டு "திருடன்" "திருடன்" என்று கூவினார். குற்றவாளி சிறிது தூரம் சென்றவுடன் பொன் காப்பைப் போட்டுவிட்டு, மகாராஜா ஜெயிலுக்குச்சமீபத்திலிருந்த ஜெயிலர் வீட்டிற்குச் சென்று ஒளிந்துகொண்டான். அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்த ஒருவர் குற்றவாளியை அரஸ்ட்செய்து போலீசாரிடம் ஒப்புவித்தார்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி இதற்கு முன் 6-தடவை தண்டனை அடைந்து ஜெயிலுக்குப் போய் வந்ததாக ஒப்புக்கொண்டான். தான் பழைய குற்றவாளியானபடியால் போலீசார் இந்தக்கேசைத் தன்பேரில் ஜோடித்துக் கொண்டுவந்திருப்பதாகச் சொன்னான்.

தீர்ப்பு:—கைதி குற்றம் செய்திருக்கிறான் என்று ஜூரர்கள் ஏகோபித்துக் கூறிய அபிப்பிராயத்தைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு இரண்டுவருஷக்கடுங்காவல் தண்டனை விதித்து அவன் ஜெயிலிலிருந்து திரும்பி வந்தவுடன் நான்குவருஷம் வரையில் அவனுடைய போக்கு வரத்துக்களைப் போலீசாரிடம் அறிவித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

V.

இரண்டாம் நாள்.

(15-2-07.)

ஜியார்ஜ் டௌன் கொலைக்கேஸ்.

குற்றவாளி.—பைராகி.

குற்றம்:—நினைத்துச் செய்த கொலை.

கேசின்விபரம்:—சென்ற டிசம்பர்மீ 16ௗ காலை மூன்றுமணிக்கு ஜியார்ஜ் டௌன் மலையப்பெருமாள் வீதியில் ஒரு பைராகி தன்னுடைய பெண்சாதியாகிய சௌத்திரியை கல்லால் அடித்தும் கழுத்தில்கத்தியால் குத்தியும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தான். அவள் கூச்சல் போட, எதிர் வீட்டின் திண்ணையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த மூன்று பைராகிகள் விழித்துக் கொண்டு பிரஸ்தாப குற்றவாளியைக் கண்டித்தார்கள். அதற்குக்குற்றவாளி என் பெண்சாதியை நான் எப்படி வேண்டுமானாலும் செய்வேன் என்று சொன்னான். ஆகவே மற்ற மூன்று பைராகிகளும் மறுபடியும் படுத்து உறங்கிவிட்டார்கள். விடியற்காலையில் பெண்சாதி சித்த சுவாதீனமற்றவளாய் ரோட்டில் கிடந்தாள். போலிசார் அவளை எடுத்துக்கொண்டுபோய் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். அவள் உடனே அவ்விடத்திலே இறந்துபோய்விட்டாள்.

ஜூரர்கள்:—மெஸர்ஸ் தாமஸ் பிஷர் (போர்மன்) A. G. கால்டர், N. செங்கைராவ், P. B. கிருஷ்ணசாமி நாயுடு, E. கோம்பிரிட்ஜ், P. T. முனிசாமி செட்டி, F. J. பிஷப், W. S. பிக்காம், K. சின்னத்தம்பி பிள்ளை.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி தன் தரப்பிற்கு வக்கீல் வைத்துப் பேசுவதற்கு ஐவேஜியற்றவன். ஆதலால் சீப் சஸ்டிஸ் பாரிஸ்டர் நன்ஜண்ட் K. ராண்டைக் குற்றவாளி தரப்பிற்கு ஆஜராகும்படியாக உத்தரவு செய்தார். கொலை நடந்த ஸ்தலத்தின் பொட்டகிராப்படம் சாக்ஷியாக தாக்கல் செய்யப்பட்டது.

பிராசிக்கியூஷன் தரப்பில் தோடியா என்கிற ஒரு பைராகி சொன்ன வாக்குமூலம்:—என்பெயர் தொடியா, நான் ஒரு பைராகி, இறந்து போனவளையும் குற்றவாளியையும் எனக்குத் தெரியும். இவர்கள் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்ளுகிறது வழக்கம். கொலை நடந்த தினம் குற்றவாளியும் அவன் பெண்சாதியும் ஒரு திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். நான் எதிர்வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தேன். இறந்துபோனவள் கூச்சல்போட்டாள். நான் விழித்துக்கொண்டேன். குற்றவாளியைக் கண்டித்தேன். குற்றவாளி தன் பெண்சாதியை இஷ்டமிருந்தால் கொலை செய்தாலும் செய்வேன்; தன்னை ஒருவரும் கேட்கக்கூடாதென்று பதில் சொன்னான். நான் மறுபடியும் படுத்துக்கொண்டேன். திரும்பி காலை 6-மணிக்கு எழுந்திருந்த போது குற்றவாளியின் பெண்சாதி பிரேதமாய்க் கிடந்தனள். ஒரு பெரியகல்லும் கத்தியும் அவள் தலைமாட்டிலிருந்தது. (குறுக்குக் கேள்விகளுக்கு) என்னுடன் கூட இன்னுமிரண்டு பேர்கள் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். இறந்து போனவள் வேறு புருஷர்களுடன் விபசாரம் செய்கிறதாகக் குற்றவாளி சந்தேகம் கொண்டு தன் பெண்சாதியுடன் சண்டை போடுகிறதுவழக்கம். அஸ்தமித்தவுடன் அவள் அலைகிறது வழக்கம். கொலைநடந்த தினம் நான் அந்தத் திண்ணையில் படுக்கப்போகும்போது 9-மணி இருக்கும். அப்போது இருளாயிருந்தது. நான் திரும்பியும் எழுந்திருந்தபோது அதிக இருளாகவிருந்தது. இறந்து போனவளுடைய கூச்சல் கேட்டு என்னுடன் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்த மற்ற இரண்டு பேர்களும் விழித்துக்கொண்டார்கள். குற்றவாளி அவளைக்கல்லால் அடிக்கும்போது நான்பார்த்தேன். அவள் கூச்சல் போட்டாள். குற்றவாளி தன் பெண்சாதியைக் கொலை செய்யும்போது நான் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் பிரவேசித்துத் தடுக்கவில்லை.

அதன் பிறகு பிரேத பரிசோதனை செய்த மெடிகல் ஆபீசர் சாக்ஷியம் சொன்னார்.

இறந்து போனவள் பேரிலிருந்த துணிமுதலிய சாமான்களைப் பரிசோதனைசெய்த கெமிகல் எக்சாமினர் (Chemical Examiner) ரிப்போர்ட் சாக்ஷியமாக தாக்கல் செய்யப்பட்டது.

இறந்துபோனவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டுபோன போலிஸ் எட்கான்ஸ்டேபிலின் வாக்குமூலம்:—நான் டிசம்பர்மீ 17ௗ இறந்து போனவளை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்தேன். குற்றவாளி இருந்தவீட்டிற்கு எதிரிஉள்ளரோட்டில் இறந்துபோனவள் கிடந்தாள். அவள் தேகத்தின்பேரில் அனேக காயங்களிருந்தன. அவளுக்குச் சமீபத்தில் ஒரு கத்தியும் கிடந்தது. இந்த சாமான்களை எல்லாம் நான் எடுத்துக்கொண்டேன். அனேகசாக்ஷிகளை அழைத்துக்கொண்டு போலிஸ்டேஷனுக்குப்போனேன். அவ்விடத்தில் குற்றவாளி நின்றுகொண்டிருந்தான். நான் அவனைப்பிடித்துக் கைதிசெய்தேன். பிரேத பரிசோதனை விசாரணை நடக்கும்போது குற்றவாளியும் கூடவிருந்தான். பிரேதத்தின் பேரிலிருந்த இரத்த சம்பந்தப்பட்ட வஸ்திரங்களை நான் ஒப்புவித்துக்கொண்டேன்.

அதன் பிறகு பிராசிக்கியூஷன்தரப்பில் இன்னொரு சாக்ஷியும் விசாரணை செய்யப்பட்டது. பிறகு குற்றவாளி கீழ்க்கோர்ட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்டு எழுதிவைத்தவாக்குமூலம் வாசித்துக்காண்பிக்கப்பட்டது. அதில் குற்றவாளி, குற்றம் நடந்ததினம் இரவு12-மணிக்கு அவள் வந்ததாகவும் விபசாரம் செய்துவிட்டு வருகிறாள் என்கிற சந்தேகங்கொண்டு அதனால் தனக்குத் திடீரென்று கோபம் பிறந்து அவளைக் கல்லால் அடித்துக் கத்தியால் குத்தியதாகவும் அதனால் அவள் இறந்துபோய்விட்டதாகவும் வாக்குமூலம் எழுதிவைத்திருந்தான். ஆனால் செஷன்கோர்ட்டில், தன் பெண்சாதியை யாரோ கொலை செய்துவிட்டதாகவும் இதைப் போலிசாருக்கு அறிவிக்கும்பொருட்டுப்போலிஸ் ஸ்டேஷனுக்கு வந்ததாகவும் அப்போது போலிசார் தன்னைப்பிடித்துக் கைதி செய்து அடித்ததாகவும் குற்றத்தை ஒப்புக்கொண்டு கீழ்க்கோர்ட்டில் வாக்குமூலம் எழுதி வைக்கும்படி போலீசாரால் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் சொன்னான்.

ஜூரர்கள் அபிப்பிராயம்:—ஏழு ஜூரர்கள் குற்றவாளி நிரபராதி என்று அபிப்பிராயம் கூறினார்கள். இரண்டு ஜூரர்கள் குற்றவாளி என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—பெரும்பான்மையான ஜூரர்கள் கூறின அபிப்பிராயத்தைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு குற்றவாளியை விட்டுவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

VI.

மூன்றாம் நாள்.

(18-2-07.)

குற்றவாளி:—ரத்னம் என்கிற படையாச்சி என்கிற ராமசாமி என்கிற சுப்பராயன் என்கிற கோதண்டபாணி.

குற்றம்:—திருட்டு.

கேசின் விவரம்:—சென்ற ஜனவரிமீ 11ௗ குற்றவாளி மூர் மார்க்கட்டிற்குச் சமீபத்தில் போய்க்கொண்டிருந்த பாப்பய்ய நாயுடு என்பவரின் சட்டை ஜேபியில் கையை யிட்டு ஒரு கைகுட்டையைத்திருடினான். அதில் ஒரு சவரன், 5 துலாம் நிறையுள்ள வெள்ளி, ரொக்கம் ரூ. 2 ஆக ரூ. 24-12-5 விலை மதிப்புள்ள சாமான்களிருந்தன.

ஜூரர்கள்:—மெசர்ஸ் ஜான் மாக்வர் (போர்மன்) P. சுப்பிரமணிய சாஸ்திரி J. மாக்பர்சன், H. R. கார்மிக்கல், M. C. S. அனந்தபத்மநாபராவ, ஜோசப A. D. ரொஜெரியோ, பீட்டர் J. பெருமாள், தெய்வசிகாமணி பிள்ளை A. சீனிவாசாசாரி.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பில் சில சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளி பலதடவை தண்டனை யடைந்து ஜெயிலுக்குப்போய்வந்திருக்கிறான்.

ஜூரர்கள் அபிப்பிராயம்:—குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளிக்குநான்குவருஷ கடுங்காவல் தண்டனை விதித்து அவன் ஜெயிலிலிருந்து திரும்பி வந்தவுடன் 5 வருஷம் வரையில் அவன் தன்னுடைய போக்கு வரத்துக்களைப் போலீசாருக்கு அறிவித்துக்கொண்டு வரவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

VII.

நம்பிக்கை மோசக் கேஸ்.

குற்றவாளி:—கந்தசாமி முதலி.

குற்றம்:—நம்பிக்கை மோசம்.

கேசின் விவரம்:—கணபதிசெட்டி என்பவர் தின்னனூரில் குற்றவாளியிடம் ரூ. 30 பெறுமான ஜவுளி கொடுத்து அதனை சென்னை ஜியார்ஜ் டௌன் சேஷாசலம் செட்டி கம்பெனியில் கொடுக்கும்படி சொன்னார். குற்றவாளி அவ்வாறு கொடாமல் சில துணிகளைவிற்றும் சில துணிகளை அடமானம் வைத்துவிட்டதாகவும் ஷை கணபதி செட்டி போலீசாருக்கு அறிவிக்க, போலீசார் நடேசமுதலி என்பவரிடம் ரூ. 7-க்கு அடமானம் வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் துணிகளை அவரிடமிருந்து பெற்று, குற்றவாளியின்பேரில் நம்பிக்கை மோசக் குற்றம் சாட்டினார்கள்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளி ஷை கணபதி செட்டியின் உத்தரவின் பேரில் துணிகளை விற்றதாகச் சொன்னான். டிபன்ஸ் தரப்பிற்கு நான்கு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அதில் ஒரு சாக்ஷி, குற்றவாளி துணிகளை விற்றுக்கொண்டிருக்கும்போது ஷை கணபதி செட்டியும் கூடவிருந்ததாகச் சாக்ஷியும் சென்னார்.

ஜூரர்கள் அபிப்பிராம்:—குற்றவாளி நிரபராதி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளியை விடுவிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

VIII.

குடைதிருடின கேஸ்.

குற்றவாளி:—ராஜகோபால்.

குற்றம்:—திருட்டு.

கேசின் விவரம்:—கடந்த நவம்பர்மீ 12ௗ சேப்பாக்கத்தில் (Chepauk) ஒரு தோட்டக்காரன் தன்னுடைய குடையை ஒரு மரத்தில் மாட்டித் தொங்கும்படி வைத்தான். அப்போது குற்றவாளி அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தான். சிறிது நாழிகை சென்று தோட்டக்காரன் குடையைப் பார்க்கும்போது குடையையும் காணோம்; அவ்விடத்தில் நின்று கொண்டிருந்த குற்றவாளியையும் காணோம். தேடிப்பார்க்க குற்றவாளி குடையுடன் ஓடிக்கொண்டிருந்தான். தோட்டக்காரன் பின்பற்றி ஓட, குற்றவாளி குடையைப்போட்டுவிட்டு ஓடினான். அப்போது அந்த விடத்தில் டீட்டியிலிருந்த கான்ஸ்டேபில் குற்றவாளியைப் பிடித்துக்கொண்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ள வில்லை. தான் பழைய குற்றவாளியாகவிருக்கிறபடியால் போலீசார் தன் பேரில் இந்தக் கேசை ஜோடித்துக் கொண்டுவந்திருப்பதாகச்சொன்னான்.

ஜூரர்கள் அபிப்பிராயம்:—குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—18 மாதம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டதுடன் அவன்ஜெயிலிலிருந்து வந்தவுடன் இரண்டு வருஷம் வரையில் போலீசாருக்குத் தன் போக்குவரத்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது.

IX.

சட்டை திருடின கேஸ்.

குற்றவாளி:—மாணிக்க முதலி என்கிற ஆறுமுக முதலி என்கிற மீனாட்சிசுந்தர முதலி.

குற்றம்:—திருட்டு.

கேசின் விவரம்:—குற்றவாளியும் இன்னொருவரும் திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டில் வசித்துக்கொண்டு வந்தார்கள். இப்படி வசித்து வரும்போது சென்ற ஜனவரிமீ 8ஆ திடீரென்று குற்றவாளி அந்த வீட்டில் காணோம். அதே சமயத்தில் அவ்விடத்தில் குடியிருந்த மற்றொருவருடைய தலைப்பாகையும், டுவீட்கோட்டும் ஒரு பொன் மோதிரமும் காணமற் போயின. ஆகையால் குற்றவாளியின் பேரில் சமுசயமுண்டாகிப் போலிசார் உதயத்தில் தேடினதில் அமன் ஜியார்ஜ்டௌனில் கண்டு பிடிக்கப்பட்டான். அவனிடம் மேற் கூறப்பட்ட தடையங்களிருந்தன.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி தான் ஏதோ சில பாத்திரங்களை வீட்டில் குடியிருந்தவர்களிடம் கிரயம் செய்ததாகவும், அதற்காக இந்தத்தடையங்களைக் கொடுத்ததாகவும் டிபன்ஸ் கூறினான். ஆனால் இது ருஜுவாக வில்லை.

ஜூரர்கள் அபிப்பிராயம்:—குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—மூன்று வருஷக்கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

X.

போர்ஜரி செய்து கட்டடம்புகுந்துதிருடின கேஸ்.

குற்றவாளி:—மதனகோபால செட்டி.

குற்றம்:—கட்டடத்தில் புகுந்து திருடினது போர்ஜரி.

கேசின்விபரம்:—முத்துசாமி அய்யர், சுப்பய்யர், கொர்கோர்விக்ஸ் ஆகிய இவர்கள் மெடிக்கல் ஸ்கூலில் வாசிக்கின்றவர்கள். குற்றவாளி கடந்த ஜனவரிமீ 11ஆ அவர்களிடம் சென்று ஏதோ சில மருந்து விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டுப்போகும்போது அவனும் கூடச்சென்றான். அவர்களுடைய அறையின்சாவி நடேசசெட்டி யென்பவரிட மிருப்பது வழக்கம். இந்தச் சாவியைத்தன்னிடம் கொடுக்கும்படி முத்துசாமி அய்யர் நடேச செட்டிக்கு எழுதியதுபோல ஒரு கடிதம் எழுதி அதில் முத்துசாமி கையெழுத்து மாதிரிபோட்டு அந்தக்கடிதத்தைக் கொண்டுபோய் நடேசசெட்டியாரிடம் கொடுக்க, அவர் இவனிடம் அறையின்சாவியைக் கொடுத்து விட்டார். குற்றவாளி அறையைத்திறந்து சில கெடியாரங்களையும் கரன்சி நோட்டு முதலிய ரூ. 276 பெறுமான சாமான்களையும் திருடிவிட்டான்.

ஜூரர்கள்:—மெஸர்ஸ் E. J. ஹாக்கின்ஸ் (போர்மன்), W. C. H. லிட்டில்வுட், F. A. De. V. ராபர்ட்சன் W. B. பர்னன்ட்ஸ், A. முத்துசாமிராஜு, பெருமாள்நாயுடு, ஜான்மார்ட்டிமிஸ், G. D. ஸ்மித், A. L. குயின்ஸ்டன்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—5 வருஷக்கடினகாவல் தண்டனைவிதிக்கப்பட்டது.

XI.

நான்காம்நாள்.

(19-2 07)

பஞ்சுமூட்டைகள் திருடினகேஸ்.

குற்றவாளிகள்:—1) காட்டராயன்
(2) முனிசாமி
(3) உண்டுரட்டான்.

கேசின் விபரம்:—சென்ற டிசம்பர்மீ 14ஆ மெஸர்ஸ் கார்டன்வுட்ராப் கம்பெனிக்குச் சொந்தமான படகில் பஞ்சுமூட்டைகள் அடுக்கியிருந்தன. அவற்றில் இரண்டை குற்றவாளிகள் திருடினதாகக்குற்றம் சாட்டப்பட்டார்கள்.

கேசின்நடவடிக்கை:—2, 3, குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். இவர்களே, முதல் குற்றவாளி இந்தத்திருட்டில் சம்பந்தப்படவில்லை யென்று சாக்ஷி சொன்னார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—முதல் குற்றவாளி நிரபராதி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—2, 3 குற்றவாளிகளுக்கு 6 மாத கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டது; முதல் குற்றவாளியை விடுவிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

(இத்துடன் முதல் செஷன் விசாரணை முடிந்தது).

DISTRICT CIRCULARS.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்கட்டர் சர்க்கியுலர்கள்.

1906ஆ அக்டோபர்மீ 26ஆ உள்ள 6069 Exc. நீ. செப்ரேட் ரிவினியூ ஸ்டாம்பு சம்பந்தமான இந்தியா கவர்ன்மெண்டாருடைய பைனான்ஸ் இலாகா விளம்பரம்.

அந்தந்த மாகாணத்து விவசாய டிபார்ட்மெண்டாரிடமிருந்து உதவிபெற அல்லது எது விஷயமாயும் ஆலோசனை கேட்க ஒரு கலெக்டருக்கு அல்லது கலெக்டர்போல் அதிகாரமுள்ள அல்லது அவரைவிட கீழ் அதிகாரமுள்ள எந்த ரிவினியூ ஆபீசருக்கும் செய்துகொள்ளும் மனுக்கள் பேரில் ஏற்பட்டிருக்கும் ஸ்டாம்பு செலவை 1870ஆ த்திய VII-வது சட்டமாகிய கோர்ட்பீஸ் ஆக்ட் 35-வது செக்ஷன் கீழ் தமக்கு வகித்திருக்கும் அதிகாரத்தைமுன்னிட்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் சந்தோஷத்துடன் ரத்துசெய்யலானார்கள்.

11-1-7 உள்ள செப்ரேட் ரிவினியூ 12-91 B. Mis. நீ. போர்டார் உத்தரவு சம்பந்தமாம்.

1907ஆ ஜனவரிமீ 2ஆயுள்ள 10 Exc. நீ. செப்ரேட் ரிவினியூ ஸ்டாம்பு சம்பந்தமான இந்தியா கவர்ன்மெண்டாருடைய பைனான்ஸ் விளம்பரம்:—

தம்முடைய சொந்த உபயோகத்திற்காக ஒரு வீட்டைக் கட்டவாவது அல்லது விலைக்கு வாங்கவாவது கவர்ன்மெண்டிடமிருந்து வாங்கின அட்வான்சு தொகையைத் திருப்பிக் கொடுக்கும்பொருட்டு கவர்ன்மெண்டு சிவில் அல்லது ராணுவ இலாக்காக்களில் வேலையாயிருக்கும் ஒரு ஆபீசரால் எழுதிக்கொடுக்கவான ஈட்டுப்பத்திரங்களின் பேரில் 1899ஆல் II வது சட்டமாகிய இந்தியன் ஸ்டாம்பு ஆக்டு I-வது ஷெடியூல் 40-வது ஆர்டர்களில் ஏற்பட்டிருக்கும் ஸ்டாம்பு செலவை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்கள் ஷை சட்டத்தின் 16-வது செக்ஷன் (a) பிரிவுப்படி தமக்கு வகித்திருக்கும் அதிகாரங்களை முன்னிட்டு சந்தோஷமாய் ரத்து செய்யலானார்கள்.

NOTIFICATION.

விளம்பரம்.

அடியிற்கண்ட கிராமங்களில் பெரியார்தண்ணீர் பாய்ச்சலுள்ள சர்க்கார் தரிசு நிலங்களின் பூரா ரயத்துவாரி பாத்தியதையை ஷை கிராமங்களில் அடியிற்கண்ட தேதிகளில் ஸ்பெஷல் டிப்டிகலெக்டர் அவர்களால் ஏலம் போடப்பட்டு ஷை நிலங்கள் சர்க்கார்மதிப்பு நஞ்சை ஏகரா 1-க்கு ரூ. 20-க்கும் புஞ்சை ஏகரா 1-க்கு ரூபாய் 10-க்கும் மேற்பட்டு உயர்ந்த தொகைக்குக் கேட்கிறவர்களுக்கு ஏலம்முடிவு செய்யப்படுமென்று இதன் மூலமாய்ப் பிரசுரம் செய்யலாயிற்று.

2. ஷை ஏலம் பகல் 12-மணிக்குத்துடங்கி சாயந்திரம் 5-மணிக்கு முடிவாகும்.

3. ஷை நிலங்கள் சர்வே நெம்பர் ஸ்தலவாரியாய் ஏலம் போடப்படும். ஷை ஏலமானது கலெக்டர்துரையவர்களால் மஞ்சூர் செய்யப்பட்டதின்பேரில் உயர்ந்த தொகைக்கு எடுத்தவர் பேரால் ஷை நிலங்களுக்கு ரயத்துவார் பட்டா கொடுக்கப்படும். —யாதொரு முகாந்திரமும் சொல்லாமலே ஏலத்தை அங்கீகரிக்கவாவது தள்ளுபடிசெய்பவாவது கலெக்டர் துரையவர்களுக்கு அதிகாரமுண்டு. ஏலத்துக்கு ஏற்பட்ட எந்த ஸ்தலத்தையாவது ஏலம்போடாமல் நிறுத்திக்கொள்ளவும் 6 ஏகராவுக்கு மேற்படாமல் எத்தனைஸ்தலங்களையாவது சேர்த்து ஒரே மொத்தமாக ஏலம் போடவும் ஏலம்போடுகிற உத்யோகஸ்தருக்கு அதிகாரமுண்டு.

4. ஏலத்தில்கேட்க உத்தேசிக்கிற ஒவ்வொருவரிடமும் 10-ரூ. வீதமும் டேவணி வாங்கப்படும். ஒவ்வொரு ஸ்தலத்தின் ஏலம் முடிவானவுடன் ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையில் 100-க்கு 15 வீதம் ஆகவேண்டியதற்குள்ள ஜாஸ்தித்தொகையைக்கட்டவேண்டும். அப்படிக்கட்டத்தவறினால் ஷை ஸ்தலம் தவறினவனுடைய ஜவாப்தாரிக்கு உட்படுத்தி மறுயேலம் போடப்படும். ஏலத்தொகையில் பாக்கிநிற்கும் மீதத்தொகையை ஏலத்தேதிமுதல் 30-நாளுக்குள்ளாக தாலூகாகஜானாவில் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்தத்தவறினால் ஷை ஸ்தலம் பணம் செலுத்தத்தவறினவனுடைய ஜவாப்தாரிக்குட்படுத்தி மறுஏலம் போடப்படும். ஏலம் முடிவானவுடன் ஏலம் யெடுத்தவர்களுடைய டேவணித்தொகையை அவர்களுக்கு வாபசு செய்யப்படும்.

5. ஏலத்தில் கேட்பவர்கள் அப்படி கேட்பது தங்களுக்காகவா, அல்லது தாங்கள்ஏஜெண்டுகளாகக் கேட்கிறவர்களா என்பதை வியக்தமாய் ஏலகாலத்தில் தெரிவிக்கவேண்டும். ஏஜெண்டுகளாக ஏலம் கேட்கும்விஷயத்தில் அதற்குறுதியாகத்தங்களுடைய முதலாளிகளாகத்தங்களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் எழுத்து மூலமான அதிகாரபத்திரத்தைத்தாக்கல்செய்யவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய ஏலம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

6. ஷை நிலங்கள் இருபோக நஞ்சை நிலங்களாகத்தாக்கல் செய்யப்பட்டு, ஏக்ரா 1-க்கு முதல்போகத்துக்கு $2\frac{1}{2}$-ரூ. முதல் $8\frac{1}{2}$-ரூபாய் வரையில்தீர்வையும், இரண்டாம் போகத்துக்கு ஷை தீர்வையுடன் அரைப்பங்கும் சேர்த்து செலுத்தப்படவேண்டும். ஆனால் சாத்தமங்கலம் கிராமத்தில் உள்ளவும் 10-வது பிரிவு வாய்க்காலிலுள்ள திருவாதூர் கிளைவாய்க்காலின் 1 முதல் 7-வரை லக்கமுள்ள மடைகளினால் தண்ணீர் பாயக்கூடியவும் தெற்குத்தெருகிராமத்தில் 11-வது பிரிவு வாய்க்காலின் 14, 16, 18, 19, 20 இந்த லக்கமுள்ள மடைகளினால் தண்ணீர் பாயக்கூடியவும் சூரக்குண்டு கிராமத்தில் 13-நெ. மடைக்குக் கீழே இருக்கும் மடைகளினால் தண்ணீர் பாயக்கூடியவும் ஆன நிலங்கள் ஒருபோக நிலங்களாக ஏலம் போடப்படும். பின்னும் மேற்படி நிலத்தீர்வையோடுகூட மேற்படி நிலங்களுக்கு ரோட்வரிவகையரு செஸ்களும் செலுத்தப்படவேண்டும். அடுத்த ரிவினியூ செட்டில்மெண்டு காலத்தில் மேற்படி நிலத்தீர்வையைக் கவனித்து வேறேதீர்வை ஏற்படுத்தப்படலாம். 1316-ம் பசலியில் ஒருபயிராவது வாஸ்தவத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்தாலொழிய 1317-ம் பசலி முதற்கொண்டுதான் தீர்வை வசூல்செய்யப்படும். 1316-ம் பசலியில் சாகுபடி செய்யப்பட்ட ஒரு பயிரானது புதுவலாகபாவிக்கப்பட்டு அதற்கு ஒரு போக நஞ்சைத்தீர்வை வசூல்செய்யப்படும். பயிர் சாகுபடிக்கல்லாமல் நிலத்தைநஞ்சையாகத்திருத்துவதற்குமட்டும் கொண்டு போகப்பட்ட தண்ணீருக்கு யாதொரு தீர்வையும் வசூல்செய்யப்படமாட்டாது. இந்த நிலங்களுக்குப் பெரியாற்று ஜலம் வருகிறவரையில் தரிசாகப்போடப்பட்ட நிலங்களுக்குத் தீர்வை வஜா செய்யப்படும். ஷை நிலங்களில் புஞ்சை சாகுபடியாயிருந்தால் அவைகளுக்குப்புஞ்சைத்தீர்வைமட்டும்விதிக்கப்படும். செட்டில்மெண்டு ரிஜிஸ்தரில் "நஞ்சை" யாகவகுக்கப்பட்ட நிலங்கள் விஷயத்தில் முதல்போகத்துக்கு அரைத் தீர்வைமட்டும் வசூல் செய்யப்படும். புஞ்சையாக வகுக்கப்பட்ட நிலங்கள்விஷயத்தில் தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்யப்பட்ட முதல்வருஷத்தில் இருபோகத் தீர்வையில் 100-க்கு 75 வீதமும் இரண்டாவது வருஷத்தில் 100-க்கு 50 வீதமும் மூன்றுவது வருஷத்திற்கு 100-க்கு 25 வீதமும் வஜாசெய்து கொடுக்கப்படும். முழு இருபோகத் தீர்வையானது நாலாவது வருஷம்முதல் ஆரம்பித்து அதன்பிறகு வருஷா வருஷம் வசூல்செய்யப்படும்.

7. பெரியார் பாசனத்துக்குச் சம்பந்தப்பட்ட சின்ன வாய்க்கால்கள் வடிவாய்க்கால்கள் மற்றவேலைகள் இவைகளுக்கும் ரஸ்தாக்களுக்கும் கவர்ன்மெண்டுக்குத் தேவையாயிருக்கிற நிலங்களை அதன் சரியான ஏல ஈவுத்தொகையைப் பெற்றுக்கொண்டு விட்டுவிடவேண்டும்.

8. ஏலம்போடப்பட்ட ஒவ்வொரு ஸ்தலவிஷயத்திலும், பிரசுரம் செய்யப்பட்ட விஸ்தீரணமானது 100-க்கு 10 வீதமாயாவது அல்லது அதற்குக்குறைவாயாவது கம்மிப்படுகிறதென்று கொண்டுவரப்படும் தாவாவானது ஏலம் மஞ்சூர் செய்யப்பட்டதேதிமுதல் 2 மாதத்திற்குள் பெரியார் ஸ்பெஷல் டிப்டி கலெக்டரிடம் கொண்டுவரப்பட்டாலொழிய அங்கீகரிக்கப்படயாட்டாது.

9. ஏலத்தேதிமுதல் 2-ஆூத்துக்குள்ளாக யாதாமொரு நிலம் பெரியார் தண்ணீர்பாய லாயக்கில்லாமலிருந்து தண்ணீர் மேற்படி நிலத்துக்குப் பாயமாட்டாதென்று எக்சிகூட்டிவ் இஞ்சினீர் செர்ட்டிபை செய்தாலும், அல்லது வேறு காரணத்தைக்கொண்டு யாதாமொரு நிலத்துக்குத் தண்ணீர் எக்காலத்திலும் சப்ளை செய்யமுடியாதென்று எச்சிகூடிவ் இஞ்சினீர் செர்டிபை செய்தாலும், அந்த நிலத்தின் ஏலத்தொகை வாபசு செய்யப்பட்டு நிலம் மறுபடியும் சர்க்கார் கைவசப்படுத்திக் கொள்ளப்படும். மேல்கண்டபடி செய்யப்படுவதைத் தவிர ஏலம் எடுத்தவனுக்கு வேறு எவ்வித பிரதிப்பிரயோசனத்துக்கும் பாத்தியமில்லை. மேலும் அவன் எடுத்த நிலத்தில் ஒருபாகம் தண்ணீர் பாயக்கூடியதாயும் மற்றொருபாகம் தண்ணீர் பாயலாயக்கில்லாமலிருக்குமானால் தண்ணீர்பாய லாயக்காயிருக்கும் பாகத்தை மட்டும் தனக்குவைத்துக்கொண்டு அப்படிலாயக்கில்லாமலிருக்கும் பாகத்தை விடுதலை ராஜிநாமா செய்ய ஏலதாருக்குப் பாத்தியமில்லை.

10. ஷை நிலங்களை நஞ்சையாக்கிக் கொள்ளும் பொருட்டு குடிகளுக்கு 100-க்கு வருஷம் 1-க்கு 5 வட்டிவீதம் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வாயிதாக்கள் யேற்படுத்தி மேற்படி நிலக்களின் ஜாமீனின்பேரிலேயே யேலத்தில் எடுத்திரு

க்கும் துகைக்கு 100-க்கு 80 வீதம் கடன்கொடுக்கப்படும். அதற்குமேல் தேவையாயிருந்தால் இதரசொத்து ஜாமீனின்பேரில் கடன்கொடுக்கப்படும். உரம் போடுவதற்கும் கால்நடைகள் வாங்குவதற்கும் கடன்கள் கொடுக்கப்படும்.

11. ஏலம் போடப்படும் ஸ்தலங்களின் சர்வே நம்பர் விஸ்தீரணம் தீர்வை வகையரு விபரம்பெரியார் ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் ஆபீசில் தெரிந்து கொள்ளலாம். மேற்படி விபரம் மதுரைஜில்லா கெஜட்டிலும் பிரசுரம் செய்யப்படும். மேலும் மேற்படி விபரங்கொண்ட ஜாப்தாக்கள் அச்சிடப்பட்டு ஏலதேதிக்கு முந்தியே பட்டுவாடா செய்யப்படும். ஏலம்போடப்படும் நிலத்தை கணக்கன் உதவியின்பேரில் எந்தசமயத்திலும், ஸ்பெஷல்ரிவினியூ இன்ஸ்பெக்டர் உதவியின் பேரில் ஏலத்தேதிக்கு அடுத்த முந்தின மூன்றுநாள்களிலும் யாரும் பார்த்துக்கொள்ளலாம்.

12. மேடி நிலங்கள் சர்க்காரினாலே ஏலம்போடப்பட்டது என்கிற காரணத்தைக்கொண்டு, மேற்படி நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக்கொள்ள யாரும் விசேஷமான அல்லது முதன்மையான பாத்தியதையைப்பாராட்டினால் அது ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

[illegible]	கிராமம்.	ஏலத்துக்கு தயாராக இருக்கும் நிலங்களின் விஸ்தீர்ணம்.		ஏலம்போடப்படுகிற இடம்.	ஏலத்தேதி.	[illegible]
		ஏ.	செ.			
1	கல்லம்பட்டி ...	2	28	மேலூர் ...	12-3-07	
2	எட்டிமங்கலம் .	32	21	மேலூர் ...	12-3-07	
3	சென்னகரம்பட்டி ...	16	5	மேலூர் ...	12-3-07	
4	சூரகுண்டு ...	2	39	மேலூர் ...	12-3-07	
5	வல்லானபட்டி.	12	28	மேலூர் ...	12-3-07	
6	இடாரிப்பட்டி .	4	70	மேலூர் ...	12-3-07	
7	சாத்தமங்கலம் .	168	73	கீழாயூர் ...	18-3-07	
8	தெற்குத் தெரு.	233	66	தெற்குதெரு.	22-3-07	
		472	30			

POLICE SHEET.

போலீஸ் ஷீட்.

தஞ்சாவூர் ஜில்லா திருவடமருதூரில் வைத்தியத் தொழில் செய்துகொண்டிருந்த P.M. சேஷய்யா என்கிற சேஷாசாரி என்பவனுடைய அங்க அடையாள ஜாப்தா அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கும்பகோணம் ஜாயிண்டு மேஜிஸ்டிரேட்டாரவர்கள் கோர்ட் கியாலண்டர் கேஸ் 64/1906-ல் இ. பி. கோ. 420-செக்ஷன்படி குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு டிபென்சு சொல்லவேண்டியிருக்க 1906ஆம் டிசம்பர்௴ 5உ வாக்கில் பராரியாய் விட்டான்.

தகப்பன் பெயர், செங்கல்பட்டு ஜில்லா நெமெல்லியிலிருக்கும் திருவேங்கடய்யங்கார்; வயது 36; 5 அடி 7 அங்குல உயரம்; பறந்த முகம்; மேல்வரிசையிலோ அல்லது கீழ்வரிசையிலோ ஒரு பல் விழுந்திருக்கிறது; நிறம் கருப்பு; பிராமண ஜாதி; தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் இந்த 3 பாஷையிலும் பேசுவான்; உடுப்பு கெட்டிமேல் சுற்றிய சரிகைத் தலைப்பாகை வைத்துக்கொள்வான்; ஐரோப்பியர்கள் உடுப்பு மாதிரி தரித்துக்கொள்வான்; தலைமயிர் வெட்டி ஐரோப்பியர்கள் மாதிரி வைத்திருப்பான்; சென்னபட்டணத்திலிருக்கும் ஹைகோர்ட்டு வக்கீல் P. K. சிங்கராசாரியார் இவனுக்கு மைத்துனன். (Coussin or brother-in-law).

இவன் திருவடமருதூரில் வைத்தியத் தொழில் செய்துகொண்டிருந்தபோது மெசர்ஸ் R. மெக்னோர் and கம்பெனிக்கு கிளையாக, கும்பகோணத்தில் ஒரு மருந்துக்கடை ஏற்படுத்தி அதற்கு மாயவரம் தாலூகா மல்லியம் கிராமத்திலிருக்கும் ராமசந்திர அய்யர் என்ற ஒருவரை, மேடி கடைக்கு ஏஜண்டு அல்லது மானேஜராக ஏற்படுத்துவதாய், அவரை ரூ. 500 ஜாமீன்கட்டச்செய்து அவரை மோசம் செய்து விட்டான். இவன் பழைய குற்றவாளி. ஏற்கனவே இம்மாதிரியான கேசில் தண்டிக்கப்பட்டு ஜெயிலிலிருந்திருக்கிறான்.

மேடியான் கண்டு பிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு துரையவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

தஞ்சாவூர் ஜில்லா கோட்டூர் ஸ்டேஷன் கிரைம் ந. 72/1906, இ. பி. கோ. 304-பிரிவுப்படி நடந்த கேசின் குற்றவாளியின் அங்க அடையாளம் அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மன்னார்குடி சப்-மேஜிஸ்டிரேட்டவர்களால் 31-12-1906-ல் வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவனைக் கண்டுபிடிக்கும்படியான சமாசாரம் ஏதேனும் இருக்குமேயாகில் அடியில் கையொப்பமிட்டவருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கோரப்படுகிறது.

பெயர், வீரன் வாய்க்காரன்; தகப்பகன் முனியன்; இருப்பிடம், தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகா கருப்புகினார்; மாநிறம்; வழுக்கத்தலை; தடித்ததேகம்; வலது முன்கையில் பச்சை குத்தியிருக்கிறான்; நெற்றியில் நீண்டபச்சை; 5 அடி 7 அங்குல உயரம், வயது. 40/1907.

தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த மன்னார்குடி திருத்துறைப்பூண்டி தாலூகாக்களிலும், ரங்கூனிலும் இவனுக்குப் பந்துக்களிருக்கிறார்கள். இவன் மேற்சொன்ன இடங்களுக்கு அடிக்கடி போகக்கூடியவன்.

தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலிலிருந்து விடுதலையாகித் தன் சொந்த ஊருக்குத்திரும்பி வாராமலிருக்கிறவர்களின் அங்க அடையாள ஜாப்தா அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் யாராவது கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு துரையவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

(1) பெயர், ஆறுமுக படையாச்சி; ஜாதி, படையாச்சி; தொழில், பயிர்த்தொழிலும் கூலிவேலையும், இருப்பிடம், தென்னாற்காடு ஜில்லா திருப்பாப்புலியூர்; வயது, 35; உயரம், 5 அடி 3 அங்குலம்; நெற்றியின் இடதுபக்கத்தில் ஒரு தழும்பு; இவன் இதற்கு முன்னால் 5 தடவை தண்டனை அடைந்திருக்கிறான். இவன் 5-12-1905-ல் Mis Case 46/1905-ல் மாயவரம் சப்-டிவிஷனல் மேஜிஸ்டிரேட்டாரவர்களால், நன்னடத்தைக்கு ஜாமீன் கொடுக்கத்தவறினதற்காக ஒரு வருஷம் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு 12-11-1906-ல் விடுதலைசெய்யப்பட்டான்.

---

(2) பெயர், குலாம்யூசப்; ஜாதி, மகம்மதியன்; தொழில், கோர்ட்டு பியூன்; தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர்; வயது, 50; உயரம், 5 அடி 5¾ அங்குலம்; வலது விலாவில் ஒரு மச்சம்; இவன் கியாலண்டர் கேஸ் 8/1906-லும் 8-A-1906-லும் இ. பி. கோ.193, 197-பிரிவுப்படிக்கும், இ. பி. கோ. 409-பிரிவுப்படிக்கும், 1 வருஷம் கடினகாவல் தண்டனை 26-1-1906-ல் விடுதலைசெய்யப்பட்டான்.

தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலிலிருந்து விடுதலையான தேதி முதல் பராரியாயிருக்கிற நாகரத்னம் என்பவனுடைய அங்க அடையாள ஜாப்தா அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்டால் அடியில் கையொப்பமிட்டவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கோரப்படுகிறது.

ஜாதி, இடையன்; தொழில், பச்சை; இருப்பிடம், தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகா திருநாகேஸ்வரம்; வயது 35; 5 அடி 4 அங்குல உயரம்; கழுத்தின் முன்புறத்தில் மச்சம்; இவன் கும்பகோணம் 1-வது கிளாஸ் மேஜிஸ்டிரேட்டாரவர்களால், நன்னடத்தைக்கு ஜாமீன் வாங்குகிற கேசில் Mis.Case & 7/1906-ல் 10-2-1906-ல் 1 வருஷம் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு, 17-1 1907-ல் விடுதலை செய்யப்பட்டான்.

தஞ்சாவூர் ஜில்லா நாகபட்டணம் தாலூகா திருவாரூர் ஸ்டேஷன் கிரைம் ந. 100/1906, இ. பி. கோ. 457, 380-பிரிவுப்படி நடந்த கேசில் குற்றவாளியைத் திருட்டு சொத்துடன் பிடித்துப் போலீசாருக்கு உதவி செய்த நிமித்தமாகத் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்டிரேட்டு துரையவர்களால், நன்னிலம் தாலூகா எருக்காட்டூர் கிராமத்தின் தலையாரி பங்காரு நாயக்கன் என்பவனுக்கு ரூ. 2 இனாம் கொடுபட்டிருக்கிறது.

தஞ்சாவூர் ஜில்லா 1907ஆம் ஜனவரி மாதத்தில் கொடுக்கப்பட்ட குட் சர்விஸ்.

தஞ்சாவூர் ஜில்லா Ji. டிவிஷன் கான்ஸ்டேபில் நெ. 1053 ராமசாமி பழைய குற்றவாளியால் செய்யப்பட்ட திருட்டை சுறுசுறுப்பாய் இருந்து கண்டுபிடித்ததற்காக, Jii. டிவிஷன் 1-கிரேட் ஏ. கா. நெ. 151 அருணாசலம் பிள்ளை திருவாரூர் ஸ்டேஷன் கிரைம் ந. 97 & 99-ல் குற்றவாளிகளைக் கண்டு பிடித்ததற்காக, J. டிவிஷன் கான்ஸ்டபிள் நெ. 1053 ராமசாமி நாகப்பட்டணம் டவுன் ஸ்டேஷன் கிரைம் ந. 85/1906; கால்நடை திருட்டுக்கேசில் நல்ல வேலை செய்ததற்காக, Jii டிவிஷன் கான்ஸ்டபிள் நெ. 1093 விடல் ராவ். நெ. 755 கான்ஸ்டபிள் சிங்காரம் பொறையார் ஸ்டேஷன் கிரைம் 1/1907, திருட்டுக்கேசில் நல்லவேலை செய்ததற்காக, Ji டிவிஷன் 3கி. ஏ. கா. நெ. 209 முனிசாமி நாய்க் பீட் ட்யூட்டியில் சுறுசுறுப்பாய் இருந்து ஒருகால்நடை திருட்டுக்கேசைக் கண்டுபிடித்ததற்காக.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

கிரம வியாஜ்ஜியங்கள்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம்.

வாதிகள்:—R. மாசிலாமணிமுதலியார் கம்பெனி.

பிரதிவாதிகள்:—ஸ்டான்டர்ட் ஆயல் கம்பெனி.

கேசின் விபரம்:—வாதிகள் சென்னையில் கண்ட்ராக்டர்கள். பிரதிவாதிகள், சென்னையில் அவர்களுடைய ஏஜண்டு மிஸ்டர் E. R. ரிச் என்பவர்கள் மூலமாய் எண்ணெய் வியாபாரம் செய்து வருகின்றார்கள். பிரதிவாதிகளுக்குக் கட்டட விஷயமாகச் செய்யவேண்டிய சகல வேலைகளையும் வாதிகளுக்குக் கொடுப்பதென்றும், ஒவ்வொரு வேலைக்கும் வாதிகள் எஸ்டிமேட் தயார்செய்து பிரதிவாதிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், பிரதிவாதிகள் சம்மதம் கொடுத்தவுடன் வாதிகள் மேற்படி வேலைகளை ஆரம்பித்துச் செய்து முடிக்கவேண்டுமென்றும் பிரதிவாதிகள் வாதிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்களாம். பிரதிவாதிகள் தங்களுக்குச் சொந்தமான 9 கிட்டங்கிகளையும் அவைகளின் எல்லைச் சுவரையும் ரிப்பேர் செய்யும்படி பிரதிவாதிகள் வாதிகளுக்கு உத்தரவு கொடுத்தார்கள். வாதிகள் அந்த வேலைகளுக்கு எஸ்டிமேட் தயார்செய்து அனுப்பினார்கள். பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். இதன்பேரில் வாதிகள் வேலைகளை ஆரம்பித்து நடத்தி மூன்று கட்டடங்களை ரிப்பேர்செய்து முடித்தார்கள். இதன் பிறகு பிரதிவாதிகள் வேலைகளை நிறுத்தும்படி உத்தரவு செய்துவிட்டார்கள். வாதிகள் 9-கிட்டங்கிகளையும் எல்லைச்சுவரையும் ரிப்பேர் செய்வதற்குத் தேவையான சாமான்களைச் சேகரித்து வைத்திருப்பதுமன்றி கூலிக்காரர்களுக்கும் அட்வான்ஸ் கொடுத்துமிருக்கிறார்கள். இப்படி கூலிக்காரர்களுக்கு அட்வான்ஸ் கொடுத்திருக்கும் பணத்தைத்திருப்பி அவர்களிடமிருந்து வசூல் செய்யமுடியாது. ஆகையால் அட்வான்ஸ் கொடுத்த வகையிலும் பாக்கிக்கட்டடங்களுக்குச் சாமான் சேகரித்த வகையிலும் நேர்ந்திருக்கும் நஷ்டமும் ரிப்பேர்செய்து முடிவான வேலைகளுக்குமாகக் கூடின தொகை ரூ. 1092 - 3 - 11. பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்குக் கிடைக்கவேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் எழுத்து வாச்குமூலம்:—பிரதிவாதிகளைச் சேர்ந்த எல்லா ரூல்சுகளையும் வாதிகளுக்கே கொடுத்து வருவதாகப் பிரதிவாதிகள் வாதிகளுடன் யாதொரு ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. 9-கிட்டங்கிகளையும் எல்லைச் சுவற்றையும் வாதிகள்ரிப்பேர்செய்து கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதிகள் வாதிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. வாதிகள் செய்து கொடுத்திருக்கும் சில வேலைகளுக்குப் பிரதிவாதிகள் ரூ. 644 - 14 - 5 கொடுக்கவேண்டியதிருக்கின்றது. இந்தத் தொகையைக் கொடுக்கப் பிரதிவாதிகள் தயாராயிருக்கிறார்கள். ஆகையால் வாதிகளுக்கு நேரிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டும் நஷ்டத்திற்குப் பிரதிவாதிகள் ஜவாப்புதாரிகளல்ல.

அடியிற்கண்ட இஷியூக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன:—

(1) பிரியாதில் (Plaint)சொல்லப்பட்டிருக்கிறபடி பிரதிவாதிகள்வாதிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்களா ?

(2) பிரதிவாதிகள் வாதிகளிடம் ஒப்புவித்திருக்கும் வேலைகளுக்கு வாதிகள் எவ்வளவு தொகை கேட்கப் பாத்தியப்பட்டவர்கள்.

(3) பிரதிவாதிகள் கிட்டங்கிகளின் வேலையையும் எல்லைச் சுவற்றின் வேலையையும் வாதிகளுக்குக்கொடுத்ததாகச் சொல்லப்படுகிறதே, அவைகள் எல்லாவற்றிற்கும் கூடுதலான தொகையைப் பிரதிவாதிகள் கொடுக்கக்கட்டுப்பட்டவர்களா ?

(4) பிரதிவாதிக்கு ஏதேனும் கிடைக்கவேண்டியதாயிருந்தால் அது எவ்வளவு ?

லாயர்கள்:—வாதிகளுக்கு வக்கீல் மிஸ்டர் V. V. சீனிவாச அய்யங்கார், பிரதிவாதிகளுக்கு மிஸ்டர் C. P. ராமசாமி அய்யர்.

வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சர்வ கலாசாலை மோசக் கேஸ்.

(7-3-07.)

கிரிமினல் அப்பீல்.

கேசின்விபரம்:—(இந்தக்கேசைக் குறித்து முந்திய மாத கெஜெட்டில் விபரமாய் எழுதியிருக்கிறோம்). சர்வகலாசாலை மெட்ரிக்கிலேஷன் பரீக்ஷையின் கேள்விக்கடிதங்களை இரண்டு மாணவர்கள் தங்களுக்குத் திருடிக்கொடுக்கும்படி அக்கடிதங்கள் அச்சடிக்கப்படும் S. P.C.K. அச்சாபீஸ் சூப்பிரண்ட்டெண்ட் மிஸ்டர்பிளம்ப் துரைக்கு லஞ்சம் கொடுத்ததற்காகத் திருட்டு உடந்தைக் குற்றத்திற்குக் குற்றஞ்சாட்டப்பட்டு சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் கி.பு.கோ.562-வது பிரிவின்படி நல்ல நடைத்தைக்கு ஜாமீன் வாங்கிக்கொண்டு விடுதலை செய்யப்பட்டார்கள். போலிஸ் கோர்ட்டார் இவர்களுக்கு விதித்த தண்டனை போதாதென்றும் தண்டனையை உயர்த்தவேண்டுமென்றும் கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டர் ரிவிஷன் மனு தாக்கல்செய்தார். இந்த கிரிமினல் ரிவிஷன் மனு இன்று விசாரணைக்கு வந்தது.

உத்தரவு:—ஜட்ஜி மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சர்வகலாசாலையில் சம்பந்தப்பட்டவரானபடியால் இந்தக்கேசை வேறொரு ஜட்ஜியின் விசாரணைக்குக் கொண்டுவரும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

ஜட்ஜி, ஜூரர்களுக்குக் கேசின் சாரம்சத்தைப் பிசகாய் எடுத்துக் கூறினகேஸ்.

கிரிமினல் அப்பீல்.

(5-3-07.)

கேசின்விபரம்:—தென் கன்னடத்தில் 15 பேர்கள் ஒரு வீட்டில் புகுந்து வீட்டுக்காரர்களைத் தூணில் கட்டிவிட்டு தீவட்டிக் கொள்ளையாடிப் பணம் நகை தானிய முதலிய பொருள்களைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டதாக 15 பேர்கள் போலீசார் அரஸ்ட் செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டார்கள். அதில் ஒருவன் அப்ரூவராயிருப்பதாக ஒப்புக்கொண்டான். பாக்கி 14 பேர்களில் 12 பேர்களுக்குச் செஷன் கோர்ட்டார் பலவிதமான தண்டனை விதித்தார்கள். பாக்கியுள்ள இரண்டுபேர்கள் இக்குற்றத்திற்கு பிரதமகாரண கர்த்தர்கள் என்று செஷன்கோர்ட்டார் அபிப்பிராயம் கூறி ஒவ்வொருவருக்கும் 5 வருஷகடினகாவல் தண்டனையும், ரூ 100 அபராதமும் விதித்தார்கள். இந்த இரண்டு பேர்களும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள். அப்பீல்தார்களுக்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் ஆஜராகி, செஷன் ஜட்ஜி ஜூரர்களுக்குக் கேசின் சாராம்சத்தை எடுத்துச்சொல்லும்போது, இந்தக்கேசில் வாதிகளுக்கு விரோதமாக ஏற்பட்டிருக்கும் சாக்ஷியமும் அப்ரூவர் சொன்னசாக்ஷியமும் ஒத்திருக்கிறபடியால் கைதிகள் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றம் ருஜூவாய்விட்டதென்று சொல்லிவிட்டாரென்றும், பிராசிக்யூஷன் தரப்பில் சொல்லியிருக்கும் சாக்ஷிகளெல்லாம் தாங்கள் குற்றத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர நேரில் பார்த்ததாகச் சொல்லவில்லை என்றும் இந்த சாக்ஷியத்தை செஷன் ஜட்ஜி ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாதென்றும் அப்படியிருந்தும் செஷன் ஜட்ஜி குற்றம் ருஜூவாய்விட்டதென்று ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னது பிசகென்றும், இதுவுமன்றி, அப்பீல்தார்களின் நடத்தைகளையும், அவர்கள் மிகுந்த தாமதமாய் அரஸ்ட் செய்யப்பட்டதையும், சாக்ஷிகள் சொல்லியிருக்கும் சாக்ஷியத்தின் வித்தியாசத்தையும் செஷன் ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக்கூறத் தவறிப்போய்விட்டாரென்றும் எடுத்துப்பேசினார். சர்க்கார் தரப்பிற்கு கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டர் பேசினார்.

தீர்ப்பு:—கீழ்க் கோர்ட்டு குற்றஸ்தாபனைகளையும் தண்டனையையும் ரத்து செய்து, மறுபடியும் அப்பீல் தார்களை விசாரணை செய்து பைசல் செய்யும்படியாக உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

கிரிமினல் அப்பீல்.

மிகுந்த வைராக்கிய முடைய கிராம முனிசீப் கேஸ்.

(5-3-07)

கேசின் விவரம்:—தஞ்சாவூர் ஜில்லாவில் விளுவூர் கிராம மாஜிஸ்டிரேட் முன்னிலையில், இரண்டுபேர் முனிசாமி என்பவருடைய வீட்டின் சுவற்றின் பேரிலிருந்த உத்திரத்தையும், இன்னும் இரண்டுசில்லறைச் சாமான்களையும் திருடினதாகக்குற்றம்சாட்டப்பட்டார்கள். கிராம மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரணை செய்து குற்றவாளிகளின் பேரில் குற்றஸ்தாபனை செய்து மூன்று மணி நேரத்திற்கு விலங்குதண்டனை விதித்தார். இந்த தண்டனை நிறைவேறவில்லை. இதன்பேரில் இந்தக்குற்றவாளிகள் சட்டப்பிரகாரமான பந்தோபஸ்திலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்டார்கள் என்றும், இருட்டுக்குற்றத்திற்கும் தஞ்சாவூர் இரண்டாவது கிளாஸ் சப் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இ. பி. கோ. 224-வது பிரிவின்படி குற்றம் சாட்டினார். இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரணை செய்து குற்றவாளிகளை தண்டிப்பதற்குப் போதுமான சாக்ஷியுமில்லாததால் விட்டு விட்டார். கிராம மாஜிஸ்டிரேட் கொடுத்த தீர்ப்பை மாற்றுவதற்கு ஐகோர்ட்டார் ஒருவருக்குமட்டிலும் அதிகார மிருக்கிறதே யொழிய மற்றக் கோர்ட்டார் மாற்ற அதிகாரமில்லை என்றும், ஆகையால் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் மாற்றினது சட்டவிரோதமென்றும் கிராம மாஜிஸ்டிரேட் சொல்லி, ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு மனுசெய்து கொண்டார். ஜில்லா மாஜிஸ்ட்டிரேட் மறுபடியும் கேசை விசாரணைசெய்து பைசல்செய்யும்படியாகச் சப் மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவு செய்தார். இவர் மறுபடியும்கேசைவிசாரணைசெய்து குற்றவாளிகள்பேரில் இ. பி. கோ. 224 வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றம் ஸ்தாபித்துத் தண்டிப்பதற்குப் போதுமான சாக்ஷியமில்லை யென்றுசொல்லி குற்றவாளிகளைவிட்டு விட்டார். இதன்பேரில் கிராம மாஜிஸ்டிரேட், குற்றவாளிகளுக்கு விதித்த விலங்கு தண்டனையை நிறைவேற்றி வைக்கும்படியாக அதாவது, அவர்கள் இந்த தண்டனைக்கு உட்படும்படியாக உத்தரவு செய்யவேண்டுமென்று சப் மாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்து கொண்டார். இந்த மனுவின்பேரில், குற்றவாளிகளைத் தம்முடைய கோர்ட்டில் ஆஜராகும்படிச் சப் மாஜிஸ்டிரேட் சம்மன் அனுப்பினார். ஆகவே, குற்றவாளிகள் இந்த உத்தரவிற்கு விரோதமாகவும் கிராமமாஜிஸ்டிரேட் விதித்த விலங்கு தண்டனைக்கு விரோதமாகவும் ஹைகோர்ட்டில் இரண்டு ரிவிஷன் மனுக்கள் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:—பாரிஸ்டர் ரிச்மண்டு அப்பீல்தார்களுக்கும், பப்ளிக் பிராசிக்கியூட்டர் கிராம மாஜிஸ்டிரேட்டிற்கும் பேசினார்.

தீர்ப்பு:—கிராம மாஜிஸ்டிரேட்டின்மனுவின்பேரில் குற்றவாளிகளை விசாரணைசெய்யும் பொருட்டு அவர்களுக்குச் சம்மன் அனுப்பினதில் சப் மாஜிஸ்டிரேட் தம்முடைய அதிகார வரம்பு மீறி நடந்திருக்கிறார் என்று சொல்லி சப் மாஜிஸ்டிரேட் செய்திருக்கும் உத்தரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

கிராம மாஜிஸ்டிரேட், மிகுந்த கேவலமானவர்களுக்கு விலங்கு தண்டனை விதிக்கலாமே தவிர குற்றவாளிகள்போலொத்தவர்களுக்கு விலங்கு தண்டனை விதித்தது சட்டவிரோத மென்று அத்தண்டனையையும் ரத்து செய்துவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—{ மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

நிறைவேற்று மனு சரியான கோர்ட்டில் கொடுக்கப்படவேண்டும்.

(5—3—07.)

கேசின்விபரம்:—திருச்சினுப்பள்ளி ஜில்லாக் கோர்ட்டில் S. சுந்தர குருசாமி அய்யர் என்பவர் ஒரு டிக்கிரி பெற்றார். இந்த டிக்கிரியை டி. மு. கோர்ட்டிற்கு மாற்றும்படியாக 1903-ம் வருஷம் ஜனவரிமீ 30உ ஒரு நிறைவேற்று மனு ஜில்லாக்கோர்ட்டில் செய்துகொண்டார். ஜில்லாக்கோர்ட்டார் இந்த மனுவை விசாரணை செய்ய 1903-ம் ஆ பிப்ரவரிமீ 24உ குறிப்பிட்டு நோட்டீஸ் பிறப்பிக்கும்படி உத்தரவு செய்தார்கள். விசாரணைதினம் டிக்கிரி பெற்றவராகிய சுந்தர குருசாமி அய்யர் கோர்ட்டில் ஆஜராகவில்லை. கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிட்டார்கள். சுந்தர குருசாமி அய்யர் தம்முடைய டிக்கிரியை ஜில்லாக் கோர்ட்டார் டி.மு. கோர்ட்டிற்கு மாற்றியிருப்பார்கள் என்று பிசகாக நினைத்து 1906-ம் ஆ ஜனவரிமீ 16உ டிக்கிரியை நிறைவேற்ற டி. மு. கோர்ட்டில் மனுகொடுத்தார். டி. மு. கோர்ட்டார், அந்த டிக்கிரியும் அதைச்சேர்ந்த ரிகார்ட்டுகளும் தங்களுடைய கோர்ட்டிற்கு வரவில்லை என்று சொல்லி மனுவைத் திருப்பிக்கொடுத்துவிட்டார்கள். இதன்பிறகு சுந்தரகுருசாமி அய்யர் 1906 - ம் ஆ மார்ச்சுமீ 5உ ஜில்லாக்கோர்ட்டில் நிறைவேற்று மனு கொடுத்தார்.

ஜில்லாக்கோர்ட்டார் உத்தரவு:—இந்த டிக்கிரியை நிறைவேற்ற 1903-ம் ஆ ஜனவரிமீ 30உ முதலில் மனு செய்துகொள்ளப்பட்டது. இதன் பிறகு டிக்கிரி பெற்றவர் 1906-ம் ஆ ஜனவரிமீ 16உ டி. மு. கோர்ட்டில் மனுகொடுத்திருக்கிறார். டி. மு. கோர்ட்டில் கொடுக்கப்பட்ட மனு சரியான கோர்ட்டில் கொடுத்ததாக எண்ணப்படமாட்டாதாகையால், இந்த மனு கொடுக்கப்பட்ட தேதிமுதல், (டிக்கிரிக்கு காலாவதி தோஷம் உண்டாய்விட்டதா இல்லையா என்று நிர்ணயிக்க,) கணக்கு செய்யப்படமாட்டாது. ஆகையால் டிக்கிரிபெற்றவர் ஜில்லாக் கோர்ட்டில் 1903-ம் வருஷம் ஜனவரிமீ 30உ கொடுத்த தேதிமுதல் டிக்கிரிக்குக் காலாவதி தோஷம் கணக்கிடப்படவேண்டும். அப்படி 1903-ம்ஆ ஜனவரிமீ 30உ முதல் இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் மனுதேதியாகிய 1906ம்ஆ மார்ச்சுமீ 5உ வரையில் கணக்கு செய்தால் மூன்று வருஷங்களுக்கு மேலாகின்றது. ஆகையால் லிமிடேஷன் ஆக்ட் 179 ஆர்ட்டிகிலின் 4-வது கிளாசின் பிரகாரம் டிக்கிரி காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறது என்று சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்தார்கள். இதன்பேரில் சுந்தரகுருசாமி அய்யர் ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்.

மனுதாரருக்கு ஆஜரான வக்கீல் டி. மு. கோர்ட்டில் செய்துகொண்ட மனு சட்டப்பிரகாரம் செய்துகொள்ளப்பட்டதென்றும் அதிலிருக்கும் தோஷமெல்லாம் கூடி மனுதார் டிக்கிரி டி. மு. கோர்ட்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறதென்று தப்பிதமாக நினைத்து டி. மு. கோர்ட்டில் மனு கொடுத்தார் என்றும், ஆகையால் டி. மு. கோர்ட்டில் மனு கொடுத்த தேதிமுதல் காலாவதி தோஷம் உண்டா இல்லையா என்றுநிர்ணயிக்க, கணக்கு செய்யப்பட வேண்டுமென்றும், அப்படி கணக்கு செய்துபார்த்தால் டிக்கிரிக்குக் காலாவதி தோஷமுண்டாகவில்லை என்றும் இதற்கு ஆதாரமாக ஒரு பிரிவி கவுன்சில் தீர்ப்பையும் எடுத்துக் கூறினார்.

தீர்ப்பு:—அப்பீல்தாரின் வக்கீல் கூறும் தீர்ப்பு பழைய லிமிடேஷன் ஆக்ட் ஊர்ச்சிதத்திலிருக்கும்போது செய்யப்பட்ட தீர்ப்பாகையால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இப்போது ஊர்ஜிதத்திலிருக்கும் லிமிட்டேஷன் ஆக்ட் 179 ஆர்ட்டிகில் நான்காவது கிளாசில் நிறைவேற்று மனு சரியான கோர்ட்டில் செய்யப்பட வேண்டுமென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்பீல்தார் டி. மு. கோர்ட்டாருக்குச் செய்துகொண்ட மனு சரியான கோர்ட்டில் செய்துகொண்ட மனுவாகமாட்டாதென்று சொல்லி அசல் கோர்ட்டு உத்தரவை உறுதிசெய்து ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்தார்கள்.

ஜட்ஜிகள்:—{ மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

அநியாயமாய்த் தடுத்துப் பணம்பறித்த கேஸ்.

(26-2-07.)

கேசின்விபரம்:—அப்பீல்தார் சொக்கலிங்கஆசாரி. ரன்னிமெட் ரயில்வேஸ்டேஷனில் பிரயாணிகளுக்கு பிளேக் பாஸ்போர்ட் கொடுக்கும் ரயிட்டர்; இவரும் ஒரு போலிஸ் கான்ஸ்டேபிளும் ஆக இருவரும் சேர்

ந்து இரண்டு பிரயாணிகளை அநியாயமாய்த் தடுத்து அவர்களிடமிருந்து மூன்று அணு மூன்று தம்படி பறித்ததாக கூனூர் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்னால் குற்றம் சாட்டப்பட்டார்கள். இருவர்களும் பிரயாணிகளை அநியாயமாய் தேக்கிவைத்து, ரயிட்டர் பாஸ்போர்ட் எழுதுகிறவர்போல் பாவனை செய்தாரென்றும், அந்த சமயம் கான்ஸ்டேபில் பிரயாணிகளிடம் அநியாயமாய் 3-அணு 8-தம்படி வாங்கினதாகவும், கடைசியில் பிரயாணிகளுக்கு யாதொரு பாஸ்போர்ட்டும் கொடுக்காமல் அனுப்பினுர்கள் என்றும் தெரியவந்தது. ஆகவே சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் இருவர் பேரிலும் அநியாயமாய்த் தடுத்த குற்றமும், அநியாயமாய் பணம் பறித்த குற்றமும் ஸ்தாபித்து ஒவ்வொருவருக்கும் 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் ரூ. 15 அபராதமும் விதித்தார். பாஸ்போர்ட் ரயிட்டராகிய சொக்கலிங்க ஆசாரி மட்டிலும் செஷன் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். செஷன் ஜட்ஜி மிஸ்டர் F. D. P. ஓல்ட்பீல்ட் இந்த அப்பீலை விசாரணைசெய்து சப் கோர்ட்டு குற்றஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதி செய்தார். இந்தத்தீர்மானத்திற்கு விரோதமாக சொக்கலிங்க ஆசாரி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீல் கிரௌண்டுகளில் ஒன்று என்னவென்றால், செஷன் கோர்ட்டார், சொக்கலிங்கஆசாரி வக்கீல் வைத்துப் பேசும்படி ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய அவகாசம் கொடாமலே அப்பீலை விசாரணை செய்து பைசல் செய்துவிட்டார்கள் என்பதே.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—செஷன் கோர்ட்டார் கைதி வக்கீல் வைத்துப்பேசும்படியான அவகாசம் கொடுக்காமல் கேசை பைசல் செய்துவிட்டபடியால் இந்தக் கேசை மறுபடியும் செஷன் கோர்ட்டார் விசாரணை செய்து பைசல் செய்யும்படியாக உத்தரவு செய்தார்கள்.

செஷன் கோர்ட்டார் இந்தக் கேசை மறுபடியும் விசாரணைசெய்து சொக்கலிங்கஆசாரியின் பேரில் ஒரு குற்றமட்டிலும் அதாவது அநியாயமாய்த் தடுத்த குற்றமட்டிலும் ஸ்தாபித்து, முன் விதித்த தண்டனையை மாற்றி 15-நாள் சாமானிய தண்டனை விதித்தார்கள். இந்தத் தீர்மானத்திற்கும் விரோதமாக சொக்கலிங்கஆசாரி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு:—இந்தக் கேசில் சொக்கலிங்கஆசாரி சம்பந்தப்பட்டவரையில் அவர் அநியாயமாய்த் தடுத்த குற்றம் செய்திருப்பதாக ருஜுப்படவில்லை. ஆகையால் கீழ்க்கோர்ட்டு தண்டனையை ரத்து செய்து குற்றவாளியை விடுவிக்கும்படி உத்தரவு செய்கிறோம் என்று சொன்னார்கள்.

ஜட்ஜிகள் :—(ஷை)

கிரிமினல் அப்பீல்.

நெட்ராவதி நதி கொலைக்கேஸ்.

27-2-07.

கேசின் விபரம்:—தென்கன்னடத்தில் சேஷபாண்டி என்பவரின் தமையன் குமாரனாகிய ஜென்னுபாண்டி என்பவர் கொலை செய்யப்பட்டு, பிரேதம் நெட்ராவதி நதியில் அகப்பட்டது. சேஷபாண்டி என்பவருக்கும் கொலை செய்யப்பட்ட ஜென்னுபாண்டி என்பவருக்கும் ஜென்ம விரோதம். போலீசார், இந்த விரோதத்தை முன்னிட்டு சேஷபாண்டி என்பவரும் அவர் வகையருவுந்தான் இந்தக் கொலைக்குற்றத்தைச் செய்திருக்கவேண்டுமென்று அனுமானித்து சேஷபாண்டி என்பவர் பேரிலும் இன்னும் 9-பேர்கள் பேரிலும் கொலைக்குற்றமும் கொலைக்கு உடந்தையாயிருந்த குற்றமும் சாட்டினார்கள்.

தென்கன்னடம் செஷன் கோர்ட்டார் இந்தக் கேசை விசாரணைசெய்து முதல்குற்றவாளியாகிய சேஷபாண்டிக்கும் இரண்டாவது குற்றவாளிக்கும் தூக்குத் தண்டனை விதித்து மற்றக்குற்றவாளிகளுக்கு ஜன்ம தீவாந்தர தண்டனை விதித்தார்கள். செஷன் ஜட்ஜி தீர்ப்பு சொல்லும்போது இந்தக்கேசில் பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்வது ருஜுப்படுவது போலவும், டிபன்ஸ் தரப்பார் சொல்லுவது ருஜுப்படாதது போலவும் என்முன் வந்திருக்கும் எந்தக் கேசிலும் நான் பார்த்ததில்லை என்று ரிமார்க்கு செய்திருக்கிறார்.

செஷன் கோர்ட்டார் தீர்மானத்திற்கு விரோதமாக கைதிகள் எல்லோரும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—முதல் குற்றவாளிக்கு வக்கீல் மிஸ்டர் C. சங்கரநாயரும், 2, 10 - குற்றவாளிகளுக்கு மிஸ்டர் R. L. ரொசேரியோவும்,—பாரிஸ்டர் மிஸ்டர் E.R. ஆஸ்டரும், வக்கீல் மிஸ்டர் K. P. மாதவராவும் 3, 4, 5, 6, 7, 8, 9 குற்றவாளிகளுக்கு ஆஜரானார்கள்.

அப்பீல் கிரௌண்டுகளில் முக்கிய அம்சம் என்னவென்றால், மரணம் எப்படி உண்டானதென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதபடி பிரேதம் அழுகிப்போயிருந்தது. நெட்ராவதி நதியில் பிரேதம்கண்டெடுத்தபோது அதன் கழுத்தில் ஒரு கல் ஒரு துணியால் இறுக்கிக்கட்டப்பட்டிருந்தது. கழுத்து சரியான நிலையிலில்லாமல் திரும்பியிருந்தது. ஒருக்கால் கல்லின் பளுவைப்பொறுக்கமுடியாமல் கழுத்து திரும்பியிருந்தாலுமிருக்கக்கூடுமென்று யூகிக்கப்பட்டது. வலது காலில் முழங்கால் வளையிலில்லை. அந்தரங்கஸ்தானங்களுமில்லை. பிரேதபரிசோதனை விசாரணையில் இறந்துபோனவனுக்கும் குற்றவாளிகளுக்கும் கடுமையான விரோதமிருந்ததாகத் தெரியவந்தது.

உத்தரவு:—அப்பீல் தாக்கல்செய்யும்படி உத்தரவு செய்தார்கள். முதல் குற்றவாளியை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று வக்கீல் மிஸ்டர் C. சங்கரநாயர் செய்துகொண்ட மனு தள்ளுபடிசெய்யப்பட்டது.

ஒரு அட்வோகேட்.

இங்கிலாண்டிற்குப் போய் பாரிஸ்டராகத்தயாராகி வந்திருக்கும் மிஸ்டர் பிரகாசம் என்பவரைச் சென்னை ஹைகோர்ட்டில் அட்வொகேட்டாகத் தாக்கல் செய்துகொள்ளும்படி பாரிஸ்டர் டாக்டர் சாமிநாதன் நிகழ் மார்ச்சுமீ 7௳ வேண்டிக்கொள்ள, அப்படியே தாக்கல் செய்துகொள்ளும்படி கோர்ட்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மிஸ்டர் பிரகாசம் என்பவர் இங்கிலாண்டிற்குப்போவதற்குமுந்தி கோதாவரி ஜில்லாவில் வக்கிலாக பிராக்டிஸ் செய்துகொண்டிருந்தார்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ். மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் அப்பீல்.

லைசென்சு வாங்காமல் விறகுதோட்டிவைத்த கேஸ்.

(25-2-07.)

கேசின் விபரம்:—நாகபட்டணத்தில் சொக்கலிங்கம்பிள்ளை என்பவர் தர்க்காமார்க்கட்டில் 1884-ம்ளு த்திய ஜில்லா முனிசிபல் ஆக்ட் 188-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி லைசென்சு வாங்காமல் விறகுதொட்டி வைத்தார். முனிசிபாலிடியார் சொக்கலிங்கம்பிள்ளையின்பேரில் ஷை ஆக்ட் 188, 189 பிரிவுகளில் சொல்லியிருக்கும் குற்றம் சாட்டினார்கள். நாகபட்டணம் பென்ச் மாஜிஸ்டிரேட் கோர்ட்டார், இந்தக்கேஸை விசாரணைசெய்து தர்க்கா மார்க்கெட் லைசென்சு பெற்று வைக்கப்பட்டிருக்கும் மார்க்கட்டானபடியால் அதில் விறகுதொட்டிவைப்பதற்குச்சொக்கலிங்கம்பிள்ளைபிரத்தியேகமாய் லைசென்சு வாங்கவேண்டியதில்லை என்று சொல்லி அவரைக்குற்றத்தினின்று விடுவித்து விட்டார்கள்.

இந்தக்கேசின் ரிகார்ட்டுகள் பப்ளிக் பிராசிக்கியூட்டருடைய பார்வைக்கு வந்தபோது பென்சு கோர்ட்டார் குற்றவாளியை விட்டுவிட்டது பிசகு என்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—ஜில்லா முனிசிபல் ஆக்ட் 188-வது பிரிவில் விறகுவிற்கும் ஒவ்வொருவரும், அல்லது சேர்த்து வைக்கும் ஒவ்வொருவனும் அப்படி விற்பதற்கும் சேர்த்துவைப்பதற்கும் முந்தி லைசென்சு பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. தர்க்கா மார்கெட் லைசென்சுபெற்று வைக்கப்பட்டிருப்பது குற்றவாளி தான் விறகுதொட்டி வைப்பதற்கு லைசென்சு வாங்கவேண்டிய கடமையிலிருந்து விலக்கமாட்டாது என்று சொல்லி குற்றவாளிக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்தார்கள்.

ஜட்ஜிகள் :—(ஷை)

கிரிமினல் அப்பீல்.

பாஷாணமிட்டுக் கொலைசெய்த கேஸ்.

(25-2-07.)

கேசின் விபரம்:—குண்டூர் ஜில்லாவில் பெத்த காஞ்ச் சர்லா என்கிற கிராமத்தில் பி. ஹெமுனுகாடி என்பவன், பிச்சுவாடு என்கிற சுமார் பத்துவயதுள்ள பையனுக்கு ஒருவிதமான "கோரா" மாவில் பாஷாணம் கலந்து உருண்டைசெய்து சாப்பிடும்படி கொடுத்தான். பையன் அதைச் சாப்பிட்டவுடன் அன்று மத்தியானமே இறந்துபோய்விட்டான். பையன் வாயாலெடுத்ததையும், அவனுடையவயிற்றிலிருந்த இரைப்பையையும் போலீசார் சென்னபட்டணம் கெமிகல் எக்ஸாமினருக்குஅனுப்பினார்கள். அவர் வாயாலெடுத்ததிலும் இரைப்பையிலும் பாஷாணம் கலந்திருப்பதாக ரிபோர்ட் செய்தார்

குண்டூர் செஷன் கோர்ட்டார் இந்தக்கேஸை விசாரணைசெய்து கொலைக்குற்றம் ருஜுப்படுகிறதென்றும், ஆனால் கைதி எந்த எண்ணத்தைக்கொண்டு கொலைசெய்திருக்கிறான் என்று தெரியவில்லை என்றும் சொல்லி கைதிக்கு ஜென்ம தீவாந்தர தண்டனை வி[illegible]த்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—இந்தக்கேஸ் கலப்பற்ற கொலைக்கேஸ் என்றும், கைதி பையனை கொலை செய்யவேண்டுமென் கிற எண்ணத்துடன் கொலை செய்திருக்கிறான் என்று சொல்லி கீழ்க்கோர்ட்டுத் தண்டனையை மாற்றிக் கைதிக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்கள்.

ஜட்ஜிகள் :—(ஷை)

கிரிமினல் அப்பீல்.

திடீரென்று கோபமூண்டு கொலைசெய்த கேஸ்.

(25-2-07.)

கேசின் விபரம்:—வட ஆற்காடு ஜில்லாவில் லிங்[illegible] சித்தாடு என்பவன் பெண்சாதிக்கும் வேறொருவனு[illegible]க்கும் தொடுசிருந்ததாகத் தெரிகின்றது. ஆன[illegible] இந்த விஷயம் புருஷனுக்குத் தெரியாது. இவள் க[illegible]ந்த செப்டம்பர்மீ 14௳ பகலில் ஒரு வயலில் ஏதோ தானியம் பொறுக்கிக்கொண்டிருந்தபோது சோர பு[illegible]ஷன், பக்கத்திலிருந்த ஒரு குத்துச் செடிக்குச் சமீப[illegible]த்தில் அவளுடன்புணரும்பொருட்டு அவளைப்பிடித்திழு[illegible]த்துக் கொண்டிருந்தான். அவள் இச்சமயம் வரமாட்டே[illegible]ன் என்று சொல்லிக்கொண்டிருந்தாள். இப்படி இரு[illegible]ரும் தகரார் செய்துகொண்டு இழுத்துப் பரித்து[illegible] கொண்டிருக்கையில் சொந்த புருஷன்வந்துவிட்டான். திடீரென்று அவனுக்குக் கோபம்பிறந்து சோரபு[illegible]ஷனைக் கல்லாலடித்தான். அவன் அடிபட்டவுட[illegible] பூமியில் விழுந்து இறந்துபோய்விட்டனன். ஆகவே செ[illegible]ந்தபுருஷன்பேரில் கொலையாகாத அநியாயமரணம் வி[illegible]வித்த குற்றம் சாட்டப்பட்டு வட ஆற்காடு செஷன் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டதில் கைதி, தன்[illegible]டைய பெண்சாதியைச்சோரபுருஷன் இழுத்துக்கொ[illegible]டிருந்ததைப் பார்க்கச்சகியாமல் திடீரென்று கோ[illegible]மூண்டு அந்தக் கோபத்தால் அடித்ததில் கொலைநேர்ந்[illegible]ருப்பதால் 7-வருஷ தண்டனை விதித்தால் போதுமா[illegible]தென்று சொல்லி அப்படியே 7 - வருஷ கடினகாவ[illegible] தண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்துகொ[illegible]டான்.

தீர்ப்பு:—7-வருஷ தண்டனையை மூன்று வருஷ த[illegible]டனையாக மாற்றப்பட்டது.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் மில்லர்.

கிரிமினல் அப்பீல்.

அதிகாரமில்லாமல் ஜப்திசெய்த கேஸ்.

கேசின் விபரம்:—தென்கன்னடத்தில் உடுப்பி எ[illegible]னு நகரில் ஒரு கோவிலிருக்கின்றது. இதைச் சுற்[illegible]யுள்ள நிலம் சர்க்காருக்குச் சொந்தமானது. இதி[illegible] கடைவைத்துப் பந்தல் போட்டுக்கொள்ளுகிறவர்களி[illegible]மிருந்து சர்க்கார் வாடகை வசூல் செய்கிறது வழக்க[illegible] இந்தவாடகைகளை வசூல்செய்ய ஒவ்வொரு வருஷமு[illegible]

சர்க்கார் ஏலம்போட்டு கண்டிராக்ட்டு விட்டுவிடுகிறது வழக்கம். 1906ம் ௵ ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ 31௳ வரையில் சங்கர நாராயணராவ் என்பவர் கண்டிராக்ட் எடுத்திருந்தார். இவர் கண்டிராக்ட் எடுத்ததற்குமுந்தி, ஷை நிலத்தில் ஒருவர் பந்தல்போட்டுக்கொள்ள வேண்டுமென்று தாலுக்கா போர்ட் பிரசிடெண்டிற்கு மனுசெய்து கொண்டார். பிரசிடெண்ட் பந்தல் போட்டுக்கொள்ளும்படி உத்தரவுசெய்தார். அப்படியே பந்தலும் போட்டுக்கொள்ளப்பட்டது. வாடகை வசூல்செய்ய கண்டிராக்ட் எடுத்த சங்கரநாராயணராவ் பந்தல்போட்டுக் கொண்டவரிடம் வாடகைகேட்டார். அவர் தாம் வியாபாரம் செய்யப் பந்தல் போடவில்லை என்று சொல்லி வாடகைகொடுக்கமறுதளித்துவிட்டார். கண்டிராக்ட்டர் தாசில்தாருக்குத் தெரிவித்து இதுவிஷயத்தில் "பேட்டல்" என்கிற கிராம உத்தியோகஸ்தரை உதவிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தாசில்தாரும் அப்படியே அனுப்புவித்தார். சங்கரநாராயணராவும், பேட்டலும் இன்னும் சிலரும் பந்தல் போட்டவன் கடைக்குச் சென்று வாடகைகேட்டார்கள். அவர் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இதன்பேரில் சங்கரநாராயணராவ் வகையரு ஒருநோட்டிஸ் பந்தற்காலில் ஒட்டிக் கடையிலிருந்த ரூ. 8-8-0 பெறுமான இரண்டு உளுந்து மூட்டைகளை ஜப்தி செய்து அதற்கு ரசீதும் பந்தல்காரரிடம் கொடுத்துவிட்டு, மூட்டைகளை ஏலத்தில் போட்டு கிரயம்செய்து தங்களுக்குச் சேரவேண்டிய வாடகையை எடுத்துக்கொண்டு பாக்கிப்பணத்தை தாலூக்கா கெஜானாவில் செலுத்திவிட்டார். பந்தல்காரர் சங்கரநாராயணராவ் செய்தது சட்டவிரோதமென்று தாலூக்கா பிரசிடெண்டிற்கு மனுசெய்து கொண்டார். தாலூக்கா பிரசிடெண்டு இதைப்பற்றித் தாசில்தாரிடமிருந்து ஒரு ரிப்போர்ட் தருவித்துப் பார்த்துவிட்டு மனுவைத் தள்ளிவிட்டார். இதன்பேரில் பந்தல்போட்டவர் சங்கரநாராயணராவ் வகையருபேரில் தென்கன்னடம் எட். அசிஸ்டன்ட் மாஜிஸ்டிரேட்டினிடம் திருட்டுக்குற்றம் சாட்டினர். ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்தக்கேசைத் தம்முடைய பயிலுக்கு மாற்றிக்கொண்டு விசாரணை செய்தார்.

கண்டிராக்ட்டருக்கு ஜப்தி செய்ய அதிகார மில்லை என்பது பிராசிக்யூஷன் தரப்பார் சொன்னகக்ஷி. வாடகைவசூல் செய்ய கண்டிராக்ட் எடுத்ததிலேயே ஜப்தி செய்யும் அதிகாரமும் அடங்கியிருக்கிறதென்பது டிபன்ஸ் தரப்பாரின்கக்ஷி.

கேசின் விசாரணை:—ஜில்லா மாஜிஸ்டிரேட் தாலூக்கா போர்ட்கிளர்க்கையும் தாசில்தாரையும் சாக்ஷிகளாக விசாரணைசெய்தார். கண்டிராக்ட்டருக்கு ஜப்தி செய்ய அதிகாரமிருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் கண்டிராக்ட் எகிரிமெண்டில் ஜப்தி செய்வதைக் குறித்து யாதொன்றும் சொல்லப்படவில்லை.

ஜில்லா மாஜிஸ்டிரேட் தீர்ப்பு:—வாடகை வசூல் செய்யும் பாத்தியதையைச் சர்க்கார் ஏலம் போடுவதற்காக விளம்பரம்படுத்திய நோட்டீசிலாவது, அல்லது கண்டிராக்டர் எழுதிக் கொடுத்த எகிரி மெண்டிலாவது, அல்லது தாலூக்கா போர்ட்பிரசிடெண்டு கொடுத்த ஆர்டரிலாவது கண்டிராக்டருக்கு ஜப்தி செய்யவும் அதிகாரமிருக்கிறதென்று பொருள்படக் கூடிய யாதொன்றும் எழுதப்படவில்லை. ஆகையால் கண்டிராக்டருக்கு ஜப்தி செய்ய அதிகாரம்கிடையாது. ஆகவே கண்டிராக்டர்பேரில் திருட்டுக் குற்றம் ஸ்தாபித்து ரூ. 30 அபராதம் விதிக்கின்றோம். அபராதம் கட்டத்தவறினல் 30 நாள் கடினகாவல் தண்டனை விதிக்கின்றோம் என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. மற்றக் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

கண்டிராக்டர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

வக்கீல் மிஸ்டர் சீதாராமராவ் அப்பீல்தார் தரப்பிற்கு ஆஜராகித் திருட்டுக்குற்றம் ஸ்தாபிக்க வேண்டுமானல் குற்றத்தைச் செய்தவன் அயோக்கியமான எண்ணம் கொண்டு செய்திருக்கவேண்டும். கண்டிராக்ட்டருக்கு அயோக்கியமான எண்ணமில்லை. ஜப்தி செய்யத் தமக்கு அதிகாரமிருக்கிறதென்று உள்ளபடி நினைத்துச் செய்திருக்கிருர்.

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு தண்டனையை ரத்துசெய்து குற்றவாளியை விடுவித்துவிட்டார்கள்.

ஜட்ஜிகள் :— ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சன். / ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.

சிவில் ரிவிஷன் மனு.

(22-2-07.)

ஜப்தி செய்யப்பட்ட மாகூலை மோசடி செய்தகேஸ்.

கேசின் விபரம் :—ஜப்தி செய்யப்பட்ட மாகூலைச் சிலர் மோசடியாய் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இவர்களைப் பிராசிக்கியூஷன் செய்யும்படியாக நாமக்கல் டி.மு. கோர்ட்டார் சாங்கிஷன் கொடுத்தார். இந்த உத்தரவிற்குவிரோதமாக அப்பீல் செய்துகொள்ள, ஜில்லாக் கோர்ட்டார் டி.மு. கோர்ட்டார் உத்தரவை ரத்து செய்தார்கள். அந்த உத்தரவிற்கு விரோதமாக ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனு தாக்கல் செய்யப்பட்டது.

லாயர்கள்:—வக்கீல் K. R. சுப்பிரமணியசாஸ்திரிகள் அப்பீல் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் டாக்ட்டர் சாமிநாதன் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானர்கள்.

தீர்ப்பு :—பிராசிக்கியூட் செய்யும்படி கீழ்க்கோர்ட்டார் கொடுத்த சாங்க்ஷனை ஒரு அப்பீல் கோர்ட்டார் ரத்துசெய்துவிட்டால் ரத்து செய்த உத்தரவிற்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளலாமென்று சில தீர்ப்புகளும், அப்பீல் செய்யக்கூடாதென்று சில தீர்ப்புகளும் கூறுகின்றபடியால் இந்தக் கேசைப் புல்பெஞ்சிற்கு ரிபர் செய்திருக்கிருர்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

கிரம வியாஜ்ஜியம்.

வாதி:—C. ரத்தினவேலு செட்டி.

பிரதிவாதி:—சென்னை கார்பொரேஷன் (முனிசிபாலிட்டி)

மார்க்கட்டு ஏற்படுத்த லைசென்ஸ் கொடுக்காத கேஸ்.

கேசின் விபரம்:—சென்னை ஸ்ரீ விஜய விக்கினேஸ்வரர் கோவில் தெருவிலுள்ளவர்கள் தங்கள் தெருவில் ஒரு மார்க்கட்டு கட்டும்படி வாதியை வேண்டிக் கொண்டார்களாம். வாதி ஒரு மார்க்கட்டு கட்டுவதற்காகப் பிளான் தயார்செய்து கட்டடங் கட்டுவதற்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்று சென்ற நவம்பர்௴ 27௳ ஒரு மனுசெய்துகொண்டார். முனிசிபாலிட்டியார் கட்டடம் கட்ட லைசென்ஸ்கொடுத்தார்கள். கொடுக்கும்போதே அதில் மார்க்கட்டு வைப்பதற்கு முனிசிபாலிட்டியார் சம்மதித்தாலும் சம்மதிப்பார்கள்; சம்மதியாமற் போனாலும் போவார்கள் என்று விபரமாய்ச் சொல்லி கட்டடம் கட்டிக்கொள்ளமட்டிலும் லைசென்ஸ் கொடுத்தார்கள். வாதி ரூ. 25 ஆயிரம் செலவுசெய்து கட்டடம் கட்டி முடித்தார். இதில் மார்க்கட்டு வைக்கும்படியாக லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்று வாதி பிரதிவாதியைக் கேட்டுக்கொண்டார். கட்டடம் சுகாதாரவிஷயத்திலும் மார்க்கட்டு வைப்பதற்கும் பொருந்தி யிருக்கின்றது. மேலும் கட்டடம்கட்டப்படும்போதே வாதிக்கும்வாதியின் உத்தியோகஸ்தர்களுக்கும் இந்தக்கட்டடம் மார்க்கட் வைப்பதற்காகக் கட்டப்பட்டுவருகிறதென்று நன்ருய்த்தெரியும். ஆகையால் இப்போது பிரதிவாதி லைசென்ஸ் கொடுக்க மறுதளிப்பதற்கு அதிகாரமில்லை. கட்டடத்தை இடித்து வேறுவிதமாகக் கட்டினலொழிய கட்டடம் குடியிருப்பதற்குப் பிரயோஜனப்படாது. ஆகையால் பிரதிவாதி இந்தக்கட்டடத்தில் மார்க்கட்டு வைப்பதற்கு லைசென்ஸ் கொடுக்கும்படிச் செய்யவேண்டுமென்றும், இல்லாவிடில் ரூ. 25 ஆயிரம் நஷ்டம் கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டு மென்றும் வாதி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிருர்.

பிரதி வாதியின் எழுத்து வாக்குமூலம்:—(1) இந்த வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூல மில்லை. ஆகையால் கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்ய அதிகாரமில்லை. (2) வாதி கட்டடம் கட்டுவதற்குப் பிரதிவாதி லைசென்ஸ் கொடுத்தபோதே மார்க்கட்டு வைக்க லைசென்ஸ் கொடுத்தாலும் கொடுக்கப்படும்கொடுக்காமலுமிருக்கப்படு மென்று வியக்தமாய் வாதிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (3)வாதி, கட்டடத்தில் மார்க்கட்டு வைத்துக்கொள்ளப் பிரதிவாதி லைசென்ஸ் கொடுக்காமல் போனது பிரதிவாதிக்குள்ள அதிகாரத்தை அநியாயமாய் உபயோப்படுத்தின தாகமாட்டாது. (4) லைசென்ஸ் கொடுப்பதும் இல்லை என்பதும் பிரதிவாயின் இஷ்டத்தைப்பொறுத்தது. (5) பிரதிவாதியின் தீர்மானம் சரியாசரியல்லவா என்று கேட்க வாதிக்குப் பாத்தியமில்லை. (6) அந்த இடத்தில் ஏற்கனவே ஒரு மார்க்கட்டிருப்பதால் இன்னுமொரு மார்க்கட்டு அவ்விடத்தில் அனவசியம். (7) ஆகையால் வியாஜ்ஜியத்தைத்தள்ளிவிட வேண்டும்.

அடியிற்கண்ட இஷ்யூக்கள் ஏற்படுத்தப்பட்டன.

(1) வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூலம் உண்டாயிருக்கிறதா ?

(2) ஒரு புது மார்க்கட்டு ஸ்தாபிக்கப் பிரதிவாதி சம்மதம் கொடுக்காதது சட்ட விரோதமான அல்லது அநியாயமான காரியமாகுமா ?

(3) 1904-ம் ௵த்திய மூன்ருவது ஆக்ட் 456 வது பிரிவின்படி லைசென்ஸ் கொடுப்பது பிரதிவாதியின் இஷ்டத்தைப்பொறுத்ததா ?

(4) நஷ்டம் ஏதேனும் வாதிக்குக் கிடைக்கவேண்டியதாயிருந்தால் அது எவ்வளவு ?

ஜட்ஜிகள் :— சீப் ஜஸ்டிஸ். / மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1904-ம் ௵த்திய இரண்டாவது சிவில் அப்பீல்.

நெ. 1254.

பெண்சாதியையும் பிள்ளையையும் தன்னுடையதல்ல வென்று சொன்னகேஸ்.

(6-3-07.)

வாதி:—புருஷன்.

பிரதிவாதிகள்:—(1) பெண்சாதி.
(2) பிள்ளை.

கேசின் விவரம்:—முதல் பிரதிவாதி தன்னுடைய பெண்சாதி யல்லவென்றும், இரண்டாவது பிரதிவாதி தன்னுடைய பிள்ளையல்லவென்றும் ஸ்பெசிபிக் ரிலிப் ஆக்ட் 42-வது பிரிவின்படி கோர்ட்டார் டிக்ளேர் (கூறும்படியாக) செய்யும் படியாக வாதி இந்த வியாஜ்ஜியத்தைப் பட்டேர் டி. மு. கோர்ட்டில் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுதவற்கு முந்தி முதல் பிரதிவாதி வாதியின்பேரில் மாஜிஸ்டிரேட்டினிடம் பிரியாது கொடுத்து கி. பு. கோ. 448-வது பிரிவின்படி புருஷன் ஜீவனும்சம் கொடுத்துவரவேண்டுமென்று உத்தரவு பிறந்திருக்கிறது. டி. மு. கோர்ட்டாரும், அப்பீலில் ஜில்லாக்கோர்ட்டாரும் இ. லா. ரி. 81 அல. 29 ல், சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பை ஆதாரமாகக்கூறி மாஜிஸ்டிரேட் ஜீவனும்சம் கொடுத்துவரும்படி செய்திருக்கும் உத்தரவை ரத்து செய்யும்படியாக இந்த வியாஜ்ஜியம் தந்திரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று அபிப்பிராயம் கூறி இந்தக்கேசைப் பிடிக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்று வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—மிஸ்டர் C. மாதவன் நாயர் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் K. S. ராமசாமி சாஸ்திரி பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானர்கள்.

தீர்ப்பு :—மாஜிஸ்டிரேட் ஜீவனும்சம் கொடுத்துவரும்படி கொடுத்திருக்கும் உத்தரவு, டிக்ளேர் செய்வதற்குச் சிவில் கோர்ட்டாருக்கிருக்கும் அதிகாரத்தை விலக்கிவிடமாட்டாது. ஆகையால் இந்தக்கேசை சிவில் கோர்ட்டார் பிடித்து சட்டப்பிரகாரம் பைசல்செய்யலா

மென்று சொல்லி இந்தக்கேசை விசாரணை செய்து பைசல் செய்யும்படி டி. மு. கோர்ட்டிற்கு அனுப்பிவிட்டார்கள்.

ஜட்ஜிகள் :— { சீப் ஜஸ்டிஸ். மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

தேர் இழுக்கத் தங்களுக்குமட்டிலும் பாத்திய முண்டேன்கிற கேஸ்.

(15-2-06.)

கேசின்விவரம்:—வாதிகள் 200 பேர்களும் கரூருக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய கிராமத்தில் ஒரு கோவிலிருக்கின்றது. இந்தக் கோவிலின் சுவாமிக்குத் தேர் உத்ஸவம் நடக்கும் பொழுது வாதிகள் 200 பேர்களும் தேர்இழுத்துச் சுவாமிக்கு ஜனங்கள் கொடுக்கும் காணிக்கையிலும் தேங்காய் பழப்பிரசாதங்களிலும் 5-ல் ஒருபங்கு பெற்றுக் கொள்ளுகிறதுவழக்கம். இப்போது காணியாக்ஷியாயுண்டான இவர்களுடைய பாத்தியதையில் சிலர் பிரவேசித்தார்கள். ஆகவே இந்த 200 வாதிகளும் தேர் இழுத்துச் சுவாமியின் வருமானத்தில் 5-ல் ஒருபங்கு பெறத் தங்களுக்குச் சுதந்தா மிருக்கிறதென்று டிக்ளேர் செய்யும் பொருட்டும், நேரிட்டிருக்கும் நஷ்டத்தைப் பெறும் பொருட்டும் கரூர் டி.மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிகளே தேர் இழுப்பது வழக்கமென்று ருஜுப்பட்டது ரூ. 100-க்குப் பிரதிவாதிகள்பேரில் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். பிரதிவாதிகள் ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—இ. லா. ரி. 28. சென். 23, 11 மெட்ராஸ் லா ஜெர்னல் 215-ல் கூறப்பட்டிருக்கும் தீர்மானங்களை ஆதாரமாக்கூறி இந்தக்கேசை சிவில் கோர்ட்டார் பிடித்து விசாரிக்கக்கூடாதென்று வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். வாதிகள் ஹைகோர்ட்டில்அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள் :— பாரிஸ்டர் மிஸ்டர் மீனன் வாதிகள் தரப்பிற்கு ஆஜரானார். மிஸ்டர் K. S. ராமசாமிசாஸ்திரியார் பிரதிவாதிகள் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—சி. பு. கோ. 11-வது பிரிவில் ஒரு சொத்திலிருக்கும்படியான பாத்தியதையை ஸ்தாபிக்கக்கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களைச் சிவில் கோர்ட்டார் பிடிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவியாஜ்ஜியத்தில் வாதிகளுக்குக் கிடைக்க வேண்டியது 5-ல் ஒருபங்கு சொத்தாகயால் இந்த வியாஜ்ஜியத்தை சிவில் கோர்ட்டார் பிடிக்க அதிகாரமிருக்கிறதென்று சொல்லி அந்த வியாஜ்ஜியத்தை விசாரித்துப்பைசல் செய்யும்படியாய் மறுபடியும் சப்கோர்ட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கோயமுத்தூர் ஜில்லா
செஷன் கோர்ட்டு.

ஜட்ஜி :—மிஸ்டர் R. D. பிராட்புட்.

அரவக்குறிச்சி கோலைக் கேஸ்.

(10-2-07.)

கேசின் விபரம் :—கோயமுத்தூர் ஜில்லாவில் பழனிமலை என்பவன், தனக்குச் சொந்தமான பரயன்காடு என்கிற வயலின் ஒரு பாகத்தைப் பொன்னப்பக்கவுண்டன் சின்னப்பக்கவுண்டன்என்கிறவர்களுக்குவிற்றான். அவ்வயலின் மற்றொருபாகத்தை ராமசாமிக்கவுண்டனுக்கு விற்றான். ராமசாமிக்கவுண்டன் வாங்கின பாகம் பின்னாலும், பொன்னப்பக்கவுண்டன் வகையரு வாங்கின பாகம் முன்னாலுமிருந்தது. ஆகவே ராமசாமிக் கவுண்டன் வாங்கினபாகத்திற்குப் போகவேண்டுமானல் பொன்னப்பக்கவுண்டன்வாங்கின பாகத்தின்வழியாகப்புகுந்து போகவேண்டியதாயிருந்தது. பொன்னப்பக்கவுண்டன் வகையரு தங்கள் நிலத்தில் வழிவிடமாட்டோம் என்று ஆக்ஷேபித்தார்கள். இது காரணம்பற்றி ராமசாமிக்கவுண்டனுக்கும் பொன்னப்பக்கவுண்டனுக்கும் மிகுந்த மனஸ்தாபமாயிருந்தது. இப்படியிருக்கும்போது ஒரு நாள் ராமசாமிக்கவுண்டன் அவ்வழியாகத் தன் தலையில் முள்ளு தூக்கிக்கொண்டு சென்றபோது பொன்னப்பக்கவுண்டன் வகையரு அவ்வழி செல்லக்கூடாதென்று மறியல் செய்தார்கள். இதினின்று சச்சரவு உண்டாகி பொன்னப்பக்கவுண்டனும் சின்னப்பக்கவுண்டனும் ராமசாமிக்கவுண்டனைக் கொலைசெய்து விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

லாயர்கள் :—குற்றவாளிகளுக்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் K. சௌடப்பய்யர், பிராசிக்கியூஷன் தரப்பிற்கு மிஸ்டர் T. J. பாலகிருஷ்ண அய்யர்.

சாக்ஷி விசாரணை :—கொலைக்குற்றம்நடந்தபோது கொலையுண்டவனாகிய ராமசாமிக்கவுண்டனின் குமாரனும், பெண்சாதியும், குமாரத்தியும் தமையன் பிள்ளையும் ஆகிய இவர்கள் அடுத்தவயலில் வேலைசெய்துகொண்டிருந்தார்கள் என்றும், பொன்னப்பன் தன்னுடைய தகப்பனை அரிவாளால் வெட்டினவுடன் தன் தகப்பன் கீழே விழுந்துவிட்டார் என்றும், பிறகு சின்னப்பன் அரிவாளை எடுத்து மறுபடியும் தன் தகப்பனரை வெட்டினனென்றும், அடுத்த வயலில் வேலை செய்துகொண்டிருந்த தானும் தன் தங்கையும் இன்னும் சிலரும் ஓடி வந்ததைப் பார்த்துக் கொலையாளிகள் ஓடிப்போய்விட்டார்களென்றும் பிராசிக்கியூஷன்தரப்பு முதல்சாக்ஷியாகிய கொலையுண்டவனின் குமாரன் சாக்ஷியம் சொன்னான். பிராசிக்கியூஷன் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட பாக்கி 22-சாக்ஷிகளும் முதல்சாக்ஷி சொன்னமாதிரியாகவே சொன்னார்கள்.

அசசர்களின் அபிப்பிராயம்:—குற்றவாளிகள் குற்றம் செய்திருக்கிறார்களென்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் அசசர் கூறின அபிப்பிராயத்தைஏற்றுக்கொண்டு பொன்னப்பக்கவுண்டன்சின்னப்பக்கவுண்டன் பேரில் இ. பி. கோ 302-வதுபிரிவின்படி கொலைக்குற்றம் ஸ்தாபித்து ஜன்மதீவாந்தர தண்டனை விதித்தார்கள்.

திருச்சினப்பள்ளி ஜில்லா
செஷன் கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் E. L. தாரண்டன் I. C. S.

பேரம்பலூர் கோலைக் கேஸ்.

(21-2-06.)

கேசின்விபரம்:—திருச்சினப்பள்ளி ஜில்லா பெரம்பலூருக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பையனைக் கொலை செய்ததாக முதல் குற்றவாளியும், முதல் குற்றவாளி பிரேதத்தையும் புதைப்பதில் 2, 3, குற்றவாளிகள் உதவி செய்ததாகவும் ஆக மூன்று பேர்கள் குற்றம் சாட்டப்பட்டார்கள். டிசம்பர்மீ 4உ பெரம்பலூர் சப் மாஜிஸ்டிரேட்டும், நான்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்களும், போலிஸ் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசரும் கிராமமுனிசீபும், முதல் குற்றவாளியை அழைத்துக்கொண்டு நான்குமயில்தூரம் நடந்து ஒரு மலையின்மேல் ஏறி, பிரேதம் புதைக்கப்பட்டிருக்கு மிடத்தைக் காண்பிக்கும்படியாக முதல் குற்றவாளியைக் கட்டாயப்படுத்தினார்கள். இரண்டு குன்றுகளுக்கு மத்தியில் பிரேதம் புதைக்கப்பட்டிருந்ததை முதல் குற்றவாளி காண்பித்தான். அதிகாரிகள் பிரேதத்தை டாக்டர் பரிசோதனைக்கு அனுப்பினார்கள்.

சாக்ஷி விசாரணை:—பிரேதத்தைப் பரிசோதனை செய்த ஆஸ்பிட்டல் அசிஸ்டன்ட் இறந்து போனவனை யாராவது முதுகில் கத்தியால் குத்தியிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டுத் தாமதமாய்ப் போலிசிற்குரிப்போர்ட் அனுப்பினதாகத் தெரியவந்தது.பிரேதபரிசோதனை புஸ்தகத்தில் முதலில் எழுதியதைக் கிழித்து எறிந்துவிட்டுப் பிறகு ஒரு கடுதாசியில் அபிப்பிராயம் எழுதியிருக்கிறார். இதற்குக்காரணம் கேட்டதற்குத் தாம் முதலிற் கொடுத்த அபிப்பிராயம் சரியா அல்லவா என்று வைத்தியபுஸ்தகங்களைப்பார்த்து எழுத வேண்டியதாயிருந்தது என்று காரணம் சொன்னார். சப் மாஜிஸ்டிரேட்டுடன் கலந்து பேசிக்கொண்டு ஆஸ்பிட்டல் அசிஸ்டன்ட் பிரேதபரிசோதனை ரிப்போர்ட் புதிதாய் தயாரித்து அனுப்பினதாகத் தெரியவந்தது. சப் மாஜிஸ்டிரேட்டை விசாரணை செய்ததில் இந்தக் கொலைக் குற்றத்திற்காக யாரையாவது பிடித்து தண்டித்துவிடவேண்டுமென்று அவ்வளவு வைராக்கியத்துடன் இந்தக் கேசில் உழைத்திருப்பதாகத் தெரியவந்தது. பையன் நவம்பர்மீ 26உ இறந்துபோனபோதிலும் டிசம்பர்மீ உ வரையில் சப் மாஜிஸ்டிரேட்டிற்கு ரிப்போர்ட் வரவில்லை. இறந்துபோன பையனின் தாயாரை சாக்ஷியாக விசாரணை செய்ததில் இவள் தன்பையன் கொலை செய்யப்பட்டதைக் கிராமமுனிசீப்புக்கு ரிப்போர்ட் செய்ததாகவும், அவர் பிரியாதை மறைத்து விட்டதாகவும் சாக்ஷிசொன்னாள். ஆனால் எந்தத்தேதியில் கிராம முனிசீப்பினிடம் ரிபோர்ட் செய்தது என்று கோர்ட்டார் கேட்ட கேள்விக்குச் சரியானபதில் சொல்லமுடியவில்லை. ஆகையால் குற்றம் ருஜுப்படவில்லை என்று அபிப்பிராயப் படும்படியாக சாக்ஷிய மெல்லாம் முன்னுக்குப் பின் விரோதமா யிருந்தது.

குற்றவாளிகளின் வாக்குமூலம்:—முதல் குற்றவாளி தான் இந்தப்பையனைக் கொலை செய்யவில்லை என்றும், இந்தப் பையன் காட்டுமிருகங்களால் அடிக்கப்பட்டுப் பிரேதமாய்க்கிடந்தான் என்றும், ஒருக்கால் தன் பேரில் இந்தக் கொலையைச் சுமத்திவிடுவார்களோ வென்று அஞ்சி இந்தப்பிரேதத்தை எடுத்து ரகசியமான விடத்தில் புதைத்ததாகவும் சொன்னான். 2, 3, குற்றவாளிகள் கீழ்க்கோர்ட்டில், முதல் குற்றவாளி பிரேதத்தைப் புதைக்கப் போனபோது தாங்களும் கூடச் சென்றதாகச் சொன்னார்கள். செஷன் கோர்ட்டில் தாங்கள் போகவில்லை என்று சொன்னார்கள்.

அசசர்களின் அபிப்பிராயம் :—ஏகோபித்துக் குற்றவாளியல்லவென்று அபிப்பிராயங் கூறினார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் T. தேசிகாசாரியார் குற்றவாளிகள் தரப்பிற்கும், பிராசிகியூஷன் தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் கணபதி அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு :—அசசர்கள் கூறின அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கோர்ட்டார் குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டார்கள்.

குறிப்பு :—பிரேத பரிசோதனை செய்த ஆஸ்பிட்டல் அசிஸ்டன்ட் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும்படி செய்யவேண்டு மென்கிற கருத்துடன் முதலில் பிரேத பரிசோதனை ரிஜிஸ்டரில்எழுதிய அபிப்பிராயத்தைக் கிழித்தெறிந்துவிட்டு மறுபடியும் புதிய அபிப்பிராயம் கூறி எழுதியிருப்பதாகத் தெரியவருகிறபடியாலும், இவர் பொய் சாக்ஷியம் தயாரிக்கவேண்டுமென்கிற கருத்துடன் இப்படிச் செய்திருப்பதாகவும் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு இது விஷயத்தைக்குறித்து விசாரணை செய்யும்படியாகத் திருச்சினப்பள்ளிஜில்லா முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

அலகபாத் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { ஜஸ்டிஸ் மிஸ்டர் பானர்ஜி. ஜஸ்டிஸ் மிஸ்டர் யெக்மான்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு ரிபர் செய்யப்பட்ட கேஸ்.

கேசின் விபரம்:—அன்னியநாட்டிலிருந்து ரோசா என்கிற சர்க்கரை இந்தியாவிற்கு வருகின்றது. இந்தச் சர்க்கரையை வாங்கக்கூடாதென்று பெர்லி என்கிற ஊரில் சுதேசி முயற்சியின் தூண்டுதலால் பனியர்கள் என்கிற ஜாதியார்கள் ஒருகட்டுப்பாடு செய்துகொண்டு தங்கள் இனத்தாருக்குப்போதித்துவந்தார்கள். இப்படி கட்டுப்பாடு செய்வதற்குக் காரணம் என்னவென்றால்,

அந்தச் சர்க்கரையில் எலும்பு முதலிய வஸ்துக்கள் கலந்திருக்கின்றன என்பதே. இப்படி கட்டுப்பாடு செய்துகொண்டு வரும்போது, பெர்லி என்னும் நகரில் ஒரு வர்த்தகனிடம் இந்த ரோசாசர்க்கரையிருப்பதாகத் தெரியவந்தது. கக்ஷிக்காரர்கள் அவ்வர்த்தகனிடம் சென்று அவன்வைத்திருந்த சர்க்கரையைக்குப்பையில் கொட்டி விடும்படியாகப் போதனை செய்தார்கள். அவ்வர்த்தகன் அதற்குச் சம்மதிக்கவில்லை. சம்மதிக்காமற்போகவே, கக்ஷிக்காரர்களில் ஒருவனாகிய ஜெண்டுலால் என்பவன், உன்னை ஜாதியினின்றும் நீக்கிவிட்டு ரூ. 101 - உனக்கு அபராதம் போடும்படி செய்வோம் என்று சொன்னான். இப்படிச்சொல்லும்போது அந்தக் கக்ஷியைச்சேர்ந்த பாஸ்டியோ பிரசாத், தோட்டாராம், லால்டா பிரசாத், மோகன்லால், லக்ஷ்மணன், முல்சண்டு, ஜம்மா என்கிற ஏழு பேர்களும் நின்று கொண்டிருந்தார்கள். வர்த்தகன் உடனே இவர்கள் ஏழுபேர் பேரிலும் இ. பி. கோ. 500-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கும், இ, பி. கோ. 506-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அநியாயமாய் பயமுறுத்தின குற்றத்திற்கும் பெர்லி நகர் ஜாயிண்டுமாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றம் சாட்டினார். மாஜிஸ்டிரேட் இவர்கள் பேரில் இரண்டு குற்றஸ்தாபனைகளையும் செய்து ஒவ்வொருவருக்கும் ரூ. 25-அபராதம் விதித்தார்.

செஷன் ஜட்ஜி, பிரஸ்தாப குற்றவாளிகள் இ. பி. கோ. 500, 506-ல் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களைச் செய்ததாக ருஜூப்படவில்லை என்றும் சொல்லி இவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும்தண்டனையை ரத்து செய்யும்படி இந்தக்கேசை ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்தார்.

தீர்ப்பு:—வர்த்தகனைப்பார்த்து "உன்னை ஜாதியைவிட்டுத்தள்ளி ரூ. 101 அபராதம் விதிப்பேன்" என்று சொன்னதுஜெண்டுலால். இவரைப்பற்றிய கேஸ் நம்மிடம் வரவில்லை. பிரஸ்தாபக்குற்றவாளிகள் ஜெண்டுலாலுடன் கூடவிருந்த போதிலும் இவர்கள்யாதொன்றும் சொல்லவில்லை என்று சாக்ஷியத்தால் ருஜூப்படுகின்றது. ஜெண்டுலால் அவ்வாறு சொல்லும்படி இவர்களை ஏவி உடந்தையாயிருந்ததாகவும் ருஜூப்படவில்லை. ஜெண்டுலால் பேரில் யாதொரு கேசும் வராததால் அவர் சொல்லிய வார்த்தைகள், அவதூறு குற்றத்திற்கும் அநியாயமாய் பயமுறுத்தல் என்னுங்குற்றத்திற்கும் உள்ளாகுமா வில்லையா என்பதைக்குறித்து இந்தக்கேசில் ஆலோசனை செய்யப்பட வேண்டியது அனாவசியம். ஆதலால் குற்றவாளிகளுக்கு விதித்திருக்கும் அபராதத்தை ரத்துசெய்து அவர்கள் அபராதம் செலுத்தியிருந்தால் அதை வாப்பீஸ் செய்துவிடவும் உத்தரவு செய்கிறோம் என்று சொன்னார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாரிங்டன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஜெட்.

கிரிமினல் அப்பீல்.

சக்களத்தி குழந்தைக்குப் பாஷாணமிட்டகேஸ்.

கேசின் விபரம்:—சென்ற ஆகஸ்ட்மீ 3வ கல்கத்தாவில் ஒருவன் தன்னுடைய இரண்டு பெண்சாதிகளையும், இளையாளுக்குப் பிறந்த 25 நாள் நிறம்பிய குழந்தையையும், தாயாரையும் வீட்டில் வைத்துவிட்டுச் சமீபத்திலுள்ள ஒரு ஊருக்குப் போனான். இளைய பெண்சாதியும் மாமியாரும் வீட்டில் அடுப்பருகில் ஏதோ வேலைசெய்துகொண்டிருந்தார்கள். குழந்தையும் கூடத்தில் ஒரு பாயில் படுக்கவைக்கப்பட்டிருந்தது. மூத்தபெண்சாதி அதன் சமீபத்தில் நின்றுகொண்டிருந்தாள். மூத்தாள் இளையவளைக் கூப்பிட்டு "குழந்தை அழுகிறது, பால் கொடுத்துவிட்டுப்போ" என்று சொன்னாள். இளையாள் குழந்தைக்குப் பால் கொடுத்தாள். பால் கொடுக்கும்போது குழந்தை அழுது வாயாலெடுத்தது. உடனே மாமியார் ஓடிவந்து குழந்தை வாயில் கையிட்டுப் பார்த்தபோது அதன் எச்சிலில் சுண்ணாம்பு கலந்திருந்ததுபோல் காணப்பட்டது. இதன் பிறகு குழந்தை ஓயாமல் வாயாலெடுத்துக்கொண்டிருந்தது மன்றி அதற்கு வயிற்றுப் போக்கும் கண்டது. அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்கள்வந்து கூடினார்கள். வைத்தியர் வந்து பார்த்தார். கடைசியில் 36 மணிநேரம் சென்று குழந்தை இறந்துபோய்விட்டது. மூத்தாள் குழந்தைக்குப் பாஷாணமிட்டுவிட்டாள் என்று சந்தேகங் கொண்டு அவளை இம்சித்துக் கேட்டார்கள். அவள்தான் பாஷாணமிட்ட தாகவும் ஒப்புக் கொண்டாள். ஆகவே மூத்தாள் பேரில் இ. பி. கோ. 302-ம் பிரிவுப்படி கொலைக் குற்றம் சாட்டி செஷன் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப் பட்டாள்.

குழந்தை வாயா லெடுத்ததையும், வயிற்றால் போனதையும், இரைப்பையையும், வயிற்றையும், உடலையும் எடுத்து கெமிகல் எக்சாமினருக்கு அனுப்பியதில் அவர் இவைகளில் பாஷாணம் கலந்திருக்கிறதென்று ரிப்போர்ட் அனுப்பினார்.

இளையாளுக்குக் குழந்தை பிறந்ததில் பொறாமைகொண்டு மூத்தாள் பாஷாணமிட்டுக் கொன்றுவிட்டதாகப் பிராசிக்கியூஷன் தரப்பாரின் கக்ஷி.

குழந்தை நோயாயிருந்ததாகவும் வைத்தியர் பாஷாணம் கலந்த மருந்தைக் கொடுத்துவந்தாரென்றும் அதனால் வயிற்றில் பாஷாணம் சேர்ந்து குழந்தை இறந்துபோய்விட்டதென்றும், மாமியாருக்கும் மூத்தாளுக்குமுள்ள மனஸ்தாபத்தால் இந்தப் பழியை மூத்தாள்பேரில் கொண்டுவந்திருக்கிறாள் என்பதும் டிபன்ஸ் தரப்பாரின்கக்ஷி.

செஷன்கோர்ட்டுத்தீர்ப்பு:—மூத்தாளுக்குத்தூக்குத் தண்டனைவிதித்து இந்த தண்டனையை உறுதிப் படுத்தும்படியாக ஹைகோர்ட்டிற்கு ரிபர்செய்தார்கள்.

கைதியும் அப்பீல் செய்துகொண்டாள்.

லாயர்கள்.—மிஸ்டர் M. B. சட்டர்ஜி கைதி தரப்பிற்கும், பப்ளிக் பிராசிக்யூட்டர் மிஸ்டர் டக்லஸ் வொயிட் பிராசிக்கியூஷன் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—இருதரப்பு லாயர்களும் பேசினதைக் கேட்டுக்கொண்டார்கள். இன்னும் தீர்ப்பு சொல்லவில்லை.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ராம்பினி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் குப்த்தா.

கிரிமினல் அப்பீல்.

(26-2-07.)

கவர்ன்மெண்டு விடுமுறை நாளில் தீர்ப்புசொன்ன கேஸ்.

கேசின் விபரம்:—வங்காளத்தில் மாங்கியர் ஜில்லாவில் பாபு கமலேஸ்வர நாராயன் என்பவருக்கும் இன்னும் சில ஜமீன்தார்களுக்கும் பொதுவாய்ச் சொந்தமான ஒரு நிலமிருக்கின்றது. இந்த நிலத்தை பாபு கமலேஸ்வர நாராயன் என்பவர் ஒருவனுக்குக் குத்தகைவிட்டார். இதர ஜெமீன்தார்கள் வேறொருவருக்குக் குத்தகை விட்டார்கள். இதர ஜமீன்தார்களிடமிருந்து குத்தகை வாங்கினவர் ஷை நிலத்தில் சாகுபடி செய்யப்போனபோது இதே நிலத்தை பாபு கமலேஸ்வர நாராயன் என்பவரிடம் குத்தகை வாங்கியவர் ஆக்ஷேபித்தார். இதனால் கலகம் நேரிட்டு அமரிக்கை கெடும்போலிருந்தது. ஆகவே சப்டிவிஷன் மாஜிஸ்டிரேட் பாபு கமலேஸ்வர நாராயன் என்பவருக்கும், இதர ஜெமீன்தார்களிடமிருந்து குத்தகைப் பெற்றவருக்கும் கி. பு. கோ. 144 - வது பிரிவின்படி நோட்டீஸ் அனுப்பித் தருவித்து விசாரணை செய்தார். விசாரணை சென்ற டிசம்பர்மீ 20வ ஆரம்பமாகி 22வ இரவு 8 - மணி வரையில் நடந்தது. இந்தக்கேசை அன்றையத்தினமே முடித்துவிட வேண்டுமென்று சொல்லி இரு கக்ஷி பிளீடர்களையும் அட்ரஸ் பேசும்படியாக மாஜிஸ்டிரேட் சொன்னார். வக்கீல்கள் அகாலமாய் விட்டபடியால் அட்ரஸ்பேச முடியாதென்று சொல்லிவிட்டார்கள். மாஜிஸ்டிரேட் அடுத்தநாள் அதாவது டிசம்பர் 23வ தீர்ப்பு சொன்னார். தீர்ப்பு பாபு கமலேஸ்வரி நாராயனுக்கு விரோதமாயிருந்தது. ஆகவே இவர் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார். அப்பீல் கிரௌண்டுகளில் ஒன்று என்னவென்றால், டிசம்பர்மீ 23வ ஓய்வுநாளென்று கவர்ன்மெண்டாரால் கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறபடியால் அன்றையதினம் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு சொன்னது சட்டவிரோத மென்பதே.

விசாரணை.

அப்பீல் தாரின் வக்கீல்:—வக்கீல் அட்ரஸ் பேசும்படியாகக் கீழ்க்கோர்ட்டார் போதுமான அவகாசம் கொடுத்திருக்கவேண்டும்.

ராம்பினி ஜட்ஜி:—அட்ரஸ் பேசும்படிதான் மாஜிஸ்டிரேட் சொன்னாரே ?

வக்கீல்:—பிளீடர்களை மிகுந்த இருளாயிருக்கும் போது 8-மணிக்கு அட்ரஸ் பேசும்படிச் சொல்வது அவர்களுக்குத் தண்டனை விதித்ததற்குச் சமானம்.

ராம்பினி ஜட்ஜி:—ஆனால் கோர்ட்டில் தீப வெளிச்சமில்லையோ ?

வக்கீல்:—டிசம்பர் மாதத்தில் இரவு 8-மணிக்கு ஒவ்வொருவரும் தங்களுடைய வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குப்போக விருப்பமுடையவர்களாயிருப்பார்கள்.

ராம்பினி ஜட்ஜி:—அது மாஜிஸ்டிரேட்டின் குற்றமல்ல.

வக்கீல்:—சர்க்கார் விடுமுறை நாளாகிய கிரிஸ்ட்மஸ் பண்டிகைதினம் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

ராம்பினி ஜட்ஜி:—சர்க்கார் விடுமுறை நாளில் தீர்ப்பு சொன்னால் சட்டவிரோதம் என்று சொல்லும்படியாக ஏதேனும் ஜாரியான தீர்ப்புகளிருக்கின்றனவா ?

வக்கீல்:—சென்னை ஹைகோர்ட்டுத் தீர்ப்பு ஒன்றிருக்கின்றது. ஆனால் இந்தக் கோர்ட்டுத்தீர்ப்பு யாதொன்றுமில்லை.

குப்த்தா ஜட்ஜி:—ஞாயிற்றுக்கிழமையில் தீர்ப்பு சொல்லுவது சட்டவிரோதமல்லவென்று ஹைகோர்ட்டார் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

ராம்பினி ஜட்ஜி:—மாஜிஸ்டிரேட் தீர்ப்பு சொன்னது கிரிஸ்ட்மஸ் பண்டிகைதினம். உம்முடைய கக்ஷிக்காரர் கிறிஸ்தவரல்லவென்று நினைக்கிறேன். ஆகையால் மாஜிஸ்டிரேட் கிரிஸ்ட்மஸ் பண்டிகைதினம் தீர்ப்பு சொன்னது அவரை பாதிக்கமாட்டாது.

வக்கீல்:—சரிதான், ஆனால் அந்தத்தினம் விடுமுறை நாள் என்று கவர்ன்மெண்டார் கெஜெட்டில் விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள்.

ராம்பினி ஜட்ஜி :—விடுமுறை நாளில் தீர்ப்பு சொல்வதில் யாதொரு சட்டவிரோதத்தையும் காணோம்.

வக்கீல் :—பிளீடர் அட்ரஸ் பேசுவதை மாஜிஸ்டிரேட் கேட்காமல் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்.

ராம்பினி ஜட்ஜி :—பிளீடர் அன்று அட்ரஸ் பேசமாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

வக்கீல் :—அட்ரஸ் பேசும்படி மாஜிஸ்டிரேட் சொன்னபோது இரவு 8-மணி.

ராம்பினி ஜட்ஜி :—இரவில் கோர்ட்டு நடத்துவதால் என்னதப்பிதமிருக்கிறது ?

வக்கீல் :—தப்பிதம் யாதொன்றுமில்லை. ஆனால் என்னுடைய கக்ஷிக்காரருக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது.

ராம்பினி ஜட்ஜி :—சில சமயம் இரவிலும் அடிக்கடி கோர்ட்டு நடத்தப்பட்டுவருகின்றது.

தீர்ப்பு :—அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் குப்த்தா; மிஸ்டர் ஜஸ்டிஸ் ராம்பினி.

கிரிமினல் அப்பீல்.

(25-2-07.)

ஒரு சந்நியாசிக்குக் கோர்ட்டார் புத்தி சொன்னகேஸ்.

கேசின் விபரம்:—ஒருவர் ஆலிப்பூர் போலீஸ் கோர்ட்டில் பிரியாது செய்திருந்தார். விசாரணை தினம் ஆஜராவதற்கு அவருக்குத் தேக அசௌக்கியமாயிருந்தது. ஆதலால் அவர் போகவில்லை. அவர் டாக்ட்டர் சர்ட்டிபிகேட் பெற்று, இந்த சர்ட்டிபிகேட்டையும், விசாரணைத் தேதியைத் தள்ளிவைத்துக்கொள்ளும்படியாக வக்கீல் வைத்து மனு செய்துகொள்ள ரூ. 3-ம், ஒரு இந்து சந்நியாசியிடம் கொடுத்து சேஷிதத் என்பவரிடம் கொடுக்கும்படியாகச்சொன்னார். சந்நியாசியும் இந்த சேஷிதத் என்பவரும் ஷை சர்ட்டிபிகேட்டை ஷை பிரியாதியின் எதிரிகளிடம் கொடுத்து ரூபா மூன்றுபெற்றுக்கொண்டு விசாரணைத்தேதியைத்தள்ளிவைக்கும்படி ஏற்பாடு செய்யாம லிருந்துவிட்டார்கள். ஆலிப்பூர் போலிஸ் கோர்ட்டார் பிரியாதி விசாரணைத்தினம் ஆஜராகாமலிருந்ததால் கேசைத் தள்ளிவிட்டார்கள். சந்நியாசியும் சேஷிதத்தும் மெடிக்கல் சர்ட்டிபிகேட்டை விற்ற சமாசாரம் பிரியாதிக்குத் தெரியவந்தது. ஆகவே இந்த இருவர்கள் பேரிலும் பிரியாதி இ. பி. கோ. 402-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கை மோசக்குற்றம் சாட்ட, இருவர்களுக்கும் நான்கு மாத கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத்தீர்மானத்திற்கு விரோதமாக சந்நியாசி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

விசாரணை.

சந்நியாசியின் வக்கீல்:—டாக்ட்டர் சர்ட்டிபிகேட் ஒரு சொத்தல்ல; இதற்கு யாதொரு விலையும் ஏற்படுத்த முடியாது. ஆகையால் இ. பி. கோ. 402-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கையுடன் ஒப்புவிக்கப்பட்ட சொத்தாக மாட்டாது. (Trust)

ராம்பினி ஜட்ஜி:—ஆனால் உம்முடைய கக்ஷிக்காரர் அதை விற்றுப் பணம் வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறதே!

வக்கீல்:—அதனால் பாதக மில்லை. ஒருவன் ஒரு வஸ்த்துவைக்கொண்டு பணம் சம்பாரிப்பதால் அந்த வஸ்து இ. பி. கோ. 402-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சொத்தாய் விட மாட்டாது.

ராம்பினி ஜட்ஜி:—சொத்தாகு மென்று நினைக்கிறேன்.

வக்கீல்:—நான் ஒரு பாட்டுப்பாடி பணம் சம்பாதிக்கிறேன் என்று நினைத்துக்கொள்வோம். என்பாட்டு ஒரு சொத்தென்று எவரும் சொல்ல முடியாது.

ராம்பினி ஜட்ஜி:—அப்போது நீர் ஒரு வேலை செய்து பணம் சம்பாதிக்கிறீர்.

குப்த்தா ஜட்ஜி:—உம்முடைய வாதம் பெருத்த சந்தேகத்தில் கொண்டுவந்து விடும்படியாயிருக்கின்றது. ஒருவன் என்னுடைய அறைக்குள் புகுந்து நான் இல்லாதசமயத்தில் என் மேஜைமேலிருந்தவும் நான் மிகுந்த விலையுள்ளதாகவும் மதித்துவரும் ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான் என்று நினைத்துக்கொள்வோம். அது திருட்டல்லவா?

வக்கீல்:—அது ஒருக்கால் பூட்டுடைத்த குற்றமாகும். அல்லது அக்கிரமமாய்ப் பிரவேசித்த குற்றமாகும். அது திருட்டாகுமா ஆகாதா என்கிறது சந்தேகமாயிருக்கின்றது.

ராம்பினி ஜட்ஜி:—உம்முடைய கக்ஷிக்காரன் யார்?

வக்கீல்:—அவர், தான் ஒரு சந்நியாசி என்று சொல்லுகின்றார்.

ராம்பினி:—ஒரு சந்நியாசி இதர மனுஷனுடைய காரியத்தில் பிரவேசிக்கக்கூடாது.

வக்கீல்:—அது வாஸ்தவந்தான். பிரவேசித்துத்தான் தொந்தரவில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறார்!

ராம்பினி ஜட்ஜி:—இவர் சந்நியாசியா யிருப்பதைப் பார்க்கிலும் வக்கீல் குமஸ்தாவாயிருக்கலாம்!

தீர்ப்பு:—அப்பீலைத்தள்ளும்படி செய்துவிட்டார்கள்.

கிரிமினல் அப்பீல்.

அக்கிரமமாய் கைதி செய்தகேஸ்.

(25-2-07.)

கேசின்விபரம்:—ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்ட்டர்வேணுமென்று வஞ்சகத்துடன்ஒருவரை அக்கிரமமாய் கைதிசெய்ததற்காக ஜெயில்தண்டனை விதிக்கப்பட்டார். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

விசாரணை.

இன்ஸ்பெக்ட்டரின் வக்கீல்:—எங் கக்ஷிக்காரர் யாதொரு குற்றமும் செய்யவில்லை. ஏதாவது அவர்பேரில் குற்றம்சொல்லவேண்டுமானால் அவர் தெரியாத்தனமாய்ச் செய்தார் என்று சொல்லவேண்டும்.

ராம்பினி ஜட்ஜி:—அவர் தெரியாத்தனமாய்ச் செய்யவில்லை. வேணுமென்று கெட்ட எண்ணத்துடன் செய்தார் என்று ருஜுப்பட்டிருக்கிறது.

வக்கீல்:—அவர் இளம்பிராயமுடையவர் இப்போதுதான் போலீசில் சேர்ந்தார்.

ராம்பினி ஜட்ஜி:—அவருடைய வயதென்ன?

வக்கீல்:—முப்பதுதா னாகிறது.

ராம்பினி ஜட்ஜி:—30 வது வயதில் ஒருவன் தான் செய்கிறது சரியா அல்லது தப்பா என்று தெரிந்துகொள்ளக்கூடும். மகா அலக்சாண்டர் (Alexander the great) இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது அவனுக்கு வயது 24 தான்.

தீர்ப்பு:—அப்பீல் தள்ளும்படி செய்யப்பட்டது.

கல்கத்தா பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் D. K. கிங்ஸ் போர்ட்.

பொய் சம்மன் அனுப்பிய கேஸ்.

(8-3-06).

கேசின்விவரம்:—மிட்னாப்பூரிலுள்ள ஒரு பணக்கார வியாபாரியாகிய சிந்தாமணிபாக் என்பவருக்கு கல்கத்தா பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் அனுப்பியதுபோலத் தபாலில் ஒரு சம்மன் வந்தது. வியாபாரி அச் சம்மனைப் பெற்றுக்கொண்டு ரெயில் பிரயாணம் செய்து கல்கத்தாவிற்கு வந்து கோர்ட்டில் ஆஜரானார். கோர்ட்டார் எல்லாக்கேசுகளையும் கூப்பிட்டார்கள். பிரஸ்தாப வியாபாரியை மட்டிலும் கூப்பிடவில்லை. கோர்ட்டு கலைகிற சமையத்தில் வியாபாரி தாம் பெற்ற சம்மனை ஒரு பிளீடரிடம் காண்பித்தார். அந்த சம்மனில் போலிஸ் கோர்ட்டைச் சேர்ந்த ஆபீசர் குறிப்புக்கையெழுத்து செய்ததுபோலச் செய்திருந்தது. கோர்ட்டு சீல் குத்தப்பட்டிருந்தது. விசாரணைத் தேதி போடப்பட்டிருந்தது, சம்மன் பாரமும் போலிஸ் கோர்ட்டைச் சேர்ந்த பாரம். ஆனால் மாஜிஸ்டிரேட் கையெழுத்து மட்டிலுமில்லை. பிளீடர் இந்த விபரங்களை யெல்லாம் மாஜிஸ்டிரேட்டிற்குச் சொல்லி தம்முடைய கக்ஷிக்காரர் மிகுந்த திரவிய வந்தர் என்றும், அவரை இவ்விடம் தருவித்துக் கொள்ளையடிக்கவேண்டுமென்கிற கருத்துடன் இம்மாதிரி பொய் சம்மன் அனுப்பியிருக்கிறார்கள் என்றும் அதற்கு இந்தக்கோர்ட்டில் யாரேனும் ஒரு உத்தியோகஸ்தர் சம்மன் பாரமும் சீலும் கொடுத்து உதவியிருக்கவேண்டுமென்றும் ஆகையால் அதைப் பற்றி விசாரணை செய்யவேண்டு மென்றும் வேண்டிக் கொண்டார்.

மாஜிஸ்டிரேட்:—(பென்ச்கிளார்க்கைப் பார்த்து) இது நம்முடைய கோர்ட்டு சம்மன் என்று நன்றாய்த் தெரிகின்றது. இன்றையத்தினம் இந்த கேஸ் விசாரணைக்குப்போடப்பட்டிருக்கிறதா?

பென்ச் கிளார்க்:—இப்படிப்பட்ட கேஸ் யாதொன்றுமில்லை. இது புறட்டுச் சம்மன்.

பிளீடர்:—என்னுடைய கக்ஷிக்காரர் பணக்காரர், யாரோ கொள்ளையடிக்கவேண்டுமென்கிற கருத்துடன் இம்மாதிரி சம்மன் அனுப்பியிருக்கிறார்கள்.

மாஜிஸ்டிரேட்:—(சிரிப்புடன்) இதுவரையில் அந்த சம்மனால் ஒருவரும் பிரயோஜனப்படவில்லை. யாராவது பிரயோஜனப்பட்டிருந்தால் அவர் நீர்தான்.!

பிளீடர்:—இந்தச் சம்மனால் என்னுடைய கக்ஷிக்காரர் கோர்ட்டுக்குவந்து என்னைப் பிளீடராக வைத்ததில் செலவு நேரிட்டிருக்கிறது.

மாஜிஸ்டிரேட்:—(பென்ச் கிளார்க்கைப் பார்த்து) இதில் போடப்பட்டிருக்கிற கை யெழுத்து உம்முடையதுபோல் தோன்றுகிறதே; பாரும். அல்லவா?

பென்ச் கிளார்க்:—ஆம். ஏறக்குறைய அப்படித்தானிருக்கின்றது.

மாஜிஸ்டிரேட் போலிஸ் இன்ஸ்பெக்டரைத் தருவித்து இதைப்பற்றி விசாரணை செய்யும்படியாக உத்தரவு செய்தார்.

JUDGMENT OF THE PRIVY COUNCIL IN TIRUPATHI DEVASTHANAM APPEAL,

திருப்பதி தேவஸ்தான அப்பீல் வியாஜ்ஜியத்தின் பிரிவி கவுன்சில் தீர்ப்பு,

கவுன்சிலர்கள்:—(1) லார்ட் மாக்னாட்டன்.
(2) லார்ட் டேவி.
(3) சர் ஆண்டி ரூஸ்கோபில்.
(4) சர் ஆர்தர் வில்சன்.

வாதி:—திருமலை ஆனந்தம் பிள்ளை வகையரு.

பிரதிவாதி:—பிரயாக தாஸ்ஜீவாரு.

திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் தேவஸ்தான பிரிவிகவுன்சில் அப்பீல் வியாஜ்ஜியம்.

(9-2-07.)

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வட ஆற்காடு ஜில்லா திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் தேவஸ்தானம் ஒன்றிருக்கிறது. இது ஹிந்துக்களுக்கு முக்கியமான தேவஸ்தானமாகச் சிறந்து விளங்கிவருகின்றது. இந்தியாவிலுள்ள எல்லாவிடங்களிலிருந்தும் ஜனங்கள் தரிசனார்த்தமாக இத்தேவஸ்தானத்திற்கு வருகின்றார்கள். இத்தேவஸ்தானத்திற்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு லக்ஷத்திற்குக் குறையாமலும் மூன்று லக்ஷத்திற்கு அதிகப்படாமலும் வருமானம் வந்துகொண்டிருக்கின்றது. இத்தேசத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முந்தி இத்தேசத்தை யார் அரசாண்டுவந்தார்களோ அவர்களுடைய மானேஜ்மெண்டில் இத்தேவஸ்தானமிருந்து வந்தது.

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவிற்கு வந்து சேர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தை இத்தேசத்தில் ஸ்தாபித்துக்கொண்டு வந்தபோது பிரஸ்தாப திருப்பதி தேவஸ்தானமும் அவர்களுடைய மானேஜ்மெண்டிற்குவந்துவிட்டது. 1817-வது ஞூ த்திய 7-வது ரெகுலேஷன் பாஸ் செய்விக்கப்பட்ட பிறகு இந்த தேவஸ்தானம் ரெவினியூபோர்ட்டார் தரப்பில் ஆற்காடு ஜில்லாக்கலெக்டரால் மனேஜ்மெண்டு செய்து வரப்பட்டது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கோர்ட் ஆப் டைரெக்டர்கள் (Court of Directors) இனி ஷை கம்பெனியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சுதேசிகளுடைய தேவஸ்தானங்களிலும், மத சம்பந்தமான நியமனங்களிலும் பிரவேசிக்கக் கூடாதென்று 1843-ம் ஞூ த்தில் ஒரு உத்தரவு பிறப்பித்ததின்பேரில், இதுகாலபரியந்தம் இந்த தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்துவந்த ரெவினியூ போர்டார் இத்தேவஸ்தான மானேஜ்மெண்டை ஷை தேவஸ்தானம் அமைந்திருக்கும் மலையின் அடிவாரத்திலிருக்கும் ஹதிராம்ஜி மடத்தின் மகந்துவாகிய சிவதாஸ் என்பவரிடம் ஒப்புவித்து அவரை ஷை தேவஸ்தானத்திற்கு விசாரணைகர்த்தாவாகக் நியமித்து இந்தவிசாரணைக்கர்த்தா ஸ்தானத்திற்குப்பாரம்பரியமாக எப்போதும் ஷை மகந்து சிவதாசின்வார்சுகளே வரவேண்டுமென்று சந்நதுகொடுத்தார்கள். ரெவினியூ போர்ட்டார் இந்த தேவஸ்தானத்தை மகந்து சிவதாசினிடம் ஒப்புவித்ததின் கருத்து என்னவெ

ருல், அவராலும் அவருடைய பரம்பரையார்களாலும் பிரஸ்தாப தேவஸ்தானம் ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரப்படும் என்று நம்பி இம்மாதிரி ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அனுபோகத்தில் இந்த தேவஸ்தானம் மகந்துக்களால் ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரப்படவில்லை என்றும், தேவஸ்தானத்தைச் சேர்ந்தபணங்கள் மோசடி செய்யப்பட்டு வந்திருக்கின்றனவென்றும் தெரியவந்தது. இந்த தேவஸ்தானத்தை ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரும்படியாகக் கோர்ட்டார் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று திருமலை ஆனந்தம்பிள்ளை வகையரு திருப்பதி மகந்துவாகிய பிரயாகதாஸ்ஜிவாருவை பிரதிவாதியாகச் சேர்த்து வட ஆற்காடு ஜில்லாக்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்கள். ஜில்லாக் கோர்ட்டார் இத்தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்து விதிகளும் ஏற்படுத்தினார்கள்.

ஜில்லாக்கோர்ட்டுத் தீர்மானத்திற்கு விரோதமாக பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஹைகோர்ட்டார், ஜில்லாக் கோர்ட்டார் செய்த ஏற்பாடுகளையும் விதிகளையும் சிற்சில விடங்களில் சீர்திருத்தி அசல் கோர்ட்டார் தீர்ப்பை உறுதி செய்தார்கள்.

பிரதிவாதிக்கு இந்தத் தீர்மானமும் திருப்திகரமாயில்லை. ஆகவே பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) திருப்பதி தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்து வரும்படியாக ஹைகோர்ட்டார் செய்திருக்கும் ஏற்பாடு மகந்துவின் பதவியைக் கேவலமாக நினைக்கும்படியா யிருக்கின்றது. அவருடைய அதிகாரத்தைப்பலஹீனப்படுத்தக்கூடியதாயிருக்கின்றது. (2) இப்போதாவது அல்லது இன்னும் சமீபகாலத்திலாவது இத்தேவஸ்தானத்திற்குப் பணம் மீதமாவதற்கு ஏதுமில்லை. அப்படியிருந்தும், அப்படிப் பணம் சேர்ந்தால் அதைத் தேவஸ்தான சம்பந்த மல்லாத காரியங்களில் விநியோகப் படுத்திவரவேண்டுமென்று ஹைகோர்ட்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். (3) இந்த ஏற்பாடுகள் இப்போது அனாவசியம். இனி போகப்போக அனேக தொந்தரவுகளை விளைவிக்கும்.

லாயர்கள்:—சர் ராபர்ட் - பின்லே. K. C. மிஸ்டர் விசில், டி. குருத்தர், மிஸ்டர் H. லிபானோ,-ஆகிய இவர்கள் பிரதிவாதியும் அப்பீல்வாதியுமாகிய மகந்துவிற்கு ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை.

அப்பீல்விசாரணை:—இந்த அப்பீலை சென்ற டிசம்பர் மாதம் லார்ட் மாக்னாட்டன், லார்ட் அட்கின்சன், சர் ஆண்டிருஸ் கோபில், சர் ஆர்தர்வில்சன் கூடிய போர்டாரால் விசாரணை செய்யப்பட்டது. ஜில்லாக் கோர்ட்டிலாவது, அல்லது ஹைகோர்ட்டிலாவது இந்த தேவஸ்தான மானேஜ்மெண்டில் கோர்ட்டார் பிரவேசித்து ஒரு ஏற்பாடு செய்யவேண்டியது அனாவசியமென்று பிரதிவாதி ஆக்ஷேபிக்கவில்லை. பிரதிவாதி ஆஜராகாமற் போனபோதிலும், பிரிவி கவுன்சிலர்கள் தேவஸ்தான விஷயங்களையும், பிரஸ்தாப தேவஸ்தான மானேஜ்மெண்டு விஷயங்களையும் நன்றாய் ஆலோசனை செய்து ஹிந்து தேவஸ்தான விஷயங்களில் மிகுந்த அனுபோகமுடைய சர்ராபர்ட் பின்லே அவர்களுடைய உதவியைக் கொண்டு அடியிற்சொல்லப்பட்டிருக்கும் ஏற்பாட்டைச் செய்து தீர்ப்பு சொன்னார்கள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—(1) ஜில்லாக் கோர்ட்டாரால் சம்பளம்பெறும் ஒரு கஜான்ஜி (Treasurer) பொக்கிஷதார் நியமிக்கப்படவேண்டும் (2) தேவஸ்தானத்தைச்சேர்ந்த எல்லாப்பணங்களும் கஜான்ஜிவச மிருக்கவேண்டும். தேவஸ்தானத்திற்குச்செலுத்தப்படும்காணிக்கைகளையும், தேவஸ்தானத்தின் வருமானத்தையும், நிதிகளையும் ஒழுங்காய்ப்பெறுவதற்கும், மிகுந்த பணங்களை வட்டிக்குப் போடுவதற்கும், தேவஸ்தானத்திற்குள்ள வருமானங்களையும் எஸ்டேட்டுகளையும் இன்னுமுள்ள சொத்துக்களையும் ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரும்படியும், தேவஸ்தான வருமானங்களும் சொத்துக்களும் மோசம் செய்யப்படாமலிருக்கும்படியும் ஜில்லாக் கோர்ட்டார் விதிகள் ஏற்படுத்தவேண்டும். (3) ஒவ்வொரு வருஷத்திற்கும் அந்த வருஷம் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்குமுந்தி விசாரணை கர்த்தா அந்தவருஷமுழுதுக்கும் என்னசெலவு பிடிக்குமென்று பட்ஜட் என்கிற திட்டம் போட்டு அதை ஜில்லாக்கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும். (4) இந்தத் திட்டக்கணக்கில் குறிப்பிட்டிருக்கிறபடி கஜான்ஜி விசாரணை கர்த்தாவிற்கு வேண்டியபோது பணம் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். திட்டக்கணக்கில் காணப்பட்ட தொகைக்கு மேற்கொண்டு விசாரணை கர்த்தா பணம் கேட்டால் ரூ. 5 ஆயிரம் வரையில் கஜான்ஜி, ஜில்லாக் கோர்ட்டார் உத்தரவு பெற்றுக்கொண்டு கொடுத்துவரலாம். (5) ஒவ்வொரு வருஷத்திலும் வந்த வருமானத்திற்கும் செய்த செலவிற்கும் விசாரணை கர்த்தா கணக்கு தயாரிக்கும்படிச்செய்து அந்த வருஷம் முடிந்தபின் மூன்று மாத காலத்திற்குள்ளாக ஜில்லாக் கோர்ட்டில் தாக்கல் செய்யும்படி செய்யவேண்டும். ஜில்லாக் கோர்ட்டாரால் நியமிக்கப்படும் ஆடிட்டரால் முடிந்துபோன வருஷத்திய வரவுசெலவுகணக்குகள் பரிசோதனை செய்யப்படவேண்டும். இந்தக்கணக்குகளை ஆடிட்டர் பரிசோதிப்பதற்குப் பரிகாரமாக அவருக்கு இவ்வளவுபணம் கொடுக்கப்படவேண்டுமென்று ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானித்ததொகை தேவஸ்தான ஐவேஜியிலிருந்து ஆடிட்டருக்குக் கொடுக்கப்பட்டு வரவேண்டும். ஆடிட்டர் இந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்து அதிலிருந்து சுருக்கமான ஒரு வரவு செலவு கணக்கு தயாரித்து ஜில்லாக்கோர்ட்டார் உத்தரவு செய்கிறபடி பகிரங்கப்படுத்தலாம். (6) தேவஸ்தானத்திற்கு வந்த வருமானத்தில் செலவழிந்தது போக மீதிப்பணங்கள் தேவஸ்தான நன்மையைநாடி வட்டிக்குப் போடப்பட்டு வரவேண்டும். (7) தேவஸ்தானத்திற்குச் சேர்ந்த சகலஸ்தாவர சொத்துக்களும், பெந்தகம் பெற்றுக்கொண்டிருக்கிற சொத்துக்களும் இன்னும் வேறுவிதமான பாத்தியதையின்பேரில் தேவஸ்தானத்தின் வசமிருக்கும் ஸ்தாவர சொத்துக்களை விசாரணைக்கர்த்தா ஜில்லா கோர்ட்டார் உத்தரவின்றி 5 வருஷத்திற்குமேல் குத்தகைக்கும் விடக்கூடாது. பெந்தகமும் வைக்கக்கூடாது. விற்பனையும் செய்யக்கூடாது. (8)தேவஸ்தானத்திற்குச்

சேர்ந்த விலைமதிப்புள்ள நகைகளையும் இதரசொத்துக்களையும் விசாரணைக்கர்த்தர் ஜில்லாக் கோர்ட்டார் உத்தரவின்றி கிரயம் செய்யக்கூடாது. (9) இந்த நிபந்தனைகளுக் குட்பட்டு விசாரணைக் கர்த்தாவின் நிலைமை முன்போலிருக்கவேண்டும். (10)இந்த ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை அல்லது விதிகளை அமுலுக்குக் கொண்டுவந்து அனுஷ்டித்துக்கொண்டு போவதில் ஏதேனும் தகவல் தெரிந்துகொள்ள வேண்டுமானால் விசாரணைக் கர்த்தாவாகிலும் அல்லது தேவஸ்தானத்தில் பற்றுடைய இன்னும் யாரேனும் ஜில்லாக் கோர்ட்டாருக்கு மனு செய்து தெரிந்துகொள்ளலாம். இந்த ஏற்பாட்டில் எதையேனும் மாற்றுவது அவசியமென்றும் மாற்றுவது சௌகரியமாயிருக்கு மென்றும் தோற்றினாலும் விசாரணைக் கர்த்தா அல்லது தேவஸ்தானத்தில் பற்றுடைய இன்னு மெவரேனும் ஹைகோர்ட்டாருக்கு மனுசெய்துகொள்ளலாம்.

ஆகையால் மாகூிமை தங்கிய மாகாராஜா அவர்கள் அடியிற் கண்டபடி உத்தரவு பிறப்பிக்கும்படி மிகவும் வணக்கமாய் பிரிவி கவுன்சிலர்கள் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றார்கள்:—

(1) ஹைகோர்ட்டாரும் ஜில்லாக்கோர்ட்டாரும் செய்த உத்தரவுகளைத் தள்ளிவிடவேண்டும். (2) மேலே கூறப்பட்ட ஏற்பாட்டை தேவஸ்தான மானேஜ்மெண்டிற்காக ஒழுங்கான ஏற்பாடாக எண்ணி சம்மதம் கொடுக்க வேண்டும். (3) இந்த ஏற்பாட்டை ஜில்லாக் கோர்ட்டாருக்கு ரிபர் செய்து ஒரு கஜான்ஜி நியமிக்கும்படியாக உத்தரவு செய்யவேண்டும். இந்த ஏற்பாட்டின்படி அவர்கள் ஏற்படுத்தவேண்டிய விதிகளை ஏற்படுத்தும்படி உத்தரவு செய்யவேண்டும். இப்படி ஜில்லாக்கோர்ட்டார் ஏற்படுத்தின விதிகளை அவர்கள் சமயத்திற்குத் தகுந்தபடியும் அப்போதைக்கப்போதும் மாற்றும்படியும் அவர்களுக்கு அதிகார மிருக்கிறதென்று அறிவிக்கவேண்டும். இந்த ஏற்பாடு எப்போது முதல் அனுஷ்டானத்திற்கு வரவேண்டு மென்று ஒரு தேதி குறிப்பிடும்படியாக ஜில்லாக்கோர்ட்டாருக்கு உத்தரவு செய்ய வேண்டும். அசல், ஹைகோட்டு ஆலோசனை சபையிலுள்ள மாட்சிமைதங்கிய மகாராஜா ஆகிய இந்த மூன்று கோர்ட்டுகளிலும் வியாஜ்ஜிய மாடினதில் இருகட்சிக்காரர்களுக்கும் என்ன செலவுகள் நேரிட்டிருக்கின்றனவோ அவைகளுக்கும்,விசாரணைக் கர்த்தாவிற்கு கிரமமான செலவுகள் என்ன நேரிட்டிருக்கின்றனவோ அவைகளுக்கும் ஜில்லாக்கோர்ட்டாருக்குக் கணக்கு அனுப்பவேண்டும். அவர்களுடைய உத்தரவின்பேரில் கட்சிக்காரர்களுக்குச்சேர வேண்டிய செலவு தொகை தேவஸ்தான ஐவேஜியிலிருந்து கொடுக்கப்படவேண்டு மென்று உத்தரவு செய்யவேண்டும்.

உப்புவரி.

ஒரு மணங்கு உப்பின்மீது இதுவரையில் ரூ. 1-8-0 தீர்வை போடப்பட்டு வந்தது. நிகழ்மீ 20உ முதல் ஒரு ரூபாய் தீர்வை விதித்து வரும்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

RIGHTS OF HINDU WIDOWS IN THE PROPERTIES INHERITED BY THEM FROM THEIR HUSBANDS.

புருஷர்களிடமிருந்து வார்சுக்கிரமத்தில் அடையும் சோத்துக்களில் ஹிந்து விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைகள்.

புருஷன் பெண்சாதிக்குத் தானமாகக் கொடுத்த சொத்தை அவள் எப்படிப் பராதீனம் செய்தாலும் செய்யலாம். ஆனால் வார்சுக்கிரமத்தில் ஹிந்து விதவைகள் தங்களுடைய புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களை அவர்கள் உயில் எழுதிவைக்கவும் பராதீனங்கள் செய்யவும் அவர்களுக்குப் பாத்தியதை கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில், புருஷர்களுடைய சொத்தில் விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைக்கு இந்துலா ஒருவரை ஏற்படுத்திவிட்டது. வார்சுக்கிரமத்தில் தங்களுடைய புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களை ஹிந்து விதவைகள் அச்சொத்துக்களைத் தாங்கள் ஜீவதசையிலுள்ளபரியந்தம் அனுபவித்து மட்டிலும் வருவதற்குச் சர்வ சுதந்தர மிருக்கிற தென்பதற்கு அனேக ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளிருக்கின்றன. (இ. லா. ரி. 13 சென். 116).

* * *

ஹிந்து விதவைகள் அவசியமான காரியங்களை முன்னிட்டு, அச்சொத்துக்களைப் பெந்தகம், தானம்,விற்பனை முதலிய பராதீனங்களும் செய்யலாம். தங்களுடைய புருஷர்களுடைய தாயாதிகளின் சம்மதத்தின்பேரில் பெந்தகம்,விற்பனை தானம் முதலிய பராதீனங்கள் செய்யலாமென்றும் தீர்மானிக்கப்படிருக்கின்றது.

* * *

ஆனால் அவர்களுக்குத் தங்களுடைய ஜீவதசை முடியும் பரியந்தந்தான் அச்சொத்தில் பாத்தியதையிருக்கின்றது. விதவை இறந்து போனபிறகு அச்சொத்திற்குப் பாத்தியமுடையவர்கள் அவ்விதவைகளின் சமீபபந்துக்களல்ல; அச்சொத்து விதவையின் புருஷனுடைய சமீப வார்சுகட்குச்சேரும். ஆகையால் விதவைக்கு இச்சொத்தில் ஆயுள்பரியந்தம்தான் பாத்தியதையிருக்கிறது. அவள் இறந்துபோனபின்பு அவளுக்கு அச்சொத்தில் பாத்தியதை யில்லாமலிருப்பதால், இந்தச்சொத்தை அவள் இறந்து போனபிறகு தன்னிஷ்டப்பட்ட ஒருவர் அனுபவிக்கும்படியாக உயில் எழுதி வைக்கப் பாத்தியதையில்லை என்று எண்ணப்படுகின்றது.

* * *

அடியிற்கண்ட தீர்ப்புக்கள் புருஷனிடமிருந்து அடையும் சொத்தை உயில் எழுதி வைக்கக்கூடாதென்று கூருகின்றன:—3 வீக்கிலி ரிப்போர்ட்டர் 49, 105, இ. லா. ரி, 7 சென் 93; 4 மெட்ராஸ் லாஜர்னல் 89, 17 பம்பாய் 69); 4 பம் 181;

* * *

இப்படி ஹிந்துவிதவைஉயில் எழுதிவைக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், சில சந்தர்ப்பங்களில் ஹிந்துவிதவை எழுதிவைக்கும் உயில்செலாமணியாகின்றது. விதைவையின் புருஷனுடைய சமீப வார்சு அதாவது விதவை இறந்துபோனால் இந்தச்சொத்தை வார்சுக் கிரமத்தில் அடையவேண்டிய புருஷனுடைய சமீபபந்து ஷெவிதவை தன் இஷ்டப்பட்ட ஒருவருக்கு உயில் எழுதி வைப்பதற்குச் சம்மதம் கொடுத்திருந்தால், பிறகு அந்த உயிலை ஆக்ஷேபிக்கமுடியாது; யாருக்கு விதவை உயில் எழுதிவைத்தாளோ அவர்களு

க்கு அச்சொத்துசேரும். அவர்களிடமிருந்து, புருஷனுடைய வார்சு ஷை உயில் எழுதிவைக்கப்பட்ட சொத்துக்களைப் பெறமுடியாது. உயில் எழுதிவாங்கியவர்கள் அச்சொத்துக்களை அனுபவிக்க விடாமல் வேறொருவருக்குப் பராதீனம்செய்யவும் புருஷனுடைய வார்சுகளுக்குப் பாத்தியமில்லை.

* * *

புருஷனுடைய தாயாதிகளிருந்தால், விதவை வார்சுக் கிரமத்தில் புருஷனிடமிருந்து அடைந்தசொத்தை மிகமுக்கியமான காரியங்களுக்கன்றி யாதொரு பராதீனமும் செய்யக்கூடாது.

* * *

புருஷனுடைய ஆத்மாவிற்குச் சொர்க்காதிபதவிகள் உண்டுபண்ணி வைக்கும்படியான தர்ம காரியங்களுக்காகவும் வைதிககாரியங்களுக்காகவும் அவள் அச்சொத்தை அதிகமாகவும் பராதீனம்செய்யலாம். இவ்வுலககாரியங்களுக்காக அவள்செய்யும் பராதீனங்கள் செலாமணியாகவேண்டியதாயிருந்தால் அக்காரியங்கள் மிக முக்கியமானவை என்றும் அவசியமானவை என்றும், சொத்தைப் பராதீனம் செய்தாலொழிய அக்காரியங்களை நடத்தமுடியாதென்றும் ருஜுப்படுத்தவேண்டும்.

* * *

அவள்செய்யும் பராதீனங்கள் செலாமணியாகாதவையாயிருந்தாலும், புருஷனுடைய வார்சின் அதாவது அவள்இறந்துபோனபின் அச்சொத்தை அனுபவிக்கப் பாத்தியதையுடைவனுடைய சம்மதம் பெற்றுப் பராதீனம் செய்திருந்தால் அப்பாரதீனங்கள் செலும்படியுள்ளதாக எண்ணப்படும்.

* * *

ஹிந்துவிதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக் கிரமத்தில் அடையும்சொத்துக்களைப் பராதீனம் செய்யக்கூடாதென்று ஒருவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அவள் இறந்துபோனபின் அச்சொத்தை அனுபவிக்க வார்சுகளிருப்பதையும் இல்லாததையும் பொறுத்ததல்ல. அவள் இறந்துபோனபின்பு அச்சொத்தை அடைய வார்சுயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவள் அச்சொத்தைப் பராதீனம் செய்ய அவளுக்குப் பாத்தியதை கிடையாது என்றும் அவள் பராதீனம் செய்யக்கூடாதபடி, புருஷனிடமிருந்து அச்சொத்து அவளுடைய கைக்குவந்தவுடனே அதற்கே அந்த சுபாவம் உண்டாய் விடுகிறதென்றும், முசிலிப்பட்டணம் கலெக்டர் V கலவே வெங்கடநாராயணய்யா கேசில் (8 மூர் இந்தியன் அப்பீல் 553) பிரிவு கவுன்சிலர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக்கேசில் பிரதிவாதி புருஷனிடமிருந்து திரண்டசொத்தை வார்சுக் கிரமத்தில் பெற்ற ஒரு ஹிந்துவிதவை. இவர் தாம்பெற்ற எஸ்டேட்டைத் தம்இஷ்டப்படி பராதீனம்செய்யத்தலைப்பட்டார். இந்த விதவை இறந்துபோனவுடன் இச்சொத்தை அடையவேண்டிய வார்சுகளுமில்லை. வார்சுக்கிரமப்படி சொத்தையடைய பாத்தியமுடையவன் இல்லாமற்போனால் கடைசியில் அச்சொத்து மகாராஜாவைச் சேரவேண்டுமென்று யாஞ்ஞவல்கிய முதலிய உபநிஷதங்கள் கூறுகின்றன. ஆகையால் மேற் கூறப்பட்ட கேசில் சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கு வார்சுளில்லாததால் அச்சொத்து கவர்ன்மெண்டாரைச் சேரவேண்டும். ஆகையால் விதவை யிறந்துபோனபின் அச்சொத்தை அடையவேண்டிய வார்சாகிய கவர்ன்மெண்டார் கிருஷ்ணாஜில்லா கலெக்டர் மூலியமாக ஷை விதவை சட்டவிரோதமாகவும் தான் இஷ்டப்பட்டபடியும் பராதீனம் செய்ய பாத்தியதையில்லை என்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்த வியாஜ்ஜியம் பிரிவிகவுன்சிலுக்குச் சென்று முடிவடைந்தது. பிரிவி கவுன்சிலர்கள் ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் ஒருவனுடைய சொத்தைப் பெற்றவுடன் அவள் அதைத் தன்னிஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாதபடி, அச்சொத்திற்கே அந்த சுபாவம் உண்டாய்விடுகிறதென்றும், விதவை இறந்துபோனவுடன் அச்சொத்தை அனுபவிக்கப் பாத்தியதையுடைய வார்சுகளிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவள் அதைத்தன் இஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாதென்றும் விதவை இறந்துபோனபின்பு அச்சொத்தை அடையவேண்டிய வார்சுகளுக்கு விதவை செய்யும் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியதையிருப்பதுபோல, இந்தவியாஜ்ஜியத்தின் சொத்துக்களுக்கு விதவை இறந்துபோனபின்பு வார்சாய் வரக்கூடிய கவர்ன்மெண்டாருக்கும் விதவைசெய்யும் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியதையிருக்கிறதென்றும் தீர்மானித்தார்கள்.

* * *

வங்காளத்தில் தாயபாகப் பிரகாரமும், பாக்கி மூன்று ராஜதானிகளில் மிதக்ஷராப்பிரகாரமும் விபக்த்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவனுக்கு ஆண் வார்சில்லாவிட்டால் அவனுடைய விதவை புருஷனுடைய சொத்திற்கு வார்சாகிறாள். ஆனால் அவள் ஜீவதசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்கலாமே தவிர அதைப் பராதீனமும் செய்யக்கூடாது, உயிலும் எழுதிவைக்கக் கூடாதென்று பிரிவி கவுன்சிலர்கள் கிராட்சிங் V ரூல்ஹால்சிங் (2 மூர் இந்தியன் அப்பீல் 331) வியாஜ்ஜியத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். முதலில் இந்த வியாஜ்ஜியம் பண்டைக் காலத்தில் பங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சாடார்திவானி அடவால்ட் (Sadder Dewany Adawalt) கோர்ட்டில் விதவையால் பராதீனம் செய்யப்பட்ட காசிநகரிலிருந்த சொத்துக்களைப் பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்டது. அப்போது சாடர் திவானி அடவால்ட் கோர்ட்டார் அப்போதிருந்த பிரக்கியாதி பெற்ற ஹிந்து சாஸ்திரியார்களைத் தருவித்து அடியிற்கண்ட கேள்வி கேட்டார்கள்.

* * *

கேள்வி:—ராஜாஜெஸ்வெண்டு சிங்கின் முன்னோர்கள் அனேகவருஷகாலமாக ஆண்டு அனுபவித்து வந்த ஜெமீன் வார்சுக்கிரமத்தில் ராஜாஜெஸ்வெண்டு சிங்கிற்கு வந்து சேர்ந்தது. ஜெஸ்வெண்டு சிங்கோ ஆண் வார் சில்லாமல் இறந்து போய்விட்டார். ஆதலால் இந்த ஜெமின், வார்சுக் கிரமத்தில் ராஜஜெஸ்வெண்டு சிங்கின் விதவைக்கு வந்து சேர்ந்தது. இந்த விதவை ஷை ஜமீனை கிரட்சிங் என்பவருக்கு உயில் எழுதிவைத்தால் அந்த உயிலும் பராதீனமும் இந்து சாஸ்திரங்கள் பிரகாரம் செல்லுபடியுள்ளனவா அல்லவா ?

* * *

சாஸ்திரிகளின் ஜவாப்பு:—சொத்தை வேறொருவருக்குக்கொடுப்பதற்கு ஹிந்து விதவைக்கு அதிகாரமில்லை. பிரஸ்தாப விதவை பிரஸ்தாப ஜமீனுக்கு மிகுந்த பாத்தியதையுடைய ஒருவனுக்குக்கொடுத்த போதிலும், ஜமீனுக்கு, விதவையிறந்தவுடன் "வார்சாக வரக்கூடியவர்களின்" சம்மத மின்றிக் கொடுக்கக்கூடாது.

ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தில் பிரிவு கவுன்சிலர்கள் இந்து சாஸ்திரிகளின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு ஷை விதவைக்கு ஷை ஜமீன் வார்சுகளின் சம்மதமின்றி உயில் எழுதிவைத்துப்பராதீனம் செய்ய அதிகாரமில்லை என்று தீர்மானித்தார்கள்.

* * *

இந்தத்தீர்மானத்தால், ஹிந்து விதவை தான் இறந்தபின் தான் அனுபவித்து வரும் சொத்திற்கு சட்டப் பிரகாரம் வார்சாய் வரக்கூடியவர்களின் சம்மதத்துடன் ஷை சொத்தை உயில் எழுதிவைக்கலாமென்றும் ஏற்படுகின்றது. மற்றப்படி விதவை ஜீவதசையிலுள்ளபோது செய்துவரும் பராதீனங்கள், அவள் இறந்து போனவுடன் அச்சொத்தை அடையக்கூடியவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுச் செய்யலாமென்று இந்தியாவிலுள்ள எல்லா ஹைகோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் சில ஹைகோர்ட்டார் ஷை சொத்திற்குப் பாத்தியமுடையவும் ஜீவதசையிலிருக்கிறவுமான எல்லா வார்சுகளுடைய சம்மதத்தையும் விதவைபெற்றுப் பராதீனம்செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். சில ஹைகோர்ட்டார் மிகுந்த சமீபவார்சுவின் சம்மதத்தைப் பெற்றால் போதுமானதென்றும் அந்தசம்மதம் மற்ற வார்சுகளையும் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * *

எப்படியிருந்தபோதிலும் வார்சுகளின் சம்மதத்துடன் விதவை செய்த பராதீனத்தால் சொத்தைப் பெற்றுக்கொண்டவன் அச்சொத்தை அனுபவித்துவருவதை, விதவை இறந்துபோனவுடன் வார்சுகள் ஆக்ஷேபிக்கமுடியாது. ஏனென்றால் விதவைசெய்த பராதீனத்திற்கு வார்சுகள் சம்மதம் கொடுத்துவிட்டார்கள்.

* * *

ஒருதடவை சம்மதம் கொடுத்துவிட்டால் பிறகு ஆக்ஷேபிக்கமுடியாது. இம்மாதிரி நடந்திருக்கும் வியாஜ்ஜியத்தையும் உதாரணமாகக் கூறுகின்றோம். A என்பவனும் B என்பவனும் விபக்த சகோதரர்கள். A. ஆண்வார்சில்லாமலிறந்துபோய்விட்டான். அவனுடைய சொத்துக்கள் வார்சுக்கிரமத்தில் அவனுடைய விதவை M க்குக் கிடைத்தது. B க்கு ஆண்சந்ததியில்லை. ஆதலால் C என்பவனை ஸ்வீகாரமாக எடுத்துக்கொண்டான். M என்பவனும் B என்பவனும் சேர்ந்து தத்தம் சொந்தசொத்துக்களைத் தாங்கள் இறந்து போனவுடன் C அனுபவித்துவரும்படியாக உயில் எழுதிவைத்தார்கள். அப்போது C மைனர், M என்பவளுடையவும் B என்பவனுடைய பராமரிப்பிலிருந்து வந்தான்; இப்படியிருக்கும்போது M இறந்துபோய்விட்டாள். M இறந்துபோனபின்பு அவள் B என்பவனின் சம்மதத்துடன் C க்கு உயில் எழுதிவைத்த சொத்துக்களில் சிலவற்றை B என்பவன் D என்பவனுக்குக் கிரயம்செய்தான். C மெஜாரட்டி அடைந்தவுடன் M எழுதிவைத்த உயிலை ஆதாரவாகவைத்துக்கொண்டு D கிரயம்பெற்ற சொத்துக்களைப் பெறுவதற்கு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

* * *

விதவை M. க்குப்பின் அவனுடைய புருஷனுடைய சொத்துக்களை அடையவேண்டிய வார்சு B யைத்தவிர வேறொருவருமில்லை. அந்த ஒரே வார்சுடைய சம்மதத்தை ஏற்று M என்பவள் C என்பவனுக்கு உயில் எழுதிவைத்தாள். B அப்போது சம்மதம் கொடுத்துவிட்ட பிறகு எப்படி அந்த சொத்தை D க்குக் கிரயம் செய்யக்கூடும் ?

ஒரு ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்துக்களைத் தான்ஜீவதசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்கப்பாத்தியமிருக்கிறது. இந்த பாத்தியதையை அவள் இறந்துபோனபிறகு அச்சொத்துக்கு வார்சாக வரக்கூடியவனுக்காகிலும் அல்லது அவனுடைய சம்மதமேற்று ஒரு அன்னியனுக்காகிலும் அவள் ஜீவதிசையிலிருக்கும்போதே கொடுத்துவிடலாமென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டு புல்பென்சார் தீர்மானித்திருக்கிறார்கள். —I. L. R. 21. Mad. 128.

* * *

ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிடமிருந்துவார்சுக்கிரமத்தில் அடைந்த சொத்துக்களைத்தன்னுடைய காலக்ஷேபச் செலவுகளுக்காக விற்பனைசெய்வது அவ்வளவு அவசியமில்லாமலிருந்தபோதும் பம்பாய் ஹைகோர்ட்டார் அந்த விற்பனை செலாமணியாகுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கேசிற்குத் தீர்ப்புசொன்ன ஜட்ஜிகள் ஒரு குடும்ப மானேஜருக்கு நியாயமாக எவ்வளவு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு அதிகாரம் ஒரு ஹிந்து விதவைக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் அவள் இறந்துபோனபின்பு அந்தச் சொத்துக்களை அடையவேண்டிய வார்சுகளுக்கு எவ்வளவு பாத்தியதையிருக்கின்றனவோ அவ்வளவுபாத்திதை தானம் பெற்றவனுக்கிருக்கிறதென்றும் அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கின்றார்கள்.—10. All. 407.

* * *

அவசியமான செலவுகளுக்காக ஒரு ஹிந்துவிதவை தனக்குப்பின் அச்சொத்திற்கு அப்போது (for the time being) பாத்தியமுடைய ஒரு வார்சுவின் சம்மதத்தை ஏற்று பெந்தகம் விற்பனைமுதலிய பராதீனம் செய்திருந்தால் எந்தவார்சு பாத்தியதையுடையவன் சம்மதங்கொடுத்தானோ அவனைவிட அதிக பாத்தியதையுடையவனாகவும் உள்ளபடியே விதவை இறந்தவுடன் அவளுக்குப்பின் அச்சொத்தை அடையவேண்டியவனும் அப்பராதீனங்களை ஆக்ஷேபிக்கக்கூடாது. அவன், பிறகு அச்சொத்துக்கள் தனக்குச் சேரவேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தாலும் அப்பாராதீனங்கள் செல்லுபடியுள்ளதுதான் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—10. கல். 1102.

* * *

ஆதியில் இந்து லாவில் உயில் என்பது கிடையாது. இப்போதுதான் சிற்சில விஷயங்களில் ஹிந்துக்களில் உயில்கள் செல்லுமென்று தீர்மானித்துவருகின்றார்கள். உயில் ஏற்பாடு இங்கிலாண்டைச் சேர்ந்தது. அந்த வழக்கத்தையும் ஏற்பாட்டையும் இப்போது நம் தேசத்திலுள்ளவர்களும் அனுஷ்டித்து வருகின்றார்கள். இத்தேசத்தில் ஜனங்கள் தாங்கள் இறந்துபோனபின் அனுபவிக்கும்படியாக யாருக்கேனும் கொடுத்து ஏற்பாடுசெய்வதற்கு ஆதியில் "உயில்" என்கிற பெயர் வழக்கில் வராமற் போனபோதிலும் அது தானம் என்கிற பெயருடன் வழங்கிவந்தது.

* * *

எப்போது ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் அடைந்த சொத்தை அவள் இறந்துபோனபின்பு அச்சொத்தை அனுபவிக்கவேண்டிய வார்சுக்களின் சம்மதத்துடன் பராதீனம் செய்

தால் அப்பராதீனம் செல்லுபடியுள்ளதென்று ஏற்பட்டிருக்கிறதோ அப்போதே அவள் ஷை வார்சுகளுடைய சம்மதத்துடன் உயில் எழுதிவைக்கவும்அவளுக்கு அதிகாரமிருக்கிறதென்றும் அவள் சட்டப்படிப் பராதீனம் செய்யக்கூடிய சொத்தை உயில் எழுதிவைக்க அவளுக்கு அதிகாரமில்லை என்று இதற்குமுன் எந்த ஹைகோர்ட்டாரும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை என்றும் ஆகையால் சட்டப்படி பராதீனம் செய்யவும் சட்டப்படி பராதீனம் செய்யக்கூடிய சொத்தை அவள் உயிலும் எழுதிவைக்கலாமென்றும் ஆகவே இரண்டு பாத்தியதைகளும் அவளுக்கிருக்கிறதென்றும் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.—20. Mad. 162.

***

ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்தைத் தன்னுடைய சொந்தப் பந்துக்களுக்குத் தானம் செய்வதை ஹிந்துமத சாஸ்திரங்கள் கண்டித்தபோதிலும் புருஷனுடைய பந்துக்களுக்குத் தானம் செய்வதை ஒப்புக்கொள்ளுகின்றன.

***

ஒரு ஹிந்துவிதவைவார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்துஅடைந்தசொத்தைத் தன் பந்துவல்லாதவும், தன்னுடைய புருஷனின் பந்துவல்லாதவுமான ஒரு அன்னியனுக்குத் தானம் செய்தாலும் அவள் இறந்துபோனபிறகு அச்சொத்தை அனுபவிக்கவேண்டிய வார்சுவின் சம்மதத்துடன் அச்சொத்தைத் தானம் (gift) செய்திருக்கிறபடியால் அத்தானம் செல்லும் என்றும் விதவைக்கும் வார்சுகளுக்கும் அச்சொத்தில் எம்மட்டில் பாத்தியதை யிருக்கின்றதோ அம்மட்டில் பின்புவரும் வார்சுகளுக்குப்பாதகமின்றி அச்சொத்தை மானேஜ்மெண்டு செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.—இ. லா. ரி. 18 பம். 534.

***

ஹிந்து விதவை தன்னுடைய ஸ்திரீதனச்சொத்தை உயிலில் எழுதிவைக்கலாமென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—I. L. R. 1 Mad. 281, 166, 307.

***

ஒரு ஹிந்து விதவை தனக்குத் தன் புருஷனாலும் அல்லது இன்னும் யாராலேனும் தானமாகக் கொடுக்கப்பட்ட சொத்தை உயில் எழுதிவைக்கலாமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—1. பம. 155, 491; 21. பம். 170.

***

ஒரு ஹிந்து குடும்ப மானேஜருக்கு எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அவ்வளவு அதிகாரமும் புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் சொத்தடைந்திருக்கும் ஒரு ஹிந்து விதவைக்கிருக்கின்றது என்று கல்கத்தாஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—33. கல். 845.

***

புருஷனால் பட்ட கடன்கள் காலாவதியாகப் போயிருந்தாலும் அவைகளைத் தீர்க்கும்பொருட்டு ஹிந்து விதவை செய்யும் பராதீனங்கள் செல்லுபடியுள்ளவென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கின்றார்.—I. L. R. 11. Bom. 320.

***

ஆகவே மேற்கூறிய தீர்மானங்களால் வார்சுக்கிரமத்தில் புருஷனுடைய சொத்தை அடையும் ஒருஹிந்து விதவை தான் இறந்துபோனபிறகு அச்சொத்திற்கு வார்சாக வரக்கூடியவர்களின் சம்மதத்தை ஏற்றுப் பராதீனமும் செய்யலாமென்றும்,உயிலும் எழுதிவைக்கலாமென்றும் முடிவு செய்யலாம்.

GENERAL NEWS.

பொது வர்த்தமானம்.

அனந்தபூர் கொலைக்கேஸ்.

அனந்தபூர் ஜில்லாவில் கொலை செய்ததாக இரண்டுபேர்களுக்குத்தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. நான்கு பேர்களுக்கு ஜன்ம தீவாந்தரதண்டனை விதிக்கப்பட்டது. அப்பீல் செய்துகொண்டதிலும் அசல் கோர்ட்டுத் தீர்மானமே உறுதி செய்யப்பட்டது. மரண தண்டனை அடைந்த கைதிகள் சென்னை மாகாணம் கவர்னர் இரக்கம் பாராட்டும்படியாக மனு செய்துகொண்டார்கள். கவர்னர் அவர்களும் கோர்ட்டார் தீர்மானத்தில் பிரவேசிக்கப் போதுமான காரணமில்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இந்த ஜில்லா ஜனங்களுக்கு ஷை இரண்டு கைதிகளும் நிரபராதிகள் என்று தோற்றுகின்றபடியால் இவர்கள் தாட்பத்திரியில் ஒரு பெரிய மகா நாடு கூடி இக்கைதிகள் விஷயத்தில் இரக்கம் பாராட்டி விட்டுவிடும்படியாகவும், அப்படிச் செய்ய முடியாத விஷயத்தில் அவர்கள் அடைந்திருக்கும் மரண தண்டனையை ஜன்ம தீவாந்தர தண்டனையாக மாற்றும்படியாகவும் ஒரு தீர்மானம் செய்து இந்தியாவின் வைசிராய்க்குத் தந்தி அடித்திருக்கிறார்கள்.

அர்பத்நட் இன்ஸால் வென்ஸி.

மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் இன்சால்வெண்டுபெற்றுக்கொள்ளச்செய்துகொண்ட மனு ஜீகழுமீ 25உ முதல் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அனேக கடன்காரர்கள் மனுவை ஆக்ஷேபிக்கிறார்கள். இந்தக் கம்பெனியாரின் கணக்குகளைப் பரிசோதனை செய்த சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் இரண்டு தினங்களாக விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய விபரங்கள் அடுத்தமாத இந்தியசட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும்.

பிளீடர் பரீக்ஷை.

1907-ம் ஜனவரிமீ நடத்தப்பட்ட பிளீடர் பரீக்ஷையில் வெற்றி அடைந்த மாணவர்களின் நம்பர்கள்.

முதல் கிரேட்.

14, 21, 25, 26, 27, 29, 36, 37, 47, 52, 62, 74, 79.

இரண்டாவது கிரேட்.

3, 6, 7, 10, 12, 13, 16, 18, 19, 20, 23, 28, 31, 32, 33, 38, 39, 42, 44, 48, 49, 50, 51, 53, 54, 58, 61, 64, 67, 68, 70, 75, 80, 82, 83, 86, 87, 211, 88, 90, 83, 94, 99, 100, 101, 104, 108, 114, 119, 120, 133, 139, 144, 148, 153, 156, 159, 162, 167, 172, 179, 183, 191, 196, 200, 201, 202, 203, 204, 207.

தேவஸ்தான ரிசீவர்.

காஞ்சீபுரம் தேவராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு கோர்ட்டார் ம-ா-ா-ஸ்ரீ தேசிகாசாரியார் அவர்களை ரிசீவராக நியமித்தார்கள். அவர் ரூ. 30 ஆயிரம் டிபாசிட் கட்ட சாத்தியப்படாமலிருப்பதால் சென்னை மெசர்ஸ் பெஸ்ட் கம்பெனி துபாஷாகிய மிஸ்டர் டி. ராமானுஜாசாரியார் ரிசீவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கான்வகேஷன்:—ஜீகழுமீ 22உ நடந்த இவ்வருடத்திய கான்வகேஷனில் 8 மாதர்கள் B. A. டிக்ரிபெற்றிருப்பது நமக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுப்பது மன்றி, சென்னமாநகரம் நாளுக்குநாள் பெண்கல்வி விஷயத்தில் அபிவிர்த்தியாய்க் கொண்டு வருகிறதென்பதற்குத் தகுந்த அத்தாட்சியாயிருக்கிறது.

கொல்லப்பட்ட எலிகளின் எண்ணிக்கை:—இம்மாதம் 20 தேதியோடு முடிந்த வாரத்தில் கொல்லப்பட்ட எலிகள் எண்ணிக்கை 4768, இத்தொழில் ஆரம்பத்திலிருந்து இதுவரையில் கொல்லப்பட்டவைகளின் தொகை 232,422.

ரெவினியூபோர்டு தீவிபத்து:—ரெவினியூ போர்டில் நடந்த தீவிபத்து என்னவிதமாய் நடந்தது என விசாரித்தறியும் பொருட்டு அடியில் வரும் மூன்று கனவான்கள் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. (1) ரெவினியூ போர்டு மெம்பர் மிஸ்டர் அட்கின்சன். (2) மிஸ்டர் F. வில்சன் (3) கலெக்டர் மிஸ்டர் A. R. கம்மிங்.

மனைவியை அடித்ததற்காக அபராதம்:—மிஸ்ட்ரஸ் E. டொப்ஸன் என்னும் பறங்கிஸ்திரீ தன்னுடைய புருஷன் தன்னை அடித்தான் என்பதாக மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் கிளார்க் துரை முன்பு பிரியாது செய்துகொள்ள, மாஜிஸ்ட்ரேட் கேசை விசாரணை செய்து புருஷனுக்கு 1 ரூபாய் அபராதம் விதித்து இனிமேலம்மாதிரியாகப் பெண்ஜாதியைத் துன்புறுத்தாதிருக்கவும் ஆர்டர் செய்தார்.

மரணதண்டனை மாற்றப்பட்டது:—சென்ற ஜனவரிமாதம் 11-தேதி இரவு ராமசாமி என்பவன் தனது மனைவியைக் கத்தியால் குத்திக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தஞ்சாவூர் செஷன்ஸ்ஜட்ஜியால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளி தண்டனையைப்பற்றி ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொள்ள அவ்வப்பீல் மெஸர்ஸ் ஜஸ்டிஸ் வாலிஸ், ஜஸ்டிஸ் பென்சன் இவர்கள் கூடிய கோர்ட்டில் விசாரணைக்குவந்தது. குற்றவாளி தனது மனைவி கெட்டநடத்தையை விரும்புவதாகச் சந்தேகப்பட்டிருக்கும்போது ஒருநாளிரவு அவளது அறையினின்றும் பக்கத்து வீட்டுக்காரன் போவதைப்பார்த்து ஆத்திரம் தாளாமல் அம்மாதிரியான தொழிலைப்புரிய நேர்ந்தது எனக்கூற, ஜட்ஜிகள் அவன் [illegible] செய்த கிருத்திய மெனவெண்ணி மரணதண்டனையைத் தீவாந்தர சிக்ஷையாக மாற்றினார்கள்.

யூனிவர்ஸிடி மோகக்கேஸ்:—மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவுப்படி ஜாமீன் பேரில் விடுதலையடைந்திருந்த இரண்டு மாணவர்களுக்கு மாஜிஸ்ட்ரேட் விதித்த தண்டனை மிகவும் சொல்பமென்றும், அவர்கள் செய்த குற்றம் மிகவும் பெரியதாகையால் தண்டனை அதிகப்படுத்த வேண்டுமென்றும் [illegible] மிஸ்டர் ஆடம் ஹைகோர்ட்டிற்கு மனுசெய்துகொள்ள, இக்கேஸ் இம்மாதம் 19உ ஆனரபில் மிஸ்டர் [illegible] முன்பு விசாரணைக்குவந்தது. மாணவர்கள் தரப்பில் ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பரன் மாணவர்களின்மீது யாதொரு குற்றமுமில்லையென வாதித்தார். ஜட்ஜி இருதரத்தாரின் வாதிப்புகளைக்கேட்டு நீர ஆலோசித்து மாணவர்களுக்கு மாஜிஸ்ட்ரேட் விதித்த தண்டனையே போதுமான தென்று சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்.

தற்கொலை செய்துகொள்ளப் பிரயத்தனப்பட்டவள்:—இம்மாதம் 20-தேதி காலையில் சென்னை வெங்கடேச மேஸ்திரி தெருவில் வாசஞ் செய்யும் முப்பது வயதுள்ள தாயார் என்னும் ஸ்திரீ, தன் வீட்டுக்கதவைச் சாத்திக்கொண்டு, வீட்டுத் தாழ்வாரத்தில் ஓர் கயிற்றைமாட்டி தூக்கிட்டுக்கொள்ளப் பிரயத்தனப் படுகையில் அவள்தாய் வந்து வீட்டுக்கதவைத்தட்டி பதில்மொழி யில்லாமையால், சந்தேகங்கொண்டு அழுதுகொண்டே தெருவில்வர, பக்கத்திலிருந்த வேலுமுதலி அவ்வீட்டிற்குப்போய் அவள் கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு தொங்கிக்கொண் டிருப்பதை ஜன்னல் துவாரத்திற்பார்த்து கதவை உடைத்துக்கொண்டு உள்ளேபோய் அவளைப் பிடித்துக் கொண்டான். இவள் தற்கொலைசெய்துகொள்ள முயன்ற குற்றத்திற்காக, சி. டிவிஷன் போலீசாரால் சார்ஜ் செய்யப்பட்டு, மிஸ்டர் J. R. கூம்பஸ்துரைமுன்பு விசாரணைக்குக் கொண்டுபோகப்பட்டாள். அங்கு, குற்றவாளியாகிய தாயார் தான் நெடுநாளாய் வயிற்றுவலியால் வருந்துவதால் அதன் உபத்திரவம் பொறுக்கமுடியாமல் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி தூக்குப்போட்டுக்கொள்ள எத்தனித்ததாகக் கூற மாஜிஸ்டிரேட் 10-ரூபாய் ஜாமீன் பேரிலும் இன்னும் 6 மாத காலபரியந்தம் சரியான நடத்தையிலிருக்க ஒரு நபர் ஜாமீன் பேரிலும் தாயாரை விடுதலை செய்துவிட்டார்.

கவர்னர் விஜயம்:—ஜீகழுமீ 21உ முழுதும் கனந்தங்கிய நமது கவர்னருக்குச் சற்றேனும் ஓய்வில்லையென்னலாம். நேற்றுக்காலை 8-மணிக்கு மூர்மார்க்கட்டிற்குப்போய் அங்கு முனிசிபல் பிரஸிடெண்ட் மிஸ்டர் E. S. இலியாட்டால் வரவேற்கப்பட்டார். முனிசிபல் பிரஸிடெண்ட் கவர்னருக்கு மார்க்கட்முழுமையும் காண்பித்தார். கவர்னர், கசாப்புக் கடைமார்க்கமாய் வரும்போது கசாப்புக்காரர்களிடம் சமீபத்தில் நடந்த கசாப்புக்காரர்களின் தொழில் நிறுத்தியதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். பிறகு, மார்க்கட்டைவிட்டுப் புறப்பட்டு தங்கசாலை வீதி மார்க்கமாய் கவர்ன்மெண்ட் பிரெஸ்ஸிற்கு விஜயஞ்செய்தார். அங்கு பிரெஸ் சூபரின்டெண்டெண்டு மிஸ்டர் பிஷர் கவர்னரை அழைத்துக்கொண்டுபோய் பிரெஸ்ஸின் ஒவ்வொரு டிபார்டுமெண்டுகளுக்கும் கொண்டுபோய்க் காண்பித்துப் புதிதாய் தருவிக்கப்பட்ட சில மெஷின்களையும், அது வேலைசெய்யும் முறைகளையும் கவர்னருக்கு எடுத்துக் கூறினார். பிறகு பிரெஸ்ஸைச்சார்ந்த டெக்னிகல் ஸ்கூலைப்போய் பார்வையிட்டு இவ்வருடம் டெக்னிகல் பரீக்ஷையில் தேறின 40 மாணவர்களுக்கு வெகுமதியும், சர்டிபிகேட்டுமளித்தார். அன்று பிற்பகல் கவர்னர் விஜயத்தின் ஞாபகார்த்தமாக பிரெஸ்ஸில் ½ நாள் விடுமுறை விடப்பட்டது. பிறகு கவர்ன்மெண்ட் பிரெஸ்ஸைவிட்டு பிரசிடென்ஸி காலேஜுக்குப்போனார். அக்காலேஜு முழுமையும் சுற்றிப்பார்வையிட்டார். கவர்னர் விஜயம்செய்ததை முன்னிட்டு காலேஜ் மாணவர்களுக்கு ஒருநாள் ரஜாவிடப்பட்டது. அங்கிருந்து ரெவினியூ போர்ட்டுக்குப்போய் அங்கு சுமார் 1¼ மணி நேரம் வரையில் இருந்தார். பிறகு சாயங்காலம் 5-மணிக்கு [illegible] பிடியும் கவர்ன்மெண்ட் ஹவுசை விட்டுப்புறப்பட்டு லெப்பர் ஆஸ்பிடலைப்போய்ப் பார்வையிட்டுத் திரும்பினார்.

கூச்பீஹார் மகாராணி தேவியார் தமது இராஜகுமாரிகளுடன் மகாராஜாவின் மிலிடேரி செக்ரிடேரிகளுடன் கூச்பீஹாருக்குச் சமீபத்திலுள்ள வால்கா என்னுமிடத்திற்கு வேட்டையாடும்பொருட்டு டார்ஜிலிங் மெயிலில் ப்ரயாணமானார்கள். லேடிமிசேரும் ராணியைச் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

கர்ஸன் பிரபு:—இங்கிலாந்து ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடியில் காலியாயிருந்த சான்ஸலர் ஸ்தானத்திற்கு லார்ட் கர்ஸனும் லார்ட் ரோஸ்பரியும், அபேட்சகர்களாய் நின்று போட்டிபோட்டதில் கர்ஸன் பிரபுவுக்கு வோட்டுகள் அதிகம் கிடைத்து கர்ஸன் பிரபுவே சான்ஸலராக நியமிக்கப்பட்டார்.

மிஸ்டர் ரோமெஷ் சந்திரதத்:—இவர் பரோடா சமஸ்தானத்தில் வகித்துவந்த பரோடா மந்திரி ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டார். இந்தியா மந்திரி ஆபீஸில் ஒரு ஸ்தானம் பெறுவதற்காக இவர் இங்கிலாண்டு செல்லக்கருதி யிருப்பதாய் அறிகிறோம்.

முத்துச்சலாபம்:—லங்கைக்குச் சமீபத்தில் இப்பொழுது முத்துச் சலாப் வேலை நடந்துகொண்டிருக்கிறது. 13 நாட்களுக்கு முன் இதில் 4 லக்ஷத்து 28 ஆயிரம் ரூபாய் சிப்பிகள் எடுக்கப்பட்டு விற்பனையாயிருக்கின்றது. இன்னும் இச்சலாபம் முடியுங்காலத்திற்குள் அனேக லக்ஷ ரூபாய்கள் கிடைக்குமாம்.

அமீர்:—ஆப்கன் அமீர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்பொழுது அவருடைய செய்கையைத் தமது தேசத்தில் குருமார் வம்சத்தாராகிய ஓர்முல்லா கண்டித்துப் பேசினதற்காகத் தமது தேசம்போய்ச் சேர்ந்ததும் அந்த முல்லாவின்மீது ராஜஙிந்தனைக் குற்றஞ் சாட்டி தண்டனை புரிந்தார்.

சர்-பி-எம் மேதாவிற்கு ஒரு உருவச்சிலை:—இந்தியமாதின் புத்திரர்களின் சிரேஷ்டரான பழுத்த தேசாபிமானியாகிய சர்-பி-எம் மேதாவிற்கு ஒரு உருவச்சிலை யேற்படுத்துவதற்காகப் பம்பாயில் பெருமுயற்சிகள் நடந்துவருகின்றது. இதற்காக 25,000 ரூபாய் பிடிக்குமாம். இந்த 25,000 ரூபாயும் முன்னதாகவே கைபொப்பஞ் செய்ப்பட்டிருக்கிறது.

ஒரு கொடுங் கொலை:—கல்கத்தாவில், தையல் வேலைசெய்து ஜீவனஞ்செய்யும் டிக்குயென்னும் மகமதியன் சில காலமாய்த் தனது மனைவியாகிய "ரூபி" பென்கள்மீது வீணே கோபித்துக்கொண்டிருந்தான். அதாவது, அவள் விபசாரநட்த்தையிலிருப்பதாகத் தனது சினேகிதர்கள் தன்னிடம் வந்துசொல்வது தனக்கு மிகவும் அவமானத்தைத் தருகின்றதென்றும் ஆனால் தனக்கு அதில் நம்பிக்கையில்லை யென்றும், பொருள் சம்பாதிப்பது கஷ்டமாயிருக்கிற தென்றும் இன்னும் பலவிதமாக அவள்மீது சினந்து பேசிக்கொண்டு சச்சரவிட்டுவந்தான். சமீபத்தில் ஒரு நாளிரவு அவன் அன்னமருந்தி உறங்கிவிட்டான். அவன் மனைவி தன்னாயகன் அநியாயமாய்ப் பழிகளைச்சுமத்தித் தன்மீது அடிக்கடி கோபஞ்செய்துகொள்வதை நினைந்துருகி வருத்தமடைந்து சுமார் ஒரு மணிக்குச் சமயலறையிலுட்கார்ந்துகொண்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது உறங்கிக்கொண்டிருந்த மகமதியன் எழுந்திருந்துபோய் வீட்டிலிருந்த கோடரியைக் கையிலேந்திக் கொண்டு தன்மனைவியிருந்த சமையலறைக்குப்போய் கோடரியால் வெட்டிக் கொலைசெய்துவிட்டான். இத்தனைகொடுந்தொழில் புரிந்ததற்கும் அம்மாது சத்தம்போடாதிருந்தமையால், அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு மிச்சேதியைப்பற்றி யொன்றுந் தெரியாமற்போய்விட்டது. அவ்வீட்டில் படுத்திருந்த மருமகன் எழுந்திருந்து இக்கொடுந் தொழிலைப்பார்த்து பயந்து உடனே போலீசுக்குப்போய் அறிவித்து போலீஸ் அதிகாரிகளைக் கொண்டுவருவதற்குள் அந்த ஸ்திரீ இரத்தவெள்ளத்தில் பிணமாகக்கிடந்தனள். அப்பாதகன் போலீசாரால் பிடிக்கப்பட்டு பந்தோபஸ்திலிருந்துவருகின்றான். இவன் தனது சரியான மனநிலைமையிலில்லையெனக் கூறப்படுவதால், டாக்டர்கள் இவனைப் பரிசோதனை செய்வார்கள்.

ஓர் துணிகரம்:—மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகா எழுமலைஜமீன் கஸ்பா போலீசுஸ்டேஷனுக்கு மேற்பக்கம் வசிக்கும் 30-வயதுடைய கம்மாள விதந்துவான கூடம்மாள் என்பவள் 16-3-07-ஆகிய சனிக்கிழமை காலை 8-மணிக்கு வழக்கமாய்ப்போகிற பருத்திக்காட்டுக்குப் பருத்தியெடுக்கும்பொருட்டுப் போய் குனிந்து பருத்தியெடுத்துக்கொண்டிருக்கும் சமயம் தனது சோரபுருஷனான ஜமீன் மாஜிசம்பிரம சின்னச்சாமியாபிள்ளை என்பவன் அவளுக்குத் தெரியாமலே மறைவாகப் பதுங்கிவந்து குனிந்து நின்று பருத்தியெடுப்பவளின் பிடரியில் தன்கையிலிருந்த அரிவாளால் ஒரு வெட்டுவெட்டவும், அடே அப்பா என்று நிமிர்ந்தவளின் முகத்தில் மறு வெட்டு போட்டுக் கொத்தவும் ஷையாள் கூக்குரலிட அச்சத்தங்கேட்டு அக்கம்பக்கங்களில் பருத்தி யெடுத்துக்கொண்டு நின்ற பெண்களும் 12 வயதுடைய ஷையாளின் சொந்தமகளும் ஓடிவர, அந்தமகா கொலைபாதகன் ஓடிப்போய்விட்டான். கூடம்மாள் அங்கே மயங்கிவிழவும் இவளுடையமகளான சிறுபெண் அழுதுகொண்டு கண்ணீருடன் டவுனுக்குள் வந்து தன்தாய் மாமனிடமும்போலீஸ் அதிகாரியிடமும தெரிவித்தாள். அதைக்கேட்ட இரக்கமற்றநெஞ்சுடைய சில செந்தலைப்புலிகள் மனதில் கவலையென்பதில்லாமலே சாவதானமாய் பதில்சொன்னார்கள். வெட்டுண்டவளின் சகோதரன் ஒருவண்டிகொண்டுபோய் குற்றுயிராய்க்கிடந்த தன் சகோதரியை வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு அழுதகண்ணீருடன் ஸ்டேஷனுக்கு வந்தான். ஷையூர் கிராமமுன்சீபும் போலீஸ் அதிகாரியும்வெட்டுண்டவள் வாக்குமூலங்களை வாங்கினார்கள். பின் அவ்வூரில் ஆஸ்பத்திரியில்லாததால் 10-மைலுக்கப்பால் உசிலம்பட்டியிலிருக்கும்ஆஸ்பத்திரிக்கு மணி 11-க்கு அனுப்புவித்தனர். அவ்வுசிலம்பட்டிக்குப்போய்ச் சேருவதற்குள் மணி 4-ஆகும். அதற்குள் அவள் கதி யென்னவாகுமோ தெரியாது. ஸ்டேஷனுபீசரா யிருக்கும் மிஸ்டர் நாயுடு இதைப்பற்றி சிரமம் எடுத்துக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பாரென்று நம்புகிறோம்.

புதியதிருட்டு:—வங்காளத்திலுள்ள திருடர்கள் இப்பொழுது புதியவிதமாய்த் திருட்டுச்செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அதாவது, கல்கத்தாவில் தந்தியாபீசுக்கிடையில் செப்புக்கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. சிலதிருடர்கள் மூன்று நான்குமுறை இந்தக்கம்பிகளை இரவில் அறுத்து அதைத் தட்டானிடம் கொண்டுபோய் உருக்கி விற்றுவிடுகிறார்கள். ஒருநாள் இவர்கள் சுமார் ஒரு மைல் தூரம் நீளமுள்ள தந்திக்கம்பிகளை ஒரேயடியாய் அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இதனால் அனேகமுறை தந்திசமாசாரங்கள் அனுப்புவதில் பெரிய கஷ்டங்கள் வந்துநேர்ந்தன. ஆனால் இவர்கள் கடைசியில் பிடிபட்டுக்கொண்டார்கள். தேசத்தில் பஞ்சமும் வறுமையும் வந்தால் திருடர்கள் என்னசெய்வார்கள்? புதிதுபுதிதாய்க் களவு செய்யத்தொடங்குகின்றார்கள். இந்தியர்கள் ஒழுக்கவீனங்களுக்கெல்லாம் அவர்கள்மேற்சுமத்தப்பட்டிருக்கும் பரதேச ஆட்சியே காரணமென்று சொல்வது பிழையாகமாட்டாது. தேசம் செழித்திருந்தால் யாராவது களவுசெய்யப் போவார்களா?

சத்கதா ரத்னாவளி.

"பேராசை பெருந்துக்கம்."

(84-ம் பக்கத்தொடர்.)

அநந்தராமன் பலவிடங்களிலும் வாங்கியுள்ள கடன் சுமார் ஐயாயிரரூபாய்க்கு அதிகமிருக்கலாமாதலால், நாளை தனக்குக் கிடைக்கும் லாட்ரித்தொகையில் கொடுத்துவிடுவதாக ஒவ்வொரு கடன்காரர்களுக்கும் கடிதமெழுதி விடுத்தான்.

இப்போது இரவு ஒன்பதுமணியாயிற்று. அநந்தராமன் அன்னமுண்டு படுக்கையறைக்குச் சென்றான். அங்கே சிறிதுநேரத்திற்கெல்லாம் அவன் மனைவியும் வந்து சேர்ந்தாள்.

அநந்தராமன்:—என்னடி ருக்மணீ! நீ வன் என்னைப்போல் சந்தோஷகரமாயிருக்கவில்லை. நமக்குத்தான் முதற் பிரைஸ் வந்துவிடப்போகிறதே! இனியென்னகுறைச்சல்? இப்படி என் பக்கத்தில்வந் துட்காரு (ருக்மணி கட்டிலின்மே லேறிக் குந்துதல்). உனக்கு வேண்டிய நகைகள் இன்னின்ன வென்பதை இப்போதே சொல்; வாங்கித் தந்துவிடுகின்றேன். ஆனால் பணத்தை முன்போல் விருதாவில்செலவழிக்கக்கூடாது.

இனி நானென்னமோ உத்தியோகம் செய்யப்போகிறதில்லை. அது தெரிந்துதான் சுவாமி என்மேல் கிருபைவைத்து முதற் பிரைஸ் கொடுப்பதாகச் சொன்னார். அத்தொகையைப் பத்திரமாகவைத்துக்கொண்டு நகைகளின்மேல் நூற்றுக்கு இரண்டு மூன்று விழுக்காடு வட்டிக்குக் கொடுத்து ஜீவிக்கவேண்டுமாகையால் உனக்கு வேண்டிய நகைகளைச் சொன்னால் அவற்றிற்குப் பிடிக்குந்தொகை இவ்வளவென் றேற்படுத்திக்கொண்டு நாமிருப்பதற்குச் சின்னதாக ஒரு மெத்தைவீட்டை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். சீக்கிரம் சொல். எழுதிக்கொள்கிறேன். எல்லாம் குறைந்ததொகையா யிருக்கட்டும் என்று காகிதமும் எழுதுகோலும் கையிற் பிடித்தான். உடனே பிராமணனுக்குத் தும்மல்வர, இசுக்கிசுக்கென்று தும்மி "பெண்ணே! ஜயமிருக்கிறது! பார்த்துக்கோ மூன்றுதும்மல் தும்மினேன்! என் தும்மலால் அநேகர் காரியசித்தியடைந்திருக்கிறார்கள். உம்: உம்: நல்லவேளைதான் இனி நீ செய்யவேண்டியதைச் சொல்.

ருக்மணி:—அதென்னமோ எனக்குத்தெரியாது. நான் அணிந்துகொள்ளும் நகைகளெல்லாம் விலையுயர்ந்தனவாகத்தா னிருக்கவேண்டும். அடுத்தாத்து அங்கயற்கண்ணி அணிந்திருக்கும் கம்மல் ஆயிரரூபாயாம். என்னமாய் ஜொலிக்குதென்கிறீர்? கண்ணைப் பரிச்சுக்கொண்டுபோகிறது. எனக்கு வாங்குவது அதற்குமேல் கொஞ்சம் உயர்ந்ததாயிருக்கவேண்டும். அப்போதுதான் அவள் என்னைக்கண்டால் அச்சப்படுவாள். என்னமோ செய்கிறது செய்கிறீர்; கொஞ்சம் நல்லதாய்த்தான் செய்துவிடுமே!

அநந்த:—என்னடீ! எடுக்கும்போதே பிரமாதமாய்ச் சொல்கிறாய்! ஏது: ஆயிரம் ரண்டாயிரமென்றால் உனக்கென்ன அலக்ஷியமாயிருக்கிறதோ? ஐயோ பயித்தியமே! கல் நகைகளின்மேல் அதிகத்தொகை போடுவது வீணல்லவா?

ருக்:—சும்மாவருகிற பணத்துக்கு ஏனோ இவ்வளவு கணக்கு வழக்கு! நீர் கஷ்டப்பட்டுசம்பாதித்தமாதிரியாய் வருத்தப்பட்றீரே! என்னமோ சொல்லுவாங்களாம்: அப்படி இருக்கு கதை. ஒண்ணு செய்தாலும் பளிச்சென்றிருக்கவாண்டாமா?

அநந்த:—சரி சரி: ஏண்டி அப்படி முகஞ் சுளிக்கிறே; உன்னிஷ்டப்படி கம்மலுக்காக ஆரத்தைஞ்ஞூறு ரூபாய் எழுதிக்கொண்டேன். உம்: அப்புறம்.

ருக்:—இரட்டைக்கொள்ளுக்கா யட்டிகை அறுநூறு ரூபாயில் இருந்தால் போதும். காப்பும் கொலுசும் ஆயிரத்தைஞ்ஞூறுரூபாய் வைத்தேன். காசிமாலை ஆயிரம். தாலியுருவு ஐநூறு. ஒட்டியாணம் நானூறு. புதுச்சேரி கொலுசுக்கு ரூபா நூறு. பட்டை கொலுசு எண்பதுரூபாய். தலைசாமான் வகையறுவுக்கு இரண்டாயிரம். உயர்ந்த துணிமணிகளுக்கு ஓராயிரரூபாய். இது போக, நம்ம குழந்தை கிருஷ்ணவேணிக்கு வேண்டிய நகைநட்டுதுணிமணி சாமான்களுக்கெல்லாம் சேர்த்து இரண்டாயிரரூபாய் வைத்தேன். அன்றியும், என் தங்கை திக்கின்றியிருக்கிறாள். நாளை தைமாதக் கடைசியில் சாந்திமுகூர்த்தம் செய்யவேண்டியிருக்கு. நம்மைவிட அவளுக்கு வேறாரும் திக்கில்லாமையால் சுமாராய் ஒரு ஆயிரம் ஆயிரத்தைநூறு ரூபாயில் நகைநட்டு துணிமணிகள் வாங்கித்தரோணும் என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே,

அநந்தராமன் கட்டிலைவிட்டுக் குதித்தான். அப்போதவன் முகத்தில் கோபத்தீ ஜ்வலித்தது. மீசை மேலெழுந்து நின்றது. நாசித்துவாரங்கள் விரிந்தன. இங்குமங்கும் ஓடி கையிலொரு கொம்பை யெடுத்துக்கொண்டுவந்து தன் மனைவி உதட்டி விடித்து 'அடி அவிசாரிமுண்டே! என் குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! தேவடியாள்முண்டே! உனக்கு நகை செய்துதருவதல்லாமல் உன் தங்கைக்குமா செய்துதரச் சொல்கிறாய்! அடிபாபீ! என்னைப் பலவிதத்திலும் நஷ்டமடைவிக்கவா எண்ணங்கொண்டிருக்கிறா யென்று வைதுகொண்டே தடியால் முதுகுபிளக்க அடித்தான். அவள் அடிபொறுக்கமுடியாமல் வாய்பிளந்து அழுதாள். அண்டை அயலிலுள்ள ஜனங்கள் என்னமோ அபாயமென்று ஓடிவந்து பார்த்துச் சங்கதி தெரிந்துகொண்டு நகைசெய்து பிராமணனைச் சமாதானப்படுத்திச் சென்றார்கள்.

ருக்மணி தன் புருஷனைநோக்கி 'அடே கட்டேலேபோக! (கையை நெட்டொடித்தல்) நான் என்ன சொன்னேனென்று இப்படி யடித்தாய்? உனக்கு ஒரு ரூபாய்க்கு வழியின்றி நான் கொடுத்த ரூபாயைத்தானே லாட்டரிக்குக் கட்டினாய்? உன் பவுஷு இவ்வளவிலிருக்கும்போது என்னை யாதொரு தப்பிதமுமின்றி யடிக்கிறையா? ஆகட்டும்; என் தமயனிடம் சொல்லி உன்னை என்னபாடுபடுத்தச் சொல்கிறேன் பார், நாளைக்கு என்பேரில் ஒரு லாட்ரி கட்டி ரங்கம் பாடி சுவாமியை வரவழைத்து முதற் பிரைஸை எனக் கெடுத்துக் கொடுத்தால் ஆயிரரூபாய் செலவழித்துப் பெரும்பூசை போடுவதாய் வேண்டிக்கொள்ளப்போகிறேன். அதுபோலவே சுவாமி கிருபைசெய்துடப் போகிறார். அப்போது பார் உன் துள்ளளெல்லாம் அடங்கிவிடுகிறது என்று வலதுகரத்தால் கண்ணைத் துடைத்துக்கொண்டே எழுந்து ஆடையை வரிந்துகட்டி மற்றோரிடத்திற்போய்ப் படுத்துக்கொண்டாள்.

மறுநாட் காலை அநந்தராமனெழுந்து காலைக்கடனை முடித்துக்கொள்ளாமலே பரபரப்பாக நடந்து தன்னுடன்சேர்ந்து லாட்ரி கட்டியவர்களிடம் சென்று எனக்குத்தான் முதற் பிரைஸ் அடிக்கப்போகிறது. சுவாமி உத்தரவு கொடுத்துவிட்டார். ஆகவே இன்று கல்கத்தா லாட்ரிக்கு டெலிகிராப் செய்யப்போகின்றேன் என்றான். அவர்கள் என்னமோ ஐயா அதிர்ஷ்டம் ஒருவர் பங்கல்ல. வாராததற்கு முன்னமே வருமென்று துணிதல் பேதமையாம் என்றனர். அநந்தராமன் இல்லை இல்லை எனக்குமுதற் பிரைஸ் வருவது நிச்சயம். நீங்களே கேட்கப்போகிறீர்கள் என்று அங்குநின்றும் போஸ்ட்டாபீசுக்குச் சென்று அடியில் வருமாறு டெலிகிராப் செய்யலானான்.

'லாட்ரிதேதி நேற்றோடு முடிந்தது. 1390-வது டிக்கட் நெம்பருக்கு வந்த பிரைஸ் எவ்வளவு? உடனே பதில்' என்று அர்ஜண்ட் தந்தி கொடுத்தான். அன்று மத்தியானமே அதற்கு மறுமொழி வந்தது. எங்ஙனமெனின், 'அக்டோபர்மாதம் பதினேழாந்தேதி லாட்

ரியின் கடைசிநாளென்று தெரிவித்திருந்தோம். கையொப்பம் சேராமையால், அதை நவம்பர் மூன்றாந்தேதியாக மாற்றியிருக்கின்றோம்' என்று வந்த தந்தியைக் கண்ட அநந்தராமன் அந்தத் தேதியை எதிர்பார்த்திருந்தான். பிராமணன் காலை ஆறுமணிமுதல் இரவு எட்டு மணிவரையில் அவன் நுழையாதகோயிலில்லை. காணாத கடவுளில்லை. பிரார்த்தித்துக்கொள்ளாத விஷயமில்லை. அல்லும்பகலும் அவனுக்கு லாட்டரி யேக்கமே பெரிதாயிற்று. வேளைக்கு அன்னமுண்ணான், இரவில் படுத்துறங்கான். சிறிது நித்திரையும் விழிப்புமா யிருக்கையிலேயே லாட்டரி முதற்பிரைஸ் வந்ததாகவும் பாங்கிக்குச் சென்று செக்குமாற்றுவதாகவும் பலதரம் கனவு காண்பான். இவ்வாறு ஒருநாளை ஒரு யுகமாகக் கழித்து வந்தான்.

நவம்பர்மாதம் மூன்றாந்தேதி யொழிந்து நாலாந்தேதியும் பிறந்தது. அநந்தராமன் குடுமியைத் தட்டி முடிந்துகொண்டு வெளியே வந்தான். சென்னையிற் பிரசுரமாகும் மெயில் பத்திரிகையை ஒருவர் வீதியில் நின்று வாசித்துக்கொண்டிருந்தார். அவரைச்சுற்றி லாட்ரி கட்டியவர்களும் பிறருமாக சுமார் நூறுபேர்வரையில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களினிடையே அநந்தராமன் மிக அவசரமாகப் புகுந்து 'பத்திரிகையில் என்பெயர் வந்திருக்கிறதா? முதற்பிரைஸ் என்னதுதானே? ஏதோ இப்படிக்கொஞ்சம் காட்டும் பார்த்துட்டுத் தருகிறேன்' என்று பிடுங்கினான். அதை வாசித்துக்கொண்டிருந்தவர் பிராமணனை வைதார். அதற்கு அநந்தராமன் என்னகாணும்! எனக்கு வந்திருக்கும் முதற்பிரைஸை பார்க்கவேண்டாமோ? உளறுகிறீரே' என்று பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தான். இஃது இங்ஙன நிற்க.

அவ்வூரில் சர்க்கரை வியாபாரம் செய்யும் சடகோபனென்பவன் தனது சிநேகனாகிய வீரபத்திரனிடஞ் சென்று தான் கல்கத்தா லாட்ரியில் ஒரு ரூபாய்கட்டி சேர்ந்திருப்பதாகக் கூறி, வீரபத்திரனையும் அதிற் சேரச் சொன்னான். வீரபத்திரன் பரம ஏழையாதலால் வேண்டாமென்று மறுத்தான். சடகோபன் சேரவேண்டுமென்று நெடுநேரம் தொந்தரை செய்தும் அவன் இணங்காமையால், தானே ரூபா கொடுப்பதாகச் சொல்லி வீரபத்திரன்பெயரை 1389-வது டிக்கட் நெம்பரிற் பதிந்து ரசீதை அவனிடங்கொடுத்தான். வீரபத்திரன் தலையிலடித்துக்கொண்டு அது தனக்கு வேண்டாமென்றும் ரூபாய் கொடேனென்றும் ரசீதை வீசி யெறிந்தான். சடகோபன், போடாபோ: விருதாவில் எவ்வளவோ செலவழித்து விடுகிறோம். ஒரு ரூபாயில் என்ன கெட்டுப்போகும் சாம்ராஜ்யம்? நாளை உனக்கு அதிர்ஷ்டமிருந்து முதற் பிரைஸ் வந்தால் எனக்குத்தான் கொட்டிக் கொடுத்துவிடுவையோ? என்று ரசீதை வீரபத்திரனிடம் விட்டெறிந்தான். அவன் அந்த ரசீதை லக்ஷியஞ்செய்யாமல் சமையல் செய்யும் வீட்டுப் பரணைமேலிருந்த மூங்கிற்றடுக்கில் சொருகிவைத்தான். கல்கத்தா லாட்ரியில் பிரைஸ்வந்தவர்கள் பெயரையெல்லாம் மெயில் பத்திரிகையில் வரிசையாகக் குறிக்கப்பட்டிருந்தன. வேண்டாமென்று தலையிலடித்துக்கொண்ட ஏழை வீரபத்திரனுக்கே முதற் பிரைஸ் வந்ததாக அப்பத்திரிகையிற் குறிக்கப்பட்டிருந்தது. (என்ன ஆச்சரியம்! உலகீர்! அதிர்ஷ்டவசத்தைக் கண்டீர்களா?)

முதற் பிரைஸில் வீரபத்திரனுடைய பெயரிருக்கக்கண்ட அநந்தராமன் வாயிலடித்துக்கொண்டு கண்களில் நீர் ததும்ப தொப்பென்று கீழேவிழுந்து மூர்ச்சித்தான். அங்குச் சுற்றிலு நின்றுகொண்டிருந்தவர்கள் பிராமணனை வண்டியிற்கொண்டுபோய் விடுசேர்த்தார்கள்.

வீரபத்திரனுக்கு முதற்பிரைஸ் வந்த சங்கதி அவ்வூரெங்கும் பரவியது. முன்னே வீரபத்திரனோடு நின்று பேசவும் வெட்கப்பட்டுக்கொண்டிருந்த அவனுடைய பந்துமித்திரர்கள் இப்போது மிக அன்புடையவர்கள் போல அவன்முன்வந்து தங்கள் வருத்தங்களை வெளியிடலானார்கள். சிநேகர்களோ தங்கள் நெற்றியிற் கையைவைத்து குட்மார்னிங்சார் என்று வந்தனஞ்செய்யவும், தினமும் வைதுகொண்டிருந்த நிர்மலா என்னும் அவனுடைய மனைவி வாழ்த்தவும், லாட்ரித்தொகை அவன் கைக்கு வராததற்கு முன்னமே அவனுடைய சுற்றத்தார்கள் கலியாணத்திற்கும் கருமாந்தரத்திற்கும் பணங்கேட்கவும், அந்தஸ்தும் அழகுமுடைய வேசியர் சிலர் தங் கண்வலையை அவன்மேல் வீசவும், செல்வந்தர்கள் அவனிடம் பொறாமை கொள்ளவு மானார்கள். இஃதிங்ஙனமாக, மறுநாள் சோமவாரம் காலை ஒன்பதரைமணிக்கு வீரபத்திரனிடத்தில் தபாற்காரன் ஒரு கடிதங் கொண்டுவந்துகொடுத்தான். அக்கடிதத்தின் தலைப்பில் கல்கத்தா வென்று போஸ்டு முத்திரை போடப்பட்டிருந்தது. அதனை வீரபத்திரன் பிரித்து வாசித்துத் தனக்கு முதற் பிரைஸ் என்பதினாயிரத்துச் சில்லறை ரூபாய் வந்திருப்பதுணர்ந்து தன் பேரெழுதிப் பரணையிற் சொருகியிருந்த ரசீதை ஒரு கவரில் அடக்கஞ் செய்து கல்கத்தாவுக்கு ரிஜிஸ்டர்செய் தனுப்பினான்.

வெளியூருக்குப்போயிருந்த சடகோபன், வீரபத்திரனுக்கு முதற்பிரைஸ் வந்த துணர்ந்து அக்கணமே எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு ரயிலேறி இரவு பதினொரு மணிக்கு வீரபத்திரனுடைய வீடு வந்து சேர்ந்தான். அப்போதவன் ஒரு சிறிய வீட்டிற்படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்தான், சடகோபன் அவனைத் தட்டி யெழுப்பினான்.

வீரபத்திரன் :—(கண்ணை நிமிண்டிக்கொண்டே) சடகோப! ஏது இந்நேரவேளையில் இங்குவந்தது?

சடகோபன் :—ஒன்றுமில்லை. ஊரிலிருந்து இப்படியே உன்னைப் பார்த்துவிட்டுப்போலாமென்று வந்தேன். இப்போது மணி யென்னவிருக்கும்?

வீர :—இதோ பார் டயம்பீசில் பதினொன்றாகி பத்துநிமிஷமாயிற்று. கடியாரம் குண்டுக்குச் சரியாய்த்தான் போகிறது ; தப்பில்லை.

சட :—அடடா! அப்படியா? நேரந்தெரியாமல் வந்துவிட்டேன். நான்வரட்டுமா?

வீர:—செய். காலையில் பார்க்கிறேன். நித்திரை என் கண்ணை மறைக்கிறது. போகிறையா?

சட :—நல்ல நினைவு வந்தது! அதுதான்: அந்த லாட்ரி ரசீது கொடுத்தேனே அதனைப் பத்திரமாய்ப் வைத்துக்கொண் டிருக்கின்றனையா?

(வரும்.)

THE LATE HON'BLE SIR. T. MUTHUSAWMY AYER.

கனம்-ஸர்-டி-முத்துசாமி ஐயர்

B. L. K. C. I. E.

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்குநாடு தென்னாடு எனப்படும். இது சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் என நான்கு மண்டலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுட் சோழமண்டலமானது நீர் நிலவளங்களான் மற்றைய மூன்று மண்டலங்களினும் மிகச் சிறந்தது. ஒருகால் ஔவையார் இந்நான்குமண்டலங்களையும் ஒரு செய்யுளாற் புகழத்தொடங்கி, "மேதக்க, சோழவளநாடு சோறுடைத்து" என்றனர். இம்மண்டலம் இங்ஙன மற்றைய மண்டலங்களினுஞ் சிறந்து விளங்குதற்குக் காரணம் யாதோ வெனின், குடகுமலையினின்று மிழிந்து மிக்குப்பெருகி இடையறாத நீரோடுகூடி மதகுகளையுந்தி, வறியவர்க்குதவும் வள்ளியர்களையொப்பத் தெளிய திரைக்கரத்தால் வெள்ளிய முத்தினங்களையும், பொற்சன்னங்களையும் இறைத்து, தேக்கு, அகில், சந்தம், நரந்தம், நாகம் முதலிய பலமரங்களை வேருடன் பெயர்த்தெடுத்துக் கொண்டு, முல்லை நிலப்பொருள்களையும் ஒருங்கு சேர்த்து வாரிக்கொண்டுவந்து, 'தாதுகு சோலை தோறுஞ் சண்பகக்காடு தோறும், போதவிழ் பொய்கைதோறும் புதுமணற்றடங்கடோறும், மாதவிவேலிப்பூக வனந்தொறும் வயல்கடோறும், உடப்புதோறும் உயிரென உலவி, வேதசாகைகளெனப் பெருகிய பலசாகைகளோடு கூடிப் பொலியாநிற்கும்காவிரியாறே. அன்றியும் இம்மண்டலத்திலேயே வைணவதலங்களுட் சிறந்த திருவரங்கம் பெரிய கோயிலும், மற்றும் பலவைணவ சந்நிதிகளும், சைவதலங்களுட் சிறந்த சிதம்பரமும் மற்றும் பலசைவதலங்களும் அமைந்திருக்கின்றன. ஔவையார் மேற் கூறிய செய்யுளிற், "சான்றோருடைத்துத் தொண்டை" என்று புகழ்ந்த தொண்டை மண்டலமும் இதனுட்பிரிவானதே.

முற்காலத்தில் இச்சோழ மண்டலத்தை யாண்ட மன்னர்கள் மற்றைய தேயமன்னவர்கள் யாரையும் வென்றி கொண்டு, தமது வெற்றிக்கொடியை எத்தேயத்தினு நாட்டித் தாமே மற்றைய தேய அரசர்கள் யாரினுஞ் சிறந்து விளங்கினர்கள். இவர்களுக்குத் துணையாக மிக்க பராக்கிரம சாலியான பலசிற்றரசர்களும், சிறந்த பிரபுக்களும், பெரிய பெரிய கவிராயர்களும் இதிற்றோன்றி விளங்கினர். கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாடர் பிறந்ததும், வளர்ந்ததும், கவிசார்வ பௌமரெனப் பெயர் பெற்றதும் இம்மண்டலத்திலேதான். கம்பநாடகமென்றும், கம்பசூத்திரமென்றும், செந்தமிழ் வளங்கள் யாவும் ஒருங்கு அமையப் பெற்றது மாகிய கம்பராமாயணத்தை அக்கவிராஜ கேசரியார் நாளொன்றுக்கு எழுநூறு பாடல்களாகப் பாடி முடித்ததும் இம்மண்டலத்திலேதான். ஒப்புயர் வில்லாத அப்புலவர் பெருமானை யாதரித்து, அவரைக்கொண்டு அவ்விராமாவதாரம் என்னும் பாரகாவியத்தைப் பாடுவித்த பல்பெரும் புகழுடைய பிரபுவாகிய சடையப்பவள்ளலும், பொருளினுங் கொடையினுஞ் சிறந்தவரும் அம்மகாகவியின் மாணவருமாகிய ஏகம்பவாணருந் தோன்றி விளங்கியது இம்மண்டலத்திலேதான்.

பெருகிய பலநூற்களினாலுஞ் சொல்லி முடித்தற்கியலாத சிறந்த பலவளங்களையுடைய இச்சோழமண்டலத்தில், தஞ்சாவூர்ஜில்லாவில், உச்சுவாடி யென்னுங் கிராமத்தில், நாற்பாற்குலத்தினுண் மேற்பாற் குலமாகிய பார்ப்பனக்குலத்திற் பெருமையுற்ற மரபிலே 1832-வது இச்சென்னை ராஜதானியில் ஆங்கில மொழியினுள் முதன்மையுற நிற்பாரில் யானே முதன்மையானவன் எனக்குறிப்பாலுணர்த்துவார்போல் ஆங்கிலமாதங்களுண் முதன்மாதமாகிய ஜனவரிமாதத்தில் நமது முத்துசாமி ஐயர் பிறந்தனர். அவர் பிறந்த குடும்ப மிகவும் எளிய குடும்பம். அவரது தந்தையாராகிய வேங்கடாசல சாஸ்திரியார் பொறை, அடக்கம், தயைமுதலிய நற்குணங்கள் ஒருங்கமையப்பெற்றவர். அவரது அன்னையோ பெண்களுக்குரிய ஒழுக்கங்களத்தனையு நிரம்பப்பெற்றவள். இத்தகைய குணசீலர்களாகிய அம்மேலோருக்கு நமது ஐயரே யன்றி, அவருக்கு மூத்தபுத்திரரும் ஒருவருண்டு, அம்முது மக்கள் பொருட்பேறு இல்லாதவர்களாயினும், புத்திரப் பேற்றையே பெரும் பேறாக எண்ணி, அப்புத்திரர்கள் பேசு மழலைச் சொற்களையே தம்மிரு செவிக்கு முரிய இன்பமாகவும், அவர்களது தளர் நடையைக் காண்டலே கண்ணுக்குரிய இன்பமாகவும், அம்மக்கள் தமது காந்த ளிதழ்போன்ற சிறுமெல் விரல்களால் தம்மை யோடிவந்து கட்டித்தழுவுதலே உடற்குரிய இன்பமாகவும் அவ்வரும் பெறற் புதல்வர்களது உச்சிமோந்து முத்த மிடுதலே மூக்கிற்கும், வாக்கிற்கு முரிய இன்பமாவுங் கொண்டு மகிழ்ந்திருந்தனர். இவ்வுலகத்தில் 'இன்னடிசில் புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்களையில்லாதவர், பொன்னுடையரேனும் புகழுடையரேனு மற்றென்னுடையரேனும் உடையராவரோ?' ஆகார். அன்றியும் அவர்கட்கு, மனைவாழ்க்கையில் இன்பம் ஒரு சிறிதுந்தோன்றாது. புத்திரப்பே றில்லையாயின் 'மெய்தானம் வண்மை விரதந்தழல் வேள்வி நாளுஞ் செய்தாலு ஞாலத்தவர் நற்கதி சென்று சேரார்' என்று நூற்கள் புகல்கின்றமையின் 'மைதாழ் தடங்கண் மகவின் முகமன்னுபார்வை - யெய்தா தொழிவார்க்குப் பெறு மின்ப மெவனுமில்லை.' மக்கட்பேறுள்ளவர்களே இம்மையம்மை எனமறை புலங்கொளச்செப்பும் இருமையும் அடைதற்குரியர் என்பதை அம்முதுமக்கள் நன்குணர்ந்தவர்கள். ஆதலின், தமக்குற்றுள்ள வறுமையினாலாகுஞ் சிறுமையை யுன்னி மனந்தளராமல், அம்மக்களின் அருமையே யெண்ணிப் பெருமையாக வாழ்வாராயினர். இங்ஙனஞ் சின்னாள் செல்ல, அவ்விருமுதுமக்களுள் வெங்கடாசலசாஸ்திரியார், பத்துடையடியவர்க் கெளியவனாகிய பகவானது திருவடிக்கமலங்களைத் தமது உள்ளத்தடத்தமைத்துக் கொண்டு பொய்யாகிய இம்மெய்யை நீத்துச் சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமில் பேரின்பவீட்டை யடைந்தனர்.

இங்ஙனம் அவர் வீடுற்றமையின், இடிமேலிடியுற்று வாடிய சர்ப்பமென, மிடிமேன் மிடியுற்று வாடிய அவரது இல்லக்கிழத்தி என்செய்வாள்? பாவம்! பாவம்!!. 'இனி இம்மக்களைப்பேணுதல் எவ்வாறு? ஆ கெட்டேன்! என்செய்வேன்! தெய்வமே! யாரிடம் புகலடைவேன்? இனியாரே இம்மக்களுக்குத் துணையாகுவார்?' என்று கலங்கினாள். பிறகு 'வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை' எனவும், 'ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு' எனவும், பெரியார் பணித்த நீதிமொழிகளை யுன்னி, ஒருவாறு உள்ளந்தெளிந்து 'இனி இம்மைந்தர்களைக் காப்பாற்றுங்கடமை நமதே. இங்கிருந்து மனந்தளர்ந்து வருந்துவதனால் எட்டுணையும் பயனின்று'. என்றுட்கொண்டு, முன்னர் அவ்வறுமையினுந் தமது திறத்தினால் ஈட்டிவைத்த சொற்பப் பொருளைக்கைக்கொண்டு அந்நல்லிளம் பாலர் இருவரோடு திருவாரூரையடைந்தனள். இவர்கள் அவ்வருந்தண்கமலையை யடைதலும், வெண்கமலையும், செங்கமலையும் இவர்களையடைய விரும்பினர். அவ்வன்னை அவ்வூரையடைந்த பிறகு இவ்வாறு எண்ணுவாளாயினள். "கல்வியானது அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையு நாட்டும், உறுங்கவலொன்றுற்றுழியுங் கைகொடுக்கும். அன்றியும், அது வைப்புழிக்கோட்படாது, வாய்த்தீயிற் கேடுறாது, மிக்க சிறப்பின் அரசர்செறினும் வவ்வப்படாது, தாயத்தாராலுங் கொள்ளப்படாது, பிறர்க்கீயினுங்குறையாது. ஆதலால், அதனை நம்மக்களுக்கு நம்மாலியன்றவளவு சேர்த்து வைத்தல் வேண்டும்" எனத் துணிந்தனள். இங்ஙனந் தந்தை மகற் காற்றவேண்டிய கடமையைத் தானாற்றத்துணிந்த அம்மாதரசி தன்கையிலுள்ள சொற்பப் பொருளைக்கொண்டு ஔவையார் 'தந்தை யொடு கல்விபோம்' என்றுரைத்த வாக்கியம் பொய்ப் படும்படி அம்மைந்தர்கட்குக் கல்விபயிற்றுவிப்பாளாயினள். அவ்விருமைந்தர்களில் நம்முத்துசாமி ஐயரையே வெண்கமலை விரும்பினள். செங்கமலையும் அவரையடையவே விருப்புடையளாய் அவருழை அதர் வினாய்ச்செல்லக் கருத்துக் கொண்டனள். அதனால் நம்முத்துசாமி ஐயர் அச்சிறு வயதிலேயே உபாத்தியாயர் கற்பிப்பதை யொ

ருசிறிது முட்டின்றி யுள்ளத்திற் கொள்ளலுற்றனர். 'விளையும்
பயிர் முளையிலேயே தெரியும்' அன்றோ ? அவரது அன்னையும்
இயற்கையறிவாகிய ஒளியினைக் கொண்டிலகும் இம்முத்தே
இனிக் கல்வியினலாகுஞ் செயற்கையறிவையுங் கொண்டிலக
க்கூடியது என மனத்துட் கொண்டனள். அதனால், அவரிட
மே அவ்வம்மைக்கு அன்பு பெருகுவதாயிற்று. இயற்கையிலே
யே தாய்மாருக்குக் கடைசிமைந்தனிடம் அன்பு அதிகரித்திரு
த்தல் உலகியற்கை. அவ்விருமைந்தருந் தமிழ்க்கடலிற் படிந்து
சிறிது தூரம் ஓடியாடித் திளைக்கையிலேயே அவ்வம்மை கொ
ணர்ந்த சிறுபொருண் முற்றுஞ் செலவாயிற்று. அதற்குமேல்
அவர்களைப் படிப்பிக்க வியலாமன் மிகவுந் தயங்கினள். மற்
றென்செய்வாள் பாவம்? அந்தோ ! கொடியதிற் கொடிது
வறுமையன்றோ ? இளமையில் வறுமை அதனினு மிகக்கொடிய
தல்லவா ? அதைப்போலும் இன்னாதது அதுவேயாம். அவ்
விருமக்களும் அச்சிறு வயதிலேயே அத்தகைய வறுமைக்கிட
னாய் நின்றனர். அதனால், அம்மாதரசிக்கு அதுகாறும் உண்டா
யிருந்த களிப்பு முற்றுஞ் சிதைந் தொழிந்தது. தரித்திர
மானது 'களிப்பாங் கடலுக்கோர் வடவை' யல்லவா ? பிறகு
அவ்வம்மையின் மனம் இக்குமரர் விஷயத்தினும் பலவாறு
எண்ணி யெண்ணிப் புண்படலாயிற்று. எண்ணங்கள் யாவும்
வாழ்தற்கு இடமாயிருப்பதுந் தரித்திரமேயன்றோ? பற்பல
துக்கங்கள் தோன்றத்தக்கதோர் ஆகரமாயிருப்பதும் அதுவே
யாம். அவ்விளைஞர் இருவரும் என்செய்வார்கள் ? வயிறு பிழை
க்கும் வழியை நாடி வெளியே சென்றார்கள். 'சுவரைவைத்துக்
கொண்டன்றோ சித்திர மெழுதவேண்டும்' உடலைவைத்துக்
கொண்டன்றோ ஒருவன் எல்லா நலங்களையு மடையவேண்டும்;
அவ்வுடலும் வயிற்றுக்கு உணவிருந்தாலல்லவா நிற்கக் கூடி
யது ? வயிறு ஒருநாளுணவை ஒழித்திரு வென்றால் ஒழித்திரு
ப்பதா ? அன்றி இருநாளைக்கு ஒன்றாய் ஏற்றுக்கொள் என்றால்
ஏற்பதா? அதுமிக்க இடும்பையை விளைப்பதல்லவோ? அருமை
யாகக் கிடைக்கப்பெற்ற இம்மனிதயாக்கையைப் பலவகைப்
பாடுபட்டு வீணே கழியா நிற்கின்றனர்.

அவ்விளைஞர் இருவரில் சில 'தினங்கள் மூத்தவர் மெய்
வருந்திச் சம்பாதித்துக்கொண்டு வருவதைக்கொண்டு மூவரும்
வயிற்றுப்பாட்டைக் கழித்து வந்தனர். ஆயினும், முற்றும்
அப்படிச்செய்துவர முடியவில்லை. குடும்பமாகிய பெரியதோர்
தேரை நடத்துதன் மூத்தவயதும், முதிர்ந்த வனுபவமு முடை
யவர்களுக்கும் கஷ்டசாத்தியமான காரியமெனில், அவ்விளஞ்
சிறுவர் ஒருவரால் அது முடியுங் காரியமாமோ ? ஆதலால்,
நம் முத்துசாமி ஐயரும் அக்காரியத்தில் தமது சகோதரருக்
குத் துணையாகப் பாடுபடவேண்டியவராயினர். அவ்விளைஞர்
கள் இருவரும் ஒரு கிராமக் கணக்கனிடத்தில் உதவிக்கணக்கர்
களாக வமர்ந்தனர். அவர்களுள் நம் முத்துசாமிஐயர் மாத மொ
ன்றுக்கு ஜீவேதனமாக முதன் முதல் பெற்றது ஒரே ஒரு
ரூபாய்தான். ஒன்றேயன்றோ சகல எண்களுக்கு முதலா
யுள்ளது? உலகம் யாவையுந் தாமுளவாக்கலும் நிலைபெறுத்
தலும் நீக்கலும் நீங்கலா வலகிலா விளையாட்டினை யுடையரா
கிய கடவுளும் ஒருவரேயல்லரோ ? அவ்வொரு ரூபாயே நமது
ஐயர் தமது தாயாரைப் போஷிக்கவும், பிறகு தாம் தமது வல்
லமையினால் உயர் நிலையை யடைந்து இவ்வுலகினர்க்கு நீதி
மொழிந்து நிலையான குற்றமற்ற பெரும் புகழைத் தேடிக்கொ
ள்ளுதற்குங் காரணமாயிற்று. ஐயரவர்கள் அவ்வொரு ரூபாயை
மிக்க மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டுவந்து தமதருமையன்னை
யிடம் கொடுத்தனர். அவ்வம்மையும் தனது அருமைமைந்தன்
கொணர்ந்த அவ்வொற்றை வெள்ளியைப் பெற்றுக்கொண்டு
பகவானை யுன்னி யுன்னி 'ஒன்றே பத்து, அதுவே நூறு,
அஃதே ஆயிரம். அதுவே ஐயாயிரமும் ஆம்; இவ்வொன்றைக்
கொண்டே நம்முத்து மேன் மேலும் பெருகுதல் வேண்டும்.
இதுவே நமது பாக்கியம்.' என்றெண்ணி மகிழ்ந்தனள். 'மா
தா மனமகிழ்ந்தால் வாழா ரொருவ ருளரோ?' இவ்வாறு தாம்
மாதந்தோறுங் கொண்டுவந்து கொடுக்கும் ஒரு ரூபாயை தன்
திருக்கரத்தேற்றுக் களிகூரும் தமது அன்னையைக்கண்டு தா
மும் சந்தோஷ சாகரத்துண் மூழ்கி ஒளிகொண்டு தோன்றுவர்.
நமது ஐயர் இவ்விதச் சந்தோஷத்தை விரைவி னிழந்துவிட்
டனர். " தந்தையொடு கல்விபோம் " என்றருளிச்செய்த அக்
கிழவியே அவ்வாக்கியம் பொய்படும்படி கல்விச்சுவையைத்தன்
மக்களுக்கு ஊட்டிவைத்த இக்கிழவியை வீட்டினளோ? அன்றி
இக்கிழவியே தன்னைப்போன்ற பெண்ணுவனொருத்தி முன்
சொல்லி வைத்த வாக்கியங்களுளொன்றைத் தன் மக்களின்
பொருட்டுத் தான் பொய்ப்படுத்திய குற்றந்தீர அவ்வாக்கியங்
களுண் மற்றொன்றை மெய்ப்படுத்துவான் மரித்தனளோ ?
என அனைவரும் ஐயுறும்படி அவரது அன்னை பரகதி யடைந்
தனள். அவ்வம்மை தன் மரணத்தினால் மெய்ப்படுத்திய வாக்
கிய மியாதோ வெனின், 'தாயொ டறுசுவைபோம்' என்பதே:
நமது ஐயருக்குத்தமதுதாய் மரணத்தினு லறுசுவை போய்
விட்டதாயினும் அவளாலூட்டி வைக்கப்பட்ட கல்விச்சுவை
மாத்திரம் நீங்காமலுளுக்குநா ளோங்கி வளர்வதாயிற்று. திரி
சிரபுரத்தில் தாயுமான சுவாமி யுண்டென்பர். நமது ஐயருக்குத்
தாயே தந்தையுமான சுவாமியாகி யிருந்தனள். அவளே அறு
சுவையுள்ள உணவுகளையூட்டி அவரதுடலை வளர்த்தவள்.
அவளே, கல்வியறிவையூட்டி யறிவையும் வளர்த்தவள். அவ
ரது ஆக்கத்திற்குக் காரணமானவளும் அவளே. அத்தகைய
இவர் அச்சிறு வயதிலேயே இழந்து விட்டது கொடுமையுட்
கொடுமையே. அந்தோ ! அஃது எவ்வளவு பரிதாபமா
னதில்லை. உலகில் ஒருவனுக்கு அதைப் போலத் துன்பத்
தை விளைக்கக்கூடியது மற்றொன்றுண்டோ ? நமதையர் இயற்
கையிலேயே எளியகுடும்பத்திற் பிறந்தவர். பிறகு தந்தையின்
மரணம் தலைகொண்ட துன்பத்தைத் தந்தது. இத்தத்துன்பங்
கண் முற்றும் தனது நுண்ணறிவினாற் றன்மக்களுக்குத் தோன்
றாவண்ணம் பேணிவளர்த்துக் கல்விச்சுவையையும் ஊட்டிவை
த்த தாயையும் அச்சிறுவயதிலேயே இழந்துவிட்டனரெனின்,
அவருக்கு அக்காலத்தில் உற்றதுன்பத்தை யாரே அளவிட்டு
ரைக்க வல்லார்? ஒன்றன்மேலொன்று யடுக்கியுற்ற அவ்விடு
க்கணிலும், தமக்குற்ற அவ்விடுக்கண் ணிடுக்கட்படும்படி
தமதுள்ளக் கோட்பாட்டை விடாதவராய் உத்தியோகத்
தையுங் கல்வியையு மேன்மேலும் விருத்திசெய்வதிலேயே
நோக்கத்தைச் செலுத்திவந்தனர். இவ்வாறாக அவர் 1846 -௵
வரையில் அவ்வுதவிக்கணக்கு வேலையைப் பார்த்துவந்தனர்.
அப்பொழுதவர்க்கு வயது பதினைன்காயின. அவர் அவ்வுத்தி
யோகத்தி லமர்ந்தபோது வயது பன்னிரண்டாம். இனத்தை
யினங்காக்கு மென்பதுபோல் அக்காலத்தில் நம்முத்துசாமிக்கு
மற்றோர் முத்துசாமியே பெயரொற்றுமையினால் துணையாகவா
ய்த்தனர். அவர்யாரெனில், அக்காலத்தில் கலெக்டராயிருந்த
ஸர் - ஹென்றி மாண்ட் கோமரி என்னும் துரையினிடம் பொ
ட்லராயிருந்து அவரது தயவுக்குரியவராகி அவரால் தாசில்தா
ருத்தியோகஞ் சம்பாதித்துக்கொண்டு யாவராலும் பொட்லர்
முத்துசாமிநாயகரெனவும், தாசில்தார் முத்துசாமிநாயகரென
வும் சொல்லப்பெற்றிருந்த திருவாரூர்தாசில்தார் முத்துசாமி
நாயகரென்பவரே: அவர் நமதையரது மதிநுட்பத்தைக் கண்டு
அவரைத் தம்மிடத்திலேயே ஒருசிறு உத்தியோகத்திலமர்த்தி
க்கொண்டனர். ஐயரவர்கள் அதிலிருந்துகொண்டு இரண்டு
விஷயங்களிற் காட்டியமதிநுட்பமானது அந்நாயகரது உள்ள
த்தை முற்றுங்கவர்ந்துகொண்டு அந்நாயகருக்கு ஐயர்மீதுள்ள
அன்பை முன்னிலும் பதின்மடங்கதிகமாக வளர்த்துவிட்டது.
அவற்றுள் முதலாவது :—அவ்வூரையடுத்துள்ள நதியொன்
றில் வெள்ளமதிகமாய்ப்பெருகிப் பயிர்வகைகளுக்கு மிக்க சேத
த்தைவிளைத்ததாகத் தாசில்தாருக்கு ஓரறிக்கைவந்தது. அதை
க்கண்டு தாசில்தார் அதன்சம்பந்தமான சிலவிஷயங்களை அறிய
வேண்டிக்கச்சேரிக்குச்சென்று குமஸ்தாவை அழைத்துவரும்
படி சேவகனொருவனுக்குக் கட்டளையிட்டனர். அவன் கச்சே
ரிக்குச்சென்று பார்க்கையில் அங்கு நமதையரையன்றி மற்றொ
ருவரையுங் கண்டிலன், ஆதலின், அவன் அவரிடமே தாசில்தா
ரின் கட்டளையைத் தெரிவித்தனன். அவர் அதைக்கேட்டு மிக்க

தைரியத்துடன் தாசில்தார் சமுகத்தையடைந்தனர்; தாசில்
தார் அவரைக்கண்டு தமக்கு வந்த அறிக்கையை அவர்கையிற்
றந்து "இதன்சம்பந்தமாக ஏதேனுமறிவையோ ?" என்று வின
வினர். அதற்கு ஐயர் "விரைவிற்றெரிந்துகொண்டு வந்து கூறு
கின்றேன் " என்றுரைத்து விடைகொண்டு ஆற்றுப்பெருக்கி
னாற் சேதமடைந்த இடத்தையணுகி யதனையளந்து அதன்மரா
மத்துக்கு வேண்டிய சாமான்கள் மலிவாகவும் நயமாகவும் இன்
னவிடத்தில் கிடைக்குமென்பதையும் தெரிந்துகொண்டுவந்து
கூறி, பிறகு அவற்றையெல்லாம் ஓரோலையிலெழுதி அதையும்
தாசில்தாரிடங்கொடுத்தனர். தாசில்தார் அவ்விஷயங்கள் சரி
யாயிருக்குமென அப்பொழுதுநம்பிலர். ஆயினும் பிறகு பெரி
ய கணக்குப்பிள்ளையைக்கண்டு ஒப்பிடுவித்து அக்கணக்குப்பிள்
ளையால் ஐயர் தெரிவித்தனயாவும் சரியாயிருந்தலையறிந்து
அவரது அறிவினாற்றலை மிகவும் வியந்து புகழ்ந்தனர்.

இரண்டாவது:—ஒரு பெரிய மிராசுதாரர் தீர்வைபாக்கி
யை அறிய ஒருதினம் தாசில்தாரிடம் வந்தனர். தாசில்தார் அ
தைப்பற்றி நமதையரைக்கேட்க ; அவர் ஒருசிறிதுந் தளராமற்
கற்றைப் பனையோலைக்கட்டொன்றைக் கையிலேந்திக் கயிற்
றையவிழ்த்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இன்னவின்ன பச
லிக்கு இத்தனையித்தனை பாக்கியென அம்மிராசுதாரரது தூர
தூரமாயுள்ள இருபதுநிலங்களுக்குஞ் சரிவரக்கூறினர். மிரா
சுதாரரும் அவையாவுஞ் சரியெனவொப்பினர். உடனே தாசில்
தார் ஐயரதுகையிலிருந்த ஓலைக்கட்டை வாங்கிப்பார்த்து அது
வெறுங்கட்டாயிருக்கக்கண்டு அவ்வளவுவிஷயங்களையும் அவ்வி
ளைஞர் ஞாபகத்தில் வைத்திருந்தே சொல்லினர் என்பதை
யுணர்ந்து, அவரது ஞாபகசக்திக்காக அவரைப் பலமுறையுங்
கொண்டாடி "இவ்வரும்பெறன் முத்து இனி நம்மால்துறக்க
த்தகுவதோ?" என்றார். அத்தாசில்தார் நமது சரிதத்தலைவரைச்
சலஞ்சலம்பெற்றமுத்தினும் அரியமுத்தெனவே பாவித்து அன்
றமுதல் முத்தென்றே அழைப்பாராயினர். அஃது ஐயருக்குத்
தமதன்னையின் மொழியோவின்புறுத்துவதாயிற்று. அன்று மு
தல் தாசில்தார் அவரைத்தமது கச்சேரியிற் றமதருகே அமர்த்தி
க்கொண்டனர். அம்முத்துக்குப் போதுமானவேலை கச்சேரியினு
மில்லை. அதினுங் காலை பதினொருமணிமுதல் இரண்டுமணிவ
ரையில் தினைத்துணை வேலையு மிருப்பதில்லை. ஆதலால், அவ
ரது சித்தம் பரவிக்கொண்டேயிருந்தது. அவர் நாடோறும்
மேற்குறித்த ஓய்வுகாலங்களிற் கச்சேரிக்குச் சமீபத்தில் வை
க்கப்பட்டுள்ள சொக்க வுபாத்தியாயரது பாடசாலைக்குப்போ
ய்ச் சேய்மையிலுட்கார்ந்திருந்து அக்கணக்காயர் பிள்ளைகளுக்
குப் போதிப்பதையெல்லாஞ் செவியே வாயாகவு நெஞ்சேகள
னாகவு முட்கொண்டுவப்பர். இவ்வாறு இங்கிலீஷ் நெடுங்கண
க்கை முற்றுமனனஞ்செய்தனர். பிறகு அவருக்கு அவ்வாங்கி
லமொழியைக் கற்கவேண்டுமென அதிகவிருப்புண்டாயிற்று.
அவ்விளைஞர் நல்குரவென்னும் விடும்பைக்குட்பட்டவராயினும்
அவர் தளராதவூக்கமுடையவராதலானும் அதனுடன் அவரு
க்கு அம்மொழியைக் கற்பதற்கான ஆழுண்மையானும்,
அதனைக் கற்பதற்கு வேண்டிய அநுகூலங்களும் அவர் விரு
ம்பியபடி வாய்ப்பனவாயின. எங்ஙனமெனில், தாசில்தார்நா
யகருக்கு மருமகனொருவனிருந்தனன். அவனுக்குக் கல்வியறி
வையூட்டவேண்டுமென்னுமவா அவருக்கதிகமாயிருந்தது. ஆத
லால் அவர் அவனுடன் நமதையரையுங்கூட்டி இருவருக்கும்
இங்கிலீஷ் முதற்பாடந்துவக்கித் தமக்குற்ற ஓய்வுநேரங்களி
லெல்லாம் போதித்துவந்தனர். ஒருகால் அவர் அவர்கள்படி
ப்பைப் பரீக்ஷிக்கவிரும்பி அவ்விளைஞரிருவரையுநோக்கி "நா
னின்னு மொருவாரத்தி லுங்களைப் பரீக்ஷிக்கவெண்ணியிருக்கி
றேன். அதற்குள்ளாக நீங்களுங்கள் பாடத்தைச் சித்தப்படுத்தி
வையுங்கள் " என்றுநியமித்தனர். பிறகு அவ்வாறே அவர் அவ்
விருவரையு மழைத்துப் பரீக்ஷித்துத் தமதருமைமருகன் சில
தாள்களைமாத்திரம் படித்திருப்பதையும் ஏழைப்பார்ப்பனப்பி
ள்ளையாகிய முத்துசாமிஐயர் புத்தகமுழுதினையும் படித்திருத்
தலையும் கண்டு தன்மருமகனிடத்து வெறுப்பும் நமதையரிட
த்து விருப்புமுடையவராயினர். அப்பரீக்ஷையினால் ஐயரை
நன்றாய் விருத்தியடையக்கூடிய சிறுவரெனத் தாசில்தார் உண
ர்ந்துகொண்டவராய் உடனே அவரை நாகப்பட்டணத்திற்கு
அங்குள்ள மிஷ்யோன் பாடசாலையிற் படிக்கும்படி யனுப்பி
னர். நமதையர் "இவனைப்பெற்ற வயிறுடையாண் முற்பிறப்
பில் எவ்வகைச் சிறந்த தவத்தைச்செய்தனளோ? " என்று
அனைவரும் வியந்துரைக்கும்படி பதினெட்டுமாதகாலம் அப்பா
டசாலையிற் படித்தனர். பின்பு தாசில்தார் அவரைச் சென்னை
ஹைஸ்கூலுக்கு அனுப்பினர். இங்ஙனம் அவர் செய்தற்குக்
காரணம் யாதோவெனின், நமதையரிடமமைந்துவிளங்கிய சா
ன்றோர் திறனுடைய ரென்னுந் தேசேயாம். இத்திறன் நம
தையரிடமமைந்திருத்தலைத் தாசில்தார் நன்கறிந்து கொண்ட
வராகையால் அதனை விருத்திசெய்விப்பின் அது பலருக்கும்
பயன்படுவ தாகுமெனக்கருதி அதில் மிகவுந் தமது ஊக்கத்
தைச் செலுத்துவாராயினர். இங்ஙனம் அவ்வருமை முத்தினி
டம் பேரன்புபூண்டு அவருக்கு அபிமானபிதாவாகிய தாசில்
தார் அவரைச் சென்னைக்கு அனுப்பும்போது அவரிடம் இரா
சா ஸர் -K. C. S. I. மாதவராயருக்கு ஒரு கின்னாக்குத்தந்த
னுப்பினர். நமதையர் அதனை அதிக மரியாதையுடன் பெற்று
க்கொண்டுசென்று அவ்விராயர் அவர்களிடங்கொடுத்து அவர்
மூலமாக மேற்கண்ட சர்வகலாசாலையைச்சேர்ந்து, கற்றோர்யா
வரும் புகழும்படி யமைந்து தமதுபாடங்களைப் போற்றுவாரா
யினர்.

முற்கூறப்பட்ட ஸர்-ஹென்றிமாண்ட் கோமரிதுரைக்குத்
தஞ்சாவூர் ஜில்லாவின்மீது அபிமானமதிகம் ; அதினும் அச்
சில்லாவிலிருந்து சென்னையில்வந்து படிக்குமாணவரிடங்காட்
டும் பிரியமதிகம். அதினும் பதின்மடங்கதிகமான அன்பை
முன்தமதபிமானத்திற் குரிய பொட்லராயிருந்த தாசில்தார்
முத்துசாமிநாயகரால் அனுப்பப்பட்ட முத்துசாமிஐயரிடம்
வைத்திருந்தனர். இதுவும் நமது ஐயரது விருத்திக்கு ஓர்கா
ரணமாயிற்று. கூடுங்காலத்தில் யாவுமொருங்குகூடுவது உல
கத்தியற்கையன்றோ ? துரையவர்கள் நமதையரின்மீதே மிக்க
நோக்கமுடையவராயினர். ஐயரும் மடியா வூக்கத்துடனும்
தமதூக்கத்திற்குதவியாக இடையூறின்றியேற்பட்ட அநுகூலங்
களினாற் றூண்டப்பட்ட வுற்சாகத்துடனும் பலகலைகளையும்
பயின்றுதேர்ந்தனர். ஐயர், இலக்கணத்தினும் கணிதத்தினு மிக
வுஞ்சமர்த்தர். ஏனை கலைகளினும்வல்லவர். அவர்தாம்கற்றகலை
களை மறப்பெனுங் கள்வனுக்குப்பறிகொடுப்பவர் அல்லர். அவர்
மிக்கநற்குணசீலர். நல்லொழுக்கமே தமக்கு அணியெனப்பூண்
டவர். தமதபிமானபிதாவாகிய தாசில்தார் தமக்குக்காலத்திற்
செய்த அவ்வுத்தமோத்தமயான வுதவியை என்றுமறவாதவுள்
ளத்தினர். தாசில்தார் நமதையருக்குச் செய்த வுதவியானது
கன்மேலெழுத்துப்போ லென்றுமழியாமல் விளங்குவதாயிற்று.
"நல்லாரொருவருக்குச் செய்தவுபகாரம் கன்மேலெழுத்துப்
போற்காணும்" என்ற ஆய்மொழி மாய்மொழியாமோ ? அத
னால் அவரதுபுகழும் ஐயரதுகல்வியறிவும் முற்பிறையெனப்
பொற்புடன்வளர்ந்து விளங்குவனவாயின. நமதையர் "ஆயி
ரத்தொன்றாம் புலவர்." தாசில்தாரும் "கோடிக்கொருவராந்
தாதா." இட்டவெல்லாம்பயிராமா ?" "பெற்றவெல்லாம்பிள்
ளைகளாமா ?" நமதையரைப்போன்ற யானைக்கன்று ஒன்றே
யாயினுமமையும். அல்லாத சூகரக்குருளைகள்பலவற்றாற்பய
னென் ? "பாத்திரமறிந்துபிச்சையிடு" என்றபழமொழியை
நன்குணர்ந்தவர் அத்தாசில்தாரே: அதற்குத்தக்க பாத்திரமான
வரும் நமதையரே: நமதையர் இங்ஙனம் ஒப்புரவொழுகி மூத்
தோர்சொல்வார்த்தையமுதெனக்கொண்டு, யாவர்க்கும்நல்லவ
ராயிருந்து பலரும் புகழும்படி கணக்கிலடங்காத வெகுமதிகளை
வாரிவாரிக்கட்டிக்கொண்டு, வருடந்தோறும் (ஸ்காலர்ஷிப்பு)
மாணவர்க்குரிய உபகாரச்சம்பளமும்பெற்று, ஒருவகுப்பிலாயி
னும் தவறி இரண்டுவருடங்கணிற்றலின்றிப் பிரதிவருடமும்
உயர்ந்த வகுப்புகளுக்குத் தாவித்தாவிச்சென்று, அவற்றின் சி
ரோபூஷணமாய் விளங்கிவந்தனர். இது கருவிற் றிருவுடைமை

யைக்காட்டுகின்றதன்றோ? அவரதுதீவிரபுத்தியைக்கண்டுணர்ந்தவராகிய அப்பாடசாலையின் றலைமை உபாத்தியாயர்-மிஸ்டர்—பவ்வல்துரை "முத்துசாமி அபாரவல்லமையுடையவன்" எனப்பன்முறையும்படிப்போர்முன் கூறுவாராயினர். அம்மட்டோ? அவ்விளஞ்சிடரைச் சிறிதுநேரமும் விட்டுப்பிரிந்திருக்க மனமில்லாதவராய் இரவிலு மவரை நெடுநேரம் தம்முடனிருத்திக்கொண்டு மிக்க நேயத்தோடு சரசமாய்ப் பேசிக்கொண்டிருப்பர். சிலசமயங்களில் அத்துரையவர்கள் அவ்வுத்தமமாணவருடன் இரவு பத்துமணிவரையிலும் பேசிக்கொண்டிருந்து பிறகு அம்மாணவரைத் தமது வண்டியிலேற்றிக்கொண்டு சென்று மயிலாப்பூரின் அம்மாணவர் தங்கியுள்ள இல்லத்தின்கண் விட்டுவிட்டுத் தமது இல்லிற்குத் திரும்புவர். இங்ஙனம் நமதையர் தமது போதகாசிரியருடன் கூடிப்போக்கும் நேரத்தையும் பாடசாலைக்குப் போகும் காலத்தையுந்தவிர்த்த மற்றைய வேலைகளிற் றமதபிமான பிதாவாகிய தாசில்தாருக்கு இனிய நண்பராகிய மாதவராயரது மனைக்கட்சென்று அவருடன்கூடிச் சம்பாஷிப்பதும் படிப்பது மெழுதுவதுமாயிருப்பர். இங்ஙனம் ஐயரவர்கள் அவருடன் கூடிச்செய்வன பயனற்றனவாயிரா. ஒவ்வொன்றும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுவனவாகவேயிருக்கும். இப்பொழுது திவானாகவிருக்கும் இரகுநாதராவும் அவர்களுடன்கூடுவர். அத்தகையோர் கூடியிருக்குங் காட்சியைக் காண்பதே கண்செய்தபாக்கியமாம். அவர்கள் பேசுவதைக்கேட்பதே செவிபுரிந்த தவமாம். அவர்கள் கூடிப்பொறிப்பதைப் படிக்கின் நாவிற்குச் சுவையூறும். இங்ஙனம் நமதையரிடம் "நல்லவெளிப்படுத்துத் தீயமறந்தொழிந்து" அருள்வட்டமாக வறிவுகதிராய்ப் பொருள்வட்டமெல்லாம்விளக்கி இருள்வட்ட மாற்றுமறிவான ஞானவனரொளி வந்துவிட்டமையால், அவர் தமது குருவுக்குக் குருமணியாயும் தமது நண்பருக்கெல்லாம் நன்மணியாயும் தமது அபிமானபிதாவுக்கு அரும்பெறன்மணியாயும் மற்றெல்லோருக்கும் எண்மணியாயும் விளங்கினர். அவர் கல்விபயிலுதற்கென வேற்படுத்திக்கொண்ட இடங்கள் இன்னுமிரண்டுள; அவற்றை அறிவார்க்கு அக்காலத்தில் அவ்விளமாணவருக்கு உற்றிருந்த நிலைமையின் மிக்க பரிதாபமும் அம்மிடியினும் வடியாதிருந்த அவரதுமனவுறுதியில் அதிகவியப்புந் தோன்றும்.

அவ்விடங்களில் ஒன்றாவது:-வீதியிற் காற்றுக்கும் மழைக்கும் அசையாமல் நாட்டப்பட்டுள்ள தீபஸ்தம்பமே. இரவிற் குருமனையிலிருந்து வந்தபின்பு அக்கம்பவிளக்கங்களை யணுகிநின்று இதுவேயின்பமென வாசிப்பர். அவர் செயற்கரிய செய்யும் பெரியர். இவ்விஷயத்தில் அவரையொத்தவர் அவரே. கடலுக்குவமை கடலேயன்றோ?

அவர்தாம் தொடங்கிய காரியத்திற் றமக்குண்டாகும் மெய்வருத்த முதலியவற்றைக் கவனியாது அக்காரியத்தைச் சாதிப்பதிலேயே மனமுடையவராயிருப்பார். இரண்டாவது:— அவர் தங்கியுள்ள மயிலாப்பூரில் இருக்கும் திருக்கோயிலினுள்ள ஒதுக்கிடமே. இவ்வொதுக்கிடங்களைப் பகற்பொழுதிற் றனித்திருந்து படிப்பதற்கான இடமாக வைத்துக்கொண்டனர். அவ்வாலயத்தினுள்விளங்கும் விருக்ஷங்களினிழலிலிருந்து கருந்தாமரையையொத்த கருணைநிறைந்துததும்பும் கண்ணிணைகளையுடைய சகலகலாவல்லியின் றிருவடியாகிய செந்தாமரை மலருக்குத் தமதுமனமாகிய மதுவை உறைவிடமாக்கி, அத்தேவியைநாடி, "அடிவேதநாறுஞ் சிறப்பார்ந்தவேத மனைத்தினுக்குமுடிவே! தவமுனிமின்னே! முடியாயிரத்தின்வடிவே! மகிழ்ந்துபணிவார்தமது மயலிரவின்விடிவே! அறிந்தெனையாள்வார் தலந்தனில்வேறிலை; அடியேன் உன்னையே நம்பினேன். பூதலத்தில் வைக்கும்பொருளும் மற்றெப்பொருளும் பொய்க்கும்பொருளன்றி நீடும்பொருளல்ல; நீ தரும் கலைப்பொருளே மெய்க்கும்பொருளும் அழியாப்பொருளும் விழுப்பொருளும் உய்க்கும்பொருளுமாகும் எனவுணர்ந்து, அடியேன் அக்கலைப்பொருளையே விரும்பி நின்னைச்சரணென வடைந்தனென்; பாதாம்புயத்திற் பணிவார்தமக்குப் பல்கலையும் வேதாந்தமுத்தியுந் தந்தருள்பாரதியே! அடியேற்கு அதனைத்தந்தருள்க" என்று துதிப்பர். அவர் சகலகலாவல்லியின் றொண்டு புரிவதிலேயே தமது பொழுதையெல்லாம் போக்குவர். அத்தேவியும் தொண்டர்தந்நாவினு நெஞ்சினு நின்று அவர் வேண்டியனயாவுந்தந்து காப்பவளாதலின் நமது ஐயரவர்களைச் சென்னை ஹைஸ்கூலாரால் அக்காலத்திற் கொடுக்கப்படாநின்ற புரவின்ஷியல் முதல்வகுப்புச் சர்டிபிகேட்டுக்கு உரியராக்கினள். இதுவன்றோ தெய்வபலம்?

"துதிமேவு புத்தியது சேரிலெவருக்குமே தோன்றவரு தெய்வமுண்டாம்" என்று பெரியோர்கள் கூறியவாக்கியம் பொய்படுவதாமோ? அவருக்கு அந்த யோக்கியதாபத்திரத்துடன் ஒருகணையாழியுங் கொடுக்கப்பட்டது. இது, சிறியதிருவடியாற் கணையாழிபெற்ற வைதேகியின் களிப்புக்குச் சமமான களிப்பை அவருக்குண்டாக்கிற்று. அவற்றுடன் அவர் ஒரு மோளிப்புத்தகங்களையும் வெகுமதியாகப்பெற்றுக் கட்டிச் சுமந்துகொண்டு வீட்டுக்குச்சென்றனர். இதுநிற்க; 1850 ௵த்தில் வித்யாவாலோசனைச்சபையார் "இங்கிலீஷ் ஜனங்களின் துன்மார்க்கமும் அது நிவர்த்தியாவதற் கேற்றமார்க்கமும்" என்னும் விஷயத்தைக்குறித்து ஓர்சிறந்த வியாசம் எழுதுகின்றவர்களுக்கு ரூபா 500 - பரிசளிப்பதெனத் தீர்மானித்தனர். இச்செய்தியை அறிந்த நமதையர் அதிக சாமர்த்தியமாக ஒரு வியாசமெழுதிமுடித்து அச்சபையார்கட்கு அனுப்பினர். அவ்வியாசத்தை அச்சபையார் சிறிதும்விடாமன் முற்றும் நன்றாய்க் கவனித்தார்கள். அச்சபையார்களில் ஒருவரேனும் அதில் வித்தியாசமான அபிப்பிராயங்கொள்ளாமல் இதுவேதக்கது; இஃதே ஏற்றது; இதுவே நன்று; இதுபோல்வதின்று, என வொப்பினார்கள். ஆதலின் அந்தவெகுமதி ரூபா ஐந்நூறுக்கும் நமதையரே உரியவராயினர். சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம்-ஹால்லோவே துரையவர்கள் "மிஸ்டர்முத்துசாமிஐயர் எங்காட்டினர்? அவர் மிகவுஞ்சிறந்த பெருமையினை யடைதற்குரிய நுண்ணறிவாளர்களில் ஒருவராயிருக்கின்றனர்" எனக் கூறிப்புகழ்ந்தனர். பிறகு அத்துரையவர்களும், டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் - ஸர்- அலக்ஸாந்தர் அர்பத்நட்டு துரையவர்களும் நமதையருடைய வித்யாபிவிர்த்தியைச் சதாகவனித்துவருவாராயினர். நமதையருக்குப் பரிசளிக்கப்படும்போதே "முத்துசாமிஐயர் ஸர்க்கார் உத்தியோகமனைத்திற்கும் உரியவர்." என்பது கெஜட்டிற் பிரசுரிக்கப்பட்டது.

பரிசாய்க்கிடைத்தபொருளை நமதையரது கரத்திற் கொடுக்கும்போது அவரது போதகாசிரியராகிய பவ்வல்துரையவர்கள் "இதுவேயுன்னுடைய சகல ஐசுவரியங்களுக்கும் வித்து என்று நான் நம்புகின்றேன்" என்று கூறி அன்புடன் ஆசிர்வதித்து அளித்தனர். அவ்வாறே அதுவே நமதையரவர்கட்கு உலவாக்கிழியாயிற்று. அவர் தமதந்தியகாலவரையினும் அதிலிருந்து ஒருபைசாவையும் எடுத்துச் செலவிட்டிலர். அதனை ஒரு பேழையிற் சேமித்துவைத்தனர். அதன்மீது தமதுகரகமலங்களைச்சேர்க்காமற் றமது மனத்திலும் அப்பேழையினும் என்றும் பொருள் குறைவுபடாமல் இருத்தல்வேண்டுமென மலராசனிகளிருவரையும் தமது மனவாசனத்திலமர்த்தி வாழ்த்திவந்தனர். பின்பு மிஸ்டர் பவ்வல்துரையவர்கள் நோன்பெருங்கலைகளின் மாண்பமையறிவும், காசறுசிந்தையும் தேசுறுபுகழும், நாடோறுமோங்கிவளரப்பெற்ற நமதையரவர்களைச் சீர்மையிற்சென்று வாசித்துச் சிவில்சர்விஸ் பரீக்ஷையிற் றேறும்படித் தூண்டினர். அக்காலத்து நமது இந்துதேசத்துப் பிள்ளைகள் கடல்கடந்துசென்று வேற்றுத்தேயத்தையணுகி அங்குச் சிலகாலந்தங்கியிருந்து ஓதிவருதற்குரிய மனத்திடங்கொண்டவர்களல்லர். அதினும் பார்ப்பனச்சிறுவர்கள் "புலத்திற்சிறந்த புரிநூன்முதல்வர்க்குக் கலத்திற் சேறல் கடனன்று" என்னுங் கொள்கையினமைந்தவர்களாதலின் அக்காரியத்துக்குட்படுவது அருமையினுமருமையே. அன்றியும் ஐயரவர்கள் இளமையிலேயே விவாகஞ் செய்விக்கப்பெற்றவர். ஆதலின் அவர் அதற்கொருப்படாரென்பதை அத்துரையவர்கள் தாமே யோசி

த்துணர்ந்து அவரைத் தமது கல்லூரியிற் றம்மோடு உதவிபோதகாசிரியராக விருக்கும்படி நியமித்தனர். ஐயரவர்கள் தமதாசிரியரது நியமனப்படியே சிலகாலமிருந்தபின்னர் அதினின்று நீங்கித் தஞ்சாவூர்க்கலெக்டர் ஆபீசு ரிகார்டுகீபராயினர். அதன்பிறகு டைரக்டர்ஸ் அலெக்ஜாண்டர் துரையவர்கள் 1856௵த்தில் அவரை நூற்றைம்பது ரூபாச்சம்பளமுள்ள ஸ்கூல்டிப்டி இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்த்தினர். நமதையர் அவ்வேலையைப் பார்த்தபோது அவர்பெற்ற பெரும்புகழை மற்றியாவர் பெற்றனர்? அதேவருடத்தில் வக்கீல் பரீக்ஷையும் ஏற்பட்டது. அப்பரீக்ஷை சென்னைமுதலிய இடங்களிலேயேயன்றிக் கும்பகோணத்திலும் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜி மிஸ்டர் பிச்சான் துரையவர்கள் கண்ணோட்டத்தின்கீழ் நடைபெற்றது. அப்பரீக்ஷைக்கு அநேகர் போயினர். அவருள் வெற்றிபெற்றவர் மூவரே: அம்மூவருள் முதன்மைபெற்றவர் நமதையரவர்களே: இரண்டாவதாகத்தேர்ந்தவர் இப்பொழுது திவானாயுள்ள இரகுநாதராவ் அவர்கள். பொன் எப்படிச்செய்யப்படினும் தானே மற்றைய லோகங்களெல்லாவற்றினும் சிறந்துவிளங்குவதுபோல நமதையரவர்கள் தாஞ் செய்யத்தொடங்கிய எல்லாக்காரியங்களினும் தாமே முதன்மையுற்று விளங்கினர். மேற்குறித்த ஜட்ஜி துரையவர்கள் அவரது பேராற்றலைப்பற்றி மிகவும் வியந்துகூறி, அவரைத் தூத்துக்குடியில் தாலூக்கா முன்சிப்புவேலையில் அமர்த்தினர். வித்யாவிலாசாவிலிருந்த நமதையருக்கு முன்சிப்புவேலை கொடுக்கப் பெற்றதென்றால் அவரது திறமை எத்தகையதாயிருந்திருத்தல் வேண்டும். அவரைப் பெற்றவர்களன்றோ பெரும் புண்ணியர்? அவர் தாம் பிறந்த குடியைப் பெருங்குடியாக்கினர். சொல்லானது தன்னாற்றலால் தன்னையும் விளக்கித் தனதகத்துப் பொருளையும் விளக்குதல்போன்று அவர் தமது அறிவினாற்றலாற் றம்மையும் விளக்கித் தமது குடியையும் விளக்கிவைத்தனர். நமதையரவர்கள் அவ்வேலையிலமர்ந்த பிறகு மேற்கண்ட ஜட்ஜி துரையவர்கள் அவரது பேராற்றலை முற்றும் நன்குணர்ந்தவராயினர். எவ்வாறெனின், அக்காலத்தில் ஜட்ஜிகள் முன்சிப்பு கோர்ட்டுகளைப் பரிசோதிக்கப் போவார்களாயின் முன்சிப்புகள் இடியோசைக்கேட்ட பைந்நாகம்போலஞ்சிநடுங்குவார்கள்; அவர்கள் வயிற்றிற் றீப்பற்றியெரியும்; தேகமுழுவதும் வெயர்வை மீக்கொண்டொழுகும்; அவயவங்கள் யாவுஞ் சோர்ந்தயரும்; எழுதக்கையுமெழாது; பேச நாவுமெழாது; எழுத்துஞ் சொல்லும் அவர்களைவிட்டுச் சேய்மையினீங்கி நின்று நகையாடும்; அவர்கள் ஒன்றையெடுக்க வெண்ணி மற்றொன்றையெடுப்பார்கள். அக்காலத்திலவர்கட்குண்டாகும் நடுக்கம் தொண்ணூறுஞ் சென்ற கிழவர்களுக்கும் வேண்டியவளவு ஐயமிடக்கூடியதாயிருக்கும். தமது கோர்ட்டுக்கு வருகின்ற ஜட்ஜிதுரையவர்களின் பொட்ளர்களாகிய தெய்வங்கட்குப் பிரார்த்தனை செய்துகொண்டு காணிக்கையுடனே பாத பூஜைசெய்வார்கள். அத்தெய்வங்கள் அப்பூசையை ஏற்றுக்கொண்டு நல்வரமளித்த பின்னரே அவர்களைக்கொண்டு ஜட்ஜிதுரையவர்களைப் பார்ப்பார்கள். அங்ஙனம் பார்த்தும் அருகுற்று நில்லார்கள். நமதையரவர்களோ அன்னதன்மையினரல்லர். ஒருகால் மேற்கண்ட டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜி மிஸ்டர்-பிச்சான் துரையவர்கள் எவருக்குந் தெரிவியாமல் திடீரென நமதையரவர்களின் கோர்ட்டுக்கு வந்து ஒவ்வொரு இலாகாவையும் பார்வையிட்டனர். பிறகு ஐயரவர்களின் விசாரணையின் றிறத்தை நேரிற்காணவிரும்பி அவருடன் வீற்றிருந்தனர். ஐயரவர்கள் அதைக்கண்டஞ்சாது மனத் திட்பமுடையவராய்த் தாமன்று விசாரிக்கப்புகுந்த வழக்குகளை முறையாகவிசாரித்து முடித்தனர். ஒருவன் தான் செய்யத்தொடங்கிய காரியத்தின் மனத்திட்ப முடையவனாயினன்றோ அவன் செய்யத்தொடங்கிய அவ்வினையுந் திட்ப மெய்தப்பெறுவது. ஐயரவர்கள் அங்ஙனம் மனதிட்ப முடையராய்ச் செய்த அவ்வினையின் றிட்பத்தை அந்த ஜட்ஜிதுரையவர்கள் கண்டு, அவரை நன்குமதித்து, அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவராய், அவருடன் நெடுநேரம் வீற்றிருந்தனர். இப்படி அத்துரையவர்கள் ஐயருடன் நெடுநேரம் வீற்றிருந்து அவரது விசாரணையின் றோரணையை அமைவுறப் பார்த்துக் களிகூர்ந்து, அவரிடம் விடைகொண்டு தஞ்சைக்குச் சென்று "ஒரே ஆசனத்திலென்னோடு சமமாக வீற்றிருந்து நீதிமொழியத்தக்கவர்களின் முத்துசாமி ஐயரும் ஒருவர்" எனத் தமது மேலான வபிப்பிராயத்தை வெளியிட்டுரைத்தனர். பிறகு ஐயரவர்கள் 1851-வது வருடத்தின் முதல் ஆற்காட்டுக்கும்பின்னர் தஞ்சாவூருக்கும் டிப்டிகலெக்டராக நியமிக்கப்பட்டனர். இங்ஙனம் நம்மையார் டிப்டிகலெக்டராகவிருக்கையில் சாவுகாரொருவர்மீது மோசடிக் குற்றஞ் சாட்டப்பட்டு அது விசாரணைக்குவர; அதனைக்கலெக்டர் மிஸ்டர் மாரிஸ் துரையவர்கள் நமதையரிட மனுப்பினர். அவர் அதனை விசாரிக்கையில் எதிரிக்காக மிஸ்டர் ஜான் புருஸ் நாட்டன் துரை வந்தனர்; அவர் ஞாயவாத சிங்கமெனப் பெயர்பெற்றவர். நமதையரவர்களால் பதினைந்து நாள் அவ்வழக்கு விசாரிக்கப்பெற்றுக் கடைசியாகச் செஷனுக்குக் கமிட் செய்யப்பட்டது. ஐயரவர்கள் அக்கேசை விசாரிக்கும்போது அவரது விசாரணையின் விதரணையை நன்கு கவனித்து வந்த ஷை நாட்டன் துரையவர்கள் தாம் சென்னைக்கு வந்ததும் தமது நண்பர்களாகிய ஜட்ஜி கனம் ஹால்லோவே துரையவர்களையும் ஸர் — அலக்ஸாந்தர் துரையவர்களையுங் கண்டு அவர்களிடத்து "ஜுடிஷியல் சம்பந்தமான மதிநுட்பங்களும் சாதுர்யங்களும் ரெவினியூ இலாகாவில் முற்றும் ஒரு பயனுமின்றிக்கழிக்கின்றன." என்றுகூறி ஐயரது குணாதிசயங்களை அவர்களுக்குப் பசுமரத்தாணியென மனதிற் பதியும்படி நன்கெடுத்துரைத்தனர். அங்ஙனம் அத்துரையவர்கள் பிரஸ்தாபித்த காலத்தில் மங்களூர் சப்கோர்ட்டுக்கு அறிவினும் அனுபவத்தினும் சிறந்த ஜுடிஷியல் அதிகாரியொருவர் வேண்டியதாயிருந்தது. ஆகூழாங்கால்யாரேயதனைத் தடுப்பவர்? 1865-ம் வருடத்தில் ஐயரவர்கள் அங்குச் சப்ஜட்ஜியாக அனுப்பப் பெற்றனர். அதன்பிறகு 1868-ம் வருடத்தில் சென்னைப் போலீஸ் மேஜஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டனர். அதிலிருந்துகொண்டு ஜட்ஜி-கனம் ஹால்லோவே துரையவர்களின் உரையின்படி நீதிசாஸ்திரத்தை (ஜூரிஸ்புருடன்ஸ்) ஓதியுணர்ந்தனர். அச்சாஸ்திரத்தின் முதனூல் ஜர்மனிபாஷையில் எழுதப்பட்டுள்ளது, ஆதலால் அப்பாஷையைக்கற்றால் அச்சாஸ்திரத்தை நன்குணரலாமென வுன்னி அப்பாஷையையுந் தெளிவாகத் தெளிந்தனர். அவர் படிப்பிற் பேராசைகொண்டு திரிந்தவர். கடவுளுக்குந் தமது மனசாக்ஷிக்கு மல்லது மற்றவர்களின் தயவுக்குங் கண்ணோட்டத்திற்கும் பயந்தவரல்லர். அதனை விளங்குவதற்கான உதாரணமொன்றை ஈண்டு உதகரிக்கின்றேன்.

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளிலொருவர் தமதுமாளிகையினுழைந்த ஒருவனை நன்றா யடித்துவிட்டனர். அடிபட்டவன் மேஸ்திரேட்டாயுள்ள நமதையரவர்களின் கோர்ட்டில் தன்னையடித்த ஜட்ஜியின்மீது பிரியாது கொடுத்தான். அக்கோர்ட்டார் அதை யேற்றுக்கொண்டு அந்த ஜட்ஜிக்கு ஸம்மன் அனுப்பினர். அச்சமயத்தில் தம்மினு முயர்ந்த மேஜஸ்திரேட்டாயுள்ள துரையொருவர் அந்த ஜட்ஜிக்கு ஸம்மனனுப்புதல் தக்கதன்றெனப் பன்முறை கூறினர். கூறியும் நமதையரவர்கள் நீதி நூலிற் றமக்குள்ள வன்மையினாற் றமக்குண்டாயிருக்கும் தைரியத்தைக்கொண்டு அத்துரையவர்களின் கூற்றைப் பொருட்படுத்தாது நடுநிலைமையைப் பொருந்திமேற்குறித்த ஜட்ஜிக்கு ஸம்மனனுப்பி அவரை வரவழைத்து அவர்சொல்லையு மவர்மீது பிரியாதுகொடுத்தவனது சொல்லையுந் தீரவிசாரித்துச் சீர்தூக்கி, அந்தஜட்ஜிக்குமூன்று ரூபாய் அபராதம் விதித்தனர். அவரன்றோ நீதிமதியெனத் தக்கவர்?

நமதையர் ஐயமின்றியுணர்ந்தவராதலின், இவ்வாறே சிறிதும் நடுநிலைமையிற் சிறகாது கடவுளுக்கும் மனசாக்ஷிக்கும் பயந்து குற்றஞ் செய்தாரை யொறுத்து, அவர்களாற் றுன்பெய்தித் தம்மைவந் தடைந்தவர்களின் றுயரைக் களைந்து நீதி

பதிகெட் செல்லாம் அதிபதியாக விளங்கிவந்தனர். இங்ஙனமி ருக்கையில் அம்மம்ம! அவரது சமர்த்தென்னே? அவர் எவ்வாறு படித்தனரோ? படிக்கக்காலம் அவருக்கு எப்படி வாய்த்ததோ? தெரிந்தில: B. L. பரீக்ஷைக்குப்போய் அதன் முதல் வகுப்பிற்றேறினர்.

இப்படி நமது ஐயரவர்கள் அப்பரீக்ஷையிற் றேர்ந்ததைக் குறித்து நார்ட்டன் துரையவர்கள் வியந்து வியந்து பேசினர். பிறகு ஐயரவர்கள் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜியாயினர். அவ்வேலையினும் அவர் ஒரு சிறிதுங் குறைகூற விடந்தராது மிக்க பக்குவமாக விளங்குவதைக்கண்ட மதராஸ் ஆக்டிங்கு கவர்னர் ஸர்-அலக்ஸாந்தர் ஆர்பத்நட் துரையவர்கள் அவரைத் தஞ்சாவூர் ஜட்ஜியாக்கமுயன்றனர். பலராக்ஷேபனையினுல் துரையவர்களின் எண்ணம் பலியாதாயிற்று. 1877-ம் வருடத்தில் டில்லிநகரிற்கூடிய இராஜமகாசபைக்குப் போகும்படி மதராஸ் கவர்ன்மெண்டார் நமதையரவர்களை வேண்டினர். ஐயரவர்கள் அதற்கிணங்கி அவ்விராஜ மாசபைக்குச் சென்று அச்சபையிற் கவர்னர் ஜனரலவர்கள் பரிசாக வளித்த பொற்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டு சென்னைவந்தடைந்தனர். அடுத்தவருடம் அவருக்கு C. I. E. பட்டம் அளிக்கப்பட்டது. இப்பட்டத்திற்கேற்ற சன்னதைக் கொடுக்குங் காலத்தில் சென்னை கவர்னர் பகிங்காம்பிரபு ஜுடிஷியல் இலாக்காவின் விசேஷத்தை எடுத்துக்கூறி அதில் நமதையரவர்கள் மிகவுந் தெளிவுற்று யாவரும் நன்கு மதிக்கும்படி சிறந்திருப்பதை வியந்துரைத்து, "இவர் மகாராணியார் மனமுவந்தளித்த மரியாதையைக் கொண்டு நீடூழிவாழ்வாராக" என வாழ்த்தினர். அதேவருடத்தில் நமதையரவர்கள் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராக நியமிக்கப் பெற்றனர். சென்னை இராஜதானியின் மக்களில் நமதையரவர்களே முதன்முதல் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜியாக வீற்றிருந்து விளங்கியவர். இப்பதவியுற்று நீதிசெலுத்தும் நீதியதிபர்களின் காரியங்கள் தெய்வீகம் பொருந்தியவை யென்பதை நமதையரவர்கள் நன்கறிந்தவராகலின் தாம் வீற்றிருந்து நீதிமொழியும் ஸ்தானத்தை நியாயந்திருக்கோயிலென்பர். இங்ஙனமவர் இவ்வுன்னதமான பதவியிற் பதினேழுவருடகாலம் நமது நாட்டுக்கோர் ஆபரணமாக விளங்கினர். 1893-ம் ஞுத்திற் சென்னை ஹைகோர்ட்டுப் பிரதம ஜட்ஜி சீமைக்குச் சென்றிருந்தகாலத்தில் நமதையரவர்கள் அவ்வேலையினும் அமர்ந்திருந்து, தமதுதாய் தம்மால் கொடுக்கப்பெற்ற ஒரு ரூபாய் வேதனத்தை இஷ்டத்துடன் பெற்று, "இதுவே, பத்து நூறு ஆயிரம் ஐயாயிரமுமாம்" என மதித்து மகிழ்ந்த மகிழ்ச்சியைப் பூர்த்தி செய்தவராயினர். விரைவில் K. C. I. E. பட்டமும் அணியப் பெற்றனர். அந்தோ! அவர் திடீரென்று நோயுற்று 1895 ம் ஞு முதலில் இம்மண்ணுலகை விட்டு நீங்கி விண்ணுலகமடைந்தனர். இதை ஈண்டு விரித்துக் கூற நாவெழுந்திலது. நமது ஐயரவர்களின் விருத்தியை விருத்தியாக வசனித்தும் எழுதியும் சிந்தித்து மகிழ்ந்த நாம் அவர் க்ஷயத்தை எவ்வாறு விரித்துக் கூறத்துணிவோம். அவர்குண விசேஷங்களை பன்முறையும் பாராட்டற் பாலனவாகலின், அவற்றை ஒருவாறு தொகுத்துக் கூறுவோம்.

சர்-முத்துசாமி ஐயரவர்கள் ஒருமகான். அவர் தேவாமிசத்தோடு பிறந்த ஒருமனுஷ சிரேஷ்டர். தமது விடாமுயற்சியினுற் சகலமுங் கூடிவரப்பெற்றவர். அவர் கல்வி கேள்வி அறிவுடைமை குற்றங்கடிதல் பெரியாரைத் துணைக்கோடல் சிற்றினஞ் சேராமை தெரிந்து வினைசெயல் நடுநிலைமை ஊக்கமுடைமை மடியின்மை ஆள்வினையுடைமை இடுக்கணழியாமை மனத்திட்பம் வினைத்திட்பம் முதலிய நல்லியல்க ளியாவுமொருங்கமையப் பெற்றவர்.

அன்றியும், அவர் சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவராதலின், சென்னை யூனிவர்சிடியின்மீது பற்றதிகங் கொண்டிருந்தனர். அதன் பெல்லோவாகவும் விளங்கினர். சின்டிகேட் மெம்பராகவுந் துலங்கினர். பலவாண்டுகளின் B. L. M. L. என்னும் பட்டபரீக்ஷா கருத்தராகவிருந்து, அப்பரீக்ஷைக்குப் போகின்றவரின் ஞாயவறிவை அளவெடுக்குங் கருவியுமாகவிருந்தனர் கான்வோகேஷன் அட்ரெஸ்ஸையும் வாசித்தனர். அவர் சிறந்த வாக்யமில்லராயினும் அவரெழுதிப்படிக்கும் வியாசங்களொவ்வொன்றும் பொறுக்கி யெடுத்த சொல்லடுக்குகளையப்பெற்று, ஆழ்ந்தகருத்துகளை யுள்ளடக்கிக்கொண்டு கேட்பார்க்கும் படிப்பார்க்கும் இன்பம் பயந்து நிற்கும். ஐயரவர்கள் தமது காலத்திலிருந்த மகான்களொவ்வொருவரைப் பற்றியும் மிகவும் புகழ்ந்தே பேசுவர். அடிக்கடி தமது போதகாசிரியராகிய மிஸ்டர் பவ்வல் துரையவர்களின் சீரெல்லா மெடுத்துத் துற்றுவர். வித்தியாசம்பந்தமான சகல பிரசங்கங்களினும் அத்துரையவர்களுக்குத் தமது குருபக்தியைச் செலுத்துவர். ஏனைய நண்பர்களைப்பற்றிப் பேசும் பொழுதும், அவர்களின் குணங்களையே எடுத்து விதப்பர். எப்பொழுதுந் தமதுள்ளத்திற் பிறரது நலங்களையே குறிக்கொள்வர். இராய்பகுதூர் - கோபால்ராவ் அவர்களைத் தமது வாழ்நாண்முழுதும் புகழ்ந்துகொண்டிருந்தனர். மைசூர் திவானுக இருந்த அரங்காசாரிலுவைப்பற்றி "அவருண்மையான மகான் மிக்கமேதாவி நவீனகாரியங்களை யெடுத்து அவற்றை நிலைபெறச் செய்யும் விஷயத்தில் அவருக்குள்ளசக்தி யாவராலும் அதிசயிக்கத் தக்கது" எனப் பன்முறையுமுரைப்பர். சகலகலாவல்லவரான பூண்டி அரங்கநாத முதலியாரவர்களைத் தமது சிரசிற்கொண்டு வந்திப்பர். ஆசாரசீர்திருத்த விஷயத்தில் அதிக ஆவலுடையவர். பெண்கல்வியினும் மிக்க விருப்புடையர்.

ஒரு சமயங் கடல்கடந்து வேற்றுத்தேயஞ் சொல்ல நேர்ந்தபோது அதைத் தவிர்த்திட்டன ராயினும், அவ்விஷயத்தில் அவருக்கு மாறுன வெண்ணங் கிடையாது. பாலிகாவிவாகத்தால் பலதுன்பங்கள் விளைவது உறுதியெனப் பன்முறையுமுரைத்திருக்கின்றனர்.

தமது மனதை, அனுதினமும் ஜகதீசன் பாதாரவிந்தத்திற் படியவைத்து ஜபதபவோமங்களைக் கிரமமாக இயற்றிவந்தனர். ஷேக்ஸ்பிரியரியற்றிய இங்கிலீஷ் நாடகங்களில் அவருக்கு அன்பதிகம். இங்கிலீஷ் பாவலராகிய கோல்ட்ஸ்மித்து என்னுங்கவியெழுதிய வைகார் ஆப்வேக்பீல்ட் என்னுங் கிரந்தத்தைமட்டும் 50 முறைக்குமே லாநந்தத்தோடு படித்தனராம். சங்கீதத்திறும் விசுவாசமும் நல்லஞானமும் படைத்திருந்தார். இது நாஷனல் இந்தியன் சங்கத்தார் பச்சையப்பன் கலாசாலையிற் கூடிய கட்டடத்தில் அவரெழுதிப்படித்த வியாசத்தாற் றெரியவந்தது. அப்பொழுது அச்சபையில் சபாநாயகராக வீற்றிருந்தசென்னை கவர்னர் கிராண்டப்பெருமான் அவ்வியாஸத்தைக் கேட்டுப் புளகாங்கிதராகி ஐயரவர்களைப் பெரிதுங் கொண்டாடினர். முற்குறித்த தாசில்தார் முத்துசாமி நாயகரவர்கள் நமதையரவர்களைக் கண்ணுற்ற நாண்முதற் சென்னை ஹைஸ்கூலில் பெருத்த பரீக்ஷையிற்றேறும் வரையில் உண்டிஉடை பாடசாலைச்சம்பளம் முதலிய அனைத்தையும் தந்துவந்ததே தவிரக் கடைசியாகப் பரீக்ஷையிற்றேறி வந்தபோது அவரைக்கட்டியணைத்துக் கழிபேருவகையுடன் உருமாலையும் ஒருபைசிறையப் பணத்தையுங் கொடுத்துச் "சகலசம்பத்துடன் நீ வாழ்வாயாக" என ஆசீர்வதித்தனர் ஐயரவர்களுந் தமது அபிமானபிதாவாகிய அந்நாயகரிடத்துத் தமது வாணுண்முழுதும் நீங்காத நன்றியுடையவரா யொழிகிலர். அந்நாயகரிடத்தன்றி மற்றொருவரிடத்தும் நமதையரவர்கள் இரந்தரியார்.

இந்நற்குணங்களுடன் ஈகைக்குணமும் உடையராகவே இருந்தனர். அவர்தமக்குச் சஷ்டிபூர்த்தி சாந்தி நடந்த காலையில் மாயவரத்தில் ஒரு சமுஸ்கிருத பாடசாலையை ஸ்தாபிப்பதன் பொருட்டு ரூபா. 25,000. தருமமாகக்கொடுத்துந் தவிர அப்பாடசாலைக்கு மற்றும் பலவித வுதவிகளைச் செய்ததாவுந் தெரிகிறது. அவர் சகலவிஷயத்திலும் புண்ணிய புருஷர். அவருக்குவாய்த்த மனைவியும் உறப்போடுணர்வுடையவள். கொண்டான் குறிப்பறிந் தொழுகுநீரால். நாண மடனச்சம் பயிர்ப்பென்னு நாற்குணமு நலமைகயப் பெற்றவள். வெறுப்பன செய்யாள். கணவன் விழைவனகண்டு செய்வள். விருந்தோம்பலின் விழைவுடையவள். கணவனையன்றி வேறோர்தெய்வத்தைக்கருதாள். இத்தகைய மனைவியுடனும் அறிவிற்சிறந்த பல மக்கட்பேற்றுடனும் தமது நட்பினராகிய நுண்ணுணர்வினருடனும் மற்றும் வாய்த்த கிளைஞர் பலருடனும் இம்மையில் இன்புற்று இனிதுவாழ்ந்து 1895-ம் ஞு பரமன்றிருவடியடைந்தனர்.

N. B. ஆசிரியாபத்திராதிபரால் எழுதப்பட்ட இச்சரித்திரத்தை சர்வகலாசாலையார் 1908-வது வருஷத்திய எம். ஏ. பரீக்ஷைக்குப் பாடமாக வைத்திருக்கிறார்கள். [E.d.]

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டு களிலுள்ள கேஸ்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்.

சிவில் அப்பீல் வியாஜ்ஜியங்கள்.

புல்பெஞ்ச்:—சர் ஆர்னல் ஒயிட், சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

நாராயணசாமி படையாச்சு—வாதி (அப்பீல்வாதி)
கோவிந்தசாமி படையாச்சி—பிரதிவாதி—
(அப்பீல்வாதி பிரதிவாதி.)

லாபாயின்ட்:—இத்தேசத்தில் பேரிரவலான விவகாரங்கள் செல்லுமா?

வியாஜ்ஜிய விபரம்:—1864-வது ஞுத்திய 2-வது ஆக்ட் (ரெவினியூ ரிக்கவரி ஆக்ட்) டின்படி பிரதிவாதியின் நிலம் ஏலம்போடப்பட்டது. பிரதிவாதியே வெங்கடாசலம் என்பவரிடம் பணங்கொடுத்து தனக்காகஏலம் எடுக்கும்படி சொன்னர். அப்படியே வெங்கடாசலம் என்பவரும் ஏலம் எடுத்தார். ஷை ஆக்ட் 39-வது பிரிவின்படியும் பிரஸ்தாப நிலத்தை வெங்டாசலம் என்பவர் வாங்கிக்கொண்டதாய் பயிரங்கப் படுத்தப்பட்டது. வெங்டாசலம் என்பவர் இறந்துபோய்விட்டார். நிலமும் பிரதிவாதியின் அனுபோகத்திலிருந்தது. வெங்கடாசலத்திற்குச் சந்ததியில்லை. ஆகவே அவர் ஏலத்தில் எடுத்தநிலம் தமக்குச் சேரவேண்டுமென்று ஷை வெங்கடாசலத்தின் சிறிய தகப்பனர் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டின் தீர்மானம்:—பிரதிவாதி தம்முடைய நன்மைக்காக வெங்கடாசலத்தினிடம் பணம் கொடுத்து ஏலம் எடுக்கச் சொன்னது ருஜுப்பட்டது. ஆகவே கோர்ட்டார் வாதியின் வியாஜ்ஜியத்தை தள்ளி விட்டார்கள்.

வாதி ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அவர்களும் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதி செய்தார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்தார்.

இந்த அப்பீல் மிஸ்டர் ஜஸ்டிஸ்மூர், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் கூடியிருந்த கோர்ட்டின் விசாரணைக்கு வந்தது.

இ. லா. ரி. 25 சென். 655 (நாராயண செட்டியார். V. சொக்கப்பமுதலியார்)ல் சொல்லப்பட்டிருக்கும் கேஸில் ரெவினியூ பாக்கிக்காக விற்பனை செய்யப்பட்ட நிலத்தை வாங்கியவர் பெயர் ஷை ஆக்ட் 39-வது பிரிவின்படி பயிரங்கப்படுத்தப் பட்டபின் அந்தநிலம் அவருக்கே சர்வ சுதந்தரமாய் விடுகிறதென்றும் பின்பு அவர் சொந்தக்காரர் அல்லவென்றும், பெயர் இரவலாகஅவர் பெயரால் வாங்கப்பட்டதென்றும், தனக்குத்தான் அந்நிலம் சொந்தமென்று வேறொருவன் சொல்லக்கூடாதென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கேசிற்கு முன்நடந்த கேஸ்களாகிய திருமலையப்பாபிள்ளை V. சாமிநாயக்கர் (இ. லா. ரி. 18-சென். 469), சுப்பராயர் V. ஆசீர்வாத உபதேசியார் (இ. லா. ரி. 20.சென். 494)ல் ஏறக்குறைய ஷை நாராயணசெட்டியார் V. சொக்கப்பாமுதலியார் கேஸில் சொல்லியிருக்கும்தீர்மானம்போலவே சொல்லப்பட் டிருக்கின்றது.

ஆனல் சமீபத்தில் நடந்த கேசாகிய முத்துநாயன் V. சின்னசாமவய்யன் (இ. லா. ரி. 28 சென்: 526)ல் ரெவினியூ ரிக்கவரி ஆக்ட்8-வது பிரிவிலும்39-வது பிரிவிலும் பேரிரவல் விவகாரங்கள் சட்டவிரோதமல்லவென்று பொருள்படும்படியாகவாவது அல்லது வெளிப்படையாகவாவதுயாதொன்றும்கூறப்படவில்லை என்றும், ஆகையால் நிலத்தை உள்ளபடி வாங்கினவன், எவன்பேரால் ஷை நிலம் வாங்கப்பட்டதோ அவன் சொந்தக்காரனல்லவென்றும், தான்தான் சொந்தக்காரன் என்றும் வியாஜ்ஜியம்கொண்டுவந்து ருஜுப்படுத்திப்பெறுவதற்குப் பாத்தியம் [illegible] இல்லாமற் போகவில்லை [illegible] தலைவர்க [illegible] என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் முசமட்பன்ஸ்கோவார் V. லாலாபு, கூரிலால்(14 மூர் இந்தியன் அப்பீல் 496)ல் பிரிவிகவுன்சிலர்கள், பேரிரவலாக வாங்குவது இந்தியாவில் சாதாரணமாய் அனுஷ்டானத்திலிருந்து வருகின்றபடியால் கோர்ட்டார் அதை ஏற்றுக்கொண்டுகக்ஷிக்காரர்களின் உண்மையான எண்ணத்தின்படி தீர்மானிக்கவேண்டுமென்றும், பேரிரவல் விவகாரங்கள் சட்டவிரோதமென்று யாதொருசட்டமும் பிறக்காதபடியால் அவைகளைக் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் மேற்கூறிய தீர்ப்புகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால் இதைக்குறித்து ஒரு முடிவான தீர்மானம் செய்யும்படி இந்தக்கேசை புல்பெஞ்சிற்கு அனுப்பினர்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் V. விஸ்வநாதசாஸ்திரியும், அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல் மிஸ்டர் N. சேஷாசாரிலும் பேசினர்கள்.

அபிப்பிராயம்:—1864-ம் வருஷத்திய சென்னபட்டணம் இரண்டாவது ஆக்ட்டின்படி ரெவினியூ பாக்கிகளுக்காக விற்பனைசெய்யப்பட்ட நிலத்தை வாங்கியவன் பெயர் ஷை-ஆக்ட் 39-வது பிரிவின்படி பிரசித்தஞ்செய்யப்பட்ட பிறகு, அந்நிலத்தை உள்ளபடி வாங்கியவன் தான் என்றும், தனக்குத்தான் அந்த நிலம் சொந்தமென்றும், எவன்பெயரால் வாங்கப்பட்டதோ அவன் பெயரால் பேரிரவலாகவாங்கப்பட்ட தென்றும் வியாஜ்ஜியம் கொண்டுவர சாத்தியப்படாதபடி, அந்நிலம் எவன் பெயரில் வாங்கப்பட்டதோ அவனுக்கே சர்வ சுந்தரமாய்ப்போய்விடமாட்டாது. நாராயணசெட்டியார் V. சொக்கப்ப முதலியார் கேஸில் சொல்லப்பட்டிருக்கும்

தீர்மானம் ரத்துசெய்யப்பட்டதென்று அபிப்பிராயம் கூறினார்கள்.

பிறகு இந்தக்கேஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்கூடிய கோர்ட்டாருடைய விசாரணைக்கு வந்தது.

தீர்ப்பு:—புல் பென்சார், நிலத்தை உண்மையில் வாங்கியவன் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கப் பின்பு வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று அபிப்பிராயம் கூறிவிட்டபடியால், வாதி கொண்டுவந்த அப்பீல் வியாஜ்ஜியத்தைச் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

சிவில் அப்பீல்.

புல் பென்ச்:—சர் ஆர்னல் வொயிட் சீப்ஜஸ்டிஸ்.

மிஸ்டர்:—ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

நீலமேக சாஸ்திரி (முதல் பிரதிவாதி)—அப்பீல்வாதி.

அப்பய்யா சாஸ்திரி (வாதி)—அப்பீல் பிரதிவாதி.

லாபாயின்ட்:— சீட்டுப் போடும் பண்டுகள் எப்படியிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும், எப்படி யிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியதில்லை.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—ஒரு சீட்டு பண்டிற்கு முதல் பிரதிவாதியும் இன்னொருவரும் ஆக இருவரும் மானேஜர்களாக விருந்தார்கள். வாதி ஷை மானேஜர்களிடம் சீட்டுக்கட்டிக்கொண்டு வந்தவர். இவருக்குச் சேரவேண்டிய சீட்டுப்பணம் பிரதிவாதிகளால் கொடுபடவில்லை. ஷை மானேஜர்களில் ஒருவர் இறந்துபோய் விட்டார். இவருடைய வார்சை இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்த்து இரண்டு பிரதிவாதிகள் பேரிலும் ஜில்லாக் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதிகள் இருவரும் அவர்களிடம் சீட்டுக்கட்டிக் கொண்டுவந்த வாதியுள்பட 12 பேர்களும் அடியிற்கண்ட பிரகாரம் கரார்நாமா எழுதிக்கொண்டார்கள்:—"சுப்பிரமணிய சாஸ்திரியும், நீலமேக சாஸ்திரியும்" அடியிற் சொல்லப்பட்ட பன்னிரண்டு பேர்களும் கூட்டுச் சீட்டு சேர்ந்து செய்துகொண்ட கரார்நாமா என்னவென்றால், 1899-ம் ௵ அக்டோபர்மீ ஞாயிற்றுக் கிழமைமுதல் ஒவ்வொருவரும் ரூ 250 மேனிக்கு சீட்டுகட்டி வருஷத்திற்கு இரண்டு முறை, முறை ஒன்றுக்கு ரூ. 3500 சேர்த்து 6½-வருஷங்களுக்குச் சீட்டு போட்டுக் கொண்டுவர வேண்டும். மேலே கூறப்பட்ட இருவர்களும் இந்த சீட்டு பண்டிற்கு ஏஜெண்டுகளாக விருந்து நடத்திக்கொண்டுவரவேண்டும். இந்தபண்டில் சேர்ந்து சீட்டுக் கட்டிக்கொண்டு வருகிறவர்கள் அவர்களுடைய குடும்ப நன்மைக்காகக் கட்டிவருகின்றார்கள். ஆகையால் சீட்டு பண்டிற்கு அவர்களுடைய குடும்பமேகட்டுப்படவேண்டும். மேலேகூறிய இருவர்களும் இந்த சீட்டுபண்டிற்கு ஏஜெண்டாகவிருந்து நடத்திக்கொண்டுவருவதை முன்னிட்டு முதல் சீட்டை ஏலம் போடாமல் சீட்டுத் தொகை மூன்றில் ஒரு பாகத்தை முதல் ஏஜண்டும் மூன்றில் இரண்டு பாகத்தை இரண்டாவது ஏஜெண்டும் தங்களுடைய குடும்ப நன்மைக்காக எடுத்துக் கொள்ள வேண்டும். சீட்டு கட்டவேண்டியவர்களிடமிருந்து ஏஜண்டுகள் சீட்டுப்பணத்தை வசூல் செய்ய வேண்டும். ஒவ்வொரு சீட்டிற்கும் ஏஜெண்டுகள் தாங்கள் கொடுக்க வேண்டிய சீட்டுப் பணத்தையும் போட்டுக்கொள்ள வேண்டும். இப்படிச் சேர்த்து இரண்டாவது சீட்டு முதல் ஏலம் போடப்படவேண்டும். ஏலம் போடுவதற்கு முந்தி ரூ. 1000 க்கு ரூ.60-வட்டி மேனிக்கு ரூ. 210-வட்டிக்காக ஏஜெண்டுகள் பிடித்துக்கொண்டு பாக்கி ரூ. 3290 யும் ஏலம் விடவேண்டும். யார் குறைந்த விலைக்குக்கேட்கிறாரோ அவருக்கு விட்டு விடவேண்டும், இதில் மிகுந்த பணத்தையும் வட்டிக்காகப் பிடித்து வைத்திருந்த பணத்தையும் சேர்த்து ஏஜெண்டுகள் அப்போதைக்கப்போது பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்; சீட்டைஏலத்தில் எடுத்தவர்கள், கடன் வில்லங்கமில்லாத தங்களுடைய சொத்துக்களின் பேரில் ஏஜெண்டுகளுக்கு அடமானப் பத்திரம் எழுதிக்கொடுத்து ஏலத்தொகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஏஜெண்டுகள் சீட்டை எடுத்தவர்களுக்கு ஏலத் தொகையைக் கொடுக்கா விட்டால், ஏஜெண்டுகள் ஜாமீனாகக் கொடுத்திருக்கிறவும் இந்தக் கரார் நாமாவில் சொல்லப்பட்டிருக்கும் ஏஜெண்டின் சொத்துக்களின் பேரில் தொடர்ந்து வசூல் செய்து கொள்ளலாம்.

ஏலம் எடுத்தவர்கள் ஏஜெண்டுகளுக்கு அடமானப்பத்திரம் எழுதிக் கொடுத்த பின் ஏலத்தொகை வாங்காமற் போனால் அதுவரையில் அவர்கள் செலுத்தியிருக்கும் பணத்தைப் பிடித்துக் கொள்ளவேண்டும்; அப்படி பிடித்துக்கொண்டும் ஏலம் எடுத்தவர்கள் நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டியதாயிருந்தால் அதை ஏஜெண்டு வசூல் செய்யவேண்டும். சீட்டுக் கட்டவேண்டியவர்கள் சரியான காலத்தில் சீட்டுப்பணத்தைச் செலுத்தத்தவறிப்போனால் ஏஜெண்டுகள் அவர்களுடைய பணத்தைக் கட்டவேண்டும். அவர்களுக்குச் சேரவேண்டிய வட்டிப்பணத்தையும் கசர் வட்டிப்பணத்தையும் ஏஜெண்டுகள் எடுத்துக் கொள்ளுவதுமன்றி அவர்களிடமிருந்து 100-க்கு மாதத்திற்கு இரண்டு வட்டி மேனிக்குப் பணம் வசூல் செய்துகொள்ளலாம். ஒரு ஏலத்தில் எவரும் கேட்காவிட்டால் வட்டிப்பணம் ரூ. 210-க் கழித்துக்கொண்டு ஏஜெண்டுகள் சீட்டெடுக்காத யாருக்கேனும் கொடுத்து விடலாம். வட்டிப்பணத்தை மட்டிலும் ஏஜெண்டுகளும் இன்னும் மற்று முள்ளவர்களும் அவரவர்களுடைய விகிதப்படி பங்கு பிரித்துக் கொள்ள வேண்டும். சீட்டெடுக்காதவர்கள் சீட்டு கட்டத் தவறிப்போனால் அவர்களுக்கு ஒருமாத அவகாசம் ஏஜண்டுகள் கொடுக்கவேண்டும். அதற்குள் அவர்கள் செலுத்தாவிடில், ஏஜெண்டுகளுக்கு இஷ்டமிருந்தால் அவர்களை விலக்கி விடலாம். அவர்களுக்குப் பதிலாக யாரேனும் சேர விரும்பினாலும் ஏஜெண்டுகள் சேர்த்துக் கொள்ளலாம். இப்படிச் சேர்ந்தவர்கள் சீட்டெடுத்தவுடன் விலக்கப்பட்டவர்கள் கொடுத்திருந்த பணத்தை வட்டி சேர்த்துக் கொடுத்து விடவேண்டும்.

ஏல கசர் வட்டிலாபத்தைத் தள்ளிக் கொடுப்பதற்கும் அதிகப்படி வட்டியைத் தள்ளிக் கொடுப்பதற்கும் ஏஜெண்டுகளுக்கு அதிகார மிருக்கின்றது. இந்த ஷரத்துகளின்படி இந்த சீட்டுப் பண்டை நடத்திக் கொண்டு வரும்பொருட்டு இந்தக் கரார்நாமா செய்து கொள்ளப்பட்டது"

இம்மாதிரி சிலகாலம் நடத்திக்கொண்டு வந்ததில் இந்தச் சீட்டுப் பண்டில் இருபது பேர்களுக்குமேல் சேர்ந்திருந்தார்கள்.

எதிர் வாதம்:—இரண்டு ஏஜெண்டுகளும், மற்றும் இந்தப்பண்டில் சீட்டுக்கட்டி வருகிறவர்களுமாகச் சேர்த்து இருபது பேர்களுக்கு அதிகமா யிருக்கிறார்கள் என்றும், ஆகவே, இவர்கள் இந்தியன் கம்பெனி ஆக்ட் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கூட்டத்தார் (Association) ஆகிறபடியால் இந்த சீட்டுப் பண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும், அப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாததால் இந்த வியாஜ்ஜியம் செல்லாதென்பது முதல் பிரதிவாதியின் கக்ஷி.

ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானம்:—வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதி ஹைகோர்ட்டில் தாக்கல் செய்த சிவில் ரிவிஷன் மனு மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாமால் விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

முதல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் லெட்டர்ஸ்பேட்டண்ட் அப்பீல் செய்து கொண்டார்.

இந்த அப்பீல் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர் ஆகிய இவர்கள் கூடியிருந்த கோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது.

புல்பென்ச்சிற்கு ரிபர்செய்ய நேரிட்டகாரணங்கள்:- மதுரை ஜில்லாவிலிருந்து ராமசாமி பாகவதர் V நாகேந்திர நாராயன் (இ. லா. ரி. 19. சென். 31) என்கிற அப்பீல் வியாஜ்ஜியம் ஹைகோர்ட்டிற்குவந்தது. இந்தக் கேசில் 20 பேர்களுக்கு மேல் அதிகமாகச்சேர்ந்து சீட்டுப்போட்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் சீட்டுப் பிடித்தவனிடம் சீட்டுப்பணம் செலுத்தி வந்தார்கள். சீட்டுக் குலுக்கி எவர்பேருக்குச் சீட்டு வருகிறதோ அவனுக்கு அந்தமாதச் சீட்டுத்தொகையைக் கொடுத்து வந்தார்கள். சீட்டு எடுத்தவன் சீட்டு பிடித்தவன் பெயராலும், பாக்கியுள்ள சீட்டுக்காரர்கள் பேராலும் பத்திரம் எழுதிக்கொடுத்து சீட்டுப்பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப் பத்திரம் எழுதிக்கொடுத்து சீட்டெடுத்துக்கொண்ட ஒருவன் பிறகு சீட்டு கட்டவில்லை. ஆகவே அவன் எழுதிக்கொடுத்த பத்திரத்தின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. இந்த வியாஜ்ஜியத்தில் இந்தச் சீட்டுப் பண்டு காரர்கள் இந்தியன் கம்பெனிஸ் ஆகட் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் "அசோசியேஷன்"(Association) காரர்களாகிறபடியாலும், இந்த சீட்டு பண்டுக்காரர்கள் தங்களுடைய பண்டைச் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யாதபடியால், அவர்கள் கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் செல்லாதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

பிறகு, மலையாளத்திலிருந்து பஞ்சன்ன மஞ்சு நாயர் V காட்டின் ஹொர் குமாரன் சதபத்மநாப நாயர் (இ. லா. ரி. 20. சென். 68). என்கிற ஒரு அப்பீல் வியாஜ்ஜியம் வந்தது. இந்தக்கேசில் இருபது பேர்களுக்கு அதிகமாகச்சேர்ந்து லாட்டரி ஏற்படுத்திடிக்கட்டு வாங்கிக்கொண்டார்கள். லாட்டரியில் வெற்றி அடைந்தவர்கள் லாட்டரிக்குத் தலைமையாயிருந்த இரண்டு பேருக்கு, மாதா மாதம் செலுத்தவேண்டிய பணத்திற்காக ஈடுகாட்டிப் பத்திரம்எழுதிக்கொடுத்துவிட்டு லாட்டரிப் பணத்தைப் பெற்றுக்கொண்டுவந்தார்கள். இப்படி லாட்டரியில் பணம் பெற்றுக்கொண்டு பத்திரம் எழுதிக்கொடுத்தவன் பின்பு செலுத்த வேண்டிய தவணைப் பணத்தைச்செலுத்தவில்லை. ஆகவே லாட்டரித் தலைவர்கள் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்தக்கேசில் ஹைகோர்ட்டார் (1) லாட்டரியில் சேர்ந்தவர்கள் பணத்தைச் செலுத்தாவிட்டால் அப்பணத்தை வசூல் செய்யும்பொறுப்பு இந்தலாட்டரிஏற்பாட்டின்படி லாட்டரித் தலைவர்களுக்குமட்டிலு மிருக்கின்றது. (2) லாட்டரியில் சேர்ந்தவர்கள் பணங் கொடுக்கத் தவறிப்போய்விட்டால் அந்தப் பணத்தைத் தங்களுடைய கையிலிருந்து கொடுக்கவேண்டிய பொறுப்பும் லாட்டரித்தலைவர்களுடைய பொறுப்பாயிருக்கின்றது. (4) லாட்டரியில் வெற்றி பெற்றவன்தான் பின்னிட்டுச்செலுத்தவேண்டிய தவணைக்காக எழுதிக்கொடுக்கும் பத்திரமும் லாட்டரித்தலைவர்களுக்கே. (5) தவணைப்பணம் செலுத்தாதவர்களை விலக்கவும்புதியவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் அந்த லாட்டரித் தலைவர்களுக்கே அதிகாரமிருக்கின்றது. (6) ஆகையால் லாட்டரியைச் சேர்ந்த சகலவிஷயங்களும் லாட்டரித் தலைவர்களைப்பொறுத்திருக்கின்றது. (7) லாட்டரியில் சேர்ந்த மற்றவர்கள் தங்களுடைய தவணைப் பணத்தை லாட்டரித்தலைவர்களிடம் செலுத்துவதும், லாட்டரி தங்களுக்கு விழும்போது தலைவர்களிடமிருந்து தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுவதும் ஆகிய இந்த இரண்டு சுதந்தரங்களைத் தவிர்த்து வேறொரு சுதந்தரமுமில்லை; லாட்டரியில் சேர்ந்திருந்தவர்களுக்குள் ஒருவருக்கொருவர் யாதொரு சம்பந்தமும் கிடையாது. (7) ஆகையால் லாட்டரியில்சேர்ந்திருப்பவர்கள்இந்த லாட்டரியில்சேர்ந்துடிக்கட்டு பெற்றுக்கொண்டிருந்த போதிலும், ஒருவருக்கொருவர் யாதொருசம்பந்தமுமின்றி நிற்கிறபடியால் அவர்கள் அன்னியர்கள் நிலைமையிலிருக்கிறார்கள் என்று சொல்லி இப்படிப்பட்ட லாட்டரி இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் "அசோசியேஷன்" ஆகமாட்டாதென்றும் இந்த லாட்டரி ரிஜிஸ்ட்டர் செய்யப்படவேண்டியது அனாவசியமென்றும் தீர்மானித்தார்கள்.

இன்னொரு அப்பீல்வியாஜ்ஜியத்தில் அதாவது நாராயணசாமி V. ஜாம்பு அய்யன் (11 மெட்ராஸ் லா ஜர்னல்) கேசில் இருபதுபேர்களுக்குமேல் அதிகமாகச் சேர்ந்து சீட்டுபண்டு ஏற்படுத்தி சீட்டுப்போட்டுக்கொண்டுவந்தார்கள். எல்லா சீட்டுக்காரர்களும் சேர்ந்து தங்களுக்குள் 9 பேர்களை ஏஜண்டுகளாக நியமித்து இந்தப் பண்டை நடத்திக்கொண்டுவரும்படி ஏற்பாடுசெய்து, இவர்கள் ஒழுங்காய்ச் சீட்டுநடத்திக்கொண்டு வருகிறார்களாவென்று விசாரணைசெய்யவும், இவர்களை ஏஜண்டு ஸ்தானத்தில் வைக்கவும் தங்களிடம் அதிகாரம் வைத்துக்கொண்டார்கள். இந்த சீட்டுப்பண்டைச்சேர்ந்த கேஸ் ஹைக்கோர்ட்டிற்கு வந்தபோது மேலே கூறப்பட்ட மலையாள லாட்டரியைப்போல சொந்தமுதலாளி

கள்உள்ள சீட்டுப்பண்டு அல்லவென்றும், இதில்சேர்ந்த எல்லோருமே சீட்டுப்பண்டிற்கு முதலாளிகள் என்றும் இதில்சேர்ந்திருக்கிறவர்களுள் ஒருவருக்கொருவர் கட்டுப்படும்படியாக சுந்தரமிருக்கிறதென்றும் இந்த சீட்டுப்பண்டுக்காரர்கள் இந்தியன் கம்பேனிஸ் ஆக்ட் 14-வதுபிரிவில்சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷன்காரர்களாகிறார்கள் என்றும் ஆகையால் இந்தச் சீட்டுப்பண்டு ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

ஹைகோர்ட்டார், மேலேகூறப்பட்ட மலையாள லாட்டரி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை என்று தீர்மானித்ததுமுதல் சீட்டுப்பண்டுகளைப் பற்றியும் லாட்டரிகளைப்பற்றியும் கேசுகள் ஹைகோர்ட்டிற்கும் வெளியூர் கோர்ட்டுகளுக்கும் வந்தால் எம்மாதிரியுள்ள சீட்டுபண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். எம்மாதிரியான சீட்டுபண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை என்று சரிவரத் தெரியாமலிருக்கிறபடியால், இதைப்பற்றி முடிவானவும் விபரமானவு மான அபிப்பிராயம் கூறும்படியாக இந்தக்கேஸ் புல்பென்ச்சிற்கு ரிபர் செய்தார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அப்பீல்வாதி தரப்பிற்கும், T. சுப்பிரமணிய அய்யரும், P. பஞ்சாபிகேச சாஸ்திரியும் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்குப் பேசினார்கள்.

புல்பென்ச் அபிப்பிராயம்:—ஒரு சீட்டுப்பண்டு ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமாவேண்டாமாஎன்று பரீக்ஷிக்க மேலே கூறப்பட்டுள்ள மலையாளம் லாட்டரிகேசில், சொல்லப்பட்டிருக்கும் தீர்மானமே சரியானதீர்மானம்.

ஒருசீட்டுபண்டு இந்தியன்கம்பேனிஸ்ஆக்ட்4-வதுபிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷன் என்று சொல்லப்படவேண்டுமானால் அந்த பண்டைச் சேர்ந்தவர்கள் (1) இருபதுபேர்களுக்கு மேலிருக்கவேண்டும். (2) அவ்வளவு பேர்களுக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பர சுதந்தரங்களும் கடமைகளுமிருக்கவேண்டும். (3) அல்லது கட்டுப்பட்டு பாத்தியப்படவேண்டிய விஷயங்களில் எல்லோரும்சேர்ந்து பாத்தியப்படவேண்டியதாயிருக்கவேண்டும். (4) அல்லது பாத்தியதைகளை அல்லது சுதந்தரங்களை அனுபவிக்கவேண்டிய விஷயங்களில் எல்லோருக்கும் பாத்தியமிருக்கவேண்டும். இந்த அம்சங்களை உடைத்தாயிருக்கும் பண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

பிரஸ்தாபபண்டு வியாஜ்ஜியத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற கரார்நாமாவைப்பார்த்தால், அதில் சொல்லப்பட்டிருக்கும் இருவர்கள் மற்ற மெம்பர்களால் நியமிக்கப்பட்ட ஏஜண்டுகளாகக் காணப்பட்டபோதிலும் கரார்நாமாவை முழுதிலும் வாசித்துப்பார்த்தால் அவர்களே இந்தப்பண்டிற்குச் சொந்தக்காரர்கள் என்று தெரியவருகின்றது. ஆகையால் இந்தப்பண்டு இந்தியன்கம்பேனிஸ் ஆக்ட் 4-வதுபிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷனாகமாட்டாதென்றும், இந்தப்பண்டு ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை யென்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

புல் பென்சார் அபிப்பிராயம் கூறியபின்னர் இந்த அப்பீலை மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன், மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் ஆகிய இருவர்களும் விசாரணைசெய்து செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

N. B. இந்தக்கேஸ் நம்முடைய சென்னைராஜதானிக்கு முக்கியமானகேஸ். சீட்டுப் போடுவதற்குச் சேரவேண்டியதாயிருந்தால் இருபதுபேர்களுக்குமேல் சேரவேண்டும்; சேர்ந்தமெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் பரஸ்பர சுதந்தரமிருக்கவேண்டும்; யாராவது ஒருமெம்பர் பணம்கொடுக்கத் தவறிப்போய்விட்டால் எல்லோரும் சேர்ந்து பிராதுசெய்யவேண்டும். ஏதேனும் கடனுக்குப் பாத்தியப்பட வேண்டியதாயிருந்தால் அந்தக் கடனுக்கு எல்லோரும் சேர்ந்து பாத்தியப்படவேண்டும். சீட்டெடுத்துக் கொண்டவன் எல்லோர் பெயராலும் பத்திரமாவது பிராமிசரி நோட்டாகிலும் எழுதிக்கொடுக்கவேண்டும். இந்த அம்சங்களைப் பொருந்தியிருந்தால் அந்தப் பண்டு கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். அப்படிக் கில்லாவிட்டில் இது சம்பந்தமாகவந்த வியாஜ்ஜியங்கள் கோர்ட்டில் செலாவணியாகமாட்டாது. சாதாரணமாய் ஒருவன் அல்லது இரண்டு பேர் சேர்ந்து சீட்டுப்பிடித்து மற்றவர்களைச்சேர்த்துக்கொண்டு ஒவ்வொரு சீட்டு சமயத்திலும் பணம்வசூல் செய்து சீட்டுக்குலுக்கி சீட்டு வந்த பேர்வழிக்குப் பணம் கொடுத்துத் தங்கள் பேருக்கு மட்டிலும்பத்திரம் எழுதிக்கொண்டும், சீட்டுக்கட்டவேண்டியவன் சீட்டுக் கட்டத் தவறிப்போனால் தாங்கள் பணம் கையிலிருந்து கொடுக்கவும், வசூலித்துக் கொள்ளவும் ஆக இம்மாதிரி சகல சுதந்தரமும் சீட்டிற்குத் தலைமையா யிருந்து பிடிக்கிறவர்களைப் பொறுத்ததாயிருக்கும். சீட்டுப்பண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை.

ஜட்ஜிகள்:—சர் ஆர்னால்ட் வொயிட், சீப்ஜஸ்டிஸ். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

வீரசூரப்ப நாயனி—(வாதி) அப்பீல்வாதி.

V. எர்ரப்பநாயுடு வகையறு (1, 4 முதல் 18 பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—வார்சுக் கிரமத்தில் புத்திரன் அடைந்த பாகிக்கக்கூடாத எஸ்டேட்டின்பேரில் தகப்பன்பட்ட சன்மார்க்கக் கடன்களுக்காக டிக்கிரியை நிறைவேற்றி ஜப்திசெய்து விற்கலாமா?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—பாகலூர் எஸ்டேட் என்பது சேலம் தாலூக்காவிலிருக்கிறது. அது பாகிக்கக்கூடாத பாளையம். ஜமீன்தார் தம்முடைய பாகலூர் பாளையத்தைக்கோத்தாநஞ்சப்பா என்பவரிடம் பெந்தகம்வைத்துப்பணம்வாங்கியிருந்தார். கடன் திருப்பிச்செலுத்தப்படவில்லை. கோத்தாநஞ்சப்பா பாளையத்தின்பேரில்1875-ம் ஆ௵த்திய 15-ம் நெம்பர் கிரமவியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரிபெற்றார். டிக்கிரிநிறைவேற்றப்பட்டு பாளையம் 1883-ம் ஆ௵ ஜப்திசெய்து ஏலம்போடப்பட்டது. ஏலத்தில் ஷை கோத்தாநஞ்சப்பாவே பாளையத்தை வாங்கிக்கொண்டார். பிறகு கோத்தாநஞ்சப்பா இறந்துபோய்விட்டார். இவருடையவார்சுகளாகிய 2 முதல் 5 பிரதிவாதிகள் ஷை பாளையத்தை, இந்த வியாஜ்ஜியத்தில் ஷைபாளையக்காரரின் இரண்டாவதுபெண்சாதியின் புத்திரனாகிய முதல் பிரதிவாதிகளுக்குக் கிரயம் செய்தார்கள். பாளையக்காரர்1885-ம் ஆ௵ இறந்துபோய்விட்டார். அவருடைய முதல்பெண்சாதிக்குப்பிறந்தவும், அவருக்கு ஜேஷ்டபுத்திரனாகவுமிருக்கும் வாதி தமக்குச்சேரவேண்டுமென்றும், இப்போது அப்பாளையத்தைக் கிரயம்வாங்கி அனுபவித்துவரும் ஷை பாளையக்காரரின் இரண்டாவது மனைவிக்குப்பிறந்த புத்திரனை முதல் பிரதிவாதியாகவும் ஷை கோத்தாநஞ்சாப்பாவின் வார்சுகளாகிய 4 முதல்14 பேர்களையும் பிரதிவாதிகளாகவும் சேர்த்து சேலம் ஜில்லா சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

வாதிசொன்ன கக்ஷி:—(1) பாளையம் பாகிக்கக்கூடாதஜமீன்; சண்டையில் சகாயம்செய்ததற்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டது. ஆகையால் அதைப் பராதீனம் செய்யக்கூடாது.

(2) தகப்பனாராகிய இறந்துபோன பாளையக்காரருக்கு அந்தப்பாளையத்தை ஜீவதசையுள்ளபரியந்தம் அனுபவிக்கமட்டிலும் பாத்திய மிருக்கிறது.

(3) இறந்துபோன பாளையக்காரர் துன்மார்க்கச்செலவுகளுக்காகக் கடன்வாங்கினார். அக்கடன்களுக்கு எஸ்டேட்டு கட்டுப்படமாட்டாது.

(4) பாளையம் ஏலம்போடப்படுகிறபோது ஏல அறிக்கை நோட்டீசில் இந்த "எஸ்டேட்டில் பாளையக்காரருக்கு என்னபாத்தியதை அக்குயிருக்கிறதோ அதுமட்டிலும் ஏலம் போடப்படுகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாளையக்காரருக்கு இந்தப் பாளையத்தில் ஜீவதசையிலுள்ளபரியந்தந்தான் பாத்தியதையிருக்கின்றது. அவர் 1885-ம் வருஷத்தில் இறந்துபோய்விட்டார். அதன்பிறகு அந்த எஸ்டேட்டு எனக்குச் சேரவேண்டும்.

சப் கோர்ட்டார் தீர்மானம்:—பீஜப்பூர் அரசர்கள் இப்பாளையத்தை இறந்துபோன பாளையக்காரருடைய முன்னோருக்குக் கொடுத்ததுமுதல் வியாஜ்ஜியத் தேதிவரையில் இந்தப்பாளையத்தின் சரித்திரத்தைப் பூராவாய் ஆராய்ந்துபார்த்து இந்தப்பாளையம்பிரிட்டிஷ்கவர்ன்மெண்டாருக்குச் சண்டையில் உதவிபுரிந்ததற்காகவாவது அல்லது இனிமேல் உதவிபுரியும்படியாகவாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டதென்று தீர்மானிக்கப்போதுமான ருஜுவில்லை என்று முடிவுசெய்தார்கள். இந்தப் பாளையம் பராதீனம் செய்யப்படக்கூடாத பாளையம் என்று தீர்மானிக்கவும் ருஜுவில்லை என்று தீர்மானித்தார்கள். ஏனெனில், நீண்டகாலமாய் இறந்துபோன பாளையக்காரர் காலத்திலும் அவருடைய முன்னோர்காலத்திலும் பாளையத்தைச் சேர்ந்த சில கிராமங்கள் பராதீனம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. பராதீனம் செய்யப்பட்ட கிராமங்களைப் பெற்று அனுபவித்து வருகிறவர்களில் சிலரும் இந்த வியாஜ்ஜியத்தில் சாக்ஷியம் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பாளையம் பராதீனமே செய்யப்படுகிறதில்லை என்பது ஆதிமுதல் இப்பாளையத்தில் அனுஷ்டித்துவந்த வழக்கமென்று வாதி சொல்லுகிறார். ஒருவழக்கம் ருஜுப்படவேண்டுமானால் வைத்தினாதா V. அப்பு (இ. லா. ரி. 9. சென். 44) பிரயிச் V. பிரௌன் (இ. லா. ரி 14. சென். 420) ஆகிய இந்தக் கேஸ்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி புராதீனமாயும், நிச்சயமாயும், சிறிதும் மாறுதபடியும், நியாயமாயுமிருப்பதாய் ருஜுப்படுத்தவேண்டும். ஆனால் இந்த எஸ்டேட்டில் அடிக்கடிபராதீனங்கள் செய்யப்பட்டிருக்கின்றவென்று வியக்த்தமாய் ருஜுப்படுகின்றது. இறந்துபோன பாளையக்கார் துன்மார்க்கச்செலவுகளுக்காகக் கடன்வாங்கினதாகவும் ருஜுப்படவில்லை. ஆகையால் இந்தப்பாளையம் சாதாரணமான பாகிக்கக்கூடாத எஸ்டேட்டாக விருந்தபோதிலும் பராதீனம் செய்யப்படக்கூடாத எஸ்டேட்டல்லவென்று சப் கோர்ட்டார் முடிவுசெய்து வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் R. சடகோபா சாரியார் வாதி தரப்பிற்கும், C. ராமசந்திரராவ் சாகிப் பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—பராதீனம் செய்யப்படக்கூடாத எஸ்டேட் அல்லவென்று சப் கோர்ட்டார் தீர்மானித்திருப்பது சரியே.

முத்தய்யன் செட்டி V. சங்கிலி வீரபாண்டிய சின்னதம்பியார் (9. இ. அ. 128) கேசில் வார்சுக்கிரமத்தில் புத்திரன் அடையும் எஸ்டேட்டின்பேரில் தகப்பன்பட்ட துன்மார்க்கக்கடன்களல்லாத கடன்களுக்காக டிக்கிரியை நிறைவேற்றி ஜப்திசெய்து விற்பனைசெய்யலாமென்றும், இந்த எஸ்டேட் பாகிக்கப்படக்கூடாத எஸ்டேட்டாகவிருந்தபோதிலும் அப்படிச்செய்யலாமென்று பிரிவி கவுன்சிலர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் 1882-ம் ஆ௵-ம் மேமீ செய்யப்பட்டது. இந்தப்பாளையம் 1883-ம்ஆ௵ ஏலம்போடப்பட்டது. பாளையக்காரர் கடன்வாங்கினது துன்மார்க்கச்செலவுகளுக்கல்ல. வாதி பிறக்காததற்குமுந்தியே இந்தக்கடன் பாளையத்திலிருந்து கொண்டுவந்தது. வாதியின் பாட்டனார் காலத்தில் சர்க்கார் பேஸ்குஷ் கட்டும்பொருட்டு இந்தக்கடனை வாங்கினதாகவும் ருஜுப்படுகின்றது. ஆகையால் இப்போது நாம் யோசிக்கவேண்டிய பிரஸ்னை ஒன்றுமட்டிலுந்தா னிருக்கின்றது. அது யாதெனில், ஏல அறிக்கை நோட்டீசில் கண்டபடி பாளையக்காரருக்கு அந்தப்பாளையத்திலிருந்த அக்குமட்டிலும் ஏலம் போடப்பட்டதா அல்லது முழுப்பாளையமும் ஏலம் போடப்பட்டதா என்கிற ஒரு பிரஸ்னைமட்டிலும் யோசனைசெய்யவேண்டும்.

முழுப் பாளையமும் பெந்தகம் வைக்கப்பட்டிருந்தது. முழுப் பாளையத்தின்மீதும் டிக்கிரி கொடுக்கப்பட்டது. முழுப்பாளையமும் ஏலம் போடப்பட்டது. முதல் பிரதிவாதி முழுப்பாளையத்தையும் வாங்கியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. 1859-ம் ஆ௵ -த்தில் பாஸ் செய்விக்கபட்ட சிவில் புரொசீஜர்கோடில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஏல அறிக்கையில் ஏலம் போடப்போகிறசொத்தில் "பிரதிவாதிக்குமட்டிலும் என்ன அக்கிருக்கிறதோ அதுமட்டிலும் ஏலம் போடப்படும்" என்று

எழுதப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பாளையம் ஏலம் போடப்படும் காலத்தில் 1877-ம்ஹு பாஸ் செய்யப்பட்ட சிவில் புரொசீஜர் கோட் ஊர்ச்சிதத்திற்கு வந்துவிட்டது. அதில் இம்மாதிரி எழுதவேண்டுமென்று சொல்லப்படவில்லை. இருந்தபோதிலும் சில கோர்ட்டுகளில் 1859-ம்ஹு-த்திய சிவில்புரொசீஜர் கோடில் சொல்லியபடியே பிரதிவாதிக்குமட்டிலுமிருக்கும் அக்கு ஏலம் போடப்படுமென்று ஏல அறிக்கை நோட்டீஸ்களில் மாமூலாய் எழுதிக்கொண்டு வந்தார்கள் என்று தெரியவருகின்றது. ஆகையால் கீழ்க் கோர்ட்டார் அபிப்பிராயப்படுவதுபோல இறந்துபோன பாளையக்காரருக்குள்ள சர்வ சுதந்தரமும் எல்லா அக்கும் ஏலம்போட்டு விற்பனை செய்யப்பட்டதென்று நாங்களும் அபிப்பிராயப்படுகின்றோம். மேலும் பாளையக்காரர் 1885-ம் ஹு-த்தில் இறந்துபோயிருக்க வாதி 12 வருஷம் வரையில் சும்மாவிருந்துவிட்டு 1897-ம் ஹு இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருப்பது அவர் (வாதி) தம்முடைய தகப்பனாரின் ஜீவதசை பாத்திய மட்டிலும் ஏலம்போட்டு விற்பனை செய்யப்பட்டதாக நினைத்ததற்கு அத்தாக்ஷியாயில்லை என்று சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—சர் ஆர்னல் வொயிட் சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

அபாக்கி கெகாடாதி—(வாதி) அப்பீல் வாதி.

கிருஷ்ணப்ப செட்டி—(பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—சாதாரண - அடமானம் பெற்றுக்கொண்டவன், அடமானச் சொத்திலிருந்து முழுக் கடனும் உளவடைத்துக்கொள்ள முடியாமற்போனால் அடமானம் வைத்தவனின் தேகத்தின் பேரில் போகலாமா ?

தீர்ப்பு:—சாதாரண அடமானம் அதாவதுசுவாதீன அடமானமல்லாத அடமானம் (Simple Morotgage) பத்திரத்தில், கடன்வாங்கிக் கொண்டவனுடைய தேகத்தின்பேரில் தொடரக்கூடாதென்று கக்ஷிக்காரர்கள் ஏற்பாடு செய்து கொண்டாலொழிய அடமானச்சொத்தால் முழுக்கடனும் வசூலாகாமற்போனால், அடமானம் வைத்துக்கொண்டவன் அடமானம்வைத்தவன் தேகத்தின் பேரிலும் தொடரலாம்.

ஒரு வாதி கொடுத்த பிரியாதியில் "என்னென்ன சகாயம் (Relief) கொடுக்கப்பட வேண்டுமென்று கோர்ட்டார் நினைக்கிறார்களோ அவை எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட் டிருந்தால் அந்த வாதிக்கு என்னென்ன சகாயம் கோர்ட்டாரால் கொடுக்கப்படவேண்டுமோ அவைகளை எல்லாம் கோர்ட்டார் கொடுத்தே தீரவேண்டும். இன்ன சகாயம் வேண்டுமென்று வாதி குறிப்பிட்டுக் கேட்கவில்லையே என்று கோர்ட்டார் நினைத்து வாதிக்குச்சட்டப்படிகொடுக்கப்படவேண்டிய சகாயத்தைக் கொடுக்க மறுதளிக்கக்கூடாது.

சேர்ந்த ஹிந்து குடும்ப சொத்துக்களைக் கட்டுப்படுத்தும்படியான பெந்தகம்வைக்க அக்குடும்பத்தின் மானேஜிங் மெம்பருக்கு அதிகாரமிருக்கின்றது. இப்படி பெந்தகம் பெற்ற ஒரு வாதி தான் கொடுத்த கடனைப்பெறுவதற்கு குடும்பச்சொத்துக்களின் பேரில் போகலாமே தவிர ஷை பெந்தகப்பத்திரம் எழுதிக்கொடுக்காத இதர மெம்பர்களின் தேகத்தின் பேரில் டிக்கிரி கொடுக்கும்படியாகக் கேட்கக்கூடாது.

வாதி, பிரதிவாதிக்கு 100 - க்கு வருஷத்திற்கு 7-வட்டிமேனிக்கு ஒரு பெருந்தொகை கடனாகக்கொடுத்திருந்தனர். கூடுதலான வட்டியை வருஷா வருஷம் ஆகஸ்ட்௴ பிரதிவாதி செலுத்தாவிட்டால்நிலுவைவட்டிக்கு 12-மேனிக்கு வட்டிபோட்டு சேர்த்துக்கொடுக்கவேண்டுமென்றும் வாதி பிரதிவாதிகள் ஏற்பாடு செய்துகொண்டார்கள். வட்டி நிலுவையில் விழுந்துபோயிருந்தும் வாதி வெகு காலம் வரையில் பிரதிவாதியைப் பணமும் கேட்கவில்லை. நிலுவையில் விழுந்தவட்டியைப்பெற வியாஜ்ஜியமும் கொண்டுவரவில்லை. பிறகு வியாஜ்ஜியும் செய்தார். இப்படி வாதி ரூ. 100-க்கு 12-மேனிக்கு வட்டிப்பணத்திற்கு வட்டி போட்டுத்தரவேண்டுமென்று வாதி இடையில் பிரதிவாதியைக் கேட்காததாலும் வியாஜ்ஜியம் தாமதமாய்க் கொண்டு வந்ததாலும் வாதி பத்திரத்தின்படி உயர்ந்த வட்டி போட்டு வாங்கவேண்டு மென்கிற எண்ணம் வாதிக்கிருந்ததேயில்லை என்று எண்ணமுடியாதென்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 9. சென். 491.)

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணியஐய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

உலகப்பன் அம்பலம்—(பிரதிவாதி) அப்பீல் வாதி.

சிதம்பரம் செட்டி--(வாதி) அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—குடிவார பாத்தியதையுடைய ஒரு குடி அந்நிலத்தில் ஒருகட்டடம் கட்டினால் அதை நிலன் சுவான்தார் இடிக்கக்கூடுமா ?

தீர்ப்பு:—குடிவாரபாத்தியதையுடைய ஒருகுடி அந்நிலத்திற்குப் பொருந்தாத ஒரு கட்டடம் கட்டிவருவது நிலசுவான்தாருக்குத் தெரியவந்தால் உடனே ஆக்ஷேபிக்க வேண்டியதுமன்றி வேலையைத் தடைபடுத்தும் பொருட்டு கோர்ட்டு நடவடிக்கைகள் நடத்தவேண்டும். அப்படிச் செய்யாமல் கட்டடத்தைக் கட்டும்படி விட்டுவிட்டுப்பிறகு கட்டடத்தை இடிக்கும் பொருட்டுகோர்ட்டாரிடமிருந்து உத்தரவுபெறுவதற்கு நில சுவான்தாருக்குப் பாத்தியமில்லை. இ. லா. ரி. 29. சென். 497.

Hon'ble C. SANKARA NAYAR, B.A., B.L., Advocate-General.

ஹானரபில் C. சங்கர நாயர் அவர்கள் பி.எ., பி.யல்., அட்வோகேட் ஜெனரல்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ணு அண்டு கோ.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ஹு ஏப்பிரல்மீ [4 பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம் :—ஹானரபில் மிஸ்டர் C. சங்கரநாயர் அவர்கள் B. A., B. L., அட்வொகேட் ஜெனரல்.	
2.	மார்வாடிகளும் ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளும்	129
3.	ஹைகோர்ட்டு வக்கீல்கள் மெசர்ஸ் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும், மிஸ்டர் P. R. சுந்தரமய்யர் அவர்களும், தேவஸ்தான சொத்துக்களில் பொது ஜனங்களுக்கிருக்கும் பாத்தியதைகளைக் குறித்து மதுரையில் செய்த உபன்னியாச சங்கிரகம் ...	130
4.	இன்சால்வென்சி கோர்ட்டாரால் சர் ஜியார்ஜ் அர்பத்நட்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள்	131
5.	கிரிமினல் பிராசிக்கியூஷன் பிரியாதி கவர்ன்மெண்டார் V. குற்றவாளி சர்ஜியார்ஜ் அர்பத்நட்	132
6.	கவர்ன்மெண்டு ஆர்டர்கள், போர்ட்ஸ் புரொசீடிங்ஸ்கள், ஜில்லா சர்க்கியுலர்கள் ...	133
7.	முக்கியமான பிரிவுகளும் அவைகளின் வியாக்கியானங்களும்	138
8.	லாயரும் கக்ஷிக்காரர்களும்	143
9.	நம்முடைய எழுத்துக்கூலி	150
10.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	151
11.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்	153
12.	சென்னபட்டணம் ஹைகோர்ட்டு 1907-ம் முதல் இரண்டாவது கிரிமினல் செஷன்ஸ் ...	163
13.	கடிதங்கள்	,,
14.	பலதேச வர்த்தமானங்கள்	166

நிரந்தரமான

கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்தனுப்புவோர்க்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனைவருடம் ஆதரித்துவருகிறார்களோ அத்தனைவருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்றயாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால், வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்டஞானம்நிறைந்த இந்த கெஜெட்விஷயமாகப் பெருமுயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானுல் பென்ஷனைப்போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100-சந்தாதாரர்களை ஒருவர் சேர்ப்பாரானுல் வருடமொன்றுக்கு 40-ரூபாய் சம்பாத்தியமுடையவர்களாவார்கள்.

இந்திய சட்ட கெஜெட் விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 25 கையொப்பங்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கும் கனதனவான்களுக்கும் ரூ. 10-மணியார்டர்செய்து அனுப்பத்தயாராயிருக்கின்றோம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்ப போஸ்ட் கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கித் தபால் ஸ்டாம்பு ஒட்டாமலே நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார், மானேஜர்கள்,
இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,
37, நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, ஜியார்ஜ்டௌன்,
சென்னை.

விஞ்ஞாபனம்.

ஹானரபில் மிஸ்டர் சி. சங்கரநாயர் அவர்கள்.

இந்த கெஜெட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் பொட்டகிராப் படம் ஹானரபில் மிஸ்டர் C. சங்கரநாயர் அவர்களுடைய உருவப்படம். இவர் அநேக வருஷங்களாகச் சென்னை ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்திவருகின்றார். இவர் சிறந்த வக்கீல். அநேக பெரிய சிக்கலான வியாஜ்ஜியங்களை ஜெயித்துக் கொடுத்திருக்கின்றார். அமெரிக்காதேச சட்டத்திலும் இங்கிலாண்டுதேசச் சட்டத்திலும் மிகுந்த ஞானமுடையவர். இவர் இரண்டுமுறை ஹைகோர்ட்டு ஆக்டிங் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மிகுந்த தேசாபிமானி. காங்கிரஸ் மகா சபைக்குச் சபா நாயகராயிருந்தனர். ஆங்கிலேயரின் தயவு தாக்ஷணியத்தை எதிர் பாராமல் அபிப்பிராயம் கூறும் தன்மையுடையவர்.

சென்ற ஆகஸ்ட்டுமீ சஞ்சிகையில் இவருடைய ஆயுள் விருத்தாந்தத்தை எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

நிருபநேயர்கட் குறிக்கை.

K. R. சேதுராமராவ்:—சென்ற மார்ச்சுமீ கெஜெட்டின் விஞ்ஞாபனப் பக்கத்தில் மிஸ்டர் சிவசுப்பிரமணிய பிள்ளை என்பவருக்குத் தெரிவித்திருக்கும் விடையைத் தயவு செய்து பார்க்கவும்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ஞு ஏப்ரல்மீ [பாகம் 4.

MARWARI MONEY LENDERS AND DECISIONS OF JUDICIAL TRIBUNALS.

மார்வாடிகளும், ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளும்.

கிருஷித்தொழில் செய்கிறவர்கள் தங்கள்தொழிலை நடத்துவதற்குப் போதுமான பண ஐவேஜியற்றுச் சாவுகார்களிடம் தங்கள் நிலங்களை அடமானம் வைத்து அபார வட்டிக்குக் கடன்வாங்கி கஷ்டத்திற்குள்ளாகிக் கடைசியில் தங்களுக்குச் சீவன ஆதாரமாகிய நிலத்தையே இழந்துவிடுகிறார்கள் என்று பரிதாபப்பட்டு, காருண்யத்துடன் இப்போது சிலகாலமாகக் கிராமாந்தரங்கள் தோறும் கோவாப்பரேட்டிவ் கிரடிட்சொசைட்டிகளும், விவசாயபாங்கிகளும் ஏற்படுத்தி அவைகளுக்கு மிகுந்த சொற்பவட்டிக்குக் கடன்கொடுத் துதவிவரும் பரோபகாரச் சிந்தையுடைய கவர்ன்மெண்டார் வடதேசத்திலிருந்து சென்னைக்குவந்து ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிவரும் அட்டைகள்போலொத்த மார்வாடிகளின் அக்கிரம சம்பாதனையை அடக்க முன்வராமலிருப்பதேனோ? "அமீனா புகுந்த வீடும் ஆமை புகுந்த வீடும் அக்கவானம்" என்று ஒரு பழமொழியுண்டு. அதாவது, ஒருவீட்டில் ஜப்திசெய்யக்கோர்ட்டு அமீனா ஒருதரம் புகுந்தால் அந்தவீடு பிறகு முன்னுக்குவராதென்று எண்ணப்படுகின்றது. ஆமைபுகுந்த வீட்டில் ஆறு மாதம் வரையில் குடியிருக்கவேகூடாது; அதுபோல மார்வாடியுடன் எவன் ஒருவன் லாவாதேவிவைத்துக் கொள்ளுகின்றானோ அவன் கெட்டுப்போகிறதற்குக் காதல்வேண்டியதில்லை, கள்ளுண்டல் வேண்டியதில்லை, களவாடல்வேண்டியதில்லை. இந்த மூன்று துர்ச்செய்கைகளும் ஒருவனிடம் குடிகொண்டிருந்தால் அவனும் அவன் குடும்பத்தாரும் எவ்வளவு க்ஷேமத்திலிருப்பார்களோ அவ்வளவுக்ஷேமத்திலிருப்பான் மார்வாடியுடன் லாவாதேவிசெய்கிறவன்! ஐசுவரியவந்தனுயிருந்தபோதிலும் சமயாசமயங்களில் பணமுடைபுண்டாகிக் கடன் வாங்குவது எந்தேசத்திலும் சகஜமானகாரியம். ஜனங்கள் பணமுடைப்படுகிறார்களே இந்தச் சமயத்தில் நாம் என்னவட்டிகேட்டாலும், எப்படி எழுதிக்கொடுக்கச்சொன்னாலும் எழுதிக்கொடுத்துவிடுவார்களென்று தகாதபடி தங்களுடைய செல்வாக்கை (Undue influence) ப்பிரயோகப்படுத்தி 100-க்கு மாதம் ஒன்றுக்கு 5 ரூ. வட்டிமேனிக்கும், 6 ரூ. வட்டிமேனிக்கும் மார்வாடிகள் மிகுந்த கடுமையான வட்டி கேட்பது சிறிதும் பொதுஜன க்ஷேமத்தை நாடிய காரியமல்ல. இவர்கள் கடன்கொடுக்கும் தொழில்செய்துவருவதால் இவர்களிடம் ஜனங்கள்வந்து கடன் கேட்கிறார்கள். ஆகையால் இவர்கள் செய்யும் தொழில் மற்ற வியாபாரங்களைப்போல ஒரு பகிரங்கமான தொழில்; ஆகாராதி தானியங்களை வியாபாரிகள் அக்கிரம விலைக்கு விற்று வந்தால் கவர்மெண்டார் பிரவேசித்துத் தடுப்பதற்குச் சட்ட ஆதாரமிருக்கின்றது. அதுபோல் இந்த மார்வாடிகள் அக்கிரமவட்டிக்குக் கடன்கொடுப்பதையும் தடுக்கலாம். இந்தமார்வாடிகளுடன் செய்துவரும் லாவாதேவியால் அனேககுடும்பங்கள் இச்சென்னையில் நசித்துப்போகின்றன. மார்வாடிகள் இப்படி அக்கிரமவட்டிக்குக் கடன்கொடுத்துவருவதற்கு ஒரு காரணமும் சொல்லுகின்றார்கள். அது யாதெனில், அவர்கள் தாங்கள்கொடுக்கும் கடனுக்கு யாதொரு பொருளாயும் ஈடாகப் பெற்றுக்கொள்ளாமல் நபரைமட்டிலும் நம்பி கடன்கொடுப்பதாகவும் அப்படிக் கடன் கொடுத்துவருவதில் சிலர் இன்சால்வெண்டு பெற்றுவிடுகிறார்கள் என்றும், அதனால் நஷ்டமடையும்படியாக நேரிடுகிறதென்றும் சொல்லுகின்றார்கள்; கடன் வாங்கிக்கொண்ட பணத்தைத் திரும்பிச் செலுத்துவதற்கு ஐவேஜியும் யோக்கியதையும் அற்றவர்களுக்கு மார்வாடிகள் ஏன் கடன்கொடுக்கவேண்டும்? தங்களுடன் லாவாதேவி

செய்துவருகிறவர்களில் இரண்டொருவர் இன்சால்வெண்டு பெற்றுவிடுகிறார்கள் என்றும், அவர்கள் இன்சால்வெண்டு பெற்றுக்கொண்டதால் தாங்கள் இழந்துவிடுகிற நஷ்டத்தை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் மற்ற பற்று வரவுக் காரர்களை, அரிச்சந்திரனைப் படாதபாடு படுத்திவந்த நக்ஷத்திரேசனைத் தோற்கடிக்கக்கூடிய கொடுங்குண முடைய மார்வாடிகள் அட்டையைப்போல் உறிஞ்சி அவர்களைத் தரித்திரர்களாகச் செய்துவிடுவது எவ்வளவேனும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. மார்வாடிகளா வலிய வந்து பணம் கொடுக்கிறார்கள்? கடன்வாங்குகிறவர்களல்லவா ஒன்றுக்குப்பத்தாய் எழுதிக்கொடுப்பதாய் அவர்களிடம்போய் கெஞ்சிப் பணம் கேட்கிறார்கள். அப்படியிருக்க, மார்வாடிகள் பேரில் குறை கூறுவதில் என்ன பலன் என்று சிலர் கேட்கக் கூடும். ஒருமனிதன் தனக்குச் சொந்தமாயுள்ள சுயார்ஜிதத்தை வேறொருவனுக்குக் கொடுத்துவிட்டால் அவனை அப்படிச் செய்யக்கூடாதென்று ஆக்ஷேபிக்கச் சட்ட மிடம்கொடுக்க மாட்டாது. ஆனால் பகிரங்கமாய்த் தொழில் செய்கிறவர்கள் நீதியை அனுசரித்துச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாதவரையில் அதில் பிரவேசிக்கக் கவர்ன்மெண்டாருக்குச் சர்வாதிகாரமு மிருக்கின்றது. மேலும் மார்வாடிகள் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்துவருகிறபடியால், ஏதேனும் சாமான் தேவையாயுள்ளவர்கள் கடைசில் போய் வாங்குவதுபோலப் பணம் தேவையா யிருப்பவர்கள் மார்வாடிகளிடம் சென்று கடன் கேட்கின்றார்கள். ஆகையால் இத்தேசத்திலுள்ள இதர தொழில்கள் போல இந்த மார்வாடிகள் செய்து வரும் கடன் கொடுக்கும் தொழிலும் யோக்கியதை பெற வேண்டுமானால் மற்றத் தொழில்களை நடத்துபவர்கள் எப்படி நீதியையும் நியாயத்தையும் தர்மத்தையும் அனுஷ்டித்துச் செய்துவருகின்றார்களோ அப்படியே இவர்களும் செய்துவரவேண்டும்; கடன் கொடுக்கும் தொழிலைச் செய்துவருபவர்கள் இந்த ராஜதானியில் மார்வாடிகள் மட்டிலுமல்ல, நாட்டுக்கோட்டைச் செடிமார்களும் கடன் கொடுத்துவருகின்றார்கள். மார்வாடிகள் கடன் கொடுத்துத் தவணை தவணையாகப் பெற்றுக்கொள்ளுவது போலவே சில காலத்திற்கு முந்தி நாட்டுக் கோட்டைச் செடிமார்களும் செய்து வந்தார்கள். ஆனால் 100-க்கு ஒரு வட்டிக்கு அதிகமாக அவர்கள் வட்டி கேட்கிறதில்லை. ரூபா 100 ஒருவன் இவர்களிடம் கடன் வாங்கினால் பத்துமாதக் கெடுவுக்குள் மாதம் ஒன்றுக்கு ரூபா 10 மேனிக்குச் செலுத்தும்படியாக ஏற்பாடு செய்துகொண்டு பத்து மாதத்திற்குள்ள வட்டியை முன்னடி எடுத்துக்கொண்டு பாக்கி ரூபா 90-ஐகொடுக்கிறார்கள். மார்வாடியிடம் ரூபா 100-கடன் வாங்கினால் அவர்கள் பெரும்பாலும் 100-க்கு ரூபா 3 மேனிக்கு வட்டிபோட்டு 20-மாதத் தவணையில் செலுத்தும்படியாக 60 ரூபா கழித்துக்கொண்டு ரூபா 40 கையில் கொடுப்பதாகத் தெரியவருகிறது. ரூபா 40 பெற்றுக்கொண்டதற்கு ரூபா 100 செலுத்துவதென்றால் இதை விட கடன் வாங்குகிறவன் கெட்டுப்போவதற்கு வேறென்ன ஏதுக்கள் வேண்டும்? இப்படி மார்வாடிகளிடம் தப்பித் தவறி சிக்கிக்கொண்டவர்கள் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு தலை எடுப்பதற்கு ஏதுவில்லாமற் போய்விடுகிறது. மார்வாடிகள் இவ்வளவு அக்கிரமவட்டி கேட்டுப் பணம் சம்பாதிக்கிறார்களே இவர்களாவது பணக்காரர்களாய் விடுகிறார்களா வென்றாலோ அந்த பாபத்தும் பூஜ்ஜியம்! அக்கிரமமான சம்பாதனையைக்கடவுள் சகித்துக்கொண்டிருக்கமாட்டார். அக்கிரமமாய்ச் சம்பாதிப்பவர்கள் தற்காலம் க்ஷேமமாயும், சந்தோஷமாயுமிருக்கலாமே தவிர எப்போதும் அப்படியிருக்க முடியாதென்பது ஈசுவரனுடைய ஆக்ஞை; ஆதலால் மார்வாடிகள் இப்படி அக்கிரம வட்டி சம்பாதித்துக்கொண்டு வரும்போதே அவர்களுடன் லாவாதேவி செய்துவருகிறவர்களிற் சிலர் இன்சால்வெண்டு பெறுவதால் மார்வாடிகள் நஷ்டமடைந்து வருகிறார்கள். ஆகக்கூடி அவர்களுக்கு என்ன நேறு மென்றால், கிரமமாய் மாதம் ஒன்றுக்கு ஒரு வட்டி மேனிக்குக் கொடுத்தால் எவ்வளவுலாபம்கிட்டுமோ அவ்வளவுதான் கிடைக்கின்றது. ஆகையால் அவர்கள் கெட்ட பேர் எடுப்பதுதான் அவர்கள் கண்டபலன். வரவர கோர்ட்டார்களும் மார்வாடிகளுடைய கொடுமையை அடக்கிவரத் தலைப்பட்டுவிட்டார்கள். கடன் வாங்கினவனும் கடன் கொடுப்பவனும் என்ன ஒப்பந்தம் செய்துகொண்டாலும் அதில் கோர்ட்டார் பிரவேசிக்கச் சம்மதிக்காமல் ஒப்பந்தப்படி டிக்கிரி கொடுத்து வந்தார்கள். இப்போது தகாதவும் நியாயவிரோதமானவும் மனசாக்ஷிக்கு விரோதமானவுமான ஒப்பந்தங்களில் கோர்ட்டார் பிரவேசித்து ரத்துசெய்யும்படியாக இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் கோர்ட்டாருக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தைக் கோர்ட்டார் இப்போது பிரயோகப்படுத்திவருகின்றார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் சென்னையில் ஒரு சாவுகார் ரூபா7000-க்குஎழுதப்பட்டுள்ள ஒரு பிராமிசரி நோட்டின்பேரில் ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியமாடப் பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்தவர் ரூபா 871-தான் பெற்றுக்கொண்டதாக [illegible]ன்ஸ் கூற, சாவுகார் தான் ரூ. ஏழாயிரம் கொடுத்ததாகப் பிர[illegible] மாண வாக்குமூலம் கொடுத்தும், லாவாதேவி தொழில் செய்யும் மார்வாடி சாவுகார்கள் யாதொரு ஈடு அல்லது அடமானம்பெற்றுக்கொள்ளாமல் ஏழாயிரம் ரூபா பிராமிசரிநோட்டின்பேரில் ஒருக்காலும் கொடுத்திருக்க மாட்டார்கள் என்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு ரூ. 817 க்கு மட்டிலும் டிக்ரி கொடுத்தார்கள்; பம்பாய் ஹைகோர்ட்டில் ரூபாய் 100-க்கு வருஷத்திற்கு ரூ. 75 வட்டி மேனிக்கு ரூ. 500 கடன் கொடுத்த மார்வாடி வியாஜ்ஜியம் செய்ததில், பிரதிவாதி விசாரணைத் தேதியில் கோர்ட்டிற்கு வாராமற்போனபோதிலும் ஜஸ்டிஸ் மிஸ்டர் தேவர் (Daver-J) இந்தியன் காண்ராக்ட் ஆக்ட்டின்படி 19 A பிரிவின்படி வாதி பிரதிவாதிகள் செய்துகொண்ட ஒப்பந்தம் தகாத ஒப்பந்தமாயிருந்தால் கோர்டார் அதில் பிரவேசித்து ஒப்பந்தத்தை ரத்துசெய்யலாமென்று ஆதாரம் கூறி ஹைபிராமிசரி நோட்டு பிறந்தகால முதல் 100 க்கு வருஷத்திற்கு 24 ரூ. வட்டிமேனிக்கு எக்ஸ்பார்ட்டி டிக்ரி கொடுத்தார்.

Religious Endowments.

தேவஸ்தான சோத்துக்களில் போது ஜனங்களுக்கிருக்கும் பாத்தியங்கள்.

நாளது ஏப்ரல்மீ 10உ யன்று மதுரை சேதுபதி கலாசாலையில் மேல் மதுரை சப்ஜட்ஜி ம-ா-ா-ஸ்ரீ, சுவாமிநாதையரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் சென்னை "தர்மரக்ஷணசபை"யின் பொருட்டு ஓர் கூட்டம் கூடியது. அக்காலத்து அச்சபையின் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ, வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தமிழிலும் ம-ா-ா-ஸ்ரீ, பி. ஆர். சுந்தரமய்யரவர்கள் ஆங்கிலத்திலும் இவ்வித "தர்மரக்ஷணசபை" ஒன்று இருக்கவேண்டிய அவசியத்தையும், அச்சபையா லுண்டாகும் பிரயோஜனங்களையும் எடுத்துப் பேசிய பொழுது பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

இந்தியாவின் தென் பாகமாக, நமது இராஜதானியில் வட இந்தியாவைப் பார்க்கிலும் கோவில்களும், சத்திரங்களும் இன்னு மற்ற தர்மங்களும் அநேக மிருக்கின்றன. அவைகளிலிருந் துண்டாகும் வருமானம் ஏராளமானது. சில வருடங்களுக்குமுன் சென்னையில் ஓர் கமிட்டியார் கோவில்களிலிருந்து அடையும் வருமான மாத்திரம் 75 லக்ஷம் ரூபாய் என்று கணித்தார். இராஜாக்களாலும் ஜெமீன்தார்களாலும் இன்னுமிதர கனவான்களாலும் தர்மத்திற்காக அளிக்கப்பட்ட சொத்துக்களில் சிலபாகம் அவர்கள் சந்ததியார் மேற்பார்வையிலிருந்து வருகிறது. பெரும்பான்மை சொத்துக்கள் மடாதிபதிகள் தம்பிரான்கள் தர்மகர்த்தர்கள் அவர்களின் மானேஜ்மெண்டி லிருக்கிறது. இவர்கள் வசம்வந்த நாள்முதல் அநேக கோவில்களும் சத்திரங்களும் அடைபட்டாவது, அழிந்தாவது, ஈனஸ்திதியை அடைந்தாவது இருக்கின்றன. ரயில்வே ஏற்பட்ட காரணத்தினால் அனேக சத்திரங்கள் ஜனப்புழக்கமில்லாமல் உபயோகமற்றதாய்விட்டன. இந்நிலைமையடைந்த தர்மசிந்தனையோடு முன்னோர்களா லளிக்கப்பட்ட சொத்துக்களும் அதினின் றுண்டாகும் வரும்படிகளும் தர்மகர்த்தர்கள் என்று பெரும் பெயர் வகித்து ஜனங்களால் பூஜிக்கப்படும் தம்பிரான்களாலும் மடாதிபதிகளாலும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. சிலவிடங்களில் அளவற்ற திரவியம் உபயோகிப்பதற்கு நல்லவழி தெரியாமல் பூமியில் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில சொத்துக்களை இதரமனிதர்கள் தங்கள் வலிமையினால் சுயார்ச்சிதப் படுத்திக்கொண்டார்.

இவ்வித மோசங்களைப் பொது நன்மை கருதிய சிலர் இராஜாங்கத்தாருக்குத் தெரிவித்தால், அவர்கள் சிலர் மாத்திரந்தானே இது விஷயத்தில் கவலையெடுத்துக்கொண்டது, பெரும்பான்மையோர் இதைப்பற்றிக் கவனிக்கவில்லையென்றும் மதசம்பந்தமான விஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்றும் ஆக்ஷேபித்து அவர்களையே தங்கள் கோவில் காரியங்களை மேல்பார்க்கப் பழகும்படி விட்டுவிடுகிறார்கள். இம்மாதிரி இராஜாங்கத்தார் படுத்துக் கொள்வது தர்ம சொத்துக்களைக் கையாடி ஜீவிக்கும் அநேக பழம் பெருச்சாளிகளைக் கட்டவிழ்த்து விட்டதுபோ லாகிறது. 1870ஹு இதுவரை சென்னையில் அதிகாரம் செலுத்திய ஏழு கவர்னர்களி லொருவரேனும் கோயில்கள் நல்ல நிலைமையிலிருந்ததாகச் சொல்லக் கேட்டிரோம். இரண்டொரு முறை சென்னை கவர்ன்மெண்டார் இந்திய கவர்ன்மெண்டிற்கு இவ்விஷயத்தைப்பற்றித் தெரிவித்த பொழுதும் அவர்கள் கவனிக்கவில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் இவ்விஷயங்களில் பிரவேசித்துச் சீர் திருத்தங்கள் செய்வாரென்றும், புதிய சட்டங்கள் ஏற்படுத்தித் தர்மசொத்துக்களுக்குப் பொறுப்பாயுள்ள டிரஸ்டிகளை ஒருவித கட்டுக் குட்படுத்துவாரென்றும் எண்ணுவது வீணைப் முடியும். இவர்களைக் கோர்ட்டுக்கிழுத்துத் தக்க நியாயம் புகட்ட எண்ணி சிலர் முன்வந்து வேலை செய்ய எத்தனித்தால் நம்மால் அவர்கள் அவரைக் காட்டிக்கொடுத்துப் பின் வாங்குவதே யல்லாது பொருளுதவி செய்வாரொருவருமில்லை. ஏனெனில், பல மனிதர்கள் ஒன்றுசேர்ந்து பொது நன்மைக்குழைக்கும் பரோபகார சிந்தை நம்மவர்கட்கு இன்னும் புலப்படவில்லை. யாதேனும் ஒரு கனவான் பொருள் செலவு செய்து வழக்கிட்டால் இவர் ஏதோ தமக்கும் தர்மகர்த்தர்களுக்கும் உண்டான பகைமையினால் இவ்விதம் செய்தாரென்று கோர்ட்டார் நிர்மானம் கொண்டு இவர் பக்கம் பிரதிகூலம் செய்து சிலவேளைகளில் இவரையே செலவு தொகையும் கொடுக்கும்படி செய்தார்கள்.

இவ்வித கஷ்டங்கள் நேரிடாதபடி "தர்மரக்ஷணசபை" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தர்மகாரியங்களை வழுவற நடத்தப்படவேண்டுமெனவும், தர்மசொத்துக்கள் பிறரால் அபகரிக்கப்படாது பாதுகாக்கவேண்டுமெனவும், அச்சொத்துக்களை அபகரிக்கப்பட்டவர்களைக் கோர்ட்டுக்கிழுத்துத் தண்டிக்கவும் சில கோவில்களில் செலவுபோக வரும்படிகளைச் சாஸ்திரங்களில் கூறியபடி இதர நல்வழியில் உபயோகப் படுத்தவும் இச்சபை யொன்றிருப்பதுவே மோசக்காரர்களுக்கு ஓர் திகிலையூட்டும். இச்சபை தர்ம சொத்துக்களுக்குப் பொறுப்பாயுள்ள டிரஸ்டி முதலானவர்கள் செய்யும் ஒவ்வொரு வேலையையும் அதிக ஜாக்கிரதையோடுமேல் பார்க்கும் அவர்கள் தம் வேலையினின்றும், தவறுங் காலத்து தக்கபுத்திமதி சொல்லியாவது, அப்படி புத்திமதி கேட்கப் பிரிய மில்லாமல் தாங்கள் எண்ணுவதே சட்டம் என்று நினைக்கும் அறிவிலிகளைக் கோர்ட்டு மூலமாக நியாயம் கற்பித்தாவது தர்மகாரியங்களைப் பாதுகாக்கும்.

ஜனங்கள் கோவிலுக்குச் சென்று பூஜை முதலிய கைங்கரியங்கள் நடத்தி வீட்டுக்குத்திரும்பி விடுவதைத்தவிர தமக்கும் கோவிலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று நினைக்கிறார்கள். கோவில் மானேஜ்மெண்டில் எவ்வித ஊழல்க ளிருந்தபோதிலும் அவை நம்மைப் பொறுத்த காரியமன்று; நாம் அவைகளைப் பற்றிக் கவனிக்க வேண்டிய தவசியமில்லை; என ஆறுதல் செய்துகொள்ளுகிறார்கள். கோவிலுக்குப்போகும் ஒவ்வொருவரும் இவ்விதம் நினைத்துவிட்டால் நாம் அதிக மோசம்போய்விடுவோம்.

CHARGES FRAMED AGAINST SIR GEORGE ARBUTHNOT IN THE INSOLVENCY COURT.

இன்சால்வென்சி கோர்ட்டாரால் சர். ஜ்யார்ஜ் அர்பத்நட் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள்.

மெஸர்ஸ் அர்பத்நட் கம்பெனியார் இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ள செய்துகொண்டமனு சென்ற மார்ச்சுமீ 25உ முதல் இன்சால்வென்சிகோர்ட்டு கமிஷனர் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களால் விசாரணைசெய்யப்பட்டுவருகின்றதென்று சென்றமாதம் கெஜெட்டில் தெரிவித்திருந்தோம். சென்ற மார்ச்சுமீ முதல் ஏப்ரல்மீ 26உ வரையில் தொடர்ந்தேர்த்தியாக விசாரணை நடந்துவந்திருக்கிறபடியால் விசாரணை முழுவிபரத்தையும் எழுதி அதைமட்டிலும் பிரத்தியேகமாய் மேமீ சஞ்சிகையாக விடுகிறதாக உத்தேசம் செய்திருக்கிறபடியால், இம்மாதகெஜெட்டில் அந்த விசாரணையைக்குறித்த விபரங்களை அறிவிக்கவில்லை. நிற்க, விசாரணையில் பெரும்பாக முடிந்துபோய் இருதரப்பு பாரிஸ்டர்களும் அட்ரஸ் பேசிவிட்டார்கள். ஆனால் அர்பத்நட்டாருக்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் நேப்பியர் கடன்காரர்கள் தரப்பு பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன்பேசின அட்ரஸிற்கு இன்னும் பதில்கூறவில்லை. இப்படியிருக்கும் தருவாயில் கமிஷனர் ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரவர்கள் இன்சால்வென்சி ஆக்ட் 11, 12 விக்டோரியா 21 வது அதிகாரம் 50-வது பிரிவின்படி சர் ஜியார்ஜ் அர்பத்நட்டின்பேரில் அடியிற்கண்ட குற்றப் பத்திரிகை வாசித்திருக்கின்றார்.

11, 12 விக்டோரியாசட்டத்தின் 29-வது அத்தியாயம் 50 வது பிரிவின்படி மனுதார் சர் ஜியார்ஜ் அர்பத்நட் அடியிற்கண்ட குற்றஸ்தாபனைகளுக்கு ஜவாப்பு சொல்லும்படியாக உத்தரவுசெய்யப்படுகின்றார். மேலே சொல்லப்பட்ட சர் ஜியார்ஜ் அர்பத்நட் தம்முடைய நிலைமையை மறைக்கவேண்டுமென்கிற மோசக் கருத்தான எண்ணத்துடனே அல்லது இன்சால்வென்ட் ஆக்ட்டின் கருத்துக்களை மோசப்படுத்தவேண்டுமென்கிற கருத்துடனே அடியிற்கண்ட பொய்க்கணக்குகள்வைக்கும்படி செய்திருந்தார். (a) அர்பத்நட்கம்பெனியின் ஹோம் இன்வெஸ்ட்மெண்டு அக்கவுண்ட், (b) அர்பத்நட் ஹோம் இன்வெஸ்ட்மெண்ட்டு அக்கவுன்ட் (c) வகையரு குறிப்பிட்ட பாக்கி கட்டின ஜாப்பிதாக்கள்

(Balance Sheets) (II) 'பிரைவேட்லெட்ஜர்" என்கிற கணக்குப்புத்தகத்தில் அடியிற்கண்டதொகைகள் தமக்கு வரவேண்டுமென்று எழுதும்படிச் செய்திருந்தார். (a) ஹாஜி முகம்மது ஈசாக்கிடமிருந்துவரவேண்டிய ரூ. 203103; A. மெகன்சியிடமிருந்து வரவேண்டிய ரூ. 167666, (III) கோர்ட்டில் தாக்கல்செய்யப்பட்டிருக்கும் G. எக்சிபிட்கணக்குகளில் 1905-ம் ௵ டிசம்பர் மாதத்தில் 5 லக்ஷரூபாய்க்குத் தப்பானகணக்கு ஜோடித்து எழுதிவைக்கும்படி செய்திருக்கிறார். அர்பத்நட் கம்பெனியின் கடன்காரர்களைச் சமமாய்நடத்தாமல் ஒரு கடன்காரராகிய அர்பத்நட் லாதாகம்பெனியிருக்குமட்டிலும் 1906-ம்௵ அக்டோபர்௴ 20௳ யன்று அவர்களுக்குச் சேரவேண்டிய 506 ரூபாயையும் மோசமான கருத்துடன் கொடுக்கும்படி செய்திருக்கிறார். ஈக்குவிட்டபில் அசுயரன்ஸ் கார்ப்பொரேஷனுக்குச் செலுத்தவேண்டிய ரூ. பதினாயிரத்திற்கு 1906-ம் ௵ அக்டோபர்௴ 20௳ யன்று, தம்முடைய கம்பெனி வசமிருந்த கவர்ன்மெண்டு பிராமிசரிநோட்டுகளை டிரான்ஸ்பர் செய்திருக்கிறார். அர்பத்நட்கம்பெனியார் அர்பத்நட் இண்டஸ்டிரியல் கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக அர்பத்நட்கம்பெனிக்குச் சொந்தமான ரூபா 50 ஆயிரம் பெறுமான கவர்ன்மெண்டு பிராமிசரிநோட்டுகளை 1906-ம் ௵ அக்டோபர்௴ 20௳ யன்று மோசக்கருத்துடன் டிரான்ஸ்பர் செய்துவைத்திருக்கிறார். இதுவுமன்றி அதேதேதியில் ரூ. 50 ஆயிரம் அந்த இண்டஸ்டிரியல் கம்பெனியாருக்கு ரொக்கம் கொடுத்திருக்கிறார். (a) அர்பத்நட்கம்பெனியார் இன்சால்வெண்டு மனுகொடுத்தபின் அவர்களுடைய சொத்துக்களை கடன்காரர்கள் பங்கிட்டுக்கொண்டால் அவர்களுக்கு கிரமமாய் கிடைக்கக்கூடியதொகையை குறைக்கவேண்டுமென்கிற மோசக்கருத்துடன் அர்பத்நட் கம்பெனியாருக்கு அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் என்கிற கம்பெனியிலிருந்த பங்குகளில் லக்ஷத்தி ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான 1500 பங்குகளை சர் ஜியார்ஜ் அர்பத்நட் 1904-ம் வருஷத்திலேயே அவருடைய மாப்பிள்ளைபேரில் டிரான்ஸ்பர் செய்துவைத்திருக்கிறார். (c) 1902-ம் ௵ முதல் 1903 வருஷம் வரையில் சர்ஜியார்ஜ் அர்பத்நட் அவருடைய பெண்சாதிக்கு அனுப்பினதாகப் பொருள்படும்படியாக 8682 பவுன் இங்கிலாண்டிற்கு அனுப்பியிருக்கிறார். சர்ஜியார்ஜ் அர்பத்நட் தம்முடைய மாமனார், விவாககாலத்தில் கொடுத்த சொத்துக்களில் அவருக்கிருந்த பாத்தியதையையும்மோசக்கருத்தான எண்ணத்துடன் பேரிரவலாக எழுதிவைத்திருக்கிறார். அர்பத்நட் கம்பெனியார் அர்பத்னட் இன்டஸ்டிரியல் கம்பெனியாரிடம் வாங்கியிருந்த முப்பதினாயிரம் ரூபாய் பெறுமான டிபன்சர்களை சர் ஜியார்ஜ் அர்பத்நட் தம்முடைய தங்கை பேரில் டிரான்ஸ்பர் செய்துவைத்திருக்கிறார். சர் ஜியார்ஜ் அர்பத்நட்டிற்கு இங்கிலாண்டிலிருக்கிற விட்டையும் மோசக்கருத்தான எண்ணத்துடன் பெந்தகம் வைத்திருக்கிறார்.

இவைகள்தான் சர் ஜியார்ஜ் அர்பத்நட் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள். இதன் பிறகு கோர்ட்டாருக்கும் பாரிஸ்டர்களுக்கும் நடந்த சம்பாஷணைகளை எடுத்து எழுதுகின்றோம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணி அய்யர்:—இவைகள்தான் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டின்பேரில் சாட்டியிருக்கும் குற்றங்கள். மிஸ்டர் நேப்பியர்! எப்போது விசாரணை வைத்துக்கொண்டால் உமக்கு சௌகரியமாயிருக்கும் ?

மிஸ்டர் நேப்பியர் :—இங்கிலாண்டு கோர்ட்டார் எப்போது விசாரணை வைத்துக்கொள்ளுகிறார்களோ அதையும் ஆலோசனைசெய்யவேண்டும்.

கமிஷனர் :—உமக்கு வேண்டிய டயம் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

நேப்பியர்:—சர்ஜியார்ஜ் அர்பத்நட் தங்களுடைய உத்தரவின்றி இந்த ஊரைவிட்டுப் போகக்கூடாது என்பது நிச்சயம். இவ்விடத்தில் கோர்ட்டு மூடியிருக்கும் சமயத்தில் சர்ஜியார்ஜ் அர்பத்நட் இங்கிலாண்டிற்குப் போக அனுமதி கொடுக்கத் தங்களுக்கு இஷ்டமிருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. இப்போது இங்கிலாண்டில் இன்சால்வெண்டு கோர்ட்டு விசாரணை நடந்து வருகின்றது. ஆகஸ்ட்டு௴த்தில்தான் அவ்விடத்தில் கோர்ட்டு மூடுகின்றார்கள். ஆகையால் சர் ஜியார் அர்பத்நட் இங்கிலாண்டிற்குப்போய் அதிகாரிகளிடம் அஜராவதற்கு இப்போது வசதியாயிருக்கிறது.

கமிஷனர் :—ஜாமின் கொடுப்பதற்கு சர்ஜியார்ஜ் அர்பத்நட்டிற்குக் கஷ்டமாயிருக்குமென்று நம்புகின்றேன்.

நேப்பியர்:—அது ஜாமீன் தொகையைப் பொறுத்தது.

கமிஷனர்:—இரண்டுபேர்கள் தனித்தனி ரூபா 5-ஆயிரத்திற்கு ஜாமீன் கொடுக்கவேண்டும். அதிகத்தொகை கேட்பதில் பிரயோஜனமில்லை.

நேப்பியர்:—ஜாமீன் கொடுக்கிறோம்.

கமிஷனர்:—ஜாமீன் கொடுப்பவர்கள் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டைக் கோர்ட்டார் விரும்புந்தினத்தில் ஆஜர்படுத்தவேண்டும்.

மிஸ்டர் ஆஸ்பர்ன்:—இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட தொகைக்கு ஜாமீன் தொகை மிகக் கேவலமாயிருக்கின்றது.

கமிஷனர்:—சர்ஜியார்ஜ் அர்பத்நட்டின் சக்திக்கு மிஞ்சின தொகை கேட்கக்கூடாது. அவருடைய இப்போதைய நிலைமையையும் கவனிக்கவேண்டும். ஆகஸ்ட்டு௴ 15௳ வரையில் விசாரணை தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றது.

இத்துடன் இன்சால்வெண்ட் கோர்ட்டு விசாரணை தற்சமயம் முடிவு பெற்றது.

லோக்கல் கவர்ன்மெண்டார் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டைப் பிராசிக்கியூட் செய்யும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள்.

சர் ஜார்ஜ் அர்பத்னட் ரிமாண்டு ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இவர்மீது சர்-எஸ்-சுப்பிரமணிய அய்யர் அவர்கள் குற்றங்கள் ஏற்படுத்தினபின் சென்ற திங்கட்கிழமையன்று மிஸ்டர் இ-பி-பவுலும், மெஸர்ஸ்ஷார்ட் அண்டு பீவிஸ் கம்பெனியாரும், மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் W. E. கிளார்க்கு முன்பு கவர்ன்மெண்டார் தரப்பில் ஆஜராகி ஹைகோர்ட்டில் ஜாமீன்பேரில் விடப்பட்டிருக்கும் சர் சார்ஜ் அர்பத்நட்டை அடியில் குறிக்கப்பட்ட மூன்று குற்றங்களுக்காக அரஸ்டுசெய்ய வாரண்டு பிறப்பிக்கவேண்டுமென்று பிரியாது கொடுத்தார்கள். அதாவது:—

முதல் குற்றம்:—அர்பத்னட் கம்பெனியில் ராஜா வி. கிருஷ்ணபகதூர் என்பவர் பணம்கட்டிவைத்திருந்தார். அவர் தான் கட்டிவைத்திருந்த $3\frac{1}{2}$ லக்ஷ ரூபாய்க்கு அக்டோபர்மாதம் 9 தேதி கொடுக்கவேண்டிய வாய்தா போடப்பட்டிருந்தது. ராஜா அவர்கள் கெடுவுதினம் வந்ததும் தன்னுடைய பணத்தைத் திருப்பிக்

(இதன் தொடர்ச்சி 1..)

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1907-ம் ௵-ம் மார்ச்சு௴ 12௳ G. O. நெ. 424 M.

தஞ்சாவூர் முனிசிபாலிட்டி சேர்மன் அனுப்பியிருக்கும் 1907-8-ம் வருடிய வரவுசெலவு திட்டக்கணக்கு ரிமார்க்குடன் தாக்கல் செய்துகொள்ளப்பட்டது. வரவு ரூ. 124480 ; செலவு ரூ. 1,1:810.

———16௳ G. O. நெ. 329 L.

சென்னை ராஜதானியின் ஜெனன மரணவிபர ஜாப்தா.

1906-ம் ௵ டிசம்பர்௴த்தில் சென்னை ராஜதானியிலுள்ள • ஜில்லாக்களில் ஜனனம் 89543. ஆண்—45549 ; பெண் 43994 ; மரணம் 92238 ; ஆண் 46616 ; பெண் 45622 ; நோயின் விவரம் :—காலரா. 10613, வைசூரி 2033, பிளேக் 74, சுரம் 30504, வயிற்றுளைவு 5000 ; சுவாச காசம் 2136, காயம 844, இதரகாரணங்கள் 40434.

முனிசிபாலிட்டிகளின் ஜாப்தா.

ஜனனம் 6921; ஆண் 3567; பெண் 3354; மரணம் 7205; ஆண் 3617; பெண் 3588. நோயின்விபரம்—காலரா 608, வைசூரி 37, பிளேக் 11, சுரம் 1267, வயிற்றுளைவு 1054, சுவாச காசம் 363, காயம் 58, இதரகாரணங்கள் 3807.

——1907-ம் ௵ பிப்ரவரி௴ 21௳ G. O. நெ. 359 M.

1907-௵ 8௳ ஸ்ரீவில்லிபுத்தூர் முனிசிபாலிட்டியின் வரவு செலவு திட்டக்கணக்கு வரவு ரூ. 30470; செலவு ரூ. 9800.

———14௳ G. O. நெ. 303 M.

கொடைக்கானல்மலைமுனிசிபாலிட்டி 1907—8-௵த்திய வரவு செலவு திட்டம். வரவு:—ரூ. 13740 ; செலவு ரூ. 12040.

———132 G. O. நெ. 284 M.

ஈரோடு முனிசிபாலிட்டி.

வரவு 29910 ; செலவு ரூ. 26790.

———122 G. O. நெ. 271 M.

தலைச்சேரி முனிசிபாலிட்டி.

வரவு ரூ. 64000 ; செலவு ரூ. 62240.

——— ஜனவரி௴ 25௳ G. O. நெ. 155 M.

பிளேக் செலவுகளுக்காகத் தலைச்சேரி முனிசிபாலிட்டிக்கு கவர்ன்மெண்டார் ரூ. 1200 சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இந்தத் தொகையை முனிசிபல் சேர்மென் 1907-ம் ௵ மார்ச்சு௴ 31௳க்குள் அக்கவுடண்ட் ஜெனரலிடமிருந்து பெற்றுக்கொண்டு ரிப்போர்ட்டு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்.

———பிப்ரவரி௴ 27௳ G. O. நெ. 404 M.

வேலூர் முனிசிபாலிட்டி.

வரவு ரூ. 92220, செலவு ரூ. 79500.

———மார்ச்சு௴ 1௳ G. O. நெம்பர் 425 M.

பெரியகுளம் முனிசிபாலிட்டி.

வரவு ரூ. 26310, செலவு ரூ. 23680.

———பிப்ரவரி௴ 27௳ G. O. நெம்பர் 406 M.

தஞ்சாவூர் முனிசிபாலிட்டியை சானிட்டரி கமிஷனர் பார்வையிட்டு அனுப்பிய ரிப்போர்ட்டின்பேரில் கவர்ன்மெண்டார் அடியிற் கண்ட ரிமார்க்குகள் செய்திருக்கிறார்கள்.

(1) தாக்கல் செய்துகொள்ளப்பட்டது.

(2) முனிசிபல் கவுன்சில்வசம் போதுமான பண ஐவேஜியில்லாதபடியால் சானிட்டரி கமிஷனர் பிரேரேபித்திருக்கிறபடி இந்நகரில் இப்போது கால்வாய்கள்கட்ட சாத்தியப்படமாட்டாது.

(3) சுடுகாட்டிற்காகப் புதியவிடங்கள் திட்டப்படுத்தித் தயாரிக்கப்பட்டபிறகு எந்தெந்த சுடுகாடுகளில் அதிகப்படியான சமாதிகள் ஏற்பட்டு சமீபத்தில் வசிக்கும் ஜனங்களின் சுகாதாரத்திற்கு அபாயகரமாயிருக்கின்றனவோ அவைகளை மூடிவிடுவதற்கு முனிசிபல் கவுன்சில் முயற்சிசெய்யவேண்டும்.

1907ம் ௵ மார்ச்சு௴ 13௳ G. O. நெம்பர் 483.

பத்திரப்பதிவு இலக்கா இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரேரேபித்தபடி 1907-ம் ௵ ஏப்ரல்௴ 12௳ முதல் திருநெல்வேலி ஜில்லா கள்ளிடைக்குறிச்சியில் ஒரு சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் ஏற்படுத்தும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

———மார்ச்சு௴ 6௳ G. O. நெம்பர் 426.

அடியிற்கண்ட போலிஸ் ஆபீசர்கள் போலிஸ் இலாக்காவில் செய்யப்பட்டுவரும் சீர்திருத்த ஏற்பாட்டின்படி போலிஸ் டிப்டி சூப்பிரன்டெண்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(1) ராவ்பகதூர் A. கிருஷ்ணசாமி அய்யர்.
(2) மிஸ்டர் P. M ஸ்வீனி.
(3) ராவ்பகதூர் B. ராமசாமி நாயுடு.
(4) ம-ள-ள-ஸ்ரீ, C. K. சுப்பிரமணிய அய்யர்.
(5) ராவ்பகதூர் P. பராங்குச நாயுடு.
(6) மிஸ்டர் மாக்வாக்லின்.
(7) ம-ள-ள-ஸ்ரீ, M. M. சுப்பய்யா.
(8) ம-ள-ள-ஸ்ரீ, N. அரங்கநாதராவ்.
(9) ம-ள-ள-ஸ்ரீ, V. இராமசாமி அய்யங்கார்.
(10) முகமது அப்துடின் சாகிப்பு.
(11) ம-ள-ள-ஸ்ரீ, T. வெங்கோபராவ்.
(12) ம-ள-ள-ஸ்ரீ, சேஷாத்திரி அய்யங்கார்.

அடியிற்குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் போலிஸ் டிப்டி சூப்பிரன்டெண்டு உத்தியோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டுவருகின்றார்கள்.

(1) ம-ள-ள-ஸ்ரீ, M. S. இராமசாமி அய்யர்.
(2) ம-ள-ள-ஸ்ரீ, P. தேவராஜ முதலியார்.
(3) ம-ள-ள-ஸ்ரீ, R. S. கிருஷ்ணசாமி அய்யர்.
(4) குலாம் R. சேன்ஆலி சாயப்பு.
(5) ம-ள-ள-ஸ்ரீ, F. B. செல்வ நாயகம்.
(6) ம-ள-ள-ஸ்ரீ, S. சுப்பிரமணிய அய்யர்.
(7) ம-ள-ள-ஸ்ரீ. N. இராமாநுஜ அய்யங்கார்.
(8) ம-ள-ள-ஸ்ரீ, B. ஸ்ரீராமுலு நாயுடு.
(9) ம-ள-ள-ஸ்ரீ, V. இராமசந்திர அய்யர்.
(10) ம-ள-ள-ஸ்ரீ, M. கோவிந்த நாயர்.
(11) ம-ள-ள-ஸ்ரீ, சையட் முகமதுமுக்கி.

———மார்ச்சு௴ 16௳ G. O. நெ. 494.

போலிஸ் ஆபிசர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிராவிடன்ட் பண்டு ஏற்பாட்டில் புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கும் போலிஸ் டிப்டி சூப்பிரண்டுகளையும் சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

——— மார்ச்சு௴ 13௳ G. O. நெ. 208.

1907-ம் ௵ மார்ச்சு௴ 11௳ சென்னை ரெவினியூ போர்ட் ஆபீசில் தீப்பிடித்ததற்குக் காரணங்களை விசாரிக்கும்படி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

கமிட்டி மெம்பர்கள்.

(1) ஹானரபில் மிஸ்டர் J. N. அட்கின்சன்—ரெவினியூபோர்ட் முதல் மெம்பர்.

(2) ஹானரபில் F. J. வில்சன்—கவர்ன்மென்ட் சீப் இன்ஜினீர்.

(3) மிஸ்டர் H. R. கம்மிங் - சென்ன பட்டணம் கலெக்டர்.

அடியிற்கண்ட கேள்விகளைக்குறித்து யோசனைசெய்து பதில் அனுப்பும்படியாகக் கமிட்டியார் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்

(1) தீ உண்டானால், அதைத்தடுக்கும்படியான ஏதுக்கள் போர்ட் ஆபீசில் போதுமானபடி யிருந்தனவா ?

(2) போர்ட் ஆபீசிலிருந்த தீயை அணைக்கும் யந்திரம் போதுமா, அது சரிவர வேலைசெய்ததா ?

(3) போலீஸ் ஏற்பாடு திருப்திகரமா யிருந்ததா ?

(4) கமிட்டியார் உடனே கூடி ஆலோசனை செய்து பதில் அனுப்பவேண்டும்.

(5) தீயைச் சாமர்த்தியமாய் அணைத்ததற்காக மெட்ராஸ் பிரிகேடைச்சேர்ந்த துருப்புகளுக்குக் கவர்ன்மெண்டார் வந்தன மளிக்கிறார்கள்.

—பிப்ரவரிமீ 12உ G. O. நெ. 193 M.

செங்கற்பட்டில் ஸ்டேஷனரி சம்மாஜிஸ்டிரேட் ஆபீஸ் கட்டுவதற்காக ரூ. 15700 சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

மார்ச்சுமீ 14உ G. O. நெ. 609 M.

தஞ்சாவூர் ஜில்லா அணைக்கட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரூரல்பாங்கிக்கு கவர்ன்மெண்டார் ரூ. 250 கடன் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

ஷரத்துகள்:—(1) கடன் வாங்கிக்கொண்ட தேதி முதல் நான்கு வருஷத்திற்கு வட்டி கிடையாது.

(2) வருஷம் ஒன்றுக்கு ரூ. 25 மேனிக்கு 10 வருஷத்திற்குள் கடனை கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டும்.

——மார்ச்சுமீ 14உ G. O. நெ. 605 M.

தென் ஆற்காடு ஜில்லா ராமமலையனூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரூரல்கிரிடிட் சொஸைட்டிக்கு கவர்ன்மெண்டார் ரூ. 300 கடன்கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

ஷரத்துகள்:—(1) கடன் பெற்றுக்கொண்ட தேதி முதல் மூன்று வருஷம் வட்டி கிடையாது. நான்காவது வருஷமுதல் 100-க்கு வருஷத்திற்கு இரண்டு ரூபாய் வட்டி சேர்த்துக்கொடுக்கவேண்டும்.

(2) பத்து வருஷங்களுக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

மார்ச்சுமீ 11உ G. O. நெ. 573 M.

1315-ம் பசலிக்குச் சரியான 1905-1906-ம் ஆஂத்திய கோர்ட் ஆப் வார்ட்ஸ் பரிபாலன ரிப்போர்ட்.

பிரஸ்தாப பசலி ஆரம்பத்தில் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ் மெண்டில் 32 எஸ்டேட்டுகளிருந்தன, அவைகளில் 5 எஸ்டேட்டுகளின் சொந்தக்காரர்களுக்கு வயது வந்துவிட்டபடியால் அவைகள் பிரஸ்தாப வருஷத்தில் ஒப்புவிக்கப்பட்டன.

காளாஸ்திரி கார்வேட்நகர் ஆகிய எஸ்டேட்டுகளின் சொந்தக்காரர்கள் இறந்துபோய்விட்டபடியால் கோர்ட் ஆப் வார்ட்ஸ் மானேஜ்மெண்டிலிருந்த இந்த எஸ்டேட்டுகள் இறந்துபோன ஜமீன்தார்களின் வார்சுகளுக்கு ஒப்புவிக்கப்பட்டன. கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிலிருந்த V. U. அய்யண்ணு எஸ்டேட்டும் பிரஸ்தாப வருஷத்தில் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிலிருந்து விலகிவிட்டது. ஏனெனில், ஷை எஸ்டேட்டின் மைனர் இறந்துபோய்விட்டார். இறந்துபோன மைனருடைய மனைவியும் மைனராகவிருந்த போதிலும் இந்த மைனர் தரப்பில் மறுபடியும் அந்த எஸ்டேட்டைக் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டு செய்துவர இஷ்டப்படவில்லை. தஞ்சாவூர் A. சுப்பிரமணிய சாஸ்திரியார் எஸ்டேட்டும் பிரஸ்தாப வருஷத்தில் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிற்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே பிரஸ்தாப பசலி ஆக்கரில் கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிலிருந்த எஸ்டேட்டுகள் 25.

(1) சிவ சமுத்திரம் எஸ்டேட், (2) மருங்காபுரி எஸ்டேட், (3) V. U. அய்யண்ணு எஸ்டேட், (4) போடகோடு, (5) மருதா நல்லூர் ஆகிய இந்த 5 எஸ்டேட்டுகளும் மிகுந்த நல்ல ஸ்திதியுடன் பிரஸ்தாப வருஷத்தில் கோர்ட் ஆப் வார்ட்சாரால் ஒப்புவிக்கப்பட்டன.

கோர்ட் ஆப் வார்ட்சார் மானேஜ்மெண்டிலிருந்துவரும் எஸ்டேட்டுகளுக்குள் மூன்றே எஸ்டேட்டுகள்தான் கடன் சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றின் பாளையம் பட்டி ஒன்று இருந்தபோதிலும் இந்த எஸ்டேட்டின் கடன்களைத்தீர்க்கும் பொருட்டு பிரஸ்தாபபசலியில் கோர்ட் ஆப் வார்ட்சாரால் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கடனால் தீண்டப்பட்டிருக்கும் எஸ்டேட்டுகளுக்குள் ஊற்றுமலை எஸ்டேட் ஒன்று. இந்த எஸ்டேட்டுகளைத் தீர்க்க ஒரு தகுந்த உபாயம் செய்யக்கோர்ட் ஆப் வார்ட்சாரால் சாத்தியப்படவில்லை ஆயினும் இந்த எஸ்டேட் சுதந்தர தாரியின் சில அற்ப பாத்தியதைகளை விற்றுக் கடனை அடைக்க கோர்ட் ஆப் வார்ட்சார் தீர்மானித்திருக்கிறார்கள்.

கோர்ட் ஆப் வார்ட்சார் பார்வையில் நியூங்டன் ஸ்கூலில் கல்வி பயின்று வரும் மைனர்கள் எல்லோரும் படிப்பில் விர்த்தியடைந்து வருவதைக் கேள்விப்பட்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் சந்தோஷப்படுகின்றார். காவல்பார மைனர் பிரஸ்தாபவருஷத்தில் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் தேறியிருப்பதும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னருக்குச் சந்தோஷத்தை விளைவித்திருக்கிறது.

கோர்ட் ஆப் வார்ட்ஸ் மானேஜ்மெண்டிலிருந்து வரும் எஸ்டேட்டுகளின் 1905-06ம்ஆஂத்திய வரவு செலவு ஜாப்தா.

ஜில்லா.	எஸ்டேட்.	வரவு. ரூ.	செலவு. ரூ.	எஸ்டேட் கொடுக்க வேண்டிய கடன்.
வட ஆற்காடு.	தம்பா.	6618	5934	—
	காளாஸ்திரி.	41341	167608	
	கார்வேட் நகர்.	126619	263589	
	ஆரணி.	254476	221537	12830
தஞ்சாவூர்	கருவாளகரை.	5053	5478	—
	மருதா நல்லூர்.	16636	17321	—
	T. சொக்கப்ப முதலியார் எஸ்டேட்.	18851	20556	11500
	A. சுப்பிரமணிய சாஸ்திரி எஸ்டேட்.	1374	379	
திருச்சிராப்பள்ளி	மருங்காபுரி.	106487	134255	
மதுரை.	பாளையப்பட்டி.	68953	65950	80616
	சிவகங்கை.	59325	71794	
	இடயக்கோட்டை.	24229	23951	
திருநெல்வேலி.	சிவகிரி.	203014	176111	
	ஊத்துமலை.	99819	105925	38318
கோயமுத்தூர்.	சிவசமுத்திரம்.	2986	40127	
சேலம்.	அங்குசகிரி.	44117	44117	
	கொமரமங்கலம்.	84399	84399	

N. B. இந்த ஜாப்தாவில் தமிழ் ஜில்லாக்களிலிருக்கும் எஸ்டேட்டுகளை மட்டிலும் எடுத்து எழுதியிருக்கிறோம்.

BOARD'S PROCEEDINGS AND DISTRICT CIRCULARS.

போர்ட் புரோசீடிங்ஸ்களும் ஜில்லா சர்க்குலர்களும்.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் அவர்களால் விடுக்கப்பட்டிருக்கும் சர்க்குலர் ஆர்டர்கள்.

I.

தகவல்:—1907-ம் ஆஂ ஜனவரிமீ 3உ 3 நம்பர், லாண்டு ரிவினியூ போர்டு புரொசீடிங்க்ஸ்.

எஸ்டேட் சொந்தக்காரர்கள் வேறே எவ்வித ஏற்பாடுகளில்லாத வரையில் அவர்களிட குத்தகைதார்களிட மிருந்தும் இனும் தார்களிடமிருந்தும் பைசலாத்தி செய்யப்பட்ட கிராம ஊழியம் இனாம்களின் குயிட்ரெண்டையும் செஸ்ஸையும் ஜமீன் குத்தகைகளை வசூல் செய்யும் வழக்கம்போல் அதே வாயிதாக்களில் வசூல்செய்து வரலாமென்று போர்டாரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

II.

1906-ம் ஆஂத்திய 43-நம்பர் டிஸ்டிரிக்ட் சர்க்குலருக்குப் பதிலாக அடியில்கண்ட 1906-ம் ஆஂ நவம்பர்மீ 28உ யுள்ள 446 நம்பர் (செட்டில்மெண்டு) போர்ட் புரொசீடிங்சின் எக்ஸ்ட்ராக்ட்டை எல்லா ரிவினியூ உத்தியோகஸ்தர்களுடைய அறிவுப்புக்கும் அனுஷ்டானத்திற்கும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்மானம்.—1906-ம் ஆஂ நவம்பர்மீ 28உ யுள்ள 446 நம்பர்.

1906-ம் ஆஂ ஆகஸ்டுமீ 29உ யுள்ள 316 நம்பர் போர்ட்டு புரொசீடிங்சுக்குப் பதிலாக 1906-ம் ஆஂ அக்டோபர்மீ 1உ யுள்ள 971 நம்பர் (ரிவினியூ) கவர்ன்மெண்டு உத்தரவை எல்லா கலெக்டர்களுடைய அறிவிப்பிற்கும் அனுஷ்டானத்திற்கும் தெரிவிக்க போர்டாரவர்கள் தீர்மானிக்கிறார்கள். ஷை கெவர்ன்மெண்டு உத்தரவில் முதல்போகம் நஞ்சைப்பயிர் அறுவடையான வுடனே, பாச்சலாதாரத்தினால் எருவு அல்லது தீனி நிமித்தம் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குத் தண்ணீர் தீர்வை மாப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை விதை முத்துவதற்கு முந்தியே உழுதுவிடவாவது, அறுத்துவிடவாவது அல்லது மேய்ச்சிவிடவாவது வேண்டியது. ஏககாலத்திலாவது இரண்டாவது போகம் ரிவினியூவுக்கு குந்தகமாய் நடத்தப்படுவதாகத் தெரிய வந்தால் ஷை கெவர்ன்மெண்டு உத்தரவினால் கொடுக்கப்பட்ட சுதந்தரம் நீக்கிவிடப்படும்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டருடைய சர்க்குலர் ஆர்டர்கள்.

I.

இதில் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், கவர்ன்மெண்டார் தமது 6-3-07 உள்ள 427 - நெ. உத்திரவில் தாசில்தார்களுக்கும், ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கும் 1907-ஆஂத்தில் ஸ்பெஷலாக இந்தியன் ஆயுத சட்டத்தின் விதிகளின் கீழ் XII - நெ. பாரம் லைசென்சுகளுக்காக செய்துகொள்ளும் மனுக்களைத் தாமே வாங்கி டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பலாமென்று அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். மனுதார்களும் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டால் தமது மனுக்கள் பைசலாகும் வரைக்கும் குற்றமன்னியில் பாறைகளை வெடிப்பதற்காகக் கருமருந்தும் அதற்கு வேண்டிய மருந்துவத்திகளும் வைத்துக்கொள்ளவும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக்கொண்டுபோகவும் அனுமதி கொடுத்திருக்கிறது.

II.

அன்னிய நாடுகளுக்குக் குடியேறிப்போகும் பிரிட்டிஷ் இந்தியர்கள் பாஸ்போர்டுகள் (பிரயாணப்பத்திரங்கள்) பெற்றிருக்கவேண்டுமென்பதைத்தெரியப்படுத்த வேண்டுமென்று செக்ரட்டரி ஆப்ஸ்டேட்செய்த உத்திரவைப்பகிரங்கமாய் எல்லாருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று எல்லா டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுகளும் போலீஸ் கம்மிஷனரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கப்பல் கம்பெனிகளும் கப்பலேற்றும் ஏஜண்டுகளும் டிக்கட்டு பார்க்கும் ஒவ்வொருவரையும் பாஸ்போர்ட்டு வாங்கிக்கொள்ளும்படி சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

III.

நியூ கலடோனியாவில் இந்திய கூலியாட்களுக்கு வேலை கிடைக்காதென்றும் அவர்கள் அவ்விடம் சென்று ஆதரவற்றுப்போனால் கலோனியல் கவர்ன்மெண்டாரால் அவர்களுக்கு ஓர்வித உதவியும் கிடைக்காதென்றும் மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியின் இந்தியா செக்ரட்டரி ஆப்ஸ்டேட் இடமிருந்து சமாசாரம் தெரியவந்திருக்கிறது. எல்லா டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுகளும் மதராஸ் போலீசு கம்மிஷனரும் இந்த சமாசாரத்தை ஜில்லா கெஜட்டு மூலியமாயாவது அல்லது மற்ற எந்தவிதத்திலாவது அவ்விடம் குடியேறிப்போக எண்ணுகிறவர்களுக்கு அவ்விடம் போவதினால் உண்டாகும் அபாயத்தைக்குறித்து எச்சரிக்கை யடையும்பொருட்டுப் பகிரங்கப்படுத்துவார்கள்.

IV.

1906-ஆஂ செப்டம்பர்மீத்திய ஜில்லா கெஜட்டு வில்லேஜ் ஷீட்டில் 31 நெ. சர்குலர் உத்திரவாகப் பிரசுரமான விளம்பரத்திற்கு மாறுதலாக எல்லா மிட்டாதார்களுக்கும் பாளையதார்களுக்கும் ஜாகீர்தார்களுக்கும் சுரோத்திரியம் தார்களுக்கும் ரயத்வாரி அல்லாத மற்ற எந்தவிதமான நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக விருப்பவர்களுக்கும் இதனால் தெரியப்படுத்துவது யாதெனில், அந்த விளம்பரத்தில் கேட்டபடி தத்தம் நிலங்களைக்குறித்த பலவாரி விபரங்கள் கொடுக்கவேண்டியதில்லை. இந்த ஆபீசிலிருந்து திருத்தப்பட்ட உத்திரவுகள் பிரசுரமாகும் வரைக்கும் இது வரைக்கும் உபயோகத்திலிருந்து வந்த பாரங்களில் விபரங்களைத் தெரியப்படுத்தலாம்.

V.

1906-ஆஂ ஜனவரிமீ 11உ யுள்ள லாண்டு ரிவினியூ 135 - நெ. ரிவினியூ போர்டார் உத்தரவு விஷயமாய்.

வெளிப்படையாகத் தெரிந்திருக்கும் சொந்தக்காரரிடமிருந்து எழுத்து மூலியமாய் அனுமதி பெற்ற அவசரமான சமயங்களிலும் நிலங்களில் பிரவேசித்து அனுபோகத்தில் உசிதமல்லவென்று உத்திரவு செய்யலான 1905-ஆஂத்திய நவம்பர்மீ 9உ யுள்ள 1395-L. நெ. கவர்ன்மெண்டு உத்திரவு பொதுவான உத்திரவென்று ரிவினியூ போர்டார் மேற்சொன்ன உத்திரவில் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள். நில ஆர்ஜன சட்டத்தின் 17-வது செக்ஷன்படி சட்டயுக்தமாக சர்க்காரால் வாங்கப்படாத பிரைவேட் நிலங்களை எந்த டிபார்மெண்டுக்கும் கொடுத்துவிடப்படாதென்று டிவிஷனல் ஆபீசர்களும் தாசில்தார்களும், டிப்டி தாசில்தார்களும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

VI.

நீர் கூலி.

7-2-07 உள்ள 86 (செட்டில்மெண்டு) நெ. ரிவினியூ போர்டார் உத்திரவு விஷயமாம்.

ஒரு போக நஞ்சை நிலங்களில் மிருக சாதிகளுக்கு உணவாக உபயோகப்படும் பயிர்கள் சாகுபடி செய்யும் விஷயமாய் ஏற்படும் நீர் கூலியைப்பற்றி 1905-ஆஂத்திய 2 - நெ. 1607 -வருஷத்திய 6 - நெ. ரிவினியூ சர்க்குலர் உத்திரவுகளாகப் பிரசுரமான 24-10-04, 28-11-06 உள்ள 423, 446(செட்டில்மெண்டு) நெ. ரிவினியூ போர்டார் உத்திரவுகளில் செய்யப்பட்ட அனுகூலங்கள் புல் சாகுபடி செய்வதற்கும் அனுசரிக்குமென்றுஇதனால் விளம்பரம் செய்யப்படுகிறது, ஏனெனில், அது பூமியிலிருக்கும்போது மேயப்பட்டுப் போவதாலும் அதனால் ஓர் வித பயிரும் கைக்கெட்டாததாலும்.

முனிசிபல் புறம்போக்கு அல்லது தரிசு கவர்ன்மெண்டு புறம்போக்கு அல்லது தரிசு நிலங்களுக்கு மத்தியில் போடப்படும் டிமார்கேஷன் கற்கள் விஷயமாய் ஏற்படும் செலவு கவர்ன்மெண்டார் மூன்றில் ஒருபங்கும் முனிசிபாலிடியார் இரண்டுபங்கும் ஏற்றுக்கொள்ளவேண்டும். முனிசிபல் நிலத்தையும் பிரைவேட் நிலத்தையும் காட்டும்படி போடப்படும் கற்கள் விஷயமாக பூரா சிலவும் முனிசிபாலிட்டியார் பிரைவேட் சொந்தக்காரரிடமிருந்து வசூல் செய்துகொள்ள வேண்டுமென்று ரிவினியூ போர்டார் அவர்கள் ஜில்லா கெஜட்டில் பிரசுரமான 1897-வருஷத்திய IV-வது சட்டமாகிய மதராஸ் சர்வேயும் எல்லைகளையும் குறித்த சட்டத்தின் 32 (a) செக்ஷன்கீழுள்ள விதிகளில் 4-வது விதியை அனுசரித்து உத்திரவு செய்யலானார்கள்.

VII.

மதராசு போர்டாரவர்களுடைய 9-1-07 உள்ள செப்ரேட்டு ரிவினியூ இலாகா ஆர். மிஸ். 9-07 நெ. உத்திரவு பிரகாரம் கெட்டுப்போன ஸ்டாம்புகளின் கிரயத்தை ரிபண்டு செய்ய அல்லது ஷை ஸ்டாம்புகளுக்கு பதில் ஸ்டாம்புகள் கொடுக்க அப்பிளிகேஷன் பாரம் பூரா பூல்ஸ்காப்பு காகிதத்தில் டிக்ளட்டில் அச்சிட்டு மதிராசிலிருந்து சப்ளை செய்யப்படும். அதின் கிரயம் பாரம் ஒன்றுக்கு 3 - பைசா வீதம் விற்கப்படும்.

ரெபரன்ஸ்:—1907-ஹு ஜனவரிமீ 31உ யுள்ள ஸெட்டில்மெண்டு இலாகா 601 Mis. நெ. போர்டு புரொஸீடிங்ஸ்.

ஒரு சர்வே ஸ்கூலில் சேர விரும்புகிற கர்ணன்களில் வார்சுகளையும் பிரைவேட் காண்டிடேட்டுகளாகப்பாவித்து அவர்களிடம் 5. ரூ. பீசு வசூல் செய்யப்படுமென்று இதனால் பிரசித்தப்படுத்தலாயிற்று.

VIII.

1906-ஹு நவம்பர்மீ 21உ யுள்ள ரிவினியூ 337 - நெ. உத்திரவு சம்பந்தமாய்:—

1897-வருஷத்திய I-வது சட்டத்தின்கீழ் ஒரு எஸ்டேட்டின் பாகத்தை விலைக்கு வாங்குகிற நபரின் பெயரை பிரத்தியேகமாய் ரிஜிஸ்தர் செய்வதற்காக அந்த ஸ்டேட்டின் எல்லா கூட்டு பாகஸ்தர்களுடைய அனுமதியைத் தவறாமல் வாங்கவேண்டுமென்பது அவசியமில்லையென்று 1904-வருஷத்திய 15-நெ. அப்பீல் வியாஜ்யத்தில் ஹைகோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானத்தை அனுசரித்து போர்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இந்த சர்க்குலர் உத்திரவுக்கு அனுபந்தமாய் ஹைகோர்ட்டார் தீர்மானத்தைச் சேர்த்திருக்கிறது.

தீர்மானம் :—தீர்மானிக்கவேண்டியது என்னவெனில், ஜில்லா கலெக்டராகிய முதல்பிரதிவாதியால் வாதிக்குக் கொடுக்கவேண்டுமென்று கீழ் கோர்ட்டாரால் உத்திரவு செய்யப்பட்ட வாதியின் செலவு தொகையைக்குறித்து சாஸ்வதமாக செட்டில் செய்யப்பட்ட ஒரு எஸ்டேட்டின் ஒருபாகம் விற்பனையானபோது அந்த விற்பனையில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து அந்த பாகத்தை சப்-டிவிஷன் செய்யவும் பிரத்தியேகமாய் ரிஜிஸ்தர் செய்யவும் மனு செய்துகொண்டு அதில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் ஏதாவது ஆட்சேபனை செய்து அதுவும் கலெக்டரால் தள்ளுபடி செய்யப்பட்டால் 1876-ஹுத்திய 1-வது சட்டத்தின்கீழ் அம்மாதிரி சப்-டிவிஷன் முதலானது செய்ய கலெக்டருக்கு அதிகாரமிருக்கிறது. விவாத கேசில் வாதி தனக்கு இரண்டாவது பிரதிவாதியின் இறந்துபோன தகப்பனால் செய்யப்பட்ட விற்பனையின்கீழ் தன் பாத்தியதையைக் கேட்கிறான். மேலும் விற்பனை செய்தவரின் வார்சாகிய இரண்டாவது பிரதிவாதியும் பிரத்தியேகமாக ரிஜிஸ்தர் செய்யவும் சப்-டிவிஷன் செய்யவும் கலெக்டருக்குச் செய்துகொண்ட மனுவில் தன் அனுமதியையும் காட்டி[illegible]ன். இந்த விற்பனையால் பாகஸ்தனாக வாதி ஏற்பட்ட மிட்டாவில் இன்னொரு பாகத்திற்குச் சொந்தக்காரனாகிய மூன்றாவது பிரதிவாதி கிரயத்திற்கு வாங்கினவரும மற்ற பாகஸ்தர்களும் தங்களுக்குள் பேஷ்கஷ் தொகையைப் பிரித்துக்கொண்டிருப்பதாலும் கலெக்டரால் நியமிக்கப்படும் பேஷ்கஷ் தொகை அம்மாதிரி எக்கிரிமெண்டில் ஏற்பட்ட தொகைக்கு வித்தியாசமாயிருக்கப்படாதென்ற காரணத்தைக்கொண்டு வாதியின் பாகத்தை சப்-டிவிஷன் செய்யவும் பிரத்தியேக ரிஜிஸ்திரேஷன் செய்யவும் கூடாதென்று ஆட்சேபனை செய்தான். கலெக்டர்செய்திருக்கிற ஆட்சேபனையைப் பைசல்செய்யாமல் வாதியின் மனுவின்பேரில உத்திரவு செய்ய மறுத்துவிட்டார். இந்த கேசு விஷயமாக கலெக்டருக்கு ரிஜிஸ்தர் செய்யவும் சப்-டிவிஷன் செய்யவும் அதிகாரமிருக்கவில்லையென்று கவர்ன்மெண்டு பிளீடர் வற்புறுத்துகிறார். அவர் சொல்வது என்னவெனில், ஆட்சேபனை செய்த மூன்றாவது பிரதிவாதி ஷை எஸ்டேட் ரிஜிஸ்தர் செய்திருக்கும் பாகஸ்தர்களில் ஒருவரானதால், சட்டதாத்பரியப் பிரகாரம் விவாதவிற்பனை நடவடிக்கையில் அவர் ஒரு பார்ட்டியானதால் அவர் சம்மதிக்காததினால் கலெக்டருக்கு மேல் நடவடிக்கை செய்ய அதிகாரமில்லை. இந்த சம்பிரதாயத்தை நாம் அங்கீகாரம் செய்யக்கூடவில்லை. சந்தேகமன்னியில் மூன்றாவது பிரதிவாதியும் வாதிக்கு விற்பனை செய்தவரும் பார்ட்டிகளாக விருக்கும் பிரிவினையானது அவர்களுக்குள் ஏற்பட்ட பாத்தியதையைக்குறித்த நடவடிக்கையாகும். வாதிக்கு விற்றவருக்கு என்ன பாத்தியதை இருந்தது என்று ஒரு வேளை விசாரிக்கப்படுமானால் வாதி அதைக்குறித்து ருசுகொடுக்க வேண்டியதாகும். ஆனால் மூன்றாவது பிரதிவாதி இப்போது கொடுத்திருக்கும் மனுவில் பிரஸ்தாபிக்கும் விற்பனைக்கு அவர் பார்ட்டியல்ல. மூன்றாவது பிரதிவாதியின் வக்கீலாகிய ம-ள-ள-ஸ்ரீ, சிவசாமி அய்யரால் எடுத்துக்காட்டியதுபோல் சட்டத்தில் கண்டிருக்கும் விற்பவர், வாங்கினவர் என்னும் பதங்கள் தத்தமை தழிவியிருக்கின்றன. அந்தப்பதங்களால் நடவடிக்கை எந்தெந்தப்பார்ட்டியைநேராகத்தழுவியிருக்கின்றனவோ அந்தந்தப் பார்ட்டிகளைத்தான் குறிக்கும். கவர்ன்மெண்டு பிளீடர் சொல்வதை அங்கீகாரம் செய்தால் அடியில் குறிப்பிடும் விபரீதம் ஏற்படுகிறது. விற்பனை நடவடிக்கைகளில் கடைசியாக விற்றவர் தனக்குக் கிடைத்த பாத்தியதையைக்குறித்து விலைக்கு வாங்கினவராவார். விற்றவர் என்னும் பதம் "விற்றவர்" "வாங்கினவர்" என்று அர்த்தம் கொள்ளவேண்டியதாகும். அப்படியே படிப்படியாக ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்டவரால் விற்பனையான வரைக்கும்செல்லவேண்டியதாகும். இம்மாதிரியாகக் கொள்வது விற்றவர் என்னும் பதத்திற்குள்ள சாதாரண அர்த்தத்திற்கு விரோதமாகின்றது. கவர்ன்மெண்டு பிளீடருடைய சம்பிரதாயமானது "விற்பனை" என்னும் பதம் கலெக்டருடைய ரிஜிஸ்தர் தாக்கலானவரையில் செய்யப்பட்ட விற்பனையையே காட்டுகின்றது என்னும் அபிப்பிராயத்தைக்கொண்டு அதன் பேரில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இம்மாதிரியான அபிப்பிராயத்திற்கு ஆதாரம் இல்லையென்று நாம்நினைக்கிறோம். கவர்ன்மெண்டு பிளீடர் தமக்கு ஆதாரமாகக் கொண்டுவந்த 1802-ஹுத்திய XXV-வது மதராஸ் ரெகுலேஷன் 8-வது செக்ஷன் வெளிப்படை அவர்கொண்ட அபிப்பிராயத்திற்கு நேர் விரோதமான அர்த்தத்தைக் காட்டுகின்றது.

ஆகவே, கலெக்டர் தமக்கு இந்தக் கேசில் பிரத்தியேகமாய் ரிஜிஸ்தர் செய்வதில் அதிகாரமில்லையென்று நினைத்தது பிசகு என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். மூன்றாவது பிரதிவாதியால் செய்யப்பட்ட ஆட்சேபனையைக்குறித்து விசாரிக்கவேண்டியது சட்டப்பிரகாரம் கலெக்டருடைய கடைமை. அந்த ஆட்சேபனையை அவர் தள்ளுபடி செய்தால் வாதியின் மனுவில் கேட்டுக்கொண்டதைப் பூர்த்தி செய்வது அவர் வேலை. வாதியின் செலவு தொகையை கலெக்டர் கொடுக்கவேண்டுமென்று டிஸ்டிரிக்டு ஜட்ஜி செய்த உத்திரவு இந்த சம்பர்ப்

பங்களில் சரி என்று நாம் நினைக்கிறோம். ஆனால் பூராவும் கலெக்டரே இதற்குப் பாத்தியமாகமாட்டார். ஏனெனில், மூன்றாவது பிரதிவாதியின் ஆட்சேபனையின் பேரில்தான் இந்த வியாஜ்ஜியம் ஆரம்பித்தது. அவர் செய்த ஆட்சேபனை சுத்தமாக நிற்கத்தக்கதல்ல, ஏனெனில், தங்களுக்குள்ளாக பேஷ்கஷ் தொகையைப் பிரித்துக்கொள்வதைக்குறித்து ஏற்பட்ட எக்கிரிமெண்டு கவர்ன்மெண்டாரைக் கட்டுப்படுத்தாது. மேலும் அந்த ஆட்சேபனை தள்ளுபடிதான் செய்யவேண்டியதாகும். வியாஜ்ஜியத்தில் வாதிக்கு ஏற்பட்ட செலவு தொகையில் கலெக்டர் பாதியும் மூன்றாவது பிரதிவாதி பாதியும் கொடுக்கவேண்டுமென்று நாம் உத்தரவு செய்து டிஸ்டிரிக்டு ஜட்ஜி டிக்கிரியை மாற்றுகிறோம். வாதியின் அப்பீல் செலவைக் கலெக்டர்தான் கொடுக்கவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டரின் உத்தரவுகள்.

1901ஹுத்திய 1-நெ. மாஜிஸ்திரேட் சர்க்கியுலர்.

1901ஹு ஏப்பிரல்மீ 2உயுள்ள 1901ஹுத்திய 18-ந.

கிராம போலீசார் அதாவது தலையாரி சிப்பந்தி இப்பொழுதிருப்பது போலவே கிராமத்தலைமை உத்தியோகஸ்தர்களுடைய நேர் விசாரணைக்குட்பட்டு வேலைபார்க்கவேண்டுமென்றும், கிராம உத்தியோகஸ்தர்களுடைய மானுயல் (Village Officers' Manual) III-வது பாகத்திலிருக்கும் கட்டளைகளின்படி தங்கள் கிராமத்திலுள்ள போலீஸ் வேலைகள் துரிதமாகவும் செவ்வையாகவும் செய்யப்பட்டுவருகிறதற்கு கிராமத்தலைவர்கள் மாஜிஸ்திரேட்டார்களுக்கு உத்தரவாதியாவார்களென்றும் ஏதாவது ஒரு கிராமத்தில் குற்றங்கள் விசேஷமாய் சம்பவிப்பதும் அதிகரிப்பதும் கிராமத்தலைமை உத்தியோகஸ்தர் தங்களுடைய வேலையில் சட்டையாயிருக்கிறாரென்பதற்கு முக்கியமான ருஜுவாக நினைக்கவேண்டுமென்பதாகவும் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறபடியால் இனிமேல் கிராமத் தலையாரிகள் தங்களுடைய போலீஸ் வேலைகளைச்சரிவரகவனமாய்ப் பார்த்துவரும்படி தாசில்தார் மாஜிஸ்திரேட்டுகளும் டிப்டி தாசில்தார் மாஜிஸ்திரேட்டுகளும் கவனிக்கவேண்டியது. அந்த வேலைகளில் முக்கியமானவை என்னவென்றால்:—

i. இராத்திரியில் கிராமத்தில் காவலுலாவுதல், ரோந்து சுற்றுதல்)

ii. அன்னியர்களைப்பற்றி விழிப்பாயிருத்தல்.

iii. கிரிமினல் புரோசஸ்களை நிறைவேற்றல்.

iv. குற்றங்களைக் கண்டு பிடித்தல்.

v. குற்றங்களைப்பற்றியும் சமுசயப்பட்ட பேர்வழிகளைப் பற்றியும் அதிகசமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட்டு செய்தல்.

2. முக்கியமாய் இருக்கவேண்டிய விதமாகப் போலீஸ் ஆபீசராயிராமல் தலையாரிகளை ரிவினியூ ஆபீசர்களொப்பந்தம் வேலைகளைச் செய்யும்படிச் செய்யக்கூடாதென்று தாசில்தார்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். தலையாரிகள் தங்களுடைய போலீஸ் வேலைகளில் போதுமான கவனமும் காலமும் செலுத்திவருகிறார்களாவென்பதைத் தாசில்தார்கள் பார்த்துவரவேண்டியது.

3. ஒன்றுக்கு மேற்பட்டு தலையாரிகளை உடைத்தாயிருக்கும் பெரிய கிராமங்களுக்குப்போலீஸ் டிபார்ட்மெண்டால் பீட் (beat-books) புஸ்தகங்கள் சப்பிளை செய்யப்படும். தலையாரிகள் அவைகளைச் சரியாய்வைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அந்த டிபார்ட்டுமெண்டு உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் யாராகிலும் வரும்போது தங்கள் புஸ்தகங்களோடு கூட போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராகி ரிபோர்ட்டு செய்துகொள்ளவேண்டியது.

4. வேலையாயிருக்கும்போது எல்லா தலையாரிகளும் போலீஸ் டிபார்ட்டுமெண்டால் சப்பிளைசெய்யப்பட்டிருக்கும் பித்தளைவில்லைகளைக் கையில் போட்டுக்கொண்டும், தடிகளைக் கையில் வைத்துக்கொண்டும் இருக்கவேண்டியது.

5. தங்கள் தாலூகாக்களில் ஒன்றுக்கு மேற்பட்டு தலையாரிகளை உடைத்தாயிருக்கும் கிராமங்களின் ஜாப்தா ஒன்றைப் போலீஸ் சூப்பிரின்டெண்டெண்டுக்கும் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கும் தாசில்தார்கள் உடனே அனுப்பவேண்டும். வேண்டிய அளவு (beat) புஸ்தகங்களுக்கு அவர்கள் சூப்பிரின்டெண்டெண்டுக்கு இண்டெண்டனுப்பவேண்டும். அவர்கள் சர்க்கியூட் போகும்போதெல்லாம் பீட் (beat) புஸ்தகங்கள் சரிவர வைக்கப்பட்டிருக்கின்றனவாவென்று பார்க்கவேண்டும்

6. ஜில்லாவில் முக்கியமான ரஸ்தாக்களில் காவலுலாவும் கான்ஸ்டெபிள்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போகும் வரையில் அவர்களோடு தலையாரிகளிருக்கவேண்டியது. கான்ஸ்டெபிள் ஒருவனும் ஒருதலையாரியுமாகச் சர்ந்து எப்பொழுதும் காவலுலாவும்படியாக பீட் கான்ஸ்டெபிள் அடுத்த கிராமம்போய் சேருகிறவரையில் ஒரு தலையாரி அவனோடுகூடவிருக்கும்படி கிராமத்தலைவர் ஒரு தலையாரியை அனுப்பவேண்டியது.

7. தலையாரிகள் தங்களுடைய போலீஸ் வேலைகளைச் சரிவர பார்க்கமுடியாதவிதமாய் ரிவினியூ வசூல்செய்ய அவர்களைக் கிராமத்தலைவர்கள் வேலையிடக்கூடாது. கிராம முன்சீபாவது கர்ணனாவது அவர்களை வீட்டுவேலை செய்யச்சொல்லக் கூடாது. எந்த கிராமத்தலைவர்களுக்குட்பட்டு தலையாரி வேலைபார்க்க வேண்டுமோ அந்த கிராமத்தலைவர் அண்டித்திருக்கிற பாரத்தில் ஒரு ரோஸ்டர் புஸ்தகம் (duty roster) வைத்துவரவேண்டும். தலையாரிகள் செய்யக்கூடாத வேலையை கிராம உத்தியோகஸ்தர்கள் அவர்களைச் செய்யச்சொல்லவில்லையாயென்று தெரிந்துகொள்ளு நிமித்தம் தாலூகா மாஜிஸ்திரேட்டுகளும் சப்-மாஜிஸ்திரேட்டுகளும் இந்தப் புஸ்தகங்களைப் பரிசோதிக்கவேண்டும்.

சர்க்கியுலர்.

1905ஹு மார்ச்சுமீ 24உயுள்ள 1905ஹுத்திய

ஆர். டிஸ். ந. 14-மே.

கிராம மாஜிஸ்திரேட்டுகள் போலீசாருக்கும் சப்-மாஜிஸ்திரேட்டுக்கும் கொடிய குற்றங்களைப்பற்றி ரிப்போர்ட்டு அனுப்புமுன் சாட்சிகளிடத்தில் வாக்குமூலம் வாங்கியிருந்தும் அவைகளைத் தங்கள் ரிப்போர்ட்டுகளுடன் அனுப்பத் தவறிப்போய் விட்டார்கள் என்று செஷன்ஸ் ஜட்ஜி அவர்கள் கவனித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வாக்குமூலங்கள் கமிட் செய்யும் மாஜிஸ்திரேட்டு முன்னுக்கும் செஷன் கோர்ட்டிலும் ஆஜர் படுத்தப்படாமல் போயிருப்பதாயும் சொல்லப்படுகிறது. முதலில் கிராம மாஜிஸ்திரேட்டுகள் எடுக்கும் வாக்குமூலங்கள் சாட்சியத்தின் முக்கியமான பாகமானபடியால், கிராம மாஜிஸ்திரேட்டுகள் ஷை வாக்குமூலங்களைத் தங்கள் பிரதம ரிப்போர்ட்டுடன் அனுப்ப ஒருபோதும் தவறிப்போகக்கூடாது.

விளம்பரம்.

1907ஹு பிப்ரவரிமீ 20உயுள்ள, 1907ஹு

ஆர். டிஸ். ந. 16-மே.

இதரதேசத்துக்குப்போகும் பிட்டிரிஷ் இந்தியர்கள் தாங்கள் வசிக்கும் தேசங்களிலுள்ள கான்ஸலேட்டுகளில்பிரிட்டிஷ் ஸப்ஜெக்டாக ரிஜிஸ்தர்செய்து கொள்வதற்கு யாதொரு இடஞ்சலுமில்லாமலிருக்கும் பொருட்டு அவர்கள் பாஸ்போர்ட்டு பெற்றுக்கொண்டுபோக வேண்டியதென்று இந்திய செக்ரிடெரி அப்ஸ்டேட் அவர்கள் உத்திரவு செய்திருக்கிறார்களென்று எல்லா ஜனங்களுக்கும் தெரியும் பொருட்டு இதனால் விளம்பரப்படுத்தப்படுகிறது.

Important Sections with Notes.

முக்கியமான பிரிவுகளும் அவைகளின் வியாக்யானங்களும்.

The Indian Penal Code.
இந்தியன் பினல் கோட்.

துராக்கிரதமான புணர்ச்சி.

பிரிவு **375.** எவனாவது பின்னால் விலக்கப்பட்டிருக்கிற விஷயத்தைத் தவிர இதனடியில் கண்டிருக்கிற ஐந்து வகைகளில் எதன்படியாவது ஒரு ஸ்திரீயைப் புணர்ந்தால், அவன் துராக்கிரதமாய்ப் புணர்ந்தானென்று சொல்லப்படுவான்.

முதலாவது:—அவளுக்கு இஷ்டமில்லாம லிருக்கையில் பலவந்தமாய்ப் புணருவது.

இரண்டாவது:— அவளுடைய சம்மதமில்லாமற் புணர்வது.

மூன்றாவது:—உடன்படா விட்டால் கொல்லுவேனென்றாகிலும், உபத்திரவப் படுத்துவே னென்றாகிலும் பயப்படுத்தி அவளுடைய சம்மதிபெற்றுக்கொண்டு புணர்வது.

நான்காவது:—எவனாவது தான் இன்ன ஸ்திரீயின் புருஷனல்லவென்றும், அவள் எவனை நியாயமாய் விவாகஞ் செய்துகொண்டாளோ அல்லது விவாகஞ் செய்துகொண்டதாக நம்பி யிருக்கிறாளோ அவனென்று தன்னை அவள் நினைத்துப் புணர்ச்சிக்குச் சம்மதித்திருக்கிறாள் என்று தெரிந்துகொண்டு அந்தச் சம்மதியின்பேரில் புணர்வது.

ஐந்தாவது:—பன்னிரண்டு வயசாகாதவளோடு அவளுடைய சம்மதி பெற்றாகிலும் பெறாமலாகிலும் புணர்வது.

அர்த்தம்:—துராக்கிரதமாய்ப் புணர்ந்த குற்றமென்று நிச்சயிப்பதற்குப் பிரஜாபதி நுழைவதே போதும்.

விலக்கு:—ஒருவன் பன்னிரண்டு வயதுக்குக் குறையாத வயசையுடைய தன் பெண்சாதியோடு புணர்வது துராக்கிரதமான புணர்ச்சியாகமாட்டாது.

வியாக்கியானம்.

புணர்ச்சிக்கு இஷ்டமில்லாமல் தடங்கல் செய்துகொண்டிருந்தவள் தடங்கல் செய்வதை நிறுத்திவிட்டால் சம்மதம் கொடுத்தவளாகமாட்டாள். 1. வீக்லி ரிபோர்ட்டர் 21.

மயக்கத்தினாலாவது பைத்தியத்தினாலாவது காரியத்தின் விஷயம் தெரியாததனாலாவது இஷ்டம் கொடாதவளாகலாம். தவிர, அவள் வேறு ஒருவிஷயமாய்ச் சம்மதித்ததைப் புணர்ச்சிக்கென்று எடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒரு வைத்தியன் ஒரு பெண்ணைப் புணர்ச்சி செய்யும்போது தனக்கு வைத்தியம் செய்வதாக நல்ல எண்ணத்துடன் அவள் நம்பி தடை செய்யாமலிருந்தாலும் வைத்தியன் குற்றவாளியாவன்.

விவாகமான புருஷன் தன் பெண்சாதிபேரில் பிரிவில்கண்ட செய்கை செய்தால் குற்றவாளியாக மாட்டான். வேறொருவன் தன் பெண்சாதியைப் பலவந்தம் செய்து புணர்வதற்குச் சகாயம் செய்தால் உடந்தைக் குற்றத்திற் குள்ளாவான். இ. பி. கோ. 114-வது பிரிவின்படி தானே அந்தக்குற்றம் செய்ததாகவும் எண்ணப்படுவான்.

அர்த்தம்:—பிரஜாபதி யெள்ளளவேனும் நுழைதல், குற்றம் பூர்த்தியாவதற்குப் போதுமானது. இந்திரிய ஸ்கலிதம் ஆகவேண்டுமெனும் அவசியமில்லை.

துராக்கிரதமான புணர்ச்சிக்குத் தண்டனை.

செ. **376.** துராக்கிரதமாய்ப் புணருகிறவன் ஆயுசு பரியந்தம் தண்ணீர்மே லேற்றும்படியான தண்டனைக்காவது, பத்து வருஷத்திற்கு அதிகப்படாமல் இருவகைக் காவலி லெதிலாகிலும் வைக்கும்படியான தண்டனைக் குள்ளாவது மல்லாமல் அபராதத்திற்கும் உள்ளாவான்.

சுபாவத்திற்கு விரோதமான புணர்ச்சி யென்னும் குற்றங்களுக்குத் தண்டனை.

377. சுபாவத்திற்கு விரோதமாய் யாதொரு புருஷனோடாகிலும் ஸ்திரீயோடாகிலும் மிருகத்தோடாகிலும் எவனாவது வேணுமென்று புணர்ந்தால் அவன் ஆயுசு பரியந்தம் தண்ணீர்மே லேற்றும்படியான தெண்டனைக்காவது, பத்து வருஷத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலி லெதிலாகிலும் வைக்கும்படியான தெண்டனைக்காவது உட்படுவது மல்லாமல் அபராதத்திற்கு முள்ளாவான்.

அர்த்தம்:—இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற குற்றம் செய்யப்பட்டதென்று நிச்சயிப்பதற்குப் பிரஜாபதி நுழைவதே போதும்.

The Indian Evidence Act.
இந்து தேசத்து சாட்சி ஆக்ட்.

வாய்மொழி சாட்சியத்தினாலே சங்கதிகளுக்கு ருஜு.

59. தஸ்தாவேஜிகளின் மற்றவைகள் தவிர, சகல சங்கதிகளையும் வாய்மொழி சாட்சியத்தினாலே ருஜுப்படுத்தலாம்.

வாய்மொழி சாட்சியும் நேராயிருக்க வேண்டும்.

60. வாய்மொழி சாட்சியமானது எப்படிப்பட்ட விஷயங்களிலும் நேராக இருக்கவேண்டும். அதாவது,— அது பார்த்திருக்கக்கூடுமான சங்கதியைப்பற்றியிருந்தால் அதைப் பார்த்ததாகச் சொல்லுகிற சாட்சிக்காரனுடைய சாட்சியமாக அது இருக்கவேண்டும்.

அது கேட்டிருக்கக் கூடுமான சங்கதியைப் பற்றியிருந்தால் அதைத் தான் கேட்டிருந்ததாகச் சொல்லுகிற சாட்சிக் காரனுடைய சாட்சியமாக அது இருக்கவேண்டும். அதுவேறே யாதொரு புலனாலாவது வேறேஎவ்விதமாயாவது அறிந்திருக்கக் கூடுமான சங்கதியைப் பற்றியதா யிருந்தால் அதை அந்தப் புலனாலாவது எவ்விதமாயாவது தான் அறிந்திருக்கிறதாகச் சொல்லுகிற சாட்சிக் காரனுடைய சாட்சியமாக அது இருக்கவேண்

டும். அது ஒரு அபிப்பிராயத்தைப் பற்றியதாவது, அந்த அபிப்பிராயம் கொள்ளுவதற்கு ஆதாரமாயிருந்த ஏதுக்களைப் பற்றியதாகவாவ திருந்தால், அந்த ஏதுக்களின்பேரில் அந்த அபிப்பிராயம் கொண்டிருக்கிற நபரினுடைய சாக்ஷியமாக அது இருக்கவேண்டும்.

ஆனால் சாதாரணமாய் விற்பனைக்காக இருக்கிறயாதொரு கிரந்தத்தில் தெரிவிக்கப்பட்ட நிபுணருடைய அபிப்பிராயங்களையும், எதின்பேரில் அந்த அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றதோ அந்த ஆதாரங்களையும், கிரந்தகர்த்தா இறந்துபோயிருந்தாலும் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும், சாட்சியஞ் சொல்ல அசக்தனாயிருந்தாலும், அவனை சாட்சியாக வரவழைக்கவேண்டுமானாலும் அதிக ஆவசியமாவது அதிக செலவாவது நேரிடுமாதலால் அப்படிச்செய்வது கிரமமல்லவென்று கோர்ட்டார் நினைத்தாலும் அப்படிப்பட்ட கிரந்தத்தைக் கொண்டுவந்து காட்டி ருஜுப்படுத்தலாம்.

மேலும், வாய்மொழிசாட்சியமானது தஸ்தாவேஜியல்லாத வேறே யாதொரு சட்டப் பொருள் உண்டாயிருப்பதை அல்லது அதன் ஸ்திதியைப் பற்றியதாயிருந்தால், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பக்ஷத்தில், தாங்கள் பார்வையிடுவதற்கு அப்படிப்பட்ட பொருளைக்கொண்டு வந்து காட்டும்படி உத்தரவு செய்யலாம்.

வியாக்கியானம்.

இப்பிரிவின் பொருள் பார்க்கக்கூடிய கேட்கக்கூடிய அல்லது உரைக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி விசாரணைகளின் சந்தர்ப்பத்தை அநுசரித்து வேறுவித சாக்ஷியும் ஒற்றுமையாகமாட்டா தென்பதல்ல. 12 பங்காளம் லா. ரிப்போர்ட் 18.

Court-fees Act.
கோர்ட் பீஸ் ஆக்ட்.

அடியிற்கண்ட தஸ்தாவேஜுகளுக்கு கோர்ட் பீஸ் ஸ்டாம்பு கிடையாதென்று கோர்ட் பீஸ் ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கின்றது.

1. யாதொரு வியாச்சியத்தின் பிரதமவிசாரணைக்குப்பின்பு கோர்ட்டாரால் வரவழைக்கப்பட்ட விவரப் பத்திரிகைகள்.

2. சென்னபட்டணம் பிரசிடென்சியில் கிராம முனிசிபுகளால் பரிசீலனை செய்யப்பட்ட வியாஜ்ஜியங்களில் பிளெயின்ட்டுகள்.

3. அதே பிரசிடென்சியில் டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்தாருக்கு முன்பாக நடக்கிற வியாஜ்ஜியங்களிலே பிளெயின்ட்டுகளும், சம்மன்வகையறாக் கட்டளைகளும்.

4. 1816-ம் ஹுத்திய சென்னபட்டணத்து 12-வது ரெகுலேஷன்படி கலெக்டர்களுக்கு முன்பாக நடக்கிற வியாஜ்ஜியங்களிலே பிளெயின்ட்டுகள்.

5. மரணசாசனத்தின் புரொபேட்டும் அட்மினிஸ்டிரேஷன் லெட்டர்ஸ் என்னும் அதிகாரபத்திரமும் எதற்காகக் கொடுக்கப்படுகின்றதோ அந்தத்தொகை அல்லது சொத்தின் கிரயம் ஆயிர ரூபாய்க்கு அதிகப்படாவிட்டால், அந்த புரொபேட்டும் அட்மினிஸ்டிரேஷன் லெட்டர்ஸ் என்னும் அதிகாரபத்திரமும் சர்ட்டிபிக்கேட்டும்.

6. நிலத்தீர்வை சம்பந்தமான சங்கதிகளைக்குறித்தாவது, அதற்குண்டான பாத்தியதை அல்லது அதிலுள்ள சுதந்தரத்தை நிச்சயிப்பதைச் சேர்ந்த சங்கதிகளைக்குறித்தாவது, கலெக்டருக்காகிலும், பூமி பேரிஜ் பைசலாதி செய்கிற வேறே உத்தியோகஸ்தருக்காகிலும், ரெவினியூ போர்ட்டாருக்காகிலும், ரெவினியூ கமிஷனருக்காகிலும் அப்படிப்பட்ட பைசலாதி முடிவாய் ஊர்ச்சித மாவதற்கு முன்னமே விண்ணப்பமும் அல்லது மனுகொடுக்கப்பட்டால் அப்படிப்பட்ட விண்ணப்பமும் மனுவும்.

7. கவர்ன்மெண்டாரைச் சேர்ந்த ஜலத்தைப் பாய்ச்சலுக்காகச் சர்பரா செய்வதைக்குறித்த விண்ணப்பம்.

8. சாஸ்விதமா யல்லாமல் சர்க்கார் பேரீஜ் நிஷ்கரிஷையாயிருக்கிற நிலத்தை நேராய் கவர்ன்மெண்டாரோடு கரார் நாமாவின்மேல் அநுபவித்து வருகிறவர் சாகுபடியை அதிகப்படுத்திக்கொள்ளவாவது நிலத்தை விட்டு விடவாவது உத்தரவாக வேண்டுமென்று யாதொரு லாண்ட் ரெவினியூ அதிகாரிக்குச்செய்து கொள்ளுகிற விண்ணப்பம்.

9. நிலத்தை விட்டுவிடவாவது குத்தகைத்தொகையை அதிகப்படுத்தவாவது நோட்டிஸ் சேர்ப்பிக்கும்படி விண்ணப்பம்.

10. ஜப்தி பண்ணும்படி ஏஜெண்டுக்குக்கொடுக்கிற அதிகாரப்பத்திரம்.

11. சாட்சி சொல்லவாவது தஸ்தாவேஜைக் கொண்டுவந்து காட்டவாவது ஆஜராகும்படிக்காகிலும், கோர்ட்டில் தட்சணம் கொண்டுவந்து தாக்கல் செய்வதற்காகத் தயார்செய்யப்பட்ட அபிடெவிட் என்னும் பிரமாணப்பத்திரமல்லாத யாதொரு ஆதரவைக்கொண்டுவந்து காட்டுவது அல்லது தாக்கல் செய்வதைக் குறித்தாகிலும் சாட்சியையாவது வேறே எவரையாவது சம்மனனுப்பி வரவழைக்கும்படி (கிரிமினல் பிரியாது அல்லது அறிக்கை கண்டெழுதியிருக்கிற மனுவல்லாத வேறே யாதொரு) முதல் விண்ணப்பம்.

12. கிரிமினல் வியாஜ்ஜியங்களிலே நபர் ஜாமீன் பத்திரங்களும், பிரியாது தொடருகிற தாகவாவது சாட்சி சொல்லுகிற தாகவாவது எழுதிக்கொடுக்கிற முச்சலிக்காக்களும் நபர் ஆஜராகிறதாகவாவது மற்றப்படிக்காகவாவது எழுதிக்கொடுக்கிற முச்சலிக்காக்களும்.

13. யாதொரு குற்றத்தைக்குறித்து மனுவாவது விண்ணப்பமாவது பிரியாதாவது அறிக்கையாவது ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டனம் கவர்னர் அவர்களுக்கு உட்பட்டராஜ்யங்களிலே போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது கிராம பெரியதனக்காரருக்காவது கிராமப்போலீசாருக்காவது கொடுக்கப்பட்டாலும் அப்படிப்பட்டவர்களிடத்திலே செய்யப்பட்டாலும் அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாகவைக்கப்பட்டாலும் அப்படிப்பட்டதும்.

14. யாதொரு கைதியினாலாவது யாதொரு கோர்ட் அல்லது அதன் உத்தியோகஸ்தர்களுடைய காவலிலாகிலும் மறியலிலாகிலும் இருக்கிற வேறே எவனாலாவது கொடுக்கப்பட்ட மனு.

15. இந்தியன் பினல் கோடில் விவரித்துச்சொல்லியிருக்கிறபடிக்கான சர்க்கார் உத்தியோகஸ்தர், முனி

சீப் உத்தியோகஸ்தர் ரெயில்வே கம்பெனியின் உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரருடைய பிரியாது.

16. சர்க்கார் காடுகளில் மரம் வெட்டுவதற்கு உத்தரவாகும்படிக்காவதுமற்றப்படி அந்தக்காடுகளுக்குச்சம்பந்த மாகவாவது கொடுக்கப்பட்ட விண்ணப்பம்.

17. விண்ணப்பதாரருக்கு கவர்ன்மெண்டார் பாக்கியிருக்கிற பணத்தைக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிற விண்ணப்பம்.

18. 1856-ம் ஞுத்திய 20 வது ஆக்ட்டின்படி சவுகீதாரிவரியைக் குறித்தாகிலும் யாதொரு முனிசிபல் வரியைக் குறித்தாகிலும் கொடுக்கப்பட்ட அப்பீல் மனு.

19. ஜனசமூகப் பிரயோஜனத்துக்காகச் சொத்தையெடுத்துக் கொள்வதைக்குறித்து அந்தந்தக்காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்பிரகாரம் பிரதிபலன் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிற விண்ணப்பங்கள்.

20. 1882-ம் ஞுத்திய இந்து தேசத்து கிறிஸ்தவ விவாக ஆக்ட் 45 வது 48 வது பிரிவுகளின்படி கொடுக்கப்பட்ட மனுக்கள்.

Indian Companies Act.
இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட்.

மீட்டிங்குகள்.

75. இந்த ஆக்ட் ஊர்ச்சிதத்திற்கு வந்தது முதல் இந்த ஆக்டின்பிரகாரம் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கம்பெனியும் அதனுடைய மெமோராண்டம் ஆப் அஸோஸியேஷன் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாக ஒரு ஜெனரல் மீட்டிங் கூடவேண்டும். இப்படி மீட்டிங் கூடாவிட்டால் ஆறுவதுமாதத்திற்குப் பிறகு மீட்டிங்குகூடுகிறதினம் வரையில் ஒவ்வொரு தினத்திற்கும் ரூ 50 க்கு அதிகப்படாத அபராதம் விதிக்கப்படும். மீட்டிங்கு கூடவேண்டுமென்று தெரிந்திருந்தும் அப்படி மீட்டிங்குகூடாமலிருந்தவும் கூடாமலிருக்கும்படி செய்தவுமான ஷை கம்பெனியின் டைரக்டர் அல்லது மானேஜருக்காவது அல்லது இந்த கம்பெனியின்மெமோராண்டத்தில்கையெழுத்துச்செய்திருக்கும் ஒவ்வொரு சப்ஸ்கிரைபருக்கும் அதே அபராதம் விதிக்கப்படும்.

The Indian Stamp Act.
இந்துதேச முத்திரைச் சட்டம்.

1. **ஸ்வீகாரப் பத்திரம்,** அதாவது யாதொரு ஸ்வீகரத்தை ரெக்கார்ட்செய்கிற அல்லது ஸ்வீகாரஞ்செய்துகொள்ள அதிகாரங்கொடுக்கிற அல்லது கொடுப்பதாகப் பொருள்படுகிற (உயிலல்லாத) வேறேயாதொரு ஆதரவுக்கு முத்திரைத்தீர்வை ரூபாய் பத்து.

2. **பிரமாணப் பத்திரிகை,** பிரமாணஞ் செய்வதற்குப் பார்த்தியாக உறுதிமொழி சொல்லவாவது உறுதிமொழிப்பத்திரிகை எழுதிக்கொடுக்கவாவது சட்டத்தினாலே அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபர்களின் விஷய … மொழிப் பத்திரிகையாகிலும் அடங்கியிருப்பது—இந்த ஆதரவுக்கு முத்திரைத்தீர்வை ஒரு ரூபாய்.

நிவாரணைகள்.

பிரமாணப்பத்திரிகை அல்லது உறுதிமொழிப் பத்திரிகை:—

(*a*) இந்தியா ராணுவ நிபந்தனைகளின்படி ராணுவத்தில் சேருவதாய் உடன்படிக்கையாக ;

(*b*) யாதொரு கோர்ட்டிலாவது யாதொரு கோர்ட் உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாவது நேராய் தாக்கல்செய்வதற்காக அல்லது உபயோகிப்பதற்காக.

Guardians and Wards Act.
கார்டியன் ஆக்ட், (மைனர்களைப்பற்றிய ஆக்ட்).

கார்டியன் நியமிப்பதற்குக் கோர்ட்டிற்கிருக்கும் அதிகாரம்.

7. (1) மைனருடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டியது அவசியமென்று கோட்டார் திர்ப்திகரமாய் அபிப்பிராயப்பட்டால்,

(*a*) மைனருடைய தேகத்திற்காயினும அல்லது சொத்துக்காயினும் அல்லது இரண்டினுக்குமாயினும் ஒரு கார்டியன் ஏற்படுத்தலாம்.

(*b*) கார்டியனுயிருப்பதற்கு ஒருவரைத் தெரிந்தெடுத்து நியமிக்கலாம்.

(2) இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவு, உயிலாலாவது அல்லது கோர்ட்டாராலாவது நியமிக்கப்படாத கார்டியனை விலக்கிவிடுகிறது.

(3) ஒரு உயிலினுலாவது அல்லது வேறெந்த ஆதரவாலாவது அல்லது கோர்ட்டார் மூலியமாயாவது ஒரு கார்டியன் நியமிக்கப்பட்டிருந்தால், இந்த கார்டியனுடைய அதிகாரம் முடிவடையும்பரியந்தம் இந்தப் பிரிவின்படி வேறொருகார்டியனை நியமிக்கக் கோர்ட்டார் உத்தரவு செய்யக்கூடாது.

Transfer of Property Act.
டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்.

52. பிரிட்டிஷ் இந்தியாவில் அதிகாரமுடைய எந்தக் கோர்ட்டிலாகிலும் அல்லது பிரிட்டிஷ் இந்தியா எல்லைக்கப்பால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் கோர்ட்டிலாகிலும் ஒரு ஸ்தாவர சொத்தின்பாத்தியதையைக் குறித்து வியாஜ்ஜியம் மும்மரமாய் நடந்துகொண்டு வரும்போது ஷை வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட எந்த கக்ஷிக்காரனும், அச்சொத்தில் பாத்தியதையுடையவர்கள் பாத்தியதையைப் பாதிக்கும்படியாக, அந்த வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் டிக்கிரி கொடுக்கும்பரியந்தம் அச்சொத்தை டிரான்ஸ்பர் செய்யக்கூடாது. அப்படி டிரான்ஸ்பர் செய்யவேண்டுமானுல் கோர்ட்டார் சம்மதத்தைப் பெற்று அவர்கள் என்ன நிபந்தனைகள் குறிப்பிடுகிருர்களோ அவைகளை அனுசரித்து டிரான்ஸ்பர் செய்யவேண்டும்.

53. சொத்தை அடையவேண்டியவர்களுக்காவது அல்லது கடன்காரருக்காவது கிடைக்காமலிருக்கும்படிச் செய்யவேண்டுமென்கிற கருத்துடனுவது அல்லது அவர்களுக்கு அச்சொத்துசேர்வதைத் தாமதப்படுத்த வேண்டுமென்கிற கருத்துடனுவது ஒருவன் ஒரு ஸ்தாவரசொத்தை டிரான்ஸ்பர் செய்தால் இந்த டிரான்ஸ்பரால் எவன் பாதிக்கப்பட்டிருக்கிருனே அவன் இந்த டிரான்ஸ்பரை ரத்துசெய்துவைக்கலாம்.

மோசக்கருத்துடனுவது அல்லது கடன்காரனை மோசப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்துடனுவது அல்லது கடன்காரனுக்கு அச்சொத்து சேருவதைத் தாமதப்படுத்தவேண்டுமென்கிற கருத்துடனுவது ஒருவன் ஒரு அசையாப்பொருளை டிரான்ஸ்பர் செய்தால், அப்படி அவன் செய்த டிரான்ஸ்பருக்கு யாதொரு தொகையும் வாங்காமலாவது அல்லது சரியானதொகை வாங்காமலாவது செய்திருந்தால் அவன் மோசக்கருத்துடன் இந்த டிரான்ஸ்பரைச் செய்திருக்கிறுன் என்று யூகிக்கப்படும்.

நல்ல எண்ணத்துடனும் சரியானதொகைகொடுத்து டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர்களின் பாத்தியதைகள் இந்தப் பிரிவால் பாதிக்கப்படமாட்டா.

Indian Easements Act.
இந்தியன் ஈஸ்மெண்டு ஆக்ட்.

18. தேசவழக்கத்தால் ஈஸ்மெண்டு பாத்தியதையை ஸ்தாபிக்கலாம். இப்படிப்பட்ட பாத்தியதைகள் தேசவழக்க ஈஸ்மெண்டு பாத்தியதைகள் என்று சொல்லப்படுகின்றன.

உதாரணம்.

(*a*) ஒரு கிராமத்தில் உள்ள கிருஷிகள் தங்களுடைய கால்நடைகளை ஒரு பொதுவான புல்லடர்ந்த மைதானத்தில் மேயவிடுகிறது வழக்கம். A. என்பவன் இந்த கிராமத்தில் ஒரு தார்சுநிலத்தைக் குத்தகை பெற்று அதைச் சாகுபடிசெய்கிறுன. இந்த கிராமத்தின் வழக்கப்படி அந்த மைதானத்தில் தன்னுடைய கால்நடைகளை மேயவிடுவதற்கு A க்கு பாத்தியமிருக்கின்றது.

(*b*) அடுத்த வீட்டுக்காரனுடைய அந்தரங்கங்களைப் பார்க்கும்படியான புதிய ஜன்னல்வைப்பது ஒரு ஊரில் வழக்கமில்லை. இந்த ஊரில் A என்பவன் B என்பவனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு வீடுகட்டுகின்றுன். A என்பவனுடைய வீட்டு அந்தரங்கங்கள் தெரியும்படியாக B என்பவன் தன்னுடைய வீட்டில் ஒரு புதிய ஜன்னல் வைத்தால் அதைத்தடுக்க A க்கு ஈஸ்மெண்டு பாத்தியதையிருக்கின்றது. இதேமாதிரி A தன்னுடைய வீட்டில் ஒரு ஜன்னல் வைத்தால் அதைத்தடுக்க B என்பவனுக்கும் ஈஸ்மெண்டு பாத்தியதையிருக்கிறது.

Trust Act.
டிரஸ்ட் ஆக்ட்.

(20) இந்த ஆக்ட்டின்பிரகாரம் டிரஸ்ட்டியினிடம் ஒப்புவிக்கப்பட்ட டிரஸ்ட் சொத்து ரொக்கப்பணமாயிருந்து எந்தக்காரியத்திற்காக அது ஒப்புவிக்கப்பட்டதோ அதற்கு உடனே அதை உபயோகப்படுத்தக் கூடாமலிருந்தால் அப்படிப்பட்ட ரொக்க டிரஸ்ட் பணத்தை டிரஸ்டி டிரஸ்ட் ஆதரவில் சொல்லப்பட்டிருக்கிறதற் குட்பட்டு அடியிற்கண்டபிரகாரம் பத்திரப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

(*a*) இந்தியா கவர்ன்மெண்டு அல்லது கிரேட்பிரிட்டன் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டு அல்லது டிபன்ஸர்களில்.

(*b*) இந்தியாவின் ரெவினியூவின்பேரில் சார்ஜ்செய்து அயன்பார்லிமெண்டார் விடுத்திருக்கும் பாண்டுகள் டிபன்சர்கள்.

(*c*) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா காரியதரிசி வட்டிக்கு ஜவாப்புதாரியாகவிருக்கும் ரெயில்வே கம்பெனிகளின் பங்குகளில் அல்லது டிபன்ஸர்களில்.

(*d*) பிரிட்டிஷ் இந்தியாவில் அமுலிலிருக்கும் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் முனிசிபாலிட்டியார் அல்லது இன்னும் வேறு கூட்டத்தார் விடுத்திருக்கும் டிபன்ஸர்கள்.

(*e*) பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் ஸ்தாவரசொத்தின்பேரில் முதல்பெந்தகத்தில்.

(*f*) அல்லது டிரஸ்ட் ஆதரவில் கண்டிருக்கிற ஜாமீன்பேரிலாவது அல்லது ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது செய்யும் உத்வரவுப்படியாவது.

Civil Procedure Code.
சிவில் புரொசீஜர் கோட்.

74. ஒரு வியாஜ்ஜியத்தில் ஒரு பிரதிவாதிக்குமேல அதிகமாயிருந்தால் ஒவ்வொருபிரதிவாதிக்கும் சம்மன் சார்வ் செய்யப்படவேண்டும்.

ஆனல் கூட்டுவியாபாரம்செய்யும் கம்பெனியார் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் அந்தக் கம்பெனியின்பாகஸ்தர் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாகச் சம்மன் சார்வ்செய்யும்படி உத்தரவுசெய்தாலொழிய ஒரு பாகஸ்தனுக்காவது அல்லது அந்த வர்த்தகக் கம்பெனியை எவன் அந்தக்கம்பெனியில் முக்கியமான ஸ்தலத்தில் மானேஜ்மெண்டு செய்துவருகின்றுனே அவனுக்குச் சார்வ்செய்தால்போதுமானது.

80. பிரதிவாதியாயினும் அல்லது இன்னும் யாரேனும் சம்மனில் கையெழுத்துசெய்ய மறுதளித்தால் அல்லது சம்மன் சார்வ்செய்கிற ஆபீசர் பிரதிவாதியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அல்லது அந்த சம்மனைப் பெற்றுக்கொள்ள அதிகாரமுடையஏஜண்டில்லாவிட்டாலும்அல்லது இந்தச்சம்மன் சார்வ் செய்யப்படக்கூடிய எவருமில்லாவிட்டாலும், சம்மன் சார்வ்செய்யும்

...சர் சம்மன்களை அந்தப்பிரதிவாதி சகஜமாய் வசித்துவரும் வீட்டின் வெளிக்கதவில் ஒட்டிவிட்டுச் சம்மனை அக் கதவில் ஒட்டினதாகவும் அப்படி ஒட்டநேர்ந்ததற்குக் காரணங்களையும் அசல்சம்மனில் எண்டார்ஸ்மெண்டுசெய்து கோர்ட்டிற்கு அனுப்பிவிடலாம்.

வியாக்கியானம்.

ஒரு பிரதிவாதியின்வர்த்தகஸ்தலத்தின் வெளிக்கதவில் சம்மனை ஒட்டினது சம்மன் அவனுக்குச்சார்வ்செய்யப்பட்டதாக எண்ணப்படமாட்டாது. 7. பம்பாய் ஹைகோர்ட் ரிப்போர்ட் 138.

சம்மன் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று நினைத்து மறைந்து கொண்டிருப்பதாகத் தெரிந்தால்மட்டும் சம்மனை அவன்வீட்டுக்கதவில் ஒட்டவேண்டும். 4. கல்கத்தா லா ரிப்போர்ட் 397.

சம்மனில் கையெழுத்துச்செய்ய மறுதளிப்பது இ. பி. கோ. 173 அல்லது 180 பிரிவுகளில் சொல்லியிருக்கும் குற்றத்திற் கிலக்காகாது. இ. லா. ரி. 20 கல் 358.

கூட்டுவர்த்தகக் கம்பெனியின்பேரில் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்திலே எல்லாபாகஸ்தர்களுக்காக ஒரு பாகஸ்தருக்குமட்டிலும் சம்மன் சார்வ்செய்யப்பட்டது. ஆனால் அப்படி சார்வ்செய்யப்பட்ட சம்மனை ஷை வர்த்தககம்பெனியில்அந்த பாகஸ்தரிருக்கும் போது சார்வ் செய்யப்படவில்லை. வேறொருவிடத்தில் அவர் இருக்கும்போது சார்வ்செய்யப்பட்டது. இப்படிச் சார்வ்செய்தது போதுமான சார்வ்செய்ததாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 7 - பெங்கால் லாரிப்போர்ட் 58.

மூன்று சகோதரர்கள்பேரில் எக்ஸ்பார்ட்டிடிக்கிரி கொடுக்கப்பட்டது. இவர்கள் இந்தடிக்கிரியைரத்துசெய்யச்செய்துகொண்ட அப்பீலில், மூன்றுபேருக்கும்ஒரே சம்மன் பிறப்பிக்கப்பட்டதென்றும், பெயிலிப் எந்த சகோதரன்பேருக்குச் சம்மன் பிறந்ததோ அவனிடம் நேரே சார்வ் செய்ய முயற்சிசெய்யாமல் அவனுடைய வீட்டுக்கதவில் ஒட்டிவிட்டுவந்ததாக ருஜுப்பட்டது. இப்படி சார்வ்செய்தது போதுமானபடி சார்வு செய்யப்பட்டதாக எண்ணப்படமாட்டாது.-25 வீக்லி ரிப்போர்ட்டர் 394.

Indian Limitation Act.

இந்துதேச கால நிரணயசட்டம்.

ஷெட்யூல் II ஆர்ட்டிக்கில் I—1863-ம் ஆடுத்திய 28-வது ஆக்ட்டின்படி சாகுபடிசெய்யப்படாத தார்சு நிலங்களைக்குறித்தபாத்தியதைகள் விஷயமாகரெவினியூ போர்ட்டார் செய்த உத்திரவிற்கு விரோதமாக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமானல் உத்திரவு பெற்றுக்கொண்ட தேதிமுதல் 30 நாளைக்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டும்.

—ஆர்ட்டிக்கில் II—பிரிடிஷ் இந்தியாவில் வுசர்ச்சியிலிருக்கும் யாதேனும் ஒரு சட்டத்தை அனுசரித்து ஒரு காரியத்தைச் செய்ததற்காக அல்லது செய்யத்தவறிப்போனதற்காகக் கிடைக்கவேண்டிய காம்பன்சேஷனைப்பெற வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமானல் அந்தக் காரியத்தைச்செய்த தேதிமுதலாவது அல்லதுசெய்யத்தவறிப்போனதுமுதலாவது 90 நாட்களுக்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டும்.

Indian Contract Act.

இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட்.

19 A. தகாதசெல்வாக்கைப் (Undue influence) பிரயோகப்படுத்தி ஒரு ஒப்பந்தத்திற்கு மற்றொருவனுடைய சம்மதத்தைப் பெற்றுவிட்டால், எவன் சம்மதம் கொடுத்தானே அவனுக்கு இஷ்டமிருந்தால் அந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்துவைக்கலாம்.

இப்படிப்பட்ட ஒப்பந்தங்களைக் கோர்ட்டார் அடியோடு ரத்துசெய்து வைக்கலாம். தகாதசெல்வாக்கை உபயோகப்படுத்தினதை முன்னிட்டு ஒப்பந்தத்திற்குச் சம்மதம்கொடுத்த ஒருவன் ஷை ஒப்பந்தத்தால் ஏதேனும் நன்மையைப் பெற்றிருக்கிறதாகக் கோர்ட்டாருக்குத் தெரியவந்தால் எந்த நிபந்தனைகளுடன் ஒப்பந்தத்தை ரத்துசெய்தால் நியாயமாயிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றுகின்றதோ அந்த நிபந்தனைகளுடன் அந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்யலாம்.

உதாரணங்கள்.

(a) ஒரு பிராமிசரி நோட்டில் A என்பவனுடைய குமாரன் B என்பவன் கையெழுத்தைப் போர்ஜரிசெய்துவிட்டான். B என்பவன் ஷை குமாரனைப் பிராசிக்கியூட் செய்வதாகப் பயமுறுத்தி A என்பவனிடமிருந்து ஷை பிராமிசரிநோட்டு எழுதிவாங்கி அந்தத்தொகை வசூல் செய்யும்படி A என்பவன்பேரில் B என்பவன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் கோர்ட்டார் இந்தப் பிராமிசரி நோட்டை ரத்துசெய்துவைக்கலாம்.

A என்கிற சாவுகார் B என்கிற ஒரு விவசாயிக்கு ரூ 100 கடன்கொடுத்துத் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தி மாதம் ஒன்றுக்கு 6 வட்டிமேனிக்கு ரூ 200 க்கு ஒரு பிராமசரிநோட் எழுதிக்கொடுக்கும்படி தூண்டுகின்றான். B என்பவனும் அப்படி எழுதிக் கொடுத்துவிடுகின்றான். இந்த ரூபாயையும் கூடுதலானவட்டியையும் வசூல்செய்ய A என்பவன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால், கோர்ட்டார், ரூ 100-ம் என்ன நியாயமானவட்டியோ அதையும் A என்பவனுக்குக் கொடுக்கும்படியாக B என்பவனுக்கு உத்தரவுசெய்யலாம்.

Lawyer and Clients.

லாயரும் கக்ஷிக்காரர்களும்.

வைப்பாட்டி பிள்ளையின் ஜீவனும்சம்.

I.

லாயர் :— நான் சென்னை சட்டகலா சாலையில் படித்து பி. எல். பரீக்ஷை பாஸ் செய்தால் அதிகவருமானம் வராதென்று நினைத்து ரூபாய் பதினாயிரம் செலவு செய்து இங்கிலாண்டில் மூன்று வருஷம் வரையிலிருந்து பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துத் தேறிப் பட்டம்பெற்று இவ்விடம் வந்தேன்! வந்து மூன்று வருஷமாகின்றது. சிறிய வியாஜ்ஜியக் கக்ஷிக்காரர்கள் நான் பாரிஸ்டரானபடியால் அற்ப வியாஜ்ஜியங்களுக்குப் பேச உடன்படமாட்டேன் என்று நினைத்து என்னிடம் வருகிறதில்லை. சிக்கலான பெரிய வியாஜ்ஜியக்காரர்கள் எனக்கு அனுபோகம் போதாதென்று நினைத்து என்னிடம் வருகிறதில்லை. இப்படியாக எனக்கு வருமான பூஜ்ஜியமாயிருக்கிறது. இன்றைக்கோ 5உ! பங்களா குடிக்கூலி ரூபா 500 கொடுக்க வேண்டும். கோச்சுமான், காகாரி, புல்லுக்காரி எல்லோரும் சம்பளம வாங்க வந்துவிடுவார்கள். இன்றையத்தினம் ஏதேனும் ஒரு கேஸ்வந்தால் எனக்கு மிகுந்த உதவியாக இருக்கும். இன்று அதிர்ஷ்டத்தைப் பார்ப்போம்!

வேலைக்காரன் :—சார், நம்முடைய பங்களாவை நோக்கி ஒரு புரூம்வண்டி வந்துகொண்டிருக்கிறது.

லா:—பாய்! பாய்! சீக்கிரம் வா, ஆம். ஆம். புரூம் வருகிறது. அதிலிருப்பவர் கக்ஷிக்காரர்தான்போலிருக்கிறது. கம்! கம்! சீக்கிரம் நாற்காலிகளை எல்லாம் வரிசையாய் எடுத்துப் போடு.

கக்ஷிக்காரர் :— பாரிஸ்டர் அவாள் படுக்கையிலிருந்து எழுந்திருந்து விட்டார்களா?

வே:— இப்போதுதான் எழுந்திருந்தார்கள். பாத் ரூமுக்குப் போயிருக்கிறார்கள். நான் இதோ பாருங்கள், டி-வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறேன்.

கக்ஷி:—பாரிஸ்டர் நல்ல சாமர்த்தியசாலி என்று கேள்விப்பட்டேனே. ரெங்கநாதபுரம் ஜமீன் கேசில் கூட இவர்தான் பேசினாராமே!

வே:—ஆம். இவரும வந்து மூன்றுவருஷ மாகிறது. இதுவரையில் எந்தக்கக்ஷிக்காரரும்இந்தப்பங்களாப்படியை மிதித்து அபஜெயமடைந்து போனதே கிடையாது! நம்ம எஜமான் எப்படியாவது சாமார்த்தியம்செய்து கேசை ஜெயித்துக்கொடுத்துவிட்டு மறுவேலை பார்ப்பார்.

கக்ஷி:—ஆனால் ஹைகோர்ட் ஜட்ஜிகளுடன்நம்முடைய பாரிஸ்டர் அவாளுக்கு சிநேகமுண்டோ?

வே:— அதெல்லாம் நான் சொல்லலாமா? நேற்றுகூடமிஸ்டர் ஒயிட் துரை பங்களாவிற்கு வந்திருந்தார். எஜமானும் அவரும் பந்தடித்தார்கள். நான் அதெல்லாம் சொல்லலாமா? இரண்டுபேரும் டாக்கார்ட்டில் ஏறிக்கொண்டு, அடையார் லேடி கிளப்பிற்குப் போனார்கள். அதெல்லாம் பெரிய இடத்துப் பேச்சு, நான்சொல்லலாமா? இரண்டு தினங்களுக்கு முந்தி வாலேஸ் துரையும் நம்ம எஜமானும் பீச்சுக்கு டிரைவ் போனார்கள். அதெல்லாம் பல ரகசியமிருக்கும். நான் சொல்லலாமா?

லாயர் :—பாய்! டி, ஆட் ஒன்ஸ்! பங்காபாய் புல் பங்கா!

வே:—இதோ டி-சார்! புரூமிலே வந்த கக்ஷிக்காரர் டிராயிங் ரூமில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.

லாயர் :—பேசிக் கொண்டிருந்தாயே, பெரிய கேஸ் தானே?

வே:—அப்படிதான் தோற்றுகின்றது.

லா:—அழைத்துக்கொண்டுவா?

வே:—ஐயா, எஜமானைப் பார்க்கிறதாயிருந்தால் பார்க்கலாம். இப்போதுதான் டி கொடுத்தேன். சந்தோஷமாயிருக்கிற சமயம். என்னை மட்டிலும் போகிறபோது கொஞ்சம் மறந்து போகாமல் விசாரித்துக் கொள்ளவேணும்.

லா:— வாருங்கள். உட்காருங்கள். என்ன சமாசாரம்? எந்த ஊர்? என்ன கேஸ்? கட்டு கொண்டுவந்திருக்கிறீர்களா?

கக்ஷி:—கேஸ் சின்ன கேஸ்தான். வைப்பாட்டி பிள்ளை என்னை அவமானப் படுத்துகிற தென்றால் நான் என்ன சளைப்பேனா? ரூபா பதினாயிரம்செலவழிந்தாலும் நான்விட்டுவிடுவேனா? ஒருகை பார்த்தே விடுகிறது என்று ஒரு வர்மம் வைத்துவிட்டேன்! அதற்காகத்தானே உங்களுடைய பிரக்கியாதி கேள்விப்பட்டு உங்களைத் தேடிவந்தேன்.

லா:—என்னமோ கேசில் ஆதாரமிருந்தால் நான் விடப்போகிறதில்லை.

கக்ஷி:—என்ன எடுத்த அடியில் அப்படி இரண்டாம் பக்ஷமாய்ச் சொல்லுகிறீர்போலே யிருக்கிறதே!

லா:— இருக்கட்டும். அப்பீல் கேஸ்தானே. கீழ்க்கோர்ட்டு கட்டு கொண்டுவந்திருக்கிறீரா?

கக்ஷி:— இதோ யிருக்கிறது.

லா:— நல்லதிருக்கட்டும், கேசின் விர்த்தாந்தத்தைச் சற்று சொல்லும்.

கக்ஷி:—என் தகப்பனார், கோப்பம்மா என்கிற ஒரு ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்திருந்தார். அவளுக்கு ஒரு ஆண் பிள்ளைபிறந்தது. சில வருஷங்கள் சென்று என் தகப்பனாருக்கும் வைப்பாட்டிக்கும் சச்சரவு உண்டாகி இருவரும் பிரிந்துபோய் விட்டார்கள்.

லா:—சரிதான். வைப்பாட்டி தன் புத்திரனுக்கு ஜீவனும்சம் கிடைக்க வேண்டுமென்று உன் தகப்பனார் பேரில் பிரியாது செய்தாளோ? அப்புறம்.

கக்ஷி:—ஆம். வைப்பாட்டிமகன்பெயர்சுப்பண்ணா, அந்த மைனருக்காகத் தாயார் கோப்பம்மாள் கார்டியானாகவும் அடுத்த சிநேகிதனாகவுமிருந்து ஜீவனும்சதாவாகொண்டுவந்து எங்களுடையசொந்தகுடும்ப

ச்சொத்தின்பேரில் டிக்கிரி கொடுக்கும்படி வேண்டிக் கொண்டனள்.

லா:—உம்முடைய தகப்பனருக்கு எத்தனை சொந்தப் பிள்ளைகள்,

கக்ஷி:—நானொன்று, எனக்குத்தம்பி ஒருவனிருக்கிறான்

லா:—பிறகு,

கக்ஷி:—கோர்ட்டார், வாதி கேட்டுக் கொண்டபடியே குடும்பச் சொத்தின்பேரில் டிக்கிரி கொடுத்துவிட்டார்கள். தகப்பனர் இறந்துபோய்விட்டார். வாதி இப்போது டிக்கிரியை நிறைவேற்றிக் குடும்பச் சொத்தை ஜப்திசெய்வதாகக் கோர்ட்டு மூலமாய் நோட்டீஸ் எங்களுக்கு அனுப்பினான். இதன்பேரில் என்னையும் என் தம்பியையும் அசல் வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்காததால் குடும்பச்சொத்து இந்த டிக்கிரிக்குக் கட்டுப்படாதென்று ஆக்ஷேபணை மனு கொடுத்தேன்.

லா:—சரி, முனிசிப் கோர்ட்டார் உம்முடைய மனுவைத்தள்ளிவிட்டார்கள். ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்தீர். அவர்களும் தள்ளிவிட்டார்கள்போலிருக்கின்றது. சரிதான்!

கக்ஷி:—என்ன, கட்டைப் பார்க்காததற்கு முந்தியே சரிதானென்று சொல்லிவிட்டீர்களே! இதற்குத்தானு இவ்வளவு தூரம் தங்களைத் தேடிவந்தேன். எப்படியாவது ஜெயித்துக் கொடுத்துவிடவேண்டும்.

லா:—உம்முடைய பெயர் சுப்பண்ணவா ?

கக்ஷி:—ஆம்.

லா:—வீண்காலம் கழித்தோம். இந்தக்கேசில் ஸ்வாரஸ்யமில்லை.

லா:—பாய் !

வேலை:—சார்.

லா:—இன்னும் பார் ? யாரேனும் கக்ஷிக்காரர்கள் வந்திருக்கிறார்களா ?

கக்ஷி:—என்ன எனக்கு ஒன்றும் சொல்லவில்லையே! எப்படியாவது ஜெயித்துக் கொடுக்கவேண்டும். நான் பெரிய குடும்பஸ்தன் !

லா:—ஐயா, நீங்கள்போய் வரலாம். நான்இந்தக் கேசைப்பிடிக்க மாட்டேன்.

கக்ஷி:—கொஞ்சம்கூட ஆதாரமில்லையா ?

லா:—இல்லை.

கக்ஷி:—ஜீவனும்ச வியாஜ்ஜியத்தில் என்னையும் என்தம்பியையும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கவில்லையே !

லா:—சேர்க்காமற்போனலென்ன? உங்களுடைய தகப்பனர்உங்களுக்குப்பிரதிநிதியாகவும், இந்துசேர்ந்தகுடும்பமானேஜிங் மெம்பராகவும்சேர்க்கப்பட்டார். அதனல் கீழ்க்கோர்ட்டில் குடும்பச்சொத்தின்பேரில் வாதிக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நியாயந்தான்.

கக்ஷி:—இருந்தபோதிலும் ஒரு அப்பீலைப் போட்டுப் பார்ப்போமே. பட்டால்படுகிறது. இல்லாவிட்டால் நடக்கிறபடிநடக்கிறது.

லா:—உம்முடைய கேஸ் ஜெயிக்கவே ஜெயிக்காது. இம்மாதிரி இரண்டாவது அப்பீல் நெ. 46. சென்றவருஷம் (1906) ஒன்றுவந்தது. அதை விசாரித்து ஹைகோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். நீர் போய்வரலாம்.

II.

P. பாலாமணியின் அப்பில்.

வேலைக்காரன்:—ஒரு அம்மாள் புருட்வண்டியில் வந்திருக்கிறார்கள்.

லாயர்:—யார் என்று விசாரி.

வே:—அம்மா, எங்கேவந்திருக்கிறீர்கள் ?

பா:—சாஸ்திரியார், வீட்டிலிருக்கிறார்களோ ?

வே:—(தனக்குள்) நம்முடைய எஜமானை முந்தியே தெரியும்போலிருக்கிறதே!வக்கீல்இருக்கிறாரா என்று கேளாமல் சாஸ்திரியார் என்று சொல்லுகிறுங்களே அந்த அம்மா !— அம்மா! ஐயா! இருக்குறுங்கோ.

பா:—அவகாசர்தானே ?

வே:—கேட்டுக்கொண்டுவந்து சொல்லுகிறேன்.

பா:—கேட்கவும்வேண்டாம் ஒன்றும்வேண்டாம். என் பெயரைச்சொல்லி வந்திருப்பதாகச் சொல்.

வே:—ஆகா, அப்படியே சொல்லுகிறேன்.

பா:—அடே அப்பா, இங்கேவா. ஒருவார்த்தை கேட்டுவிட்டுப்போ ?

வே:—ஏன் அம்மா ?

பால:—நான்சொன்னவுடன் ஓடுகிறாயே என்பெயர் உனக்குத் தெரியுமா ?

வே:—எங்க எஜமான் ரொம்பகண்டிப்புக்காரர்! நான் அதிகமாகக் கக்ஷிக்காரர்களுடன் பேசக்கூடாது. அவர்கள் சொன்னதைப்போய் உடனே சொல்லிவிடவேண்டும். நீங்கள் "என்பெயரைச் சொல்லி, வந்திருக்கிறதாகச் சொல்" என்று சொன்னீர்கள். அப்படியேபோய் "என் பெயரைச்சொல்லி வந்திருக்கிறதாய்ச்சொல்"லச்சொன்னதாகச் சொல்லிவிடுவேன். ஒருதடவை சொன்னல் போதாதாம்மா ? இதோபோய்ச் சொல்லிவிடுகிறேன்.

பா:—இதென்னடா தர்மசங்கடமாயிருக்கிறது! மூடனயிருக்கிறான் ! அப்பா, பாலாமணி வந்திருப்பதாகச் சொல்.

வேலை:—தெருவில் வண்டியில்வந்திருக்கிற ஸ்திரீயின் பெயர் பாலாமணியாம்.

லா:—யார் ! யார் !! பாலாமணியா ? பாலாமணியா ? அடே குப்புசாமி! உடனே பின்கட்டுவழியாக மெத்தைக்கு அழைத்துக்கொண்டுவா. சார்! உங்கள்கட்டை நாளையத்தினம் பார்க்கிறேன். நீங்கள் போய்வாருங்கள்: அடேகுப்பா பாலாமணிவந்துட்டதாடா ?

வே:—ஹாலிலே உட்காரவைத்திருக்கிறேன்.

லா:—சரியானவேலைக்காரன். அப்படித்தான் மனுஷாளுக்குத் தகுந்தபடி செய்யவேண்டும்.

பா:—சுவாமி கும்பிடு வருகின்றது.

லா:—ஆசீர்வாதம். என்ன க்ஷேமமா ? காம்ப்–கும்பகோணமா அல்லது சென்ன பட்டணந்தானு ? ஏது இவ்வளவுதூரம் நம்முடைய ஞாபகம் ?

பா:—என்னமோ, தாங்கள் மறந்து போனபோதிலும், ஸ்திரீ ஜாதியல்லவா ? எனக்கு ஆசைவிட்டுப்போகுமா ? எப்போதும் ஞாபகமிருந்துகொண்டுதானிருக்கிறது.

லா:—நீயும் தொழிலாளி. நானும்தொழிலாளி. இரண்டுபேரும் வாசாலகாய் பேசிக்கொண்டிருப்பதாயிருந்தால் எத்தனை நாழிகை வேண்டுமானலும் பேசிக்கொண்டிருக்கலாம். இன்றைக்கு எனக்கு சக்கண்ட் அப்பீல் கோர்ட்டில் ஒரு பெரிய கேஸ் இருக்கிறது ; எதிர் தரப்பில் பாஷியமையங்காரே ஆஜராகிறார். அவசரம். என்ன காரியமாய்வந்தாய்?

பா:—நீங்கள் மட்டுமா, எனக்கு இந்த சென்னபட்டணத்தில் எத்தனையோ வக்கீல்களைத் தெரியும். ஏதாவது ஒரு கேஸ் விஷயமாய் அவர்கள் வீடு தேடிப்போய் விட்டமோ, கனத்த கிராக்கி பண்ணிக்கொள்ளுவார்கள் ! போடாம் கோர்ட்டில் கேஸ்.—சுப்பிரமணிய அய்யர் கோர்ட்டில் கேஸ்.—அந்த ஜமீன் கேஸ்.—இந்த ஜமீன் கேஸ் எல்லாம் ஒரே சமயத்தில் வந்துவிடும் !

லா:—உன் வீட்டுக்கு வந்தால் நீ கிராக்கி செய்கிறதில்லையா ? அதுபோல்தான் தொழில் முறை. நல்லது உன் கேசைச் சொல் பார்ப்போம்.

பால:—ஹைகோர்ட்டில் ஒரு சொற்பமனு கொடுக்க வேண்டும்.

லா:—எதைப்பற்றி?

பா:—இராமசாமி செட்டியாரைத் தெரியுமல்லவா ?

லா:—யாரது. ஓகோ, அவரா சரிதான், தெரியும். இப்போது நீயும் அவரும் விரோதமாகப் போய்விட்டீர்களோ ?

பா:—ஆமாஞ்சாமி! இப்போது அவர்கும்போணம் முனிசீப் கோர்டில் என்மேல் தாவா செய்திருக்கிறார். இந்தக்கேசை டி. மு. விசாரணை செய்துகொண்டுவரும்போது அவர் வசமிருக்கும் சில தஸ்தாவேஜிகளைக்கோர்ட்டில்ஆஜர் படுத்தும்படி சி. பு. கோ. 130 வது பிரிவின்படி உத்தரவு செய்தார். அந்த தஸ்தாவேஜிகளை எல்லாம் எனக்குக் காண்பிக்கக் கூடாதென்று சொல்லி ஒரு லகோடாவில் போட்டுமுத்திரை வைத்துக்கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறார்.

லா:—நீ அவைகளைப் பாக்க உத்தரவு கொடுக்கும்படி மனு கொடுக்கிறதுதானே ?

பா:—கேளுங்கள். மனு கொடுத்தேன். இத்தனைக்கும் அந்த லகோடாவிலிருக்கிற கடிதங்கள் எல்லாம் நான் ராஜியாயிருக்கும்போது எழுதியன. அப்படியிருந்தும் அவைகளை நான் பார்க்கும்படி உத்தரவு கொடுக்க மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். ஆகையால்ஹைகோர்ட்டில் மனு செய்துகொள்ளலாமென்று வந்திருக்கிறேன்.

லா:—என்ன பாலாமணி! இருந்திருந்து என்னைத் தேடி க்கொண்டு வந்தாய்! நான் உனக்கு உபகாரம் செ யமுடியாதுபோலிருக்கிறது. அந்த தஸ்தாவேஜு களை உனக்குக் காண்பிக்கும்படி உத்தரவு கொடு பதும் கொடுக்காததும் எந்தக் கோர்ட்டார் சி. பு கோ 130 வது பிரிவின்படி உத்தரவு செய்து தஸ் தாவேஜுகளைக் கொண்டுவரும்படிசெய்தார்களோ அவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது, ஹை கோர்ட்டில் ரிவிஷனில், இது விஷயத்தில் கீழ் கோர்ட்டார் செய்த உத்தரவில் பிரவேசிக்க மாட் டார்கள்.

பாலா:—சில கேஸ்களில் ஒரு கக்ஷிக்காரன் தாக்கல் செ ய்த தஸ்தாவேஜுகளை எதிர்கக்ஷிக்காரன் பார்க் ம்படி உத்தரவு செய்கிறார்களே.

கக்ஷி:—ஆம். அந்த தஸ்தாவேஜியை எந்தக் கக்ஷிக்கா ரன்தாக்கல் செய்கிறானே அவன்கேசைமட்டிலும் பலப்படுத்தக்கூடியஆதாரங்களிருந்து எதிர்கக்ஷி காரனுடைய கேசைப் பலப்படுத்தக்கூடிய ஆதா ங்களில்லா விட்டால், எதிர்கக்ஷிக்காரன் அந்ததஸ் தாவேஜுகளைப் பார்ப்பதற்குச் சட்டமிடங் கொடு க்கமாட்டாது. ஆனல்உன்னுடையகேசில், தாக்கல் செய்யப்பட் டிருக்கும் தஸ்தாவேஜிகள் உன்கைப் பட எழுதின கடிதங்கள்என்று சொல்லுகின்றாய் டி. மு. கோர்ட்டார் உனக்குக் காண்பித் திருக்க வேண்டும். ஆயினும் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு இது விஷயமாய் தாக்கல் செய்வதில் யாதொ ருபலனுமில்லை.

பா:—இதற்குமுன் இம்மாதிரி யாரேனும் இது விஷய மாக ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாக்கல் செ ய்து தள்ளுபடி செய்யப்பட் டிருக்கிறதா ?

லா:—இதே மாதிரி ஒரு அப்பீல் கும்பகோணத்திலிரு ந்து வந்தது. அதிலும் அப்பீல்தார் உன் பெய கொண்ட ஸ்திரீதான். இந்த அப்பீல் 1907ளு தி திய 167ம் நெ. ரிவிஷன் மனுவாக தாக்கல் செய் யப்பட்டுவிசாரணை செய்யப்பட்டதில் கோர்ட்டார் டி. மு. கோர்ட்டார் செய்த உத்தரவில் பிரவேசிக் கக்கூடாதென்று சொல்லி தள்ளி விட்டார்கள். போய் வா ?

III

லாயர்:—என்ன அம்மா, இவ்விடம் வந்திருக்கிறீர்கள் ஏதேனும் கேசிருக்கிறதோ ?

கக்ஷிக்காரி:—ஆம். ஹைகோர்ட்டில் ஒரு அப்பீல் தாக் கல் செய்யவேண்டும்.

லா:—எதைக் குறித்து?

கக்ஷி:—ஸ்வீகாரத்தைக் குறித்து.

லா:—கீழ்க்கோர்ட்டில் உமக்குப் பிரதிகூலமாகத்தீர்ப்பு சொல்லப் பட்டதோ ?

கக்ஷி:—ஆம்.

லா:—கட்டு கொண்டுவந்திருக்கிறீரோ ?

கக்ஷி:—கொண்டு வந்திருக்கிறேன் இதோ.

லா:—நல்லது, உம்முடைய கேசைச் சற்றுச் சுருக்க மாய்ச் சொல்லும்.

ககூி:—நான் பிராமணஜாதி. என் புருஷன் பாகம் பிரித்துக்கொண்டு நானும் அவரும் தனியே வசித்து வந்தோம். அவர் 1881௵ இறந்து போய் விட்டார். எங்களுக்குப்புத்திரசந்தானமில்லே. என் புருஷனுக்குச் சொந்தமான சில ஸ்திதிகள் இப்போது என்வச மிருக்கின்றன. நான் ஒரு ஸ்வீகாரம்எடுத்துக்கொள்ள விரும்பினேன். நான்அப்படி எடுத்துக்கொள்ளவேண்டுமானல் என்புருஷனின் பெரிய தகப்பனருக்கிருக்கும் இரண்டு குமாரர்கள் சம்மதத்தைப் பெறவேண்டுமென்றும், இல்லாவிட்டால்நான் எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரம் செல்லாதென்றும் எங்க அமுக்கு வருகிற பெரியவாள் சொன்னுக. என் மைத்துனர் இரண்டு பேர்களில் மூத்தவரைப்போய் யோசனே கேட்டேன். அவர், "அம்மாஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேணுமென்று சொல்லுகிருயே, உன் புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உனக்குச் சம்மதம் கொடுத்திருக்கிருரா?" என்று கேட்டார்.

லா:—அவர் கேட்டது சரிதான்.

ககூி:—என்னத்தினுல் அது சரிதான் என்று சொல்லுகிறீர்கள்?

லா:—விதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதாயிருந்தால் புருஷன் இறந்து போவதற்கு முந்தி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி அனுமதி கொடுத்திருக்கவேண்டுமென்று சட்டம்கூறுகின்றது. பிறகு என்ன நடந்தது சொல்லும்.

ககூி:—உங்களே நான் அப்பீலில் வக்கிலாக வைக்கப் போகிறேனே, தங்களிடம் நான் பொய் சொல்லலாமா? ஆகையால் நிஜத்தைச் சொல்லிவிடுகிறேன். அதாவது, என் புருஷனுடைய பிராணன் பிரியும் பரியந்தம் அவர் இறந்து போவாரென்று நானும் நினைக்கவில்லே. அவரும் நினைக்கவில்லே. ஆகையால் ஸ்வீகார பிரஸ்தாபமேயில்லே. இருந்த போதிலும் எனக்கு என்ன சொல்லுகிருரென்று கேட்கலாமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்குள்ளாக அவருக்குக் கபம் கட்டிக்கொண்டது. பேச முடியவில்லே. இருந்தபோதிலும் அவர் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுமபடி சொன்னதாகவே நான் என் மூத்தமைத்துனருடன் சொல்லி விட்டேன். சரிதான். அப்போது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலா மென்று அவரும் சம்மதம் கொடுத்தார். இளைய மைத்துனர் ஒருமாதிரி சுபாவமுடையவர் அவர் சம்மதம் கொடுப்பாரோ கொடுக்கமாட்டாரோ என்று அஞ்சி நான் அவர் சம்மதத்தையே கேட்கவில்லே. 1906௵ ஏப்பிரல்௴ 20௳ ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டேன்.

லா:—ஆனல் இப்போது இளைய மைத்துனர் தம்முடைய சம்மதத்தையும் பெருமல் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டிருப்பதாகத் தாவா கொண்டுவந்திருக்கிருரோ?

ககூி:—அதுமட்டிலுமா! என் புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள எனக்கு அனுமதிகொடுக்கவேயில்லே என்றும், என் மூத்தமைத்துனரிடம் நான் பொய்சொல்லி அவருடைய சம்மதத்தைப் பெற்றதாகவும் இந்த ஸ்வீகாரம் செல்லாதென்றும் வியாஜ்ஜியமாடுகிருர்.

லா:—நல்லது, இனி கட்டைப்பார்த்துத் தெரிந்துகொள்ளுகிறேன்-(பார்க்கிருர்) ஓகோ! புருஷன் அனுமதி கொடுத்ததாகக் கீழ்க் கோர்ட்டில் சாக்ஷிகள் கூட விட்டிருக்கிறீர்போ லிருக்கிறதே!

ககூி:—ஆம். என்னசெய்கிறது? கோர்ட்டிற்குப் போனல் நிஜத்தைச் சொன்னல் காரியமாகிறதா!

லா:—அப்படியும் புருஷன் அனுமதிகொடுத்தது ருஜுப்படவில்லே. மேலும் பொய்சொல்லி மூத்தமைத்துனரின் சம்மதத்தைப் பெற்றதாகவும் ருஜுப்பட்டது. இளையமைத்துனர் சம்மதத்தையும் பெறவில்லே. நல்லது இப்போது என்ன செய்யவேண்டும்?

ககூி:—ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்யவேண்டும்.

லா:—அடேபாவம்! கைப்புண்ணைப்பார்க்கக் கண்ணுடியும் தேவையா? முதலாவது, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் புருஷனுடைய சம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும். புருஷனுடைய சம்மதத்தைப் பெற்றிருந்து, இந்த மைத்துனர்கள் சம்மதம் கொடுக்காமற்போனலும் பாதகமில்லே. நீர் ஆக்ஷேபணையின்றி எடுத்துக்கொள்ளலாம். நீரோ, புருஷனுடைய அனுமதியைப் பெறத் தவறிப்போய்விட்டீர். அப்படி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தால், உன் புருஷன்சொத்திற்கு நீர் இறந்துபோனபின்பு வார்சாக வரக்கூடிய இரண்டுமைத்துனர்களுடைய சம்மதத்தையும் அவசியம் பெற்றிருக்கவேண்டும். ஒருவர் சம்மதம்பெற்றால்மட்டும் போதாது. மேலும் அந்த ஒருவர்சம்மதத்தையும் பொய்சொல்லிப் பெற்றிருக்கிறீர். ஆகையால் இந்த ஸ்வீகாரம் பிரிவு கவுன்சில்வரையில் வியாஜ்ஜியமாடினுலும் செல்லாது. அப்பீல் தாக்கல்செய்வதில் பலனில்லே. இப்போது சமீபத்தில் அதாவது சென்ற டிசம்பர்௴ 18௳ பிரிவு கவுன்சிலில் இதே மாதிரியான சென்னபட்டண அப்பீல்கேசை விசாரணைசெய்து ஸ்வீகாரம் செல்லாது என்று தீர்ப்புசொல்லி அப்பீலேத் தள்ளிவிட்டார்கள். ஆகையால் நீர் வீணே கோர்ட்டில் பணச் செலவு செய்து கஷ்டமடையவேண்டாம். போய்வாரும் அம்மா!

IV.

லாயர்:—சாமி வாருங்கள்! உட்காருங்கள். எங்கே தரிசனம் கொடுத்து வெகு நாளாகின்றதே.காஞ்சீபுரத்தில் எல்லாம் க்ஷேமந்தானு? தென்கலே வடகலேசண்டை ஒன்றுங்கிடையாதா? எங்களுக்கு ஏதேனும் கேஸ்கள் கொடுக்கக்கூடாதா?

வடகலே அய்யங்கார் ககூிக்காரர்:—என்னசார், கேசுகளுக்கு என்ன குறைவு? சூரியன் ஒரு நாள் உதயமாவதற்கு மறந்தாலும் மறந்து போவான். எங்க

ஊரிலே தென்கலே வடகலேசண்டை உண்டாகாமலிருக்குமா?

லா:—நாங்கள் பின்னே யாரை நம்பி, வீடு நிலத்தை எல்லாம் அடமானம் வைத்துப் பணச்செலவிட்டுக் கஷ்டப்பட்டுப் படித்து பி.எல், பரீக்ஷையில் தேறியிருக்கிருேம். எல்லாம் கூடி உங்களேப்போலொத்தவைம்புகாரர் (அல்ல! அல்ல! தெரியாமல்வந்துவிட்டது.) கோர்ட்டில் செலவு செய்யக்கூடிய பெரிய மனுஷாளே உத்தேசித்துதானே!

ககூி:—அது சரிதான். பீஸ் வாங்குகிற பரியந்தம் நயமாய் பேசுவார்கள்! பீஸ் சேர்ந்துபோய்விட்டதோ, எங்கள் கேஸ் கூப்பிடுகிறபோது நீங்கள் எந்தக்கோர்ட்டிலிருக்கிறீர்களோ? அந்தச் சமயம் வருகிறீர்களோ என்னமோ!

லா:—நான் மட்டிலும் அப்படி அதிகமாய்ச் செய்கிற வழக்கமில்லே. ஒரு கேசையே கட்டி அழுது கொண்டிருந்தால் எங்கள் காலத்தைதான் எப்படிக் கழிக்கிறது? நல்லது என்னமனு சொல்லுங்கள்.

ககூி:—நம்மூரிலே அந்த திருக்கோயிலிலே வேதாந்த தேசிக விக்கிரக மிருக்கிற தல்லவா? இதற்குப் பூஜை முதலிய மரியாதைகள் டிரஸ்ட்டிகள் சரிவர நடத்திவருகிறதில்லே. ஆதலால் அந்த டிரஸ்டிகளில் ஒருவரை வேலையை விட்டு விலக்கிவிடும்படியாக ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த டிக்கிரியை நிறைவேற்ற மனு கொடுத்தேன். பூஜை முதலியவைகளே டிரஸ்டி சரிவர நடத்தி வைக்காமற் போனல் பிரத்தியேகமாக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமே யொழிய டிக்கிரியை நிறைவேற்றச் சாத்தியப்படாதென்று ஜில்லா ஜட்ஜி நிறைவேற்று மனுவைத் தள்ளிவிட்டார்.

லா:—டிக்கிரி எந்த வியாஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரி? அதில் என்ன சொல்லியிருக்கிறது?

ககூி:—இந்தத்திருக்கோயில் விஷயமாக முன் ஒரு வியாஜ்ஜியம் டிரஸ்ட்டிகளுக்கும் சில ஆராதனைக் காரர்களுக்கும் நடந்தது. அப்போது ஹைகோர்ட்டார் கொடுத்த டிக்கிரியில் "கோவில்களில் என்ன வழக்கமோ அதன் பிரகாரம் வேதாந்த தேசிகருக்குப் பூஜையும் மரியாதைகளும் நடத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

லா:—சரிதான். ஜில்லாக்கோர்ட்டார், நிறைவேற்று மனவைத் தள்ளினது சரிதான். இது டிக்ளரேட்டரி டிக்கிரிதானே.

ககூி:—அப்படி என்றால் என்ன?

லா:—அந்தக் கோவிலிலிருக்கும் வேதாந்த தேசிகர் பிரதிதினம் பூஜையும் மரியாதைகளும் பெற்றுக் கொள்ளுவதற்குப் பாத்தியதையிருக்கின்றது. இன்னும் விவரமாய்ச் சொல்லவேண்டுமானல் வேதாந்ததேசிகருக்குப் பிரதிதினம் பூஜையும் மரியாதைகளும் நடத்திவைக்க டிரஸ்ட்டிகள் கட்டுப்பட்டிருக்கிருர்கள்.

ககூி:—இந்த டிக்கிரியை நிறைவேற்றி அப்படிப் பூஜை நடத்திவரத் தவறிப்போன டிரஸ்ட்டிகளே விலக்க முடியாதா?

லா:—முடியாது. இந்த டிக்ளரேட்டரி டிக்கிரியை ஆதாரமாகவைத்துக்கொண்டு டிரஸ்டிகளே விலக்கப் பிரத்தியேக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டும். ஆகையால் அப்பீல்செய்வதில் பலனில்லே.

ககூி:—இம்மாதிரி இதற்குமுன் ஏதேனும் கேஸ்நடந்திருக்கிறதா?

லா:—இதேமாதிரி ஜானகிராம் செட்டி என்பவர் ஹைகோர்ட்டில் தாக்கல்செய்த 1905-௵த்திய 205-வது ரிவிஷன்மனுவைக் கோர்ட்டார் தள்ளி டிரஸ்ட்டியை உத்தியோகத்தினின்று தள்ளவேண்டுமானல் பிரத்தியேக வியாஜ்ஜியம் கொண்டுவரும்படி சொல்லியிருக்கிருர்கள்.

V.

அண்ணுமலே செட்டியார்:—நானே நாட்டுக்கோட்டை செட்டியார். நான் முந்திரிவட்டி காணிவட்டி கூடத் தள்ளவிடாமல் கடன்களே வசூல்செய்து விடுகிறேன். இப்படி வசூல்செய்து ரூபாய் இருபதினுயிரத்தை ஜமீன்தாருக்குக்கொடுத்து இழந்து போவதென்றால் என்வயிறு பற்றிஎரிகிறதே! எதிரி சென்னபட்டணம் மார்ட்கேஜ் பாங்கிக் காரர்கள், தகுந்த பாரிஸ்டரை வைப்பார்கள். ஆகையால் என்தரப்பிற்குப் பாஷ்யமையங்காரையே வைக்கவேண்டும். அவரிடம் போவோம்.

பாஷி:—செட்டியாரா? வாரும். கேசா? அபிப்பிராயமா?

ககூி:—அபிப்பிராயம் கொடுத்தால் போதுமானது.

பாஷி:—ரூ 100 பீஸ்.

ககூி:—இதோ.

பாஷி:—அடே ரெங்கா! இதை எடுத்துக்கொண்டு போய் கஸ்தூரியிடம்கொடுத்து வரவுவைக்கச் சொல்லு. நல்லது செட்டியாரே கீழ்க்கோர்ட்டு ரிக்கார்டு கொண்டுவந்திருக்கிறீரா?

ககூி:—கொண்டுவந்திருக்கிறேன். இதோ!

பாஷி:—(5 நிமிஷம் பார்த்துவிட்டு) "ஹைகோர்ட்டில் அப்பீல்செய்வதிற் பலனில்லே" போய்வாரும்.

ககூி:—காரணம் தெரியவில்லேயே?

பாஷி:—சீனிவாசா! இந்த ரிகார்டுகளேப் பார்த்து அவருக்குக் காரணம்சொல்லு. செட்டியாரே! பயங்காதீர். அவரும் ஹைகோர்ட்டு வக்கீல்தான்.

சீனி:—அந்நிலந்தான்வியாஜ்ஜியத்திலிருக்கிறதுஎன்று தெரியுமே, நீர் ஏன் அந்த நிலத்தை அடமானம் வைத்துக் கொண்டு இவ்வளவு பெருந்தொகையை கொடுத்தீர்?

ககூி:—கன்னிவாடி ஜமீன்தாருக்கும் சென்ன பட்டணம் மார்ட்கேஜ் பாங்கியாருக்கும் வெகு நாளாய் வியாஜ்ஜியம் நடந்து வருகின்றது என்று தெரியும். அந்த வியாஜ்ஜியம் முடிந்துபோய் விட்டது. அந்த டிக்கிரிப்படி கன்னிவாடி ஜமீன்தாரும் சிலகிராமங்களேப் பெந்தகம் எழுதிக் கொடுத்துவிட்டார்.

சீனி.—நீர் இப்போது பெந்தகம் பெற்றுக் கொண்டிருக்கிற நிலமும் கன்னிவாடி ஜமீன்தார் பாங்கிக் காரருக்குப் பெந்தகம் எழுதிக் கொடுப்பதாக ஒப்

புக் கொண்ட நிலங்களில் ஒன்று. மற்ற நிலங்களை ஜமீன்தார் பாங்கியாருக்குப்பெந்தகம்எழுதிக்கொடுத்துவிட்டு இந்த ஒரு நிலத்தைமட்டிலும் பெந்தகம் வைக்கமாட்டேன் என்று வம்பு வழக்கு சொல்லிக்கொண்டிருந்தார். பாங்கியார் சமாதானமாய் ஆனவரையில் ஜமீன்தாரைக் கேட்டுப் பார்த்தார்கள். அவர் பெந்தகம் எழுதிக்கொடுக்கமாட்டேன் என்று ஒரே பிடிவாதமா யிருந்தார். விதியில்லை. பாங்கிக்காரர் உடனே இந்த நிலத்தைப் பெந்தகம் எழுதிக்கொடுக்கும்படி கட்டாயப் படுத்த பாங்கியார்ஜமீன்தார்பேரில் வியாஜ்ஜியம் போட்டார்கள். இந்த வியாஜ்ஜியம் தாக்கலான பிறகு அந்த நிலத்தை உம்மிடம் பெந்தகம்வைத்து ஜமீன்தார்கடன் வாங்கி யிருக்கிறார்.

ககூஷி:—வியாஜ்ஜியம் தாக்கலான பிறகு அந்த நிலத்தைப் பெந்தகம் பெற்றால் தோஷ மென்ன? நான் தொகை கொடுக்கவில்லையா? பெந்தகப் பத்திரம் ரிஜிஸ்டராகவில்லையா?

லா:—அதெல்லாம் சரியாய்த்தான் நடத்தி யிருக்கிறீர்கள். இருந்த போதிலும் டிரான்ஸ்பர் ஆப்பிராபர்ட்டி ஆக்ட் 52 வது பிரிவில் ஒரு அசையாப் பொருளைக் குறித்து கோர்ட்டில் வியாஜ்ஜியம் நடந்து கொண்டிருக்கிறபோது அந்தப் பொருளை எந்தக் கக்ஷிக்காரரும் கோர்ட்டாருடைய உத்தரவின்றி டிரான்ஸ்பர் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலத்தைக்குறித்து வியாஜ்ஜியம் நடந்து கொண்டிருக்கும்போது அதை உம்மிடம் பெந்தகம்வைத்து ஜமீன்தார் பணம்வாங்கியதும் நீர் பெந்தகம் பெற்றுக்கொண்டதும் பிசகு. பாங்கியார் இந்த நிலத்தைக்குறித்து வியாஜ்ஜியம் செய்ததில் பாங்கியாருக்கும் டிக்கிரிகிடைத்து விட்டது. டிக்கிரிப்படி ஜமீன்தாரும் இந்த நிலத்தைப்பாங்கியாருக்குப் பெந்தகம் எழுதிக்கொடுத்து விட்டார்கள்.

ககூஷி:—ஆகவே நான் மேலே செய்யவேண்டிய காரியம் என்ன?

லா:—ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தாலும் பலன்படாது. கீழ்க்கோர்ட்டார் டிக்கிரி கொடுத்தது போலப் பணத்திற்கு மட்டிலும்தான் டிக்கிரி கொடுப்பார்கள்.

ககூஷி:—நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன் தயவு செய்து கேளுங்கள். என்ன பீஸ் கேட்கிறீர்களோ அதை இப்போதே கொடுத்து விடுகின்றேன். எப்படியாவது நம்ம பெரிய அய்யா பாஷியமய்யங்கார் அவர்களை விட்டு பேசச்சொல்லி இந்தக் கேசை ஜெயித்துக் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும் சாமி!

சினி:—அதெல்லாம் முடியாதுகாணும்.

ககூஷி:—நம்ம பெரிய அய்யா மனசுவச்சாக் கூடவா?

சினி:—இது மாதிரி கேசிலே உம்மைப்போல பணம் கொடுத்த ஒரு செட்டிக்கு கீழ்க்கோர்ட்டார் பண டிக்கிரிமட்டிலும்தான் கொடுத்தார்கள். அவர் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்து மிஸ்டர். P. S. சிவசாமி அய்யரையும் மிஸ்டர். பாஷியமய்யங்காரையும்தான் வக்கீல்களாய் வைத்தார்கள். இவர்கள் ஆனமட்டிலும் பேசிப் பார்த்தார்கள். மேலும் சீப்ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் பென்சன் ஆகிய இந்த ஜட்ஜிகள் புல்பென்ச் கூடின கோர்ட்டு டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 52 வது பிரிவில் வியாஜ்ஜியமாடப்படும் போது எந்த சொத்தைக் குறித்து வியாஜ்ஜியமாடப்படுகிறதோ அதை ஒரு கக்ஷிக்காரரும் பராதீனம் செய்யக்கூடாது என்று விபரமாய்ச் சொல்லியிருக்கும் போது அதற்கு மாறுதலாகத் தீர்ப்பு சொல்லக் கூடாதென்று சொல்லி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

சகூஷி:—அந்தக் கேஸ் சென்னபட்டணம் லாரிப்போர்ட்டில் வந்திருக்கிறதா?

லா:—இ. லா. ரி. 29 சென். 426 வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

VI.

கூரிவீரப்பரெட்டி:—அப்பப்பா! இந்தக் காலத்திலே சட்டஞான மில்லாமலிருப்பது மிகுந்த கெடுதி. நியாயம் ஒருபுறமிருக்கிறது, சட்டமொருபுற மிருக்கிறது. கோர்ட்டார் நியாயமென்று தெரிந்துகொண்டபோதிலும் சட்டத்திற்கு விரோதமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். நமக்கா பெரியகுடித்தனம். பொழுதுவிடிந்தால் அந்திபட்டால் கோர்ட்டு விவகாரமாயிருக்கிறது. அடிக்கடி லாயரைப்போய் யோசனைபாசனை கேட்கிறதென்றால் அவர்களுக்குப் பீஸ் கட்டுவதிலேயே பணமெல்லாம் போய் விடுகிறது! நான் தான் இப்போது இந்த அப்பீல் விஷயமாய்ச் சென்னபட்டணம் போகிறேனே. அப்போது சென்னபட்டணம் நாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி 37-ம்நெ. வீட்டில் மெசர்ஸ் ந. ராதா கிருஷ்ணு கம்பெனியார்கள் "இந்திய சட்டகெஜெட்" என்று ஒரு மாதாந்த சஞ்சிகை பிரசுரிக்கிறார்களாம். அதற்கு ரூ. 4 - 14 - 0. செலுத்திவிட்டேனேயானல் மாதமாதம் ஜர்னல் வந்துகொண்டிருக்கும். அதைவாசித்தால் நமக்குண்டாகும் சந்தேகங்களை நாமேதெளிய வைத்துக் கொள்ளலாம். லாயரிடம்போகவேண்டியதுமில்லை. பணம்கொடுக்க வேண்டியதுமில்லை. நல்லது, சென்னபட்டணம்வந்து சேர்ந்து விட்டோம். வக்கீல் மிஸ்டர் சுந்தரய்யரிடம் போகலாம்.

லா:—வாரும் ரெட்டியாரே! க்ஷேமமா?

ககூஷி:—க்ஷேமந்தான்.

லா:—அப்பீல்கேஸ் ஏதேனுமிருக்கிறதா?

சகூஷி:—சாமி, ஒரு முக்கியகேஸ்! கீழ்க்கோர்ட்டில் வெகு அக்கிரமம் செய்துவிட்டார்கள்.

லா:—என்ன உம்முடைய கேசைச்சொல்லும்.

ககூஷி:—நம்மூரிலே பாப்பிரெட்டி வெகுநாளாய் தன்னுடைய நிலம் விற்கவேணுமென்றும் என்னை வாங்கிக்கொள்ளும்படியும்சொல்லியிருந்தான். நான் வாங்கிக் கொண்டேன். பணம்கொடுத்து விட்டேன். என்வசத்திலும்நிலத்தைவிட்டுவிட்டான். கிரயசாசனம் எழுதிரிஜிஸ்டர்பண்ணிக்கொண்டு போனேம். பத்திரத்தில் ஏதோ பிழையிருக்கிறதென்று சொல்லிப் புதியபத்திரம் எழுதிவரும்படி உத்தரவுசெய்தார்கள். பிறகு அவகாசமாய் எழுதி ரிஜிஸ்டர் செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்படியே தாமதமாய்ப் போய்விட்டது. இதற்குள் இந்தநிலத்திற்கு ஒரு நல்ல கிராக்கிவந்தது. அதை ஒருவனிடம் கிரயம் செய்தேன். எவன் என்னிடம்கிரயத்துக்குப்பெற்றானே அவனுக்குப் பாப்பிரெட்டி நிலத்தை ஒப்புவிக்கமாட்டேன் என்றான். அதன் பேரில் அவர் பாப்பிரெட்டி நிலத்தை ஒப்புவிக்கக் கட்டாயப்படுத்தும்படியாக 1898ம்-ஆ தாவா செய்தார். செய்யவே, கோர்ட்டார் நிலத்தைப் பிரதிவாதியினிடம் ஒப்புவித்துவிடும்படியாக டிக்கிரி கொடுத்துவிட்டார்கள். இப்போது பாப்பிரெட்டி ஷை டிக்கிரியை ரத்துசெய்வதற்காக என்னையும் என்னிடமிருந்து நிலம் வாங்கினவனையும் சேர்த்து தாவா கொண்டுவந்திருக்கிறார்.

லா:—தாவா முனிசீப்கோர்ட்டிலேயா?

ககூஷி:—ஆம். அந்தக்கோர்ட்டில் என்பக்கந்தான் தீர்ப்பு சொன்னார்கள். நான் நிலத்தின் கிரயத்தையும் கொடுத்துவிட்டேன். நிலத்தையும் ஒப்புக்கொண்டு விட்டேன். ஆதலால் கிரயம் முடிந்துபோய்விட்டதென்று சொல்லி வாதியின்வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

லா:—வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தாரே, அவர்கள் என்ன தீர்ப்பு சொன்னார்கள்?

ககூஷி:—வாதியிடமிருந்து கிரயத்தொகையைப் பெற்றுக்கொண்டு நிலத்தை அவர்வசம் ஒப்புவித்துவிடும்படியாகத் தீர்ப்பு சொன்னார்கள்.

லா:—இப்போது என்ன, இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல் செய்யவேண்டுமோ?

ககூஷி:—ஆம். என்ன, ஜில்லாக்கோர்ட்டில் நியாயமென்பது கிடையாதே! நான் நிலத்தைக் கிரயம்பெற்றுக்கொண்டேன். கிரயத்தொகை என்னமோ அதையும் செலுத்திவிட்டேன். நிலம் விற்றவன் நிலத்தையும் என் வசம் ஒப்புவித்துவிட்டான். கிரயசாசனம் எழுதிக்கொண்டு ரிஜிஸ்டர் பண்ணப்போனேம். ரிஜிஸ்டிராரும் அந்தப்பத்திரத்தைப் பார்த்தார். ஒரு பிசகைக் காண்பித்து இப்படி எழுதக்கூடாது என்று சொல்லிப்புதிய பத்திரம் எழுதிக்கொண்டுவரும்படி சொன்னார். எல்லாம் கூடி பத்திரம் இன்னும் ரிஜிஸ்டராகவில்லை. அப்பீல் நம்மபக்கம் ஜெயமாய்விடும் சாமி!

லா:—அவசரப் படவேண்டாம். கிரயம் பெற்றுக்கொண்டீர், பணம் செலுத்தி விட்டீர், நிலம் ஒப்புக்கொண்டீர்முக்கியமானகாரியம் எதுவோ அதைச் செய்யவில்லை. கலியாணத்தில் தாலி கட்ட மறந்தது போல ரிஜிஸ்டர் செய்ய மறந்து போய்விட்டீர்.

ககூஷி:—ரிஜிஸ்டர் செய்யாமற் போனால் என்ன?

லா:—டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆகட் 54 வது பிரிவில் ரூ. 100-க்கும் 100-க்கு மேற்பட்ட அசையாச் சொத்து கிரயம் செய்யப்பட்டால் அதன்கிரயசாசனம் ரிஜிஸ்டர்செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபிரிவில் ஒரு அசையாப் பொருளைக் கிரயம் செய்வதாகச் செய்துகொள்ளும் ஒப்பந்தம் (எகிரிமெண்டு) கிரயசாசனமாகமாட்டாதென்றும் அந்தச்சொத்தில் எந்த விதமான பாத்தியதையும் உண்டாகமாட்டாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ககூஷி:—ஆனல் நான்நிலம் ஒப்புக்கொண்டு விட்டேனே.

லா:—ஒப்புக்கொண்டு விட்டால் என்ன? கிரய ஆதரவு ரிஜிஸ்டர் செய்யப்படும் பரியந்தம் அந்த நிலத்தில் உமக்குப் பாத்தியதை உண்டாகவில்லை.

ககூஷி:—நிலம் கிரயம் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி ஒருவன் பணம் வாங்கிக்கொண்டு கிரய ஆதரவு எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுக்கமாட்டேன் என்றால் நிலத்தையும் பணத்தையும் அவனிடமே விட்டுவிடவேண்டுமோ?

லா:—விட்டுவிடுவானேன்? ஆதரவு எழுதிக் கொடுத்துக் கட்டாயப் படுத்த இவன்மேல் தாவாகொண்டு வரவேண்டும்.

ககூஷி:—ஆனல் இப்போது அப்பீல் செய்வதில் பிரயோஜனப்படமாட்டாதுபோ லிருக்கிறதே?

லா:—அதில் என்ன சந்தேகம்! ஆனல் நீர் ஒன்று செய்திருக்கலாம். அதாவது, எப்போது வாதி டிக்கிரியை ரத்துசெய்யத் தாவா கொண்டுவந்தானே அப்போதே நீர், அவனை ரிஜிஸ்டர் செய்யக் கட்டாயப்படுத்த அவன்பேரில் ஒரு தாவா கொண்டுவந்து இந்த தாவா முடிவடையும் பரியந்தம் அவன் கொண்டுவந்த தாவாவை விசாரிக்காமல் நிறுத்திவைக்கலாம். அப்படிச் செய்யத் தவறிப்போய்விட்டீர். அப்படிச்செய்வதாயிருந்தாலும், இப்போது சாத்தியப்படாது. ஏனெனில் நீர், இப்போது தாவா செய்தால் உம்முடைய தாவா காலாவதிதோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறது.

ககூஷி:—இம்மாதிரி அப்பீல் ஏதேனும் ஒன்று வந்து ஹைகோர்ட்டார் தள்ளுபடி செய்திருக்கிறார்களா?

லா:—சென்ற வருஷம்தான் இதே மாதிரி ஒரு அப்பீல் வந்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அது புல்பென்ச் தீர்மானம்.

நகசி:—சென்னபட்டணம் இந்தியன் லா ரிப்போர்ட்டில் எந்தவால்யூமில் எந்தப் பக்கத்தில் இந்தக் கேஸ் சொல்லப்பட்டிருக்கிறது?

லா:—இ: லா. ரி. 29. சென். 336. பக்கம்.

OUR DOCUMENT WRITER.
நம்முடைய எழுத்துக்கூலி.

நம்முடைய "இந்திய சட்ட கெஜெட் ஆபீஸார்," "எழுத்துக்கூலி" இனி ஒவ்வொருமாத கெஜெட்டிலும் ஆதரவு எழுதும்விதங்களை எடுத்துக் கூறிக்கொண்டு வருவார்.

உயில், அல்லது மரணசாசனம் எழுதவேண்டியதாயிருந்தால் அடியிற்கண்டபிரகாரம் எழுதவேண்டும்.

உயில் அல்லது மரணஸாஸனம்.

1907-ம் ஞு ஏப்ரல்மீ 20உ தஞ்சாவூர் ஜில்லா மாயவரம்தாலூக்கா குத்தாலம் வேளாளஜாதி சிவமதம் பயிர்ஜீவனம் ரெங்கசாமி முதலியார் குமாரன் நாராயணசாமி முதலியாராகிய நான் என்னுடைய புத்திஸ்வாதீனத்துடன் மனப்பூர்வமாய் எழுதிவைத்த மரணஸாஸனம்.

எனக்குத் தீராரோகங்கண்டு அதிகநாள் பிழைத்திருப்பேன் என்கிற நம்பிக்கையில்லாதபடியால் நான் நற்கதி அடையும்பொருட்டும் என்னுடைய ஆயுளுக்குப் பிற்காலம் என் சொத்துக்களைக்குறித்து என்னுடைய வார்சுகள் சண்டைசச்சரவுமுதலான தொந்தரவுசெய்யாமல் சமாதானமாய் வாழ்ந்திருக்கும்படிக்கும் நான் பின்வருமாறு ஏற்பாடுசெய்திருக்கிறேன். எனக்குப் பிற்காலம் இதனடியிற்கண்ட 1, 2, தபசில் சொத்துக்களை என்னுடைய குமாரர்கள் மூன்றுபேருக்கும் சுவாதீனப்படுத்தியிருக்கிறேன். ஷெ யார்கள் ஒன்றுகவாவது அல்லது சமமாகப் பிரித்தாவது அவர்களுடைய இஷ்டப்படி அனுபவித்துக்கொள்ளவேண்டியது. ஆனல் என்னுடைய மூன்ருவது குமாரனிப்போது மைனராயிருக்கிறபடியால் ஷெ. யானுக்கு என்னுடைய மற்ற இரண்டுகுமாரர்களும் கார்டியன்களாக இருந்து ஷெ மைனருக்காக அவன் பாகச்சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு சொத்தின் வரும்படியைப் பாங்கியில்போட்டு ஷெயானுக்கு 18-வயது வந்தபின் வரும்படியையும் சொத்தையும் அவன்வசம் விட்டுவிடவேண்டியது. என்னுடைய குமாரத்திகளில் இருவருக்குசீதனமுதலானவற்றைக்கொடுத்து அவர்களைக் கலியாணம்செய்துகொடுத்துவிட்டபடியால் ஷெ யார்களுக்கு என் சொத்துக்கவில்யாதொருபங்கும்கிடையாது. ஆனல் அவர்கள்மேல் வைத்த அன்பினல் மேற்படியார்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 200 என் சொத்துக்களிலிருந்து என்னுடைய ஆயுளுக்குப்பின் ஆறுமாதத்திற்குள் கொடுத்துவிடவேண்டியது; என்னுடைய மூன்ருவதுமகன் மைனராயிருந்து அவனுக்குக் கலியாணமாகாதிருப்பதால் மேற்படியானுக்குக் கலியாணகாலத்தில் ஸ்ரீதனத்திற்கு ரூ. 1000-மும் கலியாணச்செலவு ரூ 800-ம் என்னுடைய சொத்திலிருந்து கொடுத்துவிடவேண்டியது. இதன் மூன்ருவது தபசில்கண்ட நஞ்சை புஞ்சை நிலங்களையும் மனை வீடு வகையறுக்களையும் என் மனைவிக்குப்பாத்தியப்படுத்தியிருக்கிறேன். மேற்படியாள் ஆயுசுபரியந்தம் விக்கிரயம், தானம், அடமானம் முதலியவை செய்யாமல் இஷ்டப்படி அனுபவித்துக்கொண்டு அவளுடைய அந்தியகாலத்துக்குப்பின் அப்போதிருக்கும் புத்திரர்கள் சமபாகமாய் ஷெ யாளுக்குப் பாத்தியப்படுத்தியிருக்கும் சொத்துக்களைப் பாகித்துக்கொள்ளவேண்டியது. எனக்குப் பிற்காலம் என்னுடைய புத்திரர்களை இழந்துபோக நேரிட்டால் என்னுடைய மனைவி அவள் இஷ்டப்படி ஒரு புத்திரனை ஸ்வீகாரம்செய்துகொள்வதற்கு இதன்மூலமாய் அதிகாரம் கொடுத்திருக்கிறேன், ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப் பிரியமில்லாதபக்ஷத்தில் என் புத்திரர்களுக்கென்று பாத்தியப்படுத்தியிருக்கிற சொத்துக்களை என்குமாரத்திகளும் அவர்கள்பிள்ளைகளும் சமபாகமாய் பங்கிட்டுக்கொள்ள வேண்டியது. என்னுடைய தமக்கையார் புருஷன் இறந்துபோய் அவள் என்வீட்டில் இப்போது இருந்துவருகிறபடியாலும் அவளுக்குவேறே ஆதரவு இல்லாதபடியாலும் சாகும்வரை அவள் என்வீட்டில் குடியிருந்து அவளுடைய அன்னவஸ்திரத்துக்காக மாதம் ரூ. 5 என்சொத்திலிருந்து கொடுத்துவரவேண்டியது. எனக்கு மிகவும் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்துவந்த வேலைக்காரனுக்கு ரூ 100 என்சொத்திலிருந்து இனம் கொடுக்கவேண்டியது. இந்த மரணசாசனத்திற் கண்டபடி நடவடிக்கை நடத்தும்பொருட்டு என்னுடைய குமாரர்களிருவரையும் என்னுடைய மைத்துனன் (ரையும்) எக்ஸிக்கியூட்டராகவும் நியமித்திருக்கிறேன். இவர்கள் இந்த உயிலில் கண்டபடி காரியங்களை நடப்பித்துக்கொள்ளவேண்டியது.

சாக்ஷிகள்.

கையெழுத்து.

கெட்டெழுத்து.

குறிப்பு:—மரணசாசனம் சாகும் தறுவாயில்தான் எழுதிவைக்கவேண்டுமென்பது அவசியமில்லை. எக்காலத்திலும் எழுதிவைக்கலாம்—

N. கோதண்டபாணி நாயுடு

MISCELLANEOUS SUITS.
சிவில் கிரமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்.
இன்சால்வெண்ட் கோர்ட்டு.

கமிஷனர்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் S. சுப்பிரமணிய அய்யர்.

மனு.

மனுவின் விபரம்:—மெசர்ஸ் அர்பத்நட் கம்பெனியாருடைய சொத்துக்கள் இப்போது அபிஷியல் அசயினி மிஸ்டர் ஆர்ச்சிபால்டரீட்வசம் இருக்கின்றது. இந்தசொத்துக்களில் சரிபாதி காலஞ்சென்ற பாட்ரிக் மாக்படேயினுக்கு (Patric Macfadyen) சேரவேண்டுமென்று அவர் தரப்பில் அட்மின்ஸ்டிரேட்டர் ஜெனரல் வியாஜ்ஜியம்கொண்டுவர உத்தேசித்திருக்கிறதாகத் தெரிகிறது. அப்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் அந்த வியாஜ்ஜியத்தை ஆக்ஷேபிக்க அனுமதிகொடுக்கவேண்டுமென்றும், அப்படி ஆக்ஷேபிக்க நேரிடும்படியான செலவுகளை அர்பத்நட் எஸ்டேட்டிலிருந்து கொடுக்கும்படியாக கோர்ட்டார் உத்தரவுசெய்யவேண்டுமென்றும் அபிஷியல் அசயினியாகிய மிஸ்டர் ஆர்ச்சிபால்ட்ரீட் மனுசெய்துகொண்டார்.

உத்தரவு:—அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் கொண்டுவரப்போகிற வியாஜ்ஜியத்தை ஆக்ஷேபிக்கவும், அதற்காக வேண்டிய செலவுகளை அர்பத்நட் எஸ்டேட்டிலிருந்து கொடுக்கும்படியாகவும் அபிஷியல் அசயினியாகிய மிஸ்டர் A. ரீட்டுக்கு அனுமதிகொடுக்கப்பட்டது.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன். / மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ். }

கிரிமினல் அப்பீல்.

(14-3-07).

பைத்தியம்கோண்ட கோலையாளி கேஸ்.

கேசின் விபரம்:—தென்கன்னடத்தில் ஒருவன் கடந்த ஆக்டோபர்மீ 19உ, தன்னுடைய பெண்சாதியையும் பிள்ளையையும் கொலைசெய்துவிட்டான். அந்தக் குற்றத்திற்காக தென்கன்னடம் செஷன்கோர்ட்டார் இவனுக்கு மரணதண்டனை விதித்தார்கள். மரணதண்டனை ஹைகோர்ட்டாரால் உறுதிப்படுத்தப்படவேண்டியதானபடியால், இதுவிஷயமாகக்கோர்ட்டார் கிழ்கோர்ட் ரிக்கார்டுகளைப்பரிசீலனஞ்செய்தபோது, கைதி பிரஸ்தாபகுற்றத்தைச் செய்ததற்கு இரண்டுவருஷத்திற்கு முந்தி பயித்தியம்கொண்டிருந்ததாகத் தெரியவந்தது. இதன்பேரில் இந்தக்கைதியை ஜெயிலில்வைத்து அவனுடைய மனநிலைமையை அறியும்பொருட்டு சர்ஜனுக்கு உத்தரவுசெய்திருந்தார்கள். கைதிஜெயிலில்45நாள்வரையில் வைக்கப்பட்டு சோதனைசெய்யப்பட்டதில் இவனுக்கு அடிக்கடி சித்தபேதம் உண்டாகின்றதென்று டாக்ட்டர் சர்ட்டிபிக்கேட் கொடுத்தார்.

தீர்ப்பு:—கைதியைக் கொலைக்குற்றத்தினின்று விடுவித்துவிட்டார்கள். கி. பு கோ. 471-வது பிரிவின்படி இந்தக்கேசைப்பற்றி லோக்கல் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்திருக்கிருர்கள். அவர்களிடமிருந்து உத்தரவுவரும்பரியந்தம் கைதியை ரிமாண்டுஜெயிலில் வைத்திருக்கும்படியாக உத்தரவு செய்திருக்கிருர்கள்.

பயித்தியம்கோண்ட கோலையாளி கேஸ்.

கேசின் விபரம்:—கோயமுத்தூரில் கடந்த செப்டெம்பர்மீ 13உ குட்டிக்கவுண்டனை உலக்கையால் அடித்துக் கொன்றதற்காகக் கோயமுத்தூர் செஷன்கோர்ட்டாரால் மரணதண்டனை விதிக்கப்பட்ட கர்னினநாவிதன் சில சமயங்களில் தனக்குப்பயித்தியம் வருகிறதென்று அப்பீல் செய்துகொண்டான். ஹைகோர்ட்டார் அவனுடைய மனநிலைமையைப்பரிசோதித்து ரிப்போர்ட்செய்யும்படியாக டாக்டருக்கு உத்தரவு அனுப்பியிருந்தார்கள். டாக்டர் இவன் பயித்தியம்கொண்டவன் என்று சர்ட்டிபிக்கேட் அனுப்பினர்.

தீர்ப்பு:—கைதி கொலைக்குற்றத்தினின்று விடுவிக்கப்பட்டான். கி. பு. கோ. 471-வது பிரிவின்படி இந்தக் கேசை லோக்கல் கவர்ன்மெண்டாருக்கு ரிபர்செய்திருக்கிருர்கள். உத்தரவு வரும்பரியந்தம் கோயமுத்தூர் சென்டிரல் ஜெயிலில் வைக்கும்படி உத்தரவுசெய்யப்பட்டிருக்கிருன்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

1096ஞு-த்திய 510 நெம்பர் சிவில் ரிவிஷன்மனு.

கேசின் விபரம்:—ஒருவர் நெல்லூரில் 1903-4ஞுத்தின் பிந்தியபாகத்தில் ஒரு வீடுவாங்கினர். அந்த வீட்டிற்கு 1903-4-ம் வருஷத்திற்குச் சேரவேண்டிய முனிசிபல் வரியை முனிசிபாலிட்டியார் இவரிடமிருந்து கேட்டார்கள். இவர் தாம் 1903 - 4 ல் பிந்திய பாகத்தில் வீடுவாங்கியபடியால் பிந்தி பாதிவருஷத்திற்கு மட்டிலும் வீட்டுவரிகட்டுவதாகச் சொன்னர். முனிசிபல் சேர்மன் இவரிடமிருந்து முழுவருஷத்திற்கு வரி கிடைக்கவேண்டுமென்று நெல்லூர் டி. மு. கோர்ட்டில் தாவா கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார், பிரதிவாதிவீட்டை 1903-4ம் ஞு-த்திய பிந்தியபாகத்தில் வாங்கியிருக்கிறபடியால் பிந்திய பாதிவருஷத்திற்குத்தான் வரிகட்ட பாத்தியப்பட்டவரென்று சொல்லி பாதிவருஷத்திற்குள்ள வரியைக் கட்டும்படி டிக்கிரிகொடுத்தார். இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக சேர்மன் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாக்கல்செய்தார்.

அப்பீல்தார் தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் V. சேஷகிரி அய்யர் ஆஜராகி ஜில்லாமுனிசிபல் ஆக்ட் 64-வது பிரிவில் வீட்டின்பேரில் விதிக்கப்பட்டிருக்கும் வரியை ஒருவருஷத்தில் இருமுறையாகச் செலுத்தலாமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் அது ஷை ஆக்ட் 47-வது பிரிவின்படி ஒருவருஷத்திற்குக் கணக்குப்பார்த்து விதிக்கப்பட்டவரி என்றும், இந்த வரியை முனிசிபாலிட்டியார் ஷை ஆக்ட் 113-வது பிரிவின்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தாகிலும் அல்லது ஜப்திசெய்தாகிலும் வசூல்செய்யலாமென்றும் ஷை ஆக்ட் 110-வது பிரிவின்படி வீட்டுவரியை வீட்டில் குடியிருப்பவனிடமிருந்து

கூட வசூல்செய்யலாமென்றும் ஆகையால் இப்போது இந்தவீட்டை வாங்கியிருக்கிற பிரதிவாதி ஷெ வீட்டிற்குச் சேரவேண்டிய வரிபாக்கியைச் செலுத்தப் பாத்தியப்பட்டவரென்றும் வாதித்தார்.

பிரதிவாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் M. குன்ஜுணிநாயர் ஆஜராகித்தம்முடைய கக்ஷிக்காரராகிய பிரதிவாதி பாதிவருஷ வரிகட்டத்தான் பாத்தியப்பட்டவரென்றும் 60 நாள்களுக்குச் சேர்ந்தாப்போல் வீடுகாலியாயிருந்தால் செலுத்தப்பட்டவரியை வாப்பிஸ்கொடுக்கும்படி டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட் 66-வது பிரிவின்படி முனிசிபாலிட்டியாருக்கு மனுசெய்துகொள்ளலாமென்று 102-வது பிரிவின்படி 6 மாதத்திற்கு ஒருபில் கொடுக்கப்படுகின்றதென்றும் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 55-வது பிரிவு முதலாவது கிளாசின் பிரகாரம் வீட்டைவிற்றவன் விற்கும்வரையில் சர்க்கார் வரிகளைச் செலுத்தப் பாத்தியப்பட்டவனென்றும் வாதித்தார்.

தீர்ப்பு:—வீட்டிற்கு முனிசிபாலிட்டியார் விதிக்கும் வரி வருஷவரியே ஒழிய 6 மாத வரியல்ல. ஆதலால் பிரதிவாதி வருஷவரியையும் செலுத்தப் பாத்தியப்பட்டவர். பிரதிவாதி ஒருவருஷவரியையும் செலுத்திவிட்டு, வீட்டைவிற்றவனிடமிருந்து அவன் கொடுக்கவேண்டிய வரியை வசூல்செய்துகொள்ளவேண்டும் என்று சொல்லி அப்பீலை ஏற்றுக்கொண்டு செலவுதொகையுடன் டிக்கிரிகொடுத்தார்கள்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

(18-3-07).

வட்டிபோடாத பிராமிசரிநோட்டு கேஸ்.

கேசின் விபரம்:—பிரதிவாதிக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருந்தார். அதில் வட்டி சொல்லப்படவில்லை. பிரதிவாதி கடனைத்தீர்க்கவில்லை. வாதி கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

பிராமிசரி நோட்டில் வட்டி சொல்லப்படாமற் போனபோதிலும், வட்டி செலுத்தவேண்டு மென்று தாம் பிரதிவாதியுடன் ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகச் சொல்ல, டி. மு. கோர்ட்டார் இந்துதேச சாக்ஷி சட்டம் 90 வது பிரிவின்படி, சாக்ஷியம் விடும்படி வாதிக்கு அனுமதி கொடுத்து கூடிய வட்டி முதலுக்கும் பிரதிவாதியின் பேரில் டிக்கிரி கொடுத்தார்.

பிரதிவாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து பிராமிசரி நோட்டின்படி வாதிக்குக் கிடைக்கவேண்டிய முதலுக்கு மட்டிலும் டிக்கிரி கொடுத்தார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—வாதி தரப்பிற்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் V சேஷகிரி அய்யர் ஆஜராகி 9 கல்கட்டா ரிப்போரிட்டில் சொல்லப்பட்டிருக்கிற இம்மாதிரி கேசில் வட்டி செலுத்தவேண்டுமென்று வாதி, பிரதிவாதிகள் வாய்ச்சொல்லைச்செய்துகொண்ட ஏற்பாட்டிற்குக் கோர்ட்டார் சாக்ஷியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்.

பிரதிவாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் K. நாராயணராவ் ஆஜராகி, இந்த பிராமிசரி நோட்டிற்கு, கோர்ட்டார் வட்டி போட்டால் வாதிபிரதிவாதிகள் எழுத்து மூலியமாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு விரோதமாயிருக்கும். ஆதலால் வாதி பிரதிவாதியுடன் வாய்மூலியமாய்ச் செய்து கொண்ட ஏற்பாட்டிற்கு சாக்ஷியம் விட்டால் கோர்ட்டார் அதை அங்கீகாரம் செய்து கொள்ளக்கூடாது என்று வாதித்தார்.

தீர்ப்பு:—பிராமிசரி நோட் மூலமாக வாதி பிரதிவாதிகள் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தம் பூர்த்திப்பட்டிருக்கும்போதும் அவை பேதப்படும்படியாவது அல்லது அதனுடன் சேர்க்கும்படியாவது வாய்மூலியமான சாக்ஷியம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்று சொல்லி அப்பீலைச் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

பெண்சாதியைக் கொலைசெய்த கேஸ்.

(18-3-07)

கேசின் விவரம் :—இந்த அப்பீல் கேஸ் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் ராமசாமி நாயக்கன் என்பவன் 1907-ம் ஆு ஜனவரிமீ 11உ இரவு தன்னுடைய பெண்சாதியுடன் தன்னுடைய வீட்டிலிருந்த ஒரு அறையில் படுக்கப்போனான். மாமனாரும் மாமியாரும் வீட்டிற்கு எதிரிலிருந்த ஒரு கொட்டகையில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். நடு இரவில் "அப்பா, "அப்பா" என்கிற சத்தம் கேட்க, கொட்டகையில் படுத்துக் கொண்டிருந்த மாமனாரும் மாமியாரும் எழுந்திருந்து பார்க்கையில் ஷெ ராமசாமி நாயக்கனென்பவன் தன்னுடையபெண்சாதியாகியசம்பூரணத்தின் கூந்தலைக்கையிற் பிடித்து இழுத்துக்கொண்டு சாணான் அரிவாளால் அவளுடைய தொண்டையை அறுத்துக்கொண்டிருந்தான். அவளுக்கு தேகத்தில் இருபது அபாயகரமான காயங்களிருந்தன. உடனே இறந்துபோய்விட்டாள். இந்தக்கேசை செஷன் கோர்ட்டார் விசாரித்தபோது தன்னுடைய பெண்சாதி, குற்ற நடந்ததினத்திற்கு முந்தினதினம் தன்ஜிராயன் என்பவனுடன் விபசாரம் செய்து கொண்டிருந்ததாகவும், தான் வீட்டுக்கொல்லையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அதனால் திடீரென்று கோபம் பிறந்து இந்தக்குற்றத்தைச் செய்ததாகவும் டிபன்ஸ் சொன்னான்.

இந்தக்கேசை விசாரணை செய்த அசசர்கள் கைதி குற்றவாளி யல்லவென்று அபிப்பிராயம் கூறினார்கள். ஆனால் கோர்ட்டார், அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் கைதிக்குத் திடீரென்று கோபமூட்டக்கூடிய சம்பவமே யாதொன்றுமில்லை என்றும் முன்யோசனை செய்து கைதி இந்தக் கொலையைச் செய்திருக்கிறான் என்றும் அபிப்பிராயம கூறி அவனுக்கு மரணதண்டனை விதித்தார்கள். கைதி அப்பீல் செய்து கொண்டான்.

தீர்ப்பு:—கைதி திடீரென்று கோப மூண்டு இந்தக் கொலையைச்செய்திருக்கிறான் என்று அபிப்பிராயப்பட்டு மரணதண்டனையை ஜென்ம தீவாந்தர தண்டனையாக மாற்றி விதித்தார்கள்.

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

புல்பென்ச்:—சர் ஆர்னால்ட் வொயிட் சீப்ஜஸ்டிஸ்.
மிஸ்டர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

பெரியகோவில் இராமானுஜ பெரியஜீயர் அய்யங்கார் தரப்பில் அவருடைய அதிகாரம்பெற்ற ஏஜண்டு K. வெங்கடாசாரியார். } பிரதிவாதி-அப்பீல்வாதி.

வக்ஷிமிதாஸ்—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாபாயின்ட்:—ஒரு டிக்கிரிக்கு விரோதமாக இரண்டாவது அப்பீல்செய்தால், அந்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்குக் காலம் நிர்ணயிக்க டிக்கிரி பிறந்ததேதி முதல் கணக்கிடவேண்டுமா, அல்லது, இரண்டாவது அப்பீல்கோர்ட்டு உத்தரவு பிறந்தகாலமுதல் கணக்கிடவேண்டுமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி தமக்கு 1305 - ம் பசலிக்குச் சேரவேண்டிய மேல்வாரத்திற்காகப் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்ததில் முனிசிப் கோர்ட்டில் அவருக்கு டிக்ரிகிடைக்கவில்லை. ஜில்லாக்கோர்ட்டில் செய்துகொண்டதில் அவருக்கு 1901 -ம் ஆு சூலைமீ 15உ டிக்கிரி கொடுக்கப்பட்டது.

பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல்செய்தார். ஆனால் 1903 ஆு மார்ச்சுமீ 2உ அந்த அப்பீலை வாப்ஸ்பெற்றுக்கொள்ளும்படி மனு கொடுத்தார். இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் அப்பீலை வாப்பீஸ்கொடுக்காமல் அப்பீலைத் தள்ளுபடி செய்து வாதிக்குச் செலவுதொகையும் கொடுக்கும்படி உத்தரவுசெய்தார்கள்.

வாதி தமக்கு ஜில்லாக்கோர்ட்டார் 1901-ம் ஆு சூலைமீ 15உ கொடுத்த டிக்கிரியை நிறைவேற்ற ஜில்லாக்கோர்ட்டில் 1904-ம் ஆு டிசம்பர்மீ 13உ மனு செய்துகொண்டார்.

பிரதிவாதி, டிக்கிரி பிறந்ததேதிக்கும் நிறைவேற்று மனுகொடுக்கப்பட்டதேதிக்கும் கணக்கிட்டால் டிக்கிரிக்கு காலாவதிதோஷம் உண்டாயிருக்கிறதென்று சொல்லி நிறைவேற்றுமனுவை ஆக்ஷேபித்தார். பிரதிவாதி ஹைகோர்ட்டில் செய்துகொண்ட இரண்டாவது அப்பீலைவாப்பீஸ்பெற்றுக்கொண்டபடியால் அப்பீலைக்கோர்ட்டார் தள்ளின உத்தரவு டிக்கிரியாக மாட்டாதென்றும் ஆதலால் காலாவதிதோஷம் அதுமுதல் கணக்கு செய்யப்படக்கூடாதென்றும் ஆக்ஷேபனைசொன்னார்.

ஜில்லாக்கோர்ட்டார், பிரஸ்தாப டிக்கிரிக்குக் காலாவதிதோஷம், இரண்டாவது அப்பீல்கோர்ட்டார், பிரஸ்தாபடிக்கிரிக்கு விரோதமாகச் செய்துகொள்ளப்பட்ட அப்பீலைத் தள்ளினகாலமுதல் கணக்குச்செய்யவேண்டுமென்றும் அப்படிக் கணக்குச்செய்து பார்த்தால் இந்த டிக்கிரிக்குக் காலாவதிதோஷம் உண்டாகவில்லை என்றும் சொல்லி டிக்கிரியை நிறைவேற்றும்படி உத்தரவுசெய்தார்.

இந்த உத்தரவிற்கு விரோதமாகப் பிரதிவாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல்செய்தார். இந்த அப்பீல் மனு மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்களாலும் விசாரணைசெய்யப்பட்டது.

புல்பென்ச்சுக்கு ரிபர்செய்த காரணங்கள்:—லாஜிர் மாக்ட்டன் V. லல்விட்சில் (இ. லா. ரி. 9. கல். 100)ல் சொல்லப்பட்டிருக்கிற கேசில் இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் உத்தரவுசெய்த காலமுதல் காலாவதிதோஷம் கணக்கிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பேட்டலோஜி V. கானு (இ. லா. ரி. 15. பம். 370) அப்தல் ரகிமான் V. மொய்தீன்சாயப்பா (இ. லா. ரி. 22. பம். 500) ஆகிய இந்த இரண்டுகேசுகளிலும் கோர்ட்டார் வியாக்கியானம் செய்திருக்கிறபடி ஒரு அப்பீல்தார் தன்னுடைய அப்பீலை வாப்பீஸ்பெற்றுக்கொள்ளும்போதுகோர்ட்டார்செய்யும் உத்தரவு டிக்கிரியாக மாட்டாது. இப்படிசந்தேகமாயிருக்கிறபடியால் பிரஸ்தாப அப்பீலில் சம்பந்தப்பட்ட டிக்கிரி, காலாவதிதோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளும்பொருட்டு இந்தக்கேசை புல்பென்ச்சுக்கு ரிபர்செய்தார்கள்.

லாயர்கள்:—அப்பீல்தாருக்கு வக்கீல் மிஸ்டர் சி. அய்யாசாமி சாஸ்திரியாரும், அப்பீல்பிரதிவாதி தரப்பிற்கு K. குப்புசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

புல்பென்ச் அபிப்பிராயம்:—மேலே கூறப்பட்ட பம்பாய்கோர்ட்டுத்தீர்மானங்களை நாங்கள் எற்றுக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது அப்பீல் தாக்கல்செய்யப்பட்டு அந்த அப்பீல் கோர்ட்டார் அந்த அப்பீல் முடிவடையும்படியான ஒரு உத்தரவுசெய்தால் இந்த அப்பீலில் சம்பந்தப்பட்ட டிக்கிரிக்குக்காலாவதிதோஷம் அப்பீல்கோர்ட்டார் உத்தரவுசெய்தகாலமுதல் கணக்கிடப்படவேண்டுமென்றும் அப்படிப் பிரஸ்தாப அப்பீலில் சம்பந்தப்பட்ட டிக்கிரிக்குக் கணக்குச்செய்தால் காலாவதிதோஷமுண்டாகவில்லை என்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

புல்பென்ச்சார் மேற்கூறப்பட்ட அபிப்பிராயம் அனுப்பியபின்னர் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்களும் இந்த அப்பீல் ரிவிஷன்மனுவை விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்தார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர். ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

1902-ம் ஆுத்திய 181-ம் நெ. அப்பீல்.

சிதம்பரம் செட்டியார்:—(வாதி) அப்பீல்வாதி.

V.

சாமி அய்யர் என்கிற அருணசல அய்யர்வகையரு (பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

1902-ம் ௵த்திய 60-ம் நெ. உத்தரவுக்கு விரோதமாய்ச் செய்துகொண்ட அப்பீல்.

சிதம்பரம் செட்டியார்:—மனுதார்.

V.

சீனிவாச சாஸ்திரிகள் வகையரு:—எதிர்மனுதார்.

லா பாயின்ட்:—ஒரு கடனாளிபேரில் பலபேர்கள் டிக்கிரி பெற்றிருக்கும்போது தனக்குள்ள ஜங்கமசொத்தை அந்தக் கடனாளி ஒருவனுக்கு டிரான்ஸ்பர் செய்துவிட்டால், அப்படி டிரான்ஸ்பர் செய்தது உண்மையாகவும், தகுந்த கிரயத்திற்கும் செய்யப்பட்டிருக்குமாயின் அந்த டிரான்ஸ்பர் செலாமணியாகக்கூடிய டிரான்ஸ்பர்தான். அந்த டிக்கிரிக்காரர்கள் ஆக்ஷேபிக்கக்கூடாது. ஆனல்; அப்படிச்செய்யப்பட்ட டிரான்ஸ்பர் ஒருபாகத்தில் மட்டிலும் சரியானபடியிருந்து மற்றபாகத்தில் கடன்காரர்களை மோசம்பண்ணவேண்டுமென்று டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருந்தால் அந்த டிரான்ஸ்பரின் சரியான பாகத்தைக் கூட கோர்ட்டார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

கேசின் விபரம்:—இந்த அப்பீல்கள் கும்பகோணத்திலிருந்து வந்திருக்கின்றன. கும்பகோணம் சப்கோர்ட்டில் நடந்த 1899ம் ௵த்திய12-ம் நெ. கிரமவியாஜ்ஜியத்தில் சாமி அய்யர் என்பவருக்கு ரூபா 14 ஆயிரத்திசொச்சத்திற்கு ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டது. டிக்கிரி கடனாளி ஷை டிக்கிரிக்கடனைக் கோர்ட்டில் கட்டிவிட்டார். பிரஸ்தாப சாமி அய்யருக்கே பலகடன்காரர்களிருக்கிறார்கள். இவர்களில் ஏற்கனவே டிக்கிரிபெற்ற சிலர் தங்களுடைய டிக்கிரிகளை நிறைவேற்றிக் கோர்ட்டில்கட்டியிருந்த பணத்தை ஜப்திசெய்தார்கள். அண்ணாமலை செட்டி என்பவரும் ஷை சாமி அய்யருக்கு ஒரு கடன்காரர். இவரும் அவர்பேரில் டிக்கிரிபெற்றிருந்தார். ஷை சாமி அய்யர் தாம்பெற்றடிக்கிரியை அண்ணாமலை செட்டியாருக்கு ரூபா 15 ஆயிரத்திற்கு 1900ம் ௵மார்ச்சு௴ 28௳ அசயின் அதாவது மேடோவர் செய்தார்; அம்மேடோவர் பத்திரத்தின் விபரம்.

(1) அண்ணாமலைசெட்டி வர்த்தக கம்பெனிக்குச் சேர வேண்டியது (1893ம் ௵த்திய 93-ம் நெ. கிரம வியாஜ்ஜியத்தில் கிடைத்த டிக்கிரிப் பிரகாரம்) ரூபா. 4390. (2) 1899ம் ௵ 65 நெ. கிரம வியாஜ்ஜியத்தில் லக்ஷ்மணசெட்டி என்பவருக்குச் சேரவேண்டிய ரூபா. 1650. எக்சிபிட் C. பிராமிசரிநோட் பாபத்திற்காக K. சீனிவாச அய்யருக்குச் சேரவேண்டிய ரூபா 1185. ரூபா 7775 சப்ரிஜிஸ்டராரின் முன்னிலையில் சாமி அய்யருக்குக் கொடுத்து விடவேண்டும். ஆகவே மேடோவர் இம்மாதிரி எழுதி சப்ரிஜிஸ்டராரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

அண்ணாமலைசெட்டியாரும்மேடோவர் பத்திரத்தில் சொல்லப்பட்டபடி கடன்காரர்களுக்குக் கடனைக்கொடுத்துவிட்டு சப்ரிஜிஸ்டரார் முன்னிலையில் சாமி அய்யருக்கும் ரூபா 7775ம் கொடுத்துவிட்டார். ஆனல் இந்த ரொக்கத்தை மட்டிலும் அண்ணாமலை செட்டியார் சாமி அய்யரிடமிருந்து வாங்கிக்கொண்டு மறுபடியும் இருவரும் ஒரு உடன் படிக்கை செய்துகொண்டார்கள். அதென்ன வென்றால், அண்ணாமலை செட்டியார் பெற்றுக்கொண்ட ரூபா 7775 - க்கு அவர் அடியிற்கண்ட சாமி அய்யர் கடன்களைக் கொடுத்து விடவேண்டுமென்று ஏற்பாடுசெய்துகொண்டார்கள். அவையாவன:—ரூபா 610 சாமி அய்யர்கையில் கொடுத்து விடவேண்டும். ரூபா 270 C. கிருஷ்ணசாமி அய்யர் என்பவருக்குக் கொடுத்துவிட வேண்டும். ரூபா 57 கோர்ட்டில்செலுத்திவிடவேண்டும். ரூபா 1000 இந்த வியாஜ்ஜியத்தின் அப்பீல் வாதியாகிய சிதம்பரம் செட்டிக்குக் கொடுத்து விடவேண்டும். ரூபா 5838 நாடகபாலாமணிக்குக் கொடுத்துவிடவேண்டும். இவ்விதமாக அண்ணாமலை செட்டியாரும் சாமி அய்யரும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். அண்ணாமலை செட்டியார் தாம் டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்ட டிக்கிரியைச் சிதம்பரம் செட்டியாருக்கு டிரான்ஸ்பர் செய்தார். சிதம்பரம் செட்டியார் சி. பு. கோ. 232-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி தாம் டிக்கிரியை டிரான்ஸ்பர் பெற்றுக் கொண்டதைக் கோர்ட்டார் அங்கிகரிக்கும் பொருட்டுமனுகொடுத்தார். இந்தடிக்கிரியை, ஜப்திசெய்திருந்தசாமி அய்யரின்மற்றக் கடன்காரர்கள்ஆக்ஷேபிக்கவே, கும்பகோணம்சப்கோர்ட்டார் சிதம்பரம் செட்டியார் கொடுத்திருந்த மனுவைத் தள்ளிவிட்டார்கள். இந்த உத்திரவிற்கு விரோதமாகச் சிதம்பரம் செட்டியார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளாமல் தாம் டிக்கிரியை டிரான்ஸ்பர் பெற்றுக் கொண்டதை ஸ்தாபிக்கக் கும்பகோணம் சப்கோர்ட்டிலேயே அசல் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை 1902ம் ௵த்திய 2-வது நெ. கிரமவியாஜ்ஜியமாகத் தாக்கல் செய்துகொண்டு விசாரணைசெய்து, வாதி நிறைவேற்று நடவடிக்கையில் கோர்ட்டார் செய்தஉத்தரவு வாதிக்குத் திருப்திகரமாகயிராவிட்டால் அந்தஉத்தரவிற்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ள வேண்டுமே யொழிய பிரத்தியேக வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

ஆகவே, கும்பகோணம் சப்கோர்ட்டார் மனுவைத் தள்ளி உத்தரவு செய்ததற்கு விரோதமாகவும், அசல் வியாஜ்ஜியத்தைத் தள்ளினதற்கு விரோத மாகவும முறையே மனுவும் அப்பீல்வியாஜ்ஜியமும் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—V. கிருஷ்ணசாமி அய்யரும், S. சீனிவாச அய்யங்காரும் அப்பீல்வாதி தரப்பிற்கு ஆஜரானார்கள். ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அவர்கள் 19-வது பிரதிவாதி தரப்பிற்கு ஆஜரானர்.

தீர்ப்பு:—சிதம்பரம் செட்டியார் தாம் டிக்கிரியை டிரான்ஸ்பர் பெற்றதை ஏற்றுக்கொள்ளும்படி செய்துகொண்ட மனுவை சப் கோர்ட்டார் விசாரித்து மனுவைத்தள்ளி உத்தரவு செய்ததில் அண்ணாமலைசெட்டி K. சீனிவாச அய்யர், லக்ஷ்மண செட்டியார், ஆகிய இவர்கள் சாமிஐயரின்உண்மையான கடன்காரர்களென்று தீர்மானித்திருப்பதுபோல நாமும் தீர்மானிக்கின்றோம். பாலாமணிதான் சாமி அய்யருக்கு ரூ. 5838 கடன் கொடுத்ததாகவும் அந்தத்தொகையை அண்ணாமலை செட்டியாரிடம் பெற்றுக்கொண்டதாகவும் சாக்ஷியம் சொல்லியிருந்தபோதிலும் அந்த சாக்ஷியத்தை நம்பக்கூடவில்லை. ஏனென்றால், எந்தத்தேதியில் சாமி அய்யருக்குக்

கடன்கொடுத்ததென்றும் எதற்காகக் கடன்கொடுத்ததென்றும் ஆகிய இம்மாதிரி விஷயங்களைக் குறித்து நிச்சயமாய் ஒன்றும்சொல்ல முடியவில்லை. மேலும் சாமி அய்யருக்கும் பாலாமணிக்கும் தேகசம்பந்தமுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் இவ்வளவு பெருந்தொகையாதொரு ஆதரவு அல்லது வவுச்சரின்றி சாமி அய்யருக்குக் கடனைக் கொடுத்ததாகச் சொல்வதை நம்பக்கூடவில்லை. அதுபோலவே சிதம்பர செட்டிக்கு சாமி அய்யர் ரூ. 1000 கொடுக்கவேண்டுமென்று சொல்வது பொய்யான கடனென்றே ருஜூப்படுகின்றது. சாமி அய்யருக்கு உள்ளபடி 1899-ம் ௵ 12-ம் நெம்பர் கிரம வியாஜ்ஜியத்தில் கிடைத்த டிக்கிரித் தொகையைத் தவிர வேறு ஐவேஜியில்லை. அண்ணாமலை செட்டியார், சிதம்பரம் செட்டியார், சாமி அய்யர் ஆகிய மூவரும் பாலாமணியினிடம் சினேகம்செய்து ஒருவருடன் ஒருவர் சினேகிதமாயிருப்பவர்கள். ஆகையால் சாமி அய்யருடைய க்ஷேமத்தை நாடி அல்லது அவர் பற்றுவைத்திருக்கும்படியானவர்களின் க்ஷேமத்தை நாடி சாமி அய்யரின் மற்றக்கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் இவர்கள் எல்லோரும்கூடி வாங்கி சாமி அய்யரின் பாதிசொத்தைமட்டிலும் சில கடன்காரர்களுக்குக் கொடுத்துவிட்டுப் பாதிசொத்தை மறைத்து சாமி அய்யரின் மற்றக் கடன்காரர்களை மோசம்செய்ய வேண்டுமென்கிற கருத்துடன் இந்த டிக்கிரியை டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சப் கோர்ட்டார் தீர்மானித்ததுபோலவே நாமும் தீர்மானிக்கின்றோம்.

ஆனல் நாம் தீர்மானிக்க வேண்டிய அடுத்த அயிட்டம் என்னவென்றால், சாமி அய்யருக்குப் பல டிக்கிரிக்காரர்க ளிருக்கும்போது அவர்களுள் ஒருவராகிய அண்ணாமலை செட்டியாருக்கு அவர் டிக்கிரியை டிரான்ஸ்பர் செய்தது செலாமணியாகுமா, அல்லது இந்த டிரான்ஸ்பர் மற்ற டிக்கிரிக்காரர்கள்ஷை ரத்துசெய்யக்கூடிய டிரான்ஸ்பரா என்பதே.

இந்த அப்பீல் தாவாவில் சம்பந்தப்பட்ட சொத்து ரொக்கப் பணமாகிய அசையும் பொருளானபடியால் டிரான்ஸ்பர்ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 53-வது பிரிவு இதற்குப் பொருந்தாது. ஆகையால் இந்தக்கேசை தர்மத்துடனும், மனசாக்ஷியுடனும் நீதியுடனும் தீர்மானிக்க வேண்டும். கார்லட் V. ராட்கிளிப் கேசில் பிரிவுகவுன்சிலர்கள் சொல்லியிருக்கிறபடி அந்தந்தக்கேசின் சந்தர்ப்பங்களின்படி உண்மையான டிரான்ஸ்பரா அல்லது கடன்காரரை மோசம்பண்ணவேண்டுமென்று செய்யப்பட்ட டிரான்ஸ்பரா என்று தீர்மானிக்கப்படவேண்டும். ஒரு டிரான்ஸ்பர் செலாமணியாக வேண்டியதா யிருந்தால் தகுந்த ஈடுபெற்றுக்கொண்டு டிரான்ஸ்பர் செய்தால்மட்டும் போதுமானதல்ல. அந்த டிரான்ஸ்பர் யாதொரு மோசடியை உத்தேசித்துச் செய்யப்படாமல் உண்மையான டிரான்ஸ்பராக விருக்க வேண்டும் என்று பிரிவுகவுன்சிலர்கள் மார்க்கமூலேயின்(Piarll Twayne) கேசில் தீர்மானித்திருக்கிறார்கள்.

அப்பீல் வாதிக்காகப்பேசும் மிஸ்டர். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் எப்போது டிரான்ஸ்பர் செய்கிறவன் கைம்மாறுபெற்றுக்கொண்டு டிரான்ஸ்பர் செய்கிறானே அந்தக் கைம்மாறுஎவ்வளவு கேவலமானதாக விருந்தாலும் டிரான்ஸ்பர்செய்தவனும் டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவனும் மோசக்கருத்துடன் இந்த டிரான்ஸ்பரைச் செய்கிறார்களாவென்று கவனிக்கவேண்டியது அனுவசியமென்றும், அப்படி அவர்கள் செய்த டிரான்ஸ்பர் கடன்காரர்கள் மோசப்படுத்த வேண்டு மென்று எண்ணிச் செய்த டிரான்ஸ்பராயிருந்தபோதிலும் அப்படியே அந்த டிரான்ஸ்பரால் கடன்காரர்கள் மோசம் செய்யப்பட்டிருந்தபோதிலும் அந்த டிரான்ஸ்பர் செல்லு மென்று சொல்லுகின்றார். இதற்கு ஆதாரமாக டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 53 வது பிரிவையும், எலிசபத் C. 5 யையும் கூறுகின்றார். ஆனல் இந்த வாதத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 53 வது பிரிவிலும் எலிஜபத் C. 5 லும் ஒரு டிரான்ஸ்பருக்கு நல்ல கைம்மாறும் நல்ல எண்ணமும் ஆகிய இரண்டு அம்சங்களும் சேர்ந்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரிவி கவுன்சில் தீர்ப்புகளும் அப்படியே கூறுகின்றன. பலகடன்காரர்களுக்குப் பணம்கொடுக்கவேண்டிய ஒரு கடனாளி தனக்குள்ள சொத்தை அவர்களுள் ஒருவனுக்கு மட்டிலும் டிரான்ஸ்பர் செய்வதை டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 53 வது பிரிவும் எலிஜபத் C. யும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனல் அந்த டிரான்ஸ்பரால் இதர கடன்காரர்களுக்குப் பாதகரமுண்டாகாம லிருக்கவேண்டுமென்று அதே பிரிவுகள் கூறுகின்றன.

இன்னும் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் இந்த அப்பீல் வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட டிரான்ஸ்பரில் முன்பாகம் அதாவது அண்ணாமலைசெட்டியார், லக்ஷ்மண செட்டியார், சீனிவாச அய்யர் ஆகிய இவர்களுக்குக் கொடுத்ததொகை வாஸ்தவமென்று கோர்ட்டார் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் இந்த டிரான்ஸ்பரை அம்மட்டில் செல்லுபடியுள்ளதென்று தீர்மானிக்க வேண்டுமென்று வாதிக்கிறார். இதையும் ஒப்புக்கொள்ளமுடியாது. அண்ணாமலைசெட்டியாரும் சாமி அய்யரும் சேர்ந்து செய்துகொண்ட டிரான்ஸ்பர் விவகாரம் சாமி அய்யரின் இதர கடன்காரர்களுக்கு முழுதிலும் பாதகமாயிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால் அந்தடிரான்ஸ்பரில் ஒரு சில அம்சங்கள் மட்டிலும் செல்லுபடி யுள்ளனவென்று தீர்மானிக்கமுடியாது. அப்பீல்வாதி தான் நஷ்டப்படாமலிருக்கவேண்டுமென்றுஎண்ணினல் சாமி அய்யரின் இதர கடன்காரர்களுக்கும் கடனைக்கொடுத்துத் தீர்க்கவேண்டும்.

ஆகையால் இரண்டு அப்பீல்களையும் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

பழனியப்பபிள்ளை என்கிற அடுத்த சிநேகிதன் மூலியமாக மைனர் சுப்பம்மாள். } வாதி-அப்பீல் வாதி.

ஆவுடியம்மாள் இன்னும் சிலரும் } பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட் :—வார்சுக்கிரமத்தில் ஒரு விதவை அடைந்திருக்கும் புருஷனுடைய சொத்தின் பேரில் யாதொரு மோசடியின்றி ஒரு சமாதான டிக்கிரி ஏற்பட்டால் அந்த டிக்கிரி, ஷை சொத்தை விதவைக்குப் பிந்தி அடையவேண்டிய வார்சைக் கட்டுப்படுத்துமா கட்டுப்படுத்தாதா ?

கேசின் விபரம்:—பழனியப்பபிள்ளை என்பவர் சில சொத்துக்கள் வைத்துவிட்டு ஆண்சந்ததியில்லாமல் இறந்துபோய்விட்டார். அவருக்கு நான்கு மனைவிகள். முதல்மனைவியும் இரண்டாவதுமனைவியும் இறந்துபோய்விட்டார்கள். இரண்டாவது மனைவியின் புத்திரிதான் இந்தவியாஜ்ஜியத்தின்வாதி. அவருடையமூன்றுவதுமனைவி, மூன்றுவதுபிரதிவாதி; நான்காவது மனைவி. 2 வது பிரதிவாதி;முதல் பிரதிவாதியின் புத்திரி. 4,5, பிரதிவாதிகள் மூன்றுவதுபிரதிவாதியின் புத்திரிகள். வார்சுக்கிரமப்படி மூலபுருஷனுகிய பழனியப்ப பிள்ளையின் சொத்துகள் 1, 3, பிரதிவாதிகளுக்கு வந்து சேர்ந்தன. வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் என்னவென்றால், முதல் பிரதிவாதியும் இன்னும் சிலரும் சேர்ந்து இறந்துபோன பழனியப்பபிள்ளை 1893-ம் ஆ அக்டோபர்மீ 10உ இந்த வியாஜ்ஜியத்தில் எட்டாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் வள்ளிக்கண்ணு அம்மாளுக்கு ரூ. 3000-க்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தது போல சிருஷ்டனை செய்து ஷை வள்ளிக் கண்ணம்மாளைவிட்டு ஷை பிராமசரி நோட்டிற்காகக் கிடைக்கவேண்டிய தொகைக்கு ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரும்படி தூண்ட, அந்த அம்மாள் அப்படியே வியாஜ்ஜியம் செய்ய, இந்த வியாஜ்ஜியம் திருநெல்வேலி சப்கோர்ட்டில் 1896-ம் ஆத்திய 50-ம் நெ. கிரம வியாஜ்ஜியமாக தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோது, வள்ளிக்கண்ணம்மாள், 1, 3, பிரதிவாதிகளுடைய ஒக்குமத்தின்பேரில் ஷை தொகைக்கு டிக்கிரி பெற்றுக்கொண்டதாகவும், இந்த டிக்கிரிப்பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய கடனின் ஒரு பாகத்தைக்கொடுப்பதற்காக அடமானம் வைத்துபோல் முதல் பிரதிவாதி பிரியாதில் 1 வது ஷெட்யூலில் கண்டிருக்கிற சொத்துக்களை இந்த வியாஜ்ஜியத்தில் 6 வது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறவரிடம் அடமானம் வைத்ததாகவும், மேலேசொல்லப்பட்ட சப்கோர்ட்டு டிக்கிரியை 8வது பிரதிவாதியாகிய வள்ளிக்கண்ணம்மாள் இந்த வியாஜ்ஜியத்தில் 9 வது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறவருக்கு மேடோவர் செய்ததாகவும் அவர்ஷைடிக்கிரியைநிறைவேற்றி பிரியாதில் 2 முதல் நான்கு ஷெட்யூல்களில் காணப்பட்டிருக்கும் சொத்துக்களை ஜப்திசெய்து கோர்ட்டு ஏலத்திற்குக்கொண்டுவந்துவிட்டதாகவும், இந்த வியாஜ்ஜியத்தில் 7 வது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டவர் 1900-ம் ஆ செப்டம்பர்மீ 9உ ஏலத்தில் வாங்கினதாகவும், ஆகிய இவ்வளவுவிர்த்தாந்தங்களும் கற்பனைகள் என்றும், உண்மையான நடவடிக்கைகளல்லவென்றும், பிரியாதில் முதல் ஷெட்யூலில் காணப்பட்டிருக்கும் சொத்துக்களை 6 வது பிரவாதிக்குவைத்த அடமானத்தையும், பிரியாது 2 முதல் 4 ஷெட்யூல்களில் காணப்பட்டிருக்கும் சொத்துக்களை 4 வது பிரதிவாதி ஏலத்தில் கிரயம்பெற்றிருப்பதையும் மோசடி என்று கூறி ரத்து செய்யும்பொருட்டும் இந்தப் பராதீனங்கள் ஷை விதவைகளுக்குப் பிறகு ஷை சொத்துக்களுக்கு வார்சாக வரக்கூடிய தம்மைக் கட்டுப்படுத்தாதென்று கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படியும் வாதி திருநெல்வேலி சப்கோர்ட்டில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

சப்கோர்ட்டார் தீர்ப்பு:—எட்டாவது பிரதிவாதிக்குப் பழனியப்ப பிள்ளை பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்தது வாஸ்தவமென்றும், 1896-ம் ஆ 50-வது நெம்பர் கிரம வியாஜ்ஜியத்தில் எட்டாவது பிரதிவாதி பெற்றுக்கொண்ட டிக்கிரி மோசடியான டிக்கிரி அல்லவென்றும், 6 வது பிரதிவாதி அடமானம்வைத்துக்கொண்டதும் 4 வது பிரதிவாதி கோர்ட்டு ஏலத்தில் சொத்தை வாங்கினதும் உண்மையான நடவடிக்கைகள் என்றும் ஆகையால் இந்தப் பராதீனங்கள் வாதியைக் கட்டுப்படுத்து மென்றும் தீர்ப்புசொல்லி வாதியின் வியாஜ்ஜியத்தைச் செலவுதொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

(No. 4 of 1404.)

லாயர்கள்:—அப்பீல்வாதி தரப்பில் மிஸ்டர் C. சங்கர நாயருக்காக மிஸ்டர் S. வெங்கடாசாரியும், அப்பீல் பிரதிவாதிகளாகிய 4 வது 8 வது பிரதிவாதிகள் தரப்பில் மிஸ்டர் K. சீனிவாச அய்யங்காரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்திலிருந்து நாம் வித்தியாசப்படுவதற்கு யாதொரு காரணத்தையும் காணோம். இந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியமெல்லாம் பிரதிவாதிகளுக்குப் பலமாயிருக்கின்றது. வாதி சாக்ஷிகள்விடவில்லை. இறந்துபோன பழனியப்ப பிள்ளை 8 வது பிரதிவாதிக்கு ரூ. 3000 க்குப் பிராமிசரிநோட்டு (எக்சிபிட் 1) எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கினதாக 8 வது பிரதிவாதியுள்பட அனேகம்பேர் சாக்ஷிசொல்லியிருக்கிறார்கள். இறந்துபோன பழனியப் பிள்ளை வேறு தஸ்தாவேஜிகளில் போட்டிருக்கும் கையெழுத்தையும் பிராமிசரிநோட்டில் போட்டிருக்கும் கையெழுத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அது அவருடைய உண்மையான கையெழுத்தென்றே ருஜுப்படுகின்றது. ஷை பழனியப்ப பிள்ளை இறந்துபோன பின் சில மாதங்கள்சென்று அவருடைய விதவைகளாகிய 1, 3 பிரதிவாதிகள் தத்தம் வசமிருக்கும் சொத்துக்களைக் குறித்து ஒரு எக்ரிமென்ட் (எக்சிபிட் 2) உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த உடன்படிக்கையில் இந்தப் பிராமிசரிநோட்டின் கடனையும் சொல்லி இந்தக்கடன் ஷை உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் சொத்துக்களிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உடன்படிக்கையில் இந்த பிராமிசரி நோட்டுக் கடன் விஷயமாக எழுதப்பட்டிருக்கிற விஷயங்களை மோசடி என்றும் உண்மையற்ற விஷயங்களென்றும் நாம் நினைப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோம். ஆகையால் 8 வது பிரதிவாதி எந்தக்கடனுக்காக முதல் பிரதிவாதியின்பேரில் டிக்கிரி பெற்றிருக்கிறாரோ அந்தக்கடன் முதல் பிரதிவாதி வார்சுக்கிரமத்தில் அடைந்திருக்கும் சொத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதாயிருக்கிறதென்றும், அதை வாதி விலக்க முடியாதென்றும் ஏற்படுகின்றது. ஆனால் வாதி ஒரு கக்ஷிசொல்லுகின்றார். அதென்னவென்றால், 8 வது பிரதிவாதி பிராமிசரி நோட்டின்பேரில் கொண்டுவந்த தாவாவில் 1, 3, பிரதிவாதிகள் இரண்டு பேர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்திருந்தும் 3 வது பிரதிவாதியை யாதொன்றும்விசாரிக்காமல், முதல்பிரதிவாதி மட்டிலும் கடனை ஒப்புக்கொண்டதின்பேரில் அவர்கையிலிருக்கும் சொத்துக்களின்பேரில்மட்டிலும் டிக்கிரி கொடுத்தால் போதுமென்று சொல்லி டிக்கிரி பெற்றிருப்பதால், அப்படி பெற்ற டிக்கிரி முதல் பிரதி வாதிக்கு ஷை சொத்துக்களில் ஜீவதசையுள்ள பரியந்தமுள்ள பாத்தியதை மட்டிலும்தான் கட்டுப்படுமென்றும், முதல் பிரதிவாதியின் ஜீவதசைக்குப் பிறகு அந்த டிக்கிரி அச்சொத்தைக் கட்டுப்படுத்தமாட்டாதென்றும் ஆகையால் 6 வது பிரதிவாதிபெற்றுக்கொண்ட அடமானமும் 7 வது பிரதிவாதி கோர்ட்டு ஏலத்தில் கிரயம் பெற்றுக்கொண்டதும் வாதியைக் கட்டுப்படுத்தமாட்டாதென்றும் வாதி வக்கீல் கக்ஷிசொல்லுகின்றார். இந்தக் கக்ஷியை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

இந்தப் பிராமிசரிநோட்டுக் கடன்மோசடி, அல்லது வேறுசில காரணங்களால் இந்த நோட்டுச் செல்லாது என்று ருஜுப்படுத்த வாதிக்கு வசதிகொடுக்கப்பட்டிருந்தும் அவர் ருஜுப்படுத்தவில்லை. ஆகையால் நாம் இப்போது தீர்மானிக்கவேண்டிய ஒரே விஷயம் என்னவென்றால், 6-வது பிரதிவாதி பெற்றுக்கொண்ட அடமானமும், 4 வது பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஏலக் கிரயமும் வாதியின் பாத்தியதைக்குப் பாதகரமாகச் செய்யப்பட்டன வென்று வாதி ருஜுப்படுத்த பிரயத்தனப்படவில்லை. 6 வது பிரதிவாதி வாஸ்தவமாகவே ரூ. 1800, பிராமிசரிநோட்டின்பேரில் 8 வது பிரதிவாதி பெற்ற டிக்கிரிக்காகக் கொடுத்து அடமானம் பெற்றார் என்று ருஜுப்படுகின்றது. இந்த அடமானப் பத்திரத்திலும் யாதொரு நியாயம் தவறின ஷரத்தையும் காணோம். 4 வது பிரதிவாதி கோர்ட்டு ஏலத்திலும் சரியான விலைக்கே கிரயம் பெற்றிருக்கிறார். ஆனால் டிக்கிரி மட்டிலும் வியாஜ்ஜியம் மும்மரமாய்நடத்திப் பெற்றடிக்கிரியல்ல. அதாவது 1-வதுபிரதிவாதிபிராமிசரிநோட்டுக் கடனை ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொண்டு விட்டார். இருந்தபோதிலும் இதில் யாதொரு மோசடியுமில்லை. 8 வது பிரதிவாதியும் 1 வது பிரதிவாதியும் சேர்ந்துகொண்டு வாதியின் பாத்தியதைக்குப் பாதகரமாகச்செய்யவேண்டுமென்று எண்ணி ஒக்குமத்தாய் பெற்ற டிக்கிரியுமல்ல. முதல் பிரதிவாதி இந்த பிராமிசரி நோட்டை ஆக்ஷேபிக்கவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், அது வாஸ்தவமான கடன் என்று அவருக்கு நன்றாய்த்தெரியும். 8 வது பிரதிவாதி முதல்பிரதிவாதி வசமிருக்கும் சொத்தின் பேரில் மட்டிலும் டிக்கிரி கொடுக்கும்படி கேட்டதற்கு ஒரு நியாயமான காரணமுமிருக்கின்றது. அதென்னவெனில், 1, 3, பிரதிவாதிகள் செய்து கொண்டிருக்கிற உடன்படிக்கைப்படி ஷை இறந்துபோன பழனியப்பபிள்ளையின் சொத்துக்களின் பெரும்பாகம் மூன்றுவது பிரதிவாதியின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அவரே ஷை. பழனியப்ப பிள்ளைக்குள்ள கடன் ஷை சொத்துக்களிலிருந்து தீர்க்கவேண்டுமென்றும் அந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருந்தது. ஷை பழனியப்பபிள்ளைக்கு இரண்டு விதவைகளிருக்கும்போது ஒருவிதவை மட்டிலும் செய்த பராதீனம் மற்றொரு விதவையையும் பின்னிட்டுவரும் வார்சுக்களையும் கட்டுப்படுத்தாது என்று வாதி வக்கீல் சொல்லுகிறார். ஆனால் கலியாண சுந்தரம் பிள்ளை V. சுப்பா மூப்பனார் (14. Madras Law-Journal) கேசில், அம்மாதிரிப் பராதீனம் செல்லுபடியுள்ள பராதீனம் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா. ரி. 30. சென். 13.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர். ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ராமசாமி அய்யர் வகையரு:—வாதி—அப்பீல்வாதிகள்.

V.

முத்துசாமி அய்யர்:—பிரதிவாதி – அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட் :—அநியாயமாய் சொத்தை வசப்படுத்திக்கொண்டவனிடமிருந்து ஷைசொத்தைப்பெறுவதற்கு தாவாக்கொண்டுவர வேண்டுமானல் எத்தனை வருஷத்திற்குள் கொண்டுவரவேண்டும் ? அந்தக்காலம் எதுமுதல் கணக்கிடப்படவேண்டும் ?

கேசின் விபரம்:—வாதி 243 கலம் நெல்லை அக்கிரமமாய் எடுத்துக்கொண்டுபோய்விட்டதாகவும், அது தமக்குச் சொந்தமானதென்றும் பிரதிவாதி மாஜிஸ்டிரேட்டினிடம் பிரியாது கொடுத்தார். மாஜிஸ்டிரேட் அந்தப் பிரியாதை விசாரணை செய்து ஷை நெல் பிரதிவாதிக்குச் சொந்தமென்று அபிப்பிராயப்பட்டுப் பிரதிவாதியிடம் ஒப்புவிக்கும்படி 1898ம் ஆ அக்டோபர்மீ 18உ உத்தரவு செய்தார். வாதி அந்த நெல் தம்முடையதென்று ஸ்தாபிக்கவும் அதன் கிரயத்தைப் பெறவும் நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் 1901ம் ஆ அக்டோபர்மீ 17உ தாவா தாக்கல் செய்தார்.

சப்கோர்ட்டே தீர்ப்பு:—கலம் ஒன்றுக்கு ரூபா1-12-0 விகிதம் 117 கலத்திற்குப் பிரதிவாதியின்பேரில் டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி தஞ்சாவூர் ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

ஜில்லாக் கோர்ட்டார் தீர்ப்பு :—117 கலத்தில் 35 கலம் பிரதிவாதி, வாதியின்பேரில் கிரிமினல் பிரியாது தாக்கல் செய்ததின்மேல், போலிசாரால் வாதியிடமிரு

ந்து எடுத்துக் கொள்ளப்பட்டமையால் காலாவதிதோஷம் பிரதிவாதி பிரியாது கொடுத்த தேதி முதல் கணக்கிடப்படவேண்டுமென்றும், பாக்கி 85 கலத்தைப் பிரதிவாதி கிரிமினல் பிரியாது தாக்கல் செய்வதற்கு முந்தியே அக்கிரமமாய்த் தன் வசப்படுத்திக்கொண்டிருக்கிறபடியால் அப்படி. அக்கிரமமாய் வசப்படுத்திய தேதி முதல் காலாவதி தோஷக்கணக்குச்செய்யப்படவேண்டுமென்றும் இப்படி மாஜிஸ்டிரேட்டினிடம் பிரியாது கொடுத்த தேதிமுதல் சப்கோர்ட்டில் தாவா தாக்கலான 1901ம் ளு அக்டோபர்மீ 17உ வரையில் தாவா தாக்கல் செய்தால் மூன்றுவருஷத்திற்கு அதிகமாகிறதென்றும் ஆகையால் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல்செய்தார் (No 282 of 1904).

லாயர்கள்:—A. மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் அப்பீல்வாதிக்கும், ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அப்பீல் பிரதிவாதிக்கும் பேசினார்கள்.

தீர்ப்பு:—35 கல நெல் முதல்பிரதிவாதியின் வீட்டிலிருந்து இந்த நெல் தமக்குச் சொந்தமென்றும் வாதி அக்கிரமமாய்எடுத்துக்கொண்டுபோய்விட்டார் என்றும் பிரதிவாதிகிரிமினல்பிரியாதி தாக்கல்செய்ய, போலிசார் இந்த 35 கல நெல்லையும் முதல் வாதி வீட்டிலிருந்து எடுத்துத் தங்கள்வசம் வைத்துக்கொண்டார்கள். விசாரணை முடிந்தவுடன் மாஜிஸ்டிரேட் உத்தரவின்படி ஷை 35 கல நெல்லையும் பிரதிவாதியின் கையில் போலீசார் ஒப்புவித்துவிட்டார்கள். அப்போது வாதி கொண்டுவந்திருக்கும் சிவில் தாவாவில் ஷை நெல் வாதிக்குச் சொந்தமானதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் மாஜிஸ்டிரேட் நெல்லை பிரதிவாதியிடம் கொடுக்கும்படி பிசகாக உத்தரவு செய்த தேதிமுதல் பிரதிவாதி நெல்லை தம்வசத்தில் அநியாயமாய் வைத்திருந்தார் என்று சட்டப்படி பாவிக்கவேண்டும். ஆகையால் இந்த தாவாவிற்கு காலாவதி தோஷம் கணக்கு செய்யவேண்டுமானால் லிமிட்டேஷன் ஆக்ட். 49 வது ஆர்ட்டிகிலின்படி மாஜிஸ்டிரேட் உத்தரவுசெய்த தேதி முதல் கணக்கு செய்யவேண்டும். அப்படிக் கணக்குசெய்துபார்த்தால் லிமிட்டேஷன் ஆக்ட் 49 ஆர்ட்டிகிலின்படி மூன்று வருஷத்திற்குள்ளாகவே இந்த தாவா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆகையால் இப்போது தீர்மானிக்கவேண்டியது என்னவென்றால், பாக்கி 82 கலத்தைக்குறித்த தாவா காலாவதிதோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதா அல்லவா என்பதே. இந்த 82 கல நெல்லும் பிரதிவாதி வீட்டிலிருந்தது. இதை வாதி எடுத்துக்கொண்டு போகும்போது பிரதிவாதி தடுத்துப் பிடுங்கி வேறொருவன் வசம் வைத்துவிட்டு வாதியின்பேரில் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் திருட்டுக்குற்றம்சாட்ட, மாஜிஸ்டிரேட் சோதனை வாரண்டு பிறப்பித்தார். அதன்பேரில் போலீசார் இந்த 82 கல நெல்லையும் எடுத்து பந்தோபஸ்து செய்துகொண்டார்கள். விசாரணை நடந்ததில் வாதிக்கு ஜெயில்தண்டனை விதிக்கப்பட்டது. மாஜிஸ்டிரேட்இந்தநெல்லைப் பிரதிவாதியிடம் ஒப்புவிக்கும்படி 1898-ம் ளு அக்டோபர்மீ 18உ உத்தரவு செய்துவிட்டார். அதுமுதல் இந்த நெல்லைப் பிரதிவாதி அநியாயமாய் வைத்திருந்ததாக சட்டப்படி பாவிக்கவேண்டும். ஆகையால் இந்த 82 கல நெல்லைக் குறித்ததாவுவாம் காலாவதிதோஷத்தால் தீண்டப்படவில்லை.

ஆனால் பிரதிவாதி தரப்பிற்குப் பேசும் வக்கீல் இந்த 82 கலமும் ஏற்கனவே பிரதிவாதி வீட்டிலிருந்தபடியால் இந்த வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூலம் அப்போதே உண்டாய்விட்டதென்றும் மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவு வாதிக்குப் புதிய வியாஜ்ஜியமூலத்தைஉண்டாக்கமாட்டாதென்றும் ஆதலால், காலாவதிதோஷம் எப்போது இந்த நெல்லை வாதியிடமிருந்து பிரதிவாதி எடுத்து தன்னுடைய வீட்டில் வைத்திருந்தாரோ அதாவது, கிரிமினல் பிரயாதிற்குமுந்தி முதல், கணக்குச் செய்யப்பட வேண்டுமென்று வாதிக்கிறார். அதை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பிரதிவாதி இந்த 82 கல நெல்லையும் கிரிமினல் பிரியாதிற்குமுந்தி தம்முடையவீட்டில் வைத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மாஜிஸ்டிரேட்கொடுத்த உத்தரவின்பேரில்பிரதிவாதி நெல்லை வைத்துக்கொண்டதை முந்திவைத்துக்கொண்டிருந்ததின் தொடர்ச்சியாக நினைக்கக்கூடாது.

மாஜிஸ்டிரேட் ஒருசொத்தைப் போலீசார் பந்தோபஸ்தில் வைக்கும்படி உத்தரவுசெய்வது சொத்தின் உண்மையான சொந்தக்காரனை உத்தேசித்து என்று வெங்கடகிரி ராஜா V. இஸ்க்கப்பள்ளி சுப்பய்யா (இ. லா. ரி. 26. சென். 410) கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த நெல்லை மாஜிஸ்டிரேட் பிரதிவாதியிடம் ஒப்புவிக்கும்படி பிசகாக உத்தரவு செய்துவிட்டபடியால்வாதியும் தனக்குச்சொந்தமல்லாதநெல்லை வைத்துக்கொண்டபடியால் மாஜிஸ்டிரேட் கொடுத்த உத்தரவு வாதிக்குப் புதியவியாஜ்ஜியமூலத்தைக்கொடுத்திருக்கின்றது. ஆகையால் காலாவதிதோஷம் இந்த தாவாவிற்கு மாஜிஸ்டிரேட் உத்தரவு கொடுத்ததேதி முதல் கணக்குச் செய்யப்படவேண்டும். அப்படி கணக்குச்செய்யின் இந்த வியாஜ்ஜியம் காலாவதிதோஷத்தால் தீண்டப்படாமல் மூன்று வருஷத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று சொல்லி கீழ் அப்பீல்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து சப்கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

கூனிமீரா சாயப் வகையரு—(வாதி)- அப்பீல் வாதிகள்.

முகமது மீராசாயபு வகையரு—(பிரதிவாதி)—
அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—மதசம்பந்தமான அனுஷ்டானங்களைப்பற்றிய வியாஜ்ஜியங்களை இத்தேசத்தில் சிவில் கோர்ட்டார் விசாரணை செய்ய அதிகாரமுண்டா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசியில் ஒரு பள்ளிவாசலிருக்கிறது. வாதிவகையரு தங்களுடைய பந்துக்கள் மவுத்தாய் விட்டால் அந்தப் பள்ளிவாசல் காம்பௌண்டிற்குள் புதைக்கிற வழக்கமாம். புதைப்பதற்கு முந்தி பிரேதத்தைப்பள்ளிவாசல் தொழுகிறமண்டபத்தில் வைத்துப் பிரேதத்தின் பந்துக்களும் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களும் மந்திரம் சொல்லுகிற வழக்கமாம்.

பிரதிவாதி வகையருக்கள் லப்பைகள். இவர்கள், பிரேதத்தின்பேரில் மந்திரம் சொல்லும் பாத்தியதை தங்களுடையபாத்தியதையேதவிர வாதிகளுக்குப்பாத்தியதைகிடையாது,பிரேதத்தின்பந்துக்களுக்கும்பாத்தியதைகிடையாதென்று ஆக்ஷேபிக்கிறார்கள். ஆகவேஇது விஷயமாக ஒரு தகரார் உண்டாகி இதனால் கலகம் நேரிடும்போலிருந்தது. உடனே மாஜிஸ்டிரேட் இரு கக்ஷிக்காரர்களையும் தருவித்து விசாரணை செய்து வாதிகள் தங்களுடைய பாத்தியதையையும் வழக்கத்தையும் சிவில்கோர்ட்டில் ஸ்தாபிக்கும் பரியந்தம் பள்ளிவாசல் காம்பவுண்டுக்குள்பிரேதத்தை அடக்கச்செய்கிறபோது செய்யவேண்டிய மத சம்பிரதாயங்களை அவர்களே செய்யக்கூடாதென்றும் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட குருக்களும் செய்யக்கூடாதென்றும் கிரிமினல் புரொசீஜர்கோட் 147 வது பிரிவின்படி உத்தரவு செய்துவிட்டார். ஆகையால் வாதிகள் பள்ளிவாசலில் தங்களுடை பந்துக்களின் பிரேதங்களின் பேரில் மந்திரம் செய்ய தங்களுக்கு மட்டிலும் பாத்திய மிருக்கிறதென்று கோர்ட்டார் கூறும்படியும், பிரதிவாதிகள் வாதிகளுடைய பாத்தியதைகளில் பிரவேசிக்காமலிருக்கும்படியும் சாஸ்வத இன்ஜங்ஷன் ஆர்டர்கொடுக்கவேண்டுமென்றும் வாதிவகையரு இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அசலில் தென்காசி டி. மு. கோர்ட்டாரும், அப்பீலில் திருநெல்வேலி ஜில்லாக் கோர்ட்டாரும், இந்த தாவா மதசம்பந்தமான அனுஷ்டானத்தைப்பற்றியதானபடியால் இந்த தாவாவைப் பிடித்து விசாரிக்கச் சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று முறையே தாவாவையும் அப்பீல் தாவாவையும் தள்ளிவிட்டார்கள். வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். (239 of 1906).

லாயர்கள்:—அப்பீல்வாதிகளுக்காக மிஸ்டர் K. S. ராமசாமி சாஸ்திரியாரும், அப்பீல் பிரதிவாதிகள் தரப்பிற்காக ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு:—இத்தேசத்தில் மத அனுஷ்டானங்கள் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியங்களை விசாரிக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்பது சரிதான். ஆனால் அப்படிப்பட்ட தாவாவில் ஒருவனுடைய பாத்தியதை சம்பந்தப்பட்டிருந்தாலும்அந்த மத அனுஷ்டானங்களை விசாரணைசெய்யாமல் இந்த பாத்தியதையை ஸ்தாபிக்கவோ அல்லது ரத்துசெய்யவோ கூடாமலிருந்தாலும் இத்தகைய வியாஜ்ஜியங்களில் கோர்ட்டார் மத சமாசாரங்களையும் அனுஷ்டானங்களையும் விசாரித்தே தீரவேண்டும் என்று ஆனந்தராபிக்கா ஜிபாடேக் V. சங்கர்தாசி சர்மா (இ. லா. ரி. 7 பம். 323)ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வியாஜ்ஜியம், பிரேதத்தைப்புதைக்கும் பாத்தியதையைப்பற்றிக்கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரேதத்தைப் புதைக்கும் பாத்தியதை ஒரு மனிதனுடைய சிவில்பாத்தியதைஎன்றுராமராவ் V. ரஸ்டம்கான் சாகிப் (இ.லா. ரி. 26 பம். 198)ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிவாசலில் பிரேதத்தின்பேரில் மந்திரம்சொல்வது புதைக்கும் கிரியைகளைச்சேர்ந்தது. ஆகையால்வாதிகளின்ஜாதியார்சட்டப்படிக்கும் வழக்கப்படிக்கும் அவர்கள் சொல்லுகிறமாதிரி அவர்களே மந்திரம்சொல்ல பாத்தியமுடையவர்களா அல்லவா என்று கோர்ட்டார் விசாரணைசெய்து தீர்மானிக்கவேண்டும். மேலும்இந்தக் கேசில் வாதிகள் தங்களுடையபாத்தியதைகளை ஒரு சிவில்கோர்ட்டில் ஸ்தாபிக்கும் பரியந்தம் அவர்கள் தங்களுடைய பந்துக்களின்பேரில் மந்திரம் சொல்லக்கூடாதென்று மாஜிஸ்டிரேட் கி. பு. கோ. 147–வது பிரிவின்படி உத்தரவு செய்திருக்கிறார். ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தைக்கோர்ட்டார் விசாரித்து அந்த பாத்தியதை வாதிகளுக்கு உண்டா அல்லது இல்லையா என்று தீர்மானிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுப்போய்விட்டது: ஆகவே, இந்த வியாஜ்ஜியத்தைக் கீழ்க் கோர்ட்டார் விசாரணைசெய்து, சட்டப்படி பைசல்செய்யும்படியாக அனுப்புகிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

கேசவலு நாயுடு—மனுதார் (அப்பீல் வாதி)

முருகப்ப முதலிவகையரு—எதிர் மனுதார்கள்—
அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 177-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட லிக்விடெட்டர்கள் தாங்கள்செய்யவேண்டிய கடமைகளை வேறு சிலர்செய்யும்படி விடலாமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—மனுதார் செங்கற்பட்டு ஜில்லா வாலாஜாபாத் நிதியின் கடன்காரர். இந்த நிதியைக் கோர்ட்டார் மேற்பார்வையில் ஒயிண்டப் பண்ணும்படி அதாவது கணக்கு வழக்குகளைப் பார்த்துத் தீர்த்து முடிவுக்குக் கொண்வரும்படி இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 189 வது பிரிவின்படி செங்கற்பட்டு ஜில்லாக் கோட்டில் மனுசெய்து கொண்டார்.

ஜில்லாக் கோர்ட்டு உத்தரவு —மனுவைத்தள்ளிவிட்டார்கள்.

மனுதார் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

(174 of 1905).

லாயர்கள்:—ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர்அவர்கள் மனுதாருக்கும் B. பஞ்சாபகேச சாஸ்திரியும், சங்கரநாராயண சாஸ்திரியும் எதிர் மனுதார்களுக்கு ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—வாலாஜாபாத் நிதியார் நிதியை முடிவுக்குக்கொண்டுவந்துவிடவேண்டுமென்று கோர்ட்டாரால் கட்டாயப்படுத்தப்படாமல் தாங்களே முடிவுக்குக் கொண்டுவந்துவிடவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி முடிவுக்குக் கொண்டுவருவது கோர்ட்டாருடைய மேற்பார்வையில் செய்யப்படவேண்டுமென்று மனுதார் இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 189 வது பிரிவின்படி மனு செய்து கொண்டார். ஜில்லாக் கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிட்டார்கள். மனுதார் அப்பீல் செய்துகொண்டிருக்கிறார். முதலா

வது இந்த நிதி முடிவிற்கு வரும்படி கோர்ட்டார் கட்டாயப்படுத்தாமல் தானே முடிவு செய்துகொள்ள உடன்பட்டிருக்கிறபடியால் இந்த முடிவு சம்பந்தமாக செய்துகொண்ட மனுவின்பேரில் கோர்ட்டார் செய்த உத்தரவிற்கு இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 196வது பிரிவின்படி அப்பீல் கிடையாது என்று எதிர் மனுதார்கள் சொல்லும் ஆக்ஷேபனை ஒப்புக்கொள்ளமுடியாது. நிதி தானே முடிவுசெய்துகொள்ள உடன்பட்டிருந்தாலும், முடிவுசெய்யக் கோர்ட்டாரால் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தாலும், அது விஷயமாகச் செய்துகொண்ட மனுவின்பேரில் கோர்ட்டார் செய்த உத்தரவிற்கு 124 வது பிரிவின்படி அப்பீலிருக்கிறது. ஆகையால் அப்போது மனுதார் மனு கொடுக்க நேர்ந்த காரணங்களையும் இந்நிதி முடிவுசெய்யப்படுவது கோர்ட்டாருடைய மேற்பார்வையில் முடிவுசெய்ய வேண்டியது அவசியமா என்றும் சிந்திப்போம். இந்நிதியை முடிவுக்குக் கொண்டு வரும்படியாக 1900-ம் ஹு நியமிக்கப்பட்ட இரண்டு லிக்குவிடெட்டர்களும் சேர்ந்து சில காலம் வேலை பார்த்தார்கள். பிறகு இருவரும் சச்சரவு செய்து கொண்டார்கள். ஆகையால் தங்களுக்குள்ள தகராரைத் தீர்த்து வைக்கும்படியாக இரண்டு மத்தியஸ்தர்களை 1906-ம் ஹு நியமித்தார்கள். இந்த மந்தியஸ்தர்கள் தாங்களே முடிவான ஏற்பாடு செய்வதாகச் சொல்லி மேற்கூறப்பட்ட இரண்டு லிக்குவிடெட்டர்களையும் தள்ளி இந்த வியாஜ்ஜியத்தின் எதிர் மனுதார்களை லிக்குவிடேட்டர்களாக நியமித்தார்கள். 1904 - ம் ஹு ஜூன்மீ டைரக்டர்கள் மீட்டிங்கு கூடி மத்தியஸ்தர்கள் செய்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டார்கள். இதன் பிறகு 1904-ம் ஹு ஆகஸ்ட் மீ 12உ நிதியின் சப்ஸ்கிரைபர்கள் ஒரு ஜெனரல் மீட்டிங்கு கூடி அவர்களும் மத்தியஸ்தர்கள் செய்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டார்கள். மத்தியஸ்தர்களுடைய நடவடிக்கைகள், டைரக்ட்டர்கள், சப்ஸ்கிரைபர்கள் ஆகிய எல்லோருடைய நடவடிக்கைகளெல்லாம் சட்டவிரோதமானவை, முதலில் நியமிக்கப்பட்ட இரண்டு லிக்குவிடெட்டர்களும் நிதியை முடிவுக்குக் கொண்டுவரும்படியாகவும், கணக்கு வழக்குகளைப் பார்த்து நிதியின்கடன்களைத் தீர்த்து சொத்துக்களை சப்ஸ்கிரைபர்களுக்குள் பங்கிட்டுக் கொடுக்கவும் இந்தியன் கம்பேனிஸ் ஆக்ட் 177 (6) பிரிவின்படி நியமிக்கப்பட்டார்கள். சட்டத்தால் ஆக்கியாபிக்கப்பட்ட இந்தக் கடமைகளை அந்த லிக்குவிடேட்டர்கள் வேறுலர் செய்யும்படியாக விடக்கூடாது. ஒரு தடவை அவர்கள் நியமிக்கப்பட்டபின் நிதி சப்ஸ்கிரைபர்களும் சரியே, அல்லது டைரக்ட்டர்களும் சரியே அந்த லிக்விடேட்டர்களை நீக்க முடியாது. 185 வது பிரிவின்படி தகுந்த காரணத்தின்பேரில் அவர்களைவிலக்கக் கோர்ட்டாருக்குமட்டிலும் அதிகாரமிருக்கிறது. ஆகையால் மத்தியஸ்தர்களின்நடவடிக்கைகளும், டைரக்ட்டர்களுடையநடவடிக்கைகளும் சட்டவிரோதமாயிருக்கின்றன.

நிற்க, புதிதாய் நியமிக்கப்பட்ட லிக்விடேட்டர்கள் நிதியைக் கோர்ட்டார் மேற்பார்வையில் முடிவுசெய்யும்படியாக உத்தரவு பிறப்பிக்கவும், தாங்கள் லிக்விடேட்டர்களாக நியமிகப்பட்டதைக் கோர்ட்டார் ஊர்ச்சிதப்படுத்தும்படியாகவும் கோர்ட்டில் மனு செய்துகொண்டார்கள். அப்போது இந்த அப்பீல் மனுதார் எதிர் மனுகொடுத்து அவர்களை லிக்விடேட்டர்களாக நியமிப்பதற்கு மத்தியஸ்தகளுக்கு அதிகாரமில்லை என்று ஆக்ஷேபனை செய்தார்.

இதன்பேரில் இந்நிதியைச் சேர்ந்த சப்ஸ்கிரைபர்களின் அபிப்பிராயத்தை அறியும்பொருட்டு கோர்ட்டார் ஒருமீட்டிங்குகூட்டி ஆலோசனைசெய்தார்கள். இதன்பேரில் கோர்ட்டார் தங்களுடைய மேற்பார்வையில் நிதியை முடிவுக்குக் கொண்டுவரும்படி உத்தரவு செய்யவில்லை. ஆனுல் புதிய லிக்விடேட்டர்களின் நியமனத்தை ஊர்ச்சிதப்படுத்தினுர்கள். இந்த உத்தரவிற்கு விரோதமாக இந்த மனுதார் அப்போது அப்பீலும் செய்யவில்லை. இப்போது செய்திருக்கும் மனுவில் புதிய லிக்விடேட்டர்களின்நியமனத்தை ஆக்ஷேபிக்கவுமில்லை. ஆகையால் அந்த லிக்விடேட்டர்கள் கோர்ட்டாரால் 185 வது பிரிவின்படி கிரமமாய் நியமிக்கப்பட்டவர்களாகவே நாம் எண்ணவேண்டும்.

இந்த லிக்விடேட்டர்கள், தம்முடைய பாத்தியதைகளைப்பற்றிக் கவனிக்கவில்லைஎன்றும் அவர்கள்செய்து வருவது தமக்கும் பாதகரமாயிருக்கிறதென்றும் அதனுல்இந்நிதியைக் கோர்ட்டார் மேற்பார்வையின்பேரில் முடிவுசெய்ய உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் மனு செய்துகொண்டிருக்கிறுர்.

மனுதாரின்பாத்தியதைகள் ஏற்கனவே பாத்தியஸ்தர்களால் கவனிக்கப்பட்டு டைரக்ட்டர்களாலும் ஜெனரல் மீட்டிங்காலும் ஒப்புக் கொள்ளப்பட்டமையால் மறுபடியும் மனுதாரின் பாத்தியதையை விசாரிக்க முடியாது என்று லிக்விடேட்டர்கள் சொல்லிவிட்டார்கள். பாத்தியஸ்தர்களும் டைரக்ட்டர்களும், ஜெனரல் மீட்டிங்கு நடத்தின நடவடிக்கைகள் சட்டவிரோதமான நடவடிக்கைகள். ஆகையால் செல்லுபடியுள்ளன. எப்போது ஒரு கடன்காரனின் பாத்தியதைகளைக்கவனிக்க மாட்டோமென்று லிக்விடேட்டர்கள் போதுமான காரணமின்றிச் சொல்லுகிறுர்களோ, அப்போது கோர்ட்டார் அந்நிதிக் கோர்ட்டார் பார்வையில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கோர்ட்டார் உத்தரவு செய்யவேண்டும். ஆதலால் ஜில்லாக் கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்து இந்நிதி கோர்ட்டார் மேற்பார்வையில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று உத்தரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னுர்கள். இ. லா. ரி 30. சென். 22.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

குமரட்டசேர்வகாரன் என்கிற சின்னசாமி சேர்வகாரன் மைனர் சிவியம்மாள் என்கிற அடுத்த சிநேகிதன். } (2 வது பிரதிவாதி) அப்பீல் வாதி.

V. சபாபதி செட்டியார்—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—நிறைவேற்று நடவடிக்கையில் டிக்கிரியைப்பற்றி ஆக்ஷேபிக்கலாமா?

கேசின் விபரம்:—1, 2 பிரதிவாதிகளின் காலம் சென்ற தகப்பனுர் வாதியிடம் சில ஸ்தாவரசொத்துக்களை அடமானம்வைத்துக் கடன் வாங்கியிருந்தார். கடனைத் தீர்க்கவில்லை. அதன்பேரில் வாதி 1, 2 பிரதிவாதிகள்பேரில் தூத்துக்குடி சப் கோர்ட்டில் 1897-ம் ஹுத்திய 680 நெம்பர் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரிபெற்றுர். கடனைச்செலுத்தாவிடில் அடமான சொத்துக்களை ஏலம்போட்டு வசூல் செய்துகொள்ளும்படியாக டிக்கிரியில் சொல்லப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் கடனைச் செலுத்தவில்லை. வாதி டிக்கிரியை நிறைவேற்றிச் சொத்துக்களை ஏலம் போடும்படி உத்தரவு கொடுக்கும்படி டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 89 வது பிரிவின்படி மூனு செய்துகொண்டார்கள்.

டிக்கிரி பிறந்ததற்குப்பிறகு 2 வது பிரதிவாதி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டார். டிக்கிரியில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் ஸ்வீகாரத் தகப்பனுக்குச் சொந்தமானதென்றும் வாதி ஷை சொத்துக்களின் சரியான சொந்தக்காரரிடம் அடமானப்பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றும் ஆகையால் அந்த டிக்கிரி ஷை சொத்துக்களைக் கட்டுப்படுத்தமாட்டாதென்றும் தான் ஷை சொத்துக்களுக்கு உண்மையான சொந்தக்காரரின் ஸ்வீகாரப் புத்திரனு யிருக்கிறபடியால் தன்னை அந்த டிக்கிரி கட்டுப்படுத்த மாட்டாதென்றும் ஆக்ஷேபித்தார். சப் கோர்ட்டார் ஆக்ஷேபனை மனுவைத் தள்ளுபடிசெய்து சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவரும்படியாக உத்தரவுசெய்தார்கள்.

2 வது பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார் (156 of 1905).

லாயர்கள்:—மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அப்பீல்தாருக்கும், மிஸ்டர் K. சீனிவாச அய்யங்கார் அப்பீல் பிரதிவாதிகளுக்கும் பேசினுர்கள்.

தீர்ப்பு:—அப்பீல் வாதி முதலாவது 2 வது பிரதிவாதி நிறைவேற்று நடவடிக்கையில் டிக்கிரியையே ஆக்ஷேபிக்கிறுர். சி. பு. கோ. 244 வது பிரிவின்படி நிறைவேற்று நடவடிக்கையில் டிக்கிரியை ஆக்ஷேபிக்கக்கூடாது. டிக்கிரியை ரத்து செய்யவேண்டுமானுல் பிரத்தியேக வியாஜ்ஜியம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிப்படுத்தி அப்பீலைச் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். இ. லா. ரி. 30. சென். 26.

ஜட்ஜிகள்:— { சர் ஆர்னுல் வொயிட் சீப் ஜட்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

சையத் உசேன்சாயப்பு ராவுத்தன்—எதிர் மனுதார்—மூன்ருவது பிரதிவாதி—அப்பீல்தார்.

ராஜகோபால் முதலியார்—(மனுதார்—வாதி)—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—பணத்தைச் செலுத்திவிட்டு நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டுமென்று ஒரு டிக்கிரியில் சொல்லப்பட்டிருந்தால் அந்தடிக்கிரியை நிறைவேற்றும்போதேகோர்ட்டில் பணம் கட்டிவிடவேண்டுமா? அல்லது கோர்ட்டார் உத்தரவு செய்கிறபோது கட்டவேண்டுமா?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—கரூர் டி. மு. கோர்ட்டாரால் வாதிக்கு ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தது. அந்த டிக்கிரியில் வாதி ரூ 865 மூன்ருவது பிரதிவாதியினிடம் செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. இந்த டிக்கிரி 1895-ம் ஹு டிசம்பர்மீ 31உ கொடுக்கப்பட்டது. வாதி 1898-ம் ஹு டிசம்பர்மீ 3உ டிக்கிரியை முதலில் நிறைவேற்றினுர்.

இப்போது அவர் டிக்கிரியில் சொல்லப்பட்டிருக்கும் ரூ. 865 கோர்ட்டில் கட்டவில்லை என்று சொல்லி கோர்ட்டார் நிறைவேற்றுமனுவைத் தள்ளிவிட்டார்கள். வாதி மறுபடியும் டிக்கிரியை 1901-ம் ஹு நவம்பர்மீ 29உ நிறைவேற்றினுர்கள். அப்போதும் அவர் கோர்ட்டில் பணம் கட்டவில்லை என்று கோர்ட்டார் நிறைவேற்று மனுவைத் தள்ளிவிட்டார்கள். மறுபடியும் வாதி 1904-ம் ஹு ஜூன்மீ 23உ டிக்கிரியை நிறைவேற்ற மனுகொடுத்தார்.

கரூர் டி. மு. கோர்ட்டார் உத்தரவு:—டிக்கிரியில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் வாதி 865 ரூபாவை மூன்ருவது பிரதிவாதியிடமாவது அல்லது கோர்ட்டிலாவது மூன்று வருஷத்திற்குள் செலுத்தி டிக்கிரியை நிறைவேற்ற மனுகொடுக்கவேண்டும். அப்படிச் செய்ய வாதி தவறிப்போய்விட்டபடியால் இப்போது அவர் டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியதை கிடையாதென்றும் லிமிட்டேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் 179-வது ஆர்ட்டிகிலின்படி டிக்கிரி காலாவதியாய்ப் போய்விட்டதென்றும் சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—இத்தனைவருஷ காலத்திற்குள்ளாக வாதி மூன்ருவது பிரதிவாதியிடம் பணம் செலுத்தவேண்டு மென்று டிக்கிரியில் சொல்லப்படவில்லை. ஏறக்குறைய இதேமாதிரி கேசில் பம்பாய் ஹைகோர்ட்டார், முந்திய இரண்டு நிறைவேற்று மனுக்களும் லிமிட்டேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் 179 ஆர்ட்டிகிலில் சொல்லப்பட்டிருக்கிறபடி மூன்று வருஷகாலத்திற்குள் சரியான கோர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் பக்ஷத்தில் மூன்று வருஷம் சென்று கூட டிக்கிரியை நிறைவேற்றலாமென்று தீர்மானித்திருக்கிறுர்கள் என்று சொல்லி டி. மு. கோர்ட்டாரின் தீர்மானத்தை ரத்து செய்து நிறைவேற்று மனுவை விசாரித்துச் சட்டப்படி பைசல் செய்யும்படி டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவு செய்தார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக மூன்ருவது பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார். (3 of 1906).

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் E. R. ஆஸ்பர்ன், அப்பீல்வாதிக்காகவும், மிஸ்டர் T. R. வெங்கடமராசாஸ்திரியார் அப்பீல் பிரதிவாதிக்காகவும் பேசினுர்கள்.

தீர்ப்பு:—வாதி 1898, 1901-ம் வருஷங்களில் கொடுத்த நிறைவேற்றுமனுக்கள் சட்டப்படி செல்லுபடியுள்ளனவல்ல வென்பது அப்பீல்வாதியின் கக்ஷி, ஏனென்றால், வாதி நிறைவேற்று மனு கொடுத்தபோது கோர்ட்டில் பணம் கட்டவில்லை என்பதே. மற்றப்படி

அம்மனுக்களுக்கு யாதொரு தோஷமும் சொல்லப்படவில்லை. லிமிட்டேஷன் ஆக்ட்டின்படி சரியான கோர்ட்டில் சரியானகாலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு டிக்கிரியில் பணம் செலுத்திவிட்டு நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருந்தால், நிலத்தைக் கொடுக்கும்படி பிரதிவாதிக்குக் கோர்ட்டார் உத்தரவு செய்யும்போது பணம் கட்டவேண்டும் என்று தாத்பரியம் செய்துகொள்ளவேண்டுமேயொழிய பணத்தைக் கட்டிவிட்டு நிறைவேற்றுமனு கொடுக்கவேண்டுமென்று தாத்பரியம் கொள்ளக்கூடாது. கீழ் அப்பீல்கோர்ட்டார் எடுத்துக்கூறியிருக்கிற பம்பாய் ஹைகோர்ட்டு தீர்ப்பை (இ. லா. ரி. 16 பம் 48?) நாம் ஏற்றுக்கொள்ளுகின்றோம் என்றுசொல்லி கீழ் அப்பீல்கோர்ட் தீர்ப்பை உறுதிப்படுத்தி அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடிசெய்தார்கள். இ. லா. ரி. 30 சென். 30.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம். மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

செருவத்தலங்கால் பாபு—மனுதார்—அப்பீல்வாதி.
நிராத்தாலங்கன்—எதிர் மனுதார்— அப்பீல் பிரதிவாதி.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—மலையாளத்தில் குவிலாண்டில் டி. மு. கோர்ட்டில் 1899-ம் ௵ ஜனவரிமீ 28௳ அப்பீல்வாதிக்கு ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டது.

அப்பீல்வாதி டிக்கிரியை இரண்டொருமுறை நிறைவேற்றினார். ஆனால் மேற்கொண்டு நடவடிக்கை நடத்தவில்லை. அவர் கடைசிமுறையாக நிறைவேற்று மனு கொடுத்தது 1902-ம் ௵ ஜனவரிமீ 2௳ கோர்ட்டார் எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பும்படி சி. பு. கோ. 248 வது பிரிவின்படி ஜனவரிமீ 3௳ உத்தரவு செய்தார்கள். நோட்டீசும் தயார்செய்யப்பட்டது. கோர்ட்டார் அதில் 72 கையெழுத்து செய்தார்கள். அப்பீல்வாதி மேல் நடவடிக்கை நடத்தவில்லை. பிறகு அப்பீல்வாதி 1905-ம் ௵ ஜனவரிமீ 7௳ டிக்கிரியை நிறைவேற்ற மனு கொடுத்தார். முனிசிப்கோர்ட்டாரும் முதல் அப்பீல்கோர்ட்டாரும் காலாவதிதோஷம், கோர்ட்டார் எதிரிக்கு நோட்டீஸ்கொடுக்க உத்தரவுசெய்த காலமுதல் அதாவது 1902-ம் ௵ ஜனவரிமீ முதல் கணக்கிடவேண்டுமென்றும், அப்படி கணக்குசெய்துபார்த்தால் மூன்றுவருஷத்திற்கு மேலாகிறதென்றும், லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் 179 வது ஆர்ட்டிகில்5-வது கிளாசிற்கு விரோதமாயிருக்கிறதென்றும் சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

அப்பீல்வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் அப்பீல்வாதிக்கும், மிஸ்டர் K. R. சுப்பிரமணிய அய்யர் அப்பீல் பிரதிவாதிக்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—6 கல். வீக்லிநோட்ஸ், 10 கல். வீக்லிநோட்ஸ் 303–ஆகிய இந்தக்கேஸ்களில் கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறபடி காலாவதிதோஷம் எதிரிக்கு உள்ளபடி நோட்டீஸ்பிறப்பித்த தேதிமுதல் கணக்கு செய்யப்படவேண்டும். ஏனெனில், கோர்ட்டார் நோட்டீஸ் பிறப்பிக்கும்படி உத்தரவுசெய்த சிலதினங்கள்சென்று நோட்டீஸ் பிறக்கின்றது என்று சொல்லி கீழ்க்கோர்ட்டு தீர்மானங்களை ரத்துசெய்து இந்த மனுவைவிசாரித்து சட்டப்படி பைசல்செய்யும்படி டி. மு. கோர்ட்டாருக்கு அனுப்பினார்கள். இ. லா. ரி. 30 சென். 32.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம். மிஸ்டர் ஜஸ்டிஸ் லாலிஸ்.

சிவில் அப்பீல்.

பெரியண்ண செட்டி-(வாதி) அப்பீல்வாதி.

நாகப்ப முதலியார்-(பிரதிவாதி) அப்பீல்பிரதிவாதி.

கேசின்விபரம்:—திருமங்கலம் டி. மு. கோர்ட்டில் வாதி, பிரதிவாதியின்பேரில் வீட்டுவாடகையைப் பெறுவதற்காகவும் வீட்டை சுவாதீனப்படுத்திக்கொள்ளுவதற்காகவும் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரியாதில் வியாஜ்ஜியதேதிவரையில் பாக்கிப்பட்ட வாடகைத்தொகையின்பேரில் கணக்குசெய்து கோர்ட்டு ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருந்தது. வியாஜ்ஜியம் விசாரணையிலிருக்கையில் பிரதிவாதி வாதியிடம் வீட்டைக்காலிசெய்து ஒப்புவித்துவிட்டார். ஆகவே கோர்ட்டார் பிரதிவாதி வீட்டை ஒப்புவித்ததேதிமுதல் வாடகைக்கணக்கு செய்து கூடுதலானதொகைக்கு டிக்கிரிகொடுத்து அந்தடிக்கிரியிலேயே பிரியாது தாக்கலானதேதிமுதல் வீட்டை ஒப்புவித்ததேதிவரையில் கூடுதலான வாடகைக்கும் போடவேண்டிய கோர்ட்பீஸ் ஸ்டாம்புக்கு ரூ. 4-14-0 கோர்ட்டில் 1904-ம் ௵ செப்டெம்பர்மீ 9௳க்குள் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. வாதி இந்தத்தேதிக்குள் ரூ. 4 - 14 - 0 யும் கோர்ட்டில் செலுத்தவில்லை. 1904-ம் ௵ டிசம்பர்மீ 7௳ டிக்கிரியை நிறைவேற்ற மனுகொடுத்தார். கோர்ட்பீசுக்காகக் கோர்ட்டில் செலுத்தப்படவேண்டிய ரூ. 4-14 ஐச் செலுத்தாமல் டிக்கிரியை நிறைவேற்ற உத்தரவு கொடுக்கமாட்டோமென்று கோர்ட்டார் சொன்னதின்பேரில் வாதி சிலதினங்களுக்குள் கட்டிவிடுவதாகவும் கேட்டுக்கொண்டார்.

டி. மு. கோர்ட்டார் டயம் கொடுத்தார்கள். அதற்குள் வாதி ரூ. 4-14-0 ஐ கோர்ட்டில் செலுத்திவிட்டார். டிக்கிரியை நிறைவேற்றும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

பிரதிவாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

ஜில்லாக்கோர்ட்டார் வாதிக்குடயம்கொடுக்க முனிசிப்கோர்ட்டாருக்கு அதிகாரம்கிடையாதென்று சொல்லி கீழ்க்கோர்ட்டு உத்தரவை ரத்துசெய்து வாதியின் நிறைவேற்றுமனுவையும் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொண்டார் (24 of 1905).

லாயர்கள் :—மிஸ்டர் K. சீனிவாச அய்யங்கார் அப்பீல் வாதிக்கும், மிஸ்டர J. C. ஆடம் அப்பீல் பிரதிவாதிக்கும் பேசினார்கள்.

தீர்ப்பு:—முதலாவது ரூ. 4-14-0 ஐப்பற்றிய உத்தரவு அசல் டிக்கிரியைச் சேர்ந்ததல்ல. வாதிபிரதிவாதியின்பேரில் டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு ரூ. 4-14-0 வாதி கோர்ட்டில் செலுத்துவது ஒரு நிபந்தனையல்ல. ஆகையால் வாதி கோர்ட் பீசைச்செலுத்திவிட்டால், டிக்கிரியை நிறைவேற்றக் கோர்ட்டார் அனுமதி கொடுக்க அதிகாரமிருக்கின்றது. மேலும் டிக்கிரியில் கோர்ட் பீசைப்பற்றி சொல்லியிருப்பது பிரதிவாதிக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. ஏன்னெனில் ரூ. 4-14-0 ஐ 1906-ம் ௵ செப்டம்பர்மீ 9௳க்குள் செலுத்தினால் தான் பிரதிவாதியின் பேரில் டிக்கிரியை நிறைவேற்றலாம். இல்லாவிடில் நிறைவேற்றக் கூடாதென்று சொல்லப்படவில்லை. ஆகையால் அப்பீல் கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்துகின்றோம். என்று சொன்னார்கள் இ. லா. ரி. 30 சென். 32.

சென்னபட்டணம்.

ஹைகோர்ட்.

1907-ம் ௵த்திய இரண்டாவது கிரிமினல் சேஷன்.

ஜட்ஜி:—ஹானரபில் சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஆர்னால் ஒயிட்.

முதல்நாள்—(15-4-07).

வேஷ்டி திருடின கேஸ்.

கேசின் விவரம் :—சென்னபட்டணத்தைச் சேர்ந்த சூளையில் ஒபியா என்கிறவன் சென்ற மார்ச்சுமீ 20௳ ஒரு திண்ணையில் தலையில் வேஷ்டி மூட்டையை வைத்துக்கொண்டு படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அப்போது போட்டி என்கிற ராமான்ஜுலு என்பவன் அம்மூட்டையிலிருந்த வேஷ்டியைத் திருடிக்கொண்டு ஓடினான். இரவு ரோந்து போய்க்கொண்டிருந்த போலீசார் சந்தேகப்பட்டு அவனைப் பிடித்துப் போலீஸ்டேஷனுக்குக்கொண்டுவந்தார்கள் என்பது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கக்ஷி.

ஜூரர்கள்:—மெசஸ் K. T. உட்ஸ் (போர்மன்) உல்லியம் ஜி. டசஸ் ; P. T. டிரட்வின், M. J. லாட்சன், H. H. பின்ஸ், M. பாலட் W. பாலட் P. துரைசாமி அய்யங்கார், D. ஸ்காட், பிரன்னர், குலாம் முகமது ஹபிபுல்லா சாயப்பு.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பில் சில சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அவர்கள் முன்னுக்குப்பின் விரோதமாய் சாக்ஷியம் சொன்னார்கள்.

டிபன்ஸ் :—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அன்று இரவில் அவன் ரோடில் போய்க்கொண்டிருந்தபோது ஒரு வேஷ்டி ரோடில் கிடந்ததாகவும் அதை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்ததாகவும் டிபன்ஸ் கூறினான்.

ஜூரர்கள் அபிப்பிராயம் :—குற்றவாளி நிரபராதி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளியை விட்டுவிடும்படி உத்தரவுசெய்தார்கள்.

கட்டடத்தில் திருடின கேஸ்.

குற்றவாளிகள்:—(1) மொட்டைக்கம்பு என்கிற முனிசாமி.
(2) வெங்கடேசன் என்கிற வெங்கடசாமி.

கேசின் விவரம்:—கடந்த பிப்ரவரிமீ 15௳ குற்றவாளிகள் வியாசர்பாடியில் பெருமாள் என்கிறவன் வீட்டில் புகுந்து வேஷ்டி சேலைகள் அடங்கிய ரூ. 17-8-0 பெறுமான ஒரு மரப்பெட்டியைத் திருடியதாகக் குற்றவாளிகள் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது குற்றவாளிபேரில் திருட்டுக் குற்றமாகிலும் அல்லது உடந்தைக்குற்றமாகிலும் சாட்டப்பட்டிருக்கிறது.

ஜூரர்கள்:—முன் கேஸ் ஜூரர்கள்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள் ஜட்ஜி கேசின் சாராம்சத்தைச்சங்கிரகமாக ஜூரர்களுக்கு எடுத்துரைத்தார்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—இரண்டு குற்றவாளிகளும் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு முதல் குற்றவாளிக்கு மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனையும், இரண்டாவது குற்றவாளிக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

N. B.—செஷன் கேஸ்களின் தொடர்ச்சி அடுத்தமாத கெஜெட்டில் காண்க.—Ed.

கடிதம்.

[கடிதக்கார ரபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்].

இந்திய சட்டகெஜெட்டு பத்திராதிபர் அவர்களுக்கு

சதா நமஸ்காரம்.

அடாதசெய்கை (பலாத்காரம்) படாதபாடு.

ஐயா !

ஷை தனிச்செயங் கிராமத்திலிருக்கும் கந்தசாமி பிள்ளை பாரி 20 - வயதுள்ள ஐயம்மாளென்னும் கன்னிகை 2-12-06 ல் பகல் 2-மணி சுமாருக்கு ஷை யூருக்கு வடபுறமிருக்கிற கணக்கப்பிள்ளைக் கரும்புதோட்டக்கிணற்றில் சேலை துவைத்துக் குளித்துக்கொண்டிருக்கும்போது ஷை தனிச்செயங் கிராமத்திலிருக்கும் நல்லுத்தேவன் மகன் நாச்சியப்பன் என்பவன் ஷை கரும்புத்தோட்டத்திற்குள் ஏற்கனவே இருந்து வந்து கெட்ட

எண்ணத்தோடு ஷை யாளைப் பலாத்கார்மாய் கட்டிப்பிடித்துத் தூக்கிக்கொண்டு கரும்புத்தோட்டத்திற்குள் போக எத்தனித்தபோது ஷையாள் கூச்சல் போட்டதாயும் ஷை கூச்சலைக்கேட்டு பக்கத்து வயல்களிலிருந்த ஆறுமுக ஆசாரிக்கு சாக்ஷிகள் ஓடிவந்ததைக்கண்ட, ஷையான் ஷையாளைக் கீழேபோட்டுவிட்டு ஓடிப்போய் விட்டதாயும் ஷையாள் வீட்டுக்குவந்து பேசாதிருந்ததாயும் அதற்கு 2-நாளைக்குமுன் மதுரைக்குக் குதிரைவண்டி வாங்கப்போயிருந்த ஷையாள் புருஷன் இதற்கு 2 - நாளைக்குப்பின் ஊருக்கு வந்ததாயும் புருஷனிடம் வந்தவுடன் ஷை சங்கதியைத் தெரிவிக்க ஷையான் 4-12-06 ல் இதுசெய்தியை ஷை கிராம முன்சீப்பிடம் தெரிவிக்க கிராம முன்சீப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் மாஜிஸ்டிரேட்டாருக்கும் இது விஷயத்தைப்பற்றித் தெரிவித்தவுடனே ரிப்போர்ட்டுகள் அனுப்பினதாயும், போலீஸார்உடனே இது விஷயத்தைப்பற்றி விசாரித்து மாஜிஸ்டிரேட்டாருக்கு அகார்னிஸ் ரிப்போர்ட்டுக்கொடுத்து மதுரை தாலூகா 2—வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் சம்மன்போட்டு விசாரித்துக் குற்றவாளி நாச்சியப்பனுக்கு கடந்த ஜனவரிமாசத்துக் கடைசியில் 31வுயில் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். குற்றவாளி ஜாமீன் வாங்கிக்கொண்டு மதுரை டிவிஷன்டிப்டி மேல் கோர்ட்டில் அப்பீல் செய்தான். அப்பீல் கோர்ட்டாரும் சென்ற பிப்ரவரி மாதத்திற் கீழ்க்கோர்ட்டு தண்டனையை உறுதிசெய்திருக்கிறார்கள். குற்றவாளி ஜயிலிலிருக்கிறான்.

மூ. சி. அ. கோன்,

ஐயா,

இதனடியிற் குறித்திருக்கும் விஷயம் குடிகளுக்கு அவசியமென்பது கண்ணுற்ற மாத்திரத்திற் றங்களுக்குத் தெற்றெனை விளங்கும். இதிற்றெரிவிக்கும் குடிகளின் குறை முறைகளை கவர்ன்மெண்டார் அறியும் பொருட்டுத் தமது சமுக மனுப்பினேன். இதனை இந்திய சட்ட கெஜெட்டு வாயிலாக வெளிப்படுத்தும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரை ஜில்லாவில், மலையாளம் ஷை நகரத்திலிருந்து கவர்ன்மெண்டாரால் முல்லைப்பெரியாறு ராஜவாய்க்கால் என்று ஒருகால் பிரித்து கடந்த 1306 - ம் பசலி முதல் நாளது 1316-ம் பசலி வரை மதுரை தாலூகா, மேலூர் தாலுக்காக்களிலுள்ள அயன் ஜாரிஜமீன் கிராமங்களின் நஞ்சை புஞ்சை வகையரு நிலங்களுக்குஷை ராஜவாய்க்காலினின்றும் பெரியாற்றுத் தண்ணீர் சப்ளை செய்துவருகிறார்கள். அதற்கென குடிகள் சர்க்காருக்கு வாட்டரேட்டுத் தீர்வை பிரத்தியேகமாய்க் கொடுத்துவந்தபோதிலும் பெரும்பாலுங் குடிகள் அதனால் சௌகரியமடைந்து வருகிறார்களென்பதில் யாதோராக்ஷேபணையுமில்லை யென்ப தெதார்த்தம்.

1. ஆனால் கவர்ன்மெண்டார் எல்லா கிராமக்குடிகளையும் சமமாகப் பாவிக்கவேண்டியதிருக்க அங்ஙனஞ் செய்யாமல் அயன் கிராமக்குடிகளைச் சொந்தக்காரர்களாகவும் இதர ஜமீன் ஜாரிகிராமக்குடிகளை அன்னியர்களாகவும் பாவித்து வருவதவர்களின் துரதிர்ஷ்டமென்பதி லென்ன சந்தேக மிருக்கிறது?

2. அப்படி இருவிதமாக பாவிக்கும் கவர்ன்மெண்டார் லாப நஷ்டத்தைக் கருதியாவது செய்கிறார்களா? அதுவுமில்லை. அதாவது, அயன் கிராமக்குடிகளிடத்தில் தரந் தீர்வைக்குமேல் தண்ணீர் தீர்வை ஏக்கர் 1-க்கு ரூ. 1 வீதமாகவும், ஜாரி ஜமீன் கிராமக் குடிகளிடத்தில் ஏக்கர் 1 - க்கு நஞ்சைக்குத் தரந் தீர்வையைத் தவிர ரூ. 4-ம், புஞ்சைக்கு ஏக்கர் 1-க்கு தரந் தீர்வையைத் தவிர ரூ. 5-மாக வசூலிக்கிறார்கள்.

3. அவ்விதம் ஜாரி ஜமீன் கிராமக்குடிகளினிடத்தில் ஜாஸ்தி தீர்வை வசூலித்தும், அயன் கிராமக்குடிகளுக்குச் செய்யுஞ் சௌகரியத்தில் பத்திலொருபங்காவது ஜாரி ஜமீன் கிராமக்குடிகளுக்குச் செய்வதாக இல்லை.

4. மேற்கண்ட இருவகுப்பார்களுக்கு முள்ள சௌகரியா சௌகரிய மியாதென்றாலோ அயன்கிராமக் குடிகளுக்கு ஏற்கனவே ஷை ராஜவாய்க்காலில் எந்தெந்த இடத்தில் சுலுயிஸ் கட்டவேண்டுமோ அதைக் கட்டியும், ஜலப்பாய்ச்சலாதார வாய்க்கால்கள்பிரித்து லெவல் முதலான எடுத்து வெட்டியும் தேக்கமுதலானது கட்டியும், மேடு பள்ளங்களுள்ள நிலங்களில் சமமாக ஜலம் பாயும்படிச் செய்தும், இன்னும் நாளுக்குநாள் அதிலுள்ள குறைபாடுகளைச் சீர்திருத்தியும் ஒவ்வொரு வருஷம் மேமீ முதல் அடுத்த மார்ச்சுமீ வரை காலங்கோடை இருபோகத்துக்கும் குடிகள்கேளாமலே போதுமானமட்டும் சப்ளை செய்துவருகிறார்கள்.

5. ஜாரி ஜமீன் கிராமங்களுக்கோ, ஏற்கனவே பின்னீடு இதினின்றும் அடையப்போகுஞ் சௌகரியம் குடிகளுக்குத் தெரியாததால் இது விஷயத்தில் யாதொருமுயற்சியு மெடுத்துக்கொள்ளாத நிமித்தம் கவர்ன்மெண்டார் எந்தெந்த இடத்தில் சுலுயிசுகள் வைக்கவேண்டுமோ அந்த இடங்களில் வைக்காமல், பலான கிராமங்களுக்கு ஒரு சுலுயிஸ் ஆக வைத்திருக்கிறார்கள். அதுவுந்தவிர, மேடுபள்ளங்களான நிலங்களுக்கெல்லாம் ஒரே சமமாக ஜலம் பாயும்படி வாய்க்கால் முதலிய லெவலெடுத்துப் பிரித்து வெட்டி தேக்க முதலியதுகட்டிக்கொடுக்கவுமில்லை. குடிகளுடைய சொந்தத்தில் வாய்க்கால்கள் வெட்டி தண்ணீர் பாய்ச்சும்படி செய்து வருகிறார்கள். அயன் கிராமத்துக்கொப்பந்தம் சரியான காலத்தில் ஜலம் சப்ளை செய்கிறார்களா அதுவுமில்லை.

6. இந்துக்களினுடைய குணதிசயம் கவர்ன்மெண்டாருக்குத்தெரியாததல்ல. அதாவது, இந்துக்கள் அவரவர்களுடைய சௌகரியத்தையே அவரவர்கள் பெரிதாகக் கவனிப்பார்களேதவிர எல்லாருமொன்றுசேர்ந்து ஒற்றுமையான காரியங்களைச்செய்து எல்லாரும்சௌகரியமடையவேண்டுமென்னுங் கருத்து இந்துக்களுக்குள் இதுவரையுமில்லை. இனிமேலுமுண்டாகமாட்டாது என்பது திண்ணம். ஆனதால் குடிகள் யார்யாருக்கு எது எதுசௌகரியமோ அந்தந்தப்படி செய்துகொள்ளுகிறார்கள். அதிலுஞ்செல்வாக்குடையவர்களைத்தவிர ஏழைக்குடிகளும் மேட்டுநிலக்காரர்களும் கடைசி நிலக்காரர்களும் மத்தியிற்கிடந்து ஜலக் கஷ்டத்தையுந் தீர்வை நஷ்டத்தையும் அடைந்து கடன்வறுமைக் குட்பட்டுப் பரதவிக்கிறார்கள்.

7. மேற்கண்ட குறைபாடுடையவர்கள் டி. பி. டப்ளியூ. அதிகாரிகளிடத்தில் தங்கள் குறைபாடுகளை

வெளியிட்டுச்சொல்லி முறையிட்டு மனுமூலமாயும் நேரிலும் தெரிவித்துக்கொண்டால் அதற்கவர்கள்சொல்லும் ஜவாப்பாவது, இனிமேல் குடிகளுடைய சௌகரியப்படி நூதனமாக சுலுயிஸ் கட்டிக் கொடுக்கவுமுடியாது. சர்க்காரில் வாய்க்கால் முதலானது பிரித்து லெவலெடுத்து வெட்டிகொடுக்கவுமுடியாது. அயன் கிராம நிலங்களுக்குக் கண்டு மீதமான தண்ணீர் இருந்தால் ஸ்பெஷலாக எங்களிஷ்டமிருந்தால் ஜாரி ஜமீன் கிராம நிலங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்படுமென்று வாய்மொழியாகத் தெரிவித்திருக்கிறார்களே தவிர எழுத்து மூலமான எண்டார்ஸ்மெண்டு முதலானது கொடுக்கிறார்களில்லை.

8. கவர்ன்மெண்டார் பெரியாறு ஜலத்தால் குடிகள் எல்லாருஞ் சௌகரியத்தை யடைகிறார்களென்கிற பொதுவான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்களே தவிர ஜாரி ஜமீன் கிராமங்களின் குடிகளுக்குள்ளகுறைபாடுகளை யறிந்திருந்தும் நிவர்த்திக்க முயலுகிறார்களில்லை.

9. இவ்வித குறைபாடுகளை நிவர்த்திக்க ஜாரி ஜமீன் கிராமங்களின் ப்ரொப்ரைடர்களாவது முயற்சியெடுத்துக்கொள்ளுகிறார்களா அதுவுமில்லை. ஆனாலவர்கள் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பில்லாததால் அவர்களும் சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்களில்லை.

10. ஜாரி ஜமீன் கிராமங்களுக்கு இவ்விதம் பெரியாறு தண்ணீர் சப்ளை செய்வதைப்பார்க்கிலும் செய்யாதிருப்பது உத்தமத்திலு முத்தமமாக விருக்கிறது.

11. மேற்கண்ட குறைபாடுகளுடைய கிராமங்களில் சில கிராமங்களின் வர்த்தமானங்களை இதற் கத்தாக்ஷியாக இங்குச் சுருக்கமாக எடுத்துக்காட்டுகிறேன்.

12. அதாவது, மதுரை தாலூகா ஜமீன்தசிர்சயம் கிராமத்தின் நஞ்சை புஞ்சைகளின்,பெரியாறு தண்ணீர் பாய லாயக்கான விஸ்தீரணம் ஏக்கர் (2500). இதற்கு இப்போது குடிகள் செலுத்திவருகிற மொத்தம் தண்ணீர்த்தீர்வை ரூ. (12000). இவ்வளவு பெரிய கிராமங்களுக்கு இந்த கிராம எல்லைக்குள் ஷை ராஜ வாய்க்கால் போயும் இந்த கிராம எல்லையில் சுலுயிஸ் வைக்காமல் இந்த கிராம மேற்குக்கடைசி எல்லைக் கால்வாயிலுள்ள ஆண்டிப்பட்டி கிராமத்து எல்லையில் முன்னமே ஒரு சுலுயிஸ் கட்டியிருக்கிறார்கள். அதுவும் இந்த ராஜவாய்க்காலிலுள்ள எல்லாச் சுலுயிஸ்களிலும் மேட்டு சுலுயிஸாயும் ஜலக்குறைவுடையதாயுமிருக்கிறது. அந்த சுலுயிஸிலிருந்து இப்போது ஜலம் சப்ளை செய்கிற கிராமமாவது ஷை தசிர்சயம் கிராமம், ஆண்டிப்பட்டி, துப்பிச்சநாய்க்கன்பட்டி ஆக 3-கிராமங்களுக்குமென்று பேரிட்டிருக்கிறார்கள். அதற்காவது பாய்ச்சலாதார வாய்கால்கள் சர்க்காரில் லெவலெடுத்துப்பிரித்து வெட்டிக்கொடுத்திருக்கிறார்களா ? அதுவுமில்லை.

13. ஷை தசிச்சியங் கிராமக்குடிகள் ஷை ஆண்டிப்பட்டி சுலுயிஸ்வழியாகப் பெரியாற்றுத்தண்ணீர் எங்கள் கிராமங்களுக்குச் சப்ளை செய்துவருவதில் ஜலம்போதாமலும் தூரமாக இருப்பதால் ஜலம் வந்திட்டேறுமலும் சரியான காலத்தில் ஜலம் பாயாமல் சரியானபடி விளைவேறாமல் குடிகள் கஷ்டமும் தீர்வைநஷ்டமும் அடைந்து வருகிறோம். ஆனதால் எங்கள் கிராம எல்லையில் அதாவது பெரியாறு ராஜவாய்க்கால் 12-வது மைல் 3-வது பர்லாங்கில் எங்கள் கிராமத்துக்கென்று தனியாக ஒருசுலுயிஸ்கட்டி வாய்கால் முதலானதும்சர்க்காரில்லெவலெடுத்து வெட்டி தேக்க முதலானதும்கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் தொன்று தொட்டு டி.பி. டப்ளியூ அதிகாரிகளிடத்தில் முறையிட்டுவந்ததில் சென்ற வருஷத்தில் ம-ா-ா-ஸ்ரீ, எக்ஸிகூடிவ் இஞ்சினீர் இராமலிங்கையரவர்கள் வந்து பார்வையிட்டு மேற்கண்ட இடத்தில் நூதனமாக ஒரு சுலுயிஸ்வைத்துக் கொடுக்கப்படுமென்று கேரி உத்தரவுசெய்து வாய்க்கால் முதலியன வெட்ட ஓவர்சியரைக்கொண்டு லெவல் முதாலான தெடுத்தும் இதுவரை யாதொரு முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக இப்போது வந்திருக்கும் துரையவர்களைக் கேட்டுவருவதில், இனிமேல் உங்கள் சௌகரியப்படி சுலுயிஸ் கட்டிக்கொடுக்கவும் வாய்க்கால் முதலானது லெவலெடுத்து எங்களால் வெட்டிக்கொடுக்கவும் முடியாதென்றுஞ் சொல்லுகிறார்.

14. அயன் கிராமத்துக் கொப்பந்தம் ஜமீன்ஜாரி கிராம நிலங்களுக்குச் சாஸ்வதமாகத் தண்ணீர் சப்ளை பண்ண முடியாது. தண்ணீர் ஜாஸ்தியுள்ள காலத்தில் எங்களிஷ்டமிருந்தால் ஸ்பெஷலாக சப்ளை பண்ணப்படுமென்றும் ஷை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறபடி 1306-ம் பசலி முதல் இதுவரை ஒரு பசலியிலாவது தண்ணீர் விடாமல் ஜாரிஜமீன் கிராமங்களுக்கு நிறுத்திவைக்கப்படவுமில்லை.

15. கவர்ன்மெண்டார் பெரியாறு தண்ணீர் சப்ளை செய்கிற விஷயமாய் அயன் ஜமீன்ஜாரி கிராமங்களுக்கு இன்னவிதமான ரூல்ஸுகளேற்படுத்தி இருக்கிறார்களென்பதுங் குடிகளுக்கிதுவரை தெரியவில்லை.

(குடிகளின் பிரார்த்தனை.)

16. பத்திராதிபரவர்கள் ஏழைக்குடிகள் விஷயத்தில் பூரண கிருபைவைத்து, ரெவினியூ போர்டார், பெரியாறு விஷயமாய் என்னவிதமான ரூல்ஸுகளேற்படுத்தியிருக்கிறார்களென்பதைத் தெரிந்துஷைரூல்ஸின் கருத்தையும் குடிகள் மேற்கூறுங் குறைபாடுகளையும் குடிகள் விஷயத்தில் இவ்வித முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் குடிகளுக்குள்ள குறைகளைக் கவர்ன்மெண்டார் நிவர்த்திக்க வேண்டு மென்றும் இன்னுந் தங்கள் யுக்தியானுசாரம் தங்கள் கௌரவம் பொருந்திய இந்தியசட்ட கெஜெட்டு மூலமாய் விபத்தமா யெடுத்தெழுதி வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மு. சி. அருணாசலக்கோன்,

ஐயன் கோட்டை.

(இது 132-ம் பக்கத் தொடர்.)

கேட்க அவர் கம்பெனி விதிப்படி தனக்கு ஒருவாரம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் எனவே, ராஜா அர்பத்னட்வார்த்தையை நம்பி அவர் சொன்னபடி ஒருவாரம் கழித்தே வாங்கிக் கொள்வதாக ஒப்புக்கொண்டார். அவர் சொல்லியது முற்றிலும் பொய். அம்மாதிரியாக நோட்டீசு கொடுக்கவேண்டிய அவசியமே கிடையாது. பிறகு சர்ஜார்ஜ், ராஜாவிடம்பலவிதமாய்ப் பொய்பேசித் திரும்பவும் தனதுடிபாஸிட்டை கம்பெனியிலேயே வைத்திருக்கும்படியான உபாயத்தைச் செய்ய முயன்றதில், அதுவரையில் ராஜாவிற்குச் சேரவேண்டிய வட்டியைக் கொடுத்துவிடும்படி நேரிட்டது. இதன்பேரில் அக்டோபர் 19-தேதி ராஜாவின் ஏஜண்டு, ராஜாவிற்குச் சேரவேண்டிய வட்டி 17,500 ரூபாயைக்கொடுக்கும்படி எழுதியனுப்பினர். மறுநாளாகிய 20-தேதி சர் ஜார்ஜ் தான் திங்கட்கிழமை 22உ கம்பெனியை மூடப்போகிறதாக நிச்சயித்திருந்தும், வேணுமென்றே மோசக்கருத்தாய் 17,500 ரூபாய்க்கு ஓர் பொய்ச்செக்கை எழுதிக்கொடுத்தார். அதாவது, ராஜாவிற்கு வாய்தாநாளாகிய 9உ சேரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் மோசடியாய் கம்பெனி நல்லஸ்திதியிலிருக்கிறதென்று அவரை ஏமாற்றிப் பணத்தைக் கம்பெனியிலேயே சில காலம்வரையில் வைத்திருக்கும்படிச் செய்ததுமன்னியில்பொய்ச்செக்குகொடுத்ததற்கு இந்தியன் பினல்கோட் 417 வது செக்ஷன் பிரகாரம் முதல் குற்றம்.

இரண்டாவது குற்றம்:—இந்த அர்பத்னட் கம்பெனியார் பதராஸ் இகூடபில் அஷ-ரன்ஸ் சொஸைடிக்குப் பொக்கிஷதாரர்களாயும் செக்ரிடெரிகளாயுமிருந்தார்கள். ஆகவேயிவர்கள் அந்த சொஸைடியின் டைரெக்டர்கள் கூறுகிறபிரகாரம் நடக்கக் கடைமைப்பட்டவர்கள். டைரக்டர்கள் கூடி அந்த சொஸைடியின் மொத்தப்பணமாகிய 1,62,93-64 ரூபாயில் 73 423-0-5 வெளியில்வரவேண்டிய நிலுவை போகமற்றத் மீதித் தொகையாகிய 89, 272-5-7 ரூபாய்க்குகவர்ன்மெண்ட் பேபர் வாங்கிவிடும்படி ஆர்டர்செய்தார்கள். அர்பத்நட் அம்மாதிரியாகப் பேபர்வாங்காமல் அந்தப் பணத்தில் பெரும் பாகத்தைத் தன் சொந்த செலவிற்கு உபயோகப்படுத்திக்கொண்டதற்காக இ-பி-கோ 403, 406, 409, செக்ஷன்கள் பிரகாரம் இரண்டாவது குற்றம்.

மூன்றாவது குற்றம்:—அர்பத்னட் இண்டஸ்டிரயில்ஸ்லிமிடெட் என்னும் கம்பெனி விஷயத்தில், மோசஞ்செய்ததற்காக இ-பி-கோ, 403, 406, 409 செக்ஷன்படி மூன்றாவது குற்றம். கூடிய சீக்கிரத்தில் சர் ஜார்ஜ் சீமைக்குப் போவதால் சீக்கிரம் வாரண்டு பிறப்பிக்கும்படி மிஸ்டர் E. P. பவல் மாஜிஸ்டிரேட்டை வேண்டிக்கொண்டார். சர்ஜார்ஜ் தரப்பில் ஆஜரான சர் ஹென்றி கிங் மனுவை எதிர்த்து சர் ஜார்ஜ் 20, 000 ரூபாய் ரொக்க ஜாமீன் இரண்டு கொடுக்கத்தயாராயிருப்பதாகவும் ஜாமீன்பேரில் விடும்படியும் கேட்டுக்கொள்ள கவர்ன்மெண்ட்பிராசிக்கூடர்தனக்கொன்றும் ஆக்ஷேபணையில்லை; ஆனல் கவர்ன்மெண்டுக்குத் தந்திகொடுத்துத் தெரிந்துகொண்டு பிறகு தெரிவிப்பதாய்க்கூறினர். கோர்டார் கேசை மறுநாள் வரையில் நிறுத்திவைத்தார்கள். திரும்பவும் கேஸ் எடுத்துக்கொள்ளப்பட்டு கேஸ் ஈடந்தே தீரவேண்டும்;'ஜாமீன் முதலியவைகளில் விடக்கூடாதென பவல் கூறினர். சர் ஹென்றிகிங் தன்னல் கூடுமானவரையில் அர்பத்னெட்டை ஜாமீனில் விடும்படிக் கேட்டும் மாஜிஸ்ட்ரேட் தான் ஜாமீன்பேரில் விடமாட்டேனெனக்கூறிவிட்டார். அதன்பிறகு சர் எச் கிங் தான் ஹைகோர்ட்டிற்குப் போய் ஜாமீன் ஆர்டர் வாங்கிக் கொள்ள உத்தரவுகேட்டார். மாஜிஸ்டிரேட் உத்தரவு கொடுத்தார். ஹைகோர்ட்டு உத்தரவு வரும்பரியந்தம் சர்ஜார்ஜ் மிஸ்டர் கிளார்கின்ப்ரைவேட்ரூமில் வைக்கப்பட்டிருந்தார். உடனே சர். H. கிங் ஹைகோர்டிற்குப்போய் சர். எஸ். சுப்பிரமணியரிடம் ஜாமீன் ஆர்டர் கேட்க, அவர் அம்மனுவைத்தள்ளிவிட்டார். ஆகவே மாஜிஸ்ட்ரேட் அவர்கள் சர் ஜார்ஜ் பேரில் ஏற்படுத்தப்பட்ட குற்றங்கள் மிகவும் பெரிய குற்றங்களாதலால் ஜாமீனல் விடப்படமாட்டாது என்று கூறி கேஸை 14 தேதிவரையில் தள்ளிவைத்திருக்கிறர். அதுபரியந்தம் சர் ஜார்ஜை காவலில் வைக்கப்பட்டிருக்கும்படி ஆர்டர் பிறப்பித்தார்.

NEWS AND NOTES.

லாகூரில் ஓர் இளம் பெண் தன்புருஷன் மரிக்கும் தருணத்தில் 'நீயும் என்னேடேவா' என்று சொன்னதின் பொருட்டு உடனே அப்பெண் அமைதியாய்மறு அறைக்குட்சென்று தன்னை தூக்கிலிட்டுஉயிர் துறந்தனள். இருவரு மொன்ருகத் தகனிக்கப் பட்டனர்.

* * *

சேர்க்கை ரத்தினம்:—பாரிஸ் நகரிலுள்ள ஒரு ரத்னவியாபாரி சிறியகெம்புகளையும் நீலக்கற்களையும் பொடித்துத்தூள் செய்து ரசாயனசேர்க்கையால் பெரிய ரத்தினங்கள் செய்யக் கண்டுபிடித்திருக்கின்றனும்.

* * *

ஒருபாட்டுக்குப் பதினயிரம் பவுண்:—ஐரோப்பாவில் பிரசித்தி பெற்ற மெலபாவென்னும் பாடகி ஓர் போனேகிராப் பெட்டியில் அவள் பாட்டைப் பதிப்பிப்பதற்காகப் பதினயிரம் பவுண் பேசியிருக்கின்றனளாம்.

* * *

நம்பிக்கை மோசக்கேஸ்:—தார்டியோவென்னும் ஊரில் உள்ள மிஸ்டர் தாதாபாய் கச்வாலா என்பவரின் 125 ரூபா பெறுமான துவிச்சக்கிரவண்டி என்னும் பைசக்கலை தன்னுடைய வேலைக்காரனிடம்கொடுத்து வண்டிகள்ரிபேர் செய்யப்படும் ஷாப்புக்குக் கொண்டுபோகும்படி அனுப்பிவைத்தார். வேலைக்காரன் அந்தவண்டியைத் தூக்கிக்கொண்டு பைசிகல் ரிபேர்செய்யும் ஷாப்பின் அருகாமையில் செல்லும்போது அங்கு நின்றுகொண்டிருந்த கூவர்ஜேம் ஷெட்ஜி என்னும் ஒரு பார்சி சிறுவன் தான் அந்த ஷாப்பில் வேலையாயிருப்பவனென்றும் வண்டியைத் தன்னிடம் கொடுத்தால் ரிபேர்செய்து கொடுப்பதாகவும் சொல்லி, வண்டியை வாங்கிக்கொண்டு போய்விட்டான். வேலைக்கரன் எஜமானனிடம்போய் மேலேநடந்த சங்கதியைச் சொன்னன். எஜமானன் தன்வேலைக்காரனை யாரோ ஏமாற்றி விட்டார்கள் என்று போலீசாருக்கு அறிவித்தான். போலீசார் அவனைப்பிடித்து சார்ஜ் செய்து மாதுசார் மாஜிஸ்டிரேட் முன்பு விசாரணைக்குக் கொண்டுவந்தபோது, மாஜிஸ்டிரேட் குற்றவாளி சிறுவனயிருப்பதையும் முதல் குற்றமாயிருப்பதையும் யோசனைசெய்து 100 ரூபாய் ஜாமீன் கட்டும்படியும் ஒரு வருடபரியந்தம் தான் எப்போது தண்டனைவிதிக்கக்கூப்பிடுகிருரோ அப்போது ஆஜராகும்படியும் அதுபரியந்தம் நன்னடக்கையி லிருக்கும்படியும் உத்தரவு செய்தார்.

சுட்டுவிட்டாள்:—மிஸ்டர் ஸ்டுவேர்ட் என்னும் ஐரோப்பியமாது இம்மாதம் 16 தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு தன் வீட்டின் ஜன்னலின் வழியாகத் தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு கூலியைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டாள். அடிபட்டகூலி ஆஸ்பத்திரியில் மிகவும் ஆபத்தான நிலைமையிலிருக்கிருன். போலீசார் இன்னும் அவளைப்பிடிப்பதற்கு யாதொரு பிரயத்தனமும் செய்யவில்லையாம்.

* * *

விலைபெற்றசிலை:—ஜப்பான் தேசத்திலுள்ள யோகஹாமா நகரில் தெய்பு பஸார் என்ற தெய்வத்திற்காக அடித்து வைக்கப்பட்டிருக்கின்ற சிலையே உலகத்திலுள்ள சிலைகள் யாவற்றிலும் மிகவும் விலையேறப்பெற்றது. இதன் உயரம் 63½ அடி, கனம் 55 டன், அதன்வேலைப்பாட்டில் 500 பவுண் நிறையுள்ள சுத்தமானபொன் சேர்ந்திருக்கின்றது.

* * *

கொலை:—சென்றவாரம் செவ்வாய்க்கிழமை யிரவு சாமல்கோட்டில், கொள்ளைக்காரர்கள் நெல்வயலில் புகுந்து கொள்ளையடிக்க ஆரம்பிக்கும்பொழுது, வயலின் காவற்காரன் அவர்களைத்தடுக்கவே அவர்கள் அவனை நன்ருயடித்து கடுங்காயப்படுத்தி கொன்றுவிட்டதுமன்றி, அவனுடைய குடிசைக்கும் நெருப்புவைத்து விட்டார்கள். போலீசாரிதைப்பற்றி விசாரணை செய்துவருகிருர்கள்.

* * *

இக்கிலீஷ்மான் பத்திரிகையின் சென்னை நிருபரின் யோக்கியதை:—ஸ்ரீ விபனசந்திரபாலர் சென்னைக்கு வந்திறங்கியபோது அவரைவரவேற்பதற்கு 200 மாணவர்களே வந்திருந்தார்களெனக் கல்கத்தாவில் பிரசுரமாகும் இங்கிலீஷ்மான் பத்திரிகையின் சென்னை நிருபநேயர் தன் பத்திரிகைக்கு அறிவிக்கிருர். இந்நிருபநேயருக்கு கண்பார்வையில் ஏதோ பிசகாயிருக்க வேண்டும். சுமார் 10,000 மாணவர்கள் கூட்டத்திலிவருக்கு 200 மாணவர்கள்தான் தெரிந்ததுபோலும்! இம்மாதிரி உள்ளதைமறைந்துப் பொய் எழுதுவதால் இப்பறங்கிகளுக்குவரும் லாபம் என்னவோ?

* * *

ஒரு பவுத்தகுருவால் கொல்லப்பட்டான்:—காலிப்பகுதியைச் சேர்ந்த பொட்டல் என்னுங்கிராமத்திலுள்ள தேவமித்தனென்ற பவுத்தகுரு தேங்காய்த் திருடிய ஒருசிறுகள்வனை இருப்புத்தடியாலடித்துக் கொன்ற வழக்கு கொளும்பு சிப் ஜஸ்டிஸ் முன்பாக சென்ற வெள்ளிக்கிழமை விசாரணை செய்யப்பட்டது. குற்றவாளி வேண்டுமென்று கொலைசெய்யாதிருந்தாலும் தேங்காய் திருடியவனுக்கு மரணதண்டனை நியாயமாகமாட்டாதென அனுமானித்துப்புத்தகுருவுக்கு 1-வருட கடின காவல் விதித்துவிட்டார்.

* * *

மழையோடு மச்சங்களும் சொரிந்தனவாம்:—அதிரியாட்டிக் கடலையடுத்த ஒட்டோனே நகரத்தில் சில தினங்களுக்கு முன் கனமழை வருஷித்தபோது பற்பலவகையான மச்சங்களும் ஏராளமாய் விழுந்தனவாம். மழையொழிந்தபின் ஜனங்கள் கூடைகளையும் பாத்திரங்களையுந்தூக்கிக் கொண்டு திரிந்து துடிக்கத்துடிக்கக் கைகொண்டமட்டும் விதம்விதமான மச்சங்களைப் பொறுக்கி வந்தார்களாம். அந்நகரையடுத்த சமுத்திரத்தில் நீராவிமேகங்கள் ஜலத்தையுறிஞ்சிய பொழுது மச்சங்களும் கூடவே போயிருக்கலாமெனக் கருதப் படுகின்றது.

* * *

காயத்தாலிறந்தான்:—பெங்காளத்திலுள்ள என்டாலி என்னுமிடத்தில் இம்மாதம் 8 தேதி யஹமத்ஜாம் என்பவன் தனது பக்கத்து வீட்டுக்காரர்களான மூவருடன் சாரக் பண்டிகையில்நடந்த வேடிக்கையைப்பார்க்கப் போயிருந்தான். அங்கு இவர்களுள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் நேரவே, அவனுடன் பின்தொடர்ந்துசென்ற மூவரும் சேர்ந்து யஹமத்ஜாமை நன்ருய் அடித்துக்காயப் படுத்திவிட்டார்கள். அவன் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு சொஸ்தப்படுத்தப்பட்டு வீட்டுக்குக்கொண்டுவந்த சில நாட்களுக் கெல்லாம் திரும்பவும் அடிப்பட்ட காயத்தால் ஓர்வித நோய்கண்டு உயிர்துறந்தனன். அவனை அடித்த மூவரும் போலீஸ் பந்தோபஸ்திலிருந்துவருகிருர்கள்.

* * *

மோசம் வெளிவந்துவிட்டது:—ஹௌராவில் 4 சினேதசத்து ஸ்திரீகள், பல்வலி, காது குத்தல் முதலிய நோய்களைத் தீர்ப்பதில்வல்லவர்கள் என ஜனங்களை ஏமாற்றித்திரிந்து வந்தார்கள். ஒரு கீர்த்திபெற்ற பெங்காளி வைத்தியர் அவர்களைப் பரிசோதனைசெய்ய வேண்டுமெனக் கருதி ஒருநாள் அந்த ஸ்திரீகளில் ஒருத்தியைக் கூப்பிட்டு தனக்குப் பல்வலி யிருப்பதாயும் அதைத்தீர்க்கும்படியும் கேட்க, அந்தஸ்திரீ, அவ்வைத்தியரின் வாயைத் திறக்கச்சொல்லி பரீட்சை செய்து வாயில் 3 புழுக்களிருப்பதாகவும் அந்த நோய் தீரவேண்டுமாகில், அம்மூன்று புழுக்களை வெளியே எடுத்துவிடல் வேண்டுமெனவுங் கூற, வைத்தியர் எப்படியாவது அந்த ஸ்திரீகளின் சூதைக் கண்டு பிடிக்கவேண்டுமென வெண்ணங் கொண்டு பரிசோதனை செய்யலாம் என்றதும், அவள் உடனே அவர் வாயைத்திறக்கச் செய்து, பரிசோதனை செய்வதுபோல் செய்து தன்னகத்தில்வைத்திருந்த புழுவை வாயிற்போட்டு எடுத்துக்காண்பிக்க எத்தனிக்கும்போது வைத்தியர் அவள்கையைப் பிடித்துக்கொண்டு சார்ஜ்செய்யப்போனர். அந்தஸ்திரீ தன்னுடைய மோசத்தைவெளியிட்டுவிட்டான் என்று மிகவும்கோபித்து அவரைத் திட்டிக்கொண்டு அடிக்கப்புகுந்தனள். ஆனல் பக்கத்திலிருந்த ஒருவருடைய உதவியால் வைத்தியர் அடிபடாமல் தப்பித்துக்கொண்டார். போலீசாரிவர்களைப்பற்றிவிசாரணைசெய்துவருகிருர்கள்.

* * *

கோழிமுட்டைக்கு வந்தயோகம்:—அமெரிக்காவில் கெண்டகி என்ற மாகாணத்திலுள்ள ஒரு குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கும் ஓர் வீட்டின் சொந்தக்காரர் ஓர் கோழி வளர்த்தாராம். அக்கோழி வழக்கமில்லாது ஒரு நாள் மாலை 8-மணி வரைக்கும் வராமைகண்டு வேவுகாரர்கள் தேடிப்பார்க்க அக்குன்றின் கீழ்ப்புறமிருக்கும் டள்ளத்தாக்கில் "மின்மினி" பூச்சிகளைப்பிடித்துத் தின்றுவிட்டு தன் கூண்டிற்கு வருவதைப் பார்த்தனர்களாம். இப்படி மாலை 8 மணிக்குமேல் வழக்கமாய் மின்மினி வேட்டையாடிவிட்டு வருகிறது என்ற ஓர் வழக்கம் ஏற்படுத்திக்கொண்டதாம். அப்படிச்சிலநாள் செல்லக் கோழியும் முட்டையிட்டது. அம்முட்டை மின்சாரத்தைவிடப் பிரகாசிப்பதைக்கண்ட அவ்வீட்டார் அப்பிரகாசம் கெடாதிருக்கும்படி அதன்மேல் பூச்சிட்டு தங்கள் வீட்டிற்கு விளக்கிற்குப்பதிலாய் வைத்துக்கொண்டார்களாம். அவ்வீடு குன்றின்மே லிருப்பதால் எங்கேயிருந்து பார்த்தாலும் ஜோமயமாய் விளங்குகிறதாம். அவ்வீட்டார் ஒருவர் தன் 40 குதிரைவேகமுள்ள மோட்டார்விசை வண்டிக்கு விளக்குகளுக்குப்பதிலாக இதை உபயோகித்து வருகின்றராம் அம்முட்டை சுமார் ஒரு மைல் தூரம் நிலாவெளிச்சம்போன்ற குறையாவெளிச்சம் கொடுக்கிறதாம். இது என்ன விந்தை.

அந்தப்புர ரகசியம்.

புத்தகவரவு:—இத் தமிழ்க்கதை திருமயிலை-இராமலிங்க முதலியாரவர்களால் எழுதப்பட்டது. இந்நூலாசிரியர், ஜீவரத்தினம், பனமோஹினி, விசாலாக்ஷி, மோகனசுந்தரி, பங்கஜவல்லி, மனேரஞ்சனி, பழமொழிக்கதைகள் முதலிய அநேக நாவல்கள் எழுதியிருக்கிருர். இவ் அந்தப்புரரகசியம் தமிழ் படிக்கத்தெரிந்த ஒவ்வொருவரும் வாசித்து அகமகிழத்தக்க இனிமையுடையதாயிருக்கிறது. கதையின்போக்கு மிக ருசிகரமாகவும், இன்பமாகவும், ஆழ்ந்தகருத்துடையதாகவும், பலதரம் படிக்கவேண்டுமென்னும் ஆசையை எழுப்புவதாகவும், கம்பீரமான நடையுடையதாகவும் இருக்கிறது. அச்சுப்பதிப்பும் காகிதமும் கண்களைக் கவரத்தக்க நாகரீகமுடையது.

காலத்தை ஆநந்தமாகக் கழிப்பதற்கு இஃதோர் அருமையான கதையேயாகும். இக்கதையின் இடையிடையே பலநீதிகளும், கதாநாயகியால் பாடப்பெற்ற பல இனிய பாடல்களும் உடைத்தா யிருக்கிறது.

இக்கதையின் போக்கெல்லாம் நூதனநடையாக எழுதப்பட்டு, படிப்போருள்ளத்தைக் கவரத்தக்கதாக விருக்கிறது. இதன்விலை எல்லாபோஸ்டேஜூம் உட்பட ரூபா. 1—0—0.

தீவிபத்து.—சென்றவெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கூசாரி நார் மில்லில் தீப்பிடித்து சுமார் 60 டன் நார்மூட்டைகள் எரிந்துபோய்விட்டன.

***

புதிய உடை:—ஜூன் மாதம் முதல்தேதியிலிருந்து கல்கத்தா ஹைகோர்ட் வக்கீல்கள் எல்லாம் நீல கவுன் தரித்து கோர்ட்டிற்கு வரவேண்டுமென சென்றவாரக்கல்கத்தா கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

***

கிழக்கு பெங்காளத்தில் பழையகட்சியைச்சார்ந்த சிலர் "சுரேந்திர நாத்மேலா" என ஓர்வித சந்தை ஏற்படுத்தினார்கள். இதன்பிரகாரம் பழைய கட்சியார் "பால்சந்தை" என ஒன்று ஏற்படுத்தப்போகிறார்கள்.

***

பஞ்சாபியின் விருத்தி:—பாரிசாலில் மாத்திரமிப்பொழுதிப்பத்திரிகைக்கு 52 சந்தாதாரர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இது கொஞ்சநாளில் தினசரிப்பத்திரிகையாக்கப்படுமாம். இப்பத்திரிகையை கவர்ன்மெண்டார் வீணாய் சிக்ஷைசெய்து வைத்ததால் எல்லாவிஷயத்திலும் லாபமே யொழிய நஷ்டம் ஒன்றுமில்லை யென்பதை நன்றாயறியட்டும்.

***

களவு:— கல்கத்தாவில் நார்தம்பர்லண்டு ரிஜிமெண்டைச் சார்ந்த ஒரு சோல்ஜர் அதே ரிஜிமெண்டைச்சார்ந்த மிஸ்டர் A. சிலவிங்டனின் 120 ரூபாய் பெறும்படியான பைசகல் வண்டியைத் திருடினதற்காக கல்கத்தா போலீஸ் கோர்ட்டில் சார்ஜ் செய்யப்பட்டான். மாஜிஸ்ட்ரேட் இதை மிலிடேரி அதிகாரிகளுக்கறிவித்து கேஸை 16உ வரையில் தள்ளி வைத்திருக்கிறார்.

***

மிட்டாயின் பொருட்டு தன் பெண்ஜாதியைக்கொன்ற பாதகன்:—பெங்காளத்தில் செயித்தாட்டி என்னும் ஒருமகமதிய வாலிபன் இரண்டுவருடத்துக்கு முன்பு பன்னிரண்டு பிராயமுள்ள ஒரு சிறுபெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அந்நாள்தொட்டு கணவன் தன் பெண்ஜாதியின் மீது பக்ஷமாயிருந்தபோதிலும், சிற்சில வேளைகளில் வீட்டுச் சமுசார விஷயத்தில் அவள்மீது கோபங்கொள்ளுவதுண்டு. சென்ற ஞாயிற்றுக்கிழமை அவன் தன்னுடைய சினேகிதன் ஒருவருக்காக மிட்டாய் வாங்கிவந்து வீட்டில் வைத்துவிட்டு ஜீவனம்சத்தின் பொருட்டு வெளியிலேபோய் பகல் பன்னிரண்டுமணிக்குத் திரும்பிவந்து தான் வைத்தவிடத்தில் மிட்டாயைப்பார்க்க அதில் கொஞ்சம் தின்னப்பட்டிருந்ததாம். அதனால் அவன் தன் பெண்ஜாதிதான் அதைத் தின்றிருக்கவேண்டுமென்று நினைத்து அச்சிறுபெண்ணைக் கூப்பிட்டு மிட்டாயை யார் தின்னதென்று கேட்க, அதைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறினாள். இதன்பேரில் அந்த முரட்டுமகமதியனுக்குக் கோபம் பிறந்து அப்பெண்ணை நன்றாய் அடித்துப் புடைத்துவிட்டான். அப்பெண் உடனே கீழேவிழுந்து உயிர் துறந்தாள். அம்மகமதியன் பிரமைகொண்டு ஒன்றுந்தெரியாது மயங்கித் தன்பெண்ஜாதி கலராவால் இறந்து விட்டாள் என்று வெளியாருக்குக் கூறினான். ஆனால் இவன் செய்த கொடுமைகளைப் பார்த்திருந்த பக்கத்து வீட்டுக்காரன் போலீசுக்கு அறிவிக்கவே போலீசார் உடனே வந்து இக்கொலைசெய்த இடத்தைப் பரிசோதனைசெய்து உடனே கொலைசெய்த அப்பெண்ணின் புருஷனைப்பிடித்து சார்ஜ்செய்தார்கள். கூடியசீக்கிரத்தில் விசாரணைக்குவரும்.

ஸ்ரீ விபின சந்திர பாலர்.

இப்புண்ணிய புருஷர் செவ்வாய்க்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு பேசின் பிரிட்ஜ் ரயில்வேஸ்டேஷனில் வந்திறங்கினார். மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யரும் சுமார் 3000 மாணவர்களும் அவரை எதிர்கொண்டழைக்க கூடியிருந்தார்கள். இவர் ரயிலிலிருந்து இறங்கினதும் பூமாலையிட்டு வண்டியிலேற்றினதும், மாணவர்கள் தாங்கள்வண்டியை இழுத்துச் செல்வோம் என வற்புறுத்தியதின்பேரில் ஸ்ரீபாலர், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கும்படி நேரிட்டது. சற்றுதூரம் இழுத்துவந்து தங்கசாலைக்கருகாமையில் இரட்டைக்குதிரைகள் பூட்டிய வண்டியிலேற்றுவித்தார்கள். போலீசார் பந்தோபஸ்து தடபுடலாயிருந்தது. வழிமுழுவதும் வந்தேமாதரத்தின் பேரொலிமுழக்கம் வானையளாவியது. ஊர்கோலம் தம்பு செட்டித்தெருவீதி முனையில் வரும்போது 10000-ஜனங்களுக்குமேலிருக்குமென்னலாம். அம்மாதிரியானவைபவத்தை இதுகாறும்நாம் கண்ணுற்றோமில்லை. கணக்கில்லாதபுஷ்பமாலைகள் இச்தேசாபிமானிக்கு ஆங்காங்கு போடப்பட்டு. வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. இவர் ஒவ்வொருபத்திரத்திற்கும் எழுந்து பதில்கூறிக்கொண்டே வந்தார். அன்று மாணவர்களின் ஆரவாரத்தை என்னென்று கூறுவாம்? சில மாணவர்கள் ஆங்கிலத்தில் மங்கள வாழ்த்துகள் செய்து அச்சிட்டு எல்லோருக்கும் கொடுத்தார்கள். இப்புண்ணிய புருஷர் அன்றைபதினம் தற்கால இருப்பிடமாகிய இராயப்பேட்டை போய்ச் சேருவதற்கு இரவு $9\frac{1}{2}$ மணி ஆயிற்று. இவர் புதன் கிழமையிலிருந்து தினந்தோறும் சாயங்காலவேளைகளில் திருவல்லிக்கேணி சமுத்திரக்கரையில் மகோபன்னியாசம் புரிந்து வருகிறார். தினந்தோறும் சுமார் 8000 ஜனங்களுக்குக் குறையாமல் உபன்னியாசத்தைக் கேட்க வருகிறார்கள்.

செத்தவர்களுக்கு உயிருண்டாக்குவது:— நர்பக் மாகாணத்திலிருக்கும் டாக்டர் போ என்பவர் செத்தவர்களை உயிருண்டாக்குவதற்கு ஒரு வழி கண்டுபிடித்து அதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு 20 ஆயிரம் பவுண் மூலதனம் சேர்த்திருக்கிறாராம். இந்த சாதனத்தினால் சுவாசகோசத்திலிருந்து பம்ப் வழியாய் கார்பானிக்காஸை வெளிப்படுத்தி ஆக்ஸிஜன்காஸை உள்ளுக்குப்பிரயோகித்துப் பிணத்திற்கு உயிர் உண்டாக்குகிறாராம். இந்த சாதனத்தினால் இறந்தவர்களுக்கு உயிருண்டாக்கினதாக ஏற்படாவிட்டாலும் செத்த நாய்களைப் பிழைப்பித்தாரென்று அந்த டாக்டரின் சினேகிதர்கள் சொல்லுகிறார்கள்.

"பஞ்சாபி" அபிவிர்த்தி.

பறங்கிகள் இந்தியர்களைக் கெடுத்துவிடவேண்டுமென்கிற நோக்கத்தோடு செய்யும் செயல்களெல்லாம் முடிவில் இந்தியர்களுக்கு நன்மையாயும் பறங்கிகளுக்குக் கேடாயும் முடிகின்றன. ஆகவே தெய்வமும் நியாயமும் இந்தியர் பக்கத்திலிருக்கின்ற தென்பதற்குச் சந்தேகமில்லை. இதற்கு இரண்டு உதாரணங்கள் ஏற்பட்டு விட்டன. "பஞ்சாபி" பத்திரிகையையும் அதன் அதிபர்களையும் கெடுத்துவிட வேண்டுமென்று பறங்கிகள் செய்த பயனற்ற முயற்சியானது இப்பத்திரிகையின் மதிப்பை உயர்த்திவிட்டது. இப்பத்திரிகை இதுவரையும் வாரம் இருமுறைதான் பிரசுரிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது சமீபத்தில் கேஸ் தொடங்கிய காலமுதல இப்பத்திரிகை அளவற்ற கீர்த்தி பெற்றுவிட்டது. வங்காளத்தில் நூற்றுக்கணக்கான கனவான்கள் இதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விட்டார்கள். ஆகவே இப்பொழுது வாரம் இருமுறையாய் நடைபெறும் இப்பத்திரிகை இன்னும் சிறிது காலத்துக்குள் தினப்பத்திரிகை யாக்கப்படுமென்று பிரஸ்தாபிக்கப்படுகின்றது. "பஞ்சாபி" க்கு இந்த யோகம் கிடைப்பதற்குப் பறங்கிகள்தானே காரணம்? இரண்டாவதாகப் பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையானது ஸர் மேட்டாவுக்கு விரோதம் செய்யத்தொடங்கவே இப்பொழுது இப்பத்திரிகை யிருக்குமிடம் தெரியாமல் போய்விடுமென்ற மட்டிலும் அபாயகரமான நிலைமைக்கு வந்துவிட்டது. இதற்கு பறங்கிகளின் சொந்தக்கெடுமதியே காரணமல்லவா? "கெடுவான் கேடுநினைப்பான" என்னும் பழமொழி பொய்யாமோ?

நிரந்தரமான

கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்தனுப்புவோர்க்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனைவருடம் ஆதரித்துவருகிறார்களோ அத்தனைவருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்றயாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால், வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்டஞானம்நிறைந்த இந்த கெஜெட்விஷயமாகப் பெருமுயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானால் பென்ஷனைப்போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100-சந்தாதாரர்களை ஒருவர் சேர்ப்பாரானால் வருடமொன்றக்கு 40-ரூபாய் சம்பாத்தியமுடையவர்களாவார்கள்.

இந்திய சட்ட கெஜெட் விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 25 கையொப்பங்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கும் கனதனவான்களுக்கும் ரூ. 10-மணியார்டர்செய்து அனுப்பத்தயாராயிருக்கின்றோம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்ப போஸ்ட் கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கித் தபால் ஸ்டாம்பு ஒட்டாமலே நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார், மானேஜர்கள்,
இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,
37, நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, ஜியார்ஜ் டௌன்,
சென்னை.

விஞ்ஞாபனம்.

பிழை திருத்தம்.

இந்த சஞ்சிகையில் 181-வது பக்கத்தில் பெரிய அச்செழுத்துக்களில் காணப்படும் வார்த்தைகளாகிய "முக்கியமான தீர்ப்புகள்" அதே பக்கத்தின் ஆரம்பத்தில் 15-வது வரிக்கும் 16-வது வரிக்கும் மத்தியிலிருக்கவேண்டியன.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ஞு மேமீ [பாகம் 5.

Regulation III. of 1818.

1818-ம் ஞுத்திய 3-வது ரெகுலேஷன்.

1818-ம் ஞுத்திய மூன்றாவது ரெகுலேஷன் என்பது, ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் பரிபாலிக்கப்பட்ட காலத்தில் பாஸ் செய்விக்கப்பட்ட ஒரு சட்டம். இந்த ரெகுலேஷன் சட்டத்தில் யாரேனும் ஒருவன் இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைச் சதி செய்ய யோசனை செய்வதாகத் தெரியவந்தால் கவர்ன்மெண்டார் அவனைப் பிடித்துக் கைதி செய்து பிரிட்டிஷ் இலாகா எல்லைக்கு அப்புறம் எத்தனைவருஷ காலத்திற்கு வேண்டுமானாலும் கொண்டுபோய் வைக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் காலத்தில் பாஸ் செய்விக்கப்பட்டபோது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு 5 வருஷத்திற்கு ஒருமுறை இங்கிலாண்டிலிருந்து கவர்னர் ஜனரல்கள் வந்து இந்தியாவை நிர்வகித்துக்கொண்டு வந்திருந்தபோதிலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பூராவாய் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவை ஒவ்வொரு மாகாணமாகக் கைவசப் படுத்திக்கொண்டு வந்த காலத்தில் மகராஷ்டிரர்கள் கலகமென்றும் பிண்டாரிகள் கலகமென்றும் இன்னும் பலவிதமான போர்களும் சண்டைகளும் நடந்தன. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இத்தேசத்தில் ஸ்தாபிக்கப்படாமலிருக்குமாறு அனேக இடைஞ்சல்கள் செய்துவரப்பட்டன. ஜனங்களுக்கு அப்போது ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்களுடைய எண்ணமும் நோக்கமும் தெரியாமலிருந்தது. ஸ்தாபித்துக் கொண்டுவரப்பட்ட பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைச் சதி செய்ய இத்தேசத்து ஜனங்கள் பல யோசனைகளும் முயற்சியும் செய்து வந்தார்கள். அப்போதிருந்த ஜனங்களுக்குத் தேசத்தின் மீது படையெடுத்து வரும் எதிரிகளை எதிர்த்துச் சண்டையிடப் போதுமான தைரியமும் பலமும் ஜன ஒற்றுமையுமிருந்தது. அப்போது ஒவ்வொரு குடும்பத்திலும் போரில் உபயோகப்படுத்தும்படியான ஆயுதங்களுமிருந்தன. சுதேச சிற்றரசர்கள் மிகவும் வல்லமையுடையவர்களாகவும், யுத்தாயுதங்கள் உடையவர்களாகவும் சண்டை செய்யக்கூடிய போதுமான சைனியங்கள் உடையவர்களாகவும், செல்வாக் குடையவர்களாகவுமிருந்தார்கள்.

இவர்களில் அனேகர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இத்தேசத்தை வசப்படுத்துவதற்கு உபபலமாகவுமிருந்தார்கள். சிலர் அவர்களை எதிர்த்துச் சண்டையும் செய்திருக்கிறார்கள். ஆகையால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவில் ஸ்தாபித்துக்கொண்டு வந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அப்போது அபாயம் வரும் என்று நினைப்பதற்கு அறிகுறிகளிருந்தன. இந்த பயமேலீட்டால் அவர்கள் அப்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைச் சதிசெய்ய யோசனை செய்பவர்களை இந்தியாவைவிட் டப்புறப்படுத்தி அவர்களுடைய சொத்துக்களையும் அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படியான ஒரு சட்டமிருந்தால் எல்லா ஜனங்களுக்கும் ஒரு அச்சத்தை விளைவிக்குமென்றுகருதி 1818-ம் ஞும் பிரஸ்தாப சட்டத்தைப் பாஸ்செய்வித்து அமு

லுக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால் இந்தச் சட்டம் பாஸ் செய்விக்கப்பட்ட காலமுதல் லார்ட் எல்ஜின் இந்தியாவிற்கு வைசிராயாக வந்த காலம் வரையில் இந்த சட்டத்தால் அந்தஸ்துடைய எவரும் தீண்டப்படவில்லை. லார்ட் எல்ஜின் காலத்தில் பம்பாய் மாகாணத்தில், பூனாவில் பிளேக்கலகத்தில் நடந்த கொலைசம்பவத்தால் லார்ட் எல்ஜின் கவர்ன்மெண்டார் இந்தியாவிற்கே ஒரு பெரிய ஆபத்து உண்டாய் விட்டதென்றும், இந்தியா பிரிட்டிஷார் கையை விட்டுப் போய்விடுமென்றும் பயந்து நாட்டு சகோதரர்கள் என்கிற தனவந்தர்களை இந்தச் சட்ட ஆதரவால் கைதி செய்து அவர்களை யாதொரு நியாயஸ்தல விசாரணைக்கு முட்படுத்தாமல் காராக்கிரகத்தில் வைத்து அவர்களுடைய குடும்பச் சொத்துக்களையும் அரசாங்கத்தில் சேர்த்துக்கொண்டார்கள். இப்படி அவர்களைச் சில மாத காலம் காராக்கிரகத்தில் வைத்திருந்த பிறகு லார்ட் எல்ஜின், கவர்ன்மெண்டார் தாங்கள் கொண்ட பயம் வீண் பயமென்று தாங்களே உணர்ந்து அவர்களை விடுவித்துவிட்டார்கள். இப்போது இரண்டாவது முறையாக லார்ட் மின்டோ, கவர்ன்மெண்டார் இந்தியாவிற்குப் பெருமோசம் வந்துவிடு மென்று கருதி பஞ்சாப் மாகாணத்தில் சீப் கோர்ட்டில் பிராக்ட்டிஸ் செய்துவரும் மிஸ்டர் லாலாலஜபட்ராய் என்னும் ஒரு பிளீடரைக் கைதி செய்து பர்மாவிற்கப்பாலுள்ள கூஃான்ஸ்டேஸ் என்னும் ஸ்தலத்தில் கொண்டுபோய் வைத்திருப்பதைக் கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். இரண்டு மாதங்களுக்கு முந்தி நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் தலைபங்கத்தில், பஞ்சாபிக்கேஸ், என்னு மகுடம்பூண்டு ஒரு வியாசமெழுதியிருந்ததை நம்முடைய நேயர்கள் வாசித்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட பஞ்சாபி பத்திரிகையின் பத்திராதிபர்கள் அடைந்த தண்டனையைப் பஞ்சாப் சீப் கோர்ட்டார் உறுதிப்படுத்திப் பத்திராதிபர்களைக் காராக்கிரகத்திற்கு அனுப்பினார்கள். இவர்களைக்காராக்கிரகத்திற்குக் கொண்டுபோன ஐரோப்பிய போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் வேடிக்கைப் பார்க்க வந்திருந்த சுதேசிகளுக்கும் கலகம் உண்டாயிற்று. சில சுதேசமாணுக்கர்கள் ஐரோப்பியர்களை அடிக்க, அவர்கள் திரும்பி இவர்களுடைய மண்டையை உடைக்க, இதைப்பற்றிய கேஸ்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. இது நிற்க. ராவில்பண்டி என்னும் ஊரில் சர்க்கார் அதிகாரிகள் ஏதோ நிலத்தீர்வையை உயர்த்திவிட்டார்கள் என்பதாக ஜனங்கள் கூடி கட்டுப்பாடு செய்துகொண்டார்கள். இதனால் ஒரு கலகம் உண்டாகும்போலிருந்தது. சர்க்கார் அதிகாரிகள் அவ்வூரிலுள்ள சில ஜனத்தலைவர்களைக் கைதிசெய்து ஜாமீன் பேரில்கூட விடாமல் ஜெயிலில் இன்னும் அடைத்து வைத்திருக்கிறார்கள். பஞ்சாபில் ஏதேனும் கலக அறிகுறிகள் உண்டாயின என்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டிருந்தால் இந்தச்சின்னங்கள்தான். இந்தச்சின்னங்கள் ஜனங்கள் தங்களுடைய குறைகளை விலக்கிக்கொள்ளும்பொருட்டுச் செய்த முயற்சிகளே தவிர மற்றப்படி இச்சின்னங்கள் கவர்ன்மெண்டைச்சதி செய்வதற்காக ஜனங்கள் செய்துவரும் யோசனையின் அறிகுறிகளாக நினைக்க யாதொரு காரணமுமில்லை.

இங்ஙனமிருக்க, பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னராகிய சர்டென்ஜில் இப்பர்ட்சன், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைச் சதிசெய்ய யோசனை செய்துவரும் பஞ்சாப் மாகாணத்தலைவர்களில் இரண்டு பேர்களைப் பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்தவேண்டுமென்று லார்ட் மின்டோவை உத்திரவு கேட்க, அவர் இந்தியா காரியதரிசியை உத்திரவு கேட்டார். இந்தியாகாரியதரிசி பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்தப்படப்போகிறவர்களின் பெயர்களைக்கூட தெரிந்துகொள்ள விரும்பாமல் சர்டென்ஜில் இப்பர்ட்சன் மிகுந்த அனுபோகமுள்ளவும் முன் யோசனையுமுள்ள லெப்ட்டினண்ட் கவர்னரானபடியால் அவர் கோரிக்கையை நிறைவேற்றிவைக்காமலிருக்கக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டு அப்படியே இருவர்களைப் பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்தும்படி உத்திரவு கொடுத்துவிட்டார். இந்த உத்திரவு வந்த மறுதினமே மிஸ்டர் லாலா லஜபட்ராய் என்பவரைப் போலீஸ் கமிஷனரும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் அழைத்துக்கொண்டு வரும்படியாகத் தங்களுடைய சிப்பந்திகளை ஏவ, அவர்கள் போய் சொன்னவுடன் மிஸ்டர் லாலா லஜபட்ராய் அவர்கள் எழுந்திருந்து தம்முடைய புரூம்வண்டியில் ஏறிக்கொண்டு போலிஸ்கோர்ட்டிற்கு வந்தார். அவ்விடத்தில் ஜில்லா மேஜிஸ்டிரேட் மிஸ்டர் லாலா லஜபட்ராய்க்கு வாரண்டைக் காண்பித்தார். அவர் தம்முடைய மைத்துனருக்கும் இன்னொருவருக்கும் இரண்டுகடிதங்கள் எழுதும்படி அனுமதிகொடுக்கவேண்டுமென்று கேட்க, அப்படியே ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்தரவுகொடுக்க, இரண்டுகடிதங்கள் எழுதினார். அதன்பிறகு போலிஸ்பந்தோபஸ்துடன் இவரைமோர்ட்டர்கார் என்னும்தானாய் இயங்கும் வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய்ப்பின் இவருக்கென்று தயார்செய்யப்பட்டிருந்த ஸ்பெஷல் ரெயில் வண்டியில் ஏற்றிக் கல்கத்தாவிற்குக் கொண்டுபோய்விட்டார்கள். அவ்விடத்தில் சிலமணிநேரங்கள் வைத்திருந்து பிறகு ஸ்டீமர் ஏற்றி மாண்டலே கோட்டைக்குள் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். இவ்விடமிருந்து இப்போது கூஃான்ஸ்டேட்ஸ் என்கிற ஸ்தலத்தில் கொண்டுபோய் வைத்திருப்பதாகவும் தந்திசமாசாரம் வந்திருக்கிறது. மிஸ்டர் லாலா லஜபட்ராய் என்பவர் மிகுந்த சாந்தகுணமுடையவர் ; ராஜவிசுவாசி ; தேசாபிமானி. இவருடைய ஆயுள்விர்த்தாந்தத்தை இந்திய சட்டகெஜெட்டின் மற்றோர் அங்கத்தில் எழுதியிருக்கின்றோம்.

இதுவிஷயத்தில் இந்திய சட்டகெஜெட் துவாராவாக நாம் என்ன கவனிக்கவேண்டியதென்றால், கவர்ன்மெண்டார் மூலைமுடுக்கில் பதுங்கிக்கொண்டிருந்த பழையசட்டத்தை இக்காலத்தில் பிரயோகித்துமிஸ்டர் லாலா லஜபட்ராயைப் பிரிட்டிஷ் இந்தியாவைவிட்டப்புறப்படுத்தினது நியாயமானகாரியமா என்பதே. அப்படி யோசிக்குமளவில் சிறிதும் நியாயமல்லவென்று அஞ்சாமற் சொல்லலாம். முதலாவது 1818-வது௵த்திய ரெகுலேஷனை இக்காலத்தில் பிரயோகப்படுத்துவதற்கே போதுமான காரணமில்லை. இந்திய ஜனங்களால் கவர்ன்மெண்டிற்கு யாதொருதீங்கு முண்டாவதற்குச் சிறிதும் ஏதுக்களில்லை. இதைக்குறித்து சென்னையில் நடந்த ஆக்ஷேபனை மீட்டிங்கின் சபாநாயகராகிய மிஸ்டர் P. R. சுந்தரமய்யர் அவர்கள் கூறியபடி

இந்தியாசெய்த தவப்பயனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு கிடைத்திருக்கிறதென்று இந்திய ஜனங்கள் எல்லோரும் நினைத்துப்பிரிட்டிஷ் தர்மத்தையும், நியாயத்தையும் பிரக்கியாதியையும் போற்றிவருகின்றார்கள். இந்திய ஜனங்கள் பிரிட்டிஷ் சிம்மாசனத்தின்மீது எவ்வளவு ராஜவிசுவாசம் பாராட்டிவருகின்றார்களோ அதேமாதிரியாகவே பரஸ்பரம் மாகூஷிமைதங்கிய சக்ரவர்த்தியாரும் இந்தியஜனங்கள்மீது அன்பு பாராட்டி வருகின்றார். பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியாவிற்குப்பலநன்மைகள் உண்டாயிருக்கின்றனவென்று எல்லாஜனங்களும் உணர்ந்து சந்தோஷப்பட்டுவருகின்றார்கள். இந்ததேசத்தில் கவர்ன்மெண்டைச் சதிசெய்ய யோசனைகொண்ட சிப்பாய்கலகத்திற்குப் பிறகு யாதொருகலகமும் நடந்ததில்லை. கவர்ன்மெண்டார் இந்தியர்களுடைய மதாசார விஷயங்களில் பிரவேசிக்கிறதில்லை. இன்னும் சொல்லப்போனால் அவைகளைப் பாதுகாத்துவருகின்றார்கள். கவர்ன்மெண்டை எதிர்த்துச் சண்டை செய்ய ஜனங்களுக்குப் போதுமான தேகபலமுமில்லை. கூட்டுறவுமில்லை. சண்டை ஆயுதங்களுமில்லை. இத்தேசத்திலிருக்கும் சிற்றரசர்கள் ஒருவர்கூட தப்பாமல் எல்லோரும் பிரிட்டிஷ் சிம்மாசனத்தின்மீது அதிகபக்தியுடையவர்கள். இவ்வாறிருக்கும்போது கவர்ன்மெண்டைச் சதிசெய்ய இத்தேசத்தில் யார் யோசனைசெய்யக் கூடும் ? அப்படி யோசனைசெய்தால்தான் பலிதப்படுமா? நிற்க, மிஸ்டர் லாலா லஜபட்ராய் சாமானியமனிதரல்ல. சிறந்த ஒழுக்கங்கள் அமையப்பெற்ற அந்தஸ்துடையவர்.

இவர் கவர்ன்மெண்டைச் சதி செய்ய யோசனை செய்திருந்தால் அவரைக் கவர்ன்மெண்டார் கைதி செய்தவுடன் சந்தர்ப்பம் வாய்த்ததே என்று இவரைச் சேர்ந்த கக்ஷிக்காரர்கள் சந்தோஷப்பட்டுக் கலகம்செய்ய ஆரம்பித்திருக்க மாட்டார்களா ? இவரை அரஸ்ட் செய்து ஏறக்குறைய ஒருமாத காலமாகியும் பஞ்சாபில் யாதொரு கலகச் சின்னமும் காணப்படவில்லை. இன்னும் மிஸ்டர். லஜபட்ராய் கவர்ன்மெண்டைச் சதிசெய்யவோ அல்லது இன்னும் வேறே ஏதேனும் குற்றம் செய்திருந்தாலாவது அவரை நியாயஸ்தலத்தில் விசாரணை செய்து சிட்சை விதிக்கும்படியாகச் செய்ய வேண்டுவது கிரமமான வழியாயிருக்குமே யொழிய அவரை இம்மாதிரி யாதொரு விசாரணையும் செய்யாமல் பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்தியிருப்பது பிரிட்டிஷ் நீதிக்கும் தர்மத்திற்கும் ஒத்தசெய்கையாயில்லை. கவர்ன்மெண்டார் இந்தியாவை நீதிவரம்பு கடவாமல் எப்போதும் பரிபாலித்து வருகிறார்கள் என்று பொது ஜனங்கள் கொண்டிருக்கும் எண்ணம் இந்தக் கொடுமையான செய்கையால் ஊனப்படுமென்பதில் சந்தேகமில்லை. நிற்க, பிரஸ்தாப 1818-ம் ௵த்திய 3-வது ரெகுலேஷன் ரத்து செய்யப்படாமலிருப்பது இத்தேசத்தாருக்குப் பெரிய ஆபத்தாயிருக்கின்றது.

அாண்டவன்கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய் என்றும், உடலைபுருவிக் காட்டினாலும் வாழை நார் என்றும் எண்ணும் சுபாவமுடைய சில அதிகாரிகள், பிரஜைகள் தங்கள் குறைகளை விலக்கிக்கொள்ள சட்டத்தை அனுசரித்துச் செய்யும் முயற்சிகளைக் கவர்ன்மெண்டைச் சதி செய்யும் யோசனைச் சின்னங்களாகப் பாவித்து இந்தச் சட்டத்தைப் பிரயோகித்துத் தகுந்த அந்தஸ்துடையவர்களை உயிருடன் இறந்து போனவர்களாக எண்ணப்படும்படியாகச் செய்துவிடுகிறார்கள். இந்தியா, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய நேரான ஆளுகைக்குவந்து 50 வருஷ மாகிறது. இந்த 50 வருஷ அனுபவத்தில் ராஜவிசுவாசம் பொருந்திய இத்தேசப் பிரஜைகளை நம்பாத அரசாங்கத்தார்கள். இனி எப்போதுதான் நம்பப்போகிறார்கள் ? ஆகையால் பிரஸ்தாப சட்டத்தை ரத்து செய்து விடவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ORDINANCE I. OF 1907.

1907-ம் ௵த்திய இந்தியா வைசிராய் உத்திரவு.

மிஸ்டர் லாலா லஜபட் ராயை பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்தினதை ஆக்ஷேபிக்கவும் அவருடைய குடும்பத்திற்கு அனுதாபத்தந்தி அனுப்பவும் பஞ்சாபிலும் கீழ் பங்காளத்திலும் கூட்டங்கூடிப் பேசுவார்கள் என்றும் அப்படிக் கூடிப்பேசினால் ஒருக்கால் கலகம் நேரிடுமென்றும் இந்தியா வைசிராயாகிய லார்ட் மின்டோ பஞ்சாபிலும் கீழ் பங்காளத்திலும் கூட்டங்கள்கூடிப் பேசக்கூடாதென்று உத்திரவு அனுப்பியிருக்கிறார். இந்தச்செய்கையும் பிரிட்டிஷ் நீதிக்கும் தர்மத்திற்கும் பொருந்தாத செய்கை. பிரஜைகள் சட்ட ஒழுங்கு தவறாமல் கூட்டம்கூடி தங்களுடைய குறைகளை அரசாங்கத்தார்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுவது பிரிட்டிஷ் பிரஜைகளின் மேன்மையான சுதந்தரம். இந்த சுதந்தரத்தைக் கவர்ன்மெண்டார் பிரஜைகளிடமிருந்து பிடுங்கிவிட்டால் ருஷிய கவர்ன்மெண்டிற்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கும் பேதம் என்னவென்று தெரியவில்லை!

இந்தியா காரியதரிசியின் ஜவாப்பு.

மிஸ்டர் லாலாலஜபட்ராய் அவர்களைப் பிரிட்டிஷ் இந்தியாவைவிட் டப்புறப்படுத்துவதற்கு என்னகாரணங்கள் நேரிட்டதென்றும், அவரை நியாயஸ்தல விசாரணைக்குட்படுத்த கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமிருக்குமா என்றும், அவரை எத்தனைகாலம் இப்படி தீவாந்திரத்தில் வைத்திருக்க கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள் என்றும் ஒரு பார்லிமெண்டுமெம்பர் இந்தியா காரியதரிசியைக் கேள்விகேட்கப் போகிறதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார். இந்தக் கேள்விக்கு இந்தியா காரியதரிசி ஜவாப்புசொல்லுவதாகக் குறிப்பிட்டிருந்த தினத்தில் இந்தியாதேச விஷயங்களில் கவலைகொண்ட அனேக பிரிட்டிஷ்ஜனங்களும் சென்றவருஷத்தில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த மாக்ஷிமைதங்கிய ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியாரின் புத்திரரும் இளவரசருமாகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸ்] அவர்களும் பார்லிமெண்டில் வேடிக்கைபார்க்கும் காலரிகளில் விஜயம் செய்திருந்தார்கள். இந்தியா காரியதரிசி மேற்கூறிய கேள்விக்குப் பதில் கூறும்போது,"அனேக வருஷகாலமாகப் பஞ்சாபிலேயே லெப்ட்டினெண்ட் கவர்னராக

விருந்துவரும் சர்டென்சில் இபர்ட்சன்சிலரால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்குத் தொந்திரவு நேரிடும்போலிருக்கிறதென்றும், அவர்களைப்பிடித்துப்பிரிடிஷ்இந்தியாவைவிட்டப்புறப்படுத்தவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டால் நாம் என்னசெய்கிறதென்றும், தொந்திரவென்றால் இத்தேசத்தில் (இங்கிலாண்டில்) நடக்கிற தொந்திரவுகள் மாதிரியல்லவென்றும், இந்தியாவில் நடக்கும் சேஷ்ட்டைத் தொந்திரவுகள் பிரமாதம் என்றும், லாலாலஜபட்ராயை விட்டு விட்டால் இந்தியாவில் அமரிக்கை உண்டாய்விடுமென்று நினைப்பதற்கு ஏதுக்களில்லை என்றும், அவரை நியாயஸ்தலவிசாரணைக்குட்படுத்தகவர்ன்மெண்டாருக்கு எண்ணமில்லை என்றும், அவர் எத்தனைகாலம் அந்நியதேசத்தில் வைக்கப்பட்டிருப்பார் என்று சொல்வதற்கு இப்போது சாத்தியப்படமாட்டாதென்றும் பதில் கூறினர்.

LIFE OF Mr. LALA LAJPUT RAI.

மிஸ்டர் லாலா லஜபட்ராயின் சரித்திரம்.

சில வாரங்களுக்கு முன் நாம் லாகூரில் பிரசுரமாகும் "பஞ்சாபி" என்ற ஓர் இந்தியப் பத்திரிகாசிரியரின் தலைவரும், பத்திரிகாசிரியருமான ஸ்ரீமான் ஜாஸ்வென்ட் ராயும் ஆதவேல்என்ற இரண்டு பிரபுக்களும் இ. பி. 153. எ. பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்குள்ளாகும்படியான கவர்ன்மெண்டுக்கு விரோதமான விஷயங்களைப் பிரசுரம் செய்தகாரணத்திற்காக, காவலும், அபராதமும் விதிக்கப்பட்டார்கள் என்று தெரிவித்தோம். இது செய்தி கேள்வியுற்று யாம் இக்கொடுந்தண்டனைக்குட்பட்ட இவ்விருவருக்கும் வெகு வாயிரங்கினோம். வருந்தினோம்.

இன்னும் இவ்வருத்தம் நம்மைவிட்டு நீங்கவில்லை. இதற்குள்ளாக இந்தியாவிலெங்கும் பேரிருள் மூடினலென இந்தியர்கள் எல்லாரும் பெருந்துக்கசாகரத்தில் மூழ்கினார்கள். இந்தியர்களுக்குள் பெரும்பதவியும், எல்லோராலும் நன்குமதிக்கப்பட்டும், கல்வி கேள்வி ஞானம் பொருந்தி இந்தியர் நன்மைக்கென்றே தம் வாழ்நாள் முழுதும் தத்தம் செய்து உழைத்துவந்த பஞ்சாப் தேசவாசியாகிய ஸ்ரீமான் லஜபுத்ராயரவர்களை இவர் ஏதோ ஆயிரக்கணக்கான பஞ்சாப் வீரர்களைத் திரட்டி லாகூர் கோட்டையை முற்றுகை செய்து ஆங்கிலேய அரசாட்சியை அடியோடே தொலைத்துவிடுவதாய்ப் பிரயத்தனம் செய்தாரென்று சொப்பனம் கண்டாற்போல இந்தியர்கள் விருத்திக்கு என்றும் சத்துருவாகிய பறங்கிப் பத்திரிகைகளும் போலீசும் சொன்ன சொல்லை உண்மை என்று நினைத்துப் பஞ்சாப் கவர்ன்மெண்டார் கொடுங்கோலை செய்த சண்டாளனுக்குக்கூட மறுக்கவியலாத நியாயஸ்தல விசாரணைகூட இல்லாமல் இவரை இந்திய தேசத்தினின்றும் பர்மாவிலுள்ள மாண்டலே நகரத்துக்கு அனுப்பி விட்டார்கள்.

இவர் இற்றைக்கு நாற்பத்திரண்டு வருடங்களுக்குமுன் வைசிய குலத்தில் முன்ஷி ராதாகிருஷ்ணருக்கு மூத்தகுமாரனாயவதரித்தார். முன்ஷி ராதாகிருஷ்ணர் ஊர்கவர்ன்மெண்டு கலாசாலையில் பார்ஷிய பாஷை போதகாராயிருந்தார். இவர் தம்மை அடைந்த மாணாக்கர்களுக்கு அன்போடு பாடங்கள் புகட்டி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர். இவர் மாணாக்கர்களில் சிலர் பெரும்பதவி யடைந்திருக்கிறார்கள். இவர் உருடுபாஷையில் மிகப்பயிற்சி பெற்றவர். இப்பாஷையில் அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கிறார். கிழப்பருவம் அடைந்தும் இன்னும் அவர் எழுதுகோல் தளரவில்லை. டம்பமற்ற வுத்தமவாழ்வும் உயர்தர எண்ணமும் தம் வாழ்க்கையின் சித்திக்கு உறுதிமொழியாகக் கொண்டவர். இவருக்கு இகவிஷயங்கள் பெருப்பாலும் கைகூடிவரவில்லை. இருந்தும், இவர் தம் புத்திரர்களின் சம்ரட்சணையிலில்லாது தாமே தம் உள்ளூராகிய ஜாக்கிரான் என்ற நகரில் வியாபாரம் செய்து அதனாலுண்டாகும் சொற்பலாபத்தைக் கொண்டு ஜீவனம் செய்துவருகிறார். கடந்த சில வருஷங்களாக இவர் பெருந்துன்பத்துக்கு ஆளாகிய விட்டார். B. A. பரீக்ஷையில் தேறி நல்ல அந்தஸ்துக்கு வந்துகொண்டிருந்ததமது இரண்டாவது குமாரன் இறந்தார். இத்துடன் இவரது அருமைமனையாளும்காலனுக்கிரையானாள்.

இப் பத்தினியோ கள்ளங் கபடற்று ஈரநெஞ்சமும் இளகிய மனமுமுடைத்தாய்ப் பெண்கள் நாயகம் போல்விளங்கிய ஓர்உத்தமபதிவிரதை. லஜபுத்ராயர் தன் தம்பியை இழந்தார். ஆங்கில வைத்தியத்தில் பழகி B. M. C. M. பரீட்சையில் தேறிய தம்மருகனையுமிழந்தார். இத்துக்கமெல்லாம்ராயரவர்களுப் பெரிதல்ல. தம் தாயார் இறந்ததுக்கமே இவரது மனதைப் புண்படுத்தியது. இத்தேவியைப்பற்றி நினைத்தால் இவர் அழ ஆரம்பிப்பார். அம்மாதுசிரோமணியின்உத்தமலட்சணங்களையும் பலதரமும் எடுத்துப்புகழுவார். முன்ஷி ராதாகிருஷ்ணர் சொற்ப சம்பாத்தியம் செய்து தரித்திரதசையிலிருந்தபோதிலும் இவ்வுத்தமிதமது சூட்சுமஅறிவினால் செட்டாக இல்லறம்நடத்தித் தம் நாயகருக்காவது பிள்ளைகளுக்காவது எள்ளளவேனும் குடும்பக்கவலையைக் காட்டார். "கற்புடைய மனையாள் வாய்த்தால் இல்லறமே சிறந்தது" என்ற உண்மைக்கோர் உதாரணமாக இல்லறதருமம்நடத்திவந்தார். பொருள்கொஞ்சமாயிருந்தபோதும் தம்சீரானகுடித்தனத்தால் பன்னாள் கழிக்கச்செய்வார். அவசரகாலத்துக்கு வேண்டியபணங்கள் எல்லாம் சேகரித்துவைப்பார். சுயநலம் பாராட்டாது தயாளசிந்தை நிறம்பி தெய்வபக்தியுடன் இளகிய மனதுடையவராய் யாருக்கு மிரங்கும் தர்மசிந்தை கொண்டவர். இவ்வம்மை தம் குலத்துக்கோர் திலகம்போலும் மாதுகளுக்குளோர் உத்தமி என்றும் கொண்டாடப்பட்டவர். தம் தகப்பனார் சொற்ப சம்பாத்தியத்தில் தம் தாயார் குடும்பத்தை மேல் பார்த்தகாலத்துத் தாமனுபவித்த செல்வம் தாம் ஆயிரக்கணக்காகச் சம்பாதித்த காலத்துக்கூட அனுபவிக்கவில்லை என்று ராயவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட உத்தமர் பெற்ற பிள்ளையாகிய லஜபுத்ராயர் விவேகமும் நற்குண நன்னடக்கையும் பொருந்தியவர் என்று சொல்லவும் வேண்டுமோ?

இவ்வரிய பத்தினியும் நாயகரும் தம் பிள்ளைகளை வளர்ப்பதில் சற்றேனு மனத்தளர்ச்சி கொண்டிலர். லஜபுத்ராயர் அடைந்த மேன்மையெல்லாம் அவர்களது போதனையின் பலனே இப்பொழுது இந்தியர்கள் எல்லாம் இச்சிலாக்கியவானைப் பெற்ற பிதாவுக் கிரங்குவார்கள். பிதாவாகிய ராதாகிருஷ்ணர் இப்பொழுது தம்மிடமிருந்தும் திடீரென்றும்பலாத்காரத்தோடும் தம் புதல்வனைப்பிரித்ததால் விசனமும், தம்போதனை வீணாகாது தம் மகன் பொதுநன்மைகருதி உழைத்ததில் தண்டனை அடைந்தார் என்பதில் மகிழ்ச்சியும் கொண்டிருக்கிறார்.

லஜபுத்ராயர் தேகவன்மையின்றி பலஹீனராயிருந்தும் விவேகமும் புத்திகூர்மையும், மிகுந்த ஆண்மையும், உண்மையும், பொறுமையும், வருத்தம்வந்தகாலத்துத் தளராமனநிலைமையும், கபடமின்மையும், ஊக்கமும் நடுநிலைமையுமாகிய பல நற்குணங்கள்பொருந்தி விளங்கினார். இவர் இராஜதத்துவ விவேகி, கொழுத்த தேசவிசுவாசி, பரமேசுவரனிடத்தில் பூர்ண நம்பிக்கை கொண்டவர், சுவாமி தயானந்தசரஸ்வதியின் பிரதம சிஷ்யரிலொருவர், ஆரியசமாஜத்துக்கு ஓர் ஊன்றுகோல்போல் நின்று ஆரியசமாஜத்தை உன்னதஸ்திதிக்குக் கொண்டுவந்தவர்.

இவரது பாக்கியமேபாக்கியம். இவர், உத்தமவிவேகிகளான பெற்றோர், பெற்றோர்மாத்திரமல்ல. இவரது சிநேகிதர்களும் பெரும் விவேகிகளே. இவர் கல்வி பயிலுங்கால் இவரது திறமைகண்டு பஞ்சாப் யூனிவர்சிட்டியார் (Punjabi University) இவருக்கு உயர்தரக்கல்விபயிலபொருளுதவிசெய்தார்கள். இவ்வுதவியைக் கொண்டு இவர் லாகூர் கவர்ன்மெண்டுகலாசாலையில் இரண்டுவருஷம் கலைபயின்றார். அக்காலத்து இவர் சிநேகிதர்கள், ஆரியசமாஜத்துக்குத்தலைவரும், D. A. V. காலேஜ் தலைமை போதகாசிரியருமாகிய புண்ணிய புருஷனான ஸ்ரீ லாலா அன்ஸ் ராஜர் என்பவரும் ஆரிய சமாஜத்திற்குப் புதிய ஊக்கத்தை ஊட்டி அதிக இளம்பருவமாகிய இருபத்தைந்தாம்வயதில் காலஞ்சென்ற ஸ்ரீ பண்டிதர் குருதத் வித்தியார்த்தர் என்பவரும் இன்னுமற்ற தேசாபிமானிகளுமே. நாம் மேலே சொன்ன D. A. V. காலேஜ் என்ற ஓர் உயர்தரக் கலாசாலை லாலாலஜபுத்ராயர், அன்ஸ்ராஜர் என்ற இவ்விருவருடைய ஊக்கத்தினாலும் பொருளுதவியினாலும் தற்காலத்திய உன்னத பதவியடைந்தது.

இவர் கவர்ன்மெண்டுகாலேஜில் வித்தியார்த்திசெய்யும்கால் இவருக்கு அல்ல, இந்தியர்களுக்கே சாதகமான முக்கியவிஷயங்கள் நடந்தன. இவருக்குப் பதினேழுவயதானபொழுது அதாவது 1877 வருடம் சுவாமிதயானந்தசரஸ்வதி முதல்முதல் பஞ்சாபுக்கு வந்தார். அப்பொழுது தயாளசிந்தையுள்ள 'பிரமமோ' மதத்தார் இவருக்கு நல்ல வரவளித்தார்கள். சிறிய காலத்துக்குள் அவர் இவர்களிடமிருந்து விலகிக் கொண்டார். பின்பு தியசாபிகல் சொஸைட்டிக்குத் தலைவரான கர்னல் ஆல்காட்துரையும் பிளவட்ஸ்கி அம்மாளும் அவரைத் தமது சொஸைட்டியில் சேரும்படி கேட்டுக்கொண்டார். அதற்குச் சுவாமிதயானந்தர் நீங்கள் ஆரியவேதத்தை மூலாதாரமாகக் கொள்ளவில்லை. அதனால் உங்களுக்கும் நமக்கும் சரிப்படாது என்றும் இந்தியர் அபிவிர்த்திக்கும் மோக்ஷசாதகத்துக்கும் ஆரியவேதமே மூலாதாரமாகப் போதும் என்றும் அவ்வாரியவேதத்தைவிட வேறு சமயநூல்களின் உதவி அனாவசியமென்றும் சொல்லி ஆரியவேதத்தைத் தம் அடியார்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்தார்.

இவரது சிஷ்யருள் மூவரே முக்கியமானவர். அவராவார்:—லஜபத்ராயர், குருதத்தர், லாலா அன்ஸ்ராஜர். அக்காலத்தில் இச்சிறுவரான மூவரையே சுவாமி தயானந்தரின் அடியார்களான ஆரியசமாஜர் தங்கள் தலைவரென நம்பியிருந்தார். அவர்களது நம்பிக்கை வீண்போகவில்லை. "மனிதரொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்ற பழமொழி பொய்யாக, அவர்களது எண்ணம் தெய்வ எண்ணத்துக்கு ஒத்திருந்தபடியாலும், அவர்கள் சுயநலம் கருதாது பொது நலம் கருதியதாலும் அவரது எண்ணம் நிறைவேறிற்று. மேற்சொன்ன இம்மூவரும் தம்மெய்ப்பொருளாவி மூன்றையும் தெய்வ காணிக்கையாக அளித்துப் பொதுநன்மைக்காக ஒரே மனதுடையவராய் உழைத்து வந்தார். சிலர் தெய்வபக்தி முதிர்ந்துவிட்டால் கானகங்களுக்காவது மலைகளுக்காவது தவஞ் செய்யப்போகிறார்கள். சிலர் மௌனம் சாதிக்கிறார்கள். தாயுமானவர்போன்ற சிலர்கடவுளின் அன்பாகிய பிரசாதத்தை அருந்த ஜகத்தீரை எல்லா மழைக்கிறார்கள். இவ்விதமான 'தெய்வபக்தியைப் பற்றி விவேகாநந்த சுவாமியின் குருவாகிய ம-ா-ா-ஸ்ரீ, இராமகிருஷ்ண பரம அம்ஸதேவர் ஒரு கதை சொல்லுகிறார்.

ஒரு உயர்ந்த மதில்சூழ்ந்த தோட்டம் ஒன்றுண்டு. வெளியிலுள்ளவர்களுக்கு உள்ளே என்ன யிருக்கிறதென்று தெரியாது. ஒருநாள் நால்வர் சுவர் ஏறி உள்ளே என்ன விருக்கிறதென்று பார்க்க யெத்தனித்தார்கள். முதல் மனிதன் ஏறி ஆ! ஆ! ஆ! என்ற ஆநந்தத்துடன் உள்ளே குதித்தான். இரண்டாவதவனும், மூன்றாவதவனும் அவ்விதமே செய்தார்கள். நாலாவதவன் மேலே ஏறி உள்ளே அழகான பூஞ்சோலைகளைப் பார்த்து அவ்வழகிய காட்சியை அனுபவிக்க அளவற்ற அவாக்கொண்ட போதிலும் உள்ளே செல்லாது ஏணியிலிருந்து கீழேயிறங்கி தம்மைக் கூடியிருந்தவருக்குத் தோட்டத்தின் அழகைப்பற்றிப் பிரசங்கிக்க ஆரம்பித்தான். கடவுள் மதில்சூழ்ந்த தோட்டம் போன்றது. அதைக்காண்கிறவன் ஆனந்த பரவசனாகி மோட்சமடையும் பொருட்டுத் தலைகீழாய் உள்ளே விழுகிறான். உலகத்தில் ஞானிகளும் ஜீவன் முக்தர்களும் இத்தன்மையுடையவரே. உலகரக்ஷகர்கள் யாரெனில், சுயநலம் பாராட்டாது எம்பெருமானது அருளால் அமிருதத்தைப் பலருடனும் பகர்ந்துண்பவரே. இவரே ஜனங்களுடன் கூடி அவர்களுக்கு உண்மைப்பொருளை உபதேசிக்கும் பொருட்டு ஜனனமரணமாகிய துக்கத்துக்குட் படுகின்றார்கள். இவ்விதமாக இம்மூவரும் சுவாமி தயானந்தரது உபதேசம் பெற்றுக்கொண்டு ஏகாந்தத்திற்குப் போகவில்லை. ஜனங்களுடன் சேர்ந்து தங்கள் சுகங்களைக் கருதாது பல வருத்தங்களுக்குள்ளான போதும் தம் எண்ணம் நிறைவேறும் வரை ஊக்கத்தைக் கைவிடாது உழைத்துவந்தார். இவர்களது வளர்ச்சிக்கு விரோதமாக அநேகர் கிளம்பி இவரை அடக்கமுயன்றும் அவர்களது பிரயத்தனம் பிரயோசன மற்றதாய் விட்டது. இம்மூவரும் சுவாமி தயானந்தரிடம் உபதேசம் பெறுங்காலத்தில் தம் பள்ளிக்கூடத்துப் பாடங்களை மறந்துவிடவில்லை. அக்காலமே சம்ஸ்கிரதமும் கற்க முயன்றார்கள். காலேஜ் படிப்பு முடிந்தவுடன் லஜபுத்ராயர் முதலாவது சட்டப் பரீட்சையில் தேறி இஸ்ஸார் நகரத்தில் வைக்கீலாக அமர்ந்தார். இரண்டு வருடத்துக்குள் அதாவது தமது

20-ம் வயதில் கடைசிசட்டப் பரீட்சையில் முப்பத்
திரண்டு மாணவர்களுக்குள் இரண்டாவதாகத் தேறி
ஞர். 1892ம் வருடம் வரை இஸ்ஸார் நகரில் வைக்
கீல்தொழில் செய்துவந்தார். இங்கும் அவருக்குத்
தம்மனம் போன்ற சிநேகிதர்கள் அகப்பட்டார்கள்.
நாம் இவரது சிநேகிதர்களைப்பற்றித் தெரிவிப்பதன்
காரணமென்னவென்றால், ஒருமனிதனது சிநேகிதரே
அவனை நல்லவனாகவாவது கெட்டவனாகவாவது செய்
வார். ஒருமனிதன் இயற்கையாகவே நற்குணவனு
யிருந்தால் அவன் துஷ்டசகவாஸம் செய்வானாகில்
கெட்டுப்போவான். ஏனெனில், 'பன்றியோடு சேர்ந்த
கன்றும் மலம் தின்னும்' என்பதனுற்ருன் நம்மூதா
தைகள் சத்சங்க சகவாஸம் செய்யும்படி சொல்லி
யிருக்கிறுர். இஸ்ஸார் நகரில் இவரது சிநேகிதர்கள்
பரோபகார சிந்தையோடு தம் ஆஸ்திபெல்லாம் ஜன
நன்மைக்களித்த தாதாவாகிய பண்டிதர் லக்பத்ராயர்,
அனுதி ஏழைப்பிள்ளைகளுக்குக் கைத்தொழிற் சாலை
ஸ்தாபித்த 'பஞ்சாபி' பத்திரிகையின் தலைவரான
ஜஸ்வன்டராயரின் பிதாவாகிய லாலாசுராமணியருமே.
நமது லஜபுத்ராயர் தமது விசேஷ அறிவினுலும் நுட்ப
மான சட்டப்பயிற்சியாலும் இஸ்ஸார் நகரில் பிரபல
வைக்கீலானுர். இவர் எக்காரியம் செய்தாலும் அதிர்
ஷ்டம் இவரை விட்டு நீங்கவில்லை. இங்கே மிகுந்த
திரவியம் சம்பாதிக்க ஆரம்பித்தார். இந்நகரத்து முன்
ஸிபல் போர்டு காரியதரிசியாக மூன்று வருடம்
சம்பளமில்லாமல் வேலை பார்த்து வந்தார்.

இவர் ஆரிய சமாஜத்திற்குப் பள்ளிப்பிள்ளையா
யிருக்கும்பொழுது எவ்வளவு ஊக்கமும் அபிமானமும்
காட்டினுரோ அதனினும் பன்னிருமடங்கு தாம்
மனிதரான பொழுதும் காட்டினுர். லாலா லஜபுத்ராயர்,
லாலா அன்ஸ்ராஜர் முதலான அபிமானிகளின் விடா
முயற்சியாலும் பொருளுதவியாலும் ஆரிய சமாஜம்
பெருங் கீர்த்தியடைந்தது. தற்போது ஆரிய சமாஜத்
தின் மேற்பார்வையில் 6-ஐஸ்கூல்களும், 6-பெண்பாட
சாலைகளும், ஒரு முதல்தர காலேஜும் இன்னும் இதர
தர்ம காரியங்களும் ஆதரிக்கப்பட்டு வருகின்றன.
வருஷத்திற்கு வித்தியார்த்தம் முதலிய தர்மகாரியங்
களுக்காக ஆரியசமாஜர் 10 லட்சம் ரூபாய் செலவு
செய்கிறுர்கள். பிர்ஜாபூர் என்ற ஊரில் பஞ்சத்தில்
எடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அனுதிப் பிள்ளைக
ளுக்கு அன்னமிட்டுக் கல்வி கற்பித்து வருகிறுர்கள்.
இவை முதலான தர்தகாரியங்கள் எல்லாம் ராயரவர்
களின் உதவியினுலே நடத்தப்பட்டு வருகின்றன.

1892-ம் வருடம் லஜபத்ராயர் இஸ்ஸார் நகரத்தை
விட்டுப் பஞ்சாப் தலைநகராகிய லாகூரிலுள்ள நம்
சென்னை ஐகோர்ட்டுக்கு ஒப்பான சீப்கோர்ட்டில்
வைக்கீல் தொழில் நடத்தவந்தார். அங்கும் அவர்
அநேக கேசுகளில் அனுகூலமாய் கீர்த்தியும் செல்வ
மும் சம்பாதித்தார். சென்ற ஐந்து வருஷமாகத் தம்
தேக அசௌகரியத்தினுலும் இராஜாங்க விஷயங்க
ளில் அதிமாகத் தமது காலத்தைச் செலுத்தவேண்டு
மென்ற எண்ணத்தினுலும் வைக்கீல்தொழிலைப் பெரும்
பாலும் விட்டுவிட்டார்.

லாலா லஜபத்ராயர், லாலா அன்ஸ்ராஜா, குருத்தர்
ஆகிய இம்மூவரும் தம் குருவாகிய சுவாமி தயாநந்த
ருக்கு எவ்விதம் வாக்களித்தனரோ அதினின்றும்
சற்றும் பிசகாமல் ஒரேமனத்தினராய் ஜன அபிவிர்த்
திக்கு உழைத்து வந்தார். குருத்தர் இளம்பிராயத்
திலேயே காலஞ்சென்றுர். இவர் இறந்தது இவர்க
ளுக்கு ஓர் கை ஒடிந்ததுபோலானுலும் இவர்கள்
சற்றும் அதைரியங் கொள்ளவில்லை. லாலா அன்ஸ்
ராஜா "ஆரியசமாஜ வேலையைச் செய்யவே ஆயிரமனி
தர்கள்வேண்டும்" ஆகையால் தாம் வேறு விஷயங்க
ளில் தம் கருத்தையும் காலத்தையும் செலவழிக்கமுடி
யாதென்று சொல்லிசமாஜவேலையைச் செய்துவந்தார்.
ராயரவர்களோ சமாஜவேலையையும் செய்து கொண்டு,
தம்மாகாணத்தாருக்கு இராஜாங்கவிஷயங்களின் முறை
களைக்கற்பிக்கவேண்டுமென்ற ஆவலுடன் இராஜதத்து
வநீதிகளைப்பத்திரிகைமூலமாயும் பிரசங்க மூலமாகவும்
எடுத்துக்கூறுவார். இவர் இந்தியன் நாஷனல்காங்கிரஸ்
மகாசபையில் வெகுகாலத்துக்குமுன்னமே சேர்ந்து
அதன் நடவடிக்கைகளை ஒத்திருந்து செய்திருக்கிறுர்.
அவர் D. A. V, காலேஜில்சரித்திர போதகராய்ச்சொற்
பசம்பளம் பெற்றுக்கொண்டு உழைத்திருக்கிறுர். மே
லும் தாம் அருமையாய் வளர்த்த D. A. V. காலேஜி
னின்று சற்றும் விலகியிருக்க மனம்பொருதவராய்
காலேஜுக்கு அருகில் ஒரு வீட்டை வாங்கி எப்
பொழுதும் காலேஜுக்கு உதவியா யிருக்கும்படி
அங்கு வசித்துவந்தார். இவர் மாதம் ஆயிரக்கணக்காகச்
சம்பாதித்தபோதிலும் தம் செலவுக்காக நூறு இரு
நூறு ரூபாய் எடுத்துக்கொண்டு மீதி வருமானத்தைக்
காலேஜ் நிருவாகத்திற்குக் கொடுப்பார். இதன்றி,
இந்திய அரசிறைமுறைகளைப் படிப்பதற்காக ஆங்கில
த்தேர்ச்சிபெற்ற இந்தியமாணவர் சிலருக்குப் பண உத
வி செய்திருக்கிறுர். இவரது பரோபகாரம் இத்துடன்
நின்றதா? கங்கிராமாகாணத்தில் பூகம்பத்தால் ஆயி
ரக்கணக்கான இந்தியர்கள் இறந்தொழிந்த கொடூர
த்தைச் சகிக்கமுடியாது தம் காலேஜ்மாணவர்களை அ
ங்கு அழைத்துச்சென்று உணவு, பொருள் முதலியன
உதவி அநேகரைக் காப்பாற்றினுர். இது மாத்தி
ரமா? இராஜபுதனத்திலும் மத்தியமாகாணத்திலும்
கொடியபஞ்சத்தால் கணக்கற்ற இந்தியர்கள் கொடிய
பசியால் மாண்டதைக் கேள்வியுற்று அவர்களுக்கு உத
விசெய்ய ஆரியசமாஜத்தாரில் ஒரு கூட்டத்தாரை அனு
ப்புவித்து அங்கு அன்னசாலை ஏற்படுத்தி ஏழைகளுக்கு
உணவளிக்கும்படிச்செய்த உத்தமரும் இவரே.

1903-ம் வருஷம் ஐரோப்பா அமெரிக்காகண்டங்
களில் சுற்றுப்பிரயாணம்செய்து ஸ்ரீ கோபாலகிருஷ்
ண கோகலேயுடன் காங்கிரஸின் பிரதிநிதியாக இங்கி
லாந்திலுள்ளவர்களுக்கு இந்தியர்களது குறைகளையும்
ஆங்கிலேய அதிகாரிகள் இந்தியாவில்செய்யும் அக்கிர
மங்களையும் எடுத்துக்கூறினர். இனிநாம் இவ்வித பெ
ருந்தன்மையும் பரோபகாரசிந்தையும் நிறம்பிய வேறு
மனிதரைக் காணமுடியுமோ?

ராயரவர்கள் அதிக உயரமல்ல. பார்வையில் அதி
கம்பீரமானவருமல்லர். தேகமோ என்றும் நோய்க்
கிடமாய் அவரை வருஷத்துக்கு மூன்றுமாதம் ஈரல்

வலியும் அதைத் தொடர்ந்த மற்ற உபாதைகளும்
படுத்த படுக்கையில் போட்டுவிடும். அவர் ஐரோப்
பாவுக்குப் போய் வந்த சிறிது காலம் சுகமாயிரு
ந்தார். மறுபடியும் அவர் சற்றும் ஓய்வின்றி உழை
க்க ஆரம்பித்ததனுல் தேகம் மெலிவடைந்தது. என்
றைக்கேனும் ஒருநாள் இவர்நோய்க்கிரையாவாரென்று
அவர் சிநேகிதர்கள் பயந்திருந்தனர். இப்பொழுது இவ
ரை இந்தியாவினின்றும் அப்புறப்படுத்தியதனுல் இவர்
வேலைசெய்யாமலிருப்பார். அதனுல் தெய்வீகமாக வந்த
இத்தண்டனை இவருக்கு வருத்தந்தைக்கொடுக்காமல்
சுகத்தைக்கொடுக்குமென்று அவர் சிநேகிதர்கள் சந்
தோஷப்படுகின்றனர்.

இப்பரிசுத்த புருஷனை ராயவர்களை இராஜாங்க
த்தார் இரகசியமாய் தங்களுக்கு விரோதமாய்க் கிளம்
பினுரென்று தேசபிரஷ்டம் செய்தார்கள். இக்கொ
டுமையினும் பெருங்கொடுமை வேறு உளதோ? நாக
ரீகமான இராஜாங்கத்தார் எனப் பெயர்கொண்டு மனி
தனது இயற்கையான சுதந்தரங்களைக்கூட கவனியாது
யாதொரு விசாரணையுமின்றி சிறிதும் கனவிலும் யா
வரும் நினைத்திராத இப்பெரும் பாதகத்தொழிலைக்
கொடுங்கோன்மன்னர்போல் செய்துவிட்டார்கள்.

ராயவர்களைப் பிடித்தமாதிரியோ மிகவும் வேடி
க்கையாகவிருக்கிறது. இவர் தம்மறையில் படித்துக்
கொண்டிருந்தார். அப்பொழுது இரண்டுபோலீசார்
வந்து போலீசுகமிஷனர் கூட்டிக்கொண்டுவரச்சொன்
னதாகச் சொல்ல, ராயவர்கள் தம்வண்டியைத் தயாரிக்
கும்படிக் கட்டளையிட்டு, உடுப்பைமாட்டிக்கொண்டுவெ
ளியேவந்து வண்டியில் ஏற, உடனே ஒருபட்டாளம் சிப்
பாய்கள் தம்வண்டியையும் வீட்டையும் வளைந்துகொ
ண்டார்களாம்.

எழும்பூர் பிரசிடென்சி
மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் W. R. கிளார்க்.

பிரியாதி:—கவர்ன்மெண்டார்.

குற்றவாளி:—சர் ஜியார்ஜ் அர்பத்நட்.

கேசின்விபரம்:—சென்ற மாத இந்தியசட்ட கெ
ஜெட்டில் 132-வது பக்கத்தில் சொல்லப்பட்டபடி சர்
ஜியார்ஜ் அர்பத்நட் பேரில் சாட்டப்பட்டிருக்கும்
மூன்று குற்றங்களைப்பற்றி விசாரணை செய்ய நிகழ்மீ
27உ குறிப்பிடப்பட்டிருந்தது. கோடைகாலமானபடி
யால் இந்தக் கேசை எழும்பூர் போலிஸ் கோர்ட்டின்
கட்டடத்தில் நடத்தினுல் கோர்ட்டாருக்கும் லாயர்களு
க்கும் கக்ஷிக்காரர்களுக்கும் சௌக்கியமா யிருக்கமாட்
டாதென்று அபிப்பிராயப்பட்டு போலிஸ் கோர்ட்டார்
ஹைகோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய
அய்யர் அவர்களுடையவும் ஸ்மால்காஸ் கோர்ட் சிப்
ஜட்ஜியினுடையவும் உத்திரவைப்பெற்று இந்தக்கே
சை ஸ்மால்காஸ் இரண்டாவது கோர்ட்டில் நடத்திவரு
கின்றுர்கள்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட்டு தரப்பில் பேச வேறே
பாரிஸ்டர்கள் அகப்படவில்லையாம். ஆகையால் மெ
சர்ஸ் கிங் அண்டு ஜாசிலயின் என்கிற சொலிசிட்டர்
கம்பெனியார்களே பேசிவருகின்றுர்கள். ஆனுல்இப்
போது கல்கத்தாவில் பிராக்ட்டிஸ் செய்துவரும் பாரிஸ்
டர் மிஸ்டர் நார்ட்டன் சர் ஜியார்ஜ் அர்பத்நட் தரப்பில்
பேச ஒப்புக்கொண்டிருப்பதாயும் சமீபத்தில் வரப்போ
வதாயும் ஒரு பிரஸ்தாபமுண்டாயிருக்கின்றது.

கேசின்நடவடிக்கை:—பப்ளிக் பிராசிக்கியூட்டர்
மிஸ்டர் E. B. பவல் பிராசிக்கியூஷன் தரப்பிற்குப்
பேசிவருகின்றுர். சர் ஜியார்ஜ் அர்பத்நட் தரப்பிற்கு
மெசர்ஸ் ஜேம்ஸ் ஷார்ட் என்கிற சொலிசிட்டர் கம்
பெனியார்களுடைய உதவியின்பேரில் சொலிசிட்டர்
கம்பெனியார்களாகிய மெசர்ஸ் ஷார்ட் அண்டு பியூஸ்
பேசிவருகின்றுர்கள்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட் தம்முடைய லாயர்கள் பக்
கத்தில் வீற்றிருக்கும்படி உத்திரவு கொடுக்கப்பட்
டது. பிராசிக்கியூஷன் தரப்பில் சாக்ஷியம் சொல்ல
ராஜா சர் சவலை ராமசாமி முதலியாருக்குச் சம்மன் அனு
ப்பப்பட்டிருந்தது. லெப்டினெண்ட் கர்னல் W. B.
பிரௌனிங் என்கிற டாக்டர், ராஜா சர் சவலை ராமசாமி
முதலியாரைப் போய்பார்த்ததாகவும் அவர் தேக
அசௌக்கியமாயிருக்கிறுர் என்றும், சாக்ஷியம் சொல்ல
கோர்ட்டிற்கு வரசாத்தியப்படமாட்டாதென்றும், இரு
ந்தபோதிலும் சுமீபத்தில் சௌக்கியமடைந்துவிடுவார்
என்றும் சாக்ஷியம் சொன்னுர். ஆகவே கோர்ட்டார்
அடுத்த புதன்கிழமை கோர்ட்டிற்கு வரும்படியாக
கோர்ட்டார் அவருக்குச் சம்மன் அனுப்பும்படி உத்தி
ரவு செய்திருக்கிறுர்கள்.

பப்ளிக் பிராசிக்கியூட்டராகிய மிஸ்டர் பௌல்
முதலில், சர் ஜியார்ஜ் அர்பத்நட் ஈக்குட்டபில் அசுயூ
ரன்ஸ் சொசைட்டி சம்பந்தமாக நடத்தியிருக்கும் நம்
பிக்கை மோசக் கேசைக் குறித்துப் பின் வருமாறு
சொன்னுர்:—1869-வது வருஷத்திய 6-வது ஆக்ட்டைத்
தழுவி இந்த சொசைட்டி ஏற்படுத்தப்பட்டது. இந்த
சொசைட்டியின் விஷயங்களை டைரக்டர்கள் என்கிற
போர்டார்கள் மானேஜ்மெண்டு செய்துவருகின்றுர்கள்.
இந்த போர்டின் டைரக்டர்கள் சொசைட்டியின்
மெம்பர்களால் எலக்ஷன் செய்து நியமிக்கப்பட்டவர்
கள். இந்த சொசைட்டிக்கு மெசர்ஸ் அர்பத்நட் கம்
பெனியார் கஜான்ஜிகளாகவும் காரியதரிசிகளாகவுமிரு
க்கிறுர்கள். ஆகையால் இவர்கள் டைரக்டர்கள்
செய்த உத்திரவின்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள்.
இந்த சொசைட்டி மெம்பர்கள் கட்டவேண்டிய பிரிமிய
ம் என்கிற தவணைப்பணங்கள் ஒவ்வொரு வருஷமும்
ஜனவரிமீ 12உ யும், ஜூலைமீ 12உயும் செலுத்தப்பட
வேண்டும். 1906-ம் ௵-ம் ஜூலைமீ 31உ பொக்கிஷ
தார்களாகிய அர்பத்நட்டார் வசம் ரூ. 162 699-6-0
யிருந்தது. சொசைட்டி மெம்பர்களுக்குப் பொக்கிஷ
தாரர்கள் செலுத்தவேண்டிய தொகை ரூ. 73,423.
இன்னும்பொக்கிஷதார்கள் நடைமுதல் செலவிற்குவை
த்துக்கொள்ளவேண்டிய தொகை போக, ரூ. 89.292-
5-7 மீர்ந்துபோயிருந்தது. இந்தத் தொகையும் பொக்
கிஷதார்களாகிய அர்பத்நட்டார் கையிலிருந்தது. மிகு

ந்த பணத்தைக்கொண்டு அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கிவிட வேண்டுமென்பது இந்த சொஸைட்டியின் விதி. சர்ஜியார்ஜ் அர்பத்நட்டும், இந்த சொஸைடியின் டைரக்ட்டர்களில் ஒருவர் அதேவருஷம் ஜூலைமீ 31௳ டைரக்ட்டர்கள் ஒருமீட்டிங்கு கூடி மீதப்பட்டிருந்த ரூ. 89,272-5-7ல் ரூ. 75 ஆயிரத்திற்கு கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கும்படியாகப் பொக்கிஷதார்களுக்கு உத்தரவு செய்து ஒரு தீர்மானம் பாஸ்செய்தார்கள். அர்பத்நட்கம்பெனியின் மானேஜ்மெண்டு முழுதிலும் குற்றவாளிகையிலிருக்கிறது. இவர் ஆகஸ்ட்மீ 7௳ ரூ. 25 ஆயிரம் பெறுமான கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளை ரூ. 22,920-12-6-க்கு வாங்கினார். அதன் பிறகு அக்டோபர்மீ 17௳ வரையில் யாதொரு கவர்ன்மெண்டு புரோநோட்டும் வாங்கவில்லை. அக்டோபர்மீ 17௳ இரண்டாம் முறையாக ரூ. 21,714-2-0 கிரயத்திற்கு ரூ. 25 ஆயிரம் விலைமதிப்புள்ள புரோநோட்டுகளை வாங்கியிருக்கிறார். இதன் பிறகு மூன்றும் முறையாக அர்பத்நட் கம்பேனி மூடுவதற்கு முந்திய சனிக்கிழமை அதாவது அக்டோபர்மீ 21௳ ரூ. பதினாயிரம் விலைமதிப்புள்ள புரோநோட்டை ரூ. 10,039-9-க்கு வாங்கியிருக்கிறார். ஆகவே இம் மூன்று முறையிலும் வாங்கின புரோநோட்டுகள் எவ்வளவு என்றால் ரூ. 60 ஆயிரம் விலை மதிப்புள்ள புரோநோட்டுகளை ரூ. 54,661-3-8-க்கு வாங்கியிருக்கிறார். பாக்கித்தொகைக்குப் புரோநோட்டுகள் வாங்கப்படவில்லை. அர்பத்நட் பாங்கி 1906-ம்௵ அக்டோபர்மீ 22௳ மூடப்பட்டுப்போய்விட்டது. இது சம்பந்தமாகக் குற்றவாளிபேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றம் என்னவென்றால், சர் ஜியார்ஜ் அர்பத்நட்டிற்குத் தன்னுடைய கம்பேனி இன்சால்வெண்டு நிலைமையை அடைந்து வருகிறதென்று ஜூலைமீ 31௳ நன்றாய்த் தெரியும். அவருக்கும் தெரியுமென்பதை ருஜுப்படுத்த அவருக்கும் லண்டனிலிருந்த மாக்படேயினுக்கும் போக்குவரத்தான தந்திகளைத் தாக்கல்செய்யத் தயாராயிருக்கிறேன். சர் ஜியார்ஜ் அர்பத்நட் இந்த சொஸைட்டியின் டைரக்ட்டர்களில் ஒருவர். இவர் இந்த சொஸைட்டியின் க்ஷேமத்தை நாடி ஐவேஜுள்ள பாங்கியில் சொஸைட்டியின் பணத்தைப் போடும்படிச்செய்வது இவருடைய கடமை. இப்படியிருக்க, இவருடைய கடமையை மீறித் தம்முடைய கம்பெனி இன்சால்வெண்டு கம்பெனி என்று அறிந்திருந்தும் பிரஸ்தாப சொஸைட்டியின் பணத்தைத் தாம் உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் இந்தப் பணத்தை அதாவது ரூ. 1,62000-யை தம்முடைய கம்பெனிவசம் ஒப்புவிக்கும்படித் தூண்டி நம்பிக்கை மோசக்குற்றம் செய்திருக்கிறார். இதுவுமன்றி 75 ஆயிரம்ரூபாயை கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டில் போடும்படிடைரக்ட்டர்கள் உத்தரவுசெய்திருக்க, 50 ஆயிர ரூபாய்க்குமட்டிலும் புரோநோட்டுகள் வாங்கிவிட்டு பாக்கி ரூ. 25 ஆயிரத்திற்குப்புரோநோட்டுகள்வாங்கவேயில்லை. மேலும் ஷை 50 ஆயிரம் ரூபாய்க்குவாங்கப்பட்ட புரோநோட்டுகளும் வாங்காமல்ஷை பணத்தைஉபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார். டைரக்டர்கள் எந்தத்தேதியில் வாங்கும்படி உத்திர்வு செய்தார்களோ அந்தந்தேதியில் வாங்காமல் பல தேதிகளில் சில்லறைச் சில்லறையாக வாங்கியிருக்கிறார்.

பிராசிக்கியூஷன் தரப்பு முதல் சாக்ஷி:—என் பெயர் ஹானரபில் மிஸ்டர் V. G. லின். 1906-ம்௵ ஜுலைமீ 31௳ நான் ஈக்குட்டபில் அசுயுரன்ஸ்சொஸைடியின் டைரக்ட்டராக விருந்தேன். அன்றையத் தினம் கூடின டைரக்ட்டர் மீட்டிங்குக்கு சர்ஜியார்ஜ் அர்பத்நட் சேர்மேனாக விருந்தார். மிஸ்டர் B. C. வாக்கர், மிஸ்டர் சதர்லாண்டு அண்டு ஆர், மிஸ்டர் J. H. பீபில்ஸ் ஆகிய இவர்கள் மற்ற டைரக்ட்டர்கள். இந்த புஸ்தகந்தான் சொசயிட்டி மீட்டிங்குகளின் நடவடிக்கைகள் எழுதிவைக்கப்படும் புத்தகம். அன்றைய த்தினம் ரூ. 162699-6-6. கையிருப்பிருப்பதாகக் காரியதரிசிகளும் பொக்கிஷதார்களும்ரிப்போர்ட் செய்தார்கள். அந்தத் தேதியில் மெம்பர்களுக்குச் செல்லாக வேண்டிய தொகை ரூ. 73423-0-5 என்றும் ரிப்போர்ட் செய்தார்கள். ஆகவே ரூ. 89 ஆயிரம் மீதப்பட்டிருந்தது. அன்றையத் தேதியில் சேர்மேனாகிய சர்ஜியார்ஜ் அர்பத்நட் ரூ. 75 ஆயிரம் கவர்ன்மெண்டு புரோ நோட்டில் போடவேண்டுமென்று பிரேரேபித்தார். இதைப் பற்றி சேர்மன் ஒரு கடிதம் எழுதினார். அந்தக்கடிதம் டைரக்ட்டர்களுக்கு அனுப்பப்பட்டது. சேர்மேன் பிரேரேபித்ததை ஒப்புக்கொண்டதற்குடைரக்ட்டர்கள் ஷை கடிதத்தில் குறிப்புக்கையெழுத்து செய்திருக்கிறார்கள். அர்பத்நட் பாங்கி மூடப்படும் பரியந்தம் நான் டைரக்ட்டராகவிருந்தேன். ரூ. 75 ஆயிரத்திற்கு புரோநோட் வாங்கும்படி பொக்கிஷதார்களுக்குச் செய்தஉத்திரவு பிறகுமாற்றப்படவில்லை. இதைப்பற்றிஒரு தீர்மானமும் பாஸ் செய்யவில்லை. சர்ஜியார்ஜ் அர்பத்நட் ரூ. 75 ஆயிரத்திற்குக் கவர்ன்மெண்டு புரோநோட்டுவாங்கவேண்டுமென்றுபிரேரேபித்தார். அதைடைரக்ட்டர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். புரோநோட்டுகள் வாங்கும்படி நேரான உத்திரவுசெய்யவில்லை. மீட்டிங்கின் நடவடிக்கை பதியப்பட்ட புஸ்தகத்தைப் பொக்கிஷதாரிகளுக்கு அனுப்பி இந்த உத்திரவு அறிவிக்கப்பட்டது. மீட்டிங்கின் நடவடிக்கைகள் புத்தகத்தில் சர்ஜியார்ஜ் அர்பத்நட் கையால் பதியப்பட்டது. டைரக்ட்டர்கள் அதில் குறிப்புக்கையெழுத்து செய்திருக்கிறார்கள்.

இந்தப்பிரேரேபணையின்படி பொக்கிஷ தார்கள் கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கக்கடமைப்பட்டவர்களா அல்லவா என்று நான் சொல்லமுடியாது. பொக்கிஷதார்கள் ரூ. 75 ஆயிரத்திற்கு கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்குவார்கள் என்று டைரெக்ட்டர் ஸ்தானத்தில் நான் நினைக்கவேண்டும். அர்பத்நட் பாங்கியார் இன்சால்வெண்டுநிலைமையிலிருக்கிறார்கள் என்று அந்த சமயம் எனக்குத்தெரிய வந்தால் இந்தத்தொகையை அவர்கள் வசம் விட நான் சம்மதித்திருக்க மாட்டேன்.

கேள்வி:—சர் ஜியார்ஜ் அர்பத்நட் இங்கிலாண்டிற்கு 1906ம் ௵ம் ஜூலைமீ 31௳ க்கு 5 நாள் முந்தி ரூ. 9-ஆயிரம் அனுப்பியிருக்கிறேன்: சென்னையைவிட்டுப் புறப்படுவதற்குச் சாத்தியப்படாதுபோலிருக்கிறது.

சமீபகாலத்தில் பணக்கசாலா உண்டாகுமென்று பயப்படுகிறேன். பணசம்பந்தமான விஷயங்கள் அதிகமாய் அனுகூலமாயிருந்தாலொழிய நாம் தயாராயிருக்கவேண்டும்.” இப்படி தந்தி அனுப்பியது உமக்குத்தெரிய வந்தால் நீர் இந்தத்தொகையை அவர்கள் வசம்விட உமக்குச் சம்மதமாயிருக்குமா ?

ஜவாப்பு:—இந்த தந்தியால், அர்பத்நட் பாங்கியார் பணக்கசாலாவிலிருக்கிறார்கள் என்று நான் தாத்பரியம் செய்துகொண்டால் நான் சம்மதித்திருக்க மாட்டேன்.

மிஸ்டர் கிங்:—இந்தக்கேள்வி கேட்கக் கூடாது.

மிஸ்டர் டேளல்:—குற்றவாளி டைரக்ட்டர் ஸ்தானத்திலிருந்து கொண்டு தம்முடைய இன்சால்வெண்டு கம்பெனியில் பணத்தைப்போடும்படி தூண்டின குற்றத்தை ருஜுப்படுத்த இந்தக்கேள்வி அவசியமாய்க் கேட்கப்படவேண்டும்.

இதன்பிறகு மறுபடியும் பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் பௌல் கேட்ட கேள்விகளுக்கு முதல் சாக்ஷி சொன்ன சாக்ஷியம்:—அர்பத்நட் பாங்கியார் இன்சால்வெண்டு நிலைமையிலிருப்பதாக எனக்குத்தெரிந்திருந்தால் நான் இந்தப் பணத்தை அவர்கள் வசம்விட சம்மதித்திருக்கமாட்டேன். (இந்த சொஸைடியின் 1906ம் ௵த்திய ரிப்போர்ட்டும் வரவு செலவு பாக்கி ஜாப்திதாவும் தஸ்தாவேஜி சாக்ஷியமாக தாக்கல் செய்யப்பட்டது.)

அர்பத்நட் பாங்கியார் இந்த சொஸைட்டிக்குப் பொக்கிஷதாரிகளாகவும் காரியதரிசிகளாகவு மிருப்பதற்குச் சொஸைடிக்குவரும் மொத்தப்பிரிமியப்பணத்தின் 100-க்கு 5 விழுக்காடு கமிஷனும், ஆபீஸ் செலவுகளுக்காக லைசென்சும் ஆக வருஷம் ஒன்றுக்கு ரூ. 12ஆயிரம் கொடுத்துவரப்படுகின்றது. டைரக்ட்டர்கள் உத்திரவு செய்திருந்தபடி அர்பத்நட் பாங்கியார் ஜுலைமீ 31௳க்குப்பிறகு கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கியிருந்தால் சொஸைடிக்கு அதுமுதல் வட்டி கிடைத்துக்கொண்டுவரும். 100-க்குமூன்று வட்டி கிடைக்கக் கூடியகவர்ன்மெண்டு புரோநோட்டுகளில்சொஸைடியின் பணங்களைப் போடுகிறது வழக்கம். அப்படி இந்த சொஸைடியின் பணத்தைக் கொண்டு கவர்ன்மெண்டுபுரோநோட்டுகள் அர்பத்நட்பாங்கியார் வாங்காததால் சொஸைடிக்குக் கிடைக்கவேண்டிய வட்டி கிடைக்காமற்போய் விட்டது. பொக்கிஷதாரிகளும் தங்கள் கைவசமிருந்த பணத்திற்குத் தங்களுடைய கம்பெனியிலிருந்து வட்டியும் எனக்குத் தெரிந்த வரையில் செலுத்தவில்லை. சர்ஜியார்ஜ் அர்பத்நட் டைரக்ட்டரானபடியால் அர்பத்நட் பாங்கியார் வசம் ஜூலைமீ 31௳ முதல் பாங்கிமூடப்படும்பரியந்தமிருந்த சொஸைடியின் பணத்திற்கு அவர் உத்திரவாத முள்ளவர்தான். சொஸைடியின் பணத்தைக்கொண்டு கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கவேண்டுமென்று பிரேரேபித்தது சர்ஜியார்ஜ் அர்பத்நட்டுதான்.

டிபன்ஸ் தரப்பு சொலிசிட்டராகிய சர் என்கிற கிங், இந்த சாக்ஷியை செஷன்கோர்ட்டில் கிராஸ்செய்வதாகச் சொல்லிவிட்டார்.

இரண்டாவது சாக்ஷி மிஸ்டர். G. F. ரூள்:—நான் ஈக்கியூட்டபில் அசூயரன்ஸ் சொஸைடியின் டிப்டி செக்ரெட்டரி. அர்பத்நட் பாங்கி மூடப்பட்ட பிறகு நான் டிப்டி செக்ரட்டெரியாக நியமிக்கப்பட்டேன். நான் மெசர்ஸ் பெஸ்ட் கம்பெனியைச் சேர்ந்த மெம்பர்களில் ஒருவன். சொஸைடியைச் சேர்ந்த எல்லா புஸ்தகங்களும் என்னிடமிருக்கின்றன. பிரிமியப் பணம் ஒவ்வொரு வருஷத்திலும் ஜனவரிமீ 1௳ யிலும், ஜூலைமீ 1௳ யிலும் செலுத்தப்படவேண்டும். அந்தத் தேதிகளில் செலுத்தத் தவறிப்போனவர்கள் அது முதல் ஒருமாதத்திற்குள்ளாக யாதொரு வட்டியும் அபராதமுமில்லாமல் செலுத்தி விடலாம். இதுதான் சொஸைடியில் அனுபோகத்திலிருந்த விதி. ஜூலைமீ 31௳ பொக்கிஷதாரிகளாகிய அர்பத்நட் பாங்கியார் வசம் ரூ. 1,62,000ம் சொச்சமுமிருந்தது. சொஸைடி மெம்பர்களுக்குக் கொடுக்க வேண்டிய போனஸ் (Bonus) பணம் ரூ. 73,423-0-5 ஆகவே ரூ. 89,272—5—7 பாக்கிப்பட்டிருந்தது. இப்படி மீதப்பட்டிருக்கிற பணத்தை இன்னது செய்ய வேண்டுமென்று டைரக்டர்கள் கூடி ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். டைரக்டர்கள் மீட்டிங்குகூடி நடத்தும் நடவடிக்கைகள் எழுதப்பட்டுரிக்கார்ட்டுசெய்யப்படுகிறது வழக்கம். நான் புஸ்தகங்களைச் சோதித்த வரையில், டைரெக்ட்டர்கள் இதற்குமுன் மீட்டிங்கு கூடினதாகத் தெரியவில்லை. டைரெக்ட்டர்களுக்குச் சர்க்குலர்கள் அனுப்புகிறது வழக்கம். நான் டிப்டி செக்ரெட்டரியாக நியமிக்கப்பட்ட பின்னால் இதே வழக்கத்தை அனுசரித்து சர்க்குயுலர்கள் அனுப்புகிறது வழக்கம். ஆகஸ்ட்மீ 7௳ கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றிய பதிவுகள் புத்தகத்திலிருக்கின்றன. ஜூலைமீ 31௳ க்குப் பிறகு எந்தெந்தத் தேதிகளில் கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கப்பட்டிருக்கின்றனவோ அவைகள் லெட்ஜர் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கின்றன. ரூ. 75 ஆயிரம் மதிப்புள்ள கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. முதல் தடவையில் ரூ. 31,750க்கு வாங்கப்பட்டிருக்கின்றன. பிறகு அக்டோபர்மீ 11௳ வாங்கப்பட்டிருக்கிறது. மதிப்பு ரூ. 25 ஆயிரம். கிரயம் ரூ. 21,500. அதன் பிறகு அக்டோபர்மீ 20௳ வாங்கப்பட்டிருக்கிறது. மதிப்பு ரூ பதினாயிரம். கிரயம் வட்டியின்றி ரூ. 9,737—8—0 வட்டியுள்பட மொத்தக் கிரயம் ரூ. 64,705—15—7. செக்ரெட்டரிகளுக்கு 100-க்கு 5-கமிஷனும், ஆபீஸ் செலவு அலவுன்ஸ் வருஷத்திற்கு ரூபா இரண்டாயிரமும் கொடுத்துவரப்பட்டிருக்கிறது. அர்பத்நட் கம்பெனியார் இந்த சொஸைட்டிக்கு செக்ரெட்டரிகளாகவும் பொக்கிஷதாரர்களாகவு மிருந்து வந்ததற்கு 1906ம் ௵த்திற்கு ரூ. 12094 கமிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1906ம் ௵த்தில் அர்பத்நட் கம்பெனியாரிடம் இந்த வட்டிபாபத்திற் கென்று சொஸைட்டிக்கு யாதொரு பணமும் வரவில்லை. (அதன் பிறகு தாம் மேலே கூறிய சாக்ஷியத்திற்குச் சொஸைட்டியின் லட்ஜர் புத்தகங்களில் செய்யப்பட்டிருந்த பதிவுகளைக் காண்பித்தார்.

இந்தப் பதிவுகளெல்லாம் ஜெயராம்ரெட்டி கையால் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் அஸிஸ்டெண்டு காஷீட் ரைட்டராயிருந்தார். இப்போது சார்டட் பாங்கியில் உத்தியோகமாயிருக்கிறார். அர்பத்நெட் பாங்கி மூடப்படும்போது மிஸ்டர் ஜி. சீனிவாசாசாரியார் அந்த பாங்கியின் காஷ்கீப்பராயிருந்தார். இப்போதும் அர்பத்நட் கம்பெனியிலேயே வேலை செய்துகொண்டு இருப்பதாகத் தெரிகிறது.

கே:—அர்பத்நெட் கம்பெனியார் மதராஸ் பாங்கியில் போட்டிருந்த பணத்தைவிட அதிக பணம் அந்தபாங்கியாரிடமிருந்து வாங்கியிருக்கிறார்களா இல்லையா என்று சொல்ல முடியுமா?

வி:—அந்தப் பத்து வரவைக் குறித்து நான் பேரேட்டுப் புஸ்தகத்தைக் காண்பிக்கக்கூடும். அக்டோபர்மீ 15உ யில் மதராஸ் பாங்கியாருக்கு அர்பத்நெட் கம்பெனியர் கொடுக்கவேண்டிய ரூபா 217445 என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வாக்குமூலம் :—இந்தத்தொகை இன்ன இன்ன பாபத்துகள் சேர்ந்த தொகையென்று எனக்குத் தெரியாது, அபிஷியல் அஸைனி அர்பத்நெட் பாங்கியை ஒப்புக்கொண்ட தினத்தில் அந்த பாங்கியில் எவ்வளவு பணமிருந்ததென்று என்னால் சொல்ல முடியாது.

மூன்றாவதுசாட்சி மிஸ்டர் A. H. வேல்மான்:—நான் அர்பத்நெட் கம்பெனியில் 7 வருஷம் உத்தியோகத்திலிருந்தேன். எங்கள் கம்பெனிக்கு அடிக்கடி லண்டனிலிருந்து தந்திவரும். தந்திகள் பெரும்பாலும் கோட் தந்திகளாயிருக்கும். இந்தத் தந்திகளை அர்த்தம்கண்டு பிடித்துச் சரியான பாஷையில் எழுதுவது என்னுடைய கடமை. மெஸர்ஸ் மேக்பாடன் கம்பெனிக்கும் அர்பத்நெட் கம்பெனிக்கும் போக்குவரவு தந்திகள் ஹூபியஸ்கோட் பாஷையில் எழுதப்பட்டு வந்தன. மாக்பாடனுக்கு அனுப்பும் சொந்தத்தந்திகள் "மகடாலா" என்னு மேல்விலாசத்திற்கு அடிக்கப்படும்; மெக்பாடன் கம்பெனிக்கு வர்த்தகவிஷயமாய் அனுப்பும் தந்திகள் பெண்டிக் என்னு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும். (இவ்விடத்தில் அர்பத்நெட்டுக்கும் மெக்பாடன் கம்பெனிக்கும் ஜூன்மீ 24உ முதல் பாங்கி மூடப்படும்வரைக்கும் போக்குவரத்தான தந்திகள் இன்ஸால்வெண்டு கோர்ட்டு சீப்கிளர்க்கு கொண்டு வந்து காண்பித்தார். பிராஸிகூஷன் தரப்பு லாயர் 26உ உள்ள தந்தியைத்தாக்கல் செய்யும்படி வேண்டிக்கொண்டார். டிபன்ஸ் லாயர் தாக்கல்செய்யக்கூடாதென்று ஆட்சேபித்தார்.

பிராஸிகூஷன் தரப்புலாயர், மேற்படி தேதியில் அர்பத்நெட்கம்பெனி இன்ஸால்வெண்டு நிலைமையில் இருந்ததென்று சர்ஜியார்ஜ் அர்பத்நெட்டுக்கு நன்றாய்த் தெரியும் என்பதை ருஜுப்படுத்த இந்தத் தந்தி தாக்கல்செய்யவேண்டுமென்று சொன்னார்.

இந்த ஆக்ஷேபணையைக் கோர்ட்டார் குறித்துக் கொண்டார்கள். ஏற்றுக்கொள்ளவில்லை.

வாக்குமூலம்:—இந்தத் தந்தி சர்ஜியார்ஜ் அர்பத்நட் கையால் எழுதப்பட்டிருக்கிறது. கோட்பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் தாத்பரியம் என்னவென்றால், "9000 பவுன் அனுப்பியிருக்கிறேன். சென்னபட்டணத்தைவிட்டுப் புறபட்டுவரத் தோதுபடாது போல் இருக்கிறது. சமீபகாலத்தில் பணக்கசாலா உண்டாகுமென்று பயப்படுகின்றேன். பணவிஷயங்கள் ரொம்பவும் அனுகூலமாயிருந்தாலொழிய நாம் தயாராயிருப்பது அவசியம்.

சர்ஜியார்ஜ் அர்பத்னட்தன்னுடையபாங்கி இன்ஸால்வெண்டு நிலைமையிலிருக்கிறதென்று தெரிந்துகொண்டிருப்பதை இந்தத்தந்தி வெளிப்படுத்துகிறது.

இந்தத்தந்தி தஸ்தாவேஜ் சாக்ஷியாக தாக்கல் செய்யப்பட்டது.

வாக்குமூலம்,—இப்போது காண்பிக்கும் தந்தி சர்ஜியார்ஜ் அர்பத்னட்டால் மெஸர்ஸ் 'மெக்பாடன் கம்பெனிக்கு ஆகஸ்ட் மாதம் 11உ கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் தாத்பரியம் என்னவென்றால்:—அந்தரங்கமான நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. 300000 ரூபாய் செலுத்தப்பட்டுப் போய்விடும். செலுத்தவேண்டியது அவசியம். உடனே பணம் அனுப்பவும். ஒருவாரத்திற்குள் பணவிபத்து உண்டாகும்போலிருக்கிறது.

இந்தத்தந்தியும் சர்ஜியார்ஜ் அர்பத்னட்டால் மெக்பாடன் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் தாத்பரியம் என்னவென்றால், திடீரென்று 345000 ரூபாய்க்கு நோட்டீஸ் வந்திருக்கிறது. நாளைய தினம் இந்தப்பணம் தேவை 200000 ரூபாய் உடனே நீ தந்தி அனுப்பினாலொழிய நாம் பாங்கியை மூடிவிடுவது அவசியமாயிருக்கும். இன்னம் 2 வாரத்திற்குள் 150000 ரூபாய் தேவையாயிருக்கும். பாங்கியை இனிமேல் நடத்தமுடியாதென்பது எங்களுடைய அபிப்பிராயம்.

இந்தத்தந்தி ஆகஸ்டுமாதம் 28உ மெக்பாடனுக்கு சர்ஜார்ஜ் அர்பத்னட்டால் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத்தந்தியில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றால், அடியில்கண்ட சமாசாரத்தை லேடி அர்பத்னட்டுக்குத் தெரியப்படுத்தவும் மிகவும் ரகசியம். ஆகஸ்டுமாதம் 8உ கடிதம் ரத்துசெய்யப்பட்டதாக எண்ணிக்கொள்ளவும். வியாபாரவிஷயங்கள் மிகுந்த சுணக்கமாயில்லை.

இந்தத்தந்தி சர்ஜியார்ஜ் அர்பத்னட்டால் லண்டன் மெக்பாடன் கம்பெனிக்கு ஆகஸ்டுமாதம் 10உ யில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தந்தியின் தாத்பரியம் என்னவென்றால்:— ரூபாய் 345000 கொடுப்பதற்குச் சாத்தியப்படாது என்று நினைக்கிறோம். அப்படிக் கொடுத்தோமானால் கையில் இருப்பிருக்கமாட்டாது. இன்னும் ஒருவாரத்துக்குத்தேவையாயிருக்கும் 100000 உள்பட இந்தமாதத்தில் 250000 ரூபாய் வேண்டியதாயிருக்கிறது. நீர் இந்தத்தொகையை அனுப்பச் சாத்தியப்படாமற்போய்விட்டால் அடுத்த வெள்ளிக்கிழமை பாங்கியை அவசியமாய் மூடும்படியிருக்கும். இதற்கு நீர் சம்மதித்தால் உம்மிடமிருந்து வந்த 50000 த்தைத் திருப்பி அனுப்பத் தயாராயிருக்கிறோம். அனேகம் நோட்டீசுகள் வந்திருக்கின்றன. அடுத்தமாதமுதல் ஒவ்வொருமாதமும் 200000 ரூபாய் பட்டுவாடா ஆகவேண்டியிருக்கிறது. இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்திற்கு விவரமாய் தந்தி அனுப்பவும்.

வாக்குமூலம்:—அந்தத்தந்தி சர்ஜார்ஜ் அர்பத்னட்டால் லண்டன் மெக்பாடனுக்கு அக்டோபர் மாதம் 10உ அனுப்பப்பட்டது. அதன் தாத்பரியம் என்னவென்றால், இன்னும் 50000 ரூபாய் செலவாய்விட்டது. இனிமேல் பிரயோஜனமில்லை

அக்டோபர்மாதம் 11-தேதித் தந்தி:—இந்தவாரம் ரூ. 425000 செலுத்தவேண்டியது. வாரத்துக்குவாரம் ரூ. 125000 செலுத்தவேண்டியதாயிருக்கிறது. ஏற்கெனவே அனுப்பப்பட்ட 150000 உள்பட கையிருப்பு 400000 நாளையதினமாவது அதற்கடுத்த மறுதினமாவது உம்முடைய உதவி வராதுபோனால் எங்களால் பாங்கியை நடத்தமுடியாது.

ஸர் என்றிகிங்:—இந்தத் தந்திகளைத் தாக்கல்செய்துகொள்ளக்கூடாது. அர்பத்னட் கம்பெனியார் அக்டோபர் மாதம் 11உ டிபாஸிடர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்கும் பிரஸ்தாபக்கேசுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

மாஜிஸ்டிரேட்:—சர்ஜியார்ஜ் அர்பத்னட் ஈக்குவிட்டபில் அசுயரன்ஸ் சொஸைட்டியாரிடம் பணம் வாங்கும்போது அவருடைய கம்பெனியிருந்த நிலைமையைக் காண்பிக்கின்றது.

சர் என்றிகிங்:—இந்த சொஸைட்டியாரிடமிருந்து பணம் வாங்கும்போது ஏதேனும் சம்பவித்திருந்தால் அந்த சம்பவங்கள் சாக்ஷியமாகுமேயொழிய இந்தத்தந்திகள் சாக்ஷியமாகமாட்டாது.

மிஸ்டர் பௌல்:—இந்தத் தந்திகளைத்தாக்கல் செய்வதில் என் கருத்து என்னவென்றால், சர்ஜியார்ஜ் அர்பத்நட் சொஸைட்டியாரிடமிருந்து பணம் வாங்கும் காலத்தில் அவர் மிகுந்த பணமுடையவராயிருந்தார் என்றும் அவருக்கு அந்தச் சமயத்தில் ஒவ்வொரு நிமிஷமும் கிடைக்கும் பணமும் அவருக்கு மிகுந்த முக்கியமான பணமாயிருந்ததென்றும் காண்பிக்கும் பொருட்டே ஆகையால் சொஸைட்டிக்குச் சேர்ந்த பெருந் தொகையாகிய எழுபதினாயிரம் ரூபாயை அர்பத்நட் பாங்கியார் தங்களுடைய சொந்த உபயோகப்படுத்திக் கொண்டார்கள். அதனால்தான் அர்பத்நட்டார் சொஸைட்டியின் பணத்திற்கு உடனே கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கவில்லை.

சர் என்றி கிங் :—ஆனால் சொஸைட்டியின் பணத்தை அர்பத்நட் கம்பெனியார் வைத்துக்கொள்ள அதிகாரமில்லையோ?

மிஸ்டர் பௌல்:—அந்தப் பணத்தைச் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சர் என்றி கிங்:—நான் ஆக்ஷேபணை செய்ததைக் கோர்ட்டார் தாக்கல்செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வாக்குமூலம்:—இப்போதுஎனக்குக்காண்பிக்கும் தந்தி அக்டோபர்மீ 12உ சர் ஜியார்ஜ் அர்பத்நட்டால் மாக்பெடயனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் தாத்பரியம்என்னவென்றால்,"கையிருப்பு மிகசொற்பம். அடுத்த செவ்வாய்க்கிழமைக்குள் ரூ. 375,000-க்குகொடுக்காமலிருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தி பாங்கியை நடத்தவேண்டியதாயிருந்தால் குறைந்தபக்ஷம் இரண்டுலக்ஷ ரூபாய் வேண்டியதாயிருக்கின்றது. இதையன்றி அடுத்தவாரம் டிமாண்டிற்கு ரூ. 15,0000 வேண்டியதாயிருக்கிறது. நீர் இந்தப் பணம் அனுப்பாத விஷயத்தில் பாங்கியை அடுத்த செவ்வாய்க்கிழமை மூடவேண்டியதாயிருக்கும். இல்லையேல் சாத்தியப்படமாட்டாது. ராஜா சர் சவலை இராமசாமி முதலியாரிடமிருந்து ரூபாய் இரண்டுலக்ஷம் கடன்வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். இதைத்தவிர வேறேயாதொரு மார்க்கமுமில்லை. உமக்குச் சம்மதமா?

சர் ஜியார்ஜ் அர்பத்நட்டால் மெக்பாடனுக்கு அக்டோபர்மீ 13உ கொடுக்கப்பட்ட தந்தி:—ராஜா சர் சவலை இராமசாமி முதலியாரைக்கண்டு பேசினோம். பணவிபத்து சமீபத்தில் உண்டாகாதபடி கூடிய வரையில் பிரயாசப்பட்டு வருகின்றோம். இதைக் குறித்து அடுத்த திங்கட்கிழமை தந்தி சொல்லுகிறோம்.

அக்டோபர்மீ 15உ அடித்த தந்தி:—இன்னும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். முடிவு நாளைய தந்தியில் அறிவிக்கிறோம்.

அக்டோபர்மீ 16உ அடித்த தந்தி:—இன்னும் பேச்சு நடந்துகொண்டிருக்கிறது. முடிவு மிகுந்த சந்தேகமாயிருக்கிறது. எப்படியிருந்தாலும் உமக்கு இன்று அனுப்பியிருக்கும் மூவாயிரம் பௌன் உள்பட 5000-ம் பௌன்தான் அனுப்பமுடியும். நீர் அக்டோபர்மீ 10உ யில் சொல்லியிருந்தபடி அக்டோபர்மீ 20உ 3500 பௌன் தராமல் அனுப்பிவிட வேண்டும். புதன்கிழமை ஓய்வுநாள்.

அக்டோபர்மீ 18உ தந்தி:—டிபாசிட்டர்கள் பாங்கியில் போட்டிருந்தபணத்தை வாங்கிக்கொண்டுவருகிறார்கள். நம்பிக்கை கெட்டுப்போய்விட்டது. திடீரென்று ஆபத்துவரும்போலிருக்கிறது. நாளையதந்தியில் சொல்லுகின்றோம்.

அக்டோபர்மீ 19உ தந்தி:—சாத்தியமானால் 2 ஆயிரம் பௌன் நாளைய காலமே அனுப்பமுடியுமா? பணத்திற்கு டிமாண்டு அதிகமாயிருக்கின்றது.

அக்டோபர்மீ 20உ தந்தி:—பட்வாடாவை நிறுத்து (அதாவது பாங்கியை மூடு).

சர் என்றி கிங்:—இந்தத்தந்தி சர்ஜியார்ஜ் அர்பத்நட்டால் அனுப்பப்படவில்லை. ஆகையால்இதைக்கோர்ட்டார் தாக்கல் செய்யக்கூடாது. ருஜுப்படுத்தினால் தாக்கல் செய்து கொள்ளலாம்.

மிஸ்டர் பௌல்:—இந்தப்படி தந்தி அனுப்பியதாக சர்ஜியார்ஜ் அர்பத்நட்டே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சர் என்றி கிங்:—இதே வார்த்தைகள் அடங்கிய யாதொரு தந்தியும் கொடுக்கவில்லை என்று சர்ஜியார்ஜ் அர்பத்நட் சொல்லுகிறார்.

வாக்குமூலம்:—அர்பத்நட் பாங்கி மூடும்போது சர்ஜியார்ஜ் அர்பத்நட், மாக்படேயின், யங் ஆகிய மூவரும் பார்ட்னர்களாகவிருந்தார்கள். மிஸ்டர் ரெயினால் அர்பத்நட், கம்பெனியில் பார்ட்டனராக விருந்தாரோ என்னமோ என்னால் சொல்லமுடியாது.

பார்ட்னர்களில்சர்ஜியாஜ் அர்பத்நட்டும் யங்கும், சென்னபட்டணத்தி லிருந்தார்கள், 1906-ம்ஆ ஜுலைமீ த்தில் சர்ஜியார்ஜ் அர்பத்நட் சென்னையிலிருந்தார். 1906-ம்ஆ ஜுலைமீ முதல் பாங்கி மூடப்படும் பரியந்தம் சென்னையிலேயேதானிருந்தார். சென்னையில் முக்கியமான பார்ட்னர் யாரென்றால் சர்ஜியார்ஜ் அர்பத்நட்.

கேள்வி:—இந்தக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறது?

விடை:—சர்ஜியார்ஜ் அர்பத்நட்டால் அபிஷியல் அசயினிக்கு எழுதப்பட்டிருக்கிறது.

கேள்வி:—என்ன எழுதியிருக்கிறது? வாசியும்.

விடை:—(வாசிக்கிறார்.) "மதராஸ் ஈக்குவிட்டபில் அசுயுரன்ஸ் சொசைட்டிக்காக பாங்கியை மூடுவதற்குச் சிலதினங்களுக்கு முந்தி வாங்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் ஷை சொசைட்டியின் டைரக்டர்கள் உத்தரவுசெய்தபடி வாங்கப்பட்டிருக்கிறது. டைரக்டர்கள் உத்தரவுசெய்தபடி நாங்கள் நடந்துகொள்ளுவது எங்களுடைய கடமை. ஆகையால் ஷை கவர்ன்மெண்டு புரோநோட்டுகளை வாங்கியிருக்கிறோமே ஒழிய மற்றப்படி அந்த சொசைட்டிக்கு மற்ற டிபாசிட்டர்களைக் காட்டிலும் அபிமானம் பாராட்டி அந்த சொசைட்டிக்குச் சேரவேண்டியகடனை மட்டிலும் செலுத்திவிட்டதாக எண்ணக்கூடாது.

மிஸ்டர் பௌல்:—முந்திய தினம் மிஸ்டர் லின் சாக்ஷியம் சொல்லும்போது டைரக்டர்கள் உத்திரவுப்படி பொக்கிஷதாரிகள் நடக்கக் கட்டுப்பட்டவர்களா அல்லவா என்று தாம் சொல்லமுடியாது என்று சொன்னார். இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் கடிதத்தில் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டே தங்களுடைய கம்பெனியார் டைரக்டர்கள் செய்த உத்திரவின்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

4-வது சாக்ஷி செல்லபதி செட்டி:—அர்பத்னட் கம்பெனியில் நான் காஷிட் கிளர்க்காயிருந்தேன். அக்கம்பெனியில் 15 வருஷமாயிருக்கிறேன். அதில் 5 வருஷகாலம் பிக்ஸட்டிபார்டுமெண்டில் வேலைபார்த்துவந்தேன். (இவா அர்பத்னட் கம்பெனியின் கணக்குப்புஸ்தகங்களைக் கொண்டுவந்து ஈக்குட்டபில் அசுரன்ஸ் சொசைட்டியின் பணம் ஜுலைமாதம் 31உ இவ்வளவு இருந்ததென்றும் இன்ன இன்ன தேதிகளில் கவர்ன்மெண்டு புரோநோட்டுகள் வாங்கப்பட்டது என்றும் இவ்வளவு ரூபாய்க்கு வாங்கவில்லை என்றும் கணக்குப்புஸ்தகங்களைக் காண்பித்தார்.)

மிஸ்டர் பௌல்:—சர் ஜியார்ஜ் அர்பத்நட் இன்சால்வென்சி கோர்ட்டில் சொல்லியிருக்கும் சில வாக்கு மூலங்களை இந்தக் கோர்ட்டில் சாக்ஷியமாகத் தாக்கல் செய்ய விரும்புகிறேன்.

சர் என்றிகிங்:—சிவில் கோர்ட்டில் சொன்ன வாக்குமூலத்தைக் கிரிமினல் கேசில் தாக்கல் செய்யக்கூடாது.

மிஸ்டர் பௌல்:—இ. லா. ரி. 3 சென்., 12. சென். சொல்லப்பட்டிருக்கிறபடி தாக்கல் செய்யலாம். இன்சால்வென்சி கோர்ட்டில் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் அவர் கட்டாயப்படுத்தப்பட்டு எழுதி வைத்த வாக்கு மூலமல்ல.

மாஜிஸ்டிரேட்:—ஆக்ஷேபணையை தாக்கல்செய்துகொண்டேன். மிஸ்டர் பௌல்! நீர் அந்த வாக்கு மூலங்களை இந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்யலாம்.

இதன்பிறகு மதிராஸ் டைம்ஸ் பத்திரிகையைச் சேர்ந்த மிஸ்டர் N. C. ராஜகோபாலாசாரியரும், மதிராஸ் மெயில் பத்திரிகையைச் சேர்ந்த மிஸ்டர் C. V. முனுசாமி அய்யரும் முறையே 5-வது 6-வது சாக்ஷிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள்.

இவர்கள் தாங்கள் இன்சால்வெண்டு கோர்ட்டாரால் ஷை கோர்ட்டின் நடவடிக்கைகளைக் குறிக்கும்படி நியமிக்கப்பட்டதாகவும் அர்பத்நட் இன்சால்வென்சி விசாரணை முழுதிலும் ஒன்றுகூடத் தவறாமல் எழுதியிருப்பதாகவும், அவர்கள் யாதொரு பிழையு மற்ற ரிப்போர்டுகள் என்றும் சாக்ஷியம் சொன்னார்கள்.

மிஸ்டர் பௌல்:—சர் ஜியார்ஜ் அர்பத்நட் இன்சால்வெண்டு கோர்ட்டில் கடந்த ஏப்பிரல்மீ 9உ கொடுத்த வாக்குமூலத்தைத் தாக்கல்செய்ய விரும்புகிறேன்.

7-வது சாக்ஷி:—நான் இன்சால்வெண்ட் கோர்ட்டு கிளர்க்கு. ஏப்பிரல்மீ 1உ சர் ஜியார்ஜ் அர்பத்நட் கொடுத்த வாக்குமூலத்தின் நகல் இதோ யிருக்கிறது.

மிஸ்டர் பௌல்:—ஷை வாக்கு மூலத்தில் சர் ஜியார்ஜ் அர்பத்நட் மதராஸ் ஈக்குவிட்டபில் அசூயரன்ஸ் சொசைட்டிக்காகக் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கும் வாக்குமூலத்தை வாசித்துக் காண்பித்தார்.

8-வது சாக்ஷி மிஸ்டர் G. சீனிவாசா சாரியார்:—நான் அர்பத்நட் பாங்கியின் காஷ்கீப்பர். 30 வருஷமாக இந்த உத்தியோகத்தி லிருக்கிறேன். பாங்கிமூடப்படும்போதும் நான்காஷ்கீப்பராயிருந்தேன். ஒவ்வொரு நாளும் நான் ரொக்கக் கையிருப்பு ஸ்டேட்டுமெண்டு தயார்செய்து கையெழுத்துப் போடுகிறது வழக்கம். அதில் காஷ் ரயிட்டரும் கையெழுத்துப் போடுகிறது வழக்கம். அந்த ஸ்டேட்டுமெண்டு ஒவ்வொரு நாளும் எவ்வளவு ரொக்கக்கையிருப்பு இருக்கிறதென்று காண்பிக்கும். கை யிருப்பு ஸ்டேட்டுமெண்டு தயார் செய்வது என்னுடைய கடமை. 1096ம்ஆம் அக்டோபர்மீ 20உ ரொக்கக் கையிருப்புரூ. 35714-5-6. மதிராஸ் பாங்கியிலிருந்து அர்பத்நட் கம்பெனியார் ரூ. 2,17356-5-8 அதிகப் பத்து பத்தியிருப்பதாகக் காஷ் புத்தகத்தால் தெரிய வருகின்றது.

அர்பத்நட் கம்பெனியார் ரூ. 2,50,000 வரையில் ரொக்கம் பத்திக்கொள்ளலாமென்று சம்மதம் கொடுத்திருந்தார்கள். 1906ம் ஆ ஜூலைமீ 31உ அர்பத்நட் கம்பெனியின் ரொக்கக் கையிருப்பு ரூ.46,599-8-9 அந்தத்தேதிவரையில் மதிராஸ் பாங்கியில் அதிகமாய்ப் பத்தியது ரூ. 35,235-4-8.

8-வது சாக்ஷி மிஸ்டர் கிரகாம்ராஸ்:—இவரும், பிரஸ்தாப சொசைட்டியின் டைரக்டர்கள் உத்திரவு செய்ததைக் குறித்தும் சர் ஜியார்ஜ் அர்பத்நட் அவ்வளவு தொகைக்கும் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் வாங்கவில்லை என்றும் சொசைட்டியின் கணக்கு விஷயங்களைக் குறித்தும் சாக்ஷியம் சொன்னார்.

இத்துடன் மதராஸ் ஈக்குவிட்டபில் அசூயரன்ஸ் சொசைட்டி விஷயமாகச் சர் ஜியார்ஜ் அர்பத்நட் செய்திருக்கும் நம்பிக்கை மோசக் குற்றம் இத்துடன் முடிவானது. ராஜா வேணுகோபால் பகதூர் விஷயமாகச் செய்திருக்கும் மோசம் திங்கட்கிழமை விசாரணைசெய்யப்படும்.

N. B.—இந்தக் கேசில் மேமீ 27உ அதன்பிறகு மேமீ 31உ விசாரணை நடவடிக்கைகள் மட்டிலும் எழுதியிருக்கிறோம் விசாரணை நடந்துகொண்டிருப்பதை அடுத்த மாத கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

எழும்பூர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை சென்னை ஹைகோர்ட்டிலுள்ள இரண்டாவது ஸ்மால்காஸ் கோர்ட்டில் விசாரணை நடத்தினர். திங்கட்கிழமை முதல் எழும்பூர் போலீஸ் கோர்ட்டிலேயே விசாரணை நடத்தப் போகிறார்கள்.

இந்தியன் பினல்கோட் 268-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நியூசன்ஸ் குற்றத்தை ஸ்தாபிப்பதற்கு அந்த நியூசன்ஸ் Nuisance:—தேகத்திற்குத் தீங்கு செய்யக்கூடியதாயிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. நாசிக்குப்பாதகரமாயிருந்தால் அதாவது துர்க்கந்தம் வீசுவதாயிருந்தால் போதுமானது.

ஒரு எலும்பாலை மானேஜர் தம்முடைய ஆலைக்குச் சமீபத்தில் ஒரு விடத்தில் எலும்புகளைக்குவித்து அவைகள் பேரில் யாதொன்றும் போட்டு மூடாமல் வெகுகாலம் வைத்திருந்தார். அதனால் எலும்புகள் அழுகிப்போய் சமீபத்தில் வசித்துக்கொண்டுவந்த ஜனங்களுக்கும் அப்பக்கமாய்ப்போக்குவரத்து செய்துகொண்டுவந்த ஜனங்களுக்கும் துர்க்கந்தம் வீசிக்கொண்டிருந்தது. மானேஜர் பேரில் இ. பி. கோ. 268, 290-வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் பப்ளிக் நியூசன்ஸ் செய்த குற்றம் சாட்டப்பட்டது. மானேஜர் கிரமமாய் தொழில் நடத்தும் முறையில் அப்பாதிரியான செய்கையைச்செய்யப் பாத்திய மற்றவர் என்றும் பப்ளிக் நியூசன்ஸ் என்னும் குற்றத்தைச் செய்திருக்கிறார் என்றும் கல்கத்தா ஹைகோர்ட்டார் நிர்மாணித்திருக்கிறார்கள். பெர்க் பீல்ட்பி சக்ரவர்த்தி இ. லா. ரி. 34. கல். 73.

மாஜிஸ்டிரேட் ஒரு குற்றவாளியின் பேரில் இரண்டு பிரத்தியேக குற்றஸ்தாபனைகள் செய்து இரண்டு குற்றங்களுக்கும் சேர்த்து ஒரு தண்டனை விதித்தார். கைதி அப்பீல் செய்துகொள்ள, அப்பீல் கோர்ட்டார் ஒரு குற்றஸ்தாபனையை மட்டிலும் உறுதிப்படுத்தினார்கள், மற்றொரு குற்றஸ்தாபனையை ரத்துசெய்து விட்டார்கள். கீழ்க்கோர்ட்டார் விதித்த தண்டனையையும் மாற்றாமல் உறுதிப்படுத்திவிட்டார்கள். கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான். முதல் அப்பீல் கோர்ட்டார் ஒரு குற்றத்தை மட்டிலும் உறுதிப்படுத்தி, ரத்துசெய்த குற்றஸ்தாபனைக்குத் தகுந்தபடி தண்டனையைக் குறைக்காமற்போனது தண்டனையை உயர்த்தினதற்குச் சமானமாக விருக்கிறதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

***

கி. பு. கோ. 106-வது பிரிவின்படி நல்ல நடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படி செய்யும் உத்திரவு அப்பீல் கோர்ட்டாரால் செய்யப்படக்கூடாது. ஆனால் எந்தக் கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் குற்றம் ஸ்தாபித்தார்களோ அந்தக் கோர்ட்டார் ஷை பிரிவு முதல் பாராவில் சொல்லப்பட்டிருக்கும் கோர்ட்டாராயிருந்தால் அப்பீல் கோர்ட்டார் உத்திரவு செய்யலாம் என்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். பரமசிவம்பிள்ளை சக்ரவர்த்தி இ. லா. ரி. 30. சென். 48.

***

ஒரு பஞ்சாயத்தார் தீர்மானத்தில் அடியிற் கண்ட பிரகாரம் சொல்லப்பட்டிருந்தது. "அடியில் கண்டபடி நாங்கள் தீர்மானிக்கிறோம். கக்ஷிக்காரர்கள் அதன் பிரகாரம் நடந்து கொள்ளவேண்டும். சட்டப்பிரகாரமான விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டுப் பிரதிவாதி அடியில் கண்ட சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

இப்படி எழுதிவிட்டுப் பிரதிவாதி இன்னின்ன மாதிரி நடந்து கொள்ளவேண்டுமென்று உத்திரவுசெய்திருந்தார்கள். இதன்பின் "நாங்கள் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படியாகவும் அவர் பெற்றுக்கொள்ளும்படியாகவும் என்னென்ன தீர்மானித்திருக்கிறோமோ அவர் சரியான ஸ்டாம்பு போட்டு விடுதலைப்பத்திரம் எழுதி ரிஜிஸ்டர்செய்து கொடுத்துவிட்டு அச்சொத்துக்களை வசப்படுத்திக்கொள்ளும்படியும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும் பணத்தைக் கொடுக்கும்படியும் உத்திரவு செய்கிறோம்" என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த ஆதரவு இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட் இரண்டாவது பிரிவு 15-வது கிளாசில் சொல்லப்பட்டிருக்கும் பஞ்சாயத்தார் பாகம் பிரித்துக்கொள்ளும்படி உத்திரவு செய்த தீர்மானம் (an award directing a partition) என்று அதற்குப் போடவேண்டிய ஸ்டாம்பு போடவேண்டுமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. 310-ம் 68.

சென்னபட்டணம்

ஹைகோர்ட்டு.

1907-ம் ஆ த்திய இரண்டாவது கிரிமினல் செஷன்ஸ்.

(தொடர்ச்சி).

ஜட்ஜி:—ஹானரபில் சிப் ஜஸ்டிஸ்.

இரண்டாம்நாள் ஏப்பிரல்மூ 16உ

புரட்டுக்கணக்கு எழுதிப் பணத்தைச் சொந்த உபயோகப்படுத்திக்கொண்ட கேஸ்.

குற்றவாளி:—அண்ணாமலை முதலியார்.

கேசின் விபரம்:—சென்னபட்டணம் லாரன்ஸ் அசைலம் அச்சுக்கூடத்தில் அண்ணாமலை முதலியார் என்பவர் காஷ்கீப்பர் உத்தியோகம் பார்த்து வந்தார்.

1906-ம் ஆ ஜனவரிமாதத்திற்கும் ஆகஸ்ட்மாதத்திற்கும் மத்தியில் மெஸர்ஸ் மகமடாலி சிவாஜி கம்பெனியார்பேரில்ஏற்பட்டிருந்த மூன்றுபில்லுகளின்விஷயமாகப் புரட்டுக்கணக்கு எழுதியதாகவும் ஷை அச்சுக்கூடத்திற்குச் சொந்தமான ரூ. 88-3-4 யை நம்பிக்கை மோசம் செய்ததாகவும் ஆகவே இவ்விருகுற்றங்களுக்கும் குற்றம் சாட்டப்பட்டார்.

ஜூரர்கள்:—மெஸர்ஸ் சாமுவேலபிரைஸ் (போர்மென்) Z. J. ஹான்ட், C. ஷண்முக முதலியார், A. C. பால்மன், H. P. உவில்லியம்ஸ், ஜோசப்ராடிரிக்ஸ், நாராயண அய்யர், G. C. A. கோல்மான், நாமம் சோமசுந்தர முதலியார்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் ஜான் ஆடம், பாரிஸ்டர் மிஸ்டர் E. R. ஆஸ்பர்ன் ஆகிய இருவர்களும் பிராசிக்கியூஷன் தரப்பில் பேசினார்கள். கைதி தரப்பிற்கு சொலிசிட்டர் கம்பெனியார்களாகிய மெஸர்ஸ் ஷார்ட் அண்டுபியூஸ் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மண்டு பேசினார்.

மூன்றாம்நாள்-ஏப்பிரல்மீ 17உ கேசின் நடவடிக்கை:—கைதி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. சாக்ஷி விசாரணைமுடிந்தபின்னர் பாரிஸ்டர்கள் அட்ரைஸ் பேசினார்கள். இதன்பிறகு ஜட்ஜிகளின் சாராம்சத்தை ஜூரர்களுக்குச் சொல்ல ஜூரர்கள் எழுந்திருந்து ஆலோசனை அறைக்குச் சென்றார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—15 நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பிவந்து கைதி நிரபராதி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கைதியை விட்டுவிடும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

கட்டிடத்தில் திருடின கேஸ்.

குற்றவாளி:—திட்டக்காரக் குப்பன்.

கேசின் விபரம்:—சென்ன பட்டணம் வண்ணாரப்பேட்டையில் தொரைக்கண்ணு என்பவர்வீட்டிலிருந்து சென்ற மார்ச்சுமீ 12உ ஒரு நூறுரூபாய் கரன்சிநோட்டைத் திருடினதாகக் குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. இதற்குமுன் 6 முறை தண்டனையடைந்து ஜெயிலுக்குப் போய்வந்தவன் என்று ருஜூப்பட்டது.

தீர்ப்பு:—கோர்ட்டார் கைதிக்கு மூன்றுவருஷக் கடுங்காவல் தண்டனைவிதித்து ஜெயிலிலிருந்து வந்தவுடன் மூன்றுவருஷம்வரையில் போக்குவரத்துகளைப் போலீசாருக்கு ரிப்போர்ட் செய்துகொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது

V

நான்காம் நாள்:—ஏப்ரல்மீ 18உ

கன்னம் வைத்துத்திருடின கேஸ்.

குற்றவாளி:—முனுசாமி என்கிற சேனை.

கேசின்விவரம்:—கடந்த மார்ச்சுமீ 12உ குற்றவாளி ஒரு வீட்டிற்குள் புகுந்து இரண்டு உலக்கைகளையும் இருப்புக்கரண்டிகளையும் திருடினதாகக் குற்றம் சாட்டப்பட்டான். தண்டையார் பேட்டையில் முகுந்து என்பவன் தன்னுடைய குடிசையை மூடிக்கொண்டு அடுத்த வீட்டிற்குப் போயிருக்கையில் குற்றவாளி கூரையில் ஒரு தொண்டி செய்து உள்ளே குதித்து ஷை சாமான்களை வெளியே எடுத்துப்போட்டுவிட்டுத் தானும் அத்தொண்டி வழியாக வருகையில் ஷை முகுந்து என்பவனின் பெண்சாதி கண்டு கூக்குரல்போட பாட்டைசாரிகள் பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவித்தார்கள்என்பது பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்லும் கக்ஷி.

ஜூரர்கள்:—மெசர்ஸ் H. பிளம்ப், (போர்மன்) மீர் உசேனி ஆலிசாகிப், J. J. ராட்ரிக்ஸ், R. J. பாட்ரிக், மீர்ஜா காதர்பெக்சாயப், W. W. லால், R. முதலியாண்டான் செட்டி B. A. R. J. லில்க்கின்ஸ், R. சுந்தரமய்யர் B. A.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பில் நான்கு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளி தான் இதற்கு முன் 9 தடவை தண்டனை அடைந்து ஜெயிலுக்குப்போனதை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு:—கோர்ட்டார் கைதிக்கு மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்து ஜெயிலிலிருந்துவந்தவுடன் மூன்று வருஷம்வரையில் போக்குவரத்துக்களைப் போலீசாருக்கு அறிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

கன்னம் வைத்துத் திருடின கேஸ்.

குற்றவாளி:—சோட்டாசிங்.

கேசின்விவரம்:—ஜியார்ஜ்டௌனில் திருவேங்கடநாயுடு என்பவர் வீட்டில் குற்றவாளி புகுந்து ரூ. 361-10-0 பெறுமான சரிகை வேஷ்டிகளைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டான்.

ஐந்தாம் நாள்:—ஏப்பரல்மீ 19உ.

கேசின் நடவடிக்கை:—கைதி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. டிபன்ஸ் தரப்பில் 5 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். கைதிதானே ஜூரர்களுக்குத் தன்னுடைய கேசைப்பற்றி எடுத்துச்சொல்லி போலீசாருக்கும் தனக்குமுள்ள விரோதத்தால் போலீசார் இந்தக்கேசைக் கற்பனைசெய்து கொண்டுவந்திருப்பதாகச்சொன்னான். ஜட்ஜி ஜூரர்களுக்குப் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் சொன்னதையும் டிபன்ஸ் தரப்பு சாக்ஷிகள்சொன்னதையும் சங்கிரகமாக எடுத்துக்கூற ஜூரர்கள் கைதி குற்றம் செய்யவில்லை என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்மானம்:—கோர்ட்டார் ஜூரர்கள்கூறின அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கைதியை விட்டுவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

VII

கோழி திருடினகேஸ்.

குற்றவாளி:—சிங்காரம் என்கிற ஆறுமுகம் என்கிற குமாரசாமி முதலி.

கேசின் விபரம்:—கைதி ஏப்பிரல்மீ 12உ கையில் இரண்டுகோழிகள் தூக்கிகொண்டு பூந்தமல்லி ஹைரோட்டு வழியாக வந்தான். வந்து கொண்டிருக்கையில் பீட்டிலிருந்த போலீஸ்கான்ஸ்டேபிளுக்குச் சந்தேகமுண்டாகி ஏது கோழி என்று கேட்க, அவன் சரியானபதில் சொல்லவில்லை. அதன்பேரில் குற்றவாளி

சந்தேகத்தின்பேரில் டாணாவில்வைக்கப்பட்டிருந்தான். பிறகு விசாரணையில் குற்றவாளி சைதாப்பேட்டைதாலூக்காவீரம்பாக்கம்கிராமத்தில் ஒருகிராமத்தானுக்குச் சொந்தமானகோழிகளைத் திருடினதாகத்தெரியவந்தது. ஆகவே இவன் கோழிகள் திருடினகுற்றத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். கைதி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. தான் ஒரு கிராமத்தானிடமிருந்து கிரயம்கொடுத்து வாங்கினதாக டிபன்ஸ் கூறினான்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—கைதி குற்றம்செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 15 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

6-வதுநாள்-ஏப்பிரல்மீ 22உ

VIII

ஆள்மாறாட்டம்செய்து ஏமாற்றினகேஸ்.

குற்றவாளி:—லாரன்ஸ் என்றி இக்ஸ்.

கேசின் விபரம்:—குற்றவாளி தென் இந்தியா ரெயில்வேயில் கார்டாயிருந்து தள்ளுபடிசெய்யப்பட்டவன். இவன் 1906-ம்ஞு நவம்பர்மீ 30உ க்கும் 1906-ம்ஞு மார்ச்சுமீ 30உ க்கும் மத்தியில் திருச்சிநாப்பள்ளியில், உதகமண்டலம் அஸிஸ்டெண்ட் அட்ஜரட்டண்ட் ஜெனரலிடம் லாரன்ஸ் என்றிஇக்ஸ் என்கிற சோல்ஜர் தான்தான் என்றுசொல்லி ஒரு பிசகான நன்னடக்கை சர்ட்டிபிக்கேட் தாக்கல்செய்து ஏமாற்றி ஏப்பிரல்மீ த்துச் சம்பளத்தை வாங்கிவிட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி இந்த இரண்டு குற்றத்தையும் ஒப்புக்கொண்டுவிட்டான்.

தீர்மானம்:—குற்றவாளி ஏற்கனவே 5 மாதகாலம் ஜெயிலிலிருந்திருப்பதால் அதை உத்தேசித்துக் கோர்ட்டார் அவனுக்கு மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

இரண்டாவது கிரிமினல் செஷன்ஸ் முடிவடைந்தது.

Proceedings of the Meeting of the Madras Legislative Council.

சென்னை சட்ட நிரூபண சபையார் கூடி நடத்தின நடவடிக்கைகள்.

சென்னைச்சட்ட நிரூபண சபையின் அங்கத்தினர்கள் கடந்த ஏப்ரலமீ 9உ சென்ன பட்டணம் போர்ட்சென் ஜியார்ஜ் கோட்டைக்குள் இருக்கும் கவுன்சில் சேம்பரில் ஒரு கூட்டம் கூடினார்கள். கவர்ன்மெண்டு அங்கத்தினர்களாகிய ஹானரபில் மிஸ்டர் G: S. போர்க்ப்ஸ், ஹானரபில் மிஸ்டர் M. ஹாமிக், ஹானரபில் மிஸ்டர் H. பிராட்லி, ஹானரபில் மிஸ்டர் J. N. அட்கின்சன், ஹானரபில் திவான் பகதூர் R. V. சீனிவாச அய்யர், ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களில் ஹானரபில் குருப்பம் ராஜா, ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர், ஹானரபில் மிஸ்டர் B. N. சர்மா, ஹானரபில் மிஸ்டர் K. சீனிவாசராவ் ஆகிய இவர்கள் வந்திருந்தார்கள். இன்னும் சர். V. பாஷியமய்யங்கார், ஹானரபில் மிஸ்டர் J. ஆண்டிரு, ஹானரபில் மிஸ்டர் C. J. லீன். ஹானரபில் மிஸ்டர் F. J. வில்சன், ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர், ஹானரபில மிஸ்டர் J. டேவிக், ஹானரபில் கொலிங்கோடு ராஜா, ஹானரபில் மிஸ்டர் ராஜாக்கான், ஹானரபில் மிஸ்டர் H. P. ஹாட்சன், ஹானரபில்மிஸ்டர் A. G. கார்டியூ, ஹானரபில் மிஸ்டர் V. G. லின், ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர், ஹானரபில் சர். V. தேசிகாசாரியார், மிஸ்டர் H. D. டெய்லர்.

ஹானரபில் மிஸ்டர் C. K. சீனிவாசராவும், ஹானரபில்மிஸ்டர் ஆனடிருவும், அடிஷனல் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று செக்ரட்டரி ரிப்போர்ட் செய்தார்.

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அவர்கள் கேட்டகேள்விகளும் அவைகளின் விடைகளும்.

I. (a) "யூரேஷிய கிளார்க்குகளுக்குப் பெர்சனல் அலவன்ஸ்" என்று தலைப்பெயரிட்ட வியாசம் ஒன்று 1907-ம் ஞு மார்ச்சுமீ 8உ இந்தியன் பேட்ரியட் பத்திரிகையிலும் மார்ச்சுமீ 12உ ஹிந்துபத்திரிகையிலும் எழுதப்பட்டிருந்ததே அதைக் கவர்ன்மெண்டார் பார்த்தார்களா?

(b) போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீசில் மாதம் ஒன்றுக்கு 80 ரூபாய் சம்பளத்தில் ஸ்டோர் கீப்பர் உத்தியோகத்திலிருக்கும் மிஸ்டர் கிப்ஸ் என்பவர் தம்முடைய சம்பளத்தை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் காரேஜ் அலவுன்ஸ் என்கிற வண்டி அலவுன்ஸ் கொடுக்கும்படியாக மனு செய்துகொள்ள, இதைவிட அதிக பணம் கிடைக்கக்கூடிய வீட்டுவாடகை அலவுன்ஸ் கவர்ன்மெண்டார் கொடுத்துவரும்படியாக இன்ஸ்பெக்டர்ஜெனரல் சிபார்சுசெய்தது வாஸ்தவம்தானா?

(c) கவர்ன்மெண்டார் இவருக்குப் பெர்ஸனல் அலவுன்சாகக் கொடுத்துவரும்படியும், பென்ஷன் பெற்றுக்கொள்ளுகிறகாலத்தில் இந்த அலவுன்சைச் சம்பளத்துடன் சேர்த்துக் கணக்கு செய்துகொள்ளும்படியும் உத்தரவுசெய்திருப்பது வாஸ்தவம்தானா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி பதில் கூறினார்:—

(a) கவர்ன்மெண்டார் இந்த வியாஜ்ஜியங்களை இப்போது பார்த்தார்கள்.

(b) கடந்த 6 வருஷகாலமாக மிஸ்டர் கிப்ஸ் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 சம்பளத்திலிருக்கிறார். அவர் சென்னையிலிருப்பதைவிட வெளியூரிலிருந்தால் நலமாயிருக்குமென்றும், வெளியில் அவருடைய ஊழியம் அவசியமாயிருக்கிறதென்றும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் அபிப்பிராயப்பட்டு அவருக்கு வீட்டுவாடகை அலவுன்ஸ் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 25 கொடுத்துவரும்படியாகச் சிபார்சுசெய்தார்.

(c) மிஸ்டர் கிப்சுக்கு வீட்டுவாடகை அலவுன்ஸ் கொடுத்தால் அவருக்குப்பின் அந்த உத்தியோகத்திற்கு வருகிறவர்களுக்கும் அம்மாதிரி வீட்டுவாடகை அலவுன்ஸ் கேட்பார்களென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டு அவருக்குமட்டிலும் பிரத்தியேகமாகப் பெர்சனல் அலவுன்ஸ் கொடுத்திருக்கிறார்கள்.

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர்கேள்வி.

(11) (a) இந்நகரில் ஆகார சாமான்களின்விலை உயர்ந்திருப்பதை முன்னிட்டு இன்ஸ்பெக்ட்டர்ஜெனரல் ஆபீசில் லஸ்கர் உத்தியோகத்திலிருப்பவர்கள் தங்களுக்குமாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அலவுன்ஸ் கொடுக்கும்படி மனுசெய்துகொண்டது வாஸ்தவம்தானா?

(b) கவர்ன்மெண்டார் அம்மாதிரி அலவுன்ஸ்சொற்பகாலத்திற்காகிலும் கொடுத்துவர இஷ்டப்படுவார்களா?

ஜவாப்பு. (II) (a) 1906-ம்ஞு நவம்பர்மீ 21உ லஸ்க்கர்கள் அனுப்பிய விண்ணப்பம் போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் ஜனரலுக்கு வந்து சேர்ந்தது. அதில் தங்களுடைய சம்பளம் வெகுகாலத்திற்முந்தி நிர்ணயிக்கப்பட்டதென்றும், அப்போது அவர்களுக்கு அதிகவேலைகளில்லை என்றும் இப்போது அதிகவேலைகள் செய்துவருவதாகவும், காலக்ஷேபத்திற்கு இக்காலத்தில் அதிகச்செலவு பிடிக்கிறதென்றும் ஆதலால் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

(b) ஆகாரசாமான்களின் விலை உயர்ந்திருப்பதால் தற்சமயம் ஏதேனும் அலவுன்ஸ் வேண்டுமென்று அவர்கள் வேண்டிக்கொள்ளவில்லை.

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர்.

கே. (III) (a) சீப்செக்ரெட்டரி ஆபீசில் உத்தியோகம்பார்க்கும் ரூ. 100 சம்பளத்திற்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு ஐரோப்பியர் அல்லது யுரேஷிய கிளர்க்கும் 100 சம்பளம்பெறுகிறவரையில்மாதம் ஒன்றுக்கு அவர்களுடைய சம்பளத்துடன்கூட பெர்சனல் அலவுன்சாக ரூ. 20 சேர்த்து வாங்கிக்கொள்ளலாமென்று கவர்ன்மெண்டார் சாங்ஷன்செய்திருப்பது வாஸ்தவம்தானா?

(b) இப்படி பெர்சனல் அலவுன்ஸ் கொடுத்துவரும்படி யுரேஷிய கிளர்க்குகளாவது அல்லது ஐரோப்பிய கிளர்க்குகளாவது மனுசெய்துகொண்டார்களா? அப்படி மனுசெய்துகொண்டிருந்தால் பெர்சனல் அலவுன்ஸ் தங்களுக்குத் தேவை என்பதற்கு என்னகாரணங்கள் சொல்லியிருக்கிறார்கள்?

(c) இந்நகரிலிருக்கும் இதர ஆபீசுகளிலுள்ள ஐரோப்பிய யுரேஷிய கிளர்க்குகளும் பெர்சனல் அலவுன்ஸ் கொடுத்துவர கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

(a) கீழ்த்தர உத்தியோகத்திலிருக்கும் ஐரோப்பிய யூரேஷிய கிளர்க்குகளுக்கு மாதம் ஒன்றுக்குப் பெர்சனல் அலவுன்ஸ் கவர்ன்மெண்டார் சிறிதுகாலத்திற்குமுந்தி சாங்ஷன் செய்திருக்கிறார்கள். உத்தியோகஸ்தர்வு ஒவ்வொருவரும், உத்தியோகத்தில் தாக்கலான காலத்தைப் பொறுத்திருப்பதால் அவர்கள் ரூ. 100 சம்பளத்தை அடைவதற்கு வெகுகாலம் செல்லும். ஆகையால் இவர்களுக்குப் பெர்சனல் அலவுன்ஸ் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

பெங்காளமாகாணத்தில்ஐரோப்பிய யூரேஷியகிளர்க்குகளுக்குப் பிரத்தியேகமான சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விடத்தில் கவர்ன்மெண்டார் அம்மாதிரி ஏற்பாட்டைச்செய்ய இஷ்டப்படாமல் பிரஸ்தாப பெர்சனல் அலவுன்ஸ் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இப்போதிருக்கும் ஒரு யூரேஷிய கிளர்க்குதான் இப்படிப் பெர்சனல் அலவுன்ஸ் வாங்கிக்கொண்டு வருகின்றார்.

(b) ஐரோப்பிய கிளர்க்குகளாவது அல்லது யூரேஷிய கிளர்க்குகளாவது மனு அனுப்பவில்லை. சீப்செக்ரெட்டரி ஆபீசில் சில ஐரோப்பியர் அல்லது யூரேஷிய கிளர்க்குகளை நியமிக்க வேண்டுமென்கிற கருத்துடன் இம்மாதிரி ஏற்பட்டிருக்குமாயின் இந்த உத்தியோகங்களை விரும்பி ஐரோப்பிய யூரேஷிய கிளர்க்குகள் வந்து சேருவார்கள் என்றுஎண்ணி இந்தப் பெர்சனல் அலவுன்ஸ் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

(c) கவர்ன்மெண்டாருக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லை.

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர்:—

கே. (IV) (a) பப்ளிக் ஆபீசுகளும் இராவேலைகளும் என்று தலைப்பெயரிட்ட ஒரு வியாசம் 1907-ம்ஞு மார்ச்சுமீ 15உ ஹிந்துபத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைக் கவர்மெண்டார் பார்த்தார்களா?

(b) பப்ளிக் ஆபீசுகளிலிருக்கும் மிக முக்கியமான ரிக்கார்ட்டுகளைத் தீவிபத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டும்,கிளர்க்குகள் 5 மணிக்குப் புறப்பட்டு விளக்கு முதலிய தீபங்கள் உபயோகப்படுத்தி வேலை செய்யாமலிருக்கும் பொருட்டும், உத்தியோகஸ்தர்கள் இத்தனை மணி முதல் இத்தனை மணி வரையில் வேலை செய்யவேண்டு மென்றும் ஆபீசுகளில் தீபம் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஆபீஸ் தலைவருக்கும் ஆர்டர்கள் அனுப்ப இஷ்டப்படுவார்களா?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

A. IV. (a) கவர்ன்மெண்டார் இப்போது அந்த வியாசத்தைப் பார்த்தார்கள்.

(b) உத்தியோகஸ்தர்கள் ஆபீசுகளில் உத்தியோகம் பார்க்கவேண்டிய காலம் காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரையில். ஆனால் இந்த ஏற்பாடு ஆபீசுகளிலிருக்கும் வேலைக்குத்தகுந்தபடி மாறுதலுக்கு உட்பட்டது, இந்த ஏற்பாட்டை மாற்ற கவர்ன்மெண்டாருக்குச்சம்மதமில்லை. பப்ளிக்ஆபீசுகளின்கட்டடங்களைத் தீவிபத்தினின்று பாதுகாக்கும் பொருட்டு கவர்ன்மெண்டார் 1896-ம்ஞு சில விதிகள் பிரசுரம் செய்திருக்கிறார்கள். சமீபத்தில் சேப்பாக்கத்தில் நடந்த தீவிபத்தைக்குறித்தும், விசாரணை செய்து இனிமேல் இம்மாதிரி விபத்து உண்டாகாமலிருக்கும் பொருட்டு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளைப் பற்றியும் ரிப்போர்ட் செய்யும்படி கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

இதன் தொடர்பை ஜூன்மாதக் கெஜெட்டில் பார்க்க.



K. F. Ingleton.

Sir HENRY KING, Solicitor, Madras.

சர். ஹென்றி கிங், சொலிசிட்டர்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ணு அண்டு கோ.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ளு ஜுன்மீ [6 பாகம்

அடக்கம்.

		பக்கம்
1.	உருவப்படம்:—சர். ஹென்றி கிங்.	
2.	சிவில் புரொசிஜர் மசோதா ஆக்ட்	18
3.	தஞ்சாவூர் அரண்மனைச் சத்திரங்கள்	18
4.	காக்கிநாடாவில் தண்டனைப் போலிஸ்	18
5.	பத்திராசிரியர் குறிப்புகள்	18
6.	சென்னை சட்டநிரூபண சபையார் கூடி நடத்தின நடவடிக்கைகள் தொடர்ச்சி— ...	18
7.	கிரிமினல் கேஸ்;—கவர்ன்மெண்டு V. சர் ஜியார்ஜ் அர்பத்நட் (தொடர்ச்சி)	19
8.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேசுகள்	20
9.	முக்கியமான தீர்ப்புகள்	22
10.	சென்னபட்டணம் போலிஸ் டிபார்ட்டுமெண்ட்டு ஆர்டர்கள்	22
11.	சத்கதா ரத்னவளி	22

விஞ்ஞாபனம்.

மேன்மைதங்கிய சந்தாதாரர்களே! கனவான்களே! நண்பர்களே!

நாம் இந்த கெஜெட்டில் உங்களுக்கெடுத்துரைக்கவேண்டிய விஷயமொன்றுளது. அடுத்த ஜூலைமீ 30உ யுடன் நம்முடைய இந்திய சட்டகெஜெட்டிற்கு முதலாம் வயது பூர்த்தியாகின்றது. நாம் ஆதியில் இந்த சட்டகெஜெட்டை ஏற்படுத்த உத்தேசித்துப் பிரசுரப்படுத்திய விளம்பரத்தில் என்னென்னவிஷயங்கள் இக்கெஜெட்டில் பதிப்பிக்கப்பட்டுவருமென்று சொல்லியிருந்தோமோ பெரும்பாலும் அவ்விஷயங்கள் எல்லாம் பிரசுரித்துவந்தோமென்று நீங்களே அறிந்துகொண்டிருக்கக்கூடும். ஆதியில் இந்த சட்டகெஜெட்டை உற்பத்திசெய்வதற்காக நாம், மெஸர்ஸ் N. ராதாகிருஷ்ணு கம்பெனியாருடன் கலந்து யோசித்தபோது, டெம்மி 8-பேஜ் சைசில் 32 பக்கங்கள் அடங்கிய சஞ்சிகையாகப் பிரசுரித்தால் போதுமானதென்று நினைத்தோம். புனராலோசனையில், இந்த கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படவேண்டிய விஷயங்கள் அதிகமாயிருப்பதால் பூல்ஸ்காப் சயிசில் 40 பக்கங்களுக்குக் குறையாத சஞ்சிகையாகப் பிரசுரிக்கவேண்டுமென்று தீர்மானித்தோம். இப்போது அனுபவத்தில் இந்தப் பூல்ஸ்காப் சயிசில் 40 பக்கங்களும் போதுமானதல்லவென்று தெரியவருகின்றது. ஒவ்வொரு கெஜெட்டிலும், இந்தியன்லாரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்களும், சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்களும், அப்போதைக்கப்போது நடக்கும் வியாஜ்ஜிய விவகாரங்களும், கவர்ன்மெண்டு ஆர்டர்களும், போர்ட்ஸ்புரொசீடிங்சுகளும், சென்னபட்டணம்ஹைகோர்ட்டு கிரிமினல்செஷன்கேசுகளும், சட்டசபைகேள்வி ஜவாப்புகளும் பிரசுரஞ்செய்யப்பட்டு வந்தபோதிலும், இன்னும் பிரசுரிக்கவேண்டியவும்இடமின்மையால் பிரசுரிக்கப்படாமலிருக்கிற விஷயங்களும் அனேகமிருக்கின்றன. ஆகவே இந்த கெஜெட்டின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1500 ஆகும்போது ஒவ்வொருமாதமும் 60 பக்கங்களுக்குக் குறையாத சஞ்சிகையாகப் பிரசுரம்செய்து வருவதாகத் தீர்மானித்திருக்கிறோம். நிற்க, இந்த கெஜெட்டில் சட்ட விஷயங்கள் எழுதிவரப்படும்விதம் உங்கள் எல்லோருக்கும் சந்தோஷத்தை விளைவித்திருக்குமென்று நம்புகின்றோம். இந்த கெஜெட்டைப் பார்வையிட்ட ஹைகோர்ட் ஜட்ஜிமார்களும், வக்கீல்களும், சமஸ்தானாதிபதிகளின் திவான்களும் கெஜெட்டிற்கு நற்சாக்ஷிப்பத்திரங்கள் அனுப்பியிருப்பதுமன்றி, இந்த கெஜெட் நம் தேசத் தமிழ் ஜனங்களுக்கு மிகப்பெரிய நன்மை செய்யக்கூடிய ஏதுக்களில் ஒன்றென்றும் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். அனேக சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை வாசித்துத் தங்களுடைய குடும்பவியாஜ்ஜியங்களைக் கோர்ட்டிற்குப் போகாமல் தாங்களே பைசல்செய்துகொள்ளுகிறார்கள் என்று கேள்விப்பட்டு சந்தோஷமடைகின்றோம். மேன்மைதங்கிய லோக்கல் கவர்ன்மெண்டார் நமக்கு ஒவ்வொரு வாரமும் கவர்ன்மெண்டு ஆர்டர்களை தயவுகூர்ந்து அனுப்பிவருவதற்காக அவர்களுக்கு வந்தனமளிக்கின்றோம். பத்திரப்பதிவு இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள், தம்மால் அப்போதைக்கப்போது பிறப்பிக்கப்படும் சர்க்குலர் உத்திரவுகளை அனுப்பிவருவதாக அன்புகூர்ந்து வாக்களித்திருப்பதற்காக அவர்பால் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றோம். புதுக்கோட்டை திவான் அவர்கள் நம்முடைய கெஜெட்டைத் தம்முடைய சமஸ்தான தமிழ் லாயர்கள் வாங்கி வாசிக்கும்படி சிபார்சுசெய்திருப்பதற்காக அவருக்கு வந்தனம்செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இன்னும் கனதனவான்கள் முதலிய போஷகர்கள் நம்முடைய முயற்சியில் அனுதாபங்காட்டி அனுப்பியிருக்கும்நன்கொடைக்காகவும் அவர்களுக்குவந்தனம் செலுத்துகின்றோம். ஆகவே நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டானது பொது ஜனங்களுடைய நன்கு மதிப்பைப்பெற்றிருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை. இப்போது இதற்கு 1100-சந்தாதாரர்களிருக்கிறார்கள். இவ்வளவு சந்தாதாரர்களிருந்தும், இக்கெஜெட்டைப் பிரசுரிப்பதால் நேரிடும்செலவழிவுகளை உத்தேசிக்கின், இந்த எண்ணிக்கையுடன் நாம் திருப்தியடையக்கூடியதாயில்லை. ஒவ்வொருமாதத்திலும் பிரசுரிக்கப்பட்டு வரும் பொட்டகிராப் படத்திற்கு மட்டிலுமே ரூபா நாற்பதுக்குக் குறையாமல் செலவாகின்றது. நிற்க, இந்த சட்டகெஜெட்டின் அச்சுவேலைகள் வேறொருவருடைய அச்சாபீசில் நடத்திச் சரியானகாலத்தில் வெளிப்படுத்தக் கூடியதாயில்லை. ஆகவே, அடுத்த டிசம்பருக்குள் இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு அச்சியெந்திரசாலை ஏற்படுத்துவதாகவும் தீர்மானித்திருக்கிறோம். நம்முடைய நாட்டில் நூதன விஷயங்கள் தலையெடுப்பதென்றால் பகீரதப்பிரயத்தனமாயிருக்கின்றது! ஒருவன் தன்னுடைய சொந்த வியாஜ்ஜியத்தைக் குறித்து ஆலோசனை முதலியவைகள் கேட்டால் அதற்காக லாயர்கள் கேட்கும்தொகையைக் கொடுத்துவிடுகிறான். அந்த யோசனையை நம்முடைய இந்திய சட்டகெஜெட் வலியச்சொல்லிவந்தபோதிலும் இதற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 4-14-0 செலுத்தி வாசித்து அறிந்துகொள்ளப் பின்வாங்குவதை நாம் என்னவென்றெடுத்துரைப்பது! வருஷத்திற்கு ரூ. 4-14-யை ஒரு பெரிதாக நினைக்காத தமிழ்க்குடும்பங்கள் இச்சென்னை ராஜதானியில் அனேகமிருக்கின்றன. வியாஜ்ஜிய விவகாரங்களில்லாத குடும்பங்கள் பெரும்பாலுமில்லை. ஆதலால் ஒவ்வொரு குடும்பத்திலும் நம்முடைய சட்டகெஜெட்டிருக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே இப்போதிருக்கும் 1100 சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் அனுதாபங்காட்டிக் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து கெஜெட்டை ஆதரித்துவருவதுபோலத்தங்களுடைய மித்திரர்களிடம், இந்த கெஜெட்டால் உண்டாகக் கூடிய பெருநன்மையை எடுத்துக்கூறி அவர்களையும் இதற்குச் சந்தாதாரர்களாகச்சேர்ந்து ஆதரித்துவரும்படி சிறிது பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம். இது விஷத்தில் சந்தாதாரர்கள் எங்களுக்குச் செய்யும் உபகாரம் லோகோபகாரமேயொழிய வேறல்ல.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907௵ ஜூன்மீ [பாகம் 6.

The Civil Procedure Code Bill.

சிவில் புரொசீஜர் மசோதா ஆக்ட்.

இப்போது ஊர்ச்சிதத்திலிருக்கும் சிவில் புரொசீஜர் கோட் 1882-ம் வருஷத்தில் பாஸ் செய்விக்கப்பட்டு அமுலுக்கு வந்தது. அது அந்த வருஷம் பாஸ் செய்விக்கப்பட்ட 14-வது ஆக்ட். ஆகையால் இப்போது ஊர்ச்சிதத்திலிருக்கும் சிவில் புரொசீஜர் கோட் 1882-ம் ௵த்திய 14-வது ஆக்ட் என்று அழைக்கப்பட்டுவருகின்றது. இந்த ஆக்ட் ஊர்ச்சிதத்திலிருந்து வருவதில் தற்காலத்திய சிவில் விவகார நடவடிக்கைகளுக்கு, இதிலிருக்கும் பிரிவுகள் பொருந்தாதனவாயிருக்கின்றனவென்றும், போதாதனவாயிருக்கின்றனவென்றும் கல்கத்தா, பம்பாய், சென்னபட்டணம் ஹைகோர்ட்டார்கள் அடிக்கடி ரிமார்க் செய்திருக்கிறபடியால் கவர்ன்மெண்டார் தற்காலத்தில் ஊர்ச்சிதத்திலிருக்கும் சிவில் புரொசீஜர் கோடை 1892-ம்௵ முதல் சீர்திருத்திக்கொண்டு வருகிறார்கள். இப்போதிருக்கும் கோடில் அனேக பிரிவுகள் சீர்திருத்தப்பட்டுப் போயிருக்கின்றன. இப்படி சீர்திருத்தப்பட்ட மசோதா ஆக்ட் முன்னொரு சமையம் வைசிராய் சட்ட சபையில் வாசிக்கப்பட்டு சபையார் அதை செலக்ட் கமிட்டிக்கு ரிபர்செய்தார்கள். செலக்ட் கமிட்டியார் கூடி ஆலோசனைசெய்து இன்னும் சில திருத்தப்பாடுகளைச் செய்து சட்ட சபைக்கு ஆஜர்படுத்தப்போவதாய் பயிரங்கப்படுத்தினார்கள். இந்த சீர்திருத்தங்களில் சில, கக்ஷிக்காரர்களுக்கு அசௌகரியங்களைவிளைவிக்கக்கூடியனவாயிருக்கிறதென்று பங்காளம், பம்பாய் முதலிய தேசங்களிலிருந்து ஆக்ஷேபனை மனுக்கள் வரவே கவர்ன்மெண்டார் இது விஷயங்களைக்குறித்து ஆலோசனை செய்ய ஒரு பிரத்தியேக கமிட்டி நியமித்திருக்கிறார்கள். இந்த கமிட்டியில் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜி, கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜி முதலியவர்கள் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சிம்லாவில் கூடி ஏற்கனவே ஹானரபில் மிஸ்டர் ராலியால் தயார்செய்யப்பட்டிருக்கும் சிவில் புரொசீஜர் மசோதா ஆக்ட்டையும், அதன்பேரில் உண்டாயிருக்கும் ஆக்ஷேபனைகளையும்பற்றி ஆலோசனைசெய்து சீர்திருத்தம் செய்துவருகின்றார்கள். ஆகையால் சீர்திருத்தப்பட்ட இந்த சிவில்புரொசிஜர் மசோதா ஆக்ட் அடுத்த நவம்பர்மீ கூடப்போகிற வைசிராய் சட்டசபையில் ஆஜர்படுத்தப்பட்டு சட்டமாகப் பாஸ் செய்விக்கப்படுமென்று எண்ணுகிறோம். இப்போது கமிட்டியார் மசோதா ஆக்ட்டை சீர்திருத்தம் செய்துவருகிறபடியால் இச்சமயம் நாம் எடுத்தெழுதி அவர்களுடைய கவனத்தை இழுக்கவேண்டிய விஷயமொன்றுளது. அது யாதெனில், சீர்திருத்தப்பட்டிருக்கும் மசோதா ஆக்டின் 168-175-வது பிரிவுகளில் சம்மன் மனுக்களை நிராகரிக்கும் அதிகாரத்திற்கு அனுசரணையாய் வேறு சில விஷயங்களும் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதம் பிரேரேபித்திருக்கும் பிரிவுகளையெல்லாம் எடுத்து இங்கு எழுதுவது ஆயாசமுண்டாக்கும் விஷயமாய் மாத்திரம் முடியும். ஆனால் சாட்சிகளைக் கோர்ட்டில் ஆஜர் படுத்தும்பொருட்டு நிபந்தம் செய்யும் விஷயத்தில் கோர்ட்டாருக்கு இப்பொழுது இருக்கும் அதிகாரங்களும் இனிமேல் கொடுக்க உத்தேசிக்

கும் அதிகாரங்களும் இத்தன்மையன வென, ஆதி மசோதாவில் ஆனரபில்மிஸ்டர் ராலி சொல்லியிருக்கும் காரண காரியங்களினின்றுமே செவ்வையாகத் தெரியத்தக்கதாயிருக்கிறபடியால், அதை மாத்திரம் இங்கு சொல்வது போதுமானதாகும். அவர் சொல்வதாவது, "கோடில் இருக்கும் நிபந்தனைகள் சாட்சிகளை ஆஜர் படுத்தி வைக்கவேண்டிய விஷயத்திலும் சந்தேகமில்லாமலே போதாதவைகளா யிருக்கின்றன என்று ருசுவாயிருக்கின்றன. இப்பொழுது சம்மன் சேர்ப்பிக்கப் படாவிட்டால் பலமுறை சம்மன்கள் அனுப்பியும் சாட்சிக்காரன் கட்டளை சேர்ப்பிக்கப் படுவதினின்றும் தப்பித்துக்கொண்டிருக்கிறான்; அல்லது ஒளிந்துகொண்டிருக்கிறான் என்று கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜு ஆனாலொழிய நிபந்திக்கத்தக்க கட்டளை யாதொன்றையும் பிறப்பிக்கக்கூடாததா யிருக்கின்றது. அவ்விதம் ருசுவான பிறகும் சாட்சிக்காரன் ஆஜராக வேண்டுமென்று நாடும் கட்சிக்காரன் கோர்ட்டாரைக் கோரவேண்டி யிருக்கின்றது. சாட்சிக்காரன் வேணுமென்றே தவறுதல் செய்கிறான் என்று சரியானபடி திருப்திகரப் பட்டாலும், தக்க ஒழுங்குடன் அழிக்கை (இஸ்தியார்) ஒன்று பிறப்பிக்காமல் சொத்தை ஜப்தி செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது.

தவிர, இவ்விஷயத்திலும் சாட்சிக்காரன் ஆஜராக வேணுமென்று விரும்பும் கட்சிக்காரன் மறுபடியும் (ம)னு கொடுக்கவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்து (கொ)ள்ளும் மனுவின் மேல் கோர்ட்டார் ஜப்திக்கு உத்தரவு செய்தாலும் செய்யலாம் செய்யாது விட்டாலும் விடலாம்...........சாட்சிக்காரனுக்குச் சம்மன் சேர்ப்பித்த பிறகு அவன் அதற்குக்கீழ்ப்படிய மறுத்தால் அவனுக்குச் சம்மன் பெற்றகட்சிக்காரனவனை வாரண்டில் பிடித்துக் கோர்ட்டு முன் ஆஜர் செய்தாலொழிய அவனுக்கு அபராதம் போடக் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாது. இத்தகைய குறைகளை நீக்குவதற்காக இப்பொழுது பிரேரேபிக்கிறதென்னவென்றால், 168-வது பிரிவிற் கண்டிருக்கும் விஷயமாகிய சம்மன் சேர்ப்பிக்க ஒட்டாமல் தப்பித்துக்கொள்வது என்கிற விஷயத்திற்கும், 174-வது பிரிவிற் கண்டிருக்கிற விஷயமாகிய சம்மனில் கண்டபடி நடவாமலிருத்தல் என்கிற விஷயத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நீக்கி, சாட்சிக்காரன் வேணுமென்றே ஆஜராகத் தவறிப்போனான் என்றாவது, அல்லது தெரிந்துகொண்டே சம்மன் சேராதவண்ணம் தப்பித்துக்கொண்டிருக்கிறான் என்றாவது கோர்ட்டார் திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ள விரிவான விசாரணை யில்லாமலே, நம்புவதற்கு முகாந்திரம் இருக்கிறதென்று கண்டால் மாத்திரமே நிபந்தக் கட்டளையைப் பிறப்பிக்கும் விஷயத்தில் ஆரம்பிக்கவேண்டிய நடவடிக்கைப் பொறுப்பைக் கட்சிக்காரனிட மிருப்பதை மாற்றிக் கோர்ட்டாருக்குக் கொடுப்பதாகும். இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சாதாரணமாய் இஸ்தியாரைப் பிறப்பிப்பது கோர்ட்டாருக்குத் தக்கதெனத் தோற்றினால், உடனே இஸ்தியாரை யனுசரித்து ஆளைப்பிடிக்க வாரண்டையும், சொத்தை ஜப்திசெய்ய வாரண்டையும் பிறப்பித்துத் தனக்குத் தானே இபங்கவல்ல சூழ்ச்சியாலே 500 ரூபாய்களுக் கதிகப்படாத அபராதத்துக் குத்தரமாய் ஏல விற்பனையில் முடியத் தக்கதான அதிகாரத்தையும் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது...........மேல் நடக்கப்படும் விசாரணைக்காலங்களில் ஆஜராகாத சாட்சிக்காரர்களை முச்சிலிக்காக்களால் நிபந்தப்படுத்தும் விஷயத்தில், ஏற்கெனவே மாஜிஸ்டிரேட்டுகள் செலுத்திவரும் அதிகாரத்துக்கு ஒப்பான ஓர் அதிகாரம் ஜட்ஜிகளும் அடையவேண்டியதே தவிர, இவ்வித தாந்திரீகக் காப்புடன் இஸ்தியார் பிறப்பித்தல், அதற்கு அனுகுணமாய் வாரண்டில் ஆளைப் பிடித்தல், சொத்தை ஜப்தி செய்தல் முதலிய நடவடிக்கையையும் கோர்ட்டாரின் அமைதியில்லாமல் கோர்ட்டை விட்டுப்போகும் நபர்களுக்கு விரோதமாய்ப் பிரயோகம் செய்யத்தக்கவனாகச் செய்யப்பட்டிருக்கின்றது. அதே காலத்தில் கட்டளை நிறைவேறாமற் போவதற்குரிய காரணங்களுள் ஒன்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு வாரண்டுகள் பிறப்பிக்கும் விஷயத்தில், இப்பொழுது சாட்சிக்காரன் விடுதலை உத்தரவு வாங்குமுன் வாரண்டில் பிடிபட்டுக் கோர்ட்டு முன் கொண்டுவரப்படுவதில் ஏற்படும் அவமானத்தை நீக்கும் உத்தேசமாய் ஜாமின்மேல் விடுதலை செய்யக்கூடியதாய் வாரண்டு ஒன்றைப் பிறப்பிக்கும் அதிகாரத்தையும் கோர்ட்டார்களுக்குத் தர உத்தேசிக்கப்படுகின்றது. கடைசியாகப் பிரேரேபிக்கும் விதிகளின் பிரகாரம் கோர்ட்டார்கள் பிறக்கும் கட்டளைகளை நிறைவேற்றத் தாங்களே ஜவாப்தாரிகள் ஆகிறபடியால், கோர்ட்டுக் கட்டணங்களையும் மற்றுமுள்ள இதரச் செலவுகளையும் வசூலிக்கும் விஷயத்தில் விசேஷ விதிகளையும ஏற்படுத்தப்படும்" என்பதேயாம்.

இவ்விதமாய்ச் செய்திருக்கும் பிரேரேபணைகளை அமைதியுடனும் பக்ஷபாத மில்லாமலும் ஆலோசித்துப்பார்த்தால், கட்சிக்காரர்களுக்குள்ள விவாதாம்சங்களைத் தீர்த்து நீதி செலுத்துவதற்காக இத்தகைய கொடுமையான நிபந்தனைகள் அவசியமில்லை என்னும் விஷயம் புலப்படாமற் போகாது. இவ்விடத்தில் கோர்ட்டாரின் அதிகாரத்தை உல்லங்கனம் செய்யும் கட்சிக்காரனுடைய குற்றம் எத்தன்மையுள்ளது என்னும் விஷயத்தைப்பற்றி விரிவாய் சொல்ல வேண்டியது அவசியமானதல்ல. அவ்விதக் குற்றங்களைக் கண்டிக்கப் போதுமான நிபந்தனைகள் இப்பொழுது ஜாரியிலிருக்கும் கோடிலும் பினல் கோடிலும் ஏற்கனவேயிருக்கின்றன. சிவில்நீதி பரிபாலன விஷயத்தில் கட்சிக்காரர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டிய உத்தேசமாய் சாட்சிக்காரனை ஆஜராக்க எவ்வளவுநிபந்தம் ஏற்படுத்த வேண்டுமென்னும் சங்கதிதான் இப்பொழுது யோசிக்கவேண்டிய விஷயமாகும். அதுவிஷயமாய் நற்பலன் ஏற்பட்டிருக்கிறதாக ஆனரெபில் மிஸ்டர் ராலி எடுத்துக் காட்டிய நியந்தனைகளே போதுமானதாகும். கட்சிக்காரனைப்பிடித்து அவமானப்படுத்தக்கூடியவிதமாய் கோர்ட்டுமுன் இழுத்துக்கொண்டு வருகிற நடவடிக்கைக்குப்பதிலாக ஜாமீன்பேரில் விடத்தக்க வாரண்டு பிறப்பிக்கும் அதிகாரத்தை மட்டும் கோர்ட்டாருக்குக் கொடுத்து, மற்ற அம்சங்களில் இப்பொழுது இருக்கும் நிபந்தனைகளை ஸ்திரப்படுத்தினால் மிக்க நலமான சட்டமாகும். கட்டளைகளும் ஜாரியாகாமற் போகமாட்டாது. ஆனால் இப்பொழுது செய்திருக்கும் பிரேரேபணைகளோ சட்டமாக்குவதற்கு முன் தீர்க்காலோசனை செய்யத்தக்கவைகளாகும்.

1859-ம் வருஷத்து 8-வது ஆக்ட் 160-வது பிரிவின்படி மறைந்தொளியும் சாட்சிக்காரனுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் கோர்ட்டார்களுக்கு இல்லாமலே இருந்தது. அந்த அதிகாரம் 1877-ம் வருஷத்தில் முதல்முதல் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டது. அதின்படி அபராதம் விதிப்பதற்கு முன்னதாகவே சாட்சிக்காரன் வேணுமென்ற கெட்ட எண்ணத்துடன் கோர்ட்டாரை உல்லங்கனம்செய்தான் என்று திருப்திகரமாய்க் கோர்ட்டாருக்கு ருஜு ஆகவேண்டியிருக்கிறது. அப்படி ருஜுவாவதற்கு சாட்சிக்காரனைக் கோரும் சாட்சிக்காரன் அதுவிஷயமாய்க் கொண்டுவரும் சாட்சியத்தையும் சாட்சிக்காரன் கொண்டுவரும் சாட்சியத்தையும் சிவில்தாராய் விசாரணை செய்யவேண்டியதாயிருக்கிறது. பிரஸ்தாபப் பிரேரேபணைகளால் சாட்சிக்காரன் வேணுமென்றே கெட்ட எண்ணத்துடன் தப்பித்துக்கொண்டிருக்கிறான் என்கிறதற்குத்திருப்திகரமான ருசு இல்லாமலே, கோர்ட்டாருக்கு அவர்கள் யுக்தத்தில் அப்படி அவன்தப்பித்துக் கொண்டிருக்கக்கூடும் என்று எண்ண முகாந்தரம் இருந்தாலும் கூட, அந்தச் சாட்சிக்காரனுக்கு அபராதம் விதிக்கும் பொருட்டு அவனைப் பிடிக்கவும், அவன்சொத்தை ஜப்திசெய்து விற்கவும் கொடுக்கப்போகிற அதிகாரம் மிக்க பயங்கரமான அதிகாரம் என்றும், ஜனங்கள் அதனால் மிகக் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்றும் நமக்குத் தோற்றுகின்றது. சாட்சிக்காரன் தப்பித்துக்கொண்டிருக்கிறான் என்பதற்குத் திருப்தியான ருசு இல்லாமலே தப்பித்துக்கொண்டிருக்கக்கூடும் என்பதற்கு முகாந்தரம் இருப்பதாய்க் கண்டால் மாத்திரமே, அவனைத்தண்டித்துப் பணம் பிடுங்குவதற்காக மேற்கொண்டிருக்கும் நோக்கம் கோடை நன்மையை நாடி ஏர்திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது எனச் சொல்லத்தக்க விஷயமாகாது.

தற்காலத்திய சட்டப்படி சாட்சிக்காரனை ஆஜராக்கிக்கொள்ளும் விஷயத்தில் வாரண்டோ ஜப்தியோ பிறப்பித்து நிபந்தப்படுத்த முயல்வது கட்சிக்காரன் பொறுப்பா யிருக்கின்றது. அவ்வித நிபந்தக் கட்டளைகளால் ஆஜராகப்பட்ட சாட்சிக்காரன் தனக்குக் கேசு விமரிசையில் ஒத்தாசையா யிருக்கமாட்டான் என்பது கட்சிக்காரனுக்குத் தெரிந்த விஷயம். ஆகையாலேதான் சாட்சிகளை ஆஜராக்க நிபந்தக் கட்டளைகள் அதிகமாய்க் கோரப்படுகிறதில்லை. சாட்சி ஆஜராகவில்லை என்னும் காரணம்பற்றிக் கட்சிக்காரர்கள் இன்னொரு சம்மன் வேணுமென்று கோருகிறார்களே யல்லாது, நிபந்தக் கட்டளை வேணுமென்று கோருகிறதில்லை. அப்படி இரண்டொரு தரம் சம்மன் செய்தும் ஆஜராகாத சாட்சிக்காரனைத் தங்கள் காரியத்திற்கு உதவாதவனென்று எண்ணவேண்டாம் என்று விட்டுவிடுகிறார்கள். இருக்கிற சட்டப்பிரகாரம் சாட்சிக்காரனை வேண்டாமென்று விட்டுவிடவும், அவனுடைய சாட்சியமில்லாமலே வியாச்சிய விமரிசையைப் பூர்த்திசெய்துகொள்ளவும் கட்சிக்காரனுக்கு ஒரு யுக்தாயுக்த உரிமை இருக்கின்றது. ஆஜரில்லாத சாட்சிக்காரனுடைய சாட்சியம் அத்தியாவசியம் என்று கட்சிக்காரனுக்குத் தோற்றினாலல்லது நிபந்தக்கட்டளை வேணுமென்று அவன் சாதாரணமாய்க் கோருகிறதில்லை. அப்படியிருக்கக் கட்சிக்காரன் கோராமலே கோர்ட்டார் சுதாவில் நிபந்தக்கட்டளைகள் பிறப்பித்து, இஸ்தியார், பிடிவாரண்டு, ஜப்தி, ஏல முதலிய நடவடிக்கைகளை நடத்தி சாட்சிக்காரனுக்கு அபராதம்விதித்து அவனை நிபந்தத்தின்மேல் அஜராக்குவதில் அந்தக் கட்சிக்காரனுக்கு என்னலாபம் கிடைக்கக்கூடும்?

கட்சிக்காரன் மனுசெய்துகொள்ளாமலே சாட்சிக்காரன் வேணுமென்று தப்பிநூக்கொண்டிருக்கிறான் என்று கோர்ட்டார் எதைக்கொண்டு என்ன முகாந்திரம் இருக்கிறது என்று சொல்லக்கூடும்? மறைந்தொளியும் சாட்சிக்காரனுடைய சொத்து இன்னதென்று கோர்ட்டார் அறியும் வகை என்ன? மூன்றாவது மனுஷன் ஒருவனுடைய சொத்தைத் தவறுதலாக ஜப்தி செய்யும்பட்சத்தில் நேரிடும் செலவுத்தொகைகளை எவன்பேரில் போடுகிறது? இவ்வித விமரிசைகள் வியாச்சிய விவாதாம்சங்களுக்குப் புறம்பானவைகளல்லவா? அவைகள் வியாச்சிய பரிஷ்காரமாவதைத் தாமதப்படுத்த மாட்டாவா? வேண்டாத வீண்செலவுகளையும் கட்சிக்காரன்மேல் போட்டு அவனை நோகச்செய்யாவா?

நமது நாட்டு ஜனங்கள் கோர்ட்டுகளில் சாட்சிகளாக வந்து நிற்கச் சாதாரணமாய் இஷ்டப்பட்டவர்களல்ல. கீழ்க்தஸ்துக் கோர்ட்டார்களால் நிந்திக்கப்பட்டு நியாயமாய் பொய்க்காரன் என்கிற பெயர் கொடுக்கப்படுமோ என ஏக்கங்கொண்டவர்களா யிருக்கிறார்கள். ஆகவே பிரஸ்தாபப் பிரேரேபணைகளால் அவர்களின் வெறுப்பு அதிகப்படுமே யல்லாது வேறில்லை. தவிர அவ்வித நிபந்தங்களால் ஆஜராகப்பட்ட சாட்சிக்காரன் நிஷ்பக்ஷபாதமாய் சாட்சியம் சொல்லமாட்டானே. அதை யறிந்த கட்சிக்காரர்கள் உண்மைச் சங்கதிகளைச் சொல்லக்கூடிய சாட்சிக்காரர்களுக்குச் சம்மன் கோராமல் தங்கள் வியவகாரத்தை ருசு செய்யும் பொருட்டுக் கோர்ட்டுக்குச் சம்மனில்லாமலே வரக்கூடிய அயோக்கியர்களை அனுசரித்து அவ்விதப் பொய்ச் சாட்சியத்தை நாட இப்பிரேரேபணைகள் தூண்டுகோலாய் விடுமே. அதுவு மல்லாமல், நல்லொழுக்கங்கள் கொண்டு செங்கோல் நடாத்தும் ராஜாங்கத்தார் அதிகக் கவலையுடன் யோசிக்கத்தக்க விஷயம் வேறொன்று மிருக்கின்றது. A. என்பவனுக்கும் B. என்பவனுக்கும் நேர்ந்த வியாச்சியத்தில் கோர்ட்டார் கட்சிக்காரர்களால் கோரப்படாம லிருக்கும் பொழுதே C. D. முதலிய சாட்சிக்காரர்களைத்தண்டித்து வருவதை ஜனங்கள் பார்த்தால் அவர்கள் மனங்கலங்கி நீதி விவகாரக் கோர்ட்டுகளின்மேல் கசப்புக்கொண்டு அருவை காட்டவு மிடமுண்டாய் விடுமே.

TANJORE PALACE CHATTRAMS.

தஞ்சை அரண்மனைச் சத்திரங்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார்கள் கைப்பற்றுவதற்கு முந்தி தஞ்சாவூரை அரசாக்ஷி செய்துவந்த சிவாஜி மகாராஜாவும் சரபோஜி மகாராஜாவும் தஞ்சாவூர் ஜில்லாவில் அநேக சந்திரங்கள் கட்டியிருப்பது மன்றி, தஞ்சாவூரிலிருந்து இராமேஸ்வரம் போகும் பாதையில் அநேக சத்திரங்கள் கட்டிவைத்திருக்கிறார்கள். இந்த சத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் அநேக வேலி நிலங்

களை ஐவேஜியாகக் கொடுத்து இவைகளினின்று வரும் வருமானத்தைக் கொண்டு சத்திரத்திற்கு, வரும் யாத்திரிகர்களுக்கு அன்னதானம் நடத்தும்படியாக சாஸ்வதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இச்சத்திரங்களைக் கட்டின ராஜாக்கள் காலத்தில் அவர்கள் எவ்வளவு தர்மசிந்தையுடன் இச்சத்திரங்களைக் கட்டினார்களோ அப்படியே மிகுந்த தான தர்மங்களையும் நடத்தினார்கள். தஞ்சாவூர் சமஸ்தானத்தைப்பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கைப்பற்றி பிரிட்டிஷ் அரசாட்சியை ஸ்தாபித்தது முதல் இச்சத்திரங்கள் ஜில்லா போர்டார் பார்வையிலிருந்துவருகின்றன. இச்சத்திரங்களைமானேஜ்மெண்டுசெய்துவர சூப்பிரன்டெண்டுகள். தாசில்தார்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர், மணியகாரர்கள் முதலிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்றால் எத்தனைச் சத்திரங்களிருக்க வேண்டுமென்றும் அவைகளுக்கு எவ்வளவு ஐவேஜியிருக்கவேண்டுமென்றும், இந்த ஐவேஜியைக்கொண்டு எவ்வளவு தர்மம் நடத்தக்கூடுமென்றும் இதை வாசிக்கும் நம் நண்பர்களே யூகித்துக்கொள்ளக்கூடும்! இந்த சத்திரங்கள் ஜில்லா போர்ட்டார் மானேஜ்மெண்டிற்கும் மேற்பார்வைக்கும் வந்தவுடன் இவைகளில் ஆதியில் ராஜாக்கள் காலத்தில் எப்படி தர்மம் நடத்தப்பட்டதோ அப்படியே நடத்தப்பட்டு வந்தன. ஆனால் வரவர ஜில்லா போர்ட்டார் அத்தர்மங்களை எல்லாம் குறைத்துக்கொண்டே வந்துவிட்டார்கள். ஆகவே இப்போது சில சத்திரங்களில் அன்னதானம் செய்யப்படுகிறதில்லை. இவ்விதமாக தானம் குன்றிப்போய் சத்திர ஐவேஜிகள் செலவு செய்யப்படாமல் சத்திரங்களுக்குத் திரண்ட ரொக்க ஐவேஜி சேர்ந்திருக்கின்றது. இந்த ஐவேஜியைப் பிரயோகப்படுத்தும் மார்க்கம் தெரியாமல் ஜில்லா போர்டார் மயங்கிக் கொண்டிருந்து கடைசியில் இந்த ஐவேஜியின் ஒரு பாகத்தைக்கொண்டு மாயவரம் முத்துப்பேட்டை இருப்புப்பாதை போட்டிருக்கிறார்கள். இந்த இருப்புப்பாதைக்காக கொடுக்கப்பட்ட மூலதனம்போக இச்சத்திரங்களுக்கு இன்னும் திரண்ட ரொக்கச் சொத்திருக்கின்றது. இந்த ஐவேஜியிலிருந்து தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் ஒரு விவசாய சோதனைப்பண்ணை ஏற்படுத்தப்போகிறதாக ஜில்லா போர்ட்டார் தீர்மானித்திருப்பதாகக்கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். சத்திர ஐவேஜியைக்கொண்டு சோதனைப்பண்ணை ஏற்படுத்த சட்டமிடம் கொடுக்குமாவென்று ஜில்லா போர்ட்டார் சர். வி. பாஷியமய்யங்கார் அவர்களையும், மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களையும் அபிப்பிராயம் கேட்டதாகவும், அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று அபிப்பிராயம் கூறியிருப்பதாகவும் கேள்விப்படுகின்றோம். சர். வி. பாஷியமய்யங்கார் அவர்களும், மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் சம்பூரணமான சட்ட ஞானம் பொருந்தினவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் கூறியிருக்கும் அபிப்பிராயப்படி சத்திர ஐவேஜியைக்கொண்டு விவசாய சோதனைப்பண்ணை ஏற்படுத்த சட்ட சம்மதமுமிருந்தாலு மிருக்கக்கூடும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் சட்டக்கோட்பாடு சாதாரண அறிவுக்குப் பொருந்தாததாகவு மிருக்கக்கூடும். ஆதியில் இச்சத்திரங்களை உற்பத்திசெய்து அதற்கு ஐவேஜிகளும் ஏற்படுத்திவைத்த அரசர்களின் கருத்தென்னவெனறால், அச்சத்திரங்களில் எக்காலத்திலும் அன்னதானம் செய்யப்பட வேண்டுமென்பதே. இப்போது அச்சத்திரங்களுக்கு டிரஸ்டி ஸ்தானத்திலிருக்கும் ஜில்லா போர்ட்டார் அச்சத்திர ஐவேஜிகளை என்ன உத்தேசம் கொண்டு ஏற்படுத்தினார்களோ, அந்த உத்தேசத்தை எப்போதும் நிறைவேற்றிவைக்கப்பாத்தியப்பட்டவர்களே ஒழிய மற்றப்படி அந்த உத்தேசத்திற்குப்புறம்பான விஷயங்களில் அந்த ஐவேஜியை வினியோகப்படுத்த பாத்தியப்பட்டவர்களல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் ஏறக்குறைய முழுதிலும் இருப்புப்பாதைகள் போடப்பட்டிருக்கிறபடியால் சத்திரங்களில் தங்கும் பிரயாணிகளுக்குப் பெரும்பாலும் அன்னதானம் செய்வது அனாவசியமென்று ஜில்லா போர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்வது எவ்வளவு சொற்பச்செலவில் முடிகிறதாயிருந்தபோதிலும் அச்செலவுகளைக்கூடத் தாங்கக்கூடிய நிர்வாகமற்று நடைப்பிரயாணம் செய்யும் ஏழைகள் இக்காலத்திலும் எத்தனையோபேர்க ளிருக்கிறார்கள். ஆகையால் சத்திரங்களில் அன்னதானத்தை நிறுத்துவதற்குத்தகுந்த காரணமில்லை. அப்படி ஒருக்கால்ஜில்லாபோர்டார் அபிப்பிராயப் படுகிறதுபோல தஞ்சாவூர் ஜில்லாவில் ஏதேஷ்டமாக இருப்புப்பாதைகள் ஏற்பட்டுப்போய்விட்டபடியால் முன்போல் சத்திரங்களில் பிரயாணிகள் தங்கும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறதில்லை என்று முடிவுசெய்தபோதிலும், சத்திர ஐவேஜியை ஆதியில் அதை ஏற்படுத்தின அரசர்களின் எண்ணத்தை அனுசரித்து அன்னதானம் செய்யாமற் போனபோதிலும் அதைப்போலொத்த தர்மகாரியங்களில் செலவு செய்ய வேண்டும்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட் கிரிமினல் கேஸ்.

கவர்ன்மெண்டார் சர் ஜியார்ஜ் அர்பத்நட் பேரில் சாட்டிய குற்றங்களைப்பற்றி எழும்பூர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் W. E. கிளார்க் நடத்தின விசாரணை விபரங்களைத் துவக்கமுதல் சென்றமாத கெஜட்டிலும் இம்மாத கெஜட்டிலும் பிரசுரித்திருக்கிறோம் அவர் இன்டஸ்டிரியல்ஸ் கம்பெனி விஷயமாகச் செய்[illegible]தாகச் சொல்லப்படும் குற்றத்தைப் பற்றிய விசாரணை மட்டிலும் இடமின்மையால் இம்மாத கெஜெட்டில் பிரசுரம் செய்யவில்லை. நிற்க; போலீஸ் கோர்ட்டார் பிராசிக்யூஷன் தரப்பு சாக்ஷி விசாரணையை முடித்து விட்டு சர்ஜியார்ஜ் அர்பத்நட்டின் மீது குற்ற ஸ்தாபனைசெய்து செஷனுக்குக் கமிட்டி செய்திருக்கிறார்கள். ராஜா கிருஷ்ணபகதூர் டிபாசிட் தொகை விஷயமாகச்செய்திருக்கும் குற்றத்திற்கும் இ. பி. கோ. 417-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஏமாற்றல் குற்றத்திற்கும், ஈக்குவிட்பில் அசூயரன்ஸ் சொசைட்டி விஷயமாக இ. பி. கோ. 406, 409-வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கை மோசக் குற்றங்களுக்காகவும், அர்பத்நட் இன்டஸ்டிரியல் விஷயமாக இ. பி. கோ. 404, 406 பிரிவில் சொல்லப்படும் குற்றங்களுக்காகவும், குற்ற ஸ்தாபனை செய்திருக்கிறார்கள். டிபன்ஸ் தரப்பு சாக்ஷிகளின்பெயரை இன்னும் இரண்டு வாரத்திற்குள் தாக்கல் செய்து வைப்பதாய் டிபன்ஸ் தரப்பு லாயர் சொல்லியிருக்கிறார்.

PUNITIVE POLICE AT COCANADA.

காக்கிநாடாவில் தண்டனை போலிஸ்.

காக்கிநாடாவில் கலககாபராவா யிருக்கிறதென்று நம்முடைய லோக்கல் கவர்ன்மெண்டார் தண்டனை போலிஸ் அனுப்பியிருக்கிறார்கள். தண்டனைப் போலிஸ் அனுப்புவதற்கு Punitive Police ஆக்ட்டின்படி கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த ஆக்ட்டின்படி கலககாபரா எந்தவிடத்தில் லோக்கல் போலிசாரால் அடக்கமுடியாமலிருக்கிறதோ அந்தவிடத்திற்கு கவர்ன்மெண்டார் ஷை Punitive Police Act டின்படி தண்டனை போலிஸ்அனுப்பும்படியாகச் சட்டம் ஆக்கியாபிக்கின்றது. காக்கிநாடாவிற்கு கவர்ன்மெண்டார் தண்டனை போலிஸ் அனுப்பும்படியான அவ்வளவு பெருத்த கலகம் உண்டாகி லோக்கல் போலிசாரால் அடக்கமுடியாத தன்மையாக விருந்ததாவென்று சற்று பரிசீலனை பண்ணிப்பார்ப்போம். காக்கிநாடாவில் நடந்த விஷயங்கள் என்ன? காக்கிநாடா சர்ஜன் மிஸ்டர் கெம்பு, ஒரு தினம் ரோட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது சில மாணவர்கள் வந்தேமாதரம் கூவினார்கள். கூவினதில் மிஸ்டர் கெம்பிற்கு ஆத்திரம் உண்டாகி ஒரு பையனை அடிக்க அவன் அடிபொறுக்காமல் மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட்டான். சிலமனிதர்கள் இவனை இவனுடைய வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். டாக்டர் கெம்பிற்கு அஞ்சி எந்த அப்பாத்தகிரியும் டிரசரும் அந்தப் பையனுக்குச் சிகிச்சை செய்ய வர உடன்படவில்லை. இந்த சமாசாரம் ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கம்மிங்கிற்கு எட்டி, அவர் ஒரு டிரசரை அனுப்பினார். நிற்க, யாதொரு குற்றமும் செய்யாத ஒரு பையனை ஒரு வெள்ளைக்காரர் அடித்ததில் காக்கிநாடாவிலிருந்த சில மூர்க்கக் காலாடிகளுக்கு ஆத்திரமுண்டாகி பழிக்குப்பழி வாங்கிவிடுகிறதென்றெண்ணி டாக்டர் கெம்பை அடிக்க உத்தேசம் செய்து அவர் சாயங்காலம் ஒரு ஐரோப்பிய கிளப்பில் சாப்பிட்டுக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு அந்த விடத்திற்கு ஏகினார்கள். இப்படி காலாடிகள் ஐரோப்பிய கிளப்பைத்தாக்கப் போவதாகக் கேள்விப்பட்ட ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கம்மிங் சில கான்ஸ்டேபில்களை அழைத்துக்கொண்டு ஐரோப்பிய கிளப்பிற்கு வந்தார். இவர்தான் பையனை அடித்த சர்ஜன் கெம்பென்று கலகக்காரர்கள் அடையாளம் தெரியாமல் எண்ணி அடித்து காயப்படுத்தி கிளப்பிற்குள் பிரவேசித்துச் சில சாமான்களை உடைத்துவிட்டுக் கலைந்துபோய் விட்டார்கள். அப்போதுமுதல் காக்கிநாடா போலிசார் இந்த கலகத்தில் சம்பந்தப்பட்ட போலிசாரை அரஸ்ட் செய்து கொண்டுவந்து இப்போது அவர்களை விசாரணைக்காக மாஜிஸ்டிரேட் முன்னிலையிலும் ஆஜர் படுத்தியிருக்கிறார்கள். இப்படி அக்கிரமமாய் அடித்த ஒருவனை முரடர்கள் கூடி அடிப்பது எத்தேசத்திலும் சகஜமான காரியம், அதுபோலவே காக்கிநாடாவிலும் நடந்தேறினது. இந்த சம்பவத்திற்கு முந்தியும் இந்த சம்பவத்திற்குப் பிந்தியும் காக்கிநாடாவில் யாதொரு கலகக்குறியும் உண்டாகவில்லை என்பதை ஆங்கிலேயரே ஒப்புக்கொள்ளுகிறார்கள். லோக்கல் போலிசாரால் அடக்க முடியாமல் நீடித்து நடந்துகொண் டிருக்கும் கலகத்தை அடக்க கவர்ன்மெண்டார் தண்டனை போலிஸ் அனுப்பவேண்டுமே தவிர மற்றப்படி நீர்க்குமிழிபோல் தோன்றிமறையும் அற்பகலகத்திற்காகத் தண்டனை போலிஸ் அனுப்பி இந்த போலிசாரின் சாப்பாட்டுச் செலவிற்காகவும் சம்பளச்செலவிற்காகவும் ஜனங்கள்மீது வரிபோட்டு வசூலிப்பது நியாயமான காரியம் என்று நாம் சொல்லக்கூடியதாயில்லை.

சிலவருஷங்களுக்கு முந்தி நடந்த சாணார் மறவர் கலகத்தை அடக்க கவர்ன்மெண்டார் தண்டனை போலிஸ் அனுப்பினார்கள். அந்தக்கலகத்தில் கொலை கொள்ளை முதலியவைகள் ஏறக்குறைய ஒருமாதம் வரையில் நடந்தது. மேலும் கலகம் மதுரைஜில்லாவிலும் திருநெல்வேலி ஜில்லாவிலும் பரவி நடந்துவந்தது. அந்தக்கலகத்தை அந்தந்த ஜில்லாப்போலிசார் அடக்க முடியவில்லை. இம்மாதிரி காக்கிநாடாவிலும் நீடித்துக் கலகம் நடந்து கொலையும் கொள்ளையும் நடந்தேறியிருந்தால் காக்கிநாடாவிற்கு கவர்ன்மெண்டார் தண்டனை போலிஸ் அனுப்பிய செய்கையை நியாயமான செய்கை என்று எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

உத்தியோகமாற்றல்.

சேலம் ஜில்லா நாமக்கல்லில் டிஸ்டிரிக்டு முனிசிபாகவிருந்த மிஸ்டர் நாராயணாசாரியர் அவர்கள், ராஜமகேந்திரம் டி. மு. வாக மாற்றப்பட்டிருக்கிறார். இவர் நாமக்கல் டி. மு. வாக வந்து இன்னும் மூன்று வருஷம் பூர்த்தியாகவில்லை. அதற்குள்ளாக கவர்ன்மெண்டார் இவரை மாற்றியிருக்கிறார்கள்.

பத்திரப்பதிவு இலாகா.

பத்திரப்பதிவு இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய ஹானரபில் திவான் பகதூர் மிஸ்டர் V. சீனிவாச அய்யர் அவர்கள் இம்மாகாண வடபாக ரிஜிஸ்டரார் ஆபீசுகளைப் பார்வையிட்டுப் பரிசோதனை செய்யப் போயிருக்கின்றார். இப்போது விசாகப்பட்டணம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம்செய்து வருகின்றார்.

டாக்டர்களுக்கு விரோதமான தீர்ப்பு.

Benares என்கிற காசிக்ஷேத்திரத்தில் டாக்டர் P. முக்கர்ஜி என்கிறவர் டாக்டர் தொழில் செய்து வருகின்றார். இங்கிலீஷ் வைத்திய டாக்டர்கள், நோயாளிகளைப்போய்ப் பார்த்து அவர்களுக்கு மருந்து எழுதிக் கொடுக்கும்போது இன்ன ஷாப்பில் மருந்து வாங்க வேண்டுமென்று சொல்லும் வழக்கம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்படி டாக்டர்கள் செய்யும் சிபார்சுக்காக மருந்து ஷாப்புக்காரர்கள் அவர்களுக்கு ஏதேனும்கமிஷன் கொடுத்துவருகிற வழக்கமும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இவ்விதமாக பிரஸ்தாபடாக்டர் முக்கர்ஜி காசியில் ஒரு இங்கிலீஷ் மருந்து ஷாப்புக்காரருடன், தம்முடைய சிபார்சால் விற்பனையாகும் மருந்துகளின் கிரயத்தில் 100-க்கு 25 தமக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டு நோயாளிகளின் மருந்து சீட்டுகளை அனுப்பிக்கொண்டு வந்தார். சிலகாலம் சென்று டாக்டர் முக்கர்ஜி தமக்குச்சேரவேண்டிய கமிஷன் தொகைக்காக மருந்துஷாப்புக்காரர்கள்பேரில் ஸ்மால்காஸ் கோர்ட்டில்வியாஜ்ஜியம்

கொண்டுவந்தார். மருந்துக் கிரயத்தில் 100-க்கு 25 கமிஷன் மருந்து ஷாப்புக்காரர்களை டாக்டர்கள் கேட்டால் அவர்கள் இந்த கமிஷனையும் மருந்துக் கிரயத்தில் சேர்த்து மருந்தின் விலையை உயர்த்தி விடுவார்கள் என்றும், இதனால் நோயாளிகள் கஷ்டப்படுவார்களென்றும்சொல்லி ஸ்மால்காஸ் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அலகபாத் ஹைகோர்ட்டார் இந்தத் தீர்மானத்தை உறுதிப் படுத்தியிருக்கிறார்கள்.

மரணம்.

மைசூர் சமஸ்தான சீப் கோர்ட்டு ஜட்ஜிமார்களில் ஒருவராகவிருந்து பிரக்கியாதியும் பிரசித்தியும் பெற்ற ராஜா தர்ம பிரவீண T. R. A. தம்புச் செட்டியார் C. I. E. அவர்கள் நிகழ்மீ 20உ வியழாக்கிழமை இறந்து போய் விட்டார். மைசூர் சமஸ்தானாதிபதி அவர்கள் இந்த துக்க சமாசாரத்தைக் கேட்டு துக்கித்து அவருக்குமரியாதை காட்டும்பொருட்டு பெங்களூர் சிட்டியிலிருக்கும்தம்முடைய ஆபீசுகளை அன்றையதினம் மூடிவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

A என்பவன் B என்பவன்பேரில் டிக்கிரி வாங்கி வைத்திருந்தான். B என்பவன் விவாகங்களுக்கு நாற்காலி ஜமுக்காளம் வெள்ளித் தாம்பாளம் முதலியவைகள் வாடகைக்குக் கொடுக்கிற வழக்கம். ஒருநாள் A என்பவன் B என்பவனிடம் வந்து தன்னுடைய கிரகத்தில் விவாகம் நடக்கப்போகிறதென்றும் அதற்காகச்சில சாமான்கள் தேவையிருக்கிறதென்றும் கேட்க B என்பவன் கொடுத்தான். A என்பவன் டிக்கிரியை நிறைவேற்றித் தன்வசமிருந்த B என்பவனுடைய சாமான்களைஜப்தி செய்தான். A என்பவன் விவாகம் நடக்கப் போகிறதாகச் சொன்னது பொய். A என்பவன் விவாகம் நடக்கப் போகிறதாகச் சொல்லி சாமான்களை வாடகைக்கு வாங்குகிறதுபோல் வாங்கி ஜப்தி செய்திருக்கிறபடியால் A என்பவன்பேரில் ஏமாற்றல் என்னும் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டான். கல்கத்தா ஹைகோர்ட்டார் இந்தத் தீர்மானத்தைக் காயப்படுத்தியிருக்கிறார்கள்.

தென் இந்தியா இருப்புப்பாதை ஒர்க்ஷாப் (Work shop).

இப்போது நாகப்பட்டணத்தி லிருக்கும் இந்த வொர்க்ஷாப்பை திருச்சினாப்பள்ளியில் கொண்டுபோய்ப்போடுவதாய் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் தீர்மானித்து இதற்காக 32 லக்ஷ ரூபா செலவிட்டு கட்டடங்கள் கட்ட ஏற்பாடு செய்து வருகிறார்கள் திருச்சியில் இந்த வொர்க்ஷாப்பிற்காக கட்டப்போகிற கட்டடங்கள் நிகரற்றதா யிருக்கவேண்டுமென்று கம்பெனியார் கருத்துக்கொண்டு இந்தியாவிலிருக்கும் வொர்க்ஷாப்புகளை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வரும் பொருட்டு லோக்கோ சூப்பிரன்டெண்டாகிய மிஸ்டர் ரேயினால்டை அனுப்பியிருக்கிறார்கள்.

தேவஸ்தானக் கொள்ளைக்காரர்கள்.

திருநெல்வேலி ஜில்லா நான்குநேரியி லிருக்கும் விஷ்ணு தேவஸ்தானத்தில் திருடும் பொருட்டு பம்பாயிலிருந்து சில திருடர்கள் வந்திருக்கிறார்கள். தேவஸ்தானத்தில் திருடுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முந்தி இவர்கள் பைராகி வேஷம் பூண்டு கோயிலின் உளவை எல்லாம் பார்த்துக்கொண்டார்கள். அப்போது இவர்களை எவரும் சமுசயிக்கவில்லை. ஒரு நாள் இவர்களில் மூன்று பேர் கோவில் மதிலின்பேரில் ஏறிப் பின்புறம் குதித்து இரண்டாவது பிரகாரத்திலிருந்த மதிலின் நடுவிலுள்ள ஒரு கல்லைப் பிடுங்கி நுழைந்து சந்நதிக்குள் சென்று திருடப்போகும் சமயத்தில் அச்சமயம் அவ்விடமிருந்த காவலாளிகள் கண்டு பிடித்துக் கொண்டார்கள். இவர்களில் இரண்டு பேர் உடனே தப்பித்துக்கொண்டு ஓடிவந்து விட்டார்கள். இவர்கள் ஓடிவந்த பின்னர் மற்றொருவனும் ஓடிவந்து தன்னுடைய வேஷத்தைக் கலைத்துவிட்டுச் சாதாரணமாய் உடுப்பு தரித்துக்கொண்டு அதிகாலையில் வந்த ஒரு திருமண ஊர்கோலத்தில் சேர்ந்து போய்க்கொண்டிருந்தான். இவனை மட்டிலும் கோவில் காவலாளிகள் அடையாளம் கண்டுபிடித்துப் போலீசாரைக் கொண்டு அரஸ்ட் செய்து வைத்திருக்கிறார்கள். இவன் பெயர் துவாரகப் பிரசாத் இவன் பம்பாயில் பலே ஆசாமியாம். பலமுறை தண்டனை அடைந்திருக்கின்றானாம். இன்னும் மற்றவர்கள் அகப்படவில்லை.

ஸிதனம்.

புருஷன் வீட்டிலிருந்த ஸீதனசொத்தை அவனுடைய சம்மதமின்றி வீட்டைவிட்டு எடுத்துக் கொண்டு போன பெண்சாதியைத் திருட்டுக்குற்றத்திற்குள்ளாக்க முடியாதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

நிரந்தரமான

கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்தனுப்புவோர்க்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனைவருடம் ஆதரித்துவருகிறார்களோ அத்தனைவருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்றயாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால், வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்டஞானம்நிறைந்த இந்த கெஜெட்விஷயமாகப் பெருமுயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானால் பென்ஷனைப்போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100-சந்தாதாரர்களை ஒருவர் சேர்ப்பாரானால் வருடமொன்றுக்கு 40-ரூபாய் சம்பாத்தியமுடையவராவார்கள்.

PROCEEDINGS OF THE MEETING OF THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னைசட்ட நிரூபண சபையார் கூடி நடத்தின நடவடிக்கைகள்.

(184-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர்.

கே V. (a) "கவர்ன்மெண்டாரும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும்," என்று தலைப்பெயரிட்டு 1907-ம் ஞு மார்சுமீ 22உ பிரசுரமான ஹிந்து பத்திரிகையில் ஒரு வியாசம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் கவர்ன்மெண்டார் பார்த்தார்களா ?

(b) கவர்ன்மெண்டில் ஊழியம் செய்துவரும் சேவக சிப்பந்திகளுடையவும் சொற்ப சம்பளம் பெறும் கிளர்க்குகளுடையவும் சம்பளத்தை உயர்த்த கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

(c) ஆகார சாமான்கள் சாதாரண காலத்திலும், எச்சரிக்கை காலத்திலும், பஞ்ச காலத்திலும் இன்னின்ன விலைக்கு விற்றுவருகிறதென்று காண்பிக்க ஜாப்தா தயார் செய்துவருவதாகக் கவர்ன்மெண்டார் முன் ஒரு சமயம் சொன்னார்களே, அந்த ஜாப்தாக்களைப் பயிரங்கப்படுத்தக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ :—

ஜ. V. (a) கவர்ன்மெண்டார் இப்போது அந்த வியாசத்தைப் பார்த்திருக்கிறார்கள்.

(b) 1906-ம்ஞு நவம்பர்மீ 13உ கூடின சட்ட சபை மீட்டிங்கில் கேட்கப்பட்ட 25-ம் நெ. கேள்விக்குச்சொல்லப்பட்டிருக்கும் ஜவாப்பைப் பார்க்கும்படி ஹானரபில் மெம்பர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

(c) ஆகார சாமான்களின் சாதாண காலவிலை, எச்சரிக்கை காலவிலை பஞ்ச காலவிலையைக் குறித்து அடியிற்கண்ட கவர்ன்மெண்டு ஆர்டர்களைப்பார்த்தால் தெரியவரும்.

G. O. நெ. 1077 ரெவினியூ 1893ஞு 18உ யுள்ளது.
,, 306 ,, 1896 ஜுலை 2உ
,, 763 ,, 1896 டிசம்பர் 31உ
,, 696 ,, 1902 ஆகஸ்ட் 5உ

முதல் மூன்று ஆர்டர்களும் ஏற்கனவே பயிரங்கப்படுத்தப்பட் டிருக்கின்றன. ஆனரபில் மெம்பருக்குத் தேவையாயிருந்தால் இந்த நான்கு ஆர்டர்களையும் அவருக்குச் சப்ளை செய்யக் கவர்ன்மெண்டாருக்குச் சந்தோஷமாயிருக்கும்.

ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் :—

கே. VI. (a) ரெவினியூ போர்ட்டில் ஆப்காரி உப்பள இலாகாவில் ஒரு கிளர்க்கு தனக்குச் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று ஷை டிபார்ட்டுமெண்டு தலைவராகிய செக்ரெட்டரிக்கு மனு செய்து கொள்ள அவர் ஷை மனுவின்பேரில் கிளர்க்குகளுக்கு ஏதேனும் குறையிருந்தால் அதை நேரில் வந்து தெரிவித்துக் கொள்ள வேண்டுமே யொழிய மனு எழுதக்கூடாதென்று என்டார்ஸ்மெண்டு செய்தார் என்று கடந்த சட்ட சபை மீட்டிங்கில் தெரியப்படுத்தினேன். இந்த எண்டார்ஸ்மெண்டு ஷை டிபார்டுமெண்டுத் தலைவர்களுக்கு ஆர்டர்மாதிரியாக அனுப்பப்பட்டிருப்பது வாஸ்தவம் தானா ? அதனால் இப்போது ஷை டிபார்ட்மெண்டில் எவரும் செக்ரெடரிக்கு மனு அனுப்புகிறதில்லை என்பதும் வாஸ்தவம்தானா ?

(b) இது உண்மையானால் செக்ரெட்டெரியின் ஆர்டரை ரத்து செய்யும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ:—

ஜ, VI. போர்டார் யாதொரு சர்க்குலர் ஆர்டரும் அனுப்பவில்லை என்று கவர்ன்மெண்டார் அறிவிக்கப்படுகிறார்கள். செக்ரெட்டரிசெய்த எண்டார்ஸ்மெண்டு டிபார்ட்டுமெண்டு தலைமை உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இதைப் பற்றி யாதொரு புகாரும் கவர்ன்மெண்டிற்கு எட்டவில்லை. ஆகவே இது விஷயத்தில் கவர்ன்மெண்டார்பிரவேசிப்பதற்கு இஷ்டமில்லை.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. VII. (a) கெஞ்சம் விசாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியங்களில் வசிக்கும் மலைநாட்டார்களுக்கு யாதொரு வைத்திய உதவியுமில்லை என்பது வாஸ்தவம் தானா ?

(b) இந்த ஏஜன்சி பிராந்தியங்களி லிருக்கும் ஆஸ்பத்திரிகளில் அதிகப்படியான டிரசர்கள் நியமித்து அவர்கள் அடிக்கடி இம் மலைநாடுகளுக்குப் போய் வைத்தியம் செய்துவிட்டு வரும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய இஷ்டப்படுவார்களா ?

(c) இப்படிப் போகக்கூடிய டிரசர்களுக்கு உற்சாக மூட்டும் பொருட்டு அவர்களுக்கு டிராவலிங் அலவன்ஸ் என்கிற பிரயாணச் செலவு கொடுத்துவர கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமுண்டாகுமா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

கே. VII. (a) சில மலைநாட்டார், ஆஸ்பத்திரிகளுக்கு வெகு தூரத்தில் வசித்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் வைத்திய உதவிபெற்று வரவில்லை என்று கவர்ன்மெண்டார் சொல்ல முடியாது.

(b) டிவிஷனல் ஆபீசர்கள் தங்களுடைய ஆபீசுகளில் ஹாஸ்பிட்டல் அசிஸ்டெண்டுகளைச் சேர்த்து வைத்துக்கொண் டிருக்கிறார்கள். மலைநாட்டார் இவர்களுடைய உதவிகளைக் கிரமப்படி பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஆஸ்பிட்டல் அசிஸ்டென்டுகளை மலைநாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் போகும்படிச் செய்ய சௌகரியப்படமாட்டாது.

(c) ஆஸ்பிட்டல் அசிஸ்டெண்டுகளுக்குச் சகஜமாய் ஏற்பட்டிருக்கும் டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வருமே யொழிய மற்றப்படி இவர்களுக்குப் பிரத்தியேகமான டிராவலிங் அலவன்ஸ் கொடுத்து வரப்படமாட்டாது.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. VIII. (a) கஞ்சம், விசாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியங்களில் குடிக்கும் ஜலம் அருந்தலாயிருப்பதும், ஜலம் அகப்படக்கூடிய காலத்தில் ஜலம் மிகுந்த அசுத்தமாயிருக்கிறதும், இதனால் ஜனங்கள் நல்ல தண்ணீர் கொண்டுவர வெகுதூரம் போகவேண்டியதாயிருப்பதும் வாஸ்தவம்தானா ?

(b) இந்தப் பிராந்தியங்களில் எதேஷ்டமாகக் கிணறுகள் வெட்டும்படி கவர்ன்மெண்டார் லோக்கல் போர்ட்டார்களுக்கு உத்திரவு செய்ய இஷ்டப் படுவார்களா ?

(c) கிணறு வெட்ட லோக்கல் போர்ட்டாரிடம் பணமில்லாது போனால் கவர்ன்மெண்டார் கொடுத்துதவ இஷ்டப் படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. VIII. லோக்கல் போர்ட் ஆக்ட், கெஞ்சம் ஏஜன்சி பிராந்தியத்தில் ஊர்ஜிதத்திலில்லை. விசாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியத்தில் அதிலும் சிலவிடத்தில்தான் ஊர்ச்சிதத்திலிருக்கிறது. விசாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியத்தில் ஜனங்கள் குடிக்கும் ஜலத்திற்காக விசேஷ கஷ்டப்படுவதாகத் தெரியவில்லை. கஞ்சம் ஏஜன்சி பிராந்தியத்தில் ஜல சப்ளை ஏற்பாடு செய்வதற்காகக் கவர்ன்மெண்டார் பண உதவியும் செய்திருக்கிறார்கள்.

ஹானரபில் ராஜா V. வீரபத்திரராஜு பகதூர் :—

கே. IX. ரெவினியூ லோயர், ரெவினியூ அய்யர் கவர்ன்மெண்டு பரீக்ஷைகளில் விவசாயப் படிப்பைப் பற்றியும் பரீக்ஷிக்கும்படி தாசில்தார் உத்தியோகத்தில் நியமிக்கப்படுபவர்கள் அவ்வுத்தியோகம் பெறுவதற்கு முந்தி விவசாயப் படிப்பில் பயிலும்படி கட்டாயப்படுத்தவும் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ:—

ஜ. IX. ரெவினியூ ஆபீசர்கள் விவசாயஞானம் அடைந்திருந்தால் நலமாயிருக்குமென்பதில் கவர்ன்மெண்டாருக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அந்த ஞானத்தை அவர்களுக்கு உண்டுபண்ண இந்த விவசாயப் படிப்பை கவர்ன்மெண்டு பரீக்ஷைகளில் சேர்ப்பது யுக்தமான உபாயமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படவில்லை. தாசில்தார் உத்தியோகத்திற்கு வருபவர்களை விவசாயக் கல்விகற்கக் கட்டாயப்படுத்தும் ஏற்பாடு செய்ய இப்போது சாத்தியப்படமாட்டாது.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. X. (a) (b) (c) வடக்கே யிருக்கும் யூரியா ஜனங்களை முன்னுக்குக் கொண்டு வருவதைப் பற்றிய கேள்வி.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. XI. (a) கெஞ்சம் விஜாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியங்களில் டிப்டி தாசில்தார்கள் சிவில் விவகாரங்களைக் கூட விசாரணை செய்துவருகின்றார்கள். இவர்கள் மற்ற டிப்டி தாசில்தார்களைப்போல கிரிமினல் லோயர் அய்யர் பரீக்ஷைகளில் மட்டிலும் தேறினவர்கள் என்பதும் சிவில்சட்டம் இவர்களுக்குத் தெரியாதென்பதும் வாஸ்தவம்தானா ?

(b) அப்படியானால் இவர்கள் டி. மு. கடமைகளைப் பார்ப்பதற்கு முந்தி சிவில் டெஸ்ட் பரீக்ஷைகளுக்கும் படித்துத் தேறும்படிக் கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பிக்க இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. XI. இந்த ஏஜன்சி பிராந்தியங்களின் நிலைமையே பிரத்தியேகமாயிருக்கின்றது. இப்போது அவ்விடத்திலிருக்கும் வழக்கத்தை மாற்றப் போதுமான காரணமில்லை என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகின்றார்கள். சிவில் புரொசீஜரில்கூட சில பிரிவுகள் மட்டிலும்தான் அந்தப் பிராந்தியங்களில் ஊர்ச்சிதமாயிருக்கின்றன. மலை நாட்டாருடைய சிவில் விவகாரங்களைத்தீர்க்க சிவில் சட்டஞானம் அதிகமாய் வேண்டியதில்லை. மனசாக்ஷிக்கு விரோதமின்றியும் நியாயமாயும் விவகாரங்களைத் தீர்த்தால் அதுவே போதுமானது.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. XII. கெஞ்சம் விசாகப்பட்டணம் ஜில்லா போர்டுகளின் வைஸ் பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாதவர்களை நியமிக்கக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. XII. அந்த உத்தியோகத்தை வகித்துப்பார்க்கத் தகுந்த யோக்கியதை பொருந்தியவர்கள் அகப்பட்டு அவர்கள் அந்த உத்தியோகத்தில் உழைக்கச் சம்மத முடையவர்களா யிருந்தால் அவர்களை நியமிக்க கவர்ன்மெண்டார் தயாராயிருக்கிறார்கள்.

ஹானரபில் ராஜா V. வீரபத்திர ராஜு பகதூர் :—

கே. XIII. 1897ம் ஞுத்திய மூன்றாவது ஆக்ட்டால் சீர் திருத்தப்பட்ட 1884ம் ஞுத்திய 4-வது ஆக்ட்டாகிய ஜில்லா முனிசிபல் ஆக்ட்டின்படி நியமிக்கப்பட்ட முனிசிபல் செக்ரெட்டரிகள், முனிசிபல் கவுன்சில்களுக்கு உபயோகமுள்ளவர்களாக யிருக்கிறதாகத் தெரியவருகிறதா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. XIII. சிலரைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் உபயோக முள்ளவர்களாகவே யிருக்கிறார்கள் என்று தெரிய வருகின்றது.

கே. XIV. (a) (b) விசாகப் பட்டணத்தில் மிருகங்களுக்காக ஆஸ்பத்திரி ஏற்படுத்தும்படி வேண்டிக் கொண்ட கேள்வி.

கே. (XV) பிராவிண்டண்டு சொசைட்டிகளைப்பற்றிய கேள்வி ; இந்தக்கேள்விக்கு கவர்ன்மெண்டார் இன்னும் பூராய் பதில்சொல்லவில்லை.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர்.

கே. (XVI) முனிசீப் கோர்ட்டிலிருக்கும் சமன் சார்வ் செய்பவர்கள் அவர்களுடைய வேலைகள் ஒழுங்காய்ச் செய்துவரும்பொருட்டு அவர்களுக்கு அபராதம்போடவும் அவர்களை உத்தியோகத்தினின்று தள்ளவும் டிஸ்டிரிக்ட் முனிசீப்களுக்கு, ஜில்லா ஜட்ஜியின் அப்பீலுக்குட்பட்ட அதிகாரம் கொடுக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. (XVI) மதிராஸ் சிவில்கோர்ட் ஆக்ட் 2-வது பிரிவைப் பார்க்கும்படி ஹானரபில் மெம்பர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். இந்தப் பிரிவின்படி முனிசீப் கோர்ட்டைச்சேர்ந்த சேவக சிப்பந்திகளை நியமிக்கவும் தள்ளவும் அபராதம்போடவும் ஜில்லா ஜட்ஜியின் அபீலுக்குட்பட்ட அதிகாரம் முனிசிப்தார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முனிசீப்கோர்ட் சம்மன் சார்வ் செய்பவர்கள் சேவக சிப்பந்திகள் என்று ஹைகோர்ட்டார் தாத்பரியம் கூறியிருக்கிறார்கள். ஆகையால் இப்போது ஊர்ச்சிதத்திலிருக்கும் சட்டத்தை மாற்றப் போதுமான காரணமில்லை என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர் :—

கே. (XVII) சென்னபட்டணம் ஸ்டேஷனரி சூப்பிரண்டெண்ட் ஆபீசு கிளர்க்குகள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று செய்துகொண்ட மனு கவர்ன்மெண்டார்களிடம் வந்து சேர்ந்ததா ? அப்படிச் சேர்ந்திருந்தால் கவர்ன்மெண்டார் அம்மனு விஷயமாய் என்ன செய்திருக்கிறார்கள் ?

ஜ. (XVII) மனு வந்துசேர்ந்தது. ஸ்டேஷனரி சூப்பிரண்டெண்டு ஆபீசில் ஆரம்பச்சம்பளம் ரூ. 20 தாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று ஸ்டேஷனரி சூப்பிரண்டெண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறார். சம்பளத்தை உயர்த்தும்படி ஸ்டேஷனரி சூப்பிரண்டெண்டு பிரேரேபித்திருந்ததையும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆனால் டைப் அடிக்கிறவருக்கு மட்டிலும் பெர்சனல் அலவுன்ஸ் கொடுக்க கவர்ன்மெண்டார் தயாராயில்லை.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர் :—

கே. (XVIII) (a) 1907-ம்ஞு மார்ச்சுமீ 16உ மதிராஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் "விளாட்டி-குளம் தாய்வாய்க்காலும் மராமத்து இலாக்காவும்" என்று ஒரு வியாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததே அதைக் கவர்ன்மெண்டார் பார்த்தார்களா ?

(b) மிஸ்டர் L. D. வெங்கடராமய்யர் ரூ. 280000 செலவுசெய்து கட்ட உத்தேசித்திருக்கிற பெரிய ஏற்பாட்டைக்குறித்து கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்வதற்கு முந்தி வெய்ப்பார்நதியிலிருந்து விளாட்டிகுளத்திற்கு ரூ. 19600 செலவுசெய்து ஒரு தாய்வாய்க்கால் கட்டும்படி உத்தரவுசெய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் வில்சன் :—

ஜ. (XVIII) (a) ஆம்.

(6) பெரிய ஏற்பாட்டைச் சோதனைசெய்து முடிப்பதற்கு முந்தி சொற்பச்செலவில் கட்டி முடிக்கலாமா வேண்டாமா என்று சீப் இன்சினீயர் யோசனை செய்து வருகின்றார். சீக்கிரம் ரிப்போர்ட் அனுப்புவதாகவும் வாக்களித்திருக்கிறார். இந்த ரிப்போர்ட் வருவதற்கு முந்தி கவர்ன்மெண்டார் யாதொரு அபிப்பிராயமும் கூறும்படியான நிலைமையிலில்லை.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர்.

கே. XXI. I. (a) கன்னனூர் சென்டிரல் ஜெயிலில் அச்சுயந்திரசாலை யிருக்கிறதா ?

(b) எத்தனை வருஷகாலமாயிருக்கிறது ?

(c) அதில் கைதிகள் வேலை செய்து வருகிறார்களா ?

(d) கவர்ன்மெண்டாருடைய அச்சு வேலைகளன்றி வெளியார் வேலைகள் வாங்கி செய்துகொடுக்கப்படுகின்றனவா ?

(e) மலையாளத்திலிருந்தும், இன்னும் இந்த ராஜதானியின் இதர பாகங்களிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும் பிரஞ்சு இலாக்காக்களாகிய மாகியிலிருந்தும் ஆர்டர்கள் வாங்கி அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றனவா ?

(f) கடந்த மூன்று வருஷகாலமாக அச்சு வேலைக்காகவும் பைண்டு வேலைக்காகவும் எவ்வளவு பிரைவேட் ஆர்டர்கள் வந்திருக்கின்றனவென்றும் அவைகளால் என்ன தொகை வசூலாயிருக்கிறதென்பதற்கும் கவர்ன்மெண்டார் ஒரு ஸ்டேட்மெண்டு தயார் செய்து பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா ?

(II) கைதிகள் செய்யும் வேலை சாதாரண ஜனங்கள் செய்யும் வேலையுடன் போட்டி போடாமலிருக்கும்படிக்கு இந்த அச்சு யந்திரசாலையில் கவர்ன்மெண்டு வேலையைத்தவிர இதர பிரைவேட் வேலைகள் வாங்கிச் செய்யக்கூடாதென்று கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பிக்கச் சம்மதப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

கே. XIX. (1) (a) இருக்கிறது.

(6, c, d, e):—இதைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு ஒரு சமாசாரமும் தெரியாது. இருந்த போதிலும் கவர்ன்மெண்டார் எழுதிக் கேட்பார்கள்.

(II) ஜெயிலில் செய்யப்படும் சாமான்கள் வெளியில் செய்யப்படும் சாமான்களுடன் போட்டி போடக்கூடாதென்பது கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம். இது காரணம் பற்றியே 1906-ம்ஞு ஜனவரிமீ கன்னனூர் ஜெயிலுக்காக வாங்க உத்தேசித்திருந்த பிரஸ் என்கிற அச்சடிக்கும் யந்திரத்தை வாங்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் உத்திரவுசெய்து விட்டார்கள். ஆனால் அந்த அச்சு யந்திரசாலையில் எவ்வளவு பிரைவேட் வேலைகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றதென்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியமாட்டாது. இருந்த போதிலும், எழுதிக்கேட்கத் தயாராயிருக்கிறார்கள்.

ஹானரபில் மிஸ்டர் M. கிருஷ்ண நாயர்.

கே XX. (1) பத்திரப்பதிவு (ரிஜிஸ்டர்) ஆபீசுகளிலிருக்கும் ரிக்கார்டுகளில் எந்தெந்த பத்திரங்கள் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட பத்திரங்களை அப்போதைக்கப்போது அழித்துவிடுவதற்குக் கவர்ன்மெண்டார் ஏதேனும் யோசனைசெய்துகொண்டிருக்கிறார்களா ?

அப்படி யோசனைசெய்துகொண்டிருந்தால், இத்தேச ஜனங்களும் கோர்ட்டாரும் ரிஜிஸ்டரான தஸ்தாவேஜுகளை மிக முக்கியமாக நினைப்பதை முன்னிட்டு, அவைகளை அழிக்காமலே வைத்திருக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்யச் சம்மதப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. XX. அப்படிப்பட்ட யோசனை தற்காலம் கவர்ன்மெண்டாருக்கில்லை.

ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர்.

கே. XXI. (1) கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்தவரையில் இந்த ராஜதானியில் வெளி ஜில்லாக்களிலும், முக்கியமாய் சென்னபட்டணத்திலும் ஆகார சாமான்களின் விலை ஏறி நிற்பது உண்மைதானா ?

(2) பங்காளத்திலும் இதர மாகாணங்களிலும் ஆகார சாமான்களின் விலை ஏறி நிற்பதால் கவர்ன்மெண்டு கச்சேரிகளில் உத்தியோகம் செய்து வரும் கிளார்க்குகளுக்குப் பிரத்தியேக அலவன்ஸ் கொடுக்கப்பட்டுவருகிறது வாஸ்தவம் தானா ?

(3) விலைகள் உயர்ந்துபோயிருப்பதால் சர்க்காரில் உத்தியோகம் செய்யும் கிளார்க்குகளும் சொற்ப சம்பளம் வாங்கும் சிப்பந்திகளும் உள்ளபடி கஷ்டப்படுகிறார்கள் என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படவில்லையா ?

(4) சென்னபட்டணத்தில் ரூ. 35க்குக் குறைவான சம்பளம் வாங்குகிறவர்களுக்கும், வெளியூர்களில் ரூ. 25 சம்பளத்திற்குக் குறைவாக வாங்குகிறவர்களுக்கும் கவர்ன்மெண்டார் பிரத்தியேக அலவன்ஸ் கொடுத்துவர இஷ்டப்படுவார்களா ?

(5) ஆகார சாமான்களின் விலைகள் உயர்ந்திருப்பதை முன்னிட்டு சர்க்காரில் உத்தியோகம் செய்யும் எந்த வகுப்பாருக்காயினும் கவர்ன்மெண்டார் அலவன்ஸ்கொடுத்திருக்கிறார்களா ? அப்படிக் கொடுத்திருந்தால் யாருக்கு எவ்வளவு அலவன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது ? என்ன காரணத்தை முன்னிட்டு ?

ஹானரபில் மிஸ்டர் கார்டியூ :—

ஜ. XXI. (I) இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா முழுதிலுமுள்ள ஜில்லாக்களில் முக்கியமான ஆகார சாமான்களின் சராசரி விலைகளுக்கு 5 வருஷத்திற்கு ஒருமுறை ரிப்போர்ட்டுகள் பிரசுரிக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டை ஹானரபில் மெம்பர் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். அதைப் பார்வையிட்டால் அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய முக்கியமான ஆகார சாமான்களின் விலைகள் 1896ம் ஆம் முதல் 1900ம் ஆம் வரையிலுள்ள 5-வருஷங்களில் விற்று வந்த விலை 1901 முதல் 1904 ஆம் வரையிலுள்ள 5-வருஷங்களில் விற்று வந்த விலையை விட ஏறி நிற்கின்றனவென்று தெரியவரும். இருந்தபோதிலும் இப்போது விலைகள் ஏறியிருப்பது சொற்ப காலத்திற்குமட்டிலுமிருக்கக்கூடியதல்ல ; நீடித்தகாலம் இப்படியேயிருக்குமென்று காண்பிக்கப் படவில்லை.

(2 & 3) ஆகார சாமான்களின் விலைகள் கிராக்கியாயிருப்பதை முன்னிட்டு எந்தவகையிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரையிலும் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை ; கொடுப்பதாகவும் கவர்ன்மெண்டாருடைய உத்தேசத்தில் இப்போதில்லை. பங்காளத்தில் அலவன்ஸ் கொடுத்துவருவதும் வராததும் கவர்ன்மெண்டாருக்குத் தெரியமாட்டாது. அப்படி கொடுத்து வருவதாகக் காண்பித்த போதிலும் அதுபோல் சென்னபட்டணத்திலும் கொடுக்கப்படவேண்டுமென்பது அவசியமல்ல. பங்காளமாகாணத்தில் சிலகாலமாகப் பஞ்சம் பரவி வருகின்றது. சிலவாரங்களுக்கு முந்தி 44632 ஜனங்கள் பஞ்ச நிவாரண வேலைகளில் அமர்ந்து வேலைசெய்து வந்தார்கள், அப்படிப்பட்ட சந்தர்ப்பம் சென்னை ராஜதானியிலுண்டாகவில்லை.

ஹானரபில் மிஸ்டர் குருசாமி அய்யர் :—

கே (XXII) (a) தென்கன்னடத்தைப்பற்றிய கேள்வி.

ஹானரபில் மிஸ்டர் குருசாமி அய்யர் :—

கே. (XXIII) (a) மதுரை முனிசிபாலிட்டியில் செண்டிரல் மார்க்கட்டு கட்டும் கண்டிராக்ட்டை முனிசிபாலிட்டியார் ஒரு முனிசிபல் கவுன்சிலருக்குக் கொடுத்திருப்பதாக மதுரை ஜனங்கள் புகார்செய்து கவர்ன்மெண்டுக்கு ஒருமகஜர் அனுப்பியிருந்தது வாஸ்தவமா?

(b) கலெக்ட்டர் ஷை முனிசிபல் கவுன்சிலருக்கு கண்டிராக்ட் கொடுக்கும்படி உத்தரவு செய்துவிட்டாரோ ?

(c) கண்டிராக்ட்டை முனிசபல் கவுன்சிலருக்குக் கொடுத்ததால் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் நடக்கமாட்டாதென்றும் முனிசிபாலிட்டியின் நன்மைகள் கெட்டுப்போகமாட்டாதென்றும் கவர்ன்மெண்டார் திருப்திசெய்துகொண்டார்களா ?

(a) கண்டிராக்ட்டை முனிசிபல் கவுன்சிலருக்குக் கொடுத்த விஷயத்தைக்குறித்து கவர்ன்மெண்டார் என்னமுடிவு செய்திருக்கிறார்கள் ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி.

ஜ. (XXIII) மதுரை ரேட்பெயர்களில் சிலரிடமிருந்து கவர்ன்மெண்டாருக்கு ஒரு மகஜர் வந்திருக்கிறது. அதில் மதுரை முனிசிபல் பரிபாலனத்தைக் குறித்த புகார்செய்திருக்கிறார்களே தவிர செண்டிரல் மார்க்கட்டு கட்டும் கண்டிராக்ட்டை ஒரு முனிசிபல் கவுன்சிலருக்குக் கொடுக்கும்படியாக முனிசிபல் கவுன்சிலில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது வாஸ்தவம்தான். ஆனால் கலெக்ட்டர் அதற்கு அனுமதிகொடுக்கவில்லை. சேர்மன் ஷை தீர்மானத்திற்குத் தம்முடைய சம்மதத்தைக் கொடுக்கவில்லை.

ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர் :—

கே. (XXIV) (a) 1906-ம் ஆம் வருஷத்திய 3-ம் நெ. கிரிமினல் கலண்டர்கேசில் புதுக்கோட்டை மூன்றாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் பிரிட்டிஷ் இந்தியாவிலிருப்பதாக எண்ணப்படும் தாமனிக் கிராமத்தைத் தம்முடைய அதிகார எல்லைக்குள் சேர்த்துக்கொண்டிருப்பதைக் குறித்து மதுரைஜில்லாவில் கானாடுகாத்தானிலிருக்கும் S. R. M. M. S. T. சிதம்பரம் செட்டியார், மதுரைஜில்லாகலெக்ட்டருக்குச் செய்துகொண்டிருக்கிறமனுவையாவது அல்லது மகஜரையாவது புதுக்கோட்டை பொலிக்கொட்டை பொலிட்டிகல் ஏஜெண்டாகிலும் அல்லது கலெக்ட்டராகிலும் கவர்ன்மெண்டாருடைய நோட்டீசுக்குக் கொண்டுவந்தார்களா ?

(b) இதைக்குறித்து கவர்ன்மெண்டார் என்ன முடிவு செய்திருக்கிறார்கள் ? அப்படி யாதொருமுடிவும் இதுவரையில் செய்யாமலிருந்தால் ஷை கேசில் சம்பந்தப்பட்ட மிஸ்டர் சிதம்பரம் செட்டியாரும் மற்றொரு குற்றவாளியும் பிரிட்டிஷ் இந்தியாவைச்சேர்ந்த பிரஜைகளானபடியால் அவர்பேரில் வந்திருக்கும் கேசை

விசாரணைசெய்யாமல் நிறுத்திவைக்கும்படி உத்தரவுசெய்யக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. (XXVI) இதைப்பற்றிக் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு சமாசாரமும் எட்டவில்லை.

ஹானரபில் மிஸ்டர் K. R. குருசாமி அய்யர் :—

கே (XXV) (a) இந்த ராஜதானியில் மெடிகல் டிபார்ட்மெண்டின் குறைகளை எடுத்துக் காண்பித்து அடிக்கடி அநேக பத்திரிகைகள் எழுதிவருகின்றனவே, கவர்ன்மெண்டார் அவைகளையெல்லாம் கவனித்தார்களா ?

(b) "மதராஸ் சிவில் மெடிக்கல் டிபார்ட்மெண்டு" என்று தலைப்பெயர்கொடுத்து, அதில் ஷை டிபார்ட்மெண்டின் குறைகளைச் சுட்டிக்காண்பித்தவும், கையெழுத்தில்லாதவுமான அச்சிட்டதுண்டு விளம்பரங்கள் சென்னை ராஜதானி முழுதிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவே, அந்த விளம்பரங்கள் கவர்ன்மெண்டாருடைய நோட்டீசுக்கு எட்டினதா ? அப்படியானால் அந்த விளம்பரத்தில் சொல்லியிருக்கும் விஷயங்கள் உண்மையா அல்லவா வென்று கண்டுபிடித்து ரிப்போர்ட் செய்ய சர்ஜன் ஜனரலுக்கு உத்திரவு செய்யக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

(c) சர்ஜன் ஜெனரல் ஆபீசில் மானேஜர் மிஸ்டர் குலாம் முகமத்சாயபுக்கு 26 வயதிற்கு மேலாகிறதென்றும் 34 வருஷ சர்விஸ் உடையவரென்றும் சொல்லப்படுவது வாஸ்தவமா ?

(d) சர்விசில் அதாவது உத்தியோகத்திலிருக்கவேண்டிய காலத்திற்கு அதிகமாயிருக்கும்படி இதுவரையில் அவருக்கு ஏதேனும் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறதோ? இனிமேலாகிலும் உத்திரவு கொடுப்பதாக உத்தேச மிருக்கிறதோ ? அப்படி அவருக்கு உத்திரவு கொடுக்காத விஷயத்தில் ஒரு புதிதாய் ஒருவரை நியமிக்க கவர்ன்மெண்டார் உத்திரவு செய்ய இஷ்டப்படுவார்களா ?

(e) சர்ஜன் ஜனரலுக்குப் பெர்சனல் அசிஸ்டன்ட் உத்தியோகத்தில் நியமிக்கப் படுகிறவர்கள் ஜில்லா அனுபோக மிகுதியாக உடையவர்களைப் பார்த்து நியமிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

(f) மெடிகல் டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களை, மற்ற டிபார்ட் மெண்டு உத்தியோகஸ்தர்களை அடிக்கடி மாற்றுவதுபோல மாற்றாமல் நீண்ட காலத்திற்குப் பிறகு மாற்றும்படி உத்திரவுசெய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. XXV. (a & b) பார்க்கவில்லை.

(c) கையெழுத்தில்லாத விளம்பரத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டார் கவனிக்கமாட்டார்கள்.

(d) ஆம் அவருக்கும் 56 வயதாகிறது. 34 ஆம் சர்விஸ் உடையவர்.

(e) உத்தியோகத்திலிருக்கவேண்டிய காலத்திற்கு அதிகமா யிருக்கும்படி முன் ஒரு சமயம் உத்திரவு கொடுக்கப்பட்டது. இனிமேல் கொடுக்கப்படமாட்டாது.

(f) கவர்ன்மெண்டார் யாதொரு பொதுவான அபிப்பிராயமும் இப்போது சொல்ல முடியாது.

(XXVI) (a) மதுரைஜில்லா தோண்டியிலிருக்கும் சிவில் அப்பாத்தகிரி மிஸ்டர் சய்யத்முகம்மது, அப்பாத்தகிரிவேலையுடன் இன்னும் அநேகவேலைகள் பார்த்து வருவதால் வைத்தியவேலைகளுக்கு இடஞ்சலாயிருக்கிறதென்று ஏதேனும் புகார் கவர்ன்மெண்டாருக்கு எட்டியிருக்கிறதா ?

(b) அப்பாத்தகிரி வேலையன்றி அடியிற்கண்ட வேலைகள் பார்த்து வருவது வாஸ்தவமா ?

(c) சிலோன் கவர்ன்மெண்டு தரப்பில் இமிகிரேஷன் அஸிஸ்டெண்டு சூப்பிரண்டு.

(d) தோண்டித் துறைமுகத்திற்கு வரும் பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச்சேர்ந்த ஸ்டீமர்கள் சோதனைசெய்து அதில் ஏறிப்போகிறவர்களுக்குச் சுகாதார சர்ட்டிபிகேட் கொடுக்கும் ஹெல்த் ஆபீசர்.

(e) திருவாடானை ஜெயிலுக்கு வாரம் ஒருமுறை போய் பார்வையிட்டுவரும் உத்தியோகம்.

(f) சிலோன் லேபர்கமிஷனுக்கு ஏஜண்டு.

(g) சொந்த வைத்தியத் தொழில்.

(h) இவ்வளவு வேலைகளையும் ஒற்றுப் பார்க்க கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்களா? இவ்வேலை இதைக் குறித்து விசாரணை செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஹானரபில் மிஸ்டர் பிராட்லி :—

ஜ. XXVI (a) இதைக்குறித்து கடந்த நவம்பர்மீ புகார்மனு ஒன்று கவர்ன் மெண்டாருக்கு வந்தது. அதில் கையெழுத்து செய்யப்படவில்லை. ஆதலால் கவர்ன்மெண்டார் அதைக்குறித்து கவனிக்கவில்லை.

(b) சிலோன் லேபர் கமிஷனுக்கு ஏஜண்டாகவிருப்பதுமட்டிலும் கவர்ன்மெண்டாருக்குத் தெரியமாட்டாது. மற்ற வேலைகள் பார்த்து வருவது வாஸ்தவம் தான்.

(c) இதைக் குறித்து ஒரு விசாரணை உத்திரவு செய்ய கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமில்லை.

ஹானரபில் மிஸ்டர் குருசாமி அய்யர் :—

கே. XVII. அம்மையநாய்க்கனூரிலிருந்து கிருஷ்ணப்ப நாயக்கன் தோப்பிற்குப் போக்கு வரத்தாகும் வண்டிகளைக் குறித்த கேள்வி.

கே. XXVIII நெட்டால் கூலிகளை மிகுந்த அசௌகரியங்களுக் குட்படுத்தி நெட்டாலிலிருந்து ஒரு கப்பலில் அழைத்துக்கொண்டு வந்ததைப்பற்றிய கேள்வி.

ஹானரபில் மிஸ்டர் குருசாமி அய்யர் :—

கே. XXIX திருச்சினாப்பள்ளி செஷன் ஜட்ஜியாகிய மிஸ்டர் A. M. லேட்ஸ், போர்ஜரி குற்றமும் நம்பிக்கை மோசக்குற்றமும் சாட்டப்பட்ட ஒரு தபால் இலாக்கா உத்தியோகஸ்தனை 1907ம் ஆம் மார்ச்சுமீ 11உ செஷன் விசாரணை செய்ய ஆரம்பித்த

தும், 12௳, 13௳, 14௳ 15௳ களில் கோர்ட்டிற்கு வராமற் போனதும், 16௳, 3-மணிக்கு வந்து விசாரணை ஆரம்பித்த பிறகு 18, 19, 20, 21ம் தேதிகளில் கோர்ட்டுக்கு வராததும் ஜூரிகள், சாக்ஷிகள் இன்னும் கேசில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் ஜட்ஜி கோர்ட்டுக்கு வருவதும் வராததும் தெரியாமல் பிரதி தினம் காலை 11 மணி முதல் 5 மணிவரையில் கோர்ட்டில் காத்துக்கொண்டிருப்பதும் 13௳ தெலுங்கு வருஷப்பிறப்பை முன்னிட்டு சர்க்கார் விடுமுறை நாளாயிருந்தபோதிலும், அன்றையதினம் கோர்ட்டு நடத்துவதாக ஜட்ஜி சொன்னதும், அதே பிரகாரம் கேசில் சம்பந்தப்பட்ட சாக்ஷிகளும், கக்ஷிக்காரர்களும், ஜூரிகளும் மற்றவர்களும் காத்திருந்தும் ஜட்ஜி கோர்ட்டிற்கு வராமற்போனதும் ஆகிய இந்த சம்பவங்கள் வாஸ்தவமா? இப்படி தொடர்நேர்த்தியாய் ஜட்ஜி கோர்டிற்கு வராமற்போனதற்குக்காரணமென்ன? வர சௌகரியப்படாமற்போனால் கட்சிக்காரர் முதலியோர்க்குச் சொல்லியனுப்பாத காரணமென்ன? செஷன் ஜட்ஜி இவ்வாறு நடந்ததற்காக கவர்ன்மெண்டார் அவரை என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்?

ஆனரபில் மிஸ்டர் பிராட்லி:—

ஜ. XXIX மிஸ்டர் ஸ்லேட் இன்னும் நோயாயிருக்கிறார். மார்ச்சு௴ 30௳ சனிக்கிழமை அவர் மெடிகல் போர்டுக்கு முன்னால் ஆஜராயிருக்கவேண்டியது. அதற்குக்கூட சக்தியில்லாமல் அவர் நோயாயிருக்கிறார். அவர் தொடர் நேர்த்தியாய் சீக்காயிருந்தாரென்று கேள்விப்பட்டவுடன் கவர்ன்மெண்டார் வேறொரு செஷன் ஜட்ஜியை நியமித்தார்கள்.

ஆனரபில் மிஸ்டர் குருசாமி ஐயர்:—

கே. XXX. முனிசீபினிடம் சப் ஜட்ஜிகளும், தங்களிடம் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களை அடக்கும்படியானவும் கண்டிக்கும்படியானவுமான அதிகாரம் அவர்கட்கு இருக்கும்படியாக மதராஸ் சிவில் கோர்ட்டு ஆக்டை சீர்திருத்த ஐகோர்ட்டார் அபிப்பிராயத்தைக் கேட்டு யோசனை செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஆனரபில் மிஸ்டர் பிராட்லி:—

ஜ. (XXX) சிவில் கோர்ட் ஆக்ட் 23-வது பிரிவில் ஜில்லா ஜட்ஜிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தில் அசௌகரியங்கள் உண்டாகுமென்று கவர்ன்மெண்டார் நினைக்கப் போதுமான காரணமில்லை. ஆகையால் ஆனரபில் மெம்பர் பிரேரேபித்ததைக் கவர்ன்மெண்டார் பெற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

சட்டங்கள்.

1907-௵ மோடார் வண்டி ஆக்ட் 1907-வது வருஷத்திய மலைநாட்டுப் பிராந்திய முனிசிபல் ஆக்ட் கவர்னருடையவும், கவர்னர் ஜனரலுடையவும் சம்மதத்தை யேற்று அமுலுக்கு வந்திருக்கின்றன என்று ரிபோர்ட்டு செய்யப்பட்டது.

1905-௵த்திய சென்னபட்டணம் நில சோத்து மசோதா ஆக்ட்.

இதைக்குறித்து அடியிற் கண்டவர்கள் கவர்ன்மெண்டாருக்கு மனு அனுப்பியிருக்கிறார்கள்.

I. 1907-௵ ஜனவரி௴ 7௳ திருநெல்வேலி ஜில்லா எட்டியாபுரம் ஜமீன்தார் அனுப்பியிருக்கும் கடிதம்.

II. 1907-௵ பிப்ரவரி௴ 4௳ சென்னபட்டணம் நில சுவான்தார் சங்கத்தார் எழுதியிருக்கும் கடிதம்.

III. 1907-௵ பிப்ரவரி௴ 10௳ கிருஷ்ணா ஜில்லாவில் சித்தநத்தம் கிராமத்திலும், இன்னும் 72 கிராமங்களிலும் இருக்கும் ரயத்துகள் எழுதியிருக்கும் கடிதங்கள்.

IV. 1907-௵ ஏப்ரல்௴ 1௳ பொபிலி மஹாராஜா அனுப்பியிருக்கும் கடிதம்.

நகர் போலீஸ் சீர்திருத்த மசோதா ஆக்ட்.

சென்னை நகரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் அதிகாரத்திற்கு உட்பட்ட போலீசாரும், போலீஸ் கமிஷனர் அதிகாரத்திற்குட்பட்ட போலீசாரும், கிரிமினல் கேசுகளைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் மோதிக்கொள்கிற படியால், இப்போதிருக்கும் சிட்டி போலீஸ் ஆக்டைச்சீர்திருத்தப் பிரேரேபிக்கப்பட்டது. இப்போது செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தத்தால், இனிமேல் சென்னபட்டணம் போலீஸ் இலாகாமுழுதிலும் இன்ஸ்பெக்ட் ஜனரலுடைய நேரான அதிகாரத்திலிருக்கும் போலீஸ் கமிஷனர், போலீஸ் இன்ஸ்பெக்டருடைய அதிகாரத்திற் குட்பட்ட டிப்டி இன்ஸ்பெக்டராயிருப்பார். இந்த சீர் திருத்த மசோதா ஆக்டும் பாஸ் செய்விக்கப்பட்டது.

PRESIDENCY MAGISTRATE'S COURT, EGMORE.

எழும்பூர் பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் W. R. கிளார்க்.

பிரியாதி:—லோக்கல் கவர்ன்மெண்டார்.

குற்றவாளி:—சர்ஜியார்ஜ் அர்பத்நட்.

சர்ஜியார்ஜ் அர்பத்நட் கேசின் தொடர்ச்சி.

கேசின்விவரம்:—சர் ஜியார்ஜ் அர்பத்நட் சென்னை ஈக்குவிட்டபில் அசூபரன்ஸ் சொசைட்டி விஷயமாகச் செய்த நம்பிக்கை மோசக்குற்றத்தைப் பற்றிய விசாரணையைச் சென்ற மாதம் கெஜெட்டில் பிரசுரம் செய்திருந்தோம். இந்த விசாரணை முடிந்தபின்னர் நிகழ் ஜூன்௴ 3௳ ராஜா V. கிருஷ்ணபகதூர், சர்ஜியார்ஜ் அர்பத்நட் ஏமாற்றின குற்றத்தைப்பற்றிய விசாரணையைக் கோர்ட்டார் ஆரம்பித்தார்கள்.

லாயர்கள்:—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு முன்போலவே பாரிஸ்டர் மிஸ்டர F. B. பௌல் பேசிவந்தார். குற்றவாளி தரப்பிற்கு முன்போலவே சொலிசிட்டர் சர் என்றிகிங் ஆஜரானார்.

பிராசிக்கியூஷன் தரப்பார் கக்ஷி:—பாரிஸ்டர் மிஸ்டர் பௌல் பிராசிக்கியூஷன் தரப்புக்கக்ஷியை அடியிற்கண்ட பிரகாரம் சொன்னார்:—வெங்கடகிரி ராஜாவினுடையவும் பொபிலி மகாராஜாவினுடையவும் சகோதரராகிய ராஜா V. கிருஷ்ணபகதூர், அர்பத்நட் பாங்கியில் 3½ லக்ஷ ரூபாய் பிக்சட் (Fixed) டிபாசிட்டில் போட்டிருந்தார். இந்த டிபாசிட் பணத்தைப் பாங்கியார் திருப்பிக் கொடுக்கவேண்டிய வாயிதா 1906-ம்௵ அக்டோபர்௴ 9௳ விழுந்தது. குற்றவாளி அக்டோபர்௴ 1௳ அதாவது, வாயிதாவுக்கு ஒருவாரத்துக்கு முந்தியே வாயிதா அக்டோபர்௴ 9௳ வருகிறதென்றும் டிபாசிட் தொகையை ராஜா மறுபடியும் பாங்கியிலேயே போடப்போகிறாரா அல்லது வாங்கிக்கொள்ளப்போகிறாரா என்றும் தெரிவிக்கும்படியாக ராஜாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். ராஜா அதன் பேரில் தன்னுடைய ஏஜண்டாகிய கிருஷ்ணய்யரிடம் டிபாசிட் ரசீதையும் 1906-வது௵ அக்டோபர் மாதம் 7௳யில் அர்பத்னட் கம்பெனிக்கு எழுதிய லெட்டரையும் கொடுத்தனுப்பினார். அந்த லெட்டரில் ஏஜண்டு கிருஷ்ணய்யரிடம் பணத்தைக் கொடுக்கும்படியாக எழுதப்பட்டிருந்தது. வாயிதா தேதியாகிய அக்டோபர்௴ 9௳ ஏஜண்டு கிருஷ்ணய்யர் அர்பத்நட் பாங்கிக்குச்சென்று ஷை டிபாசிட் தொகையைக்கேட்டார். அப்போது குற்றவாளி பணம் வேண்டுமென்பதற்கு நோட்டீசு கொடுத்தது மிகுந்த சொற்பகாலமாயிருக்கிறதென்றும், பெருந்தொகையானபடியால் ஒருவாரம் நோடீசாவது கொடுக்கவேண்டுமென்றும் இதைக்குறித்து ராஜாவுக்கு எழுதுவதாயும் ஏஜண்டுக்குச் சொன்னார். ஏஜண்டு இதை அதேதினத்தில் ராஜாவுக்குத் தந்தி மூலமாய்த் தெரியப்படுத்தினார். ராஜா இந்தப் பணத்தை அர்ப்பத்நட் பாங்கியிலிருந்து வாங்கினவுடன் தன்னுடைய சகோதரராகிய பொபிலி மகாராஜாவுக்குக்கடன் கொடுப்பதாகச் சொல்லியிருந்தபடியால் அவருக்குப் பணம் அவசரமாய்த் தேவையாயிருந்தது. ஆகையால் இப்பணத்தை உடனே வாங்கி பொப்பிலி மகாராஜா கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும்படியாக மதிராஸ் பாங்கியாரிடம் கொடுக்கும்படி அக்டோபர்௴ 9 தேதி ஏஜண்டுக்குத் தந்தி அடித்தார். 10 தேதி ஏஜண்டு அர்ப்பத்னட் பாங்கிக்குச் சென்று குற்றவாளியைக்கண்டு பணம் கேட்டார். அப்போது குற்றவாளி தாம் ஏற்கனவே ராஜாவுக்குக் கடிதம் எழுதி இருக்கிறதாகச் சொன்னார். ஆனால் உள்ளபடி குற்றவாளி 12௳ வரையில் ராஜாவுக்கு யாதொரு கடிதமும் எழுதவில்லை. 12 தேதி தினம் குற்றவாளி ராஜாவுக்கு ஒரு கடிதமும் தந்தியும் அனுப்பியிருக்கிறார். அவைகளில் லக்ஷரூபாய்க்கு மேற்பட்ட டிபாசிட்டு பெறவேண்டியதாயிருந்தால் ஒரு வாரம் நோடீசு கொடுக்கவேண்டுமென்பது பாங்கியின் விதி என்று சொல்லி இருந்தார். இப்பேர்ப்பட்ட விதி யாதொன்றும் பாங்கியில் கிடையாது. டிபாசிட்டுக்காக பாங்கியார் கொடுத்திருக்கிற ரசீதிலேயே டிபாசிட்டர்கள் வாய்தா தேதியில் பணத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அந்த வாய்தா தேதிக்குப்பிறகு வட்டி கொடுக்கப்படமாட்டாதென்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படி குற்றவாளி சொன்னது காலத்தைப் போக்குவதற்குச் சொன்னதே தவிர உண்மையான விஷயமல்ல. ராஜாவுக்கு 12-ந்தேதி கடிதம்எழுதுவதற்கு முந்தி குற்றவாளி லண்டனில் இருக்கும் பார்டனருக்கு ஒரு தந்தி அடித்திருக்கிறார். அதில் அக்டோபர்௴ 14-ந் தேதிவரையில் ராஜாவுக்குப்பணம் கொடுக்காமல் இருக்கும்படி தாம் பிரயத்தனப்பட்டுவருவதாய்ச் சொல்லியிருக்கிறார். இதுவரையில் பணத்துக்கு அடிக்கடி தந்தி அடித்துக்கொண்டிருந்த ராஜா, குற்றவாளி அடித்த தந்தியைப் பார்த்துவிட்டு ஒருவாரம் நோட்டீசு கொடுக்கவேண்டுமென்பதை நம்பி சும்மா இருந்துவிட்டார். இது குற்றவாளி இன்னும் ஒருவாரத்திற்கு ராஜாவின் பணத்தை வைத்துக்கொள்வதற்குச் செய்த பாசாங்கு. குற்றவாளி தன்னுடைய சிநேகிதராகவும் நம்பிக்கையுள்ள ஏஜெண்டாகவும் அர்பத்னட் கம்பெனி துபாஷியாகவும் இருக்கும் சர் சவலை ராமசாமிமுதலியாரை, ராஜாவுடன் பேசி இன்னும் சிலகாலம் ஷை டிபாசிட் தொகையைப் பாங்கியிலேயே வைத்துவைக்கும்படியாய் ராஜாவுக்குப் பொய்யான புகல்கள் சொல்லித் தூண்டும்படியாக அனுப்பினார். பாங்கி தலையாடிக்கொண்டிருக்கிறதென்று சர்ஜார்ஜ் அர்பத்நட்டுக்குத்தெரிந்திருந்தும் பாங்கியை மூடும்படியாக நாளுக்கு நாள் யோசனைசெய்து வருகின்றோம் என்று லண்டனில் இருக்கிற பார்டனருக்குப்பிரதிதினமும் தந்தி அடித்திருந்தும் அர்பத்நட் பாங்கி நல்ல நிலைமையில் இருக்கிறதென்றும் இப்போது உண்டாயிருக்கிற பணக்கசாலா தற்சமயம் கஷ்டமென்றும் டிபாசிட் தொகையைப்பற்றிப் பயப்படவேண்டுவதில்லை என்றும் இன்னும் ஒரு வருஷம் வரையில் ஷை டிபாசிட் தொகையைப் பாங்கியில் வைத்துவைக்கும்படியாகவும் சொல்லி ராஜாவைத் தூண்டும்படி குற்றவாளி, சர் சவலை ராமசாமிமுதலியாரை அனுப்புவித்தார். ராஜா, சர் சவலை சொன்ன பேச்சை நம்பி பாங்கி நல்ல நிலைமையில் இருக்கிறதென்று எண்ணித் தம்முடைய மூன்று லக்ஷம் ரூபாயை மறுபடியும் பாங்கியிலேயே போடும்படி சம்மதித்தார். ஆனால் வட்டி பாக்கி அன்றி 50,000-ரூபாய் தமக்குத் தேவையாயிருக்கிறதென்று ராஜா, சர் சவலை இடம் சொன்னார். டிபாசிட் தொகையை மறுபடியும் ராஜா பாங்கியில் போட்டால் வட்டியை உடனே கொடுத்துவிடுவார்கள் என்று சர் சவலை ராஜாவுக்குச் சொன்னார். எப்படியானாலும் ஷை டிபாசிட் தொகையில் 50,000 ரூபாய் மிகுந்த அவசியமாய்த் தேவையாயிருக்கிறதென்றும் தம்முடைய சகோதரருடைய பெண்ணுக்கு விவாகம் நிச்சயித்திருக்கிறதென்றும் இந்த செலவுகளுக்காகத் தேவையாயிருக்கிறதென்றும் ராஜா சொன்னார். இந்த 50,000 ரூபாயையும் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டுடன் பேசிக்கொடுக்கும்படியாகச் செய்வதாக சர்சவலை சம்மதித்தார். சர் சவலை 15-ந்தேதி திரும்பிவந்துவிட்டார். ராஜா 50,000 ரூபாயும் வட்டியும் வாங்கிவரும்படியாக ஏஜண்டைச் சென்னபட்டணத்திற்கு அனுப்பினார். சர் சவலை புதிய பிரேரேபனைகள் செய்தார். ஏஜண்டு அதற்குச் சம்மதித்தார். இதன்பேரில் அக்டோபர்மாதம் 17-ம்தேதி ராஜா, அர்பத்நட் பாங்கியின் டிபாசிட்டை இன்னொரு வருஷத்திற்கு வைத்துக்கொள்ளும்படியாக ஒரு கடிதம் எழுதினார். டிபாசிட் தொகையை மறுபடியும் பாங்கியில் போட்டதற்காக ரசீது வாங்கும்பொருட்டு ராஜாவின் ஏஜண்டுகள் அர்பத்நட் பாங்கிக்குப்போனார்கள். சர் சவலையினுடையவும் குற்றவாளியினுடையவும் பொய்மொழிகளால் ராஜா தூண்டப்பட்டு டிபாசிட்டை இன்னொரு வருஷம் வரையில் பாங்கியில்வைக்கும்படியாகச் சம்மதித்தார். ராஜாவின் பணத்தைத்திருப்பிக்கொடுக்கப்போகிறதில்லைஎன்று சர் ஜியார்ஜ்அர்பத்

நட்டுக்குத் தெரிந்திருந்தும் பாங்கி நாளுக்குநாள் இன்சால்வெண்ட் நிலைமையில் வந்துகொண்டிருக்கிறதென்று தெரிந்திருந்தும் இந்த மூன்றரை லக்ஷத்தில் பாதி தொகையை ஒரு வருஷத்தில் கொடுத்துவிடுகிறதாக ஜியார்ஜ் அர்பத்நட் சொன்னது பொய்யான புகல். பாங்கி இருந்த நிலைமைக்கு மூன்றரை லக்ஷத்தைத் திருப்பிக் கொடுக்கவே சாத்தியப்படாத காரியம். ராஜா டிபாசிட்டின் பணத்தை மறுபடியும் பாங்கியில் போடும்படியாகவே தூண்டும்படி சர் சவலையை அனுப்பியிருக்கிறார். இது ஏமாற்றுவதற்கு மேல் பெருங் குற்றமாகும். மூன்றரை லக்ஷத்தைத் திருப்பிக்கொடுக்க பாங்கிக்குச் சக்தியேயில்லை என்று குற்றவாளிக்கு நன்றாய்த்தெரியும். இவர் அந்தத் தேதிகளில் லண்டனில் இருக்கும் பார்டனருக்கு அடித்திருக்கும் தந்திகளே இந்த விஷயத்தை ருஜுப்படுத்துகின்றன. ராஜாவின்எஜெண்டு 19௳ டிபாசிட்டை மறுபடியும் போட்டுப் புதியரசீது வாங்கும்படிப்போயிருந்தார். டிபாசிட்டைப் புதுப்பித்ததற்குக் குற்றவாளி ரசீது மாத்திரம் கொடுத்தார். வட்டிபணத்துக்குச் செக்கு கொடுக்கவில்லை. 20௳ செக் தயார் செய்து கொடுக்கிறதாகக் குற்றவாளிசொன்னார். 20௳ செக் கொடுத்தால் என்ன பிரயோசனம்? அன்றையதினமே பாங்கியை மூடி இன்சால் வெண்டு பெற்றுக்கொள்ளப் பிரயத்தினம் செய்துகொண்டிருந்தார்கள்.

இன்சால்வெண்டுகோர்ட்டில் நடவடிக்கைகள் நடத்தும்படியாக அன்றையத்தினம் அதாவது அக்டோபர்மீ 20௳ ரூ. 4000, தம்முடைய லாயர்களுக்குக் குற்றவாளி கொடுத்திருக்கிறார். சிலகாலம் சென்று இன்சால்வெண்டு பெற்றுக்கொள்வதற்காக இப்போதே தம்முடைய லாயர்களுக்குப் பணம் கொடுத்துவிட்டார்கள் என்று எதிர்கக்ஷிக்காரர்கள் சொல்லக்கூடும்.சிலகாலம் சென்று இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ளப் போகிறதற்குப் புத்தியுள்ள எவனும் இப்போதே தன்னுடைய லாயருக்குப் பணம் கொடுக்க மாட்டான்! ஆகையால் 20௳ சர் ஜியார்ஜ் அர்பத்நட் தம்முடைய லாயர்களுக்கு இன்சால்வெண்டு நடவடிக்கைகள் நடத்த ரூபாய் நாலாயிரம் கொடுத்து அவர் மறுநாளைக்கு மறுநாளாகிய 22௳ திங்கட்கிழமை பாங்கியை மூடப்போகிறதாக 20௳யே தீர்மானித்துவிட்டதை வியக்த்தமாய் ருஜுப்படுத்துகின்றது. அக்டோபர்மீ 20௳ லாயர்களுக்கு மட்டிலுமா பணம் அனுப்பியிருக்கிறார்? பாங்கி திங்கட்கிழமை மூடப் போகிறதைக் குறித்து ஞாயிற்றுக்கிழமை லண்டனுக்குத்தந்தி அடிக்கவும் இன்னும்சில்லறைச் செலவுகளுக்காகவும் அவருடைய அந்தரங்க மானேஜராகிய மிஸ்டர் பீபில்ஸ் என்பவருக்கு ரூ. 500 கொடுத்தார். அந்தக் கம்பெனியின் மற்றொரு பாகஸ்தராகிய மிஸ்டர் எங் என்பவருக்கு இன்சால்வெண்டு கோர்ட்டுச் செலவுகளுக்காக ரூ. 200 கொடுத்திருக்கிறார். இன்னும் பாங்கி இன்டஸ்டிரியல் கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய ரூ. 50 ஆயிரம் கடனுக்காகத் தம் வசமிருந்தகவர்ன்மெண்டு புரோநோட்டுகளை இன்டஸ்டிரியல் கம்பெனிக்கு டிரான்ஸ்பர் செய்தார். ஈக்குவிட்டபில் அஷ்யூரன்ஸ் சொசைடிக்காக ரூ. 10 ஆயிரத்திற்குத் தம்முடைய வசமிருந்த கவர்ன்மெண்டு புரோநோட்டுகளை டிரான்ஸ்பர் செய்தார். லண்டனிலிருக்கும் அர்பத்நட்லாதாம்கம்பெனியாராகிய தம்முடைய உறவினர்களுக்கு 500பௌன் அனுப்பிப் பத்திரப்படுத்தி வைக்கும்படிச்சொல்லியிருக்கிறார். அதேதினமே லண்டன் மாக்படயினுக்குந் தந்தி அடித்தார். இந்தத் தந்தியில் திங்கட்கிழமை பாங்கியை மூடப்போகிறதாகவும் தம்முடைய பெண்சாதிக்குச் சொல்லும்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் என்ன தெரிவிக்கிறதென்றால், குற்றவாளி 22௳ பாங்கியை மூட 20௳யே நிச்சயித்து விட்டார் என்று ருஜுப்படுத்துகின்றன. இப்படியிருந்தும் ராஜாவுக்கு வட்டிக்காக 20௳ பகல் மூன்று மணிக்குசெக்கு கொடுத்திருக்கிறார். அதுவும் ராஜாவின் பெயருக்குச் செக்கு கொடுத்தார். ராஜா தம்முடைய பெயருக்கு வேண்டியதில்லை என்றும் தம்முடைய ஏஜண்டினிடம் ரொக்கம் கொடுக்கும்படியும் அப்படி ஒருக்கால் செக் கொடுப்பதாயிருந்தால் ஏஜண்டின் பெயருக்கே செக் கொடுத்துவிடவேண்டும் என்றும் ராஜா சர் ஜியார்ஜ் அர்பத்நட்டிற்கு எழுதியிருந்தார். ராஜா சென்னையிலில்லை. வெங்கடகிரியிலிருக்கிறார் என்று குற்றவாளிக்கு நன்றாய்த்தெரியும்; அப்படியிருந்தும் ராஜாவின் பெயருக்குக் கொடுத்ததின் காரணம் என்னவென்றால், இந்தசெக் ராஜாவினிடம் போய் கையெழுத்து செய்யப்பட்டு வருவதற்குள் பாங்கி மூடப்பட்டுப் போய்விடும்; அப்போது மதிராஸ் பாங்கியார் செக்கை செலாவணி செய்யமாட்டார்கள் என்று தெரிந்தே குற்றவாளி ராஜா பேருக்கு வேணுமென்கிற மோசக்கருத்தான எண்ணத்துடன் செக் கொடுத்திருக்கிறார். 22௳ ஏஜண்டு செக்கை மதிராஸ் பாங்கிக்குக்கொண்டுபோனார். பாங்கியார் மதிக்கவில்லை. ஆகவே இது சம்பந்தமாகக் குற்றவாளிபேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றம் என்னவென்றால்.

(1) ராஜாவின் டிபாசிட் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய வாயிதா உள்ளபடி அக்டோபர்மீ 9௳ என்று குற்றவாளிக்குத் தெரிந்திருக்கும், ராஜா இன்னும் ஒரு வாரம் வரையில் பணத்தைக் கேட்காமலிருக்கும் பொருட்டு வாயிதா 16௳ என்று மோசக்கருத்தான எண்ணத்துடன் சொல்லி ராஜா இன்னும் ஒரு வாரம் வரையில் தம்முடைய பணத்தைப் பாங்கியிலேயேவைக்கும்படித் தூண்டியிருக்கிறார்.

(2) ராஜாவிற்குப்பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்கிற எண்ணமில்லாமலிருந்து அக்டோபர்மீ 14௳க்கும் 19௳க்கும் மத்தியில் ராஜா தம்முடைய பணத்தை மறுபடியும் பாங்கியிலேயே பிக்சட் டிபாசிட்டில் போடும்படியாக மோசக்கருத்தான எண்ணத்துடன் தூண்டியிருக்கிறார்.

(3) ராஜாவின் பேருக்குக்கொடுத்தசெக் மதராஸ் பாங்கியில் செலாவணியாக மாட்டாதென்று குற்றவாளிக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் செக்கைப்பெற்றுக் கொள்ளும்படி மோசக்கருத்தான எண்ணத்துடன் ராஜாவைத்தூண்டி அவருக்கு நஷ்டத்தை விளைவித்திருக்கிறார்.

கோர்ட்டார் கேள்விக்கு:—நான் என்னுடைய வேலைக்காரனிடம் தந்தியைக் கொடுத்து தந்தி ஆபீசுக்கு அனுப்பினேன். அந்த தந்தியின் நகல் என்னுடைய குமஸ்தா கிருஷ்ணமாசாரி கையால் எழுதப்பட்டிருக்கிறது. நான் நகலை வாசிக்கமுடியும். அதில், $3\frac{1}{2}$ லக்ஷத்தைப் பொபிலி மகாராஜாவின்பேரில் மதிராஸ் பாங்கியில் போடும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

சர் என்றி கிங்:—இந்தத் தந்தியில் சொல்லப்பட்டிருக்கும் சமாசாரம் சாக்ஷியமாக தாக்கல் செய்யப்படக்கூடாது.

மிஸ்டர் பௌல்:—பணத்தை அர்பத்நட் பாங்கியிலிருந்து வாங்கவேண்டுமென்று ராஜா கொண்டிருந்த ஆவலைக் காண்பிப்பதற்கு அந்தத் தந்தி சாக்ஷியமாகத் தாக்கல் செய்யப்படவேண்டும்.

கோர்ட்டார்:—ராஜா, பணத்தை வாங்கிவிடவேண்டுமென்று கொண்டிருந்த ஆவல் குற்றவாளிக்குத் தெரிந்திருந்தாலொழிய இந்தத் தந்தியைச் சாக்ஷியமாகத் தாக்கல் செய்யக்கூடாது.

வாக்குமூலம்:—என்னுடைய ஏஜண்டு கிருஷ்ணய்யாவிடமிருந்து அக்டோபர்மீ 9௳ எனக்கு ஒருதந்தி வந்தது. அதில் "அர்பத்நட்பாங்கியார் இன்று பணம் கொடுக்கவில்லை—தொகை பெரிதாயிருப்பதால் கொடுத்த நோட்டீஸ் போதாதென்று சொல்லுகிறார்கள். இன்று சாயங்காலம் உங்களுக்குக் கடிதம் எழுதுவதாகச் சொல்லுகிறார்கள். உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்." அடுத்ததினம் இந்தத் தந்தியை உறுதிப்படுத்தி கிருஷ்ணய்யாவிடமிருந்து எனக்குக் கடிதம்வந்து சேர்ந்தது. மறுதினம் எனக்கு அர்பத்நட் கம்பெனியாரிடமிருந்து கடிதம் வரவில்லை. 10௳ என்னுடைய ஏஜண்டினிடமிருந்து எனக்கு ஒருதந்தி வந்தது. அதில் "அர்பத்நட் பாங்கியார் பணம் கொடுக்கவில்லை—பொபிலிமகாராஜாவிற்கு அறிவிக்கவும்." கிருஷ்ணய்யாவிடமிருந்து எனக்கு 10௳ ஒருகடிதம் வந்தது. அதில் அவருக்குப் பகல் மூன்றுமணிக்குத் தந்தி வந்ததென்றும், அவர் உடனே அர்பத்நட் பாங்கிக்குப் போனதாகவும் ஒருவார நோட்டீஸ் தேவை என்று அவர்கள் எனக்கு எழுதியிருப்பதாயும் அதுவரையில் ஒன்றும் செய்யமுடியாது என்று அர்பத்நட் பாங்கியார் சொல்லுவதாயும் சொல்லப்பட்டிருந்தது. எனக்கு அர்பத்நட்கம்பெனியாரிடமிருந்து 13௳ கடிதம் வந்தது. அதில் ஒருவார வாயிதாவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். 1888 அல்லது 1889-வது வருஷமுதல் அர்பத்நட் பாங்கியில் பிக்சட்டிபாசிட்டில் பணம் போட்டுவருகிறேன். ஒருலக்ஷரூபாவரையில் போட்டுவந்திருக்கிறேன். இதற்குமுன் அந்தத் தொகையை வாங்கியுமிருக்கிறேன். அந்தத்தொகைகளுக்கு எந்தெந்தத் தேதியில் வாயிதாவிழுந்ததோ அதேதேதியில் வாங்கிவிட்டேனோ என்னமோ எனக்கு ஞாபகமில்லை. அவர்களுடைய கடிதம் வரும்பரியந்தம், பிக்சட்டிபாசிட்டில் போட்டிருந்த பணத்தை வாங்குவதற்கு ஒருவார நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று எனக்குத்தெரியாது. இதற்குமுன் எனக்கு இப்படிப்பட்ட கடிதம் வந்ததில்லை, இம்மாதிரி பாங்கியில் ஒரு விதியிருக்குமென்று நம்பினேன். ஆகையால் பணத்திற்கு அர்பத்நட்டாரை அவசரப்படுத்தவேண்டாமென்று என்னுடைய ஏஜண்டிற்கு உத்தரவுசெய்தேன். எனக்குப் பணம் அவசரமாய் வேண்டியதாயிருந்தது. எனக்கு ராஜா சர் சவலை ராமசாமி முதலியாரைத் தெரியும். அவர் என்னைப்பார்க்க வெங்கடகிரிக்கு வந்திருந்தார். அவர் 14௳ வந்தார். காலையில் என்னைப்பார்த்தார். சர்ஜியார்ஜ் அர்பத்நட் தம்மை என்னிடம் அனுப்பியிருப்பதாகச் சொன்னார். அவர் அர்பத்நட்டாருக்குச் சொந்தமான 50 ஆயிரம் பவுன் விலைமதிப்புள்ள (Manganese)காந்தமண் விற்பனைசெய்யப்படாமல் கிடக்கிறதென்றும், விலை இறக்கமாயிருக்கிறதென்றும் அதனால் விற்பனைசெய்யப்படவில்லை என்றும்அதனால் பாங்கியில்பணமுடையாயிருக்கிறதென்றும்சொன்னார். அவரும் அர்பத்நட்பாங்கியில் ஒரு லக்ஷம் ரூபா. போட்டிருப்பதாகச்சொன்னார். அவர் அவ்வளவு பணம் போட்டிருப்பதாகச் சொன்னாரேயொழிய பிக்சட்டிபாசிட்டில் போட்டிருப்பதாகவாவது அல்லது கரன்ட் டிபாசிட்டில் போட்டிருப்பதாகவாவது எனக்குச் சொல்லவில்லை. பொபிலி மகாராஜாவிற்குப் பணம் கொடுக்கவேண்டியதாயிருப்பதால் எனக்குப் பணம் அவசரமாய்வேண்டுமென்று சொன்னேன். பொபிலி மகாராஜாவிற்குப் பணம் கொடுப்பதாய் வாக்குக்கொடுத்துதந்தி அடித்துவிட்டேன்.—அதை எப்படி மாற்றமுடியும்?—ஆகையால் எனக்குப்பணம் அவசரமாய்த் தேவையாயிருக்கிறதென்று சொன்னேன். அதன்பேரில் சர் சவலை எனக்குவேண்டிய பணம் தருவதாய்ச்சொன்னார். அதன்பேரில் அவர் முன்னிலையிலேயே பொபிலி மகாராஜாவிற்குத் தந்தி அடித்தேன். அதன்பேரில் அர்பத்நட்பாங்கியில் போட்டிருந்த $3\frac{1}{2}$ லக்ஷத்தை அந்த பாங்கியிலேயே இருக்கும்படி சம்மதித்தேன். ஆனால் என்னுடைய குமாரத்தியின் விவாகத்திற்காக ஐம்பதினாயிரரூபாயாவதுபாங்கியார் அச்சமயம் கொடுக்கவேண்டுமென்று சொன்னேன். அர்பத்நட்பாங்கி நல்ல நிலைமையிலிருக்கிறதென்றும் இப்போதுபாங்கியில் உண்டாயிருக்கும் முடை எல்லாம்கூடி மாகனீஸ் என்கிற காந்தமலேயே விலையாகாததக்கல் என்றும் தாமே ஷை பாங்கியில் ஒருலக்ஷம் போட்டிருப்பதாகவும் சர் சவலை இராமசாமி முதலியார் எனக்குச் சொன்னார்.

கோர்ட்டார் கேள்விக்கு:—அர்பத்நட்பாங்கியார் இப்போது வட்டிமட்டிலும் கொடுப்பார்கள் என்றும் சர் சவலை ராமசாமி முதலியார் எனக்குச் சொன்னார். வட்டி தவிர ரூ. 50 ஆயிரமாகிலும் எனக்கு இப்போது அர்பத்நட்பாங்கியார் கொடுக்கவேண்டுமென்று சொன்னேன். பாங்கியிலிருந்த பிக்சட்டிபாசிட்டிற்குப் பாங்கியார் எனக்கு அக்டோபர்மீ 9௳ வட்டிகொடுக்கவேண்டும். என்னை என்றையதினம் வந்துபார்த்தாரோ அன்றுசாயங்காலமே ராஜாசர் சவலை ராமசாமி முதலியார் திரும்பி வந்துவிட்டார். அவர் சென்னபட்டணம் வருவதற்கு எந்தரயிலில் ஏறினாரோ அதேரயிலில் அவருடன்கூட என்னுடைய ஏஜண்டையும் அனுப்பினேன். அக்டோபர்மீ 16௳ நான் கிருஷ்ணய்யாவைப் பார்த்தேன். கிருஷ்ணய்யாவுடன் சிவராமய்யாவும் வந்துசேர்ந்தார். அர்பத்நட்பாங்கியில் நான் போட்டிருந்த பணமுழுமையும் மறுபடியும் பாங்கியிலேயே

யிருக்கும்படி நான் அனுமதி கொடுத்துவிட்டதாகவும், நான் ரூ. 50 ஆயிரம் கேட்கவில்லை என்றும் ராஜாசர் சவலை ராமசாமி முதலியார் சொன்னதாகச் சொன்ஞர். நான் என்னுடைய குமாரத்தியின் விவாகத்திற்காக ரூ. 50 ஆயிரம் கேட்கவில்லை என்று சொன்னதாகச் சர்வலை சொன்ஞராம். சர் சவலை அப்படிச்சொன்னது பொய். நான் ரூ. 50 ஆயிரம் கேட்டேன் என்று கிருஷ்ணய்யாவினிடம் சொன்னேன். கிருஷ்ணய்யாவினுடைய சகோதரராகிய சுப்பிரமணிய அய்யருக்கு நான் 16வ. தந்தி அடித்தேன். அவர் ஒருவக்கீல். நான் அடிக்கடி அவருடன் ஆலோசனை செய்வதுண்டு. "பிக்சட்டிபாசிட் ரசீதை அர்பத்நட்பாங்கியில் ஆஜர்படுத்தவும்" என்னுடைய ஏஜண்டு கிருஷ்ணய்யாவந்து நாளையதினம் என் அபிப்பிராயங்களைச் சொல்லுவார் என்றும் அந்தத் தந்தியில் சொல்லியிருந்தேன். நான் அர்பத்நட்பாங்கிக்கும் ஒரு தந்தி அடித்தேன். அந்தத்தந்தியில் வக்கீல் மிஸ்டர் சுப்பிரமணியத்தை என்னுடைய பிக்சட்டிபாசிட்பணத்தைப்பற்றிப் பேச தங்களிடம் அனுப்பியிருக்கிறேன்" என்று சொல்லியிருந்தேன். 17வ எனக்கு மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரிடமிருந்து கடிதம் வந்தது. சென்னபட்டணத்திலிருக்கும் என்னுடைய ஏஜண்டினிடம் கலந்துபேசும்படி நான் அவருக்குப்பதில் எழுதியிருந்தேன். 16வ செய்துகொண்ட ஏற்பாட்டின்படி முடிவுசெய்யும்படி நான் எழுதியிருந்ததாக எனக்கு ஞாபகமிருக்கிறது. சுப்பிரமணிய அய்யர் மூலியமாக நான் அர்பத்நட்பாங்கிக்கு எழுதிய கடிதம் இங்கிலீஷ்பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் அடியிற்கண்டபிரகாரம் எழுதப்பட்டிருக்கிறது. "நான் பாங்கியில் போட்டிருக்கும் ரூபாய் மூன்றுலக்ஷத்து ஐம்பதினுயிரத்தையும் பிக்சட்டிபாசிட்டில் மறுபடியும் ஒருவருஷத்திற்கு வைத்துக்கொள்ளும்படி வேண்டுகின்றேன். 100 க்கு வருஷத்திற்கு 5 வட்டிமேனிக்குப்போட்டுக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஷை $3\frac{1}{2}$-லக்ஷத்திற்கும் இப்போது கூடுதலானவட்டியையும் என்னுடைய ஏஜண்டு கிருஷ்ணையாவிடம் செலுத்தும்படி வேண்டுகிறேன். என்னுடைய புதிய டிபாசிட் தொகைக்கு கிருஷ்ணய்யாவிடம் ரசீதுகொடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்." நான் பிக்சட் டிபாசிட்டில் போட்டபணத்திற்கு மூன்றுரசீதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (ரசீதுகள் தாக்கல்செய்யப்பட்டன) ஒருரசீது 6 மாதத்தில் கொடுக்கப்படவேண்டிய ரூ. 50 ஆயிரத்திற்கு; ஒரு ரசீது. 9 மாதத்தில் கொடுக்கப்படவேண்டிய 50 ஆயிரத்திற்கு; ஒருரசீது. 12 மாதத்தில் கொடுக்கப்படவேண்டிய ரூபாய் $2\frac{1}{2}$ லக்ஷத்திற்கு. இந்த ரசீதுகளை அர்பத்நட்பாங்கியார் எனக்குக் கொடுத்தனுப்பியிருப்பதுமன்றி, ஒரு செக்கும் கொடுத்தனுப்பியிருக்கிறூர்கள். (செக்கு தாக்கல்செய்யப்பட்டது). அந்தச் செக்கு மதராஸ் பாங்கியின்பேரில் கொடுக்கப்பட்ட செக்கு. எனக்கு வெங்கடகிரியில் அக்டோபர்மீ 21வ வந்துசேர்ந்தது. நான் அந்தச்செக்கை கிருஷ்ணய்யர் பெயருக்கு எண்டார்ஸ்மெண்டுசெய்து மாற்றும்படியாகச் சென்னைக்கு அனுப்பிவிட்டேன். அர்பத்நட்பாங்கியார் பாங்கியை மூடிவிட்டார்கள் என்றும் செக்கு செலாவணியாகமாட்டாதென்றும் என்னுடைய ஏஜண்டு 22வ எனக்குத் தந்தி அடித்தார். அதேமாதிரியாக அவர் எனக்கு ஒரு கடிதமும் எழுதியிருந்தார். அதில் அர்பத்நட் பாங்கியார் கதவை மூடிவிட்டார்கள் என்றும் மதிராஸ்பாங்கியார் செக்கை மதிக்கவில்லை என்றும் சொல்லப்பட்டிருந்தது. கிருஷ்ணய்யாவிடமிருந்து தந்திவருகிறவரையில் அர்பத்நட்பாங்கியார் பாங்கியை மூடினசமாசாரம் எனக்குத் தெரியமாட்டாது. பாங்கியை மூடப்போகிற சமாசாரம் எனக்கு முந்தியே தெரிந்திருந்தால் நான் டிபாசிட்தொகையை மறுபடியும் அந்தபாங்கியிலேயேபோட சம்மதித்திருக்கமாட்டேன்.

மிஸ்டர் பௌல்:—சர் சவலை ராமசாமி முதலியாரைப் பிராசிக்கியூஷன் தரப்பார் சாக்ஷியமாகக்கோறியிருக்கிறூர்கள். அவரைக் கோர்ட்டார் விரோதமான சாக்ஷியாகப் பாவிக்கவேண்டும்.

சர் என்றிகிங்:—ஆக்ஷேபிக்கிறேன்.

கோர்ட்டார்:—வாக்குமூலம் கொடுத்துக்கொண்டு வரும்போது அதைப்பற்றிக் கவனிப்போம்.

ராஜா சர் சவலை ராமசாமி முதலியாரின் வாக்குமூலம்: — அர்பத்நட் கம்பெனியில் 23, 24 வருஷங்கள்வரையில் நான் துபாஷியாகவிருந்தேன். சர் ஜியார்ஜ் அர்பத்நட்டுக்கும் எனக்கும் சினேகமுண்டு. எனக்கு சர் ஜியார்ஜ் அர்பத்நட் ஒரு வைரப்பதக்கம் பயிரங்கமாய் இனுமளித்தார். ராஜா கிருஷ்ணபகதூர் அர்பத்நட்பாங்கியில் போட்டிருந்த ரூ. $3\frac{1}{2}$ லக்ஷரூபாய் விஷயமாக அவருடன்பேச சர்ஜியார்ஜ் அர்பத்நட் என்னை அக்டோபர்மீ 13வ அனுப்பியிருந்தார். சர்ஜியார்ஜ் அர்பத்நட் தம்மைவந்துபார்க்கும்படி எனக்கு ஒருகடிதம் எழுதியிருந்தார். நான் அவரை மதராஸ் கிளப்பில்போய்ப் பார்த்தேன்.

அவர் எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது:—இன்றுகாலையில் என்னை கிளப்பில்வந்துபார்க்கச் சௌகரியப்படுமா? ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்துப் பேசவேண்டிய திருக்கிறது. தாங்கள் வரக்கூடியதாயிருந்தால் ஆபீசுக்குப் போகாமல் காத்துக்கொண்டிருக்கிறேன். அப்படி சௌகரியப்படாதவிஷயத்தில் நான் ஆபீசுக்குப்போகும்போது தங்கள்வீட்டிற்குவந்து பார்க்கலாமா? முக்கியமானகாரியம். இல்லாவிடில் நான் சிரமம் கொடுக்கமாட்டேன். உடனே தயவுசெய்து பதில் எழுதி அனுப்பவும் !!

பணக்கஷ்டமா யிருக்கிறதென்று என்னிடம் சொல்லி விசனப்பட்டார்.

அவர் தாம் பணக்கஷ்டத்தி லிருப்பதாகச் சொன்ஞர். திங்கட்கிழமை தினம் ராஜா கிருஷ்ணபகதூருக்கு ரூ. $3\frac{1}{2}$ லக்ஷம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறதென்று சொன்ஞர். லண்டன் மாக்படேயின் கம்பெனியார் பணம் அனுப்பினுலொழிய ராஜாவுக்குப் பணம் செலுத்த முடியாது என்று சொன்ஞர். ராஜா கிருஷ்ணபகதூர் அவருடைய டிபாசிட் தொகையை இன்னும் சில காலம் பாங்கியிலேயே வைத்திருக்கச் சம்மதப்படும்படிச் செய்தால் எல்லாக்காரியங்களும் ஒழுங்காய் நடந்துபோகுமென்று சொன்ஞர். எந்த ஐவேஜியைக் கொண்டு இராஜாவின் கடனைத் தீர்க்கலாமென்று உத்

தேசித்திருந்தாரோ அதை எனக்குத் தெரிவிக்கவில்லை. எல்லாக்காரியங்களும் ஒழுங்காய் நடந்துபோய்விடுமென்று சொல்லுகிறீரே அது எப்படி நடக்குமென்று நான் கேட்டேன். ரூ. 50 ஆயிரம் பௌன் பெறுமான மாகனீஸ் என்கிற காந்தக்கல்லை தம்மிடமிருப்பதாகவும் அதை விற்பனை செய்தால் பாங்கிக்காரியங்களெல்லாம் ஒழுங்காய் நடத்துபோகுமென்றும் சொன்ஞர். அந்த விற்பனையில் நஷ்டம் வருமா லாபம் வருமா என்று நான் கேட்கவில்லை. மாகனீஸ் என்கிற காந்தக்கல்லை விற்பதால் 50 ஆயிரம் பௌன் தமக்கு வருமென்றும் அது லண்டனிலிருந்து ஏப்பரல்மீ வருமென்றும் சொன்ஞர்.

கோர்ட்டார்:—நீர், சர்ஜியார்ஜ் அர்பத்நட்டைக் கண்டு சம்பாஷித்ததை ஞாபகப்படுத்திச் சொல்ல வேண்டும். நீர் சாக்ஷிக்கூண்டிலிருக்கிறீர். நீர் உண்மையைத்தவிர வேறென்றும் பேசக்கூடாது. நீரும் வர்த்தகர். சர்ஜியார்ஜ் உம்மிடம் சொன்னதின் தாத்பரியம் உமக்குத் தெரியவில்லையா ?

வாக்குமூலம்:—இது ரொம்பவும் மெலுக்கானவிஷயம். அதனுல் அவரை நான் விபரமாய்ச் சொல்லும்படி கேட்கவில்லை. நான் அக்டோபர்மீ 13வ வெங்கடகிரிக்குப் போனேன். அடுத்ததினம் காலையில் வெங்கடகிரி ராஜாவைப் பார்த்தபின் அவருடைய சகோதரராகிய ராஜாகிருஷ்ணபகதூரைப் பார்த்தேன். நான் அர்பத்நட் கம்பெனி காரியமாக வந்திருப்பதாய்ச் சொன்னேன். நானும் சர்ஜியார்ஜ் அர்பத்நட்டும் சினேகிதர்களானபடியால் அவர் என்னை வெங்கடகிரிக்கு அனுப்பினுர். நான் ராஜா கிருஷ்ணபகதூரிடம் பேசினேன். அர்பத்நட் பாங்கியார் அவருக்குத் திங்கட்கிழமை தினம் செலுத்த வேண்டிய ரூ. $3\frac{1}{2}$ லக்ஷத்தைச் செலுத்த அசௌகரியமா யிருக்கிறதென்றும், இந்தத்தொகையை இன்னும் சில காலம் பாங்கியில் வைத்துவைக்கும்படியாக சர்ஜியார்ஜ் அர்பத்நட் தங்களை வேண்டிக்கொண்டார் என்றும் நான் அவரிடம் சொன்னேன். மாகனீஸ் விற்பனையில்வரவேண்டிய 50 ஆயிரம் பௌன்னை அர்பத்நட் கம்பெனியார் எதிர்பார்க்கிறூர்கள் என்றும் சொன்னேன். ராஜாகிருஷ்ணபகதூர் என்னுடைய கோரிக்கைக்கிணங்க சற்று யோசனை செய்தார். அவர் சம்மதிக்காமற் போனுல் பாங்கிக்கு அபாயமுண்டாய்விடுமென்றுசொன்னேன். அவருடையபணம் திரும்பிவந்துவிடுமென்று நம்பிக்கை ஊட்டும்படியான யாதொரு பேச்சும் பேசவில்லை. டிபாசிட் தொகையை இன்னும் சில காலம் பாங்கியிலேயே வைத்துவைக்கும்படியாக அவரைக் கேட்டுக்கொள்ள நான் சர்ஜியார்ஜ் அர்பத்நட்டால் அனுப்பப்பட்டவனே யொழிய டிபாசிட் தொகையை அவர் பாங்கியிலேயே வைத்துவைக்கும்படியாக அவரைத் தூண்டும்படியாக நான் அனுப்புவிக்கப்படவில்லை. நான் அவரிடம் என் செல்வாக்கைப் பிரயோகப்படுத்துவதற்காக அனுப்பப்படவில்லை. சர்ஜியார்ஜ் அர்பத்நட் தரப்பில் நான் நேரே போய் ராஜாவை வேண்டிக்கொண்டால் ராஜா உடனே சம்மதம் கொடுத்துவிடுவார் என்று ஒருக்கால் சர் ஜியார்ஜ் அர்பத்நட் எண்ணியிருக்கக்கூடும். ஒரு ராஜாவிடத்தில் எனக்கு என்ன செல்வாக்கிருக்கிறது ?

கோர்ட்டார்:—இந்த சாக்ஷி பிராசிக்கியூஷன் தரப்பிற்கு விரோதமான சாக்ஷியமாகப் பாவிக்கப்பட வேண்டும்.

வாக்குமூலம்:—சர்ஜியார்ஜ் அர்பத்நட் என்னை வெங்கிடகிரிக்கு அனுப்பும்பரியந்தம் பாங்கி நல்ல நிலைமையிலிருக்கிறதென்று தான் எண்ணியிருந்தேன். ரூ. $3\frac{1}{2}$ லக்ஷம் செலுத்த சாத்தியப்படவில்லை என்று எப்போது சர்ஜியார்ஜ் சொன்ஞரோ இனி பாங்கி நடப்பது சாத்தியமான காரியமல்லவென்று நான் நினைத்தேன். சர்ஜியார்ஜ் அர்பத்நட் இந்தச் சமய மட்டிலும் பணக்கஷ்டமாயிருக்கிறதென்று தெரிவித்தார். பாங்கி இனி நடப்பது சாத்தியமற்ற காரியமென்று நான் நினைத்தேன். பாங்கிக்கு உண்டாயிருக்கும் கஷ்டமெல்லாம் கூடி தற்கால கஷ்டமென்று சொன்னேன். மாகனீஸ் என்கிற காந்தகக் கல்லினுடைய விலை உயர்ந்திருக்கிற தென்றுவது இறங்கியிருக்கிறதென்றுவது நான் யாதொன்றும் சொல்லவில்லை. மாகனீஸ்வியாபாரத்தைப்பற்றி யாதொன்றும் எனக்குத் தெரியாது. ராஜா பணத்தைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினுல் பாங்கியை மூடிவிடுவார்கள் என்றும், எனக்கும் அதிக நஷ்டம் நேரிடுமென்றும் நான் சொல்லவில்லை. ராஜா பணம் வேண்டுமென்று அவசரப்படுத்தினுல் பாங்கியை மூடிவிடுவார்கள் என்றும் நானும் நஷ்டமடைந்து விடுவேன் என்றும் ராஜாவுக்குச்சொல்லும்படியாக சர்ஜியார்ஜ் அர்பத்நட் எனக்குச் சொல்லிக்கொடுக்கவில்லை. அர்பத்நட் பாங்கியில் பிக்சட் டிபாசிட்டில் ரூ. 10 ஆயிரம் போட்டிருந்தேன். இதன்றி ரூ. 30 ஆயிரம் ஜாமீன் தொகையும் அந்த பாங்கியிலிருக்கிறது. அர்பத்நட்பாங்கியில் ரூ.70 ஆயிரத்திற்குமேல் நான் எந்தக்காலத்திலும் போட்டிருந்ததில்லை. ஆகஸ்ட் மாதத்தில் அர்பத்நட் பாங்கியில் ரூ. 20 ஆயிரமிருந்தது. அதில் ரூபாய் பதினுயிரம் வாங்கிவிட்டேன். கடந்த மூன்று வருஷமாக நான் பாங்கியில் போட்டிருந்த பணத்தைச் சிலா சிலாவாக வாங்கிக்கொண்டுவந்திருக்கிறேன். இதற்குக் காரணமும் நான் சொல்லக்கூடும்.

மிஸ்டர் பௌல்:—காரணம் சொல்ல வேண்டியதில்லை ! நான் யூகித்துக்கொள்ளக்கூடும். !

வாக்குமூலம்:—நான் வெங்கடகிரியை விட்டுப் புறப்படுவதற்கு முந்தி நான் ராஜாவுடன் செய்துகொண்ட ஏற்பாடு என்னவென்றுல், ராஜா பாங்கியில் போட்டிருக்கிற பணத்திற்குக் கூடுதலாயிருக்கும் வட்டி ரூ. 17500 யை உடனே பாங்கியார் கொடுத்துவிட வேண்டுமென்றும்,ஷை அசல் தொகையை மறுபடியும் பாங்கியிலேயே அர்பத்நட்டார் வைத்துக்கொள்ளுகிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டோம். இதன்றி ராஜா தம்முடைய புத்திரியின் விவாகச் செலவுகளுக்காக ரூ 50 ஆயிரம் கேட்டார்.

கோர்ட்டார் கேள்விக்கு :—ராஜா தம்முடைய $3\frac{1}{2}$ லக்ஷ ரூபாயை மறுபடியும் பாங்கியில் போடுவதற்குச் சில நிபந்தனைகள் சொன்ஞர். அதாவது தம்முடைய புத்திரியின் விவாகத்திற்கு ரூபா 50 ஆயிரம் தேவையா யிருக்கும் என்றும், வட்டி ரூ. 17500 யை உடனே கொடுத்துவிடவேண்டுமென்றும் சொன்ஞர்.

மிஸ்டர் பவல் கேள்விகளுக்கு:—ரூ. 50 ஆயிரம் 6 மாத காலத்தில் தேவை என்று சொன்னார். இந்தத் தொகை உடனே வேண்டுமென்று ராஜா சொல்லவில்லை என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். இவ்வளவு காலத்திற்குள் அந்தத்தொகை வேண்டுமென்றும் அவர் எனக்குச் சொல்லவில்லை. 50 ஆயிரம் 6 மாத காலத்திற்குள் கொடுக்கும்படியாக பாங்கியாருடன் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். ராஜா ஒப்புக்கொண்டார். புத்திரியின் விவாகத்திற்காக ராஜா ரூ. ஒரு லக்ஷம் அவசரமாய்க் கொடுக்கவேண்டுமென்று கேட்டதாகவும், கடைசியில் ரூ. 50 ஆயிரம் கொடுப்பதாய் முடிவு செய்யப்பட்டதாகவும் நான் மிஸ்டர் ஷார்ட் துரையினிடம் சொன்னதுண்டு. நான் சென்னபட்டணம் போய் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டுடன் பேசி என்னால் கூடியதைச் செய்கிறேன் என்று ராஜாவுக்குச் சொல்லிவிட்டு வந்ததாக நான் மிஸ்டர் ஷார்ட் துரையிடம் சொன்னதுண்டு. பாக்கி ரூ. 3 லக்ஷத்தையும் இன்னும் ஒரு வருஷத்திற்குப் பாங்கியில் வைத்துக் கொள்ளும்படி ராஜா சம்மதித்தார். ரூ. 50 ஆயிரத்தைக் குறித்து நான் சென்னைக்குப்போய் சர்ஜியார்ஜ் அர்பத்நட்டுடன் பேசி ராஜாவுக்குக் கொடுக்கும்படியாகச் செய்கிறேன் என்று ராஜாவுக்குச் சொன்னதுண்டு.

கே:—ராஜா ரூ. 50 ஆயிரம் அவசரமாய் வேண்மென்று சொன்னதாகவும், நீர் பட்டணம்போய் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டுடன் பேசி பதில் சொன்னதாகவும் நீர் ஒப்புக்கொள்ளுகிறீர். ஆனால் நீர் வெங்கடகிரியை விட்டுப் புறப்படுவதற்கு முந்தி யாதொரு முடிவும் செய்துகொள்ளவில்லையா?

வாக்குமூலம்:—இல்லை. சர்ஜியார்ஜ் உத்திரவின்றி நான் இது விஷயத்தைக்குறித்து என்னமுடிவு சொல்லக்கூடும்? இந்த 50 ஆயிரத்தைக்குறித்துச் சென்னையில் போய் முடிவு சொல்வதாக ராஜாவுக்குச் சொல்லிவிட்டு வந்தேன். ராஜா இன்னும் சில மாதங்களுக்குள் இந்த ரூ. 50 ஆயிரமும் தேவையாயிருக்கிறதென்று சொன்னார்.

இதுவிஷயமாக நானும் ராஜாவும் சில நிமிஷம் பேசி 6 மாதகாலம் குறிப்பிட்டோம். 6 மாதத்திற்குள் கொடுக்கும்படியாக பாங்கியாருடன் ஏற்பாடு செய்கிறேன் என்று நான்தான் முதலில் சொன்னேன். பாங்கியிருக்கும் ஸ்திதியை உத்தேசித்தும், ராஜா விவாகம் சமீபத்தில் வரவில்லை என்று சொன்னதை உத்தேசித்தும் அப்படிச்சொன்னேன். பொபிலி மகாராஜாவிற்கு ரூ. 3½ லக்ஷம்கொடுக்கும் பொருட்டுத் தமக்குப் பணம் தேவை என்று ராஜா சொன்னார். அவருக்குப் பணம் தேவையாயிருந்தால் சென்னையில் யாரைக்கொண்டாகிலும் அவருக்குக் கடன் கொடுக்கும்படிஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். நானே 3½ லக்ஷம் கடன்கொடுக்கிறேன்என்று பொபிலி மகாராஜாவிற்குத் தந்தி அடிக்கவில்லை. நான் தந்தி அடித்ததாக எனக்கு ஞாபகமில்லை. வெங்கடகிரியிலிருந்துபொபிலிமகாராஜாவிற்கு நானொரு தந்தி அடித்தேன். அவரும் எனக்குப் பதில் தந்தி அடித்தார். தமக்குப்பணம்தேவையில்லை என்றும்தாம் வேறொருவிடத்தில் ஏற்பாடு செய்து கொண்டதாகவும்எனக்குத் தந்தி அடித்தார். அக்டோபர்மீ 15௳ நான் வெங்கடகிரியிலிருந்து திரும்பி சென்னைக்கு வந்தேன். ராஜா தம்முடைய ஏஜண்டையும் என்னுடன்கூட அனுப்பினார்; சென்னையிலிருக்கும் அவருடைய ஏஜண்டிற்குச் சமாசாரம் சொல்லுவதற்காக அனுப்பினார். நான் அந்த ஏஜண்டை வெங்கடகிரி ரெயில்வேஸ்டேஷனில் கண்டேன். நான்சென்னையிலிருந்து திரும்பி வந்தவுடன் சிவராமய்யா, கிருஷ்ணையா, நரசய்யா ஆகிய மூவர்களும் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். ரூ. 50 ஆயிரமும், டிபாசிட் தொகைக்கு வட்டியும் பெற்றுக் கொண்டு ரூ. 3 லக்ஷத்தை மறுபடியும் பாங்கியில் வைத்துக்கொண்டதற்கு ரசீதும் வாங்கிக்கொண்டு வரும்படி ராஜா உத்திரவு செய்திருப்பதாய்ச் சொன்னார்கள். ரூ. 50 ஆயிரம் உடனே வேண்டுமென்று ராஜா சொல்லவில்லை என்றும், 6 மாதத்திற்குள் தேவை என்று சொன்னதாகவும் நான் சொன்னேன். நான் சென்னபட்டணத்திற்குத் திரும்பிவந்தவுடன், சர் ஜியார்ஜ் அர்பத்நட்டைக் கண்டேன். ராஜா கிருஷ்ணபகதூரிடம் பேசினதாகச் சொன்னேன். வட்டி உடனே கொடுத்துவிடவேண்டுமென்றும் ரூ. 50 ஆயிரம் 6 மாதத்திற்குள் கொடுத்துவிடவேண்டுமென்றும் பாக்கித்தொகையைப் பாங்கியில் ஒரு வருஷகாலம் வரையில் வைத்துக்கொள்ளலாமென்றும் ராஜா கிருஷ்ணபகதூரிடம் ஏற்பாடு செய்துகொண்டு வந்திருப்பதாய்ச் சொன்னேன். அவர் சம்மதித்தார். இவரைப்பார்த்தபிறகு ராஜாவின் ஏஜண்டுகள் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். நான் அக்டோபர்மீ 15௳ திங்கட்கிழமை ஆபீசுக்கு (அர்பத்நட்பாங்கிக்குப்) போனேன். வக்கீல் சுப்பிரமணியம் பாங்கிக்குவந்து தம்முடைய பிக்சட் டிபாசிட் பணத்தைக் குறித்துப் பேசுவார் என்று ராஜா கிருஷ்ண பகதூர் தந்திஅடித்திருப்பதாக சர்ஜியார்ஜ் அர்பத்நட்சொன்னார். அவர் தந்தியை எனக்குக் காண்பிக்கவில்லை. நான் தந்தியைப் பார்த்தபிறகு வக்கீல் சுப்பிரமணியம் என்னுடைய அறைக்கு வந்தார். பகல் 2-மணிக்கு அவரைச் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டினிடம் அழைத்துக் கொண்டு போனேன். அவருடன் எத்தனைபேர்களை அழைத்துக் கொண்டுபோனேனென்று எனக்குஞாபகமில்லை. நான் தான் பேச ஆரம்பித்தேன். இப்போது வட்டியைத் தவிர வேறே பணம் கொடுக்க பாங்கிக்கு சௌகரியப்படமாட்டாதென்றும் டிபாசிட் முழுத்தொகையும் பாங்கியிலேயே யிருக்கவேண்டுமென்றும் 6-மாதகாலத்திற்குள் 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்றும் நான் சொன்னேன். இரண்டு மூன்றுமாதகாலத்திற்குள் கொடுத்து விடுவதாய் நான் சொல்லவில்லை. வக்கீல் சுப்பிரமணியம் ரூ. 50 ஆயிரத்திற்கு மேலே கேட்டார். சௌகரியப் படாதென்று சொன்னேன். மறுநாள் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அக்டோபர்மீ 16௳ வக்கீல் சுப்பிரமணியம் என்னிடம் வந்தார். நாங்கள் இருவரும் சர் ஜியார்ஜ் அர்பத்தினிடம் போனோம். வட்டி ரூ, 17,500 யும் உடனே கொடுத்து விடுகிறதென்றும், ரூ. 50,000 ஆறு மாதத்தில்கொடுத்து விடுகிறதென்றும் முடிவு செய்து கொண்டோம். ரூ. மூன்றரை லக்ஷத்தை மறுபடியும் பாங்கியில் வைத்துக்கொண்டதற்கு சர் ஜியார்ஜ் அடுத்ததினம் ரசீது தருவதாகச் சொன்னார். வட்டிக்கும் ஒரு செக் தருவதாகச் சொன்னார். சனிக்கிழமை செக்கு கொடுக்கப்

படும்போது நானிருந்தேன். செக்கு தன்பேரில்கொடுக்கும்படி கிருஷ்ணையா என்பவர் கேட்கவில்லை.

இதன்பிறகு, ராஜா கிருஷ்ண பகதூரின் ஏஜெண்டு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். அவரும் தன் எஜமான் சொல்வதுபோலவே சாட்சியம் சொன்னார். இதன்பிறகு அர்பத்நட் கம்பெனியின் மானேஜராயிருந்த மிஸ்டர். பீபில்ஸ் சாக்ஷியாக விசாரணை செய்யப்பட்டதில் அர்பத்நட் பாங்கி அக்டோபர்மீ 22௳ திங்கட்கிழமை மூடிவிடுவதாக அக்டோபர்மீ 20௳ சனிக்கிழமைதினமே யோசனைசெய்யப்பட்டதென்றும், அன்றைய தினமே, ஸொலிஸிட் மிஸ்டர் ஆருக்கு இன்ஸால்வெண்டு கோர்ட்டில் நடவடிக்கை நடத்துவதற்கு ரூ. 4000 கொடுக்கப்பட்டதென்றும், தமக்கு ரூ. 500 கொடுக்கப்பட்டதென்றும், மற்றொரு பார்ட்டனராகிய மிஸ்டர் எங்குக்கு ரூ. 200 கொடுக்கப்பட்டதென்றும் சாக்ஷியம் சொன்னார்.

இதன்பிறகு பிராசிகூஷன் தரப்பில் டிபாஸிட் கிளர்க் மிஸ்டர். செல்லப்ப செட்டியும், அர்பத்நட் பாங்கிக் காஷியர் மிஸ்டர். ஸ்ரீநிவாஸாசாரியும் சாக்ஷி விசாரணை செய்யப்பட்டார்கள்.

இத்துடன் பிராசிகூஷன் தரப்பு சாக்ஷி விசாரணை முடிந்து விட்டது. மிஸ்டர். பௌல் சுருக்கமாக அட்ரஸ் பேசினார். பாங்கிக்கு மூன்றரை கோடி ரூபாய் கடனும், நாற்பது லக்ஷத்திற்கு ஐவேஜியும் இருக்கும்போது ஒருவருஷ டயத்துக்குள் ராஜா கிருஷ்ண பகதூருக்கு மூன்றரை லக்ஷரூபாய் எப்படிக் கொடுக்க முடியும்? ஒரு தேவதூதன் மூன்றரை லக்ஷரூபாயும் கொண்டுவந்து அர்ப்பத்நட்டார் தலையில் அபிஷேகஞ் செய்தாலொழிய, இவர்கள் எப்படி பாங்கியை நடத்த முடியும்? ஆகையால் பாங்கியை மூடிவிடப் போகின்றோமென்று, சர் ஜியார்ஜ் அர்பத்நட் தீர்மானித்திருந்தும் ராஜா, கிருஷ்ண பகதுரை ஏமாற்ற வேண்டுமென்னும் மோசடியான கருத்துக் கொண்டு அவருடைய பணத்தை மறுபடியும் பாங்கியில் போடும்படி சர் ஜியார்ஜ் அர்பத்நட் தூண்டி அவருக்கு நஷ்டம் விளைவித்திருக்கின்றாரென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை என்று சொல்லி முடித்தார்.

இத்துடன் சர் ஜியார்ஜ் அர்பத்நட், ராஜாகிருஷ்ண பகதூரின் டிபாஸிட் தொகை விஷயமாய் செய்தகுற்றத்தைப்பற்றிய விசாரணை முடிவு பெற்றது.

இதன் பிறகு நிகழ்மீ 13௳ முதல் சர் ஜியார்ஜ அர்பத்நட் இன்டர்ஸ்ட்ரியல்ஸ் கம்பெனி விஷயமாகச் செய்திருக்கும் குற்றவிசாரணையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். விசாரணையின் விவரங்களை அடுத்தமுறை கெஜட்டில் அறிவிக்கின்றோம்.

CASES FOR THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலிருக்கும் கேஸ்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

போஜா செல்லப்பரெட்டி:—வாதி—அப்பீல்வாதி.

விருத்தாசல ரெட்டி:—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—ஒரு நிலம் ஒருவன் பேரில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறது. மற்றொருவன் அந்நிலத்திற்குச் சர்க்கார் தீர்வை முதலியவை செலுத்தி அநேக வருஷகாலமாக அனுபவித்துக் கொண்டு வருகின்றான். இப்படியிருக்கும்போது இந்நிலம் எவன் பெயரால் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அவன் தானே வலிய சர்க்கார் தீர்வையைச் செலுத்திவிட்டு நிலத்தை அனுபவித்து வருபவன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து இந்தியன் காண்டிராக்ட் ஆகட் 69-வது பிரிவின்படி வசூல் செய்யலாமா?

கேசின்விவரம்:— திருச்சினாப்பள்ளி ஜில்லா குளித்தலையில் ஒரு நிலம் வாதி பெயரில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த நிலம் வெகு காலமாக பிரதிவாதியின் அனுபோகத்திலிருந்துகொண்டு வருகின்றது. அவரே சர்க்காருக்குச் சேரவேண்டிய கிஸ்தி முதலியவைகளைச் செலுத்திக்கொண்டு வருகிறார். இப்படியிருக்கும்போது வாதி அந்நிலம் தம்முடையதென்றும் தமக்குச் சேரவேண்டுமென்றும் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியம் விசாரணையிலிருந்துகொண்டு வரும்போது ஷை நிலத்தின் சர்க்கார் தீர்வையைத் தம்மிடமிருந்து வசூல் செய்யும்படியாக ரெவினியூ அதிகாரிகளுக்கு மனு செய்ய, அந்தப்பிரகாரம் வாதியிடமிருந்து வசூல் செய்யும்படி தாசில்தார் கிராமமுனிசீப்புக்கு உத்திரவு செய்ய, வாதி கிராமமுனிசீப்பினிடம் தீர்வையைச் செலுத்திவிட்டார். வாதி, பிரதிவாதி பேரில் நிலத்திற்காகச் செய்திருந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இப்போது வாதி தாம் செலுத்திய சர்க்கார் தீர்வையாகிய ரூ. 45 யை பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்வதற்காகப் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

டி. மு. கோர்ட்டார் விசாரணை செய்து வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் T. V. முத்து கிருஷ்ண அய்யர் மனுதார் தரப்பிற்கும், மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர், அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

உத்திரவு:—வாதி தாமே வேணுமென்று வலிய கிஸ்தியைச் செலுத்தியிருப்பதாகத் தீர்மானித்திருக்

கிறார். அப்படித் தீர்மானித்திருப்பது சாக்ஷி விசாரணை செய்து தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், வாதி தாமே வேணுமென்று வலிய கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறாரா அல்லவா என்கிற ப்ரஸ்னையைப் பற்றி இருகக்ஷிக்காரர்களும் விடக்கூடிய சாக்ஷிகளை விசாரணைசெய்து முடிவும் செய்து அனுப்பும்படியாக டி. மு. கோர்ட்டாருக்கு உத்திரவுசெய்கிறோம்.

நாளது தேதி முதல் ஒரு மாதத்திற்குள்ளாக டி. மு. கோர்ட்டார் செய்த தீர்மானம் அனுப்பப்படவேண்டும். ஷை தீர்மானம் இந்தக்கோர்ட்டிற்கு வந்துவிட்டதென்றும் பயிரங்கப்படுத்தப்பட்டபின் ஒரு வாரத்திற்குள்ளாக ஷை தீர்மானத்திற்கு ஏதேனும் ஆக்ஷேபணைகளிருந்தால் கக்ஷிக்காரர்கள் தாக்கல் செய்யவேண்டும்.

இதன்பேரில் டி. மு. கோர்ட்டார் மறுபடியும் கக்ஷிக்காரர்களைத் தருவித்து இருதரப்பிலும் விசாரணை செய்து பிரதிவாதி, வாதியின்குமாரத்தியை விவாகம் செய்திருந்ததாகவும் அந்தப்பெண்ணிறந்துபோய்விட்டதென்றும் இறந்துபோனதுமுதல் இருவருக்கும் மனஸ்தாபமுண்டாகி வாதி இதேகோர்ட்டில் பிரஸ்தாப நிலம் தம்முடையதென்று சொல்லி பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார் என்றும் அந்தவியாஜ்ஜியம் 1901-ம்௵த்திய 1183-வது அசல் வியாஜ்ஜியமாக தாக்கல்செய்யப்பட்டு விசாரணைசெய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டதென்றும் அந்தவியாஜ்ஜியம் விசாரணையிலிருந்து வந்தபோது வாதி ஷை நிலத்தின்கிஸ்தியைத் தம்மிடமிருந்து வசூல்செய்ய கிராமமுனிசீப்பிற்கு உத்தரவுசெய்யும்படி தாசீல்தாருக்கு மனு செய்துகொண்டதாயும் தாசீல்தாரும் அப்படியே உத்தரவுசெய்ததாகவும் அதன்பேரில் வாதி கிராமமுனிசீப்பினிடம் கிஸ்தியைச் செலுத்தினதாகவும், பிரதிவாதி கிஸ்திசெலுத்திவந்தபோது அதைக் கிராமமுனிசீப்பெற்றுக்கொள்ளவில்லை என்றும் இதற்குமுந்திய 20 பசலிகளுக்கு அந்தநிலத்திற்காகப்பிரதிவாதியே கிஸ்தியைச் செலுத்திவந்திருக்கிறார் என்றும் இந்தப்பசலிக்குச்செலுத்தவும் தயாராயிருந்தாரென்றும் வாதி இந்தப்பசலிக்குமட்டிலும் கிஸ்திசெலுத்துவதற்கு யாதொருகாரணத்தையும் காணோமென்றும் ஆதலால் ஷை அசல் வியாஜ்ஜியத்தில் நிலம் தம்முடையதென்று ஸ்தாபிக்கவேண்டுமென்கிற கருத்துடன் வாதி அந்தப்பசலிக்குமட்டிலும் கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறதாக எண்ணவேண்டுமென்றும் ஆகவே வாதி வலிய தாமே இந்தக்கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறார் என்றும் தீர்மானித்து, இத்தத் தீர்மானத்தை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் நாம் தீர்மானிக்க வேண்டிய விஷயமென்னவென்றால், வாதி தம்பெயரில் ரிஜிஸ்டர்செய்யப்பட்ட நிலத்திற்கு வேணுமென்று வலியச்செலுத்திய கிஸ்தித்தொகை ரூ. 45 யை பிரதிவாதியிடமிருந்து வாசூல்செய்யப் பாத்தியமுடையவரா ?

இந்தியன் கான்டிராக்ட் ஆக்ட் 69 - வது பிரிவுப்படி ஒருவன் சட்டப்பிரகாரம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கும் ஒரு தொகை செலுத்தப்படுவதில் பற்றுதலுடைய ஒருவன் ஷை தொகையைச் செலுத்தினால் இவனுக்கு அவன் ஷை தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று கான்டிராக்ட் ஆக்ட் 69 - வது பிரிவு கூறுகின்றது.

அதாவது, உதாரணமாக A. என்கிற ஜமீன்தார் ஒருநிலத்தை B. என்பவனுக்குக் குத்தகைவிடுகிறார். A. சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தி நிலுவையில் விழுந்துபோக, சர்க்கார் ஷை நிலத்தை ஜப்திசெய்து ஏலம்போடும்படி உத்தரசெய்துவிட்டார்கள். அப்படி ஷை நிலம் ஏலம்போடப்பட்டால் ரெவினியூ சட்டத்தின்படி B. என்பவனுடைய குத்தகை பாத்தியதை ரத்துசெய்யப்படும். ஆகையால் ஷை நிலம் ஏலம்போடப்படுவதைத் தடுக்கும்பொருட்டு B. என்பவன் கிஸ்தியைச்செலுத்தினால் அந்தத்தொகையை A. என்பவர் B. என்பவனுக்குச் செலுத்திவிடவேண்டும். இந்தக் கேசில், சர்க்கார் தீர்வையைச்செலுத்தக் கடமைப்பட்டவர் பிரதிவாதியல்ல. அவர் தீர்வையைச் செலுத்தச் சட்டப்பிரகாரம் கடமைப்பட்டவரல்லாதவரேனும், அத்தீர்வை செலுத்தப்படுவதில் பற்றுதலுடையவர். அல்லது கவலையுடையவர். கவர்ன்மெண்டார் நிலத்தீர்வையை ரெவினியூசட்டத்தை அனுசரித்து வசூல்செய்துவருகிறார்கள். ஒருநிலத்தின்தீர்வை செலுத்தப்படாவிட்டால் அந்நிலம் ஜப்திசெய்து ஏலம்போடப்படுவதுமன்றி, அந்நிலம் எவன்பெயரால் ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கிறதோ அவனுடைய இதரசொத்துக்களை ஜப்திசெய்யவும் ஏலம்போடவும் அவனை ஜெயிலில்பிடித்துவைக்கவும் சட்ட ஆதாரமிருக்கின்றது. ஆனால் அந்நிலத்தை எவன் அனுபவித்துவருகிறானோ அவனை இம்மாதிரிசெய்ய சட்ட ஆதாரமில்லை. ஷை நிலம் ஜப்திசெய்து ஏலம்போடப்பட்டால் நிலத்தை அனுபவித்துவருகிறவன் தன்னுடைய அனுபவ பாத்தியதையை இழந்துவிடவேண்டியதாய் நேரிடும். ஆகையால் நிலத்தை அனுபவித்துவருபவன் ஷைநிலத்திற்குத் தீர்வை செலுத்தப்படுவதில் பற்றுதலுடையவனே யொழிய தீர்வைசெலுத்தச் சட்டப்பிரகாரம் கடமைப்பட்டவனல்ல. ஆகையால் இந்தவியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட நிலம் பிரதிவாதியின்பேரில் ரிஜிஸ்டர்செய்யப்படாமல் அவருடைய அனுபோகத்திலிருப்பதால் அவர் இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சட்டப்பிரகாரம் செலுத்தக் கடமைப்பட்டவராகமாட்டார். ஆகையால் வாதி செலுத்திய தொகையை இந்தியன்காண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவின்படி பிரதிவாதியிடமிருந்து வசூல்செய்ய முடியாது. இதுவுமன்றி, ரெவினியூ ரிக்கவரி ஆக்ட் 35-வது பிரிவின்படியும் வாதி இந்தத்தொகையைப் பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்யமுடியாது. ஏனெனில், ஷை நிலம் கிஸ்திபாக்கிக்காக ஜப்திசெய்து ஏலம் போடப்படவில்லை. அப்படியிருந்தபோதிலும் வாதி ஷை நிலத்தை அனுபவித்துவருகிறவருமல்ல. அதை அடமானமாகவைத்துக்கொண்டு கடன் கொடுத்திருப்பவருமல்ல. இதுவுமன்றி சி. பு. கோ. 501-வது பிரிவின்படியும் இந்தத்தொகையைப் பிரதிவாதியிடமிருந்து வசூல்செய்யமுடியாது. ஷை 501-வது பிரிவில், ஒரு நிலப்பாத்தியதையைப்பற்றி கக்ஷிக்காரர்கள் கோர்ட்டில் வியாஜ்ஜியமாடிவரும்போது அந்நிலம் தீர்வைக்காக சர்க்காரால் ஜப்திசெய்யப்பட்டு

ஏலம் போடப்பட்டால் ஷை நிலம் எந்தக்கக்ஷிக்காரனுடைய வசத்திலிருக்கிறதோ அவன் ஷை கிஸ்திபாக்கியைச் சர்க்காருக்குச் செலுத்தி ஏலத்தை ரத்துசெய்யத் தவறிப்போய்விட்டால் எதிர்கக்ஷிக்காரன் ஷை கிஸ்தியைச்செலுத்திவிட்டு அந்தநிலத்தைத் தன்வசம் ஒப்புவிக்கும்படி கோர்ட்டாருக்கு மனுசெய்து கொள்ளலாமென்றும், பிறகு அந்தக்கிஸ்தியை எதிரியினிடமிருந்து வசூலிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாபவியாஜ்ஜியத்தில் ஷை நிலம் கிஸ்திபாக்கிக்காக சர்க்காரால் ஏலம் போடப்படவில்லை. பிரதிவாதி கடந்த 20 பசலிகளுக்குத் தீர்வையைச் செலுத்தியிருப்பதுமன்றி. பிரஸ்தாப பசலிக்கும் தீர்வையைக் கிராம முனிசீப்பினிடம் செலுத்தப்போனார். ஷை நிலம் வாதிபெயரால் ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கிறபடியால்வாதி தீர்வையைப் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்க கிராமமுனிசீப் தாசீல்தாருடைய உத்தரவை அனுசரித்துப் பிரதிவாதி செலுத்தத் தயாராயிருந்த கிஸ்தியைப் பெற்றுக்கொள்ளவில்லை.

ஆகையால் எவ்விதமாய்ப் பார்த்தாலும் இந்தக் கிஸ்தியை வாதி தாமேவேணுமென்று செலுத்தியிருக்கிறார் என்று முடிவுசெய்யவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் இந்த சிவில்ரிவிஷன்மனு செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்யப்பட்டது. இ. லா. ரி. 30 சென். 35.

ஜட்ஜி:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்.

சிவில் அப்பீல்.

ஸ்ரீ ராஜா சிம்மாத்திரி அப்பாராவ்-வாதி-அப்பீல்வாதி.

செல்சேனபத்ரய்யா முதலியவர்கள்—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து ரூ. 52-2-10 கிடைக்கவேண்டுமென்று வாதி கிருஷ்ணாஜில்லா தென்னலை டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல்செய்தார். (1905-ம்௵த்திய 245 நெ. ஸ்மால்காஸ்.)

1 முதல் 3 பிரதிவாதிகளும் காலஞ்சென்ற சின்னசுப்பய்யா என்பவருடைய புத்திரர்கள்.

ஷை ரூ. 52-2-10 பிரதிவாதிகள் எந்தவகையில் வாதிக்குச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றால், பிரதிவாதியின் பிதாவாகிய காலஞ்சென்ற சின்னசுப்பய்யா இந்த வியாஜ்ஜியத்தின் வாதியின்பேரில் 1897-ம்௵ குடிவாடா டி. மு. கோர்ட்டில் ரூ. 200-க்கு வியாஜ்ஜியம்கொண்டுவந்தார். இந்தவியாஜ்ஜியம் சட்டப்பிரகாரம் முசிலிப்பட்டணம் சப்கோர்ட்டார் பிடிக்கவேண்டிய ஸ்மால்காஸ் நெம்பர். குடிவாடா டி. மு. கோர்ட்டார் இந்தவியாஜ்ஜியத்தை ஸ்மால்காஸ் நெம்பரல்லவென்றும் அசல் வியாஜ்ஜியமென்றும் அபிப்பிராயப்பட்டு 1897-வது ௵த்திய 17-வது நெ. அசல் வியாஜ்ஜியமாக தாக்கல்செய்துகொண்டு விசாரணைசெய்து செலவுதொகையுடன் வாதிபக்கம், அதாவது காலம்சென்ற சின்னசுப்பய்யாபக்கம் தீர்ப்புசொன்னார்கள். பிரதிவாதி (இந்தவியாஜ்ஜியத்தின் வாதி) கிருஷ்ணாஜில்லா கோர்ட்டில் அப்பீல்செய்தார். ஜில்லாக்கோர்ட்டார், இந்த வியாஜ்ஜியத்தை டி. மு. கோர்ட்டார் பிடிக்க அதிகாரமில்லையே என்கிற சங்கையை யோசிக்காமல் சாக்ஷிவாக்குமூலங்களைப்பார்த்து டி. மு. கோர்ட்டார் தீர்ப்பை ரத்துசெய்து இரண்டு கோர்ட்டுகளின் செலவுதொகையுடன் பிரதிவாதிபக்கம் (அதாவது இந்த வியாஜ்ஜியத்தின் வாதி) தீர்ப்புசொன்னார்கள். வாதி, அதாவது காலம்சென்ற சின்னசுப்பய்யா ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார். இந்தக்கோர்ட்டாரும் இந்த நெம்பரை டி. மு. கோர்ட்டார் பிடித்து விசாரிக்க அதிகாரமிருக்கிறதா இல்லையா என்கிற சங்கையை ஆலோசனைசெய்யாமல் அப்பீல் ரிக்கார்டுகளைப் பார்த்து ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தி செலவுதொகையுடன் பிரதிவாதி (இந்தவியாஜ்ஜியத்தின் வாதி) பக்கம் தீர்ப்புசொன்னார்கள்.

ஆகவே ஷை இரண்டு அப்பீல் கோர்ட்டுகளிலும் தமக்குக்கிடைத்த டிக்கிரிகளின் பிரகாரம் தமக்குச் சேரவேண்டிய செலவுதொகைகளுக்காக வாதி (அந்த வியாஜ்ஜியத்தின் பிரதிவாதி) ஷை சின்னசுப்பய்யா இறந்துபோய்விட்டபடியால் அவருடைய புத்திரராகிய 1 முதல் 3 பிரதிவாதிகள்பேரில் டிக்கிரிகளை நிறைவேற்றினார். அந்த செலவுதொகைகளைப் பெறுவதற்குப் பிரத்தியேகவியாஜ்ஜியம் கொண்டுவரும்படி வாதிக்கு உத்தரவுசெய்யப்பட்டது.

ஆதலால் வாதி ரூ. 52-2-10 பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று தென்னலை டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

பிரதிவாதிகளின் கக்ஷி:—1897-ம்௵ குடிவாடா டி. மு. கோர்ட்டில் காலம்சென்ற சின்னசுப்பய்யா தாக்கல்செய்த வியாஜ்ஜியம் சட்டப்பிரகாரம் சப்கோர்ட்டாரால் பிடிக்கப்படவேண்டிய நம்பராயிருக்க, டி. மு. கோர்ட்டார் அதை அறியாமல் அந்த ஸ்மால்காஸ் நெம்பரை அசல் வியாஜ்ஜியமாகத் தாக்கல்செய்துகொண்டு விசாரணைசெய்து பைசல்செய்திருப்பதாலும், இரண்டு அப்பீல் கோர்ட்டார்களும் அந்த நம்பரை டி. மு. கோர்ட்டார்பிடிக்க அதிகாரமில்லையே என்கிற விஷயத்தை யோசிக்காமல் டிக்கிரிகள் கொடுத்திருப்பதாலும் இரண்டு அப்பீல் கோர்ட்டார்களால் செலவுதொகைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் டிக்கிரிகள் செலாவணியாகமாட்டாவென்றும் ஆகையால் தாங்கள் செலவுதொகையைச் செலுத்த பாத்தியப்பட்டவர்களல்லவென்றும் கக்ஷி சொன்னார்கள்.

டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பு:—இரண்டாவது அப்பீல் செலவுதொகைக்குமட்டிலும் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

வாதி 1887-வது ௵த்திய 9-வது ஆக்ட் 25-வது பிரிவை அனுசரித்து ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனு தாக்கல்செய்தார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் K. N. அய்யா அப்பீல்வாதி தரப்பிற்கும், டாக்டர் S. சாமிநாதன் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—1897-வது ௵த்திய வியாஜ்ஜியத்தில் வாதிக்கு (அதாவது, அந்தவியாஜ்ஜிய பிரதிவாதி) ஜில்லாக்கோர்ட்டார் கொடுத்த டிக்கிரி செல்லுபடியுள்ளதா அல்லவா என்று இப்போது யோசிக்கப்படவேண்டும். அந்த வியாஜ்ஜியம் இ. லா. ரி. 21 சென். 239 ல் (கருப்பண்ணன் V. ராமசாமிசெட்டி) சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் என்பதில் சந்தேகமில்லை. இதை டி. மு. கோர்ட்டாரும், இரண்டு அப்பீல்கோர்ட்டார்களும் கக்ஷிக்காரர்களும் அசல் வியாஜ்ஜியமென்று அபிப்பிராயப்பட்டு நடவடிக்கைகள் நடத்திவிட்டார்கள். இந்தவியாஜ்ஜியம் அப்பீலில் ஜில்லாக்கோர்ட்டிற்கு வந்தபோது சாக்ஷிவாக்குமூலங்களை மட்டிலும் கவனித்து பிரதிவாதி (இந்தவியாஜ்ஜியத்தின் வாதி) பக்கம் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் இந்தவியாஜ்ஜியத்தை டி. மு. கோர்ட்டார் பிடிக்க அதிகாரமில்லை என்று ஜில்லாக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளி, அந்த வியாஜ்ஜியத்தின் பிரதிவாதிக்கு அந்த வியாஜ்ஜியத்தின் வாதியைச் செலவுதொகை கொடுக்கும்படி தீர்ப்பு சொல்லியிருந்தால் அவருக்கு அப்படிச்செய்ய அதிகாரமில்லை என்று சொல்லமுடியாது. அவருக்கு அதிகாரமிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்தவியாஜ்ஜியத்தை (1897-வது௵த்திய) நம்பரைப் பிடிக்க டி. மு. கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு ஜில்லா ஜட்ஜி சாக்ஷிவாக்குமூலங்களை மட்டிலும் பரிசீலனைசெய்து தீர்ப்புசொல்லியிருப்பதால் செலவுதொகைக்கு டிக்கிரிகொடுக்க அவருக்கு அதிகாரமில்லை என்று சொல்லவும்முடியாது. 1897-வது௵த்திய நம்பர் இரண்டாவது அப்பீல் விசாரணைக்காக இந்தக்கோர்ட்டிற்கு வந்தபோது முதல் அப்பீல் கோர்ட்டாராகிய ஜில்லாக்கோர்ட்டார் செலவுதொகைக்கு டிக்கிரிகொடுக்க அதிகாரமற்றவர்கள் என்றும் ஆகையால் சி. பி. கோ. 622-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் அந்த டிக்கிரியை ரத்துசெய்யவேண்டுமென்றும் கக்ஷி சொல்லப்பட்டது. அப்போது இந்தக்கோர்ட்டார் தாங்கள் ஜில்லா ஜட்ஜிசெய்த தீர்மானத்தில் பிரவேசிக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். 1897-ம்௵த்திய வியாஜ்ஜியம் ஜில்லாக்கோர்ட்டிற்கு அப்பீலுக்கு வந்தபோது ஜில்லாக்கோர்ட்டார் வாதிக்குஅனுகூலமாகத் தீர்ப்புசொல்லியிருந்தால் இந்த இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் அந்தத்தீர்மானத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதற்கு இ. லா. ரி. 27. சென். 479 ல் (பரமேஸ்வரன் நம்புரி V. விஷ்ணு எம்பிராந்திரி) சொல்லப்பட்டிருக்கும் கேசில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தையே ஆதாரமாகக்கொள்ளலாம். மேலே எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கும் கேசில் இரண்டாவது அப்பீல்கோர்ட்டார் ஜில்லாஜட்ஜி செய்த தீர்மானம் செல்லுபடி யுள்ளது என்று தீர்மானித்திருக்கின்றார்கள்.

ஆதலால், இந்த பிரஸ்தாபவியாஜ்ஜியத்திலும் ஜில்லாக் கோர்ட்டார்செய்த தீர்மானம் செல்லுபடியுள்ளதுதான் என்று தீர்மானிக்கிறேன் என்று நியாயம் சொல்லி வாதிபக்கம் தீர்ப்புசொன்னார்கள். இ. லா. ரி. 30 சென். 41.

ஜட்ஜி:—சீப்ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வைட்.

கிரிமினல் அப்பீல்.

மாரிவேலய்யன்—கைதிகள்—அப்பீல்வாதிகள்.

சக்ரவர்த்தியார்—பிரியாதி—அப்பீல் பிரதிவாதி.

கேசின் விபரம்:—கைதிகள்பேரில் இந்தியன் பினல்கோட் 395-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தீவட்டிக்கொள்ளைக் குற்றம்சாட்டப்பட்டு கோயமுத்தூர் செஷன்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டு பலவிதமான தண்டனை விதிக்கப்பட்டது. செஷன் கோர்ட்டில் விசாரணை ஜூரர்கள்முன்னிலையில் நடத்தப்பட்டது. செஷன்ஜட்ஜி ஜூரர்களுக்குக் கேசின் சாராம்சத்தை எடுத்துச்சொன்னபோது அடியிற்கண்டபடி சொன்னார்.

"குற்றவாளிகளின் தீவட்டிக்கொள்ளை அடித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

ஐந்து பேர்களுக்குக்குறையாமல் எத்தனைபேர்கள் சேர்ந்து கொள்ளை அடித்தாலும் அக்குற்றம் தீவட்டிக்கொள்ளைக்குற்றம் என்று சொல்லப்படும்.

"ஒவ்வொருகுற்றவாளிபேரிலும் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியத்தைக்குறித்து யோசிக்குமளவில், 1, 2, 4, சாக்ஷிகள் முதல்குற்றவாளிசெய்த குற்றத்தைக்குறித்து சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முதல்குற்றவாளிசெய்த குற்றத்தைப்பார்க்கத் தங்களுக்கு நல்லவசதியிருந்ததென்றும் அவன் முதல்சாக்ஷியைப்பிடித்து இழுத்ததையும், நான்காவது சாக்ஷி கழுத்தில்போட்டிருந்த அட்டிகையைப் பிடுங்கினதையும் தாங்கள் கண்ணாரப்பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். 1, 2, 12, சாக்ஷிகள் இரண்டாவதுகுற்றவாளி செய்தகுற்றத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1, 2, 6, 12-வது சாக்ஷிகள் மூன்றுவது குற்றவாளியைக்குறித்தும், 1, 2, 8, 10, 11-வது சாக்ஷிகள் நான்காவதுகுற்றவாளியைக் குறித்தும், 1, 2 9, 10, 12-வது சாக்ஷிகள் ஐந்தாவதுகுற்றவாளியைக் குறித்தும், 1, 2, 8, 9, 10, 11-வது சாக்ஷிகள் 6-வது குற்றவாளியைக்குறித்தும், 6, 7, 8, 10, 11-வது சாக்ஷிகள் 7-வது குற்றவாளியைக்குறித்தும், 6, 7, 8, சாக்ஷிகள் 8-வது குற்றவாளியைக்குறித்தும், 2, 5, 6, 7 சாக்ஷிகள் 9-வது குற்றவாளியைக்குறித்தும் பேசியிருக்கிறார்கள்."

தண்டனை அடைந்த கைதிகள் ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டார்கள்.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) அப்பீல்தார்கள்பேரில் சாட்டப்பட்டிருக்கும் தீவட்டிக்கொள்ளைக்குற்றம் எப்படியிருக்கவேண்டும்? என்னென்னசெய்கைகள் சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக்குற்றமாகுமென்றும் செஷன்ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக்கூறத் தவறிப்போயிருக்கிறார். அப்பீல்தார்கள்சேர்ந்து நடத்தினதாகச் சொல்லியபடி தீவட்டிக்கொள்ளையில் இன்னின்னவன் இன்னின்னசெய்கையைச் செய்தான் என்று ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக்கூறத் தவறிப்போயிருக்கிறார்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் S. கௌடல் அப்பீல்தார்தரப்பிற்கும், பிராசிக்கியூஷன் தரப்பில் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக மிஸ்டர் J. L. ரொஸாரியோவும் பேசினார்கள்.

தீர்ப்பு:—முதல் அப்பீல் கிரௌண்டு என்னவென்றால், இன்னின்ன அம்சங்கள்சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக் குற்றமாகுமென்று சட்ட தாத்பரியத்தை ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக்கூறத் தவறிப்போயிருப்பதாக அப்பீல்தார்கள் கூறுகிறார்கள். ஜட்ஜி தீவட்டிக்கொள்ளைக் குற்றத்தைப்பற்றி என்னசொல்லியிருக்கிறார் என்றால், 5 பேர்களுக்குக்குறையாமல் சேர்ந்து கொள்ளையடித்தால் அது தீவட்டிக்கொள்ளையாகுமென்று சொல்லியிருக்கிறார். ஜட்ஜி சொல்லியிருக்கிறவரையில் சரியானதாயிருந்தபோதிலும் இம்மட்டிலும்சொல்லி நிறுத்திவிட்டது போதுமானதல்ல. இன்னின்ன அம்சங்கள் சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக் குற்றமாகுமென்றும் இ. பி. கோ. 390-வது பிரிவில் தீவட்டிக்கொள்ளைக் குற்றத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதையும் எடுத்துக் கூறியிருக்கவேண்டும். எல்லா ஜூரர்களும் சட்டஞானமுடையவர்களாக விருக்கமாட்டார்கள். சாக்ஷிவாக்குமூலங்களைக்கொண்டு கைதிகள்செய்தகுற்றம் தீவட்டிக்கொள்ளையா அல்லவா என்று நிர்ணயிக்கவும் அவர்கள் எல்லோருக்கும் சட்டஞானமிருக்கமாட்டாது. ஆகையால் கிரிமினல் புரொசீஜர்கோட் 297-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் ஜட்ஜி ஜூரர்களுக்குக் கைதிகள்பேரில் எந்தக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதோ அந்தக்குற்றம் என்னென்ன அம்சங்கள்பொருந்தியிருக்கின்றனவென்று எடுத்துச்சொல்லவேண்டும். அப்படி எடுத்துச்சொல்லாமற்போவது சாமானிய ஒழுங்கினமல்ல; சட்ட ஆக்கினைக்கு விரோதமாய் நடந்ததாக எண்ணப்படவேண்டும்.

இரண்டாவது அப்பீல் கிரௌண்டு என்னவென்றால், ஒவ்வொரு குற்றவாளியும் இன்னின்ன குற்றத்தைச் செய்திருக்கிறான் என்றும் சாட்சி பேதங்களையும் ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக் கூறவில்லை என்பதே. ஜட்ஜி, முதல்குற்றவாளிமட்டிலும் இன்னகுற்றம் செய்திருக்கிறான் என்று எடுத்துக் காண்பித்திருக்கிறார். மற்றக் குற்றவாளிகள் செய்தகுற்றத்தை விவரமாய் எடுத்துக்காட்டாமல் பொதுவாய் இன்னின்ன சாட்சி இன்னின்ன குற்றவாளியைப்பற்றி சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதுவும் சட்டவிரோதம். ஒவ்வொரு குற்றவாளியும் இன்னின்னகுற்றம் செய்திருப்பதாகச் சாட்சியத்தால் புலப்படுகிறதென்றும், சாட்சியத்தின் தாரதம்மியத்தையும் ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். ஆகையால் செஷன்கோர்ட்டார் செய்திருக்கும் குற்றஸ்தாபனையை ரத்துசெய்து அப்பீல்தார்களையும் புனர்விசாரணைசெய்து கேசைப் பைசல்செய்யும்படியாக உத்தரவுசெய்கிறோம் என்று தீர்ப்புசொல்லப்பட்டது. இ. லா. ரி. 30. சென். 44.

பிரிவு கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட் டேவே.
லார்ட் ராபர்ட்சன்.
சர் ஆன்டிருஸ்கோபில்.
சர் ஆர்தர் வில்சன்.

சிவில் அப்பீல்.

J. வெங்கம்மா வகையரு—பிரதிவாதிகள்—அப்பீல்வாதிகள்.

J. சுப்பிரமணியம் வகையரு—வாதிகள்—அப்பீல்பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—ஒரு விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டுமானால் தன்னுடைய புருஷனின் சமீப தாயாதிகளிடமிருந்து அனுமதி பெறாமல் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—கக்ஷிக்காரர்கள் பிராமண ஜாதியர்கள். அப்பீல்வாதியின் புருஷன் பெயர் ராமய்யர். இவர் சந்ததியின்றி 1881ம ௵ இறந்து போய்விட்டார். இவர் இறந்துபோன பின்பு இவருடைய சொத்து முழுதும் வார்சுக்கிரமத்தில் இவருடைய விதவைக்கு வந்து சேர்ந்தது. அப்பீல் பிரதிவாதிகள் இருவரும் இராமையருடைய சொத்திற்கு விதவைக்குப்பிறகு வார்சாக வரக்கூடிய பாத்தியதை யுடையவர்கள். மேலும் இறந்துபோன ராமய்யாவின் சகோதரரின் புத்திரர்கள். இவர்களிருவரும் பாகம் பிரிவினை செய்துகொண்டு தனித்தனியே வசித்து வருகிறார்கள். இவர்களில் இரண்டாவது அப்பீல் பிரதிவாதி. மூத்தவர்; முதல் அப்பீல் பிரதிவாதி இளையவர். ஷை விதவையாகிய அப்பீல் முதல்வாதி அப்பீல் இரண்டாவது வாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து அப்பீல் இரண்டாவது பிரதிவாதியை அனுமதிகேட்டார். அவர் அனுமதி கொடுத்தார். இப்படி அனுமதி கொடுத்ததற்கு தஸ்தாவேஜும் ஏற்பட்டு அதில் ஷை இறந்துபோன ராமய்யாவினுடைய ஒரு தூரதாயாதியும் சாக்ஷி கையெழுத்தும் செய்தார். விதவை மற்றொரு அப்பீல் பிரதிவாதியின் சம்மதத்தைக் கேட்கவில்லை. அவரும் கொடுக்கவில்லை. ஸ்வீகார காரியங்கள் நடந்தேறின. இதன்பிறகு அப்பீல் முதல் பிரதிவாதியாகிய J. சுப்பிரமணியம், கிருஷ்ணாஜில்லா கோர்ட்டில் 1901ம் ௵ இந்த ஸ்வீகாரம் செல்லாதென்று 1, 2, அப்பீல் வாதிகளைப், பிரதி வாதிகளாகச் சேர்த்து வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

வாதியின் கக்ஷி :—விதவை இரண்டாவது பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வாதியின் சம்மதத்தைக் கேட்கவில்லை. விதவை தன்னுடைய புருஷன் உயிருடனிருக்கும்போது ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அனுமதிகொடுத்திருப்பதாய்ப் புரட்டுச்சொல்லி மற்றொரு தாயாதியிடமிருந்து சம்மதம் பெற்றிருக்கிறார். ஆகையால் இந்த ஸ்வீகாரம் செல்லுபடியுள்ளதல்லவென்று கக்ஷி சொன்னார்கள்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—வாதி கொண்டு வந்த வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

வாதி வகையரு சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். இந்த அப்பீலை ஜட்ஜி மிஸ்டர் பென்சனும், ஜட்ஜி மிஸ்டர் பாஷியமய்யங்காரும் விசாரணைசெய்து விதவை கிரமப்படி புருஷனின் சமீப பந்துக்களிடமிருந்து அனுமதி பெறவில்லை என்று முடிவுசெய்து வாதிபக்கம் செலவுதொகையுடன் 1903ம் ௵ பிப்ரவரிமீ 18௳ தீர்ப்பு சொன்னார்கள்.

[இந்தக் கேசின் விபரமும் தீர்ப்பும் இ. லா. ரி. 26. சென். 627ல் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியம் V. வெங்கம்மா.]

இதன் பிறகு பிரதிவாதியாகிய வெங்கம்மா பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொண்டார்.

பாரிஸ்டர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் கென்னி வெயிக்பிரெளன. அப்பீல் வாதியாகிய வெங்கம்மாள் தரப்பிற்கு ஆஜரானார். அப்பீல் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை.

தீர்ப்பு:—கீழ் இரண்டு கோர்ட்டார்களும், விதவை தம்முடைய புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாக வாய் மொழியாய் அனுமதி கொடுத்திருப்பதை ருஜூப்படுத்தவில்லை என்று முடிவுசெய்திருக்கிறார்கள். ஆகையால் ஒரு தாயாதியிடம் பெற்றசம்மதமும் அவருடைய சொந்த சம்மதமல்ல. விதவை இருதாயாதிகளின் சொந்தசம்மதத்தையும்பெறக் கடமைப் பட்டவர். ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயமோ முக்கியமான விஷயம். குடும்பத்தைச் சேர்ந்த இப்படிப்பட்ட ஒரு பெரிய விஷயத்தில் இந்தக் குடும்பத்திற்குப் பிரதமஸ்தானத்திலிருக்கும் அப்பீல் முதல்பிரதிவாதியின் அனுமதிபெறுமற் போவதற்குவிதவை தகுந்த காரணம் சொல்லவில்லை. சம்மதங் கேட்டால் அவர் கொடுக்கமாட்டார் என்று தமக்குத் தெரியுமென்று விதவை டிபன்ஸ் கூறுகிறார். இப்படி டிபன்ஸ் சொல்ல விதவைக்குப் பாத்தியம் கிடையாது. ஆகையால் இரு தாயாதிகளின் சொந்த சம்மதத்தைப் பெறுவதற்கு விதவை தவறிப்போயிருக்கிறார். ஆகையால் அவர் எடுத்துக் கொண்டிருக்கும் ஸ்வீகாரம் செல்லுபடியுள்ளதல்லவென்று முடிவுசெய்து விதவை செய்து கொண்ட அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிடும்படி மகாராஜா அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டார்கள்—இ. லா. ரி. 30. சென். 54.

புல் பெஞ்ச்.

ஜட்ஜிகள்:—(1) சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்.
(2) மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
(3) மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

சாது கிருஷ்ணய்யர்—வாதி—அப்பீல்வாதி.

குப்பனய்யங்கார் வகையறு—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயிண்ட்:—ஒருவியாஜ்ஜியத்தில் எக்ஸ்பார்ட்டி டிக்கிரி கொடுக்கப்பட்டது. அந்தடிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்பட்டால் அசல்கோர்ட்டாரார் எக்ஸ்பார்ட்டி டிக்கிரிகொடுத்தது பிசகு என்றுசொல்ல மறுபடியும் அந்த வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்யும்படி உத்தரவுசெய்து அனுப்ப அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதா?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி சில ஸ்தாவரசொத்துக்களைக்குறித்து 1 முதல் 16 பிரதிவாதிகள்பேரில் பெரியகுளம் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார். (O. S. No. 399 of 1903).

டி. மு. கோர்டார் தீர்ப்பு:—முதல்பிரதிவாதி ஆஜராகவில்லை. அதாவது எக்ஸ்பார்ட்டி என்று கூறி வாதிபக்கம் தீர்ப்புசொன்னார்கள்.

இந்தடிக்கிரிக்கு விரோதமாக சில பிரதிவாதிகள் மதுரைஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்தார்கள். அப்படி அப்பீல் தாக்கல்செய்ததில் டி. மு. கோர்ட்டில் எக்ஸ்பார்ட்டியாக விருந்த முதல்பிரதிவாதியை எதிர்கட்சியில் அதாவது அப்பீல் பிரதிவாதிகளில் ஒருவராய்ச் சேர்த்தார்கள்.

முதல் பிரதிவாதி தனக்கு இந்த டிக்கிரியைப்பற்றியாவது இந்த வியாஜ்ஜியத்தைப்பற்றியாவது யாதொன்றும் தெரியமாட்டாதென்றும் தனக்கு சம்மன் சார்வ்செய்யப்படவில்லை என்றும் ஆக்ஷேபணைமனு தாக்கல் செய்தார்.

ஜில்லாக் கோர்ட்டார் தீர்ப்பு:—முதல்பிரதிவாதி தமக்குச்சம்மன்சேரவில்லை என்றுசொல்வதை எவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் டி. மு. கோர்ட்டார் முதல்பிரதிவாதியை எக்ஸ்பார்ட்டி என்று கூறியிருக்கும் உத்தரவை ரத்துசெய்கிறோம். ஆகவே இந்தக் கேசை டி. மு. கோர்ட்டார் மறுபடியும் பயலில் வைத்துக்கொண்டு முதல்பிரதிவாதியின் முன்னிலையில் விசாரணைசெய்து முடிவுசெய்யும்படி உத்தரவுசெய்கிறோம். முதல்பிரதிவாதி ஆக்ஷேபணை மனுவின்பேரில் செலுத்த வேண்டிய கோர்ட்டுபீசைச் செலுத்திவிட்டார் என்று சொல்லி உத்தரவுசெய்தார்கள்.

இந்த உத்தரவிற்கு விரோதமாக வாதி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்தார்.

அப்பீல் கிரௌண்ட்:—எப்போது முதல்பிரதிவாதி எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்ய டி. மு. கோர்ட்டில் மனுசெய்யவில்லையோ அப்போது முதல்பிரதிவாதியின்பேரில் கொடுக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்ய ஜில்லாக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று கூறிசொன்னார்கள்.

இந்த அப்பீல் முதலில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயரும், ஜட்ஜி மிஸ்டர் மூரும் ஆகிய இருவர்கள் கூடின கோர்ட்டிற்கு விசாரணைக்குவந்தது.

இவர்கள் இந்த அப்பீலை முடிவுசெய்யமுடியாமல் புல் பெஞ்சிற்கு ரிபர்செய்தார்கள்.

புல்பெஞ்சிற்கு அனுப்புவதற்கு ஜட்ஜி மிஸ்டர் மூர் சொன்னகாரணங்கள்:—முதல்பிரதிவாதி எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்யும்பொருட்டு சி. பு. கோ. 108-வது பிரிவின்படி டி. மு. கோர்ட்டாருக்கு மனுசெய்து கொள்ளவில்லை. அப்படிச்செய்யாமற் போனபோதிலும் அந்தடிக்கிரியை ரத்துசெய்ய சி. பு. கோ 540-வது பிரிவின்படி முதல்பிரதிவாதி அப்பீல்செய்துகொண்டிருக்கிறார். அப்படி அப்பீல்செய்துகொண்டிருக்கும்போது அதுவிஷயமாக இருதரப்பிலும் சாட்சிவிசாரணைசெய்ய ஜில்லாக் கோர்ட்டாருக்கு அதிகார மிருக்கின்றது. இருந்தபோதிலும் எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்து வியாஜ்ஜியத்தை புனர் விசாரணை செய்யும்படி உத்திரவு செய்ய ஜில்லாக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று சொல்ல நான் சிறிதும் தாமதிக்கவில்லை. அப்பீல் கோர்ட்டார், புனர் விசாரணை செய்யும் பொருட்டு அசல் கோர்ட்டுகளுக்கு வியாஜ்ஜியங்களை அனுப்புவதற்கு சி. பு. கோ. 562, 564 வது பிரிவுகள் ஆதாரம். இந்த பிரிவுகளால் அப்பீல் கோர்ட்டாருக்கு எவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதை மீஞ்சி இந்தக்கேசில் ஜில்லாக் கோர்ட்டார் நடந்திருப்பதாக அபிப்பிராயப் படுகின்றேன். ஆகையால் இந்தக்கேசை புல்பென்ச்சிற்கு ரிபர்செய்ய சம்மதிக்கிறேன்.

ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர் கூறினகாரணம்:—அப்பீல்கோர்ட்டார் புனர்விசாரணைக்காக அசல்கோர்ட்டாருக்கு வியாஜ்ஜியங்களை அனுப்புவதைக்குறித்து சி. பு. கோ 562-வது பிரிவு பேசுகின்றது. அந்தப் பிரிவில் சொல்லப்பட்ட காரணங்களைத் தவிர இதர காரணங்களுக்காக அப்பீல்கோர்ட்டார் வியாஜ்ஜியங்களை அசல்கோர்ட்டிற்கு ரிமாண்டுசெய்தால் சட்டவிரோதமென்று இ. லா. ரி. 23. சென். 447. (சேஷன்னபட்டர் V. சேஷன்பட்டர்) இ. லா. ரி. 28. சென். 447. (காளாஸ்திரி எஸ்டேட் கோர்ட் ஆப்வார்ட்ஸ் மானேஜர் V. ராமசாமி ரெட்டி) ஆகிய இந்தக்கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இ. லா. ரி. 23. சென். 445 (பெருமப்பிரநாயர் V. சுப்பிரமணிய பட்டர்) இ. லா. ரி. 23. அல. 167 (ஹாபிப் பிரக்ஷ V. பால்கியோ பிரசாத்) கேஸ்களில் அப்பீல்கோர்ட்டார் எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்து புனர்விசாரணைக்காக அசல்கோர்ட்டிற்கு ரிமாண்டுசெய்வதற்கு அதிகாரமிருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தப்பிரிவின் அதிகாரத்தைக்கொண்டு அதிகாரமிருக்கிறதென்று குறிப்பிடப்படவில்லை. இதன்பேரில் டி. மு. கோர்ட்டார் கொடுத்த எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்ய ஜில்லாக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று எண்ணுகின்றேன்.

இந்த விஷயத்தைக் குறித்த தீர்ப்புகளெல்லாம் இப்படி ஒன்றுக்கொன்று முரணாயிருப்பதால், இந்த வியாஜ்ஜியத்தைப் புல் பென்சிற்கு ரிபர் செய்ய சம்மதம் கொடுக்கிறேன்.

புல்பென்சிக்கு அனுப்பிய கேள்வி:—ஒரு எக்ஸ்பார்ட்டி டிக்கிரி ஏற்பட்டு அந்த டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல செய்து கொள்ளப்பட்டால், அசல் கோர்ட்டார் எக்ஸ்பார்ட்டி டிக்கிரி கொடுத்தது பிசகு என்று சொல்லி ஷை டிக்கிரியை ரத்துசெய்து புனர் விசாரணை செய்யும் பொருட்டு அசல்கோர்ட்டிற்கு விசாஜ்ஜியத்தை ரிமாண்டுசெய்ய அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதா?

லாயர்கள்:—வக்கீல்கள் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர், K. குப்புசாமி அய்யர், அப்பீல் வாதிகளுக்கும், ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும், வக்கீல் மிஸ்டர் M. நாராயணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகள் தரப்பிற்கும் பேசினார்கள்.

புல் பென்சார் சொன்ன நியாயம்:—முதல் பிரதிவாதி எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்து செய்யும் பொருட்டு டி. மு. கோர்ட்டாருக்கு மனுசெய்து அவர்கள்ரத்து செய்யமாட்டோமென்று சொல்லியிருந்து இந்த உத்திரவுக்கு விரோதமாக முதல் பிரதிவாதி அப்பீல் செய்து கொண்டிருந்தால் இந்த அப்பீலை விசாரணை செய்து டி. மு. கோர்ட்டார் செய்த உத்திரவை ரத்து செய்ய ஜில்லாக் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. எப்போது அந்த அதிகாரம் அப்பீல் கோர்ட்டாருக்கிருக்கிறதோ, அப்போது கேசைப் புனர் விசாரணை செய்யும்படி டி. மு. கோர்ட்டாருக்கு வியாஜ்ஜியத்தை அனுப்ப அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது. அப்படி இல்லை என்று சொல்வது பொருந்தாது. மேலும் அப்பீல் கோர்ட்டார் சி. பு. கோ. 566, 568 வது பிரிவுகளை அனுசரித்து அந்த அப்பீலை விசாரணை செய்வதைப் பார்க்கிலும் அசல் கோர்ட்டாரே மறுபடியும் விசாரணை செய்வது மிகுந்த சௌகரியமாயிருக்கும். இ. லா. ரி. 23. அல. 167ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானங்களே சரியான தீர்மானங்கள்.

புல் பென்சார் கூறிய பதில்:—ஆம். அதிகார மிருக்கிறது.

தீர்ப்பு:—புல்பென்ச்சார் எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்து செய்து புனர் விசாரணைக்கு அனுப்ப அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகார மிருக்கிறதென்று முடிவு செய்திருக்கிறார்கள். மிறக, டி. மு. கோர்ட்டார் முதல் பிரதிவாதியின் பேரில் மட்டிலும்தான் எக்ஸ் பார்டி டிக்கிரி கொடுத்திருக்கிறார்கள் என்றும், மற்ற பிரதிவாதிகள் டி. மு. கோர்ட்டில் ஆஜராயிருந்தார்கள் என்றும், அவர்கள் பேரில் கொடுக்கப்பட்ட டிக்கிரியையும் ரத்துசெய்ய ஜில்லாக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்றும் இப்போது அப்பீல் வாதி கூடச் சொல்லுகிறார். இப்படி ஜில்லாக் கோர்ட்டார் செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லை என்றாவது அல்லது இப்படி செய்ததால் தமக்கு அநியாயம் கிடைக்கமாட்டா தென்றாவது அப்பீல் வாதி எடுத்துக் காண்பிக்கவில்லை. ஆகையால் அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம். இ. லா. ரி. 30 சென். 54.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ஜாதவேடன் நப்புத்திரி வகையறு—மூன்றாவது பிரதிவாதி—அப்பீல்வாதி.

குஞ்சு ஆச்சான் வகையறு—வாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—முதல்வாதி தமக்குச் சொந்தமான ஒரு சொத்தை ஒருவருக்கு மரணசாசனம் எழுதிவைத்தார். இவர் ஷை சொத்தில் தமக்கிருந்த அக்கை K. என்பவருக்குக் கிரயம்செய்துவிட்டார். அந்த அக்கு பாத்தியதையை வாங்கின K. ஆறுகுமாரர்களைவிட்டுவிட்டு இறந்து போய்விட்டார். முதல் பிரதிவாதி தாம் மரணசாசனம் எழுதிவைத்த சொத்தைப் பெறும்பொருட்டு ஷை K.என்பவரின் ஆறுகுமாரர்களையும் இரண்டாவது பிரதிவாதியையும் மற்றுமுள்ளவர்களையும் பிரதிவாதிகளாகச்சேர்த்து வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார். (O. S. No.57 of 1899).

இந்தவியாஜ்ஜியம் ஷை K. என்பவரின் புத்திரர்களாகிய 1, 2, பிரதிவாதிகளால்மட்டிலும் சமாதானம்

செய்துகொள்ளப்பட்டது. மற்றப்பிரதிவாதிகள் இந்த சமாதானத்தில் சேரவில்லை. சமாதானம் எப்படி செய்துகொள்ளப்பட்டதென்றால், பிரதிவாதிகள் ஒரு குறிப்பிட்டதேதிக்குள் ஒருதொகை வாதிக்குக் கொடுக்கிறதென்றும் அப்படி அந்தத்தேதிக்குள் வாதிக்குப் பிரதிவாதிகள் பணம்கொடுக்கத் தவறிப்போய்விட்டால் வாதி ரூ. 200 பிரதிவாதிகளுக்குக் கொடுத்துவிட்டு தாவாச் சொத்தை மீட்டுக்கொள்ளுகிறதென்றும் சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. கோர்ட்டாரும் இப்படியே சமாதான டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதிகள், குறிப்பிட்டதேதியில் வாதிக்குச் சமாதான டிக்கிரிப்பிரகாரம் பணம்செலுத்தத் தவறிப்போய்விட்டார்கள். ஆகவே வாதி சமாதானடிக்கிரியில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் ரூ. 200 பிரதிவாதிகளுக்குச் சேரும்படி கோர்ட்டில்கட்டிப் பிரதிவாதிகள் சொத்தை ஒப்புவிக்கும்படி உத்தரவுசெய்யக் கோர்ட்டில் மனு செய்துகொண்டார்.

(1899-ம் ௵த்திய 57-ம் நெ.) இந்த வியாஜ்ஜியத்தின் மூன்றாவது பிரதிவாதி ஷை K. என்பவரினுடைய புத்திரர்களிடமிருந்து பிரஸ்தாபதாவாச் சொத்திலுள்ள சிலபாத்தியதைகளைவாங்கி அனுபவித்துவருகிறார். அவர் ஷை தாவா சமாதானடிக்கிரிக்குக் கட்டுப்பட்டவரல்ல. இவரும் ஷை சமாதானடிக்கிரியில் சேராத மற்றுமுள்ள பிரதிவாதிகளும் வாதி சமாதான டிக்கிரியை நிறைவேற்றுவதை ஆக்ஷேபித்து அவரிடம் சொத்தை ஒப்புவிக்கக் கோர்ட்டார் உத்திரவுசெய்யக்கூடாதென்று கக்ஷி சொன்னார்கள். மேறகூறப்பட்ட அசல்வியாஜ்ஜியமும் நிறைவேற்று நடவடிக்கைகளும் பாலக்காட்டு டி. மு. கோர்ட்டில் நடந்தன. சி. பு. கோ 331-வது பிரிவில், நிறைவேற்று நடவடிக்கையில் டிக்கிரியை நிறைவேற்றக்கூடாதென்று டிக்கிரிக் கடனாளியைத்தவிர வேறேயாரேனும் டிக்கிரிக்குக் கட்டுப்பட்ட சொத்தில் தனக்குப் பாத்தியதை யிருக்கிறதென்றும் ஆகையால் டிக்கிரியை நிறைவேற்றக் கூடாதென்றும் ஆக்ஷேபித்தால்கோர்ட்டார்ஷை ஆக்ஷேபணையை டிக்கிரி பெற்றவரை வாதியாகவும் ஆக்ஷேபணைசெய்தவரைப் பிரதிவாதியாகவும் அசல்வியாஜ்ஜியமாகப் பயிலில் தாக்கல் செய்துகொண்டு விசாரணைசெய்து பைசல் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாலக்காடு டி. மு. கோர்ட்டார் மூன்றாவது பிரதிவாதிகள் முதலியவர்கள் செய்துகொண்ட ஆக்ஷேபணை மனுவை அசல்வியாஜ்ஜியமாகத்தாக்கல்செய்துகொண்டு (O. S. No. 497 of 1901) விசாரணைசெய்ய ஆரம்பித்தார்கள்.

வாதியின் ஆக்ஷேபணை:—இப்போது டிக்கிரியை நிறைவேற்றுவதை ஆக்ஷேபிக்கும் பிரதிவாதிகள் சமாதானடிக்கிரியில் சேராதவர்களானபடியால் அவர்கள் இந்த டிக்கிரியை ஆக்ஷேபிக்கவேண்டுமானால் பிரத்தியேக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமே யொழிய நிறைவேற்றுநடவடிக்கையில் கோர்ட்டார் இந்தவிஷயத்தைக்குறித்துத் தீர்மானிக்கக்கூடாதென்று வாதிகக்ஷி சொன்னார்.

டி. மு. கோர்ட்டார் அந்த ஆக்ஷேபணையை ஏற்றுக்கொள்ளாமல் வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்து சொத்தை வாதியிடம் ஒப்புவிக்கும்படிப் பிரதிவாதிகளுக்கு உத்திரவுசெய்து தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாகப் பிரதிவாதிகள் தென்மலையாளம் ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக மூன்றாவது பிரதிவாதிமட்டிலும் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் இரண்டாவது அப்பீல்வாதிக்கும், 5 முதல் 7 அப்பீல் பிரதிவாதிகளுக்கு வக்கீல மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யருக்குப் பதிலாக மிஸ்டர் P. R. சுந்தர அய்யரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—அப்பீல்வாதியின் வக்கீலாகிய மிஸ்டர் ராமசந்திர அய்யர் இரண்டே ஆக்ஷேபணை சொல்லுகின்றார். ஒன்று என்னவென்றால், பிரதிவாதிகள் நிறைவேற்றுநடவடிக்கையில் செய்த ஆக்ஷேபணையை சி. பு. கோ. 244-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் நிறைவேற்று நடவடிக்கையிலேயே விசாரணைசெய்து பைசல் செய்திருக்கவேண்டுமென்றும், பிரத்தியேக வியாஜ்ஜியமாகத் தாக்கல்செய்துகொண்டு விசாரணை செய்யக்கூடாதென்றும், அப்படி டி. மு. கோர்ட்டார் செய்யாமல் பிரதிவாதிகள்செய்த ஆக்ஷேபணையைப்பிரத்தியேகவியாஜ்ஜியமாகத் தாக்கல்செய்துகொண்டுபைசல் செய்திருப்பது சி. பு. கோ. 244-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதற்கு விரோதமா யிருக்கிறதென்றும், இரண்டாவது ஆக்ஷேபணை என்னவென்றால், அப்படி டி. மு. கோர்ட்டார் பிரதிவாதிகள்செய்த ஆக்ஷேபணையைப் பிரத்தியேக வியாஜ்ஜியமாகத் தாக்கல்செய்துகொண்டு விசாரணைசெய்தபோதிலும் வாதிக்குச் சொத்தை ஒப்புவிக்கும்படித் தீர்ப்புசெய்திருப்பது சட்டவிரோதமென்பதே.

சி. பு. கோ. 331-வது பிரிவில் நிறைவேற்று நடவடிக்கையில் டிக்கிரி கடனாளியைத்தவிர வேறேயாரேனும் ஆக்ஷேபித்தால் கோர்ட்டார் அந்த ஆக்ஷேபணையைப் பிரத்தியேக வியாஜ்ஜியமாக தாக்கல்செய்துகொண்டு விசாரிக்கவேண்டுமென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வியாஜ்ஜியத்தில் வாதி டிக்கிரியைப் பாலக்காட்டு டி. மு. கோர்ட்டில் நிறைவேற்றினபோது ஆக்ஷேபித்தவர் மூன்றாவது பிரதிவாதி. இவர் அந்த சமாதான டிக்கிரியில் சேராதவர். ஆகையால் அவர் டிக்கிரி கடனாளியல்ல. ஆகையால் இவர்செய்த ஆக்ஷேபணை டி. மு. கோர்ட்டார் பிரத்தியேக வியாஜ்ஜியமாக தாக்கல்செய்துகொண்டு பைசல்செய்தது சட்ட சம்மதமான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. அப்பீல்வாதியின் வக்கீல் சொல்லும் இரண்டாவது ஆக்ஷேபணையைப் பற்றி யோசிப்போம். எந்தடிக்கிரியைப் பிரதிவாதிகள்

ஆக்ஷேபித்தார்களோ அந்த டிக்ரியில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் சொத்தை வசப்படுத்திக்கொள்ள வாதி டிக்கிரியை நிறைவேற்றினார். இந்த நிறைவேற்று நடவடிக்கையில் உண்டான ஆக்ஷேபணை என்னவென்றால், வாதியிடம் சொத்தை ஒப்புவிக்கக் கூடாதென்பதே. கோர்ட்டார் இந்த ஆக்ஷேபணையைப் பிரத்தியேக வியாஜ்ஜியமாக தாக்கல்செய்து விசாரணைசெய்ததில் ஆக்ஷேபணைசெய்த பிரதிவாதிகள் டிக்கிரிக்குக் கட்டுப்பட்ட சொத்தில் தங்களுக்கிருக்கும் பாத்தியதையை ருஜுப்படுத்தி ஸ்தாபிக்கவில்லை. ஆகையால் ஷை சொத்தை வாதியிடம் ஒப்புவிக்கும்படி பிரதிவாதிகளுக்கு உத்தரவுசெய்து தீர்ப்புசொன்னது நியாயமான தீர்ப்பென்று முடிவுசெய்கிறோம் என்றுசொல்லி அப்பீலைச் செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்து தீர்ப்புசொன்னார்கள்.—இ. லா. ரி. 30 சென். 72.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

பரமசிவம் பிள்ளை—குற்றவாளி—அப்பீல்வாதி.
சக்ரவர்த்தியார்—பிரியாதி—அப்பீல் பிரதிவாதி.

சேசின் விவரம்:—மாயவரம் இரண்டாவதுகிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் அப்பீல்வாதியின்மீது இ. பி. கோ. 147-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கலகம்செய்த குற்றமும், இ. பி. கோ. 379-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் திருடினகுற்றமும் ஸ்தாபித்து இரண்டுமாத கடுங்காவல் தண்டனையும் ரூ. 50 அபராதமும் விதித்தார்கள். அப்பீல்வாதி அப்பீல்செய்துகொண்டதில் கும்பகோணம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் அப்பீல்வாதியை இ. பி. கோ. 379 பிரிவின் குற்றத்தினின்று விடுவித்துவிட்டு கீழ்க்கோர்ட்டார் விதித்த தண்டனையை உறுதிப்படுத்தினதுமன்றி கி. பு. கோ 106-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் நல்லநடத்தைக்கு ஜாமீன்கொடுக்கும்படியாக உத்தரவுசெய்து தீர்ப்புசொன்னார்கள். குற்றவாளி ஹைகோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன்மனு தாக்கல்செய்தார்.

லாயர்கள்:—அப்பீல்வாதிக்கு வக்கீல்கள் மெசர்ஸ் P. R. சுந்தர அய்யரும் K. S. ராமசாமி சாஸ்திரியாரும் ஆஜரானார்கள். பிராசிக்கியூஷன் தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக மிஸ்டர் J. L. ரொஜெரியோ.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) இந்தக்கேசில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியங்களைக்கொண்டு குற்றவாளியின் பேரில் இ. பி. கோ. 147-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்தை ஸ்தாபிக்கப் போதுமான ஆதாரமில்லை.

(2) எப்போது கும்பகோணம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் குற்றவாளியைத் திருட்டுக்குற்றத்தினின்று விடுவித்துவிட்டார்களோ அப்போதே அதற்குத் தகுந்தபடி கீழ்க்கோர்ட்டார்கொடுத்த தண்டனையையும் குறைத்துவிடவேண்டும். அப்படிக் குறைக்காதது சட்டவிரோதம்.

(3) குற்றவாளியை முதல்கோர்ட்டில் இரண்டாவதுகிளாஸ் மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்து தண்டித்திருப்பதால் அப்பீல்கோர்ட்டார் நல்லநடத்தைக்கு ஜாமீன்கொடுக்கும்படி உத்தரவுசெய்தது சட்டவிரோதம்.

தீர்ப்பு:—இந்தக்கேசில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியத்தால் அப்பீல்வாதியின்பேரில் 147-வது பிரிவின் குற்றம் ஸ்தாபிக்கக்கூடாதென்று அப்பீல்வாதியின் வக்கீல் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இரண்டாவது அப்பீல் கிரௌண்டு என்னவென்றால், முதல் அப்பீல்கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் சாட்டப்பட்ட இரண்டு குற்றங்களில் ஒன்றை நீக்கிவிட்டபோது அதற்குத்தகுந்தபடி தண்டனையைக் குறைக்கவில்லை என்பதே. இதேகோர்ட்டில் 1905-ம் ௵ 141 நெ. கிரிமினல் ரிவிஷன்மனு (ராமானுஜம் பிள்ளை V. சக்ரவர்த்தி) விசாரணையில் ஒரு அப்பீல்கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட பல குற்றங்களில் ஒரு குற்றத்தை நீக்கிவிட்டு அதற்குத் தகுந்தபடி அவன்பேரில் விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்காவிட்டால் அவன் அடைந்திருந்த தண்டனையை உயர்த்தினதற்குச் சமானமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக்கேசில் கும்பகோணம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டும் தண்டனையைச் சிறிதாகிலும் குறைத்திருக்கவேண்டும். அப்படிக் குறைக்காமல் ஏற்கனவே அடைந்திருக்கும் தண்டனை அவ்வளவுமிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருந்தால் அவர் ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்திருக்கவேண்டும். ஆகையால் அப்பீல் கோர்ட்டார் தண்டனையைக் குறைக்காமற்போனது சட்டவிரோதம். மூன்றாவது அப்பீல்கிரௌண்டு நல்லநடத்தைக்கு ஜாமீன்கொடுக்கும்படி உத்தரவுசெய்ததைக் குறித்தது. கி. பு. கோ. 106-வது பிரிவில் இன்னின்ன மாஜிஸ்டிரேட்டாரால் அசல் கோர்ட்டில் குற்றவாளி விசாரணை செய்யப்பட்டிருந்தால் அப்பீல்கோர்ட்டார் நல்லநடத்தைக்கு ஜாமீன்வாங்கும்படி உத்தரவுசெய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாஜிஸ்டிரேட்டுகளுக்குள் இரண்டாவதுகிளாஸ் மாஜிஸ்டிரேட் சொல்லப்படவில்லை. குற்றவாளியைப் பிரதமத்தில் விசாரணை செய்து தண்டித்தவர் இரண்டாவதுகிளாஸ் மாஜிஸ்டிரேட். ஆகையால் கைதியிடமிருந்து நல்லநடத்தைக்கு ஜாமீன்வாங்கும்படி உத்தரவுசெய்ய அப்பீல்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. இதேமாதிரியாக இ. லா. ரி. 29 சென். 190 (முத்தையசெட்டி V. சக்ரவர்த்தியார்)க்கும் இ. லா. ரி. 21 கல். 622 (முகமதுஷேக் V. ஆஜிஷேக்) ல் சொல்லப்பட்டிருக்கும் கேஸ்களிலும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

முதல் அப்பீல்கோர்ட்டார் தண்டனையைக் குறைக்காதபடியால், நாங்கள் குறைத்து விதிக்கிறோம்.

கைதி ஏற்கனவே 5 வாரகாலமாக ஜெயிலிலிருந்திருக்கிறான். அதுவே போதுமானதண்டனை என்று கூறுகின்றோம். நல்லநடத்தைக்கு ஜாமீன்கொடுக்கும்படியாக முதல் அப்பீல்கோர்ட்டார் செய்திருக்கும் உத்தரவை ரத்துசெய்கிறோம். அபராத தண்டனையில் நாங்கள் பிரவேசிக்கவில்லை.—30 இ. லா. ரி 30 சென் 49.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ராமய்யன்—இரண்டாவது பிரதிவாதி—அப்பீல்வாதி.

V.

வெங்கடாசல பட்டர் வகையரா—வாதிகள் அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—"என்னுடைய உத்திரவு பெற்றவருக்காவது" என்று எழுதப்படாத பிராமிசரி நோட்கேஸ்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—இரண்டாவது பிரதிவாதி S. என்பவருக்கு ஒரு பிராமிசரிநோட்டு எழுதிக் கொடுத்திருந்தார். S. என்பவர் இந்தப் பிராமிசரிநோட்டை வாதிக்கு எண்டார்ஸ்மெண்டு செய்து கொடுத்தார். இந்த எண்டார்ஸ்மெண்டுப்பிரகாரம் வாதிக்குச்சேரவேண்டிய பணத்தைப் பெறும்பொருட்டு வாதி மலையாளம் ஜில்லா தெம்மல்புரம் டி. மு. கோர்ட்டில் (O. S. No 397 of 1900.) வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். தாவாப்பிராமிசரி நோட்டு அடியிற்கண்ட பிரகாரம் எழுதப்பட்டிருந்தது.

"பாலக்காட்டுத்தாலுக்கா கன்னனூர் பால்டா அம்சூரம் இருஷிகாரத மங்கல கிராமத்திலிருக்கும் ஹரிஹர சங்கர நாராயண அய்யர் அவர்களுக்கு ஷை கிராமத்திலிருக்கும் ராமசந்திர ராமய்யன் எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு என்ன வென்றால், தங்களிடமிருந்து நான் கடனை வாங்கிக்கொண்ட ரூ. 800. மேலே சொல்லப்பட்ட ரூபாய் எண்ணூறையும் 100க்கு மாதத்திற்கு ஒரு ரூபாய் வட்டிசேர்த்துத் தாங்கள் வேண்டும்போது தங்களுக்குக்கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறேன். 1074-ம் ளு மீனம் 29உ (10-4-1899) த்தில் இந்தப் பிராமிசரிநோட் எழுதிக்கொடுக்கப்பட் டிருக்கிறது. இந்தப் புரோ நோட்டில் சொல்லப்பட்டிருக்கிற தொகையை ரொக்கம் பெற்றுக்கொண்டிருக்கிறேன்."

(ஒப்பம்) ராமசந்திர ராமய்யன்.

இந்தப் பிராமிசரி நோட்டின் பின்புறத்தில் அடியிற்கண்ட பிரகாரம் எண்டார்ஸ்மெண்டு செய்யப்பட்டிருந்தது :—

" இந்தப் புரோநோட்டுப் பிரகாரம் கூடுதலாயிருக்கும் தொகை பட்டனஹரி கிராமம் தாத்தாமங்கலத்தைசேர்ந்த கொளத்துரான்பட்டர் குமாரராகிய வெங்கடாசல பட்டருக்குச் செலுத்தப்படவேண்டும்" 1075 ம் ளு சிங்கம் 72.

(ஒப்பம்) A. சங்கரநாராயண அய்யர்.

இரண்டாவது பிரதிவாதி சொன்னகக்ஷி :—(1) பிராமிசரி நோட்டைவில்கண்டதொகையை இரண்டாவது பிரதிவாதி வாங்கவில்லை. (2) வாதியிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு பிராமிசரி நோட்டு டிரான்ஸ்பர் செய்யப்படவில்லை. ஆகையால் தாவா பிராமிசரி நோட்டு செலாவணியாகமாட்டாது.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு :—(1) இரண்டாவது பிரதிவாதி பிராமிசரி நோட்டில் கண்ட தொகையைப் பெற்றுக்கொண்டு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருப்பதாய் ருஜுவாயிருக்கிறதென்று முடிவுசெய்தார்கள். (2) பிராமிசரி நோட் நமோதாவிற்கு வாதியின் பேரில் டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறதே யொழிய வாதிஇந்தப்பிராமிசரி நோட்டிற்காக யாதொருதொகையும் டிரான்ஸ்பர் செய்து கொடுத்தவருக்குக் கொடுக்கவில்லை என்று முடிவு செய்தார்கள். (3) தாவாப் பிராமிசரிநோட்டில் "என்னுடைய உத்திரவுபெற்றவர்க்காகிலும்" என்று எழுதப்படாததால் நெகோஷியபில் இன்ஸ்டிருமெண்டு ஆக்ட் (Negotiable Instrument Act) 13-வது பிரிவின்படி தாவா பிராமிசரி நோட்டு நெகோஷியபில் இன்ஸ்டிருமெண்டாக மாட்டாததால் வாதி தம்முடைய பெயரால் தாவா தாக்கல் செய்வதற்குப் பாத்தியமற்றவர் என்று முடிவுசெய்தார்கள்.

இத்தியாதி காரணங்களுக்காக வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

வாதி பாலக்காடு சப் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—இ. லா: ரி. 12 பம். 686. (மானிஷங்கர் பிரான்சிலான் V. பாய்முலி)ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி வாதி பிராமிசரி நோட்டை டிரான்ஸ்பர்பெற்றுக்கொண்டதற்குப்பணம் செலுத்தியிருந்தாலும் செலுத்தாவிட்டாலும் அதைப்பற்றிக் கேட்க இரண்டாவது பிரதிவாதிக்குப் பாத்தியமில்லை என்றுசொல்லி செலவு தொகையுடன் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு சொன்னார்கள்.

இரண்டாவது பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—மிஸ்டர் J. L. ரொஜோரியோ அப்பீல் வாதிக்காகவும், வக்கீல் மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் 7-வது அப்பீல் பிரதிவாதிக்கும், வக்கீல்மிஸ்டர் C. V. அநந்தகிருஷ்ண அய்யர் 4-முதல் 6 அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—தாவாப் பிராமிசரி நோட்டில் " என் உத்திரவு பெற்றவர்களுக்கு " என்கிற வார்த்தைகளில்லாததால் நெகோஷியபில் இன்ஸ்டிருமெண்டு ஆக்ட் 13-வது பிரிவின்படி தாவா பிராமிசரி நோட் நெகோஷியபில் இன்ஸ்டிரு மெண்டாக மாட்டாது. (அதாவது நோட்டு யார்பேரிலிருக்கிறதோ அவரைத்தவிர வேறொருவர் ஷை பிராமிசரி நோட்டின் தொகையை வசூல் செய்யும்படியாக அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய பிராமிசரி நோட்டல்ல.) இருந்த போதிலும் இந்தப் பிராமிசரிநோட்டில் செய்யப்பட்டிருக்கும் எண்டார்ஸ்மெண்டு டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act) 130 - வது பிரிவின்படி சரியான டிரான்ஸ்பர் என்று வாதி வக்கீல் கக்ஷி சொல்லுகிறார். ஆனால் இதைக் குறித்து சப் கோர்ட்டார் கொடுத்திருக்கும் தீர்ப்பில் யாதொன்றையும் காணோம். ஆகையால் இந்தப் பிராமிசரிநோட்டில் செய்யப்பட்டிருக்கும் எண்டார்ஸ் மெண்டு செல்லுபடியுள்ள டிரான்ஸ்பரா அல்லவா வென்று சப் கோர்ட்டார் தீர்மானித்து அனுப்பும்படியாக இந்த வியாஜ்ஜியத்தை அவர்களுக்கு அனுப்பும்படி உத்திரவு செய்கிறோம் என்று சொன்னார்கள்.

சப் கோர்ட்டார் தீர்மானம்:—பிராமிசரி நோட்டில் செய்யப்பட்டிருக்கும் என்டார்ஸ் மெண்டில் பிராமிசரி நோட்டு டிரான்ஸ்பர் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதாக விபக்த்தமாய்ச் சொல்லப்படவில்லை. பிராமிசரி நோட்டின் பிரகாரம் சேரவேண்டிய தொகையை வாதிக்குக் கொடுக்கும்படியாக உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இந்த எண்டார்ஸ்மெண்டு நேரான டிரான்ஸ்பர் என்று சொல்லக்கூடாமற் போனபோதிலும் டிரான்ஸ்பரின் பயன் என்று சொல்லவேண்டும். இந்த எண்டார்ஸ் மெண்டு டிரான்ஸ்பர் செய்தவரால் எழுதப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டிருக்கும் ஒரு ஆதரவு இதற்கு ஏற்கனவே ஸ்டாம்பு போடாமலிருந்தபோதிலும் இப்போது வாதி ஸ்டாம்புத் தீர்வையையும் அபராதத்தையும் செலுத்தியிருக்கிறார். ஆகையால் இந்தப் பிராமிசரி நோட்டின் எண்டார்ஸ்மெண்டு நியாயமான டிரான்ஸ்பர் என்று முடிவு செய்தார்கள்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு:—சப் கோர்ட்டார் இந்த பிராமிசரி நோட்டில் செய்திருக்கும் எண்டார்ஸ்மெண்டு, நியாயமான டிரான்ஸ்பர் என்று முடிவு செய்திருப்பதை நாமும் ஏற்றுக்கொள்ளுகிறோம். எப்போது பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை வாதியிடம் கொடுத்துவிடும்படியாக உத்திரவிட்டு எண்டார்ஸ் மெண்டு செய்து கொடுத்து அத்துடன் ஷை பிராமிசரி நோட்டும் வாதியிடமே கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்போது அந்த எண்டார்ஸ்மெண்டு சரியான டிரான்ஸ்பர் என்று தாத்பரியம் செய்துகொள்ளவேண்டும். ஆகையால் பிராமிசரிநோட்டில் செய்யப்பட்டிருக்கும் எண்டார்ஸ்மெண்டு Transfer of Property Act 130-வது பிரிவின்படி சரியான டிரான்ஸ்பர் என்று சொல்லி சப் கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தி அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.—இ. லா. ரி. 30 சென். 75.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

1906-ம்ளுத்திய 519-வது கிரிமினல் ரிவிஷன்மனு.

பட்டாளா அச்சப்பா—பிரியாதி—மனுதார்.

பட்டாளா மகாலக்ஷ்மி—எதிரி—எதிர்மனுதார்.

லா பாயின்ட் :—விபசாரம்செய்கிற பெண்சாதி புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கலாமா ?

கேசின் விபரம்:—ஒரு பெண்சாதி தன்னுடைய புருஷனை ஜீவனாம்சம் கொடுத்துவரும்படி கோர்ட்டார் உத்தரவுசெய்யவேண்டுமென்று மாஜிஸ்டிரேட்டினிடம் கி. பு. கோ. 438-வது பிரிவின்படி பிரியாது செய்து கொண்டாள்.

புருஷனுடைய டிபன்ஸ்:—பெண்சாதி பத்துமாதத்திற்குமுந்தி ஒருமுறை விபசாரம் செய்ததால் அவளை வீட்டைவிட்டுத் துறத்திவிட்டதாகவும், விபசாரம்செய்கிற பெண்சாதிக்குப் புருஷன் ஜீவனாம்சம் கொடுக்கப் பாத்தியப்பட்டவனல்ல என்பதும் புருஷன் சொன்ன கக்ஷி.

கேசின் நடவடிக்கை:—சாட்சி விசாரணையில் பெண்சாதி பத்துமாதங்களுக்கு முந்தி ஒருதடவை ஒரு அன்னியனுடன் புணர்ந்ததாகவும், அதற்குப்பிறகு அவள் அப்படிப்பட்ட துர்நடத்தை யாதொன்றும் செய்யவில்லை என்றும் ருஜுப்பட்டது.

மாஜிஸ்டிரேட்டாரின் தீர்ப்பு:—கி. பு. கோ. 448-வது பிரிவு 4-வது கிளாசின்பிரகாரம் விபசாரம்செய்து கொண்டிருக்கும் பெண்சாதி புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் பெறுவதற்குப் பாத்தியமுடையவளல்லவென்று தீர்மானித்துப் பிரியாதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள்.

பெண்சாதி விசாகபட்டணம் செஷன்கோர்ட்டில் அப்பீல்செய்துகொள்ள இந்தக்கேசை அவர்கள் ஹைகோர்ட்டாருக்கு ரிபர்செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு :—கி. பு. கோ. 448-வது பிரிவில் விபசாரத்தால் ஜீவனம்செய்யும் பெண்சாதி (Living in Adultery) புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் பெற பாத்தியமற்றவள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருமுறை விபசாரம்செய்வது விபசாரத்தால் ஜீவனம் செய்வதாகமாட்டாது. அப்படியே அலகபாத் ஹைகோர்ட்டாரும் இ. லா. ரி. 26. அல. 326 ல் சொல்லப்பட்டிருக்கும் காலு V. கான்கீலியா என்கிற கேசில் இதேவிதமாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் மாஜிஸ்டிரேட்டினுடைய தீர்மானத்தை ரத்துசெய்து மறுபடியும் அந்தக்கேசை பைலில் வைத்துக்கொண்டு சட்டப்படி பைசல்செய்யும்படி விசாகப்பட்டணம் எட் அசிஸ்டன்ட் மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவுசெய்கிறோம்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

சேலம் கலெக்ட்டர்:—முதல்பிரதிவாதி—அப்பீல்வாதி.

மீர் பாக்ஷாசாயேப் வகையரா—வாதிகளும் ; 2 முதல் 7 பிரதிவாதிகளும்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—சேலம்ஜில்லாவில் கொல்லட்டி என்பது சாஸ்வததீர்வை விதிக்கப்பட்ட மிட்டா. அந்தமிட்டா N. என்பவருள்பட நான்குசகோதரர்கள் பேரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தது. அந்த நான்குசகோதரர்களும் பாகப் பிரிவினைசெய்து கொண்டார்கள். N. என்பவருடைய பாகத்திற்கு வந்த சிலகிராமங்களை N. என்பவர் இந்த வியாஜ்ஜியத்தின் வாதிக்கு விற்பனைசெய்தார். அப்படி விற்பனைசெய்யப்பட்ட கிராமங்களை வாதியின்பேரில் ரிஜிஸ்டர்செய்து கொள்ளும்பொருட்டு வாதியும் N என்பவரும் சேர்ந்து கலெக்ட்டருக்கு மனுசெய்துகொண்டார்கள். சென்னபட்டணத்து 1876-வது ளுத்திய 1-வது ஆக்ட் 2-வது பிரிவில், சாஸ்வத தீர்வையை யுடைய ஒரு எஸ்டேட்டின் ஒருபாகம் பராதீனம் செய்யப்பட்டு அந்தப்பாகம் அவன் எஸ்டேட்டிலிருந்துப்பிரித்து பிரத்தியேகத் தீர்வை விதிக்கப்படவேண்டுமென்று மனு செய்து கொள்ளப்பட்டால், அந்தப் பராதீனத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கலெக்ட்டர் நோட்டீஸ் அனுப்பித் தருவித்து அவர்களுடைய சம்மதத்தையும் ஏற்றும், இந்த எஸ்டேட்டில் பாத்தியதையுடையவர்கள் எவரும் ஆக்ஷேபிக்காவிட்டால் அல்லது ஆக்ஷேபித்துக் கலெக்டர் அவ்வாட்சேபனையை ஏற்றுக்கொள்ளாமற் போனால் அந்த பாகத்தைப்பிரித்துக் கலெக்ட்டர்பிரத்தியேகத் தீர்வை விதிக்கவேண்டுமென்றுசொல்லப்பட்டுமிருக்கிறது. கலெக்ட்டர்மற்ற மூன்றுசகோதரர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பினார். அவர்களில் இரண்டுபேர்சாங்கி

தினம் கோர்ட்டில் ஆஜராகவில்லை. ஒருசகோதரர்மட்டிலும் அதாவது மூன்றாவது பிரதிவாதிமட்டிலும் ஆஜராகி அந்தமிட்டாவைப் பாகப்பிரிவினை செய்துகொள்ளுகிறகாலத்தில், அந்தமிட்டாவுக்காகச் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தியைத் தங்களுடைய விதாசாரப்படி போட்டுக்கட்டுகிறதென்றும், ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதாயும், வாதிவாங்கியிருக்கும் கிராமங்களுக்குக் கலெக்டர்விதிக்கும் தீர்வை ஷை உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் தீர்வையினின்று பேதப்படக்கூடாதென்றும் ஆகையால் மிட்டாவைப்பிரித்து வாதி பெயரில் ரிஜிஸ்டர் செய்யக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார். கலெக்டர் இந்த ஆக்ஷேபணையைப் பற்றி சாட்சி விசாரணைசெய்யாமல் இந்த மிட்டாவைப் பிரித்து ரிஜிஸ்டர் செய்ய மற்ற பாகஸ்தர்கள் சம்மதம் கொடுக்காததால் மிட்டாவைப் பிரித்து வாதியின் பெயரில் ரிஜிஸ்டர் செய்யமுடியாது என்று சொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

இதன்பேரில் இந்த மிட்டாவைக் கலெக்டர் பிரித்துத் தம்பேரில் ரிஜிஸ்டர் செய்யும்படி டிக்ளேர் செய்ய வாதி ஜில்லாக்கலெக்டரை முதல் பிரதிவாதியாகச்சேர்த்து மற்ற மூன்று சகோதரர்களையும் முறையே பிரதிவாதிகளாகச் சேர்த்து இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வியாஜ்ஜியம் சென்னபட்டணத்து 1876-வது ௵த்திய 1-வது ஆக்ட்டின்படி ஜில்லாக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

ஜில்லாக் கோர்ட்டார் தீர்ப்பு:—கலெக்டர் மிட்டாவைப்பிரித்து வாதிபெயரில் ரிஜிஸ்டர் செய்யும்படி டிக்ளேர் செய்தார்கள். வாதியின் செலவை கலெக்டர் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்டது.

ஜில்லாக் கோர்ட்டார் வாதிக்குச் செலவுதொகை கட்டிக்கொடுக்கும்படி கொடுத்த டிக்கிரிக்கு விரோதமாகக் கலெக்டர் ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு பிளீடர் அப்பீல் வாதியாகிய கலெக்டர் தரப்பிற்கும், ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் இரண்டு முதல் 7 அப்பீல் பிரதிவாதிகள் தரப்பிற்கும் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் முதல் அப்பீல் பிரதிவாதிக்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—சென்னபட்டணத்து 1876-வது ௵த்திய 1-வது ஆக்ட்டில், மிட்டா அல்லது ஒருநிலசொத்து பராதீனம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அல்லது அம்மிட்டாவின் ஒருபாகம் பராதீனம்செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதைப்பிரித்து ரிஜிஸ்டர்செய்யவேண்டுமென்று மனுசெய்து கொள்ளப்பட்டால், அந்தப்பராதீனத்தில் சம்பந்தப்பட்டவர்களுடைய சம்மதத்தைப்பெற்று ரிஜிஸ்டர்செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வியாஜ்ஜியத்தில் மிட்டா பராதீனம்செய்யப்பட்டதில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் யாரரென்றால் N. என்பவரும் வாதியுமே யொழிய, மற்ற சகோதரர்களல்ல. மிட்டா பிரித்து வாதி பெயரால் ரிஜிஸ்டர் செய்யப்படுவதற்கு ஆக்ஷேபித்த மூன்றாவதுபிரதிவாதி, பிரஸ்தாப பராதீனத்தில் சம்பந்தப்பட்ட பார்ட்டியல்ல. ஆகையால் அவருடைய சம்மதத்தைக்கலெக்டர்பெறவேண்டியது அனுவசியம். N. என்பவருக்கு மிட்டாக் கிராமங்களையே வாதிக்கு விற்கப்பாத்தியமில்லை என்று மூன்றாவது பிரதிவாதி ஆக்ஷேபித்திருந்தால் அப்போது கலெக்டர் அவருடைய ஆக்ஷேபணையைப்பற்றி யோசிக்கவேண்டும். ஆகையால் கலெக்டர் மூன்றாவது பிரதிவாதியை இந்தப் பராதீனத்தில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகளில் ஒருவராக நினைத்து அவர் ஆக்ஷேபணை செய்யும்போது மிட்டாவைப்பிரித்து வாதி பெயரில் ரிஜிஸ்டர்செய்ய நடக்க ஆதாரமில்லை என்று கலெக்டர் நினைத்தது சட்ட விரோதம். மேலும் மூன்றாவது பிரதிவாதி சொன்ன ஆக்ஷேபணையை விசாரணைசெய்து அதை ஏற்றுக்கொள்ளக்கூடாததாயிருந்தால் மிட்டாவைப்பிரித்து வாதிபெயரில் ரிஜிஸ்டர் செய்திருக்கவேண்டியது கலெக்டரின் கடமை. ஆகையால் ஜில்லாக் கோர்ட்டார் வாதிக்கு நேர்ந்த கோர்ட்டுச் செலவுகளைக் கலெக்டர் கட்டிக்கொடுக்கும்படியாகச் சொன்னது நியாயந்தான். ஆனால் இந்தவியாஜ்ஜிய முண்டானதற்குக் கலெக்டர் மட்டிலும் ஜவாப்புதாரியல்ல. மூன்றாவது பிரதிவாதியும் ஜவாப்புதாரி. அவரும் அவர்களுடைய சகோதரர்களும் கிஸ்தியைப்பங்குவீதப்படி செலுத்துவதாகச் செய்துகொண்ட உடன்படிக்கை கலெக்டரை எப்படிக் கட்டுப்படுத்தும்? ஆகையால் அவர் செய்த ஆக்ஷேபணை அனுவசியமான ஆக்ஷேபணை. இப்படியிருப்பதால் வாதியின் ஜில்லாக்கோர்ட்டுச் செலவுகளில் ஒரு பாகத்தை மூன்றாவது பிரதிவாதி செலுத்தவேண்டும்; மற்றொரு பாகத்தைக் கலெக்டர் செலுத்தவேண்டும்.

இந்த அப்பீலினால் வாதிக்கு நேரிட்டிருக்கும் செலவுகளைக்கலெக்டர் கட்டிக்கொடுக்கும்படி வாதிக்கு டிக்கிரி கொடுத்து அப்பீலைத் தள்ளும்படி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். 30 சென். 106.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

அருணாசல செட்டியார்—வாதி—அப்பீல்வாதி.

ராமய்யநாயுடு வகையரு—1,2, 4 பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—ஒரு வீடுவாடகைக்கு விடப்பட்டிருந்தால் வீட்டில் குடியிருப்பவனுக்குச் சொந்தக்காரன் எத்தனை நாள் நோட்டீஸ் எந்தக்காலமுதல் கொடுக்க வேண்டும்?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—தஞ்சாவூர் ஜில்லா திருவாலூரில் S. என்பவன் வாதிக்கு 1889-ம்௵ ஜூலை௴ 18௳ ஒரு குத்தகைப்பத்திரம் (குடிக்கூலி எக்ரிமெண்டு) எழுதிக்கொடுத்திருந்தார். ஷை பத்திரத்தின் முக்கியமான பாகம் பின்வருமாறு:—

"என்னுடைய தகப்பனார் மேற்கண்ட தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாக்களுக்கு, கீழே 1, 2, ஷெட்யூல்களில் காணப்பட்டிருக்கும் பூமிகளுக்காக வாடகைப் பத்திரம் எழுதிக்கொடுத்துப் பெற்று என் தகப்பனார் உள்ள காலத்தில் அவரும், அவருக்குப்பிறகு நானும் ஷை நிலத்தில் கூரைகட்டிக் கடைவைத்து வியாபாரம் செய்து வாடகை செலுத்திக்கொண்டு வந்தோம். தாங்கள் இப்போது ஷை தேவஸ் தானத்தை மானேஜ்மெண்டு செய்து வருகிறபடியால் நாளது தேதிவரையில் நிலுவையிலிருந்த வாடகை ரூ. 15 யை இன்றையதினம் தங்களிடம் செலுத்திவிட்டேன். இன்றுமுதல் கீழ்க்கண்ட நிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 11 - அணா விழுக்காடு குடிக்கூலி தருவதாய் சம்மதித்திருக்கிறேன். அப்படி வாயிதாத் தேதியில் செலுத்தத் தவறிப்போவேனேயாகில் ஆறுமாதவரையில் நிற்கும் வாடகை நிலுவையை 6-வது மாதத்தில் சேர்த்துச் செலுத்த ஒப்புக்கொண்டிருக்கிறேன். இந்த வாயிதாவிலும் செலுத்தத் தவறிப்போவேனேயாகில் என் கூரையைப் பிரித்துக்கொண்டு தங்களிடம் நிலத்தை ஒப்புவிக்கவும் அதுவரையில் நிலுவை வாடகையைச் செலுத்தவும் சம்மதித்திருக்கிறேன். நான் செலுத்தும் வாடகைக்குத் தங்களிடம் ரசீது பெற்றுக்கொள்ளுகிறேன்."

S. என்பவர் தன்னுடைய குத்தகைபாத்தியதையை இந்தவியாஜ்ஜியத்தின் முதல் பிரதிவாதிக்கு அசயின் செய்தார். முதல் பிரதிவாதி வாடகை பத்திரத்தின்படி வாடகை செலுத்தத் தவறிப்போய்விட்டார். ஆகவே வாதி நிலத்தைக் காலிசெய்யும்படி முதல் பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுத்தார். 1901-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 30௳யில் நிலத்தைக் காலிசெய்து ஒப்புவித்துவிடும்படியாக 1901-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 1௳யில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. முதல் பிரதிவாதி காலிசெய்ய மறுதளித்தார். ஆதலால் வாதி இந்த வியாஜ்ஜியத்தைத் திருவாரூர் டி. மு. கோர்ட்டில் தாக்கல்செய்தார்.

பிரதிவாதிகளின் ஆக்ஷேபணை :—நோட்டீஸ் போதுமான நோட்டீசல்ல. தாவா நிலத்தை வாடகைக்கு 1897-ம் ௵ ஜூலை௴ 13௳ ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் 13௳முதல் 13௳ ஒருமாதமாகக் கணக்கு செய்துகொண்டு 13௳யுடன் முடிவாகும்படியான நோட்டீஸ் கொடுக்கவேண்டியதிருக்க ஆகஸ்ட்டு௴ 30௳யுடன் முடிவாகும்படியான நோட்டீஸ்கொடுத்தது சட்டவிரோதமென்று சொன்னார்கள்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு :—வாடகைப் பத்திரத்தில் 1897-ம் ௵ ஜூலை௴ 13௳ குத்தகை ஒப்புக்கொண்டிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறபடியால் குத்தகையை ரத்துசெய்ய வேண்டியதாயிருந்தால் அந்தத் தேதிமுதல் அதாவது 13௳ முதல் 13௳ ஒருமாதமாகக் கணக்கு செய்யப்படவேண்டுமென்றும் ஆகையால் டிரான்ஸ் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 106 - வது பிரிவின்படி 13௳யுடன் முடிவாகும் 15-நாள் நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

ஜில்லாக்கோர்ட்டாரும் டி. மு. கோர்ட்டாருடைய தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—மிஸ்டர் P. R. சுந்தரமய்யருக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணா அய்யர் அப்பீல்வாதி தரப்பிற்கும், மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யருக்காக மிஸ்டர் K. சீனிவாச அய்யங்கார் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—வாடகைப் பத்திரத்தில் நிலத்தைத்காலி செய்வதற்கு நோட்டீஸ் கொடுப்பதைக்குறித்து யாதொன்றும் சொல்லப்படவில்லை. வாடகை ஒவ்வொரு மாதமும் 30௳ செலுத்தவேண்டுமென்று எழுதியிருக்கிறார். இதை அனுசரித்து வாதி 30௳யுடன் முடிவாகும் ஒருமாத நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். குத்தகை பாத்தியதை ஆரம்பமானது மாத முதல்தேதியாகவிருந்தால் வாதி கொடுத்திருக்கும் நோட்டீஸ் சரியான நோட்டீஸ்தான். ஆனால் குத்தகை 13௳ கொடுத்திருக்கிறதாகக் குத்தகைப்பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. குத்தகை 13௳ விடப்பட்டதாகப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருந்த போதிலும் மாதமுதல் தேதி முதல் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கக்ஷிக்காரர்கள் ஏற்பாடுசெய்துகொள்வதற்குப் பாத்தியமில்லையென்று சொல்லமுடியாது. ஆகையால்இப்பேற்பட்ட கேஸ்களில் கக்ஷிக்காரர்கள் எவ்விதம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கக் கூடுமென்பதைக் கோர்ட்டார் யூகிக்கவேண்டும். இத்தேசத்தில் மாதமுதல் தேதி முதல் ஒருமாதமாகக் கணக்கு செய்து வீடுகளை வாடகைக்கு விடுகிறவழக்கம் வெகுவாய் வழங்கிவருகின்றது. ஆகவே ஒருமாதத்தின் மத்தியில் வீடுவாடகைக்கு விடப்பட்டு ஒவ்வொரு மாதமும் 30௳ வாடகையைச் செலுத்திவிடவேண்டுமென்று வீட்டுச் சொந்தக்காரனும் குடியிருப்பவனும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தால் இதனின்று அறிந்துகொள்ளவேண்டிய தென்னவென்றால், குத்தகை பாத்தியதை மாதமுதல் தேதி முதல் கணக்கு செய்துகொள்ளப்பட வேண்டுமென்பதே. அதுபோல இந்தக்கேசில் ஒவ்வொருமாதமும் 30௳ வாடகை செலுத்திவிடவேண்டுமென்று வாதியும் பிரதிவாதியும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறபடியால் குத்தகை ஆரம்பம் 13௳ யாகவிருந்தபோதிலும் மாதமுதல் தேதியிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று யூகித்துக்கொள்ளவேண்டும். ஆகையால் இந்தப்படி கணக்குசெய்து வாதி 30௳ யுடன் முடியும்படியான டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 106 - வது பிரிவின்படி 15 - நாள் நோட்டீஸ் கொடுத்திருப்பது சரியானதென்று கீழ்க்கோர்ட்டு தீர்ப்புகளை ரத்துசெய்து செலவு தொகையுடன் வாதிபக்கம் தீர்ப்புசொன்னார்கள்—30. சென். 114.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

*** சிவில் அப்பீல்.**

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா காரியதரிசி தரப்பில் மதுரை ஜில்லா கலெக்டர்—முதல்பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

V.

வெங்கடேசலு நாயுடு—வாதி—அப்பீல் வாதி.

இந்தக்கேசில் ஹைகோர்ட்டார் அடியிற்கண்ட தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

சென்னபட்டணம் ஜில்லா முனிசிபாலிட்டி ஆக்ட் 10-வது பிரிவின்படியும் 250 - வது பிரிவின்படி உண்

---

* இந்த அப்பீல் வியாஜ்ஜிய விபரம் இதற்குமுன் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் சிவில் கிரிமினல் வியாஜ்ஜியத்தின்தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருக்கிறபடியால் இப்போது இதில் ஹைகோர்ட்டார் முடிவு செய்திருக்கும் சட்ட சாராம்சங்களை மட்டிலும் எடுத்தெழுதியிருக்கிறோம்.—[Ed.]

டாக்கப்பட்ட 6-வது விதியின்படியும் ஒருவர் முனிசிபல் கவுன்சிலராக நியமிக்கப்படுவதற்கு முந்தி கிரிமினல் தண்டனையை அடைந்திருந்தால் அப்படி அடைந்திருப்பதனால் அவர் முனிசிபல் கவுன்சிலர் உத்தியோகத்திற்கு யோக்கியதை உடையவரல்லவென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அபிப்பிராயப்பட்டால், அவர் முனிபல் கவுன்சிலருக்கு யோக்கியதை உடையவரல்ல. இப்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அபிப்பிராயப் பட்டது, அவர் முனிசிபல் கவுன்சிலராக எலக்ஷன் செய்யப்பட்ட பிறகாயிருந்த போதிலும் அவர் முனிசிபல் கவுன்சிலர் உத்தியோகத்திற்கு யோக்கியதையுடையவரல்ல.

எலக்ஷன் செய்து நியமிக்கப்பட்டதண்டனை அடைந்த முனிசிபல் கவுன்சிலரை அவர் தண்டனை அடைந்திருந்த காரணத்தை முன்னிட்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் 19-வது பிரிவின்படி அவரைக் கவுன்சிலைவிட்டு விலக்க மறுதளித்தது, பிறகு அவர் ஒரு சமயத்தில் முனிசிபல் கமிஷனராக எலக்ஷன்செய்யப்பட்டதை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் ரத்து செய்வதற்குத் தடையா யிருக்கமாட்டாது.

ஒரு எலக்ஷனை ஆக்ஷேபித்து மனு வரும்போது எவ்வித நடவடிக்கைகள் நடத்தி அதைப்பைசல் செய்ய வேண்டு மென்பதை 35,36-வது விதிகள் தெரிவிக்கின்றன.—30. சென். 118.

புல்பென்ச்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

கேசவரப்பு—ராமகிருஷ்ணரெட்டி வாதி—அப்பீல்வாதி.

V.

கோட்டா கோட்டரெட்டி வகையரு—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியிடம் சில நிலங்களை அடமானம் வைத்து ரூ.942 வாங்கியிருந்தார்கள். இப்படி அடமானம்வைக்கப்பட்ட நிலங்களில் சிலவற்றை 6 முதல் 9 பிரதிவாதிகள் கிரயத்திற்கு வாங்கி யிருக்கிறார்கள். ஆகையால் வாதி தாம் கொடுத்த கடனை வசூல் செய்வதற்கு எல்லோரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து நெல்லூா ஜில்லாக் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

ஜில்லாக் கோர்ட்டார், 6, முதல் 9 பிரதிவாதிகள் வாங்கியிருக்கும் சொத்துக்களை நீக்கி விட்டுப் பெர்தகத்திற்குக் கட்டுப்பட்ட மற்ற சொத்துக்களின் மீது ரூ. 94-க்கு வாதிக்கு டிக்கிரி கொடுத்து 9-வது பிரதிவாதியின் செலவு தொகையை வாதி கட்டிக் கொடுக்கும்படியாக உத்திரவு செய்தார்கள்.

ஜில்லாக்கோட்டார் கொடுத்தடிக்கிரியில் 6-முதல் 9-பிரதிவாதிகள் வாங்கின பெந்தகச் சொத்தை நீக்கிவிருப்பது நியாயவிரோதமென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

6 முதல் 9 பிரதிவாதிகள் வாங்கின பெங்கதச் சொத்தின் விலை மதிப்புக்குறிப்பு:—

கடனை வசூல் செய்வதற்குப்பெந்தகப் பத்திரத்தின்பேரில்கொண்டுவந்த வியாஜ்ஜியம்.

6 முதல் 9 பிரதி வாதிகள் வாங்கின பெந்தகச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 4000; இந்தச்சொத்துக்களிலிருந்து ரூ. 4000 தான் வசூல் செய்ய வாதி விரும்புகிறார். ஆகையால் அப்பீலின் மதிப்பு. ரூ. 4000-0-0.

9-வது பிரதிவாதிக்குக் கொடுக்கும்படி உத்திரவுசெய்யப்பட்ட செலவு தொகை. ரூ. 150-8-0.

அப்பீலின் மொத்த மதிப்பு ரூ. 4150-8-0.

இந்தப் பிரகாரம் அப்பீலுக்கு மதிப்பு போட்டு வாதி அதற்குத்தகுந்த கோர்ட்பீஸ் ஸ்டாம்பு ஒட்டியிருந்தார்.

6 முதல் 9 பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:—வாதி செய்து கொண்டிருக்கும் அப்பீல், ஜில்லாக் கோர்ட்டார் ரூ. 9240க்கு கொடுத்த டிக்கிரிக்கு விரோதமாகச் செய்து கொண்டிருக்கிறபடியால் கோர்ட் பீஸ் ஆக்ட் 7-வதுபிரிவின்படி அவர் 6 முதல் 9 பிரதிவாதிகள் வாங்கியிருக்கும் பெர்தகச் சொத்துக்களிலிருந்து வசூல் செய்ய உத்தேசித்திருக்கும் ரூ. 4000க்கு மட்டிலும் கணக்கு செய்து கோர்ட்பீஸ் போட்டது பிசகு என்றும் ரூ. 240-க்கும் கோர்ட்பீஸ் கட்டவேண்டுமென்றும் ஆக்ஷேபித்தார்கள்.

இந்தக் கேஸ் முதலில் ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர், ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சன் கூடியகோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது.

இதைக் குறித்து இதற்குமுந்திய வியாஜ்ஜியங்களில் செய்யப்பட்டிருக்கும் ஜாரியான தீர்ப்புக ளெல்லாம் ஒன்றுக்கொன்று முரணாகவிருப்பதால் இதைப்புல்பென்ச்சாருடைய அபிப்பிராயத்திற்கு ரிபர் செய்தார்கள்.

புல்பென்ச்சாருக்கு அனுப்பிய கேள்வி:—பிரஸ்தாப அப்பீலுக்குச்சரியான ஸ்டாம்பு போடப்பட்டிருக்கிறதா?

புல்பென்ச் தீர்ப்பு:—முதலாவது, வாதி கொண்டுவந்திருக்கும் அப்பீலில் ஜில்லாக் கோர்ட்டார் எவ்வளவு தொகைக்கு டிக்கிரி கொடுத்தார்களோ அதை ஆக்ஷேபிக்கவில்லை. இந்த அப்பீலின் மொத்தக்கருத்துஎன்னவென்றால், ஜில்லாக்கோர்ட்டார 6 முதல் 9 பிரதிவாதிகள் வாங்கியிருக்கும் நிலத்தைடிக்கிரிக் கடனுக்குக்கட்டுப்படுத்தவில்லை என்பதே. ஆகையால் இந்த அப்பீலில் டிக்கிரித் தொகையைப்பற்றி யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆகையால் கோர்ட்பீஸ் ஆக்ட் 7-வது பிரிவு இந்த அப்பீலுக்குப் பொருந்தாது. ஆனால் இந்த அப்பீலில் வாதி வெற்றி அடைந்தால் டிக்கிரி முழுத்தொகைக்கும் 6 முதல் 9 பிரதிவாதிகள் வாங்கின பெர்தகச் சொத்தின் பேரில் போக பாத்தியமிருக்கிறது. அப்படிப் போனாலும் அவருக்கு ரூ. 4000-ம் தான் கிடைக்கும். ஏனெனில் ஷை சொத்து ரூ. 4000ம் தான் விலை மதிப்புள்ளதென்று வாதி சொல்லுகிறார். இந்த மதிப்பைப் பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் வாதி இந்த அப்பீலுக்குச் சரியானகோர்ட்பீஸ் ஸ்டாம்பு போட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட அப்பீல்களில் நிலமதிப்பு, டிக்கிரித் தொகையைவிட அதிகமாயிருந்தால் டிக்கிரித் தொகையின்பேரில் கணக்கு செய்து கோர்ட்பீஸ்ஸ்டாம்பு ஒட்டவேண்டும் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

இதன்பேரில் இந்த வியாஜ்ஜியம் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் இவர்கள் கூடின கோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது.

தீர்ப்பு:—டிக்கிரித் தொகை, ஜில்லாக் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரிக்குக் கட்டப்பட்ட, பெந்தக நிலங்களிலிருந்து, வசூலாகாமற்போனால், எவ்வளவு பாக்கிப்படுகிறதோ அதற்கு 6 முதல் 9 பிரதிவாதிகள் வாங்கியிருக்கும் சொத்தின்பேரில் தொடரலாம். அப்படித் தொடரலாமானாலும் 4000க்கு மேல் இந்தச் சொத்துக்களிலிருந்து வசூல் செய்யக்கூடாது. ஏல விற்பனையில் இந்தச் சொத்துக்கள் ரூ. 4000க்கு மேற்போனால் பாக்கியுள்ள தொகையை 6முதல் 9பிரதிவாதிகள் எவ்வளவு தொகைக்கு ஷை நிலத்தை வாங்கினார்களோ, அந்தவிதாசாரப்படி அவர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்து விடவேண்டுமென்று தீர்ப்பு செய்தார்கள். இ. லா. ரி. —30. சென். 96.

புல் பென்ச்:—சீப்ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

ராமசந்திர அய்யர்—வாதி—அப்பீல்வாதி.

V

நூர்ல சாயப்பு—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதிகொடுத்த பட்டாவை பிரதிவாதி ஒப்புக்கொள்ளும்படி செய்யவும், வாரத்திற்காகவும் ரோட்செஸ்ஸிற்காகவும் வாதி பிரதிவாதியிடமிருந்து 1310 பசலிக்காகச் சேரவேண்டிய ரூ. 171-5-10-ம் அதற்கு வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 12 வட்டி மேனிக்குக் கூடுதலான வட்டியும் வசூல் செய்யும்பொருட்டு இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். வியாஜ்ஜியம் சேலம்ஜில்லா கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டில் கொண்டுவரப்பட்டது.

வாதியின் பிரியாதில் அடியிற்கண்ட Relefs ரிலிபுகள் (சகாயங்கள்) கேட்டிருந்தார்:—

"வாதியே அடியிற்கண்ட நிலத்திற்கு சுவான்தார் என்றும், பிரதிவாதி வாதியின்குடி என்று கோர்ட்டார் கூற அதாவது டிக்ளேர்செய்ய கருணைபுரியவேண்டுமென்றும் அத்துடன் (பிராதுடன்) அனுப்பப்பட்டிருக்கும் பட்டாவை ஒப்புக்கொண்டு முச்சிலிக்கை எழுதிக்கொடுக்கும்படியாக டிக்ளேர்செய்யவேண்டும். 1810-ம் பசலிக்குச் சேரவேண்டிய கந்தாயத்திற்காகவும் வட்டிக்காகவும் ரோட்செஸ்ஸிற்காகவும் ரூ. 171-15-10 பிரதிவாதி கொடுக்கும்படியாக உத்தரவு செய்யவேண்டும், இன்னும் என்ன சகாயங்கள் கோர்ட்டாரால் கொடுக்கமுடியுமோ அவைகள் எல்லாம்வாதிக்குக் கொடுக்கும்படி உத்திரவாகவேணும்.

கோர்ட்டாரை டிக்ளேர்செய்யும்படி ஸ்மால்காஸ் வியாஜ்ஜியங்களில் கேட்கக்கூடாது.

டி. மு. கோர்ட்டார் வாதிகொண்டுவந்த கேசைத் தள்ளிவிட்டார்கள். ஜில்லாக்கோர்ட்டார் உறுதிப்படுத்தினார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

பிரதிவாதிகள் ஆக்ஷேபனை:—ரூ. 500-க்குட்பட்ட ஸ்மால்காஸ் நெம்பருக்கு சி. பு. கோ. 596-வது பிரிவின்படி இரண்டாவது அப்பீல் கிடையாது.

புல் பென்சிற்கு அனுப்பிய காரணம்:—

இதேமாதிரி டிக்ளேர்செய்யும்படி பிரார்த்தனையிருந்த ராமநாதன் செட்டி V. அந்தோனி உடையான் கேசில் இரண்டாவது அப்பீலில்லை என்று இந்தக்கோர்ட்டார் முன் ஒருசமயம் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தக்கேசில், பட்டா கிரமமான பட்டாவென்று டிக்ளேர்செய்யும்படியாக வியர்த்தமான பிரார்த்தனை செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. டிக்ளேர்செய்யும்படியான பிரார்த்தனைக்கு வாதி பிரத்தியேகஸ்டாம்பு போடவில்லை. கோர்ட்பீஸ் ஆக்ட் 7-வது பிரிவின்படி போடவேண்டியது அவசியமென்று சொல்லுகிறார். அதுவும் ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. ரூ. 500-க்குள்பட்ட ஸ்மால்காஸ் நம்பருக்கு இரண்டாவது அப்பீல் கிடையாதே அதற்காக இப்படி டிக்ளேர்பண்ணும்படி ஒரு பிரார்த்தனைபோட்டால் இரண்டாவது அப்பீலுக்கிடங்கொடுக்கும் என்று எண்ணி பிரியாதில் வாதி டிக்ளேர்செய்யும்படியான பிரார்த்தனை செய்திருக்கிறார் என்றும் சொல்லமுடியவில்லை. ஆகையால் இந்தக்கேசை புல்பென்ச்சிற்கு ரிபர் செய்கிறோம்.

புல்பென்ச் அபிப்பிராயம்:—இந்தப் பிரியாதி எழுதப்பட்டிருக்கும் விதத்தை நோக்கினால் வாதி கோர்ட்டாரை டிக்ளேர் செய்யும்படியாகச் செய்திருக்கும் பிராத்தனை அவசிய மென்று தெரியவருகிறது. அவர் இப்படி டிக்கிளேர் செய்யும்படியான பிரார்த்தனை செய்யாமற் போனபோதிலும் அவர் டிக்ளேர் செய்யும்படி கேட்டிருக்கும் சகாயங்களெல்லாம் வாதிக்குக் கோர்ட்டார் கொடுத்திருப்பார்கள். ஆகையால் இந்தப் பிரியாதில் டிக்ளேர் செய்யும்படியான பிராத்தனை இருப்பதை முன்னிட்டு இந்த வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ் சுபாவமற்றிருக்கிறதென்று சொல்லமுடியாது. சி. பு. கோ. 586-வது பிரிவில் ரூ. 500-க்குட்பட்ட ஸ்மால்காஸ் வியாஜ்ஜியத்திற்கு இரண்டாவது அப்பீல் கிடையாது என்று சொல்லப்பட்டருக்கிறது. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்திற்கு இரண்டாவது அப்பீல் கிடையாதென்று அபிப்பிராயப்படுகின்றோம்.

இந்த அப்பீல் வியாஜ்ஜியம் மறுபடியும் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் கூடிய கோர்ட்டிற்கு விசாரணைக்குவந்தது. செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.—இ. லா. ரி. 30. சென். 101.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் ரிவிஷன் மனு.

சக்ரவர்த்தியார்:—மனுதார்.

V.

துரைசாமி முதலி—எதிரி.

கேசின்விவரம்.—எதிரி, நாகபட்டணம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளிருக்கும் பேரளத்தில் இ. பி. கோ. 468, 471 பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களைச் செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டான். இந்தக்கேசை திருச்சிறைப்பள்ளி அஸிஸ்டெண்ட் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்தார். அப்போது, குற்றம் பேரளத்தில்நடந்ததாகச் சொல்லப்படுகிறபடியால் இந்தக்கேசை திருச்சிறைப்பள்ளி கோர்ட்டார் விசாரணை செய்யக்கூடாதென்று எதிரி ஆக்ஷேபிக்கவில்லை. கோர்ட்டார் கேசை விசாரணைசெய்து எதிரிக்குத் தண்டனை விதித்தார்கள். தண்டனை அடைந்த எதிரி திருச்சிறைப்பள்ளி செஷன் கோர்ட்டாரிடம் அப்பீல் செய்துகொண்டான். செஷன் கோர்ட்டார் திருச்சிறைப்பள்ளி முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணைசெய்ய அதிகாரமற்றவர் என்று சொல்லி அசல் கோர்ட்டு தண்டனையை ரத்துசெய்து எதிரியை விட்டுவிட்டார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் தரப்பில் பப்ளிக் பிராஸிக்கியூட்டர் ஹைகோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—ஒரு கோர்ட்டார் தங்களுடைய அதிகார எல்லையில் நடக்காத கேசைப்பிடித்து விசாரணைசெய்து பைசல் செய்துவிட்டால், அப்படிச்செய்ததில் அந்தக்கேசின் கக்ஷிக்காரர்களுக்கு யாதொரு நியாயவிரோதமு முண்டாகாமலிருந்தால், இந்தக்கேஸ் அப்பீலுக்கு வரும்போது எங்கே அப்பீல் கோர்ட்டார், அந்தக்கோர்ட்டிற்கு விசாரணைசெய்ய அதிகாரமில்லாததை முன்னிட்டு அதன் தீர்மானத்தை மாற்றிவிடப் போகிறார்களோ என்று எண்ணம் கொண்டு அதைத்தடுக்கும்பொருட்டே கி. பு. கோ. 531-வதுபிரிவில் ஆதாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரியாக இ. லா. ரி. 5. சென். 25. இ. லா. ரி. 26. சென். 640 ஆகிய இந்தக் கேசுகளில் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகையால் செஷன் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்துசெய்து அவர்கள் மறுபடியும் எதிரி செய்துகொண்ட அப்பீலை பயிலில் எடுத்துக்கொண்டு விசாரணைசெய்து பைசல் செய்யும்படி உத்திரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா. ரி. 30 சென். 94.

புல்பெஞ்ச்:—சர் ஆர்னால்ட் வொயிட் சீப்ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கிரிமினல் அப்பீல்.

பக்தவத்ஸல நாயுடு வகையரு:—1, 5, 6, 9 குற்றவாளிகள் மனுதார்கள்.

சக்ரவர்த்தியார்:—பிரிவாதி எதிர் மனுதார்.

ஜாரியான தீர்ப்புகள்.

(1) அப்பீல் கோர்ட்டார் ஒரு குற்றவாளி செய்த பல குற்றங்களுக்காகக் கொடுத்த பலவிதமான ஜெயில் தண்டனைகளை மொத்தம் சேர்த்துப்பார்த்தால் அசல் கோர்ட்டார் கொடுத்த ஜெயில் தண்டனைக்குக் கம்மியா யிருக்கும்போது அப்பீல் கோர்ட்டார் தாங்கள் விதித்த ஜெயில் தண்டனையுடன் அபராத தண்டனையும் சேர்த்து விதிப்பது அசல் கோர்ட்டார் கொடுத்த தண்டனையை உயர்த்தினதாகாது.

(2) அசல் கோர்ட்டார் விதித்த ஒரு மாத ஜெயில் தண்டனையை அப்பீல் கோர்ட்டார் இரண்டுவார தண்டனையாக மாற்றி அதனுடன் கூட அபராதம் விதித்தது சட்டவிரோதமாகமாட்டாது—இ.லா.ரி. 30. சென். 103

N.B.—இந்தக்கேசின் விபரத்தையும் தீர்ப்பையும் நம்முடைய இந்திய சட்ட கெஜட்டில் சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் என்கிற தலைப்பின் கீழ் பிரசுரித்திருக்கிறோம்.

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிட் சர் ஆர்னால் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

சக்ரவர்த்தியார்:—பிரியாதி.

கந்தசாமிக் கவுண்டன் வகையறு:— குற்றவாளிகள்.

கேசின்விவரம்:—குற்றவாளிகள் சேலத்தில் இ. பி. கோ. 379-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் திருட்டுக்குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு செஷன்கோர்ட்டாரால் ஜூரர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்கள் கைதிகள்நிரபராதிகள் என்று அபிப்பிராயம் கூறினார்கள். செஷன் ஜட்ஜி கி. பு. கோ. 307-வது பிரிவின்படி இந்தக்கேசை ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்து அடியிற்கண்ட ஆர்டர் பிறப்பித்தார்.

உத்திரவு:—கைதி நிரபராதி என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்பிராயம் கூறுகிறார்கள். இவர்கள் இவ்வித அபிப்பிராயம் கூறியிருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. கைதி திருடினதை நேராகப்பார்த்ததாக ஒரு சாக்ஷியும் சொல்லவில்லை என்று ஜூரியின் போர்மன் சொல்லுகிறார். இது போதுமான காரணமல்ல வென்று சொல்லுவதில் சந்தேகமில்லை. திருட்டு பட்டப்பகலில் நடத்தப்பட்டிருக்கிறது.

களவாடப்பட்ட சொத்துக்கள் ஒரு நிமிஷத்திற்குள் காணமற் போயிருக்கின்றன. கைதி ஓடிக்கொண்டிருந்ததை ஒருமனிதனுக்கு மேல் பார்த்ததாகச் சாக்ஷியம் ஏற்பட்டிருக்கிறது. அவன் ஓடிக்கொண்டிருக்கையில் பிடிக்கப்பட்டான்; பிடிக்கப்பட்டபோது அவன் வசம் திருட்டுப்போன சொத்துக்களிருந்தன. இதைவிட இன்னும் என்ன சாக்ஷியம் தேவை என்பது என்னால் யூகிக்கமுடியவில்லை. ஜூரர்கள் கூறியிருக்கும் அபிப்பிராயம்புத்திக்குப்பொருந்ாததாயிருக்கிறது. ஆகையால் இந்தக்கேசை ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்யாமலிருக்கமுடியவில்லை. கைதி அடியிற்கண்ட 5 குற்றங்களுக்காக 5 முறை தண்டிக்கப்பட்டதாக ஒப்புக்கொள்ளுகிறான். ஹைகோர்ட்டார் அபிப்பிராயம் கூறும் பரியந்தம் கைதி ரிமாண்டு ஜெயிலில் வைக்கப்படவேண்டும்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயம்:—கடந்த ஜூலை 20உ கைதி கந்தசாமிபிள்ளை பிராஸிகூஷன் தரப்புதல் சாக்ஷியின் கடையிலிருந்து ஒரு ஜோடி அங்கஸ்திரம் திருடிக்கொண்டு ஓடும்போது பிடிக்கப்பட்டான் என்று சாக்ஷி விசாரணையால் புலப்படுகின்றது. கதி தான் குடித்திருந்ததாக டிபன்ஸ் கூறுகிறான். வலோ வேணுமென்று குடித்ததாகச் சொல்லுகிறடியால் அவன் குடித்திருந்தது வாஸ்தவமாயிருந்தாம் அவன் செய்த குற்றத்தைத் தணிக்கமாட்டாது.

ஆகையால் அவன் பேரில் திருட்டுக்குற்றஸ்தாபனைசெய்ய நீங்கள் சிறிதேனும் தாமசிக்கவில்லை.

திற்க, ஜூரர்கள் அப்பிராயம் கூறினவுடன் கைதிான் 5 முறை தண்டனை அடைந்ததை ஒப்புக்கொண்டுளீட் செய்ததாக செஷன் ஜட்ஜி சொல்லுகிறார். கேல் எப்போதும் ஒரு கைதியின்பேரில் குற்றஸ்தாபனைசெய்தபின்பு அவனை முந்திய தண்டனைகளுக்கு பிளீட் செய்யும்படி செஷன் ஜட்ஜி உத்திரவு செய்யவேண்டும். . பு. கோ. 307-வது பிரிவின்படி செஷன் ஜட்ஜி ஹைகார்ட்டிற்கு ரிபர்செய்யும் கேஸில் கைதிமேல் குற்றஸ்தாபனை செய்வதும் அவனைவிடுவிப்பதும் ஹைகோர்ட்டாரைச்சேர்ந்த கடமை. ஆகையால் செஷன் ஜட்ஜி, ஜூரர்கள் அபிப்பிராயம் கூறினவுடன், பழைய தண்டனைக்காக பிளீட் செய்யும்படி கைதியைக்கேட்டது சட்டவிரோதம். இப்போது கைதிமேல் குற்றஸ்தாபனைசெய்துவிட்டபடியால் அவன் பழையதண்டனையை ஒப்புக்கொள்ளுகிறானா இல்லையா என்று சாக்ஷி விசாரணை முதலியவைகள் செய்து தீர்மானம் செய்து அனுப்பும்படியாக கி. பு. கோ. 428-வது பிரிவின்படி உத்திரவுசெய்கிறோம் என்று சொன்னார்கள். இ. லா. ரி. 30. சென். 134.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ஷேக்முகமது ராவுத்தர்—வாதி—அப்பீல்வாதி.

பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி (லிமிடெட்)டினுடைய மானேஜிங் ஏஜண்டுகளாகிய மெசர்ஸ் மாக்கினன் மெக்கன்ஜி. அண்டுகோ—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—முதல்வாதி ரெங்கூனிலிருக்கிறார். அவருடைய ஏஜண்டாகிய 2-வது, 3-வது, வாதிகள் தூத்துக்குடியிலிருக்கிறார்கள். முதல்வாதி 1901-ம்ஃத்தில் பிரதிவாதிகளுக்குச் சொந்தமான "தாரண்டேல்" என்கிற ஸ்டீமரில் ரெங்கூன் துறைமுகத்தில் அரிசிமூட்டைகள் ஏற்றித் தூத்துக்குடியிலிருக்கும் தம்முடைய ஏஜண்டுகளுக்கு அனுப்பினார். ஸ்டீமர் அக்டோபர்மீ 24உ தூத்துக்குடி துறைக்கு வந்துசேர்ந்தது. வந்ததினமுதல் பிரதிவாதிகள் ஸ்டீமரிலிருந்த சரக்குகளை விற்றுக்கொண்டுவந்தார்கள். அப்படி பிரதிவாதிகள் 24உ முதல் சரக்குகளை இறக்கிக்கொண்டு வரும்போது 27உ முதல் மழை ஆரம்பமாகி 30உ வரையில் பெய்துகொண்டிருந்தது. பிரதிவாதிகளும் 24உ சரக்குகள் இறக்க ஆரம்பித்து 30உ வரையில் இறக்கிக்கொண்டிருந்தார்கள். ஆகையால் அரிசிமூட்டைகள் எல்லாம் நனைந்துபோய்விட்டன. பிரதிவாதிகள் இறக்கின பலபேர்களுக்குச் சொந்தமான அரிசிமூட்டைகளில் 1908 அரிசிமூட்டைகள் முழுதிலும் கெட்டுப்போய்விட்டனவென்றும் ஆகாரத்திற்கு உபயோகப்படாதென்றும் தூத்துக்குடி முனிசிபாலிட்டியார் அபிப்பிராயப்பட்டு அவைகளை நாசம்செய்துவிடும்படி உத்தரவுசெய்தார்கள். இப்படி உத்தரவுசெய்யப்பட்ட மூட்டைகளுக்குள் வாதிக்குச் சொந்தமான அரிசிமூட்டைகள் 246.

அந்த 246 மூட்டைகளின் கிரயமாகிய ரூ. 2400-ம் சொச்சமும் தமக்குக் கிடைக்கவேண்டுமென்று வாதி பிரதிவாதிகள்பேரில் திருநெல்வேலி சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல்செய்தார். (O. S. No. 7 of 1901)

சப்கோர்ட்டார் வாதிகொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஜில்லாக்கோர்ட்டில் செய்த அப்பீலும் தள்ளுபடிசெய்யப்பட்டது. ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல்செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் P. R. சுந்தரமய்யர், மிஸ்டர் V. C. சேஷாசாரியார், K. குப்புசாமி அய்யர் அப்பீல் வாதிகளுக்காகவும், மிஸ்டர் ஷாமியர் அப்பீல்பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் தீர்ப்பு.

தாவாவில் சம்பந்தப்பட்ட மூட்டைகள் ஆகாரத்திற் குபயோகப்படாமலிருந்த தென்பதையும் அதனால் முனிசிபாலிட்டியார் அவைகளை நாசம்செய்துவிட்டார்கள் என்பதையும் இருகட்சியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இம்மூட்டைகள் ஸ்டீமரைவிட்டு இறக்கப்பட்டபோதும் கரையில் அடுக்கிவைக்கப்பட்டபோதும் மழையில் நனைந்து கெட்டுப்போயிருக்கின்றன. அந்தமூட்டைகள் வந்திறங்கின தேதிகள் தங்களுக்குத் தெரியமாட்டாதென்றும் ஆதலால் தாங்கள் எடுக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள். மூட்டைகள் ஸ்டீமரைவிட்டு இறக்கப்படும்போதும் அடுக்கிவைக்கப்படும்போதும் ஒரு புத்தியுள்ளமனிதன் எப்படி தன்னுடைய சொந்தசொத்துக்களைப் பாதுகாப்பானோ அதுபோல் அந்தமூட்டகள் மழையில் நனைந்து கெட்டுப்போகாதவண்ணம் அவைகள்பேரில் படுதாக்கள்போட்டு மூட பிரதிவாதிகள் தவறிப்போயிருக்கிறார்கள். ஆகையால் அந்தமூட்டைகள் பிரதிவாதிகளுடைய வேலைக்காரர்களின் அலட்சியத்தால் கெட்டுப்போயிருக்கின்றன. ஆனால் பிரதிவாதிகள் பில்ஆப்லேடிங்கிலிருக்கும் ஷரத்துகளால் அந்த உத்திரவாதத்தினின்று காப்பாற்றப்படுகின்றார்களாவென்று ஆராய்ந்துபார்க்கவேண்டும். பில் ஆப்லேடிங்கில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டு ஷரத்துக்களில் முதல்ஷரத்து சரக்குகளை ஸ்டீமரைவிட்டுக் கரையிலிறக்குவதைக்குறித்துப் பேசவில்லை. இரண்டாவது ஷரத்து அதைக்குறித்துப் பேசியபோதிலும் பிரதிவாதிகள் மூட்டைகளை டெலிவர் செய்யும்பரியந்தம் அவைகளுக்கு ஜவாப்தாரிகளா

யிருக்கவேண்டிய பாத்தியத்திலிருந்து விலக்கவில்லை என்று சொல்லி செலவுதொகையுடன் பிரதிவாதிகள் பேரில் டிக்கிரிகொடுத்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் தீர்ப்பு:—பிரதிவாதிகள் மூட்டைகளை இறக்கும்போதும் கரையில் அடுக்கும் போதும் அலைகள் மழையால் நனைந்துபோகாமலும் கெட்டுப்போகாமலுமிருக்கும்படி உபாயங்கள் செய்யாமற்போனபோதிலும் பில்ஆப்லேடிங்கில் சொல்லப்பட்டிருக்கும்ஷரத்துகள் பிரதிவாதிகளை ஷை மூட்டைகளுக்கு ஜவாப்புதாரிகளாயிருப்பதிலிருந்து விலக்குகின்றன. ஸ்டீமரைவிட்டு சாமான்கள் இறக்கப்பட்டவுடனே பிரதிவாதிகளுக்கு அந்த சரக்குகளுக்காக விருந்த உத்திரவாதம் நீங்கிப்போய்விட்டது. ஆகையால் வாதி செய்துகொண்டிருக்கும் அப்பீலைச் செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்யவேண்டும் என்று தீர்ப்புசொன்னார்.

இருஜட்ஜிகளும் வித்தியாசமான தீர்ப்புகள் சொல்லியபடியால் சி. பு. கோ. 575-வது பிரிவின்படி வேறொருஜட்ஜியின் அபிப்பிராயத்திற்கு அனுப்ப அவர் ஜட்ஜி மிஸ்டர் மில்லர் சொன்ன தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்.

ஆகவே அந்த அப்பீல் செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்யப்பட்டது. 30. சென். 89.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல்.

சுப்பா நாராயண வைத்தியர் வகையரு:—வாதிகள் அப்பீல் வாதிகள்.
ராமசாமி அய்யர் பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாபாயின்ட்:—பிராமிசரி நோட் ஒருவருடைய பேரில் எழுதிக்கொடுத்துவிட்டு, அந்தப் பிராமிசரி நோட்டின்பேரில் அவர் வியாஜ்ஜியம் கொண்டுவந்தபோது அவர் பெயரால்பிராமிசரி நோட்டுஎழுதிக்கொடுக்கப்பட்டதேதவிர உள்ளபடி பிராமிசரி நோட்டிற்குப் பணம் கொடுத்தவர் வேறொருவர் என்று டிபன்ஸ் கூறலாமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—பிரதிவாதி வாதிக்காவது அல்லது வாதியின் உத்திரவு பெற்றவர்களுக்காவது கடனைச்செலுத்துகிறது என்று ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார். வாதி இந்த நோட்டின் பிரகாரம் தமக்குத் தொகை சேரவேண்டுமென்று சொல்லி சேலம் ஜில்லாக்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

பிரதிவாதியின் டிபன்ஸ்:—பிராமிசரி நோட்டில் வாதியின் பெயர் கண்டிருந்த போதிலும் இந்தப்பிராமிசரி நோட்டிற்கு K. என்பவர் பணம் கொடுத்தார் என்றும், அவர்தான் உண்மையில் அந்தப்பிராமிசரிநோட்டிற்குடையவரென்றும் இந்தப் பிராமிசரி நோட்டின்படி சேரவேண்டியதொகையைK. என்பவருக்குச்செலுத்திவிட்டதாகவும் கக்ஷி சொன்னார்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—பிரதிவாதி கூறிய டிபன்சிற்கு சாக்ஷிகள் விடும்படி சொல்லி, விசாரணை செய்து வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடிசெய்து தீர்ப்பு சொன்னார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

இந்த அப்பீல் ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரும், ஜஸ்டிஸ் மிஸ்டர் டேவிசும் கூடிய கோர்ட்டிற்கு விசாரணைக்குவந்தது. பிராமிசரி நோட் வாதியின் பெயரால் பேரிரவலாக எழுதப்பட்டிருக்கிறதென்றும், அதற்குடையவர் வேறொருவர் என்றும்டிபன்ஸ் கூறப் பிரதிவாதிக்குப் பாத்தியமிருக்கிறதா வென்கிற சங்கையும், ஜில்லா ஜட்ஜி இந்த டிபன்சை ருஜுப்படுத்த சாட்சி விடச்சொன்னது நியாயமாவென்கிற சங்கையும் இந்த இரு ஜட்ஜிமார்களாலும் ஆலோசனை செய்யப்பட்டது. ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், அம்மாதிரிடிபன்ஸ் கூற பிரதிவாதிக்குப் பாத்தியமிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டார். மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ், நெகோட்சியபில் இன்ஸ்டிருமெண்டு ஆக்ட்டின்படி அம்மாதிரி டிபன்ஸ் கூறப் பிரதிவாதிக்குப் பாத்தியமில்லை என்று அபிப்பிராயப் பட்டார்.

முடிவில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அபிப்பிராயமே தீர்மானமாகச் சொல்லப்பட்டது. அதாவது, ஜில்லாக்கோர்ட்டாருடைய தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. வாதி லெட்டர்ஸ் பேட்டன்ட் ஆகட் 15-வது பிரிவின்படிஹைகோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார்.

தீர்ப்பு :—நெகோட்சியபில் இன்ஸ்டிருமெண்டு ஆகட் 78-வது பிரிவில் பிராமிசரி நோட் எவன் உடைத்தாயிருக்கிறானோ (Holder) அவனுக்குப் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தவன் பணம் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமிசரி நோட்டை உடைத்தாயிருப்பவன் அதாவது ஆங்கிலத்தில் (Holder) என்கிற பதத்திற்கு ஷை ஆகட் 8-வது பிரிவில் தாத்பரியம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, எவன் பெயராலும் எவன்வசத்திலும் எவன் அந்தப் பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை வாங்கவும் அல்லது வசூல் செய்யவும் பாத்தியமுடையவனோ அவன்தான் பிராமிசரி நோட்டை உடையவன் (Holder) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் சொத்துக்களை வாங்குவதா யிருந்தாலும் சரி, கடன் கொடுப்பதாயிருந்தாலும் சரி வேறொருவர் பெயரால் பேரிரவலாக வாங்குவதும் பத்திரங்களும் பிராமிசரி நோட்டுகளும் எழுதுவது வழக்கமாயிருக்கிறபடியால், பிராமிசரி நோட்டில் கண்ட பெயர்வழியைத் தவிர வேறே யாரேனும் தான்தான் அந்தப் பிராமிசரி நோட்டிற்குச் சொந்தக்காரன் என்று எவன் பெயரால் பிராமிசரி நோட்டு எழுதப்பட்டிருக்கிறதோ அவன் பெயரால் பேரிரவலாக நமோதாவிற்கு எழுதி வாங்கப்பட்டதென்றும் கட்சி சொல்லுவான் என்கிற முன்யோஜனையான கருத்துக்கொண்டே அதைத்தடுக்கும்பொருட்டே நெகோட்சியபில்இன்ஸ்ட்ருமெண்ட் ஆகட்செய்த சட்ட கிரந்த கர்த்தாக்கள் எவன் பிராமிசரி நோட்டை உடைத்தாயிருக்கிறானோ (Holder) அவனிடம் பணம்

செலுத்தவேண்டுமென்று ஷை ஆக்ட் 78-வது பிரிவில் சந்தேகத்திற் கிடம் கொடுக்காமல் வியக்த்தமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். கல்கத்தா வீக்லி நோட்ஸில் (Calcutta Weekly Notes) ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் சாரட் சந்திரதத் V. கிடார் நாததாஸ் கேசில் கல்கத்தா ஹைகோர்ட்டாரும் இ. லா. ரி. 21 சென். 30-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் போஜம்மா V. வெங்கட்ராமய்யா கேசில் சென்னபட்டணம் ஹைகோர்ட்டாரும் எவன் பெயரால் பிராமிசரி நோட்டு எழுதப்பட்டிருக்கிறதோ அவன் பெயரில் பேரிரவலாக எழுதிக்கொக்கப்பட்டதென்றுபிராமிசரி நோட்டுஎழுதிக்கொடுத்தவன் கட்சி சொல்ல பாத்தியமேயில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகையால் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளை ரத்து செய்து எல்லாக்கோர்ட்டுச் செலவுகளுடன் வாதிக்கு டிக்கிரி கொடுக்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா. ரி. 30. சென். 88.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் மிஸ்டர் மிட்டர்.
ஜஸ்டிஸ் மிஸ்டர் காஸ்பரஸ்.

ஜாமீன்பேரில் விடும்படி செய்துகொண்ட மனு.

கேசின் விபரம் :—கீழ் பெங்காளத்தில் ரிஷோர்கன்ஞ்என்கிற ஊருக்குச் சமீபத்திலிருக்கும்செம்படவர்கள் இரு கக்ஷிப்பட்டு சண்டைசெய்ததில் ஒருகக்ஷியைச் சேர்ந்த நாபிபக்ஸ் என்பவன் மற்றொரு கக்ஷியைச் சேர்ந்த ஒருவனுக்குக் கடுங்காயம் விளைவித்திருப்பதாகப் போலீசார் கேள்விப்பட்டு அவனை மேமீ 26௳ கைதி செய்து டாணாவில் கொண்டுவந்து அடைத்து வைத்தார்கள். இதன் பிறகு இரு கட்சியாரும் போலீசாரிடம் கம்பிளெயின்ட் தாக்கல் செய்தார்கள். கைதி செய்யப்பட்ட நாபிபக்ஸ் என்பவன் தன்னை ஜாமீன்பேரில் விடுவிக்கும்படி மைமன்சிங் ஜில்லாமாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்து கொண்டான். அவர் விட்டுவிடும்படி உத்திரவு செய்யவில்லை. இதன் பேரில் செஷன் கோர்ட்டாருக்கு மனுசெய்து கொண்டான். அவர்களுமப்படி உத்திரவு செய்யவில்லை. ஆகவே நாபிபக்ஸ் என்பவன் பாரிஸ்டர்மிஸ்டர் ஜாக்சன் மூலமாகமனு செய்துகொண்டான்.

மிஸ்டர் ஜாக்சன்:—மனுதார் பேரில் சாட்டப்பட்ட குற்றம் ருஜுப்படு முன்னர் மேமீ 26௳ முதல் ஜெயிலில் அடைத்து வைத்திருப்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன்.

காஸ்பிரஸ் ஜ :—ஏதாயினும் மனுதார்பேரில் சாட்சியம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா ?

ஜாக்சன்:—இல்லை.

மிட்டர் ஜட்ஜி:—என்ன காரணத்தைக் கொண்டு கீழ்க்கோர்ட்டார் இப்படி அவனை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று விசாரணை செய்வோமா ?

ஜாக்சன்:—அவனை இன்னும்ஜெயிலில் அடைத்து வைத்திருப்பதை ஆக்ஷேபிக்கிறேன்.

மிட்டர் ஜ:—ஜாமீன் எவ்வளவு தொகைக்குக் கொடுக்க முடியும் ?

ஜாக்சன் :—மாஜிஸ்டிரேட் எவ்வளவு சொல்லுகிறாரோ ? இருந்த போதிலும் இத்தனை காலம் அவனை விசாரணைக்குக் கொண்டு வராமல் ஜெயிலில் அடைத்து வைத்திருப்பது அக்கிரமம்.

மிட்டர், ஜ :—அது வாஸ்தவந்தான். நானும் அப்படியே அபிப்பிராயப்படுகிறேன். சில காலத்திற்கு முந்தி கல்கத்தாவில் நடந்த பேர்போன கொலைக்கேசில் சம்பந்தப்பட்ட ஜோகர்மல்லை நான் ஜாமீன்பேரில் விட்டது உமக்குத் தெரியுமல்லவா ?

ஜாக்சன்:—ஆம். அந்தக்கேஸ் கடைசியில் என்னமாய் முடிந்தது ? ஜோகர்மல் விடுதலை அடைந்தான்.

மிட்டர், ஜ :—இதில் என்ன ஆச்சரியமென்றால், நான் ஜோகர் மல்லை ஜாமீன்பேரில் விட்டவுடன், குற்றவாளிக்குப் பெரும்பாலும்ஜாமீன்பேரில் விடும்படி ஜட்ஜிகளுக்கும் மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் உத்திரவு செய்யும்படி ஆலோசனை சபையிலுள்ள இந்தியா செக்ரெட்டரி ஒரு சர்க்கியுலர் அனுப்பியிருந்தார். குற்றம் ருஜுப்படுமென்பதற்குப் பலமான காரணங்க ளிருக்கிற தென்று பிரதமத்திலேயே தெரிந்தாலொழிய குற்றம் சாட்டப் பட்டவனை எப்போதும் ஜாமீன்பேரில் விடவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

மனுதாரை ஜாமீன் பேரில் விடும்படி உத்திரவு செய்யப்பட்டது.

அலகபாத் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பானர்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்க்மான்.

நாராயணதாஸ்—டிக்கிரிக் கடனாளி.

V.

திருலோக்நிலாரி—டிக்கிரி பெற்றவர்.

லா பாயின்ட்:—பெண்சாதி, புருஷனைவிட்டுப் பிரிந்து விபசாரம் செய்து சம்பாதித்த சொத்திற்குப் புருஷன் வார்சாக வரக்கூடுமா ?

கேசின் விபரம்:—திரிலாக்திலாரி என்பவருடைய பெண்சாதியாகிய செமத்சமுந்திரகார் என்பவர் 15,16 வருஷங்களுக்கு முந்தி புருஷனை விட்டுப்பிரிந்துபோய் விபசாரம் செய்து சில சொத்துக்கள் சம்பாதித்து மேலேகூறியிருக்கும் டிக்கிரி கடனாளிக்குக் கடன் கொடுத்து அவன்பேரில் டிக்கிரியும் பெற்று இறந்து போய்விட்டாள். இவள் இறந்துபோன பிறகு அவளுடைய சொந்த புருஷன், தான் அவளுக்கு வார்சு என்று சொல்லி டிக்கிரியை நிறைவேற்ற ராஸ்ரா டி. மு. கோர்ட்டில் மனு கொடுத்தான்.

டிக்கிரி கடனாளியின் ஆக்ஷேபணை:—டிக்கிரி பெற்றவள் 15,16, வருஷங்களுக்கு முந்தி புருஷனை விட்டுப் பிரிந்து விபசாரம்செய்துவந்தது, புருஷனுக்கும்பெண்சாதிக்குமுள்ள விவாக பந்தத்துவத்தை விலக்கிவிட்ட

தென்றும் ஆகையால் புருஷன் விபசாரியாய்ப் போன பெண்சாதிக்கு இந்து லா பிரகாரம் வார்சாகமாட்டான் என்றும் ஆக்ஷேபணை சொன்னார்.

டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பு:—டிக்கிரிக்கடனாளி சொன்ன ஆக்ஷேபணையை ஏற்றுக்கொண்டு டிக்கிரியை நிறைவேற்றக் கூடாதென்று சொல்லி விட்டார்கள். இந்த உத்திரவிற்கு விரோதமாகப் புருஷன் ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—புருஷன் வார்சாக வர பாத்தியதை யிருக்கிறதென்று தீர்மானித்து டிக்கிரியை நிறைவேற்றும்படி உத்திரவு செய்தார்கள்.

ஆகவே டிக்கிரி கடனாளிஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—புருஷன் ஹிந்து. மெய்ன் ஹிந்துலா 878 வது பக்கத்தில், ஒரு பெண்சாதி பதிவிரதா தர்மத்தில் குறைவுபட்டு ஜாதிப் பிரஷ்டையாவது, அவளுக்கு அவளுடைய பெற்றோர் குடும்பத்திலிருக்கும் உறவையும் புருஷனுடைய குடும்பத்திலிருக்கும் உறவையும் பிரித்து விடுகின்றது. இப்படிப்பட்ட விபசாரிப் பெண்சாதி சொத்து வைத்துவிட்டு இறந்துபோனால் அவளைப்போல ஜாதிப் பிரஷ்டையானவர்கள் அந்த சொத்திற்குப் பாத்தியம் கொண்டாடவேணும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி பாஷியகாரர்கள் எவரும் சொல்லவில்லை என்றும், தாம் கல்கத்தா ஹைகோர்ட்டார் காமினி மணிபீவா (இ. லா. ரி. 21 கல். 697) கேஸின் தீர்மானத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு சொல்வதாகவும் எழுதியிருக்கிறார்; இந்தக்கொள்கை உசிதமானதா அல்லவா என்று மிஸ்டர் மெயின் தம்முடைய சொந்த அபிப்பிராயம் யாதொன்றும் கூறவில்லை.

காமினி மணிபீவா கேசில், கல்கத்தா ஹைகோர்ட்டார், ஒருவன் பெண்சாதி விபசார தோஷத்தால் ஜாதிப் பிரஷ்டையாவது அவளுக்கும் அவளுடைய பெற்றோர் புருஷன் குடும்பத்திற்குமுள்ள பந்தத்துவத்தை நீக்கி விடுகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இந்தக்கோர்ட்டார் இப்படித் தீர்மானித்திருப்பதற்கு ஹிந்துலாவில் யாதொரு ஆதாரமும் கூறவில்லை. 1846-ம் ௵த்திய 4-வது செலக்ட் கமிட்டி ரிப்போர்ட் 273-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் தாராமுனிதோசியோ V. மொட்டி புனியா கேசையும், சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்த இரண்டு கேசுகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு அப்படி கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட சென்னபட்டணம் ஹைகோர்ட் கேசுகளிலும் முனிதோசியோ V மொட்டிபுனியா கேசிலும் கோர்ட்டார் எந்த விஷயத்தைக்குறித்து ஆலோசனை செய்தார்கள் என்றால், விபசாரத்தால் ஜாதி பிரஷ்டையான ஸ்திரீக்கு வார்சாக வரக்கூடியவர்கள் அவளைப்போல கெட்டுப்போனவர்களா அல்லது யோக்கியதையுடனிருப்பவர்களா என்பதே. ஜாதிப் பிரஷ்டையானவளுக்கு வார்சாக வரக்கூடியவர்கள் அவளைப்போல கெட்டுப் போனவர்களுக்குத்தான் அதிக பாத்தியதையிருக்கிறதென்று தீர்மானித்தார்கள். தாராமுனி தோசியா, V. மொட்டி புனியா கேசில் பண்டிதர்கள், ஜாதிப்பிரஷ்டையான தாயாருடைய சொத்திற்கு கௌரவம் பொருந்திய விவாகமான புத்திரிக்குப் பாத்தியதையில்லை என்று அபிப்பிராயம் கூறினார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போது நம்மிடம் வந்திருக்கும் கேசைப்போல ஒரு கேஸ் சென்னபட்டணம் ஹைகோர்ட்டாருக்கு வந்தது. அதாவது சுப்பராய பிள்ளை V. ராமசாமிபிள்ளை கேஸ். இந்தக் கேசில் விபசாரியாய்ப்போனவளுடைய சொத்திற்கு அவளுடைய சக்களத்தி புத்திரனுக்குப் பாத்தியதையிருக்கிறதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். எப்போது விபசாரியாய்ப் போனவளுக்கு அவளுடைய சக்களத்தி புத்திரன் வார்சாகலாமென்று தீர்மானித்திருக்கிறார்களோ அப்போது அவளுடைய புருஷனும் வார்சாகலாம். மேலேகூறப்பட்ட சென்னபட்டணம் ஹைகோர்ட்டு கேசில் ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம், ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் ஆகிய இருவரும், ஒருவன் பெண்சாதி விபசாரம் செய்வது அவளுக்கும் அவளுடைய புருஷனுக்குமிருக்கும் சட்டசம்பந்தமான பந்தத்துவத்தை நீக்கிவிடமாட்டாதென்று சொல்லி, விபசாரியாய்ப்போன ஒரு மாற்றாந்தாய்க்கு மாற்றாந்தாய்ப் புத்திரன் வார்சாக வரலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். வடமேற்கு மாகாண ஹைகோர்ட்டார் பிஷகர் V. மட்டாகுலாம் கேசில் ஒரு புருஷன் விபசாரம் செய்து ஜாதிப் பிரஷ்டம் செய்யப்படுவது சட்டப்படியுள்ள அவனுடைய விவாகபந்தத்துவத்தை நீக்கிவிட மாட்டாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. அல. 46-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற முசபட் கஞ்சா ஜட்டி V. காஷ்டியா கேசில் புல் பென்சார் ஒரு ஸ்திரீ விபசாரியாகப் போய்விட்டதனால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட ஸ்திரீதனத்திற்கும் அவளுக்கும் பாத்தியமில்லை என்று சொல்லமுடியாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

மிதக்ஷர சட்டப்படி விபசாரியாயிருக்கும் ஒரு பெண்சாதி வார்சுக்கிரமத்தில் புருஷனுடைய சொத்தை அடையக்கூடாதென்பது உண்மையே. ஒரு ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த பெண்சாதி விபசாரியாகப்போனபோதிலும் அவள் ஹிந்து மதபிரஷ்டையானவளாகமாட்டாள். ஆகையால் அவளுடைய வார்சு பாத்தியதைகள் எப்போதும்போல ஹிந்து வார்சு சட்டத்தினால் (Hindu Law of succession) பரிபாலிக்கப்படவேண்டும். பிரஸ்தாபக்கேசில் விபசாரியாய்ப் போய் இறந்து போன பெண்சாதிக்குப் புருஷனைத்தவிர நெருங்கிய பாத்தியஸ்தர்களில்லை. ஆகையால் புருஷனே சட்டப்படி வார்சாக வர பாத்தியமுடையவராயிருக்கிறார் என்று சொல்லி அப்பீலைச்செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். இ. லா. ரி. 29. அன். 4.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

இந்தியன் பினல் கோட்.

ஒரு தேவஸ்தானத்தில் பணிவிடை செய்துகொண்டு வந்த ஒரு தாசி ஒரு மைனர் பெண்ணை ஷை தேவஸ்தானம் மானேஜரிடம் அழைத்து வந்து, இவள் தன்னுடைய குமாரத்தி என்றுபொய் சொல்லி இவளைத் தனக்குப் பதிலாகவைத்துக்கொள்ளவேண்டுமென்றும், பிரஸ்தாப தேவஸ்தானத்தில்தனக்குள்ள சொத்துமிராசை இப்பெண்பெயரில்செய்துவைக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டனள். மானேஜர் இதற்குச் சம்மதித்து அப்பெண்ணின் பெயரை தேவஸ்தான சம்பளப் பட்வாடா ரிஜிஸ்டரில் தாக்கல் செய்துகொள்ள அப்பெண்ணும் தேவஸ்தானத்தில் பணிவிடையும் செய்துகொண்டு வந்தனள். ஆனால் இப்பெண்ணிற்கு இன்னும் பொட்டு மட்டிலும் கட்டவில்லை. இருந்த போதிலும் ஷை தாசி, தேவஸ்தான மானேஜர், பெண்ணை தாசிக்கு விற்ற பெற்றோர்கள் ஆகிய எல்லோரும் இ. பி. கொ. 372 வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விபசாரம் செய்வதற்காக ஒருபெண்ணை விற்பனைசெய்த குற்றம் ஸ்தாபிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள். இ. லா. ரி. 15. சென். 41.

---

13 வயதுடைய ஒரு புருஷன் புஷ்பவதி யாகாதவும் 11 வருஷம் மூன்று மாதவயதுள்ளவளுமான தன்னுடையபெண்சாதியுடன் ஒருநாள் புணர்ந்தான். இவன் புணர்ந்ததால் அவளுடைய அந்தரங்கபாகம் உடைந்து போய் உதிரம் கட்டி இறந்துபோய் விட்டாள். புருஷன் பெண்ணுடன் பலவந்தப் புணர்ச்சிசெய்ததால் அவள் வேதனை பொறுக்காமல் இறந்துபோய் விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டான். இறந்துபோன பெண்ணின் அந்தரங்க பாகத்தில் வேதனைக்குறிகளொன்றையும் காணோம் என்று டாக்டர்கள் சாக்ஷியம் சொன்னார்கள். ஆகையால் அவள் இறந்துபோனதற்குக் காரணம் குற்றவாளி செய்த பலவந்தப் புணர்ச்சியல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 1. வீக்கிலி ரிப்போர்ட்டர். 29.

புஷ்பவதியாகாத பெண்சாதியுடன் புருஷன் பலவந்தப் புணர்ச்சி செய்தால், போலீசார் அவனை வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாது. கோர்ட்டார் அவனுக்கு சம்மன் பிறப்பிக்க வேண்டும். ஒருக்கால் வாரண்டு பிறப்பித்தால் ஜாமீன் வாங்கும்படியான வாரண்டு பிறப்பிக்கவேண்டும். இந்தக்கேசை கக்ஷிக்காரர்கள் சமாதானம் செய்துகொள்ள முடியாது. இந்தக் கேசை செஷன் கோர்ட்டார் விசாரணை செய்துதான் குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும்.

ஒருஸ்திரீ ஒருமனுஷனுடைய பீஜத்தைப்பிடித்துக் கொடூரமாய்ப் பிசைந்து நசுக்க அவன் இறந்து போய் விட்டான். இந்தக் குற்றத்திற்காக இவள் பேரில் கொலைக்குற்றம் சாட்டி விசாரணை செய்யப்பட்டதில் தண்டனை அடைந்தாள். இவள் சென்னபட்டணம்ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ள, ஜட்ஜி மிஸ்டர் டேவிஸ், பீஜத்தைப் பிசைந்தால்மரணம் நேரிடுமென்று கைதிக்குத் தெரியாதென்றும், ஆதலால் அவன் இறந்து போனதற்கு அவள் ஜவாப்புதாரி யல்லவென்றும் இ. பி. கோ. 323 வதுபிரிவில்சொல்லப்பட்டிருக்கும்வேணுமென்று காயம் விளைவித்த சாமானியக் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டு தண்டிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார். ஜட்ஜி மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரும், ஜட்ஜி மிஸ்டர் பென்சனும் பீஜத்தைக் கடுமையாகப்பிசைந்தால் மனிதன் இறந்துபோவான் என்று கைதிக்குத் தெரியாத விஷயமல்லவென்றுசொல்லி அவள் பேரில் இ. பி. கோ. 304-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கொலையாகாத அநியாயமரணம் விளைவித்த குற்றம்ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 19. சென். 356.

சிவில் புரொசீஜர் கோட்.

ஒரு டிக்கிரி கடனாளி சி. பு. கோ. 330-வது பிரிவின்படி வாரண்டில் பிடிக்கப்பட்டான். அவனை எந்த சமயம் கோர்ட்டார் ஆஜர்படுத்தும்படி உத்திரவு செய்கிறார்களோ அச்சமயம் ஆஜர்படுத்துவதாக ஒருவன் ஜாமீன் கொடுக்க, அந்தக்கடனாளி விடுவிக்கப்பட்டான். கடனாளி உடனே இன்சால்வெண்டு பெற மனு கொடுத்தான். டிக்கிரி பெற்றவன் அதாவது கடனாளியை வாரண்டில் பிடித்தவன் ஷை டிக்கிரித்தொகையை ஜாமீன் கொடுத்தவனிடமிருந்து வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். ஜாமீன் பத்திரத்தில் கடனாளி இன்சால்வெண்டு பெற்றுக் கொள்ள மனு கொடுக்காமலிருப்பதற்கு ஜாமீன் கொடுத்தவன்ஜவாப்புதாரியா யிருக்கவேண்டுமென்று சொல்லப்படாமலிருப்பதால் டிக்கிரி பெற்றவன் ஜாமீன் கொடுத்தவனிடமிருந்து டிக்ரிக்கடனை வசூல் செய்ய முடியாதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 1906-ம் ௵த்திய சிவில் ரிவிஷன் மனு நெ. 178.

ஒருவர்த்தக கம்பெனியார் இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ள மனுகொடுத்தார்கள். இவர்கள், கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் மனுசெய்துகொண்டிருப்பதாகக்கடன்காரர்கள் ஆக்ஷேபித்தார்கள். கோர்ட்டார் கணக்குப் புஸ்தகங்களைக் கொண்டுவந்து காண்பிக்கும்படியாக இன்சால்வெண்டு மனு கொடுத்தவர்களுக்கு உத்திரவு செய்ய அவர்கள் தங்களுடைய கணக்குப் புஸ்தகங்கள் மழையில் நனைந்து அழிந்து போய்விட்டனவென்று டிபன்ஸ் கூறினார்கள். மனுதார்கள் கடன்காரர்களை மோசம் செய்வதற்காகவே கணக்குப் புஸ்தகங்களை நாசம் செய்திருப்பதாக எண்ணவேண்டுமென்று சொல்லி இன்சால்வெண்டு பெற்றுக்கொள்ளக் கொடுத்திருந்த மனுவைத் தள்ளிவிடவேண்டுமென்று அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

கண்டிராக்ட் ஆக்ட்.

வாதி, 1902-ம் ளு ஏப்ரல்மீ 1வ முதல் 1903-ம் ளு மார்ச்சுமீ 31வ வரையில் ஒரு ரோடின் டோல் கேட்டை கண்டிராக்ட் எடுத்திருந்தார். ரோடு மிகுந்த கெடுதலான நிலைமையிலிருக்கிறதென்றும் அதனால் இந்த ரோடுவழியாக வண்டிகள் விடுகிறதில்லை என்றும் தாம் நஷ்டமடைந்து வருகிறதாகவும் ஆகவே கண்டிராக்ட் உடன்படிக்கைப்படி தாம் லோக்கல்பண்டிற்குக் கட்டவேண்டிய தொகையில் சிறிதுதள்ளும்படியும் வாதி மனு செய்துகொண்டார்.

இந்த மனுவை கண்டிராக்ட்டின்படி காம்பென்சேஷன் பெறுவதற்காக வாதி மனு செய்திருப்பதாய் லோக்கல்பண்டு பிரசிடெண்டு எண்ணி இந்த மனுவைக் குறித்து விசாரணைசெய்து வாதிக்கு காம்பென்சேஷன் கொடுத்திருக்க வேண்டும். இதன் பிறகு பிரஸ்தாப ரோடை ரிப்பேர் செய்யும்பொருட்டு லோக்கல் பண்டு பிரசிடெண்டு கண்டிராக்ட்டருடைய சம்மதமின்றி செப்டம்பர்மீ முதல் அக்டோபர்மீ கடைசி வரையில் ரோட்டை அடைத்துவைத்திருந்தார்.

பிரசிடெண்டு கண்டிராக்ட்டரின் சம்மதமின்றி ரோடை மூடினது கண்டிராக்ட் எகிரிமெண்டில் சொல்லப்பட்டிருக்கும் ஷரத்திற்கு விரோதமென்றும் ஆகையால் கண்டிராக்ட்டருக்கு நேரிட்ட கஷ்டத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் நஷ்டம் எவ்வளவு கட்டிக்கொடுக்கவேண்டுமென்றால், ரோடை மூடிவைத்திருந்த காலத்தில் கண்டிராக்ட்டருக்கு என்ன வருமானம் வந்திருக்குமோ அவ்வளவு நஷ்டம் கட்டிக்கொடுக்கவேண்டுமென்றும் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 1904-ம் ளுத்திய 84-ம் நெ. அப்பீல்.

இந்தியன் சாக்ஷி சட்டம்.

பெந்தகம் வாங்கிக்கொண்ட ஒருவன் பெந்தகப் பத்திரத்தின்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தான். இந்தப்பத்திரத்தில் ஒரே ஒரு சாட்சி கையெழுத்துப் போடப்பட்டிருந்தது. வாதி அந்த ஒரே சாட்சியைக் கோர்ட்டில் ஆஜர்படுத்தி பெந்தகம் வைத்தவன் பெந்தகப்பத்திரம் எழுதிக்கொடுத்ததை ருஜுப்படுத்தவில்லை. இருந்தபோதிலும் கீழ்க்கோர்ட்டார்கள். அந்தப் பத்திரத்தை சாட்சியாக தாக்கல் செய்துகொண்டு வியாஜ்ஜியத்தை முடிவுசெய்தார்கள்.

அப்பீலில் வாதி எப்போது சாட்சியைக்கொண்டு பத்திரத்தை ருஜுப்படுத்தவில்லையோ அப்போது கீழ்க்கோர்ட்டார் பத்திரத்தை சாட்சியமாக தாக்கல்செய்து கொண்டிருக்கக்கூடாது என்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 1904-ம் ளுத்திய இரண்டாவது அப்பீல் நெ. 142.

கார்ட்டியன் வார்ட்டுச் சட்டம்.

ஒருவன் இறந்துபோகும்போது தன்னுடைய சொத்துக்களுக்கு சில எக்சிக்கியூட்டர்கள் நியமித்து, தன்னுடைய பேரப்பிள்ளைக்கு வயதுவந்தவுடன் அவன் சொத்துக்களை ஒப்புவிக்கும்படி ஏற்பாடு செய்தான். இந்த எக்சிக்கியூட்டர்களில் ஒருவன், மற்ற எக்சிக்கியூட்டர்களை விலக்கும்படியாக சிலகாரணங்கள் காட்டி கார்ட்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்ட்டின்படி மனுசெய்துகொண்டான்.

1890-ம் ளுத்திய கார்ட்டியன் அண்டு வார்ட்சாக்ட்டின்படி ஒருஎக்சிக்கியூட்டர் கார்ட்டியனாகமாட்டான். ஆகையால் இந்த ஆக்ட்டின்படி அந்த எக்சிக்கியூட்டரை நீக்கமுடியாது. எக்சிக்கியூட்டருக்கு அந்தசொத்தில் ஒப்புவிக்கப்பட்ட பாத்தியதையிருக்கிறது. கார்ட்டியனுக்கு அப்படியில்லை.

ஹிந்து லா.

ஒரு ஹிந்து தகப்பன் தன்னுடைய பணத்தை X என்பவனிடம் வட்டிக்குப் போட்டிருந்தான். தகப்பனிறந்துபோய்விட்டான், இவனுடைய பாகம் பிரியாத புத்திரன் X என்பவனைப் பணம்கேட்டான். வார்சு சர்டிபிகேட் (Succession Certificate) டு வாங்கிக் காண்பித்தால் பணம் கொடுப்பதாய்ச் சொன்னான்.

புத்திரன் வார்சு சர்ட்டிபிக்கேட் வாங்கவேண்டியதில்லையென்றும், தகப்பனுக்குப் பின் புத்திரன் ஜீவித்திருப்பதாலேயே தகப்பனுடைய சொத்திற்குப் புத்திரனுக்கு பாத்தியமுண்டாயிருக்கிறதென்றும் X என்பவன் புத்திரனிடமிருந்து யாதொரு வார்சு சர்டிபிகேட் கேட்காமலே பணத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டவனென்றும் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 1906-ம் ளுத்திய சிவில்மிசிலேனியஸ் அப்பீல் நெ. 62.

ஹிந்து லா.

சாஜ்மல் என்பவர் ராஜபுதனத்தில் போஸ்ட் மாஸ்டர் உத்தியோகத்திலிருந்து இறந்துபோய்விட்டார். அவர் சேவிங்ஸ் பாங்கியில் ரூ. 1996 போட்டிருந்தார். இதுவன்றி சம்பள பாக்கியில் ரூ. 244-ம் வரவேண்டியதாயிருந்தது. அவருடைய விதவை முசம்டமல்லி வார்சு சர்டிபிகேட் பெறுவதற்காக கோர்ட்டில் மனு செய்துகொண்டாள். அவருடைய சகோதரர்களில் ஒருவர் விதவைக்கு வார்சு சர்டிபிகேட் கொடுக்கக்கூடாதென்று ஆக்ஷேபித்தார். ஆக்ராநகர் சப் கோர்ட்டார் குடும்பம் ஒன்று சேர்ந்த ஹிந்து குடும்பமாயிருந்தபோதிலும் ஷை பணங்கள் புருஷனுடைய சுயார்ஜ்ஜிதமானபடியால் விதவைதான் அவைகளுக்குப் பாத்தியப்பட்டவள் என்று தீர்மானித்து விதவைக்கு வார்சு சர்டிபிகேட் கொடுத்தார்கள்.

அப்பீலில் ஜில்லாக்கோர்ட்டார் சப் கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தினதில், விதவை ஷை பணங்களிலிருந்து செலவு செய்தால் சகோதரர்களுக்குக் கணக்கு சொல்லக் கட்டுப்பட்டவள்என்று அவளிடமிருந்து ஜாமீன் வாங்கும்படி உத்திரவு செய்தார்கள். இரண்டாவது அப்பீலில் விதவையிடமிருந்து ஜாமீன்வாங்கும்படி ஜில்லாக்கோர்ட்டார் உத்திரவுசெய்தது பிசகு என்றும், புருஷனுடைய சுயார்ஜ்ஜிதத்திற்கு விதவைவார்சென்றும் அவளை ஜாமீன் கொடுக்கும்படி உத்திரவு செய்ய ஜில்லா ஜட்ஜிக்கு இந்த வியாஜ்ஜியத்தில் அதிகாரமில்லை என்றும் அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (1906ம் ளுத்திய S. A. நெ. 11.)

டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட்.

ஒரு குடி (Tenant) ஒரு நிலக்காரனு (Landlord) டைய நிலத்தைக்குத்தகைக்கு எடுத்துக்கொள்வதாக நிலக்காரனுக்குக் குத்தகைப்பத்திரம் எழுதிக் கொடுத்தான்.

டிரான்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் பிரகாரம் பரிபாலிக்கப்படும் குத்தகைகள் சம்பந்தமாய் ஏற்படும்குத்தகைப்பத்திரங்கள் நிலக்காரனால் குடிக்கு எழுதிக் கொடுக்கப்படவேண்டு மென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் .தீர்மானித்திருக்கிறார்கள். 1906-ம் ளுத்திய சிவில் மிசிலேனியஸ் அப்பீல் நெ. 68.

மகமடன் லா.

முகமதியசட்டத்தின் பிரகாரம் ஒரு தானம் எப்போதுபூர்த்தியாகுமென்றால்,தானம்செய்யப்பட்ட சொத்து எவனுக்கு தானம் செய்யப்பட்டதோ அவனுடைய வசத்திற்கு வந்துவிட வேண்டுமென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு முகம்மதிய தாயார் தன்னுடைய புத்திரிக்கு ஒரு வீடு தானம் செய்தாள். புத்திரி அந்த வீட்டில் குடியிருந்து வருகிறாள். சிலகாலம் சென்றபின்பு தாயாரும் அந்தவீட்டில் சென்று புத்திரியுடன் வசித்துவந்தாள். இருவருக்கும் விவாதமுண்டாயிற்று. தானம்கொடுத்தவீட்டில் மறுபடியும் தாயார் போய் குடியிருந்தது தானத்தை ஊனப்படுத்த மாட்டாதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியன் பினல் கோட்.

சுவாதீன அடமானம் வைக்கப்பட்ட சொத்தை அடமானம் பெற்றுக்கொண்டவன் அடமானம் வைத்தவனிடத்திலேயே விட்டு வைத்திருந்தபோது, அடமானம் வைத்தவன் அதற்காக சர்க்காருக்குச் சேரவேண்டிய கிஸ்தியைச் செலுத்தாமல் அதைச் சர்க்கார் ஏலம் போடும்படி விட்டு அதைத் தனக்காக வேறொருவர்பேரில் ஏலத்தில் வாங்குவது இ. பி. கோ. 405-வது பிரிவின்படி நம்பிக்கை மோசக்குற்றமாகுமென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

அடகு வாங்கின நகையை அடகு வைப்பது நம்பிக்கை மோசக்குற்றமாகும். ஆனால் இப்படி அடகு வைத்தவன் பேரில் நம்பிக்கை மோசக்குற்றம் ஸ்தாபிக்கவேண்டுமானால் இரண்டு விஷயங்கள் ருஜுப்படுத்தவேண்டும். (1) குறிப்பாகவோ வெளிப்படையாக வோ இருவரும் செய்துகொண்ட கண்டிராக்ட்டுக்கு விரோதமாகவாவது அல்லது கண்டிராக்ட் ஆக்ட்டிற்கு விரோதமாக வாவது அடகு வைத்திருக்கிறான் என்று ருஜுப்படுத்தவேண்டும். (2) அயோக்கியமான எண்ணத்துடன் அடகு வைத்திருப்பதாகவும் ருஜுப்படுத்த வேண்டும். சென்னபட்டணம் ஹைகோர்ட்டு ரிப்போர்ட் 6-வது வால்யும் 28-பக்கம்.

கூட்டுவியாபார பாகஸ்தர்களுடைய பொதுவான அனுபோகத்திலிருக்கும் ஒரு சொத்தை ஒரு பாகஸ்தன் விற்று சொந்த உபயோகப்படுத்திக்கொண்டால் அது நம்பிக்கை மோசக்குற்றமாகும்.

பாங்கிக்காரர்கள் பாங்கிக் கணக்கு வழக்குகளைப் பார்த்ததில் லாபமில்லையென்று தெரியவந்தபோது டிபாசிட்டர்களுடைய பணத்தை எடுத்து பாங்கிஷேர் ஹோல்டர்களுக்கு லாபம் பங்கிட்டுக் கொடுப்பது நம்பிக்கை மோசக்குற்றமாகுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. 16. அல. 88.

MADRAS POLICE DEPARTMENTAL ORDERS.

சென்னபட்டணம் போலீஸ் டிபார்ட்மெண்ட்டல் உத்திரவுகள்.

M. P. D. O. No. 19.

வெளி வேலையில் (Outdoor duties) அமர்ந்திருக்கும் போலீஸ் ஆபீசர்கள் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்கு வைத்திருக்கும் வண்டிகளுக்கும் குதிரை முதலிய பிராணிகளுக்கும் தங்களுடைய அதிகாரங்களுக்கும் முனிசிபல் ஆக்ட் 78-வது பிரிவு நான்காவது கிளாசின் பிரகாரம் முனிசிபல் வரிசெலுத்தவேண்டியதில்லை.

M. P. D. O. No. 20.

அடியிற்கண்ட போலீஸ் ஆபீசர்கள் தந்தி ஆபீசுக்கு ரொக்கம் அனுப்பாமல் தந்தி இலாக்காகாரர்களை, போலீஸ் இலாக்காபேரில் பத்து எழுதிக் கொள்ளும்படி சொல்லி தந்தி சமாசாரங்கள் அனுப்பலாம்.

1. போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் ஜெனரல்.
2. ஷை யாருடைய பெர்சனல் அசிஸ்டன்ட்.
3. கிரிமினல் இன்டெலிஜன்ஸ் டிபார்ட்மெண்டினுடையவும் ரெயில்வே இலாக்காவுடைய டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல்.
4. ஷை யார்களுடைய பெர்சனல் அசிஸ்டென்ட்.

இப்படி அனுப்பப்படும் தந்திகளில் அந்தந்த ஆபீசருடைய கையெழுத்துகளுக்குக் கீழ் அவர்களுடைய உத்தியோகங்களின் பெயரும் போடப்பட்டிருக்க வேண்டும்.

M. P. D. O. No. 1.

(1) துறைமுகக் கொடிமரத்தில் அபாயக்கொடி பறந்தால், சமுத்திரக்கரையில் பந்தோபஸ்திலிருக்கும்படியாக இரண்டு மௌன்டட் ஆர்டர்ளிகளையும் 50 கான்ஸ்டேபில்களையும் உடனே டிப்டி போர்ட் கன்சர்வேட்டரிடம் போலீஸ் கமிஷனர் அனுப்பவேண்டும்.

(2) சமுத்திரப்போலீஸ் இன்ஸ்பெக்ட்டர்ஸ்டீமர் சேதமடைந்திருப்பதாக ஸ்டீமரில் பிறக்கும் கொடியால் அறிந்து கொண்டாலும் சரி, அல்லது ஸ்டீமருக்கு அபாயம் உடனே நேரிடப் போகிறதென்று போர்ட் டிப்டி கன்ஸர்வேட்டர் மூலியமாய் அறிந்துகொண்டாலும் சரி அவர் உடனே போலீஸ் டிப்டி கமிஷனருக்கு அறிவிக்கவேண்டும். இவர் உடனே ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கும் போலீசாரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும்.

(3) போலீஸ் டிப்ட்டி கமிஷனர் துறைமுகத்திற்கு வரும்வரையில் போலீஸ்படை போர்ட் டிப்டி கன்ஸர்வேட்டருடைய அதிகாரத்தின்கீழிருக்கவேண்டும். போலீஸ் டிப்ட்டி கமிஷனர்வந்து போர்ட் டிப்டி கன்ஸர்வேட்டருடன் யோஜனைசெய்து எந்த விடங்களில் தம்முடைய ஆள்களின் ஊழியம் தேவையாகவிருக்கிறதோ அந்தந்தவிடங்களுக்கு அனுப்பவேண்டும்.

4. போலீசார்களுக்குப்பந்தோபஸ்து வேலையும், ஸ்டீமர் உடைந்து போனதால் அலைமோதிக் கொண்டு கரையில் தள்ளும் சாமான்களைப் பாதுகாக்கும் வேலையும் ஊனப்பட்ட பிரயாணிகளைத் தூக்கிக்கொண்டு வந்து பந்தலில் சேர்ப்பதையும் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதையும் மானேஜ்மெண்டு செய்யும் வேலையும் ஆகிய இம்மாதிரி வேலைகள் கொடுக்கப்பட வேண்டுமே யொழிய நோயாளிகளின் தொட்டில்களையும், டோலிகளையும், வண்டிகளையும், கயிற்றை இழுக்கும் வேலையும் முழுகிக் கொண்டிருக்கும் சாமான்களை மீட்கும் வேலையும் கொடுக்கக்கூடாது. இந்த வேலைகளுக்கு ஆள்கள் அகப்படாத அவசர சமயத்தில் இந்த வேலைகளும் கொடுக்கலாம்.

5. எல்லா ஆபீசர்களும் கான்ஸ்டேபில்களும் யூனிபாரத்துடனிருக்க வேண்டும்.

சத்கதாரத்நாவளி.

(116-ம் பக்கத்தொடர்.)

வீர:—ரசீதோ கிசீதோ! அந்தப் பீடையெல்லாம் இங்காருக்குவேண்டும்? நீ என்முன் எறிந்துவிட்டுப்போனதை நான் எடுக்கவேயில்லை. எப்பவோ போனசங்கதியை இப்பவந்து கேட்கிறையே!

சட:—அட பாவீ! என்ன இப்படிப்பேசுகிருயே! அதற்கு நான் ரூபாய் கட்டியிருக்க என்னிடம் ரசீது கொடுக்கவேண்டாமா?

வீர:—யார் வேண்டாமென்றது? நான் பலதரமும் உன்னிடம் ரசீதிருக்கட்டுமென்று சொல்லியும் கேளாமல் நீதானே என்முன் எறிந்துவிட்டுப்போனாய்? அதற்கு யாரென்னசெய்வது? எனக்கு அதன்மேல் பிரியமில்லாததனால் நான் எடுத்துவைக்கவில்லை.

சட:—வீரபத்திரா! என் வயிறெறியச் செய்யாதே! ஏதோ உன்னை உண்மைச் சினேகனென்று நம்பி ரசீதைக்கொடுத்துச் சென்றேன். உன் காலில்வேண்டுமானாலும் விழுகின்றேன். அதைத் தயவுசெய்து கொடுத்துவிடு.

வீர:—அடே, உனக்கென்ன பயித்தியமோ! இருந்தாலல்லவா கொடுப்பதற்கு? அது எனக்கென்னத்திற்கு? தலையிற் கிழித்துப் போட்டுக்கொள்ளவா? நீ எழுந்துபோ: எனக்குத் தூக்கம்வருது.

சட:—ஆனால் கொடுக்கமாட்டையோ?

வீர:—இல்லையென்றால் எழுந்துபோ!

சட:—அப்படியா? அந்தக்காகிதத்தால் உனக்கென்னத்திற்கு?

வீர:—உனக்குமட்டு மென்னத்திற்கு?

சட:—நீ இப்போதிந்தக் கேள்வியெல்லாம் கேட்கவேண்டியதுதான் ஏனென்றால், என்கைராசி அப்படிப்பட்டது! உன்னை நோகவேண்டுவதில்லை. படவாகாலமாயிற்றே இது!

வீர:—கற்றதெல்லாம் பேசாதே! வேண்டுமானால் உன் ஒரு ரூபாயைப் பெற்றுக்கொள் என்றெழுந்து கையிற் சாவியை யெடுத்துப் பெட்டியைத் திறக்கச் சென்றான்.

சடகோபன் சடக்கென்றெழுந்து ரூபா வேண்டாமென்று பரபரப்பாய்த் தன் வீடுநோக்கி நடந்தான்.

இனி இவர்களைவிட்டு, அநந்தராமன் எவ்வாறிருக்கின்றானென்பதைச் சென்று காண்போம்.

இப்போது அநந்தராமன் சுவாதீன சித்தத்தோடு கூடத்திலுட்கார்ந்துகொண்டு அடியில் வருமாறு சிந்திக்கலாயினான். "நம்முடைய தெய்வம் நமக்குக்கொடுத்த வாக்குத்தப்பாது. தெய்வத்துக்கு தெரியாத ரகஸ்யமுமுண்டா? நம்முடைய நம்பருக்கும் வீரபத்திரனென்பவனுடைய நம்பருக்கும் ஒரு எண்தானே வித்தியாசப்படுகிறது. நம்முடைய எண் ஆயிரத்துக்கு முன்னூற்றுத் தொண்ணூறு. அவனுடையது ஆயிரத்து முன்னூற்று எண்பத்தொன்பதா யிருப்பதால், இப்பிழை பத்திரிகைக்காரலால் நேர்ந்துமிருக்கலாம். எண் பிரண்டதுபோலவே பெயரும் பிரண்டிருக்கக்கூடும். ஆகவே நாம் இதனைத் தெரிந்துகொள்ளாதிருப்பது பிசகென்று தந்தியாபீசுக்குப்போய் 'நான் 1890-வது டிக்கெட் நெம்பருக்கும் பணங்கட்டிச் சேர்ந்துள்ளேன். எனது குலத்தெய்வத்தின் உத்திரவுப்படி எனக்கு முதற்பிரைஸ் வரவேண்டும். அதுவிஷயமாக இதுவரையில் யாதொரு சங்கதியும் தெரியாமையால் உடனே பதில்' என்று கல்கத்தாவுக்கு டெலிகிராம் கொடுத்தான்.—*Replied by Telegram*—The God that you worship is not a true one, therefore your number is **blank.** அதாவது,—* நீ தொழுந்தெய்வம் உண்மையானதல்ல; ஆகவே உன்னுடைய டிக்கெட் நெம்பர் பிளாங்க் என்று உடனே கல்கத்தாவினின்றும் பதில் தந்திவந்தது. அதைத் தபாற்சேவகன் அநந்தராமனிடம் கொண்டுவந்து கொடுத்தான். ஐயர் அதனை அவசரமாய் வாங்கிப்பிரித்து வாசித்துக்கொண்டிருக்கையிலேயே அவன்கண்கள் சுழலமிட்டன. முகம் வெளுத்தது. சக்கரமெனச்சுழன்று தலைதூணில் மோதப்பட்டு ஓவென் றலறிக்கொண்டே கீழேவிழுந்தான். அவன் தலையில் இரண்டிடங்களில் பலத்த காயங்கள்பட்டன. வாயினின்றும் சிறிதுசிறிதாக நுரைநீரெழுந்தொழுகியது. அவனுடையமனைவி அருகில்வந்து கணவனைப்பார்த்து "லாட்ரியோ லாட்ரி" என்று உரத்துக் கூச்சலிட்டு, 'வேண்டும் வேண்டும்; என்னை விருதாவி லடித்துக்கொன்ற பயனைப் புசித்தாயா? எனக்குத் திக்கில்லாமற்போனாலும் தெய்வங் கூடவா என் பங்கி லில்லாமற்போகும்? என நகைத்தாள். பின்னர் அநந்தராமனுக்குப் பொருட் பயித்தியம் பிடித்து எந்நேரமும் அதே சிந்தையாய்ப் பேசுவதும், எழுதுவதும், வீதிவீதியாய்த் திரிவதுமாகி வேளைக்கு அன்னாகாரமின்றிப் பெருந்துயருழந்தான். இனி இப்பேராசைக்காரன் கதி எப்படியேனு மாகட்டும். நாம் இவனைவிட்டுச் சடகோபனிருக்குமிடஞ் செல்வோம்.

(இன்னும் வரும்.)

---

* "Covetousness brings nothing home." "Man proposes, God disposes."

" Rai Bahadur P. ANANDA CHARLU, B.L., C.I.E."

" ராய் பகதூர் - P. அனந்தாசார்லு, B. L., C. I. E."

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ணு அண்டு கோ.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ளு ஜுலைமீ [7 பாகம்.

அடக்கம்.

பக்கம்.

1. உருவப்படம்:—ராய்பகதூர் P. அனந்தாசார்லு அவர்கள், பி. யல்., சி. ஐ. இ.
2. வக்கீல்களும் மாஜிஸ்டிரேட்டுகளும் 225
3. பத்திராசிரியர் குறிப்புகள் 226
4. ராய்பகதூர் P. அனந்தாசார்லு B. L., C. I. E. அவர்களுடைய ஜநநதசைச் சரித்திரம் ... 227
5. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் 233
6. கோர்ட்டு சமாசாரங்கள் 245, 249
7. இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலிருக்கும் கேஸ்கள் 246
8. கிராம பீட் ஏற்பாட்டை ரத்துசெய்தல் 249
9. ஹிந்து லா விவாகம் (தொடர்ச்சி) 253
10. பலதேச வர்த்தமானம் 255

நிரந்தரமான

கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்தனுப்புவோர்க்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனைவருடம் ஆதரித்துவருகிறார்களோ அத்தனைவருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்றயாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால், வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்டஞானம்நிறைந்த இந்த கெஜெட்விஷயமாகப் பெருமுயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானால் பென்ஷனைப்போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100-சந்தாதாரர்களை ஒருவர் சேர்ப்பாரானல் வருடமொன்றுக்கு 40 - ரூபாய் சம்பாத்தியமுடையவராவார்கள்.

இந்திய சட்ட கெஜெட் விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 25 கையொப்பங்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கும் கனதனவான்களுக்கும் ரூ. 10-மணியார்டர்செய்து அனுப்பத்தயாராயிருக்கின்றோம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்ப போஸ்ட் கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கித் தபால் ஸ்டாம்பு ஒட்டாமலே நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார், மானேஜர்கள்

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,

37, நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, ஜியார்ஜ் டௌன்,

சென்னை.

விஞ்ஞாபனம்.

(1) நாம் சென்றமீ சட்ட கெஜெட்டில் வைத்தனுப்பிய கார்ட்டில் கையெழுத்து செய்து அனுப்பியிருக்கும் சந்தாதாரர்களுக்கு மனமார வந்தனமளிக்கின்றோம். பாக்கியுள்ள சந்தாதாரர்களும் கையெழுத்துசெய்து கூடியசீக்கிரம் அனுப்பி நம்முடைய கெஜெட்டை ஆதரிக்கும்படியாக மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(2) 1906-ம் ஞு ஆகஸ்ட்டுமீ த்தில் இந்திய சட்ட கெஜெட்டிற்குக் கையொப்பக்காரர்களாய்ச் சேர்ந்தவர்களும் அதற்குப்பின்பு சேர்ந்து ஆகஸ்ட்டுமீ முதல் கணக்கு வைத்துக்கொள்ளும்படிசெய்து ஆகஸ்ட்டுமீ கெஜெட்டு ஆரம்பமாக கெஜெட்டுகளைப்பெற்றுக்கொண்டிருப்பவர்கள் மட்டிலும் அதாவது 1906-ம் ஞுமும் ஆகஸ்ட்டுமீ ஆரம்பமாக கெஜெட்டுகள் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் மட்டிலும் கார்டில் கையெழுத்துசெய்து அனுப்பவேண்டுமே தவிர மற்ற சந்தாதாரர்கள் கையெழுத்து செய்து அனுப்பவேண்டியதில்லை. இவர்கள் சந்தாசெலுத்தும் வாயிதா சமயத்தில் இவர்களுக்கும் கைக்கெடியாரமும் சட்டபுத்தகமும் இனம் கொடுக்கப்படும்.

(3) இன்னும் சில சந்தாதாரர்கள் கையெழுத்து செய்து அனுப்பாததால் இம்மாத கெஜெட்டிலும் அதாவது இந்த கெஜெட்டிலும் கார்டுகள் வைத்து அனுப்பியிருக்கிறோம். இதுவரையில் கையெழுத்து செய்து அனுப்பாதவர்கள் மட்டிலும் கையெழுத்து செய்து தபால் ஸ்டாம்பு ஒட்டி தபாலாபீசில் போட்டுவிடவேண்டும்.

(4) மேன்மைதங்கிய கனவான்களே! இந்திய சட்ட கெஜெட்டு பல தேசங்களிலும் பல ஊர்களிலும் நடக்கும் கேசின் விபரங்களை எடுத்துக்கூறி உங்களுடைய் குடும்பத்திலுள்ள விவகாரங்களை நீங்களே தீர்த்துக்கொள்ளும்படியான உபாயங்களைச்சொல்லும் ஆப்த்தமித்திரனு யிருக்கிறபடியால் இந்த ஆப்ததமித்திரனை உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு போஷித்து வருவதை நீங்கள் உங்களுடைய கடமையாக எண்ண வேண்டுமென்றும் மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எடிடர்.

DIEU ET MON DROIT
HONI SOIT QUI MAL Y PENSE

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ஞு ஜூலைமீ [பாகம் 7.

Vakils and Magistrates.

வக்கீல்களும் வெளிஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளும்.

இரண்டாவது மூன்றாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் கேஸ்களை விசாரணை செய்து வரும்போது அவர்களும், இந்தக்கேசுகளில் ஆஜராகும் வக்கீல்களும் அடிக்கடி ஒருவருக்கொருவர் கடுமையாகப் பேசிக்கொண்டு சச்சரவு செய்துகொள்வதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். இந்தத் துர்வழக்கம் சில சுதேச டிப்டடி மாஜிஸ்டிரேட்டுகளுடைய கோர்ட்டுகளிலு மிருந்துவருகின்றது. எதைப்பற்றி சச்சரவு செய்து கொள்ளுகிறார்கள் என்றால், வக்கீல்கள் கேட்கும் கேள்வி அவசியமானதா (Relevant) அல்லவா என்பதைப்பற்றியே. வக்கீல் சாக்ஷிக்குக் கேள்விமேல் கேள்வி போட்டுக்கொண்டு வருகிறார். சாக்ஷி அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஜவாப்பு சொல்லிக்கொண்டு வருகின்றான். தாம் கேட்ட கேள்விகளையும் சாக்ஷி சொன்ன ஜவாப்புகளையும் வக்கீல் ரிக்கார்டு செய்துகொள்ள கடமைப்பட்டவரல்ல. இன்னும் சொல்லப்போனால் கக்ஷிக்காரர்கள் தமக்கு விசேஷமாய்ச் சேரவேண்டுமென்கிற கருத்துக்கொண்டும் கீர்த்தி சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்கிற கருத்துக்கொண்டும் வேணுமென்றே அனேக கேள்விகள் கேட்க விரும்புவார். மாஜிஸ்டிரேட்டிற்கு இது இஷ்டப்படாதவிஷயம். இவர் ஒவ்வொருகேள்வியையும் அதன் ஜவாப்பையும் ரிக்கார்ட்டுசெய்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. இது இவருக்குமிகுந்த சிரமமான வேலையா யிருக்கிறது. ஆகவே இவர் எப்போதும் கேசை சீக்கிரம் முடித்துவிடுகிறதில் திருஷ்டியா யிருக்கிறார். வக்கீல் கேட்கும் கேள்வியையும் ஜவாப்பையும் மாஜிஸ்டிரேட் தாக்கல் செய்துகொண்டு வருகிறார். திடீரென்று எழுதுவதை நிறுத்திப் பேனாவைக் கீழே வைத்துவிட்டுச் சும்மாவிருக்கின்றார். அப்போதுதான் சண்டை ஆரம்பிக்கிறது! வக்கீல் கேள்வியையும் ஜவாப்பையும் தாக்கல் செய்து கொள்ளும்படியாக மாஜிஸ்டிரேட்டிற்குச் சொல்லுகிறார். மாஜிஸ்டிரேட் இந்தக்கேள்வி அனாவசியமென்று சொல்லுகிறார். இப்படி அநேக நிமிஷநேரம் வரையில் இருவரும் வாதம் செய்கிறார்கள். இந்த வாதம் இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட் என்கிற இந்திய சாக்ஷி சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவைப்பார்த்துத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாகவுமில்லை. சில மாஜிஸ்டிரேட்டுகள் எப்படியாவது வக்கீலுக்கு நல்ல வார்த்தை சொல்லி சமாதானம் செய்துகொள்ளப்பார்க்கிறார்கள். சில வக்கீல்கள் அதற்குச் சம்மதித்து இணங்கிப் போகிறார்கள். சில வக்கீல்கள் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று கேள்வியும் ஜவாப்பும் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறார்கள். இப்படிப் பிடிவாதப்படுத்தியும் மாஜிஸ்டிரேட் தாக்கல் செய்ய இஷ்டப்படாமற்போய்விட்டால் கேள்வியைமட்டிலும் எழுதிக் "கோர்ட்டார் இந்தக் கேள்வியைக்கேட்க அனுமதி கொடுக்கவில்லை" என்று ரிக்கார்ட் செய்யும்படியாக மாஜிஸ்டிரேட்டிற்குச் சொல்லுகிறார்கள். பெரும்பாலான மாஜிஸ்டிரேட்டுகள் இப்படி ரிக்கார்ட் செய்தால் ஒருக்கால் அப்பீல் கோர்ட்டிலிருந்து தங்களுக்கு ரிமார்க்கு வருமோ என்று அஞ்சியும் அப்படி ரிக்கார்டு செ

ய்ய உடன்படாமல், மறுபடியும் வக்கீல் இஷ்டப்படி கேள்வியையும் ஜவாப்பையும் தாக்கல்செய்துகொள்ளுகிறார்கள். இப்படி அடிக்கடி ஒரு கேசில் மாஜிஸ்டிரேட்டிற்கும் வக்கீலுக்கும் வாதமுண்டாவது மாஜிஸ்டிரேட்டினுடைய வேலைக்குப் பெருந்தொந்திரவாயிருந்துகொண்டிருக்கிறது. வக்கீல் கேட்கும் ஒவ்வொரு கேள்வியையும் அதனுடைய ஜவாப்பையும் மாஜிஸ்டிரேட் தாக்கல்செய்தே தீரவேண்டுமென்றும் அப்படி தாக்கல் செய்யாவிட்டால் அந்தக் கேள்வியை எழுதி "இந்தக் கேள்வி கேட்க அனுமதிகொடுக்கப்படவில்லை" என்று எண்டார்ஸ்மெண்டு செய்யவேண்டுமென்பதற்குச் சட்ட ஆதாரமிருக்கிறதாகத் தெரியவில்லை. சிவில் கோர்ட்டு நடவடிக்கைகளுக்காக சிவில் புரொசிஜர் கோடில் இம்மாதிரி ஆதாரமிருந்த போதிலும் கிரிமினல் புரொசிஜர்கோடிலில்லை என்பது திண்ணம். ஆதாரமான ஹைகோர்ட்டு ஜாரியான தீர்ப்பு மிருக்கிறதாகவும் தெரியவில்லை. வாதம் செய்து கொள்ளும் வக்கீல்களும் மாஜிஸ்டிரேட்டுகளும் உள்ளபடியே விரோதிகளாகப் போய்விடுகிறார்கள். ஒரு வக்கீல் மாஜிஸ்டிரேட்டிற்காகாதவர் என்று வெளிப்பட்டால் கக்ஷிக்காரர்கள் அவரிடம் வரமாட்டார்கள். அவருடைய வருவானம் குறைவடைகின்றது. வக்கீல் கேட்கும் கேள்விகள் எல்லாம் ஒன்று தப்பாமல் யெழுதுவதாயிருந்தாலும் அது மாஜிஸ்டிரேட்டிற்கு ஓயாத் தொந்தரவான வேலையாகத்தானிருக்கும். ஆகவே சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் தோன்றுநிற்கும் இத்துர்வழக்கத்தை ஒழிக்க ஒரு உபாயம் செய்யவேண்டும். அதற்கு நமக்குத்தெரிந்த வரையில் நாம் ஒரு உபாயம் சொல்ல விரும்புகின்றோம். அஃதென்னவென்றால், மாஜிஸ்டிரேட் எந்தக்கேள்வி கேட்க வக்கீலுக்கு அனுமதிகொடுக்கவில்லையோ அந்தக் கேள்வியை வக்கீல் எழுதி இதைக் கேட்க கோர்ட்டார் அனுமதி கொடுக்கவில்லை. என்று அந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்தால் அந்தக்கேஸ் அப்பீலுக்குப் போகக் கூடியதாயிருந்தால் அப்பீல் கோர்ட்டிற்கு தஸ்தாவேஜ் கட்டுகள் போகும்போது வக்கீலுடைய ஸ்டேட்டுமெண்டும் அப்போது அப்பீல் கோர்ட்டார் பார்வையிட்டு அதற்குத்தகுந்தபடி வுத்தரவு செய்வார்கள். வக்கீல் தாக்கல் செய்யும் ஸ்டேட்மெண்டை மாஜிஸ்டிரேட் பயில் செய்து கொள்ளும்படியும் கிரிமினல் புரொசிஜர் கோடில் ஒரு ஆதாரம் உண்டு பண்ணலாம். ஆகவே, கிரிமினல் கோர்ட்டில் காணப்படும் சீர்கேட்டை கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரம் சீர்திருத்த வேண்டுமென்று மிகவணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஆர்ம்ஸ் ஆக்ட்.

ஆலோசனைசபையிலுள்ள புதுச்சேரி கவர்னர் இந்தியாவில் பிரன்ச் இலாக்காவில் ஊர்ச்சிதத்திலிருக்கும்பொருட்டு ஒரு ஆயுதச்சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் இப்போது சிலகாலமாக ஜனங்களுக்குண்டாயிருக்கும் மனப்பதைப்பைப் பார்த்துப் பிரன்சு அரசாங்கத்தாரும் கவலைகொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஹைகோர்ட்டு கிரிமினல் சேஷன்ஸ்.

சென்ன பட்டணம் ஹைகோர்ட்டு கிரிமினல் செஷன்ஸ் விசாரணை அடுத்த ஆகஸ்ட்டு௴ 19௳ ஆரம்பமாகின்றது.

சர் ஜியார்ஜ் அர்பத்நட்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட் ரிமாண்டு ஜெயிலிலிருக்கிறார். இவர் தமது தரப்பில் அர்பத்நட் பாங்கியின் கணக்குகளைப் பரிசோதனை செய்து ரிப்போர்ட் செய்யும்படியாகக் கல்கத்தாவிலிருந்து சார்ட்டர்ட் அக்கவுண்டண்டைத் தருவித்திருக்கிறார். இவர் ஷை கணக்குகளை ஷை அக்கவுண்டன்ட் பரிசோதனை செய்யும்போது தாமுமிருக்க வேண்டுமென்று அவருடைய சொலிசிட்டர் சர் என்றிகிங் மூலியமாகக் கேட்டுக்கொள்ள அப்படியே இவர் ஜெயிலிலிருந்து பாராவுடன் பிரதிதினம் அர்பத்நட் பாங்கிக்கு கொண்டுவரப்படலாமென்று இன்சால்வெண்டு கமிஷனர் உத்திரவு செய்திருக்கிறார்.

ஒரு போஸ்டுமாஸ்டர்.

திருநெல்வேலி ஜில்லா மதுரைக்குளம் கிராமப் போஸ்டுமாஸ்டர் மணியார்டர் செய்யும்படியாகக் கொடுக்கப்பட்ட ரூ. 150 மோசஞ்செய்து சொந்த உபயோகப்படுத்திக்கொண்டதற்காக இப்போது சே[illegible] மாதேவி சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

பிரியாது.

காக்கிநாடாவில் சர்ஜன் கேம்பால் அடிக்கப்பட்ட கோப்பாளி கிருஷ்ணராவ் என்கிற பையன் அவர்கள் பேரில் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் முன்னிலையில் பிரியாது தாக்கல் செய்திருக்கிறான்.

சென்னை நகர் போலீஸ் கமிஷனர் உத்தரவு.

போலீஸ் கான்ஸ்டேபில்களின் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறபடியால் இனிமேல் இவர்கள் ஜட்கா வண்டிக்காரர்களையும் சிறிய கடைக்காரர்களையும் இ[illegible]சித்து லஞ்சம் வாங்கும்வழக்கத்தை விட்டொழிக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவும் பிறப்பித்திருக்கிறார்.

சிவில் தாவா.

காக்கிநாடாவில் சர்ஜன் கேம்பால் அடிக்கப்பட்ட பையனின் தகப்பன் ஷை பையனுக்கு வயித்திய செய்த வகையில் ரூ. 200 செலவழிந்த நஷ்டத்தை பெறுவதற்காக டாக்ட்டர் கேம்பின் பேரில் சிவில் வியாஜ்ஜியம் தொடுத்திருக்கிறார்.

காக்கிநாடா கலகக்காரர்கள்.

காக்கிநாடாவில் கலகஞ்செய்து ஐரோப்பியர் கி[illegible]ப்பைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கு[illegible] சிலரை மாஜிஸ்டிரேட்டார் ஜாமீன்பேரில் விடும்ப[illegible] உத்தரவு செய்யவில்லை. இவர்கள் பாரிஸ்டர் டாக்ட[illegible] சாமிநாதனையும், பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்னையு[illegible] வைத்து ஹைகோர்ட்டில் கோடைகால ரஜா ஜட்[illegible] மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்களிடம் ம[illegible]

செய்துகொள்ள ஜாமீன்பேரில் விடும்படி உத்தரவு செய்யப்பட்டது.

உறங்கும் நோய்.

இந்தநோய் ஜப்பான்தேசத்திலிருந்து கல்கத்தாவிற்கு வந்திருக்கிறது. சிலதினங்களுக்குமுன் கல்கத்தாவிலிருக்கும் ஒரு ஜப்பான்தேச ஸ்திரீக்கு கண்டதாம். ஒரு இரவு உறங்கப் படுத்துக்கொண்டவள் 28 நாள் வரையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்காமல் உறங்கிக்கொண்டிருந்தனள். இவளுக்கு ஆகாரத்தைச் சலமாகச்செய்து நாசியின்வழியாகச் செலுத்தப்பட்டதாம். 28-ம்நாள் இறந்துபோய்விட்டாள். அந்தநோய் தீண்டப்பட்டவர்களை டாக்டர்கள் சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தமுடியவில்லை என்பதாகத் தெரியவருகின்றது.

கவர்னரைச் சுட எத்தனித்தது.

சீனு தேசத்திலுள்ள ஆண்டாய் என்னும் மாகாணத்தின் கவர்னர் கொடுமையாய் ஆக்ஷி செலுத்தி வருகிறார். ஆகையால் நிகழ்௴ 7௳ அவர் சைனியங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருக்கும்போது அவரைக் கொன்றுவிடவேண்டுமென்கிற எண்ணத்தால் அவர்பேரில் பாம் என்கிற வெடியைப் போட்டதாகவும் அது அவர்பேரில் படாமல் வேறு மூன்று பேர்கள்பேரில்பட்டு அம்மூவரையும் கொன்றுவிட்டதாகவும் லண்டனிலிருந்து தந்தி சமாசாரம் வந்திருக்கிறது.

அரசர்.

பிக்கானியர் சமஸ்தானாதிபதி இப்போது இங்கிலாண்டிலிருக்கிறார். நிகழ்௴ 8௳ பிரின்ஸ் ஆப் வேல்ஸ் இளவரசர் இளவரசியுடன் விருந்துசாப்பிட்டார்.

ஒரு நூதன உத்தரவு.

ரெயில்வே ஸ்டேஷன்களில் பழம் முதலிய சாமான்கள் விற்பவர்கள் நல்ல சாமான்கள் விற்கவேண்டுமென்றும் ஊர்களில் என்ன விலைக்கு விற்கப்படுகின்றனவோ அதேவிலைக்கு ரயில்வே ஸ்டேஷன்களிலும் விற்கப்படவேண்டுமென்றும் தென் இந்தியா ரெயில்வே ஏஜண்டு உத்தரவு செய்திருக்கிறார். ஹிந்து ரிபரஷ்மெண்டு ரூம்களிலும் சாப்பாடுகளும் அப்படியே போடப்பட்டு வரவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார். விற்பனை செய்கிறவர்கள் ரயில்வே டிபார்ட்டுமெண்டாருக்குக் கட்டவேண்டிய கட்டணங்களையும் குறைத்துவிடும்படி உத்திரவு செய்திருக்கிறார்.

மரணம்.

கார்வட்நகர் ராஜாவாகிய ராஜா திருமல் ராஜா பகதூர் அவர்கள் நிகழ்௴ 20௳ கார்வட் நகரத்தில் இறந்து போய்விட்டார். வயது 25. இரண்டு குமாரர்களும், ஒரு பெண் குழந்தையுமிருக்கிறார்கள்.

Rai Bahadur
P. ANANDA CHARLU, B. L., C. I. E.
ராயபகதூர்
பி. அனந்தாசார்லு பி. யல். சி. ஐ. இ.

நிகழ்௴ நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கும் உருவப்படம், ராயபகதூர் P. அனந்தாசார்லு B. L., C. I. E. அவர்களுடையது. இவர் சென்னைமாநகர் ஹைகோர்ட்டில் சிறந்து பொலிவுற்று விளங்கிவரும் வக்கீல்களில் ஒருவர். இவர் தம்முடைய வக்கீல் தொழிலில் பிரசித்தியடைந்து கீர்த்திபெற்றிருப்பதுமன்றிப் பொதுஜனங்களுடன் கலந்து தேச நன்மைக்காகவும் பாடுபட்டு வருகிறவர். இவரைப் பார்க்காதவும் இவருடைய பிரதாபத்தைக் கேட்காதவுமான நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டு சந்தாதாரர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு இவருடைய உருவப்படத்தையும் இந்த கெஜெட்டில் பிரசுரஞ்செய்து இவருடைய ஜீவதசைச் சரித்திரத்தையும் தெரிந்தமட்டில் எழுதப்புகுந்தனம். இவ்வுலகத்தில் மனிதர்கள் சர்வேசுவரனால் எந்த நிலைமையில் எந்த அந்தஸ்த்தில் வைக்கப்பட்டிருக்கிறார்களோ அந்நிலைமையையும் அந்தஸ்த்தையும் மறைக்காமல் உள்ளபடி வெளிப்படுத்திக் காண்பித்து ஒழுகுவார்களேயானால் அவர்கள் உலகத்தார்களால் மதிக்கப்படுவார்களென்றும் அவர்கள் எப்படியும் முதன்மை பெறுவார்கள் என்றும் இந்த கனவானுடைய ஜீவதசைச் சரித்திரம் போதிக்கின்றது. ஆகையால் இவருடைய சரித்திரத்தை வாசித்து அறிந்துகொண்டிருப்பது மிகவும் நலமா யிருக்குமென்று எண்ணுகின்றோம். ராயபகதூர் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவின் சுதேசி என்று சொல்லவேண்டும். ஏனெனில், இவர் பெற்றோர்களும் அவர்களுக்கு முன்னுள்ள பெரியோர்களும் இவருடைய குடும்பத்தார்கள் அனேக ஆண்டுகளாகச் செங்கற்பட்டு ஜில்லாவிலேயே வசித்துவந்தார்கள். ஆனால் ஜீவன ஆதாரமான தொழில் நிமித்தமாக இவருடைய தகப்பனார் வடஆற்காடு ஜில்லாவில் குடிவழி வசித்து வந்தார். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடைய தகப்பனார் வடஆற்காடு ஜில்லா சிவில் செஷன்ஸ் கோர்ட்டில் (Civil and Sessions Court) உத்தரவாதமுடைய ஒரு உத்தியோகத்திலிருந்தார். இவருக்குச் சம்பளம் ரூ. 45. அந்தக்காலத்தில் ரூ. 45 சம்பளம் இந்தக்காலத்தில் 450-க்குச் சமானமாகும். ஏனெனில், இப்போது ஒரு ரூபாய்க்கு எவ்வளவு சாமான்கள் வாங்கக்கூடுமோ அதைவிட பத்துமடங்கு அதிகமான சாமான்கள் வாங்கலாம். என்பது அகனிலைகள் தெரிந்தவர்களின் கருத்தாகும். தகப்பனார் வடஆற்காடு ஜில்லாவில் உத்தியோகம் பார்த்துவரும்போது நம்முடைய ராயபகதூர் அனந்தாசார்லு அவர்கள் பிறந்தனர். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் வடஆற்காடு ஜில்லாவில் அப்போது தெலுங்கு பாஷை வழங்கிவந்தபடியால் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் தெலுங்குபாஷையைக் கற்றுக்கொண்டு

12-வது வயதிலேயே பாண்டித்யம் அடைந்துவிட்டார். தென்ஜில்லாக்கள் முழுதிலும் அப்போது மகாராஷ்டிர பாஷை சர்க்கார் பாஷையாக வழங்கிவந்தபடியால் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் அப்பாஷையும் சிறிது கற்றறிந்துகொண்டனர். நம்முடைய சார்லு அவர்கள் ஆங்கிலேய பாஷையிலும் பயின்றனராயினும் மேற்கூறிய இரு பாஷையிலும் அடைந்திருந்த தேர்ச்சி இப்பாஷையில் அடையவில்லை. ஏனெனில், இப்போது நான்காவது ஸ்டாண்டர்டிற்குப் பாடமாயிருக்கும் (Mayor Spelling Book) என்கிற பெயருடைய எழுத்துக்கூட்டும் புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தார். இப்படியிருக்குந்தறுவாயில் அதாவது அவருடைய 12-வது வயதில் அவருடைய பிதாவை இழக்கும்படி நேரிட்டது. இவருடைய தகப்பனுர் ரூ. 45-சம்பளமுள்ள உத்தியோகத்தில் நீண்டகாலம் அமர்ந்திருந்தபோதிலும் பெரிய குடும்பத்தை ஆதரித்துவந்தபடியால் யாதொரு சொத்தும் சேகரித்துவைப்பதற்கு இயலாமற்போய்விட்டது. ஆகவே மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் 12-வது வயதில் நிராதரவான நிலைமையிலிருந்தார். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே கதி என்பதற்கிணங்க கடவுள் இவரைக் கைவிட்டுவிடவில்லை. மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடைய தகப்பனுர் புத்திரனுக்கு யாதொரு சொத்தும் சேகரித்துவைக்காமற் போனபோதிலும், இப்போது சென்னைமாநகர் சிட்டி சிவில் கோர்ட்டில் ஜட்ஜியாயிருந்து சிறந்து விளங்கிவரும் மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியாரின் பாட்டனுராகிய மிஸ்டர் ரங்கநாத சாஸ்திரியாரின் உறுதியான நேசத்தைத் தம்முடைய குடும்பத்திற்குச் சம்பாதித்துவைக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருந்தனர். ஆகவே மிஸ்டர் சார்லு அவர்களுடைய தகப்பனுர் காலஞ்சென்றவுடன் மிஸ்டர் ரங்கநாத சாஸ்திரியார் அவர்கள் தமது நேசனுடைய குடும்பத்தை ஆதரிக்கும்படியாக நேரிட்டது. மிஸ்டர் ரங்கநாத சாஸ்திரியார் அவர்கள் தம்முடைய ஆப்த்த நேசனுடைய குடும்பத்தைச் சென்னைக்குத்தருவித்து மிஸ்டர் சார்லு அவர்களைப் பச்சையப்பன் கலாசாலையில் கல்வி பயிலும்படி செய்து அதற்குண்டான செலவுகளையும் கொடுத்துக் குடும்பத்தையும் ஆதரித்துவந்தார். இத்தகைய புண்ணியவானுன போஷகருடைய மேற்பார்வையில் படித்து வளர்ந்துவந்த மிஸ்டர் சார்லு இவ்வுலகத்தில் முன்னுக்கு வந்தது ஆச்சரியமா? மிஸ்டர் சார்லு அவர்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போதே சுயேச்சை உடையவர். தம்முடைய மரியாதையைப் பாதுகாத்துக்கொள்ளும் இயல்புடையவர். தம்முடைய மரியாதைக்கு ஊனமுண்டாகும்படியான காரியங்களில் சேரமாட்டார். பாஸாங்கான சங்கோஸம் அவரைக் கண்டால் பயப்படும். எந்த விஷயத்திலும் தயவு தாக்ஷண்ணியத்திற் கஞ்சாமல் உண்மையையே பகரும் குணமுடையவர். மேன்மையான இக்குணங்களெல்லாம் எந்நாளும் அவரிடம் சிறந்து விளங்கிவருகின்றன.

பாசாங்கான சங்கோஸம் அவரைக்கண்டால் பயந்தோடும் என்று மேலே கூறினேம்: சாதாரணமாய் இவ்வுலகத்தில் ஏழையாகவிருக்கும் ஒருவன் பலபேர் முன்னில் தன்னை ஏழை என்று சொல்லிக்கொள்ள சங்கோஸப்படுவான். மிஸ்டர் அனந்தாசார்லுவின் கருத்து அப்படியல்ல. ஒவ்வொருவனும் தன்னுடைய உண்மையான நிலைமையை வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டுமென்றும் அப்படி அவன் காண்பிக்காவிடில் அவன் பாசாங்கு செய்து உலகத்தை ஏமாற்றுகிறவனுகிறுன் என்பதும் அவருடைய கருத்தாகும். பாலியத்திலேயே இவரிடம் இந்த குணுதிசயம் விளங்கிவந்ததென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களிருந்திருப்பதிலும் அவைகளை எல்லாம் இவ்விடத்தில் எடுத்தெழுத விடமின்மையால் ஒரு திருஷ்டாந்தமட்டிலும் கூறுகின்றேம். இவர் பச்சையப்பன் கலாசாலையில் 5-வது வகுப்பில் அதாவது மெட்ரிக்குலேஷன் வகுப்பிற்குக் கீழ்வகுப்பில் வாசித்துக்கொண்டு வரும்போது ஒருநாள் அக்கலாசாலையின் தலைவராகிய பிரின்சிபால் 5-வது வகுப்பு மாணுக்கர்கள் பிரதி மாலையிலும் கிரிக்கட் (Cricket) விளையாடும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று உத்தேசித்து ஒவ்வொரு மாணுக்கரும் ஒரு மாதத்திற்கு நான்கு அணு விழுக்காடு கொடுக்கவேண்டுமென்றும் மாலையில் கிரிக்கட் விளையாடவேண்டுமென்றும் உத்தரவு செய்தார். இந்த வகுப்பில் அநேக ஏழைமாணுக்கர்களிருக்கிறுர்கள் என்றும், அவர்கள் இடைவேளைக்குச் சிற்றுண்டி வாங்கிச் சாப்பிடக்கூட ஐவேஜியற்றவர்களாயிருக்கிறுர்களென்றும் இப்படிப்பட்டவர்கள் எப்படி நான்கு அணு ஒவ்வொரு மாதத்திற்கும் கொடுத்துவர முடியுமென்றும் ஆதலால் இந்த ஏற்பாடு அப்படிப்பட்டவர்களை பாதிக்கக்கூடியதென்றும் மிஸ்டர் சார்லு அவர்கள் நினைத்தனர். இந்த ஏற்பாடு பாதிக்கக்கூடியவர்களில் மிஸ்டர் சார்லு அவர்களும் ஒருவர். ஆகவே இவருடைய அபிப்பிராயம் அவ்வகுப்பிலுள்ள மற்ற ஏழை மாணுக்கர்களுக்குள் பரவ அநேக மாணுக்கர்கள் இந்த கிரிக்கட் ஏற்பாட்டில் சேர உடன்படவில்லை. இந்த சமாசாரம் அவ்வகுப்பு மானிட்டரு (பிரதம மாணுக்கன்) க்கு எட்ட அவர் பிரின்ஸ்பால் மிஸ்டர் லவுரிக்குத் தெரிவித்தனர். மிஸ்டர் லவுரி பிரதிதினமும் மாலையில் ஒருமணிநேரம் 5-வது வகுப்பிற்கு வந்து பாடம் சொல்லிக்கொடுப்பது வழக்கம். இந்த கிரிக்கட் விஷயத்தைக்குறித்து மிஸ்டர் லவுரி உத்தரவு செய்த மறுதினம் அவர் 5-வது வகுப்பிற்கு வந்து பாடம் போதிக்கும்போது கேவலம் ஒரு சின்னப்பணம் நான்கு அணு கொடுக்க ஐவேஜியற்ற பிச்சைக்காரப்பையன்கள் இந்த வகுப்பில் யார் யார் என்று வினவினுர். அப்போது மிஸ்டர் அனந்தாசார்லு கொஞ்சங்கூட சங்கோஸப்படாமல் "நான் ஒரு பிச்சைக்காரப்பையன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்து நின்று இப்படி நான் எழுந்து நிற்பதில் எனக்கு யாதொரு வெட்கமுமில்லை என்றும், ஏனெனில், என் தகப்பனுர் சம்பாதனையை வீண் செலவு செய்து என்னை ஏழையாகச் செய்துவிடவில்லை என்றும் சொன்னுர். இந்த மொழிகளைக் கேட்டவுடன் மிஸ்டர் லவுரி ஒன்றும் பதில் கூறுமல் சும்மாவிருந்துவிட்டார். இப்படி ஒரு வகுப்பிலுள்ள பல மாணுக்கர்கள் முன்னிலையில் மிஸ்டர் சார்லு தம்முடைய ஏழ்மையான நிலைமையை வெளிப்படுத்திக் காண்பித்தது மிஸ்டர் லவுரியின் கவனத்தைப்பற்றியது. இதுமுதல் மிஸ்டர் லவுரி மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடன் பிரதி மாலையிலும் கண்டு பேசுகிறது வழக்கம். மிஸ்டர் லவுரி மிஸ்டர் சார்லுக்கு உபகாரச்சம்பளப் பணம் பள்ளிக்கூட ஐவேஜியிலிருந்து கொடுத்துவரும்படி செய்தனர். தம்முடைய வீட்டிற்குத் தாராளமாக வந்து தம்வசமிருக்கும் புத்தகங்களை எல்லாம் வாசிக்கும்படி அனுமதி கொடுத்தார்.

இந்த வசதியுடனும் பிரசிடென்சி கலாசாலையிலுள்ள லைபிரரியிலுள்ள புஸ்தகங்களைப்படித்தும் மிஸ்டர் சார்லு அவர்கள் ஆங்கில பாஷையிலும் பாண்டித்யமடைந்தனர். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் உபந்நியாசம் செய்யும் கூட்டங்களிலும் சேர்மேனுகவிருந்து பிரசங்கம் செய்யும் கூட்டங்களிலும் மிஸ்டர் லவுரி இருக்கும்படி நேரிட்டால் அங்குள்ளவர்களுக்கு மிஸ்டர் அனந்தாசார்லுவைக் குறித்துப்பேசி அவரை இப்பிரசங்கம் செய்யும்படியான நிலைமைக்குக்கொண்டுவந்ததில் நான் பெரும்பாகமான பங்கு எடுத்துக்கொண்டேன் என்று பெருமைபாராட்டிப் பேசிக்கொள்வார்.

ராய்பகதூர் அனந்தாசார்லு அவர்கள் 1867-ம் ௵ம் யப். எ. (F. A. பரீக்ஷையில் தேறினபின்பு கலாசாலையை விட்டனர். விட்டவுடன் பச்சையப்பன் கலாசாலை பிரின்சிபாலாகிய மிஸ்டர் லவுரியே அவருக்கு அதே கலாசாலையில் ஒரு உபாத்தியாயர் உத்தியோகம் செய்துவைத்தனர்.

மிஸ்டர் சார்லு அவர்கள் தமக்குக்கொடுக்கப்பட்ட வகுப்பை ஒப்புக்கொண்டு யாதொரு கடுமையான ஏற்பாடும் செய்யாமல் தம்முடைய இனிய மொழிகளைக் கொண்டே மாணுக்கர்களை வசப்படுத்திச் சீர் கேடாயிருந்த வகுப்பை நான்கு தினத்திற்குள் ஒழுங்கான நிலைமைக்குக்கொண்டுவந்தது கலாசாலை டிரஸ்டிகளின் மனதிலும் பிரின்சிபால் மனதிலும் மிஸ்டர் சார்லு அவர்களின்பேரில் பெருமதிப்பை உண்டுபண்ணிவைத்தது. ஆயினும் சிறிது காலத்திற்குப்பிறகு டிரஸ்டிகள் மிஸ்டர் சார்லுவின் மனதில் ஆயாசமுண்டாகும்படி நடந்தார்கள். நடக்கவே மிஸ்டர் சார்லு அவர்கள் உபாத்தியாயர் உத்தியோகத்தை விட்டுவிட உத்தேசித்து B. L. பரீக்ஷைக்குப்படித்து 1869-ம் ௵த்தில் பரீக்ஷையில் தேறினர். F. A. பாஸ் செய்தவர்கள் B. L. பரீக்ஷைக்குப் போகக்கூடாதென்று உத்தரவு பிறந்த வருஷத்திற்கு முந்திய வருஷம் தேறிப் பட்டம் பெற்றனர்.

ராய்பகதூர் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் B. L. பரீக்ஷையில் தேறினவுடன் சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் வைக்கீலாயிருந்து கீர்த்திபெறவேண்டுமென்று அபேக்ஷித்தார். இவர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே வசதிப்பட்டபோதெல்லாம் சூப்ரீம் கோர்ட், அதற்குப்பிறகு ஹைகோர்ட்டு செஷன் விசாரணை சமயமெல்லாம் போய் அக்காலத்திலிருந்த லாசிம்மங்களாகிய சிட்னி சிமித், ஜான் புரூஸ்நார்ட்டன், ஜான்மில்லர், ஜான்டிமெயின் முதலிய பாரிஸ்டர்கள் வாசாமகோசரமாய்ப் பேசுவதைக்கேட்டு இவ்விதமாக இந்த ஹைகோர்ட்டில் தாமும் பேசும்படியான நிலைமைக்குவரவேண்டுமென்று எண்ணியிருந்தார். தம்முடைய ஆயுளை லாயராகவிருந்து கழிக்கவேண்டுமென்று இவர் பாலியத்திலேயே தீர்மானித்துவிட்டார்.

மிஸ்டர் சார்லு அவர்கள் பி. யல். பரீக்ஷையில் தேறினவுடன் ஹைகோர்ட்டில் பிராக்டிஸ் செய்கிறதா அல்லது ஜில்லாக்கோர்ட்டுகளில் பிராக்டிஸ் செய்கிறதா என்று மயங்கினுர். பி. யல். பரீக்ஷையில் தேறியவர்கள் பட்டம் பெற்றவுடன் ஹைகோர்ட்டில் பிராக்டிஸ் செய்யக்கூடாது. பிராக்டிஸ் செய்வதற்கு முந்தி ஒரு வருஷம் ஒரு சீனியர் வக்கீலினிடமிருந்து தொழில் கற்றுக்கொள்ளவேண்டு மென்பது ஹைகோர்ட்டார் செய்திருக்கும் விதி. அப்படி ஒரு சீனியர் வக்கீலினிடம் தொழில் கற்றுக்கொள்ளவேண்டுமானுல் ரூபாய் ஆயிரம் கட்டவேண்டும். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுக்கு ரூபாய் ஆயிரமென்றுல் அந்தக்காலத்தில் தாங்கக்கூடாத தொகையல்லவா? ஆகையால் இதைக்குறித்து மயங்கினுர். பின்னிட்டு சம்பாதித்துக் கொடுத்துவிடலாமென்று அநித்தியத்தை நம்பி கடன் வாங்கினுல் தமக்கு மானஹானி உண்டாகுமென்று அஞ்சி கடன் வாங்க இஷ்டப்படவில்லை. சாதாரணமாய் ஆயிரம் ரூபாய் கொடுத்து தொழில் கற்றுக்கொள்ள இஷ்டப்பட்டவர்கள் வெளி ஜில்லாக்கோர்ட்டுகளில் பிராக்டிஸ் செய்யும்படியான வசதியிருக்கும்போது அப்படிச்செய்யாமல் தம்முடைய சுயநலத்தை உத்தேசித்தும் தம்முடைய சொந்த இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டும் மறுபடியும் தம்முடைய போஷகராகிய மிஸ்டர் ரெங்கநாதசாஸ்திரியார் அவர்களைக்கொடுக்கும்படி கேட்கவும் தமக்கு இஷ்டமில்லை. இப்படி மயங்கிக்கொண்டிருக்குங்கால் பெரும்பாலும் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சயிடில் பிராக்டிஸ் செய்துகொண்டிருந்த ஒரு சீனியர் வக்கீல் தமக்குத் தம்முடைய தொழில் முறையில் உதவிசெய்துகொண்டுவந்த ஒரு புரோஷியரினுடைய உதவியை இழக்கும்படியாக நேர்ந்து; அந்த ஸ்தானத்திற்கு ஒரு தகுதியுடையவரை நியமிக்கவேண்டுமென்று தேடிக்கொண்டிருந்தார். மிஸ்டர் சார்லு அவர்களுடைய சிநேகர் ஒருவர் அந்த வக்கீலுக்கும் சிநேகர். இவர் மிஸ்டர் சார்லுவைக்குறித்து அவ்வக்கீலுக்குச் சொல்லவே அவர் தொழில் கற்றுக்கொடுக்க யாதொரு கட்டணமும் விரும்பாமல் மிஸ்டர் சார்லுவை அப்பிரண்டிசாய் வைத்துக்கொள்வதாக வாக்களித்தார். இந்த வக்கீலின் பெயர் மிஸ்டர் காவலி வெங்கடபதிராவ். இவர் கர்நூலைச்சேர்ந்த ஒரு ஜமீன்தாருடைய குமாரர். இவரிடம் மிஸ்டர் சார்லு அவர்கள் சேர்ந்து தொழில் ...றுக்கொண்டுவந்த சிறிது நாட்களுக்குள் வக்கீ... மிகுந்த சந்தோஷமுண்டாகும்படியாக நடந்து ... சர். டார். ...கொண்ட

மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடை... பேசுவார் ...தியமும் புத்தி சாதுரியமும் வக்கீலை பிர... கள் சொல் படியாக விருந்தன. மிஸ்டர் அனந்தாச... யில் ஒரிஜினல்

தொழில் கற்றுக்கொள்ள ஆரம்பித்த இரண்டு மூன்று மாதத்திற்குள் கோடைகால ரஜா காலத்தில் வக்கீல் கர்நூலுக்குப்போகும்போது இவரையும் அழைத்துக்கொண்டு போனார். அப்போது கர்நூல் ஜில்லாவில் இடங்கை வலங்கைச்சண்டை உண்டாகி ஜனங்கள் இருகட்சியாக விருந்தார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் சூப்பிரண்டெண்டும் தப்பான கட்சியில் சார்புடையவர்களாயிருந்தார்கள். அப்போது அவ்விடமிருந்த சரியான கட்சியைச்சேர்ந்தவர்கள் கவர்ன்மெண்டாருக்கு மகசர் அனுப்பவேண்டுமென்றும் இதற்காக ஒரு மீட்டிங்கு கூட்டவேண்டுமென்றும் அபேக்ஷைப்பட்டார்கள். இந்த ஏற்பாடுகளைச்செய்தால் ரூ. 500 கொடுப்பதாய்ச் சொன்னார்கள். இந்த ஏற்பாடுகளைச் செய்ய மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் நியமிக்கப்பட்டார். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் ஒரு மீட்டிங்கு கூட்டி வெகு சாமர்த்தியமாகப்பேசி மகசரும் தயாரித்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார். இச்செய்கையால் ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் சூப்பிரண்டெண்டும் மிஸ்டர் சார்லுவுக்கு விரோதமாகப் போயிருக்கவேண்டிய திருக்க அவர்கள் மிஸ்டர் சார்லு உண்மையை அஞ்சாமல் போதிக்கிறவர் என்று அப்பிராயப்பட்டு இவரைச் சிநேகிதம் செய்துகொண்டார்களென்றால் மிஸ்டர் சார்லுவுக்கிருக்கும் திறமையையும் ஜனங்களை வசப்படுத்தும் குணாதிசயத்தையும் நாம் எடுத்துக் கூறவும்வேண்டுமோ? மிஸ்டர் சார்லு அவர்கள் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலும் தொழில் நடத்தும் காலத்திலும் நடந்த சம்பவங்களை இதுவரையில் எடுத்துக்கூறினோம்.

இனி அவர் வக்கீலாய் பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்த பிறகு நடந்த பிரதாபங்களை எடுத்துக்கூறுவாம். மிஸ்டர் சார்லு அவர்கள் 1890-ம் ௵ ஏப்ரல்௴ ஹைகோர்ட்டில் பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்தார். அவ்வாறு ஆரம்பித்தவுடனே இவருக்குக் கேசுகள் வந்துகொண்டிருந்தன.

ஒருவருஷகாலமாக மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடைய சாமர்த்தியத்தை நிறுத்துப்பார்த்து அளவுக்குமேலிருக்கிறதென்று கண்டறிந்த அவருடைய எஜமானாகிய வக்கீல் மிஸ்டர் வெங்கடபதி ராவ் அவர்கள் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களை தம்முடைய லாயர் தொழிலில் பாகஸ்தராகச் சேர்த்துக்கொண்டனர். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் பிராக்டிஸ்செய்ய ஆரம்பித்த மூன்றாம்நாளே ஒரு பெரிய சிக்காலன அப்பீல்வியாஜ்ஜியத்தில் வாதிதரப்பில் ஏகாங்கியாய் மகாமேதாவியான ஜட்ஜியாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாலோவேமுன்னால் ஆஜரானாரென்றால் மிஸ்டர் சார்லு அவர்களுடைய அபார திறமையை எடுத் கண் கூறவும்வேண்டுமோ! மேலும் இந்தக்கேசில் பிரதி தாக்ஷ தரப்பில் பாரிஸ்டர் சிம்மமாகிய மிஸ்டர் சலிவன் ரும் குணமுடைய ஒரு வக்கீல்கூட்டம் ஆஜரானதும் பிர ல்லாம் எ ரப்பில் அத்தனைலாயர்களிருந்தும் மிஸ்டர் றன. வர்கள் வாதிதரப்பில் ஏகாங்கியாயிருந்து பாசாங்க ன்முதலில் வியாஜ்ஜியத்தை நடத்தினதை பயந்தோடும் எ ஹைகோர்ட்டிலுள்ள வக்கீல்கள்சொல்லி ஆச்சரியப்படுகின்றார்கள். மேலும் இந்தவியாஜ்ஜியத்தில் ஒரு சிக்கலான ஹிந்துலா சம்பந்தமான சட்ட அம்சம் ஒன்று தீர்மானிக்கப்படவேண்டியதாயிருந்தது. அந்த சட்ட அம்ச சம்பந்தமாக ஸ்மிருதிகளிலும், இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும் சிக்கலானபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறதும் இதுகாலபரியந்தம் ஆங்கிலத்தில் தர்ஜிமாசெய்யப்படாதவுமான சில ஸ்லோகங்களை மிஸ்டர் சார்லு அவர்கள் தாமே தர்ஜமாசெய்து தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாகக்கூறி பயிரங்கமான கோர்ட்டில் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஹாலோவின் மனப்பூர்வமான வந்தனத்தைப் பெற்றனர். இந்த வியாஜ்ஜியத்தில் மிஸ்டர் சார்லு அவர்கள் தம்முடைய சாமர்த்தியத்தையும் கீர்த்தியையும் ஸ்தாபித்ததுமுதல் எதேஷ்டமான கக்ஷிக்காரர்கள் அவருக்குச்சேர்ந்து பெரும்பாலும் ஒரிஜினல்சயிடில் பிராக்டிஸ்செய்துவந்தார். இந்தக்காலத்தில்நடந்த சிக்கலான பெரிய வியாஜ்ஜியங்களில் இவர் வாதிதரப்பிலாவது பிரதிவாதிதரப்பிலாவது வக்கீலாக நியமிக்கப்படாத வியாஜ்ஜியம் பெரும்பாலும் வந்திருக்கமாட்டாது. மிஸ்டர் சார்லு அவர்கள் தம்வசம் ஒப்புவிக்கப்பட்ட வியாஜ்ஜியத்தை எப்படியாவது ஜெயித்துக் கொடுத்துவிடவேண்டுமென்று சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்களுக்குமேல் கவலை எடுத்துக்கொண்டு பிரயாசப்பட்டுவருவார். சாக்ஷிகளை கிராஸ்செய்வதில் மிஸ்டர் சார்லு அவர்கள் நிகரற்ற சாமர்த்தியமுடையவரென்று பாரிஸ்டர் ஜான்புரூஸ் நார்ட்டனே சிலாகித்துப் பேசியிருக்கும்போது நம்போன்றவர்கள் மிஸ்டர் சார்லு அவர்களுடைய திறமையைப்பற்றிப் பேசுவது ஒரு பெரிய காரியமல்ல. இவரிடம் அகப்பட்ட ஒரு சாக்ஷி உண்மையைமறைத்துப்பேசப் பெரும்பாலும் சாத்தியப்படாது. சில வக்கீல்களைப்போலவும் பாரிஸ்டர்களைப்போலவும் சாக்ஷிகளை மிரட்டி உருட்டி இவர் கேள்விகேட்கிறதில்லை. சாக்ஷியை சிநேகம்செய்துகொள்ளுவதுபோல் பாவனைகாட்டி அவனுக்குப் பதமாகக் கேள்விகளைக்கொடுத்து உண்மையை வெளிப்படுத்திவிடுவார். சாக்ஷியைக் கிராஸ்செய்யும்போது அவன் இவருடைய கக்ஷிக்கு விரோதமாகச் சொன்னபோதிலும் சிறிதும் கோணல்முகம் காட்டமாட்டார். பொய்பேசுவதற்கு இடம் கொடுக்காமல் நளினமான கேள்விகளைப்போட்டு அவனுடனே வெகுநாழிவரையில் ஊடாடி அவன் வாயிலிருந்து உண்மையைப் பிடுங்கிவிடுவார்.

நிற்க, மிஸ்டர் சார்லு அவர்கள் ஜட்ஜிகளை சந்தோஷிப்பிக்கவேண்டுமென்றாவது அல்லது அவர்களுடைய அபிமானத்தைப் பெறவேண்டுமென்கிற கருத்துடனாவது, உயர்ந்த அந்தஸ்துவாய்ந்த லாயர்களிடம் தகாத பேச்சுகளைப் பேசுகிறதுமில்லை. அத்தகைய காரியங்களைச் செய்கிறதுமில்லை. அவருடைய அந்தஸ்த்தையும் கௌரவத்தையும் ஊனப்படுத்தும்படியாக எந்த ஜட்ஜியேனும் எந்த சமயத்திலாவது ஜாடையாக ரிப்போர்ட்டு செய்தாலும் மிஸ்டர் சார்லு அவர்கள் உடனே எழுந்திருந்து அஞ்சாமல் பதில் கூறுவார். ஜட்ஜி மிஸ்டர் கர்னன் ஒருசமயம் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள்பேரில் ஒரு சொற்ப ரிமார்க்குசெய்ததற்கு மிஸ்டர் சார்லு அவர்கள் கூறின பதிலைக்கேட்டு பயிரங்

கமான கோர்ட்டில் மிஸ்டர் சார்லு அவர்களை மன்னிப்பு கேட்டுக்கொண்டார் என்றால் மிஸ்டர் சார்லுவின் அஞ்சாத்தன்மையைக்குறித்து இன்னும் விசேஷமாய் நாம் எடுத்துச்சொல்லவேண்டுமோ? நிற்க, ஜட்ஜி மிஸ்டர் கர்னன் மன்னிப்புக்கேட்ட சந்தர்ப்பத்தை இங்கு எடுத்துரைப்பாம்.

மிஸ்டர் சார்லு, சகோதர வகீல்களுக்கு எப்போதும் தொழில்முறையில் உதவிசெய்யும் குணாதிசயமுடையவர். சகோதர வக்கீல்கள் ஏதேனும் சட்டசம்பந்தமான சந்தேகங்களைக்கேட்டால் அவைகளை விபத்தப்படுத்திச் சொல்லிக்கொடுப்பார். சகோதர வக்கீல்களுக்குச் சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதால் கக்ஷிக்காரர்கள் சகோதர வக்கீல்களிடம் போய்விடுவார்களே என்கிற பொறாமையுடையவரல்ல. ஒரு அபிமான புத்திரன் தன்னுடைய தகப்பனுடைய சகோதரர்கள் பேரில் கொண்டுவந்த ஒரு வியாஜ்ஜியத்தில் ஒருவக்கீல் பிரதிவாதிகளில் ஒருவருக்கு வக்காலத்து வாங்கியிருந்தார். கக்ஷிக்காரர்கள் சென்னபட்டணத்தில் லாலா ஜாதியைச் சேர்ந்தவர்கள். அந்த வியாஜ்ஜியத்தின் தீர்மானம் லாலா ஜாதியார் க்ஷத்திரியர்களா அல்லது சூத்திரர்களா என்று முடிவுசெய்வதைப் பொறுத்ததாக விருந்தது. பிரதிவாதிகளுக்கு வக்கீலாயிருந்த ஷை வக்கீலுக்கு இதுவிஷயத்தில் சந்தேகமுண்டாக, மிஸ்டர் சார்லு அவர்கள் லாலாஜாதியார் க்ஷத்திரியர்களல்லவென்று அபிப்பிராயப்பட்டு அதை ஸ்தாபிக்கவேண்டிய ஆதாரங்களை எல்லாம்தேடி தயாரித்துக் கொடுத்தனர். வக்கீல் அன்று இரவு 8-மணிக்கு வீட்டிற்குச்சென்றபோது காஞ்சீபுரத்தில் தம்முடைய மாமனார் அத்தியாவஸ்தையிலிருப்பதாகத் தந்திவர, அதைப்பார்த்தவுடன் அடுத்ததினம் கேசைநடத்தும்படியாக மிஸ்டர் சார்லு அவர்களுக்கு ஒருகடிதம் எழுதிக் கேசின் கட்டுகளையும் அனுப்பினார். அடுத்த நாள் வியாஜ்ஜியவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது வாதிதரப்பு சாக்ஷிகளை கிராஸ்செய்யவேண்டியதாக விருந்தது. கோர்ட்டார் மற்றப் பிரதிவாதிகளுக்காக ஆஜராயிருக்கும் வக்கீல்கள் கிராஸ்செய்தால் போதுமானதென்றும் மிஸ்டர் சார்லு அவர்கள் விசாரணை செய்யவேண்டியது அனாவசியமென்றும் கோர்ட்டார் சொல்லிவிட்டார்கள். இருந்தபோதிலும் மிஸ்டர் சார்லு அவர்கள் மற்றப் பிரதிவாதிகளின் வக்கீல்களுடன் வீற்றிருந்தார். மற்றொரு பிரதிவாதியின் வக்கீல் வாதி சாக்ஷியை கிராஸ்செய்துகொண்டு வரும்போது பிரஸ்தாப லாலாஜாதியார் பூணூல்தரித்துக்கொள்ளும்போது வேதமந்திரம்சொல்லித் தரித்துக்கொள்ளுகிறது வழக்கமா அல்லவா என்று கேட்கத்தவறிப்போய்விட்டார். இந்தக்கேள்விக்கு ஜவாப்பு வெளிப்படுத்த பூணூல்போடும் முடிச்சு ருத்ரமுடிச்சா அல்லது பிரம்மமுடிச்சா என்று கேட்கவேண்டுவது அனாவசியம். ஏனெனில், கக்ஷிக்காரர்கள் சைவ பிராமணர்களாகவாவது அல்லது வைணவபிராமணர்களாகவாவதிருந்தால் இந்தக்கேள்வி கேட்கவேண்டுமென்பது மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடைய அபிப்பிராயம். ஆகையால் இந்தவிஷயத்தைக் குறித்து வாதியின் சாக்ஷிகளை மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களே கிராஸ்செய்தார். தொடர்நேர்த்தியாக நான்குநாள்வரையில் இந்தவிஷயத்தைக்குறித்து மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் சாட்சிகளைக் கிராஸ்செய்தார். பிறகு வியாஜ்ஜியத்தைத் தள்ளிவைத்துக்கொண்டார்கள். இதற்குள்ளாக காஞ்சீபுரம் போயிருந்த வக்கீலும் வந்துவிட்டார். மறுபடியும் இந்தவியாஜ்ஜியம் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது ஷை வக்கீல் அதேவிஷயத்தைக்குறித்து வாதி சாட்சியை கிராஸ் செய்ய ஆரம்பித்தார். இப்படி கிராஸ் செய்துகொண்டுவரும்போது லாலாஜாதியார் பூணூல்போடும் முடிச்சு பிரமமுடிச்சா அல்லது ருத்ரமுடிச்சா என்று ஒரு கேள்விகேட்டார். ஜட்ஜி மிஸ்டர் கர்னனுக்கு இந்துலா அதிகமாகத் தெரியாதபடியால் அந்தக்கேள்வி அவசியமான கேள்வியா அல்லவா என்று கேட்டார். அதற்கு வக்கீல் மிகுந்த அவசியமானகேள்வி என்று பதில் கூறினார். இதன்பேரில் ஜட்ஜி மிஸ்டர் கெர்னன், மிஸ்டர் அனந்தாசார்லு நான்குநாள் இதுவிஷயத்தைக்குறித்து கிராஸ்செய்தபோது பூணூல்முடிச்சு பிரமமுடிச்சா அல்லது ருத்ரமுடிச்சா என்று கேட்காமல் நான்குநாள் கோர்ட்டாருடைய டயத்தை வீண் செலவுசெய்தார் என்றும் இப்போது இந்த வக்கீல் கோர்ட்டாருடைய டயத்தை வீணேகழிக்கிறார் என்றும் ரிமார்க்குசெய்தார். அப்போது நம்முடைய சார்லு அவர்களும் கோர்ட்டிலிருந்தார், கிராஸ் செய்துகொண்டிருந்த வக்கீலை இந்தக்கேள்வி அனாவசியமென்று ஒப்புக்கொள்ளும்படி சொன்னார். அவர் கோர்ட்டாருக்கு அஞ்சியோ அல்லது தம்முடைய கௌரவம் குறைந்துபோகுமென்றோ அப்படி ஒப்புக்கொள்ள சம்மதப்படவில்லை. உடனே மிஸ்டர் சார்லு அவர்கள் எழுந்திருந்து தாம் ஒரு சொற்பமனு தெரியப்படுத்திக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்று ஜட்ஜி மிஸ்டர் கெர்னனைக் கேட்டுக்கொண்டனர். ஜட்ஜி உத்தரவுகொடுக்க, பூணூல்முடிச்சு பிரமமுடிச்சா ருத்ரமுடிச்சா வென்கிற கேள்வி இந்த வியாஜ்ஜியத்தில் கேட்கப்படவேண்டியது அனாவசியமென்றும் ஆகையால் தாம் நான்குதினம் கிராஸ்செய்தபோது இதைக்குறித்துக் கேள்விகேட்கவில்லை என்றும் பிறருக்கு இந்துலா தெரியாமலிருப்பது தம்முடைய குற்றமல்லவென்றும் தமக்குப் பிரத்தியார் செய்யவேண்டிய கடமையைச் செய்வார்கள் என்று தாம் எதிர் பார்ப்பதாயும் சொல்லிவிட்டு உட்கார்ந்தார். இதைக்கேட்ட ஜட்ஜி மிஸ்டர் கெர்னன் பயிரங்கமான கோர்ட்டில் தாம் செய்த ரிமார்க்கை மன்னிப்புசெய்ய வேண்டுமென்று மிஸ்டர் சார்லு அவர்களைக் கேட்டுக்கொண்டனர்.

ராயபகதூர் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் ஜட்ஜிகளுடைய தயவு தாக்ஷண்யத்திற் கஞ்சாமல் பேசும் குணாதிசய முடையவ ரென்பதற்கு இன்னுமொரு திருஷ்டாந்தம் கூறுவாம்.

ஹைகோர்ட்டு ஜட்ஜியாக நியமிக்கப்பட்ட சர். சார்லஸ் டர்னர் உத்தியோகத்தை ஒப்புக்கொண்ட ஆரம்பகாலத்தில் மிகவும் படபடப்பாய்ப் பேசுவார் என்று இப்போதும் ஹைகோர்ட்டுவக்கீல்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர் முன்னிலையில் ஒரிஜினல்

சயிடில் லக்ஷ ரூபாய் சம்பந்தப்பட்ட ஒரு கேசில் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் ஆஜரானார். இவருடைய கக்ஷிக்காரர் வாதி. பிரதிவாதி தரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர் சலிவன் ஆஜராயிருந்தார். வாதியின் தகப்பன் 60-வருஷத்திற்கு முந்தி ஸ்வீகாரமாகக்கொடுக்கப்பட்டுப் போய்விட்டபடியால் தாவா சொத்தில் வாதிக்குச் சம்பந்தமில்லை யென்று பிரதிவாதிகள் கக்ஷிசொன்னார்கள். ஆகவே இந்த கக்ஷியை ருஜுப்படுத்தும் பொறுப்பு பிரதிவாதிகளைப் பொறுத்ததாகவிருந்தது. பிரதிவாதிகள் இந்த ஸ்வீகாரத்தை ருஜுப்படுத்த இரண்டு விர்த்தாப்பிய விதவைகளை சாட்சியாக விட்டார்கள். மிஸ்டர் அனந்தாசார்லு, விவாகம், கருமக்கிரியை முதலிய விஷயங்களைக்குறித்து இந்த இரண்டு சாட்சிகளையும் நான்குநாள்வரையில் கிராஸ் செய்தார். கிராஸ் செய்யும்போது கோர்ட்டார் அநேக ஆக்ஷேபனைகள் செய்தார்கள். எதிர் தரப்பு லாயர்களும் அடிக்கடி ஆக்ஷேபனை செய்தார்கள். கடைசியில் மிஸ்டர் அனந்தாசார்லு தம்முடைய கேஸை முடிக்கும் சமயத்தில் இத்தேச ஜனங்களின் வழங்கங்களில் நம்பிக்கைவைக்கக்கூடியதைப்பற்றியும் வைக்கக்கூடாததைப்பற்றியும் எடுத்துச்சொன்னார். இதற்கு ஜட்ஜி மிஸ்டர் டர்னர் "இது உம்முடைய அனுபோகம்போ லிருக்கிறது" என்று நகைப்பாய்ச் சொன்னார். மிஸ்டர் சார்லு அவர்கள் ஜட்ஜிக்குக் கொஞ்சம்கூட அஞ்சாமல் தம்முடைய லாயர் உத்தியோகத்திற்கு ஆபத்து வந்தாலும் வரட்டும், மானபங்க மடையக்கூடாதென்று எண்ணி ஜட்ஜி மிஸ்டர் டர்னரைப்பார்த்து "தங்களுடைய அனுபோகத்திற்கு ஒரு நமஸ்காரம் செய்கிறேன்! இத்தேசத்தில் இம்மாகாண ஜனங்களைப்பற்றித் தாங்கள் அடைந்திருக்கும் அனுபோகத்திற்கு இன்னும் ஒரு மாத வயதுகூட ஆகவில்லை என்கிறசிறிய விஷயத்தைத் தாங்கள் மறந்து போகக்கூடாது." என்று சொன்னார். ஜட்ஜி சர் சார்லஸ் டர்னர் ஜட்ஜி மிஸ்டர் டேவிசைப்போல முரடானபோதிலும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவரானபடியால் ஒன்றும் பதில் சொல்லவில்லை. இதுகாறும் ராய்பகதூர் மிஸ்டர் அனந்தாசார்லு அவர்களுடைய லாயர் தொழில் சரித்திரத்தை எடுத்துரைத்துக்கொண்டு வந்தோம்.

இனி தேச நன்மையைநாடி அவர் என்ன செய்திருக்கிறார் என்பதைப்பற்றிப் பேசுவோம். மிஸ்டர் சார்லு அவர்கள் 10 - வருஷகாலம் தொடர்நேர்த்தியாக முனிசிபல் கமிஷனராகவிருந்தார். அப்படி யிருந்தபோது தாம் தலையாட்டி முனிசிபல் கமிஷனராயிராமல் பிரதம முனிசிபல் கமிஷனராகவிருந்து நகர் நன்மையை நாடி அநேக பிரேரேபனைகள் செய்துவந்திருக்கிறார். குற்றமிருக்குமிடத்தைப் பார்த்துத் தப்பாமல் கண்டிப்பார். பொதுஜன விஷயத்தில் பாரபக்ஷமென்பதேயிருக்கக் கூடாதென்பது இவருடைய மேன்மையான கொள்கை. ஆகவே முனிசிபல் அதிகாரிகள் எந்த விஷயத்திலும் இவருடைய யோசனையைக் கேட்கிற வழக்கமாயிருந்தது. இப்போதும் இவர் கார்பொரேஷனில் கமிஷனராகவிருந்தால் நலமாயிருக்குமென்று அநேக ஜனங்கள் எண்ணுகிறார்கள். இவரைப்போலொத்த நிஷ்பக்ஷவாதிகள் இப்போது கார்பொரேஷனிலில்லாமலிருப்பது ஒரு குறை என்றே எண்ணப்படுகின்றது.

எவ்வளவு பிடிமானமான கொள்கைகளையும் குணநிசயங்களையும் மிஸ்டர் சார்லு அவர்கள் உடையவராயிருந்தபோதிலும், அவர் மிகுந்த சரசகுணமுடையவர். அவர் பணக்காரர்களுக்கும் சினேகர், ஏழைகளுக்கும் சிநேகர். இளைஞருக்கும் சிநேகிதர், வயோதிகருக்கும் சிநேகிதர். படித்தவர்களுக்கும் சிநேகிதர், படியாதவர்களுக்கும் சிநேகிதர். ஆகவே எல்லாவகை ஜனங்களுடனும் அவர் கலந்து பழகும் சுபாவமுடையவர். எல்லோருடனும் சந்தோஷமான முகத்துடன் வார்த்தையாடுவார். பெருமை பாராட்டமாட்டார். தாம் பெரிய ஐசுவரியவந்தர் என்றும் புகழ்பெற்ற லாயர் என்றும் கர்வம் கொள்ளமாட்டார். அவர் வக்கிலாக தாக்கலாகி 5-வருஷம் வரையில் பெரும்பாலும் பொதுஜன மீட்டிங்கிற்கு வருகிறதில்லை. தம்முடைய தொழில் சம்பந்தமான வேலைகளைத் தவிர வேறொன்றையும் கவனிக்கிறதில்லை. அவகாசமுள்ள வேளையில் படித்துக்கொண்டிருப்பார். அவர் எந்த சமயம் பொது ஜனக்கூட்டத்தில் கலந்தாரென்றால், சில காலத்திற்கு முந்தி சிலதனுட்டிய வியாபாரிகள் கீழ்ப்பட்ட உலோகத்தை வெள்ளியாக வாவது அல்லது செம்பாகவாவது கிலிட் கொடுத்து விற்பனை செய்வதை ஆக்ஷேபிப்பதற்காகச் சென்னை கோவிந்தப்பநாய்க்கன் தெருவிலுள்ள வசந்த மண்டபத்தில் கூடின கூட்டத்தில் சேர்ந்துகொண்டனர். அவர் அந்தச்சமயம் செய்த பிரசங்கத்தை இந்நகர் டைம்ஸ் பத்திரிகைகூட சிலாகித்துப் பேசியிருக்கிறது. அதன் பிறகு இச்சென்னையில் நடந்த பொதுஜனக்கூட்டங்களில் மிஸ்டர் சார்லு அவர்கள் பேசாத மீட்டிங்கிருக்கமாட்டாது. ஆனால் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கவர்ன்மெண்டார் கோடைகாலத்திற்காக ராஜதானி நகரைவிட்டு 6-மாத காலம் உதகமண்டலம் போயிருப்பதைக் கண்டனம் செய்வதற்காகக் கூடின மீட்டிங்கில் மிஸ்டர் சார்லுசெய்த பிரசங்கம் அவருடைய பிரசங்க வல்லமையை ஸ்தாபித்தது.

தேசநன்மைக்காகப் பாடுபடுவது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய கடமை என்று எண்ணவேண்டுமென்கிற கொள்கையுடையவர். இதுவுமன்றி தம்முடைய லாயர்தொழிலில் தாம் உள்ளபடி இன்னகொள்கைகளும் அபிப்பிராயங்களுமுடையவரென்றும் வெளிப்படுத்திக் காண்பிக்க சாத்தியப்படவில்லை என்றும், ஏனெனில் தொழில்முறையில் சாக்ஷிகள் முன்னிலையில் தம்முடைய சொந்த குணநிசயங்களை மறைத்துப் புலப்படுத்தவேண்டியதிருக்கிறதென்றும் ஆதலால் தாம் இன்னகொள்கையுடையமனிதன் என்று வெளிப்படுத்திக் காண்பிக்கப் பொது ஜனக்கூட்டத்தில் சேரவேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் ஒருசமயம் சொல்லியுமிருக்கிறார். எப்படியிருந்தாலும் அவர் தேசநன்மையைநாடி உழைத்துவந்தார் என்பதற்கு அவர் தம்முடைய திரண்டவருமானத்தை அலக்ஷியம் செய்துவிட்டு 8 வருஷகாலம் தொடர்நேர்த்தியாக வைசிராய் சட்டசபையில் சென்னை மாகாணபிரதிநிதி ஸ்தானத்தை வகித்திருந்ததே போதுமான அத்தாக்ஷியாக விருக்கின்றது. வைசிராய் சட்டசபையிலும் இவர் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளுடைய தயை தாக்ஷணியத்திற் கஞ்சாமல் பேசுவார். பெங்காள பாபுக்கள் இவரைக் கொண்டாடுவார்கள். வங்காளத்திலுள்ள பண்டிதர்கள் கூடி இவருக்கு வித்தியா விநோதி என்கிற ஒரு கௌரவப்பட்டம் கொடுத்திருக்கிறார்கள். இவர் வைசிராய் சட்ட சபையில் அங்கத்தினராக விருந்தபோது மடச்சொத்துக்களும் தேவஸ்தானச் சொத்துக்களும் துர்வினிபோகப்படுத்தப்படுவதைக் கவர்ன்மெண்டார் கண்டிக்கும்படியான அதிகாரமிருக்குமாறு Religious Endowment Act-ல் ஆதாரமிருக்க வேண்டுமென்று அதைச் சீர்திருத்த அநேக வருஷகாலமாகக் கனத்த பிரயாசப்பட்டு வந்தும் பயன்படாமற் போய்விட்டது. லாயர்கள் சட்டத்தில் அதாவது Legal Practitioners' Act-ல்லாயர்களுடைய அந்தஸ்திற்கும் பொருந்தாமலிருந்த 36-வது பிரிவை ரத்து செய்யும்படியும் பிரயாசப்பட்டு வந்தார். இந்த விஷயத்தில் இவருடைய பிரயாசை வெற்றி அடைந்தது. ஏனெனில், இந்தப்பிரிவை கவர்ன்மெண்டார் ரத்து செய்து விட்டார்கள். இவர் பொது ஜன நன்மைக்காக உழைத்து வந்ததைப் பொது ஜனங்கள் நன்குமதிக்க, இவர் நாகப்பூரில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்குச் சபாநாயகராய் நியமிக்கப்பட்டார்.

கவர்ன்மெண்டாரும் இவரை நன்குமதித்து இவருக்கு ராய்பகதூர் பட்டமும் சி. ஐ. இ. கௌரவப் பட்டமும் அளித்து கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். மாசற்ற தேசாபிமானியாகிய நம்முடைய ராய்பகதூர் அனந்தாசார்லு B. L., C. I. E. அவர்கள் செல்வசம்பத்து புத்திரசம்பத்து ஆகிய எல்லாச் சம்பத்துகளும் சம்பூரணமாக நிறைந்து இப்போது 66 வயதடைந்தவராயினும் தேச நன்மைக்காக இன்னும் பாடுபட்டு வரும்படியாக இவருக்கு இன்னும் தீர்க்காயுளையும் சுகதேகத்தையும் குறைவுபடாச்செல்வத்தையும் தந்தருளுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபமஸ்து.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னபட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

இரண்டு பெண்களை விவாகம் செய்த கேஸ்.

கேசின் விபரம்:—குற்றவாளி லாஜர் என்பவன் ஒரு ரோமன் காதலிக் கிறிஸ்தவன். இவன் ஒரு ரோமன் காதலிக் கிறிஸ்தவஸ்திரீயை விவாகம் செய்துகொண்டிருந்தான். தம்பதிகள் 1906-ம்ளு வரையில் சேர்ந்து வசித்து வாழ்ந்துவந்தார்கள். அதன்பிறகு பெண்சாதி ரெங்கூனுக்குப் போய்விட்டாள். இவன் ரெங்கூனிலிருக்கும்போது புருஷன் ஒரு ஹிந்துஸ்திரீயை இரண்டாம் தாரமாக விவாகம் செய்துகொண்டான். கிறிஸ்தவ விவாகச் சட்டத்தின்படி (Christian Marriage Act) முதல் பெண்சாதி உயிருடனிருக்கும்போது இரண்டாந்தாரம் விவாகம் செய்துகொள்ளக் கூடாது. ஆதலால் முதல் பெண்சாதி தன் புருஷன் பேரில் சென்னபட்டணம் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இரண்டாவது விவாகம் செய்த குற்றம் சாட்டினாள்.

குற்றவாளியின் டிபன்ஸ்:—இரண்டாவது பெண்சாதி ஹிந்துஸ்திரீயானபடியால் அவளைச் செய்துகொண்ட விவாகம் சட்டப்படி செலாவணியாகக்கூடியதல்லவென்று டிபன்ஸ் கூறினான்.

மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பு:—ஒரு மதத்தைச்சேர்ந்த ஒருவன் வேறொரு மதத்தைச்சேர்ந்த ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டால் அந்த விவாகம் செல்லுபடியுள்ளதா அல்லவா என்பதைப்பற்றிக் கோர்ட்டார் சந்தேகப்கொண்டு இந்தக்கேஸை ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—இந்தக் கேசில் நிகழ்ந்திருக்கும் விஷயங்களைக்கொண்டு புருஷன் இரண்டு பெண்களை விவாகம் செய்த குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் கேஸ்.

லா பாயின்ட்:—ஒருவன் ரிமாண்டு ஜெயிலிலிருக்கும்போது அவன் சம்பந்தப்பட்ட கேசில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் போலிசாரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வாக்குமூலங்களுக்கு நகல் கொடுக்கும்படி கேட்க பாத்தியமுடையவனா?

குற்றவாளி:—முத்தய்யாசாமியார்.

கேசின் விபரம்:—திருச்சினாப்பள்ளி ஜில்லா முசிரியில் ஒரு கொலை நடந்தது. இதைப் போலிசார் விசாரணைசெய்து குற்றவாளியை அரஸ்ட் செய்து ரிமாண்டு ஜெயிலில் வைத்திருக்கிறார்கள். இன்னும் மாஜிஸ்டிரேட் விசாரணை ஆரம்பமாகவில்லை. கேஸ் இன்னும் போலிசார் விசாரணையிலேயே யிருக்கிறது. இந்தக் கேஸ்சம்பந்தமாகமுசிரி சப்மாஜிஸ்டிரேட்போலிசாரிடமிருந்தும் இன்னும் சிலரிடமிருந்தும் கி. பு. கோ 164-வது பிரிவின்படி பிரமாணத்தின்பேரில் வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறார். குற்றவாளி இந்த வாக்குமூலங்களுக்கு நகல் வேண்டுமென்று சப்மாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்துகொண்டான்.

சப்மாஜிஸ்டிரேட் உத்திரவு: இ. லா. ரி. 20. சென். 189-ல் சொல்லப்பட்டிருக்கிற புல்பென்ச்சின் தீர்ப்பை ஆதாரமாகக்கொண்டு நகல் கொடுக்கப்படமாட்டாது என்று உத்திரவு பிறப்பித்தார்.

இந்த மனுவிற்கு விரோதமாக குற்றவாளி செஷன் கோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்தான். செஷன் கோர்ட்டார் மாஜிஸ்டிரேட் செய்த உத்திரவு சட்டவிரோதமென்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டிற்கு ரிபர் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—பிரஸ்தாப வாக்குமூலங்கள், கி. பு. கோ. 176-பிரிவின்படி ஒரு குற்றவாளி பார்க்க பாத்தியமுடைய வாக்கு மூலங்களல்ல. இந்தியன் சாக்ஷி சட்டம் (Indian Evidence Act) 74 – வது பிரிவின்படி பிரஸ்தாப வாக்குமூலங்கள் "பப்ளிக் டாக்குமெண்டு" களுமல்ல. மாஜிஸ்டிரேட் ஆரம்ப விசாரணைக்கு முந்தி ஒரு குற்றவாளிக்கு நகல் கொடுக்கும்படியாக கிரிமினல் புரொசீஜர் கோடு கூறுகின்றதேயொழிய மற்றப்படி ரிமாண்டிலிருக்கும் குற்றவாளிக்கு நகல் கொடுக்கும்படியாகக் கூறவில்லை. ரிமாண்டிலிருக்கும் குற்றவாளிக்கும் நகல் கொடுக்கவேண்டுமென்பது கிரிமினல் புரொசீஜர் கோடைத் தயாரித்தவர்களின் கருத்தாக விருக்குமாகில் ரிமாண்டிலிருப்பவன் நகல் கேட்டாலும் கொடுக்கவேண்டுமென்று கூறியிருப்பார்கள். ஆகவே சப்மாஜிஸ்டிரேட் செய்த உத்திரவே சரியான உத்திரவு என்று கூறி குற்றவாளி ரிமாண்டிலிருப்பதால் நகல் கொடுக்கப்படமாட்டாதென்று தீர்மானித்தார்கள்.

ஜட்ஜிகள்:— { ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சன்.
ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.

தாயாரை உதைத்துக்கொன்ற கேஸ்.

கேசின் விபரம்:—குற்றவாளி லாதுசேலரா என்பவன் கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்தவன். இவனுடைய தாயார் இவனுடன் மனஸ்தாபப்பட்டு வேறொரு வீட்டிற்குப்போய்விட்டாள். இவன் போய்க் கூப்பிட்டான். அவள் வரமாட்டேன் என்று சொல்ல, இவனுக்குக் கோபம் பிறந்து அவளை உதைக்க, அது அவளுடைய ஈரல் கொலையில் பட்டு இறந்து போய்விட்டாள். இதற்காக இவன் பேரில் இ. பி. கோ. 30-வது பிரிவில் சாட்டப்பட்டிருக்கும் கொலைக்குற்றம் சாட்டப்பட, செஷன் கோர்ட்டார் இந்தக் கேசை விசாரணை செய்து இவன் தன்னுடைய தாயாரைக் கொலைசெய்ய வேண்டுமென்று முந்தியே எண்ணம் கொண்டதாக ருஜுப்படாதபடியால் இவன் பேரில் கடுங்காயம் விளைவித்த குற்றம் ஸ்தாபித்து மூன்று வருஷக் கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

இந்த தண்டனைக்கு விரோதமாக கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—செஷன் கோர்ட்டார் இவன் பேரில் கடுங்காயம் விளைவித்த குற்றம் ஸ்தாபித்தது சரியல்லவென்று ரியார்க்கு செய்து நினையாமற் செய்த அநியாய மரணமென்கிற குற்றம் ஸ்தாபித்து செஷன் கோர்ட்டார் விதித்த மூன்று வருஷக் கடினகாவல் தண்டனையை ஏழு வருஷ கடினகாவல் தண்டனையாக உயர்த்தினார்கள்.

முக் கொலைக்கேஸ்.

குற்றவாளிகள்:— { (1) C. புல்லம் ராஜா.
(2) S. லக்ஷ்மி ராஜா வகையரு.

கேசின் விபரம்:—குற்றவாளிகளும் இன்னும் 6 பேர்களும் சேர்ந்து கோதாவரி ஜில்லாவில் வெங்கட்ராஜு என்னும் ஒரு சாவுகார் வீட்டில் 1906ளு ஆகஸ்ட்டுமீ 24உ புகுந்து அவனையும், அவனுடைய பெண்ணையும், அவனுடைய குமாரத்தியையும், அடியோ தண்டமாக அடிக்க, அவர்கள் இறந்து போய்விட்டார்கள் வீட்டிலிருந்தசொத்துக்களையும் களவாடிக்கொண்டு போய்விட்டார்கள். இரண்டாம் நாள் நடந்த பிரேத பரிசோதனையில் கொலை செய்தவர்கள் இன்னார் என்று தெரியாமல் பதினான்குநாள் சென்று போலீசார் பிரஸ்தாப குற்றவாளிகள் பேரில் சந்தேகங் கொண்டு கைதி செய்து ஸ்டேஷனில் அடைத்து வைத்திருந்தார்கள். ஆனால் இவர்கள்பேரில் குற்றம் சாட்டப் போலீசாரால் சாக்ஷியாம் சேசரிக்க முடியாமல் இவர்களை விட்டுவிட்டார்கள். இதன் பேரில் கவர்ன்மெண்டார் இந்தக் கேசைக் கண்டுபிடிக்க இன்ஸ்பெக்டர் ஜேய்சிங்கை அனுப்பினார்கள். இவர் இந்த இரண்டு குற்றவாளிகளையும் இன்னும் 6 பேர்களையும் மறுபடி அரஸ்டு செய்து இவர்கள் பேரில் சாக்ஷியமும் சேகரித்து மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் குற்றம் சாட்டினார். இந்தக் கேஸ் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு 1, 2, குற்றவாளிகளுக்குத் தூக்குதண்டனையும், 5-வது குற்றவாளிக்கு ஜென்ம தீவாந்திர தண்டனையும் விதிக்கப்பட்டார்கள். இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக மூன்று கைதிகளும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—1, 2, குற்றவாளிகளுக்கு வக்கீல் மிஸ்டர் ஜோசப் சத்திய நாடாரும், கவர்ன்மெண்டு தரப்பிற்கு மிஸ்டர் E. B. பௌலும் ஆஜரானார்கள். நான்காவது குற்றவாளி வக்கீல் வைக்கவில்லை.

கேசின் நடவடிக்கை:—மிஸ்டர் ஜோசப் சத்திய நாடார் கேசை ஆரம்பித்து பிராசிக்கியூஷன் தரப்பு சாட்சிகள் சொல்லியிருக்கும் வாக்குமூலங்களைக் கண்டனம் செய்து அப்புரூவர் சொல்லியிருக்கும் சாட்சியத்திற்கு இவைகள் பொருந்தவில்லை என்று எடுத்துக் காண்பித்துக்கொண்டு வருகிறார். கொலையுண்ட வெங்கட்ராஜு என்னும் கோமுட்டி வர்த்தகன் கொலை சம்பவம் உண்டாவதற்கு இரண்டு வருஷங்களுக்கு முந்தி கல்லபள்ளி என்கிற கிராமத்தில் வசித்துக்கொண்டிருந்தான். இவன் கொஞ்சம் ஐவேஜியுடையவன். ஒரே வருஷத்தில் திருடர்கள் இவனுடைய வீட்டில் இரண்டு முறை புகுந்து சொத்துக்களைக் கொள்ளையடிக்கொண்டு போய்விட்டார்கள். இதற்காக பட்டணவாசமான ஸ்தலத்தில் குடியிருந்தால் திருடர் பயமிருக்கமாட்டாதென்று நினைத்து வேமுலிப்பள்ளியில் ஒரு வீடு கட்டி. அதில் வாசஞ் செய்துகொண்டு வந்தான்.

ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னைவிட்டுப் போகமாட்டாதென்பது போல இவன் பட்டணவாசம் செய்யவேண்டுமென்று வேமுலப்பள்ளியில் கட்டிய வீடு போக்கிரிகள் சேர்ந்து சூதாடும் வீட்டிற்கு மூன்றாவது வீடாக விருந்தது; இந்தப் போக்கிரிகள் உள்ளூர் போலீசாரைக்கைக்குள் போட்டுக்கொண்டு வெகுகாலமாக சூதாடி அதில் அகப்படக் கூடிய பணத்தில்

போலீசாருக்கும் கட்டணம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து கொலையுண்ட வெங்கடராஜுவின் வீட்டைக் கொள்ளையடிக்க வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து, சென்ற வருஷம் ஆகஸ்ட்மீ 24உ இரவு ரட்டி என்கிற ஒரு ஸ்திரீயைக் காலணுவுக்குக்கருப்பட்டி வாங்கிவரச் சொன்னது போலச் சொல்லி வீட்டிலுள்ளவர்கள் உறங்கிவிட்டார்கள் என்பதை அறிந்து கொண்டு 1 முதல் 7 குற்றவாளிகளும் அப்புரூவர்களள் அப்பாடு C. பெத்தராஜு C. பொட்டன்னு ஆகிய எல்லோரும் வீட்டிற்குள் புகுந்து, 1-வது குற்றவாளிகையில் கத்தியை வைத்துக்கொண்டு சொத்து எங்கேயிருக்கிறதென்று வெங்கட்ராஜுவைப் பயமுறுத்த அவன் சொல்லாமல் முற்றத்திலிருந்த ஒரு கட்டிலிற் போய் படுத்துக்கொள்ள 2, 6, குற்றவாளிகள் அவனைப் பிடித்துக் கொண்டுவர முதலாவது குற்றவாளி அவனைக் கண்டதுண்டமாய் வெட்டினான். உடனே அவனுடைய பெண்சாதி விழித்துக்கொண்டு ஓடத்தலைப்பட அவளையும் வெட்டிவிட்டார்கள். அவளை வெட்டும்போது ஏன் என்னை வெட்டுகிறீர்கள் சொத்துக்கள் நகைகள் எல்லாம் பெரிய அறையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் கீழே பூமியில் புதைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னாள். திருடர்கள் கடைசியாக குமாரத்தியையும் வெட்டி விட்டு சொத்துக்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

உள்ளூர் போலீசார் இந்தக் கொள்ளைக்காரர்களுக்கு ஒக்குமத்தாயிருந்தபடியால் இந்தக் கேசைக் கண்டு பிடிக்கவில்லை. ஆகவே கவர்ன்மெண்டார் இன்ஸ்பெக்டர் ஜெயசிங்கை அனுப்பினார்கள்.

அப்பீல் நடவடிக்கை:—இந்தக் கேசில் அப்புரூவராக ஏற்பட்டவர்கள் கொடுத்திருக்கும் ஸ்டேட்டுமெண்டுகள் இதர சாட்சியத்தால் ருஜுப்படுகின்றன.

தீர்ப்பு:—கோதாவரி ஜில்லா செஷன் கோர்ட்டார் கொடுத்த தண்டனையை உறுதிப் படுத்தினார்கள். உள்ளூர் போலீசார் குற்றவாளிகளுக்கு உடந்தையாயிருந்த செய்கையைக் கோர்ட்டார் கண்டனம் செய்து ரிமார்க்கு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:— பதிலி சீப் ஜஸ்டிஸ்.

தீர்ப்பிற்கு முந்தி வாரண்டு பிறப்பித்த கேஸ்.

வாதி:—திரிபுராந்தங்க முதலியார்.

பிரதிவாதி:—மிஸ்டர் மாயர்.

கேசின் விவரம்:—பிரதிவாதி ஹான்சாலயன் ஸ்டீமர் லாண்டிங் கண்டிராக்ட்டர். இவர்பேரில் ரூ. 7500-க்கு வாதி ஹைகோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கிறார். தீர்ப்பாவதற்கு முந்தி இவர் இரண்டு மூன்றுமாதத்திற்கு ரூ. இருபதினாயிரம் கடன் வாங்கிவிட்டார் என்று வாதி கேள்விப்பட்டு இவரிடம் ஜாமீன் வாங்கும்படியாக வாரண்டு பிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். கோர்ட்டார் உத்திரவுசெய்துவிட்டார்கள்.

வாரண்டைக் கொண்டுபோன போது, மிஸ்டர் மாயர் நோயாயிருந்தும் இரண்டு டாக்டர்களுடைய சர்ட்டிபிக்கேட் காண்பித்தும் பெய்லிப் கைதிசெய்து ஒரு டோலியில் வைத்துக்கொண்டுவந்துவிட்டான்.

லாயர்கள்:—வாதி தரப்பிற்கு சொலிசிட்டர் ஜேம்ஸ்ஷார்ட்டும், பிரதிவாதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஆடமும் பேசினார்கள்.

உத்திரவு:—பிரதிவாதி எழுந்திருந்துநடக்கக்கூட சக்தியில்லாமலிக்கும்போது எப்படி ஹைகோர்ட்டின் எல்லையைவிட்டு ஓடிப்போகக்கூடுமென்று சொல்லிவிட்டுவிடும்படி உத்திரவுசெய்தார்கள். வாரண்டைக் கோர்ட்டிற்கு ரிட்டர்ன் செய்யும்படி உத்திரவுசெய்யப்பட்டது.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

நெசவுமில் பிராசிக்கியூஷன் கேஸ்.

கேசின்விபரம்:—சென்னபட்டணம் ஸ்பின்னிங் காம்மில் கம்பேனி சொந்தக்காரர் (Factorys Act) பாக்ட்டரி ஆக்டிற்கு விரோதமாக 14 வயதுக்குக் கீழ்பட்ட 9 பிள்ளைகளைத் தம்முடைய கையில் வேலையாட்களாகவைத்திருந்தார் என்றுபாக்ட்டரி ஆக்ட் 15-வது பிரிவில் சொல்லப்படும் குற்றத்திற்காக பாக்ட்டரி இன்ஸ்பெக்டரால் குற்றம் சாட்டப்பட பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டார் இந்தக் கேசை விசாரணை செய்து ஒவ்வொரு பையனை நியமித்ததற்கு ரூ. 15 ஆக 9 பையன்களை நியமித்ததற்கும் அபராதம் விதித்தார்.

மில் சொந்தக்காரர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்,

லாயர்கள்:—மில் சொந்தக்காரர் தரப்பிற்கு மெசர்ஸ் கிங் அண்டு ஜாசிலயின் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்னும் கவர்ன்மெண்டு தரப்பிற்கும் பாரிஸ்டர் மிஸ்டர் நன்சஞ்னட் கிராண்ட்டும் பேசினார்கள்.

அப்பீல் கிரௌண்ட்டுகள்:—(1) மில் சொந்தக்காரரை இன்ஸ்பெக்ட்டர் பிராசிக்கியூட் செய்வதற்கு முந்தி நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும். (2) மில் சொந்தக்காரர் பையன்களுக்கு 14 வயதிற்கு மேற்பட்டிருக்குமென்று நம்பி வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறபடியால் இ. பி. கோ. 74-வது பிரிவின்படி காப்பாற்றப்பட்டிருக்கிறார். (3) ஒரு பையனை மட்டிலும் 14 வயதிற்குக் கீழ்ப்பட்டவனென்று கர்னல் ராபர்ட்சனும் கர்னல் ரீவ்சும் ஆகிய இருடாக்டர்களும் ஏகோபித்த அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். மற்ற பையன்கள் விஷயத்தில் கர்னல் ராபர்ட்சன் 14 வயதிற்குட்பட்டவர்களென்றும் கர்னல் ரிவ்ஸ் ஏறக்குறைய 14 வயதிருக்குமென்றும் சாட்சியம் கூறியிருக்கிறார்கள். இப்படி டாக்ட்டர்கள் பேதப்பட்ட சாட்சியம் கூறியிருக்கும்போது மாஜிஸ்டிரேட் சந்தேகத்தின் நன்மையை (Benefit of doubt) மில் சொந்தக்காரருக்குக் கொடுத்திருக்க வேண்டியதிருக்க அபராதம் விதித்தது நியாயவிரோதம்.

தீர்ப்பு:—இன்ஸ்பெக்டர் மில் சொந்தக்காரருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பதற்குச் சட்டத்தில் ஆதாரமில்லை. மில் சொந்தக்காரர் பையன்களுக்கு

14 வயதிற்கு மேலிருக்குமென்று நம்பி நியமித்ததாயும் அதனால் இ. பி. கோ. 79-வது பிரிவால் காப்பாற்றப்படுவதாயும் சொல்லுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தபோதிலும் பையன்களின் வயதை நிர்ணயித்த இரண்டு டாக்டர்கள் பேதப்பட்ட அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்; மாஜிஸ்டிரேட் ஒரு டாக்டருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு மற்றொரு டாக்டருடைய அபிப்பிராயத்தை நிராகரித்தது நியாயமல்ல; ஆகவே 8 பையன்கள் விஷயமாக மாஜிஸ்டிரேட் அபராதம் விதித்திருப்பதை ரத்துசெய்கிறோம். பாக்கி, 14 வயதிற்குப்பட்ட ஒரு பையன் விஷயமாய் மாஜிஸ்டிரேட் ரூ. 15 அபராதம் விதித்திருப்பதை ரூ. 5 ஆகக் குறைத்து விதிக்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—பதில்சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஜாமீன்பேரில் விடும்படி செய்துகொண்ட மனு.

பிரியாதி:—கவர்ன்மெண்டார்.

எதிர்:—ஜெயராம்முதலி.

கேசின்விபரம்:—எதிரி சென்னபட்டணம் மிலிட்டரிபே எக்சாமினர் ஆபீசில் காஷியர் உத்தியோகத்திலிருந்தார். இவர்வசம் நடைமுதல் செலவுக்காக ஒப்புவிக்கப்பட்ட பணசம்பந்தமாக போர்ஜரிகுற்றமும் நம்பிக்கை மோசக்குற்றமும் சாட்டப்பட்டு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாரால் செஷனுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறார்.

இவர் தன்னை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்றாவது அல்லது இந்தக் கேசின் பிராசிக்கியூஷன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் கணக்கு புஸ்தகங்களைப் பார்த்து டிபன்ஸ் தயார்செய்யும்பொருட்டு பந்தோபஸ்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஹைகோர்ட்டிற்குக் கொண்டுவரும்படியாவது அனுமதி கொடுக்கவேண்டுமென்று ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் V. கிஷ்ணசாமி அய்யர் மூலியமாக மனுசெய்துகொண்டார்.

உத்திரவு:—ஹைகோர்ட்டார் இவரை ஜாமீன்பேரில்விடாமல் சனிக்கிழமைதோறும் பந்தோபஸ்துடன் ஹைகோர்ட்டிற்குக் கொண்டுவரும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்

சிட்டி சிவில் கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார்.

பாப்பர் வியாஜ்ஜியம் கொண்டுவரச்
செய்துகொண்ட மனு.

மனுதார்:—பியாட்ரிஸ் டெல்பினா மார்ட்டின்.

எதிர் மனுதார்:—கிலிபோர்ட் தாமஸ் பிராஸ்.

மனுவின் விபரம்:—ஜியார்ஜ் டௌன் பிரான்ஸ்டு யூரின் தெருவு 22-ம் நெ. வீட்டில் மனுதார் பெற்றோருடன் குடியிருக்கிறார். எதிர் மனுதார் மதிராஸ் ரெயில்வே கம்பெனியைச் சேர்ந்த கார்டு; பெஜவாடாவிலிருக்கிறார். எதிர் மனுதார் 1905ம் ஹு சென்னையிலிருக்கும்போது மனுதாரை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று மனுதாருக்குச் சொன்னார். மனுதார் ஒப்புக்கொண்டார். எதிர் மனுதார் மனுதாரை விவாகம் செய்து கொள்ளுவதாய் வாக்குத் தத்தம் செய்து கொடுத்தார். எதிர் மனுதார் பெஜவாடாவிற்குப் போனபிறகும் மனுதாரை விவாகம்செய்து கொள்ளுவதாக இரண்டு கடிதங்கள் மனுதாருக்கு எழுதியிருக்கிறார். எதிர் மனுதார் விவாகம் செய்து கொள்ளுவாரென்று மனுதார் நம்பியிருந்தார். இப்படியிருக்குப்போது எதிர் மனுதார் இருந்தாப்போலிருந்து கடந்த மார்ச்சுமீ 4உ விவாகம் செய்து கொள்ளச் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டார். மனுதார் எதிர் மனுதாரை விவாகம் செய்து கொள்ள விருப்பமுடையவராயும் தயாராயுமிருக்கிறார்.

எதிர் மனுதார், மனுதாரை விவாகம் செய்து கொள்ளமாட்டேன் என்று சொல்லி விட்டபடியால் மனுதாருடைய பிற்காலத்திய வாழ்க்கை எல்லாம் கெட்டுப்போய் விட்டது. மேலும் எதிர் மனுதார் மனுதாரை விவாகம் செய்துகொள்ளப் போகிறார் என்றும் புருஷனுடன் கூட விருந்து வாழப்போகிறதாகவும் மனுதார் தீர்மானித்துவிட்டபடியாலும் இப்போது எதிர் மனுதார் வாக்குதத்தத்தை நிறை வேற்றுமற்போயிருப்பது மனுதாருடைய உணர்ச்சிகள் தீண்டப்பட்டிருக்கின்றன. ஆதலால் எதிர் மனுதார் பேரில் ரூ. 1000 க்கு நஷ்ட வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்று மனுதார் இஷ்டமுடையவராக விருக்கிறார். ஆனால் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவர மனுதார் போதுமான ஐவேஜியற்ற பாப்பராயிருக்கிறார். ஆதலால் பாப்பர் வியாஜ்ஜியம் கொண்டுவரும்படி கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்பது மனுவின் சாராம்சம்.

எதிர் மனுதாருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது.

லாயர்கள்:—எதிர்மனுதார் தரப்பிற்கு சொலிசிட்டர் ஜேம்ஸ் ஷார்ட் ஆஜராயிருந்தார். மனுதார் தானே ஆஜராயிருந்தார்.

இந்தக் கேசில் இஷுக்கள் ஏற்படுத்துவதற்காக கேஸ் அடுத்தமீ 7உ தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

N. B. விசாரணை விபரம் அடுத்த ஆகஸ்ட்டுமீ கெஜெட்டில் அறிவிக்கப்படும்.

அலகபாத் ஹைகோர்ட்டு

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏயக்மான்.

கேசின்விபரம்:—கலகப்பிரசாத் என்பவன் ஒரு கேசில் சாட்சியம் சொன்னபோது பான்க்லால் என்பவர் பேரில் அவதூறுவார்த்தைகள் கூறினன். இதற்காக பான்க்லால் என்பவர் கலகப்பிரசாத் பேரில் மொராடாபாட் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் அவதூறு குற்றம் சாட்டினார். ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரணைசெய்து கலகப்பிரசாதிற்கு மூன்று மாத காவல் தண்டனை விதித்தார். குற்றவாளி அப்பீல் செய்துகொள்ள செஷன் கோர்ட்டாரும் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிசெய்துவிட்டார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—இங்கிலீஷ் சட்டத்தின்படி ஒருவன் சாட்சிக்கூண்டிலிருந்துகொண்டு ஒருவனைக்குறித்து அவதூறான வார்த்தைகள் சாட்சி வாக்குமூலத்தில் சொன்னபோதிலும் அது குற்றமாகமாட்டாது. ஆனால் இந்தியாவில் அப்படியல்ல.

ஒரு சாக்ஷி தன்னுடைய வாக்குமூலத்தில் அவதூறான வார்த்தைகள் சொல்ல வேண்டியது. அந்தக் கேசிற்கு அவசியமாக விருந்தால் அது குற்றமாகமாட்டாது. இல்லையேல் குற்றமாகும். அதாவது அவதூறு குற்றம் சாட்டப்பட்ட ஒரு சாக்ஷி குற்றத்தினின்று தன்னை நீக்கிக்கொள்ள வேண்டுமானால் இ. பி. கோ. 499-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விலக்குநிபந்தனைகளில் ஒன்றால் காப்பாற்றப்பட்டவனாயிருக்கவேண்டும் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ரெங்கூன் சீப் கோர்ட்

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

லா பாயின்ட்:—வீட்டில் கத்தி முதலிய ஆயுதம் வைத்திருக்கலாமா?

கேசின்விபரம்:—இரண்டு பர்மன்கள் லேக்மா என்கிற ஊரில் சண்டை போட்டுக்கொண்டார்கள். இவர்கள் ஒரே வீதியில் எதிர் எதிர் வீட்டில் குடியிருக்கிறார்கள். ஒரு பர்மன் தன்னுடைய வீட்டிலிருந்தபடி ஒரு ஈட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு வீட்டினுள்ளேயிருந்து கொண்டு எதிர்வீட்டிலிருந்த மற்றொருவனைச் சண்டைக்குக் கூப்பிட்டான். ஆயுதச் சட்டம் அதாவது Arms Act 19-வது பிரிவில் ஆயுதபாணியாகப் போகிறவன் (Going armed) கிரிமினல் குற்றத்திற்கு இலக்காகுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஈட்டியைப் பிரயோகப்படுத்திய பர்மன்பேரில் போலிசார் குற்றம் சாட்ட, இந்தக்கேசை விசாரணைசெய்த முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் ஒருவன் தன்னுடைய வீட்டிற்குள் ஆயுதபாணியா யிருப்பது அல்லது ஆயுதத்தை உடைத்தாயிருப்பது ஆர்ம்ஸ் ஆக்டின்படி குற்றமாகாதென்று சொல்லி குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவுசெய்தார். இந்தக் கேசின் ரிக்கார்ட்டுகள் உத்தியோக முறையில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்குப் போனபோது அவர் குற்றவாளி விடுவிக்கப்பட்டதை ஒப்புக்கொள்ளாமல் இந்தக் கேசைச் சீப் கோர்ட்டாரின் அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்.

சீப் கோர்ட்டார் தீர்ப்பு:—ஆயுதபாணியாகப் போகிறதென்பதற்கு (Going armed) ஆர்ம்ஸ் ஆக்ட்டில் விபரமான வியாக்கியானம் சொல்லப்படவில்லை.

ஆயினும் ஆயுதம் உடைத்தாயிருப்பதென்பதற்கும் (Carrying arms) ஆயுதபாணியாகப்போகிறதென்பதற்கும் வித்தியாசமுண்டென்று சொல்லலாம்.

ஒருவன் தன்னுடையவீட்டில் ஆயுதம் உடைத்தாயிருப்பது ஆயுதபாணியாகப் போகிறதாகமாட்டாது. ஆதலால் முதல்கிளாஸ் மாஜிஸ்டிரேட்கொடுத்த தீர்ப்பே சரியான தீர்ப்பு என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

பேதூல் போலீஸ் கோர்ட்.

பெண்சாதியை உயிருடன் புதைத்த கேஸ்.

கேசின்விபரம்:—மத்தியமாகாணம் பேதூல் ஜில்லாவில் டாமா கேய்க் என்பவனுடைய பெண்சாதி நீடித்த காலமாக நோயில் பாதைப்பட்டு வந்தனள். புருஷன் அனேக வைத்தியர்களைக்கொண்டு பார்க்கும்படி செய்தான். பெண்சாதி சொஸ்தமடைந்த பாட்டைக்காணோம். அதனால் புருஷனுக்குப்பெண்சாதியின்பேரில் வெறுப்புண்டாய்விட்டது. ஒரு நாள் ஒரு வண்டி அமர்த்திப் பெண்சாதியை அதில் ஏற்றிக்கொண்டு ஒரு பெரிய மைதான வெளிக்குச் சென்று பூமியில் ஒரு பள்ளம் தோண்டி அவளை எடுத்து அதில் புதைத்தான். பள்ளம் தோண்ட சரியான ஆயுதங்களில்லாதபடியால் பெண்சாதியின்தேகம்வெளியே புலப்பட்டுக்கொண்டிருந்தது. அதை மறைக்கும் பொருட்டு மரத்திலிருந்து தழைகளையும் இலைகளையும் பறித்தும் குத்துச்செடிகளைப் பிடுங்கியும் அதன்பேரில் போட்டு மறைத்துவைத்துவிட்டுத் திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டான். மூன்று நாள் வரையில் யாதொன்றும் தெரியாமலிருந்தது. மூன்றும் நாள் இந்த மைதானத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு மாடு இந்த புத்து அசைவதைக்கண்டு மிரண்டு ஓடிற்று. இதைக்கண்ட இடையன் புத்தைப்போய்ப்பார்த்து அது அசைவதைக்கண்டு மிரண்டு கிராமத்திற்கு ஓடிப்போய் சொல்ல, கிராமத்தார்கள் ஓடோடியும்வந்து பார்த்து இதென்ன ஆச்சரியமென்று ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருக்கையில் புத்து அசைந்துகொண்டிருந்ததுமன்றி "ஆ! ராம! ராம! நான்உயிருடன்இருக்கிறேன்" என்னும் சப்தம் கேட்டது. அப்போதும் கிராமத்தார்கள் இதென்ன பேயோ பிசாசோ என்று பயந்து அதன் அருகிற் போகவில்லை. இந்தப் பிரஸ்தாபம் கிராம அதிகாரிகளுக்கு எட்ட அவர்கள் வந்துபார்த்தபோதும் புத்து மேலிருந்த இலைகளும் குத்துச்செடிகளும் அசைந்து கொண்டிருந்தன. ராம! ராம! என்கிற சப்தமும் கேட்டுக்கொண்டிருந்தது. கிராம அதிகாரிகள் புதரின்பேரிலிருந்த இலை தழைகளைத் தள்ளிவிட்டுப்பார்க்குப்போது ஒரு ஸ்திரீ புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. உடனே அந்த ஸ்திரீயைப் பள்ளத்தினின்றும் எடுத்துப் போலீசாரிடம் ஒப்புவித்தார்கள். போலீசார் விசாரித்தபோது தான் நீடித்த காலமாக நோயாயிருப்பதாயும் புருஷன் தன்பேரில் அருவருப்புற்று வண்டியிலேற்றிக் கொண்டுவந்து புதைத்ததாகவும், 5 நாள் வரையில் அன்னம் தண்ணீர் ஆகாரமின்றிக்கிடப்பதாயும் அந்த ஸ்திரீ சொன்னாள். போலீசார் இவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். ஆஸ்பத்திரியில் 13-ம் நாள் இறந்துபோய்விட்டாள். புருஷன் அரஸ்ட் செய்யப்பட்டு மாஜிஸ்டிரேட்டின் முன்னால் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றான்.

கேஸ் இன்னும் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது.

எழும்பூர்

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் மீர் சுல்தான் மொய்தீன் சாயபு.

கிறிஸ்தவப் பாதிரிகள் இந்துப் பெண்ணைத் திருடிக்கொண்டுபோன நரசோரக்கேஸ்.

பிரியாதி:—தர்மலிங்க நயினர்.

எதிரிகள்:—(1) மிஸ்டர் ஹாரபான்ட்.
(2) மிஸ்டர்ஸ் டிரின்ஞ்பல்லோ.
(3) மிஸ்டர் மேரி,
(4) மிஸ்டர் பாக்கியம்.

கேசின் விபரம்:—பிரியாதி தர்மலிங்கநயினர் தாக்கல்செய்திருக்கும் அடியிற்கண்ட பிரியாது ஸ்டேட்மெண்டால் அறிந்துகொள்க:—

(1) எனக்கு 14 வயதுடைய ஜெகதாம்பாள் என்னும் பெயருடைய புத்திரி இருக்கின்றாள். அவள் நந்தன௵ புரட்டாசி௴ அதாவது 1882-ம்௵ அக்டோபர்௴ 5௳ பிறந்தாள். இந்தத்தேதி என்னுடைய காலஞ்சென்ற தகப்பனரால் எழுதி வைக்கப்பட்ட ஜாதகத்தால் தெரியவருகின்றது.

(2) குற்றவாளிகள் ஜெனனமிஷனைச் சேர்ந்த துரைசானிகள். சுதேசிகளுடைய வீட்டிற்குவந்து ஸ்திரீகளுக்குப்படிப்பு சொல்லிக்கொடுக்கிற வழக்கம். 3, 4, குற்றவாளிகள் பிரதிதினமும் என்னுடைய வீட்டிற்குவந்து என்னுடைய புத்திரிக்குக் கல்வி கற்பித்துக்கொண்டு வந்தார்கள். 3, 4, குற்றவாளிகள் சரிவர வீட்டிற்குவந்து படிப்பு சொல்லிக்கொடுக்கிறார்களா வென்பதைப் பார்வையிடுவதற்கு 1, 2, குற்றவாளிகள் சமயா சமயங்களில் என்னுடைய வீட்டிற்கு வருகிறதுண்டு.

(3) வீட்டில் புருஷர்களில்லாத சமயத்தில் இவர்கள் வருகிற வழக்கம்.

(4) என்னுடைய புத்திரிக்கு இனமாகப்படிப்பு சொல்லிவைக்கிறபடியால் இவர்கள் நல்லெண்ணத்துடன் படிப்பு சொல்லிவைக்கிறார்கள் என்று நம்பியிருந்தேன்.

(5) இப்படி மூன்று நாலுமாதங்களாகப் படிப்பு சொல்லிக்கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

(6) ௸௴ 18௳ வியாழக்கிழமை 3, 4, குற்றவாளிகள் மூன்று அல்லது நான்கு தடவை வந்ததாகவும் இரவில் $7\frac{1}{2}$ மணிக்கு மறுபடியும் சூளை கந்தப்ப முதலி வீதி 6-ம் நெ. வீடாகிய என்னுடைய வீட்டிற்கு வந்து நானும் என்னுடைய பெண்சாதியுமில்லாத போது என்னுடைய பெண்ணைத் திருடிக்கொண்டு போய்விட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

(7) 3, 4, குற்றவாளிகள் என்னுடைய பெண்ணைத்திருடிக்கொண்டு போய்விட்டதாகவும், என்னுடைய பாலிய புத்திரன் தன் தமக்கையினுடைய பாவாடையைப் பிடித்துக்கொண்டு போகவேண்டாமென்று தடுத்து இழுத்ததாகவும், 3, 4, குற்றவாளிகள் அந்தப் பையனைப்பிடித் திழுத்துத் தள்ளிவிட்டுப் பெண்ணை வண்டியிலேற்றிக்கொண்டு மிஷன் பயிபில் வுமன் சொசைியிட்டிக்குப் போனவுடனே கதவைச்சாற்றிக் கொண்டதாகவும் என்னுடைய புத்திரன் எனக்குச் சொன்னான்.

(8) நானும் என் பெண்சாதியும் ஜெனனமிஷனண்டைசென்று வாசலில் நின்று கூச்சலிட்டோம், அப்போது 1, 2, குற்றவாளிகள் போலீஸ்காரர்களைத் தருவித்து எங்களைத்துரத்திவிட்டார்கள்.

(9) இதன்பேரில் குற்றவாளிகள் என்னுடைய புத்திரியைத் திருடிக்கொண்டுபோனதைப் போலீசாருக்குத் தெரிவித்தேன். அடுத்தநாள் இன்ஸ்பெக்டர் விசாரணைசெய்தார்.

(10) அந்தப்பெண் பெற்றோர்களிடம் போவதற்கு இஷ்டப்பட்டால் தங்களுக்கு ஆக்ஷேபணையில்லை என்று குற்றவாளிகள் சொன்னார்கள்.

(11) என்னுடைய புத்திரி குற்றவாளிகளின் போதனையிலிருப்பதால் என்னுடன் வரமாட்டேன் என்றும் உண்மையான கடவுளைக்காணப்போகிறதாகவும் சொல்லிவிட்டாள்.

(12) அடுத்தமாதம் என்னுடைய புத்திரிக்கு விவாகம் செய்வதாய் நிச்சயம் செய்திருக்கிறேன்.

(13) 3, 4, குற்றவாளிகள் கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துகொண்ட இந்து ஸ்திரீகள் என்று கேள்விப்படுகிறேன்.

14. குற்றவாளிகள் ஜெனன இந்து ஸ்திரீகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதுபோல சொல்லிக்கொடுத்து கிறிஸ்தவமதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் என் புத்திரியைத் திருடிக்கொண்டுபோயிருக்கிறார்கள். ஆதலால் பெற்றோருடைய சட்டப்பிரகாரமுள்ள பாதுகாப்பிலிருந்த பெண்ணைத் திருடி அநியாயமாய் குற்றவாளிகள் அடைத்துவைத்திருக்கிறபடியால் முறையே இ. பி. கோ. 363, 368. பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். ஆதலால் இவர்கள்பேரில் வாரண்டுபிறப்பிக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகின்றேன்.

15. என்னுடைய புத்திரியைக் குற்றவாளிகள் ஞானஸ்நானம் பெறும்படிச்செய்து யாதேனும் ஒரு பறையனுக்கு விவாகம்செய்துவிடுவார்கள் என்றுநான் பயப்படுகிறபடியால் இப்பெண்ணை என்வசம்ஒப்புவித்துவிடும்படி உத்தரவாகவேண்டுமென்று கி. ப். கோ. 522-வது பிரிவின்படி பிரார்த்திக்கிறேன்.

உத்திரவு:—குற்றவாளிகளுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவு செய்யப்பட்டது. 26௳ விசாரணை ஆரம்பம்.

கேசின் நடவடிக்கை:—நோட்டீசைப் பெற்றுக்கொண்ட குற்றவாளிகளில் ஒரு துரைசானியாகிய மிஸ். ஹாரபான்ட் என்பவர் வக்கீல் மிஸ்டர் ஜோசப் சத்தியநாடாருக்கு வக்காலத்துக் கொடுத்து ஆஜராகும்படி செய்ததுமன்றி தானும் ஆஜரானார்.

ஜோசப் சத்தியநாடார்:—இரண்டாவது குற்றவாளியாக மிஸ் ஸ்டிரினஞ் பல்லோ 1906-ம்௵ மார்ச்சு௴ முதல் இங்கிலாண்டி லிருந்துகொண்டிருக்கிறார். பிராசிக்கியூஷன் தரப்பார் இன்னருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மிஸ் பாக்கியம் என்கிற குற்றவாளியும் மிஸ்டர் மேரி என்கிற குற்றவாளியும் இன்னார் என்று தெரியவில்லை. பயிபில் டிரெயினிங் ஸ்கூலில் மேரி என்கிற பெயருடையவர்கள் அநேகம்பே ரிருக்கிறார்கள்.

மிஸ்டர் வெங்கட சுப்பய்யர்:—ஜெனனஸ்திரீகளுக்குப் பிரதிதினம் படிப்பு சொல்லிக் கொடுக்கப்போகிற அந்த மிஸ்மேரிதான்.

மிஸ்டர் சத்திய நாடார்:—மிஸ் பாக்கியம் இன்னார் என்று ஸ்கூல் சூப்பிரண்டெண்டிற்குத் தெரியவில்லை.

மிஸ்டர் வெங்கடசுப்பய்யர்:—கோர்ட்டார் வாரண்டுபிறப்பித்தால் நான் ஆசாமிகளைக்காண்பிக்கிறேன்.

கோர்ட்டார்:—யார்பேரில் வாரண்டு?

மிஸ்டர் வெங்கடசுப்பய்யர்:—என்னுடையகட்சிக்காரருடைய வீட்டிற்குப்பிரதிதினமும்படிப்புச்சொல்லிக்கொடுப்பதாக வந்துகொண்டிருந்த ஸ்திரீகள்பேரில். இதன்பிறகு பாதிரிகள் அடித்துக்கொண்டுபோனதாகச் சொல்லப்படும் பெண்ணைப்பற்றி பிரஸ்தாபம் வந்தபோது போலிசாபிசர்கள் நோட்டீஸ் சார்வ்செய்ய வந்தபோது அந்தப்பெண்ணுக்கு ஒரு நோட்டீஸ் கொண்டுவந்தார்கள் என்றும் அதில் தம்முடைய பெயர் போடப்பட்டிருந்ததால் தாம் பெற்றுக்கொண்டதாகவும் பிறகு பார்த்ததில் தாம் மேல்விலாசம் பார்வையிட்டு அந்தப்பெண்ணிடம்கொடுக்கவேண்டுமென்றிருந்ததால் அந்த நோட்டீசை அந்தப்பெண்ணுக்கு அனுப்பிவிட்டதாகவும் மிஸ்டர் ஹாரபான்ட் என்கிற துரைசானி சொன்னார்.

கோர்ட்டார்:—அந்தப்பெண் எங்கே?

மிஸ்டர் ஹாரபான்ட்:—அப்பெண்ணினுடைய பாதுகாப்பிற்காக அந்தக்கேள்விக்கு ரகசியமாகக்கோர்ட்டாருக்குப் பதில்கூற விரும்புகிறேன்.

கோர்ட்டார்:—அந்தக்கேள்விக்கு நீர் பதில்சொல்லுவதற்குக் கட்டுப்பட்டவரல்ல. உமக்கு இஷ்டமிருந்தால் சொல்லலாம்.

மிஸ்டர் சத்தியநாடார்:—ஊர்முழுதிலும் ஆத்திரம் பரவியிருக்கிறதென்பதைத் தாங்கள் மறந்துபோகக்கூடாது.

கோர்ட்டார்:—பெண் உம்முடையவசமிருக்கிறதா?

மிஸ்டர்:—அந்தப்பெண் கேட்டுக்கொண்டபடி வேறொருவிடத்தில் வைத்திருக்கிறேன். அந்தவிடத்தைச் சொல்லும்படி கோர்ட்டார் என்னைக் கட்டாயப்படுத்தினலொழிய சொல்ல எனக்கு இஷ்டமில்லை.

கோர்ட்டார்:—அந்தப்பெண் உம்முடைய வசத்திலிருக்கிறதா?

மிஸ்டர் ஹாரபான்ட்:—ஆம்.

கோர்ட்டார்:—அவளுக்குக் கோர்ட்டாரால் சபீனா பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே: அவளை இவ்விடம் கொண்டுவரவேண்டுமே.

மிஸ்டர் ஹாரபான்ட்:—தாங்கள் உத்திரவுசெய்தால் மூன்றுதினத்திற்குள் கோர்ட்டில் ஆஜர்படுத்துகிறேன்.

மிஸ்டர் வெங்கடசுப்பய்யர்:—தகப்பனர் கோர்ட்டிற்கு வந்திருக்கிறார். பெண்ணை அவரிடம் இப்போதே ஒப்புவித்துவிடவேண்டும்.

கோர்ட்டார்:—அந்தப்பெண்ணுக்கு வயதென்ன?

மிஸ்டர் சத்தியநாடார்:—18 வயது என்று எண்ணுகின்றேன்.

மிஸ்டர் வெங்கடசுப்பய்யர்:—இதோ ஜாதகம் என்கையிலிருக்கிறது. இது அப்பெண்ணின் பாட்டனர்கையால் எழுதப்பட்ட ஜாதகம். அதன்படி 14 வயதாகிறது.

மிஸ்டர் சத்தியநாடார்:—போலிஸ் கமிஷனர் உத்தரவின்பேரில் அந்தப்பெண்ணிற்கு டாக்ட்டர் சர்ட்டிபிகேட் வாங்கப்பட்டிருக்கிறது. 18 வயது என்று சர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறார்கள்.

மிஸ்டர் வெங்:—குற்றவாளிகள் நரசோரம் செய்திருக்கிறார்கள் என்று ருஜூப்படுத்துவதற்கு நான் வேறே சாக்ஷி விடவேண்டியதில்லை. குற்றவாளிகள் அந்தப்பெண்ணை சென்னையைவிட்டு அப்புறப்படுத்தியிருப்பதே போதுமான சாட்சியம்.

மிஸ்டர் ஹார்:—நான் எனக்குத் தெரிந்தவரையில் இந்தப் பெண்ணைப்பற்றி சொல்லவிரும்புகிறேன். அனுமதி கொடுக்கவேண்டும்.

கோர்ட்டார்:—உம்முடைய வக்கில் சொல்லுவார்.

மிஸ்டர் சத்திய நாடார்:—இந்தப் பெண்ணிற்கு என்னவயது என்பதை அறிந்து கொள்வதற்காக மிஸ்டர் ஹார் பாண்ட். மிஸ்டர் சேஸ் என்கிற ஒரு டாக்டர் துரைசானியிடம் அனுப்பினர். இந்தடாக்ட்டர் 18 வயது என்று சர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறார். இது மிஸ்டர் ஹார்பாண்டினுடைய நடவடிக்கையை வெளிப்படுத்தும்.

கோர்ட்டார்:—இந்தக்கேசின் முடிவு அந்தப் பெண்ணின் வயதைப் பொறுத்ததாக விருக்கின்றது.

மிஸ்டர் வெங்:—வயது 18 ஆனல் என் கேஸ் போய்விட்டது. கோர்ட்டைவிட்டுப் போய்விடுகிறேன்.

மிஸ்டர் சத்திய நாடார்:—சட்டப்படி 16-வயதிற்குமேலிருக்க வேண்டும். கோர்ட்டார் சொல்லுவதுபோல இந்தக்கேசில் வயதுதான் முக்கியம்.

கோர்ட்டார்:—ஆம் அதுதான் முக்கியமான பாயின்ட். மிஸ்டர் சேஸ் என்கிற டாக்ட்டர்யார்?

மிஸ்டர் ஜோசப்:—அவர் M. D. என்கிற டாக்ட்டர் பட்டம் பெற்றிருக்கிறார்.

மிஸ்டர் ஹார்பனெட்:—மெக்காவிற்குப்போகும் பிரயாணிகளுடன் போகும்படியும் வரும்படியும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் டாக்ட்டர்.

கோர்ட்டார்:—என்ன காரணத்தைக்கண்டு அந்தப் பெண்ணிற்கு வயது 18 என்று நிர்ணயிக்கிறார் என்று சாட்சியம் சொல்ல மிஸ்டர் சேஸ் கோர்ட்டிற்கு வரக்கூடு மென்று நான் நினைக்கிறேன்.

மிஸ்டர் ஹாரபான்ட்:—அந்தப் பெண்ணை மறைத்துவைத்திருப்பதன் காரணமென்னவென்ருல் மறைத்துவைக்காவிட்டால் கொலை செய்துவிடுவார்கள்.

மிஸ்டர் வெங்:—அந்தப்பெண் எங்கே வைக்கப்பட்டிருக்கிருள் என்று எனக்குத்தெரியவேண்டும். சபீனு சர்வ் செய்யப்படும்போது அந்தப்பெண் வீட்டிற்குள்ளே யிருந்தனள்.

மிஸ்டர் சத்திய நாடார்:—இல்லை.

மிஸ்டர் வெங் :—நான் ருஜுப்படுத்துகிறேன். சபீனுசார்வ்செய்யப்படும்போது தகப்பனுர்பெண்ணைப் பார்த்தார். அவளை வீட்டிற்குள்ளே இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

மிஸ்டர் ஹார்பீன்ட்:—சனிக்கிழமை முதல் அந்தப் பெண் என்னுடைய வீட்டிலில்லை.

கோர்ட்டார்: —கோர்ட்டார் கவனிக்கக்கூடாத பாயின்டைப்பற்றி நீங்கள் தர்க்கம் செய்கிறீர்கள்.

மிஸ்டர் வெங்க:—கேஸ் மிகவும் உக்கிரமானது.

கோர்ட்டார்:—பாதகமில்லை. பெண்ணைக்கொண்டு வராமற்போனல் வாரண்டு பிறப்பிப்போம் மூன்று நாளைக்குள் கொண்டுவருவீரல்லவா ?

மிஸ்டர் ஹாரபீனட்:—ஆம் கொண்டுவருகிறேன்.

கோர்ட்டார்:—இந்தக்கேஸ் மறுபடியும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும்.

மறுபடியும் மேற்படிமீ 29வ திங்கட்கிழமை இந்தக் கேஸ் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மிஸ் ஹாரபான்ட் என்கிற பாதிரி துரைசானி இந்தப்பெண்ணையும் மற்ற 3, 4, குற்றவாளி ஸ்திரீகளையும் அழைத்துக்கொண்டு ஆஜராயிருந்தார். கோர்ட்டில் வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களை எண்ணமுடியாது. ஏட்டிலடங்காது. கோர்ட்டுமுழுதிலும் நிறைந்திருந்ததன்றி ரோட்டிலும் வெகுஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பிராசிக்கியூஷன்தரப்பிற்கு மிஸ்டர் வெங்கடசுப்பய்யரும் பிரதிவாதிகளின்தரப்பிற்கு சத்தியநாடாரும் ஆஜரானுர்கள். கோர்ட்டார், "இந்தக்குற்றவாளிகளுக்குச் சம்மன் அனுப்புவதாக உத்தேசித்திருக்கிறோம். ஏதேனும் சொல்லவேண்டியதாகவிருந்தால் சொல்லும்" என்று மிஸ்டர் ஜோசப் சத்தியநாடாரைக் கேட்டார்கள். இந்தக்கேசில் பெண்ணினுடைய வயதுதான் முக்கியமென்றும் பிராசிக்கியூஷன்தரப்பார் காண்பிக்கும் ஜாதகத்தை நம்பக்கூடாதென்றும் குற்றவாளிகள் வாங்கியிருக்கும் டாக்ட்டர் சர்ட்டிபிக்கேட்டையே நம்பவேண்டுமென்றும் மேலும் அன்று இரவு பெண்களின்தகப்பன் காண்பித்த ஜாதகம் வேறே; இப்போது கோர்ட்டின்முன்பு காண்பிக்கும் ஜாதகம் வேறுயிருக்கிறதென்றும் மிஸ்டர் ஜோசப் சத்தியநாடார் சொன்னுர். மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் சுபாவத்திலேயே இந்துமத வைராக்கியர். இந்தக்கேசில் அவர் பேசுவதற்குக் கேட்கவா வேண்டும்! பிறந்தவுடன் எழுதிய ஜாதகத்தின்முன் டாக்ட்டர்கள் பார்த்துத் தோராயமாய்ச் சொல்லும் சாட்சியம் நிற்காதென்று சொன்னுர். மேலும் இந்தப்பெண்ணின் வயது 18 என்று கூறியிருக்கும் மிஸ் சேஸ் யாதொரு வைத்தியப்பட்டமும் பெறறவரல்ல என்றும் அதனுல் அவர் இங்கிலாண்டில் பிராக்ட்டிஸ்செய்யக் கூடாதென்று உத்தரவுபிறக்க இவ்விடம் வந்துவிட்டார் என்றும் அந்தச்சாட்சியத்தை நம்பக்கூடாதென்றும் மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் சொன்னுர். அதன் பிறகு கோர்ட்டார் 3, 4, பிரதிவாதிகள் அன்று இரவு பெண்ணின்வீட்டிற்குப்போய் பெண்ணை அழைத்துக் கொண்டுவந்தது வாஸ்தவமா என்று மிஸ்டர் சத்திய நாடாரைக் கேட்டார்கள். அதெல்லாம் பொய் என்று சொல்லிவிட்டார். இதன்பேரில் பெண்ணைப் பெற்றோர்கள் அழைத்துக்கொண்டுபோவதைக்குறித்து கட்சிவாதம் நடந்தது. பெண்ணின் தகப்பன் பெண்ணைப் பலாத்காரமாய் கூட அழைத்துக்கொண்டுபோகலாமென்றும் அப்படி அழைத்துக்கொண்டுபோவதைக் கோர்ட்டார்கூட தடுக்கமுடியாது என்றும் சொன்னுர். மிஸ்டர் சத்தியநாடார் பெண்ணினிடம் தகப்பன் சென்ருல் கலகமுண்டாகுமென்று சொன்னுர். இப்படி வெகு நாழிகை பரியந்தம் கட்சிவாதம் நடந்தது.

கோர்ட்டார் உத்தரவு:—குற்றவாளிகளுக்குச் சம்மன் அனுப்பும்படி உத்திரவுசெய்தார்கள்.

N. B. பெண் வாக்குமூலம் எழுதிவைக்க விரும்புவதாக மிஸ்டர் சத்தியநாடார் கூறினுர். பெண் இந்தக்கேசில் குற்றவாளியுமல்ல சாட்சியுமல்ல. ஆகையால் அவளுடைய வாக்குமூலத்தைக்கோட்டார்கேட்கப்பாத்தியப் பட்டவர்களல்லவென்று கோர்ட்டார் சொல்லிவிட்டார்கள். கோர்ட்டில் வேடிக்கைப்பார்க்க வந்தவர்களில் சிலர் கூடி பெண்ணிடம் போய்ப்பேசும்படி தாயாரைத்தூண்டினுர்கள். தாயார்பெண்ணிற்குச் சமீபத்தில் போனுல் கலகம் உண்டாகுமென்று போலீசார் தடுத்துவிட்டார்கள். பெண்ணை அழைத்துக் கொண்டு போவதற்குப் போலீஸ் பந்தோபஸ்து வேண்டுமென்று குற்றவாளிகள் கேட்டுக்கொண்டார்கள் கோர்ட்டார் பார்வையிலிருக்கும் பரியந்தம் கலகம் நடக்காமலிருப்பதற்குக் கோர்ட்டார் ஏற்பாடுசெய்யக் கூடுமென்றும் கோர்ட்டைவிட்டு வெளியே போகும் போது போலீஸ் பந்தோபஸ்து தேவையாகவிருந்தால் அதற்குப் போலீஸ் கமிஷனரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கோர்ட்டார் சொல்லிவிட்டார்கள். இதன்பிறகு குற்றவாளிகளில் சிலர் போலீஸ் பந்தோபஸ்து கேட்க போலீஸ் கமிஷனர் ஆபீசுக்குப்போய் விட்டார்கள். அவர்கள் திரும்பிவருகிற பரியந்தம் பெண் பல கிறஸ்தவப்பிரசங்கிகளாகிய காட்டிகிஸ்ட்டுடைய பந்தோபஸ்தில் கோர்ட்டிலேயே வைக்கப்பட்டிருந்தாள்.

போலீசார் கமிஷனர் உத்திரவின்பேரில் சில கான்ஸ்டேபில்களும் ஒரு சார்ஜண்டும் போலீஸ் கோர்ட்டிற்கு வந்தார்கள். இந்தப் பெண்ணைப் பெற்ருேருடன் அனுப்புவிக்கலாமா அல்லது பாதிரி துரைசானிகளுடன் அனுப்பலாமாவென்று மாஜிஸ்டிரேட்டிற்கு யோஜனை உண்டாயிற்று. அவரே ஒன்றும் முடிவு செய்யக் கூடவில்லை. ஆகவே மிஸ்டர் மீர் சுல்தான் மொய்தீன் சாயபும், சீப்பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் கிளார்க்கும் சேம்பருக்குள் சென்று அந்தப் பெண்ணைத் தருவித்துப் பார்த்து அவள் எந்த விடத்திற்குப் போகவேண்டுமென்று அபேக்ஷைப் படு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 MAR 1908
MADRAS.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை,

பத்திராசிரியர்— M. A. லோகனுதன்

பிரசுரிக்கிறவர்கள்:—ந ராதாகிருஷ்ண அண்டு கோ

[...]யம் 2.] சென்னப்பட்டணம், 1907ளு அக்டோபர்மீ [பாகம் 10

அடக்கம்

		பக்கம்
1.	உருவப்படம்—சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு ஜட்ஜியாகவிருந்த சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் B. L. K. C. I. E.	
2.	சர். S சுப்பிரமணிய அய்யரவர்களின் சரித்திரச்சுருக்கம்.	II
3.	இராஜத்துரோகக் கூட்டங்களைத் தடுக்கும் படியான 1907ம் ளுத்திய மசோதா ஆகட் ...	339
4.	முக்கியமான தீர்ப்புகள்.	343
5.	பிரிவி கவுன்சில் அப்பீல் வியாஜ்ஜியங்கள்.	348

சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டில் நீடித்த காலம் ஜட்ஜியாகயிருந்த சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு கிழ்மீ உத்தியோகத்தினின்று நீங்கி பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். இவருடைய சரித்திரத்தைக்குறித்து 1907-ம்ஞ ஆகஸ்டுமீ பிரசுரமான இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரஞ் செய்திருக்கின்றோம். மகாபுத்திமான் எப்பேர்க்கொற்ந சிக்கலான வியாஜ்ஜியங்களையும் புத்தி கூர்மையால் சிக்கறுத்து தீர்ப்பு சொல்லுவார். தம்முடைய சகோதர ஜட்ஜிமார்கள்கொண்ட அபிப்பிராயத்திற்கு விரோதமான அபிப்பிராபத்தை இவர் ஒரு கேஸில் கொண்டபோதிலும் ஆங்கிலேய ஜட்ஜிக்கு அஞ்சி தம்முடைய அபிப்பிராயத்தை புறக்கணிக்கமாட்டார். இவர் காலம் சென்ற ஜட்ஜி முத்துசாமி அய்யர் அவர்கள் இறந்து போன பிறகு அவருடைய ஜட்ஜி ஸ்தானத்திற்கு நியமிக்கப் பட்டவர். கவர்ன்மெண்டாரும் பொது ஜனங்களும் கனம் பொருந்திய முத்துசாமி அய்யர் அவர்களை எப்படி மதித்துவந்தார்களோ அதுபோலவே சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களையும் மதித்து வந்திருக்கிறார்கள். ஜட்ஜி சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் உத்தியோகத்தை ராஜநாமா கொடுத்ததை கவர்ன்மெண்டார் அங்கீகரித்துக்கொண்டு அவர்களின் கவர்ன்மெண்டிற்குச்செய்த உதவிகளைச் சிலாகித்துப்பேசி: அடியிற்கண்டபடி கவர்ன்மெண்டு கெஜெட்டாகிய போர்ட் செண்ட் ஜியார்ஜ் கெஜட்டில் தாக்கல்செய்து கொண்டிருக்கிறார்கள்.

சர் S. சுப்பிரமணிய அய்பர் அவர்கள் ஜட்ஜியாகயிருந்த காலத்தில் அவருடைய சரித்திரத்தையும் உருவப்படத்தையும் நம்முடைய கெஜெட்டில் பிரசுரித்து அவருடைய பார்வைக்கு ஒரு சஞ்சிகையும் அனுப்பினோம். கனம்பொருந்திய அய்யர் அவர்கள் அதைப்பார்வையிட்டு சந்தோஷமடைந்து இந்த கெஜெட்டு தென்தேசத்திலுள்ள தமிழ் ஜனங்களுக்கு பெரும்பயனை விளைவிக்கக் கூடியதாகயிருக்கிறதென்று அபிப்பிராயம் கூறியதற்கு ரூ 200 - சம்மானம் செய்து ஆசீர்வதித்திருக்கிறார் ஆகவே கனம் அய்யர் அவர்கள் நம்முடைய கெஜெட்டின் போஷகரானபடியால் அவர்களால் நாம் பாராட்டியிருக்கும் நன்றியையும் காண்பிக்கும்பொருட்டும் வந்தனமளிக்கும் பொருட்டும், இம்முறை கெஜெட்டிலும் இரண்டாம் முறையாக அவருடைய உருவப்படத்தைப் பிரசுரஞ் செய்திருக்கின்றோம்.

விஞ்ஞாபனம்.

என்னுடைய கிரகத்தில் நடந்த துக்க சம்பவத்தாலும் அது காரணமாக உத்தியோகத்தினின்று ஒரு மாதம் விலகியிருக்கும்படியாக நேரிட்டதாலும், அக்டோபர் நவம்பர்மீ சஞ்சிகைகளை காலாகாலத்தில் அனுப்பிவிக்கக் கூடாமல் போய்விட்டதைக் குறித்து விசனிக்கிறேன். இனி டிசம்பர்மீ முதலாகிலும் அந்தந்தமாத கெஜட் அந்தந்த மாதக்கடைசியில் சந்தாதாரர்களுக்குக் கிடைத்து வரும்படியாக ஏற்பாடு செய்யும் பொருட்டு அக்டோபர் நவம்பர்மீ சஞ்சிகைகளை மும்மூன்று பாரங்களுடன் (12-பக்கம்) பிரசுரித்திருக்கின்றோம். நாம் ஆதியில் வகுத்த விளம்பரத்தில் ஒவ்வொரு சஞ்சிகைகளையும் 40-பக்கங்கள் அடக்கிக்கொண்டிருக்குமென்று நாம் சொல்லியிருந்தபடியால் அந்த வாக்குத்தத்திற்கு விரோதமின்றி பாக்கியுள்ள பக்கங்கள் 56 - ம் சிலா சிலாவாக டிசம்பர்மீ முதல்வரும் சஞ்சிகையில் சேர்க்கப்பட்டு பூர்த்திசெய்யப்படும். ஆதலால் அக்டோபர் நவம்பர்மீ சஞ்சிகைகள் காலதாமதமாகவும் குறைவான பக்கங்களுடனும் அனுப்பிவைக்கப்பட்டதைக் குறித்து கனம்பொருந்திய சந்தாதாரர்கள் ஆயாசப்படக் கூடாதென்றும் மிகவும் வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எம். எ. லோகநாதன்,
எடிட்டர்.

சந்தாதாரர்களுக்கு கைகெடியாரம் இனாம்.

சீமையிலிருக்கும் நம்முடைய பத்து வரவு கம்பெனியார் நாம் கேட்டுக்கொண்டபடி ஆயிரம் கெடியாரங்களை ஒரே கட்டாய்கட்டி அனுப்பினால் சேதப்படுமென்று சொல்லி ஒவ்வொரு வாரமும் 100-கெடியாரம் சென்னையில் நமக்குக் கிடைக்கும்படி அனுப்புவதாக எழுதியிருக்கிறார்கள். எழுதியிருந்தபடி இந்த வார ஸ்டீமரில் 100-கெடியாரங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இவைகளை டிசம்பர்மீ 4உ புதன்கிழமை முதல் நம்முடைய ரிஜிஸ்டர் நிலவரிசைக்கிரமப்படி சந்தாதாரர்களுக்கு அனுப்பப் போகின்றோம். இப்படியே வாரவாரம் வரும் கெடியாரங்களை அனுப்பி டிசம்பர் மாதத்துக்குள் எல்லா சந்தாதாரர்களுக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய தயாராயிருக்கிறோம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்
மானேஜர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 MAR 1908
MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2] சென்னப்பட்டணம், 1907ஞ அக்டோபர்மீ [பாகம். 10.

உ

தேவி துணை.

PREVENTION OF SEDITIOUS MEETINGS BILL.

இராஜத்துரோகமான கூட்டங்களைத் தடுக்கும் மசோதா ஆக்ட்.

கனம் பொருந்திய இந்தியா கவர்ன்மெண்டார் அடுத்த நவம்பர்மீ 1உ கூடப்போகிற வைசிராய் சட்ட நிரூபண சபையில் இராஜத்துரோகமான கூட்டங்களையும் பொது அமரிக்கையைக் கெடுக்கக் கூடிய கூட்டங்களையும் தடுப்பதற்குத் தக்கதான ஒரு சட்டமிருக்கவேண்டுமென்று உத்தேசித்து (Prevention of Seditious Meetings Act) அதாவது ராஜத்துரோகமான கூட்டங்களைத் தடுக்கும் சட்டம் என்று பெயர்கொண்ட சட்டத்தைப் பாஸ் செய்விக்கப்போகிறார்கள். இந்த மசோதா ஆக்ட்டில் ஒன்பது பிரிவுகள்மட்டிலும் அடங்கியிருக்கின்றமையால் அவைகளை நம்முடைய கெஜெட்டில் வழக்கம்போல பிரத்தியேகமாய் அச்சிடாமல் அவைகளின் சாராம்சத்தை நம்முடைய நேயர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு இவ்விடத்திலேயே எடுத்து எழுதப் புகுந்தனம். இந்த மசோதா ஆக்ட்டின் ஆரம்பத்தில் ஆக்ட்டின் கருத்துகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன, ராஜத்துரோகமான கூட்டங்களையும் பொது அமரிக்கையைக் கெடுக்கக்கூடிய கூட்டங்களைத் தடுப்பது தான் இந்த ஆக்ட்டின் கருத்துக்களாகும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. முதல் பிரிவில் இந்த ஆக்ட்டின் பெயர் "ராஜத்துரோகமான கூட்டங்களைத் தடுக்கும் ஆக்ட் என்றும் பிரிடிஷ் இந்தியா முழுதிலும் ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவரப்படக் கூடிய ஆக்ட்டாயினும் இந்த ஆ ட் எந்தெந்த விடத்தில் ஊர்ச்சிதத்திலிருக்கவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அபிப்பிராயப்படுகிறார்களோ அந்தந்த விடங்களை கவர்ன்மெண்டு கெஜெட்டில் அப்போதைகப்போது பயிரங்கப்படுத்தி பிறகு அந்த விடங்களில் இந்த ஆக்ட்டை ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவில், லோக்கல் கவர்ன்மெண்டார் அதாவது மாகாண கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட்டின் அதிகாரத்தைக்கொண்டு தங்களுடைய மாகாணம் முழுதையுமாவது அல்லது எந்தப் பாகத்தையாவது பொதுக்கூட்டங்கள் கூடப்படக்கூடாத (Proclaimed area) என்று கவர்ன்மெண்டு கெஜெட்டில் பயிரங்கப்படுத்தி இந்த ஆக்ட்டை ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவரலா மென்றும், அப்படி ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவந்தாலும் 6 மாத கால மட்டிலும் தான் ஊர்ச்சிதத்திலிருக்கக்கூடு மென்றும், மறுபடியும் அந்த விடத்தில் இந்த ஆக்ட் ஊர்ச்சிதத்திலிருக்கவேண்டியது அவசியமென்று லோக்கல் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுவார்களேயாகில் இன்னொ

ரு ஆறுமாதம் இந்த ஆக்ட் அந்த விடத்தில் ஊர்ச்சிதத்திலிருக்கும்படியாக ஒரு உத்தரவு பிறப்பிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது பிரிவில் (Public Meeting) அதாவது பொதுக் கூட்டம் என்கிற பதங்களுக்கு தாற்பரியம் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது (1) சகல ஜனங்களுமாவது அல்லது ஒருவகுப்பராவது அல்லது பொது ஜனங்களின் ஒருபாகமாவது விஜயம் செய்யக்கூடிய மீட்டிங்கும் (2) ஒரு பிரத்தியேகமான விடத்தில் கூட்டம்கூடி டிக்கட்டு பெற்றுக் கொண்டவர்கள் மட்டிலும் வரக்கூடிய மீட்டிங்கும் (3) இருபது பேர்களுக்குமேல் கூடியிருக்கும்படியான கூட்டமும் பப்ளிக் மீட்டிங் என்று எண்ணப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. நான்காவது பிரிவில், இந்த ஆக்ட்டால் எந்தெந்த விடம் தீண்டப்பட்டிருக்கிறதென்று கவர்மெண்டு கெஜட்டில் பயிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றதோ அந்த விடத்தில் பொது அமரிக்கையைக் கெடுக்கக் கூடியவாவது அல்லது ஜனசமுகத்தின் உணர்ச்சியைப் பொங்கும்படி செய்யக் கூடியவாவதுள்ள பேச்சுகளைப் பேசவாவது அல்லது தர்க்கம் செய்யவாவது அல்லது எந்த விதமான அரசாங்க விஷயத்தைக் குறித்துப் பேசவாவது அல்லது இம்மாதிரியான விஷயங்களைக் குறித்த துண்டு விளம்பரங்களையும் பத்திரிகைகளையும் பிரசுரிக்கவாவது யாதொரு விதமான கூட்டங் கூடாதென்றும், அப்படி கூட்டம் கூடவேண்டியானால் பிரதான பட்டணங்களில் போலிஸ் கமிஷனருக்கும் வெளியூர்களில் ஜில்லா சூப்பிரண்டெண்டிற்குப் மூன்று தினங்களுக்கு முந்தி அறிவித்து அவருடைய எழுத்து மூலமான உத்தரவு பெற்றுக்கொண்டு கூட்டம் கூடவேண்டுமென்றும், போலிஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திற்குக் குறையாத ஒரு போலிசாபிசரை அக்கூட்டத்திற்கு இரண்டுமூன்று போலிசாபிசரை அனுப்பி அம்மிட்டிங்கின் நடவடிக்கையைப்பற்றி ரிப்போர்ட் அனுப்பும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்சொல்லப் பட்டிருக்கின்றது. ஐந்தாவது பிரிவில், ஜனங்கள் கூட்டம் கூடிப் பேச வேண்டியதற்காக அனுமதி கொடுக்கவேண்டுமென்று போலிஸ் கமிஷனருக்காகிலும் அல்லது ஜில்லா போலிஸ் சூப்பிரண்டெண்டிற்காகிலும் எழுதிக் கேட்டுக்கொண்டால், மீட்டிங்கு பொது அமெரிக்கையைக் கெடுக்கக் கூடிய மீட்டிங் என்றாவது அல்லது ஜன சமூக உணர்ச்சியைக் கிளப்பிவிடக் கூடிய மீட்டிங்கென்றாவது அவருடைய புத்திக்குப் பட்டால் அவர் உத்தரவு கொடுக்கக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறாவது பிரிவில், எவன் ஒருவன், இந்த ஆக்ட்டிற்கு விரோதமாகக் கூடப்பட்ட மீட்டிங்கில் சம்பந்தப்படுகிறானோ அவனுக்கு 6 - மாதவரையில் ஜெயில் காவல் தண்டனையாவது அல்லது அபராத தண்டனையாவது அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனையாவது விதிக்கப்படுமென்றும் இப்படிப்பட்ட மீட்டிங்குகள் இந்தியன் பீனல்கோட் 8-வது அத்தியாயத்திலும் கிரிமினல் புரொஸீஜர் கோட் 9 - வது அத்தியாயத்திலும் கூறப்பட்டிருக்கும் சட்ட விரோதமான கூட்டங்களாக எண்ணி நடவடிக்கை நடத்தப்படுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. 7 - வது பிரிவில் தெருவில் நின்று பிரசங்கம் செய்பவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது இந்த ஆக்ட்டால் எந்தவிடம் தீண்டப்பட்டிருக்கிறதோ அந்தவிடத்தில் ஒருவன் போலிஸ் கமிஷனருடையவாவது அல்லது போலிஸ் சூப்பிரண்டெண்டினுடையவாவது உத்தரவைப் பெறாமல் அவ்விடத்திலுள்ள ஜனங்களுக்கு பொது அமரிக்கையைக் கெடுக்கும்படியான அல்லது அவர்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விடும்படியான அல்லது அரசாங்கத்தைப் பற்றிய விஷயங்களைக் குறித்தாவது ஏதேனும் பிரசங்கம் செய்தால் அப்படிப்பட்டவனை வாரண்டில்லாமல் அரஸ்ட்செய்து அவனுக்கு 6 - மாதகடுங்காவல் தண்டனை விதிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எட்டாவது பிரிவில் பஞ்சாப் மாகாணத்திலும் கீழ் வங்காள மாகாணத்திலும் மீட்டிங்குகள் கூடக் கூடாதென்று 1907-ம் ௵த்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்கள் பிறப்பித்த ஆர்டினன்ஸ் (Ordinance) உத்தரவு இந்த ஆக்ட்டால் ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒன்பதாவது பிரிவில் இந்த ஆக்ட் பிறந்த தேதி முதல் மூன்று வருஷ காலம் முடியும்பரியந்தம் ஊர்ச்சிதத்திலிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவே, இந்த ஆக்ட்டை வாசித்துப் பார்த்தாலே பயங்கரமாயிருந்துகொண்டிருக்கிறது. ராஜத்துரோகத்தின் நிழலைக்கூட காணக்கூடாத இத்தேசத்தில்கவர்மெண்டார் ராஜத்துரோகத்தை அடக்குவதற்காக ஒரு சட்டம் பிறப்பிப்பது, இந்தியாவில் ஊர்ச்சிதத்திலிருக்கும் சட்டங்களைப் பரிகாசம் செய்வதற்குச் சமமாக இருக்கின்றது ராஜத்துரோகம் அன்னியதேசத்தாருக்கு உட்பட்டிருக்கும் ஒருதேசத்தில் எப்போது உண்டாகுமென்றால் இந்த அரசாங்கத்தாரின் குணாதிசயங்களைத் தெரியாத ஆரம்பகாலத்திலிருக்கக் கூடும். ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்த தேசத்தை வசப்படுத்தும் அக்காலத்திலும் இந்தியன்பினல்கோட் உண்டான காலத்திலும் சாதாரணமாய் ராஜத்துரோகம் தேசத்தில் அதிகமாயிருந்திருக்க வேண்டும். இந்தியன் பினல்கோடைச் செய்தவர்கள் ராஜத்துரோகத்தை அடக்குவதற்கான பிரிவுகள் அதிகமாக இ. பி. கோடில் சேர்ப்பது அனாவசியமென்று நினைத்து சேர்க்காமலிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தாலேயே தேசத்தில் அந்தக்காலத்தில் அரசாங்கத்தார் பார்த்துப் பயப்படும்படியான அவ்வளவு ராஜத்துரோகமிருந்ததில்லை என்பதற்குத் தகுந்தசாக்ஷியமாயிருக்கின்றது இப்போது இந்தியாவின் ஆளுகையை ஈஸ்ட் இந்தியாகம்பெனியாரிடம் பிரிடிஷார் பெற்றுக்கொண்டு நேரே ராஜ்ஜியபாரம் செலுத்த ஆரம்

பித்து இப்போது 50-வருஷங்களாகின்றன. இந்த 50-வருஷத்தில் இந்தியாவிலிருக்கும் பிரஜைகளுக்கு கவர்ன்மெண்டார் பேரில் பிரியம் உண்டாகி அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து வந்திருக்கிறார்கள். இந்த 50-வது வருஷத்தில் கவர்ன்மெண்டார் தங்களுடைய பாகைக்ஷயில் பிரஜைகளைப் பயிலவைத்து ஆயிரக் கணக்கான அனேகர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கொடுத்து அன்னோர்களுடைய உதவிகளையும்பெற்று ராஜ்ஜயபாரம் செலுத்தி வருகின்றார்கள். இந்த 50 - வருட காலத்தில் கவர்ன்மெண்டார் தாலுக்காபோர்ட் ஜில்லாபோர்ட் முனிஸிபாலிட்டி முதலிய நியமங்களை பிரஜைகளிடம் ஒப்புவித்து அவைகளைப்பரிபாலித்து வரும்படி கற்றுக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த 50 வருஷ காலத்திற்குள், கடந்த 22-வருஷங்களாக இத்தேசத்தில் மகாமேதாவிகளான புத்திமான்களிருக்கின்றார்கள் என்று இந்தியர்களுடைய பார்லிமெண்டாகிய காங்கிரஸ் மகாசபை கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காண்பித்துக்கொண்டு வந்திருக்கின்றது இந்த ஐம்பது வருஷகாலத்தில், கவர்ன்மெண்டைச் சதிசெய்யும்படியான யோசனையுள்ள சந்தர்ப்பங்கள் என்று கவர்ன்மெண்டார் சந்தேகப்பட்ட சந்தர்ப்பங்களாகிய ஜுபிலி கொலைகளும், பிளேக் சச்சரவுகளும், கெம்பு கலகங்களும் சாதாரண சந்தர்ப்பங்களையொழிய கவர்மெண்டு சம்பந்தமான யோஜனை அவைகளில் யாதொன்றுமில்லை என்று கவர்ன்மெண்டாரே அறிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த 50-வருட காலத்திற்குள் இப்போது நமக்குச்சக்கிரவர்த்தியாராகவிருக்கும் மாட்சிமை தங்கிய ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தியாரும் அவருடைய செல்வப் புதல்வராகிய பிரின்ஸ் ஆவ் உவேல்ஸ் என்கிற இளவரசரும் இத்தேசத்திற்கு வந்து சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்துவிட்டு இந்தியப் பிரஜைகள் பிரிடிஷ் சிம்மாசனத்தின்மீது வைத்திருக்கும் ராஜ விசுவாசத்தின் எல்லையைக்கண்டு பிடிக்க முடியாமல் இந்தியர்களின் மீது அன்புநிறைந்த இருதயங்களுடன் திரும்பிச் சுதேசம் சென்று நாளைக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு அன்பான சமாசாரங்கள் சொல்லி அனுப்புகிறார்கள். ஆகவே இந்த 50 - வருஷகாலத்தில் அரசும் குடியும் ஒன்றுபட்டு ஒரு மனதாயிருந்து தேசத்தைத்பலவிதத்திலும், விர்த்திசெய்துகொண்டு வந்திருக்கையில் கவர்மெண்டார் இருந்தாப்போலிருந்து ஒரு கொடிய சட்டத்தைப்டாஸ் செய்துஜனங்கள் இதுகாறும் அனுபவித்துவந்த ஒரு பெரும் சுதந்தரத்தின் தலையில் அடிக்க எத்தனிப்பது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கின்றது. இந்த ஆக்டை ஏற்படுத்துவதற்கு கவர்ன்மெண்டார் என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால் இந்தியா முழுதிலும் ராஜத்துரோகம் பரவிவருகிறதென்றும் அதை அடக்குவதற்காக இந்த சட்டம் பிறப்பிக்கப்போகிறதாகவும் சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டார் நம்தேசத்தில் பரவிவரும் எந்த முயற்சியைக்கண்டு ராஜத்துரோகம் பரவி வருகிறதாக எண்ணிப் பயப்படுகிறார்கள் என்று ஆராய்ந்து பார்ப்போம்.

அப்படி ஆராயின் லார்ட் கர்ஜனுடைய பிரேரேபனையின் பேரில் கவர்ன்மெண்டார் வங்காளத்தைப் பிரிக்க எத்தனித்தார்கள். எத்தனிக்கும் போதே வங்காள மாகாணவாசிகள் தங்களுடைய மாகாணத்தைப்பிரிக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டாருக்கு மனு மகஜர் முதலியவைகளை அனுப்பினார்கள். இந்தியா மந்திரியாருக்கு மனு செய்துகொண்டார்கள். இந்துக்களும் முகமதியர்களும் சேர்ந்து கூட்டங்கள் கூடி மாகாணத்தைப் பிரிக்கக்கூடாதென்று தீர்மானங்கள் செய்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா மந்திரியாருக்கும் அனுப்பினார்கள். இவ்வளவு ஆக்ஷேபனைகளையும் கவர்ன்மெண்டார் புறக்கணித்துவிட்டு வங்காளத்தைப்பிரித்து, பிரிக்கப்பட்ட மாகாணத்திற்கு சர். பி. புல்லரை லப்டினன்ட் கவர்னராக நியமித்தார்கள். வங்காள மாகாண ஜனங்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து ஒரு மனதுடன் ஆக்ஷேபனை செய்ததை எப்போது கவர்ன்மெண்டார் புறக்கணித்து விட்டார்களோ குடிகளின் இஷ்டப்படி அரசுமுறை செலுத்தாத அரசாங்காத்தார் இனிதங்களுக்கு என்ன நன்மையைச் செய்யப்போகிறார்கள் என்று வங்காள வாசிகள் நினைத்து தங்களுக்காக வேண்டிய காரியங்களைத் தாங்களே செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். இந்த வங்காள ஜனங்கள் இதற்கு முன் ஒன்றுபட்டிருந்தாலும் இல்லாமற்போன போதிலும் கவர்ன்மெண்டார் ஜன சமுக அபிப்பிராயத்திற்கு விரோதமாக வங்காளத்தைப் பிரித்தது இந்த மாகாண வாசிகளை ஒன்றுபடுத்தி விட்டது. இதன்பேரில் வங்காளமாகாணத்தை எப்படியாவது மறுபடியும் ஒன்று சேர்த்துவைக்கும்படியான சட்டவிரோத மில்லாதவுமான உபாயங்களைத் தேடவேண்டுமென்று எண்ணி சீமையிலிருந்து வரும்படியான சாமான்களை தாங்கள் வாங்காமலிருந்தால் சீமை கைத்தொழிலாளிகளும் வர்த்தகர்களும் தங்களுடைய சாமான்களின் விற்பனை குறைந்து போனதின் காரணத்தை உணர்ந்து வங்காளத்தைச்சேர்த்து விடும்படி இந்தியா மந்திரியைக் கேட்டுக் கொள்ளுவார்கள் என்றும் அப்படி கேட்டுக் கொள்ளுவார்களேயாயின் இந்தியா மந்திரியார் தம்முடைய தேச ஜனங்களின் நிமித்தமாகவாவது மறுபடியும் வங்காளத்தைச் சேர்த்துவிட இந்தியா கவர்ன் மெண்டாருக்கு உத்தரவு செய்வார்கள் என்று அபிப்பிராயப்பட்டு இனி சீமைச் சாமான்களை வாங்குகிறதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார்கள். எப்போது அன்னிய நாட்டுச் சாமான்களை வாங்குகிறதில்லை என்று தீர்மானம் உண்டானதோ அப்போதே ஜனங்களுக்குத் தேவையான சாமான்களை உள் நாட்டிலேயே தயார் செய்து கொள்ளும்படியான எண்ணம் உண்டானது. உண்டாகவே உள் நாட்டுக் கைத்தொழில்களை விர்த்திசெய்யும்படியான வழிகளை நாடவேண்டு மென்று

புத்திக்குப்பட சுதேசிய முயற்சி இத்தேசத்தில் தலை எடுத்துப்பரவ ஆரம்பித்தது. இது ஒருபுற மிருக்க சுதேசிய முயற்சி நம் தேசக் கைத்தொழிற்களை விர்த்திசெய்வதில் மட்டிலு மிருந்தால் போதுமான தல்லவென்றும் அரசாங்க விஷயத்தில் கூட சுதேசியத்தை நாடவேண்டும் மென்று அதாவது சுய ராஜ்ஜியம் இந்தியாவில் ஸ்தாபிக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் சிலர் கக்ஷி சொல்லி வருகின்றார்கள். இந்த கட்சிகாரர், இந்தியாவில் பிரிடிஷ்காரருக்கு யாதொரு பற்றுமின்றி சுய ராஜ்ஜியம் இந்தியாவில் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்று கட்சி சொல்லி வந்தபோதிலும் இப்போதிருக்கும் கவர்ன்மெண்டாருடன் சண்டை செய்து அவர்களைப் புறப்படுத்தி விட வேண்டுமென்று சொல்லவுமில்லை யோஜனை பாசனை செய்யவுமில்லை. பிரிடிஷ் ஜனங்கள் மிகுந்த தர்மச் சிந்தனை யுடையவர்களானபடியால், பிரஜைகள் அவர்களுடைய தேசத்தை அவர்களே பரிபாலித்துக் கொள்ள பக்குவிகளாயிருப்பதைப் பார்த்தால் தாங்களே அவர்களிடம் தேசத்தை ஒப்புவித்து விடுவார்களென்றும் ஆதலால் இந்தியர்கள் எல்லோரும் சுய அரசாங்கம் இந்தியாவில் ஸ்தாபிக்க முயலவேண்டுமென்று போதித்து வருகின்றார்கள். கைத்தொழில்களை விர்த்தி செய்யவேண்டுமென்கிற சுதேசிய முயற்சிக்காக ஆங்காங்கு மீட்டிங்குகள் கூட்டம் கூடிப் பேசி யோஜனை பாசனை செய்து வருகின்றார்கள். சுய ராஜ்ஜியம் ஸ்தாபிக்கவேண்டுமென்கிற கக்ஷிக்காரர்கள் அதிகமாயில்லாமற் போனபோதிலும் அவர்களும் சமயா சமயங்களில் பயிரங்கமாய்ப் பேசி வருகின்றார்கள். ஆகவே சுதேசிய முயற்சிக் கூட்டங்களிலும் சரி, சுயராஜ்ஜிய முயற்சிக் கூட்டங்களிலும் சரி இப்போதிருக்கும் அரசாங்கத்தாரைச் சதி செய்யவேண்டுமென்கிறதாக சிறிதும் எண்ணமில்லை. அப்படியிருந்தும், அரசாங்கத்தார் அன்னியர்களாகையால் இந்த சுதேசிய முயற்சியைக் கண்டு ராஜத்துரோகம் என்று அபிப்பிராயப்பட்டு அஞ்சி அதை அடக்க முயன்றுவருகின்றார்கள். இத்தேச அரசமுறையிலிருக்கும் கோணலைப்பார்த்துபொதுஜனங்கள் அதிர்ப்தி கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லவேண்டுமே யொழிய அவர்கள் ராஜத்துரோகமான எண்ணம் கொண்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

நிற்க, ராஜத்துரோகக் கூட்டங்களைத் தடுக்கும்படியான இந்த ஆக்ட்டைப் பாஸ் செய்வதற்கு கவர்ன்மெண்டார் சொல்லும் காரணத்தை எடுத்துக் கூறுவோம். ஸ்ரீலா லஜபதி ராயையும், சர்தார் ஆஜிட் சிங்கையும் தேசப் பிரஷ்டை செய்ததை முன்னிட்டு பஞ்சாப் மாகாணத்தில் ஜனங்கள் பொதுக்கூட்டங்கள் கூடி ஆத்திரமாய்ப் பேசினால் பொது அமரிக்கை கெட்டுப்போகுமென்று கவர்ன்மெண்டார் முன் யோஜனை செய்து அந்த மாகாணத்திலும் இதற்கு முன் ஏற்கனவே சிறிது கொந்தளிப்புடனிருந்த கீழ்வங்காள மாகாணத்திலும் பொதுக்கூட்டங்கள் கூடக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்தார்கள். (Ordinance No. 1 of 1907) இந்த ஆர்டினன்ஸ் என்கிற உத்தரவிற்கு உயிர் 6 மாதந்தான். இந்த ஆர்டினன்ஸ் என்கிற உத்தரவு சென்ற மேமீ பிறப்பித்தபடியால் நவம்பர்மீ 10உயில் இறந்து போகின்றது. ஆகையால் இந்த விடங்களில் பொதுக்கூட்டங்கள் கூடக் கூடாதென்று உத்தரவு செய்யவேண்டியதாயிருப்பதாகவும் மேலும் இந்தியா முழுதிலுமே ராஜத் துரோகமான எண்ணம் பரவியிருப்பதாலும் அதை அடக்க இம்மாதிரி சட்டம் ஒன்று தயாராயிருக்கவேண்டுமென்றும கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டார் பஞ்சாப் மாகாணத்திலும் கீழ்வங்காள மாகாணத்திலும் ஆர்டினன்ஸ் உத்தரவு பிறப்பித்தபிறகு இந்த இரண்டு மாகாணங்களிலும் உத்தரவிற்கு விரோதமாக கூட்டங்கள் கூட்டப்பட்டதாகச் சொல்ல முடியாது. அப்படியிருந்தும் கவர்ன்மெண்டார் இந்த மசோதா ஆக்ட்டைப் பாஸ் செய்விக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இது வரையில் மசோதா ஆக்ட்டின் பிரிவுகளைப்பற்றியும், இந்த மசோதா ஆக்ட் உண்டானதற்கு கவர்ன்மெண்டார் சொல்லும் காரணத்தையும் எடுத்துக் கூறிக்கொண்டு வந்தோம். இப்போது பிரிவுகளைச் சோதித்துப் பார்ப்போம். இருபது பேர்களுக்கு மேல் வீட்டில் ஒரு கூட்டம் கூடினாலும் அதுவும் இந்த ஆக்ட்டின்படி பொதுக்கூட்டமாகும். ஆதலால் சுகதுக்கங்களில் நம்முடைய கிரகங்களில் கூடும் கூட்டமும் ஒரு சமயம் ஆக்ஷேபிக்கப்படக் கூடியதாக விருக்கும். இன்னும் ஊன்றிச் சொல்லப்போனால் நம்முடைய வீட்டில் நடக்கும் சுக துக்கங்களை சிறப்பாய்க்கொண்டாடுவது போலிசாருடைய இஷ்டத்தைப்பொருத்ததாக இருக்கின்றது. மேலும் பொதுஜனங்கள் எந்த விஷயத்தைக் குறித்தாகிலும் மீட்டிங்கு கூடவேண்டுமானால் போலீஷ் கமிஷனருடைய உத்தரவையாகிலும் அல்லது போலிஷ் சூப்பிரண்டெண்டினுடைய உத்தரவையாகிலும் பெறவேண்டும். இந்த மீட்டிங்குகளுக்கு உத்தரவு கொடுப்பது அவருடைய இஷ்டத்தைப் பொருத்தாகயிருக்கின்றது. மேலும் இந்த ஆக்ட்டின் இரண்டாவது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒரு ஊரில் இந்த ஆக்ட்டை ஊர்ச்சிதத்திற்குக் கொண்டு வரவேண்டுமானால், முதலில் லோக்கல் கவர்ன்மெண்டார அந்த விடத்தை கவர்ன்மெண்டு கெஜட்டில் பிரசுரப்படுத்த வேண்டும். இரண்டாவது இந்தியா கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட்டை அந்த ஊர் எந்த மாகாணத்திலிருக்கிறதோ அந்த மாகாணம் முழுதிலும் ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஆகையால் கவர்ன்மெண்டாருக்கு ஒரு ஊரார் பேரில் சந்தேக மிருந்தாலும் அதற்காக மாகாணமுழுதிலும் கஷ்டப்படவேண்டிய தாயிருக்கிறது சுபகாலத்திலாவது துக்ககாலத்திலாவது இருபதுபேர்களுக்குமேல் ஒருவனுடைய வீட்டில் கூடியிருந்து அந்த வீட்டுக்காரனுக்கும் ஒரு போலிஸ் காரனுக்கும் விரோத மிருந்தால் அந்தக் கூட்டத்தார் அரசாங்க சம்பந்தமான பேச்சைப் பேசினார்களென்று சார்ஜ்செய்து அதற்குத்தகுந்தபடி இரண்டு சாக்ஷிகளையும் தயார்செய்து அக்கூட்டத்திலிருந்த ஒவ்வொருவனையும் தண்டித்து வைக்கலாம். ஆகவே பொய்க் கேஸ்கள் ஜோடிக்கத்

தெரியாதென்று சொல்லமுடியாத நம்முடைய தேசப்போலிசாரிடம் இந்த ஆக்ட்டால் ஒரு பெரிய வெட்டுவாளை ஒப்புவித்திருக்கிறார்கள். எந்த விதத்தில் யோஜித்துப்பார்த்தாலும் ஆக்ட் தேசத்தாருக்கு அபாயகரமானதா யிருக்கின்றது. நாகரீகம் பொருந்திய இங்கிலாண்டு பிரான்சு, பெல்ஜியம், ஜெர்மனி, அமரிக்கா முதலிய தேசங்களில் இம்மாதிரி சட்டம் யாதொன்றையும் காணேம். அமெரிக்கா தேசத்தில் பிரஜைகள் கூட்டம்கூடி குறைகளைத் தெரிவிக்க் வேண்டுமென்று அரசாங்கத்தார்களே உத்தரவு செய்திருக்கிறார்கள். இங்கிலாண்டு தேச சரித்திரத்தைப் பார்த்தால் மூன்றாவது ஜியார்ஜ் ஆண்டுவந்த காலத்தில் ஒரு ஆறுமாத கால தேசம் கொந்தளிப்புகொண்டிருந்த காலத்தில் 50 பேர்களுக்குமேல் கூட்டம் கூடக்கூடாதென்று உத்தரவு செய்யப்பட்டிருந்தபோதிலும் இம்மாதிரியான சட்டம் எந்தக் காலத்திலும் உண்டாக்கப்பட்டதில்லை. ஒரு சமயம் லண்டன் நகரிலுள்ள ஜனங்கள் கட்டுப்பாடு செய்து கொண்டு கோட்டையை முற்றுகை போட்டார்கள். அந்த சமயத்தில்கூட இமமாதிரி ஆக்ட் ஒன்று அத்தேசத்தில் பிறப்பிப்பது அவசியமென்று அப்போதிருந்த ராஜ தந்திரிகள் நினைக்கவில்லை. பிரிடிஷ் அரசாங்கத்தாரை இவ்வுலகத்தில் முன்னுக்குக்கொண்டு வந்த எது என்னவென்றால் அவர்கள் பிரஜைகளுக்குக் கொடுத்திருக்கும் பேச்சு சுதந்தரமே என்று சொல்ல வேண்டும். ஆகையால் பிரிடிஷ் பிரஜையாகயிருக்கிற ஒவ்வொருவனுக்கு மிருக்கும் பயிரங்கமாய்ப்பேசும் சுதந்தரத்தைக் கவர்ன்மெண்டார்கபோதித் தனமாய்ப் பிடுங்கி விடப்போகின்றார்கள். மேலும் மதம், ஆசாரம், கொள்கை, நடை, உடை, பாவனை முதலிய விஷயங்களில் அரசாங்கத்தாரிடமிருந்து பேதப்பட்ட பிரஜைகளடங்கிய இத்தேசத்தில் பிரஜைகளுக்குப் பயிரங்கமாய் கூட்டங்கூடி குறைகளைப் பேசி அறிவிக்கும்சுதந்தரமிருப்பது அவசியத்திலும் அவசியம். தேசக்குறைகள் என்கிற ஜலத்தை அரசாங்கம் என்கிற தடாகத்திற்குப் பாய்ச்சுவதற்குப் பொதுக் கூட்டங்கள் கூடிப் பேசும் சுதந்தரம் ஒன்றே நேரான தலைப்பு வாய்க்காலாயிருக்கின்றது. இந்த முக்கியமான தலைப்பு வாய்க்காலின் முகத்துவாரத்தைக் கெட்டியாக அடைத்துப்போட்டால், தடாகம் அடிக்கடி புதிய ஜலம் பெற்று தன்னுடைய குணதிசயத்தை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் வசதியை இழந்து பாசி பிடித்து அக்கம் பக்கத்தில் போகும் ஜனங்களுக்கு துர்நாற்றத்தை வீசும். அப்போது என்ன நேரிடும்? இதுவரையில் பொறுமையாக விருந்த ஜனங்கள் துர்நாற்றம் சகிக்க முடியாமல் கூடுமானால் ஒன்று தடாகத்தைக் புதிப்பிக்கும்படியாகவாவது அல்லது அடியோடு எடுத்துப் போடும்படியாகவாவது ஆரம்பிப்பார்கள். ஆதலால் இந்த ஆக்ட் பாஸ் செய்யப்படும் விஷயத்தில் இந்த தேசத்தில் பெரும் குழப்பத்தை உண்டாக்கி கவர்ன்மெண்டாரைக் கவலை என்கிற சமுத்திரத்தில் ஆழ்த்திவிடும். ஆகவே இந்த ஆக்ட் அரசுக்கும், குடிக்கும் ஆக இருதரத்தாருக்கும் தீமைகளை விளைவிக்கக் கூடியதாயிருக்கின்றது. இந்தியா என்கிற யானையின்பேரில் அம்பாரி வைத்து ஏறியிருக்கும் கவர்ன்மெண்டு நிர்வாகிகள் யானையின் வாலில் பட்டாசிக் கட்டைக் கட்டிக் கொளுத்திவிட்டு அதை ஓட்டப் பார்க்கிறார்கள். யானை பயப்படாமல் செல்லுகின்றதோ அல்லது மிரண்டு வெறி கொள்ளுகின்றதோ அனுபவம் அறிவிக்கவேண்டும்.—

IMPORTANT RULINGS.
முக்கியமான தீர்ப்புகள்.

காண்டிராக்ட்:—ஒருவன் தன்னுடைய நிலத்தைக் குத்தகைக்கு விடுவதாக ஒப்புக்கொண்டான். இப்படி ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக ஒரு எகிரிமெண்டு உடன்படிக்கையும் எழுதிக் கொடுத்தான். ஆனால் அந்த எகிரிமெண்டு ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. எகிரிமெண்டில் கண்டபடி எகிரிமெண்டு எழுதிக்கொடுத்தவன் தன்னுடைய நிலத்தைக் குத்தகைக்குவிடத் தவறிப்போய்விட்டான். எகிரிமெண்டு எழுதிவாங்கினவன் எழுதிக்கொடுத்தவனைக் கட்டாயப் படுத்தும்படியாக (Specific Relief) ஆக்ட்டின்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். கக்ஷிக்காரர்கள் செய்துகொண்ட உடன்படிக்கை ரிஜிஸ்டர் செய்யப்படாமற் போனபோதிலும் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ருஜுப்படுத்த வென்று எகிரிமெண்டை சாக்ஷியமாக கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளலாமென்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—சீனிவாசன் V. வெங்கட்ருஜு. 17 மதிராஸ் லாஜர்னல் 218.

பத்திரப் பதிவு:—சட்டப் பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய ஒரு நிலதஸ்தாவேஜி ரிஜிஸ்டர்செய்யப்படாவிட்டால் அதைசாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஆனால் தாவர சங்கம சொத்துக்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் ஒரு பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் இந்த தஸ்தாவேஜி தாவர சொத்து சம்பந்தப்பட்டவரையில் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படாமற் போனபோதிலும் சங்கம சொத்து சம்பந்தப்பட்டவரையில் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படுமென்று பர்மா சீப் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.—மால்மாயட் V. செட்டி, 13 பர்மா லா ரிப்போர்ட் 149.

பிரிவி கவுன்சில் அப்பீல்:—ஒரே விஷயம் சம்பந்தப்பட்ட அனேக வியாஜ்ஜியங்கள் ஒன்றாய் விசாரணை செய்யப்பட்டு அவைகளுக்கெல்லாம் ஒரே தீர்ப்பு கீழ்க்கோர்ட்டாராலும் ஹைகோர்ட்டாராலும் சொல்லப்பட்டன. பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்று ஹைக்கோர்ட்டாரை உத்தரவு கேட்க, எந்தெந்த வியாஜ்ஜியங்களில்

வியாஜ்ஜிய மதிப்பு ரூபா. பதினாயிரத்திற்கு மேலிருக்கிறதோ அந்த வியாஜ்ஜியங்களுக்கு அப்பீல் செய்துகொள்ளும்படியாக உத்தரவு செய்யப்பட்டது. பாக்கி வியாஜ்ஜியங்களுக்கும் பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல்செய்துகொள்ளும்படி உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்த வியாஜ்ஜியங்களின் வியாஜ்ஜிய மதிப்பைத் தனித்தனியே பார்த்தால் மதிப்பு ரூபா. பதினாயிரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த போதிலும் எல்லா வியாஜ்ஜியங்களையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய ரூ பதினாயிரத்திற்கு வருகிறபடியாலும், இவைகள் எல்லாவற்றிற்கும் ஒரே தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும் இவைகள் எல்லாம் சி. பு. கோ. 506-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற வியாஜ்ஜியங்களைச் சேர்ந்தனவாயிருக்கிறபடியாலும் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கலாமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—டியோ நாரயின்சிங் V. குன்னிலிங் 34. கல். 329.

ஹிந்து விதவை :—ஒரு ஹிந்து விதவைக்குக் கொடுக்கப்பட்ட ஜாகை அவளுக்குப் போதுமா போதாதா என்கிற பிரஸ்தாபம் அந்தந்தக் கேசிற்குத் தகுந்தபடி தீர்மானிக்கவேண்டும். இதைக் குறித்துக் கீழ்க்கோர்ட்டார்கள் என்ன முடிவு செய்திருக்கிறார்களோ அதில் ஹைகோர்ட்டார் இரண்டாவது அப்பீலில் பிரவேசிக்கமாட்டார்கள் என்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். கிருஷ்ணா V. ரங்குபாய்.—9 பம். லா ரிபோர்ட் 382.

அப்பீல் :—சாமல்பூர் என்பது மத்தியமாகாணத்தில் ஒருஜில்லா சாமல்பூர் சப்கோர்ட்டார் 3—9—05ல் ஒரு வியாச்சியத்திற்குத் தீர்ப்பு சொன்னார்கள். இத்தீர்மானத்திற்கு விரோதமாக ஜில்லாக் கோர்ட்டில் 17—10—05ல் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. இதற்குள்ளாக சாமல்பூர் என்கிற ஜில்லாவை கவர்ன்மெண்டார் 16—10—05ல் விளம்பரம் பிரசுரித்து வங்காளத்துடன் சேர்த்து விட்டார்கள். ஜில்லாக் கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்திற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள வேண்டுமானால் கல்கத்தா ஹைகோர்ட்டில் செய்துகொள்ள வேண்டுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். [illegible] கல்கத்தா லாஜர்னல் 550.

பிளீடர்.—ஒரு கேசின் விசாரணையைத் தள்ளிவைத்துக்கொள்ளும்படி பேசமட்டிலும் வக்காலத்து வாங்கிய பிளீடர் முழுக்கேசையும் நடத்த வக்காலத்து வாங்கினவராக எண்ணப்படமாட்டார் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.—சர்ட்டிஸ் சந்திரா V. அயுரூ பிரசாத், இ. லா. ரி. 34 கல் 402.

அடமானம் :—A என்பவன் தன்னுடைய யானையை B என்பவனிடம் அடைவைத்து கடன்வாங்கினான். A என்பவன் இரண்டுமாத காலத்திற்குள் கடனைச் செலுத்தாவிடில் யானை B என்பவனுக்குச் சொந்தமாகவேண்டுமென்று A என்பவனும் B என்பவனும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இரண்டு மாதகாலம் சென்று A என்பவன் கடனைத்தீர்க்கவில்லை. இரண்டு மாதகாலம் சென்றபிறகு A என்பவன் யானைக்குச் செலுத்தவேண்டிய வரி நிலுவைக்காக கவர்ன்மெண்டார் யானையை ஏலம் போட்டார்கள். B என்பவன் ஏல விற்பனையை ஆக்ஷேபிக்காமல் தான் கொடுத்த கடனைப் பெறுவதற்காக A என்பவன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். இரண்டு மாதங்களுக்குப் பிறகு யானை B என்பவனுக்குச் சொந்தமாய்ப் போய்விட்டபடியாலும் இப்படி சொந்தமாகப்போன பிறகு கவர்ன்மெண்டார் யானையை ஏலம் போட்டிருக்கிறபடியாலும் B என்பவன் A என்பவன் பேரில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரக் கூடாதென்று அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள் யுடித் நாரேயின் V. கூஷியோநரேயின், 4 அலகபாத் லா ஜர்னல் 340.

ஜீவனாம்சம் :—ஒரு இந்து விதவையும் அவளை ஆதரிக்கக் கடமைப்பட்ட முதல் பிரதிவாதியும் ஒரு கரார் நாமா செய்து கொண்டார்கள். இந்த கரார் நாமாவில் என்ன சொல்லப்பட்டிருந்ததென்றால் முதல் பிரதிவாதி மாதம் ஒன்றுக்கு விதவைக்கு ரூ 1000 ஜீவனாம்சம் கொடுத்துவந்தால், அவளுக்கு கவர்ன்மெண்டார் முதல் பிரதிவாதி குடும்பத்திற்குக் கொடுத்துவரும் குடும்பம் பென்ஷனில் யாதொரு பாத்திதையுமில்லை என்று எழுதப்பட்டிருந்தது. முதல் பிரதிவாதி ஜீவனாம்சம் கொடுக்கத் தவறிப் போய்விட்டான். விதவை வியாஜ்ஜியம் கொண்டு வந்தாள். விதவை கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் கவர்ன்மெண்டார் கொண்டு வந்திருக்கும் பென்ஷனைக் குறித்ததல்ல வாகையால், இந்த வியாஜ்ஜியத்தை சிவில் கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்ய அதிகார மிருக்கிறதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ருஜா வெங்கட்ட, V. லக்ஷ்மி நரசிம்மா 2 மதிராஸ் லா டைப்ஸ் 188.

சொந்த பாத்தியதை:—ஒரு அன்னியன் பக்கத்து வீட்டுக்காரன் மனையை தன்னுடைய சொந்தமனை என்று எண்ணி அதில் கட்டடம்கட்டுவானேயானால் வேறே ஏதேனும் காரண மிருந்தாலொழிய கட்டடம் உள்பட நிலத்தைப் பெறுவதற்கு நிலத்தின் சொந்தக்காரனுக்கு பாத்தியதை யிருக்கிறதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—விநாயக ரூஸ் V. வித்தியாசங்கர் 9-பம்பாய் லா. ரி. 405.

பெந்தகம் :— இரண்டாவது பெந்தகத்தின்மீது வியாஜ்ஜியம் கொண்டு வரும்போது முதல் பெந்தகம் வைத்துக் கொண்டவனைக் கக்ஷிக்காரனாகச் சேர்க்க வேண்டுமென்பது அவசியமல்லவென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 7 குர்டி யோசில் V. சந்திரகா, 5-கல் லாஜர்னல் 611.

முகமதிய சட்டம் :—ஒரு முகமதிய தாயார் ஒரு வீட்டைத் தன்னுடைய புத்திரிக்குத் தானம் செய்தாள். பிறகு தாயார் தன்னுடைய புத்திரியுடன் அதே வீட்டில் வசித்து வந்தாள். தாயார் தானம் செய்யப்பட்ட வீட்டில் தன்னுடைய புத்திரியுடன் வசித்து வந்தது ஷை தானத்தை முகமதிய சட்டபடி செல்லுபடியுள்ள தானமென்றும் ஷை தானத்தால் ஷை வீடு புத்திரிக்குச்சொந்தமாய்ப் போய்விட்டதென்றும் இனைப் பதைப் பாதிக்கமாட்டாதென்று சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள்.-வெட்டில் பானு V. பக்குரு குட்டி, 2 மதிராஸ் லா டைம்ஸ் 180.

டிக்கிரியை நிறைவேற்றல்:—மேலொப்பம் போட்டவன் பேரிலும் உள்ளபடி கடன் வாங்கினவன் பேரிலும் ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தது. டிக்கிரி ஓல்டர் மேலொப்பம் போட்டவன் பேரில் டிக்கிரியை நிறைவேற்றினான். டிக்கிரி பிறந்து மூன்று வருஷம் சென்ற பின்பு கடனாளிபேரில் டிக்கிரியை நிறைவேற்ற மனுக்கொடுத்தான். முதலில் மேலொப்பம் போட்டவன்பேரில் டிக்கிரியை நிறைவேற்றினது காலாவதி தோஷகாலத்தைமட்டு படுத்தாதென்றும் டிக்கிரி பிறந்த மூன்று வருஷத்திற்குள் டிக்கிரியை நிறைவேற்றியிருக்கவேண்டுமென்றும் பர்மா சிப் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

ஹிந்துவிதவைபட்ட கடன்:—ஒரு ஹிந்து வியாபாரி வார்சில்லாமல் இறந்துபோனான். அவனுடைய விதவை வார்சு கிரமத்தில் புருஷனுடைய சொத்துக்களை அடைந்து வியாபாரத்தையும் நடத்திவந்தனள். அவள் ஷை வியாபாரத்தை நடத்திவந்த வகையில் சிலபேர்களிடம் கடன் வாங்கியிருந்தாள். இப்படியிருக்கும் தறுவாயில் அவள் இறந்துபோய்விட்டாள். இவள் இறந்துபோனபிறகு ஷை சொத்திற்கும் வியாபாரத்திற்கும் வார்சாக வரவேண்டிய அவளுடைய புருஷனுடைய பந்துக்கள் ஷை சொத்தையும் வியாபாரத்தையும் அடைந்தார்கள். இவர்கள் தாங்கள் விதவைப்பட்ட கடனுக்குக் கட்டுப்பட்டவர்களல்லவென்று டிபன்ஸ்கூற, ஷை சொத்துக்களிலிருந்து கடனை வசூல் செய்து கொள்ளும்படி வாதிகளுக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது. W. N. 1907,155.

ஹிந்து விதவை:—ஒரு சேர்ந்த இந்து குடும்ப சகோதரர்கள் தங்களுடைய குடும்பச் சொத்தைப் பாகப் பிரிவினை செய்து கொள்ளுகிற காலத்தில் தங்களுடைய இறந்துபோன சகோதரனின் விதவைக்கும் ஒரு பாகம் கொடுத்தால் அந்த பாகம் அவளுடைய ஜீவனாம்சத்திற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது என்று எண்ணப்பட வேண்டும். ஆகையால் அவள் இறந்துபோன பின்பு அந்த பாகத்திற்கு எந்தச் சகோதரர்களுடைய பாகங்களிலிருந்து அவளுக்குபாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்தப் பாகத்திற்கு வார்சாக வர பாத்தியப்பட்டவர்கள் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.—திரிபுரசுந்திரி V. தக்ஷணமோகன், 11 கல். வீக்கிலி நோட்ஸ் 699.

சேர்ந்த இந்து குடும்பம்:—1882-ம் ளுத்தில் ஒரு சேர்ந்த இந்து குடும்பத்தலைவனால் பிதிரார்ஜிதமான குடும்பச் சொத்துக்கள் முதலில் ஒரு முறை ஒருவனிடம் பெந்தகம் வைக்கப்பட்டது. அதே சொத்துக்களை 1893-ம் ளுத்தில் இரண்டாம் முறையாக வேறொருவனிடம் பெந்தகம் வைக்கப்பட்டது. இரண்டாவது பெந்தகம் வைத்துக்கொண்டவன் முதல் பெந்தகக்காரனுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்து பெந்தகத்தை மீட்டு தான் வைத்துக்கொண்டு இரண்டு பெந்தகத்திற்கும் தனக்குச் சேரவேண்டியதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவந்து 1895-ம்ளு மார்ச்சுமீ ஒரு டிக்கிரி பெற்றான். இந்த டிக்கிரியை நிறைவேற்றி ஷை பெந்தகச் சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவந்தார். ஏல விற்பனையும் கோர்ட்டாரால் 1907-ம்ளு அக்டோபர்மீ 25உ காயப்படுத்தப்பட்டது. இந்த வியாஜ்ஜியத்தில் வாதி, பிரதிவாதியின் புத்திரர்களையும் பௌத்திரர்களையும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கவில்லை. ஆகவே இவர்கள் (புத்திரர்களும் பௌத்திரர்களும்) ஷை பெந்தகச் சொத்திலிருக்கும் தங்களுடைய பாகத்தை பெந்தகம் பெற்றவர் வாங்கியிருக்கும் டிக்கிரி கட்டுப்படுத்த மாட்டாதென்று சொல்லி தங்களுடைய பாகத்தை வாங்கிக்கொள்ள வியாஜ்ஜியம் கொண்டு வந்து ஒரு டிக்கிரி பெற்றார்கள். இதன் பிறகு பெந்தகம் வைத்துக்கொண்டவன் தனக்குச் சேரவேண்டிய பெந்தகத் தொகையில் வீதாச்சாரப்படி புத்திரர்களிடமிருந்தும் பௌத்திரர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டுமென்று 1907-ம்ளு ஏப்பிரல்மீ 6உ வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். இப்படி வியாஜ்ஜியம் கொண்டு வரலாமென்றும் செல்லுபடி யுள்ளதென்றும் இதற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 147-வது அல்லது 132-வது ஆக்ட்டின்படி காலாவதி தோஷம் உண்டாகவில்லை என்றும் அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் :—ஒரு குற்றவாளி தன்பேரில் சாட்டப்பட்ட ஒரு குற்றத்தை ஒப்புக்கொண்டான். மற்றொரு சமயம் அவனைக் கேட்டபோது தான் அந்த குற்றத்தைச் செய்யவில்லை என்று சொன்னான். அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு சொன்ன சமாசாரத்தை அனுசரித்துச் சொன்ன சாக்ஷியமுமில்லை. இப்படியிருக்கும்போது கோர்ட்டார் அவன் குற்றம் செய்தேயிருக்கிறான் என்று நம்புவதற்கு இடமிருந்தாலொழிய அவன் ஆதியில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை சாக்ஷியாக ஏற்றுக்கொண்டு அவனைத் தண்டிக்கக் கூடாது ஒரு குற்றவாளி தன் வசமிருக்கும் ஒரு பொருள்

தான் அடித்த திவட்டிக் கொள்ளையில் அகப்பட்ட பொருள் என்று ஒரு போலிஸ் ஆபீசரிடம் ஒப்புக்கொண்டால் அப்படி குற்றவாளி போலிசாரிடம் ஒப்புக்கொண்டது செலாமணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜூரி :—பலபேர் சட்ட விரோதமான கூட்டம் கூடி கலகம்செய்து அதில் எதிரிகளுக்கு கடுங்காயம் விளைவித்தாகக் குற்றம் சாட்டப்பட்டு செஷனுக்குக் கமிட் செய்யப்பட்டிருந்தார்கள். செஷன்ஸ் ஜட்ஜி கேசை விசாரணைசெய்து ஜூரிகளுக்குக் கேசின் சாராம்சத்தை எடுத்துக் கூறிக்கொண்டு வரும்போது "ஆகவே ஜூரர்கள் கலகம் நடந்ததென்று முடிவு செய்தால் சட்ட விரோதமான கூட்டத்தில் சேர்ந்த ஒவ்வொருவனும் காயம் விளைவித்த குற்றத்தையாவது அல்லது கடுங்காயம் விளைவித்த குற்றத்தையாவது செய்திருக்கிறான் என்று இ. பி. கொ. 149-வது பிரிவின்படி தீர்மானிக்கவேண்டு"மென்று சொன்னார். ஆனால் குற்றவாளிகள் கூட விரோதமான கூட்டம் கூடவில்லை என்று ஜூரர்கள் முடிவு செய்தால் அவர்கள் என்ன விதமான அபிப்பிராயம் கூறவேண்டுமென்று செஷன்ஸ் ஜூரர்களுக்கு எடுத்துக் கூறவில்லை. இப்படி செஷன்ஸ் ஜட்ஜி ஜூரார்களுக்கு எடுத்துக் கூறத்தவறிப்போனது சட்டவிரோதமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்—ஜோட்டிந்திரநாத் (11-கல்கத்தா வீக்கிலி நோட்டீஸ் 166.)

சாக்ஷி :—இரண்டு பேர்கள் பேரில் ஒரே குற்றம் சாட்டப்பட்டது. ஒவ்வொருவனும் தனியே விசாரணை செய்யப்படும்போது ஒருவன் மற்றொருவனுடைய கேசில் சாக்ஷியம் சொல்லத் தகுந்த சாக்ஷியாக எண்ணப்படலாம். இறந்துபோன ஒரு குற்றவாளி தானும் மற்றொருவனும் சேர்ந்து குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டு எழுதி வைத்திருக்கும் வாக்குமூலத்தை மற்றொருவனுடைய கேசில் இந்தியன் சாக்ஷி சட்டம் 32. 37-வது பிரிவின்படி சாக்ஷியாக ஏற்றுக் கொள்ளலாம்.

மரண வாக்குமூலம் :—ஒருவன் கொலை செய்யப்பட்டான். இவன் இறந்து போகும் தறுவாயில் ஒரு மாஜிஸ்டிரேட் குற்றவாளிகள் எதிரில் வைத்துக்கொள்ளாமல் இவனிடம் வாக்குமூலம் வாங்கினார். இந்த மாஜிஸ்டிரேட் கொலை செய்தவர்களை விசாரணை செய்து செஷனுக்குக் கமிட் செய்த மாஜிஸ்டிரேட்டாக இராவிட்டால் இவர் வாங்கின மரண வாக்குமூலம் செஷன் கோர்ட்டில் சாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. அப்படி ஏற்றுக்கொள்ளப் படவேண்டுமானால் அந்த மாஜிஸ்டிரேட் சாக்ஷியாக வந்து தாம் எடுத்த வாக்குமூலத்தை ருஜுப்படுத்த வேண்டும். ஆர்டர் ஷீட்டில் (Order Sheet) தாக்கல் செய்த வாக்குமூலத்தைக் குற்றவாளிகள் ஒப்புக்கொண்டார்கள் என்று அந்த மாஜிஸ்டிரேட் எழுதியிருப்பது போதுமான சாக்ஷியமாக எண்ணப்பட மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கோர்ட்டார் வசமிருக்கும் சொத்து :—கோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்ட சொத்தைப்பற்றியாகிலும் அல்லது கோர்ட்டார் பந்தோபஸ்திலிருக்கும்படியான சொத்தைப்பற்றியாகிலும் அந்த சொத்து விஷயமாக யாதொரு குற்றமும் செய்யப்படாமற் போன போதிலும் இந்த் சொத்தைக் குறித்து உத்தரவளிக்க, கி. பு. கோ. 517-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரமிருக்கின்றது என்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ரசல் பிபி.V. அகமத் முசாஜி, 34 கல். 347.

நிர்வாக உத்தரவு:—சி. பு. கோ. 45 (3)-வது பிரிவின்படி லோக்கல் கவர்ன்மெண்டார் உண்டாக்கியிருக்கும் விதிகளை அனுசரித்து ஒரு கலெக்ட்டர் செய்யும் உத்திரவு நிர்வாக (Executive) உத்திரவு இந்த உத்தரவிற்கு விரோதமாக ஹைக்கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.—Dama A. W. N. 1907, 168.

சாங்கிஷன்:—கி. பு. கோ, 195-வது பிரிவின்படி ஒரு இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் கொடுத்த அல்லது கொடுக்க மறுதளித்த ஒரு சாங்கிஷனை ஷை பிரிவின் 7-வது சப் பிரிவின்படி ஜில்லா மாஜிஸ்டிரேட் மட்டிலும் ரத்து செய்யவாவது அல்லது கொடுக்கவாவது அதிகாரமிருக்கின்றது. ஆனால் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு இப்படியிருக்கும் அதிகாரத்தை இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பிற்கு விரோதமாகச் செய்துகொள்ளப்படும். அப்பீல்களை விசாரணைசெய்யும் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு இந்த விஷயங்களில் ஜில்லா மாஜிஸ்டிரேட் கொடுக்கக் கூடாது. Ramadayal V. Ramayrasad, 3 Nay. L. R. 50.

ஜீவனும்ச டிக்கிரி—டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்பாஸ் செய்து அமுலுக்குக் கொண்டு வந்த பிறகு கொடுக்கப்பட்ட ஒரு ஜீவனும்ச டிக்கிரியில் ஒரு சொத்து ஜீவனும்சத் தொகைக்குட்படுத்தப்பட்டது. இந்த சொத்தைக் கிரயம்செய்து ஜீவனும்சத் தொகையை அடையவேண்டுமானால் டிக்கிரியை நிறைவேற்றி ஜப்திசெய்து ஏலத்திற்குக் கொண்டுவரக் கூடாது. பிரத்தியேகமான வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெறவேண்டும் என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். வெங்கடசுப்பன்னா V. வெங்கன்னா, 17 மதிராஸ் லா ஜர்னல் 217.

வீட்டு வாடகை :—வாதிக்குப் பம்பாயில் ஒரு வீடிருந்தது. இதை ஒருவரிடம் வாடகைக்கு விட்டிருந்தார். இவர் அந்த வீட்டில் ஒரு அச்சாபிசு ஏற்படுத்தி ஷை ஆபிசின் யந்திரங்களையும் சாமான்களையும் வேறொருவரிடம் அடமானம் வைத்திருந்தார். அடமானம் வைத்துக்கொண்டவர் தம்முடைய அடமானத் தொகையை வசூல் செய்யும்படியாக பம்பாய் ஹைக்கோர்ட்டில் பிரியாது செய்ய, ஷை வீட்டிலிருந்த அச்சாபிசு சாமான்கள் உள்பட ஒரு ரிசிவரிடம் ஒப்புவிக்கப்பட்டது, ஹைக்கோர்ட்டில் தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தி வீட்டின் சொந்தக்காரர் வீட்டை காலிசெய்து விட்டுவிடும்படியாக வீட்டை வாடகைக்கு ஒப்புக்கொண்டவருக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தார். இதன் பிறகு ரிசிவருக்கும் ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தார். இந்த நோட்டிசில் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு ரிசிவரிடமிருந்து வாடகையைக் கேட்கப் போகிறதாகவும் அப்படி ரிசிவர் கொடுத்துத் தீரவேண்டுமென்றும் அப்படிக்கில்லாவிடில் ரிசிவர் அந்த வீட்டை உபயோகப்படுத்திக் கொண்டு வருவதற்காக ஏதேனும் காம்பென்சேஷனாவது கொடுத்துக் கொண்டு வரவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. நோட்டிசில் சொல்லப்பட்டிருந்தபடி ரிசிவர் வாடகையும் கொடுக்கவில்லை, காம்பென்சேஷனுங்கூட கொடுக்கவில்லை. ஆகவே வீட்டிற்குடையவர் ஹைக்கோர்ட்டார் உத்தரவுபெற்று ரிசிவர்பேரில் பம்பாய் ஸ்மால் காஸ் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். ஸ்மால்காஸ் கோர்ட்டார் ரிசிவர் சொத்தை பந்தோபஸ்தில் வைத்துக்கொள்ளும்படியாக உத்தரவு செய்யப்பட்ட ஆபீசர் என்றும் அவருக்கும் வாதிக்கும் Landlord and Tenant அதாவது வீட்டுக்கு எஜமான் குடித்தனக்காரன் என்கிற சம்பந்தமில்லை என்றும் ரிசிவர் சொத்தை ஒப்புக்கொண்டிருப்பது வீட்டுக்காரனும் குடித்தனக்காரனும்செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தைப் பாதிக்க மாட்டாதென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். வாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டதில் கீழ்க்கோர்ட் தீர்மானமே உறுதி செய்யப்பட்டது.—இ. ல. ரி. 31-பம் 138.

அப்பீல் :—ஸ்மால் காஸ் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியில் சட்ட சம்பந்தமான வழுவிருப்பதாக ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டால் அப்பீலில் அந்த டிக்கிரியில் பிரவேசிப்பதற்கு புரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட் 25-வது பிரிவின்படி அதிகாரமிருக்கிறதென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—5-கல், லாஜர்னல் 413.

ஒரு வியாஜ்ஜியத்தில் ஸ்மால் காஸ் கோர்ட்டார் கொடுத்த தீர்ப்பை ரிவியூ செய்யும்படி மனு செய்து கொள்ளப்பட்டது. இந்த மனுவிற்குச் சரியான கோர்ட் பீஸ் ஸ்டாம்பு போடவில்லை என்றுசொல்லி மனுவைத் தள்ளிவிட்டார்கள். இந்த உத்தரவிற்கு விரோதமாக ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக் கொள்ளலாமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. A. W. N. 1907, 132.

ரிசீவர் :—ஒரு வியாஜ்ஜியத்தில் நியமிக்கப்பட்ட ஒரு ரிசீவர் நீக்கப்பட்ட பின்பு, மறுபடியும் அந்த வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட சொத்துவிஷயமாக எதையும் செய்ய அதிகாரம் கொடுக்க கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாது. 34-கல். 336.'

ரிசீவர் .—ஒரு ரிசீவர் சப் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தை ஜில்லா ஜட்ஜி காயப்படுத்துவதற்குள் ரிசிவர் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வியாஜ்ஜியம் கொண்டுவந்தபிறகு ஜில்லா ஜட்ஜி ரிசீவர் நியமனத்தைக் காயப்படுத்தின உத்தரவு வந்தது. ஜில்லா ஜட்ஜி காயப்படுத்துவதற்கு முந்தி ரிசீவர் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறபடியால் இந்த வியாஜ்ஜியம் செலமாணியாக மாட்டாதென்று பிரதிவாதி கக்ஷிசொன்னான். செலாமணியாகுமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஒரு ரிசீவர் தன்னுடைய சொந்தப் பெயரைப் போட்டு வியாஜ்ஜியம் கொண்டுவரும்படி கோர்ட்டார் அதிகாரம் கொடுக்கலாமென்றும், வியாஜ்ஜியம் செய்ய அதிகாரமுடைய ஒரு ரிசீவர் தம்முடைய சொந்தப் பெயரைப்போட்டு வியாஜ்ஜியம்கொண்டு வராமற் போனபோதிலும் சி. பு. கோ. 503-வது பிரிவின்படி அவர் அம்மாதிரியாக வியாஜ்ஜியம் கொண்டுவர அவருக்கு சர்வ அதிகாரம் இருக்கிறதென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

பெந்தகம் :—ஒரு பெந்தகப் பத்திரத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில், பெந்தகத்திற்குக் கட்டுப்படாத சொத்துக்களையும் டிக்கிரிக்குக் கட்டுப்படுத்தும்படியாக வாதி பிரதிவாதிகள் சமாதானம் செய்துகொண்டால் அந்த சமாதானப்படி கோர்ட்டார் டிக்கிரி கொடுப்பது சட்ட விரோதமாக மாட்டாது என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். கப்பிராகடு V. வெங்கடாச்சாரன், 17 மதிராஸ் லா ஜர்னல்.

பிராமிசரி நோட் :—ஒரு பிராமிசரி நோட்டு எவனுக்கு மேடோவர் செய்யப்பட்டதோ அவன் தன்னுடைய சொந்தப் பெயரால் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமானால் அந்த மேடோவர் காலமான அல்லது உறுதியான மேடோவராக இருக்க வேண்டுமே ஒழிய நிபந்தனைக்குட்பட்ட மேடோவராக இருக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 2,P. W. R. 124.

மைனர் பெண்சாதி:—ஒரு மைனர் பெண்சாதியின் புருஷன் தன்னுடைய பெண்சாதிக்காக லெட்டர்ஸ் ஆப் அட்மினிட் டிரேஷன் என்கிற வார்சு செர்ட்டிபிக்கேட் பெறுவதற்கு மனுசெய்து கொள்ளுவதற்கு முந்தி தன்னை தன்னுடைய பெண்சாதிக்குச் சட்டப் பிரகாரமுள்ள கார்டியனை நியமித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருகின்றது. 11 கல். வீக்கிலி நோட்ஸ் 697.

PRIVY COUNCIL CASES.

பிரிவி கவுன்சில் கேஸ்கள்.

கவுன்சிலர்கள் :—(1) லார்ட் டேவி
(2) லார்ட் ராபர்ட்சன்
(3) சர் ஆஸ்டிருஸ் கோபில்
(4) சர் ஆர்தர் வில்சன்.

லாலா பாதர் வகையரு—வாதிகள்—(அப்பீல் வாதிகள்.)

கன்னய்யா லால்—பிரதிவாதி (அப்பீல் பிரதிவாதி)

லா பாயின்ட்:—பிதிராஜ்ஜித சொத்தில் பௌத்திரர்களுக்கிருக்கும் பாத்திதையைப் பற்றியது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதிகளும், பிரதிவாதியும் துர்க்கப்பிரசாத் என்பவருடைய புத்திரர்கள். தகப்பனும், புத்திரரும் சேர்ந்த இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். துர்க்கப்பிரசாத் இறந்துபோகும் சமயத்தில் தம்முடைய சொத்துக்கள் எல்லாம் தம்முடைய சுயார்ஜ்ஜிதமென்று சொல்லி அவைகளைத் தம்முடைய ஜேஷ்ட குமாரனுகிய கன்னிலால் என்பவரே அடையவேண்டுமென்றும் மற்ற இரண்டு இளைய குமாரர்களாகிய லால்பாதரும், ஜகதாம்பிரசாதும், ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூபா. 35 அல்லவன்ஸ் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு வீடு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் 1893-ம்ஹு டிசம்பர்மீ 11வ்ல் எழுதிவைத்து விட்டு இறந்துபோய்விட்டார். ஆதலால் துர்க்கப்பிரசாதின் மற்ற இரண்டு புத்திரர்களாகிய வாதிகள், தங்களுடைய குடும்பச் சொத்து பிதிராஜ்ஜித சொத்தென்றும் தங்களுக்கு அதில் பாத்தியதையிருக்கிறதென்றும் அச்சொத்தை உயில் எழுதிவைப்பதற்கு தங்களுடைய தகப்பனுருக்கு பாத்தியதையில்லை என்றும் ஆகவே இந்த உயிலை ரத்து செய்துவைக்கவும் தங்களுடைய பாகத்தைப் பெற்றுக் கொள்ளவும் தங்களுடைய மூத்த தமையன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்டபிறகு வாதிகளில் ஒருவராகிய துர்க்கப்பிரசாதின் மூன்றுவது புத்திரனுகிய ஜெகதாம்பிரசாத் இறந்துபோக அவருடைய மைனர் புத்திரர்கள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டார்கள்.

இந்த வியாஜ்ஜியம் பெரிலிஜில்லா சப் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. சப்சோர்ட்டார் 1903ம்ஹு மார்ச்சுமீ 30வ வாதிகள் பக்கம் தீர்ப்பு சொன்னுர்கள். பிரதிவாதிகள் அலகபாத் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள, ஹைக்கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றி பிரதிவாதிபக்கம் தீர்ப்புசொன்னுர்கள்.

வாதிகள் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொண்டார்கள்.

பாரிஸ்டர்கள் :—மிஸ்டர் W. A. ரேய்க்ஸ் அப்பீல் வாதிகள் தரப்பிற்கும், மிஸ்டர் G. E. A. ரூய் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் பேசினுர்கள்.

பிரிவு கவுன்சிலில், சர் ஆன்டிரூஸ்கோபில் என்கிற கவுன்சிலரால் 1907-ம் ஹு பிப்ரவரிமீ 8வ தீர்ப்பு சொல்லப்பட்டது.

தீர்ப்பு :—இந்தக் கேசில் முக்கியமான அம்சம் என்னவென்றல் துர்க்கப்பிரசாத் உயில்எழுதிவைத்துவிட்டுப்போன சொத்து பிதிராஜ்ஜிதமா அல்லது அவருடைய சுயார்ஜ்ஜிதமா என்பதே. ஆகையால் துர்க்கப்பிரசாதின் தகப்பனுர் எவ்வளவு சொத்து வைத்துவிட்டு இறந்துபோனுர் என்பதை இப்போது நாம் கவனிக்கவேண்டும். துர்க்கப்பிரசாதின் தகப்பனுர் பெயர் கோவிந்தராம். இவருக்கு துர்க்கப் பிரசாதைத் தவிர ஜுவாலப் பிரசாத், சாரிலால், என்கிற இரண்டு புத்திரர்களும் இருக்கிறுர்கள். இந்த மூன்று புத்திரர்களும் 1886ஹு வரையில் சேர்ந்த—இந்து குடும்ப சகோதரர்களாக வசித்து வந்து 1886ஹுத்தில் தங்களுடைய குடும்பச் சொத்தை சமபாகமாகப் பிரித்துக் கொண்டார்கள். பாகப்பிரிவினையாகும்போது துர்க்கப்பிரசாதிற்கு கன்னிலால், லால்பாதர் என்கிற புத்திரர்கள் பிறந்திருந்தார்கள். மூன்றுவது புத்திரனுகிய ஜெகதாம்பிரசாத் என்பவன் பிறகு பிறந்தான். ஆகவே பாகப்பிரிவினையானபின்பு துர்க்கப்பிரசாத் தன்னுடைய புத்திரர்களுடன் தனியே வசித்து வந்தார். பிரதிவாதி, தன்னுடைய பாட்டன் கோவிந்தராம் என்பவர் யாதொரு சொத்தும் வைக்கவில்லை என்று முதலில் சொன்னுர். இருந்தபோதிலும் கீழ்க்கோர்ட்டார்கள், தோப்புகளும் வீடுகளுமாக ஸ்தாவர சொத்துக்கள் வைத்துவிட்டுப் போனுர் என்று முடிவு செய்திருக்கிறுர்கள். இவைகளுமன்றி இன்னும் அனேக சொத்துக்களும் அவருக்கிருந்ததாகவும் சாக்ஷி வாக்குமூலத்தால் ஏற்படுகின்றது. ஆதலால் கோவிந்தராம் என்பவர் ஏதேஷ்டமான ஸ்தாவர சொத்தும் ரொக்கமும் வைத்துவிட்டு இறந்துபோனுர் என்று நாம் நினைக்கிறோம். கோவிந்தராம் ஜீவதிசையிலும் இறந்துபோன பின்பும் அவருடைய புத்திரர்களின் நிலைமையை ஆராய்ந்து பார்த்தால் நாம் எண்ணினதை உறுதிப்படுத்துகின்றது.

கோவிந்த பிரசாதும் அவருடைய மூன்று புத்திரர்களும்-சேர்ந்தஇந்து குடும்பமாகவசித்துக்கொண்டு வந்தார்கள். 1849-ம் ஹுத்தில் கோவிந்தராம் இறந்துபோகும்போது துர்க்கப்பிரசாதிற்கு வயது 20. பார்லி கலாசாலையில் மாணக்கராக இருந்து வந்தார். ஜுவாலப் பிரசாதிற்கு வயது 17 அல்லது 18; ஜுரிலாலுக்கு வயது பத்து அல்லது பதினுென்றிருக்கலாம். இந்த மூன்று புத்திரர்களும் தகப்பனுடைய செலவில் படிக்க வைக்கப்பட்டிருந்தார்கள். 1852-ம் ஹு-ம் வரையில் இவர்களில் எவரும் உத்தியோகத்திலில்லை. 1852-ம் ஹு-துர்கப்பிரசாத் மட்டிலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 75 உள்ள கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் அமர்ந்தார். ஆகையால் இவர்கள் எல்லோரும் அது பரியந்தம் தகப்பனுருடைய குடும்பச் சொத்தினைக்கொண்டு காலக்ஷேபம் செய்துகொண்டு வந்திருக்கிறுர்கள். மேலும் 1851-ம் ஹுத்தில் குடும்ப ஐவேஜியைக்கொண்டு முறையே ரூ. 1605, ரூ. 1555-விலையுள்ள இரண்டு நிலச் சொத்துக்களையும் வாங்கியிருக்கிறுர்கள். இந்தச் சொத்துக்களை வாங்குவதற்கு தகப்பனுருடைய குடும்ப ஐவேஜியைத் தவிர இவர்களிடம் அந்தசமயம் வேறே ஐவேஜிகிடையாது. ஆகையால் கோவிந்தராம் சொத்து வைத்துவிட்டு இறந்துபோனுர் என்று ருஜுப்படுகின்றது. இப்படி தகப்பன் வைத்துவிட்டுப்போன சொத்தை மூன்று சகோதரர்களும் 1866-ஹும் வரையில் இந்து சேர்ந்த குடும்பமாக வசித்து வந்து அனுபவித்து வந்தார்கள். 1886-ம்-ஹு இவர்கள் பாகப்பிரிவினைசெய்து கொண்டார்கள். இவர்கள் இப்படி பாகம் பிரித்துக் கொண்டபோது இவர்களுக்கு பிரத்தியேகமான சொத்திருந்ததாக ஒருவரும் கக்ஷி சொல்லவில்லை. ஆகையால் துர்க்கப்பிரசாதின் பங்கிற்கு வந்த சொத்து சந்தேகமின்றி பிதிராஜ்ஜித சொத்தாயிருக்கின்றது. துர்க்கப் பிரசாத்தின் புத்திரர்கள் எந்த நிமிஷம் பிறந்தார்களோ அந்த நிமிஷமே அந்த சொத்தில் அவர்களுக்குப் பாத்தியமுண்டாய்விட்டது. 1866-ஹுதில் பாகப் பிரிவினையான பிறகு துர்க்கப்பிரசாதும் அவருடைய மூன்று புத்திரர்களும் துர்க்கப்பிரசாத் இறந்துபோன 1849-ஹு-ம் வரையில் சேர்ந்த இந்து குடும்பமாய் வசித்து வந்தார்கள். ஆகையால் துர்க்கப்பிரசாத் பிதிராஜ்ஜித சொத்தை தம்முடைய இஷ்டப்படி உயிலெழுதி வைக்கப் பாத்தியமில்லை. ஆனுல் பாகப்பிரிவினையான பிறகு துர்க்கப்பிரசாத் பிதிராஜ்ஜித சொத்தின் உதவியின்றி உத்தியோகத்திலிருந்து சம்பாதித்த சுயார்ஜ்ஜிதத்தை அவர் இஷ்டப்படி உயில் எழுதிவைக்கப் பாத்தியமுடையவர் என்று பிரதிவாதி தரப்பில்வாதிக்கப்படுகின்றது. துர்க்கப்பிரசாத் பிரத்தியேகமாகவும் சம்பாதித்தார் என்பதற்கு வேண்டிய ருஜுக்களிருக்கின்றன. அவர் வித்தை யிலாகாவில் ரூ. 75, 150, 300, 750, சம்பளத்திலிருந்து கடைசியில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 4000-ம் பென்ஷனுடன் சுகவாசம் செய்து வந்தார் என்று இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளுகிறுர்கள். ஆகையால் அவர் அவருடை ஆயுளின் பிந்திய காலத்தில் தம்முடைய வருமானத்திலிருந்து மிகுத்து வைக்கக்கூடிய நிலைமையிலிருந்தார் என்பதில் சந்தேகமில்லை ஆனுல் துர்க்கப்பிரசாத் இறந்துபோகும் பரியந்தம் அவரும் அவருடைய புத்திரர்களும் இந்து சேர்ந்த குடும்பமாய் வசித்து வந்தார்கள் என்றும், துர்க்கப்பிரசாத் கையில் பிதிரார்ஜ்ஜித சொத்துக்களு மிருந்ததென்றும் ருஜுப்பட்டிருக்கின்றது.

உத்தியோக மூலமாய் சம்பாதித்த சொத்தை பிரத்தியேகமாக வைத்து வந்தார் என்று ருஜுப்படுத்த வேண்டிய கடமை அவருக்கு சுயார்ஜ்ஜித சொத்திருந்ததென்று கக்ஷி சொல்லும் பிரதிவாதியைச் சேர்ந்தது. பிரதிவாதி அப்படி ருஜுப்படுத்தியிருக்கிறுரா ? இல்லை. இந்த முக்கியமான விஷயத்தைக் குறித்து சாக்ஷியம் சொல்லியிருப்பவர் பேரிலியிலிருக்கும் சாவுக்கார்களாகிய லக்ஷிமிநாரேயின் கம்பெனியார்கள் ; இவர்களுடைய கணக்குப் புத்தகங்கள் சாக்ஷியமாக தாக்கல் செய்யப்பட்டன. ஷை கம்பெனியின் குமஸ்தாவும் சாக்ஷியம் சொல்லி யிருக்கிறுர்- அவர் என்ன சொல்லியிருக்கிறுர் என்றுல் துர்க்கப்பிரசாத் தம்முடைய கிராமங்களிருந்து வரும் பணத்தையும் தம்முடைய சம்பளப் பணத்தையும் தங்களுடைய கம்பெனியில் வட்டிக்குப் போட்டு வந்தார் என்றும், அவர் ஒரே கணக்கு வைத்துவந்தாரென்றும், அவர் கிராமங்கள் வாங்கவேண்டியதாயிருந்தால் இரண்டு பணத்தையும் போட்டு வாங்குகிறதுண்டு என்றும், பிதிரார்ஜ்ஜித வரவு செலவிற்கு பிரத்தியேகக் கணக்கும் சுயராஜ்ஜித வரவு செலவுக் கணக்கும் பிரதியேகமாக வைத்து வந்ததில்லை என்றும் சொல்லியிருக்கிறுர். இது உண்மையான சாக்ஷியமென்றே நம்புகின்றோம். மேலும் துர்க்கப்பிரசாதின் பிள்ளைகள் சம்பாதிக்கத் தலைப்பட்ட பின்பு அவர்களுக்கு வந்த வருமானத்தையும் தகப்பனுர் கையில் கொடுத்து தாங்கள் குடும்பத்தில் கூடவிருந்து ஏக குடும்பமாய் வசித்து வந்திருக்கிறுர்கள். ஆகையால் துர்க்கப்பிரசாதும் சரி, அவருடைய புத்திரர்களும் சரி, தாங்கள் சம்பாதித்ததை தாங்களே வைத்துக் கொள்ளாமல் அல்லது தங்களுடைய பிரத்தியேக சொத்தாய்ப் பாவிக்காமல் எல்லோரும் சேர்ந்த குடும்பம் என்கிற பொதுவான பெட்டியில் தங்களுடைய சம்பாதனையை மனப்பூர்வமாய் கொடுத்து, சேர்ந்து வசித்து இப்படி சேர்ந்த தொகையைக்கொண்டு நில முதலியவைகள் வாங்கி தங்களுடைய குடும்பச்சொத்துக்களைப் பெருக்கிக்கொண்டு வந்திருக்கிறுர்கள் என்று தெற்றன விளங்குகின்றது. ஆகையால் துர்க்கப்பிரசாத் இறந்துபோன சமயத்தில இந்து லா பிரகாரம் சுயார்ஜ்ஜிதம் என்று சொல்லப்படக்கூடிய சொத்து அவருக்கு யாதொன்றுமில்லை. ஆகையால் அவர் எழுதிவைத்திருக்கும் உயில் செல்லுபடியுள்ளதல்ல. பெர்லி சப் கோர்ட்டார் வாதி பக்கம் தீர்ப்பு சொல்லியிருப்பதை உறுதிப்படுத்துகின்றோம். இந்த அப்பீல் செலவை பிரதிவாதிகள் வாதிகளுக்குக் கொடுக்கவேண்டும். இவ்விதமாக தீர்மானிக்கும்படி கவுன்சிலர்கள் மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு யோஜனை கூறினுர்கள்.

கவுன்சிலர்கள்:—லார்ட் டேவி.
லார்ட் ராபர்ட்ஸன்.
சர் ஆண்டிருஸ் கோபில்.
சர் ஆர்தர் வில்சன்.

ஆனந்தராவ் கஜபதிராவ் வகையரு—பிரவாதிகள் (அப்பீல் வாதிகள்.)

வதந்தராவ் மாதவராவ் வகையரு—வாதிகள் (அப்பீல் பிரதிவாதிகள்.)

லா பாயின்ட்:—பிதிராஜ்ஜித சொத்தில் இந்து சேர்ந்த குடும்ப சகோதரர்களுக்கிருக்கும் பாத்திதை.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி பிரதிவாதிகள் இந்து—சேர்ந்த குடும்ப சகோதரர்கள். இவர்களுக்குப் பொதுவாக ஒரு வீடு இருந்தது. வாதிகள் இந்த வீட்டில் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தைப் பிரித்துக் கேட்க, பிரதிவாதிகள் கொடுக்கவில்லை. ஆகவே வாதிகள் பம்பாய் ஹைக்கோர்ட்டு ஒரிஜனல் சயிடில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். அசல் கோர்ட்டார் பிரதிவாதிகள் பக்கம் தீர்ப்பு சொன்னார்கள். பிரதிவாதிகள் முதல் அப்பீல் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள தீர்ப்பு வாதிகள் பக்கம் சொல்லப்பட்டது. பிரதிவாதிகள் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொண்டார்கள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு கவுன்சிலர் லார்ட் ராபர்ட்சனால் சொல்லப்பட்டது.

தீர்ப்பு:—குடும்பச் சொத்தைப் பாகப் பிரிவினை செய்து கொள்ளுவதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகையால் இதில் முக்கியமான பிரஸ்னை என்னவென்றால் ஷை குடும்பம் சேர்ந்த-இந்து குடும்பமா, குடும்பச்சொத்து பிதிரார்ஜ்ஜிதமா என்பதே. ஹைக்கோர்ட் ஒரிஜினல் சயிடில் வாதி வகையரு 1901-ம்ஞு இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். பிரதிவாதிகள் அடியிற் கண்ட டிபன்ஸ் கூறினார்கள் :—(1)—குடும்பம் சேர்ந்த இந்து குடும்பமல்ல, சொத்து பிதிரார்ஜ்ஜித சொத்துமல்ல. (2) வாதியின் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் ஏற்பட்டிருக்கிறது. (3) 1889-ம் ஞு ஜனவரிமீ 28உ ஏற்பட்ட விடுதலைப் பத்திரத்தை முன்னிட்டு வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவர பாத்திய மற்றவர்கள். ஒரிஜினல் சயிடில் விசாரணை செய்த ஜஸ்டிஸ் மிஸ்டர் தியாப்ஜி காலாவதி தோஷ காரணத்தை முன்னிட்டு பிரதிவாதிகள் பக்கம் தீர்ப்பு சொன்னார். வாதிகள் முதல் அப்பீல் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். முதல் அப்பீல் கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தில் காலாவதி தோஷம் அவ்வளவு முக்கியமான அம்சம் அல்லவென்றும் ஆகையால் அசல் கோர்ட்டார் கொடுத்திருக்கும் தீர்ப்பு வாதிகள் தாவா குடும்பம் சேர்ந்த இந்து குடும்பம் என்றும் ஷை குடும்பச் சொத்து பிதிராஜ்ஜிதமென்றும் ருஜுப்படுத்துவதைத் தடுக்கமாட்டாதென்றும் சொல்லி கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்து வாதிகளுக்கு தாவா குடும்பச் சொத்தில் சரி பாகத்திற்கு டிக்கிரி கொடுத்தார்கள். ஆகவே பிரதிவாதிகள் இப்போது நமக்கு அப்பீல் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் கேசில் முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்த குடும்பத்தார் சேர்ந்து வசித்து வந்தார்களா, இந்தக் குடும்பச் சொத்து பிதிராஜ்ஜித சொத்தா என்பதே. வாதி பிரதிவாதிகள் தாவா வீட்டில் ஒன்றாய் வசித்து வந்தார்கள் என்று கக்ஷிக்காரர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிரதிவாதிகள், தங்களுடைய குடும்பத்திற்கு சொற்ப பிதிராஜ்ஜித மிருந்ததாகவும் ஆனால் அந்த பிதிராஜ்ஜித சொத்தையும் இப்போதிருக்கும் சொத்தையும் சீர்தூக்கிப்பார்த்தால் பூனைக்கும் யானைக்கு மிருக்கும் வித்தியாசமாயிருக்கிறதென்றும் இப்போதிருக்கும் சொத்து தங்களுடைய சொத்தென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பிதிராஜ்ஜித சொத்து இப்போதிருக்கும் சொத்தைவிட மதிப்பில் தாழ்ந்ததென்றும் இப்போதிருக்கும் சொத்து அதிக விலையுள்ளதென்றும் ருஜுப்படுகின்றது. இருந்தபோதிலும் ஆதியிலிருந்த பிதிரார்ஜ்ஜித சொத்தை கிரயம் செய்த ஐவேஜியில் ஒரு பாகத்தை பிரஸ்தாபதாவரச் சொத்தாகிய வீட்டைக் கட்டுவதில் உபயோகப்படுத்தினார்கள் என்று ருஜுப்படுகின்றது. ஆகையால் இப்போதிருக்கும் குடும்பச் சொத்து பிதிராஜ்ஜித சொத்து இது, பிதிராஜ்ஜித சொத்தல்லவென்றும் தங்களுடைய சொத்தென்றும் கக்ஷி சொல்லும் பிரதிவாதிகள் அதை ருஜுப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். கீழ்க்கோர்ட்டுகளில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷி வாக்குமூலங்களைப் பரிசீலனை செய்ததில் பிரதிவாதிகள் தங்களுடைய கக்ஷியை ஸ்தாபிக்கவில்லை. ஆகையால் பம்பாய் ஹைக்கோர்ட்டார் வாதிகள் பக்கம் சொல்லியிருக்கும் தீர்ப்பை ருஜுப்படுத்துகின்றோம்.

கவுன்சிலர்கள்:—லார்ட் மகனட்டன்.
லார்ட் டேவே.
சர் ஆன்டிரூஸ் கோபில்.
சர் ஆர்தர் வில்சன்.

பயாஜ் உசேன்—அப்பீல் வாதி.

முன்ஷிபிராக் நாரேன் வகையரு—அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—ஒரு சொத்து வியாஜ்ஜியத்திலிருக்கும்போது அதை டிரான்ஸ்பர் செய்யலாமா?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—1889-ம் ஞு ஜூன்மீ 14உ ஹாமித் உசேன் என்பவர் தம்முடைய "மாஜா பங்கவான்" என்கிற பங்களாவை நிலால் கிஷோர் என்பவருக்கு அடமானம் வைத்தார். 1891-ம் ஞு ஜூலைமீ 13உ இந்த பெந்தகத்தின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து 1895-ம் ஞு நவம்பர்மீ 29உ டிக்கிரி பெற்று ஏல விற்பனைசெய்து தொகையை வசூல் செய்து கொள்ளும்படியாக உத்தரவு பெற்றுக்கொண்டார். 1901-ம் ஞு பிப்ரவரிமீ 21உ சொத்து ஏலம் போடப்பட்டது. டிக்கிரி ஓல்டருடைய குமாரனாகிய பிராக் நாராயனனே சொத்தை ஏலத்தில் எடுத்துக்கொண்டார். 1901-ம் ஞு ஜூலைமீ 2உ ஏலம் காயப்பட்ட பிறகு பிராக் நாராயின் என்

பவர் வீட்டை வசப்படுத்தப்போனார். வீட்டை விடமாட்டேன் என்று சொல்லி இந்த வியாஜ்ஜியத்தின் அப்பீல்தார் ஆக்ஷேபித்தார். ஆகவே பிரேக் நாராயணன் என்பவர் அப்பீல் வாதியின் பேரில் சித்தாப்பூர் சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். சப் கோர்ட்டார் வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள். அப்பீலில் அயோத்திய ஜூடிஷியில் கமிஷனர் உறுதிப்படுத்தினார். ஆகையால் பிரதிவாதி பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல்செய்து கொண்டிருக்கிறார்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு லார்ட் மாக்னட்டனால் வாசிக்கப்பட்டது.

தீர்ப்பு:—அப்பீல் வாதி ஷை பெந்தக சொத்தின் பேரில் கொடுக்கப்பட்ட வேறொரு டிக்கிரியை முன்னிட்டு ஷை சொத்து ஏலம்போடப் பட்டபோது தாம் வாங்கிக்கொண்டிருப்பதாக கக்ஷி சொல்லுகிறார். ஷை பங்களா 1889-ஞும் ஜூன்மீ 14உ பெந்தகம் வைக்கப்படுவதற்கு முந்தியாவது அல்லது இந்த பெந்தகவிஷயமாக 1891-ஞும் ஜூலைமீ 13உ விவாங்கிஷோர் வியாஜ்ஜியம் கொண்டு வருவதற்கு முந்தியாவது இந்த பெந்தகத்தைத் தவிர வேறே பெந்தமாவது அடமானமாவது அந்த சொத்தின் பேரிலிருந்ததில்லை. ஆனால் வியாஜ்ஜியத்தில் சம்மன்ஸ் பிறப்பதற்கு முந்தி அதாவது 1891-ஞும் ஜூலைமீ 15உ ஷை பங்களாவிற்குச் சொந்தக்காரராகிய ஹாமிட் உசேன் என்பவர் ஷை பங்களாவை மீர்சாமுசயர் பெக் என்பவரிடம் வைத்தார். இந்த மூர்சாமுசபர் பெக் பெந்தகத்தின்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற்று 1900-ம்ஞு டிசம்பர்மீ 20உ பெந்தக சொத்தை ஏலம் போட்டார். ஏலத்தில் அப்பீல் வாதி எடுத்திருக்கிறார். இரண்டாவது பெந்தக விஷயமாக நடந்திருக்கும் வியாஜ்ஜியத்தில் முதல் பெந்தகம் வைத்துக் கொண்டவர் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவில்லை.

இந்தக்கேஸ் மிகவும் சுலபமான கேஸ் ஒரு சொத்தைக்குறித்து கோர்ட்டில் வியாஜ்ஜியம் மும்மரமாய் நடந்துவரும்போது அந்த சொத்தை டிரான்ஸ்பர் முதலிய பராதீனங்கள் செய்தால் அது செல்லாது என்று டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 52-வது பிரிவில் கூறப்பட்டிருக்கின்றது. ஹாமிட் உசேன் ஷை சொத்தை இரண்டாவது பெந்தகம் வைத்த தேதியாகிய 1891-ம்ஞு ஜூலைமீ 15உக்கு முந்தியே முதல் பெந்தகம் வைத்துக்கொண்ட நிலால்கிஷோர் என்பவர் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். வியாஜ்ஜியம் கொண்டுவந்தபோதிலும் சம்மன்ஸ் பிரதிவாதிகளுக்கு சார்வ் செய்யவில்லை என்றும் சம்மன்ஸ் சார்வ் செய்தபிறகு தான் ஷை ஆக்ட் 52-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி வியாஜ்ஜியம் மும்மரமாக நடத்தப்பட்டுவருகிறதாக தாற்பரியம் கொள்ளவேண்டுமென்றும பிரதிவாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். ஷை பிரிவுக்கு இப்படி தாற்பரியம் கொடுப்பதற்கு பிரிவில் யாதொரு ஆதாரத்தையும் காணோம். இப்படி தாற்பரியம் செய்வோமாகில் சம்மன்ஸுக்குட்படாமல் ஒளிந்து திரியும் வழக்கத்தைத் தெரியாது என்றும் சம்மன்ஸ் சார்வ் செய்வது இலகுவான காரியம் என்றும் சொல்ல முடியாத இந்தியா தேசத்தில் கஷ்டத்தை விளைவிக்கும். ஆகையால் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளையே காயப்படுத்தி செலவு தொகையுடன் அப்பீலைத் தள்ளும்படி செய்கின்றோம்.

COVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு உத்தரவுகள்.

1907-ஞும்த்திய அக்டோபர்மீ 31உ G. O. நெ 82

சட்ட நிரூபண சபையில் தென் ஜில்லாக்களுக்காக தற்காலமிருக்கும் இரண்டு பிரதிநிதிகளின் ஸ்தானங்கள் அடுத்த டிசம்பர்மீ 11உ கார்லியாகப் போகின்றபடியால் முனிசிபாலிட்டிகளும் ஜில்லா போர்டுகளும் முறையே அடியிற்கண்ட கனவான்களைத் தெரிந்தெடுத்து நியமித்து அவர்களுக்கே வோட்டுகள் கொடுக்கும்படியாக வோட்டிங்டெலிகேட்டுகளை நியமித்திருக்கிறார்கள்.

தேன் ஜில்லாக்களின் ஜில்லா போர்ட்டாரால் தெரிந்தெடுக்கப்பட்ட காண்டிடேட்டும் வோட்டிங் டெலிகேட்டும்.

தென் ஆர்க்காடு—காண்டிடேட் ஆனரபில்மிஸ்டர் கிருஷ்ணநாயர் அவர்கள் ;—வோட்டிங் டெலிகேட் ம-ா-ா-ஸ்ரீ, ருமசாமி அய்யர் அவர்கள் ; தென்கன்னடம்—ம-ா-ா-ஸ்ரீ, ருவ் சாயப் N. சுப்பாராவ் அவர்கள்—ம-ா-ா-ஸ்ரீ, D. அனந்தய்யர் அவர்கள்; கோயம்புத்தூர்—ஆனரபில் M. கிருஷ்ணநாயர் அவர்கள்—ம-ா-ா-ஸ்ரீ, T. H. கோவிந்தசிங் அவர்கள்; மதுரை ஆனரபில் M. கிருஷ்ணநாயர் அவர்கள்; மிஸ்டர் R. பிஷர் ; மலபார்—ஆனரபில் M. கிருஷ்ணநாயர்—ம-ா-ா-ஸ்ரீ, C. கர்ணாகரமீனன் அவர்கள்; நீலகிரி—ம-ா-ா-ஸ்ரீ, M. சுப்பாராவ் அவர்கள்;—ம-ா-ா-ஸ்ரீ, D, கனகரத்தினம்பிள்ளை; தஞ்சாவூர்—ஷை நாயர் ம-ா-ா-ஸ்ரீ, R. சுவாமிநாத விஜயத்தேவர்; திருநெல்வேலி—ஷை நாயர்—ம-ா-ா-ஸ்ரீ, R. சுப்பய்யா அவர்கள்; திருச்சிராப்பள்ளி—ஷை நாயர்—ம-ா-ா-ஸ்ரீ, T. சுந்திரராவ் அவர்கள்.

தேன்ஜில்லா முனிசிபாலிட்டிகளின் நியமனம்.

சிதம்பரம்—ஆனரபில் K. R. குருசாமி அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, K. வரதாச்சாரியார்; கூடலூர்—ஷை அய்யர், ம-ா-ா-ஸ்ரீ, V. சீனிவாசாச்சாரியார்; திருவண்ணாமலை—ஷை அய்யர் மிஸ்டர் D. D. தாமஸ்; மங்களூர்—ம-ா-ா-ஸ்ரீ N. சுப்பராவ்-ம-ா-ா-ஸ்ரீ, N. கிருஷ்ணய்யர் அவர்கள்; கோயம்புத்தூர்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, K. மாதவமீனன்; ஈரோடு—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, A. அரங்கசாமி அய்யங்கார் அவர்கள்; கரூர்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, A. C. நரசிம்மாசாரியார்; திண்டுக்கல்—ஷை அய்யர்—மிஸ்டர் G. S. இக்கி; கொடைக்கனல்—ஷை நாயர்—I. A. பீர் முகமது சாயப்பு; மதுரை—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, வேணுகோபால் நாயடு ; பழநி—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, A. ஆத்மநாத அய்யர்; பெரியகுளம்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, இராமபத்திரநாயடு; கள்ளிக்கோட்டை—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ,

P. நாராயணமேனன்; கன்னனூர்—P. ... ...கொச்சின்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, P. T. வருகிஸ்; பாலகாட்—ஷை நாயகர்—ம-ா-ா-ஸ்ரீ, V. இராமன்நாயர்; தலைச்சேரி—ஷை அய்யர் ம-ா-ா-ஸ்ரீ, P. K. கிழப்பா குருப்பு; கூடலூர்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, R. சுந்தரராஜ அய்யர்; உதகமண்டலம் ஷை அய்யர்—N. M. கூல்முகமம்சேட்சாஹேப்; சேலம்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ E. S. இராமசாமி அய்யர் அவர்கள்; திருப்பத்தூர்—ஷை அய்யர்—உசேன் அலிகான் பகதூர்; வாணியம்பாடி—ஷை அய்யர்—P. M. இனமால் குல்லா சாயப்பு; கும்பகோணம்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, C. K. சீனிவாச அய்யங்கார்; மன்னார்குடி—ஷை அய்யர்—S. M. வெங்கட்டராம அய்யர்; மாயவரம்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, S. வைத்தியநாத அய்யர்; நாகப்பட்டணம்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, V. சுவாமிநாத அய்யர்; தஞ்சாவூர்—ஷை அய்யர்—ம-ா-ா-ஸ்ரீ, T. D. சாமிநாத அய்யர்; பாளையம்கோட்டை—ஷை அய்யர்—P. முருகேச முதலியார்; ஸ்ரீவில்லிபுத்தூர்—ஷை அய்யர்—K. சீனிவாச அய்யங்கார்; திருநெல்வேலி—ஷை அய்யர்—R. V. மொயிதீன் ருவுத்தர்; தூத்துக்குடி—ஷை அய்யர்—K. இராமச்சந்திர அய்யர்; ஸ்ரீரங்கம்—ஷை அய்யர்—A. V. கோபாலாச்சாரியார் அவர்கள்; திருச்சிநுப்பள்ளி—ஷை அய்யர்—I. S. பழநிசாமிப்பிள்ளை.—

வோட்டிங் டெலி கேட்கள் கூடி தெரிந்தெடுக்க வேண்டியதினம் 1907ளு டிசம்பர்மீ 14உ சனிக்கிழமை.

1907-ம்ளுத்திய அக்டோபர்மீத்திய 29உ

G. O. நெ. 1818.

பல்லாரி, கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களில் பிளேக் நோய் பரவி வருகின்றபடியால் பிளேக் பந்தோபஸ்திற்காக பல்லாரி ஜில்லாவிற்கு 25-எட் கான்ஸ்டேபில்களும், 250-கான்ஸ்டேபில்களும், கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு 2-எட் கான்ஸ்டேபில்களும், 20-கான்ஸ்டேபிலும், சேலம் ஜில்லாவிற்கு 7 எட் கான்ஸ்டேபில்களும் 71-கான்ஸ்டேபில்களும் கொடுத்து உதவும்படியாக கவர்ன்மெண்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் அவர்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

அக்டோபர்மீ 30உ G. O. நெ. 768.

இந்தியா தேசத்தில் என்னகாரணத்தால் பிளேக்நோய் உண்டாகிறதென்பதை ஆராய்ச்சி செய்யும் பொருட்டு கவர்மெண்டார் ஐரோப்பா கண்டத்தில் சிறந்து விளங்கும் சில டாக்டர்களைத் தருவித்து ஒரு கமிஷன் ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்யும்படி சொன்னார்கள். அவர்கள் ஆராய்ச்சிசெய்து அடியிற்கண்ட முடிவு செய்திருக்கிறார்கள்.

(1) இறந்துபோன எலிகளால் பிளேக் நோய் உற்பத்தியாகின்றது.

(2) மாண்டுபோன எலிகளினின்று உண்டாகும் Rat fleas என்கிற ஜெந்துக்கள் பறந்து மனிதர்கள் மேல்பட, மனிதர்களுக்கு இந்த நோய் தொத்துகின்றது.

(3) பூமியில், தரையில் அல்லது வீடுகளின் சுவர்களில் [illegible] பிளேக்குக்கு சொற்ப காலம்தான் விஷமுள்ளதாக வி[illegible]

[illegible] மாண்டுபோன எலிகளினின்றும் உண்டான [illegible] என்கிற ஜெந்துக்கள் பறந்து தங்கள்மேல் படாத [illegible] மனிதர்கள் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நோயுகண்டவுடன் எந்த வீட்டில் கண்டதோ அந்த வீட்டை அந்த க்ஷணமேவிட்டு விலகுவதுதான் சரியான பரிகாரம்; பால் குத்திக்கொள்ளுவதே நோய் காணுமல் தடுக்கும்படியான சிறந்த உபாயம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இனிமேல் வீடுகள் கட்டும் நகரவாசிகளும் கிராம வாசிகளும் Rat proof buildings என்கிற எலிகள் வரக்கூடாத கட்டடங்கள் கட்டினால் உத்தமமாயிருக்கும். ஜனநெருக்கமுடைய வீதிகளைச் சீர்திருத்திக்கட்டும் முனிசிபாலிட்டியார் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளும்படியாக அம்மாதிரி கட்டடங்கள் கட்டிக் காண்பிக்கவேண்டும்.

எலிகளுக்கு ஆகாரம் கிடைக்கக் கூடாதப்படி எலிகள் சாப்பிடக்கூடிய தானியங்களையும் பண்டங்களையும் மூடி வைத்திருக்கவேண்டும் எலிகளை கொல்லுவதற்கு எலி பிடிக்கும் Trap (யந்திரமே) தகுந்த யந்திரம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். பிளேக்நோய் உண்டான வீட்டின் தரையின் சுவரிலும் இந்தியா கவர்மெண்ட் சிற்றுயிர் இலக்கண சாஸ்திரியராகிய மிஸ்டர் மாக்ஸ் லெல்லிபராய் அவர்களால் சிபார்சு செய்யப்பட்ட எண்ணெயைத் தெளிக்கவேண்டும். கவர்மெண்டார் பிளேக் நோயைப் போக்குவதற்காகச்செய்யும் ஏற்பாடுகளை பாமர ஜனங்கள் கண்டு மிரளாமல் அவைகளைத் தழுவி நடக்கும் பொருட்டு படிப்படைந்த ஜனங்கள் புத்தி சொல்லவேண்டும். பாமர ஜனங்கள் பால் குத்திக்கொள்ளும் பொருட்டு படிப்படைந்த ஜனங்கள் பகிரங்கமாக பால் குத்துமிடத்திற்கு வந்து பால் குத்திக்கொண்டால் நலமாக விருக்குமென்று சென்னப்பட்டணம் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

விளம்பரம்.

எடிட்டர் கிரகத்தில் நடந்த எதிர் பார்க்காத துக்கம் சம்பவம் ஒருபுரமிருக்க, இதற்கு முன் இந்த கெஜெட்டை அச்சிட்டுக்கொண்டிருந்த அச்சியந்திர சாலைக்காரருக்கும் நமக்குமுள்ள கணக்கு வழக்குகளைத் தீர்த்து வேறொரு அச்சாபீசுக்குக் கொண்டு வந்ததிலும் தாமதப்பட்டது. இவ்விதமான தாமதம் எக்காலத்திலு முண்டாகமாட்டாதென்று உறுதியாய்ச் சொல்லுகின்றோம்.

ராதாகிருஷ்ண கம்பெனியார்

அவரை அந்த விடத்திற்குக் கொண்டுபோய் விடும்படியாக போலீசாருக்கு உத்திரவு செய்தார்கள். அந்தப் பெண் போலீஸ் பந்தோபஸ்தில் ரோடில் நடந்து கொண்டு வேப்பேரியிலுள்ள ரெவரெண்டு பிலிப்பிஸ் பாதிரி வீட்டிற்குச் சென்றனள். அது வரையில் வேடிக்கைபாக்க வந்த ஜனங்களும் அவளுடன் பின் தொடர்ந்து சென்றார்கள். இப்படி வந்தவர்களில் ஒருவன் சார்ஜண்ட்பேரில் கல்லைவிட்டெறிந்ததற்காக அடுத்த நாள் விசாரணை செய்யப்பட்டு 6-மாத கடுங்காவல் தண்டனை அடைந்திருக்கிறான்.

எழும்பூர் போலீஸ் கோர்ட்.

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் :—மிஸ்டர் W. E., கிளார்க்.

கைதிகள் கூடி ஜெயில் அதிகாரிகளைச் சதிசெய்ப யோசனை செய்த கேஸ்.

கேசின் விபரம் :—சென்னபட்டணத்தி லிருக்கும் மைக்ராராஜாவின் ஜெயிலில் கைதிகள் கூடி ஜெயில் அதிகாரிகளை அடிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ரிப்போர்ட் பெற்று F. டிவிஷன் போலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஹாரனட் ஜெயிலுக்குப்போய் கைதிகளை விசாரணைசெய்து அவர்களுடைய வாக்குமூலங்களை தாக்கல்செய்து பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டிற்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பினார்.

இந்த ரிப்போர்ட்டைப் பார்வையிட்ட பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் அடியிற்கண்ட பிரகாரம் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்:—

இன்ஸ்பெக்டர் அனுப்பிய ரிப்போர்ட்டையும் கைதிகளின் வாக்குமூலங்களையும் பார்வையிட்டோம். கைதிகள் கூடி ஜெயில் அதிகாரிகளை அடிப்பதாக யோசனை செய்ததாக மட்டிலும் தெரிகிறதே யொழிய மற்றப்படி அவர்கள் இந்த யோசனையை நிறைவேற்றினதாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் சில கைதிகள் ஜெயில் அதிகாரிகளுக்குப் பயங்கரமான வார்த்தைகள் சொல்லியும் திட்டியும் பயமுறுத்தி யிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவர்களுக்குத் தகுந்தபடி சிக்ஷை விதிக்க ஜெயில் சட்டத்தின்படி ஜெயில் சூப்பிரண்டெண்டிற்குப்போதுமான அதிகாரமில்லை. ஆகையால் அவர்கள்பேரில் குற்றம் சாட்டி நம்முடைய விசாரணைக்கு சூப்பிரண்டெண்டு அனுப்புவாராகில் விசாரணைசெய்து தண்டிக்கத் தயாராயிருக்கிறோம்.

காக்கிநாடா டி. மு. கோர்ட்.

டி. மு. மிஸ்டர் T. கோபாலகிருஷ்ண பிள்ளை.

நஷ்ட தாவா.

வாதி:—கிருஷ்ணராவ்.

பிரதிவாதி:—காப்டின்கேம்ப் I. M. S.

கேசின்விபரம்:—காக்கிநாடாவில் வந்தேமாதரம் கூவி, சர்ஜன்கேம்பால் அடிபட்ட கிருஷ்ணராவ் என்கிற பாலுக்கன் சர்ஜன் கேம்பின்பேரில், காயத்தை ஆற்றிக்கொள்ள வைத்தியச்செலவு ரூ. 100-க்கும் நஷ்டத்திற்காக ரூ. 1900-க்கும் நஷ்டதாவா கொண்டுவந்திருக்கிறார்.

வாதியின் பிரியாது:—(1) நான் கமர்ஷியல் ரோட்டுவழியாக மேமீ 31உ போய்க்கொண்டிருக்கும் போது வந்தேமாதரம் எழுதப்பட்ட ஒரு விளம்பரம் என்கண்ணிற்குப் புலப்பட்டது: நான் அதை உரத்து வாசித்தேன். (2) அந்தச்சமயம் அந்தவழியாக வண்டியில் சவாரிசெய்துகொண்டுவந்த பிரதிவாதி வண்டியைப் பாலத்தினடியில் நிறுத்திவிட்டுப்பின்புறமாகவந்துஎன் முதுகில் ஒரு பலமான அடி அடித்து என்னைப் பூமியில் தள்ளினார். (3) நான் மறுபடியும் எழுந்திருந்தபோது வாதி என்குடுமியைப் பிடித்துக்கொண்டு தம்முடைய கையைமூடி என் முகத்தில் குத்தினார். இதனால் இரத்தம் வெளிவந்து ஒழுகிக்கொண்டிருந்தது. நான் பிரக்ஞையின்றிக் கீழே விழுந்து விட்டேன். அதன் பிறகு பிரதிவாதி என்னை அவருடைய பூட்ஸ்போட்டகாலால் உதைத்து இரத்தம் ஒழுக ஒழுக என்னை இழுத்துக்கொண்டு போலிஸ்ஸ்டேஷனுக்குப் போனார். (4) எனக்கு இரண்டுமணிநேரம்வரையில் பிரக்ஞை வரவில்லை. அன்று இரவு முழுதிலும் என் உயிர் ஆபத்திலிருந்தது.

சர்ஜன் கேம்பின் எழுத்து வாக்குமூலம்:—அடித்தது வாஸ்தவம். ஆனால் வாதி சொல்லியிருப்பதுபோல் அவ்வளவு பலமாக அடிக்கவில்லை. அப்படி வாதிக்குக் காயமுண்டாகவுமில்லை. வாதிக்கு யாதொருநஷ்டமும் நேரிடவில்லை. அப்படி கோர்ட்டார் நஷ்டப்கொடுக்கும்படி உத்திரவுசெய்யவேண்டுமானால் ஒரு ஆஸ்பிட்டல் அசிஸ்டன்ட் ஒருமுறை வந்து பார்ப்பதற்கு 8 அணு நஷ்டம் கொடுக்கும்படி உத்தரவுசெய்தால் போதுமானது. வாதி கோரணிகள்காட்டிக் கோபமூட்டினதால் நான் பொது அமரிக்கையைக் கெடுக்கும்படியாக நேரிட்டது.

டி. மு. கோர்ட்டார் உத்திரவு:—வாதி காயத்தை சொஸ்தப்படுத்திக்கொள்ளுவதற்காகச் செலவுசெய்த பணத்திற்கு விபரக்கணக்கு தாக்கல்செய்யவேண்டும். வாதி இன்னவிதமான கோரணிகள் காண்பித்தார் என்று விபரமாய் பிரதிவாதி ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்யவேண்டும்.

சேலம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்.

விவாகத்தை ரத்துசெய்யக்கோண்டுவந்த வியாஜ்ஜியம்.

வாதி:—முகமதிய பெண்சாதி.

பிரதிவாதி:—ஷையாள் புருஷன்.

கேசின்விபரம்.—வாதி பிரதிவாதிகளிருவரும் முகமதியமத ஆசாரப்படி விவாகம் செய்துகொண்ட தம்பதிகள். வாதி பிரதிவாதியுடன் கூடி வாழ்ந்தவந்தில் புருஷனுக்குப் போகசக்தி இல்லை என்று வாதிக்குத்தெரியவருகிறதாம். ஆகையால் விவாகத்தைப்பிரித்துவிடும்படி கோர்ட்டில் பிரதிவாதியாகிய புருஷன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறாள்.

பிரதிவாதியின் டிபன்ஸ்:—பிரதிவாதிக்குப் போகசக்தியிருப்பதாக டாக்டர்கள் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். இவைகளை தாக்கல் செய்து ருஜுப்படுத்தத் தயாராயிருக்கிறார்.

N. B. விசாரணை காலம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆகஸ்ட்மீ கெஜெட்டில் காண்

தென் ஆற்காடு செஷன் கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் H. மோபர்லி I. C. S.

விழுப்புரம் சப்மாஜிஸ்டிரேட் லஞ்சக்கேஸ்.

பிரியாதி:—கவர்ன்மெண்டார்.

எதிரி:—P. தாமோதரநாயுடு B. A.

கேசின் விபரம்:—விழுப்புரம் சப்மாஜிஸ்டிரேட்டாகிய தாமோதரநாயுடு கல்லிடைக்குறிச்சி ஆக்டிங் சப்மாஜிஸ்டிரேட்டாயிருக்கும்போது பாலம் பட்டு என்னும் ஊரில் ஒரு கொலைநடந்ததாகத் தமக்குப் புத்தூர் ஜாகிர்தார் ஆரியக்கவுண்டன் தபால் மூலமாக ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக நடித்து துப்பாக்கி தோட்டா விலங்கு சகிதமாய் மூன்று கான்ஸ்டேபில்களை அழைத்துக்கொண்டு பாலப்பட்டிக்குச் சென்று கொலையுண்டதாகச் சொல்லப்படுபவனுடைய பெண்சாதியினிடம் ஒரு மனுவில் கையெழுத்து வாங்கிக்கொண்டு இந்தக் கொலையில் குரும்பக் கவுண்டன் மலை ஜாகிர்தாருடைய குமாரர்களில் ஒருவனாகிய ரெங்கசாமிக் கவுண்டன் சம்பந்தப்பட்டிருப்பதாக அரஸ்ட் செய்து மறுநாள் அவனுடைய வீட்டில் சோதனைபோட்டு சில கடிதங்களை எடுத்துக்கொண்டு அந்தக் கிராமத்திலேயே இரண்டு நாள் வரையிலிருந்து பெருந்தொகை லஞ்சம் கேட்டார். அரஸ்ட் செய்யப்பட்ட ரெங்கசாமிக்கவுண்டன் போலீஸ் பந்தோபஸ்துடன் தன்னுடைய வீட்டிற்குச் சென்று ரூ. 1300 அடங்கிய ஒரு பணமூட்டையை எடுத்துக் கொண்டுவந்து கோவிலில் முகாம்போட்டிருந்த சப்மாஜிஸ்டிரேட்டினிடம் கொடுக்க வந்தான். இதற்குள்ளாக சப் மாஜிஸ்டிரேட், ஷை ரெங்கசாமிக்கவுண்டனை செல்லப்பட்டி என்னும் கிராமத்திற்குப் போலீஸ் பந்தோபஸ்துடன் கொண்டு வரும்படி உத்திரவு செய்துவிட்டுப்போய் விட்டார். ஆகவே ஷை ரெங்கசாமிக்கவுண்டன் இந்தப் பணமூட்டையை செல்லப்செட்டி தூக்கிக் கொண்டு வந்து கிராமமுனிசீப் வீட்டில் தங்கியிருந்த சப் மாஜிஸ்டிரேட்டினிடம் ரூ. 1300ம் கொடுத்தார்கள். சப் மாஜிஸ்டிரேட் ரூ. 4000ம் கொடுத்தால் தான் ரெங்கசாமிக் கவுண்டனைவிடத் தாம் தயாராகவிருப்பதாகச் சொன்னார்கள். செலப்பட்டியிலேயே ரூ. 500 கடன் வாங்கி சப் மாஜிஸ்டிரேட்டிற்குப் பணம் கட்டி விட பிரயத்தனப்பட்டார்கள். சாத்தியப்படாமல் இராவிலேயே பாலப்பட்டிக்குப் போய் ரூ. 500 வாங்கிக் கொண்டுவந்து ரூ. 1800ம் சாத்தூர் சப்மாஜிஸ்டிரேட்டினிடம் கொடுத்தார்கள். பாக்கித்தொகையை கள்ளிடக்குறிச்சிக்குப் போனவுடன் தருவதாய்ச் சொன்னார்கள். சப்மாஜிஸ்டிரேட் சம்மதித்தார். சப் மாஜிஸ்டிரேட் ரெங்கசாமிக் கவுண்டனை விடாமல் பந்தோபஸ்துடன் கள்ளடக் குறிச்சிக்குக்கொண்டு வந்து சப் ஜெயிலில் வைக்காமல் ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார். இரண்டு தினம் சென்று சப் ஜெயிலில் அடைக்கும்படி உத்திரவு செய்தார். ரெங்கசாமிக் கவுண்டனின் தகப்பனாகிய ஜாகிர்தார் ஒரு நாட்டுக் கோட்டை செட்டியாரிடம் அதிகப்படியான வட்டிக்குப் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்து ரூ. 2000ம் கடன் வாங்கி சப் மாஜிஸ்டிரேட்டினிடம் கொடுத்தார். இந்தத் தொகையையும் வாங்கிக் கொண்டார். ரெங்கசாமிக்கவுண்டனை கிரிஸ்ட்மஸ் பண்டிகை கழித்தவுடன் விட்டுவிடுவதாக வாக்குக்கொடுத்திருந்தார். கிரிஸ்ட்மஸ் பண்டிகை கழித்தவுடன் சப்மாஜிஸ்டிரேட் ரெங்கசாமிக்கவுண்டனைவிடாமல் பல்லப்பட்டியில் கொலை நடந்திருப்பதாகவும் சந்தேகத்தின்பேரில் தாம் ஒருவனை அரஸ்ட் செய்துகொண்டுவந்திருப்பதாகவும் இதைக்குறித்துப் போலீசாரை விசாரணைசெய்யும்படி உத்திரவுசெய்யவேண்டுமென்றும் டிப்டி மாஜிஸ்டிரேட்டிற்கு ரிப்போர்ட்செய்தார். இது, பின்னிட்டு இவர்பேரில் லெஞ்சம் கொடுத்தவர்கள் கேஸ் கொண்டுவந்தால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்படியாகத்தயார்செய்த சாட்சியம்; இற்க, சப் மாஜிஸ்டிரேட் ஒப்புக்கொண்டபடி ரெங்கசாமிக்கவுண்டனை ஜெயிலிலிருந்துவிடாமற் போனதால் லெஞ்சம் கொடுத்தவர்கள் சப் மாஜிஸ்டிரேட் பேரில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டினிடம் பிரியாது கொடுத்தார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட் இதைப்பற்றி டிபார்ட்மெண்டில் விசாரணைசெய்யும்படியாக டிப்டி மாஜிஸ்டிரேட்டிற்கு உத்திரவுசெய்தார். டிப்டி மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்து அனுப்பிய ரிப்போர்ட் ஜில்லா மாஜிஸ்டிரேட் மூலமாக கவர்ன்மெண்டாருக்கு எட்ட இவர்கள் அவரை சஸ்பெண்டு செய்து விசாரணைக்குட்படுத்தினார்கள். இவர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டதில் இவர்பேரில் லெஞ்சம் வாங்கின குற்றமும், சர்க்கார் தஸ்தாவேஜிகளை மோசடியாய் திருத்திய குற்றமும், அக்கிரமமாய் இம்சித்து லெஞ்சம் வாங்கிய குற்றமும் ஏற்பட்டதால் இ. பி. கோ. 161, 218, 388-வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்கள் ஸ்தாபனை செய்யப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்.

செஷன்விசாரணை:—டிசம்பர் 16வ முதல் விசாரணை நடந்துவருகின்றது. பிராசிக்கியூஷன் தரப்பில் இதுவரையில் 18 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும் வக்கீல் மிஸ்டர் B. சீனிவாச அய்யங்காரும் பேசி வருகிறார்கள். குற்றவாளி தரப்பிற்கு ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் சடகோபாசாரியாரும் C. நரசிம்மாசாரியாரும், V. வெங்கடாசாரியாரும் பேசிவருகிறார்கள்.

(முடிவு அடுத்த மாதம் கெஜெட்டில் காண்க).

சிலோன் செஷன் கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் உட்ரீட்டன்.

குடை பிடிக்கக்கூடாதென்று உத்திரவுசெய்த கேஸ்.

கேசின்விபரம்:—சிலோனில் ஹார்கல்லி எஸ்டேட் என்று ஒரு தோட்டமிருக்கிறது. இதனுடைய சொந்தக்காரருடைய பெயர் மிஸ்டர் பிரவன் இவர் தம்முடைய தோட்டத்திற்குள் ஒருவரும் குடை பிடிக்கக்கூடாதென்று உத்திரவு செய்திருக்கிறார். ஒருநாள் இவருக்குத்தந்தி ஒன்று வந்தது. அந்தத் தந்தியிலேயே பதிலடிக்கவும் சார்ஜ் கட்டப்பட்டிருந்தது.

தாமஸ் புல்லி என்கிற தந்தி ஆபீசு சேவகன் இத்தந்தியைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு பதில்

தந்தி எழுதி வாங்கிக்கொண்டுவரும்போது குடை பிடித்துக் கொண்டுவந்தான். மிஸ்டர் பிரவனுடைய குமாரன் குடை பிடிக்கக்கூடாதென்று சொன்னான். தந்தி பியூன் குடையை மடக்கவில்லை. குமாரன் அடித்தான். தந்திப்பியூன் தந்தியைக்கிழித்தெறிந்தான். ஆகவே அந்த எஸ்டேட்டின் சொந்தக்காரனாகிய மிஸ்டர் பிரவன் தந்தி பியூன்பேரில் இ. பி. கோவில் சொல்லப்பட்டிருக்கும் விஷமம் (Mischief) என்னும் குற்றம் சாட்டினார். மாஜிஸ்டிரேட்டார் இந்தக்கேசை விசாரணைசெய்து தந்திப்பியூனுக்கு ரூ. 10 அபராதம் விதித்தார்கள்.

தந்திப்பியூன் செஷன் கோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—ரூ. 10 அபராதத்தை ஒரு சென்டாகக் குறைத்துக் குடைபிடிக்கக்கூடாதென்று சட்டம் பிறப்பிக்க கவர்ன்மெண்டாரல்லாத பிறருக்கு அதிகாரமில்லை என்று ரிமார்க்கூறினார்கள்.

கோயமுத்தூர் செஷன் கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் R. L. பிராட்புட்.

மணிகாரபாளையம் கொலைக்கேஸ்.

குற்றவாளிகள்:—(1) பெத்தநாய்க்கன்.

(2) வெங்கடசாமிநாய்க்கன்.

(3) லக்ஷ்மண நாய்க்கன்.

(4) இடிகரை ரெங்கசாமி நாய்க்கன்.

கேசின் விபரம்:—கோயமுத்தூருக்குச் சமீபத்திலுள்ள மணிகாரபாளைபத்தில் பெத்தநாய்க்கன் என்பவனைக் குற்றவாளிகள் அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். கொலைசெய்யப்பட்டவனுக்கும் குற்றவாளி நால்வர்களுக்கும் ஒரு அசால்ட் கேஸ் சம்பந்தமாய் மனஸ்தாபம், குற்றவாளிகள் நால்வரும் பந்துக்கள்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளிகள்சேர்ந்து இறந்துபோனவனை அடிக்கையில் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பையன் சாட்சியம்சொன்னான், கொலையுண்டவன் அடிபட்டு மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தவுடன் ரோட்டிற்போய்க்கொண்டிருக்கிறவர்கள் அவனுக்கு ஜலம்கொடுத்து பிரக்ஞை உண்டாக்கினதாகவும் பிரக்ஞை வந்தவுடன் அவன் தன்னை அடித்த குற்றவாளிகள் நான்குபேர்கள்பெயரையும் சொன்னதாகவும் சாட்சியம் சொன்னார்கள். அந்தக் கூட்டத்திலிருந்தவும் கான்ஸ்டேபில் உத்தியோகத்திலிருந்து நீக்கினவுமான ஒருவன் இறந்துபோனவன் குற்றவாளிகள் பெயரைச் சொல்லும்போது தன்னுடைய நோட்டுபுத்தகத்தில் தாக்கல்செய்துகொண்டதாகவும் சாட்சியம் சொன்னான்.

டிபன்ஸ்தர்ப்பார் பிராசிக்கியூஷன் தரப்பு சாட்சிகள்சொன்ன சாட்சியத்திலிருந்த பேதா பேதங்களை எடுத்துக் காண்பித்துக்கொண்டும் பிராசிக்கியூஷன் சாட்சிகள் கேவலமானவர்களென்றும் சொன்னார்களே யொழிய மற்றப்படி தங்கள்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை நிராகரிக்கக்கூடிய யாதொரு சாட்சியமும் விடவில்லை.

அசசர்களின் அபிப்பிராயம்:—1, 2, 3 குற்றவாளிகள் குற்றம்செய்திருக்கிறார்கள் என்று எல்லா அசசர்களும் ஏகோபித்த அபிப்பிராயம்கூறினார்கள். ஒரு அசசர்மட்டிலும் நான்காவது குற்றவாளியும் குற்றம் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறினார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் எல்லாக்குற்றவாளிகள்மீதும் கொலையாகாத அநியாயமரணம் என்கிற குற்றம் ஸ்தாபித்து 1, 3, கைதிகளுக்கு 5 வருஷ கடினகாவல் தண்டனையும், 2, 4, கைதிகளுக்கு மூன்றுவருஷ கடினகாவல் தண்டனையும் விதித்தார்கள்.

புரோம் செஷன் கோர்ட்டு.

குற்றவாளி:—ஒரு பர்மாஸ்திரீ.

கேசின்விபரம்:—பர்மாபுரோமைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒருவனுக்கு இரண்டு பெண்சாதிகளிருக்கிறார்கள். இருவர்களும் தனித்தனி வீட்டில்வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் குற்றவாளி ஒரு மனைவி. இவளுடைய வீட்டிலிருக்கிற சொத்துக்களைப் புருஷன்அடிக்கடி களவாடிக்கொண்டுவந்தான். இந்த மனைவியின் வீடு ஒரு குக்கிராமத்திலிருக்கிறபடியால் இவள் ஆயுதங்கள் வைத்துக்கொண்டிருந்தாள். ஒருநாள்புருஷன் வீட்டிற்கு வந்தபோது அவனுடன் வம்பு வளர்த்து அவனை வெட்டரிவாளால் வெட்டி கண்டதுண்டமாகச் செய்துவிட்டதாகப் பிராசிக்யூஷன் தரப்பாரின் கக்ஷி.

தீர்ப்பு:—கோர்ட்டார் அவளுக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

கைதி அப்பீல் செய்துகொண்டிருக்கிறாள்.

அப்பீல் கிரௌண்டுகள் (1) எந்த போலிசார் கைதியை அரஸ்ட்செய்தாரோ அந்த ஆபீசரின் மனைவியின் போதனையின்பேரில் கைதி குற்றத்தை ஒப்புக் கொண்டாள். (2) இப்படி ஒப்புக்கொண்டதை கைதி நிராகரித்திருந்தும்செஷன் கோர்ட்டார் அதைகவனிக்காமற்போனது சட்ட விரோதம். (3) கொலை நடந்தபோதுபார்த்ததாகச்சாக்ஷியம்சொன்னபிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் கைதிக்கு அனுகூலமாகவும் சாக்ஷியம் சொல்லியிருப்பதை செஷன் கோர்ட்டார் கவனிக்கவில்லை. (4) இறந்துபோன புருஷன் பலபேர் முன்னிலையில் தகாதவிடத்தில் புணரும்படிக் கூப்பிட்டது கைதிக்குக் கோபத்தை மூட்டிவிட்டது.

அப்பீல் விசாரணை இன்னும் முடியவில்லை.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

நினையாமல் அநியாய மரணமுண்டுபண்ணினகேஸ்.

கேசின் விபரம்:—திருநெல்வேலிஜில்லாவில் தேவகிருபாய் என்பவனும் அவனுடைய சகோதரனும் அருணாசல செட்டி என்பவனுடைய 50 ஆடுகளைப் பிடித்து பவுண்டில் அடைக்கப்போனார்கள். போகும் வழியில் அருணாசல செட்டியும் அவன் தம்பியும் மறித்தார்கள். அவர்களுக்குநடந்த சண்டையில் தேவ

திருபாய் என்பவன் அருணாசல செட்டியைக் கத்தியால் குத்திக்கொலைசெய்தான். இந்தக்கேஸ் திருநெல்வேலி செஷன்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டு குற்றவாளிக்கு 6 வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கைதி அப்பீல்செய்துகொண்டான்.

கைதியின் டிபன்ஸ்:—இறந்துபோன அருணாசலசெட்டியே முதலில் கைதியைக் கத்தியால் குத்தினான். கைதி தன்னை டிபன்ஸ் செய்துகொள்ளும் பொருட்டு அருணாசலசெட்டியை எதிர்த்ததில் கைதி கையிலிருந்த கத்தி அவன்பேரில்பாய்ந்து இறந்துபோய்விட்டான்.

தீர்ப்பு:—அருணாசல செட்டியைக் கொலைசெய்ய வேண்டுமென்கிற முன்யோஜனை கைதிக்குக் கிடையாது. தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பலாத்காரம் உபயோகப்படுத்தவேண்டுமோ அதைவிட அதிகமாக உபயோகப்படுத்தியிருக்கிறான். ஆதலால் இவனுக்கு செஷன்கோர்ட்டார் விதித்த 6 வருஷக் கடுங்காவல் தண்டனை அதிகமாயிருக்கிறபடியால் மூன்று வருஷமாகக் குறைக்கிறோம்.

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்டுகள்:—மிஸ்டர் J. R. கூம்ஸ்.
மிஸ்டர் P. ராஜரத்தின முதலியார்.

முனிசிபல்வரி கேஸ்.

அப்பீல்வாதி:—எலக்ட்ரிக் டிராம்வே கம்பெனியார்.

அப்பீல் பிரதிவாதி:—சென்னை கார்பொரேஷன்.

கேசின் விவரம்:—டிராம்வண்டிக்குப் பின்னால் கோர்க்கப்பட்டு ஓடும் மற்றொரு டிராம்வண்டிக்கும் 1904-ம்௵த்திய 3-வது ஆக்ட் 6-வது ஷெட்யூல் பிரகாரம் சென்னைக் கார்பொரேஷன்காரர்கள் ஒரு டிராம்கார் ஒன்றுக்கு பிரதிவருஷத்திற்கு ரூ. 15 வீழுக்காடு வரி கொடுக்கவேண்டுமென்று வரி போட்டார்கள். டிராம்வே கம்பெனியார் பின்னால் கோர்க்கப்பட்டிருக்கும் வண்டிக்கு மின்சாரம் இல்லாதபடியால் தானே ஓடக்கூடிய சக்தியில்லை என்றும் ஆதலால் கார்பொரேஷன்காரர்கள் அந்தவண்டிகளுக்கு வரிபோட்டது சட்டவிரோதமென்றும் சொல்லி ஆக்ஷேபித்தார்கள். முனிசிபல் அதிகாரிகள்போட்ட வரி சரி என்று முனிசிபல் கமிஷனர்கள் மீட்டிங்குகூடி தீர்மானித்துவிட்டார்கள். ஆகவே எலக்ட்டிரிக் டிராம்வே கம்பெனியார் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—டிராம்வே கம்பெனியாருக்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்னும் முனிசிபாலிட்டியாருக்கு வக்கீல் மிஸ்டர் துரைசாமி அய்யங்காரும் ஆஜரானார்கள்.

பின்னால் கோர்க்கப்பட்டிருக்கிற வண்டியில் எலக்ட்டிரிக் என்கிற மின்சாரமில்லாமற்போனபோதிலும் முதல்வண்டியிலிருக்கும் மின்சாரத்தால் இழுக்கப்படுகிறபடியால் அதற்கும் வரி செலுத்தவேண்டுமென்பது முனிசிபாலிட்டியாரின் கட்சி.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

லா பாயின்ட்:—பிராமிசரிநோட்டில் எவன்பெயர் இருக்கிறதோ அவனன்றி வேறொருவன் பிராமிசரி நோட்டின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாமா?

கேசின் விபரம்:—வாதியும் இரண்டாவது பிரதிவாதியும் சகோதரர்கள். இருவரும் பாகம் பிரிவினைசெய்துகொண்டார்கள். இரண்டாவது பிரதிவாதியின் பெயரால் வாங்கப்பட்ட ஒரு பிராமிசரிநோட்டு இதர சொத்துக்களுடன் வாதிபங்கிற்காக வந்தது. ஆனால் இந்தப் பிராமிசரிநோட்டில் இரண்டாவது பிரதிவாதி, வாதிக்கு எண்டார்ஸ்மெண்டு செய்துகொடுக்கவில்லை.

வாதி பிராமிசரிநோட்டு எழுதிக்கொடுத்தவரை முதல் பிரதிவாதியாகவும் தம்முடைய சகோதரனை இரண்டாவது பிரதிவாதியாகவும் சேர்த்து திருக்கோயிலூர் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி முகோர்ட்டார் தீர்ப்பு:—பிராமிசரிநோட்டின்மீது நெகோஷியபில் இன்ஸ்டுரூமெண்டு ஆக்ட்டின்படி யாதொரு எண்டார்ஸ்மெண்டாவது அல்லது வாதிக்கு இந்தநோட்டு மேடோவர் செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லும்படியான தஸ்தாவேஜி ஆதாரமாவது இல்லாமலிருக்கிறபடியால் வாதி இந்தப் பிராமிசரிநோட்டின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார்.

ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்பு:—பிராமிசரிநோட் பாகம் பிரிவினையில் வாதிபங்கிற்காக வந்ததென்று ருஜுப்படுகிறபடியால் அதற்கு எண்டார்ஸ்மெண்டு வேண்டுமென்பது அவசியமில்லை. வாதியும் இரண்டாவது பிரதிவாதியும் அன்னியர்களாக இருந்தால் எண்டார்ஸ்மெண்டு தேவை என்று சொல்லி கீழ்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து வாதிபக்கம் தீர்ப்புசொன்னார்கள்.

முதல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல்செய்தார்.

லாயர்கள்:—வக்கீல் மிஸ்டர் T. ராமானுஜாசாரியார் முதலாவது பிரதிவாதி தரப்பிற்கும், மிஸ்டர் ஜோசப் சத்தியநாடார் வாதிதரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—பிராமிசரிநோட் எவன்பேரால் வாங்கப்பட்டிருக்கிறதோ அவனை அன்னியில் வேறொருவன் அந்த நோட்டின்பேரில் தாவாக் கொண்டுவரக்கூடாதென்றும் அப்படிக் கொண்டுவரவேண்டுமானால் டிரான்ஸ்பர் ஆப்பிராபர்ட்டி ஆக்ட் 130-வது பிரிவின்படி டிரான்ஸ்பர் செய்யப்பட்டதற்கு எழுத்துமூலியமான சாட்சியமிருக்கவேண்டுமென்றும் இ.லா.ரி. 30 சென் 88-ல் சொல்லப்பட்டிருக்கும் கேசில் இதே ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் ஜில்லாக்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து டி. மு. கோர்ட்டார் தீர்ப்பை உறுதிப்படுத்துகின்றோம் என்று தீர்ப்புசொன்னார்கள்.

கோதாவரி ஜில்லா ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் H. L. பிரேயிட்வுட் I. C. S.

கல்கத்தா பிராவிடண்ட் பண்டு கேஸ்.

குற்றவாளி:—காமல்கிருஷ்ண போஸ்.

கேசின் விபரம்:—கல்கத்தா பிராவிடண்ட் பண்டு மானேஜராகிய மிஸ்டர் போஸ் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார் என்று நம்முடைய சட்ட கெஜெட்டில் முன் ஒரு சமயம் கூறியிருந்தோம். ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டார் இந்தக்கேசை விசாரணை செய்து போசின் பேரில் நம்பிக்கை மோசக்குற்றமும் ஏமாற்றின குற்றமும் துர்விநியோகம் செய்த குற்றமும் ஆகிய மூன்று குற்றங்களும் ஸ்தாபனை செய்து எல்லாக் குற்றங்களுக்கு மாகச் சேர்ந்து நான்கு வருஷக் கடின காவல் தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும்கட்டத்தவறினால் ஒரு வருஷக்கடுங்காவல் தண்டனையும் விதித்திருக்கிறார்கள்.

சங்கரநார்கோவில் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்.

அம்பட்டனைக் கொலைசெய்த கேஸ்.

கேசின்விபரம்:—திருநெல்வேலி ஜில்லா சங்கரநார்கோவிலைச்சேர்ந்த திருகுரட்டநல்லூர் என்னும் கிராமத்தில் ஜனங்கள் இருகட்சிப்பட்டிருந்தார்கள். ஒரு கட்சியைச்சேர்ந்த அம்பட்டன் 1907-ம்௵ ஏப்பரல் மீ 21உ கொலையுண்டு கிடந்தான். கிராமமுனிசிப் இதைக்குறித்து முதல்கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிற்கு ரிப்போர்ட்டு அனுப்பினதுமன்றி சங்கரநார்கோவில்கிராமமுனிசிப்பிற்கு யாதாஸ்தும் அனுப்பினர். போலீசார் வந்து விசாரணைசெய்து பிரேதசபரிசோதனைசெய்து ரிப்போர்ட் அனுப்பினார்கள். இந்தக்கொலை நடந்ததற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று என்னவென்றால், இந்த அம்பட்டன் எந்த கட்சிக்கு விரோதமோ அந்தக்கட்சிக்காரர்களின் பேரில் கேஸ் கொண்டுவரும்பொருட்டு அம்பட்டனுடைய கட்சிக்காரர்கள் அம்பட்டனைக் கொலைசெய்திருக்கவேண்டுமென்பது. மற்றொரு காரணமென்னவென்றால் இந்த அம்பட்டனுடைய எதிரிகள் அடித்துக்கொன்றிருக்கவேண்டுமென்பது. போலீசாரும் கிராமமுனிசிப்பும் அம்பட்டனுடைய சொந்தக்கட்சிக் காரர்களே இந்தக்கொலையைச்செய்திருக்கவேண்டுமென்று அவர்கள் பேரில் கொலைக்குற்றம் சாட்டினார்கள்.

கொலையுண்ட அம்பட்டனுடைய தகப்பன் எதிர்கட்சியார்பேரில் குற்றம் சாட்டியிருக்கிறான். சங்கரநார்கோவில் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் இந்த இரண்டு கேசுகளையும் விசாரணைசெய்து இருகட்சிக்காரர்களையும் செஷனுக்கு கமிட் செய்திருக்கிறார்.

N. B. செஷன் விசாரணை விபரத்தை அடுத்த ஆகஸ்ட்டுமீ கெஜெட்டில் காண்க.

பூனா மாமல்தார் கோர்ட்.

மாமல்தார்—லாட்கார் ஹாலாலி:

பெண்சாதியைத் தலைகீழாய்க்கட்டி அடித்த கேஸ்.

குற்றவாளி:—ஈபுரோபாறு.

கேசின்விபரம்:—குற்றவாளியின் பெண்சாதி கடந்த மூன்றுமாதம் தன்னுடைய தாயார் வீட்டில் வசித்துவந்தாள். ஒரு நாள் அவள் வெளியே ஒரு வேலையாகப் போய்க்கொண்டிருந்தபோது மூக்கா என்னும் பெயருடைய ஒரு ஸ்திரீ அவளைப்பிடித்துக்கொண்டு வந்து தன்னுடைய புருஷனிடம் விடவே அவன் அவளை ஒரு உத்திரத்தில் தலைகீழாகக்கட்டித் தொங்கவிட்டு ஒரு கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தொண்டையை அறுப்பதாகச்சொல்லி தலையில் ஒரு வெட்டுப்போட்டான். மூக்கா என்கிற ஸ்திரீ அவளை முதுகில் அடித்தாள். பெண்சாதி வேதனை பொறுக்க முடியாமல் கூச்சல் போடவே தெருவில் போய்க்கொண்டிருந்த ஜனங்களும் போலீசாரும் சென்று தப்பித்துவிட்டார்கள்.

பெண்சாதி புருஷன்பேரில் கடுங்காயம் விளைவித்த குற்றம் சாட்டினாள்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டதில் பெண்சாதி கொடுத்த வாக்குமூலத்தை அனுசரித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(இன்னும் விசாரணை முடியவில்லை).

COURT NEWS.

கோர்ட்டு சமாசாரங்கள்.

ஹைகோர்ட்டு.

கோடைகால ரஜாவிற்காக மூடப்பட்ட ஹைகோர்ட்டு நிகழ் ஜூலைமீ 8உ. திறக்கப்பட்டது. ரஜாகாலத்தைக்கழிக்க இங்கிலாண்டிற்குச் சென்றிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் ஆகிய இருவரும் நிகழ்மீ 6உ திரும்பி சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னால்ட் வொயிட் சென்ற வருஷத்தில் கோடைகால ரஜா ஐட்ஜியாக விருந்தபடியால் இந்த வருஷ கோடைகால ரஜாவுடன் தொடர்ச்சியாக ஒரு மாதத்திற்கு ரஜாவெடுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே ஹானரபில் சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஆக்டிங் சீப் ஜட்ஜியாகவிருந்துவருகிறார்கள். கோர்ட்டு திறந்ததினம் சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களும் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிசும் முதல அப்பீல் கோர்ட்டில் வீற்றிருந்து விசாரணை புரிந்தார்கள். ஜட்ஜிகள் மிஸ்டர் பென்சனும் மிஸ்டர் போடாமும் இரண்டாவது அப்பீல் கோர்ட்டில் வீற்றிருந்து விசாரணைசெய்தார்கள். ஜஸ்டிஸ் மிஸ்டர் மில்லர் அட்மிஷன் கோர்ட்டில் வீற்றிருந்து விசாரணை புரிந்தார். ஒரிஜினல் சயிட்மூடப்பட்டிருந்தது.

ஹைகோர்ட் ரிஜிஸ்டிராராபீஸ் மிஸ்டர் A. L. ஹானே I. C. S. 6-மாத ரஜாவின்பேரில் இங்கிலாண்டிற்குப் போயிருக்கிறபடியால் மிஸ்டர் H. D. C. ரேய்லி ரிஜிஸ்டிராராகநியமிக்கப்பட்டிருக்கிறார்.

CASES FOR THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டுகளி லிருக்கும் கேஸ்கள்.

கவுன்சிலர்கள்:—(1) லார்ட் மாக்னாட்டன்.
(2) லார்ட் டேவி.
(3) சர் ஆண்டி ரூஸ்கோயில்.
(4) சர் ஆர்தர் வில்சன்.

வாதி:—திருமலை ஸ்ரீரங்காசார்லு வகையரு.

பிரதிவாதி:—பிரயாகதாஸ்ஜீவாரு.

* திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் தேவஸ்தான பிரிவிகவுன்சில் அப்பீல் வியாஜ்ஜியம்.

(9-2-07.)

வியாஜ்ஜியசங்கிரகம்:—வட ஆற்காடு ஜில்லா திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் தேவஸ்தானம் ஒன்றிருக்கிறது. இது ஹிந்துக்களுக்கு முக்கியமான தேவஸ்தானமாகச் சிறந்து விளங்கிவருகின்றது. இந்தியாவிலுள்ள எல்லாவிடங்களிலிருந்தும் ஜனங்கள் தரிசனார்த்தமாக இத்தேவஸ்தானத்திற்கு வருகின்றார்கள். இத்தேவஸ்தானத்திற்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு லக்ஷத்திற்குக் குறையாமலும் மூன்று லக்ஷத்திற்கு அதிகப்படாமலும் வருமானம் வந்துகொண்டிருக்கின்றது. இத்தேசத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம்ஸ்தாபிக்கப்படுவதற்கு முந்தி இத்தேசத்தை யார் அரசாண்டுவந்தார்களோ அவர்களுடைய மானேஜ்மெண்டில் இத்தேவஸ்தானமிருந்து வந்தது.

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவிற்கு வந்து சேர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தை இத்தேசத்தில் ஸ்தாபித்துக்கொண்டு வந்தபோது பிரஸ்தாப திருப்பதி தேவஸ்தானமும் அவர்களுடைய மானேஜ்மெண்டிற்குவந்துவிட்டது. 1817-வது ஹ்த்திய 7-வது ரெகுலேஷன் பாஸ் செய்விக்கப்பட்டபிறகு இந்த தேவஸ்தானம் ரெவினியூபோர்ட்டார் தரப்பில் ஆற்காடு ஜில்லாக்கலெக்டரால் மானேஜ்மெண்டு செய்து வரப்பட்டது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கோர்ட் ஆப் டைரெக்டர்கள் (Court of Directors) இனிஷை கம்பெனியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சுதேசிகளுடைய தேவஸ்தானங்களிலும், மத சம்பந்தமான நியமனங்களிலும் பிரவேசிக்கக் கூடாதென்று 1843-ம் ஹ்த்தில் ஒரு உத்தரவு பிறப்பித்ததின்பேரில், இதுகாலபரியந்தம் இந்த தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்துவந்த ரெவினியூ போர்டார் இத்தேவஸ்தான மானேஜ்மெண்டை ஷை தேவஸ்தானம் அமைந்திருக்கும் மலையின் அடிவாரத்திலிருக்கும் ஹதிராம்ஜி மடத்தின் மகந்துவாகிய சிவதாஸ் என்பவரிடம் ஒப்புவித்து அவரை ஷை தேவஸ்தானத்திற்கு விசாரணைகர்த்தாவாக நியமித்து இந்தவிசாரணைக்கர்த்தர் ஸ்தானத்திற்குப்பாரம்பரியமாக எப்போதும் ஷை மகந்து சிவதாசின்வாரசுகளே வரவேண்டுமென்று சந்நதுகொடுத்தார்கள். ரெவினியூ போர்ட்டார் இந்த தேவஸ்தானத்தை மகந்து சிவதாசினிடம் ஒப்புவித்ததின் கருத்து என்னவென்றால், அவராலும் அவருடைய பரம்பரையார்களாலும் பிரஸ்தாப தேவஸ்தானம் ஒழுங்காய் மானேஜ்மெண்டுசெய்து வரப்படும் என்று நம்பி இம்மாதிரி ஏற்பாடுசெய்தார்கள். ஆனால் அனுபோகத்தில் இந்த தேவஸ்தானம் மகந்துக்களால் ஒழுங்காய் மானேஜ்மெண்டுசெய்து வரப்படவில்லை என்றும், தேவஸ்தானத்தைச் சேர்ந்தபணங்கள் மோசடி செய்யப்பட்டு வந்திருக்கின்றனவென்றும் தெரியவந்தது. இந்த தேவஸ்தானத்தை ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரும்படியாகக் கோர்ட்டார் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று திருமலை ஸ்ரீரெங்காச்சார்லு வகையரு திருப்பதி மகந்துவாகிய பிரயாகதாஸ்ஜிவாருவை பிரதிவாதியாகச் சேர்த்து வட ஆற்காடு ஜில்லாக்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல்செய்தார்கள். ஜில்லாக் கோர்ட்டார் இத்தேவஸ்வானத்தை மானேஜ்மெண்டு செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்து விதிகளும் ஏற்படுத்தினார்கள்.

ஜில்லாக்கோர்ட்டுத் தீர்மானத்திற்கு விரோதமாக பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஹைகோர்ட்டார், ஜில்லாக் கோர்ட்டார் செய்த ஏற்பாடுகளையும் விதிகளையும் சிற்சில விடங்களில் சீர்திருத்தி அசல் கோர்ட்டார் தீர்ப்பை உறுதி செய்தார்கள்.

பிரதிவாதிக்கு இந்தத் தீர்மானமும் திருப்திகரமாயில்லை. ஆகவே பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொண்டார்.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) திருப்பதி தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்து வரும்படியாக ஹைகோர்ட்டார் செய்திருக்கும் ஏற்பாடு மகந்துவின் பதவியைக் கேவலமாக நினைக்கும்படியா யிருக்கின்றது. அவருடைய அதிகாரத்தைப்பலஹீனப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. (2) இப்போதாவது அல்லது இன்னும் சமீபகாலத்திலாவது இத்தேவஸ்தானத்திற்குப் பணம் மீதமாவதற்கு ஏதுமில்லை. அப்படியிருந்தும், அப்படிப் பணம் சேர்ந்தால் அதைத் தேவஸ்தான சம்பந்த மல்லாத காரியங்களில் விநியோகப் படுத்திவரவேண்டுமென்று ஹைகோர்ட்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். (3) இந்த ஏற்பாடுகள் இப்போது அனாவசியம். இனி போகப்போக அனேக தொந்தரவுகளை விளைவிக்கும்.

லாயர்கள்:—சர் ராபர்ட்-பின்லே. K. C. மிஸ்டர் விசில், டி. குருத்தர், மிஸ்டர் H. லிபானே,-ஆகிய இவர்கள் பிரதிவாதியும் அப்பீல்வாதியுமாகிய மகந்துவிற்கு ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை.

அப்பீல் விசாரணை:—இந்த அப்பீல் சென்றடிசம்பர் மாதம் லார்ட் மாக்னாட்டன், லார்ட் அட்கின்சன், சர் ஆண்டிருஸ் கோயில், சர் ஆர்தர்வில்சன் கூடிய போர்டாரால் விசாரணை செய்யப்பட்டது. ஜில்லாக் கோர்ட்டி

* இந்தக்கேசின் தீர்மானம் இங்கிலாண்டிலிருந்து இந்தியாவிற்கு தந்திமூலியமாக வந்தபோது நம்முடைய சட்ட கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டது. இப்போது 1907-ம் ஹ்த்திய ஏப்ரில்மாதத்திய சென்னபட்டணம் இ. லா. ரி. யில் வந்திருக்கிறபடியால் இப்போதும் விபரமாய் பிரசுரம் செய்திருக்கிறோம்.

லாவது, அல்லது ஹைகோர்ட்டிலாவது இந்த தேவஸ்தான மானேஜ்மெண்டில் கோர்ட்டார் பிரவேசித்து ஒரு ஏற்பாடு செய்யவேண்டியது அனாவசியமென்று பிரதிவாதி ஆக்ஷேபிக்கவில்லை. பிரதிவாதி ஆஜராகாமற் போனபோதிலும், பிரிவி கவுன்சிலர்கள் தேவஸ்தான விஷயங்களையும், பிரஸ்தாப தேவஸ்தான மானேஜ்மெண்டு விஷயங்களையும் நன்றாய் ஆலோசனை செய்து ஹிந்து தேவஸ்தான விஷயங்களில் மிகுந்த அனுபோகமுடைய சர்ராபர்ட் பின்லே அவர்களுடைய உதவியைக் கொண்டு அடியிற்சொல்லப்பட்டிருக்கும் ஏற்பாட்டைச் செய்துத் தீர்ப்பு சொன்னார்கள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—(1) ஜில்லாக் கோர்ட்டாரால் சம்பளம்பெறும் ஒரு கஜான்ஜி (Treasurer) பொக்கிஷதார் நியமிக்கப்படவேண்டும் (2) தேவஸ்தானத்தைச் சேர்ந்த எல்லாப்பணங்களும் கஜான்ஜிவசமிருக்கவேண்டும். தேவஸ்தானத்திற்குச் செலுத்தப்படும் காணிக்கைகளையும், தேவஸ்தானத்தின் வருமானத்தையும், நிதிகளையும் ஒழுங்காய்ப் பெறுவதற்கும், மிகுந்த பணங்களை வட்டிக்குப் போடுவதற்கும், தேவஸ்தானத்திற்குள்ள வருமானங்களையும் எஸ்டேட்டுகளையும் இன்னுமுள்ள சொத்துக்களையும் ஒழுங்காய் மானேஜ்மெண்டு செய்து வரும்படியும், தேவஸ்தான வருமானங்களும் சொத்துக்களும் மோசம் செய்யப்படாமலிருக்கும்படியும் ஜில்லாக் கோர்ட்டார் விதிகள் ஏற்படுத்த வேண்டும். (3) ஒவ்வொரு வருஷத்திற்கும் அந்த வருஷம் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்குமுந்தி விசாரணை கர்த்தா அந்தவருஷமுழுதுக்கும் என்னசெலவு பிடிக்குமென்று பட்ஜட் என்கிற திட்டம் போட்டு அதை ஜில்லாக் கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும். (4) இந்தத்திட்டக்கணக்கில் குறிப்பிட்டிருக்கிறபடி கஜான்ஜி விசாரணை கர்த்தாவிற்கு வேண்டியபோது பணம் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். திட்டக்கணக்கில் காணப்பட்ட தொகைக்கு மேற்கொண்டு விசாரணை கர்த்தர் பணம் கேட்டால் ரூ. 5 ஆயிரம் வரையில் கஜான்ஜி, ஜில்லாக் கோர்ட்டார் உத்தரவு பெற்றுக்கொண்டு கொடுத்துவரலாம். (5) ஒவ்வொரு வருஷத்திலும் வந்த வருமானத்திற்கும் செய்த செலவிற்கும் விசாரணை கர்த்தர் கணக்கு தயாரிக்கும்படிச்செய்து அந்த வருஷம் முடிந்தபின் மூன்று மாதகாலத்திற்குள்ளாக ஜில்லாக் கோர்ட்டில் தாக்கல் செய்யும்படி செய்யவேண்டும். ஜில்லாக் கோர்ட்டாரால் நியமிக்கப்படும் ஆடிட்டரால் முடிந்துபோன வருஷத்திய வரவுசெலவுகணக்குகள் பரிசோதனை செய்யப்படவேண்டும். இந்தக்கணக்குகளை ஆடிட்டர் பரிசோதிப்பதற்குப் பரிகாரமாக அவருக்கு இவ்வளவுபணம் கொடுக்கப்படவேண்டுமென்று ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானித்ததொகை தேவஸ்தான ஐவேஜியிலிருந்து ஆடிட்டருக்குக் கொடுக்கப்பட்டு வரவேண்டும். ஆடிட்டர் இந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்து அதிலிருந்து சுருக்கமான ஒரு வரவு செலவு கணக்கு தயாரித்து ஜில்லாக்கோர்ட்டார் உத்தரவு செய்கிறபடி பகிரங்கப் படுத்தலாம். (6) தேவஸ்தானத்திற்கு வந்த வருமானத்தில் செலவழிந்தது போக மீதிப்பணங்கள் தேவஸ்தான நன்மையை நாடி வட்டிக்குப் போடப்பட்டு வரவேண்டும். (7) தேவஸ்தானத்திற்குச் சேர்ந்த சகல ஸ்தாவர சொத்துக்களும், பெந்தகம் பெற்றுக்கொண்டிருக்கிற சொத்துக்களும் இன்னும் வேறுவிதமான பாத்தியதையின்பேரில் தேவஸ்தானத்தின் வசமிருக்கும் ஸ்தாவர சொத்துக்களை விசாரணைக்கர்த்தா ஜில்லாக் கோர்ட்டார் உத்தரவின்றி 5 வருஷத்திற்குமேல் குத்தகைக்கும் விடக்கூடாது பெந்தகமும் வைக்கக்கூடாது. விற்பனையும் செய்யக்கூடாது.(8)தேவஸ்தானத்திற்குச்சேர்ந்த விலைமதிப்புள்ள நகைகளையும்இதரசொத்துக்களையும் விசாரணைக்கார்த்தர் ஜில்லாக்கோர்ட்டார் உத்தரவின்றி கிரயம் செய்யக்கூடாது. (9) இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு விசாரணைக் கர்த்தாவின் நிலைமைமுன் போலிருக்கவேண்டும். (10) இந்த ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை அல்லது விதிகளை அமுலுக்குக் கொண்டுவந்து அனுஷ்டித்துக்கொண்டு போவதில் ஏதேனும் தகவல் தெரிந்துகொள்ள வேண்டுமானால் விசாரணைக் கர்த்தாவாகிலும் அல்லது தேவஸ்தானத்தில் பற்றுடைய இன்னும் யாரேனும் ஜில்லாக் கோர்ட்டாருக்கு மனு செய்து தெரிந்துகொள்ளலாம். இந்த ஏற்பாட்டில் எதையேனும் மாற்றுவது அவசியமென்றும் மாற்றுவது சௌகரியமாயிருக்கு மென்றும் தோற்றினாலும் விசாரணைக் கர்த்தா அல்லது தேவஸ்தானத்தில் பற்றுடைய இன்னுமெவரேனும் ஹைகோர்ட்டாருக்கு மனு செய்துகொள்ளலாம்.

ஆகையால் மாக்ஷிமை தங்கிய மாகாராஜா அவர்கள் அடியிற் கண்டபடி உத்தரவு பிறப்பிக்கும்படி மிகவும் வணக்கமாய் பிரிவி கவுன்சிலர்கள் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றார்கள்:—

(1) ஹைகோர்ட்டாரும் ஜில்லாக்கோர்ட்டாரும் செய்த உத்தரவுகளைத் தள்ளிவிடவேண்டும். (2) மேலே கூறப்பட்ட ஏற்பாட்டை தேவஸ்தான மானேஜ்மெண்டிற்காக ஒழுங்கான ஏற்பாடாக எண்ணி சம்மதம் கொடுக்கவேண்டும். (3) இந்த ஏற்பாட்டை ஜில்லாக் கோர்ட்டாருக்கு ரிபர் செய்து ஒரு கஜான்ஜி நியமிக்கும்படியாக உத்தரவு செய்யவேண்டும். இந்த ஏற்பாட்டின்படி அவர்கள் ஏற்படுத்தவேண்டிய விதிகளை ஏற்படுத்தும்படி உத்தரவு செய்யவேண்டும். இப்படி ஜில்லாக்கோர்ட்டார் ஏற்படுத்தின விதிகளை அவர்கள் சமயத்திற்குத் தகுந்தபடியும் அப்போதைக்கப்போது மாற்றும்படியும் அவர்களுக்கு அதிகார மிருக்கிறதென்று அறிவிக்கவேண்டும். இந்த ஏற்பாடு எப்போது முதல் அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமென்று ஒரு தேதி குறிப்பிடும்படியாக ஜில்லாக் கோர்ட்டாருக்கு உத்தரவு செய்யவேண்டும். அசல், ஹைகோட்டு ஆலோசனை சபையிலுள்ள மாட்சிமை தங்கிய மகாராஜா ஆகிய இந்த மூன்று கோர்ட்டுகளிலும் வியாஜ்ஜிய மாடினதில் இருகட்சிக்காரர்களுக்கும் என்ன செலவுகள் நேரிட்டிருக்கின்றனவோ அவைகளுக்கும், விசாரணைக் கர்த்தாவிற்கு கிரமமான செலவுகள் என்ன நேரிட்டிருக்கின்றனவோ அவைகளுக்கும் ஜில்லாக் கோர்ட்டாருக்குக் கணக்கு அனுப்பவேண்டும். அவர்களுடைய உத்தரவின்பேரில் கட்சிக்காரர்களுக்குச் சேரவேண்டிய செலவுதொகை தேவஸ்தான ஐவேஜியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கடனாளியை வாரண்டில் பிடித்துக் கடன் கொடுத்தவன் வீட்டில் அடைத்துவைத்த கேஸ்.

குற்றவாளிகள்:—சாமுவேலும் இன்னும் இருவரும்.

கேசின் விபரம் :—மதுரை ஜில்லாக் கோர்ட்டார் ஒரு கடனாளியை அரஸ்ட் செய்து கோர்ட்டின்முன் கொண்டு வரும்படியாக வாரண்டு பிறப்பித்து 1905ம் ஹு ஏப்ரல்மீ 15வ அந்த வாரண்டை நாஜருக்கு அனுப்பினார்கள். நாஜர் முதல் குற்றவாளியாகிய அமீனாவிடம் அந்த வாரண்டை ஒப்புவித்தார். முதல் குற்றவாளி கடனாளியை 22வ சனிக்கிழமை காலை 9-மணிக்கு அரஸ்ட்செய்து டிக்கிரி ஓல்டர் (கடன் கொடுத்தவன்) வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் வெளித்திண்ணையிலுள்ள ஒரு அறையில் மாலை 7½-மணி வரையில் அடைத்து வைத்திருந்து பிறகு அவனை வெளிப்படுத்தி தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் மறுபடியும் அழைத்துக்கொண்டு வந்து 10-மணி முதல் மறுநாள் காலை 6-மணி வரையில் அடைத்து வைத்தான். மறுநாள் காலையில் முதல் குற்றவாளி அவனை நாஜர் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான். நாஜர் கடனாளியை இரண்டு சேவகன் வசம் ஒப்புவித்து அவனுடைய சொந்த வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் கோர்ட்டு திறக்கிற தினம் கோர்ட்டில் ஆஜர்படுத்தும்படியாகச் சொன்னார்.

கடனாளி தன்னை அநியாயமாய் அடைத்து வைத்ததற்காக இ. பி. கோ. 342-வது பிரிவின்படி கோர்ட்டு அமீனாபேரில் மதுரை டௌன் மாஜிஸ்டிரேட்முன்னிலையில் குற்றம் சாட்டினான். 2,3, குற்றவாளிகள் முறையே டிக்கிரி ஓல்டருடைய தமையனும், குமாரனும், முதல் குற்றவாளி கடனாளியை அடைத்து வைப்பதற்கு உடந்தையாக விருந்தார்களென்று அவர்களையும் இந்தக்கேசில் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டது. டௌன்மாஜிஸ்டிரேட் இந்தக்கேசைவிசாரணை செய்து குற்றவாளிகளைத் தண்டித்தார்.

குற்றவாளிகள் மேலூர் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

முதல் குற்றவாளியின் டிபன்ஸ் என்னவென்றால், கடனாளியை அரஸ்ட் செய்ததினமாகிய சனிக்கிழமையும், அடுத்த தினங்களாகிய ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் ஈஸ்டர் பண்டிகைக்காக கோர்ட்டு மூடப்பட்டிருந்த படியால் கடனாளியை பந்தோபஸ்திற்காக டிக்கிரி ஓல்டர் வீட்டில் அடைத்து வைத்திருந்ததாகச் சொன்னான்.

சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் அசல் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்து குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

கடனாளி ஹைகோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—22வ சனிக்கிழமை முதல் குற்றவாளி கடனாளியை அரஸ்ட் செய்தது சட்ட சம்மதமான விஷயம். ஆனால் அரஸ்ட் செய்தவனைக் கோர்ட்டின்முன் ஆஜர்படுத்தாமற் போய்விட்டால் முதல் குற்றவாளி தன்னுடைய கடமையைப் பூர்த்தி செய்தவனாக சட்டப்படி எண்ணப்படமாட்டான். வாரண்டில் கடனாளியை அரஸ்ட் செய்து கூடிய சீக்கிரம் கோர்ட்டின் முன் ஆஜர்படுத்த வேண்டுமென்று தாக்கிது செய்து எழுதப்பட்டிருப்பதனால் கடனாளி அரஸ்ட் செய்யப் பட்டவுடன் கோர்ட்டு கட்டிடத்திற்காவது அல்லது ஜட்ஜி வீட்டிற்காவது அல்லது ஜட்ஜி எங்கேயிருக்கிறாரோ அந்த விடத்திற்காவது கொண்டுவரப்படவேண்டுமென்று தாத்பரியம் செய்து கொள்ளக்கூடாது. கடனாளி அரஸ்ட் செய்யப்பட்ட காலத்தில் கோர்ட்டு மூடப்பட்டிருந்ததால் அடுத்தபடி கோர்ட்டு திறக்கப்படும் தினத்தில் அவனை ஆஜர்படுத்த வேண்டும். ஆகையால் வாரண்டில் சொல்லப்பட்டிருக்கிறபடி அரஸ்ட் செய்யப்பட்ட கடனாளியை கோர்ட்டு திறக்கும் தினத்தில் ஆஜர்படுத்த முதல் குற்றவாளியாகிய அமீனா சட்டப்படி கடமைப்பட்டவனாகவிருக்கிறான். அரஸ்ட் செய்த காலத்திற்கும் கோர்ட்டில் ஆஜர்படுத்தும் காலத்திற்கும் இடையிலுள்ள காலத்தில் கடனாளி ஓடிப்போகாமலிருப்பதற்கு அமீனா ஜவாப்புதாரி. அவன் ஓடிப்போய் விட்டால் டிக்கிரி ஓல்டர் அமீனாபேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடும். இத்தியாதி காரணங்களை முன்னிட்டு அமீனா கடனாளியைப் பந்தோபஸ்திற்காக அடைத்து வைக்கப் பாத்தியப்பட்டவன். இன்ன விடத்தில்தான் அடைத்துவைக்கவேண்டுமென்றும் டிக்கிரி ஓல்டர் வீட்டில் அடைத்துவைக்கக் கூடாதென்றும் சட்டத்தில் சொல்லப்படவில்லை. பெரும்பாலும் கடனாளிகள் அரஸ்ட் செய்யப்பட்டால் அரஸ்ட் செய்த பெய்லீப் கடனாளிகூட கடனாளி வீட்டிற்கும் போயிருந்து பிறகு கோர்ட்டில் ஆஜர் படுத்துகிற வழக்கம், ஆனால் அரஸ்ட்செய்கிற ஆபீசர் இவ்விதம் செய்ய பாத்தியப்பட்டவரல்ல. ஆகையால் முதல் குற்றவாளி கடனாளியை டிக்கிரி ஓல்டர் வீட்டில் அடைத்துவைத்தது இ.பி.கோ. 342-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றமாகமாட்டாது என்று சொல்லி அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ராவில்பிண்டி பலவந்தப்புணர்ச்சி கேஸ்.

16 வயதுடைய ஒரு இந்துப்பெண் சேலம்ஜில்லாவிலிருக்கும் கால்காஸ்டேஷனிலிருந்து ரெயிலேறி மான்க்கியலாஸ்டேஷனுக்கு வந்துகொண்டிருக்கும் போது ரெயிலிலேயே நித்திரை செய்துவிட ரெயில் வண்டி ராவில்பிண்டிக்கு வந்துவிட்டது. அந்த ரெயில் வண்டி ராவில்பிண்டியிலேயே நின்றுபோகின்றது. வண்டி ராவில்பிண்டியில் நின்றவுடன் வண்டியைச் சோதனைசெய்யும்முகம்மதியப்போர்ட்டர்இந்துப்பெண் படுத்துறங்குவதைப் பார்த்து தட்டி எழுப்பினான். நடு இரவானபடியால் அப்பெண் தான் ஏகாங்கியாய் அந்நிய ஊரில்நிற்பதை நினைத்துத் தூக்கித்துக்கொண்டிருக்கையில் போர்ட்டர்ஓடிப்போய்இப்படித்தனியே ஒருபெண் அகப்பட்டுக்கொண்டாள்.—இன்று இரவை சந்தோஷமாகக் கழிக்கலாமென்று ஸ்டேஷன் மாஸ்டருக்குச் சொல்ல, உடனே மெத்தையிலுள்ள ஒரு அறையில் தீபமேற்றிப் போர்ட்டர் அந்தப்பெண்ணை ஏதோ காரணம்சொல்லி அழைத்துக்கொண்டுபோனான். அந்தப்பெண் அந்த அறைக்குட்சென்றவுடன் யூரேஷிய ஸ்டேஷன்மாஸ்டர்காமாகிராந்தனாய் அப்பெண்ணுடன் பலவந்தப்புணர்ச்சிசெய்து ஓய்ந்தவுடன் போர்ட்டர் ஆரம்பித்தான். இப்படியாக இருவரும் அப்பெண்ணின் பதிவிரதாதர்மத்தை அழித்துவிட்டார்கள். பிளாட் பாரத்திலிருந்த போலீசார்கள் ஸ்டேஷன்மாஸ்டர் அறைக்குப் போர்ட்டரால் அழைத்துக்கொண்டுபோன பெண்ணை வெகுநாழிகையாகக் காணாமல் சந்தேகங்கொண்டு மெத்தையில் எதிர்பார்க்கையில் அவள் கூவிக்கொண்டிருக்க அந்தக்கிராதகர்கள் பலவந்தப்புணர்ச்சிசெய்வதைப் பார்த்தார்கள். உடனே போலீசார் யூரேஷிய ஜாதியைச்சேர்ந்த ஸ்டேஷன்மாஸ்டரையும், முகமதியஜாதியைச்சேர்ந்த போர்ட்டரையும் கைதிசெய்து மறுநாள்காலையில் மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் ஆஜர்படுத்தினார்கள். கற்பழிக்கப்பட்ட ஸ்திரீ பிராமணஜாதி. யூரேஷியன் அந்த பிராமணப்பெண்ணின் கற்பழித்தது ராவில்பிண்டியில் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது. திவான்பகதூர் டௌவிட்ராவ் ஸ்டேஷன்மாஸ்டருக்காக ஆஜராகித் தம்முடைய கக்ஷிக்காரனை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கோர்ட்டார் ஸ்டேஷன்மாஸ்டரைமட்டிலும் ஜாமீன்பேரில் விட்டிருக்கிறார்கள்.

COURT NEWS.

கோர்ட்டு சமாசாரங்கள்.

ஹைகோர்ட்டு ரிஜிஸ்டிரார்.

ஹைகோர்ட்டு ஒரிஜினல் சயிட் ரிஜிஸ்டிரார் மிஸ்டர் J. H. பேக்வில் ரஜா வெடுத்துக் கொண்டிருக்கிறார். அசிஸ்டன்ட் ரிஜிஸ்டிரார் மிஸ்டர் J. R. அட்கின்சன் அவருக்குப் பதிலாக ரிஜிஸ்டிரார் உத்தியோகத்தைப் பார்த்து வருகின்றார். அட்டர்னி மிஸ்டர் S. தியாகராஜ அய்யர் பதிலியாக அசிஸ்டன்ட் ரிஜிஸ்டிராராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னபட்டணம் எக்சாமினர் ஆபீசில் சாக்ஷிக்கார் உத்தியோகத்திலிருந்த ஜெயராம் என்பவர் தந்தி அடிப்பதற்காகவும் நடைமுதல் செலவுகளுக்காகவும் அவரிடம் கொடுக்கப்பட்டிருந்த ரூ. 30, யை துர்விநியோகப்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டதில் சர்க்கார் உத்தியோகஸ்தன் துர்விநியோகம் செய்த குற்றம், போர்ஜரி, ஏமாற்றல் ஆகிய குற்றங்கள் குற்றஸ்தாபனை செய்யப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்.

தென் ஆற்காடுஜில்லாவில் டி. மு. கோர்ட்டுகளில் விசாரணைசெய்யப்படாமல் நிலுவையிலிருக்கும் வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்து ஃபைசல்செய்யும்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் தென் ஆற்காடுஜில்லாவிற்கு ஒரு அடிஷனல் டி. மு. கோர்ட்டு சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சென்னபட்டணம் ஸ்மால்காஸ்கோர்ட் ரிஜிஸ்டிரார் அடியிற்கண்ட சர்க்குலர் விடுத்திருக்கிறார்கள்:—

1. பிளெய்ண்டுகளிலும் மனுக்களிலும் பிரதிவாதியின் விபரமான மேல்விலாசம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அப்படி எழுதப்படாவிட்டால் சம்மன்கள் பிறப்பிக்கப்படமாட்டா.

2. சம்மன்களைச் சார்வ்செய்யும்படி நாஜர் ஒரு பெய்லிப்பினிடம் ஒப்புவித்தவுடன் அந்தச்சம்மனை சார்வ்செய்யும் பொறுப்பு பெய்லிப்பைச்சேர்ந்தது.

3. ஒரு சம்மனைச் சார்வ்செய்யும்படி நாஜர் ஒரு பெய்லிப்பினிடம் ஒப்புவித்தபின்பு அந்த பெய்லிப் அந்தச் சம்மனை எந்தக்காரணத்தை முன்னிட்டும் வேறொரு பெய்லிப்பினிடம் ஒப்புவிக்கக்கூடாது. தகுந்த காரணமிருந்தால் நாஜர் அந்தச்சம்மனை வேறொரு பெய்லிப்பினிடம் ஒப்புவிக்கலாம். அப்படி ஒப்புவிக்கும் போது தகுந்த காரணம் எழுத்தில் தாக்கல்செய்ய வேண்டும்.

4. ஐரோப்பியர்களுக்கும் யுரேஷியர்களுக்கும் சார்வ்செய்யும்படியாகச் சம்மன்களை ஐரோப்பிய யுரேஷிய பெய்லிப்புகளிடம் நாஜர் ஒப்புவிக்கவேண்டும்.

5. ஐரோப்பியர்களுக்கும் யுரேஷியர்களுக்கும் சார்வ்செய்யும்படியாக சம்மன்களை சுதேச பெய்லிப்களிடம் ஒப்புவிக்கவேகூடாது. ஆனால் எந்தக்கோர்ட்டில் அந்த வியாஜ்ஜியம் விசாரணைசெய்யும்படி போடப்பட்டிருக்கிறதோ அந்தக்கோர்ட்டார் உத்திரவுசெய்தால் சுதேச பெய்லிப்பினிடம் ஒப்புவிக்கலாம்.

6. பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு சம்மனையும் பெய்லிப் சட்டப்பிரகாரம் சார்வ்செய்யவேண்டும். பெய்லிப்கள் சம்மனை நேரே சார்வ்செய்ய முடியாதகாலத்தில் சம்மன் இன்னவிதமாக சார்வ்செய்யப்பட்டதென்றும் நேரே சார்வ்செய்யப்படாததற்கு என்னகாரணங்கள் என்றும், நேரே சார்வ்செய்வதற்கு என்னகாரணங்கள் நேரிட்டனவென்றும் விபரமாய் ரிட்டர்ன்செய்ய வேண்டும். அப்படி பெய்லிப்கள் செய்யத்தவறிப்போய்விட்டால் Conduct Register-ல் அவர்களுடைய பெயர்களுக்கு எதிரில் ரிமார்க்குகள் எழுதிவைக்கப்படும்.

CIRCULAR No. 130 OF THE INSPECTR-GENERAL OF POLICE, DATED 9th MAY 1907.

ABOLITION OF THE VILLAGE BRAT SYSTEM.

கிராம பீட் ஏற்பாட்டை அமுலிலிருந்து தள்ளிவிடுதல்.

இப்போது அமுலிலிருக்கும் கிராமபீட் ஏற்பாடு தகுதியற்றதென்று போலீஸ் கமிஷனால் சொல்லப்பட்டு அவர்களால் பீட் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட சில விதிகள் இந்தியா கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அமுலிலிருக்கும் கிராம பீட் வேலை இனிநடந்தேறு வராமல் நிறுத்தப்படும்.

2. குற்றத்தை ரிப்போர்ட் செய்யவும் கெட்ட நபர்களின் போக்கு வரத்தைப்பற்றிய சமாசாரத்தைத் தெரிவிக்கவும் கிராம அதிகாரிகளை உத்தரவாதமாக்குவதே அனுஷ்டிக்க வேண்டிய பிரதமவிதியாகும். இன்ன காரியத்துக்காகவென்று ஸ்பஷ்ட்டமாய் உத்தரவில்லாவிட்டாலும் அல்லது அலுவலாய்ப்போகும் அல்லது திரும்பும் வழியிலிருந்தாலொழிய கிராம சந்திப்புக்காகக் கட்டாயமாய் கான்ஸ்டேபிள்கள் போகக்கூடாதென்கிற இரண்டாவது முக்கியவிதி இதனுள்ளடங்கியி

ருக்கிறது. இவ்விதிகளுக்கொத்திருக்கும்பொருட்டு கிராம பீட்வேலைக்குக் கான்ஸ்டேபிள்கள் நியமனம் அடியில்வருமாறு நிர்ணயிக்கவேண்டியது அவசியம்:—

(i) கிராம அதிகாரிகள் சமாசாரங்களை ரிப்போர்ட் செய்ய நம்பத்தகாதவர்களென்று எண்ணக்கூடிய கிராமங்களின் சந்திப்பு.

(ii) காவல்விசாரணையிலிருக்கவேண்டிய முக்கிய அபாயகரமான குற்றவாளிகள் அல்லது கூட்டங்கள் குடியிருக்கும் கிராமங்களின் சந்திப்பு.

(iii) பிரயாணிகளிடமிருந்தாவது அல்லது பிரயாணிகளைப் பற்றியாவது சமாசாரம் சேகரிக்கப் பிரயாணிகள் தங்கும் இடங்கள், சத்திரங்கள் ஓடத்துறைகள், இன்னும் ஜனங்கள் கூடக்கூடிய பொது இடங்களுக்கு கான்ஸ்டேபில்களை அனுப்புதல்.

(iv) கெட்ட நபர்கள் குறிப்பிட்ட கிராமங்களிலிருந்தார்களாவென்றாவது அல்லது அவைகளின் சுற்றுப்பக்கங்களிலிருக்கிறார்களாவென்றாவது விசாரணை செய்ய அப்போதைக்கப்போது கான்ஸ்டேபில்களை அனுப்புதல்.

(v) யாதொரு குறிப்பிட்ட சமாசாரத்தை அறிந்துவர கான்ஸ்டேபில்களை உத்தரவுடன் அனுப்புதல்.

3. மேலே விவரித்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவரும்பொருட்டு, சூப்பிரண்டெண்டெண்டுகள் எந்த தபால்பீட்டுகளை திறக்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்கவேண்டும். தபால்ஆபீசு சாதனங்கள் ஏற்பட்டிருக்கும் இடங்களில், ஸ்டேஷன்தபாலைத் தபால்ஆபீசு வழியாய் அனுப்பவேண்டும். தவறினால், 2-வது பாராவில விவரித்த யாதொரு வேலையைச் செய்ய விசேஷ உத்திரவு செய்தாலொழிய, தபால் எடுத்துப்போவதுடன் வேறு பீட் அலுவல்கள் செய்யாத கான்ஸ்டேபிள்கள் வசம் தபால்கள் அனுப்பவேண்டும். எந்த வேலையாய்ப் போனபோதிலும் போகும் வழியிலிருக்கும் இடங்களில் சமாசாரம் சேகரிக்கும் அவசியத்தைக் கான்ஸ்டேபில்களுக்கு மனதில் பதியும்படி தெரிவிக்கவேண்டும். இவர்கள் முன்னேக்காட்டிலும் கண்ணை விழித்துக்கொண்டு போய்எல்லா சம்பவங்களையும் சமாசாரங்களையும் தவறாமல் தங்கள் நோட்டு புத்தகங்களில் எழுதிக்கொள்ளவேண்டும்.

4. இன்ஸ்பெக்டர்களின் ரிப்போர்ட்டுகளின் பேரில் டிவிஷனல் போலீஸ் ஆபீசர்கள் மேலே 2. (i) (ii) குறிப்பிட்ட பாராக்களில் அடங்கிய பொதுவிதிகளையனுசரித்துஎந்தெந்த கிராமங்கள் எவ்வளவுகாலத்துக்கு இடையே சந்திப்பிக்காக வேண்டியதென்பதைத் தீர்மானிக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட கிராமங்கள் அடங்கிய பட்டி அடிக்கடி திருத்தப்படும். மேலும், போலீசாரால் பார்த்துவரவேண்டியவும் கிராம அதிகாரிகள் காவல்விசாரணையில் விட்டுவிடவேண்டியவுமான (கே. டி. அல்லது இதர) குற்றவாளிகளைப்பற்றி மிகவும் ஜாக்கிரதையாய்ப் பகுத்தறிதல் செய்யவேண்டும். போலீஸ்காரர் உண்மையாய் அபாயகரமுள்ளவும் அடிக்கடி குற்றம் செய்யத்தக்கவுமான குற்றவாளிகளையும், கிராம அதிகாரிகளால் எளிதில் பார்த்துவரக் கூடாத குற்றவாளிகளையும் கவனித்துவரவேண்டும்.

5. 2-வது பாராவின் (ii) (iv) (v) உள்ளபாராக்களில் கண்ட வேலை நியமனத்தைப் பெரும்பான்மை ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசர் யுக்தானுசாரத்துக்கு விட்டுவிடவேண்டியதிருக்கும். இன்ஸ்பெக்டிங் உத்தியோகஸ்தர்கள் இந்தக் காரியத்தில் தடையில்லாமல் அவர்கள் முக்கிய கவனத்தைச் செலுத்துவார்கள்.

6. இதர காரணங்களைப்பற்றி, சந்திக்கவேண்டாத கிராமங்களில் கட்டளை சார்வு செய்வது இதாகாக நியமிக்கப்படும் கான்ஸ்டேபில்களால் செய்யப்படவேண்டியது.

7. பாரா 2. (i) (ii) படியும், பாரா 3 படியும் (வேறேனுமிருந்தால்), கிரமப்படி சந்திக்கவேண்டிய கிராமங்கள் கூடியவரையில் ஒரேதினத்தில் சந்திக்கக்கூடும்படி வசதியாய்த்தொகுத்திருக்கவேணும். ஒவ்வொரு தொகுப்புக்கும் ஒரு பீட் புத்தகம் வைக்கவேண்டும். பாரா 2. (iii) (iv) (v) படி காலாகாலத்து நடத்தவேண்டிய அலுவல்களுக்காக வேண்டும்போது உபயோகிக்கச் சில பீட் புத்தகங்கள் வைத்திருக்கவேண்டும்.

8. போலீஸ்கார் கிராம அதிகாரிகளைச் சமாசாரத்துக்கு முன்னைவிட அதிகமாய் எதிர்பார்க்கவேண்டியதிருக்கிறதென்பது நன்றாய் விளங்குகிறது. இது இந்தியா கவர்ன்மெண்டாரவர்களின் விளம்பரமான எண்ணம். அவர்கள் கிராம, சர்வ ஜனங்கள் இவ்விஷயத்தில் உத்தரவாதிகளென்பதையும் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதையும் அறியும்படி மீண்டும் நினைப்பூட்ட விரும்புகிறார்கள். கிராமங்களுக்குப், போலீஸ் கான்ஸ்டேபில்களைச் சமாசாரம் சேகரிக்கும் பொது எண்ணத்துடன் அனுப்புவது இந்த உத்தரவாதத்தின் அறிவைத் தளர்ச்சிசெய்துவிட்டதாயும், மேலும் கிஞ்சித்துப் பிரமாணமாயினும் சாரமாய் காரியசித்திபெறுவதில் தவறிவிட்டதாயும் எண்ணப்படுகிறது. கிராம அதிகாரிகளின் கூட்டுதவியை மிக்க அளவில் சம்பாதிப்பதே, இனிமேல் ஒரு ஜில்லாவின் மிகவும் பலமான போலீஸ் அரசாட்சியாகும்.

9. பெரிய உத்தியோகஸ்தர்கள் கிராமங்களை விஜயம் செய்வதின் முக்கியம் இனிவிருத்தியாகும். கிராம அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவர நடத்துகிறார்களாவென்பதைக் கவனிப்பதும், அவர்களுக்குப் புத்திசொல்லுவதும், அவர்களை உற்சாகப்படுத்துவதும் வேண்டுமானால் அவர்களுடைய குறைவுகளை டிஸ்டிரிக்ட்மாஜிஸ்டிரேட் அவர்களுக்குரிப்போர்ட்டு செய்வதும் அவர்களுடைய கடமையாகும். கிராம அதிகாரிகளின் நல்லவேலைக்குத் தக்கபடி வெகுமானம்—கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்டவரையில் வஸ்திரம், அல்லது ஆபரண வெகுமானமும், கிராம ஊழியர்கள் சம்பந்தப்பட்டவரையில் பணக்கொடையும்—செய்யவேண்டுமென்னும் முக்கியத்தைக் கமிஷனிலுள்ளோர் வற்புறுத்திச சொல்லியிருக்கிறார்கள். சமயம்நேரும்போது, டிஸ்டிரிக்ட் மேஜிஸ்டிரேட் அவர்களால் வெகுமான மடையும்படி தகுதியான கிராம உத்தியோகஸ்தர்களைச் சிபார்சுசெய்ய உத்தியோகஸ்தர்கள் தவறக்கூடாது.

* * * *

11. கிராமஅதிகாரிகள் சட்டப்படி நடத்தவேண்டிய அலுவல்கள் 1896-ஞ்வருத்திய XI-வது ரெகுலேஷனிலும், கிரிமினல் புரொசிஜர் கோட் 45 (f) குறிப்பிட்ட பிரிவிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அலுவல்கள் விஷயமாய் கற்பனைகளடங்கிய திருத்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்காக வேண்டிய மானுயல் ஒன்று கூடிய சீக்கிரத்தில் வெளியாகும். இந்த மானுபலில் குடியிருப்பாயிருக்கும் கெட்ட நபர்கள் விஷயமாய் ஒரு ரெஜிஸ்தர்வைக்கவேண்டியதைப்பற்றியும் அவர்களுடைய போக்குவரத்துகளைப் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கவேண்டிய கடமையைப்பற்றியும் கற்பிக்கப்படும்.

12 இந்த உத்தரவுகளின் விஷயமாய்ச் சம்பந்தப்பட்ட போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டிலிருந்து எடுக்கப்பட்ட எஸ்டிராக்ட்டுகளை இதனடியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* * * *

31. உத்தியோகத்திலிருக்கும் போலீஸ்காரர்களைக்கொண்டு மாத்திரம்போலீஸ் அரசாட்சியைச் சாரமாய்நடத்துவது

கிராம கூட்டுதவியைப் பெறுவதின் பிரயோசனம்.

அசாத்தியமென்பதை கமிஷனில் சேர்ந்தவர்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். கிராமசர்வஜனங்களின்உதவியைப் பெறுவது மிகவும் அவசியம். கவர்ன்மெண்டு தரப்பில்பார்க்கும்போது இது அவசியம்தான். கிராம உத்தியோகஸ்தர்களின் கூட்டுதவி பெறுமலும், அவர்களுடைய உத்திரவாதத்தைப் பலவந்தப்படுத்தாமலும், இந்தியாவின் ஏராளவிஸ்தீரணத்திலுள்ளும் அநேக பிரஜைகளுள்ளும நடக்கும் குற்ற விஷயமாய் சமாசாரம் சம்பாதிக்கப்போதுமானசேனையின் செலவைதாங்குவது அசாத்தியம. ஜனங்கள் தரப்பில் பார்க்குமிடத்தும் இது அவசியம். எவ்வளவு அதிகசெலவாகும் சிப்பந்தியைப்ப

ராமரித்தபோதிலும், ஜனங்களுக்கு அது அலைக்கழிப்பாகவும் சகிக்கமுடியாததாகவுமிருக்கும். போலீசார் அடிக்கடி பிரவேசித்தலிலும், கிராம உளவுகளை அடிக்கடி தெரிந்து கொள்வதிலும், தாழ்ந்த உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி கிராமங்களுக்குப் போவதிலும, ஜனங்களுக்குத் தாங்கக்கூடாத ஒரு சுமையும் வெறுப்பும் உண்டாகக்கூடியதாகும். குற்றத்தை ரிப்போர்ட்டு செய்ய கிராம ஜனங்களையே பைசல் செய்து கொள்ளும்படி விட்டுவிடுவதிலும், ரிப்போர்ட்டு செய்யவேண்டிய உத்தரவாதக் கடமையில் தவறுதல் உண்டானபோதும், பிரவேசிக்கவேண்டிய அவ்வளவு விபரீதகாரியமாயிருக்கும்போது மாத்திரம் பிரவேசித்தலை நிர்ணயிப்பதிலும், அளவிற் கெட்டாத நன்மையுண்டு.'

* * * *

44. விஷயத்தைப் பொதுவாய் ஆலோசிக்கத் திரும்புகையில் போலீஸ் வேலைக்காக இப்போது அகப்படும் கிராம

கிராம போலீஸ், கிரமமான போலீஸின் கீழிருக்கக்கூடாது.

காரியஸ்தர்களைப் பராமரிப்பதும் விருத்தி செய்வதும் சிரேஷ்டமான முக்கியமென்பது கமிஷனிலுள்ளவர்கள் மனதில் இந்த விசாரணை காலத்தில் மிகவும் பதிந்திருப்பதால் அவர்கள் அதை எழுதிவைக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த விஷயமாய், கிராமபோலீஸை கிராம கூட்டத்தினின்று பிரித்து ஒழுங்கான போலீசுக்குக் கீழ்வைக்கக்கூடாதென்று கமிஷனுக்கு உண்டான கோட்பாட்டை அவர்கள் அழுந்தச் சொல்ல விரும்புகிறார்கள். அவர்களுடைய விருப்பம், தாழ்ந்த சம்பளம் பெறும் கூலியாட்கள், அல்லது தாழ்ந்த போலீஸ்காரர்களின் சங்கத்தை ஊர் முழுவதும் பரப்பவேண்டுமென்பதல்ல, ஆனால் கிராமகாரியஸ்தர்களை உபயோகப்படுத்தச் செய்ய வேண்டுமென்பதேயாம். அரசாட்சியில் கிராமம் ஒன்றுவதுஸ்தானம் தங்கள்சொந்த விவகாரங்களில் கிராம சர்வ ஜனங்கள் உண்மையாய்ப் பொறுப்புள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பதைக் கற்பிப்பதே விருத்தியான அரசாட்சியாகும். கிராம சர்வஜனங்களுக்குப் பிரதிநிதி (சாதாரணமாய) பெரிய தனக்காரன்; பெரிய தனக்காரரின் உத்திரவாதத்தைப் பலவந்தப்படுத்துவதும் வெளிப்படுத்துவதும் பலிதமான போலீஸ் அரசாட்சி ஆதாரமாகக்கொள்ளவேண்டும். அவர்தான் வாஸ்தவத்தில் போலீசுக் குதவிசெய்யக்கூடியவர்; அவருடைய பதவியையும், செல்வாக்கையும் பலப்படுத்த வேண்டும்; போலீஸ் தங்கள் வேலையில் அவருடைய கூட்டுதவியைத்தான் எதிர்பார்க்கவேண்டும். கிரிமினல் புரொசிஜர் கோடின் 45-வது பிரிவுக்கு இதுதான் ஆதாரம். அந்தப் பிரிவு சில குற்றங்களைப்பற்றி சமாசாரம் உடனுக்குடன் மேஜிஸ்திரேட்டாருக்காவது போலீசுக்காவது தெரியப்படுத்துவதில் பெரியதனக்காரனைக் கட்டுப்படுத்துவதுடன், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்களுக்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இதரசட்டத்தால் அப்பேர்ப்பட்ட பெரிய தனக்காரன் நியமனமில்லாத இடங்களுக்குக் கிராம பெரியதனக்காரனை இந்தப் பிரிவின் நடவடிக்கைகளை நடத்தும் பொருட்டு நியமனம் செய்யவும் அதிகாரம் கொடுக்கிறது. கிராம பெரியதனக்காரனுடைய உத்திரவாதத்தையும், பிரதேசத்தில் எவ்வித பெயரால் வழங்கினபோதிலும் கிராம போலீஸ் அதிகாரி கிராம பெரியதனக்காரனுக்குட்பட்ட உத்திரவாதி என்பதையும் போலீஸ் விவகாரங்களில் அவருடைய வேலைக்காரன் என்பதையும் வற்புறுத்திச் சொல்வது கமிஷனில் உள்ளவர்கள் ஜீவாதாரமான முக்கிய விஷயமென்று எண்ணுகிறார்கள். போலீஸ் நடவடிக்கைகளுக்காக கிராம பெரிய தனக்காரன், கூடுமானவரையில் கிராம வருமான பரிபாலன விஷயங்களில் பெரிய தனக்காரனென்று பகிரங்கமாய் விளங்கக் கூடியவனாயிருக்கவேண்டும். இது அசாத்தியமான இடங்களுக்கு, கிராமத்தில கண்ணியமும் செல்வாக்கும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். டிஸ்டிரிக்ட் அதிகாரி அவருடைய பதவியையும் செல்வாக்கையும் பராமரித்துப் பலப்படுத்தவேண்டும். அவருக்கு அதிக சுயேச்சை கொடுப்பது அவசியமாவதுடன், அவருடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் கிராமத்தில் உறுதியாய் அங்கீகரிக்கும்படிச் செய்யவேண்டும். கிராம போலீஸ் அதிகாரி கிராமத்தில் தன் அந்தஸ்தைவசிக்கும் கிராக நவுக்கராயிருக்கவேண்டும். கிராம பெரியதனக்காரனுக்குக் கீழ் உததியோகஸ்தராயிருப்பதுடன் கிராமத்தில் நடக்கும் குற்றங்களுக்குப் பிரதமத்தில் ஜவாப்தாரி என்றெண்ணப்படுவான். இவ்விருவர்களும் ஜனங்களுடன் அன்னியோன்னிய சம்சந்தமுடையவர்களாயும் கூடியிருப்பதாயுமிருத்தலைப் பராமரிக்க வேண்டும். இருவரும் கிராம சர்வ ஜனங்களுக்குப் பிரதிநிதியாய்த் தங்கள் வேலைகளை நடத்தி வருவதுடன் ஜில்லா அதிகாரிக்கு ஜவாப்தாரியாயிருக்கவேண்டும். கிராம போலீஸ் அதிகாரியை ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசர் கையின்கீழ் வைப்பதினால் ஏற்பாட்டின் முக்கிய அம்சங்களைத் தலைகீழாய் புரட்டவும், ஜனங்களுடைய ஆசாரம் வழக்கம் உரிமை இவைகளிலிருந்தும் நீக்கவும், கேவலமானவர்களைக் கண்ணியமானவர்களின்மேல் அந்தஸ்தில் வைக்கவும் நேரிடும். கிராம தலைபாரி போலீஸ்காரருக்கு ஆளாவான். சில சமயம் அவன் நடக்கவேண்டிய ஒழுங்குகளில் சகைையற்றவனாவான். அவன் கிராம பெரியதனக்காரனுடன் சேராமலும் அநேகமாய் அவருக்கு எதிரிடையாகவும் நடப்பான். அவன் கிராம நடவடிக்கைகளின் நன்றாய்த் தெரிந்த சங்கதிகளை மறந்து மிகவும் கேவலமான போலீஸ் உத்தியோகஸ்தனாவான். கிராம பெரியதனக்காரனும் கிராம போலீஸ் அதிகாரியும் ஒழுங்கான போலீஸ்காரருக்குக் கூட்டுதவி செய்பவர்களென்றும் அவர்களுக்குக் கீழ்பட்டவர்களல்லவென்றும் எண்ண வேண்டும்.

* * * *

47. கிராம பெரியதனக்காரர் சரியாய்த் தன் வேலைகளைச் செய்து வருகிறாராவென்று கவனிக்கவேண்டிய மேற்

பெரியதனக்காரன் பேரில் மேல்விசாரணை.

பார்வையையும் மேல்விசாரணையையும் ஜில்லா அதிகாரிக்கு விட்டுவிடவேண்டும். இந்த விஷயத்தில் ஜில்லா அதிகாரி தன்னுடைய கீழ்உத்தியோகஸ்தர்களால் ஒத்தாசை அடைவார். ஜில்லா அதிகாரியுடைய அல்லது அதிகாரம் கொடுக்கப்பெற்றவும் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கி எடுக்கப்பட்டவுமான சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவன்றியில் கிராம பெரியதனக்காரனை எவ்விதத்திலும் தெண்டிக்கக் கூடாது. போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பெரியதனக்காரன் வேலை செய்யத்தவறுதலை ரிபோர்ட்செய்யவேண்டும். இப்படி ரிப்போர்ட் செய்வதில் ஞாயமானயுக்தத்தை அனுஷ்டித்து வந்தால் மிகவும் நல்லவேலை நடக்கும். ஜில்லா அதிகாரி இப்பேர்ப்பட்ட ரிபோர்ட்டுகளை நன்றாய்கவனித்து உண்மையாய்த் தவறுதலிருந்தால் தக்க நோட்டீசு எடுத்துக்கொண்டு கிராம போலீசினிடம் அக்கிரமமாயும் வெறுப்புள்ள தாயுமுள்ள பிரவேசித்தலைக் கண்டிப்பாய் தடுக்கவேண்டும். மேலதிகாரிகளால் கிராம பெரியதனக்காரர்களின் நடத்தையை அடிக்கடி சீர்திருத்தும்படிச் செய்வதினால் பெரியதனக்காரர்களுக்குத் தங்கள் வேலை தொந்திரவுள்ளதென்றும் தங்கள் செல்வாக்குக்குக் குறைவு உண்டாகிறதென்றும் கொடுக்கும் அபிப்பிராயத்தைத் தடுக்க மிக்க கவனம் செலுத்த முடியாது. கிராம போலீஸ் வேலையை மேல் பார்ப்பது ஜில்லா அதிகாரியின் உதவிகளும் தாசில்தார்களும் தங்கள் கடமையின் முக்கியமான ஒரு பாகமென்றெண்ணவேண்டியது அவசியம். ரெவினியூ வேலையை முன்னிட்டு கிரிமினல் வேலையை அலக்ஷியம் செய்யும் சார்புக்கு அத்தாக்ஷியிருக்கிறது. இந்தச் சார்பைத் தடுக்க வேண்டும். சப் டிவிஷனல் ஆபீசரும், தாசில்தாரும் தங்கள் தங்கள் அதிகாரவரம்பிற்குட்பட்ட எல்லைக்குள்ளும, தங்களதிகார அளவுக்குட்படும் தாங்கள் ரெவினியூ. கிரிமினல் இந்த இரண்டுவேலையிலும் ஜில்லா அதிகாரியின் பிரதிநிதிப்பிரதி

எண்ணவேண்டும். கிரிமினல் புரொசீஜர் கோடின் 45-வது பிரிவுப்படி கிராம கணக்கர்களும் குற்றம் நடப்பதை ரிப்போர்ட்டு செய்ய உத்திரவாதியாயிருக்கிறார்கள். அவர்கள் இந்த விஷயத்தில் உதவிகள்தான். அவர்கள் மறைப்பதாய் எண்ணப்பட்டாலொழிய அவர்கள் உத்திரவாதத்தைப் பலவந்தம் செய்வது அனுவசியமாகும். அவர்கள் பெரிய தனக்காரன்பேரில் தணிக்கையாவார்கள். கிராம கணக்கர்களுக்குச் சில விபரீத குற்றங்களை மறைத்ததாய் தெரிந்திருந்தும் அவர்கள் ரிப்போர்ட்டு செய்யாமல் தவறின அலட்சியத்துக்காகச் சில கணக்கர்களை முகாந்திரம் கேட்டாலும் தண்டனைக்குள்ளாக்கினாலும் அவர்கள் கிராம பெரியதனக்காரனுடன் விசேஷமாய் உடந்தையாயிராமல் கிராம பெரியதனக்காரனை வேணுமென்று மறைக்கவொட்டாமல் தடுப்பார்கள். போலீஸ் வேலையைக் கிராம பெரியதனக்காரனும் தலையாரியும் சரிவர நடத்துகிறார்களாவென்பதை ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் பார்த்துவரவேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டும். போலீஸ் சூப்பிரண்டெண்டும், அவருடைய கீழ் உத்தியோகஸ்தர்களும் அவர்களை உபசாரத்துடனும் மரியாதையுடனும் நடத்தவேண்டும். சிறந்த சூப்பிரெண்டெண்டு வகுப்பு ஏற்பட்டால் மிக்க விருத்தியை நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். கிராம உத்தியோகஸ்தர்களை அனுவசியமாய்த் தொந்தரவு செய்யக்கூடாது. நல்ல வேலையை அதிசீக்கிரமாயும் வினயத்துடனும் அங்கீகரிக்கவேண்டும்.

கிராமத்தலையாரி.

49. கிராம போலீஸ் அதிகாரியை கிராம நவுக்கர்களில் ஒருவனாகவும் கிராம பெரியதனக்காரனுக்குட்பட்டவனாகவும் எண்ணப்பட வேண்டும். சட்டப்படி அவன்பேரில் சுமத்தப்பட்ட வேலைகளுக்கு அவனைத் தடையின்றி உடன் ஜவாப்தாரியாக்கவேண்டும்; பெரியதனக்காரனுடைய துற்போதனைக்குட்பட்டு தன்வேலையில் அசட்டையாயிருந்தால் அவனை மாப்பு செய்யக்கூடாது. கிராம போலீஸ் அதிகாரி (பெரியதனக்காரனுக்குத்தெரியாமல்) பெரியதனக்காரன் உத்தரவுகளைக் கீழ்ப்படியவில்லையென்று தெரியவந்தாலொழிய, பெரியதனக்காரன் பிரதமத்தில் உத்தரவாதியாவான். பெரியதக்காரன், ரெவினியூ போலீஸ் வேலைகளுக்குப் பெரியதனக்காரனுயிருக்கும் இடங்களில், சில நவுக்கர்களைப் போலீஸ் வேலைக்குப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தவேண்டுமென்று கம்மிஷனில் சேர்ந்தவர்கள் சிபார்சு செய்ய மாட்டார்கள். கிராம வேலைக்காரன் இரண்டு விஷயத்திலும் பெரியதனக்காரனுக்குட்பட்டவனுயிருந்தால் நன்மையைத்தரும். போலீஸ் வேலையிலேயே சில வேலைக்காரர்களை உபயோகித்துவர வேண்டுமென்றேற்படும் இடங்களிலும், பெரியதனக்காரனுடைய உத்தரவுகளை அவர்கள் நடத்தக்கடமைப்பட்டிருப்பது அவசியமென்பது நலம்தரும். ரெவினியூ போலீஸ் வேலைகள் சரிவர நடத்துவதற்குப் பெரியதனக்காரன் ஜவாப்தாரியாவான். ரெவினியூ வேலையை முன்னிட்டுப் போலீஸ்வேலையைக் கைவிடக்கூடாது. போலீஸ்வேலை சம்பந்தமாய், கிராமத்தலையாரி பெரியதனக்காரனுக்காக ரிப்போர்ட்டுகளை எடுத்துக்கொண்டு போகவேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் உதவி செய்யவேண்டும். கிராமத்துக்கு வேண்டிய காவல்புரிய வேண்டும். சட்டத்தில் திட்டம்செய்தபடி கைது செய்யவேண்டும். பொதுவாய் அவன் கைது செய்யவேண்டிய அதிகாரம் அதிகமல்ல. தன் முன்னிலையில் குற்றஞ்செய்தவர்களையும் தப்பித்து ஓடிப்போகிற குற்றவாளிகளையும், குற்றம் செய்ததாய்க் கூக்குரல் உண்டாயிருக்கும் நபர்களையும் மாத்திரம் கைது செய்ய அதிகாரம் கொடுக்க வேண்டியதவசிமென்கிறதல்லாமல் இரவில் சஞ்சரிக்கத்தக்க சந்தர்ப்பங்களில் அகப்படும் சமுசயிக்கக்கூடிய நபர்களையும், கிராமத்தலையாரி தான் திருட்டு சொத்தென்று அனுமானிக்கக்கூடிய சொத்துக்கள் ஒருவன் வசமிருந்தாலும் அவனையும் கைது செய்யவேண்டும் என்கிற அவசியத்திற்கும் வெகுவாய் சாட்சிய மிருக்கிறது.

சில மாகாணங்களில் கிராமத் தலையாரி வேலைக்குக் கீழ்க்குலத்தாரை எடுக்கக்கூடாதென்று நீக்கி விடுவது பெரிய பிசகானகாரியம். சாதாரணமாய், இவர்கள் உண்மையாய் கிராம நவுக்கர்களாயிருந்தால் மிகவும் நல்ல காவல்காரராகிறார்கள். பங்காளத்தில் இவர்கள் உண்மையாய் நாட்டுப்புறதேச கூலிபோலிஸ் காரர்களாகையால், இதுவேறு மாதிரியாயிருக்கிறது. அவ்விடத்தில் உயர்ந்த ஜாதி வகுப்புகளில் வேலைக்கு ஆட்களைச் சேகரிப்பது தடையின்றி நன்றுயிருக்கும். இழிகுலத்தார் கிராம நவுக்கர்களாயிருந்தால் உத்தரவுகளுக்கு அமைந்தவர்களாகவும் சாதாரணமாய் கிராமகாவல் வேலையை ஒழுங்குபடி உயர்குலத்தாரைவிட நன்றுயும் செய்வார்கள். மரியாதையாய் ஜீவிக்கும்படி குற்றஞ்செய்யக்கூடிய வகுப்பினர்களைத் தூண்டுதல் செய்து அவர்கள் தங்களுக்கிட்ட அலுவல்களை நிதானமாய்ச் செய்துவருவார்களாகில் அவர்களை நிராகரிக்கக் கூடாது' அவர்களை அப்படிச் செய்யும்படித் தூண்டுதல் செய்வது மிகவும் அனுகூலமாயிருக்கும். இது தேசாசாரத்துக்கு ஒத்திருக்கும்.

* * * *

பீட்வேலைகள்.

140. கெட்டநபர்கள் விஷயமாய் கிராம அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவர நடத்திவருகிறார்களா வென்பதை நிச்சயிப்பதற்காக அவர்களைத் தணிக்கை செய்வது அவசியமாகும்; இவ்வேலையைப் போலீஸ் ஸ்டேஷன் சார்ஜிலிருக்கும் உத்தியோகஸ்தர், தங்கள் கிராமங்களில் கெட்ட நபர்களை வைத்திருக்கிறார்களாவென்பதை அறியும் பொருட்டு கான்ஸ்டேபில்களையாவது, ஹெட் கான்ஸ்டேபில்களையாவது அப்போதைக்கப்போது அனுப்ப சுயேச்சை உள்ளவராயிருந்தபோதிலும், தாமே முக்கியமாய் நேரில்போய் அறிந்து கொள்வார். அவர் சமாசாரம் சேகரிக்கும்படி பிரயாணிகள் தங்குமிடங்களுக்கும், ஓடத்துறைகளுக்கும், ஜனங்கள் கூடும்படியான பொது இடங்களுக்கும் கான்ஸ்டேபில்களையும் அனுப்பலாம். ஆனால் மேலே ஒரு அத்தியாயத்தில் விவரித்தபடி இப்போது அமுலிலிருக்கும் கிராமசந்திப்பு ஏற்பாட்டின்படி எல்லாகிராமங்களையும் சந்திப்பது அனுவசியமாயும் ஆக்ஷேபிக்கத்தக்கதுமாயுமிருக்கிறது. இந்த ஏற்பாட்டைத் தள்ளிவிட வேண்டும். உண்மையாகவே சில அல்லது சில சமயம் அனேககிராம உத்தியோகஸ்தர்கள் அவர்கள் பேரில்வைத்த நம்பிக்கைக்குத் தகுதியற்றவர்களாகவே இருக்கக்கூடும்; ஆனால் இதற்குப் பலிதமான பரிகாரம் என்னவெனில், நம்பத்தக்கவர்களாயும் நம்பத்தகாதவர்களாமிருக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களைப் பகுத்தறிதலும்,யாவரையும்தங்கள் உத்திரவாதத்தையும் மானத்தையும் கொலைக்கும்படியானஒரேவித மேற்பார்வை ஏற்பாட்டில் வைக்காமலும் இருப்பதேயாம். திண்ணமாய்ப் பலிதமாவதற்குக்கிராம உத்தியோகஸ்தர்கள் ரெவினியூ இலாகா உத்தியோகஸ்தர்களுக் கடங்கியிருப்பதால் இந்த இலாகா உத்தியோகஸ்தர்களுடைய விநயமான கூட்டுதவி மிக்க அவசியம். ஆனால் கிராம போலீசினுடையவும் அவர்களுடைய கிராம உதவிகளுடையவும் மேல் விசாரணை ஜில்லா அதிகாரியினுடைய பதவியால் அவரிடம் ஒன்றுயிருக்கிற அவசியத்தால் இந்த உதவியைப் பெறக்கூடாமை என்று சந்தேகமுற முகாந்தரமில்லை. இப்போதிய ஏற்பாடு தவறுதல் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; அனேக நூற்றுண்டுகளாய் நிலைபெற்றுநின்ற சுதேச கிராமகாரியஸ்தர்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கி விடுவதினால் மாத்திரமல்ல, ஆனால் கிராம போலீசின் பேரிலேயே நம்பிக்கைவைக்கவேண்டுமென்கிற தப்பு அபிப்பிராயத்தினால் எங்கும் தளர்ச்சியடையும்படி செய்த கிராம உத்திரவாதத்தின் அறிவை உற்சாகப்படுத்துதினாலும் விருத்திசெய்வதினாலும்தான் விருத்தியுண்டாகுமென்று கம்மிஷனிலுள்ளோர் திண்ணமாய் உணர்ந்திருக்கிறார்கள்.

HINDU LAW.

இ ந் து ல ா.

---

1. ஆதிகாலத்து வழக்கத்தின்படி விவாகம் எட்டு வகைப்படும்; அவையாவன:—

1. பிராம்மம்-வேதாத்தியயனம் செய்திருக்கும் ஒரு பிராம்மணனை வரவழைத்து உபசரித்து கன்னிகையை மனப்பூர்வமாய்க் கொடுப்பது.

2. தைவம்-ஆசாரியனாக இருந்து வைதிகச் சடங்குகளைச்செய்து முடிக்கும் பிராம்மணனுக்குக்கன்னிகையை அலங்கரித்துக் கொடுப்பது.

3. ஆரிஷம்-விவாகம்செய்துகொள்பவனிடமிருந்து ஒன்று அல்லது இரண்டுஜோடி பசுக்களைப் பெற்றுக்கொண்டு கன்னிகையைக் கொடுப்பது.

4. பிராஜாபத்தியம்-கன்னிகையை விவாகம்செய்துகொள்ளவிரும்புகிற ஒருவனுக்குக்கன்னிகையைக் கொடுத்து அத்துடன் லௌகீக வைதீக அனுஷ்டானங்களைச் சரிவர நடத்திக்கொண்டு இருவரும் வாழ்ந்திருங்களென்று அவர்களை ஆசிர்வதிப்பது.

5 ஆசுரம்-விவாகம் செய்துகொள்ளுகிறவன் பெண்ணின் தகப்பனுக்கும் அவளைச் சேர்ந்தவர்களுக்கும் அவளுக்கும் வேண்டியதிரவியத்தைக்கொடுத்து திருப்திசெய்து பெண்ணை அடைவது.

6. கந்தர்வம்-ஸ்திரீ புருஷர் இருவரும் ஒருவர் மேலொருவர் நட்பும் ஆசையும் கொண்டு பெற்றோர் முதலியவர்களுடைய தகவலன்னியில் தாங்களே கூடிக் சுகித்திருப்பது.

7. ராக்ஷசம்-பெற்றோர் முதலியவர்கள் வசத்திலிருக்கும் பெண்ணை பலத்தால் ஜெயித்து இழுத்துக்கொண்டு போவது.

8. பைசாசம்-கன்னிகை தூங்கும்போதும் மயக்கங்கொண்டிருக்கும் போதும் புத்தி சுவாதீனமில்லாமலிருக்கும்போதும் சூதாய் அவளைக் கூடுவது.

2. ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படக்கூடும் சம்பந்தங்கள் இவ்விதம் எட்டு வகையெனப்பட்ட போதிலும், கன்னிகையின் சொந்தக்காரர்களாகிய தகப்பன் முதலியோர் சம்மதித்துக் கொடுத்த பின் அவளை யடைவதே விவாகம் என்ற பெயரை யுரித்தாகும். ஆதலால் முதலில் சொல்லிய ஐந்துமே சரியான விவாகங்கள் என்று சொல்லப்படும். கடைசி மூன்றும் உலகத்தால் ஒப்புக்கொள்ளத்தகாத குற்றமுள்ள செய்கைகளாகுமே யன்றி க்ரமமான விவாகங்களாக மாட்டாது. மேலும் கடைசி யிரண்டாகிய இராக்ஷஸமும் பைசாசமும் இக்காலத்தில் இந்தியன்பினல்கோடு 366 376-வது பிரிவுகளின்படி கடினமாய் தண்டிக்கப்படத்தக்க பெருங் குற்றங்களாகவும் இருக்கின்றன.

24. முதல் மூன்று விவாகங்களில் பெண்ணின் தகப்பனுடைய மனப்பூர்வமான சம்மதம் இருக்கிறபடியால் அவை உத்தமவிவாகங்க ளென்றும். நான்காவது ஐந்தாவதில் அச்சம்மதம் பொருள் கொடுத்துப்பெறப்படுகிற படியால் அவை மத்திம விவாகங்களென்றும், உலகத்தார் ஒப்புக்கொள்ளத்தகாத கடைசி மூன்றும் அதமவிவாகங்கள் என்றும் சொல்லப்படும்.

3. இவ்வெட்டு வகைகளில் முதலாவதாகிய **பிராம்மமும்** ஐந்தாவதாகிய **ஆசுரமும்** தவிர மற்றவை இக்காலத்தில் அனுஷ்டானத்திலில்லை. இவ்விரண்டில் சுத்த கன்னிகாதான மாகிய பிராம்மம் சிரேஷ்டமானதாயும் பொருள் கொடுத்துக் கன்னிகையை யடைவதான ஆசுரம் கனிஷ்டமானதாயு மிருந்தாலும் கனிஷ்டமானதாயிருக்கிற ஆசுரவிவாகமே இப்போதுஎங்கும் விசேஷமாய் வழங்கி வருகிறது. மேலும் அது பிராம்மணர்களுக்குள்ளுங் கூட சரியான விவாகமென்றே நியாயஸ்தலத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு மிருக்கிறது. 13 மது 83.

4. விவாகம் செய்துகொள்ளுகிற ஆண் பெண் இருவரில் ஆணே மேம்பட்டவனாகவும் ஸ்திரியைத்தன்னுள்ளடக்கியாளவேண்டியஎஜமானனாகவுமிருக்கிறான். அதுபற்றியும், பெண்ணானவள் தேகவளர்ச்சியையும் பருவகாலத்தையும் ஆணைக்காட்டிலும் சீக்கிரமாக அடைகிறபடியாலும் பெண்ஜாதியைவிடபுருஷனேவயதில் பெரியவனாக இருக்கவேண்டும். தர்ம சாஸ்திரங்களிலும் புருஷனே பெரியவனாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. இது பிராம்மணர் முதலிய முதல் மூன்று ஜாதியாராலும் சூத்திரர்களில் பெரும்பான்மை யோராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இத்தென்னிந்தியாவில் சில வேளாளர்களிலும் தொட்டியர் முதலிய ஜாதியர்களிலும் சிறு பையனுக்குப் பெரிய குமரியைக்கட்டும் துர்வழக்கம் வெகு காலமாக நடந்துவருகிறது. அப்படிப்பட்ட விவாகமும் வழக்கத்தை யனுசரித்துச் செல்லுபடியுள்ளதாக இருப்பதுமன்றி அந்த ஸ்திரீக்குப் பிறக்கும் பிள்ளைகள் யாவும் புருஷனுடையதாகவே பாவிக்கப்பட்டும் வருகின்றன.

5. ஒரு பெண்ணானவள் சாஸ்திரங்களின்படி **எட்டாவதுவயதில்** விவாகத்துக்குத் தகுதியுள்ளவளாகிறாள். பருவகாலத்தை யடைந்தவுடன் மனமானது விஷயாதிகளில் பிரவேசித்துச் சுகானுபவங்களைத்தேட விரும்பித் தன்னிஷ்டம்போல் சஞ்சரிக்கத் தொடங்குமாகையால், அம்மனதை அவ்விதம் திரியவொட்டாமல் ஓர் வரம்புக்குள்ளடக்கி வைக்கும்படியான சாதனத்தை இளம்பிராயத்திலேயே ஏற்படுத்திவைப்பது மிக்க நன்மையைப் பயக்கும் எனக்கருதி நமது பெரியோர்கள் பெண்களுக்குச்சிறுவயதிலேயே விவாகத்தைச் செய்து முடிக்கவேணுமென்று விதித்திருக்கிறார்கள். இவ்விதியானது பிராமணர்களுக்குள் கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பிராமண கன்னிகையானவள் விவாகமாகாமலே புஷ்பவதியாய் விட்டால் சாஸ்திரங்களின்படி அவள் ஜாதி பிரஷ்டையாய் விடுகிறாள்.

6. பிராம்மணர்களன்றி க்ஷத்திரிய வைசிய ஜாதியார்களும், சூத்திரர்களில் மேலான வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் பெண்களுக்குப் பருவகாலத்துக்கு முந்தியே விவாகம் செய்கிறார்கள். ஆனால் சூத்திரர்களில் பெரும்பான்மையோரும் அதற்குக் கீழ்ப்பட்ட ஜாதியார்களும் பருவகாலத்துக்குப் பிறகே பெண்களுக்குச் சாதாரணமாய் விவாம் செய்கிறார்கள்.

7. விவாகத்துக்குரிய ஆண் பெண் இருவரும் **ஓரே ஜாதியையும் வெவ்வேறு குடும்பத்தையும்** சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

8. ஆனால் முந்தினயுகங்களாகிய ஆதிகாலத்தில் மேல்ஜாதி புருஷர்கள் கீழ்ஜாதிப் பெண்களையுங்கூட விவாகம் செய்துகொள்ளலாமென்றிருந்தது. அது இப்போது அனுஷ்டானத்தில் இல்லை. இக்காலத்தில் அவரவர்கள் அந்தந்த ஜாதியிலேயே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்பது விதியாக இருக்கிறது.

9. விவாகிதர்கள் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்ற இரண்டாவது விதிப்படி, ஆண் பெண் இருவரும் ஒரேகோத்திரத்தையும் குலத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது.

10. மேலும் பெண்ணானவள் புருஷனுக்குத் தகப்பன் வழியிற் சேர்ந்த பந்துவாயிருந்தால் ஐந்து தலைமுறையும், தாய் வழியிற்சேர்ந்த பந்துவாயிருந்தால் நான்கு தலைமுறையும் விட்டு விலகினவளாக இருக்கவேண்டும். இவ்விலக்கின்படி ஒருவன் தன் அத்தையின் மகளையும் மாமன் மகளையும் சுத்தமாய் விவாகம் செய்துகொள்ளக்கூடாது. ஆனால் இவ்விலக்குகள் வெகு காலமாக எங்கும் அனுஷ்டானத்திலில்லை. மேலும்சாஸ்திரங்களில் தள்ளப்பட்டிருக்கிற இவ்விவாகங்களை தென் இந்தியாவாகிய நமது ஜில்லாக்களிலும் மேல் இந்தியாவிலும் சாதாரணமாய் வழங்கிவருகிறது. சிலஜாதியாருக்குள் அத்தைமகள், மாமன் மகளன்றி சகோதரியின் மகளையுங்கூட விவாகம்செய்துகொள்ளுகிற வழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. சூத்திரர்களும் அதற்குக்கீழ்ப்பட்ட கள்ளர், மறவர், அகமடியர் முதலிய ஜாதியர்களும் மேற்கூறிய விலக்குகளுக்குள்ளடங்கிய பெண்களென பாத்தியம் பாராட்டி விசேஷமாய் விவாகம் செய்து வருகிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட எல்லா விவாகங்களும் வழக்கத்தையனுசரித்து இக்காலத்தில் செல்லுபடியுள்ளதாகவே யிருக்கின்றன.

11. பெண்ணை விவாகம்செய்து கொடுக்கும் விஷயத்தில் அவளுடைய சுபாவ கார்டியனான தகப்பனே முதல் பாத்தியஸ்தனாக இருக்கிறான். தாயினுடைய சம்மதியில்லாமலே தகப்பன் பெண்ணை விவாகம் செய்துகொடுத்துவிடலாம். தகப்பனுக்குப்பிறகு, பாட்டன், சகோதரன், சிற்றப்பன் பெரியப்பன் ஆகிய இவர்களும், இவர்களுக்கும் பிறகு தகப்பன் வழியைச்சேர்ந்த சமீபபந்துக்களும், அதற்கும் பிறகு தாய் வழியைச் சேர்ந்த சமீபபந்துக்களும், கடைசியில் தாயாரும், பெண்ணை விவாகம் செய்துகொடுக்க பாத்தியஸ்தர்களாக இருக்கிறார்கள். தாயார் இல்லாவிடில் தூரபந்துக்களும் பெண்ணை விவாகம்செய்து கொடுக்கலாம். தூரபந்துக்களும் இல்லாவிட்டால் கன்னிகையானவள் அரசனுக்குத்தெரிவித்து அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு தனக்கிஷ்டமான ஒரு புருஷனை விவாகம்செய்துகொள்ளலாமென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

12. குழந்தைகளைத்தன்வசத்தில் வைத்துக்கொண்டு சம்ரக்ஷணைசெய்யும்படியான கார்டியன் அதிகாரத்தில் தாயானவள் தகப்பனுக்கு அடுத்த படியிலிருந்தாலும், பெண்ணை விவாகம் செய்து கொடுக்கும் சுதந்திரத்தில் தாயானவள் மிகவும் கீழ்ப்பட்டவளாகவே இருக்கிறாள்.

35. ஆனாலும் கன்னிகையின் தகப்பனுடைய சகோதரர்கள் விபக்த நிலைமையிலிருந்தால் அவர்களுக்குக் கன்னிகையின் தாயைக்காட்டிலும் முந்தினபாத்தியமில்லையென்றும், புருஷனுடைய சொத்தை தனியாய் அனுபவித்துக்கொண்டுகன்னிகையையும்சம்ரக்ஷணை செய்து வருகிற தாயாரானவள் பெண்ணைத் தனக்கு இஷ்டமான இடத்தில் விவாகம் செய்துகொடுக்க சுதந்திரவாளியாக இருக்கிறாள் என்றும், அவளுடைய இஷ்டத்துக்கு விரோதமாக நடக்க அவளுடைய விபக்த கொழுநன் முதலியோர்களுக்கு அதிகாரமில்லை என்றும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 4 மதுறைகோரி 339; 10 மதராஸ் லா ஜர்னல் 112 ;

13. மேலும் தகப்பனானவன் தன் பெண்சாதி பிள்ளைகளை கவனியாமலும் ஆதரிக்காமலும் தனியே விட்டுப்பிரிந்துபோய்விட்டால் தாயாரானவள் பெண்ணை விவாகம் செய்துகொடுத்துவிடலாம். 11. பம். 247.

14. மேலும் பெண்ணின் தகப்பன் உயிரோடிருக்க அவனுடைய சம்மதமும் தகவலுமில்லாமலே தாயாரானவள் பெண்ணினுடைய நன்மையின் பொருட்டும் நல்ல எண்ணத்தோடும் பெண்ணை ஒருவனுக்கு விவாகம் செய்துகொடுத்து விவாகத்துக்குரிய சடங்குகளையும் முறைப்படி செய்து விவாகத்தையும் பூர்த்தியாக்கிவிட்டால், அதுவும் சட்டப்படி செல்லுபடியுள்ளதாய் விடுகிறது. ஆனால் மோசடியாகவும் பலாத்காரத்தின்பேரிலும் செய்யப்படுகிற விவாகம் செல்லுபடியுள்ளதாக மாட்டாது. 14 மது. 316 ; 12 கல். 140 ; 19. அல 515 ; 11 பம். 247 ; 22 பம். 509 ; 22 பம். 812

15. பெண்ணினுடைய க்ஷேமத்துக்கும் அபிவிருத்திக்கும் விரோதமாயிருக்கிற ஒரு விவாகத்தைப் பெண்ணின் கார்டியனானவன் அயோக்கியமான காரணங்களால்செய்ய எத்தனப்பட்டால் அவ்விவாகத்தை நடத்த வொட்டாமல் தடுக்க நியாயஸ்தலத்தாருக்கு அதிகாரமுண்டு.

ஆனால் அப்படிச்செய்ய எத்தனிக்கிறவன் பெண்ணினுடைய முதல் கார்டியனான தகப்பனாகவேயிருந்தால் கோர்ட்டார் பிரவேசிப்பதற்குத் தக்க விசேஷமான காரணங்கள் இருக்கவேண்டும்: அப்போது அப்படிப்பட்ட விவாகம் தடுக்கப்படும். 8 கல். 266; பம் 480.

16. ஒரு பெண்ணை விவாகம்செய்து கொடுக்க அதிகாரமில்லாத ஒருவன் அப்பெண்ணினுடைய விவாகத்தை நடத்த எத்தனித்தால், அவ்விவாகத்தைத் தடுக்கும்பொருட்டுப் பெண்ணினுடைய சரியான பாத்தியஸ்தன் கோர்ட்டுக்கு மனுசெய்து கொள்ளலாம். அதன்பேரில் அவ்விவாகம் கோர்ட்டாரால் தடுக்கப்படும். 11 பம். 253.

17. தர்மசாஸ்திரங்களின்படி இந்துக்களுடைய விவாகமானது வைதீக சம்பந்தமான ஓர் சமஸ்காரமேயன்றி கேவலம் உடன்படிக்கையல்ல. ஆனதால் விவாகம் செய்துகொள்ளுகிற ஆண் பெண் இருவரும் ஒருவருக்கொருவர் சம்மதமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்களுக்கு விவாகம் செய்துவைக்கும் பெற்றோர் முதலியோருடைய சம்மதமே போதுமானது. ஆகையால் அவர்களுடைய சம்மதமின்றி செய்யப்படும் விவாகங்களும் சட்டப்படி செல்லத்தக்கதாகும். 5 அல் 513 ; 14 மது 316 ; 19 அல். 515. கார்டியனுடையசம்மதத்தின்பேரில்முறைப்படி செய்யப்பட்ட ஒரு விவாகம் ரத்தாகமாட்டாது. 14 மது. 316. Et.

NEWS AND NOTES.

ஸ்ரீவிபின சந்திரபாலர்:—இவர் சீக்கிரத்தில் பம்பாய்க்குப்போவாரென வறிகிறோம்.

லார்ட் லாமிங்டன்:—இவர் இம்மாதம் 27௳ பம்பாயை விட்டுப்புறப்பட்டு ஜன்மதேசத்திற்குப் பிரயாணமாகின்றார்.

இடியால் மரணம்:— மலையாளத்திலுள்ள ஆலத்தூர்க்கருகாமையில் சென்ற சனிக்கிழமை நல்லமழை பெய்து இடி விழுந்து மூன்றுபேர் மாண்டார்கள்.

லேடிமிண்டோ :—இங்கிலாண்டிலிருந்து புறப்பட்டு வந்த லேடிமிண்டோ பம்பாய்வந்திறங்கினார்கள். அப்போது பம்பாய் கவர்னர் லார்ட்லாமிங்டன் எதிர்கொண்டு அழைத்தார்.

தப்புவிக்க முயன்றும் பயன் படவில்லை:—பம்பாயில் 25 வயதுள்ள ஓர் இந்து தன்னை துன்புறுத்திவந்த வியாதியின் தொந்தரவால் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள நினைத்து கிணற்றில் குதித்துவிட்டாள். அவள் போட்ட இறைச்சலால் தெருவில் பைசிகல் வண்டியில் போய்க்கொண்டிருந்த ஒருவன் நின்று தன்னுடையைக் கழற்றிவைத்துவிட்டு கிணற்றில் இறங்கி தன்னால் கூடுமானவரையில் அவளைத் தப்புவிக்க முயன்றும் பயன்படாமல் போய்விட்டது. பிறகு போலீசார் வந்து பிரேதத்தை எடுத்து வழக்கம்போல் பரிசோதனை செய்தார்கள்.

ஒரு மாணவன் தற்கொலை புரிந்து கொண்டது:—கல்கத்தாவில் 16 வயதுள்ள ஓர் வங்காள மாணவன் சரியாய் படிப்பதில்லை யென்று அவன் தகப்பனார் கடிந்துபேச அவன் அவ்வார்த்தைகளைச் சகிக்கமுடியாது கோபத்துடன் வீட்டினின்றும் போய் அபினியை வாங்கிக்கொண்டு வீட்டிற்குத்திரும்பி வந்து ஓர் அறைக்குள் புகுந்து கதவையடைத்துக்கொண்டு அபினியை உட்கொண்டுவிட்டான். அந்தச்சிறுவனுக்கு இரண்டு மனைவிகளுண்டு. முதல்மனைவியின் வயது 14. இரண்டாவது மனைவிக்கு வயது 8. அவன் கதவைத் திறந்துகொண்டு வெளியேவரும்போது முதல்மனைவி சந்தேகங் கொண்டு "என்ன ஒருவாறுயிருக்கிறீர்கள், சங்கதி என்ன" என்று வினவ, அவன் "நான் 8 அணா அபினியை வாங்கித்தின்று விட்டேன்" என்று கூறினான். அதைக்கேட்ட அப்பெண் கூச்சலிட்டு அழ எல்லோரும்வந்து சூழ்ந்துகொண்டு உடனே வைத்தியருக்கு ஆள் அனுப்புவிக்க வைத்தியர் வருவதற்குள் பையன் தன்னிலைதப்பி தரையில் விழுந்தனன். அவன் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகப்பட்டு அங்கு உயிர்துறந்தனன். ஐயோ, அந்தச்சிறு பெண்களின் கதி என்னவாவது? பால்ய விவாகத்தை எப்பொழுதுதான் நம்மவர்கள் தொலைத்துவிடுவார்களோ அறியோம்.

ரீப்பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட்.

பிரதம மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் W. E. கினார்க் அடுத்த அக்டோபர்மாதம் வேலையிலிருந்து நீங்குவதாய் அறிகிறோம். பக்ஷபாதமின்றி கேஸ்களை விசாரித்து தீர்மானஞ் செய்வதில் தனக்கு நிகரில்லை எனப்பெயர் வகித்திருக்கு மிவர் நீங்குவது ஜனங்களுக்கு மிகவும் வருத்தத்தைச் கொடுப்பதுமன்றி கவர்ன்மெண்டிற்கும் பெருத்த நஷ்டம் என்பதில் தடையில்லை.

மனிதரைக்கொன்று புசிக்கிறார்கள் :—சைனாவில் வறுமையால் வருந்துவோர் மனிதர்களைப் பிடித்துக்கொன்று தின்கின்றார்களாம்.

லேடிமிண்டோ :—லேடிமிண்டோ நேற்றையதினம் லண்டன் நகரைவிட்டு இந்தியாவிற்குப் புறப்பட்டிருப்பார்கள் என வறிகிறோம்.

கல்கத்தா வக்கீல்கள் :—இவர்கள் இம்மாதம் 8-தேதி புதிய மாதிரியான கௌன்கள் தரித்துக்கொண்டு வரவேண்டுமென உத்திரவு செய்யப்பட்டிருக்கின்றது.

சுதேசக்கப்பல் கம்பெனி, இசற்கு தூத்துக்குடி வக்கீல் மிஸ்டர் சோமசுந்தர பாரதியார் B. A. B. L மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கீழ்வங்காளத்திற்குப் போலீசார்:—இப்பொழுது ஐக்கிய மாகாணத்திலிருந்து 100 போலீசாரும்; வங்காளத்திலிருந்து 50 போலீசாரும் கீழ்வங்காளத்தில் இறங்கி யிருக்கின்றார்கள்.

லார்ட்மிண்டோவும் இரங்கூன் முனிசிபாலிடியாரும்:—லார்ட் மிண்டோ அடுத்த நவம்பர் மாதத்தில் இரங்கூனுக்குப் போகும்போது அவரை வரவேற்க இரங்கூன் முனிசிபாலிட்டியார் பதினாயிரம் ரூபாய் செலவிடப்போகின்றார்களாம்.

ஆயுதக்களவு:—கல்கத்தா லால் பஜார் சென்டிரல் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி முதலிய ஆயுதங்களும் வெடி மருந்துகளும் களவு போய்விட்டன களவாடின ஆசாமிகள் அகப்படவில்லையாம்.

கொடுஞ்செயல்.—ருஷிய ராஜ்ஜியத்திற் கருகாமையிலுள்ள ஓர் பட்டணத்தில் ஒரு கூலி தன் பெண்ஜாதியும் தனது நான்கு குழந்தைகளும் உறங்கும்போது அவர்கள்மீது கிரசனாயல் வார்த்து தீயிட்டுவிட்டான். மறுநாட்காலையில் அவர்கள் வெந்து பிணமாய்க்கிடந்தார்கள்.

சிறையினின்றும் தப்பித்துக்கொண்டார்கள்: பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான சந்திர நாகூரில், 6 பெங்காளிக் கைதிகள் சிறையினின்றும் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டார்கள். அவர்களைப்பிடித்துத் தரும்படி, கல்கத்தாவிற்குத்தெரிவித்திருக்கிறார்கள்.

சர்டென்ஸில் இபெட்சன்:—பஞ்சாப் மாகாணலெப்டினெண்ட் கவர்னராகிய சர்டென்ஸில் இபெட்சனின் தேக அசௌக்கியம் சொஸ்தமாய் விட்டதென்றும், இம்மாதம் 4௳ சீமையைவிட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்குவந்து சார்ஜ் ஒப்புக்கொள்ளுவாரென்றும் ஒரு தந்தி தெரிவிக்கின்றது.

பாபு அஸ்வனி குமாரதத்தர்:—இவர் பாரிசாலில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் உடையவர். இவர் சொற்படியே ஜனங்கள் நடப்பார்கள். இதை யறிந்த கவர்ன்மெண்டார், மீன் பிடிப்பவன் தூண்டிமுள்ளின்மீது கண்வைத்திருப்பது போல், அவர்மீது கண்வைத்திருக்கின்றார்களாம். அவருக்கு என்ன தீங்கிழைக்க உத்தேசித் திருக்கின்றார்களோ நாம் அறியோம்.

ஸ்ரீலாலா லஜபத்ராயின் கடிதம்:—இவர் சென்ற மாதம் 16 தேதி தன் சிநேகிதர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம் அமிர்தபஜார் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது "என் தேசத்தாருக்கு உழைக்கும் சுதந்தரம் ஒன்றில்லாமை தவிர மற்றப்படிக்கு நான் சௌகரியமாகவேயிருக்கின்றேன். எப்படியிருந்தபோதிலும் கடவுள் இவ்விததுன்பங்களெல்லாம் ஓர்வித நன்மைக்காகவே நமக்குச் செய்திருக்கிறார் எனக்கருதி நான் தைரியமாயிருக்கிறேன்.

3600-ம் பவுன் விலையுள்ள புஸ்தகங்கள்:—பழையகாலத்து புஸதகங்கள் இப்போது மிகுந்த விலைக்கு விற்கப்படுகிறது. 214 தாளகொண்ட காக்ஸ்டன் என்பவரால் எழுதப்பட்ட ஒரு அபூர்வமான பெரிய புத்தகம் ஒன்று சிறிது காலத்திற்குமுன் 490 பவுனுக்கு விற்கப்பட்டது. இது காக்ஸ்டன் இராஜபுத்தகம்" Royal Book) என்ற புத்தகத்தின் ஒருபாகம் மாத்திரம்தான். இந்த முழுப்புத்தகம் 1962-ம் வருஷம் 2225 பவுனுக்கு விற்கப்பட்டதாம்.

வறுமையின் கொடுமை:—பம்பாயில் ஓர் கூலி வேலைக்காரனுடைய மனைவி வறுமையின் கொடுமையையும், அதன் காரணத்தால் உண்டான நோயின் உபத்திரவத்தையும் சகிக்க முடியாதவளாய் இவ்விதத்துன்பங்களுடன் யாம் மண்ணில் வாழ்வதைக்காட்டிலும் சாதலே உசிதம் எனக்கருதி அபினியை வாங்கி ஜலத்திற் கலந்து, இரண்டு வயதுள்ள தனது குழந்தைக்குக் கொடுத்துத் தானும் தின்று இருவரும் உயிர் மாய்ந்தார்கள். இந்தியமாது கணக்கிலா மக்களையிப்படி வறுமைக்கு பலிகொடுத்துக் கொண்டிருக்க, இந்தியாவில் வறுமையென்பதே யில்லை என்று பாட்டு பாடும் ஆங்கிலோ இந்தியர்களை என்னென்பது ?

சிறைச்சாலையில் மணம் புரிதல்:—ஜெர்மனி தேசத்தில் தன் ஜீவகாலமெல்லாம் காவற்கூடத்திலிருக்கத் தீர்ப்புப்பெற்ற ஒரு மனிதன் அந்த மறியல் வீட்டுக்காவலின் புத்திரியையே சிறிது நாளுக்குமுன் மணந்துகொண்டான். இப்படியே இங்கிலாந்திலும் ஒருவன் தான் நேசித்த பெண்ணை மணம் செய்யக்கேட்க அவள் மறுத்து விட்டனள். பின்பு அவன் ஓர் குற்றம் செய்து காவலிலிடப்பட்டான். ஒருநாள் காலையில் அவனுக்கு ஒருகடிதம் கிடைத்தது. அதிலெழுதியிருந்ததாவது நீ என்னை ஒருக்கால் மணம் செய்யக்கேட்டனை நான் கூடாதென்றேன். ஒருவேளை நீதிரும்ப என்னை கேட்பாயானால் அதின் பலன் வித்தியாசமாயிருக்கும் என்பதே. அப்படியே அவன் காவற்கூடத்திலிருந்து இரண்டாந்தரம் அவளை மணம் செய்யக்கேட்க அவள் சம்மதித்து அவ்விருவரும் காவற்கூடத்திலேயே விவாகம் செய்துகொண்டனர்.

கொடுங்கொலை:—25 வயதுள்ள இந்து புரோகிதன் ஒருவன் பம்பாயிலுள்ள 40 வயதுடைய கங்காபாய் என்னும் மாதையும் 15 வயதுள்ள அவள் பெண்ணையும் பக்குவமாய் தன்னிடத்திற்கழைத்துக் கொண்டுபோய் தன் வீட்டில் இரண்டு நாள் விருந்தாளிகளாய் வைத்திருந்து ஒருநாள் அவர்களிருவருக்கும் பங்கி தண்ணீரைக் குடிப்பித்து அலிபாக் கோட்டைக்கு வெளியே இழுத்துக்கொண்டுபோய் அன்று இராத்திரி அங்கேயே தூங்கும்படி செய்து, அவர்கள் தூங்கும்போது அவன் பலரின் உதவியோடு ஓர் பெரிய பாராங்கல்லை அவர்கள் மீது தள்ளிவிட்டான். அவர்கள் நசுங்கி மாண்டார்கள். மறுநாள் காலை போலீசார் கோட்டைக்கு வெளியில் இரண்டு பேர் நசுங்குண்டிருந்ததைக்கண்டு விசாரித்து ஆசாமியைப் பிடித்து சார்ஜ்செய்ய கேஸ் கார்ஜெட் மாஜிஸ்டிரேட் முன் விசாரணையாகி வருகின்றது. அம்மாதர்கள் அணிந்திருந்த 150 ரூபாய் விலையுள்ள நகைகள் 40 ரூபாய்க்குக் குதவை வைக்கப்பட்டிருக்கின்றதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாம். கேஸ் இன்னும் முடிவாகவில்லை.

போலீசார் ஓர் கள்ளனைப் பிடித்த விதம்:—லண்டன் நகரிலுள்ள மாபில் அண்டு கம்பெனியில் வேலையாயிருந்த ஜியார்ஜ் வால்ஸ் என்பவன் மேற்படி கம்பெனியிலிருந்து பித்தளைச் சாமான்களைத் திருடிக்கொண்டு போவதாக போலீசுக்கு சமாசாரம் எட்டியது. அவன் திருடிய சொத்துக்களை அங்கு சான்தில் ரோட்டிலுள்ள ஒரு ஷாப்பிற்குக் கொண்டுபோய் கொடுக்கிறான் எனப் புலன் கிடைத்ததால் மூன்று போலீஸ்காரர்கள் சாதாரண உடையில் புறப்பட்டு அந்த ஷாப்பிற்குப் போய் முதலில் கடைக்காரனைப்பிடித்து, ஷாப்பின் மேல் மாடியில் ஒரு அறையில் அடைத்துவிட்டு தாங்களே ஷாப்பின் சொந்தக்காரர்கள் மாதிரி, ஷாப்பில் உட்கார்ந்துகொண்டு சாமான்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். இவர்கள் உட்கார்ந்த ஒருமணி நேரத்திற்குள் 5 பேர் பழைய பித்தளைகள் எடுத்துக்கொண்டு விற்பதற்காக வந்தார்கள். அவர்களில் வாலஸ் என்பவனும் ஒருவன். இந்த வாலஸ் என்பவன் கையில் ஒரு மூட்டை பித்தளைச் சாமான்களை வைத்துக்கொண்டு ஷாப்பிற்குள் தாராளமாய் நுழைந்து, ஷாப்பின் தராசில் வைத்து விற்பனைக்காக என்று கூறினான். உடனே கடைக்காரராக விருந்த போலீசார் அவனைப்பிடித்து மேல் மாடிக்கு அனுப்பி விட்டார்கள். இம்மாதிரியாகவே அங்கு திருட்டுச் சொத்துக்களை விற்கவந்தவர்களை யெல்லாம்பிடித்துக் கொண்டார்களாம்

ஸ்ரீலாலா லஜபத்ராய்.

பர்மாவிலிருந்து வரும் பத்திரிகைகள் ஸ்ரீலாலா லஜபத்ராயைக்குறித்துப் பேசுகின்றன. அவர் மாண்டிலே கோட்டையில் ஒரு உன்னதமான பங்களாவில் வைக்கப்பட்டிருக்கிறார். அதே கோட்டையில் ஸ்ரீராய் வசித்துவரும் பங்களாவிற்குச் சமீபத்திலுள்ள வேறொரு பங்களாவில் சர்தார் அஜிட்சிங்கை வைத்திருக்கிறார்களாம். சர்தார் அஜிட்சிங்கின் பங்களா ஸ்ரீராயின் பங்களாவைவிட விசாலமானதாம். ஸ்ரீராய்க்கு இரட்டைக்குதிரை பீட்டன் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. பிரதிதினம் மாலையில் சவாரி செய்துவருகிறார். வழியில் பர்மாஜனங்கள் கண்டு கும்பிட்டாலும் சலாம்செய்தாலும் ஸ்ரீராய் அதேபிரகாரம் முறையே பதில்மரியாதை செய்கின்றனராம். ஸ்ரீராயை ஒருவருடனுடம் பேசவிடாமல் வைத்திருக்கிறார்கள். பங்களாவிலிருக்கும்போது ஈஜிசேரில் சார்ந்துகொண்டு சிலசமயம் புஸ்தகங்கள் வாசித்துக்கொண்டிருக்கிறாராம், சிலசமயம் பாராக்கொடுத்துக்கொண்டிருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் பேசிக்கொண்டிருக்கிருக்கின்றனராம். பங்களாவைச் சுற்றிலும் சோல்ஜர்கள் பாராக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கிற்க, தேசப்பிரஷ்டை செய்யப்பட்டவர்கள் கவர்னர் ஜனரலுக்கு மனுசெய்துகொள்ள சுதந்திரமிருக்கிறதென்று ஸ்ரீராய்க்கும் சர்தார் அஜிட் சிங்குக்கும் இந்தியா கவர்ன்மெண்டாரால் அறிவிக்கப்பட்டபின்பு, ஸ்ரீராய்மட்டிலும் கவர்னர் ஜனரலுக்கு மனு அனுப்பியிருக்கிறார்.

காலநிலை.

சென்னையில் இந்தவார ஆரம்பமுதல் சற்று மட்பு மந்தாரமாயும் பின் இரவில் குளிரும் அப்போதைக்கப்போது தூறலுமாயிருக்கிறது.

ஓர் வீணை உபாத்தியாயன் தண்டிக்கப்பட்டான்.

சென்னை நேஷனல் பாங்கியில் கிளர்க்காயிருக்கும் மிஸ்டர் கோபாலாசாரி யென்பவர் 14 வயதுள்ள தன்மனைவி ஏகயம்மாள் என்பவளைச் சங்கீத உபாத்தியாயன் சேஷகிரிராவ் என்பவன் இழுத்துக்கொண்டு போய்விட்டதாய் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் கிளர்க்கு துரைமுன்பு ஓர் கேஸ் கொண்டுவந்தார். மிஸ்டர் சாரியார் மைசூரிலிருக்கும் பொழுது அந்த வுபாத்தியாயனைத் தன்மனைவிக்கு வீணைகற்பிக்கும்படி 11 மாதத்திற்கு முன் ஏற்பாடு செய்துவைத்தார். அவர் பட்டணத்திற்கு வந்தபிறகும் அந்தவீணை உபாத்தியாயன் அவர்வீட்டிற்கு தினம் போய் கற்பிக்கிறவழக்கம். சென்ற மேமாதம் முதல் தேதி அவன் தஞ்சாவூரில் கலியாணத்திற்குப் போக வேண்டுமெனக்கூறி போய்விட்டான். மறுநாள் இரவு 8 மணிக்கு மிஸ்டர் சாரியார் ஆபீசிலிருந்து வீட்டிற்கு வந்ததும் தன் மனைவி ஓடிவிட்டனள் என்று சமாசாரம் தெரிய உடனே தஞ்சாவூருக்கும் பெங்களூருக்கும் தந்திகொடுத்தார். பிறகு அவர்கள் பெங்களூரிலிருப்பதாகத் தெரியவந்து மிஸ்டர் சாரியார் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் நாராயணசாமி அய்யருடன் பெங்களூருக்குப் போக அங்கு அந்த சேஷகிரிராவின் தங்கைவீட்டிற்குப் பக்கத்து வீட்டில் தனது மனைவியைக்கண்டனர். உடனே அந்த வீணை உபாத்தியாயனைக் குடும்பஸ்திரியை இழுத்துக் கொண்டுபோன குற்றத்திற்காக சார்ஜ் செய்தார். விசாரணையில் இருதரப்பின் சாக்ஷியங்களெல்லாம் விசாரணையாகி மாஜிஸ்டிரேட் அந்த வீணை உபாத்தியாயனுக்கு 3 மாத கடினகாவல் தண்டனை விதித்தார். குழந்தைகளுக்கு சங்கீதம் கற்பிக்கும் பெற்றோர் தகுந்த சங்கீத வுபாத்தியாயன்களாகப் பார்த்து வைத்துக்கொள்ள யிதுவோர் எச்சரிக்கை.



MR. JAMES SHORT, SOLICITOR, MADRAS.
மிஸ்டர். ஜேம்ஸ் ஷார்ட் ஸொலிசிடர், மதருஸ்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர்:—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள்:—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

ஈல்யம் 2.] சென்னபட்டணம், 1907ஞு ஆகஸ்டுமீ [8 பாகம்.

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம்:—ஜேம்ஸ் ஷார்ட், எஸ்கொயர்., சொலிசிட்டர், சென்னை.	
2.	இந்திய சட்ட கெஜெட் என்கிற நாம்	257
3.	ஜுரர்களுக்கு காம்பன்சேஷன்	258
4.	தாம் கொடுத்த மன்னிப்பை கவர்னர் ரத்துசெய்யலாமா?	,,
5.	கோர்ட்டு சமாச்சாரங்கள்	259
6.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	264
7.	பாதிரிகள் ஜெகதாம்பாளைத் திருடினதாகக் கொண்டுவரப்பட்ட நரசோரக்கேஸ் ...	270
8.	ஜாரியான முக்கிய தீர்ப்புகள்	278
9.	போர்ட் ஸ்டான்டிங் ஆர்டர்கள், கலெக்டர் உத்திரவுகள் சர்க்குலர்கள்	80
10.	கவர்ன்மெண்டு ஆர்டர்கள்	282
11.	மதராஸ் போலீஸ் டிபார்ட்மெண்டல் ஆர்டர்கள்	283
12.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்	286
13.	சட்டசம்பந்தமான வேடிக்கை சமாச்சாரங்கள்	291
14.	பலதேச வர்த்தமானம்	294
15.	சுகஷிக்காரர்கள் பக்கம்	296

நிரந்தரமான கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்த னுப்புவோர்க்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனைவருடம் ஆதரித்துவருகிருர்களோ அத்தனைவருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்ற யாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால் வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்டஞானம் நிறைந்த இந்த கெஜெட்விஷயமாக பெருமுயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானல் பென்ஷனைப் போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100–சந்தாதாரர்களை ஒருவர் சேர்ப்பாரானல் வருடமொன்றுக்கு 40–ரூபாய் சம்பாத்தியமுடையவர்களாவார்கள்.

இந்திய சட்ட கெஜெட்
விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 25 கையொப்பங்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கும் ரூ. 10–மணியார்டர்செய்து அனுப்பத்தயாராயிருக்கின்றேம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்ப போஸ்ட்கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கித் தபால் ஸ்டாம்பு ஒட்டாமலே நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,
மானேஜர்கள்,
இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,
37, நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, ஜியார்ஜ் டௌன்,
சென்னை.

விஞ்ஞாபனம்.

I. ஒவ்வொரு சந்தாதாருக்கும் அனுப்பப்பட்டிருக்கும் உறுதிமொழிச்சீட்டில் காணப்படும் நெம்பர் சந்தாதாரரின் ரிஜிஸடர் நெம்பராக எண்ணப்படவேண்டும். நம்முடைய ஆபீசுக்குக் கடிதம் எழுதுவதாகயிருந்தால் எழுதும் கடிதத்தில் அந்த நெம்பரை எழுதும்படி கேட்டுக்கொள்ளுகின்றேம்.

II. நம்முடைய ஆபீசுக்குக் கடிதம் எழுதுபவர்கள் ரிப்ளை போஸ்ட்கார்டில் எழுதினல் உடனே பதில் கிடைக்கும். நம்முடைய சட்டகெஜெட்டின் செலவு வருவாய்க்கு மிஞ்சிப்போகிறபடியாலும் கடிதங்களுக்கு பதில் எழுதுவதில் அபரிமிதமான தபாற்செலவுகளாகிறபடியாலும், சந்தாதாரர்கள் கடிதம் எழுதினலும் ரிப்ளைக்கார்டில் எழுதும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

III. மாதிரிக்காக ஒருமாத சட்டகெஜெட் அனுப்பும்படி எழுதுகிறவர்கள் 6–அணு தபால் ஸ்டாம்புகள் அடக்கம்செய்து எழுதவேண்டும்.

IV. நாம் சென்ற இரண்டுமாதங்களின் கெஜெட்டுகளில் அடக்கம்செய்திருந்த கார்டுகளில் கையெழுத்துசெய்து அனுப்பி நம்முடைய சட்டகெஜெட்டை ஆதரிக்க முன்வந்திருக்கும் கனதனவான்களுக்கு அனேக கோடிவந்தனம் மனமாரத்தந்தனம்.

V. இன்னும் கார்டுகளில் கையெழுத்துசெய்து அனுப்பாத பழைய சந்தாதாரர்களின் நன்மையை உத்தேசித்தும் அவர்களுள் சிலரின் கோரிக்கைக்கிணங்கவும், 1907–ம்ஞூ செப்டம்பர்மீ 31உ க்குள் நம்முடைய சட்டகெஜெட்டிற்குச் சந்தாதாரர்களாகச் சேருகிறவர்களுக்கும் சட்டபுஸ்தக இனமும், ரூ. 1-8 செலுத்தினல் கைக்கெடியார இனமும் கொடுக்கப்படும்.

VII. அடுத்தமாத கெஜெட்டில் அர்பத்நட் செஷன்விசாரணை பிரசுரஞ்செய்யப்படும்,

எடிடர்.

ஜேம்ஸ் ஷார்ட், எஸ்கோயர்.

இந்த மாத சஞ்சிகையில் போடப்பட்டிருக்கும் உருவப்படம் மிஸ்டர். ஜேம்ஸ் ஷார்ட் என்பவருடைய படம். இவர் இச்சென்னையில் பிரக்கியாதிபெற்ற சொலிசிட்டர். இவருடைய ஆபீஸ் மானேஜருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 250 சம்பளம் என்றல் இவருடைய வருமானத்தை நம்முடைய சந்தாதாரர்களே நிதானித்துக்கொள்ளலாம். இவர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளிலும் விசேஷமாய் பிராக்ட்டிஸ் செய்து வருகின்றர். ஹைகோர்ட்டில் பாரிஸ்டர்களுக்கு உதவியும் புரிந்து வருகின்றர். சர் ஜியார்ஜ் அர்பத்நட் - செஷன் விசாரணையை பிராஸிக்கியூஷன் தரப்பில் நடத்தும் பாரிஸ்டர் மிஸ்டர் பௌலுக்கு உதவிபுரியும்படியாக கவர்ன்மெண்டார் ஜேம்ஸ் ஷார்ட்டை நியமித்திருக்கிறர்கள். இவருடைய நெருங்கிய பந்து ஒருவர் லண்டன் நகரில் ஒரு பெரிய வர்த்தகக் கம்பேனியின் முதலாளியாக யிருக்கின்றனர்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907ஞூ ஆகஸ்டுமீ [பாகம் 8.

OURSELVES.

இந்திய சட்ட கெஜெட் என்கிற நாம்.

நம்முடைய இந்திய சட்டகெஜெட் மாதிரியாக பொதுஜனங்களுக்குச் சட்டஞானத்தைப் போதிக்கும்படியான ஒரு சஞ்சிகை இச்சென்னைராஜதானியில் ஏற்பட்டால் நன்மையைப் பயக்குமென்று வெகுநாளாய் எண்ணங்கொண்டு கடைசியில் சென்றவருஷம் இந்த கெஜெட்டை ஆரம்பிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேம். நாம் ஆதியில் துவக்கும் காலத்தில் இந்த கெஜெட்டிற்கு பெரும்பான்மையான கையொப்பக்காரர்கள் சேருவதில் ஐயமுற்றிருந்தோம். ஆயினும் பரமேஸ்வரியின் கிருபையால் நம்முடைய இந்திய சட்டகெஜெட் முதலாவதுவயது கடந்து இரண்டாவதுவயதை அடைந்திருப்பதுச் சென்னைராஜதானியிலுள்ள தமிழ் ஜனங்களுக்குள் வெகுகாலமாகவிருந்துகொண்டிருந்த ஒரு குறை விலக்கப்பட்டிருக்கிறதென்று வெளிப்படுத்திக் காட்டுகின்றது. நாம் சென்ற வருஷம் ஆகஸ்ட்மீ இந்த கெஜெட்டை ஆரம்பித்த காலத்தில் 650 சந்தாதாரர்கள் சேர்ந்தனர்கள். இதன் பின்பு சென்ற டிசம்பர்மீ வரையில் சேர்ந்த 390 பேர்களும் சென்ற ஆகஸ்ட்மீ த்திலிருந்தே கணக்குவைத்துக்கொண்டபடியால் ஆகவே முதல்வருஷத்தில் 1100 சந்தாதாரர்களிருந்தார்கள். இவர்களில் 900 பேர்கள் புதுவருஷத்திற்கு அதாவது நிகழ் ஆகஸ்ட்மீ முதல் ஆரம்பமாகும் வருஷத்திற்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்திருக்கிறர்கள். பாக்கியுள்ள 200 பேர்களும் கூடியசீக்கிரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் கார்டினும் கையெழுத்துசெய்து அனுப்புவார்களென்று நம்புகின்றேம். நிற்க, நம்முடைய கெஜெட்டைக்குறித்த சென்றவருஷத்திய ரிப்போர்ட்டை இவ்விடத்தில் சுருக்கமாய் எடுத்து வரைவாம். நம்முடைய கெஜெட் ஆரம்பமானமுதல் இதன் சஞ்சிகைகளை சில ஹைகோர்ட் ஜட்ஜிமார்களுக்கும், வெளியூர்களிலுள்ள அனேக ஜமீன்தார்களுக்கு மறியாதைக்காகவும் அபிப்பிராயம் பெறுவதற்காகவும் அனுப்பிவந்தோம். இப்படி அனுப்பப்பட்டுவந்த சஞ்சிகைகளைப் பார்வையிட்ட ஒவ்வொருகனவானும் இந்த கெஜெட் சென்னைராஜதானியிலுள்ள தமிழ் ஜனங்களுக்கு மிகுந்த நன்மையைப் பயக்குமென்று மேன்மையான அபிப்பிராயம் தந்தருளியும் அனுப்பினர்கள். இவர்களுள், சென்னை ஹைகோர்ட்டிற்கு ஓர் திலகம்போல் விளங்காநின்ற ஒரு ஜட்ஜி அவர்கள் நம்முடைய முயற்சியில் அனுதாபங்காட்டி தகுந்த பொருளுதவியும் தந்தருளினர்கள். வெளியூரிலிருந்து மூன்று ஜமீன்தார்களும் அனுதாப உணர்ச்சி மேலிட்டால் நம்முடைய கெஜெட்டிற்குப் போஷகப்பணமும் தந்தருளியிருக்கின்றனர்கள்.

நம்முடைய சட்ட கெஜெட்டிற்கு வேண்டிய உதவிகளைக் கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டில் எந்தெந்த இலாக்காரர்களுக்கு எழுதியிருந்தமோ அவர்கள் எல்லோரும் தங்களால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்தனர்கள். நாமும் ஆதியில் நோட்டீசில் பிரசுரித்திருந்தபடி, சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள், இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள், ஜாரியான தீர்ப்புகள், கவர்ன்மெண்டு ஆர்டர்கள், போலீஸ் ஆர்டர்கள், ரெவினியூ போட்ஸ் புரோசிடிங்ஸ்கள், ஜில்லாக் கலெக்ட்டர் உத்திரவுகள், சட்டசபை புரோசீட்டிங்கங்கள் முதலியவைகளை அப்போதைக்கப்போது பிரசுரித்து வந்ததை நம்முடைய சந்தாதாரர்கள் கவனித்திருப்பார்கள், என்று நம்புகின்றேம்.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்களையும் இந்தியன் லா ரிப்போர்ட்டுகளையும் வாசித்த கனவான்கள் கேசுகளின் ரிப்போர்ட் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறதென்று அபிப்பிராயம் கூறி நம்மை உற்சாகப்படுத்தியிருக்கிறர்கள். இன்னும் இந்த சட்ட கெஜெட் தரப்பில் பொதுஜன நன்மைக்காக எவ்வளவு வேண்டுமா

னும் உழைக்கத் தயாராயிருக்கின்றோம். நாம் ஏற்கனவே முன் ஒரு சமயம் இந்த கெஜெட்டில் எடுத்துக் கூறியுள்ளபடி இன்னும் இந்த கெஜெட்டில் அதிகப் பக்கங்கள் சேர்க்கவும் இன்னும் விசேஷ சமாச்சாரங்கள் எடுத்து எழுத வசதிப்படாமலிருப்பது ஒரு பெரும் குறையாக யிருந்துக்கொண் டிருக்கின்றது. கடந்த வருஷத்திலேயே ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள செஷன் கோர்ட்டிற்கு நம்முடைய ஆபீசின் தரப்பில் ரிப்போர்ட்டர்கள் அனுப்பி செஷன் விசாரணை ரிப்போர்ட்டுகளை எடுத்து நமக்கு அனுப்பும்படி ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு அவ்வெண்ணத்தை நிறைவேற்ற நம்மால் கூடிய வரையில் பிரயத்தனம் செய்தும் பயன்படாமற் போய்விட்டது. ஒவ்வொரு செஷன்கோர்ட்டிற்கும் ரிப்போர்ட் அனுப்புவதென்றால், சாமானிய காரியமல்ல. பெருத்த செலவு பிடிக்கும்; சென்ற வருஷத்திலேயே இன்னும் 500 சந்தாதாரர்கள் அதிகமாய்ச்சேர்ந்திருந்தால் இந்த ஏற்பாட்டை நடவடிக்கைக்குக் கொண்டு வந்து நம்முடைய அருமையான சந்தாதாரர்களுக்குப் பெருமையான சந்தோஷத்தை உண்டு பண்ணியிருப்போம். நாம் நினைத்தவண்ணம் சந்தாதாரர்கள் சேருவார்கள் என்று அபிப்பிராயம் கொண்டு ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் 500 காப்பிகள் அதிகமாக அச்சடித்து வைத்திருந்தோம். ஒவ்வொரு செஷன் கோர்ட்டிற்கும் ரிப்போர்ட்டர் அனுப்பி செஷன் விசாரணைகளை நம்முடைய கெஜெட்டில் பிரசுரம் செய்யவேண்டுமென்கிற நம்முடைய கோறிக்கையை நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய சந்தாதாரர்களுடையதே யொழிய நம்முடையதல்லவென்று வணக்கமாய் இவ்விடத்தில் எடுத்துத் தெரிவித்துக்கொண்டோம். சந்தாதாரர்கள் தங்களுடைய மித்திரர்களில் சிலரை இந்த் சட்ட கெஜெட்டிற்குக் கையொப்பக் காரர்களாகச் சேரும்படி தூண்டுவார்களேயாகில், நம்முடைய எண்ணம் பலிதப்பட்டுப் போகுமென்பதில் என்ன சந்தேகம்? நிற்க, சட்ட கெஜெட் அவசியமென்றும் அது ஒவ்வொரு குடும்பத்திலிருக்க வேண்டியது அவசியமென்றும் நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. ஒரு மனிதன் தனக்குள்ள சுதந்தரத்தையும் உரிமைகளையும் அறிந்து கொள்ளாவிட்டால் அவனுக்கும் அன்னியனுடைய புலத்தில்போய் மேய்ந்தால் இன்ன பாதகம் தனக்குண்டாகு மென்று அறியாத பசுவிற்கும் என்ன பேதம்? எப்போது கவர்ன்மெண்டார் சட்ட திட்டங்களைச் செய்து அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்களோ அப்போதே பிரஜைகள் அவைகளை அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கவர்ன்மெண்டாரால் எண்ணப்படுகிறார்கள். ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு அது குற்றமாகுமென்றும் தனக்குத் தெரியாதென்று டிபன்ஸ் கூறினால் இந்த டிபன்ஸ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்று இந்தியன் பினல் கோர்டு கூறுகின்றது. ஆகையால் பிரஜையாகவிருக்கும் ஒவ்வொருவனும், கிராமத்தானாவிருக்கும் ஒவ்வொருவனும் நகரத்தானாயிருக்கும் ஒவ்வொருவனும் அவன் தனட்டிகனாகயிருந்தாலும் சரி, தரித்திரனாயிருந்தாலும் சரி அவன் தான் வசிக்கும் தேசத்திலுள்ள சட்டங்களின் சாராம்சங்களை அறிந்தவனாகயிருக்கவேண்டும். சட்ட ஞானமில்லாக் குறையால் உண்டாகும் தீமைகளை நாம் எண்ணமுடியுமோ? அநேகர் வாசுக்கிரம பாத்திதைகளை அறியாமல் தாங்கள் அடைந்து அனுபவிக்க வேண்டிய சொத்துக்களை சுதந்தர மற்றவர்கள் அனுபவிக்கும்படியாக விட்டுவிட்டு பரிதவித்து பிச்சை எடுத்துச் சாப்பிடுகின்றார்கள். சட்ட ஞானமில்லாத தோஷத்தால் கெடுமதியுடைய லா ஏஜெண்டுகளுடையவும் லாயர் தொழிலைக் கேவலப்படுத்தும்படியான நடவடிக்கை உடைய லாயர்களுடைய வலையில் சிக்கி தங்களிடமிருந்த சொத்துக்களை எல்லாம் விரையம் செய்து பிரிவு கவுன்சில் வரையில் வியாஜ்ஜியமாடி கடைசியில் ஒட்டாண்டியாய்ப் போய் அன்னவஸ்திரத்திற்கு கஷ்டப்படுகிறார்கள். ஜனங்களுக்கு சட்டஞானக் குறையால் உண்டாகும் இன்னும் அனேக தீமைகளை எடுத்துக்கூறலாம். இவைகளை எல்லாம் நம்முடைய சட்டகெஜெட்டை வாங்கி வாசிக்கிறவர்களிடம் அணுகா என்பது திண்ணமென்பதற்கு சென்றவருஷம் நம்முடைய சட்டகெஜெட்டை வாங்கி வாசித்துவந்தவர்களே உண்மையான சாக்ஷிகளாக நிற்கின்றார்கள். ஆகையால் இக்கொடிய தீமைகளை விலக்கி ஜனங்களுக்கு சட்டஞானத்தை ஹிதோபதேசம் செய்யவந்திருக்கிற நம்முடைய இந்திய சட்டகெஜெட்டை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பயனடைய வேண்டுமென்பது நம்முடைய அன்பார்ந்த பிரார்த்தனை சென்றவருஷமும் இவ்வருஷமும் இந்திய சட்ட கெஜெட் விஷயமாக நாம் செய்துவந்த முயற்சியில் அனுதாபம்காட்டி உதவிபுரிந்திருக்கிற கனதனவான்களுக்கும், அதை ஆதரித்துவந்தவும் வருகிறவுமான சிறந்த சந்தாதாரர்களுக்கும் தீர்க்காயுசையும் புத்திரமித்திர சம்பத்தையும் இன்னுமுள்ள சகலபாக்கியங்களையும் தந்தருளுமாறு அகிலாண்டகோடி பிரமாண்டநாயகியாகிய பரமேஸ்வரியின் பாதக் கமலங்களைச் சிந்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

Payment to Jurors.

ஜூரர்களுக்கு அலவுன்ஸ்.

ஹைகோர்ட்டு செஷன் விசாரணைக்கு ஆஜராகும் ஜூரர்களுக்கு ஏதேனும் அலவுன்ஸ்கொடுத்தால் நலமாகயிருக்குமென்று எம்பயர் என்னும் பத்திரிகை கூறுகின்றது. ஹைகோர்ட்டார் இந்தப் பிரேரேபணையை ஏற்றுக்கொண்டால் நலமாயிருக்குமென்று எண்ணுகின்றோம். செஷன் விசாரணைக்காலங்களில் ஜூரர்கள் கோர்ட்டிற்குவந்து விசாரணைமுடியும்பரியந்தம் ஜூரர்களாயிருப்பதில் தேகசௌக்கியத்தை இழப்பதுமன்றி உள்ளபடி சிறிது வருமானத்தையும் இழந்து வருகின்றார்கள். ஆகையால் இவர்களுக்கு ஏதேனும் அலவுன்ஸ் கொடுத்துவருவது உத்தமமாயிருக்கும். இதற்குப் போதுமான ஐவேஜியும் ஹைகோர்ட்டாரிடமிருக்கிறதென்பதில் தடையில்லை. அப்பீல்கோர்ட்டை பராமரித்துவருவதில் ஹைகோர்ட்டார் நஷ்டமடைந்துவந்தபோதிலும் ஒரிஜனல் சயிடில் விசேஷ வருமானம் வந்துகொண்டிருக்கிறது. ஹைகோர்ட்டு செஷன் விசாரணை ஒரிஜினல் சயிட் தரப்பில் நடத்தப்படுகின்றன. ஆகையால் ஒரிஜினல் சயிட் வருமானத்திலிருந்து ஜூரர்களுக்கு அலவுன்ஸ் கொடுத்துவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கவர்னர் மன்னிப்புகொடுத்துவிட்டு ரத்துசெய்யலாமா?

கவர்னர் மன்னிப்புகொடுத்துவிட்டு பிறகு அதை செய்யக்கூடுமா என்கிற சட்ட அம்சத்தை இப்போது அமெரிக்காதேசத்திலிருக்கும் வாஷிங்டன் கோர்ட்டார் யோசனைசெய்துவருகிறார்கள். ஒரு பெண்ணைக் கொலைசெய்தவன் பலவருஷங்களுக்குத் தண்டிக்கப்பட்டு ஜெயிலிலிருந்தான். சில வருஷங்களாக ஜெயிலிலிருந்துகொண்டு தான் அடைந்த தண்டனைகாலத்தை கழித்துக்கொண்டுவருகையில் நோயில் விழுந்துவிட்டான். டாக்டர்கள் இவன் இரண்டொருவாரத்தில் இறந்துபோவான் என்று அபிப்பிராயம் கூறினார்கள். இவனுடைய பந்துக்கள் இவனுக்கு மன்னிப்புகொடுத்து ஜெயிலிலிருந்து விட்டுவிடவேண்டுமென்று கவர்னருக்கு மனுசெய்து மன்றாடிப் பிரார்த்திக்க, இவன் வீட்டில்போய் இறந்துபோகும்படியான வசதி இவனு

(இதன் தொடர்பை 295-வது பக்கம் கடைசியில் பார்க்க.)

COURT NEWS.

கோர்ட்டு சமாசாரங்கள்.

ரிஜிஸ்டிரார் ஆபீஸ் கேஸ்.

கோயம்புத்தூரில் இப்போது ஒரு முக்கியமான கேஸ் விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. குற்றவாளியின் பெயர் சேஷய்யங்கார். இவர் கோயம்புத்தூர் ஜில்லா ரிஜிஸ்டிரார் ஆபீசில் கிளார்க்கு உத்தியோகத்திலிருக்கிறார். 1904-ம் நவம்பர்௴ தாராபுரம் சப் ரிஜிஸ்டிரார் ஆபிசைச்சோதனை செய்ய அனுப்பப்பட்ட கிளார்க்குகளில் குற்றவாளி ஒருவர். இவர் 1905-ம் ௵-ம் ஜூலை௴ வர்க்கில் ரஜாவெடுத்துக்கொண்டு தாராபுரத்திற்குச்சமீபத்திலுள்ள ராஜேந்திரம் என்கிற கிராமத்திலிருந்தார். இப்படியிருக்கும்போது தாராபுரம் சப் ரிஜிஸ்டிராருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் என்ன எழுதப்பட்டிருந்ததென்றால் சப் ரிஜிஸ்டிராவது அல்லது அவருடைய ரயிட்டர்களில் யாரேனும் ஒருவராயினும் ராஜேந்திர கிராமத்தில் குற்றவாளியை வந்துபார்க்கும்படியாக எழுதப்பட்டிருந்தது. இந்தக் கடிதத்தை சப் ரிஜிஸ்டிரார் பார்த்தவுடன் தம்முடைய கிளார்க்குகளில் ஒருவரைக் குற்றவாளியிடம் அனுப்பினார். தாராபுரம் சப் ரிஜிஸ்டிரார் ஆபீசில் இதற்கு முந்தி கிளார்க்கு உத்தியோகத்திலிருந்தவர்களில் யாரோ ஒருவர் முக்கியமான பத்திரங்கள் பதியப்பட்ட புஸ்தகத்திலிருந்து நான்கு கடிதாசிகளைக்கிழித்து கோயம்புத்தூர் ஜில்லா ரிஜிஸ்டிராருக்கு அனுப்பியிருக்கிறாரென்றும் இந்தக்கடிதாசிகள் இப்போது ரஜாவின் பேரில் கும்பகோணத்திற்குப் போயிருக்கும் கோயம்புத்தூர் ஜில்லா ரிஜிஸ்டிராராகிய மிஸ்டர் வெங்கடராவிடமிருக்கிறதென்றும், இந்தக்கடிதாசிகளை அவரிடமிருந்து எப்படியாது பெற்று பழையபடி அப்புத்தகத்தில் ஒட்டவிடாவிட்டால் சப் ரிஜிஸ்டிராருக்கும் அவருடைய ஆபீசுக்கிளார்க்குகளுக்கும் தொந்தரவு நேரிடுமென்றும், ஜில்லா ரிஜிஸ்டிராருக்கு ஏதேனும் தக்கபடி லெஞ்சம் கொடுத்தால் அந்தக்கடிதாசிகளைக் கொடுத்துவிடுவார் என்றும் குற்றவாளி கிளார்க்கிற்குச் சொன்னார்.

கிளார்க்கு திரும்பி தாராபுரம் சென்று சப் ரிஜிஸ்டிராருக்கு இந்தச் சமாசாரத்தைச்சொல்ல அவர் பயந்துபோய் குற்றவாளி சொன்ன யோஜனைப்படி நடக்கத்தயாராகவிருப்பதாகக்குற்றவாளிக்குப்பதில் சொல்லி அனுப்பினார். இதன்பேரில், அந்தக்கடிதாசிகளைத்திருப்பிக்கொடுக்க ஜில்லா ரிஜிஸ்டிரார் எவ்வளவு தொகை கேட்கிறாரோ அதைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் அதைக்கும்பகோணத்திற்குப்போய் ரிஜிஸ்டிராருடன் பேசினால்தான் அறிந்துகொள்ளக்கூடுமென்றும் குற்றவாளி சொன்னார். ஆகவே குற்றவாளியும் தாராபுரம் சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் கிளார்க்கும் கும்பகோணம்வந்து சேர்ந்தார்கள். கும்பகோணத்தில் குற்றவாளி மட்டிலும் ரிஜிஸ்டிரார் வீட்டிற்குப்போய்வந்தார். ரிஜிஸ்டிரார் ரூபாய் 300 கேட்கிறதாகக் குற்றவாளி கிளார்க்கிற்குச்சொன்னதின்பேரில் கிளார்க்கு தாராபுரம் சப் ரிஜிஸ்டிராருக்குத் தந்தி அடித்து ரூ. 300 தந்திமணியார்டர்மூலியமாய்ப்பெற்று குற்றவாளியிடம் கொடுத்து ரிஜிஸ்டிராருக்குக் கொக்கும்படியாகச் சொன்னார். குற்றவாளி ரூ. 300 யும் பெற்றுக்கொண்டு ரிஜிஸ்டிராருக்குக் கொடுக்கப்போவதுபோல பாவனைசெய்து ரிஜிஸ்டிராருடைய வீட்டிற்குச்சென்று சில மணிநேரம் சென்று திரும்பிவந்து ரிஜிஸ்டிராரிடம் ரூ. 300 செலுத்திவிட்டதாகவும் அவர் அந்தத்தொகையைப்பெற்றுக்கொண்டு பதிவு—புஸ்தகக்கடிதாசிகளைக் கொடுத்ததாகவும் குற்றவாளி கிளார்க்கிற்குச்சொல்லி அவரிடம் அந்தக்கடிதாசிகளையும் கொடுத்தார்.

பிறகு இருவரும் சேர்ந்து தாராபுரத்திற்குவந்துவிட்டார்கள். தாராபுரம் சப் ரிஜிஸ்டிரார், கிளார்க்கு கொண்டுவந்த கடிதாசிகளைப்பெற்று அவைகள் எந்தப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்டிருந்தனவோ அந்தப் புத்தகத்தில் ஒட்டிவைத்துவிட்டனர். இந்த விர்த்தாந்தங்களெல்லாம் 1905-ம் ஜூலை௴த்தில் நடந்திருந்தும் 1906-ம்௵ நம்பர்௴ வரையில் இவைகளைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் வெளிவராமலிருந்தது. இப்படியிருக்கும் தறுவாயில் மேலே சொல்லப்பட்ட கோயம்புத்தூர் ரிஜிஸ்டிராராகிய மிஸ்டர் வெங்கட்டராவ் மாற்றப்பட்டு புதிய ரிஜிஸ்ரார் நியமிக்கப்பட்டார். இவர் தாராபுரம் சப் ரிஜிஸ்டிராரைப் பற்றி சில புகார் பிரஸ்தாபங்கள் கேள்விப்பட்டு தாராபுரம் சப் ரிஜிஸ்டிராராபீசை சோதனை செய்யப்போனபோது மேலே சொல்லப்பட்ட கடிதாசிகள் ஒட்டப்பட்டிருந்த புஸ்தகத்தைப்பற்றி விசாரணைசெய்கையில் மேல் கூறப்பட்ட சமாசாரங்களெல்லாம் வெளிக்குவந்தன. இது சம்பந்தமாகப்போலீசார் விசாரணை நடத்திக் குற்றவாளியை அரஸ்ட்செய்து குற்றம் சாட்டியிருக்கிறார்கள். பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் விசாரணைசெய்யப்பட்டு வருகின்றார்கள்.

புருஷன் பெண்சாதியின்பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியம்.

ராஜபுதனத்திற்குச் சமீபத்தில் புரோச் ஜில்லாவில் "கார்வார் முகமதியர்கள்" என்னும் பெயருடைய ஒரு சிறுபான்மையான ஓர்வகை முகமதியக் கூட்டத்தார்களிருக்கிறார்கள். இவர்கள் ஆதியில் இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முகமதிய மதத்தில் சேர்ந்துகொண்டபின்னும் இந்த மதக்கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும் அனுஷ்டித்துவருகின்றார்கள். இவர்களில் ஒருவன் விவாகம்செய்துகொண்ட மறுவருஷம் சில காரணங்களை முன்னிட்டு பஞ்சாயத்தார்களால் ஜாதிப்பிஷ்டம் செய்யப்பட்டான். இவன் ஜாதி பிரஷ்டம் செய்யப்பட்டவுடன் இவனுடைய பெண்சாதி தன்னுடைய தாயார் வீட்டிற்குப் போய்விட்டனள். இவன் தன்னுடைய பெண்சாதி தன்னுடன் கூடி வாழும்படி கட்டாயப்படுத்தும்படியாக சப் கோர்ட்டில் பெண்சாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். சப் கோர்ட்டார் புருஷனோடு கூடி வாழும்படியாகப் பெண்சாதிக்கு உத்தரவுசெய்து, அப்படிப் பெண்சாதி புருஷன் வீட்டிற்கு வருவதற்கு முந்தி புருஷன் ஜாதியில் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று சொல்லி வாதிக்கு நிபந்தனை டிக்கிரி கொடுத்தார்கள்.

வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் புருஷன் ஜாதிப்பிரஷ்டனாகப்போய்விட்டபோதிலும் பெண்சாதி அவனுடன் கூடிவாழப் பாத்தியப்பட்டவளென்று சொல்லி கீழ்க்கோர்ட்டார் கொடுத்த டிக்

கிரியில் கூறப்பட்டிருந்த நிபந்தனையை ரத்து செய்து புருஷனுடன் சேர்ந்து வாழும்படியாக பெண்ஜாதிக்கு உத்தரவு செய்தார்கள். பெண்சாதி ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொண்டதில், பெண்சாதி முகம்மதிய மதத்தைச்சேர்ந்தவளென்றும் புருஷனும் முகமதிய மதத்தைச் சேர்ந்தவனாயிருந்தபடியால் அவனை விவாகம் செய்துகொள்ளப் பெண்சாதி ஒப்புக்கொண்டாளென்றும், எப்போது புருஷன் முகமதிய மதத்தை விட்டுப் புருஷன் விலக்கப்பட்டானோ, அப்போது பெண்சாதி புருஷனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ரத்தாய் விட்டதென்றும் ஆதலால் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட புருஷனுடன் பெண்சாதி வாழ பாத்தியப்பட்டவளல்லவென்றும் அப்படிப் புருஷன் தன்னுடன் கூடி வாழும்படி பெண்சாதியைக் கட்டாயப்படுத்த வேண்டுமானால் புருஷன் ஜாதியில் சேர்ந்துகொள்ளவேண்டுமென்றும் சொல்லி சப்கோர்ட்டார் கொடுத்த நிபந்தனை டிக்கிரியை ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

நம்பிக்கை உண்டுபண்ணும் தந்திரம்.

பஞ்சாப் மாகாணத்தில் லாகூரில் குலாம் உசேயின் என்பவனும் இன்னும் இருவர்களும் ஒரு கரன்சி நோட்டை இரு கரன்சி நோட்டாகச் செய்துகொடுக்கிறதாகச் சொல்லி ஜனங்களை ஏமாற்றி வந்தார்கள். இவர்கள் நோட்டுகளை இருநோட்டுகளாகச் செய்யக்கூடிய மருந்துகளை ஜாடிகளில் வைத்துக்கொண்டு இந்த மருந்தை நோட்டில் தடவி இரண்டு கண்ணாடிகளுக்கு மத்தியில் வைத்து இரண்டு நோட்டாக எடுப்பது போல பாவனைசெய்கிற வழக்கம். உண்மையில் இவர்கள் வசம் சில நோட்டுகளிருக்கின்றன. ஒருவன் 10-ரூபாய் நோட்டைக்கொடுத்து இரண்டு பத்துரூபாய் நோட்டாய்ச் செய்துகொடுக்கும்படியாகச் சொன்னால், இவர்கள் இந்த கண்ணாடிகளுக்கு மத்தியில் வைப்பது போல பாவனைசெய்து தங்களிடமிருக்கும் ஒரு நோட்டைச் சேர்த்து இரண்டு நோட்டாய்க் கொடுத்து நம்பிக்கை உண்டுபண்ணி பிறகு நோட்டுக்கொடுத்தவன் ஆசைப்பட்டு ரூ. 100-உள்ள நோட்டைக்கொடுத்து இரண்டு நூறுரூபாய் நோட்டுகள் கேட்கும்போது நோட்டை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டிவிடுவார்கள். இப்படி அநேக ஜனங்கள் லாகூரில் ஏமாந்துபோயினார்கள். போலீசாருக்கு இச்சமாசாரம் எட்டி லாகூர் போலீஸ் சூப்பிரண்டு மிஸ்டர் பிலிட்ஸ் இவர்கள் மேலே கூறினவாறு நோட்டு செய்துகொடுப்பதாய் ஏமாற்றிக்கொண்டிருக்கும்போது அரஸ்ட் செய்திருக்கிறார்.

இருமல் தும்மல் மாஜிஸ்டிரேட்.

பம்பாய் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் ஆஸ்டன் கோர்ட்டில் யாரேனும் தும்மினாலும் சரி, இருமினாலும் சரி அவர்களுக்கு ஆபத்து வந்துவிடும். அவர், கோர்ட்டு நடத்திக்கொண்டிருக்கும்போது தும்மினவர்கள்பேரில் குற்றம் சாட்டி அவர்களை விசாரணைசெய்து தண்டிக்கும்படியாக இரண்டாவது பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டினிடம் அனுப்பினார். அவர் அவர்களை எச்சரிக்கைசெய்து விட்டுவிட்டார். நிகழ்மீ 9வ மிஸ்டர் ஆஸ்டன் ஒரு கைதியை விசாரணைசெய்து கொண்டிருக்கும்போது அவன் இருமினான். உடனே மாஜிஸ்டிரேட் அவன்பேரில் கோர்ட்டார் கோர்ட்டு நடத்திக்கொண்டிருக்கும்போது வேணுமென்று இடைஞ்சல் விளைவித்த குற்றம் சாட்டி ரூ. 2. அபராதம் விதித்தார். அவனை மறுபடியும் விசாரணை செய்துவந்த போது மறுபடியும் இருமினான். மாஜிஸ்டிரேட் மூன்று ரூபாய் அபராதம் விதித்தார். தனக்குக் காசநோய் உண்டென்றும், தனக்கு அபராதம் கட்ட சக்தியில்லை என்றும் அவன் சொன்னதை ஏற்றுக்கொள்ளாமல் இருமுறை விதித்த அபராதத் தொகை ரூ. 5-க்கு அவனுக்குச் சொந்தமான சொத்தின்பேரில் ஜப்திவாரண்டு பிறப்பித்திருக்கிறார். இம்மாதிரி மாஜிஸ்டிரேட்டுகளால் கக்ஷிக்காரர்களுக்குச் சரியான நியாயம் கிடைக்குமென்று நாமெடுத்துச்சொல்லவா வேண்டும்?

ஒரு பெரிய தீவட்டிக்கொள்ளை.

நிகழ்மீ 8வ காலை சுமார் 1-மணிக்கு ஔரங்கபாட் கன்டோன்மெண்டு பஜாரில் 73-ம் நெ. கர்னாட்டிக் இன்பண்டிரி பட்டாளத்தைச்சேர்ந்த ஒரு ஜமேதார் வீட்டில் 6-திருடர்கள் புகுந்தார்கள். ஜமேதார் அவர்களில் ஒருவனைப் பிடித்துக்கொண்டபோது மற்றவர்கள் 1500 ரூபா பொறுமான துணிமணி நகை முதலியவைகளையும் ரொக்கம் ரூ. 250 யும் களவாடிக் கொண்டுபோய்விட்டார்கள். ரோந்து வந்துகொண்டிருந்த போலீசார் சுபேதாரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். சுபேதாருக்குப் பலமான காயம்பட்டபோதிலும் ஆஸ்பத்திரியில் சௌக்கியமடைந்து வருகின்றார். திருடர்கள் தேகத்தில் கரி தடவிக்கொண்டு வந்தபடியால் அடையாளம் கண்டுபிடித்துச் சொல்ல முடியவில்லை என்று சுபேதார் சொல்லுகிறார்.

மதுரை.

அடிஷனல் செஷன் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் வுட் செஷன் கேஸ்களை மட்டிலும் விசாரணை செய்துவிட்டு, கேஸ்களில்லாத சமயத்தில் சும்மாவிருக்கிறதாகத் தெரிகிறது. ஜில்லா ஜட்ஜியாகவிருக்கும் மிஸ்டர் பின்னி எவ்வளவு சுறுசுறுப்பாய் கேசுகளைப் பைசல்செய்தபோதிலும் ஜில்லாக்கோர்ட்டில் நிலுவை வியாஜ்ஜியங்களிருந்துகொண்டேயிருக்கின்றன. கவர்ன்மெண்டார் அடிஷனல் செஷன் ஜட்ஜிக்கு ஜில்லா ஜட்ஜி அதிகாரம் கொடுத்து செஷன் விசாரணை காலம்போக பாக்கியுள்ள காலத்தில் நிலுவை வியாஜ்ஜியங்களை விசாரணை செய்யும்படி உத்திரவு செய்வார்களேயானால் மதுரை ஜில்லாக்கோர்ட்டு கக்ஷிக்காரர்களுக்கு நன்மையாகவிருக்கும்.

மிஸ்டர் கோபிநாத டாக்கர் கேஸ்.

இரண்டு ரவைக்கடுக்கன்கள், ரவை அட்டிகை ஆகிய இந்த நகைகள் சம்பந்தமாக சென்னப்பட்டணம் நகை வியாபாரியாகிய மிஸ்டர் கோபிநாத டாக்கர் நம்பிக்கைமோசம் செய்ததாக கல்கத்தாவிலிருக்கும் காளிச்சரன் சேட் கல்கத்தா பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றம் சாட்ட கோர்ட்டார் இந்தக் கேசை வெகுநாளாய் விசாரணைசெய்து மிஸ்டர் கோபிநாத டாக்கரை விடுதலைசெய்துவிட்டார். பாரிஸ்டர் மிஸ்டர்நார்ட்டன் மிஸ்டர்டாக்கர் தரப்பில் பேசினார்.

கவர்ன்மெண்டாரும் அச்சாபீசும்.

பங்காளத்தில் பிரசுரமாய் வரும் "யுகாந்தா" என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பேரில் ராஜதுரோக குற்றம் ஸ்தாபனை செய்யப்பட்டு கல்கத்தா பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் 5 வருஷ கடுங்காவல் தண்டனைவிதித்திருக்கிறார்கள். போலீசார் இத்துடன் திருப்தி கீரமடையாமல் இந்தப் பத்திரிகை பதிப்பிக்கப்படும் அச்சாபீசாகிய "சால்டானு" அச்சுயந்திரசாலையையும் ஜப்திசெய்து கவர்ன்மெண்டு சொத்துக்களுடன் சேர்த்துவிடவேண்டுமென்று பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டிற்கு மனு செய்துகொள்ள அவரும் அப்படியே உத்திரவுசெய்து விட்டார். அச்சாபீசுக்குச் சொந்தக்காரர்கல்கத்தாஹைகோர்ட்டிற்கு அப்பீல்செய்துகொள்ள ஜஸ்டிஸ் மிஸ்டர் மிட்டரும்," ஜஸ்டிஸ் மிஸ்டர் பிளட்சரும் ராஜதுரோக குற்றத்தில் ராஜதுரோகமான வாக்கியங்களை எழுதின நபர் ஜவாப்தாரியே ஒழிய அச்சாபீஸ் ஜவாப்புதாரியாகப்படாதென்றும், போலீசார் கிரிமினல் புரோசீஜர் கோடில் எந்தப்பிரிவை ஆதாரமாகக்கொண்டு அச்சாபீசையும் ஜப்தி செய்து கவர்ன்மெண்டு சொத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மனுசெய்தார்களோ, அந்தப்பிரிவாகிய கி. பு. கோ. 517-வது பிரிவு சந்தேகமறத் தெளிவாயில்லை என்றும் ரிமார்க்கு செய்து பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டார் உத்திரவை ரத்து செய்திருக்கிறார்கள்.

பாஷாணமிட்டுக் கொலைசெய்த கேஸ்.

கிருஷ்ணாஜில்லா தென்னலையில் ஒரு முகம்மதியனுக்கு ஒரு சொந்த பெண்சாதியும் ஒரு வைப்பாட்டியுமிருக்கிறார்கள். சொந்த பெண்சாதிக்கு நான்கு குழந்தைகளுமிருக்கிறார்கள். சென்ற வாரத்தில் அடுத்தவீட்டுக்காரி சொந்தபெண்சாதியிடம் கொஞ்சம் அரிசி கொடுத்து சமயல்செய்து கொடுக்கும்படி சொன்னான். பெண்சாதி அப்படியே ஒப்புக்கொண்டு அரிசியை உலையிற் போட்டுவிட்டு 15 நிமிஷம் வெளியே சென்றிருந்து திரும்பிவந்து சாதத்தை வடித்துத் தன்னுடைய பிள்ளைகளிருவருக்கும் போட்டனள். இரு குழந்தைகளும் அச் சாப்பாட்டைச் சாப்பிட்ட சிறிது நாழிகைக்கெல்லாம் வாந்தியெடுத்துக்கொண்டு உபத்திரவப்பட இந்த சமாசாரம் கிராம முனிசீப்பிற்கு எட்டி அவர்வந்து குழந்தைகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி சாப்பாட்டுப்பானையை எடுத்துப் போலீசாரிடம் ஒப்புவித்திருக்கிறார். இரண்டு குழந்தைகளும் ஆஸ்பத்திரியில் இறந்து போய்விட்டார்கள். போலீசார் சமுசயத்தின்பேரில் இருவர்களைக் கைதி செய்திருக்கிறார்கள்.

ஞாபகச்சின்னம்.

சென்னபட்டணம் சீனியர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் W. E. கிளார்க்கு அவர்கள் இன்னும் சிறிதுநாட்களுக்குள் பென்ஷன் பெற்றுக்கொள்ளப் போகிறபடியால் அவர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாகவிருந்து கோர்ட்டு நடத்திவந்த முறையை நன்குமதித்து மிஸ்டர் E. B. பவல், மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட், ஹானரபில் மிஸ்டர் C. சங்கரநாயர், சர் என்றிகிங் மிஸ்டர் சிவக்கியானமுதலியார் மிஸ்டர் சல்லா குருசாமிசெட்டி முதலிய லாயர்கள் ஒரு மீட்டிங்கு கூடி மிஸ்டர் கிளார்க்கு மாதிரியாக ஒரு உருவப்படம் தயாரித்து எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் வைத்து அவருக்கு மரியாதை காண்பிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

பண்டிட் பிஷாம்பர்நாத்.

அலகபாத்தில் பிரசித்திபெற்ற அட்வொகேட்டாகவிருந்த பண்டிட் பிஷாம்பர்நாத் அவர்கள் நிகழ் ஆகஸ்ட்மீ 9வ இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகியிருக்கின்றனர். இவர்தம்முடைய லாயர்தொழில் பொலிவுபெற்று விளங்கிவந்ததுமன்றி இந்தியா தேசத்தின் நன்மைக்காக உழைத்துவந்தனர். பழுத்த தேசாபிமானி, காங்கிரசின் நண்பர்! சகல ஜனங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சிறந்த ஜனத்தலைவர். முன் ஒருசமயம் வைசிராய் சட்டசபையின் அங்கத்தினராகவுமிருந்திருக்கின்றனர். இவருடைய பிரேதத்தின்பேரில் அவருடைய ஆங்கிலேய நேயர்கள்கூட மரியாதைகாண்பித்து புஷ்பம் வைத்தார்கள். இவருடைய மரணத்தால் நம்முடைய இந்தியமாதாவிற்கு உண்டாயிருக்கும் நஷ்டம் ஈடுபடுத்தக்கூடிய நஷ்டமாக எண்ணப்படவில்லை.

சூதாட்டம்.

திருவிழாகாலங்களில் ஷாப்புக்காரர்கள் தங்களுடைய ஷாப்புகளில் கம்பிகள்நட்டு ஒவ்வொருகம்பியின் அடியிலும் பணமாவது அல்லது சாமான்களாயினும் வைத்து அந்த சாமான்களை விரும்புகிறவர்கள் கையில் வளையம்கொடுத்து போடச்செய்து அவர்கள் போடும் வளையம் கம்பியில் மாட்டிக்கொண்டால் அந்த சாமானை வளையம்போட்ட பேர்வழிக்குக் கொடுத்துவிடுவதை நம் நேயர்கள் சகஜமாய் பார்த்திருக்கக்கூடும். ரெங்கூனில் இம்மாதிரி ஷாப்புவைத்த ஒருவன் பேரில் சூதாட்டக் குற்றம்சாட்ட அடிஷனல் மாஜிஸ்டிரேட் வளையம்மாட்டுவது மனுஷனுடைய சாமர்த்தியத்தைச் சேர்ந்ததென்றும், ஒருவன் அப்பியாசப்படுத்தியிருந்தால் அது அவனுக்கு சாத்தியப்பட்டதாகவே யிருக்குமென்றும்ஆகையால் அதில் சூதொன்றும் கிடையாதென்றும் சொல்லி கேசைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள்.

ராமநாதபுரம் வியாஜ்ஜியம்.

இந்தக் கேஸ் மதுரை ஜில்லாக் கோர்ட்டாரால் அடுத்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்படும். இதில் இருதரப்பிலும் வக்காலத்து பெற்றிருக்கும் சென்னப்பட்டணம் லாயர்கள் விசாகப்பட்டணத்தில் நடக்கும் ஒரு பெரிய வியாஜ்ஜியத்தில் வக்காலத்து வாங்கியிருப்பதால் அந்த வியாஜ்ஜியத்தைப் போய் நடத்தும்படியாக அவர்களுக்கு அவகாசம் கொடுக்கும்பொருட்டு ராமநாதபுர வியாஜ்ஜியம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

கலாசாலை.

தஞ்சாவூர் ஜில்லாவில் மன்னார்குடியிலிருக்கும் பின்லே கலாசாலையை விஸ்தரித்துக் கட்டும்படி கவர்ன்மெண்டார் ரூபாய் பதினாயிரம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட்டின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் கிரிமினல் கேஸ் மிகப் பெரிதானபடியால் இந்தக் கேசை விசாரிக்கப் பிரத்தியேகமாக ஒரு செஷன் கோர்ட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கோர்ட்டில் ஸெப்டம்பர் 26உ சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னால்ட் வொயிட் அவர்கள் செஷன் ஜட்ஜியாக வீற்றிருந்து சர் ஜியார்ஜ் அர்பத்நட் கேசை விசாரணைசெய்துவருவர். எப்போதும்போல ஆகஸ்ட்மீ'த்தில் நடக்கவேண்டிய மூன்றுவது கிரிமினல் செஷன் கோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் வீற்றிருந்து செஷனுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கும் இதர கேஸ்களை விசாரணை செய்வார். இந்தக் கோர்ட்டில் ஸெப்டம்பர் 19உ விசாரணை ஆரம்பமாகும்.

ஸ்டீமர் சேதம்.

இங்கிலாண்டிலிருந்து காராச்சி துறைமுகத்திற்கு வந்து கொண்டிருந்த ரேயின்பால்ஸ் என்கிற ஒரு ஸ்டீமர் ஏடன் துறைமுகத்திற்கும் மஸ்கட் துறைமுகத்திற்கும் மத்தியில் ஒரு பாறையில் மோதி உடைந்துபோய் சமுத்திரத்தில் முழுகிவிட்டது. ஸ்டீமரிலிருந்த சிப்பந்திகள் மட்டிலும் இரண்டு படகுகளில் ஏறிக்கொண்டுவந்துவிட்டார்கள். அதிலும், ஒரு படகுதான் ஏடன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. மற்ற விபரங்கள் இன்னும் தெரியவில்லை.

சென்னப்பட்டணம் அயிஸ் பாக்ட்டரி.

மிஸ்டர் அங்கர், மிஸ்டர் P. V. சுப்பிரமணிய பிள்ளை ஆகிய இருவர்களும் உடன்படிக்கைக்கு மீறி நடந்ததால் தமக்கு நஷ்டம் நேரிட்டிருப்பதாக ரூ. 13 ஆயிரத்திற்கு கோவிந்தசாமி நாயக்கர் வியாஜ்ஜியம்கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியத்தை ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் விசாரணைசெய்து தள்ளுபடிசெய்து வாதி பிரதிவாதிகளிடம் கட்டியிருந்த டிபாசிட் பணத்தை வாப்பீஸ் கொடுத்துவிடும்படியாக பிரதிவாதிகள்பேரில் வாதிக்கு டிக்கிரிகொடுத்திருக்கிறார்.

சீப்கோர்ட்.

ரெங்கூன் சீப்கோர்ட்டில் பைசலாகாத நிலுவை வியாஜ்ஜியங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகப்பட்டுவருகின்றபடியால் சீப்கோர்ட் பிரதம ஜட்ஜியாகிய சர் சார்லஸ்பாக்ஸ் (Sir Charles Fox) தம்முடைய சீப்கோர்ட்டிற்கு இன்னொரு ஜட்ஜி நியமிக்கப்படவேண்டுமென்று லோக்கல் கவர்ன்மெண்டார் மூலியமாய் இந்திய கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கிறார்.

புதுக்கோட்டை.

சீப்க்கோர்ட்டு சீப்ஜட்ஜி மிஸ்டர் I. சாமிநாத அய்யர் அவர்கள் தேக அசௌக்கியத்தால் 5—மாத ரஜா எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அவருக்குப் பதிலாக ராஜா அவர்கள் ஜட்ஜி மிஸ்டர் C. ராஜகோபால பிள்ளை அவர்களைப் பதில் ஜட்ஜியாக நியமித்திருக்கிறார்கள்.

கல்லரணைக் கலகக்கேஸ்.

கல்லரணைக் கலகக்கேசை ராமநாதபுரம் எட் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் நாராயண அய்யர் I. C. S. அவர்கள் விசாரணை செய்து வருகின்றார். இந்தக்கேசில் அனேக சாணார்கள் சட்ட விரோதமான கூட்டம் கூடி கலகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இது முக்கியமான கேஸ். இதர ஜாதியர் ஜலம் எடுத்துக்கொண்டிருந்த ஒரு கிணற்றில் நாடார்களும் ஜலம் எடுக்கவேண்டுமென்று பிடிவாதம் செய்ய இருகக்ஷியாருக்கும் கலகம் சம்பவிக்க, அருப்புக் கோட்டை இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் ரிப்போர்ட் அனுப்பினார். அனுப்பவே எட் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் கி. பி. கோ. 145—வது பிரிவின்படி கேசை பயிலில் வைத்துக்கொண்டு விசாரணை செய்து வருகின்றார்.

வந்தேமாதரம்.

பங்காளத்தில் வந்தேமாதரம் என்று ஒரு சுதேச பத்திரிகை ஆங்கில பாஷையில் பிரசுரஞ் செய்யப்பட்டு வந்தது. இந்தப்பத்திரிகை இந்தியாவில் சுய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்கிற கக்ஷியைச் சேர்ந்த பத்திரிகை. போலிசார் இதன்பேரில் செஷன் வாரண்டு பெற்று இதன் ஆபீசைச் சோதனை செய்து சில கடிதாசிகளை அள்ளிக்கொண்டு போயிருக்கிறார்கள். பத்திராதிபர்கள்பேரில் வாரண்டு பிறப்பது தண்ணீர்பட்ட பாடாயிருக்கின்றது!

சர்க்குலர்.

சென்னப்பட்டணத்திலிருக்கும் மிருகவுதை நிவாரண சங்கத்திற்கு (Society for the Prevention of Cruelty to Animals) ஒரு கிளைச்சபையை திருச்சினாப்பள்ளியில் ஏற்படுத்தினால் நலமாயிருக்கலாமென்று திருச்சினாப்பள்ளி கலெக்டர் ஒரு சர்க்குலர் அனுப்பினார். திருச்சினாப்பள்ளியில் அநேக ஜட்கா வண்டிகளிருக்கின்றன. ஆகையால் ஒரு கிளை சங்கம் திருச்சினாப்பள்ளியில் ஏற்படுவது பெரும்பாலும் குதிரைகளுக்கு நன்மையாகவே யிருக்குமென்று எண்ணுகின்றோம்.

ஒரு அசம்பாவம்.

தென்கன்னடத்தில் போர்ட்ஸ்கூல் உபாத்தியாயர் தம்முடைய சிநேகர்களில் மூன்றுபேர்களை அழைத்துக்கொண்டு பக்ஷிகளை வேட்டையாடப்போய் தற்செயலாய் அச்சிநேகர்களில் ஒருவரைக் கொன்றுவிட்டார். கேஸ் போலீசார் விசாரணையிலிருக்கின்றது.

பம்பாய் கவர்னர்.

சென்றமீ'-ம் பம்பாய் கவர்னர் உத்தியோகத்தை ராஜிநாமாகொடுத்துவிட்டு இங்கிலாண்டிற்குச் சென்ற லார்ட் லமிடனுக்குப் பதிலாக சர்ஜியார்ஜ் கிளார்க்கு பம்பாய் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருமங்கலம்.

மிஸ்டர் N. A. சீனிவாசாசர்ரியார் அவர்கள் மதுரை ஜில்லா திருமங்கலம் டி. மு. வாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

காலஞ்சென்ற மிஸ்டர் மாக்படேயின் எஸ்டேட்.

தீபாவளி எடுத்த அர்பத்நட் பாங்கியில் மிஸ்டர் மாக்படேயினும் ஒரு பாகஸ்த ரென்றும் நம்முடைய சட்ட கெஜெட்டை வாசித்து வருபவர்கள் அறியாதிரார். அர்பத்நட் பாங்கி முழுகிப்போனதே அவருடைய நிச்சயமற்ற வியாபார முயற்சியாலே என்று அபிஷியல் அசயினி சொல்லியிருக்கிறார். கடையிசில் சர் ஜியார்ஜ் அர்பத்நட் பாங்கியை மூடப்போகிறதாக தந்தி அடிக்கவே இவர் அந்தத் தந்தியைப்பார்த்தவுடன் இருப்புப்பாதையின் குறுக்கே படுத்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டு இறந்துபோய்விட்டார். அர்பத்நட் பாங்கிக்கு இந்தியாவிலிருக்கும் சொத்துக்களில் இவருக்குப் பங்குயிருக்கிறதென்றும் அந்த பங்கு அவருக்குக்கிடைக்க வேண்டுமென்றும் அட்மினிஸ்டேட்டர் ஜெனரல் அவர்தரப்பில் அபிஷியல் அசயினியின்பேரில் ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். இந்த வியாஜ்ஜியத்தில் இஷ்யூக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது குதிரை தள்ளினதுமன்றி குழிதோண்ட எத்தனித்தகதையாயிருக்கின்றது!

ஜயினமடபண்டார சந்நதி.

திண்டிவனம் தாலூகா சித்த மூரில் ஒரு ஜேயின மடமிருக்கிறது. இதன் பண்டார சந்நதி. ஷை மடத்தின் சிக்ஷியன்பேரில் திண்டிவனம் முனிசிப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். பிரதிவாதி பண்டார சந்நதியை கோர்ட்டிற்கு தருவித்து சில கேள்விகேட்க வேண்டுமென்றும் அவருக்கு சாக்ஷி சம்மன் அனுப்பும்படியும் மனுசெய்து கொள்ள கோர்ட்டார் பண்டார சந்நதிக்கு சம்மன் அனுப்பினார்கள். பண்டார சந்நதிக்காக வக்கீல் மிஸ்டர் L.A. கோவிந்த ராகவய்யர் ஆஜராகி பண்டார சந்நதி மடத்தின் பெரிய குரு என்றும் அவரைக் கோர்ட்டிற்கு இழுப்பது அவருடைய அந்தஸ்தை ஊனப்படுத்துமென்றும் ஆகையால் அவருக்கு கமிஷன் அனுப்பி வாக்குமூலத்தைப் பெறும்படி உத்திரவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சோரூர் ரெயில்வே சேதக் கேஸ்.

இந்தக் கேசை கடப்பை ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டார் விசாரணை செய்து கோரூர் ரெயில்வே அசிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்ட்டருக்கு 20 வாரம் கடுங்காவல் தண்டனை விதித்தார். இவர் அப்பீல் செய்து கொள்ள கடப்பை செஷன் கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டார் கொடுத்த காவல் தண்டனையை மாற்றி ரூ. 50 அபராததண்டனை விதித்தார். கவர்ன்மெண்டார் இந்த தண்டனை மிகுந்த கேவலமாக யிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள். இந்தக்கேசின் கட்டுகளை ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சனும் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிசும் பார்வையிட்டு கீழ்க்கோர்ட்டு தீர்மானத்தில் பிரவேசிக்க மாட்டோமென்று சொல்லி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

கிரிமினல் சேஷன்ஸ்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு மூன்றுவது கிரிமினல் செஷன்ஸ் விசாரணை ஸெப்டம்பர் 19உ முதல் ஆரம்பமாகி நடந்துகொண்டு வருகிறது. ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் செஷன் ஜட்ஜியாக வீற்றிருந்து கோர்ட் நடத்திவருகின்றார். இந்த செஷனுக்கு 20 கேஸ்கள் கமிட் செய்யப்பட்டிருக்கின்றன.

மரணம்.

நாகப்பட்டணம் வக்கீல் மிஸ்டர் K. A. மரிய சூசேப்பிள்ளை அவர்கள் கடந்த ஜூலைமீ' 2உ சப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியத்தில் ஆட்டிரஸ் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று மயக்கம் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார். உடனே அவரை நாற்காலியில் வைத்து அவருடைய ஜாகைக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். அடுத்தநாள் இறந்துபோய்விட்டார். இவர் நாகப்பட்டணத்தில் ஒரு பிரசித்தமான லாயர். இவருடைய மாப்பிளை பிரான்சில் பட்டாளத்தில் சர்ஜனா யிருக்கின்றார்.

திருவநந்தபுரம் திவான் உத்தியோகம்.

திருவாங்கூர் திவானாகவிருக்கும் மிஸ்டர் கோபாலாச்சாரியார் அவர்களை கவர்ன்மெண்டார் பெர்ஹாம்பூர்ஜில்லா ஜட்ஜியாக நியமிக்கப்போகிறார்கள் என்றும், கோவாப்பரேட்டிவ் கிரடிட் சொசயிட்டியின் ரிஜிஸ்டிராகிய மிஸ்டர் ஜே. கோபாலாச்சாரியாரை திருவாங்கூர் திவானாக நியமிக்கப் போகிறார்கள் என்றும் மெயில்பத்திரிகை கூறுகின்றது. கோர்ட்டு விஷயங்களில் மட்டிலும் அனுபோகமுடைய மிஸ்டர் கோபாலாச்சாரியர் திவான் உத்தியோகத்திற்கு பொருந்தாமலிருத்தலை கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டு இம்மாதிரி ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று நம்புகின்றோம்.

சப்கோர்ட்.

தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு புதிய சப் கோர்ட்டு ஸ்தாபிக்கும் பொருட்டு ஹைகோர்ட்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இந்தக் கோர்ட்டு மாயவரத்தில் ஸ்தாபிக்கப்படுமென்று பிரஸ்தாபமாயிருந்தது. ஆனால் இதை கும்பகோணத்தில் ஸ்தாபிக்கப்போகிறதாக வதந்தி உலாவுகின்றது.

சேஷன் கோர்ட்டார் உத்திரவு.

ஜாமீன்பேரில் விடும்படி செய்து கொள்ளப்படும் மனுக்களையும் இன்னும் இதரமான மனுக்களும் தம்மிடம் நேரே கொடுக்கப்படவேண்டுமென்று மதுரை அடிஷனல் செஷன் கோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் வுட் உத்திரவு செய்திருக்கிறார்.

தண்டனைப்போலிஸ்.

காக்கிநாடாவில் கவர்ன்மெண்டார் நியமித்திருக்கும் தண்டனை போலிசை எடுத்துப் போகும்படி காக்கிநாடாவிலுள்ள ஜனங்கள் கூடி கவர்ன்மெண்டாருக்கு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

பஞ்சாலை.

கோவில்பட்டியிலிருக்கும் பஞ்சாலையை சாத்தூர் டி. மு. கோர்ட்டார் டிக்கிரி ஹல்டர் தரப்பில் ஏலம் போடப்போகிறார்கள்.

ஒரு மகஜர்.

திருநெல்வேலிஜில்லா ஸ்ரீவல்லிப்புத்தூர் தாலூகாவைச்சேர்ந்த வாட்ரூப் பிர்க்காவை கவர்ன்மெண்டார் புதிதாய் உண்டாகப்போகிற ருமநாதபுரம் ஜில்லாவுடன் சேர்க்க உத்தேசித்திருக்கிறார்கள். ஷை வாட்ராப்பிர்காவிலில் வசித்துவரும் ஜனங்கள் ஒன்று கூடி தங்களுடை பிர்க்கா எப்போதும் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்திருக்கவேண்டுமென்றும் ருமநாதபுரத்திற்கும் தங்களுடைய ஊருக்கும் 100 மைலுக்கு அதிகமாயிருப்பதால் ஜில்லாக்கோர்ட்டு முதலிய கச்சேரிகளில் விவகார நடவடிக்கைகள் முதலியவைகளை நடத்தப்போகும் கட்சிக்காரர்களுக்கு மிகுந்த கஷ்டமாகயிருக்குமென்றும், அப்படி தங்களுடைய பிரக்காவை திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து பிரித்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்துவிட்டால் ருமநாதபுரத்தை ஜில்லா நகராகச்செய்வதைப் பார்க்கிலும் நாளுக்கு நாள் ஓங்கிப்பிரகாசித்துவரும் விருதுப்பட்டியை புதிய ஜில்லாவாகச்செய்து அதனுடன் தங்களுடைய பிர்க்காவைச் சேர்க்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு மகஜர்செய்துகொண்டிருக்கிறார்கள்.

மிஸ்டர் கணபதி அய்யர் கேஸ்.

கோயம்புத்தூர் டிப்டி மாஜிஸ்டிரேட்டாரால் விசாரணைசெய்யப்பட்டு தண்டனை அடைந்திருக்கும் கோயம்புத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் செஷன் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொண்டிருக்கிறார். இவரை ஜாமீன்பேரில் விடும்படி வக்கீல் மிஸ்டர் பத்மநாபாசாரியார் மனுசெய்து ஆஜராகிக்கேட்டதற்கு, டிப்டி மாஜிஸ்டிரேட் எழுதியிருக்கும் தீர்ப்பு 80 பக்கங்களிருப்பதாலும் அவைகளை வாசிக்கவேண்டியதிருப்பதாலும் ஒருவாரம் சென்றுதான் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்படுமென்று செஷன் கோர்ட்டார் சொல்லிவிட்டார்கள்.

அசிஸ்டேண்ட் செஷன் கோர்ட்.

கோயம்புத்தூர் ஜில்லா அசிஸ்டெண்ட் செஷன் கோர்ட்டிற்கு ஜில்லா மாஜிஸ்டிரேட் மாதம் மாதம் ஒரு பப்ளிக் பிராசிக்கியூட்டரை நியமித்துவருகின்றார். சென்ற மாதம் மிஸ்டர் கிருஷ்ணய்யர் அவர்களை நியமித்தார். நிகழ் ஆகஸ்ட்டுமீ த்திற்காக மிஸ்டர் ராமசாமி அய்யர் அவர்களை நியமித்திருக்கிறார்.

போலிஸ் இன்ஸ்பெக்டர்.

மதுரை டௌன் போலிஸ் இன்ஸ்பெக்ட்டர் மிஸ்டர் ஈல்ஸ் நெல்லூருக்கும், கூடலூர் போலிஸ் இன்ஸ்பெக்ட்டர் மிஸ்டர் லூயிஸ் மதுரை டௌனுக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

தற்கொலை.

சென்ற ஜூலைமீ 23உ பித்தாபுரத்தில் கப்பு ஜாதியைச்சேர்ந்த சுமார் 15 வயதுடைய ஒரு பெண் இரவு 10-மணிக்குக் கிணற்றில்விழுந்து தற்கொலை செய்துக்கொண்டனள். கேஸ் போலீசார் விசாரணையி லிருக்கிறது.

காளாஸ்திரி ஜமீன்.

காளாஸ்திரி ஜமீனுக்குக்கடன் கொடுத்திருந்தவர்கள் தாங்கள் பெற்றிருந்த டிக்கிரியை நிறைவேற்றி ஜமீன்பேரில் தொடர்ந்திருக்கிறார்கள்.

தாசிகள்மீது தொழில்வரி.

டில்லி முனிசிபாலிட்டியார், நாட்டியமாடும் தாசிகள்மீது தொழில்வரிபோட தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்.

திவான்பகதூர் மிஸ்டர் P. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் கிரேட்ஜில்லா மாஜிஸ்டிரேட்டாக நியமனமடைந்திருக்கின்றனர்.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

நம்பிக்கை மோசக்கேஸ்.

குற்றவாளி:—ருமநாத டாக்கர்.

(15-8-07).

கேசின்விவரம்:—குற்றவாளி சென்னப்பட்டணம் தனவந்தராகிய மிஸ்டர் லாட் கோவிந்ததாசின் ஏஜெண்டு. இந்த தனவந்தருக்கு ஆல்பியன் அச்சுக்கூட புரோப்பிரைட்டராகிய சௌரியப்பா என்பவர் வாடகைவகையில் ரூ. 640 கொடுக்கவேண்டியதாக விருந்தது. ஏஜண்டு இந்தத்தொகையை வசூல்செய்து சொந்த உபயோகப்படுத்தினதில் நம்பிக்கை மோசக் குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கூம்ஸ் இந்தக்கேசை விசாரணை செய்து குற்றவாளிக்கு 9 மாத கடினகாவல் தண்டனை விதித்தார்.

கைதி பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன் மூலமாக அப்பீல் தாக்கல்செய்து ஜாமீன்பேரில் விடும்படி மனு செய்துக்கொண்டார்.

உத்தரவு:—அப்பீல் தாக்கல்செய்துகொள்ளப்பட்டது. ரூ. 250-க்கு தனி தனி இரண்டு ஜாமீன்களும், சொந்த ஜாமீன் ரூ. 500-க்கு பெற்றுக்கொண்டு கைதியை விடும்படி உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

கவர்ன்மெண்டு அப்பீல்.

(15-8-07).

கேசின்விவரம்:—79-வது கர்னாட்டிக் இன்பன்ட்ரி பட்டாளத்தைச் சேர்ந்த ஒரு சிப்பாயும் பிரியாதியும் கடந்த ஏப்ரல்மீ 8உ கன்னனூரிலிருந்து கூனூருக்கு ஒரே கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்தார்கள். வழியில் ரயில் குவிலாண்டியில் நின்றவுடன் பிரியாதி தன்னுடைய மூட்டைகளைப்

பார்த்துக்கொள்ளும்படி கேட்க சிப்பாய் சம்மதிக்க, பிரியாதி கக்கூசுக்குப்போய் வந்தான். திரும்பி வரும்போது சிப்பாய் வண்டியின் கேட்டில் நின்றுகொண்டிருந்தான். பிரியாதி சமீபத்தில் வந்தவுடன் சிப்பாய் தான் ஜலம் குடிக்கப்போகிறதாகச்சொல்லி பிரியாதியையும் துணைக்குக்கூப்பிட்டான். கூப்பிடவே இருவரும்போய் திரும்பிவந்து வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டி கள்ளிக்கோட்டைக்கு வந்தவுடன் பிரியாதி தன்னுடைய மூட்டையைப்பார்க்க, மூட்டையைச்சுற்றிக்கட்டியிருக்கும் துணியில் முடிந்திருந்த ரூ. 5-5-1 யைக்காணோம். உடனே போலீசார் சிப்பாயைப்பிடித்து சோதனை செய்ததில் அதேமாதிரிப்பணம் அவனிடமிருந்தது. ஆகவே சிப்பாய் கள்ளிக்கோட்டை சப் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் திருடின குற்றம் சாட்டப்பட கோர்ட்டார் விசாரணை செய்து, குற்றவாளி திருடினதை பிரியாதி கண்ணாரப் பார்க்கவில்லை, என்றும் இந்தக்கம்பார்ட்மெண்டிலிருந்த இதரபிரயாணிகளில் யாரேனும் திருடியிருந்தாலுமிருக்கக்கூடுமென்று சொல்லி குற்றவாளியை விடுவித்துவிட்டார்கள்.

இந்த ரிக்கார்டுகளைப் பார்வையிட்ட பப்ளிக் பிராசிக்கியூட்டர் சிப்பாயை தண்டிக்கப் போதுமான சாட்சிய மிருக்கின்றதென்றும் சப் மாஜிஸ்டிரேட் விட்டுவிட்டது நியாய விரோதமென்றும் சொல்லி ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்தார்.

உத்தரவு:—அப்பீல் தாக்கல்செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

அந்நியாயமாய் ஜெயிலில் அடைத்துவைத்த கேஸ்.

குற்றவாளி:—பெருமாள் நாயுடு.

கேசின்விவரம் :— கடப்பை ஜில்லாவிலிருக்கும் வானிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒட்டசுப்பன் என்று ஒரு K. D. அதாவது பழைய குற்றவாளி யிருந்தான். இவன் வேறொரு கிராமத்திற்குப்போக வேண்டுமென்று போலீஸ் ஸ்டேஷனில் அறிவிக்க, போலீசார் நாரப்பா என்கிற போலீஸ் கான்ஸ்டேபிலை கூடப்போகும்படி உத்தரவுசெய்தார்கள்; வருகிற வழியில் ஒரு கிராமத்தில் இருவரும் சேர்ந்து ஒரு கோமுட்டிவீட்டில் கன்னம்வைக்க, கிராமத்தார் இருவர்களையும் இராமுழுதிலும் ஒரு சாவடியில் கட்டிவைத்து மறுநாள் காலையில் இந்தக்கேசின் குற்றவாளியாகிய ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் பெருமாள் நாயுடு விடம் ஒப்புவித்தார்கள். இவர் முகமது சாயப்பு என்கிற கானஸ்டேபிலிடம் இந்தக்குற்றவாளிகளை ஒப்புவித்து போலீஸ் ஸ்டேஷனுக்குக்கொண்டு போகும்படியாகச்சொன்னார். போகும்வழியில் பழைய குற்றவாளியாகிய ஒட்டசுப்பன் ஓடிப்போய்விட்டான் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் பக்கத்து கிராமத்திலிருந்த ஒரு K. D. யாகிய சாந்திவேடு என்பவனைத்தவருவித்து இவனை ஷை கன்னம்வைத்த கான்ஸ்டேபிலுடன் ஜெயிலில் அடைத்து இவன்தான் கோமுட்டிவீட்டில் கன்னம் வைத்து திருடியதாய் குற்றம் சாட்டினார். இருவரும் சப் ஜெயிலிலிருந்தபோது கான்ஸ்டேபில் ஓடிப்போய்விட்டான். இவன் மறுபடியும் பிடிப்பட்டு ஓடிப்போன குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டான். இவன்பேரிலிந்த கன்னக்களவு கேசில், இவன் பழைய குற்றவாளியுடன் படுத்துக்கொண்டிருந்ததாகவும், நடுஇரவில் எழுந்திருந்து பார்க்கும்போது பழைய குற்றவாளியைக்காணாததை முன்னிட்டு தேடிக்கொண்டு போனதாகவும் அப்போது கிராமத்தார் இவனையும் சேர்த்துப்பிடித்துக் கட்டிவிட்டதாகவும் சொல்ல கோர்ட்டார் விடுவித்துவிட்டார்கள். இதன்பிறகு ஓடிப்போன ஒட்ட சுப்பன் அகப்பட்டான். அவனை செஷன்கோர்ட்டார், கோமுட்டி வீட்டில் திருடின குற்றத்திற்காகவும் சர்க்கார் காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடின குற்றத்திற்காகவும் விசாரணைசெய்து 10-வருஷம் தண்டித்து ஜெயிலுக்கு அனுப்பினார்கள். இவனை ஜெயிலுக்குக் கொண்டுபோகும்போது இவன் மறுபடியும் ஓட எத்தனிக்க, போலீசார் இவனைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். இது இம்மட்டில் நிற்க, ஓடிப்போன ஒட்டசுப்பனுக்குப் பதிலாக வேறொரு கிராமத்திலிருந்த சாந்திவேடு என்கிற K. D. யை ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் பெருமாள்நாயுடு வரவழைத்து அவன் கோமுட்டி வீட்டில் திருடினதாக தப்பிதமான ரிஜிஸ்டர் தயார்செய்து அவனை சப்ஜெயிலில் அந்நியாயமாய் அடைத்துவைத்ததற்காக குற்றம் சாட்டப்பட செஷன் கோர்ட்டார் அவனுக்கு மூன்றுவருஷ கடின காவல்தண்டனை விதித்தார்கள். கைதி அப்பீல் செய்துகொண்டான்.

லாயர் :—மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யர்.

உத்திரவு :—அப்பீலை தாக்கல்செய்யும்படி உத்திரவு செய்யப்பட்டது. ஜாமீன்பேரில் விடவில்லை.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர்.

அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் ஏல விற்பனை.

அர்பத்நட் இன்டஸ்டிரியல் கம்பெனியைச்சேர்ந்த 100-க்கு 6 வட்டியுள்ள 4830 பிரிபரன்ஸ் ஷேர்களையும் 25 ஆயிரம் ஆர்டினரி ஷேர்களையும் அபிஷியல் அசயினியின்ஸ் தரப்பில் நிகழ்மீ 10உ முதல் ஏலம் போட்டதாகவும் முதலில் ஹாஜி இஸ்மேயல் சேட் ரூ. 75 ஆயிரத்திற்குக் கேட்டதாகவும், பிறகு பதினாயிரரூபாய் கணக்காய் உயர்த்தி கடைசியில் பம்பாய் கம்பெனியார் ரூ. 370000 க்குக் கேட்டதாகவும், பிறகு ஆயிரக் கணக்காய் உயர்த்திக் கேட்டதில் பம்பாய் கம்பெனியார் ரூ. 380000 க்கும் மிஸ்டர் ஹாஜி இஸ்மேயல் சேட் ரூ. 385000 க்குக் கேட்டதாகவும் ஆகவே மிஸ்டர் ஹாஜி இஸ்மேயல் சேட்டிற்கு ரூ. 385000 க்கு ஏலம் விடப்பட்டதென்றும் அபிஷியல் அசயினிக்காக ஏலம்போட்ட சொலிசிட்டர் கம்பெனியாராகிய மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன் கோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டார்கள். மிஸ்டர் இஸ்மேயல் சேட், (1) மிஸ்டர் ஹாஜி இஸ்மேயல்சேட், (2)மிஸ்டர் ராஜபக்கிர் முகமது சேட், (3) மிஸ்டர் தியாகராய

செட்டி ஆக மூன்றுபேர்களும் கூடிய சின்டிக்கேட்டாருக்காக ஏலம் எடுத்திருக்கிறார்.

கோர்ட்டார் உத்திரவு:—ஏல விற்பனையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கர்நூல் சோலைக்கேஸ்.

குற்றவாளிகள்:—உப்பார சின்னசாயப்பாவும் இன்னும் நால்வர்களும்.

கேசின் விபரம்:—குற்றவாளிகள் 5 பேர்களும் சேர்ந்து பட்டிக்கொண்டா முகமத்சாயப்பு என்பவனை வீட்டிலிருந்து இழுத்து, குற்றவாளிகளில் மூன்றுபேர்கள் அவனைப்பிடித்துக் கீழே தள்ளியதாகவும், 4-வது குற்றவாளிகள் காலைப் பிடித்துக்கொண்டதாகவும், 2-வது குற்றவாளி கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டதாகவும், 3-வது குற்றவாளி மற்றொருகைதியைப் பிடித்துக்கொண்டதாகவும், 1-வது குற்றவாளி ஈட்டியை எடுத்து முகமதுசாயப்பின் வயிற்றில் குத்தியதாகவும் இதனால் முகமத்சாயப் என்பவன் இறந்துபோய்விட்டான் என்பது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கக்ஷி. குற்றவாளிகள் கொலை செய்வதற்கு என்னகாரணமென்றால், கொலையுண்ட சாயப்பு முதல் குற்றவாளியின் வைப்பாட்டியை ரகசியமாக வைத்திருந்தான் என்று சொல்லப்படுகிறது.

சேஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—எல்லாக் குற்றவாளிகள்பேரிலும் கொலைக்குற்றம் ஸ்தாபித்து தூக்கு தண்டனையை உறுதிப்படுத்தும்பொருட்டு இந்தக் கேசை ஹைக்கோர்ட்டிற்கு ரிபர் செய்தார்கள். வாதிகள் ஐவரும் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—முதல் குற்றவாளிக்கு வக்கீல் மிஸ்டர் குப்புசாமி அய்யரும், மற்ற நான்கு குற்றவாளிகளுக்கும் பாரிஸ்டர் மிஸ்டர் கோவிந்தராஜுலு நாயுடும் பேசினார்கள்.

தீர்ப்பு:—முதல் குற்றவாளிக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்கு தண்டனையை உறுதிசெய்து மற்ற நான்கு குற்றவாளிகளை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்:— { ஜஸ்டிஸ் சர் ஆர்னால்ட் வொயிட்.
ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கவர்ன்மெண்டு அப்பீல்—வித்தன்காடு கொலைக் கேஸ்.

கேசின்விபரம்:—கோயம்புத்தூர் ஜில்லாவில் வித்தன்காடு என்கிற ஒரு வயலைக்குறித்து கொலையுண்ட ஸ்திரீக்கும் முதல் குற்றவாளிக்கும் சில சச்சரவுக்களிருந்தன. குற்றவாளிகள் இருவரும் ஆள் சேர்த்துக்கொண்டும் கலைப்பைகள் எடுத்துக்கொண்டும் உழப்போனதை கொலையுண்டவள் கேள்விப்பட்டு மகளுக்குச் சொல்லிவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டு வயலுக்குப் போய் மறித்தாள். மறிக்கவே குற்றவாளிகள் இருவரும் இவளை மார்ப்பிலும் வயற்றிலும் குத்திகீழே தள்ளிவிட்டார்கள். இப்படி குற்றவாளிகள் கொலை செய்ததை கொலையுண்டவளின் புத்திரன் பார்த்து ஓடிவந்தான். ஓடிவர குற்றவாளிகள் அவனையும் குத்துவதாகப் பயமுறுத்தினார்கள். இதன் பிறகு குற்றவாளிகள் பிரேதத்தை எடுத்து அடுத்த கொல்லையில் எறிந்து விட்டு வந்துவிட்டார்கள் என்பது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கக்ஷி.

கேசின் நடவடிக்கை:—கோயம்புத்தூர் செஷன் கோர்ட்டார் இந்தக்கேசை விசாரணைசெய்து பிராசிக்கியூஷன் தரப்பில் சாக்ஷியம் சொல்லியிருப்பவர்கள் இந்தக்கேசில் பற்றுடையவர்களென்றும், மேலும் அவர்கள் சொல்லியிருக்கும் சாக்ஷியம் ஒன்றுக்கொன்று முரணாகவிருக்கிறதென்றும் ஆகவே கைதிகளை தண்டிக்க போதுமான சாக்ஷியம் ஏற்படவில்லை என்று சொல்லிவிட்டு விட்டார்கள்.

செஷன் கோர்ட்டார் கைதிகளை விடுதலைசெய்தது நியாய விரோதமென்று பப்ளிக் பிராசிக்கியூட்டர் அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டில் கிரிமினல் அப்பீல் தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் விசாரணை ரிக்கார்ட்டுகளைப் பார்த்து பிராசிக்கியூஷன் தரப்பார் தக்களுடைய கேசை ருஜுப்படுத்தவில்லை என்று சொல்லி செஷன் கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள்.

ஜட்ஜிகள்:—ஆக்டிங் சீப் ஜஸ்டிஸ் சர் S. சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

வாதி:—புத்திரி.

பிரதிவாதி:—விதவைத்தாயார்.

கேசின்விபரம்.—வாதி காலஞ்சென்ற ஆதங்கி-வரதப்ப செட்டியின் குமாரத்தி; பிரதிவாதி ஷை யாரின் விதவை. செட்டியாருக்கு ஆண் சந்ததியில்லை. மாதம் ஒன்றுக்கு ரூ. 500 வருமான வரக்கூடிய எஸ்டேட் வைத்துவிட்டு இறந்துபோனார் வார்சுக்கிரமத்தில் இந்த எஸ்டேட் செட்டியாருடைய விதவையாகிய பிரதிவாதி மானேஜ்மெண்டிலிருக்கிறது. தாயார் இறந்துபோனபின்பு வாதி அந்த எஸ்டேட்டிற்கு வார்சாகவர பாத்தியமுடையவர், பிரதிவாதி வாதியைக் கெடுத்துவிடவேண்டுமென்று பல பராதீனங்கள் செய்து நாளதுவரையில் ரூ. 16 ஆயிரம் பொருமான சொத்துக்களை பராதீனம் செய்திருக்கிறபடியால் இந்தப்பராதீனங்கள் தம்மைக் கட்டுப்படுத்தமாட்டாதென்று கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்பொருட்டும் இந்த எஸ்டேட்டிற்கு ஒரு ரிசிவர் நியமிக்கும்படிக்கும் வாதி ஹைகோர்ட்டில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

இந்தக்கேசை சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஆர்னால் வொயிட் விசாரணைசெய்து பிரதிவாதி செய்திருக்கும் பராதீனங்கள் அவசியமான பராதீனங்கள் என்று சொல்லமுடியாதென்றும் பிரதிவாதி எஸ்டேட்டை பிசகாக மானேஜ்மெண்டு செய்து அழித்துவிடுவதாக வாதி ருஜுப்படுத்தவில்லை என்றும் பிரதிவாதி ஜீவ

திசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்க பாத்தியப்பட்டவள் என்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி அப்பீல்செய்துக் கொண்டார்.

லாயர்கள்:—வக்கீல்கள் மெசர்ஸ் P. R. சுந்திர அய்யரும் அனந்தகிருஷ்ண அய்யரும் வாதி தரப்பிற்கும் பாரிஸ்டர் மிஸ்டர் நேப்பியர் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—இந்த எஸ்டேட்டிலிருந்துவரும் ரூ. 500 யையும் பிரதிவாதி ஏகாங்கியாயிருந்துகொண்டு செலவுசெய்துவிட்டு மேற்கொண்டு செலவுகளுக்காக சொத்துக்களை பராதீனம்செய்வது சிறிதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியமல்ல. ஆகையால் பிரதிவாதி ஒன்று எஸ்டேட்டை ரிசிவரிடம் ஒப்புவித்துவிடவேண்டும் அல்லது எஸ்டேட் வருமானம் நகை முதலியவைகளுக்கும் வரவு செலவுகளுக்கும் அப்போதைப்போது கோர்ட்டில் கணக்கு தாக்கல் செய்யவேண்டுமென்று பிரதிவாதிக்கு உத்திரவுசெய்து வாதியின் வியாஜ்ஜியச்செலவை எஸ்டேட்டிலிருந்து கொடுக்கும்படி தீர்ப்புச் சொன்னார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

அர்பத்நட் இன்சால்வேன்சி.

மனுவின் விபரம்:—அபிஷியல் அசயினி மிஸ்டர் ஆர்ச்சுபால்ட்ரீட் இப்போதுநோயாகயிருக்கிறார். அவர் தரப்பில் சொலிசிட்டர் கம்பேனியாராகிய மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சன் ஆஜராகி அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனியை உடனே ஏலம் போடும்படி கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்றும், இனி விற்பனையைச் சிறிதும் தாமதப்படுத்தக்கூடாதென்றும் இதுவரையில்தாமதம் செய்ததால் கடன்காரர்களுக்கு பாதகம் நேரிட்டிருக்கிறதென்றும் ஆகையால் உடனே விற்று விடும்படி அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் இப்போது அபிஷியல் அசயினி கையில் சேர்ந்திருக்கும் பணத்தை கடன்காரர்களுக்கு பாகித்துக்கொடுக்கும்படி குறிப்பிட்டிருந்த தேதியை மூன்றுமாதம் தள்ளிவைக்க வேண்டுமென்றும் இன்னும் கடன்காரர்களின் பூராவான ஜாபிதா தயாரிக்கப்படவில்லை என்றும் மனு செய்துக் கொண்டார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

நல்லநடைத்தைக்காக கொடுத்த ஜாமீனை இழந்த கேஸ்.

குற்றவாளி:—ஆலப்பரெட்டி சின்னரெட்டி.

கேசின்விபரம்:—கடப்பை ஜில்லா, புலிவெண்டை தாலூகாவைச் சேர்ந்த கராபு கிராமத்தில் ஜனங்கள் இருகக்ஷி பட்டிருந்தார்கள். மாஜிஸ்டிரேட்டார் விசாரணை செய்து அந்தகிராமத்தில் மிகுந்த செல்வாக்குடைய குற்றவாளியை ஒருவருஷத்திற்கு நல்ல நடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படி உத்திரவுசெய்தார்கள் குற்றவாளியும் மாஜிஸ்டிரேட்டார் உத்திரவின்படி ரூ. 5000-க்கு ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தான். ஜாமீன் காலம் முடிவதற்குள்ளாக பிரஸ்தாப கிராமத்தில் இரண்டு கொலைகள் நடந்தன. இந்தக் கொலைக் கேசுகளை செஷன்கோர்ட்டார் விசாரணை செய்ததில் அந்தக் கொலைகள் குற்றவாளியின் தூண்டுதல் பேரில் நடந்ததென்று தெரியவந்தது. ஆகவே கடப்பை டிப்ட்டி மாஜிஸ்டிரேட் குற்றவாளி, ரூ. 5000-க்கு எழுதிக் கொடுத்த ஜாமீன் பத்திரத்தை ரத்து செய்து ரூ. 5000 அபராதம் விதித்தார். குற்றவாளி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அப்பீல் செய்து கொண்டதில் கீழ்க்கோர்ட்டார் உத்திரவு உறுதி செய்யப்பட்டது.

குற்றவாளி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தான்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும், குற்றவாளி தரப்பிற்கு டாக்ட்டர் சாமிநாதனும் பேசினார்கள்.

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு தீர்மானத்தை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் கீழ்க்கோர்ட்டார் விதித்த ரூ. 5000 அபராதத்தொகையை ரூ. 3000 மாகக் குறைத்து விதித்தார்கள்.

திருச்சினாப்பள்ளி ஜில்லாக் கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் E. L. R. தார்னுட்டன்.

அரியலூர் ஜமீன் கேஸ்.

கேசின் விவரம்:—அரியலூர் பாளைப்பட்டார் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு சண்டையில் உதவிபுரிந்ததற்காக அரியலூர் பாளையம் 1817-ம் ளு பிரிட்டிஷாரால் ஆதி ஜெமீன்தாருக்குக் கொடுக்கப்பட்டது. கடைசி ஜெமீன்தார் 1859-ம் வருஷம் இறந்துபோய்விட்டார். இவருக்குப் பிறகு இவருடைய குமாரராகவிருக்கிறவரும், இந்த வியாஜ்ஜியத்தின் முதல் பிரதிவாதியின் அப்பனாராகவும், இரண்டாவது பிரதிவாதியின் பாட்டனாராகவுமிருக்கும் குமாரவிஜய ராஜா அவர்கள் பட்டத்திற்கு வந்தனர். இப்போது இந்த ஜமீன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிற வாதி 1859-ம் வருஷத்தில் இறந்துபோன ஜமீன்தாரின் பட்ட ஸ்திரீயின் புத்திரன் என்றும் தாம் அப்போது பயித்தியம்கொண்டவராக யிருந்தபடியால் தாம் பட்டத்திற்கு வர முடியவில்லை என்றும் இப்போது பயித்தியம் தெளிந்து போய்விட்டதாகவும் தமக்கு ஜமீன் கிடைக்கவேண்டுமென்று 1, 2, பிரதிவாதிகள் பேரிலும் அவர்களிடமிருந்து ஜமீனைச்சேர்ந்த பல நிலங்களை வாங்கியிருக்கும் 300 பிரதிவாதிகள்பேரிலும் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். 1,2, பிரதிவாதிகளும் இவர்களுடைய தகப்பனாரும் செய்திருக்கும் பராதீனங்கள் தம்மைக் கட்டுப்படுத்தாதென்றும், ஜமீன் பாகிக்கக்கூடாத ஜமீனாகயிருப்பதுமன்றி பராதீனம் செய்யப்படக்கூடாத ஜமீனாகவுமிருக்கிறதென்றும் ஆகையால் 1, 2, பிரதிவாதிகள் செய்திருக்கும் பராதீனங்கள் செலாமணியாகமாட்டாவென்பது வாதியின்கக்ஷி.

வியாஜ்ஜிய நடவடிக்கை:—இந்த வியாஜ்ஜியம் 1889-ம்ளுதாக்கல் செய்யப்பட்டது. மிஸ்டர் ஜோசப் மிஸ்டர் A. M. ஸ்லெட் முதலிய அனேக ஜட்ஜிமார்கள்

இந்த வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்தார்கள்; கடைசியில் ஜில்லா ஜட்ஜி மிஸ்டர் தாரன்டன் விசாரணை செய்து தீர்ப்புச் சொன்னார்.

லாயர்கள்:—இந்த வியாஜ்ஜியத்தில் ஆரம்பமுதல் சென்னை ராஜதானியிலுள்ள அநேக கீர்த்திபெற்ற பாரிஸ்டர்களும் வக்கீல்களும் இருதரப்பிலும் பேசி வந்தார்கள். வியாஜ்ஜியத்தில் ஆர்குமெண்டு நடக்கும்போது வாதி தரப்பிற்கு வக்கீல் ஆஜராகவில்லை. பிரதிவாதிகள் தரப்பிற்கு சர். வி. பாஷியமய்யங்காரும், மிஸ்டர் T. தேசிகாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—வாதி, 1859-ம் ஞ இறந்துபோன கடைசி ஜமீன்தாருடைய பட்டஸ்திரீயின் புத்திரனல்லவென்றும் அந்த ஜமீன்தாருடைய புத்திரர்களுக்குள் ஜேஷ்டபுத்திர னல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஜமீன்தாருக்குப் பலகுமாரர்களிருந்தும் பட்டஸ்திரீ மூலியமாகப்பிறந்த பிள்ளைதான் பட்டத்திற்கு வரவேண்டுமென்கிற வழக்கம் இந்த ஜமீனிலிருந்ததாகவும் ருஜுப்படவில்லை. வாதி 1859-ம் ஞமுதல் 1898-ம் ஞவரையில் சிற்சில சமயங்களில் சித்தபேதமடைந்து வந்ததாக ருஜுப்பட்டிருந்தபோதிலும் இந்துலாப் பிரகாரம் பட்டத்திற்கு வரக்கூடாதபடி அவ்வளவு பயித்தியம் கொண்டிருந்ததாக ருஜுப்படவில்லை. வாதி பயித்தியம் கொண்டிருந்தது அவர் பட்டத்திற்கு வருவதைத் தடைப்படுத்தினது என்று ருஜுப்பட்டால் அவர் இப்போது பயித்தியமற்றிருப்பது இப்போது ஜமீனை அனுபவித்து வருகிறவர்களைப் புறப்படுத்திவிடுமென்று இந்தக்கேசை விசாரணைசெய்த மிஸ்டர் ஷலேட் ஒரு முடிவுதாக்கல் செய்திருக்கிறார். வாதி பயித்தியம் கொண்டிருந்தது ருஜுப்படவில்லை. கவர்ன்மெண்டார் ஆதி ஜமீன்தாருக்குக் கொடுத்த சன்னதில் இந்த ஜமீன் பராதீனம் செய்யப்படக்கூடாதஜமீன் என்று சொல்லப்படவில்லை. இந்தஜமீனைச் சேர்ந்த நிலங்களை பராதீனம் செய்கிறதில்லை என்று எண்ணும்படியாக யாதொரு வழக்கமும் அனுஷ்டானத்திலிருந்ததாகவும் ருஜுப்படவில்லை. இத்தியாதி காரணங்களுக்காக வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

திருநெல்வேலி செஷன்கோர்ட்டு:

ஜட்ஜி:—C. G. ஸ்பென்சர், I. C. S.

தூத்துக்குடி சட்டி பீரங்கிகுண்டு கொலைக்கேஸ்.

குற்றவாளிகள்:—(1) ஷன்முக ஆசாரி.
(2) மாரியப்ப பிள்ளை.
(2) எர்ரமுத்து ஆசாரி.
(4) ராமசாமி ஆசாரி.

அப்ரூவர்:—நாராயண செட்டி.

கேசின்விபரம்:—தூத்துக்குடியிலிருக்கும் மெசர்ஸ் காடம் அண்டு கம்பேனியில் குற்றவாளி இன்ஜின் பிட்டர் வேலையிலும் 2–வது குற்றவாளி பியூன் வேலையிலும், 3–வது குற்றவாளி ஜின் பிட்டர் வேலையிலும், நான்காவது குற்றவாளி ஸ்டோர்கீப்பர் வேலையிலுமிருந்தார்கள். இவர்களும் அப்ரூவரும் சேர்ந்து ஒக்குமத்து ஏற்பாடு செய்துகொண்டு ஷை கம்பேனியின் இன்ஜினீராகிய மிஸ்டர் ஷேக் அப்துல்லா என்பவரைக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டு எட்குவர்ட்டர் டிவிஷன் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் N. ராஜகோபால் அய்யங்கார் அவர்களால் செஷனுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் இன்னவிதமாய் கொலைசெய்தார்கள் என்பது அடியிற்கண்ட பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளின் வாக்கு மூலத்தால் அறிந்துகொள்க:—

பாலாமீய சாயப்பின் வாக்குமூலம்:—நான் B. I. S. N ஸ்டீமர் கம்பேனி போட் எக்சாமினர் உத்தியோகத்திலிருக்கிறேன். இறந்துபோன ஷேக் அப்துல்லா என்பவர் என்னுடைய தமைபனின் மாப்பிள்ளை. ஏப்பிரல்மீ 8உ இரவு 8-மணிக்கு ஷேக் அப்துல்லா இறந்துபோனார். இறந்துபோன ஷேக் அப்துல்லாவிடம் ஒரு தகரப்பெட்டி கொண்டுவந்து ஒருவன் கொடுத்தான். அது வெடித்து ஷேக் அப்துல்லாவுக்கு அனேக காயங்கள் பட்டன. பெட்டியைக்கொண்டுவந்து கொடுத்தவன் காஷ்கீப்பர் எரூடியன் நாடார் கொடுக்கச் சொன்னதாகச் சொல்லிக் கொடுத்தான். பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தவன் தன்னுடைய பெயர் சுந்திரப்பிள்ளை என்று சொன்னான். வடக்கு வீதியில் வசித்துவருவதாகவும் சொன்னான். பெட்டிவெடித்தவுடன் ஷேக் அப்துல்லா கீழே விழுந்துவிட்டார். நான் டிரசரை அழைக்க ஓடினேன். டிரசர் சுந்திரப்பிள்ளை காயங்களைக் கட்டினபோது மூன்று தகரத்துண்டுகளைப் பார்த்து எடுத்தார். பெட்டி கொண்டுவந்தவன் இன்னானென்று அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லமுடியாது.

மற்றுமுள்ள பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

அச்சர்களின் அபிப்பிராயம்:—1, 2, 3, குற்றவாளிகள் குற்றம் செய்திருப்பதாயும், 4-வது குற்றவாளி நிரபராதி என்றும் அச்சர்கள் அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் 1, 2, 3, குற்றவாளிகள் விஷயமாக அச்சர்கள் கூறின அபிப்பிராயத்தை நிராகரித்தும், நான்காவது குற்றவாளி விஷயமாய் கூறின அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டும் நான்கு குற்றவாளிகளையும் விட்டுவிடும்படி உத்தரவுசெய்தார்கள்.

கோதாவரி செஷன்கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் M. O. பார்த்தசாரதி அய்யங்கார்.

தண்டனை போலீஸ் படை கான்ஸ்டேபில்கள் கேஸ்.

குற்றவாளிகள்:—(1) மாது சன்னியாசி.
(2) லக்ஷிமி அப்பர்.
(3) S. ருமசாமி

கேசின்விபரம்:—கோதாவரி ஜில்லாவிலிருக்கும் காக்கிநாடாவில் கலக காபுராவாக யிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு கவர்ன்மெண்டார் தண்டனைப்போலீஸ் படை ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். மேலே கூறப்பட்ட மூன்று குற்றவாளிகளும் ஷை படையைச் சேர்ந்த கான்ஸ்டேபில்கள். இவர்கள் சாதாரணமாய் விஜயநகரம் போலீஸ் படையைச்சேர்ந்தவர்கள். தண்டனை போலீஸ் படைக்கு அசிஸ்டெண்டு சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் அட்க்கின்சன் என்பவரை இந்த மூன்று குற்றவாளிகளும் கொலை செய்ய எத்தனித்ததாக குற்றம் சாட்டப்பட்டு காக்கிநாடா டௌன் சப் மாஜிஸ்டிரேட்டால் செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்கள்.

இந்தக் குற்றவாளிகளின் பேரில் வந்திருக்கும் கேசின் விபரத்தை பிராசிக்கியூஷன் தரப்பு முதல் சாக்ஷியின் வாக்குமூலத்தால் அறிந்துக் கொள்ளலாம்.

அச்சர்கள்:—(1) சென்ன வெங்கய்யா.
(2) சுப்பிராயடு.

லாயர்கள்:—பப்ளிக் பிராசிக்யூட்டர் மிஸ்டர் வெங்கடாச்சலய்யா பிராசிக்கியூஷன் தரப்பிற்கும் முதல் கிரேட் பிளீடர் மிஸ்டர் G. லக்ஷுமணு குற்றவாளிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

பப்ளிக் பிராசிக்கூட்டர் அடியிற்கண்ட பிரகாரம் கேசின் சாரம்சத்தை ஜுரர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்:—

குற்றவாளிகள் காக்கிநாடா சப் ஜெயிலில் 1907 ஞ ஜுலைமீ 13உ இரவு பாராக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். 14உ காலை ஒருமணிக்கு அசிஸ்டன்ட் சூப்பிரண்டு மிஸ்டர் அட்க்கின்சன் ரோந்து போகையில் இந்த சப் ஜெயிலுக்குள்வந்தபோது முதல் குற்றவாளி "Halt" (நில்) என்று சொன்னான். அதற்கு மிஸ்டர் அட்க்கின்சன் "Visiting round" என்று அதாவது ரோந்துவந்திருக்கிறேன் என்று பதில் சொன்னார். முதல் குற்றவாளி துப்பாக்கியில் ஈட்டியை மாட்டி மிஸ்டர் அட்க்கின்சனை நோக்கி நீட்டினான் 2, 3, குற்றவாளிகள் உடந்தைக்குற்றம் சாட்டப்பட்டார்கள்.

மிஸ்டர் அட்க்கின்சன் வாக்குமூலம்:—இவர் பிராசிக்கியூஷன் தரப்பு முதல்சாக்ஷி, இவர், இரவில் போலீஸ் கான்ஸ்டேபில்கள் டியூட்டியிலிருக்கிறார்களா வென்றுபார்க்கும்பொருட்டு அடிக்கடிரோந்துபோய்க் கொண்டிருந்ததாகவும் அப்படி வந்த ஒரு சமயத்தில் முதல் குற்றவாளி டியூட்டியிலிருக்கும்போது உறங்கிக்கொண்டிருந்ததாகவும் அதற்காக தாம் அவனுக்கு அபராதம் விதித்ததாகவும், இந்த விரோதத்தால் முதல் குற்றவாளி தம்மை கொலைசெய்ய எத்தனித்தான் என்று சாக்ஷியம் சொன்னார்.

கேசின் விசாரணை இன்னும் நடந்து கொண்டு வருகின்றது.

தென் ஆற்காடு செஷன்கோர்ட்டு.

ஜட்ஜி:—மோபர்லி I. C. S.

விழுப்புரம் சப் மாஜிஸ்டிரேட் கேஸ்.

குற்றவாளி:—தாமோதரம் பிள்ளை B. A.

கேசின்விபரம்:—சென்றமாத கெஜெட்டில் தெரிவித்திருந்தோம்.

தீர்ப்பு:—(1) ரெங்க சாமியைக் கெடுத்துப்போடவேண்டுமென்று கருத்துக்கொண்டு எக்சிபிட் D யை திருத்தினதற்காக குற்றவாளியின் மீது இ. பி. கோ. 218-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றம் ஸ்தாபனை செய்கிறேன். (2) அதேமாதிரியாக எக்சிபிட் E யைத் திருத்தினதற்காகவும் குற்றஸ்தாபனை செய்கிறேன். (3) 1906-ம் ஞ-ம் டிசம்பர்மீ 26உ ஆரியக் கவுண்டனிடமிருந்து ரூ. 2000-ம் லஞ்சம் வாங்கினதற்காக இ. பி. கோ. 161, 388-வது பிரிவுகளின்படி குற்றஸ்தாபனை செய்கிறேன். (4) ரெங்க சாமியை 20 நாள்வரையில் ஜெயிலில் அடைத்து வைத்ததற்காகவும் அவனிடமிருந்து லஞ்சம் பெறவேண்டுமென்கிற கருத்துடன் அவனை ஜெயிலில் அடைத்து வைத்ததற்காகவும் இ. பி. கோ. 344, 347-வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் குற்றஸ்தாபனை செய்கிறேன். ஆதலால் இக்குற்றங்களுக்தாக குற்றவாளிக்கு மூன்று வருஷக் கடினகாவல் தண்டனையும் ரூ. 2000 அபராத தண்டனையும் அபராதம் கட்டாவிடில் இன்னும் 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன். என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

எழும்பூர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் W. E. கிளார்க்கு

நோட்டு திருடிய கேஸ்.

குற்றவாளி:—ராமசந்திரநாயுடு.

கேசின்விபரம்:—குற்றவாளி தஞ்சாவூர் ஜில்லா சீர்காழியில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் என்ப[illegible] குமாஸ்தாவாக விருந்தான். சிதம்பரநாத முத[illegible] வாக்குமூலம்:—

நான் சீர்காழியிலிருக்கிறேன். நான் ஒரு [illegible]தார். நான் கவர்ன்மெண்டாருக்கு ரூ. முப்பதினா[illegible] கிஸ்தி கட்டிக்கொண்டு வருகின்றேன். எனக்குச் [illegible]ந்தமான ரூ. 17,800 பொருமானமுள்ள கரன்சி நோட்டுகள் காணமற் போயின. இந்த நோட்டுகளை யார் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு 100-க்கு [illegible] ரூபாய் விகிதம் இனம் கொடுப்பதாய் பத்திரிகையில் அறிவித்திருந்தேன். சென்னபட்டணம் போலீஸ் இனடலி ஜென்ஸ் டிபார்ட்டுமெண்டு இன்ஸ்பெக்டர் எனக்கு ஆனிமீ கடைசியில் ஒருதந்தி அடித்தார். நான் இரண்டுநாள் சென்று சென்னைக்கு வந்து சேர்ந்தேன். எனக்கு ரூ. 3000 கரன்சி நோட்டுகளை இன்ஸ்பக்டர் காண்பித்தார். அவைகளின் நம்பரைப் பார்த்து என்னுடைய நோட்டுகள் என்று அடையாளம் கண்டுபிடித்துச் சொன்னேன். 268 சவரன்களையும் போலீசார் எனக்குக் காண்பித்தார்கள்.

இதன் பேரில் குற்றவாளியின் பேரில் குற்றம் சாட்டினேன். குற்றவாளி ரூ. 5000-ம் க்கு நோட்டுகள் சாவுகார் பேட்டையில் ஒரு சாவுகாரிடம் கொடுத்து சவரன் கேட்டான். சாவுகார் அக்கவுன்டன்ட் ஜெனரலாபீசில் நோட்டை மாற்றப்போனபோது திருட்டு வெளிக்கு வந்தது. இந்த நோட்டுகளை குற்றவாளி திருடும்போது என்னிடம் குமாஸ்தாவாகவிருந்தான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி தன் தரப்பிற்கு வக்கீல் வைத்திருந்தான். பிரஸ்தாப நோட்டு

களை குற்றவாளி தன்னுடைய ஏஜமான் வீட்டில் கண்டெடுத்ததாகவும் அது அவனுக்கு கடவுளால் கொடுக்கப்பட்டதென்று நினைத்து சிறிதுநாள் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாகவும், அவைகளில் இரண்டு நோட்டுகளைமட்டிலும் மாற்றி செலவு செய்ததாகவும் பாக்கி நோட்டுகளை சென்னப்பட்டணம் கொண்டுவந்ததாகவும் ஆகையால் கோர்ட்டார் குற்றவாளியை இலகுவாய்த் தண்டிக்கவேண்டு மென்றும் கோர்ட்டார் தண்டனை சொல்லுவதில் குற்றவாளி அனேக வருஷகாலமாக பிரியாதியிடம் மாசற்ற குமாஸ்தாவாகவிருந்து வந்ததையும் கவனிக்க வேண்டுமென்று குற்றவாளியின் லாயர் சொன்னார்.

தீர்ப்பு:—குற்றவாளிக்கு இரண்டு வருஷ கடினகாவல் தண்டனையும் ரூ. ஆயிரம் அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

PRESIDENCY MAGISTRATE'S COURT, EGMORE.

எழும்பூர் பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு.

மாஜிஸ்டிரேட் :—W. E. கிளார்க்கு.

கிறிஸ்தவப்பாதிரிசள் இந்துப்பெண்ணைத் திருடிக் கொண்டுபோன நரச்சோரக் கேஸ்.

பிரியாதி :—தர்மலிங்க நயினார்.

எதிரிசள் :—(1) மிஸ் ஹாரபாண்ட்

(2) மிஸ் ஸ்டிரின்ஞ்பெல்லோ

(3) மிஸ் மேரி

(4) பாக்கியம்.

கேசின் விபரம் :—இந்தக் கேசின் விர்த்தாந்தம் ஆதியோடந்தமாக சென்ற ஜூன்மீ கெஜட்டில் 238-வது பக்கம் ஆரம்பமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் கோர்ட்டார் முதலில் எதிரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி தருவித்து விசாரணைசெய்து எதிரிகள் குற்றம் செய்திருப்பதாக அபிப்பிராயங்கொண்டு சம்மன் அனுப்பினார்கள். இந்தக்கேஸ் முக்கியமான கேசானபடியாலும் இதன்முடிவை சென்னையில் அனேகர் ஆவலுடன் எதிர்ப்பார்த்து வந்தபடியாலும் சீப் பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க் அவர்களே இந்தக்கேசை தம்முடைய பயிலுக்கு மாற்றிக் கொண்டு விசாரணை செய்தனர்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் பிராசிக்கியூஷன் தரப்பிற்கும் பாரிஸ்டர் ரிச்மெண்டு டிபன்ஸ் தரப்பாருக்கும் ஆஜரானார்கள்.

தர்மலிங்கநயனாரின் வாக்குமூலம் :—(குருக்குக் கேள்விகளுக்கு) என்னுடைய பெண் ஜெகதாம்பாளுக்கு நெல்வேலியிருந்து அம்மைகுத்தின சர்ட்டிபிக்கேட் வாங்கிக்கொண்டுவர நான் எத்தனிக்கவில்லை, என்னுடைய பெண் எப்போது பிறந்தாள் என்று அறிந்துகொள்ளும்பொருட்டு பாதிரிகள் முனிசிபல் ஆபீஸில் ஜெனனசர்ட்டிபிக்கேட் வாங்க ஏற்பாடுசெய்திருக்கிறது எனக்குத்தெரியாது. குட்டிக் கிராமணி தெருவில் வசித்துக்கொண்டுவந்த தர்மலிங்கபண்டாரம் என்பவனுக்கு ஜெகதாம்பாள் என்று பெயர்கொண்ட ஒரு புத்திரியிருந்தாள் என்று எனக்குத்தெரியும். அவளுக்கு பொன்னம்மாள் என்று மற்றொரு புத்திரியுமுண்டு. அவளுக்கு 5 - புத்திரிகளிருந்தார்கள். அவர்களுடைய பெயர்களை என்னால் சொல்ல முடியாது. இரண்டு பெண்களுடைய பெயர்கள்தான் தெரியும் ; அதாவது ஜெகதாம்பாள், பொன்னம்மாள். பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளில் ஒரு குழந்தையை ஜெகதாம்பாள் என்கிற பெயர்சொல்லி கூப்பிடுவார்கள். தர்மலிங்க பண்டாரமும் அவன் குடும்பத்தாரும் இப்போது எங்கேயிருக்கிறார்களோ அது எனக்குத்தெரியாது. அவர்களைப்பற்றி எனக்குயாதொன் தெரியாது. (இவ்விடத்தில் பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்சமண்டு சென்னை முனிசிபல் ஆபீசிலிருந்து வாங்கப்பட்ட அம்மைகுத்தின சர்ட்டிபிகேட் தாக்கல்செய்து இந்த சர்டிபிகேட்டில் ஜெகதாம்பாள் என்கிற ஒரு வயது குழந்தைக்கு 1888-ம் ளுலம் அம்மை குத்தப்பட்டதென்றும் அவளுடையதகப்பனார் தர்மலிங்கபண்டாரம் குட்டிகிராமணி தெருவில் குடியிருக்கிறார் என்றும் சர்ட்டிபிகேட்டில் காணப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.)

இந்த சமயத்தில் பிராசிக்கியூஷன் வக்கீல் மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் வெளியேபோயிருந்தார் அவருக்குப்பதிலாக வக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமிநாயுடு எழுந்திருந்து பிராசிக்கியூஷன் தரப்பார் குட்டிகிராமணி தெருவில் இரண்டு தர்மலிங்கபண்டாரம், இரண்டு ஜெகதாம்பாள் இருந்தார்கள் என்று ரூகித்துப்பிராசிக்கியூஷனை நடத்தினாலொழிய இந்த சர்ட்டிபிகேட் பிரயோஜனப்படமாட்டாது என்று சொன்னார்.

பாரிஸ்டர் ரிச்மண்ட் :—இந்த சர்ட்டிபிக்கேட் பப்ளிக் டாக்குமெண்டு. இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட் 35-வது பிரிவின்படி அது சாக்ஷியமாக தாக்கல் செய்யப்படலாம். அதில் சொல்லப்பட்டிருக்கிற ஜெகதாம்பாள் இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட ஜெகதாம்பாளல்லவென்றும் தர்மலிங்கபண்டாரம் என்ற பெயர் கொண்ட இரண்டுபேரிருந்தார்கள் என்றும், ஜெகதாம்பாள் என்று பெயர்கொண்ட இரண்டுபேர்களிருந்தார்கள் என்றும் இவர்கள் குட்டிகிராமணி தெருவிலேயே வசித்துவந்தார்களென்றும் ருஜுப்படுத்தவேண்டியது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கடமை. பாதிரிகள் முனிசிபல் ஆபீசிலிருந்து ஜெனன சர்ட்டிபிகேட் வாங்குகிறார்கள் என்று பிரியாதி அறிந்துகொண்டு அந்த சர்ட்டிபிகேட்டிலிருக்கும் ஜெகதாம்பாள் வேறொரு தர்மலிங்கபண்டாரத்தின் குமாரத்தி என்று கற்பனை செய்து சொல்லுகிறார்.

மிஸ்டர் கிருஷ்ணசாமி நாயுடு :—டிபன்ஸ் தரப்பார் சர்ட்டிபிக்கேட்டை தாக்கல்செய்தால் மட்டிலும் போதாது. சர்ட்டிபிக்கேட் சர்க்கார் தஸ்தாவேஜு என்பதில் தடையில்லை. அந்த சர்ட்டிபிக்கேட்டிற்கும் இந்தக்கேசிற்கும் இன்ன சம்பந்தமிருக்கிறதென்று டிபன்ஸ் தரப்பார் ருஜுப்படுத்தவேண்டும்.

கோர்ட்டார் தஸ்தாவேஜுயை தாக்கல் செய்துக் கொண்டார்கள்.

தர்மலிங்கநயினார் வாக்குமூலத்தொடர்ச்சி :—(குருக்குக்கேள்விக்கு) என்னுடைய தகப்பனார் கையால் எழுதப்பட்ட தஸ்தாவேஜுகளிருக்கின்றன. என்னுடைய சகோதரன் சுந்திர நயினாருக்கு படிக்க எழுதத் தெரியும். ஆனால் அவருக்கு ஓலையில் எழுதத்தெரியாது. சுந்திரத்திற்கு கையெழுத்து செய்யத்தெரியும். என்னுடைய புத்திரி என்னுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போன மாலையில் நான் மிஷன் அவுசுக்குப் போனேன் ; வியாழக்கிழமை இரவு போனேன்; வெள்ளிக்கிழமை மாலையிலும், சனிக்கிழமை காலையிலும் போயிருந்தேன். இந்தமூன்று சமயங்களிலும் நான் ஜாதகத்தை எந்தப்பாதிரியிடமும் காண்பிக்கவில்லை. வெள்ளிக்கிழமை மாலையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்ட்டர் நாராயணசாமி அய்யர் அவ்விடமிருந்தார். சப் இன்ஸ்பெக்ட்டர் தம்முடைய நோட்டு புத்தகத்தில் தாக்கல் செய்துகொண்டதை நான் பார்க்கவில்லை. சப் இன்ஸ்பெக்ட்டர் நாராயணசாமி அய்யர் முன்னிலையில் என்னுடைய புத்திரிக்கு 17-வயதென்று நான்சொல்லவில்லை. என்னுடைய பெண்ணிற்கு சுமார் 15 அல்லது 16-வயதிருக்கலாமென்று என் பெண்சாதிசொன்னாள். இப்போது கோர்ட்டில் காண்பிக்கிற ஜாதகத்தை நான் போலீஸ் ஸ்டேஷனில் காண்பிக்கவில்லை. என்னுடைய சகோதரன் மிஸ் என்டர்சனுக்கு சனிக்கிழமைதினம் காட்டிய ஜாதகம் இந்த ஜாதகந் தான். போலீசார் ஜாதகத்தைக் காண்பிக்கும்படி கேட்கவுமில்லை. நான் காண்பிக்கவுமில்லை. நான் போலீஸ் கோர்ட்டில் 23உ பிரியாது தாக்கல் செய்வதற்கு முந்தி போலீசாரிடம் என்பெண் 16-வயதிற்குக்கீழ்ப்பட்டவள் என்று நான்புகார் சொல்லிக்கொண்டதில்லை. (மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் மறுபடியும் கேட்டகேள்விக்கு) போலீசார் மிஷன் அவுசிற்கு வெள்ளிக்கிழமை காலையில் வந்தார்கள். நான் முதல் முதல் என் லாயரிடத்தில் திங்கட்கிழமை போனேன். அப்போது ஜாதகத்தை அவருக்குக் காண்பித்தேன். (கோர்ட்டார் கேள்விக்கு) நெல்வேலியில் ஜெகதாம்பாள் பிறந்தபொழுது நான் அவ்விடமில்லை. அவள் 1892-ம்ளு அக்டோபர்மீ 5உ பிறந்தாள். பிரசவகாலத்திற்கு $1\frac{1}{2}$ - மாதத்திற்குமுந்தி என் பெண்சாதி நெல்வேலிக்குப் போய்விட்டாள். அவளுடன்கூட இன்னார் போனதென்று இப்போது எனக்கு ஞாபகமில்லை. யாரேனும் தான் அவளுடன் கூடப்போயிருக்கவேண்டும். அந்த சமயம் என்னுடைய தாயார் என்னுடன் கூட சென்னப்பட்டணத்தி லிருந்தாள். இவர்களைத்தவிர என்னுடைய குடும்பத்தில் என் சகோதரர்களிருக்கிறார்கள். என் பெண்சாதி கிராமத்திற்குப் போனது என் தாயார் அவளுடன் கூடப்போகவில்லை. என்னுடைய சகோதரர்களில்யாரேனும் கூடப்போனார்களோ என்னமோ எனக்கு ஞாபகமில்லை. ஆனால் என் சகோதரர்களில் யாரேனும் ஒருவர்தான் அவளுடன் கூடப் போயிருக்கவேண்டும். கிராமத்திலிருக்கும் என்னுடைய தகப்பனார் வீட்டில் என்னுடைய அத்தையும் தாய் மாமனுடைய பெண்சாதியும் வசித்துக்கொண்டு வந்தார்கள். என்னுடைய அத்தை இறந்துபோய்விட்டாள். என் தாய் மாமன் பெண்சாதி உயிருடனிருக்கிறாள். என்னுடைய பெண் பிறந்தபோது என்னுடைய தகப்பனார் வீட்டிலிருந்த புருஷர்கள் எவரும் இப்போது உயிருடனில்லை. அந்த சமயத்தில் என்னுடைய பெண்சாதி சுமார் 7, 8-மாத காலம் கிராமத்திலேயே தங்கிவிட்டாள். குழந்தைப்பிறந்த பின்னர் என் பெண்சாதியை என்னுடைய தகப்பனார் அழைத்துக்கொண்டுவந்து சென்னையில் விட்டார் ; குழந்தை பிறந்ததற்கு இரண்டுவருஷத்திற்குப் பிந்தி என் குழந்தையின் ஜாதகத்தை வாசித்துக்கொண்டிருந்தபோது நான் பார்த்தேன். குழந்தை பிறந்த 5, 6 - மாதங்களுக்கெல்லாம் ஜாதகம் எழுதப்பட்டபோதும் நான் பார்த்தேன் என்னுடைய பெண்சாதியை என் தகப்பனார் சென்னைக்கு அழைத்துக்கொண்டு வந்தபிறகு என்னிடம் ஜாதகத்தைக் காண்பித்தார். மூன்று ஜாதகங்களையும் சேர்த்துக்கொடுத்தார். அதுகாலபரியந்தம் என்னுடையமற்ற இரண்டு புத்திரிகளுடைய ஜாதகமும் என் தகப்பனார் வசமிருந்தன. ஜாதகங்களை என் தகப்பனார் தான் வைத்துக்கொள்ளுகிறவழக்கம் வேதகிரி ஜோசியருக்குக் காண்பிக்கும்பொருட்டு என் தகப்பனாரை ஜாதகங்கள் கேட்டேன். வேதகிரி ஜோசியர் இறந்துபோய்விட்டார். நான் வேறெந்த ஜோசியர்களுக்கும் ஜாதகங்களைக் காண்பிக்கவில்லை ஜாதகங்களை என்னுடைய பெட்டியில் வைத்திருந்தேன். 1893ளு-ல் என் தகப்பனார் வீட்டைவிட்டுப்போனது முதல் ஜாதகங்கள் என்வசமிருந்தன. என் வீட்டிலிருப்பவர்கள் எவருக்கும் நான் ஜாதகங்களைக் காண்பிக்கவில்லை. நான் அவைகளை பெட்டியில்வைத்திருந்தது எவருக்கும் தெரியாது. பெட்டியின் சாவி என்வசமேயிருந்தது. என்வசம் ஜாதகமிருந்தது என் சகோதரர்களுக்குத் தெரியாது. ஆனால் ஜாதகம் எழுதப்பட்டிருக்கிறதென்று என் சகோதரனுக்குத்தெரியும். மிஸ் என்டர்சனுக்கு ஜாதகத்தைக் காண்பிக்கவேண்டுமென்று சொல்லி என் சகோதரன் ஜாதகத்தைக்கேட்டான். நான் கொடுத்தேன் என் தகப்பனார் என்னிடம் ஜாதகத்தைக் கொடுத்த ஒரு மாதத்திற்குப் பின்னர் தகப்பனார் ஜாதகம் என்னிடம் கொடுத்திருப்பதாக என்னுடைய சகோதரர்களுக்குச் சொன்னேன். மிஸ் என்டர்சனிடம் காண்பிக்கும்படியாக என் சகோதரனிடம் மூன்றில் ஒரு ஜாதகத்தைக் கொடுத்தேன். நான் கொடுக்கும்போது ஒருவருமில்லை. என் தகப்பனார் என்னிடம் ஜாதகத்தைக் கொடுத்தபிறகு என்னுடைய குடும்பத்தார்களில் சிலர் அதைப்பார்த்திருக்கிறார்கள். என்னுடைய புத்திரி ஜெகதாம்பாள் இரண்டாவது வயதில் நோயாகயிருந்தபோது வேதகிரி ஜோசியரிடம்ஜாதகம் காண்பிக்கப்பட்டது. அந்த ஜோசியர் இறந்துபோய்விட்டார். அப்போது என்னுடைய வீட்டிலிருந்தவர்கள் அந்த ஜாதகத்தைப்பார்த்தார்கள். இப்படிக் காண்பித்தது 13 - வருஷத்திற்கு முந்தி ; இதன்பிறகு என்னுடைய குடும்பத்தார் அந்த ஜாதகத்தைப் பார்த்தார்களா இல்லையாவென்று எனக்கு ஞாபகமில்லை இந்த சம்பவம் நடந்ததினம் இரவு

8-மணிக்கு நான் மிஷன் அவுசிற்குப்போனேன் அன்று இரவு என்னுடைய பெண்ணை மிஷன் அவுசில் நான் பார்க்கவில்லை. அன்று இரவு இவ்விடத்தில் இரண்டு துரைசானிகளைப்பார்த்தேன். 14 வயதுடைய என்னுடைய பெண்ணை அழைத்துக்கொண்டு வந்துவிட்டீர்கள் என்று அந்த துரைசானிகளுச் சொன்னேன். என் பெண்ணிற்கு ஜாதகம் மிருக்கிறதென்று அப்போது அவர்களுக்கு நான் சொன்னதுண்டு. என் பெண் இரவு $7\frac{1}{2}$-மணிக்கு காணமற்போனாள். அந்தச் சமாச்சாரத்தை நான் $7\frac{1}{2}$மணிக்குக்கேள்விப்பட்டேன். என் பெண்ணைத் தேடிக்கொண்டு நான் நேரே மிஷன் அவுசிற்குப்போனேன். ஜாதகத்தையும் கூட எடுத்துக்கொண்டுபோகவேண்டுமென்று அப்போது என் புத்திக்குப்படவில்லை. மறுநாள் காலையில் என்பெண்ணை மிஷன் அவுசில் பார்த்தேன். அப்போது துரைசாணிகளைக்கண்டு பேசினேன். அன்றுமாலையில் மறுபடியும் மிஷன் அவுசிற்குப் போனேன். அப்போது அவ்விடத்தில் எவருமில்லை.

இத்துடன் அன்றையதினம் விசாரணை முடிந்துபோய்விட்டது. விசாரணை 8உ தள்ளிவைக்கப்பட்டது. அந்தப்பெண் எவ்விடம்போக இஷ்டப்பட்டாளோ அவ்விடத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்படியாக கோர்ட்டார் போலீசாருக்கு உத்தரவுசெய்தார்கள்.

கோர்ட்டார் இப்படி உத்திரவுசெய்திருப்பதை வெளியிலிருக்கும் திரளான கூட்டத்திற்குச் சொல்லும்படியும் இந்தப்பெண் போகும்போது எவரும் இடஞ்சல் செய்யக்கூடாதென்று சொல்லும்படியும் கோர்ட் இன்ஸ்பெக்ட்டருக்கு உத்தரவுசெய்தார்கள். அந்தப்பெண்ணும் மிஸ்டர் ஹார்பன்ட்டும் ஒரு பாதிரியும் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு குதிரைமேல் ஏறியிருக்கும் போலீசாரின் பந்தோபஸ்துடன் ரெவரெண்டு பிலிப்ஸ்வீட்டிற்குச் சென்றார்கள். வண்டி போகும்போது கோர்ட்டிற்கு வெளியே கூடியிருந்த ஜனங்கள் பெரும் கூச்சல் போட்டு பாதிரிகளைப்பார்த்து நகைத்தார்கள். போலீசார் கோர்ட்டு வாசற்படியை கடந்தவுடன் எதிர் தோட்டத்தில் ஒளிந்துக்கொண்டிருந்த சிலர் போலீசாரைக் கல்லால் அடித்தார்கள். இவர்களைப் போலீசார் அரஸ்ட் செய்யவில்லை. போலீசார் இரண்டொருவரை மாஜிஸ்டிரேட்டினிடம் இழுத்துக்கொண்டு வந்தார்கள். இவர்கள் போலீசார் தங்களை அடித்ததாகப் புகார் செய்தார்கள். மாஜிஸ்டிரேட் தம்முடைய கோர்ட்டு ஆசனத்தை விட்டு இறங்கி வெளியே வந்து நின்று கொண்டு கூட்டத்தைப் பார்த்து அடியிற்கண்ட பிரகாரம் எச்சரித்தார்:—"கோர்ட்டில் விசாரணை நடக்கும்காலத்தில் அதை வந்து பார்க்க பொது ஜனங்களுக்கு சகலபாத்தியதையு மிருக்கிறது. கோர்ட்டினுள்ளேயும், கோர்ட்டிற்கு வெளியே காம்பவுண்டிற்குள்ளேயும் எவ்வளவுவிட மிருக்கிறதோ அவ்வளவு வரையில் விடப்படுவார்கள். கோர்ட்டு கலைந்து போனவுடன் கோர்ட்டார் பந்தோபஸ்திற்காக வேடிக்கை பார்க்க வந்த ஜனங்கள் வெளியே போய்விட வேண்டுமென்று உத்திரவு செய்தால், ஜனங்கள் உடனே போய்விட வேண்டும். இந்த உத்திரவை கோர்ட்டார் உத்திரவின்பேரில் நிறைவேற்றி ஜனங்களைப்போகும்படி செய்கிற போலீசாருக்கு யாரேனும் கீழ்ப்படியாமல் இடஞ்சல் செய்வானேயாகில் அவன் தண்டனைக்குள் ளாகுவான்! சட்ட விரோதமான காரியத்தைச் செய்ய உத்தேசித்து யாரேனும் 5 அல்லது 5 பேர்களுக்குமேல் ஒன்று சேர்வோர்களே யானால் அந்தக்கூட்டம் சட்டவிரோதமான கூட்டம் என்றும் சொல்லப்படும். அந்தக் கூட்டத்தைச்சேர்ந்த ஒவ்வொருவனும் தண்டனைக்குள்ளாகுவான் ஜனங்கள் ஏதேனும் புகார் அல்லது பிரியாதுசெய்யவேண்டியதாகயிருந்தால் அவர்கள் கோர்ட்டிற்குவந்து பிரியாது செய்யலாம். ஆனால் கோர்ட்டார் உத்திரவை நிராகரித்து போலீசாரை எதிர்த்துக்கொண்டு கோர்ட்டு கட்டடத்தில் நிற்பது கிரிமினல் குற்றமாகும். அப்போது அப்படி நின்றுகொண்டிருந்தவர்கள் தண்டனைக்குள்ளாகுவார்கள் ஆகையால் இங்கு நிற்காமல் போய்விடுங்கள்."

மாஜிஸ்டிரேட் இப்படிச்சொன்னதின்பேரில் கூட்டம் கலைந்தது.

டாக்ட்டர் T. M. நாயர் சாக்ஷி வாக்குமூலம்:—நான் வைத்தியத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன். பத்துவருஷமாக வைத்தியதொழில் செய்து வருகின்றேன். 12-வயதிற்கு மேற்பட்டும் 18-வயதிற்குட்பட்டும் நிச்சயமான வயது நிர்ணயித்துச்சொல்லக்கூடிய வைத்தியசாஸ்திர உபாயமில்லை. சாதாரணமாய் ஒருவனுடைய வயதை நிர்ணயிக்கவேண்டியதாகயிருந்தால் அவ்னுடைய பற்களையும் எலும்புகளையும் பார்த்து நிர்ணயிக்கிறதுண்டு. ஆனால் இந்த உபாயங்களை நம்பக்கூடாது. வயது சொன்னால் உத்தேசவயதாகத்தான் சொல்லக்கூடும். அந்தப்பெண்ணை என்முன் ஆஜர்படுத்தினால் என்னால் கூடியவரையில் உத்தேசம்செய்து வயது நிர்ணயித்துச் சொல்லக்கூடும்.

டாக்ட்டர் M. கிருஷ்ணசாமி அய்யர் வாக்குமூலம்:- இவரும் வயது உத்தேசமாகத்தான் சொல்லக்கூடுமென்றும் நிச்சயமாய் இன்னவயது என்று சொல்ல முடியாது என்றும் சொன்னார்.

மிஸ்டர் ரிச்மண்டு:—இந்த டாக்டர்கள் பெண்ணைப்பார்த்து வயது இன்னதென்று சொன்னதற்குப் பிந்தி இவர்களை நான் கிராஸ்செய்கிறேன்.

ஆனந்தாயின் வாக்குமூலம்:—நான் அந்தப்பெண்ணின் தாயார். எனக்கு முதல்முதல் பிறந்த குழந்தைக்கு இன்னவயதென்று எனக்குத் தெரியாது. ஜெகதாம்பாள், என்னுடைய மூன்றாவது குழந்தை. ஜெகதாம்பாளுக்கு முன் நான் இரண்டு பெண்குழந்தைகள் பெற்றேன். அவர்கள் உயிருடனிருக்கிறார்கள். ஜெகதாம்பாள் நெல்வேலியில் அவளுடைய பாட்டன் வீட்டில் பிறந்தவள். நெல்வேலியில்தான் அவளுக்கு அம்மை குத்தினார்கள்.

மிஸ்டர் ரிச்மெண்டு:—கோர்ட்டிற்கு வெளிய திரளானஜனங்கள் கூடியிருக்கின்றார்கள். இந்த சமயத்தில் பெண்ணை மிஷன் அவுசிலிருந்து கோர்ட்டிற்கு அழைத்துக்கொண்டுவருவது அவ்வளவாக யுக்தமாயிருக்கமாட்டாது.

சோர்ட்டார்.—மிஷனரிகளே! அடிக்கடி கோர்ட்டைவிட்டு வெளியே போகவேண்டாம். வெளியேயிருந்து கோர்ட்டிற்குள் வரவேண்டாம். உங்களைக்கண்டால் வெளியில் நிற்கும் ஜனங்களுக்கு ஆத்திரம் கிளம்புகின்றது. இருந்தபோதிலும் அந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டுவரும்படியாகப் போலீசாரை அனுப்பியிருக்கிறேன்.

சபாபதி கிராமணியின் வாக்குமூலம்:—எனக்கு மேடவாக்கத்தில் பயிர்தொழில் ஜீவனம். எனக்கு ஒரு கள்ளுக்கடையுமிருக்கிறது. நான் பிறந்தது முதல் நாளதுவரையில் குட்டியப்பகிராமணி தெருவிலேயே வசித்துக்கொண்டு வருகின்றேன். குட்டியப்ப கிராமணி என்பவர் என்னுடைய பாட்டனார். என்னுடைய பாட்டனார்பெயர் நானிருக்கும் தெருவிற்கு வைக்கப்பட்டிருக்கின்றது. தர்மலிங்க நயினாரையும் அவருடைய தகப்பனாரையும் எனக்கு நன்றாய்த் தெரியும். தர்மலிங்கநயினார் இதற்குமுன் குட்டியப்பகிராமணி தெருவில் குடியிருந்தார். இவருடைய தகப்பனார் திருவள்ளூருக்கு சமீபத்திலிருக்கும் நெல்வேலியில் வசித்துவந்தார் அடிக்கடி குட்டியப்பகிராமணி தெருவிலிருக்கும தம்முடைய பிள்ளைவீட்டிற்கு வருகிறதுண்டு. நான் பார்த்திருக்கிறேன். எனக்கு ஒரு ஆண்குழந்தையும் இரண்டு பெண்குழந்தைகளுமிருக்கிறார்கள். தர்மலிங்கநயினாருடைய தகப்பனுக்கு ஜோசியம் தெரியும். இவர் என்னுடைய குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக்கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருடைய கையெழுத்து நன்றாய்த்தெரியும். (பிரியாதியின் குழந்தைகளாகிய ஜெகதாம்பாள் முதலியவர்களுடைய ஜாதகங்கள் இவ்விடத்தில் காண்பிக்கப்பட்டன.) இந்த ஜாதகங்களிலிருக்கும் எழுத்து பிரியாதியின் தகப்பனாருடைய கையெழுத்து. பிரியாதியின் தகப்பனார் என்னுடைய குழந்தைகளுக்கு எழுதியிருக்கும் ஜாதகங்கள் இதோயிருக்கின்றன.

ஜெகதாம்பாளை எனக்குத் தெரியும். அவளுடைய வயது எனக்குத்தெரியாது. பிரியாதியின் பெயர் தர்மலிங்க நயினார். தர்மலிங்க பண்டாரம் என்று பெயர்கொண்டவர் குட்டியப்பகிராமணி தெருவில் எவரும் வசித்ததில்லை. என்னுடையவீட்டிற்கு ஒருபர்லாங்குதூரத்து ரோட்டில் தர்மலிங்கபண்டாரம் என்று பெயர்கொண்டவர் வசித்துக்கொண்டுவந்தார். (கோர்ட்டார் கேள்விக்கு) தர்மலிங்கபண்டாரம் என்பவர் 10 வருஷத்திற்குமுந்தி என்வீட்டிற்கு எதிரில் குடியிருந்தார். அவர் தையல்தொழில் செய்துவந்தார். அவர் இந்தத் தெருவைவிட்டுப்போய் 10 வருஷமாகின்றது. இந்த தர்மலிங்கபண்டாரத்திற்கு ஜெகதாம்பாள் என்றும் பொன்னம்மாள் என்று இரண்டு புத்திரிகளிருந்தார்கள். இந்தக் குழந்தைகள் என்னுடைய வீட்டிற்கு வருகிறதுண்டு. ஆகையால் எனக்குத்தெரியும்.

கிருஷ்ணசாமி ரெட்டியின் வாக்குமூலம்:—நான் மேடவாக்கம் குட்டியப்பகிராமணி தெருவில் குடியிருக்கிறேன். பிரியாதியை எனக்குத்தெரியும். அவருடைய வீட்டிற்கு அடுத்தவீட்டில் நான் குடியிருந்தேன். பிரியாதியின் குமாரத்தி ஜெகதாம்பாளை எனக்குத்தெரியும். இப்போது அவளுக்கு 12 அல்லது 13 வயதிருக்கலாம். பிரியாதியின் தகப்பன் எனக்குத்தெரியும் அவருடைய பெயர் அண்ணாமலை நயினார். அவர் ஜோசியர் அண்ணாமலை பண்டாரம் என்று பெயர்கொண்டவர் ஒருவர் பெரியரோட்டில் குடியிருந்தார். பிரியாதியின் தகப்பனார் அண்ணாமலைநயினார் என்பவர். சில சமயம் புத்திரன் வீட்டில் வந்திருப்பார். சில சமயம் கிராமத்திலிருப்பார். குட்டியப்ப கிராமணி தெருவில் நான் கடந்த 25 வருஷமாய் வசித்துக்கொண்டு வருகின்றேன். அண்ணாமலைநயினார் இறந்துபோய் 10-வருஷமிருக்கும். தர்மலிங்க பண்டாரம் என்று பெயர் கொண்டவர் இந்தத்தெருவில் ஒருவர் வசித்துக்கொண்டுவந்தார். அவர் என்னுடைய வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருந்தார். அவர் இப்போது எங்கே யிருக்கிறாரோ எனக்குத் தெரியாது. அவருக்கு நாலைந்து பெண்குழந்தைகளும் ஒரு ஆண்குழந்தையு மிருந்தார்கள். ஜெகதாம்பாள் என்று பெயருடைய ஒரு பெண்குழந்தையும் அவருக்குண்டு. அண்ணாமலைப்பண்டாரம் என்பவர் டோல்கேட்டிற்குச் சமீபத்தில் வசித்துக்கொண்டுவந்தார். அவர். 5, 6, வருஷங்களுக்கு முந்தி இறந்துபோய்விட்டார். அவருக்கு அப்போது வயது 80 அல்லது 85 யிருக்கலாம்.

(குருக்குக்கேள்விகள் கேட்கப்படவில்லை).

கோர்ட்டார் கேள்விக்கு:—தர்மலிங்க பண்டாரத்தை நான் பார்த்து 7, 8 வருஷமிருக்கும் அவருடைய பெண் ஜெகதாம்பாளுக்கு இப்போது 16 அல்லது 17 வயதாயிருக்கலாம்.

டாக்ட்டர் T. M. நாயரின் வாக்குமூலம்:—(பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டின் குறுக்குக்கேள்விக்கு) அனேகர்களுக்கு நான் வயது சர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறேன். இன்சூரன்ஸ் கம்பெனி தரப்பிலும் அனேகருக்கு வயது சர்ட்டிபிக்கேட்டுகள் கொடுத்திருக்கிறேன். அவைகளெல்லாம உத்தேசத்தின்பேரில் கொடுக்கிற சர்ட்டிபிக்கேட்டே ஒழிய மற்றபடி நிச்சயமாய் நிர்ணயிக்கப்பட்டவைகளல்ல. என்னுடைய பார்வைக்கு என்ன வயது என்று தோற்றுகிறதோ அந்த வயதிற்கு சர்ட்டிபிக்கேட் கொடுப்பேன். நான் கொடுக்கும் சர்ட்டிபிக்கேட் கொஞ்சம்கூட உபயோகம் அற்றதென்பது என்னுடைய அபிப்பிராயம்.

கோர்ட்டார் கேள்விக்கு:—வயதைக்குறித்து டாக்ட்டர்கள் கொடுக்கிற சர்ட்டிபிக்கேட்டைக்கொண்டு மட்டிலும் இன்சூரன்ஸ் கம்பெனியார் வயதை நிர்ணயித்துக்கொள்ளுகிறதில்லை. வேறு சாக்ஷியங்களையும் சேகரித்து வயது நிச்சயப்படுத்திக்கொள்ளுவார்கள்.

டாக்ட்டர் M. கிருஷ்ணசாமி அய்யரின் வாக்குமூலம்:—நான் இதுவரையில் ஒருவருக்கும் வயது சர்ட்டிபிக்கேட் கொடுத்ததில்லை. 12 வயதுவரையில் நான் சரியான வயது நிர்ணயித்து சர்ட்டிபிக்கேட் கொடுக்கக்கூடும்; 12 வயதிற்கு பிறகு சரியான சர்ட்டிபிக்கேட் கொடுக்க என்னால் முடியாது.

ஆனந்தாயி:—(குருக்குக்கேள்விகளுக்கு) என்னுடைய மாமனார் நெல்வேலியில் இறந்துபோனார். அப்போது அவருக்கு வயது 70 அல்லது 80 இருக்கலாம். நான் சமயா சமயங்களில் வண்ணாரப்பேட்டையிலிருக்கும் என்னுடைய தாயார் வீட்டிற்கு வருவதுண்டு.

நான் வண்ணாரப்பேட்டையிலிருக்கும்போது எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. என்னுடைய ஜேஷ்ட குமாரத்தி அங்கம்மாள் மேடவாக்கத்தில் பிறந்தவள். என்னுடைய புருஷனுக்கு வேலையில்லாமல் குடும்பம் கஷ்டம் அடைந்துவந்தபடியால் நான் என்னுடைய மைத்துனன் அமிர்தலிங்கத்தை அழைத்துக்கொண்டு நெல்வேலிக்குப்போனேன் ஜெகதாம்பாள் அவ்விடத்தில் பிறந்தபோது அந்த சமயமிருந்த புருஷர்களில் எவரும் இப்போது உயிருடனில்லை. ஜெகதாம்பாளின் ஜெனனம் அவ்விடத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதோ என்னமோ எனக்குத்தெரியாது. இந்தக் குழந்தை பிறந்தபின் 10, 11, மாதங்கள் அவ்விடத்திலிருந்தேன். நான் சென்னபட்டணத்திற்கு திரும்பி வருவதற்கு முந்தியே கிராமத்திலேயே ஜெகதாம்பாளுக்கு அம்மை குத்திவிட்டார்கள். யார் அம்மை குத்தினதென்று எனக்குத்தெரியாது. குழந்தைக்கு அம்மை குத்தையில் நான் அறுகிலில்லை. அடுத்தபடி எனக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அவன் பெயர் சாம்பமூர்த்தி அவனுக்கு சுப்பிரமணியன் என்று பெயர் வைக்கவில்லை. அவனுக்கு அந்த கிராமத்திலேயே அம்மை குத்தப்பட்டது. வெள்ளிக்கிழமை காலை 7 அல்லது 7½ மணிக்கு நான் மிஷன் அவுசில் நாராயணசாமி அய்யரைப்பார்த்தேன். என்னுடைய பெண்ணிற்கு 17 வயது என்று நான் அவரிடம் சொல்லவில்லை. நான் அவரை பிறகு பார்க்கவில்லை. வயதைக்குறித்தே நான் அவரிடம் யாதொரு பிரஸ்தாபமும் செய்யவில்லை. என்னுடைய புருஷனும் செய்யவில்லை. என்னுடைய மைத்துனர் சுந்தரமும் ஜோசியர். அவருக்கு ஓலையில் எழுதத்தெரியாது. கடுதாசியில் எழுதத்தெரியும். என்னுடைய இரண்டாவது புத்திரனுக்கும் 5-வது குழந்தைக்கும் சுமார் 10 வயதிருக்கலாம். நடராஜன் வண்ணாரப்பேட்டையில் பிறந்தவன். (கோர்ட்டார் கேள்விக்கு) நான் ஜெகதாம்பாளைப்பெற்றபோது என்னுடைய அத்தை என்னுடன் அறையிலிருந்தாள், இப்போது உயிருடனிருக்கிறாள். ஜெகதாம்பாளின் ஜாதகவிஷயமாக என்னுடைய மாமனார் என்னிடம் பேசினதில்லை.

கோர்ட்டார் உத்தரவு:—இந்தக்கேஸ் மறுபடியும் 19உ விசாரணைக்கு எடுக்கப்படும்.

19உ விசாரணை.

பிராசிக்கியூஷன் தரப்புவக்கீல் மிஸ்டர் வெங்கட்டசுப்பையருக்குப்பதில் அவருடைய சகோதரர் வக்கீல் மிஸ்டர் T. S. நாராயணசாஸ்திரியார் ஆஜராகி தம்முடைய தமயனார் ஹைக்கோர்ட்கிரிமினல்செஷனில் ஒரு கேசிற்கு வக்காலத்துவாங்கியிருக்கிறபடியால் இன்றைய தினம் இந்தக்கேசிற்கு வரமுடியவில்லை என்றும் விசாரணையைத் தள்ளிவைத்துக் கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார். மிஸ்டர் ரிச்மெண்டு ஆக்ஷேபித்தார்.

பிராசிக்யூஷன் தரப்பு சாக்ஷிகளைக்கிராஸ் செய்யும்படியாக கோர்ட்டார் மிஸ்டர் ரிச்மெண்டிற்கு உத்திரவு செய்தார்கள்.

சபாபதி கிராமணியின் வாக்குமூலம்:—(குருக்குக் கேள்விகளுக்கு) அண்ணாமலைநயினார் இறந்துபோவதற்கு5,6.மாதங்களுக்குமுந்தி அவர்ஏதோ எழுதிக்கொண்டிருந்ததை நான்பார்த்தேன்.இவருடைய குழந்தையின் தேகஸ்திதியை அறிந்துகொள்ள விரும்பினேன். அவருடைய வீட்டிற்குப்போனபோது குழந்தையின் தேகஸ்திதி எப்படியிருக்கிறதென்று கேட்டேன். அவர் சௌக்கியமாகயிருக்கிறதென்றுசொன்னார். அவருக்கு வாசிக்கத்தெரியும்; ஓலையிலெழுதத்தெரியும். சுங்கன் கேட்டிற்குச்சமீபத்தில் வசித்துக்கொண்டிருந்த அண்ணாமலைநயினாருடைய பந்துக்கள்பெயரையும் எனக்குத் தெரியாது.அண்ணாமலைப்பண்டாரம் டோல்கேட்டிற்கு சமீபத்தில் வசித்துக்கொண்டுவந்தார். தகப்பனும் பிள்ளையும் ஆகிய இருவரும் டோல்கேட்டிற்கு சமீபத்தில் வசித்துக்கொண்டுவந்தார்கள். தர்மலிங்கம் தெருவில் குடியிருந்தான். அதேதெருவில் நானும் குடியிருந்தேன். தர்மலிங்கபண்டாரம் என்னுடைய வீட்டிற்குச் சமீபத்தில் வசித்துக்கொண்டிருந்தானென்று நான் இதற்குமுன் என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது பிசகுதான். தர்மலிங்கபண்டாரம் டோல்கேட்டிற்குச்சமீபத்தில் வசித்துக்கொண்டிருந்த தாக இதற்குமுன் சொல்லியிருந்தால் அதுவும் பிசகு தான், அண்ணாமலைப் பண்டாரத்தின் பந்துக்கள் ஜீவி திருக்கிறார்களென்று என்னால் சொல்ல முடியாது பிரியாதின் தகப்பன் வெம்பாக்கம் கிராமத்தைச்சேர் தவரென்று என்னால் சொல்லமுடியாது. ஓலையில் எழு தப்பட்டிருக்கும் எழுத்துக்கள் அண்ணாமலையின் கை யெழுத்து மாதிரியாயிருக்கின்றது. சுந்திரத்தின் கை யெழுத்தை நான்பார்த்ததில்லை. எனக்குக்காண்பிக்கு ஓலைஜாதகம் என்னுடையது. பிரியர்தியின் தகப்ப ருடையபெயர் அண்ணாமலைநயினார் அவருக்குப்பண் டாரம் என்கிற பட்டப்பெயரே கிடையாது. ஜெகதா பாளுக்கு சுமார் 7-அல்லது 8-வயதாகயிருக்கும்போது இறந்துபோன பையனுக்கு 3-வயதிருக்கலாம். ஜெக தாம்பாளைப்பற்றி எனக்கு இப்போது யாதொருசமா சாரமும் தெரியாது. தர்மலிங்கநயினார் விட்டிற்குப்ப கத்து வீட்டில் கடந்த 20வருஷகாலமாக வசித்துக் கொண்டு வருகின்றேன். பிரியாதிக்கு பண்டாரமென் பெயரே கிடையாது. அவருடைய தகப்பனருக் அண்ணாமலைநாயனாரென்று பெயர்.

கிருஷ்ணசாமிரெட்டியின் வாக்குமூலம்: — ஜெக தாம்பாள் என்னுடைய கிராமத்தில் பிறந்தவள். அ ளுக்கு வயது 12 அல்லது 13 இருக்கலாம். டோ கேட்டிற்குச் சமீபத்தில் வசிக்கும் அண்ணாமலையின் பந்துக்கள் இன்னார் என்று எனக்குத்தெரியாது அவர் இறந்துபோனபோது அவருக்கு ஒருபுத்தி னிருந்தான். அவர் இறந்துபோனபோது அந்த புத்திரனுக்கு வயது 30; அவன்பெயர் அண்ணாம நயினார்; பண்டாரமென்று சொல்லி அவனைக்கூப்பி கிறதில்லை. பிரியாதியின்தகப்பன் இறந்துபோனபோது அவருக்கு வயது 75. பிரியாதியின் தகப்பன் வெம்பா கம் கிராமத்தைச்சேர்ந்தவரா அல்லவா என்று என குத்தெரியாது. பிரியாதியை தர்மலிங்கபண்டார என்று எவரும் கூப்பிடுகிறதில்லை.

இதன் பிறகு பாரிஸ்டர் ரிச்மெண்டு டிபன்ஸ்தரப்பு சாக்ஷிகளை விசாரணைசெய்ய ஆரம்பித்தார். அப்போது வக்கீல் மிஸ்டர் நாராயணசாஸ்திரியார் முன்கேட்டுக்கொண்டபடி விசாரணையைத் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

கோர்ட்டார் டிபன்ஸ்தரப்பு சாக்ஷிகளை விசாரணை செய்யும்படி மிஸ்டர் ரிச்மெண்டுக்கு உத்திரவு செய்தார்கள்.

மேஜர் ராபர்ட்சன் வாக்குமூலம்:—நான் சென்னப்பட்டணம் இரண்டாவது ஜில்லா சர்ஜன்; வைத்திய இலாக்காவில் கடந்த 20-வருஷகாலமாக வேலைபார்த்து வருகின்றேன். ஜெகதாம்பாளைப்பார்த்து நான் வயது நிர்ணயித்தேன். 18 - வயதிருக்கலாமென்பது என்னுடைய அபிப்பிராயம். வயது நிர்ணயிப்பதில் எனக்கு மிகுந்த அனுபோக மிருக்கின்றது. நெட்டாலுக்குப் போகிறவர்களுக்கு வயது பார்த்து நிர்ணயிக்கும் வேலையில் 5-அல்லது 6-வருஷம்இருந்திருக்கின்றேன். அதைத்தவிர கடந்த 15-வருஷமாக ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் அனுபோகமுண்டு. பாக்டரியில் வேலைசெய்கிறவர்களுக்கு வயது நிர்ணயித்து சர்ட்டிபிகேட் கொடுக்கும் சர்ஜனாகவுமிருந்தேன். பெற்றோர் அற்ற ஏழைப் பெண்பிள்ளைகளுக்கு கடந்த 2-வருஷகாலமாக மெடிக்கல் ஆபீஸராகவுமிருந்து வருகின்றேன்.

சாதாரணமான மனிதர்கள் வயது உத்தேசமாய்ச் சொல்லுவார்கள். ஆனால் டாக்டர்கள்போல அவர்கள் சரியானவயது சொல்லமுடியாது. வயதுகண்டு பிடிப்பதற்குஅநேக உபாயங்களிருக்கின்றன. (இந்தவிடத்தில் வயதுகண்டு பிடிப்பதற்குள்ள வயித்திய சாஸ்திரமுறைகளைச்சொன்னார்.) நான் நிர்ணயிக்கும் வயது ஒன்று 6-மாதம் அதிகமாகயிருக்கும் அல்லது குறைவாகயிருக்கும்.

கர்னல் பிரௌன்னிங்கின் வாக்குமூலம் :—நான் ஜெனரல் ஆஸ்பிட்டலில் சீனியர் மெடிகல் ஆபீசர். மெடிகல் காலேஜிற்குப் பிரின்சிபலாக 37-வருஷமாக இந்த உத்தியோகத்திலிருந்து வருகின்றேன். என்னுடைய உத்தியோகமுறையில் ஆயிரங்கணக்கான பேர்களுக்கு வயது நிர்ணயித்திருக்கிறேன். ஜெகதாம்பாளுக்கும் வயது நிர்ணயித்தேன். அவளுக்கு 18-அல்லது 18-க்கு மேற்பட்ட வயதாக இருக்குமென்று எண்ணுகின்றேன். அவள் 18-வயதுக்குக் கீழ்ப்பட்டவளென்று யாரேனும் சொன்னால் அது பிசகாகும். (மற்றப்படி வயது கண்டுபிடிப்பதற்கான வைத்திய சாஸ்திர முறைகளைச்சொன்னார்.)

நாராயணசாமி அய்யர்:—நான்போலீஸ் சப் இனிஸ்பெக்டர். வேப்பேரி டிவிஷனி லிருக்கிறேன். 19உ ஜூலைமீ சூளை லண்டன் மிஷின் அவுசிற்குப் போயிருந்தேன். ஜெகதாம்பாளுக்கு வயது 17-என்று தர்மலிங்கம் சொன்னான். அவன் என்னிடம் பிரியாதுகொடுக்கவில்லை. மிஷின் துரைசானி என்னைக் கூப்பிட்டனுப்பினார். அப்போது வயது என்னவென்று பிரியாதியைக் கேட்டேன். 17-வயது என்று பதில்சொன்னான். அவளுடையதாயாரும் அப்படியே என்னிடம் சொன்னாள். புருஷனும் பெண்சாதியும் இருவரு மிருந்தார்கள்.

ராமகிருஷ்ணனின் வாக்குமூலம்:—நான் சென்னப்பட்டணம் முனிசிபல் ஆபீசில் கிளர்க்காகயிருக்கிறேன். (இவர் 1886ஆ 1889—வருஷங்களின் ஜெனனரிஜிஸ்டரைக்கொண்டுவந்து காண்பித்தார்) 1886-ம்ஆ த்திய ரிஜிஸ்டரில் நவம்பர்மீ த்தில் கீழ்ப்பாக்கம் குட்டிகிராமணித்தெருவில் தர்மலிங்கபண்டாரத்திற்கு ஒரு குழந்தை பிறந்திருந்தது என்று பதியப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த குழந்தை பெண்குழந்தையென்று எழுதப்படவில்லை. கோர்ட்டார் இந்த ரிஜிஸ்டரை எக்சிபிட்டாக தாக்கல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஜெகதாம்பாளின் வாக்குமூலம்:—நான் தர்மலிங்க பண்டாரத்தின் புத்திரி; என் தகப்பனாரை தர்மலிங்கநயினாரென்றும் கூப்பிடுவார்கள். நான் பிரமாணமாய்ச் சொல்லுவேன். எனக்குவயது 18-க்கு மேலாகிறது. நாங்கள் சூளைக்கு குடிவருவதற்குமுந்தி குட்டிகிராமணித்தெருவில் குடியிருந்தோம். அந்தத்தெருவில் என்னுடைய தகப்பனாரைத் தவிர தர்மலிங்கப்பண்டாரம் என்று பெயர்கொண்ட வேறெவரும் வசித்ததில்லை. என்னுடைய பாட்டன்பெயர் அண்ணாமலைப்பண்டாரம் அண்ணாமலைப்பண்டாரம் என்று பெயர்கொண்ட எவரும் டோல்கேட்டிற்குச் சமீபத்தில் வசித்ததில்லை. இதற்குமுன் என் ஜாதகத்தை நான்பார்த்திருக்கிறேன். இப்போது எனக்குக் காண்பிக்கப்படும் ஜாதகம் என்னுடையதல்ல. என்னுடையதகப்பனார் சூளைக்குக் குடி வந்தவுடன் சுந்தரமும் எங்களுடன் வசித்துவந்தான். அமிர்தலிங்கம் எங்களுடன் வசிக்கவில்லை. என்தகப்பனார் தையல்வேலை செய்துவந்தார். அச்சமயம் வைத்தியமும் செய்துவந்தார். எனக்கு இரண்டு சகோதரர்களிருக்கிறார்கள். அவர்களிருவரும் மேடவாக்கத்தில் பிறந்தார்கள். என்னுடைய தாயாருக்கு கடைசி குழந்தைப் பிறக்கும்போது எனக்கு என்னவயது என்று எனக்குத் தெரியாது.

கோர்ட்டார் கேள்விகளுக்கு :—நான் என்னுடைய ஜாதகத்தைப்பார்த்திருக்கிறேன். அது இவ்விடத்திலில்லை. எனக்குத் தமிழ்வாசிக்கத்தெரியும். நான் என் ஜாதகத்தைப்பார்த்ததில்லை. அதன்குறிப்பைமட்டிலும் பார்த்திருக்கிறேன். தர்மலிங்கத்தின் குமாரத்தி ஜெகதாம்பாளென்று எழுதப்பட்டிருந்தது. அதில்நான் பிறந்தவருஷமாதமும் எழுதப்பட்டிருந்தது. அந்த வருஷமாதத்தை நான்மறந்து போய்விட்டேன். இந்த ஜாதகக் குறிப்பை இரண்டுமாதத்தற்கு முந்திபார்த்தேன். அதுவீட்டிலிருந்த பெட்டியிலிருந்தது. நான்பெட்டியைத்திறந்து அதை எடுத்துப்பார்த்தேன். ஏனெனில் எந்த வருஷம் பிறந்தேனென்று அறிந்துக்கொள்ள எனக்கு விருப்பமாகயிருந்தது.

கேள்வி :—கோர்ட்டாருக்கு உண்மையைச் சொல்லு?

ஜவாப்பு :—ஆம். அப்படியே சொல்லுகிறேன்.

கே:—ஜாதகம் ஓலையிலெழுதப் பட்டிருக்கிறதா அல்லது நோட்டுபுத்தகத்தி லெழுதப்பட்டிருக்கிறதா?

ஜ:—ஓலையில்.

கே:—நீ பிறந்த வருஷத்தை ஏன் பார்த்தாய்?

ஜ:—நான் சாதாரணமாய்ப் பார்த்தேன். என்னுடைய வீட்டிலுள்ள எல்லோரும் பார்க்கிற வழக்கம் அதினால் நானும்பார்த்தேன்.

கே :—இதற்குமுந்தி நீ பார்த்ததில்லையா ?

ஜ :—இல்லை.

கே :—நீ பார்த்தது இதுதான் முதல் தடவையோ ?

ஜ :—இதற்குப்பிறகு இரண்டு மூன்று சமயங்களிலும் பார்த்திருக்கிறேன்.

கே :—ஒருக்கால் வேடிக்கையாய் பார்த்தாப்போலிருக்கிறது.

ஜ :—இல்லை. வீட்டில் ஜாதகங்களிருக்கும்போது அதைப்பார்க்கமாட்டார்களா ?

கே :—உன்னுடைய ஜாதகம் எழுதப்பட்டிருந்த ஓலையை நீ எடுத்துவைத்துக்கொண்டாயோ ?

ஜ :—இல்லை. யாதொரு காரணமுமில்லாமல் நான் பெட்டியைத்திறந்து ஜாதகத்தை எடுத்துப்பார்த்தேன்.

கே :—உன்னுடைய பெற்றோர்களை விட்டுவிட்டு ஏன் போய்விட்டாய் ?

ஜ :—கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துக்கொள்ள எனக்கு விருப்பமாகவிருந்தது. அதனால் வந்துவிட்டேன்.

கே :—உன் பெற்றோர் வீட்டைவிட்டு வந்தபோது ஒண்டியாகவா வந்தாய் ?

ஜ :—ஆம் தனியாய்த்தான் வந்தேன். மிஷன் அவுசிற்குள் நுழையும்போது என் தம்பிவந்து பிடித்து இழுத்தான். நான் வீட்டைவிட்டு வரும்போது இரவு 7-அல்லது 7½-மணி இருக்கலாம்.

கே :—உன் தம்பியைப்பற்றி என்ன சொல்லுகிறாய் ?

ஜ :—நான் மிஷன் அவுசிற்குள் போகும்போது என்தம்பிவந்து என்னைப்பிடித்து இழுத்தான். என்னை விட்டுவிடு என்றுசொன்னேன். போய்விட்டான்.

கே :—நீ மிஷன்வீட்டிற்கு ஏன் போனாய் ?

ஜ :—ஜனங்கள்வந்து என்னை தொந்திரவுசெய்யாமலிருக்கும்பொருட்டு அவ்விடத்திற்குப்போனேன் கிறிஸ்தவமதத்தில் சேரவேண்டியதாக விருந்ததாலும் நான் அவ்விடத்திற்குப் போனேன்.

கே :—அந்த மிஷன் அவுசில் உன்னைச்சேர்த் துக்கொள்ளுவார்கள் என்று எப்படிதெரியும் ?

ஜ :—மிஷன் அவுஸ் என்று ஒன்றிருந்தால், வயதுமட்டிலும் சரியான வயதாக இருக்கிறவிஷயத்தில் அவ்விடத்தில் சேர்த்துக்கொள்ளவாமாட்டார்கள்? சேர்த்துக்கொள்ளுவார்கள் என்று எனக்குத்தெரியும்.

கே :—நீ கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துக்கொள்ளப் போகிறதை உன் பெற்றோருக்குச் சொன்னதுண்டா?

ஜ :—இல்லை.

கே :—நீ மிஷன் அவுசிற்குப் போகப்போகிறதையும் உன்னுடைய பெற்றோருக்குச் சொன்னதுண்டா ?

ஜ :—இல்லை. நான் சொல்லவில்லை.

கே :—ஏன் உன்னுடைய வீட்டைவிட்டு இரவில் 7½-மணிக்கு வந்தாய் ?

ஜ :—ஒருவர் கண்ணுக்கும்படாமல் மிஷன் அவுசிற்குவர அப்படி வந்தேன்.

கே :—உன் பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு புறப்பட்டு மிஷன் அவுசிற்கு வந்திருப்பதாக துரைசாணிகளுக்குச் சொன்னியா ?

ஜ :—நான் சொன்னேன்.

கே :—நீ மிஷன் அவுசிற்குவரப் பிரியமாயிருந்தது துரைசாணிகளுக்குத் தெரியுமோ ?

ஜ :—அவர்களுக்குத் தெரியாது.

கே :—உன்னுடைய வீட்டிற்குத் திரும்பிப்போகும்படி உனக்கு புத்திமதி அவர்கள் சொன்னார்களா ?

ஜ :—திரும்பிப்போகும்படி சொன்னார்கள். நான் போகமாட்டேன் என்று சொன்னேன்.

கே :—கிறிஸ்தவ மதத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

ஜ :—லூதரன் மிஷன் பள்ளிக்கூடத்தில் கிறிஸ்தவ மதத்தைப்பற்றி படித்தேன்.

கே :—எவ்வளவு காலம் படித்தாய் ?

ஜ :—இரண்டு மூன்று வருஷம் படித்தேன்.

கே :—இப்போது நீ சேர்ந்திருக்கிற மிஷனுக்கும் லூதரன் மிஷனுக்கும் யாதொரு சம்பந்தமில்லையே அப்படியிருக்கும்போது இந்த மிஷனுக்கு ஏன் போனாய் ?

ஜ :—இந்த மிஷனில் என்னைச் சேர்த்துக்கொள்வார்களென்று எனக்குத்தெரியும்.

கே :—இந்த மிஷனைப்பற்றி உனக்கு எப்படித் தெரியும்.

ஜ :—இந்த மிஷனைச்சேர்ந்த மாணுக்கர்களுடன் சேர்ந்து பலதடவை வெளியே போயிருக்கிறேன். ஆகையால் இந்த மிஷனைப்பற்றி எனக்குத்தெரியும்.

கே :—இந்த மிஷன்காரர்கள் உனக்கு எப்போதாயினும் படிப்புச்சொல்லிக்கொடுத்த துண்டோ ?

ஜ :—இல்லை.

கே :—ஆனால் ஏன் இந்த மிஷனுக்குப்போனாய் ?

ஜ :—எனக்கு இஷ்டமிருந்தது நான் போனேன்.

கே :—இந்த மிஷனைப்பற்றி உனக்கு எப்படித் தெரியும் ?

ஜ :—அந்த மிஷன்காரர்கள் எத்தனையோ பெண்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கே :—இந்த மிஷனைச்சேர்ந்த பைபில் போதிக்கும் ஸ்திரீகள் உனக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கவில்லையோ ?

ஜ :—அவர்கள் எனக்கு பைபில்மட்டிலும் சொல்லிக்கொடுத்தார்கள்.

கே :—பைபிலை உனக்கு யார் சொல்லிக்கொடுத்தது ?

ஜ :—மேரி ஹன்னா

கே :—இன்னும் யார் சொல்லிக்கொடுத்தது ?

ஜ :—வேறொருவரும் எனக்கு பைபில் போதிக்கவில்லை. ஆனால் மேரி ஹன்னாவுடன் பார்த்தம்மாள் என்கிற ஸ்திரீ வருகிறதுண்டு.

கே :—மேரி ஹன்னா என்கிற ஸ்திரீ லண்டன் மிஷனைச்சேர்ந்த ஸ்திரீயா ?

ஜ :—ஆம்.

கே :—அந்த ஸ்திரீதானே உனக்குபைபில்சொல்லிக்கொடுத்தது ?

ஜ :—ஆம்.

கே :—மார்த்தம்மாள் உன்னுடைய வீட்டிற்கு வருகிறதுண்டல்லவா ?

ஜ :—ஆம்.

கே :—எவ்வளவு காலமாக அவர்கள் உன்னுடைய வீட்டிற்குவந்து போய்க்கொண்டிருந்தார்கள் ?

ஜ :—கடந்த 5, 6-வருஷகாலமாக.

கே :—அவர்கள் உனக்கு பைபில் போதித்துக்கொண்டுவந்தது உன்னுடைய பெற்றோர்களுக்குத் தெரியுமோ ?

ஜ :—ஆம். என்னுடைய வீட்டிலிருக்கிற எல்லோரும் பைபில் பிரசங்கத்தைக் கேட்கிறதுண்டு.

கே :—நீ கிறிஸ்தவமதத்தில் சேர்வதில் அவர்களுக்கு என்ன ஆக்ஷேபனையிருக்கிறது ?

ஜ :—அவர்களுக்கு ஆக்ஷேபனையில்லை.

கே :—அவர்களுக்கு ஆக்ஷேபனையில்லையென்று உனக்குத் தெரிந்திருந்தால் நீ ஏன் வீட்டைவிட்டு வந்திருக்கிறாய் ?

ஜ :—கிறிஸ்தவ மதத்தில் சேரக்கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள்.

கே :—ஆனால் நீ இதற்குமுன் சொன்னதுபிசகா?

ஜ :—ஆம்.

கே :—ஒரு பையனை விவாகம் செய்துக்கொள்ளும்படி உன்னுடைய பெற்றோர் உனக்குச் சொன்னதில்லையோ ?

ஜ :—சொன்னதுண்டு.

கே :—இந்தக் காரணத்திற்காகவா நீஇந்து மதத்தை விட்டுவிட்டாய் ?

ஜ :—இந்துக்களுடன் சேர்ந்திருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. என்னுடைய விவாகம் நிகழ் ஆவணி மாதத்தில் நடத்துவதாய் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

கே :—உனக்கு விவாகம் நடக்கப்போகிறதென்று நீ எப்போது கேள்விப்பட்டாய் ?

ஜ :—கடந்த ஜூன்மீ (ஆனிமீ)த்தில்

கே :—நீ வீட்டைவிட்டுப் புறப்பட்டு வந்ததற்கு சிறிதுநாட்கள் முந்தியா ?

ஜ :—ஆம்.

கே :—ஏன் வீட்டைவிட்டு வந்தாய் ?

ஜ :—எனக்கு விவாகம் செய்துகொள்ளப்பிரியமில்லை. இந்துமத ஆசாரப்படி விவாகம் செய்துக்கொண்டால் புருஷனுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் அப்போது எனக்கு கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துகொள்ள இடஞ்சலாகயிருக்கும்.

கே :—இப்போது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மிஷனரி துரைசாணிகளை நீ முந்தி பார்த்திருக்கிறாயா ?

ஜ :—ஆம் பார்த்திருக்கிறேன். என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் அப்போது நான் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துக்கொள்ள விரும்புவதாய் ஒருகடிதம் எழுதிக்கொடுத்தேன்.

கே :—அதற்கு ஏதாவது பதில் கிடைத்ததா ?

ஜ :—வந்தது.

கே :—அந்தக் கடிதத்தை இவ்விடம் கொண்டு வந்திருக்கிறாயா ?

ஜ :—இல்லை என்னுடைய வீட்டில் வைத்திருக்கிறேன்.

கே :—அந்தக்கடிதத்தில் என்ன எழுதியிருந்தது.

ஜ :—உண்மையான கடவுளை ஆராதிக்கவிரும்பும் பெண்கள் என்னிடம்வந்தால் நான் அவர்களை அழைத்துக்கொள்ள தயாராயிருக்கிறேன் என்று எழுதப்பட்டிருந்தது.

கே :—நீ வீட்டைவிட்டு வந்தபோது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஸ்திரீகள் உன்னுடைய வீட்டிற்கு வரவில்லையா ?

ஜ :—இல்லை. நான் தனியாகவந்தேன் மறுநாள் காலையில் அவர்களை நான் மிஷன் அவுசில் கண்டேன்.

இந்தப்பெண் சாக்ஷி வாக்குமூலம் சொல்லிக்கொண்டு வரும்போது இவள் அருகில் நின்றுகொண்டிருந்த இவளுடைய தாயார் அடிக்கடி ஐயையோ ! ஐயையோ ! பொய் சொல்லுகிறாளே என்று பலமுறைகூவினாள். அப்போது கோர்ட்டார் "சும்மாவிரு" "சும்மாவிரு" என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்தப்பெண்ணைக் கோர்ட்டார் கேள்விகேட்டு முடிந்தபின்பு பிராசிக்கியூஷன் தரப்பு வக்கீல் மிஸ்டர் நாராயணசாஸ்திரியார் டாக்ட்டர் மேஜர் ராபர்ட்சனை சுருக்கமாகக் கிறாஸ் செய்தார். இதன்பிறகு மிஸ்டர் நாராயணசாஸ்திரியார் விசாரணையைத் தள்ளிவைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, கோர்ட்டார் இந்தக்கேசை முன்னிட்டு திரளான ஜனங்கள் கோர்ட்டிற்கு வருகிறபடியால் இந்தக்கேசை சீக்கிரம் பைசல் செய்துவிடவேண்டுமென்று சொல்லி சனிக்கிழமை தினம் மறுபடியும் இந்தக்கேஸ் விசாரணைசெய்யப்படுமென்று சொன்னார்கள்.

ஆகஸ்ட்டுமீ 24உ.

தீர்ப்பு :—இந்த மாதிரி கேசில் பிராசிக்கியூஷன் தரப்பார் அந்தப் பெண் 16-வயதிற்குக் கீழ்பட்டவளென்று ருஜூப்படுத்தவேண்டும். அப்படி ருஜூப்படுத்தாத விஷயத்தில் பிராசிக்கியூஷன் தரப்பாருடைய கேஸ் தவறிப்போய் விட்டதென்று எண்ணவேண்டும். இதன்பிறகு கோர்ட்டார் ஜாதகவிஷயமாக கொடுக்கப்பட்ட சாக்ஷியத்தைப்பற்றி பேசி பிராசிக்கியூஷன் தரப்பார் 12 - வருஷத்திற்கு முந்தி எழுதின ஜாதகத்தைக் கொண்டுவந்து காண்பித்திருக்கிறார்கள்—என்றும் ஆனால் அதை எழுதின மனுஷனை சாக்ஷியாகக் கூப்பிட்டு ருஜூப்படுத்தவில்லை என்றும் சொன்னார். ஜாதகம் எப்படி எழுதப்பட்டதென்றும்—யார் எழுதினார் என்றும் ஒருவரும் சாக்ஷியம் சொல்லவில்லை. எழுதப்பட்ட ஜாதகம் யாரிடமாவது காண்பிக்கப்பட்டதென்றும் ருஜூப்படுத்தப்படவில்லை. இப்போது கோர்ட்டில் காண்பிக்கப்படும் ஜாதகம் எப்படி பிரியாதியின் வசத்திற்கு வந்ததென்றும் தெரியவில்லை. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு ஜாதகம் கூடியசீக்கிரத்தில் யாரிடமாவது காண்பிக்கப்பட்டதா என்று கோர்ட்டார் கவனிக்கவேண்

டும். இப்படி கவனித்ததில் ஜாதகம் ஜூலை 19உ முதல் 22உவரையில் எவரிடமும் காண்பிக்கப்படவில்லை. ஜெகதாம்பாளின் உண்மையான ஜாதகத்தை பிரியாதி உடைத்தாயிருந்தால் ஏன் அதைபாதிரி துரைசானிகளுக்கு உடனே காண்பித்திருக்கக்கூடாது. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு கோர்ட்டார் ஜாதகம் உண்மையானது என்று ருஜுப்படவில்லை என்று தீர்மானித்துவிட்டார்கள். இதன்பிறகு பிராசிக்கியூஷன் தரப்பில் சாக்ஷியம் சொன்ன டாக்டர் நாயர் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யர் வாக்குமூலங்களை பரிசீலனைசெய்து பேசினார். இவர்களுடைய வாக்குமூலம் கோர்ட்டார் வயதைக் குறித்து ஒரு முடிவுக்கு வரும்படியான உதவியைச் செய்யவில்லை.

இந்த டாக்டர்கள் எவ்வளவு அதிக அனுபோகமடைந்திருக்கிறார்களோ அவ்வளவிற்குத் தகுந்தபடி கோர்ட்டார் இந்த கேசை முடிவு செய்வதற்கு அவர்களிடமிருந்து எவ்வளவு உதவி எதிர்ப்பார்த்தார்களோ அவ்வளவு உதவி அவர்களுடைய வாக்கு மூலத்தால் கிடைக்க வில்லை என்றும் இவர்கள் வயது கண்டு பிடிப்பதற்கு வைத்திய சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் முறைகள்நம்பப்படக்கூடியதாகவில்லை என்றும் இவர்கள் வயது நிர்ணயிப்பது உத்தேசமான வயது என்றுசொல்வதும் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. ஆகையால் டிபன்ஸ் தரப்பார் விட்டிருக்கும் டாக்டர் சாக்ஷியத்தை நம்பத் தயாராகயிருக்கிறோம். இதுவுமன்றி பிராசிக்கியூஷன் தரப்பார் சாக்ஷிகளும் விட்டார்கள். தர்மலிங்க பண்டாரம் என்னும் வேறொரு மனிதனிருந்ததாகவும் அவனுக்கு பல குமாரத்திகளும் ஒரு ஆண்பிள்ளையு மிருந்ததாகவும் அந்தப்பெண்களுள் ஒரு பெண்ணிற்கு ஜெகதாம்பாள் என்று பெயர் என்றும் இந்த சாக்ஷிகள் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் ஷை தர்மலிங்க பண்டாரம் இப்போது எங்கேயிருக்கிறான் என்றும் அவனுடைய மற்ற பெண்களுடைய பெயர் என்னவென்று கேட்டால் தெரியவில்லை என்றும் சொல்லுகிறபடியால் இவர்களுடைய சாக்ஷியத்தை நம்ப முடியவில்லை. ஆகையால் கோர்ட்டார் டிபன்ஸ் தரப்பார் விட்ட டாக்டர் சாக்ஷிகளாகிய லெப்ட்டினன்ட் கர்னல் பிரௌனிங், லப்ட்டினினட் கர்னல் ராபர்ட்சன் ஆகிய இருவர்கள் வயதைக் குறித்துச் சொல்லி யிருக்கும் சாக்ஷியத்தை நம்ப வேண்டியதாயிருக்கின்றது. இவர்கள் அந்தப் பெண்ணிற்கு 18-வயதிற்கு மேலிருக்கவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறார்கள். மேலும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நாராயணசாமி அய்யர் தம்மிடம் பிரியாதியும் பிரியாதியின் பெண்சாதியும் தங்களுடைய புத்திரி 17-வயது என்று சொன்னதாக சாக்ஷியம் சொல்லி[illegible] ஆகையால் பிராசிக்கியூஷன் [illegible]யிருக்கிறார்கள்.

கே :—நீமிஷன் ஹை [illegible] தரப்பார் ஜெகதாம்பாள் 16-வயதுக்குக் கீழ்பட்டவள் என்று ருஜுப்படுத்தத் தவறிப்போய் விட்டார்கள். ஆகையால் குற்றவாளிகளை விடுவிக்க வேண்டுமென்று தீர்ப்புச்சொன்னார்கள்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

கொலை.

ஒருவனுக்கு ஒரு குழந்தைபிறந்தது அந்தக்குழந்தை பிறந்தபின்பு அவனுக்கு வறுமைகாலம் சம்பவித்து கஷ்டப்பட்டான். அதனால் தகப்பன் தன்னுடைய குழந்தையை காளிசந்நிதானத்திற்கு எடுத்துக்கொண்டு போய் அதை வெட்டியெறிந்துவிட்டு தனக்கு காளிமேலிருந்த ஆத்திரத்தைக் காண்பிக்கும்பொருட்டு தன்கழுத்தையும் வெட்டிக்கொள்ள எத்தனித்தான். இந்த இரு குற்றங்களுக்காக இவன்பேரில் கொலைக் குற்றம் ஸ்தாபனைசெய்யப்பட்டு தண்டனைவிதிக்கப்பட்டது.—மகாராணி V. ஜேப்சண்ட்பஸ்டில் 4, வீக்கிலி ரிப்போர்ட்டர் 60.

தேவஸ்தானம்.

ஒரு தேவஸ்த்தானத்தைச்சேர்ந்த உற்சவத்திற்குப் பணம்கொடுத்து நடத்துவதற்கு இந்த தேவஸ்த்தானத்தின் சுவாமியை கும்பிடும் ஒவ்வொருவனுக்கும் பாத்திதையிருக்கிறது. அந்தஉற்சவத்தைக்குறிப்பிட்ட ஒருவன்தான் நடத்தவேண்டும் மற்றவர்கள் அதை நடத்துவதற்குப் பணம்கொடுக்கக் கூடாதென்று சொல்ல முடியாது. தேவஸ்த்தான தர்மகர்த்தர்களாயினும் அல்லது டிரஸ்டிகளாயினும் ஒரு குறிப்பிட்ட உற்சவத்தை ஒரு குறிப்பிட்ட மனுஷன் நடத்தவேண்டுமென்று அவனுடன் ஏற்பாடுசெய்துகொள்ளப் பாத்தியமுடையவர்களாயிருந்தபோதிலும் அதே உற்சவத்தை நடத்த வேறே சிலர் பணம் கொடுத்தபோதிலும் அதையும் பெற்றுக்கொண்டு உற்சவத்தை இன்னும் சிறப்பாய் நடத்தவேண்டும். ஒரு தேவஸ்த்தானத்தைச்சேர்ந்த ஒரு உற்சவத்தை நடத்த தனக்கு ஒருவனுக்குமட்டிலும் பாத்திதை உண்டென்று எவனும் சொல்லமுடியாது. என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—வைத்தியனாதர் V. சந்திரசேர் 15. மதிராஸ் லா ஜெர்னல் 458.

பர்மா ஆக்ட்.

தகப்பன் இறந்துபோனபின்பு அவனுடைய புத்திரர்கள் எத்தனைபேர்களிருந்தபோதிலும் அவர்கள் சொத்தை சமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டுமென்பது லோயர்பர்மாவிலிருக்கும் புத்தமதத்தைச்சேர்ந்த பர்மர்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்ட சட்டமாகயிருந்துவருகின்றது.—11. பர்மா-62.

[illegible] பிரிவு கவுன்சில்.

மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்கள் பிரிவுகவுன்சிலில் ஒரு அப்பீல்வியாஜ்ஜியம்தாக்கல்செய்யப்பட்டது; பிரிவுகவுன்சிலர்கள் இந்த அப்பீலில் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை ஒருவிதமாய்ப்பார்த்து டிக்கிரி கொடுக்கும்படியாக ஹைக்கோர்ட்டாருக்கு இந்த அப்பீலை திருப்பி அனுப்பினார்கள்.

ஹைக்கோர்ட்டில் சில ஜட்ஜிகள் கோர்ட்டு கூடி பிரிவு கவுன்சிலர்கள் உத்திரவுசெய்தபிரகாரம் கணக்கு வழக்குகளைப்பார்த்து டிக்கிரீ கொடுத்தார்கள். இந்த

டிக்கிரிக்கு விரோதமாக மறுபடியும் பிரிவுகவுன்சிலில் அப்பீல் தாக்கல் செய்யமுடியாதென்று சொல்லமுடியாது. டிக்கிரித்தொகை ரூபாய் பதினாயிரத்திற்கு மேற்பட்டிருந்தால் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

குடும்ப ஏற்பாடு.

ஒருகுடும்பத்தார் செய்துக்கொண்ட ஏற்பாட்டால் அக்குடும்பச்சொத்திற்கு அனந்தர வார்சாகவர பாத்தியதையுடைய ஒருவன் அல்லது ஒருவள், அச்சொத்துக்கள், செய்துக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டிற்கு விரோதமாக, பரா்தீனம் செய்யப்பட்டால் அப்பராதீனங்கள் தம்மைக் கட்டுப்படுத்த மாட்டாவென்று கோர்ட்டார் கூறும்படி டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—அம்மாக்கண்ணு V. ரெங்கநாதன். 15. மதிராஸ். லா ஜர்னல் 342.

விபக்தமாகாத ஹிந்து குடும்பம்.

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் இறந்துபோய்விட்டான். இவனுடையவிதவை 1889ஆம்த்திய 7-வது ஆக்டின்படி வார்சு சர்டிபிகேட் வாங்கிவிட்டாள். இறந்துபோனவன் பேரிலிருக்கும்நிலுவைகளை வசூல் செய்துகொள்ள தமக்குப் பாத்தியதையிருக்குதென்று கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படியாக ஷை இறந்துபோனவனுடைய சகோதரன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் இறந்துபோனவனுடைய பெண்ஜாதிக்கு வார்சு சர்ட்டிபிக்கேட் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் கோர்ட்டார் இந்தவியாஜ்ஜியத்தைப் பிடித்து விசாரணை செய்யலாமென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—சின்னப்பா V. துளசி. 15 மதிராஸ். லா ஜெர்னல் 399.

ஹிந்து லா.

ஒரு சிற்றப்பனும் அண்ணன்மகனும் சேர்ந்த ஒரு ஹிந்துகுடும்பத்தில் சிற்றப்பன் இறந்துபோனபிறகு அவனுடைய குமாரத்தி ஹிந்துலாப் பிரகாரம் குடும்பச்சொத்திற்கு வார்சாகவர பாத்தியமற்றவள் என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.— அம்மாக்கண்ணு V. ரெங்கநாதா 15. மதிராஸ். லா. ஜெர்னல் 392.

ஹிந்துலா.-உயில்.

ஒருவன் தனக்குள்ள ஸ்தாபரசங்கம சொத்துக்கள் சகலவற்றையும் தன்னுடைய தாயாருக்கு உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோய்விட்டான். அந்த உயிலில் அவனுடைய பெண்சாதி யெத்தனைகாலம் அவனுடையதாயாருடன் வசித்துவருகிறாளோ அதுபரியந்தம் அவளுக்கு அன்னவஸ்திரம்கொடுத்து வரும்படியாக யெழுதப்பட்டிருந்தது. தாயார் சிலகாலம் சென்று அந்தச்சொத்துக்களை தனக்கு இஷ்டப்பட்ட ஒருவனுக்குஉயில் எழுதிவைத்தாள். அச்சொத்துக்களை உயில் எழுதிவைக்க இவளுக்கு அதிகாரமில்லையென்று இவள் பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டபோது தாயாருக்கு தானமாகக் கொடுக்கப்படும் சொத்து ஹிந்துலாபிரகாரம் நிபந்தனைக்குட்பட்ட சொத்தாக மாட்டாதென்றும் தானம் செய்யப்பட்ட சொத்து அவளுடையசொந்த சொத்தாய்விட்டதென்றும் அவள் அதை தன்னிஷ்டப்படி பராதீனம்செய்ய பாத்தியமுடையவளென்றும் கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—32 கல். 1051.

சுவாதீன அடமானம்.

ஒரு சொத்து சுவாதீன அடமானம் வைக்கப்பட்டது. சுவாதீன அடமானப்பத்திரத்தில் சொத்தை, அடமானம் பெற்றுக்கொண்டிருக்கிறவன் வசத்தில் ஒப்புவிக்க அடமானம் வைத்தவன் தவறிப்போனால் அடமானத்தின்பேரில் கொடுக்கப்பட்டதொகைக்கு வட்டி கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. வட்டிகட்டிக்கொடுக்கும்படி சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

முஹம்மதியச் சட்டம்.

"க்ஷியா"வகுப்பைச்சேர்ந்த முகம்மதியன் ஒருவன் வார்சில்லாமல் இறந்துபோய்விட்டால் அந்தச்சொத்து கவர்ன்மெண்டாருடன் சேர்த்துக்கொள்ளப்படுமென்றும் அப்பேர்க்கொற்ற சொத்துக்கள் பள்ளிவாசல்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தவழக்கம் இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்றும் பம்பாய் ஹைக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

கேஸை மாற்றுவது.

ஒரு ஜில்லா ஜட்ஜி ஒருகேஸைப் பாதி விசாரணை செய்திருந்த போதிலும் இந்தக்கேஸை விசாரணை செய்து பைசல்செய்யும்படியாக அடிஷனல் ஜில்லா ஜட்ஜிக்கு அனுப்பக்கூடாதென்று கல்கத்தா ஹைக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

தேவஸ்தான கமிட்டி.

ஒரு காண்டிடேட் தேவஸ்தானகமிட்டி அங்கத்தினராவதற்கு அருகற்றவர் என்று ருஜுப்படுத்தவேண்டுமானால் அவர் வோட்டுக் கொடுத்தவர்களுக்கு பணம்கொடுத்து அதற்காக அவர்கள் தனக்கு வோட்டுக் கொடுக்கும்படியாகச் செய்தாரென்று ருஜுப்படவேண்டும்.

ஒரு காண்டிடேட் தனக்கு வோட்டுக்கொடுக்கும்படியாக போலீங்ஸ்டேஷனுக்கு வருகிறவர்களுக்கு ரயில் பிரயாணச்செலவும் வண்டிச்சத்தமும் கொடுத்தாரென்று ருஜுப்பட்டால் அந்த காண்டிடேட் இப்படிபணம் கொடுத்ததற்காக வோட்டர்கள் வோட்டுக்கொடுத்திருக்கிறார்கள் என்றும் காண்டிடேட் வோட்டுக்கொடுத்து பணம் பெற்றிருக்கிறார் என்று எண்ணப்படும். வோட்டர்களுக்குப் பணம்கொடுத்தது தனக்குவோட்டுக்கும் படியாக வல்லவென்று ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு காண்டிடேட்டைச் சேர்ந்தது என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—கிருஷ்ணசாமி V. சிவசாமி 15. மதிராஸ் லா ஜெர்னல் 449.

அடிமை.

A. என்பவன் 9 வயதுடைய ஒருபெண்ணைக் கிரயத்திற்குவாங்கி தன்னுடைய சகோதரனுக்கு விவாகம் செய்துவைத்தான். ஒருபெண்ணை அடிமையாக விற்றானென்பதாக இ. பி. கோ. 370-வது பிரிவில் சொல்லப்

பட்டிருக்கும் குற்றத்திற்கு A. என்பவன் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டான். பெண்ணை விவாகம் செய்து கொடுத்திருக்கிறபடியால் A. என்பவன் இ. பி. கோ. 370-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கு இலக்காகமாட்டான் என்று பஞ்சாப் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

BOARD'S PROCEEDINGS AND COLLECTOR'S ORDERS.

போர்ட் புரோசீடிங்ஸ்களும் கலெக்டர் ஆர்டர்களும்.

RULES OF THE SPECIAL TEST-EXAMINATION OF THE VILLAGE OFFICERS.

கிராம நவுக்கர்களின் ஸ்பெஷல் டேஸ்டு பரிட்சை.

"கிராம நவுக்கர்களின் ஸ்பெஷல் டெஸ்டு" என்னும் பரிட்சை வருஷா வருஷம் கர்ணன், உதவி கர்ணன், மணியக்காரன், முன்சீபு இந்த வேலைக்கு வருபவர்கள் லாயக்காயிருக்கிறார்களா வென்பதை அறிய நடத்தப்படும்.

(i) கர்ணம் வேலைக்கு வருபவர்கள் அடியிற்கண்ட விஷயங்களில் தேறவேண்டும்.

(1) வில்லேஜ் மானுயல் கணக்குகள்.

(2) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்களும், வேலைகளும்.

கர்ணன் வேலைக்கு வருபவர்கள் லாண்டு ரிக்கார்டைச்சேர்ந்த ஒரு ஆபீசரால் அல்லது ஒரு ஜில்லா சர்வேயரால் வைக்கப்பட்ட கர்ணன்கள் பள்ளிக்கூடத்தில் சர்வேயில் ஏற்பட்ட பயிற்சி யடைந்ததாகவாவது அல்லது சர்வே ஆபீசர் ஒருவரால் வைக்கப்பட்ட கர்ணன்கள் பள்ளிக்கூடத்தில் சர்வே பரிட்சையில் தேறினதாகவாவது காட்டக்கூடிய சர்ட்டிபிகேட்டுகளை தாக்கல் செய்யவேண்டும்.

(ii) மணியகார் அல்லது முன்சீபு வேலைக்கு வருபவர்கள் அடியிற்கண்ட விஷயங்களில் தேரவேண்டும்.

(1) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்களும் வேலைகளும்

(2) கிராம சுகாதாரம்.

3. பரிட்சைக்கு சேர்த்துக்கொள்ள கட்டவேண்டிய (பீஸ்) இந்தஜில்லாவில் வேலையிலிருக்கிற கணக்கு, உதவிகணக்கு (அசிஸ்டாண்டு கர்ணம்) ரெட்டிகள் அல்லது முன்சீபுகள் இவர்களுடைய வம்சத்தில் சேர்ந்தவர்களாயிருந்தால் 12-அணாவும், மற்ற இதரர்கள் எல்லாரும் 4-ரூபாயும் கட்டவேண்டியது. கிராம நவுக்கர்களுடைய வம்சத்தார்களென்றும் அதினால் குறைந்தவீதம் பரிட்சை கட்டணம் கட்ட பாத்தியதை உடையவர்களென்றும் சொல்லிக்கொள்ளும் ஆசாமிகள் துவக்கத்தில் தங்கள் தாலூகா தாசில்தாரிடமாவது டிவிஷனல் டிப்டிதாசில்தாரிடமாவது விண்ணப்பிக்கவேண்டியது. சரியான விசாரணையின்பேரில் அவர் பந்துத்துவத்தை சொல்லி ருஜு சர்ட்டிபிகேட்டு கொடுப்பார். இந்த சர்ட்டிபிகேட்டை திரஜரி ஆபீசரிடத்தில் கட்டணத்துடன் ஆஜர்படுத்தவேண்டும். பந்துத்துவத்தைப் பற்றி சந்தேகமாவது விவகாரமாவது ஏற்பட்டால் அது விஷயத்தைக்குறித்து டிவிஷனலாபீசரவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

4. இந்த பரிட்சையானது ஒவ்வொரு ஜில்லாவில் தனித்தனியாக நடத்தப்படும். கலெக்டருடைய பூரா அதிகாரத்திற்குட்பட்டு இருக்கும்.

5. வருஷத்தில் ஒருதரம் ஒவ்வொரு டிவிஷனல் ஆபீசருடைய எட் குவார்ட்டரிலும் அவருடைய மேல் பார்வைக்குட்பட்டும் ஜில்லாகெஜட்டில் கலெக்டரால் பிரசுரமாகும் தேதியிலும் நேரத்திலும் முழு ஜில்லாவில் ஏககாலத்திலும் பரிட்சை நடத்தப்படும்.

6. வேறு யிடத்தில் ஆஜராக டிவிஷனலாபீசரவர்களால் ஸ்பெஷலாக அநுமதி பெற்றாலொழிய ஆசாமிகள் தாங்கள் எந்த டிவிஷனைச்சேர்ந்தவர்களோ அந்த டிவிஷன் கஸ்பாவில் பரீட்சைக்கு ஆஜராகவேண்டியது.

7. பரிட்சை எல்லா விஷயங்களிலும் எழுத்து மூலமாயும் அந்தந்த ஜில்லா சுதேச பாஷையிலும் நடத்தப்படும். ஜில்லா முழுதிலும் ஒவ்வொரு விஷயத்திலும் அதே கேள்விகள் போடப்படும். அந்த கேள்விகளை கலெக்டர் நியமனம் செய்யும் ஆபீசர் அல்லது ஆபீசர்களால் தயார்செய்யப்பட்டு அவர்களே அதன் விடைகளை மதிப்பார்கள்.

8. ஒவ்வொரு விஷயத்திற்கும் ஏற்படுத்தியிருக்கும் மார்க்கில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு வாங்கினாலொழிய ஒரு ஆசாமியும் பரிட்சையில் தேறினதாக எண்ணப்படமாட்டான். ஆனால் மாணாக்கர்கள் பரிட்சையை பாகம் பாகமாக பாஸ்செய்யலாம்.

9. பரிட்சை முடிந்த கூடியசீக்கிரம் அவரவர்களுடைய மார்க்குப் பிரகாரம் தேறின மாணாக்கர்களின் பெயர்களைக் காட்டக்கூடிய நோட்டீசு ஒன்று ஜில்லா கெஜட்டில் கலெக்டர் துரையவர்களால் பிரசுரம் செய்யப்படும். அதில் இந்த நோட்டீசு பிரசுரமான கெஜட்டின் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் சர்ட்டிபிகேட்டுகளுக்காக மனு செய்துக் கொள்ளவேணுமென்றும் கண்டிருக்கும்.

10. பரிட்சையில் தேறின ஆசாமிகளுக்கு டிவிஷனல் ஆபீசரவர்களால் கையெழுத்து செய்யப்பட்ட சர்ட்டிபிகேட்டுகள் மனு செய்துகொண்டால் கொடுக்கப்படும். இதுகளில் ஆசாமியின் வித்தியாசமில்லாமல் இன்னவரென்று காட்டப் போதுமான ஆளைக்குறித்த அடையாளங்கள் சேர்த்துள்ளதாயிருக்கவேண்டும். 9-வது விதியின்கீழ் பிரசுரமாகும் நோட்டீசில் கண்டிருக்கும் மூன்றுமாத தவணை கடந்து செய்துக்கொள்ளும் எல்லா மனுக்களின்பேரில் நான்கு அணா தண்டம் விதிக்கப்படும். அசல் சர்ட்டிபிகேட்டு காணாமல் போய்விட்டதாக டிவிஷனல் ஆபீசருக்கு திருப்திகரமாகத் தோற்றியபோது அந்த சர்ட்டிபிகேட்டின் டூப்ளிகேட் காப்பி நான்கு அணா கட்டணம் கட்டினால் கொடுக்கப்படும். காணாமல்போனதற்கு காரணம் மனுதாரருடைய அஜாக்கிரதையாலல்லாமல் மற்ற எந்த காரணத்தினாலும் ஏற்பட்டிருந்ததாக டிவிஷனல் ஆபீசர் அபிப்பிராயப்பட்டால் அவர் செலுத்திய கட்டணம் தொகை வாபசுசெய்யலாம்.

11. பரிட்சைக்கு சேர்த்துக்கொள்ள விண்ணப்பங்கள் நமூனக்கள்பேரில் பதிந்து டிவிஷனலாபீசருக்கு பரிட்சை குறிப்பிட்ட நாளுக்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னமே அனுப்பவேண்டும். இந்த விண்ணப்பத்துடன் இந்த விளம்பரத்தின் 3-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் கட்டணத் தொகையை செலுத்தினதற்காக கஜானா ஆபீசரால் கொடுக்கப்படும் ஒரு ரசீதையும் அப்படி செலுத்திய கட்டணம் 12-அணாவாக இருந்தால் தாசில்தாரால் அல்லது டிப்டி தாசில்தாரால் கொடுக்கப்பட்ட பந்துத்துவ விஷயமான ஒரு சர்ட்டிபிகேட்டையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

12. இந்த பரிட்சைக்குச்சேர்த்துக்கொள்ள அனுப்பும் விண்ணப்பத்துடன் ஆஸ்பிடல் அசிஸ்டெண்டு ஹோதாவுக்குக் குறையாத ஒரு மெடிகல் ஆபீசர் அல்லது மெடிகல் சபார்டினேட்டு இவர்களால் கொடுக்கப்பட்ட அம்மைகுத்தின விஷயமான சர்ட்டிபிகேட் அனுப்பவேண்டும். அவ்விதமாக முந்தின பரிட்சைகளில் ஆஜர்படுத்தின ஆசாமிகள் மறுபடியும் ஆஜர்படுத்தவேண்டியது அவசியமில்லை.

13. கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி இந்த ஜில்லாவிலுள்ள ஷெடியூல் ஜில்லாக்களைத் தவிற மற்ற இராஜதானி முழுவதும் இந்த விளம்பரம் அமுலில் வரும்.

14. ஜமீன்தாரி இலாக்காவிலிருக்கப்பட்ட கிராம நவுக்கர்களுக்காவது அல்லது 1898ஹு ஜூலைமீ 1உயில் வேலையிலிருக்கிற கிராம நவுக்கர்களுக்காவது அல்லது அவர்களுடைய வார்சுதாரர்களில் அந்த தேதியில் 18-வயதுக்குமேற்பட்டுள்ளவர்களாயிருந்து 1897-ஹு ஜூலைமீ 1உயில் அல்லது அதற்குமுந்தி தங்கள் தங்கள் டிவிஷனல் ஆபீசர்களுடைய ஆபீசுகளில் பெயர் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறவர்களுக்காவது மேற்கண்ட உத்திரவுகள் பொருந்தமாட்டாது. ஆனால் இதைத் தவிறவும் கலெக்டரால் அல்லது டிவிஷனல் ஆபீசரால் ஸ்பெஷலாக விலக்கானவர்கள்போக மற்ற எந்த ஆசாமியும் கர்ணம் மணியக்காரன் அல்லது முன்சீபு வேலைக்கு இந்த விளம்பரத்தில் இரண்டாவது ஆர்டிகளில் குறிப்பிட்ட பரிட்சையில் தேறினாலொழிய தாக்கல் செய்யப்படமாட்டான்.

கலெக்டர் ஸ்டாண்டிங் ஆர்டர்.

1907ஹு ஜூன்மீ 18உ உள்ள 454 P. நெ. கவர்ன்மெண்டு உத்திரவுடன் தெரிவிக்கலான எலிகளை கொல்வதற்கு தக்கவிதத்தை கண்டுபிடிக்கும் விஷயமாயுள்ள இந்தியா கவர்ன்மெண்டாருடைய அடியில் வரும் கடிதத்தை சகலருக்கும் தெரியும்படியாக பிரசுரம்செய்யப்படுகிறது.

எலிகளை கொல்வதற்காக தக்கமுறையைக் கண்டுபிடிக்கும் விஷயமாக பொம்பாய் பாக்டிரியலாஜிகல் கலாசாலையில் இப்போது நடத்திவரும் பரிசோதனை சம்பந்தமாக இந்தியாவின் அநேக இடங்களில் வயல்களில் திடீரென்று ஏராளமான எலிகள் ஏககாலத்தில் காணப்பட்டு அவை அதி தீவிரமாக மறுபடியும் மறைபட்டுப்போவதும் ஒருக்கால் அவைகளில் எபிடூடிக் வியாதி காணப்படுவதாலுண்டாகுமென்றும் ஆகவே அவ்வியாதியின் காரணத்தைத்தனிப்படுத்தி மற்ற பிராணிகளுக்கு அபாயமில்லாவிடில் பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள எலிகளில் அதை விடுவதற்காக அவ்வியாதியை அபிவிர்த்திசெய்யலாமென்றும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்களின் அனுமதியின்பேரில் சென்னை இராஜதானியிலுள்ள எல்லா ஜில்லா அதிகாரிகளுக்கு கேட்டுக்கொள்ளப்படுவது என்னவெனில்:—வயல்களில் எங்கேயாவது திடீரென்று ஏராளமான எலிகள் காணப்படுமானால் உடனே தந்திமூலமாக பொம்பாயைச்சேர்ந்த பரேலுள்ள பாக்டிரியலாஜிகல் கலாசாலை டைரெக்டருக்கு சமாச்சாரம் தெரிவித்தவுடன் அவர் கலாசாலையிலிருந்து ஒரு அதிகாரியை ஜாகாவுக்குப்போய் அவ்வியாதியின் காரணங்களை பரிசோதிக்க அனுப்பப்படுவார்.

MAGESTERIAL CIRCULARS.

மாஜெஸ்டிரியல் சர்க்குலர்.

1907ஹு ஜூன்மீ 8உய ரேவினியூ ஆர்டர் நெ. 1442.

ரெயில்வே கம்பேனி சிப்பந்தியைச்சேர்ந்த ஒருவன் கிரிமினல் கோர்ட்டாரிடம் அப்பீல் அல்லது ரிவியூ மனு தாக்கல்செய்தால் அந்தமனுவிற்கும் அதனுடன்கூட அனுப்பப்படும் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பிற்கும் கோர்ட் பீஸ் ஆக்ட்டின்பிரகாரம் ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டுமென்று போர்டார் நினைப்பதுபோல கவர்ன்மெண்டாரும் நினைக்கின்றார்கள்.

மைசூர் சமஸ்தானத்தில் ஜெயில்தண்டனை அடைந்துக்கொண்டிருக்கும் ஒருவனை பிரிட்டிஷ் இலாக்காவில் ஏதேனும் குற்றம்செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு அவன் பிரிட்டிஷ் இலாக்காக் கோர்ட்டுகளுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் இலாக்காக் கோர்ட்டார் விரும்பினால் மைசூரிலிருக்கும் பிரிட்டிஷ் ரெசிடெண்டிற்கு எழுதிக்கொள்ளவேண்டுமென்றும் அப்படி எழுதிக்கொண்டால் அந்தக் கைதிகள் அனுப்பப்படுவார்களென்றும் தூக்கில் போடப்போகிற கைதிகள் மட்டிலும் அனுப்பப்பட மாட்டார்களென்றும் பிரிட்டிஷ் இலாக்காவிற்கு அனுப்பப்படும் கைதிகள் எத்தனைகாலம் பிரிட்டிஷ் இலாக்காவிலிருக்கிறார்களோ அந்தகாலம் மைசூர் சமஸ்தானத்தில் அடையவேண்டிய தண்டனையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாதென்றும் மேன்மைதங்கிய மகாராஜா அவர்கள் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

காம்பன் சேஷன்.

ஒருநிலத்தை, லான்ட் அக்குலேட்கஷிஷன் ஆக்டின்படி கவர்ன்மெண்டார் வாங்கும்போது கலெக்டர் அதற்கு கிரையம் நிர்ணயித்ததை நிலத்தின் சொந்தக்காரன் ஆக்ஷேபிக்காவிட்டால் கலெக்டர் நிர்ணயித்த தொகையை ஒப்புக்கொண்டவனாக எண்ணப்படுவான் என்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு தீர்ப்புக்கடனாளியை வாரண்டின்பேரில் அரஸ்ட்செய்த ஒருகோர்ட் சேவகன் அரஸ்ட் செய்யும் காலத்தில் கோர்ட்டு மூடப்பட்டிருந்தால் கோர்ட்டு திறக்கும் தினத்தில் ஆஜர்செய்ய கடமைப்பட்டவன்; கோர்ட்டு மூடப்பட்டிருக்கிறகாலத்தில் கடனாளி ஓடிப்

போகாவண்ணம் டிக்கிரிபெற்றவன்வீட்டில் கோர்ட்டுச் சேவகன் அடைத்துவைத்திருப்பது கடனாளியை அநியாயமாகவும் சட்டவிரோதமாகவும் அடைத்துவைத்திருப்பதாகவும் எண்ணப்படமாட்டாது.

மூன்றுபேர்கள் சேர்ந்து தடிகளை வைத்துக்கொண்டு ஒருவனை எதிர்த்தார்கள். அவர்களுள் ஒருவன் மண்டையில் அடிக்க அடிப்பட்டவன் இறந்து போய்விட்டான். ஆனால் இன்னான் தலையில் அடித்தான் என்று ருஜுப்படவில்லை. இப்படியிருக்கும்போது மூன்றுகுற்றவாளிகள்பேரிலும் கொலையாகாத அநியாய மரணம் உண்டுபண்ணின குற்றம் ஸ்தாபிக்கக் கூடாதென்றும் கடுங்காயம் விளைவித்தக்குற்றம் ஸ்தாபிக்கவேண்டுமென்று அலகாபாத் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

GOVERNMENT ORDERS.
கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1907-ம் ௵ ஆகஸ்டு௴ 3௳ இந்தியா கவர்ன்மெண்டு ஆர்டர் நெ. 6462-78.

சமுத்திரவழியாகவாயினும் அல்லது பூமிவழியாகவாயினும் Pink நிறமுள்ளகொயினமருந்தை பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் கொண்டுவரக் கூடாதென்று ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜெனரல் அவர்கள் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

——ஜுலை௴ 27௳ G O நெ. 410.

தஞ்சாவூர்ஜில்லா மன்னார்குடியிலிருக்கும் பின்லே கலாசாலையை விஸ்தரித்துக் கட்டும்பொருட்டு ரூபாய் பதினாயிரம் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

——ஜுலை௴ 26௳ G O நெ. 1546.

முனிசிபல் ஆபீசில் உத்தியோகமாயிருக்கும் சிப்பந்திகள் பிரைவேட் வேலைசெய்தால் அதற்குப்பணம் பெறுவதைக்குறித்து அனந்தப்பூர் முனிசிபல் கவுன்சிலர்கள் செய்திருக்கும் உபசட்டத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

உபசட்டம்.

முனிசிபாலிட்டியைச் சேர்ந்த எந்த வேலைக்காரனும் முனிசிபல்கவுன்சிலர் உத்திரவின்றி எந்தவிதமான வியாபாரத்திலாவது அல்லது எந்தவிதமானவேலையிலாகிலும் அமரக்கூடாது.

ஆனால் முனிசிபாலிட்டியில் உபாத்தியாயர் உத்தியோகத்திலும் ஜம்னெகஷியம் உபாத்தியாயர் உத்தியோகத்திலு மிருப்பவர்கள் முனிசிபல் கவுன்சிலின் அனுமதியைப்பெற்றுக்கொண்டு பிரைவேட் வேலைகளும் செய்து பணம் சம்பாதித்துக்கொள்ளலாம். இந்த உத்தியோகஸ்தர்கள் அனுமதிகேட்கும்போது அவர்கள் எந்த சர்க்கிலைச் சேர்ந்தவர்களோ அந்த சர்க்கிலிலிருக்கும் பள்ளிக்கூட இனிஸ்பெக்டருடன் முனிசிபல்கவுன்சில்கலந்து ஆலோசனைசெய்து அனுமதி கொடுக்கவேண்டும்.

இந்த உபச்சட்டத்திற்கு மீறி நடப்பவர்கள்முதல் தடவை ரூ. 50 அபராதம் விதிக்கப்படுவார்கள். மறுபடியும்குற்றம்செய்தால் முதலில் அபராதம் விதிக்கப்பட்டதேதிமுதலும் முனிசிபல் கவுன்சில் நோட்டீஸ் கொடுத்த தேதிமுதலும் ஒவ்வொருதினத்திற்கும் ரூ. 10-க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

——ஜுன்௴ 15௳ தீய G. O. நெ 378.

சென்னப்பட்டணத்தி லிருக்கும் பிரசிடென்சி கலாசாலையின் 1906-ம் ௵ த்திய பரிபாலன ரிப்போர்ட்டில் கவர்ன்மெண்டார் டாக்டர் சத்தியநாதன் இறந்து போனது பொதுவாய் இந்தியன் கல்விக்கு ஒரு ஊனம் உண்டாயிருக்கிறதென்றுரிமார்க்குசெய்திருக்கிறார்கள்.

——ஜுலை௴ தீய 122 G. O. நெ. 1414.

1906—1907-ம் ௵ த்திய கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியின் பரிபாலன ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் பார்வையிட்டு அடியிற்கண்ட ரிமார்க்குகள் செய்திருக்கிறார்கள்.

(1) டோல்கேட்டுகளிலிருந்து வசூலான மொத்தத்தொகையில் 100-க்கு 52 பங்குவீதம் முனிசிபாலிட்டியார் ரோட்டுகளைச் செப்பனிடுவதில் செலவிட்டிருந்தபோதிலும் இன்னும் அதிகமாகச் செலவுசெய்யவேண்டும்.

(2) பிரஸ்தாப வருஷத்தில் அம்மைவைக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை சென்ற வருஷத்தைப் பார்க்கிலும் மிகவும் குறைந்துபோயிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதா யிருக்கிறது.

(3) முனிசிபாலிட்டியார் பிரதிதினமும் ஜெனன ரிஜிஸ்டரை கண்ஜாட்டத்தில் வைத்திருந்ததின்பயன் என்னவென்றால் ஜெனனம்பூராய் பதியப்பட்டு சென்ற வருஷ எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாகக் காட்டுகின்றது.

(4) கோயம்புத்தூருக்கு ஜல சப்ளை ஏற்பாடு ஒன்று சானிட்டரி இன்ஜினீர்தயார்செய்து அனுப்பியிருக்கிறார் அதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும் முனிசிபாலிட்டியார் சாக்கடைகளையும் மார்க்கட்டையும் மிகவும் சுத்தமாக வைத்து சுகாதாரத்தை விர்த்திசெய்யவேண்டும்.

(5) அம்மைகுத்தும்பாவத்து ஒன்றைத்தவிர மற்ற மற்றவிஷயங்களில் முனிசிபல் பரிபாலனம் கூடியவரையில் திருப்திகரமாகவே யிருக்கிறதென்று சொல்லவேண்டும். ஆனால் மரணப்பதிவுகள் இன்னும் அதிகமாக முனிசிபாலிடியார் கவனத்தைப்பற்றவேண்டும்.

——ஜுலை௴ 18௳ G. O. நெ. 290.

WORKMAN'S COMPENSATION ACT 1906.
1906-ம் ௵ த்திய வேலைக்காரர்களின் காம்பன்சேஷன் ஆக்ட்.

இந்த ஆக்ட் இங்கிலாண்டிலில் அமுலிலிருக்கிறது இங்கிலாண்டிலிருக்கும் வர்த்தக போர்ட்டார் இந்த ஆக்ட்டின் 7-வது பிரிவிலிருக்கும் C. உட்பிரிவு பிரிட்டிஷ் இந்தியா தேசத்திலும் அமுலிலிருக்கவேண்டுமென்று இந்தியா மந்திரிக்கு எழுத, இந்தியா மந்திரி இந்தியா கவர்னர் ஜெனரலுக்கு எழுத இவர்கள் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கு அறிவித்திருக்கிறார்கள்.

7-வது பிரிவின் C. உட்பிரிவு.

கப்பல் மாஸ்ட்டராகிலும், மாலுமியாகிலும் இன்னும் கப்பல் ஓட்டுவதில் அமர்ந்திருக்கும் எந்த ஆபீசராகிலும் கப்பலிலிருந்து விலக்கப்பட்டாவது அல்லது ...யப்பட்டாவது பிரிடிஷ்காரர்களுக்குச் சொந்தமான ...தசத்தில் விடப்பட்டால் அந்த ஊரிலுள்ள மாஜிஸ்டிரேட் அல்லது ஜட்ஜி, என்ன காரணத்தை முன்னிட்டு ...ந்த ஆபீசரை அந்த ஊரில் விட்டுவிட்டு கப்பல் அல்...து ஸ்டீமர் சென்றுவிட்டதென்று அந்த ஆபீசரின் ...க்குமூலத்தை வாங்கவேண்டும். அப்படி விடப்...ட்ட ஆபீசர் அன்னிய அரசாங்கத்திற்குட்பட்ட தேசத்தில் விடப்பட்டிருந்தால் அவ்விடத்திலிருக்கும் பிரி...ஷ் அரசாங்கத்தின் பிரதிநிதி அந்த ஆபீசரிடம்வாக்குமூலம் பெறவேண்டும். இப்படிப்பெறப்பட்ட வாக்குமூலங்களின் நகல் இங்கிலாண்டிலிருக்கும் வர்த்தக போர்ட்டாருக்கு அனுப்பப்படவேண்டும். ஏதேனும் ...ந்த சந்தர்ப்பங்களைக்குறித்து கோர்ட்டில் வியாஜ்ஜிய ...டவடிக்கை நடந்தால் இந்த வாக்குமூலங்கள் சாக்ஷியமாகவும் தாக்கல் செய்யப்படலாம்.

—ஜுலை௴ G. O. நெ. 1201.

இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட்டின் பிரகாரம் ...ஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சொசைட்டிகள் பண்டுகள் ...தலியவைகளைக்குறித்து ரிஜிஸ்ட்டிரேஷன் இலாகா ...ன்ஸ்பெக்ட்டர் ஜெனரல் ஹானரபில் R. V. சீனிவா...ய்யர் திவான் பஹதூர் C. I E. அவர்கள் அனுப்பிய ...ப்போர்ட்டை கவர்ன்மெண்டார் பார்வையிட்டார்...ள்.

1906-07 ல் 240 - பண்டுகள் தான் ரிஜிஸ்ட்டர் ...சய்யப்பட்டன. இவைகளை ரிஜிஸ்ட்டர் செய்ததால் ...ஜிஸ்ட்டிரேஷன் இலாகாவிற்குவருமானம் ரூ. 44,589. ...துவிஷயத்தில் ரிஜிஸ்ட்டிரேஷன் இலாக்காவிற்குச் ...சலவு ரூ. 1,111.

MADRAS POLICE DEPARTMENTAL ORDERS.
மதிராஸ் போலீஸ் டிபார்ட்மெண்டல் ஆர்டர்கள்.

No. 36.–சந்தேகப்பட்ட ஆசாமிகளின் கூட்டம் (Gangs.)

(1) வால்யம் II பாரம் நெ. 63ல் ஒவ்வொரு ...ல்லா ஆபீசிலும், சப் டிவிஷனிலும், இன்ஸ்பெக்ட்டர் ...ளாலும், ஸ்டேஷன் ஆபீசர்களாலும் ஒரு ரிஜிஸ்ட்டர் ...வக்கப்படவேண்டும்.

போலீசாரால் கவனிக்கப்பட்டுவருகிறதும் அவர்களுடைய நோட்டீசுக்கு வரும்படியான ஒவ்வொருகூட்...த்தையும் அந்தக்கூட்டம் சாஸ்வதமாய் ஒரே விடத்...ல் தங்கியிருப்பதாக விருந்தாலும் சரி அல்லது அலைந்து திரியும் கூட்டமாக விருந்தாலும் சரி இந்த ரிஜிஸ்...டரில் தாக்கல் செய்யப்படவேண்டும்.

(2) எந்தக் கூட்டத்திற்குப் போலீசார் காவலி...க்கவேண்டுமென்பதாக முடிவாய் தீர்மானிக்கவேண்...யவர் போலீஸ் சூப்பிரண்டு. இருந்தபோதிலும் ஒரு கூட்டத்தார் ஒரு போலீஸ் ஸ்டேஷனில் எல்லைக்குள் வந்தவுடன் அந்த் ஸ்டேஷனைச்சேர்ந்த ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் அந்தக்கூட்டத்தாருக்குக் காவல்போடவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் ரிஜிஸ்ட்டரில் தாக்கல்செய்துக்கொண்டு சூப்பிரண்டு உத்திரவை எதிர்ப்பார்த்து தாமே காவல்போடலாம். இப்படி ரிஜிஸ்ட்டர் செய்தபின்பு இதற்கு ஒரு நகல் எடுத்து இந்தக் கூட்டத்தை ரிஜிஸ்ட்டர் செய்வதற்கு காரணம் இன்னதென்பதையும் எழுதி சூப்பிரண்டிற்கு அனுப்பவேண்டும். அவர் இதைப் பார்வையிட்டு காவல்போடவேண்டியது அவசியமா அல்லவா என்று தீர்மானித்து உத்திரவு அனுப்புவார். ஒரு கூட்டத்தார் ஒரு போலீஸ் ஸ்டேஷன் எல்லைக்குள் வந்திருப்பதாக ரிப்போர்ட் செய்யப்பட்டவுடன் போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் சிறிதும் தாமதமின்றிச்சென்று அந்தக்கூட்டம் ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்யப்பட்டு காவல்போடவேண்டிய கூட்டமாவென்று விசாரணைசெய்து அறிந்துகொள்ளவேண்டும். இந்தக் கூட்டத்தாருக்குக் காவல்போடப்பட்டிருக்கும் கான்ஸ்டேபில் அந்தக் கூட்டத்திலிருக்கும் புருஷர்களின் பெயரை ஒரு ஜாப்பிதாவில் பதிவு செய்து வைத்திருக்கவேண்டும். இந்தக்கூட்டத்தார் என்ன என்ன செய்கிறார்களோ எங்கெந்தவிடங்களுக்குப் போகிறார்களோ இது விஷயங்களைக்குறித்து பிரதிதினமும் காவல் போடப்பட்ட கான்ஸ்டேபில்கள் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட்டு அனுப்பவேண்டும். ஒரு கூட்டத்தாருக்கு ஒரே கான்ஸ்டேபிலை காவலாகப்போடுவது பெரும்பாலும் கெடுதலை விளைவிக்கும். இதற்காக போலீஸாபீசர்கள் நாலைந்து கான்ஸ்டேபில்களைச் சேர்த்துக்கொண்டு இரவில் திடீரென்று இந்தக்கூட்டத்தாரைப் போய் பார்வையிடவேண்டும்; அலைந்து திரியும் கூட்டத்தாருக்கு எப்போதும் இரண்டுகான்ஸ்டேபில்களைப் பாராப்போடவேண்டும்.

ஒரு கூட்டத்தார் நாலைந்து கூட்டங்களாகப் பிரிந்துபோனால் எந்தவிடத்தில் அப்படி பிரிக்கிறார்கள் அந்த விடத்திலிருக்கும் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் எல்லாக் கூட்டங்களுக்கும் காவல்போட்டு அனுப்ப சிறிதும் தவறிப்போகக்கூடாது.

ஒரு கூட்டத்திலிருக்கும் ஒரு புருஷனாகிலும் ஸ்திரியாகிலும் காணாமல்போனால் காவலிலிருக்கும் போலீசார் உடனே விசாரணை செய்யவேண்டும்.

THIRD CRIMINAL SESSIONS OF THE MADRAS HIGH COURT.
சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு.

மூன்றாவது கிரிமினல் செஷன்ஸ்.

ஜட்ஜி :—ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம்.

பணப்பை திருடியகேஸ்.

முனுசாமி என்கிற பரசுராமன் என்கிற ராகவன் ஒரு பணப்பையைத் திருடியதற்காக 7 வருஷம் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான். இவன் ஜெயிலிலிருந்து வந்தவுடன் 5 வருஷம் வரையில் இவன் இவனுடைய போக்குவரத்துகளை போலீசாருக்கு அறிவிக்கும்படியாகவும் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறான்.

II.

கன்னம்வைத்து திருடியகேஸ்

பலமுறை தண்டனை யடைந்து ஜெயிலுக்குப் போய்வந்த பார்த்தசாரதி முதலி ஒரு வீட்டில் கன்னம் வைத்து பித்தளைப் பாத்திரங்களைத் திருடியதற்காக 7 வருஷங் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான்.

III.

பலவந்தப்புணர்ச்சிசெய்தகேஸ்.

குற்றவாளி :—பொன்னன்.

கேசின் விபரம் :—குற்றவாளி சென்னப்பட்டணம் பேசின்பாலத்தெருவில் ஒரு வீட்டில் குடியிருந்தான். அந்தவீட்டில் பாச்சி என்கிற புத்திரி அறியாதபெண்ணும் அவளுடைய தாயாரும் வசித்துவந்தார்கள். அப்படி வசித்து வரும்போது சென்ற ஜூன்மீ 25உ தாயார் ஏதோ வேலையின்பேரில் வெளியே போயிருந்தசமயத்தில் குற்றவாளி பாச்சி என்கிற பெண்ணைப் பிடித்து இழுத்து கீழேதள்ளி பலாத்காரமாய் புணர்ந்தான். அதினால் அவளுடைய அந்திராங்கபாகத்தில் அனேககாயங்கள் நேர்ந்தன.

கேசின் நடவடிக்கை :—கைதி குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு :—கோர்ட்டார் குற்றவாளியைப்பார்த்து நீ செய்திருக்கும் குற்றம் மிகவும் பெரியகுற்றம். இந்தக்குற்றத்திற்கு ஜென்மதீவாந்திரதண்டனை விதிக்கவேண்டுமென்று சட்டம் கூறுகிறபடியால் உனக்கு ஜென்மதீவாந்திரதண்டனை விதிக்கிறேன் என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

IV.

தோலை திருடியகேஸ்.

குற்றவாளி :—முருகன் என்கிற முருகேசன்.

கேசின்விபரம் :—சென்னப்பட்டணம் ரெயில்வே சால்ட்கொட்டாரத்தில் ரயிலில் ஏற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு வர்த்தகனுக்குச் சொந்தமான தோல்மூட்டைகளில் ரூ. 30 விலைமதிப்புள்ள 28 தோல்களை திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டான். கைதி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

ஜூரர்கள் :—மெசர்ஸ் N. Y. அண்ணுசாமி ராவ் (போர்மன்) J. பிளேயித் V. துரைசாமிப்பிள்ளை, முகமது உசேன் சாயப்பு, ஆமத் உசேன் சாயப்பு, ஜான் அசே, G. M. பிரௌன், E. D. சௌசா, E. M. D. மெல்லோ. K. கிருஷ்ணராவ்.

லாயர்கள் :—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு கிரௌன் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் நன்ஜன்கிரான்ட் பேசினார் குற்றவாளி வக்கீல் வைக்கவில்லை.

கேசின் நடவடிக்கை :—பிராசிக்கியூஷன் தரப்பில் நான்கு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். இவர்கள் எல்லோரும் கைதி தோல்களை திருடிக்கொண்டுவந்ததைக் கண்ணாரப் பார்த்ததாகச் சொன்னார்கள். டிபன்ஸ் தரப்பிற்கு மூன்று சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

கைதியின் ஸ்டேட்மெண்டு :—கைதி தனக்கும் போலீசாருக்குமிருக்கும் விரோதத்தால் இந்தக்கேசை தன்பேரில் ஜோடித்துக்கொண்டுவந்திருக்கிறார்கள் என்றும் இம்மாதிரி ஒரு கேசை போலீசார் தம்பேரில் கீழ்க்கோர்ட்டில் கொண்டுவந்து அபஜெயப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்றும்; தான் அன்றைய தினம் சால்ட்கொட்டாரத்தில் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் தன்னுடைய சகோதரனைப் போய் பார்ப்பதற்குப் போனதாகவும் அப்போது போலீசார் தன்னை வேணுமென்று அரஸ்ட் செய்ததாகவும் சொன்னான்.

ஜூரர்களின் அபிப்பிராயம் :—கைதி குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் கைதிக்கு 7 வருஷ கடின காவல் தண்டனைவிதித்ததுமன்றி இவன் ஜெயிலிலிருந்து வந்தபிறகும் 5 வருஷம் வரையில் போலீசாருக்கு தன்னுடைய போக்குவரத்துக்களை அறிவித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

வீட்டில் திருடியகேஸ்.

காசிமேட்டில் ஒரு வீட்டில்புகுந்து இரண்டு அங்கவஸ்திரங்களையும் சட்டைகளையும் திருடியதாக வடிவேலு என்பவன் குற்றம் சாட்டப்பட்டான். பிராசிக்கியூஷன் தரப்பார் கேசை ருஜுப்படுத்தவில்லை. ஜூரர்கள் கைதி குற்றவாளி அல்லவென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூற கோர்ட்டார் கைதியை விட்டுவிட்டார்கள்.

மூர்மார்க்கட்டு குஜிலியில் கிருஷ்ணசாமி முதலி சட்டை ஜேப்பிலிருந்து இரண்டு கரன்சிநோட்டுகளடங்கிய ஒரு பணப்பையைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வீராகவலு என்பவன் கோர்ட்டாரால் விடுவிக்கப்பட்டான்.

பெரம்பூர் கொலைக்கேஸ்.

குற்றவாளி :—ராகவப்பிள்ளை.

குற்றம் :—1907-ம்ஆ மேமீ பெரம்பூரில் ராஜூமுதலியை கத்தியால்குத்தி கொலையாகும் அந்நியாய மரணம் உண்டுபண்ணினது கொலையாகாத அந்நியாய மரணம் விளைவித்த குற்றம்.

ஜூரர்கள் :—மெசர்ஸ் J. H. ஸ்டோன் (போர்மன்) C. H. ஸ்டிரேக்கர், G. வெங்கட்டரெங்க ராவ், R. C. M. ஸ்டௌட்ஸ், C. B. மாகிடாசன் P. தியாகராயசெட்டி, வேலாயுதாச்சாரி E. E. வெஸ்லி ஓர்க்கி, ஆளவந்தார்செட்டி.

லாயர்கள் :—கிரௌன் பிராசிக்கியூட்டர் பிராசிக்கியூஷன் தரப்பிற்கும், மிஸ்டர் T. வெங்கடசுப்பய்யர். குற்றவாளி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

கேசின்விபரம் :—கிரௌன் பிராசிக்கியூட்டர் அடியிற்கண்டபிரகாரம் கேசின்விவரத்தை ஜூரர்களுக்கு எடுத்துக்கூறினார் :—கொலையுண்ட ராஜூமுதலி என்பவனும் இந்தக்கேசின் குற்றவாளியும் பெரம்பூர் பகிங்ஹாம் மில்லில் வேலைசெய்பவர்கள். இறந்துபோன ராஜூமுதலி என்பவனுடைய மைத்துனன் பச்சயப்ப

முதலியும் பக்கிங்ஹாம் மில்லில் வேலைசெய்கிறான். கொலை நடப்பதற்கு இரண்டுதினங்களுக்குமுந்தி குற்றவாளிக்கும் பச்சயப்பமுதலிக்கும் மில்லில் வேலைசெய்துகொண்டிருக்கும் சச்சரவு உண்டாக குற்றவாளி பச்சயப்பமுதலியை அடித்துவிட்டான். மறுநாளும் அப்படியே அடித்தான். பச்சயப்பமுதலி இரண்டுநாள் ரஜா எடுத்துக்கொண்டு ஒருநாள் சாயங்காலம் யாரிடமோ பேசவேண்டுமென்று மில்லிற்கு சமீபத்தில் போனான். அப்போது மில்லிலிருந்து வந்துகொண்டிருந்த் குற்றவாளி பச்சயப்பமுதலியைப் பார்த்து அவனை அடிக்க எத்தனிக்கையில் அவனுடைய மைத்துனனாகிய ராஜூமுதலி அவனுக்காகப் பரிந்துகொண்டுபோனான். போகவே குற்றவாளி தன்கையில் வைத்துக்கொண்டிருந்த கத்தியால் ராஜூமுதலியைக் குத்த இவன் கீழேவிழுந்து இறந்துபோய்விட்டான்.

முதல் பிராசிக்கியூஷன் சாக்ஷி :—என் பெயர் பச்சயப்பமுதலி (இவன் கிரௌன் பிராசிக்கியூட்டர் சொன்னதுபோலவே சொல்லிவிட்டு) (குருக்குக்கேள்விகளுக்கு) இறந்துபோன ராஜூமுதலி கர்னாட்டிக் மில்லில் வேலைசெய்துவந்தான். என்னுடைய புத்திமதியின்பேரில் பக்கிங்ஹாமில்லில்சேர்ந்து வேலைசெய்து வந்தான். கொலை நடந்தவிடத்தில் ஏறக்குறைய 40 அல்லது 50 மனிதர்களிருந்தார்கள். அந்த சமயத்தில் மில்லிலிருந்து வெகுஜனங்கள் வந்துக்கொண்டிருந்தார்கள். குற்றவாளியை அடிப்பதற்காக நான் போக்கிரிகளை அழைத்துக்கொண்டுபோகவில்லை. இறந்துபோன ராஜூமுதலியும் போக்கிரிகளை அழைத்துக்கொண்டு வரவில்லை. நாங்கள் குற்றவாளியை எதிர்க்கவில்லை. குற்றவாளி ஓடிப்போகவுமில்லை. எத்தனைபேர்கள் அந்தவிடத்திலிருந்தார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. அப்போது இருளாயிருந்தது. மில் வேலைக்காரர்கள் வேலையைவிட்டு 6-மணிக்கு வந்தார்கள். முதலில் குற்றவாளி இறந்துபோனவனைக் குத்திவிட்டு ஓடிப்போய்விட்டான். நான் அவனை துரத்திக்கொண்டு ஓடினேன். பிரேதத்தைச்சுற்றி சுமார் 50 பேர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள். கத்தியைக் குற்றவாளி வேறொருவனிடம் கொடுத்துவிட்டான். அவன் உடனே ஓடிப்போய்விட்டான். அந்தக்கூட்டத்திலிருந்த எவனும் அவனிடமிருந்து கத்தியைப்பிடுங்க முடியவில்லை, கத்தியை எடுத்துக்கொண்டு ஓடினவனை பிடிக்கும்படியாக நான் கூச்சல்போடவில்லை. ஏனென்றால் இறந்துபோய்க்கொண்டிருந்த மனிதனை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். நானும் முனுசாமியும் இந்தக் கத்தியைக் கொண்டுவந்தோம் என்று சொல்லுவது பொய். குற்றவாளியை அரஸ்ட்செய்தபோது அவன் சோதனைசெய்யப்பட்டான். அப்போது அவனுடைய வேஷ்டிகளில் இரத்தக்குறிகளிருந்தன. போலீசார்வசமிருந்த குற்றவாளியின் வஸ்திரங்களில் நான் இரத்தக்குறியைப் பார்க்கவில்லை.

பிராசிக்கியூஷன் தரப்பு இரண்டாவது சாக்ஷி :—என்பெயர் டாக்ட்டர் ரர்பர்ட்சன் நான் மேமீ 16உ இறந்துபோனவனுடைய பிரேதத்தைப்பரிசோதனைசெய்தேன். (இவர் பிரேதத்தின்பேரிலிருந்த காயங்களைக்குறித்துப்பேசி 6 அங்குலமுள்ள கத்தியால் இறந்துபோனவன் குத்தப்பட்டிருக்கவேணுமென்று சொன்னார்.

மூன்றாவது பிராசிக்கியூஷன் சாக்ஷி :—(குருக்குக்கேள்விகளுக்கு) குற்றவாளியை அடிக்கும்படியாக பச்சயப்பமுதலி தயார்செய்தமனிதர்களில் நான் ஒருவனல்ல. நான் குற்றவாளியைகுத்த அவனைத் துரத்திக்கொண்டு ஓடவில்லை. அப்போது விளக்குவைக்கிற சமயம். நான் குற்றவாளியைக்குத்த ஓடினபோது என்கையில் கத்தியிருந்ததாகவும் அந்தக்கத்தி தற்செயலாய் கொலையுண்டவன்பேரில் விழுந்ததென்பதும் பொய். அந்தசமயத்தில் என்கையில் யாதொருவிதமான கத்தியுமில்லை. என்னை அன்று முழுதிலும் போலீஸ்ஸ்டேஷனுக்குவெளியே வைத்திருந்தார்கள்.

நான்காவது சாக்ஷி :—என்பெயர் சிங்காரமுதலி நான் பகிங்ஹாம்மில்லில் பிட்டர்வேலையிலிருக்கிறேன் மேமீ 16உ நானும் இன்னும் சிலரும் ராகவப்பிள்ளையுடன் மில்லைவிட்டு வந்தோம். பச்சையப்பபிள்ளை ராகவமுதலியை அடித்தான். அந்தசமயம் இறந்துபோனவனும் ராகவப்பிள்ளையை அடித்தான். இதன்பேரில் ராகவப்பிள்ளை ராஜூமுதலியை கத்தியால் குத்தினான், ராஜூமுதலி கீழேவிழுந்துவிட்டான். குற்றவாளி ஓடிப்போய்விட்டான். இவனைப் பிடிக்கவந்தவர்களையும் குத்துவதாக கத்தியைக் காண்பித்தான். (குறுக்குக்கேள்விக்கு) குற்றவாளி இறந்துபோனவனைக் கத்தியால்குத்தினதை நான் கண்ணாரப்பார்த்தேன். கத்தி மூன்று அங்குல நீளமிருக்கும். கைப்பிடியும் மூன்று அங்குலமிருக்கலாம். கூட்டமதிகமாயிருந்தபடியால் கத்தியில் இரத்தமிருந்ததா இல்லையா என்று நான் கவனிக்கவில்லை. கத்தியைப் பிறகு யார் எடுத்துக்கொண்டுபோனது என்று எனக்குத்தெரியாது. பிடிக்கவந்தவர்களை குந்துவதாக கத்தியைக் காண்பித்துக்கொண்டு குற்றவாளி ஓடினான். இந்த சம்பவத்தைக் குறித்து நான் எவரிடமும் சொல்லவில்லை. கொலை நடந்த ஸ்தலத்தில் போலீசார் வரும்பரியந்த மிருந்தேன். இறந்துபோனவனை கத்தியால் குத்திவிட்டார்கள் என்று நான் எவரிடமும் சொல்லவில்லை. போலீசார் கொலைநடந்த ஸ்தலத்திற்கு வந்தபோது நான் குற்றவாளியை நான் பார்க்கவில்லை. (கோர்ட்டார் கேள்விக்கு) குற்றவாளி இறந்துபோனவனுடைய தேகத்தில் கத்தியைக்குத்தினதற்கும் உறுவினதற்கும் இடையில் 5 நிமிஷ சாவகாசமிருக்கலாம். இந்த சம்பவத்தைக்குறித்துப் போலீசாருக்குச் சொன்னேன். இறந்துபோனவன் முதலில் குற்றவாளியை அடித்தான் என்று கீழ்க்கோர்ட்டில் சொல்லியிருக்கிறேன்.

ஐந்தாவது பிராசிக்கியூஷன் சாட்சி :—(இவனும் முன்சாக்ஷி சொன்னபடியே சொல்லியிருக்கிறான் குறுக்குக்கேள்விக்கு) நான் ஒருவனுடைய கால்களைவெட்டினதற்காக ஒரு வருஷ கடினகாவல்தண்டனை அடைந்து ஜெயிலுக்குப் போய்வந்திருக்கிறேன். சண்டைகள்போட்டதற்காக இரண்டொருசமயம் அபராததண்டனையும் அடைந்திருக்கிறேன். நான் முன்சாக்ஷியின்வீட்டிற்குப் பக்கத்துவீட்டிலிருக்கிறேன். இறந்துபோனவன் குற்றவாளியை முதலில் அடித்ததாக நான் கீழ்க்கோர்ட்டில் சொல்லியிருக்கிறேன்.

ஆருவது பிராசிக்கியூஷன் சாட்சி:—என்பெயர் மாணிக்கம். நான் எட்கான்ஸ்டேடபில் வேலையிருக்கிறேன். இந்தக்கொலை சமாசாரத்தை நான் கேள்விப்பட்டு கொலைநடந்த ஸ்தலத்திற்குப் போயிருந்தேன். நான் போகும்போது குற்றவாளியைக் கண்டேன். அவனைப் போலீஸ்ஸ்டேஷனுக்கு அனுப்பினேன். கொலைநடந்த ஸ்தலத்தில் பிரேதத்தைக் கண்டேன். அதை பிரேத பரிசோதனைக்காக அனுப்பினேன்.

ஏழாவது பிராசிக்கியூஷன் சாக்ஷி:—கொலைநடந்த தினம் நான் பாரக்ஸ் ரோட்டில் டியூட்டியிலிருந்தேன். "குத்தினான்" என்கிற சப்தம் என்காதில் விழுந்தது. நான் ஓடினேன். குற்றவாளி அப்போது ஓடிக்கொண்டிருந்தான். ராகவப்பிள்ளை அப்போது அரஸ்ட்செய்யப்பட்டான். எட்கான்ஸ்டேபில் வந்தவுடன் குற்றவாளியை டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

டிபன்ஸ் தரப்பு முதல்சாக்ஷி:—என்பெயர் துரைசாமிமுதலி. கொலைநடந்ததினம் நான் மாலை 6-மணிக்கு மில்லைவிட்டு வெளியேவந்தேன். அப்போது பச்சையப்பன்கேட்டில் நின்றுக்கொண்டிருந்தான். முனுசாமி முதலியவர்களும் நின்றுக்கொண்டிருந்தார்கள். பச்சையப்பன் முதலில் குற்றவாளியை அடித்தான். முனுசாமியும் ராஜுவும் அடித்தான். பிறகு இவர்கள் எல்லோரும் சேர்ந்து ராஜுவைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். "குத்திவிட்டு ஓடுகிறான்" என்கிற சப்தம் கேட்டது. குற்றவாளி இறந்துபோனவனைக் குத்தினதை நான் பார்க்கவில்லை. குற்றவாளி ஓடிப்போகிறவனாயிருந்தேன்.

டிபன்ஸ் 2-வது சாக்ஷி:—என்பெயர் வெங்கடகசுப்பன். நான் பக்கிங்ஹாம்மில்லில் நெசுவுவேலை செய்கிறேன். கொலை நடந்ததினம் பச்சயைப்பன் கேட்டில் நின்றுக்கொண்டிருந்தான். பெருத்த கும்பலிருந்தது. அப்போது முனுசாமி என்பவன் தன்னுடைய இடுப்பிலிருந்து ஒரு கத்தியை உறுவிக்கொண்டு கூட்டத்தின் மத்தியில்வந்து நிந்தனையான வார்த்தைகளைப் பேசினான். இதன்பிறகு "கத்தியால் குத்தினான்" என்கிற சப்தம் கேட்டது.

அதன்பிறகு குற்றவாளியின் லாயரும் பிராசிக்கியூஷன் லாயரும் அட்டிரஸ்பேசினார்கள். ஜட்ஜி ஜூரர்களுக்கு கேசின் சாராம்சத்தை எடுத்துக் கூறினபின்பு ஜூரர்கள் ஆலோசனை அறைக்குச்சென்று ஒருமணிநேரம் ஆலோசனைசெய்து திரும்பிவந்து அபிப்பிராயம் கூறினார்கள். 6 பேர்களை கைதி குற்றவாளி என்றும் 3 பேர்கள் நிரபராதி என்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் கைதிக்கு 5 வருஷ கடினக் காவல்தண்டனை விதித்தார்கள்.

N. B. இன்னும் செஷன்விசாரணை நடந்துவருகின்றது. மற்றக்கேள்விகளை அடுத்தமாதக் கெஜெட்டில் காண்க.

CASES FROM INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டிலுள்ள கேசுகள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர். எஸ். சுப்பிரமண்ணியஐயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.

டிக்கிரிபெற்ற இருவரில் முழுத்தொகையும் வசூலித்துக்கொண்ட ஒருவன் மற்றொருவன் வீதத்துக்குக் கட்டுபடவேண்டும்.

சோமசுந்தரம்பிள்ளை—அப்பீல் வாதி—பிரதிவாதி
கிருஷ்ணசாமி நாயுடு வ-று—அப்பீல் பிரதிவாதிகள் (வாதிகள்.)

வியாச்சிய சங்கிரகம்.

அப்பீல் வாதி சோமசுந்தரம் பிள்ளையும் அப்பீல் பிரதிவாதிகள் கிருஷ்ணசாமி நாயுடு வ-றுவும் வேறொருவன்மேல் டிக்ரி பெற்றிருந்தார்கள். அந்த டிக்கிரியின்படி இவ்விரு கட்சிக்காரருக்கும் செலவு தொகை சேரவேண்டியிருந்தது. இதில் சோமசுந்தரம் பிள்ளை என்பவர் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவரிடமிருந்து முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டு கோர்ட்டுக்கு சர்டிபிகேட்டு கொடுத்துவிட்டார். பிறகு அப்பீல் பிரதிவாதிகள் கிருஷ்ணசாமி நாயுடு வ-று தஞ்சாவூர் சப் கோர்ட்டில் தங்கள்வீதம் கிடைக்கவேண்டுமென்று சோமசுந்தரம் பிள்ளையின்மேல் தாவா செய்தார்கள்; இதில் ஏற்பட்ட சிவில் ரிவிஷன் மனுவில் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் அப்பீல் பிரதிவாதிகள் பக்கம் தீர்ப்பு செய்தார்கள்.

இதன்மேல் லெட்டர்ஸ் பேட்டண்டு 15-வது பிரிவின்படி அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—வாதிகள் சொல்வதிலிருந்து பிரதிவாதியின் மேல்வியாச்சியங் கொண்டுவர பாத்தியமுடையவர்களென்று ஹைகோர்ட்டு ஜட்ஜி கொண்ட அபிப்பிராயமே அப்பீல் கோர்ட்டு ஜட்ஜிகளும் கொண்டார்கள். டிக்கிரியினால் வாதி பிரதிவாதிகளாகிய இரு கட்சிக்காரர்களுக்கும் செலவு தொகை சேரவேண்டியிருக்கிறது பிரதிவாதியாகிய சோமசுந்தரம் பிள்ளை டிக்கிரிக்குக் கட்டுபட்டவரிடமிருந்து முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டு கோர்ட்டுமூலமாக சர்ட்டிபிகேட்டு கொடுத்துவிட்டார். இந்த சர்ட்டிபிகேட்டு பிரதிவாதிகளாகிய கிருஷ்ணசாமி நாயுடு வ-றுவை கட்டுப்படுத்தாது; டிக்கிரிக்குக் கட்டுபட்டவரிடம் தொடாமல் வேண்டுமானால் முழுத்தொகையும் பெற்றுக்கொண்ட சோமசுந்தரம் பிள்ளையிடமிருந்து தங்கள் வீதத்தை யடைய வியாச்சியங் கொண்டுவரலாமென்று தீர்ப்புச் செய்து அப்பிலை செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

ரூலிங்ஸ்:—டிக்கிரி பெற்றுக்கொண்ட இருவரில் ஒருவனிடம் முழுத்தொகையையுஞ் செலுத்தி டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவன் சர்ட்டிபிகேட்டு வாங்கிவைத்

திருந்தாலும் மற்றொரு டிக்கிரி பெற்றவனுக்குச் சேரவேண்டிய வீதத்தைச் செலுத்தவேண்டிய கடமையிலிருந்து நீங்கினவனல்ல வென்றும் (2) டிக்கிரி பெற்றவன் டிக்கிரிக்குக் கட்டுப்பட்டவன்மேல் நிறைவேற்றுமல் முழுத்தொகையும் பெற்றுக்கொண்ட டிக்கிரி பெற்றவன்மேல் வியாச்சியங் கொண்டுவரலாமென்றும் தீர்ப்புச்சொல்லப்பட்டது. இ. லா. ரி. 29. சென்னை, 183. (Somasundaram Pillay, V. Krishnasawmy Naidu, I. L. R., 29. Madras. 183).

சீவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

மேல்வாரம்.

சீனிவாச ராகவ அய்யங்கார்—அப்பீல் வாதி.
(மனுதார்)
பிச்சைகாரன் வ-று—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாச்சிய சங்கிரகம்.

முதல் பிரதிவாதி, இரண்டாம் பிரதிவாதிக்கும் வாதிகளுக்குஞ் சொந்தமான அவிபக்த சொத்தைப் பயிரிடுங் குடியானவன். பாகப்பிரிவினையில் வாதிகள் ஒரு பாகச்சொத்தை தங்கள் வீதத்துக்காக அடைகிறதென்று ரிஜிஸ்டரான பாகபத்திரம் வாதிகளும் இரண்டாவது பிரதிவாதியும் செய்துக் கொண்டார்கள். அப்பாகப் பத்திரப்படி தங்களுக்குச் சேரவேண்டிய மேல்வாரத்துக்காக முதல் பிரதிவாதியின் மேலும் இரண்டாம் பிரதிவாதியின் மேலும் வியாச்சியங் கொண்டு வந்தார்கள். இரண்டாம் பிரதிவாதி பேருக்கு வாரப்பத்திரம் எழுதப்பட்டிருக்கிறதால் முதல் பிரதிவாதி கொடுக்காத பட்சத்தில் இரண்டாம் பிரதிவாதி கொடுக்க கட்டுபட்டவரென்று இரண்டாம் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது.

இந்தப் பிராது கும்பகோணம் சப்கோர்ட்டில் 1903ளு 1979 ஸ்மால் நெ ஆக கொடுக்கப்பட்டது. அந்தக் கோர்ட்டு அதிகாரத்துக்குட் பட்டதல்ல வென்றும் தகுந்த கோர்ட்டில் கொடுக்கும்படியாகவும் வேறு காரணம் சொல்லாமல் வாப்ஸ் செய்து விட்டார்கள். பிறகு கும்பகோணம் முன்சீப்கோர்ட்டில் கொடுக்கப்பட்டது. முன்சீப் கோர்ட்டார் ஸ்மால்காஸ் வியாச்சியமாக இருப்பதால் தகுந்த கோர்ட்டில் கொடுக்கப்பட வேண்டுமென்று வாப்ஸ் செய்துவிட்டார்கள். இந்த உத்தரவுக்கும் 1904ளு 1131 நெ. அசல் மனுவுக்கும் விரோதமாக 1904ளு 47 நெ. அப்பீல் மனுதார் கொடுத்தார். டிஸ்டிரிக்ட் முன்சீப்கோர்ட்டார் உத்தரவை மாற்றும் பட்சத்தில் சப் கோர்ட்டார் செய்த உத்தரவு சரியா வென்பதைப்பற்றி சிவில் புரோசிஜர் கோடு 646 பிரிவுப்படி ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்யும்படியாக மனுவில் கண்டிருந்தது. அதே பிரகாரம் ஹைகோர்ட்டிற்கு ரிபர் செய்யப்பட்டது.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் அபிப்பிராயம் முதல் பிரதிவாதி விஷயமாக யோசிக்கும் பட்சத்தில் இப்பிராது மேல் வாரத்தை பற்றியதாயிருப்பதால் ஸ்மால்

காஸ் கோர்ட்டார் பிடிக்க வேண்டிய வியாச்சியமே. இரண்டாம் பிரதிவாதி விஷயமாகப் பார்க்கும்போது "வாதிக்குச் சொந்தமாகிய ஸ்தாபர சொத்தாயிருந்து அதன் வரும்படி பிரதிவாதியால் பிசகி வாங்கப் பட்டிருக்கிறதா" வென்பதை ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்டு 2-வது ஷெடியூல் 31-வது பிரிவுப்படி கவனிக்க வேண்டியது இவ்வபிப்பிராயத்தோடு ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டு ஹைகோர்ட்டாரின் தீர்மானத்துக்கு ரிபர் பண்ணியிருக்கிற காரணத்துக்காக தங்களிடம் வந்த அப்பீலைத் தள்ளிவிட்டார்கள். செலவைப்பற்றி யாதொரு உத்தரவும் செய்யவில்லை.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:— இந்தப் பிராது மேல் வாரத்துக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறதால் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்டு இரண்டாவது ஷெடியூல் 31-வது பிரிவுக்குட் பட்டதல்லவென்றும் ஸ்மால்காஸ் கோர்ட்டார் அதிகாரத்துக் குள்பட்டதென்றும் ஆகையால் இந்தப்பிராதை கும்பகோணம் சப் கோர்ட்டார் பயிலில் வைத்து சட்டப்படி முடிவு செய்ய வேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

ரூலிங்ஸ்:—விபக்த்த குடும்பத்தின் ஒரு பாகஸ்தன் தனக்குரிய மேல் வார வீதத்துக்காக குடியானவன் கொடுக்கக் கடமைப்படாத பட்சத்தில் மேல்வாரம் பத்திரம் வேறொரு பாகஸ்தன் பேரால் மாத்திரம் பிறந்திருந்தால் இவ்விருவர் மேலுங் கொண்டுவரும் பிராது மேல்வாரத்தொகைக்காக ஏற்றப்பட்ட பிராதாக பாவிக்கப்படுமே யல்லாமல் ஸ்தாவர சொத்தின் வரும்படியை பிசகாக வாங்கிக்கொண்ட ஒரு பாகஸ்தன் மேல் அவ்வரும்படியை யடைய தொடரும் ஸ்மால்காஸ் ஆக்டு 2-வது ஸெடியூல் 31-வது பிரிவில் சொல்லிய வியாச்சிய மாகாதென்றுந் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29. சென். 184. Srinevasa Ragava Ayyangar, V. Pichaikaran, I. L. R., Madras, 184.)

அலகபாத் ஹைகோர்ட்டு.

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஜான்ஸ் டேன்லி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சர்வில்லியம் பர்க்கிட்.

வேறொருவருக்கு செய்திருக்கும் உடன்படிக்கை தெரிந்து வாங்கின கிரையம் செல்லாது.

அன்னுமால் வ-ரா—பிரதிவாதிகள் (அப்பீல்வாதி).
பேரலி கலெக்டர்—வாதி (அப்பீல் பிரதிவாதி).

வியாச்சிய சங்கிரகம்.

1867ளு கூதிரி நாபாத்ராம் மகேஸ்புரம் கிராமத்தையும் வேறு சில சொத்தையும் வைத்துவிட்டு இறந்துபோனார். இவர் விதவை அந்தச்சொத்தை அனுபவித்து 1878ளு இறந்துபோனார். பிறகு நாபாத்ராமின் சுவிகாரப்புத்திரனின் மனைவியென்று சொல்லி இச்சொத்துக்களை ராணி நாருயன் குன்வார் அபகரித்துக்கொண்டார்.

1. ஷிப்லால் 2. பியாரிலால் ஆகிய ஒரேதாத்திஉள்ள இரண்டு அனந்தரவார்சுக்கள் 1881௵ ஜூன்௴ 20௳ பேரலி டிஸ்டிரிக்டு ஜட்ஜியினிடம் இச்சொத்துக்களை வசப்படுத்திக்கொள்ள டிக்கிரி பெற்ருர்கள். இவ்வியாச்சியத்துக்கு பணம் உதவி செய்த லால்ஜிமால் என்பவருக்கும் இச்சொத்தில் ஒரு பாகங்கொடுத்தார்கள். பியாரிலால் இறந்துபோக இவருக்கு வார்சாக பெயிரோ பிரசாத் இச்சொத்தின் சிறிது பாகத்தையடைந்தார்.

இவ்வாறிருக்கும்பொழுது ஷிப்லாலும் பெயிரவ பிரசாத்தும் தங்களுடைய வியாச்சியத்தில் தங்களுக்கு நர்பட பிரசாத் செய்த உதவிக்காக 1 ரூ. வரும்படியில் 2 அணு 8 பைசா வரும்படி பாகத்தை நர்படா பிரசாத்துக்குக் கொடுத்துவிடுகிறதென்றும் அவர் பெயரை தங்கள் பெயரோடு கேவாத்துகளில் பதிந்துவிடுகிறதென்றும் ஒரு உடன்படிக்கை 5 ரூ. ஸ்டாம்பு கடுதாசியில் எழுதி ரிஜிஸ்டர் செய்யாமல் இருந்துவிட்டார்கள். இவ்வுடன்படிக்கையில் லாஜிமால் சாட்சி போட்டிருக்கிறார். ராணி நாராயனி குண்வார் அப்பீல் செய்தபொழுது ஒரு ராஜிநாமா செய்துக்கொண்டு வேறு சொத்துக்களை கொடுத்துவிட்டும் கேஸ்புரம் கிராமத்தை தங்களுக்குள் வைத்துக்கொண்டார்கள். இந்த ராஜிநாமாவை ஒட்டி ஹைகோர்ட்டு டிக்கிரி 1885௵ ஜூலை௴ 8௳ ஏற்பட்டது. இத்தறுவாயில் ராணி நாராயனி குன்வார் மகேஸ்புரம் கிராமத்தை ராம் சரப் என்பவருக்கு தனக்கு பாத்தியதை யுள்ளதாக 1885௵ செப்டம்பர்௴ 24௳ ஹைகோர்ட்டு டிக்கிரிக்குப் பிறகு கிரயஞ்செய்து விட்டார். இக்கிரயத்தை ஆதாரமாகக் கொண்டு ராம் சரப்பின்மேல் டிக்கிரி பெற்ற ஒருவர் இக்கிராமத்தை ஏலம் போட ஹர் சுஹாரன் மிசர் என்பவர் ஏல மெடுத்துவிட்டு இறந்துபோனர். இவர் குமாரர்கள் மைனராயிருந்ததால் கோர்ட்டு ஆப் வார்டுசில் இவர் சொத்துக்களை பரிபாலனம் பண்ணினர்கள்.

ஷிப்லாலின் சகோதரன் மகன் லக்ஷிமி நாராயணனுக்கும் ஷிப்லாலுக்கும் விவாதம் வந்தபொழுது ஓர் மத்தியஸ்தரிடம் மகேஸ்புரம் கிராமத்துக்கு பாத்தியதையுள்ளவர்களின்னரென்றும் இவ்வளவு பாத்தியமுள்ளதென்றும் பின் வருமாறு தெரிவித்துக்கொண்டார்கள்.

ஷிப்லாலுக்கு 4 அணு 6 பைசா வரும்படி பாகமும் பெயிரோ பிரசாத்துக்கு 3 அணு 6 பைசா வரும்படி பாகமும் லால்ஜிமாலுக்கு 5 அணு 4 பைசா வரும்படி பாகமும் நர்படா பிரசாத்துக்கு 2 அணு 8 பைசா வரும்படி பாகமும் உள்ளதென்றும் இதில் யாதொரு விவாதமும் இல்லையென்றும் எழுதிக்கொடுத்தார்கள்.

ஷிப்லாலுக்கும் லக்ஷிமி நாராயணனுக்கும் நடந்த வியாச்சியத்தில் நர்படா பிரசாத்துக்கு 2 அணு 8 பைசா வரும்படி பாகம் சொந்தமென்று ஷிப்லால் ஒப்புக்கொண்டிருந்தும் லால்ஜிமால் முன் உடன்படிக்கையில் சாட்சி போட்டிருந்தும் ஷிப்லாலுக்கு 7 அணு 2 பைசா வரும்படி பாகம் பாத்தியமிருப்பதுபோல அவரிடமிருந்து லால்ஜிமால் ஒரு கிறையம் வாங்கிக்கொண்டார். லால்ஜிமால் இறந்துபோக இவர் விதவை அன்னுமாலுக்கு லால்ஜிமாலின் பாத்தியத்தை கிறையஞ்செய்தார்.

1896௵ அக்டோபர்௴ 10௳ ஹர் சுஹாரன் மிசர் என்பவருக்கு நர்படா பிரசாத்தின் பாகம் 2-அணு 8 பைசா வரும்படிக்காக ஒரு விடுதலைப்பத்திரம் கொடுத்துவிட்டார்.

1901௵ அலகபாத் பேங்கார் (Allahabad Bank) லால்ஜிமாலைக் கட்டுப்படுத்தி ஒரு டிக்கிரி பெற்றிருந்ததால் மகேஸ்புரம் கிராமத்தில் லால்ஜிமாலுக்கு 18 அணு 4½ பைசா வரும்படி பாகம் பாத்தியமிருக்கிறதாகச் சொல்லி ஏலத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவ்வளவு லால்ஜிமாலுக்குச் சொந்தமில்லையென்று ஹர் சுஹாரன் மீசர் மைனர் குமாரர்களுக்காக கோர்ட்டு ஆப்வார்ட்ஸார் ஆக்ஷேபனை மனு கொடுத்தார்கள். இவ்வாட்சேபனை மனுவை சப் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளாததால் சீ. பு. கோ. 283 வது பிரிவுப்படி புது வியாச்சியம் கொண்டுவந்தார்கள். மகேஸ்புரம் கிராமத்தில் தங்களுக்கு 8 அணு வரும்படி பாகம் தங்களுக்கிருக்கிறதாக டிக்கிளேயர் பண்ணும்படிக்கும் அப்பாகத்தின் மேல் அலகபாத்து பேங்கார் (Bank) தொடரக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள்.

இவர்களுக்குப் பிரதிவாதிகளாக இருந்தவர்கள் 1. அலகபாத்து பேங்கு (2) லால்ஜிமாலின் விதவையும் குமாரர்களும் (3) அனனுமால், சந்தர் ஷை அலகபாத்து பேங்குக்கு பணம் செல்லாகிவிட்டதால் இவர்கள் சாட்சியாடவில்லை. லால்ஜிமாலின் விதவையும் குமாரர்களும் தங்கள் பாத்தியதையைக் கிரயஞ் செய்து விட்டதால் இவர்களும் கட்சியாடவில்லை.

அன்னுமால் வ-ரா மாத்திரம் எதிர் கட்சியாடினர்கள்.

சப் கோர்ட்டார் தீர்மானம்:—நர்படா பிரசாத்தின் பாகமாகிய 2 அணு 8 பைசா வரும்படி உள்பட 5-அணு 3½ பைசா வரும்படி பாகத்துக்கு வாதி பக்கம் தீர்ப்புச் செய்தார்கள்.

இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அன்னுமால் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—ராணி நாருயணி குன்வாரின் ராஜிநாமா தீர்ப்பு ஹைகோர்ட்டார் செய்ததற்கு ஒருவருஷத்துக்குமுன் 1884௵ செப்டம்பர்௴ 15௳ ஷிப்லாலும் பெயிரோ பிரசாத்தும் இந்த வியாச்சியத்தில் முக்கிய தஸ்தாவேஜாயிருக்கும் ஒரு உடன்படிக்கை செய்துக்கொண்டார்கள். ராணி நாராயணி குன்வாரோடு செய்த வியாச்சியத்தில் தாங்கள் ஜெயமடைந்ததையும் நர்படா பிரசாத்தங்களுடைய கட்சியிலிருந்து நடத்தினதையும் தாங்கள் பாத்தியதை ஸ்தாபிக்க தஸ்தாவேஜி சாட்சியங்கள் தயார்பண்ணினதையும் தாங்களும் நர்படா பிரசாத்தும் ஒரே மூல புருஷனின் சந்ததியாயிருப்பதையுங் கண்டெழுதி (மேலே கூறிய உதவிக்காக) தீர்மானத்தினலாவது ராஜி நாமாவினலாவது தங்களுக்குக் கிடைத்து தங்கள் சுவாதீன மாகும் எல்லா சொத்துக்களிலும் 2 அணு 8 பைசா வரும்படி பாகத்தை நர்படா பிரசாத்துக்குக் கொடுக்கிறதென்று உடன்படிக்கையில் எழுதியிருந்தார்கள். அன்றியும் அவர் பெயரை கேவாத்தில் தங்கள் பெயரோடு ஜமீன்தாரென்றும் சொத்துக்குச் சொந்தக்காரரென்றும் பதிந்துவிடுகிற தென்று அவ்வுடன்படிக்கையில் வரையப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் லால்ஜிமால், சாட்சி கையெழுத்துப்போட்டிருந்தார். இதில் லால்ஜிமால் வாங்கியிருந்த சில சொத்துக்களும் விலக்கியிருந்தன, லால்ஜிமால்நேரில் அந்த பத்திரத்தில் சம்பந்தப்படாமலிருந்தாலும் அவ்வுடன்படிக்கையில் எழுதியிருக்குஞ் சங்கதிகளை யறிந்தவராக விருக்கிறார். பேரலி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தீர்ப்பினல் நாபாத்ராமின் குடும்பசந்ததி ஜாபிதாவை நர்படா பிரசாத் சேகரம் பண்ணிகொடுத்து கட்சி செயிக்கும்படிச் செய்ததாக தெரியவருகிறது. இவ்வுடன்படிக்கை ஐந்து ரூபாய் ஸ்டாம்புக்கடிதத்தில் எழுதி ரிஜிஸ்டர் பண்ணப்படாமலிருந்தது. 2 அணு 8 பையான வரும்படி பாகத்தை கிறையஞ் செய்ததாக யாதொருபத்திரமும் காண்பிக்கப்படவில்லை. இவ்விரண்டுங் குறைவாயிருக்கிறதென்று டிபன்சு சொன்னர்கள். 2 அணு 8 பைசா வரும்படி பாகத்துக்குச் சொந்தக்காரராக நர்படா பிரசாத்தின் பெயரை கேவாத்தில் எழுதி உடன்படிக்கை ஷரத்து பூர்த்தி பண்ணியிருக்கிறதாக 1902௵ ஹைகோர்ட்டார் செய்த அப்பீல் தீர்மானத்தால் தெரிகிறது. இந்த வியாச்சியம் ஷிப்லால் ஒரு பக்கத்திலும் நர்படா பிரசாத் மற்றொரு பக்கத்திலுமிருந்து கட்சியாடினதால் ஏற்பட்ட தீர்ப்பு. அப்பீல் வாதிகளாகவும் கீழ்க்கோர்ட்டு பிரதிவாதிகளாவுமிருக்கிறவர்கள் ஷிப்லால் லால்ஜிமாலுக்கு மகேஸ்புரம் கிராமத்தில் 7 அணு 2 பைசா வரும்படி பாகத்தை விற்றதினல் (இதில் 2 அணு 8 பைசா வரும்படி பாகமும் சேர்ந்திருக்கிறதென்று அது தங்களுக்குகிடைக்கவேண்டுமென்று பாத்தியங் கொண்டாடுகிறார்கள். ஹர் சுஹாரன் மிசருக்கு நர்படா பிரசாத்து 2 அணு 8 பைசா வரும்படி பாகத்தை விடுதலை பத்திரத்தின் மூலமாக கையளித்துவிட்டதால் கீழ்க்கோர்ட்டு வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகையால் இவ்வியாச்சியத்தின் இரு கட்சிக்காரர்களும் அவ்வியாச்சியத்தின் இருகட்சிக்காரர்களிடமிருந்து தங்களுக்கு பாத்தியமுண்டானதாகச் சொல்லுகிறார்கள். முந்தின வியாச்சியத்தில் நர்படா பிரசாத்துக்கு யாதொரு பாகமும் கொடுக்கப்படவேண்டியதில்லை யென்றும் கொடுக்க உடன்படவில்லை யென்றும் இவர் பெயரை வாதி பதிந்தது புகலான காரிய மென்றும் கட்டுப்பாடான காரிய மென்றும் டிக்கிளேயர் பண்ணும்படி கோர்ட்டாரை ஷிப்லால் கேட்டுக்கொண்டார். ஷிப்லாலின் மேல் தாவா செய்ய உத்தேசித்திருந்த லக்ஷிமி நாருயணனை இந்தச் சொத்து நர்படா பிரசாத்துக்குச் சொந்த மென்று காண்பித்து ஏமாற்றுவதற்காக அக்காரியஞ் செய்ததாக ஷிப்லால் காரணஞ் சொன்னர். இந்த வியாச்சியம் கீழ்க்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வியாஜ்ஜியம் அப்பீலில் ஹைகோர்ட்டு விசாரணைக்கு வந்த போது ஷிப்லாலின் பிராது பொய்யென்றும், லக்ஷிமி நாருயணனை ஏமாற்றுவதற்கு நர்படா பிரசாத்தின் பெயர் பதியப்படவில்லையென்றும் முன்னேற்பட்ட உடன்படிக்கையை முன்னிட்டு அவர்பெயர் பதியப்பட்டதென்றும் 1887௵ மார்ச்சு௴ 6௳ நடந்த வேறொரு உடன் படிக்கையில் இது உறுதி செய்யப்பட்டிருக்கிறதென்றும். நர்படா பிரசாத் இச்சொத்துக்கு ஈடாக உதவி செய்திருப்பதாலும் அவ்விடு போதுமானதாயிருப்பதாலும் அவ்வுடன்படிக்கை இருவரையும் கட்டுப்படுத்து மென்றும் உடன்படிக்கைபடி நர்படா பிரசாத்துக்கு கிரய சாசனம் செய்துக்கொடுக்கவேண்டுமென்றும், அக்கடமையில் ஷிப்லால் தவறிவிட்ட காரணத்துக்காக நியாயப்படி. அவருக்குச் சேரக்கூடாத ஒரு சொத்தை சுவாதீனப் படுத்திக்கொள்ள டிக்ரி கொடுக்கக்கூடாதென்றும் அத்தீர்ப்பில் எழுதிருக்கிறார்கள். அத்தீர்ப்பில் கொண்ட கருத்தை மாற்றி வேறு தீர்ப்பு செய்ய இப்பொழுது யாதொரு காரணமும் இல்லை. இத்தீர்ப்பினுல் இவ்வியாச்சியத்தில் எதிர் கட்சிக்காரர் சொல்வது போலன்றி நர்படா பிரசாத்தின் பெயரை கேவாத்தில் பதிந்தது உடன்படிக்கையில் ஏற்பட்ட வாக்குதத்தை நிறைவேற்றுவதற்கென்று தெரிகிறது. வேறொரு தஸ்தாவேஜி 1887-௵ மார்ச்சு௴ 9௳ எழுதப்பட்டது. 1-பெயிரோ பிரசாத் 2. ஷிப்லால் 3. நர்படா-4. லக்ஷிமி நாராயணன்-5. லால்ஜிமால் ஆகிய இவ்வைந்து பேரும் கூடி அந்ததஸ்தாவேஜியை எழுதியிருக்கிறார்கள் அதில் நர்பாத் ராமின் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்வதற்காக-நர்படா பிரசாத்தின் பெயரை சில நடவடிக்கைநடத்துவதற்காக நீக்கிவிடவேண்டுமென்றும் கீழே குறித்த பிரகாரம் இவர்கள் பங்கு ஸ்தாபிக்கப்பட்டுப் போய் எல்லாருடைய சம்மதத்தின் மேல் அப்பங்கு வீதம் அன்றைய வரைக்கும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகிறதென்றும் இப்பங்கு வீதம் - ஷிப்லால் - 4½-அணு- பெயிரோ பிரசாத் 3 அணு 4 பைசா நர்படா பிரசாத் 2 அணு 8 பைசா லால்ஜிமால் 5 அணு 4 பைசா என்றும் கண்டிருந்தது—இப்பங்கு வீதத்தில் ஷிப்லாலுக்கும் லக்ஷிமி நாருயணனுக்கும் விவாத மிருக்கிறதென்றும் மற்றவர்கள் பங்கு வீதத்தில் ஒரு விவாதமும் இல்லை யென்றும் எழுதப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் - ஷிப்லாலினுடைய பாகத்தில் - லக்ஷிமி நாருயணனுக்கு இவ்வளவு பாகமென்றும் வக்கீல் மிஸ்டர் காஸ்பருடைய மத்தியஸ்தம் முதலியவைகளும் எழுதப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மேலே குறித்த ஜட்ஜிமெண்டில் இப்பத்திரத்தைப் பற்றி ஹைகோர்ட்டார் பூராய் யோசித்து முன்னுடன்படிக்கையை அனுசரித்து. எழுதியிருந்தார்கள்; இதில் 1. கட்சிக்காரர்களின் பாகத்தில் விவாத மிருக்கிறதாகவாவது அவைகளைத் தீர்க்க மத்தியஸ்தரைக் கேட்டுக்கொள்ளவாவது இல்லை 2. நர்படா பிரசாத் அந்த மத்தியஸ்த வியாச்சியத்தில் ஒரு கட்சிக்காரராக இருந்தார் 3. கிராமக்-கேவாத்தில் நர்படா பிரசாத்தின்-பெயர் எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வுடன்படிக்கை ஷரத்துப்படி காரியங்கள் நிறைவேற்றப்பட்டதென்று தெரிகிறது. லக்ஷிமி நாராயணன்செய்த வியாச்சியத்தில் மத்தியஸ்தரால் 2 அணு 8 பைசா

வரும்படி பாகம் நர்படா பிரசாத்துக்கு தீர்ப்பு செய்திருக்கிறதாக - ஷிப்லால் சொல்லியிருக்கிறாரென்றும் முன் ஜட்ஜிமெண்டில் கண்டிருக்கிறது. இதனால் நர்படா பிரசாத்துக்கு 2 அணா 8 பைசா வரும்படி பாகம் சொந்தமென்று ஷிப்லால் ஒப்புக்கொண்டு கிராமத்தின் - கேவாத்தில் இவர் பெயரையும் பதிந்திருக்கிறார் என்று தெரிகிறது 7000 ரூபாய் கிரயம் பேசி (2 அணா 8 பைசா பாகம் உள்பட) 7 அணா 2 பைசா வரும்படி பாகம் தனக்கிருக்கிறதாகக் கண்டு லால்ஜிமாலுக்கு ஷிப்லால் கிரயஞ் செய்திருக்கிற கிரயசாசனம் 1896௵ மே௴ 8௳ பிறந்திருக்கிறது இதில் நர்படா பிரசாத்தின் யாவரும் ஒப்புக்கொண்ட பாத்தியதையை அறியாதிருக்கிறது போல் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கிரயஞ் செய்த வரும் பெற்றுக்கொண்டவரும் நர்படா பிரசாத்துக் குரிய பாத்தியதையை நன்றாய் அறிந்திருக்கிறவர்களென்று சொல்லாமலே விளங்குகின்றது. 1887௵ உடன்படிக்கையில் லால்ஜிமாலும் ஷிப்லாலும் நேரிற் சம்பந்தப்பட்டவர்கள். 1884௵ உடன் படிக்கையில்-ஷிப்லால் நேரிற் சம்பந்தப்பட்டும் லால்ஜிமால் சாக்ஷியாகவுமிருக்கிறார். இவ்விரண்டாவது பத்திரத்தில் லால்ஜிமாலின் சொந்த சொத்துக்கள் நன்றாய்க் காபந்து பண்ணப்பட்டு எழுதியிருக்கிறது. இதனால் 2 அணா 8 பைசா வரும்படி பாகம் விற்ற ஷிப்லால் தனக்குச் சொந்தமல்லவென்று தெரிந்தவராக இருக்கிறார். இப்பாதகத்தை வாங்கின லால்ஜிமாலும் விற்றவருக்குச் சொந்தமல்லாத பாகத்தை வங்குகிறோமென்றும் தெரிந்தவராக இருக்கிறார். இவர்களிருவரும் அச்சொத்து நர்படா பிரசாத்துக்குச் சொந்தமென்று தெரிந்திருக்கிறார்கள். 1894௵ டிசம்பர்௴ 16௳ ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தின்படி தனக்குப் பாத்தியமுண்டென்று விற்றதை கவனிக்கவேண்டியதில்லை. இத்தீர்ப்போ, ஷிப்லால் பெயிரோ பிரசாத்-லால்ஜிமால் ஆகிய மூவர்களும் ஹார்கூரன்லால் இடமிருந்து மகேஷ்புரம் கிராமத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ள கொண்டுவந்த விபாச்சியம் இதில் நர்படா பிரசாத்தை சேர்த்துக்கொண்டு கக்ஷியாடவில்லை ஆகையால் இத்தீர்மானம் நர்படாபிரசாத்தை பாதிக்காது. ஆகையால் 2 அணா 8 பைசா வரும்படி பாகத்துக்கு நர்படா பிரசாத் சொந்தக்காரர்.

1896௵ அக்டோபர்௴ 10௳ நர்படாபிரசாத் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்திரத்தில் தனக்கு நாபாத்ராமின் முழுச்சொத்தில் 2 அணா 8 பைசா பாகம் தனக்குச் சொந்தமென்றும் மத்தியஸ்தர் தீர்ப்பினாலும் கிராம ரிக்கார்டுகளில் தன் பெயர் பதியப்பட்டிருக்கிறதினாலும் மகேஷ்புரம் கிராமம் உள்பட தான் குறித்திருக்கும் பாகம் அவ்வளவுக்கு சுவாதீன அநுபவம் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு நேரிட்ட வியாச்சியச் செலவினால் ஏற்பட்ட கடனையும் தன் முன்னோர் பட்டகடனையும் தீர்க்கவேண்டி மகேஷ்புரம் கிராமத்தில் தனக்குரிய 2 அணா 8 பைசா பாகத்தை தான் விட்டதாகவும்இனி தனக்கு யாதொரு சம்பந்த மில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது. ஹார்கூரன்லால் மிசருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. இப்பத்திரத்தின் மூலமாக வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் தங்கள் பாத்தியதை ஸ்தாபிக்க முயன்றார்கள்.

நர்படா பிரசாத்து விஷயமாகச் செய்த உடன்படிக்கை ரிஜிஸ்டர் ஆகாமலிருக்கிறதால் முடிவு பெறாத வாக்குத்தத்தம் என்று அப்பீல் வாதிகள் வாதஞ் சொன்னார்கள். 2 அணா 8 பைசா பாகம் நர்படா பிரசாத்துக்குச் சொந்தமென்று கேவாத்தில் இவர் பெயர் எழுதப்பட்டிருப்பதாலும் மத்தியஸ்தர் விசாரணைக்காக செய்துக்கொண்ட உடன் படிக்கையில் நான்கு பாகஸ்தர்களுடைய பாகமும் எல்லாருடைய ஒற்றுமையினாலும் சம்மதத்தினாலும் அப்பொழுது வரைக்கும் ஒழுங்காயனுபவித்து வருவதாகக் கண்டிருப்பதாலும், 9 வருஷத்துக்குப்பின் ஷிப்லால் தான் ஒப்புக்கொண்டதற்கு மாறாக மற்றொருவர் பாகத்தைச் சேர்த்து கிரயஞ் செய்திருப்பதாலும் மேலே கூறிய வாதம் நிற்கத்தகுந்ததல்ல. அன்றியும் ரிஜிஸ்டர் ஆகாத ஒரு பத்திரத்தை நர்படா பிரசாத்தின் பாத்தியத்துக்கு ஆதாரமாகக் காண்பிப்பது செல்லத்தகுந்ததல்லவென்றும் ஷிப்லால் தங்களுக்கு முந்தி 1896௵ மே௴ கிரயஞ் செய்து விட்டதாகவும் அதற்குப் பிறகு 1896௵ அக்டோபர்௴ 10௳ அப்பீல் பிரதிவாதிகளுக்கு நர்படாபிரசாத் கிரயம் பண்ணியிருப்பதாகவும் அதனால் அப்பீல் பிரதிவாதியின் கட்சி பலமில்லையென்றும் அப்பீல் வாதிகள் வாதஞ்சொன்னார்கள்.

அநியாயத்தை உண்டுபண்ண ரிஜிஸ்டரேஷன் ஆக்டை ஒரு யந்திரமாகக்கூடாதென்று அடிக்கடி ஹைகோர்ட்டில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ரிஜிஸ்டர் பண்ணப்பட்ட கிரயசாசனத்தையுடைய ஒருவன் தனக்கு முன் கிரயம் வாங்கின வேறொருவன் ரிஜிஸ்டராகாத ஒரு கிரயசாசனம் பெற்றிருப்பது தெரிந்து வாங்குவானேயானால் ரிஜிஸ்டர் பண்ணினபத்திரத்தை யுடையவனுக்கு ரிஜிஸ்டரேஷன் ஆக்ட்டில் சொல்லியிருந்தாலும் முந்தி பாத்தியம் கிடைக்காது இவ்விதி இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இதேப் பிரகாரம் இங்கிலாந்திலும் ரிஜிஸ்டரேஷனுள்ள கௌன்டிகளிலும் அனுஷ்டித்துவரப்படுகின்றது 1861௵ 1 ஜான்சன் 682 இல் சொல்லியிருக்கும் பென்ஹாம் V. கீன் கேசில் சொல்லியிருக்கிறதாவது. "ஒருவன் தன் முன்னடத்தையால் கிரயம்பண்ண யோக்கியதை யில்லாதபட்சத்தில் அவனிடமிருந்து வேறொருவன் அது தெரிந்து வாங்குவானேயானால் விற்கிறவனின் மனச்சாட்சியினால் வாங்குகிறவனின் மனச்சாட்சி பாதிக்கப்படும் ஆகையால் விற்கிறவன் விற்பதிலிருந்து விலக்கப்பட்டவனென்று தெரிந்து வாங்குகிறவன் விற்பவனைப் போலேதானும் வாங்குவதிருந்து விலக்கப்படுவான்" ஆகையால் ஷிப்லால் நர்படாபிரசாத்துக்கு கொடுத்துவிட்ட அதே சொத்தை விற்பதிலிருந்து தடுக்கப்படுவதுபோல் இது தெரிந்து வாங்கின-லால்ஜிமாலும் தடுக்கப்படுவார்.

சில கேசுகளில் இது விஷயமாகச் சொல்லப்பட்டவைகளாவன:—

முன்னால் இரகசியமாகவும் மோசடியாகவும் செய்துக்கொண்ட சொத்துக்களின்மேலுள்ள பாத்தியதையினால் பின் அச்சொத்து வாங்குகிறவர்களை பாதிக்காமலிருப்பதற்கு ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டு ஒரு காபந்தாக ஏற்படுத்தப்பட்டதே யன்றி ஏற்கனவே கைமாறிப்போன சொத்தை இது விஷயந்தெரித்து வாங்குகிறவர்களை காபந்துபண்ண ஏற்பட்டதல்ல. அது சட்டத்தின் நோக்கமன்று என்று ஜேம்ஸ் என்னும் ஜஸ்டிஸ் சொல்லுகிறார்.

இரகசியமாக கிரயம் முதலிய பராதீனம் செய்யப்பட்டிருந்து பின் வேறொருவன் அதனை யறியாது பணம் கொடுத்து வாங்கி ரிஜிஸ்டர் பண்ணி கிரயசாசனம் வைத்திருந்தால் அவனைக்காபந்து பண்ணுவதே ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் வித்தாகும் என்றும் முன்னடந்த கிரயமுதலியவை தெரிந்து வாங்கும் ஒருவனுக்கு அது காபந்து ஆகாதென்றும் பேகாலே என்னும் ஜஸ்டிஸ் சொல்லியிருக்கிறார்.

ஒருவன் தன்னுடைய சொத்தை வேறொருவனுக்குக் கிரயம் பண்ணுவதாக உடன்பட்டிருக்கும்பொழுது இதனை லக்ஷியஞ்செய்யாது மூன்றாவது பேர்வழிக்கு கிரயம் பண்ணி இது விஷயம் வாங்குகிறவன் அறிந்திருக்கின் பின் வாங்கினவனுடைய மனச்சாட்சி பங்கமாயிருக்கிறதால் முன் வாங்கிக்கொள்ள ஒப்பந்தம் பண்ணினவனுடைய பாத்தியதைக்குள் பட்டே இவனுக்குச் செல்லுமே யன்றி இவன் கிரயம் நிற்கத்தகுந்ததல்லவென்றும் பிரேய்வெல் என்னும் ஜஸ்டிஸ் கூறியிருக்கிறார்.

மனச்சாட்சி பாதிக்கப்படாமலிருக்கும் பேர்களுக்கு இந்த ஆக்ட் காபந்தாகுமே யல்லாமல் ஒரு உடன்படிக்கை விரோதமாக ஒரு தப்பிதத்தை செய்பவனோடு கூடிக்கொண்டு அப்பிசகுக்கு உடந்தையாயிருக்கும் வேறொருவனைக் காபந்துபண்ணுவது இவ் ஆக்டின் கருத்தல்லவென்று இந்த ஜஸ்டிஸ் திரும்பவும் சொல்லியிருக்கிறார்.

மேலே கூறியவைகளை இவ்வப்பீல் சம்பந்தமாக யோசிக்கும் பொழுது. ஷிப்லாலுக்கும் நர்படா பிரசாத்துக்கும் நடந்த நடவடிக்கைகளை - லால்ஜிமால் பூராய் அறிந்தவராய் இருக்கிறார். இந்நடவடிக்கையினால் 2 அணா 8 பைசா பாகத்துக்கு சொந்தக்காரராக இவர் பெயர் பதிவாயிருக்கிறது. அப்பீல்வாதிகள் லால்ஜிமாலின் பாத்தியதையடைந்தவர்களா யிருக்கிறதால் - நர்படா பிரசாத்துக்கு 2 அணா 8 பைசா பாகத்துக்கு சொந்தக்காரராகையாலும் அந்தப்பாத்தியத்தை அப்பீல் பிரதிவாதிக்கு வந்துவிட்டபடியாலும் அப்பீல் வாதிகள் இவருக்குப்பாத்தியமில்லை யென்று சொல்லக்கூடியவர்களல்ல வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் வசம் 2 அணா 8 பைசா பாகமிருக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நர்படா பிரசாத்தைத்தவிர வேறொருவருக்கு ஷிப்லால் பராதீனம் பண்ண யோக்கியத்தை யுடையவரல்ல ஷிப்லால் அப்பாகத்தை பராதீனம் பண்ணக்கூடிய பாத்தியதையை இழந்தவராயிருக்கிறதினால் யோக்கியதையோடு 1896௵ மார்ச்சு௴ 10௳ அதை கிரயஞ் செய்யக்கூடியவரல்லவென்பதை லால்ஜிமால் அறிந்தவராயிருக்கிறார்.

லால்ஜிமால் அக்கிரயத்தை ஒப்புக்கொண்ட பொழுது நல்ல எண்ணத்துடன் வாங்கினவராக மாட்டார். இவரும் இதை கிரயஞ்செய்தவரும் அயோக்கியதையாய் நடந்துக்கொண்டார்கள். நர்படா பிரசாத்தை சொத்தின் பாத்தியத்திலிருந்து விலக்கவும் 1887௵ மார்ச்சு௴ 1884௵ செப்டம்பர்௴களில் பிறந்த உடன்படிக்கைகளினால் ஏற்பட்ட நர்படா பிரசாத்தின் நலத்தைக் கெடுக்கவும் ஷிப்லாலின் கருத்தாயிருக்கிறதென்று ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது. மேலே சொன்ன காரணங்களால் சப் கோர்ட்டார் தீர்ப்பு நியாயமென்று ஆதை வுறுதிப்படுத்தி அப்பீலை செலவு தொகையுடன் தள்ளி விட்டார்கள்.

ரூலிங்ஸ் :— ஒருகேசில் ஜெயமடைந்த சிலவாதிகள் ஒரு பெரிய சொத்தையடைந்தார்கள் தங்கள் வியாச்சியத்தில் உதவிபுரிந்த ஓர் சொந்தக்காரனுக்கு அந்தச்சொத்தில் ஒரு பாகம் கொடுக்கிற உடன்பாடு செய்துக்கொண்டு அவ்வுடன்பாட்டின்படி மற்ற உடன்பங்காளிகளின் சம்மதத்தோடு இவர் பெயரை கிராம ரிக்கார்டுகளின் பதிவு செய்து இவர் வசத்திலும் அப்பாக அனுபவத்தையும் விட்டுவிட்டார்கள் ஆனால் கிரயசாசனம் எழுதி ரிஜிஸ்ட்டர் பண்ணவில்லை பின்பு இவ்வாறு அனுபவிப்பதையும் காரணத்தையுமறிந்த வேறொருவருக்கு மூலபங்காளிகளில் ஒருவர் விட்ட இப்பாகத்தை கிரயம்பண்ணினார்.

விற்றவர், விற்க தனக்குப்பாத்திய மில்லையென்று தெரிந்து விற்றதாலும், முன் வாங்கினவரை மோசஞ் செய்யாமல் விற்கமுடியாதென்கிறதை பின்பு வாங்கினவர் அறிந்திருப்பதாலும் முன்வாங்கினவரின் பாத்தியத்துக்கு விரோதமாக இவ்விற்பனை பயன்படாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. அல. 315.

(Annu Mal. V. The Collector of Bareilly, I. L. R. 28 All. 315.)

FUN UPON LAW.

சட்ட சம்பந்தமான வேடிக்கை சமாச்சாரங்கள்.

ஒரு வக்கீல் பொய்சாக்ஷியைக் கிராஸ்செய்தது.

ஒரு கொலைக்கேசில் ஒருவன் பிராசிக்யூஷன் தரப்பில் சாக்ஷிசொன்னான் அவனை டிபன்ஸ்தரப்பு பாரிஸ்டர் அடியிற் கண்டபடி கிராஸ்செய்து அந்த சாக்ஷியே கொலையாளி என்று ருஜுப்படுத்தினார்.

வக்கீல்:—ஆகவே வேலனை ரெங்கன் சுட்டுக்கொலை செய்ததை நீ கண்ணால் பார்த்தாய் ?

சாட்சி :—ஆம், பார்த்தேன்.

வக்கீல்:—சுடும்போது நீ ரெங்கனுடனிருந்தாயா ?

சாட்சி:—ஆம்.

வக்கீல்:—இவர்களுக்கு சமீபத்தில் நின்றுக்கொண்டிருந்தாயோ ?

சாட்சி:—இருபதுஜெஜ தூரத்தில் நின்றுக்கொண்டிருந்தேன்.

வக்கீல்:—ஏன் பத்து கெஜ தூரமாக யிருக்ககூடாதா ?

சாட்சி :—இல்லை இருபது கெஜம் அல்லது 21 கெஜத் திற்கு மேலிருக்கும்.

வக்கீல்:—சுட்டது வயலில்தானே ?

சாட்சி:—இல்லை தோப்பில்.

வக்கீல்:—என்ன தோப்பு.

சாட்சி:—மூங்கில் தோப்பு.

வக்கீல்:—ஆகஸ்டுமீ த்தில் இதன் இலைகள் அடர்ந் திருக்குமல்லவா ?

சாட்சி :—இருக்கலாம்.

வக்கீல் :—இந்த துப்பாக்கிதானு ரெங்கன் உபயோகப் படுத்தின துப்பாக்கி ?

சாட்சி :—அதேமாதிரியாகத்தானிருக்கிறது.

வக்கீல்:—ஆகவே கைதி சுட்டதை நீ பார்த்தாய்-துப் பாக்கியை பார்த்தாய்-வேலன் காயப்பட்டு கீழே விழுந்ததைப் பார்த்தாய்.

சாட்சி:—ஆம்.

வக்கீல்:—ஆனுல் தோப்பிற்கும் கிராமத்திற்கும் எவ்வ ளவுதூரம் இருக்கும்.

சாட்சி :—முக்கால் மயிலிருக்கலாம்.

வக்கீல்:—ஆனுல் தீபவெளிச்சம் எங்கே யிருந்தது ?

சாட்சி:—கிராம ஓரத்திலிருந்தது.

வக்கீல்:—முக்கால் மயில் தூரத்திலா ?

சாட்சி:—ஆம்.

வக்கீல்:—ஆனுல் ரெங்கனுக்கு சமீபத்திலாவது அல் லது வேலனுக்கு சமீபத்திலாவது தீபமில்லையே ?

சாட்சி:—இல்லை. ஆனுல் ஏன் தீபம்வேண்டும் ?

வக்கீல்:—தீபமில்லாமற்போனுல் நீ எப்படி ரெங்கன் சுட்டதைப் பார்த்திருக்கக்கூடும் ?

சாட்சி:—திவ்யமான சந்திரிகை அன்றையத்தினம் பிர காசித்தது !

வக்கீல்:—அதலால் ரெங்கன் வேலனை இரவு 10-மணி க்கு திவ்யமான சந்திரிகையில் சுட்டதை நீ பார் த்தாய் ?

சாட்சி:—ஆம்.

வக்கீல்:—நல்லதிருக்கட்டும் அந்தக்கொலை நடந்திப் போது எத்தனைமாத மாகின்றது ?

சாட்சி:—6 மாதங்களாகின்றன.

வக்கீல்:—கொலை நடந்ததினம் திவ்யமான சந்திரிகை யிருந்ததென்று உமக்கு ஞாபகம் இருக்கிறதா ?

சாட்சி:—ஆம் ஞாபகமாயிருக்கிறது.

வக்கில்:—அன்றையத்தினம் கொலை எத்தனைமணிக்கு நடந்தது ?

சாட்சி:—இரவில் சுமார் 8 அல்லது 9-மணி யிருக்க லாம்.

வக்கீல்:—உன் தகப்பஞர் உயிருடனிருக்கிறுரா ?

சாட்சி:—இல்லை.

வக்கீல்:—எப்போது இறந்துபோனுர்.

சாட்சி.—5, 6, வருஷமாகும்.

வக்கீல்:—உம்முடைய ஜாதி என்ன ?

சாட்சி:—வேளாளர் ஜாதி.

வக்கீல்:—உம்முடைய தகப்பனுருக்கு வருஷம்தோ றும் திதி கொடுக்கிறதில்லையே ?

சாட்சி:—திதி மட்டிலுமா ஒவ்வொரு அமாவாசை யும் தர்ப்பணம் செய்யாமல் சாப்பிடுகிறதில்லை.

வக்கீல்:—ஆனுல் கொலை நடந்ததினம் நீர் தர்ப்பணம் செய்துவிட்டுதானு சாப்பிட்டீர் ?

சாட்சி:—சந்தேகமில்லாமல் ! தர்ப்பணம் செய்துவிட்டு தான் சாப்பிட்டேன்.

வக்கீல்:—ஆகையால் அன்றையத்தினம் அமாவாசை தானே ?

சாட்சி:—ஆம் அம்மாவாசைதான்.

வக்கீல் :—அன்றையதினம் புரோகிதர் வந்தாரா ?

சாட்சி :—வந்தார்.

வக்கீல்:—அன்றையதினம் தர்ப்பணம் செய்துவிட்டு விருதமிருந்து சாப்பிட்டீரா?

சாட்சி :—ஆம்.

வக்கீல் :—உமக்கு நல்ல ஞாபகசக்தி யிருக்கிறதாகத் தெரிகிறது! அன்றையத்தினம் அமாவாசை-புரோ கிதர்வந்தார் தர்ப்பணம் செய்தீர்-விருதமிருந்தீர் சாப்பிட்டீர்-இதெல்லாம் வாஸ்தவம்தானே ? நன் ருய் ஞாபகமிருக்கிறதா ?

சாட்சி :—உண்மைதான் ; நன்ருய் ஞாபகமிருக்கிறது.

வக்கீல்:—இதில் ஒன்றும் பிசகில்லையே ?

சாட்சி :—இல்லை.

வக்கீல் :—ஆதலால் கொலை நடந்ததினம் அமாவாசை தான் ?

சாட்சி :—ஆம் எனக்கு நன்ருய் ஞாபகமிருக்கிறது.

வக்கீல் :—ஆதலால் அமாவாசை தினம் கொலை நடந் தது அன்று இரவு சந்திர வெளிச்சத்தில் இந்தக் கொலை நடந்ததை நீர் கண்ணுல்பார்த்தீர் ?

சாட்சி :—ஆம்.

வக்கீல் :—அமாவாசைதினம் சந்திரனைப்பார்க்க முடி யுமா ?

சாட்சி :—மு-டி-யா-து.

வக்கீல் :—ஆனுல் சந்திரவெளிச்சத்தில் கொலை நடந்த தாகச் சொன்னீரே அது மெய்தானே ?

சாட்சி :—(ஒன்றும் பேசவில்லை).

கோட்டார் இவனை பொய்சாட்சி சொன்னதற் காக பிராசிக்கியூட் செய்யும்படி உத்திரவு செய்தார்கள்.

அமேரிக்கா தேசத்திலுள்ள ஒருகோட்டில் வாரன் என்று பெயருடைய ஓர் பேர்போன லாயர் ஒரு உயில் கேசில் ஒரு சாட்சியை அடியிற்கண்டபடி கிராஸ் செ ய்து அந்த சாட்சி பொய்சாட்சி என்று ரூபகாரப்படுத் தினுர்.

வக்கீல் :—உயில் எழுதினவர் உயிலில் கையெழுத்து போட்டதை நீர் உம்முடையகண்ணுல் பார்திரா ?

சாட்சி :—பார்த்தேன்.

வக்கீல் :—இந்த உயிலில் உம்மை சாட்சி போடும்படி அவர் கேட்டுக்கொண்டாரா ?

சாட்சி :—கேட்டுக்கொண்டார்.

வக்கீல் :—அவர் அந்த உயிலுக்கு அரக்கு ஒட்டி சீல் போட்டதைப் பார்த்தீரா ?

ட்சி :—உயில் எழுதினவர் உயிலில் கையெழுத்து செய்து அரக்கு ஒட்டிச் சீல்செய்தபோது அவர் எங்கேயிருந்தார் ?

ட்சி :—அவருடைய படுக்கையில்.

கீல் :—அவர் உபயோகபடுத்தின அரக்கு எவ்வளவு நீளமிருக்கும்.

ட்சி :—சுமார் மூன்று அல்லது நான்கு அங்குல மிருக்கலாம்.

கீல் :—அந்த அரக்கை அவருக்குயார் எடுத்துக் கொடுத்தது ?

ட்சி :—நான் எடுத்துக் கொடுத்தேன்.

கீல் :—அதை நீர் எவ்விடத்திலிருந்து எடுத்தீர் ?

ட்சி :—அவருடைய மேஜையிலிருந்து எடுத்தேன்.

கீல் :—அந்த அரக்கை எப்படி கொளுத்தினுர்.

ட்சி :—மெழுகு வத்தியால் (Candle)

கீல் :—இந்த மெழுகுவத்தி எங்கிருந்தது ?

ட்சி :—அவருடைய அலுமாரியிலிருந்து நான் எடுத்துக் கொடுத்தேன்.

கீல் :—இந்த மெழுகுவத்தி எவ்வளவு நீளமா யிருந்தது.

ட்சி :—சுமார் 4 அல்லது 5 அங்குலமாயிருக்கும்.

கீல் :—இந்த மெழுகுவத்தியை யார் கொளுத்தி னது ?

ட்சி :—நான் கொளுத்தினேன்.

கீல் :—எதனுல் ?

ட்சி :—நெருப்புக் குச்சியைக்கொண்டு.

கீல் :—அந்த நெருப்புக்குச்சியை நீ எங்கேயிருந்து எடுத்தாய் ?

ட்சி :—அறையிலிருந்த மாடத்திலிருந்து.

வக்கீல் அந்த உயிலை சீல்பண்ணியிருக்கிற விடத் த கை பெருவிரலால் அழுத்திக்கொண்டு சாட்சியின் லயின்பேரில்வைத்து உயிலின் கையெழுத்து போ ம்போது நீர் பார்த்தீர் - உயில் எழுதிவைத்தவர் உம் ம சாட்சி கைபெழுத்து செய்யும்படி கேட்டார்-நீர் கயெழுத்து செய்தீர் - உயில் எழுதியவர் சீல் செய் ர்-நீர் அரக்கை மாடத்திலிருந்து எடுத்துக் கொடுத் ர், மெழுகுவத்தி எடுத்துக் கொடுத்தீர் - நெருப்புப் பட்டி எடுத்துக்கொடுத்தீர் - இதெல்லாம் வாஸ்தவம் னே ? பிரமாணமாய்ச் சொல்லும்.

ட்சி :—பிரமாணமாணத்தின் பேரில் சொல்லுகிறே ன் உண்மைதான்.

க்கீல்:—கோர்ட்டாரைப்பார்த்து இந்த உயில் முதலா வது அரக்குவைத்தே சீல்செய்யப்படவில்லை.

IMPORTANT RULINGS.

சாக்ஷிப்படி.

ஒரு வியாஜ்ஜியத்தில் சாக்ஷியம் கூறும்படி சம்மன் சய்து வரவழைக்கப்பட்ட ஒரு சாக்ஷி தனக்குச் சேர வண்டிய சாக்ஷிப்படியைப் பெற்றுக்கொள்ள சாக்ஷி ம் சொன்ன சமயத்திலேயே மனு செய்துக்கொள்ள வண்டுமென்று அவசியமல்ல வென்றும் அந்த வியா ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரியை நிறைவேற் றினபிறகும் மனு செய்து கொள்ளலாமென்று 1906ம் ஞுத்திய சிவில் ரிவிஷன் 225 நெ. வியாஜ்ஜியத்தில் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக் கிருர்கள்.

பஞ்சாயத்தார் தீர்மானம்.

ஒரு வியாஜ்ஜியம் டி. மு. கோர்ட்டார் பயிலிலிருக் கும்போது வாதி பிரதிவாதிகள் பஞ்சாயத்தார் ஏற்படு த்தி அவர்கள் தீர்மானத்திற்குக் கட்டுப்படுகிற தெ ன்று ஒப்புக்கொண்டார்கள். பஞ்சாயத்தார் தீர்மானம் செய்தார்கள். பஞ்சாயத்தார் யார்பக்கம் தீர்ப்புச்சொன் ஞர்களோ அந்த கக்ஷிக்காரன் டி. மு. கோர்ட்டில் பஞ் சாயத்தார் தீர்மானத்தை தாக்கல் செய்தபோது மற் றொரு கக்ஷிக்காரன் ஆக்ஷேபித்தான். ஆக்ஷேபிக்கவே டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து கேசை பைசல் செய்தார்கள். பஞ்சாயத்தார் தீர்மா மானத்தை தாக்கல் செய்த கக்ஷிக்காரன் ஜில்லா கோர் ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொண்டான். ஜில்லா கோ ர்ட்டார் பஞ்சாயத்தார் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அதின்படி டிக்கிரி கொடுத்தார்கள். இதைக் கோர்ட் டில் இரண்டாவது அப்பீலில் பஞ்சாயத்தார் தீர்மானத் தின்படி டிக்கிரி கொடுக்க அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள்.

கைதியும் மாஜிஸ்டிரேட்டும்.

கைதி :—இந்தப் பணப்பையை நான் திருடவில்லை அந்த துரைசாணி மடியிலிருந்து கீழேவிழுந்தது நான் அதை பூமியின்பேரில் கண்டெடுத்தேன்.

மாஜிஸ்டிரேட் :—பை கீழே விழுந்தபோது நீ பார்த் தாயா ?

கைதி :—ஆம் பார்த்தேன்.

மாஜிஸ்டிரேட் :—பின் ஏன் அதை சொந்தக்காரரிடம் நீ கொடுக்கவில்லை.

கைதி :—பை அந்த துரைசாணி மடியிலிருந்து விழுந் தது வாஸ்தவம்தான் அதனுல் அது அவளுக்குச் சொந்தமென்று எப்படி நான் நிச்சயமாய் எண் ணக்கூடும்.

மாஜிஸ்டிரேட் :—என்ன நீ சொல்கிறது விளங்கவில்லை யே.

கைதி :—நான் பையைக் கண்டெடுத்தபிறகு நானே கீழே போட்டுவிட்டேன் என்று எண்ணிக்கொள் வோம் அப்போது என்னை அதன் சொந்தக்கார ஞக தாங்கள் நினைப்பீர்களா ?

மாஜிஸ்டிரேட் :—நினைக்கமாட்டோம்.

கைதி :—அதுபோல்தான் நானும் நினைக்கவில்லை. அந் தப்பைக்கு துரைசாணி தான் சொந்தக்காரர் என்று சாட்சியத்தால் ஏற்படுகிறபரியந்தம் நான் தான் வைத்துக்கொள்ள தீர்மானித்துவிட்டேன்.

மாஜிஸ்டிரேட் :—நல்லதிருக்கட்டும் "அந்தப் பை உம் முடையதா" என்று துரைசாணியை நீர் கேட்

டிருந்தால் துரைசாணிதான் அதன் சொத்துக்காரி என்று தெரிந்திருக்குமல்லவா?

கைதி:— நான் கேட்கவில்லை; இருந்தபோதிலும் இன்னொருபை இந்த அம்மாள் மடியிலிருந்து விழுகிறதா இல்லையா என்று பார்க்கும் பொருட்டு ஒரு அரைமயில் தூரம் பின்தொடர்ந்து போனேன் ஒன்றும் விழவில்லை.

ஹைகோர்ட் பயிரங்க விளம்பரம்.

கோயம்புத்தூர் செஷன் கோர்ட்டார் பயிலிருந்த 1906-ம் ஞு-த்திய 129-ம் நெ. கேசில் இ. பி. கோ. 148-வது, 302-வது பிரிவுகளின்படி குற்றம் சாட்டப்பட்ட இரண்டாவது குற்றவாளியாகிய வார்ஞலசிக்கவுண்டன் விசாரணை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டான். இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக கி. பு. கோ. 417-வது பிரிவின்படி கிரிமினல் அப்பில் தாக்கல் செய்யப்பட்டது. வார்ஞ லாசிக்கவுண்டனை மறுபடியும் அரஸ்ட் செய்யும்படி ஹைக்கோர்ட்டார் அனுப்பிய வாரண்டிற்கு அவன் அகப்படாமல் ஒளிந்து திரிகிறபடியால் அவன் செப்டம்பர்மீ 12உ-க்கு ஹைகோர்ட்டில் ஆஜராகவேண்டுமென்று கி. பு. கோ. 87-வது பிரிவின்படி பயிரங்கமான விளம்பரம் பிரசுரஞ் செய்யும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்.

GENERAL NEWS.

பலதேச வர்த்தமானம்.

ஸ்ரீலாலா லஜபட்ராய்.

நாலைந்து மாதங்களுக்கு முந்தி ஆப்கன் அமீர் இந்தியாவிற்கு வந்திருந்தபோது ஸ்ரீராய் அவரை பேட்டி கண்டு கொண்டதாகவும் அப்போது இந்தியாவின் மீது படை யெடுத்து வரும்படி அமீரைத் தூண்டினதாகவும் அப்படி அமீர் படை யெடுத்து வருவாரேயாகில் இந்தியாவிலிருக்கும் சுதேச சையினியங்கள் அவருக்கு உதவிபுரியுமென்று சொன்னதாகவும் அதற்கு அமீர் இதைப்பற்றி இங்குபேசக்கூடாதென்றும் தாம் ஆப்கன் தேசத்திற்குப் போனவுடன் ஸ்ரீராய் இதைக்குறித்து எழுதுவாரேயாகில் தாம் கவனிப்பதாய் ஆப்கன் அமீர் சொன்னதாகவும் அதேபிரகாரம் ஸ்ரீராய் அமீருக்கு ஒருகடிதம் எழுதினதாகவும், அந்தக்கடிதத்தை அமீர், வைசிராய் லார்ட் மின்டோவிற்கு அனுப்பினதாகவும் அதன் பேரில் ஸ்ரீராயை தேசபிரஷ்டை செய்யும்படி உத்திரவு பிறந்ததென்று இங்கிலாண்டில் பிரசுரமாகும் ஒரு பாங்கிப்பத்திரிகை கூறுகின்றது. இதுகலப்பற்ற கட்டுக்கதை என்று நாம் சொல்ல வேண்டியது அனுவசியம்.

அமீர் உத்திரவு.

சென்ற ஜூன்மீ த்தில் ஆப்கன்தேச அமீருடைய பட்டாளங்களில் ஒன்றிலுள்ள ஒரு சிப்பாய் அப்பட்டாளத்தின் பெரிய ஆபீசரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். இதற்குக்காரணம் ஷை பட்டாள் ஆபீசர் சிப்பாயை ஏதோகுற்றத்திற்காக அவனுடைய நேயர்கள் முன்னிலையில் ஏசினார் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கேசைக்குறித்து ஆப்கன் அமீரே நேரே விசாரணைசெய்து கொலைசெய்த சிப்பாயை தூக்கிவிடும்படி உத்தரவுசெய்திருப்பதுமன்றி இனி இம்மாதிரி சம்பவங்கள் நடந்தால் ஆபீசரைச் சுற்றுக் கொன்ற சிப்பாய்களை தூக்கிலிட்டு உயிருக்குயிர் வாங்கிவிடுவதுமன்றி அன்னோருடைய சொத்துகளும் கவர்ன்மெண்டில் சேர்த்துக்கொள்ளப்படும் என்றும் ஆயினும் பட்டாள பெரிய ஆபீசர்கள் தங்களிடம் உத்தியோகம்பார்த்துவரும் உத்தியோகஸ்தர்களை திட்டவும் வையவும் கூடாதென்று கண்டிப்பான எச்சரிக்கை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

கவனர் ஜனரல்.

இதற்குமுன் இந்தியாவிற்கு கவர்னர்ஜனரலாகவிருந்து இப்போது இங்கிலாண்டிலிருந்துகொண்டிருக்கும் லார்ட் கர்ஜன் ... தேக அசௌ... யிருக் ... யதினம் தர்ப்பணம் செய்துவிட்டு யும் வல்லமை ... து சாப்பிட்டீரா?

கூட்ட...

...சி:— ஆம்.

...க்கில்:— ...க்கு நல்ல ஞாபகசக்தி யிருக்கிறதாகத் டாக்டர்கள்... அன்றையத்தினம் அமாவாசை–புரோ ... யிருக்கிறார்கள்.

டில்லி தர்பார் வைபவம்.

மாகஷிமைதங்கிய ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியாரின் பட்டாபிஷேகத்தைக் கொண்டாடுவதற்காக நடத்தப்பட்ட டில்லி தர்பார் சமயத்தில் லார்ட் கர்ஜன் யானை ஆம்பாரியுடனும் சிற்றரசர்கள் புடைசூழ தர்பாருக்குள்சென்ற வைபவத்தைப்பற்றியபடம் ஒன்று, படம் எழுதுவதில் இவ்வுலகத்தில் நிகரற்றவரென்று பெயர் வாங்கியிருக்கும் மிஸ் R. S. மெக்கன்சி என்பவரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவர் பிரான்சுக்காரர். பாரிசிஸ் நகரில் வசித்துவருகின்றார்.

தேசாபிமானி.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி அவர்கள் இங்கிலாண்டில் தேக அசௌக்கியமாயிருக்கிறார் என்று கேள்விப்பட்டு விசனிக்கின்றோம்.

சண்டை உபாயம்.

அரசாங்கத்தார்கள் ஒருவருடன் ஒருவர் சண்டைசெய்துக்கொள்ளும்போது (Ballon) வாலூனில் ஏறி ஆகாயத்திலிருந்துகொண்டு எதிரியின் சையினியங்களின்பேரில் பாயும்படியாக வெடிகள்விடுகிறார்கள். இந்தவழக்கத்தை ஒழித்துவிடவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசனைசெய்ய ஐரோப்பியாக்கண்ட அரசாங்கத்தார்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து “ஹெக்” என்னும் நகரில் கூடி யோசனைசெய்தார்கள். பிரான்சுகாரர்களும், ருஷியர்களும் இந்த வழக்கத்தை எடுத்துப் போடக்கூடாதென்று பிடிவாதம் செய்து பேசினார்கள். ஆங்கிலேயர்கள் சண்டை கடலிலும் பூமியிலும் நடந்தால் போதுமானது ஆகாயம் வேண்டியதில்லை என்று சொன்னார்கள். இப்படி அரசாங்கத்தார்கள் பலவிதமான அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இன்னும் யாதொருமுடிவும் செய்யப்படவில்லை.

ஆரிய சமாஜத்தார்.

ஆரிய சமாஜத்தார் ஜனங்களுக்கு ராஜத்துரோகம் போதித்து வருகிறார்கள் என்று கவர்ன்மெண்டார் சமுசயிக்கிறதாகத் தெரியவருகின்றது.

பலாப்பூரில் ஸ்ரீலாலா லஜபதிராய் தேசம்பிரஷ்டை அடைந்திருப்பதைப் பற்றிய பாட்டை பாடிக்கொண்டு தெருவில் போன ஒரு சந்நியாசியை போலீசார் அரஸ்ட் செய்தார்களென்றும் அவரை வருவிக்கும்படி லோக்கல் கவர்ன்மெண்டார் தந்தி அடிக்க போலீசார் விட்டுவிட்டார்களென்றும் பஞ்சாபி பத்திரிகை கூறுகின்றது.

வைசிராய் சுற்றுப்பிரயாணம்.

இந்தியாவின் கவர்னர்ஜனரலாகிய லார்ட் மின்டோவும் அவருடைய துரைசாணியாகிய லேடி மின்டோவும் அடுத்த நவம்பர்மீ த்தில் தென் இந்தியாவிலும் பர்மாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு அணு நாணயம்.

ஒரு அணு நிக்கல் நாணயத்தை நிகழ்மீ முதல் வழங்கிவரும்படி கவர்ன்மெண்டார் ... செய்திருக்கிறார்கள். பம்பாய் கரன்சி ... வகிருந்தது? களில் இரண்டுலக்ஷம் வெஞமாரியிலிருந்து நான்

மிஸ்டர் ... ம்தன்.

தேசப்பிரஷ்டை செய்யப்பட்டிருக்கும் மிஸ்டர் லாலா லஜபெட்ராய் அவர்கள் தம்மை காராக்கிறகத்திலிருந்து விடுவிக்கும்படி இந்தியாவின் வைசிராய்க்கு மனுசெய்துக் கொண்டிருக்கிறார்.

கிரிமினல் சேஷன்ஸ்.

இது ஜஸ்டிஸ் போடாம் துரையால் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த கேஸில் அனேக களவுக்கேஸூம் கொலைக்கேஸூமிருந்த போதிலும் பொது விஷயத்தைப் பிரசுரித்தல் அவசியம்பற்றி அவைகளைப் பிரிசுரிக்காது விடுத்தனம். பெரும்பாலும் அந்தக் கேசுகளின் விருத்தாந்தங்கள் அடுத்த கெஜெட்டில் வெளிப்படுத்தப்படும்.

ஸ்ரீபாலரை சார்ஜ்செய்யப்போவதாய் வதந்தி.

ஸ்ரீவிபின சந்திரபாலர் சென்னைக்கு விஜயஞ்செய்தபோது செய்த உபன்னியாசத்தில் ராஜத்துரோகமான வார்த்தைகள் உபயோகப்படுத்திருப்பதாகவும் ஆதலால் சென்னைக் கவர்ன்மெண்டார் அவரைச் சார்ஜ்செய்யப்போவதாயும் ஓர் வதந்தி உலாவுகின்றது. இங்கு பெரிய புகார் உண்டாயிருந்தது. ஆனால் அது அடங்கியிருந்தது. திடீரென்று இப்பொழுது இந்த வதந்தி உண்டானதற்குக்காரணமின்னதெனப் புலப்படவில்லை. ஒருக்கால் இத்தனை நாளாக அவர் உபன்னியாசத்தை வாசித்து பார்த்து அதில் ராஜத்துரோக வார்த்தைகள் அகப்படுகிறதா என்று ஆராய்ந்து பார்த்தார்கள் போலும். இந்த வதந்தியை நிஜமாகவே வைத்துக்கொள்வோம். அவரைப்பிடித்து சார்ஜ்செய்வதால் என்ன நன்மை அடைவார்கள். இந்திமாதிரியான போலீஸ்சார்ஜுகளுக்கு ஸ்ரீபாலர் பின்வாங்கிநிற்பாரா? அல்லது, ஸ்ரீபாலரையே, சார்ஜ் செய்துவிட்டார்களே எனபயந்து, மற்ற ஜனத்தலைவர்கள் சோர்வடைந்து, தாங்கள் வைத்த காலைபின்னெடுப்பார்களா ஐயோ! ஏன் வீணாய் கவர்ன்மெண்டார் ஜனங்களின் அதிருப்திக்களாகிறார்கள்.

போலீசாரும் மாணவர்களும்.

கல்விப் பொருட்காட்சியைப் பார்க்கும் பொருட்டு அனேக மாணவர் செனட்ஹௌசிற்குப் போயிருந்தார்கள் அங்குநின்ற போலீசார் மாணவர்களை அடித்துதுறத்த ஆரம்பிக்க மாணவர்களுக்கு கோபம்பிறந்து, போலீசாரை எதிர்த்து இருவர் மண்டையை பிளந்துவிட்டார்களாம். மாணவர்களில் அனேகருக்கு நல்லடியெனக் கேள்வி. பிறகு பெரிய போலீஸ் படையொன்று வந்து மாணவர்களில் சிலரைப் பிடித்து சார்ஜ் செய்திருப்பதாயும் அறிகிறோம். இதன் விவரம் அடுத்த கெஜெட்டில் தெரிவிக்கிறோம்.

கல்விப் பொருட்காட்சி.

இது சென்ற சனிக்கிழமையன்று செனட் ஹாலில், ஜஸ்டிஸ் பென்சன்துரை அவர்களால் திறக்கப்பட்டது. மாணவர்களாலும், உபாத்தியாயர்களாலும் செய்யப்பட்ட அநேக (Clay model) மண்பொம்மைகள், சித்திரங்கள், தையவேலைகள் முதலியவைகளும், சீமை லாங்க்மன்ஸ் கம்பெனியார் முதலியவர்களின் புத்தகங்களும் காக்ஷியில் வைக்கப்பட்டிருக்கின்றன. செனட்ஹாலில் காலை 10-மணி மாலை 5 மணிவரையில் பிரவேசக்கட்டணமின்றி யார்வேண்டுமென்றாலும் போய்ப்பார்க்கலாம்.

அர்பத்னட் கேஸ்.

இந்தக் கேஸ் இப்பொழுது செஷன்ஸ் சீப் ஜட்ஜியால் விசாரணை செய்யப்பட்டுவருகிறது. அர்பத்னட் பக்கம் ஆஜரான மிஸ்டர். நார்டன் அர்பத்னட்டை விடுவிக்கும்படியாக தனது சாமர்த்திய மெல்லாம் காட்டி வாதித்து வருகிறார். இவர்மீது கொண்டுவரப்பட்ட மூன்று சார்ஜில் ஒரு சார்ஜை கவர்ன்மெண்டாரே தகுந்த ஆதாரங்களில்லை என விலக்கிக்கொண்டார்கள். ஆகவே பாக்கி இரண்டு சார்ஜில் இரண்டாவது சார்ஜ் விசாரிக்கப்பட்டுவருகிறது.

(258-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

க்குக் கொடுக்குமாறு கவர்னர் இவனுக்கு மன்னிப்பு கொடுத்தார். டாக்டர்கள் கூறியவாறு இவன் இறந்துபோகாமல் நோயினின்று நீங்கி சௌக்கியப்பட்டு வசித்துக்கொண்டுவந்தான். அனேகவருஷகாலம் சென்று கவர்னர் இவன் உயிர்பிழைத்து வாழுவதை கேள்விப்பட்டு இவனுக்குக்கொடுத்த மன்னிப்பை ரத்துசெய்து ஜெயிலில் பிடித்துவைக்கும்படி உத்தரவுசெய்தார். கவர்னர் மன்னிப்பை ரத்துசெய்வதற்கு அதிகாரமற்றவரென்று கூறும்படியாக கைதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். அசல்கோர்ட்டாரும் முதல் அப்பீல்கோர்ட்டாரும் கவர்னர் தாம் கொடுத்த மன்னிப்பை ரத்துசெய்ய அதிகாரமிருக்கிறதென்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். கைதி சீப்கோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டிருக்கிறான். லாயரும் ஜட்ஜிகளும் இந்தப் பிரஸ்னையைக்குறித்து வாசாமசோசரமாய் வாதித்து வருகின்றார்கள்.

ஆனால் இந்திய சட்டத்தின்படி ஒரு மன்னிப்பு சில நிபந்தனைகள்பேரில் கொடுத்து ஒப்புக்கொள்ளப்பட்டபின் அந்த நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்பட்டால் மன்னிப்பைக்கொடுத்த அதிகாரி அதை ரத்து செய்வதற்கு அதிகாரம்கிடையாது.

Clints page—கக்ஷிகாரர்களின் பக்கம்.

1907-ம் ஆம் ஜூலைமீ த்தில் ஹைகோர்ட்டு வக்கீல்களாகத் தாக்கலானவர்களின் ஜாப்பிதா.

தாக்கலானவர்களின் பெயர்.	யாரிடம் அப்பிரண்டிசாக யிருந்தார்.	யாரிடம் மனு செய்துகொள்ளப்பட்டது.	தேதி.	கோர்ட்டார் உத்திரவு.
1. S. V. பத்மநாப அய்யங்கார்.	சர். V. பாஷியமய்யங்கார், K. T., C. I. E.	முதல் அப்பீல் கோர்ட்டார்.	22—7—1907.	அனுமதி கொடுக்கப்பட்டது.
2. D. S. தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி.	டாக்ட்டர் சாமிநாதன்.	அபிஷியேட்டிங் சிப் ஜஸ்டிஸ்—ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.	15- 7—1907.	ஷை
3. T. K. கோவிந்த அய்யர்.	திவான்பகதூர் L. A. கோவிந்தராகவய்யர்.	ஷை	19—7—1907.	ஷை
4. P. S. சுப்பிரமணிய அய்யர்.	ஹானரபில் P. S. சிவசாமி அய்யர்.			
5. A. விஸ்வநாதம்.	மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர்.			
6. K. ராமசாமி அய்யர்.	மிஸ்டர் T. எத்திராஜ முதலியார்.	அபிஷியேட்டிங் சிப் ஜஸ்டிஸ்—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.	11—7—1907.	ஷை
7. P. வெங்கட்டரமணய்யர்.	C. வெங்கடசுப்பிராமய்யர்.			
8. C. பாஷியமய்யங்கார்.				
9. A. சிவராமமீனன்.	T. R. ராமச்சந்திர அய்யர்.	அபிஷியேட்டிங் சிப் ஜஸ்டிஸ்—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.	19—7—1907.	ஷை
10. A. கிருஷ்ணசாமி அய்யர்.	P. R. சுந்திரமய்யர்.			
11. C. சக்ரதரராவ்.	T. V. சேஷகிரி அய்யர்.	அபிஷியேட்டிங் சிப் ஜஸ்டிஸ்—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.	15—7—1907.	ஷை



The Hon'ble Mr. Justice H. BATTY, M.A.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பட்டி, எம். ஏ.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்த சஞ்சிகை.

பத்திராசிரியர் :—M. A. லோகநாதன்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

2.] சென்னபட்டணம், 1907ஞு செப்டம்பர்மீ [9 பாகம்.

அடக்கம்.

	பக்கம்.
உருவப்படம்:—பம்பாய் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி ஹானரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர் பட்டி ...	
ஜெகதாம்பாள் கேஸில் சொல்லப்பட்ட தீர்ப்பின் ஆராய்ச்சி	297
தண்டனை அடைந்த மாணாக்கர்களின் கேஸ்	299
காக்கிநாடா கலகக் கேஸ்	300
கோர்ட்டு சமாச்சாரங்கள்	301
சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட் மூன்றாவது செஷன்ஸ்	304
இந்தியன் லா ரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்ட கேசுகள்	309
ரெவினியூ போர்ட் புரோசீடிங்ஸ்களும், கலெக்டர் உத்திரவுகளும்	322
ஒரு இன்பமான கதை	324
பலதேச வர்த்தமானம்	326
முக்கியமான தீர்ப்புகள்	329
மதுரை அடிஷனல் செஷன் ஜட்ஜி கோர்ட்டில் ஒரு நாடகக் காக்ஷி	330
சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	332
ஹிந்து லா—ஸ்வீகாரம் யார் எடுத்துக் கொள்ளலாம்?	333
கவர்ன்மெண்டு ஆர்டர்கள்	335
ஹைக்கோர்ட் ஸ்பெஷல் செஷன்ஸ்—சர் ஜியார்ஜ் அர்பத்நட் கிரிமினல் கேஸ் ...	336
ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பட்டி அவர்களுடைய சரித்திரம்	337

விஞ்ஞாபனம்.

I. சென்ற ஆகஸ்டு௴த்தில் சேர்ந்த புதிய சந்தாதாரர்களில்சிலரும் பழைய சந்தாதாரர்களில் சிலரும் இந்திய சட்ட கெஜெட்டிற்கு கையொப்பக்காரர்களாகச் சேருபவர்களுக்குப் புஸ்தக இனாம் கெடியாரம் இனாம் கொடுத்துவருவதை இன்னும் சில காலம் கொடுத்துவந்தால் இன்னும் அனேகர்கள் கையொப்பக்காரர்களாகச் சேருவதற்கு வசதி உண்டாகுமென்று நமக்கு எழுதியிருக்கிற யோசனைக்கிணங்க, 1907-ம் ௵ டிசம்பர்௴ 31௳ வரையில் சேருகிறவர்களுக்கு கெடியார இனாம் புஸ்தக இனாம் கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறோம்.

II. கெஜெட்டின் அருமை பெருமையையும் வருவாயையும் செலவையும் ஆராய்ந்து அறியாத சிலர் "சென்ற வருஷ நோட்டீசில் வருஷக்கடைசியில் ஒரு புத்தகம் இனாம் கொடுக்கப்படுமென்று சொல்லியிருந்தீர்களே அந்தப்படி கொடுக்கவேண்டிய புத்தகம் எங்கே என்று அனாவசியமாக எழுதிக் கேட்கிறார்கள். விளம்பரத்தில் சொல்லியிருக்கிறபடி நடப்பது எங்களுடைய முக்கிய கடமை. இந்த உத்திரவாதத்தையும் பொறுப்பையும் நாங்கள் உணர்ந்து எங்களுடையதொழிலையும் கடமையையும் நடத்திக்கொண்டு வருகிறோமென்பதற்கு சென்ற வருஷ சந்தாதாரர்கள் பெரும்பான்மையோர் இவ்வருஷமும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து நம்முடைய கெஜெட்டை ஆதரிக்க முன்வந்திருப்பதே போதுமான சாக்ஷியமாக யிருக்கின்றது. ஆகையால் நாங்கள் செய்யவேண்டிய கடமையிலிருந்து சிறிது தவறி நடப்பதால் எங்களுக்கு லாபம் கிடைக்கக்கூடியதாயிருந்தாலும் அதை ஒரு பொருட்டாகநினைத்து எங்கள் கடமையை எள்ளளவேனும் மாறிநடத்த நாம்நம்மனதை உடன்படுத்தமாட்டோம், எப்போது சந்தாதாரர்கள் ஒரு வருஷம் சந்தாதாரர்களாகச்சேர்ந்தார்களோ அப்போது அவர்கள் சாஸ்வத கையொப்பக்காரர்களாக எண்ணப்படுவது பத்திரிகை நடத்தும் ஆபீசுக்காரர்களின் சித்தாந்தம். வருஷக்கடைசியில் ஒரு புத்தகம் இனாம் கொடுக்கப்படுமென்று சென்ற வருஷ நோட்டீசில் சொல்லப்பட்டிருக்கிறது உண்மையே. அந்த இனாம் புத்தகம் யாருக்கு? எப்போதும் பத்திரிகையை ஆதரித்து வருகிறவர்களுக்கே யொழிய நடுவில் விட்டுப்போகிறவர்களல்லவென்று நாம் வியாக்கியானமா கூறவேண்டும்? பத்திரிகையை விட்டுப்போகிறவர்களுக்கு எந்தப்பத்திரிகை ஆபீஸ்காரர்களாவது இனாம் கொடுத்திருப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோமோ? இல்லை. இனாம்கொடுப்பதின் பிரதமாக காரணமே பத்திரிகையைஆதரிக்கும் பொருட்டல்லவோ? சென்ற வருஷம் ஆகஸ்டு௴த்தில் சேர்ந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 750. இந்த 750 பேர்கள் 675 பேர்கள் இந்த வருஷமும் சேர்ந்து பணம் செலுத்தி ஆகஸ்டு௴. கெஜெட்டைப் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். இன்னும் பாக்கியுள்ள பேர்களில் பலரும் சீக்கிரம் மணியார்டர் செய்வதாய் எழுதியிருக்கிறார்கள். இத்தனைபேர்கள் சென்ற வருஷம் நாம் பிரசுரித்த விளம்பரத்திற்கு சரியான தாற்பரியம் செய்துக்கொண்டிருக்க, இந்தவருஷம் கையொப்பம் செய்தனுப்பாத இரண்டொருவர் மட்டிலு பிசகான தாற்பரியம் செய்துகொள்வதேனோ? ஆழ்ந்து யோசனை செய்யாததின் தோஷமே ஒழிய வேறல்ல நிற்க, நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை வாங்கி வாசித்துவரும் சில சந்தாதாரர்களும் பல நண்பர்களும் இந்த கெஜெட்டு பூல்ஸ்காப் சைசில் சஞ்சிகை தோறும் 40 பங்களுக்குக்குறையாமல் விலை உயர்ந்த ஆண்டோன் பொட்டகிறாப் படத்துடன் விலையுயர்ந்த கடிதத்தில் பிரசுரப் படுத்தப்பட்டிருக்கிறபடியாலும் இதில் பிரசுரப்படுத்தப்படும் சமாச்சாரங்களும் விலை உயர்ந்த சட்டசமாச்சாரங்களாக யிருப்பதாலும் இதற்கு இனாம் ஏற்பாடு செய்திருப்பதே அனாவசியமென்று எழுதியிருக்கிறார்கள். ஆயினும் ஜனங்களுக்குசட்ட ஞானத்தில் ஒரு அவாவும், நம்முடைய கெஜெட்டில் ஒரு அபிமானமும் உண்டாகும் பரியந்தம் இனாம் கொடுத்துவருவது இந்த கெஜெட் பரவுவதற்கு ஒரு தூண்டுகோலாயிருக்குமென்றும் இப்படி இனாம் கொடுத்துவருவதால் உண்டாகும் செலவழிவை ஒரு பொருட்டாக நினையாமலும் இந்த கெஜெட் வருமானத்தால் கிடைக்கக்கூடிய ஊதியம் குறைவுப்பட்டுப்போனாலும் போகட்டும் கெஜெட் நானாவிடங்களில் பரவி தன்னுடைய பெயரை ஸ்தாபித்துக்கொண்டால் போதுமானதென்று எண்ணியும் இனாம் கொடுத்துவருகின்றோம்.

மேலே நாம் கூறியிருக்கும் சமாதானத்தில் இனாம் புஸ்தகம் கேட்டிருக்கும் இரண்டு நண்பர்களும் திர்ப்தி அடைவார்கள் என்று நம்புகின்றோம்.

நா. ராதாகிருஷ்ண அண்டு கோ.,

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டிலிருக்கும் ஒரிஜினல் சயிட் அட்மிஷன் கோர்ட், முதல் அப்பீல்கோர்ட்டு, இரண்டாவது அப்பீல் கோர்ட்டு ஆகிய இந்த நான்கு கோர்ட்டுகளிலும் விசாரணையாகும் கேசுகளை ரிப்போர்ட்டு எடுக்க ரிப்போர்ட்டர்களை மாதம் மாதம் அமர்த்திக்கொள்ளுகிறது எங்களுடைய வழக்கம். சென்ற ஆகஸ்டு௴ முதல் நிகழ்௴ 26௳ வரையில் அர்பத்நட்டை விசாரணைசெய்ய செஷன்கோர்ட் நடத்தப்பட்டபடியால் ஷை கோர்ட்டுகளுக்குப் போய் ரிப்போர்ட் எடுக்க யோக்கியதையுடைய எல்லா ரிப்போர்ட்டர்களையும் இங்கிலீஷ் பத்திரிகைக்காரர்கள் அமர்த்திக்கொண்டார்கள் ஆகையால் இந்த மாத சஞ்சிகையில் சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் என்கிற அத்தியாயத்தில் அதிகமான கேசுகள் பிரசுரிக்கப்படவில்லை. இக்குறையை அடுத்த௴த்தில் பூர்த்தியாய் நிவர்த்தி செய்யப்படும்.

எடிட்டர்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னபட்டணம், 1907௵ செப்டம்பர்௴ [பாகம் 9.

A REVIEW OF THE JUDGMENT DELIVERED IN JAGATHAMBAL'S CASE.

ஜெகதாம்பாள் கேசும் மாஜிஸ்டிரேட் கொடுத்த தீர்ப்பும்.

சென்னப்பட்டணம் சூளை வீராசாமிமுதலி தெருவிலிருக்கும் தர்மலிங்கநயினார் என்பவர் தம்முடைய மைனர் பெண் ஜெகதாம்பாளை (1) மிஸ் ஸ்டிரின்ஞ்பல்லோ, (2) மிஸ் ஹார்பண்ட், (3) மிஸ் மேரி, (4) பாக்கியம் ஆகிய நால்வரும் கூடி கிறிஸ்த்தவ மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் சட்டப்பிரகாரமுள்ள பெற்றோருடைய காவலிலிருந்து திருடிக்கொண்டு போனதாய் போலீஸ் கோர்ட்டார் முன்னிலையில் ஷை நான்கு பேர்கள்பேரிலும் குற்றம் சாட்டினதாயும் இந்தக் கேசை எழும்பூர் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க் துரை தம்முடைய பயிலுக்கு மாற்றிக்கொண்டு விசாரணை செய்த விபரத்தையும் நம்முடைய சந்தாதாரர்கள் அறிந்துகொள்ளும்படியாக சென்ற மாத கெஜெட்டில் பிரசுரம் செய்திருந்தோம். இந்தக்கேசில் இரண்டு முக்கியமான விஷயங்களைக்குறித்து பொது ஜனங்கள் கவனிக்கவேண்டியதா யிருக்கின்றது. ஒன்று என்னவென்றால்; கல்வி கற்றுக்கொடுக்கும் பொருட்டு இந்துக்களின் வீட்டிற்கு வரும் கிறிஸ்தவ ஸ்திரீகள் இந்துப் பெண்ணை கிறிஸ்தவ மதத்தில் சேரும்படி தூண்டியது. இரண்டாவது என்ன வென்றால் குற்றம் சாட்டப்பட்ட பேர்வழிகளும் கேசை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட்டும் ஒரே மதத்தைத்தழுவி வருகிறவர்களானபடியால் மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை நடுநிலைமையான மனதுடனிருந்து முடிவு செய்கிறாரா என்பதே. இந்தக்காரணங்களை முன்னிட்டு இந்தக்கேசை கோர்ட்டார் விசாரணைசெய்யும் ஒவ்வொரு தினத்திலும் திரளானஜனங்கள் கோர்ட்டில் கூடியிருந்தார்கள். இந்த ஜனகும்பிற்கு அஞ்சியே கோர்ட்டார் இந்தக்கேசை வெகுசீக்கிரம் விசாரணைசெய்து பைசல் செய்துவிட்டார்கள். இந்தக்கேசை விசாரணைசெய்த மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க் எப்போதும் நியாய வரம்பு தவராமல் கேசுகளைத் தீர்மானிப்பவர் என்றும் பிரசித்தியான பெயர் பெற்றுவந்தவராயிருந்த போதிலும் பிரஸ்தாப பண்டாரப் பெண்ணினுடைய கேசில் அவர் செய்திருக்கும் தீர்மானம் நியாயமான தீர்மானம் என்று நாம் இவ்விடத்தில் எடுத்தெழுத நம்முடைய மனம் ஒப்பவில்லை. இந்தக் கேசை ஆதிமுதல் கவனித்துவந்தோம். மாஜிஸ்டிரேட் குற்றவாளிகள் தம்முடைய மதஸ்தர்கள் என்று எண்ணி அவர்களை பாரபக்ஷமாய் விடுவித்திருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கிடமில்லாமற் போனபோதிலும் கேசில் புலப்பட்டிருக்கும் விஷயங்களை பரிசீலனை செய்து டிபன்ஸ் தரப்பாருக்கு அனுகூலமாய் தீர்ப்பு சொல்லியிருப்பதில் தவரிப்போயிருக்கிறார் என்று இவ்விடத்தில் ஸ்தாபிக்கத் தயாராயிருக்கிறோம். இந்தக்கேசின் பிரியாதி தர்மலிங்கநயினார் கொடுத்த பிரியாதின் விபரத்தை நம்முடைய கெஜெட்டில் ஏற்கனவே பிரசுரித்திருந்தபடியால் இப்போது இவ்விடத்தில் எடுத்த எழுதவேண்டியது அனாவசியம். இந்தக்கேசின் தீர்மானத்திற்கு முக்கியமான அம்சம் என்னவென்றால் ஜெகதாம்பாளின் வயது. சட்

டப்பிரகாரம் பெண்கள் 16 வயதடைந்தவுடன் மைனர் காலம் நீங்கி மேஜர் அடைகின்றார்கள். பிராசிக்கியூஷன் தரப்பில் குற்றவாளிகள்பேரில் கொண்டுவந்த நரசோரக்கேசை (Kidnapping) ருஜுப்படுத்த வேண்டியதாயிருந்தால் ஜெகதாம்பாள் 16 வயதிற்குட்பட்டவளென்று ருஜுப்படுத்தவேண்டும். டிபன்ஸ் தரப்பார் தங்கள்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்திலிருந்து தங்களை நீக்கிக்கொள்ள வேண்டுமானால் ஜெகதாம்பாள் 16 வயதிற்கு மேற்பட்டவளென்று ருஜுப்படுத்தவேண்டும். ஆகையால் ஜெகதாம்பாளின் வயது இந்தக்கேசில் முக்கியமான பாயிண்டாக யிருந்து கொண்டிருக்கின்றது. இந்துக்களின் குடும்பங்களில் வயதிற்கு ஜாதகமே ஆதாரம். ஜாதக மற்ற இந்துகுடும்பங்களின் எண்ணிக்கை மிகவும் அற்பமாகயிருக்குமென்பதை எவரும். ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகையால் பிராசிக்கியூஷன் தரப்பில் ஜெகதாம்பாளின் ஜாதகத்தை சாட்சியமாக தாக்கல் செய்தார்கள். இந்த ஜாதகத்தைக் கோர்ட்டார் நம்பக்கூடவில்லை என்று தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். பிராசிக்கியூஷன் தரப்பில் சொல்லுகிறபடி இந்த ஜாதகம் 12 வருஷத்திற்கு முந்தி ஜெகதாம்பாளுடைய பாட்டனால் எழுதப்பட்டது. எழுதியபாட்டன் இறந்துபோய்விட்டான். ஆகையால் பிராசிக்கியூஷன் தரப்பார் இறந்துபோன பாட்டனை சாக்ஷியாகக்கூப்பிட்டு ஜாதகத்தை ருஜுப்படுத்த முடியவில்லை. இருந்தபோதிலும் இந்தியன் சாட்சி சட்டத்தைத் தழுவி ஜாதகம் எழுதினவன் கையெழுத்தை தெரிந்த ஒரு மனிதனை சாட்சியாகப்போட்டு அவனைக்கொண்டு இந்த ஜாதகம் ஜெகதாம்பாளின் பாட்டன் கையெழுத்தால் எழுதப்பட்டிருக்கிற தென்று ருஜுப்படுத்தினார்கள். டிபன்ஸ் தரப்பு பாரிஸ்டராகிய மிஸ்டர் ரிச்மெண்டு தம்மால் கூடியவரையில் இந்த சாக்ஷியை கிராஸ் விசாரணையில் போட்டு வாட்டியும் சிறிதும் அசையவில்லை. நிற்க, ஜெகதாம்பாள் தன்னுடைய வாக்குமூலத்தில் தனக்கு ஜாதகம் எழுதப்படிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறாள். இத்தனை பேர்கள் இந்த ஜாதகம் ஜெகதாம்பாளின் பாட்டனால் எழுதப்பட்ட தென்றும், உண்மையான ஜாதகமென்று சொல்லியிருந்தும் இவர்கள் பாரிஸ்டர் ரிச்மெண்டின் கிராஸ் விசாரணையிலும் அப்படியே சொல்லியிருந்தும் பிராசிக்கியூஷன் தரப்பார் ஜாதகம் 12 வருஷத்திற்கு முந்தி ஜெகதாம்பாளின் பாட்டன் கையெழுத்தால் எழுதப்பட்டதென்று ருஜுப்படுத்த தவரிப் போய்விட்டார்கள் என்று கோர்ட்டார் தீர்ப்பில் சொல்லியிருப்பது விந்தையாக விருக்கின்றது. ஜெகதாம்பாளின் ஜாதகம் உண்மையில் எழுதப்பட்டிருந்தால் குடும்பத்தார் எந்த சமயத்திலாவது யாரிடமாவது அதைக் காண்பித்திருக்கமாட்டார்களா வென்றும், அப்படிக் காண்பிக்கப்பட்டவர்களை ஏன் பிராசிக்கியூஷன் தரப்பார் சாக்ஷிகளாகக் கூப்பிட்டு ருஜுப்படுத்தவில்லை என்று மாஜிஸ்டிரேட் சந்தேகப் படுகிறார். சாதாரணமாய் ஒரு பெண்ணின் ஜாதகம் எப்போது காண்பிக்கப்படுமென்றால் அந்தப்பெண் அதிக நோயால் வருந்தும் சமயத்திலும், புஷ்பவதியாகும் சமயத்திலும், வரன் வீட்டார் யாரேனும் பெண்ணைவந்து பார்க்கும் சமயத்திலும் ஜாதகங்கள் ஜோசியர்களிடம் காண்பிக்கப்படுவது வழக்கமாயிருந்துகொண்டு வருகின்றது. பிரஸ்தாபப்பெண் ஜெகதாம்பாள் நோயாயிருந்த காலத்தில் ஜாதகம் வேதகிரி ஜோசியரிடம் காண்பிக்கப்பட்டதென்று ஜெகதாம்பாளின் தகப்பன் வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார். பிரியாதி வள்ளுவ ஜாதியைச் சேர்ந்தவரானபடியால் அவரும் அவருடைய தகப்பனும் சகோதரனும் ஆகிய குடும்பத்திலுள்ள புருஷர்கள் தாங்களே ஜாதகங்களைப் பார்த்துப் பலாபலனை அறிந்து கொள்ளக்கூடியவர்கள். ஆகையால் ஜாதகத்தை வேறு ஜோசியர்களிடம் காண்பிப்பதற்கு அவசியமேற்படவில்லை. நிற்க, கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஜாதகம் உண்மையான ஜாதகமாகவும் பிரியாதியின் கைவசத்திலுமிருந்திருந்தால் ஜெகதாம்பாள் வீட்டைவிட்டுப் புறப்பட்டதினமே ஏன் பெற்றோர்கள் மிஷன் அவுசிலிருக்கும் பாதிரி துரைசாணிகளுக்கு அன்றையதினமாயினும் அல்லது மறுதினமாயினும் காண்பித்திருக்கக்கூடா தென்றும் அப்படி காண்பிக்காததால் இந்த ஜாதகம் அப்போது சமயத்திற்கேற்றபடி சிருஷ்டி செய்யப்பட்ட ஜாதகமாக இருக்கக்கூடுமென்று மாஜிஸ்டிரேட் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். சாதாரணமாய் சட்ட புஸ்தகங்கள் வாசிக்காத ஆங்கிலம் கற்றவர்களுக்குக்கூட மைனர் பெண்களை அழைத்துக்கொண்டு போவது கிரிமினல் குற்றமென்றும் இந்தக்குற்றத்திற்காக இந்தியன் பினல் கோடில் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்றும் பெண் மைனர் என்று ருஜுப்படுத்த ஜாதகத்தைக் காண்பித்தால் உத்தமமாகவிருக்குமென்று தெரியாது. அங்கனமிருக்க, சாமாணியப்படிப்புடைய பிரியாதிக்கு ஜாதகத்தைக் காண்பித்தால் மிஷன் அவுஸ் துரைசாணிகள் ஜெகதாம்பாளைத் துரத்திவிடுவார்கள் என்று எப்படித் தெரியும்? பெற்றோர்கள் தங்களுடைய பெண் கிறிஸ்தவ மதத்தில் சேரப்போகிறாளே என்றும் அவளை உயிருடன் எள்ளும் தண்ணீரும் வார்த்து தாரைவார்க்கும்படியாக நேரிட்டுவிட்டதென்று நினைக்க, நினைக்க, காண்டாவனம் பற்றி எறிந்ததுபோல அவர்களுடைய வயிறுபற்றி எறியும்போது பாதிரிகளை பிராசிக்கியூட் பண்ணவேண்டுமென்றும் ஜாதகத்தைக் காண்பிக்கவேண்டுமென்று எப்படி அவர்களுக்கு அந்த சமயத்தில் எண்ணமுண்டாயிருக்கக்கூடும்? உண்டாயிருக்க மாட்டாது. மிஷன் அவுசிற்கு ஓடிப்போன ஜெகதாம்பாளை பெற்றோர்கள் போய் கூப்பிட்டுப் பார்த்தார்கள். வரவில்லை. பாதிரி துரைசாணிகளுக்குச் சொல்லிப்பார்த்தார்கள். அதிலும்பலிதப்படவில்லை. இதற்குள் நான்கு ஐந்து தினங்களாய்விட்டன. இதன்பேரில் லாயரை யோசனை செய்தார்கள். அப்போது அவர் ஜாதகத்தைக்கொண்டு பெண் மைனர் என்று ருஜுப்படுத்தலாமென்று சொன்னார். அப்போது ஜாதகத்தை அவருக்குக் காண்பித்தார்கள். இது சரியான விஷயமாக இருக்கிறதே ஒழிய மற்றப்படி மாஜிஸ்டிரேட் நினைப்பதுபோலசந்தேகத்தை உண்டுபண்ணக்கூடிய நடவடிக்கை இதில் யாதொன்றையும் காணோம். மேலும் பெற்றோர்கள் துரைசாணிகளுக்கு ஜாதகத்தைக் காண்பிக்கக் கட்டுப்பட்டவர்களல்ல. கோர்ட்டார் கேசில் சொல்லப்பட்டிருக்கிற வாக்குமூலங்களைக்கொண்டு யூகித்து ஒரு

முடிவுசெய்யவேண்டுமே யொழிய வாக்குமூலங்களுக்குப்புறம்பான விஷயங்களைக்கொண்டு யூகிப்பது சட்ட சம்மதமுள்ளதாயிருக்கமாட்டாது. ஆகையால் பிராசிக்கியூஷன் தரப்பார், ஜாதகம் உண்மையான ஜாதகமென்று ருஜுப்படுத்தியிருக்கும்போது கோர்ட்டார் ருஜுப்படவில்லை என்று தீர்ப்பில் சொல்லியிருப்பது நியாயமான தீர்மானமல்லவென்று சந்தேகமின்று கூறுவோம்.

நிற்க, இந்தக்கேசில் சொல்லப்பட்டிருக்கும் டாக்டர்கள் வாக்குமூலத்தைக்கொண்டு ஜெகதாம்பாளின் வயது 18-க்கு மேலிருக்குமென்று மாஜிஸ்டிரேட் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். டாக்டர் நாயரும் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யரும் சரியான வயது நிர்ணயிப்பதற்கு வைத்திய சாஸ்திர உபாயமில்லை என்றும் தோராயமாய்த்தான் சொல்லக்கூடுமென்றும் சொன்னார்கள். டாக்டர் பிரௌனிங்கும் டாக்டர் ராபர்ட்சனும் அந்தப்பெண்ணிற்கு 18 வயதிற்கு மேற்பட்டிருக்கலாமென்று சொன்னார்கள். இவ்விதமாக சாட்சியம் கூறிய நான்கு டாக்டர்களும் வைத்திய சாஸ்திரத்தில் சமமானபடிப்படைந்திருப்பவர்கள் ஆகையால் மாஜிஸ்டிரேட் சுதேச டாக்டர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமலிக்கிறபோது வெள்ளைக்கார டாக்டர்களுடைய சாட்சியத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது. சிறிது நாட்களுக்கு முந்தி நடந்த இந்நகர் சூளை பாக்டரி அப்பீல் கேசில் எப்போது ஒரே அந்தஸ்துடைய இரண்டு டாக்டர்கள் ஒருவனுடைய வயதைநிர்ணயிப்பதில்பேதப்பட்ட அபிப்பிராயங்கள் கூறினார்களோ அப்போது மாஜிஸ்டிரேட் ஒரு டாக்டருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு மற்றொரு டாக்டருடைய அபிப்பிராயத்தைத்தள்ளிவிடக் கூடாதென்று ரிமார்க் செய்திருக்கிறார்கள். ஆகையால் மாஜிஸ்டிரேட் வெள்ளைக்கார டாக்டர்களின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு சுதேச டாக்டர்களின் அபிப்பிராயத்தைத்தள்ளிவிட்டது பிசகென்று கூறி கண்டனம் செய்கின்றோம்.

நிற்க டிபன்ஸ் தரப்பார் சென்னப்பட்டணம்முனிசிபாலிட்டியிலிருந்து 1886ஞத்தில் ஜெகதாம்பாள் என்கிற பெண்ணிற்கு அம்மை வைத்ததாக ஒரு சர்டிபிக்கேட் வாங்கி தாக்கல் செய்தார்கள் இந்த சர்டிபிக்கேட்டில் சொல்லப்பட்டிருக்கும் ஜெகதாம்பாள் என்கிற பெண் வேறொரு தர்மலிங்க பண்டாரத்தின் பெண் என்றும் இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட ஜெகதாம்பாள் நெல்வேலியில் பிறந்தவளென்றும் பிராசிக்கியூஷன் தரப்பார் ருஜுப்படுத்தக்க சாக்ஷிகள் விட்டார்கள். சபாபதி கிராமணியும் கிருஷ்ணசாமி ரெட்டியும் தங்கள் வீட்டிற்கு எதிரில் சுமார் 10, 12 வருஷத்திற்கு முந்தி தர்மலிங்க பண்டாரம் யென்று ஒருவன் குடியிருந்ததாகவும் அவனுக்குப் பல புத்திரிகளிருந்தார்கள் என்றும் அவர்களுக்குள் ஒரு பெண்ணின் பெயர் ஜெகதாம்பாள் என்றும் சொன்னார்கள், ஆனால் இந்த தர்மலிங்க பண்டாரமும் அவனுடைய குடும்பத்தாரும் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று அவர்களால் சொல்லவில்லை. நொண்டிக்குதிரைக்கு சருக்கினது சாக்கு என்பதுபோல மாஜிஸ்டிரேட் சாக்ஷிகள் தர்மலிங்க பண்டாரத்தின் தற்கால இருப்பிடத்தைச்சொல்ல முடியாததால் இந்த சாக்ஷிகள் சொல்லுவதை நம்பமுடியவில்லை என்று தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். சென்னப்பட்டணத்திலுள்ள வீடுகளில் குடியிருப்பதும், ரயில் பிரயாணிகள் நேசம் செய்வதும் ஒன்று என்று ஒப்புக்கொள்ளாதார் யார்? சென்னப்பட்டணத்தில் ஒரு வீட்டில் பல குடித்தனக்காரர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் ஒரு வீட்டில் சேர்ந்து குடியிருக்கும் பரியந்தம் நேசமாயிருக்கிறார்களே தவிர அந்த வீட்டைவிட்டுப் போனபிறகு பெரும்பாலும் அவர்களுடைய இருப்பிடங்களை அறிந்து கொள்ள விரும்புகிறதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இந்தக்கேசில் டாக்டர்கள் பேதப்பட்ட அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். ஆகையால் மாஜிஸ்டிரேட் டாக்டர் சாக்ஷியத்தைத் தள்ளியிருக்கவேண்டும். ஆகையால் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ஜாதகம் உண்மையான ஜாதகமா அல்லவா என்றும் மாஜிஸ்டிரேட் கண்டுபிடித்திருக்கவேண்டும். மாஜிஸ்டிரேட் தீர்ப்பில் சொல்லியிருப்பது போல ஜாதகம் பிரஸ்தாப ஜெகதாம்பாளுடைய ஜாதகம் என்று ருஜுப்படவில்லை என்று எண்ணம் கொண்டபோதிலும் மாஜிஸ்டிரேட் குட்டியப்ப கிராமணி தெருவிற்குச் சென்று லோக்கல் இன்கொயரி நடத்தி பிரியாதியைத் தவிர வேறொரு தர்மலிங்க பண்டாரம் என்று ஒருவர் 10 அல்லது 12 வருஷங்களுக்கு முந்தி இந்தத் தெருவிலிருந்தாரா வென்றும் அவருக்கு ஜெகதாம்பாள் என்கிற பெண் இருந்தாளாவென்றும் விசாரணை செய்து முடிவு செய்திருக்கவேண்டும். குற்றவாளிகள் பேரில் சாட்டப்பட்ட குற்றம் கொஞ்சம்கூட ருஜுப்படவில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால் இத்தியாதிகாரணங்களை முன்னிட்டு மாஜிஸ்டிரேட்டு குற்றவாளிகள் நிரபராதிகள் என்று கூறி அவர்களை விடுதலை செய்யாமல் சந்தேகத்தின் நன்மையைக் கொடுத்து அவர்களை விடுதலை செய்திருந்தால் அவருடைய தீர்ப்பு நியாயமான தீர்ப்பு என்று கூறும்படியாகயிருக்கும்.

THE CONVICTED STUDENTS CASES.

மாணுக்கர்களின் கேசுகள்.

இந்த கெஜெட்டில் சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் என்கிற அத்தியாயத்தில் சென்னை மாணுக்கர்கள் வித்வ சம்பந்தமான காக்ஷி காண்பிக்கப்பட்ட சென்னட் அவுஸ்மாளிகையில் புகுந்து சிலரைக் கல்லால் அடித்ததாக அவர்கள்பேரில் கொண்டுவரப்பட்ட கேசின் ரிப்போர்ட்டைத் பிரசுரித்திருக்கிறோம். இந்தக் கேசை விசாரணை செய்த சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க்கு நல்லசாமிப் பிள்ளை என்கிற மாணுக்கனையும் ஜம்புநாத அய்யர் என்கிற மாணுக்கனையும் தண்டித்திருக்கிறார். நல்லசாமி பிள்ளைக்கு ரூ. 25 அபராதம் விதித்து ஒருவருஷத்திற்கு நல்ல நடவடிக்கைக்காக ஜாமீன் கொடுக்கும்படி தண்டனை கூறினார். ஜம்புநாத அய்யர் என்பவருக்கு ரூ. 10 அபராதம் விதித்திருக்கிறார். இவர் கூறியிருக்கும் நீண்ட தீர்ப்பை நாம் பலமுறைவாசித்துப் பார்த்தோம். நல்ல

சாமிப்பிள்ளை முகம்மது ஷேரிப்பின் கண்ணில் படும்படியாக கல்லைவிட்டு எரிந்ததாக பிராசிக்கியூஷன் தரப்பார் ருஜுப்படுத்தவில்லை என்றே தெரியவருகின்றது. இந்தக்கேசில் சாக்ஷியம் சொல்லியிருப்பவர்கள். எல்லாம் கூடி ஒரு கான்ஸ்டேபிலும் மிஸ்டர் டாஸ் என்பவரும். கான்ஸ்டேபிலின் சாக்ஷியம் குற்றத்தைப் போதுமானபடி ருஜுப்படுத்தக் கூடியதாகயில்லை என்று சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டே தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். ஆகவே பாக்கியிருக்கிற சாக்ஷியமெல்லாம் கூடி மிஸ்டர் டாஸ் என்பவர் ஒருவர் சொன்ன சாட்சியமுமே. இவர் கிரிஸ்தவரானபடியால் இவர் பிரமாணத்தின் பேரில் சொல்வது பொய்யாக யிருக்கமாட்டாதென்றும் கிறிஸ்தவர்கள் பிரமாணத்தின் பேரில் பொய் சொல்லமாட்டார்கள் என்றும், பொய் சொன்னால் தெய்வகோபத்திற்குள்ளாக வேண்டுமென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியுமென்றும் ஆகையால் மிஸ்டர் டாஸ் கூறியிருக்கும் சாட்சியத்தை நம்பவேண்டுமென்றும் சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். கிறிஸ்தவமதத்தை அனுஷ்டித்து வருபவர்கள் பொய்பேசுகிறதில்லையோ? பொய் பிரமாணம் செய்கிறதில்லையோ? எத்தனை கிறிஸ்தவர்கள் பிரமாணத்தின்பேரில் பொய் சாட்சியம் சொல்லி தண்டனை அடைந்து ஜெயிலுக்குப்போயிருக்கின்றார்கள்! ஒரு சாட்சி கிறிஸ்தவனாயிருப்பதால் அவன் சொல்வது சத்தியமென்று கோர்ட்டார் நினைப்பது தகாதகாரியமென்று அஞ்சாமல் எழுதுவோம். நல்லதிருக்கட்டும் மிஸ்டர் டாஸ் என்ன சாட்சியம் சொல்லியிருக்கின்றார் நல்லசாமிப் பிள்ளை. கையைத் தூக்கினதை தாம்பார்த்ததாகச் சொல்லியிருக்கிறாரேதவிர அவர் கீழே குனிந்து கல்லெடுத்ததைப் பார்த்ததாகவும் சொல்லவில்லை கல்லை எறிந்ததாகவும் சொல்லவில்லை. கூட்டத்தில் ஒரு மனிதன் தன்னுடைய கையைத்தூக்கினால் அவன் கல்லைவிட்டெறியத்தான் தூக்கினான் என்று எப்படி சொல்லக்கூடும். ஒருக்கால் கூட்டநெருக்கத்தில் கை அகப்பட்டுக்கொண்டால் கையை தூக்கக்கூடும். இன்னும் யாதொரு குற்றமற்ற சாமாணிய காரணங்களுக்காகவும் தூக்கக்கூடும். மேலும் காபுரா செய்துகொண்டிருந்த ஒரு கூட்டத்தில் ஒருகை தூக்கப்பட்டால் அந்தக்கை குறிப்பிட்ட இன்னானுடைய கை என்று தூரவிருந்து பார்த்த ஒருவன் நிச்சயமாய்ச் சொல்லக்கூடுமா? ஆகவே இத்யாதி காரணங்களை முன்னிட்டு நல்லசாமிப் பிள்ளை பேரில் சாட்டப்பட்ட குற்றம் ருஜுப்படவில்லை என்று முடிவு செய்கின்றோம். குற்றம் சந்தேகமின்றி ருஜுப்பட்டாலொழிய ஒருவனைத் தண்டிப்பது சட்ட விரோதமாகும். குற்றம் ருஜுப்பட்டிருப்பது சந்தேகமாயிருந்தால் கோர்ட்டார் குற்றவாளிக்கு சந்தேகத்தின் நன்மையைக் கொடுத்து விடுதலை செய்ய வேண்டும். இந்தக்கேசில் சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் சந்தேகத்தின் நன்மையை நல்லசாமிப்பிள்ளைக்குக் கொடுத்திருந்து அவனை விடுவித்திருந்தால் அவருடைய தீர்ப்பு சரியான தீர்ப்பாவென்று சொல்லும்படியிருக்கும்.

COCANADA RIOT CASE.

காக்கிநாடா கலகக்கேசுகள்.

காக்கிநாடாவில் நடந்த குழப்பக் கேசுகளின் விசாரணை ஏறக்குறைய முடிந்து போய் விட்டனவென்று சொல்ல வேண்டும். பிராமணப் பையனை அடித்த டாக்ட்டர் கேம்பின்பேல் கொண்டு வரப்பட்ட நஷ்டதாவா டிஸ்டிரிக்ட் முனிசிப் மிஸ்டர் மாஸ்கர்னஸ் அவர்களால் விசாரணை செய்யப்பட்டு டாக்ட்டர் கேம்ப் 100 ரூ. நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் கேசில் டி. மு. எதிர்பார்த்தபடி பாரபக்ஷம் காட்டாமல் நடு நிலைமையான மனதுடன் விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லியிருப்பதற்காக சந்தோஷமடையவேண்டும். இப்போதாவது டாக்டர் கேம்ப் பையனை அடித்து காயப்படுத்தின விருத்தாந்தங்களை கவர்ன்மெண்டாரும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் ஏனையோ ஆங்கிலேய இந்தியர்களும் நம்புவார்களென்று நம்புகின்றோம். சட்டப்பிரகாரம் ஏற்பட்டுள்ள நியாயஸ்தலத்தார் டாக்ட்டர் கேம்ப் பையனை அடித்தது நியாய விரோதமென்றும் அக்கிரமமென்றும் தீர்மானித்து நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி உத்திரவு செய்திருக்கிறபடியால் இனியாயினும் கவர்ன்மெண்டார் அவனை டிபார்ட்மெண்டு தரப்பில் தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம். டாக்டர் கேம்பின் அடாத செய்கையால் காக்கிநாடாவிலுள்ள சிலருக்குக் கோபம் பிறந்து ஆங்கிலேயர் கிளப்பைத் தாக்கும்படியாக நேரிட்டது! கலெக்டர் மிஸ்டர் கம்மிங்கின் மண்டை உடைந்தது! கவர்ன்மெண்டார் காக்கிநாடாவிற்குத் தண்டனை போலீஸ் அனுப்ப நேரிட்டது! இப்படைகளுக்கு ஏழை ஜனங்கள் படிச்செலவு கொடுக்கும்படியாக நேரிட்டது! இந்த அசம்பாவிதங்களுக் கெல்லாம் காரணம் யார்? டாக்டர் கேம்ப்! ஆகையால் கவர்ன்மெண்டார் இவரை டிபார்ட்மெண்டு தரப்பில் தண்டிக்காமல் விட்டால் கவர்ன்மெண்டாரேலேயே ஏற்படுத்தப்பட்ட நியாயஸ்தலத்தாரின் தீர்மானத்தை கவர்ன்மெண்டாரே அவமதித்தார்கள் என்று எண்ணப்படுவதுமன்றி டாக்டர் கேம்ப் ஆங்கிலேயரானபடியால் அவரை கவர்ன்மெண்டார் தண்டிக்காமல் விட்டு விட்டார்கள் என்று பொது ஜனங்கள் கவர்ன்மெண்டார் மீது பழி கூறும்படியாக நேரிட்டுவிடும்.

இது இம்மட்டிலுமிருக்க, தண்டனைப் போலீஸ் அசிஸ்டென்ட் சூப்பிரண்டு மிஸ்டர் அட்கின்சனை சப் ஜெயிலில் பாராக் கொடுத்துக்கொண்டிருந்த மூன்று கான்ஸ்டேபில்கள் கொலை செய்ய எத்தனித்தார்கள் என்று இவர்கள் பேரில் கொண்டு வரப்பட்ட கேஸ் கோதாவரி செஷன்கோர்ட்டிற்கு கமிட் செய்யப்பட்டதில் செஷன் ஜட்ஜி மிஸ்டர் M. O. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் இந்தக் கேசை விசாரணை செய்து கைதிகளை விடுவிக்கும்படி உத்திரவு செய்து விட்டார்கள். ஆதியில் இந்தக் கேஸ் இவர்கள்பேரில் கொண்டு வரப்படும்போதே இது உபயோகமற்ற கேஸ் என்று எண்ணினோம், அது போலவே இந்தக்கேஸ் முடிவடைந்திருப்பதைக் குறித்து சந்தோஷப் படுகின்றோம். போலீஸ் சூப்பிரண்டு மிஸ்டர் அட்கின்சன்

அந்நியர் பேரில் கொண்டுவரப்படுகிற கேசுகளைக்கண்டுபிடிப்பதற்குப் பதிலாக தாம் சம்மதப்பட்ட கேஸ் கொண்டு வந்து கோர்ட்டார் தங்களுடைய காலத்தை வீண்விரையம் செய்யும்படியாகச் செய்து வைத்தனர். இது இம்மட்டிலிருக்க, காக்கிநாடாவில் ஆங்கிலேயர் கிளப்பைத் தாக்கினதாக குற்றம் சாட்டப்பட்ட கலகக்காரர்களை எட் அசிஸ்டன்ட் மாஜிஸ்டிரேட் நான்கு பிரிவுகளாகப் பிரித்து விசாரணை செய்தார். முதல் பிரிவில் சேர்ந்தவர்களை விசாரணை செய்ததில் மாஜிஸ்டிரேட் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷியத்தை முற்றிலும் நம்பி விட்டார். டிபன்ஸ் தரப்பு சாக்ஷியத்தை சிறிதேனும் நம்பவில்லை. இந்தப் பிரிவாரையும் மிகவும் கடுமையாகவும் தண்டித்திருக்கிறார். இதில் 13-வது குற்றவாளி B. A. பட்டம் பெற்றவர்; இவர் அடைந்திருக்கும் தண்டனைக்காக அனுதாபப்படுகின்றோம், இருந்த போதிலும் இவர்கள் அப்பீல் தாக்கல் செய்தால் அப்பீல் கோர்ட்டார் கூடியவரையில் தண்டனை காலத்தையாவது குறைப்பதற்கு போதுமான ஆதாரமில்லாமலில்லை.

A VAKIL AND A MAGISTRATE.

வக்கீலும் மாஜிஸ்டிரேட்டும்.

காக்கிநாடா எட் அசிஸ்டன் மாஜிஸ்டிரேட் முதல் பிரிவு குற்றவாளிகளைவிசாரணை செய்து முடிந்த பின்பு 13-வது குற்றவாளிக்கு ஆஜரான லாயர் அட்டிரஸ் பேசினார். தம்முடைய கக்ஷிக்காரனைக் குறித்து எவ்வளவு பேசவேண்டுமோ அவ்வளவும்பேசிமுடித்துவிட்டு இந்தக் கேசை பொருமையுடன் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்தாரென்று டிபன்ஸ் லாயர்கள் எல்லாக் கேள்விகளும் கேட்கும்படி அனுமதி கொடுத்தார் என்றும் இன்னும் அனேக சௌகரியங்களைச் செய்து கொடுத்தார் என்றும் மாஜிஸ்டிரேட்டை புகழ்ந்து பேசினார். மாஜிஸ்டிரேட் தீர்ப்புக் சொல்லுவதற்கு முந்தி லாயர்கள் மாஜிஸ்டிரேட்டை ஸ்துதியம் செய்து பேசுவது சட்ட விரோதம்.

COURT NEWS.

கோர்ட்டு சமாச்சாரங்கள்.

பிராசிக்கியூஷன்.

அரசாங்கியமான சமாச்சாரங்களைப் பதிப்பித்து பிரசுரித்ததாக லாகூரில் பஞ்சாப் அச்சியந்திர சாலை சொந்தக்காரரை கவர்ன்மெண்டார் இ. பி. கோ 290-வது பிரிவின்படி பிராசிக்கியூட் செய்யப்போகிறதாக ஒருவதந்தி உலாவுகின்றது.

கோச்சின் சீப் கோர்ட்டு.

கொச்சின் சீப் கோர்ட்டில் சீப் ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் S. லாக் கடந்த ஆகஸ்ட்டுமீ 19௳ பென்ஷன் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தினின்று நீங்கினார். இவர் கடந்த முப்பது வருஷ காலமாக சீப் கோர்ட்டில் ஜட்ஜியாகவிருந்து சிலாக்கியமான பெயர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். சிலகாலம் உதவி ஜட்ஜியாகவுமிருந்தனர் இவருக்கு மரியாதை காட்டும் பொருட்டு, சீப் கோர்ட்டில் பிராக்ட்டிஸ் செய்துகொண்டிருக்கும் லாயர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மரியாதைப் பத்திரம் வாசித்தனர்கள்.

ஒரு அதனப் பிரசங்கி மாஜிஸ்டிரேட்டின் புத்திமதி.

பங்காள மாகாணத்திலுள்ள ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் தம்முடைய அதிகாரத்திற்குட்பட்ட டிப்டி மாஜிஸ்டிரேட்டுகளை எல்லாம் வரவழைத்து கூட்டம் கூடி "நீங்கள் கேசுகளை விசாரணை செய்யும் போது சாதாரணமான ஜட்ஜிகளைப்போல உங்களை நினைத்துக் கொள்ளக்கூடாது. நீங்கள் ஜட்ஜிகளுக்குமேல் உயர்ந்த நிலைமையி லிருக்கப்பட்டவர்கள். பிராசிக்கியூஷன் தரப்பின் கக்ஷியை பலப்படுத்தி ருஜுப்படுத்துவதற்குள்ளதுக்களைச் செய்வதிலேயே உங்களுக்கு திருஷ்டியிருக்கவேண்டும். ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளை நீங்கள் கவனிக்கவேண்டாம். நீங்கள் கவனிக்கவேண்டிய சட்டமெல்லாம் கூடி இந்தியன் பினல்கோடே தவிர மற்றப்படி ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளல்ல. இப்போது கல்கத்தா ஹைகோர்ட்டிலிருக்கும் கிரிமினல் கோர்ட்டார் வெகுநாளைக்கிருக்கப் போகிறதில்லை" என்று சொன்னார்.

இந்த மாஜிஸ்டிரேட் தீர்மானம் செய்த கேசுகளை எல்லாம் ஹைக்கோர்ட்டார் ரத்து செய்திருக்கின்றனர் ஆகையால் இவர் ஹைக்கோர்ட்டின் மீது கோபம் கொண்டு பேசுகின்றார்.

பச்சயப்பா தர்மங்கள்.

பச்சயப்பா தர்மங்களின் டிரஸ்ட்டி கமிட்டியில் ஓர் அங்கத்தினராகவிருந்த சிட்டி சிவில் கோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார் B. A., B. L. அவர்கள் தம்முடைய ஸ்தானத்தை ராஜினாமா செய்து விட்டார். காரணம் இன்னதென்று தெரியவில்லை.

எட் கான்ஸ்டேபில் தண்டனை அடைந்தார்.

பெட்சபூர் என்னும் ஊரில் ஒரு எட் கான்ஸ்டேபில் பாப்டின் சோனா என்பவனை அடித்து அநியாயமாய் இம்சித்து ரூ. 11 பெற்றதற்காக இ. பி. கோ. 323, 384 பிரிவுகளின்படி குற்றம் சாட்டப்பட ஷெ யூர் மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணை செய்து அவனுக்கு மூன்று மாத கடினகாவல் தண்டனையும் 50 ரூ. அபராதமும் விதித்திருக்கிறார். அபராதம் செலுத்தப்பட்டால் அதை பிரியாதிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்திரவு செய்திருக்கிறார்.

ஒரு குறை.

பார்வதிப்பூர் டிஸ்டிரிக்ட் முனிசிப்கோர்ட் நாஜர் இரண்டு மாதத்திற்கு ரஜா எடுத்துக்கொண்டிருக்கிறார். இவருக்கு பதிலாக பார்க்கதக்க யோக்கியதை உடையவர்கள் அனேகர்கள் கிளர்க்குகளுக்குள்ளிருக்கையில் டிஸ்டிரிக்ட் முனிசிப் காப்பிஸ்ட் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவனை பதிலாக நியமித்திருப்பது முனிசிப்கோர்ட்டு உத்தியோகஸ்தர்களுக்குள் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டிருக்கின்றது. கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும்.

600 008

சார்வேட் நகர ஜமீன்.

இந்த ஜமீனுக்கு அனேகர்கள் கடன் கொடுத்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் நிகழ்மீ 9உ ராயப்பேட்டை பாட்டர்சன் தோட்டத்திலிருக்கும் மிஸ்டர் லாட் கோவிந்ததாசின் பங்களாவில் கூடி தாங்கள் கொடுத்திருக்கும் கடனை எப்படி திரும்பி அடைகிறதென்று யோசனை செய்தார்கள், மீட்டிங்கிற்கு வந்திருந்த கடன்காரர்கள்:—மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ், திவான்பகதூர் K. கிருஷ்ணசாமிராவ், திவான்பகதூர் P. ராமசாமி செட்டியார் திவான்பகதூர் N. சுப்பிரமணியம், மிஸ்டர் T. சீதாராம் செட்டியார், மிஸ்டர் C. கண்ணன் செட்டியார், முதலியவர்கள்" இவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து ரூ. 75-லக்ஷம் ஜமீன்தார் கொடுக்கவேண்டும். திவான்பகதூர் P. ராமசாமி செட்டியார் இந்த மீட்டிங்கிற்குச் சேர்மெனாகவிருந்தார். கடஷை ஜமீனிலிருந்து வசூல்செய்து கொடுக்கும்படியாக கவர்ன்மெண்டாருக்கும் கோர்ட் ஆப் வார்ட்சாருக்கும் மனு செய்துகொள்ளவேணுமென்றும் இதைக்குறித்து யோசனைசெய்து மனுசெய்துகொள்ள அடியிற்குறிப்பிட்டவர்கள் ஒரு கமிட்டியாராக நியமிக்கப்படவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது:— (1) மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ், (2) திவான்பகதூர் K. கிருஷ்ணசாமிராவ், (3) மிஸ்டர் C. கண்ணன் செட்டி (4) மிஸ்டர் P. ராமகிருஷ்ண ரெட்டி, (5) J. சுப்பரெட்டி (6) ராவ்பகதூர் கோவிந்ததாஸ், (7) சதர்புஜதாஸ், (8) மிஸ்டர் புன்னியம் நாராயணசாமி செட்டி, (9) மிஸ்டர் A. ராமச்சந்திர அய்யர், (10) J. சுப்பிரமணிய அய்யர், (11) மிஸ்டர் சுப்பராயலு செட்டி, (12) திவான்பகதூர் N. சுப்பிரமணியம், (13) T. சீதாராம் செட்டி. இவர்களுக்குள் 1 முதல் 11 கனவான்களும் பெந்தகத்தின்பேரில் கடன்கொடுத்திருக்கிறார்கள். பாக்கி இரண்டுபேர்களும் வெண்ணிலையாகக் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு நஷ்டதாவா.

காசீம் பானடலே என்கிற ஒரு தோல் வியாபாரி ஜோட்பூர் பிக்கானீர் இருப்புப்பாதையைச் சேர்ந்த ஐதராபாகத்திற்கு அனுப்பும்படியாக ஜோட்பூர் ஸ்டேஷனில் ரூ. 3000 பொருமானமுள்ள தோல்கள் ரயிலில் ஏற்றினார். ரெயில்வே அதிகாரிகளின் அஜாக்கிரதையினால் சரக்குகள் தீப்பிடித்து எறிந்துபோய் விட்டன. வியாபாரி கம்பெனியார் பேரில் ரூ. 3000-ம் நஷ்டத்திற்கு ஐதராபாத் சப் கோர்ட்டில் தாவா செய்தார். விசாரணை தினம் டிராபிக் மானேஜர் ஆஜராகி சரக்குகளின் கிரயம் ரூ. 1,800 தானிருக்குமென்றும், இந்தத்தொகையைக் கொடுக்கத் தாம் தயாராயிருப்பதாகச் சொன்னார். வாதி ஒப்புக்கொள்ளவில்லை. வாதி பின் வேண்டிக்கொண்டபடி தீப்பிடித்து எறிந்து கிடக்கும் சரக்குகளைப் பார்த்து மதிப்புபோட கோர்ட்டார் ஒரு கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

புதிய சப் கோர்ட்.

கும்பகோணத்தில் புதிதாய் நிகழ்மீ 2உ முதல் ஒரு சப் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு மிஸ்டர் கிருஷ்ணசாமி ராவ் சப் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார். வக்கீல்களுக்கும் கக்ஷிக்காரர்களுக்கும் மரியாதை காண்பித்து கேசுகளை விரைவில் பைசல் செய்து வருவதாயும் கேள்விப்படுகின்றோம்.

ஜில்லா ஜட்ஜி.

திருச்சினாப்பள்ளி சப் ஜட்ஜியாகவும் கோயம்புத்தூர் அசிஸ்டெண்ட் செஷன் ஜட்ஜியாகவுமிருந்த மிஸ்டர் ரெங்காச்சாரியார் அவர்களை கவர்ன்மெண்டார் கஞ்சம் ஆக்டிங் ஜில்லா ஜட்ஜியாக நியமித்திருக்கிறார்கள். இவர் ஈரோட்டிலும் கோயம்புத்தூரிலும் 7-வருஷகாலமாக முனிசிபாகவுமிருந்தனர்.

விவாக கேஸ்.

இந்தியன் கிறிஸ்தவ விவாக சட்டத்தின் 68-வது பிரிவின்படி கிறிஸ்தவர்களுக்குள் நடக்கும் விவாகத்தை லைசென்ஸ் பெற்ற கிறிஸ்தவமத ஆசாரிகள் நடத்திவைக்கவேண்டும். கோயம்புத்தூரில் உள்ள ஒரு கிராமத்தில் சத்தியநாதன் என்கிற ஒரு சுதேச கிறிஸ்தவனுக்கும் மாசிலாமணி என்கிற சுதேச கிறிஸ்தவனுடைய பெண்ணிற்கும் நடந்த விவாகத்தை பூசாரி கருப்பன் என்கிற ஒரு இந்து காஞ்சி கோவிலில் நடத்திவைத்தான், இதற்காக கிறிஸ்தவமத குரு மூவரையும் பெருந்தொரை சப் மாஜிஸ்டிரேட் முன்பாகக்குற்றம் சாட்டினார். இவர் கேசை செஷனுக்குக் கமிட் செய்ய, குற்றவாளிகள் இந்து கிறிஸ்தவர்களுடைய விவாகத்தை நடத்திவைக்கும் வழக்கம் தங்களுக்குள் வெகுகாலமாகயிருந்து வருகிறதென்று டிபன்ஸ் கூறினார்கள். பிரியாதியாகிய கிறிஸ்தவமத குருவும் இம்மாதிரி வழக்கம் சிறிது காலத்திற்கு முந்தியிருந்ததாக கேள்விப்படுவதாயும் ஒப்புக்கொண்டார். செஷன் ஜட்ஜி மிஸ்டர் பிராட்புட் குற்றவாளிகளை இனிமேல் இம்மாதிரியான குற்றம் செய்யக்கூடாதென்று கண்டித்து கோர்ட்கலையும் பரியந்தம் காவலிலிருக்கும்படி தண்டனை விதித்தார்.

காக்கிநாடா கலகக்கேஸ்.

காக்கிநாடா கலகக்காரர்களை நான்கு பிரிவுகளாகப்பிரித்து எட் ஆசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்து வருகிறார் என்றும் இரண்டாவது பிரிவுக்கும் மூன்றாவது பிரிவுக்கும் தண்டனை சொல்லிவிட்டார் என்றும் சொல்லியிருந்தோம். நிகழ் செப்டம்பர்மீ 9உ மூன்றாவது பிரிவுக்கும் தீர்ப்பு சொல்லிவிட்டார், அதாவது பாக்கி எர்ரய்யா, கான்ராய்யா, ஆகிய இருவர்களும் விடுவிக்கப்பட்டார்கள். சாமி தட்டிகாடு, லாங்கின விஸ்வநாதம் ஆகிய இருவர்களுக்கும் தலைக்கு 18 மாத கடின காவல் தண்டனையும் ஒவ்வொருவருக்கும் 40 ரூ. அபராதமும் அபராதம் கட்டத்தவறினால் இரண்டுமாத கடினகாவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அகப்பட்டுக் கொண்டார்.

ராவில்பண்டி கலகக்கேசில் சம்பந்தப்பட்டதாகவும் நேப்பாளத்திற்கு ஓடி ஒளிந்துக் கொண்டிருந்ததாகவும் சொல்லப்பட்ட நான்டிக்ஷோர் அரஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

அக்கிரமமான தண்டனை.

அலகபாத்தில் ஜாமீலுடின் என்கிற முகமதிய பிளீடர் வீட்டில் ஒரு விவாகம் நடந்தது, விவாகம் நடந்தினத்திற்கு அடுத்த தினமாகிய செப்டெம்பர்மீ 6உ காலை 2-மணிக்கு பாணவேடிக்கைகள் நடத்துவதற்கு மாஜிஸ்டிரேட்டினிடமிருந்து லைசென்ஸ் பெற்றிருந்தார். பாணவேடிக்கைகள் அப்படியே நடந்தன.

ஜெயிலில் இரவில் கைதிகள் கூடி கலகம் செய்தால் போலீசார்வந்து சேரும்படி ஜெயில் சூப்பிரண்டு எச்சரிக்கைக்காக ஆகாயபாணங்கள் விடவேண்டுமென்பது சட்டம். இந்தப்பிளீடருடைய வீடும் ஜெயிலுக்கு சமீபத்திலிருந்தபடியால் பாணவேடிக்கையின் கோஷ்டத்தால் துயிலின்று விழித்துக்கொண்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயிலில் ஏதோ கலகம் நடக்கிறதென்று எண்ணம்கொண்டு ஓடிவந்தார் ஓடிவந்து பார்க்கவே ஷை பிளீடரால் பாணவேடிக்கைகள் நடத்தப்படுகின்றனவென்று தெரியவந்தது. மறுநாள் இந்த பிளீடரை இ.பி.கோ. 290-வது பிரிவின்படி பப்ளிக்நியூசன்ஸ் என்னும் குற்றத்திற்காக பிராசிக்கியூட் செய்தனர். பிளீடர் லைசென்ஸ் பெற்றிருப்பதாக டிபன்ஸ் கூறியும், இந்தக்கேசை விசாரணைசெய்த ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் பிளீடர் அபரிமிதமான கோஷ்டம் செய்தார் என்றும் இதனால் போலீஸ் சூப்பிரண்டு தம்முடைய படுக்கையிலிருந்து எழுந்திருந்து வரும்படியாக நேரிட்டதென்றும் சொல்லி பிளீடருக்கு ரூபாய் ஐந்து அபராதம் விதித்தார்.

இந்தக்கேசின் ரிக்கார்டுகளைப் பார்வையிட்ட செஷன் ஜட்ஜி தண்டனையை ரத்து செய்யவேண்டுமென்று ஹைக்கோர்ட்டாருக்கு சிபார்சு செய்திருக்கிறார்.

திருவாங்கூர் சமஸ்தானம் சர்க்கார் பேரில் வந்திருக்கும் வியாஜ்ஜியம்.

காலஞ்சென்ற திருவாங்கூர் சமஸ்தான இளைய ராஜாவிற்கு பிரைவேட் செக்ரட்டெரி அதாவது குடும்ப காரியஸ்தராகவிருந்த மிஸ்டர் ரெங்கராவ் B. A., B. L. அவர்கள் இளையராஜாவிற்கு ரூபாய் பதினாயிரம் கடன் கொடுத்திருந்தார். இளைய ராஜா இறந்து போய் விட்டபடியால் திருவாங்கூர்சர்க்காரை சட்டப்பிரகாரமுள்ள வார்சாக நிதியாகச்சேர்த்து (Legal Representation) சர்க்கார்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

வாதி தரப்பில் மேன்மைதங்கிய ராஜாவிற்கு நேரில் அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டிருந்தும், இந்தக் கடனாளிகளுக்குத் தாங்கள் பாத்தியப்பட்டவர்களாக மாட்டார்கள் என்று சர்க்கார் டிபன்ஸ் கூறினார்கள். இந்தக் கேசை விசாரணை செய்த ஜட்ஜி இந்தக் கடன்களில் ரூ. 400-க்கு இளையராஜா ஒரு பிராமிசரிநோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறபடியால் இந்தக் கடன் உண்மையான கடன் என்று தீர்மானித்தார்.

இறந்துபோன இளையராஜாவிற்கு சர்க்கார் சட்டப்பிரகாரமுள்ள வார்சாக மாட்டார்கள் என்றும் ஆகையால் அவர்கள் இந்தக்கடனுக்கு ஜவாப்புதாரிகளாகமாட்டார்கள் என்றும் தீர்மானித்தார். சர்க்கார், இளையராஜாவிற்கு எக்சிக்யூட்டர்கள் தரப்பிலும், இந்தக்கடனுக்கும் பாத்தியப்பட்டவர்களாக மாட்டார்கள். ஏனெனில் சர்க்காரை இளைய ராஜாவின் எக்சிக்கியூட்டர் தரப்பில் இந்தக்கடனுக்கு பாத்தியப்படும்படி செய்யவேண்டுமானால் வாதி சர்க்காருடன், இளைய ராஜாவின் சட்டப்பிரகாரமுள்ள வார்சையும் பிரதிவாதியாகச் சேர்ந்திருக்கவேண்டும். ஆகையால் சர்க்கார் எக்சிக்கியூட்டர்கள் தரப்பிலும் இந்தக்கடனுக்குப்பாத்தியப்பட்டவர்களாகமாட்டார்கள் என்று தீர்மானித்தார். ஆகவே முடிவில் கோர்ட்டார் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைச்செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆதால் இந்தக்கேசில் நிர்ணயிக்கப்படவேண்டிய சட்ட அம்சம் என்னவென்றால் காலஞ்சென்ற இளைய ராஜாவிற்கு யார் வார்சென்பதே. சர்க்கார் வார்சாகமாட்டார்கள் என்று ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானித்துவிட்டார்கள். எப்போது சர்க்கார் வார்சாகமாட்டார்கள் என்று தீர்மானிக்கப்பட்டதோ அப்போது ராஜகுடும்பத்திற்குத் தலைவராகிய மகாராஜாவே வார்சாவார் என்று முடியும். சட்டப்பிரகாரம் மகாராஜாவின்பேரில் மகாராஜாவினுடைய கோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாது.

இப்போது ஜில்லாக்கோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானத்தை திருவாங்கூர் ஹைக்கோர்ட்டாரும் உறுதிப்படுத்தினால் ராஜகுடும்பத்தாருக்கு கடன் கொடுத்தால் கடனை எப்படி திரும்பிப்பெற்றுக்கொள்ளுகிறதென்று தெரியவில்லை. மிஸ்டர் ரெங்கராவ் செய்திருக்கும் அப்பீலின் முடிவை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

மாற்றல்.

மதுரை டிப்டி கலெக்ட்டராகிய மிஸ்டர் சக்கீதராவ் நாயுடு அவர்கள் சொற்பகாலம் வரையில் திண்டுக்கல்லிலிருந்து ஜாமீன் கேஸ்களை விசாரணை செய்யும்படியாக மாற்றப்பட்டிருக்கிறார். இவர் எப்போதும் பாரபக்ஷமில்லாமல் கேசுகளை விசாரணை செய்யுங்குணதிசயமுடையவர். இவரை சொற்பகாலத்திற்குக்கூட விட்டுப்பிரிந்திருக்க மதுரை ஜனங்கள் மனமற்றவர்களாகயிருக்கின்றார்கள்.

சப் ஜட்ஜி.

திருச்சினாப்பள்ளி சப் ஜட்ஜியாகவும் கோயம்புத்தூர் அசிஸ்டெண்ட் செஷன் ஜட்ஜியாகவுமிருக்கும் மிஸ்டர் ரெங்காச்சாரியார் தம்மை திருச்சினாப்பள்ளியிலிருந்து மாற்றிவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு மனு செய்துக்கொண்டிருக்கிறார். இவர் மாதம் ஒருமுறை செஷன் ஜட்ஜி உத்தியோகத்தைப் பார்க்கும் பொருட்டு கோயம்புத்தூருக்குப் போகவேண்டியதா யிருக்கிறபடியால் தமக்கு தேக அசௌக்கியப் படுகிறதென்று மனுவில் காரணம் காட்டியிருக்கின்றார். இருந்தபோதிலும் இவருடைய நெருங்கிய பந்துக்களாகிய இரண்டு லாயர்கள் திருச்சினாப்பள்ளியில் விசேஷமான பிராக்டிஸ் செய்து வருகின்றார்கள். இப்பேர்கொற்ற விடத்தில் மிஸ்டர் ரெங்காச்சாரியார் அவர்களை சப் ஜட்ஜியாக வைத்திருப்பதைப் பார்க்கிலும் வேறொரு ஊருக்கு மாற்றிவிடுவதே நலமாயிருக்குமென்பது கக்ஷிக்காரர்களின் அபிப்பிராயம்.

THE THIRD CRIMINAL SESSIONS OF THE HIGH-COURT OF MADRAS, FOR 1907.

சென்னப்பட்டணம்

ஹைக்கோர்ட்.

1907-வது ௵த்திய மூன்றாவது கிரிமினல் செஷன்ஸ் விசாரணையின் தொடர்ச்சி.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

தகப்பன் புத்திரியைக் கொலைசெய்த கேஸ்.

குற்றவாளி:—தாண்டவராயன் என்கிற டிங்கான்.

கேசின் விபரம்:—சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி மன்னார்சாமி கோவில் வீதியில் கெம்பம்மாள் என்கிற ஸ்திரீ 10-வருஷத்திற்கு முந்தி வசித்துக்கொண்டு வந்தாள். இவளுடைய புருஷன் பெயர் பெருமாள். இவர்களிருவரும் விவாகம் செய்துக்கொண்டு வெகுநாட்கள் வரையில் புத்திர சந்தானமில்லாமலிருந்தார்கள். இப்படி யிருக்கும் தருவாயில் இந்தக்கேசின் குற்றவாளி டிங்கன் என்பவனுக்கும் கெம்பம்மாளுக்கும் நேசமுண்டாக குற்றவாளி கெம்பம்மாளிடம் போக்குவரத்து சாவகாசம் செய்துக்கொண்டுவந்தான். இப்படி குற்றவாளியும், கெம்பம்மாளும் நேசமாயிருந்து தேக சம்பந்துப்பட்டு வருவது கெம்பம்மாளின் புருஷனுக்கும் ஜாடையாகத் தெரியும். இப்படி இருவர்களும் தேகசம்பந்தம் செய்துவந்ததால் கெம்பம்மாளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. இதற்கு பத்து மாத வயதாகின்றபோது தாயாராகிய கெம்பம்மாள் இறந்துபோய் விட்டாள். அப்போதே அவளுடைய சொந்தப் புருஷனாகிய பெருமாள் என்பவனும் தீவாந்திரம் போய்விட்டான். இதன் பிறகு குழந்தை குற்றவாளியாகிய டிங்கனாலும் பாட்டியாராலும், (கெம்பம்மாளின் தாயார்) பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. 10-வருஷம் சென்று தேசாந்திரம் போன சொந்தத் தகப்பனாகிய பெருமாள் வந்து சேர்ந்தான். "ஆடு மலையேறி மேய்ந்தாலும் குட்டி கோனானுடையது" என்பதுபோல கெம்பம்மாளின் சொந்த புருஷனாகிய பெருமாள், கெம்பம்மாள் டிங்கனுக்குப்பெற்ற குழந்தையை தன் குழந்தையாக பாத்தியம் பாராட்டி அந்தப்பெண்ணைப் பார்க்கப்போனான். மாமியார் மருமகனுக்கு நல்வரவுகூறி உபசரித்து பெண்ணை எடுத்து பெருமாள் மடியில் தூக்கி வைத்தாள். பெருமாள் முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும் தன்னுடைய சொந்த ஜாகைக்கு அழைத்துக்கொண்டுபோய், ஸ்நாநம் செய்துவைத்தான், அப்பம் வாங்கிக் கொடுத்தான் சோரூட்டினான், துட்டு கொடுத்தான், பிறகு அப்பெண்ணை அழைத்துக்கொண்டுவந்து பாட்டியாரிடம் ஒப்புவித்துவிட்டான். அருமபாடுபட்டு பெற்ற டிங்கன் ஒருநாள் முழுதிலும் பெண்ணைப் பார்க்காமல் அப்பெண்ணின் பாட்டியாரைக்கேட்க, அவள் பெருமாள்வந்து அழைத்துக்கொண்டுபோனதாகச் சொன்னாள். டிங்கனுக்குக் கோபம் பிறந்தது. இனிமேல் பெண்ணை பெருமாள் வீட்டிற்கு அனுப்பவேண்டா மென்று தாக்கீது செய்தான். மறுநாள் பெருமாள் பெண்ணைக் கொண்டுவந்து பாட்டியாரிடம் ஒப்புவித்தபோது டிங்கன் பெண்ணைப் பார்த்து "நீஎங்கே போயிருந்தாய்" என்றுகேட்க, அதற்குஅந்தப்பெண் "என் தகப்பன் வீட்டிற்குப்போயிருந்தேன்" என்று பதில் சொன்னாள். இனிமேல் போகவேண்டாமென்று டிங்கன் தாக்கீது செய்தான். இப்படியிருந்தும் பெருமாள் அடிக்கடி வந்து அந்தப் பெண்ணை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய்க் கொண்டிருந்தான். பெண்ணின் பாட்டியார் வீட்டில் ஒருநாள் பெருமாளும் டிங்கனும் சந்திக்கும்படியாக நேரிட்டது. இருவர்களுக்கும் வார்த்தை நடந்ததில் பெண்ணைக் கொலைசெய்தாலும் செய்வனே தவிர இந்த பெண்ணை உன்னிடம் விடமாட்டேன் என்று டிங்கன் பெருமாளைப்பார்த்துச் சொன்னான். இதன் பிறகு இரண்டு மூன்று தினங்கள் சென்று டிங்கன் பெண்ணை ஒரு கோவிலுக்குள் அழைத்துக்கொண்டுபோய் படியில் படுக்கவைத்துக்கொண்டு பெண்ணின் கழுத்தைக் கத்தியால் அறுத்துவிட்டு ஓடி, ஓடுகையில் தன்னை விவாகம் செய்துக்கொள்ள இஷ்டப்படாமல் மறுதளித்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணையும் கத்தியால் குத்திவிட்டு மௌன்ரோட்டிற்கு ஓடி அவ்விடத்தில் ஸ்டேபில்கம்பேனிக்குச் சமீபத்தில் பீட்டில் நின்றுகொண்டிருந்த ஒரு கான்ஸ்டேபிலினிடம் கத்தியையும் கொடுத்து நான் தன்னுடைய புத்திரியின் கழுத்தை அறுத்துவிட்டு வந்ததையும் தனக்கு விரோதமாயிருந்த பெண்ணை குத்திவிட்டு வந்த விர்த்தாந்தத்தையும் சொன்னான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் எட்கார் பிர்ஷ்டன் (போர்மன்) மெசர்ஸ் J. F. ஜோன்ஸ், P. M. அப்பாசாமி பிள்ளை, F. L. மார்லாலோ B. A. R. M. தர்லி, H. N. C. காம்பல், E. A. ஸ்மித், H. M. கிளே, B. A. L. T. E. W. பாலிட்மாஸ்ட் M. A.

லாயர்கள்:—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு கிரௌன் பிராசிக்கியூட்டரும், டிபன்ஸ் தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் வெங்கட சுப்பய்யரும் பேசினார்கள்.

அங்குப்பிள்ளை:—இவர் பிளான் எழுதும் தொழிலுடையவர். இவர் கொலை நடந்த ஸ்தலத்தைப் பற்றிய ஒரு பிளான் தயார்செய்து காட்டினார்.

இந்தப் பிளான் கோர்ட்டில் தஸ்தாவேஜு சாக்ஷியமாக தாக்கல் செய்துக் கொள்ளப்பட்டது.

பிராசிக்கியூஷன் தரப்பு முதல் சாக்ஷியின் வாக்குமூலம்:—என்பெயர் விரப்பாள், இறந்துபோன பெண்ணின் பெயர் முனியம்மாள். இவள் என்னுடைய பேத்தி. குற்றவாளி டிங்கனை எனக்குத் தெரியும். இறந்துபோன என்னுடைய புத்திரி கெம்பம்மாளிடம் அவன் வைத்துப்போக்காயிருந்தான். கொலையுண்ட பெண் 10 மாத வயதாயிருக்கும்போது கெம்பம்மாளிறந்து போய்விட்டாள், கெம்பம்மாளுடைய சொந்த புருஷன் பெருமாளும் என் வீட்டில்தான் வசித்துக் கொண்டு வந்தான். ஆனால் கெம்பம்மாள் இறந்து போனவுடன் அவன் வீட்டைவிட்டுப் போய்விட்டான். இவன் வீட்டைவிட்டுப் போகும்போது குழந்தை டிங்கனுடையதானபடியால் அதை வளர்த்து வரவேண்டிய பொருப்பு என்னுடையதென்று சொன்னான்.

கடந்த தமிழ் வருஷப்பிறப்பு தினம் பெருமாள் என்னுடைய வீட்டிற்கு வந்து பெண்ணை அழைத்துக் கொண்டு போனான். அப்போது டிங்கனில்லை. அன்று மாலையில் பெருமாள் பெண்ணை வீட்டில் கொண்டு வந்து விட்டான். குற்றவாளி மாலையிற் வீட்டிற்கு வந்தபோது பெண்ணைப்பார்த்து "நீ சாப்பிட்டாயா" என்று கேட்டான். இதற்கு அந்தப்பெண் தன்னுடைய தகப்பன் வீட்டில் சாப்பிட்டதாகப்பதில் சொன்னாள். இதைக்கேட்டவுடன் குற்றவாளி பெண்ணை அடித்தான். நான் பரிந்து சென்றபோது என்னையும். அடித்தான். மறுநாள் பெருமாள் அந்தப்பெண்ணை தெருவில் கண்டபோது அவளுக்கு கால் அணா கொடுத்தான். அதைக்குற்றவாளி பார்த்து என் குழந்தையை நீ அழைத்துக்கொண்டுபோய் சாப்பாடுசெய்து வைத்தாய்" என்றும் "இப்போது ஏன் காசுகொடுத்தாய்" என்றும் பெருமாளைக்கேட்டான். பெருமாளைப் பார்த்து இனிமேல் குழந்தையை உன்னிடமும் விடமாட்டேன், அதன் பாட்டியிடமும் விடமாட்டேன் என்று சொன்னான். அடுத்தநாள் காலையில் நான் தெருவின் கோடியில் போனபோது என் வீட்டிலிருந்து கூச்சல் கேட்டது. நான் வீட்டிற்கு ஓடிப்பார்த்தபோது, என் பேத்தி தொண்டை அறுக்கப்பட்டு இறந்து கிடந்தனள். (வக்கீல் மாசிலாமணி முதலியாரின் குறுச்குக்கேள்விகளுக்கு) கெம்பம்மாள் இறந்துபோனவுடன் பெருமாள் குழந்தை தன்னுடையதல்லவென்று சொல்லிவிட்டான். கெம்பம்மாள் இறந்துபோனபின்பு பெருமாள் இரண்டாவது விவாகம் செய்துக்கொண்டான். அவன் இரண்டாவது விவாகம் செய்துக்கொண்டபோதிலும் அவன் அடிக்கடி என்னுடைய வீட்டிற்குவந்து குழந்தையை அழைத்துக் கொண்டு போய் மறுபடியும் கொண்டுவந்து விடுகிற வழக்கமுண்டு. அப்போது டிங்கன் என்னுடைய வீட்டில் தான் வசித்துக்கொண்டுவந்தான்.

பிராசிக்கியூஷன் இரண்டாவது சாக்ஷி:—என்பெயர் மேஜர் T. H. பிரௌனிங், I. M. S. நானி இறந்து போன பெண்ணின் பிரேதத்தைப் பரிசோதனை செய்தேன் (பிரேதபரிசோதனை ரிப்போர்ட்டை கோர்ட்டாருக்கு வாசித்துக் காண்பித்தார்) இந்தப்பெண்ணின் கழுத்து அறுக்கப்பட்டபின்பு இவள் சிறிது நிமிஷம் வரையில் ஓடியுமிருக்கக்கூடும். (குறுக்குக் கேள்விகளுக்கு) கழுத்து அறுக்கப்பட்ட உடன் மரணம் சம்பவித்திருந்தாலு மிருக்கக்கூடும் அல்லது $1\frac{1}{2}$-மணி நேரம் சென்று மரணம் சம்பவித்திருந்தாலுமிருக்கக்கூடும். கழுத்து அறுக்கப்பட்டிருக்க வேண்டுமே ஒழிய குத்தப்பட்டிருக்கமாட்டாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கழுத்து அறுக்கப்பட்டபின்பு குழந்தை 4 அடி உயரமுள்ள படிகளிலிருந்து இறங்கி 150 அடி தூரமும் நடந்திருக்கக்கூடும். குழந்தையின் உள்ளங்கைகளில் இரத்தத்துளிகளிருந்தன.

மூன்றாவது பிராசிக்கியூஷன் சாக்ஷி:—[இவன்பிராசிக்கியூஷன் தரப்பிற்கு அனுகூலமாக சாக்ஷி சொன்னான்.] (குறுக்குக்கேள்விகளுக்கு) பெருமாள் அடிக்கடி குழந்தையை எடுத்துக்கொஞ்சி துட்டு கொடுப்பதுண்டு. கெம்பம்மாள் இறந்துபோனபின்பு டிங்கனும் பெருமாளும் ஒருவருடன் ஒருவர் பேசுகிறதில்லை.

4-வது சாக்ஷி:—என் பெயர் மதுரை. நான் கோவில் பூஜாரி. குற்றவாளி குழந்தையை கோவிலுக்குள்ளிருந்த ஒரு சந்தின் வழியாக அழைத்துக் கொண்டு போனபோது நான் பார்த்தேன். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் குழந்தையைக் குத்திவிட்டான் என்று தோட்டக்காரன் கூச்சல் போட்டான். ஒரு ஸ்திரீயும் இதே மாதிரியாகக் கூச்சல் போட்டாள். கும்பு கூடினது. நான் கொலைநடந்த ஸ்தலத்தைப் போய் பார்த்தேன். இந்தப்பெண் தொண்டை அறுக்கபட்டு பூமியின் பேரில் கிடந்தாள். (இந்த சாக்ஷியை வக்கீல் மிஸ்டர் மாசிலாமணி முதலியார் அனேக குறுக்குக் கேள்விகள் கேட்டார்).

5-வது சாக்ஷி ரேங்கனாயகி அம்மாள்:—என் பெயர் ரெங்கனாயகி அம்மாள். இறந்துபோன பெண் கழுத்து அறுக்கப்பட்டு என்னுடைய வீட்டிற்குள் ஓடிவந்தனள். வந்தவுடன் கீழேவிழுந்து விட்டாள். அவளுடைய ஆடைகள் எல்லாம் இரத்தத்தால் நனைந்திருந்தன. நான் கூச்சல் போட்டேன். வெகு ஜனங்கள் வந்து கூடினார்கள். (குறுக்குக் கேள்விகளுக்கு) நான் அப்போது வீட்டில் ஒண்டியாயிருந்தேன். குழந்தை ஓடிவந்து கிழே விழுந்ததை நான் கண்ணால் பார்த்தேன்.

6-வது சாக்ஷி:—என் பெயர் கன்னி அம்மாள். குற்றவாளி இரத்தம்பட்ட கத்தியுடன் என் வீட்டிற்கு வந்தான் அவன் கையிலும் இரத்தம் பட்டிருந்தது.

7-வது சாக்ஷி:—என் பெயர் வீராசாமி. அன்றயத்தினம் நான் அந்த வீட்டிலிருந்தேன். தெருத்திண்ணையில் படுத்து உரங்கிக்கொண்டிருந்தேன். "டிக்கன் குத்திவிட்டான் என்கிற சப்தம் கேட்டது. நான் டிங்கனுடன் சண்டைக்குப்போனேன். அவன் என்னையும் மார்பில் குத்திவிட்டான். குத்தின அடையாளம் இன்னுமிருக்கின்றது. நான் உடனே போலீசாருக்குத் தெரியப்படுத்தினேன். அவர்கள் என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள்.

8-வது சாக்ஷி:—என் பெயர் அப்தல்ரகிமான். நான் கான்ஸ்டேபில் உத்தியோகத்திலிருக்கிறேன். மே௴ 18௳ காலை 11-20-க்குநான் மவுன்ட் ரோட்டில் பீட்டிலிருந்தேன். இரத்தம்பட்ட கத்தியுடனும் ஆடைகளுடனும் குற்றவாளி ஓடிவந்தான். அவனுடைய ஆடைகளில் எல்லாம் இரத்தம் பட்டிருந்தது. குற்றவாளி கொலைசெய்து விட்டதாக என்னிடம் சொல்லி கத்தியைக் கொடுத்தான். அவனை நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனேன்,

9-வது சாக்ஷி:—என் பெயர் "பிளித்" நான் சார்ஜன்ட்டு உத்தியோகத்திலிருக்கிறேன். (இவர் முந்திய சாக்ஷி சொன்னது போலவே சொல்லியிருக்கிறார்).

10-வது சாக்ஷி:—என்பெயர் கதிரேசம்பிள்ளை. நான். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கொலை நடந்த ஸ்தலத்தை நான்போய் பார்வையிட்டேன். அதில் இறந்து போன குழந்தையின் விரல்கள் பதித்திருந்த அடையாளத்தைப் பார்த்தேன்.

இத்துடன் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷி விசாரணை முடிந்துபோய்விட்டது.

கைதியின் ஸ்டேட்மெண்டு :—இறந்து போன பெண் என்னுடைய புத்திரி, இவளுடைய தாயார் இறந்துபோனபோது இவளுக்கு வயது 10 மாதம். கடந்த 01 வருஷங்களாக நான் இந்தக் குழந்தையை வளர்த்துவந்தேன். இந்த 10வருஷகாலமாகபெருமாள் என்னுடைய வீட்டிற்கு வந்ததில்லை. சித்திரைமாதம் 1உ பெருமாள் குழந்தையை சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோனது எனக்குத்தெரியாது. நான் வீட்டிற்கு வந்தபோது குழந்தையைக்காணோம். குழந்தை எங்கே என்று கேட்டேன். என்னுடைய மாமியார் பெருமாள்வந்து அழைத்துக்கொண்டு போனான் என்று சொன்னாள். குழந்தை வந்தவுடன் கேட்டேன். பெருமாள் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் சாப்பாடு போட்டான் என்றும் தான் சாப்பிடவில்லை என்றும் அதற்காக பெருமாள் தன்னை அடித்ததாகவும் என் புத்திரி சொன்னாள். இனி பெருமாள் கூப்பிட்டால் போகவேண்டாம் என்று என்னுடைய புத்திரிக்குச்சொன்னேன். மறுபடியும் பெருமாள் வீட்டிற்குவந்து குழந்தையை அழைத்துக்கொண்டுபோனான். பெருமாளை நான் கண்டு இனி குழந்தையை அழைத்துக்கொண்டு போகவேண்டாம் என்று சொன்னேன். நாங்களிருவரும் அடித்துக்கொண்டோம். சித்திரைமீ 6உ பகல் 11 மணிக்கு வெளியே போயிருந்து வீட்டிற்குவந்தேன். குழந்தையைக்காணோம். தேடிக்கொண்டு கோவிலுக்குள் போனேன். குழந்தை படுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். உறங்கிக்கொண்டிருப்பது போலிருந்தது. நான் சப்தம்போட்டு எழுப்பினேன். விழித்துக்கொள்ளவில்லை. அதன் பிறகு அருகில்போய்ப்பார்த்தேன். கழுத்து அறுக்கப்பட்டிருந்தது. கத்தி அதன் பாவாடையிலிருந்தது. கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்து கான்ஸ்டேபிலிடம் கத்தியைக்கொடுத்து என் புத்திரியை யாரோ கொலைசெய்துவிட்டார்கள் என்று சொன்னேன். போலீசார் என்னையே பிடித்துக்கொண்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—டிபன்ஸ் தரப்பு வக்கீல் சாக்ஷிகள் கூப்பிடவில்லை. லாயர்கள் அட்டிரஸ் பேசிமுடிந்த பின்பும் கோர்ட்டார் ஜூரர்களுக்குக் கேசின் சாரம்சத்தை எடுத்துச் சொன்னபின்பும் ஜூரர்கள் கைதி குற்றவாளியென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் கைதியைப்பார்த்து நீ குற்றம் செய்திருக்கிறாய் என்கிற அபிப்பிராயத்தை அன்னியில் வேறு விதமான அபிப்பிராயம் கூறுவதற்கு ஜூரர்களுக்கு சாத்தியப்படமாட்டாது. ஆகையால் அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டேன். உனக்கு என்ன தண்டனை என்றால் உன் ஆத்மா உன்னைவிட்டு பிரியும் பரியந்தம் நீ தூக்கிலிட்டுக்கொல்லப்படவேண்டும்.

N. B. தூக்கு தண்டனையில் இரண்டுவிதமான தூக்கு தண்டனை. ஒன்று என்னவென்றால் ஆத்மா பிரியும் பரியந்தம் கைதி தூக்கிலிடப்படவேண்டும். ஒன்று சாதாரண தூக்கு தண்டனை. சாதாரண தூக்கு தண்டனையில் கைதி தூக்கிலிடப்பட்டால் ஏதேனும் அகஸ்மாத்தான சம்பவத்தால் அவன் கீழேவிழுந்து விட்டால் அவனை மறுபடியும் தூக்கிலிடக்கூடாது. ஆகையால் கோர்ட்டார் தூக்கு தண்டனை விதிக்கும்போது மரணமுண்டாகும் பரியந்தம் 'தூக்கிலிடவேண்டுமென்று தண்டனை விதிப்பது வழக்கமாயிருக்கிறது.

பெங்களூர் கிளப்பு கேஸ்.

குற்றவாளிகள் :— (1) A. E. லிஸ்டர். (2) N. E. B. டெய்லர். (3) H. லார்ட்.

குற்றங்கள் :—(1) இரவில் வீட்டில் கன்னம் வைத்தல்.
(2) சொத்து அடங்கியிருந்த பெட்டியை உடைத்தல்.
(3) கொலையில்லாத அந்நியாயமான மரணம் உண்டுபண்ணுதல்.

கேசுகள் :—குற்றவாளிகள் பேரில் மேற்கூறப்பட்ட குற்றங்கள் சாட்டப்பட்டு செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை :—கிரௌன் பிராசிக் கியூட்டர் பாரிஸ்ட்டர் மிஸ்டர் நன்ஜன்ட் கிரான்ட் தாம் இந்தக் கேசின் தஸ்தாவேஜுக்களை பலதடவை வாசித்துப் பார்த்ததாகவும் குற்றவாளிகள்பெங்களூரிலுள்ள கிளப்பை கொள்ளை அடிக்க ரகசியமாய் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள் என்றும் ஆனால் இவர்கள் கொள்ளை அடிக்கஒக்குமத்துசெய்துகொண்டிருந்ததாககுற்றம் சாட்டப்பட வேண்டுமானால் இ. பி. கோ. வில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் அவர்கள் ஒக்குமத்துசெய்துக்கொண்டதற்கு அடையாளமாக அவர்கள் ஏதேனும் குற்றம் செய்திருக்கவேண்டுமென்றும் இந்தக் கேசில் குற்றவாளிகள் கிளப்பில் கூடி யோசனை செய்ததாகத் தெரிகின்றதே ஒழிய மற்றப்படி அவர்கள் யாதொரு குற்றத்தையும் செய்ததாகத் தெரியவில்லை என்றும் மிஸ்டர் ஒக என்பவரை குற்றவாளிகள் சுட்டதற்கு போதுமான சாக்ஷியமில்லை என்றும் ஆகையால் கி. பு. கோ. 494-வது பிரிவின்படி கேசை வாப்பிஸ் பெற்றுக்கொள்ள விரும்புவதாய்ச் சொன்னார்.

தீர்ப்பு :—குற்றவாளிகளை விட்டுவிடும்படி கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

N. B.—குற்றவாளிகள் மூவரும்விடுதலை அடைந்து கோர்ட்டைவிட்டு வரும்போது இவர்களில் ஒருவனாகிய N. E. டெய்லர் என்பவன் ராணுவ இலாக்கா வாரண்டின்பேரில் அரஸ்ட் செய்யப்பட்டான்.

வண்ணாரப்பேட்டைக் கொலைக்கேஸ்.

குற்றவாளிகள் :—(1) எத்திராஜ முதலியார்.
(2) ஷண்முக ஆசாரி.

குற்றம் :—பாஷாணமிட்டுக் கொலைசெய்த குற்றம்.

கேசின் விபரம் :—குற்றவாளிகள் கடந்த ஏப்ரல்மீ 11உ வண்ணாரப் பேட்டையிலிருந்த சாமி செட்டி என்பவனுக்கு பாஷாணம் கலந்த பிராக்

கொடுத்துவேணுமென்று கொலை செய்தார்கள் என்பது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கக்ஷி.

ஜூரர்கள்:—மெசர்ஸ் D. A. ஸ்லோர்ட், (போர்மன்), A. G. நார்ட்டன் நயிட், T. R. ஸ்காட், H. H. பிக்னல், திருமலைநாயிடு, H. N. C. காம்பல், F. L. கார்பாலோ, E. A. சிமித், C. ஆளவந்தார் செட்டி.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் வெங்கடசுப்பய்யர் டிபன்ஸ் தரப்பிற்குப் பேசினார்.

கேசின் நடவடிக்கை :—பிராசிக்கியூஷன் தரப்பில் 12 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரிகளின் அபிப்பிராயம்:—கைதிகள் குற்றம்செய்யவில்லை என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கைதிகளை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

N. B.—இந்தக்கேசில் குற்றவாளிகள் சாமி செட்டியைப் பாஷாணமிட்டுக் கொலைசெய்ததாக ருஜுப்படவில்லை.

போர்ஜரி கேஸ்.

குற்றவாளிகள்:—(1) வேணுகோபால் நாயுடு.
(2) கந்தசாமி முதலி.

குற்றம்:—போர்ஜரி.

ஜூரர்கள்:—மிஸ்டர் E. S. டன்ஹில், மிஸ்டர் A. C. பார்நாட், மிஸ்டர் A. N. ரொஜேரிபோ, மிஸ்டர் முகமத் ஷை காஜுடின் சாயப்பு, மிஸ்டர் A. ருஜரெத்தின முதலி, மிஸ்டர், D. A. ஷாப்டே, மிஸ்டர், G. N. செம்பர்ஸ், மிஸ்டர் C. கிர்ஸ்டி, மிஸ்டர். P. A. பாரிஷ்.

கேசின் விவரம்:—ஆதிசேஷப்பா என்பவர் சென்னப்பட்டணம் ஜியார்ஜ் டௌனில் லாவாதேவிசெய்துவருபவர்களில் ஒருவர். இரண்டாவது குற்றவாளிக்கு அவரைத்தெரியும் இரண்டாவது குற்றவாளி ஒரு தினம் முதல் குற்றவாளியை ஆதிசேஷப்பாவினிடம் அழைத்துக்கொண்டுபோய் அவருடைய பெயர் ரெத்தினவேலுமுதலி என்றும் இவருக்கு ஜியார்ஜ் டௌன் வெங்கட்ருமய்யா தெருவில் ஒரு வீடிருக்கிறதென்று சொல்லி இவருக்குக் கடன் கொடுக்கும்படியாகச் சிபார்சு செய்தான். ஷை வீட்டின் குபிட்ரெண்ட்டு ரசீதையும், கலெக்டர் சர்ட்டிபிக்கேட்டின் நகலையும் இரண்டாவது குற்றவாளி காட்டினான். ஷை வீடு மைலாப்பூர் பண்டில் பந்தகம் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் இப்போது இரண்டாவது பந்தகத்தின் பேரில் கடன் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்தான். ஆதி சேஷய்யா வீட்டை வந்துபார்வையிட்டு மற்றுமுள்ள சமாச்சாரங்களைவிசாரித்துக்கொண்டு திருப்த்தி அடைந்து பந்தகபத்திரம் எழுதும்படி ஏற்பாடு செய்தார். இதற்குள்ளாக குற்றவாளிகளுக்கு பணம் தேவையாக யிருக்கிறதென்று கேட்க முதல் குற்றவாளியிடமிருந்து பிராமிசரி கோட்டு பெற்றுக்கொண்டு ரூ. 150 கொடுத்தார். இதன் பிறகு பந்தகப் பத்திரம் எழுதிமுடிந்தபின் ரூ. 1000 கொடுத்தார். இதன் பிறகு முதல் குற்றவாளி ஆதி சேஷையாவுக்கு ஷை வீட்டை ரூ. 2,250-க்கு விற்கிரையம் செய்து பாக்கித் தொகையைப் பெற்றுக்கொண்டான். இரண்டாவது குற்றவாளி ஷை பத்திரங்களில் சாக்ஷி கையெழுத்து செய்திருக்கிறான்.

சில நாள் சென்ற பின்பு, இந்த விவகாரம் முழு மோசடி என்றும் ஷை வீடு வேறொரு இரத்னவேலு முதலிக்குச் சொந்தமென்றும் முதல் குற்றவாளியின் பெயர் வேணுகோபால் நாயுடு என்றும் ஆதி சேஷய்யாவுக்குத் தெரிய, இவர் இரு குற்றவாளிகள் பேரிலும் போலீஸ் கோர்ட்டில் குற்றம் சாட்டினார்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்ட பின்பு கீழ்க்கோர்ட்டில் கைதிகள் எழுதிவைத்த ஸ்டேட்டுமெண்டுகள் ஜூரர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டன. இதன் பிறகு கைதிகள் ஏதேனும் இந்தக் கோர்ட்டில் சொல்லிக்கொள்ள வேண்டுமானால், சொல்லிக்கொள்ளலாமென்று கோர்ட்டார் அனுமதி கொடுக்க முதல் குற்றவாளி பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் சொன்ன வாக்கு மூலங்கள் எல்லாம் உண்மை என்றும், தான் இரண்டாவது குற்றவாளியின் தூண்டுதல்பேரிலும் அவன் தனக்குக் குடிக்கக்கொடுத்த கள்ளின் மயக்கத்திலும் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டதாகவும், ஏதேனும் இது விஷயத்தில் ஆபத்து நேரிட்டால் தன்னைக்காப்பாற்றிவிடுவதாக இரண்டாவது குற்றவாளி வாக்குக் கொடுத்தான் என்றும் இந்த விவகாரத்தில்வந்த பணம் எல்லாவற்றையும் இரண்டாவது குற்றவாளியே எடுத்துக் கொண்டான் என்றும் தன்னுடைய பெயர் இரத்னவேலு முதலியல்லவென்றும் சொன்னான்.

இரண்டாவது குற்றவாளி தான் ஒரு நாள் ஆதி சேஷய்யா வீட்டிற்குப் போனபோது முதல் குற்றவாளியும் ஆதி சேஷப்பாவும் ஒரு டைப்படித்த (Typed) பத்திரம்வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது தன்னை அதில்சாக்ஷிகையெழுத்துப் போடச்சொன்னதாகவும் தான் போட்டதாகவும் தனக்கு மற்றப்படி யாதொன்றும் தெரியாதென்றும் சொன்னான்.

லாயர்கள் :—அட்டிரஸ் பேசினபிறகு ஜட்ஜி கேசின் சாரம்சத்தைக் ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னதின் பேரிலும் ஜூரர்கள் ஆலோசனை அறைக்குட் சென்று திரும்பி வந்து இரு கைதிகளும் குற்றம் செய்திருக்கிறார்களென்று அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—இரு குற்றவாளிகளும் இருபோக்கிரிகள் என்றும் இருவரும் ஒரு அந்நியனுடைய பணத்தைப்பறிப்பதற்குகூடி யோசனைசெய்து இந்த மோசடியை நடத்தியிருக்கிறார்கள் என்று இவர்கள் இருவரில் ஒருவன் அற்பக்குற்றமும், மற்றொருவன் அதிகக் குற்றமும் செய்திருக்கிறான் என்று நினைப்பதற்குக் காரணமில்லை என்றும் ஆகலால் இரண்டுபேர்களுக்கும் சமமான தண்டனை கொடுக்கவேண்டுமென்று சொல்லி இருவர்களுக்கும் தனித்தனியே மூன்று வருஷ கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

இரண்டாவது விவாகம் செய்துகொண்ட கேஸ்.

குற்றவாளி:—லாஜர்.

குற்றம்:—கிரிஸ்தவ விவாக சட்டத்திற்கு விரோதமாக முதல் பெண்சாதி உயிருடனிருக்கும்போது இரண்டாவது விவாகம் செய்துக்கொண்ட கேஸ்.

ஜூரர்கள்:—மிஸ்டர் C. J. புல்டன், (போர்மன்) மிஸ்டர் V. துரைசாமிப்பிள்ளை, மிஸ்டர் மோபஜர் அகமத் உசேன் சாயப், மிஸ்டர் A. C. டிக், மிஸ்டர் A. அசே, மிஸ்டர் E. ஹெனடிரிக், மிஸ்டர் N. J. டேவிஸ், மிஸ்டர் T. V. செல்லபதி சாஸ்திரி, மிஸ்டர் S. P. அருமநாயகம்.

கேசின் விவரம்:—கிரௌன் பிராசிக்கியூட்டர், அடியிற்கண்ட பிரகாரம் கேசின் சாரம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துக்கூறினார். குற்றவாளி சுதேச கிரிஸ்தவ ஜாதியைச்சேர்ந்தவன். இவன் சிலவருஷங்களுக்கு முந்தி ஜோசாலு அம்மாள் என்கிற கிருஸ்தவ ஜாதிப்பெண்ணை சென்னப்பட்டணம் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள Sacred Herat என்கிற தேவாலயத்தில் விவாகம் செய்துக்கொண்டான். இருவரும்சென்ற ஆகஸ்ட்மீ வரையில் கூடிவாழ்ந்து வந்தார்கள். சென்ற ஆகஸ்ட்மீ த்தில் ஜோசாலு அம்மாள் ரெங்கூனுக்குப்போய்விட்டபிறகு புருஷன் ஒரு ஹிந்து ஸ்திரீயை இந்துமத ஆசாரப்படி விவாகம் செய்துக்கொண்டான். ஜோசாலு அம்மாள் திரும்பி இவ்விடம் வந்தவுடன் புருஷன் இரண்டாம் விவாகம் செய்துக்கொண்ட குற்றத்திற்காக புருஷன்பேரில் குற்றம் சாட்டினாள்.

லாயர்கள்:—மிஸ்டர் சல்லா குருசாமிசெட்டியார் டிபன்ஸ் தரப்பிற்குப் பேசினார்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷி விசாரணையால் ஜோசாலி அம்மாள் குற்றவாளியின் தங்கை பெண் என்றும் அவள் 11 வயதுடையவளாகயிருக்கும்போது குற்றவாளிக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டாள் என்றும் ஏற்பட்டது.

தீர்ப்பு:—முதல் பெண்சாதி உயிருடனிருக்கும்போது ஒரு சுதேச கிறிஸ்தவன் இந்துமத ஆசாரப்படி ஒரு இந்துப் பெண்ணை விவாகம் செய்துக் கொள்வது சுதேச கிறிஸ்தவன் தன்னுடைய முதல்தாரம் உயிருடனிருக்கும்போது இரண்டாம் தாரம் செய்துகொண்டதற்குச் சமானமென்றும் அவன் குற்றத்திற்கிலக்காவான் என்றும் ஏற்கனவே ஒரு சமயத்தில் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருந்த போதிலும் சுதேச கிறிஸ்தவன் செய்துக்கொண்ட முதல்விவாகம் சட்டப்படி செலாமணியாகக்கூடிய விவாகமென்று ருஜூப்பிக்க வேண்டியது பிராசிக்கியூஷன் தரப்பாரின் கடமை.

பிரஸ்தாபக் கேசில் குற்றவாளியின் பெண்சாதி அவனுடைய தங்கை புத்திரி; கிறிஸ்தவ சட்டத்தின்படிகுற்றவாளி அவளை விவாகம் செய்துக்கொண்டிருக்கக்கூடாது. மேலும் குற்றவாளி அவளை விவாகம் செய்துக் கொண்டபோது அவளுக்குவயது 11 ஆகையால் குற்றவாளி ஜோசாலி அம்மாளுடன் செய்துகொண்ட விவாகம் சட்டப்படி செலாமணியாக மாட்டாது என்று கோர்ட்டார் ஜூரர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—குற்றவாளியாதொரு குற்றத்தையும் செய்யவில்லை என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—குற்றவாளியை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

இரண்டாவது விவாகம் செய்துக்கொண்ட கேஸ்.

குற்றவாளிகள்:—(1) அமீனாபீ.

(2) அப்தல் ரகிமான்.

(3) சேபு மீயா.

குற்றம்:—புருஷன் உயிருடனிருக்கும் போது பெண்சாதி வேறொரு புருஷனை விவாகம் செய்துக் கொண்ட குற்றம் முதல் குற்றவாளியின் பேரில் சாட்டப்பட்டிருக்கிறது. 2, 3, குற்றவாளிகள் பேரில் உடந்தைக்குற்றம்.

ஜூரர்கள்:—மிஸ்டர் A. J. பிரௌன், (போர்மன்) மெசர்ஸ் C. J. புல்டன், M. ரூஜரெத்தின முதலியார், D. S. ஆண்டர்சன், J. பிளித், F. A. தாமஸ், V. கோவிந்தன், N. J. டேவிட்ஸ், A. N. S. ரொஜோரியோ.

கேசின் விபரம்:—கிரௌன் பிராசிக்கியூட்டர் அடியிற்கண்டபடி கேசின் சாரம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துக்கூறினார்:—இந்தக்கேசின் பிரியாதி பாமீயா என்பவர் 12 வருஷங்களுக்கு முந்தி முதல் குற்றவாளியாகிய அமீனாபியை விவாகம் செய்துக்கொண்டார். இருவரும் சில வருஷகாலம் கூடிவாழ்ந்து வந்தார்கள். பிறகு மனஸ்தாபத்தின்பேரில் முதல் குற்றவாளி மூன்றாவது குற்றவாளியாகிய தன்னுடைய தகப்பனார் வீட்டிற்குப்போய்விட்டார். சிலகாலம் சென்று பிரியாதி பழையபடி தன்னுடைய பெண்சாதியை தன்னிடம் வந்தும் சேரும்படி சொல்லியும் முதல் குற்றவாளி வந்து சேர உடன்படவில்லை. பிரியாதி தன்னுடைய பெண்சாதியை தன்னிடம் அனுப்பிவைக்கும்படி மூன்றாவது குற்றவாளியையும் வேண்டிக்கொண்டார் அவரும் அனுப்பவில்லை. பிறகு, மூன்றாவதுகுற்றவாளி முதல் குற்றவாளியை வேறொரு புருஷனுக்கு விவாகம் செய்துக்கொடுக்கப்போகிறதாக பிரியாதி கேள்விப்பட்டு மூன்றாவது குற்றவாளியின்பேரில் போலீஸ் கோர்ட்டில் பிரியாது செய்தார். இந்தக்கேஸ் விசாரணை நடந்துக்கொண்டுவந்தபோது பிரியாதி ஜீவதிசையிலிருக்கும் பரியந்தம் முதல் குற்றவாளியை வேறொரு புருஷனுக்கு விவாகம் செய்துக்கொடுக்கும் எண்ணம் தமக்கில்லை என்று மூன்றாவது குற்றவாளி சொன்னதின்பேரில் அந்தப்போலீஸ் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது. இதன்பிறகு மூன்றாவது குற்றவாளி தன்னுடைய வீட்டில் முதல் குற்றவாளியை இரண்டாவது குற்றவாளிக்கு விவாகம் செய்துக்கொடுத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு பிரியாதி இந்தக்கேசைக் கொண்டுவந்திருக்கிறார். டிபன்ஸ்தரப்பாரின் கக்ஷி என்னவென்றால், முகமதியமத் குருவாகிய காஜி என்பவர் முதல் குற்றவாளியும் பிரியாதியும் செய்துக்கொண்ட

விவாகத்தை ரத்துசெய்துவிட்டார் என்றும் ஆகையால் முதல் குற்றவாளி இரண்டாவது விவாகம் செய்துக்கொண்டார் என்றும் ஆகையால் குற்றமாக மாட்டாதென்றும் சொல்லுகிறார்கள். காஜிக்கி விவாகத்தைப்பிரிக்க அதிகாரமிருக்கிறதென்று கோர்ட்டார் சொல்வார்களேயாகில் அப்போது டிபன்ஸ் தரப்பாரின் கக்ஷிக்கிபலமிருக்கிறதென்று கிரௌன் பிராசிக்கியூட்டர் ஜூரர்களுக்குச்சொன்னார்.

தீர்ப்பு:—குற்றவாளிகளை விடுவித்து விட்டார்கள்.

இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸுகள்.

பிரிவு கௌன்சில்.

கவுன்சிலர்கள்:— { லார்ட் மக்நாட்டன். சர் ஆண்டிருஸ்கோபில். சர் ஆண்டிரு வில்சன்.

திருவண்டிபுரம் வடகலை தென்கலை கேஸ்.

சடகோபாச்சாரியார் வகையறா:—வாதிகள்—அப்பீல் வாதிகள்.

கிருஷ்ணமூர்த்திராவ் வகையறா:—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—தென்னாற்காடு ஜில்லாவில் திருவண்டிபுரம் கிராமத்திலிருக்கும் வடகலை பிராமணர்கள் ஷை கிராமத்திலிருக்கும் தெருக்கள் ஷை கிராமத்திலிருக்கும் வடகலை தேவஸ்தானமாகிய தேவநாயகசுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமென்று அந்தத்தெருக்களின் வழியாக தென்கலையார் தங்களுடைய மணவாளமாமுனி ஆழ்வாரை ஊர்கோலம் விட்டுக்கொண்டுவரக் கூடாதென்றும், ஆகவே ஷை தெருக்கள் தங்கள் ஒரு வகையராக்காரர்களுக்கு மட்டிலும் சொந்தமென்றும் இந்த பாத்தியதையை ஸ்தாபிக்க தென்னாற்காடு ஜில்லாக்கோர்ட்டில் டிக்களரேட்டரீ வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இது விஷயமாக நீண்ட காலமாய் இருகக்ஷியாருக்கும் விவாதம் நடந்துவந்தது. இந்த விபரங்களெல்லாம் பிரிவு கவுன்சிலர்கள் கொடுத்திருக்கும் தீர்ப்பில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

லாயர்கள்:—வாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் கோகன் K. C. யும், பாரிஸ்டர் L. T. குருதியரும் பேசினார்கள். பிரதிவாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ராஸ் பேசினார்.

வாதிகளின் லாயர் பேசினது:—வாதிகள் தங்களுடைய பிரியாதியில் கேட்ட ஒவ்வொரு பரிகாரத்திற்கும் சட்டப்படி பாத்தியதை உடையவர்கள் என்று ருஜூப்படுத்தியிருக்கிறார்கள். வாதிகளின் வியாஜ்ஜியத்தின் முதல் அம்சம் என்னவென்றால், திருவண்டிபுரம் கிராமத்திலுள்ள தெருக்கள் புராதீனகால முதல் தங்களுக்குச் சொந்தமாயிருந்து கொண்டு வருகின்றன வென்றும், இத்தெருக்களில் தென்கலையார் தங்களுடைய ஆழ்வாராதிகளை ஆராதிக்கக் கூடாதெனவும் இத்தெருக்களின் வழியாய் தென்கலை ஆழ்வாராதிகளுக்கு உற்சவம் ஊர்கோலம் முதலியவைகள் நடந்திக்கொண்டு வரக்கூடாதென்கிற நிபந்தனைகளுடன் இத்தெருக்களில் வீடுகட்டிக்கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன வென்பதே. இந்நிபந்தனைகளுடன் விடப்பட்டிருக்கும் தெருக்கள் சொற்பமே தவிர மற்றப்படி மிகுந்த விசாலமானவிடமல்ல. இந்தத் தெருக்கள் ஷை வடகலை தேவநாயகசுவாமி தேவஸ்தானத்திற்கு 700 வருஷங்களுக்கு முந்தி தானம் செய்யப்பட்டன. ஆகையால் வாதிகள் இப்போது இந்த வியாஜ்ஜியத்தில் ஸ்தாபிக்க முயல்வதெல்லாம் கூடி தங்களுக்குக் கிடைத்த தானத்தின் பாத்திதையே தவிர மற்றபடி வேறல்ல. ஆகையால் அவர்களுடைய பாத்தியதைக்குச் சட்டப்படி சரியான மூலமிருக்கின்றது. இதினால் நாம் யூகிக்கவேண்டியதென்னவென்றால், ஒன்று இத்தெருக்கள் வடகலையாருக்குச்சொந்தமாயிருக்கவேண்டும் அல்லது இத்தெருக்களில் வசிப்பவர்கள் இவைகளை தேவநாயக தேவஸ்தானத்திற்கு தான கைங்கரியம் செய்து இத்தெருக்களில் தென்கலை சுவாமிகளுக்கு ஆராதனைகள் நடக்கும்படியாக விடுகிறதில்லையென்றும் தென்கலை சுவாமிகளின் ஊர்கோலங்களை விடுகிறதில்லையென்றும் சம்மதித்திருக்கவேண்டும். ஷை தெருக்களுக்கு வடகலையார் ஏக சுதந்தரம் பாராட்டிவந்ததை 1807, 1828, 1840-ம்ஆுங்களில் தென்கலையார் ஆக்ஷேபித்து கோர்ட்டில் விவாதங்கள் நடத்தியும் வடகலையாரின் பாத்தியதையே கோர்ட்டார் டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வியாஜ்ஜியத்தின் இரண்டாவது முக்கிய பாயின்ட் என்னவென்றால், இத்தெருக்கள் வடகலையாருக்கு மட்டிலும் சொந்தமென்று இப்போது ஒருக்கால் ருஜூப்படாமல் போயிருந்தாலும், பரம்பரையான வழக்கத்தாலும் அனுபவத்தாலும் இத்தெருக்களுக்குவடகலையார் ஏகசுதந்தர பாத்தியதைசம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த தெருக்களின் வழியாக அனேக வருஷகாலமாக வடகலையார் தென்கலை சுவாமிகளின் உற்சவங்களையும், ஊர்கோலங்களையும் விடுகிறதில்லை. தென்கலையார் தங்களுடைய சுவாமிகளை புறப்பாடு செய்துக்கொண்டு இந்தத் தெருக்களில் நுழைந்த சமயங்களிலெல்லாம் வடகலையார் தடுத்திருக்கிறார்கள். வடகலையாரின் இந்த பாத்திதை 1840-ம் ஆும் நடந்த வியாஜ்ஜியத்தில் சாடர் அலட் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வியாஜ்ஜியத்தின் மூன்றாவது முக்கியமான பாயின்ட் என்னவென்றால், எப்படியிருந்தபோதிலும் தென்கலையார் தங்களுடைய மணவாளமாமுனியை இந்தத் தெருக்களின் வழியாக புறப்பாடு செய்துகொண்டுவரக்கூடாதென்று தென்கலையார் பேரில் வடகலையாருக்கு 1828-ம்ஆுத்திய வியாஜ்ஜியத்தில் 1840 ஆும் சாதர் அடல் கோர்ட்டார் வடகலையாருக்கு டிக்கிரி கொடுத்திருக்கிறார்கள் ஆகையால் அந்த வியாஜ்ஜியம், மணவாளமாமுனி சம்பந்தப்பட்டவரையில் இந்த வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்தும்.

அனந்தராவ் பிக்காஜிபாடேக் V. ஷன்கர் தாஜிசாரியா (இ. லா. ரி. 70-ம் 323) பார்த்தசாரதி அய்யங்கார் V. சின்னகிருஷ்ண அய்யங்கார் (இ. லா. ரி. 26.

சென். 154) ஆகிய இந்தக்கேசுகளில் சொல்லப்பட்டிருக்கிற தீர்ப்புகளின் பிரகாரம் வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டுவர பாத்தியமுடையவர்கள்.

பிரதிவாதிகளின் லாயர் பேசினது:—வாதிகள் தங்களுக்கு உண்டென்று சொல்லும் பாத்தியதையை ஸ்தாபிக்கவில்லை. கீழ் இரண்டு கோர்ட்டார்களும் திருவண்டிபுரம் கிராமம் எந்த காலத்திலாவது வடகலையாருக்கு ஏகசுதந்தரமாயிருந்ததென்று தீர்மானிக்கவில்லை. ஷை தெருக்களில் வடகலை சுவாமிகளின் உற்சவங்களை நடத்துகிறதேயொழிய மற்றபடி தென்கலை சுவாமிகளின் ஊர்கோலங்கள் வந்தால் அவைகளைத் தடுத்துவிடுகிற வழக்கமென்பதையும் வாதிகள் ஸ்தாபிக்கவில்லை. இம்மாதிரி ஒருவழக்கமிருந்ததாக ருஜுப்பட்ட போதிலும் அது அந்நியாயமாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் கோர்ட்டார் ஊர்ச்சிதப்படுத்தக் கூடாத வழக்கமென்று கீழ் இரண்டு கோர்ட்டார்களும் முடிவு செய்திருக்கிறார்கள். பயிரங்கமான தெருவில் இரண்டு கக்ஷியாரில் ஒருகக்ஷியார் மட்டிலும் போகபாத்தியதை இருப்பதென்பதற்கும் மற்றொரு கக்ஷிக்காரர்கள் வந்தால் தடுக்க பாத்தியதையிருக்கிறதென்பதற்கும், அந்த பாத்தியதையை இந்தியாவில் எந்த ஹைக்கோர்ட்டாராவது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும் வாதிகள் உதாரணமாக ஒரு சரியான தீர்ப்பைக்கூட எடுத்துக் கூறவில்லை.

1840 ௵த்தில் சாதர் அடல் கோர்ட்டார் வாதிகளுக்குக் கொடுத்த டிக்கிரியை வாதிகள் ஆதாரமாகக் கூறி அந்த வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்தை கட்டுப்படுத்துமென்று கூறுகின்றார்கள். ஆனால் அந்த வியாஜ்ஜியத்தில் இந்தவியாஜ்ஜியத்தின் கக்ஷிக்காரர்கள் கக்ஷிக்காரர்களாயில்லை. அதில் வாதிகள் கேட்ட பிரார்த்தனைகள் இந்த வியாஜ்ஜியத்தில் கேட்கப்பட்டிருக்கும் பிரார்த்தனைகளல்ல, ஆகையால் அந்தவியாஜ்ஜியத்திற்கும் இந்த வியாஜ்ஜியத்திற்கும் சம்பந்தமில்லை. ஆகையால் ஷை தாவாவில் சம்பந்தப்பட்ட தெருக்களில் பிரதிவாதிகள் போகவும் அனுபவிக்கவும் சட்டப்படி பாத்தியமுடையவர்கள். இவர்களை வாதிகள் தடுக்க யாதொரு பாத்தியதையு மற்றவர்கள்.

தீர்ப்பு:—லார்ட் மகனுட்டனால் 1907-ம் ௵ம் மார்ச்சுமீ 21௳ சொல்லப்பட்டது:—வாதிகள் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தை தென்னாற்காடு ஜில்லாக்கோர்ட்டார் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து சொன்ன தீர்ப்பை சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் உறுதிப்படுத்த வாதிகள் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொண்டிருக்கிறார்கள். பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொள்ள ஹைக்கோர்ட்டார் முதலில் அனுமதி கொடுக்கவில்லை. ஏனெனில் வியாஜ்ஜிய மதிப்புத்தொகை எவ்வளவாயிருந்தால் பிரிவுகௌன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாமோ அதற்குக் குறைவாகயிருக்கின்றது இந்த வியாஜ்ஜியத்தின் மதிப்பு. இருந்தபோதிலும் இந்த வியாஜ்ஜியத்தில் இந்தியாவிலுள்ள மத சம்மந்தமான கக்ஷிக்காரர்களைக்குறித்த சட்ட அம்சமும், பயிரங்கமான தெருவை ஒரு கக்ஷியார் உபயோகப்படுத்திக்கொண்டு மற்ற கக்ஷிக்காரர்களை வரக்கூடாதென்று தடுப்பதைக்குறித்த பாத்தியதையும், இன்னும் இந்துமத கக்ஷிக்காரர்களுக்கு முக்கியமாயுள்ள சட்ட பாயின்ட்டுகளும் இதில் அடங்கியிருப்பதால் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்று வாதிகளை கேட்டுக்கொண்டதின்பேரில் ஹைகோர்ட்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

தென்னாற்காடு ஜில்லாவில் திருவண்டிபுரம் கிராமத்தில் வைஷ்ணவ பிராமணர்களுக்குள் தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் வெகுகாலமாயிருந்த சச்சரவை முன்னிட்டு இந்த வியாஜ்ஜியம் உற்பத்தியாயிருக்கின்றது. இந்த கிராமத்தில் புராதீனமான தேவஸ்தானம் ஒன்றிருக்கிறது. இதில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் தேவநாயகசுவாமி. இந்த தேவஸ்தானத்திற்குச் சேர்ந்தாப்போல் வடகலையாரால் மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கப்படும் வேதாந்த தேசிகர் சந்நதியுமிருக்கிறது. இது இப்படியிருக்க தென்கலையார் மணவாளமாமுனியை ஆராதித்து வருகின்றார்கள். தென்கலையார் 1807-ம் ௵த்தில் தங்களுடைய மணவாளமாமுனி விக்கிரகத்தை ஷை தேவநாயக சுவாமி தேவஸ்தானத்தில் கொண்டுவந்து வைத்தார்கள். வைக்கவே வடகலையார் ஆக்ஷேபித்துத் தடுக்க, இதினால் தங்களுக்கு நஷ்டம் நேரிட்டிருப்பதாகச் சொல்லி தென்கலையார் வடகலையார் பேரில் 1807-ம் ௵த்தில் ஒரு நஷ்டதாவா கொண்டுவந்தார்கள். கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை தள்ளுபடிசெய்து தென்கலையார் ஷை தேவஸ்தானத்தில் கொண்டுவந்து வைத்த மணவாளமாமுனிவிக்கிரகத்தை எடுத்துப்போகும்படி உத்திரவுசெய்து தீர்ப்புச்சொன்னார்கள். இதன் பிறகு 1828-ம் ௵த்தில் தென்கலையார் தங்களுக்குச் சொந்தமான ஒருவீட்டில் மணவாளமாமுனியை வைத்து ஆராதனைசெய்து இந்த வியாஜ்ஜியத்தில் கண்ட தெருக்களின் வழியாக புறப்பாடு செய்துக்கொண்டு வந்தார்கள். தென்கலையார் ஷை தெருக்களில் பயிரங்கமாக மணவாளமாமுனியை ஆராதிப்பதையும் புறப்பாடு செய்வதையும் பற்றி புகார்செய்து வடகலையார் தென்கலையார் பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். தென்கலையார் பயிரங்கமாய் அவர்களுடைய ஆழ்வார்களை ஷை தெருக்களில் ஆராதனை செய்யக்கூடாதென்பதும் புறப்பாடுசெய்துக் கொண்டுவரக்கூடாதென்பதும் ஷை தெருக்கள் வடகலை தேவஸ்தானமாகிய தேவநாயக சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமென்பதும் தென்கலையார் தங்களுடைய சுவாமிகளைப் புறப்பாடு செய்துக்கொண்டுவருவது பரம்பரையான வழக்கத்திற்கு விரோதமென்பதும் வடகலையாரின் கக்ஷி. இதன்பேரில் கோர்ட்டார் இந்துமத ஆசாரியர்களை தருவித்துக்கேட்டார்கள். அவர்கள் கூறின அபிப்பிராயம் பெரும்பாலும் மதசம்பந்தமான பிரபந்தங்களைப் பொருத்ததாயும், சட்டத்திற்கு ஒவ்வாததாயுமிருந்தது. இருந்தபோதிலும் கோர்ட்டார் அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு தென்கலையார் இனி பயிரங்கமாய் தங்களுடைய ஆழ்வார்களை ஆராதிக்கக்கூடாதென்றும் ஷை தெருக்களில் புறப்பாடு செய்துக்கொண்டு வரக்கூடாதென்றும், வாதிகளாகிய வடகலையாருக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்புச்சொன்னார்கள்.

பிரதிவாதிகளாகிய தென்கலையார் சாடர் அடல் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொள்ள, தென்கலையார் தங்களுடைய வீடுகளில் வைத்து ஆராதனை செய்துவரலாமென்றும் ஆனால் தெருக்களில் புறப்பாடு செய்துக்கொண்டு வரக்கூடாதென்றும் கீழ்க்கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியை சிறிது மாற்றி தீர்ப்புச்சொன்னார்கள். இதின் பிறகு 1886-ம் ௵-ம் வரையில் இரு கக்ஷியாரும் சச்சரவுசெய்துக்கொண்டு பலமுறை சிவில்கோர்ட்டிலும் பலமுறை கிரிமினல்கோர்ட்டிலும் கக்ஷி ஆடினார்கள். சில சமயம் வடகலையாரும் சிலசமயம் தென்கலையாரும் வெற்றி அடைந்திருக்கிறார்கள். ஆனால் 1886-ம் ௵த்தில் இருகட்சியாருக்கும் நடந்த கிரிமினல்விவகாரத்தில் அப்போதிருந்த மாஜிஸ்டிரேட் தென்கலையார் தங்களுடைய சுவாமிகளை புறப்பாடு செய்து கொண்டுவந்தால் வடகலையார் தடுக்கக்கூடாதென்றும் அப்படி தடுக்க பாத்தியமுண்டென்பதை வடகலையார் சிவில்கோர்ட்டில் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டனர். இதன் பேரில் வடகலையார் தங்களுக்கு சாடர் அடல் கோர்ட்டாரால் கொடுக்கப்பட்ட டிக்கிரியை நிறைவேற்றி மேற்படி டிக்கிரிக்குக் கட்டுப்பட்ட பிரதிவாதிகளின் சந்ததியார்களை அரஸ்ட்டு செய்து ஜெயிலில் வைக்கும்படி நிறைவேற்று மனு தாக்கல் செய்தார்கள். கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிடவே வடகலையார் கடைசியாக, தென்கலையார் தங்களுடைய சுவாமிகளை பயிரங்கமாய் ஆராதனை செய்வதையும், புறப்பாடு செய்துகொண்டு வருவதையும் தடுப்பதற்கு தங்களுக்குப் பாத்தியதையிருக்கிறதென்று கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படியாக இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். புராதீனமாக இந்த தெருக்கள் வடகலையாருக்குச் சொந்தமான தெருக்கள் என்றும் தென்கலை சுவாமிகளைத் தென்கலையார் புறப்பாடு செய்து கொண்டு வந்தால் விடக்கூடாதென்கிற நிபந்தனையின் பேரில் இத்தெருக்களில் வீடுகள் கட்டிக் கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன வென்றும் சொன்னார்கள். இதை முழுதிலும் ருஜுப்படுத்த முடியாமற் போனபோதிலும் ஷை தெருக்களை சில நிபந்தனைகள் பேரில் உபயோகித்துக் கொண்டு வந்தார்கள் என்று யூகிக்க ஆதாரமிருக்கிறதென்றும் எப்படியிருந்தபோதிலும் தங்களுடைய வடகலை சுவாமிகளைத் தவிர வேறெந்த சுவாமிகளும் அந்த தெருக்களில் ஆராதிக்கப்பட்டால் அதை தாங்கள் தடுத்துவரும் வழக்கம் பாரம்பரியாக யிருந்துவருகிறதென்றும் எப்படியிருந்தபோதிலும் மணவாளமாமுனி சம்பந்தப்பட்டவரையில் தென்கலையார் இந்த ஆழ்வாரை புறப்பாடு செய்துக்கொண்டு இந்தத் தெருக்களின்வழியாக வரக்கூடாதென்று 1828-ம்௵த்திய வியாஜ்ஜியத்தில் சாடர் அடல் கோர்ட்டார் டிக்கிரி கொடுத்திருக்கிறார்கள் என்றும் இந்த விஷயம் சம்பந்தப்பட்டவரையில் அந்த வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்துமென்றும் கக்ஷி சொல்லுகிறார்கள்.

கீழ் இரண்டு கோர்ட்டார்களும் வாதிகளுக்கு விரோதமாய் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். இந்த தீர்மானங்கள் சரியானவையென்றேநாமும் அபிப்பிராயப்படுகின்றோம். இந்த தாவாவில் கண்டிருக்கும் தெருவுகள் எந்த காலத்திலாவது வடகலையாரின் சொந்த சொத்தாக யிருந்ததென்று நினைக்க சாக்ஷியத்தின் நிழலைக்கூட காணோம். கிராமம் சாதாரணமான ரயத்வாரி கிராமம். தெருக்கள் பயிரங்கமான தெருக்கள். லோக்கல் போர்ட் ஆக்ட் (Madras Act V of 1884)டின் பிரகாரம் லோக்கல் போர்டார் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த தெருக்கள் லோக்கல் போர்டாரிடம் ஒப்புவிக்கப்படக் கூடாதென்று சொல்வதற்கு வடகலையாருக்குத் தகுந்த காரணமிருக்குமாகில் அந்த ஆக்ட் அமுலுக்கு வந்தவுடனே அந்த ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கவர்னர் ஜெனரலுக்கு அப்பீல் செய்துக்கொண் டிருக்கவேண்டும்.

லோக்கல்போர்ட் ஆக்ட் திருவண்டிபுரத்தில் அமுலுக்கு வந்தபோது உள்ளபடி இந்த தெருக்கள் வடகலையாருக்குச் சொந்தமாயிருந்திருந்தபோதிலும், லோக்கல்போர்ட் ஆக்ட் அமுலுக்குவந்து வெகுகாலமாய் விட்டபடியால் இப்போதும் வடகலையார் தங்களுக்கு அந்த பாத்திதை உண்டென்று சொல்லமுடியாது.

வாதிகள், 1828-ம்௵ம் வியாஜ்ஜியத்தில் சாடர் அடல் கோர்ட்டார் கொடுத்த தீர்மானம் இந்தவியாஜ்ஜியத்தைக்கட்டுப்படுத்தும் என்று கக்ஷி சொல்லுவதையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 1828-ம் ௵ம் நடந்த வியாஜ்ஜியத்தில் தென்கலை வகுப்பாரை எப்போதும் கட்டுபடுத்தும்படியான அத்தனை பிரதிவாதிகள் கக்ஷிக்காரர்களாயில்லை. அந்த வியாஜ்ஜியத்தில் சில தென்கலை யாரும் சிலவடகலையாரும் தங்கள் தங்களுக்கு நேர்ந்த தீங்குகளுக்காக கக்ஷிக்காரர்களாக யிருந்தார்கள். ஆகையால் அப்பீலைத் தள்ளிவிடவேண்டும் இந்த அப்பீலில் யாதொரு முக்கியமான லாப்பாயிண்டுமில்லை. ஹைக்கோர்ட்டார் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொள்ள அனுவசியமாக உத்திரவு செய்திருக்கிறார்கள்.

ஆகையால் அப்பீலைத் தள்ளுபடி செய்துவிடும்படியாக கவுன்சிலர்கள் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களுக்கு யோசனை சொல்லுகிறார்கள். வாதிகள் பிரதிவாதிகளின் அப்பீல் செலவைக்கொடுக்கவேண்டும்.—இ. லா. ரி. 30 சென். 185.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

அப்பாக்குட்டி முதலி வகையரு—வாதிகள்—
அப்பீல் வாதிகள்.

முத்துகுமரப்ப முதலி வகையரு—பிரதிவாதிகள்—
அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—ஏக்சிக்கியூட்டர்களைப் பற்றியது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—முருகப் பரதேசிஎன்பவர் தம்முடைய சொத்துக்களுக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து போய்விட்டார். இந்த உயிலில் வாதி வகையருவை ஷை சொத்துக்களுக்கு டிரஸ்ட்டிகளாக நியமித்து அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன என்று எழுதப்பட்டிருந்தது. வாதிகள்

எக்சிக்கியூட்டர் ஸ்தானத்திலிருந்து இந்த சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்து வரும் பொருட்டு புரோபேட் (Probate) பெறுவதற்காக ஹைக்கோர்ட்டில் மனு செய்துக்கொண்டார்கள். பிரதிவாதிகள் ஒரு கவியாத் தாக்கல்செய்ய ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் வாதிகளின் மனுவைத் தள்ளிவிட்டார்.

வாதிகள் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

லாயர்கள்:—ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும், மிஸ்டர் S. சீனிவாச அய்யரும் வாதிகள் தரப்பிற்கும் பிரதிவாதிகள் தரப்பிற்கும் மிஸ்டர் P. R. சுந்தர அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு:—இந்த அப்பீலில் கவனிக்கவேண்டிய பாயின்ட் என்னவென்றால்: வாதிகள் தாக்கல் செய்திருக்கும் உயிலின் மொத்த தார்பரியத்தைக் கொண்டு வாதிகளை எக்சிக்கியூட்டர்களாக பாவித்து புரோபேட் கொடுக்கலாமா என்பதே. வாதிகள் தரப்பில் பேசும் ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் புரோபேட் அண்டு அட்மினிஸ்டிரேஷன் ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் எக்சிக்கியூட்டர் என்கிற பதத்திற்கு சொல்லும் வியாக்கியானம் இங்கிலாண்டில் செய்யப்பட்டும் வியாக்கியானத்திற்கும் அதை அனுசரித்து செய்யப்படும் தீர்ப்புகளுக்கும் அதைத்தழுவி இந்தியாவின் கோர்ட்டுகளில் செய்யப்படும் தீர்ப்புகளுக்கும் மாறுதலாயிருப்பதால் அதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயில்லை. இருந்தபோதிலும் எப்போது ஒரு உயிலில் சொத்துகள் எக்சிகியூட்டர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்று எழுதப்படாமல் டிரஸ்டிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்று எழுதப்பட்டிருந்தால் உயிலின் மொத்த தார்பரியத்தின் பேரில் அவர்களை எக்சிகியூட்டர்களாக பாவித்து புரோபேட் யாதொரு ஆக்ஷேபணையுமின்றிக் கொடுக்கலாம். ஆனால் எப்போது அப்படி கொடுக்கலாமென்றால் உயிலில் "எக்சிகியூட்டர்" என்கிறபதம் எழுதப்படாமற்போனபோதிலும் அவர்கள் செய்யவேண்டுமென்று உயிலில் சொல்லப்பட்டிருக்கும் கடமைகளுக்குள் எக்சிகியூட்டர்கள் செய்யவேண்டிய கடமைகளும் சொல்லப்பட்டிருக்கவேண்டும். ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் தம்முடைய கக்ஷிக்கு இங்கிலாண்டில் ஹாமில்டன் கேசில் கோர்ட்டார் கூறியிருக்கும் தீர்ப்பை ஆதாரமாக எடுத்துக் கூறுகின்றார். அவர் கூறியிருக்கும் தீர்ப்பு அவர்கக்ஷிக்கு ஆதாரமாகயில்லாமல் எதிர் கக்ஷிக்கு ஆதாரமாகயிருக்கின்றது. இந்த ஹாமில்ட்டன் கேசில் உயிலில் எக்சிகியூட்டர் என்கிற பதமில்லாமல் டிரஸ்டிட்டி என்கிறபதம் போடப்பட்டிருந்தும் கோர்ட்டார் அந்த டிரஸ்ட்டியை எக்சிகியூட்டராகப் பாவித்து புரோபேட்கொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையே, ஆனால் அந்த உயிலில் எக்சிகியூட்டர் என்கிற பதம் போடப்படாமல் டிரஸ்ட்டி என்கிற பதம் போடப்பட்டிருந்தும் கோர்ட்டார் புரோபேட் கொடுத்ததற்குக்காரணம் என்னவென்றால், அந்த உயிலில் டிரஸ்ட்டிகள் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்த கடமைகளுக்குள் எக்சிகியூட்டர்கள் செய்யவேண்டிய கடமைகளும் சொல்லப்பட்டிருந்தன. ஆகையால் உயில் எழுதினவர் உயிலில் எக்சிகியூட்டர் என்கிற பதத்தைப் போடாமல் டிரஸ்டிகள் என்று போட்டிருந்தபோதிலும் உயிலின் மொத்த தார்பரியத்தை நோக்கினால் டிரஸ்டிகள் எக்சிகியூட்டர்களாக விருந்து எஸ்டேட்டை மானேஜ்மெண்டு செய்யவேண்டுமென்பது உயில் எழுதியவரின் கருத்தென்று கோர்ட்டார் திருப்த்தி அடைந்து அவர்களுக்கு புரோபேட் கொடுத்தார்கள். அந்த வியாஜ்ஜியத்தின் உயிலில் "எக்சிகியூட்டர்" என்று சொல்லப்படாமற் போனபோதிலும், டிரஸ்டிகள் எஸ்டேட்டைச்சேர்ந்த வருமானத்தை வசூல் செயவேண்டும், கடனைத்தீர்க்கவேண்டும். மானேஜ்மெண்டும் செய்யவேண்டுமென்றும் ஆகவே எக்சிகியூட்டர் செய்யும்படியான கடமைகள் எழுதப்பட்டிருந்தன. ஆனால் இந்த பிரஸ்தாப வியாஜ்ஜியத்தின் உயிலில் அம்மாதிரி எக்சிகியூட்டர்கள் செய்யவேண்டிய யாதொரு கடமையும் சொல்லப்படவில்லை. சொத்துகள் வாதிவகையறாவிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றனவென்று மட்டிலும் கூறப்பட்டிருக்கிறது. இந்த உயிலில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளைக்கொண்டு வாதிகள் இந்த எஸ்டேட்டிற்கு எக்சிகியூட்டர்களாக விருந்து மானேஜ்மெண்டுசெய்வதற்கு அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கக்கூடவில்லை. ஆகையால் வாதிகளுக்கு புரோபேட் கொடுக்கப்படமாட்டாது. அப்பீலை தள்ளுபடி செய்கிறோம். வாதிகளுக்கு புரோபேட் கொடுக்கப்படாததால் இந்த அப்பீல் செலவை அவர்கள் கொடுக்கும்படியாக நாம் உத்திரவு செய்யவில்லை என்று தீர்ப்புச் சொன்னார்கள்—இ. லா. ரி. 30 சென். 191.

N. B. ஆகையால் இறக்கும்போது உயில் எழுதிவைப்பவர்கள் சொத்தை எவர்களிடம் ஒப்புவிக்கிறார்களோ அவர்களே எக்சிகியூட்டர்களாக விருந்து மானேஜ்மெண்டு செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டால் உயிலில் டிரஸ்டிகள் என்று எழுதாமல் எக்சிகியூட்டர்கள் என்று எழுதவேண்டும்.—[Ed].

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

பூலபைராகி முனுசாமி செட்டி வகையறா—
வாதிகள்—அப்பீல்வாதிகள்.

V.

கார்வெட்நகர ராஜா:—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

கேசின்விவரம்:—சிவில் கோர்ட்டு டிக்கிரிகள் நிறைவேற்றப்படுவதற்கு கலெக்டர்களுக்கும் அனுப்பப்படலாமென்று சிவில் புரோசிஜர் கோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் கவர்ன்மெண்டார் எந்தெந்த கலெக்டர்கள் டிக்கிரிகளை நிறைவேற்றலாமென்று அதிகாரம் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டிலும் தான் சிவில் கோர்ட்டார் டிக்கிரிகளை நிறைவேற்றுவதற்காக அனுப்பலாம். நிற்க, இந்த வியாஜ்ஜியத்தின் சாரம்சத்தை எடுத்துரைப்போம். 1898-வது௵த்திய 22-ம். நெ. அசல்வியாஜ்ஜியத்தில் வாதிகளுக்குப் பெந்தக சொத்தின்பேரில் ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தது. வாதிகள் டிக்கிரியை நிறைவேற்றி பெந்தக சொத்தை ஜப்திசெய்து ஏலம் போட்டதில் முழுக்கடனும் உளவடையவில்லை. ஆகவே பிரதிவாதியின் சொத்துக்களின்பேரில் தொடரும்படி அனுமதி கொடுக்கும்படியாக வாதிகள் கோர்ட்டாருக்கு மனு செய்துக்கொண்டார்கள். கோர்ட்டார் அனுமதி கொடுத்தார்கள். பிரதிவாதியின் சொத்து ஒன்று வட–ஆற்காடு ஜில்லாவிலிருக்கின்றது. 1804-ம்௵த்திய சீர்திருத்தப்பட்ட 5-வது ரெகுலேஷன் 35-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்து சிவில் கோர்ட்டு டிக்கிரிகளை நிறைவேற்றுவதற்கு இந்த ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே வாதிகளின் டிக்கிரி வாதிகள் கேட்டுக்கொண்டபடி நிறைவேற்றப்படுவதற்காக ஜில்லாக் கலெக்டருக்கு அனுப்பப்பட்டது. ஜில்லாக்கலெக்டர் டிக்கிரி காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று மனுவைத் தள்ளிவிட்டார். வாதிகள் சம்மதிக்கவில்லை. ஆகவே கலெக்டர் 1804–ம்௵த்திய சீர்திருத்தப்பட்ட ஐந்தாவது ரெகுலேஷன் 7-வது பிரிவின்படி உண்டாக்கப்பட்ட 7-வது விதியின்படி வட ஆற்காடு ஜில்லா ஜட்ஜியாகிய மிஸ்டர் மானவேதன் ராஜா அவர்களுக்கு இந்தக்கேசை ரிபர்செய்தார். ஜில்லா ஜட்ஜி பிரதிவாதிக்கு அனுகூலமாக தீர்ப்புச்செய்தார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக வாதிகள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்கள். (No. 150 of 1903).

தீர்ப்பு:—ஜில்லாக்கோர்ட்டார் தீர்ப்புச் சொன்ன பிறகு கவர்ன்மெண்டார் சிவில் கோர்ட்டு டிக்கிரிகளை நிறைவேற்றுவதற்கு வட ஆற்காடு ஜில்லா கலெக்டருக்குக் கொடுத்திருந்த அதிகாரத்தை எடுத்துப் போட்டார்கள். ஆகையால் இப்போது நாம் இந்த அப்பீலில் செய்யும் தீர்மானத்தைக் கலெக்டருக்கு அனுப்பலாமா என்பதை முதலில் யோசிக்கவேண்டும். விவாதப்பட்ட கேசுகளில் 1804-ம்௵த்திய ஐந்தாவது ரெகுலேஷன் 35–வது பிரிவின்படி கலெக்டர்கள் ஜில்லாக் கோர்ட்டிற்கு ரிபர் செய்கிறார்கள். இப்படி ரிபர் செய்வதின் கருத்து என்னவென்றால், இன்ன இன்னார் டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமுடையவர்கள் என்றும் அவர்களுக்கு இவ்வளவு இவ்வளவு தொகை சேரவேண்டுமென்றும் கலெக்டர் அறிந்து கொண்டு தம்முடைய ஆபீஸ் ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்துக்கொள்ள வேண்டுமென்பதே. கலெக்டர் ஜில்லாக் கோர்ட்டாருக்கு ரிபர் செய்த கேசில் இன்ன பேர்வழிக்கு டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமிருக்கிறதென்றும், இவ்வளவு தொகை அவருக்குச் சேரவேண்டுமென்றும் ஜில்லாக்கோர்ட்டார் தீர்மானித்து அந்த தீர்மானத்தைக் கலெக்டருக்கு அனுப்பினால் அவர் அதின்படி தம்முடைய ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்துக்கொள்வார். இப்போது இந்தக்கேசில் நாம் செய்யும் தீர்மானத்தையும் அவர் அனுப்பினால் அவர் தம்முடைய ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்துக்கொள்ளுவார். ஆனால் கவர்ன்மெண்டார் டிக்கிரிகளை நிறைவேற்றும் அதிகாரத்தையே கலெக்ட்டரிடமிருந்து எடுத்துப்போட்டபோது அவர் ரிஜிஸ்ட்டரால் என்ன பிரயோஜனமுண்டாகப்போகிறது. கவர்ன்மெண்டார் பிரசுரித்திருக்கும் விளம்பரத்தால் கலெக்ட்டருக்கே டிக்கிரியை நிறைவேற்ற அதிகாரமில்லை. ஆகையால் நாம் செய்யும் தீர்மானம் அவருக்கு அனுப்பப்படக்கூடாது. இந்தக்கேஸ் ஜில்லாக்கோர்ட்டில் விசாரணையாய் வரும்போது கவர்ன்மெண்டார் கலெக்ட்டரிடமிருந்து டிக்கிரியை நிறைவேற்றும் அதிகாரத்தை எடுத்துப் போட்டிருந்தால், பிரதிவாதி தரப்பில் பேசும் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் சொல்லுவதுபோல் ஜில்லாக்கோர்ட்டார் இந்தக்கேசில் யாதொரு தீர்ப்பும் சொல்லியிருக்கமாட்டார்கள். அதுபோல் நாமும் இந்த அப்பீலில் யாதொரு தீர்மானமும் சொல்லக்கூடாது. இருந்தபோதிலும், ஜில்லாக்கோர்ட்டார் இந்தக் கேசில் செய்திருக்கும் தீர்மானம் சட்டப்படி டிக்கிரியாகுமானபடியால், பின்பு கக்ஷிக்காரர்கள் சிவில் கோர்ட்டுகளில் நிறைவேற்றும் நடவடிக்கையில் டிக்கிரிக்குக்கட்டுப்பட்ட சொத்தைத் தவிர இதர சொத்தின்பேரில் தொடரலாமா தொடரக்கூடாதா என்கிற பிரஸ்னையைக் கிளப்பிவிட்டால் அவர்களுக்கு பாதகமுண்டாகாமலிருக்கும்படி ஜில்லாக்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்து செய்கின்றோம். செலவு தொகைகளைப்பற்றி நாம் யாதொரு உத்திரவும் செய்யவில்லை. இ. லா. ரி. 30. சென். 194.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

பட்டன்னு என்கிற கேசவபட்டா—வாதி—
அப்பீல்வாதி.

V.

ராமகிருஷ்ண சாஸ்திரி வகையறா—பிரதிவாதி—
அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—அனந்தரவார்சு பாத்தியதையை ஸ்தாபிக்க டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் கொண்டு வருவதைப்பற்றி.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—புத்திர சந்ததியில்லாத A என்பவர் நான்காவது பிரதிவாதியாகிய தம்முடைய விதவையை விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார். இறந்து போகும்போது தம்முடைய சொத்துக்களை 1, 2, பிரதிவாதிகளுக்கு உயில் எழுதிவைத்தார். இந்த உயில் எழுதிவைக்காவிட்டால் A என்பவருடைய சொத்து வார்சுக்கிரமத்தில் அவருடைய விதவைக்கு வந்து சேரவேண்டும். அப்படி வந்து சேர்ந்திருக்குமாகில் அந்த விதவை இறந்துபோனபின்பு அந்த சொத்திற்கு வார்சாக வரவேண்டிய வாதி, 1, 2, பிரதிவாதிகள் A என்பவரிடமிருந்து மோசடியாய் உயில் பெற்று விட்டார்கள் என்றும் இந்த உயில் செலாவணியாகமாட்டாதென்றும் A என்பவருடைய சொத்து வார்சுக்கிரமத்தில் அவருடைய விதவையைச் சேரவேண்டுமென்றும், இந்த விதவை இறந்துபோன பிறகு தாம் அச்சொத்திற்கு வார்சு என்றும், தம்முடைய பாத்தியதையை கோர்ட்டார் டிக்ளேர் செய்யவேண்டுமென்று டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் தென்கன்னடம் சப் கோர்ட்டில் கொண்டு வந்திருக்கிறார். (O. S. No. 113 of 1903.)

சப் கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்ய ஏற்படுத்திய இஷுக்களுக்குள் 5-வது இஷு என்னவென்றால், வாதி கொண்டுவந்திருக்கும் டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் செல்லுபடியுள்ளதா என்பதே.

சப் கோர்ட்டார் இந்த இஷுவைக்குறித்து விசாரணைசெய்து அடியிற்கண்ட முடிவு செய்திருக்கிறார்கள்.

வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் என்னவென்றால், A என்பவரிடமிருந்து 1, 2, பிரதிவாதிகள் பெற்றிருக்கும் உயில் மோசடி என்றும், நான்காவது பிரதிவாதியாகிய விதவை இறந்து போனபிறகு A என்பவருடைய சொத்திற்கு தாமும் மூன்றாவது பிரதிவாதியும் வார்சுகளாக வரவேண்டுமென்றும் இந்த பாத்தியதையை கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வாதி தாக்கல் செய்திருக்கும் பிளேயன்டில் நான்காவது பிரதிவாதியாகிய விதவை உயிலை ஒப்புக்கொண்டதாகவாவது அல்லது ஒப்புக்கொள்ளாததாகவாவது ஒன்றும் சொல்லப்படவில்லை. இருந்தபோதிலும் நான்காவது பிரதிவாதி உயிலை ஆக்ஷேபிக்காமலிருந்து விட்டாள் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில், 1, 2, பிரதிவாதிகள் உயிலில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் நான்காவது பிரதிவாதிக்கு ஜீவனாம்சப் பணம் அனுப்பும்போது அவள் உயிலை ஆக்ஷேபித்து, தம்முடைய புருஷனுடைய சொத்தில் ஒரு சொற்பபாக மட்டிலும் பெற்றுக்கொண்டிருப்பதாக ரசீது கொடுத்திருக்கிறாள். ஆகையால் வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் தாம் விதவைக்குப்பின்பு A என்பவருடைய சொத்திற்கு வார்சாக வரவேண்டிய பாத்தியதையை ஸ்தாபித்து கோர்ட்டாரை டிக்ளேர் செய்யும்படியாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் டிக்ளரேட்டரிவியாஜ்ஜியம். ஆனால் நான்காவது பிரதிவாதி வாதியைவிட நீண்ட காலம் ஜீவித்திருக்கக் கூடுமாகையால் வாதி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருப்பது அனுவசியம்.

ஆகவே சப் கோர்ட், இந்த வியாஜ்ஜியம் செல்லும்படியானதல்லவென்று சொல்லி தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார் (No. 88 of 1904.)

லாயர்கள்:—மெசர்ஸ் C. V. அநந்த கிருஷ்ண அய்யரும், B. சீத்தாராமராவும், அப்பீல் வாதிகளுக்காகவும், மிஸ்டர் K. P. மாதவராவ் 1, 2, அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் பேசினார்கள்.

தீர்ப்பு:—வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கக்கூடாதென்று சப் கோர்ட்டார் நினைப்பது போல் நாம் நினைக்கக்கூடவில்லை. A என்பவன் 1, 2, பிரதி வாதிகளுக்கு செய்துகொடுத்திருக்கும் உயில் செலாமணியாகக் கூடாத உயிலாகயிருக்கும் பக்ஷத்தில் A என்பவருடைய சொத்திற்கு விதவைக்குப் பிறகு வாதி வார்சாக வர பாத்தியமுடையவர். 1, 2, பிரதிவாதிகள் A என்பவருடைய சொத்திற்கு தாங்கள் பாத்தியமுடையவர்கள் என்று சொல்லி A எழுதிக் கொடுத்த உயிலைக் காண்பிக்கிறார்கள். 1, 2, பிரதிவாதிகள் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தியும், கட்டாயப்படுத்தியும் இந்த உயிலைப் பெற்றிருக்கிறார்கள். என்றும் ஆகையால் இந்த உயில் செல்லாதென்றும் விதவைக்கு பிறகு தாம் வார்சாக வர பாத்தியமுடையவர் என்றும் இந்த பாத்தியதை கோர்ட்டார் டிக்ளேர் செய்யவேண்டு மென்றும் வாதி சொல்லுகிறார். இந்த உயில் செலாமணியாகக்கூடாத உயிலாயிருந்தால் A. என்பவரின் சொத்து அவருடைய வார்சைச் சேருமென்றும் அவர் வாதியைவிட நீண்ட காலம் ஜீவதிசையிலிருக்கக்கூடுமானபடியால் இந்த வியாஜ்ஜியம் அனுவசியமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

இருந்தபோதிலும் சப்கோர்ட்டார் ஸ்பெசிபிக் ரிலிப் ஆக்ட் (Specific Relief Act) 42-வது பிரிவை கவனிக்கவில்லை. இந்தப்பிரிவின் பிரகாரம் பின்பு வார்சாக வரக்கூடியவன் தன்னுடைய பாத்தியதையை கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படி டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்.

வாதி இந்த வியாஜ்ஜியம் தாக்கல் செய்வதற்கு முந்தி, நான்காவது பிரதிவாதியாகிய விதவை 1, 2, பிரதிவாதிகளுடன் ஒக்குமத்து செய்து இந்த உயிலை A, என்பவரிடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்று வாதி ருஜுப்படுத்தவேண்டுமென்று பிரதிவாதிகளின் வக்கீல் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வாதி அப்படி ருஜுப்படுத்தக் கட்டுப்பட்டவரல்ல. பிரதிவாதிகளின் வக்கீல் இ. லா. ரி. 6 கல் 764-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் பிரிவுகவுன்சில் தீர்மானம் தங்களுடைய கக்ஷிக்கு ஆதாரமாகக் கூறுகின்றார்கள்.

அந்தத்தீர்ப்பு இந்தக் கேசிற்குப் பொருந்தாது.

ஆகையால் சப்கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியை ரத்துசெய்து அவர்கள் இந்தக்கேசை சட்டப்பிரகாரம் பைசல் செய்யும்படியாக அனுப்புகிறோம்.

செலவு தொகை சப்கோர்ட்டார் தீர்மானத்தைப் பொருத்தது.

ஜட்ஜிகள்:—சர் ஆர்னல் ஒயிட்—சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

ஷர்கோஜிராவ் வகைபரு—பிரதிவாதிகள்—
அப்பீல்வாதிகள்.

V.

பக்கீர் சாயப்பும் இன்னும் சிலரும் (வாதியும், 3 முதல் 6 பிரதிவாதிகளும்) அப்பீல் **பிரதிவாதிகள்.**

லாப்பாயின்ட்:—முகமதிய புத்திரன் மைனராகயிருக்கும்போது அவனுடைய சொத்துக்கு தாயார் கார்டியனாயிருந்து பராதீனம் செய்தால் அந்தப்பராதீனம் மைனரைக்கட்டுப்படுத்துமா?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி முகமதிய மதத்தைச்சேர்ந்தவர். இவர் மைனராகயிருக்கும் காலத்தில் இவருடைய தாயார் கார்டியனாயிருந்து ஒரு வீட்டை 1, 2, பிரதிவாதிகளுக்கு விற்கிரயம் செய்தனர்.

1, 2, பிரதிவாதிகள் வீட்டை தங்களுடையதாக பாவித்து பணச்செலவிட்டு ரிப்பேர்செய்து விஸ்தரித்தும் கட்டியிருக்கிறார்கள். வாதி அந்த வீடு தமக்குச் சேரவேண்டு மென்று இந்த வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கிறார்.

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:—(1) வாதி மட்டிலும் அந்த வீட்டிற்குச் சொந்தக்காரரல்ல; அவருடைய தங்கைகளுக்கும் அந்த வீட்டில் பங்குண்டு! (2) பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டிருக்கும் கிரையம் வாதியைக்கட்டுப்படுத்தும். (3) 1, 2, பிரதிவாதிகள் பணச் செலவுசெய்து வீட்டை விஸ்தரித்துக் கட்டியிருப்பதால் அந்தத் தொகையைக் கொடுக்காமல் வாதி வீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்த வீட்டில் பங்குடைய வாதியின் தங்கைகள் 3, முதல் 6 பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

கடப்பை டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள, ஜில்லாக் கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து வாதி விற்கிரயத்திற்குக் கட்டுப்பட்டவரல்ல வென்றும், 1, 2, பிரதிவாதிகள் வீட்டை விஸ்தரித்து கட்டின விஷயத்தில் செலவிட்ட தொகையை பெற பாத்தியப்பட்டவர்களல்ல வென்றும் சொல்லி வீட்டிற்கும் வீட்டை விற்கிரயம் செய்த காலமுதல் கூடுதலாக கூடியவாடகைக்காக ரூபாய் 50-க்கும் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார். 1, 2, பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக் கொண்டார்கள். (1087 of 1903.)

லாயர்கள்:—ஹானரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் முதல் பிரதிவாதிக்கும், மிஸ்டர் T. எத்திராஜ முதலியார் 2, 3, 5, 6, பிரதிவாதிகளுக்கும், மிஸ்டர் C. ராமச்சந்திரராவ் சாயப்பு அப்பீல் வாதிகளுக்கும் ஆஜரானார்கள்.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) கீழ் அப்பீல் கோர்ட்டார், வாதி தாவா வீட்டின் ஒரு பாகத்திற்கு மட்டிலும் பாத்தியமுடையவராகயிருக்க, அவருக்கு முழு வீட்டிற்கும் டிக்கிரி கொடுத்ததில் தவறிப்போயிருக்கிறார்கள்.

(2) கீழ் அப்பீல் கோர்ட்டார் முகமதிய மைனரின் தேகத்திற்கும் சொத்திற்கும் அவனுடைய தாயாரே சரியான கார்ட்டியன் என்று நினைக்காததில் தவறிப்போயிருக்கிறார்கள்.

(3) கீழ் அப்பீல் கோர்ட்டார் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 51-வது பிரிவு இந்தக் கேசிற்குப் பொருந்தாதென்று நினைத்ததிலும், 1, 2, பிரதிவாதிகள் வீட்டை விஸ்தரித்துக் கட்டின விஷயத்தில் செலவிட்ட தொகையை அடைவதை முகமதிய சட்டம் தடுக்கிறதென்று நினைத்ததிலும் தவறிப்போயிருக்கிறார்கள்.

தீர்ப்பு:—முகமதிய தாயார் முகமதிய மைனரின் தேகத்திற்கு மட்டிலும் தான் கார்டியன் சொத்திற்கு கார்டியனல்ல. ஆகையால் தாயார் செய்த விற்கிரையம் மைனரைக் கட்டுப்படுத்தாது. (இ. லா. ரி. 26. சென். 724-லும், இ. லா. ரி. 29 கல், 473-லும், இ. லா. ரி. 20 பம். 144-லும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் முறையே பதுமாபாய் V விட்டில உபாச்சேபே, மொய்னுபிபி V பான்குபிகாரி பிஸ்வாஸ், மாலாட்சிலப்பா கேஸ்களில் முகமதிய தாயார் முகமதிய மைனரின் சொத்திற்கு கார்டியனல்ல வென்று தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.)

1, 2, பிரதிவாதிகள் வீட்டை விஸ்தரித்துக் கட்டுவதில் செலவு செய்த தொகையைப்பெற பாத்தியப்பட்டவர்கள் என்று ஜில்லாக்கோர்ட்டார்கள் சொல்லுகிறார்கள்.

இப்படி சொல்லுவதற்கு ஜில்லாக்கோர்ட்டார் என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் (Transper of Property Act) இரண்டாவது அத்தியாயம் முகமதிய சட்டத்தின் எந்த விதியையும் பாதிக்கமாட்டாதென்று ஷை அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிற தென்பதே. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 57-வது பிரிவில் ஒருவன் வீட்டைக் கிறையத்திற்கு வாங்கி தனக்கு அது சொந்தமானது என்று நல்ல எண்ணத்துடன் நம்பி பணச்செலவிட்டு அதை விஸ்தரித்துக் கட்டுவானேயாகில், பிறகு வேறொருவன் அந்தவீடு தனக்குச் சொந்தமென்று கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் இவனுக்கு டிக்கிரி கொடுப்பார்களேயாகில் செலவு செய்து கட்டினவனுக்குச் சேரவேண்டிய பணத்தைச் கொடுத்து விடும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

செலவுசெய்து வீட்டைக்கட்டினவனுக்குக்கோர்ட்டார் இந்த நியாயத்தைச் செய்வதைத்தடுக்கக்கூடிய விதி முகமதிய சட்டத்தில் யாதொன்றையும் காணோம் ஆகையால், 1,2, பிரதிவாதிகள் தாங்கள் வீட்டை விஸ்தரித்துக்கட்டின விஷயத்தில் செலவுசெய்த தொகையை அடைய பாத்தியப்பட்டவர்கள். முதல் அப்பீல் பிரதிவாதி தரப்பில் பேசும் மிஸ்டர் சிவசாமி அய்யர் சட்டம் இன்னதென்று அறியாமல் செய்யப்பட்ட ஒரு டிரான்ஸ்பரை நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட ஒரு டிரான்ஸ்பராக நினைக்கக்கூடாதென்று சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருவன் ஒருவீட்டை தன்னுடைய சொந்தவீடு என்று உள்ளபடி நல்லெண்ணத்துடன் நம்பி டிரான்ஸ்பர் செய்திருக்கிறானா அல்லவா என்கிற பிரஸ்னை சட்டசம்பந்தமான பிரஸ்னையல்ல. சாட்சியத்தைப்பொருத்த பிரஸ்னை

வாதி தாவா வீடு தம்முடைய தகப்பனுடையதென்று சொல்லி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறபடியால், அந்த வீட்டிற்குள்ள இதர பாகஸ்தர்களுடன் இவர் ஒருவராக யிருக்கவேண்டும், அல்லது மற்றவர்கள் பாகமும் வாதியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆகையால் இதர பாகஸ்தர்களுடைய பாகம் வாதியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதா இல்லையாவென்றும், 1, 2, பிரதிவாதிகள் தாவா வீடு தங்களுக்கு ஏக சுதந்தரமாய்விட்டதென்று நல்ல எண்ணத்துடன் நம்பி பணச்செலவுசெய்து விஸ்தரித்துக்கட்டியிருக்கிறார்களாவென்றும் அப்படி நல்ல

எண்ணத்துடன் அவர்கள் தங்களுக்குச் சொந்தமென்று எண்ணி கட்டியிருந்தால், அவர்களுக்கு என்ன தொகை சேரவேண்டுமென்றும் ஆகிய இந்த மூன்று பாயின்ட்டுகளையும் விசாரணைசெய்து முடிவுபண்ணி அனுப்பும்படி இந்த வியாஜ்ஜியத்தை ஜில்லாக்கோர்ட்டாருக்கு அனுப்புகின்றோம்.

ஹைக்கோர்ட்டு திறந்தது முதல் ஒருமாதத்திற்குள்ளாக ஜில்லாக்கோர்ட்டார் முடிவுசெய்து அனுப்பவேண்டும். முடிவு ஹைக்கோர்ட்டிற்குவந்து சேர்ந்தது முதல் ஒருவாரத்திற்குள்ளாக ஜில்லாக்கோர்ட்டார் செய்திருக்கும் முடிவுக்கு ஆக்ஷேபணை உண்டானால் தாக்கல் செய்யப்படவேண்டும்.

ஜில்லாக்கோர்ட்டார் செய்தனுப்பிய முடிவு:—

இஷ்யூ நெ. 1:—இதர பாகஸ்தர்களுடைய பாகம் வாதியிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதாக என்று விசாரணை செய்ததில் வாதி தரப்பில் ஒரே சாட்சி சாட்சியம் கூறியிருக்கிறார். தஸ்தாவேஜி சாட்சியம் யாதொன்றுமில்லை. இதர பாகஸ்தர்களுடைய பாகம் வாதியினிடம் ஒப்புவிக்கப்படவில்லை என்று அபிப்பிராயப்படுகின்றோம். தாவாவீடு தனக்கே ஏக சுதந்தரமானது என்று ருஜுப்படுத்தவேண்டியது வாதியின் கடமை. இதர பாகஸ்தர்கள் தங்களுடைய பங்குகளைக் கேட்கவில்லையென்று வாதி சொல்வது சோம்பேரித்தனமான கட்சி.

இஷ்யூ நெ. II:—1, 2, பிரதிவாதிகள் தாவா வீட்டை தங்களுடைய சொத்து என்று உள்ளபடி நல்ல எண்ணத்துடன் நம்பி யிருந்தார்களென்பதைக்குறித்து விசாரித்ததில் வீட்டின் கிரையத்தொகை ரூ. 300-யை சப் ரிஜிஸ்டிரார் முன்னிலையில் கொடுத்திருக்கிறார்கள். வாதியின் முதல் சாட்சியே தாவா வீட்டில் ரூ. 2 தான் வாடகை வரக்கூடும் என்று சொல்லியிருக்கிறார். வாதியின் இரண்டாவது சாட்சி தானே அந்த வீட்டில் சிலகாலம் குடியிருந்ததாகவும் ரூ. 1 முதல் ரூ. 2 வரையில் வாடகை கொடுத்துவந்ததாகவும் சொல்லியிருக்கிறார். 1, 2, பிரதிவாதிகள் ரிப்பேர் செய்திருக்கிறார்கள் என்பதற்கும் விஸ்தரித்துக்கட்டியிருக்கிறார்கள் என்பதற்கும் ஏதேஷ்டமான சாட்சியமிருக்கின்றது. ஆகையால் 1, 2, பிரதிவாதிகள் தாவா வீட்டை தங்களுடையதென்று உள்ளபடி நம்பியிருந்தார்கள் என்று நாம் அபிப்பிராயப்படுகின்றோம்.

இஷ்யூ நெ. III:—1, 2, பிரதிவாதிகள் எவ்வளவு பணம் செலவு செய்து விஸ்தரித்துக்கட்டியிருக்கிறார்களென்று விசாரணை செய்ததில் ரூ. 400 செலவிட்டிருப்பதாகத் தெரிகிறது. வாதியின் 6-வது சாட்சியின் வாக்குமூலத்தால் இந்தத்தொகை செலவிடப்பட்டிருப்பது உண்மை என்று தெரியவருகிறது. 1, 2, பிரதிவாதிகள் கோர்ட்டில் ஷை தொகைக்குக் கணக்குக் காட்டவில்லையே என்று வாதி ஆக்ஷேபிக்கிறார். 1, 2, பிரதிவாதிகள் வீடு தங்களுடையது என்று எண்ணி இருந்தபடியால் கணக்கு வைக்கவில்லை. ஆகையால் வாதிக்கு முழு வீடும் கிடைத்தால் அவர் ரூ. 400 1, 2, பிரதிவாதிகளுக்குக் கொடுக்கவேண்டும். வீட்டில் ஒரு பங்குமட்டிலும் கிடைத்தால் அந்த வீதத்திற்குள்ளபடி 1, 2, பிரதிவாதிகளுக்குக்கொடுக்கவேண்டும்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்கு வீட்டில் 24 பங்கில் 7 பங்குண்டு அதாவது 7/24 பாகத்திற்கும் வாடகைவகையில் ரூ. 14-9-4-க்கும் டிக்கிரி கொடுக்கப்பட்டது.

1,2, பிரதிவாதிகளிடமிருந்து வீட்டை வசப்படுத்துவதற்கு முந்தி ரூ. 116-10-8 வாதி பிரதிவாதிகளுக்குச் செலுத்தவேண்டும். அவரவர்கள் செலவுத்தொகை அவரவர்களைச்சேர்ந்தது. இ. லா. ரி. 30 சென். 197.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

நொரஜட்டி சுப்பிராயா—வாதி—அப்பீல்வாதி.

V.

தொரஜட்டி வெங்கய்யா—பிரதிவாதிகள்—
அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட் :—ஸ்வீகாரப் புத்திரனுக்கு சொந்த குடும்பத்திலிருக்கும் பாத்திதை.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—முதல் பிரதிவாதியும் அவருடைய குமாரர்களும், வாதியும் 2, 3, பிரதிவாதி ஆகிய இவர்கள் பாகப்பிரிவினையாகாத சேர்ந்த குடும்பத்தின் சகோதரர்கள். இவர்களுக்குள் வாதி குழந்தையாக யிருக்கும்போது S. என்பவருடைய விதவையால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். S. என்பவருடைய அனந்தர வார்சுகள் தங்களுடைய பாத்திதையை ஸ்தாபிக்க டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் கொண்டுவந்தபோது கோர்ட்டார் 1883-ம்௵த்தில் இந்த ஸ்வீகாரம் செல்லாது என்று தீர்ப்புச் செய்தார்கள். இருந்தபோதிலும் வாதி எப்போதும்போல் விதவையுடன் வசித்துவந்தார். 1, 2, 3, பிரதிவாதிகளும் வாதியும். ஆகிய இவர்கள் விதவைக்குப்பின்பு S. என்பவருடைய சொத்திற்கு வார்சாக வரக்கூடியவர்கள். 1, 2, 3, பிரதிவாதிகள் 1896-௵த்தில் தாங்களும் தங்களுடைய வார்சுகளும் இந்த பாத்திதையைப்பாராட்டுகிறதில்லை யென்றும் வாதியே விதவைக்குப்பின்பு S. என்பவருடைய எஸ்டேட்டை ஏகசுதந்தரத்துடன் அனுபவித்து வரலாமென்றும் வாதிக்கு ஒரு உடன்படிக்கை செய்துக்கொடுத்தார்கள். இதற்கு பதிலாக வாதி தமக்கு சொந்த குடும்பத்திலிருந்த தம்முடைய பாகத்தைக் கேட்கிறதில்லை என்று வாய்மொழியாக ஒப்புக்கொண்டார். இப்படியிருக்கும் தருவாயில் வாதிக்கும் விதவைக்கும் சச்சரவு நேரிட்டுவிடவே, வாதி தம்முடைய சொந்த குடும்பத்திலிருக்கும் தம்முடையை பாகத்தைப்பிரித்துப் பெற்றுக்கொள்ளும்படி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

நெல்லூர் டி. மு. கோர்ட்டார் பிரதிவாதிகள் 1883-ம்௵ம் முதல் குடும்பச்சொத்தை தங்களுக்குமட்டிலும் சொந்தமென்று எண்ணி அனுபவித்துக்கொண்டு வருகிறபடியால் வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷமுண்டாயிருக்கிறதென்றும் பிரதிவாதிகள் S. என்பவருடைய சொத்தில்தமக்கிருக்கும் பாத்தியதையை விட்டுவிட்டபடியால்

வாதி அதற்குப்பதிலாக தம்முடைய குடும்பச்சொத்திலிருந்த பாத்திதையை விட்டுவிட்டார் என்று, வாதி இப்படி விட்டுவிட்டது செல்லுபடியுள்ளதென்றும் சொல்லி வாதியின் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஜில்லாக்கோர்ட்டாரும் டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை உறுதி செய்தார்கள்.

வாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

வக்கீல்கள்:—டாக்டர் சாமிநாதன் அப்பீல் வாதிக்கும், அப்பீல் பிரதிவாதிக்கு V. கிருஷ்ண சாமி அய்யருக்குப் பதிலாக A. நீலகண்ட அய்யரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—வாதி குடும்பச்சொத்தில் தமக்கிருக்கும் பாகத்தைப் பெறுவதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கிறார். வாதி குழந்தையாக யிருக்கையில் சுந்தர ராமய்யா என்பவருடைய விதவையால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆனால் இந்த ஸ்வீகாரம் செல்லுபடியுள்ளதல்லவென்று கோர்ட்டார் 1883-ம்௵த்தில் தீர்மானித்து விட்டார்கள். 1896-ம்௵த்தில் பிரதிவாதிகள் தங்களுக்கு சுந்தர ராமய்யா எஸ்டேட்டிலிருந்த பாத்திதையை விட்டு விட்டதாக விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுக்க, வாதி குடும்பச்சொத்தில் தமக்கிருந்த பாத்தியதையையும் விட்டுவிட்டார். இந்த வியாஜ்ஜியத்திற்கு இரண்டு டிபன்சுகளிருக்கின்றன அவையாவன:—(1) வாதிகுடும்பச் சொத்திலிருந்த பாத்திதையை விட்டுவிட்டது. (2) வியாஜ்ஜியத்திற்கு காலாவதி தோஷம் உண்டாய் விட்டது. காலாவதி தோஷத்தைக்குறித்து கீழ் இரண்டு கோர்ட்டார்களும் யாதொரு விபரமான முடிவும் செய்யவில்லை. பிரதிவாதிகள் லிமிட்டேஷன் ஆக்ட்டின்படி இரண்டாவது ஷெட்டியூல் 127-வது ஆர்ட்டிகலின்படி வாதியின் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷமுண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். [குடும்பச்சொத்திலிருந்து விலக்கப்பட்டவன் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமானால் அப்படி விலக்கப்பட்டது தனக்குத் தெரிந்தது முதல் 12 வருஷத்திற்குள் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்று 127-வது ஆர்ட்டிகிலில் சொல்லப்பட்டிருக்கின்றது] டி. மு. கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷமுண்டாய் விட்டதென்று சொல்லியிருக்கிறார்களே தவிர 1883-ம்௵ முதல்பிரதிவாதிகள் வாதியைசொத்தின் பாத்தியதையின்று விலகி தாங்களே அனுபவித்துக்கொண்டு வருவது வாதிக்குத் தெரியுமா என்பதைப்பற்றி டி. மு. கோர்ட்டார் யாதொன்றும் சொல்லவில்லை. டி. மு. கோர்ட்டார் முடிவு செய்திருப்பதெல்லாம் கூடி ஸ்வீகாரம் செல்லாது என்று கோர்ட்டார் தீர்மானித்த பிறகும் வாதி சுந்தரராமய்யாவின் விதவையுடன் வசித்து சுந்தரராமய்யாவின் ஸ்ரார்த்தம் முதலிய கிருத்தியங்களை எல்லாம் செய்துவந்தார் என்பதே. 1896-ம்௵த்திற்கு முந்தி வாதி குடும்பச் சொத்திலிருந்த தம்முடையபாத்தியதையை விட்டுவிட்டார் என்றாவது அல்லது பிரதிவாதிகள் வாதியை குடும்பச்சொத்திலிருந்து நீக்கியதை வாதி அறிந்து கொள்ளும்படியாக குடும்பச்சொத்து தங்களுக்கே சுதந்தரமென்று எண்ணி அனுபவித்து வந்தார்கள் என்றாவது எண்ணுவதற்குயாதொரு முகாந்தரமுமில்லை. ஆகையால் காலாவதி தோஷம் கணக்கிடப்படவேண்டுமானால் 1896-ம்௵ முதல் கணக்கிடப்படவேண்டும். இந்த வியாஜ்ஜியம் நெல்லூர் டி. மு. கோர்ட்டில் 1904-ம்௵ தாக்கல் செய்யப்பட்டது. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் இன்னு முண்டாகவில்லை. மேற்கூறப்பட்ட 127 ஆர்ட்டிகளும் இந்த வியாஜ்ஜியத்திற்குத் தடையாயில்லை.

நிற்க, குடும்பச்சொத்திலிருக்கிற தம்முடைய பாத்தியதையை வாதி விட்டு விட்டதாக வாய்மொழியாய் கூறியிருப்பது செல்லுபடி யுள்ளதல்லவென்று ஒப்புக்கொண்டபோதிலும் அவர் தம்முடைய பாத்தியதையை விட்டு விட்டது ஈடற்றதாயிருக்கிறது. அதாவது அதற்குப் பரிகாரமாக அல்லது ஈடாக வாதி யாதொன்றும் அடையவில்லை. வாதி ஏதேனும் அடைந்திருப்பதாகச் சொல்லவேண்டுமானால் அது என்னவென்றால்: எக்சிபிட் A. அதாவது பிரதிவாதிகள் சுந்தர ராமய்யா சொத்தில் தங்களுக்கிருக்கும்படியானப் பாத்தியதையை விட்டு விட்டதாகச்சொல்லி எழுதிக்கொடுத்திருக்கும் விடுதலைப்பத்திரம் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 6 (a) பிரிவின்படி இளவரசன் தன் தகப்பன் இறந்துபோன பிறகு தான் பட்டத்திற்கு வரப்போகிறபாத்தியதையும் ஒருவன் தன்னுடையபந்து ஒருவன் இறந்துபோன பின்பு அவனுடைய சொத்துக்களுக்கு தான் வார்சாகவரும்படியான பாத்தியதையும் இதைப்போலொத்த பாத்தியதைகளையும் டிரான்ஸ்பர் செய்யக்கூடாது.

இந்த வியாஜ்ஜியத்தில் சுந்திர ராமய்யாவின் விதவை இறந்துபோன பின்பு தாங்கள் வார்சாக வரக்கூடியபாத்தியதையை பிரதிவாதிகள் வாதிக்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். ஆகையால் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்திருக்கும் விடுதலைபத்திரம் செல்லுபடியுள்ளதல்ல.

ஆகையால் நாங்கள் அப்பீலை ஏற்றுக்கொள்ளுகின்றோம். வாதியின் பாகத்தைப் பிரித்துக்கொடுக்கும்படியாக இந்த வியாஜ்ஜியத்தை ஜில்லாக்கோர்ட்டாருக்கு அனுப்புகின்றோம். அப்பீல் பிரதிவாதிகள் இந்த அப்பீல் செலவை வாதிக்குக்கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புச்சொன்னார்கள். இ. லா. ரி. சென். 201.

ஜட்ஜிகள் :— { சர் ஆர்னல் வொயிட், சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ரூமாந்தி வெங்கட சுப்பாராவ்—வாதி—அப்பீல் வாதி.

V.

லக்காஜு சின்ன அய்யன்ன வகையரு—
பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்

லாப்பாயின்ட்:—காலாவதி தோஷம்.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—வாதி பிரதிவாதிகள் பேரில் பெந்தக சொத்தின்பேரில் ஒரு டிக்கிரி பெற்றி

ருந்தார். டிக்கிரியை நிறைவேற்றினதில் ஷை சொத்து 1898-ம்ஹு டிசம்பர்மீ 19௳ ஏலம் போடப்பட்டது. பிரதிவாதிகள் மேற்கொண்டு நடவடிக்கை நடத்தின தில் ஏல் விற்பனை கோர்ட்டாரால் 1900-ம்ஹு அக்டோபர்மீ 9௳ ரத்து செய்யப்பட்டது. ஏலத்தில் ஷை சொத்தை வாங்கினவன் தன்னுடைய பணத்தைக் கொடுத்துவிடும்படி மனு செய்துக்கொள்ள, கோர்ட்டார் ஏலத்தொகையை வாப்பஸ் செய்யும்படி வாதிக்கு 1901-ம்ஹு ஜூன்மீ 19௳ உத்திரவு செய்தார்கள். வாதி டிக்கிரியை மறுபடியும் நிறைவேற்ற 1904-ம்ஹு ஜூன்மீ 20௳ மனு செய்துக்கொண்டார், டி. மு. கோர்ட்டார் 1901-ம்ஹு ஜூன்மீ 19௳ முதல் 1904ஹு ஜூன்மீ 20௳ வரையில் கணக்கிட்டு மூன்று வருஷத்திற்குள் மனு செய்துக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால் டிக்கிரிக்கு காலாவதி தோஷம் உண்டாகவில்லை என்று சொல்லி டிக்கிரியை நிறைவேற்றும்படி அனுமதி கொடுத்தார்.

பிரதிவாதிகள் அப்பீல்செய்துக்கொண்டதில் ஜில்லாக்கோர்ட்டார் டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து காலாவதி தோஷம் ஏலவிற்பனை ரத்து செய்யப்பட்ட தேதியாகிய 1900-ம்ஹும் அக்டோபர்மீ 9௳ முதல் கணக்கு செய்து டிக்கிரிக்கு காலாவதி தோஷம் உண்டாய்விட்டதென்று சொல்லி வாதி நிறைவேற்றுவதற்காகக் கொடுத்திருந்த மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்.

லாயர்கள்:—மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அப்பீல்வாதிக்கும், மிஸ்டர் C. வெங்கடசுப்பிரமய்யா அப்பீல் பிரதிவாதிகளுக்கும் பேசினார்கள்.

தீர்ப்பு:—இந்தக்கேசில் முக்கியமான தேதிகள் எவை என்றால், 1900-ம்ஹும் அக்டோபர்மீ 9௳ ஏலம் ரத்து செய்யப்பட்டது. 1901-ம்ஹும் ஜூன்மீ 19௳ ஏலத்தொகையை வாப்பஸ் செய்யும்படி வாதிக்கு உத்திரவு செய்யப்பட்டது. 1904-ம்ஹும் ஜூன்மீ 20௳ டிக்கிரியை நிறைவேற்ற வாதி மனுசெய்துக்கொண்டார். காலாவதி தோஷம் 1901-ம்ஹும் ஜூன்மீ 19௳ முதல் கணக்கிடப்படக்கூடுமானால் இப்போது வாதி செய்துக்கொண்டிருக்கும் மனுவு சரியான காலத்தில் செய்யப்பட்டிருக்கிறதாக எண்ணப்படவேண்டும். இந்தக்கேஸ் இ. லா. ரி. 4 கல். 415 லும். இ. லா. ரி. 5 பம். 29 லும் சொல்லப்பட்டிருக்கும் முறையே இஷிரிதாசி V அப்தல்காணிக்கலியாணபாய் தீப்சீண்டு V. களேஷப்லால் ஜாடன்தாஜி கேசுகள் போலிருக்கின்றது.

இந்தக்கேசிற்கு லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெட்டியூல் 179 - வது பிரிவு பொருந்தாது. 178-வது பிரிவு பொருந்தும் [178-வது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், இந்த ஷெட்டியூல் காலாவதி தோஷம் நிர்ணயிக்கப்படாத இதர மனுக்களுக்கு காலாவதி தோஷம், பாத்தியதை ஆரம்பித்த தேதி முதல் மூன்று வருஷத்திற்கு மேற்பட்டால் காலாவதி தோஷமுண்டாய்விடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.] ஆகையால் இப்போது நாம் கவனிக்கவேண்டிய பிரஸ்னை என்னவென்றால், வாதிக்கு மறுபடியும் டிக்கிரியை நிறைவேற்றும்படியான பாத்தியதை எப்போது முதல் உண்டாயிருக்கிறதென்பதே.

ஜில்லா ஜட்ஜி, எப்போது ஏலம் ரத்துசெய்யப்பட்டதோ அப்போது முதலே வாதிக்கு மறுபடியும் நிறைவேற்ற பாத்தியதை உண்டாய்விட்டதென்றும், வாதி ஏலத்தொகையை உடனே ஏலம் எடுத்தவனுக்கு வாப்பஸ் செய்ய கட்டுப்பட்டவரென்றும் ஆகையால் ஏலம் ரத்தான தேதியிலே வாதிக்கு மறுபடியும் பாத்தியதை உண்டாய்விட்டதென்றும் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். நாம் இவருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எப்படியிருந்தபோதிலும் டிக்கிரி ஓல்டர் (வாதி) ஏலத்தொகையைக் கோர்ட்டார் கேட்டாலொழிய வாப்பஸ்செய்ய கட்டுப்பட்டவரல்ல,

சி. பு. கோ. 315 வது பிரிவில் ஏலம் ரத்துசெய்யப்பட்டால் ஏலம் எடுத்தவன் தான் கொடுத்த பணத்தைக் கேட்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய டிக்கிரி ஓல்டர், ஏலம் ரத்து செய்யப்பட்டவுடன் பணத்தைக் கொடுத்துவிடவேண்டியது அவனுடைய பொறுப்பு என்று சொல்லப்படவில்லை. அப்படியானால் பணம் டிக்கிரி ஓல்டர் கையிலிருக்கும்போது மறுபடியும் அவன் டிக்கிரியை நிறைவேற்றலாமோ? நிறைவேற்ற முடியாது. ஆனால் பிரதிவாதிகளின் வக்கீல்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் எப்போது ஏலம் ரத்துசெய்யப்பட்டதோ, அப்போது டிக்கிரி ஓல்டர் கையிலிருக்கும் ஏலம் எடுத்தவனுடைய பணத்திற்கு டிக்கிரி ஓல்டர் டிரஸ்டியாய் விடுகிறான் என்றும், ஆகையால் ஏலம் ரத்துசெய்யப்பட்டவுடனே மறுபடியும் டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமுண்டாய்விடுகிறதென்றும் சொல்லுகிறார்கள். நாம் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஏலம் எடுத்தவன் ஏலத்தொகையைக் கேட்டாலொழிய டிக்கிரி ஓல்டர் கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. டிக்கிரி கடனாளி ஏலத்தை ரத்துசெய்ய நடத்தின நடவடிக்கைகள் டிக்கிரி ஓல்டர் கையில் ஏலத்தொகையிருக்கும் பரியந்தம் அவனை பாதிக்கமாட்டாது. டிக்கிரி ஓல்டர் தன்னுடைய கையிலிருக்கும் பணத்தை கொடுக்கும்படி கட்டாயப் படுத்தப்படும் பரியந்தம் மறுபடியும் டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமுண்டாகவில்லை. ஆகையால் டிக்கிரியை நிறைவேற்றும்படியான பாத்தியதை, தொகையை வாப்பஸ் செய்யும்படி கோர்ட்டார் வாதிக்கு உத்திரவுசெய்த தேதி முதல் அதாவது 1901-ஹும் ஜூன்மீ 19௳ முதல் உண்டாகின்றது. ஆகையால் 178-ம் நெ. ஆர்டிக்கில் இந்த வியாஜ்ஜியத்தைத் தடை செய்யமாட்டாது.

நாங்கள் அப்பீல் ஏற்றுக்கொள்ளுகிறோம். பிரதிவாதிகள் இந்தக்கோர்ட்டுச் செலவையும் கீழ்க்கோர்ட்டுச்செலவையும் வாதிக்குக்கட்டிக் கொடுக்கவேண்டும். இ. லா. ரி. 30 சென். 209.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

கருப்பண்ணன் செட்டி வகையரு—வாதி—அப்பீல் வாதி.

V.

கந்தசாமி தேவன் வகையரு—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—டிக்கிரியைநிறைவேற்றுதலைக்குறித்து.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—1903-வது ஹூத்திய 22 நெ. வியாஜ்ஜியத்தில் வாதிகள் 2 முதல் 4 பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி பெற்றிருந்தார்கள். வாதிகள் டிக்கிரியை நிறைவேற்றி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்குச் சொந்தமான நிலத்தில் நின்றுக்கொண்டிருந்த பயிர்களை ஜப்திசெய்தார்கள். இந்த வியாஜ்ஜியத்தின் முதல் பிரதிவாதியாகிய கந்தசாமித்தேவன் தான் ஷை 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து நிலத்தைக்குத்தகை பெற்று அனுபவித்துவருவதாயும் ஜப்திசெய்யப்பட்டிருக்கும் பயிர்கள் தனக்குச் சொந்தமென்றும் ஜப்தியை ஆக்ஷேபித்து பாத்தியதை மனுசெய்துகொண்டார். கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிட்டார்கள். இதன்பிறகு முதல் பிரதிவாதியாகிய கந்தசாமி தேவன் பயிர்களை அறுத்துக்கொண்டு போய்விட்டதாகவும் இவரிடமிருந்து நஷ்டம் கட்டி வாங்கவேண்டுமென்றும் வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:—பிரதிவாதிகள் பயிர்களை ஜப்தி செய்திருப்பதை முன்னிட்டு அவர்களுக்கு அந்த பயிர்கள் சொந்தமாய் போய்விட மாட்டாதென்றும், பயிர்களுக்குச் சொந்தம் பாராட்டும்படியான அவ்வளவு பாத்தியதை உண்டாய்விடவில்லையென்றும் ஆகையால் முதலாவது இந்த வியாஜ்ஜியத்தையே கொண்டுவர பாத்தியதை யற்றவர்கள் என்று பிரதிவாதிகள் கக்ஷி சொன்னார்கள்.

மதுரை (West) சப் கோர்ட்டார் தீர்ப்பு:— இ. லா. ரி. 25 கல். 179, இ. லா. ரி. 25 அல. 347, இ. லா. ரி. 26 சென் 673-ம் முறையே ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் மோட்டிலால் V. காராபுஷ லக்ஷிமிடையால் V. ஹரிடானிலால், கிருஷ்ணசாமி முதலியார் V. சென்னப்பட்டணம் அப்பிஷியல் அசைனி ஆகிய இந்தக்கேசுகளில் தற்காலம் அமுலிலிருக்கும் சிவில் புரோசிஜர் கோடின்படி ஜப்திசெய்வது ஜப்திசெய்த டிக்கிரி ஓல்டருக்கு ஜப்திசெய்யப்பட்ட சொத்தில் சுதந்தரமான பாத்தியதையை உண்டாக்கவில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக்கேஸில் ஜப்தி செய்யப்பட்ட பயிரில் வாதிகளுக்கு சுதந்தர பாத்தியமில்லை என்று சொல்லி வியாஜ்ஜியத்தைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அவரவர்களுடைய செலவு தொகையை அவரவர்களைப் பொறுத்ததென்றும் தீர்ப்புச் சொன்னார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ண அய்யரும், அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கு சர். V. தேசிகாச்சாரியாரும் பேசினார்கள்.

தீர்ப்பு:—பயிர்களை வாதிகள் ஜப்தி செய்திருந்த போது முதல் பிரதிவாதியாகிய கந்தசாமித் தேவன் அறுத்துக்கொண்டு போய்விட்டானென்றும் அவனிடமிருந்து நஷ்டம் கட்டிவாங்க வேண்டுமென்றும் வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். வாதிகள் முதல் பிரதிவாதியின்பேரில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவர்களா? என்பதைக் கவனிக்க வேண்டும். கடனாளி சொத்துக்களை டிக்கிரி ஓல்டர்கள் பாதுகாப்பதில் ஜப்திக்கு முன்னிருந்ததைவிட ஜப்தி செய்யப்பட்டவுடன் அவர்களுக்கு அதிக பாத்தியதை உண்டாய் விட்டதாகச் சொல்லக்கூடாது. வாதியின் வக்கீல்கள் தங்களுடைய கக்ஷிக்கு டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 91 (f) பிரிவை ஆதாரமாகக் கூறுகின்றார்கள்.

ஷை பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் பெந்தகச் சொத்தை மீட்பதற்கு ஷை சொத்தில் பெந்தகம் வைத்திருக்கிறவனுக்கிருக்கும் பாத்தியதையை ஜப்தி செய்தவனும் வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜப்தி செய்த சொத்தில் டிக்கிரி ஓல்டர்களுக்கிருக்கும் பாத்தியதையைப் பற்றிப் பேசும் சட்டம் சிவில் புரோசிஜர் கோட். ஆகையால் ஷை கூறப்பட்ட பிரிவின்படி கடன்காரனுக்குக் கிடைத்திருக்கும் பாத்தியதை சி. பு. கோ. டால் கொடுக்கப்பட்ட பாத்தியதையல்ல. இ. லா. ரி. 27. அல. 378-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கோடுராம் V. சுராஜ்மல் கேசில் ஜப்தி செய்யப்பட்ட சொத்திற்கு யாரேனும் தீங்கு செய்தால் ஜப்தி செய்தவன் தீங்கு செய்தவன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று பிரரேபனை செய்யப்பட்டது. ஆனால் கோர்ட்டார் அதை ஏற்றுக்கொண்டு தீர்மானிக்கவில்லை. இருந்தபோதிலும் பிரதிவாதிகள் ஜப்தி செய்த பயிர்களை அறுத்துக்கொண்டுபோன விஷயத்தை கோர்ட்டார் நிறைவேற்று நடவடிக்கையிலே கவனித்துபைசல் செய்யலாமென்று ஷை கோடுராம் V. சுபராஜ்மல் கேசில் தீர்மானிக்கிறார்கள்.

ஆகையால் வாதிகள் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கக்கூடாது.

டிக்கிரியை நிறைவேற்றும் கோர்ட்டில் வாதிகள் இந்த விஷயத்தைக் குறித்து மனு செய்துக்கொள்ள வேண்டும்.

ஆகையால் செலவு தொகையுடன் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. இ. லா. ரி. 30 சென். 207.

ஜட்ஜிகள்:— { சிப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

*மாறலம்மாள் வகையரு.—பிரதிவாதிகள்—
அப்பீல் வாதிகள்.*

V.

மாறல மரக்காயர்.—வாதிகள்—அப்பீல் பிரதி வாதிகள்.

லாப்பாயின்ட்:—வீதாச்சாரபணத்தைப்பற்றியது.

வியாஜ்ஜிய சங்கிரஹம்:—வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் சொந்தமாக ஒரு தோப்பிருந்தது. இந்தத் தோப்பில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதாக யிருந்ததை வாதியே முழுப்பணமும் செலவு செய்து சீர்திருத்தங்களைச்செய்து முடித்துவிட்டு வீதாச்சாரப்படி மற்ற பாகஸ்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூ. 275—க்காக 1 முதல் 5 பிரதிவாதிகள்பேரில் பரமக்குடி டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் 1898ம் ளுத்திய 487-ம் நெ. அசல் வியாஜ்ஜியம் கொண்டுவந்து 1 முதல் 5 பிரதிவாதிகள் பேரிலும் டிக்கிரி பெற்றார். இதன் பிறகு 3 முதல் 5 பிரதிவாதிகள் வாதி மோசடியாய் தங்கள்பேரில் டிக்கிரி பெற்றுவிட்டதாகச் சொல்லி ஷை டிக்கிரியை ரத்து செய்துவைக்க 1901-ம் ளு-த்திய 157-ம் நெ. அசல் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்த வியாஜ்ஜியத்தில் வாதிகள் பக்கம் தீர்ப்புச்சொல்லப்பட்டது. அதாவது பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் வாதி 1898ம் ளு-த்திய 487-ம் நெ. வியாஜ்ஜியத்தில் பெற்றிருந்த டிக்கிரி 3 முதல் 5 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்த மாட்டாதென்று தீர்ப்புச்சொல்லப்பட்டது.

இதன்பேரில் வாதி தமக்குச்சேரவேண்டிய முழுத்தொகையாகிய ரூ. 525-9-4 க்கும் 1, 2, பேரில் தொடர்ந்தார். 1, 2, பிரதிவாதிகள் நிறைவேற்று நடவடிக்கையில் தாங்கள் தங்களுடைய வீதாச்சாரப்படி பணம் கொடுக்கக் கட்டுபட்டவர்களே யொழிய மற்றப்படி முழுத்தொகையும் கொடுக்கக் கட்டுபட்டவர்களல்லவென்றும் கக்ஷி சொன்னார்கள். கோர்ட்டார் இந்த ஆக்ஷேபணையை ஏற்றுக்கொள்ளாமல் முழுத்தொகையை வசூல் செய்துகொள்ளும்படி வாதிக்கு அனுமதி கொடுத்தார்கள். இந்த உத்திரவிற்கு விரோதமாக 1, 2, பிரதிவாதிகள் ஹைக்கோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் K. S. மீனன் அப்பீல் வாதிகளுக்கும், மிஸ்டர் K. நாராயணராவ் அப்பீல் பிரதிவாதிகளுக்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ் வியாஜ்ஜியமென்றும், ரூ. 500-க்கு மேற்படாத ஸ்மால்காஸ் வியாஜ்ஜியத்திற்கு சி. பு. கோ. 586—வது பிரிவின்படி இரண்டாவது அப்பீல் கிடையாதென்றும் ஆகையால் நாம் இந்த அப்பீலை விசாரணை செய்யக்கூடாதென்றும் அப்பீல் பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கின்றார்கள். ஒரு கூட்டு பாகஸ்தன் கொடுக்கவேண்டிய பணத்தை மற்றொரு பாகஸ்தன் கொடுத்துவிட்டு அந்தப்பணத்தை வசூல்செய்யும் பொருட்டு ஷை கூட்டு பாகஸ்தன் பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்தை 1887ம் ளுத்திய 9-வது ஆக்டாகிய புரோவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் இரண்டாவது ஷெட்யூல் 41 – வது ஆர்ட்டிகளின்படி ஸ்மால்காஸ் கோர்ட்டார் பிடித்து விசாரிக்கக்கூடாதென்றும் ஆகையால் இதுஸ்மால்காஸ் சுபாவமுடைய வியாஜ்ஜியமல்லவென்றும், அப்பீல்வாதிகள் சொல்லுகிறார்கள். இந்த வியாஜ்ஜியத்தில் கூட்டு பாகஸ்தன் வேறொருவனுக்குக்கொடுக்கவேண்டியபணத்தை மற்றொரு பாகஸ்தன் கொடுத்துவிட்டு அந்தப் பணத்தை வசூல் செய்வதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்படவில்லை. இந்த வியாஜ்ஜியத்தில் கூட்டு பாகஸ்தன் மற்ற பாகஸ்தர்களுக்காக தானே செலவு செய்தபணத்தைப் பெறுவதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த வியாஜ்ஜியம்ஸ்மால்காஸ்சுபாவமுடையது. இதை ஸ்மால்காஸ் கோர்ட் பிடித்து விசாரணை செய்யலாம். ரூ. 500-க்கு மேற்பட்ட ஸ்மால்காஸ் வியாஜ்ஜியங்களுக்கு சி.பு.கோ. 586-வது பிரிவின்படி இரண்டாவது அப்பீல் உண்டென்றும் ஆகையால் நாம் இந்த அப்பீலை விசாரணை செய்யலாமென்றும் அப்பீல் வாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். வியாஜ்ஜியத்தொகை வியாஜ்ஜியம் ஆரம்பமானபோது எவ்வளவு தொகைக்கு தாவா செய்யப்பட்டதோ அந்தத் தொகையே ஒழிய மற்றபடி டிக்கிரியை நிறைவேற்றும் சமயத்தில் ஆதிதாவா தொகை எவ்வளவுக்கு விர்த்தியாய் விட்டதோ அந்தத் தொகையல்லவென்று இ. லா. ரி. 11 கல். 169-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறலால் பட்டா சார்ஜு V. பாபுராம் சபோயாத்தியாயர் கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த தாவாவின் தொகை ரூ. 500 க்குக் கீழ்பட்டது. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்திற்கு இரண்டாவது அப்பீல் கிடையாது என்றுசொல்லி அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள். இ. லா. ரி. சென். 212.

ஜட்ஜிகள்:— { சிப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

அப்பய்ய செட்டி—மனுதார்— அப்பீல் வாதி.

V.

குள் காட்டி பியார்—எதிர் மனுதார்—அப்பீல் பிரதிவாதி.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—அப்பீல் பிரதிவாதி ஒரு பெர்தக சொத்தின்பேரில் டிக்கிரி பெற்று நிறைவேற்றி சொத்தை ஏலம் போட்டு அதை 1905ளு-ம் ஜூன்மீ 5உ ஏலத்தில் எடுத்துக்கொண்டார். டிக்கிரி கடனாளி 1905ளு-ம் ஜூலைமீ 5உ ஷை ஏலச் சொத்தை இந்த வியாஜ்ஜியத்தின் அப்பீல் வாதிக்கு அடமானம் வைத்து டிக்கிரி ஹோல்டருக்குச் சேரவேண்டிய தொகை போக பாக்கித் தொகையைப் பெற்றுக்கொண்டார். அப்பீல் வாதி சி. பு. கோ. 310 [illegible] A பிரிவின்படி ஏல விற்பனையை ரத்து செய்ய கோர்ட்டில் மனு செய்துக்கொண்டார்.

தென்கன்னடம் காசர்காடு டி. மு. கோர்ட்டார் மனுவைத்தள்ளிவிட்டார்கள். இந்த உத்திரவு ஜில்லாக் கோர்ட்டாரால் உறுதி செய்யப்பட்டது.

அப்பீல்வாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்.

லாயர்கள்:—மிஸ்டர் K. நாராயணராவ் அப்பீல் வாதி தரப்பிற்கும், மிஸ்டர் C. மாதவன் நாயர் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் பேசினார்கள்.

தீர்ப்பு:—சி. பு. கோ. 310 A. பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கு கீழ் இரண்டு கோர்ட்டார்களும் குறுகின தார்பரியம் கொடுத்திருக்கிறார்கள். சி. பு. கோ. 310 A பிரிவில் ஒருவனுடைய ஸ்தாவர சொத்து ஏலம் போடப்பட்டால் அவன் ஏலம் போட்ட தேதி முதல் 30 நாட்களுக்குள்ளாக தகுந்த காரணங்களைக் கொண்டு ஏலத்தை ரத்துசெய்ய கோர்ட்டில் மனு செய்துக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏலம் போடப்பட்ட சொத்தை 30 நாட்களுக்குள்ளாக வாங்கினதால் அதில் பாத்தியதை உண்டாயிருக்கிறவனுக்கும் அந்த வசதி யிருக்கிறதென்று ஏன் நினைக்கக் கூடாது ? சி. பு. கோ. 310 A. பிரிவு தீர்ப்பு கடனாளியின் நன்மையை உத்தேசித்தும் அவனுடைய பாத்தியதையைப் பாதுகாக்கவும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் 310 A பிரிவிற்கு செய்திருக்கும் தார்பரியம் சட்டத்தின் நோக்கத்திற்கு ஒத்திருக்கின்றது. சி. பு. கோ. 346-வது பிரிவின்படி ஏலம் உறுதிப்படுத்தப்படும் பரியந்தம் ஏலம் எடுத்தவனுக்கு ஏலச்சொத்தில் சுதந்தர பாத்திய முண்டாகவில்லை. ஆகையால் ஏலம் உறுதிப்படுத்தப் படுவதற்குள்ளாக டிக்கிரி கடனாளி ஏலச்சொத்திலிருக்கும் தன்னுடைய சுதந்திரத்தை வேறொருவனுக்கு டிரான்ஸ்பர் செய்ய பாத்தியமிருக்கிறது. ஆகையால் அப்பீலை ஏற்றுக் கொள்ளுகின்றோம். அப்பீல் பிரதிவாதிகள் அப்பீல் வாதிக்குச் செலவு தொகையைக் கட்டிக்கொடுக்க வேண்டும். இ. லா. ரி. 30 சென். 214.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

சக்ரவர்த்தியார் :—அப்பீல் வாதி.

V.

மாயாண்டிக் கோனன் வகையரு—அப்பீல் பிரதிவாதி.

கேசின்விவரம்:—1884-ம்ளுத்திய நான்காவது மதிராஸ் ஆக்டாகிய மதிராஸ் முனிசிபாலிட்டி ஆக்ட் 188-வது (N) பிரிவின்படி ஒருவன் ஒருவிடத்தில் 10 மாடுகளுக்கு மேற்கட்டி வைத்துக்கொள்ளவேண்டுமானால் அந்த விடத்திற்கு முனிசிபாலிட்டியாரிடமிருந்து லைசென்ஸ் வாங்கிக்கொள்ளவேண்டும். இந்தக் குற்றத்தைச் செய்ததாக அப்பீல் பிரதிவாதிகள் குற்றம் சாட்டப்பட்டார்கள். இந்தக்கேசை விசாரணை செய்த பென்ச் மாஜிஸ்டிரேட்டார் குற்றவாளிகள் தங்களுடைய விடத்தில் எப்போதும் 10 மாடுகளுக்குக் குறைவாகத்தான் கட்டி வைத்திருந்தார்கள் என்றும் ஒரு சமயத்தில் மட்டில் பத்து மாடுகளுக்கு அதிகமாய் கட்டி வைத்திருந்தார்கள் என்றும் முடிவுசெய்தார்கள். ஆயினும் வியாபாரம் செய்யும்பொருட்டு இந்த மாடுகள் அந்த விடத்தில் கட்டப்படாததால், குற்றவாளிகள் 188 N. பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கிலக்காகமாட்டார்கள் என்று சொல்லி குற்றவாளிகளை விடுவித்துவிட்டார்கள். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள் :—கவர்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும் குற்றவாளிகள் தரப்பிற்கு மிஸ்டர் A. S. பாலசுப்பிரமணிய அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு :—188 N. பிரிவிற்கு ஸ்ரீரங்கம் பென்ச் மாஜிஸ்டிரேட்டார் தப்பர்த்தம் செய்திருக்கிறார்கள். இந்தப்பிரிவு அபாயகரமான வியாபாரங்களைக்குறித்துப்பேசி இந்த வியாபாரங்கள் செய்யவேண்டுமானால் லைசென்ஸ் பெறவேண்டுமென்று சொல்லவில்லை. பத்து மாடுகளுக்குமேல் ஒரு விடத்தில் கட்டிவைக்கவேண்டுமானால் லைசென்ஸ் பெறாமல் அந்த விடத்தில் கட்டி வைக்கக்கூடாதென்று தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் லைசென்ஸ் வாங்கவேண்டியது இடத்திற்கே ஒழிய மாடுகள் எந்தக்காரியத்திற்காக அவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கிறதோ அந்த காரியத்திற்காகவல்ல. இருந்தபோதிலும் இந்தக்கேசில் குற்றவாளிகள் ஒரு சமயத்தில் மட்டிலும் அந்த விடத்தில் பத்து மாடுகளுக்கு மேல் கட்டிவைத்திருந்த படியால் அவர்களை தண்டனைக்குள்ளாக்குவது நியாயமாயிருக்கமாட்டாது. ஆகையால் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. இ. லா. ரி. 30 சென். 220.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

சக்ரவர்த்தியார்—அப்பீல் வாதி.

V

நாகன் செட்டி—அப்பீல் பிரதிவாதி.

கேசின் விபரம் :—நாகன்செட்டி கரூரில் தன்னுடைய வீட்டின் சாக்கடைத் தண்ணீரை தெருவில் விட்டதாக 1884-ம்ளுத்திய நான்காவது ஆக்டாகிய 222-பிரிவின்படி முனிசிபாலிட்டியாரால் பிராசிக்கியூட் செய்யப்பட்டார். இந்தக்கேசை பென்ச் மாஜிஸ்டிரேட்டார் விசாரணை செய்து ஷை தெருவில் முனிசிபாலிட்டியார் சாக்கடை கட்டியிருததால் நாகன் செட்டி தம்முடைய வீட்டின் சாக்கடைத் தண்ணீரை தெருவில் விட்டது குற்றமாகமாட்டாது என்று சொல்லி கேசைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு தரப்பிற்கும் பப்ளிக் பிராசிக்கியூட்டரும், நாகன் செட்டி தரப்பிற்கும் மிஸ்டர் C. வெங்கட சுப்பிராமய்யாவும் பேசினார்கள்.

தீர்ப்பு:—சாக்கடைத் தண்ணீரை தெருவில் விடக்கூடாதென்று ஒவ்வொரு வீட்டுக்காரனுக்கும் சட்டம் விதித்திருக்கும் பொறுப்பு நிபந்தனையான பொருப்

பல்ல. அதாவது முனிசிபாலிட்டியார் சாக்கடை கட்டியிருந்தால் தான் வீட்டுக்காரர்கள் தங்களுடைய விடுகளின் சாக்கடைத்தண்ணீரை தெருவில்விடாமலிருப்பதற்கு அவர்களுக்கு பொறுப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும் மற்றப்படி அவர்களுக்கு அந்தபொருப்பில்லை என்றும் சட்டத்தில் கூறப்பட்டில்லை. ஆனல் முனிசிபாலிட்டியார் சாக்கடைகள் கட்டிபிராத ஊர்களில் தெருக்களில் சாக்கடைத்தண்ணீரை விட்டவர்களைத் தண்டிப்பதில் கஷ்டமிருக்கின்றது. இம்மாதிரி கேசுகளில் தண்டனை விதிக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் தண்டனையைக் குறைத்துக் கூறவேண்டும்.

பென்ச் மாஜிஸ்ட்டிரேட்டார் பிரிவிற் தப்பர்தம் செய்து இந்தக்கேசைத் தள்ளிவிட்டபடியால் மறுபடியும் இந்தக்கேசை அவர்கள் பயிலில் தாக்கல் செய்துக்கொண்டு சட்டப்படி பைசல் செய்யும்படியாக உத்திரவு செய்கின்ருேம். இ. லா. ரி. 30. சென். 221.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கிரிமினல் அப்பீல்.

அளராஜு நாயுடு கேஸ்.

லாப்பாயின்ட்:—சாக்ஷி வாக்குமூலத்தில் அவதூர் சொன்னவனை மான நஷ்டத்திற்காக பிராசிக்கியூட் செய்பலாமா?

கேசின் விவரம்:—இந்தக் கிரிமினல் கேசின் பிரியாதி, அளராஜு நாயுடு என்பவரிடமிருந்து பணம் கிடைக்கவேண்டுமென்று டி. மு. கோர்ட்டில் தாவா செய்திருந்தார். இந்த சிவில் கேஸ் தமக்கும் வாதிக்குமிருக்கும் மனஸ்தாபத்தால் வாதி கொண்டுவந்திருகிருர் என்று பிரதிவாதி அளராஜு நாயுடு டிபன்ஸ் கூறினர்.

கோர்ட்டார் பிரதிவாதியை விசாரணைசெய்தபோது வாதியைப்பற்றி அவதூரான சில வார்த்தைகள் கூறினர்.

வாதி அதாவது இந்தக்கேசின் பிரியாதி தம்பேரில் பிரதிவாதி அவதூர் கூறினதற்காக இந்தியன் பினல்கோட் 499-வது பிரிவின்படி பிராசிக்கியூட் செய்தார். ஆர்னி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணைசெய்து இ. பி. கோ. 499-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்தை ஸ்தாபனை செய்து இ. பி. கோ. 500-வது பிரிவின்படி குற்றவாளிக்கு ரூ. 15 அபராதம் விதித்தார். மாஜிஸ்டிரேட் சொன்ன தீர்ப்பின் முக்கியமான பாகம் அடியிற்காண்க:—பிரியாதியின் பெண்சாதி தன்னைப்பிடித்து இழுத்ததாகவும், சத்தியம் செய்ய கோவிலுக்குக் கூப்பிட்டதாகவும் குற்றவாளி சொல்வது நம்பக்கூடியதாயில்லை. இது நம்பப்படக்கூடாதசமாச்சாரமாகயிருப்பதால், குற்றவாளி இந்த சமாச்சாரத்தை சிவில் கோர்ட்டில் நல்ல எண்ணத்துடனும் தன்னுடைய நன்மையைப் பாதுகாக்கவும் சொல்லியிருப்பதாகச் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பிரியாதின் இரண்டாவது பெண்சாதி தன்னை வழிமறித்துப் பிடித்து இழுத்தாள் என்று குற்றவாளி ருஜுப்படுத்தவில்லை. ஆகையால் இந்தசமாச்சாரத்தை சிவில்கோர்ட்டில் நல்ல எண்ணத்துடன் குற்றவாளி சொல்லியிருக்கமாட்டான். பிரியாதியின் இரண்டாவது பெண்ஜாதி விபசாரி என்று குற்றவாளி சொல்லாமற் போனபோதிலும் அவன் அவளைப்பற்றிச் சொல்லியிருப்பது அவள் பதிவிரதா தர்மமுடையவளல்லவென்று கேட்டவர்கள் நினைக்கும்படியாக யிருக்கின்றது.

குற்றவாளி ஹைகோர்ட்டில் கி.பு.கோ. 435-வது பிரிவின்படி ரிவிஷன் பெட்டிஷன் தாக்கல் செய்தான்

தீர்ப்பு:—குற்றவாளி சிவில் தாவாவில் டி. மு. கேட்ட கேள்விகளுக்கு அவதூரான வார்த்தைகளைச் சொல்லியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறன் பிரத்தியேகமான பிரமாணத்தின்பேரில் இவனைக் கோர்ட்டார் கேள்விகள் கேட்டார்களா இல்லையா என்பது தெரியவில்லை. இருந்த போதிலும் இந்தியன் பிரமான ஆக்ட்டின்படிகோர்ட்டார் இவனிடமிருந்து பிரமாணம் வாங்கியிருக்கிருர்கள். ஆகையால் ஷை ஆக்ட் 5, 13 வது பிரிவுகளின்படி இவன் உண்மையைச் சொல்லக் கடமைப்பட்டவன். இவன் சொன்ன வாக்குமூலத்தில் பொய்யான சமாச்சாரங்களிருந்தால் இவன் பொய்சாக்ஷியம் சொன்னதற்காக பிராசிக்கியூட் செய்யப்படலாம். கோர்ட்டார் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையைச் சொல்லக் கடமைப்பட்ட ஒருவன் ஷை கேள்விகளுக்குச் சொன்ன பதில் உண்மை யற்றதாயும், நல்ல எண்ணத்துடன் சொல்லப்படாததாயுமிருந்த போதிலும், அவன் அவதூர் பேசினன் என்று அவனை மான நஷ்டத்திற்காகப் பிராசிக்கியூட் செய்வது பொது நன்மைக்கு விரோதமென்று இ. லா. ரி. 11 சென். 447-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் மன்னய்யா V. சேஷ செட்டி கேசில் இந்தஹைக்கோர்ட்டாரே தீர்மானித்திருக்கிருர்கள். ஆகையால் குற்றவாளிக்கு கீழ்க்கோர்ட்டார் விதித்திருக்கும் தண்டனையை ரத்துசெய்கிருேம். குற்றவாளி அபராதம் செலுத்தியிருந்தால் அதை வாப்பிஸ் செய்துவிடவேண்டும் இ. ல. ரி. 30 சென். 222.

PROCEEDINGS OF THE BOARD OF REVENUE AND COLLECTORS' CRICULARS.

ரெவினியூ போர்ட் சர்க்குலர்களும் கலெக்ட்டர் உத்திரவுகளும்.

தஞ்சாவூர் கலெக்ட்டர் சர்க்கியுலர்.

விளம்பரம்.

1907ஸு மார்ச்சுமீ 20உ முதல் அனுஷ்டானத்துக்கு வரும்படியாக உப்பின் தீர்வை மணு ஒன்றுக்கு ரூ. 1-8-0 ஆக இருந்ததை ரூ. 1-0-0 ஆக இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் களிகூர்ந்து குறைத்திருக்கிருர்களென்று யாவரும் அறியும் பொருட்டு இதனல் பிரசித்தப்படுத்தப்படுகிறது.

சர்க்கியுலர் ந.

1907-வருஷம் ஆகஸ்ட்டுமீ 10உயுள்ள 1907-வருஷத்திய ஆர். டிஸ். நெ. 861-ரிவினியூ.

1903-வருஷம் ஆகஸ்ட்டுமீ 12உயுள்ள 1903-வருஷத்திய ஆர். டிஸ். ந. 810-ரிவினியூ சர்க்கியுலரின் 3-வது பாராவுக்கு மாறுதலாக டிமாண்டுகள் ரிட்டர்ன் செய்யவேண்டிய கெடு இரண்டாவது இருசால் தேதிகள் வரையில் போகலாமென்று ஆக்டிங் கலெக்ட்டர் அவர்கள் இதனல் உத்தரவு செய்கிருர்கள். ஏற்பட்ட காலத்துக்குள் கிஸ்தியை வசூல் செய்வதில் அலக்ஷியமாயிருந்தாவது அல்லது குறிப்பிட்ட தேதிகளுக்கு மேற்பட்டு இருசால்களை தாமதித்தாவது இந்த சாதமான உத்தரவை துர் உபயோகப்படுத்துதலை கவனித்து கண்டிப்பாய் நடவடிக்கை நடத்தவேண்டியது. விசேஷமான காரணங்களுக்கு அல்லாது இன்னும் அதிகமான காலம் தாசில்தார்களால் கொடுபடக்கூடாது.

1907-வருஷம் ஜூலைமீ 30உயுள்ள 1907-வருஷத்திய R. Dis. ந. 805-ரிவினியூ.

1907-வருஷம் ஜூன்மீ 22உயுள்ள ந. 217-ரிவினியூ செட்டில்மெண்டு போர்டு புரொசீடிங்ஸின்படி, போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் ந. 4 பாரா 2 அடியில் வருமாறு மாறியிருப்பதை, கிராமாதிகாரிகள் உள்பட எல்லா ரிவினியூ உத்தியோகஸ்தர்களுடைய அனுஷ்டானத்துக்காக பிரசுரம் செய்யப்படுகிறது.

நோட் (1):—(a) பூமி தண்ணீரால் பூராவும் நனைந்திருந்தாலல்லது;

(b) பயிர்செய்யப்பட்டிருக்கும் தானியங்களுக்கு தேவையானபடி பிரயோஜனமுள்ளதாகவும் போதுமானதாகவும்தண்ணீர் பாய்ந்தாலல்லது;

நஞ்சைவகுப்பு பயிர்களுக்கு ஊரலால் நீர்பாய்ந்தால் தண்ணீர் தீர்வை விதிக்கவேண்டியதில்லை.

(2) நஞ்சைவகுப்பு பயிர்களுக்கு ஊரலால் நீர்பாய்ந்தால்—வெள்ளக்குறைவினலாவது அல்லது இதர (ஸ்பெஷல்) அபூர்வமான காரணங்களாலாவது, மேற்சொல்லிய ஊரல்பாய்ச்சலில்லாவிட்டால் ஸ்தலம் தரிசாயிருந்திருக்கவேண்டுமென்ருவது அல்லது பயிர்கள் அழிந்துபோயிருக்கவேண்டுமென்ருவது தெரியவந்தாலல்லது—தண்ணீர் தீர்வை விதிக்கவேண்டியதில்லை. மேற்சொல்லிய பாய்ச்சலன்னியில் பயிர் விளைவுக்கு வரக்கூடுமாவென்ற சந்தேகம் உண்டானல், தீர்வை விதிக்கவேண்டியதில்லை.

விளம்பரங்கள்.

பஹறீன் துறைமுகத்திலிருந்து வரும் கப்பல்களைப்பற்றிய மட்டில் ஷை துறைமுகம் பிளேக் வியாதியினின்றும் நிவர்த்தியாயிருப்பதால் மதுராஸ் இராஜதானியின் துறைமுகங்களுக்கு ஏற்பட்டுள்ள வெனிஸ் சானிடேரி கன்வென்ஷன் ரிகியூலேஷன்களை ஆலோசனை சபையுடன் கூடிய கவர்னர் அவர்கள் களிகூர்ந்து ரத்து செய்திருக்கிருர்கள்.

தஞ்சாவூர் ஹைகோர்ட்டுவக்கீல் ம-ள-ள-ஸ்ரீ S. இராமசந்திர அய்யர் அவர்கள், B.A., B.L., 1907-வருஷம் ஆகஸ்டுமீ 31உ முதல் மூன்று வருஷகாலத்திற்கு தஞ்சாவூர் ஜில்லாவுக்கு கவர்ன்மெண்டு பிளீடராகவும் பப்ளிக் பிராசிக்கியூடராகவும் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டார் அவர்களுடைய புரொசீடிங்ஸ்.

1907ஸு ஜூலைமீ 10உ.

ஆக்டிங் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்:—J. P. பெட்போர்ட் எஸ்குயர், I. C. S. முன்பாக.

திருத்துரைப்பூண்டி தாலூகா தோகூர் ஸ்டேஷன் 1223-ந. ஹெட்கான்ஸ்டேபிளாகிய முத்துகிருஷ்ணனுயுடு என்பவர் பெரியகுளம் குளத்தில் தவரிவிழுந்து அதிக ஆழத்தில் போய்விட்ட ஒரு பெண்ணின் உயிரைக்காப்பாற்றியதற்காக அவருக்கு ரூ 5 வெகுமதி கொடுக்கவேணுமென்று சிபார்சுசெய்த டிஸ்ட்டிரிக்ட்டு போலீஸ் சூபரின்டெண்டினுடைய 1907வருஷம் ஜுன்மீ 8உ யுள்ள R. C. 1624 Genl. நெ. லெட்டர் படிக்கப்பட்டது.

2. ரூபாய் வெகுமானத்திற்கு பதிலாக ஷை சமாச்சாரத்தை சுருக்கமாகக்கண்ட ஒரு மெடலைப் பெற்றுக்கொள்ள ஷை ஹெட்கான்ஸ்டேபிள் சம்மதமுள்ளவனயிருக்கிருனென்றும் அப்படிமெடல் கொடுக்கும் விஷயத்தில் சூபரின்டெண்டெண்டு சிபார்சு செய்யும் பட்சத்தில் இன்னம் சொஞ்சம் ஜாஸ்தி ரூபாய் சாங்கிஷன் செய்யத்தயாராக இருப்பதாகவும் கண்டு டிஸ்ட்டிரிக்ட்டு போலீஸ் சூபரின்டெண்டிற் கனுப்பப்பட்ட டிஸ்ட்டிரிக்ட்டு மாஜிஸ்ட்டிரேட்டினுடைய 1907ஸு ஜுன்மீ 18உ யுள்ள R. C. 797-M. ரெபரென்ஸ் படிக்கப்பட்டது.

3. ஹெட்கான்ஸ்டேபிள் பண வெகுமதியைக்காட்டிலும் வெள்ளி மெடலை விரும்புவதாகவும் அவ்விதம் சிபார்சு செய்த 1907ஸு ஜுன்மீ 28உ யுள்ள 1847 Genl. ந. நுள்ள டிஸ்ட்டிரிக்ட்டு போலீஸ் சூபரின்டெண்டினுடைய பதில் லெட்டர் படிக்கப்பட்டது.

உத்திரவு.

திருத்துரைபூண்டி தாலூகா தோகூர் ஸ்டேஷன் 1223-ந. ஹெட்கான்ஸ்டேபிளாகிய முத்துகிருஷ்ணனுயுடு பெரியகுளம் குளத்தில் முழுகிப்போவதிலிருந்தும் ஒரு பெண்ணைத் தப்பித்துவிட்ட சாமர்த்தியத்துக்கும் தைரியத்துக்குமாக அவருக்கு ஒரு வெள்ளிமெடல் வெகுமதி கொடுக்கப்படும். செலவு ரூ. 8-க்கு மேற்படக்கூடாது.

திருவாரூர் டிஸ்டிரிக்ட்டு முனிசீப் கோர்ட் O. S. ந. 235-1907.

வாதிகள்.	பிரதிவாதிகள்.
1. வைத்தியலிங்கபிள்ளை.	1. T. சோமசுந்திர முதலியார்.
2. வடிவேலுப் பிள்ளை.	2. மீனுக்ஷிசுந்தர முதலியார் என்கிற ராமலிங்க முதலியார்.
3. அய்யாக்கண்ணுபிள்ளை.	3. அருணசலபிள்ளை.
4. மாரிய பிள்ளை.	4. சுப்பராயலு நாயக்கர்.
5. நடேச பிள்ளை.	
6. ஆறுமுகத்தாபிள்ளை.	

ஷை நம்பரில் திருவாரூர் தெற்கு வீதியிலிருக்கும் செம்படவர் மடம் அதைச்சேர்ந்த மனைவகையரா அந்தணப்பேட்டை பாப்பாகோவில் அதிவீரராமன் பட்டணம் இந்த கிராமங்களிலுள்ள செம்படவர்களுக்கு சொந்தமென்றும் அதில் பிரதிவாதிகளிடமிருக்கிற சிலபாகம் ஷை கிராமங்களிலுள்ள செம்படவர்களுக்காக தங்கள் ஸ்வாதீனமாகவேணும் என்றும் ஷை வாதிகள் வியாஜ்ஜியம் செய்திருப்பதில் ஷை மூன்று கிராமத்திய செம்படவர்களுக்கும் தங்களை பிரதிநிதியாக வைத்துக்கொண்டு நடவடிக்கை நடத்தவேணும் என்றுமனுக்கொடுத்து நாளது வருஷம் செப்டம்பர்மீ 29உ ஈரங்கி போட்டிருப்பதால் அதுவிஷயமாய் ஆட்சேபமுள்ளவர்கள் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம். வாதியாக சேர விரும்புகிறவர்களும் சேரலாம் என்கிற விபரம் இதனல் அறிவிக்கப்படுகிறது.

நோட்டீஸ்.

இதனல் அறிவிப்பது என்னவென்ருல், தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா நாரசிங்கம்பேட்டை போஸ்டைச் சேர்ந்த மஞ்சமல்லிவட்டம் மஞ்சமல்லி கிராமத்திலிருக்கும் வெங்கிடாசல பிள்ளை மகன் சாமினதபிள்ளை என்பவர் மறைந்த உயிலென்று பொருள்படும்படியாக ஒரு லகோடாவில் தஞ்சாவூர்ம-ள-ள-ஸ்ரீ டிஸ்டிரிக்ட்டுரிஜிஸ்டிரார் அவர்களுக்குக் கொடுப்பது என்று மேல்விலாஸமெழுதி நாரசிங்கம்பேட்டை போஸ்டு முத்திரையுடன் நாளது 1907ஸு மேமீ 28உ யில் தபால் மூலமாய் நம்முடைய ஆபீசுக்கு வந்துசேர்ந்தது. ஆனல் தபால்மூலமாய் கவரில் அடக்கம்செய்து உயில்களை ரிஜிஸ்டிராபீசர்களுக்கு அனுப்பினல் அப்பேர்ப்பட்ட கவர்களை ரிஜிஸ்டிராராபீசுகளில் வாங்கக்கூடாதென்று டிபார்ட்டுமெண்டு உத்திரவு இருப்பதால் ஷை சாமினத பிள்ளையால் அனுப்பப்பட்ட கவரை திரும்பவும் ஷை சாமினத பிள்ளைக்கே தபால்மூலமாய் அனுப்பியதில் அவர் இறந்துபோய் விட்டதாக டெட் லெட்டர் ஆபீசிலிருந்து நாளது ஸு ஜூன்மீ 22உ யில் நம்முடைய ஆபீசுக்கு மறுபடியும் வந்துசேர்ந்திருக்கிறது. ஆகையால் மேல்கண்ட சாமிநாதபிள்ளைக்கு வார்சுகள் யாராவது

இருக்கும்பக்ஷத்தில் அவாள் தகுந்த நியாயக்கோர்ட்டில் வார்சு சர்டிபிகேட்டு பெற்றுக்கொண்டு நம்முடைய ஆபீசில் ஷை சர்டிபிகேட்டைக் கொண்டுவந்து தாக்கல்செய்யும்பட்சத்தில் மேற்சொல்லிய லகோடாவில் அடக்கம் செய்திருப்பதாய்ச் சொல்லுகிற உயிலை லகோடாவுடன் அவர்களிடம் கொடுக்கப் படுமென்கிற விவரத்தை தெரிவிக்கலாயிற்று.

விளம்பரம்.

நாகப்பட்டணம் தாலூகா சேமங்கலம் வட்டம் சித்தாநல்லூரிலிருந்து இறந்துபோனதாய்த் தெரியவருகிறகணபதிஅய்யர் குமாரன் ஸ்ரீநிவாசய்யரால் 1907௵ ஜூலை௴ 8உ எழுதிவைக்கப்பட்டதாய்ப் பொருள்படுவதும், இந்த ஆபீசில் 1907௵ ஜூலை௴ 29உயில் ஷை ஸ்ரீநிவாசய்யர் பாரியை அன்னபூரணியம்மாளால் தாக்கல்செய்யப்பட்டிருப்பதுமான ஒரு உயிலின் உண்மையைப்பற்றி 1907௵ செப்டம்பர்௴ 10உ செவ்வாய்க்கிழமை காலை 11-மணிக்கு இந்த ஆபீசில் விசாரணை நடத்தப்படுமாகையால் ஆட்சேபனையுள்ளவர்கள் தங்கள் சாக்ஷிகளுடன் அந்தத்தேதிக்குள் ஆஜராகித் தங்கள் ஆட்க்ஷேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

ஒட்டுத்திரவு.

தகவல்:—போர்டார் அவர்களுடைய 1907-ம்௵ஜனவரி௴ 2உ யுள்ள லாண்டு ரெவினியூ 1-ம் நெ. புரொஸிடிங்ஸ்.

எல்லா ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கும் தெரிவிக்கிறதாவது: ரிஸர்வு பாரஸ்டைச்சுற்றி நட்டிருக்கும் கற்கள் அல்லது முட்டுகள் எல்லை லயனுக்குவெளிப்புறம் நடாமல் வேறுவிதமாக நடப்பட்டிருந்தால் ஷை லயன் வெளிப்புறத்தின் ஓரத்தை போட்டல்லது எல்லைகற்கள் அல்லது முட்டுகள் லயனை ரிஸர்வுக்கு எல்லையாக பாவிக்ககூடாது. ஷை லயன் வெளிப்புறம் ஓரத்துக்கும் கற்கள் அல்லது முட்டுகள் லயனுக்கும் மத்தியிலுள்ள நிலமானது ஆக்கிறமிக்கப்பட்டால் அதை ஆக்ஷேபகரமானதாக பாவித்து 1905-ம்௵த்திய III-வது ஆக்ட்டுபடி நடவடிக்கை நடத்தவேண்டும்; தவிர லயனிலுள்ள பிசகைதிருத்த முயற்சி எடுத்துக்கொள்ளும் பொருட்டு டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசரவர்களுக்கு ஏதாவது ஆக்கிரமிப்பு இருந்தால் அதன்விவரத்தைப்பற்றி தெரிவிக்கவும்வேண்டியது.

டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரசிடெண்ட் அவர்களால்

அம்மை குத்தாதிருக்கும் குழந்தைகளின் பெயரைவிட்டும் ஜாபிதாக்களை கிராமத்தலைவர்கள் அதிர்ப்திகரமான மாதிரியாய் எழுதிவருவதைப்பற்றியும், அதினால் அம்மைகுத்தாத குழந்தைகளை தெரிந்துக்கொள்வதில் அம்மைகுத்தி சிப்பந்திகள் அடையும் கஷ்டங்களைப்பற்றியும் அடிக்கடி அம்மைகுத்தி சிப்பந்திகளால் புகாராசெய்யப்பட்டுவருகிறது. ஆகையால் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களின் அறிவிப்புக்காகவும், அனுஷ்டானத்திற்காகவும் அடியில்கண்ட நிபந்தனை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

(a) 1906-ம்௵ ஜூன்௴ 21உ யுள்ள 230-ம் நெ. செட்டில்மெண்டு போர்ட்டு புரோசிடிங்சுடன் அறிவிக்கப்படலான 1906-ம்௵ மே௴ 22உயுள்ள 461-ம் நெ. ரிவினியூ கெவர்ன்மெண்டார்டருடன் சேர்க்கப்பட்டவும், 1906-ம்௵ ஆகஸ்ட்௴த்திய ஸ்டாண்டிங்கு ஆர்டர் பத்திரிகையிலும், கிராமநவுக்கர்கள் பத்திரிகையிலும் பிரசுரஞ்செய்யப்பட்டுமிருப்பதுமான நமூனாவில் அம்மை குத்தாத குழந்தைகளின் பெயரை காட்டும் ஜாபிதாவை எழுதிவரவேண்டியது. இந்த நமூனாக்கள் இதர அச்சு நமூனாக்களைப்போலவே கலெக்ட்டரவர்களால் கொடுதுவரப்படும்.

(b) பேரை காட்டும் ஜாபிதாவை முதலில் எழுத ஆரம்பிக்கும்போது கிராமத்திலுள்ள அம்மை குத்தப்படாதவும் அம்மை போடப்படாதவுமான 10 வயதுக்குட்பட்ட எல்லாக்குழந்தைகளையும் பதியவேண்டியது. இப்படி பதிந்தபிற்பாடு இதில் கிராமத்தில் பிறக்கும் குழைந்தைகளை ஜனன ரிஜிஸ்தரில் ஜனங்களை பதிவு செய்யும்போதே எழுதிவரவேண்டியது.

(c) பிரதிமாதம் முதலில் கிராமத்தில் ஜனனமாகாத 6மீத்திற்கு மேற்பட்டும் 10-வயதுக்குட்பூட்டு முள்ள அம்மை குத்தாத குழந்தைகளைபெயரைகாட்டும் ஜாபிதாவில் எழுதவேண்டியது, ஆனால் அப்படிப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது சம்ரெக்ஷகர்த்தாக்கள் புதுசாய் கிராமத்திற்குவந்தி நிலையாயிருக்கப்பட்டவர்களா யிருக்கவேண்டியது. நிலையாயிருத்தலென்பது ஒரு மாதத்துக்கும் அதற்குமேற்பட்டும் கிராமத்தைவிட்டு திரும்பிப்போகிறதென்கிற தீர்க்க உத்தேசமில்லாததென்று பாவிக்கவேண்டியது.

(d) முதல் 8-வது வரையிலுள்ள கலங்களை ரெஜிஸ்ட்ரார் அதாவது கிராமத்தலைவனாலும் 9 முதல் 12-வரையிலுமுள்ள கலங்களை அம்மைகுத்தியினாலும் பதியப்படவேண்டியது.

(e) ஒரு குழந்தையானது இறந்துபோனபோதும் அல்லது கிராமத்தைவிட்டு ஸ்திரமாய் போய்விட்டபோதும் அது சங்கதியை 13-வது கூராகலத்தில் கிராமத்தலைவனால் குறிக்கப்படவேண்டியது.

2. பேரைகாட்டும் ஜாபிதா எவ்விதமாய் எழுதிவரவேண்டியதென்பதைப்பற்றி அம்மைகுத்தி இன்ஸ்பெக்டரும், அம்மைகுத்தியும், கிராம தலைவனுக்கு போதிக்கவேண்டியது. அப்படி போதிக்கப்பட்டபிறகும் ஷை ஜாபிதா சரிவர எழுதாமல்போகும் கிராமத்தலைவனைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யவேண்டியது

AN AMUSING] STORY.

ஒரு இன்பமான கதை.

ஸ்திரீ மாச்சரியம்.

பெர்ஷியா தேசத்தின் சக்கரவர்த்திகளில் அதிக திரவியஸ்தனும், மிகுந்த வல்லபம் பொருந்தினவனும், ஆசியாகண்ட முழுமையும் தன் ஆஞ்ஞைக்குள்ளடக்கி அரசாட்சி செய்துவந்தவனுமாகிய ஆபீக்கின் என்னும் சக்கரவர்த்தி யொருவனிருந்தான். அவனுடைய பராக்கிரமமும், அதிகாரமும் சமமாயிருந்ததால், உலகத்தின் மற்ற இராஜ்ஜியங்களையும் தன்னுடையதாக்கிக் கொள்ள வேணுமென்றும் பேராசை தனக்கிருக்குமாயின் அவைகளெல்லாவற்றையுஞ் செயித்துத் தன்வசமாக்கிக்கொள்ளக் கூடியவன்தான். ஆனால் தனக்குரிய விஸ்தீரணமும், செழிப்பும் பொருந்திய இராச்சியத்தை யாளுவதில் மனரம்மியமுடையவனாயிருந்து, அயலாருடையதைக் கைப்பற்றக் கனவிலும் நினையாமல், தன்னரசாட்சிக்குள் மனோபாக்கியத்துடன் வாழுங்குடிகளின் க்ஷேமத்தையே யன்றி வேறெதையுங் கோராதவனாயிருந்ததால், பிரஜைகள் அவனுளுகையின் ஒவ்வொரு நாளையும் வாழ்த்தினார்கள். இதர நாட்டாரும் இவ்விதுரனை அண்டி, பதவியடையப்பதறினார்களென்றால், அச்சக்கரவர்த்தியின் அரசாட்சி, மகா மாட்சிமையுடைய தென்பதற்கு வேறே சாட்சியும்வேண்டுமோ?

இப்பெரிய சக்கரவர்த்திக்குக் காண்போரெல்லாங் களிப்புறும் உலகத்தின் ஒளியென்று அர்த்தங்

கொள்ளும் நூர்ஜியானென்ற ஒரு குமாரனிருந்தான். இவ்விளவரசன் நல்ல வடிவம், பூர்ணவழகும், விசேஷ வரங்களுடையவனானதால், உலகத்தார் அவனை அதிகமாய் மதித்தார்கள். சகல பாஷைகளிலும் யாவனையும் வியப்பிக்கச் செய்யவல்ல சாமர்த்தியன். வில்வித்தையில் அவனிலும் விற்பனர் வேறொருமிலர். காஸ்மீரக் காரிகைகளுக்கோர் திலகம்போன்ற கட்டழகிற் சிறந்த தன் தாயாகிய சக்கரவர்த்தினியின் பிரதிபிம்பம்போலிருந்தான். ஆபீக்கின் தன் பத்தினியை அதிகமாய் நேசித்திருந்தானென்பதை, அவள் தன் விதியின்படி நெடுங்காலம் வியாதியாயிருந்து தேகவியோகமானபொழுது அளக்கக்கூடாத ஆற்றற்கரியதுக்கத்தால் காட்டினானென்றாலும், ஜாலஞ்செய்யுங் காலத்தின் கோலத்தினால், சக்கரவர்த்தியின் உக்கிரமான துக்கமும், நாளுக்கு நாள் நகர்ந்து, புதுப்பெண்சாதியின் மயக்கத்தில், மரித்துப்போன தன் முதல் மனைவியின் ஞாபகமுந் தகர்ந்து விட்டது. அவன் தன்னயலரசன் மகள் கான்ஸாடா வென்னுங் காரிகையைக்கலியாணஞ் செய்துகொண்டான். அப்பெண்மணிக்கோ அழகும் விவேகமும் அதிகமிருந்தும், இலச்சையுண்டாக்கும் தன்னிச்சைக்குக் கரை கட்டுந் திறமாத்திரமிருந்ததில்லை. அவள் தன் கணவன் மகனைக் கண்டு காதலித்து, இச்சையைத் தன்னுள்ளடக்க வியலாதவளாய், அதற்குத் தன்னை ஆளாக்கி, சமயம் வாய்த்தவுடன் நூர்ஜியானை எவ்விதத்திலும் தன்னிஷ்டத்திற்கு இணங்கச் செய்யவேணுமென்று தன்னுள் தீர்மானஞ் செய்திருந்தாள்.

சக்கிரிமைந்தன் அநேக சாஸ்திரங்களைப் பயின்று தேர்ச்சியுற்றபின், ஆசியாக்கண்டத்தில் ஜோதிடத்தில் அதிபாண்டித்திய மடைந்தவனாயிருந்த ஆபூமாஷாரென்னும் ஆசானிடம் ஜோதிடங் கற்றுவந்தான் அக்கல்விமானோர்நாள் தன் மாணாக்கனின் ஜாதகத்தைக் கணித்துப் பார்க்கையில், தன் மாணவனுக்கு ஒரு பயங்கரமான தீங்கு சீக்கிரத்தில் நேரிடவிருப்பதைத் தெரிந்து அவனைநோக்கி “அரசிளங்குமாரா, உனக்காகுங் காரியங்களை, உன் ஜென்ம நட்சத்திரத்தின் தன்மையைக்கொண்டு சீர்தூக்கிப்பார்த்ததில், அநுகூலத்திற் கிடமாயிராமல் உனக்கோர் ஆபத்தை நேமித்திருக்கிறது” எனவும், அதைக்கேட்ட நூஜிர்யான், அகம்பதறி, முகம்வெளுத்து நிற்பதைக் கண்ட ஆசான், மீண்டு மவனை நோக்கி “நேசத்திற்குரிய இராசனின் மைந்தா? எனக்குன்மேலுள்ள அன்பும், என்னனுபவ அறிவும் இப்போதுன்னை எதிர்ந்து நிற்கும் ஆபத்திற்கு இளக்கரித்துப்போகுமென்று எவ்வளவும் எண்ணவேண்டாம். அபாயமென்னபோ அவசியம் நேரிடவேண்டிய தென்பது நட்சத்திரத்தின் பலனாயிருந்தாலும், அது நாம் அனுசரிக்கும் ஏதுக்களால் விலக்கப்படக்கூடாததல்ல. சாஸ்திரத்தில் எனக்கோர்மார்க்கந் தோன்றுகிறது. ஆனால் நீ மாத்திரம் நாற்பது நாட்களுக்கு உன் நாவைக் காப்பதுவேண்டும். யாருடனேடு என்ன சம்பாஷித்த போதிலும், உனக்கு என்ன துன்பம் நேர்ந்தபோதிலும், உன் ஜீவன் தப்பவேண்டுமானால், நீ ஊமையாயிருத்தல்வேண்டு” மென அரசகுமாரன் அதற்குச் சம்மதித்து உறுதிகூற, போதகன் ஒரு குளிகமெழுதி, காதலன் கழுத்தில் கட்டிவிட்டு, இனித் தரித்திருந்தால், சனி தன்னையும் பிடித்துக்கொள்ளுமென்றும, அதிபனுக்குத் தானறிவிக்கத் தகாத காரியங்களைத் தெரிவிக்க நேரிடுமாகில், ஆபத்துகள் அநேகஞ் சம்பவிக்குமென்றும் அறிந்தவனாயிருந்ததால், இச்சங்கடங்களுக்குத் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு யாருக்குந் தெரியாதிருந்தவோர் சுரங்கத்தில் போயொளித்துக்கொண்டான்.

ஆபீக்கின் சக்கரவர்த்தி தன்னருமந்த புதல்வனைப் பாராதிருக்க மனந் தாளாதவனாகையால், அவனைத் தன் சமுகத்திற்கு வரவழைத்து அநேக விதமாய் வார்த்தையாடியும், மைந்தன் வாய்திறந்து மறுமொழி கூறாதிருந்ததைக் கண்டு, ஆச்சரியங்கொண்டு, அவனை நோக்கி “மைந்தா, நீ ஏன் மவுனமாயிருக்கிறாய்? நீ பேச்சிழந்து போகும்படி வாய்த்ததற்கு ஏதாவது பிரமாதங்களுண்டோ? உன் மனம் நையும்படி உனக்குச் செய்யப்பட்டவை யின்னதென்று எனக்குச் செப்பாயோ? உன்காந்தியுள்ள வதனம் சோர்ந்திருப்பதற்கு உனக்கு நேர்ந்த காரியங்களை எனக்கு நிகழ்த்தாயோ? மகனே, நீ மவுனஞ்சாதித்து நிற்பது, என்னிருதயத்தைச் சவளங்கொண்டு குத்துவதுபோலிருக்கிறதே, என் சற்குணம்பொருந்திய விற்பனனே” என்று பற்பலவிதமாய்ப் பரிதபித்துப் பேசியும், அரசகுமாரன் குருமொழி மீறி, மறுமொழி கூற மனமின்றி, தனக்குண்டாயிருக்கும் விசனத்தின் பொருக்கத்தைத்தன் நயனத்தில் நாட்டி நிற்பதை நோக்குற்றவேந்தன், அருகில் நின்ற ஆஸ்தான உத்தியோகஸ்தனைப்பார்த்து “என் நேசத்திற்குரிய மைந்தன் ஏதோ யோசத்திற்கிடமாகிய வோர் அந்தரங்க விசனத்தில் அமிழ்ந்திக் கிடக்கிறான், அவனுடைய சிற்றன்னை விடுதிக்கு அவனைச்சீக்கிரம் அழைத்துப்போயின், அவனைப்பற்றியிருக்கும் பிரிவு, முற்றிலும் நீங்குமென்றெண்ணுகிறேன்” னென்றுரைக்கவும், அரசன் கட்டளையைச் சிரமேற்கொண்ட அவ்வுத்தியோகஸ்தன், காதலனைக் கூட்டிப்போய்க் கான்ஸாடாவருகில் விடுத்து, அவளை நோக்கி “அம்மணி, இளவரசர் ஏது காரணத்தினாலோ உரைக்குந்திறனற்று ஊமையாகிவிட்டார். மரணத்திற் கேதுவான விதனமுங் கொண்டிருக்கிறார், முகாந்தரமொன்றுந் தெரியவில்லை. உங்கள் சமுகத்திலாவது தான் உட்கொண்டிருக்கும் உறுவலை உதறிப்போடுவாரென்னும் நம்பிக்கையோடு அரசன் தங்களிடம் அனுப்பிவைத்தா” ரென்று அறைந்தான். இப்பேர்க்கொத்த சமயம் எப்போது வாய்க்குமென்று எதிர்பார்த்திருந்த அரசிக்கு, கும்பிடப்போன தெய்வங் குறுக்கிட்டுத் துன்பந்தவிர்க்கத் துணைவந்ததுபோ லிருந்ததால், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளென்னுங் கனிந்தார் வாக்கை நினைந்து, “நான் இக்காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும். நான் அவன் மேற்கொண்டிருக்கும் ஆசையை அவனிட மறிவிப்பதினால், நூர்ஜியான் உண்மையாகவே பேச்சிழந்திருப்பானாகில், நான் ஏச்சுக்குள்ளாக இடமேயில்லை. அவ்வாறின்றி அவன் வாய் பேசாதிருப்பது மாய்மாலத்தினாலிருந்து, நான் அவன்மீது கொண்டிருக்குங்

காதலை மற்றவர்களுக்கு அறிக்கைசெய்யும் அவிவேகியாயிருந்தால், நான் அவனோரைத்நகைகள் அவனைப் பேசும்படி கோபமூட்டிய மோசவார்த்தைகளென்று மொழிந்து, அதினால் எனக்கு நேரக்கூடிய நிந்தையினின்று நீங்கிக்கொள்ளக்கூடியது. இதுபோன்ற சமயம் இனியொருக்கால் வாய்க்குமென்பது என்ன நிச்சயம்" என்று, பலவிதமாய்த் தன்னுள்ளத்தி லெண்ணி "வருவது என்னமோ வழியில் நில்லாது, நடக்கிறது நடக்கட்டும், நானுமென்னாலானதைப் பார்க்கிறேன்" னென்று தீர்மானித்துக்கொண்டு, அவ்விடமிருந்த தன் தோழியர்களை அப்புறப்படுத்தி, பட்டியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ஆசை பெருக ஆலிங்கனஞ்செய்து, அவனைநோக்கி "சந்திரவதன சுந்தரா, நீ பீடைகொண்டு வாடுவதினா லடையும் ஈடு என்னவோ? பெற்ற மகனிலும் மெத்த அன்புபாராட்டி, சித்தங் குளிரச்செய்யுமுன் சிற்றன்னைக்கு, உனக்குற்ற துயரத்தை யொளியாமல் மொழியாயோ?" என்று உசாவினாள். சிறியதாயார் புரிந்த உபசாரத்தில் செறிந்து நின்ற விருப்பத்தை அறியாதவனாகிய அரசகுமாரன். பதில் பகர விதியிடங்கொடாத விசனத்தைக்கண் பார்வையாலும், கைச்சாடையாலுங் காட்டவும், அக்குறிப்புக்களால், தன்னை எரிக்குங் காமத்தீயானது மன்னன் மகனையும் மாய்க்கிறதென்றும், தான் அவன்மேல் காதல்கொண்டிருக்கும் வண்ணம், அவனுந் தன்மேல் அதிமோகங்கொண்டு, தகப்பனுக்கஞ்சிக் கமுக்கமாயிருக்கிறானென்றுந் தப்பெண்ணங்கொண்டு, ஆனந்தபரவசமாகி, மானத்தையும், ஞானத்தையும், ஈனத்துவமென்றிழந்தவளாய், இளவரசனைநோக்கி, "இறையே, நான் வெகுநாளாய் இச்சைகொண்டிருக்குந் துரையே, நம்மிருவரையு மிப்போது வருத்துகின்ற உன்மவுனஞ் சாதித்தலை உடனே துரத்திவிடு. சக்கரவர்த்திக்கு உரியவைகளெல்லாம் என்வசம் சிக்கியிருப்பது நீ அறியாத ஆந்தரிகமல்ல. நீ எனக்கிசைந்து, நான் சாற்றுவதற்குச் சம்மதித்தால், உன்விருப்பங்கள் வெகு எளிதிற் கைக்கூடும். நீயோ பாலியன், நானும் விடைப்பெண்ணா யிருப்பதால், என் ஜீவியத்தைக் கவலைக்குட்படுத்தி விசனிக்கச்செய்யும் முதிர்ந்த வயதையுடைய உன் தந்தையைவிட, நீயே என்வாணாளைப்பேணச்செய்யக்கூடிய பிரியன். உன் முத்தான வாய்திறந்து, "நான் உன்னை எனக்குரிய மனைவியாக்கிக்கொள்ளுவே" னென்று ஒரு உத்தாரஞ் சொல்லுவையேல், உன் தந்தையை நிர்ச்சீவியாக்கி உன்னை வெகு சீக்கிரத்தில் சிம்மாசனாதிபதி யாக்குகிறேன். இவ்வாக்கில் அணுவளவும் பிசகேனென்று, அண்டசராசர மனைத்தும் உண்டுபண்ணி, தொண்டர்களுக் கருள்புரியுந் துய்யோனைக்கொண்டு சத்தியஞ் செய்கிறேன். உனக்கு முடிசூட்டுமென்னைக் கடிமணம் புரிவேனென்று உன்னைப் பிறப்பித்த பூரணன்மேல் நீயும் பிரமாணிக்கஞ் செய்" என்று பிதற்றினாள்.

இத்தனை வார்த்தைகளுக்கும் உத்தரவளிக்கச் சத்துவமின்றி, சித்தப்பிரமைகொண்டு நின்ற உத்தமனாகிய நூர்ஜியானை நோக்கி "அரசகுமாரா, நாணங்குறைவது உனக்கு ஆச்சரியத்தை யுண்டாக்குகிறதோ? அல்லது நான் சொல்லியபடி செய்ய வல்லவளல்லளென்று வாட்டங்கொள்ளுகிறாயோ? அப்படியொன்றுந் தப்பெண்ணங் கொள்ளவேண்டாம். காவலனின் கஜானாவில் பாஷாணத்திற்குப் பஞ்சமில்லையே அவைகளிற் சில ஒருமாதத்திலும், சில இரண்டுமாதத்திலும், மற்றவை சாவகாசத்திலும் உன்பனின் திண்மையை நாளாவட்டத்திலுடைத்து அவனை மீளாக்கதிக்கு ஆளாக்கக்கூடிய வலிமையுடையது. இவைகளில் தாமதமாய்க் கிரியை செய்யும் நஞ்சைத் தலைவனுக்குப் பிரயோகப்படுத்தினால், வேந்தன் வியாதிப்பட்டு விளிவுங்குள்ளாகிவிடுவார். அவர் நஞ்சிடப்பட்டுத் துஞ்சினாரென்று, நாட்டார் சந்தேகிக்க நிபாயமேயிராது. பிறகு இராச்சியம் அங்கீகரிக்க, இராணுவமும் உனக்கடங்க, சராசரமனைத்திற்கும் நீ சக்கரவர்த்தியாகலா" மென்று அரசி கூறினாள்.

மன்னவன் மைந்தன் மறுமொழிகூற மனங்கொண்டாலும், பாதகி பகர்ந்த பயங்கர வார்த்தைகள், அவனை ஆழ்ந்தயோசனையில் அமிழ்த்திவிடவும், காமங்கொண்டு கருத்தழிந்திருக்குங் காதகி, தான் ஓதியதெல்லாம் இளவரசனால் ஒத்துக்கொள்ளப் பட்டதென்று, தன்னைத் தேறுதல்செய்து, ஆடவனைநோக்கி, "அண்ணலே, பார்ப்போர் தப்பெனப் பகராமல், அப்பன் மனைவியை எப்படிக் கைப்பிடிப்பதென்று எண்ணமிடுகிறாற்போலிருக்கிறது. உபாயமறிந்தோருக்கும் அபாயமணுகுமோ? உன் தகப்பனிறந்தபிறகு நானுன்னோடிருத்தல் நன்றல்லவென்று, என் தேசத்திற்கு என்னை அனுப்பிவிடுவதுபோல் காட்டி, நான் சிறிதுதூரஞ்சென்றதன்பின் உன் தளகர்த்தர்களி லொருவனை உனக்குளவாளியாக்கி, அவனுக்குவேண்டிய உபபலமுங்கொடுத்து, கள்ளன்போல் வந்து என்னைக் களவாடும்படிக் கட்டளையிட்டு, தம்மனைக்குச் சென்ற அன்னை, வம்பர் கைப்பட்டு இம்மையைத் துறந்தாளென்று எங்குமறிவித்து, சிலநாட்சென்று அடிமைப்பெண்களை விலைக்கு வாங்குவதுபோல், அத்தளகர்த்தனிடமிருந்து என்னை வாங்கி, யாவருமறிய விவாகமுடித்துக் கொள்வதுதான் ஏற்ற உபாயம், இதைச்சாற்றவும்வேண்டுமோ? என்னை ஆட்கொண்ட அரசே" என்றாள். (இன்னும் வரும்.)

GENERAL NEWS.
பலதேச வர்த்தமானம்.

அஜிட்சிங் சகோதரர்:—ஸ்ரீலாலா லஜபத்ராயுடன் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ. அஜித்சிங்கின் சகோதரரையும் நேபாளத்தில் பிடித்து லாகூருக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

மிஸ்டர் R. குருசாமி ஐயர் B A, B L, F. M. U. சட்ட நிரூபணச்சங்கத்து அங்கத்தினர் ஸ்தானம் இவருக்கு அடுத்த டிசம்பர்மாதக் கடைசியோடு முடிவாகுவதாய் மறுபடியும் தன்னையே தெரிந்தெடுக்கும்படியாக ஓர் விளம்பரம் விடுத்திருக்கிறார்.

இந்தியாவின் உதவி பத்திராசிரியர்:—இந்தியாப் பத்திரிகையின் உதவி பத்திராசிரியராகிய ஸ்ரீசுபி அம்பாபிரசாத் எல்டவர் 21 தேதி யன்று லாகூர் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை செய்யப்படுவார்.

"வந்தேமாதரம்" கேஸ்:—இக்கேஸ் வெகு மும்முரமாய்நடந்து வருகிறது, ஸ்ரீ அரவிந்தகோஸ் தரப்பு ஆஜரான பாரிஸ்டர் ஸ்ரீ சக்கிரவர்த்தி மிகுந்த சாமர்த்தியத்துடன் வாதித்து வருகிறார். இந்தக்கேஸின் தீர்ப்பை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

***

"சந்தியா" கேஸ்:— கல்கத்தா பிரதம மாஜிஸ்ட்ரேட்டிடம் நடைபெறுகிந்தக் கேஸ் வேறு மாஜிஸ்ட்ரேட்டிடம் விசாரணைக்குப்போகும்படி ஹைகோர்ட்டிற்கு மனு செய்துக்கொள்ள, அம்மனு தள்ளப்பட்டது.

***

ஒரு சௌகிதார் கொல்லப்பட்டான்:—பெஷாவர் கண்டோன்மெண்டில் 4 ஆசாமிகள் சேர்ந்து தங்களுக்கும் ஜேம்ஸ் கம்பனியின் சௌகிதாருக்கு மிகுந்த மனஸ்தாபத்தால் இம்மாதம் 4-தேதி இரவு, அந்த சௌகிதார் பாராவின் பொருட்டு கம்பெனியின் வெளியில் படுத்திருக்கும் பொழுது அவனைக் கொலைபுரிந்துவிட்டார். கொலையாளிகள் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்கள்.

***

மனைவியுடன் இங்கிலாந்து சென்றார்:—டில்லி மாநகரைச்சார்ந்த சந்துலால் என்பவர் கோடைகால விடுமுறையில் ஆக்ஸ்பர்டிலிருந்து, இங்குவந்து தங்கியிருந்து, தனது இளம்மனைவியை யழைத்துக்கொண்டு இம்மாதம் 14 தேதி இங்கிலாந்துசென்றார். டில்லிநகர் ஸ்திரீ இங்கிலாந்துசெல்வது இது இரண்டாவது முறை. டில்லியிலிருந்து முதல் முதல் இங்கிலாந்து தேசத்திற்குச் சென்றது, ஸ்ரீஹரிதயாளரின் மனைவியே.

***

இச்சாபூர் துப்பாக்கி தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்:—இச்சாபூர் துப்பாக்கி தொழிற்சாலையில் சுமார் 800 இந்தியர்கள் வேலை செய்கின்றார்கள் சமீபத்தில் அச்சாலையின் மேலதிகாரிகள் வேலைக்காரரின் மீது சில நிபந்தனைகளை புதிதாய் ஏற்படுத்தவே, அவர்களுக்கு வெறுப்புண்டாகி சுமார் 300 வேலையாட்கள் வரையில் ஒரே கட்டுப்பாடாய் வேலையினின்றும் நின்றுவிட்டார்கள். அச்சாலையிலுள்ள வெள்ளையர்கள், அவர்களம்மாதிரி செய்ததற்குக்காரணம் வங்காளத்திலுள்ள புதிய உணர்ச்சிதான் என்கின்றார்கள். புதிய உணர்ச்சி எதெதற்குத்தான் காரணமாயிருக்கும்?

***

தூக்கவியாதி:—ஐரோப்பாவில் சகஜமாக விருக்கிறதென்றும் இது இந்தியாவிற்கும் வந்துவிட்டதென்றும் முன்பு இரண்டொருமுறை கூறியிருக்கிறோம். சென்ற மார்ச்சுமாதம் சென்னையைச்சார்ந்த ஓர் கிருஸ்தவ ஸ்திரீ சுரத்தின் சிகிச்சைக்காக கல்கத்தா மெடிகல் காலேஜ் ஹாஸ்பத்திரிக்குச் சென்றனள். அங்கு சிகைச்சையிலிருக்கும்பொழுது, சுரம்போய், தூக்கவியாதியின் குறிகள் காணப்பட்டன. அந்த குறிகண்ட சில நாளைக்கெல்லாம் அந்தஸ்திரீ பிரக்ஞையின்றி படுக்கையில் படுத்தவள் இன்னும் எழுந்திருக்கவில்லையாம். சிறுகுழாயை அவள் வாயில்வைத்து, அதன் மூலமாய் ஆகாரம் கொடுக்கிறார்கள். டாக்டர்கள் மின்சாரத்தின் வலுவைக்கொண்டு அவளை எழுப்ப எவ்வளவோ முயன்றும் இரண்டு மூன்று விநாடிவரையில்தான் பிரக்ஞை வருகிறதாம். நாளுக்கு நாள் அவளுடைய ஸ்திதி கேவலமாயிருக்கிறதென அறிகிறோம்.

***

பாரத்வான் சஞ்சிபானி எழுதுகிறது:—கல்கத்தாவிலுள்ள கவிராஜ ஷாமதாஸ் என்னும் ஆயுர்வேதபண்டிதரிடம் போகும் நோயாளிகள் பரதேசத் துணிகளைத் தரித்துப்போனால் அவர்தான் பரதேசத் துணிகளைத் தரிப்பவர்களுக்கு வயித்தியம் செய்யும் வழக்கமில்லையெனக் கூறி யனுப்பிவிடுகின்றனர். இதேமாதிரியாக, எல்லாவைத்தியர்களும் வக்கீல்களும், முக்தியர்களும் செய்வார்களாகில் சுதேசியம் எவ்வளவு சொற்பகாலத்தில் முன்னுக்கு வந்துவிடும் மேலும் மீடிங்குகளில் சுதேசியம் அன்னியச்சரக்கு விலக்க மிவைகளைப் பற்றிப் பேசினால், ராஜத்துரோகம் எனப் போலீசார் வந்து நுழைகிறார்கள். மேற்சொல்லிய மாதிரி செய்தால் போலீசார் நுழையமுடியாது; ஆகவே எல்லா வைத்தியர்களும் வக்கீல்களும் மற்றுமுள்ள வர்த்தகர்களு மிதைக் கவனிப்பார்களாக.

***

இதென்ன நியாயம்:—ஸ்ரீமான் பாலர் சத்தியமெடுத்துக்கொண்டு சாக்ஷியம் கூறேன் என்றதற்கு கோர்ட்டை அவமதித்த குற்றம்சாற்றி 6 மாத சுவல்ப காவல் தண்டனை விதித்தார்களல்லவா. ஆனால் இதே மாதிரியான குற்றத்திற்கு டைம்ஸ் பத்திரிகையின் பத்திராசிரியராகிய மிஸ்டர் பிரேசருக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தார்கள், அதாவது மிஸ்டர் பிரேசர்வந்த தந்தியைக்காண்பிக்கமாட்டேன் எனகூறி கோர்ட்டை அவமதித்தார். ஆனால் ஸ்ரீ பாலர் தன் மனசாட்சிக்கு விரோதமாய் அந்தக் கேசில் சம்பந்தப்படமாட்டேன் என்றார். இதில் எந்தக்குற்றம் பெரிது? வந்திருந்த தந்தியை காண்பிக்கேன் என்றதா அல்லது, தன் மனசாக்ஷிக்கு விரோதமென்று நினைத்ததை செய்யமாட்டேன் எனக்கூறியதா? அவர் வெள்ளையரானதால் 50 ரூபாய் அபராதத்துடன் சென்றது போலும்.

***

கிணற்றில் விழுந்த சாமானை எடுக்கப்போய் உயிர்துறந்தான்:—ஹுசெயின்ஜங் என்னுமூரில் ஓர் வீட்டின் சொந்தக்காரர் தன்வீட்டில் கிணற்றில் ஏதோ ஓர் சாமானை கைசோர்ந்து விட்டுவிட்டான் இதை யெடுப்பதற்காக மற்றொருவனைக் கூப்பிட்டு கிணற்றிலிறங்கச் செய்தார். அவன் பாதிகிணற்றிலிறங்குவதற்குள் அக்கிணற்றிலிருந்த கெட்ட காற்றை உட்கொண்டதால் இறங்கமுடியாது மயங்கிக்கொண்டிருந்து அப்படியே கிணற்றில் விழுந்து விட்டான் இவனது உதவிக்குச் சென்ற மற்றொருவனும் கிணற்றில் பாதிவழிச் சென்றதும் அவனது கதியே இவனுக்குமாகவே உதவிக்காகக் கூவினான். இந்தக் கூச்சலால் கும்பல் சேர அவர்கள் அந்த இரண்டுபேரையும் வெளியிலெடுத்துப் போட அதிலொருவன் மாத்திரம் உயிருடனிருந்தனன். மற்றொருவனிறந்து போய்விட்டான்.

சக்கிரவர்த்தி வெறுப்புடன் எழுந்துச் சென்றார்:—இங்கிலாந்தில் ஓர் நாடகக் கம்பெனியின் ஆட்டத்திற்கு எட்வர்ட் சக்கிரவர்த்தியும் இராஜவம்ஸத்தைச்சேர்ந்த சிலரும் சென்றிருந்தார்கள். நாடகத்தில் மிகவும் ஆபாஸ அபினயங்களும் பாட்டுகளும் நிறைந்திருந்ததால், சிலநேர மிருந்துவிட்டு உடனே வெறுப்புடன் புறப்பட்டு அந்த நாடக ஹாலைவிட்டு சென்றனராம். அவர் எழுந்ததும், உட்கார்ந்திருந்த பிரபுக்களெல்லாம் நாடகக் கம்பெனியாரின்மீது கோபங்கொண்டவர்களாய் தங்கள் அதிருப்தியைக் காண்பிக்க வேண்டும் எனக்கருதி அவர்களும் வெளியே போய்விட்டார்களாம் நம்மூரில் சில நாடககம்பெனிக்காரர்கள் பலவிதமான ஆபாச வார்த்தைகளை உபயோகித்து பாமர ஜனங்களைச் சந்தோஷிக்கச் செய்கின்றார்கள். அவர்களுக்கிதுவோர் எச்சரிக்கை.

***

மாற்றும்போது அகப்பட்டுக் கொண்டான்:—சென்ற ஜனவரி மாதக் கடைசியில். சென்னை பச்சையப்பன்காலேஜ் டிரஸ்டிகள், சிதம்பரத்திலுள்ள பச்சையப்பன் கலாசாலையின் உபாத்தியார்களின் மாதாந்தர சம்பளத்திற்காக 500 ரூபாய் நோட்டுகளை ஒரு கவரில் போட்டு இன்ஷ்யூர் செய்து அக்கலாசாலையின் ஹெட்மாஸ்டருக் கனுப்பிவைத்தார்கள். அந்த நோட்டு அடங்கிய கவரை தபாலாபீஸிலிருந்து வாங்கிக்கொண்டுவந்த அந்த கலாசாலையின் சேவகன்வழியில் அதை கைச்சோரவிட்டுவிட்டான். இதைப்பார்த்திருந்த அவ்வூரான் ஒருவன் அதை எடுத்துக்கொண்டு சென்னைக்கு வந்து அந்த நோட்டுகளை ரூபாயாக மாற்றும்போது சந்தேகத்தால் பிடிக்கப்பட்டான். பிறகு சிதம்பரம் சப் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இவன் விசாரணை செய்யப்பட்டு 6 மாதக்கடினகாவல் தண்டனையும் 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டான். இதன்பேரில் குற்றவாளி டிப்டி மாஜிஸ்ட்ரேட்டிற்கு மனுசெய்து கொள்ள அம்மனு இப்போது தள்ளப்பட்டது.

***

ஸ்ரீ மான் விபினசந்திரபாலரை சிறைப்படுத்தியதை "ஹிதபாதி" என்னும் பத்திரிகை அடியில் வருமாறு பொருள்பட எழுதுகிறது:—ஸ்ரீமான் விபினசந்திரபாலரை விசாரணை செய்து தண்டித்த மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் சிங்கிக்கு கவர்ன்மெண்டார் இன்னும் உயர்ப்பதவி கொடுப்பார்கள். அன்னிய சரக்கு விலக்கத்தைப் பற்றி போதித்துவந்த முக்கியஸ்தரை சிறைக்கூடத்திற்குப் அனுப்பிவிட்டதால் மிஸ்டர் சிங்கிக்கு உண்மையில் வெகுமானம் கிடைக்கும். இதனால் சுதேச முயற்சி தளர்வடையும் என நினைப்பவர்கள் தங்கள் எண்ணத்தில் தோல்வியடைவார்கள். ஸ்ரீ பாலரை இம்மாதிரி செய்ததால் ஜனங்களுக்கு கவர்ன்மெண்டாரிடமிருந்த அதிருப்தி ஆயிரமடங்கு விருத்தியாகுமேயன்றி குறையாது. 'அன்னியசரக்கு விலக்கம் ஜனங்களால் முன்னிலுமதிகமாக கையாளப்பட்டு வருகிறதென நான் ஜெயிலில் கேழ்விப்படுவேனாயின், அங்கும் நான் அளவிறந்த ஆனந்தம் கொள்வேன்' நமது பாரதாமாதாவின் அன்பான புத்திரராகிய ஸ்ரீ பாலர் ஜெயிலுக்குப் போகுமுன் கூறினதை நல்ல இருதயத்தையுடைய ஒவ்வொருவனும், அவமதிக்காது அவ்வாக்கியத்தின் பிரகாரம் நடந்து அவரைக் களிப்புறச் செய்யவேண்டும். ஸ்ரீமான் விபினசந்திரபாலரை சிறைபடுத்தியதால் வங்காளிக்கு ஓர் கௌரத்தை உண்டு பண்ணிவிட்டார்கள் ஸ்ரீ பாலர் கடைசிவாக்கை கியாபகத்தில்வைத்து அம்மாதிரியே நடந்து, நாட்டின் பிரகாசத்தை விர்த்தி செய்வார்களாக.

***

விலையுயர்ந்த மஞ்சி:—அமெரிக்காவிலுள்ள ஒரு கோடீஸ்வரர் தமக்கென்று 20,000ம் பவுன் (30,0000) ரூபாய் செலவழித்து ஒரு பிரேதப்பெட்டி ஆயத்தம் பண்ணி வைத்துக்கொண்டிருக்கிறார். உயிரற்றபிணத்துக்குப் பல அரசர்களாலும் கோடீஸ்பரராலும் செய்துவைக்கப்பட்டிருக்கிற பிரேதப்பெட்டிகளில் இதுவே அதிக விலைபெற்றதாய்ச் சொல்லவேண்டும். சிலகாலத்துக்கு முன்னே பாரிஸ்நகரத்தில் ஓர் தனாட்டி. தனது நாயகனைத் தேக்கமரத்தினால் ஓர் மஞ்சிசெய்து அதைப்பொற்றகட்டினால் பொதிந்து புதைத்தாளாம். இந்தப் பெட்டியின் கிரயம் 4000ம் பவுனும் பிரேதத்துக்காகச் செலவு செய்தவைகளில் ஆங்கிலேய சீமாட்டி பொருத்தி செய்தது வெகுவிநோதமுடையதாகும். அவள் மரணத்துவாயில் எழுதிய மரணசாதனத்தில் தனது நல்லறையில் எக்காலும் ஓர் மின்சார தீபமேற்றி வைக்கவேண்டுமென்றும் பிரேதப் பெட்டிக்குள் வருஷாந்தரம் 100 பவுன் செலவில் எக்காலும் மின்சார தீபமேற்றி வைக்கவேண்டுமென்றும் எழுதிவைத்தாளாம். சீனதேசத்தில் பிரபல மந்திரியாயிருந்து ஐரோப்பியரால் நன்குமதிக்கப்பட்டுக் காலஞ்சென்ற வியங்சங் மந்திரியார் 200000ம் ரூபாய் செலவில் தங்கத்தினால் செய்து கற்கலழுத்தப்பட்டிருந்த பெட்டியிலே அடக்கம் செய்யப்பட்டாராம்.

***

கொலையாளியே சேதியை அறிவித்தான்:—கல்கத்தாவில் ஜுக்லி என்பவனும்; அவன் பந்துவாகிய ரகுநாத என்பவனும் ஒரே வீட்டில் வசித்துவந்தார்கள். சிலவாரத்திற்குமுன் ரகுநாத் என்பவன் ஜுக்லி என்பவனின் பணத்தை அபகரித்துக்கொண்டுபோய் 15 நாளுக்குமுன் வீட்டிற்குத் திரும்பிவந்தனன். ஜுக்லி அவன்மீது சட்டப்படி பிரியாதுசெய்ய தகுந்த ஆதாரமில்லாததால், அவனுடன் எந்நேரமும் சண்டையிட்டுக்கொண்டிருந்து சென்ற சனிக்கிழமையன்று சாயங்காலம் 7-மணிக்கு ரகுநாத் படுக்கச்சென்றதும் ஜுக்லியும் அவனுடனிருந்த ஒரு ஸ்திரீயும், தரையில் படுத்துக்கொண்டார்கள். ரகுநாத் நல்ல நித்திரையில் இருக்குந் தருணம்பார்த்து எழுந்திருந்து அந்த ஸ்திரீயை எழுப்பி, மிளகாய் வாங்கி வரும்படி கடைக்கு அனுப்பிவிட்டு அங்கிருந்த ஒரு பெருத்த கட்டையால் படுத்துறங்கியிருந்த ரகுநாதன் தலைமீது அடிக்க, அவன் ஓலமிட, அந்தக் குரலைக்கேட்ட ஸ்திரீ, ஓடிவந்து, அண்டை வீட்டுக்காரர்களை உதவிக்கு வரும்படி கூவ, அவளையும் பிரக்ஞையன்றி கிழே விழும்படி அடித்து, மறுபடியும், ரகுநாதனை நய்யப்புடைத்து, கொலைபுரிந்து போலீசுக்குப்போய் தனது பந்துவாகிய ரகுநா

தனை யாரோ கொன்றுவிட்டதாக பிரியாது கொடுத்தான். இதைக்கேட்ட போலீசார் அவனை யழைத்துக்கொண்டு கொலை நடந்த வீட்டிற்குவர, பிரக்ஞையின்றி விழுந்து கிடந்த ஸ்திரீ, கொலையாளியாகிய ஜுக்லியைப்பார்த்து "அவன் தான் கொலைபுரிந்தவன் அவனை முன்பு பிடித்துவைத்துக் கொள்ளுங்கள்" எனக்கூற போலீசார்கள் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். போலீஸார் அறைக்குள் நுழைந்ததும், இரத்தம் தோய்ந்திருந்த படுக்கையின்மீது ஒருவன் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டார்கள், கொலையாளியாகிய ஜுக்லி சீக்கிரத்தில் விசாரணைக்குகொண்டு வரப்படுவான்.

(இன்னும் வரும்.)

IMPORTANT RULINGS.
முக்கியமான தீர்ப்புகள்.

கணக்கு புஸ்தகங்களைக் காண்பித்தால் மட்டிலும் கோர்ட்டார் பிரதிவாதியின்பேரில் டிக்கிரிகொடுக்கமாட்டார்கள் என்றும் அந்தக்கணக்கு புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி பிரதிவாதிக்கு பணம் கொடுபட்டிருக்கிறதென்று ஒரு சாக்ஷியைக் கொண்டாகிலும் அல்லது கடன் கொடுத்தவனே ருஜுப்படுத்த சாக்ஷி சொல்லவேண்டும். என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 5 மூர் இந்தியன் அப்பீல் 432.

வட்டிக்கு வட்டிபோட்டு கணக்கு தீர்ப்பது சட்டவிரோதமாகமாட்டாது ஆனால் அப்படிபோடப்பட்டது சாதாரண வட்டியாக யிருக்கவேண்டும் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் 34. கல். 150.

ஒரு கடையில் பத்துவரவு செய்துவந்தால் அந்தக் கடைக்காரன் வருஷத்திற்கு ஒருமுறைகூடுதலான வட்டியையும் அசலுடன் சேர்த்து அதற்கு வட்டிபோட்டு வாங்குகிறவழக்கமாயிருந்தால் வாதி தன்னுடையவூரில் மற்ற கடைக்காரர்களும் இதே மாதிரியாக வட்டி போட்டு வாங்குகிற வழக்கமென்று ருஜுப்படுத்தவேண்டுமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் 5. சென்னப்பட்டணம் ஹைகோர்ட் ரிப்போர்ட் 135.

கண்டிராக்ட் ஆக்ட் சம்பந்தப்பட்ட ஒரு கேசில் பொதுவான ஒரு வழக்கத்தை கோர்ட்டார் கவனிக்காமல் தீர்ப்புச்சொன்னால் அது ஒப்பந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு ஷரத்தை நிராகரித்து தீர்ப்புச் சொன்னதற்குசமமான அநியாயத்தீர்ப்பாகயிருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 9. பெங்காளம் லா ரிப்போர்ட் 1.

ஒரு பத்திரத்தில் வட்டி 6 மாதம் செலுத்தப்படாவிடில் 6 மாதமும் கூடுதலான வட்டி அசலுடன் சேர்க்கப்பட்டு இப்படி கூடுதலான தொகையின்பேரில் 100-க்கு வருஷத்திற்கு 12 மேனிக்கு வட்டிசெலுத்தவேண்டுமென்று சொல்லியிருந்தால் அது சட்ட விரோதமாகமாட்டாதென்றும் அப்படியே பிரதிவாதி செலுத்தவேண்டுமென்று அலகபாத் ஹைக்கோர்ட்டார் அடியிற்கண்ட மூன்று கேசுகளில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

2 All. 621. 2 All. 639. 6 All. 63.

ஒருவனை ஒருவன் மற்றொருவனுக்குச் சிபார்சு செய்தால், சிபார்சுசெய்யப்பட்டவனால் அவனை வைத்துக்கொண்டவனுக்கு நஷ்டம் நேரிட்டால் அந்த நஷ்டத்தை சிபார்சுசெய்தவன் ஈடுபடுத்தவேண்டும் என்பது இங்கிலாண்டு தேசத்தீர்ப்பு. A. என்கிற ஒரு நியூஸ் பேப்பர் சொந்தக்காரன் வர்த்தகர்களுக்கு, கணக்கர்களும் தரகர்களும் வேண்டியதாயிருந்தால் தமக்கு எழுதினால் தகுந்த பேர்வழிகளைச் சிபார்சு செய்கிறதாக தம்முடைய பத்திரிகையில் விளம்பரம் பிரசுரித்திருந்தார். B. என்கிற வர்த்தகன் தனக்கு ஒரு தரகனைச் சிபார்சு செய்யும்படியாக எழுதியிருந்தான். D. என்பவன் கோர்ட்டார் டிச்சார்ஜ் செய்யாத இன்சால்வென்ட். இவன் இந்நிலைமையிலிருக்கிறான் என்பதை A. என்பவர் அறிந்துகொள்ளாமல் B. என்பவருக்கு சிபார்சு செய்தார். B. என்பவரிடம் D. என்பவன் தரகனாயிருந்த போது B. என்பவருடைய பணத்தைக் கையாடி விட்டான். தமக்கு நேரிட்ட நஷ்டத்தைப் பெறுவதற்காக B. என்பவன் A. என்பவர் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். யோக்கியமுடைய தரகனைப்பார்த்து சிபார்சு செய்திருக்கவேண்டியது A. என்பவருடைய கடமை என்றும் இந்தக் கடமையை அவர் சரிவரச் செய்யாமல் இன்சால்மெண்டு பெறப்போகிற D. என்பவனைச்சிபார்சு செய்தபடியாலும் அதனால் B. என்பவருக்கு நஷ்டமுண்டானதாலும் அந்த நஷ்டத்தை ஈடுபடுத்த A. என்பவர் கட்டுப்பட்டவரென்றும் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்:—I. K. B. 483.

ஒருவன் ஒருவிடத்தில் பாடிக்கொண்டிருந்தான் போனகிறாப் காரர்கள் இந்த பாட்டை போனகிறாப்பில் பிடித்துக்கொண்டு பல விடங்களிலும் போனகிராப்பைப் பாடச்செய்துபணம் சம்பாதித்தார்கள். பாடகனுக்கு வருமானம் குறைந்து போனது, ஆகவே போனகிராப் காரர்கள் தன்னுடைய பாட்டை போனகிராப்பில் பிடித்து பாடும்படி செய்வது காப்பிரயிட் ஆக்டிற்கு விரோதமென்று சொல்லி வியாஜ்ஜியம்கொண்டு வந்தான். பாட்டை போனகிராபில் பிடிப்பது காப்பிரயிட் ஆக்ட்டிற்கு விரோதமாகமாட்டாதென்று இங்கிலாண்டு தேசத்து கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 51. S. J. 412 T. R. 430.

ஒரு பெந்தக பத்திரத்தில் இரண்டுபேர்களுக்குக் குறையாமல் சாக்ஷி போடவேண்டுமென்பது சட்டம். இப்படி இரண்டுபேர்கள் சாக்ஷிக் கையெழுத்து போடாவிட்டால் அந்த பெந்தகப்பத்திரம் சட்டப்படி சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்பதும் சட்டம். இந்தப்பத்திரம் சம்பந்தமாக வியாஜ்ஜியமுண்டான காலத்தில் அதில் கையெழுத்து போட்டிருந்த சாக்ஷி உயிருடனிருந்தும் சாக்ஷியம் சொல்லும்படியான நிலைமையிலிருந்தும் அவனை சாக்ஷியாகப் போட்டு அவனைக்கொண்டு அந்தப் பத்திரத்தின் பிரகாரம் பணம் கொடுத்ததை ருஜுப்படுத்தாமற் போனால் அந்த பந்தகப்பத்திரத்தைக் கோர்ட்டார் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று சென்னப்பட்டணம்ஹைக்கோர்ட்டார்தீர்மானித்திருக்கிறார்கள். வீரப்பா V. ருமசாமி 17. சென்னப்பட்டணம் லா ஜர்னல். 213.

பாகப் பிரிவினையாகாத சேர்ந்த இந்து குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன் பேரில் வாதிக்கு பண டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தது. ஷை குடும்பத்தின் சில ஸ்தாவர சொத்துக்கள் பெந்தகம் வைக்கப்பட்டிருந்தன. வாதி டிக்கிரியை நிறைவேற்றி ஷை குடும்ப சொத்தின் ஒரு பாகத்தை ஜப்தி செய்து விற்பனைக்குக் கொண்டுவந்து ஏலத்தில் எடுத்தான். ஷை விற்பனை செய்யப்பட்ட பாகம் இதற்கு மாறுதலாயிருந்தாலொழிய பெந்தகம் வைக்கப்படாத பாகமென்று யூகிக்கப்படவேண்டுமென்று W. N. 131 - ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற கஷியோஙரேயின் V. நூர்முகமது கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கடன் கொடுத்தவனை மோசடி செய்யும்படியாக ஒருவன் தன் சொத்துக்களை வேறொருவனுக்கு பேரிரவலாக எழுதிவைத்தான். இவன் பிறகு இந்தமோச சம்பந்தமாக வியாஜ்ஜியம் கொண்டுவந்து ஷை விவகாரம் மோசடியானதால் தனக்கு ஷை சொத்து கிடைக்க வேண்டுமென்று சொல்லக்கூடாது. பிரதிவாதி ஸ்தானத்திலிருந்துகொண்டும் சொல்லக்கூடாது. கூிடிங்கப்பா V. இராசா - 9 பம். லா. ரி. 542.

எப்போது ஒரு மைனர் மேஜராகிறனே அப்போதே அந்த மைனருக்கு கார்டியனாகயிருந்தவனும் கார்டியன் பதவியிலிருந்து நீங்கிப்போகின்றான். ஆகையால் மைனரின் பணத்தை எடுத்து அவருடைய தங்கையின் விவாகத்திற்குச் செலவுசெய்யும்படியாக கோர்ட்டார் கார்டியனுக்கு உத்திரவுசெய்யக்கூடாது என்று சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் சீதாராம் V. பலராமா 17. மதிராஸ் லா ஜர்னல் 199.

ஜேயினர்களைப் பரிபாலித்துவரும் இந்துலாப்படியும் அவர்கள் அனுஷ்டித்துவரும் வழக்கத்தின்படியும் ஒரு ஜேயின விதவை தன்னுடைய இறந்துபோன புருஷனுக்கு யாதொரு உத்திரவின்றியும் விவாகமான ஒரு புருஷனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். மனோகர்லால் V. பனர்சி. A. W. N. 1907, 121.

ஒருவன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள தன்னுடைய பெண்சாதிக்கு அடியிற்கண்டபடி அதிகாரம் கொடுத்திருந்தான் :—என்னுடைய இளைய சகோதரனுக்கு குழந்தைகளிருந்து அவர்களுள் அவன் இரண்டாவது குழந்தையை ஸ்வீகாரம் கொடுக்க சம்மதித்தால் அந்த இரண்டாவது குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம்.

இந்தக் குழந்தையைத் தவிர, மத்தியில் வேறொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் உனக்குத் தொந்திரவு உண்டாகும், உனக்கு தொந்திரவு கொடுக்க மனம்வராத பந்துக்களுடைய குடும்பத்தில் ஒரு பையன் அகப்படுவானேயாகில் அவனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமென்று எழுதப்பட்டிருந்தது. விதவை தனக்கு இஷ்டமுள்ள ஒரு குடும்பத்தில் ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள நிச்சயித்திருந்தாள். வேறொரு குடும்பத்தில் விதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வது தான் தன்னுடைய இரண்டாவது புத்திரனை ஸ்வீகாரம் கொடுப்பேனு கொடுக்கமாட்டேனு என்கிற தன்னுடைய சம்மதத்தைப் பொறுத்த தென்றும் ஆகையால் விதவை அந்தப்பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் இளைய சகோதரன் ஆக்ஷேபித்தான். அதிகாரப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் கடைசிவாக்கியங்கள் விதவைக்குக் கூறியிருக்கும் புத்திமதி என்றும் அவள் தனக்கு இஷ்டப்பட்ட குடும்பத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது இளைய சகோதரன் சம்மதத்தைப் பொறுத்ததல்லவென்றும் சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். தோரகின அம்மா V. நராசூவி- 17 மதிராஸ் லா ஜர்னல் 186.

ஒரு இந்து குடும்பச்சொத்து தகப்பனுக்கும் பிள்ளைக்கும் சொந்தமாக யிருக்கின்றது. தகப்பன் முகமதிய மதத்தில் சேர்ந்துக்கொண்டால், புத்திரன் ஷை குடும்பச்சொத்திற்கு ஏக சுதந்தரக்காரனாகிறான். என்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். C. W. N. 1907, 151.

A DRAMATIC SCENE IN THE COURT OF Mr. WOOD, THE ADDITIONAL SESSION'S JUDGE OF MADURA.

மதுரை அடிஷனல் சேஷன் ஜட்ஜி மிஸ்டர் வுட் கோர்ட்டில் ஒரு நாடகக்காக்ஷி.

(செப்டம்பர்மீ 9உ.)

மதுரை போலீஸ் இன்ஸ்பெக்டர் பஞ்சாபிகேச அய்யரும், இன்னும் நான்கு கான்ஸ்டேபில்களும் ஜில்லாக் கலெக்டரிடம் லாயக் வேலையிலிருக்கிற ஒரு முகமதியனை அநியாயமாய் அடைத்து வைத்திருந்த குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு மதுரை அடிஷனில் செஷன் ஜட்ஜி மிஸ்டர் வுட்டால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்கள். முதல் குற்றவாளி போலீஸ் இன்ஸ்பெக்டராயிருப்பதால் பிரதிதினமும் திரளான ஜனங்கள் கோர்ட்டிற்கு வேடிக்கை பார்க்க வந்தார்கள். நிகழ்மீ 9உ மட்டிலும் கோர்ட்டில் ஆயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். கோர்ட்டார் உத்திரவின் பேரில் கோர்ட்டு அதிகாரிகள், வந்திருந்தவர்களை எல்லாம் கோர்ட்டில் வீற்றிருக்கும்படி செய்தார்கள். தரையில் ஒரு மனிதன் உட்காரக்கூட இடம் கிடையாது. கோர்ட்டில் போட்டிருந்த நாற்காலிகளிலெல்லாம் லாயர்களும் பெரிய மனுஷர்களும் வீற்றிருந்தனர். கோர்ட்டு இப்படி நிரம்பியிருக்கும் தருவாயில் மதுரையில் பிராக்டிஸ் செய்துக்கொண்டிருக்கும் முதல் கிரேட் பிளீடராகிய மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் கோர்ட்டிற்கு வந்து உட்காருவதற்கு வசதிப்படாமல் ஒரு பெஞ்சின் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தார். ஜட்ஜி இவரைப்பார்த்தவுடன் தம்முடைய அருகில் நின்றுகொண்டிருந்த டலாயத்தைப்பார்த்து "அவரை என்னிடம் கொண்டுவாவென்று" சொன்னார். உடனே டலாயத்து பிளீடரை அழைத்துக்கொண்டுவந்து ஜட்ஜி முன் நிற்கும்படி செய்தார். ஜட்ஜி பிளீடரைப்பார்த்து "நீர் ஏன் அங்கே நின்று கொண்டிருந்தீர்" என்று கேட்க அதற்கு பிளீடர்

"நான் அவ்விடத்தில் நிற்கக்கூடாதென்று எனக்குத் தெரியாது என்று பதில் சொன்னார்." ஜட்ஜி பிளீடரைப்பார்த்து "என்னுடைய நாற்காலிக்குப் பின்புறத்தில் காலியாகவிருக்கும் இடத்திற்குப்போய் நில்லும்" என்று சொன்னார். உடனே இன்டிராபிரட்டர் எழுந்திருந்து "அவர் இந்தக் கோர்ட்டு வக்கீல்" என்று சொன்னார். அதற்கு ஜட்ஜி "நான் கோர்ட்டை கலைக்கும் பரியந்தம் அவர் அவ்விடத்திலேயே நிற்கட்டும் அவரை ஒருபோலீஸ் கான்ஸ்டேபிலினிடம் ஒப்பியும்" என்று சொன்னார். இப்படி ஜட்ஜி அவரை நிறுத்தி வைத்தபோது மாலை 4$\frac{1}{4}$-மணியிருக்கும் ஜட்ஜி 5-மணிக்கு கோர்ட்டைக்கலைத்துவிட்டு மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரைக் கூப்பிட்டு கையில் கடுதாசியும் பேனு எடுத்துக்கொண்டு அவருடைய பெயர், தகப்பனர் பெயர், ஜாதி, மதம், தொழில் முதலியவைகளைக்கேட்டு எழுதிக்கொண்டு இவரை எந்தப்பிரிவின்படி சார்ஜ்செய்கிறதென்று கிரிமினல் புரோசீஜர் கோட்டின் பக்கங்களைப் புறட்டிப்புறட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்குத் தெரியவில்லை.

இதன் பிறகு மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரைப் பார்த்து "நீர்தான் வக்கீலாயிற்றே, உம்மை எந்தப் பிரிவின்படி சார்ஜ் செய்யலாமென்று சொல்லும்" என்றார். இதற்கு மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

இதன்பேரில் தம்முடைய எதிரில்வீற்றுக்கொண்டிருந்த லாயர்களைப்பார்த்து இவரை எந்தப் பிரிவின்படி சார்ஜ் செய்யலாமென்று கேட்டனர். எல்லா லாயர்களும் ஒன்றும் பேசாமலிருந்தார்கள். ஆனால் பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் இரங்கசாமி அய்யர் எழுந்திருந்து கி. பு. கோ. 480-வது பிரிவின்படிசார்ஜ் செய்யலாமென்று சொன்னார். ஜட்ஜி அந்தப் பிரிவைப் பார்த்தவுடன் அது பொருந்தாது என்று சொல்லி மறுபடியும் புஸ்தகத்தின் பக்கங்களை புறட்டிப் புறட்டிப் பார்த்தார். இதற்குள்ளாக இந்த சமாச்சாரத்தை வக்கீல் அஸோஸியேஷன் செக்ரடெரியாகியமிஸ்டர் ராமய்யங்கார் கேள்விப்பட்டு கோர்ட்டிற்கு வந்து "நான் வக்கீல் சங்கத்தின் காரியதரிசி, மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அந்த சங்கத்தின் அங்கத்தினர். அவர் இந்தக்கோர்ட்டில் பிராக்டிஸ் செய்யும் ஒரு வக்கீல் இந்த விடத்தில் நிற்கக்கூடாதென்பது தங்களுடைய உத்திரவு என்பது எங்களுக்காவது அல்லது அவருக்காவது தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால் தங்களுக்குக் கீழ்படியாமற் உத்திரவை மிஸ்டர் சுப்பிரமணியர் நிராகரிக்கக் கூடியவரல்ல. குற்றவாளிகளாகிய பஞ்சாபிகேச அய்யரையும் கான்ஸ்டேபில்களையும் டிபன்டு செய்வதற்காக சென்னையிலிருந்து வந்திருக்கும் பேர்போன வக்கீலாகிய மிஸ்டர் சுப்பிரமணியர் கேசை நடத்தும் சாமர்த்தியத்தையும் விதத்தையும் கற்றுக்கொள்ளும் பொருட்டும் இந்தக்கோர்ட்டு வக்கீலாகிய நாங்கள் இந்தசமயத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றோம். இவ்விடத்தில் போட்டிருக்கும் நாற்காலிகளின் எல்லாம் உபயோகப்பட்டுப் போய்விட்டபின் நாங்கள் நின்றுக்கொண்டிருக்கவேண்டியதாயிருக்கின்றது" என்று சொன்னார். நீங்கள் அவரிடம் வேலைகற்றுக்கொள்ளுவதா யிருந்தால் கற்றுக்கொள்ளலாம் ஆனால் இவ்விடத்தில் நிற்கக்கூடாதென்று உத்திரவு செய்திருக்கின்றேன். என்று ஜட்ஜி சொன்னார்.

மிஸ்டர் ராமைய்யங்கார்:—இந்த உத்திரவு பயிரங்கப்படுத்தப்படவில்லை. எங்களுக்குத் தெரியாது. மிஸ்டர் வுட்:-என்னுடைய ஆர்டர்லி அவருக்குச் சொன்னார் என்று எண்ணுகின்றேன்.

மிஸ்டர் ராமைய்யங்கார்:—கோர்ட்டுச் சேவகன் கோர்ட்டில் சப்தம் போடாமலிருக்கும்படி ஒருவனை உட்காரச்சொன்னல் அவன் தானே செய்கிற உத்திரவென்றும் தங்களுடைய உத்திரவின்பேரில் உத்திரவு செய்கிறவனென்றும் எப்படித் தெரியும். ஒரு உத்திரவை எல்லோரும் அறிந்துகொள்ளும்படியாக பயிரங்கப்படுத்தவேண்டுமானல் அந்த உத்திரவை விளம்பரப் பலகையில் ஒட்டவேண்டும். இல்லையேல் இந்த உத்திரவை என்னிடம் கொடுத்தால் நான் என்னுடைய சங்க நோட்டிஸ் போர்ட்டில் போட்டு பிரசித்தப் படுத்துகின்றேன்.

மிஸ்டர் வுட்:—நீர் வக்கீல் சங்கத்தின் காரியதரிசியல்லவா நீர் நின்றுக்கொண்டிருந்தால் நான்என்னசெய்கிறது நீர் சொல்லும்.

மிஸ்டர் ராமைய்யங்கார்:—தாங்கள் இந்த ஊருக்கு வருவதற்குமுந்தி இந்தக்கோர்ட்டில் சில நாற்காலிகளிருந்தன அவைகளில் சிலவற்றை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சாதாரணகாலத்திலேயே இந்தக் கோர்ட்டில் சில வக்கீல்கல் நின்றுக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கின்றது. இப்போது இவ்விடம் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் வேடிக்கை பார்க்கவந்திருக்கிறவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கத்தை நிறுத்தவேண்டும்.

மிஸ்டர் வுட்:—உட்கார்ந்து கொள்ள இடமில்லாமற்போனல் நீர் நிற்கக்கூடாது. வக்கீல்கள் தரையில் உட்கார்ந்து கொள்ளவேண்டும்.

மிஸ்டர் ராமைய்யங்கார் :—இதுகால பரியந்தம் இந்தக் கோர்ட்டில் அந்த வழக்கம் கிடையாது. மேலும் வக்கீலுடைய அந்தஸ்திற்கு அது பொருந்தாது.

சென்னப்பட்டணம் மிஸ்டர் சுப்பிரமணி அய்யர்:— சென்னபட்டணம் ஹைக்கோர்ட் செஷனில்கூட அனேக வக்கீல்கள் நின்றுக்கொண் டிருக்கிறார்கள். அதைப்பார்க்கிலும் இந்தக் கோர்ட்டில் விசாலமான விடமிருக்கின்றது.

மிஸ்டர் வுட்:—(மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரைப் பார்த்து) நீர் போய்விடலாம்.

மிஸ்டர் வுட்:—(மிஸ்டர் ராமைய்யங்காரைப் பார்த்து, இவ்விடத்தில் கூட்டங் கூடாமலிருப்பதற்கு என்ன உபாயம் செய்யலாம்.

மிஸ்டர் ராமைய்யங்கார்:—இந்தக்கேஸ் முக்கியமானகேஸ். அனேகம்பேர் கூடுவார்கள். வக்கீல்களையும் வக்கீல் குமாஸ்தாக்களையும் தவிர மற்றபடி ஒருவரையும் விடக்கூடாதென்று உத்திரவு செய்யலாம்.

மிஸ்டர் வுட்:—கிளார்க்குகளைப் பார்த்து நாளைய தினம் வக்கீல்களையும் குமாஸ்தாக்களையும் தவிர கோர்ட்டிற்குள் ஒருவரையும் விடக்கூடாது.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம். / மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர்.

சிவில் அப்பீல்.

ருமசாமி நாயகர் வகையரு—மனுதார்—அப்பீல் வாதிகள்.

V.

ருமசாமி காமய்ய நாயக்கர்—எதிரி.

மனுதார்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—நிறைவேற்று நடவடிக்கை—காலாவதி தோஷம்.

கேசின்விவரம் :—வாதிகள் மதுரை (West) சப் கோர்ட்டில் ஒருபாக வியாஜ்ஜியம் கொண்டுவந்து 1, 2, பிரதிவாதிகள் பேரில் தங்களுடைய பாகத்திற்காக ஒரு டிக்கிரி பெற்றுக்கொண்டார்கள். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக 2-வது பிரதிவாதி மட்டிலும் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார். இந்த அப்பீலில் 2-வது பிரதிவாதி முதல் பிரதிவாதியை அப்பீல் பிரதிவாதியாகச் சேர்த்து அப்பீல் வியாஜ்ஜியமாடினர். அப்பீலில் 2-வது பிரதிவாதியும் வாதிகளும் சமாதானம் செய்துக்கொண்டார்கள். அதாவது 2-வது பிரதிவாதி தாம் சம்பந்தப்பட்டவரையில் வாதிகளுக்கு இருபத்தோருயிரம் கொடுத்துவிடுகிறதென்றும் சமாதானம் செய்துகொண்டார்கள். ஹைகோர்ட்டார் இந்த சமாதானப் பிரகாரமே 2-வது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் கீழ்க்கோர்ட்டு டிக்கிரியை சீர்திருத்தி மற்ற விஷயங்களில் கீழ்க்கோர்ட்டு டிக்கிரியை உறுதிப்படுத்தினார்கள். வாதிகள் தாங்கள் சப் கோர்ட்டில் முதல் பிரதிவாதியின்பேரில் பெற்றிருந்த டிக்கிரியை நிறைவேற்ற 1901-ம்௵ ஜூன்௴ 19௳ மனு செய்துகொண்டார்கள். இந்த மனு சீர்திருத்தப்படவேண்டியதாக யிருந்தபடியால் கோர்ட்டார் இதை சீர்திருத்தி இரண்டு வாரத்திற்குள் ஆஜர்படுத்தும்படி மனுவை வாதிகளுக்கு வாப்பீஸ் செய்தார்கள். 1901-ம்௵ ஆகஸ்ட்௴ 19௳ வாதிகளின் வக்கீல் இந்த மனுவை சீர்திருத்தாமல் மறுபடியும் ஆஜர்படுத்தி சீர்திருத்துவதற்காக இன்னும் இரண்டுவார டயம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். 1901-ம்௵ ஆகஸ்ட்௴ 6௳ கோர்ட்டார் உத்திரவு செய்தபடி வாதிகள் இந்த மனுவை சீர்திருத்தி ஆஜர்படுத்தவில்லை என்று சொல்லி கோர்ட்டார் 1901௵ ஆகஸ்ட்௴ 21௳ மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதிகள் முதல் பிரதிவாதியின் ஸ்தாவரசொத்தை பாகம் பிரித்து தங்கள் பாகத்தை தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அல்லது முதல் பிரதிவாதியின் சொத்துக்களை ஏலம் போட்டு ஏலத்தொகையில் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி டிக்கிரியை நிறைவேற்ற மறுபடியும் 1904-ம்௵ ஏப்பிரல்௴ 20௳ மனுக்கொடுத்தார்கள்.

முதல் பிரதிவாதியின் கக்ஷி:—வாதிகள் டிக்கிரியை நிறைவேற்ற 1901-ம்௵ ஜூன்௴ 15௳ செய்துகொண்ட மனு டிக்கிரியை நிறைவேற்றச் செய்துக்கொண்ட மனுவாயிருந்தாலும் சரி அல்லது டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு உதவியாகச் செய்துகொண்ட நடவடிக்கையாக யிருந்தாலும் சரி எப்படி இருந்தபோதிலும் 1901-ம்௵ ஜூன்௴ 15௳ வாதிகள் செய்துக் கொண்ட மனு சட்டப்பயிடில்லாமற் போனதால், இப்போது வாதிகள் செய்துக் கொண்டிருக்கும் மனு காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறது. என்று கக்ஷி சொன்னார்கள்.

சப் கோர்ட்டார், முதல் பிரதிவாதிசொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு வாதிகள் செய்துக்கொண்டிருக்கும் மனுவிற்குக் காலாவதிதோஷம் உண்டாய்விட்டதென்று சொல்லி தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக வாதிகள் ஹைக்கோர்ட்டில் ரிவிஷன்மனு செய்துக்கொண்டார்கள்.

அப்பீல் நடவடிக்கை :—அப்பீல் வாதிகளுக்கு ஆஜரான வக்கீல், வாதிகள் 1901 - ம்௵ ஜூன்௴ 15௳ செய்துக்கொண்ட மனுநிறைவேற்று மனுவாயிருந்தாலும் சரி அல்லது நிறைவேற்ற உதவிசெய்வதற்குச் செய்துக்கொண்ட நடவடிக்கையா யிருந்தாலும் சரி அது சட்டப்படி செய்யப்பட்டதென்று இரண்டுநாள் வரையில் வாதித்து கடைசியில் சப் கோர்ட்டார் வாதிகளுக்குக் கொடுத்த டிக்கிரி உடனே நிறைவேற்றப்படும்படியான டிக்கிரியா யில்லாமலிருப்பதால் 1905-ம்௵ ஜூன்௴ 15௳ வாதிகள் செய்துக்கொண்ட மனு டிக்கிரிக்குச் செய்யப்பட்ட மேல் நடவடிக்கைகள் என்றும் ஆதலால் வாதிகள் இப்போது செய்துக் கொண்டிருக்கும் மனுவிற்கு காலாவதி தோஷம் கூற முடியாதென்றும் வாதித்தார்.

தீர்ப்பு:—சப் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியைப் பார்த்தால் அந்த டிக்கிரி முடிவான டிக்கிரி என்றும் உடனே நிறைவேற்றப்படக் கூடிய டிக்கிரி என்றும் சொல்ல முடியாது. அந்த டிக்கிரியில் பிரதிவாதியின் ஸ்தாவர சொத்துக்களில் வாதிகளுக்கு பங்குகளிருக்கின்றனவென்று மட்டிலும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வளவு பங்குகள் என்றும் இன்னுமுள்ள விபரங்களும் அதில் சொல்லப்படவில்லை. இவைகள் எல்லாம் இனிமேல் வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்பட்டு வாதிகள் முடிவான டிக்கிரி பெறவேண்டும். ஆகையால் வாதிகள் இப்போது செய்துக்கொண்டிருக்கும் மனு அவர்கள் பெற்றிருக்கும் டிக்கிரியை பூர்த்தி செய்துக் கொள்ளும்படியாகச் செய்திருக்கும் மேல் நடவடிக்கையே ஒழிய மற்றபடி நிறைவேற்றும் நடவடிக்கையல்ல, ஆகையால் இதற்குக் காலாவதி தோஷம் பொருந்தாது என்று துவாரகநாத் மிசர் V. பாரிந்தநாத மிசர் (இ. லா. ரி. 22 கல். 425) இமாதிரிநாத் பன் V. ருமனிகாந்தராய் (இ. லா. ரி. 24 கல். 575.

ஜோட்டிந்திரமோகன் தாகூர் V. பிஜாசந்தமாலடாக் (இ. லா. ரி. 32. கல் 463) லக்ஷ்மண செட்டி V. ருமநாதன் செட்டி (இ. லா. ரி. 28 சென் 127) ஆகிய இந்தக்கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் நாங்கள் அப்பீலை ஏற்றுக்கொண்டு சப் கோர்ட்டார் உத்திரவை ரத்துசெய்து அப்பீல் வாதிகள் செய்துக்கொண்டிருக்கும் மனுவை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி பைசல் செய்யும்படி உத்திரவுசெய்கிறோம்.

வாதிகள் எந்த ஆதாரத்தைக்கொண்டு இந்த அப்பீலில் வெற்றிபெற்றிருக்கிறார்களோ அந்த ஆதாரத்தை அப்பீலில் கிரௌண்டுகளில் சொல்லாததால் அவரவர்கள் செலவு அவரவர்களைப் பொறுத்ததென்று உத்திரவுசெய்கிறோம்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

மணவாளக்கவுண்டன்—மனுதார்—

V.

குமரப்ப ரெட்டி—எதிர் மனுதார்—

லாப்பாயின்ட்:—டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் செய்த உத்திரவிற்கு விரோதமாக ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்யலாமா ?

கேசின் விவரம்:—செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் சப் ரிஜிஸ்டிரார் 1905-ம்௵ மே௴ 17௳ ரிஜிஸ்டர்செய்ய மறுதளித்தார். இந்த உத்திரவிற்கு விரோதமாக செங்கற்பட்டு ஜில்லா ரிஜிஸ்டிராரிடம் அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டதில் அவர் 1905-ம்௵ ஜூலை௴ 10௳ சப் ரிஜிஸ்டிராரின் உத்திரவைக் காயப்படுத்தினார். இந்த உத்திரவிற்கு விரோதமாக மணவாள கவுண்டன் ஹைக்கோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார். (1905-ம் ௵த்திய சிவில் ரிவிஷன் மனு நெ. 403.)

லாயர்கள் :—மனுதாருக்கு வக்கீல் மிஸ்டர் T. R. கிருஷ்ணசாமி அய்யரும், எதிரி மனுதாருக்காக வக்கீல் மிஸ்டர் K. S. ராமசாமி சாஸ்திரியாரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—எதிர் மனுதாருக்கு ஆஜராயிருக்கும் வக்கீல் மிஸ்டர் T. R. கிருஷ்ணசாமி அய்யர் முதலாவது நாம் ஜில்லா ரிஜிஸ்டிரார் செய்த உத்திரவையே சி. பு. கோ. 622-வது பிரிவின்படி ரிவிஷன் செய்வதற்கு நமக்கு அதிகாரமில்லையென்று வாதிக்கிறார். சி. பு. கோ. 622ம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கோர்ட் என்கிற பதத்திற்கு சாதாரண சட்ட சம்பந்தமான தாற்பரியம் கொடுக்கவேண்டும் அதாவது, நியாயம். நியாயமுறையில் எவ்விடத்தில் பகரப்படுகிறதோ அந்த இடம் என்று தாற்பரியம் செய்யவேண்டும். இந்த தாற்பரியத்தைத்தவிர வேறே தாற்பரியப்படும்படியாக "கோர்ட்" என்கிற பதம் சி. பு. கோ. வில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்று நினைப்பதற்கு சி. பு. கோ. வில் யாதொன்றையும் காணோம். ஆகையால் ஜில்லா ரிஜிஸ்டிரார் 622-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற "கோர்ட்டார்" என்று நினைப்பதற்கு முடியாமலிருக்கிறது. மனுதார் தரப்பிற்கு ஆஜராயிருக்கும் வக்கீல் ஜில்லா ரிஜிஸ்டிரார் "கோர்ட்டார்" என்று நினைக்கவேண்டுமென்பதற்கு இ. லா. ரி. 15 சென். 136-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருந்த அச்சய்யா V. ரெங்கய்யா கேசை ஆதாரமாகக் கூறுகின்றார். இந்தக் கேசில் ஹைக்கோர்ட்டார் ஜில்லா ரிஜிஸ்டிரார் "கோர்ட்டாரா" அல்லவா என்கிற பிரஸ்னையைப்பற்றி கவனிக்கவில்லை.

ரிஜிஸ்டிரார் இந்தக்கேசில் கோர்ட்டார் விசாரணை நடத்தி தீர்ப்புச் சொல்வதுபோல செய்து உத்திரவு செய்திருப்பினும் அவர் 622-வது பிரிவில் கூறப்பட்டிருக்கும் கோர்ட்டாராகமாட்டார். ஆகையால் எதிர் மனுதார் கூறும் கக்ஷியை ஏற்றுக்கொண்டு அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

பசுபதி பிள்ளை—முதல் பிரதிவாதி—அப்பீல் வாதி.

சுந்திரப்பய்யர் வகையரு—வாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—ஒரு கோவில் டிரஸ்ட்டி கோவிலுக்காக கடன் வாங்கினால், கடன் டிரஸ்ட்டியினிடமிருந்து வசூல் செய்யலாம்.

கேசின் விவரம் :—பிரதிவாதிகள் கும்பகோணத்தில் ஒரு கோவிலுக்கு டிரஸ்ட்டிகள் இவர்களுக்குக் கொடுத்த கடனைப் பெரும்பொருட்டு வாதிகள் கும்பகோணம் சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

பிரதிவாதிகளின் சக்ஷி :—கடன் வாங்கினது உண்மை. ஆனால் டிரஸ்ட்டி ஸ்தானத்தில் கோவில் செலவுகளுக்காக கடன் வாங்கப்பட்டது. ஆகையால் வாதிகள் தற்காலமிருக்கும் டிரஸ்ட்டிகள் பேரில் டிக்கிரி பெறவேண்டுமென்று சொன்னார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—முதல் பிரதிவாதி பேரில் டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக முதல் பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனுதாக்கல் செய்தார்.

லாயர்கள் :—அப்பீல் பிரதிவாதிக்கு வக்கீல் மிஸ்டர் R. குப்புசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகள் தரப்பிற்கு மிஸ்டர் சுந்திரமய்யரும் சுந்தரமய்யர் வகையருவும் பேசினார்கள்.

தீர்ப்பு :—முதல் பிரதிவாதி வாதிகளிடம் வாங்கிய கடன் டிரஸ்ட்டி ஸ்தானத்திலிருந்துகொண்டு கோவில் செலவுக்காக வாங்கியிருந்தபோதிலும் அவர் கடன் கொடுத்தவருக்கு ஜவாப்புதார்தான். அவர் கோவில் செலவுகளுக்காக கடன் வாங்கியிருப்பது அவர் ஷை கடனுக்காக வாதிகளுக்கு ஜவாப்புதாரராயிருப்பதிலிருந்து விலக்கமாட்டாது. இந்தக்கேசில் ஏற்பட்ட சாக்ஷியத்தில் இந்த டிரஸ்ட்டி பப்ளிக் டிரஸ்ட்டியாகமாட்டார் என்று ஏற்படுகின்றது. மேலும் வாதிகள் இந்தக் கடனுக்காக முதல் பிரதிவாதியின்பேரில் தொடரக்கூடாதென்று நினைப்பதற்கு முதலாவது கடன் ஆதரவிலேயே யாதொரு ஆதாரத்தையும் காணோம். முதல் பிரதிவாதி கோவிலின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து பணத்தை வசூல் செய்வதற்கு பாத்தியதையிருக்கிறதா இல்லையா என்கிற பிரஸ்னையை நாம் இவ்விடத்தில் கவனிப்பது நம்முடைய கடமையல்ல. ஆகையால் ரிவிஷன் பிட்டிஷனை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

HINDU LAW.

ஹிந்து லா.

ADOPTION.

ஸ்வீகாரம்:

யார் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம் ?

1. வேத இதிகாச புராணங்கள் ஆதியில் ஸ்வீகாரம் எடுக்கும் விஷயத்தில் அநேகவிதமான வழக்கங்கள் அனுஷ்டானத்திலிருந்தனவென்று கூறுகின்றன.

1. கர்மக் கிரியைகளைச் செய்ய யோக்கியதை யற்ற புத்திரனும், பௌத்திரனும், பிரபௌத்திரனு மற்ற புருஷனாகிலும், ஸ்திரீயாகிலும் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம். பிண்டம் கொடுத்து எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்காகவும், சந்ததியை விர்த்தி செய்து முன்னோர் பெயரை ஸ்தாபிப்பதற்காகவும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி வேத இதிகாச புராணங்கள் சிபார்சு செய்கின்றன.

3. ஒரு புருஷனுக்கு ஒரே புத்திரனிருந்து அந்த ஒரு புத்திரனும் வேறொரு மதத்தில் சேர்ந்துக் கொண்டாலாவது அல்லது ஜாதி பிரஷ்டம் செய்யப் பட்டவனாய் போய்விட்டாலாவது, அப்பேர்க்கொற்ற புருஷனுக்கு, கர்மக் கிரியைகள் செய்ய யோக்கியதை யற்றபௌத்திரனாவது, அல்லது பிரபௌத்திரனாவது இல்லாவிட்டால் அந்தப் புருஷனும் ஸ்வீகாரம் எடுத் துக் கொள்ளலாம்.

4. பெண்சாதி கர்ப்பமாயிருப்பது புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதை தடை செய்யாது. அதாவது பெண்சாதி கர்ப்பமாயிருக்கையில் புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். கர்ப்பத்திலிருக்கிற சிசு ஆண் அல்லதுபெண் என்று முன்னமே அறிந்துக் கொள்ளக்கூடாமலிருக்கிறது மேற்கூறிய விதி உண் டாவதற்கு இடம் கொடுத்திருக்கிறது. பெண்சாதி கர்ப்பமாயிருக்கிறது தெரிந்திருந்தும் புருஷன் எடுத் துக்கொண்ட ஸ்வீகாரம் செல்லுபடி யுள்ளதென்று பம்பாய் ஹைக்கோர்ட்டாரும் சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். நாரா யணரெட்டி V. வரதாச்சல ரெட்டி (இ.லா.ரி.3.சென். 180.) ஹநுமன் ராமச்சந்திர V. பீமாச்சாரியர் (இ. லா. ரி.12 பம் 105).

5. ஏற்கனவே ஸ்வீகாரம் எடுக்கப்பட்ட பை யன் உயிருடனிருக்கும்போது ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட ஒரு புருஷனாவது அல்லது அவனு டைய அதிகாரம் பெற்ற அவனுடைய விதவையா வது வேறொரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

6. விவாகமாகாத பிரமச்சாரியும் தாரமிழந்த வனும் (Widower) ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலா மென்று சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டாரும் பம் பாய் ஹைகோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள்:— நாகப்ப உடப்பா V. சுப்பா சாஸ்திரி 1865 சென். ஹை. கோ. ரி. 367 ; N. சந்திரசேகரடு V. N. பிர ம்மண்ண 1864. சென். ஹை. கோ. ரி. 270 ; கோபால ஆனந்த் V. நாராயண கனேஷ இ. லா. ரி. 12 பம். 320 ; பிரமச்சாரியாக யிருந்தபோதிலும் அவனுக்கும் கர்மக்கிரியைகள் செய்யப்படவேண்டியதாகயிருப்ப தால் அவனும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென் றும் தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

7. பகுத்தறியும்படியான வயதடைந்த அதாவது தான் செய்யும் செய்கையின் சுபாவத்தை அறியக்கூடிய ஒரு மைனர் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கோர்ட் ஆப் வார்ட்சாரால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு மைனர் ஷை யாருடைய அனுமதியின்றி ஸ்வீகா ரம் எடுத்துக்கொள்ளவும் கூடாது. ஸ்வீகாரம் எடுத் துக்கொள்ளும்படி அதிகாரமும் கொடுக்கக்கூடாது. ஆதலால் ஒருவன் மைனராக யிருப்பது அவன் ஸ்வீ காரம் எடுத்துக்கொள்ளுவதை தடை செய்யமாட் டாது. கோர்ட் ஆப் வார்சாருடைய அனுமதியின்றி ஒரு மைனர் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதை சென் னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் செல்லாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்—ஜமுனா V. பாம சுந்திரி L. R. 3. I. A. 72 ; அனந்தபாயி V. சேபச்சந்தர் 9 M. I. A. 287.

பகுத்தறியக்கூடிய வயதுடைய மைனர் ஸ்வீ காரம் எடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லு படியுள்ளதென்றும் பகுத்தறிவு 10-வயது முதல் 16 வயதிற்குள் உண்டாய் விடுகிறதென்று பம்பாய் ஹைக் கோர்ட்டாரும் கல்கத்தா ஹைக்கோர்ட்டாரும் தீர் மானித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை பிரிவு கவுன்சிலர்களும் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தியிருக் கிறார்கள். ராஜேந்திரராயின் V. சரோதா, 15 கல். விக்கிலி ரிப்போர்ட்டர் 546 ; போட்ட V. ஜேக்கிசன் இ. லா. ரி. 15. பம். 565 ;

8. பிதிரார்ஜிதத்திற்கு வார்சாகவர யோக்கி யதையற்ற குருடனும், நபுன்சகனும், குஷ்டரோகி யும் முதலிய இவர்களைப் போலொத்தவர்களும் ஸ்வீ காரம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஸ்வீகாரப் புத் திரனுடைய ஸ்வீகாரத் தகப்பனைப்போல ஜீவனாம்சம் பெற மட்டிலும் பாத்தியதையுடையவன். மேற்கூறிய வர்கள் சுயமாக சம்பாதித்த சொத்திற்கு அவர்களு டைய ஸ்வீகாரப் புத்திரர்கள் வார்சு பாத்தியதையுடை யவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

9. புருஷன் உயிருடனிருக்கும்போது அவனு டைய அனுமதியைப் பெற்று பெண்சாதி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். புருஷன் பயித்தியம் கொண் டவனாகயிருந்தால் இவனுடைய சம்மதத்தைப் பெற்ற தாக எண்ணி பெண்சாதி ஸ்வீகாரம் எடுத்துக்கொள் ளலாம்.

பம்பாய் ராஜதானியில் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் ஜீவதிசையிலிருக்கும்போது ஸ்வீகாரம் எடுத் துக்கொள்ளவேண்டுமானால் புருஷனுடைய நிச்சயமான அதிகாரத்தைப் பெற்று ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மா னித்திருக்கிறார்கள். நாராயன் V. நானா 7 பம். ஹை. கோ. ரி. 153; தரக்கபாய் V. பாகிரதி இ. லா. ரி. 2. பம் பாய் 174 ராம்ஜி V. காமன் இ. லா. ரி. 6. பம். 498.

10. மிதிலையைத் தவிர, இதர மாகாணங்களில் ஒரு பெண்சாதி புருஷனுடைய உத்திரவின்றி தானே ஒரு புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

11. துவி ஜாதியர்கள் தீட்டாயிருக்கும்போது. ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் செல்லாது. இந்த விதி சூத்திரர்களுக்குப் பொருந்தாது. ஏன் எனில் சூத்திரர்களில் புத்திரனைக் கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும் ஆகிய இந்த கிர்த்தியத்தைத்தவிர ஸ்வீகா ரவிசேஷத்தில் ஹோமம் முதலிய தர்மசாஸ்திர சம்பிர தாயங்கள் யாதொன்றும் செய்யப்படுகிறதில்லை. 9 மூர் இந்தியன் அப்பீல் 510-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற ராமலிங்கம் பிள்ளை V. சதாசிவப் பிள்ளை கேசில் ஒரு வைசியன் தீட்டாயிருக்கும் போது தன்னுடைய தங்கை புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவது செல்லாதென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் சுட்டிக்காண்பித்திருக்கிறார்கள்.

12. பெண்சாதி தன்னுடைய புருஷன் உத்திர வின்றி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவும் கூடாது. கொடுக்கவும் கூடாதென்று எல்லா தர்ம சாஸ்திரங் கூறுகின்றன,

புருஷன் இறந்துபோன பின்பு விபசாரியாய் போன ஒரு விதவை அந்த பாவத்திற் பிராயச்சித்தம் செய்து கொண்டாலொழிய ஸ்வீகாரம் எடுத்துக் கொ ள்ளக்கூடாது.

புனர்விவாகம் செய்துக்கொண்ட ஒரு விதவை தன்னுடைய முதல் புருஷனுக்காக ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதற்காக புருஷன் தன்னுடைய பெண்சாதிக்கு என்ன அதிகாரம் கொடு த்திருக்கிறாரோ அந்த அதிகாரத்தினின்று பெண்சாதி ஒரு அணுவளவேனும் தவறி நடக்கக்கூடாதென்று 12 மூர் இந்தியன் அப்பீல் 350-ல் சொல்லப்பட்டிருக் கும் சவுத்திரி புதம் V. கோயா கேசில் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது.

சென்னப்பட்டணத்தில் அனுஷ்டானத்திலிருக் கும் இந்துலாப்பிரகாரம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளு வதற்காக ஒரு விதவை புருஷனிடமிருந்து பெறாமற் போனபோதிலும் புருஷனுடைய சமீபந்துக்களின் சம்மதியைப்பெற்று ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம்.

பம்பாய் ராஜதானியில் புருஷனுடைய சொத் திற்கு ஏக சுதந்தர பாத்தியதையுடைய விதவை வே றொருவனுடைய சம்மதத்தையும் தேடாமல் ஸ்வீ காரம் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் அந்த ஸ்வீகாரம் உண்மையான ஸ்வீகாரமாகவும் தர்மசாஸ் திரங்களில் சொல்லப்பட்டபடி செய்யப்பட்ட ஸ்வீகார மாக இருக்கவேண்டும்.

மைனராக யிருக்கும் விதவை புருஷனுடைய அனுமதியைப் பெற்றிருந்தால் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம்.

இறந்துபோன ஒருவனுடைய சொத்திற்கு வார் சாகவர அவனுக்குப் புத்திரனாவது, விதவையாவது அல்லது சமீப பந்துக்களு மில்லாமற்போய் அவனு டைய தாயார் அந்த சொத்தை அடைவாளேயாகில் அவள் தன்னுடைய புத்திரனுக்காக ஒரு ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம்.

இந்துலா பிரகாரம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள் ளக் கூடியவர்கள் இவ்வளவு பேர்கள் தான்.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1907-ம்௵ ஆகஸ்ட்௴ 30௳ G. O. நெ. 447:—

தென் டிவிஷன் விவசாய டிப்டி டைரெக்டர் ஆபிசில் மாதம் ஒன்றுக்கு ரூ. 8 சம்பளத்திற்கு அதிக ப்படாத சம்பளமுடைய சேவக உத்தியோகத்திலிருப் பவர்கள் எட்குவாட்டரை விட்டு வெளியே போனால் ஒவ்வொரு தினத்திற்கும் அவர்களுக்கு படிச்சிலவிற் காக இரண்டணாகொடுக்கும்படி கவர்ன்மெண்டார் சா ங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

——செப்டம்பர்௴ 4௳ G. O. நெ. 454.

சென்னப்பட்டணம் போலீசைச் சேர்ந்த எட் கான்ஸ்டேபில் போலீஸ் வேலையின் பேரில் ஸ்டிரெ யிட் செட்டில்மெண்ட்ஸ் என்கிற சிங்கப்பூர் பினாங் முதலிய தீவாந்திரங்களுக்குப் போனால் அவர்களுக்கு பிரதிதினமும் படிச்செலவிற்காக 12 அணா கொடுக்க வேணுமென்று கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்தி ருக்கிறார்கள்.

——ஆகஸ்ட்௴ 26௳ G. O. நெ. 1502.

காக்கிநாடாபோலீஸ் அசிஸ்டெண்டு சூப்பிரண் டினிடம் கோதாவரி ஜில்லாவிலுள்ள (1) காக்கிநாடா டௌனையும், தாலூக்காவையும், (2) துனி, (3) ராமச் சந்திரபுரம், (4) பெத்தபுரம் ஆகிய இந்த நான்கு டிவி ஷன்களையும் ஒப்புவித்து அவருக்குப் பிரத்தியேக ஆபீஸ் ஒன்று ஏற்படுத்திக்கொடுத்து அதற்கு ரூ. 48 க்குள் சிப்பந்திகள் வைத்துக்கொடுக்கவேண்டுமென் றும் அவர் எப்போதும்போல் தண்டனை போலீஸ் படையையும் பார்த்துவரவேண்டுமென்றும் அவர் தம் முடைய எட்குவாட்டரை காக்கிநாடாவில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று இனிஸ்பெக்டர் ஜெனரல் பிரரேபித்ததை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள்.

——ஆகஸ்ட்௴ 28௳ G. O. 1520.

1900-வது ௵த்திய III-வது ஆக்ட்டாகிய கைதிகளின் ஆக்ட் 29-வது பிரிவின்படி தண்டனை அடைந்த கைதிகளை ஒரு ஜெயிலிலிருந்து மற்றொரு ஜெயிலுக்கு அனுப்ப ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனர லுக்கு அதிகாரமிருக்கிறது. ஆனால் தண்டிக்கப்படா மல் விசாரணை அடைந்துவரும் கைதிகளை ஒரு சப் ஜெயிலில் கூட்டமாயிருக்கிறதென்று செண்டிரல் ஜெயி லுக்காவது அல்லது செண்டிரல் ஜெயிலில் கூட்டமா யிருக்கிறதென்று ஒரு சப் ஜெயிலுக்காவது மாற்ற ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கு அதிகாரம் கிடை யாது. பின்னால் சொல்லப்பட்ட கைதிகளை சப் ஜெயி லில் கூட்டமாகயிருக்கிறதென்று செண்டிரல் ஜெயி லுக்கு மாற்றவேண்டுமானால் ஜெயில் இன்ஸ்பெக் டர் ஜெனரல் இந்தக் கைதியை எந்த மாஜிஸ்டிரேட் விசாரணை செய்துவருகிறாரோ அவருக்குத் தெரிவித்து அவர் எந்த ஜெயிலுக்குக் கொண்டுபோகவேண்டுமெ ன்று உத்திரவுசெய்கிறாரோ அந்த ஜெயிலில் கொண்டு போய் வைக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

——ஆகஸ்ட்௴ 27௳ G. O. நெ. 2154.

நிகழ்௵ மார்ச்சு௴ எல்லோரில் காண்பிக்கப்பட்ட கால்நடை காட்சி திப்ருதிகரமாய் நடைபெற்றதென்று ரெவினியூ போர்ட்டார் சந்தோஷப்படுகிறார்கள். ஆடு மாடுகளுமாகச் சேர்ந்து 745 கால்நடைகள் வந்திருந் தன இந்த கால்நடைக் காட்சியை நடத்துவதற்காக ஜமீன்தார் முதலிய போஷகர்கள் கொடுத்துதவிய தொகை ரூ. 4225-9-2; கிருஷ்ண ஜில்லா போர்டார் ரூ. 250 ; பெஜவாடா தாலூகா போர்டார் ரூ. 25. ஆக மொத்தம் ரூ. 4500-9-2.

போஷகர்கள்:—ஹானரபில் குருப்பம் ராஜா, பத் திராசலம் ராஜா ; மிஸ்டர் J. N. ராய் I. E. S. மகாடி M. வெங்கடபதி நாயுடுகாரு, B. A., B. L. மிஸ்டர் V. ராமராவ் பந்துலு.

இனாம்:—உயர்ந்த தினுசான கால்நடை கொண்டு வந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட இனாமின் மொத்தத் தொகை ரூ.610. மெடல்களின் மொத்த மதிப்பு ரூ.240.

——ஆகஸ்ட்௴ 16௳ G. O. நெ. 536.

மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்காவது அல்லது சர்வ கலாசாலையைச் சேர்ந்த வேறெந்த பரீக்ஷைக்காவது படிக்கும் ஒரு மாணாக்கன் கலாசாலையிலாவது அல்லது ஒஸ்டலிலாவது ஒழுங்கீனமாய் நடந்ததாக ரிப்போர்ட் செய்யப்பட்டால் அவன் அப்பரீக்ஷைக்குப்போகக் கூடாதென்று சாஸ்வதமாய் உத்திரவுசெய்யவாவது அல்லது சொற்பகாலத்திற்குப் போகக்கூடாதென்று உத்திரவு செய்யவாவது சிண்டிகேட்டாருக்கு அதி காரம் கொடுக்கும்படியாக 1904-ம்௵த்திய இந்தியன் சர்வகலாசாலை ஆக்ட்டின்படி செய்யப்பட்ட ரெகுலே ஷன்களில் 96-வது ரெகுலேஷனுக்கு ஒரு உட்பிரிவு ஏற்பட்டிருக்கிறது.

SPECIAL SESSIONS COURT.

சென்னபட்டணம் ஹைகோர்ட்.

ஸ்பெஷல் செஷன்கோர்ட்.

ஜட்ஜி:—சீப் ஜஸ்டிஸ் கனம்பொருந்திய மிஸ்டர் ஆர்னல் ஒயிட்.

சர் ஜியார்ஜ் அர்பத்நட் கேஸ்.

பிரியாதி:—கவர்ன்மெண்டார்.

எதிரி:—சர் ஜியார்ஜ் அர்பத்நட்.

கேசின் விபரம்:—சர் ஜியார்ஜ் அர்பத்நட் பேரில் அடியிற்கண்ட மூன்று குற்றங்கள் சாட்டப்பட்டன. (1) சர் ஜியார்ஜ் அர்பத்நட் சென்னபட்டணம் அர்பத்நட் பாங்கின் பிரதம பார்ட்னர். இந்த பாங்கியார் அர்பத்நட் இன்டஸ்டிரில் எஸ் என்கிற கம்பேனிக்கு டிரஸ்டிகளாகவும் மானேஜிங் டைரெக்ட்டர்களாகவுமிருந்தவகையில் ஷை இன்டஸ்டிரியல் கம்பேனிக்கு பணமுடைய இல்லாத காலத்தில் ஷை இன்டஸ்டிரியல் கம்பேனி தரப்பில் மதிராஸ் பாங்கியாரிடம் ரூபாய் 5-லக்ஷம் கடன் வாங்கி இந்தத்தொகையை தங்களுடைய சொந்தக் கம்பேனியாகிய அர்பத்நட் பாங்கிற்கு உபயோகித்துக்கொண்டு இ. பி. கோ. 409-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கை மோசக் குற்றத்திற்கு இலக்காயிருக்கிறார்கள். (2) அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் என்கிற கம்பேனிக்கு டிரஸ்டிகளாகவும் மானேஜிங் டைரெக்ட்டர்களாகவு மிருக்கும் அர்பத்நட் பாங்கியார், ஷை அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனிக்குச் சொந்தமான ரொக்கப்பணம் 6-லக்ஷம் தங்களுடைய கையிலேயே யிருக்கும்போதும் ஷை இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனிக்கு யாதொரு பணமுடையுமில்லாத காலத்தில் ஷை கம்பேனிக்கு மானேஜிங் டைரெக்ட்டர்கள் தரப்பில் 10-லக்ஷ ரூபாய்க்கு டிபன்ச்சர் கடன் பத்திரங்கள் பிறப்பித்து அந்த டிபன்ச்சர்களை தாங்களே எடுத்துக்கொண்டு லண்டனிலிருக்கும் அர்பத்நட் லாதம் கம்பேனியாரிடம் ஷை கடன் பத்திரங்களை ஈடு காட்டி 60 ஆயிரம் பௌன் பெற்று ஷை தொகையில் ஒரு தம்படி கூட ஷை இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனிக்கு உபயோகிக்காமல் தங்களுடைய சொந்த பாங்கிக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதில் இ. பி. கோ. 409-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கை மோசக் குற்றத்திற்கு இலக்காயிருக்கிறார்கள். (3) அர்பத்நட் இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனிக்கு டிரஸ்ட்டிகளாகவும்மானேஜிங் டைரெக்ட்டர்களாகவு மிருந்த அர்பத்நட்பாங்கியார் ஷை கம்பேனிக்குச் சொந்தமான இரண்டு லக்ஷ ரூபாயை, தங்களுடைய பாங்கிக்குச் சொந்தமான மைசூர் சர்க்கரைக்கம்பேனி இன்சால்வெண்டு நிலைமையிலிருப்பதை தாங்கள் அறிந்திருந்தும் தங்களுடைய சுயநன்மையை உத்தேசித்தும் அயோக்கியத்தனமான எண்ணத்துடனும் ஷை தொகையை ஷை மைசூர் சக்கரைக் கம்பேனிக்குக்கடன் கொடுத்ததில் இ. பி. கோ. 409-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நம்பிக்கை மோசக்குற்றத்திற் கிலக்காயிருக்கிறார்கள்.

இந்தக் குற்றங்களுக்காகவும், சென்னபட்டணம் ஈக்குவிட்டபில் அசூரன்ஸ் கம்பேனி விஷயமாகவும், ராஜா வேணுகோபால் பகதூர் டிபாசிட் விஷயமாகவும், செய்த குற்றங்களுக்காகவும் குற்றம்சாட்டப்பட்டு சென்னைப்பிரசிடெண்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க்கால் விசாரணை செய்யப்பட்டு செஷனுக்கு கமிட்டு செய்யப்பட்டார்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு தரப்பிற்கு சொலிசிட்டர் கம்பேனியாராகிய மெசர்ஸ் ஷார்ட் அண்டு பியூல் என்பவர்களுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் பவலும் குற்றவாளி தரப்பிற்கு சொலிசிட்டர் கம்பேனியார்களாகிய மெசர்ஸ் கிங் அண்டு ஜாகிலேயின் என்பவர்களுடையவும், பாரிஸ்டர் மிஸ்டர் நேப்பியர் ஆகிய இவர்களுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் நார்ட்டனும் பேசினார்கள்.

கேசின் நடவடிக்கை:—செஷன் விசாரணை ஆகஸ்ட்டு௴ 26௳ திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு செப்டம்பர்௴ 25௳ புதன்கிழமை 2½-மணிக்கு முடிவடைந்தது. கீழ்க்கோர்ட்டில் இந்தக்கேஸ் விசாரணை நடந்தபோது கேசின் நடவடிக்கையும் சாக்ஷி வாக்கு மூலங்களையும் விபரமாய் நாம் நம்முடைய சட்ட கெஜெட்டில் பிரசுரித்திருந்தபடியால், இப்போதும் அவைகளை எடுத்தெழுதுவதைநம்முடைய சந்தாதாரர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கமாட்டாதென்று எண்ணி எழுதாமல் விட்டு விட்டோம். இந்த விசாரணை முடிவடையும் பரியந்தம் இரு தரப்பு பாரிஸ்டர்களின் வாதமே பெரும் வாதமாகயிருந்தது. இது பெரிய பாங் சம்பந்தப்பட்ட கேசானபடியால் கோர்ட்டார்களும் ஜூரர்களும் பெரிய கணக்குப் புஸ்தகங்களை சோதிப்பதில் மிக கஷ்டப்பட்டு வந்தார்கள். பாரிஸ்டர்மிஸ்டர் நார்ட்டன் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளை உடைக்க தம்மால் கூடிய மட்டில் தம்முடைய சாமார்த்தியத்தைக் காட்டி வந்தார். இவர் இரண்டு நாள் அட்டிரஸ் பேசினார். பிராசிக்கியூஷன் தரப்பு பாரிஸ்டர் 6-மணி நேரம் பேசினார்.

ஜட்ஜி, கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச்சொல்ல 24௳ மத்தியானம் ஆரம்பித்து 25௳ பகல் 1-மணிக்கு முடித்தார். ஜட்ஜி ஜூரர்களுக்கு கேசின் சாராம்சத்தை எடுத்துக்கூறிவிட்டு அடியிற்கண்ட பிரகாரம் சொல்லி முடித்தனர்:—கனவான்களே! இந்தக் கேசில் புலப்பட்ட சாக்ஷியத்தை எல்லாம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இப்படிக்கு கொண்டுவந்ததில் நான் மிகுந்த காலத்தைச் செய்திருக்கிறேன். ஆகையால் நான் உங்களுடைய பொருமைக்குப் பெரும் பாரமாகயிருந்திருக்க வேண்டும். இந்தக் கேஸ் மிகுந்த முக்கியமான கேஸ். ஆகையால் இந்தக்கேசில் எந்த விஷயத்தையும் அதிலும் டிபன்ஸ் தரப்பார்க்கு அனுகூலமாயிருக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்தை பராமுகம் செய்வதற்கு இஷ்டமில்லாமலிருந்தேன். நீங்கள் சாக்ஷி விசாரணையை மிகுந்த பொருமையுடனும் கவனத்துடனும் கேட்டு வந்தீர்கள். இப்போது இந்தக் கேசை உங்களுடைய கையில் ஒப்புவிக்கக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். நீங்கள் ஜூரர்களாக ஏற்படுவதற்கு முந்தி இந்தக் கேசைப்பற்றிக் கேள்விப்பட்டு ஒருவிதமான அபிப்பிராயம் கொண்டிருக்கக்கூடும். அர்பத்நட் பாங்கியாரின் இன்சால்வெண்டு கோர்ட்டின் நடவடிக்கையால் நீங்கள் ஏதேனும் ஒரு அபிப்பிராயம் கொண்டிருக்கக்கூடும், இவைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பதையும் இவைகளால் உண்டாயிருக்கக்கூடிய அபிப்பிராயத்தையும் நீங்கள் இந்த சமயம் தள்ளிவிட வேண்டும். உங்களுக்கு முன்னால் சொல்லப்பட்டிருக்கும் சாக்ஷியத்தைக் கொண்டு சர் ஜியார்ஜ் அர்பத்நட் குற்றம் செய்திருக்கிறாரா இல்லையா என்று நீங்கள் ஆலோசனை செய்யவேண்டும், சர் ஜியார்ஜ் குற்றம் செய்யவில்லை என்று உங்களுக்குச் சந்தேகமில்லாமல் தோன்றினால் நீங்கள் அவர் குற்றவாளி அல்லவென்று அபிப்பிராயம் கூறலாம். அவர் குற்றம் செய்திருப்பது உங்களுக்கு சந்தேகமாயிருந்தால் நீங்கள் சந்தேகத்தின் நன்மையை அவருக்குக் கொடுக்கலாம். அவர் குற்றம் செய்திருக்கிறாரென்று உங்களுக்கு சந்தேகமில்லாமல் தோற்றினால் அவர் குற்றம் செய்திருக்கிறார் என்று அபிப்பிராயம் கூறுவது உங்களுக்கு எவ்வளவு மனதைப் புண்படுத்தும்படியான காரியமாகயிருந்தபோதிலும் நீங்கள் அவர் குற்றம் செய்திருக்கிறார் என்று கூறுவது உங்களுடைய கடமை.

ஜூரர்கள் பகல் 1 மணிக்கு ஆலோசனை அறைக்குச் சென்றார்கள். இவர்கள் திரும்பி கோர்ட்டிற்கு வருவதற்குள் மிஸ்டர் நார்ட்டன், ஜட்ஜி இந்தக்கேசை விசாரணை செய்ததிலும் ஜூரர்களுக்குக் கேசை எடுத்துக்கூறினதிலும் 19 சட்ட விரோதமான ஒழுங்கீனங்களிருப்பதாக ஒரு மனு தயார்செய்து இந்த மனுவை புல்பென்ச்சார் விசாரணைசெய்து முடிவு செய்யவேண்டுமென்று ஜட்ஜியைக்கேட்டுக் கொண்டார். இந்த மனுவைப்பற்றி ஜட்ஜி தாமே முதலில் அடுத்த வெள்ளிக்கிழமை கவனிப்பதாகவும், புல்பென்ச்சாருக்கு அனுப்பப்படவேண்டுமென்று தோன்றினால் அனுப்புவதாகவும் பதில் சொன்னார்.

இதற்குள் ஜூரர்கள் ஆலோசனை அறையிலிருந்து திரும்பிவந்து 1, 3, நம்பர் குற்றங்கள் சம்பந்தமாய் சர் ஜியார்ஜ் யாதொரு குற்றத்தையும் செய்யவில்லை என்றும், 2-வது நம்பர் குற்றத்தைச் செய்திருக்கிறார் என்றும் ஏகோபித்த அபிப்பிராயம் கூறினார்கள்.

மிஸ்டர் நார்ட்டன் எழுந்திருந்தது. தாம் சிறிது நிமிஷங்களுக்கு முந்தி செய்துகொண்டிருக்கும் மனு புல்பென்ச்சாரால் பைசல் செய்யப்படும் பரியந்தம் கோர்ட்டார் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டிற்கு தண்டனை விதிக்கக் கூடாதென்று ஆக்ஷேபித்தார். இதற்கு கோர்ட்டார், தண்டனை இப்போது சொல்லப் போவதாயும் தண்டனை குறைத்து விதிப்பதைக் குறித்து குற்றவாளியின் பாரிஸ்டர் ஏதேனும் சொல்லிக்கொள்ளவேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாமென்று சொன்னார். உடனே மிஸ்டர் நார்ட்டன் எழுந்திருந்து கைதி பாலியமுதல் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறபடியாலும், முரட்டுப் பழக்க வழக்கமற்றவராயிருந்தபடியாலும் அவருக்குக்கடின காவல் தண்டனை கோர்ட்டார் விதிக்காமலிருந்தால் யுக்தமாயிருக்குமென்று கைதிகௌரவமான அந்தஸ்திலிருந்தபடியால் அவரை அவர் தேசத்தாரே குற்றவாளி என்று கூறியிருப்பது போதுமான தண்டனையென்றும், ஆகையால் அவருக்குச் சாதாரண காவல் தண்டனைவிதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தீர்ப்பு:—(ஜட்ஜி கைதியைப்பார்த்து) சர் ஜியார்ஜ் அர்பத்நட்! என்னுடைய உத்திரவின் பேரில் ஜூரர்கள் நெ. 1 குற்றத்தை நீர் செய்யவில்லையென்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இரண்டாவது நம்பர் குற்றம் சம்பந்தமாக அதாவது இண்டரஸ்டிரியல் கம்பேனி தரப்பில் நீர் டிபன்சர் கடன் பத்திரம் விட்டது சம்பந்தமாக நீர் குற்றம் செய்திருக்கிறதாக ஏகோபித்த அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். மூன்றாவது நம்பர் குற்றம் சம்பந்தமாக நீர் குற்றம் செய்யவில்லை என்று ஏகோபித்த அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். ஜூரர்கள் இரண்டாவது குற்ற சம்பந்தமாகக் கூறியிருக்கும் அபிப்பிராயத்தை நாம் ஏற்றுக்கொண்டோம்; ஆகையால் இப்போது உமக்கு தண்டனை சொல்லுவது நம்முடைய கடமையாயிருக்கிறது. உம்முடைய பாரிஸ்டர் உமக்கு சாதாரண காவல் தண்டனை விதிக்கவேண்டுமென்று மிகவும் மன்றாடி கேட்டுக்கொள்ளுகின்றார். உமக்கு சாதாரண காவல் தண்டனை நாம் விதிப்போமாகில் நாம் நம்முடைய கடமையைச் சரிவரச்செலுத்தியிருப்பதாக எண்ணப்படமாட்டாது. ஆனால் அனேக மாதங்கள் நீர் ஜெயிலிலிருந்து வருவதை உத்தேசித்து உமக்கு நாம் விதிக்கும் தண்டனை என்னவென்றால், 18 மாத கடினகாவல் தண்டனை.

மிஸ்டர் நார்ட்டன்:—மைலார்ட்! இன்று முதலா?

ஜட்ஜி:—ஆம்! நீர் என்ன சொல்லுகிறீர்.

மிஸ்டர் நார்ட்டன்:—நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், நான் செய்துகொண்டிருக்கும் மனு பைசல் செய்யப்படும்பரியந்தம் சர் ஜியார்ஜ் அர்பத்நட்டை மற்ற கைதிகளுடன் சேர்த்து வைக்காமல் இதற்கு முன்னிருந்ததுபோல சாதாரணமாய் ரிமாண்டு ஜெயிலில் வைக்கவேண்டும் மேலும் மேற் கூறப்பட்ட மனு சம்பந்தமாய் சர் ஜியார்ஜ் உடன் நான் யோசனை செய்யவேண்டியதாயிருப்பதால் இன்று ஒரு மணி நேரம் நான் அவருடன் பேசும்படியாக அனுமதி கொடுக்கவேண்டும்.

ஜட்ஜி:—நான் மனுவை பைசல் செய்யும் வரையில் சர் ஜியார்ஜ் அர்பத்நட் முன்போலவே ரிமாண்டு ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். கைதியுடன் மிஸ்டர் நார்ட்டன் இன்று ஒரு மணிநேரம் பேசுவதற்கும் அனுமதி கொடுத்திருக்கிறோம்.

ஹானரபில்மிஸ்டர் ஜஸ்டிஸ் H. பட்டி என்பவர் 1902-ம் ௵ம் ஏப்பிரல்௴ முதல் பம்பாய் ஹைக்கோர்ட்டில் ஜட்ஜியாயிருந்து வருகின்றார். பம்பாய் ராஜதானியிலுள்ள கக்ஷிக்காரர்கள் இவரை மிகுந்த நற்குணமுடைய ஜட்ஜி யென்றும் கிரிமினல் அப்பீல்களை பைசல்செய்யும் விஷயத்தில் ஒப்புவமையற்ற ஜட்ஜி யென்றும் சொல்லி சந்தோஷப் படுகிறார்கள். ஆகையால் இவருடைய உருவப்படத்தை இம்மாத கெஜெட்டில் பிரசுரித்து நம்முடைய சந்தாதாரர்களுக்கு அறிமுகப்படுத்தும்படியான பாக்கியத்தைப் பெற்றோம். இவர் பாலிய முதல் இங்கிலாண்டில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பயின்று 17-வது வயதிலேயே M. A. பரீட்சையில் தேறி பட்டம்பெற்று பிறகு பாரிஸ்டர் பரீக்ஷைக்கும் பயின்று அதிலும் பட்டம் பெற்று அதன்பிறகு இந்தியன்சிவில் சேர்விஸ் பரீக்ஷையில்தேறி1870-ம் ௵ம் அக்டோபர்௴ 31௳ இந்தியாவிற்கு வந்து சேர்ந்தார். இவர் ஆங்கிலேய தத்துவ சாஸ்திரத்திலும் தர்க்க சாஸ்திரத்திலும் மிகுந்த பாண்டித்ய முடையவராக யிருந்தபடியால் அப்பேதிருந்த கவர்ன்மெண்டார் இவரை தக்ஷண கலாசாலைக்கு (Deccan College) போதகாசிரியாரய் நியமித்தார்கள். இவர் ஷை கலாசாலையில் பயின்ற மாணாக்கர்களுக்கு எவ்வளவு தெளிவாய் மேற்கூறப்பட்டுள்ள இரண்டு சாஸ்திரங்களையும் போதித்து வந்தார் என்பதை நாம் எவ்வளவு தூரம் சிலாகித்துபேசினபோதிலும் அது குறைவாகவே யிருக்கும், சில வருஷ காலங்கள் இவர்போதகாசிரியராயிருந்தபின் கான்டக்ஷ், தாணு, கோலாப்பூர், கக்ஷிக்கார்பூர், ஐதராபாத், கன்னரா, ரெத்னகிரி, அமராவதி முதலிய ஜில்லாக்கள் தங்களுக்கு இவர் ஜில்லா ஜட்ஜியாகவும், செஷன் ஜட்ஜியாகவும் இருக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றன. இதன்பிறகு இவர் சிந்து சீப் கோர்ட்டு ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். இவ்விடமிருந்தபடி கவர்ன்மெண்டார் இவரை பம்பாய் ஹைக்கோர்ட்டு ஜட்ஜியாக நியமித்திருக்கிறார்கள். இவர் கக்ஷிகாரர்களுக்குச்சரியான நியாயத்தை பகரும் குணநியசமுடைய ஜட்ஜியென்றும், கக்ஷிக்காரர்களையும் சாக்ஷிகளையும் தாறுமாறாய் பேசாமல் அன்னோருக்குமறியாதை காட்டுபவரென்றும் கக்ஷிக்காரர்களை அன்புடன் நடத்துகிறவரென்றும், கேசுகளை பொருமையுடன் விசாரணை செய்து பைசல் செய்கிறவரென்றும் புன் சிறிப்புடைய முகத்தை அடையப்பெற்றவரென்றும் எல்லா கக்ஷிக்காரர்களும் லாயர்களும் கூறி சந்தோஷப்படுகின்றார்கள். இவர் இன்னும் சிலகாலம் ஹைக்கோர்ட்டிலிருந்து கக்ஷிக்காரர்களுக்குநியாயம் பரிபாலிக்க வேண்டுமென்று நாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோமாயினும், இவர் தமக்காலம் நோயாயிருப்பதால் சமீபகாலத்தில் உத்தியோகத்தினின்று நீங்கி இங்கிலாண்டிற்கு போகும்படி நேரிடும்போலிருக்கிறது. இவர் கிரிமினல் அப்பீல் கோர்ட்டில் ஜட்ஜியாக யிருந்து இதர ஜட்ஜிகளாலும் லாயர்களாலும் புகழப்படத்தக்க அனேக தீர்ப்புகள் எழுதியிருக்கின்றனர்.

தாரூபாய் V வெங்கட்ராவ், பகவன் V கொடாரி, அநாபுருஷன் V கோவார், ஜோகர்மல் V இராநாத், ராஜத், V சீதாராம் இந்தக் கேசுகளில் அவர் எழுதியிருக்கும் தீர்ப்புகள் அவரிடமிருக்கும் நியாயம் பகரக்கூடிய அபாரத்திறமையை உலகத்தாருக்குத் தெற்றன விளக்கிக் காட்டுகின்றன. இந்தத் தீர்ப்புகளில் மோசடியான டிரான்ஸ்பர்களைக் குறித்தும் பெந்தகப்பத்திர பாத்திதைகளைக் குறித்தும், பூர்வகால தஸ்தாவேஜுகளைக் குறித்தும், ரிஜிஸ்டர் செய்த தஸ்தா வேஜிகளின் முக்கியத்தை குறித்தும், சேர்ந்த இந்து குடும்பத் தகப்பன் பட்ட கடன்களைக் குறித்தும், சேர்ந்த இந்து குடும்ப மானேஜிங் மெம்பருக்குள்ள அதிகாரத்தைக் குறித்தும் ஆகிய இந்த விவாதப்பட்ட சட்ட அம்சங்களை ஆராய்ந்து பரிசீலனை பண்ணி முடிவு செய்து எழுதியிருக்கின்றார். இப்போது கோர்ட்டில் வருந்திக்கொண்டு வரும் இவர் சீக்கிரம் சௌக்கியப்படவேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றோம்.

Indian Law Gazette Office,
Law Publication Series.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் சட்ட பிரசுரங்கள்.

A PREVENTION TO FRIVOLOUS EXPENSES.

விரதாச் செலவுகளுக்கு ஒரு தேக்கம்.

A
HAND BOOK
OF
CIVIL AND CRIMNIAL LAWS,
VOL. I

சிவில் கிரிமினல் சட்டமஞ்சரி.

பெரும்பாலான ஜனங்கள் அரசாங்கத்தார் உண்டாக்கிருக்கும் சட்டதிட்டங்களையும் கோர்ட்டு நடவடிக்கைகளையும் தெரிந்துக்கொள்ளாமல் சாதாரணமான அற்ப விஷயங்களில்கூட சட்ட ஞான சூனியர்களுடைய பேச்சையும் போதனையையும் கேட்டு அவர்களுடைய கையில் சிக்கி அசல், அப்பீல் கிங்அப்பீல் வரையில் வியாஜ்ஜியமாடி தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடின சொத்தைவாரி இறைத்துச் செலவிட்டு ஓட்டாண்டியாய் போய் கடைசியில் அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள். என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் தெரிந்த விஷயம்! நம் சகோதரர்கள் இவ்வித வியாஜ்ஜியப் படுநரகத்தில் விழுந்து பரிதவிப்பதைப்பார்த்து மனம் சகியாது அவர்களுக்கு, கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்டிருக்கும் முக்கியமான சட்டங்களை அச்சடித்து சொற்பவிலைக்குக் கொடுக்கிறதென்று தீர்மானித்திருக்கிறோம். இந்த தீர்மானத்திற்கிணங்க இப்போது சிவில் கிரிமினல் சட்டமஞ்சரி என்கிற புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறோம். இதில் அடியிற்கண்ட முக்கிய ஆக்ட்டுகள் அடங்கியிருக்கின்றன.

The Indian Stamp Act.
இந்து தேசத்து முத்திரைக் கடிதாசியைக் குறித்த ஆக்ட்.
The Indian Registraticn Act.
1877-ம் வருஷத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்.
Court Fees Act.
1870-ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்ட்.
Indian Limitation Act.
இந்து தேசத்து கால நிர்ணயச் சட்டம்.
The Indian Easements Act.
இந்து தேசத்து வழிநடை முதலிய வசதி உரிமைகளையும் லைசென்சுகளையும் குறித்த ஆக்ட்.
The Indian Trusts Act.
இந்து தேசத்து திரஸ்ட்டுகளைக் குறித்த 1882-வருஷத்திய 2-வது ஆக்ட்.
The Transfer of Property Act.
உபயத்திராளுடைய விவகாரத்தினாலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்தஆக்ட்.

இப்புத்தகம் முத்துக்கள்போன்ற எழுத்துக்களால் தும்பமலர்போல் வெண்மையாயுள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டு வெகு உன்னதமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை ரூ. **1.** வி. பி. தபால் சார்ஜுடன் ரூ. **1-2-0.**

ஆனால் 1907ம் ஆம் டிசம்பர் ௴ 31ௗ வரையில் இந்திய சட்ட கெஜெட்டிற்குச்சந்தாதாரர்களாய்ச் சேருகிறவர்கள் தபாற் சார்ஜ் ஒரு அணா மட்டிலும் அனுப்பினால் இப்புத்தகம் இனாமாகக் கொடுக்கப்படும்.

ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.
மானேஜர்கள்,
இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் நெ. 37. நாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி,
ஜியார்ஜ் டௌன் சென்னை.

The Honorable Justice Sir S. SUBRAMANYA IYER, B.L., K.C.I.E., Dewan Baha



லாலா லஜபட்ராய். திலக். பிபின் சந்திரபால்.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்— M. A. லோகனாதன்

பிரசுரிக்கிறவர்கள்:—த. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 2.] சென்னப்பட்டணம், 1907ஹ நவம்பர்மீ [பாகம் II

அடக்கம்

பக்கம்

1. உருவப்படம்—ஸ்ரீலாலா லஜபட்ராய் அவர்கள், பஞ்சாப் சீப் கார்ட்டு பிளீடர்
2. இராஜத்துரோக கூட்டங்களைத் தடுக்கும்படியான மசோதா ஆக்ட்டை ஆக்ஷேபித்து ஆனரபில் மிஸ்டர் கோபால கிருஷ்ன கோகலே C. I. E. அவர்களும், ஆனரபில் டாக்டர் ராஷ்விஹாரி கோஷ் சிம்லாவில் வைசிராய் சட்டசபையில் பேசின பேச்சின் சங்கிரகம் … … 353
3. ஸ்ரீலாலா லஜபட்ராய் அவர்களுடையவும், சர்தார் எஸ் அஜிட் சிங் அவர்களுடையவும் விடுதலை … 355
4. ரெவினியூ போர்ட் புரோசிடிங்ஸ்களும் ஜில்லாக் கலெக்டரின் சர்க்குலர் உத்தரவுகளும் … 358
5. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் … … … … … 358
6. முக்கியமான தீர்ப்புகள் … … … … 360
7. பிளேக் மஹாமாரியைக்குறித்து கவர்ன்மெண்டார் செய்திருக்கும் விளம்பரம் … … 361

பிழை திருத்தம்.

(I) அக்டோபர்மீ கெஜெட்டில் விஞ்ஞாபன பக்கத்தில் சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்களைப் பற்றி எழுதியிருக்கும் வியாசத்தில் முதல் பாராவுக்கும் இரண்டாவது பாராவுக்கும் மத்தியில் அடியிற் கண்ட இங்கிலீஷ் வாக்கியங்களிருக்கவேண்டும்.

NOTIFICATION.

Fort St. George, November 21, 1907.

No. 534.—The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., Dewan Bahadur, is permitted to resign the office of a Judge of the High Court of Judicature at Madras with effect from the 13th November 1907:—

The Governor in Council desires to place on record his high appreciation of the eminent services by Sir S. Subramania Aiyar, K.C.I.B., during his long term of office as a Judge of the High Court. The high judicial qualities, the independence of character and the profound learning which he has at all times displayed throughout his long and honourable career have earned for him a name which will long be held in reverence and esteem by the Government and the public.

(II) அதே வியாசத்தின் இரண்டாது பாராவில் 12-வது பிரிவில் "அவர்களால்" என்கிற பதம் "அவர் பால்" என்றிருக்கவேண்டும்.

(III) விஞ்ஞாபனத்தில் 11-வது பிரிவில் "வகுத்த" என்னும் பதம் "விடுத்த" என்றிருக்கவேண்டும்.

(IV) அதே பக்கத்தில் கை கெடியார இனமைப்பற்றி எழுதியிருக்கும் பாராவில் ஒன்பதாவது வரியில் "நிலவரிசை" என்கிற பதங்கள் "நம்பர் வரிசை" என்றிருக்கவேண்டும்.

விஞ்ஞாபனம்.

நாம் ஏற்கனவே கூறி யிருந்தபடி இம்மாத கெஜெட்டையும் மூன்று பாரங்களுடன் பிரசுரித்திருக்கிறோம். சந்தாதாரர்கள் டிசம்பர்மீ முதலாகிலும் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டை ஷை மாதத்திற்குள் அடைந்து வரும்படியான உறுதியான ஏற்பாட்டைச் செய்யும் பொருட்டு சென்ற அக்டோபர்மீ சஞ்சிகையும் பிரஸ்தாப சஞ்சிகையும் குறைவான பாரத்துடன் அனுப்பியிருக்கிறோமே தவிர மற்றப்படி குறைவாய் அனுப்பியிருப்பது செலவை உத்தேசித்தல்ல; இந்த இரண்டு சஞ்சிகைகளிலும் சேர்க்கப்படாமலிருக்கும் பக்கங்கள் இனி ஒவ்வொரு சஞ்சிகையிலும் சில சிலவாகச் சேர்க்கப்பட்டுக் கொண்டே வரும். அடுத்த டிசம்பர்மீ சஞ்சிகை ஷை மாதம் 20உக்குள் சந்தாதாரர்கள் கையிலிருக்குமென்பதை நிச்சயமாய்த் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அடுத்த சஞ்சிகை வழக்கம்போல கோர்ட்டு சமாசாரங்கள், சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள், இந்துலா, முக்கியமான தீர்ப்புகள், இந்தியன் லா ரிப்போர்ட்டு கேஸ்கள், கக்ஷிகாரர்கள் பக்கம், வேடிக்கையான சட்ட சமாசாரங்கள் ஆகிய எல்லா விஷயங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும்.

எடிட்டர்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 31 MAR 1908 MADRAS.

DIEU ET MON DROIT · HONI SOIT QUI MAL Y PENSE

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னப்பட்டணம், 1907ஞு நவம்பர்மீ [பாகம். 11.

HON'BLE Mr. GOKHALE AND HON'BLE Dr. RASHBEHARY GHOSE ON THE PREVENTION OF SEDITIOUS MEETINGS BILL 1907.

வைசிராய் சட்டசபையில் ஆனரபில் ஸ்ரீகோகலேயும் ஆனரபில் ஸ்ரீராஸ்விஹாரிகோஸஉம் பேசினது.

இந்திய கவர்ன்மெண்டார் "இராஜத்துரோகக் கூட்டங்களைத் தடுக்கும் மசோதா ஆக்ட்டை நிகழ் நவம்பர்மீ 1உ வெள்ளிக்கிழமை தினம் வைசிராய் சட்டசபையில் ஆலோசனைக்குக் கொண்டுவந்து தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம்செய்து சட்டமாகப் பாஸ் செய்துவிட்டார்கள். பெரும்பாலான ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் சிம்லாவில் கூடும் மீட்டிங்கிற்குப்போகிறதில்லை. ஆகையால் சுதேச மெம்பர்களுக்குள் ஆனரபில் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயும் ஆனரபில் டாக்ட்டர் ராஸ்விகாரி கோஸஉம் ஆனரபில் திக்காசாயப் அவர்களுமாகிய இம்மூவர்கள் மட்டிலும் போயிருந்தனர். ஆனரபில் ஸ்ரீ கோகலே என்பவர் பம்பாய் மாகாணத்தின் பிரதிநிதி. இவர் மிகுந்த பழுத்த தேசாபிமானி. நம்முடைய சுதேச நன்மைக்காக உழைக்கும் பொருட்டே கடவுள் இவரை சிருஷ்டித்தார்போலும். இத்தேச ஜனங்களின் குறைகளை எடுத்து பிரிட்டிஷ் ஜனங்களுக்குப் போதிக்கும் பொருட்டு தம்முடைய சொந்த திரவியத்தைச் செலவு செய்து கொண்டு இங்கிலாண்டு தேசத்திற்குச் சென்று அவ்விடத்தில் 6 மாத காலம் தங்கி, பிரிட்டிஷ் ஜனங்கள் அடங்கிய பெருங் கூட்டங்களுக்கு உபன்னியாசங்கள் செய்து வந்தார். இத்தேசத்தில் இத்தேசாபிமானி ஒருவரே பொது ஜனங்களால் மதிக்கப்படுகிற அளவு கவர்ன்மெண்டாராலும் பிரிட்டிஷ் பொது ஜனங்களாலும் மதிக்கப்பட்டிருக்கிறவர், டாக்டர் ஸ்ரீ ராஸ்விஹாரிகோஸ் என்பவர் வங்காள மாகாண ஜனப்பிரதிநிதி. இவர் இத்தேசத்தின் சட்டங்களைக் கற்றுணர்ந்து சிறந்து விளங்கும் லாயர்களில் ஒருவர். இவர்கள் இருவரும் இராஜத்துரோகக்கூட்டச்சட்டத்தை ஆக்ஷேபித்து அது இத்தேசத்தார்க்குச் செய்யக்கூடிய தீமைகளை எடுத்துக்காட்டி வாசமகோசரமாய் பிரசங்கமாரி பொழிந்திருக்கிறார்கள். அன்னிய பாஷையாகிய அரசாங்க ஜாதியாரின் பாஷையைக் கற்றுணர்ந்து அரசாங்கத்தார் முன்னிலையில் துப்பாக்கிமருந் திருக்கு மிடத்தில் பயமின்றிப் புகைச் சுருட்டுக் குடிப்பதுபோல தயவு தாக்ஷிண்யத்திற்கஞ்சி கேட்பவர்கள் பார்ப்பவர்கள் முறையே கேட்டும்பார்த்தும் மூக்குமேல் கையை வைத்துப் பிரமித்து பெருமூச்சு விடும்படியாக மிகுந்தவாக்கு சாதுரியத்துடனும் துரிதமாகவும் பேசும் இம்மகா புத்திமான்களாகிய தேசாபிமானிகளின் புத்திமதிகளும்யோசனையும் கவர்ன்மெண்டார் கேட்டு, இத்தேச ஆக்ஷிமுறையைச் செலுத்திமட்டிலும் வந்தால் ஆகா! நம்தேசத்தில் குறை என்கிற பதமும் சொல்லப்படுமோ? நிற்க இவர்கள் இருவரும் என்ன பேசினார்கள்

என்று சிறிது ஆராய்ந்து பார்ப்போம். ஆனரபில் ஸ்ரீ கோகலே, முதலாவது இந்தியா முழுதிலுமுள்ள பொது ஜனங்களைப் பாதிக்கும்படியான இந்தச்சட்டத்தை ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள்விசேஷமாக வர வசதிப்படாத சிம்லாவில் கூடும் சபையில் பாஸ் செய்ய ஆரம்பித்தது பிசகு என்று சொன்னார். முன் ஒரு சமயம் கவர்னர் ஜனரலாக விருந்த லார்ட் நார்த்புரூக் இதே மாதிரி முக்கியமான ஒரு சட்டத்தை சிம்லாவில் கூடின சட்ட சபையில் பாஸ் செய்வித்தபோது அச்சமயம் இந்தியாவிற்குக் காரியதரிசியாக விருந்த லார்ட் சாலிஸ்பரி இந்தியா கவர்ன்மெண்டாரின் நடவடிக்கையை ஆக்ஷேபித்துப் பேசி யிருக்கிறதாகச் சொன்னார். இரண்டாவது "இந்த ஆக்ட்டைப்பற்றி பொதுஜனங்கள் யோசித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கூறும்படியாக அவர்களுக்குக் கவர்ன்மெண்டார் சாவகாசம் கொடுக்கவில்லை. மேலும் இம்மாதிரியான ஆக்ட்டை கவர்ன்மெண்டார் உற்பத்தி செய்து வெகு சீக்கிரத்தில் பாஸ் செய்துவைப்பதற்குக் கொஞ்சமேனும் காரணமில்லை. ஏன் எனில் இத்தேசத்தில் அரசாங்கத்தாருக்கு விரோதமான யாதொரு ரகசியமான ஏற்பாடாவது அல்லது குழப்பமாவது அல்லது சண்டையாவது ஏதாவது சிறிதுமில்லை. இன்னும் சொல்லப்போனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் இன்னும் சமீப காலத்திற் குள்ளாகிலும் சம்பவிக்குமென்று எண்ணுவதற்குக்கூட இடமில்லை. என்றும் யாதொரு ஆக்ஷேபணையன்றி சொல்லக்கூடுமென்று" சொன்னார். ஆனரபில் மெம்பராகிய சர் ஆர்வி ஆடம்சன் இந்த மசோதா ஆக்டைப் பிரேரேபித்தபோது இத்தேசத்தில் இராஜத்துரோக கூட்டங்கள் நடந்து பொது அமரிக்கையைக் கெடுக்கிறதென்று பொதுவாய்ச் சொல்லியிருக்கிறாரே ஒழிய இன்னவிடத்தில் நடந்த கூட்டத்தில் இன்ன கலகம்நடந்ததென்று சுட்டிக்காண்பிக்கவில்லை. இந்த வருஷம் மே மாதத்தில் கவர்னர் ஜனரல், ஆர்டினன்ஸ் உத்தரவு பிறப்பித்த பின்பு பஞ்சாப் மாகாணத்திலும் கீழ் வங்காள மாகாணத்திலும் யாதொரு கூட்டமும் கூட்டப்படவில்லை. யாதொரு கலகமும்நடக்கவில்லை. யாதொரு பொது அமரிக்கையும் கெட்டுப்போகவில்லை, என்று மிகவும் உறுதியாய்ச் சொன்னார். ஆனால் அங்கங்கே கூட்டங்கள்கூடி கவர்ன்மெண்டாருக்கு விரோதமாகப் போலீசார் கொடுக்கும் ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் நம்பி மதிமயங்கிப் போயிருக்கிறார்கள். ஆனால் இந்தப் போலிசார் ராவல்பிண்டிக் கேஸ்களை அடிமுதல் நுனிவரையில் ஜோடித்து அவமானமடைந் திருப்பவர்கள், என்பதை கவர்ன்மெண்டார் கவனிக்கவில்லையே என்று சொன்னார். இன்னும் கடந்த 6 மாத காலங்களில் பஞ்சாபையும் கீழ் வங்காளத்தையும் தவிர இதர மாகாணங்கள் எப்படியிருந்திருக்கின்றன வென்று பார்க்கின் காக்கிநாடாவிலும் கல்கத்தாவிலும் சொற்ப குழப்பங்கள் நடந்திருக்கின்றன. முதல்சொன்னவிடத்தில் ஒரு வெள்ளைக்கார ஆபிசரும் இரண்டாவது சொன்னவிடத்தில் போலிசாரும் குழப்பத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் இந்த இரண்டு ஊர்களில் நடந்த குழப்பங்களுக்காக தேச முழுவதிற்குமாக ஒரு தீமையான சட்டத்தைப் பிறப்பிப்பது உசிதமான காரியமா யிருக்கமாட்டாது என்று அஞ்சாமல் எடுத்துக் கூறினார். தேசத்தி லுண்டாகக்கூடிய இராஜத்துரோகத்தைக் கண்டிப்பதற்கு எவ்வளவு சட்டங்கள் தேவையோ அதற்கு மேல் அதிகமா யிருக்கும்போது இந்த சட்டத்தை பாஸ் செய்விப்பது அனாவசியமென்றும், ஏற்கனவே இந்தியர்களின் சுதேசிய முயற்சியைக் கண்ணுற்ற நிரூபர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்டபடி பித்தலாட்டமாய் சீமையிலுள்ள பத்திரிகைகளுக்கு எழுதி பிரிட்டிஷ் ஜனங்களின் மனதில் இந்தியர்கள்மீது தப்பான அபிப்பிராய முண்டாகும்படி செய்திருக்கிறார்கள் என்றும் இதற்குத் தகுந்தபடி இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தக் கொடிய சட்டத்தைப் பாஸ் செய்துவிட்டால் இந்தியர்களைக் கெட்டவர்கள் என்று பிரிட்டிஷ் ஜனங்கள் நினைக்கும்படியாக நேரிட்டு விடுமென்றும் ஆதலால் இந்த ஆக்ட்டால் அநேக தீங்குகள் நேரிடுமென்றும் கவர்ன்மெண்டார் இந்த மாதிரியான ஆக்ட் ஒன்றிருப்பது எவ்வளவு அவசியமானதென்று எண்ணினபோதிலும் இந்த ஆக்ட் பொது ஜனங்களின் மனஸ்தாபத்தைச் சம்பாதித்து கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்திருக்கிற தென்பதில் சந்தேகமில்லை என்றும் சொன்னார். இப்போது ஜனங்கள் செய்யும் முயற்சியை இன்ன தென்பதாக அறிந்து கொள்ளாமல் இராஜத்துரோகம் பரவி வருகிறதாகக் கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். ஆனால் அது இராஜத்துரோகமல்ல. இந்த தேச ஜனங்கள் தங்களுக்கு அரசாங்கத்தில் பற்றில்லாமலிருப்பதை உணர்ந்து இருபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தி காங்கிரஸ் முயற்சி செய்ய இந்த முயற்சி எல்லா மாகாணங்களிலும் பரவிக் கொண்டே வந்தது. இந்த சமயத்தில் வங்காள ஜன நோக்கத்திற்கு விரோதமாக வங்காளம் துண்டிக்கப் பட்டதும் ஸ்ரீராயைத் தேசப்பிரஷ்டம் செய்ததும், ஆங்கிலேயர்களுக்கும் இந்துக்களுக்கும் விரோதம் உண்டாக்க எத்தனித்த சிவில் மிலிட்டரி கெஜட்டைவிட்டு அதே குற்றத்தைச் செய்ததாக பஞ்சாபி பத்திரிகையைப் பிராசிக்யூட் செய்ததும், ஆகிய இந்த உபநதிகள் காங்கிரஸ் என்கிற பெரிய நதியில்போய் விழுந்து ஜலத்தைக் கலக்கும்படி அதாவது ஜனங்களுக்கு மிகுந்த அதிருப்தி உண்டாகும்படி செய்துவிட்டது. ஸ்ரீ ராய் என்ன! சாமானியரா? மிகுந்த நல்ல நடக்கையும், உயர்ந்த தெய்வ பக்தியும் பெரிய அந்தஸ்தும் பொருந்தி சகல ஜனங்களாலும் மதிக்கப்பட்டவர். இப்படிப்பட்ட இவர் செய்ததாகச் சொல்லப்படும் குற்றம் எவ்வளவு அபாரமானதாக விருந்த போதிலும் பட்டப் பகலில் செய்திருக்கக் கூடியதே

ஒழிய ரகசியமாய்ச் செய்யவில்லை. இப்படியிருக்க இப்படிப்பட்டவரை யாதொரு விசாரணையும் செய்யாமல் இருந்தாற்போலிருந்து தேசப்பிரஷ்டம் செய்வதென்றால் என்ன அற்ப சமாசாரமா? இதைக் கேள்விப்பட்டவுடன் ஜனங்கள் கற்கள்போல திகைப்படைந்து நின்று விட்டார்களே! வங்காளத்தாரும் சாமானியர்களல்ல. அவர்கள் இதரமாகாணத்தாருக்கு எந்த விஷயத்திலும் குருஸ்தானத்திலிருக்கப்பட்டவர்கள். வங்காளம் ஈன்ற டாக்டர் J. C போஸ் என்ன, டாக்டர் P. C. ராய் என்ன, நபேந்திரநாத் டாக்டர் என்ன, இப்படிப்பட்ட அரிய புத்திர சிகாமணிகளுக்குச் சமமாக இந்தியாவில் யாரையேனும் ஒப்பிடக்கூடுமோவென்றும், வங்காளத்தார் வீரகுணமுடையவர்களென்றும், இவர்களுடைய இஷ்டப்படி கவர்ன்மெண்டார் ஆக்ஷி செலுத்தாவிட்டால் அவர்கள் சமாதானப்படக் கூடியவர்களல்லவென்றும் அவர்கள் ஜெயிலைச் சட்டைசெய்யமாட்டார்கள் என்றும் சொன்னார். இந்த இரண்டு மாகாணத்தார்களும் கொண்டிருக்கும் அதிருப்தி, அனுதாப காரணமாக மற்ற மாகாணங்களுக்குப்பரவி தேசத்தில் கூர்மையான மனப்பதைப்பைக் கிளப்பி விட்டிருக்கிறது. இதில் பொருமை யற்ற சிலர் இந்த அரசாங்கமே வேண்டியதில்லை என்றும் சுய அரசாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் கக்ஷி பேசி பிரசங்கம் செய்து வருகின்றார்கள். இந்தப் பிரசங்கத்தையும் ஜனங்கள் கேட்டு சிறிது காதிற்கும் வாங்கிக்கொள்ளுகின்றார்கள் என்றும், இன்னும் கவர்ன்மெண்டார் மேலும் மேலும் கொடிய உபாயங்களையே ஆக்ஷி முறையில் உபயோகப்படுத்தி வந்தால் ஜனங்களுக்கு அதிக மனப்பதைப்புஉண்டாகி புதிய கக்ஷியாருடன் சேர்ந்து கொள்ளும்படியாக விருக்கும், கவர்ன்மெண்டாருக்கும் பெருங்கவலையை உண்டு பண்ணுமென்றும் விவரமாய் எடுத்துக் கூறினார். ஆதலால் புதிய கக்ஷியார் பிரசங்கத்தை ஜனங்கள் கேட்கவொட்டாமல் கவர்ன்மெண்டார் தடுப்பதற்கு உபாயமென்னவென்றால் ஆக்ஷி முறையில் அன்பைக்கலக்க வேண்டியதே தவிர மற்றப்படி வேறொரு ஏதுவாலும் முடியாது. வங்காளத்தையும் ஒன்று சேர்த்து, தேசப்பிரஷ்டம் செய்து வைக்கப்பட்டவர்களையும் கவர்ன்மெண்டார் விட்டுவிட்டால் தேசத்தில் அமரிக்கை பரவுமென்று சொன்னார். இந்த ஆக்ட் பாஸானால்போலிசார் அதிகாரத்தை துர்வினியோகப்படுத்தி வீட்டிற்குள் புகுந்து சுகதுக்கக் கொண்டாட்டங்களைக் கூட சின்னாபின்னம் செய்து பெரிய இடஞ்சல்களைச் செய்வார்களென்றும், இந்த ஆக்ட்டால் எண்ணிறந்த தீங்குகள் இத்தேசத்திற்கு உண்டாகப்போகிறதென்றும், இதைப்பாஸ்செய்விப்பது கொஞ்சங்கூட புத்திசாலித் தன்மையாக மாட்டாதென்றும், இந்த ஆக்ட்டைச் சீர்திருத்துவதெப்படி என்றால் இந்த ஆகட்டைப் பாஸ் செய்யாமல் விட்டுவிடுவதே தகுந்த சீர்திருத்தமென்றும்" சொல்லி முடித்தார். இதன் பிறகு ஆனரபில் டாக்டர் ஸ்ரீ ராஸ்விஹாரி கோஸ் பிரசங்க மாரி வருஷித்தனர். இந்த ஆக்ட்டைக் கவர்ன்மெண்டார் பாஸ் செய்தால் ஜனங்கள் நினைத்ததைப் பேச வொட்டாமல் வாயை அடக்கி இராஜத்துரோகத்தை மனதிலேயே சிந்தைசெய்யும்படி செய்து கவர்ன்மெண்டைச் சதிசெய்யும்படியான ரகசியமாக யோசனை செய்யும் கூட்டத்தாரை இத்தேசத்தில் உற்பத்திசெய்து விடுமென்று சொன்னார். ஜெர்மனி, பிரான்ஸ், ஆலண்டு, பெல்ஜியம் முதலிய தேசங்களில் அரசர்களையே கொல்லும்படியான ரகசியமான அரச சம்ஹாரக் கூட்டத்தார்களிருந்தும் அரசர்களைக் கொல்லுவது பாவமான கொலையாகமாட்டாதென்று கக்ஷி சொல்லிப் பிரசங்கம் செய்பவர்களிருந்தும், அத்தேசங்களில் கூட இம்மாதிரி ஜனங்களின் வாயைப் பொத்தும் சட்டத்தைக்காணோ மென்றும், முன் ஒரு சமயம் லண்டன் பட்டணத்தை இரண்டு நாள்வரையில் ஜனங்களே கூடி கலகம் செய்து முற்றுகை போட்டார்கள் என்றும், அப்போதுங் கூட அப்போதிருந்த இராஜ தந்திரிகள் இம்மாதிரி ஆக்ட் ஒன்று உற்பத்திசெய்யவேண்டியது அவசிய மென்று நினைத்ததில்லை என்றும், ஒருகால் இம்மாதிரி ஆக்ட்டு ருஷியாதேசச் சட்ட புத்தகத்திலிருக்கிறதோ என்னமோ நமக்குத் தெரியாதென்றும் சொன்னார். இந்த ஆக்ட் கவர்ன்மெண்டாருடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொடுக்க மாட்டாதென்றும் தேசத்தில் இராஜத் துரோகிகளை உண்டாக்கி விடுமென்றும், பொது அமரிக்கையைக் கெடுத்து விடுமென்றும், கவர்ன்மெண்டார் பிரஜைகளுக்குக் கத்தியைக் காட்டி பயமுறுத்தி ஆக்ஷி செலுத்தக்கூடாதென்றும் பாரம்பரியமான பிரிட்டிஷ் அன்பை ஆக்ஷி முறையில் பிரயோகப்படுத்தி ஆண்டுவர வேண்டுமென்றும் இந்த ஆக்ட் ஜனங்களின் தலையின்பேரில் கத்தி தொங்குவதுபோ லிருப்பதால் இந்த ஆக்ட்டிற்குத் தம்முடைய சம்மதத்தைக் கொடுக்க தமக்கு மனமில்லை என்றும், நவம்பர்௴ முதல்தேதி காலஞ்சென்ற மகாராணியார் இந்தியர்களுக்குரிமை கொடுத்து டில்லி நகரில் பயிரங்கப் பிரமாணப்பட்டயம் கொடுத்த தேதியான படியால் இந்தத் தேதியை இந்துக்கள் சந்தோஷகரமான தினமாகக் கொண்டாடுகிறது வழக்கமென்றும், அப்படிப்பட்ட தினத்தில் கவர்ன்மெண்டார் முக்கியமான ஜன சுதந்தரத்தைத் தலையிலடிக்கும்படியான இந்த ஆக்ட்டைப் பாஸ் செய்தது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிற தென்றும் சொல்லி முடித்தார். வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

ஸ்ரீ லாலா லஜபட்ராய் அவர்களின் விடுதலை.

கவர்ன்மெண்டாரால் தேசப் பிரஷ்டை செய்யப்பட்டு மாண்டிலே கோட்டையில் காராக்கிருஹத்தில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீ லாலா லஜபட்ராய் அவர்களையும் மிஸ்டர் அஜிட் சிங்கையும் நிகழ் நவம்பர் 15வ விடுதலை செய்துவிட்டார்கள். கவர்ன்மெ

டார் இவர்களை விடுவித்த சமாசாரத்தை உடனே பயிரங்கப் படுத்தாமல் ரகசியமாக வைத்திருந்தார்கள். மாண்டிலே கோட்டையிலிருந்து போலீஸ் பந்தோபஸ்து சகிதமாய் ரெங்கூன் ரெயில்வே ஸ்டேஷனாகிய பாசுடாங் ரெயில்வே ஸ்டேஷனில் ஸ்ரீ ராயும் மிஸ்டர் அஜிட்சிங்கும் வந்திறங்கும்போது இவர்களைப் பார்த்த "எம்பயர்" என்கிற பத்திரிகையின் நிருபர் இவர்களை வேறொரு ஊருக்குக் கொண்டு போகிறார்கள் என்று கல்கத்தாவிற்குத் தந்தி அடித்தார். கவர்னர் ஜனரல் லார்ட் மின்டோ அவர்கள் அந்த சமயம் பர்மாவிற்குச் சுற்றுப் பிரயாணம் சென்ற படியால் பர்மா ஜனங்கள் ஸ்ரீ ராயை விட்டு விடும்படி ஒருக்கால் மனு முதலியவைகள் செய்வார்களென்றும் இவைகளுக்கு இடம் கொடுக்காமல் அரசாங்கக் கைதிகளை வேறொரு விடத்தில் கொண்டுபோய் வைத்திருக்கும்படியாக உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதென்று "எம்பயர்" பத்திரிகையின் நிருபர் தந்தி அடித்தார். ரெங்கூன் ரேவு துறையில் இவர்களை ஏற்றிக்கொண்டு போன ஸ்டீமர் இன்ன திசையை நோக்கிப் போகிறதென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதபடி ஸ்டீமர் சென்றது. இரண்டு நாள் வரையில் இந்தியாவில் நிச்சயமான சமாசாரங்கள் தெரியவில்லை. ஸ்டீமர் ரெங்கூனுக்கும் கல்கத்தாவிற்கும் மத்தியிலிருக்கும்போது கவர்ன்மெண்டார் ஸ்ரீராய் அவர்களையும் மி-ர் அஜிட் சிங் அவர்களையும் விடுவித்து விட்டதாக பயிரங்கப் படுத்தினார்கள். இதன்பேரில் சமாசாரம் நிச்சயப்பட்டு மின்சார ஒளி போல் ஒரு க்ஷணத்தில் இமயகிரி பருவத முதல் கன்னியாகுமரி முனைவரையில் பரவி ஜனங்களை அகமகிழச் செய்தது. ஸ்ரீராய் அவர்களையும் மிஸ்டர் அஜிட் சிங்கையும் ஸ்டீமரிலும் ரயில் வண்டியிலும் முறையே முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு வண்டியில் சௌக்கியமாய்க் கொண்டுவந்தார்களென்றும் வழியில் சாப்பாட்டிற்கும் சிற்றுண்டிக்கும் யாதொரு குறைவின்றிக் கொண்டுவந்தார்களென்றும் இவர்களுடன் பந்தோபஸ்திற்காக வந்த போலீஸ் சூப்பரின்டெண்டு முதலிய போலீஸ்ஆபிசர்கள் இவர்களுக்கு மிகுந்த அன்பு காட்டினார்களென்றும் ஸ்ரீராய் அவர்களே ஒப்புக்கொள்ளுகின்றார். இவ்வளவு சமீபத்தில் விடுதலை உத்தரவு வரப்போகிறதை ஸ்ரீராய் அவர்களே எதிர் பார்க்கவில்லை. நிகழ்௴ 14௳ மாலையில் மாண்டிலே ஜெயில் சூப்பரின்டெண்டு ஸ்ரீ லாலா லஜபட்ராய அவர்கள் தங்கியிருந்த பங்களாவிற்கு வந்து அவரை விடுவிடுக்கும்படி தமக்கு உத்தரவு வந்திருப்பதாகவும் "இனிநீர் ராஜத்துரோகமான காரியங்களைச் செய்யக்கூடாது என்பதை உமக்குக் கவர்னர் ஜெனரல் எச்சரிக்கும்படியாகவும்" உத்தரவு அனுப்பியிருப்பதாகச் சொன்னார். இதற்கு ஸ்ரீராய் அவர்கள் "அது எனக்குத் தெரியுமென்று" பதில் கூறினார். இதன் பேரில் மூட்டைகளைக் கட்டிக்கொண்டு பிரயாணத்திற்குத் தயாராக விருக்கும்படி ஸ்ரீராய் அவர்களுக்குச் சொல்லிவிட்டு ஜெயில் சூபரின்டெண்டுபோய்விட்டாராம். போலீஸ்காரர்கள் இவர்கள் இருவரையும் லாகூர் ஜெயிலுக்குக்கொண்டுவந்து ஒப்புவித்துவிட்டுதிரும்பிப்போய்விட்டார்கள். ஸ்ரீராய் அவர்களுக்கு மரியாதை காட்டி அனுப்பும்படி கவர்ன்மெண்டார் செய்த உத்தரவை அனுசரித்து லாகூர் ஜெயில் சூபரின்டெண்டு ஸ்ரீராய் அவர்களை ஒரு உயர்ந்த புரூம் வண்டியில் ஏற்றி போலீஸ் சூபரின்டெண்டையும் கூட அனுப்பி அவருடைய பங்களாவில் கொண்டுபோய்விட்டு விடும்படியாக ஏற்பாடு செய்தனர். போலீஸ் சூபரின்டெண்டு குதிரைமேல் ஏறிக்கொண்டு முன்னும் ஸ்ரீராய் அவர்கள் புரூம் வண்டியி பின்னுமாக, ஜெயிலிலிருந்து புறப்பட்டு பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். வண்டி பங்களாவிற்குச் சமீபத்தில் வந்தவுடன் போலீஸ் சூபரின்டெண்டு ஸ்ரீராய் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு திரும்பி வந்து விட்டார். நிற்க, ஜெயில் சூபரின்டெண்டு மிஸ்டர் அஜிட் சிங்கை ஒரு டோங்கா வண்டியிலேற்றி இவர் எந்த விடத்திற்குப் போக வேண்டுமென்று சொல்லுகிறாரோ அந்த விடத்தில் கொண்டுபோய் விட்டு விடும்படியாக ஏற்பாடு செய்தார். ஆகவே இரண்டு தேசாபிமானிகளும் தேச நன்மைக்காகப் பாடுபட்டதில் துன்பமடைந்து 6 மாத காலம் காராக் கிருகத்திலிருந்து விடுதலை யடைந்து அவரவர்கள் கிருகத்திற்குவந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராய் அவர்களுக்கு நேரிட்ட கஷ்டத்தில் இந்தியா முழுதிலுமுள்ள ஜனங்கள் ஒரு மனதாய் அனுதாபப்பட்டு வந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீராய் அவர்களுக்கு நேரிட்ட கஷ்டம் அவருடைய தெய்வத்தையும் எண்ணத்தையும் எள்ளளவும் மாற்றி விடவில்லை. விடுதலை யடைந்து வீடு வந்து சேர்ந்த இரண்டு மூன்று தினத்திற்குள் அவர் பொது நன்மைக் காகப்பாடு படுவதற்கு ஆரம்பித்து விட்டார். லாகூரிலேயே அனேக மீட்டிங்குகளில் பேசியிருக்கின்றனர். இவ்வருஷம் நடந்தேறிய ஆரிய சமாஜ் வருஷாந்திரக் கூட்டத்திற்கு ஸ்ரீராய் அவர்களே சபா நாயகரா விருந்து அதை மிகுந்த கம்பீரத்துடன் நடத்தி வைத்தனர். சூரட் நகரில் அடுத்த டிசம்பர்௴த்தில் கூடப்போகிற காங்கிரஸ் மகா சபைக்கு வரப்போகின்றனர். இவர் விடுதலை அடைந்ததற்காக ஒரு நாள் நகரில் கொண்டாட்டம் நடத்த வேண்டுமென்று சூரட் நகரத்தார் ஏதேஷ்டபணம் சேகரித்துக்கொண்டு வருகின்றார்கள். ஸ்ரீராய் அவர்கள் இவ்வளவு கஷ்டமடைந்த பின்பும் இன்னும் தேச நன்மைக்காக தம்மிடம் சக்தி உள்ளவளவு பாடுபடத் தயாராக விருக்கின்றார் என்பது அவர் இந்நகர் ஸ்டாண்டர்ட் பத்திரிகைக்கு எழுதியிருக்கும் கடிதத்தால் நன்கு விளங்குகின்றது. நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் சந்தாதாரர்கள் அறிந்து கொள்ளும்படியாக அவர் எழுதி யிருக்கும் கடிதத்தை இவ்விடத்தில் பிரசுரிக்கின்றோம்:— நிற்க, ஸ்ரீராய் அவர்களிடம் நிபந்தனையான வாக்குத்தத்தம் வாங்காமல் கவர்ன்மெண்டார் விடுவித்திருப்பதைப் பார்த்தால் இவரை தேசப் பிரஷ்டை

செய்து வைத்ததைக் குறித்து கவர்ன்மெண்டார் தவறுதலான காரியமென்று நினைத்து பச்சாத் தாபப் படுகிறதாக நினைக்க வேண்டியதா யிருக்கின்றது. இவரை என்ன காரணத்திற்காக பயிரங்கமான விசாரணைக் குட்படுத்தாமல் தேசப் பிரஷ்டை செய்து வைத்திருக்கிறதென்று சீமை பார்லிமெண்டில் சர் என்ரி காட்டன், டாக்டர் ரதர்போர்ட், மி-ர் கேயர் ஹார்டியும் இன்னும், சில அங்கத்தினர்களும் கேள்வி கேட்டதற்கு இந்தியா காரியதரிசி சரியான காரணம் யாதொன்றும் சொல்லாமல் "ரகசியம்" "ரகசியம்" என்று சொல்லி காலத்தைக் கழித்துக் கொண்டு வந்து விட்டார். இவரைத் தேசப் பிரஷ்டை செய்வதற்குச் சிறிதும் காரணமில்லை. ஸ்ரீராய் அவர்கள் படித்த மேதாவி, சிறந்த லாயர், வேறான்றிய தேசாபிமானி, மிகுந்த தீர்க்காலோசனை உடையவர், நாளைக்குத் தமக்கு வரக்கூடிய விபத்தை அறியாமல் இன்று ஒரு காரியம் செய்யக்கூடியவரல்ல. இவர் செய்ததாகச் சொல்லும் குற்றம் வாஸ்தவமானதாகவும் ருஜுப்படுத்தக் கூடியதாகவு மிருந்தால் கவர்ன்மெண்டார் அந்தக் குற்றத்தை வெளிப்படையாகச் சொல்லாம லிருந்திருக்கமாட்டார்கள். கவர்ன்மெண்டார் இவர் செய்த குற்றத்தை இன்னதென்று 6 மாதகாலம் வரையில் வெளிப்படையாகச்சொல்லக்கூடாதா? இந்த ஒரு சந்தர்ப்பமே இவர் நிரபராதி என்று தீர்மானிப்பதற்குப் போதுமான காரணமா யிருக்கின்றது. சென்ற மே௴த்தில் "கலோனிசேஷன் ஆக்ட்" என்று ஒரு ஆக்ட்டைப் பாஸ் செய்விக்க ஷை மாகாணத்தின் கவர்னராகிய சர் டென்சில் இபர்ட்சன் பிரயத்தனம் செய்து கொண்டுவந்தார். இந்த ஆக்ட்டால் பாதிக்கப்படக்கூடிய ஜனங்களுக்குள் பட்டாளத்தில் சேவகம் செய்து பென்ஷன் பெற்றுக்கொண்டு சுகவாசம் செய்யும் அனேக சிப்பாய்களுமிருந்தார்கள். இவர்களுடைய புத்திரர்களும் பந்துக்களும் இன்னும் பட்டாளத்தில் சேவகம் செய்து வருகின்றபடியால் இவர்களுடைய ஆதரவின் பேரிலும் இந்தியா சேனாதிபதியாகிய லார்ட் கிட்ச்சனருடைய ஆதரவின் பேரிலும் லோக்கல் கவர்ன்மெண்டார் பாஸ் செய்விக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த ஆக்டை ஆக்ஷேபித்தார்கள். லெப்டினன்ட் கவர்னராகிய சர் டென்சில் இபர்ட்சன் பென்ஷன் பெற்றுக்கொள்ளுகிற சமயம். இந்த ஆக்ட்டால் ரூ. 45 லக்ஷம் வருஷம் ஒன்றுக்குக் கவர்ன்மெண்டிற்குக் கூடுதலாகும். சர் டென்சில் இபர்ட்சன் இந்த ஆக்ட்டைப் பாஸ் செய்வித்து கவர்ன்மெண்டிற்கு ஒரு பெருத்த வருமானத்தைக் காண்பித்து கௌரவப்பட்டம் சம்பாதித்துக் கொண்டு போகலாமென்று நினைத்தார். சர் டென்சில் இபர்ட்சன் இந்த ஆக்ட்டை தம்முடைய சட்ட சபையில் பாஸ் செய்வித்தும், இந்த ஆக்ட்டிற்குச் சம்மதம் கொடுத்தால் சுதேச சைனியத்தில் அதிருப்தி உண்டாகி விடுமென்று அஞ்சி இந்தியா கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட்டை ரத்து செய்துவிட்டார்கள். ஆகவே இதனால் சர் டென்சில் இபர்ட்சனுக்கு உண்டான ஆத்திரம் லாகூரில் மிகுந்த கௌரவமுடையவராகவும் ஷை பென்ஷன் சிப்பாய் கூடி ஆக்ட்டை ஆக்ஷேபித்த மீட்டிங்களுக்கு சில சமயம் சேர்மேனாகவுமிருந்த ஸ்ரீராய் அவர்கள் பேரிலும், சர்தார் ஆஜிட் சிங் பேரிலும் பாய்ந்தது. ஆதலால் இவர்கள் இருவரும் அரசாங்கத்தைச் சதி செய்ய யோசனை செய்து, வருகிறார்கள் என்றும் இவர்களை உடனே 1818-ம்௵த்திய ரெகுலேஷன் பிரகாரம் தேசப் பிரஷ்டை செய்யவேண்டுமென்றும் வைசிராயாகிய லார்ட் மின்டோவிற்குத் தந்தி அடிக்க, இவர் இந்தியா காரியதரிசிக்குத் தந்தி அடிக்க, இவர் சிறிதும் யோசனை செய்துபார்க்காமல் இவர்களைத் தேசப்பிரஷ்டை செய்யும்படியாக அனுமதி கொடுத்துவிட்டார். சீமைப் பார்லிமெண்டில் இவர்களைத் தேசப்பிரஷ்டை செய்ததற்குக் காரணம் சொல்லும்படியாக அங்கத்தினர்கள் கேள்வி கேட்கத் தலைப்பட்டபின் இந்தியா காரியதரிசி சர்டென்சில் இபர்ட்சனையே நேரில் தருவித்துக் கேட்டும் யாதொரு சரியானபதிலும் சொல்ல முடியவில்லை. ஸ்ரீராய் அவர்களை தேசப்பிரஷ்டை செய்தவுடன் சர் டென்சில் இபர்ட்சன் தம்முடைய முதுகில் உண்டாயிருக்கும் கொப்பளத்தை சீமைக்குப் போய் டாக்டர்களிடம் அறுத்துக்கொள்வதற்குப் போனதுபோல் ரஜா எடுத்துக்கொண்டுபோனார். ஆனால் அவர் சீமைக்குப் போனதற்கு அது காரணமல்ல வென்றும், ஸ்ரீராய் செய்த குற்றம் இன்னதென்று அறிந்து கொள்ளும் பொருட்டு இந்தியா காரியதரிசி சர் டென்சில் இபர்ட்சனைத் தருவித்ததாகவும் வங்காளத்தில் பிரசுரமாகும் தேசாபிமானப் பத்திரிகையாகிய அமிர்த பஜார் பத்திரிகை கூறுகின்றது. அது எப்படியிருந்தாலுமிருக்கட்டும். சர் டென்சில் இபர்ட்சன் பேச்சைக் கேட்டு லார்ட் மின்டோ மதி மோசம் போனார், லார்ட் மின்டோ பேச்சைக்கேட்டு இந்தியா மந்திரி மதி மோசம் போனார் என்று உள்ளங்கை நெல்லிக்கலிபோல் விளங்குகின்றது. இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக அதிகாரிகள் இம்மாதிரி அக்கிரமங்களைச் செய்வதற்கு 1818-ம்௵த்திய மூன்றுவது ரெகுலேஷன் தூண்டுதலாக விருக்கின்றது. இந்த ரெகுலேஷன் பிரிட்டிஷ் அரசாங்கம் பூர்த்தியாக ஸ்தாபிக்கப்படாத ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் காலத்தில் உண்டாக்கப்பட்டது. இது இன்னும் ரத்து செய்யப்படாமல் இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட புத்தகத்திலிருப்பது சமாயா சமயங்களில் பெரிய அபாயத்தை விளைவிக்கின்றது. ஆகையால் கவர்ன்மெண்டார் இந்த சட்டத்தைக் கூடிய சீக்கிரம் ரத்து செய்து விடவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஸ்ரீராய் அவர்கள் பஞ்சாப் தேசத்தில் சீப் கோர்ட்டில் லாயராகப் பிராக்ட்டிஸ் செய்துவருகின்றார். இவரைத் தேசப் பிரஷ்டை செய்த கடந்த மே௴த்தில் இவருடைய உருவப்படத்தையும் சரித்திரத்தையும் நம்முடைய மே௴ இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்து கொண்டாடினோம். இவர் விடுதலை அடைந்ததில் நமக்குப் சந்தோஷத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும்பொருட்டு

இப்போது அவருடைய உருவப்படத்தை அவரைப்போல் தேச நன்மைக்காகப் பாடுபட்டு காராக்கிருகத்திலிருந்த ஸ்ரீ பாலகங்காதரதிலகர், ஸ்ரீ விபன சந்திர பாலர் உருவங்கள் சகிதமாய் இப்போது பிரசுரித்திருக்கிறோம்:—வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

PROCEEDINGS OF THE BOARD OF REVENUE.

ரெவினியூ போர்டாரவர்களுடைய புரோசீடிங்ஸ்.

1907ஞு ஜூலைமீ 2வ-யுள்ள செப்ரேட் ரிவினியூ ந. 155/1470-R. மிஸ்.

பிரெசிடென்ஸியிலுள்ள பல பிராவிடெண்டு கம்பேனி கொடுக்கப்பட்டிருக்கும் மெம்பர் பட்டாக்கள் சரியானபடி ஸ்டாம்பு செய்யப்படவில்லையென்று போர்டார் அவர்கள் கோட்டீஸுக்கு வந்திருப்பதால் 1899ஞு த்திய 11-வது ஆக்ட்டாகிய இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட்டு 1-வது ஷிடியூல் 47-D. ஆர்டிகில்படி ஷை பட்டாக்கள் அல்லது செர்டிபி கேட்டுகள் "லைப் இன்ஷியூரன்ஸ் பாலிஸிகள்" போல கிரமமாக ஸ்டாம்பு செய்யப்படவேண்டுமென்றும் சட்டத்தின் நிபந்தனைப்படி நடத்தவருவது ஷை ஆக்ட்டின் 66-வது பிரிவுப்படி குற்றமாகுமென்றும் இதனல் பிரசுரம் செய்யப்படுகிறது.

திருச்சிஞப்பள்ளி ஜில்லா கலெக்ட்டர் உத்தரவு.

ரிமிஷன்.

1907-ஞு அக்டோபர்மீ 13வ-யுள்ள 311-ந. போர்டு புரோசிடிங்ஸ் (செட்டில்மெண்டு) ரெவரென்ஸ்.

பாய்ச்சலாதாரத்தில் போதுமான ஜலசப்ளை இல்லாததால் ஒரு போகம் நஞ்சை நிலத்தின் ஓர் பாகம் தரிசாக விடப்பட்டும் மற்ருேர் பாகத்தில் புஞ்சை சாகுபடி செய்யப்பட்டு அதற்கு சர்க்கார் ஜலம் பாய்ச்சப்பட்டும் இருக்கிற விஷயத்தில்,

(1) சாகுபடிசெய்த பாகத்திற்கும் தரிசு பாகத்திற்கும் ஆக இரண்டிற்கும் புஞ்சைத் தீர்வையும் நீர்க் கூலியும் ஏற்படுத்துகிறதா,

அல்லது

(2) முழு புலத்திற்கும் புஞ்சைத் தீர்வையும் சாகுபடியான பாகத்திற்குமட்டும் நீர்க்கூலியும் ஏற்படுத்துகிறதாவென்பதைப்பற்றி யோசித்ததில்.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 13-ந. படிக்கு பூரு புலங்களுக்குமட்டும் தீர்வை வஜா கொடுக்க வேண்டியதாகையால் நஞ்சைத் தீர்வை வீதத்திற்கும் முழுபுலத்தின் தண்ணீர் தீர்வையுள்பட புஞ்சை தாரணைக்குமுள்ள வித்தியாசத்தை வஜா செய்து கொடுப்பது சரியென்பதாக போர்டாரவர்கள் உத்தரவு செய்திருக்கிருர்கள். அதாவது புஞ்சைத் தீர்வையும் சாகுபடியான பாகத்திற்கும் தரிசு பாகத்திற்குமாக இரண்டு பாகத்திற்கும் தண்ணீர் தீர்வையும் வசூல் செய்யவேண்டியது.

ரிவினியூ போர்டாரவர்கள் தமது 1907-ஞு ஆகஸ்டுமீ 5வ-யுள்ள 220-L. R. ந. உத்தரவில் சர்க்கார் நிலத்தின் பேரில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளைக் குறித்துள்ள பி. மிமோராண்டங்கள் 5-வருஷம் கிரமித்து ஒழிக்கப்படவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிருர்கள். ஆனபோதிலும் ஆபீசர்களுக்கு ஏதாவது முக்கியமாயுள்ள ரிகார்டுகளை அதைவிட நீண்ட காலத்திற்கு வைத்திருக்க அதிகாரமுண்டு.

தென் ஆர்க்காடு ஜில்லாக் கலெக்ட்டர் செய்திருக்கும் உத்தரவு.

ஒருபோக நஞ்சை நிலத்தில் நஞ்சை சாகுபடி செய்ய பாய்ச்சலாதாரத்தில் போதுமான ஜலமில்லாததினல், ஆண்டாக ஜலம்பாய்ச்சி புஞ்சை சாகுபடி செய்து மீதிபாகத்தை தரிசாக விட்டிருந்தால், நஞ்சை தீர்வைக்கும் பூரா கேதின் பேரிலுள்ள நீர் கூலியுள்பட புஞ்சை தீர்வைக்கும் உள்ள வித்தியாசத்தை வஜாசெய்ய வேண்டியது. தீர்வை கம்மி ரிமிஷனுக்காக வாஸ்தவத்தில் சாகுபடியான பாகத்தின் பேரிலுள்ள நீர்க்கூலியை மட்டில் கணக்கிடும் வழக்கத்தை இனி விட்டுவிட வேண்டியது.

1907-ம்ஞு செப்டம்பர்மீ 7வ- உள்ள ந. 1585 ஜுடிஷியல் உத்தரவு.

சில ஜில்லாக்களில் பலிகொடுக்கும் காலத்தில் பிராணிகள் அசாதாரணமாயும், அனவசியமாயும், குரூரமான மாதிரியாய் கொல்லப்படுவதாக கவர்ன்மெண்டாருக்குத்தெரிய வருகிறது. சில சந்தர்ப்பங்களில் பலிக்கிரியை விதிப்படி பலி ஒரு மாதிரியாய் கொடுக்கப்படவேண்டியதென்று காணப்படுகிறது. ஆனல் பெரும்பாலும் பலி கொடுக்கப்படும் பிராணியைக்கொல்வதே அந்த கிரியைக்கு முக்கியபாகமாக கவர்ன்மெண்டார்கள் அறிகிருர்கள். ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் பலி கொடுக்கப்படும் பிராணிகளுக்கு அனவசியமாய் அவஸ்தை செய்யப்படுவதை அங்கீகரிக்கவில்லை என்பதைத்தெரிவிப்பதுடன் அப்படி நடத்தப்படுமிடங்களில் கூடியவரையிலதைத் தடுப்பதற்காக முயற்சி எடுத்துக்கொள்வதில் ஜனங்களுடைய மனப்பூர்த்தியான ஒத்தாசை கிடைக்குமென்று நம்புகிருர்கள்.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு.

(24—11—07.)

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்ரோ.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

கேசின் விபரம் :—1904-வது ஞுத்திய 3-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் நகர் முனிசிபாலிடி ஆக்ட் 150-வது பிரிவின்படி சென்னப்பட்டணம் முனிசிபாலிடியார் டிராம்வண்டிக்குப் பின்னல் கோர்க்கப்படும் டிராம் வண்டிகளின் மீதும் வரிபோட்டார்கள். டிராம் கம்பெனிக்காரர்கள், பின்னல் கோர்க்கப்படும் வண்டிகளில் மின்சார வல்லமை உடைத்தாயிராமல், மின்சார வல்லமை உடைத்தாயிருக்கிற முன்வண்டிகளால் இழுக்கப்படுகிறபடியால் பின்னல் கோர்க்கப்படும் டிராம் வண்டிகளுக்குவரிபோடக் கூடாதென்று ஆக்ஷேபித்து போலிஸ் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். போலிஸ் கோர்ட்டில் நடந்த விசாரணை நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் ஏற்கனவே பிரசுரித்திருக்கிருேம். போலிஸ் கோர்ட்டார் இது விஷயமாக யாதொரு நிச்சயமான முடிவு செய்யக் கூடாமல் இந்தக்கேசை ஹைக்கோர்ட்டிற்கு ரிபர் செய்தார்கள்.

லாயர்கள் :—மெஸர்ஸ் டேவிட் பிரைட் வெல் என்கிற சொலிஸிட்டர் கம்பெனியாருடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் E. R. ஆஸ்பரன் டிராம் கம்பெனியூர் தரப்பிற்கும், வக்கீல் மிஸ்டர் P. R. சுந்திரமய்யர் முனிசிபாலிடியார் தரப்பிற்கும் ஆஜரானர்கள்.

தீர்ப்பு :—ஓடும் ஒவ்வொரு வண்டியும் தன்னிடத்தில் மின்சார வல்லமை உடைத்தாயிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அப்படி மின்சார வல்லமை பொருந்தியிருந்தால்தான் வரி போடுகிறதென்று எண்ணி வரி போட்டால் முதல் வண்டிக்குக்கூட வரி போடக்கூடாது. ஏனெனில் அந்த வண்டியில் கூட மின்சார வல்லமை யில்லை. மின்சார வல்லமை (Electric Power) வேருெரு இடத்தில் உண்டாகி முதல் வண்டிக்கு ஓடுகிறது. ஆதலால் இரண்டு வண்டிகளும் மின்சார வல்லமையால் ஓடுகின்றபடியால் பின்னல் கோர்க்கப்படுகிற வண்டிக்கும் முனிசிபாலிடியார் வரி போட்டிருப்பது நியாயமாக இருக்கின்றது, என்று சொல்லி அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

பாஷாணமிட்டு கொலை செய்த கேஸ்.

கைதி :—சக்கம்மாள்.

கேசின் விபரம் :—இந்தக் கிரிமினல் அப்பீல் கேஸ் பல்லாரி ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறது. சுமார் 5, 6, வயதுடைய 6 பெண் குழந்தைகள் ஒரு கிணற்றினருகில் நின்று கொண்டிருந்தார்கள். கைதி அவர்களுக்கு சர்க்கரை கொடுத்தனள். குழந்தைகள் அதைச் சாப்பிட்டுவிட்டு கசப்பாயிருக்கிறதென்று சொல்ல அவர்களுக்கு இனிப்பு கொடுக்கும்படியாக பனைவெல்லம் கொடுத்ததாகவும், இதைச்சாப்பிட்டபின் குழந்தைகளுக்கு உடனே வாந்தியும் மயக்கமும் உண்டானதாகவும், மற்றகுழந்தைகளும் வீட்டிற்கு ஓடிப்போய் விட்டதென்றும், 6-வயதுடைய ரங்கம்மாள் என்கிற குழந்தை மட்டிலும் திடீரென்று பூமியில் விழுந்து இறந்துபோய் விட்டதென்றும், ஆகவே கைதியின்பேரில் கொலைக்குற்றத்திற்காவது அல்லது அலக்ஷியமான செய்கையால் மரணம் உண்டுபண்ணின குற்றத்திற்காவது குற்றம் சாட்டப்பட்டு பல்லாரிசெஷன்ஸ் கோர்ட்டிற்கு கமிட் செய்யப்பட்டனள். கைதிபாஷாணமிட்டுக் கொலைசெய்வதற்கு காரணம் அதாவது அவளுடைய எண்ணம் இன்னதென்று ருஜுப்படாமற் போனதால் அலக்ஷியமான செய்கையால் மரணம் உண்டு பண்ணின குற்றம் அவள்பேரில் ஸ்தாபித்து செஷன்ஸ்கோர்ட்டார் அவளுக்கு இரண்டு வருஷ கடின காவல் விதித்தார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக கைதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டனள்.

பாரிஸ்டர் மிஸ்டர் A. S. கவ்டல் கைதி தரப்பிற்கும் கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூடரும் பேசினர்கள்.

கைதி லாயர் பேசினது :—கிராம முனிஸிப் அனுப்பிய முதல் ரிப்போர்ட்டில் கைதி முதலில் குழந்தைகளுக்கு சர்க்கரை கொடுத்ததாகச் சொல்லப்படவில்லை. குழந்தைகள் வலிப்புகண்டு வாந்தி எடுத்து இழுத்துக் கொண்டிருக்கிறதாக பெற்ருேர்கள் நினைத்து அவர்களுக்கு தலையிலும் முதுகிலும் சூடுபோட்டிருக்கிருர்கள். பிரேத பரிசோதனையில் வயிற்றுக்குள்ளிருக்கும் இரைப்பையை எடுத்து சென்னப்பட்டணம் கெமிக்ல் எக்சாமினருக்கு அனுப்பியதில் அவர் சிறிது பாஷாணச் சின்னமிருப்பதாக ரிப்போர்ட் அனுப்பியிருக்கிருர். கிராம வைத்தியர்கள் மருந்தில் துளி பாஷாணம் சேர்த்துக் கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. அதுபோல இறந்துபோன பெண் வாந்தி எடுக்க ஆரம்பித்தவுடன் பெற்ருேர்கள் வைத்தியர்களை அழைத்துக் கொண்டுவந்து மருந்து கொடுக்கும்படி செய்தார்கள். ஒருக்கால் இரைப்பையில் காணப்படும் பாஷாணச் சின்னங்கள் ஷை வைத்தியர்களின் மருந்துகளில் கலக்கப்பட்டிருந்த பாஷாணத்தின் சின்னமாகவுமிருக்கக்கூடும். மேலும் இந்த குழந்தைகளுக்கு கைதி பாஷாணம் கொடுத்துக் கொல்லும்படியான அவ்வளவு கெட்ட எண்ணம் அவளுக்குண்டாகும் படியாக குழந்தைகளின் பெற்ருேர்களுக்கும் கைதிக்கும் யாதொரு மனஸ்தாபமாவது அல்லது விரோதமாவ திருந்ததில்லை என்றும் ருஜுப்பட்டிருக்கிறது. மேலும் குழந்தைகள் வாந்தி எடுத்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவர்கள் சொஸ்தப் படும்படியாக கைதி அநேக பக்குவங்களையும் சொல்லி அவர்கள் சொஸ்தமடையும் விஷயத்தில் உள்ளபடி கவலை காட்டியும் வந்தனளென்று ருஜுப்பட்டிருக்கின்றது. ஆகையால் கைதி நிரபராதி என்றும் அவளை விடுவித்து விடவேண்டுமென்றும் பேசி முடித்தனர்.

தீர்ப்பு :—கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூடர் வாதித்ததைக் கோர்ட்டார் கேட்டுக் கொண்டு கைதி குற்றம் செய்திருக்கிருள் என்று நிச்சயமாகத் தீர்மானிக்கிறதற்கு போதுமான சாக்ஷியமில்லாதபடியால் அவளை விடுவிக்கும்படியாக உத்தரவு செய்து தீர்ப்பு சொன்னர்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

தீவட்டிக் கொள்ளைக் கேஸ்.

(28—10—07.)

கேசின் விபரம் :—இந்தக் கிரிமினல் அப்பீல் கிருஷ்ணா ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறது. 1, 2, 3, பிராசிக்கியூஷன் சாக்ஷிகள் ஒரு நாள் காலையில் 4 மணிக்கு எழுந்திருந்து தங்களுடைய கிராமமாகிய காம வரப்பு கோட்டையிலிருந்து ஜார ரெட்டி குடம் என்கிற கிராமத்திற்குச் சென்றார்கள். ஒரு மைலில் சென்றவுடன் 5 திருடர்கள் வந்து இவர்களை எதிர்த்து அடித்து இவர்கள் வைத்திருந்த மூட்டைகளைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். கொள்ளை கொடுத்தவர்கள் உடனே போலிசாருக்கு ரிப்போர்ட் செய்ய போலிசாரும் ஷை. சாக்ஷிகளும் ஒரு கிராமத்திற்குச் சென்று இந்தக் கேசின் கைதிகளாகிய மகா லக்ஷ்முகாடு வகையறுவை கைதிசெய்து அவர்களுடையும் வீடுகளையும் பரிசோதனை செய்தார்கள். பரிசோதனை செய்ததில் திருட்டுத் தடயம் ஒன்றும் அகப்படவில்லை. ஆகவே போலிசார் கைதிகளை அப்போது விட்டுவிட்டார்கள். நாலைந்து தினங்கள் சென்று போலிசார் திருடர்களைத் தேடித்திரிந்து கொண்டிருக்கும்போது இதே திருடர்கள் ஒரு குதத்துச் செடியின் மறைவிலிருந்து புறப்பட்டதைக் கண்டு போலிசார் சந்தேகப்பட்டு அரஸ்ட் செய்து கேட்டதில் அவர்கள் போலிசாரை ஒரு நதியின் கரைக்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு பள்ளத்தில் தாங்கள் புதைத்து வைத்திருந்த ஒரு வேஷ்டி மூட்டையையும் ரூ. 44 கையும் எடுத்துக்கொடுத்தார்கள். பறி கொடுத்தவர்களும் ஷை மூட்டையிலிருந்த வேஷ்டிகள் தங்களுடைய தென்று ஒப்புக்கொண்டார்கள். இந்தக் கேஸ் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டபோது அஸெஸர்கள் கைதிகள் குற்றவாளிகளல்ல வென்று அபிப்பிராயம் கூறினார்கள். ஜட்ஜி கைதிகள் குற்றவாளி என்று அபிப்பிராயப்பட்டார். இந்தப் பேதப்பட்ட அபிப்பிராயத்தை முன்னிட்டு செஷன்ஸ் கோர்ட்டார் இந்தக் கேசை ஹைக்கோர்ட்டிற்கு ரிபர் செய்தார்கள்.

தீர்ப்பு :—ஹைக்கோர்ட்டார் இந்தக் கேசின் கட்டுகளைத் தருவித்துப் பரிசீலனை செய்து பார்த்து கைதிகள் பேரில் தீவட்டிக் கொள்ளைக் குற்றம் ஸ்தாபித்து ஐந்து கைதிகள் ஒவ்வொருவருக்கும் 5 வருஷ கடின காவல் தண்டனை விதித்து தீர்ப்பு சொன்னார்கள்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்

நம்பிக்கை மோச சம்பந்தமான மூன்று தனித்தனி குற்றங்களுக்கும், கணக்கு மோசடி சம்பந்தமான மூன்று தனித்தனி குற்றங்களுக்கும் சேர்த்தாற்போல் ஒரு குற்றவாளியை விசாரணை செய்வது சட்டவிரோதமென்று சென்னப்பட்டணம் ஹைக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். நம்பிக்கை மோசக்குற்றமும் கணக்கைப்புறட்டி எழுதும் குற்றமும் ஒன்றுதான் என்று சொல்லப்படுவது சாத்தியப்படாதாகையால் கி. பு. கோ. 244 - வது பிரிவு பொருந்தமாட்டாது. இந்த இரண்டுவித குற்றங்களும் ஒரே விவகாரத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லக்கூடாததாயிருக்கிறபடியால் கி. பு. கோ. 255-வது பிரிவும்பொருந்தாது. பன்னிரண்டு மாதத்திற்குள் தொடர்ந்தேர்த்தியாக சிலுசிலாவாக மோசம் செய்யப்பட்ட மொத்தத் தொகையை ஒரு குற்றமாகப் பாவித்து ஒரு குற்றவாளியை ஒரே சமயத்தில் விசாரணைசெய்யலாமென்று கி. பு. கோ. 222-வது பிரிவில் சொல்லப்பட்டிருந்த போதிலும் ஷை தொகை சம்பந்தமாகச் செய்யப்பட்ட செய்கைகள் ஒரே விவகாரத்தில் செய்யப்பட்ட செய்கைகள் என்று எண்ணவேண்டுமென்பது கி. பு. கோ. 235-வது பிரிவின்படி அவசியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கி. பு. கோ. 488-வது பிரிவில் 4-வது கிளாசில் சொல்லப்பட்டிருக்கிற " Living in adultery " (விபசாரத்தால் வசிப்பது) என்கிற பதங்களுக்கு ஒரு தடவை சோரம்போனாலும் விபசாரத்தால் வசிப்பதாக மாட்டாது. ஆகையால் ஒரு பெண்சாதிக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஜீவனாம்ஸத்தை ரத்துசெய்யவேண்டுமென்றால் அவள் விபசாரம் செய்து ஜீவனம் செய்து வருகின்றாள் என்று புருஷன் ருஜுப்படுத்தவேண்டும். ஏதோ அவள் ஒரு சமயத்தில் சோரம் போயிருப்பது அவளுடைய ஜீவனாம்ஸத்தை ரத்து செய்யக்கூடிய போதுமான காரணமாக மாட்டாது என்று ஜஸ்டிஸ் மிஸ்டர் பென்சனும், மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிசும் கூடிய சென்னப்பட்டணம் ஹைக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி. 30 சென். 332.

ஒரு மாஜிஸ்டிரேட்டின் அதிகாரத்தைப்பற்றிப் பேசும் பிரிவு கி. பு. கோ. 145-வது பிரிவின் 1-வது உட்பிரிவுமட்டிலுமல்ல. அதே பிரிவில் இன்னும் சில நிபந்தனைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனையைமீறி மாஜிஸ்டிரேட் ஏதேனும் செய்வாராகில் அது விஷயத்தில் ஹைக்கோர்ட்டார் பிரவேசிப்பதற்கு அதிகாரமிருக்கின்றது. கக்ஷிக்காரர்களிடமிருந்து எழுத்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டு அதைப்பற்றி சாக்ஷி விசாரணை செய்யாமல் மாஜிஸ்டிரேட் உத்தரவு செய்ததை கல்கத்தா ஹைக்கோர்ட்டார் ரத்துசெய்து அப்படி உத்தரவு செய்வதற்கு மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரமில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள்—இ. லா. ரி. 34-கல். 840.

PLAGUE.

பிளேக் என்னும் மஹாமாரி.

பிளேக் என்னும் மஹாமாரி இத்தேசத்தில் தோன்றி ஏறக்குறைய 12-வருஷங்களாகியும் அது கவர்ன்மெண்டார் மனதை இப்போது கவலை சமுத்திரத்தில் ஆழ்த்தியிருப்பதுபோல எந்தக்காலத்திலும் ஆழ்த்தினதில்லை. இப்போது இத்தேசத்தின் வட பிராந்தியங்களில் பல விடங்களில் பரவி வருகின்றது. சென்னை இராஜதானியில் பெங்களூரிலும் சேலம் ஜில்லாவிலும் கோயம்புத்தூரிலும் இதற்கு முன் பிளேக் நோய் பரவிவந்தபோதிலும் இப்போது சென்னைக்குச் சமீபத்திலுள்ள பூந்தமல்லிக்கும் வந்திருக்கிறது. ஆயினும் கவர்ன்மெண்டாருடைய தீவிர ஏற்பாடுகளால் பூந்தமல்லியில் அதிக சேதம் ஏற்படுவதற்கு ஏதுகரமில்லை. பிளேக் இத்தேசத்தில் மும்மரமாகப் பரவிவரும் இச்சமயத்தில் பத்திராதிபர்கள் பிளேக் வியாதியைப் பரவ வொட்டாமல் தடுப்பதற்கு கவர்ன்மெண்டார் செய்யும் உபாயங்களை, தங்களுடைய பத்திரிகைகளில் எடுத்து எழுதவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்டாரும் சர்க்குலர்கள் அனுப்பியிருப்பதால் கவர்ன்மெண்டார் பிரசுரஞ் செய்திருக்கும் அடியிற்கண்ட விளம்பரத்தை நம்முடைய கெஜெட்டில் பிரசுரிக்கலாயிற்று.

பிளேக் என்னும் மஹாமாரி.

மெத்தவும் கொடுமையான தொத்து வியாதிகளுக்குள் இதுவொன்றாகும். இந்த வியாதிகண்ட வெகு சொற்ப காலத்துக்குள்ளாகவே இதன் முடிவு ஏற்படுகிறது; இதனால் அநேகர் செத்துப்போகிறார்கள். நல்ல வேளையாய் இது சீக்கிரமாகப் பரவுகிறதில்லை; ஆகவே, தகுந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச்செய்தால் இதைத்தடுத்துவிடக்கூடும். ஆனால், இந்த ஏற்பாடுகளைப் பூர்த்தியாய் நிறைவேற்றிவிட்டால் விசேஷ ஜீவ நஷ்டமும் வியாபார நஷ்டமும் நேரிடலாம். தடுப்பதற்கான ஏற்பாடுகளை அனுசரிப்பதுதான் இந்த வியாதிக்கு எதிரிடையாகச் செய்யக்கூடிய காரியமாகும்; இந்த வியாதியானது அக்கம்பக்கத்தில் கண்டவுடனே ஷை ஏற்பாடுகளை அனுசரிக்கவேண்டும்.

வாஸ்தவத்தில் மஹாமாரியானது எலிகளுக்குக்காணும் ஒரு வியாதியாகும்; ஆகவே, அந்த எலிகளை அழித்துவிடக்கூடுமானால் ஷை வியாதியானது மனிதர்களுக்குக் காணாது. அந்த வியாதி எலிகளுக்குள் பரவி, தெள்ளுப்பூச்சிகள் மூலமாக எலிகளினின்றும் மனிதர்களுக்குப் பரவுகிறது; தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர்கள் மூலமாகவாவது எலிகள் மூலமாகவாவது அந்த வியாதி சம்பந்தத்துக்குட்பட்ட தெள்ளுப்பூச்சிகள் இருக்கும் வஸ்துக்கள் மூலமாகவாவது ஷை வியாதி ஒரு தூரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்குப் பரவுகிறது. யாதொரு பிரதேசமானது மஹாமாரி சம்பந்தத்துக்குட்பட்டால், அந்த வியாதியானது முதலில் எலிகளுக்குக் காண்கிறது; இதை அங்கே செத்த எலிகள் விசேஷமாய்க் கிடப்பதனால் தெரிந்துகொள்ளலாம். தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்பட்ட எலித் தெள்ளுப்பூச்சிகள் அங்கேயுள்ள ஜனங்களின் இரத்தத்தைக்குடித்து அவர்களுக்கு இந்த வியாதியை உண்டாக்கிவிடுகின்றது.

குறிகள்.

தசிரகோளங்கள் (Glands) - நுரையீரல் - இரத்தம் ஆகிய இவைகளில் எது பெரும்பாலும் பாதிக்கப்படுகிறதோ அதற்குத்தக்கபடி மஹாமாரி வியாதியானது மனிதர்களுக்கு மூன்றுவிதமாகக் காண்பது வழக்கம். இந்த வியாதியின் ஆரம்பத்திலே, திடீரென்று நேரிடும் தேகநடுக்கமும்-தலைநோயும்-தலைச்சுற்றலும்-வாந்தியும்-தள்ளாடி நடக்கும் நடையும்-குடி வெறித்தோற்றமும் - அதன் பிறகு உறக்கமும் பெரும்பாலும் உண்டாகின்றன; வெளுவெளுப்பான முகமும் சிவந்த கண்களும் மந்தப்பார்வையும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல சக்தியற்றிருப்பது அல்லது மறப்பதும் சாதாரண குறிகளாகும். வியாதியஸ்தருக்கு விடாமல் விசேஷமாக ஜுரங்காய்ந்து அதோடு நோக்காடும் இருப்பது வழக்கம்.

(1) தசிரகோளங்கள் பாதிக்கப்பட்டால், கழுத்து - அக்குள் - அல்லது அரையிலே வீக்கங்கண்டு அதனால் நோயுண்டாவதோடுகூட, சிலசமயங்களில் மூக்கிலிருந்தாவது வாயிலிருந்தாவது குடலிலிருந்தாவது இரத்தம் வந்து, இழுப்பு-புத்தி தடுமாற்றம்-உணர்ச்சியின்மை ஆகிய இவைகளும் உண்டாகின்றன.

(2) நுரையீரல் பாதிக்கப்பட்டால், இருமல்-மூச்சுவிடும்போது கஷ்டம் - இரத்தங்கலங்க கோழை உமிழ்தல் ஆகிய இவைகள் உண்டாகின்றன; இந்தக் குறிகளினால் நுரையீரல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்துகொள்ளலாம்.

(3) இரத்தம் பாதிக்கப்பட்டால், நரம்புகள் தளர்ச்சியடைந்துபோய் அமைதியின்மையும்-விரைவாய் மூச்சுவிடுவதும் புத்திதடுமாற்றமும்-உணர்ச்சியின்மையும் உண்டாகின்றன; இதனால் சீக்கிரத்தில் மரணம் நேரிடுகிறது

மஹாமாரியானது பெருவாரியாய்க் கண்டிக்குரும்போது,

(1) வயது சென்றவர்களுக்குள்ளே சொற்ப ஜுரங்கண்டு இரத்தாசயத்தின் வேலை நின்றுவிடுவது காரணமாகவும்,

(2) குழந்தைகளுக்குள்ளே இழுப்பு காணுவது காரணமாகவும்,

(3) கர்ப்பஸ்திரீகளுக்குள்ளே கர்ப்பச்சிதைவு காரணமாகவும்,

திடீரென்று மரணம் நேரிட்டால், அது சாதாரணமாக மஹாமாரியால் நேரிட்ட மரணமாகும். அப்படிப்பட்ட சகல விஷயங்களிலும் ஜாக்கிரதையாக விசாரணைசெய்து அவசியமானால் சரியான மஹாமாரி வியாதியின் விஷயத்திலே முன்னெச்சரிக்கையான என்ன ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமோ அதே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

வைத்தியர் வருகிறவரையிலே செய்யவேண்டிய சிகிச்சை.

வியாதியஸ்தரை வீட்டிலுள்ள மற்றவர்களினின்றும் பிரித்து ஒரு தனியான அறை அல்லது கட்டடத்திலே வைத்திருக்கவேண்டும்; ஷை அறை அல்லது கட்டடத்துக்குள் சாத்தியப்பட்டமட்டில் சூரியவெளிச்சமும் காற்றும் வரும்படியான ஏற்பாடு செய்யவேண்டும். வியாதியஸ்தரையும் அறையையும் வெகு சுத்தமாக வைத்திருக்கவேண்டும்; தரையையும் சுவர்களையும் மேசை நாற்காலி முதலிய சாமான்களையும் கெரொஸின் எண்ணெய் எமல்ஷன் என்னும் கலப்பைக்கொண்டு பிரதிதினமும் கழுவவேண்டும். (இந்த எமல்ஷன் தயார் செய்வதற்கான முறைக்காக, அடிக்குறிப்பைப்பார்க்க)

நுரையீரல் பாதிக்கப்பட்டால், வியாதியஸ்தர் இருக்கும் அறையிலிருந்து கொண்டுவரப்படும் ஒவ்வொரு வஸ்துவுனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதற்காக, கரோஸிவ் ஸப்ளிமேட் (corrosive sublimate) அல்லது ஸில்லின் (cyllin) கலப்புத்திரவத்தை உபயோகிக்கவேண்டும். படுக்கைகளையும் உடுப்புகளையும் தோய்ப்பதற்குமுன்னே அவைகளை ஸில்லின் கலப்புத்திரவத்தில் நனைத்தெடுக்கவேண்டும்.

வியாதியஸ்தரைப் படுக்கவைத்திருக்கவேண்டுமேயல்லாமல் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும்படியாகவோ அப்படியும் இப்படியும் அசைந்துகொண்டிருக்கும்படியாகவோ விடக்கூடாது. அந்தப்படி விடாமல் வைத்திருந்தால் இரத்தாசயத்தின் வேலை நின்றுபோகாமலிருப்பதோடுங்கூட சகல அவயவங்களும் திடீரென்று ஒடுங்கிப்போகாமலும் இருக்கும்; மேலேகண்டபடி இரத்தாசயத்தின் வேலை நின்றுவிடுவதும் சகல அவயவங்களும் திடீரென்று ஒடுங்கிப்போவதும் (இந்த வியாதியில்) மெத்தவும் சகஜமாயிருக்கின்றன. மலம் போவதற்காக ஒருதடவை கொடுக்கவேண்டிய அளவுக்கு மருந்து கொடுக்கவேண்டும். ஆரம்பத்திலிருந்து உத்தீபன மருந்துகள் கொடுத்துவரவேண்டும்; இவைகளோடுகூட குளிர்ச்சியைத்தரத்தக்க பானங்களும் கொடுக்கவேண்டும்; தலையில் ஐஸ் (பனிக்கட்டி) கட்டவேண்டும்; ஜ்வரத்தைக் குறைப்பதற்காக கடற்பஞ்சென்று வழங்குகிற ஸ்பஞ்சைக் குளிர்ச்சியான நீரில் தோய்த்து (தேகத்தின் மேல்) துடைத்துவரவேண்டும்; ஆனால், ஆன்டிபெப்ரின் (antifebrin), பெனஸிட்டின் (phenacetin) ஆகிய இவைகள்போன்ற மருந்துகளைக் கொடுக்கக்கூடாது; ஏனென்றால் அவைகள் இரத்தாசயத்தின் வேலையைக் குறைவுபடுத்துகின்றன. ஸூப்-பால்-அல்லது கஞ்சி ரூபமாக ஆகாரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் அடிக்கடிகொடுத்துவரவேண்டும்.

கெரோஸின் எண்ணெய் எமல்ஷன் என்னும் கலப்பு:—அரை காலன் தண்ணீரிலே $2\frac{1}{2}$ பவுன் எடையுள்ள நாட்டு சுண்ணம்பு ஸப்பைக் கொதிக்கவைத்துக் கரைக்கவேண்டும்; அது சூடாயிருக்கும்போது அதைக் கலக்கிக்கொண்டே அதோடுகூட கொஞ்சங் கொஞ்சமாக 2 காலன் கெரோஸின் எண்ணெய் சேர்க்கவேண்டும். இந்தக் குழம்பின் அளவைப்போல் 50 பங்கு அளவுள்ள ஜலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக இந்தக் குழம்பை அசைத்துக்கொண்டே அதோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். இந்தப்படி செய்தால் 125 காலன் எமல்ஷன் என்னும் கலப்பு உண்டாகும்; இது உடனே உபயோகத்துக்கு உதவத்தக்கதாயிருக்கும்.

மஹாமாரி பரவுவதை இன்ன விதமாய்த் தடுக்கலாமென்பது.

முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைக் கொண்டுதான் மஹாமாரி பரவுவதைத் தடுக்கக்கூடும்; முறையே அந்த ஏற்பாடுகள் எவையென்றால்:—

(1) தவறாமல் எலிகளை அழிப்பது.

(2) இந்த வியாதி முதலில் கண்டவுடன் அது சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணங்களைக் காலி செய்வது.

(3) வியாதியஸ்தர்களையும் அவர்களைத் தொட்டுக்கொண்டிருந்தவர்களையும் பிரத்தியேகப் படுத்தி வைப்பது.

(4) மஹாமாரி குத்துவது.

எலிகளை அழிப்பது.—எந்த இடத்துக்கு அக்கம்பக்கத்திலே மஹாமாரி கண்டிருந்தாலும் அந்த இடமானது மஹாமாரி சம்பந்தப்பட்டதாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, எலிகளை இடைவிடாமல் அழித்துவரவேண்டும்; இதற்காக முக்கியமாய் (எலி) போன்களை உபயோகிக்கவேண்டும்; ஆனால், விஷங்கலந்த எலி யிரையைக்கொண்டும் பூனைகளை வளர்ப்பது மூலமாகவும் எலிகளை யழிக்கப் பிரயத்தனப்படவும் வேண்டும். எலிகள் வெகு சீக்கிரத்தில் விர்த்தியாகின்றன வென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்; ஆகையால் செய்யவேண்டிய வகைப்படியல்லாமலும் இடைவிட்டு இடைவிட்டும் அவைகளை யழிக்க முயல்வதனால் எவ்வித பிரயோசனமுமுண்டாகமாட்டாது. வீடுகளிலே கூடியமட்டில் எலிகள் தங்குவதற்கு இடமில்லாதபடி, தரையைத் தளவரிசைசெய்தும் விழல் முதலியவைகளைக் கொண்டாவது வளைவாயுள்ள நாட்டோடுகளைக்கொண்டாவது கூரை போடுவதற்குப் பர்த்தியாய்ச் சுருக்குகளாகச் செய்த இரும்பைக் கொண்டாகிலும் மங்களூர் ஓடுகளைக் கொண்டாகிலும் கூரைபோட்டும் வீடுகளைக் கட்டவேண்டும்; ஷை விழலிலும் நாட்டு ஓடுகளிலும் எலி முதலியவைகள் தங்குவதற்கு இடமிருக்கிறது. வீட்டையும் அதைச் சேர்ந்த சாக்கடைக்கால்களையும் பிரதிதினமும் நிரம்ப ஜலத்தைக்கொண்டு கழுவவேண்டியதோடுங் கூட அழுக்கு முதலிய சகுமாலங்கள் அவ்விடத்திற் சேராதபடி வைத்திருக்கவும் வேண்டும்; தரையின்மேலும் கைத்துண்டுகளுக்குச் சமீபமாகவும் அங்குமிங்குமாக கூடைகளையும் விறகையும் கழிகடையான சாமான்களையும் சேர்த்துவைக்கக்கூடாது. தானியத்தையும் ஆகாரத்தையும் சாப்பிட்டு மிகுந்தவைகளையும் தகரப்பெட்டிகளில் சேர்த்து வைக்கவேண்டுமேயல்லாமல் அப்படியே வைப்பதும் கூடைகளில் வைப்பதுங் கூடாது.

சுகாதாரமற்ற விஸ்தீர்ணங்களையும் ஜன நெருக்கமாயுள்ள விஸ்தீர்ணங்களையும் பரிஷ்கரித்து, ஜன நெருக்கமாயிருப்பதைத் தடுக்கவேண்டும்; வீடுகளில் நன்றாய்க் காற்று போகும்படியான வழி ஏற்படுத்தவேண்டும்; இருட்டாயும் குப்பை நிறைந்துமுள்ள இடங்களிலே எலிகள் விசேஷமாய்த் தங்குகிறபடியால் அந்த இடங்களில் சூரிய வெளிச்சமும் காற்றும் படும்படி செய்யவேண்டும்.

காலிசெய்வது.—செத்துப்போன எலிகள் கண்ணுக்குப் புலப்பட்டால், உடனே ஜனங்கள் தங்களுடைய வீடுகளை விட்டு, கிராமத்திலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் மலைப்பக்கங்களின் மேலாவது வயல்களிலாவது சிறிது காலத்துக்குத்தங்க இடமேற்படுத்திக்கொண்டு அங்கேபோய் வசிக்கவேண்டும். மஹாமாரியைத் தடுப்பதற்கான வகைகளுள் மிகவும் பிரயோசனகரமான வகைகளிலே இது ஒன்றாகும். அக்கம்பக்கத்திலுள்ள எலிகளெல்லாம் செத்துப்போகிற வரையிலாகிலும் அங்கிருந்து போய்விடுகிற வரையிலாகிலும் மேலே கண்டபடி சிறிது காலத்துக்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட குடிசைகளுக்கும் மஹாமாரி சம்பந்தப்பட்ட வீடுகளுக்கும் எவ்விதப்போக்குவரவு சம்பந்தமும் இருக்கக்கூடாது; மேலே கண்டபடி எலிகள் சாவதற்கோ போய்விடுவதற்கோ குறைந்தது ஒரு மாதமாகிலும் பிடிக்கும்; இந்த ஒருமாத காலத்துக்கு ஜனங்கள் மேலே கண்ட இடங்களுக்குப் போகவும் அங்கிருந்து வரவுங்கூடாது. வீடுகளில் சூரிய வெளிச்சமும் காற்றும் படும்படி அவைகளையெல்லாம் நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும்; மேலும் அவைகளில் மறுபடியும் குடிபுகுவதற்கு முன்னமே, கெரோஸின் எமல்ஷன் என்னும் கலப்பைத் தெளித்து அவைகளிலுள்ள தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டும்; இந்தப்படி தெளிப்பது மஹாமாரியைப் பரவச்செய்கிற தெள்ளு பூச்சிகளை அழிப்பதற்கு நல்ல மார்க்கமாகையால், மஹாமாரியதான

சுற்றுப்பக்கங்களில் இருக்கிறவரையிலே இடைவிட்டு இடைவிட்டு மேலே சொன்னபடி தெளித்துக்கொண்டு வரவேண்டும்.

பிரத்தியேகப் படுத்திவைப்பது:—மஹாமாரி கண்டவியாதியஸ்தர்களையும் அவர்களை நேரில் தொட்டுக்கொண்டிருந்தவர்களையும் அந்த இடத்திலுள்ள இதர குடி ஜனங்களினின்றும் பிரத்தியேகப் படுத்திவைக்கவேண்டும்; அந்தவியாதியைத் தடுப்பதற்காகச் செய்யப்படும் காரியங்கள் சித்திபெறவேண்டுமானால், மேலே கண்டபடி பிரத்தியேகப்படுத்திவைப்பது அவசியமாகும். பற்பல வகுப்பு ஜனங்களின் வழக்கத்துக்கும் உணர்ச்சிக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் சிறிதும் பாதகமுண்டாகாதபடி பிரத்தியேகப்படுத்திவைக்கவேண்டும். யாதொரு பட்டணத்தில் மஹாமாரி காணுமென்னும் அச்சமிருந்தால், பிரதியேகப்படுத்தி வைப்பதற்கான கூடாரங்களுக்காகவும் ஹாஸ்பிடல்களுக்காகவும் வேண்டிய இடங்களை ஏற்படுத்தி வைத்துக்கொள்வதோடுங்கூட, அவைகள் வேண்டியிருக்கிறபோது அவைகளை ஆலாசியமில்லாமல் கட்டிக்கொள்வதற்கு அவசியமான சாமான்களையெல்லாம் தயாராய் வைத்திருக்கவும் வேண்டும்.

மஹாமாரி குத்திக்கொள்வது:—அம்மை குத்துவதனால் ஜனங்களுக்கு பெரியம்மையின்றும் பாதுகாப்பேற்படுகிறது. அம்மை குத்தப்பெற்ற குழந்தைகள் அந்தநோய் வராமலே முற்றிலும் தப்பித்துக்கொள்ளுகின்றன அல்லது ஷை குழந்தைகளுக்கு அந்தநோய் கண்டால் குரூரமாய்க் காணாமல் சொற்பமாகவே காண்கிறது. அதைப் போலவே ருசித்த ஒரு மருந்தைச் சருமத்திலே குத்தி உள்செலுத்துவதனால் ஜனங்களுக்கு மஹாமாரியினின்றும் பெருத்த பாதுகாப்பு உண்டாகிறதென்று கண்டறியப்பட்டிருக்கிறது. (மஹாமாரி குத்திக்கொள்வதனால்) மஹாமாரி காணும் நபர்கள் மெத்தவும் குறைவாயிருப்பது மாத்திரமேயல்லாமல், அந்த நோய் (அப்படி குத்திக்கொண்டவர்களுக்குக்) காணும்போது பலமாய்க் காணாமலும் இருக்கிறது; மஹாமாரி குத்தப்பெறாதவர்களைக் காட்டிலும் மஹாமாரி குத்திக்கொண்டவர்களிதமநேகர் அந்த நோய்கண்டால் பிழைக்கிறார்கள். மஹாமாரி குத்திக்கொள்ளும் முறையில் எவ்வித அபாயமுமில்லை; மேலும், அசௌகரியமும் கஷ்டமும் சிறிதுகூட உண்டாவதில்லை; அதிகமாயிருந்தால் ஒரு நாள் அல்லது இரண்டு நாளைக்கு ஜ்வரமும் தலைநோயும் இருக்கும்; ஆனால் அதனாலேற்படுகிற பாதுகாப்பு மெத்தவும் அதிகமாயிருக்கிறது; ஆகையால், மஹாமாரிகுத்த யாராகிலும் முன் வரும்போதெல்லாம் அந்தப்படியே குத்திக்கொள்ளவேண்டும்.

மஹாமாரி குத்திக்கொள்ள ஜனங்கள் இஷ்டப்படுகிறபோதெல்லாம், பயிற்சிபெற்ற வைத்திய உத்தியோகஸ்தர்களைக்கொண்டு பிரெஸிடென்ஸி முழுவதும் இலவசமாய் மஹாமாரி குத்துவதற்கான ஏற்பாடுசெய்ய கவர்ன்மெண்டார் சித்தமாயிருக்கிறார்கள். மஹாமாரி பரவுவதைத் தடுக்கவேண்டுமென்றும் அதனுடைய கொடுமைகளினின்றும் ஜனங்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும் கோரப்படுகிறது. யாருடைய நன்மைக்காக இந்த சிகிச்சைசெய்ய (கவர்ன்மெண்டார்) முன் வந்திருக்கிறார்களோ அந்த ஜனங்களே இஷ்டத்துடன் மஹாமாரி குத்திக்கொண்டு அதிகாரிகள் செய்யுங் காரியங்களுக்கு ஆதரவாயிருந்தால்தான், மஹாமாரி பரவ வொட்டாமல் தடுப்பதும் அதனுடைய கொடுமைகளின்றும் ஜனங்களைத் தப்புவிப்பதும் கூடும்.

B.

மஹாமாரி குத்திக்கோள்வது.

மஹாமாரி குத்திக்கொள்ள விரும்புகிறவர்கள்—

(1) இரண்டொருதினம் முன்னதாக எண்ணெயிட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்யலாம்;

(2) மலச்சிக்கலுடையவர்களாயிருந்தால், சில தினங்களுக்கு முன்னதாக நன்றாய் மலசுத்தியாகும்படி விரேசனம் (பேதிமருந்து) சாப்பிடுவது உத்தமம்;

(3) மஹாமாரி குத்திக்கொண்டபிறகு சாப்பாடு இலேசானதாகவும் மிதமானதாகவும் இருக்கவேண்டும்; பால் கஞ்சி, ஜவ்வரசி, காப்பி, ஸோடாவாட்டர் முதலியதை யதேஷ்டமாய்ச் சாப்பிடுவது நல்லது;

(4) மஹாமாரி குத்திக்கொண்ட பிறகு அப்படி குத்திக்கொண்டவர்களுக்குச் சில வேளைகளில் தலைச்சுற்றலும் மூர்ச்சையும் உண்டாவதுண்டு; இதனால் மனக்கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இரண்டு முழங்கால்களுக்கும் மத்தியில் தலையை இறக்கி வைத்துக்கொண்டிருப்பதே அதற்கு உத்தமமான பரிகாரமாகும். ஸோடாவாடரையாவது உரத்த காப்பியையாவது கொஞ்சம் பால்கலந்து குடிக்கலாம்;

(5) மஹாமாரி குத்திக்கொண்ட கை அதிக நோயாயிருந்தால் வறுத்த தவிட்டைக்கொண்டாவது சுடுகிற சாம்பல் முதலிய வஸ்துவைக்கொண்டாவது (அந்தக் கைக்கு) ஒற்றிடம்போடலாம்; கழுத்திலிருந்து கச்சைப்பட்டை முதலிய ஏதேனும் ஒன்றை மாலைபோல் தொங்கவிட்டு அதில் அந்தக் கையை மாட்டி வைத்திருக்கவேண்டும்;

(6) மஹாமாரி குத்திக்கொண்டவர்கள் ஜ்வரம் முழுமையும் நின்றுபோகிறவரையிலே வெளியே வராமலே இருக்கவேண்டும்; சில தினங்கள் வரையில் கைநொந்துகொண்டிருந்தாலுமிருக்கும்; ஆனால், இப்படி இருப்பதனாலே சாதாரண வேலைக்குத் தடங்கல் நேரிடவேண்டிய அவசியமில்லை;

(7) மூன்று அல்லது நான்கு தினம் வரையில் வெறும் ஸ்நானமும் செய்யக்கூடாது. ஸ்நானம் செய்யவேண்டியது அத்தியாவசமாயிருந்தால், குளிர் உண்டாகாதபடி நன்றாய் மூடியிருக்கும் ஒரு அறைக்குள் போய்க் கடற்பஞ்சென்று வழங்குகிற ஸ்பஞ்சை நீரில் தோய்த்துத் தேகத்தைச் சுத்திசெய்துகொள்ளவேண்டும்: குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேகூடாது;

(8) மஹாமாரி குத்திக்கொண்ட பிறகு 8 அல்லது 10 தினம் வரையில் எண்ணெயிட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்யக்கூடாது.

(9) ஜ்வரத்திற்கு எவ்வித சிகிச்சையும் செய்யவேண்டிய அவசியமில்லை; அது இரண்டு அல்லது மூன்று தினங்களில் தானே நின்று போய்விடும். தலைநோய் இருக்குமானால் மென்தாலையாவது பனிக்கட்டியையாவது காடி-ஜலம் முதலிய ஜில்லென்றிருக்கும் ஜல ரூபமான வஸ்துக்களையாவது மேலுக்கு உபயோகப்படுத்திச் சிகிச்சை செய்யலாம். ஆயினும், ஒரு வேளை ஜ்வரம் அதிகமானால் மஹாமாரி குத்திக்கொண்டவர்கள் பாமர வைத்தியர்களை நம்பாமல் தகுந்த வைத்தியம் உத்தியோகஸ்தரை அழைத்து யோசனை கேட்பதாவது அதி சமீபத்திலுள்ள டிஸ்பென்ஸரிக்குச் சத்கதி தெரிவிப்பதாவது உத்தமம்;

(10) குமட்டலும் ஒக்காளமும் இருக்குமானால், பனிக்கட்டியில் வைக்கப்பட்டாவது பனிக்கட்டி கலந்தாவதுள்ள ஸோடாவாட்டரை யாகிலும், பால்சேர்த்த ஸோடாவாட்டரையாகிலும் கொஞ்சம் சாப்பிடுவது அதற்கு உத்தமமான சிகிச்சையாகும் ;

(11) அதமம் இரண்டு அல்லது மூன்று வாரம் வரையில் சம்போகம் செய்யவே கூடாது ;

(12) தீட்டுவருவதற்கு ஒருவாரம் அல்லது பத்துதினத்திற்கு முன்பு மஹாமாரி குத்திக்கொள்வது ஸ்திரீகளுக்கு அனுகூலமாயிருக்கும் ; தீட்டு வந்துபோன ஒருவாரம் கழிந்தபிறகும் அவர்களுக்கு மஹாமாரி குத்தலாம் ;

(13) இரத்தாசயமாவது நுரையீரலாவது பலஹீனப்பட்டவர்களும், இழுப்பு-இரத்தாசயவியாதி - நரம்பு சம்பந்தமான பலஹீனம் ஆகிய இந்த வியாதிகளுக்கு உட்பட்டவர்களும் மஹாமாரி குத்திக்கொள்வதற்குமுன்னே ஒரு வைத்திய உத்தியோகஸ்தரைக்கொண்டு தங்களை ஜாக்கிரதையாய்ப் பரீக்ஷை செய்வித்துக்கொள்ளவேண்டும்.

ஹெச், டி. டெய்லர்,

கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெகேர்டேரி.

Indian Law Gazette Office, Law Publication Series.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் சட்ட பிரசுரங்கள்.

A PREVENTON TO FRVOLOUS EXPENSES.

விரதாச் செலவுகளுக்கு ஒரு தேக்கம்.

A

HAND BOOK.

OF

CIVIL AND CRIMNAL LAWS,

VOL. I

சிவில் கிரிமினல் சட்ட மஞ்சரி.

பெரும்பாலான ஜனங்கள் அரசாங்கத்தார் உண்டாக்கிருக்கும் சட்டதிட்டங்களையும் கோர்ட்டு நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ளாமல் சாதாரணமான அற்ப விஷயங்களில்கூட சட்டஞான சூனியர்களுடைய பேச்சையும் போதனையையும் கேட்டு அவர்களுடைய கையில் சிக்கி அசல், அப்பீல் கிங் அப்பீல் வரையில் வியாஜ்ஜியமாடி தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடின சொத்தைவாரி இறைத்துச் செலவிட்டு ஓட்டாண்டியாய் போய் கடைசியில் அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் தெரிந்த விஷயம் ! நம் சகோதரர்கள் இவ்வித வியாஜ்ஜியப் படுநரகத்தில் விழுந்து பரிதவிப்பதைப்பார்த்து மனம் சகியாது அவர்களுக்கு, கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்டிருக்கும் முக்கியமான சட்டங்களை அச்சடித்து சொற்பவிலைக்குக் கொடுக்கிறதென்று தீர்மானித்திருக்கிறோம். இந்த தீர்மானத்திற்கிணங்க இப்போது சிவில் கிரிமினல் சட்டமஞ்சரி என்கிற புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறோம். இதில் அடியிற்கண்ட முக்கிய ஆக்ட்டுகள் அடங்கியிருக்கின்றன.

The Indian Stamp Act.
இந்து தேசத்து முத்திரைக் கடிதாசியைக் குறித்த ஆக்ட்.
The Indian Registration Act.
1877-ம் வருஷத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்.
Court Fees Act.
1870-ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்ட்.
Indian Limitation Act.
இந்து தேசத்து கால நிர்ணயச் சட்டம்.
The Indian Easements Act.
இந்து தேசத்து வழிநடை முதலிய வசதி உரிமைகளையும் லைசென்சுகளையும் குறித்த ஆக்ட்.
The Indian Trusts Act.
இந்து தேசத்து திரஸ்ட்டுகளைக் குறித்த 1882-வருஷத்திய 2-வது ஆக்ட்.
The Transfer of Property Act.
உபயத்திராளுடைய விவகாரத்தினாலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்த ஆக்ட்.

இப்புத்தகம் முத்துக்கள்போன்ற எழுத்துக்களால் தும்பமலர்போல் வெண்மையாயுள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டு வெகு உன்னதமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா. ௮. வி. பி. தபால் சார்ஜுடன் அணா 10.

ஆனால் 1907-ம் ஹு டிசம்பர்மீ 31உ வரையில் இந்திய சட்டகெஜெட்டிற்குச்சந்தாதாரர்களாய்ச் சேருகிறவர்கள் தபாற் சார்ஜ ஒரு அணாமட்டிலும் அனுப்பினால் இப்புத்தம் இனாமாகக் கொடுக்கப்படும்.

ந. ராதாகிருஷ்ணா அண்டு கோ.

மானேஜர்கள்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் நெ. 37. காட்டுப் பிள்ளையார் கோவில் வீதி,

ஜியார்ஜ் டௌன் சென்னை.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 31 MAR 1908 MADRAS



The Honorable Mr. P. S. SIVASAWMI IYER,
Ag. Advocate General of the High Court of Madras.
ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள்,
சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு, அட்வோகேட் ஜெனரல்.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 31 MAR 1908 MADRAS.

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்— *M A.* லோகனாதன்·

பிரசுரிக்கிறவர்கள்:—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ·

ல்யும் 2.] சென்னப்பட்டணம், 1907ஞ டிசம்பர்மீ [பாகம் 12.

அடக்கம்·

		பக்கம்.
1.	உருவப்படம்—ஹானரபில் Mr. பி-எஸ். சிவசாமி ஐயர் பி-ஏ., பி-எல், மதராஸ். அட்வோகேட் ஜெனரல்.	
2.	கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள்.	365
3.	அதிகாரப் பிரிவினை கமிஷன்.	367
4.	கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.	369
5.	முக்கியமான தீர்ப்புகள்.	377
6.	லைசென்ஸ் வாங்காமல் எண்ணெய் ஸ்டோர் செய்தது முனிசிபல் பிராசிகியூஷன் ...	383
7.	கவர்ன்மென்டு ஆர்டர்கள்.	389
8.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேசுகள்.	3[illegible]1

Indian Law Gazette Office, Law Publication Series.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் சட்ட பிரசுரங்கள்.

A PREVENTION TO FRIVOLOUS EXPENSES.

விரதாச் செலவுகளுக்கு ஒரு தேக்கம்.

HAND BOOK OF

CIVIL AND CRIMINAL LAWS.

VOL. I

சிவில் கிரிமினல் சட்ட மஞ்சரி.

பெரும்பாலான ஜனங்கள் அரசாங்கத்தார் உண்டாக்கியிருக்கும் சட்டதிட்டங்களையும் கோர்ட்டு நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ளாமல் சாதாரணமான அற்ப விஷயங்களில்கூட சட்டஞான சூனியர்களுடைய பேச்சையும் போதனையையும் கேட்டு அவர்களுடைய கையில் சிக்கி அசல், அப்பீல் இங் அப்பீல் வரையில் வியாஜ்ஜியமாடி தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடின சொத்தைவாரி இறைத்துச் செலவிட்டு ஓட்டாண்டியாய் போய் கடைசியில் அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் தெரிந்த விஷயம்! நம் சகோதரர்கள் இவ்வித வியாஜ்ஜியப் படுகுழியில் விழுந்து பரிதவிப்பதைப்பார்த்து மனம் சகியாது அவர்களுக்கு, கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்டிருக்கும் முக்கியமான சட்டங்களை அச்சடித்து சொற்ப விலைக்குக் கொடுக்கிறதென்று தீர்மானித்திருக்கிறோம். இந்த தீர்மானத்திற்கிணங்க இப்போது சிவில் கிரிமினல் சட்டமஞ்சரி என்கிற புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறோம். இதில் அடியிற்கண்ட முக்கிய ஆக்ட்டுகள் அடங்கியிருக்கின்றன.

The Indian Stamp Act.

இந்து தேசத்து முத்திரைக் கடிதாசியைக் குறித்த ஆக்ட்.

The Indian Registration Act.

1877-ம் வருஷத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்.

Court Fees Act

1870-ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்ட்.

Indian Limitation Act.

இந்து தேசத்து கால நிர்ணயச் சட்டம்.

The Indian Easements Act.

இந்து தேசத்து வழிநடை முதலிய வசதி உரிமைகளையும் லைசென்சுகளையும் குறித்த ஆக்ட்.

The Indian Trusts Act.

இந்து தேசத்து திரஸ்ட்டுகளைக் குறித்த 1882-வருஷத்திய 2-வது ஆக்ட்.

The Transfer of Property Act.

உபயத்திராளுடைய விவகாரத்தினாலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்த ஆக்ட்.

இப்புத்தகம் முத்துக்கள்போன்ற எழுத்துக்களால் தும்பைமலர்போல் வெண்மையாயுள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டு வெகு உன்னதமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா. வி. பி. தபால் சார்ஜுடன் அணா 10.

ஆனால் 1907-ம் வருஷம் டிசம்பர்மீ 31உ வரையில் இந்திய சட்டகெஜெட்டிற்குச்சந்தாதாரர்களாய்ச் சேருகிறவர்கள் தபாற் சார்ஜ ஒரு அணாமட்டிலும் அனுப்பினால் இப்புத்தம் இனாமாகக் கொடுக்கப்படும்.

ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

மானேஜர்கள்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் நெ. 37. காட்டுப் பிள்ளையார் கோவில் வீதி,

ஜியார்ஜ் டௌன் சென்னை.

CERTIFICATE.

(Certificate given by Honorable V. Bashyam Iyenger Avergal High Court Vakeel Madras).

Kumbakonam Mr. Anumanur—Ramalinga Chettiar's Agent Saminadaier consulted me professionally in regard to two or three cases. I was very much struck by his lucid and intelligent statement of the facts of the Cases which enabled me without trouble and waste of time to give my professional advice.

18th *Lodge*, Mylapore.
3—12—89. } (Signed) **V. BASHYAM IYENGAR.**

சர்ட்டிபிகேட்.

(ஹானரபில் ஹைக்கோர்ட்டு வக்கீல் V. பாஷியம் அய்யங்காரவர்களால் கொடுத்த சர்ட்டிபிகேட்.)

கும்பகோணம் ம-ா-ா-ஸ்ரீ அனுமானூர்-இராமலிங்கசெட்டியார் அவர்களுடைய ஏஜெண்டு சாமிநாதய்யர் இரண்டு மூன்று கேசுகளைக் குறித்து வியவஹார விஷயமாய் என்னிடம் ஆலோசித்தார். அவர் அந்த கேசுகளின் சங்கதிகளைத் தெளிவாயும் புத்திசாலித்தனமாயும் எனக்கு எடுத்துக்காட்டினதானது எனக்கு யாதொரு சிரமமன்னியிலும் காலதாமதமன்னியிலும் நான் என் வியவஹார அபிப்பிராயத்தை உடனே தெரிவிக்கும்படி செய்ததைப்பற்றி நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன்.

மைலாப்பூர் 18-நெ, பங்களா
3—12—89. } (ஒப்பம்) **V.** பாஷியம் ஐயங்கார்.

As an agent of Mr. A. Ramalinga Chettyar the bearer Saminatha Iyer has consulted me in several cases and I have had other occasions also of judging of his qualifications. He is well conversant with the procedure and rules of evidence in Civil and Magesterial Courts. He is intelligent and well understanding the cases entrusted to him, states them clearly. His character is good.

Combaconam
3rd February 1890. } (Signed) **V. RAMACHANDRA ROW.**
High Court Vakil.

இதை வைத்துக்கொண்டிருக்கிற சாமிநாதய்யர் ம-ா-ா-ஸ்ரீ A. இராமலிங்க செட்டியாருடைய ஏஜெண்டாக அநேகம் கேசுகளில் என்னிடம் ஆலோசித்திருக்கிறார். அவருடைய திறமையை நிதானிப்பதற்கு எனக்கு அநேகம் சமயங்களும் நேர்ந்திருக்கிறது. சிவில் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளில் நடக்கிற நடவடிக்கைகளிலும் சாக்ஷி சட்டங்களிலும் அவர் நன்றாகத் தெரிந்தவர். அவர் புத்திசாலி. அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட கேசுகளை செவ்வையாக தெரிந்துகொண்டு தெளிவாய் அவைகளை எடுத்துச் சொல்லுகிறார். அவருடைய நடத்தை நல்லது.

கும்பகோணம்
1890ளு பிப்ரவரிமீ 3உ } (ஒப்பம்) **V.** இராமச்சந்திரராவ்
ஹைகோர்ட்டு வக்கீல்.

CERTIFICATE.

(Certificate given by Raja T. Rama Row Avergal High Court Vakeel.)

This is to certify that I have known Saminadaier for the last nine years and during this period he had enturstred me with the conduct of several appeals in the High Court and also consulted me professionally in respect of several matters. I found him invariably well up with all the intricate and minute points of his cases and he enabled me by his very lucid and intelligent statement of the relevant facts and ready reference to the documentary and oral evidence in each case, to master the same without any trouble. In my opinion he is well acquainted with all the ordinary procedure in the Civil and Criminal Courts and he can be very safely trusted by any professional gentleman in the conduct of any suit.

I have no doubt whatever from my long experience of Saminadaier that, Mr. Anumanur—Ramalinga Chettyar Avergal was extremely fortunate in having secured the services of such an able and intelligent agent for the management of his business in Civil and Criminal Courts.

8th April 1895
Madras. } (Signed) **T RAMA ROW**
High Court Vakil.

சர்ட்டிபிகேட்.

(ஹைக்கோர்ட்டு வக்கீல் ராஜா. டி. ராமராயரவர்களால் கொடுத்த சர்ட்டிபிகேட்.)

சாமிநாதய்யரை சென்ற ஒன்பது வருஷங்களாக எனக்குத்தெரியும். இந்த காலத்தில் ஹைக்கோர்ட்டிலே அநேக அப்பீல்கள் நடத்தும்படி அவர் என்னிடம் கொடுத்திருப்பதுமன்றி அநேக சங்கதிகளைப்பற்றி வக்கீல் முறைமையில் என்னிடம் அவர் ஆலோசனை பண்ணியுமிருக்கிறார். அவருடையகேசுகளில் சிக்கலானவும், நுட்பமானவும், உள்ள பாயிண்டுகளைத்தவறாமல் தெரிந்து காண்டிருந்தாரென்று நான் அறிந்துகொண்டேன். அவர் ஒவ்வொரு கேசிலும் ஒத்துமையான சங்கதிகளை மிகவும் தெளிவாயும் புத்திசாலித்தனமாயும் எடுத்துச் சொன்னதைக் கொண்டும், தஸ்தாவேஜி ருசு, வாய்மொழிருசு இவைகளைக் குறிப்பாய் எடுத்துச்சொன்னதைக்கொண்டும் கேசுகளை யாதொரு சிரமமுமில்லாமல் நான் பூராவாய்த் தெரிந்துகொண்டேன். சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் சாதாரணமான எல்லா நடவடிக்கையும் அவருக்கு நன்றாகத் தெரியுமென்பதும் வியாச்சிய நடவடிக்கையில் எந்தப் பிரபுவும் அவரை அதிகமாக நம்பலாமென்றும் என்னுடைய அபிப்பிராயம்.

சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் தன் காரியங்களை நடத்துவதற்காக இப்பேர்க்கொந்த சாமர்த்தியமுள்ள புத்திசாலியான ஏஜெண்டு ம-ா-ா-ஸ்ரீ. அனுமானூர்-இராமலிங்கசெட்டியார் அவர்கள் சம்பாதித்த விஷயத்தில் அவர் மகா அதிர்ஷ்டசாலியென்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமில்லையென்று சாமிநாதய்யரிடம் எனக்குள்ள நீண்ட அநுபோகத்தினால் எனக்குத் தெரிகிறது.

1895ளு ஏப்பிரல்மீ 9உ
சென்னபட்டணம். } (ஒப்பம்) **T.** ராமாராவ்.
ஹைகோர்ட்டு வக்கீல்

DIEU ET MON DROIT

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 2.] சென்னப்பட்டணம், 1907வு டிசம்பர்மீ [பாகம். 11.

VILLAGE PUNCHAYET COURTS.

கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள்.

நம்முடைய இந்தியா தேசத்தில் சுதேசியம் பரவி னாமெல்லோரும் ஒன்றுபட்டவர்களாகி இவ்வுலகிலுள்ள மற்ற அரசாங்கத்தார்களைப் போல நம் தேசத்தவர்களும் ஒரு அரசாங்கத்தார்களாகவேண்டுமானால் நாம் முதலில் கிராமபரிபாலனத்தைச் சீர்திருத்தவேண்டும். இந்தியாவிலுள்ள பெரும்பாலான ஜனங்கள் கிராமங்களில் வசித்துவருகின்றார்கள். முதலில் இவைகள் சீர்திருத்தப்பட்டால் நம்முடைய எண்ணம் வெகு இலகுவில் நிறைவேறும். விவசாயம், சுகாதாரம், கல்வி, கிராமப் பஞ்சாயத்து ஆகிய இத்தியாதி விஷயங்களின் பலாபலன்களைப்பற்றி அவர்களுக்குப் போதிக்கவேண்டும். இந்த விஷயங்களைக் குறித்து அவர்களுக்குப் போதித்தால் அவர்கள் கவனத்துடன் காதுக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள் என்பதில் தடையில்லை. ஆனால் அந்தப்போதனையை அவர்கள் பின்பற்றி அவைகளின் பிரகாரம் அவர்களை நடக்கும்படி செய்வது மிகுந்த கஷ்டமாயிருக்கின்றது. ஆனால் கல்வி அறிவு அடைந்திருக்கும் சிலர் வசிக்கும்படியான பாக்கியத்தைப்பெற்றிருக்கும் கிராமங்களில் இந்தக் கஷ்டமில்லை என்று சொல்லவேண்டும். ஏனெனில் இந்தப்படிப்பாளிகள் மற்றப்படியுள்ள படிப்பற்ற ஜனங்களைச் சீர்திருத்திக் கொண்டுவந்துவிடுகிறார்கள். இந்தக் காலத்திலகூட கிராமங்களில் தன்னுடைய பெயரை மட்டிலும் கையெழுத்து செய்யக்கூடிய ஒருவன் பிரமாதமான படிப்படைந்திருப்பவனாக எண்ணப்பட்டு மதிக்கப்பட்டு வருவது ஆச்சரியமல்ல. இப்படிப்பட்ட ஜனங்களையுடைய கிராமங்களைச் சீர்திருத்துவதுதான் மிகுந்த கஷ்டமாயிருக்கின்றது. இவர்களுக்கு என்ன போதனை செய்தபோதிலும் எப்படிப் பிரசங்கம் செய்தபோதிலும் பயனில்லாமலிருக்கிறது. ஆகையால் கிராமங்களில் கட்டாய இனாம் படிப்பு ஏற்பாட்டைப் பரவும்படி செய்யவேண்டும். கிராமவாசிகள் படிப்பற்றிருப்பது நம் தேச விர்த்திக்குப் பெரும் தடையாயிருக்கிறதென்று நம் தேசத் தலைவர்கள் அபிப்பிராயப்படுகிறபடி கவர்ன்மெண்டாரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்படி கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டிருந்தும் இன்னும் கட்டாய இனாம் படிப்பு (Free Compulsory education) ஏற்பாட்டை இன்னும் அமுலுக்குக் கொண்டுவராமலிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. சில கிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்களிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இந்தப் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கும் உபாத்தியாயர்கள் மிகுந்த கேவலப்படிப்புடையவர்கள். அரிசிக்காக பண்டமாற்றும் அங்காடிக்காரிபோல் நெல்லுக்கும் அரிசிக்கும், எண்ணெய்க்கும், வறட்டிக்கும் படிப்பு போதிக்கும் உபாத்தியாயர்களால் என்னபடிப்பு சொல்லிக்கொடுக்கக்கூடும்? கவர்ன்மெண்டார் கட்டாயப்படிப்பு ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதை எதிர்பார்

க்காமல் நம் தேச தனவந்தர்களும், தாலூக்கா போர்ட்டார், ஜில்லா போர்ட்டார், முனிசிபாலிடியார், ஆகிய இவர்கள் படிப்பு விஷயத்தில் திரண்ட செல்வத்தைச் செலவுசெய்து கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி போதனை செய்வதில் பயின்றுதேறிய உபாத்திமார்களை, அவர்கள் அமரும்படி செய்ய வேண்டும். நம்முடைய தேசம் செல்வத்தில் எவ்வளவு வறுமையடைந்ததாகக்காணப்பட்டபோதிலும் கல்வி விஷயத்தில் பணம் செலவிடக்கூடிய யோக்கியதையுடைய தனவந்தர்களில்லாமலில்லை. இங்கிலாண்டு பிரான்சு, ஜாமனி முதலிய தேசங்களில் தனவந்தர்கள் வாரிசில்லாமல் இறக்கநேரிட்டால் தங்களுடைய சொத்தைக்கொண்டு கல்வியை விர்த்திசெய்யவேண்டுமென்று உயில் எழுதி வைத்துவிட்டு இறந்துபோகின்றார்கள். இதனால் அத்தேசங்களில் படிப்பிற்காக பெரும் நிதிசேர்ந்து கவர்ன்மென்டாருடைய உதவியை எதிர் பாராமலே கல்வி பரவச் செய்யப்பட்டு வருகின்றது. நம் தேசத்தில் உயில் எழுதிவைப்பவர்களில் சிலர் தங்களுடைய சொத்தைக் கல்வி விஷயத்தில் பிரயோகிக்கும்படி இக்காலத்தில் உயில் எழுதிவைத்தபோதிலும், பெரும்பாலோர் தேவாலயங்களுக்கும் திருப்பணி வேலைகளுக்கும் மட்டிலுமே பிரயோகிக்கும்படி எழுதிவைக்கின்றார்கள். இதனால் தேவாலயங்களுக்கும், திருப்பணிவேலைகளுக்கும்சொத்துகளைச் செலவிடுவது அனுவசியமென்று நாம் அபிப்பிராயப்படுவதாக எண்ணக்கூடாது. சொத்துகள் தேவஸ்தானங்களுக்கு உயில் எழுதிவைக்கப்பட்டால் அவைகளைப் பாதுகாக்கும் மானேஜ்மென்டு செய்வதற்கு படிப்புடைய தர்மகர்த்தர்களிருந்தாலொழிய, அச்சொத்துகள் துர்வினியோகம் செய்யப்பட்டுப் போகின்றன. அப்படிச் செய்யப்பட்டுப் போவதில் தானம் செய்தவரின் எண்ணம் பலிதப்படாமற்போகின்றது. ஆகையால் உயில் எழுதிவைப்பவர்கள் தங்களுடைய சொத்தில் பெரும்பாகத்தை கல்வி அபிவிர்த்தி விஷயத்தில் பிரயோகப்படுத்தும்படி உயில் எழுதி வைத்தால் தேசத்திற்கும் பெருத்த நன்மை உண்டாக்குவதுமன்றி உயில் எழுதிவைத்தவரின் ஞாபகம் எந்நாளும் இப்பூவுலகினில் சிறந்து விளங்கும். ஆகையால் கிராமங்களில் படிப்பை விர்த்தி செய்யவேண்டியதே நம்முடைய பிரதம கடமையாகக்கொள்ளவேண்டும். இதன்பிறகு கிராமப்பஞ்சாயத்து கோர்ட்டுகளைப்பற்றி சிறிது இவ்விடத்தில் ஆலோசனைசெய்வோம். கிராமவாசிகள் படிப்பற்றவர்களாயிருப்பதால், வீம்பு வியாஜ்ஜியங்களாடி கையிலிருக்கும்பொருளை எல்லாம் செலவுசெய்து ஓட்டாண்டிகளாய்ப்போய்ப் பிறகு அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள். வியாஜ்ஜியங்கள் தோன்றுவதும் வளருவதும் பெரும்பாலும் கிராமங்களிலேயேயொழிய மற்றப்படி நகர் வாசங்களிலல்ல என்பதற்கு முனிசிப் கோர்ட்டு பயிலே சாக்ஷியமாக நிற்கின்றது. முனிசிப் கோர்ட்டு பயிலைப்பார்த்தால் பெரும்பாலுமுள்ள கக்ஷிக்காரர்கள் கிராமங்களில் வசிப்பவர்களா யிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. கவர்ன்மென்டார் பரீக்ஷார்த்தமாக சில கிராமங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை! ஆயினும் இந்த பஞ்சாயத்துக்கோர்ட்டின் எல்லைக்குள்ளிருப்பவர்கள் டி கோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் தாக்கல் செய்யும்படி கட்டாயப்படுத்தும்படியான விதி யாதொன்றையும் இன்னும் பிறப்பிக்கவில்லை. இப்படிப் பிறப்பிக்காததால் கிராமவாசிகள் வெகுதூரமுள்ள டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டுகளிலே வந்து வியாஜ்ஜியங்களைத் தாக்கல் செய்துவிடுகின்றார்கள். இந்த வியாஜ்ஜியங்களை டி. மு. தாக்கல் செய்துகொள்ளாமலிருப்பதற்கும், பஞ்சாயத்து கோர்ட்டுகளில் தாக்கல் செய்யம்படி உத்தரவு செய்யும்படியான அதிகாரம் டி. மு. க் களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் கடன்வாங்கியும் பட்டினியிருப்பதுபோல் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளால் இன்னும் யாதொரு பயனும் விளையவில்லை. இன்னும் கிராமவாசிகள், தங்களுடைய வியாஜ்ஜியங்களையும் பஞ்சாயத்து கோர்ட்டுகளில் தாக்கல் செய்ய உடன்படாமல் டி. முக் கோர்ட்டில் தாக்கல்செய்ய இஷ்டப்படுவதற்கு ஒரு முக்கியமான காரணமிருக்கின்றது. பஞ்சாயத்துக்கோர்ட்டில் பஞ்சாயத்தார்களாயிருப்பவர்கள் கிராமவாசிகள். இவர்களுக்குப் பெரும்பாலும் வியாஜ்ஜியத்தின் உண்மை தெரியும். இவர்களிடம் பொய் வியாஜ்ஜியம் கொண்டுபோனால் பலிதப்படாதென்று கிராமவாசிகளுக்குத் தெரியும். ஆகையால் இவர்கள் எப்போதும் வியாஜ்ஜியத்தின் உண்மை அறியாதவும் சாக்ஷி வாக்கு மூலத்தைக் கொண்டுமட்டிலும் தீர்மானம் செய்யவுங்கூடிய டி. முக் கோர்ட்டிலேயே வியாஜ்ஜியங்களைத் தாக்கல் செய்ய இஷ்டப்படுவார்கள். ஆகையால் 200-ரூபாய்க்குட்பட்ட வியாஜ்ஜியங்களைக் கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டுகளில் தாக்கல் செய்யும்படி உத்தரவு செய்ய டி. முக்கு அதிகார மிருந்தாலொழிய இந்தப் பஞ்சாயத்துக்கோர்ட்டுகளால் யாதொரு பயனுமுண்டாகமாட்டாது. நிற்க, இன்னும் பெரும்பாலான கிராமங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் இதுவிஷயத்தில் கவர்ன்மென்டார்மீது குறை கூறுவதில் யாதொரு பலனுமில்லை. பஞ்சாயத்தார்களால் நியமிக்கப்படுகிறவர்கள் சொற்பப்படிப்பாகிலும் அடைந்தவர்களாயிருக்கவேண்டும். அனேக கிராமங்களில் போதுமான படிப்பு யோக்கிதை யுடையவர்களைப்பார்ப்பது அத்திபூத்ததற்குச் சமானமாகவிருக்கின்றது. ஆகையால் பஞ்சாயத்துகோர்ட்டுகளை ஏற்படுத்துவதில் கவர்ன்மென்டார் ஆவல்கொண்டிருந்த போதிலும், அக்கோர்ட்டுகள் இன்னும் விசேஷமாக ஏற்படுத்தப்படுவதற்குக்கூடாமலிருக்கிறது. ஆயினும் நாலைந்து கிராமங்களைச்சேர்த்து அவைகளுக்குப் பொதுவாய் ஒரு பஞ்சாயத்து கோர்ட்டு ஏற்படுத்திக்கொடுக்கலாம். இந்தப்பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குப் பெரும்பாலும் கிராம முன்சீப்களையே சேர்மனாக நியமிக்கவேண்டும்.

கி. மு-க்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டுமென்று கவர்ன்மென்டார் பல கவர்ன்மென்டு ஆர்டர்ஸ்கள் பிறப்பித்திருந்தபோதிலும், இன்னும் சிலருடைய நிலைமை உயர்த்தப்படவில்லை. இக்காலத்தில் கூட கி. மு. உத்தியோகத்தைக் குமாஸ்தாக்களைக்கொண்டு பார்க்கும்படிசெய்து அவர்கள் போடச்சொன்ன விடத்தில் கையெழுத்துப்போடும் கி. முக்களுமிருக்கிறார்கள். இப்படிப்பட்டஉபயோகமற்ற, கி.முக்களால் பஞ்சாயத்துகோர்ட்டுகளுக்கு என்ன பிரயோஜன முண்டாகப் போகிறது? ஆகையால் பஞ்சாயத்துகோர்ட்டுகளை இன்னும் விசேஷமாக விர்த்திசெய்ய வேண்டுமானால் கிராம முனிசீப்களின் சம்பளத்தை உயர்த்தித் தகுந்த யோக்கியதை உடையவர்களை கி. மு.க்களாக உயர்த்தவேண்டும். கி-முக்களின் சம்பளத்தை உயர்த்துவதில் கவர்ன்மென்டார் கவனிக்கிறதில்லை. ஏனெனில் இவர்கள் ஒரு தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். முன் ஒரு சமயம் அதாவது 1905-ம் ௵த்தில் ஒரு ஜனப்பிரதிநிதி அங்கத்தினர் கி. மு-க்களின் சம்பளத்தை உயர்த்தும்படி கேட்ட கேள்விக்கு, கவர்ன்மென்டார், கி. மு.க்கள் கௌரவத்திற்காக கி. மு. உத்தியோகத்தைப் பார்த்து வருகிறார்களே தவிர மற்றப்படி சம்பளத்துக்கு அபேக்ஷித்துப் பார்த்து வரவில்லை என்றும் ஆகையால் அவர்களுடையது சம்பளத்தை உயர்த்தவேண்டியது அனுவசியமென்றும் சொன்னார்கள். ஆதிகாலத்தில் கி. மு-க்கள் தனவந்தர்களாக விருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்போது கௌரவத்தை அபேக்ஷித்தே கி. மு. உத்தியோகத்தைப் பார்த்து வந்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் வரவர இவர்கள் ஏழைகளாய்ப் போய்விட்டார்கள். அக்காலத்தில் ஆகார சாமான்களின் விலை மிகவும் நயமாகவிருந்தன. இப்போதோ அப்போதைய விலையைவிட பத்துமடங்கு அதிகமாக ஏறி நிற்கின்றது. ஆகையால் காலம் செல்லச் செல்ல கி. முக்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இனாம் நிலங்களைக்கூட விற்பனை செய்துவிட்டு மிதந்த கேவலமான நிலையிலிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூபாய் பத்து ஏற்பட்டு ரூபாய் 20-வரையில் உயரும்படியாக ஏற்பாடு செய்தால் இந்த உத்தியோகத்திற்குக் கூடியமட்டில் தகுந்த யோக்கிதையுடையவர்கள் வர இஷ்டப்படுவார்கள் என்று எண்ணுகின்றோம். இவ்விதமான கி. முக்களை உடைய பஞ்சாயத்து கோர்ட்டுகள் செவ்வையாய்நடக்கும். போகப்போக கவர்ன்மென்டார், அற்ப கிரிமினல்கேஸ்களை விசாரணைசெய்து தண்டிக்கவும் ரூ. பத்துவரையில் அபராதம் விதிக்கவும் இந்த கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுப்பதுமன்றி, படிப்பு அபிவிர்த்தி விஷயங்களையும், சுகாதார விஷயங்களையும் விவசாய விஷயங்களையும், மராமத்து விஷயங்களையும், நீர்ப்பாய்ச்சல் விஷயங்களையும் கவனித்து வரும்படியும் அதிகாரம் கொடுக்கலாம். அப்போது கிராம பரிபாலனம் செவ்வையாய் நடத்தப்பட்டு கிராமங்கள் முன்னுக்கு வரும். அதனால் நம் இந்தியா தேசமோ விர்த்தி அடையும்.

DECENTRALISATION COMMISSION.

அதிகாரப் பிரிவினை கமிஷன்.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி அடையார்," "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்." ஆகிய இப்படிப்பட்ட அரிய வாக்கியங்கள் ஒருகாலும் பொய்யாகமாட்டா! நம் தேசத்தில் வழக்கத்திலிருக்கும் பழமொழிகளும், முதுமொழிகளும், அரிய வாக்கியங்களும் மிகுந்த அனுபோகத்தின்பேரில் புத்தியில் மிகுந்த முன்னோரால் உண்டாக்கப்பட்டன. இப்போது அனுபோக வழக்கத்திலிருந்துவரும் எந்த முதுமொழியும் இக்காலத்தில் உண்மையில்லாமலிருக்கிறதென்று சொல்லுவதற்கிடமில்லை. உதாரணமாக நாம் காங்கிரஸ்கூடி முயற்சி செய்வதற்கு முந்தி நம்முடைய குறைகளை கவர்ன்மென்டார் கவனிக்கவில்லை. கவர்ன்மெண்டார் அன்னிய ஜாதியர்களாயினபடியாலும் மதம், ஆசாரம், நடை, உடை, பாவனை அபிப்பிராயம் முதலியவைகளில் அவர்களிடமிருந்து நாம் பேதப்பட்டவர்களாக இருக்கிறபடியாலும் அவர்களுக்கு முதலாவது நம்முடைய குறைகள் என்னவென்று தெரியமாட்டாது. காங்கிரஸ் தோன்றியபின் நாம் வருஷாவருஷம் கூடி தேசக்குறைகளை கவர்ன்மென்டாருக்கு எடுத்துக் காண்பித்துக்கொண்டு வந்தோம். காங்கிரஸ் முயற்சியை இராஜத்துரோகமான முயற்சி என்று கூறும் சில ஆங்கிலேயர்களிருந்தபோதிலும் அது கவர்ன்மென்டாருக்குப் பெரும் உதவியைச்செய்து கொண்டிருக்கிறது. கவர்ன்மென்டார் சில சமயங்களில் காங்கிரசை வெறுத்தபோதிலும் அதன் உதவியை மட்டிலும் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு வருகின்றார்கள். காங்கிரஸ் மகாசபையில் உப்பு வரியைக் குறைக்கவேண்டுமென்றும், பிரஜைகளின் உணவிற்கு இயன்றியமையாததாகவிருக்கும் உப்பின்மீது வரிபோடப்பட்டு வருவது தர்மமல்லவென்றும், அனேக காலம் பேசி தீர்மானங்கள் செய்து கவர்ன்மென்டிற்கு அனுப்பிவந்தோம். கவர்ன்மென்டார் இந்தத் தீர்மானங்களைச் சில வருஷகாலம் கவனிக்காமலிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் லார்ட் கர்ஜன் வைசிராயாக வந்தபோது இந்தத்தீர்மானத்தைக் கவனித்து அங்கீகரித்துக்கொண்டு தேச ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமடையும்படி மாக்ஷிமை தங்கிய எட்வர்ட் மகாராஜா அவர்களின் பட்டாபிஷேக சம்பந்தமாக டில்லி மாநகரில் தர்பார் நடத்தப்பட்ட சமயத்தில் உப்பு வரியைக் குறைத்துவிட்டார். அதன் பிறகு வந்த லார்ட் மின்டோவும் உப்பு வரியைக் குறைத்திருக்கிறார். சட்டசபையில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களிருக்கவேண்டுமென்று காங்கிரஸ் மகாசபையின் மூலமாகக் கேட்டுக்கொண்டோம். இந்தக்கோரிக்

கையையும் கவர்ன்மென்டார் சில காலம் சென்று நிறைவேற்றிவைத்தனர்கள். சென்னையில் சென்ற மாதமுதல் நடத்தப்பட்டுவரும் அதிகாரப்பிரிவினைக் கமிஷன் விசாரணைக்கும் காங்கிரஸ் மகாசபையே காரணமென்று சொல்லவேண்டும். சில அம்சங்களில், இஞ்ஜினீருக்கும், சில அம்சங்களில் போலீஸ் சூப்பிரண்டெண்டிற்கும் சில அம்சங்களில் லோக்கல் கவர்ன்மென்டாருக்கும், சில அம்சங்களில் அயன் கவர்ன்மென்டாருக்கும் அதிகாரம் அதிகப் பட்டும் குறைந்துமிருக்கிறபடியால் அவர்கள் தங்களுக்குக் கவர்ன்மென்டாரால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு அமுல் நடத்தும்போது ஜனங்களுக்குப் பல கஷ்டம் நேரிடுகிறதென்றும், இப்படிக் கஷ்டம் நேரிட்ட அனேக உதாரணங்களையும் எடுத்துக்காட்டி காங்கிரஸ் மகாசபையில் பேசித் தீர்மானம் செய்துவந்தார்கள். இந்த விஷயத்தைக்குறித்து லார்ட் கர்ஜனுக்கு முன் வந்திருந்த வைசிராய் சிறிதும் கவனிக்கவில்லை. லார்ட் கர்ஜன் தேசத்தைப் பிற்போக்கில் கொண்டுபோகும்படியான ஏற்பாடுகளைச் செய்து வந்தபோதிலும் தேச நிலைமையை அறிந்து கொள்ளுவதில் மிகுந்த அவாவுடையராக இருந்தனர். ஆப்காரி இலாக்காவைப்பற்றி அறிந்து கொள்ளும்பொருட்டு ஆப்காரி கமிஷன் ஒன்று ஏற்படுத்தி தேச முழுதிலும் சுற்றி விசாரணைசெய்யும்படி செய்தனர். அதே பிரகாரம் போலீஸ் கமிஷன் ஒன்று நியமித்து விசாரணை செய்யும்படி செய்தனர். பஞ்சக் கமிஷன் ஒன்று ஏற்படுத்தினர். பிரஸ்தாப அதிகாரப் பிரிவினைக் கமிஷனும் அவராலேயே பிரரேபிக்கப்பட்டது. பிரரேபிக்கப்பட்டதாயினும், அந்த அதிகாரப் பிரிவினைக் கமிஷன் மட்டிலும் அவர் ஏற்படுத்த அவருக்கு அதிகாரமில்லை. ஏன் எனில் இந்தக் கமிஷனில் அங்கத்தினர்களாகவிருக்கும் கமிஷனர்கள் இந்தியா கவர்னர் ஜனரலுடைய அதிகாரத்தை உயர்த்தவும் குறைக்கவும் அதிகாரமுடையவர்கள். ஆகையால் இந்த அதிகாரப் பிரிவினைக் கமிஷனை உண்டாக்க மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களைத் தவிர வேறொருவருக்கும் அதிகாரம் கிடையாது. இப்போதும் இந்த அதிகாரப் பிரிவினைக் கமிஷன் மாக்ஷிமைதங்கிய எட்வர்ட் மகாராஜா அவர்களின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கின்றது. இந்த கமிஷனுக்கு இந்தியா காரியதரிசிக்கு உதவியாயிருக்கும் உதவிக் காரிய தரிசியாகிய லார்ட் ஹாப் அறஸ் என்பவர் பிரசிடென்டாக இருக்கிறார். இன்னும் மூன்று ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இந்தியர்களின் தரப்பில் ஸ்ரீராமச் சந்திரதத் அவர்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றார். ஆகவே இவர்கள் எல்லோரும் சென்னையில் இரண்டு வாரகாலமாகத் தங்கியிருந்து கோட்டையிலிருக்கும் கவர்னர் கச்சேரியில் விசாரணைசெய்து வருகின்றார்கள். சகல இலாக்காக்களிலுமுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களையும் உத்தியோகஸ்தரல்லாத பெரிய மனுஷர்களையும் வக்கில்களையும் சாக்ஷியாகக் கோரித் தருவித்து விசாரணை செய்து வருகின்றார்கள். வக்கீல் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர், வக்கீல் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யர், திவான் பகதூர் இரகுநாதராயர், திவான் மிஸ்டர் கிருஷ்ணசாமி ராயர், முதலான ஜன சமுகத் தலைவர்கள் சாக்ஷியம் பகன்றிருக்கிறார்கள். உத்தியோகத்தில் ஆனரபில் மிஸ்டர் ஸ்டோக்ஸ், மிஸ்டர் போர்பஸ், சீப் செக்ரேட்டரீ மிஸ்டர் பிராட்லி முதலாயினோர் சாக்ஷியம் பகன்றிருக்கிறார்கள். அவரவர்கள் அவரவர்களுடைய அனுபவத்திற்குத் தக்கபடி சாக்ஷியம் கூறியிருந்தபோதிலும் பெரும்பாலும் சில செலவு வகையில் இந்தியா கவர்ன்மென்டாருடைய அனுமதியை நாடாமல் செல்வுசெய்ய லோக்கல் கவர்ன்மென்டாருக்கு அதிகாரமிருக்கவேண்டுமென்று சாக்ஷியம் சொல்லியிருக்கிறார்கள். இரண்டொரு உத்தியோகஸ்தர்கள் படிப்படியாய் அப்பீல்செய்து கொண்டு போவதற்கிடமில்லாமல் ரெவினியூ விஷயங்களில் ஒரு அப்பீல் போதுமானது என்று சாக்ஷியம் கூறிய இந்தியா அனுமதியை நாடாமற் போன போதிலும், அனேகர் அப்பீல்செய்து கொள்ளும் ஏற்பாட்டைக் குறைத்தால் பிரஜைகள் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் பஞ்சாயத்து நியமித்து அதற்கு 20 ரூ. வரையிலுள்ள சிவில் வியாஜ்ஜியங்களை விசாரணை செய்து முடிவுசெய்யவும் அற்பக் கிரிமினல் குற்றங்களை விசாரணைசெய்து தண்டிக்கவும் அதிகாரமிருக்க வேண்டுமென்று அனேகர் சாக்ஷியம் பகன்றிருக்கிறார்கள். ஜலப்பாய்ச்சல் விஷயத்தில் இஞ்ஜினீர் தம் மிஷ்டப்படி செய்யக் கூடாதென்றும் கலெக்டரை ஆலோசனைசெய்து அவருடைய உத்தரவின்படி நடக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். சிலர் நீர்ப் பாய்ச்சல் விஷயத்தில் மராமத்து இலாக்காக்காரர்கள் செய்யும் ஏற்பாட்டில் கலெக்டர் பிரவேசிக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். ஜில்லா கலெக்டர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாலும் அவர்கள் தேச பாஷையில் பேசக்கூடாதவர்களாயிருக்கிறபடியாலும் அவர்களுக்குப் பிரஜைகளின் நோக்கங்களை அறிந்துகொள்ள முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஜில்லாவில் கொடிய நோய் பரவி வரும் காலத்திலும் பஞ்சம் தோன்றும் காலத்திலும் இன்னும் சமயா சமயங்களிலும் ஜில்லா கலெக்டருக்கு யோஜனை சொல்லும்படியாக ஜனப்பிரதிநிதிகளடங்கிய ஒரு கவுன்சில் (Advisory Council) இருக்கவேண்டுமென்று அனேகர் சாக்ஷியம் சொல்லியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் விசாரணைசெய்து கொண்டு பிறகு மற்றுமுள்ள மாகாணங்களுக்குச் சென்று அவ்விடங்களில் விசாரணைசெய்து இங்கிலாண்டிற்குச்சென்று ரிப்போர்ட் தயார்செய்து மாக்ஷிமை தங்கிய மகாராஜாவுக்கு அனுப்புவார்கள். இந்த ரிப்போர்ட்டின் பிரகாரம் கவர்ன்மென்டு சீர்திருத்தப்படும். இந்த திருத்தம் உண்டாவதற்கு இன்னும் மூன்று வருஷம் செல்லுமென்பதில் தடையில்லை. ஆயினும் முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தமாக நிற்கின்றது. நாம் எவ்வளவிற்கு எவ்வளவு தேச விஷயங்களில் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய குறைகள் நீங்கி சுகமாகக் காலம் கழிக்கலாம்.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்.

மிஸ்டர் ஜஸ்டில் சங்கரனியர்.

ஆள் மாருட்டம் செய்து போர்ஜரி செய்த கேஸ்.

(28—10—07.)

கேஸின் விபரம்:—இந்த அப்பீல் கோயம்புத்தூ
லிருந்து வந்திருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லா
காபிச்செட்டி பாளையத்தில் நாட்டுக்கோட்டை முத்
ய்யன் செட்டியாருக்குச் சொந்தமான ஒரு லாவா
தவிக்கடை யிருந்தது. மூன்றுவது கைதி இந்த
ாங்கியின் ஏஜன்டினிடம் கடந்த மார்ச்சுமீ 28௳
ந்து 1, 2, கைதிகள் முறையே தனவந்தனுகிய
ழக் கவுண்டனுடைய புத்திரன் பாக்கியக் கவுண்
ன் என்றும் காளப்பக் கவுண்டனுடைய புத்திரர்
ளப்பக் கவுண்டன் என்றும் ஆள்மாருட்டமாகச்
சால்லி அவர்களுக்கு ரூ. 600 கடன் கொடுக்கும்படி
சான்னன். அதற்கு பாங்கியின் ஏஜன்டும் சம்மதி
து அப்படியே இவர்களிடம் ஒரு பிராமிஸரி நோட்டு
ழுதி வாங்கிக்கொண்டு ரூ. 600-ம் கடன் கொடுத்
ார்கள். 1, 2, கைதிகள் பிராமிஸரி நோட்டில் முறை
ய பாக்கியக் கவுண்டன் என்றும் காளப்பக் கவுண்
ன் என்றும் கையெழுத்து செய்திருக்கிறார்கள்.
[illegible] கைதிகள் மூவரும், ஆள்மா
ட்டம் செய்து ஏமாற்றிக் கடன் வாங்கியிருக்கிறார்
ள் என்றும் "பாக்கியக் கவுண்டன்" என்றும் "காள
பக் கவுண்டன்" என்றும் உள்ளபடி பெயருடைய
ணக்காரர்கள் மார்ச்சுமீ 28௳ தினம் கோபிச்
செட்டி பாளையத்திலில்லை என்றும் பாங்கியின் ஏஜண்
க்குத் தெரியவந்தது. ஆகவே இந்த கைதிகள்
வர் பேரிலும் இ. பி. கோ. 419-வது 467-வது
ரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் முறையே ஆள்
ருட்டம் செய்து ஏமாற்றின குற்றத்திற்கும் போர்
ரிக் குற்றத்திற்கும் மாஜிஸ்டிரேட் முன்னிலையில்
ற்றம் சாட்டினர். போலிஸ் கோர்ட்டார் இந்தக்
கசை விசாரணை செய்து கைதிகளை செஷன்ஸ் கோர்
டிற்குக் கமிட் செய்தார்கள். செஷன்ஸ் கோர்ட்டில்
ந்தக் கேசை விசாரணை செய்யும்போது இந்தக்
கள் தங்கள்பேரில் ஜோடிக்கப்பட்டு வந்திருப்ப
கவும் தாங்கள் நிரபராதிகள் என்றும் டிபன்ஸ்
றினர்கள். செஷன்ஸ் கோர்ட்டார் ஒவ்வொருவகதி
கும் 5வருஷ கடினகாவல் தண்டனையும் ரூ 200அப
தமும் அபராதம் கட்டத்தவறினல் இன்னும் ஒரு
ருஷ கடினகாவல் தண்டனையும் விதித்தார்கள்.
த்தத் தீர்மானத்திற்கு விரோதமாக கைதிகள் ஹை
கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள் :—கைதிகள் தரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்னும் கவர்ன்மெண்டு தரப்பில் பப்ளிக் பிராசிக்கியூடரும் பேசினர்கள்.

தீர்ப்பு :—இருதரப்பு லாயர்களும் வாதித்ததைக் கோர்ட்டார் கேட்டுவிட்டு கைதிகள் செய்திருக்கும் குற்றம் ஆள் மாருட்டம் செய்து ஏமாற்றின குற்றமாக மாட்டாதென்றும் ஆள்மாருட்டம் செய்து தப்புக் கையெழுத்து சிருஷ்டி செய்த குற்றமாகுமென்றும் சொல்லி அசல் குற்றங்களை மாற்றி ஸ்தாபனம் செய்து செஷன்ஸ் கோர்ட்டார் கொடுத்த தண்டனையை உறுதிப்படுத்தினர்கள்.

சென்னப்பட்டணம் ஸ்மால்காஸ் கோர்ட்

ஜட்ஜி : மிஸ்டர் C அரங்கநாத நாயுடு.

மைலாப்பூர் பண்டு கேஸ்.

(30—10—07.)

வாதி :—ஆண்டாளம்மாள்.

பிரதிவாதி :—மைலாப்பூர் பண்டு ஆபீசார்.

கேசின் விபரம் :—வாதியின் புருஷன் தன்னுடைய வீட்டின்பேரில் ரூ. 1500 - கடன் வேண்டுமென்று பிரதிவாதியைக் கேட்டார். 1904-ம் ளு ஜூன்மீ பிரதிவாதி வீட்டின் மூலதஸ்தாவேஜிகளை ஈடாக வைத்துக்கொண்டு ரூ. 1500-கடன் கொடுத்தார்கள். அடமானப் பத்திரத்தில் வாதியின் புருஷனுடைய குமாரனும் கட்டுப்பட்டு கையெழுத்து செய்திருந்தான். ஆயினும் பண்டின் கணக்குப் புஸ்தகங்களில் வாதியினுடைய புருஷன் பேயரில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. சிலகாலம் சென்று இன்னும் கடன் முழுதிலும் தீர்க்கப்படாதிருக்கிறபோது தன்னுடைய சம்மதமின்றி தன்னுடைய தகப்பனரிடம் வீட்டின் மூலதஸ்தாவேஜிகளைப் பண்டார் கொடுக்கக்கூடாதென்று புத்திரன் பண்டாருக்கு நோடீஸ் கொடுத்தான். ஒரு மாதம் சென்றபிறகு அதாவது 1904-ம்ளும் அக்டோபர்மீ 27௳ வாதியின் புருஷன் வாதிக்குப்பிரஸ்தாபவீட்டை சர்வவில்லங்க சுத்தியாய் கிரையம் செய்து கொடுத்துவிட்டு வாதி பண்டாரின் கடனைச் செலுத்திவிட்டபிறகு வாதியிடம் பண்டார் வீட்டின் மூலதஸ்தாவேஜிகளை ஒப்புவித்து விடும்படி பண்டாருக்கு அதிகாரம் கொடுத்து கடிதம் எழுதிவிட்டார். 1907-ம் ளு செப்டம்பர்மீ முழுக்கடனையும் வாதி செலுத்திவிட்டு வீட்டின் மூலதஸ்தாவேஜிகளைக் கேட்க, பண்டார் புத்திரனுடைய சம்மதமின்றி கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே வாதி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்.

பண்டார் சொல்லும் எதிர் கக்ஷி :—(1) வாதியின் புருஷனுடைய புத்திரனுடைய சம்மதமின்றி மூலதஸ்தாவேஜிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வாதி பாத்தியமற்றவள். (2) வாதியின் புருஷன் ஜீவதிசையி

லிருக்கும்போது வாதிக்கு அந்த வீட்டில் பாத்தியமுண்டாகமாட்டாது. (3) புத்திரனையும் கக்ஷிக்காரனாகச்சேர்க்காததால் வியாஜ்ஜியத்திற்கு தோக்ஷமுண்டாயிருக்கிறது. (4) இந்தவியாஜ்ஜியத்தின் செலவுத்தொகைக்கு பிரதிவாதிகள் பாத்தியப்பட்டவர்களல்ல.

தீர்ப்பு :—பண்டு விதிகளின்படி வாதியிடம் மூல தஸ்தாவேஜிகள் ஒப்புவிக்கப் பண்டார்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அந்த வீட்டிற்குச் சொந்தமானவர் வாதி ஆகையால் மூல தஸ்தாவேஜிகளை அவர் பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவர். எப்போது வாதி கடனைப் பைசல்செய்துவிட்டு மூலதஸ்தாவேஜிகளைக் கேட்டாரோ அப்போதே பண்டார் புத்திரனுக்கு அறிவித்து புத்திரன் பதில் தெரிவிக்கும்படியான போதுமான காலம் சென்றபிறகு தஸ்தாவேஜிகளை வாதியினிடம் ஒப்புவித்திருக்கவேண்டும். அப்படிக்கல்லாமல் பண்டார் தங்கள் கையிலேயே தஸ்தாவேஜிகளை வைத்துக்கொண்டு புகல் சொல்லிக்கொண்டு வந்தபடியால் அவர்களே இந்த வியாஜ்ஜியத்தின் செலவுத்தொகையைக் கொடுக்கவேண்டுமென்று டிக்கிரி கொடுத்து தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

சேலம் கொலைக் கேஸ்.

(29—10—07.)

கைதி :—சின்ன சடையப்பன்.

கேசின் விபரம் :—சின்ன சடையப்பன் என்கிற கைதி பேரில் இரண்டுவித குற்றம் சாட்டப்பட்டது. முதலாவது குற்றம் என்னவென்றால் அவன் அவனுடைய தமையனுடைய பெண்சாதியை 1907-ம் ஞு ஜூன்மீ 5உ கொலை செய்ததாக இ. பி. கோ. 302-வது பிரிவின்படி கொலைக்குற்றம். இரண்டாவது ஷை தினத்தில் காவேரி என்கிற ஸ்திரியின் காதை அறுத்து கடுங்காயம் விளைவித்ததற்காக இ. பி. கோ. 326-வது பிரிவின்படி கடுங்காயம் விளைவித்த குற்றம். இந்த இரண்டு குற்றங்களுக்காக சேலம் செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்து இரண்டு குற்றங்களையும் ஸ்தாபனை செய்து, ஹைகோர்ட்டார் உறுதிப்படுத்தும் நிபந்தனையுடன் மரண தண்டனை விதித்தார்கள். இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள் :—கைதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் J. கிருஷ்ணாராவும் கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூடரும் பேசினார்கள்.

கைதியின் லாயர் பேசினது :— இந்தக் கேஸில் கைதி கொலைசெய்தான் என்பதற்கு காவேரி என்கிற ஸ்திரி சொல்லியிருக்கும் வாக்குமூலத்தைத் தவிர வேறே சாக்ஷியமில்லை. இவளும் முதலில் எழுதிவைத்த வாக்குமூலத்தில் கைதி கொலை செய்ததைத் தான் பார்த்ததாக எழுதி வைக்கவில்லை. தான் கைதியால் காயமடைந்ததை மட்டிலும் எழுதிவைத்திருக்கிறாள். பின்னிட்டு எழுதி வைத்திருக்கிற வாக்குமூலத்தில் கைதி தன்னுடைய வீட்டிலிருந்து வெளியே வரும்போது இறந்துபோனவளுடைய, கூச்சல் கேட்டதென்று எழுதி வைத்திருக்கிறாளே தவிர் கைதி கொலை செய்ததைப் பார்த்ததாக சாக்ஷி வாக்குமூலம் கொடுக்கவில்லை. இப்படி காவேரி சொன்ன சாக்ஷியத்தை அனுசரித்துச் சொல்லக்கூடிய வேறே சாக்ஷியமில்லாதிருக்கும்போது கைதியின்பேரில் இ. பி. கோ. 302-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கொலைக்குற்றத்தை ஸ்தாபனை செய்யக்கூடாதென்று வாதித்தார்.

தீர்ப்பு :—கைதியின்பேரில் கொலைக்குற்றம்ஸ்தாபனை செய்வதற்கு காவேரி சொல்லியிருக்கும் சாக்ஷியத்தைத் தவிர வேறே சாக்ஷியமில்லை. ஆகையால் இந்த சொற்ப சாக்ஷியத்தை முன்னிட்டு கைதியின்பேரில் கொலைக்குற்றம் ஸ்தாபனை செய்யக்கூடாது. ஆயினும் காவேரி தான் கைதியால் காயமடைந்ததாகச் சொல்லியிருக்கும் வாக்குமூலத்தை நம்பி கைதியின்பேரில் இ. பி. கோ. 326-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கடுங்காயம் விளைவித்த குற்றத்தை ஸ்தாபனைசெய்து செஷன்ஸ்கோர்ட்டார் கொடுத்த மரணதண்டனையைக் கடுங்காயம் விளைவித்த தண்டனையாக மாற்றி விதிக்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்.
ஜஸ்டிஸ் மிஸ்டர் மில்லர்.

தஞ்சாவூர் வக்கீல் கேஸ்.

கேசின் விபரம் :—கும்பகோணம் ஜாயின்ட்மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் ஜாக்சன் தஞ்சாவூர் சப் டிவிஷன் பதில்மாஜிஸ்டிரேட்டாக இருந்தபோது, கலகம்செய்த குற்றத்திற்காக தண்டனை அடைந்த சிலர் செய்துகொண்ட அப்பீலை விசாரணை செய்யும்படி நேரிட்டது. தண்டனையை அடைந்தவர்களுக்காக ஆஜரான பிளீடர் மிஸ்டர் K. R. இராமசந்திர அய்யர் கீழ்க்கோர்ட்டில் கொடுத்த ஒரு மனுவை அப்பீல் மாஜிஸ்டிரேட் தப்பான அபிப்பிராயம் கொள்ளும்படி பின்னப் படுத்தியதாகத் தெரிய, அப்பீலை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் ஜாக்சன் மிஸ்டர் K. R. இராமசந்திர அய்யர், Legal Practitioners' Act என்கிற லாயர்களின் ஆக்ட்டின் 14-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற குற்றத்தைச் செய்ததாக குற்றம் சாட்டி இதற்காக அவரை விசாரணை செய்வதற்கு 1907ஞ செப்டம்பர்மீ 30உ குறிப்பிட்டிருந்தார். அதே மாதம் 22உ ரஜா எடுத்துக்கொண்டு போயிருந்த தஞ்சாவூர் சப்டிவிஷன் மாஜிஸ்டிரேட் திரும்பிவர, மிஸ்டர் ஜாக்சன் அவரிடம் சார்ஜை ஒப்புவித்து விட்டு தம்முடைய சொந்த கும்பகோணம் டிவிஷனுக்கு வந்துவிட்டார். நோட்டீஸ் சார்வ் செய்யப்பட்டபடி பிளீடர் செப்டம்பர்மீ 30உ தஞ்சாவூர் சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜரானார். இந்தக் கேஸைச்சேர்ந்த தஸ்தாவேஜிகளை மிஸ்டர் ஜாக்சன் தம்முடன் எடுத்துக்கொண்டு போய்விட்டதாக தஞ்சாவூர் சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் சொல்லிவிட்டார். மிஸ்டர் ஜாக்சன் இந்தக் கேஸை தம்முடைய பயிலில்வைத்து விசாரணை செய்யும்படி உத்தரவாக வேண்டுமென்று ஜில்லா மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக்கொள்ள, ஜில்லா மாஜிஸ்டிரேட் பிளீடருக்கு நோட்டீஸ் கொடுத்து தருவித்து அவருக்கு ஏதேனும் ஆக்ஷேபனை உண்டோ இல்லையோ என்றுகூட விசாரணை செய்யாமல் கேஸை கும்பகோணம் ஜாயின்டு மாஜிஸ்டிரேட்டின் பயிலுக்கு அக்டோபர்மீ 3உ மாற்றிவிட்டார். இதன்பேரில் மிஸ்டர் ஜாக்சன் கேசை தம்முடைய பயிலில் வைத்துக்கொண்டு முதலில் பிளீடருக்கு நோட்டீசும், இரண்டாவது சம்மன்ஸும் மூன்றாவது ஜாமீன்பேரில் விடக்கூடிய வாரண்டும் அனுப்பினார். பிளீடர் நோட்டீசும் சம்மன்ஸும் வந்து சேரவில்லை என்று சொல்லுகிறார். பிளீடருக்கு வாரண்டு வந்ததின்பேரில் மிஸ்டர் ஜாக்சனுக்கே இந்தக் கேசை விசாரணைசெய்ய அதிகாரமில்லை என்று மிகவும் நிந்தனையும் கடுமையுமான பதங்களையும் பிரயோகித்து ஆக்ஷேபனைக் கடிதம் எழுதினார். வாரண்டில் குறிப்பிட்ட 9-ந் தேதியில் பிளீடர் மிஸ்டர் ஜாக்சனுடைய கோர்ட்டில் ஆஜரானபோது இவர்பேரில் நிந்தனையான கடிதம் எழுதின குற்றத்திற்கும் அவர்பேரில் குற்றம் சாட்டி, இரண்டு குற்றங்களையும் விசாரணை செய்ய டிசம்பர்மீ 7உ குறிப்பிட்டார். மிஸ்டர் ஜாக்சன் இந்தக்கேசை விசாரணை செய்யக்கூடாதென்று பிளீடர் ஹைக்கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

லாயர்கள் :—ரூவ்பகதூர் T. சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் T. கிருஷ்ணசாமி அய்யர் ஆகிய இருவர்களும் பிளீடர் தரப்பிற்கும் பப்ளிக் பிராசிக்கியூடர் கவர்மெண்டு தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

உத்தரவு :—பிளீடர் குற்றஞ்செய்ததாகச் சொல்லப்படும் இடம் தஞ்சாவூர் டிவிஷன். எப்போது மிஸ்டர் ஜாக்சன் தஞ்சாவூர் டிவிஷனை விட்டு விலகிப் போய்விட்டாரோ, அப்போதே அந்த டிவிஷனிலுள்ள கேஸை விசாரணை செய்வதற்குள்ள பாத்தியதையும் போய்விட்டது. தஞ்சாவூர் டிவிஷன் பயிலிலிருந்த கேஸை கும்பகோணம் டிவிஷன் பயிலுக்கு தஞ்சாவூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் மாற்றினது சட்டவிரோதம் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டிற்கு இந்தக்கேஸைவிசாரிப்பதற்குசரியான அதிகாரமில்லாமலிருக்கும்போது, அவர் அனுப்பிய நோட்டீசும் சம்மன்ஸும், வாரண்டும்சட்டப்படி செலாமணியாகக்கூடியவையல்ல. பிளீடர் எழுதிய கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்கள் நிந்தனையான வாக்கியங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் அதிகாரமின்றி நடவடிக்கை நடத்திவந்ததாலும் பிளீடர் கடிதம் எழுதியிருப்பது தம்முடைய பிளீடர் தொழில் சம்பந்தமில் எழுதப்படாததாயிருப்பதாலும் கடிதம் எழுதின குற்றத்திற்காக பிளீடர்பேரில் லாயர் ஆக்ட்டின்படி குற்றம் சாட்டி விசாரணை செய்யக்கூடாது. ஆகவே பிளீடர் பேரில் இரண்டாவது குற்றம் சாட்டப்பட்டதை கோர்ட்டார் சட்டவிரோதமென்று கூறி தஞ்சாவூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்தக்கேஸை கும்பகோணம் டிவிஷன் பயிலுக்குமாற்றிய உத்தரவை ரத்துசெய்து தஞ்சாவூர் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டே பிளீடர்பேரில் சாட்டப்பட்ட முதல் குற்றத்தை விசாரணைசெய்து பைசல் செய்ய வேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்.

வியாபார அடையாளக் கேஸ் (Trade-mark)

வாதிகள் :—மெஸ்ஸர்ஸ் பீயர்ட்சல் கம்பெனியார்
பிரதிவாதிகள்.-மெஸ்ஸர்ஸ் டெட்லி அண்டுவொயிட்லி

(19—11—07.)

கேஸின் விபரம் :—வாதிகளும் பிரதிவாதிகளும் சென்னையில் சீமைத்துணிகள் வியாபாரஞ் செய்யும் வர்த்தகர்கள். சென்னையில் வியாபாரம் செய்துவரும் தொடி பாக்ஷா சாயப் கம்பெனியார்கள் சீமையிலிருந்து தருவிக்கும் மல்லுகளுக்குப்போட்டுவந்த "செடி" அடையாளத்தை வாதிகள் 1901ஞ வாங்கிக்கொண்டு அந்தக் காலமுதல் நாளது வரையில் தாங்கள் சீமையிலிருந்து தருவிக்கும் மல்லுகளுக்கு "செடி" அடையாளமும், "நெ. 136"ம் போட்டு விற்பனை செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த நெ. 136 உள்பட உள்ள செடி அடையாளம் வாதிகள் சீமையிலிருந்து தருவிக்கும் மல்லுகளுக்கு அடையாளமாகவிருந்து விளங்கி வருகின்றது. இதேமாதிரி எண்ணிக்கையையும் செடி அடையாளத்தையும் போட்டு இப்போது சிலகாலமாக பிரதிவாதிகள் சீமையிலிருந்து தருவிக்கிறார்கள். பிரதிவாதிகள் இந்தப் பிரகாரம் மல்கள் தருவிப்பதால் இந்த மல்கள் வாதி கம்பெனியாருடைய மல் என்று எண்ணப்பட்டு விற்பனையாகி வருகின்றன. ஆதலால் வாதிகளுக்கு நஷ்டம் நேரிட்டிருப்பதாக வாதிகள் பிரதிவாதிகள்பேரில் நஷ்டதாவா தாக்கல்செய்து, இந்த வியாஜ்ஜியம் பைசல் செய்யப்படும் பரியந்தம் பிரதிவாதிகள் கைவசமிருக்கும் மல்லை விற்காமலிருக்கும்படி சொற்பகால உத்தரவு பிறப்பிக்கும்படி (Temporary injunction) மனு செய்துகொண்டார்கள்.

லாயர்கள் :—வாதி கம்பெனியார் தரப்பிற்கு சொலிஸிட்டர் கம்பெனியாராகிய மெஸ்ஸர்ஸ் பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியரும், பிரதிவாதி கம்பெனி தரப்பிற்கு சொலிசிட்டர் கம்பெனியாராகிய மெஸ்ஸர்ஸ் ஆர், டேவிட், பிரைட்வெல் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பார்னும் பேசினார்கள்.

பிரதிவாதிகளின் லாயர் பேசினது :—(1) பிரதிவாதிகள் மல்லை விற்பனை செய்யாமலிருக்கும்படி கோர்ட்டார் உத்தரவு பிறப்பிக்கும்படியாக வாதிகள் செய்துகொண்டிருக்கும் மனு மிகுந்த காலதாமதமாகச் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றது. (2) பிரதிவாதிகள் தருவித்திருக்கும் மல்லுக்கும் வாதி கம்பெனியார் மல்லுக்கும் மிகுந்த வித்தியாசமிருக்கின்றது. பார்வைக்கு இரண்டிற்கும் வித்தியாசம் தோற்றுகின்றது (3) இந்த விஷயங்களை எல்லாம் அசல் வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் விசாரணைசெய்து ஏதேனும் முடிவான தீர்மானம் செய்யலாமே தவிர இந்த மனு விசாரணையில் தீர்மானிக்கக்கூடாது. (4) ஆகையால் கோர்ட்டார் இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று பேசினார்.

கேசின் நடவடிக்கை:—மெஸ்ஸர்ஸ் வால்காட் பிரதர்ஸ் என்னும் கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் A ஸ்கோல், மெஸ்ஸர்ஸ் பாரிகம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் J. ஆர்ம்ஸ்டிராங்; மெஸ்ஸர்ஸ் கார்டன்வுட்ராப் கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் இம்சன், மிஸ்டர் ஷேக்மீரான் சாயப்பு ஆகிய இவர்கள் வாதிதரப்பில் சாக்ஷியம் பகன்றார்கள்.

உத்தரவு :—"வாதிகள், தாங்கள் கொண்டு வந்திருக்கும் வியாஜ்ஜியம் பலமான வியாஜ்ஜியமென்று ருஜுப்படுத்தி யிருக்கிறார்கள். ஆகையால் அசல் வியாஜ்ஜியம் பைசல் செய்யப்படும் பரியந்தம், கைவசமாயிருக்கும் மல்லை பிரதிவாதிகள் விற்பனைசெய்யக் கூடாதென்று உத்தரவு செய்கிறோம்" என்று கோர்ட்டார் உத்தரவு பிறப்பித்தார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

சோரம்போன தாயாரின் கேஸ்.

(12—12—07.)

கேசின் விபரம் :—ஒரு மைனர் மகளை அவளுடைய தாயாரும், இந்தத் தாயாரை வைப்பாட்டியாக வைத்திருந்ததாகச் சொல்லப்படும் ஷேக் அப்தல் காதர் என்பவனும், சேர்ந்து, மைனருடைய சொத்துக்களுக்கு ஆசைப்பட்டு கொலை செய்துவிட்டதாக குற்றம்சாட்டப்பட்டு திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டதில் தாயார் விடுதலை அடைந்தனள். ஷேக் அப்தல்காதர் என்பவன் தண்டனை அடைந்தான். தாயார் இறந்துபோய்விட்டால் ஷை மைனர் பெண்ணுக்கு வார்சாகவரக் கூடியவன், தாயார் உயிருடனிருந்தும் அவள் துன்மார்க்க நடவடிக்கை உடையவளாக இருந்து ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டும் போய்விட்டபடியாலும், மேலும் அவள் தன்னுடையமைனர் மகளைக் கொலை செய்ததாக சாக்ஷியம் ஏற்பட்டிருக்கிறபடியாலும் அவள் ஷை மைனருடைய சொத்துக்கு வார்சாக வரப் பாத்திதையற்றவள் என்றும், ஷை மைனர் மகளுடைய தாயார் இறந்துபோன பிறகு ஷை மைனருடைய சொத்திற்கு தானே வார்சாக வர சட்டப்பிரகாரம் பாத்தியமுடையவனாயிருக்கிறபடியாலும் ஷை பெண்ணுடைய சொத்து தனக்குக் கிடைக்கவேண்டுமென்று தாயார் பேரில் திருநெல்வேலி சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்.

கேசின் நடவடிக்கை :—பிரதிவாதி மைனரைக் கொலை செய்ததில் சேரவில்லை என்று சொல்லி செஷன்ஸ் கோர்ட்டார் அவளை விடுவித்து விட்டபோதிலும் அவள் அந்தக்கொலையில் சம்பந்தப்பட்டிருந்தாள் என்று இந்த சிவில் வியாஜ்ஜியத்தில் ருஜுப்படுத்த முடியும் என்று வாதி கக்ஷி சொன்னார்.

சப்கோர்ட்டார் தீர்ப்பு :—பிரதிவாதி கொலையில் சம்பந்தப்பட்டவளா அல்லவா என்கிற பிரஸ்னையை செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணை செய்து அவள் கொலையில் சம்பந்தப் படவில்லை என்று தீர்மானித்து விட்டபடியால் இந்தத் தீர்மானம், அதே விஷயத்தைக் குறித்து சிவில் கோர்ட்டார் விசாரணை செய்வதற்கு (Resjudicata) தடையாயிருக்கிறதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக வாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு :—ஒரு விஷயத்தைக் குறித்து கிரிமினல் கோர்ட்டார் செய்த தீர்மானம் அதே விஷயத்தைக் குறித்து சிவில் கோர்ட்டார் விசாரணை செய்வதற்குத் தடையா யிருக்கமாட்டாது. ஆகையால் பிரதிவாதி கொலையில் சம்பந்தப்பட்டாளா இல்லையா என்று சிவில் கோர்ட்டார் விசாரணை செய்யலாம். ஆயினும் பிரதிவாதி கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் அவள் தன்னுடைய மைனர் பெண்ணின் சொத்திற்கு வார்சாக வரப் பாத்தியமற்றவள் என்று சொல்லி இந்தக்கேசை விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யும்படியாக சப் கோர்ட்டாருக்கு அனுப்பினார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு :—சப்கோர்ட்டார் பழையபடி இந்தக் கேசை விசாரணை செய்து பிரதிவாதி கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தீர்மானித்தார்கள். தாயார் விபசாரம் செய்வதாகச் சொல்லப்படுவது அவள் தன்னுடைய பெண்ணினுடைய சொத்திற்கு வார்சாக வருவதைத் தடுக்கமாட்டாதென்றும் தீர்மானித்தார்கள். ஆகவே முடிவில் வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

இந்த தீர்ப்பிற்கு விரோதமாக பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டாள்.

லாயர்கள் :—பாரிஸ்டர் மிஸ்டர் T. ரிச்மண்டும், பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்னும், வக்கீல் மிஸ்டர்

T. வைத்திநாத அய்யரும் பிரதிவாதி (தாயார்) தரப்பிற்கும், ஆனரபில் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் A. K. சுந்திர அய்யரும் வாதி தரப்பிற்கும் பேசினார்கள்.

ஹைக்கோர்ட் தீர்ப்பு :—சப்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வாக்குமூலங்களை ஆராய்ந்து பார்த்ததில் பிரதிவாதி கொலைக் குற்றத்தில் சேர்ந்திருக்கக்கூடுமென்று சந்தேகமாய் அனுமானிக்கக் கூடியதாக இருக்கிறதே யொழிய அவள் அக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாள் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. பிரதிவாதி தன்னுடைய பத்திரனுடைய சொத்திற்கு வார்சாக வரவேண்டிய பாத்தியதையைப் புறக்கணிக்கவேண்டுமானால் அவள் கொலையில் சம்பந்தப்பட்டாள் என்பதற்கு கண்டிப்பான ருஜு வேண்டும். இந்தக்கேசில் இவள் பேரில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியம் இவள் கொலையில் சம்பந்தப்பட்டாள் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதபடியிருக்கிறது. இரண்டாவது, தாயார் ஒரு முகமதியனைச் சோர புருஷனாக வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று சொல்லப்படுவது உள்ளபடி உண்மையாகயிருந்த போதிலும் அவளுடைய விபசாரத் தன்மை அவள் தன்னுடைய புத்திரனுடைய சொத்திற்கு வார்சாக வரக்கூடிய பாத்திதையை ரத்து செய்யமாட்டாதென்று இ. லா ரி. 5, சென். 149ல் தீர்மானிக்கப்பட்டிருப்பதுபோல நாமும் தீர்மானிக்கிறோம். புருஷனுடைய சொத்திற்கு வார்சாக வரக்கூடிய விதவைகள் செய்யும் விபசாரம்மட்டிலும் அவர்களுடைய வார்சு பாத்தியதையை ஊனப்படுத்துமே யொழிய இதர ஸ்திரிகள் செய்யக்கூடிய விபசாரம் அவர்களுக்குள்ள வார்சு பாத்தியதையைச் சேதிக்கமாட்டாது. ஆகையால் சப் கோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்து வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

கல்கத்தா ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பிரட்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் காஸ்பிரஸ்.

சுதேசியக் கேஸ்.

கேசின் விபரம் :—கீழ் வங்காளத்திலிருக்கும் பாகர்கன்ஞ் ஜில்லாவிலிருக்கும் போலாஎன்னும் ஊரிலுள்ள டி. மு. க்கோர்ட்டில் தூர்க்கசாரன் சாகையரு என்கிற வர்த்தகர்கள் ரிவர் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார்மீது ஒரு வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்கள். வாதிகள் இந்த வியாஜ்ஜியத்திற்கு ஒரு லாயரை வைத்து நடத்தவேண்டுமென்று கருத்துகொண்டு ஷை ஊரிலுள்ள பிளீடர்களிடம் போய்ப் பேசினார்கள். இவர்கள் இருவரும் இந்த வியாஜ்ஜியத்திற்கு வக்காலத்து வாங்கிக்கொள்ள சம்மதிக்கவில்லை. ஆகவே இந்த வியாஜ்ஜியத்தை வேறொரு ஊருக்கு மாற்றிவிடும்படி பாகர்கன்ஞ் ஜில்லா ஜட்ஜியிடம் மனு செய்து கொண்டார்கள். ஜில்லா ஜட்ஜி என்ன காரணத்தை முன்னிட்டு பிளீடர்கள் வாதியின் வியாஜ்ஜியத்திற்கு வக்காலத்துவாங்க இணங்கவில்லை என்பதைப்பற்றி அந்தப் பிளீடர்களிடமிருந்து ஸ்டேட்டுமென்டு வாங்கி அனுப்பும்படியாக டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவு செய்தார். டி. மு. கோர்ட்டார் எல்லா பிளீடர்களையும் தருவித்து ஸ்டேட்மென்டு வாங்கியதில் அவரவர்கள் தங்களுக்கு தோற்றிய காரணங்களைச் சொன்னார்கள். ஆனால் அதில் பாபுநிரபன் சந்தர் தாஸ்குப்தா என்கிற பிளீடர், வாதி தேசநன்மைக்கு விரோதமான காரியத்தைச் செய்து வருகிறவரானபடியால் அவரிடமிருந்து வக்காலத்துப் பெற தமக்குச் சம்மதமில்லை என்று ஸ்டேட்மெண்டு எழுதி வைத்தார். இப்படி டி. மு. கோர்ட்டார் வாங்கின வாக்கு மூலங்களை அவர்கள் ஜில்லா கோர்ட்டாருக்கு, அனுப்பினார்கள். ஜில்லா கோர்ட்டார் வாதி எப்படி தேசத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்து வருகிறார்களென்று ஷை பிளீடர் பாபு நிபரன் சந்திரதாஸ் குப்தாவை விசாரணைசெய்து அறிவிக்கும்படி டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவு செய்தார்கள். டி. மு. கோர்ட்டார் அந்த பிளீடரை விசாரணை செய்ததில் வாதிகள் சீமைத்துணிமணிகளை விற்பனைசெய்து வருகின்றபடியாலும், விற்பனை செய்துவரக் கூடாதென்று அவருக்கு புத்திமதி சொல்லுகிறவர்களைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கவர்ன்மென்டு அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்கிறபடியாலும் அவர் தேசத்திற்கு விரோதமான காரியத்தைச் செய்வதாகத் தாம் எண்ணுவதாய் விபரமான ஸ்டேட்மென்டு எழுதி வைத்தார். இதன் பேரில் டி. மு. கோர்ட்டார், ஷை பிளீடர் வாதியிடமிருந்து வக்காலத்துப்பெற சம்மதிக்காமல் போன நடத்தை Legal Practitioners' Act என்கிற லாயர் சட்டத்தின் 13-வது பிரிவிற்கு விரோதமென்றும் இந்தச் சட்ட விரோதமான நடத்தையைக் குறித்து தாங்கள் ஹைக்கோர்ட்டாருக்கு ரிப்போர்ட் செய்யாமலிருக்கிறதற்கு ஏதேனும் காரணம் சொல்லக்கூடுமானால் சொல்லிக் கொள்ளலாமென்றும் ஷை பிளீடருக்கு நோடீஸ் பிறப்பித்தார்கள்.

இந்த நோடீஸ் பிறப்பிக்கப்பட்டது சட்ட விரோதமென்று பிளீடர் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு :—(1) வக்கீலின் நடவடிக்கை, லாயர் ஆக்ட்டின் எந்தப் பிரிவிற்கும் இலக்காகாது. (2) டி. மு. கோர்ட்டார் இம்மாதிரி நோடீஸ் பிறப்பிக்க அதிகாரமற்றவர்கள். (3) பிளீடர் வக்காலத்து வாங்க சம்மதிக்காததில் தமக்குள்ள பாத்தியதையைப் பாராட்டினாரே ஒழிய மற்றப்படி வேறில்லை. என்று நியாயம் சொல்லி டி. மு. கோர்ட்டார் பிறப்பித்த நோடீசை ரத்துசெய்து விட்டார்கள்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஆஸ்டிரேலியா தேசத்திலிருந்து ஓடிவந்து விட்டவர்கள் கேஸ்.

(6—12—07).

மனுவின்விபரம் :—கூடன்சிங், சுந்திரசிங் என்கிற இரண்டு இந்தியர்கள் ஆஸ்டிரேலியா தேசத்திற்குப்போயிருந்தார்கள், இந்தியர்கள் ஆஸ்டிரேலியா தேசத்திற்குப் போய் வியாபாரம் அல்லது கூலிவேலை செய்தால் அத்தேசத்தைவிட்டு வரும்போது கவர்ன்மெண்டாருடைய உத்தரவைப்பெற்றுக்கொண்டு வரவேண்டும். பிரஸ்தாப கூடன்சிங், சுந்திரசிங் என்பவர்கள் அப்படி கவர்ன்மெண்டாருடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டுவராமல் ஸ்டீமர் ஏரி சென்னைக்கு வந்து விட்டார்கள். வந்த இரண்டு பேர் வழிகளும் அவர்களுடைய கடன்காரர்களை மோசம் செய்துவிட்டு 300 சவரனுடன் ஸ்டீமரில் ஏறிவருகிறார்களென்றும் இவர்களைக் கைதி செய்யும்படியும் சென்னைக் கவர்ன்மெண்டாருக்குத் தந்தி வந்தது. Fugitives offenders' Act ன்படி இவர்களைக் கைதி செய்ய கவர்ன்மெண்டார் ஷை தந்தியைப் போலிசார் இடம் ஒப்புவித்தார்கள், ஒப்புவிக்கவே, போலீஸ் அதிகாரிகள் ஸ்டீமரை எதிர் பார்த்துக் கொண்டிருந்து அது வந்தவுடன் இந்த இரண்டு பேர்களையும் கைதிப்படுத்தி பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் ஆஜர்படுத்த, அவர் ஆஸ்டிரேலியா தேசத்திலிருந்து சமாசாரம் வரும் பரியந்தம் ரிமாண்டு ஜெயிலில் வைத்திருக்கும்படி உத்தரவு செய்தார். இந்த இரண்டு பேர்களும் ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் T. வெங்கட்சுப்பய்யர் அவர்கள் மூலமாக தங்களை ஜாமீன் பேரில் விடும்படி மனு செய்துக்கொண்டார்கள். கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூடர் பேசினார்.

உத்தரவு :— ஆஸ்டிரேலியா தேசத்திலிருந்து கேஸின் விசாரணையைக் குறித்து தந்தி வரும் பரியந்தம் இவர்கள் ஜாமீன்பேரில் விடப்பட்டிருக்க வேண்டும். முதல் கைதியிடமிருந்து எடுக்கப்பட்ட 200 பௌனும் போலிசார்வசமே யிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள் :—சிப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ் பேரில் வந்திருக்கும் வியாஜ்ஜியம்.

வாதி :—மணிபாய் (மைனர்) ;
ஷையாருடைய தாயார் கார்டியன் மூலமாக.

பிரதிவாதி :—மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ்.

கேசின் விபரம்:— பிரதிவாதியாகிய மிஸ்டர் லாட் கோவிந்ததாஸ் சென்னையிலிருக்கும் ஒரு தனவந்தர். வாதிக்கு கார்டியனாக நிற்கும் ஸ்திரி மிஸ்டர் லாட் கோவிந்ததாஸின் தகப்பனுருடைய இரண்டாவது மனைவி. பிரதிவாதி வாதியின் வசமிருந்த சில நகைகளைப் பெறுவதற்கும், பிரதிவாதி வாதிக்கு ஜீவனும்சம் கொடுத்து வரும்படிக்கும், குடியிருக்க வீடுகொடுக்கும்படியாகவும் வாதி இந்த வியாஜ்ஜியம் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சயிடில் கொண்டுவந்தார். அப்போது, பிரதிவாதி ஒரு பிரமாணபத்திரம் (affidavit) தாக்கல் செய்து வாதிக்கு யாதொரு சொத்துமில்லாததால், வாதி வியாஜ்ஜியத்தின் செலவுத் தொகைக்கு ஜாமீன் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அசல் கோர்ட்டு ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் இந்த பிரமாணப் பத்திரத்தை விசாரணை செய்து வியாஜ்ஜியத்தின் செலவுத் தொகைக்காக ஆயிரம் ரூ. பிரதிவாதி ஜாமீன்கொடுக்கும்பரியந்தம் அசல்வியாஜ்ஜிய நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார்.

இந்த உத்தரவிற்கு விரோதமாக வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டனர்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் வெங்கட்டசுப்பராவ், மிஸ்டர் ராதாகிருஷ்ணய்யர் ஆகிய இருவர்களுடைய உதவியுடன் வக்கில் மிஸ்டர் K. நாராயணராவ் வாதிதரப்பிற்கும், சொலிஸ்லிடர் கம்பெனியாராகிய பிரான்சன் அண்டு பிரான்சன் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன் பிரதிவாதிகளுக்காகவும் பேசினார்கள்.

வாதியின் வக்கீல் பேசினது :—சொத்தில்லாத வாதியிடமிருந்து வியாஜ்ஜியத்தின் செலவுத் தொகைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று பேசும் பிரிவு சி. பு. கோ. 380-வது பிரிவு. இந்தப் பிரிவில் கார்டியனிடமிருந்து ஜாமீன் வாங்கவேண்டுமென்று சொல்லப்படவில்லை. இதுவிஷயமாக இங்கிலாண்டு தேசக் கோர்ட்டார் அநுசரித்துவரும் வழக்கத்தை சென்னப்பட்டண ஒரிஜினல் கோர்ட்டார் அனுசரிப்பார்களேயானால் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் செய்திருக்கும் உத்தரவு பிசகான உத்தரவென்று முடியும். Hindu V. Wilmou 2 K. and F. 465, Simpson on Infan to page 470 ஆகிய இந்தப்பிரமாணங்கள் மைனருக்காக வியாஜ்ஜியம் செய்யும் கார்டியன்களிடமிருந்து ஜாமீன் வாங்கக்கூடாதென்று கூறுகின்றன. இ. லா ரி. 23, பம். 100-ல் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் ஏதாவது புறக்கணிக்கக்கூடாதமுக்கியகாரணங்களிருந்தால் கார்டியனிடமிருந்து ஜாமீன் வாங்கலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அந்தத்தீர்மானத்தை இந்தக்கோர்ட்டார் பின்பற்றுவது இங்கிலீஷ் தீர்ப்புகளுக்கு விரோதமாயிருக்கின்றது என்று சொல்லி முடித்தார்.

பிரதிவாதி லாயர்பேசினது:—2, பம்பாய் 100-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை இந்தக்கோர்ட்

டாரும் பின்பற்றி கார்டியனிடமிருந்து ஜாமீன் வாங்கும்படியாக ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் செய்திருக்கும் உததரவை உறுதிப்படுத்த வேண்டுமென்று சொன்னார்.

தீர்ப்பு :—23. பம்பாய் 100-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானத்தை அனுசரித்தபோதிலும் இந்த வியாஜ்ஜியத்தில் கார்டியனிடமிருந்து ஜாமீன் வாங்கும்படி அவ்வளவு முக்கியமானவும் புறக்கணிக்க முடியாதவுமான காரணங்களில்லை என்று சொல்லி மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் செய்த உத்தரவை ரத்து செய்து அசல் வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து பைசல் செய்யும்படியாக தீர்ப்பு சொன்னார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டு.

ஜட்ஜி.—மிஸ்டர் S. O. P. ஓல்ட் பீல்ட் I. C. S.

நாகப்பட்டணம் தேவஸ்தான கமிட்டி.

(12—12—07.)

தஞ்சாவூர் தேவஸ்தான கமிட்டியில் அங்கத்தினராக விருந்த மிஸ்டர் P. இரத்தின சபாபதி பிள்ளை அவர்கள் இறந்துபோய் விட்டபடியால் காலியான மெம்பர் ஸ்தானத்திற்குத் தங்களை நியமிக்கும்படியாக1 2-பேர்கள் ஜில்லா ஜட்ஜிக்கு மனு செய்துகொண்டார்கள். வோட்டர்கள் ஜாபிதா தயார் செய்யப்பட்டு மூன்று வருஷங்களாய்விட்டபடியால் இந்த ஜாபிதாவை ஆதாரமாக வைத்துக்கொண்டு எலக்ஷன் நடத்தும்படி விடுவது உசிதமா யிருக்கமாட்டாதென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு தாங்களே காண்டிடேட்டுகளின் உரிமைகளை விசாரணை செய்ய ஆரம்பித்தார்கள். தஞ்சாவூர் தேவஸ்தான கமிட்டியின் அதிகாரத்திற்குட்பட்டு 372 சிவ தேவஸ்தானங்களும் 33 வைஷ்ணவ தேவஸ்தானங்களுமிருக்கின்றன.

உத்தரவு:— இப்போது காலியாயிருக்கும் மெம்பர் ஸ்தானத்திற்கு ஒருவரைத் தெரிந்தெடுப்பதில் கோர்ட்டார் கவனிக்கவேண்டிய முதல் விஷயமென்னவென்றால் சகல வர்ணத்தைச் சேர்ந்தவரும் கமிட்டியில். அங்கத்தினர்களாக இருக்கிறார்களாவென்று கவனித்து எந்த வர்ணத்தாருக்கு கமிட்டியில் பிரதிநிதியில்லையோ அல்லது பிரதிநிதிகளின் எண்ணிக்கைக் குறைவாக விருக்கின்றதோ அப்படிப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதியை நியமிக்கவேண்டும், காண்டிடேட்டு தேவஸ்தான கமிட்டியிலிருந்து தேவஸ்தான பரிபாலனங்களை ஒழுங்காய் நடத்திவைப்பதில் உதவி புரியக்கூடிய யோக்கிதை உடையவரா என்றுகவனிக்கவேண்டியது. இரண்டாவதுவிஷயம், தற்காலம் தேவஸ்தானக் கமிட்டியிலிருக்கும் 6 அங்கத்தினர்களில் இரண்டுபேர்கள் சிவ மதத்தைச் சேர்ந்தவர்களாகவும், நான்கு பேர்கள் வைஷ்ணவர்களாகவு மிருக்கின்றார்கள். இதில் மூன்றுபேர்கள் பிராமணர்கள், இறந்துபோன கமிட்டி மெம்பராகிய மிஸ்டர் P. இரத்தினசபாபதிபிள்ளை அவர்கள்சைவர். ஆகையால் இப்போது நாம் பிராமணர்களாயிருப்பவரையும் நியமிக்கக்கூடாது. வைஷ்ணவரா யிருப்பவரையும் நியமிக்கக்கூடாது, இந்தக் காரணத்தைக் கொண்டு இப்போது வந்திருக்கும் 12-மனுக்களில் 9-மனுக்களைத் தள்ளுபடி செய்கின்றோம். ஆகையால் பாக்கியுள்ள, மிஸ்டர் கோபாலசாமி உடையார், மி-ர் T. இராமலிங்கமுதலியார், அன்னதான மேத்த தேசிகர் ஆகிய மூன்றுபேர்களுக்குள் ஒருவரை நியமிக்கவேண்டும். முதல் இருவரும் தஞ்சாவூர் ஜில்லாவில் மிகுந்த செல்வாக்குள்ள குடும்பத்தாரைச் சேர்ந்தவர்கள் என்பதில் தடையில்லை. ஆயினும் மிஸ்டர் கோபாலசாமி உடையாரைச் சேர்ந்த நெருங்கிய பந்துக்கள் ஏற்கனவே அனேக தேவஸ்தானங்களுக்கு தர்மகர்த்தர்களாக இருந்து வருகின்றார்கள். ஆகையால் அவருடைய குடும்பத்தார் போதுமானபடி தேவஸ்தானத்தில் பிரதிநிதிகளாயிருக்கின்றார்கள். மேலும் மிஸ்டர் கோபாலசாமி உடையார் தேவஸ்தான கமிட்டியின் அதிகார எல்லைக்கு அப்பால் வசித்துக்கொண்டு வருகின்றார். மி-ர் T. இராமலிங்கமுதலியார், இப்போது கமிட்டியிலிருக்கும் ஒரு மெம்பருக்கு சமீபமான பந்து. ஆகையால் இந்த இருவரும் நியமனத்திற்கு அருகற்றவர்களா யிருக்கின்றார்கள். ஆகையால் அன்னதான மேத்த தேசிகரை இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு நியமிக்கின்றோம். முதலாவது நிபந்தனை இவர் இப்போது வகித்துக்கொண்டுவரும் வலிவலம் தேவஸ்தான தர்மகர்த்தா ஸ்தானத்தை ஒரு மாதத்திற்குள் ராஜிநாமா கொடுத்து விடவேண்டும். இரண்டாவது நிபந்தனை, காலியான தர்மகர்த்தா ஸ்தானத்திற்கு இவருடைய சமீபபந்து எவரும் நியமிக்கப்படக்கூடாது.

பம்பாய் ஹைகோர்ட்.

எண்ணெய்க் கிணறு பற்றி எரிந்த கேஸ்.

கேசின் விபரம்:—பம்பாய் ராஜதானியிலிருக்கும் பாரிசி என்கிற ரெயில்வே ஸ்டேஷனுக்கு சமீபத்தில் ஒரு எண்ணெய்க்கிணறு கட்டப்பட்டு அதில் எண்ணெய் நிறப்பப்பட்டிருந்தது. இந்த எண்ணெய்க்கிணற்றைப் பாதுகாக்கவேண்டிய கடமை ஷை ஸ்டேஷன் மாஸ்டருடைய கடமைகளில் ஒன்று. கடந்த மேமீ 25வ ரெயில்வே கம்பெனியைச் சேர்ந்த ஒரு போர்ட்டர் மாலை 6 - மணி சூரிய அஸ்தமனத்திற்கு மேற்பட்டு கையில் ஒரு கைலாந்தர் எடுத்துக்கொண்டு ஷை எண்ணெய்க் கிணற்றுக்கருகில்போக, எண்ணெய்த்தீப்பிடித்து எறிந்துபோய்விட்டது. எண்ணெய்க்கிணறுக்குச் சொந்தக்காரர்கள் ஸ்டேஷன் மாஸ்டருடைய அஜாக்கிரதையால் தங்களுக்கு நஷ்டம் நேரிட்டிருக்கிறதென்று சொல்லி ஸ்டேஷன் மாஸ்டர் பேரில் அஜாக்கிரதை குற்றம் சாட்ட மாஜிஸ்டிரேட் ஸ்டேஷன் மாஸ்ட்டரை செஷன்ஸ் கோர்ட்டிற்குக் கமிட்செய்தார். செஷன்ஸ் கோர்ட்டார் ஸ்டேஷன் மாஸ்

டர்பேரில் குற்ற ஸ்தாபனே செய்து அவருக்கு அபராதம் விதித்தார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக ஸ்டேஷன் மாஸ்டர் பம்பாய் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு :—சூரிய அஸ்தமானத்திற்குப் பிறகு ஸ்டேஷன் மாஸ்டர் ரெயில்வே சட்டத்திற்கு விரோதமாக கூலியைக் கிணற்றுக்கு சமீபத்தில் அனுப்பியதாக இந்தக் கேசில் யாதொரு சாக்ஷியமும் ஏற்படவில்லே. மேலும் கிணற்றுக்குச் சொந்தக்காரர்கள் அந்தக் கிணற்றினிடம் யாரொருவரும் போகாமலிருக்கும்படி பந்தோபஸ்தான உபாயங்கள் செய்துவைக்கவில்லே. ஆகையால் கிணற்றின் சொந்தக்காரர்களுக்கு நேரிட்டிருக்கும் தீங்கிற்கு ஸ்டேஷன் மாஸ்ட்டர் ஜவாப்பு தாரியாக மாட்டார் என்றுசொல்லி செஷன்ஸ் கோர்ட்டார் தீர்மானத்தை ரத்து செய்து அபராதம் செலுத்தப்பட்டிருந்தால் வாப்பீஸ் செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

பிரிவி கவுன்ஸில்.

கவுன்சிலர்கள் :—லார்ட் ராபர்ட்சன்.
லார்ட் காலின்ஸ்.
சர் ஆர்தர் வில்சன்.

மரத்தீர்வையைப் பற்றிய கேஸ்.

வாதி :—மிஸ்டர்—பிகூஷர்.

பிரதிவாதி :—கோபாலசாமி செட்டியார் வகையரு.

கேசின் விபரம் :—பிரதிவாதிகள் வாதி ஜெமீன் குடிகள். வாதி பிரதிவாதிகளுக்குக் கொடுக்கவேண்டிய பட்டாக்களில் 1802-ம்ஹு செய்த சாஸ்வத செட்டில்மென்டில் நிர்ணயித்தபடி ஏக்ரா ஒன்றுக்கு தீர்வை செலுத்தவேண்டியதுமன்றி அந்த ஏக்ராவில் நிற்கும் பலன் கொடுக்கும் மரங்களுக்கும் குடிகள் தீர்வை செலுத்தவேண்டுமென்று எழுதிக்கொடுத்தார். பிரதிவாதிகளாகிய குடிகள் இந்த பட்டாக்களே ஒப்புக்கொள்ளவில்லே. ஆகவே வாதி மதுரை டிப்டி கலெக்டரிடம் சம்மரி வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார்.

டிப்டி கலெக்டர் தீர்ப்பு :—நிலத் தீர்வையைத் தவிர குடிகள் மரத்திற்காகவும் தீர்வை செலுத்திக்கொண்டு வந்திருக்கிறது வெகு காலவழக்கமாயிருந்தபோதிலும் இந்த வழக்கத்திற்குப் பிரதிவாதி கட்டுப்பட வேண்டியதாயிருந்தாலும் 1865ம்-ஹுத் திய சென்னப்பட்டணம் 1-வது ஆக்ட் 11-வது பிரிவின்படி 1865-ம்ஹுத்திற்குப் பிறகு பிரதிவாதிகள் செலவு செய்து வளர்த்த மரங்களுக்கு தீர்வை விதிக்க வாதிக்குப் பாத்தியதை கிடையாதென்று தீர்ப்பு சொன்னார். வாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டதில் அந்தக் கோர்ட்டாரும் அசல் கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிப் படுத்திவிட்டார்கள். இதன் பின்பு வாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். ஹைக்கோர்ட்டாரும் கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தை உறுதிப்படுத்தினர்கள். ஆனல் "வழக்கத்தைப்பற்றி" கீழ்க்கோர்ட்டார் கூறிய அபிப்பிராயத்திலிருந்து பேதப்பட்ட அபிப்பிராயம் கூறினர்கள். (இந்த ஹைக்கோர்ட்டு தீர்ப்பு இ. லா. ரி. 28, சென். 328. பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறபடி நம்முடைய கெஜெட்டில் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் களிலுள்ள "கேஸ்கள்" என்கிற தலேப்பின் கீழ் பிரசுரம் செய்யப்படுமாகையால் இவ்விடத்தில் அந்தத் தீர்ப்பை விபரமாய் எழுதவில்லே.)

ஆகவே இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கும்படி வாதி ஹைக்கோர்ட்டில் மனு செய்து கொண்டார்.

பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ள வேண்டுமானல் வியாஜ்ஜியத்தொகை ரூ. பதினயிரத்திற்கு மேற்பட்டிருக்கவேண்டும். வாதி கொண்டு வந்திருக்கும் வியாஜ்ஜியங்களின் தொகை எல்லாம் கூடி ரூ. 139-தா னகிறபடியால் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்று தீர்மானித்து உத்தரவு செய்தார்கள். இந்த உத்தரவிற்கு விரோதமாக பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ளும்படி அனுமதி கொடுக்கும்படியாக வாதி ஹைக்கோர்ட்டில் மனு செய்துகொண்டார்.

வாதி சொன்ன கக்ஷி :—வாதி தற்காலம் கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியங்களின் மொத்தம் ரூ. 189 தாக விருந்தபோதிலும் இம்மாதிரி இன்னும் அனேக வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யக்கூடுமாகையாலும் அப்போது தொகை ரூபா பதினயிரத்திற்கு மேற்படுமாகையாலும் பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்து கொள்ள தமக்குப் பாத்தியதை யிருக்கிறதென்று கக்ஷி சொன்னர்.

ஹைக்கோர்ட்டார் உத்தரவு —பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள தாங்கள் அனுமதி கொடுக்காத உத்தரவிற்கு விரோதமாக வாதி பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்து கொள்ளலாமென்று ஹைக்கோர்ட்டார் உத்தரவு பிறப்பித்தார்கள்.

வாதி பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொண்டார்.

பிரிவி கவுன்சில் உத்தரவு :—பிரிவி கவுன்சிலில் வாதிக்கு ஜெயம் உண்டானலும், அபஜெயமுண்டானலும் வியாஜ்ஜியச் செலவுத்தொகையை அவரே ஏற்றுக்கொள்ள சம்மதப் படுவாராகில் வாதி தங்களுக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்று பிரிவி கவுன்சிலர்கள் உத்தரவு செய்தார்கள்.

பெங்களூர் ரெசிடென்டு கோர்ட்.

ரேசிடெண்டு:—ஆனரபில் மிஸ்டர் S. M. பிரேசர்.

ஸ்வீகாரக் கேஸ்.

கேசின் விபரம்:—பெங்களூரில் பிரதிவாதி இந்து தேவஸ்தானத்திற்குப் பொட்டு கட்டப்பட்ட ஒரு பெண்ணே ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். பொட்டு கட்டப்பட்டவ ளானபடியால் அவள் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு யோக்கிதை யற்றவளென்றும் அவளே ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது

இந்துலாப் பிரகாரம் செலாமணியாக மாட்டாதென்பதும் வாதியின் வியாஜ்ஜியம்.

லாயர்கள் :— அட்வோகேட் மிஸ்டர் சீனிவாச அய்யங்கார் வாதி தரப்பிற்கும், அட்வோகேட் மிஸ்டர் இராமசாமி அய்யர் பிரதிவாதி தரப்பிற்கும் வாதித்தார்கள்,

கேசின் நடவடிக்கை :— பொட்டு கட்டின பின்பு தாசிப் பெண்ணே ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரம் செலாமணியாக மாட்டாதென்பதற்கு அனேக ஹைக்கோர்ட்டு ஜாரியான தீர்ப்புகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டன.

தீர்ப்பு :—இருதரப்பு லாயர்கள் பேசினதையும் கோர்ட்டார் கேட்டுக்கொண்டு ஆலோசனே செய்து இரண்டொருநாளேயில் தீர்ப்பு சொல்லுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

இந்துக்கள் அவிபக்தர்களாக இருந்துவரும் ஒரு காரணத்தினலேயே ஜிவனும்சம் என்பது ஏற்பட ஏதுவாயிருக்கிறது. குடும்பத் தலேவனனவன் குடும்பத்திலுள்ள புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் முதலிய யாவரையும் சம்ரட்சிக்கவும அவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகள், கலியாணங்கள் செய்யவும் கடமைப்பட்டவன். இச்செலவுகளெல்லாம் குடும்பச் சொத்துகளேப் பொறுத்தே கொடுக்கப்படவேண்டியதாக விருக்கிறது.

அடியிற்கண்ட அவிபக்த குடும்ப மெம்பர்களுக்குக் குடும்பத்தலேவன் ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப் பட்டவன்.

(1) குடும்பச் சொத்தில் பாகப் பிரிவினே செய்துகொள்ளப் பாத்தியமற்ற பிறவிக் குருடு, ஊமை, செவிடு, முடம், பயித்தியம்,தீராக்குஷ்டரோகம் முதலிய கொடிய வியாதி உள்ளவர்கள், நபும்சகர்கள்;

(2) மேற்சொன்னவர்களின் பத்தினிகளாயுள்ள பெண்சாதிகள், பெண்கள்.

(3) பாலியமுதல் அதாவது விவாகமாவதற்கு முந்தி காந்தர்வ விவாகமாகச் சேர்த்துகொண்ட வைப்பாட்டிகள்.

(4) அந்த வைப்பாட்டிகளின் பிள்ளேகள்.

(5) அவிபக்த குடும்பஸ்தர்களின் பத்தினிகளாயுள்ள விதந்துகள்.

(6) அவிபக்த குடும்பஸ்தர்களின் பத்தினிகளாயுள்ள பெண்சாதிகள்.

(7) அவிபக்த குடும்பங்களில் விவாகமாகாத பெண்கள்.

(8) ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டபின் அது சட்டப்படி செல்லுபடி யற்றதென தீர்மானிக்கப்பட்டு ஸ்வீகார குடும்பத்தில் சொத்து பாத்தியதைகளே யிழந்த நபர்கள்.

(9) ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டபின் ஸ்வீகார தகப்பனுக்கு அவுரசபுத்திரன் பிறந்ததினிமித்தம் குடும்பச்சொத்தில் பாத்தியதைகளே இழந்த ஸ்வீகாரப் பிள்ளேகள்.

(10) பாகம் பிரித்துக்கொள்ள பாத்தியமுள்ள மைனர்கள்.

மேற்கண்ட ஜீவனும்சங்களெல்லாம் குடும்பப்பொதுசொத்தின் வரும்படி முதலியவைகளேக் கொண்டு கொடுக்கக் குடும்பத்தலேவன் கட்டுபட்டவனேயன்றி தன்னுடைய சுயார்ச்சித வரும்படிகளினின்றும் கொடுக்க எவ்விதத்திலும் கடமைப்பட்டவனல்ல. ஒருவனுக்கு எவ்வித பிதிரார்ச்சித சொத்துமில்லாவிட்டாலும் அவன் தன் பெற்றோர்கள், பத்தினியாயுள்ள பெண்சாதிகள், மைனர் குழந்தைகள் இவர்களேச் சம்ரட்சிக்கக் கடமைப்பட்டவன்.

இ. லா. ரி. சென். 236. சுப்பராயன் V சுப்பக்கா.

ஒருவிதந்து அவிபக்த குடும்பத்தினின்றும் தனக்கு ஜீவனும்சம் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்கும் தொகையானது அக்குடும்பச் சொத்தில் அவளுடைய புருஷன் பாகத்திற்கு என்னவரும்படி கிடைக்குமோ அதற்குமேற்படாமலிருக்கவேண்டியதுந்தவிர அவளுடைய ஆகாராதிகளுக்கு அவசியமான செலவுகளுக்கு பட்டில் கொடுத்தால் போதுமானது.

ஸ்திரிகளுக்குக் கொடுக்கப்படவேண்டியஜீவனும்சத்தொகைகளேப்பற்றி நிஷ்கரிப்பதில் அவர்களுடைய ஸ்திரீ தன் சொத்துகளில் வரும்படி என்னகிடைத்து வருகிறதென்பதைக் கணக்கிட்டு அத்தொகை போக பாக்கித்தொகைக்குத்தான் தீர்ப்பு செய்யவேண்டும். வரும்படி வராத நகை முதலியவைகள் எவ்வளவு இருந்தபோதிலும் அவைகளேக் கணக்கிடக்கூடாது. ஒருஸ்திரீக்கு மொத்தத் தொகையாக ஜீவனும்சம் கொடுக்கப்பட்டுப்போனபின்பு அவள் அத்தொகைகளேச் செலவழித்துவிட்டுப்பின்னும் ஜீவனும்சம் கேட்பது செல்லமாட்டாது.

இ. லா. ரி. பம். 537, சாவுத்திரிபாய் V இலட்சுமிபாய், இ. லா. ரி. உமப். 537.

ஒரு குடும்பத்தின் ஸ்திதிக்குத்தக்கபடி ஒரு ஸ்திரீக்கு ஜீவனும்சம் கொடுக்கப்பட்டிருந்தால் குடும்பச்சொத்துகளின் விருத்தி அல்லது குறைவுகளுக்குத் தக்கபடி ஜீவனும்சத்தொகைகளே ஜாஸ்திப்படுத்தும்படிக்காவது கம்மிப்படுத்தும்படிக்காவது வழக்கிட்டுத் தீர்ப்புபெறலாம்.

இ. லா. ரி. 1 அல. 594. ரூகாபாய் V காண்டாபாய்.

ஒருவிதந்து தன் மாமனர்பேரிலும் கொழுந்தன் மார்கள்பேரிலும் ஜீவனும்சம் கிடைக்கவேண்டு

மென்று வியாச்சியம் செய்தாள். அதில் மாமனார் பேரில் மட்டில் டிக்கிரி ஏற்பட்டது. அவ்விதந்து குடும்பச் சொத்துகளின் ஜவாப்புதாரியின்பேரில் ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று பிரியாது செய்யாததினால் சொத்துகளைக் கட்டுபடுத்தித் தீர்ப்பு செய்யப்படவில்லை. மாமனார் இறந்து போய்விட்டார். குடும்பச்சொத்துகளில் சிலபாகங்கள் விற்கப்பட்டு போய்விட்டன. மேற்படி விதந்து தனக்குக்கிடைக்க வேண்டிய ஜீவனாம்ச டிக்கிரி பாக்கியும் பிறபட்டு தன்னாயுள் பரியந்தம் கிடைக்கவேண்டிய ஜீவனாம்சமும் தன் கொழுந்தன்மார்கள் அவர்களுடைய குமாரர்கள் இவர்களுடைய வசத்திலுள்ள குடும்பச்சொத்துகளின்பேரிலும் அவள் ஜீவனும்சம் டிக்கிரி பெற்ற பிறகு அவளுடைய மாமனார் முதலியவர்களால் விற்கப்பட்டுப்போன குடும்பச் சொத்துகளின் ஜவாப்புதாரியின்பேரிலும் கிடைக்க வேண்டுமென்று வழக்கிட்டதில் விற்கப்பட்டுப்போன சொத்துக்கள் ஜீவனும்சத்துக்குக் கட்டுப்படமாட்டாதென்றும் மற்றக் குடும்ப சொத்துகள் கட்டுப்படக்கூடியவென்றும் தீர்ப்பு செய்யப் பட்டிருக்கிறது.

இ. லா. ரி. 17, சென். 258, பாகீரதி V அனந்தாச்சாரியார்.

அவிபக்த குடும்பத்திலுள்ள ஒருபாகஸ்தன் அக்குடும்பச்சொத்துகளில் சிலவற்றை நீண்டகாலமாக அனுபவித்துவந்தான். அப்பாகஸ்தன் இறந்து விட்டான். பிறகு அச்சொத்துகளை அவனுடையபெண்சாதி 20 வருஷங்களுக்குமேற்பட்ட காலமாக அனுபவித்து வந்தாள். அவ்விதந்து வசத்திலிருந்த சொத்துகளை மற்றக் குடும்பப் பாகஸ்தர்கள் ஒருவனுக்கு சாசனம் செய்துவிட்டார்கள். சாசனம் பெற்றவன் கிரயசொத்துகள் கிடைக்கவேண்டுமென்று விதந்துவின்பேரில் வழக்கிட்டத்தில் ஷை சொத்துகள் நீண்டகாலமாகத் தன்னுடைய வசத்திலிருப்பதாகவும் விதந்து கட்சியாடினாள். அவ்விதந்து ஷை சொத்துக்களை நீண்டகாலமாய் அனுபவித்து வருவதை கிரயதாரன் தெரிந்துகொண்டிருப்பதானது அச்சொத்துகளில் விதந்துவுக்கு ஜீவனும்ச பாத்தியதையிருப்பதைத் தெரிவிக்கக்கூடிய நோட்டீசென்றும் ஆகையால் அச்சாசனம்செல்லுபடியற்றதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 12. சென். 334. இமாம் V பாலம்மா.

ஒருவிதந்துவுக்குச் சேரவேண்டிய ஜீவனும்சடிக்கிரித்தொகை பாக்கியிருக்கிறது. அவ்விதந்து இறந்துவிடுகிறாள். அவ்விதந்துவின் கடன்காரர்கள் அத்தொகைகளைத் தொடர்ந்து வசூலிக்கலாம். அத்தொகை விதந்துவின் சுயார்ச்சித சொத்தேயன்றி அவளுடைய புருஷன் சொத்துகளல்ல.

இ லா. ரி. 11. பம். 528. A. P. ராஜாராவ் சுந்திரராவ் V கலராவ் கிருஷ்ண ஜாகிதர்.

ஒரு விதந்துவின்பேரில் ஒரு ஸ்திரீ ஜீவனும்ச டிக்கிரி பெற்றிருக்கிறாள். அந்த டிக்கிரி ஸ்தாவர சொத்துக்களின் ஜவாப்தாரியின்பேரில் ஏற்படவில்லை. அந்த டிக்கிரிக்காக விதந்துவசமிருக்கும் சொத்துகள் ஜப்தி செய்யப்படுகின்றன. பிறகு விதந்து இறந்து விடுகிறாள். அச்சொத்துகள் அவ்விதந்துவின் புருஷனுடைய அனந்தர வார்சுகளுக்குக் கிடைத்து வருகின்றன. அச்சொத்துகளின்பேரில் மேற்படி டிக்கிரியை நிறைவேற்றியதில் அவைகள் கட்டுப்படமாட்டாதென்றும் விதந்துவுக்குள்ள பாத்தியதைமட்டில் மேற்படி டிக்கிரியில் ஏற்பட்டிருப்பதால் அவள் இறந்தபிறகு நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளும் தங்களுடைய பாத்தியதைகளுக்கு விரோதமாகச் செல்லமாட்டாதென்றும் ஆக்ஷேபித்தார்கள். அந்தப்படியே உத்தரவு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 1, கல். 133 (பிரிவி கவுன்சில் தீர்ப்பு) பேய் ஜண்டுபே V. பிரிஜ்புக்கன் லால்.

ஒரு விதந்து சென்ற 6-வருஷங்களின் ஜீவனும்சமும் பின்னிட்டு தன் ஆயுள் பரியந்தம் கிடைக்க வேண்டிய ஜீவனும்சமும் கிடைக்கவேண்டுமென்று தன் கொழுந்தன்மார்களின் பேரில் வழக்கிட்டாள். சென்ற 6-வருஷங்களின் ஜீவனும்சத்தை அந்தந்த காலங்களில் கேட்டதாக ருஜு ஏற்படவில்லை. ஆகையால் சென்ற 6-வருஷங்களின் ஜீவனும்சத் தொகைகளைத்தள்ளி பிந்திய ஜீவனும்சத்துக்கு மாத்திரம் தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 18, சென். 483. சேஷம்மாள் V. சுப்பராயடு.

A என்பவனுக்கு B என்கிற மகன் இருக்கிறான். அவர்கள் இரண்டுபேரும் அவிபக்தர்கள். A என்பவனுக்கு சுயார்ச்சித சொத்துகளன்றி பிதிரார்ச்சித சொத்துகள் கிடையாது. B முன்னும் A பின்னுமாக இறந்து விடுகிறார்கள். B க்கு ஆண் சந்ததி கிடையாது. A க்கு C என்கிற விதந்துவும் B க்கு D என்கிற விதந்துவும் இருக்கிறார்கள். A யின் சொத்துகளை C அடைந்து விடுகிறாள். மேற்படி சொத்துகளின் ஜவாப்புதாரியின்பேரில் ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று C என்றவள் பேரில் D என்பவள் வழக்கிட்டதில் அந்தப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 23, பம். 608 யமுனாபாய் V மனுபாய்.

ஒரு விதந்து தன் ஆயுள் பரியந்தம் ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று தன் புருஷனுடைய சகோதரர்கள்பேரில் வழக்கிட்டு தன் புருஷன் குடும்பச் சொத்துகளின் ஜவாப்புதாரியின்பேரில் ஜீவனும்சம் கிடைக்கிறதென்று டிக்கிரி பெற்றிருக்கிறாள். அவ்வியாச்சியத்தில் அவனுடைய கொழுந்தன்மார்களின் பிள்ளைகளை கட்சிக்காரர்களாகச் சேர்க்கவில்லை. மேற்படி டிக்கிரிக்குப் பிறகு அவளுடைய கொழுந்தன்மார்களில் ஒருவன் இறந்துவிடுகிறான். விதந்து மேற்படி டிக்கிரியைத் தன் புருஷனுடைய குடும்பச் சொத்துகளின் பேரில் நிறைவேற்றினாள். இறந்துபோன அவனுடைய கொழுந்தன் பிள்ளைகள் குடும்பச்சொத்

துகள் தங்களுக்குச் சர்வேயர் ஷிப் (Survivorships) கிரமத்தில் பாத்தியதையு முண்டாகிவிட்டதென்றும் ஆகையால் குடும்பச் சொத்துகளின்பேரில் நிறைவேற்றக்கூடாதென்றும் இன்னின்ன சொத்துகளைத் தொடர்ந்து ஜீவனும்சத் தொகை வசூலிக்கிறதென்று டிக்கிரி யேற்படாததினால் அந்த டிக்கிரியைக்கொண்டு நிறைவேற்றுவது செல்லாதென்றும், தாங்கள் அந்த டிக்கிரிக்கு எந்த விதத்திலும் கட்டுப்பட்டவர்களல்லவென்றும் கக்ஷி யாடினார்கள். குடும்பச் சொத்துகளைத் தொடர்ந்து ஜீவனும்சத் தொகை வசூலிக்கப்படவேண்டியதென டிக்கிரி ஏற்பட்டிருந்தால் எந்தக் குடும்பச் சொத்துகளைத் தொடர்ந்தும் டிக்கிரித் தொகை வசூலிக்கப்படலாமென்றும், தகப்பன் பேரில் ஏற்பட்ட டிக்கிரிக்கு பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. சென். 689. மீனாட்சி V. சின்னப்பா உடையார்.

ஒரு விதந்துவுக்கு அவள் நற்குணம் நற் செய்கைகளை யுடையவளாயிருக்கும் வரையில்தான் ஜீவனும்ச பாத்தியதை செல்லக்கூடியது. அவள் விபசாரம் செய்வாளானால் அந்தந்த தேதிமுதல் அவள் ஜீவனும்ச பாத்தியதைகளை இழந்தவளாகிறாள்.

இ. லா. ரி. 17, கல். 674. ரோமநாத் என்கிற ராமனண்டூர் போடார் V. ராஜோனி மோனிதாசி.

விபசாரம் செய்யும் விதந்துவுக்கு ஜீவனும்சம் கொடுப்பதாக அகிரிமெண்டு ஏற்பட்டிருந்தால் அந்தப்படி ஜீவனும்சம் கொடுக்கவேண்டுமென்கிற நிபந்தனை கிடையாது. அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல.

இ. லா. ரி. 17, சென். 392. நாகப்பா V. வீரபத்திரா.

A என்பவனுக்கு B-C என்கிற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். B முன்னால் இறந்துவிடுகிறான் அவனுக்கு D என்கிற விதந்து இருக்கிறாள். B க்குச் சொந்தமான சொத்துக்கள் யாதொன்றும் கிடையாது. B க்கு யாதொரு சொத்துகளும் இல்லாவிட்டாலும் D என்பவள் குடும்ப மெம்பர்களில் ஒருத்தியாகி விட்டதால் A என்பவன் அவளை சம்ரட்சிக்கக் கடமைப்பட்டவன். A இறந்து விடுகிறான். பிறகு அவனுடைய சொத்துகளை C அடைந்து விடுகிறாள். அச்சொத்துக்களினின்றும் D க்கு ஜீவனும்சம் கிடைக்கப் பாத்தியதையுண்டு.

இ. லா. ரி. 17, கல். 373. காமினிடாசி V. சந்திரபோடி மோண்டிலி.

ஒரு விதந்து தன் புருஷனுடைய குடும்பச் சொத்துக்களின் ஜவாப்புதாரியின்பேரில் ஜீவனும்ச டிக்கிரி பெற்றிருக்கிறாள். அந்தக் குடும்பச் சொத்துகள் அழிந்துபோய் விடுகிறது அல்லது வரும்படி முதலியன குறைந்துபோய் விடுகின்றது. அவ்விதம் அழிந்து அல்லது குறைந்து போனது சொத்துக் குடையவனுடைய அஜாக்கிரதை அல்லது மூட்டாள் தனத்தினால் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் ஜீவனும்ச டிக்கிரியை ரத்து செய்யப்படவேண்டுமென்றுவது டிக்கிரித் தொகை குறைக்கப்படவேண்டுமென்றுவது விதந்துவின் பேரில் வழக்கிட நியாயமில்லை. தெய்வச் செயலாக அவ்விதம் நேரிட்டிருக்கும் பட்சத்தில் டிக்கிரியை ரத்து செய்யவேண்டுமென்றும், டிக்கிரித் தொகை குறைக்கப்படவேண்டுமென்றும், விதந்துவின் பேரில் வழக்கிட்டுத் தீர்ப்பு பெறலாம். முன் ஏற்பட்ட ஜீவனும்ச டிக்கிரியில் குடும்பச் சொத்துகளின் விருத்தி அல்லது குறைவுக்குத் தக்கபடி ஜீவனும்சத் தொகை ஜாஸ்தி செய்யவும் கம்மி செய்யவும் கூடுமென எழுதப்பட்டிருந்தால் புனர் வியாஜ்ஜியம் செய்யவேண்டியதில்லை. மனு நடவடிக்கை மூலமாகவே தீர்மானங்கள் செய்யலாம்.

இ. லா. ரி. 24 பம். 387. கோபிகா பாய். தாத்தரியா.

A என்பனுவக்கு சில சுயார்ச்சித சொத்துகளும் வார்சு கிரமத்தில் கிடைத்த மாதா மகருடைய (தாயைப் பெற்ற தகப்பனுடைய) சொத்துகளும் இருக்கின்றன. A இறந்துவிடுகிறான். அவனுடைய சொத்துகளை B என்கிற அவனுடைய விதந்து அடைகிறாள். A என்கிறவனுக்கு ஒரு குமாரன் இருந்து A யினுடைய ஜீவதிசையிலே இறந்துவிடுகிறான். அந்தக் குமாரனுடைய் விதந்து தன்னுடைய மாமியார் B என்பவள் வசத்திலுள்ள சொத்துகளின்பேரில் தன்னுடைய ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டாள். C என்பவனுக்கு அவனுடைய மாதாமகளிடமிருந்து கிடைத்த சொத்துகள் ஷை ஜீவனும்சத்திற்குக் கட்டுப்படமாட்டாதென B என்பவள் கட்சியாடினாள். மேற்படி சொத்துகள் சுயார்ச்சித சொத்துகள் அல்லவென்றும் அச்சொத்துகளின் பேரில் ஜீவனும்சம் கிடைக்கத்தக்கதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது. எவ்வித பிதிரார்ச்சித சொத்துகளுமில்லாத மாமனார் தன் மருமகளை சம்ரட்சிக்க வேண்டியது சன்மார்க்கமான கடமையாகவிருந்தாலும் (Moral obligation) அவன் இறந்துவிட்டால் அவனுடைய சுயார்ச்சித சொத்துகளினின்றும் ஜீவனும்சம் கொடுக்கவேண்டியது நியாயமான கடமையாகிவிடுகிறது. (Legal obligation)

இ லா. ரி. 22, சென். 305. இரங்கம்மாள் V. எச்சம்மாள்.

ஒரு விதந்து தன்னுடைய கொழுந்தன்பேரில் (புருஷனுடைய சகோதரன்) ஜீவனும்ச வழக்கிட்டுத் தீர்ப்பு பெற்றிருக்கிறாள். அந்த டிக்கிரியானது சொத்துகளின் ஜவாப்பு தாரியின்பேரில் ஏற்படவில்லை. அவ்விதந்துவின் கொழுந்தனுடைய சொத்துகளை அவனுடைய குமாரர்கள் வார்சுக் கிரமத்தில் அடைந்து விடுகிறார்கள். பிறகு அவ்விதந்து மேற்படி குடும்பச் சொத்துகளின் ஜவாப்புதாரியின் பேரில் ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்றும் குடும்பத்துக்கு ஜாஸ்தி சொத்துகளிருப்பதால் ஜாஸ்தி ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்றும் மேற்சொன்னவர்களின்பேரில் வழக்கிட்டதில் அவ்விதந்துவுக்குப் புனர் வியாஜ்ஜியம் செய்ய இடமில்லை என்று அவ்வார்சுகள் கட்சி யாடினார்கள். அவ்விதந்து

கொண்டுவந்த வழக்கு கிரமமானதென்று பிராதுப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 22, சென். 175. பங்காரம்மாள் V. விஜயமாட்சி ரெட்டியார்.

A என்பவனுக்கு B என்ற ஒரு குமாரன் இருக்கிறான். B என்பவன் முன்னால் இறந்துவிடுகிறான். B க்கு ஆண் சந்ததியில்லை. C என்ற விதந்து இருக்கிறாள். A என்பவன் தன்னுடைய கிரமமான கடன்களுக்காக குடும்பச் சொத்துகளை விற்றுவிடுகிறான். அந்தக்காரணத்தைக் கொண்டு A என்பவன் தன்னுடைய மருமகள் C என்பவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கமாட்டேனென்று சொல்லமுடியாது. மருமகளுக்கு மாமனார் ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவன்.

இ. லா ரி. 1, அல. 170, 177, கங்காராம் V. சீதாராம்.

ஒரு அவிபக்த குடும்பத்திலுள்ள விதந்து அக்குடும்ப வீட்டில் தன்னாயுள் பரியந்தம் குடியிருக்க பாத்தியமுடையவள். ஒரு விதந்துவின் கொழுந்தன்மார்களுடைய கடன்களுக்காக அவர்களுடைய வீடு கோர்ட்டு ஏலத்தில் விற்று முதல் செய்யப்படுகிறது. அவ்வீட்டை ஏலம் எடுத்தவன் அவ்விதந்துவின் பாத்தியதைகளுக்குக் கட்டுப்பட்டவன்.

இ. லா. ரி. 3, அல. 353. தாவிமான்ட்சிங் V. ருக்மணி பாய்.

ஒருவன் தன்னுடைய பூர்விக குடும்பவீட்டை பெந்தகம் வைத்துவிடுகிறான். அவனுடைய தாயார் அதில் ஸ்திரமாய் வசித்துவருகிறாள். அந்தப் பெந்தகத்தைப்பற்றி ஆக்ஷேபிக்க பாத்தியமில்லாவிட்டாலும் அவளுடைய ஆயுள் பரியந்தம் அவ்வீட்டில் குடியிருக்கப் பாத்தியமுடையவளென ஸ்தாபித்துக்கொள்ளலாம். அப்பாத்தியதைக்கு உட்படுத்தித்தான் வீடு ஏலம் போடப்பட வேண்டும்.

இ. லா. ரி. 6, சென். 30. வெங்கட்டம்மாள் V. ஆண்டியப்பசெட்டி.

ஒரு அவிபக்த குடும்பத்தில் சொற்ப பூஸ்திதியும் ஒரு சிறிய வீடும் இருந்தது. அக்குடும்பத்திலுள்ள ஒரு விதந்து தனக்கு ஜீவனாம்சம் கொடுக்கப் போதுமான வரும்படியில்லாததினால் பூஸ்திதியில் சில பாகம் பிரித்துக்கொடுக்கப்பட்டது.

இ. லா. ரி. 22, பம். 52. கோதாவரிபாய் V. சகுணாபாய்.

ஒரு குடும்பச் சொத்தின் வரும்படி மிகவும் சொற்பமாகவும் தனி ஜீவனாம்சம் கொடுக்கப்போதுமானதாக வில்லாததாகவும் இருக்கும்பக்ஷத்தில் ஜீவனாம்சம் கேட்பவள் அக்குடும்பத்துடன் சேர்ந்து வசித்து மற்றவர்களுடன் கூட சாப்பாடு முதலியன செய்துகொள்ளலாமே யன்றி அவளுக்குத் தனி ஜீவனாம்சம் கிடைக்க மாட்டாது.

ஒரு ஸ்தாவர சொத்தின் வரும்படியைக்கொண்டு ஒரு விதந்துவுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியதாக ஒருவன் உயில் ஏற்படுத்திவிட்டு இறந்துவிடுகிறான். உயில் பெற்றவன் விதந்துவுக்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கூடாதென்கிற கெட்ட எண்ணத்துடன் மேற்படி சொத்தைப் பராதீனம் செய்து விடுகிறான். ஒரு கிரயச்சொத்தில் விதந்துவுக்கு ஜீவனாம்ச பாத்திய மிருக்கிறதென்பது சாசனம் பெற்றவனுக்கு நன்றாய்த் தெரியும். விதந்து மேற்படி சொத்தினின்றும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டாள். அந்தப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 23, பம். 342. ஸ்ரீமேகாரி லால்ஜி V. பாய் ராஜ்பாயி.

ஒரு விதந்து தனக்கு சென்ற வருஷங்களுக்கு ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கிடுவாளானால் அத்தொகை இவ்வளவென்று நிஷ்கரிப்பது ஜட்ஜியின் அபிப்பிராயத்தைப் பொருந்திருக்கிறது. பின்னிட்டுக் கொடுக்கவேண்டிய ஜீவனாம்ச ரேட்டின்படி இருக்கவேண்டுமென்ப தவசியமில்லை. அவ்வழக்கு கொண்டுவரப்பட கால தாமதம் நேரிட்ட விஷயங்களைக் கவனித்துத் தீர்ப்பு செய்ய வேண்டும்.

இ. லா. ரி. 21, அல. 183. ரகுபான்ஸ் கண்வார் V. பாக்வார் கான்வார்.

தாயாருடைய ஜீவனாம்சத்துக்கு யாதொரு ஏற்பாடும் செய்யாமல் குடும்பச் சொத்துகளை அவனுடைய பிள்ளைகள் பராதீனம் செய்து விடுகிறார்கள். அச்சொத்துகளின் ஜவாப்புதாரியின்பேரில் ஜீவனாம்சம் பெறுவதற்குத் தாயாருக்கு பாத்தியதையுமுண்டு.

இ. லா. ரி. 27, கல். 551. அமீர்தலால் மிட்டர் V. மாணிக்கலால் முல்லக்.

விதந்துவாகப் போன பெண்ணை சம்ரட்சிக்க அவளுடைய தகப்பனும் தமயனும் சட்டப்படி கட்டுப்படாவிட்டாலும் நெருங்கிய பாத்தியங்களை உத்தேசித்து அவர்கள் அப்பெண்ணை சம்ரட்சிக்க நியாயமுண்டு.

இ. லா. ரி. 23, பம். 291. பாய்மர்கல் V. பாய்கிமிம்.

பிதிரார்ச்சித சொத்துகளை அடையாத சக்களத்திப் பிள்ளைகள் தங்களுடைய சக்களத்திமாருக்கு ஜீவனாம்சம் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல.

இ. லா. ரி. 9, பம். 279. பாய் தாயா V. நாதா கோவிந்தலால்.

பெண்சாதிகளின் ஜீவனாம்சம்.

ஒருவன் தன் பெண்சாதியை சம்ரட்சிக்க வேண்டிய கடமை அவளை அவன் விவாகஞ்செய்த கால முதல் ஏற்படுகிறது. அவள் பெரியவளாவதற்கு முன் அவள் பெற்றோர் வீட்டிலிருப்பது மாமூல் வழக்கமானதாக விருந்தபோதிலும் அது பெற்றோர்களின் கடமையைச் சேர்ந்ததல்ல. அவர்களின் பிரியத்தை அனுசரித்ததாக விருக்கின்றது. பெண்ஜாதி புருஷனுடன் கூடி வாழக் கடமைப்பட்டவள். அக்காரணமாகவாவது குடும்பத்திலுள்ள சாதாரண சண்டை சச்சரவுகளினாலாவது அவள் இஷ்டப்படி

புருஷனை விட்டுப் பிரிந்திருப்பாளானால் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவள் புருஷன் எவ்விதத்திலும் கட்டுப்பட்டவனல்ல; மறு விவாகம் செய்துகொள்ளுவதும் வைப்பாட்டியை வைத்துக்கொள்ளுவதும் புருஷனைப் பிரிந்திருப்பதற்குத் தகுந்த காரணமாகமாட்டாது. புருஷன் தனக்குக் கொடுந்துன்பம் செய்வதாக விருந்தாலும் தன்னைக் கொலை செய்ய எத்தனித்தாலும் அவருடன் கூடிவாழ யோக்கிதையில்லாமல் ஈனஜாதி ஸ்திரியுடன் சம்போகம், அவளிடத்தில் சாப்பிடுதல் முதலியன வைத்துக்கொண்டிருந்தாலும் அவள் புருஷனை விட்டு நீங்கிவிடலாம்.

ஒருவனுடைய பெண்ஜாதி தன் புருஷன் அனுமதிப்படி அவனை விட்டு நீங்கியிருந்து பின்பு தன் புருஷனுடன் கூடி வாழப் பிரிய படுவாளானால் அவளைச் சம்ரட்சிக்கப் புருஷன் கடமைப்பட்டவன்.

ஒருவன் பெண்ஜாதியை திருடர் முதலியவர்கள் பலவந்தஞ் செய்து அவமானத்திற்குட்படுத்திவிட்டால் அந்தத் தோஷத்துக்காக அவளுக்கு ஜீவனாம்சம் கொடாதிருக்கக்கூடாது.

அடியிற்கண்ட குற்றங்களைச் செய்கிற பெண்சாதிகளுக்கு அவர்கள் புருஷர் எவ்வித ஜீவனாம்சமும் கொடுக்கவேண்டியதில்லை.

(1) குரு அல்லது சிஷ்யனைச் சேர்ந்தவள்.

(2) தன் குலத்துக்குக் கீழ்க்குலத்து புருஷர்களைக் கூடியவள்.

(3) புருஷனைக் கொலைசெய்ய எத்தனித்தவள்.

(4) ஜாதிப் பிரஷ்டையாய்ப் போய் விட்டவள்.

(5) தன் வயிற்றுக் கர்ப்பத்தை அழித்தவள்.

(6) பிராமணனைக் கொலை செய்தவள்.

(7) வியாபாரஞ் செய்வதற்காக வெளிப்பட்டவள்.

ஒருவன் பெண்ஜாதி சொற்ப துர்நடத்தையுடையவளாக விருந்து சாந்தி முதலிய புண்ணியங்கள் செய்து அப்பாவங்களை நிவர்த்தித்துக் கொள்வாளானால் அவள் உடம்பில் உயிர்தரிப்பதற்கு எவ்வளவு ஆகாரம் வேண்டுமோ அதை அவள் புருஷன் கொடுக்கக் கடமைப்பட்டவன்.

ஒருவன் தன் பெண்ஜாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியதாக டிக்கிரி யேற்பட்டிருக்கிறது. அந்த டிக்கிரிக்குப் பிறகு அவள் விபசாரஞ் செய்கிறாள். அந்த டிக்கிரியை ரத்து செய்ய அவள் புருஷனுக்குப் பாத்தியதையுண்டு. அவனுக்கு எவ்வித ஜீவனாம்சமும் கொடுக்க வேண்டியதில்லை.

இ. லா. ரி. 19, சென். 6, கந்தசாமிப்பிள்ளை V. முருகம்மாள்.

ஒருவன் பெண்சாதி தன் புருஷனுடன் கூடவிருந்து புசிக்காமல் தனக்குத் தனியே ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று தன் புருஷன் பேரில் வழக்கிடப் பாத்தியதையில்லை. தன் புருஷன் துர்நடத்தையுடையவனாக இருக்கின்றானென்றாவது புருஷன் வசித்துவரும் வீட்டிலிருந்து அவன் கூடிவாழப் புருஷன் தடைசெய்தானென்றாவது அவள் காலக்ஷேபத்துக்கு வேண்டியதைப் புருஷன் வகையறா கொடுக்கவில்லை என்றாவது வேறு தக்க காரணங்களாவது அவள் ருஜூப்பிக்கும் பக்ஷத்தில் அவளுக்குத் தனி ஜீவனாம்சங் கொடுக்கப் புருஷன் கடமைப்பட்டவன்.

இ. லா. ரி. 2, பம். 624, சித்லிங்கப்பா V. சிதாலா.

வைப்பாட்டிகளும் அவர்களுடைய பிள்ளைகளும்.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய இம்மூன்று குலத்தவர்களும் வைப்பாட்டி வைத்திருந்தால் அவர்களுக்குப்பிறக்கும் பிள்ளை பெண்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவர்கள் கடமைப்பட்டவர்கள். அவர்களுக்கு அவர்கள் தகப்பன் சொத்தில் எவ்வித பாத்தியதையும்கிடையாது. சூத்திரர்களின் வைப்பாட்டிப் பிள்ளைகளுக்கு அப்படியில்லை. தகப்பன் ஜீவதிசையில் தகப்பன் சொத்தில் எவ்வித பாத்தியதையும் ஏற்படாவிட்டாலும் தகப்பன் இறந்தவுடன் அவர் சொத்தில் ஒரு வித பாத்தியம் அதாவது பாகம் கிடைத்துவிடுகின்றது. சாஸ்திரோக்தமாக விவாகம் செய்த பெண்சாதிக்குப் பிறக்கும் பிள்ளையின் பாகத்துக்குப் பாதி கிடைக்கும். அதாவது அவர்சு புத்திரனுக்கு இரண்டு பாகமும் வைப்பாட்டிப் பிள்ளைக்கு ஒரு பாகமும் கிடைக்கும். அவச்சு புத்திரரல்லாமல் பெண்கள் அல்லது பெண்களின் பிள்ளைகளிருந்தாலும் அல்லது சந்ததியில்லாமல் விதந்து மட்டிலுமிருந்தாலும் அவர்களுக்குப் பேர்பகுதியும் மற்றப்பகுதி வைப்பாட்டிபிள்ளைகளுக்கும் கிடைக்கும். அவ்வித வார்சுகள் ஒருவரு மில்லாவிட்டால் முழுச்சொத்துகளும் வைப்பாட்டிப் பிள்ளைகளுக்குக் கிடைத்துவிடும்.

மெயின் ஹிந்துலா 3 வது வகுப்பு 466 பாரா.

மேற்சொன்ன உயர் குலத்தில் பிறந்த A என்பவனுக்கு B என்ற வைப்பாட்டி பிள்ளையும், B க்கு C என்ற பிள்ளையு மிருக்கிறார்கள். A என்பவன் தன் குடும்பச் சொத்துகளை பெந்தகம் வைத்துவிடுகிறான். ஷை சொத்துகளை மீட்கவேண்டுமென்று C என்பவன் வழக்கிட்டதில் C என்பவனுக்கு ஷை சொத்தில் எவ்வித பாத்தியதையுமில்லை என்று எதிர் கக்ஷி யாடினார்கள். ஷை சொத்தில் C என்பவனுக்கு ஜீவனாம்ச பாத்தியதையிருக்கிறதென்ற ஒரு காரணத்தைக் கொண்டே அவன் அச்சொத்துகளை மீட்கப் பாத்தியதையுடையவனென்று தீர்ப்பு செய்தார்கள்.

இ. லா. ரி. 22, அல, 191, க்ஷோன்சிங் V. பல்வன்ட்சிங்.

ஒருவன் ஒருத்தியை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்திருந்து பின்பு விட்டு விடுகின்றான். அவள் அப்புருஷன்பேரில் வழக்கிட நியாயமில்லை

இ. லா. ரி. 23, சென். 282 ருமாரக V. புச்சம்மா (பம்பாய் ஹைக்கோர்ட்டார் இதற்கு நேர் விரோதமாகத் தீர்ப்பு செய்திருக்கிருர்கள்.)

ஒருவன் ஒரு வைப்பாட்டியை வைத்திருந்து இறந்து விடுகின்றான். அவள் வேறு புருஷர் முகம் பாராமலிருக்கும் பக்ஷத்தில் அவள் வைப்புப் புருஷனுடைய சகோதரர்கள் அவளுக்குச் ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்.

இ. லா. ரி. 12 பம். 26. யசஷ்வண்டிராவ் V. காசீபாய்.

விவாகமாகிய ஒருத்தி தன் புருஷனை விட்டு விலகிச் சோர புருஷனுடன் சேர்ந்து ஒரு பிள்ளை பெறுகிருள். அச்சோர புருஷன் அப்பிள்ளையை சம்ரட்சிக்கக் கடமைப்பட்டவன்.

இ. லா. ரி. 1, சென், 306. வீரமுத்தி V சிங்காரவேலு.

குடும்பச்சொத்தில் பாக மில்லாமல் ஜீவனும்சம் பெறக்கூடிய அவுரசப் புத்திரர்கள்.

குடும்பச்சொத்து பாகப் பிரிவினை செய்யப்படுமுன் ஒரு பாகஸ்தனுக்கு கொடிதாகிய அல்லது இரணமுள்ள குஷ்டரோக முண்டாகி விடுகிறது. அவனுக்கு ஜீவனும்சங் கிடைக்கக் கூடியதே யன்றி குடும்பச் சொத்தில் பாகங் கிடைக்கமாட்டாது.

இ. லா. ரி. 1 பம். 544. அனந்தா V. ரூமாபாய்.

ஒருவனுக்குப் பிறவி முதல் அவயவங்களில் ஊன முண்டாயிருக்குமானுல் அதாவது பிறவிக் குருடு, நொண்டி, சப்பாணி இவர்களுக்கு மட்டில் குடும்பச் சொத்துகளில் பாத்தியதைகள் ஏற்படாமல் ஜீவனும்சம் கிடைக்கக் கூடியதே யன்றி பிறந்த பின்னிட்டு அங்க வீன முண்டானுல் அவர்களுக்குக் குடும்பச் சொத்தில் சகல பாத்தியதைகளு முண்டு.

இ. லா. ரி. 26, சென் 133, வெல்கப்பராவ் V புருஷோத்தமா.

ஒருவன் பெண்சாதி அல்லது பிள்ளைகளுக்கு ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டியதாகத் தகுந்த மாஜிஸ்டிரேட்டாரால் தீர்மானஞ் செய்யப்பட்டிருந்தால் அதை ரத்துசெய்ய சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை.

இ. லா. ரி. 18, அல. கப்பாடோமினி V. கட்டிராருடோமினி.

ரிஜிஸ்டர் செய்யப்படாத குத்தகைப்பத்திரம்.

தேவஸ்தான நிலங்கள் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென ஒருவன் தேவஸ்தானம் மானேஜருக்கு மனு செய்துகொண்டான். அவன் கோருதலின்படி குத்தகைக்கு விடுவதாக ஷை மனுவின் பேரிலேயே மானேஜர் என்டார்ஸ்மென்ட் செய்துவிட்டார். அக் குத்தகைக்கு 1-க்கு ரூபாய் 50-க்குட்பட்டதுமன்றி 5-வருஷங்களுக்கு மேற்பட்டதாகவு மிருந்தது. அக் குத்தகையின்படி தொகை கிடைக்க வேண்டுமென்று வழக்கிடப்பட்டதில் அது ரிஜிஸ்டர் செய்யப்படாததால் செல்லமாட்டாதென எதிர்கட்சி சொன்னுர்கள்.

மனுவின்பேரில் என்டார்ஸ் செய்த உடன்படிக்கை யாகுமென்றும் குத்தகை ரூ. 50-க்கு உட்பட்டதாகவும் 5 வருஷங்களுக்கு மேற்படாத தாகவுமிருப்பதால் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டு 17-வது செக்ஷன் D. கிளாசில் கண்ட கவர்ன்மென்டு விளம்பரத்தின்படி ரிஜிஸ்டர் செய்யவேண்டியது அவசியமில்லையென தீர்ப்பு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 27, சென். 43, இராமசாமி அய்யர் V. திருப்பதி நாயக்கர்.

ரிஜிஸ்டர் செய்யப்படாத ஸ்வீகாரப்பத்திரம்.

A என்பவனுக்கு எவ்வித சந்ததியுமில்லை. அவன்சொத்துகளைப்பற்றி ஒரு தஸ்தாவேஜி யேற்படுத்திவிட்டு இறந்துவிட்டான். அந்த தஸ்தாவேஜியில் A யின் பெண்சாதி B யானவளை C என்பவள் ஸ்வீகாரஞ்செய்துகொண்டு A யினுடைய சொத்துகளை C யினிடம் ஒப்புவித்துவிட வேண்டியதென்று எழுதப்பட்டிருக்கிறது. அது ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. ஷை ஸ்வீகாரத்தைப்பற்றி விவாதம் ஏற்பட்டதில் ஷை. தஸ்தாவேஜி சாட்சியமாக தாக்கல் செய்யப்பட்டது. அது ஒரு உயில்பத்திரமாகுமென்றும், அது ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தவசியமில்லை என்றும் கக்ஷிசொன்னுர்கள். அந்த தஸ்தாவேஜி உயில் பத்திரமாக மாட்டாதென்றும் அது ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டிய தவசியமில்லை என்றும் கக்ஷி சொன்னுர்கள். அந்த தஸ்தாவேஜி உயில் பத்திரமாக மாட்டாதென்றும் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள அனுமதிப் பத்திரமென்றும் அது ரிஜஸ்டிரேஷன் ஆக்ட்டு 17-வது செக்ஷன்படி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தவசியமென்றும் அதனுல் அந்த தஸ்தாவேஜியைக் கோர்ட்டில் பயில் செய்யக்கூடாதென்றும் உத்தரவு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 27, சென். 30, சோமசுந்திரமுதலியார். V. துரைசாமி முதலியார்.

அப்பீல் செய்யக் காலாவதி தோஷம்.

கோர்ட்டு சாத்துகிற தேதியில் ஒரு சிவில் கேஸ் தீர்ப்பு செய்யப்பட்டது. கோர்ட்டு திறந்த தேதியில் தீர்ப்பு காபி முதலியன கிடைக்கவேண்டு மென்று மனுக்கொடுத்து நகல்கள் பெற்று மனுக்கொடுத்த தேதிமுதல் கணக்கிட்டு அப்பீல் கொடுக்கப்பட்டது தீர்ப்பு தேதி முதல் கணக்கிட்டுப் பார்த்ததில் கெடு தவறிவிட்டதால் கீழ்க்கோர்ட்டார் அப்பீலை அங்கீகரிக்காமல் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதைப்பற்றி அப்பீல் செய்ததில் கோர்ட்டு சாத்தின தேதியில் தீர்ப்பு சொன்னதால் அத்தேதியும் கோர்ட்டு சாத்தப்பட்ட காலங்களும் சட்டப்படி விலக்கப்படவேண்டியதென்றும் அப்பீலுக்கு எவ்வித காலாவதி தோஷமும் ஏற்படவில்லை என்றும் அப்பீலை அங்கீகரித்து தீர்ப்பு செய்யவேண்டியதாக உத்தரவு செய்யப்பட்டது.

இ. லா. ரி. 27, சென். 21, சாமிநாத அய்யர் V. வெங்கடசுப்பய்யர்.

A MUNICIPAL PROSECUTION.

STORING OIL WITHOUT LICENSE.

SPECIALLY CONTRIBUTED TO THE INDIAN LAW GAZETTE BY Mr. A. V. SEYALAM, EDITOR, THE MORU, MADRAS.

முனிசிபல் பிராசிகியூஷன்.

லைசென்ஸ் வாங்காமல் எண்ணெய் ஸ்டோர் செய்தது.

1904-ம் வருஷத்திய மதராஸ் சிடி முனிசிபல் ஆக்ட் 322-வது செக்ஷன் பிரகாரம், அபாயம் அல்லது அருவெறுப்பு உண்டாக்கும் வஸ்துக்களையாவது அல்லது உயிருக்காவது, சுகாதாரத்துக்காவது பொருளுக்காவது அபாயம் விளைக்கக் கூடிய தென்று பிரசிடெண்ட் அபிப்பிராயப்படும் வஸ்துக்களையாவது வைத்து இருக்கும் இடத்தின் சொந்தக்காரர் லைசென்ஸ் வாங்கவேண்டு மென்பதை அனுசரித்து, எண்ணெய் மிஷன் மா-ா-ா-ஸ்ரீ, பு. சி. தெய்வசிகாமணி செட்டியாரையும் கொத்தவால் சாவடி எண்ணெய் கடைக்காரர்களாகிய (1) பி. ரங்கய்ய செட்டி (2) பி. சேஷாசலம் செட்டி (3) சை. கோவிந்தசாமி செட்டி (4) சி. முருகப்பசெட்டி ஆக நால்வரையும் லைசென்ஸ் வாங்காமல் எண்ணெய் ஸ்டோர் செய்திருக்கிருர்களென கார்பொரேஷன் என்னும் நவீன நாமம் பூண்ட முனிசிபாலிடியார் போலீஸ் சம்மன் செய்தார்கள். அவர்களுக்கு சம்மன் சேர்க்க இரண்டொரு நாளில், சென்னை மண்ணடி சவரிமுத்து தெரு 28-வது நெம்பருள்ள ஷை பு-சி. தெய்வசிகாமணி செட்டியார் மாளிகையில் எண்ணெய் வியாபாரிகள் யாவரும் கூட்டம் கூடினுர்கள். அப்பெருங் கூட்டத்தில் மா-ா-ா-ஸ்ரீ, பு. சி. தெய்வசிகாமணிசெட்டியார் சபாநாயகராக வீற்றிருந்து பேசிய விஷயத்தின் சாராம்சம் பின் வருமாறு :—

Section 322 of the Madras City Municipal Act III of 1904.

"The owner or occupier of every place used for any dangerous or offensive trade or for any purposes which in the opinion of the President may endanger life, health, or property, shall in the first month of every year, or, in the case of a place to be newly opened, before the opening of the same, apply to the President for a license for the use of such place for any of the said purposes"

இப்பொழுது நம்மில் சிலரை எண்ணெய் ஸ்டோர் லைசென்ஸ் வாங்கும்படி கட்டாயப்படுத்த பண்ணுவதற்காக முனிசிபாலிடியார் முன் வந்திருக்கிருர்கள். இது சென்னை முனிசிபாலிடியார் சம்மன் செய்யப்படாதவர்களெல்லாம் நமக்கென்னவென்று சும்மா இருந்துவிட்டால் பின்னிட்டு அவர்களுக்கும் அதே கதிதான். இதற்குக் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை ; ஏனென்றுல், எல்லா எண்ணெய் வியாபாரிகளையும் ஏக காலத்தில் சம்மன் செய்யாமல் 4-5 பேரை மாத்திரம் சம்மன் செய்தது (Test Case) சோதனை கேஸ் என்று பலமாய் சமாசாரம் எட்டுகிறது. இந்த சோதனைக்கேசில் முனிசிபாலிடியார் கொண்ட எண்ணம் நிறைவேறுமானுல், எண்ணெய் பெயரின் ஒவ்வொரு அக்ஷரத்துக்குமே

C	A	S	T	O	R
வி	ள	க்	கெ	ண்	ணை

வரிபோடப்பட்டு நம்மோடு நில்லாமல் இனி தோன்றும் சந்ததிகளின் மேலும் பெரும் பாரமாய்ச் சுமந்துவிடும். இதனுலேயே உங்களுக்கு இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்ல நேர்ந்ததேயல்லாமல் மற்றப்படி என் சுய நலத்தை அபேக்ஷித்தாவது அல்லது சம்மன் செய்யப்பட்ட கடைக்காரர்களின் நன்மையை நாடியாவது சொல்ல நேர்ந்ததல்ல. இதை ஒவ்வொருவரும் நன்ருய் யோசிக்க வேண்டியது. தற்காலம் முனிசிபாலிடியார் கொண்ட எண்ணப்பிரகாரம் $10\frac{1}{2}$-காலன் (காலன் என்றுல் நாழி அதாவது $2\frac{1}{2}$-படி) எண்ணெய்க்கையிருப்பு வைத்திருப்பதற்காக மிஷன்காரிடத்தில் ஐந்து ரூ. மண்டிகாரிடத்தில் ஐந்து ரூ. கடைக்காரிடத்தில் ஐந்து ரூ. சில்லரைக் கடைக்காரிடத்தில் ஐந்து ரூபாய், தெருவில் விற்றிறவர்களிடத்தில் ஐந்து ரூபாய் ஆக ஒரு எண்ணெயின் மேல் ரூ 25-வரி யானுல் எண்ணெய் விலை எவ்வளவு தூக்காய் விற்கும்.? இப்பொழுதே சரியான தாளிப்பில்லாமல் வறுக்கப்பட்டும் வறுக்கப்படாமலும் தின்றுவரும் ஏழைகள் அப்பொழுது அப்பளம் முதலியவற்றை நெருப்பில் சுட்டு தின்றுதானே தொலைப்பார்கள் ! இதனுல் சுகஹீனம் என்பதற்கு என்ன தடையிருக்கிறது ! குழந்தைமுதல் நம்மைப் போஷித்து வரும் ஆமணக்கு எண்ணெய் அதாவது விளக்கெண்ணெயும், தினசரி உபயோகத்திற்கும் ஸ்நானபானுதிகளுக்கும் உபயோகப்படும் நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் முதலியப்பிர் மூல அதாவது நம் நாட்டு எண்ணெய்கள் உயிருக்கோ - சுகாதாரத்துக்கோ - பொருளுக்கோ - அபாயம் விளைக்கும் என்று பிரசிடெண்ட் கொண்ட அபிப்பிராயம் சரியல்ல என்பது நம் யாவருக்கமே தெரியும். அப்படி தெரிந்திருந்தாலும் பிரசிடெண்டின் அபிப்பிராயம் சரியல்லவென்று நாம் சொல்வது நியாயஸ்தலத்திற்கு ஏற்காது. வைத்தியத்தில் பாண்டித்தியமுடைய வெள்ளைக்கார டாக்டர்களைக்கொண்டு ரூபிக்கவேண்டியது. இது சாமான்ய காரியமல்ல. விளக்கெண்ணெய் முதலிய நம் நாட்டு எண்ணெய்களைத் தனித்தனியாய் ஒவ்வொரு புட்டியிலும், கிரிஸினுயில் என்று வழங்கும் மண்ணெண்ணெய் முதலிய தாது-எண்ணெய்களைத் தனித்தனி ஒவ்வொரு புட்டியிலும் வைத்து திரியைக் கொளுத்தி ஒவ்வொரு புட்டியாக நம் நாட்டு எண்ணெய்கள் இருக்கும் புட்டிகளில் தோய்த்தவுடன் திரி அணைந்துவிடும். மண்ணெண்ணெய் முதலிய தாது எண்ணெய்கள் இருக்கும் புட்டிகளோ திரியைக் காட்டினதே குபீரென்று பற்றிக்கொள்ளும். இது யாவருக்கும் தெரிந்த விஷயமே. தெரிந்த விஷயமாயிருந்தாலும் அதைத் தெரிவிக்கும் பாத்திர முடையவர்கள் நாமல்ல. வெள்ளைக்கார டாக்டர்களே தகுந்தவர்கள். அவர்களிடமிருந்து சர்டிபிகேட் பெறுவதோடு அவர்களையே சாக்ஷிகளாகக் கோரவேண்டியிருக்கிறது. நம் நாட்டு எண்ணெய்களின் மேல் வரி போடுவதால் சுகாதாரத்துக்குக் கெடுதி என்பதை ஆழ்ந்து யோசியாமல் "வரி வரி" என்ற அளவிலேயே முனிசிபாலிடியரர் நோக்கமாயிருக்கிருர்கள். முதலாவது நம்மில் சிலரை பிராசிகியூட் செய்த 322 - வது செக்ஷன் பொருத்தமானதல்ல. இந்த 322-வது செக்ஷனில் லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று சொல்லுகிறதேயல்லாமல் மற்றப்படி லைசென்ஸ் வாங்கத் தவறினுல் நடத்தவேண்டிய அமுல் இன்னதென்பதைகாட்டவில்லை. பின்னும் கடைக்

SUMMONS.

Application Nos. 6006, 6007, 6008, 6009, 6010.

" ......Where as your attendance is necessary to answer for a charge of having on or about 23rd day of July 1907, in Madras aforesaid, used as a place for storing oil without a license.

Punishable under Section 322 of Act III of 1904..."

காரர்களுக்கு அவர்கள் கட்டவேண்டியது இவ்வளவு என்பதைத் தெரிவிக்காமலே சம்மன் செய்திருக்கிறார்கள். தாங்கள் கட்டவேண்டியது இவ்வளவென்று கடைக்காரர்களுக்குத்தெரிந்திருந்தால் இரண்டொருவர் கட்டியே இருப்பார்கள். அப்படித் தெரிவிக்காததினாலேயே அதைதெரிந்துகொள்ளும்பொருட்டு என் வரையில் வரவும் இச்சபை கூடவும் நேர்ந்த தோடு பின்னும் பெரும் நன்மை விளையக் காத்துக்கொண்டிருக்கிறது. இது விஷயம் நமக்கு நன்மையே யானாலும், எண்ணெய் ஸ்டோரின் லைசென்ஸுக்காக நான் கட்டவேண்டிய தொகை ரூ. 147—8—0 என்று தெரிவித்தமாதிரி கடைக்காரர்களுக்கும் தெரிவித்திருக்கவேண்டியது முனிசிபாலிடியார் கடமை. கடைக்காரர்கள், எண்ணெய்வியாபாரம் செய்வதற்காக தொழில் வரி செலுத்திவருகிறார்கள். எப்பொழுது தொழில்வரி செலுத்துகிறார்களோ அப்பொழுது அவர்கள் எண்ணெய் வியாபாரம் செய்யவேண்டியதுதானே. அப்படி செய்வதற்கு எண்ணெய் அவர்கள் கைவசத்தில் இல்லாமல் வேறு எங்கேயிருக்கும்? கைவசம் இருப்பதினாலேயே, அதற்கு "ஸ்டோர்" என்னும் பெரும்பெயரைச் சூட்டி அதன் வழியாய் வரி விதிக்கப்பார்க்கிறார்கள். இது என்ன ஆச்சரியம்! முதலாவது "ஸ்டோர்" என்றால் என்ன? ஒரு பொருளைக் குறைந்த விலையில் வாங்கி விலை தூக்காகிற காலம் வரையில் அதற்கென்றே பிரத்தியேகமான கட்டிடத்தில் பந்தோபஸ்தாய் வைத்திருப்பதற் கல்லவா "ஸ்டோர்" என்று சொல்லப்படும். அப்படிக்கில்லாமல் விலை யேறினாலும் குறைந்தாலும் அன்றாடம் விற்று வருவதற்காக தங்கள் கடையில் அல்லது மண்டியில் எண்ணெயை பீப்பாயினிடமாக வைத்திருப்பது "ஸ்டோர்" என்று சொல்லப்படுமா? பீப்பாயில்எண்ணெய் வைத்திருப்பதே "ஸ்டோர்" என்று முனிசிபாலிட்டியார் சொல்லுவார்களானால், பின் எதில் எண்ணெய் வைத்து விற்கசொல்லுகிறார்களோ அதைத் தெரிந்து கொள்ளுவோம். பிரசிடெண்டின் அபிப்பிராயத்தில் அபாயம் என்று படுமோ படாதோ என்ற சந்தேகத்தினால்; அவர் அபிப்பிராயப்படும் அபாயம் அல்லது அருவெறுப்பு அல்லது உயிருக்காவது, சுகாதாரத்துக்காவது, பொருளுக்காவது அபாயம் விளைக்கும் பொருளை வைத்திருக்கும் இடத்திற்கு லைசென்ஸ் வாங்க வேண்டியது என்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் பிரசிடெண்ட் தன் அபிப்பிராயத்தைக் கட்டாயம் வெளியிடவேண்டியது கடமை. அதாவது "இந்திந்த பொருள் அபாயம். இந்த இந்த பொருள் அருவெறுப்பு. இந்திந்த பொருள்கள் உயிருக்கு அபாயம் விளைக்கும். இந்திந்த பொருள்கள் சுகாதாரத்துக்கு அபாயம் விளைக்கும். இந்திந்த பொருள்கள், பொருளுக்கு அபாயம் விளைக்கும்" என கெஜெட்டில் வெளியிட்டு பிறகுதான் வரி விதிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்பதாய், 1907ஆ எப்பிரல்மீ 16வ போர்ட் செண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் வெளியிடப் பட்டிருக்கிறது. இதனால் பிரசிடெண்ட் தன்னுடைய அபிப்பிராயத்தை உறுதியாய் வெளியிட்டதாக ஏற்படவில்லை. என் அறிவுக்கு எட்டிய வரையில் இவ்வளவு காரணங்கள் புலப்படுகின்றன. இதன்றியில் வக்கீல்களின் அறிவுக்கு எட்டக்கூடியன இன்னும் எவ்வளவோ இருக்கக்கூடும். இவைகளை எல்லாம் ஆராய்ந்து நமக்கு இருக்கும் நியாயங்களை எடுத்துக்காட்டி, நாங்கள் முனிசிபாலிடியார் கோரும், எண்ணெய் ஸ்டோரிங்குக்கு வரிகட்ட மாட்டோம் என்று சொல்வது 1-10-ல் ஆகக் கூடியதல்ல. நூறு சணக்காயும் ஆயிரச்சணக்காயும் பிடிக்கக்கூடும். எவ்வளவு பிடித்தாலும் 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதை மாத்திரம் கைப்பிடித்து நிற்போமானால் போலீஸ் கோர்ட்டிலேயோ அல்லது ஒருசமயம் ஹைக்கோர்ட்டு அப்பீலிலேயோ நம்முயற்சி ஈடேறும் என்பது மாத்திரம் உண்மை. ஆதலால் எண்ணெய் வியாபாரிகளாகிய நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து மிஷின்கார்—மண்டிக்கார்—கடைக்கார்-சில்லரைக் கடைக்கார் ஆக நாலுபிரிவாக்கி, பிரிவுக்குத் தக்கபடி அவரவரிடத்தில் தொகை வசூல்செய்து பிறகே கேஸ் துவக்கவேண்டியிருக்கிறது—என்பதாக ஒவ்வொருவர் மனதிலும்பதியும் வண்ணம் நயம்பட தெளிவாகவும் திருத்தமாகவும் சொல்லி முடித்தனர். இது விஷயத்தில் இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்ட ஸ்ரீமான் பு. சி. தெய்வசிகாமணி செட்டியாருக்கு சபையோரெல்லாம் வந்தனம் செலுத்தி அவர்சொன்னவற்றை அங்கீகரிக்க, சபையும் கலைந்தது. பின்னர் அங்கீகரித்த சபையோரெல்லாம் அவ்விதமே அநேகமாய் நடந்துகொண்டனர். கேசும் சென்னை ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் பிரிஸிடென்சி மாஜிஸ்டிரேட், மிஸ்டர் பி. இராஜரத்தின முதலியார் முன்பாக டைந்த செப்டம்பர்மீ 13வ துவக்கப்பட்டது. பிராசிக்யூஷன் தரப்பில் முனிசிபாலிடி லைசென்ஸ் சூபரின்டென்டெண்டு மி-ர். நிக்கலசம், டிபென்ஸ் தரப்பில் ஹைகோர்ட்டு வக்கீல்கள் மிஸ்டர் இரங்க இராமானுஜாசாரியார், மிஸ்டர் வெங்கட சுப்பய்யர், மிஸ்டர் மாசிலாமணிபிள்ளை ஆக மூவரும் ஆஜரானார்கள். டிபென்ஸ் தரப்பார் 20வுக்கு அட்ஜர்ன்மென்டு வாங்கிக்கொண்டு, நீகார்கேள் வாங்கவேண்டியிருக்கும் நிமித்தம் மறுபடியும் 27வுக்கு அட்ஜர்ன்மென்ட் வாங்கிக்கொண்டார்கள். ஆதலால் 27வ கேஸ் துவக்கப்பட்டது.

Corporation of Madras.

Notice under Section 322, Act III of 1904—Licenses.

....

" Notice is hereby given that the purposes specified in clause (c), schedule II of Act III of 1904 (Storage of Iron alone excepted) are purposes which, in the opinion of the President, may endanger life, health or property and premises may therefore not to be used for these purposes without license under the above section."

E. S. Lloyd,

12.4.1907. *President.*

எண்ணெய் வியாபாரம்செய்வதற்காக பலவரிகள்செலுத்தி வந்தும் எண்ணெய் ஸ்டோர் பண்ணுவதற்காக இன்னும் மேல்கொண்டு வரிசெலுத்த 1904 - ம் வருத்திய சென்னை முனிசிபாலிடி 3-வது ஆக்ட் 322-வது செக்ஷன் இரண்டாவது ஷெடியூல் ஸி. பிரிவு 7-வது ஐட்டம் பத்தப்படுத்தாதது. எனென்றால் ஷை ஐட்டத்தில் ஒரு பொருளை ஸ்டோர்பண்ணுகிறதற்காவது அல்லது பாக் பண்ணுகிறதற்காவது அல்லது பிரஸ் பண்ணுகிறதற்காவது அல்லது கிளீன்பண்ணுகிறதற்காவது அல்லது உற்பத்தி செய்வதற்காவது லைசென்ஸ் வாங்கவேண்டுமென்றிருக்கிறதே யொழிய ஸ்டோர் பண்ணுகிறதற்கும் பாக் பண்ணுகிறதற்கும் பிரஸ் பண்ணுகிறதற்கும் கிளீன் பண்ணுகிறதற்கும் உற்பத்தி பண்ணுகிறதற்கும் லைசென்ஸ் வாங்கவேண்டுமென்றில்லை. ஆதலால், "உம்" என்பதைச் சேர்க்காமல்

Section 322, (c) 7.

Storing, packing, pressing, cleansing, preparing, or manufacturing by any process whatever, any of the following articles, namely :-

Candles,	Jute,
Cocoanut fibre,	Meat
Cotton or Cotton, refuse and seed.	Oil
	Oil cloth
Fat,	Roison
Flax,	Spirits
Flour,	Surkhi
Hemp,	Tallow
Iron,	Wool

"அல்லது" என்பதைச் சேர்த்திருப்பதே எதாவது ஒன்றுக்கு லைசென்ஸ் வாங்கவேண்டு மென்பது நன்றாய் விளக்குகின்றது, என டிபன்ஸ் தரப்பார் வாதித்தார்கள். பிராசிக்யூஷன் தரப்பாரோ ஷை ஐட்டம் பிரகாரம் அதில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு வார்த்தைக்குமே தங்கள் இஷ்டம்போல் வரி விதிக்கும்படி, கவர்ன்மென்டார் தங்கள் *ஆர்டர் நெ. 735. (18-4-06) 1820 (13-10-1906) மூலமாய் அங்கீகரித்த லைசென்ஸ் கட்டண ஷெடியூலில் ஒரு முக்கிய குறிப்பு கண்டிருக்கிறதென்று ஷை ஷெடியூலைத் தாக்கல் செய்தார்கள். முதலில் மாஜிஸ்டிரேட் முனிசிபாலிடியார் அபிப்பிராயத்தை கலந்து டிபன்ஸ் தரப்பாரை இதற்கு எதாவது சமாதானம் உண்டா என்றனர். டிபன்ஸ் தரப்பு வக்கீல் பிரம்மஸ்ரீ இரங்க இராமானுஜா சாரியார் எழுந்திருந்து தேடப்போன பொருள் காலில் அடிபட்டதுபோல் சந்தோஷங்கொண்டு, இந்த குறிப்பானது எங்களுக்கு அனுகூலமே யொழிய பிராசிக்யூஷன் தரப்புக்கு அனுகூலமானதல்ல. அந்தக் குறிப்பின் பொருளாவது ஒரே இடத்தில் பல வஸ்துக்கள் வைத்திருக்கும் பக்ஷத்தில் எத்தனை வஸ்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை வஸ்துக்களுக்கும் ஏற்றக் குறைவு இல்லாமல் வரி சமமாக போடலாமென்பதே யொழிய ஒரு பொருளின் பேரிலேயே அநேக வரி போடலாமென்பது கருத்தல்ல என்பதை எடுத்துக் காட்டி, முனிசிபாலிடியார் கொண்ட கருத்து சரியானதல்ல என்பதை ஸ்திரப்படுத்தி, எங்கள் இடத்தில் "எண்ணெய்" என்னும் ஒரு பொருள் தவிர வேறு பொருள் கிடையாது என்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளக்கினர். இவ்வளவிலேயே பிராசிக்யூஷன் தரப்பார் தாமாக நின்று பேசுதல் போதாதென்றும் டிபென்சு தரப்பைப்போல் தாமும் வக்கீல் வைத்து நடத்தவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டதை வெளியிடவும் அக்டோபர்மீ 11வ நிறுத்தி வைக்கப்பட்டது. [ஒரு வாரத்திற்கு ஒரு வாரம் அல்லது இரண்டுவாரம் கேஸ் நிறுத்தி வைப்பதின் காரணம் முனிசிபல் கேசெல்லாம் வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை விசாரிப்பதே என்று இதை வாசிக்கும் நேயர்கள் தெரிந்துகொள்வார்களாக] நிற்க,

Foot note in the Schedule of fees, as sanctioned by Government in G. O. No. 735, M, dated 18th April 1906, and No. 1820, M, dated 13th October 1906.*

" Whenever any premises are used for the storage for other than domestic use or selling packing, pressing, cleansing preparing or manufacturing of two or morelicensable commodities in respect of which a fee is fixed by the above table, the fee to be levied shall be equal to the total of all the fees leviable in respect of each of such commodities."

முன்னதாகவே எண்ணெய் மிஷன் ம-ா-ா-ஸ்ரீ, பு. சி. தெய்வசிகாமணி செட்டியாரையும் கொத்தவால்சாவடி கடைக்காரர்கள் நால்வரையும் முனிசிபாலிடியார் சார்ஜ்செய்தார்கள் என்று தெரிவித்திருக்கிறோம். பின்னும் டிபன்ஸ் தரப்பில் எண்ணெய்க்காக பல வரிகள் செலுத்திவருகிறோம் என்று வாதித்ததினாலேயே "எண்ணெய் மிஷினை" ப்பற்றிய டிபன்ஸ் என்பது யாவருக்கும் தெரிகிறதல்லவா? ஆதலால் முனிசிபாலிடியார் "எண்ணெய் மிஷன்காரர்கள் தானே பல வரி செலுத்துகிறார்கள். கடைக்காரர்கள் என்ன வரி செலுத்துகிறார்கள், எனவே எண்ணெய் மிஷன் கேசுக்கும் கடைக் கேசுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆதலால் கடைக்காரர்கள் கேசைத் தள்ளி வைக்காமல் நடத்தவேண்டுமென்று கேட்க, டிபன்ஸ் தரப்பு வக்கீல் இதற்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமில்லாவிட்டாலும் நானே அந்தக் கேசுக்கும் ஆஜராகிறேன். கடைக்காரர்கள் எண்ணெய் வியாபாரம் செய்வதற்காக ஏற்கனவே தொழில் வரி செலுத்தி வருகிறார்கள். இதன்றியில் எண்ணெய் மிஷன் கேசில், எண்ணெய் ஸ்டோர் பண்ணுதல் அபாயமாவது அல்லது அருவெறுப்பாவது - அல்லது உயிருக்காவது - சுகாதாரத்துக்காவது - பொருளுக்காவது அபாயம் விளைக்காது என்பதை ருஜூப்படுத்தத் தயாராயிருக்கிறோம். அப்படி ருஜூப்படுத்த அது ஸ்திரப்படும் பக்ஷத்தில் கடைக்காரர்களும் வரி கட்டவேண்டியதில்லையே என்று சொல்லியும், கடைக்காரர்கள் கேசு அக்டோபர்மீ 4வ நிறுத்திவைக்கப்பட்டது. அக்டோபர்மீ முதல் ஒரு மாதம் வரைக்கும் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் இராஜரத்தின முதலியார் ரஜா எடுத்துக்கொள்ளவும், மிஸ்டர் கூம்பஸ் முன்பாக அக்டோபர்மீ 4வ கடைக்காரர்கள் கேசு துவக்கப்பட்டது. அன்றையதினம் டிபன்ஸ் தரப்பு வக்கீல் மிஸ்டர் இரங்க இராமானுஜாசாரியார் ஹைக்கோர்ட்டில் ஒரு கேசில் ஆஜராக வேண்டியிருக்கிறதென்றும் தானே இதைப்போன்ற மற்றொரு கேசில் 11வ ஆஜராகப் போவதால் இதையும் அந்த 11வ நிறுத்திவைக்கும்படி லெட்டர் மூலமாய்க் கேட்டுக்கொள்ள கேஸ் 11வ நிறுத்திவைக்கப்பட்டது. அதன்படி 11வயன்று முன் நிறுத்திவைத்த மிஷன் கேஸ் துவக்க மிஸ்டர் இராஜரத்தின முதலியார் சிறிது விசாரித்து நிறுத்தி வைத்திருப்பதை (Part heard case) முன்னிட்டு அவரே விசாரிக்கவேண்டியிருக்கும் காரணத்தால் நவம்பர்மீ 8வ நிறுத்திவைக்கப் பட்டது. கடைக்காரர்களும் தங்கள் கேசும் இதே மாதிரியான கேஸ் என்று தெரிவித்து ஷை தேதியில் நிறுத்திக்கொண்டார்கள். எனவே நவம்பர்மீ 8வ மாஜிஸ்டிரேட் மிஸ்டர் இராஜரத்தின முதலியார் முன்பாக முதலாவது எண்ணெய் மிஷன் கேஸ் துவக்கப்பட்டது. பிராசிக்யூஷன் தரப்பில் வக்கீல் மிஸ்டர் துரைசாமி ஐயங்காரும் டிபன்ஸ் தரப்பில் ஏற்கனவே தெரிவித்திருந்த வக்கீல்களும் ஆஜரானார்கள்.

பிராசிக்யூஷன் முதல் சாக்ஷி மி-ர் நிக்லேஸ் வாக்குமூலம்

சென்னை மண்ணடி மலையப்பன் தெரு 3. 28ல் இருக்கும் எண்ணெய் மிஷனை 1907ஆ ஜூலைமீ 2வ தான் பா[illegible] வையிட்டதாகவும் அச்சமயத்தில் அவ்விடமிருந்த 10 பிரசு[illegible]ளில் 8 பிரஸ் வேலை செய்துக்கொண்டிருந்ததாகவும், ம[illegible]ற்றோர் இடத்தில் பீப்பாய் 1-க்கு 40 காலன் வீதம் 980 காலன் எண்ணெய் கொண்ட 24½-பீப்பாயும், 800-காலன் கொண்ட ஒரு டான்கும் மற்றொரு டான்கு 400-காலன் எண்ணெயும், மற்ற மூன்று டான்குகளில் 700 - காலன் எண்ணெயும் ஆக மொத்தத்தில் 2880 - காலன் எண்ணெய் ஸ்டோர் செய்திருந்ததையும், மற்றோர் இடத்தில் எண்ணெய் காய்ச்சுவதையும் தான் கண்டதாகவும், அதனால்தான் எண்ணெய் ஸ்டோர் பண்ணு[illegible] வதற்காக லைசென்ஸ் [illegible] டண ஷெடியூலில் கண்[illegible] விகிதம் ரூ. 147-8 0 செ[illegible] த்தவேண்டுமென்று தா[illegible] பிரசிடெண்டுக்குச் செய்[illegible] ரிப்போர்ட் எக்ஸிபிட் [illegible] என்றும் சாக்ஷியம் கூ[illegible] பிரசிடெண்ட் தன்னுடை[illegible] அபிப்பிராயத்தில் இன்[illegible] ன்ன பொருள்கள் உயி[illegible] காவது சுகாதாரத்துக்[illegible] வது பொருளுக்காவது [illegible] பாயம் விளைக்கும் என்[illegible] போர்ட் செண்ட் ஜார்[illegible] கெஜெட்டில் (*எக்ஸ்பி[illegible] பி) வெளியிட்ட விளம்ப[illegible] ரதையும், லைசென்ஸ் [illegible] டண ஷெடியூல் († எக்[illegible] பிட்-சி) யும், ஷை ஷெடியூ[illegible]

EXHIBIT A.

Note of inspection for the President's information.

Health Department.

Inspected the factory of P. Streerangam Chetty & Son in Malayappan Street, 5th Division.

The fees payable are as noted below

10 oil Presses at Rs. 10/- each...	Rs. 100
For boiling oil ...	Rs 5

Oil Stroing.	*Gallons.*
24½ Casks of 40 gallans each	980
1 Tank	800
1 do.	400

* 384-வது பக்கம் பார்க்கவும்.

† † இவைகளை இங்கு பதிப்பித்தால் அதிக இட[illegible] கொள்ளுமென்றே விடுத்தனம்.

3 do.	700
H. O.	2380

Demand this plan.

	105-0-0
	147-8-0
	252-8-0

He has already paid Rs. 60 against his 10 presses and is therefore due Rs. 192.8 0,

(Sd.) NICHOLAS,
License Supdt.
3—7—07.

Sir,

They have already paid Rs. 5 - for boiling oil.

(Initialled.)
11—7—07.

SCHEDULE II.

(*b*) *Offensive trades.*

(1) Boiling camphor, paddy or oil.

....

அங்கீகரித்த கவர்ன்மெண்ட் ஆர்டர் 735 († எக்ஸிபிட்-டி) 1820-(*எக்சிபிட்-இ) ஆ* இந்த இரண்டு ஆர்டர்களையும் பிராஸிகியூஷனுக்கு ஆதரவாய்த் தாக்கல் செய்தார். (அன்று கேஸ் நிறுத்தப்பட்டு 15உ துவக்கப்பட்டது)

கிராஸ் விசாரணையில் ஷை சாக்ஷியின் வாக்குமூலம்:— எண்ணெய் மிஷினில் 10-பிரஸ் இருக்கின்றன. ஜூலை மீ 2உயில் 8-பிரசுகள் வேலை செய்ததை நான் பார்த்தேன். அது விஷயத்தை என்னுடைய இன்ஸ்பெக்ஷன் (எச்சிபிட்-எ) குறிப்பில் எழுதியிருக்கிறேன். இந்த இன்ஸ்பெக்ஷன் குறிப்பெல்லாம் இங்கியில்தான் எழுதப்பட்டிருக்கிறது. எட்டு பிரசுகள் தான் வேலை செய்தன என்ற விஷயம் மாத்திரம் மார்ஜினில் பென்சலில் எழுதப்பட்டிருக்கிறது. நான் கோரியபடி அவர்கள் செலுத்த வேண்டியது ரூ. 100. ஆனால் அவர்கள் ரூ. (அறுபது) 60 ஈராட்டாகச் செலுத்தினார்கள்...எண்ணெய் காய்ச்சுவதற்கு 5 ரூபாயும் செலுத்தியிருக்கிறார்கள். ஆக மொத்தத்தில் எண்ணெய் காய்ச்சுவதற்கும் எண்ணெய் உற்பத்தி செய்வதற்குமாக ரூ. 65 செலுத்தியிருக்கிறார்கள். மேல் கொண்டு ரூ. 40 - செலுத்தும் பக்ஷத்தில் எண்ணெய் காய்ச்சுவதற்கு லைசென்சும் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு லைசென்சும் ஆக இரண்டு லைசென்ஸ்கள் கொடுக்கப்படும். முனிசிபல் ஆக்ட் 322-வது செக்ஷன் 2-வது ஷெடியூல், பி-ஐட்டம் 1-வது பிரிவு பிரகாரம் ரூ. ஐந்து விதிக்கப்பட்டது. (எண்ணெய் காய்க்சுவதற்கு விதித்த ரூ. ஐந்து செலுத்திவிட்டிருக்க அதற்கு இது வரையில் ஏன் லைசென்ஸ் கொடுக்கவில்லை ?) காய்ச்சுகிற எண்ணெயை அது சமயம் அவ்விடத்தில் ஸ்டோர் செய்யவேண்டியது அவசியம் தான். எண்ணெய் காய்ச்சின பிறகு எவ்வளவு காலம் அவ்விடத்திலேயே வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாது. எப்பொழுதும் எண்ணெய் அவ்விடத்தில் ஸ்டோர் செய்திருக்கிறதென்று என்னால் சொல்லமுடியாது. அது சமயத்துக்கு ஸ்டோர் செய்யப்பட்ட எண்ணெய் இரண்டு மூன்று நாளில் அப்புறப்படுத்தப்படுகிறது என்று அவர்கள் சொல்வது என்னால் மறுக்கமுடியாது. பிரசுகள் கிரமமாய் வேலை செய்கின்றனவென்று நம்புகிறேன். அது விஷயமாய் எனக்கு ரிபோர்ட்கள் கிடைத்திருக்கின்றன. நான் தினமும் பார்வையிட்டது கிடையாது........ இப்பொழுது மூன்றாவதாக லைசென்ஸ் வாங்கும்படி நான் கோருவது அவர்கள் எண்ணெய் ஸ்டோர் செய்வதற்காகத் தான். 2880 காலன் எண்ணெய்க்கு ரூ. 147-8-0 கட்டும்படி கேட்கிறேன். டாங்குகளின் அளவை பாக்டரி சொந்தக்காரர் மூலமாய்த் தெரிந்துகொண்டேன். அந்த அளவை இலேசாகவே நிர்ணயித்துக்கொள்ளலாம் என்பது எனது நம்பிக்கை 5 டான்குகள் இருந்தாலும் நான் ஒரு டாங்கை (உள்புறத்தை) மாத்திரம் பார்த்தேன். நான் பார்த்த டாங்கில் எண்ணெய் பாதியிருந்தது. அநேக காலி டாங்குகளை எனக்குக் காண்பித்தார்கள் ஆனால் டான்கில் பாதி எண்ணெயிருந்த அந்த டாங்கை மாத்திரம் பார்த்தேன். மற்ற நாலு டாங்குகளில் எண்ணெய் நிறைய இருப்பதாகச் சொன்னார்கள். (என்ன ஆச்சரியம்! தனக்குக் காண்பிக்கப்பட்ட காலி டான்குகள் அநேகம் என்றதினாலேயே 4-5 வது இருக்கவேண்டும். இதன்றி தான் பார்த்தது 1. அவர்கள் மூலமாய் தெரிந்துகொண்ட எண்ணெய் நிறைந்திருந்த டான்குகள் 4. மொத்தத்தில் சுமார் 10 டான்குகளாவது இருந்திருக்கவேண்டுமே. அப்படியிருக்கத் தன் சாக்ஷியத்தில், அவ்விடத்தில் ஐந்து டான்குகள் தான் இருந்தனவென்றது எப்படி?) எண்ணெய் பாக்டரி இருக்கும் இடம் ½-மணிக்குமேல் விஸ்தீரணமுள்ளது. அதாவது 1200 சதுர அடிக்குமேல் பட்டது. 10-பிரசுகளும் பாக்டரிக்கு உள்ளேதான் இருக்கிறது. பாக்டரி இன்னும் அதிக விஸ்தீரணமுடையதாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். (*இதன் கருத்து என்ன?) வெளியில் போய்க்கொண்டிருந்த பீப்பாய்களைத் தவிர மற்றபீப்பாய்களைப்பார்வையிட்டேன். எல்லாப் பயிர்மூல எண்ணெய்களையும் அவ்விடத்தில் பார்த்தேன். (*இலுப்பை எண்ணெய் - புங்கம் எண்ணெய் - வேப்பெண்ணெய் - ஆகிய இந்த எண்ணெய்களைப் பார்த்தாரா ?) எண்ணெய் ஸ்டோர் பண்ணுவது உயிருக்காவது - சுகாதாரத்துக்காவது பொருளுக்காவது அபாயம் விளைக்குமா என்பது என்னால் சொல்ல முடியாது. இது விஷயம் ஹெல்த் ஆபீசர்தான் சொல்லவேண்டியது. (*அப்படியிருக்க பிராசிகியூஷன் தரப்பில் ஹெல்த் ஆபீசரைக் கொண்டு ருஜுப்படுத்த ஏன் தவறிவிட்டார்கள் ?) சட்டத்தின் இரண்டாவது ஷெடியூல் சி-ஐட்டம் 7-வது † பிரிவைப் பார்த்தேன். அதன்படி பாக்கு பண்ணுகிறதற்காவது - கிளீன் பண்ணுகிறதற்காவது லைசென்ஸ் வாங்கும்படி கேட்கப் போகிறதில்லை. ஏனென்றால் கவர்ன்மெண்டார் அங்கீகரித்த ஷெடியூலில் (எக்சிபிட்-சி) அவைகளுக்காக பிரத்தியேகமாய் யாதொரு கட்டணமும் விதிக்கப்பட்டில்லை. பிரஸ்தாப ஷெடியூலின் 5-வது பக்கத்தில் "எண்ணெய் பிரஸ்" "எண்ணெய் ஸ்டோரிங்" என்றிருப்பவை, அவற்றை அனுசரித்த 7-வது ஐட்டத்துடன் பொருத்தி வாசிக்க முடியாதிருப்பது பிழைதான்— பாக்டரியானது முக்கியமாய் எண்ணெய் உற்பத்தி செய்வதற்காகவே ஏற்பட்ட இடந்தான். யக்சிபிட் 3-பார்த்தேன். இது டிபன்ஸ் தரப்பார் அஸிஸ்டெண்ட் ஹெல்த் ஆபீசருக்கு எழுதிய ‡கடிதம். இதோடு பிராசிக்யூஷன் தரப்பு விசாரணை முடியவும் டிபென்ஸ் தரப்பில் கவர்ன்மெண்ட் கெமிகல் எக்ஸாமினர் முதல் சாக்ஷியாக எடுத்துக்கொள்ளப் பட்டார். இந்நாட்டு எண்ணெய்கள் அதாவது பயிர்மூல எண்ணெய்களாகிய விளக்கெண்ணெய் - நல்லெண்ணெய் - கடலை எண்ணெய் - தேங்காய் எண்ணெய் ஆகிய இவைகளை ஸ்டோர் பண்ணுவது உயிருக்காவது பொருளுக்காவது சுகாதாரத்துக்காவது அபாயம் விளைக்காது என்றும் தான் பிரஸ்தாப எண்ணெய் மிஷினையும் திரும்பிப் போகும்போது 3-4 எண்ணெய்க் கடைகளை பார்வையிட்டதாகவும், சிலர் இவ்வெண்ணெய்களை அருவெறுப்பானவையென்று சொன்னாலும் தான் அவ்வித அபிப்பிராயப் படவில்லை என்றும் சாக்ஷியம் சொன்னார்.

EXHIBIT 4.

Madras, 11th October 1907.

I have examined the four samples of oil viz., Gingelly Groundnut, Cocoanut and Castor which you gave me, and I found that they did not give off inflammable Vapour when heated over 200° C. i. e., about 400° Fahrenheit. These vegetable oils are not inflammable or dangerous in the way that certain petroleum oils are, nor does their storage render them liable to spontaneous ignition. In my opinion the storing of the four above mentioned vegetable oils does not endanger life, health ro property.

(Sd.) VANGEYZEL,
M.B., F.I.C., F.C.S.,
Lieut-Col., I.M.S.,
Chemical Examiner.

* இந்தக் குறியுள்ள நிருபரேயரின் அபிப்பிராயம்.

⁑ இக்குறியுள்ளன நிருபரேயரின் அபிப்பிராயம்.

† வாசிப்போர் பார்க்கவேண்டுமானால் 5-வது பக்கத்தைப்பார்க்கவும்.

‡ கடிதம் நீண்டிருப்பதால் அதை இங்கே பதிப்பிக்கப் பிரியப்படவில்லை.

கிராஸ் விசாரணையில் ஷை சாக்ஷியின் வாக்குமூலம்:—இரும்பு இயந்திரங்களைக் கொண்டு எண்ணெய் உற்பத்தி செய்வதால் உயிருக்காவது - சுகாதாரத்துக்காவது பொருளுக்காவது அபாயம் விளையுமென்று நான் நினைக்கவில்லை. பாக்டரியை அடுத்த வீடு நெருப்புப் பிடித்துக்கொண்டால் பாக்டரி அபாயத்திலிராது. காரணம் அவ்விடத்தில் எண்ணெய் ஸ்டோர் செய்திருப்பதே. மானிடதேகத்தில், இவைகள் பட்டாலும் இந்த பயிர்மூல எண்ணெய்கள் அபாயம் விளைக்காது. இந்த எண்ணெய்களை ஜலத்துடன் கலக்க முடியாது. இந்த எண்ணெய்கள் பூமியில் ஊறுவதால் உண்டாகும் அல்லது தூண்டப்படும் யாதொரு நோயும் கிடையாது. சில வியாபாரங்கள் சில வியாதிகளைக் கிளரும். இந்தப் பயிர்மூல எண்ணெய்களால் கிளரப்பட்ட நோய்கள் எனக்குத் தெரிந்தவரையில் யாதும் கிடையாது. இவைகள் அதிகமாய் காய்ச்சப்பட்டால் ஆவியாய் மாறுகின்றன. இந்த ஆவியானது அபாயமா என்பது எனக்கு தெரியாததலால் என்னால் சொல்ல முடியாது பின்னும் எந்த இரசாயன சாஸ்திரி (Chemist) யாலும் சொல்ல முடியாது. இவைகள் எவ்வளவு அதிகமாய்க் காய்ச்சப்பட்டாலும் எளிதில் தீப்பற்றக் கூடிய தன்மை இவைகளுக்கு கிடையாதென்று பிரமாணங்கள் முறையிடுகின்றன.

EXHIBIT 5.

ROYAPETTA,
Madras, 13-11-07.

"Vegetable oils such as, Cocoanut, Gingelly, Groundnut and Castor are not inflammable or offensive in any such way as to cause their storage to be dangerous to life, health or property."

(Sd.) Maj. P.C. GABBETT,
I.M.S.,
Prof. of Surgery, Medl. Coll. and First Surg., Genl. Hospital.

ஜெனரல் ஆஸ்பத்திரி முதல் ஸர்ஜன் மேஜர் - பி - சி- காபட் இரண்டாவதாகவும் டாக்டர்—யம். விஜயராகவலு பிள்ளை மூன்றாவதாகவும் சாக்ஷியம் கூறினார்கள். அதாவது தாங்கள் கொடுத்த (யக்சிபட்-5; யக்சிபட் 6.) சர்டிபிகேட்டில் கண்டபடி இந்நாட்டு எண்ணெய்களை ஸ்டோர் பண்ணுவதால் உயிருக்காவது, சுகாதாரத்துக்காவது, பொருளுக்காவது அபாயம் விளையாது என்றும் பின்னும் பயிர்மூல எண்ணெய்களுக்கு எளிதில் தீப்பற்றும் சக்தி கிடையாதென்றும் இவ்வெண்ணெய்களின் வாசனை அருவெறுப்புப் படத்தக்கதல்லவென்றும் சாக்ஷியம் கூறினார்கள். நான்காவதாக ஷை எண்ணெய் மிஷினில் சுமார் 30-வருஷமாய் வேலை செய்துவரும் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் சாக்ஷியம் சொன்னதாவது:—

EXHIBIT 6.

Madras, 6th November 1907

"I inspected your oil bazaars about the kotival chavady and the oil factory of M. R. Ry., P. S. Daivasigamony Chettiar. I observed that the four fixed non-drying vegetable oils, I found therein Gingelly Castor, Groundnut and Cocoanut did not get rancid and offensive after continuous exposure to light for over a month. As such the trade in these oils is dangerous to life, health or property is scientifically untenable."

(Signed)
M. VIJAYARAGAVALOO,
B.A., M.B., & C.M.,
Physician and Surgeon.

தான் எண்ணெய் மிஷினில் இருந்து வரும் 30-வருஷ காலமாய் எண்ணெய் ஸ்டோர் செய்ததே கிடையாதென்றும், அதனாலேயே ஸ்டோர் கணக்கு தங்களிடம் கிடையாதென்றும், டாங்குகள் இருப்பது எண்ணெய் வடிகட்டுவதற்கென்றும், எண்ணெய் உற்பத்தி செய்தல் காய்ச்சல் முதலிய அதைச்சார்ந்த சகல வேலைகளும் 3/28 - நெம்பருள்ள ஒரே கட்டிடத்தில் தான் நடக்கிறதென்றும், உற்பத்தியாகும் எண்ணெய்களை அவ்வப்பொழுதே ஆசாமிகளுக்கு அனுப்பி விடுகிறதென்றும், ஆள் அல்லது வண்டிமுதலியன அகப்படாமலோ, இன்னும் மற்றெந்த காரணத்தினாலோ, ஆசாமிகள் உடனே எடுத்துப் போகாமல் இருக்கும் எப்பொழுதாவது ஒரு சமயத்தில் 20-30 - பீப்பாய்கள் இருக்குமென்றும் அப்படியிருப்பது 15 - நாளைக்கு அதிகப்பட்டிராதென்றும், பாக்டரியில் இருக்கப்பட்ட பிரசுகளிலேயே எல்லாப் பயிர்மூல அதாவது நாட்டு எண்ணெய்களையும் உற்பத்தி செய்யலாமென்றும், ஆனால் தற்காலம் தங்களுக்கு வேண்டிய விளக்கெண்ணெய் கடலைஎண்ணைகள்தான் இப்பொழுது உற்பத்திசெய்யப்படுகின்றனவென்றும் அபூர்வமாய் கூலியாள்களின் கட்டுப்பாட்டால் வேலை தவக்கப்பட்டால் அது சமயம்மாத்திரம் வெளியிலிருந்து அதாவது காக்கிநாடாவிலிருந்து எண்ணெய் தருவித்து, பாக்டரிக்கு கொண்டு வராமலே, எண்ணெய் இறக்குமதியாகும் ஸ்டேஷனிலிருந்து ஆசாமிகளுக்கு அனுப்புவதென்றும், முடிவாக சொல்லுமிடத்து ஆசாமிகள் ஆர்டர் கொடுத்தபிறகு எண்ணெய் உற்பத்த செய்வதேயல்லாமல் தங்கள் இச்சையாய் எண்ணெய் உற்பத்தி செய்து கையிருப்பு வைப்பதில்லை என்றும் சொன்னார் (கேஸ் இன்று நிறுத்தப்பட்டு டிசம்பர் மீ 6உ துவக்கப்பட்டது) இரண்டு தரப்பு வக்கீல்களும் கேசின் சாராம்சத்தை எடுத்து மாஜிஸ்டிரேட்டுக்கு சொல்ல ஆரம்பித்தார்கள்.

முதலாவது டிபன்ஸ் தரப்பு வக்கீல் மிஸ்டர் இரங்க இராமானுஜா சாரியார் தெரிவித்த கேசின் சாராம்சம்:—

இந்தக் கேசில் எண்ணெய் ஸ்டோரிங்குக்கு லைசென்ஸ் வாங்கவேண்டியதில்லை என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

I. 1904ளு முனிசிபல் 3-வது ஆக்ட் 322-வது செக்ஷனில் அபாயம் அல்லது அருவெறுப்பு அல்லது உயிருக்காவது சுகாதாரத்துக்காவது அபாயம் விளைக்குமென்று பிரசிடெண்ட் அபிப்பிராயப்படக்கூடிய பொருளை வைத்திருக்கும் இடத்திற்கு லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று கூறி அதைச் சார்ந்த ஷெடியூல் இரண்டில் எண்ணெய் காய்ச்சுவது அருவெறுப்பு என்று தெளிவாய்க் காட்டப்பட்டிருப்பதால் மற்ற இரண்டு காரணங்களை இதன்மேல் சுமத்தி லைசென்ஸ் வாங்கும்படி கட்டாயப்படுத்த முதலாவது ஷை செக்ஷன் இடந்தராது. அப்படி இடந் தருவதாகப் பாவித்தாலும் முனிசிபாலிடியார் அனுசரணையாகச் சொல்லும் ஷை ஷெடியூல் சி ஐட்டம் 7-வது பிரிவிலும் ஸ்டோரிங்குக்காவது பாக்கிங்குக்காவது பிரஸ்ஸிங்குக்காவது கிளீனிங்குக்காவது உண்டாக்கல் அல்லது உற்பத்தி செய்தலுக்காவது லைசென்ஸ்வாங்கவேண்டுமென்றிருப்பதால் அதன்படி எண்ணெய் உர்பத்தி செய்வதற்கு லைசென்ஸ் வாங்கியிருக்கும்போது நாங்கள் ஸ்டோர் பண்ணுவதற்காக லைசென்ஸ் வாங்கவேண்டியதே கிடையாது. எண்ணெய் உற்பத்தி செய்வதற்காக நாங்கள் பணம் செலுத்தியிருக்கிரோம் என்று பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷியே ஒத்துக்கொண்டிருக்கிறது.

II. எண்ணெய் ஸ்டோரிங் உயிருக்காவது சுகாதாரத்துக்காவது பொருளுக்காவது அபாயம் விளைக்கும் என்று பிரசிடெண்ட் அபிப்பிராயப்பட்டு அது விஷயம் 1907ளு எப்பிரல் மீ 16உ போர்ட் செண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியிடப் பட்டிருக்கிறதாக அந்த விளம்பரத்தை பிராசிகியூஷன் தரப்பில் (யக்சிபிட் - பி) தாக்கல் செய்திருக்கிறார்கள். அதே விளம்பரத்தில் "தகனி அடித்தல்" சுகாதாரத்துக்கு அபாயம் விளைக்கலாம் என்று பிரசுரித்திருக்க, எண்ணெய் ஸ்டோரிங் உயிருக்கு அபா

EXHIBIT B.

Supplement to the Fort St. George Gazette No. 15 dated 16th. April 1907.

CORPORATION OF MADRAS.

Notices under section 322, Act III of 1904 Lisinces.

"Notice is hereby given that the use of a place for

the beating of metals or the manufactrue of vessels from sheet metals, is usage for a purpose which, in the opinion of the President may endanger health, and will therefore require license under the above section."

....

யம் விளைக்குமா அல்லது சுகாதாரத்துக்கு அபாயம் விளைக்குமா என்பதுதெளிவாய்க் காட்டப்படவில்லை. ஒருக்கால் மூன்றுக்கும் அபாயம் விளைக்கக் கூடியது என்று வைத்துக் கொண்டாலும் தன் அபிப்பிராயத்தில் "அபாயம் விளைக்கக் கூடியது" என்று உறுதியாய்ச்சொல்லாமல் "அபாயம் விளைக்கலாம்" என சந்தேகத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிரசிடெண்ட் உறுதியான அபிப்பிராயம் வெளியிடவேண்டுமென பிராசிக்யூஷன் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் (யக்ஸிபிட்-டி) கவர்ன்மெண்டு ஆர்டர் நெம்பர் 735-ல் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அவ்வித உறுதியான அபிப்பிராயமும் தக்க காரணத்தோடு கூடியதாய் இருக்கவேண்டுமேயல்லது மனம்போன போக்காய் இருப்பது சட்டயுக்தமல்ல. ஆதலால், எண்ணெய் ஸ்டோரிங் டை மூன்றுக்கும் அபாயம் விளைக்கக் கூடியது

EXHIBIT D.

G. O. No. 735 Dated 18th April 1906.

"...The President should publish a declaration that this trade *is* in his opinion calculated to endanger human health..."

என்று பிரசிடெண்ட் உறுதியான அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறதாக வைத்துக்கொண்டாலும், வைத்தியத்தில் தக்க விற்பன்னர்களான கவர்ன்மெண்டு இரசாயன சாஸ்திரி லெப்டினண்ட் கர்னல் வாங்கேஜல் முதலிய டாக்டர்கள் பயிர் மூல எண்ணெய்களாகிய பிரஸ்தாப எண்ணெய்கள் அபாயம் அல்லது அறுவெறுப்பான வஸ்துக்கள் அல்ல ஆதலால் அவைகளின் ஸ்டோரிங் உயிருக்காவது சுகாதாரத்துக்காவது பொருளுக்காவது அபாயம் விளைக்காது என்று எங்கள் தரப்பில் சாக்ஷியம் சொல்லியிருக்கிறார்கள்.

111. வைத்திய விற்பன்னர்களின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து, காரணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உறுதியானதாய் இருந்தாலும் உறுதியற்றதாயிருந்தாலும் பிரசிடெண்ட் அபிப்பிராயமே சரி என வைத்துக்கொண்டாலும், நாங்கள் எண்ணெய் ஸ்டோர் பண்ணுவது கிடையாது. ஆனால் உற்பத்தி செய்யும் எண்ணெயை டாங்கில் ஊற்றி வடிகட்டிப் பிறகு பீப்பாயில் பர்த்திசெய்து உடனே ஆசாமிகளுக்கு அனுப்பிவிடுகிறோம். இதனால் எங்களுடைய எண்ணெய் ஸ்டோர் பண்ணவேண்டியதென்பதா? அல்லதுஸ்டோர் பண்ணுகிறோம் என்று ஏற்படுகிறதா? உற்பத்திசெய்த எண்ணெயை வடி கட்டாமலும் பீப்பாயில் பர்த்தி செய்யாமலும் பின் என்ன செய்கிறது?

I. L. R. 29. Bom 193.

The phrase "for the purpose" indicates that it must be the intention of those using the premises to store; that storing must be the object aimed at:—the final cause for which the premises are used."

இ. லா. ரி. 29 பம் 193. பக்கத்தில் ஸ்டோர் பண்ண வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் தொழில் முறையில் கைவசமிருக்கும் வஸ்துக்கள் ஸ்டோரேஜ் ஆகமாட்டாது என்று விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதலால் அதை வாசிக்கிறேன் என்று அந்த வியாச்சிய முழுவதையும் கோர்ட்டாருக்கு வாசித்துக்காட்டினார். மாஜிஸ்டிரேட்டும், வாசிக்கப்பட்ட கேசும் இந்த கேசும் பெரும்பாலும் ஒரே மாதிரியான கேசு என்று சொன்னார்) எப்பொழுதோ ஒரு சமயம் ஏதோ அசந்தர்ப்பத்தால் ஆசாமிகள் உடனே எடுத்துக்கொண்டு போகத் தவக்கப்பட்டு 2-3 நாளைக்கோ அல்லது, அதிகப்பட்டது 15 நாளைக்கோ எண்ணெய்ப் பீப்பாய்கள் கைவசமிருந்தால் அதுவும் ஸ்டோரேஜ் ஆகமாட்டாது.

I. L. R, 30. Mad. 220.

"In the present case, however, the finding is that the place was not being regularly used for keeping 10 or more head of cattle though that number (viz.,15) was found there on one occasion by the Inspector. The user was found to be of a merely temporary character, and in view of this finding, it does not appear to be necessary in the interest of public justice to set aside the acquiltal. The appeals are dismissed."

இ. லா. ரி. 30 சென். 220-வது பக்கத்தில் இன்ஸ்பெக்டர் வந்து பார்வையிட்ட ஒரு சமயத்தில் இருக்கவேண்டிய அளவுக்கு மேல் சிறிது கைவசமிருந்தினுலேயே அது ஸ்டோரேஜ் ஆகமாட்டாது என்று விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

IV. கடைசியாய் 322-வது செக்ஷன் சந்தேகத்தில் கிடந்து தவிக்காமலிருக்க பிராசிக்யூஷன் தரப்பில் தாக்கல் செய்த (யக்ஸிபிட்-ஸி) டை செக்ஷனைச் சார்ந்தும் கவர்ன்மென்டார் அங்கீகரித்ததுமான லைசென்ஸ் கட்டண ஷெட்டியூலில், ஒரு பொருளின்மேல் லைசென்ஸ் பல வாங்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாதென்ற பொருள்படும் ஒரு முக்கியக் * குறிப்பு அடங்கியிருக்கிறது. அப்படியிருக்க எண்ணெயின் மீது இப்பொழுது மூன்றாவது லைசென்ஸ் ஸ்டோரிங்குக்காக முனிசிபாலிடியார் கட்டாயப்படுத்துவது யுக்தமல்ல என்பது விளங்கும். இக்காரணங்களினால் வியாச்சியத்தைத் தள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது பிராசிக்யூஷன் தரப்பு வக்கீல் மிஸ்டர் தொரைசாமி அய்யங்கார் தெரிவித்த கேசின் சாராம்சம்.

எண்ணெய் ஸ்டோரிங் அபாயமோ அறுவெறுப்போ அல்லது உயிருக்காவது - சுகாதாரத்துக்காவது - பொருளுக்காவது அபாயம் விளைக்குமோ என்ற விசாரணை எங்களுக்கு வேண்டியதில்லை. ஆனால் ஷெடியூல் 2, ஐட்டம் ஸி. பிரிவு டை செக்ஷன் 322 உடன் சேர்தலால் குறித்திருக்கிற பிரகாரம் எந்தப்பொருளானாலும் அது இருக்கும் இடத்திற்கு லைசென்ஸ்வாங்கவேண்டும்.

SCHEDULE II, (C).

"Other purposes for which the premises *may not* be used without license."

எனவே எண்ணெய் ஸ்டோரிங்குக்கு லைசென்ஸ் வாங்க வேண்டியது அவசியமே, மேற் கண்ட விதம் டை ஐட்டத்தை செக்ஷனுடன் சேர்த்து அதன்படி நடத்தலே சட்டப் பொறுத்தமென அட்வகேட்ஜெனரல் அபிப்பிராயம் தந்து அந்த அபிப்பிராயமும் கவர்ண்மென்ட் ஆர்டர் 750ல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. டிபென்ஸ் தரப்பு ஆதரவாக எடுத்துக்காட்டிய இ.லா. ரி 28.பம். மாவாலையைச் சேர்ந்ததேயல்லாமல் இத்தக்கேசை போன்றதல்ல. பின்னும் இ. லா, ரி. 30 சென்னையும் மாட்டு தொட்டியைச் சேர்ந்ததேயன்றி இதற்கு அனுசரணையானதல்ல வென்பது விளங்கும். இக்காரணங்களால் பிரதிவாதியை எண்ணெய் ஸ்டோரிங்குக்கு லைசென்ஸ் வாங்கும்படி உத்தரவு பிறப்பிக்கவெண மிகவும் கேட்டுகொள்ளுகிறேன். (இன்று நிறுத்தப்பட்டு ஜட்ஜ்மெண்ட் 13உ சொல்லப்பட்டது.)

* 6-வது பக்கம் பார்க்கவும்.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1907-ம் ளுத்திய டிசம்பர் 10உ G. O. நெ. 2471.

சென்னை இராஜதானியிலுள்ள முனிசிபாலிட்டிகளின் மொத்த ரிப்போர்ட்.

1906-1907-ம் ளுத்திற்கு சென்னை இராஜதானியிலுள்ள ஒவ்வொரு முனிசிபாலிடியும் அனுப்பிய பரிபாலன ரிபோர்ட்டையும் பிரத்தியேகமாய்ப்பரிசீலனை செய்து அபிப்பிராயம்கூறியிருப்பதுமன்றி மொத்த அபிப்பிராயம் கூறி ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த உத்தரவில் அவர்கள் கூறியிருக்கும் சில முக்கியமான அம்சங்களை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து எழுதுகின்றோம்.

(1) பெரும்பாலான முனிசிபாலிடிகள் ரிபோர்ட்டுகளை மிகுந்த காலதாமதமாக அனுப்பியிருப்பதைத ரிமார்க்கு செய்து விசனப்படுகிறார்கள். மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இந்த இரண்டு முனிசிபாலிட்கள்மட்டிலும் சரியான காலத்தில் ரிபோர்ட்டுகள் அனுப்பிவிட்டனவென்றும் மற்ற முனிசிபாலிடிகள் சரியான காலத்தில் அனுப்புவிக்கவில்லை என்றும் நந்தியால், கர்னூல் முனிசிபாலிடிகள் ரிபோர்ட்டுகள் அனுப்பப்படவேண்டிய காலத்திற்குப் பிந்தி அனுப்பினவென்றும் ரிமார்க் செய்திருக்கிறார்கள். இதிலும், பிமிலிப்பட்டணம், பழனி, ஸ்ரீவில்லிபுத்தூர், நெல்லூர், வாணியம்பாடி, குடியாத்தம், மன்னார்குடி, மாயவரம் ஆகிய இந்த முனிசிபாலிடிகள் ரிப்போர்ட்டுகளை சரியானபடி தயாரித்து அனுப்பவில்லை என்று ரிமார்க் செப்பப்பட்டிருக்கிறது.

முனிசிபாலிட்டிகள்.

சென்னை இராஜதானியில் சென்னை ஜில்லா முனிசிபாலிடி ஆக்ட்டால் பரிபாலனம் செய்யப்படுகிற முனிசிபாலிடிகளின் எண்ணிக்கை 60.

கவுன்சிலர்கள்

இந்த 60-வது முனிசிபாலிடிகளுக்கு மாகச்சேர்ந்து 1907-ம் ளு மார்ச்சுமீ 31உ 940-கவுன்சிலர்களிருந்தார்கள். இவர்களுள் 69-பேர்கள் ex officio மெம்பர்கள். 410 பேர்கள் கவான்மென்டாரால் நியமிக்கப்பட்டவர்கள். 461 பேர்கள் ரேட்பேயர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். திருநெல்வேலி, நெல்லூர், கர்னூல், திருப்பத்தூர், மன்னார்குடி, ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் இந்துக்களும், முகம்மதியர்களும் கவுன்சிலர்களாக விருந்தனரே ஒழிய கிறிஸ்தவர்களும், ஐரோப்பியர்களும் கவுன்சிலராகயிருக்கவில்லை.

எலக்ஷன்.

வோட்டர்கள் எலக்ஷன்செய்து கவுன்சிலர்களைத் தெரிந்தெடுக்கும்படியான சுதந்தரமுடைய முனிசிபாலிடிகள் 58-தான். நந்தியால், கொடைக்கனல் ஆகிய இந்த இரண்டு முனிசிபாலிட்டிகளுக்கும் அந்தச் சுதந்தரமில்லை. டை 58 - முனிசிபாலிடிகளின் ஜனத்தொகை கூடப்பட்ட 19,00,000.

சேர்மன்.

பிரஸ்தாப வருஷத்தில் சேர்மனைத் தெரிந்தெடுத்து நியமித்துக் கொள்ளும்படியான சுதந்தரம் 35-முனிசிபல் கவுன்சில்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

வருமானம்.

வருஷ ஆரம்பத்தில் முந்திய வருஷச்செலவுகள் போக ரூ. 11,53,803-மீதப்பட்டிருந்தது. பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 39,84647 வருமானம் வந்திருக்கிறது. ஆகவேயெல்லாம் கூடி இந்த வருஷ வருமானம் ரூபாய் $50\frac{1}{2}$-லக்ஷம். இந்த வருஷத்தில் வீட்டுவரி, நிலவரி, சாக்கடைவரி, சுங்கன்வரி மூலமாக ஏதேஷ்டமான வருமானம் வந்திருக்கிறது.

செலவு.

பிரஸ்தாப வருஷத்தின் மொத்தச் செலவு ரூ. 39,25,057 அதாவது முந்திய வருஷத்தைவிட ரூ. 24,1384, அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. செலவுகளின் விபரம்:—மராமத்து வேலைகள் ரூ. 9,37,431; கல்வி ரூ. 4,01,385; வைத்தியம், அம்மை, ரிஜிஸ்டிரேஷன், சுகாதாரம் முதலிய விஷயங்களில் ரூ. 13,48;351; தீபங்கள் போடுவதிலும் இன்னுமுள்ள சில்லரை விஷயங்களிலும் ரூ. 2,74,247; ஆபீஸ் சிப்பந்தின் ரூ. 6,10,760.

சீர் திருத்தங்கள்.

ஆதோனி, கோயம்புத்தூர், கரூர், ராஜமகேந்திரி, தலைச்சேரி; கூனூர், உதகமண்டலம், மங்களூர் ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் சுகாதாரம் குறைவாக யிருப்பதாகத் தெரியுதற இந்த நகர்களை விஸ்திரணம் செய்வதற்காக, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, கூனூர் உதகமண்டலம், மங்களூர் ஆகிய இந்த முனிசிபாலிடிகளில் இது விஷயமாக ஏற்கனவே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்திவரப்படுகின்றன. கோயம்புத்தூர், கரூர், ராஜமகேந்திர முனிசிபாலிடியார்கள் கவர்ன்மென்டாரிட மிருந்து கடன் வாங்கி நிலங்கள் வாங்கிக்கொண்டு வருகிறார்கள்.

மிதம்.

டை கண்ட வருமானத்தில் டை கண்ட செலவுகள் போக ரூ. 11,33,393 மிதப்பட்டிருக்கிறது.

அபிப்பிராயம்.

முந்திய வருஷத்தின் பரிபாலன விதத்தைப் பார்க்கிலும் பிரஸ்தாப வருஷத்தியது சிறந்ததென்று சொல்லுவதற்கிடமில்லை.

முனிசிபாலிட்டிகளின் ஜனத்தொகை.

	நகர்.	ஜனத்தொகை
1.	அனந்தப்பூர்	7938.
2.	ஆதோனி	30416.
3.	பெல்லாரி	49984.
4.	செங்கற்பட்டு	10551.
5.	காஞ்சீபுரம்	46164.
6.	கோயம்புத்தூர்	53080
7.	ஈரோடு	15529
8.	கரூர்	15357
9.	கடப்பை	16432
10.	பொராம்பூர்.	27932
11.	சிக்காக்கோல்	18196
12.	பார்லகிமிடி	17338
13.	காக்கிநாடா	48091
14.	ராஜமகேந்திரபுரம்	41408

15.	குண்டூர்	30833.
16.	ஒங்கோல்	13176.
17.	பெஸ்வாடா	24224.
18.	எல்லோர்	33521.
19.	மசுலிப்பட்டணம்	39507.
20.	கர்னூல்	25376.
21.	நந்தியால்	15137.
22.	திண்டுக்கல்	25182.
23.	கொடைக்கானல்மலை	1912
24.	மதுரை	105,984.
25.	பழனி	17168.
26.	பெரியகுளம்	17960.
27.	கள்ளிக்கோட்டை	76981.
28.	கன்னனூர்	27811.
29.	கொச்சின்	19274.
30.	பாலக்காடு	44177.
31.	தலைச்சேரி	27883.
32.	நெல்லூர்	32040.
33.	கூனூர்	8525
34.	உதகமண்டலம்	18596.
35.	குடியேத்தம்	21335.
36.	திருப்பதி	15485.
37.	வெல்லூர்	45182.
38.	வாலாஜாபாட்	10067.
39.	சேலம்	70621.
40.	திருப்பத்தூர்	18689.
41.	வாணியம்பாடி	12098.
42.	சிதம்பரம்	15909.
43.	கூடலூர்	52216.
44.	திருவண்ணமலை	17069.
45.	மங்களூர்	44108.
46.	கும்பகோணம்	59673.
47.	மன்னார்குடி	20499.
48.	மாயவரம்	24276.
49.	நாகப்பட்டணம்	57190.
50.	தஞ்சாவூர்	57870.
51.	பாளையம்கோட்டை	39545.
52.	ஸ்ரீ வலிப்புத்தூர்	26382.
53.	திருநெல்வேலி	40469.
54.	தூத்துக்குடி	28048.
55.	ஸ்ரீரங்கம்	23039.
56.	திருச்சிறைபள்ளி	104721.
57.	அனக்கப்பள்ளி	18539.
58.	பிமிலிப்பட்டணம்	10212.
59.	விஸாகப்பட்டணம்	40892.
60.	விஜயநகரம்	24583.

1907-ம் ஹூத்திய G. O. நெ. 810.

சென்னை இராஜதானியிலுள்ள முதல் கிரேட் இரண்டாவது கிரேட் கலாசாலைகளுக்குக் கொடுத்துதவும்படி இந்தியா கவர்ன்மெண்டார் லோகல் கவர்ன்மெண்டாரிடம் கொடுத்திருக்கிற ரூ, 2,77,500. அடியிற்கண்டபடி பாகித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதல கிரேட்டுகள்	ரூபாய்.
1. சென்னை கிரிஸ்ட்டியன் கலாசாலை	50000.
2. மங்களூர் செண்ட் அலோசியக் கலாசாலை	25000.
3. மசிலிபட்டணம் நோபில் கலாசாலை	13000.
4. திருச்சி செண் ஜோசப் கலாசாலை	46000.
5. திருச்சி S. I. G. கலாசாலை	6000.
6. விஜயநகரம் மகாராஜா கலாசாலை	5000.

இரண்டாவது கிரேட் கலாசாலைகள்.	
1. பெரம்பூர் கான்கோட்டா கலாசாலை	6000.
2. காக்கிநாடா பிட்டாப்பூர் இராஜா காலேஜ்	9500.
3. கோயம்புத்தூர் கலாசாலை	13500
4. கூடலூர் செண்ட் ஜோசப் கலாசாலை	1000.
5. சென்னப்பட்டணம் பிங்கிலேர் கலாசாலை	1000.
6. ஷெ டி வோட்டன் கலாசாலை	11500.
7. ராயப்பேட்டை வெஸ்லி கலாசாலை	6000.
8. மதுரை கலாசாலை	13500.
9. மன்னார்குடி பின்லே கலாசாலை	6000.
10. பாளையம் கோட்டை ஹாராடக்கர் கலாசாலை,	2000.
11. பாலக்காடு விக்டோரியா கலாசாலை	13300.
12. சேலம் கலாசாலை	9000.
13. தலைச்சேரி பிரின்ஸ் கலாசாலை	10500.
14. திருநெல்வேலி C. M. S. கலாசாலை	1000
15. ஷை இந்து கலாசாலை	9000.
16. வெல்லூர் வோரி கலாசாலை	6000.
17. விசாகபட்டணம் மிஸ்டர்ஸ் A. V. நரஸிங்கராவ் கலாசாலை	13500.

1907-ம் ஹூத்திய டிசம்பர்மீ 12உ G. O. நெ. 3043.

கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி ஆகிய இந்த மூன்று ஜில்லாக்களில் சர்க்கார் தங்களுக்கு வேண்டிய சர்க்கார் படிக்கற்களையும் படி முதலிய மறக்கால்களையும் தயார் செய்து கொள்ளும்படியாக ரூ. 3,073 சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

1907-ம் ஹூ டிசம்பர்மீ 2உ G. O. நெ. 799.

ஸ்ரீவிப்பண சந்திரபாலர் ராஜமகேந்த்திரத்திற்கு வந்து பிரசங்கம்செய்தபோது மாணுக்கர்கள் கூடிச் செய்ததாகச் சொல்லப்படும் குழப்பத்தால் கவர்ன்மெண்டார் தாண்டப்பட்டு கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் மாணுக்கர்களும், புரொபஸர்களும், உபாத்தியாயர்களும் நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்கான நடவடிக்கைகளைப் பற்றி ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

1907ஹூத்திய நவம்பர்மீ 21உ G. O. நெ. 774.

கும்பகோணம் விக்டோரியா ஜபிலி ஹோஸ்ட்டலுக்குக் (மாணுக்கர்களின் கிரகம்) செய்யப்படவேண்டிய மராமத்துகளுக்கு என்ன செலவுகள் நேரிடுகிறதோ அதன் ஒரு பாகத்தைக் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளத் தயாராகயிருப்பதாகவும் பாக்கிப் பணத்தை அங்கூரிலிருக்கும் கல்வி அபிமானிகளிடமிருந்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

CASES FROM THE INDIAN LAW RERORTS.

இந்தியன் லா ரிபோர்ட்ஸ் தளிலுள்ள கேசுகள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு

ஜட்ஜிகள் :—சர் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

சிவில் அப்பீல்.

கோபாலராவ் காடேராவ் சாகேப் வகையரு— } (அப்பீல் வாதிகள்.)

V

மறிய சூசேப்பிள்ளை—பிரதிவாதிகள்.
(அப்பில் பிரதிவாதிகள்.)

கேசின் விபரம் :—வாதிகள் பிரதிவாதிகள் பேரில் திருவையார் டி. மு. கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். டி. மு. கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை 1905-ம்ஹூத்திய 145-ம் நெ. வியாஜ்ஜியமாகத் தாக்கல் செய்துகொண்டு விசாரணைக்கு ஒரு தேதி குறிப்பிட்டார்கள். ஷை குறிப்பிட்ட தினத்தில் வாதியின் பிளீடர் ஆஜராகி விசாரணையைத் தள்ளி வைக்கவேண்டுமென்று கோர்ட்டாரைக் கேட்டுக் கொண்டார். இதற்கு கோர்ட்டார் இணங்கவில்லை. ஆகவே பிளீடர்கேசை நடத்தச் சம்மதமில்லை என்று சொல்ல, கோர்ட்டார் கேசைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்தக் கேசை மறுபடியும் பயிலுக்கு எடுத்துக்கொள்ளும்படியாக வாதி சி. பு. கோ. 103, 105-வது பிரிவுகளின்படி மனு செய்துகொண்டார். கோர்ட்டார் மனுவை அங்கீகரித்து கேசை மறுபடி பயிலில் வைத்துக்கொண்டார்கள். இப்படி கோர்ட்டார் மறுபடியும் கேசை பயிலில் வைத்துக்கொள்ளும்படியாகச் செய்த உத்தரவை ரத்து செய்துவைக்கும்படி பிரதிவாதிகள் சி. பு. கோ. 622-வது பிரிவின்படி ஹைக்கோர்ட்டிற்கு மனு செய்து கொண்டார்கள். ஹைக்கோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் இந்த மனுவை விசாரணை செய்து பின் வருமாறு தீர்ப்பு கூறினர் :—சி. பு. கொ. 103, 157-வது பிரிவுகள் இந்தக் கேசிற்குப் பொருந்தா வாதிவகையருவின் வக்கீல் ஆஜராயிருந்தார். ஆகையால் வாதி ஆஜராகவில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால், மறுபடியும் இந்தக் கேசை பயிலுக்கு எடுத்துக்கொள்ளும்படி டி. மு. கோர்ட்டார் செய்த உத்தரவு சட்டப்பிரகாரம் செய்யப்பட்ட உத்தரவாகமாட்டாது. ஆகையால் இந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. செலவுத்தொகையை வாதிகள் மனுதார்களுக்குச் செலுத்தவேண்டும். 1905-ம்ஹூ நவம்பர்மீ 7உ டி. மு. கோர்ட்டார் கேசை பயிலுக்கு எடுத்துக்கொள்ளும்படி செய்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது."

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக Letters Patent 15-வது கிளாசின்படி வாதி அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—வாதிகள் தரப்பிற்குவக்கீல் S. சுப்பிரமணி அய்யரும், பிரதிவாதிகள் தரப்பிற்கு மெஸ்ஸர்ஸ் P. R. சுந்திர அய்யரும் S. கோபாலசாமி அய்யங்காரும் பேசினர்கள்.

சீப் ஜஸ்டிஸ் ஆர்னல்டு வொயிட் சொன்ன தீர்ப்பு :—டி. மு. கோர்ட்டார் கேசை பயிலில் வைத்துக் கொள்ளும்படி செய்த உத்தரவை இந்தக் கோர்ட்டு ஜட்ஜியாகிய மிஸ்டர் மூர் ரத்து செய்தது நியாயமான தீர்ப்பு என்று நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. டி. மு. கோர்ட்டார் என்ன காரணங்களை முன்னிட்டு கேசை மறுபடியும் பயிலுக்கு எடுத்துக்கொள்ளும்படி உத்தரவு செய்தார்களோ அந்தக் காரணங்கள் அவர் செய்திருக்கும் உத்தரவில் அடியிற்கண்ட பிரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது:—

"1905ம் ஹூ அக்டோபர்மீ இந்தவியாஜ்ஜியம் விசாரணைக்கு வந்தது. அப்போது வாதியின் பிளீடர் விசாரணையைத் தள்ளி வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆகவே வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. வாதியின் பிளீடர் கேசை நடத்த சம்மதமில்லை என்று சொன்னர். ஆகவே வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது." கேசை மறுபடியும் பயிலில் வைத்துக்கொள்ளும்படி செய்து கொள்ளப்பட்ட மனு சி பு. கோ. 157,103-வது பிரிவுகளின்படி செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப்பிரிவுகள் மூலமாக டி. மு. கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தால் அவர்கள் இந்த உத்தரவைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. பிரதிவாதிகள் தரப்பிற்குப் பேசும் வக்கீல் மிஸ்டர் சுந்திர அய்யர் டி. மு. கோர்ட்டார் கேசைத் தள்ளுபடி செய்திருக்கும் தீர்ப்பைப் பார்த்தால் வாதி ஆஜராகத் காரணத்தை முன்னிட்டு கேசை தள்ளுபடி செய்யவில்லை என்றும் கேசை விசாரணை செய்து தள்ளுபடி செய்திருப்பதுபோல தள்ளப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதென்றும் ஆகையால் மறுபடியும் கேசை பயிலில் வைத்துக்கொள்ளும்படி உத்தரவுசெய்ய டி. மு. கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்றும் சொல்லுகிறார். டி. மு. கோர்ட்டார் கொடுத்திருக்கும் தீர்ப்பில் கக்ஷிகளும் கக்ஷி வாதங்களும் செய்யப்பட்ட பின் கேசை தள்ளுபடி செய்ததற்குக் காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறதென்றால் வாதியின் பிளீடர்கேசை நடத்தச்சம்மதியில்லை என்றுசொல்லிவிட்டார். ஆகையால் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. டி. மு. கோர்ட்டாரின் தீர்ப்பை வாசித்துப் பார்த்தால் இந்த வியாஜ்ஜியம் வாதி ஆஜராகத்தை முன்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் நினைப்பதைத் தடுக்கக்கூடிய யாதொரு ஏதுவும் அதில்லை. எந்த அபிப்பிராயத்துடன் டி. மு. கோர்ட்டார் கேசைத் தள்ளுபடி செய்திருந்தபோதிலும், அவர்கள் மறுபடியும் கேசைபயிலுக்கு எடுத்துக்கொள்ளும்படி உத்தரவுசெய்திருப்பதைக் கவனித்துப் பார்த்தால் வாதி ஆஜராகத்தால் கேசை தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்று நிச்சயமாய் எண்ண

லாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சி. பு. கோ. 102-வது பிரிவு பொருந்தாது என்பதற்கு யாதொரு பிரமாணமும் எடுத்துக் கூறப்படவில்லை. வாதியின் பிளீடர் எப்போது கேசை நடத்தச் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டாரோ அதை வாதி ஆஜராகாதது போல நினைக்கவேண்டுமென்று எனக்குத் தோற்றுகின்றது. கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டபோது வாதி கோர்ட்டிலிருந்ததாகவும் வாதி தரப்பில் பிரரேபிக்கப்படுகின்றது. வாதி அந்த சமயம் கோர்ட்டிலிருந்தது வாஸ்தவமானாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அதில் யாதொரு வித்தியாசமில்லை. வாதி பிளீடர் மூலமாய் ஆஜராகியிருக்கிறார். எப்போது அந்தப் பிளீடர் கேசை நடத்தச் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டாரோ அது முதல் வாதி ஆஜராகவில்லை என்று எண்ணப்படவேண்டும்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

வெங்கடகிரிராஜா—வாதி—(அப்பீல் வாதி)

V.

உடுத்த சுப்பிராயடு வகையறா—பிரதிவாதி—(அப்பீல் பிரதிவாதிகள்)

கேசின் விவரம்.—வாதியின் ஜெமீனில் பிரதிவாதிகள் ஊழியம் செய்து வருவதற்காக சில நிலங்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இனாம் நிலங்களை அனுபவித்துவரும் பிரதிவாதிகள் யாதொரு விதமான தீர்வையும் ஜமீன்தாருக்குச் செலுத்தக் கடமைப்பட்டவர்களல்ல. வாதி ஜமீன்தார் தம்முடைய நிலங்களுக்கு பாய்ச்சிக் கொள்ளும் கவர்ன்மெண்டுஜலம் பிரதிவாதிகளின் நிலங்களுக்கும் பாய்ந்து அதனால் அவர்களும் பயனடைந்து வருகின்றார்கள். இப்படி ஜமீன்தார் ஜமீன் நிலங்களுக்குப் பாய்ச்சிக்கொள்ளும் கவர்ன்மென்டு ஜலத்திற்காக சென்னப்பட்டணம் 1865-ம் ௵த்திய 7-வது ஆக்ட்டின்படி தண்ணீர்த் தீர்வைக்கட்டி வரக்கடமைப்பட்டவரானபடியால்தாம் எடுத்துக்கொண்ட ஜலத்திற்கு கவர்ன்மெண்டார் விதித்த தீர்வையைச் செலுத்திவிட்டு பிரதிவாதிகளிடமிருந்து விதாச்சாரத்தீர்வையைக் கேட்க இவர்கள் இனாம்நிலங்களுக்கு யாதொரு தீர்வையும் கிடையாதென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே வாதி நெல்லூர் டி. மு. கோர்ட்டில் பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிகளின் நிலங்கள் வாதிகள் செய்துவரும் ஊழியத்திற்காக யாதொரு தீர்வையின்றி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஊழியம் செய்துவரும் பரியந்தம் யாதொரு தீர்வையும் செலுத்தக் கடமைப்பட்டவர்களல்ல. கவர்ன்மென்டாரின் ஜலத்தை பாய்ச்சிக்கொள்ளுவதற்காக ஜமீன்தாரிடம் கவர்ன்மென்டார் எவ்வளவு தீர்வை வசூலிக்கிறார்களோ, அதில் பிரதிவாதிகளின் விதாச்சாரத்தொகையை பிரதிவாதிகள் ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டுமென்று யாதொரு ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. இப்படி ஒப்பந்தமில்லாதபோது வாதி பிரதிவாதிகளிடமிருந்து ஷை விதாச்சாரத்தொகையை வசூல் செய்ய பாத்தியமற்றவர் என்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்ப்பிற்கு விரோதமாக 1887-ம் ௵த்திய ஸ்மால்காஸ் கோர்ட் 9-வது ஆக்ட் 25-வது பிரிவின்படி வாதி ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுசெய்துகொண்டார். இந்த மனுவை ஜஸ்டிஸ் மிஸ்டர் மூர் விசாரணை செய்து கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை உறுதிப்படுத்தினர்.

ஆகவே வாதி Leters Patent 15-வது கிளாஸின்படி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு :—பிரதிவாதிகளுக்கு நிலம் தீர்வையின்றி கொடுக்கப்பட்டிருப்பதால் கவர்ன்மென்டாருடைய ஜலத்தையும் தீர்வையின்றி எடுத்துக்கொள்ளப் பாத்தியமுடையவர்கள் என்று நினைக்கமுடியாது. கவர்ன்மென்டாருடைய ஜலத்தை எடுத்துக்கொண்டதற்காக ஜமீன்தார் சென்னப்பட்டணம் 1865-ம் ௵த்திய 7-வது ஆக்டின்படி கவர்ன்மென்டாருக்குத் தீர்வை செலுத்தப் பாத்தியப்பட்டவர். ஷை ஆக்ட் 1-வது பிரிவின்படி ஜலத்தீர்வை விதித்து, இரண்டாவது பிரிவின்படி ஜலத்தீர்வை நிலுவையை கிஸ்தி பாக்கியைப்போல ஜமீன்தாருடைய நிலத்தையாவது, அல்லது சங்கம சொத்துகளையாவது ஏலம் போட்டு வசூல் செய்யலாம். பிரதிவாதிகளின் நிலங்களுக்குப் பாயும் ஜலத்தால் உள்ளபடி வாதிக்கு யாதொரு நன்மையும் கிடையாது. இனாம் தார்களுடைய நன்மைக்காக வாதி கவர்ன்மென்டு ஜலத்தை எடுத்து அதற்கும் தீர்வை கவர்ன்மென்டாருக்குச் செலுத்தியிருக்கிறார். இப்படிச் செய்தது ஜமீன்தார் இனாம் தாருக்குச் சகாயம் செய்ய உத்தேசித்துச் செய்திருப்பதாக சொல்லமுடியாது. இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 70-வதுபிரிவில் "எவனாவது ஒருவன் மற்றொருவனுக்காகச் சட்டப்படி செய்யவேண்டிய காரியத்தைச் செய்தாலும் அல்லதுயாதேனும் ஒருபொருளை (இனாமாகக்கொடுக்கிறது என்கிற உத்தேசமில்லாமல்) கொடுத்தாலும் அப்படி செய்யப்பட்டகாரியத்தாலும் கொடுக்கப்பட்ட பொருளாலும் பெற்றுக்கொண்டவன் நன்மை அடைந்தால் பெற்றுக்கொண்டவன் ஈடு படுத்த பாத்தியப்பட்டவன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவின் பிரகாரம் ஜமீன்தார் கவர்ன்மெண்டு ஜலத்தை எடுத்துப் பாய்ச்சியதால் நன்மை அடைந்திருக்கும் பிரதிவாதிகள், ஜலத்தை எடுத்துக்கொண்டதற்காக கவர்ன்மென்டாருக்குச் ஜமீன்தார் செலுத்தியிருக்கும் தீர்வையை ஈடுபடுத்த வேண்டும்.

ஆகையால் அப்பீலை ஏற்றுக்கொண்டு வாதிக்குச் செலவுத் தொகையுடன் டிக்கிரி கொடுக்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

இ. லா. ரி. 30, சென். 277.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சிவில் அப்பீல்.

வைத்தியனாதசாஸ்திரி-பிரதிவாதி-(அப்பீல் வாதி.)

V.

ஏக்கிய வெங்கட்டராம தீக்ஷதர்—வாதி—(அப்பீல் பிரதிவாதி.)

கேசின் விபரம் :—தஞ்சாவூர் ஜில்லா வலங்கமான் டி. மு. கோர்ட்டில் வாதி ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்து பிரதிவாதியின் பேரில் ஒரு டிக்கிரி பெற்றார். தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டாரின் மானேஜ்மெண்டிலிருந்து வரும் சில எஸ்டேட்டுகளின் மேல்வாரத்திலிருந்து வாதிக்கு சில கலம் நெல் பிரதிவாதிக்கு அலவன்சாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. வாதி தாம் பெற்ற டிக்கிரியை நிறைவேற்றி ஷை மேல்வார அலவன்சை ஜப்தி செய்தார். பிரதிவாதி ஷை அலவன்ஸ் தம்முடைய முன்னோர்களுக்கும், தமக்கும், தம்முடைய சந்ததியாருக்கும் ஜீவனாம்சத்திற்காக கொடுக்கப்பட்ட இனாமென்றும் அது சி. பு. கோ. 226-வது பிரிவின்படி ஜப்தி செய்யப்படக் கூடியதுமல்ல அல்லது விற்பனை செய்யப்படக்கூடியதுமல்லவென்றும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார். டி. மு. கோர்ட்டார், ஷை இனாம் ஜப்தி செய்யப்படக்கூடியது என்று தீர்மானித்தார். பிரதிவாதி ஜில்லா கோர்ட்டில் செய்துகொண்ட அப்பீலில் அசல் கோர்ட்டு உத்தரவு உறுதிப்படுத்தப்பட்டது. பிரதிவாதி இதன்பிறகு ஹைக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—பிரதிவாதிக்கு வக்கீல் மிஸ்டர் M. நாராயணசாமி அய்யரும், வாதிக்கு R. குப்புசாமி அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு :— பிரதிவாதிகளுக்குக் கிடைத்துவரும், அலவன்ஸ் தம்முடையது மட்டு மல்லவென்றும், தம்முடையபரம்பரையாரைச் சேர்ந்ததென்றும் தம்முடைய பிரமாணப் பத்திரத்தில் சொல்லியிருக்கிறார். அப்படியானால் சென்னப்பட்டணம் லா ஜெர்னல் 113-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற முத்துராமன் செட்டியார் V சுந்திர குமார இட்டோபசாமி கேசில் தீர்மானிக்கப் பட்டிருப்பது போல இந்த இனாம் ஜப்தி செய்யப்படக் கூடிய இனாம். அப்பீலில் பிரதிவாதி தமக்கு ஷை மேல்வார அலவன்சுக்கு சட்டப் பிரகாரமான பாத்தியதை இல்லை என்று தஞ்சாவூர் அரண்மனையார் தாங்களே வலுவில் கொடுத்த இனாமென்றும் கக்ஷி சொல்லுகின்றார். இந்தக் கக்ஷி ஆதியில் பிரதிவாதி பிரமாணப் பத்திரத்தில் சொல்லாமல் இப்போது புதிதாய்ச் சொல்லுகிறபடியால் இதை நாம் கேட்கக்கூடாது. ஆகையால் அப்பீலைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

இ. லா. ரி. 30, சென். 279.

ஜட்ஜிகள் :—சர் ஆர்னால்டு வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

சுப்பிரமணிய செட்டியார் 9-வது பிரதிவாதி—(அப்பீல் வாதி)

V

பழனியப்ப செட்டியார் (அழகப்ப செட்டியாரின் ஏஜண்டு)—வாதி—(அப்பீல் பிரதிவாதி)

கேசின் விபரம் :— வாதி பிரதிவாதி வகையறா பேரில் திருத்துரைப் பூண்டி டி. மு. கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம்கொண்டுவந்து 1, 2, 6, 9 பிரதிவாதிகள் பேரில் செலவுத்தொகைக்கும் 1, 2, பிரதிவாதிகள் பேரில் நட முதல் லாபத்திற்கும் 1899-ம்௵ சேர்ந்த டிக்கிரிபெற்றார். இந்த டிக்கிரியை செலவுத் தொகைக்காக 1905-ம்௵ மார்ச்சு௴ 1, 2, 6, 9 பிரதிவாதிகள் பேரில் நிறைவேற்றினார். 9-வது பிரதிவாதி தான் சம்பந்தப்பட்ட வரையில் டிக்கிரி காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று ஆக்ஷேபித்தார்.

டி. மு. கோர்ட்டார் செய்த உத்தரவு.—வாதி இப்போதுசெலவுத்தொகைக்காக டிக்கிரியைநிறைவேற்ற மனு செய்துகொண்டிருப்பதற்கு முந்தி 1901-ப்௵ செலவு தொகைக்காக ஒரு தடவை டிக்கிரியை நிறைவேற்ற மனு செய்துகொண்டிருக்கிறார். ஆனால் 1903௵ ஏப்ரல்௴த்திலும், அதன்பிறகு 1904-௵ பிப்ரவரி௴த்திலும் 1, 2, பிரதிவாதிகளிடமிருந்து நட முதல் லாபம் கிடைக்கவேண்டியதற்காக டிக்கிரியை நிறைவேற்ற மனு செய்துகொண்டிருக்கிறார். 1903-ப்௵ 1904-ப்௵ வாதி 1, 2, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய நட முதல் லாபத்திற்காக டிக்கிரியை நிறைவேற்ற மனு செய்துகொண்டிருப்பது 9-வது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் அவருக்கு எதிரில் காலாவதி தோஷ காலம் ஓடிக்கொண்டு வருவதைத் தடைப்படுத்தமாட்டாது. ஆகையால் வாதி 9-வது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வகையில் 1901-ம்௵த்திலும், அதன் பிறகு இப்போது 1905-ம்௵த்திலும் டிக்கிரி நிறைவேற்ற மனுசெய்து கொண்டிருக்கிறார். ஆகையால் 9-வது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் டிக்கிரிக்கு காலாவதி தோஷம் உண்டாய் விட்டது என்று சொல்லி, 9-வது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் நிறைவேற்று மனுவைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த உத்தரவிற்கு விரோதமாக வாதி ஜில்லா கோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொள்ள, அவர்கள் அசல் கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்து செய்து 9-வது பிரதிவாதியின் பேரிலும் நிறைவேற்றும்படி உத்தரவு செய்தார்கள்.

9-வது பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள் :—9-வது பிரதிவாதிக்கு வக்கீல் மி-ர். கிருஷ்ணமாச்சாரியும், வாதிக்கு வக்கீல் மி-ர். அனந்த கிருஷ்ண அய்யரும் பேசினார்கள்.

தீர்ப்பு :—இந்தக் கேசிற்குத் தீர்ப்பு சொல்வது கஷ்டத்தினின்று நீங்கினதென்று சொல்லமுடியாது. ஆயினும் ஜில்லா ஜட்ஜி செய்திருக்கும் உத்தரவே நியாயமான உத்தரவு என்று அபிப்பிராயப்படுகின்ரேம் 1,2,6,9 பிரதி வாதிகள் பேரில் செலவுத் தொகைக்கும் 1,2, பிரதி வாதிகள் பேரில் கட முதல் லாபத்திற்கு சேர்ந்த (Joint) டிக்கிரி கொடுக்கப்பட்டது. வாதி இப்போது டிக்கிரியை நிறைவேற்ற செய்துகொண்டிருக்கும் மனுவுக்கு முந்தி மூன்று வருஷங்களுக்குள்ளாக 1, 2, பிரதிவாதிகளிட மிருந்து கிடைக்கவேண்டிய கட முதல் லாபத்திற்காக ஒரு முறை டிக்கிரியை நிறைவேற்றியிருக்கிருர். ஆதலால் நாம் இப்போது கவனிக்கவேண்டிய பிரஸ்னே என்னவென்றுல் இப்படி வாதி 1903, 1904-ல் நிறைவேற்றியிருப்பது 9-வது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் இறந்துபோகக்கூடிய டிக்கிரியை உயிருடன் வைக்கக்கூடியதா ? இந்தப் பிரஸ்னேயின் ஜவாப்பு பிரஸ்தாபக்கேஸ், லிமிடேஷன் ஆகட் இரண்டாவது ஷெடியூல் 179-ஆர்ட்டிகல் முதலாவது வியாக்கியாணம் (Explanation) இரண்டாவது பாராவின் முதல் பாகத்தில் சொல்லியிருக்கும் கேஸ்களேச் சேர்ந்ததா அல்லது இரண்டாவது பாகத்தில் சொல்லியிருக்கும் கேஸ்களேச் சேர்ந்ததா என்பதைப் பொருத்திருக்கிறதா ? இரண்டாவது பாகத்தை ஊன்றி வாசித்துப் பார்த்தால் இந்தக் கேஸ் அதில் சொல்லப்பட்டிருக்கும் கேஸ்களில் ஒன்று என்று நன்ருய் விளங்குகின்றது. டிக்கிரி பலர் பேரில் சேர்ந்தாற்போல் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாதி டிக்கிரியை சிலர் பேரில் மட்டிலும் நிறைவேற்றினர். அப்படி நிறைவேற்றியிருப்பது அந்த சேர்ந்த டிக்கிரியை எவர்கள் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் பேரில் எல்லாம் நிறைவேற்றின வலுவை உடைத்தாயிருக்கின்றது. இ. லா ரி. 26, சென். 9-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கிருஷ்ணமாச் சாரியார் V. மங்கம்மாள் கேசும் இந்த மாதிரி கேஸ். அதில் ஜட்ஜிமார்கள் ஷை வியாக்கியானத்திற்குப் பதவுரை செய்து தாற்பரியம் செய்து தீர்மானித்ததுபோல நாமும் செய்யவேண்டுமென்று நினைக்கின்ரேம். அப்படி அந்த வியாக்கியானத்தை வாசித்து தாற்பரியம் செய்துகொண்டால் 9-வது பிரதிவாதியின் பேரில் டிக்கிரியை நிறைவேற்றும் படியாக வாதிக்கிருக்கும் பாத்திதை காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை. ஆகையால் அப்பீலேச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்கின்ரேம்.

இ. லா ரி. 30, சென். 268.

ஜட்ஜிகள் —மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

ரூஜாகாமேர்தா்ன வெங்கட்டநரசிம்ம ரூமச்சந்திர ராவ் பகதூர் ஜமீன்தார்காரு வகையரு—பிரதிவாதிகள்—(அப்பீல் வாதிகள்)

V.

ரூஜலக்ஷிமி நரசிம்ம ஜமீன்தாரனிகாரு—வாதி—(அப்பீல் வாதி.)

கேசின் விபரம்:—வாதி, பிரதிவாதியினுடைய சகோதரன் விதவை. பிரதிவாதியின் குடும்பத்திற்குக் கவர்ன்மென்டார் ரூ. 600 பென்ஷன் கொடுத்துவருகிறார்கள். இதுவுமன்றி பிரதிவாதியின் குடும்பத்திற்கு எதேஷ்டமான சொத்திருக்கின்றது. ஷை கூறப்பட்ட பென்ஷனுக்கும் சொத்துக்கும் வாதியும் பாத்திதையுடையவர். வாதிக்கும் பிரதிவாதிக்கும் வாதியின் ஜீவனும்சத்தொகை விஷயமாக தகரார் ஏற்பட்டு கலெக்டர் வாதிக்குக் குடும்பப் பென்ஷன் ரூ. 600-ல் 100 ரூ. கொடுத்துவரும்படியாக உத்தரவு செய்தார். இதன்பேரில் வாதியும் பிரதிவாதியும் ஒரு கரார் நாமா செய்து கொண்டார்கள். இந்தக் கரார் நாமாவின்படி வாதி குடும்பத்திற்கு வரும் பென்ஷனுக்கும், குடும்பத்திற்குள்ள சொத்திற்கும் யாதொரு பாத்தியதையும் இனி பாராட்டக்கூடாதென்றும் மாதம் ஒன்றுக்குப் பிரதிவாதியிடமிருந்து ரூ. 100 ஜீவனும்சம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இதுவரையில் நிலுவையிலிருந்த ஜீவனும்சத் தொகையாகிய ரூபாய் ஆயிரத்தைப் பிரதிவாதி வாதிக்குச் செலுத்திவிட வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்துகொண்டார்கள். இந்தக் கரார் நாமாவின்படி பிரதிவாதி, வாதிக்கு ஜீவனும்சம் கொடுக்கவில்லை. ஆகவே வாதி தமக்கு ஷை கரார் நாமாவின்படி கிடைக்கவேண்டிய ஜீவனும்சத்துக்காக குடிவாடா டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் உத்தரவு :—இந்தியன் பென்ஷன்ஸ் ஆக்ட் 4-வது பிரிவில் பென்ஷன் கிடைக்க வேண்டுமென்று வியாஜ்ஜியம் செய்கிறவர்கள் கலெக்டரிடமிருந்து சர்ட்டிபிகேட் பெற்று வியாஜ்ஜியம் செய்யவேண்டும். இப்படி சர்ட்டிபிகேட் பெருமல் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தை சிவில் கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் தமக்குக் கிடைக்கவேண்டிய பென்ஷன் தொகையைப்பற்றியது, வியாஜ்ஜியத்தைக்கொண்டு வருவதற்கு வாதி ஷை கூறப்பட்ட பிரிவின்படி கலெக்டரிடம் சர்ட்டிபிகேட் பெற்றிருக்க வேண்டும். அப்படி சர்ட்டிபிகேட்டைப் பெருமல் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறபடியால் இந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்கிரேம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக வாதி கிருஷ்ணு ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

ஜில்லா கோர்ட்டார் தீர்ப்பு:— குடும்பத்திற்கு வரும் பென்ஷனகிய ரூ 600-ல் தமக்கு ரூ. 100 பென்ஷன் கிடைக்கவேண்டுமென்றும் அந்தப் பென்ஷன் நிலுவை கிடைக்கவேண்டுமென்றும் வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருந்தால், அவர் இந்தியன் பென்ஷன் ஆக்ட் 4-வது பிரிவின்படி கலெக்டரிடம் சர்ட்டிபிகேட் பெற்றிராத காரணத்தை முன்னிட்டு டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்யலாம். ஆனல் வியாஜ்ஜியத்தின் சாராம்சம் இதல்ல. வாதி, குடும்பத்திற்குவரும் பென்ஷன் தொகையிலிருந்து தமக்கு ஜீவனும்சம் நிலுவை கிடைக்கவேண்டுமென்று இந்த வியாஜ்ஜியம் கொண்டு வரவில்லை. வாதி எந்தக் கரார் நாமாவை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருக்கிருரோ அந்தக் கரார் நாமாவிலும் வாதிக்கு ஜீவனும்சம் குடும்பத்திற்குக் கிடைத்து வரும் பென்ஷன் ஜீவேஜியிலிருந்து கொடுக்கப்பட்டு வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கவில்லை, பென்ஷனேத் தவிர குடும்பத்திற்கு எதேஷ்டமான சொத்து மிருக்கிறது வாதிக்குப் பிரதிவாதி மாதம் ஒன்றுக்கு ரூ. 100-பென்ஷன் கொடுத்து வரவேண்டுமென்றும் இதற்காக வாதி தமக்குக் குடும்பச் சொத்திலுள்ள பாத்தியதையை விட்டுவிட வேண்டுமென்றும் கரார் நாமாவில் சொல்லப்பட்டிருக்கிறது. . ஆனல் கலெக்டர் குடும்பத்திற்கு வரும் பெஷனில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-வாதிக்குக் கொடுத்து வரும்படி உத்தரவு செய்ததின் பேரில் வாதி பிரதிவாதிகள் இந்த உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இந்த சந்தர்ப்பம் இந்தக் கேசிற்கு முக்கியமாய் கவனிக்கப்படவேண்டிய சந்தர்ப்பமல்ல. ஆக வெகு குடும்பச் சொத்தையும் பென்ஷன் ஜீவேஜியையும் ஆகச் சேர்ந்த எல்லா குடும்ப ஜீவேஜியையும் தம்முடைய ஜீவனும்சத் தொகைக்குக் கட்டுப் படுத்தி வாதி இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிருர். ஆதலால் இது பென்ஷனைப் பற்றிய வியாஜ்ஜியமாக மாட்டாது. ஆகையால் இந்த அப்பீலே ஏற்றுக்கொள்ளுகின்ரேம். இந்தக் கேசை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு சட்டப் பிரகாரம் பைசல் செய்யும்படியாக டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவு செய்கிரேம் என்று சொன்னார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக பிரதிவாதிகள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள் :—பிரதிவாதிகளுக்கு வக்கீல் மிஸ்டர் P. R. சுந்திர அய்யரும், வக்கீல் மிஸ்டர் K. சுப்பிரமணிய அய்யரும், வாதிக்கு வக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யரும் மிஸ்டர் P. நாகபூஷணமும் பேசினார்கள்.

தீர்ப்பு :—ஜில்லா கோர்ட்டார் தீர்ப்பில் சொல்லியிருக்கும் காரணங்களே ஏற்றுக்கொண்டு, குடும்பத்திலிருக்கும் பென்ஷன் ஜீவேஜியிலிருந்து வாதிக்கு மாதம் ரூ. 100 ஜீவனும்சம் கொடுத்து வரப்படவேண்டுமென்று கரார் நாமாவில் சொல்லப்படாததால் ஷை குடும்பச் சொத்திலிருக்கும் பாத்திதையை வாதி விட்டுவிட்டு மாதம் ஒன்றுக்கு மொத்தமாக ரூ. 100 பெற்றுக்கொள்ள உடன்பட்டிருக்கிறபடியாலும் இது பென்ஷனைப் பற்றிய வியாஜ்ஜியமாக மாட்டாது என்று சொல்லி ஜில்லா கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப்படுத்தி அப்பீலேத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இ. லா. ரி. 30, சென். 266.

ஜட்ஜிகள் :— மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

சிவில் அப்பீல்.

லக்ஷிமி நாராயண செட்டி—பிரதிவாதி—(அப்பீல் வாதி)

V

குருசாமி உடையான்-வாதி-(அப்பீல் பிரதிவாதி)

கேசின் விபரம் :— வாதி பிரதிவாதியினுடைய ஜமீனின் குடி (Tenant). பிரதிவாதி தமக்குச் சொந்தமாயிருக்கும் ஜமீனே வாங்கின 14-நாட்களுக்குப் பிறகு பட்டா தயார் செய்து குடிகளுக்குக் கொடுத்தார். குடிகள் பட்டாவை ஒப்புக்கொண்டு முச்சிலிக்கை எழுதிக்கொடுத்தார்கள். பட்டாவில் ஏதோ எழுதும் பிழையிருப்பதாக பிரதிவாதி தெரிந்து புதிய பட்டாக்கள் தயார் செய்து வாதிக்குக் கொடுத்தனர். வாதி அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே பிரதிவாதி நிலத்தை ஜப்தி செய்து விற்பனே செய்வதாக சென்னப்பட்டணம் 1865-ம் ளு த்திய 8-வது ஆக்ட் 39-வது பிரிவின்படி வாதிக்குநோட்டிஸ் கொடுத்தார். இந்த நோட்டீசுக்கு விரோதமாக வாதி ஷை ஆக்ட் 40-வது பிரிவின்படி கூடலூர் எட்குவார்ட்டர் டிப்டி கலெக்டரிடம் சம்மரி வியாஜ்ஜியம் செய்து கொண்டார். டிக்கிரி கலெக்டர் கொடுத்தார்.

பிரதிவாதி தென் ஆர்க்காடு ஜில்லா ஜட்ஜியிடம் அப்பீல் செய்துகொள்ள டிப்டி கலெக்டர் தீர்மானம் உறுதி செய்யப்பட்டது. பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள் :—வக்கீல் மிஸ்டர் T. V. சேஷமச் ஐயர் பிரதிவாதி தரப்பிற்கும் மிஸ்டர் T. R. கிஷரி சந்திர அய்யர், மிஸ்டர் T. R கிருஷ்ணசாமி அய்யர் ஆகிய இருவரும் பிரதிவாதிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—பிரதிவாதி முதலில் கொடுத்த பட்டாவை வாதி ஒப்புக்கொண்டு முச்சிலிக்கை எழுதிக் கொடுத்திருக்கும்போது, பிரதிவாதி இரண்டாம்தரம்

கொடுத்த பட்டாவை வாதி ஒப்புக்கொள்ளாததற்காக ஷை இரண்டாவது பட்டாவின்படி கிடைக்கவேண்டிய தீர்வை பாக்கிக்காக பிரதிவாதி ஐப்தி எலகோர்ட்டீஸ் வாதிக்கு சார்வ் செய்தது நியாய விரோதமென்று ஜில்லா ஜட்ஜி தீர்மானித்திருப்பதை நியாயமான தீர்மான மென்று ஒப்புக்கொள்ளுகின்றோம். பிரதிவாதி தரப்பார் தங்களுடைய கக்ஷிக்கு 9, சென்னை லா ஜர்னல் 83-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற கிருஷ்ணதாஸ் பாலமுகன்தாஸ் V. குருவரெட்டி, இ. லா. ரி. 28, சென். 379 ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற அருணாசல செட்டி V. கணபதி அய்யர் ஆகிய இந்த இரண்டு கேசுகளையும் ஆதாரமாகக் கூறுகின்றார்கள். ஆனால் இந்தக் கேசுகள் பிரஸ்தாப கேசிற்குப் பிரமாணமாகமாட்டாது. ஏன் எனில் அந்தக் கேஸ்களில் நிலச் சொந்தக்காரன் முதலில் கொடுத்த பட்டாவையே குடிகள் ஒப்புக்கொள்ளவில்லை. நிலச் சொந்தக்காரன் குடிக்குப் பட்டா கொடுப்பதும், குடி, குடி. நில சொந்தக்காரனுக்குப் பட்டா கொடுப்பதும் இந்தியன் கான்டிராக்டின்படி கொடுக்கும்படியான ஒப்பந்தமல்ல. பட்டா கொடுத்து முச்சிலிக்கை பெறுவதற்குமுந்தியே இருதரப்பாருக்கும், ஒருவர் நிலச் சொந்தக்காரர் என்றும், ஒருவர் குடி என்றும் சம்பந்தம் சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. நிலக்காரன் பட்டா கொடுப்பதும், குடி முச்சிலிக்கா கொடுப்பதும் இந்தச் சம்பந்தத்தை முன்னிட்டு சட்டம் செய்திருக்கும் உத்தரவு. ஆகவே பட்டா கொடுப்பதென்பது என்னவென்றால் ஒரு நிலச் சொந்தக்காரன் தான் ஏற்கனவே நில சொந்தக்காரனாக இருப்பதால் செய்யக் கடமைப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்வதாகச் சொல்லுவதே. ஆகையால் பட்டா கொடுக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்கு முச்சிலிக்காவும் எழுதப்பட்ட பின்பு, இது உடன்படிக்கையாக மாறி விடுகின்றது. இந்த உடன்படிக்கை எவ்வளவு காலம் வரையில் ஊர்ச்சிதத்திலிருக்கவேண்டுமென்று உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வளவு காலம் வரையில் அதில் சொல்லப்பட்ட பிரகாரம் நடக்க கக்ஷிக்காரர்கள் கட்டுப்பட்டவர்கள். பட்டா கொடுத்து ஒப்புக்கொள்ளப்பட்டு முச்சிலிக்கை எழுதிக் கொடுக்கப்பட்ட பின்பும் கக்ஷிக்காரர்களில் எந்தத் தரப்பாராயினும் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு சரிவர எழுதப்படமில்லை என்று அபிப்பிராயப்பட்டால் அந்த ஏற்பாட்டினின்றுந் தன்னை நீக்கிக்கொள்ளப் பாத்தியமுடையவர்கள் என்று பிரதிவாதியின் (அப்பீல்வாதி) லாயர்கள் சொல்லுகிறார்கள். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இப்போது பிரதிவாதி எந்தத் தீர்வை பாக்கிக்காக வாதிக்கு ஜப்தி எலகோட்டீஸ் சார்வ் செய்திருக்கிறாரோ அந்தத் தீர்வை பாக்கி, ஏற்கனவே வாதி பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்திருக்கும் முச்சிலிக்கையைச் சேர்ந்ததல்ல. ஆகையால் அப்பீலைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

இ. லா. ரி. சென். 258.

முனிசிபல் பிராசிக்யூஷன் லைசென்ஸ் வாங்காமல் எண்ணெய் ஸ்டோர் செய்ததின்,

ஜட்ஜ்மென்ட்.

(ஜட்ஜ்மென்டின் சாராம்சம் பின்வருமாறு)

இப்பொழுது முனிசிபாலிடியார் சார்ஜ் செய்திருப்பது செக்ஷன் 322, ஷெடியூல் இரண்டின் எந்தப் பாகத்தின் ஆதாரவால் என்பது விவரமாய்த் தெரியவில்லை. ஆனால் 322-வது செக்ஷனைக் கவனித்து வாசிக்கும்பக்ஷத்தில் அதில் சொல்லப்பட்டிருக்கும் முறையில் ஒன்றை அனுசரித்ததாயிருக்கவேண்டும். டிபன்ஸ் தரப்பாரோ துரைத்தனவைத்திய விற்பன்னர்களைக்கொண்டு தங்களிடம் இருக்கும் எண்ணெய் என்னும் பொருள் அருவெறுப்பு அல்லது உயிருக்காவது, பொருளுக்காவது, சுகாதாரத்துக்காவது அபாயம் விளைக்காது என ருஜுப்படுத்தியிருக்கிறார்கள். பின்னும் ஷை எண்ணெய் பாக்டரியின் 30-வருட அனுபோகமுள்ள ஸ்ரீனிவாச அய்யங்கார் தாங்கள் எண்ணெய் ஸ்டோரிப்பண்ணுவது இடையர்தென்றும் டாங்கில் எண்ணெய் வைப்பது வடிகட்டுவதற்கென்றும் சாக்ஷியம் சொல்லியிருக்கிறார். இவைகளை மறுக்கப் பிராசிக்யூஷன் தரப்பில் மிஸ்டர் நிக்கல்ஸ் தவிர வேறொரு சாக்ஷியமும் காணோம். அந்த சாக்ஷியம் ஒருமணி அல்லது அதிகப்பட்டது இரண்டுமணி சாகவாச பாக்டரியின் அனுபோகமே தவிர வேறில்லை. அந்த அனுபோகத்தால் ஷை சாக்ஷியே, பெரும்பான்மையாய் எண்ணெய்கள் டாங்குகளில் இருந்ததாகச் சொல்லியிருப்பதோடு எக்சிபிட் ஏ. மூலமாய் உறுதிப்படுத்தியது. மேலும் பிராசிக்யூஷன் தரப்பில் தாக்கல்செய்து எக்சிபிட்டிலில் ஒருபொருளின்மேல் இரண்டுமூன்று லைசென்ஸ் வாங்கக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று விவரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் டிபன்ஸ் தரப்பே வாங்கவேண்டிய ஒன்றுக்குமேல், உற்பத்திசெய்வதற்கும். காய்ச்சுவதற்காக, இரண்டு லைசென்ஸ் வாங்கியிருக்கிறது. ஆதலால் மேல்கொண்டு மூன்றாவது லைசென்ஸ் வாங்கவேண்டியதில்லை. இக்காரணங்களினால் தெய்வசிகாமணி செட்டியாரை விடுதலை செய்கிறோம்.

கடைக்காரர் கேசு.

இன்றையதினமே கடைக்காரர் கேசு துவக்கப்படலாம் அப்பொழுது வந்திருந்த ஆக்டிங்கு ஹெல்த் ஆபீசர் மிஸ்டர் பேடி மெத்யூஸ் 1908-ஆ ஜனவரிமீ 17உக்கு அட்ஜர்ன்மெண்டு வாங்கிக் கொண்டார். இதன் முடிவு பிந்தியே தெரியவரும்.

600 003.